ஸ்ரீ :

மீயர்வறமதிநலமருளப்பெற்ற ஆழ்வார்கள் திரு ய்மலர்ந்தருளிய

நாலாயிர திவ்யப் பிரபந்தத்தில்

முதலாயிரம்

பெரியாழ்வார், ஆண்டாள், குலசேகராழ்வார், திருமழிசையாழ்வார்,
தொண்டரடிப்பொடியாழ்வார், திருப்பாணழ்வார்,
மதுரகவியாழ்வார் ஆகிய இவர்கள் அருளிச்செய்த
திவ்வியப்பிரபந்தங்கள் கொண்டது.

ஸ்ரீகாஞ்சி பிரதிவாதிபயங்கரம் அண்ணங்காசாரியர்

எல்லார் தமக்குமின்பம் பயக்குமாறு எளிய நடையில் தெளிய எழுதிய உரையோடு கூடியது.



சென்னைத் தொண்டமண்டலம் வித்யாநிலயத்தில் நடைபெற்றுவரும்
பகவத்கதா ப்ரஸங்க ஸபையின் நீடுழி ஞாபகசின்னமாக வெளியிடப்பட்டது.

சிங்கப்பெருமாள்கோயில்
''ஜகன்மோஹினி'' அச்சுக்கூடத்தில்
அச்சிடுவிக்கப்பட்டது.

1944

விலை. ஐந்து ரூபாய்.

ஸ்ரீ வைஷ்ணவ ஸம்பிரதாய புத்தக விளம்பரம்

சின்ன காஞ்சீபுரம் ஸன்னிதி வீதி, நெ. 39, க்ரந்தமாலா ஆபீஸில் கிடைக்கும்


புஸ்தகங்களின் ஜாபிதா

P. B. அண்ணங்கராசாரியரின் வெளியீடுகள்

	ரூ.	அ.
1. பகவத்ராமாநுஜ க்ரந்தமாலா. (தெலுங்கு லிபி) உடையவர் அருளிச்செய்த ஸ்ரீ பாஷ்யம் முதலிய ஸகல க்ரந்தங்களும் ஒரே ஸம்புடமாக வுள்ளது.	6	0
2. ஸ்ரீமத் வேதாந்த தேசிக க்ரந்தமாலா (தேவநாகர லிபி) ஸ்ரீ தேசிகன் அருளிச்செய்த ஸம்ஸ்க்ருத க்ரந்தங்கள் யாவும் எட்டு வால்யமாக அச்சிட்டிருப்பவை.	25	0
(இவை தனித் தனி வால்யமாகவும் கிடைக்கும்.)		
3. ஸ்ரீ தேசிக க்ரந்தமாலா. ஸம்பிரதாய விபாகம் [தெலுங்கு லிபி] ஸ்ரீ தேசிகன் அருளிச்செய்த முப்பத்திரண்டு ரஹஸ்ய க்ரந்தங்களும், தேசிகப் பிரபந்தமென்கிற தமிழ்ப் பிரபந்தங்களும் எல்லாம் ஒன்று சேர்ந்த ஸம்புடம்.	5	0
4. ஸ்ரீமத் வரவர முநீந்த்ர க்ரந்தமாலா (தெலுங்கு லிபி) மணவாளமாமுனிகள் அருளிச்செய்த ஸ்ரீ வசந பூஷண தத்வத்ரய-முமுக்ஷுப்படி-ஆசார்யஹ்ருதய வியாக்யானங்கள் நான்கும் ஒன்று சேர்ந்த ஸம்புடம்.	6	0
5. பகவத் விஷயம். தெலுங்கு லிபி ஏடு முப்பத்தாறுயிரப்படி	10	8
6. பூருவாசார்யர்கள் அருளிச்செய்த ஸகல ஸ்தோத்ர பாடங்கள் (நாகர லிபி)	2	0
7. ஆளவந்தார் அருளிச்செய்த ஸித்தித்ரயம் (நாகரி லிபி)	0	8
8. உடையவர் அருளிச்செய்த வேதார்த்த ஸங்க்ரஹம் (நாகரி லிபி)	1	0
9. பட்டர் அருளிச்செய்த ஸஹஸ்ர நாம பாஷ்யம் (நாகரி லிபி)	2	0
10. முகுந்தமாலை உரை	0	6
11. ஆளவந்தார் ஸ்தோத்ர ரத்னம் உரை	0	12
12. வரதராஜ ஸ்தவ வியாக்யானம் [தமிழ்]	1	0
13. ஸுதர்சந சதக வியாக்கியானம் ,,	1	0
14. கோதா ஸ்துதி வியாக்யானம் ,,	0	10
15. விவாத விஷய பரிசீலனைப் புத்தகங்கள்	1	0
16. காஞ்சி அத்திகிரி வைபவம் (வசனம்)	0	4
17. ஸமுத்ர சரணகதி விசேஷார்த்தங்கள்	1	0
18. ஷே ஸம்ஸ்கிருதம் (தேவநாகர லிபி)	0	8
19. திருமந்திரார்த்தம்—தாத்பரியச் சுருக்கம்	0	12
20. ஸ்ரீசைலேசாஷ்டகவியாக்கியான விஜயம்	0	
21. ஸ்ரீவசனபூஷணம் ஆசார்ய ஹ்ருதயம் முமுக்ஷுப்படி தத்வத்ரயம் இவை கருத்துரையுடன் அற்புதமான பதிப்பு	3	
22. வேத லக்ஷண விசாரத் தொகுதி	1	
23. ஹயக்ரீவ ஸ்தோத்ரம், கோபாலவிம்சதி பரமார்த்தஸ்துதி; வைராக்ய பஞ்சகம் உரையுடன்	1	
24. பிள்ளையந்தாதி உரை	0	
25. மணவாள மாமுனிகள் வைபவம்	0	
26. ஷே ஸ்ரீ வைஷ்ணவ ஸௌபாக்யம் உரையுடன்	0	1
27. வேதாந்த தேசிகர் வைபவம்	0	
28. ஸ்ரீரங்க ராஜஸ்தவம் (தமிழுரை)	2	
29. தென்னாசார்ய ஸம்பிரதாயம்	1	
30. கூரத்தாழ்வான் வைபவம்	0	
31. அண்ணவைபவ சஞ்சிகைகள்	0	12
32. ஸதாசார்ய ஸமக்திரகூடா	0	
33. ஸத்ஸம்பிரதாய பரிசுத்தி	0	
34. க்ருஷ்ணவதார கதா ரஹஸ்யம்		
35. ஸுந்தரபாஹுஸ்தவம் உரை (தெலுங்கு லிபி)		
36. அதிமாநுஷஸ்தவம் உரை ஷே		12
37. ஸ்ரீவைகுண்டஸ்தவம் உரை ஷே		
38. காஞ்சி ஹஸ்திகிரி வைபவம் (வடமொழி)		
39. ப்ரஹ்ம வ்யாப்தி பரிஷ்க்ரியா ஷே		
40. பகவத் கதையமுதம்		
41. விசேஷார்த்த ரத்னநிதி		
42. நித்யாநுஸந்தான விரிவுரை	2	
43. ஸ்வாப தேசார்த்த ஸாகரம்		
44. லக்ஷ்மீ தத்வவிநிர்ணயம்		
45. பல மஹான்களின் படங்கள் புத்தகம்		
46. வால்மீகி ராமாயண வசனம் உத்தர காண்டமுட்பட	5	
47. வழியாத்திரை விளக்கு	0	
48. செந்தமிழாராய்ச்சி	0	
49. திருப்பல்லாண்டு பெரியாழ்வார் திருமொழி பொழிப்புரை	1	

ஸ்ரீ:

பேரருளாளன் பெருந்தேவித்தாயார் திருவடிகளே சரணம்



ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்

ஸ்ரீகாஞ்சீ பிரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசாரியர் இயற்றிய
திவ்யார்த்த தீபிகையுரையின் ஸங்க்ரஹத்தோடு கூடின

முதலாயிரம்

பொதுத்தனியன்கள்

நம்பெருமாள் அருளிச்செய்தது

ஸ்ரீசைலேச தயாபாத்ரம் தீபக்த்யாதி குணார்ணவம்:
யதீந்த்ரப்ரவணம் வந்தே ரம்யஜாமாதரம் முநிம்.

ஸ்ரீ சைலேச தயாபாத்ரம்	திருமலையாழ்வார் என்னும் திருவாய்மொழிப்பிள்ளையின் திருவருளுக்குப் பாத்ரபூதரும்	யதீந்த்ர ப்ரவணம்	எம்பெருமானார் பக்கலிலே ப்ராவண்ய முடையவருமான
தீ பக்தி ஆதி குணார்ணவம்	ஞானம், பக்தி முதலிய நற்குணக்களுக்குக் கடல் போன்றவரும்	ரம்ய ஜாமாதரம் முநிம் வந்தே	ஸ்ரீ மணவாள மாமுனிகளை வணங்காநின்றேன்.

"இப்புவியிலரங்கேசற்கு ஈடளித்தான் வாழியே" என்று வாழ்த்தப்படாநின்ற மணவாளமாமுனிகள் திருவரங்கம் பெரிய கோயிலில் ஸ்ரீ ரங்கநாதன் திருமுன்பே, திருவாய்மொழியின் சிறந்த வியாக்கியானமாகிய ஈடுமுப்பத்தாறாயிரப்படியைக் காலக்ஷேபம் ப்ரவசநித்துவருகிற அடைவிலே காலக்ஷேப சாத்துமுறையன்று ஸ்ரீ ரங்கநாதன் தானே ஒரு முதுபிள்ளை வடிவுடன் திருவோலக்கத்தினிடையே ஓடிவந்து கைகூப்பிநின்று ஸ்ரீ சைலேசதயாபாத்ரமென்று தொடங்கி இந்தத் தனியனை வெளியிட்டுச் சென்றது மன்றியில், வடமொழி வேதத்தின் ஆதியிலும் அந்தத்திலும் ப்ரணவோச்சாரணம் பண்ணுவது நியதமாயிருப்பது போலத் தமிழ்வேத பாராயணத்தின் ஆதியிலும் அந்தத்திலும் இந்தத்தனியனை ஸ்ரீ வைஷ்ணவர்களனைவரும் நியதமாக அநுஸந்திக்கக் கடவர்களென்று நியமனமும் மருளினன்.

மணவாளமாமுனிகளின் ஆசார்யரான திருவாய்மொழிப்பிள்ளைக்கு ஸ்ரீ சைலேசர் என்று திருநாமம்.

கூரத்தாழ்வான் அருளிச்செய்தது

லக்ஷ்மீநாதஸமாரம்பாம் நாதயாமுநமத்யமாம்
அஸ்மதாசார்ய பர்யந்தாம் வந்தே குருபரம்பராம்.

லக்ஷ்மீநாத ஸமாரம்பாம்	எம்பெருமானைத் தொடக்கத்திலே உடைத்தாய்	அஸ்மதாசார்ய பர்யந்தாம்	எமக்கு ஆசார்யரான எம்பெருமானாரை முடிவிலே உடைத்தான
நாத யாமுந மத்யமாம்	ஸ்ரீமந் நாதமுனிகளையும், ஆளவந்தாரையும் இடையிலே உடைத்தாய்	குருபரம்பராம் வந்தே	ஆசார்ய பரம்பரையை வணங்காநின்றேன்.

இதுவும் ஆழ்வான் அருளிச்செய்தது

யோநித்யமச்யுதபதாம்புஜயுக்மருக்ம
வ்யாமோஹதஸ் ததிதராணி த்ருணாய மேநே

அஸ்மத்குரோர் பகவதோஸ்ய தயைகலிங்தோ :
ராமாநுஜஸ்ய சரணௌ சரணம் ப்ரபத்யே.

ய :	யாவரொரு எம்பெருமானுர்
நித்யம்	எந்நாளும்
அச்யுத பதாம்புஜ யுக்ம ருக்ம வ்யாமோஹத :	எம்பெருமானது திருவடித் தாமரை யிணைகளாகிற ஸுவர்ணத்திலுள்ளமிருக்க விருப்பத்திலுலே
தத் இதராணி	அத்திருவடிகளுக்குப் புறம்பா யுள்ள விஷயங்களை
த்ருணய மேநே	துரும்பாக நினைத்துத் தள்ளி விட்டாரோ
அஸ்மத் குரோ :	எமக்கு ஆசார்யராய்
பகவத :	ஸமஸ்த கல்யாணகுண பரி பூர்ணராய்
தயா ஏக லிங்தோ :	திருவருட்கடலான
அஸ்ய ராமா நுஜஸ்ய	இந்த எம்பெருமானுருடைய
சரணௌ	திருவடிகளை
சரணம்	உபாயமாக
ப்ரபத்யே	பற்றுகிறேன்.

ஆளவந்தார் அநுஸந்தித்தது

மாதாபிதா யுவதயஸ் தநயா விபூதி :
ஸர்வம் யதேவ நியமேந மதந்வயாநாம்,
ஆத்யஸ்ய ந : குலபதேர் வகுளாபிராமம்
ஸ்ரீமத் ததங்க்ரி யுகளம் ப்ரணமாமி மூர்த்நா.

மத் அந்வயாநாம்	என்னைச் சேர்ந்தவர்களுக்கு
நியமேந	எப்பொழுதும்
மாதா பிதா யுவதய : தநயா ; விபூதி : ஸர்வம்	தாய், தந்தை, மாதர், மக்கள், செல்வம் (மற்றுமுள்ள) எல்லாமும்
யத் ஏவ	யாதொரு ஆழ்வார் திருவடி யேயோ
ந : ஆத்யஸ்ய குலபதே :	நமக்குக் குலகூடஸ்தராகிய ஆழ்வாருடைய
வகுள அபிராமம்	மகிழமலர்களினுல் அழகாயும்
ஸ்ரீமத்	நித்யோழ்வலமாயு மிருக்கிற
தத் அங்க்ரியுகளம்	அந்தத் திருவடியிணையை
மூர்த்நா ப்ரணமாமி	தலையால் வணங்குகின்றேன்.

ஸ்ரீபராசரபட்டர் அநுஸந்தித்தது

பூதம் ஸரச்ச மஹதாஹ்வய பட்டநாத
ஸ்ரீபக்திஸார குலசேகர யோகிவாஹாந்,
பக்தாங்க்ரிரேணு பரகால யதீந்த்ரமிச்ராந்
ஸ்ரீமத்பராங்குசமுநிம் ப்ரணதோஸ்மி நித்யம்.

பூதம்	பூதத்தாழ்வாரையும்
ஸரச் ச	பொய்கை யாழ்வாரையும்
மஹத் ஆஹ்வய பட்ட நாத ஸ்ரீ பக்திஸார குலசேகர யோகிவாஹாந்	பேயாழ்வார் பெரியாழ்வார் திருமழிசை யாழ்வார் குலசேகராழ்வார் திருப்பா ணாழ்வார் இவர்களையும்
பக்தாங்க்ரிரேணு பரகாலயதீந்த்ர மிச்ராந்	தொண்டரடிப்பொடியாழ்வார் திருமங்கையாழ்வார் எம் பெருமானுர் இவர்களையும்
ஸ்ரீமத்பராங் குசமுநிம்	நம்மாழ்வாரையும்
நித்யம்	நாள்தோறும்
ப்ரணத: அஸ்மி	ஸேவிக்கிறேன்

ஆழ்வார்கள் பதின்மரையும் ஆசாரியர்களில் முக்கியரான எம்பெருமானுரையும் சேர்த்து அநுஸந்திக்கும் ச்லோகமாமிது. இதில், பொய்கையார் பூதத்தார் பேயார் என்கிற முறைமைப்படியே திருநாமங்களைப் பயிலாமல் பூதத்தாழ்வாரை முன்னே பதிக்கும் நம்மாழ்வாரை முடிவிற் பதிக்துமிருப்பது ச்லோகம் கூடினவகையிலே அமைத்த அமைதியு என்று நினைத்திடுவர் சிலர். அங்ஙனன்று ; "காஸார பூத மஹதாஹ்வய பக்தி ஸராந், ஸ்ரீமச்சடாரி குலசேகர பட்டநாதாந், பக்தாங்க்ரிரேணு முநிவாஹந கார்த்திகேயாந் ராந் துஜஞ்ச யமிநம் ப்ரணதோஸ்மி நித்யம்" என்று அடைவுபடக் கவி சொல்லுவதில்

அருமையொன்றுமில்லை: ஆயினும், பூதத்தாழ்வார் தொடங்கி நம்மாழ்வார் முடிவாக அமைக்கப்பட்ட இந்த ப்ரக்ரியைக்கு நல்ல நியாயகம் ஒன்றுண்டு கேண்மின்—

ஆழ்வார்களுள் முக்கியரான நம்மாழ்வாரை அவயவியாகவைத்து மற்றுள்ள ஆழ்வார்களை அவர்க்குத் திருமுடி திருக்கண் முதலிய அவயவங்களாக வைத்துப் பூருவாசாரியர்கள் ச்லோகங்களருளிச் செய்துள்ளார்கள். அவற்றில் பூதத்தாழ்வாரைத் திருமுடியாகவும், பொய்கை பேயாழ்வார்களைத் திருக்கண்களாகவும், பட்டர்பிரானைத் திருமுகமாகவும், திருமழிசைப்பிரானைத் திருக்கழுத்தாகவும், குலசேகரப்பெருமாளையும் திருப்பாண்பெருமாளையும் திருக்கைகளாகவும், தொண்டரடிப்பொடிகளைத் திருமார்பாகவும், கலியனைத் திருநாபியாகவும், எதிராசனைத் திருவடியாகவும் உருவகப்படுத்தியிருத்தலால் அந்த ப்ரக்ரியைக்கு ஏற்ப இந்தத் தனியன் திருவவதரித்ததென்று பெரியார் கூறுவர். அவயவபூதர்களை முந்துற வரிசையாகச் சொல்லி, அவயவியான ப்ரபந்நஜநகூடஸ்தரை முடிவில் சொல்லியிருப்பது இவ்வகையிலே நன்கு பொருந்துமென்றுணர்க. பட்டர் திருக்கோட்டியூரிலே எழுந்தருளியிருக்கும்போது நஞ்சீயருடைய பிரார்த்தனையினால் அருளிச்செய்த ச்லோகமிது.

பொதுத்தனியன்களின் உரை முற்றிற்று.

திருப்பல்லாண்டு, பெரியாழ்வார் திருமொழிகளின்

தனியன்கள்

(ஸ்ரீமங்நாதமுனிகள் அருளிச்செய்தது.)

குருமுகமநதீத்ய ப்ராஹ வேதாநசேஷாந்
நரபதிபரிக்ல்ப்தம் சுல்கமாதாதுகாம:,
ச்வசுரமமரவந்த்யம் ரங்கநாதஸ்ய ஸாக்ஷாத்
த்விஜகுலதிலகம் தம் விஷ்ணுசித்தம் நமாமி.

ய:	யாவரொரு பெரியாழ்வார்
நரபதி பரிக்ல்ப்தம்	வல்லபதேவனென்கிற அரசனால் ஏற்படுத்தப்பட்ட
சுல்கம்	பந்தயப் பொருளாகிய பொற்கிழியை
ஆதாது காம:	க்ரஹிக்க எண்ணமுடையவராய்
குருமுகம் அதீத்ய	ஆசார்யமுகமாக ஒரு கல்வியும் கற்காமலே
அசேஷாந் வேதாந்	(பரதத்துவ நிர்ணயத்திற்கு வேண்டிய) வேதங்களெல்லாவற்றையும்
ப்ராஹ	(பகவத் திருவுளத்தினால்) எடுத்துரைத்தாரோ,
அமர வந்த்யம்	தேவர்களினால் வணங்கத்தகுந்தவரும்
ரங்கநாதஸ்ய ஸாக்ஷாத் ச்வசுரம்	ஸ்ரீரங்கநாதனுக்கு நேராக மாமனாரும்
த்விஜகுலதிலகம்	ப்ராமண குலத்திற்குத் திலகம் போன்றவருமான
தம் விஷ்ணுசித்தம்	அப்பெரியாழ்வாரை
நமாமி	வணங்குகிறேன்.

பாண்டியபட்டர் அருளிச்செய்தவை.

மின்னார் தடமதிள்சூழ் வில்லிபுத்தூ ரென்றிருகால்
சொன்னார் கழற்கமலஞ் சூடினேம்—முன்னாள்
கிழியறுத்தா னென்றுரைத்தோங் கீர்மையினிற் சேரும்
வழியறுத்தோம் நெஞ்சமே வந்து.

மின் ஆர்	"ஒளி நிறைந்த
தட	பெரிய
மதில்	திருமதிலாலே
சூழ்	சூழப்பட்ட
வில்லிபுத்தூர் என்று	ஸ்ரீ வில்லிபுத்தூர்" என்று
ஒருகால் சொன்னர்	ஒருதரம் உச்சரித்தவருடைய
கழல் கமலம்	திருவடித் தாமரைகளை
சூடினேம்	சிரமேற்கொண்டோம்;
முன் நாள்	"புருஷார்த்தம் வெளியாகாத முற்காலத்தில்

(பரதத்துவ நிர்ணயம் பண்ணி)

கிழி	பொருள் முடிப்பை
அறுத்தான் என்று	அறுத்தருளினர்" என்று
உரைத்தோம்	சொல்லப்பெற்றோம்;
நெஞ்சமே	ஓ நெஞ்சே!
வந்து	நீ அநுகூலமாய் வரப்பெற்று
கீழ்மையினில்	அதோகதியாகிற நரகத்தில்
சேரும்	சேருகைக்குடலான
வழி	வழியை
அறுத்தோம்	அறப்பண்ணினோம்.

பாண்டியன் கொண்டாடப் பட்டர்பிரான் வந்தானென்று
ஈண்டிய சங்க மெடுத்தூத—வேண்டிய
வேதங்க ளோதி விரைந்து கிழியறுத்தான்
பாதங்கள் யாமுடைய பற்று.

பாண்டியன்	வல்லபதேவ னென்கிற பாண்டிய ராஜன்
கொண்டாட	ப்ரசம்ஸிக்க,
பட்டர்பிரான்	"ப்ராஹ்மணர்களுக்கு உபகாரகரான பெரியாழ்வார்
வந்தான் என்று	எழுந்தருளினர்" என்று
ஈண்டிய	நிரல்நிரளான
சங்கம்	சங்குகளை
எடுத்து	கையில்கொண்டு
ஊத	(பலர்) ஊத,
வேண்டிய்	(விஷ்ணு பாரம்யஸ்தாபகத்துக்கு) ஆவச்யகங்களான

வேதங்கள்	வேதவாக்கியங்களை
ஓதி	உபந்யஸித்து
விரைந்து	விளம்பியாமல் [த்வரித்து]
கிழி	வித்யாசுல்கமாக வைத்த பொருள் முடிப்பை
அறுத்தான்	அறுத்தருளின பெரியாழ்வாருடைய
பாதங்கள்	திருவடிகளானவை
யாமுடைய	நமக்கு
பற்று	புகலிடம்.

★ தனியன் உரை முற்றிற்று. ★

ஸ்ரீ:

பெரியாழ்வார் வைபவச்சுருக்கம்

ஸ்ரீ வில்லிபுத்தூரில் அத்தணர் குலத்திலே ஆனிமாதத்து ஸ்வாதிநக்ஷத்திரத்தில் அவதரித்து விஷ்ணுசித்தரென்னும் திருநாமமுடையராயிருந்த இவ்வாழ்வார் அவ்வூர்ப் பெருமாளுக்கு நந்தவனமமைத்துத் திருமாலைகட்டிச் சாத்துபவராயிருந்தார். அக்காலத்து, தென்மதுரையரசனை வல்லபதேவன் நற்கதி கண்ணும் வழியைச் சிந்தித்துத் தன் புரோஹிதனை செல்வநம்பியின் உபதேசத்தினால் பல வித்வான்களையும் நிரட்டிப் பரதத்துவநிர்ணயம் பண்ணுவிக்க விரும்பி, மதுரையில் ஒரு பெரியஸ்தலத்தில் அபாரமான பணத்தை வித்யாசுல்கமாகக் கிழிச்சீரையில்வைத்துப் பலவிடங்களிலுமுள்ள பண்டிதர்களுக்கு அழைப்புப்பத்திரிகை யனுப்பினன். இவ்வாழ்வாரைக்கொண்டு பரதத்துவ நிர்ணயம் செய்விக்க விரும்பிய ஸ்ரீ வில்லிபுத்தூர்ப் பெருமாள் கனவிலே இவர்க்கு நியமனம் தந்தருளி, இவர் ஸர்வஜ்ஞராம்படியான விசேஷகடாக்ஷமும் செய்தருளி மதுரை வித்வத்ஸபைக்கு இவரையனுப்ப, இவரும் கம்பீரமாய் எழுந்தருளி ஸ்ரீமந்நாராயணனே பரமபுருஷனென்று சுருதி ஸ்மிருதி இதிஹாஸ புராணங்களைக்கொண்டு பலவாறு உபந்யஸித்து அக்கிழியை அறுத்துக்கொண்டார். இங்ஙனம் பரதத்துவ நிர்ணயஞ் செய்தருளின இவ்வாழ்வாருக்கு அரசன் யானையின்மீது மஹோத்ஸவம் செய்விக்க, பரமபதநாதனை எம்பெருமான் இம் மஹோத்ஸவத்தைத் தானும் கண்டு களிக்க விரும்பிப் பரிஜநபரிவாரங்களோடு கருடன்மீது எழுந்தெருளுகிற்க, ஆழ்வார் ஸேவித்து வியந்து யானைமணிகளைத் தாளமாகக்கொண்டு பல்லாண்டு பாடினர். பிறகு விசேஷ பஹுமானம் பெற்று ஸ்ரீ வில்லிபுத்தூர்க்கு எழுந்தருளி மதுரைபிற் கிடைத்த பொருள்களையெல்லாம் பகவானுக்கே ஸமர்ப்பித்துப் 'பெரியாழ்வார் திருமொழி' என்னும் திவ்ய ப்ரபந்தத்தை அருளிச்செய்து முன்போலவே நந்தவனத் திருப்பணியில் நிரதராயிருந்து வாழ்ந்து விளங்கினர்.

—பெரியாழ்வார் வைபவச்சுருக்கம் முற்றிற்று.



அடியேன் செய்யும் விண்ணப்பம். சென்னைத் தொண்டமண்டலம் கலாசாலையில் ஸ்தாபிக்கப்பட்டு நடந்துவருகின்ற பகவத்கதா பிரஸங்க ஸபையின் சார்பாக 1931வது வருஷம் ஜூலைமாதம் முதலாக [பதின்மூன்று வருஷ காலமாக] சனி ஞாயிற்றுக்கிழமைகளிலும் மற்றும் மார்கழித்திங்கள் முதலிய விசேஷ ஸந்தர்ப்பங்களிலும் அடியேன் உபந்யாஸங்கள் நடத்திவருவது பக்தர்களனைவருமறிந்ததே. "பொலிக பொலிக பொலிக" என்றும் "கண்டோம் கண்டோம் கண்டோம் கண்ணுக்கினியன கண்டோம்" என்றும் வாயார வாழ்த்தி மகிழும்படியாக ஷே ஸபையில் தொண்டர்கள் குழாம் குழுமியிருந்து அநுபவிக்கின்றவநுபவம் இக்கிலவுலகில் கெடுகாள்வரையில் நிலவும்படியாக—ஷே ஸபைக்கு நிரந்தர ஞாபகசின்னமாக நம்ஆழ்வாராசாரியர்களின் ஸ்ரீ ஸூக்திகளுக்கெல்லாம் எளிய தெளிய வுரைகளை யெழுதியச்சிட்டு ஷே ஸபையின் வாயிலாகவே வெளியிடவேணு மென்கிற விருப்பம் அடியேனுக்கு உண்டானபடியால், முதலில் நாலாயிர திவ்யப்பிரபந்த வுரை வெளியிடப்படுகின்றது. இது முடிவுபெற்றவுடனே ஆசாரியர்களின் ஸ்ரீஸூக்திகளுக்கெல்லாம் இதேவிதமான உரை ஸபையின் மூலமாகவே வெளியிடப்பெறும்.

"தமை கல்ல வின்பத்தலைப் பெய்தெங்குந் தழைக்கவே".

இங்ஙனம்

ஸ்ரீ வைஷ்ணவதாஸன்

ஸ்ரீ காஞ்சி. பிரதிவாதிபயங்கரம்

அண்ணங்கராசார்யதாஸன்

ஸ்ரீரஸ்து. ஸ்ரீமதேராமாநுஜாய நம :

முன்னுரை

ஜம்மாந்தர ஸஹஸ்ர நற்றவங்களின் பலனாக ஸ்ரீவைஷ்ணவ குலத்தில் ஜனிக்கப்பெற்றவர்கள் தங்களுடைய பிறப்பைப் பெருமைப்படுத்திக்கொள்ளவேண்டுவதற்காக முக்கியமாய்த் தெரிந்து கொள்ளவேண்டிய விஷயங்கள் கேண்மின்.

எம்பெருமானுடைய விபவாவதாரங்களும் அர்ச்சாவதாரங்களும் எண்ணிறந்தவை. பக்த சிகாமணிகளான ஆழ்வார்களின் திருவாக்கில் புகுந்து புறப்பட்ட அர்ச்சாவதாரங்களே திவ்யதேசங்கள் என வழங்கப்பெறும்.

திவ்ய என்கிற பதத்தை நமது பெரியோர்கள் ப்ரமாண ப்ரமேய ப்ரமாதாக்களில் தகுதி நோக்கி வெகு அழகாக உபயோகப்படுத்தியுள்ளார்கள். எம்பெருமானைப்பற்றித் தெரிவிக்கும் நூல்கள் எல்லாவற்றினுள்ளும் தமிழ்வேதமே சிறந்ததென்கிற கருத்தினால் அதனைத் திவ்யப்ரபந்தம் என்றார்கள். அந்த திவ்யப்ரபந்தங்களைப் பாடினவர்களை திவ்யஸூரிகள் என்றார்கள். திவ்யஸூரிகளால் திவ்யப்ரபந்தங்களில் மங்களாசாஸனம் செய்யப்பெற்ற தலங்களையே திவ்யதேசம் என்றார்கள். இது எவ்வளவு திவ்யமான அமைப்பு.

திவ்யஸூரிகளான ஆழ்வார்கள் பதின்மர். 1. பொய்கையாழ்வார். 2. பூதத்தாழ்வார். 3. பேயாழ்வார். (இம்மூவரையும் முதலாழ்வார்களென்று கூறுவது ஸம்பிரதாயம்) 4. திருமழிசையாழ்வார். 5. நம்மாழ்வார். 6. குலசேகராழ்வார். 7. பெரியாழ்வார். 8. தொண்டரடிப்பொடியாழ்வார். 9. திருப்பாணாழ்வார். 10. திருமங்கையாழ்வார்.

நம்மாழ்வாருடைய சிஷ்யரான மதுரகவியாழ்வாரையும் பெரியாழ்வாருடைய திருமகளாரான சூடிக்கொடுத்த நாச்சியாரென்கிற ஆண்டாளையும் சேர்த்து "ஆழ்வார்கள் பன்னிருவர்" என்று வழங்குதலுமுண்டு. ஆண்டாள் ஸ்ரீமஹாலக்ஷ்மியின் அமிசமாகத்தோன்றியவளாதலால் பிராட்டிமார் வகுப்பில் எண்ணப்பட்டவளாயிருந்தும், திவ்யப்ரபந்தமருளிச்செய்த காரணத்தினால் ஆழ்வார்கள் கோஷ்டியிலும் எண்ணத்தகுதியுடையாள்.

மதுரகவிகள் எம்பெருமான் விஷயத்தில் ஒன்றும் பாடாமல் நம்மாழ்வார் விஷயமாகவே பத்துப் பாசுரம் பாடியிருந்தாலும் இவருடைய பிரபந்தத்தையும் திவ்யப்ரபந்தகோஷ்டியிலே சேர்த்து, இவரையும் திவ்யஸூரி கோஷ்டியிலே சேர்த்தார்கள் பூருவாசாரியர்கள். ஆகவே இவர் மதுரகவியாழ்வாராயினர்.

1. பொய்கையாழ்வார். இவர் காஞ்சிபுரத்தில் திருவெஃகா என்கிற ஸ்ரீயதோக்தகாரி ஸந்நிதியைச் சேர்ந்த பொய்கையில் ஐப்பசியில் திருவோணத்தில் அவதரித்து 100 பாசுரங்கள் கொண்ட (முதல்) திருவந்தாதியை அருளிச் செய்தார்.

2. பூதத்தாழ்வார். திருக்கடன்மல்லையில் ஐப்பசியில் அவிட்டத்தில் அவதரித்து 100 பாசுரங்கள் கொண்ட (இரண்டாம்) திருவந்தாதியை அருளிச்செய்தார்.

3. பேயாழ்வார். மயிலையில் ஐப்பசியில் சதயத்தில் அவதரித்து 100 பாசுரங்கள் கொண்ட (மூன்றும்) திருவந்தாதியை அருளிச் செய்தார். இம்மூவரும் திருக்கோவலூரில் சந்தித்தவர்கள்.

4. திருமழிசையாழ்வார். திருமழிசையில் தையில் மகத்தில் திருவவதரித்து 96 பாசுரங்கள் கொண்ட (நான்முகன்) திருவந்தாதியையும் 120 பாசுரங்கொண்ட திருச்சந்தவிருத்தத்தையும் அருளிச் செய்தார்.

5. நம்மாழ்வார். திருக்குருகூரில் வைகாசியில் விசாகத்தில் திருவவதரித்து திருவிருத்தம் பாசுரம் (100) திருவாசிரியம் (7) பெரிய திருவந்தாதி (87) திருவாய்மொழி (1102) ஆகிய நான்கு திவ்யப் பிரபந்தங்களை அருளிச்செய்தார்.

6. மதுரகவியாழ்வார். ஆழ்வார்திருநகரிக்கு ஸமீபத்திலுள்ள திருக்கோளூரில் சித்திரைமீ சித்திரை நக்ஷத்திரத்தில் திருவவதரித்து "தேவுமற்றறியேன்" என்று நம்மாழ்வாரைத் தவிர வேறு தெய்வமறியாதவராய் ஆழ்வார்விஷயமாக 11 பாசுரங்கொண்ட கண்ணிநுண்சிறுத்தாம்பை அருளிச் செய்தார்.

7. குலசேகராழ்வார். திருவஞ்சிக்களத்தில் மாசிப்புனர்பூசத்தில் அவதரித்து 105 பாசுரங்கள் கொண்ட பெருமாள் திருமொழியை அருளிச்செய்தார்.

8. பெரியாழ்வார் ஸ்ரீ வில்லிபுத்தூரில் ஆனி ஸ்வாதியில் அவதரித்து 12 பாசுரங்கொண்ட திருப்பல்லாண்டையும் 461 பாசுரங்கொண்ட "பெரியாழ்வார் திருமொழி" என வழங்கும் பிரபந்தத்தையும் அருளிச்செய்தார்.

9. ஆண்டாள். ஸ்ரீ வில்லிபுத்தூரில் திருவாடிப்பூரத்தில் பெரியாழ்வார் திருமகளாய்த்தோன்றிச் சூடிக்கொடுத்த நாச்சியார் என்று திருநாமம் பெற்று 30 பாசுரங்கொண்ட திருப்பாவையும் 143 பாசுரங் கொண்ட நாச்சியார் திருமொழியையும் அருளிச்செய்தாள்.

10. தொண்டரடிப்பொடியாழ்வார். மண்டங்குடியில் மார்கழிக் கேட்டையில் திருவவதரித்து 10 பாசுரங்கொண்ட திருப்பள்ளியெழுச்சியும் 45 பாசுரங்கொண்ட திருமாலையும் அருளிச்செய்தார்.

11. திருப்பாணாழ்வார். உறையூரில் கார்த்திகை ரோகிணியில் திருவவதரித்து 10 பாசுரங் கொண்ட அமலனாதிபிரான் அருளிச்செய்து அழகிய மணவாளனுடைய திருமேனியில் அந்தர்த்தான் மடைந்தனர். முனிவாஹநர் என்பதும் இவரையே.

12. திருமங்கையாழ்வார். திருவாலி திருநகரியைச்சார்ந்த திருக்குறையலூரில் கார்த்திகையில் கார்த்திகைநாளில் திருவவதரித்து, நம்மாழ்வார் அருளிய நான்கு வேதஸாரமாகிய நான்கு திவ்யப்பிரபந் தங்களுக்கு ஆறு அங்கம்போன்ற ஆறு திவ்யப்பிரபந்தங்களை யருளிச்செய்தார்.

(1)	பெரிய திருமொழி.	1084.	(4)	சிறியதிருமடல்.	1.
(2)	திருக்குறுந்தாண்டகம்.	20	(5)	பெரியதிருமடல்.	1.
(3)	திருவெழு கூற்றிருக்கை.	1	(6)	திருநெடுந்தாண்டகம்.	30.

இவ்வாழ்வார்கள் யாவரும் நம்மாழ்வார்க்கு அவயவபூதர்களென்றும், நம்மாழ்வாரே ப்ரதான பூதரான அவயவியென்றும் ஸம்ப்ரதாயம். ஆசார்ய கோஷ்டியில் சேர்ந்த உடையவரையும் நம்மாழ்வா ருடைய அவயவங்களில் திருவடியாக நிர்வஹித்தார்கள். ஆனதுபற்றியே நம்மாழ்வாருடைய பாதுகைக்கு இராமானுசன் என்றே திருநாமம். இவர் விஷயமாகத் திருவரங்கத்தமுதனார் அருளிச்செய்த இராமானுச நூற்றந்தாதியும் திவ்யப்ரபந்தத் திரளிலே பரிகணிதமாயிற்று. இதை ப்ரபந்நகாயத்ரீ என்பர்கள்.

ஆக, மேற்குறித்த திவ்ய ப்ரபந்தங்களெல்லாம் நாலாயிர திவ்ய ப்ரபந்தமென்று ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் ப்ரஸித்தி பெற்றுள்ளன. இவற்றுக்குப் பூருவசாரியர்களால் மிகவும் கம்பீரமான நடையில் அரிய பெரிய வியாக்யானங்கள் அருளிச்செய்யப்பட்டிருப்பது ப்ரஸித்தம். அவற்றில் அந் வயிக்க ஸைகரியமற்றவர்களுக்கு உபயோகப்படுமாறு அந்த பூருவாசார்ய வியாக்யானங்களைத் தழுவியே அடியேனால் எளிய தெளிய நடையில் எழுதப்பட்டுள்ள உரை வெளிவருகின்றது காணீர். இவ்வுரையிலுள்ள குற்றங்குறைகளை அறிவிற் சிறந்த பெரியார்கள் இயற்கையின்னருளால் பொறுத் தருள்வாராக.

இங்ஙனம்;

ஸ்ரீ வைஷ்ணவதாஸன்

ஸ்ரீ காஞ்சீ. பிரதிவாதிபயங்கரம்

அண்ணங்கராசார்ய தாஸன்

ஸுபாநு ஸ்ரீ

தைமீ முதல் தேதி

ஸ்ரீ:

திருப்பல்லாண்டு முன்னுரை

இப்பிரபந்தத்திற்குத் திருப்பல்லாண்டென்று திருநாமம் வழங்குதற்குக் காரணம் யாதெனில்; ஒவ்வொரு பாசுரத்திலும் பல்லாண்டு பல்லாண்டு என்றுசொல்லி மங்களாசாஸநம் செய்திருப்பதனால் அதனையே நிருபகமாக்கிப் பல்லாண்டு என்று திருநாமம் சாத்தினர். திரு என்பது வடமொழியில் ஸ்ரீசப்தம்போல் மேன்மையையுணர்த்தும்; மேன்மைதங்கிய மங்களாசாஸந ப்ரபந்தம் என்றபடி. இப்பிரபந்தம் பல்லாண்டென்று தொடங்கப்படுதலால் முதற்குறிப்பு என்னு மிலக்கணத்தால் திருப் பல்லாண்டெனத் திருநாமம் பெற்றதென்னவுமாம்.

அவாப்த ஸமஸ்தகாமனென்றும் ஸர்வரக்ஷகனென்றும் ப்ரஸித்தனான ஈச்வரனைக்கண்டால் தமக்கு வேண்டிய மங்களங்களை அவனிடத்தில் பிரார்த்தித்துப் பெறவேண்டியிருக்க, தாம் அவனுக்கு மங்களமுண்டாகுமாறு ஆசாஸிப்பது தகுதியோவென்னில்; பகவத்கிருபையினால் கிடைத்த பக்தியினால் அந்த பகவானுடைய ஸர்வரக்ஷகத்வம் முதலான குணங்களை அடியோடு மறந்து 'பகவானுக்குக் குறையொன்றுமில்லாமலிருப்பதே நமக்கு மங்களம்' என்று இவ்வாழ்வார் நினைத்து மங்களா சாஸனம் பண்ணுகிறார் என்றுணர்க.

மற்றுள்ள ஆழ்வார்களுக்கும் மங்களாசாஸநத்தில் ஊற்றமிருந்தாலும் அவர்களுக்கு அது எப்போதோ ஒருகாலுள்ளதேயன்றி இப்பெரியாழ்வார்க்குப்போலே நித்யமாயும் முக்யமாயுமிராது. அவர்கள் எம்பெருமானை ரக்ஷகனைப்பற்றி அவனிடத்தில் தங்களுடைய வாழ்ச்சியைப் பெறுவதற்கு விரும்புவார்கள். இவ்வாழ்வார் அப்படியில்லாமல் எம்பெருமானுடைய வாழ்வையே தமக்கு வாழ்வாக நினைத்துப் பெருமானுக்கு என்ன தீங்குவருகிறதோவென்று பயப்பட்டுக் காப்பிடத்தேடுகிற பரமபக்த ராவர். ஆனதுபற்றியே மற்றுள்ள ஆழ்வார்களைவிட மிக்க பெருமையுடையவரானது காரணமாகவே இவர்க்குப் பெரியாழ்வாரென்று ப்ரஸித்தியுண்டாயிற்று.

ஸ்ரீ:

பெரியாழ்வார் அருளிச்செய்த

திருப்பல்லாண்டு

1. பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு *
பலகோடி நூறாயிரம்
மல்லாண்ட திண்டோள் மணிவண்ணர் * உன்
சேவடி செவ்விதிருக் காப்பு. (க)

மல் ஆண்ட	மல்லர்களை நிரஸித்த	பல் ஆயிரம் ஆண்டு	அநேக ப்ரஹ்மகல்பங்களிலும்
நின் தோள்	நிண்ணிய தோள்களை யுடையனாய்	பல கோடி நூறு ஆயிரம்	இப்படி உண்டான காலமெல்லாம்
மணி வண்ணன்	நீலமணிபோன்ற திருநிறத்தை யுடையனாவனே!	உன் சே அடி செவ்வி	உன்னுடைய சிவந்த திருவடிகளினுடைய அழகுக்கு
பல் ஆண்டு பல் ஆண்டு	பலபல வருஷங்களிலும்	திருக்காப்பு	குறைவற்ற ரக்ஷை உண்டாயிடுக.

* * *—பாண்டியராஜனுடைய பண்டிதஸபையிலேவந்து பரதத்வநிர்ணயம் பண்ணின பெரியாழ்வார்க்கு அவ்வரசன் யானையின் மேலே மஹோத்ஸவம் செய்வித்தபோது அந்த உத்ஸவத்தைக்கண்டு ஆனந்திப்பதற்காக ஸ்ரீ வைகுண்டநாதன் ஸபரிவாரனாய் எழுந்தருளி எதிரே ஸேவைஸாதிக்க, ஆழ்வார் ஸேவித்து 'இந்த அருமருந்தன்ன எம்பெருமானுக்கு எழும்பூண்டெல்லாம் அஸுர ராக்ஷஸமயமாயிருக்கிற இந்நிலத்திலே யாராலே என்ன தீங்கு விளைகிறதோவென்று அதிசங்கைப்பட்டு 'ஒரு அமங்களமும் கேரிடாதபடி மங்களமேயாயிருக்கவேணும்' என்று பல்லாண்டு பாடுகிறார். அதாவது—ஜயவிஜயீபவ' என்கிறார்.

ஆழ்வார் இப்படி அதிசங்கையாலே மங்களாசாஸநம் பண்ணுகிறரென்று தெரிந்துகொண்ட எம்பெருமான் 'ஐயோ! ஏன் இவர் இப்படி பயப்படுகிறார்? எப்படிப்பட்ட எதிரிகளையும் ஒரு விரல் நுனியாலே வென்றெழிக்கவல்ல தேஹவலிவு நமக்கு உண்டென்பது இவர்க்குத் தெரியவில்லை போலும்; அந்த வலிவைக் காட்டினேமாகில் இவருடைய அச்சம் அடங்கிவிடும்' என்று நினைத்து, முன்னே க்ருஷ்ணவதாரகாலத்தில் தன்னைக் கொல்லும்படி கம்ஸனால் ஏவப்பட்டுவந்த சாணூரன் முஷ்டிகன் முதலிய மல்லர்களை நூறுக்கித் தள்ளின தன்னுடைய புஜபலத்தைக் காட்டினான்; ஆழ்வாருடைய அச்சம் தணிவதற்காகக் காட்டின அந்த வலிவு ஆழ்வாருடைய பயம் அதிகரிப்பதற்கே காரணமாயிற்று. புத்திரன் சூரனாயிருந்தால் அவனுடைய தாயானவள் 'இவன் ஒருவரையும் லக்ஷியம் பண்ணமல் யுத்தம் செய்யப் போய்விடுவனே! யாராலே என்ன கெடுதி நேர்ந்துவிடுமோ' என்று பயப்படுவதுபோல் இவரும் அந்த மல்லர்மீட தீம்டோள் வலிமைக்குப் பயப்பட்டு மீண்டும் மங்களாசாஸனம் பண்ணுகிறார். (க)

2. அடியோமோடும்நின்னேடும் பிரிவின்றியாயிரம்பல்லாண்டு *
வடிவாய்நின்வலமார்பினில் வாழ்கின்றமங்கையும்பல்லாண்டு *
வடிவார்சோதிவலத்துறையும் சுடராழியும்பல்லாண்டு *
படைபோர்புக்குமுழங்கும் அப்பாஞ்சசன்னியமும்பல்லாண்டே. (2)

அடியோமோடும் — தாஸபூதர்களாய் அடியேன் தொடக்கமாயுள்ள சேதநர்களோடும்
நின்னேடும் — ஸ்வாமியான தேவரோடும்
பிரிவு இன்றி — பிரிவில்லாமல்
ஆயிரம் பல்லாண்டு — (இந்த ஸம்பந்தம்) நித்யமாய்ச் செல்லவேணும்.
வடிவு ஆய் நின் வல மார்பினில் வாழ்கின்ற — (உனக்கு) நிரூபக பூதையாய் உன்னுடைய திருமார்பின் வலது பக்கத்தில் பொருந்தியிரா நின்றுள்ள
மங்கையும் — நித்யயௌவந சாலினியான பெரிய பிராட்டியார் தொடக்கமான நாய்ச்சிமார்களும்
பல்லாண்டு—;

வடிவு ஆர் சோதி வலத்து உறையும் சுடர் ஆழியும் — உன் திருமேனியை வ்யாபித்திருக்கிற ஜ்யோதிஸ்ஸையுடையனுய் வலத்திருக்கையிலே நித்யவாஸம் பண்ணுமவனுய் பகைவரை எரிக்குமவனான திருவாழியாழ்வானும்
பல்லாண்டு—;
படை போர் புக்கு முழங்கும் அ பாஞ்ச சன்னியமும் — சேனைகளையுடைய யுத்தங்களில் புகுந்து கோஷிக்கின்ற அளவற்ற பெருமையையுடைய ஸ்ரீ பாஞ்சஜந்யாழ்வானும்
பல்லாண்டு—. [ஏ—ஈற்றசை.]

* * *—சேஷபூதர்களான அடியோங்களும் ஸர்வசேஷியான தேவரீரும் ஒருவரையொருவர் விட்டுப் பிரியாமல் கெடுகாளளவும் மங்கலமாக வாழவேணும்; பெரியபிராட்டியாரும் தேவரீருமான சேர்ந்தி எப்போதும் மாருமல் நித்யவாழ்ச்சியாகச் செல்லவேணும்; திருவாழியாழ்வானும் திருச்சங்காழ்வானும் குறையொன்றுமின்றி வாழவேணும் என்று இப்பாட்டால் உபய விபூதிகளோடும் கூடின நிலைமைக்கு மங்களாசாஸனம் பண்ணுகிறார். "அடியோமோடும்" என்று இந்த லீலாவிபூதியிலிருக்கிற தங்களையும், மற்ற மூன்றடிகளாலே, பரமபதமாகிய நித்யவிபூதியிலுள்ள பெரியபிராட்டியார் முதலான வர்களையும் இப்பாட்டில் கூறியிருப்பதனால் உபயவிபூதியுக்தனை எம்பெருமானுக்கு இப்பாசுரத்தால் பல்லாண்டு பாடினராயிற்று. இரண்டு பாட்டுக்களையும் சேர்த்தே அநுஸந்திப்பர். (2)

3. வாழாட்பட்டுநின்றீருள்ளீரேல் வந்துமண்ணும்மணமும்கொண்மின் *
கூழாட்பட்டுநின்றீர்களே யெங்கள்குழுவினில்புகுதலோட்டோம் *
ஏழாட்காலும்பழிப்பிலோம்நாங்கள் இராக்கதர்வாழ் * இலங்கை
பாழாளாகப்படைபொருதானுக்குப் பல்லாண்டுகூறுதுமே. (ந)

வாழ் ஆள் பட்டு — உஜ்ஜீவிப்பதற்கு உறுப்பான (எம்பெருமானுடைய) அடிமைத் தொழிலில் ஈடுபட்டு
நின்றீர் — நிலைத்து நின்றவர்கள்
உள்ளீர் எல் — இருப்பீர்களாகில்
வந்து — (நீங்கள் எங்களோடே) வந்து சேர்ந்து
மண்கொள்மின் — (எம்பெருமானுடைய உத்ஸவார்த்தமான திருமுளைத் திருநாளுக்குப்) புழுதிமண் சுமவுங்கள்;

மணமும் கொள்மின்	(அந்த உத்ஸவத்துக்கு) அபிமானிகளாகவும் இருங்கள்;
கூழ் ஆள்பட்டு நின்றீர்களீர்	சோற்றுக்காக (ப்பிறரிடத்தில்) அடிமைப்பட்டிருப்பவர்களீர்
எங்கள்குழுவினில் புகுதல் ஒட்டோம்	எங்களுடைய கோஷ்டியிலே அங்கீகரிக்கமாட்டோம்; (எங்களுக்குள்ள சிறப்பு என்னவென்கிறீர்களோ,)
காங்கள்	காங்களோ வென்றால்
ஏழ் ஆள் காலும்	ஏழு தலைமுறையாக
பழிப்பு இலோம்	ஒருவகைக் குற்றமும் இல்லாதவர்கள்; (எங்களுடைய தொழிலோவென்னில்)
இராக்கதர் வாழ் இலங்கை	ராக்ஷஸர் வஸிக்கிற லங்கையிலிருந்த
ஆள்	ஆண்புலிகள் யாவரும்
பாழ் ஆக	வேரோடே அழிந்துபோம்படி
படை	(வாநர) சேனையைக் கொண்டு
பொருதானுக்கு	போர்செய்த பெருமாளுக்கு
பல்லாண்டு கூறுதும்	பல்லாண்டு பாடுகிறவர்களாயிருக்கின்றோம்.

* * *—இவ்வாழ்வார் தனியாயிருந்து மங்களாசாஸநம் பண்ணுவதில் த்ருப்திபெறாமலும், 'போக்யமான வஸ்துவைத் தனியே அநுபவிப்பது தகாது' என்கிற நியாயத்தைக் கொண்டும் இன்னும் பலபேர்களையும் மங்களாசாஸநத்திற்குத் துணைகூட்டிக்கொள்ளவேணுமென்று நினைத்தார்; உலகத்தில் எத்தனை வகையான அதிகாரிகள் இருக்கிறார்களென்று ஆராய்ந்து பார்த்தார்; செல்வத்தை விரும்புமவர்கள், ஆத்மாநுபவமாகிற கைவல்யத்தை விரும்புமவர்கள், எம்பெருமானுடைய அநுபவத்தை அபேக்ஷிப்பவர்கள் என்றிப்படிப்பட்ட அதிகாரிகள் இருப்பதைக்கண்டார்; இம்மூவகை யதிகாரிகளில் செல்வத்தை விரும்புமவர்களும் கைவல்யத்தை விரும்புமவர்களும் ப்ரயோஜநாந்தரபரர்களா யிருந்தாலும் அந்த அற்ப பலனுக்காகவாவது எம்பெருமானைப் பணிந்து ப்ரார்த்திக்கிறார்களாகையால் அவர்களையும் திருத்திப் பணிகொள்ளலாமென்று ஆழ்வார் நிச்சயித்து மேற்சொன்ன மூவகை யதிகாரிகளையும் மங்களாசாஸநத்துக்கு அழைக்க விரும்பி, முதல்முதலாக எம்பெருமானுடைய அநுபவத்தையே விரும்புமவர்களான ஜ்ஞாநிகளை அழைக்கிறார்.

[மண்ணும் மணமும் கொண்மின்.] மண் கொள்ளுகையாவது—மஹோத்ஸவத்திற்கு ஆக வேண்டிய ஸகலகாரியங்களையும் நிர்வஹிக்கை. மணங்கொள்ளுகையாவது—அதில் அபிமானங் கொண்டிருக்கை. முற்காலத்தில் அடிமையோலை யெழுதும்போது "மண்ணுக்கும் மணத்துக்கும் உரியேனைக் கடவேன்" என்றெழுதுவது வழக்கமாம். (க)

4. ஏடுநிலத்திலிடுவதன்முன்னம்வந்து எங்கள்குழாம்புகுந்து *
கூடுமனமுடையீர்கள் வரம்பொழிவந்தொல்லைக்கூடுமினே *
நாடுநகரமும்நன்கறிய நமோநாராயணயவென்று *
பாடுமனமுடைப்பத்தருள்ளீர் வந்துபல்லாண்டுகூறுமினே. (சு)

(கைவல்யாநுபவத்தை விரும்பி உபாஸநை செய்பவர்களே!, நீங்கள்)	
வந்து	(கைவல்யத்தில் ஆசையைவிட்டு) வந்து
எங்கள் குழாம் புகுந்து	(அநந்யப்ரயோஜநரான) எங்களுடைய கோஷ்டியிலே அந்வயித்து
கூடும் மனம் உடையீர்கள்	ஒன்றுச்சேர்ந்துவிட வேணுமென்கிறவிருப்பமுடையவர்களாயிருந்தால்
ஏடு நிலத்தில் இடுவதன் முன்னம்	பொல்லாத ஸ்தானமாகிய கைவல்யத்திலே உங்களைக்கொண்டு தள்ளுவதற்குமுன்னே
வரம்பு ஒழி வந்து	(ஆத்மாநுபவம் மாத்ரம் செய்வோமென்று நீங்கள் வைத்துக் கொண்டிருக்கிற) வரம்பை ஒழித்துக்கொண்டு
	(இனி பூரணாநுபவம் பண்ணுவோமென்று) வந்து
ஒல்லை	சீக்ரமாக
கூடுமின்	எங்களோடு சேர்ந்து விடுங்கள்; (அப்படிச் சேர்ந்தபின்பு)
நாடும் நகரமும் நன்கு அறிய	நாட்டிலுள்ளவர்களும் நகரத்திலுள்ளவர்களும் (உங்களுடைய) நன்மையை அறிந்துகொள்ளும்படி
நமோநாராயணய என்று	திருமந்த்ரத்தைச் சொல்லி
பாடும் மனம் உடை பத்தர்	பாடவேணுமென்கிற எண்ணத்தையுடைய பக்தர்களுக்குள்
உள்ளீர் வந்து	சேர்ந்தவர்களாயிருந்து
பல்லாண்டு கூறுமின்	(எம்பெருமானுக்கு) மங்களாசாஸநம் பண்ணுங்கள்.

ஏடுநிலம் என்று கைவல்யஸ்தாநத்தை ப்ரகரணபலத்தினால் சொல்லும்; பொல்லாத ஸ்தானமென்று பதப்பொருள். அன்றியே, ஏடு—ஸூக்ஷ்மசரீரமானது, நிலத்தில்—தனக்குக் காரணமான மூலப்ரக்ருதியிலே, இடுவதன்முன்னம்—லயிப்பதற்கு முன்னமே, என்றும் பொருள் கொள்ளலாம்.

"வரம்பொழிய" என்பது வாம்பொழி என்று கடைக்குறையாயிருக்கிறது. வரம்பொழியவந்து என்றபடி. இவ்விடத்தில், வரம்பாவது—அவரவர்கள் ஏற்படுத்திக் கொண்ட ஒரு எல்லை; ஆத்மாநுபவத்தோடு நாம் நின்றுவிட வேண்டியது; பகவானை யநுபவிக்கப் போகக்கூடாது' என்று நீங்கள் வைத்துக்கொண்ட வரம்பை ஒழித்துவிட்டு உடனே வந்து சேருங்கள் என்று அழைக்கிறார்.

கைவல்ய நிஷ்டர்கள் "ஓமித்யேகாக்ஷரம் ப்ரஹ்ம வ்யாஹரந் மாமநுஸ்மரந்" என்கிற சாஸ்த்ரப்படி தங்கள் கோரிக்கை நிறைவேறுதற்காகப் பிரணவத்தை மாத்திரம் உச்சரிப்பர்கள்; இனி அப்படியல்லாமல் திருவஷ்டாக்ஷரத்தையும் பூர்த்தியாகக் கோஷித்துக்கொண்டு வரவேணுமென்று பின்னடிகளால் அழைக்கின்றார். பத்தர்—பக்தர்... (ஈ)

5. அண்டக்குலத்துக்கதிபதியாகி அசுரரிராக்கதரை *
இண்டைக்குலத்தையெடுத்துக்களைந்த திருவடிகேசன்றனக்கு *
தொண்டக்குலத்திலுள்ளீர்வந்தடிதொழுது ஆயிரநாமஞ்சொல்லி *
பண்டைக்குலத்தைத்தவிர்ந்து பல்லாண்டுபல்லாயிரத்தாண்டென்மினே. (ஞ)

அண்டம் குலத்துக்கு அதிபதி ஆகி } அண்ட ஸமூஹங்களுக்கெல்லாம் நியாமகனாய்

அசுரர் இராக்கதரை } அஸுர ராக்ஷஸர்களுடைய

இண்டை குலத்தை எடுத்து களைந்த } நெருக்கமான கூட்டத்தை நிர்மூலமாக்கின

திருவடிகேசன் தனக்கு } ஹ்ருஷீகேசனான பகவானுக்கு

தொண்டர் குலத்தில் உள்ளீர் } அடியவராயிருப்பவர்களுடைய கோஷ்டியில் சேர்ந்தவர்களே!

[ஐச்வர்யார்த்திகளே]
(நீங்கள்)

பண்டு குலத்தை தவிர்ந்து } (பிரயோஜநாந்தரத்தை விரும்பிக் கிடந்தமையாகிற) பழைய தன்மையை நீக்கிக் கொண்டு

வந்து எங்களோடு சேர்ந்து

அடி தொழுது } பகவானுடைய திருவடிகளை ஸேவித்து

ஆயிரம் நாமம் சொல்லி } எல்லாத் திருநாமங்களையும் அநுஸந்தித்து

பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு என்மின் } எப்போதும் மங்களாசாஸனம் பண்ணிக்கொண்டிருங்கள்.

* * *—இப்பாட்டில் ஐச்வர்யார்த்திகளை அழைக்கிறார். அவர்கள் இருவகைப்படுவர்;—நெடுநாளாக இருந்து கைதப்பிப்போன செல்வத்தை மறுபடியும் அடைய விரும்புகிறவர்கள் ஒரு வகுப்பு; நெடுநாள் தரித்ரராகவேயிருந்து புதிதாகச் செல்வமடைய விரும்புகிறவர்கள் மற்றொரு வகுப்பு. (முதல் வகுப்பினர்—ப்ரஷ்டைச்வர்யகாமர்களென்றும் இரண்டாம் வகுப்பினர் அபூர்வைச்வர்யகாமர்களென்றும் சொல்லப்படுவர்.) இவ்விருவகுப்பினரையும் இப்பாட்டில் அழைக்கிறார். இவ்வர்த்தம் இப்பாட்டில் எங்ஙனே தெரிகின்றதென்றால், கேண்மின்;—"அண்டக்குலத்துக்கதிபதியான திருவடிகேசனுக்குத் தொண்டக்குலத்திலுள்ளீர்!" என்றும் 'அசுரரிராக்கதரை இண்டைக்குலத்தை யெடுத்துக்களைந்த திருவடிகேசனுக்குத் தொண்டக் குலத்திலுள்ளீர்!' என்றும் விளியை இரண்டாகப் பகுத்துக்கொள்க. அண்டங்களுக்கு அதிபதியாயிருக்கை ஐச்வர்யத்துக்கு முடிவெல்லையாயிருப்பதால், புதிதான ஐச்வரியத்தைப்பெற விரும்புகிற அதிகாரிகள் அப்படிப்பட்ட அண்டாதிபதித்வத்தைப் பெறவிரும்பி அந்தவிருப்பம் வெளிப்படும்படி "அண்டாதிபதயே நமः, அண்டாதிபதயே நமः" என்று எப்போதும் உருப்போடுவர்கள்; அந்த அதிகாரிகளை அழைக்கிறரென்பது முதல் விளியால் விளங்கும்; ஏற்கெனவேயிருந்த செல்வத்தை அஸுராராக்ஷஸாதிகள் போன்ற சத்துருக்கள் அபஹரித்துக்கொண்டதனால் அச் செல்வத்தை மறுபடியும் சம்பாதித்துக்கொள்ள விரும்புமவர்கள் அந்தவிருப்பம் வெளிப்படும்படி "அஸுரசத்ரவே நமः, அஸுரசத்ரவே நமः" என்று உருப்போடுவர்கள்; அந்த அதிகாரிகளை அழைக்கிறரென்பது இரண்டாம் விளியால் விளங்கும்.

அண்டமாவது—உலகவுருண்டை; அது அளவற்றதாகையாலே அண்டக்குல மென்கிறது; அதுக்கு அதிபதியென்று எம்பெருமானைச் சொல்வது கருத்துடன் கூடியதாகும்; உன்னைப்போலே நாங்களும் அண்டாதிபதியாக வேணுமென்று தெரிவித்துக்கொண்டபடி.

இண்டைக்குலம்—நெருக்கமான கூட்டம் என்றபடி. 'இண்டக்குலம்' என்று பாடமாகில், "இண்டர்—குலம்" என்று பிரியும்; அஸுராராக்ஷஸர்களாகிற சண்டாளருடைய கூட்டத்தை என்றபடி. திருவடிகேசன்—ஹ்ருஷீகேசன்; இந்திரியங்களை அடக்கியாள்பவன் என்கை. தொண்டர்=குலம்; தொண்டக்குலம்.

(ஞ)

6. எந்தைதந்தைதந்தைதந்தைதம்மூத்தப்பன் ஏழ்படிகால்தொடங்கி *
வந்துவழிவழியாட்செய்கின்றோம் * திருவோணத்திருவிழவில்
அந்தியம்போதிலரியுருவாகி அரியையழித்தவனே *
பந்தணைதீரப்பல்லாண்டு பல்லாயிரத்தாண்டென்றுபாடுதுமே. (சு)

(அநந்யப்ரயோஜநரான நாங்கள்)
எந்தை தந்தை தந்தை தந்தை தம் மூத்தப்பன் ஏழ்படி கால் தொடங்கி — என்பிதாவும் அவருடைய பிதாவும் அவருடைய பிதாவும் அவருடைய பிதாவும் அவருடையபாட்டனுமாகிய ஏழு தலை முறையாக
வந்து வழி வழி — (உரியகாலங்களில்) வந்து முறைதப்பாமல்
ஆள் செய்கின்றோம் ; — கைங்கரியம் பண்ணுகிறோம் ;
திருஓணம் திருவிழவில் — சிரவண நக்ஷத்திரமென்கிற திரு நாளிலே

அந்தி அம் போதில் — அழகிய ஸாயம் ஸந்தியா காலத்தில்
அரி உரு ஆகி — நரஸிம்ஹ மூர்த்தியாய்த் தோன்றி
அரியை — ஆச்ரிதனான ப்ரஹ்லாதனுக்குப் பகைவனான இரணியனை
அழித்தவனே — கொன்றொழித்த பெருமானுக்கு
பந்தணை தீர — (அன்றைய) அநுக்கம் தீரும் படி
பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு என்று பாடுதும் — மங்களாசாஸநம் செய்வோம்.

* * *—"வாழாட்பட்டு" என்கிற பாசுரத்தில் அநந்யப்ரயோஜநர்களான முமுக்ஷுக்களை அழைத்தாரன்றே ; அழைக்கும்போது "ஏழாட்காலும் பழிப்பிலோம் நாங்கள்" என்று தம்முடைய பெருமையைச் சொல்லி யழைத்தார். அப்படி அழைக்கப்பட்ட அநந்யப்ரயோஜனர்கள் 'நாங்களும் உம்மைப் போலவே ஏழுதலை முறையாக அடிமைசெய்கிறவர்கள்' என்று தங்களுடைய பெருமையையும் எம்பெருமானுக்கு மங்களாசாஸநம் பண்ணுகிறவர்களென்கிற தங்களுடைய நினைவரியையும் சொல்லிக் கொண்டு வந்து சேர்ந்ததாக இப்பாசுரம் அருளிச்செய்யப்படுகிறது. (சு)

7. தீயிற்பொலிகின்றசெஞ்சுடராழி திகழ்திருச்சக்கரத்தின் *
கோயிற்பொறியாலேயொற்றுண்டுநின்று குடிகுடியாட்செய்கின்றோம் *
மாயப்பொருபடைவானனே ஆயிரந்தோளும்பொழிகுருதி
பாய * சுழற்றியவாழிவல்லானுக்குப் பல்லாண்டுகூறுதுமே. (எ)

தீயின் — (சந்திரன் ஸூர்யன் அக்நி முதலிய) சுடர்ப்பொருள்களெல்லாவற்றையும்விட
பொலிகின்ற — பிரபலமாகப் பிரகாசிப்பதும்
செஞ்சுடர் திகழ் — சிவந்த ஒளியோடு கூடி விளங்குவதுமான
திரு சக்கரத்தின் — திருவாழி யாழ்வான் எழுந்தருளியிருக்கிற
கோயில் ஆழி பொறியாலே — ஸ்தானமாகிய வட்டவடிவமான அடையாளத்தினால்
ஒற்றுண்டு நின்று — அடையாளம் செய்யப்பட்டவர்களாயிருந்து
குடி குடி ஆள் செய்கின்றோம் — அநாதிஸந்தாநமாக (எம்பெருமானுக்குக்) கைங்கரியம் செய்து வருகின்றோம் ;

(அதுவும் தவிர)
மாயம் பொரு படைவானனே — க்ருத்ரிம யுத்தம் செய்பவனும் சேஷநகளையுடையவனுமான பாணாசுரனுடைய
ஆயிரம் தோளும் பொழி குருதி — ஆயிரந் தோள்களினின்றும் வெளிக்கிளம்புகிற ரத்தமானது
பாய — வெள்ளமாகப் பாய்ந்தோடும் படி
சுழற்றிய ஆழி — திருக்கையிலே சுழலச் செய்த சக்ராயுதத்தை
வல்லானுக்கு — ஆளவல்ல எம்பெருமானுக்கு
பல்லாண்டு கூறுதும். — மங்களாசாஸநம் செய்வோம்.

* * *—"ஏடுநிலத்தில்" என்னும் பாசுரத்தில் கைவல்யார்த்திகளை அழைத்தாரன்றே; அழைக்கும்போது "நாடுகரமும் நன்கறிய" என்று உங்களுடைய நன்மையை எல்லாரும் தெரிந்துகொள்ளும் படி நீங்கள் வரவேணுமென்று ஒரு வார்த்தை சொன்னர், அவர்களும் அப்படியே வரவேணுமென்று நிச்சயித்து 'சங்கு சக்கரங்களாலே திருவிலச்சினை செய்துகொள்வது நல்ல உபாயம்' என்று அதைச் செய்துகொண்டு அடிமை செய்பவர்களாய் பாணாஸுரயுத்தத்தில் ஸ்ரீக்ருஷ்ணனுக்கு அடிமைசெய்த திரு

வாழியாழ்வானுக்கும் அவனே அடிமைகொண்ட ஸ்ரீக்ருஷ்ணனுக்கும் அக்காலத்தில் மங்களாசாஸனம் செய்யப்பெறுத குஞ்நீர மங்களாசாஸனம் செய்பவர்களாக ஆய்விட்டோம்' என்று தாங்கள் குடும்ப மாகத் திருந்தினபிடியைச் சொல்லிக்கொண்டு வந்தார்களாக அருளிச் செய்யும் பாசுரம் இது. (எ)

8. நெய்யெடைநல்லதோர்சோறும் நியதமுமத்தாணிச்சேவகமும் *
கையடைக்காயும்கழுத்துக்குப்பூணெடு காதுக்குக்குண்டலமும் *
மெய்யிடநல்லதோர்சாந்தமுந்தந்து என்னைவெள்ளுயிராக்கவல்ல *
பையுடைநாகப்பகைக்கொடியானுக்குப் பல்லாண்டுகூறுவனே. (அ)

நெய் எடை — நெய்யோடு ஸமமானநிறையை யுடையதாய்
நல்லது — போக்யமாய்
ஓர் — விலக்ஷணமான
சோறும் — ப்ரஸாதத்தையும்
நியதமும் அத் தாணி சேவக மும் — எப்போதும் பிரியாமல் கூடவே யிருந்து செய்கிற ஸேவக வ்ருத்தியையும்
கைஅடைக்காயும் — திருக்கையால் ப்ரஸாதிக்கும் தாம்பூலத்தையும்
கழுத்துக்கு பூணெடு — கழுத்தில் தரித்துக் கொள்ள வேண்டிய ஆபரணத்தையும்
காதுக்கு குண்டலமும் — காதில் இட்டுக்கொள்ள வேண்டிய குண்டலத்தையும்
மெய் இட — உடம்பில் பூசிக்கொள்ளும்படி
நல்லது ஓர் சாந்தமும் — சிறந்த சந்தனத்தையும்

தந்து — (ரஜஸ்தமோ குணங்களால் ஐச்வரியத்தை விரும்பின என்னுடைய விருப்பத்தின்படியே) கொடுத்து
என்னை — இப்படி ஸம்ஸாரியாய்க் கிடந்த என்னை
வெள் உயிர் ஆக்க வல்ல — சுத்த ஸாத்விகனாகச் செய்தருளினவனுக்கு
பை உடை நாகம் பகை கொடியானுக்கு — படத்தை யுடைய பாம்புக்கு விரோதியான கருடனைக் கொடியாக வுடையனை எம்பெருமானுக்கு
பல்லாண்டு கூறுவன் — மங்களாசாஸனம் பண்ணுவேன்.

* * *—"அண்டக்குலத்துக்கதிபதியாகி" என்னும் பாசுரத்தில் ஐச்வர்யார்த்திகளை அழைத்தாரே; அவர்கள்தாம் எம்பெருமானிடத்தில் சில ஐச்வர்யங்களைப்பெற்றுக்கொண்டு திருந்தி மங்களாசாஸனத்துக்கு ஸித்தமாக வந்தபடியைச் சொல்லிக் கொள்ளுகிறார்களாக அருளிச்செய்வது இந்தப் பாசுரம். கீழ்ப்பாசுரங்களிற்போல் இதில் பண்மையின்றியே "பல்லாண்டு கூறுவன்" என்று ஒருமையாகப் பிரயோகமிருப்பதற்குக் காரணம் கேண்மின்;—உலகத்தில் அந்ய ப்ரயோஜநர்களுடைய கூட்டமும் கைவல்யார்த்திகளுடைய கூட்டமும் மிகவும் ஸ்வல்பமாயிருக்குமாகையாலே அந்தக் கூட்டங்களிலுள்ள நாலைந்து பேர்கள் பேசினதாகக்கொண்டு அவர்களது பாசுரங்களில் "பல்லாண்டு பாடுநமே" என்றும் "பல்லாண்டு கூறுதுமே" என்றும் பஹுவசந ப்ரயோகம் பண்ணப்பட்டது. ஐச்வர்யார்த்திகளான இவர்களுடைய கூட்டம் அப்படி ஸ்வல்பமாயிராமல், அளவற்றிருக்குமாகையால், ஒரு பெரிய கூட்டத்துக்கெல்லாம் ஒருவன் பிரதாநனாய் நின்று பேசுவது வழக்கமாகையால் இங்கும் ஒருவன் பேசுவதாக வைக்கப்பட்டது. மேல் 'அல்வழக்கொன்றுமில்லா' என்கிற பாட்டிலுள்ள ஏகவசநத்துக்கும் இதுவே ஸமாதாநம். உலகத்தார்க்கு வேண்டிய பதார்த்தங்கள் மூன்றுவிதம்—தாரகம், போஷகம், போக்யம் என. அன்னம் தாரகம், நெய் பால் தயிர் முதலானவை போஷகம்; சந்தனம் புஷ்பம் தாம்பூலம் முதலியவை போக்யம். ஆக இந்தப் பதார்த்தங்கள் ஒருவனுக்குப் போதுமானவை கிடைத்தால் அவ்வளவில் த்ருப்தி பெற ப்ராப்தம்; ஊர்ப்பட்ட அண்டாதிபத்யமெல்லாம் வேணுமென்று விரும்புவது பகவத் விபூதியையெல்லாம் தன்னதாக்கிக்கொண்டு அநர்த்தப் படுவதற்கே காரணமாகும். ஆகையால் ஸ்வரூபஜ்ஞாநமில்லாமல் அண்டாதிபத்யம் அளிக்கவேணுமென்று நாங்கள் எம்பெருமானைப் ப்ரார்த்தித்தாலும் அவன் பரமக்ருபாளுவாய் எங்களை உஜ்ஜீவிப்பிக்கத் திருவுள்ளம்பற்றி எங்களுக்கு உசிதமாய் வேண்டியவளவு தாரக-போஷக-போக்ய வஸ்துக்களைக் கொடுத்து இனிமேலாவது எங்களுக்கு நல்லபுத்தி யுண்டாகும்படி குளிரக் கடாக்ஷித்து "ஐச்வர்யம், த்யாஜ்யம், பகவத்கைங்கர்யமே புருஷார்த்தம்" என்னும் அத்யவஸாயத்தைப் பிறப்பித்து எங்களை சுத்தஸ்வரூபராக ஆக்கினன். அப்படிப்பட்ட எம்பெருமானுக்கு மங்களாசாஸனம் பண்ணுவோம் நாங்கள்—என்று ஐச்வர்யார்த்திகள் சொல்லுவதாக இந்தப் பாசுரம் உள்ளது.

"நெய் ஏடை" என்றும் "நெய் இடை" என்றும் பாடபேதமுண்டு. முந்தின பாடத்தில், நெய் பாதி, சோறு பாதியாய் இரண்டும் அளவொத்திருக்கு மென்கை. ஒருவீசைச் சோற்றுக்கு ஒருவீசை நெய் சேர்ப்பதென்றால் இதனில் விஞ்சிய கல்லசோறு இல்லையன்றே, "நெய்யிடை" என்ற பாடத்தில், நெய்யின் நடுவே உள்ள சோறு என்று பொருளாய், நெய்யின் அளவு அதிகமாயும் ப்ரஸாதத்தினளவு அல்பமாயுமிருக்கு மென்கை.

அத்தாணிச் சேவகமாவது—ஆஸ்தாநஸேவகம்; எம்பெருமானிருக்கு மிடத்தில் கூடவே யிருந்து கொண்டு பிரியாமல் நின்று செய்கிற கைங்கரியம். ஐச்வர்யார்த்தியானவன் சொல்லுகிற இந்தப்பாசுரத்தில் "அத்தாணிச் சேவகமும் தந்து" என்று எங்ஙனே சொல்லலாம்? அநந்யப்ரயோஜநனுக்கன்றே அத்தாணிச் சேவகமுள்ளது; சோறு அடைக்காய் பூன் குண்டலம் ஆகிய இவற்றைத்தந்து என்பது சேருமே யொழிய அத்தாணிச் சேவகமும் தந்ததாகச் சொல்லுகிறது சேராதே யென்னில்; ஐச்வர்யார்த்தியா யிருந்தாலும் பகவத் க்ருபையாலே திருந்தி அநந்யப்ரயோஜநனாய் வந்தமை தோற்றும்படியாகச் சொல்லுகிற பாசுரமாகையாலே சேருமென்க. நான் அபேக்ஷித்த ஜீவநத்தை மாத்திரம் கொடுத்து விடாமல் உஜ்ஜீவநத்தையும் முண்டாக்கி என்னைப் பரிசுத்தாத்மாவாகச் செய்தானே! என்று ஸந்தோஷித்துச் சொல்லுகிற பேச்சு. (அ)

9. உடுத்துக்களைந்தநின் பீதகவாடையுடுத்துக் கலத்தவுண்டு *
தொடுத்தவதுழாய்மலர்சூடிக்களைந்தன சூடுமித்தொண்டர்களோம் *
விடுத்தநிசைக்கருமந்திருத்தி * திருவோணத்திருவிழவில் *
படுத்தபைந்நாகணைப்பள்ளிகொண்டானுக்குப் பல்லாண்டுகூறுதுமே. (க)

(எம்பெருமானே!)
உடுத்து — தேவரீர் அரையில் சாத்திக் கொண்டு
களைந்த நின் பீதக்வாடை — கழித்துவிட்ட தேவரீருடைய பீதாம்பரத்தை
உடுத்து — உடுத்துக்கொண்டும்
கலத்தது — தேவர் அமுதுசெய்த பாத்திரத்தில் மிகுந்திருப்பதை
உண்டு — புஜித்தும்,
சூடி களைந்தன — தேவர் சாத்திக்கொண்டு களைந்தவைகளான
தொடுத்த துழாய் மலர் சூடும் — தொடுக்கப்பட்டுள்ள திருத்துழாய் மலர் மாலைகளை சூட்டிக்கொள்ளுகிறவர்களான
இத் தொண்டர்களோம் — இப்படிப்பட்ட தாஸர்களான நாங்கள்,—

விடுத்த நிசை கருமம் திருத்தி — தேவரீர் ஏவியனுப்பிய திக்கிலே ஆகவேண்டிய காரியங்களை ஒழுங்காகச்செய்து,
படுத்த — கிழே பரப்பிய
பைநாகம் அணை — படத்தையுடைய பாம்பாகிற படுக்கையில்
பள்ளிகொண்டானுக்கு — சயனித்திருக்கிற தேவரீருக்கு
திரு ஓணம் திருவிழவில் — சிரவணத் திருநாளிலே,
பல்லாண்டு கூறுதும் — மங்களாசாஸநம் செய்வோம்.

* * *—"வாழாட்பட்டு" என்னும் பாசுரத்தில் அழைக்கப்பட்டு "எந்தை தந்தை தந்தை" என்னும் பாசுரத்தால் தங்கள் வருத்தியைச் சொல்லிக்கொண்டு வந்து சேர்ந்த அநந்யப்ரயோஜநர்கள் தாம் எம்பெருமானை நோக்கிப் பல்லாண்டு பாடும்படியை அநுஸந்தித்செய்வது இப்பாட்டு. "நின் பீதகவாடை" என்று முன்னிலையாகச் சொல்லியிருப்பதால் இத்தப்பாசுரம் எம்பெருமானையே நோக்கி அவர்கள் சொல்லுவதாக நன்கு விளங்கும். கீழே ஆழ்வார்கள் அழைக்கப்பட்ட மூவகை அதிகாரிகளும் வரிசையாக 'எந்தை தந்தை' 'தீமிற்பொலிகின்ற' 'நெய்யெடை நல்லது' என்னும் பாசுரங்கள் சொன்னது ஆழ்வாரை நோக்கிச் சொன்னதாம். இனி, 'உடுத்துக்களைந்த' 'எந்நாளெம்பெருமான்' 'அல்வழக்கொன்றுமில்லா' என்கிற மூன்று பாசுரங்களும்—அவர்கள் எம்பெருமானையே ஸாக்ஷாத்தாக நோக்கிச் சொல்வதாம். மேலிரண்டு பாசுரங்களில் எம்பெருமானுடைய விளி வ்யக்தமாகவுள்ளது; இப்பாசுரத்தில் அப்படி வ்யக்தமாக இல்லாவிடினும் "நின் பீதகவாடை" என்கிற சொல்லாற்றலால் வ்யக்தமாகிறது. (கூ)

10. எந்நாளெம்பெருமான் உன்றனக்கடியோமென்றெழுத்துப்பட்ட
வந்நாளே * அடியோங்களடிக்குடில் வீடுபெற்றுய்ந்ததுகாண் *
செந்நாள்தோற்றித் திருமதுரையுட்சிலகுணித்து * ஐந்தலைய
பைந்நாகத்தணைப்பாய்ந்தவனே உன்னைப்பல்லாண்டுகூறுதுமே. (கo)

எம்பெருமான்	ஸ்வாமிக் !
உன்தனக்கு	தேவரீர்க்கு
அடியோம் என்று	நாங்கள் அடிமைப்பட்டவர்களென்கிற
எழுத்து	சொல்லானது
பட்ட நாள்	எங்களுடைய வாயில் உண்டாகப் பெற்ற நாள்
எந்நாள்	எந்த தினமோ,
அக்காளே	அந்தினம் முதலாகவே
அடியோங்கள்	அடியோங்களுடைய
அடி குடில்	அடிமைப்பட்ட ஸந்தானமெல்லாம்
வீடு பெற்று, உய்ந்தது காண்	நல்ல கதியை யடைந்து உஜ்ஜீவித்து விட்டது ;
செம் நாள் தோற்றி	நல்ல நக்ஷத்திரத்திலே திருவவதரித்து
திரும்துரையுள்	அழகிய வடமதுரையிலே
	(கம்ஸனுடைய ஆயுத சாலையில் புகுந்து)
சிலை குனித்து	வில்லை வளைத்து முறித்து
ஐந்தலைய	ஐந்து தலைகளையுடைய
பை	படத்தோடு கூடின
நாகம்	காளிய நாகத்தினுடைய
தலை	தலைமேலே
பாய்ந்தவனே	குதித்தவனே!
உன்னை பல்லாண்டு கூறுதும்.	தேவரீருக்கு மங்களாசாஸனம் செய்வோம்.

* * *—"ஏடுநிலத்தில்" என்கிற பாசுரத்தில் அழைக்கப்பட்டு "நீபிற் பொலிகின்ற;" என்னும் பாசுரத்தால் தாம் திருந்தினபடியைச் சொல்லிக் கொண்டு வந்து சேர்ந்த கைவல்யார்த்திகள் எம்பெருமானை நோக்கி மங்களாசாஸனம் பண்ணுகிறபடியைச் சொல்வது இந்தப்பாசுரம்.

எம்பெருமானே! நாங்கள் கைவல்ய புருஷார்த்த ப்ராப்திக்கு ஸாதகமாக "ஓம், நம:" முதலிய சொற்களைச் சொல்லிக்கொண்டு தேவரீரை பஜனம் பண்ணினோம்; தேவரீர் எங்களைக் கடாக்ஷித்து நாங்கள் மீட்சியற்ற கைவல்யத்தை யடைந்து கெட்டுப்போகாதபடி அருள்புரிந்து நல்லபுத்தியை யுண்டாக்கினபடியால் அடியோங்கள் இப்போது திருந்தி தேவரீருக்குப் பல்லாண்டு பாடுகிறவர்களாக ஆய்விட்டோ மென்கிறார்கள். (கo)

11. அல்வழக்கொன்றுமில்லா அணிகோட்டியர்கோன் * அபிமானதுங்கன்
செல்வனைப்போலத் திருமாலேநானுனக்குப்பழவடியேன் *
நல்வகையால்நமோநாராயணவென்று நாமம்பலபரவி *
பல்வகையாலும்பவித்திரனே உன்னைப்பல்லாண்டுகூறுவனே. (கக)

திரு மாலே	ச்ரிய:பதியே !
அல் வழக்கு ஒன்றும்இல்லா	அநீதிகள் ஒன்றுமில்லாமலிருக்கிற
அணி கோட்டியர் கோன்	அழகிய திருக்கோட்டியூரிலுள்ளவர்களுக்குத் தலைவரும்
அபிமானம்துங்கன்	ஸ்ரீவைஷ்ணவாபிமானத்தாற் சிறந்தவருமான
செல்வனை போல நானும்	செல்வம்பிள்ளையைப் போலவே நானும்
உனக்கு	தேவரீருக்கு
பழ அடியேன்	பழமையான தாஸனைவிட்டேன் ;
பல் வகையாலும் பவித்திரனே	எல்லாவிதங்களாலும் பரிசுத்தனை பெருமானே !
நல் வகையால்	அடியேனுக்கு நன்மை யுண்டாகும்படி
நமோ நாராயண என்று	திருமந்திரத்தை அநுஸந்தித்து
பல நாமம் பரவி	(தேவரீருடைய) அனேக திருநாமங்களைச் சொல்லியேத்தி
உன்னை பல்லாண்டு கூறுவன்	தேவரீருக்கு மங்களாசாஸனம் பண்ணுவேன்.

* * *—"அண்டக்குலத்துக்கு" என்னும் பாசுரத்தாலே அழைக்கப்பட்டு "நெய்யெடை" என்னும் பாசுரத்தால் தாங்கள் திருந்தினபடியைச் சொல்லிக் கொண்டுவந்த ஐச்வர்யார்த்திகள் எம்பெருமானை நோக்கி மங்களாசாஸனம் பண்ணுகிறார்கள் இதில். ஐச்வர்யார்த்திகள் எண்ணிறந்தவர்களாகையாலே அவர்களுள் ஒருவன் சொல்லுகிறானென்று "நெய்யெடை" என்கிற பாசுரத்தில் "கூறுவனே" என்று ஏகவசனப்ரயோகம் பண்ணினதுபோலவே இதிலும் கொள்வது. (கக)

12. பல்லாண்டென்றுபவித்திரனைப் பரமேட்டியை * சார்ங்கமென்னும்
வில்லாண்டான்றன்னை விஷ்ணுசித்தன்விரும்பியசொல் *
நல்லாண்டென்றுநின்றுரைப்பார் நமோநாராயணயவென்று *
பல்லாண்டும்பரமாத்மனைச் சூழ்ந்திருந்தேத்துவர்பல்லாண்டே. (கஉ)

பவித்திரனை பரமேட்டியை	பரிசுத்தனும் பரமபத நிலயனும்
சார்ங்கம் என்னும் வில் ஆண்டான் தன்னை	ஸ்ரீ சார்ங்கமென்கிற தநுஸ்ஸை அடக்கி ஆள்பவனுமான எம்பெருமானை
வில்லிபுத்தூர் விட்டுசித்தன்	ஸ்ரீவில்லிபுத்தூரிற் பிறந்த பெரியாழ்வார்
பல்லாண்டு என்று	பல்லாண்டு பல்லாண்டென்று தொடங்கி
விரும்பியசொல்	ஆதரத்தோடு சொன்ன சொல்லாகிய இப்பிரபந்தத்தை,
நல் ஆண்டு என்று	நமக்கு கல்லகாலம் வாய்த்ததென்று (மகிழ்ந்து)
கலின்று உரைப் பார்	ஸர்வதா அநுஸந்திப்பவர்கள்
பரமாத்மனை	ஸ்ரீமந் நாராயணனை
சூழ்ந்து இருந்து	சுற்றும் சூழ்ந்து கொண்டு
நமோ நாராயணாய என்று—,	
பல் ஆண்டும்	எப்போதும்
பல்லாண்டு ஏத்துவர்.	மங்களாசாஸநம் பண்ணப் பெறுவர்கள்.

* * *—பரமபதத்திலெழுந்தருளியிருப்பவனும் நித்யபரிசுத்தனுமாய்ப் பஞ்சாயுதங்களைத் தரித்துக் கொண்டிருப்பவனை ஸர்வேச்வரன் விஷயத்தில் பெரியாழ்வார் பொங்கும்பரிவாலே பாடின இத்திருப் பல்லாண்டு திவ்ய ப்ரபந்தத்தை, நமக்கு நல்லகாலம் வந்துவிட்டதென்கிற கொண்டாட்டத்துடன் இவ் விபூதியில் எஞ்ஞான்றும் பாடுகிறவர்கள் மறுமையில் மோக்ஷ லோகத்தை யடைந்து அங்கும் எம்பெருமானுடைய முகோல்லாஸத்தையே புருஷார்த்தமாக நினைத்து அனேக தேஹங்களை எடுத்துக்கொண்டு அப்பெருமானுடைய நான்கு பக்கங்களிலும் இருந்துகொண்டு மங்களாசாஸனம் பண்ணப் பெறுவர்களென்று இதனால் பலன்சொல்லித் தலைகட்டிற்றாயிற்று. (கஉ)

அடிவரவு:—பல் அடி வாழ் ஏடு அண்டம் எந்தை நீ நெய் உடுத்து எந்நாள் அல்வழக்கு பல்லாண்டு வண்ணம்.

[ஆதி கூறுதும், அநந்தரம் கூறுமின், அண்டம் என்மின், எந்தை பாடுதும், நீ உடுத்து எந்நாள் கூறுதும், நெய்யும் அல்லும் கூறுவனே.]

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்

திருப்பல்லாண்டு முற்றிற்று.

ஸ்ரீ:

பெரியாழ்வார் அருளிச்செய்த

பெரியாழ்வார் திருமொழி.

[ஸ்ரீகாஞ்சீ பிரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசாரியர் இயற்றிய உரையோடு கூடியது.]

முதற்பத்து—முதல்திருமொழி—வண்ணமாடங்கள்.

அவதாரிகை:—ஸ்ரீக்ருஷ்ணாவதார சரிதைகளைப் பரிபூர்ணமாக அநுபவிக்க ஆசைகொண்ட பெரியாழ்வார் ஸ்ரீக்ருஷ்ணனுடைய திருவவதாரவைபவத்தை இத் திருமொழியில் அருளிச்செய்கிறார். கண்ணபிரான் திருவவதரித்த காலத்தில் திருவாய்ப்பாடியிலுள்ளவர்கள் ஸந்தோஷமுள்ளடங்காமல் அதற்குப் போக்குவீடாகச் செய்த காரியங்களை முதல் ஐந்து பாசுரங்களிலருளிச்செய்கிறார். ... *

பிற்காலத்தவரான ஆழ்வார் தாம் அர்ச்சாவதாரத்தி லீடுபட்டவராதலால் திருக்கோட்டியூரெம் பெருமான் விஷயமாக இப் பதிகம் பாடுகிறார்.

13 வண்ணமாடங்கள்சூழ் திருக்கோட்டியூர் * கண்ணன்கேசவன் நம்பிபிறந்தினில் *
எண்ணெய்சுண்ணம் எதிரெதிர்தூவிட * கண்ணன்முற்றம் கலந்தளருமிற்றே. (க)

வண்ணம் மாடங்கள் சூழ் திருக்கோட்டியூர்	அழகுபொருந்திய மாடங்களாலே சூழப்பட்ட திருக்கோட்டியூரில் (எழுந்தருளியுள்ள)	(திருவாய்ப்பாடியிலுள்ளார்) எண் ணெய் சுண்ணம் எதிர் எதிர் தூவிட	எண்ணெயையும் மஞ்சள் பொடியையும் (ஸந்தோஷத்தாலே ஒருவர்க்கொருவர்) எதிர்த்துத்தூவ,
கேசவன் நம்பி கண்ணன்	கேசவனென்ற திருநாமமுடையனாய் கல்யாண குண பரிபூர்ணனான ஸ்ரீக்ருஷ்ணன்	கண் நல் முற்றம்	விசாலமாய் விலக்ஷணமான (நந்தகோபர் திருமாளிகையில்) திருமுற்றமானது
இன் இல் பிறந்து	(நந்தகோபருடைய) இனிய திருமாளிகையிலே திருவவதரித்தருளினவளவிலே,	கலந்து அளறு ஆயிற்று	(எண்ணெயும் மஞ்சள் பொடியும் தூகையுண்டு) தன்னிலே சேர்ந்து சேறாய்விட்டது.

* * *—திருக்கோட்டியூரில் எழுந்தருளியிருக்கிற எம்பெருமான் திருவாய்ப்பாடியில் நந்த கோபர் திருமாளிகையில் ஸ்ரீக்ருஷ்ணனாக அவதரித்தவளவில் அங்குள்ளவர்களெல்லோரும் அளவுகடந்த ஆனந்தமடைந்து எண்ணெயையும் மஞ்சள் பொடியையும் ஒருவர்மேல் ஒருவர் தூவிக்கொள்ளவே அவ்விரண்டும் கீழேவிழுந்து ஒன்று சேர்ந்து அந்தத் திருமாளிகையின் முற்றம் முழுவதையும் சேறுமயமாக ஆக்கிவிட்டனவென்கை.

கண்ணபிரான் வடமதுரையில் கம்ஸனுடைய சிறைக்கூடத்திலே பிறந்திருக்க, நந்தகோபருடைய திருமாளிகையிற் பிறந்ததாகச் சொன்னது—கம்ஸனுக்குத் தப்பி கோகுலத்தில் பிரவேசித்த பின்புதான் இவன்பிறந்ததாக நினைத்திருக்கையாலே.

பிறந்தினில்=இதை முழுச்சொல்லாகக்கொண்டு 'பிறந்தவளவில்' என்று மூரைக்கலாம். "பிறந்து இன் இல்" என்று பிரித்துக்கொண்டால் பிறந்து-பிறக்க' என்னும் செயவெனெச்சத்தின் திரிபாம்: "சொல்திரியினும் பொருள் திரியாவினைக்குறை" என்னும் நன்னூற் சூத்திரமறிக. இனி "பிறந்த இன் இல்' என்றும் பிரிக்கலாம்; பிறந்த போக்யமான க்ருஹத்திலே என்றபடி.

கண்ணன் முற்றம்=கண்ணன் பிறந்தபோதே அவனையே திருமாளிகைக்குத் தலைவனாக நந்தகோபர் அபிமானித்ததினால் 'கண்ணபிரானுடைய முற்றம்' என்கிறார் என்று மூரைக்கலாம்; 'கண் நல் முற்றம்' என்று பிரிப்பதே நலம். (க)

14 ஓடுவார்விழுவார் உகந்தாலிப்பார் * நாடுவார்நம்பிரான் எங்குத்தானென்பார் * பாடுவார்களும் பல்பறைகோட்டநின்று * ஆடுவார்களும் ஆயிற்றுய்ப்பாடியே. (உ)

ஆய்ப்பாடி	திருவாய்ப்பாடியானது,		
ஓடுவார்	(ஸம்ப்ரமித்து) ஓடுவாரும்	எங்கு தான் என்பார்	எங்கேதான் (இராகின்றான்') என்பாரும்
விழுவார்	(சேற்றிலே வழுக்கி) விழுவாரும்	பாடுவார்களும்	பாடுவார்களும்
உகந்து ஆலிப்பார்	உகப்புக்குப் போக்குவீடாக கோஷிப்பாரும்	பல் பறை கொட்ட நின்று ஆடுவார்களும்	பலவகை வாத்யங்கள் முழங்க அதற்குப்பொருந்த நின்று கூத்தாடுவாருமாக
நாடுவார்	(பிள்ளையைத்) தேடுவாரும்		
நம் பிரான்	'நமக்கு உபகாரகனான கண்ணன்	ஆயிற்று	ஆய்விட்டது.

* * *—கோகுலத்திலுள்ளாரெல்லாரும் தங்கட்குத் தலைவரான நந்தகோபர்க்குப் பிள்ளை பிறந்ததாகக் கேள்விப்பட்டு அளவற்ற ஆநந்தமடைந்து தாம் செய்வது இன்னதென்று தெரியாமல், சிலர் ஓடினார்கள்; சிலர் சேற்றிலே வழுக்கி விழுந்தார்கள், சிலர் உரக்க கோஷம் செய்தார்கள்; சிலர் 'நம் கண்மணி எங்கே!' என்று குழந்தையைத் தேடினார்கள்; சிலர் பாடினார்கள்; சிலர் பறையடிக்க சிலர் அதற்குத் தகுதியாகக் கூத்தாடினார்கள்; ஆக இப்படி பஞ்சலக்ஷம் குடியிலுள்ளாரெல்லாரும் சொல்ல முடியாத கோலாஹலமாயிருந்தார்கள். க்ருஷ்ண ஜநநத்தால் திருவாய்ப்பாடியில் விகாரமடையாதாரொருவருமில்லை யென்பார் ஆய்ப்பாடியே ஓடுவாரும்.....ஆடுவாருமாக ஆயிற்றென்றார். 'எங்குதற்றன்' என்ற பாடமும் கொள்ளத்தக்கதே. ... ... (உ)

15 பேணிச்சீருடைப் பிள்ளைபிறந்தினில் * காணத்தம்புவர் புக்குப்போதுவார் * ஆணைப்பார் இவன்கேசில்லைகாண் * திருவோணத்தான் உலகாளுமென்பார்களே. (ங)

சீர் உடை பிள்ளை — ஸ்ரீமானை க்ருஷ்ணன்

பேணி பிறந்தினில் — (கம்ஸாதிகள் கண்படாதபடி தன்னைக்) காத்துவந்து பிறந்தவளவில்

தாம் — ஆய்ப்பாடி ஆயர்கள்

காண புகுவார் — (கண்ணனைக்) காண்கைக்காகவுள்ளே நுழைவாரும்

புக்கு போதுவார் — உள்ளேபோய் (கண்டு) வெளிப்புறப்படுவாரும்,

ஆண் ஒப்பார் இவன் கேர் இல்லை — "ஆண்தன்மை யொத்திருப்பவர்களில் இவனுடைய ஒத்திருப்பார் (யாரும்) இல்லை; (இவன்)

திரு ஓண தான் உலகு ஆளும் — ச்ரவண நக்ஷத்ரத்தில் அவதரித்த ஸர்வேச்வரனுடைய விபூதிகளையெல்லாம் ஆளக்கடவன்"

என்பார்கள் — என்று சொல்லுவாருமாக ஆனார்கள்.

* * *—கண்ணபிரான் அவதரித்த காலத்தில் கோகுலத்தவர்கள் அந்தக் குழந்தையைப் பார்க்க நந்தகோபர் திருமாளிகையிற் புகுந்துகொண்டும், புகுந்த பார்த்தவர்கள் வெளியில புறப்பட்டு வந்து கொண்டும், அவர்களில் ★ ஸாமுத்ரிக சாஸ்த்ரம் தெரிந்தவர்கள் 'இவன் எல்லாரைக்காட்டிலும் விலக்ஷண புருஷன் என்னும்படியாக லக்ஷணங்கள் அமைந்திருப்பதனால் இவன் உபய விபூதி நிர்வாஹகனாயிருப்பன்' என்று சொல்லிக்கொண்டும் இருந்தார்கள்.

கண்ணபிரான் பிறக்கும்போது சங்குசக்கரங்களுடனே தோன்றக்கண்ட தேவகி வஸுதேவர்கள் 'இந்த ரூபத்தைக் கம்ஸன் தெரிந்துகொள்ளாதபடி மறைத்துக்கொள்' என்று பிரார்த்திக்க, அப்படியே தாய்தந்தையருடைய சொல்லைப் பரிபாலித்து, அக் காலத்தில் கம்ஸனால் நேரக்கூடிய ஆபத்தில் நின்றும் தப்பினபடியால், 'பேணி' என்றும், 'சீருடைப்பிள்ளை' என்றும் அருளிச்செய்தார். சொன்னபடி கேட்கிற பிள்ளையன்றே சீருடைப்பிள்ளை. பேணி என்பதற்கு—ஆசைப்பட்டுக்கொண்டு என்றும், தன்னை மறைத்துக்கொண்டு என்றும் பொருள் சொல்லலாம்.

ஆண் ஒப்பார் இவன்றேரில்லை = லோகத்திலுள்ளவர்கள் ஆண் என்கிற தன்மையில்மாத்திரம் இவனை யொத்திருக்கிறார்களே யொழிய, மற்றபடி திருமேனி ஸந்நிவேசம் முதலானவற்றில் இவனுக்கு ஒப்பானவர்கள் இல்லையென்கை. "ஆஜானுபாஹு" என்று பாடமாகில், ஆண்களுக்கு உரிய லக்ஷணத்தால் என்று பொருளாம். ஆன் விகுதி—மூன்றும் வேற்றுமையுருபு.

"திருவோணத்தானுலகு" என்று ஆறும் வேற்றுமைத் தொகையாகக் கொள்ளாமல் 'திருவோணத்தானாகிய திருமாலேயாவன், உலகங்களையும் ஆள்வன் என்பதாகவு முரைக்கலாம். (உ)

16 உறியைமுற்றத்து உருட்டிநின்றுஆடுவார் * நறுநெய்பால்தயிர் நன்றுகத்தூவுவார் * செறிமென்கூந்தல் அவிழத்திளைத்து * எங்கும் அறிவழிந்தனர் ஆய்ப்பாடியாயரே. (ஊ)

ஆய்ப்பாடி ஆயர் — திருவாய்ப்பாடியிலுள்ள இடையர்கள்

உறியை — (பால்தயிர் சேமித்துவைத்த) உறிகளை

முற்றத்து உருட்டி நின்று ஆடுவார் — முற்றத்திலே உருட்டிவிட்டு கூத்தாடுவார் சிலரும்,

நறு நெய் பால் தயிர் — மணம்மிக்க நெய்யையும் பாலையும் தயிரையும்

நன்றுக தூவுவார் — நிச்சேஷமாக தாநம்பண்ணுவார் சிலரும்,

செறி மென் கூந்தல் அவிழ திளைத்து — நெருங்கி மெத்தென்றிருக்கிற மயிர்முடியானது அவிழ்ந்து கலையும்படி நர்த்தநம் பண்ணுவார் சிலருமாக,

எங்கும் — சேரியடங்கலும்

அறிவு அழிந்தனர் — தங்களுடைய விவேகம் ஒழியப்பெற்றனர்.

* * *—கண்ணன் பிறந்த ஸந்தோஷம் உள்ளடங்காமல், நெய்யும் பாலும் தயிருமிருக்கிற உறிகளை அறுத்துக்கொண்டுவந்து முற்றத்திலே உருட்டிவிட்டு ஆடினார்கள் சிலர்; தலைமுடி அவிழ்ந்ததும் தெரியாமல் கூத்தாடினார்கள் சிலர்; ஆகவிப்படி கோகுலத்து இடையர்களெல்லோரும் ஸந்தோஷப் பெருமையினால் இன்னதுதான் செய்வதென்று தெரியாமல் உன்மத்தராயினார்கள்.

நன்றுகத் தூவுவார் என்றவிடத்து நன்று ஆக—(பிள்ளைக்கு) நன்மையுண்டாகும்படி என்று முரைக்கலாம். ... ... (எ)

17 கொண்டதாளுறி கோலக்கோடுமழு * தண்டினார் பரியோலைச்சயனத்தர் * விண்டமுல்லை அரும்பன்னபல்லினர் * அண்டர்மிண்டிப் புகுந்துநெய்யாடினர். (ஏ)

★ ஸாமுத்ரிகசாஸ்த்ரமாவது—கைமுதலிய அவயவங்களிலுள்ள ரேகைகளைப்பார்த்து அதிருஷ்டம் சொல்லும் நூல்.

தாள் கொண்ட உறி = கால்நெருக்கத்தை யுடைய உறிகளையும்

கோலம் கொடு மழு தண்டினர் = அழகிய கூர்மையான மழுக்களையும் தடிகளையுமுடையராய்

பறி ஓலை சயனத்தர் = (தாழைமடலினின்றும்) பறிக்கப்பட்ட ஓலைகளினால் செய்த படுக்கையையுடையராய்

விண்ட முல்லை அரும்பு அன்ன பல்லினர் அண்டர் = விகஸித்த முல்லையரும்பு போன்ற பற்களையுடையரான இடையரானவர்கள்

மிண்டி = (ஒருவருக்கொருவர்) நெருங்கி

புகுந்து = (க்ருஷ்ண மந்திரத்திலே) புகுந்து

நெய் ஆடினர் = நெய்யாடலாடினர்கள்.

* * *—ஜாதிக்குத் தகுந்தபடி உறியையும் மழுவென்னும் ஆயுதத்தையும் பசு மேய்க்கிற கோலியும் ஓலைப்பாயையும் உடையரான இடையர்கள் ஆகந்தத்தினால் தங்களுடைய பற்கள் வெளியே தோன்றும்படி சிரித்துக்கொண்டு நெருங்கிவந்து நின்று நெய்யாடலாடினர்கள். நெய்யாடலாவது—ஸந்தோஷ ஸூசகமாக எண்ணெய் தேய்த்துக்கொண்டு ஒருவரோடொருவர் தழுவி நின்று ஆடும் ஆட்டம்; எண்ணெய் தேய்த்துக்கொண்டு ஸ்நாநஞ் செய்தலுமாம்.

"விண்டின் முல்லை" என்றும் பாடமுண்டாம்; விண்டு—மலை; மலையில் தோன்றிய முல்லையரும்பு நெருங்கப் பூத்தாற்போலிருக்கிற (வெண்ணிறமான) பற்களையுடையர் என்றபடி. அண்டர்—இடையர்களும் தேவர்களும்: இங்கு இடையர்களைச் சொல்லுகிறது. ... ... (ரு)

18 கையுங்காலும் நிமிர்த்துக்கடாரநீர் * பையவாட்டிப் பசுஞ்சிறுமஞ்சளால் *
ஐயநாவழித்தாளுக்கு அங்காந்திட * வையமேழுங்கண்டாள் பிள்ளைவாயுளே. (சு)

கையும் காலும் நிமிர்த்து = திருக்கைகளையும் திருவடிகளையும் (நீட்டி) நிமிர்த்து

கடாரம் நீர் = கடாரத்தில் (காய்ச்சின) திருமஞ்சனத் தீர்த்தத்திலே

பசு சிறு மஞ்சளால் = குறுங்கண்ணுனை பசு மஞ்சளால்

பைய ஆட்டி = திருமேனிக்குப் பாங்காக ஸ்நாநம் செய்வித்து

ஐய நாவழித்தாளுக்கு அங்காந்திட = மெல்லிதான நாக்கை வழித்தவளான யசோதைக்காக, (கண்ணன்) வாயைத் திறக்க, (அவள்)

பிள்ளை வாயுள் = கண்ணபிரானுடைய வாயிலுள்ளே

வையம் ஏழும் கண்டாள் = உலகங்களையெல்லாம் ஸாக்ஷாத்கரித்தாள்.

* * *—யசோதைப்பிராட்டி ஒருநாள் ஸ்ரீக்ருஷ்ண சிசுவைக் குளிப்பாட்டும்போது வழக்கப்படியே குழந்தையின் கையையும் காலையும் நீட்டி நிமிர்த்துப் பசுமஞ்சளைப்பூசி, கல்ல வாஸநாத்ரவ்யங்களைச் சேர்த்துக் காய்ச்சின தீர்த்தத்தைக் கொண்டு குளிப்பாட்டி, முடிவில் மஞ்சள் தேய்வைக் கொண்டு நாக்கு வழிக்குமளவில் அந்தக்குழந்தை வாயைத்திறக்க, அந்த வாயிலே ஸகலலோகங்களையுங் கண்டாள். அர்ஜுநனுக்கு திவ்யசக்ஷுஸ்ஸைக் கொடுத்துத் தன்னுடைய விச்வரூபத்தைக் காட்டினாற் போலே யசோதைக்கும் தன்னுடைய ஸ்வதந்த்ரமான இச்சையினாலே இப்படி காட்டியருளினனென்க. ... ... (சு)

19 வாயுள்வையகங் கண்டமடநல்லார் * ஆயர்புத்திரனல்லன் அருந்தெய்வம் *
பாயசீருடைப் பண்புடைப்பாலகன் * மாயனென்று மகிழ்ந்தனர்மாதரே. (எ)

வாயுள் வையகம் கண்ட நல் மடவார் மாதர் = (பிள்ளையின்) வாயினுள்ளே உலகங்களை ஸாக்ஷாத்கரித்த வைலக்ஷண்யத்தையும் மடப்பத்தையுமுடைய ஸ்த்ரீகளானவர்கள், ("இவன்")

ஆயர் புத்திரன் அல்லன் = இடைப்பிள்ளையல்லன்,

அரு தெய்வம் பாய சீர் உடை பண்பு உடை பாலகன் மாயன் = பெறுதற்கரிய தெய்வம், பரம்பினபுகழையுடையனும் குணங்களையுடையனுமான (இந்த)சிறுபிள்ளையானவன் ஆச்சர்யசக்தியுக்தன்"

என்று மகிழ்ந்தனர் = என்று (ஒருவருக்கொருவர்) சொல்லிக்கொண்டு ஆனந்தித்தார்கள்.

* * *—கண்ணனுடைய வாயில் ஸகல லோகங்களையுங்கண்ட யசோதையானவள் ஆகந்தாலே மற்றுமுள்ள பெண்டுகளையும் அழைத்துக்காட்ட, கண்ணபிரான் அவர்களுக்கும் அருள்கூர்ந்து அப்படியே காட்டிக்கொடுக்க, அப்பெண்களெல்லோரும் யசோதையைப்போலவே கண்ணன் வாயில் ஸகல லோகங்களையுங் கண்டு ஆச்சரியப்பட்டு 'இவன் ஸாமாந்யனை இடைப்பிள்ளையல்லன்; ஸாக்ஷாத் பரமபுருஷனே இப்படி வந்து அவதரித்தானாகவேணும்' என்று கொண்டாடிக் கூறினர்கள். (எ)

**20 பத்துநாளுங்கடந்த இரண்டாநாள் * எத்திசையும் சயமரங்கோடித்து *
மத்தமாமலை தாங்கியமைந்தனை * உத்தானஞ்செய்து உகந்தனராயரே. (அ)**

பத்து நாளும் கடந்த இரண்டாம் நாள் — பத்துநாளுங் கழிந்த பன்னிரண்டாநாளான நாமகரண திருத்திலே

எத்திசையும் சயமரம் கோடித்து — எல்லாத்திக்குகளிலும் ஜயதோரண ஸ்தம்பங்களை நாட்டி அலங்கரித்து,

மத்தம் மாமலை தாங்கிய மைந்தனை — மதம்பிடிக்குந்தன்மையுள்ள மிருகமாகிய யானைகள் தங்கியிருக்கிற கோவர்த்தன பர்வதத்தை (குடையாக) ஏந்தின்ற குழந்தையாகிய கண்ணனை

ஆயர் — இடையரானவர்கள்

உத்தானம் செய்து — கைத்தலத்திலே வைத்துக் கொண்டு

உகந்தனர் — ஸந்தோஷித்தார்கள்.

* * *—ஸ்ரீக்ருஷ்ண சிசுவுக்கு நாமகரணம் செய்யவேண்டிய தினம் வந்தவளவில் கோகுலத்து இடையர்களெல்லாரும் எங்கும் வெற்றித்தோரணங்களை நாட்டி அலங்கரித்து ஸ்ரீக்ருஷ்ணனென்று திருநாமமிட்டு அக்குழந்தையைத் தங்கள் தங்கள் கையிலே யெடுத்துக்கொண்டு ஆநந்தம் பொங்கி நின்றார்கள். பிறந்த பத்தாம் நாளிலாவது பன்னிரண்டாம் நாளிலாவது வேறு நல்ல நாளிலாவது நாமகரணம் செய்யும்படி மநுஸ்மிருதி கூறுகின்றது. கண்ணபிரான் மலையைக் குடையாகப்பிடித்தது நாமகரணஞ்செய்த பின்பு நிகழ்ந்ததாயினும், இவ்வாழ்வார் பிற்காலத்தவராகையாலே இப்போது அதனை அநுஸந்திக்கக் குறையில்லை. மேல்வருமிடங்களிலும் இங்ஙனே கொள்க.

மைந்தன்—'மைந்து' என்று இளமைக்கும் வலிமைக்கும் அழகுக்கும் பெயர்; அதனையுடையவன் மைந்தன். உத்தானம்—வடசொல். ... ... (அ)

**21 கிடக்கில்தொட்டில் கிழியவுதைத்திடும் * எடுத்துக்கொள்ளில் மருங்கையிறுத்திடும் *
ஒடுக்கிப்புல்கில் உதரத்தேபாய்ந்திடும் * மிடுக்கிலாமையால் நான்மெலிந்தேனங்காய். (கூ)**

நங்காய் — பூர்ணைகளான ஸ்த்ரீகளே! [இப்பிள்ளையானவன்]

கிடக்கில் — (தொட்டிலில்) கிடந்தானில்

தொட்டில் கிழிய உதைத்திடும் — தொட்டிலானது சிதிலமாம்படி (கால்களினால்) உதையாநின்றான்;

எடுத்துக் கொள்ளில் — (இவனை இடுப்பில்) எடுத்துக் கொண்டால்

மருங்கை இறுத்திடும் — இடுப்பை முறியாநின்றான்;

ஒடுக்கி புல்கில் — (இவனுடைய கைகால்களை) ஒடுக்கி மார்வில் அணைத்துக் கொண்டால்

உதரத்து பாய்ந்திடும் — வயிற்றிலே பாயாநின்றான்;

மிடுக்கு இலாமையால் — (இச்சேஷ்டைகளைப் பொறுக்கவல்ல) சக்தி (இப்பிள்ளைக்கு) இல்லாமையால்

நான் மெலிந்தேன் — தாயாகிய நான் மிகவும் இளைத்தேன்.

* * *—யசோதையானவள் தன் ஸமீபத்திலுள்ள பெண்களை நோக்கிக் கண்ணனுடைய பருவத்துக்குத் தகுதியல்லாத செயல்களைச் சொல்லுவதாக இப்பாசுரம் அமைந்தது. நங்காய்! என்று ஏகவசநமான ஸம்போதநம் சாதியொருமையாய், 'நங்கைமீர்களே!' என்றபடி. என்னுடைய பிள்ளையைத் தொட்டிலில் கிடக்கவிட்டாலோ, இவன் தொட்டில் கிழிந்துபோகும்படி காலாலுதைக்கிறன்; 'கால்கள் மெத்தென்றிருப்பதால் நோயுண்டாகுமே' என்று தொட்டிலினின்றும் எடுத்து இடுப்பில் வைத்துக்கொண்டால், இடத்தை விட்டு நழுவி இடுப்பை முறித்துவிடுகிறன்; 'எனக்கே இக்குழந்தை செய்யும் சேஷ்டையினால் இடுப்பு முறியும்போது இக்குழந்தைக்கு எவ்வளவு நோவுண்டாகுமோ! இஃது இவனுடைய திருமேனியின் ஸௌகுமார்யத்துக்குத் தகாதே! என்று நினைத்து ஒரு தொழிலுஞ் செய்ய முடியாதபடி மார்பிலே வலிய அணைத்துத் தழுவிக்கொண்டால் கால்களினால் வயிற்றை உதைக்கிறன்; இப்படி இவன் தன்னுடைய பருவத்திற்குத்தகாத காரியங்களைச்செய்வதை நினைத்து நினைத்து நான் மிகவும் இளைத்துவிட்டேன் என்கிறாள்.

மிடுக்கு இலாமையால்—இதற்கு இருவகையாகப் பொருள்கொள்ளலாம்;—இப்படி மிகச்சிறிய குழந்தையாகிய இவனுடைய செய்கையைப் பொறுக்கும் வல்லமை எனக்கு இல்லாமையால் என்றும், இந்த செய்கைகளையெல்லாம் தாங்குவதற்கு வேண்டிய சக்தி இந்தக்குழந்தைக்கு இல்லாமலிருப்பதனால் என்றும். ... ... (கூ)

**22 செங்கோலார்வயல்தழ் திருக்கோட்டியூர் * மன்னுநாரணன் நம்பிபிறந்தமை *
மின்னுநூல் விட்டுசித்தன்விரித்த * இப்பன்னுபாடல்வல்லார்க்கு இல்லைபாவமே. (ம)**

செம்நெல் ஆர் வயல் சூழ் திருக்கோட்டியூர் — செந்நெல் தானியங்களால் நிறையப்பெற்ற கழனிகளாலே சூழப்பட்ட திருக்கோட்டியூரிலே

மன்னு — பொருந்திவர்த்திக்குமவனுய்

காரணன் — நாராயணசப்தவாச்யனுய்

நம்பி — ஸர்வகுண பூர்ணனை ஸர்வேச்வரன்

பிறந்தமை — திருவவதரித்தபடியை

மின்னு நூல் விட்டு சித்தன் விரித்த — விளங்காநின்ற யஜ்ஞோபவீதத்தையுடைய பெரியாழ்வார் விஸ்தரித்து அருளிச்செய்த

பன்னு இ பாடல் வல்லார்க்கு — ஜ்ஞாநிகள் எப்போதும் அநுஸந்திக்கக் கடவதான இப்பாசுரங்களை ஓதவல்லவர்க்கு

பாவம் இல்லை — பாப்மில்லை.

* * *—இத்திருமொழியை ஓதவல்லவர்கள் எம்பெருமானை அநுபவிப்பதற்கு இடையூறுனபாவங்களில் நின்றும் நீங்கி வாழ்வார் என்று இத்திருமொழி கற்றூர்க்குப்பலன் சொல்லித்தலைக்கட்டினராயிற்று.

நம்பி பிறந்தமை என்றது-திருவாய்ப்பாடியில்நடந்த கொண்டாட்டங்களுக்கும் உபலக்ஷணம். (ம)

அடிவரவு:—வண்ணமோடு பேணியுறி, கொண்டதை வாய்பத்து, கிடக்கில் செந்நெல் சீதம்.

முதற்பத்து—இரண்டாந் திருமொழி, சீதக் கடல்

(யசோதைப்பிராட்டி ஆய்ச்சிகளையழைத்துக் கண்ணனுடைய அவயவசோபைகளைக் காட்டுகிறாள்.)

23 சீதக்கடலுள் ளமுதன்னதேவகி * கோதைக்குழலாள் அசோதைக்குப்போத்தந்த * பேதைக்குழவி பிடித்துச்சுவைத்துண்ணும் * பாதக்கமலங்கள்காணீரே பவளவாயீர் வந்துகாணீரே. (க)

சீதம் கடல் உள் அமுது அன்ன தேவகி — குளிர்ந்திராநின்றுள்ளதிருப்பாற்கடலிலே உள்ளமுதாகப்பிறந்த பிராட்டியோடொத்த தேவகிப்பிராட்டியால்

பேதைகுழவி பிடித்து சுவைத்து உண்ணும் — இளம் சிசுவான கண்ணபிரான் (தன் கைகளால்) பிடித்து ருசிபார்த்து திருப்பவளத்தில்வைத்து)புஜிய்யாநின்றுள்ள

கோதை குழலாள் அசோதைக்கு போத்தந்த — பூமாலையால் அலங்கரிக்கப்பட்ட கேசபாசத்தையுடைய யசோதையாகிய எனக்கு அனுப்பப்பட்டவனுய்

பாதம் கமலங்கள் காணீர் — திருவடித் தாமரைகளை வந்துகடணுங்கோள்;

பவளம் வாயீர் வந்து காணீர் — பவளம்போல் சிவந்த அதரத்தையுடைய பெண்காள்!, வந்து காணீர்!!-

* * *—"தேனே மலரும் திருப்பாதம்" என்னப்பட்ட தனது திருவடியிலுள்ள தேனைப் பருகுவதற்காகவும், தனது திருவயிற்றில் கிடக்கும் உலகங்கட்கெல்லாம் உஜ்ஜீவநமுண்டாகும்படியாகவும் ஸ்ரீகிருஷ்ணன் தனது திருவடிகளிலொன்றையெடுத்து வாயிலே வைத்துச் சுவை பார்த்துக் கொண்டிருக்க, அதைக்கண்ட யசோதைப்பிராட்டி தான் மிக மகிழ்ந்து, இதைப் பிறரும் கண்டு மகிழவேணுமென்றெண்ணித் தன்னருகிலுள்ளாரைக் கொண்டாடியழைத்து 'நீங்கள் இக்குழந்தை சுவைத்துண்ணும் இப்பாதக் கமலங்களைப் பாருங்கள்' என்று அவர்கட்குக் காட்டுகிறாள்.

கடலில் இரண்டு அமுதம் பிறந்தன; ஒன்று தேவர்களுக்கு போக்யமான உப்புச்சாரமுள்ள அம்ருதம்; அது புறவமுதமாம். மற்றொரு அம்ருதம் "அமுதில்வரும் பெண்ணமுது" எனப்பட்ட பிராட்டி: இவளே உள்ளமுதம். ஆகவே இங்கு "உள்ளமுதன்ன" என்றது பிராட்டியைப்போன்ற என்றபடியாயிற்று. "திருவின்வடிவொக்குந் தேவகி" என்று மேலும் கூறுவர். பிராட்டியைப்போலே பரோபகாரமே சீலமாகவுள்ள தேவகி என்க. (க)

24 முத்தும்மணியும் வயிரமும்கன்பொன்னும் * தத்திப்பதித்துத் தலைப்பெய்தாற்போல் * எங்கும் பத்துவிரலும் மணிவண்ணன்பாதங்கள் * ஒத்திட்டிருந்தவாகாணீரே ஒண்ணுதலீர்வந்துகாணீரே. (உ)

முத்தும் மணியும் வயிரமும் நல் பொன்னும் தத்திப்பதித்து தலைப்பெய்தாற்போல் — முத்துக்களையும் ரத்நங்களையும் வஜ்ரங்களையும் மாற்றுயர்ந்த பொன்னையும் மாறிமாறிப்பதித்துச்சேர்த்தாற்போலே

எங்கும் மணி வண்ணன் பாதங்கள் — திருமேனி யெங்கும் மணிபோன்றவர்ணத்தையுடையனன்ன கண்ணனுடைய திருவடிகளிலுள்ள

பத்து விரலும் விரல்கள் பத்தும்
ஒத்திட்டிருந்த ஆ ஒன்றோடொன்றொத்து அமைந்திருக்கும்படியை காணீர்!—,
ஒள் நுதலீர் ஒளிபொருந்திய நெற்றியையுடையீர்காள்!
வந்து காணீர்—.

* * *—முதலடியில் சில ரத்னங்களைச்சொன்னது நவரத்னங்களுக்கும் உபலக்ஷணம். கோமேதகம், நீலம், பவழம், புட்பராகம், மரகதம், மாணிக்கம், முத்து, வைடூரியம், வைரம் என்பன நவரத்தினங்களாம். கால்களுக்கு இடுகின்ற செம்பஞ்சு மருதாணி என்பனபோல ஸ்ரீகிருஷ்ணனுடைய பாதங்களில் ஒன்பது விரல்களுக்கு நவரத்ன வர்ணத்தையும் மற்றொரு விரலுக்குப் பொன்னிறத்தையும் யசோதை இட்டு 'மணிவண்ணனுடைய பாதங்களில் பத்து விரலும்–நவரத்னங்களையும் கல்ல பொன்னையும் ஒளிவிளங்க மாறிமாறிப் பதித்துவைத்தாற்போலச் சேர்ந்தனவாய் லக்ஷணங்களில் குறையொன்றுமில்லாமலிருப்பதை வந்து பாருங்கள் என்கிறாள். ... ... (உ)

25 பணைத்தோளிளவாய்ச்சி பால்பாய்ந்தகொங்கை * அணைத்தாரவுண்டு கிடந்தவிப்பிள்ளை* இணைக்காலில்வெள்ளித் தளைநின்றிலங்கும் * கணைக்காலிருந்தவாகாணீரே காரிகையீர் வந்துகாணீரே. (ங)

பணை தோள் இள ஆய்ச்சி மூங்கில்போன்றதோள்களையுடையளாய் இளமைப் பருவத்தை யுடையளான யசோதையாகிய என்னுடைய
பால் பாய்ந்த கொங்கை பால்சொரிகிற முலையை
அணைத்து ஆர உண்டு கிடந்த (திருக்கையால்) அணைத்துக் கொண்டு வயிறு நிரம்ப (பாலை) அமுது செய்து (களித்துக்) கிடக்கின்ற
இவ் பிள்ளை இந்தக் கண்ணபிரானுடைய
இணை கால்வில் சேர்த்தியழகு அமைந்த திருவடிகளில்
வெள்ளி தளை நின்று இலங்கும் கணை கால் இருந்த ஆ வெள்ளித்தண்டை நின்று விளங்காநிற்கிற கணைக்காலிருந்தபடியை காணீர்!—;
காரிகையீர் அழகுடைய பெண்காள்!
வந்து காணீர்!!—.

* * *—அன்பினால் நெகிழ்ந்துப் பால் சொரிகின்ற என் முலையைத் திருக்கைகளாலே அணைத்து வயிறாரவுண்டு மகிழ்ந்துகிடக்கிற இப்பிள்ளையினுடைய கால்களில் வெள்ளித்தண்டை விளங்காநிற்கிற கணைக்காலின் அழகை வந்து காணுங்கள். ... ... (ங)

26 உழந்தாள்நறுநெய் ஒரோதடாவுண்ண * இழந்தாளெரிவினுள் ஈர்த்தெழில்மத்தின் * பழந்தாம்பாலோச்சப் பயத்தால்தவழ்ந்தான் * முழந்தாளிருந்தவாகாணீரே முகிழ் முலையீர்வந்துகாணீரே. (ச)

உழந்தாள் (நெய்முதலியவற்றை) பிரயாஸப்பட்டுத் தடாவிலே சேர்த்த யசோதையாகிய என்னுடைய
நறு நெய் மணம் மிக்க நெய்யை
ஒரோ தடா உண்ண ஒவ்வொரு தடாவாக (கண்ணன்) அமுது செய்த வளவில்
இழந்தாள் (பிள்ளையை) இழந்தவளாக நினைத்த நான்
எரிவினுள் வயிற்றெரிச்சலாலே
ஈர்த்து கையைப்பிடித்திழுத்து
எழில் மத்தின் அழகிய மத்தினுடைய
பழ தாம்பால் (சுற்றிக் கடைந்தமையாலுண்டான) பழமை பொருந்திய தாம்பை
ஓச்ச (அடிப்பதாகக்) கையிலெடுக்க
பயத்தால் தவழ்ந்தான் அச்சத்தாலே(அதைத்தப்பிப் போவதாகத்) தவழ்ந்த கண்ணனுடைய
முழந்தாள் இருந்த ஆ முழங்கால்களிருந்தபடியை காணீர்!—;
முகிழ் முலையீர் முகிழ்த்த முலையையுடைய பெண்காள்!
வந்து காணீர்!!—.

* * *கீழ்ப்பாட்டிற்போல இப்பாட்டிலும் உழந்தாள் என்றதும் இழந்தாள் என்றதும்-தன்மையில்வந்த படர்க்கை. சிரமப்பட்டுக் கறந்து காய்த்துத் தோய்த்துக் கடைந்து வெண்ணெயாக்கி யுருக்கித் தடாக்களிலே நான் சேர்த்து வைத்திருந்தேன்; அந்த நெய்யை ஒவ்வொரு தடாவாக ஒன்றும் மிச்சமாகாதபடி இவன் வாரியுண்டான்; 'இவ்வளவு நெய்யை வாரியுண்டால் ஜரிக்கமாட்டாதே!' என்கிற வயிற்றெரிச்சலாலே கையைப்பிடித்திழுத்து, மத்திலே சுற்றிக் கடைந்து பழகின தாம்பாலே அடிப்ப

தாக நான் ஓங்க, பயத்தாலே அதைத் தப்புவதாகத் தவழ்ந்தான்; இப்படிப்பட்ட இவனுடைய முழந் தாள்களிருக்கும்படியைப் பாருங்கள் என்கிறள். யசோதை மாதர்களையழைத்துக் கண்ணனுடைய அவயவங்களைக் காட்டும்போது பழந்தாம்பாலோச்சப் பயத்தால் தவழ்ந்த சரிதை நடவாததாயினும் பிற்பட்ட ஆழ்வார் தம்முடைய அநுஸந்தானத்தினால் அருளிச் செய்யக் குறையில்லை யென்க. (சு)

27 பிறங்கியபேய்ச்சி முலைசுவைத்துண்டிட்டு * உறங்குவான்போலே கிடந்தவிப்பிள்ளை * மறங்கொளிரணியன் மார்வைமுன்கீண்டான் * குறங்குகளைவந்துகாணீரே குவிமுலையீர் வந்துகாணீரே. (நி)

முன் மறம் கொள் இரணியன்மார்வை கீண்டான் — முற்காலத்திலே த்வேஷங் கொண்ட ஹிரண்யனுடைய மார்பைப் பிளந்த வனுய்,

பிறங்கிய பேய்ச்சி முலை சுவைத்து — (கொடுமையால்வந்த) ப்ரகாசத்தையுடைய பூதனையினுடைய முலையை (பசையறும்படி) ஆஸ்வாதித்து

உண்டிட்டு — அமுதுசெய்து

உறங்குவான் போலே கிடந்த இப்பிள்ளை — (ஒன்றுமறியாமலே) உறங்குமவனைப்போலே படுத்திருப்பவனான இந்தக் கண்ணனுடைய

குறங்குகளை — திருத்துடைகளை

வந்து காணீர்!—;

குவி முலையீர் — குவிந்த முலைகளையுடைய பெண்காள்!

வந்து காணீர்!!—.

* * *—நரஸிம்ஹாவதாரம் செய்தவனும் கிருஷ்ணாவதாரம் செய்தவனும் ஒருவனே என்ற உண்மையை இவ்வாழ்வார் உணர்ந்தவராதலால் "மறங்கொளிரணியன் மார்வை முன் கீண்டானுகிய இப்பிள்ளை" என்றார். ... ... (நி)

28 மத்தக்களிற்று வசுதேவர்தம்முடை * சித்தம்பிரியாத தேவகிதன்வயிற்றில் * அத்தத்தின்பத்தாநாள் தோன்றியவச்சுதன் * முத்தமிருந்தவாகாணீரே முகிழ்நகையீர் வந்துகாணீரே. (சூ)

மத்தம் களிறு வசுதேவர் தம்முடை — மதத்தையுடைய யானைகளை நிர்வஹிக்கு மவரான ஸ்ரீ வஸுதேவருடைய

சித்தம் பிரியாத தேவகிதன் வயிற்றில் — மனத்தைவிட்டுப்பிரியாத தேவகியினுடைய வயிற்றிலே

அத்தத்தின் பத்தாம் நாள் — ஹஸ்த நக்ஷத்ரத்துக்குப் பத்தாவதான திருநாளிலே

தோன்றிய அச்சுதன் — திருவவதரித்த கண்ணபிரானுடைய

முத்தம் இருந்த ஆ — சண்ணமிருந்தபடியை

காணீர்!—

முகிழ் நகையீர் — புன்சிரிப்பையுடைய பெண்காள்!

வந்து காணீர்!!—.

* * *—முத்தம் என்றது ஆண்குறியை. 'மூத்ரம்' என்னுஞ் சொல் மூத்திரம் பேய்வதற்கு உறுப்பான அவயவத்தைச் சொல்லிற்றாய், அச்சொல் முத்தமெனத் திரிந்திருப்பதாகச் சிலர் கூறுவர். சிறுகுழந்தைகளின் குறியைப் பேரன்புடையார் முத்தமிடுவர்களென்னுங் காரணம்பற்றி அக்குறிக்கு முத்தமெனப் பெயராயிற்றென்று சிலர் சொல்லுவர்.

அத்தத்தின் பத்தாநாள்—ஹஸ்த நக்ஷத்திரத்திற்குப் பத்தாவது நாள் (தீழ்முறையில் எண்ணிப் பார்த்தால்) ரோஹிணீ நக்ஷத்ரமும், (மேல்முறையில் எண்ணிப்பார்த்தால்) திருவோண நக்ஷத்திரமுமாம். இவற்றுள் ரோஹிணீ நக்ஷத்திரம் ஸ்ரீக்ருஷ்ணாவதார நக்ஷத்ரம்: திருவோண நக்ஷத்ரம்—தானை தன்மையிலுள்ள திருமாலுக்கு உரிய நக்ஷத்ரம். வஸுதேவர் யானைகள் கட்டி வாழ்ந்தவராதலால் மத்தக்களிற்றுவசுதேவர் எனப்பட்டார். ... ... (சூ)

29 இருங்கைம்மதகளிறு ஈர்க்கின்றவனை * பருங்கிப்பறித்துக் கொண்டோடுபரமன்றன் * நெருங்குபவளமும் நேர்நாணும்முத்தும் * மருங்குமிருந்தவாகாணீரே வாணுதலீர் வந்துகாணீரே. (ஏ)

இரு கை மத களிறு — பெரியதுதிக்கையையுடைய மத்தகஜமான குவலயாபீடத்தை

ஈர்க்கின்றவனை — தன்வசமாக நடத்தாநின்றுள்ள பாகனை

பருங்கி — கொன்று

பறித்துக்கொண்டு — (யானையின் கொம்புகளை) முறித்துக்கொண்டு

ஓடு — (கம்ஸனிருக்கு மிடத்தைத் தேடிக்கொண்டு) ஓடின

பரமன் தன் { பரமபுருஷனை கண்ணனுடைய
நெருங்கு பவளமும் { செறியக்கோத்த பவள வடமும்
நேர் நாணும் அழகிய அரைநாணும்
முத்தும் { முத்துவடமும் (இவற்றோடே சேர்ந்த)
மருங்கும் இருந்த ஆ திருவரையும் இருந்தபடியை காணீர்!—;
வாள் நுதலீர் { ஒளிபொருந்திய நெற்றியையுடைய பெண்காள்!
வந்து காணீர்!!—

* * *—இடையினழகையும் அதிலுள்ள ஆபரணங்களினழகையும் காட்டும் பாசுரம் இது. ஸ்ரீக்ருஷ்ணனைக் கொல்லக்கருதிய கம்ஸன் வில்விழாவென்கிற வியாஜம்வைத்துக் கண்ணனை அழைக்க அப்பிரானும் பலராமனுடனே புறப்பட்டுவந்து கம்ஸனரண்மனையி னுட்புகும்போது, இவர்களைக் கொல்லும்படி கம்ஸனால் ஏவி நிறுத்தப்பட்டிருந்த குவலயாபீடமென்னும் மதயானை சிறிவர, ஸ்ரீக்ருஷ்ண பலராமர்கள் அவ்யானையை எதிர்த்து அதன் தந்தங்களிரண்டையும் சேற்றிலிருந்து கொடியைப்பறித்தெடுப்பதுபோல எளிதிற் பிடுங்கியெடுத்து அவற்றையே ஆயுதமாகக்கொண்டு அவற்றால் பாகனையும் அவ்யானையையும் கொன்றனரென்ற வரலாறு முன்னடிகளில் அடங்கியுள்ளது. அன்றியே, ஊரில் இடைப்பிள்ளைகள் தெருவிலே விளையாடும்போது ஒருவனை யானையாகவைத்து அவனை யொருவன் இழுத்துக்கொண்டு திரிய, அவனைக் கண்ணபிரான்தான் மோதியடித்துத் தானிழுத்துக்கொண்டு ஓடுகின்ற லீலாவிசேஷத்தை முன்னடிகளிற் கூறினதாகவும் உரைப்பர். ... ... (எ)

30 வந்தமதலைக் குழாத்தைவலிசெய்து * தந்தக்களிறுபோல் தானேவிளையாடும் * நந்தன்மதலைக்கு நன்றுமழகிய * உந்தியிருந்தவாகாணீரே ஒளியிழையீர் வந்துகாணீரே. (அ)

வந்த மதலை குழாத்தை வலி செய்து { (தன்னோடுவிளையாட) வந்த சிறுபிள்ளைகளின் கூட்டத்தில் தன்வல்லமையைக் காட்டிக்கொண்டு
தந்தம் களிறு போல் { கொம்புமுளைத்த யானைக் குட்டிபோல்
தானே விளையாடும் { தானே முக்கியனாய் நின்று விளையாடுமவனுடைய
நந்தன் மதலைக்கு { நந்தகோபர்க்கு (விதேயனை) பிள்ளையாகிய கண்ணனுடைய
நன்றும் அழகிய உந்தி இருந்த ஆ மிகவுமழகிதான நாபி இருக்கிறபடியை காணீர்!—;
ஒளி இழையீர் { ஒளியால் விஞ்சின ஆபரணங்களணிந்தபெண்காள்!
வந்து காணீர்!!—.

* * *—கண்ணபிரான் தான் சிறு குழந்தையாயிருந்தாலும் தன்னோடு விளையாடுவதற்குக் கூட்டமாய்வரும் பாலகர்களையெல்லாம் தனது வல்லமையால் அடக்கி, அவர்களெல்லாம் ஒருபக்கமும் தான்மாத்திரம் ஒருபக்கமுமாக நின்று இப்படி தானே பிரதானனாய் நின்று விளையாடுவன்; அப்போது தான் கொம்பு முளைக்கப்பெற்ற யானைக்குட்டியை த்ருஷ்டாந்தமாகச் சொல்லத் தகுந்திருப்பன்; இப்படிப்பட்டவனுடைய உந்தியைப் பாருங்களென்கிறாள். ... ... (அ)

31 அதிருங்கடல்நிறவண்ணனை * ஆய்ச்சி மதுரமுலையூட்டி வளர்த்துவைத்து * பதறப்படாமே பழந்தாம்பாலார்த்த * உதரமிருந்தவாகாணீரே ஒளிவளையீர் வந்துகாணீரே. (கூ)

அதிரும் கடல் நிறம் வண்ணனை { கோஷிக்கின்ற கடலினது நிறம்போன்ற நிறத்தையுடைய கண்ணனுக்கு
ஆய்ச்சி மதுரம் முலை ஊட்டி யசோதையானவள் இனிய முலைப்பாலை ஊட்டி,
வளர்த்து வைத்து { (மேல், தான் இவனைக்கட்டப் போகிறதை இவனறியவொண்ணாதபடி) ஏமாத்தி
பதறப் படாமே தன் எண்ணம் தப்பாதபடி
பழ தாம்பால் ஆர்த்த உதரம் இருந்த ஆ { பழகின கயிற்றாலே கட்டிவைத்த வயிறு இருந்தபடியை காணீர்!—;
ஒளி வளையீர் { ஒளிமிக்க வளையையுடைய பெண்காள்!
வந்து காணீர்!!—.

* * *—கண்ணபிரான் இளம்பிராயத்தில் கோகுலத்திலுள்ள இடையர் மனைகளிலெல்லாஞ் சென்று அவர்களது பால் தயிர் வெண்ணெய் முதலியவற்றைத் திருடியுண்டதை அவ்விடைச்சிகள் வந்து முறையிட, அறிந்த யசோதை அக்குற்றத்திற்கு ஒரு தண்டனையாகக் கண்ணனை வயிற்றில் கயிற்றினல்கட்டி உரலோடு பிணித்துவைத்தாளென்பது இதில் அறியத்தக்கது. "கடல்நிறவண்ணன்" என்னுமல் "அதிருங் கடல்நிற வண்ணன்" என்றது கண்ணனுடைய அடங்காத் தன்மையைக்காட்டும். (கூ)

32 பெருமாவுரலில் பிணிப்புண்டிருந்து * அங்கு, இருமாமருதம் இறுத்தவிப்பிள்ளை * குருமாமணிப்பூண் குலாவித்திகழும் * திருமார்விருந்தவாகாணீரே சேயிழையீர் வந்துகாணீரே. (கo)

பெருமா உரலில் பிணிப்புண்டு இருந்து = மிகப்பெரிய உரலோடு கட்டுண்டிருந்து

அங்கு = அந்த நிலைமையிலே

இருமா மருதம் இறுத்த இப்பிள்ளை = இரண்டு பெரிய மருதமரங்களை முறித்தருளின இக் கண்ணபிரானுடைய,

குருமா மணி பூண் குலாவி திகழும் = மிகவும் சிறந்த கௌஸ்துப பாபரணமான்து அசைந்து விளங்கா நின்றுள்ள

திருமார்வு இருந்த ஆகாணீர்!—;

சே இழையீர் = செவ்விய ஆபரணங்களை யுடைய பெண்காள்!

வந்து காணீர்!!—.

* * *—"குருமாமணிப்பூண்" என்று சிறந்த ரத்நாபரணமாகிய கௌஸ்துபமணியைச் சொல்லுகிறது. (கo)

33 நாள்களோர்நாலைந்து திங்களளவிலே * தாளைநிமிர்த்துச் சகடத்தைச்சாடிப்போய் * வாள்கொள்வலையெயிற் றுருயிர்வவ்வினன் * தோள்களிருந்தவாகாணீரே சுரிகுழலீர் வந்துகாணீரே. (கக)

நாள்கள் = (கண்ணன் பிறந்தபின்பு சென்ற) நாட்கள்

ஓர் நாலு ஐந்து திங்கள் அளவிலே = ஒரு நாலைந்து மாதத்தளவிலே

தாளை நிமிர்த்து = காலைத்தூக்கி

சகடத்தை சாடிப் போய் = சகடாஸுரனை உதைத்து விட்டு,

வாள் கொள் வலை எயிறு = ஒளிகொண்டதாய் வளைந்திரா நின்றுள்ள கோரப்பற்களை யுடைய பூதனையினது

ஆர் உயிர் = அரிய உயிரை

வவ்வினன் = முடித்த கண்ணனுடைய

தோள்கள் இருந்த ஆகாணீர்!—;

சுரி குழலீர் = சுருண்ட கேசத்தையுடைய பெண்காள்!

வந்து காணீர்!!—.

***—"நாலைந்துதிங்களளவிலே" என்பதற்கு-நாலு அல்லது ஐந்து மாதங்களுக்குள்ளே என்றும், (நாலு மைந்துங்கூடின) ஒன்பது மாதங்களுக்குள்ளே என்றும் (நாலால் பெருக்கப்பட்ட ஐந்தாகிய) இருபது மாதங்களுக்குள்ளே என்றும் பொருளாகும். இவ்வாழ்வார் மங்களாசாஸநபராதலால், ஸ்வல்ப வயஸ்ஸிலே அரிய பெரிய காரியஞ்செய்தானென்று சொன்னால் கண்ணெச்சில்படுமோ! என்றஞ்சி அங்ஙனம்திருஷ்டிதோஷம் வராமைக்காக, மாதம்நாலென்றும் ஐந்தென்றும் ஒன்பதென்றும் இருபதென்றுந் தெரியாதபடி மயங்கவருளிச் செய்தனரென்று ரஸோக்தியாகவருளிச்செய்வர் பூருவர்.

எயிறு + ஆருயிர், எயிற்றுருயிர். எயிறு—எயிற்றையுடையவளுக்கு ஆகுபெயர். "எயிற்றியா நுயிர்" என்பது எயிற்றுருயிரென விகாரப்பட்ட தென்பாருமுளர்.

சந்திரனுக்குப் பெயரான திங்களென்னுஞ் சொல் மாதத்தை எங்ஙனே குறிக்குமென்னில்; சந்திரனுடைய கலைகள் ஒருமுறை தேய்ந்து வளர்தல் ஒரு மாதம்—எனச் சந்திரனாலறியப்படும் மாதத்திற்கு லக்ஷணை: இச்சொல் சாந்த்ரமாநத்து மாதத்தையே குறிக்கவேண்டியதாயினும் ஸௌரமாநத்து மாதத்தையும் வழக்கில் குறித்துவருகின்றது. ... ... (கக)

34 மைத்தடங்கண்ணி அசோதைவளர்க்கின்ற * செய்த்தலைநீலநிறத்துச் சிறுப்பிள்ளை * நெய்த்தலைநேமியுஞ் சங்கும்நிலாவிய * கைத்தலங்கள்வந்துகாணீரே கனங்குழையீர் வந்துகாணீரே. (கஉ)

மை தட கண்ணி அசோதை வளர்க்கின்ற = மையணிந்த பெரிய கண்களையுடைய யசோதைப் பிராட்டியாலே வளர்க்கப் படுகின்றவனுய்,

தலை செய்நீலம் நிறம் சிறு பிள்ளை = உயர்ந்த க்ஷேத்ரத்திலே (அலர்ந்த) கரு நெய்தல் பூவினது போன்ற நிறத்தையுடையனான (இந்த) பாலக்ருஷ்ணனுடைய

நெய் தலை நேமியும் சங்கும் நிலாவிய கைத்தலங்கள் = கூர்மைபொருந்தியதுதியை யுடைய திருவாழியும் திருச்சங்கும் அமைந்திரா நின்றுள்ள உள்ளங் கைகளை

வந்து சாணீர்!!—;

கனம் குழையீர் = பொன்னால்செய்த காதணிகளையுடைய பெண்காள்!

வந்து காணீர்!!—.

* * *—கண்ணழகுபடைத்த யசோதைப்பிராட்டி பிறர்கையில் காட்டிக் கொடாமல் தானே வைத்தகண் வாங்காமல் ஆதரித்து வளர்ப்பதனால்தான் அவளது கண்ணின் நிறமெல்லாம் கண்ணனது திருமேனியில் ஏறித் திருமேனி நிறம் கறுத்திருக்கின்றதோ! என்று தோன்றும்படியிருக்கிற பிள்ளை யென்பது முன்னடிகளின் உட்கருத்து. யசோதைப்பிராட்டிக்குச் சிற்சில ஸமயங்களில் சங்கு சக்கரங் களைக் காட்டுதலால் "நேமியும் சங்கும் நிலாவிய கைத்தலங்கள்" என்றார். அன்றியே, சக்கரரேகையும் சங்கரேகையும் பொருந்திய கைத்தலங்கள் என்றும் கொள்ளலாம்: இப்பொருளில் நெய்த்தலை என்ற விசேஷணம் சக்கரத்திற்கு இயற்கை யடைமொழியாகவேணும். கைத்தலத்தில் சங்க சக்ர ரேகைகள் அமைவது மஹாபுருஷலக்ஷணம். ... ... (கஉ)

35 வண்டமர்பூங்குழல் ஆய்ச்சிமகனைக் * கொண்டுவளர்க்கின்ற கோவலக்குட்டற்கு * அண்டமும்நாடும் அடங்கவிழுங்கிய * கண்டமிருந்தவாகாணீரே காரிகையீர் வந்துகாணீரே. (கஙு)

வண்டு அமர் பூ குழல் ஆய்ச்சி — வண்டுகள் படிந்திருக்கிற பூ அணிந்த குழலையுடையளான யசோதையானநான்

மகனைக் கொண்டு வளர்க்கின்ற — புத்ரனாகஸ்வீகரித்து வளர்க்கப்பெற்றவனுய்

கோவலர் குட்டற்கு — ஸ்ரீநந்தகோபருடைய பிள்ளையான கண்ணபிரானுடைய,

அண்டமும் நாடும் அடங்க விழுங்கிய — அண்டங்களையும் (அவற்றினுள்ளே கிடக்கிற) சேதநாசேதநங்களையும் முழுதும் (ப்ரளயகாலத்தில்) கபளீகரித்த

கண்டம் இருந்த ஆ — கழுத்திருந்தபடியை

காணீர்!—;

காரிகையீர்! வந்து காணீர்!!—.

* * *—பிள்ளைகளுக்கு அணுக்கமுண்டாகாமைக்காகத் தாய்மார் தங்களை அலங்கரித்துக் கொண்டிருப்பர்களாகையாலே "வண்டமர் பூங்குழலாய்ச்சி" எனப்பட்டது. அண்டமும் நாடு மடங்க விழுங்கியது—பிரளயகாலத்தில்: "அண்டரண்ட பகிரண்டத்தொருமாகில மெழுமால்வரை முற்று முண்ட கண்டம்" என்றார் திருப்பாணாழ்வாரும். கண்டம்—வடசொல். ... (கஙு)

36 எந்தொண்டைவாய்ச்சிங்கம் வாவென்றெடுத்துக்கொண்டு * அந்தொண்டைவாய் அமுதாதரித்து * ஆய்ச்சியர், தந்தொண்டைவாயால் தருக்கிப்பருகும் * இச்செந்தொண்டை வாய்வந்துகாணீரே சேயிழையீர்வந்துகாணீரே. (கச)

ஆய்ச்சியர் — இடைப்பெண்கள்

தொண்டை வாய் எம் சிங்கம் வா என்று எடுத்து கொண்டு — "கொவ்வைக் கனிபோன்ற அதரத்தையுடைய எமது சிங்கக்குருகே!(எம்பக்கல்) வா" என்று (இடுப்பில்) எடுத்துக்கொண்டு

அம் தொண்டை வாய் அமுது ஆதரித்து — அழகிய கொவ்வைபோன்ற (கண்ணனுடைய) அதரத்தில் (ஊறுகிற) அம்ருதத்தை விரும்பி,

தம் தொண்டை வாயால் தருக்கி பருகும் — தங்களுடைய கோவை வாயை (கண்ணன்வாயோடே) நெருக்கிப் பானம் பண்ணப்பெற்ற

இசெம் தொண்டை வாய் — இந்தச்சிவந்த கோவை வாயை

வந்து காணீர்!!—.

சேயிழையீர்! வந்து காணீர்!!—.

* * *—இடைச்சிகள் ஒவ்வொருத்தியும் 'என் சிங்கக்குட்டியே! என் யானைக்குட்டியே!' என்று பலபடியாகச் சீராட்டி ஸ்ரீகிருஷ்ணகுமாரனை யெடுத்துக்கொண்டு அவனது வாயில் ஊறுகின்ற அமுதம்போல் போக்யமான நீரைப் பானம்பண்ணுவர்களாம். அப்படி அவர்களால் பானம்பண்ணப் பெற்ற அதரத்தினழகை வந்துபாருங்களென்கை. ... ... (கச)

37 கோக்கியசோதை துணுக்கியமஞ்சளால் * நாக்குவழித்து நீராட்டுமிந்நம்பிக்கு * வாக்கும்நயனமும் வாயும்முறுவலும் * மூக்குமிருந்தவாகாணீரே மோய்குழலீர் வந்துகாணீரே. (கஞ)

அசோதை — யசோதையாகிய நான்

கோக்கி துணுக்கிய மஞ்சளால் — (கண்ணபிரானதுதிருமேனியின் மென்மைக்குத் தக்கபடி) பார்த்து ஆராய்ந்து அரைத்த மஞ்சட்காப்பாலே,

நாக்கு வழித்து—;

நீராட்டும் இந்நம்பிக்கு — ஸ்நாநம் செய்விக்கப்பெறுகின்ற இக்கண்ணபிரானுடைய

வாக்கும் நயனமும் வாயும் முறுவலும் மூக்கும் இருந்த ஆ — திருவாக்கும் திருக்கண்களும் அதரஸ்புரணமும் புன்சிரிப்பும் மூக்குமிருந்த படியை

மொய் குழலீர் — செறிந்த குழலையுடைய பெண்காள்!

காணீர்!—; வந்து காணீர்!!—.

* * *—வாக்கும் என்றது—தாய் தந்தை முதலானருடைய நாமங்களைச் சொல்லுகிற வாகிந் திரியத்தைச் சொன்னபடி. வாயும் என்றது அதரத்தைச்சொன்னபடி. இனி, வாயும் என்பதை முறுவலுக்கு விசேஷணமாக்கி, வாய்த்திருக்கின்ற புன்சிரிப்பு என்றும் உரைக்கலாம். ... ... (கஞ)

38 விண்கொளமரர்கள் வேதனைதீர * முன், மண்கொள்வகை வர்த்தம் மகனுய்வந்து * திண்கொளசுரரைத் தேயவளர்கின்றான் * கண்களிருந்தவாகாணீரே கனவளையீர் வந்துகாணீரே. (கசு)

விண் கொள் அமரர்கள் வேதனை தீர — ஸ்வர்க்காதி லோகங்களை இருப்பிடமாகக் கொண்ட தேவதைகளுடைய துன்பங்கள் தீரும்படி

முன் மண் கொள் வசுதேவர்க்கம் மகனுய் வந்து — முன்னே பூமியை இருப்பிடமாகக் கொண்ட வஸுதேவர்க்கு பிள்ளையாய்வந்து பிறந்து

திண் கொள் அசுரர் தேய வளர்கின்றான் — வலிமைகொண்ட அஸுரர்கள் க்ஷயிக்கும்படி வளராகின்ற கண்ணனுடைய

கண்கள் இருந்த ஆ காணீர்!—;

கனம் வளையீர் — கனக கங்கணத்தையுடைய பெண்காள்!

வந்து காணீர்!—.

* * *—கீழ்ப்பாட்டில் நயனமும் என்று கண்ணழகைக் காட்டியிருந்தாலும் அங்கு முகமுதாய சோபையைக் காட்டின மாத்திரமேயுள்ளது; இப்பாட்டில் விசேஷித்துத் திருக்கண்களினழகைக் காட்டுகின்றார். கண்ணபிரான் சிறுகுழந்தையான பருவத்திலேயே பலபல அசுரர்களை அழித்ததனால் "திண்கொளசுரரைத் தேயவளர்கின்றான்" என்கிறார். அசுரரை என்றவிடத்து, ஐ—சாரியை. (கசு)

39 பருவம்நிரம்பாமே பாரெல்லாமுய்ய * திருவின்வடிவொக்கும் தேவகிபெற்ற * உருவுகரிய ஒளிமணிவண்ணன் * புருவமிருந்தவாகாணீரே பூண்முலையீர் வந்துகாணீரே (கள)

பருவம் நிரம்பாமே — வயது முதிருவதற்கு முன்னமே,

பார் எல்லாம் உய்ய — பூமியிலுள்ளா ரெல்லாரும் உஜ்ஜீவிக்கும்படியாக

திருவின் வடிவு ஒக்கும் தேவகி பெற்ற — பிராட்டியின் வடிவுபோன்ற வடிவை யுடையளான தேவகிப் பிராட்டியாலே பெறப்பட்டவனுய்

உருவு கரிய ஒளி மணி வண்ணன் — உருவால் கறுத்ததாய் உஜ்ஜ்வலமான மணி போன்ற வடிவையுடைய னை கண்ணபிரானுடைய

புருவம் இருந்த ஆ காணீர்!—.

பூண் முலையீர் — ஆபரணம்பூண்ட முலையை யுடைய பெண்காள்!

வந்து காணீர்!!—.

* * *—முதலடியால், சக்ரவர்த்தி திருமகனிற்காட்டில் கண்ணபிரானுக்கு வாசிசொல்லுகிறது; அவன் பருவம் நிரம்பின பின்பே விரோதிகளைமுடித்து அதுகூலரைவாழ்வித்தது. ... ... (கள)

40 மண்ணும்மலையும் கடலுமுலகேழும் * உண்ணுந்திறத்து மகிழ்ந்துண்ணும்பிள்ளைக்கு * வண்ணமெழில்கொள் மகரக்குழையிவை * திண்ணமிருந்தவாகாணீரே சேயிழையீர் வந்துகாணீரே. (கஅ)

மண்ணும் மலையும் கடலும் உலகு ஏழும் உண்ணும் திறத்து — பூமியையும் மலைகளையும் கடல்களையும் ஸப்தலோகங்களையும் திருவயிற்றிலே வைக்கிறவளவில்

மகிழ்ந்து உண்ணும் பிள்ளைக்கு — உகந்து திருவயிற்றிலே வைத்த (இக்) கண்ணபிரானுடையதான

எழில் வண்ணம் கொள் — அழகிய நிறங்கொண்ட

மகரம் குழை இவை — இம்மகரகுண்டலங்களின்

திண்ணம் இருந்த ஆ — திண்மை இருந்தபடியை

காணீர்!—;

சேயிழையீர்! வந்து காணீர்!!—.

* * *—மலையேழும், கடலேழும், உலகேழும் என்றுமியைக்கலாம். மகிழ்ந்து—'இவற்றை ப்ரளயங்கொள்ளாதபடி காக்கப்பெற்றேமே'யென்று மகிழ்ச்சி. மகரம்-வடசொல். சுருமீன்வடிவ மாகச் செய்யப்படும் காதணிக்கு மகரகுண்டலமென்று பெயர். திண்ணம்-'அம்' விகுதிபெற்ற பண்புப் பெயர். கண்டார் கண்ணையும் நெஞ்சையும் கவரும்படியான திண்மை. ... ... (கஅ)

41 முற்றிலுந்தூதையும் முன்கைம்மேல்பூவையும் * சிற்றிலிழைத்துத் திரிதருவோர்களை * பற்றிப்பறித்துக் கொண்டோடும்பரமன்றன் * நெற்றியிருந்தவாகாணீரே நேரிழையீர் வந்துகாணீரே. (கக)

சிற்றில் இழைத்து திரிதருவோர்களை (சிறுவீடுகளை (மணலினால்) செய்துகொண்டு விளையாடித்திரியும் சிறு பெண்களை)

பற்றி (வலியக்) கையைப்பிடித்துக் கொண்டு (அவர்களுடைய)

முற்றிலும் (மணல்கொழிக்கிற) சிறு சுளகுகளையும்

தூதையும் (மணற்சோறுக்குகிற) சிறு பானைகளையும்

முன்கைமேல் பூவையும் (முன்கைமேல் (வைத்துக் கொண்டுபேசுகிற) நாகணவாய்ப்புள்ளையும்

பறித்துக்கொண்டு ஓடும் அபஹரித்துக்கொண்டு ஓடுகின்ற

பரமன் தன் (தீம்பில்) சிறந்தவனை கண்ணபிரானுடைய

நெற்றி இருந்த ஆகாணீர்!—;

நேர் இழையீர் நேர்த்தியையுடைய ஆபரணங்களணிந்த பெண்காள்;

வந்து காணீர்—.

* * *—சிறுபெண்கள் விளையாட்டாகச் சிற்றிலிழைப்பது வழக்கம்; அதாவது தெருக்களில் கொட்டியிருக்கும் மண்ணையும் கல்லியுங்கொண்டு வீடுகட்டுவதுபோற் செய்து விளையாடுகை. அதற்கு மணல்கொழிக்கச் சிறுமுறம் வைத்துக்கொண்டிருப்பர்கள்; மணற்சோறு சமைக்கச் சிறு பானையையும் வைத்துக்கொண்டிருப்பர்கள்; தவிரவும், அப்பெண்கள் கொஞ்சி விளையாடும் பொருட்டுத் தங்களது முன்னங்கைமேல் நாகணவாய்ப்பக்ஷியையும் வைத்துக்கொண்டிருப்பர்கள். இவற்றையெல்லாம் பலாத்காரமாகப் பறித்துக்கொண்டு பிடிகொடாமல் ஓடுகின்ற தீம்பனும் கண்ணபிரான், அப்படிப்பட்ட இவனுடைய நெற்றியானது அங்ஙனம் ஓடுகின்ற ஆயாஸத்தினால் குறுவியர்ப்புத்தோன்றி அழகாயிருப்பதைக் காணுங்கோளென்று காட்டுகிறபடி. முற்றில்—சிறு முறம். 'முச்சல்' என்று சிறுவர்களின் வழக்கச்சொல். ... ... (கக)

42 அழகியபைம்பொன்னின் கோல் அங்கைக்கொண்டு * கழல்கள்சதங்கை கலந்தெங்கு மார்ப்ப * மழகன்றினங்கள் மறித்துத்திரிவான் * குழல்களிருந்தவாகாணீரே குவிமுலையீர் வந்துகாணீரே. (உ)

அழகியபைம்பொன்னின் கோல் (அழகியதும் பசும்பொன்னால் செய்யப்பட்டதுமான மாடுமேய்க்குங் கோலை)

அங்கை கொண்டு அழகிய கையிலே பிடித்துக்கொண்டு

கழல்கள் சதங்கை கலந்து எங்கும் ஆர்ப்ப (கால்களிலுள்ள) வீரக்கழல்களும் சதங்கைகளும் தன்னிலே சேர்ந்து போமிடமெல்லாம் மொலிக்க

மழகன்றினங்கள் இளமை பொருந்திய கன்றுகளின் திரள்களை

மறித்து திரிவான் (கைகழிபப் போகாமல்) மடக்கித் திரியுமவனை கண்ணபிரானுடைய

குழல்கள் திருக்குழல்களானவை

இருந்த ஆகாணீர்!—;

குவி முலையீர்! வந்து காணீர்!!—.

* * *—கண்டவர்கள் கண்ணுக்கு அழகியதாய்ப் பசும்பொன்னாலே செய்யப்பட்டதான கோலை கன்றுகளைமடக்கிமேய்ப்பதற்குக் கருவியாகக் கையிலே கொண்டும், கன்றுகளை மடக்குவதற்காக ஓடுகையாலே திருவடிகளிலே சாத்தியிருக்கிற வீரத்தண்டைகளும் சதங்கைகளும் ஒன்றோடொன்று கலந்து எங்கும் ஒலிக்கவும், இளங்கன்றுகளின் கூட்டங்களைச் சிதறிப்போகவொட்டாமல் மடக்கி மேய்க்கின்ற கண்ணபிரானுடைய அசைந்தலைந்து விளங்குகின்ற திருக்கேச பாசங்களின் அழகைக் காணுங்கள் என்று—பாதாதிகேசாந்தமாகக் காட்டித் தலைக்கட்டிற்றாயிற்று. ... ... (உ)

43 சுருப்பார்குழலி அசோதைமுன்சொன்ன * திருப்பாதகேசத்தைத் தென்புதுவைப் பட்டன் * விருப்பாலுரைத்த இருபதோடொன்றுமுரைப்பார்போய் * வைகுந்தத் தொன்றுவர்தாமே. (உக)

சுரும்பு ஆர் குழலி அசோதை முன் சொன்ன — வண்டுகள்படிந்து நிறைந்த கூந்தலை யுடையளான யசோதைப் பிராட்டியால் க்ருஷ்ணவதார ஸமயத்தில் சொல்லப்பட்ட

திருப்பாத கேசத்தை — பாதாதிகேசாந்த வர்ணநப் பாசுரங்களை

தென் புதுவை பட்டன் — அழகிய ஸ்ரீ வில்லிபுத்தூருக்கு (நிர்வாஹகரான) ஆழ்வார்

விருப்பால் உரைத்த — மிக்க ஆதரத்தோடு அருளிச் செய்த

இருபதோடு ஒன்றும் உரைப்பார் தாம் — இவ்விருபத்தொரு பாட்டுக்களையும் ஓதுமவர்கள்

போய் வைகுந்தத்து ஒன்றுவர் — (இம்மண்டலத்தைக்கடந்து) போய் ஸ்ரீ வைகுண்டத்திலே பொருந்தப் பெறுவர்கள்.

* * *—க்ருஷ்ணவதார ஸமயத்தில் யசோதைப்பிராட்டியானவள் ஊர்ப்பெண்டுகளை யெல்லாம் அழைத்துக் கண்ணபிரானுடைய பாதாதிகேசாந்த அவயவங்களின் ஸௌந்தர்யத்தைக் காட்டின பாசுரங்களையே நான் பேசியிருக்கிறேன்; இப்பாசுரங்களை ஓதவல்லவர்கள் எம்பெருமானை நித்யாநுபவம் பண்ணுவதற்குப் பாங்கான திருநாட்டிலே சென்று இன்புறுவர்—என்று இத்திருமொழி கற்றார்க்குப் பலன்சொல்லித் தலைக்கட்டினராயிற்று.

சுரும்பு + ஆர், சுருப்பார். பாதகேசம்—வட்சொல்தொடர். பாதகேசமென்றது—பாதாதிகேசாந்த வர்ணனை என்றபடி. ... ... (உக)

அடிவரவு.—சேத முத்துப் பணை யுழ பிற மதம் இருங்கை வந்து அதிரும் பெருமா நாள் மை வண்டென் நோக்கி விண் பருவம் மண் முற்றில் அழகிய சுருப்பார் மாணிக்கம்.

முதற்பத்து—மூன்றாந்திருமொழி—மாணிக்கங்கட்டி,

(யசோதை, கண்ணனைத் தொட்டிலிலிட்டுத் தாலாட்டுகிறாள்.)

---

44 மாணிக்கங்கட்டி வயிரமிடைகட்டி * ஆணிப்பொன்னுற்செய்த வண்ணச்சிறுத்தொட்டில்* பேணியுனக்குப் பிரமன்விடுதந்தான் * மாணிக்குறளனேதாலேலோ வையமளந்தானேதாலேலோ. (க)

மாணிக்கம் கட்டி — மாணிக்கத்தை (இரண்டருகும்) கட்டியும்

இடை வயிரம் கட்டி — நடுவில் வயிரத்தை கட்டியும்

ஆணி பொன்னுல் செய்த — மாற்றுயர்ந்த பொன்னால் செய்யப்பட்ட

வண்ணம் சிறு தொட்டில் — அழகிய சிறியதொட்டிலை

பிரமன் — சதுர்முகனவன்

பேணி உனக்கு விடுதந்தான் — விரும்பி உனக்கு அனுப்பினன்;

மாணி குறளனே — ப்ரஹ்மசாரி வாமநாவதாரம் பண்ணின கண்ணனே!

தாலேலோ!—;

வையம் அளந்தானே — உலகங்களை (த்ரிவிக்ரமனாய்) அளந்தவனே!

தாலேலோ—.

* * *—திவ்யமான தொட்டிலைப் பிரமன் கொணர்ந்து ஸமர்ப்பித்தானென்கிறாள்.

ஆணிப்பொன்-மாற்றறிதற்குக்கொள்ளும் உயர்தரப்பொன்; இதுக்குமேலே மாற்றில்லையென்னும்படியான சிறந்த பொன் என்றுமுரைப்பர். தால் ஏல் ஓ = தால்.“தாலு” என்றவடசொல் விகாரம். தாடையென்றுபொருள்; ஏல் ஓ—அசைச்சொற்கள்; குழந்தைகளைத் தொட்டிலிலிட்டுப் பெண்கள் ‘உலு உலு உலு ஆயி இ!’ என்று உள்தாடையை நாவாலே ஒலித்துச் சீராட்டுதலைத் ‘தாலேலோ’ என்று வழங்குதல் மரபு. ... ... (க)

45 உடையார்கனமணியோடு ஒண்மாதளம்பூ * இடைவிரவிக்கோத்த எழில்தெழ்கிழேடு * விடையேறுகாபாலி யீசன்விடுதந்தான் * உடையாயழேலேலோதாலேலோ உலகமளந்தானேதாலேலோ. (உ)

உடை ஆர் கனம் மணியோடு } திருவரைக்குச் சேரும்படியான பொன் மணியையும்
இலை விரவி கோத்த எழில் தெழ்கிணேடும் } நடுநடுவே கலந்து கோக்கப்பட்ட அழகிய இடைச் சுரிகையையும்,
ஒள் மாதளம்பூ } அகிழ்ய மாதளம்பூக் கோவையான அரைவடத்தையும்

விடை ஏறு காபாலி ஈசன் விடுதந்தான்; } ரிஷபவாஹனனுய் கபால தாரியாய் ஸ்வயம்பூ ஹத்துக்கு நியாமகனான ருத்ரன் அனுப்பியுள்ளான்;
உடையாய் அழேல் அழேல் } ஸ்வாமியான கண்ணனே அழாதே அழாதே தாலேலோ—;
உலகம் அளந்தானே! தாலேலோ—.

* * *—சிவபிரான் மாதளம்பூக் கோவையென்கிற அரைவடம் முதலியவற்றை அனுப்பியிருக்கிறான் (அவற்றைச் சாத்திக்கொள்) என்று சொல்லித் தாலாட்டுகிறாள். உடை என்பது வஸ்திரத்துக்கு வாசகமாயினும் இங்குத் தானியாகு பெயராய் இடையைக்காட்டிற்று. தெழ்து—அரையில் சொருகும் கத்தி. சிவன் ரிஷபவாஹனனுதலால் விடையேறு என்றும், பிரமனுடைய ஐந்து தலைகளிலொன்றைப் பறித்துவிட்டதனுல் அக்கபாலம் அப்படியே கையிலொட்டிக்கொண்டதுபற்றிக் காபாலி என்றும், அணிமா மஹிமா கரிமா லகிமா ப்ராப்தி ப்ராகாம்யம் ஈசத்வம் வசித்வம் என்று சொல்லப்படுகிற அஷ்டைச்வர்யங்களையுடையனுகையாலே ஈசன் என்றும் சொல்லப்பட்டான். கனகம் என்றவடசொல் கனம் எனக்குறைந்தது. ... ... (உ)

46 எந்தை பிரானூர் எழில்திருமார்வர்க்கு * சந்தமழகிய தாமரைத்தாளர்க்கு * இந்திரனூரும் எழிலுடைக்கிண்கிணி * தந்துவலய்நின்றருன்தாலேலோ தாமரைக் கண்ணனேதாலேலோ. (ங)

எம் தம்பிரானூர் } எமக்கு ஸ்வாமியாய்
எழில் திருமார்வர்க்கு } அழகிய திருமார்பை யுடையராய்
சந்தம் அழகிய தாமரை தாளர்க்கு } நிறத்தாலழகிய தாமரை போன்ற திருவடிகளையுடையரான தேவர்க்கு
இந்திரன் தானும் } தேவேந்திரனவன்

எழில் உடை கிண் கிணி } அழகையுடைய கிண்கிணியை
தந்து உவலய் நின்றருன் } கொணர்ந்து ஸமர்ப்பித்து அதோ இரா நின்றருன்;
தாலேலோ!—;
தாமரைக் கண்ணனே! தாலேலோ—.

* * *—இந்திரன் அரைச்சதங்கையைக் கொண்டுவந்து ஸமர்ப்பித்து அதோ நிற்கிறான் என்று சொல்லித் தாலாட்டுகின்றாள். 'கிண் கிண்' என்று ஒலிப்பதுபற்றிச் சதங்கைக்குக் கிண்கிணி யென்று காரணப்பெயராயிற்று. உவன்—நடுவிலிருப்பதைக் காட்டுஞ் சுட்டெழுத்தான 'உ' என்பத னடியாப் பிறந்த ஆண்பாற்பெயர்; அதிக தூரத்திலும் அதிக ஸமீபத்திலுமில்லாமல் நடுத்தரமாயிருப்பவனென்று பொருள். ... ... (ஙு)

47 சங்கின்வலம்புரியுஞ் சேவடிக்கிண்கிணியும் * அங்கைச்சரிவளையும் நாணுமரைத் தோடரும் * அங்கண்விசும்பில் அமரர்கள்போத்தந்தார் * செங்கட்கருமுகிலேதாலேலோ தேவகிசிங்கமேதாலேலோ. (ச)

சங்கில் வலம்புரியும் } சங்குகளில் (சிறந்த) வலம்புரிச்சங்கையும்
சே அடி கிண்கிணியும் } செவ்விய திருவடிகளில் (சாத்தத்தகுந்த) சதங்கையையும்
அம் கை சரிவளையும் } அழகிய கைகளுக்கு உரிய முன்கை வளைகளையும் தோள்வளைகளையும்
நாணும் } பொன்னரை நாணையும்
அரை தொடரும் } அரைவடத்தையும்

அம் கண் விசும்பில் அமரர்கள் போத்தந்தார் } அழகிதாய் விசாலமான ஸ்வர்க்கத்திலுள்ள தேவர்கள் அனுப்பினர்கள்;
செம் கண் கரு முகிலே } சிவந்த கண்களையுடையையாய் காளமேகம்போன்ற வடிவையு முடையையான கண்ணனே!,
தாலேலோ—;
தேவகி சிங்கமே } தேவகியின் வயிற்றிற்பிறந்த சிங்கக் குருகே!;
தாலேலோ—.

* * *—தேவதைகள் பலர் கூடிப் பல திருவாபரணங்களை அனுப்பியிருக்கிறார்களென்று சொல்லித் தாலாட்டுகிறாள்.

சங்கில் + வலம்புரி, சங்கின்வலம்புரி; "குறில்செறியாலள அல்வழிவந்த..." என்ற நன்னூற் சூத்திரத்தினிறுதியில் 'பிற' என்றமிகையை நோக்குக. நாண்-திருமார்வுக்கு அலங்காரமாகச் சாத்தத் தக்க நாணுகவுமாம். ... ... (ச)

48 எழிலார்திருமார்பிற்கு ஏற்குமிவையென்று * அழகியவைம்படையும் ஆரமுங்கொண்டு * வழுவில்கொடையான் வயிச்சிரவணன் * தொழுதுவனுய்நின்றருன்தாலேலோ தூமணி வண்ணனேதாலேலோ. (ஞ)

எழில் ஆர் திருமார் பிற்கு இவை ஏற்கும் என்று — "அழகுமிக்கிருந்துள்ள வக்ஷஸ்ஸ்தலத்துக்கு இவை பொருந்தும்" என்று

அழகிய ஐம்படையும் ஆரமும் கொண்டு — அழகியவையான பஞ்சாயுதங்களையும் முத்துவடத்தையும் எடுத்துக்கொண்டு,

வழு இல் கொடையான் வயிச்சிரவணன் — குற்றமற்ற ஔதார்யத்தையுடையனை குபேரனை வன்

தொழுது — (இவற்றைத் திருவுள்ளம் பற்ற வேணுமென்று) அஞ்ஜலி பண்ணிக்கொண்டு

உவனுய் நின்றருன், தாலேலோ—;

தூமணி வண்ணனே — பழிப்பற்ற நீலமணிபோன்ற வடிவையுடைய கண்ணனே!

தாலேலோ—.

* * *—சிறுகுழந்தைகளுக்கு அனுக்கம் வராமலிருப்பதற்காக எம்பெருமானுடையபஞ்சாயுதங்களை யமைத்துக் கழுத்திலணியும்படி ஓர் ஆபரணஞ்செய்து அணியச்செய்வது வழக்கம்; அவ்வாபரணமே இங்கு ஐம்படை என்கிறது; அதனைக் குபேரன் கொணர்ந்து ஸமர்ப்பித்து அதோ நிற்கிறுன் காண் என்று சொல்லித் தாலாட்டுகிறுள். "திருமார்பிற்கு," "திருமார்வுக்கு" என்பன பாடபேதங்கள். ஹாரமென்ற வடசொல் ஆரமெனத்திரிந்தது.

"வைச்ரவணன்" என்ற வடசொல். வயிச்சிரவணனென விகாரப்பட்டது. ப்ரஹ்மபுத்ரனை புலஸ்த்யப்ரஜாபதியினுடைய புத்ரனுகிய விச்ரவ முனிவனுக்கு பரத்வாஜபுத்ரியினிடம் பிறந்தவனை குபேரனைச் சொல்லுகிறது. வயிச்சிராவணன் என்ற பாடத்தில் அநுபபத்தியில்லையென்று சில பெரியார் கருதுகின்றுர்கள். ... ... (ஞ)

49 ஓதக்கடலில் ஒளிமுத்தினுரமும் * சாதிப்பவளமுஞ் சந்தச்சரிவளையும் * மாதக்கவென்று வருணன்விடுதந்தான் * சோதிச்சுடர்முடியாய்தாலேலோ சுந்தரத் தோளனேதாலேலோ. (சு)

ஓதம் கடலில் ஒளி முத்தின் ஆரமும் — அலையெறிப்பையுடைய ஸமுத்ரத்தில் (உண்டாய்) ஒளியையுடைத்தாய் முத்துக்களால் கோக்கப்பட்ட ஹாரத்தையும்

சாதி பவளமும் — நல்ல ஜாதியிலுண்டான பவழவடத்தையும்

சந்தம் சரி வளையும் — அழகுபொருந்திய முன்கை வளைகளையும் தோள்வளைகளையும்

மாதக்க என்று — 'விலையில் சிறந்து தகுதியாயிருந்துள்ளவை' என்று

வருணன் விடுத்தான்; — வருணதேவனனவன் அனுப்பியுள்ளான்

சோதி சுடர்முடியாய் — மிக்கஜ்யோதிஸ்ஸையுடைய கிரீடத்தையணிந்த கண்ணனே!

தாலேலோ—;

சுந்தரம் தோளனே — அழகிய திருத்தோள்களையுடைய கண்ணனே!

தாலேலோ—.

* * *—வருணதேவன் கருங்கடற் கடவுளாதலால் அக்கடலில் நின்றுந்தோன்றின முத்துக்களினும் பவழங்களினும் ஆகிய ஹாரங்களையும் முன்கைச்சரிகளையும் சங்குவளையல்களையும் அனுப்பினன்; அதைச்சொல்லித் தாலாட்டுகிறுள். தக்க—தக்கவையென்றபடி. ... ... (சு)

50 கானுர்நறுந்துழாய் கைசெய்தகண்ணியும் * வானுர்செழுஞ்சோலைக் கற்பகத்தின் வாசிகையும் * தேனுர்மலர்மேல் திருமங்கைபோத்தந்தாள் * கோனேயமேலமேல்தாலேலோ குடந்தைக்கிடந்தானேதாலேலோ. (எ)

தேன் ஆர் மலர்மேல் திருமங்கை — தேன் நிறைந்துள்ள (செந்தாமரை) மலரிலுறைகின்ற பெரிய பிராட்டியார்,
கான் ஆர் நறுதுழாய் கைசெய்த கண்ணியும் — காட்டிலுண்டான பரிமளம் மிக்க துளசியாலே தொடுத்த மாலையையும்
வான் ஆர் — சுவர்க்கலோகத்தில் நிறைய வளர்ந்துள்ள
செழு சோலை — செழுமைதங்கிய சோலையாய்த்தழைத்த
கற்பகத்தின் — கல்பவ்ருக்ஷத்தின்பூக்களால்
வாசிகையும் — தொடுத்த திருநெற்றிமாலையையும்
போத்தந்தாள் — அனுப்பினாள்;
கோனே — ஸ்வாமியான கண்ணனே!
அழேல் அழேல் தாலேலோ!—;
குடந்தை கிடந்தானே — திருக்குடந்தையிலே கண்வளர்ந்தருளுகிற ஸ்வாமியே!
தாலேலோ—.

* * *—நல்ல திருத்துழாய்மாலை முதலியவற்றைப் பெரியபிராட்டியார் கொடுத்தனுப்பினளென்று சொல்லித் தாலாட்டுகிறாள். கானநம் என்ற வடசொல் கான் எனச்சிதைந்தது: தன்னிலத்தில் வளர்ந்ததனால் மணங்குன்றாத திருத்துழாய் என்றபடி. கைசெய்த என்ற விடத்து, கை-தமிழுபசர்க்கம்.

51 கச்சொடுபொற்சுரிகை காம்புகனவளை * உச்சிமணிச்சுட்டி ஒண்டாள்நிரைப்பொற்பூ * அச்சுதனுக்கென்று அவனியாள்போத்தந்தாள் * நச்சுமுலையுண்டாய்தாலேலோ நாராயணவழேல்தாலேலோ. (அ)

கச்சொடு — கச்சுப்பட்டையையும்
பொன் சுரிகை — பொன்னாற்செய்த உடைவாளையும்
காம்பு — கரைகட்டிய சேலையையும்
கனம் வளை — கநகமயமான தோள்வளைகளையும்
மணி உச்சி சுட்டி — ரத்நமிழைத்துச் செய்யப்பட்டதாய் உச்சியிலேசாத்தத்தக்கதான சுட்டியையும்
ஒள் தாள் நிரை பொற்பூ — அழகிய காம்புகளையுடைத்தாய் ஒழுங்கான பொற்பூவையும்
அச்சுதனுக்கு என்று — 'கண்ணபிராணுக்கு (க்கொடுங்கோள்)' என்று
அவனியாள் — பூமிப்பிராட்டியானவள்
போத்தந்தாள் — அனுப்பினாள்;
நஞ்சு முலை உண்டாய் — விஷமேற்றின (பூதனையின்) முலையின் பாலை உண்ட கண்ணனே!
தாலேலோ;
நாராயணா! அழேல்! தாலேலோ—.

* * *—ஸ்ரீபூமிப்பிராட்டியார் சில ஆபரணங்களையும் ஆடையையும் கொடுத்தனுப்பினதைச் சொல்லித் தாலாட்டுகிறாள். ... ... (அ)

52 மெய்திமிருநானப் பொடியோடுமஞ்சளும் * செய்யதடங்கண்ணுக்கு அஞ்சனமும் சிந்துரமும் * வெய்யகலைப்பாகி கொண்டுவளாய்நின்றாள் * ஐயாவழேலழேல்தாலேலோ அரங்கத்தணையானேதாலேலோ. (கூ)

மெய் திமிரும் நானம் பொடியோடு — திருமேனியிலே பூசுகைக்குரிய கஸ்தூரி, கருப்பூரம், சந்தநம் முதலிய ஸுகந்தப்பொடிகளையும்
மஞ்சளும் — மஞ்சள்பொடியையும்,
செய்ய தட கண்ணுக்கு — சிவந்ததாய் விசாலமாயுள்ள கண்களில் (சாத்த)
அஞ்சனமும் — மையையும்,
(திருநெற்றியில் சாத்துகைக்கு)
சிந்துரமும் — சிந்தூரத்தையும்,
வெய்ய கலைப்பாகி — கொடிய ஆண்மானை வாஹநமாகவுடைய துர்க்கையானவள்
கொண்டு உவளாய் நின்றாள் — எடுத்துக்கொண்டு வந்து அதோ இராநின்றாள்;
ஐயா — ஸ்வாமியான கண்ணனே!
அழேல் அழேல் தாலேலோ—;
அரங்கத்து அணையானே — ஸ்ரீரங்கத்தில்(திருவனந்தாழ்வானில்) படுக்கையாகவுடையவனே!
தாலேலோ—.

* * *—துர்காதேவியானவள் வாசனைப்பொடி முதலியவற்றைக்கொண்டு ஸமர்ப்பிக்க வந்திருக்கிறாளென்றுசொல்லித் தாலாட்டுகின்றாள். துர்க்கைக்குமான் வாஹனமாகையால் கலைப்பாகி எனப்பட்டது. 'பாகன்' என்பதன் பெண்பால் பாகி என்பது; மானின்மேல் ஏறிக்கொண்டு அதனைச்

செலுத்துபவள். கலா என்ற வடசொல் 'கலே' என ஐயீருகத்திரிந்ததென்று கொண்டு தூற்கலேகளே நட்த்துகிற ஸரஸ்வதி என்று பொருள்கொள்வதும் ஏற்கும்; இப்பொருளில் வெய்ய என்பதற்கு—விரும்பப்படுகின்ற என்று பொருள். இத்திருமொழியில் முதற்பாட்டில் பிரதானமாகப் பிரமதேவன் சொல்லப்பட்டபடியால் அவனுக்குப் பத்தினியான ஸரஸ்வதியை இப்பாட்டிற் சொல்லிமுடிக்கிறதென்று கொள்வது மிகவுமினங்கும். ... ... (க)

53 வஞ்சனையால்வந்த பேய்ச்சிமுலையுண்ட * அஞ்சனவண்ணனே ஆய்ச்சிதாலாட்டிய *
செஞ்சொல்மறையவர் சேர்புதுவைப்பட்டன்சொல் * எஞ்சாமைவல்லவர்க்கு
இல்லையிடர்தானே. (ம)

வஞ்சனையால் வந்த பேய்ச்சி முலை உண்ட	வஞ்சகவேஷத்தோடே வந்த பூதனையினுடைய முலையை அமுதுசெய்தவனும்	செம் சொல் மறையவர் சேர் புதுவை	செவ்விய சொற்கள்நிறைந்த வேதங்களில் வல்லவரான ஸ்ரீவைஷ்ணவர்கள் நித்ய வாசம் பண்ணப்பெற்ற
அஞ்சனம் வண்ணனே	மைபோன்ற நிறத்தை யுடையனான கண்ணபிரானே	பட்டன் சொல்	ஸ்ரீவில்லிபுத்தூரிலவதரித்த பெரியாழ்வார் அருளிச் செய்த இப்பாசுரங்களே
ஆய்ச்சி தாலாட்டிய	யசோதைப்பிராட்டி தாலாட்டினபடிகளே,	எஞ்சாமை வல்லவர்க்கு இடர் இல்லை	குறைவுபடாமல் ஓதவல்லவர்களுக்கு துன்பமொன்றுமில்லையாம்,

* * *—தாலாட்டிய என்றது விசேஷணமன்று; இறந்தகாலப் பலவின்பால் வினையாலணையும் பெயர். இரண்டாம் வேற்றுமையுருபும்பயனு முடன்தொக்க தொகை. ... ... (கo)

அடிவரவு:—மாணியுடையென் சங்கின் எழிலோதக் காஞர் கச்சு மெய் வஞ்சனை தன்

முதற்பத்து—நான்காந் திருமொழி—தன்முகத்துச்சுட்டி

(யசோதை கண்ணனே இடுப்பிற்கொண்டு சந்திரனே விளிக்கிறாள்.)

---

54 தன்முகத்துச்சுட்டி தூங்கத்தூங்கத்தவழ்ந்துபோய் *
பொன்முகக்கிண்கிணியார்ப்பப் புழுதியளைகின்றான் *
என்மகன்கோவிந்தன் கூத்தனையிளமாமதீ *
நின்முகங்கண்ணுளவாகில் நீயிங்கேநோக்கிப்போ. (க)

இளமாமதீ	இளமைதங்கிய அழகிய சந்திரனே!,	புழுதி அளைகின்றான்	தெருப்புழுதிமண்ணே அளையா நிற்பவனும்
தன் முகத்து சுட்டி தூங்க தூங்க	தன்முகத்தில் (விளங்குகிற) சுட்டியானது பலகாலும் தாழ்ந்து அசையவும்	என் மகன் கோவிந்தன் கூத்தினை	எனக்குப் பிள்ளையுமான கண்ணபிரானுடைய சேஷ்டைகளை,
பொன் முகம் கிண் கிணி ஆர்ப்ப	அழகிய முகத்தையுடைய சதங்கைகளானவை கிண் கிண் என்றொலிக்கவும்	நின் முகம் கண் உளவாகில்	உன்முகத்தில் கண் உண்டேயானால்
தவழ்ந்து போய்	(முற்றத்தில்) தவழ்ந்துபோய்	நீ இங்கே நோக்கி போ	நீ இங்கே பார்த்துப்போ.

* * *—சந்திரா! எனது குழந்தையாகிய இக்கோபாலகிருஷ்ணன் தனது நெற்றியிலே சுட்டி அசையவும், அரையிலே சதங்கை கிண்கிண் என்று சப்திக்கவும் தவழ்ந்துவந்து புழுதியளைகின்றான்; இந்த விளையாட்டைக் கண்டால்தான் நீ கண்படைத்த பயன் பெறுவாய்; ஆகையாலே இவ்விளையாட்டைக் காண்கிற வியாஜமாக நீ இங்கே வந்து இக்குழந்தையின் கண்ணிலே தென்படுவாயாக என்று யசோதை சந்திரனை யழைக்கிறாள். ... ... (க)

55 என்சிறுக்குட்டன் எனக்கோரின்னமுதெம்பிரான் *
தன்சிறுக்கைகளால் காட்டிக்காட்டியழைக்கின்றான் *
அஞ்சனவண்ணனே ஆடலாடவுறுதியேல் *
மஞ்சில்மறையாதே மாமதீமகிழ்ந்தோடிவா. (உ)

மா மதி!—;
எனக்கு ஓர் இன் அமுது (தாயாகிய எனக்கு விலக்ஷணமாய் மதுரமா யிருப்பதொரு அம்ருதம் போன்றவனுய்)
எம் பிரான் எனக்கு உபகாரகனான
என் சிறுக் குட்டன் என் மகனை கண்ணன்
தன் சிறு கைகளால் (தன்னுடைய சிறிய கைகளால்)
காட்டி காட்டி (பலகாலும் (உன்னை யே) காட்டி)
அழைக்கின்றான் அழையா நின்றான்;
அஞ்சனம் வண்ணனே ஏறு (மைபோன்றவடிவுடையஇக் கண்ணபிரானேறு)
ஆடல் ஆட உறுதியேல் (விளையாடக் கருதினையாகில்)
மஞ்சில் மறையாது (மேகத்திலே சொருகிமறையாமல்)
மகிழ்ந்து ஓடி வா உகந்து ஓடிவா.

* * *—சந்திரன் மேகத்தில் மறைந்து போவது இயல்பாதலால், அப்படி மறைந்து போக வேண்டா வென்கிறாள். மறையாதே என்பதை எதிர்மறை வினைமுற்றாகவும் கொள்ளலாம் ... (உ)

56 சுற்றுமொளிவட்டம் சூழ்ந்துசோதிபரக்தெங்கும் *
எத்தனைசெய்யிலும் என்மகன்முகம்நேரொவ்வாய் *
வித்தகன்வேங்கடவானன் உன்னைவிளிக்கின்ற *
கைத்தலம்நோவாமே அம்புலிகடிதோடிவா. (ஊ)

அம்புலீ சந்த்ரனே! (உன்னுடைய)
ஒளி வட்டம் (ஒளிபொருந்திய மண்டலமானது (எப்போதும்)
சுற்றும் சூழ்ந்து காற்புறமும் சுழன்று
எங்கும் எல்லாத்திசைகளிலும்
சோதி பரந்து ஒளிகிரம்பி யிருக்குமாறு
எத்தனை செய்யிலும் (இப்படி உன்னை எவ்வளவு அழகுசெய்துகொண்டாலும்)
என் மகன் (என் மகனை கண்ணபிரானுடைய)
முகம் நேர் ஒவ்வாய் (திருமுகமண்டலத்துக்கு பூர்ணமாக ஒப்பாகமாட்டாய்;
வித்தகன் ஆச்சர்யப்படத்தக்கவனுய்
வேங்கடம் வாணன் (திருவேங்கடமலையிலே நன்ருக வாழுமவனான இக் கண்ணபிரான்)
உன்னை விளிக்கின்ற கைதலம் நோவாமே (உன்னை அழைக்கிற திருக்கைத்தலத்தில் நோவு மிகாதபடி)
கடிது ஓடி வா சீக்கிரமாய் ஓடிவா.

* * *—சந்திரா! நீ இப்போது நாள்தோறும் தேய்வதும் வளர்வதுமா யிருக்கின்றாய்; களங்கமுடையையு மிருக்கின்றாய்; இப்படியில்லாமல் நீ எப்போதும் கூடியமென்பதே யில்லாமல் பூர்ண மண்டலமாகவேயிருந்து களங்கமும் நீங்கிச் செயற்கையழகு செய்துகொண்டு விளங்கினாலும் என் சுழந்தை யினுடைய முகத்திற்குச்சிறிதும் ஒப்பாகமாட்டாய். ஆகையாலே நாமே அழகிற் சிறந்துள்ளோமென்கிற செருக்கையொழித்து, உன்னைக் காட்டிலும் மிக அழகிய முகமண்டலத்தை யுடையவனை இவன் உன்னைக் கைகளாலழைப்பதைப் பரமபாக்யமாக அநுஸந்தித்து விரைந்து ஓடிவா; வாராவிட்டால் வெகு காலமாக உன்னை யழைக்கிற இக்குழந்தைக்குக் கைநோவு ஒன்றே மிகும்; இவ்வபசாரத்தை நீ அடைந்திடாதே என்றவாறு. ... ... (ஊ)

57 சக்கரக்கையன் தடங்கண்ணல்மலரவிழித்து *
ஒக்கலைமேலிருந்து உன்னையேசுட்டிக்காட்டுங்காண் *
தக்கதறிதியேல் சந்திராசஞ்செய்யாதே *
மக்கட்பேறுத மலடனல்லையேல்வாகண்டாய். (எ)

சந்திரா சந்திரனே!
சக்கரம் கையன் (திருவாழியாழ்வானைத் திருக்கையிலணிந்த கண்ணபிரான்)
ஒக்கலைமேல் இருந்து (என்) இடுப்பின்மேல் இருந்து கொண்டு
தடங்கண்ணல் மலர விழித்து விசாலமான கண்களாலே மலரப்பார்த்து

உன்னையே சுட்டிக் காட்டும் = உன்னையே குறித்துக் காட்டுகின்றன; மக்கள் பெறுத மலடன் அல்லையேல் = பிள்ளைபெறுத மலடன் அல்லையாகில்

தக்கது அறியையேல் = (உனக்குத்) தகுதியானதை அறிவாயாகில் (அன்றியும்) சலம் செய்யாதே வா கண்டாய் = கபடம் பண்ணுமல் வந்து நில்கிடாய்.

* * *—சந்திரா! இவனை வெறுங்குழந்தையாக நினைத்து அலட்சியஞ்செய்கிடாதே; இவன் சக்கரக்கையன்காண்; நீ வராமலிருப்பாயானால் உன்மேல் சக்கரத்தைப் பிரயோகித்து உன்னைத் தண்டித்துவிடுவன் என்னும் கருத்தையடக்கி சக்கராக்கையன் என்கிறாள். "ஆழிகொண்டுன்னை யெறியும் ஐயுறவில்லைகாண்" என்று மேலே ஸ்பஷ்டமாகவும் கூறுவள்.

மக்கள்பெறுத மலடனல்லையேல் வா=குழந்தையை நீ இப்படி துடிக்கவிடுவது தகுதியன்று; பிள்ளை பெறுதவர்களன்றே பிள்ளையின் வருத்தமறியார்கள்; அப்படி நீ மலடனல்லையேல், பிள்ளைகள் வருத்தப்படுத்தக்கூடாதென்பது உனக்குத் தெரியுமே என்றவாறு. ... (ச)

58 அழகியவாயில் அமுதவூறல்தெளிவுரு *
மழலைமுற்றுத இளஞ்சொல்லாலுன்னைக்கூவுகின்றான் *
குழகன்சிரீதரன் கூவக்கூவநீபோதியேல் *
புழையிலவாகாதே நின்செவி புகர்மாமதீ! (நு)

புகர் மா மதி = தேஜஸ்வியாய் பெருமை பொருந்தி யிராநின்ற சந்திரனே!, உன்னை கூவுகின்றான்—;

அழகிய வாயில் ஊறல் = அழகிய திருப்பவளத்திலே ஊறுகின்ற ஜலமாகிய

அமுதம் தெளிவுரு = அம்ருதத்தோடேகூடி உருத்தெரியாததாய்

குழகன் = எல்லாரோடும் கலந்திருப்பவனாய்

சிரீதரன் = சீரியதும் பதியான இக்கண்ணபிரான்

கூவக் கூவ நீபோதியேல் = (இப்படி) பலகாலுமழையாநிற்கச்செய்தேயும் நீ போகாயேயானால்

மழலை முற்றுத இளஞ்சொல்லால் = மழலைத்தனத்துக்குள்ள முற்றுதலுமில்லாதிருக்கிற இளம்பேச்சாலே

நின் செவி புழை இல ஆகாதே = உன் காதுகளானவை துளையில்லாதவையாக ஆகாதோ?[ஆகவேஆகும்.]

* * *—சந்திரா! உன்னைக் கூவியழைக்கிற இக்குழந்தையின் இனிய மழலைச்சொல் உன் காதில் விழவில்லையா? செவிடனை நீ! உன் காதில் துளையில்லையோ? இக்குழந்தை இனிய முற்றா மழலைச் சொல்லினால் உன்னை யழைக்கவும் நீ காது கேளாதாரைப்போலே போய்விட்டாயானால் நீ காது படைத்தது பயனற்றதாகுமன்றே என்கிறாள். இப்படிப்பட்ட இளஞ்சொல்லைக் கேட்டு உடனே ஓடிவருதலே செவிபடைத்ததற்குப் பலன் என்று காட்டினவாறு. மழலை—எழுத்துக்கள் ஸ்பஷ்டமாகத் தெரியாதே மதுரமாயிருக்குமது. மழலை முற்றுத இளஞ்சொல் என்றது—மழலைத்தனத்துக்குள்ள முற்றுதலுமில்லாத மிக இளஞ்சொல் என்றபடி. குழகன்—"கொடுத்தார் கொடுக்தார் மூலகளெல்லாமுண்டு எடுத்தாரெடுத்தாரோடெல்லாம் பொருந்தியிருக்கும் கலப்புடையவன்" என்பது வியாக்கியான வாக்கியம். ... ... (டு)

59 தண்டொடுசக்கரம் சார்ங்கமேந்துந்தடக்கையன் *
கண்டுயில்கொள்ளக்கருதிக் கோட்டாவிகொள்கின்றான் *
உண்டமுலைப்பாலருகுண்டாய் உறங்காவிடில் *
விண்டனில்மன்னிய மாமதீவிரைந்தோடிவா. (சூ)

விண் தனில்மன்னிய மா மதி! = ஆகாசத்திலே பொருந்திய பெருமைதங்கிய சந்திரனே!

தண்டொடு சக்கரம் சார்ங்கம் ஏந்தும் = 'கௌமோதகி' என்னும் கதையையும் திருவாழியாழ்வானையும் ஸ்ரீசார்ங்கமென்னும் வில்லையும் ஏந்தி

தடகையன் = பிராகின்றவுள்ள விசாலமான கைகளையுடைய இக்கண்ணபிரான்

கண் துயில்கொள்ள கருதி = திருக்கண் வளர்ந்தருள நினைத்து

கொட்டாவி கொள்கின்றான் = கொட்டாவி விடாநின்றான்;

உறங்காவிடில்	(இப்போது இவன்) உறங்காதொழிந்தால்	உண்ட முலைப்பால் அரு	அமுதுசெய்யப்பட்டிருக்கிறஸ்தன்யமானது ஜரிக்கமாட்டாது; (ஆகையால்,)
		விரைந்து ஓடிவா—.	

* * *—உலகத்தில் மனிதர்களுக்கு அதிகமாகக் கொட்டாவி வந்தால் உடனே உறக்கம் வருமென்பது அநுபவஸித்தமாதலால் "கண்டுயில் கொள்ளக்கருதிக் கொட்டாவி கொள்கின்றான்" என்கிறபடி. இவன் இப்போது கொட்டாவி விடுகிறபடியாலே இனித் தூங்கிவிடுவன்; தூங்காவிட்டாலோ உண்ட முலைப்பால் ஜரியாது; ஆகலால் இவன் உறங்கிப்போவதற்கு முன்னமே விரைந்து ஓடிவா என்றழைக்கிறாள். முதலடியில் மூன்று ஆயுதங்களைச் சொன்னது பஞ்சாயுதங்கட்கும் உபலக்ஷணம். இவ்வாயுதங்களின் அழகை ஸேவித்துப்போக வேண்டுவது உனக்கு உரியதேயன்றி இவற்றின் பராக்கிரமத்திற்கு இலக்காகி முடிந்துபோகப் பாராதே என்றுணர்த்தியவாறு.

அற—அறுது; ஜரியாது. ... ... (சு)

60 பாலகனென்று பரிபவஞ்செய்யேல் * பண்டொருகாள்
ஆலினிலைவளர்ந்த சிறுக்கனவனிவன் *
மேலெழப்பாய்ந்து பிடித்துக்கொள்ளும்வெகுளுமேல் *
மாலுமதியாதே மாமதீமகிழ்ந்தோடிவா. (எ)

	மா மதி!—;	இவன்	இவனுகிறான் காண்;
பாலகன் என்று பரிபவம் செய்யேல்	'இவனொரு சிறுபயலன்றே' என்று திரஸ்கரியாதே;	வெகுளும் ஏல்	(இவன்) சீறினனகில்
பண்டு ஒருகாள் ஆலின் இலை வளர்ந்த	மூன்பொருகாலத்திலே ஆலந்தளிரிலே கண்வளர்ந்த வகைப் புராணங்களிலே சொல்லப்படுகிற	மேல் எழ பாய்ந்து பிடித்துக் கொள்ளும்	(உன்மேல்) ஒரு பாயலாகப் பாய்ந்து (உன்னைப்) பிடித்துக்கொள்வான், (ஆகையால்,)
சிறுக்கன் அவன்	அந்தசிறுப்பிள்ளையானவன்	மாலை மதியாதே	இம்மஹாபுருஷனை அவமதியாமல் மகிழ்ந்து ஓடிவா—.

* * *சந்திரா! ஓயாமல் உன்னை யழைக்கச்செய்தேயும் நீ வர்ாமையினால் 'இவனொரு சிறுபிள்ளைதானே, இவனுக்காக ஓடிவரவேணுமோ' என்று அலட்சியமாக நினைக்கிறையென்பது தெரிகின்றது; இவனைச் சிறியவனென்று நீ குறைவாக நினைக்கலாகாது; இவன்முன்னொருகாலத்தில் உலகங்களையெல்லாம் பிரளயங்கொள்ளாதபடி வயிற்றிலே வைத்துக்கொண்டு சிறு பசுங்குழந்தையாயிருந்தவன் காண்; இப்படிப்பட்ட இவனை நீ அலட்சியஞ் செய்தால் இவன் உன்மேற் கோபங்கொண்டு பாய்ந்து தெழுந்து உன்னைப் பிடித்துக்கொள்ளவுங்கூடும்; ஆகையால் இவனை அவமதியாமல் உடனே விரைந்தோடி வா என்கிறாள். — ... ... (எ)

61 சிறியனென்றென்னிளஞ்சிங்கத்தை யிகழேல்கண்டாய் *
சிறுமையின்வார்த்தையை மாவலியிடைச்சென்றுகேள் *
சிறுமைப்பிழைகொள்ளில் நீயுமுன்தேவைக்குரியைகாண் *
நிறைமதி! கெடுமால் விரைந்துன்னைக்கூவுகின்றான். (அ)

நிறை மதி என் இள சிங்கத்தை	பூர்ணசந்திரனே! எனக்குச் சிங்கக்குருகு போன்ற கண்ணபிரானை	மாவலி இடை சென்று கேள்	மஹாபலியிடம் போய்க் கேட்டுக்கொள்; ('இப்படியுள்ளவன் விஷயத்தில்)
சிறியன் என்று இகழேல்	(உபேக்ஷிக்கைக்கு உறுப்பான) சிறுமையையுடையவனாக நினைத்து அவமதியாதே;	சிறுமை பிழை கொள்ளில்	சிறுமை நினைத்தவிது மஹாபராதம்' என்று நினைத்தாயாகில் (அப்போது,) நீயும்—;
சிறுமையில் வார்த்தையை	(இவனுடைய) பால்யத்தில் நடந்த செய்கையை	உன் தேவைக்கு	(அவன் விஷயத்தில்) நீ பண்ணக்கூடிய அடிமைக்கு.

உரியை	தகுந்தவனுவாய்; (அதெல்லாமப்படி நிற்க;)	விரைந்து உன்னை கூவுகின்றன்—.
நெடு மால்	ஸர்வஸ்மாத்பரனை இவன்	['மகிழ்ந்து ஓடிவா' என்று வருவிக்க.]

* * *—சந்திரா! என் குழந்தையை 'மற்றுள்ள ஊர்ப்பிள்ளைகளைப்போலே இவனும் ஒரு சிறியவன்தானே' என்று இகழ்ச்சியாக நினைக்கிறாயாகிலும்; அப்படி நினையாதே; இவன் முன்பொரு கால் மாணிக்குறளனுருவாய் மாவலியிடஞ் சென்று செய்த காரியங்களை அந்த மஹாபலியையே கேட்டுத் தெரிந்துகொள்; மிகப் பெரியவனை இவனைச் சிறியவனென்று நினைத்து அலட்சியஞ் செய்தவிது மஹத்தான அபசாரம் என்று தாடைமேல் அறைந்துகொள்வாயாகில் பிறகுதான் நீ இவனருகில் வந்து ஏதேனும் அடிமை செய்வதற்கு யோக்யதைபெறுவாய் என்கிறாள். "மாவலியிடைச் சென்றுகேள்" என்றதன் கருத்தாவது—மாவலியின் கொழுப்பை யடக்கின கதையைக்கொண்டே நீ அவனது பெருமையை அறுதியிடலாமென்கை. ... ... (அ)

62 தாழியில்வெண்ணெய் தடங்கையாரவிழுங்கிய *
பேழைவயிற்றெம்பிரான் கண்டாயுன்னைக்கூவுகின்றன் *
ஆழிகொண்டுன்னையெறியும் ஐயுறவில்லைகாண் *
வாழவுறுதியேல் மாமதீமகிழ்ந்தோடிவா. (கூ)

	மா மதீ!—;		(இப்படி அழைக்கச்செய்தேயும் நீ வாராதிருந்தால்,)
தாழியில் வெண் ணெய்	தாழியிலே (சேமித்திருக்கிற) வெண்ணெயை	ஆழிகொண்டு	திருவாழியாலே
தட கை ஆர விழுங்கிய	பெரிதான கை நிறைய (அள்ளி) அமுதுசெய்த	உன்னை எறியும்	உன்னை வெட்டிவிடுவன்;
பேழை வயிறு எம் பிரான்	பெருவயிற்றையுடையனை என் கண்ணபிரான்	ஐயுறவு இல்லை	ஸம்சயமேயில்லை;
உன்னை கூவுகின்றன்—;		(இதில் நின்றுந்தப்பி) வாழ உறுதியேல்	வாழக்கருதினையாகில் மகிழ்ந்து ஓடிவா—.

* * *—சந்திரா! இவன் உன்னை விரும்பி அழைக்கின்றவிது வெண்ணெயை வாரிவிழுங்கின செய்திபோலே ஆசையின் கனத்தினுலானது என்னுங்கருத்துப்பட முன்னடிகளருளிச்செய்தபடி. அவ்வெண்ணெய்த்தாழியை இவனுக்கு எட்டாதபடி வைத்தால் கல்லிவிட்டெறிந்து அந்தத் தாழியை உடைப்பதுபோல, நீயும் வராதிருந்தால் இவன் சக்கராயுதத்தை உன்மீது பிரயோகித்து உன் தலையை யறுத்திடுவன்; இப்படி இவனுடைய நிக்ரகத்துக்கு இலக்காகி முடிந்துபோகாமல் பிழைத்திருக்க விரும்புவாயாகில் பெருந்தன்மையாய் வந்துவிடு என்கிறாள். (கூ)

63 மைத்தடங்கண்ணி அசோதைதன்மகனுக்கு * இவை
ஒத்தனசொல்லி உரைத்தமாற்றம் * ஒளிபுத்தூர்
வித்தகன்விட்டுசித்தன் விரித்ததமிழிவை *
எத்தனையுஞ்சொல்லவல்லவர்க்கு இடரில்லையே. (ம)

மை தட கண்ணி அசோதை	மையணிந்த விசாலமாயிரா நின்ற கண்களையுடைய ளான யசோதையானவள்	வித்தகன்	(மங்களாசாஸந) ஸமர்த்தரான
தன் மகனுக்கு	தன்மகனை கண்ணனுக்கு	விட்டுசித்தன்	பெரியாழ்வாராலே
ஒத்தன சொல்லி	நினைவுக்கும் சொலவுக்கும் சேர்ந்திருப்பவற்றைச் சொல்லி	விரித்த	விரித்து அருளிச்செய்யப் பட்ட
உரைத்த	(சந்தியை நோக்கி) சொன்ன	தமிழ்	த்ராவிட பாஷாரூபமான
இவை மாற்றம்	இப்பாசுரத்தை	இவை	இப்பாசுரங்கள் பத்தையும்
ஒளி புத்தூர்	ஒளிபொருந்திய ஸ்ரீவில்லிபுத்தூரில் உதித்த வராய்	எத்தனையும்	ஏதேனுமொருபடியாக [சக்தியுள்ளவளவு]
		சொல்ல வல்லவர்க்கு	ஓதவல்லவர்களுக்கு
		இடர் இல்லை	துன்பமொன்றுமிராது.

அடிவரவு:—தன் என் சுற்றும் சக்கரம் அழகிய தண்டு பாலகன் சிறியன். தாழி மை உய்ப.

முதற்பத்து—ஐந்தாந்திருமொழி, உய்யவுலகுபடைத்து

இளமைப்பருவத்து விளையாடல்களில் செங்கீரையாடுவது என்பது ஒன்று ; அதாவது—தாய்மார் முதலானோர் குழந்தைகளைத் தாமே ஆட்டுவிப்பதொரு கூத்து ; பிள்ளை தனது இரண்டு கைகளையும் முழந்தாளையுமூன்றித் தலையை நிமிர்த்துக்கொண்டு ஆடுதல் என்பாருமுண்டு. இவ்விளையாட்டைக் காண வேணுமென்று விரும்பிய யசோதைப்பிராட்டி "எனக்கொரு காலாடுக செங்கீரை ஆடுக ஆடுக" என்று பிரார்த்தித்து அதனை அநுபவித்தாப்போலவே ஆழ்வார் தாமும் அநுபவித்துப்பேசி மகிழ்கின்றார்'

64 உய்யவுலகுபடைத்துண்டமணிவயிறு ஊழிதொறூழிபலவாலினிலையதன்மேல் ★
பையவுயோகுதுயில்கொண்டபரம்பரனே பங்கயநீனயனத்தஞ்சனமேனியனே ★
செய்யவள்நின்னகலஞ்சேமமெனக்கருதிச் செல்வுபொலிமகரக்காதுநிகழ்ந்திலக ★
ஐயவெனக்கொருகாலாடுகசெங்கீரை ஆயர்கள்போரேறேயாடுகவாடுகவே. (க)

உய்ய { (ஆத்மாக்கள்) உஜ்ஜீவிக்கைக்காக
உலகு படைத்து (பின்பு ப்ரளயம்வந்தபோது, அவற்றை) உள்ளேவைத்து ரக்ஷித்த
உண்ட
மணி வயிறு { அழகிய வயிற்றையுடையவனே!
பல ஊழி ஊழி தொறு பலகல்பங்கள் தோறும்
ஆலின் இலை அதன் மேல் { ஆலிலையின்மேல்
பைய மெள்ள
உயோகு துயில் கொண்ட { யோகநித்திரை செய்தருளின
பரம்பரனே பரஸ்மாத்பரனானவனே!
பங்கயம் நீள் நயனம் { தாமரைமலர்போன்று நீண்டிருக்கின்ற திருக்கண்களையும்
அஞ்சனம் மேனி யனே ஐய { மைபோன்ற திருமேனியையுமுடையஸர்வேச்வரனே!

செய்யவள் நின் அகலம் { செந்தாமரைமலரிற் பிறந்த பிராட்டிக் கிருப்பிடமான உன் திருமார்வானது
(இந்த நார்த்தநத்தால் அசையாமல்)
சேமம் என கருதி { ரக்ஷையை உடைத்தாக வேணுமென்று நினைத்துக்கொண்டு,
செல்வு பொலி மகரம் காது நிகழ்ந்து இலக { ஐச்வர்யஸம்ருத்திக்கு ஸூசகங்களான திருமகரக்குழைகளோடு கூடினதிருக்காதுகளானவை மிகவும் விளங்கும்படி
எனக்கு ஒருகால் செங்கீரை ஆடுக { எனக்காக ஒருவிசை செங்கீரையாடியருளவேணும்;
ஆயர்கள் போர் ஏறே { இடையர்களுக்கு விதேயனாய் போர்செய்ய நின்ற ரிஷபம்போலே செருக்கியிராநின்ற கண்ணனே!
ஆடுக! ஆடுக!!—.

செங்கீரையாடும்போது திருமார்விலுறையும் பிராட்டிக்கு அசைதல் உண்டாகாதபடி ஸாவதாநனாய் ஆடவேணுமென்பாள் செய்யவள்நின்னகலஞ் சேமமெனக்கருதி என்றாள். ஸாக்ஷாத் திருமகள் கொழுநனே கண்ணபிரானாக வந்து பிறந்திருக்கின்றமை நன்கு வெளியிடப்பட்டதென்க. சேமம்—க்ஷேமமென்னும் வடசொல் விகாரம். மகாரக்காது என்றவிடத்து மகாமென்னுஞ் சொல் அதன் வடிவத்தையுடைய குண்டலத்திற்கு ஆகுபெயர். ... ... (க)

65 கோளரியின்னுருவங்கொண்டவுணனுடலம் குருதிகுழம்பியெழக்கூருகிர்க்குடைவாய் ★
மீளவவன்மகனெம்மைகொளக்கருதி மேலையமர்பதிமிக்குவெகுண்டுவர ★
காளநன்மேகமவைகல்லொடுகார்பொழியக் கருதிவரைக்குடையாக்காலிகள்காப்பவனே ★
ஆளவெனக்கொருகாலாடுகசெங்கீரை ஆயர்கள்போரேறேயாடுகவாடுகவே. (உ)

கோள் அரியின் உருவம் கொண்டு { வலிமையையுடைய (நர) சிங்கத்தின் வேஷங்கொண்டு
அவுணன் உடலம் குருதி குழம்பி எழ { ஹிரண்யாஸுரனுடைய சரீரத்தில் ரத்தமானது குழம்பிக் கிளறும்படியாகவும்

அவன் மீள மகனை மெய்ம்மை கொள கருதி { அவ்வஸுரனவன் மறுபடியும் தன் மகனை ப்ரஹ்லாதனை ஸத்யவாதியென்று நினைக்கும்படியாகவும் திருவுள்ளம்பற்றி
கூர் உகிரால் குடைவாய் { கூர்மையான நகங்களாலே (அவ்வசுரனுடலைக் கிழித்தருளினவனே!,

மேலை அமரர் பதி — மேன்மை பொருந்திய தேவேந்திரன்
மிக்கு வெகுண்டு வர — மிகவும் கோபித்து வர (அதனால்)
காளம் நல் மேகம் அவை — கறுத்த சிறந்த மேகங்களானவை
கல்லொடு கார் பொழிய — கல்லோடுகூடின வர்ஷத்தைச் சொரிய,
கருதி — ('இம்மலையே உங்களுக்கு ரக்ஷகம், இச்சோற்றை இதுக்கிடுங்கோள்' என்று முன்பு இடையர்க்குத்தான் உபதேசித்ததை) நினைத்து
வரை குடையா காலிகள் காப்பவனே — (அத்த) கோவர்த்தனகிரியை குடையாகக்கொண்டு பசுக்களை ரக்ஷித்தருளினவனே!
ஆள — (இப்படி ரக்ஷிக்கைக் குறுப்பான) ஆண்பிள்ளைத்தனமுடையவனே!
எனக்கு.....ஆடுக—.

* * *—"எங்குமுளன்" என்றுசொன்ன ப்ரஹ்லாதனுடைய சொல்லை யதார்த்தமாக்கும் பொருட்டுத் தூணில் நரசிங்கமூர்த்தியாய்த் தோன்றி இரணியனுடலைப் பிளந்தொழித்தவனே! பசிக் கோபத்தினால் ஏழுநாள் விடாமழைபெய்வித்த இந்திரன் பங்கமடையும்படி கோவர்த்தன மலையைக் குடையாகவெடுத்து ஆய்ப்பாடியைக் காத்தவனே! எனக்கொருகால் செங்கீரையாடியருள். (உ)

66 நம்முடைநாயகனேநான்மறையின்பொருளே நாபியுள்நற்கமலநான்முகனுக்கொருகால் ★ தம்மனையானவனேதாணிதலமுழுதும் தாரகையின்னுலகுந்தடவிஅதன்புறமும் ★ விம்மவளர்ந்தவனேவேழமுமேழ்விடையும் விரவியவேலைதனுள்வென்றுவருமவனே ★ அம்மவெனக்கொருகாலாடுகசெங்கீரை ஆயர்கள்போரேறேஆடுகவாடுகவே. (க)

நம்முடை நாயகனே — எங்களுக்கு நாதனானவனே!
நால் மறையின் பொருளே — நாலுவேதங்களுடையபொருளாயிருப்பவனே!
நாபியுள் நல் கமலம் நான்முகனுக்கு — நிருநாபியில் முளைத்திராநின்ற நல்லதாமரைமலரிற் பிறந்த பிரமனுக்கு
ஒருகால் தம்மனை ஆனவனே — அவன் வேதத்தைப் பறிகொடுத்துத் திகைத்தகாலத்தில் தாய்போலே பரிந்து அருளினவனே!
தாணிதலம் முழுதும் — பூமியடங்கலும்
தாரகையின் உலகும் — நக்ஷத்ரலோக மடங்கலும்
தடவி — திருவடிகளால் ஸ்பர்சித்து
அதன் புறமும் விம்ம வளர்ந்தவனே — அதற்குப் புறம்பாயுள்ள தேசமும் பூர்ணமாம்படி த்ரிவிக்ரமனுய் வளர்ந்தவனே!
வேழமும் — குவலயாபீடமென்ற யானையும்
ஏழ் விடையும் — ஏழு ரிஷபங்களும்
விரவிய வேலைதனுள் — (உன்னை ஹிம்ஸிப்பதாக) உன்னுடைவந்து கலந்த ஸமயத்திலே
வென்று வருமவனே — (அவற்றை) ஜயித்து வந்தவனே!
அம்ம — ஸ்வாமியானவனே!
எனக்கு...ஆடுக—.

* * *—மதுகைடபர்கள் நான்முகனிடத்திலிருந்து வேதங்களைப் பறித்துக்கொண்டு போனபோது, அப்பிரமன் வேதங்களை யிழந்ததற்காக 'கண்ணிழந்தேன், பொருளிழந்தேன்' என்று கதறிக்கதறியழ, அவ்வேதங்களை எம்பெருமான் மீட்டுக் கொணர்ந்து கொடுத்துத் துயர்தீர்த்ததனால் "நான்முகனுக்கோரு கால் தம்மனையானவனே!" என்றார். (க)

67 வானவர்தாம்மகிழவன்சகடமுருள வஞ்சமுலைப்பேயின்நஞ்சமுதுண்டவனே ★ கானகவல்விளவின்காயுதிர்க்கருதிக் கன்றதுகொண்டெறியுங்கருநிறவெள்கன்றே ★ தேனுகனும்முரனுந்திண்டிறல்வெந்நரகன் என்பவர்தாம்மடியச்செருவதிரச்செல்லும் ★ ஆனையெனக்கொருகாலாடுகசெங்கீரை ஆயர்கள்போரேறேயாடுகவாடுகவே. (ச)

வானவர்தாம் மகிழ — தேவர்கள் மகிழும்படியாகவும்
வல் சகடம் உருள — வலியுள்ள சகடாஸுரன் உருண்டு, உருமாய்ந்து போம்படியாகவும் (செய்து)
வஞ்சம் பேயின் முலை நஞ்சு அமுது உண்டவனே — வஞ்சனையையுடையளான பூதனையினுடைய முலைமேல் தடவிக்கிடந்த விஷத்தை அம்ருதத்தை அமுது செய்யுமாபோலே அமுது செய்தருளினவனே!

கானகம் வல் விளவின் காய் உதிர கருகி — காட்டிலுள்ளதான வலிமை பொருந்திய விளாமரத்தினுடைய காய்களானவை உதிரும்படி திருவுள்ளத்திற்கொண்டு

கன்று அதுகொண்டு — கன்றான அந்த வத்ஸாஸுரனைக் கையில்கொண்டு

எறியும் — (விளவின்மேல்)எறிந்தவனும்

கரு நிறம் — கறுத்தநிறத்தையுடையனும்

என் கன்றே — என்னுடைய கன்றானவனே!

தேனுகனும் முரனும் திண் திறல் வெம் நரகன் — தேனுகாஸுரனும் முராஸுரனும் திண்ணிய வலிவை யுடையனும் கொடுமையுமுடையனான நரகாஸுரனும்

என்பவர்தாம் மடிய — என்றிப்படி சொல்லப்படுகிற தீய பூண்டுகளடங்கலும் மாளும்படியாக

சேரு அதிர செல்லும் — யுத்தத்திலே மிடுக்கையுடையவனைக்கொண்டு எழுந்தருளுமவனை

ஆனே — ஆனேபோன்ற கண்ணனே! எனக்கு... ஆடுக—.

* * *—"நஞ்சமதுண்டவனே" என்றும் பாடமுண்டு; முலையில் தடவிக்கிடந்த அந்தக் கொடிய விஷத்தை உண்டவனே! என்று பொருளாம். ஆனை—அண்மைவிளி. ... (ச)

68 மத்தளவுந்தயிரும்வார்குழனன்மடவார் வைத்தனெய்களவால்வாரிவிழுங்கி ★ ஒருங்
கொத்தவிணைமருதமுன்னியவந்தவரை ஊருகாத்தினெடுமுந்தியவெந்நிறலோய் ★
முத்திலிளமுறுவல்முற்றவருவதன்முன் முன்னமுகத்தணியார்மொய்குழல்களலைய ★
அத்தவெனக்கொருகாலாடுகசெங்கீரை ஆயர்கள்போரேறேயாடுகவாடுகவே. (ட)

வார் குழல் நல் மட வார் வைத்தன — நீண்ட மயிர்முடியையுடைய ராய் நன்மையையும் மடப்பத்தையு முடையரான ஸ்த்ரீகளாலே சேமித்து வைக்கப்பட்ட

மத்து அளவும் தயிரும் நெய் — மத்தாலே அளாவிக்கடைகைக்கு உரிய தயிரையும் நெய்யையும்

களவால் வாரி விழுங்கி — திருட்டு வழியாலே கைகளால் அள்ளி வயிறுர உண்டு,

உன்னிய ஒருங்கு ஒத்த இணை-மருதம் — உன்னை கலியவேணுமென்னும் நினைவையுடையராய் ஒருபடிப்பட மனம் ஒத்தவர்களாய் இரட்டை மருதமரமாய்க் கொண்டு

வந்தவரை ஊரு காத்தினெடும் — வந்துநின்ற அஸுரர்களை தடைகளாலும்கைகளாலும்

உந்திய — இரண்டு பக்கத்திலும் சரிந்துவிழும்படி தள்ளின

வெம் திறலோய் — வெவ்வியவலிவை யுடைய வனே!

அத்த — அப்பனே!

முத்து இன் இளமுறுவல் முற்ற வருவதன் முன் — திருமுத்துக்கள் தோன்றும்படி இனிதான மந்தஹாஸமானது பூர்ணமாக வெளிவருவதற்கு முன்னே

முன்னம் முகத்து அணி ஆர் மொய் குழல்கள் அலைய — முன்முகத்திலே அழகு மிகப்பெற்று நெருங்கியிராநின்ற திருக்குழல்களானவை தாழ்ந்து அசையும்படி

எனக்கு...ஆடுக—.

* * *—நாரதசாபத்தினால் மரங்களானவற்றில் கம்ஸனால் ஏவப்பட்ட இரண்டு அசுரர்களும் ஆவேசித்திருந்தனரென்பதும் சில புராணங்களிலுள்ளது. "ஒருங்கொத்த விணைமருத முன்னியவந்தவரை" என்று இவ்விடத்திலும் "பொய்ம்மாயமருதான வசுரரை" என்று மேல் மூன்றாம்பத்திலும் இவ்வாழ்வாருளிச் செய்வனவுங்காண்க. ஊரு, கரம்—வட்சொற்கள்.

பருவமெறிந்தால் புன்சிரிப்பு முற்றிப் பெருஞ்சிரிப்பாக மாறிவிடுமாதலால் "முத்தினிளமுறுவல் முற்ற வருவதன்முன்" என்றார். 'பற்கள்' என்றாவது 'முத்துப்போன்ற பற்கள்' என்றாவது சொல்லவேண்டுமிடத்து முத்து என்றே இங்குச் சொல்லியிருப்பது—உவமையாகு பெயர். ... (டு)

69 காயமலர்நிறவாகருமுகில்போலுருவா கானகமாமடுவிற்காளியனுச்சியிலே ★
தூயநடம்பயிலுஞ்சுந்தரவெஞ்சிறுவா துங்கமதக்கரியின்கொம்புபறித்தவனே ★
ஆயமறிந்துபொருவரனெதிர்வந்தமல்லை அந்தாமின்றியழித்தாடியதாளிணையாய் ★
ஆயவெனக்கொருகாலாடுகசெங்கீரை ஆயர்கள்போரேறேயாடுகவாடுகவே. (சு)

காய்மலர் நிறவா — காயாம்பூப்போன்ற நிறத்தையுடையவனே!

கரு முகில் போல் உருவா — காளமேகம்போன்ற ரூபத்தையுடையவனே!

கானகம் மா மருவில் காளியன் உச்சியிலே — காட்டிலே பெரிய மடுவினுள்ளே கிடந்த காளிய நாகத்தினுடைய தலையின் மீது

தூய நடம் பயிலும் சுந்தர — மனோஹரமான நர்த்தனத்தைச்செய்தருளின அழகையுடையவனே!

என் சிறுவா — எனக்குப் பிள்ளையானவனே!

துங்கம் மதம் கரியின் கொம்பு பறித்தவனே — உன்னதமாய் மதத்தையுடைத்தான குவலயாபீடமென்னும் யானையினது தந்தங்களை முறித்தருளினவனே!

ஆயம் அறிந்து பொருவான் எதிர் வந்த மல்லே — (மல்லயுத்தம்)செய்யும்வகையறிந்துயுத்தம்செய்வதற்கு எதிர்த்துவந்த மல்லர்களை

அந்தரம் இன்றி அழித்து ஆடிய தாள் இணையாய் — (உனக்கு) ஒரு அபாயமில்லாதபடி த்வம்ஸம் செய்து (இன்னம் வருவாருண்டோ என்று) கம்பீரமாய் ஸஞ்சரித்த திருவடிகளையுடையவனே!

ஆய — ஆயனே!

எனக்கு..... ஆடுக—.

* * *—மூன்றுமடியில், ஆய்ம்—வேலைத்திறம். அந்தாமின்றி என்பதற்கு - மல்லயுத்தம் செய்யும் போது ஒருடலுக்கும் மற்றேருடலுக்கும் இடைவெளியில்லாமல் நெருங்கிப் பொருது என்றும், உனக்கொரு அபாயமின்றிப் பொருது என்றும் உரைக்கலாம். "காயாமலர்" என்பது காயமலரென்று சுருக்கல் விகாரம் பெற்றது. ... ... (கூ)

70 துப்புடையாயர்கள்தம்சொல்வழுவாதொருகால் தூயகருங்குழனற்ருேகைமயிலனைய ★ நப்பினைதன்திறமாநல்விடையேழுவிய நல்லதிறலுடையநாதனுமானவனே ★ தப்பினபிள்ளைகளைத்தனமிகுசோதிபுகத் தனியொருதேர்கடவித்தாயொடுகூட்டிய ★ என் அப்பனெனக்கொருகாலாடுகசெங்கீரை ஆயர்கள்போரேறேயாடுகவாடுகவே. (எ)

துப்பு உடை ஆயர்கள்தம் சொல் வழுவாது — நெஞ்சில் கடினத்தன்மையுடையரான இடையர்களுடைய வார்த்தையைத் தப்பாமல்

ஒருகால் — ஒரு காலத்திலே

தூய கரு குழல் நல் தோகை மயில் அனைய நப்பினை தன் திறமா — அழகியதாய் கறுத்திராநின்றுள்ள கூந்தலையுடையவளாய், நல்ல தோகையையுடைய மயில்போன்ற சாயலையுடையவளான நப்பின்னைப் பிராட்டிக்காக

நல் விடை ஏழ் அவிய — (கொடுமையில்) நன்ருன ரிஷபங்களேழும் முடியும்படியாக

நல்ல திறல் உடையீ நாதன் ஆனவனே — நன்ருன மிடுக்கையுடையவனாய் அவ்விடையர்களுக்கு ஸ்வாமியானவனே!

தன மிகு சோதி புக — தன்னுடைய நிரவதிக தேஜோரூபமான பரமபதத்திலே செல்லும்படியாக

தனி ஒரு தேர் கடவி — தனியே ஒப்பற்ற தேரை நடத்தி

தப்பின பிள்ளைகளை தாயொடு கூட்டிய — கைதப்பிப்போன வைதிகன் பிள்ளைகளைத் தாயோடு கூட்டினை

என் அப்ப — என் அப்பனே!

எனக்கு... ஆடுக—.

71 உன்னையுமொக்கலையிற்கொண்டுதமில்மருவி உன்னெடுதங்கள்கருத்தாயினசெய்துவரும் கன்னியரும்மகிழக்கண்டவர்கண்குளிரக் கற்றவர்தெற்றிவாப்பெற்றவெனக்கருளி ★ மன்னுகுறுங்குடியாய்வெள்ளறையாய்மதிள்சூழ் சோலைமலைக்காசேகண்ணபுரத்தமுதே ★ என்னவலங்களைவாயாடுகசெங்கீரை ஏழுலகுமுடையாயாடுகவாடுகவே. (அ)

மன்னு குறுங் குடியாய் — (ப்ரளயத்துக்கு மழியாமல்) பொருந்தியிருக்குமதான திருக்குறுங்குடியிலேயெழுந்தருளியிருக்குமவனே!

வெள்ளறையாய் — திருவெள்ளறையிலே வர்த்திக்குமவனே!

மதிள் சூழ் சோலை மலைக்கு அரசே — மதிளாலே சூழப்பட்ட திருமாலிருஞ்சோலை மலைக்கு அதிபதியானவனே!

கண்ண புரத்து அமுதே — திருக்கண்ணபுரத்திலே நிற்கிற அம்ருதம்போன்றவனே!

என் அவலம் கனிவாய் — என் துன்பங்களை நீக்குமவனே!

உன்னை ஒக்கலையில் கொண்டு தம் இல் மருவி — (மனைஹரனை உன்னை) இடுப்பிலே எடுத்துக் கொண்டு தங்கள் தங்கள் அகங்களிலே சேர்ந்து

உன்னெடு தங்கள் கருத்து ஆயின செய்து வரும் கன்னியரும் மகிழ — உன்னோடு தங்களுடைய நினைவுக்குத் தக்கபடி பரிமாறி மறுபடியும் கொண்டு வாரா நிற்கிற இளம்பெண்களும் (இச்செங்கீரையைக் கண்டு) ஸந்தோஷிக்கும் படியாகவும்

கண்டவர் கண்குளிர — (மற்றும்) பார்த்தவர்களுடைய கண்களானவை குளிரும்படியாகவும்

கற்றவர் தெற்றி வர — (கவிசொல்லக்) கற்றவர்கள் பிள்ளைக்கவிகள் தொடுத்து வரும்படியாகவும்,

பெற்ற எனக்கு அருளி — உன்னை மகனைப்பெற்ற என் விஷயத்திலே க்ருபை செய்து

ஏழ் உலகும் உடையாய் — ஸப்தலோகங்களுக்கும் ஸ்வாமியானவனே!

செங்கீரை ஆடுக—; ஆடுக ஆடுக—.

* * *—பிரானே! நீ எப்படி செங்கீரையாடவேணுமென்றால், உன்னை இடுப்பிலெடுத்துக் கொண்டு தங்கள் தங்கள் வீட்டுக்குச்சென்று தங்களிஷ்டப்படி உன்னை யநுபவித்துவருகின்ற இளம் பெண்களும் மனமகிழும்படி ஆடவேணும்; ஸாமாந்யமாகப் பார்க்கிறவர்களெல்லாருடையவும் கண்கள் குளிரும்படி ஆடவேணும்; கவிதொடுக்கக்கற்றவர்கள் பிள்ளைக்கவிகள் பாடிக்கொண்டு வரும்படி ஆடவேணும். (அ)

72 பாலொடுநெய்தயிரொண்சாந்தொடுசெண்பகமும் பங்கயநல்லகருப்பூரமுநாறிவர ★
கோலநறும்பவளச்செந்துவர்வாயினிடைக் கோமளவெள்ளிமுளைப்போல்சிலப்பல்லிலக ★
நீலநிறத்தழகாரம்படையின்நடுவே நின்கனிவாயமுதமிற்றுமுழிந்துவிழ ★
ஏலுமறைப்பொருளேயாடுகசெங்கீரை ஏழுலகுமுடையாயாடுகவாடுகவே. (ஆ)

மறை ஏலும் பொருளே — வேதத்தினுடைய தகுதியான அர்த்தமானவனே!

பாலோடு செய் தயிர் — பாலோடேகூட நெய்யும் தயிரும்

ஒண் சாந்தொடு — அழகிய சந்தனமும்

செண்பகமும் — செண்பகம் முதலிய மலர்களும்

பங்கயம் — தாமரைப்பூவும்

நல்ல — உத்தமமான

கருப்பூரமும் — பச்சைக் கர்ப்பூரமுமாகிய இவை

நாறி வர — கலந்து பரிமளிக்க,

கோலம் நறு பவளம் செம் துவர் வாயின் இடை — அழகிய நற்பவளம்போல் அழகியதாய்சிவந்திருக்கிற திருவதரத்தினுள்ளே

கோமளம் வெள்ளி முளைபோல் — இளையதான வெள்ளி முளை போலே

சில பல் இலக — சில திருமுத்துக்கள்விளங்க,

நீலம் நிறத்து அழகு ஆர் ஐம்படையின் நடுவே — நீலநிறத்தையுடைத்தாய் அழகு நிறைந்திராநின்ற பஞ்சாயுதத்தின் நடுவே

நின் கனி வாய் அமுதம் இற்று முழிந்து விழ — உன்னுடைய கொவ்வைக்கனிபோன்ற அதரத்தில் ஊறுகின்ற அம்ருத ஜலமானது இற்றிற்று விழ

ஆடுக—.

* * *—கண்ணபிரான் நெய் பால் தயிர் முதலியவற்றைப் பலகாலும் அமுதுசெய்வதாலும், சந்தனம் செண்பகம் முதலியவற்றைப் பலகாலும் திருமேனியிலே சாத்திக்கொள்வதினாலும் செங்கீரையாடும்போது அவைகள் நல்ல பரிமளம் கமழுகிற்கும். அப்படிச் செங்கீரையாடுகையில் வாயைத் திறந்து சிறிது சிரிக்கும்போது "கருப்பூரம் நாறுமோ கமலப்பூ நாறுமோ? திருப்பவளச் செவ்வாய்" என்றபடி இயற்கையாகவே தாமரைப்பூ பச்சைகற்பூரங்களின் நறுமணமுடைய திருப்பவளத்தின் பரிமளமும் வீசும்: வாயினுள்ளே வெள்ளியரும்புகள் போன்ற சில பற்கள் பிரகாசிக்கும்; திருமார்விலணிந்த ஆபரணங்களின்மேல் வாயினூறுகிற அம்ருதஜலம் இற்றிற்றுவிழும். இப்படிப்பட்ட நிலைமைகளுடனே செங்கீரையாடவேணுமென்றதாயிற்று. ... ... (ஆ)

73 செங்கமலக்கழலித்சிற்றிதழ்போல்விரலில் சேர்திகழாழிகளுங்கிண்கிணியும் ★ அரையில்
தங்கியபொன்வடமுந்தாளநன்மாதுனையின் பூவொடுபொன்மணியும்மோதிமுங்கிறியும் ★
மங்கலவெம்படையுந்தோள்வளையும்குழையும் மகரமும்வாளிகளுஞ்சுட்டியுமொத்திலக ★
எங்கள்குடிக்கரசேயாடுகசெங்கீரை ஏழுலகுமுடையாயாடுகவாடுகவே. (இ)

எங்கள் குடிக்கு அரசே — எங்கள் வம்சத்துக்கு ராஜா வானவனே!
செம் கமலம் கழலில் — செந்தாமரைப் பூப்போன்ற திருவடிகளில்
சிறு இதழ் போல் விரலில் — (அந்தப் பூவினுடைய) உள் ளிதழ்போலே சிறுத்திருக் கிற திருவிரல்களில்
சேர் திகழ் — சேர்ந்து விளங்காகின்ற
ஆழிகளும் கிண்கிணி யும் — திருவாழி மோதிரங்களும் சதங்கைகளும்
அரையில் தங்கிய பொன் வடமும் — அரையில் சாத்தியிருக்கிற பொன் அரைநாணும்
(பொன்) தாள நல் மாதுளையின் பூவொடு — பொன்னால் செய்த காம்பை யுடைய நல்லதான மாது ளம்பூக் கோவையும்
பொன் மணியும் — (நடுநடுவே கலந்து கோத்த) பொன்மணிக் கோவையும்
மோதிரமும் — திருக்கை மோதிரங்களும்
கிறியும் — (மணிக்கட்டில் சாத்தின) சிறுப்பவளவட்மும்
மங்கலம் ஐம்படை யும் — மங்களாவஹமான பஞ்சா யுதமும்
தோள் வளையும் — திருத்தோள் வளைகளும்
குழையும் — காதணிகளும்
மகரமும் — மகர குண்டலங்களும்
வாளிகளும் — (திருச்செவி மடல்மேல்சாத் தின) வாளிகளும்
சுட்டியும் — திருநெற்றிச் சுட்டியும்
ஒத்து இலக — அமைந்து விளங்கும்படி
ஆடுக.....ஆடுக.

* * *—கண்ணபிரான் திருமேனியிலணிந்துள்ள திவ்யாபரணங்களை வாயாரப்பேசி யநுபவிக் கிறார். செங்கீரையாடும்போது ஆபரணங்களெல்லாம் அசையுமாதலால் இவ்வாறு அருளிச்செய்தனர். செந்தாமரைப்பூவில் சிறிய இதழ்கள் தோன்றுவதுபோல் திருவடிகளில் சிறுவிரல்கள் தோன்றுகின்றன வென்பது செங்கமலக்கழலில் சிற்றிதழ்போல்விரலில் என்றதன் கருத்து. கிண்கிணி—அரைச்சதங்கையு மாகலாம், பாதச் சதங்கையுமாகலாம். ... ... (ம)

74 அன்னமுமீனுருவுமாளரியுங்குறளும் ஆமையுமானவனேயாயர்கள்நாயகனே ★
என்னவலங்களைவாயாடுகசெங்கீரை யேழுலகுமுடையாயாடுகவாடுகவென்று ★
அன்னநடைமடவாளசோதையுகந்தபரிசு ஆனபுகழ்ப்புதுவைப்பட்டனுரைத்ததமிழ் ★
இன்னிசைமாலைகளிப்பத்தும்வல்லார் உலகிலெண்டிசையும்புகழ்மிக்கின்பமதெய்துவரே.(கக)

அன்னமும் மீன் உரு வும் ஆள் அரியும் குறளும் ஆமையும் ஆனவனே — "ஹம்ஸரூபியாயும் மத்ஸ்ய ரூபியாயும் நரஸிம்ஹரூபி யாயும் வாமநரூபியாயும் கூர்மரூபியாயும் அவதரித் தவனே!
ஆயர்கள் நாயகனே — இடையர்களுக்கு தலைவ னானவனே!
என் அவலம் களை வாய் — என் துன்பத்தை நீக்கின வனே!
செங்கீரை ஆடுக — செங்கீரை ஆடவேணும்;
ஏழ் உலகும் உடை யாய் — ஸப்த லோகங்களுக்கும் ஸ்வாமியானவனே!
ஆடுக ஆடுக என்று — பலகாலும் ஆடவேணும்" என்று,
அன்னம் நடை மட வாள் அசோதை உகந்த பரிசு — ஹம்ஸகதியை யுடையளாய் நற்குண முமுடையளான யசோதைப் பிராட்டியாலே உகந்து சொல்லப்பட்ட ப்ர காரத்தை,
ஆன புகழ் புதுவை பட்டன் — பொருந்திய புகழையுடைய ரான பெரியாழ்வார்
உரைத்த இன் இசை தமிழ்மாலைகள் இ பத்தும் வல்லார் — அருளிச்செய்த இனியஇசை யுடைய தமிழ்த் தொடைக ளான இப்பத்துப் பாசுரங் களையும் ஓதவல்லவர்கள்
உலகில் எண்திசை யும் புகழ் — இந்த லோகத்திலே எட்டுத் திசைகளிலும் (பரந்த) கீர்த் தியையும்
மிகு இன்பமது எய்துவர் — மிக்க இன்பத்தையும் பெறுவார்கள்

மீக்கின்பம் = தொகுத்தல் விகாரமெனக்கொண்டு, மிக்க + இன்பம், என்றும் பிரிக்கலாம். (கக)

அடிவரவு:—உய்யக் கோளரி நம்முடைவான் மற்றுக்காய் துப்புன்னைப்பால் செங்கமலமன்ன மாணிக்கம்.

முதற்பத்து—ஆறாந்திருமொழி, மாணிக்கக்கிண்கிணி

(ஒரு கையோடு மற்றொரு கையையுஞ் சேர்த்துக்கொட்டுதலாகிய விளையாட்டைச் செய்யும்படி கண்ணனை வேண்டுதல்.)

75 மாணிக்கக்கிண்கிணியார்ப்ப மருங்கின்மேல் *
ஆணிப்பொன்னுற்செய்த ஆய்பொன்னுடைமணி *

பேணிப்பவளவாய் முத்திலங்க * பண்டு
காணிகொண்டகைகளாற்சப்பாணி கருங்குழற்குட்டனேசப்பாணி. (க)

ஆணி பொன்னல் செய்த — மாற்றுயர்ந்த பொன்னல் செய்த
ஆய் பொன் மணி உடை மருங்கின் மேல் — (வேலைப்பாட்டிற் குறைவில்லாதபடி) ஆராய்ந்து செய்த பொன்மணிக் கோவையை உடைய இடுப்பின்மேலே
மாணிக்கம் கிண் கிணி ஆர்ப்ப — (உள்ளே) மாணிக்கத்தையிட்ட அரைச்சதங்கை ஒலி செய்யவும்
பவளம் வாய் முத்து இலங்க — பவழம்போன்ற வாயிலே முத்துப்போன்ற பற்கள் விளங்கவும்,
பண்டு காணி கொண்டகைகளால் — முற்காலத்திலே பூமியை (பலிசக்ரவர்த்தியினிடத்தில் நின்றும்) வாங்கிக் கொண்ட திருக்கைகளாலே
பேணி — விரும்பி
சப்பாணி — சப்பாணிகொட்டியருள வேணும்;
கரு குழல் குட்டனே — கருநிறமான கூந்தலையுடைய பிள்ளாய்!
சப்பாணி — சப்பாணிகொட்டியருள்.

* * *—அரைச்சதங்கைகள் தொனிக்கவும் வாயிலே முத்துப்போன்ற பற்கள் விளங்கவும் திருக்கைகளாலே சப்பாணி கொட்டவேணுமென்கிறது. பிறருடைய காரியம் செய்வதேயன்றே உன் கைகளுக்குத் தொழில் என்கைக்காக 'பண்டு காணிகொண்ட கைகளால்' என்றார். சப்பாணிகொட்டுதல்-ஸஹ பாணிகொட்டுதல். ஒரு கையோடுகூட மற்றொரு கையைச் சேர்த்துத் தட்டுதல். (க)

76 பொன்னரைநாணொடு மாணிக்கக்கிண்கிணி *
தன்னரையாடத் தனிச்சுட்டிதாழ்ந்தாட *
என்னரைமேல்நின்றிழிந்து உங்களாயர்தம் *
மன்னரைமேற்கோட்டாய்சப்பாணி மாயவனேகோட்டாய்சப்பாணி. (உ)

பொன் அரை நாணொடு — ஸ்வர்ணமயமான அரை நாணோடுகூட
மாணிக்கம் கிண் கிணி — உள்ளே மாணிக்கமிட்ட அரைச்சதங்கையும்
தன் அரை ஆட — தனக்கு உரிய இடமாகிய அரையிலே அசைந்து ஒலிக்கவும்
தனி சுட்டி தாழ்ந்து ஆட — ஒப்பற்ற சுட்டியானது (திருநெற்றியில்) தொங்கி அசையவும்
என் அரை மேல் நின்று இழிந்து — என்னுடைய மடியிலிருந்து இறங்கிப்போய்
உங்கள் ஆயர் தம் மன் அரை மேல் — உன்னுடைய (பிதாவான) இடையர்கட்கெல்லாம் தலைவரான நந்தகோபருடைய மடியிலிருந்து
சப்பாணி கொட்டாய்—;
மாயவனே — அற்புதமான செயல்களையுடையவனே!
சப்பாணி கொட்டாய்—;

* * *—கண்ணபிரான், தன் மடியிலிருந்து சப்பாணி கொட்டுவதைப் பார்ப்பதைக்காட்டிலும் தகப்பனர் மடியிலிருந்து சப்பாணி கொட்டுவதைப் பார்த்தால் அவனுடைய ஸ்வாங்க ஸௌந்தர்யங்களையும் கண்ணாரக் கண்டு உகக்கலாமென்பதுபற்றி இங்ஙனம் வேண்டினபடி. ... (உ)

77 பன்மணிமுத்தின் பவளம்பதித்தன்ன *
என்மணிவண்ணன் இலங்குபொற்றோட்டின்மேல் *
நின்மணிவாய்முத்திலங்க நின்னம்மைதன் *
அம்மணிமேற்கோட்டாய்சப்பாணி ஆழியங்கையனேசப்பாணி. (ங)

என் மணிவண்ணன் — என்னுடைய நீலமணிபோன்ற நிறமுடையவனே!
பல் மணி முத்து இன் பவளம் பதித்த — பலவகைப்பட்ட ரத்நங்களையும் முத்துக்களையும் இனிய பவழத்தையும் அழுத்திச் செய்யப்பட்டதும்
அன்ன — அப்படிப்பட்டதுமான [அழகியதுமான]
இலங்கு பொன் தோட்டின் மேல் — விளங்குகின்ற பொன்னாற் செய்த தோடென்னுங் காதணியினழகுக்கு மேலே

நின்மணி வாய்முத்து இலங்க — உன்னுடைய அழகிய வாயிலே முத்துப்போன்ற பற்கள் விளங்கும்படி (சிரித்துக்கொண்டு)
நின் அம்மை தன் அம்மணி மேல் — உன் தாயாகிய என்னுடைய இடையிலிருந்து
ஆழி அம் கையனே — திருவாழி மோதிரத்தை அழகிய கையிலுடையவனே!
சப்பாணி கொட்டாய்—;
சப்பாணி—.

* * *—கீழிற்பாட்டில் பிரார்த்தித்தபடி நந்தகோபர் மடியிலிருந்துகொண்டு சப்பாணி கொட்டின கண்ணனைத் தன் மடியிலேயே வரவிரும்பி யசோதைப்பிராட்டி அழைக்கிறாள். அம்மைதன்-தன்மையிற்படர்க்கை. பதித்த + அன்ன = பதித்தன்ன; பெயரெச்சத்தின் அகரவீறு தொகுத்தல்; பதித்து அன்ன என்றும் பிரிக்கலாம். ஆழி—ஸ்ரீஸுதர்சநாழ்வானுமாம். ... (கூ)

78 தூநிலாமுற்றத்தே போந்துவிளையாட*
வானிலாவம்புலீ சந்திராவாவென்று*
நீநிலாநின்புகழாநின்ற ஆயர்தம்*
கோநிலாவக்கோட்டாய்சப்பாணி குடந்தைக்கிடந்தானே சப்பாணி. (சு)

வான் நிலா அம்புலீ — 'ஆகாசத்திலே விளங்குகின்ற அம்புலியே!
சந்திரா — சந்திரனே!
தூ நிலா முற்றத்தே போந்து விளையாட — வெண்ணெயான நிலாவையுடைய முற்றத்திலேவந்து (நான்) விளையாடும்படி
நீ வா என்று — நீ வருவாயாக என்று (சந்திரனை அழைத்து)
நிலா நின்றுகொண்டு
நின் புகழாநின்ற உன்னைப் புகழ்கின்ற
ஆயர்தம் கோ நிலாவ — இடையர்களுடைய தலைவராகிய நந்தகோபர் மனமகிழும்படி
சப்பாணி கொட்டாய்—;
குடந்தை கிடந்தானே! சப்பாணி—.

* * *—சந்திரனே! நான் விளையாடும்படி நீ சற்று இப்படி வருவாயாக, என்று அழைத்துக் கொண்டே முற்றத்தில் நின்றுகொண்டு நந்தகோபரது மனம் மகிழுமாறு சப்பாணிகொட்டு என்றவாறு.
நின்புகழாநின்ற—உன் சேஷ்டைகளைக்கண்டு மனமகிழ்ந்து உன்னைக் கொண்டாடுகின்ற இடையர். 'நிலா' என்ற சொல்மூன்றனுள், முதலது—பெயர்ச்சொல்; இரண்டாவது - விளைத்தொகை; மூன்றாவது - 'செய்யா' என்னும் வாய்பாட்டு உடன்பாட்டிறந்தகாலவினையெச்சம்; 'நில்லா' என்பதன் தொகுத்தல். நிலாவுதல் - விளங்குதல். ... ... (சு)

79 புட்டியிற்சேறும் புழுதியுங்கொண்டுவந்து*
அட்டியமுக்கி அகம்புக்கறியாமே*
சட்டித்தயிரும் தடாவினில்வெண்ணெயுமுண்*
பட்டிக்கன்றேகோட்டாய்சப்பாணி பற்பநாபா கொட்டாய் சப்பாணி. (எ)

புட்டியில் சேறும் புழுதியும் கொண்டு வந்து — திருவரையிற் படிந்த சேற்றையும் புழுதிமண்ணையும் கொணர்ந்து வந்து
அட்டி அமுக்கி — (என்மேல்) இட்டு உறைக்கப்பூசி
அகம் புக்கு — வீட்டினில் புகுந்து
அறியாமே — (எனக்குத்) தெரியாதபடி
சட்டி தயிரும் — சட்டியில் வைத்திருக்கும் தயிரையும்!
தடாவினில்வெண்ணெயும் உண் — மிடாக்களிலிருக்கிற வெண்ணெயையும் உண்ணுகின்ற
பட்டி கன்றே — பட்டி மேய்ந்து திரியும் கன்றுபோன்றவனே!
சப்பாணி கொட்டாய்—;
பற்பம் நாபா — ப்ரஜாபதி பிறப்பதற்குக் காரணமான தாமரைப் பூவைக்கொண்ட நாபியையுடையவனே!
சப்பாணி கொட்டாய்—.

* * *—கண்ணன் புழுதியில் விளையாடும்போது, உடம்பில் வியர்வைநீருண்டாக, அவ்வேர்வை நீரால் நனைந்து புழுதிபடிந்த இடம் சேறுகவும் நனையாதவிடம் புழுதிமண்ணாகவுமிருக்கும். அப்படியே வந்து தன்மேலணைந்தால் அந்தச் சேறும் புழுதியும் தன்மேலும் படிந்துவிடுமாதலால் 'அட்டி அமுக்கி'

எனப்பட்டது. பட்டிக்கன்றே—பட்டிதின்றுதிரியுங் கன்றுபோலே நெய் பால் தயிர்களைக் களவிலுல் தின்று திரிவதையே பொழுதுபோக்காகவுடையவனே! என்றவாறும். ... ... (நி)

80 தாரித்துநூற்றுவர் தந்தைசொற்கொள்ளாது*
போருய்த்துவந்து பகுந்தவர்மண்ணுள*
பாரித்தமன்னர்படப் பஞ்சவர்க்கு*அன்று
தேருய்த்தகைகளாற்சப்பாணி தேவகிசிங்கமேசப்பாணி. (கூ)

தந்தைசொல்தாரித்து கொள்ளாது — (எல்லார்க்கும்) பிதாவாகிய உனது பேச்சை (மனதிற்) கொண்டி அங்கீகரியாமல்
போர் உய்த்து வந்து புகுந்தவர் — யுத்தத்தை நடத்துவதாக (க்ரு வத்துடன்) வந்து (போர்க்களத்தில்) ப்ரவேசித்தவரும்
மண் ஆள பாரித்த மன்னர் — ராஜ்யத்தை (தாமே) அரசாளுவதற்கு முயற்சி செய்த அரசர்களுமாகிய
நூற்றுவர் — நூற்றுக்கணக்காயிருந்த துர்யோதநாதிகள்
படப — மாண்டுபோகும்படி (பாரதயுத்தம் நடந்த) அக்காலத்திலே
அன்று பஞ்சவர்க்கு தேர் உய்த்த கைகளால் — பஞ்சபாண்டவர்களுக்கு (வெற்றி உண்டாகப் பார்த்தசாரதியாய் நின்று) தேரை யோட்டின திருக்கைகளாலே
தேவகி சிங்கமே — தேவகியின் வயிற்றிற்பிறந்த சிங்கக்குட்டி போன்றவனே!
சப்பாணி—.

* * *—"தந்தைசொல்கொள்ளாது" என்றது—தந்தையாகிய உன்னுடைய சொல்லைக் கேளாமல் என்று பொருள்படுதலால் முன்னிலைப்படர்க்கை. எல்லாவுலகத்துக்கும் தந்தையாகையாலே தங்களுக்கும் தந்தையாகிய மீ பாண்டவர் துரியோதநாதியர் என்ற இருவகுப்பினரையும் ஸந்தி செய்விக்கைக்காகத் துரியோதநாதியரிடம் தூதுசென்று 'பாண்டவர்களும் நீங்களும் பகைமை கொள்ளவேண்டாம்; ராஜ்யத்தில் இருவர்க்கும் பகுதிபண்டாகையால் ராஜ்யத்தை ஸமபாகமாகப் பிரித்து ஸமாதாநமாக அரசாட்சிசெய்து வாழுங்கள்; அதற்கு ஸம்மதமில்லையாயின், தலைக்கு இரண்டிரண்டு ஊராகப் பாண்டவர் ஐவர்க்கும் பத்து ஊரைக்கொடுங்கள்; அதற்குமிஷ்டமில்லாதிருந்தால் பாண்டவர்கள் குடியிருக்கும்படி ஓரூரையாவது கொடுங்கள்' என்று பலபடியாக அருளிச்செய்ய, அந்தச்சொல்லுக்குச் சிறிதும் இசையாமல் 'பராக்ரமமிருந்தால் போர்செய்து ஜயித்துக்கொள்ளட்டும், இந்தப் பூமி வீரர்க்கே உரியது' என்று இப்படி அஹங்காரங்கொண்டுமறுத்துச்சொல்லி, போர்செய்து பாண்டவர்களையழித்துத் தாங்களே பூமண்டலத்தையெல்லாம் ஆளுவதாக நினைத்துத் துரியோதநாதியர் போர்க்களத்தில் ஸேநையைத் திரட்டிக்கொண்டுவர, அர்ஜுநஸாரதியாய் நின்று எதிரிகளடங்கலும் தோற்காலிலே நெரிந்து போம்படி தேரை நடத்தினாய்; அப்படி தேரைநடத்தின கைகளாலே சப்பாணிகொட்டவேணும் என்றருளாயிற்று.

தரித்து என்பது 'தாரித்து' என நீட்டல் விகாரம் பெற்றுக்கிடக்கிறது. நூற்றுவர், பஞ்சவர்—தொகைக்குறிப்பு. உய்த்து - உய்க்க: எச்சத்திரிபு. (கூ)

81 பரந்திட்டுநின்ற படுகடல்தன்னை*
இரந்திட்டகைமேல் எறிதிரைமோத*
கரந்திட்டுநின்ற கடலைக்கலங்க*
சரந்தொட்டகைகளாற்சப்பாணி சார்ங்கவிற்கையனேசப்பாணி (எ)

பரந்திட்டு நின்ற படுகடல் — (எல்லைகாண வொண்ணாதபடி) பரவியுள்ள ஆழமான ஸமுத்ரமானது
தன்னை இரந்திட்ட கைமேல் எறி திரை மோத — (வழிவிடுவதற்காகத்)தன்னை யாசித்த கையின்மேலே வீசுகின்ற அலைகளினால் மோதியடிக்க,
கரந்திட்டு நின்ற — (முகங் காட்டாமல்) மறைந்து கிடந்த
கடல் கலங்க — அக்கடலுக்கு உரிய தேவதையான வருணன் கலக்கிவிடும்படி
சரம் தொட்ட கைகளால் — அம்புகளைத் தொடுத்துவிட்ட கைகளால் சப்பாணி—,
சார்ங்கம் விற் கையனே — ஸ்ரீசார்ங்கமென்னும் தநுஸ்ஸை (அப்போது) கையில் தரித்தவனே!
சப்பாணி—.

* * *—'பரந்திட்டு' 'இரந்திட்டு' 'கரந்திட்டு' என்ற மூன்றிடங்களிலும், இடு- துணைவினை. படு- (முக்கம் முதலியவை) உண்டாகின்ற என்றுமாம். கடலை=ஐகாரம் - அசை; இவி உருபுமயக்கமாகக் கொண்டு, கடல்மேல் என்றுரைத்து, 'கடலிச்சரந்தொட்ட' என்று இயைப்பினுமாம். ... (எ)

82 குரக்கினத்தாலே குரைகடல்தன்னை*
நெருக்கியணைகட்டி நீர்இலங்கை*
அரக்கர்வய அடுகணையாலே*
நெருக்கியகைகளாற்சப்பாணி நேமியங்கையனேசப்பாணி (அ)

குரை கடல் தன்னை நெருக்கி — கோதியாகின்ற ஸமுத்ரத்தை (இரண்டு பக்கத்திலும்) தேங்கும்படி செய்து

குரங்கு இனத்தாலே அணை கட்டி — குரங்குகளினுடைய கூட்டங்களைக் கொண்டு சேது வைக் கட்டிமுடித்து

நீள் நீர் இலங்கை — பரந்துள்ள ஸமுத்ரத்தினால் சூழப்பட்ட லங்கையிலுள்ள

அரக்கர் அவிய — ராக்ஷஸர்களெல்லாம் அழிந்துபோம்படி

அடுகணையாலே — கொல்லும் தன்மையையுடைய அம்புகளைக் கொண்டு

நெருக்கிய கைகளால் சப்பாணி—; — நெருங்கப் போர்செய்த

நேமி அம் கையனே சப்பாணி—. — திருவாழி யாழ்வானை அழகிய கையிலேந்தினவனே!

* * *—குரங்கு + இனம் = தூக்கினம்; வேற்றுமைப் புணர்ச்சியில் மென்றொடர் வன்றொடராயிற்று; "மென்றொடர் மொழியுட் சில வேற்றுமையில், தம்மினவன்றொடர்" என்னுஞ் சூத்திர விதி அறிக. நீர் - கடலுக்கு ஆகுபெயர். ... ... (அ)

83 அளந்திட்டதூணை அவன்தட்ட * ஆங்கே
வளர்ந்திட்டு வாளுகிர்ச்சிங்கவுருவாய்*
உளந்தொட்டிரணியன் ஒண்மார்பகலம்*
பிளந்திட்டகைகளாற்சப்பாணி பேய்முலையுண்டானேசப்பாணி. (கூ)

அளந்திட்ட தூணை அவன் தட்ட — (தானே) அளந்துகட்டின கம்பத்தை அந்த ஹிரண்யாஸுரன் (தானே) புடைக்க

ஆங்கே — (அவன் புடைத்த) அந்த இடத்திலேயே

வாள் உகிர் சிங்கம் உரு ஆய் வளர்ந்திட்டு — கூர்மையான நகங்களையுடைய நரஸிம்ஹ மூர்த்தியாய் வளர்ந்த வடிவத்துடன் தோன்றி,

(ஒருகால் இவ்விரணியனும் அநுகூலனைக் கூடுமோ! என்று)

உளம் தொட்டு — (அவ்விரணியனது) மநஸ்ஸைப்பரிசோதித்துப் பார்த்து (பின்பு)

இரணியன் ஒள் மார்பு அகலம் பிளந்திட்ட — அவ்விரணியனுடைய ஒளி பொருந்திய மார்பின் பரப்படங்கலும் (நகத்தாற்) பிளந்த

கைகளால் சப்பாணி—; — கைகளால் சப்பாணி—;

பேய் முலை உண்டானே சப்பாணி—. — பேய்மகளான பூதனையின் முலையை உண்டவனே!

* * *—அளந்திட்ட தூணைவது—முன்பே நரசிங்கமூர்த்தியை உள்ளே வைத்துக்கட்டிய தூண் என்று சொல்லமுடியாதபடி தானே தனக்குப் பொருந்தப்பார்த்துக் கட்டினது. அவன்தட்ட - 'கையிலே நரசிங்கத்தை அடக்கிக்கொண்டுவந்து பாய்ச்சினார்கள்' என்னவொண்ணாதபடி, தானே அழன்று புடைக்கவென்கை. உளம்—'உள்ளம்' என்பதன் தொகுத்தல். ஒண்மார்பென்றது - நரஸிம்ஹத்தினுடைய கோபாக்நியாலும் தன் வயிற்றிலுள்ள பயாக்நியாலும் பிறந்த பரிதாபத்தாலே பொன்மயமான மார்பு ஒளிவிட்டு உகிரால் எளிதாகக் இழிக்கும்படியாயிற்றென்ற கருத்தைக் காட்டும். மார்பு அகலம் - அகலமான மார்பு என்றுமாம். ... ... (கூ)

84 அடைந்திட்டமரர்கள் ஆழ்கடல்தன்னை*
மிடைந்திட்டுமந்தரம் மத்தாகநாட்டி*
வடஞ்சுற்றி வாசுகிவன்கயிறாக*
கடைந்திட்டகைகளாற்சப்பாணி கார்முகில்வண்ணனேசப்பாணி (ஙி)

(துர்வாசமுனி சாபத்தினால் தாம் இழந்த ஐச்வர்யத்தைப் பெறுதற்காக)
அமரர்கள் அடைந்திட்டு } தேவர்கள் (உன்னைச்) சரண மடைய, (நீ)
ஆழ் கடல் தன்னை மிடைந்திட்டு } ஆழமான க்ஷீராப்தியை உன்னுடைய படுக்கு மிட மென்று பாராமல்) நெருக்கி
மந்தரம் மத்து ஆக நாட்டி } மந்தர பர்வதத்தை (கடை வதற்குரிய) மத்தாகும்படி நேராக நிறுத்தி
வாசுகி வல் வடம் } வாசுகியென்னும் பாம்பாகிய வலிய கயிற்றை
(அந்த மந்தரமலையாகிற மத்திலே)
கயிறு ஆக சுற்றி கடைந்திட்ட } கடைகயிறு கச் சுற்றிக் கடைந்த
கைகளால் சப்பாணி—;
கார் முகில் வண்ணனே } காளமேகம்போன்ற நிற முடையவனே!
சப்பாணி—.

* * *—அடைந்திட்டு-அடைந்திட; எச்சத்திரிபு. மிடைந்திட்டு—மிடைத்திட்டு [நெருக்கி] எனப் பிறவினைப் பொருள்கொள்க; எதுகை நோக்கிவந்த வழுவமைதி. ... ... (ஙி)

**85 ஆட்கொள்ளத்தோன்றிய ஆயர்தங்கோவினை*
நாட்கமழ்பூம்பொழில் வில்லிபுத்தூர்ப்பட்டன்*
வேட்கையினற்சொன்ன சப்பாணியிரைந்துமை*
வேட்கையினற்சொல்லுவார் வினைபோமே.** (ஙி)

ஆள்கொள்ள தோன்றிய ஆயர் தம் கோவினை } (அனைவரையும்) அடிமை கொள்வதற்காகத் திருவவதரித்த இடையர்களுக்குத் தலைவனான கண்ணனைக் குறித்து,
நாள் கமழ் பூ பொழில் வில்லிபுத்தூர் பட்டன் } எந்நாளிலும் மணம் வீசுகின்ற புஷ்பங்கள் நிறைந்த சோலைகளையுடைய ஸ்ரீவில்லிபுத்தூரில் அவதரித்த பெரியாழ்வார்
வேட்கையினல் சொன்ன } ஆசையோடு அருளிச்செய்த
சப்பாணி ஈர் ஐந்தும் } சப்பாணி கொட்டுதலைக் கூறிய பத்துப் பாசுரங்களையும்
வேட்கையினல் சொல்லுவார் } இஷ்டத்தோடு ஓதுகிறவர்களுடைய
வினை போம் பாபங்கள் அழிந்துபோம்.

* * *—மூன்றுமடியில் "வேட்கையால்" என்றும் ஓதுவர்கள். ... (ஙக)

அடிவரவு:—மாணி பொன் பன் தூலி புட்டி தாரித்து பரத்து குரக்கினம் அளந்து அடைந்து ஆட்கொள்ளத் தொடர்.

முதற்பத்து—ஏழாந்திருமொழி, தொடர்சங்கிலிகை.

(தட்டித்தடுமாறி நடக்குமாறு கண்ணனை வேண்டுதல்.)

**86 தொடர்சங்கிலிகைசலார்பிலாரென்னத் தூங்குபொன்மணியோலிப்ப*
படும்மதப்புனல்சோர வாரணம்பையநின்றார்வதுபோல்*
உடன்கூடிக்கிண்கிணியாரவாரிப்ப உடைமணிபறைகறங்க*
தடந்தாளிணைகொண்டுசார்ங்கபாணி தளர்நடைநடவானே.** (க)

சங்கிலிகை தொடர் சலார் பிலார் என்ன } இரும்புச்சங்கிலியின் தொடர் 'சலார் பிலார்' என்று சப்திக்கவும்
தூங்கு பொன் மணி ஓலிப்ப } தொங்குகின்றனவும் பொன்கயிற்றில் கட்டியிருப்பனவுமான மணிகள் ஒலிக்கவும்
படும்மதம் புனல் சோர } உண்டான மூன்று வகையான மதநீர் பெருகவும்
நின்று இருந்துகொண்டு
வாரணம் பைய ஊர்வது போல் } யானை மெல்ல நடந்து போவதுபோல,
கிண்கிணி உடன் கூடி ஆரவாரிப்ப } காற்சதங்கைகள் தம்மிலே தாம்கூடி சப்திக்கவும்

உடை மணி பறை கறங்க — திருவரையில் கட்டிய சிறு மணிகள் பறைபோல் சப்திக்கவும்

சார்ங்கம் பாணி — சார்ங்கமென்னும் வில்லைக் கையிலேந்திய திவ்ய இவன்

தட தாள் இணை கொண்டு — (தன்னுடைய) பெரிய பாதங் களிரண்டினால்

தளர் நடை நடவாயே — இளநடையை நடக்கமாட் டாயே?

[நடக்கவேணும்.]

* * *—கண்ணபிரான் தளர்நடை நடக்கும்போது, காலிலணிந்துள்ள பாதச் சதங்கை இணிகிணென்று சப்திக்கவும், இடையிற் கட்டிய சிறு மணிகள் பறைபோலொலிக்கவும், நடக்கின்ற ஆயாஸத்தினால் உடலில் வேர்வைநீர் பெருகவும் நேருமாதலால் இதற்கு ஓர் ஏற்ற உபமானம் கூறுகின்றார் முன்னடிகளில்; யானையானது மதத்தின் மிகுதியால் கட்டுத்தறியை முறித்துவிட்டுக் காலிலிட்ட இருப்புச் சங்கிலியை யிழுத்துக்கொண்டு நடக்கையாலே அந்தச் சங்கிலித்தொடர் சலார்பிலாரென்று சத்திக்கவும், பொன் கயிற்றினால் கட்டித் தனது இருபுறத்திலும் தொங்கவிட்ட மணிகள் ஒலிக்கவும், மதநீர் பெருகவும் மெல்ல நடக்கும் யானை ஏற்ற உவமையாம். தளர்நடை—(திருவடிகளை நன்றாகப் பதியவைத்து நடக்கும் பருவமன்றாகையாலே) நட்டித் தடுமாறி நடக்கும் நடை. ... ... (க)

87 செக்கரிடைதுனிக்கொம்பில்தோன்றுஞ் சிறுபிறைமுளைப்போல*
நக்கசெந்துவர்வாய்த்திண்ணமீதே நளிர்வெண்பல்முளையிலக*
அக்குவடமுடுத்தாமைத்தாலிபூண்ட அனந்தசயனன்*
தக்கமாமணிவண்ணன்வாசுதேவன் தளர்நடைநடவாயே. (உ)

செக்கரிடை நுனி கொம்பில் — செவ்வானத்திலே கொம்பின் நுனியிலே

தோன்றும் சிறு பிறை முளை போல — காணப்படுகிற சிறியபிறைச் சந்திரனுடைய முளையைப் போல,

நக்க செம் துவர்வாய் திண்ணம் மீது — சிரித்த மிகவுஞ் சிவந்த வாயாகிய மேட்டிடத்தில்

நளிர் வெள் பல் முளை இலக — குளிர்ந்த வெண்மையாகிய பல்லின் முளைகள் விளங்க

அக்கு வடம் உடுத்து — சங்குமணி வடத்தை (திருவரையில்) தரித்து

ஆமைத் தாலி பூண்ட — ஆமையின் வடிவமாகச் செய்யப்பட்ட தாலியை கழுத்திலணிந்து கொண்டவனும்

அனந்த சயனன் — திருவனந்தாழ்வான் மேலே படுப்பவனும்

தக்க மா மணி வண்ணன் — தகுதியான நீலமணிபோன்ற நிறத்தை யுடையவனும்

வாசுதேவன் — வஸுதேவ புத்திரனுமான இவன்

தளர்நடை நடவாயே—.

* * *—புன்முறுவல் செய்துகொண்டே தளர்நடை நடக்கவேணுமென்று இதனால் பிரார்த்திக்கிறபடி. கண்ணபிரானது மிகவுஞ் சிவந்த வாயாகிய மேட்டிடத்தில் வெளுத்த பல்லின் முளைகள் பிரகாசிப்பதானது - செவ்வானத்தில் தோன்றுகின்ற குளிர்ந்த வெள்ளிய சிறு பிறைபோல இருக்குமென்க. 'நக்க' என்றது வாய்க்கு விசேஷணம். "வெண்பல் முளையிலகத் தளர்நடை நடவாயே" என்று அன்வயம், சிறுபிறை முளையென்றது - மூன்றாம்பிறையை யென்பர். மாமணி-நீலரத்நம்; மா-கறுப்பு. (உ)

88 மின்னுக்கொடியுமோர்வெண்டிங்களுஞ் சூழ்பரிவேடமுமாய்*
பின்னல்துலங்குமரசிலையும் பீதகச்சிற்றுடையோடும்*
மின்னிற்பொலிந்ததோர்கார்முகில்போலக் கழுத்தினிற்காறையோடும்*
தன்னிற்பொலிந்தவிருடீகேசன் தளர்நடைநடவாயே. (ங)

மின் கொடியும் — கொடிமின்னலும்

ஓர் வெண் திங்களும் — அதனோடு சேர்ந்திருப்பதும் களங்கமில்லாததுமான (முழுவதும்) வெண்மையாயுள்ள ஒரு சந்த்ரனும்

சூழ் — (அவ்விரண்டையுஞ்) சுற்றிக் கொண்டிருக்கும்

பரிவேடமும் ஆய் — பரிவேஷத்தையும்போல

பின்னல் — (திருவரையில் சாத்தின) பொற்பின்னலும்

துலங்கும் அரசு இலையும் — விளங்குகின்ற அரசிலை போல வேலைசெய்த திருவாபரணமும்

நீதகம் சிறு ஆடை யொடும்	(இவ்விரண்டையுஞ் சூழ்ந்த) பொன்னுலாகிய சிறிய வஸ்த்ரமும் ஆகிய இவற்றோடும்,	கழுத்தினில் காறை யொடும்	கழுத்திலணிந்தகாறையென்னும் ஆபரணத்தோடும் (கூடிய)
மின்னில்	மின்னலினால்.	தன்னில் பொலிந்த	(இவ்வாபரணங்கள் திருமேனிச்சுமை என்னும்படி இயற்கையான) தனது அழகினால் விளங்குகின்ற
பொலிந்தது	விளங்குவதாகிய		
ஓர்	ஒப்பற்ற	இருடீகேசன்	'ஹ்ருஷீகேசன்' என்ற திருநாமமுடைய இவன்
கார் முகில் போல	காளமேகம்போல		தளர்நடை நடவானே—.

* * *—மின் + கொடி = மின்னுக்கொடி: 'மின் மின் பன்* கன் தொழிற்பெயரீற்ய" எனச் சிறப்புவிதி காண்க. பரிவேடம்—'பரிவேஷம்' என்ற வடசொற்றிரிபு; சந்த்ரனைச் சுற்றிச் சிலகாலங்களில் காணப்படும் ரேகை; இது ஊர்கோள் எனவும் படும். பொற்மின்னலும் அதைச்சேர்ந்து விளங்குகின்ற அரசிலைப்பணியும் இவ்விரண்டையுஞ் சூழ்ந்துகொண்டு விளங்குகின்ற பீதகச் சிற்றுடையும்-முறையே, மின்னற்கொடியையும் அதைச்சார்ந்து விளங்கும் களங்கமற்றசந்த்ரனையும் இவ்விரண்டையுஞ் சூழ்ந்துகொண்டிருக்கும் ஊர்கோளையும் போலுமென்க; இல்பொருளுவமை. அரசிலைப்பணிக்கு வெண்திங்களை உவமையாகச்சொன்னதனால், அவ்வாபரணம் வெள்ளியினால் செய்யப்பட்டதென விளங்கும். கருநிறக்கழுத்தில் பொற்காறை விளங்குவது-காளமேகத்தில் செந்நிறமின்னற்கொடி விளங்குவதுபோலும். (ங)

89 கன்னற்குடந்திறந்தாலொத்துறிக் கணகணசிரித்துவந்து*
முன்வந்துநின்றுமுத்தந்தரும் என்முகில்வண்ணன்திருமார்வன்*
தன்னைப்பெற்றேற்குத்தன்வாயமுதந்தந்து என்னைத்தளிர்ப்பிக்கின்றான்*
தன்னெற்றுமாற்றலர்தலைகள்மீதே தளர்நடைநடவானே. (ச)

கன்னல் குடம்	கருப்பஞ்சாறு நிறைந்த குடம்	திரு மார்வன்	பெரியபிராட்டியாரை மார்பிற்கொண்டுள்ளவனுமான இவன்
திறந்தால் ஒத்து	பொள்ளல் விட்டால் அப்பொள்ளல் வழியாகச் சாறுபொசிவதைப் போன்று	தன்னை பெற்றேற்கு தன் வாய் அமுதம் தந்து	தன்னைப்பெற்ற எனக்கு தன்னுடைய அதராம்ருதத்தைக் கொடுத்து
ஊறி	வாயில் நின்றும் நீர் சுரந்து வடிய	என்னை தளிர்ப்பிக் கின்றான்	(தன் மகப் பிள்ளையாகப் பெற்றபாக்யத்தையுடைய) என்னைத் தழைக்கச்செய்கிறான்;
கணகண சிரித்து	கணகணவென்று சப்தமுண்டாகும்படி சிரித்து		(இவன்.)
உவந்து	ஸந்தோஷித்து		
முன் வந்து நின்று	என்முன்னே வந்து நின்று		
முத்தம் தரும்	(எனக்கு) முத்தங்கொடுக்கும் தன்மையுள்ளவனும்	தன் எற்றும் மாற்றலர் தலைகள் மீதே	நன்றே எதிர்க்கிற சத்ருக்களுடைய தலைகளின் மேலே (அடியிட்டு)
என் முகில் வண்ணன்	எனது முகில்போன்ற திருநிறத்தையுடையவனும்		தளர்நடை நடவானே—,

* * *—தன்வாயில் நின்றும் கரும்பு ரஸம்போல் இனிமையான நீர் வெளிப்பட்டு வடியும்படி சிரித்துக்கொண்டுவந்து எனக்கு முத்தங்கொடுக்கும் தன்மையுள்ளவன் கண்ணனென்பது-முன்னிரண்டடிகளின் கருத்து. கலகல-வாய்விட்டுச் சிரிக்கும்போது உண்டாகின்ற ஒலிக்குறிப்பு. இவன் நடக்கிற நடையழகுகண்டே சத்ருக்கள் சாகவேணுமென்பது இற்றடியின் கருத்து. (அ)

90 முன்னைவோர்வெள்ளிப்பெருமலைக்குட்டன் மொடுமொடுவிரைந்தோட*
பின்னைத்தொடர்ந்ததோர்கருமலைக்குட்டன் பெயர்ந்தடியிடுவதுபோல்*
பன்னியுலகம்பரவியோவாப் புகழ்ப்பலதேவனென்னும்*
தன்னம்பியோடப்பின்கூடச்செல்வான் தளர்நடைநடவானே. (ஞ)

முன் நல் ஓர் வெள்ளி பெரு மலை குட்டன் — முன்னே அழகிய ஒப்பற்ற பெரிய வெள்ளிமலைபெற்ற குட்டி

மொடுமொடு விரைந்து ஓட — திடுதிடென்று வேகங் கொண்டு ஓடிக்கொண்டிருக்க,

பின்னே (தன்செருக்காலே அப்பிள்ளையைப் பிடிப்பதற்காக) — (அந்தப்பிள்ளையின்) பின்னே

தொடர்ந்தது — தொடர்ந்ததாகிய

ஓர் கரு மலை குட்டன் — ஒப்பற்ற கருநிறமான மலை பெற்ற குட்டி

பெயர்ந்து அடி இடுவது போல் — தானிருக்கு மிடத்தைவிட்டுப் புறப்பட்டு அடியிட்டுப்போவதுபோல,—

உலகம் பன்னி பரவி ஓவா புகழ் — லோகமெல்லாங்கூடி (தங்களாலானவரையிலும்) ஆராய்ந்து ஸ்தோத்ரஞ் செய்து முடிவுகாணமுடியாத கீர்த்தியையுடைய

பலதேவன் என்னும் — பலராமன் என்கிற

தன் நம்பி ஓட — தன்னுடைய தமையன் (முன்னே) ஓடிக்கொண்டிருக்க

பின் கூட செல்வான் — (அவனைப் பிடிக்கவேணுமென்ற எண்ணத்தினால் அவன்) பின்னே உடன் செல்பவனை இக்கண்ணபிரான்

தளர்நடை நடவானே—.

* * *—பலராமன் வெண்மை நிறமுள்ளவனதலால் அவன் ஓடுவதற்கு வெள்ளிமலையீன்ற குட்டியோடுவதையும், கண்ணன் கருநிறமுள்ளவனதலால் அவன் பின்னே தொடர்ந்தோடுவதற்குக் கரு மலையீன்ற குட்டி தொடர்ந்தோடுவதையும் உவமை குறித்தார். நம்பி—ஆண்பாற் சிறப்புப்பெயர், இங்கு, தமையனென்ற பொருளைக் காட்டிற்று. அன்றி, பலராமனுக்கு 'நம்பி மூத்தபிரான்' என்று ஒரு பெயர் ஸம்ப்ரதாயத்தில் வழங்குதலால், அதன் ஏகதேசமாகிய 'நம்பி' என்கிற வித்தால் அப்பெயர் முழுவதையுங் குறித்ததாகுமாம். மொடுமொடு—நடக்கும்போது தோன்றும் ஒலிக்குறிப்பு; விரைவுக்குறிப்புமாம் (ரு)

91 ஒருகாலிற்சங்கொருகாலிற்சக்கரம் உள்ளடிபொறித்தமைந்த*
இருகாலுங்கொண்டங்கங்கெழுதினற்போல் இலச்சினைபடநடந்து*
பெருகாநின்ற வின்பவெள்ளத்தின்மேல் பின்னையும்பெய்துபெய்து*
கருகார்க்கடல்வண்ணன்காமர்தாதை தளர்நடைநடவானே. (சூ)

கரு கார் கடல் வண்ணன் — மிகவும் கருநிறமுள்ள ஸமுத்ரம்போன்ற திருநிறமுடையவனும்

காமர் தாதை — காமதேவனுக்குப் பிதாவான இப்பிள்ளை,—

ஒரு காலில் சங்கு — ஒருபாதத்திலே சங்கமும்

ஒரு காலில் சக்கரம் — மற்றொரு பாதத்தில் சக்கரமும்

உள் அடி பொறித்து அமைந்த — பாதங்களின் உட்புறத்திலே ரேகையில் வடிவத்தோடு கூடிப் பொருந்தியிருக்கப் பெற்ற

இருகாலும் கொண்டு — இரண்டு திருவடிகளினாலும்

அங்கு அங்கு எழுதினால் போல் — அடிவைத்த அவ்வவ்விடங்களிலே சித்திரித்ததுபோல

இலச்சினைபடநடந்து — அடையாள முண்டாம்படி அடிவைத்து

(தனது வடிவழகைக்கண்டு)

பெருகாநின்ற இன்பம் வெள்ளத்தின்மேல் — பொங்குகிற ஆனந்தமாகிற ஸமுத்ரத்துக்கு மேலே

பின்னையும் பெய்து பெய்து — பின்னும் (ஆநந்தத்தை) மிகுதியாக உண்டாக்கிக் கொண்டு

தளர்நடை நடவானே!

* * *—கண்ணபிரானுடைய பிள்ளைக்குப் புருஷோத்தம சிஹ்நமாகிய சங்கசக்ரரேகைகள் உள்ளங்காலிலிருத்தலால் அத்தாள்களை வைத்து நடக்குமிடமெல்லாம் சங்கசக்ரத்தினுருவங்களை யெழுதினாற்போலாகின்றனவென்பது-முன்னிரண்டடியின் கருத்து. "கரு கார் கடல்" என்பதற்கு-கரிய பெரிய கடலென்றும், காளமேகம்போலவும் கடல்போலவுமென்றும் பொருள் கொள்ளலாம். இலச்சினை-லக்ஷணம். கண்ணன் மம்மதனுடைய அம்சமாகிய ப்ரத்யும்நனுக்கு ஜநகனுகையால், காமர்தாதை. (சூ)

92 படர்பங்கயமலர்வாய்கெழுப் பனிபடுசிறுதுளிபோல்*
இடங்கொண்டசெவ்வாயூறியூறி யிற்றிற்றுவிழுகின்று*
கடுஞ்சேக்கழுத்தின்மணிக்குரல்போல் உடைமணிகளாணை*
தடந்தாளிணைகொண்டுசார்ங்கபாணி தளர்நடைநடவானே. (எ)

படர் பங்கயம் மலர் வாய் நெகிழ — படர்ந்திருக்கிற [பெருத்திருந்துள்ள] தாமரைப்பூ (மொட்டாயிராமல்) வாய்திறந்து மலர
(அதில் நின்றும் பெருகுகின்ற)
பனி படு சிறு துளி போல — குளிர்ச்சி பொருந்திய (தேனினுடைய) சிறுத்த துளியைப்போலே
இடம் கொண்ட செவ்வாய் ஊறி ஊறி — பெருமை கொண்டுள்ள தனது சிவந்த வாயினின்றும் (ஜலமானது) இடைவிடாமற் சுரந்து

இற்று இற்று வீழ நின்று — (கடுவே) முறிந்து முறிந்து கீழேவிழும்படி நின்று
கடும் சே கழுத்தில் மணி குரல் போல் — கொடிய ரிஷபத்தின் கழுத்திலே கட்டப்பட்டுள்ள மணியினுடைய ஒலி போலே
உடை மணி கண கண என — (தனது) திருவரையிற் கட்டிய மணி கணக்கண வென் றொலிக்க

[சடந்தாளித்யாதி முதற்பாட்டிற்போல் பொருள் காண்க.]

* * *—மலர்ந்த தாமரைப்பூவில் நின்றும் தேன் சிறு சிறு துளியாய்ப் பெருகி வடிவதுபோலத் தனது வாயில் நின்றும் இடைவிடாமல் ஜலம் பெருகவும், எருது நடந்து போம்போது அதன் கழுத்திற் கட்டிய மணி கணகணவென்று சப்திப்பதுபோலத் திருவரையில் சாத்திய மணி சப்திக்கவும் தளர்நடை நடந்து வரவேணு மென்கை. ... ... (அ)

93 பக்கங்கருஞ்சிறுப்பாறைமீதே அருவிகள்பகர்ந்தனைய*
அக்குவடமிழிந்தேறித்தாழ அணியல்குல்புடைபெயர*
மக்களுலகினிற்பெய்தறியா மணிக்குழவியுருவின்*
தக்கமாமணிவண்ணன்வாசுதேவன் தளர்நடைநடவாஷே. (அ)

கரு சிறு பாறை பக்கம் மீது — கருநிறமான சிறிய மலையினுடைய பக்கத்திலே (மேடும்பள்ளமுமான இடங்களிற் பாய்கிற)
அருவிகள் பகர்ந்து அனைய — நீரருவிகள் ப்ரகாசிப்பதை ஒத்திருக்கிற (திருவரையிற்சாத்திய)
அக்கு வடம் — சங்குமணி வடமானது
ஏறி இழிந்து தாழ — உயர்ந்தும் தாழ்ந்தும் தொங்கி ப்ரகாசிக்கவும்

அணி அல்குல் புடை பெயர — அழகிய நிதம்பம் பக்கங்களிலே அசையவும்
உலகினில் மக்கள் பெய்து அறியா — உலகத்திலுள்ள மனிதர் பெற்றறியாத
மணி குழவி உருவின் — அழகிய குழந்தை வடிவத்தையுடையவனும்

[தக்க இத்யாதி இரண்டாம் பாட்டிற் போலப் பொருள் காண்க]

* * *—கருநிறத்தையுடைய திருவரையிற் சாத்திய வெண்ணிறமான சங்குமணி வடமானது, தளர்நடை நடக்கும்போது முன்பின்னாக மாறிமாறி ப்ரகாசிப்பதானது-கரிய சிறுமலையின் பக்கத்திலே வெள்ளருவி மேடும் பள்ளமுமான இடங்களில் ப்ரகாசிப்பதை ஒத்திருக்கிறபடி. பாறை-இலக்கணையால் மலையை உணர்த்திற்று, பகர்ந்தனைய-'பகர்ந்ததனைய' என்பதன் விகாரம். அன்றி வினையெச்சத்திரி பாகக்கொண்டு-பகர்ந்தால் (அதை) அனைய என்று கொள்ளினுமாம். ... ... (ஆ)

94 வெண்புழுதிமேற்பெய்துகொண்டனைந்ததோர் வேழத்தின்கருங்கன்றுபோல்*
தெண்புழுதியாடித்திரிவிக்கிரமன் சிறுபுகர்படவியர்த்து*
ஒண்போதலர்கமலச் சிறுகாலுறைத்தொன்றும்நோவாமே*
தண்போதுகொண்டதவிசின்மீதே தளர்நடைநடவாஷே. (இ)

திரிவிக்கிரமன் — (தனது) மூவடியால் (உலகங்களை) அளந்தவனுகிய இவன்
வெள் புழுதி மேல் பெய்துகொண்டு அனைந்தது — வெளுத்த புழுதியை மேலே போகட்டுக்கொண்டு அனைந்ததாகிய
ஓர் வேழத்தின் கருங்கன்று போல் — ஒரு களிறுகுட்டியானைபோல,

தெள் புழுதி ஆடி — தெளிவான புழுதியிலே விளையாடி
சிறு புகர் பட வியர்த்து — சிறிது காந்தி உண்டாக வேர்த்துப்போய்,
போது அலர் ஒள் கமலம் சிறு கால் — உரியகாலத்திலே மலர்ந்த அழகிய தாமரைப்பூவை ஒத்த சிறியபாதங்கள்

உறைத்து — (ஏதேனும் ஒன்று) உறுத்த (அதனால்)
தண்போதுகொண்ட தவிசின் மீது — குளிர்ந்த புஷ்பங்களையுடைய மெத்தையின் மேலே
ஒன்றும் நோவாமே — சிறிதும் நோவாதபடி
தளர்நடை நடவாயே—.

* * *—பரந்த திருவடிகளைக் கொண்டு உலக மூன்றையுமளந்த இவன் தனது சிறிய அடிகளைக்கொண்டு புஷ்பமெத்தையின்மேல் காலுறுத்தாமல் மெல்ல நடக்கவேணுமென்கிறார். கருகிற மான கண்ணன் திருமேனியிற் படிந்த புழுதியில் வேர்வைநீர் அழகியதாய்க் காணப்படுதலால், 'புழுதி யாடிச் சிறுபுகர்பட வியர்த்து' எனப் பாராட்டிக்கூறினர். உறைத்து—உறைக்க;எச்சத்திரிபு. (கூ)

95 திரைநீர்ச்சந்திரமண்டலம்போல் செங்கண்மாற்கேசவன்றன்*
திருநீர்முகத்துத்துலங்குசுட்டி திகழ்ந்தெங்கும்புடைபெயர*
பெருநீர்த்திரையெழுகங்கையிலும் பெரியதோர்தீர்த்தபலந்
தருநீர்*சிறுச்சண்ணந்துள்ளஞ்சோரத் தளர்நடைநடவாயே. (ஙு)

செம்கண்மால் கேசவன் — சிவந்த கண்களையும் கருநிறத்தையுமுடைய இவன்,—
திரைநீர் — அலைகின்ற நீரையுடைய ஸமுத்ரத்தின் நடுவில் (அசைந்து தோன்றுகிற)
சந்திரன் மண்டலம் போல் — ப்ரதிபிம்ப சந்த்ரமண்டலத்தைப்போல
தன்திருநீர் முகத்து துலங்கு சுட்டி — தன்னுடைய அழகிய ஒளியையுடைய திருமுகத்திலே விளங்குகின்ற சுட்டியானது
எங்கும் — எல்லாவிடத்திலும்
திகழ்ந்து — ப்ரகாசித்துக்கொண்டு
புடை பெயர — இடமாகவும் வலமாகவும் அசையவும்
பெருநீர் திரை எழு கங்கையிலும் — சிறந்த தீர்த்தமாகிய அலையெறிகிற கங்கையிற் காட்டிலும்
பெரியது ஓர் தீர்த்த பலம் தரும் நீர் — அதிகமான ஒப்பற்ற தீர்த்த பலத்தைக் கொடுக்கின்ற ஜலத்தை உடைத்தான
சிறு சண்ணம் துள்ளம் சோர — சிறிய சண்ணமானது துளிதுளியாகச் சொட்டவும்
தளர்நடை நடவாயே—.

* * *—நெற்றியில் தொங்குகின்ற சுட்டி அசையவும், குறியில் நின்றும் மூத்திரநீர் துளிதுளியாகச் சிந்தவும் தளர்நடை நடந்து வரவேணுமென்கை. கருகிறத்தனன் கண்ணனது திருநெற்றியிலசைந்துகொண்டு விளங்குஞ் சுட்டிக்கு, கருகிறமான கடலின் நடுவில் அசைந்துகொண்டு தோன்றும் சந்த்ர ப்ரதிபிம்பம் ஏற்ற உவமையாம். சண்ணம்-ஆண்குறி. ... ... (ஙo)

96 ஆயர்குலத்தினில்வந்துதோன்றிய அஞ்சனவண்ணன்றன்னை*
தாயர்மகிழவொன்னுர்தளரத் தளர்நடைநடந்ததனை*
வேயர்புகழ்விட்டுசித்தன் சீரால்விரித்தனவுரைக்கவல்லார்*
மாயன்மணிவண்ணன்தாள்பணியும் மக்களைப்பெறுவர்களே. (சக்)

ஆயர் குலத்தினில் வந்து தோன்றிய — இடையர் குலத்திலே வந்து அவதரித்த
அஞ்சனம்வண்ணன் — மைபோன்ற கருநிறமுடையனை கண்ணன்
தன்னை — தன்னை(க் கண்டு)
தாயர் மகிழ ஒன்னுர் தளர — தாய்மார்கள் மனமுகக்கவும் சத்ருக்கள் வருத்தமடையவும்
தளர்நடை நடந்ததனை — தளர்நடை நடந்ததை
வேயர் புகழ் — வேயர்குடியிலிருப்பவரெல்லாராலும் புகழப்பெற்ற
விட்டுசித்தன் — பெரியாழ்வார்
சீரால் விரித்தன — சிறப்பாக விவரித்துச் சொன்ன பாசுரங்களை
உரைக்க வல்லார் — சொல்ல வல்லவர்கள்
மாயன் மணி வண்ணன் தாள் பணியும் மக்களை பெறுவர்கள் — ஆச்சர்யமான குணங்களையுடையவனும் நீலமணிபோன்ற நிறமுடையனுமான எம்பெருமானுடைய திருவடிகளை வணங்கவல்ல பிள்ளைகளை அடைவார்கள்.

* * *-'தாயர்' எனப்பன்மையாகக் கூறியது-பாராட்டுந்தாய், ஊட்டுந்தாய், மூலைத்தாய், கைத்தாய், செவிலித்தாய் எனத் தாய்மார் ஐவராதலாலும், சிறுதாய் முதலியோரும் தாய்மாரே யாவராதலாலுமாம். தொட்டிற் பருவத்திலேயே பூதனை சகடாஸுரன் முதலியோர்களை முடித்ததனால், கண்ணபிரான் மெல்ல

அடியிட்டு நடக்கத் தொடங்கினபோதே 'இனி, இவனால் நமக்கு என்ன தீங்கு நேரிடுமோ!' என்று தம் ஸாகிகள் நடுங்கி ஓடுங்கினராதலால் 'ஒன்னுர்தளர' என்றருளிச்செய்க. ஒன்னுர்-ஒன்றார்; (தம்மோடு மனம்) பொருந்தாதவர்; எனவே, பகைவராவர். பெரியாழ்வார் பிறந்தகுடி—வேயர்குடி எனப்படும். (கக)

அடிவரவு:—தொடர் செக்கர் மின்னுக் கன்னல் முன்னல் ஒருகால் படர் பக்கம் வெண் திரை ஆயர் பொன்.

முதற்பத்து—எட்டாந்திருமொழி. பொன்னியற்கிண்கிணி

(ஓடிவந்து அணைத்துக்கொள்ளுமாறு கண்ணனை வேண்டுதல்.)

97 பொன்னியற்கிண்கிணி சுட்டிபுறங்கட்டி*
தன்னியலோசை சலன்சலனென்றிட*
மின்னியல்மேகம் விரைந்தெதிர்வந்தாற்போல்*
என்னிடைக்கோட்டராவச்சோவச்சோ எம்பெருமான்வாராவச்சோவச்சோ. (க)

பொன் இயல் கிண்கிணி சுட்டி — பொன்னாற்செய்த அரைச் சதங்கை பாதச் சதங்கை களையும் சுட்டியையும்
புறம் கட்டி — (அதற்கு உரிய) இடங்களிலே அணிந்து
தன் இயல் ஓசை சலன்சலன் என்றிட — சதங்கைக்குப் பொருந்திய சப்தமானது சலன் சல னென்று ஒலிக்க
மின் இயல் மேகம் — மின்னலோடுபொ ருந்திய மேக்மானது
விரைந்து எதிர் வந்தால்போல் — வேகமாக ஓடிவந்து எதிரே வந்தாற்போலே
என் இடைக்கு ஓட்டரா — என் இடையிலிருக்க (விரும்பி) ஓடிவந்து
அச்சோ அச்சோ — (என்னை) அணைத்துக் கொள்ளவேணும், அணைத் துக்கொள்ளவேணும்;
எம்பெருமான் வாரா அச்சோ அச்சோ. — எங்களுடைய தலைவனே! வந்து அணைத்துக்கொள்ள வேணும்.

* * *—மிகவும் ஒளிவீசுகின்ற ஆபரணங்களை அணிந்துகொண்டுள்ள கண்ணன் ஓடிவருவது மின்னலைக்கொண்டுள்ள மேகம் விரைந்து ஓடிவருவதை ஒக்கும். உபமேயத்தில், 'சலன்சலனென்றிட' என்றதனால், உபமானத்தில் சிறிய இடிகளிடித்தலைக்கொள்க. குழந்தைகள் தாய்மாரிடுப்பில் ஏறுவதற் காக ஓடிவந்து அத்தாய்மார்களைத் தழுவி அணைத்துக்கொள்ளும் இயல்பைப் பிரார்த்திக்கிறபடி.'அச்சோ' என்பது - முற்காலத்திலே குழந்தையை 'அணைத்துக்கொள்' என்றுவேண்டுதற்கு ஏற்ற குறிப்புச்சொல் லாக விருந்ததெனக் கொள்ளத்தகும்; இலி, 'அச்சோ' என்பது, அதிசயத்தைக் குறிப்பதோரிடைச்சொல் லெனக்கொண்டு, கண்ணன் தன்னை அணைத்துக்கொள்ளுதலை நினைக்கும்போது தோன்றும் பரமாநந்தத் தில் மூழ்கி நெஞ்சுருகிச் சொல்லிடந்து வாய்விட்டுச் சொல்லமாட்டாமல் அவ்வாச்சர்யத்தை ஒருதரத்துக் கிருதரம் 'அச்சோ அச்சோ' என்கிறாள் என்னவுமாம்; எனவே, இது-இங்கு, 'அணைத்துக்கொள்' என்ற பொருளை ஈர்த்தர்ப்பத்தால் குறிப்பிக்கின்றதென்க. ஓட்டம்+தரா = ஓட்டரா. விகாரப்புணர்ச்சி. ஓட்டரா, வாரா—'செய்யா' என்னும் வாய்பாட்டு உடன்பாட்டிறந்தகால வினையெச்சங்கள் : ... (க)

98 செங்கமலப்பூவில் தேனுண்ணும்வண்டேபோல்*
பங்கிகள்வந்து உன்பவளவாய்மொய்ப்ப*
சங்குவில்வாள்தண்டு சக்கரமேந்திய*
அங்கைகளாலேவந்தச்சோவச்சோ ஆரத்தழுவாவந்தச்சோவச்சோ. (உ)

செங்கமலம் பூவில் தேன் உண்ணும் வண்டே போல் — செந்தாமரைப் பூவில் தேனைக் குடிப்பதற்காக மொய்க்கின்ற வண்டு களைப்போல
பங்கிகள் வந்து உன் பவளம் வாய் மொய்ப்ப — (உனது) கூந்தல் மயிர்கள் வந்து பவளம்போற் செந் நிறமான உனது வாயில் மொய்த்துக்கொள்ளும்படி
வந்து — ஓடிவந்து
சங்கு வில் வாள் தண்டு சக்கரம் ஏந்திய அம் கைகளாலே — பஞ்சாயுதங்களை (பூவேந்தி னாற்போலே) தரித்துக் கொண்டுள்ள அழகிய கை களாலே
அச்சோ அச்சோ—;
வந்து ஆர தழுவா — ஓடிவந்து திருப்தியுண்டாகும் படி கிட்டவந்து தழுவி
அச்சோ அச்சோ—.

* * *—ஓடிவிளையாடும்போது வாரின கூந்தலும் கலைந்துவிடுமாதலால் அங்ஙனங்கலைந்து தொங்கும் கறுத்தமயிர்கள் செங்கிறமான வாயிற்படிதல்—செந்தாமரைப்பூவில் கருவண்டுகள் மொய்த்துக் கிடத்தலை ஒத்திருக்கு மென்க. பங்கி—ஆண்மயிர், "பங்கியே பிறமயிர்க்கும் பகருமாண் மயிர்க்கும் பேராம்" என்ற நிகண்டுகாண்க. தழுவா=கீழ்ப்பாட்டில் 'வாரா' என்றதுபோலக் கொள்க. (உ)

99 பஞ்சவர்தூதனுய்ப் பாரதங்கைசெய்து*
நஞ்சுமிழ்நாகங்கிடந்த நற்பொய்கைபுக்கு*
அஞ்சப்பணத்தின்மேல் பாய்ந்திட்டருள்செய்த*
அஞ்சனவண்ணனேயச்சோவச்சோ ஆயர்பெருமானேயச்சோவச்சோ. (ங)

பஞ்சவர் தூதன் ஆய் — பாண்டவர்களுக்காக (துர்யோதநாதிகளிடம்) தூதனாய்ப்போய்,
(அந்த துர்யோதநாதிகள் தன் சொற்படி இசைந்து வராமையால்)
பாரதம் கைசெய்து — பாரதயுத்தத்தை அணிவகுத்துச் செய்து
நஞ்சு உமிழ் நாகம் கிடந்த நல் பொய்கை புக்கு — விஷத்தைக் கக்குகின்ற (காளிய) ஸர்ப்பம் இருந்த கொடிய மடுவிலே புகுந்து
அஞ்ச — (ஆய்ச்சிகளும் ஆயரும் பயப்படும்படி)
பணத்தின் மேல் பாய்ந்திட்டு — (அப்பாம்பின்) படத்திலே குதித்து
(நடமாடி அக்காளியனை இளைப்பித்துப் பின்பு அவன் ப்ரார்த்திக்க)
அருள் செய்த — (அப்பாம்பின் ப்ராணனைக்) கருணையால் விட்டிட்ட
அஞ்சனம் வண்ணனே! அச்சோ அச்சோ—;
ஆயர் பெருமானே — இடையர்களுக்கு தலைவனானவனே!
அச்சோ அச்சோ—.

* * *—காளியனை அடக்கியது முன்னும், பாரதம் கை செய்தது அதற்குப் பின்னும் நடந்ததாயினும் அம்முறையைக் கருதாமல் இங்ஙனமருளிச் செய்தாரென்க. 'கைசெய்து' என்றவிடத்து, கை-தமிழ் உபஸர்க்கமென்பர். நல் பொய்கை—எதிர்மறையிலக்கணை [விபரீதலக்ஷணை]. அஞ்ச—காளியன் அஞ்சும்படி எனினுமொக்கும். ... ... (ங)

100 நாறியசாந்தம் நமக்கிறைநல்கென்ன*
தேறியவளுந் திருவுடம்பில்பூச*
ஊறியகூனினை உள்ளேயொடுங்க* அன்
றேறவுருவினுயச்சோவச்சோ எம்பெருமான்வாராவச்சோவச்சோ. (சு)

நாறிய சாந்தம் நமக்கு இறை நல்கு என்ன — 'நல்லவாஸனை வீசுகின்ற சந்தனத்தை எங்களுக்குக் கொஞ்சம் கொடு' என்று (நீ) கூனியைக்கேட்க
அவளும் — அந்தக்கூனியும் ('இவர்கட்குக் கொடுத்தால் நம்மைக் கம்ஸன் தண்டிப்பனே?' என்று அஞ்சாமல்)
தேறி — மனம் தெளிந்து
திருவுடம்பில் பூச — (உனது) திருமேனியிலே சாத்த
ஊறிய கூனினை உள்ளே ஒடுங்க — வெகுநாளாயிருக்கிற (அவளுடைய) கூனை (அவள்) சரீரத்திற்குள்ளே அடங்கும்படி
அன்று ஏற உருவினுய் — அக்காலத்திலே நிமிர்த்த உருவினவனே!
அச்சோ அச்சோ—;
எம்பெருமான்! வந்து அச்சோ அச்சோ.

101 கழல்மன்னர்சூழக் கதிர்போல்விளங்கி*
எழலுற்றுமீண்டே யிருந்துன்னைநோக்கும்*
சுழலைப்பெரிதுடைத் துச்சோதனனை*
அழலவிழித்தானேயச்சோவச்சோ ஆழியங்கையனேயச்சோவச்சோ (ரு)

கழல் மன்னர் சூழ — வீரக்கழலணிந்த ராஜாக்கள் தன்னைச் சுற்றியிருக்க (அவர்கள் நடுவில்)

கதிர்போல் விளங்கி — ஸூரியன்போல ப்ரகாசமாயிருந்து

('கண்ணனுக்கு எழுந்திருத்தல் குசல ப்ரச்நம் பண்ணுதல் முதலிய மர்யாதை ஒன்றும் செய்யக்கூடாது' என்று கட்டளையிட்டிருந்த தானே தனக்குத்தெரியாமல்)

எழில் உற்று — (முதலில்) எழுந்திருந்து

மீண்டு இருந்து — மறுபடியும் (தானெழுந்தது தெரியாதபடி) உட்கார்ந்து கொண்டு

உன்னை நோக்கும் — உன்னை (பொய்யாஸைமீடுதல் முதலியவற்றால் கொல்வதாகப்) பார்த்த

பெரிது சுழலை உடை — மிகவும் (வஞ்சனையான) ஆலோசனையையுடைய

துச்சோதனனை — துர்யோதநனை (திருவுள்ளத்திலுள்ள சிற்றமெல்லாம் பார்வையிலே தோன்றும்படி)

அழல விழித்தானே — உஷ்ணமாகப் பார்த்தவனே!

அச்சோ அச்சோ—;

ஆழி — திருவாழியாழ்வானை

அம் கையனே — அழகிய கையிலேந்தியவனே!

அச்சோ அச்சோ—.

* * *—கண்ணபிரான் பாண்டவதூதனைத் துர்யோதநனிடமெழுந்தருள, அக்கண்ணனது வருகையை அறிந்த துர்யோதநன் 'கண்ணன் வரும்போது ஒருவருமெழுந்து மர்யாதை செய்யலாகாது' என்று உறுதியாய் நியமித்துத் தானும் ஸபையிலே உறுதியுடனிருக்க, கண்ணபிரான் ஆங்கேற எழுந்தருளினவளவிலே ஸபையிலிருந்த அரசர்களனைவரும் ஸ்ரீக்ருஷ்ண பரமாத்மாவின் சோதியைக் கண்டு பரவசராயெழுந்திருந்துவிட, துர்யோதநன் தானும் தடை நடுங்கி எழுந்திருந்துவிட்டு உடனே கறுக்கொண்டு தானெழுந்தது தெரியாதபடியிருந்தானென்க. 'சுழலை' என்று மொரு தனிச்சொல் உண்டென்க; "சுழலையில் நின்றுய்துங்கொலோ" என்ற நாச்சியார் திருமொழி காண்க. (டு)

102 போரோக்கப்பண்ணி யிப்பூமிப்பொறைதீர்ப்பான்*
தேரோக்கவூர்ந்தாய் செழுந்தார்விசயற்காய்*
காரோக்குமேனிக் கரும்பெருங்கண்ணனே*
ஆரத்தழுவாவந்தச்சோவச்சோ ஆயர்கள்போரேறேயச்சோவச்சோ. (சு)

இப்பூமி பொறைதீர்ப்பான் — இந்தப் பூமியினுடைய பாரத்தைத் தீர்ப்பதற்காக

போர் ஒக்க பண்ணி — யுத்தத்தை (துர்யோதநாதிகளோடு) ஸமமாகச் செய்து,

செழுதார் விசயற்காய் — அழகிய மாலையையுடைய அர்ஜுநனுக்காக

தேர் ஒக்க ஊர்ந்தாய் — (அவனுடைய) தேரை (எதிரிகள் தேர் பலவற்றிற்கும் இது ஒன்றுமே) ஸமமாம்படி பாகனைச்செலுத்தினவனே!

கார் ஒக்கும் மேனி — மேகத்தோடு ஒத்த திருமேனியையும்

கரும்பெருங் கண்ணனே — கரியவாகிப் புடைபரந்த கண்களையுமுடையவனே!

வந்து ஆர தழுவா — ஓடிவந்து நன்றாகத் தழுவிக்கொண்டு

அச்சோ அச்சோ—;

ஆயர்கள் போர் ஏறே — இடையர்களுக்கு (அடங்கி நிற்கின்ற) போர்செய்யுந் தன்மையுள்ள ரிஷபம் போன்றவனே!

அச்சோ அச்சோ—.

* * *—துர்யோதநாதிகளுக்குப் பதினொரு அக்ஷௌஹிணி சேனையும் பாண்டவர்களுக்கு ஏழு அக்ஷௌஹிணி சேனையுமாயிருக்கவும், இவ்விருதிறத்தாரும் போர்செய்யும்போது இருவரும் சரிசமமாகவே யுத்தஞ் செய்பவர்களாகவே நிற்குமாறு செய்தனன் கண்ணபிரானென்க. பகைவர்களோடு போர்புரியும்போது தும்பைப்பூமாலையும், வெற்றிகொண்டபோது வாகைப்பூமாலையும் வீரர்சூடுவரெனக் கூறுதல் தமிழர் வழக்கமாதலால், இவ்விரு பூமாலையையும் அவ்வப்போது அர்ஜுனன் அணிவனென் பதைத் தெரிவிக்க. பொதுவாகச் 'செழுந்தார்விசயன்' என்றார். விசயன் அர்ஜுனனுக்கு, 'விஜயன்' என்று வடமொழி நாமம். (சு)

... ...

103 மிக்கபெரும்புகழ் மாவலிவேள்வியில்*
தக்கதிதன்றென்று தானம்விலக்கிய*

சுக்கிரன்கண்ணைத் துரும்பால்கிளறிய
சக்கரக்கையனேயச்சோவச்சோ சங்கமிடத்தானேயச்சோவச்சோ- (எ)

மிக்க பெரும்புகழ் மாவலி வேள்வியில் — (ஔதார்யத்தால்) மிகுந்த கீர்த்தியையுடைய மஹாபலி (செய்த) யாகத்திலே
(வாமனனாய்ச்சென்ற உனக்கு அந்த மஹாபலி நீ கேட்டதைக்கொடுக்க முயன்றவளவிலே.)
இது தக்கது அன்று என்று — 'நீ கொடுக்கிற விது தகுதியானதன்று' என்று முறையிட்டு
தானம் விலக்கிய சுக்கிரன் கண்ணை — பூமிதானத்தை (அவன் தத்தம் பண்ணும்போது நீர் விழவொட்டாமல்) தடுத்த சுக்கிராசாரியனுடைய ஒரு கண்ணை
துரும்பால் கிளறிய — (உன் கையிலணிந்திருந்த) தர்ப்பபவித்ரத்தின் நுனியால் கலக்கின
சக்கரம் கையனே — சக்ராயுதமேந்திய கையையுடையவனே!
அச்சோ அச்சோ—;
சங்கம் இடத்தானே — பாஞ்சஜந்யத்தை இடக்கையிலேந்தினவனே!
அச்சோ அச்சோ—.

* * *—'துரும்பாற் கிளறிய சக்காம்' என்றதனால், "கருதுமிடம் பொருது-கைந்நின்ற சக்கரத்தன்" என்கிறபடியே திருமால் விரும்பிய இடங்களில் விரும்பின வடிவங்கொண்டு செல்லுந் தன்மையையுடைய திருச்சக்கரமே பவித்ரத்தின் வடிவத்துடன்நின்று சுக்ரனது கண்ணைக் கலக்கிற்றென்பது பெறப்படும். ... ... (எ

104 என்னிதுமாயம் என்னப்பனறிந்திலன்*
முன்னையவண்ணமேகொண்டு அளவாயென்ன*
மன்னுநமுசியை வானிற்சுழற்றிய*
மின்னுமுடியனேயச்சோவச்சோ வேங்கடவாணனேயச்சோவச்சோ. (அ)

(வாமனனாய்ச்சென்ற திருமால் மாவலியிடத்தில் மீரேற்றுத் திரிவிக்கிரமனாய் வளர்ந்து அளக்கப் புகும்போது, அதுகண்ட மஹாபலிபுத்ரனான நமுசி ஓடிவந்து.)
இது என் மாயம் — ('யாசிக்கும்போதிருந்த வடிவம் மாறியளக்கிற) இது என்ன மாயச் செய்கை!;
என் அப்பன் அறிந்திலன் — என் தகப்பன் (நீ செய்யும் இந்தமாயத்தை) அறியவில்லை,
முன்னைய வண்ணமே கொண்டு — நீ யாசிக்கவந்தபோதிருந்த வடிவத்தையேகொண்டு
அளவாய் — அளப்பாயாக'
என்ன — என்றுசொல்ல,
மன்னு நமுசியை — (இப்படி)பிடிவாதமாய்நின்ற (அந்த) நமுசியென்பவனை
வானில் சுழற்றிய — ஆகாயத்திலே சுழலச்செய்த
மின்னு முடியனே — விளங்குகின்ற கிரீடத்தையுடையவனே!
அச்சோ அச்சோ—;
வேங்கடம் வாணனே — திருமலையிலே வாழுமவனே!
அச்சோ அச்சோ—.

* * *—நமுசி, திரிவிக்கிரமனோடு வெகு நாழிகை வழக்காடி, எம்பெருமான் சொன்ன ஸமாதானங்களைக் கேளாமல் தான் பிடித்த திருவடியின் பிடியை விடாமல் உறுதியாயிருக்க, எம்பெருமான் வளர்ந்த திருவடியினால் அவனை ஆகாசத்திலே கொண்டுபோய்ச் சுழன்று விழும்படிசெய்த வரலாறு காண்க. 'சுழற்றிய' என்ற பெயரெச்சம் முடியனைக்கொண்டு முடியும். ... (அ)

105 கண்டகடலும் மலையுமுலகேழும்*
முண்டத்துக்காற்று முகில்வண்ணனென்று*
இண்டைச்சடைமுடி யீசனிரக்கொள்ள*
மண்டைநிறைத்தானேயச்சோவச்சோ மார்வில்மறுவனேயச்சோவச்சோ. (க)

கண்ட கடலும் மலையும் — "கண்ணற்கண்ட ஸ்முத்ரங்களும் மலைகளும்

உலகு ஏழும் — கீழ் ஏழ் மேல் ஏழ் என்ற பதினாலு லோகங்களும் (ஆகிய எல்லாவற்றையும் மிட்டு நிறைக்கப் பார்த்தாலும்)

முண்டத்துக்கு ஆற்ற — (என் கையிலிருக்கிற ப்ரஹ்மம்) கபாலத்துக்குப் போதாவாம்;

முகில் வண்ண ஓ ! என்று — மேகவண்ணனே! ஓ! [ஹாஹா!]" என்று கூப்பிட்டு

இண்டை சடை முடி ஈசன் இரக்கொள்ள — நெருங்கிய ஜடாபந்தத்தையுடைய சிவன் பிச்சை பெடுக்க,

மண்டை நிறைத்தானே — (அவன் கையிலிருந்த ப்ரஹ்ம) கபாலத்தை (மார்பிலிருந்து உண்டான ரக்தத்தால்) நிறையச் செய்தவனே!

அச்சோ அச்சோ—;

மார்வில் மறுவனே — திருமார்பிலே ஸ்ரீவத்ஸமென்னும் மச்சத்தையுடையவனே!

அச்சோ அச்சோ—.

* * *—மஹாப்ரயாஸங்கள்பட்டும் நிறைக்கமுடியாத ப்ரஹ்மகபாலத்தின் தன்மையைக் காட்டிற்று-முதலிரண்டடி. ஓஒ-'ஓ' என்னும் இரக்கக்குறிப்பிடைச்சொல் அளபெடுத்து வந்தது. இனி, கண்ட கடலிலும் மலைகளிலும் உலகேழிலும் (நிரிந்தும்) முண்டத்துக்கு ஆற்ற என்றுமாம். 'உண்டத்துக்கு ஆற்ற' என்றெடுத்து, (எங்கேநிரந்தும் மிகவருந்தியும்) கபாலத்திற்குவேண்டிய உணவையிடற்கு முடியாமல் ஈசன் 'முகில் வண்ண ஓ' என்று இரக்கொள்ள என்றுமுரைக்கலாம். இரக்கொள்ளல்=இரமுதனிலைத் தொழிற்பெயர். ... ... (கூ)

106 துன்னியபேரிருள் தூர்ந்துலகைமூட*
மன்னியநான்மறை முற்றுமறைந்திட*
பின்னிவ்வுலகினில் பேரிருள்நீங்க* அன்
றன்னமதானனேயச்சோவச்சோ அருமறைதந்தானேயச்சோவச்சோ. (ம)

மன்னிய நால் மறை முற்றும் மறைந்திட — நித்யசித்தமான சதுர்வேதங்களும் முழுவதும் மறைந்து விட (அதனால்)

துன்னிய பேர் இருள் சூழ்ந்து உலகை மூட — நெருங்கிய பெரிய அஜ்ஞாநாந்தகாரம் பரவி லோகங்களை மறைத்துக்கொள்ள

பின் இ உலகினில் பேர் இருள் நீங்க — பின்பு இந்த லோகங்களில் (அந்த) மிகுந்த அஜ்ஞாநாந்தகாரமானது நீங்கும்படி

அன்று — அக்காலத்தில்

அன்னம் அதானனே — ஹம்ஸமாய் அவதரித்தவனே!

அச்சோ அச்சோ—;

அருமறை தந்தானே — (அந்த ரூபத்தோடு) அருமையான வேதங்களை உபகரித்தவனே!

அச்சோ அச்சோ—.

107 நச்சுவார்முன்னிற்கும் நாராயணன்றன்னை*
அச்சோவருகவென்று ஆய்ச்சியுரைத்தன*
மச்சணிமாடப் புதுவைக்கோன்பட்டன்சொல்*
நிச்சலும்பாடுவார் நீள்விசும்பாள்வரே. (கக)

நச்சுவார் முன் நிற்கும் நாராயணன் தன்னை — (தன்னை) விரும்பிப் பக்தி பண்ணுமவர்களுடைய முன்னே வந்து நிற்குந் தன்மையுள்ள நாராயணனெனும் ஸ்ரீ கிருஷ்ணனை

ஆய்ச்சி (அணைத்துக் கொள்ளுகையிலுண்டான விருப்பந் தோன்றும்படி) அச்சோவருக என்று உரைத்தன — இடைக்குலத்தவளான யசோதை 'அச்சோ வருவாயாக' என்று சொன்னவற்றை,

மச்சு அணி மாடம் புதுவை கோன் பட்டன் — பல நிலைகளால் அழகிய மாளிகைகளையுடைய ஸ்ரீவில்லிபுத்தூர்க்கு நிர்வாஹகரான பெரியாழ்வார்

சொல் பாடுவார் — சொன்ன இப்பத்துப் பாசுரங்களையும் பாடுமவர்கள்

நிச்சலும் நீள் விசும்பு ஆள்வர் — எப்போதும் பரமாகாசமாகிற பரமபதத்திற்கு நிர்வாஹகராவர்.

* * *—முன்பு யசோதைப் பிராட்டிக்குக் கண்ணெதிரே நின்று கண்ணபிரான் எப்படி ஸேவைதந்தருளினனோ அப்படியே இப்போது தமக்கும் ப்ரத்யக்ஷமாக ஸேவைதந்தருளினதுபற்றி "நச்சுவார் முன்னிற்கும் நாராயணன்" என்றார். ... ... (க)

அடிவரவு:—பொன் செங்கமலம் பஞ்சவர் நாறிய கழல் போர் மிக்க என்னிது கண்ட துன்னிய நச்சு வட்டு.

முதற்பத்து—ஒன்பதாந்திருமொழி, வட்டு நடுவே

(கண்ணன் ஓடிவந்து முதுகில் கட்டிக்கொள்வதாக யசோதை கூறுதல்)

---

108 வட்டுநடுவேவளர்கின்ற* மாணிக்க
மோட்டுநுனையில் முளைக்கின்றமுத்தேபோல்*
சோட்டுச்சோட் டென்னத் துளிக்கத்துளிக்க*என்
குட்டன்வந்தென்னைப்புறம்புல்குவான்கோவிந்தனென்னைப்புறம்புல்குவான் (க)

என் குட்டன் — என் பிள்ளை,
வட்டு நடுவே வளர்கின்ற — (இரண்டு நீலரத்ந) வட்டுகளின் நடுவே வளர்ந்து கொண்டிருப்பதான
மாணிக்கம் மொட்டு — இந்திர நீலமான அரும்பியுடைய
நுனையில் முளைக்கின்ற முத்தே போல் — நுனியிலே உண்டாகின்ற முத்தைப்போல
சொட்டு சொட்டு என்ன — சொட்டுச் சொட்டென்று ஓசையுண்டாகும்படி (அம்மாணிக்க மொட்டு)
துளிக்க துளிக்க — பலதரம் துளியாநிற்க
வந்து என்னை புறம் புல்குவான் — ஓடிவந்து என்னுடைய முதுகைக் கட்டிக்கொள்வான்;
கோவிந்தன் என்னை புறம்புல்குவான்—.

* * *—'வட்டு நடுவே வளர்கின்ற மாணிக்க மொட்டு' என்றது—கண்ணபிரானது ஆண்குறியை யென்க; நிறத்தாலும் ஆகாரத்தாலும் உவமை. 'முளைக்கின்ற முத்து' என்றது—அதில் நின்று வெளிவருகிற சிறுநீரை. உபமேயத்தைச் சொல்லாது உபமாநத்தை மாத்திரம் சொல்லி அதனால் உபமேயத்தைப் பெறவைத்தார். சிறுநீர்த் துளிகள் இற்று இற்று மீண்டும் வருதலால் 'சொட்டுச் சொட்டென்னத் துளிக்கத் துளிக்க' என்றார். என்னை - உருபுமயக்கம். புல்குவான் - அணைத்துக்கொண்டபடியைச் சொல்லுகிறது; இனி, 'அணைத்துக்கொள்வானை' என்று விரும்பினதாகவும் கொள்ளலாம். (க)

109 கிண்கிணிகட்டிக் கிறிகட்டி* கையினிற்
கங்கணமிட்டுக் கழுத்தில்தொடர்கட்டி*
தங்கணத்தாலே சதிராநடந்துவந்து*
என்கண்ணனென்னைப்புறம்புல்குவான்எம்பிரானென்னைப்புறம்புல்குவான். (உ)

என் கண்ணன் — என் கண்ணபிரான்—
கிண்கிணி கட்டி — அரைச்சதங்கையைக் கட்டிக்கொண்டும்
கிறி கையினில் கட்டி — சிறுப்பவளவடத்தைக் கையிலே கட்டிக்கொண்டும்
கங்கணம் இட்டு — தோள்வளையை (தோள்களில்) சாத்திக்கொண்டும்
கழுத்தில் தொடர் கட்டி — திருக்கழுத்திலே சங்கிலியை அணிந்துகொண்டும்
தம் கணத்தாலே — (இன்னுமணிந்துகொண்டுள்ள) திருவாபரணங்களின் திரளோடுகூட
சதிர் ஆடநடந்து வந்து — அழகாக நடந்து வந்து
என்னை புறம்புல்குவான்—;
எம்பிரான் என்னை புறம்புல்குவான்,

* * *—கங்கணம் - வடசொல். திருவாபரணங்களைச் சொல்லும் ப்ரகரணமாதலால், சொல்லப்படாதொழிந்த திருவாபரணங்களையும் கூட்டித் 'தம் கணம்' என்றது. கணம்-கணை என்ற வடசொல் திரிபு. தன் கணத்தாலே என்று பாடங்கொண்டு, தன்னுடைய கண்ணால்(என்னைக் கடாக்ஷித்துக்கொண்டு) எனினுமமையும்; இப்பொருளில் 'கண்' என்பது - மூன்றும் வேற்றுமையுருபை ஏற்கும்போது அத்துச் சாரியை பெற்றுவந்ததென வேண்டும். ... ... (உ)

110 கத்தக்கதித்துக் கிடந்தபெருஞ்செல்வம்*
ஒத்துப்பொருந்திக்கொண்டு உண்ணுதுமண்ணுள்வான்*
கொத்துத்தலைவன் குடிகெடத்தோன்றிய*
அத்தன்வந்தென்னைப்புறம்புல்குவான் ஆயர்களேறென்புறம்புல்குவான். (கூ)

கத்தக் கதித்து கிடந்த — மிகவும் கொழுத்து(உனக்கு எனக்கென்று மிணங்கும் படி) இருந்த
பெரு செல்வம் — மிகுந்த ஐச்வர்யத்தை
ஒத்து — (தன் பந்துக்களான பாண்டவர்களோடு) ஒத்து
பொருந்திக்கொண்டு உண்ணுது — மனம்பொருந்தியிருந்து அநுபவியாமல்
மண் ஆள்வான் — பூமியை (தான் அத்விதீயனாய்) ஆளவேணுமென்று நினைத்தவனை
கொத்து தலைவன் — (தம்பிமார்களும் பந்துக்களும் சேனைகளுமாகிய) நிரளுக்குத் தலைவனாகிய துர்யோதநன்
குடி கெட — (தன்) குடும்பத்தோடு பாழாம்படி
தோன்றிய — திருவவதரித்த
அத்தன் — ஸ்வாமி
வந்து என்னை புறம்புல்குவான்—;
ஆயர்கள் ஏறு — இடையர்களுக்குள் சிறந்த கண்ணபிரான்
என் புறம் புல்குவான்—.

* * *—கத்தக்கதித்து - "பக்கப்பருத்து," "தக்கத்தடித்து" என்பனபோன்ற ஒருவகைக் குறிப்பிடைச்சொல். ஏறு - ஆகுபெயரால், செருக்கு, நடை, காம்பீர்யம் முதலிய குணங்களால் காளைபோன்ற இளவீரனைக்குறிக்கும். ... ... (கூ)

111 நாந்தகமேந்திய நம்பிசரணென்று*
தாழ்ந்ததனஞ்சயற்காகித் தரணியில்*
வேந்தர்களுட்க விசயன்மணித்தேர்*
ஊர்ந்தவனென்னைப்புறம்புல்குவான் உம்பர்கோனென்னைப்புறம்புல்குவான். (சு)

நாந்தகம் ஏந்திய நம்பி சரண் என்று தாழ்ந்த — 'நந்தகம் என்னும் வாளை கையிலணிந்துள்ள பெரியோனே! (நீ எனக்கு) ரக்ஷகன்' என்று சொல்லி (தன்னை) வணங்கிய
தனஞ்சயற்கு ஆகி — அர்ஜுநனுக்குப் பக்ஷபாதியாயிருந்து
தரணியில் வேந்தர்கள் உட்க — இப்பூமியிலே(எதிரிகளான) ராஜாக்கள் அஞ்சிக் கலங்கும்படி
விசயன் மணி நிண் தேர் ஊர்ந்தவன் — அந்த அர்ஜுநனது அழகிய வலிய தேரை (ஸாரதியாயிருந்து) செலுத்தின இவன்
என்னை புறம் புல்குவான்—;
உம்பர் தோன் — நித்யஸூரிகளுக்கு நிர்வாஹகனை இவன்
என்னை புறம் புல்குவான்—,

* * *—நாந்தகம்='நந்தகம்' என்ற வடசொல் நீண்டுகிடக்கிறது. நம்பி - உயர்திணை ஆண்பாற் சிறப்புப்பெயர்; "நம்பி ஆடூஉ, விடலை கோவேள் குரிசில் தோன்றல், இன்னன ஆண்பெயராகுமென்ப" என்பது நன்னூல். சரண் 'சரணம்' என்ற வடசொற் சிதைவு. தனஞ்சயன் - அர்ஜுநனுக்கு மறுபெயர். இது தர்மபுத்ரன் ராஜஸூயயாகம் செய்யக் கோலினபோது பலராஜாக்களையும் வென்று மிக்க பொருளைக் கொணர்ந்ததனாலும், வெற்றியையே செல்வமாகவுடையவனென்ற காரணத்தாலும் வந்த பெயராம். உட்க (நெஞ்சு) உளுக்கும்படியாக. உம்பர் - மேலுலகு; அங்குள்ளார்க்கு ஆகுபெயர். (சு)

112 வெண்கலப்பத்திரங் கட்டிவிளையாடி*
கண்பலசெய்த கருந்தழைக்காவின்கீழ்*
பண்பலபாடிப் பலிண்டிசைப்ப* பண்டு
மண்பலகொண்டான்புறம்புல்குவான் வாமனனென்னைப்புறம்புல்குவான். (எ)

பண்டு மூன்றெரு காலத்திலே
வெண்கலம் பத்திரம் கட்டி விளையாடி — வெண்கலத்தாற்செய்த பத்திரத்தை (அரையிற்) கட்டிக்கொண்டு விளையாடி
பல கண்செய்த கருதழை காவின் கீழ் — பல பீலிக்கண்களைக் கொண்டு செய்யப்பட்ட பெரிய குடையாகிற சோலையின் கீழேயிருந்து (மாவலியிடத்தில் மூவடி மண்ணை இரந்துபெற்று)

பல பண் பாடி — (அதுகூலமானவர்கள்) பல விதராகங்களைப் பாடிக் கொண்டு
பல்லாண்டு இசைப்ப — மங்களாசாஸநம் செய்ய
பல மண் கொண்டான் — பல [ஸகலமான] லோகங்களையுமளந்து தன்னதாக்கிக்கொண்ட இவன்

புறம் புல்குவான்—;
வாமனன் என்னை புறம்புல்குவான்—.

* * *—பத்திரம்—வடசொல்; இலை என்பது பொருள்; வெண்கலத்தாலே இலைவடிவமாகச் செய்து குழந்தையினரையிற் கட்டுதல் முற்காலத்தில் ப்ராஹ்மணர்களின் வழக்கம்போலும். அங்ஙனமே, வாமநாவதாரம் செய்த ஸ்ரீ விஷ்ணு தன் திருவரையிலணிந்து கொண்டனனென்க; இனி, முதலடியால் கண்ணபிரானது பால்யதசையில் லீலைவகையைச் சொல்லிற்றாகவுமாம். "கண் பலபெய்து" என்று பாடமாகில், - கருந்தழை - பீலிப்பிச்சத்தினுடைய, பல கண் - பலகண்களையும், பெய்து - தலையில் அணிந்துகொண்டு. காவின் கீழ் விளையாடி - சோலை நிழலிலே விளையாடியென்று உரைக்கவேண்டும். பீலித்தழையைத் தலையிலேகட்டுகை ஜாதிக்கு உரிய செய்கையாம். "மண்" என்றசொல் ஆகுபெயரால் பூமியைக்காட்டும்; அச்சொல் இங்கு, உலகம் என்ற பொதுப்பொருளைத் தந்தது. ... (சு)

113 சத்திரமேந்தித் தனியொருமாணியாய்*
உத்தரவேதியில் நின்றவொருவனை*
கத்திரியர்காணக் காணிமுற்றுங்கொண்ட*
பத்திராகாரன்புறம்புல்குவான் பாரளந்தானென்புறம்புல்குவான். (சூ)

உத்தரவேதியில் நின்ற ஒருவனை — உத்தரவேதியிலிருந்த (ஔதார்யத்தில்) அத்விதீயனை மஹாபலியினிடத்திலே
சத்திரம் ஏந்தி — குடையை (கையில்) பிடித்துக்கொண்டு
தனி ஒரு மாணி ஆய் — ஒப்பற்ற ஒரு ப்ரஹ்மசாரி வாமநனாய் (ப்போய்)
கத்திரியர் — (அவனுக்குக் கீழ்ப்பட்ட) க்ஷத்ரியர்கள்
காண — பார்த்துக் கொண்டிருக்கையில்

காணி முற்றும் கொண்ட — உலகமுழுவதையும் (நீரேற்றளந்து) தன்னதாக்கிக் கொண்ட
பத்திரம் ஆகாரன் — விலக்ஷணமான வடிவையுடையனை இவன்
புறம் புல்குவான்—;
பார் அளந்தான் — பூமியை (திரிவிக்கிரமனாய்) அளந்த இவன்

என் புறம் புல்குவான்—.

* * *—சத்திரம்—வடசொல் திரிபு. உத்தரவேதி—ஆஹவநீயாக்நிக்கு வடதிசையிலே யாகபசுவைக் கட்டுகின்ற யூபஸ்தம்பத்தை நாட்டிய வேதிகை; இச்சொல் இங்கு, யாகபூமியைக் காட்டுமென்க. கத்திரியர்—வடசொற்றிரிபு. ['கத்திரிவர்' என்பது சிலர்பாடம்.] பத்திராகாரன்—வடசொல்தொடர். (சூ)

114 பொத்தவுரலிற்கவிழ்த்து அதன்மேலேறி*
தித்தித்தபாலும் தடாவினில்வெண்ணெயும்*
மெத்தத்திருவயிறார விழுங்கிய*
அத்தன்வந்தென்னைப்புறம்புல்குவான் ஆழியானென்னைப்புறம்புல்குவான். (எ)

பொத்த உரலை கவிழ்த்து — (அடியில்) ஓட்டையாய்விட்ட தொரு உரலை (ஒரு) தலைகவிழ்த்துப் போட்டு
அதன் மேல் ஏறி — அவ்வுரலின்மேலேறி
தடாவினில் — மிடாக்களிலேயுள்ள
தித்தித்த பாலும் — மதுரமான பாலையும்
வெண்ணெயும் — வெண்ணெயையும்

திருவயிறு ஆர மெத்த விழுங்கிய அத்தன்	வயிறு நிரம்ப மிகுதியாக விழுங்கின தலைவன்	ஆழியான்	(இப்படிக் களவுகண்டுஉண் கையில்) ஆழ்ந்து தேறிய வன்
வந்து என்னை புறம் புல்குவான்—;		என்னை புறம் புல்குவான்—.	

* * *—திருவாய்ப்பாடியிலுள்ளார் தந்தம் தயிர் நெய் பால்களைக் கண்ணனுக்கெட்டாதபடி உயர உறிகளின்மேலே சேமித்துவைக்க, அதுகண்டு கண்ணபிரான் ஒரு பொத்தவுரலைத்தேடிக் கண்டு பிடித்து உருட்டிக்கொண்டுவந்து தலைகீழாகக் கவிழ்த்துப்போட்டு அதன்மேலேறி உறியையெட்டி அதிலுள்ளவற்றை விழுங்குவானும். [பொத்தவுரலை] கல்லவுரலானால் அதை நடுவே யாரேனும் சிலர் கார்யார்த்தமாகத் தேடிவந்து தன்னைப்பிடித்துக்கொள்ளக்கூடுமென்று பொத்தவுரலைத் தேடிப் பிடித்தானென்க. பொத்தவுரல்—'பொத்தலுரல்' என்பதன் மரூஉ வென்னலாம்; 'பொத்தல்' என்பதில் ஈற்று மெய்கெட்டதென்றலுமொன்று. ... ... (எ)

115 மூத்தவைகாண முதுமணற்குன்றேறி*
கூத்துவந்தாடிக் குழலாலிசைபாடி*
வாய்த்தமறையோர் வணங்க* இமையவர்
ஏத்தவந்தென்னைப்புறம்புல்குவான் எம்பிரானென்னைப்புறம்புல்குவான். (அ)

மூத்தவை	வயதுசென்ற இடைச்சனங்கள்	வணங்க	தன்னைக்கண்டு வணங்கவும்
காண	காணும்படியாக	இமையவர்	தேவர்கள்
முது மணல் குன்று ஏறி	நெடுநாளாய்க் குவிந்து மேடாயிருந்த மணற்குன்றின் மேலேறியிருந்து	ஏத்த	ஸ்தோத்ரஞ்செய்யவும்
		குழலால் இசைபாடி	வேய்க்குழலினால் ராகம் பாடிக் கொண்டும்
		உவந்து	ஸந்தோஷித்து
வாய்த்த மறையோர்	தன்னுடைய சேஷ்டிதத்தைக்காணும்படி கிட்டின ப்ரஹ்மர்ஷிகள்	கூத்து ஆடி	கூத்தாடியும் நின்று
		வந்து என்னை புறம்புல்குவான்—;	
		எம்பிரான் என்னை புறம்புல்குவான்—.	

* * *—கண்ணபிரான் எல்லாருங் காணும்படியாக மிகவுமுயர்ந்ததொரு மணற்குன்றின்மேலேறிநின்று தான் விரும்பின பெண்களின்பேரைச்சொல்லுதலும் தன்மேல் கோபங்கொண்டிருக்கும் பெண்களின் காலிக்கையைப் பிடித்துக்கொண்டு பொறுப்பித்தலும் முதலான ஒலியின் குறிப்புகள் தன்னெடுபழகும் பெண்களுணரும்படி புல்லாங்குழலூதியும், நிலவறைகளிற் கிடக்கும் பெண்களும் அவ்விடத்தை விட்டோடிவந்து காண்கையாலே மிகவும் மனமுகந்து கூத்தாடியும்நிற்க, அவனுடைய சேஷ்டிதரஸத்தை அனுபவித்து ரிஷிகளும் தேவர்களும் வணங்கித்துதிக்க இப்படிக் கூத்தாடின அழகோடே அப்பிரான்வந்து என்னைப்புறம்புல்க வேணுமென்பது—கருத்து. ... (அ)

116 கற்பகக்காவு கருதியகாதலிக்கு*
இப்பொழுதீவனென்று இந்திரன்காவினில்*
நிற்பனசெய்து நிலாத்திகழ்முற்றத்துள்*
உய்த்தவனென்னைப்புறம்புல்குவான் உம்பர்கோனென்னைப்புறம்புல்குவான்.(கூ)

இந்திரன் காவினில் கற்பகம் காவு	இந்த்ரனுடைய உத்யானவநத்திலிருந்த கற்பகச் சோலையை	நிலா திகழ் முற்றத்துள்	நிலா விளங்குகின்ற அவள் வீட்டு முற்றத்தில்
		நிற்பன செய்து உய்த்தவன்	இருப்பனவாகச் செய்து தழைக்கும்படி செய்தவன்
கருதிய காதலிக்கு	(தன் வீட்டிற் கொண்டு வைக்க வேணுமென்று) விரும்பிய தனக்கு ப்ரியையான ஸத்யபாமைப்பிராட்டிக்கு	என்னை புறம்புல்குவான்—;	
		உம்பர் கோன்	(அன்றுதன் பராக்ரமத்தைக் காட்டிய)தேவாதிதேவன்
இப்பொழுது ஈவன் என்று	'இப்பொழுதே கொணர்ந்து தருவேன்' என்று சொல்லி	என்னை புறம்புல்குவான்.	

* * *—கண்ணபிரான் ஸத்யபாமையின் உகப்புக்காக, தேவலோகத்திலிருந்து பாரிஜாத விருக்ஷத்தைக் கொணர்ந்த த்வாரகையில் நாட்டினமை ப்ரஸித்தம். இந்திரன் காவு-நந்தவநம். மந்தாரம், பாரி

ஜாதம், ஸந்தானம், கல்பவ்ருக்ஷம், ஹரிசந்தனம் எனத் தேவலோகத்து மரங்கள் ஐந்து; அவ்வைந்தையும் கல்பவ்ருக்ஷமென்று ஸாதாரணமாக வழங்குதலுமுண்டு; இங்கு, பாரிஜாதத்தைக் கற்பகமென்றார். இம்மரங்களில் ஒவ்வொன்றுமே பெருஞ்சோலையாகத் தழைத்திருக்குமாதலால், "கற்பகக் காவு" எனப்பட்டது. ஒரு மரத்தையே காவு என்று கூறியதற்கு ஏற்ப 'நிற்பன் செய்து' என்று பன்மையாகக் கூறினார்போலும். ஐந்துமரங்களையுங் கொணர்ந்தா னென்பாருமுளர். ஈவன் = ஈ-பகுதி; அன்-தன்மையொருமைவிகுதி; வ்-எதிர்கால இடைநிலை. ... ... (கூ)

117 ஆய்ச்சியன்ருழிப்பிரான் புறம்புல்கிய*
வேய்த்தடந்தோளிசொல் விட்டுசித்தன்மகிழ்ந்து*
ஈத்ததமிழிவை யீரைந்தும்வல்லவர்*
வாய்த்தநன்மக்களோப்பெற்று மகிழ்வரே. (கo)

வேய் தட தோளி ஆய்ச்சி — மூங்கில்போன்ற பெரிய தோள்களையுடையளான யசோதையானவள்,

ஆழி பிரான் அன்று புறம் புல்கியசொல் — சக்ராயுததரனாகிய பரவான கண்ணன் அக்காலத்திலே புறம்புல்குவதைக் கூறிய சொல்லே

விட்டுசித்தன் — பெரியாழ்வார்

மகிழ்ந்து ஈத்த தமிழ் இவை ஈரைந்தும் வல்லவர் — (தாம் அநுபவித்து ஸந்தோஷித்து (உலகத்தார்க்கு) உபகரித்த தமிழ்ப்பாசுரமாகிய இப்பத்து பாசுரங்களையும் ஓதவல்லவர்கள்

வாய்த்த நல் மக்களை பெற்று மகிழ்வர் — (மங்களாசாஸநத்தில் விருப்பம்) பொருந்திய நல்ல புத்திரர்களை அடைந்து ஆநந்திப்பர்கள்.

* * *—'ஈந்த' என்னவேண்டியது—செய்யுளின்பம் நோக்கி, ஈத்த என்று கிடக்கிறது. நன்மக்கள்—சிஷ்யர்களென்றுமாம். இப்பத்து—ஒன்பது திருமொழிகளிலேயே நூறு பாசுரங்களாய்விட்ட படியால், இவ்வொன்பது திருமொழியிலேயே முடிந்ததென்க. ... ... (ஙி)

அடிவரவு:—வட்டு கிண்கிணி கத்த நாந்தகம் வெண்கலம் சத்திரம் பொத்த மூத்தவை கற்பகம் ஆய்ச்சி மெச்சுது.

முதற்பத்து உரை முற்றிற்று

இரண்டாம்பத்து—முதல்திருமொழி, மெச்சுது.

(கண்ணன் பூச்சிகாட்டி விளையாடுவதைக் கூறுதல்.)

118 மெச்சுதுசங்கமிடத்தான் நல்வேயூதி*
பொய்ச்சூதில்தோற்ற பொறையுடைமன்னர்க்காய்*
பத்துர்பெருதன்று பாரதங்கைசெய்த*
அத்தூதனப்பூச்சிகாட்டுகின்றான் அம்மனேயப்பூச்சிகாட்டுகின்றான். (க)

மெச்சு ஊது சங்கம் இடத்தான் — (அனைவரும்) கொண்டாடும்படி ஊதுகின்ற பாஞ்சஜந்யத்தை இடக்கையில் ஏந்தியுள்ளவனும்

நல் வேய் ஊதி — நல்ல வேய்ங்குழலை ஊதுபவனும்,

பொய் சூதில் தோற்ற பொறை உடை மன்னர்க்கு — க்ருத்ரிமமான சூதிலே (தம்முடைய சொத்துக்களையெல்லாம்) இழந்தவர்களாய் பொறுமைசாலிகளான பாண்டவர்கட்கு

ஆய் — (தான் எல்லாவகைத்) தூணியுமாயிருந்து(துர்யோதநாதிகளிடத்துத் தூதுபோய்க் கேட்டுப் பார்த்தும் அவர்களிடத்தினின்றும்)

பாரதம் கைசெய்த அதூதன் — பாரதயுத்தத்தை அணிவகுத்துச்செய்த அந்த பாண்டவதூதனை கண்ணன்

அப்பூச்சி காட்டுகின்றான் — அப்படிப்பட்ட[மிகவும் பயங்கரமான] பூச்சிகாட்டுகின்றான்;

பத்து ஊர் பெறாது அன்று — பத்து ஊரையும் அடையமுடியாமல் அக்காலத்திலே

அம்மனே — அம்மா!

அப்பூச்சி காட்டுகின்றான்—;

* * *—அப்பூச்சி காட்டுகையாவது-கண்ணை இறுத்துவது, மயிரால் முகத்தை மறைத்துக்காட்டுவது முதலாகச்செய்யும் பயங்கரமான பாலசேஷ்டைகள். அம்மனே - அச்சத்தினாற் சொல்லும் சொல்லு.

இந்தப்பாசுரத்தின் மீற்றடியைக் குறித்து ஓர் ஐதிஹ்யம்:—

இப்பாசுரத்தை நம்பெருமாள் ஸந்நிதியில் உடையவர் கோஷ்டியிலே 'உய்ந்தபிள்ளை' என்பாரொரு அரையர் அபிநயக்குமளவில் 'அத்தூதன்' என்னும்போது ஸ்ரீகிருஷ்ணனையும், 'அப்பூச்சி' என்னும்போது கண் இமையை மடக்கிக்கொண்டு வருவதையுங் காட்டி அபிநயிக்க, உடையவர் பின்னே எழுந்தருளியிருந்த எம்பார், தம் திருக்கைகளைத் திருத்தோள்களோடு சேர்த்துக்காட்ட, அரையரும் தாம் முன் அபிநயித்ததைவிட்டு எம்பார் காட்டியதுபோலவே எம்பெருமான் திருத்தோள்களில் சங்குசக்ரங்கள் தரித்துக்கொண்டிருப்பதை அபிநயிக்க, உடையவர் மிகவுமுகந்து, 'கோவிந்தப்பெருமாள்' [எம்பார்]! இருந்தீரோ? என்றராம்: இதனால் ஏற்படுவதாவது - தூதனைத் தன் ஸௌலப்யத்தை வெளியிட்டு 'நம்மிலே ஒருவன்' என்று இவ்வுலகத்தார் கொள்ளும்படி யிருப்பவன் அவர்கள் அஞ்சும்படி சில காலங்களில் ஈச்வரத்வ சின்னங்களைக் காட்டுகிறானென்பது; இது ஈற்றடிக்கு உள்ளுறைபொருள் [ஸ்வாபதேசம்]. (க)

119 மலைபுரைதோள்மன்னவரும் மாரதரும்மற்றும்*
பலர்குலைய நூற்றுவரும்பட்டழிய * பார்த்தன்
சிலைவளைய* தின்தேர்மேல்முன்னின்ற* செங்கண்
அலைவலைவந்தப்பூச்சிகாட்டுகின்றான் அம்மனேயப்பூச்சிகாட்டுகின்றான். (உ)

மலை புரை தோள் மன்னவர் மாரதரும் — மலையை ஒத்த தோள்களையுடைய அரசர்களான மஹாரதரும்

மற்றும் பலர் உம் குலைய — மற்றும் பலவகை அரசர்களும் அழியவும்

நூற்றுவரும் பட்டு அழிய — (துர்யோதநாதிகள்) நூறு பேரும் மரணமடைந்து உருவழிந்துபோகவும்

பார்த்தன் சிலை வளைய — அர்ஜுநனுடைய (காண்டீவமென்னும்) வில்வளையவும்

தின் தேர் மேல் முன் நின்ற — (அந்த அர்ஜுநனுடைய) வலிய தேரின்மேல் (ஸாரதியாய்) முன்புறத்தில் நின்ற

செம் கண் — (வாத்ஸல்ய ஸூசகமாகச்) சிவந்த கண்களையுடையவனாய்

அலைவலை — (அர்ஜுநனுடைய வெற்றியைப்) புகழ்பவனை கண்ணன்

வந்து * * * அப்பூச்சி காட்டுகின்றான்—.

தேர்வீரர்—அதிரதர், மஹாரதர், ஸமரதர், அர்த்தரதர் என நால்வகைப்படுவராதலால், 'மாரதரும் மற்றும்' என்றார். (அஸஹாயராய்த் தாம் ஒரு தேரின்மேலிருந்து தமது ரதகஜதுரகபதாதிகளுக்கழிவுவாராமல் காத்துக்கொண்டு பல்லாயிரம் தேர்வீரர்களோடு பொருது வெல்லும் வல்லமையுள்ளவர்—அதிரதர் என்றும், கிழ்ச்சொன்னபடியே தாமிருந்து பதினாயிரம் தேர்வீரரோடு பொருபவர்—மஹாரதர் என்றும், ஒரு தேர்வீரரோடு தாமு மொருவராய் நின்று எதிர்க்கவல்லவர் - ஸமரதர் என்றும், அங்ஙனமே பொருது, தம் தேர் முதலியவற்றை இழந்துவிடுபவர் - அர்த்தரதர் என்றுஞ் சொல்லப்படுவர்) அலவலை—அர்த்தத்தின் உயர்த்தியையும் கேட்பவனுடைய தாழ்வையும் பாராமல் ரஹஸ்யார்த்தங்களைச் சொல்லுமவன்; வரம்பு கடந்து பேசுபவன். இப்படியெல்லாம் ஸ்ரீகிருஷ்ணன் செய்தது—த்ரௌபதியின் விரித்த கூந்தலை முடிக்கும்பொருட்டாம். ... ... (உ)

120 காயுநீர்புக்குக் கடம்பேறி* காளியன்
தீயபணத்தில் சிலம்பார்க்கப்பாய்ந்தாடி*

**வேயின்குழலூதி வித்தகனாய்நின்ற*
ஆயன்வந்தப்பூச்சிகாட்டுகின்றான் அம்மனேயப்பூச்சிகாட்டுகின்றான்.** (ங)

காயும் நீர் புக்கு — (காளியனுடைய விஷாக்கினியால்) கொதிக்கின்ற மடுவின் ஜலத்திலே புகுந்து (கலக்கி)

சிலம்பு ஆர்க்க — (தன் திருவடியிலணிந்து கொண்டிருந்த) சிலம்பு சப்திக்கும்படி

பாய்ந்து ஆடி குதித்து கூத்தாடி,

(இச்செய்கையைக் கண்டு என்ன தீங்கு வருமோ! என்று கலங்கினவர் மகிழ)

(அம்மடுவினுள்ளிருந்த காளியனென்னும் பாம்பைக் கோபத்தோடு படமெடுக்கச் செய்து)

வேயின் குழல் ஊதி — மூங்கிலினாலாகிய குழலை ஊதி

(இப்படி)

கடம்பு ஏறி — (அம்மடுவின் கரையிலிருந்த) கடம்பமரத்தின் மேலேறி,

காளியன் தீய பணத்தில் — அந்தக் காளியனுடைய கொடிய படத்திலே

வித்தகன் ஆய் நின்ற ஆயன் — விஸ்மயநீயனுமிருந்த கண்ணபிரான்

வந்து * * * அப்பூச்சி காட்டுகின்றான்—.

* * *—தீயபணம்=படம் விஷமிருத்தற்கு உரிய இடமாதலாலும் கோபத்தைத் தெரிவித்தலாலும். ... ... (ஙு)

**121 இருட்டிற்பிறந்துபோய் ஏழைவல்லாயர் *
மருட்டைத்தவிர்ப்பித்து வன்கஞ்சன்மாள *
புரட்டியங்காளெங்கள் பூம்பட்டுக்கொண்ட *
அரட்டன்வந்தப்பூச்சிகாட்டுகின்றான் அம்மனேயப்பூச்சிகாட்டுகின்றான்.** (சு)

இருட்டில் பிறந்து போய் — இருள்நிறைந்த நடுநிசியில் (மதுரையிலே) தேவகி புத்ரனைத் தோன்றி (அங்கு நின்றும் அப்போதே ஆய்ப்பாடிக்குப் போய்,

ஏழை வல் அயர் — அவிவேகிகளான (தன்னைப் பற்றியிருக்கும்) மனவலிமையையுடைய இடையர்களின் (கண்ணனிடத்திலுள்ள ப்ரேமத்தாலும் கம்ஸனிடத்திலுள்ள கோபத்தாலும் தாமே கம்ஸனைக் கொல்ல வல்லவர்கள் போலே செருக்கிச் சொல்லுகிற)

மருட்டை தவிர்ப்பித்து — மருள்வார்த்தைகளை போக்கினவனையும்

வல் கஞ்சன் மாள புரட்டி — கொடிய கம்ஸன் மாண்டு போம்படி (அவனை மயிரைப்பிடித்து அடித்துப் பூமியிலிட்டுப் புரட்டினவனையும்)

அரட்டன் — (நாங்கள் யமுனையில் நீராடிய) அக்காலத்திலே எங்களுடைய அழகிய பட்டுப் புடவைகளை வாரிக் கொண்டுபோன தீம்பனையுமுள்ள கண்ணன்

வந்து * * * அப்பூச்சி காட்டுகின்றான்—.

* * *—'பிள்ளைபிறப்பதுஎப்போது!' என்று உருவின கத்தி உருவியபடி கம்ஸன் நிற்கையாலே அவனுடைய கண்ணிற்படாதபடி யிருக்கவேணுமென்று நள்ளிருளிலே தேவகி புத்ரனைத்தோன்றி, அப்போதே ஸ்ரீவஸுதேவரை எடுத்துப்போம்படி கட்டளையிட்டுத் தேவகி தன்னைப்பிரியும் பிரிவால் கதறத்தான் திருவாய்ப்பாடியிற் புகுந்து வளர்ந்தருளின வரலாறு அறிக. [அயர் மருட்டைத் தவிர்ப்பித்து] கம்ஸன் பூதநாதிகள் மூலமாகக் கண்ணனை நலிய நினைத்திரா நின்றனென்றறிந்த இடையர்கள் தாங்களே கம்ஸனைக் கொல்வார்போலச் சில மருட்டு வார்த்தைகளைச் சொல்ல, 'நீங்களெல்லோரும் வேணுமோ? நானே செய்வேன்' என்று சொல்லித் தன் பேச்சாலே அவர்கள் அந்த மருட்டு வார்த்தைகளைச் சொல்லாதபடி தவிர்ப்பித்து என்பது பொருள். மருட்டு - மருளையுடையது; அஃறிணை ஒன்றன் பாற் படர்க்கைக் குறிப்புவினையாலணையும் பெயர்: 'இருள்' 'மருள்' என்ற பெயர்ச்சொற்களின்மேல் 'டு' என்ற விகுதி ஏறப் பெற்றது; "துணுடுக்குற்றியலுகரவீற்ற ஒன்றன் படர்க்கை டுக்குறிப்பினுகும்" என்பது-நன்னூல். ... ... (சு)

122 சேப்பூண்ட சாடுசிதறி * திருடிகெய்க்
காப்பூண்டு நந்தன்மனைவிகடைதாம்பால் *
சோப்பூண்டுதுள்ளித் துடிக்கத்துடிக்க * அன்று
ஆப்பூண்டானப்பூச்சிகாட்டுகின்றான் அம்மனேயப்பூச்சிகாட்டுகின்றான். (நு)

சே பூண்ட சாடு — எருதுகள் கட்டுதற்கு உரிய சகடம்
(அஸுராவேசத்தாலே தன்னைக் கொல்ல வர, முலைக்காக அழுகிற பாவனையாலே தன் திருவடியைத் தூக்கி அச்சகடத்தை)
சிதறி — உருக்குலையும்படி உதைத்து
நெய்க்கு திருடி — நெய்க்கு ஆசைப்பட்டு களவு செய்து
ஆப்பூண்டு — (உடைமைக்கு உரியவர் கையில்) அகப்பட்டுக் கொண்டு
(அவர்கள் யசோதை கையிற் காட்டிக் கொடுக்க,)

நந்தன் மனைவி — நந்தகோபன்தேவியான அவ் யசோதை
கடை தாம்பால் — (தயிரைக்) கடையும் தாம் பாலே (அடிக்க)
துள்ளி துடிக்க துடிக்க சோப்பூண்டு — துள்ளி மிகவும் துடிக்கும்படி அடியுண்டு (அதனைத் நில்லாமல்)
அன்று ஆப்பூண்டான் — அக்காலத்தில் (எங்கும் சலிக்கமுடியாதபடி உரலில்) கட்டுண்டவனுமாகிய கண்ணன்
அப்பூச்சி காட்டுகின்றான் * * *—.

* * *— ஆப்பூண்டு நந்தன் மனைவிகடைதாம்பால் சோப்பூண்டு—'என் மகன்மேல் வீண்பழி விளைத்திடேல்மின், களவுகண்டதுண்டாகில் கையும் பிடியுமாய்ப் பிடித்துக் கொணருங்கள்' என்று சொல்லிய தாயான தன் முன்பே ஆய்ச்சிமார் கண்ணனைக் கொண்டியோடே கண்டுபிடித்துக்கொணர, அதுகண்ட யசோதை, நான் பிள்ளைபெற்று வளர்க்கிறது மிகவுமழகிதாயிருக்கிறது!' என்று சொல்லித் தன்னைத்தானே மோதிக்கொண்டு அவர்கள் முன்னே தன் வயிற்றெரிச்சலெல்லாந் தோன்றும்படி அடிக்க அடியுண்டு என்றபடி. ஆப்பூண்டு, சோப்பூண்டு, ஆப்பூண்டான்—'ஆப்புண்டு' 'சோப்புண்டு' ஆப்புண்டான்' என்பவற்றின் நீட்டல் விகாரம். ... ... (நு)

123 செப்பினமென்முலைத் தேவகிநங்கைக்கு *
சொப்படத்தோன்றித் தொறுப்பாடியோம்வைத்த *
துப்பமும்பாலும் தயிரும்விழுங்கிய *
அப்பன்வந்தப்பூச்சிகாட்டுகின்றான் அம்மனேயப்பூச்சிகாட்டுகின்றான். (சூ)

செப்பு இள மென்முலை தேவகி நங்கைக்கு — ஸ்வர்ணகலசங்கள்போன்ற இளமையையும் மென்மையையுமுடைய முலைகளையுடைய தேவகிப் பிராட்டிக்கு (மகளாக)
சொப்படதோன்றி — நன்றாகப் பிறந்து
தொறுப் பாடியோம் வைத்த துப்பமும் பாலும் தயிரும் — ஆய்ப்பாடியிலுள்ளவர்களாகிய நாங்கள் சேமித்து வைத்த நெய்யையும் பாலையும் தயிரையும்
விழுங்கிய அப்பன் — உட்கொண்ட ஸ்வாமி [உபகாரகன்]
வந்து * * *அப்பூச்சி காட்டுகின்றான்—.

* * *—செப்பு - முலைகளுக்கு நிறத்திலும் வடிவிலும் உவமை. சொப்படத் தோன்றி—ஸர்வேச்வரத்வசின்னங்களோடு தோன்றி. தொறு - பசு, பாடி - இடம்; எனவே, பசுக்கூட்டங்கள் நிரம்பிய 'கோகுலம்' என்று ப்ரஸித்திபெற்ற திருவாய்ப்பாடியாயிற்று. ... ... (சூ)

124 தத்துக்கொண்டாள்கொலோ தானேபெற்றாள்கொலோ *
சித்தமனையாள் அசோதையிளஞ்சிங்கம் *
கோத்தார்கருங்குழல் கோபாலகோளரி *
அத்தன்வந்தப்பூச்சிகாட்டுகின்றான் அம்மனேயப்பூச்சிகாட்டுகின்றான். (எ)

(இந்தப் பிள்ளையை யசோதை)
தத்து கொண்டாள் } தத்த புத்ரனாக வளர்த்துக்
கொல் ஓ } கொண்டாளோ!
(அல்லது)
தானே பெற்றாள் } ஸ்வயமாகவே மெய்நொந்து
கொலோ } பெற்றெடுத்தாளோ!
சித்தம் அனையாள் அசோதை இள சிங்கம் { (கண்ணனுடைய) மனக்கருத்தை ஒத்து நடப்பவளாகிய யசோதையினுடைய சிங்கக்குட்டி போன்றவனும்

கொத்து ஆர் கருங்குழல் { பூங்கொத்துக்களை யணிந்த கரியகூந்தலையுடையவனும்
கோபாலர் கோள் அரி { இடையர்கட்கு (அடங்காத) மிடுக்கை அடக்கிக் கொண்ட சிங்கம்போன்றவனுமாகிய
அத்தன் ஸ்வாமியான இவன்
வந்து*** அப்பூச்சி காட்டுகின்றான்—.

* * *—யசோதைப் பிராட்டி ப்ரஸவிக்குங் காலத்திலே அருகிலிருந்தவர்கள் 'தத்தபுத்ர ஸ்வீகாரம் செய்யவில்லை; ஆனால் இவள் பிள்ளை பெறுகிறபோது இவளைப்பேணிப் பார்த்திருந்த நாங்கள் அப்போதாக அயர்ந்து தூங்கிவிட்டபடியால், பிள்ளை பெற்றதையும் கண்டிலோம்; உணர்ந்த பின்பு இவள் 'கான் பெற்றேன்' என்று சொல்லக்கேட்டோம்' என்று சொல்லும்படியாக ஸ்ரீகிருஷ்ணன் தோன்றினனதலால் 'தத்துக்கொண்டாள் கொலோ தானே பெற்றாள் கொலோ' என்றனர்; அன்றியும் இக் கண்ணபிரானுடைய லோக விலக்ஷணமாய் அதிமானுஷமான குணசேஷ்டிதங்களைக் கண்டவர் இப்பிராட்டி இவள் பிள்ளையென்று சொல்லமுடியாதபடியும், யசோதைதானும் "இம்மாயம் வல்ல பிள்ளை நம்பி! உன்னை என் மகனே யென்பர் நின்றார்" என்று சொல்லும்படியும் ஸ்ரீகிருஷ்ணனிருப்பதும் இவ்வாறு கூறுவதற்குக் காரணமாகும். பிறர்க்கு அடங்காமையும் செருக்கும்பற்றி, கண்ணனுக்குச் சிங்கக்குட்டி உவமை; தாய்க்கு அடங்காதவன் ஊர்க்கு அடங்காதலால், 'அசோதையிளஞ்சிங்கம் கோபாலகோளரி' என்றார். ... ... (எ)

125 கொங்கைவன்கூனிசொற்கொண்டு * குவலயத்
துங்கக்கரியும் பரியுமிராச்சியமும் *
எங்கும்பரதற்கருளி வன்கானடை *
அங்கண்ணனப்பூச்சிகாட்டுகின்றான் அம்மனேயப்பூச்சிகாட்டுகின்றான். (அ)

கொங்கை வல் கூனி சொல் கொண்டு { (முதுகில்) முழையெழும்பினைப் போன்ற பலிஷ்டமான கூனையுடையளான மந்தரையினுடைய சொல்லை அங்கீகரித்து
எங்கும் குவலயம் துங்கம் கரியும் { எல்லா விடங்களிலுமுள்ள இப்பூமியில் (இருப்பவற்றுள்) சிறந்தனவான யானைகளையும்

பரியும் இராச்சியமும் { (அங்ஙனைத்) குதிரைகளையும் ராஜ்யத்தையும்
பரதற்கு அருளி { பரதாழ்வானுக்கு கொடுத்து விட்டு
வல் கான் அடை { கொடியகாட்டை அடைந்த
அம் கண்ணன் { அழகிய கண்ணையுடையனை இவன்
அப்பூச்சி காட்டுகின்றான் * * *—.

* * *—ஒற்றுமைநயத்தால் ராமக்ருஷ்ணரிருவரையும் ஒருவராகவே கொண்டு ஆழ்வார் இங்ஙனருளிச்செய்கின்றனரென்க. கோங்கை—கூனுக்கு அடைமொழி; வல்—கூனிக்கு அடைமொழி. பெருமாளுடைய வநயாத்ரைக்கு மூலகாரணம் கூனியானமைபற்றிக் 'கூனி சொற்கொண்டு' என்றார். [அங்கண்ணன்] கண்ணழகையாகவுமாம்; பட்டாபிஷேகத்துக்காகக் கட்டின காப்போடே காட்டுக்குப்போகச் சொன்னபோதும் முகங்கருகாமல் மலர்ந்து முடிதவிர்ந்து சடை புனைந்து நாட்டைவிட்டுக் காட்டுக்குப்போன பெருமாளுடைய மஹாகுணத்தை வியந்து, அவனது தயையை அழகிதாகக் கொண்டாடுகிறபடி. ... ... (அ)

126 பதகமுதலிவாய்ப் பட்டகளிறு *
கதறிக்கைகூப்பி யென்கண்ணுக்கண்ணுவென்ன *
உதவப்புள்ளூர்ந்து அங்குறுதுயர்தீர்த்த *
அதகன்வந்தப்பூச்சிகாட்டுகின்றான் அம்மனேயப்பூச்சிகாட்டுகின்றான். (கூ)

பதகம் முதலே வாய் பட்ட களிறு — பாதிக்குந் தன்மையையுடைய முதலையின் வாயிலே அகப்பட்ட ஸ்ரீ கஜேந்த்ராழ்வான்

கதறி கை கூப்பி என் கண்ணை கண்ணை என்ன — (தன் வருத்தந்தோன்றக்) கூப்பிட்டு கையைக்குவித்துக்கொண்டு 'என்னுடைய கண்ணனே!' என்று பல காலழைக்க

அங்கு உதவ — அப்போதே (அந்தயானைக்கு) உதவும்படி

புள் ஊர்ந்து — பெரியதிருவடியை வாஹநமாகக்கொண்டு சென்று

உறு துயர் தீர்த்த — (அந்தயானையின்) மிக்கவருத்தத்தை போக்கின

அதகன் — (ஆச்ரித ரக்ஷணத்தில்) மிடுக்கையுடையவன்

வந்து *** அப்பூச்சி காட்டுகின்றனன்—.

* * *—பதகம்—"பாதகம்" என்ற வடசொல் விகாரம். உறுதுயர்—ப்ரயாஸப்பட்டுப் பறித்த பூ பயனற்றுப் போகின்றதே என்னுந் துயர்; "உயிர் போகிறதே" என்ற துயரன்று. உறு—மிகுதியைக் குறிப்பதோர் உரிச்சொல். அதகன்—ஹதகன்; ஆச்ரித விரோதியை ஹதம்பண்ணுமவன் (கூ)

127 வல்லாளிலங்கைமலங்கச் சரந்துரந்த *
வில்லாளனே விட்டுசித்தன்விரித்த *
சொல்லார்ந்தவப்பூச்சிப் பாடலிவைபத்தும்
வல்லார்போய் * வைகுந்தம்மன்னியிருப்பரே. (ம)

வல் ஆள் இலங்கை மலங்க — பலசாலிகளான வீரர்களையுடைய லங்கையானது பாழாம்படி

சரம் துரந்த — அம்பைச்செலுத்திய

வில் ஆளனே — வில்லையேந்தி ஸ்ரீராமனாகி (முன்பு) திருவவதரித்த கண்ணனைப்பற்றி

விட்டுசித்தன் விரித்த — பெரியாழ்வார் பரக்கக் கூறிய

சொல் ஆர்ந்த அப்பூச்சி பாடல் இவை பத்தும் வல்லார் — சொல் நிரம்பிய அப்பூச்சி காட்டுதலைப்பற்றிய இப்பத்துப் பாசுரங்களையும் கற்கவல்லவர்

போய் — (அர்ச்சிராதி மார்க்கமாகப்) போய்

வைகுந்தம் மன்னி இருப்பர் — ஸ்ரீவைகுண்டத்திலே நித்யவாஸம் பண்ணப்பெறுவர்.

* * *—சொல்லார்ந்த பாடலிவைபத்தும்=இத்திருமொழியில் அர்த்தத்தைக்கவனிக்கவேணுமென்கிற கஷ்டமும் வேண்டா; சொல்லே பரமபோக்யம் என்று கருத்து. ... (கo)

அடிவரவு:—மெச்சு மலே காயும் இருட்டு சேப்பூண்ட செப்பு தத்துக் கொங்கை பத்தகம் வல்லாள் அரவணை. ... ...

இரண்டாம்பத்து—இரண்டாந்திருமொழி, அரவணையாய்

(க்ருஷ்ணனே முலையுண்ண அழைத்தல்)

128 அரவணையாயாயரேறே அம்மமுண்ணத்துயிலெழாயே *
இரவுமுண்ணுதுறங்கிநீபோய் இன்றுமுச்சிகொண்டதாலோ *
வரவுங்காணேன்வயிறசைந்தாய் வனமுலைகள்சோர்ந்துபாய *
திருவுடையவாய்மடுத்துத் தீமொத்துதைத்துப்பருகிடாயே. (க)

அரவு அணையாய் — சேஷசாயியானவனே!

ஆயர் ஏறே — இடையர்களுக்குத் தலைவனே!

நீ இரவும் உண்ணாது — நீ (நேற்று) இரவும் முலையுண்ணாமல்

உறங்கி போய் — உறங்கிப் போய்விட

இன்றும் உச்சி கொண்டது ஆல் — இப்போதும் (பொழுது விடிந்து) உச்சிப்போதாய் விட்டது; ஆதலால்

அம்மம் உண்ண — முலையுண்பதற்கு

துயில் எழாய் — (தூக்கந்தெளிந்து) படுக்கையிலிருந்து எழுந்திருக்கவேணும்;

வரவும் காணேன் — (நீயே எழுந்திருந்து அம்ம முண்ண வேணுமென்று சொல்லி) வருவதையுங் கண்டிலேன்;
சோர்ந்து பாய — பால் வடிந்து பெருகிக் கொண்டிருக்க
(உனக்குப் பசியில்லை யென்போமென்றால்)
வயிறு அசைந்தாய் — வயிறுந்தளர்ந்து நின்றாய்;
திரு உடைய வாய் மடுத்து — அழகை உடைய (உன்) வாயையைவத்து
வன முலைகள் — (எனது) அழகிய முலைகள் (உன்மேல் அன்பினால் நெறித்து,)
நினைத்து உதைத்து பருகிடாய் — செருக்கி கால்களாலே உதைத்துக் கொண்டு முலை யுண்பாய்.

* * *—எம்பெருமான் திருவனந்தாழ்வானிற படுக்கையைவிட்டு க்ருஷ்ணனாகத் தோன்றினாலும், "சென்றாற் குடையாம்" என்கிறபடியே அவ்வக்காலத்துக்கு ஏற்ற கோலங்கொண்டு அடிமை செய்பவனான அத்திருவனந்தாழ்வான் கண்ணபிரானுக்குத் திருப்பள்ளி மெத்தையாய் இனிது தூங்குவதற்கு உதவுகின்றானாதலால் 'அரவணையாய்' என்றது. 'அம்ம முண்ண' என்றது—கண்ணனுடைய குழந்தைப் பருவத்திற்குத் தக்கபடி யசோதை சொல்லியதாகும். இரண்டாமடியின் ஈற்றிலுள்ள ஆல்—'ஆதலால்' என்பதன் சிதைவு; இனி, ஆல், ஓ—இரண்டும் இரக்கப் பொருளைக் குறிப்பனவென்றுமாம். வயிறசைந்தாய்=நன்னூலார், "சினவினை சினையொடும் முதலொடுஞ் செறியும்" என்றாராதலின், சினவினை முதலோடு செறிந்த தென்க ... ... (க)

129 வைத்தநெய்யுங்காய்ந்தபாலும் வடிதயிரும்நறுவெண்ணெயும் *
இத்தனையும்பெற்றறியேன் எம்பிரான்நீபிறந்தபின்னை *
எத்தனையுஞ்செய்யப்பெற்றாய் ஏதுஞ்செய்யேன்கதம்படாதே *
முத்தனையமுறுவல்செய்து மூக்குறிஞ்சிமுலையுணையே. (உ)

எம் பிரான் — எமது உபகாரகனே!
வைத்த நெய்யும் காய்ந்தபாலும் வடி தயிரும் நறு வெண்ணெயும் — உருக்கிவைத்த நெய்யும் (ஏடு மிகுதியாகப் படியும் படி) காய்ந்தபாலும்(உள்ள நீரை) வடித்துக் கட்டியாயிருக்கிற தயிரும் மணம் மிக்க வெண்ணெயும்
இத்தனையும் — (ஆகிய) இவையெல்லாவற்றையும்
நீ பிறந்த பின்னை பெற்று அறியேன் — நீ பிறந்த பிறகு கண்டதில்லை;
எத்தனையும் செய்ய பெற்றாய் — (நீ) வேண்டினபடி யெல்லாம் நீ செய்யலாம்;
ஏதும் செய்யேன் — (அப்படி நீ செய்வதற்காக நான் உன்னை) ஒன்றும் செய்யமாட்டேன்;
கதம் படாதே — நீ கோபியாதே கொள்;
முத்து அனைய முறுவல் செய்து — முத்தைப்போல் வெண்ணிறமாக மந்தஸ்மிதம்பண்ணி
மூக்கு உறிஞ்சி முலை உணை — மூக்கை உறிஞ்சிக்கொண்டு முலை உண்பாயாக.

* * *—இத்தனையும் பெற்றறியேன்—(நெய் பால் முதலியவற்றில்) சிறிதும் சேஷித்திருக்கக் கண்டிலேன் என்றுமாம். கதம் - கோபம். குழந்தைகள் மூக்குறிஞ்சி முலையுண்ணுதல்—இயல்பு. (உ)

130 தந்தம்மக்களழுதுசென்றால் தாய்மாராவார்தரிக்ககில்லார் *
வந்துநின்மேற்பூசல்செய்ய வாழவல்லவாசுதேவா *
உந்தையாருன்திறத்தரல்லர் உன்னைநானென்றுரப்பமாட்டேன் *
நந்தகோபனணிசிறுவா நான்சுரந்தமுலையுணையே. (ஊ)

தம்தம்மக்கள் அழுது சென்றால் — தங்கள்தங்களுடைய பிள்ளைகள் அழுதுகொண்டு (தம்தம் வீட்டுக்குப்)போனால்
தாய்மார் ஆவார் தரிக்க கில்லார் — (அக்குழந்தைகளின்) தாய்மார்கள் பொறுக்க மாட்டாதவர்களாய்
வந்து நின்மேல்பூசல் செய்ய வாழ வல்ல வாசுதேவா — (தம் குழந்தைகளை அழைத்துக்கொண்டு) வந்து உன்மேல் பிணங்க (அதைக் கண்டு) மகிழவல்ல கண்ணபிரானே!
உந்தையார் உன் திறத்தர் அல்லர் — உன் தகப்பனார் உன் விஷயத்தைக் கவனிப்பவரல்லர்;
நான் உன்னை ஒன்று உரப்பமாட்டேன் — (அபலையான) நானும் (நீ மில் கைவளர்ந்த) உன்னை சிறிதும் அதட்ட வல்லமையற்றிராகின்றேன்;
(இவையெல்லாங் கிடக்க;)
நந்தகோபன் அணி சிறுவா — நந்தகோபருடைய அழகிய சிறுபிள்ளாய்!
நான் சுரந்த முலை உணாய் — எனது பால் சுரந்திருக்கிற முலையை உண்பாயாக.

* * *—கண்ணபிரான் தன்னேராயிரம் பிள்ளைகளோடு விளையாடப் போலல் எல்லாப்பிள்ளை களையும்போல விராமல் அப்பிள்ளைகளை அடித்துக் குத்தி விளையாடுவனுதலால் அழுதுகொண்டே வீட் டுக்குச் செல்லும். இப்பிள்ளைகளைக்கண்ட தாய்மார்கள் மனம்பொருமல் நொந்து அப்பிள்ளைகளைக் கண்ணுங் கண்ணீருமாய் அழைத்துக்கொண்டுவந்து காட்டி இவன்மேலே பழிசொல்லிப் பிணங்குதல் இவன் அதனுல் சற்றும் இளைப்புக்கொள்ளாமல் அதையே த்ருப்தியாகக்கொண்டு ஸந்தோஷிப்பனென் பதைக் காட்டுகிறார்—முதலிரண்டடியால். [வாசுதேவா] பசுவின் வயிற்றிலே புலி பிறந்ததே! யென்கிறார். உன்+தந்தையார் = உந்தையார்; மரூஉமொழி. ... ... (க)

131 கஞ்சன்றன்னுற்புணர்க்கப்பட்ட கள்ளச்சகடுகலக்கழிய *
பஞ்சியன்னமெல்லடியால் பாய்ந்தபோதுநொந்திடுமென்று *
அஞ்சினேன்காணமரர்கோவே ஆயர்கூட்டத்தளவன்றுலோ *
கஞ்சனையுன்வஞ்சனையால் வலிப்படுத்தாய்முலையுணயே. (ச)

அமரர் கோவே — தேவர்களுக்குத் தலைவனே! (நீ)
கஞ்சன் தன்னுல் புணர்க்கப்பட்ட — கம்ஸனுலே (உன்னைக்கொல்வதற்காக) ஏற்படுத்தப்பட்ட
கள்ளம் சகடுகலக்கு அழிய — க்ருத்ரிம சகடமானது கட்டு (க்குலிலிருந்து உருமாறி) அழிந்துபோம்படி
பஞ்சி அன்ன மெல் அடியால் — பஞ்சைப்போன்ற ஸுகுமாரமான உன் திருவடிகளினுல்
பாய்ந்த போது — உதைத்தபோது
நொந்திடும் என்று — (உன் திருவடிகளுக்கு) நோவுண்டாகுமே யென்று
அஞ்சினேன்காண் — பயப்பட்டேன்காண்; (என்னுடைய அச்சம்)
ஆயர் கூட்டத்து அளவு அன்று ஆல் — இடையர் குரளினுடைய (அச்சத்தின்) அளவல்ல காண்;
கஞ்சனை — (உன்னைக் கொல்வதற்காக மிக்க வஞ்சனைகளைச் செய்த) கம்ஸனை
உன் வஞ்சனையால் வலிப் படுத்தாய் — உன்னுடைய வஞ்சனையினுலே (உன்கையிற்) சிக்கும் படிசெய்து கொன்றவனே!
முலை உணாய்—.

* * *—"பெற்றவளுக்கன்றே தெரியும் பிள்ளையினருமை" என்றபடி உன்னைப் பெற்றதாயான எனக்குத்தான் உன் அருமை தெரியுமாதலால், மற்றை இடையர் குரளின் அச்சமெல்லாம் ஒன்றுசேர்ந் தாலும் நான் 'உனக்கு ஏதேனும் தீங்குநேரிடுமோ!' என்று கொண்டுள்ள அச்சத்திற்கு ஒப்பாகாது என்றபடி. கான்—முன்னிலையசை; தேற்றப்பொருள் தரும். ஆல்-தோற்றம்; ஒ-இரக்கம். பஞ்சி-பஞ்சு; கடைப்போலி. ... ... (ச)

132 தீயபுந்திக்கஞ்சனுன்மேல் சினமுடையன்சோர்வுபார்த்து *
மாயந்தன்னுல்வலிப்படுக்கில் வாழகில்லேன்வாசுதேவா *
தாயர்வாய்ச்சொல்கருமங்கண்டாய் சாற்றிச்சொன்னேன்போகவேண்டா *
ஆயர்பாடிக்கணிவிளக்கே அமர்ந்துவந்தென்முலையுணயே. (ஞ)

வாசுதேவா — கண்ணபிரானே!
தீய புந்தி கஞ்சன் உன் மேல் சினம் உடையன் — துஷ்டபுத்தியையுடைய கம்ஸனனவன் உன்பக்கலிலே கோபங்கொண்டவனுயிராநின்றான்;
சோர்வு பார்த்து — (நீ) தனியாயிருக்கும் ஸமயம் பார்த்து
மாயம் தன்னுல் வலிப்படுக்கில் — வஞ்சனையால் (உன்னை) அகப்படுத்திக்கொண்டால்
வாழ கில்லேன் — (நான்) பிழைத்திருக்கசக்தையல்லேன்;
தாயர் வாய் சொல் கருமம் கண்டாய் — தாய்மார்களுடையவாயினுற் சொல்லுவது அவச்யகர்த்தவ்ய கார்யமாகும்;
சாற்றி சொன்னேன் — வற்புறுத்திச் சொல்லுகிறேன்;
போகவேண்டா — (நீ ஓரிடத்திற்கும்) போகவேண்டா;
ஆயர் பாடிக்கு அணி விளக்கே — திருவாய்ப்பாடிக்கு மங்கள தீபமானவனே!
அமர்ந்து வந்து — பொருந்தி வந்து
என் முலை உணாய்—.

* * *—தேவகியின் மக்கள்றுவரைக் கல்லிடைமோதி சிசுஹத்திசெய்த கொடிய கம்ஸன் 'தேவகியின் எட்டாவது கர்ப்பம் உனக்குப் பகை' என்ற ஆகாயவாணிபிறந்தும், பின்பு பூர்க்கை சொல்லிப் போனதாலும் 'நம்பகைவன் கைதப்பிப்போய் நமக்கு அணுகவொண்ணாத இடத்திலே வளராநின்றான்; அவனை எப்படியாவது கண்டுபிடித்துக் கொன்றுவிடவேணும்' என்று உன்மேல் மிகவும் கறுக்கொண்டு ஆஸுர ப்ரக்ருதிகளை ஸ்தாவர ஜங்கமங்களான வடிவுகளைக்கொண்டு நீ திரியுமிடங்களில் நிற்கும்படி ஏவியிருக்கிறான்! அவன் அவர்களைக்கொண்டு நீ துணையற்றுத் திரியும்போது பார்த்து உனக்குத் தெரியாமலே தப்பமுடியாதபடி வஞ்சனையால் உன்னைப் பிடித்துக்கொண்டால் பின்னை என்னால் உயிர் தரித்திருக்கமுடியாது; என் பேச்சைப்பேணி இங்கேயே இருக்கக்கடவாய் என்று வற்புறுத்துகின்றாள். [அணிவிளக்கே] உனக்கு ஏதேனும் நீங்குவந்தால் இத்திருவாய்ப்பாடியடங்கலும் இருள் மூடிவிடுங்காணென்கிறாள். சோர்வு—தளர்ச்சி: இலக்கணையால் தனிப்பட்டிருத்தலைக் காட்டும். அமர்ந்து உவந்து என்றும் பிரிக்கலாம். ... ... (சு)

133 மின்னனையநுண்ணிடையார் விரிகுழல்மேல்நுழைந்தவண்டு *
இன்னிசைக்கும்வில்லிபுத்தூர் இனிதமர்ந்தாயுன்னைக்கண்டார் *
என்னநோன்புநோற்றாள்கொலோ இவனைப்பெற்றவயிறுடையாள் *
என்னும்வார்த்தையெய்துவித்த இருடீகேசாமுலையுணுயே. (சூ)

மின் அனைய	மின்னலையொத்த
நுண்	ஸூக்ஷ்மமான
இடையார்	இடையையுடைய பெண்களின்
விரி குழல் மேல்	விரிந்த [பரந்த] கூந்தலின் மேல்
நுழைந்த	(தேனை உண்ணப்) புகுந்த
வண்டு	வண்டுகள்
	(தேனையுண்டு களித்து)
இன் இசைக்கும்	இனிதாக ஆளத்திவைத்துப் பாடாகின்ற
வில்லிபுத்தூர்	ஸ்ரீவில்லிபுத்தூரிலே
இனிது	போக்யமாக
அமர்ந்தாய்	எழுந்தருளியிருப்பவனே!
உன்னை கண்டார்	உன்னைப்பார்த்தவர்
இவனை பெற்றவயிறு உடையாள்	இவனைப் (பிள்ளையாகப்) பெற்ற வயிற்றையுடையவள்
என்ன நோன்பு நோற்றாள் கொலோ	என்ன தபஸ்ஸை பண்ணினாளோ!
என்னும்	என்று கொண்டாடிச்சொல்லுகிற
வார்த்தை	வார்த்தையை
எய்துவித்த	(எனக்கு) உண்டாக்கின
இருடீகேசா	ஹ்ருஷீகேசனே!
	முலை உணுய்—.

* * *—[என்ன நோன்பித்யாதி] ரூபகுணசேஷ்டிதாதிகளாலே இப்படி லோகவிலக்ஷணனாயுள்ள இப்பிள்ளையைப் பெற்றாளும் ஒருத்தியே!, அவள்தான் பூர்வஜன்மத்தில் நோற்ற நோன்பு என்னே! என்று என்னைப் பலரும் கொண்டாடும்படி பிறந்தவனே! என்று—யசோதை, கண்ணன் தன் வசப்படுகைக்காகப் புகழ்ந்து கூறுகிறபடி. ஹ்ருஷீகேசன்—(ரூபகுணாதிகளாலே) ஸர்வேந்த்ரியங்களையும் கவருமவன். ... ... (சு)

134 பெண்டிர்வாழ்வார்நின்னைப்பாரைப் பெறுதுமென்னுமாசையாலே *
கண்டவர்கள்போக்கொழிந்தார் கண்ணினையாற்கலக்கநோக்கி *
வண்டுலாம்பூங்குழலினார் உன்வாயமுதமுண்ணவேண்டி *
கொண்டுபோவான்வந்துநின்றார் கோவிந்தாமுலையுணுயே. (எ)

கண்டவர்கள்	(உன்னைப்) பார்த்தவர்களான
பெண்டிர் வாழ்வார்	(தமது கணவர்க்கு) மனைவியாயிருக்கின்ற ஸ்த்ரீகள்
நின் ஒப்பாரை பெறுதும் என்னும் ஆசையாலே	உன்னைப்போன்ற குழந்தைகளைப் பெறுவோம் (பெறவேணும்) என்கிற ஆசையினாலே
போக்கு ஒழிந்தார்	(உன்னைவிட்டுப்) போகலொத்தவிர்ந்தார்கள்;
வண்டு உலாம் பூ குழலினார்	வண்டுகள் ஸஞ்சரிக்கிற புஷ்பங்களை யணிந்த கூந்தலையுடையவர்கள்
கண் இணையால் கலக்க நோக்கி	(தமது) இரண்டு கண்களினாலும் (உனது) திருமேனி முழுவதும் பார்த்து
உன் வாய் அமுதம் உண்ண வேண்டி	உன்னுடைய அதராம்ருதத்தை பாகம் பண்ண ஆசை கொண்டவர்களாய்
கொண்டு போவான் வந்து நின்றார்	(உன்னை) எடுத்துக்கொண்டு போவதற்கு வந்து நிற்கிறார்கள்;
கோவிந்தா	கோவிந்தனே!
	முலை உணுய்—.

* * *—முதலிரண்டடியால்—பதிவிரதைகளான பெண்களின் மனோரதமும், பின் ஒன்றரை யடியால்—யுவதிகளாய் போகமநுபவிக்க விரும்பின பெண்களுடைய மனோரதமும் சொல்லுகிறதென்க. பெண்டிர் = இர்—பலர்பால் விகுதி. பெறுதும்—தன்மைப்பன்மை வினைமுற்று. கலக்க நோக்குதல்—ஒவ்வொரு அங்கத்தினுடையவும் ஸௌந்தர்யத்தை நோக்குதல். ... ... (எ)

135 இருமலோபோலெதிர்ந்தமல்லர் இருவரங்கமெரிசெய்தாய் * உன்
திருமலிந்துநிகழுமார்வு தேக்கவந்தென்னல்குலேறி *
ஒருமுலையைவாய்மடுத்து ஒருமுலையைநெருடிக்கொண்டு *
இருமுலையும்முறைமுறையாய் ஏங்கியேங்கியிருந்துணுயே. (அ)

இரு மலோபோல் எதிர்ந்த மல்லர் இருவர் அங்கம் ஈரி செய்தாய் — இரண்டு மலைபோலே (வந்து) எதிர்த்துகின்ற (சாணூர * முஷ்டிகரென்னும்) இரண்டு மல்லர்களுடைய உடம்பை (பயத்தாலே) எரியும்படி செய்தவனே!

வந்து என் அல்குல் ஏறி — (நீ) வந்து என் மடிமீது ஏறிக்கொண்டு

உன் திரு மலிந்து நிகழும் மார்வு தேக்க — உன்னுடைய அழகுநிரம்பி விளங்குகின்ற மார்பானது (முலைப்பாலால்) நிறையும்படி

ஒரு முலையை வாய் மடுத்து — ஒரு முலையை வாயிலே வைத்துக்கொண்டு

ஒரு முலையை நெருடிக் கொண்டு — மற்றொரு முலையை (கையிலே) நெருடிக்கொண்டிருந்து

(மிகுதியாயிருப்பதபற்றிப் பால் வாயிலடங்காமையினால்,)

ஏங்கி ஏங்கி — இளைத்திளைத்து (இப்படி)

இரு முலையும் முறை முறை ஆய் — இரண்டு முலையையும் மாறி மாறி

இருந்து உணுய் — பொருந்தியிருந்து உண்பாயாக

* * *—திருமலிந்து நிகழுமார்வு = திரு-ஸ்ரீயாட்டி என்றுமாம். தேக்க—'தேங்க' என்பதன் விகாரம். ஒரு முலையை வாயில் வைத்துக்கொண்டு மற்றொரு முலையின் காம்பைக் கையால் நெருடிக்கொண்டு பால் மிகுதியினால் மூச்சுத்தணக்க மாறிமாறி முலையுண்ணுதல்-குழந்தைகளினியல்பு; "ஒருகையாலொரு முலைமுகம் நெருடா - வாயிலே முலையிருக்க" என்ற பெருமாள் திருமொழியும் காண்க. இது - தன்மை நவிற்சி [ஸ்வபாவோக்தி]. ... ... (அ)

136 அங்கமலப்போதகத்தில் அணிகொள்முத்தஞ்சிந்தினற்போல் *
செங்கமலமுகம்வியர்ப்பத் தீமைசெய்திம்முற்றத்துடே *
அங்கமெல்லம்புழுதியாக அளையவேண்டாவம்மவிம்ம *
அங்கமரர்க்கமுதளித்த அமரர்கோவேமுலையுணுயே. (கூ)

அம்மீ — தலைவனே!

(அஸுரர்கள் கையிலகப்பட்டு இறவாமலிருக்கும்படி தேவர்கள் அம்ருதத்தைப் பெறுதற்கு உன்னையடைந்த)

அங்கு — அக்காலத்திலே

விம்ம — (அவர்கள்வயிறு) நிரம்பும்படி

அமரர்க்கு அமுது அளித்த அமரர் கோவே — (அந்த) தேவர்களுக்கு (க்ஷீராப்தியைக் கடைந்து) அம்ருதத்தை (எடுத்துக்) கொடுத்த தேவாதிராஜனே!

அம் கமலம் போது அகத்தில் — அழகிய தாமரைப் பூவினுள்ளே

அணி கொள் முத்தம் சிந்தினல் போல் — அழகிய முத்துகள் சிந்தியதை ஒத்திருக்கும்படி

செம் கமலம் முகம் வியர்ப்ப — செந்தாமரை மலர்போன்ற (உனது) முகமானது வியர்த்துப்போக

இ முற்றத்து டே தீமை செய்து — இந்த முற்றத்திலேயே தீம்பைச் செய்துகொண்டு

அங்கம் எல்லாம் புழுதி ஆக அளைய வேண்டா — உடம்பெல்லாம் புழுதிபடியும்படி புழுதியளையாதே;

முலை உணுய் — முலையுண்ணவாராய்.

* * *—புழுதியளையாமல் முலையுண்ண வாராய் என்கிறாள். செந்தாமரைபோன்ற திருமுகத்திலே வியர்வைத்துளிகள் அரும்புதற்கு ஒரு அபூதோபமை கூறுகின்றார் முதலடியில் - தாமரைமலரில் முத்துக்கள் சிந்தியிருந்தாலொக்குமென்கிறார். ... ... (கூ)

137 ஓடவோடக்கிண்கிணிகள் ஒலிக்குமோசைப்பாணியாலே *
பாடிப்பாடிவருகின்றுயைப் பற்பநாபனென்றிருந்தேன் *
ஆடியாடியசைந்தசைந்திட்டு அதனுக்கேற்றகூத்தையாடி *
ஓடியோடிப்போய்விடாதே உத்தமாநீமூலியுணுயே. (கo)

ஓட ஓட ஒலிக்கும் கிண் கிணிகள் ஓசைப்பாணியாலே — (குழந்தைப்பருவத்துக்குத் தக்கபடி) பதறி ஓடுவதனால் சப்திக்கின்ற பாதச்சதங் கைகளினுடைய ஓசையாகிற சப்தத்தால்

பாடி பாடி — இடைவிடாது பாடிக் கொண்டு

அதனுக்கு ஏற்ற கூத்தை — அப்பாட்டிற்குத் தகுந்த ஆட்டத்தை

அசைந்து அசைந்திட்டு — வலப்புறமாகவும் இடப்புறமாகவும் அசைந்து

ஆடி ஆடி வருகின்றுயை — ஆடிக்கொண்டு வருகின்ற உன்னை

பற்பநாபன் என்று இருந்தேன் — (வேறொராபரணம் வேண்டாதபடி) பத்மத்தை நாபியிலுடையவனென்று எண்ணியிருந்தேன்;

நீ ஆடி ஓடி ஓடிபோய் விடாதே — நீ ஆடிக்கொண்டே (என் கைக்கு எட்டாதபடி) ஓடிப் போய்விடாதே.

மூலி உணுய்—.

* * *—கண்ணபிரான் நடந்துவரும்போது திருவடிச் சதங்கைகளின் ஓசைதானே பாட்டாயிருக்கு மென்கை. [பற்பநாபனென்றிருந்தேன்] 'கொப்பூழிலெழு கமலப்பூவழகர்' என்றபடி வேறொரு ஆபரணமும் வேண்டாமல் திருநாபிகமலமே ஆபரணமாம்படி யிருப்பானொருவனன்றே இவன்! இவனுக்கு வேறொருபாட்டும் கூத்தும் வேணுமோ? சதங்கையோசையும் நடையழகுமே பாட்டும் ஆட்டமுமாய் அமைந்த ஆச்சரியம் என்னே! என்று வியப்புக்கொண்டிருந்தேன் என்க. இனி,—இவன் அழிந்து கிடந்த வுலகத்தை நாபிகமலத்திலுண்டாக்கினவனன்றே, ஆகையால் நம்முடைய ஸத்தையையும் தருகைக்காக வருகிறானென்றிருந்தேன் என்றும் விசேஷார்த்தம் கூறுவர். ... (கo)

138 வாரணிந்தகொங்கையாய்ச்சி மாதவாவுண்ணென்றமாற்றம் *
நீரணிந்தகுவளைவாசம் நிகழநாறும்வில்லிபுத்தூர் *
பாரணிந்ததொல்புகழான் பட்டர்பிரான்பாடல்வல்லார் *
சீரணிந்தசெங்கண்மால்மேல் சென்றசிக்கைபெறுவர்தாமே. (கக)

வார் அணிந்த கொங்கை ஆய்ச்சி — கச்சை அணிந்துகொண்டிருக்கிற ஸ்தனங்களையுடைய யசோதை

மாதவா உண் என்ற மாற்றம் — 'மாதவனே! உண்பாயாக' (மூலியை) என்று (வேண்டிச்) சொன்ன வார்த்தையைக் குறித்தனவான,—

நீர் அணிந்த குவளை வாசம் நிகழ நாறும் — நீர்நிலையை அழகுடைய தாகச்செய்கிற செங்கழுநீரின் நல்ல வாசனை ஒரே மாதிரியாக எப்போதும் வீசுகின்ற

வில்லிபுத்தூர் — ஸ்ரீ வில்லிபுத்தூரிலவதரித்தவரும்

பார் அணிந்த தொல் புகழான் — பூமிமுழுவதும் அழகாகப் பரவிய பழமையான கீர்த்தியையுடையவருமான

பட்டர்பிரான் — பெரியாழ்வார் அருளிச்செய்த

பாடல் வல்லார் — பாசுரங்களை ஓதவல்லவர்,

சீர் அணிந்த செம் கண் மால் மேல் — குணங்களாலழகிய சிவந்த திருக்கண்களையுடைய திருமாலிடத்தில்

சென்ற சிக்கை பெறுவர் — பதிந்த மநஸ்ஸை அடைவார்கள்.

* * *—வாணிந்த கொங்கையாய்ச்சி—ராஜாக்களுக்கு போக்யமான பொருளை வேலைக்காரர் மூடிக்கொண்டுபோவதுபோல, கண்ணனுக்கு விருப்பமான ஸ்தனங்களை யசோதை பிறர் கண்படாதபடி கச்சினால்மறைத்து வைப்பாளென்க. மாற்றம் (ஆகிய) பாடல் எனத்தொடரும். வாசம்—'வாஸநா' என்ற வடசொற்சிதைவு. ... ... (கக)

அடிவரவு:—அரவணை வைத்த தந்தம் கஞ்சன் தீய மின் பெண்டிர் இருமலி அங்கமலம் ஓட வாரணி போய்.

(அந்தாதித்தொடையாலமைந்த கேசவாதி பன்னிருநாமப்பதிகம்.)

(கண்ணனைக் காதுகுத்த அழைத்தல்)

139 போய்ப்பாடுடையரின்தந்தையுந்தாழ்த்தான் பொருதிறற்கஞ்சன்கடியன் *
காப்பாருமில்லைகடல்வண்ணனுன்னைத் தனியேபோயெங்குந்திரிதி *
பேய்ப்பால்முலையுண்டபித்தனே கேசவநம்பியுன்னைக்காதுகுத்த *
ஆய்ப்பாலர்பெண்டுகளெல்லாரும்வந்தார் அடைக்காய்திருத்திநான்வைத்தேன். (க)

பாடு உடைய நின் தந்தையும் போய் தாழ்த்தான் = பெருமையை உடைய உன் தகப்பனும் (வெளியே) போய் (திரும்பி வருவதற்குத் தாமதித்தான்;

பொருதிறல் கஞ்சன் கடியன் = போர்செய்யுந்திறமையுள்ள கம்ஸனே (உன் விஷயத்தில்) மிகவும் க்ரூரனுயிரா நின்றான்;

கடல் வண்ணன் உன்னை காப்பாரும் இல்லை = கடல்போன்ற [ச்ரமஹர மான] வடிவையுடைய வனே! உன்னை பாதுகாப்பவரான வேறொருவரும் (இங்கு இப்போது) இல்லை;

(நீயோவென்றால்,)

தனியே போய் எங்கும் திரிதி = அஸஹாயனய்ப் போய் கண்டவிடங்களிலும் திரியாகின்றாய்;

பேய் முலை பால் பூதனையின் முலைப்பாலை

உண்ட பித்தனே = உட்கொண்ட மதிமயக்கமுள்ளவனே!

கேசவ நம்பி = கேசவனே! பூர்ணனவனே!

உன்னை காதுகுத்த = உன் காதுகளைக் குத்துவதற்காக

ஆய்பாலர் பெண்டுகள் எல்லாரும் வந்தார் = இடைச்சியர்களாகிய எல்லாப்பெண்டுகளும் வந்திரா நின்றார்கள்;

நான் அடைக்காய் திருத்தி வைத்தேன் = நானும் (அவர்களுக்கு ஸம்பாவிக்கவேண்டிய) வெற்றிலைபாக்குகளை ஆய்ந்து வைத்திருக்கிறேன்.

* * *—கண்ணபிரானே!' உன்னை ரக்ஷிப்பதில் ஸமர்த்தரான உன் தகப்பனரும் 'பசுக்களின் பின்னே போய்வருகிறேன்; வருகிறவரையில் நீ பிள்ளையைக் காப்பாற்றிக்கொண்டிரு' என்று சொல்லிச்சென்று இன்னும் வரவில்லை. கம்ஸனே உன்மேல் கறுக்கொண்டிருப்பதனால் எந்த ஸமயத்தில் யாரை அனுப்புவனே, என்ன செய்வனே, ஒன்றுந்தெரியவில்லை; உபாயமறிந்து காப்பாற்றவல்ல வேறொருவரும் இங்கில்லை; நீயோ பயமறியாமல் எங்குந் திரிகின்றாய்; பல பிள்ளைகளுடன் நான் திரிந்து கொண்டிருந்தால் என்னை யாரறிவாரென்று நீ நினைக்கவேண்டா; [கடல் வண்ணா!] உன் வடிவழகே உன்னைக் கோட்சொல்லிக்கொடுக்குமே. மேலும் பிள்ளைகளோடே விளையாடுகிறுயென்று சொல்லவும் முடியாதபடி நீ அவர்களை விட்டும் தனியே பலவிடங்களில் திரிகின்றாய்: இப்படியெல்லாம் ஓடிப்போகாமல் இட்ட வா; உன்னைக் காதுகுத்த ஆய்ப்பாடிப் பெண்டுகளெல்லோரும் வந்திருக்கிறார்கள்; நான் அவர்கட்குக்கொடுக்க வெற்றிலை பாக்கு எல்லாம் ஸித்தப்படுத்தி வைத்திருக்கிறேன்—என்று சொல்லியழைக்கிறள் யசோதை. அடை—இலை = வெற்றிலை; காய்—பாக்கு. ... (க)

140 வண்ணப்பவளமருங்கினிற்சாத்தி மலர்ப்பாதக்கிண்கிணியார்ப்ப *
நண்ணித்தொழுமவர்சிந்தைபிரியாத நாராயணவிங்கேவாராய் *
எண்ணற்கரியபிரானே திரியையெரியாமேகாதுக்கிடுவன் *
கண்ணுக்குநன்றுமழகுமுடைய கனகக்கடிப்புமிவையா. (உ)

நண்ணி தொழுமவர் சிந்தை பிரியாத நாராயண = கிட்டிவணங்குகிறவர்களுடைய மநஸ்ஸில் நின்றும் விட்டு நீங்காத நாராயணனே!

(நீ,)

வண்ணம் பவளம் மருங்கினில் சாத்தி = (மிக செங்நிறத்தையுடைய பவழவடத்தை திருவரையிலே சாத்திக்கொண்டு

மலர் பாதம் கிண்கிணி ஆர்ப்ப = தாமரைமலர்போன்ற பாதங்களிலணிந்த சதங்கை ஒலிக்கும்படி

இங்கே வாராய்—;

(உன்மேல் அன்பில்லாதவர்களுக்கு)

எண்ணற்கு அரிய பிரானே = நினைப்பதற்கு அருமையான ஸ்வாமியே!

திரியை எரியாமே காதுக்கு இடுவன் { நூல்திரியை எரிச்சலுண்டாகாதபடி (உன்) காதுகளுக்கு இடுவேன்;
(அப்படித் திரியையிட்டுக் காது பெருக்கினால், பின்பு நீ அணிய வேண்டியவையான
கண்ணுக்கு நன்றும் அழகுடைய கனகம்கடிப்பும் இவை { கண்களுக்கு மிகவும் அழகையுடைய (தர்சநீயமான) பொற்கடிப்பும் இவையாகும்;
ஆ ஆச்சர்யம்.

* * *—கீழ்ப்பாசுரத்தில் காதுகுத்த அழைத்தாள்; காதில் நூல்திரியை இட அழைக்கிறாள்—இப்பாட்டில். காதுகுத்தி நூல்திரியை இட்டுக் காது பெருக்கியபின்பு காதணிகளையிடுதல், இயல்பு. அழகும் = உம்—இசைநிறை. கடிப்பு—கர்ணபூஷணம். ... ... (உ)

141 வையமெல்லாம்பெறும்வார்கடல்வாழும் மகரக்குழைகொண்டுவைத்தேன் *
வெய்யவேகாதில்திரியையிடுவன் நீவேண்டியதெல்லாந்தருவன் *
உய்யவிவ்வாயர்குலத்தினில்தோன்றிய ஒண்சுடராயர்கொழுந்தே *
மையன்மைசெய்திளவாய்ச்சியருள்ளத்து மாதவனேயிங்கேவாராய். (ங)

உய்ய இ ஆயர் குலத்தினில் தோன்றிய { (நாங்களெல்லாம்) உஜ்ஜீவிக்கும்படி இந்த இடையர் குலத்திலே வந்து பிறந்த
ஒள் சுடர் ஆயர் கொழுந்தே { மிக்க ஒளியையுடைய இடையர்களின் கொழுந்து போன்றவனே!
வையம் எல்லாம் பெறும் { இந்த உலகங்களையெல்லாம் (தனக்கு) விலையாகக் கொள்ளக்கூடிய
வார் கடல் வாழும் மகரம் குழை { பெரிய கடலிலே வாழ்கின்ற சுறுமீனின் வடிவமையச் செய்யப்பட்ட மகரக் குழையை
கொண்டுவைத்தேன் { (உன் காது பெருக்கியிடும் படி) கொண்டுவந்திருக்கிறேன்;
(உன்காதுக்குத் தினவு உண்டாகாமலிருக்கும் பொருட்டு)
வெய்யவே வெம்மையுடனிருக்கும்படி
காதில் திரியை இடுவன் { (உன்) காதிலே திரியை இடுவேன்;
நீ வேண்டியது எல்லாம் தருவன் { நீ விரும்பிய பொருள்களையெல்லாம் கொடுப்பேன்;
மாதவனே ச்ரியஃபதியே!
இள ஆய்ச்சியர் உள்ளத்து { மடமைப் பருவமுடைய இடைப்பெண்கள் மனஸிலே
மையன்மை செய்து { வ்யாமோஹத்தைச் செய்து கொண்டு
இங்கே வாராய்—.

* * *—நீ இப்போது திரியையிட்டுக்கொண்டால் பின்பு பொற்கடிப்பு மாத்திரமல்ல, மிகச் சிறந்த மகரகுண்டலங்களையும் அணியலாம்; காது தினவு தின்னுமிலிருக்க வெப்பமாகவே திரியையிடுவேன்; உனக்கு வேண்டிய பணியாரங்களையும் பழங்களையும் தருவேன்; நீ வரவேணும் என்று சொல்லி யழைக்கிறாள். வெப்பு தினவுக்குப் பரிஹாரமாதலால் 'வெய்யவே காதில் திரியையிடுவேன்' என்றாள். ... ... (ங)

142 வணங்றுடையவயிரக்கடிப்பிட்டு வார்காதுதாழ்ப்பெருக்கி *
குணங்றுடையரிக்கோபாலபிள்ளைகள் கோவிந்தாநீசொல்லுக்கொள்ளாய் *
இணங்றுமகியவிக்கடிப்பிட்டால் இனியபலாப்பழந்தந்து *
சுணங்றணிமுலையுண்ணத்தருவன்நான் சோத்தம்பிரானிங்கேவாராய். (சு)

இ கோபாலர் பிள்ளைகள் } இந்த இடைப்பிள்ளைகள்
வார் காது தாழ பெருக்கி { (தமது) நீண்ட காதை (தோளளவும்) தொங்கும்படி பெருக்கி
வணம் நன்று உடைய வயிரம் கடிப்பு இட்டு { நல்லநிறத்தை மிகுதியாகவுடைய வயிரக்கற்கள் அழுத்திச் செய்த கடிப்பை அணிந்துகொண்டு
(இப்படி தமது தாய்மார் சொல்லியப்படி செய்து)
நன்று குணம் உடையர் { ஸத்குணசாலிகளாயிருக்கின்றார்கள்;
கோவிந்தா நீ சொல்லு கொள்ளாய் { கோவிந்தனே! நீயோவென்றால் தாயாகியனன்னுடைய சொல்லே கேட்கிறாயில்லை;
(இப்படியிராமல் எனது சொல்லைக் கேட்டு)
இணை நன்று அழகிய இ கடிப்பு இட்டால் { ஒன்றோடொன்றொத்து மிகவும் அழகியவனவாயிருக்கிற இக்கடிப்பை அணிந்து கொண்டால்,

நான் இனிய பலாப் பழம் தந்து சுணம் நன்று அணி முலை உண்ண தருவன் } நான் நித்திப்பான பலாப் பழங்கள் கொடுத்து சுணங்கையுடைய மிகவுமழகியமுலையையும் (நீ) பருகும்படி கொடுப்பேன்;

பிரான் சோத்தம் } ஸ்வாமியே! (உனக்கு) ஸ்தோத்ரம்;

இங்கே வாராய்—.

* * *—கண்ணனைப்புகழ்ந்து அழைத்தும் அவன் வாராமையாலே, மற்றையிடைப்பிள்ளைகள் காதுபெருக்கிக் காதணிகளே யணிந்திருப்பதைக் காட்டி அப்பிள்ளைகளைக் கொண்டாடிச் சொல்லி 'இவர் களைப்போல நீயும் தாய் சொல் கேட்டுக் காது பெருக்கிக்கொள்ள வேண்டாவோ? அப்படிக் காது பெருக்கிக் கடிப்பை யணிந்தால் நானுனக்கு நல்ல பலாப்பழம் தருவதோடு முலையையும் உண்ணத் தருவேன்; அப்பா! உன்னைக் கும்பிடுகிறேன், நீ இங்கே வரவேணும்' என்று கெஞ்சியழைக்கிறாள். வயம்—'வண்ணம்' என்பதின் தொகுத்தல். வயிரக்கடிப்பு—வஜ்ரகுண்டலம். ... (சு)

143 சோத்தம்பிரானென்றிரந்தாலுங்கொள்ளாய் சுரிகுழலாரோடுநீபோய் *
கோத்துக்குரவைபிணைந்திங்குவந்தாற் குணங்கொண்டிடுவனேம்பீ *
பேர்த்தும்பெரியனவப்பந்தருவன் பிரானேதிரியிடவோட்டில் *
வேய்த்தடந்தோளார்விரும்புகருங்குழல் விட்டுவேநீயிங்கேவாராய். (நி)

'தலைவனே! உனக்கு ஓரஞ்ஜலி' என்றுசொல்லி (வரவேணுமென்று) கெஞ்சிக் கேட்டுக்கொண்டாலும் (நீ என் சொல்லைக்) கேட்டு வருகிறதில்லை;

பிரான் சோத்தம் என்று இரந்தாலும் கொள்ளாய்

குணம் கொண்டிடுவனே } (உனக்குத்) தருகியான்தாக (நான்) கொள்வனே?;

பிரானே உபகாரகனே!

நம்பீ நீ சுரி குழலாரொடு போய் } பூர்ணனே! நீ சுருண்ட கூந்தலையுடைய பெண்களோடு (ஏகாந்த ஸ்தலத்திலே) போய்

கிரி இட ஒட்டில் } கிரியை (உன்காதிலே) இடலாம்படி நீ இசைந்தால்

கோத்து குரவை பிணைந்து இங்கு வந்தால் } கைகோத்துக் குரவைக் கூத்தாடி (பின்) இங்கே வந்தால்

பேர்த்தும் பெரியன அப்பம் தருவன் } மறுபடியும் மறுபடியும் பெரிய பெரிய அப்பங்களைக் கொடுப்பேன்;

வேய் தட தோளார் விரும்பு கரு குழல் விட்டுவே } மூங்கில்போன்ற பெரிய தோள்களையுடைய மகளிர் விரும்புகைக்கு உரிய கரு நிறமான கூந்தலையுடைய விஷ்ணுவே!

(நீ அப்படிச் செய்ததை)

நீ இங்கே வாராய்—.

* * *—கண்ணபிரான், 'நேற்று நீ என்னை அழைக்கையில் நான் வர, அப்போது வந்ததைக் குணமாகக் கொள்ளாமல் என்னை அடித்தவளன்றே நீ' என்ன: யசோதை, 'நீ பெண்களுடன் தனியிடத்திலே குரவையாடி வந்தால் அதை நான் எப்படி குணமாகக் கொள்ளக்கூடும்' என்கிறளென்க. பேர்த்தும்—புரி; புரி; 'அது சிறிது, இது சிறிது' என்று சொல்லி, யசோதை கொடுக்கும் அப்பங்களைக் கண்ணன் தள்ளிவிடவும், பின்னும் அவன் விரும்பும்படி பெரிய பெரிய அப்பங்களைக் கொடுப்பேனென்று கருத்து. குரவைக் கூத்தாவது—ஒவ்வொரு ஆய்ச்சியின் பக்கத்திலும் ஒவ்வொரு கண்ணனுகத்தோன்றி நின்று கைகோத்தாடல்; இதைத்தான் ராஸக்ரீடை என்பது. (தி)

144 விண்ணெல்லாங்கேட்கவழுதிட்டாய் உன்வாயில்விரும்பியதுனைநான்நோக்கி *
மண்ணெல்லாங்கண்டென்மனதுள்ளேயஞ்சி மதுசூதனேயென்றறிந்தேன் *
புண்ணேதுமில்லையுன்காதுமறியும் பொறுத்திறைப்போதிருகம்பி *
கண்ணுவெள்கார்முகிலேகடல்வண்ண காவலனேமுலையுணியே. (சு)

(மண்ணைத் தின்றதற்காக நான் உன்னை அடிக்கையில், நீ)

விண் எல்லாம்கேட்க அழுதிட்டாய் } மேலுலகங்கள் முழுவதும் கேட்கும்படி அழுதாய்;

(நீ அப்படி அழுகையில்)

நான் விரும்பி உன் வாயில் அதனை நோக்கி } (தாயாகிய) நான் ஆதரங் கொண்டு உன் வாயிலே (நீ மண் உண்ட) அதை பார்க்கும்போது

(அவ்வாயில்)

மண் எல்லாம் தண்டு — லோகங்களே யெல்லாம் பார்த்து
என் மனத்துள்ளே அஞ்சி — என் மனஸ்ஸினுள்ளே பயப் பட்டு
மதுசூதனே என்று — 'இவன் மதுஸூதனேயாவ' னென்று
அறிந்தேன் — தெரிந்துகொண்டேன்;
(உன்னுடைய காதிலே)
புண் ஏதும் இல்லே — புண் ஒன்றுமில்லே;
உன் காது மறியும் — (கடிப்பிடும்போது) உன்காது சிறிது மடங்கும்;

(அதைமாத்திரம்)

இறை போது பொறுத்து இரு — க்ஷணகாலம் பொறுத்துக் கொண்டிரு;

நம்பி கண்ணன் கார் முகிலே கடல்வண்ணன் காவலனே — பூர்ணனே! கண்ணனே! காளமேகம்போன்றவனே! கடல்போன்ற திருநிறத் தவனே! ரக்ஷண வ்யாபாரத்தில் வல்லவனே!

என் மூலை உணாய்—.

* * *—காதில் கடிப்பிடவேணுமென்று யசோதை அழைத்துக்கொண்டிருக்கவும் கண்ணன் வராதிருந்ததுமல்லாமல் மண்ணையும் தின்றனனை, அதற்காக் அவள் கோபங்கொண்டு அவனைய்டிக்க, அப்போது அவன் தனது வாயைத் திறந்துகொண்டு ஆகாய முழுதும் தொனிபரவும்படி அழ, அதுகண்டு யசோதை 'இவன் எவ்வளவு மண் தின்றிருப்பன்' என்பதை வாயிலுள்ள மண்சுவட்டைக்கொண்டு தெரிந்துகொள்வோமென்று அவன் வாயை விரும்பிப் பார்க்கையில்; அவன் வாயினுள்ளே உலகங்களையெல்லாம் முன்போலக்கண்டு 'இவனை நமது மகனென்றெண்ணி அடித்தோமே!. இவன் ஸர்வேச்வரனன்றே' என்று அஞ்சியிருக்க, கண்ணன் தன்னை யசோதை இப்படி வேறுக எண்ணினதைப் பொறுமல் அதனை அவள் மறந்து தன்பிள்ளையென்றே கொண்டு தழுவும்படி ஸமீபித்துநிற்க, அப்போது அவள் காதில் கடிப்பையிடும்படிமுயல, கண்ணன் அதுகண்டு 'அம்மா! என் காது குத்தியதனால் புண்ணாயிருக்கிறது. நோகும்; ஆதலால் அது எனக்கு வேண்டா' என்று மறுக்க, யசோதை 'உன் காதில் புண் ஒன்றுமில்லை, ஆறிவிட்டது; இந்தக் குண்டலத்தை இடும்போது உன் காது சற்று மறியும்; அதை மாத்திரம் பொறுத்துக்கொள்ளவேணும்' என்று சொல்ல, கண்ணன் அதற்கு இசைந்துநிற்க, யசோதை அவனைப் பலபடியாகக் கொண்டாடிக் கடிப்பிடும்போது உண்டாகும் நோவைப் பொறுப்பதற்காக முலையுண்ணவேணுமென்று விரும்புகின்றனள். நோக்கி-நோக்க: எச்சத்திரிபு. அஞ்சி-'இவனை நம்மகனென்றெண்ணியடித்தோமே, இவன்றனிப்போது நாராயணனையிராகின்றனே' என்று அஞ்சினளென்க. (சு)

145 முலையேதும்வேண்டேனென்றோடி நின்காதிற்கடிப்பைப்பறித்தெறிந்திட்டு *
மலையையெடுத்துமகிழ்ந்துகன்மாரிகாத்துப் பசுநிரைமேய்த்தாய் *
சிலையொன்றிறுத்தாய்திரிவிக்கிரமா திருவாயர்பாடிப்பிரானே *
தலைநிலாப்போதேயுன்காதைப்பெருக்காதே விட்டிட்டேன் குற்றமேயன்றே. (எ)

முலை ஏதும் வேண்டேன் என்று ஓடி — 'முலையையும் (மற்றுமுள்ள பக்ஷணங்களை) எதையும் (நான்) விரும்பமாட்டேன்' என்றுசொல்லிஓடிப்போய்
நின் காதில் கடிப்பை பறித்து எறிந்திட்டு — (நான்) உன் காதிலிட்ட காதணியை பிடுங்கி யெறிந்துவிட்டு
மலையை எடுத்து மகிழ்ந்து கல் மாரி காத்து பசு நிரை மேய்த்தாய் — கோவர்த்தனமலையை (குடையாக) எடுத்துத் தூக்கி திருவுள்ளமுகந்து கல் வர்ஷத்தில் நின்றும் (இடையர் முதலானரை) ரக்ஷித்து பசுக்களின் நிரனை மேய்த்தவனே!
சிலை ஒன்று இறுத்தாய் — (பிராட்டியை மணம்புரிய) முறித்தவனே!
திரிவிக்கிரமா — த்ரிவிக்ரமனே!
திரு ஆயர் பாடி பிரானே — திருவாய்ப்பாடிக்கு உபகாரகனே!
தலை நிலா போதே — தலைநிற்காமலிருக்கிற இளங் குழந்தைப் பருவத்திலேயே
உன் காதை பெருக் காது விட்டிட்டேன் — உன் காதை(த் திரியிட்டு)ப் பெருக்காமல் விட்டுவைத்தேன்;
(அப்படி விட்டுவைத்தது,
குற்றமே அன்றே — என்னுடைய அபராதமன்றே?

* * *—கண்ணனைப் பலவிதமாகப் புகழ்ந்து யசோதை முலையுண்ணச் சொன்னதும் அவனும் அப்படியே முலையுண்ணத் தொடங்க, அப்போது யசோதை அவன் காதில் கடிப்பை இட்டாளாக, கண்ணன் மிகவும் கோபித்து 'நீ கொடுக்கும் முலையும் வேண்டா, ஒன்றும் வேண்டா' என்று சொல்லி அவளுக்குப் பிடிபடாமல் அப்பால் ஓடிச்சென்று காதிலிட்ட காதணியையும் பிடுங்கி எறிந்துவிட்டனனை,

யசோதை மறுபடியும் பலவிதமாகப் புகழ்ந்துகொண்டு காதில்கடிப்பை இடப்போகையில் அவன் இசை யாமலிருக்க, யசோதையானவள், 'அப்பா! உன்மேல் ஒரு குற்றமுமில்லை; தலை செவ்வனே நில்லாத இளங் குழந்தைப பருவத்திலேயே உன் காதைப் பெருக்காமல் விட்டிட்டது என்னுடைய குற்றமே காண்' என்று வெறுத்துக் கூறுகின்றாள். ... ... (எ)

அவதாரிகை:—எட்டாம்பாட்டில், முதலிரண்டடி கண்ணன் பாசுரமாகவும் பின்னிரண்டடி யசோதை பாசுரமாகவும் செல்லுகிறது.

146 என்குற்றமேயென்றுசொல்லவும்வேண்டாகாண் என்னைநான்மன்னுண்டேனுக *
அன்புற்றுநோக்கியடித்தும்பிடித்தும் அனைவர்க்குங்காட்டிற்றிலையே *
வன்புற்றரவின்பகைக்கொடி வாமனநம்பியுன்காதுகள்தூரும் *
துன்புற்றனவெல்லாந்தீர்ப்பாய்பிரானே திரியிட்டுச்சொல்லுகேன்மெய்யே. (அ)

(நான் இப்போது உன் சொல்லைக் கேளாமலிருப்பது)

என் குற்றமே என்று சொல்லவும் வேண்டாகாண் — 'என்னுடைய குற்றமே யாகும்' என்று நீ சொல்லுதலும் வேண்டியதில்லை காண்: (ஏனெனில்;)

நான் மண் உண்டேன் ஆக — நான் மண்ணுண்டதாகச் சொல்லி

என்னை பிடித்தும் — (மண் தின்னுதல்) என்னை பிடித்துக்கொண்டும்

அன்பு உற்று நோக்கி அடித்தும் — அன்பை ஏறிட்டுக்கொண்டு [அன்புடையவள்போல] (என்வாயைப்) பார்த்து (என்னை) அடித்தும்

அனைவர்க்கும் காட்டிற்றிலையே — எல்லார்க்கும் நீ காட்டின திலையோ?

(என்று கண்ணன் சொல்ல அதற்கு யசோதை)

வல் புற்று அரவின் பகை கொடி வாமன நம்பி — க்ரோதியான கருடனைக் கொடியாகவுடைய வாமன மூர்த்தியே!

(இப்படி நீ ஒன்றுசொல்ல நானொன்று சொல்வதாகப் போதுபோக்கிக்கொண்டிருந்தால்)

உன் காதுகள் தாரும் — உன்னுடைய (குத்தின) காதுகள் தூர்த்துவிடும்;

(உன்னை யடுத்தவர்கள்)

உற்றன துன்பு எல்லாம் தீர்ப்பாய் பிரானே — அடைந்தனவான துன்பங் களையெல்லாம் போக்கும வனே! உபகாரகனே!

திரி இட்டு மெய்யே சொல்லு கேன் — (உன்காதில்) திரியையிட்டு (உன்னை யிடிக்கமாட்டே னென்று நீ நம்பும்படி யான) சபதத்தைச் சொல்லுவேன்

(என்கிறாள்.)

* * *—கண்ணன், யசோதையைநோக்கி, 'நான் மண் தின்றிருக்கையில் மண் தின்றதாகப் பழியையேறிட்டு என்மேல் அன்புடையாள்போல என்னைப் பிடித்துக்கொண்டு என் வாயில் மண்தின்ற சுவடு இருக்கிறதாவென்று பார்த்து அது இல்லாதிருக்கையிலேயே அதை கண்டதாகச் சொல்லியடித்து அவ்வளவோடு நில்லாமல் 'பாருங்கோள் பெண்காள்! இவன் மண் தின்னும்படியை' என்று எல்லார்க்கும் நீ காட்டினையன்றே' என்ன, யசோதை 'இப்போது நாம் வழக்காடிக்கொண்டிருந்தால் போது போகின்றது, உன் காதுகள் தூர்ந்துவிடும்' என்ன, கண்ணன் 'என்னைப் பிடித்தல் அடித்தல் செய்வ தில்லையென்று உறுதியாக ஒரு வார்த்தை சொல்' என்ன, யசோதை 'நான் திரியிடும்படி நீ இசைந்து வா, பின்பு அங்ஙனமே ஸத்யம் பண்ணித்தருகிறேன்' என்கிறாள். ... ... (அ)

147 மெய்யென்றுசொல்லுவார்சொல்லைக்கருதித் தொடுப்புண்டாய்வெண்ணெயை
கையைப்பிடித்துக்கரையுரலோடென்னைக் காணவேகட்டிற்றிலையே* [யென்று*
செய்தனசொல்லிச்சிரித்தங்கிருக்கில் சிரீதராவுன்காதுதூரும் *
கையில்தரியையிடுகிடாய் இந்நின்றகாரிகையார்சிரியாமே. (கூ)

சொல்லுவார் சொல்லை மெய் என்று கருதி — சொன்னர் சொன்ன பேச்சு சுக்களையெல்லாம் (நீ) மெய்யென்றெண்ணி

வெண்ணெயை தொடுப்பு உண்டாய் என்று — 'வெண்ணெயைக் களவு கண்டு உண்டாய்' என்று பழிசுமத்தி

தையை பிடித்து	(என்) கையைப்பிடித்து
காண	(பலரும்) கண்டு பரிஹஸிக்கும்படி
கரை உரலோடு என்னை கட்டிற் நிலையே	விளிம்பிலே வேலை செய்திருக்கிற உரலில் (ஒன்றும் திருடாத) என்னை நீ கட்டவில்லையா ?
(என்று கண்ணன் யசோதைமேல் குற்றஞ்சாட்டிச் சிரித்துநிற்க)	
(அதற்கு யசோதை சொல்லுகிறாள்,):-	
சிரீதரா	ஸ்ரீதரனே !
செய்தன சொல்லி சிரித்து அங்கு இருக்கில்	(நான் முன்பு) செய்த வற்றை சொல்லிக் கொண்டு புன்சிரிப்புச் செய்து அங்கே [தூரத்தில்] (பொழுது போக்கிக் கொண்டு) இருந்தால்
உன் காது தூரும்	உன் காதுகள் தூர்ந்து விடும்;
இ நின்ற காரிகை யார் சிரியாமே	(உன் முன்னே) நிற்கிற இந்தப் பெண்கள் சிரியாதபடி
கையில் திரியை இடு கிடாய்	(என்) கையிலுள்ள திரியை இட்டுக்கொள்வாயாக.

***—கண்ணன் யசோதையை நோக்கி 'உன் பேச்சை நம்பக்கூடாது; நீ சொல்லுவார் சொல்வதைக்கேட்டு என்னை தண்டிப்பவளன்றே ?' என்ன, யசோதை 'உன்னை நான் அப்படிச் செய்தது ண்டோ ?' என்ன, கண்ணன் 'இவன் வெண்ணெய் திருடினனென்று யாரோ சொல்ல, அதை உண்மையென்று நம்பி என் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டுபோய் என்னை எல்லாரும் பார்த்துப் பரிஹஸிக்கும்படி உரலோடு கட்டவில்லையோ ?' என்று சிரித்து நிற்க, யசோதை 'நீ இப்படியெல்லாம் நான் செய்தவற்றைச் சொல்லிச் சிரித்துக்கொண்டிருந்தால் உன் காதுகள் தூர்ந்துவிடுமே; தவிரவும், உன்பக்கல் அன்பினால் உன்னைவிட்டுப் போகமாட்டாமல் நிற்கிற இந்தப்பெண்கள் 'சொன்னக்காது, கூழைக்காது' என்று சொல்லி உன்னை ஏசாதபடி உன் காதைப்பெருக்க, இத்திரியையணிந்துகொள்ள வேணும்' என்று மறுபடியும் திரியிடப் பார்க்கிறாள். சொல்லுவார் என்றது—கொள்ளத்தகாத பேச்சையுடையவர் என்ற கருத்தைக்காட்டும். தொடுப்பு—(ஒருவரையும் கேளாமல்) தொடுதல்; எனவே, களவாம்; 'பு' விகுதிபெற்ற தொழிற்பெயர். கிடாய்—முன்னிலை யசைச்சொல். ... ... (கஅ)

148 காரிகையார்க்குமுனக்குமிழுக்குற்றென் ? காதுகள்வீங்கியெரியில் *
தாரியாதாகில்தலைநொந்திடுமென்று விட்டிட்டேன்குற்றமேயன்றே *
சேரியிற்பிள்ளைகளெல்லாருங்காதுபெருக்கித் திரியவுங்காண்டி *
ஏர்விடைசெற்றிளங்கன்றெறிந்திட்ட இருடீகேசாவென்றன்கண்ணே. (கo)

காதுகள் வீங்கி எரியில்	(என்னுடைய) காதுகள் வீங்கிப்போய், எரிச்சலெடுத்தால்,
காரிகை யார்க்கும் உனக்கும்	(பரிஹஸிக்கிற,) பெண்களுக்கும் (என்காதில் திரியிடநிற்கிற) உனக்கும்
உற்ற (து) இழுக்கு என்	நேரிட்டதான சேதம் ஏதேனுமுண்டோ?
(என்று கண்ணன் சொல்ல, யசோதை சொல்லுகிறாள்),—	
(நீ இன்னும் இளம்பருவத்திலிருந்தபோது)	
தாரியாது ஆகில்	'(திரியை இடுவது) பொருமம் போலல்
தலை நொந்திடும் என்று	(குழந்தைக்குத்) தலைநோய் உண்டாய்விடுமே' என்று நினைத்து
விட்டிட்டேன்	(முன்னமே காதுகுத்தாமல்) இருந்துவிட்டேன்;
(அன்பினால் அப்படி விட்டிருந்தது)	
குற்றமே அன்றே	(என்னுடைய) குற்றமேயாமல்லவா ?
ஏர் விடை செற்று இளங்கன்று எறிந்திட்ட இருடீகேசா	அழகிய ரிஷபத்தின் வடிவு கொண்டுவந்த அரிஷ்டாஸுரனை அழித்து சிறிய கன்றின்வடிவாய் வந்த வத்ஸாஸுரனை (குணிலாகக்கொண்டு விளாமரத்தின்மேல்) வீசிய ஹ்ருஷீகேசனே !
என்றன் கண்ணே	எனக்குக் கண்போன்றவனே !
சேரியில் பிள்ளைகள் எல்லாரும் காதுபெருக்கி திரியவும் காண்டி	இவ்விடைச்சேரியில் எல்லாப்பிள்ளைகளும் காதைப்பெருக்கிக்கொண்டு திரியாநிற்பதையும் நீ காணுகின்றாயன்றே !

***—நீயும் இடைச்சேரியிலுள்ள பிள்ளைகளைப்போலக் காதுபெருக்கிக்கொண்டிருக்க வேண்டுமென்பது, குறிப்பெச்சம். தாரியாதாகில்—ஈட்டல் விகாரம்; தரியாதாகில்: நீ குழந்தையாயிருக்கும்போதே உன் காதைக்குத்தித் திரியிட்டிருக்கவேணும்; அப்போது, ஐயோ ! சிறிய குழந்தையாயிற்

றே! காது குத்தினால் ஒருகால் குழந்தைக்குத் தலைவலியுண்டாகுமோ என்றஞ்சிக் குத்தாமல் விட்டது என்னுடைய குற்றமன்றேவென்று வெறுத்துச் சொல்லுகிறாளென்க. காண்டி—முன்னிலையொருமை வினைமுற்று. ... ... (கஎ).

149 கண்ணைக்குளிரக்கலந்தெங்கும்நோக்கிக் கடிகமழ்பூங்குழலார்கள் *
எண்ணத்துளென்றுமிருந்துதித்திக்கும் பெருமானேயெங்களமுதே *
உண்ணக்கனிகள்தருவன் கடிப்பொன்றும்நோவாமே காதுக்கிடுவன் *
பண்ணைக்கிழியச்சகடமுதைத்திட்ட பற்பநாபாவிங்கேவாராய். (கக)

குளிர — மனங்குளிரும்படி
கண்ணை — (உன்) கண்ணை (இடைப்பெண்களுடைய கண்களோடு)
கலந்து — சேர்த்து,
எங்கும் நோக்கி — (அவர்களுடைய) வடிவம் முழுவதும் பார்த்து,
கடி கமழ் பூ குழலார்கள் எண்ணத்துள் — வாஸனை வீசுகின்ற புஷ்பங்களணிந்த கூந்தலையுடைய அப்பெண்களினுடைய மநஸ்ஸினுள்ளே
என்றும் இருந்து நித்திக்கும் பெருமானே — எப்போதுமிருந்துகொண்டு ரஸிக்கின்ற பெருமையையுடையவனே!
எங்கள் அமுதே — எங்களுக்கு அம்ருதம் போன்றவனே!
உண்ண கனிகள் தருவன் — (நீ) தின்பதற்கு (காவல் முதலிய) பழங்களைக் கொடுப்பேன்;
கடிப்பு ஒன்றும் நோவாமே காதுக்கு இடுவன் — காதணியை சிறிதும் நோவாதபடி (உன்னுடைய) காதிலே இடுவேன்;
சகடம் — (அஸுராவிஷ்டமான) சகடத்தை
பண்ணை கிழிய உதைத்திட்ட — கட்டுக்குலையும்படி உதைத்தருளின
பற்பநாபா — பத்மநாபனே!
இங்கே வாராய்—.

* * *—'கண்ணைக்குளிரக்கலந்து' என்கிறவித்தால்—சக்ஷுர்ப்ரீதி [தாராமைத்ரீ] எனப்படுங் கண்கலவியைச் சொல்லுகிறதென்க. கண்ணை என்பதில், ஐகாரத்தை அசையாகக்கொண்டு, கடிகமழ் பூங்குழலார்கள் கண்குளிர்ச்சியடைய உன்னுடம்பு முழுதும் பொருந்தப் பார்த்து (உன்னோடு கலக்கும்படிகளை யெண்ண, அவர்களுடைய அந்த) எண்ணத்தின்படியே எப்போதும் அவர்களுக்கு போக்ய நிலைமையிருக்கும் பெருமானே! என்று உரைத்தலும் ஏற்கும். பண்ணைக்கிழிய=பண்ணை—செவ்வை; அது குலையும்படி. ஸந்திபந்தங்கள் சிதறும்படி. ... ... (கக)

150 வாவென்றுசொல்லியென்கையைப்பிடித்து வலியவேகாதிற்கடிப்பை
நோவத்தரிக்கிலனக்கிங்கிழுக்குற்றென் காதுகள்கொந்திடுங்கில்லேன் *
நாவற்பழங்கொண்டுவைத்தேன் இவைகாணம்பீ * முன்வஞ்சமகளைச்
சாவப்பாலுண்டுசகடறப்பாய்ந்திட்ட தாமோதராவிங்கேவாராய். (கஉ)

(கண்ணன் யசோதையைப்பார்த்து)
வா என்று சொல்லி என் கையைபிடித்து — '(நான் காதில் கிரிகிட இங்கே) வருவாயாக' என்று சொல்லி என் கையைப் பிடித்துக்கொண்டு
காதில் நோவ கடிப்பை இங்கு வலிபவே தரிக்கில் — காதிலே நோம்படி காதணியை இப்போது பலாத்காரமாக இட்டால்
உனக்கு இழுக்கு உற்ற(து) என் — உனக்கு சேதமுண்டானதென்ன?
காதுகள் நொந்திடும் — (என்) காதுகள் நோவெடுக்கும்;
கில்லேன் — (அதைப் பொறுக்கவல்லி) வல்லமையுடையேனல்லேன்:

(என்று மறுத்துச்சொல்ல;-
யசோதை சொல்லுகிறாள்:—)
கம்பி — பூர்ணனே!
நாவல் பழம்கொண்டு வைத்தேன் — (உனக்கு இஷ்டமான) நாவற்பழங்களை கொண்டு வைத்திருக்கிறேன்;
இவை காணப் முன் — இவற்றைப் பார்ப்பாயாக; முன்பு
வஞ்சம் மகள் சாவ பால் உண்டு — வஞ்சனையுள்ள பூதனையானவள் மாளும்படி (அவளது) முலைப்பாலை பாநம்பண்ணி,
சகடு இற பாய்ந்திட்ட — சகடாஸுரன் முறியும்படி (கால்களால்) தாக்கி யுதைத்த
தாமோதரா! இங்கே வாராய்—.

* * *—முன்னடிகள் கண்ணபிரானுடைய வார்த்தை, பின்னடிகள் யசோதையின் வார்த்தை. தரிக்கில்—தரிப்பிக்கில்; பிறவினையில் வந்த தன்வினை. "இவை ஆணை" என்பதும் பாடம். மகனை = ஐ—அசை. ... ... (கஉ)

151 வார்காதுதாழப்பெருக்கியமைத்து மகரக்குழையிடவேண்டி *
சீராலசோதைதிருமாலைச்சொன்னசொல் சிந்தையுள்நின்றுதிகழ *
பாரார்தொல்புகழான்புதுவைமன்னன் பன்னிருநாமத்தாற்சொன்ன *
ஆராதவந்தாதிபன்னிரண்டும்வல்லார் அச்சுதனுக்கடியாரே. (கங)

அசோதை — யசோதையானவள்
வார் காது தாழ பெருக்கி அமைத்து — (ஸ்வபாவமாகவே) நீண்டிருக்கிற காதுகளை தொங்கும்படி வளர்த்து ஓரளவிலே நிற்கும்படி செய்து
மகரம் குழை இட வேண்டி — மகரகுண்டலங்களை இடவிரும்பி
திருமாலை சீரால் சொன்ன சொல் — ச்ரீயபதியான கண்ணனை சிறப்புக்குறையாதபடி அழைத்த சொற்கள்
சிந்தையுள் நின்று திகழ — (தம்முடைய) மநஸ்ஸிலே நிலையாகப் பொருந்தி விளங்க,
(அச்சொற்களை),

பார் ஆர் தொல் புகழான் புதுவை மன்னன் — பூமியில் நிரம்பிய பழமையான யசஸ்ஸையுடைய வரும் ஸ்ரீவில்லிபுத்தூருக்கு நிர்வாஹகருமான பெரியாழ்வார்
பன்னிரு நாமத்தால் சொன்ன — த்வாதசநாமங்களோடுஞ் சேர்த்துச் சொல்லியழைத்த
ஆராத அந்தாதி பன்னிரண்டும் வல்லார் — (ஓத ஓத) த்ருப்திபிறவாத அந்தாதித் தொடையிலாகிய பன்னிரண்டு பாட்டுக்களையும் ஓதவல்லவர்கள்
அச்சுதனுக்கு அடியார் — எம்பெருமானுக்கு அடிமை செய்யப்பெறுவர்.

* * *—திருநாமங்கள் பன்னிரண்டாதலால், பாசுரங்களும் பன்னிரண்டாயின: பயனுரைத்த பாட்டு ஒன்று. ... ... (கஉ)

அடிவரவு:—போய் வண்ணம் வையம் வணம் சோத்தம் விண் மூலை என் மெய் காரிகை கண்ணை வா வார் வெண்ணெயளைந்த.

இரண்டாம்பத்து—நான்காந்திருமொழி, வெண்ணெயளைந்த.

(கண்ணனை நீராடவருமாறு அழைத்தல்.)

---

152 வெண்ணெயளைந்தகுணுங்கும் விளையாடுபுழுதியுங்கொண்டு *
தின்னெனவிவ்விராவுன்னைத் தேய்த்துக்கிடக்கநான்ஒட்டேன்
எண்ணெய்புளிப்பழங்கொண்டு இங்கெத்தனைபோதுமிருந்தேன் *
கண்ணலரியபிரானே நாரணநீராடவாராய். (க)

வெண்ணெய் அளைந்த குணுங்கும் — வெண்ணெயளைந்ததனாலான மொச்சைநாற்றத்தையும்
விளையாடு புழுதியும் கொண்டு — விளையாடுவதினால் படிந்த புழுதியையும் (உடம்பிற்) கொண்டிருந்து, (அதனால்,)
இ இரா தேய்த்து கிடக்க — இன்றை இரவில் (உடம்பைப் படுக்கையிலே) தேய்த்துக்கொண்டு படுத்திருக்கும்படி (விட)
உன்னை நின்னை நான் ஒட்டேன் — உன்னை நிச்சயமாக நான் ஸம்மதிக்கமாட்டேன்;

எண்ணெய் புளி பழம் கொண்டு — (தேய்த்துக்கொள்வதற்கு வேண்டிய) எண்ணெயையும் புளிப்பழத்தையும் ஸித்தமாக வைத்துக்கொண்டு
இங்கு — இங்கே
எத்தனை போதும் இருந்தேன் — எவ்வளவு காலமாக [வெகுகாலமாக] (உன் வரவையெதிர்பார்த்து) இராநின்றேன்;
கண்ணல் அரிய பிரானே நாரண நீராட வாராய் — (ஒருவராலும் ஸ்வயத்நத்தால்) கிட்டக்கூடாத ஸ்வாமியே! நாராயணனே! நீராடுவதற்கு வரவேணும்.

* * *—கண்ணபிரான் *தாரார்தடந்தோள்களுள்ளளவும் கைகீட்டி வெண்ணெயளைந்ததனால் உடம்பெல்லாம் அவ்வெண்ணெய்பட்டு மொச்சை நாற்றம் வீசும்; அதனோடு விளையாடப்போனால் அதன்மேல் புழுதியும்படியும்; இவ்விரண்டும் உடம்பிலிருந்தால் தினவுதின்னும்; அதற்காகக் கண்ணன் உடம்பைப் படுக்கையிலே தேய்ப்பனும்; இப்படியெல்லாம் வருந்துவதைப் பொறுக்கமாட்டாமல் நீராடவழைக்கின்றனளென்க. விளையாடுபுழுதி = விளையாடின புழுதியெனவிரிக்க 'உண்ட இளைப்பு' என்றவிடத்துப் போல, விளையாடியதனால்தோன்றிய புழுதியென்க. புளிப்பழம்—எண்ணெயைப் போக்குவதாய்ப் புளிப்புச்சுவையுடையதாயிருக்கின்ற ஒருவகைப் பழத்தைக் குறிக்குமென்பர்; சிக்காயைக்காட்டுமென் பாருமுளர். ... ... (க)

153 கன்றுகளோடச்செவியில் கட்டெறும்புபிடித்திட்டால் *
தென்றிக்கெடுமாகில் வெண்ணெய்திரட்டிவிழுங்குமாகாண்பன் *
நின்றமராமரஞ்சாய்த்தாய்! பிறந்ததிருவோணம் *
இன்றுநீராடவேண்டும் எம்பிரானோடாதேவாராய். (உ)

நின்ற மராமரம் சாய்த்தாய் — நிலையாய்நின்ற ஸப்தஸால வ்ருக்ஷங்களை (ஊடுருவ அம்பெய்து) சாய்த்தவனே!

கன்றுகள் ஓட செவியில் கட்டெறும்பு பிடித்து இட்டால் — பசுவின் கன்றுகள் வெருண்டோடும்படி (அக்கன்றுகளின்) காதில் கட்டெறும்பைப் பிடித்துப் போகட்டால்

(அதனால் அக்கன்றுகள் வெருண்டு)

தென்றி கெடும் ஆகில் — சிதறிப்போய் (கண்டுபிடிக்கமுடியாதபடி) ஓடிப்போய்விட்டால்,

(பின்பு நீ,)

வெண்ணெய் திரட்டி விழுங்கும் ஆகாண்பன் — வெண்ணெயை திரட்டி விழுங்கும்படியை பார்ப்பேன்,

[வெண்ணெயே உனக்கு உண்ணக்கிடைக்கா தென்றபடி;]

இன்று நீ பிறந்த திருவோணம் — இந்த நாள் நீ அவதரித்த ச்ரவணநக்ஷத்ரமாகும்; (ஆகையால்)

நீ நீர் ஆடவேண்டும்—;

எம்பிரான்! ஓடாதேவாராய்—.

* * *—கன்று உண்டானால் பசுகறக்கலாம், பசுவைக்கறத்தால் பாலுண்டாகும், பாலுண்டானால் வெண்ணெயுண்டாகும்: ஆகவே, வெண்ணெய் வேணுமென்றால், கன்றுகள் அவச்யம் வேணும்; அக்கன்றுகள் வெருண்டோடுவதைக் காண்கைக்காக நீ அவற்றின் காதுகளில் கட்டெறும்பைப் பிடித்துப் புகவிட்டால் அவை காணமுடியாதபடி ஓடிப்போய்விடுமே! பின்பு உனக்கு இஷ்டமான வெண்ணெய் கிடைக்கும்படி யெங்ஙனே? என்பது முதலிரண்டடிகளின் கருத்து. 'வெண்ணெய் திரட்டி விழுங்குமா காண்பன்' என்ற தொடர் வெண்ணெய் விழுங்கக் கிடைக்காது என்ற கருத்தைக்காட்டும்; இது ஒருவகை யெதிர்மறை யிலக்கணை. பிறருறிப்பு. ஆ—'ஆறு' என்பதன் விகாரம். (உ)

154 பேய்ச்சிமுலையுண்ணக்கண்டு பின்னையும்நில்லாதென்னெஞ்சம் *
ஆய்ச்சியரெல்லாருங்கூடி அழைக்கவும்நான்முலைதந்தேன் *
காய்ச்சினநீரோடுசெல்லி கடாரத்திற்பூரித்துவைத்தேன் *
வாய்த்தபுகழ்மணிவண்ணா மஞ்சனமாடவாராய். (ந)

பேய்ச்சி முலை உண்ண கண்டு — பூதனையினுடைய முலையை (அவளுடைய உயிரோடும்) (நீ) உண்டுவிட (அதைப்) பார்த்தும்

(நான் அஞ்சி ஓடவேண்டியிருக்க, அங்ஙனம் செய்யாமல்)

பின்னையும் என் நெஞ்சம் நில்லாது — பின்பும் என் மனங்கேளாமல்

ஆய்ச்சியர் எல்லாரும் கூடி அழைக்கவும் — இடைச்சிகளெல்லாரும் ஒன்றுகூடி கூப்பாடு போட்டுக் கதறவும்

நான் முலை தந்தேன் — (உன்மேல் அன்புகொண்ட) நான் முலை (உண்ணக்) கொடுத்தேன்;

நெல்லியொடு காய்ச்சின நீர் — நெல்லியையிட்டு காய்ச்சின வெந்நீரை

கடாரத்தில் பூரித்து வைத்தேன் — ஈருவத்தில் நிறைத்து வைத்திருக்கிறேன்

வாய்த்த புகழ் மணிவண்ணா — பொருந்திய யசஸ்ஸையும் நீலமணிபோன்ற நிறத்தையுமுடைய கண்ணனே!

மஞ்சனம் ஆட நீராட நீ வாராய்—.

* * *—'உனக்கு முலைகொடுத்த பேய்ச்சி பட்டபாட்டை நானறிந்துவைத்தும், நாமும் அப்பாடுபட்டவேண்டி வரப்போகிறதே யென்று அஞ்சி ஓடவேண்டியிருக்க அதுசெய்யாமல், மற்றும் அச்சமூட்டுகிற இடைச்சிகளின் பேச்சையும் கேளாமல் உனக்கு நான் முலைதந்தது அன்பினலன்றே? அதற்கிணங்க நீ நான் சொல்லிற்றை கேட்கவேண்டாவோ' என்கிறாள். நெல்லி—நெல்லியிலை. காய்ச்சின நீரோடு நெல்லி—நெல்லியோடு காய்ச்சின நீர் என உருபுபிரித்துக் கூட்டப்பட்டது. (க)

155 கஞ்சன்புணர்ப்பினில்வந்த கடியசகடமுதைத்து *
வஞ்சகப்பேய்மகள்துஞ்ச வாய்முலைவைத்தபிரானே *
மஞ்சளுஞ்செங்கழுநீரின் வாசிகையும்நாறுசாந்தும் *
அஞ்சனமுங்கொண்டுவைத்தேன் அழகனேநீராடவாராய். (ச)

கஞ்சன் புணர்ப்பினில் வந்த — கம்ஸனுடைய கபடமான ஆலோசனையிலே (நலிவதாக) வந்த
கடிய சகடம் உதைத்து — (அஸுராவேசத்தாலே) க்ரூரமான சகடத்தை (திருவடிகளால்) உதைத்து முறித்துவிட்டு,
வஞ்சகம் பேய் மகள் துஞ்ச — வஞ்சனையுள்ள பூதனையான வள் முடியும்படி
முலை வாய் வைத்த பிரானே — (அவளுடைய) முலையிலே வாயைவைத்த உபகாரகனே!

(உன்மேனி நிறம்பெறும்படி சாத்துவதற்கு உரிய)
மஞ்சளும் — மஞ்சளையும்
செங்கழு நீரின் வாசிகையும் — நீராடியபிறகு சாத்திக் கொள்ளவேண்டிய) செங்கழுநீர் மாலையையும்
நாறு சாந்தும் — பரிமளிதமான சந்தனத்தையும்
அஞ்சனமும் — (கண்களிலிடும்) மையையும்
கொண்டு வைத்தேன்—;
அழகனே! நீராட வாராய்—.

* * *—உன்திருமேனிக்கு வேண்டுமவற்றையெல்லாம் சேர்த்து வைத்திருக்கிறேன், நீராட வா என்றழைக்கிறாள். உனது அழகு கெடாதபடி நீ நீராடவேணுமென்பதற்காக அழகனே! என்கிறாள். (ச)

156 அப்பங்கலந்தசிற்றுண்டி அக்காரம்பாலிற்கலந்து *
சொப்படகான்சுட்டுவைத்தேன் தின்னலுறுதியேல்நம்பி *
செப்பிளமென்முலையார்கள் சிறுபுறம்பேசிச்சிரிப்பர் *
சொப்பட்நீராடவேண்டும் சோத்தம்பிரானிங்கேவாராய். (ஞ)

நம்பி — (பால சாபலத்தால்) பூர்ணனே!
செப்பு இள மெல் முலையார்கள் — பொற்கலசம்போன்ற இளமையான மெல்லிய முலையையுடைய மாதர்கள்
சிறு புறம் பேசி சிரிப்பர் — (உன்மேலே) அற்பமான குற்றங்களை மறைவிற் சொல்லி பரிஹஸிப்பார்கள்
(அன்றியும்,)
பாலில் அக்காரம் கலந்து — பாலிலே வெல்லக்கட்டியை சேர்த்துப் (பிசைந்து)

அப்பம் கலந்த சிற்றுண்டி — அப்பத்தையும் (அப்படியே) சேர்ந்த சிற்றுண்டியையும்
சொப்பட — நன்றாக
நான் சுட்டு வைத்தேன்—;
(நீ அவற்றை)
தின்னல் உறுதி ஏல் — தின்னவிரும்பினையாகில்
சொப்பட — நன்றாக
நீர் ஆட வேண்டும்—;
பிரான் சோத்தம் — ஸ்வாமியே! உனக்கு ஓரஞ்ஜலி;
இங்கே வாராய்.—

* * *—'இப்பயல் அழுக்குடம்பனுமிரா நின்றான்' என்று இடைச்சிகள் ஏசுவதற்கு இடமறும்படி நீராடவருவாயாகில் வேண்டிய பக்ஷணங்கள் தருவேனென்கிறாள். ('சிறுபுறம்'' என்றவிடத்தில்) சிறு—'சிறுமை' என்ற பண்பினடி, புறம் பேசுதல்—மறைவில் குற்றத்தைச் சொல்லுதல். (ஞ)

157 எண்ணெய்க்குடத்தையுருட்டி யிளம்பிள்ளைகளிளியெழுப்பி *
கண்ணைப்புரட்டிவிழித்துக் கழைகண்டுசெய்யும்பிரானே *
உண்ணக்கனிகள்தருவன் ஒலிகடலோதநீர்போலே *
வண்ணமழகியநம்பி மஞ்சனமாடநீவாராய். (ஞ)

எண்ணெய்க் குடத்தை உருட்டி — எண்ணெய் நிறைந்த குடத்தை உருட்டிவிட்டு

இள பிள்ளை கிள்ளி எழுப்பி — (உறங்குகிற) சிறு குழந்தைகளை கையால் வெடுக்கெனக்கிள்ளி (தூக்கம் விட்டு) எழுந்திருக்கச் செய்து

கண்ணை புரட்டி விழித்து — கண் இமையை தலைகீழாக மாற்றி (அப்பூச்சி காட்டி) விழித்து

கழைகண்டு செய்யும் பிரானே — பொறுக்கமுடியாததீம்புகளை செய்துவருகிற ஸ்வதக்த்ரனே !

கனிகள் — (நல்ல) பழங்களை

உண்ண — (நீ) உண்ணும்படி

தருவன் — (உனக்குக்) கொடுப்பேன்;

ஒலி — கோஷியாநின்ற

கடல் — கடலினுடைய

ஓதம் — அலைகளையுடைய

நீர் போலே — ஜலம்போலே

வண்ணம் அழகிய — திருமேனியின் நிறம் அழகாயிருக்கப்பெற்ற

நம்பி — உத்தமபுருஷனே !

மஞ்சனம் ஆட நீ வாராய்—.

* * *—அகத்திலுள்ளா ரெல்லாரும் அந்யபரராம்படியாக முதலிலே எண்ணெய்க்குடத்தை யுருட்டி, அவர்கள் சிந்திப்போன எண்ணையை வழிப்பதற்குடைப்பதுமாயிருக்கையில் அக்காரியத்தை விட்டு ஓடிவரும்படி தொட்டிலிற்படுத்துத்தூங்கும் குழந்தையைத் தேள்கொட்டினாற்போலே வீரிட்டுக்கதறியழும்படி வெடுக்கெனக்கிள்ளி, ஸமீபத்திலேவந்த சிறுவர்களுக்குஅப்பூச்சி காட்டிப் பயப்படுத்தி இப்படியெல்லாம் தீம்பு செய்பவனே ! என்றபடி. கவீ— இமைக்கு ஆகுபெயர். கண்ணைப்புரட்டி விழித்து-வெளியிற்காணப்படுங் கருவிழி உட்புறமாகும்படி கண்ணை மாறிவிழித்து என்று உரைப்பாருமுளர். 'கழகண்டு, என்றும் பிரதிபேதம். ... ... (சு)

158 கறந்தநற்பாலுக்தயிரும் கடைந்துறிமேல்வைத்தவெண்ணெய் *
பிறந்ததுவேமுதலாகப் பெற்றறியேனெம்பிரானே *
சிறந்தநற்றாயலர்தூற்றும் என்பதனால்பிறர்முன்னே *
மறந்தும்உரையாடமாட்டேன் மஞ்சனமாடவாராய். (எ)

எம்பிரானே—!

கறந்த நல் பாலும் தயிரும் — (அந்தந்த காலங்களில்) கறந்த நல்ல பாலையும் தயிரையும்

கடைந்து உறிமேல் வைத்த வெண்ணெய் — (தயிரைக்) கடைந்து உறியில் வைத்திருக்கிற வெண்ணெயையும்,

பிறந்ததுவே முதல் ஆக — (நீ) பிறந்தவன்று தொடங்கி

பெற்று அறியேன் — கண்டறியேன்;

சிறந்த நல்தாய் அலர் தூற்றும் என்பதனால் — '(எல்லாரினும், குழந்தைக்குச்) சிறக்கின்ற பெற்ற தாயும் பழிசொல்லுகின்றாளே !' என்று சொல்லுவார்களே என்ற அச்சத்தினால்

பிறர் முன்னே — அயலார் எதிரில்

மறந்தும் — ப்ராமாதிகமாகவும்

உரை ஆட மாட்டேன் — (உனக்குக் குறைவைத்தருஞ்) சொல்லிச் சொல்ல மாட்டேன்;

மஞ்சனம் ஆட நீ வாராய்—.

* * *—'மகன் குற்றம் செய்தாலும் மறைக்கும்படி மிகுந்த அன்புடையளான தாயும் இப்படி இவன்மேல் பழி தூற்றினால், இவன் எவ்வளவு துஷ்ட சேஷ்டிதனாயிருப்பனே' என்று உன்மேல் பிறர் குறைவாகச் சொல்லப்போகிறார்களே யென்ற எண்ணத்தினா லென்பது மூன்றாமடியின் கருத்து. (எ)

159 கன்றினவாலோடுகட்டிக் கனிகளுதிரவெறிந்து *
பின்தொடர்ந்தோடியோர்பாம்பைப் பிடித்துக்கொண்டாட்டினைப்போலும் *
நின்திறத்தேனல்லேனம்பி நீபிறந்ததிருநன்னாள் *
நன்றுநீராடவேண்டும் நாரணனோடாதேவாராய். (அ)

கன்றினை வால் ஓலை கட்டி } கன்றினுடைய வாலிலே ஓலையைக்கட்டி
(கன்றை) } (அஸுரத் தன்மையினால் உன்னைக் கொல்லவந்த ஒரு) கன்றை
(எறிகுணிலாகக்கொண்டு, அஸுராவேச முள்ள விளாமரத்தின்)
கனிகள் உதிர எறிந்து } பழங்கள் (கீழே) உதிர்ந்து விழும்படி வீசி
பின் ஓடி தொடர்ந்து பின்பு ஓடிப்போய்
ஓர் பாம்பை பிடித்துக்கொண்டு } (காளியனென்ற) ஒரு ஸர்ப்பத்தை பிடித்துக்கொண்டு
ஆட்டினைப் போலும் ஆட்டினவனேதான் (நீ);
நம்பி } ஒன்றிலும் குறைவில்லாதவனே! (நான்)
நின் திறத்தேன் அல்லேன் } உன் விஷயமொன்றையு மறியாதவளாயிராநின்றேன்;
(அது கிடக்கட்டும்;)
நீ பிறந்த நல் திருநாள் } நீ அவதரித்த திருநக்ஷத்திரமாகும் (இந்நாள்);
(ஆகையால்)
நீ நன்று நீர் ஆடவேண்டும்—;
நாரணன் ஓடாதே வாராய்—.

* * *—கண்ணபிரான் கன்று துள்ளியோடுவதைக் காண்கைக்காக அதன் வாலிலே ஓலைகளை முடைந்து விடுவதனால், 'கன்றினை வாலோலை கட்டி' என்றார். கன்றினை-உருபுமயக்கம். [நின் இத்யாதி.] 'அத்தைச்செய்தான் இத்தைச் செய்தான்' என்றிப்படி யெல்லாம் சொல்லுவார் சொல்லக் கேட்டதல்லது, உன்னுடைய தன்மையை நினைத்தறிதற்கும் எனக்கு முடியாதென்றபடி. ... (அ)

160 பூணித்தொழுவினிற்புக்குப் புழுதியளைந்தபொன்மேனி *
காணப்பெரிதுமுகப்பன் ஆகிலுங்கண்டார்பழிப்பர் *
காணெத்தனையுமிலாதாய் நப்பின்னைகாணிற்சிரிக்கும் *
மாணிக்கமேயென்மணியே மஞ்சனமாடநீவாராய். (கூ)

பூணி தொழுவினில் புக்கு புழுதி அளைந்த பொன் மேனி } பசுக்கள் கட்டிய கொட்டகையிலே நுழைந்து புழுதி மண்ணிலளைந்(து அதனால் மாசுபடிந்) த (உனது) அழகிய உடம்பை
காண பெரிதும் உகப்பன் } பார்ப்பதற்கு மிகவும் (நான்) விரும்புவேன்;
ஆகிலும் கண்டார் பழிப்பர் } ஆனாலும் (உன்னைப்) பார்ப்பவர்கள் '(இவள் பிள்ளை வளர்ப்பது அழகாயிருக்கின்றது' என்று என்னை) ஏசுவார்கள்;
(அன்றியும்,)
எத்தனையும் நாண் இலாதாய் } சிறிதும் லஜ்ஜையென்பதில்லாதவனே!
நப்பின்னை காணில் சிரிக்கும் } நப்பின்னையான்வள் நீ இப்படியிருப்பதைக் கண்டால் சிரிப்பாள்;
என் மாணிக்கமே! (என்) மணியே!
மஞ்சனம் ஆட நீ வாராய்—.

* * *—நீ ஜாதிக்குத்தக்கபடி மாட்டுத்தொழுவிற்புகுந்து புழுதியளைந்து அழுக்குடம்புடனேயிருந்தாலும், உனது மேனி பொன்னுக்குப் புழுதியேறினாற்போலக் குழந்தைப்பருவத்தினால் விளங்குதலால் அதைக்காண்பது எனக்கு மிகவும் விருப்பமே; என்றாலும் 'இவள் பிள்ளைவளர்ப்பது அழகாயிருக்கிறது!' என்று கண்டவர்களெல்லாரும் என்னைச்சிரிப்பார்களே; தவிரவும், நப்பின்னையும் உன்னைப் பரிஹாஸம் பண்ணுவளே; ஆகையால் இப்போது இருப்பதுபோல நீ வெட்கமற்று உடனே நீராட வரவேணுமென்கிறாள். ... ... (கூ)

161 கார்மலிமேனிநிறத்துக் கண்ணபிரானையுகந்து *
வார்மலிகொங்கையசோதை மஞ்சனமாட்டியவாற்றை *
பார்மலிதொல்புதுவைக்கோன் பட்டர்பிரான்சொன்னபாடல் *
சீர்மலிசெந்தமிழ்வல்லார் தீவினையாதுமிலரே. (ஙு)

கார் மலி மேனி நிறத்து கண்ண பிரானை உகந்து } காளமேகத்திற் காட்டிலும் சிறந்த திருமேனி நிறத்தையுடைய கண்ணபிரானை விரும்பி
வார் மலி கொங்கை அசோதை } கச்சுக்கு அடங்காமல் விம்முகின்ற ஸ்தனங்களையுடையயசோதைப்பிராட்டி
மஞ்சனம் ஆட்டிய ஆற்றை } நீராட்டின ப்ரகாரத்தை,—

பார் மலி தொல் புதுவை கோன் பட்டர்பிரான் சொன்ன — பூமியிலே சிறந்த பழமையான ஸ்ரீவில்லிபுத்தூர்க்கு நிர்வாஹகரான பெரியாழ்வார் அருளீச்செய்த

சீர் மலி செந்தமிழ் பாடல் வல்லார் — அழகு நிறைந்த செந்தமிழ்ஸாஹித்யமான (இப்) பாசுரங்களை ஓத வல்லவர்கள்

யாதும் தீவினை இலர் — சிறிதும் பாவமில்லாதவர்களாவர்.

அடிவரவு:—வெண்ணெய் கன்று பேய்ச்சி கஞ்சன் அப்பம் எண்ணெய் கறந்த கன்றினை பூணி கார் பின்னை.

இரண்டாம்பத்து—ஐந்தாந்திருமொழி, பின்னமணாளனை

(கண்ணனுக்குக் குழல்வாருதல்.)

---

162 பின்னைமணாளனைப் பேரிற்கிடந்தானை *
முன்னையமரர் முதல்தனிவித்தினை *
என்னையுமெங்கள் குடிமுழுதாட்கொண்ட *
மன்னனைவந்துகுழல்வாராயக்காக்காய் மாதவன்றன்குழல்வாராயக் [காக்காய். (க)

அக்காக்காய் — காக்கையே!

பின்னை மணாளனை — நப்பின்னைப் பிராட்டிக்கு நாயகனும்

பேரில் கிடந்தானை — திருப்பேர் நகரிலே பள்ளி கொண்டிருப்பவனும்

முன்னை அமரர் முதல் — (பகவதநுபவத்தில்) முதல்வரான நித்யஸூரிகளுக்கு தலைவனும்

(அந்த நித்யஸூரிகளின் ஸத்தைக்கும் காரகாதிகளுக்கும்)

தனிவித்தினை — ஒப்பற்ற காரணமாயிருப்பவனும்

என்னையும் எங்கள் குடிமுழுது ஆட்கொண்டமன்னனை — என்னையும் எங்களுடைய குடியிலுள்ளாரெல்லாரையும் அடிமைகொண்ட தலைவனுமாகியகண்ணனுக்கு

வந்து குழல் வாராய் — (நீ) வந்து கூந்தல் வாருவாயாக;

அக்காக்காய் — காக்கையே!

மாதவன் தன் — ச்ரியபதியான இவனுக்கு குழல் வாராய்—..

* * *—காக்கை வந்து கத்தும்போது குழந்தைகள் பராக்காயிருக்குமாதலால், அப்போது தலை வாருதல் ஸுகமாய் முடியுமென்பதுபற்றி, அக்காரியத்தைக் காக்கையின் மேலேற்றிக் 'குழல்வாராய் அக்காக்காய்' என்றுளென்க: 'அக்காக்காய்!' என்று காக்கையை விளித்துக் குழந்தைகளுக்குக் குழல் வாரி முடித்தல், உலகவழக்கத்திலிருப்பது காண்க. பேர்—திருப்பேர் நகர்; சோழநாட்டுத் திருப்பதிகள் நாற்பதில் ஒன்று. ... ... (க)

163 பேயின்முலையுண்ட பிள்ளையிவன்முன்னம் *
மாயச்சகடும் மருதுமிறுத்தவன் *
காயாமலர்வண்ணன் கண்ணன்கருங்குழல் * [காக்காய். (உ)
தூயதாகவந்துகுழல்வாராயக்காக்காய் தூமணிவண்ணன்குழல்வாராயக்

அக்காக்காய்!—;

இவன் முன்னம் பேயின் முலை உண்ட பிள்ளை — இப்பிள்ளை முன்பு பூதனையின் முலையை (அவளுயிரோடுங்) குடித்த பிள்ளை காண்;

(அன்றியும்,)

மாயம் சகடும்மருதும் இறுத்தவன் — வஞ்சனையுள்ள சகடத்தையும் யமளார்ஜுநங்களையும் முறித்தவன்;

காயாமலர் வண்ணன் — காயாம்பூப்போன்ற நிறத்தையுடையவன்;

கண்ணன் — 'க்ருஷ்ணன்' என்னும் பேரையுடையவன்:

(இவனுடைய)

கருகுழல் — கருநிறமான கூந்தலை

வந்து தூயது ஆக குழல் வாராய் — (நீ) வந்து நன்றாக வாருவாயாக;

தூமணி வண்ணன் — பழிப்பற்றநீலமணிபோன்ற நிறத்தையுடைய இவனுக்கு குழல்வாராய்—.

* * *—தூய்தாக—தலையிற் சிக்குபடாமல் மழமழவென்றிருக்கும்படி. "தழல்வாராய்" என்ற தொடர்—ஒருசொல்நீர்மைத்தாய் வாருதல் என்ற தொழிலே மாத்திரம் உணர்த்தும்; ஆதலால், 'கருங் தழல் தழல்வாராய்" என்றது. [புநருக்தி தோஷமில்லையென்க.] ... ... (உ)

164 திண்ணக்கலத்துத் திரையுறிமேல்வைத்த *
வெண்ணெய்விழுங்கி விரையவுறங்கிடும் *
அண்ணலமரர் பெருமானையாயர்தம் * [காக்காய். (ங)
கண்ணனேவந்துகுழல்வாராயக்காக்காய் கார்முகில்வண்ணன்குழல்வாராயக்

அக்காக்காய்!—;
திரை உறிமேல் வைத்த } பின்னுதலையுடைய (பெரிய) உறிமேல் வைத்த
திண்ணம் கலத்து வெண்ணெய்விழுங்கி } த்ருடமான பாத்ரத்திலுள்ள வெண்ணெயை உட்கொண்டு
விரைய உறங்கிடும் அண்ணல் } விரைவாக (ஓடிவந்து) பொய்யுறக்க முறங்குகின்ற ஸ்வாமியும்

அமரர் பெருமானே } நித்யஸூரிகளுக்கு நிர்வாஹகனும்
ஆயர்தம் கண்ணனே } இடையர்களுக்குக் கண்போன்றவனுமான இவனே
வந்து குழல் வாராய்—;
அக்காக்காய்!—;
கார்முகில் வண்ணன் } காளமேகம் போன்ற நிறத்தையுடையனான இவனுடைய
குழல் வாராய்—.

* * *—"விரையவுறங்கிடும்" என்பது பாடம். ... ... (ச)

165 பள்ளத்தில்மேயும் பறவையுருக்கொண்டு *
கள்ளவசுரன் வருவானைத்தான்கண்டு *
புள்ளிதுவென்று பொதுக்கோவாய்கீண்டிட்ட * [காக்காய். (ச)
பிள்ளையைவந்துகுழல்வாராயக்காக்காய் பேய்முலையுண்டான்குழல்வாராயக்

அக்காக்காய்!—;
பள்ளத்தில் மேயும் பறவையுருக்கொண்டு } நீர்த்தாழ்வுகளிலே இரையெடுத்துத் திரிகின்ற (கொக்கு என்னும்) பக்ஷியின் ரூபத்தை ஏறிட்டுக்கொண்டு
வருவான் கள்ளம் அசுரனை தான்கண்டு } வருபவனான வஞ்சனை பொருந்திய அசுரனை [பகாஸுரனை] தான் பார்த்து

இது புள் என்று } (அவனை) இது பக்ஷியேயென்று (ஸாமான்யமாக நினைத்து)
பொதுக்கோ வாய் கீண்டிட்ட } விரைவாக (அவ்வஸுரனது) வாயை கிழித்துப்போகட்ட
பிள்ளையை வந்து குழல்வாராய்—;
அக்காக்காய்! பேய்முலை உண்டான்
குழல் வாராய்—.

* * *—பொதுக்கோ = பொதுக்கென. ("பிதுக்கென்று புறப்பட்டான்" என்று வழங்கிவருதல் காண்க.) ... ... (ஞ)

166 கற்றினம்மேய்த்துக் கனிக்கொருகன்றினை *
பற்றியெறிந்த பரமன்திருமுடி *
உற்றனபேசி நீயோடித்திரியாதே * [காக்காய். (ஞ)
அற்றைக்கும்வந்துகுழல்வாராயக்காக்காய் ஆழியான்றன்குழல்வாராயக்

அக்காக்காய்!—:
நீ உற்றன பேசி ஓடி திரியாதே } நீ (உன்ஜாதிக்குத்) தகுந்தவற்றை சொல்லிக்கொண்டு அங்குமிங்கும் பறந்து திரியாமல்,—
கன்று இனம் மேய்த்து ஒரு கன் } கன்றுகளின் கூட்டத்தை மேய்த்துவந்து (அஸுராவிஷ்டமான) கன்றொன்றை பிடித்து (அஸுராவிஷ்ட

நினை பற்றி கனிக்கு எறிந்த பரமன் திருமுடி } மான) விளாம்பழத்தை உதிர்த்தற்காக (குணிலாக) விசின பரமபுருஷனுடைய அழகிய தலைமுடியை
அற்றைக்கும் வந்து குழல் வாராய் } அவ்வக்காளும் வந்து வாருவாயாக;
ஆழியான் தன் } சக்ராயுதபாணியான இவனுடைய
குழல் வாராய்—.

167 கிழக்கிற்குடிமன்னர் கேடிலாதாரை *
அழிப்பான்நினைந்திட்டு அவ்வாழியதனால் *
விழிக்குமளவிலே வேரறுத்தானை * [காக்காய். (சு)
குழற்கணியாகக்குழல்வாராயக்காக்காய் கோவிந்தன்றன்குழல்வாராயக்

அக்காக்காய்!—;
கேடு இலாதார் கிழக்கில் குடி மன்னரை — (வரபலமும் புஜபலமுமிருப்பதால் நமக்கு) அழிவில்லையென்று நினைத்திருந்தவரான கிழக்குத்திக்கிலுள்ள பட்டணத்திற்குடியிருந்த ராஜாக்களை
அழிப்பான் நினைந்திட்டு — அழிக்கும்படி எண்ணி
அ ஆழி அதனால் — அந்தச்சக்ராயுதத்தால்
விழிக்கும் அளவிலே — கண்மூடித்திறக்கின்றகாலத்திற்குள்
வேர் அறுத்தானை — ஸமூலமாக அழித்தவனுடைய
குழற்கு அணி ஆக — கூந்தலுக்கு அழகு உண்டாம்படி
குழல் வாராய்—;
கோவிந்தன் தன் குழல் வாராய் — (இந்த) கோவிந்தனுடைய குளிர்ந்த [சிறந்த] குழலை வாருவாயாக.

* * *—கிழக்கிற் குடிமன்னர்—ப்ராக்ஜ்யோதிஷபுரவாஸிகளான நரகாஸுரன் முதலானார். அவ்வாழி—அ—உலகறிசுட்டு: ப்ரஸித்தியைக் காட்டும். இனி, கேடு இலாதாரை—(விஷ்ணுபக்தராதலால்) அழிவில்லாதவரான இந்த்ராதிகளை, அழிப்பான் நினைந்திட்ட கிழக்கிற் குடிமன்னர் விழிக்குமளவிலே (அவரை) வேரறுத்தான் என்றும் உரைப்பர். அழிப்பான்—எதிர்கால வினையெச்சம். (சு)

168 பிண்டத்திரளையும் பேய்க்கிட்டநீர்ச்சோறும் *
உண்டற்குவேண்டி நீயோடித்திரியாதே *
அண்டத்தமரர் பெருமானழகமர் * [காக்காய். (எ)
வண்டோத்திருண்டகுழல்வாராயக்காக்காய் மாயவன்றன்குழல்வாராயக்

அக்காக்காய்!—;
பிண்டம் திரளையும் — (பித்ருக்களை உத்தேசித்து இடும்) பிண்டத்தின் உருண்டையையும்
பேய்க்கு இட்ட நீர் சோறும் — பிசாசங்களுக்குப் போகட்ட நீரையுடைய சோற்றையும்
உண்டற்கு வேண்டி — உண்ணுதற்கு விரும்பி
நீ ஓடி திரியாதே — நீ பறந்தோடித் திரியவேண்டா;
அண்டத்து அமரர் பெருமான் — மேலுலகத்திலுள்ள தேவர்களுக்கு தலைவனாகிய இக்கண்ணபிரானுடைய
அழகு அமர் — அழகு பொருந்திய
வண்டு ஒத்து இருண்ட — வண்டைப்போல் கருநிறமான
குழல் வாராய்:—
மாயவன் தன் — ஆச்சர்யச் செயல்களையுடைய இவனுடைய
குழல் வாராய்—.

* * *—தந்தைதாய் முதலானார் இறந்த திதியில் செய்யும் ச்ராத்தத்தில் பித்ராதி தேவதைகளை உத்தேசித்துப் பிண்டவுருண்டையைக் காகத்தையழைத்து இடுவதும், பிசாசம் முதலியவற்றைக் குறித்து ஜலத்தோடு கூடிய சோற்றைப் பலிகொடுத்தலும் வழக்கமென்க. இப்படி கண்ட சோற்றுக்கும் அலைந்து திரியாமல் இவனுடைய குழலை வாரவரவேணுமென்றதாயிற்று. ... ... (எ)

169 உந்தியெழுந்த உருவமலர்தன்னில் *
சந்தச்சதுமுகன்றன்னைப் படைத்தவன் *
கொந்தக்குழலைக் குறுந்துபுளியட்டி * [காக்காய். (அ)
தந்தத்தின்சீப்பால்குழல்வாராயக்காக்காய் தாமோதரன்றன்குழல்வாராயக்

அக்காக்காய்!—;
உந்தி எழுந்த உருவம் மலர் தன்னில் — (தனது) திருநாபியிலே உண்டான ஸுரூபத்தையுடைய தாமரைப்பூவிலே
சந்தம் சதுமுகன் தன்னை படைத்தவன் — சந்தஸ்ஸை நிரூபகமாகவுடைய நான்முகனை ஸ்ருஷ்டித்த இவனுடைய

புளி அட்டி கொந்தம் குழலே { புளிப்பழத்தை யிட்டுத் தேய்த்ததனால் நெறிப்பையுடைய கூந்தலே

தந்தத்தின் சிப்பால் குறந்து குழல் வாராய் { தந்தத்தினாற் செய்த சீப்பாலே சிக்கு விடுத்து வாரு வாயாக

அக்காக்காய்! தாமோதரன் தன் குழல் வாராய்!—.

* * *—கீழ் "வெண்ணெயளைந்த குணுங்கும்" என்ற திருமொழியில் கூறியபடி யசோதைப் பிராட்டி ஸ்ரீகிருஷ்ணனை எண்ணெய்தேய்த்துப் புளிப்பழமிட்டு நீராட்டியதனால், அப்படி நீராடின ஸ்ரீகிருஷ்ணனுடைய கூந்தல் நெறித்திருக்கும்; ஆதலால், யசோதையானவள் 'காக்கையே! நெறிப்புப் போம்படி எண்ணெய்தடவித் தந்தச்சீப்பினால் தலைவார வரவேணும்' என்கிறாள். புழுகட்டி' என்றும் பாடம்; புழுத—புனுகு எண்ணெய்: அதைத் தடவிக் குழல்வாராய் என முடிபு காண்க. (அ)

170 மன்னன்றன்தேவிமார் கண்டுமகிழ்வெய்த *
முன்னிவ்வுலகினை முற்றுமளந்தவன் *
பொன்னின்முடியினைப் பூவணைமேல்வைத்து * [காக்காய். (கூ)
பின்னேயிருந்துகுழல்வாராயக்காக்காய் பேராயிரத்தான்குழல்வாராயக்

அக்காக்காய்!—;

முன் மன்னன் தன் தேவிமார் கண்டு மகிழ்வு எய்த { வாமனாவதாரகாலத்தில் அஸுரராஜனை மஹாபலியினுடைய மனைவியர்கள் (தன்னுடைய) வடிவைக்கண்டு மகிழ்ச்சியடையும்படி

(மஹாபலியிலிடத்திற்போய் 'கொள்வன் நான்மாவலி!' என்று மூவடிமண் இரந்து பெற்றுப் பின்பு த்ரிவிக்ரமனாய்)

இ உலகினை முற்றும் அளந்தவன் { இந்த உலகங்கள் முழுவதையும் அளந்துகொண்ட இவனுடைய

பொன் முடியினை அழகிய தலையை

பூ அணை மேல் வைத்து { புஷ்பத்தினாலாகிய படுக்கையில் வைத்து

பின்னே இருந்து { (இவனது) பின்புறத்திலே இருந்துகொண்டு

குழல் வாராய்!—; அக்காக்காய்!—,

பேர் ஆயிரத்தான் { ஸஹஸ்ர நாமங்களையுடைய இவனுக்கு

குழல் வாராய்—.

* * *—எல்லா இந்திரியங்களையும் ஆகர்ஷிக்கவல்ல வாமனவடிவையும், பிரமசாரி ஆச்ரமத்துக்கு ஏற்றவாறு கொண்ட கோலத்தையும் மழலைச்சொல் சொல்லு மழகையுங்கண்டு மஹாபலியின் மனைவியரும் மகிழ்ந்தனராம். பொன்னின்=இன்—சாரியை. பூ அணை—புஷ்பம்போல் ம்ருதுவான படுக்கை யென்றுமாம். ... ... (கூ)

171 கண்டார்பழியாமே அக்காக்காய் * கார்வண்ணன்
வண்டார்குழல்வார வாவென்றவாய்ச்சிசொல் *
விண்டோய்மதிள் வில்லிபுத்தூர்க்கோன்பட்டன்சொல் *
கொண்டாடிப்பாடக் குறுகாவினைதாமே. (எ)

அக்காக்காய் கண்டார் பழியாமே 'காக்கையே! பார்த்தவர்கள் பழியாதபடி

கார் வண்ணன் வண்டு ஆர் குழல் வார வா { காளமேகம்போன்ற நிறமுடைய கண்ணனுடைய வண்டை ஒத்த கரிய கூந்தலே வாரும்படி வருவாயாக'

என்ற ஆய்ச்சிசொல் { என்று சொன்ன யசோதைப்பிராட்டியின் சொல்லை (க்குறித்த),—

விண் தோய் மதிள் வில்லிபுத்தூர் கோன் பட்டன் சொல் { ஆகாசத்தை அளாவுகின்ற மதிளையுடைய ஸ்ரீவில்லிபுத்தூர்க்கு நிர்வாஹகரான பெரியாழ்வாருடைய அருளிச்செயல்களை

கொண்டாடி பாட வினைதாம் குறுகா { ச்லாகித்து பாடப்பெற்றால் ஸகலதுக்கங்களும் தாமே சேராவாம்.

அடிவரவு:—பின்னே பேய் நிண்ணம் பள்ளத்தில் கற்று கிழக்கில் பிண்டம் உந்தி மன்னன் கண்டார் வேலி.

(கண்ணன் கன்றுமேய்க்கப்போக விரும்பி யசோதையைக் கோல்கேட்க, அவள் காக்கையை நோக்கிக் கோல்கொண்டுவாவென்றல்.)

172 வேலிக்கோல்வெட்டி விளையாடுவில்லேற்றி *
தாலிக்கொழுந்தைத் தடங்கழுத்திற்பூண்டு *
பீலித்தழையைப் பிணைத்துப்பிறகிட்டு * [கொண்டுவா. (க)
காலிப்பின்போவாற்கோர்கோல்கொண்டுவா கடல்நிறவண்ணற்கோர்கோல்

(அக்காக்காய்) காக்கையே!
வேலிக் கால்களிலுள்ள கோலை (வாளால்) வெட்டி (அதை) லீலோபகரண மான வில்லாகச் செய்து (அதிலே) நாணேற்றியும்,
வேலி கோல் வெட்டி விளையாடுவில் ஏற்றி
கொழுந்து தாலியை தட கழுத்தில் பூண்டு
சிறந்த ஆமைத்தாலியை (தனது) பெரிய கழுத்திலே அணிந்து கொண்டும்
பீலி தழையை பிணைத்து பிறகு இட்டு
மயில் தோகைகளை ஒன்று சேர்த்து பின்புறத்திலே கட்டிக்கொண்டும்
காலிபின் போவாற்கு ஓர் கோல்
பசுக்கூட்டங்களின் பின்னே போகின்ற இவனுக்கு ஒரு கோலை
கொண்டு வா—;
கடல் நிறம் வண்ணற்கு ஓர் கோல் கொண்டு வா—.

* * *—இடைச்சாதிக்குத் தக்கபடி ஆமைத்தாலி யென்னும் ஒரு வகை ஆபரணத்தைக் கழுத்திலணிந்தும், மயில் தோகைகளைச் சேர்த்துக் கட்டிப் பின்புறத்திலணிந்தும் வேலிக்கால்களிலே வெட்டின சிறு கோல்களை வில்லாகச் செய்து நாணேறிட்டு வளைத்து விளையாடிக்கொண்டே கன்றுகளை மேய்த்துக்கொண்டே செல்லுகின்ற என் மகனுக்குக் கோல் கொண்டுவா என்கை. வேலிக்கோல்—வேலிக் கால்களிலே வளர்ந்த சிறுகோல்களென்னுதல்; வளைவையுடைய கோலென்னுதல். தாலி கொழுந்து—பனையின் (வெண்ணிறமான) குருத்தென்று மூலைக்கலாம்; இதை ஓர் அணியாகச் சமைத்துக் கழுத்திலணிதல் முற்காலத்தியல்பென்க: "விளையாடு வில்லேந்தி" என்ற பாடத்தில், 'வேலிக்கால்களிலே கோலைவெட்டி, (அதை) விளையாடுவில்லாக (க்கையில்) ஏந்திக்கொண்டு' என்று பொருள் கொள்ளலாம். ... ... (க)

173 கொங்குங்குடந்தையும் கோட்டியூரும்பேரும் *
எங்குந்திரிந்து விளையாடுமென்மகன் *
சங்கம்பிடிக்கும் தடக்கைக்குத்தக்க * கல் [கொண்டுவா. (உ)
அங்கமுடையதோர்கோல்கொண்டுவா அரக்குவழித்ததோர்கோல்

கொங்கு குடந்தையும் கோட்டி ஊரும் பேரும்
வாஸனை பொருந்திய திருக்குடந்தையிலும் திருக்கோட்டியூரிலும் திருப்பேர் நகரிலும்
எங்கும் திரிந்து விளையாடும் என் மகன்
மற்றுமுள்ள திருப்பதிகளிலுமெல்லாம் ஸஞ்சரித்து விளையாடுகின்ற என் பிள்ளையினுடைய
சங்கம் பிடிக்கும் தடகைக்கு தக்க
பாஞ்சஜந்யம் தரிக்கிற பெரிய திருக்கைக்கு தகுந்ததான
கல்அங்கம் உடையது
நல்லவடிவை யுடையதாகிய ஓர் கோல் கொண்டு வா—;
அரக்கு வழித்தது
(நல்ல நிறமூண்டாம்படி) அரக்குப் பூசியதாகிய ஓர் கோல் கொண்டு வா—

* * *—கொங்கு+குடந்தை=கொங்குக் குடந்தை என வரவேண்டுவது செய்யுளின்பம் நோக்கிக் "கொங்குங் குடந்தையும்" என வந்ததென்க. அரக்கு—செந்நிறமெனினுமாம். ... (உ)

174 கறுத்திட்டெதிர்நின்ற கஞ்சனைக்கொன்றருள் *
பொறுத்திட்டெதிர்வந்த புள்ளின்வாய்கீண்டான் *
நெறித்தகுழல்களை நீங்கமுன்னேழி * [கொண்டுவா. (ங)
சிறுக்கன்றுமேய்ப்பற்கோர்கோல்கொண்டுவா தேவபிரானுக்கோர்கோல்

கறுத்திட்டு எதிர் நின்ற கஞ்சனை கொன்றான் — கோபித்து தன்னை எதிரிட்டு நின்ற கம்ஸனை கொன்ற வனும்,

(தன்னைக் கொல்வதாக) எதிர்வந்த புள்ளின் வாய் பொறுத்திட்டு கண்டான் — எதிர்த்துவந்த பகாஸுரனுடைய வாயை (முதலில்) பொறுத்துக்கொண்டிருந்து (பின்பு) கிழித்தவனும்,

நெறித்த குழலீகள் — நெறித்திராநின்றுள்ள கூந்தல்கள்

நீக்க — ஓடுகிறவேகத்தாலே இரண்டு பக்கமும் அலையும்படியாக

முன் ஓடி — கன்றுகளுக்கு முன்னே போய்

சிறு கன்று மேய்ப்பாற்கு — இளங்கன்றுகளை மேய்ப்பவனுமாகிய இவனுக்கு

ஓர் கோல் கொண்டு வா—;

தேவபிரானுக்கு ஓர் கோல் கொண்டுவா—.

* * *—பொறுத்திட்டுக்கீண்டான்=பகாஸுரன், தன்னை விழுங்கி உமிழுமளவும் கண்ணன் அவனை ஒன்றுஞ்செய்யாதிருந்து பின்பே அவன் வாயைக் கிழித்ததனால் பொறுமை விளங்குமென்க. (சு)

175 ஒன்றேயுரைப்பான் ஒருசொல்லேசொல்லுவான் *
துன்றுமுடியான் துரியோதனன்பக்கல் *
சென்றங்குப்பாரதங் கையெறிந்தானுக்கு * [கொண்டுவா. (சு)
கன்றுகள்மேய்ப்பதோர்கோல்கொண்டுவா கடல்நிறவண்ணற்கோர்கோல்

ஒன்றே உரைப்பான் — ('பாண்டவர்களுடன் சேர்ந்து வாழோம் என்ற) ஒரே விஷயத்தை சொல்லுபவனும்

(மத்யஸ்தர் எவ்வளவு சொன்னலும் 'ஊசிமுத்து நிலமும் பாண்டவர்களுக்குக் கொடேன்' என்ற)

ஒரு சொல்லே சொல்லுவான் — ஒரு சொல்லையே சொல்லுபவனும்

துன்று முடியான் துரியோதனன் பக்கல் சென்று — (நவரத்நங்களும்) நெருங்கப் பதித்த கிரீடத்தை அணிந்தவனுமான துரியோதனனிடத்தில் தூதுபோய்

அங்கு பாரதம் கையெறிந்தானுக்கு — அவ்விடத்தில் பாரதயுத்தத்தை உறுதிப்படுத்திக் கொண்டு வந்த இவனுக்கு

கன்றுகள் மேய்ப்பது ஓர் கோல் கொண்டு வா—.

கடல்நிற வண்ணற்கு ஓர் கோல் கொண்டு வா—.

* * *—முதலடியிற் குறித்த அடைமொழிகளிரண்டையும் எம்பெருமானுக்காக்கி 'கையெறிந்தானுக்கு' என்பதனோடு கூட்டி உரைத்தலு மொக்கும். கையெறிதல்—கையடித்தல். இது, பிரமாணம் செய்யும்வகையிலொன்று; இங்கு உறுதிப்படுத்துதல் என்ற பொருளைத் தந்தது. இனி, துரியோதனன் பக்கல் சென்று—துர்யோதனனிடம் தூதுபோய், (அவன் ஒன்றுங்கொடுக்க இசையாததனால்), அங்கு—பாரதயுத்தத்தில், கை யெறிந்தானுக்கு—ஸேனையை வருத்துக்கொண்டு யுத்தம் செய்தவனுக்கு என்றும் பொருள் கொள்ளலாம் ... ... (சு)

176 சீரொன்றுதூதாய்த் துரியோதனன்பக்கல் *
ஊரொன்றுவேண்டிப் பெருதவுரோடத்தால் *
பாரொன்றிப்பாரதங் கைசெய்துபார்த்தற்கு * [கொண்டுவா. (நு)
தேரொன்றையூர்ந்தாற்கோர்கோல்கொணடுவா தேவபிரானுக்கோர்கோல்

துரியோதனன் பக்கல் — துரியோதனனிடத்தில் (பாண்டவர்களுக்காக)

சீர் ஒன்று தூது ஆய் — சிறப்புப் பொருந்திய தூதனைப் போய்

ஊர் ஒன்று வேண்டி — (பாண்டவர்களுக்கு) ஒரு ஊராவது கொடு, என்று யாசித்துக்கேட்டும்

பெருத உரோடத்தால் — அந்த ஒரு ஊரையும் பெருமையினுண்டான சிற்றத்தாலே

பார் ஒன்றி பாரதம் கைசெய்து — பூமியில் பொருந்தியிருந்த பாரத யுத்தத்தில் அணிவகுத்து

பார்த்தற்கு தேர் ஒன்றை ஊர்ந்தாற்கு — அர்ஜுனனுக்கு ஒப்பற்ற தேரை (ப்பாகனையிருந்து) நடத்தினவனுக்கு

ஓர் கோல் கொண்டு வா—;

தேவபிரானுக்கு ஓர் கோல் கொண்டுவா—.

177 ஆலத்திலையான் அரவினணைமேலான் *
நீலக்கடலுள் நெடுங்காலங்கண்வளர்ந்தான் *
பாலப்பிராயத்தே பார்த்தற்கருள்செய்த * [கொண்டுவா. (சு)
கோலப்பிரானுக்கோர்கோல்கொண்டுவா குடந்தைக்கிடந்தாற்கோர்கோல்

(ப்ரளய காலத்தில் உலகமெல்லா முண்டு)
ஆலத்து இலை யான் { ஆலிலையில் பள்ளிகொண்டிருப்பவனும்
அரவின் அணை மேலான் { (எப்போதும்) திருவனந்தாழ்வான் மீது பள்ளிகொள்பவனும்
நீலம் கடலுள் நெடுங்காலம் கண் வளர்ந்தான் { கருநிறமான சமுத்திரத்தில் வெகுகாலமாக யோகநித்திரை செய்பவனும்

பாலம் பிராயத்தே { குழந்தைப்பருவமே தொடங்கி
பார்த்தற்கு அருள் செய்த { அர்ஜுனனுக்கு க்ருபை செய்த
கோலம் பிரானுக்கு { அழகிய வடிவத்தையுடைய தலைவனுமான இவனுக்கு
ஓர் கோல் கொண்டுவா;—
குடந்தை கிடந்தாற்கு ஓர் * * வா—.

* * *—ஆல் + இலையான் = (அத்துச்சாரியை பெற்று) ஆலத்திலையான். க்ஷீராப்தி எம்பெருமான் திருமேனியின் நிழலீட்டாலே கறுத்துத் தோன்றுமாதலால் 'நீலக்கடல்' எனப்பட்டது: அன்றி, "உவர்க்குங்கருங்கடல் நீருள்ளான்" என்றபடி லவணஸமுத்ரத்தில் பள்ளிகொண்டிருப்பதாகக் கூறுவதுமுண்டாதலால் அதுவுங் கொள்ளத்தக்கதே. ... ... (சு)

178 போற்றிகழ் சித்திரகூடப்பொருப்பினில் *
உற்றவடிவில் ஒருகண்ணும்கொண்ட * அக்
கற்றைக்குழலன் கடியன்விரைந்துன்னை * [கோல்கொண்டுவா. (எ)
மற்றைக்கண்கொள்ளாமேகோல்கொண்டுவா மணிவண்ணர்ப்பிக்கோர்

(அக்காக்காய்!—)
பொன் திகழ் சித்திர கூடம் பொருப்பினில் { அழகியதாய் விளங்குகின்ற சித்ரகூட மலைச்சாரலில்
(பிராட்டிமடியிலே தலைவைத்துக்கொண்டு ஸ்ரீராமனுடைய தான் கண்வளர்ந்தருளும்போது)
வடிவில் உற்ற ஒரு கண்ணும் கொண்ட { (பிராட்டியின்) திருமேனியில் பதிந்த (உனது இரண்டு கண்களில்) ஒரு கண்ணை மாத்திரம் பறித்துக் கொண்ட

அகற்றை குழலன் { அந்தத் தொகுதியான கூந்தலையுடையவன்
கடியன் க்ரூரன்;
(ஆதலால், அவன் தனக்கு இஷ்டமானதை உடனே செய்யாமலிருந்தற்காக)
உன்னை மற்றை கண் கொள்ளாமே { உன்னை (சீசீ) (உனது) மற்றொரு கண்ணையும் பறித்துக் கொள்ளாதபடி
விரைந்து ஓடிப்போய்
கோல் கொண்டுவா—;
மணிவண்ணன் நப்பிக்கு ஓர் * *வா—.

* * *—காக்கையே! முன்னமே ஸ்ரீராமனுயிருந்த இச்சிறுவன் (உன்சாதியிலொருவன்) செய்யத்தகாததைச் செய்ததற்காகக் கண்ணொன்றைப் பறித்திருக்கிறான்; நீ இப்போது சொல்லியது செய்யாமலிருந்தாலோ உனது மற்றொரு கண்ணையும் பறித்துவிடுவான்; ஆகவே நீ விரைந்து இவனுக்குக் கோல் கொண்டு வரவேணுமென்றவாறு. காகாஸுரனது ஒற்றைக்கண்ணைப் பறித்தபோது காக்கைகளெல்லாவற்றிற்கும் ஒற்றைக் கண்ணும்படி அப்பெருமான் ஸங்கல்பித்ததனால் காகாஸுரனுக்கும் ஸாதாரணகாக்கைக்கும் அபேதமாக இப்படிச் சொல்லுகிறாள். கொடியன்—பிழைக்கேற்ற தண்டனை செய்பவன். ... ... (எ)

179 மின்னிடைச்சீதைபொருட்டா இலங்கையர் *
மன்னன்மணிமுடி பத்துமுடன்விழ *
தன்னிகரொன்றில்லாச் சிலைகால்வளைத்திட்ட * [கொண்டுவா.(அ)
மின்னுமுடியற்கோர்கோல்கொண்டுவா வேலையடைத்தாற்கோர்கோல்

மின் இடை சீதை பொருட்டா — மின்னல்போன்ற [ஸூக்ஷ்ம மான] இடையையுடைய ஸீதையை மீட்டுக்கொணர்வதற்காக

தன் நிகர் ஒன்று இல்லா சிலை கால் வளைத்து இட்ட — தனக்கு ஸமானமான தொன்றுமில்லாத[உயர்ந்த] வில்லை கால்வளையும்படி பண்ணி ப்ரயோகித்த

இலங்கையர் மன்னன் மணி முடி பத்தும் உடன் வீழ — லங்கையிலுள்ளார்க்குத் தலைவனை ராவணனுடைய ரத்நகிரீடமணிந்த தலைகள் பத்தும் ஒருசேர அற்று விழும்படி

மின்னும் முடியற்கு — விளங்கா நின்ற கிரீடத்தை அணிந்தவனுக்கு

ஓர் கோல் கொண்டுவா—;

வேலை அடைத்தாற்கு — ஸமுத்திரத்தில் ஸேது கட்டினவனுக்கு

ஓர் கோல் கொண்டுவா—.

180 தென்னிலங்கைமன்னன் சிரந்தோள்துணிசெய்து *
மின்னிலங்குபூண் விபீடணற்கும்பிக்கு *
என்னிலங்குநாமத்தளவும் அரசென்ற * [கொண்டுவா. (கூ)
மின்னிலங்காரற்கோர்கோல்கொண்டுவா வேங்கடவாணற்கோர்கோல்

தென் இலங்கை மன்னன் சிரம் தோள் துணிசெய்து — அழகிய லங்கைக்கு அரசனாகிய ராவணனுடைய தலைகளையும் தோள்களையும் (அம்பினால்) துணித்துப் போகட்டு,

மின் இலங்கு ஆரற்கு — மின்னல்போல் விளங்குகின்ற ஹாரத்தையுடையவனுக்கு

மின் இலங்கு பூண் — ஒளிவீசுகின்ற ஆபரணங்களை அணிந்த

விபீடணன் நம்பிக்கு — விபீஷணாழ்வானுக்கு

ஓர் கோல் கொண்டுவா—;

என் இலங்கு நாமத்து அளவும் அரசு என்ற — 'என்பெயர் ப்ரகாசிக்கு மளவும் ராஜ்யம் (நடக்கக் கடவது)' என்று அருள் செய்த

வேங்கடம் வாணற்கு — திருமலையில் வாழ்ந்தருளுமவனுக்கு

ஓர் கோல் கொண்டுவா—.

* * *—"மின்னலங்காரற்கு" என்பது மொருபாடம்; மின்—விளங்காகின்ற, அலங்காரத்தையுடையவனுக்கென்று பொருள்: வாணன்—வாழ்நன்; மரூஉ. ... ... (கூ)

181 அக்காக்காய்நம்பிக்குக் கோல்கொண்டுவாவென்று *
மிக்காளுரைத்தசொல் வில்லிபுத்தூர்ப்பட்டன் *
ஒக்கவுரைத்த தமிழ்ப்பத்தும்வல்லவர் *
மக்களைப்பெற்று மகிழ்வரிவ்வையத்தே. (ஙி)

அக்காக்காய் — 'காக்கையே!

நம்பிக்கு கோல் கொண்டுவா என்று — உத்தமனான இவனுக்கு கோலிக்கொண்டுவந்து தா' என்று

மிக்காள் உரைத்த சொல் — சிறந்தவளான யசோதை சொன்ன சொற்களை

வில்லிபுத்தூர் பட்டன் — ஸ்ரீவில்லிபுத்தூரிலவதரித்த பெரியாழ்வார்

ஒக்க உரைத்த தமிழ் பத்தும் வல்லவர் — அவ்யசோதையைப்போலவே சொன்ன தமிழிலாகிய இப்பத்துப்பாசுரங்களையும்ஓதவல்லவர்கள்

மக்களை பெற்று இவையத்தே மகிழ்வர் — ஜ்ஞாநபுத்ரர்களை [சிஷ்யர்களை] அடைந்து இப்பூமியிலே மகிழ்ந்திருக்கப் பெறுவர்.

* * *—மிக்காள்=தேவகியும் யசோதையுமாகிய இருவரும் பூர்வ ஜன்மத்தில் தவஞ்செய்தவப்களாயிருந்தாலும், தேவகி கண்ணனைப் பெற்று விட்டமாத்திரமேயாய், பூர்ணநுபவம் யசோதையதாகையாலே இவள் மிக்காளாஞள். ... ... (கo)

அடிவரவு:—வேலி கொங்கு கறுத்து ஒன்றே சீர் ஆல் பொற்றிகழ் மின் தென்னிலங்கை அக்காக்காய் ஆகிரை.

கண்ணனைப் பூச்சூட அழைத்தல்.

182 ஆநிரைமேய்க்கநீபோதி அருமருந்தாவதறியாய் *
கானகமெல்லாந்திரிந்து உன்கரியதிருமேனிவாட *
பாணியிற்பாலப்பருகிப் பற்றுதாரெல்லாஞ்சிரிப்ப *
தேனிலினியபிரானே செண்பகப்பூச்சூட்டவாராய். (க)

தேனில் இனிய பிரானே — தேனைக்காட்டிலும் போக்ய ஞையிருக்கிற ப்ரபுவே!
கானகம் எல்லாம் திரிந்து — காட்டிடம் முழுதும் திரிந்து கொண்டு
பற்றுதார் எல்லாம் சிரிப்ப — பகைவரெல்லாரும் பரிஹஸிக்கும்படி
ஆ நிரை மேய்க்க நீ போதி — பசுக்களின் திரளை மேய்ப்பதற்கு நீ போகிறாய்;
பாணியில் பாலை பருகி — (கறந்த) பாணியிலேயுள்ள பச்சைப்பாலைக் குடித்து (மின்பு)
அரு மருந்து ஆவது அறியாய் — (நீ உன்னை) பெறுதற்கரிய தேவாம்ருதம்போன்றவனை தலை அறிகிறாயில்லை;
(இனி நீ கன்றுமேய்ப்பதை விட்டிட்டு)
உன் கரிய திருமேனி வாட — உன்னுடைய ச்யாமமான அழகிய திருமேனி வாடும்படி
செண்பகம் பூ சூட்ட வாராய் — செண்பகப்பூவை (நான்) சூட்டும்படி வருவாயாக.

* * *—"இந்த கிருஷ்ணன் எங்கள் வீட்டில் கைப்பாணியிலிருந்த பாலைக் குடித்துப்போனன்" என்று உகவாதார் சொல்லும்படி கறந்தபாணியிலிருந்த பச்சைப்பாலைப் பருகுமவனை பித்தனுயிருந்தாலும் தேனைவிட இனியவனுயிருப்பவனே! உன்னுடைய திருமேனியின் அருமையைத் தெரிந்துகொள்ளாமல் காட்டிலே போய்த் திரிவது தவிர்ந்து செண்பகப்பூவை நான் சூட்டும்படி வரவேணுமென்றவாறு. அருமருந்தாவதறியாய்—இவ்வுலகத்திலுள்ளார்க்குப் பிறவி நோயறுக்கும் மருந்துமாய், பரமபதத்திலுள்ளார்க்குப் போகமளிப்பதற்கு மருந்துமாய் நீ யிருப்பதை அறிகிறிலைகாண். பற்றுதார் சிரிப்ப—பற்றுமவர்கள் [அன்பர்கள்] இவன் செயலுக்கு உகப்பர். ... ... (க)

183 கருவுடைமேகங்கள்கண்டால் உன்னைக்கண்டாலொக்குங்கண்கள் *
உருவுடையாயுலகேழும் உண்டாகவந்துபிறந்தாய் *
திருவுடையாள்மணவாளா திருவரங்கத்தேகிடந்தாய் *
மருவிமணங்கமழ்கின்ற மல்லிகைப்பூச்சூட்டவாராய். (உ)

கண்கள் உன்னை கண்டால் — கண்களானவை உன்னைப் பார்த்தால்
கரு உடை மேகங்கள் கண்டால் ஒக்கும் உரு உடையாய் — கர்ப்பத்தையுடைய [நீர் கொண்ட] மேகங்களை பார்த்தால் (அதை) ஒத்துக் குளிர்கின்ற வடிவையுடையவனே!
உலகு ஏழும் உண்டாக வந்து பிறந்தாய் — ஏழுலகங்களும் ஸ்ருஷ்டை பெறும்படி திருவவதரித்தவனே!
திரு உடையாள் மணவாளா — (உன்னை) ஸம்பத்தாகவுடைய பிராட்டிக்கு நாயகனே!
திரு அரங்கத்தே கிடந்தாய் — கோயிலிலே பள்ளிகொண்டிருப்பவனே!
மணம் மருவி மகிழ்கின்ற மல்லிகைப்பூ — வாஸனை நீங்காமலிருந்து பரிமளிக்கிற மல்லிகைப்பூவை
சூட்டவாராய்—.

* * *—'ஒக்கும்' என்பதை முற்றுகக்கொண்டு 'கருவுடை மேகங்களைக் கண்டால் உன்னைக் காண்பதை ஒத்திருக்கும்: (அதுக்குமேலே) கண்கள் உருவுடையாய்—கண்ணழகையுமுடையவனே!' என்றும் உரைக்கலாம். ... ... (உ)

184 மச்சோடுமாளிகைதோறி மாதர்கள்தம்மிடம்புக்கு *
கச்சோடுபட்டைக்கிழித்துக் காம்புதுகில்வைகீறி *
நிச்சலுந்தீமைகள்செய்வாய் நீள்திருவேங்கடத்தெந்தாய் *
பச்சைத்தமனகத்தோடு பாதிரிப்பூச்சூட்டவாராய். (ங)

மச்சொடு மாளிகை ஏறி மாதர்கள் தம் இடம்புக்கு — நடுநிலையிலும் மேல் நிலையிலும் ஏறிப்போய் பெண்களிருக்கிற இடத்திலே புகுந்து

கச்சொடு பட்டை கிழித்து — (அவர்களுடைய முலைகளின் மேலிருந்த) கச்சுக்களையும் பட்டாடைகளையும் கிழித்திட்டு

காம்பு துகில் அவை கீறி — (மற்றும் அப்பெண்கள் உடுத்துள்ள) கரைகட்டின சேலையையும் கிழித்துப் போட்டு

(இப்படியே)

நிச்சலும் தீமைகள் செய்வாய் — ப்ரதிதினம் துஷ்டசேஷ்டைகளே செய்பவனே!

நீள் திருவேங்கடத்து எந்தாய் — உயர்ந்த திருமலையிலெழுந்தருளியிருக்கிறஸ்வாமியே!

பச்சை தமனகத் தோடு பாதிரிப்பூ — பசுநிறமுள்ள மருக்கொழுந்தையும் பாதிரிப்பூவையும்

சூட்டவாராய்—.

185 தெருவின்கணின்றிளவாய்ச்சிமார்களைத் தீமைசெய்யாதே *
மருவுந்தமனகமுஞ் சீர்மாலைமணங்கமழ்கின்ற *
புருவங்கருங்குழல்நெற்றி பொலிந்தமுகிற்கன்றுபோலே *
உருவமழகியநம்பி உகந்திவைசூட்டவாராய். (ச)

புருவம் கரு குழல் நெற்றி பொலிந்த — புருவங்களையும் கருநிறமான கூந்தலையும் (இவ்விரண்டிற்கும் இடையிலுள்ள) நெற்றியையும் கொண்டு விளங்குகின்ற

முகில் கன்றுபோலே உருவம் அழகிய நம்பி — மேகக் கன்றுபோலே வடிவழகிய சிறந்தோனே! (நீ)

தெருவின்கண்நின்று — தெருவிலே நின்றுகொண்டு

இளஆய்ச்சிமார்களை — இடைச்சிறுமிகளை

தீமை செய்யாதே — தீம்புசெய்யாமலிரு;

மருவும் தமனகமும் சீர் மாலை மணம் கமழ்கின்ற — மருவையும் தமனகத்தையும் (சேர்த்துக்கட்டின) அழகிய மாலைகள் வாஸனை வீசுகின்றன;

இவை உகந்து — இவற்றை விரும்பி

சூட்ட நீ வாராய்—.

* * *—எம்பெருமானுக்கு ஏற்ற உவமைப்பொருள் கிடையாமையால் 'புருவங் கருங்குழல் நெற்றி பொலிந்தமுகிற்கன்று' என இல்பொருளுவமை கூறப்பட்டது. கமழ்கின்ற—'அன்' சாரியை பெறுத முற்று. ... ... (ச)

186 புள்ளினைவாய்பிளந்திட்டாய் பொருகரியின்கொம்பொசித்தாய் *
கள்ளவரக்கியைமூக்கொடு காவலனைத்தலைகொண்டாய் *
அள்ளிநீவெண்ணெய்விழுங்க அஞ்சாதடியேனடித்தேன் *
தெள்ளியநீரிலெழுந்த செங்கமலநீர்சூட்டவாராய். (ஞ)

புள்ளினை வாய்பிளந்திட்டாய் — பகாஸுரனை வாய்கிழித்துப் பொகட்டவனே!,

பொரு கரியின் கொம்பு ஒசித்தாய் — யுத்தோந்முகமான குவலயாபீடத்தின் கொம்பை பறித்தவனே!

கள்ளம் அரக்கியை மூக்கொடு காவலனை தலை கொண்டாய் — வஞ்சனையையுடைய ராக்ஷஸியாகிய சூர்ப்பணகையின் மூக்கையும் (அவளுக்குப்) பாதுகாவலாயிருந்த ராவணனுடைய தலையையும் அறுத்தவனே!

(இப்படிப்பட்ட) நீ

வெண்ணெய் அள்ளி விழுங்க — வெண்ணெயை வாரி விழுங்க

அஞ்சாது அடியேன் அடித்தேன் — சிறிதும் பயப்படாமல் '(எப்போது குழந்தையிறந்து வெண்ணெய் விழுங்கப் போகிறது?' என்றிருந்த) நான் அடித்தேன்;

(அப்பிழையைப்பொறுத்து)

தெள்ளிய நீரில் எழுந்த செங்கமலநீர் — தெளிவான நீரிலே உண்டான செங்கழுநீரை

சூட்டவாராய்—.

* * *—புஷ்பம் மேலே பட்டாலும் வாடும்படியான உன்னுடைய ஸௌகுமார்யத்தைக் கண்டு அஞ்ச வேண்டியதாயிருக்க, அப்படி அஞ்சாமல் நான் அடித்ததைப் பொறுத்துப் பூச்சூட வரவேணுமென்கிறாள். அடியேன்=ஸ்ரீக்ருஷ்ணனுடைய வீரத்தை லீடுபட்டுச்சொல்லுகிறசொல். மரபுவழுவமைதி, அடித்தபின்பு அநுதாபங்கொண்டு 'அடியேன்' என்றாளெனினுமாம். ... ... (ஞ)

187 எருதுகளோடுபொருதி ஏதுமுலோபாய்காண்கம்பி *
கருதியதீமைகள்செய்து கஞ்சனைக்கால்கொடுபாய்ந்தாய் *
தெருவின்கண்தீமைகள்செய்து சிக்கெனமல்லர்களோடு *
பொருதுவருகின்றபொன்னே புன்னைப்பூச்சூட்டவாராய். (சு)

கம்பி — சிறந்தோனே! (கப்பின்னையை மணம் புணர்வதற்காக)

எருதுகளோடு பொருதி — ஏழுரிஷபங்களுடன் போர் செய்யா நின்றாய்;

ஏதும் உலோபாய் காண் — எதிலும் [ஒன்றிலும்] விருப்பமில்லாதவனாயிரா நின்றாய்;

கருதிய தீமைகள் செய்து — (கம்ஸன் உன்மேல் செய்ய) நினைத்த தீம்புகளை (நீ அவன்மேற்) செய்து

கஞ்சனை கால்கொடு பாய்ந்தாய் — (அந்தக்) கம்ஸனை காலினால் [காலிக்கொண்டு] பாய்ந்தவனே!

(அக்ரூரர் மூலமாயழைக்கப்பட்டுக் கம்ஸனரண்மனைக்குப் போம்போது)

தெருவின்கண் தீமைகள் செய்து — தெருவிலே தீமைகளைச் செய்து கொண்டுபோய்

சிக்கென மல்லர்களோடு பொருது வருகின்ற பொன்னே — வலிமையாக (சாணூரமுஷ்டிகனென்னும்) மல்லர்களுடனே போர்செய்துவந்த பொன்போலருமையானவனே!

புன்னைப்பூ சூட்டவாராய்—.

* * *—பொருதி = முன்னிலையொருமை நிகழ்கால வினைமுற்று: "(எருதுகளோடே பொருதது) காலாந்தரமா யிருக்கச்செய்தேயும் தற்காலம்போலே ப்ரகாசிக்கையாலே 'பொருதி' என்று வர்த்தமானமாகச் சொல்லுகிறது" என்ற பெரியஜீயர் உரை நோக்கத்தக்கது. உலோபாய் = 'லோப' என்ற வடமொழியின் திரிபாகிய 'உலோபம்' என்பதனடியாகவந்த எதிர்மறைமுற்று; உடம்பைப்பேணுதல் உயிரைப்பேணுதல் ஒன்றும் செய்யாதிரா நின்றாய் என்று கருத்து. போம்வழியில் வண்ணானைக்கொன்று வஸ்த்ரங்களைப் பறித்துக்கொண்டமை, கம்ஸனுடைய வில்லை முறித்தமை, குவலயாபீடத்தைக் கொன்றமை முதலியன - இங்கு, தெருவின்கண்செய்த தீமைகளாகும். கன் - ஏழனுருபு. ... (சு)

188 குடங்களெடுத்தேறவிட்டுக் கூத்தாடவல்லவெங்கோவே *
மடங்கொள்மதிமுகத்தாரை மால்செய்யவல்லவென்மைந்தா *
இடந்திட்டிரணியனெஞ்சை யிருபிளவாகமுன்கீண்டாய் *
குடந்தைக்கிடந்தவெங்கோவே குருக்கத்திப்பூச்சூட்டவாராய். (எ)

குடங்கள் எடுத்து ஏறவிட்டு கூத்து ஆட வல்ல எம் கோவே — பல குடங்களை தூக்கி உயர வெறிந்து (இப்படி) குடக்கூத்தை யாடுவதற்கு ஸாமர்த்தியமுடைய எம்முடைய தலைவனே

மடம் கொள் மதி முகத்தாரை மால் செய்ய வல்ல என் மைந்தா — மடப்பமென்ற குணத்தையுடைய சந்த்ரன்போன்ற முகத்தையுடைய பெண்களை மயக்கவல்ல எனது புத்ரனே!

முன் இரணியன் நெஞ்சை இடந்திட்டு — நரஸிம்ஹாவதாரத்திலே ஹிரண்யாஸுரனுடைய மார்பை (இருவகிர்களை) ஊன்ற வைத்து

இரு பிளவு ஆக கீண்டாய் — இரண்டு பிளவாகப் போம்படி பிளந்தவனே!

குடந்தை கிடந்த எம் கோவே — திருக்குடந்தையில் பள்ளிகொள்ளுகிற எமது தலைவனே!

குருக்கத்திப்பூ சூட்டவாராய்—.

* * *—தொடக்கூந்து—தலையிலே அடிக்குக் குடமிருக்க இருதோள்களிலும் இருகுடங்களிருக்க இருகையிலுங் குடங்களையேந்தி ஆகாசத்திலே யெறிந்து ஆடுவதொரு கூத்து ... (எ)

189 சீமாலிகாவனேடு தோழமைக்கொள்ளவும்வல்லாய் *
சாமாறவனேயெண்ணிச் சக்கரத்தால்தலைகொண்டாய் *
ஆமாறறியும்பிரானே அணியரங்கத்தேகிடந்தாய் *
ஏமாற்றமென்னைத்தவிர்த்தாய் இருவாட்சிப்பூச்சூட்டவாராய். (அ)

சீ மாலிகன் அவனேடு தோழமை கொள்ளவும் வல்லாய் } மாலிகன் என்ற பெயரையுடையவனேடு ஸ்நேஹம் செய்து கொள்ளுதற்கும் வல்லவனுய்,

அவனே நீ சாம் ஆறு எண்ணி } அந்த மாலிகனே நீ செத்துப் போம் வழியையும் ஆலோசித்து

சக்கரத்தால் தலை கொண்டாய் } சக்ராயுதத்தினுல் தலையையு மறுத்தாய்;

ஆம் ஆறு அறியும் பிரானே } நடத்த வேண்டியவைகளை அறியவல்ல ப்ரபுவே!

அணி அரங்கத்தே இடந்தாய் } அழகிய கோயிலிலே பள்ளி கொண்டிருப்பவனே!

என்னே ஏமாற்றம் தவிர்த்தாய் } எனக்கு துன்பத்தைப்போக் கினவனே!

இருவாட்சிப்பூ சூட்டவாராய்—.

* * *—மாலிகன் என்பானெருவன் கண்ணபிரானுக்கு உயிர்த்தோழனுய் அப்பிரானிடத்திற் பலவகையாயுதங்களையும் பயின்று ஒருவர்க்கு மஞ்சாமல் அஹங்காரியாய் ஸாதுஜநங்களை ஹிம்ஸித்துக் கொண்டிருக்க, கண்ணபிரான் அவனைக் கொன்றிடக்கருதி அவனுக்கு சக்ராயுத ப்ரயோக முறைமையைப் பயில்விக்கிற வியாஜமாக, சக்கரத்தினுல் அவன் தலையறும்படி செய்த இதிஹாஸமுணர்க.

'மாலிகன்' என்பதே அவன்பெயர்: மேன்மைப் பொருளைத்தரும் 'ஸ்ரீ' என்ற சொல் 'சீ' எனத் திரிந்துவந்து சீமாலிகன் எனக் கிடக்கிறது: க்ருஷ்ண ஸ்நேஹத்தால்வந்த மேன்மையுண்டே அவனுக்கு. அவனைக்கொல்வது ஆவச்யகமானபோது 'தோழனைக் கொன்றுன்' என்னும் பழி தனக்கு வாராமல் 'தன்னுலே தான் முடிந்தான்' என்று உலகத்தார் சொல்லும்படி கண்ணபிரான் மாலிகனை உபாயமாகக் கொன்றனனென்பார் 'சாமாறவனை நீ யெண்ணிச் சக்கரத்தால் தலைகொண்டாய்' என்றார். (அ

190 அண்டத்தமரர்கள்சூழ அத்தாணியுள்ளங்கிருந்தாய் *
தொண்டர்கள்நெஞ்சிலுறைவாய் தூமலராள்மணவாளா *
உண்டிட்டுலகினையேழும் ஓராலிலையிற்றுயில்கொண்டாய் *
கண்டுநானுன்னையுகக்கக் கருமுகைப்பூச்சூட்டவாராய். (கூ)

அத்தாணியுள் அமரர்கள் } அருகான் இடத்திலே (ஸேவிக்கும்படி) தேவர்கள் சூழ்ந்திருக்க

அங்கு அண்டத்து இருந்தாய் } அவர்கள் நடுவில் பரமபதத்தில் வீற்றிருப்பவனே!

தொண்டர்கள் நெஞ்சில் உறைவாய் } அடியார்களுடைய ஹ்ருதயத்தில் வஸிப்பவனே!

தூ மலராள் மணவாளா } பரிசுத்தமான தாமரை மலரைப் பிறப்பிடமாகவுடைய பிராட்டிக்குகொழுநனே!

(பிரளயகாலத்தில்)

உலகினை ஏழும் உண்டிட்டு ஓர் ஆல் இலையில் துயில் கொண்டாய் } ஏழு உலகங்களையும் உண்டு விட்டு ஓராலிலையில் யோக நித்திரையைக் கொண்டவனே!

நான் உன்னை கண்டு உகக்க } நான் (நீ பூச்சூடியதைப்) பார்த்து மகிழும்படி

கருமுகைப்பூ இருவாட்சிப்பூவை

சூட்ட வாராய்—.

191 செண்பகமல்லிகையோடு செங்கழுநீரிருவாட்சி *
எண்பகர்பூவுங்கொணர்ந்தேன் இன்றிவைசூட்டவாவென்று *
மண்பகர்கொண்டானை ஆய்ச்சிமகிழ்ந்துரைசெய்தவிம்மாலை *
பண்பகர்வில்லிபுத்தூர்க்கோன் பட்டர்பிரான்சொன்னபத்தே. (ங)

செண்பகம்	'செண்பகப்பூவும்	பூவும்	மலர்களையெல்லாம்
மல்லிகையோடு	மல்லிகைப்பூவும்	கொணர்ந்தேன்	கொண்டுவந்தேன்;
செங்கழுநீர்	செங்கழுநீர்ப்பூவும்	இன்று	இப்போது
இருவாட்சி	இருவாட்சிப்பூவும் (ஆகிய)	இவை சூட்ட	இப்பூக்களைச் சூட்டும்படி
எண் பகர்	(இன்னதின்னதென்று எண்ணிச்சொல்லப்படுகிற	வா	வருவாயாக'
		என்று	என்று—

பகர் மண் கொண் டாணே	பகர்ந்த மண்ணைக்கொண்ட வனே	கோன்	நிர்வாஹகரான
		பட்டர்பிரான்	பெரியாழ்வார்
ஆய்ச்சி	யசோதை		
மகிழ்ந்து	மகிழ்ச்சிகொண்டு	சொன்ன	அருளிச்செய்த
உரை செய்த	சொல்லியவற்றை		
பண் பகர் வில்லி புத்தூர்	ராகமாகவே சொல்லுகின்ற ஸ்ரீவில்லிபுத்தூருக்கு	இ மாலை	இந்தச்சொல்மாலையும்
		பத்தே	ஒருபத்தே !

* * *—இந்தத் திருமொழிக்குப் பலஞ்சொல்லாதொழிந்தது, இப்பத்துப் பாசுரங்களும் ஸ்வ யமே ரஸ்யமாய் போக்யமாயிருக்கு மென்பதற்கு. பத்தே—ஏகாரம் - இப்படியும் பாடலிருக்கப் பெறு வதே ! என்று இத்திருமொழியின் போக்யதையைக் கொண்டாடியதைக் காட்டும். எய்பகர் - சூட்டிக் கொள்ளலாமென்று சாஸ்த்ரங்களிலெண்ணப்பட்ட என்றுமாம். பகர்மலி—வாமநனாய்ச்சென்ற திரு மால் 'எனக்கு மூவடி மண் தா' என்று சொல்லப்பெற்ற பூமியை என்றுவது, 'மூவடிமண் அளந்து கொள்' என்று மஹாபலி உடன்பட்டுச் சொன்ன பூமியை என்றுவதுகொள்க. ஆரேனும் ஒன்றைச் சொல்லினும் ராகத்திலே சேரும்படி சொல்லுகின்ற ஸ்ரீ வில்லிபுத்தூரென்பது 'பண்பகர் வில்லிபுத்தூர்' என்பதன் கருத்து. (ம)

அடிவரவு:—ஆகிரை கரு மச்சு தெரு புள் எருது குடம் சீமாலிகன் அண்டம் சென்பகம் இந்திரன்.

இரண்டாம்பத்து—எட்டாந்திருமொழி, இந்திரனோடு பிரமன்.

(திருவந்திக்காப்பிடக் கண்ணனையழைத்தல்)

---

192 இந்திரனோடுபிரமன் ஈசனிமையவரெல்லாம் *
மந்திரமாமலர்கொண்டு மறைந்துவராய்வந்துநின்றார் *
சந்திரன்மாளிகைசேரும் சதுரர்கள்வெள்ளறைநின்றாய் *
அந்தியம்போதிதுவாகும் அழகனேகாப்பிடவாராய். (க)

சந்திரன் மாளிகை சேரும் சதுரர்கள் வெள்ளறை நின்றாய்	சந்த்ரனைவன் வீடுகளின் மேல்நிலையிலே சேரப் பெற்ற ஸமர்த்தர்கள் வஸிக்கின்ற திருவெள் ளறையிலே நின்றவனே !	உவர் ஆய் வந்து மறைத்து நின்றார்	(மிக்க ஸமீபமாகவும் மிக்க தூரமாகவுமல்லாமல்) நடு விடத்திலிருப்பவராகவந்து மறைந்து நிற்கிறார்கள்;
அழகனே	அழகு உடையவனே!	இது அம் அத்தி போது ஆகும்	இக்காலம் அழகிய ஸாயம் ஸந்த்யாகாலமாகும்;
இந்திரனோடு பிரமன் ஈசன் இமையவர் எல்லாம்	இந்திரனும் ப்ரஹ்மாவும் ருத்ரனும் மற்றுமுள்ள தேவர்களும் (ஆகிய) யா வரும்		(ஆகையால்)
மா மந்திரம் மலர் கொண்டு	சிறந்த மந்த்ர புஷ்பங்களைக் கொண்டு	காப்பு இட வாராய்	(நான் உனக்கு ரக்ஷையாக) திருவந்திக்காப்பிடும்படி வருவாயாக.

* * *—பகவத் ஸ்தோத்ரமாகிய வேதமந்திரங்களைச் சொல்லிக்கொண்டு பகவானுக்கு ஸமர்ப் பிப்பதற்காகக் கையிலேந்தியுள்ள மலர் மந்த்ரமலர் எனப்பட்டது. காப்பு - ரக்ஷை. ஆழ்வார் தாம் அர்ச்சாவதார ப்ரவணராதலால் கண்ணபிரானுடைய திருவந்திக்காப்புக்குத் திருவெள்ளறைப் பதியை விஷயமாக்கினர். ... ... (க)

193 கன்றுகளில்லம்புகுந்து கதறுகின்றபசுவெல்லாம் *
நின்றுழிக்தேனுன்னைக்கூவி நேசமேலொன்றுமிலாதாய் *
மன்றில்நில்லேலெந்திப்போது மதிட்டிருவெள்ளறைநின்றாய் *
நன்றுகண்டாயென்றன்சொல்லு நானுன்னைக்காப்பிடவாராய் (உ)

மதிள் திருவெள்ளறை நின்றாய் } மதிள சூழ்ந்த அழகிய திருவெள்ளறையிலே நின்றருளினவனே!

ஒன்றும் நேசம் இலாதாய் } (என்மேல்) அல்பமும் அன்பில்லாதவனே!

உன்னை கூவி நின்றழைக்கேன் } உன்னைக் கூவிக்கொண்டு நின்றுவிட்டேன்;

(அதனால்)

பசு எல்லாம் கன்று கள் இல்லம் புகுந்து கதறுகின்ற } பசுக்களெல்லாம் கன்றுகளிருக்குமிடத்திலேசேர்ந்து க்கத்துகின்றன (நீ)

அந்தி போது மன்றில் நில்லேல் } அந்திவேளையில் நாற்சந்தியில் நில்லாதே;

என் தன் சொல்லு நன்று கண்டாய் } என்னுடைய வார்த்தை (உனக்கு) நல்லதாகுங்கிடாய்:

நான் உன்னை காப்பு இட வாராய்—.

* * *—பசுக்களைக் கறக்கவேண்டிய நான் உன்னைக் காப்பிட அழைத்துக்கொண்டிருப்பதனால், மேய வெளியே போயிருந்த பசுக்களெல்லாம் கன்றுகளுள்ளவிடத்தில் வந்து சேர்ந்தபின்பும் கறப்பாரில்லாமல் மூலைக்கடுப்பெடுத்துக் கத்துகின்றன என்பது முதலடியின் கருத்து. 'கதறுகின்ற' என்பதை இடை நிலைத்தீபகமாக்கி, கன்றுகள் மூலையுண்ணப்பெறுமையால் கத்துகின்றன; பசுக்கள் புறம்பே நின்றுகொண்டு கன்றுகள் மூலைபூட்டுதல் கறத்தல் செய்யாமையாலே மூலைக்கடுப்பாற் கதறுகின்றன என்றுமாம். ... ... (உ)

194 செப்போதுமென்முலையார்கள் சிறுசோறுமில்லுஞ்சிதைத்திட்டு *
அப்போதுநானுரப்பப்போய் அடிசிலுமுண்டிலையாள்வாய் *
முப்போதும்வானவரேத்தும் முனிவர்கள்வெள்ளறைநின்றாய் *
இப்போதுநாமென்றுஞ்செய்யேன் எம்பிரான்காப்பிடவாராய் (ஊ)

ஆள்வாய் } என்னை ஆளப்பிறந்தவனே!

முப்போதும் வானவர்கள் எத்தும் முனிவர்கள் வெள்ளறை நின்றாய் } மூன்றுகாலத்திலும் தேவர்கள் ஸ்தோத்திரஞ்செய்கின்ற (உன் மங்களத்தையே எண்ணுகிறவர்களுடைய திருவெள்ளறையிலே நிற்பவனே! (நீ),

செப்பு ஓது மெல் முலையார்கள் } பொற்கலசங்களை (உவமையாகச்) சொல்லத்தகுந்த மெல்லிய முலையையுடைய ஸ்திரீகள்

(விளையாட்டாகச்செய்த)

சிறு சோறும் (சிறு)இல்லும் } மணற்சோற்றையும் மணல் வீட்டையும்

சிதைத்திட்டு } அழித்துவிட்டு (நிற்க)

அப்போது } அக்காலத்தில்

நான் உரப்ப } நான் கோபித்துச் சொல்ல

(பிடித்தடிப்பனே? என்றஞ்சி என் முன் நில்லாமல்)

போய் } அப்பாற்போய்

அடிசிலும் உண்டிலை } சோற்றையும் உண்ணாமலிருந்திட்டாய்;

இப்போது } இந்த ஸமயத்திலே

நான் ஒன்றும் செய்யேன் } நான் உன்னை (மருட்டுதல் முதலியன)ஒன்றும் செய்யமாட்டேன்;

எம்பிரான் காப்பிட வாராய்—.

195 கண்ணில்மணற்கொடுதூவிக் காலிலுதைப்பாய்ந்தனையென்றென்று *
எண்ணரும்பிள்ளைகளிவர்வந்திட்டு இவரால்முறைப்படுகின்றார் *
கண்ணனேவெள்ளறைநின்றாய் கண்டாரோடேதீமைசெய்வாய் *
வண்ணமேவேலையதோப்பாய் வள்ளலேகாப்பிடவாராய். (எ)

கண்ணனே } ஸ்ரீ கிருஷ்ணனே!

வெள்ளறை நின்றாய்!—;

கண்டாரோடே தீமை செய்வாய் } கண்டவரோடெல்லாம் தீம்பு செய்பவனே!

வண்ணம் வேலை அது ஒப்பாய் } திருமேனி நிறம் கடலின் நிறத்தை ஒத்திருக்கப்பெற்றவனே!

வள்ளலே } உதாரனே!

எண் அரு பிள்ளைகள் இவர் } எண்ணுவதற்கு அருமையான (மிகப்பல) இப் பிள்ளைகள்

வந்திட்டு } வந்திருந்து

மணல் கொடு கண்ணில் தூவி } மணலைக்கொண்டுவந்து கண்ணில் தூவிவிட்டு

(அதனோடு நில்லாமல்)
காலினால் பாய்ந்தாய் காலினாலும் உதைத்தாய்;
என்று என்று என்று பலதாஞ்சொல்லி
(நீ செய்யுந் தீம்பைக் குறித்து)
முறைப்படுகின்றார் முறையிடாநின்றார்கள்;
(ஆதலால் அங்கே போவதைவிட்டு)
காப்பு இட வாராய்—.

* * *—'நாங்கள் கண்ணை விழித்து விளையாட வொண்ணாதபடி இந்த கிருஷ்ணன் எங்கள் கண்ணிலே மண்ணைத்தூவியும், நீ ஏன் எங்கள் கண்ணிலே மண்ணைத் தூவினையென்று நாங்கள் கேட்கக் காலினாலுதைத்தும் போனான்' என்றிப்படி இவ்வூரிலுள்ள பிள்ளைகள் வந்து என்னிடத்தில் முறையிட்டுக் கொள்ளுகிறார்கள்; ஆதலால் நீ அஞ்சுப்போகாமல் நான் காப்பிடும்படி வரவேணுமென்கிறாள். வேலியது=அது—முதல் வேற்றுமைச் சொல்லுருபு. (சு)

196 பல்லாயிரவரிவ்வூரிற்பிள்ளைகள் தீமைகள்செய்வார் *
எல்லாமுன்மேலன்றிப்போகாது எம்பிரான்நீயிங்கேவாராய் *
நல்லார்கள்வெள்ளறைநின்றாய் ஞானச்சுடரேயுன்மேனி *
சொல்லாரவாழ்த்தினின்றேத்திச் சோப்படக்காப்பிடவாராய். (ரு)

(பஞ்சலக்ஷம் குடியுள்ள)
இவ்வூரிலே தீம்புகளைச் செய்பவர்களாகிய சிறுவர்கள் அனேக ஆயிரக்கணக்கானவராவர்;
இ ஊரில் தீமைகள் செய்வார் பிள்ளைகள் பல் ஆயிரவர்
எல்லாம் அவர்கள்செய்யும் தீம்புகளெல்லாம்
உன் மேல் அன்றி உன்மேலல்லாமல்
(வேறொருவர் மேலும்)
போகாது ஏறாது;
(இப்படியிருப்பதால் அங்கே போகாமல்)
எம்பிரான்! நீ இங்கே வாராய்—;
நல்லார்கள் நல்லவர்கள் வாழ்கிற
வெள்ளறை(யில்) நின்றாய்!—;
ஞானம் சுடரே ஞானவொளியையுடையவனே!
உன் மேனி உன் திருமேனியை
சொல் ஆர நின்று ஏத்தி வாழ்த்தி சொல் நிறையும்படி நின்று ஸ்தோத்ரஞ்செய்து மங்களாசாஸநஞ்செய்து
சொப்பட நன்றாக
காப்பு இட வாராய்—.

* * *—பஞ்சலக்ஷங் குடியுள்ள இவ்வூரிலோ தீம்பு செய்யும் பிள்ளைகள் பலருண்டு; அப்படியிருக்கவும், அவர்கள் தாம்தாம் செய்யுந்தீம்பை உன்மேலேயேற்றிவிடுகிறார்கள். ஆதலால் உன்மேலே குற்றத்தைச் சுமத்துகின்ற அவர்களை விட்டிட்டு, உன்னை அன்புடன் வாழ்த்திக் காப்பிடும்படி உன்மேல் பரிவுள்ளவர்களிருக்கின்ற இவ்விடத்திற்கு வரவேணுமென்பதாம்.

எம்பெருமானுடைய நித்யாத்ம ஸ்வரூபம் ஸ்வயம்ப்ரகாசமாய் ஜ்ஞாநமயமாயிருப்பதால் 'ஞானச் சுடரே' என்கிறார். ... ... (ரு)

197 கஞ்சன்கறுக்கொண்டுநின்மேல் கருநிறச்செம்மயிர்ப்பேயை
வஞ்சிப்பதற்குவிடுத்தான் என்பதோர்வார்த்தையுமுண்டு *
மஞ்சுதவழ்மணிமாட மதின்திருவெள்ளறைநின்றாய் *
அஞ்சுவன்நீயங்குநிற்க அழகனேகாப்பிடவாராய். (சூ)

மஞ்சு தவழ் மணி மாடம் மதில் மேகங்கள் ஊர்ந்து செல்கின்ற உத்தமமான வீடுகளையும் மதிளையுமுடைய
திரு வெள்ளறை(யில்) நின்றாய்!—;
கஞ்சன் நின்மேல் கறுக்கொண்டு 'கம்ஸனவன் உன்மேலே, கோபங்கொண்டு
கரு நிறம் செம் மயிர் பேயை கரு நிறத்தையும் செம்பட்ட மயிரையுமுடைய பூதனையை
வஞ்சிப்பதற்கு (உன்னை) வஞ்சனையாகக் கொல்வதற்கு
விடுத்தான் அனுப்பினன்'
என்பது ஓர் வார்த்தையும் உண்டு என்பதான ஒரு சொல்லும் கேட்டிருப்பதுண்டு,
(ஆதலால்)
நீ அங்கு நிற்க அஞ்சுவன் நீ அவ்விடத்திலே நிற்பதற்கு நான் அஞ்சா நின்றேன்;
அழகனே! காப்பு இட வாராய்—.

198 கள்ளச்சகடுமருதுங் கலக்கழியவுதைசெய்த *
பிள்ளையரசேபேயைப்பிடித்து முலையுண்டபின்னை *
உள்ளவாறொன்றுமறியேன் ஒளியுடைவெள்ளறைநின்றாய் *
பள்ளிகொள்போதிதுவாகும் பரமனேகாப்பிடவாராய். (எ)

கள்ளம் சகடும் மருதும் கலக்கு அழிய — வஞ்சனையையுடைய சகடாஸுரனையும் யமளார்ஜுநங்களையும் (வடிவம்) கட்டுக்குலைந்தழியும்படி

நீ பேயை முலை பிடித்து உண்ட பின்னை — நீ பூதனையினுடைய முலையைப் பிடித்து (வாய் வைத்து) உண்டபின்பு

உள்ள ஆறு ஒன்றும் அறியேன் — உள்ளபடி ஒன்றுமறிகிறேனில்லை;

உதை செய்த பிள்ளை அரசே — (திருவடிகளால்) உதைத்துத் தள்ளிய பிள்ளைத் தன்மையைக்கொண்ட பெருமையனே

ஒளி உடை வெள்ளறை நின்றாய்!—;

இது பள்ளிகொள் போது ஆகும் — இப்போது படுத்து உறங்குகிற வேளையாகும்;

பரமனே! காப்பு இட வாராய்—.

* * *—பார்த்தால் சிறுவன்போலிருக்கின்றாய், நீ செய்யும் செய்கையோ அதிமானுஷம், ஆகையால் உனது உண்மையான ஸ்வரூபம் என்னாலறியப்போகிறதில்லை யென்கிறாள். ... (எ)

199 இன்பமதனையுயர்த்தாய் இமையவர்க்கென்றுமரியாய் *
கும்பக்களிறட்டகோவே கொடுங்கஞ்சன்நெஞ்சினிற்கூற்றே *
செம்பொன்மதிள்வெள்ளறையாய் செல்வத்திளவளர்பிள்ளாய் *
கம்பக்கபாலிகாணங்குக் கடிதோடிக்காப்பிடவாராய் (அ)

இன்பம் அதனை உயர்த்தாய் — (உன் குணசேஷ்டிதங்களால்) பரமானந்தத்தை (எனக்கு) மேன் மேலுண்டாக்கினவனே!

இமையவர்க்கு என்றும் அரியாய் — தேவர்களுக்கு எங்காளும் அருமையானவனே!

கும்பம் களிறு அட்ட கோவே — மஸ்தகத்தையுடைய குவலயாபீடத்தை கொன்ற ஸ்வாமியே!

கொடு கஞ்சன் நெஞ்சினில் கூற்றே — கொடுமை தங்கிய கம்ஸனுடையமநஸ்ஸிலே யமன்போல் பயங்கரனாய்த் தோன்றுமவனே!

செம் பொன் மதிள் வெள்ளறையாய்!—;

செல்வத்தினில் வளர் பிள்ளாய் — செல்வச் செருக்கோடு வளர்கின்ற குழந்தாய்!

அங்கு — நீ இருக்கிறவிடத்தில்

கம்பம் கபாலி காண் — (கண்டார்க்கு) நடுக்கத்தை விளைக்கவல்ல துர்க்கையாகும்;

கடிது ஓடி — (ஆகையால் அங்கு நில்லாமல்) மிகவும் விரைந்தோடி

காப்பு இட வாராய்—.

* * *—அங்கு துர்க்கை யென்னும் க்ஷுத்ர தேவதையிருப்பதனால் அவ்விடத்தைவிட்டு நான் காப்பிடும்படி விரைந்து வரவேணு மென்பதாம். கபாலி—ருத்ரனென்றுமாம். இனி, உடம்பு நிறையச் சாம்பல் பூசி எலும்புகளை மாலையாகக்கட்டியணிந்து கையிற் கபாலங்கொண்டு பிச்சையெடுப்பவர் இரவிற் பிச்சை யெடுத்துத்திரிவது முற்காலத் தியற்கையாதலால் அப்படிவந்தவர்களை 'கபாலி' என்றதாகவுமாம்;' அப்படியிருப்பவர்களைக்கண்டு குழந்தைகள் அஞ்சுமென்று அழைத்தல் இயல்பு. (அ)

200 இருக்கொடுநீர்சங்கிற்கொண்டிட்டு எழில்மறையோர்வந்துநின்றார் *
தருக்கேல்நம்பிசந்திநின்று தாய்சொல்லுக்கொள்ளாய்சிலநாள் *
திருக்காப்புநானுன்னைச்சாத்தத் தேசுடைவெள்ளறைநின்றாய் *
உருக்காட்டுமந்திவிளக்கு இன்றுளிகொள்ளவேற்றுகேன்வாராய். (கூ)

இருக்கொடு நீர் சங்கில் கொண்டிட்டு — (புருஷஸூக்தம் முதலியன) ருக்குக்களைச் சொல்லிக்கொண்டு தீர்த்தத்தை சங்கத்திலே கொணர்ந்து

எழில் மறையோர் வந்து நின்றார் நம்பி — விலக்ஷணரானப்ராஹ்மணர் (உனக்கு ரக்ஷையிடுவதற்கு) வந்து நிற்கிறார்கள்; தீம்பு நிறைந்தவனே!

சந்தி நின்று தருக்கேல் — நாற்சந்தியிலே நின்று செருக்கித்திரியாதே;
சில நாள் — சிலகாலம்
தாய் சொல்லு கொள்ளாய் — தாய் வார்த்தையை கேட்பாயாக:
தேசு உடை வெள்ளறை நின்றாய்!—; — தேஜஸ்ஸை உடைய
இன்று நான் திருக்காப்பு உன்னை சாத்த — இப்போது நான் அழகிய ரக்ஷையை உனக்கு இடுதற்காக
உரு காட்டும் அந்தி விளக்கு — உன் திருமேனிவடிவத்தைக் காட்டுகின்ற அந்திவிளக்கை
ஒளி கொள்ள ஏற்று கேன் — ஒளியையுடையதாக ஏற்றுவேன்;
(இதைக்காண)
வாராய் — கடுக வருவாயாக.

* * *—'உனக்கு ரக்ஷையிடும்படி விலக்ஷணரான பிராமணர் சங்குகளில் நீரெடுத்துக்கொண்டு வந்திருக்கிறார்கள்' என்று யசோதை சொல்லவும், கண்ணன் விளையாடப்போகவே, மீண்டும் 'நீ பிராமணர்கள் ரக்ஷையிடும்படி வராவிட்டாலும் நாற்சந்தியிலே செருக்குடன் விளையாடித்திரிதல் கூடாது. அது க்ஷுத்ர தேவதைகள் வலிக்கிற இடமாகும். தாய் சொல்வதை இன்னுஞ் சிலகாலமாவது கேள்; உனக்கு ரக்ஷையிட விளக்கேற்றுகிறேன்; நீ அவ்விடத்தைவிட்டு வரவேணும்' என்கிறாள். இக்காலத்திலும், விளக்கேற்றிக் குழந்தைகளுக்குச் சுழற்றும் வழக்கமுளது. ... (கூ)

201 போதமர்செல்வக்கொழுந்து புனர்திருவெள்ளறையானை *
மாதர்க்குயர்ந்தவசோதை மகன்றன்னைக்காப்பிட்டமாற்றம் *
வேதப்பயன்கொள்ளவல்ல விட்டுசித்தன்சொன்னமாலை *
பாதப்பயன்கொள்ளவல்ல பத்தருள்ளார்வினைபோமே. (ய)

மாதர்க்கு உயர்ந்த அசோதை — ஸ்திரீகளுள் சிறந்த யசோதைப்பிராட்டி
மகன் தன்னை காப்பு இட்ட மாற்றம் — தன்புத்ரனை கண்ணனை ரக்ஷையிட அழைத்தவார்த்தையை
போது அமர் செல்வம் கொழுந்து புனர் திருவெள்ளறையானை — தாமரைப்பூவைப் (பிறப்பிடமாகப்) பொருந்திய செல்வத்திற்கு உரியவளாய் மற்றைத்தேவியரிற் சிறந்த வளான பிராட்டி ஸம்ச்லேஷிக்கப்பெற்ற திருவெள்ளறையில் நின்றருளிய வனைப்பற்றி—,
(எம்பெருமானுக்கு மங்களாசாஸநம் செய்கையையே)
வேதம் பயன் கொள்ள வல்ல விட்டுசித்தன் சொன்ன மாலை — வேததாத்பர்யமாக அறிய வல்ல பெரியாழ்வார் அருளிச்செய்த பாமாலையினுடைய
பாதம் பயன் கொள்ள வல்ல பத்தர் உள்ளார் — ஓரடிகற்றதனாலாயிய பயனை அடையவல்ல பக்தராக உள்ளவாறு
வினை போம் — வினைகளெல்லாம் கழிந்து விடும்.

* * *—ஒருபாசுரத்தின் ஓரடிக்கு இத்தனை மஹிமை கூறியமுகத்தால் இத்திருமொழியின் பயன் அளவிட்டுச் சொல்லமுடியாதென்பதைக் கைமுகிக நியாயத்தால் பெறவைத்தார். [பாதப்பயனித்யாதி.] ஒவ்வொருபாட்டின் கடைசிப்பாதத்தில் கூறியுள்ள காப்பிடலாகிய புருஷார்த்தத்தைக் கைக்கொள்ளக்கடவ பக்தர்களுடைய பாபங்கள் நீருமென்று முரைக்கலாம். ... (கo)

அடிவரவு:—இந்திரன் கன்று செப்பு கண்ணில் பல்லாயிரவர் கஞ்சன் கள்ளம் இன்பம் இருக்கு போதமர் வெண்ணெய்.

இரண்டாம்பத்து—ஒன்பதாந்திருமொழி, வெண்ணெய்விழுங்கி

(கண்ணனது தீம்புகளை ஆய்ச்சிகள் முறையிடுதலும் கண்ணனை யசோதை சிக்ஷித்தலும்.)

---

202 வெண்ணெய்விழுங்கிவெறுங்கலத்தை வெற்பிடையிட்டுஅதனைசைகேட்கும் *
கண்ணபிரான்கற்றகல்விதன்னைக் காக்கசில்லோமுன்மகனைக்காவாய் *

புண்ணிற்புளிப்பெய்தாலொக்குந்தீமை புரைபுரையாலிலைசெய்யவல்ல *
அண்ணற்கண்ணனேர்மகனைப்பெற்ற அசோதைநங்காயுன்மகனைக்கூவாய். (க)

வெண்ணெய் விழுங்கி — வெண்ணெயை (நிச்சேஷமாக) விழுங்கிவிட்டு
வெறுங் கலத்தை வெற்பிடை இட்டு — (பின்பு) ஒன்றுமில்லாத பாத்தை கல்லிலே போகட்டு
அதன் ஓசை கேட்கும் — அப்படி எறிந்ததனாலுண்டான ஓசையை கேட்டுக் களிக்கின்ற
கண்ணபிரான் கற்ற கல்வி தன்னை காக்க கில்லோம் — ஸ்ரீ க்ருஷ்ணப்ரபு படித்துள்ள (தஸ்கர) வித்தையை (எங்களால்) காக்கமுடியாது; (ஆகையால்)
உன் மகனை — உன் பிள்ளையை
காவாய் — (தீம்புசெய்யாமல்) தடுப்பாயாக;

புண்ணில் புளி பெய்தால் ஒக்கும் தீமை இலை — புண்ணின் மேலே புளியைச் சொரிந்ததைப் போன்ற [தீவ்ரமான] இப்படிப்பட்ட தீம்புகளை
புரை புரை செய்ய வல்ல — வீடுதோறும் செய்வதில் ஸமர்த்தனை
அண்ணல் கண்ணன் ஓர் மகனை பெற்ற அசோதை நங்காய் — ஸ்வாமித்வ ஸூசகமான கண்களையுடையனை ஒரு புத்ரனைப்பெற்ற யசோதைப்பிராட்டி!
உன் மகனை கூவாய் — உன்பிள்ளையை அழைத்துக் கொள்வாயாக.

* * *—இவ்வாறு ஒரு இடைச்சி யசோதையிடம்வந்து முறையிடுகிறாள். உன்மகன் எங்களுடைய வீட்டில் வந்து, நாங்கள் சேர்த்துவைத்த வெண்ணெயையெல்லாம் விழுங்கி அவ்வெண்ணெய் இருந்த கலத்தைக் கற்பாறைகளிலே இட்டு உடைத்து 'ஓசை நன்றாயிருக்கிறது' என்று சொல்லுகிறான். இவன் செய்யும் தீம்புகளோ எங்களாற் பொறுக்கப்போகிறதில்லை; புண்ணிலே புளிரஸத்தைப் பொழிந்தால் எப்படி பொறுக்கமுடியாதோ அப்படி பொறுக்கமுடியாத தீமைகளை ஒவ்வொரு வீட்டிலும் செய்கிறான். இவனது நிருட்டுத்தொழிலைத் தடுக்கலாமென்றாலும் எங்களாலாகவில்லை. ஆகையால், யசோதையே! நீ உன் பிள்ளையைக் கூவியழைத்துத் தீம்பு செய்யவொட்டாதபடி வீட்டிலே உன் பக்கத்திலேயே வைத்துக்கொள் என்கிறாள். புரை - வீடு; வல் - ஆசை. "அண்ணற்கு அண்ணன்" என்று பிரித்து, அண்ணனுடைய பலராமனுக்கு, அண்ணியனுகாதவன்—குணத்தினாலொவ்வாதவனென்று முரைக்கலாம்; "தன்னம்பிரம்பியு மிங்கு வளர்ந்தது அவனிவை செய்தறியான்" என்ற பெரியதிருமொழிப் பாசுரம் காண்க; அண்ணன்—எதிர்மறைவினையாலணையும்பெயர். அண்ணல்—ஆண்பாற் சிறப்புப் பெயர். ... ... (க)

203 வருகவருகவருகவிங்கே வாமனநம்பிவருகவிங்கே *
கரியகுழற்செய்யவாய்முகத்துக் காகுத்தநம்பிவருகவிங்கே *
அரியனிவனெனக்கின்றுநங்காய் அஞ்சனவண்ணவசலகத்தார் *
பரிபவம்பேசத்தரிக்ககில்லேன் பாவியேனுக்கிங்கேபோதராயே. (உ)

இங்கே வருக வருக வருக — இவ்விடத்திலே சடக்கென வருவாயாக;
வாமன நம்பி! இங்கே வருக—;
கரிய குழல் செய்ய வாய் முகத்து காகுத்த நம்பி — கருநிறமான கூந்தலையும் செந்நிறமான வாயையும் (ஒப்பற்ற) முகத்தையுமுடைய இராமமூர்த்தி!
இங்கே வருக—;
(என்று கண்ணனையழைத்து, தன்பிள்ளைமேல் குற்றம்சொன்னவளை நோக்கி யசோதை)
நங்காய் — குணபூர்ணையானவளே!
இவன் எனக்கு இன்று அரியன் — இந்தப்பிள்ளை எனக்கு இப்போது அருமையானவனாயிற்றே;

(என்றுசொல்லி மீண்டும் கண்ணனை நோக்கி)
அஞ்சனம் வண்ணா — மைபோன்ற வடிவுபடைத்தவனே!
அசல் அகத்தார் பரிபவம் பேசதரிக்கில்லேன் — அசல் வீட்டுக்காரர்கள் (உன்மேல்) அவமாகக்ரமான சொற்களைச்சொன்னால் பொறுக்கவல்லேனல்லேன்;
பாவியேனுக்கு — (இப்படி பரிபவங்களைக் கேட்கும்படியான) பாபத்தைப்பண்ணின எனக்கு
(இவ்வருத்தந்தீர)
இங்கே போதராய் — இங்கே வாராய்
[என்று யசோதை கண்ணனையழைக்கிறாள்.]

204 திருவுடைப்பிள்ளைதான்தீயவாறு தேக்கமொன்றுமிலன்தேசுடையன் *
உருகவைத்தகுடத்தொடுவெண்ணெய் உறிஞ்சியுடைத்திட்டுப்போந்துநின்றான்*
அருகிருந்தார்தம்மையநியாயஞ்செய்வதுதான் வழக்கோவசோதாய் *
வருகவென்றான்மகன்றன்னைக்கூவாய் வாழவொட்டான்மதுசூதனனே. (நா)

திரு உடைப்பிள்ளை தான் தீய ஆறு ஒன்றும் தேக்கம் இலன் — உன் செல்வப்பிள்ளையாகிய கண்ணன் தீம்பு செய்யும் வழியில் சிறிதும் தாமதிப்பதில்லை.
தேசு உடையன் — (அதைத்தனதாக்கு) புகழாகக் கொண்டிராநின்றான்;
(இவன் செய்ததென்ன வென்றால்;—)
உருக வைத்த வெண்ணெய் — உருகுவதற்காக (அடுப்பில் நான்) வைத்திருந்த வெண்ணெயை
குடத்தொடு — தாழியோடே [நிச்சேஷமாக]
உறிஞ்சி — உறிஞ்சிவிட்டு
உடைத்திட்டு — தாழியையுமுடைத்துப் போகிட்டு
(பிறகு தான் உடையாதவன்போல்)
போந்து நின்றான் — அவ்வருகேவந்து நில்லாநின்றான்.
அசோதாய் — யசோதையே!
அருகு இருந்தார் தம்மை — உன் வீட்டருகே இருந்தவர்களை
அநியாயம் செய்வது — இஷ்டப்படி அக்ரமஞ்செய்வது
வழக்கோதான் — ந்யாயமாகுமோ?
(நீ)
உன் மகன் தன்னை — உன் பிள்ளையை
வருக என்று — 'வா' என்று சொல்லி
கூவாய் — அழைக்கவேணும்;
(நீ அழைத்துக்கொள்ளாவிட்டாலோ)
மதுசூதனன் — இக்கண்ணபிரான்
வாழ ஒட்டான் — (எங்களை) குடிவாழ்ந்திருக்கவொட்டான்.

தேசு என்பது புகழ் என்னும் பொருளில் இங்குவந்தது. 'தேஜஸ்'என்னும் வடசொற்சிதைவு, (நா)

205 கொண்டல்வண்ணனிங்கேபோதராயே கோயிற்பிள்ளாயிங்கேபோதராயே*
தெண்டிரைசூழ்திருப்பேர்க்கிடந்த திருகாரணனிங்கேபோதராயே*
உண்டுவந்தேனம்மமென்றுசொல்லி ஓடியகம்புகவாய்ச்சிதானும்*
கண்டெதிரேசென்றெடுத்துக்கொள்ளக் கண்ணபிரான்கற்றகல்விதானே. (சு)

கொண்டல் வண்ண — காளமேகம்போன்ற வடிவையுடையவனே!
இங்கே போதராய் — இங்கே வாராய்;
கோவில் பிள்ளாய் — திருவரங்கத்தில் வளர்க்கு மவனை பிள்ளாய்!
இங்கே போதராய்—;
தெள் திரை சூழ் திருப்பேர் கிடந்த — தெளிவான அலையையுடைய ஜலத்தால் சூழப்பட்டதிருப்பேர் நகரிலேபள்ளிகொண்டிராநின்ற
திரு காரண — ஸ்ரீமந்நாராயணனே!
இங்கே போதராய் — இங்கே வாராய்:
(இப்படி அம்ம முண்கைக்காகப் புகழ்ந்தழைத்த யசோதையினருகில்
கண்ணபிரான் வந்து)
அம்மம் உண்டு வந்தேன் என்று சொல்லி ஓடி அகம் புக — 'உணவை (நான்) உண்டு வந்தேன்' என்று சொல்லி ஓடிவந்து அகத்திலுள்ளே புக,
ஆய்ச்சி தானும் — தாயான யசோதையும்
கண்டு — (கண்ணன் வந்த வரவையும் இவன் முகமலர்த்தியையும்) கண்டு (மகிழ்ந்து)
எதிரே சென்று — எதிர்கொண்டு போய்
எடுத்துக் கொள்ள — (அவனைத் தன் இடுப்பில்) எடுத்துக் கொள்ளும்படி
கண்ணபிரான் — (அந்த) ஸ்ரீகிருஷ்ணன்
கற்ற — (தாயிடமே) கற்றுக்கொண்ட
கல்வி தானே — கல்வியின் பெருமையிருந்தவாறு என்னே!
[என்று ஆழ்வார் இனிபராகிறார்.]

* * *—இப்பாட்டில் "வருகவென்றான் மகன்றன்னைக் கூவாய்" என்று சில ஆய்ச்சிகள் முறையிட்டவாறே யசோதைப்பிராட்டி கண்ணபிரானைப் பல படியாகப் புகழ்ந்து 'கண்ணே! மூலையுண்ணவா' என்றழைக்க, அவன் தன் மகிழ்ச்சி தோற்ற "யான் அம்மமுண்டு வந்தேன்காண்!" என்று சொல்லி ஓடிவந்து அகத்திலுள்ளேபுக, அப்பசோதை அவன்வந்த அழகையும் முகமலர்த்தியையும் கண்டு மகிழ்ந்து அக் கண்ணபிரானை எதிர்கொண்டு சென்று அவனைத் தன் இடுப்பிலேற்றி அணைத்துக்

கொண்டவாற்றை ஆழ்வார் அநுஸந்தித்து 'இவ்வகையான பறிமாற்றத்தைப் பெறும்படி கண்ணன் கற்ற கல்வியுமொன்றே!' என்று வியக்கின்றனர். அன்றிக்கே, முன்னிரண்டடியும் பின்னிரண்டடியும் நன்கு பொருந்துமாறு தாயான யசோதைதானே வியக்கின்றாளென்று உரைத்தலும் உரித்தென்க; அப்போது "ஆய்ச்சிதானும் கண்டெதிரே சென்றெடுத்துக்கொள்ள" என்றது தன் செயலைப் பிறர் சொல்லுமாபோலே தானே சொன்னபடி யெனக்கொள்க. கண்ணன் முன்பு செய்த நீமைகளைத் தாயாகிய தான் மறந்துவிட்டு அவனே யெதிர்சென் றெடுத்துக்கொள்ளும்படி அவன் பண்ணின விசித்திரத்தில் ஈடுபட்டு 'இப்பருவத்திலே இவன் இவ்வளவு விரகனாவதே!' என்று தன்னிலைதான் புகழ்ந்து மகிழ்ந்து பொலிந்திருளென்க. ... ... (சு)

206 பாலிக்கறந்தடுப்பேறவைத்துப் பல்வளையாளென்மகளிருப்ப*
மேலையகத்தேநெருப்புவேண்டிச்சென்று இறைப்பொழுதங்கேபேசிநின்றேன்*
சாளக்கிராமமுடையபெரியநம்பி சாய்த்துப்பருகிட்டுப்போந்துநின்றான்*
ஆலைக்கரும்பின்மொழியனைய அசோதைநங்காயுன்மகனைக்கூவாய். (நு)

ஆலை கரும்பு அனைய இன் மொழி அசோதை நங்காய் — ஆலையில் இட்டு ஆடும்படி முதிர்ந்த கரும்பைப் போன்று மதுரமான மொழியையுடைய யசோதைப்பிராட்டீ!

பல் வளையாள் என் மகள் — பலவகை வளைகளை அணிந்துள்ள என் மகளானவள்

பாலை கறந்து — பாலை (ப்பாத்திரங்களில்) கறந்தெடுத்து

(அப்பாத்திரங்களை)

அடுப்பு ஏற வைத்து — அடுப்பின்மேலேற்றிவைத்து

இருப்ப — (அவற்றுக்குக் காவலாக) இருக்க (நான்)

நெருப்பு வேண்டி — (அவற்றைக் காய்ச்சுவதற்காக) நெருப்பெடுத்துவர விரும்பி

மேலை அகத்தே சென்று — மேலண்டை வீட்டிற்குப் போய்

அங்கே இறைப் பொழுது பேசி நின்றேன் — அவ்விடத்தில் கூணகாலம் (அவர்களோடு) பேசிக்கொண்டிருந்து விட்டேன்; (அவ்வளவிலே)

சாளக்கிராமம் உடைய நம்பி — ஸ்ரீஸாளக்ராமத்தை (இருப்பிடமாக்) உடையனாய் ஒன்றிலுங் குறைவற்றவனான (உன் மகன்)

(என்மகளிருந்த விடத்திற் சென்று)

சாய்த்து பருகிட்டு போந்து நின்றான் — (அந்த க்ஷீரபாத்திரத்தைச்) சாய்த்து(அதிலிருந்த பாலை முழுதும்) குடித்து விட்டு (இப்புறத்தே)வந்து(ஒன்று மறியாதவன்போல)நில்லா நின்றான்;

(இனி இவன் எங்களகங்களில் இவ்வாறான நீமைகளைச் செய்யத் துணியாதபடி நீ சிக்ஷிப்பதற்காக)

உன் மகனை கூவாய் — உன் பிள்ளையான இவனை அழைத்துக்கொள்ள வேணும்.

207 போதர்கண்டாயிங்கேபோதர்கண்டாய் போதரேனென்னாதேபோதர்கண்டாய்
ஏதேனுஞ்சொல்லியசலகத்தார் ஏதேனும்பேசநான்கேட்கமாட்டேன்*
கோதுகலமுடைக்குட்டனேயோ குன்றெடுத்தாய்குடமாடுகூத்தா*
வேதப்பொருளேயென்வேங்கடவா வித்தகனேயிங்கேபோதராயே. (சூ)

கோதுகலம் உடை ஓ குட்டனே — (எல்லாருடைய) கொண்டாட்டத்தையும் (தன்மேல்) உடைய வாராய்பிள்ளாய்!

குன்று எடுத்தாய் — (கோவர்த்தநமென்னும்) மலையை (குடையாக) எடுத்தவனே!

குடம் ஆடு கூத்தா — குடக் கூத்தாடினவனே!

வேதம் பொருளே — வேதங்களுக்கு பொருளாயிருப்பவனே!

என் வேங்கடவா — 'என்னுடையவன்' என்று அபிமானிக்கும்படி திருமலையில் நிற்பவனே!

வித்தகனே — வியக்கத் தக்கவனே! (நீ)

(அசலகங்களிற்போக நினையாமல்)

இங்கே போதர் கண்டாய் போதர் கண்டாய் — என்னருகில் விரைந்து ஓடிவா;

(என்று யசோதை அழைக்க, அவன் ('வரமாட்டேன்' என்ன;)
போதரேன் என்னுதே போதார் கண்டாய் — 'வரமாட்டேன்' என்று சொல்லாமல் (இசைந்து) வருவாயாக;
(என்று யசோதை வேண்டியழைக்க, கண்ணன் 'நீ இங்ஙனே வருந்தியழைப்பது ஏதுக்காக?' என்ன;)
அசல் அகத்தார் ஏதேனும் சொல்லி — அசல் வீட்டுக்காரர்கள் இன்னது என்று எடுத்துக்கூற ஒண்ணாதபடியுள்ள சில கடுஞ்சொற்களை (உன்னை நோக்கித் தம்மிலேதாம்) சொல்லிக்கொண்டு
(அவ்வளவோடும் நில்லாமல்)
ஏதேனும் பேச — (என் காதால் கேட்கவும் வாயாற்சொல்லவு மொண்ணாத) சில பழிப்புக்களை (என் பக்கலிலே வந்து) சொல்ல
(அவற்றை)
நான் கேட்க மாட்டேன் — (உன்மீது பரிவுள்ள) நான் கேட்டுப் பொறுக்கமாட்டேன்;
(ஆதலால்,)
இங்கே போதராய் — (அவர்களின் வாய்க்கு இரையாகாமல்) இங்கே வருவாயாக (என்றழைக்கிறாள்.)

208 செந்நெலரிசிறுபருப்புச் செய்தவக்காரம்நறுநெய்பாலால்*
பன்னிரண்டிருவோணமட்டேன் பண்டுமிப்பிள்ளைபரிசறிவன்*
இன்னமுகப்பனவென்றுசொல்லி யெல்லாம்விழுங்கிட்டுப்போந்துநின்றான்*
உன்மகன்றன்னையசோதைநங்காய் கூவிக்கொள்ளாயிவையுஞ்சிலவே. (எ)

அசோதை நங்காய்!—;
செந்நெல் அரிசி சிறு பருப்பு — செந்நெலரிசியும் சிறு பயற்றம்பருப்பும்
செய்த அக்காரம் — (சமையற் குற்றமொன்றும் நேராதபடி காய்ச்சித் திரட்டிநன்றாகச்) செய்த கருப்புக்கட்டியும்
நறு நெய் பாலால் — மணம் மிக்க நெய்யும் பாலும் ஆகிற இவற்றாலே
பன்னிரண்டு திரு ஓணம் — பன்னிரண்டு திருவோணத் திருநாளளவும்
(நோன்புக்கு உறுப்பாகப் பாயஸ பக்ஷணங்களை)
அட்டேன் — சமைத்தேன்;
பண்டும் இ பிள்ளை பரிசு அறிவன் — மூன்பும் இப்பிள்ளையிடையவ ஸ்வபாவத்தை (நான்) அறிவேன்;
(இப்போதும் அப்படியே)
எல்லாம் — (திருவோண விரதத்திற் காகச் சமைத்தவற்றை) யெல்லாம்
விழுங்கிட்டு — (ஒன்றும் மிகாதபடி) விழுங்கி விட்டு
(அவ்வளவிலும் திருப்தி பெறாமல்)
நான் இன்னம் உகப்பன் என்று சொல்லி — 'நான் இன்னமும் உண்ண வேண்டியிராகின்றேன்' என்று சொல்லிக்கொண்டு
போந்து நின்றான் — (அவ்விடத்தை விட்டுக்) கடக்கவந்து (அங்கபரரைப் போல) நில்லாநின்றான்;
(இனி இவ்வாறு நீமை செய்யாதபடி)
உன் மகன் தன்னை — உன் பிள்ளையான இக் கண்ணனை
கூவிக் கொள்ளாய் — (உன்னருகில்) அழைத்துக் கொள்வாயாக;
(பிள்ளைகளைத் தீம்புசெய்ய வொட்டாதபடி பேணி வளர்க்கவேண்டியிருக்க, அப்படி வளர்க்காமல்)
இவையும் சிலவே — இப்படி வளர்ப்பதும் சில பிள்ளை வளர்க்கையோ!

209 கேசவனேயிங்கேபோதராயே கில்லேனென்னதிங்கேபோதராயே*
நேசமிலாதாரகத்திருந்து கீளையாடாதேபோதராயே*
தூசனஞ்சொல்லுக்தொழுத்தைமாருந் தொண்டருமின்றவிடத்தினின்று*
தாய்சொல்லுக்கொள்வதுதன்மங்கண்டாய் தாமோதரா விங்கேபோதராயே.(அ)

கேசவனே இங்கே போதராய் — அழகியகுழலியுடையவனே! இங்கே வருவாயாக;
கில்லேன் என்னது — 'மாட்டேன்' என்று மறுத்துச் சொல்லாமல்
இங்கே போதராய்—;
(என்று யசோதை யழைக்க, இங்கே சிறிது விளையாடி வருகிறேன் என்று கண்ணன் சொல்ல,)

நீ	நீ
நேசம் இலாதார்	(உன்மீது) அன்பில்லாதவர்களுடைய
அகத்து இருந்து	அகங்களிலே யிருந்து
விளையாடாதே	விளையாட்டொழிவதுமன்றி,
தூசனம் சொல்லும்	(உன்மேல்) பழிப்புக்களைச் சொல்லுகிற
தொழுத்தை மாரும்	(இடைச்சிகளுக்கு) அடிச்சிகளானவர்களும்
தொண்டரும்	(இடையர்க்கு) அடியரான வர்களும்
நின்ற	நிற்கின்ற

இடத்தில் நின்று போதராய்	இடங்களையு மொழித்துவிட்டு (இங்கே) வாராய்;
(என்று யசோதை சொல்லியும் அவன் வரக்காணுமையாலே,)	
தாய் சொல்லு கொள்வது	தாய் வாய்ச்சொல்லை மேற்கொண்டு நடப்பது
தன்மம் கண்டாய்	(பிள்ளைகளுக்கு) தர்மங் காண்;
(ஆதலால்)	
தாமோதரா! இங்கே போதராய்.	
[என்றழைக்கின்றாள்.]	

* * *—கண்ணபிரானே! நீ விளையாடுவதற்கு இங்கே விசாலமான இடமுண்டே; இழிசனங்களான வேலிக்காரிகளும் வேலிக்காரருங்கூட உன்மேல் குற்றங்குறைகள் கூறும்படி பொருமைக்காரர்களுள்ள விடங்களில் இருந்துகொண்டு விளையாடாமல், அசைந்திடும் குழலழகும் மீயுமாய் வரும் நிலையைக் கண்டு நான் மகிழும்படி இங்கு வாராய் என்றழைக்கிறாள் யசோதைப்பிராட்டி. (அ)

210 கன்னலிலட்டுவத்தோடுசீடை காரெள்ளினுண்டைகலத்திலிட்டு* [தான்* என்னகமென்றுகான்வைத்துப்போக்தேன் இவன்புக்கவற்றைப்பெறுத்திப்போக் பின்னுமகம்புக்குறியைநோக்கிப் பிறங்கொளிவெண்ணெயுஞ்சோதிக்கின்றான்* உன்மகன்றன்னையசோதைகங்காய் கூவிக்கொள்ளாயிவையுஞ்சிலவே. (கூ)

அசோதை கங்காய்!—;	(அவ்வளவிலும் பர்யாப்தி பிறவாமையால்)
கன்னல்	கருப்புக் கட்டிப்பாகுடன் சேர்ந்த
இலட்டுவத்தோடு	'லட்டு' என்னும் பக்ஷியத் தோடு
சீடை	சீடையையும்
கார் எள்ளின் உண்டை	காரெள் இட்டு வாரின எள்ளுண்டையையும்
கலத்தில் இட்டு	(அவ்வவற்றுக்கு உரிய) பாத்திரங்களிலே நிறைத்து
என் அகம் என்று	'என் அகம் (ஆகையால் இங்குப் புகுவாரில்லை') என்று நினைத்து
(விசேஷமாகக் காவலிடாமல்,)	
கான் போந்தேன்	(உறிகளிலே வைத்துவிட்டு) நான் (வெளியே) வந்தேன்;
(அவ்வளவில்)	
இவன் புக்கு அவற்றை பெறுத்திப் போந்தான்	இப்பிள்ளையானவன் (அவ்விடத்திலே வந்து) புகுந்து அப்பணியாரங்களை (நான்) பெறும்படி பண்ணி (ஒன்றும் அறியாதவன்போல் இவ்வருகே) வந்துவிட்டான்;

பின்னும் அகம் புக்கு உறியை நோக்கி	மறுபடியும் (என்) வீட்டினுள்புகுந்து உறியைப் பார்த்து
(அதில்)	
பிறங்கு ஒளி வெண்ணெயும் சோதிக்கின்றான்	மிகவும் செவ்வியை உடைத்தான வெண்ணெய் உண்டோ என்று ஆராயா நின்றான்;
(இச்சேஷ்டைகள் எனக்குப் பொறுக்கப் போகாமையால்,)	
உன் மகன் தன்னை கூவிக் கொள்ளாய்	உன் பிள்ளையாகிய கண்ணனை (உன்னருகில் வரும்படி) அழைத்துக் கொள்;
இவையும் சிலவே	(இப்படி இவனைத் தீம்பிலே கைவளர விட்டிருக்கிற) இவையும் ஒரு பிள்ளை வளர்க்கையோ?

* * *—'பெறுத்திப்போந்தான்' என்பது வ்யதிரேகோக்தி; பிறகுறிப்பு: அவற்றில் கானுஞ் சிலபெறும்படி சேஷப்படுத்தாமல் முழுவதையும் தானே வாரியுண்டானென்று கருத்து. பெறுத்திப்போந் தான்—பெற்றுப்போனான் என்றுமாம். ... ... (கூ)

**211 சொல்லிலரசிப்படுதிங்காய் தூமுலையனுன்பிள்ளைதானே*
இல்லம்புகுந்தென்மகனைக்கூவிக் கையிலவனையைக்கழற்றிக்கொண்டு***

கொல்லையினின்றுங்கொணர்ந்துவிற்ற அங்கொருத்திக்கவ்வலீகொடுத்து*
கல்லனகாவற்பழங்கள்கொண்டு நானல்லேனென்றுசிரிக்கின்றானே. (கo)

நங்காய் — யசோதைப்பிராட்டீ!
சொல்லில் — (உன்மகன் செய்ததிமை களை நாங்கள்) சொன்னால்
அரசிப்படுதி — (அதற்காகவீ) சீற்றங் கொள்ளாநின்றாய்;
உன் பிள்ளைதான் — உன் பிள்ளையோவென்றால்,
சூழல் உடையனே — (பற்பல) வஞ்சனச்செய்கை களை உடையவனுமிருக் கின்றானே,

(என்று ஓரிடைச்சி சொல்ல,
'அவன் என்னதிமை செய்தான்?'
என்று யசோதை கேட்க;)

இல்லம் புகுந்து என் மகளை கவி — (என்) வீட்டினுள் புகுந்து என் பெண்ணை (பேர் சொல்லி) அழைத்து
கையில் வளையை கழற்றிக்கொண்டு — (அவளுடைய) கையிலிருந்த வளையை (பலாத்காரமாக) நீக்கிக்கொண்டு போய்,
கொல்லையில் நின்றும் கொணர்ந்து — காடுகளில் நின்றும் (நாவற் பழங்களை இடைச்சேரித் தெருக்களில்) கொண்டு வந்து
அங்கு — அவ்விடத்தில்
விற்ற — (அவற்றை)விற்பனை செய்ய லுற்ற
ஒருத்திக்கு — ஒரு பெண்பிள்ளைக்கு
அவ் வளை கொடுத்து — அந்த (என்மகளுடைய) கை வளையைக் கொடுத்து

(அதற்குப்பதிலாக)

நல்லன நாவல் பழங்கள் கொண்டு — (தனக்கு) நல்லவையாகத் தோற்றினநாவற்பழங்களை (அவளிடத்தில்) வாங்கிக் கொண்டு

(போரும் போராதென்று விவாதப்படுகிற வளவிலே, என்னைத்தன் அருகில் வரக் கண்டு, நான் ஒன்றும் கேளாதிருக்கச் செய்தேயே)

நான் அல்லேன் என்று — ('உன் மகளினது கைவளை யைக் களவுகண்டவன்) நானல்லேன்' என்று தானே சொல்லி, (அவ்வள வில் தன் திருட்டுத்தனம் வெளியானதைத் தானே அறிந்துகொண்டு)
சிரிக்கின்றான் — (ஓ! மோசம் போனேமே! என்று) சிரியாகின்றான்,

(இதிலும் மிக்க திமையுண்டோ என்கிறாள்.)

அரசி—அரசன்மனைவி. அரசிப்படுதி—அரசியின் தன்மையை யடைகிறாய்; இது, கோபிக்கிறா யென்ற பொருளைத்தந்தது. சூழல்—சூழ்ச்சி; தந்திரம்: 'அல்' விகுதி பெற்ற தொழிற்பெயர். (கo)

212 வண்டுகளித்திரைக்கும்பொழில்சூழ் வருபுனற்காவிரித்தென்னரங்கன் *
பண்டவன்செய்ததிரிடையெல்லாம் பட்டர்பிரான்விட்டுசித்தன்பாடல் *
கொண்டிவைபாடிக்குனிக்கவல்லார் கோவிந்தன்றன்னடியார்களாகி *
எண்டிசைக்கும்விளக்காகிநிற்பார் இணையடியென்றலைமேலனவே. (ஙக)

வண்டு களித்து இரைக்கும் பொழில் — வண்டுகளானவை (தேனைப் பருகிக்) களித்து ஆர வாரங்கள் செய்யப்பெற்ற சோலைகளாலும்
வருபுனல் காவிரிசூழ் தென் அரங்கன் அவன் — (அச்சோலைகளுக்காகப் பெருகி) வாராநின்றுள்ள நீரையுடைத்தான காவேரி நதியாலும் சூழப்பெற்று அழகிய திருவரங்கத்தில் நித்யவாஸம் பண்ணுகிற வைபவத்தை யுடையனான அப்பெருமான்
பண்டு செய்த திரிடை எல்லாம் — (விபவமாகிய) முற்காலத்தில் செய்த லீலாசேஷ்டிதங்க ளெல்லாவற்றையும் (விஷயமாகக்கொண்டு)
விட்டு சித்தன் பட்டர் பிரான் பாடல் — விஷ்ணுவை நெஞ்சிற் கொண்டவராய் பிராஹ்ம ணோத்தமரான பெரியாழ் வார் (பாடின) பாடலாகிய
இவை கொண்டு பாடி — இப்பாட்டுக்களை (அநுஸந் தேயமாகக்)கொண்டு (இப்பாசுரங்களைப்) பாடி

(அதனால் பக்தி மீதூர்ந்து உடம்பு இருந்தவிடத்தில் இராமல் விகாரமடைந்து)

குனிக்க வல்லார் கோவிந்தன் தன் அடியார்கள் ஆகி — கூத்தாடவல்லவர்களாய் கண்ணபிரானுக்கு அடியவர் களாய்

எட்டுத் திக்குக்களிலும் (உள்ள இருள் நீங்கும்படி) (அத்திக்குக்களுக்கு) விளக்காக நிற்குமவர்களுடைய திருவடியிணைகளானவை — என் தலை மேலன — என்னுடைய முடியின்மேல் வீற்றிருக்கத்தக்கவை.

அடிவரவு.—வெண்ணெய் வருக திரு கொண்டல் பாலோ போதர் செந்நெல் கேசவன் கன்னல் சொல்லில் வண்டு ஆற்றில்.

இரண்டாம்பத்து—பத்தாந்திருமொழி, ஆற்றிலிருந்து

(கண்ணன் செய்த நீம்புகளை ஆய்ச்சிகள் யசோதையிடம் முறையிடுதல்.)

---

213 ஆற்றிலிருந்து விளையாடுவோங்களை *
சேற்றுலேறிந்து வளைதுகிற்கைக்கொண்டு *
காற்றிற்கடியனய் ஓடியகம்புக்கு *
மாற்றமுந்தாராலின்றுமுற்றும் வளைத்திறம்பேசாலின்றுமுற்றும். (க)

ஆற்றில் இருந்து — யமுனையாற்றங்கரைமணலிலிருந்துகொண்டு
விளையாடுவோங்களை — விளையாடாநின்ற எங்கள் மேல்
சேற்றுல் எறிந்து — சேற்றையிட்டெறிந்து
வளை துகில் கைக்கொண்டு — (எங்களுடைய) கைவளைகளையும் புடவைகளையும் (தன்) கையால் வாரியெடுத்துக்கொண்டு
காற்றில் கடியன் ஆய் ஓடி அகம் புக்கு — காற்றிலுங்காட்டில் மிக்க வேகமுடையவனாக (அங்குநின்றும்) ஓடிவந்து (தன்) வீட்டினுள்ளே புகுந்துகொண்டு

வாசலில்நின்று அவன்பேரைச் சொல்லிக் கூப்பிட்டுக் கதறுகின்ற எங்களைக் குறித்து)
மாற்றமும் தாராலால் இன்று முற்றும் — ஒரு வாய்ச்சொல்லும் அருளாமல் உபேக்ஷியாநின்ற பெருமானால் இப்போது முடியாநின்றோம்;
வளைத் திறம் பேசாலால் இன்று முற்றும்— (தான்முன்பு வாரிக்கொண்டுபோன வளையின் விஷயமாக (தருகிறேன், தருகிறேன் என்பவற்றில் ஒன்றையும்) வாய்விட்டுச்சொல்லாத அப் பெருமானால்

214 குண்டலந்தாழக் குழல்தாழநாண்தாழ *
எண்டிசையோரும் இறைஞ்சித்தொழுதேத்த *
வண்டமர்பூங்குழலார் துகில்கைக்கொண்டு *
விண்டோய்மரத்தாலின்றுமுற்றும் வேண்டவுந்தாராலின்றுமுற்றும். (உ)

குண்டலம் தாழ — காணபூஷணங்களானவை (தோளளவும்) தாழ்ந்து தொங்கவும்
குழல் தாழ — திருக்குழல்களானவை (அத்தோடொக்கத்) தாழ்ந்தசையவும்
நாண் தாழ — (திருக்கழுத்திற் சாத்தின) விடுநாணானது (திருவுந்தியளவும்) தாழ்ந்தசையவும்

எண் திசையோரும் — எட்டு திக்கிலுமுள்ள (தேவர் முனிவர் முதலியோர் எல்லாரும்
இறைஞ்சி தொழுது ஏத்த — நன்றாக [ஸ்ஷ்டாங்கமாக] வணங்கி ஸ்தோத்ரம் பண்ணவும்
(இப்படிப்பட்ட நிலைமையையுடையையாய்)
வண்டு அமர் பூ குழலார் — வண்டுகள் படிந்துவிடக்கப்பெற்ற பூக்களை அணிந்த கூந்தலையுடைய இடைச்சிக(ளான எங்க)ளுடைய

(ஆற்றங்கரையில் கலைந்து வைக்கப் பட்டிருந்த)
துகில் புடவைகளை
கைக் கொண்டு (தனது) கைகளால் வாரிக் கொண்டு
விண் தோய் மரத்தானல் ஆகாசத்தை அளாவிய (குருந்த) மரத்தின்மேல் ஏறியிராநின்றுள்ள கண்ணபிரானல்
இன்று முற்றும்—;
வேண்டவும் (எங்கள் துகிலைத் தந்தருள் என்று நாங்கள்) வேண்டிக் கொண்ட போதிலும்
தாரானல் (அவற்றைத்) தந்தருளாத கண்ணபிரானல்
இன்று முற்றும்—.

215 தடம்படுதாமரைப் பொய்கைகலக்கி *
விடம்படுநாகத்தை வால்பற்றியீர்த்து *
படம்படுபைந்தலை மேலேழப்பாய்ந்திட்டு *
உடம்பையசைத்தானின்றுமுற்றும் உச்சியில்நின்றானின்றுமுற்றும். (ஈ)

தடம் படு இடமுடைத்தான [விசாலமான]
தாமரைப்பொய்கை தாமரைப்பொய்கையை
கலக்கி (உள்ளே குதித்துக்) கலங்கச் செய்து, (அக்கலக்கத்தினல் சீற்றமுற்று)
விடம் படு நாகத்தை வால் பற்றி ஈர்த்து விஷத்தை உமிழ்ந்து கொண்டு (அப்பொய்கையில்) மேற்கிளம்பின காளிய ஸர்ப்பத்தை வாலைப்பிடித்திழுத்து, (அதனல் மின்பு)
படம் படு படமெடுக்கப்பெற்று
பை தலை மேல் எழ பாய்ந்திட்டு மெத்தென்றிருந்த (அந்த நாகத்தின்) தலையின்மீது இளரக்குறித்து (அத்தலையின்மீது நின்று)
உடம்பை அசைத்தானல் (தன்) திருமேனியை அசைத்துக் கூத்தாடின கண்ணபிரானல
இன்று முற்றும்—;
(அந்தக்காளியன் இளைத்து விழுந்து தன்னைச் சரணம் புகுமளவும்)
உச்சியில் நின்றானல் (அவனுடைய) படத்தின்மீது நின்றருளின கண்ணபிரானல்
இன்று முற்றும்—.

216 தேனுகனுவிசெகுத்துப் பனங்கனி *
தானெறிந்திட்ட தடம்பெருந்தோளினல் *
வானவர்கோன்விட வந்தமழைதடுத்து *
ஆனிரைகாத்தானின்றுமுற்றும் அவையுய்யக்கொண்டானின்றுமுற்றும். (சு)

தேனுகன் ஆவி செகுத்து தேனுகாஸுரனுடைய உயிரை முடிக்க நினைத்து (அத்தேனுகனை)
பனங்கனி (அஸுராவிஷ்டமான) பனை மரத்தின் பழங்கள் (உதிரும்படியாக)
எறிந்திட்ட (அந்த மரத்தின்மேல்) வீசியெறிந்த
தட பெரு தோளினல் மிகவும் பெரிய தோளாலே, (கோவர்த்தன பர்வதத்தையெடுத்து)
வானவர் கோன் விட வந்த மழை தடுத்து தேவேந்திரனது ஏவுதலாலே வந்த வர்ஷத்தைத் தவிர்த்து
ஆன் நிரை காத்தானல் பசுக்களின் நிரளை ரக்ஷித்தருளின கண்ணபிரானல்
இன்று முற்றும்—;
அவை அப்பசுக்கூட்டத்தை
உய்யக் கொண்டானல் உஜ்ஜீவிப்பித்தருளின கண்ணபிரானல்
இன்று முற்றும்—.

217 ஆய்ச்சியர்சேரி அளதயிர்பாலுண்டு *
பேர்த்தவர்கண்டுபிடிக்கப் பிடியுண்டு *
வேய்த்தடந்தோளினர் வெண்ணெய்கொள்மாட்டாது * அங்
காப்புண்டிருந்தானின்றுமுற்றும் அடியுண்டழுதானின்றுமுற்றும். (ரு)

ஆய்ச்சியர் சேரி இடைச்சேரியிலே
(இடைச்சிகள் கடைவதாக)
அளை தயிர் பால் உண்டு (மத்தை நாட்டி) உடைத்த தயிரையும் (காய்ச்சுவதற்காக வைத்த) பாலையும் அமுதுசெய்து
(அவ்வளவோடு திருப்தியடையாமல்)
பேர்த்து அவர் கண்டு பிடிக்க பின்னையும் (ஒருகால் வெண்ணெய் திருடப்புகுந்த வளவிலே) அவ்விடைச்சிகள் (ஒளித்திருந்து, இவன் திருடுகிறபோதில்) கண்டு (இவனைத் தங்கள்கையில்) அகப்படுத்திக்கொள்ள
(அதற்குத் தப்பமாட்டாமல்)

பிடியுண்டு (அவர்கள்கையிலே) பிடிபட்டு,
வேய் தட தோளினர் மூங்கிலைப்போன்று பருத்த தோள்களையுடைய அவ்விடைச்சிகளுடைய
வெண்ணெய் வெண்ணெயை
கொள் மாட்டாது (தான் நினைத்தபடி) கைக்கொள்ளமாட்டாமல்
அங்கு ஆப்புண்டு இருந்தானல் அவர்கள் வீட்டில் கட்டுண்டிருந்த கண்ணபிரானல்
இன்று முற்றும்—;
அடியுண்டு அழுதானல் (அவர்கள்கையால்) அடிக்கப்பட்டு அழுத கண்ணபிரானல்
இன்று முற்றும்—.

218 தள்ளித்தளர்நடையிட்டு இளம்பிள்ளாயாய் *
உள்ளத்தினுள்ளே அவளையுறநோக்கி *
கள்ளத்தினல்வந்த பேய்ச்சிமுலையுயிர் *
துள்ளச்சுவைத்தானலின்றுமுற்றும் துவக்கறவுண்டானலின்றுமுற்றும். (கூ)

(காலூன்றிநடக்கத் தரிப்பில்லாமையாலே)
தள்ளி தளர்நடை இட்டு தட்டித்தடுமாறித் தளர்நடையிட்டு
(நடக்க வேண்டும்படியான)
இள பிள்ளை ஆய் இளங்குழந்தையாய்
(இருக்கச் செய்தே)
கள்ளத்தினல் (தன்வடிவை மறைத்துத் தாய் வடிவைக்கொண்டு) கிருத்திரிமத்தாலே
வந்த (தன்னைக்கொல்ல) வந்த
பேய்ச்சி அவளை பேய்ச்சியாகிய அக்தப் பூதனையை
உள்ளத்தின் உள்ளே உற நோக்கி ('நம்மை நலியவருகிறவள் இவள்' என்று) தன் மனஸினுள்ளே (எண்ணி) உறைக்கப்பார்த்து

(பிறகு அவள் தனக்கு முலை உண்ணக் கொடுத்தவாறே)
முலை அம்முலையை
உயிர் துள்ள சுவைத்தானல் (அவளுடைய) உயிர்துடிக்கும்படி உறிஞ்சியுண்ட கண்ணபிரானல்
இன்று முற்றும்—;
துவக்கு அற உண்டானல் (அம்முலையில் தடவிக்கிடந்த விஷத்தில் தனக்கு) ஸ்பர்சமில்லாதபடி (அம்முலையிற் பாலை) உண்ட கண்ணபிரானல்
இன்று முற்றும்—.

219 மாவலிவேள்வியில் மாணுருவாய்ச்சென்று *
மூவடிதாவென்று இரந்தவிம்மண்ணினை *
ஓரடியிட்டு இரண்டாமடிதன்னிலே *
தாவடியிட்டானலின்றுமுற்றும் தரணியளந்தானலின்றுமுற்றும். (எ)

மா வலி வேள்வியில் மாண் உரு ஆய் சென்று மஹாபலியினுடைய யாக பூமியிலே பிரமசாரி ரூபியாய் எழுந்தருளி
மூ அடி தா என்று இரந்த இ மண்ணினை (என் அடியாலே) மூன்றடி (நிலம்) கொடு என்று யாசித்துப்பெற்ற இந்தப் பூமியை
(அளந்து தன் வசப்படுத்தத் தொடங்கின வளவிலே)

ஓர் அடி இட்டு (பூமிப்பரப்படங்கலும் தனக்குள்ளேயாம்படி) ஓரடியைப் பரப்பவைத்து (அளந்து)
இரண்டாம் அடி தன்னிலே இரண்டாவது அடியைக்கொண்டு அளக்கத்தொடங்கின வளவிலே

தாவி அடி இட்டானால் {(மேலுலகங்க ளடக்கலும் தனக்குள் ளேயாம்படி) தாவி அடியிட்ட கண்ண பிரானால்}
இன்று முற்றும்—,
(தேவேந்திரனுகிய ஒரு ஆச்சிரமனுக்காக இப்படி)
தரணி அளந்தானால் லோகத்தை அளந்தவனாலே
இன்று முற்றும்—.

**220 தாழைதண்ணும்பல் தடம்பெரும்பொய்கைவாய் *
வாழுமுதலை வலிப்பட்டுவாதிப்புண் *
வேழந்துயர்கெட விண்ணோர்பெருமானாய் *
ஆழிபணிகொண்டானலின்றுமுற்றும்அதற்கருள்செய்தானலின்றுமுற்றும்.(அ)**

தாழை (கரையிலே) தாழைகளையும்
தண் ஆம்பல் {(உள்ளே) குளிர்ந்த ஆம்பல் மலர்களையுமுடைய}
தட பெரு மிகவும் பெரிய
பொய்கை வாய் தடாகத்தினுள்ளே
வாழும் வாழ்ந்துகொண்டிருந்த
முதலை முதலையின் வாயாகிற
வலிப்பட்டு {வலியிலே அகப்பட்டுக் கொண்டு}
வாதிப்பு உண் துன்பமடைந்த
வேழம் ஸ்ரீ கஜேந்திராழ்வானுடைய
துயர் வருத்தம்
கெட நீரும்படியாக

விண்ணோர் பெரு மான் ஆய் {நித்ய ஸூரிகளுக்குத் தலைவ (ன் என்பதைத் தோற்று விக்கப் பெரிய திருவடியை வாகனமாக் உடைய) னாய்}
(அப்பொய்கைக் கரையிலே சென்று)
ஆழி சக்ராயுதத்தாலே
(முதலையைத்துணித்து)
பணிகொண்டானால் {(கஜேந்திராழ்வானுடைய) கைங்கரியத்தை ஸ்வீகரித்த திருளின கண்ணபிரானால்}
இன்று முற்றும்—;
அதற்கு அந்த யானையின் நிறத்தில்
அருள் செய்தானால் {(இப்படிப்பட்ட) திருவை யைச்செய்தருளினகண்ண பிரானால்}
இன்று முற்றும்—.

**221 வானத்தெழுந்த மழைமுகில்போல் * எங்குங்
கானத்துமேய்ந்து களித்துவிளையாடி *
ஏனத்துருவாய் இடந்தவிம்மண்ணினை
தானத்தேவைத்தானலின்றுமுற்றும் தரணியிடந்தானலின்றுமுற்றும். (கூ)**

(கடலில் நீரை முகந்துகொண்டு)
வானத்து எழுந்த மழை முகில் போல் {ஆகாசத்திலே கிளம்பின வர்ஷிக்கப்புக்க மேகம் போல}
(கறுத்த நிறத்தையுடைய)
ஏனத்து உரு ஆய் {ஒரு வராஹத்தின் ரூபமாய் (அவதரித்து)}
கானத்து எங்கும் மேய்ந்து {காடு நிலங்களில் எல்லா விடத்திலும் (திரிந்து) கோ ரைக்கிழங்கு முதலியவற் றை அமுதுசெய்து}
களித்து விளையாடி செருக்கடைந்து விளையாடி,
(பூமியைப்பாயாகச் சுருட்டிக்கொண்டுபோன ஹிரண்யாக்ஷனைக் கொன்று)

இடந்த இமண்ணினை {(அண்ட பித்திபில் நின்றும்) ஒட்டு விடுவித்தெடுத்த இந்தப் பூமியை}
தானத்தே வைத் தானால் {யதாஸ்தானத்தில் (கொணர்ந்து) வைத்து நிலைநிறுத்தின கண்ணபிரானால்}
இன்று முற்றும்—;
தரணி {(இப்படி கடலில் மூழ்கிப் போன) பூமியை}
இடந்தானால் {கோட்டாற்குத்தி எடுத்துக் கொணர்ந்த கண்ண பிரானால்}
இன்று முற்றும்—.

[இப்பொழுது நடக்கிற சுவேதவராஹ கல்பத்துக்கு முந்தின பாத்ம கல்பத்தைப்பற்றிய பிரள யத்தின் இறுதியில் திருமால் பிரளயப்பெருங்கடலில் மூழ்கியிருந்த பூமியை மேலேயெடுக்க நினைத்து ஸ்ரீவராஹரூபங்கொண்டருளிக் கோட்டுநுனியாலே பூமியை எடுத்துவந்தனனென்றும் அதுபற்றி இக்கல் பத்துக்கு வராஹகல்பமென்று பெயராயிற்று என்றும் புராணவரலாறு உண்டு.] ... (கூ)

222 அங்கமலக்கண்ணன்றன்னை அசோதைக்கு *
மங்கைநல்லார்கள்தாம் வந்துமுறைப்பட்ட *
அங்கவர்சொல்லிப் புதுவைக்கோன்பட்டன்சொல் *
இங்கிவைவல்லவர்க்கு ஏதமொன்றில்லையே. (ய)

நல் மங்கை மார்கள் தாம் — (பகவத் ப்ரேமமாகிற) நன்மை பொருந்திய (இடைப்) பெண்கள்

அம் கமலம் கண்ணன் தன்னை — அழகிய செந்தாமரைப் பூப்போன்ற கண்களையுடைய கண்ணபிரான் (செய்த தீம்பு) விஷயமாக

அங்கு வந்து — அந்தக் கண்ணபிரானுடைய வீட்டுக்கு வந்து

அசோதைக்கு முறைப்பட்ட அவர் சொல்லை — (அவன் தாயான) யசோதைப்பிராட்டியிடத்திலே (தங்கள் ஆர்த்திதோற்றக்) கதறிச் சொன்ன அவ்விடைச்சிகளின் சொல்லை,

புதுவை கோன் பட்டன் — ஸ்ரீவல்லிபுத்தூருக்கு நிர்வாஹகரான பெரியாழ்வார்

சொல் இவை — அருளிச்செய்த இப்பாசுரங்களை

இங்கு — இந்த ஸம்ஸாரத்தில்(இருந்து கொண்டே)

வல்லவர்க்கு — ஓதவல்லவர்களுக்கு

ஒன்று ஏதம் இல்லை — ஒருவகைக் குற்றமும் இல்லையாம்.

அடிவரவு:—ஆற்றில் குண்டலம் தடம் தேனுகன் ஆய்ச்சி தள்ளி மாவலி தாழை வானத்து அங்கமலம் தன்னோர்,

---

மூன்றும்பத்து—முதல்திருமொழி, தன்னேராயிரம்.

(யசோதை கண்ணன் மேன்மைகளை யநுஸந்தித்து அவனுக்கு முலைப்பால்தர அஞ்சினபடியைக் கூறுதல்.)

---

223 தன்னேராயிரம்பிள்ளைகளோடு தளர்நடையிட்டுவருவான் *
பொன்னேய்நெய்யோடுபாலமுதுண்டு ஒருபுள்ளுவன்போய்யேதவழும் *
மின்னேர்நுண்ணிடைவஞ்சமகள்கொங்கைதுஞ்ச வாய்வைத்தபிரானே *
அன்னேயுன்னையறிந்துகொண்டேன் உனக்கஞ்சுவனம்மந்தரவே. (க)

தன் நேர் ஆயிரம் பிள்ளைகளோடு — (வயஸ்ஸாலும் வளர்த்தியாலும்) தன்னோடு ஒத்த ஆயிரம் பிள்ளைகளோடு கூட

தளர் நடை இட்டு வருவான் — தளர்நடை நடந்துவருகின்ற கண்ணபிரானே!

பொன் எய் நெய் யொடு பால் அமுது உண்டு — (நிறத்தால்) பொன்னை ஒத்திராநின்ற நெய்யோடுகூட போக்யமான பாலையும் அமுதுசெய்து

(இடைச்சேரியில் களவுகண்டு

ஒன்றுமறியாத பிள்ளைபோல)

பொய்யே தவழும் ஒரு புள்ளுவன் — கபடமாகத் தவழ்ந்துவருகிற ஒப்பற்ற கள்ளனே!

மின் நேர் நுண் இடை வஞ்சம் மகள் துஞ்ச — மின்னலைப்போன்று அதிஸூக்ஷ்மமான இடையையும் வஞ்சனையையுமுடையளான பூதனையென்னும் பேய்மகள் மாண்டுபோம்படி

கொங்கை வாய் வைத்த பிரானே — (அவளுடைய) முலையிலே தன்னுடைய வாயைவைத்(தச் சுவைத்)த நாயனே!

உன்னை அறிந்து கொண்டேன் — (நம் பிள்ளையென்று இதுவரை என்னால் பாவிக்கப்பட்ட) உன்னை (அருந்தெய்வமென்று இன்று) தெரிந்துகொண்டேன்;

(ஆதலால்,)

உனக்கு அம்மம் தர அஞ்சுவன் அன்னே — உனக்கு முலைகொடுக்க பயப்படாநின்றேன்; அஹஹ!

* * *—கண்ணன் திருவாய்ப்பாடியிலேவந்து பிறந்தபோது அவனோடு கூட ஆயிரம் பிள்ளைகள் பிறந்தார்களாகையால், இளமை தொடங்கித் தன்னை விட்டுப் பிரியமாட்டாதவர்களாய்த் தன்னோடு கூடவே விளையாடித் திரிகின்ற அப்பிள்ளைகளோடேயே ஸ்ரீகிருஷ்ணன் திரிதலால் "தன்னேராயிரம் பிள்ளைகளோடு தளர்நடையிட்டு வருவான்" என்றும், இப்படித் தளர்நடை யிடுபவன் ஒவ்வொரு வீட்டிலும்புக்கு அங்குள்ள தயிர் நெய் பால் முதலியவற்றையெல்லாம் திருடி வயிறார விழுங்கிவிட்டு 'இந்தப்பூனை இந்தப்பாலைக் குடிக்குமா' என்னும்படி தவழ்ந்து நடை கற்பனதலால் "பொன்னேய் நெய்யொடு பாலமுதுண்டு பொய்யே தவழும் புள்ளுவன்!" என்றும் விளிக்கிறாள். இரண்டும் அண்மைவிளி; இயல்பு. [மீன்னேர் இத்யாதி.] உனக்கு ஒருத்தி மூலைகொடுக்கவந்து தான் பட்டபாட்டை நானறிந்துளேனுதலால் 'நம்மையும் அப்பாடு படுத்துவளே' என்றஞ்சுகின்றே னென்கிறாள். அன்னே-அச்சக் குறிப்பிடைச்சொல். ... ... (க)

224 பொன்போல்மஞ்சனமாட்டியமுதூட்டிப்போனேன் வருமளவிப்பால்*
வன்பாரச்சகடமிறச்சாடி வடக்கிலகம்புக்கிருந்து *
மின்போல்நுண்ணிடையாளொருகன்னியை வேற்றுருவஞ்செய்துவைத்த *
அன்பாவுன்னையறிந்துகொண்டேன் உனக்கஞ்சுவனம்மந்தரவே. (உ)

பொன் போல் மஞ்சனம் ஆட்டி அமுது ஊட்டி போனேன் — பொன்னைப்போல் (உன்வடிவழகு விளங்கும்படி உன்னைத்) திருமஞ்சனம் செய்வித்து (அதன்பிறகு) அமுது செய்யவும் பண்ணிவிட்டு (யமுனைநீராடப்) போன நான்

வரும் அளவு இப்பால் — (மீண்டு) வருவதற்குள்ளே

வல் பாரம் சகடம் இற சாடி — வலிவுள்ளதும் கனத்ததுமாயிருந்த சகடமானது (கட்டுக்குலைந்து) முறியும்படி (அதைத்திருவடியால்) உதைத்துத்தள்ளி

(அவ்வளவோடும் நில்லாமல்)

வடக்கில் அகம் புக்கு இருந்து — (இவ்வீட்டுக்கு) வடவருகிலுள்ள வீட்டிலே போய் நுழைந்து

(அவ்வீட்டிலுள்ள)

மின் போல் நுண் இடையாள் ஒரு கன்னியை — மின்னலைப்போன்று நுட்பமான இடையையுடையளான ஒரு கன்னிகையை

வேறு உருவம் செய்து வைத்த அன்பா — (கலவிக்குறிகளால்) வேறுபட்ட வடிவையுடையளாகச் செய்துவைத்த அன்பனே!

உன்னை அறிந்து கொண்டேன்—;
உனக்கு அம்மம் தர அஞ்சுவன்—.

225 கும்மாயத்தொடுவெண்ணெய்விழுங்கிக் குடத்தயிர்சாய்த்துப்பருகி *
பொய்ம்மாயமருதானவசுரைப் பொன்றுவித்தின்றுநீவந்தாய் *
இம்மாயம்வல்லபிள்ளைகம்பீ உன்னையென்மகனேயென்பர்நின்றார் *
அம்மாவுன்னையறிந்துகொண்டேன் உனக்கஞ்சுவனம்மந்தரவே * (ங)

(கண்ணபிரானே!)

கும்மாயத்தொடு வெண்ணெய் விழுங்கி — குழையச்சமைத்த பருப்பையும் வெண்ணெயையும் விழுங்கிவிட்டு

குடம் தயிர் சாய்த்து பருகி — குடத்தில் நிறைந்த தயிரை (அந்தக்குடத்தோடு) சாய்த்துக் குடித்தும்

பொய் மாயம் மருது ஆன அசுரை — பொய்யையும் மாயச்செய்கையையுமுடைய அஸுரர்களால் ஆவேசிக்கப்பெற்ற (இரட்டை) மருதமரங்களை

பொன்றுவித்து — விழுந்து முறியும்படி பண்ணியும்

நீ இன்று வந்தாய் — (இவ்வளவு சேஷ்டைகளைச் செய்த) நீ இப்போது (ஒன்றுஞ் செய்யாதவன்போல) வந்து நின்றாய்;

இ மாயம் வல்ல பிள்ளை கம்பி — இப்படிப்பட்ட மாயச்செய்கைகளைச் செய்யவல்ல பிள்ளாய்! (அந்தப்பிள்ளைத் தனத்தால்) பூர்ணனவனே!

உன்னை — (இப்படியிருக்கிற) உன்னை

நின்றார் — (உன்வாசி அறியாத) நெடுநின்றவர்கள்

என் மகனே என்பர் — என் (வயிற்றிற்பிறந்த) பிள்ளையாகவே சொல்லாநின்றார்கள்; (நானேவென்றால் அப்படி நினையாமல்)

உன்னை அறிந்து கொண்டேன் — (இவன் ஸர்வேச்வரன் என்று) உன்னைத் தெரிந்து கொண்டேன்;

(ஆதலால்,)

அம்மா — ஸர்வேச்வரனே!

உனக்கு அம்மம் தர அஞ்சுவன்—.

* * *—இச்சேரியில் ஒரு வீட்டில் ஒன்றுவைக்க வொண்ணுதபடி எல்லாப் பண்டங்களையும் க்ளவுகண்டும், மருதமரங்களை அவற்றின் நிலைவறிந்து முறித்துந் நிரிகிற உன் விசேஷங்களை யறியாதே உதாஸீநராயிருப்பவர்கள் உன்னை என் மகனைக் சொல்லுவர்கள்; நான் உன் வாசியை யறிந்தவ ளாகையால் உன்னை ஸாக்ஷாத் ஸ்ரீவேச்வரனுகவே அறுதியிட்டு உனக்கு முலை கொடுக்க அஞ்சாநின்றே னென்கிறாள். பிள்ளை நம்பி—அண்மைவிளி. என் மகனே என்பர்='இவன் என் பிள்ளையன்று' என்று நான் ஆணையிட்டுச் சொன்னலும் அவர் கேளார் என்ற கருத்துத்தோன்றும்; ஏ-பிரிநிலை. (க)

226 மையார்கண்மடவாய்ச்சியர்மக்களை மையன்மைசெய்தவர்பின்போய் *
கொய்யார்பூந்துகில்பற்றித்தனிநின்று குற்றம்பலபலசெய்தாய் *
பொய்யாவுன்னைப்புறம்பலபேசுவ புத்தகத்துக்குளகேட்டேன் *
ஐயாவுன்னையறிந்துகொண்டேன் உனக்கஞ்சுவனம்மந்தரவே. (ச)

மை ஆர் கண் மடம் ஆய்ச்சியர் மக்களை — மையை அணிந்துள்ள கண்களையும் மடப்பம் என்ற குணத்தையு முடையரான இடைப்பெண்களை
(உன் விஷயத்திலே)
மையன்மை செய்து — மோஹிக்கப்பண்ணி
(அப்பெண்களுடைய)
கொய் ஆர் பூ துகில் — கொய்தல் நிறைந்த அழகிய புடவைகளை
பற்றி — பிடித்துக்கொண்டு
அவர் பின் போய் — அப்பெண்களின் பின்னே போய்
தனி நின்று — தனியிடத்திலேநின்று
பல பல குற்றம் செய்தாய் — எண்ணிறந்த தீமைகளை (நீ) பண்ணினாய்;

(என்று யசோதை சொல்ல, 'நீ கண்டாயோ?' என்று கண்ணன் கேட்க)
(அதற்கு யசோதை சொல்லுகிறாள்;—)

பொய்யா — (நீமை செய்ததுமல்லாமல், செய்யவில்லையென்று) பொய் சொல்லுமவனே!
உன்னை — உன்னைக்குறித்து
புத்தகத்துக்கு உள — ஏடுபுஸ்தக மெழுதுகைக்குத் தகுந்துள்ளனவாம்படி
பேசுவ — சொல்லப் படுகின்றனவான
பல புறம் — பற்பல புன்சொற்களை
கேட்டேன் — (என் காதால்) கேட்டிருக்கின்றேன்;
ஐயா — அப்பனே!

உன்னை அறிந்துகொண்டேன்—;
உனக்கு அம்மம் தர அஞ்சுவன்—.

* * *—நீ இடைப் பெண்களுடைய கொய்சகத்தைப் பிடித்துக்கொண்டு அவர்கள் பின்னே போய் அவர்களோடு ஏகாந்தமான இடத்திலேயிருந்து சொல்லத்தகாத பல தீம்புகளைச் செய்தாய்; நீ செய்யும் தீம்புகள் பிறரறிந்து சொல்லுமவற்றை எழுதத் தொடங்கினல் பெரியதொரு புஸ்தகமாக முடியும். அதனல், உலகத்தாரால் செய்யமுடியாதவற்றையும் செய்யவல்ல அதிமாநுஷத் தன்மையை யுடையவனென்று உன்னை யறிந்துகொண்டேன்; ஆதலால் உனக்கு அம்மந்தர அஞ்சுவே னென்பதாம். ... ... (ச)

227 முப்போதுங்கடைந்தீண்டியவெண்ணெயிலேடு தயிரும்விழுங்கி *
கப்பாலாயர்கள்காவிற்கொணர்ந்த கலத்தோடுசாய்த்துப்பருகி *
மெய்ப்பாலுண்டழுபிள்ளைகள்போல நீவிம்மிவிம்மியழுகின்ற *
அப்பாவுன்னையறிந்துகொண்டேன் உனக்கஞ்சுவனம்மந்தரவே. (ஞ)

முப் போதும் கடைந்து ஈண்டிய வெண்ணெயிலேடு தயிரும் விழுங்கி — மூன்று சந்திப்போதுகளிலும் (இடையரால்) கடையப்பட்டுத் திரண்ட வெண்ணெயையும் தயிரையும் (களவுகண்டு) விழுங்கி,
(அவ்வளவோடும் நில்லாமல்)
ஆயர்கள் — அவ்விடையர்கள் (தம்முடைய)
கப்பால் காவில் — தோளாலே(வருந்திச்சுமந்து) காவடியில்
கொணர்ந்த — கொண்டுவந்த பால் முதலியவற்றை
கலத்தொடு சாய்த்து பருகி — (அந்தப்) பாத்திரத்தோடே சாய்த்துக் குடித்தும்
(அதனல் பசியடங்கினபடியை மறைக்க நினைத்து)
மெய் பால் உண்டு அழு பிள்ளைகள் போல விம்மி விம்மி அழுகின்ற — முலைப்பாலை உண்டு (அது பெருதபோது அழுகிற) பிள்ளைகளைப்போல விக்கி அழுகின்ற
அப்பா — பெரியோனே!

உன்னை அறிந்து கொண்டேன்—;
உனக்கு அம்மம் தர அஞ்சுவன்—.

* * *—கோணர்ந்த—பலவின்பால் வினையாலணையும் பெயர்; பெயரெச்சமன்று. (இ)

228 கரும்பார்நீள்வயற்காய்கதிர்ச்செங்கேலக் கற்றினைமண்டித்தின்ன *
விரும்பாக்கன்றொன்றுகொண்டு விளங்கனிவீழவெறிந்தபிரானே *
சுரும்பார்மென்குழற்கன்னியொருத்திக்குச் சூழ்வலைவைத்துத்திரியும் *
அரம்பாவுன்னையறிந்துகொண்டேன் உனக்கஞ்சுவனம்மந்தரவே. (சு)

நீள் வயல் கரும்பு ஆர் காய் கதிர் செங்கேல — பரந்த வயலிலே கரும்பு போலக் கிளர்ந்துள்ள பசுங் காயான கதிரையுடைய செங்கெல் தான்யத்தை

கன்று ஆ நிரை மண்டி தின்ன — கன்றுகளோடு கூடின பசுக்களின் திரள் விரும்பித் தின்னுகிற்கச் செய்தே (அத்திரளிலே சேர்ந்து மேய்கிறுப்போல் பாவனைசெய்த அஸுராவிஷ்டமான)

விரும்பா கன்று ஒன்று — (கெல்லைத் தின்கையில்) விருப்பமில்லாத ஒரு கன்றை (அதன் செய்கைகளினாலே 'இது அஸுரம்' என்று அறிந்து)

கொண்டு — (அதனைக் குணிலாகக்) கொண்டு, (மற்றொரு அஸுரனால் ஆவேசிக்கப் பட்டிருந்த)

விளங்கனி — விளாமரத்தின் பழங்கள்

வீழ — உதிரும்படி

எறிந்த — (அவ்விளாமரத்தின்மேல் அக்கன்றை) வீசியெறிந்த

பிரானே — பெரியோனே!

சுரும்பு ஆர் மென் குழல் கன்னி ஒருத்திக்கு — வண்டுகள் நிறைந்த மெல்லிய குழலையுடையளான ஒரு கன்னிகையை அகப்படுத்திக் கொள்வதற்காக

சூழ் வலை வைத்து திரியும் அரம்பா — (எல்லாரையும்) சூழ்ந்து கொள்ளக்கடவ (திருக்கண்களாகிற) வலையை (அவள் திறத்திலே விரித்து) வைத்து (அந்யபரரைப் போலத்) திரியாநின்ற தீம்பனே!

உன்னை அறிந்து கொண்டேன்—; உனக்கு அம்மம் தர அஞ்சுவன்—,

* * *—இங்கே, கண் என்ற உபமேயத்தை அதன்சொல்லாற் சொல்லாமல் (சூழ்வலையென்ற) உபமானச் சொல்லால் இலக்கணையாகச் சொல்லிபிருத்தலால்-உருவகவயர்வு நவிற்சியணி; வடநூலார், ரூபகாதிசயோக்தியலங்கார மென்பர். ... ... (சு)

229 மருட்டார்மென்குழல்கொண்டுபொழில்புக்கு வாய்வைத்தவ்வாயர்தம்பாடி *
சுருட்டார்மென்குழற்கன்னியர்வந்துன்னைச் சுற்றுந்தொழநின்றசோதி *
பொருட்டாயமிலேனெம்பெருமான் உன்னைப்பெற்றகுற்றமல்லால் *
மற்றிங்கரட்டாவுன்னையறிந்துகொண்டேன் உனக்கஞ்சுவனம்மந்தரவே. (எ)

மருட்டு ஆர் மெல் குழல் கொண்டு — (கேட்டவர்களை) மயங்கப் பண்ணுந் திறமையுள்ள மெல்லிய (த்வனியையுடைய) வேய்ங்குழலைக் கையிற்கொண்டு

பொழில் புக்கு — (ஸம்போகத்துக்கு ஏகாந்த மான) சோலைகளிலே போய்ச்சேர்ந்து

வாய் வைத்து — (அந்த வேய்க்குழலில்) (தன்) வாயில்வைத்து (ஊத)

ஆயர் தம் பாடி — (அவ்வளவிலே) இடைச்சேரியிலுள்ள

சுருள் தார் மெல் குழல் அ கன்னியர் — சுருண்டு பூவணிந்தமெல்லிய குழலையுடைய (இடையர்களால் காக்கப் பட்டிருந்த) அந்த இடைப் பெண்கள்

(குழலோசை கேட்கையிலுள்ள விருப்பத்தாலே காவலுக்கடங்காமல்)

வந்து — (அச்சோலையிடத்தே) வந்து

உன்னை சுற்றும் தொழ நின்ற சோதி — உன்னை நாற்புறமும்சூழ்ந்து கொண்டு ஸேவிக்க (அதனால்) நிலத்திலே நின்ற தேஜஸ்ஸையுடையவனே!

எம்பெருமான் — எமக்குப் பெரியோனே!

உன்னை பெற்ற குற்றம் அல்லால் — (இப்படி தீம்பனை) உன்னை பிள்ளையாகப்பெற்ற குற்றமொன்றை (நான் ஸம்பாதித்துக்கொண்டேனத்தனை) யல்லாது

இங்கு — இவ்வூரில் உள்ளாரோடொக்க

மற்று பொருள் தாயம் இலேன் — மற்றொரு பொருட்பங்கையும் பெற்றிலேன்;

அரட்டா — (இப்படிப்பட்ட) தீம்பனே!

உன்னை அறிந்து கொண்டேன்—; உனக்கு அம்மம் தர அஞ்சுவன்—.

* * *—மருட்டு—பிறவினைப் பகுதியே தொழிற்பொருள் தந்தது; மயங்கப்பண்ணுதல் என்ற பொருள். வாய்வைத்து—வாய்வைக்க; எச்சத்திரிபு. "அவ்வாயர்தம்பாடி" என்ற விடத்திலுள்ள அகரச்சுட்டு கன்னியர் என்பதோடு கூட்டியுரைக்கப்பட்டது. சுருள்=சிறந்த கூந்தலுக்குச் சுருட்சி இலக்கணமென்க. தார்-பூமாலை. சுற்றும் தொழும்படிநின்ற, சோதி-பரஞ்சோதியாகிய கண்ணபிரானே! என்று முரைக்கலாம். [பொருள்தாயமித்யாதி.] 'இப்படிப்பட்ட பெருந்தீம்பனை பிள்ளையைப் பெற்றுயே பாவி' என்று என்னை அனைவரும் காறுகாறென்னும்படியான நிலைமையை நான் உன்னால் பெற்றேனே யொழிய வேறொரு ஸாம்ராஜ்யமும் பெற்றேனில்லையென்கிறாள். தாயம்—வடசொல் விகாரம். ... ... (எ)

230 வாளாவாகிலுங்காணகில்லார் பிறர்மக்களைமையன்மைசெய்து *
தோளாலிட்டவரோடுதிளைத்து நீசொல்லப்படாதனசெய்தாய் *
கேளாராயர்குலத்தவரிப்பழி கெட்டேன்வாழ்விலேல * நந்தற்
காளாவுன்னையறிந்துகொண்டேன் உனக்கஞ்சுவனம்மந்தரவே. (அ)

வாளா ஆகிலும் — (நீ தீம்புசெய்யாமல்) வெறுமனேயிருந்தாலும்
(உன் மினுக்குப் பொறுதவர்கள்)
காண கில்லார் — (உன்னைக்) காணவேண்டார்கள்;
(இப்படியிருக்கச்செய்தேயும்)
நீ பிறர் மக்களை மையன்மை செய்து — நீயோவென்றால் அயற் பெண்டுகளை (உன்னுடைய இங்கிதாதிகளாலே) மயக்கி
(அவ்வளவோடு நில்லாமல்)
தோளால் இட்டு அவரோடு திளைத்து — (அவர்களைத்) தோளாலும் அணைத்திட்டு அப்பெண்களோடு விளையாடி
சொல்லப்படாதன — வாயாற் சொல்லக்கூடாத காரியங்களை
செய்தாய் — (அவர்கள் விஷயத்திலே) செய்தாய்;
ஆயர் குலத்தவர் இப்பழி கேளார் — இடைக்குலத்துத்தலைவர்கள் இப்படிப்பட்ட பழிகளைக் கேட்கப் பொறார்கள்;
(இப்பழிகளைக் கேட்கப்பெற்ற தான்)
கெட்டேன் — பெரும்பாவியாயிராநின்றேன்;
(இனி எனக்கு இவ்வூரில்)
வாழ்வு இல்லை — வாழ்ந்திருக்கமுடியாது,
நந்தற்கு ஆளா — நந்தகோபருக்கு (அழகிதாக) ஆள்பட்ட பிள்ளாய்!
உன்னை அறிந்து கொண்டேன்—;
உனக்கு அம்மம் தர அஞ்சுவன்—.

* * *—"நந்தன் காளாய்" என்பது வழங்கிவருமொரு பாடம். ... . (அ)

231 தாய்மார்மோர்விற்கப்போவர் தமப்பன்மார்கற்றுநிரைப்பின்புபோவர் *
நீயாய்ப்பாடியிளங்கன்னிமார்களை கேர்படவேகொண்டுபோதி *
காய்வார்க்கென்றுமுகப்பனவேசெய்து கண்டார்கழறத்திரியும் *
ஆயாவுன்னையறிந்துகொண்டேன் உனக்கஞ்சுவனம்மந்தரவே. (கூ)

(பெண்களை அகம்பார்க்க வைத்துவிட்டு)
தாய்மார் மோர் விற்க போவர் — தாய்மாரானவர் மோர் விற்பதற்கு (வெளியூருக்குப்) போவார்கள்
தமப்பன்மார் கன்று ஆ நிரை பின்பு போவர் — (அப்பெண்களின்) தகப்பன்மாரானவர் இளம் பசுக்கூட்டங்களை மேய்க்கைக்காக அவற்றின் பின்னே போய்விடுவார்கள்
(அப்படிப்பட்ட ஸமயத்திலே)
நீ—;
ஆய்ப்பாடி இள கன்னிமார்களை — இடைச்சேரியில் (தத்தம் வீடுகளில் தனியிருக்கின்ற) யுவதிகளான பெண்களை
கேர்பட நீ கிணைத்தபடி
கொண்டு போதி — (இஷ்டமான இடங்களில்) கொண்டுபோகா நின்றாய்;
காய்வார்க்கு என்றும் உகப்பனவே செய்து — (உன் மேல்) த்வேஷம் பாராட்டுகின்ற கம்ஸாதிகளுக்கு எந்நாளும் (வாயாரப்பழித்து) ஸந்தோஷப்படக்கூடிய கொள்கைகளையே செய்துகொண்டு
கண்டார் கழற திரியும் ஆயா — (உனக்கு) அநுகூலராயுள்ளவர்களும் (உன்னை) வெறுத்துச் சொல்லும்படி திரியாநின்ற ஆயனே!
உன்னை அறிந்து கொண்டேன் உனக்கு அம்மம் தர அஞ்சுவன்—.

232 தொத்தார்பூங்குழற்கன்னியொருத்தியைச் சோலைத்தடங்கொண்டுபுக்கு *
முத்தார்கொங்கைபுணர்ந்திராநாழிகை மூவேழுசென்றபின்வந்தாய் *
ஒத்தார்க்கொத்தனபேசுவர் உன்னையுரப்பவோநான்றும்மாட்டேன் *
அத்தாவுன்னையறிந்துகொண்டேன் உனக்கஞ்சுவனம்மம்தரவே. (ம)

தொத்து ஆர் பூ குழல் கன்னி ஒருத்தியை — கொத்தாய்ச் சேர்ந்திருந்துள்ள புஷ்பங்கள் அணியப்பெற்ற கூந்தலையுடைய ஒரு கன்னிகையை

தடஞ்சோலை இரா கொண்டுபுக்கு — விசாலமானதொரு சோலையிலே (நேற்று) இரவில் அழைத்துக்கொண்டுபோய் (அவளுடைய)

முத்து ஆர் கொங்கை புணர்ந்து — முத்துவடமணிந்த ஸ்தனங்களோடு ஸம்ச்லேஷித்து விட்டு

மூ ஏழு நாழிகை சென்ற பின் — மூன்றுயாமங்கள் கடந்த பிறகு

வந்தாய் — (வீட்டுக்கு) வந்துசேர்ந்தாய்;

(நீ இவ்வாறு நீமை செய்கையாலே)

உன்னை — உன்னைக்குறித்து

ஒத்தார்க்கு ஒத்தன பேசுவர் — வேண்டுவோர் வேண்டின படி சொல்லுவர்கள்;

(இப்படி அவர்கள் சொல்லாதிருக்கும்படி)

உரப்ப நான் ஒன்றும் மாட்டேன் — (உன்னை) சிக்ஷிக்க (அபலையாகிய) நான் கொஞ்சமும் சக்தையல்லேன்;

அத்தா — நாயகனே!

உன்னை அறிந்து கொண்டேன் உனக்கு அம்மம் தர அஞ்சுவன்—.

* * *—[ஒத்தார்க்கு இத்யாதி.] (ஒத்தார்க்கு என்றது ஒத்தார் என்றபடி; ஆறனுருபுக்குப் பொருளில்லை; வழக்கு பற்றிவந்த வழுவமைதி.) உன்மேல் பழிசொல்ல நினைத்தவர்கள் நீ செய்யாத வற்றையுஞ் சில சேர்த்துக்கொண்டு தாங்கள் நினைத்தபடி சொல்லத் தடையில்லை யென்றவாறு. உரப்புதல்—வாயால் அதட்டுதல் ... ... (கஎ)

233 காரார்மேனிநிறத்தெம்பிரானைக் கடிகமழ்பூங்குழலாய்ச்சி *
ஆராவின்னமுதுண்ணத்தருவன்நான் அம்மந்தாரேனென்றமாற்றம் *
பாரார்தொல்புகழான்புதுவைமன்னன் பட்டர்பிரான்சொன்னபாடல் *
ஏரார்இன்னிசைமாலைவல்லார் இருடீகேசனடியாரே. (ஙக)

கார் ஆர் மேனி நிறத்து எம் பிரானை — மேகத்தோடு ஒத்த திருமேனி நிறத்தையுடைய கண்ண பிரானைக் குறித்து,

கடி கமழ் பூ குழல் ஆய்ச்சி — வாஸனை விசாகின்ற பூக்களை அணிந்த கூந்தலையுடைய யசோதை

ஆரா இன் அமுது உண்ண தருவன் நான் — "(எவ்வளவு குடித்தாலும்) திருப்திபிறவாத இனிய ஸ்தந்யத்தை இதுவரை உனக்கு உண்ணத் தந்து கொண்டிருந்த நான்

(இன்று உன் ஸ்வரூபத்தை உள்ளபடி அறிந்தேனாகையால்)

அம்மம் தாரேன் என்ற மாற்றம் — அம்மந்தர அஞ்சுவேன்" என்று சொன்ன பாசுரத்தை

சொன்ன — அருளிச்செய்த,

பார் ஆர் தொல் புகழான் — பூமியெங்கும் நிறைந்துள்ள பழமையான கீர்த்தியையுடையராய்

புதுவை மன்னன் பட்டர் பிரான் பாடல் — ஸ்ரீவில்லிபுத்தூருக்கு நிர்வாஹகரான பெரியாழ்வாருடைய பாடலாகிய

ஏர் ஆர் இன் இசை மாலை வல்லார் — இயலழகாலே நிறைந்து இனிய இசையோடேகூடியிருந்துள்ள சொல்மாலையை ஓதவல்லவர்கள்

இருடீகேசன் அடியார் — ஹ்ருஷீகேசனான எம்பெருமானுக்கு அடிமைசெய்யப் பெறுவர்கள்.

* * *—[தருவன் நான் அம்மம் தாரேன்.] 'தருவன்' என்ற எதிர்கால வினைமுற்று (வழுவமைதியிலக்கணப்படி) 'தந்தேன்' என்ற இறந்தகாலப் பொருளைத்தந்தது மன்றி, 'தந்த நான் அம்மந்தாரேன்' என்று பெயரெச்சப் பொருளையுந் தந்தவாறு காண்க: ஆகவே இவ்வினைமுற்று—முற்றெச்சம் என்றற்பாற்று. ... ... (ஙக)

அடிவரவு:—தன்னேர் பொன் கும்மாயம் மையார் முப்போது கரும்பு மருட்டார் வாளா தாய்மார் தொத்தார் காரார் அஞ்சனம்.

(கண்ணனைப் பசுமேய்க்கக் காட்டுக்கனுப்பின யசோதை பிறகு வருந்திக்கதறுதல்.)

—●—

234 அஞ்சனவண்ணனே ஆயர்கோலக்கொழுந்தினே *
மஞ்சனமாட்டி மனைகடோறுந்திரியாமே *
கஞ்சனைக்காய்ந்த கழலடிநோவக்கன்றின்பின் *
என்செயப்பிள்ளையைப்போக்கினேன் எல்லேபாவமே. (க)

அஞ்சனம் வண்ணனே — மைபோன்ற நிறத்தையுடையனும்
ஆயர் கோலம் — இடைக்கோலம் பூண்டுள்ளவனும்
கொழுந்தினே — (அவ்விடையர்க்குத்) தலைவனும்
பிள்ளையை — (எனக்குப்) பிள்ளையுமான கண்ணனே
மனைகள் தோறும் — (தன்வீட்டிற் போலவே) அயல்வீடுகள் தோறும்
திரியாமே — (இஷ்டப்படி) திரியவொட்டாமல்
மஞ்சனம் ஆட்டி — (காலையில் குள்ளக்குளிர) நீராட்டி,
கஞ்சனை காய்ந்த கழல் அடி நோவ — கம்ஸனைச் சீறியுதைத்த வீரக்கழலணிந்துள்ள திருவடிகள் நோம்படியாக
கன்றின் பின் என் செய போக்கினேன் — கன்றுகளின் பின்னே (மேய்க்கப் போவென்று) ஏதுக்காகப் போகவிட்டேன்!;
எல்லே பாவமே — மஹாபாபம்! மஹாபாபம்.

* * *—ஆயர்கோலக் கொழுந்தினே—இடையர்களுக்கு அழகியகொழுந்து போன்றுள்ளவனென்னவுமாம்; வேரிலே வெக்கைதட்டினால் முற்பட வாடுங் கொழுந்துபோலே, ஊரிலுள்ளாரில் ஆர்க்கேனும் ஒரு நோவு வந்தால் முற்படக் கண்ணபிரான் தன்முகம் வாடும்படியிருத்தலால் கொழுந்தெனப் பட்டான். "மஞ்சனமாட்டி" என்றவினையெச்சம்-'போக்கினேன்' என்பதோடு இயையும். (க)

235 பற்றுமஞ்சள்பூசிப் பாவைமாரோடுபாடியில் *
சிற்றில்சிதைத்தெங்கும் தீமைசெய்துதிரியாமே *
கற்றுத்தூளியுடை வேடர்கானிடைக்கன்றின்பின் *
எற்றுக்கென்பிள்ளையைப்போக்கினேன் எல்லேபாவமே. (உ)

பாடியில் — திருவாய்ப்பாடியில்
பற்று மஞ்சள் பூசி — பற்றுப்பார்க்கும் மஞ்சளை(த் திருமேனியெங்கும் பெண்கள் கையால் தனித்தனியே) பூசப்பெற்று,
சிற்றில் சிதைத்து — (அப்பெண்கள் இழைக்கும்) சிற்றில்களை உதைத்தழித்து (இப்படி)
எங்கும் தீமை செய்து — எல்லாவிடங்களிலும் தீம்புகளைச் செய்துகொண்டு
பாவை மாரொடு திரியாமே — அவ்விடைப்பெண்களோடே திரியவொட்டாமல்,
கன்று — கன்றுகளினுடைய
தூளி உடை — தூள்களையுடைத்தாய்
வேடர் கான் இடை — (அடித்துப்பிடுங்கும்) வேடர்களுக்கிருப்பிடமான காட்டிலே
கன்றின் பின் — கன்றுகளின்பின்னே (திரியும்படியாக)
என் பிள்ளையை எற்றுக்கு போக்கினேன் — என் மகனை ஏதுக்காக அனுப்பினேன்!
எல்லே பாவமே.—

* * *—திருவாய்ப்பாடியில் இடைப்பெண்கள் மஞ்சளரைத்தால் 'இது பற்றும், பற்றாது' என்பதைப் பரீக்ஷிப்பதற்காகக் கண்ணபிரானுடைய கரியதிருமேனியிலே பூசிப்பார்ப்பார்களாம்; ஆதலால் அம்மஞ்சள் பற்றுமஞ்சள் எனப் பேர் பெற்றது. ... ... (உ)

236 நன்மணிமேகலை நங்கைமாரோடுநாடோறும் *
பொன்மணிமேனி புழுதியாடித்திரியாமே *

கன்மணிநின்றதிர் கானதரிடைக்கன்றின்பின் *
என்மணிவண்ணனைப்போக்கினேன் எல்லேபாவமே. (ந)

என் மணி வண்ணனே — என் மகனை நீலமணி போன்ற வடிவையுடைய கண்ணனே,
நல் மணி மேகலை நங்கைமாரொடு — லோகோத்தரமான நவமணிகள் பதித்த மேகலையை (அணிந்துள்ள) யுவதிகளோடுகூட
காள் தொறும் — தினந்தோறும்
பொன் மணி மேனி புழுதி ஆடி திரியாமே — அழகிய நீலமணிபோன்ற திருமேனியானது புழுதி படைக்கப்பெற்று (விளையாடி)த் திரியவொண்ணாதபடி

கான் — காட்டிலே
(இவன் கன்றுகளை அழைக்கிற த்வனியாலும், அவைகூவுகிற த்வனியாலும்)
கல் மணி நின்று அதிர் அதர் இடை — மலையிலே மணியினோசை போல பிரதித்வனியெழும்பப்பெற்றுள்ள (பயங்கரமான) வழியிலே
(வருந்தும்படியாக)
கன்றின் பின் — கன்றுகளின் பின்னே
போக்கினேன். — போகவிட்டேனே!
எல்லே பாவமே!—.

237 வண்ணக்கருங்குழல் மாதர்வக்தலர்தூற்றிட *
பண்ணிப்பலசெய்து இப்பாடியெங்குந்திரியாமே *
கண்ணுக்கினியானைக் கானதரிடைக்கன்றின்பின் *
எண்ணற்கரியானைப்போக்கினேன் எல்லேபாவமே. (ஞ)

கண்ணுக்கு இனியானே — கண்களுக்கு மிகவும் தர்சநீயனாய்
எண்ணற்கு அரியானே — (இத்தன்மையன் என்று) நினைக்க முடியாதவனாயுள்ள கண்ணபிரானை,
இ பாடி எங்கும் பல செய்து — இத்திருவாய்ப்பாடி முழுவதும் பல (தீமைகளைச்) செய்து (அத்தீமைகளினால்,)

வண்ணன் கரு குழல் மாதர் வந்து அலர் தூற்றிப் பண்ணி திரியாமே — அழகிய கறுத்த கூந்தலையுடையரான பெண்பிள்ளைகள் (தாயாகிய என்னிடம் ஓடி) வந்து பழிதூற்றும்படியாகப் பண்ணிக்கொண்டு திரியவொட்டாமல்
கான் அதர் இடை — காட்டுவழியிலே
கன்றின் பின் — கன்றுகளின்பின்னே (திரியும்படி)
போக்கினேன் — அனுப்பினேனே!
எல்லே பாவமே!—.

* * *—கண்ணுக்கினியானை = எத்தனையேனும் நம்பு செய்யிலும் அவன் வடிவழகை நினைத்தால் 'ஆகிலுங்கொடிய வென்னெஞ்சம் அவனென்றே கிடக்கும்' என்றாற்போல இவனை விடப்போகாதே! என்று கருத்து ... ... (ஞ)

238 அவ்வவ்விடம்புக்கு அவ்வாயர்பெண்டிர்க்கணுக்கனாய் *
கோவ்வைக்கனிவாய்கொடுத்துக் கூழைமைசெய்யாமே *
எவ்வஞ்சிலையுடை வேடர்கானிடைக்கன்றின்பின் *
தெய்வத்தலைவனைப்போக்கினேன் எல்லேபாவமே. (ட)

தெய்வம் தலைவனே — தேவர்களுக்கு நிர்வாஹகனை கண்ணனே
அ அ இடம் புக்கு — (மச்சுமாளிகை முதலான) அவ்வவ்விடங்களில் (ஏகாந்தமாகப்) புகுந்து
அ ஆயர் பெண்டிர்க்கு அணுக்கன் ஆய் — (அவ்வவ் விடங்களிலுள்ள) அவ்விடைப் பெண்களுக்கு அந்தரங்கனாய்
(அவர்களுக்கு)

கோவ்வை கனி வாய் கொடுத்து கூழைமை செய்யாமே — கோவைப் பழம்போன்ற (தன்) அதரத்தை (போக்யமாகக்) கொடுத்துக்கொண்டு கூழ்மைத்தனமடித்துத்திரியவொட்டாமல்
எவ்வம் சிலை உடை வேடர் கான் இடை — துன்பத்தை விளைக்குமதான வில்லை (கையிலே) உடைய வேடர்களுக்கு (இருப்பிடமான) காட்டிலே
கன்றின்பின் போக்கினேன்—;
எல்லே பாவமே!—.

* * *—[எவ்வுஞ்சிலை.] எவ்வம் என்றுல் துன்பம்; அதனைச்செய்யுஞ்சிலை—எவ்வுஞ்சிலையாம். அன்றிக்கே ; 'ஏவுஞ்சிலை' என்கிறவிது-எதுகையின்பம் நோக்கி 'எவ்வுஞ்சிலை' என்று கிடக்கிறதாகக் கொண்டால், ஏ என்று அம்புக்குப் பேராய் அத்தையும் சிலையையுமுடைய என்று பொருளாம். (சு)

239 மிடறுமெழுமெழுத்தோட வெண்ணெய்விழுங்கிப்போய் *
படிறுபலசெய்து இப்பாடியெங்குந்திரியாமே *
கடிறுபலதிரி கானதரிடைக்கன்றின்பின் *
இடறவென்பிள்ளையைப்போக்கினேன் எல்லேபாவமே. (சூ)

என் பிள்ளையை — என் மகனை கண்ண பிரானை,
வெண்ணெய் மிடறு மெழுமெழுத்து ஓட விழுங்கி — வெண்ணெயை கழுத்திலே (உறுத்தாமல்) மெழுமெழுத்துஓடும்படி விழுங்கிவிட்டு
போய் பல படிறு செய்து — (பிறரகங்களுக்குப்) போய் பல கள்ள வேலைகளைச் செய்துகொண்டு

இ பாடி எங்கும் திரியாமே — இவ்விடைச்சேரி முழுதும் திரியவொட்டாமல்
பல கடிறு திரி கான் அதர் இடை இடற — பல காட்டானைகள் திரியப் பெற்ற காட்டுவழியிலே தட்டித்திரியும்படியாக
கன்றின்பின் போக்கினேன்—; எல்லே பாவமே!—.

* * *—களிறு என்றசொல் எதுகையின்பம் நோக்கிக் கடிறு என வந்தது; டகரளகரப் போலி. ... ... (சு)

240 வள்ளிநுடங்கிடை மாதர்வந்தலர்தூற்றிட *
துள்ளிவிளையாடித் தோழரோடுதிரியாமே *
கள்ளியுணங்கு வெங்கானதரிடைக்கன்றின்பின் *
புள்ளின்தலைவனைப்போக்கினேன் எல்லேபாவமே. (எ)

புள்ளின் தலைவனை — பெரியதிருவடிக்குத் தலைவனை கண்ணபிரானை,
வள்ளி நுடங்கு இடை மாதர் வந்து அலர் தூற்றிட — கொடிபோன்று துவளாநின்றுள்ள இடையையுடைய (இடைப்) பெண்கள் (தாயாகிய என்னிடத்தில்) வந்து (இவன் செய்த தீமைகளைச் சொல்லி) பழி தூற்றிக் கொண்டிருக்கச் செய்தே
(அதை ஒரு பொருளாக மதியாமல்)

துள்ளி தோழரோடு விளையாடி திரியாமே — (நிலத்தில் நில்லாமல்) துள்ளி (தன்)தோழர்களோடேவிளையாடிக்கொண்டு திரிவனே, அப்படி திரியவொட்டாமல்
கள்ளி உணங்கு வெங் கான் அதர் இடை — (மழையில்லாக் காலத்திலும் பசுமை மாறாத) கள்ளிச் செடியுங்கூட (பால்வற்றி) உலரும்படியாய் மிக்க வெப்பத்தையுடைய காட்டு வழியிலே
கன்றின்பின் போக்கினேன்—; எல்லே பாவமே!—,

241 பன்னிருதிங்கள் வயிற்றிற்கொண்டவப்பாங்கினில் *
என்னிளங்கொங்கை அமுதமூட்டியெடுத்தியான் *
பொன்னடிநோவப் புலியேகானிற்கன்றின்பின் *
என்னிளஞ்சிங்கத்தைப்போக்கினேன் எல்லேபாவமே. (அ)

என் இள சிங்கத்தை — எனது சிங்கக்குட்டிபோன்ற கண்ணபிரானை,
பன்னிரு திங்கள் வயிற்றில் கொண்ட அ பாங்கினில் — பன்னிரண்டு மாஸகாலம் (என்) வயிற்றிலே வைத்து நோக்கின அப்படிப்பட்ட அன்புக்கேற்ப

யான் — (தாயாகிய) நான்
என் இள கொங்கை அமுதம் ஊட்டி — குழைந்திரா நின்றுள்ள என்னுடைய முலையிலுண்டான பாலை (அவனுக்கு) உண்ணக் கொடுத்து

ஏற்றுத்து வளர்த்து
(இப்படியாக அருமைப்பட நோக்கின பிள்ளையை)
புலரியே { (இன்று) விடியற்காலத்திலேயே (எழுப்பி)

பொன் அடி நோவ { அழகிய திருவடிகள் நோவெடுக்கும்படியாக
கானில் காட்டிலே
கன்றின்பின் போக்கினேன்—;
எல்லே பாவமே!—,

242 குடையுஞ்செருப்புங்கொடாதே தாமோதரனேநான் *
உடையுங்கடியன ஊன்றுவெம்பரற்களுடை *
கடியவெங்கானிடைக் காலடிநோவக்கன்றின்பின் *
கொடியேனென்பிள்ளையைப்போக்கினேன் எல்லேபாவமே. (கூ)

என் பிள்ளையை என்மகனை
தாமோதரனே கண்ணபிரானே,
குடையும் செருப்பும் கொடாதே { குடையையும் செருப்பையும் (அவனுக்குக்) கொடாமல்
கொடியேன் நான் கொடியவளாகிய நான்
உடையும் { ஐயர்யனுடைய வெப்பத்தாலே) உடைந்து கிடப்பன வாய்

கடியன ஊன்று வெம் பரற்கள் உடை { கூரியனவாய்க் கொண்டு (காலிலே) உறுத்துவன வாய் (இப்படி) அதிதீக்ஷ்ணமான பருக்காங்கல்லையுடைய
கடிய வெம் கான் இடை அத்யுஷ்ணமான காட்டிலே
கால் அடி நோவ கன்றின்பின்
போக்கினேன்—;
எல்லே பாவமே!—.

* * *—காட்டிலுள்ள பருக்காங்கற்கள் கதிரவனுடைய எரிச்சலினால் ஒன்று பலவாகப்பிளந்து கூர்மைமிக்கு உள்ளங்காலில் உறுத்திவருத்துமே, வெயிலுக்குத்தடையாகக் குடையையும், தரையின் வெம்மைக்குத் தடையாகச் செருப்பையும் அவனுக்குத் தாராமல் இப்படிப்பட்ட காட்டிற்போக விட்டேன். என் கொடுமை பிருந்தவாறு என்னே! என்கிறாள். மேல்திருமொழியில் "குடையுஞ் செருப்புங்குழலுந் தருவிக்கக்கொள்ளாதே போனயமாலே" எனக்காண்கையால் இங்குக் 'கொடாதே' என்பதற்கு-அவன் இவற்றை 'வேண்டா' வென்று மறுக்கச்செய்தேயும் நான் கட்டாயப்படுத்தி [பலாத்காரமாக] அவற்றைக்கொடாமல் என்று பொருள்விரித்தல் வேண்டுமென்க. பால்—பருக்கை. கால்—அடி-காலின் உள்ளடி. ... ... (கூ)

243 என்றுமெனக்கினியானே யென்மணிவண்ணனே *
கன்றின்பின்போக்கினேனென்று அசோதைகழறிய *
பொன்திகழ்மாடப் புதுவையர்கோன்பட்டன்சொல் *
இன்தமிழ்மாலைகள்வல்லவர்க்கு இடரில்லையே. (ஙு)

என்றும் எனக்கு இனியானே { 'எப்போதும் (தாயாகிய) எனக்கு இனிமையைத் தருமவனை'
என் மணி வண்ணனே { என்னுடைய நீலமணி போன்ற வடிவையுடையனை கண்ணபிரானே
கன்றின் பின் போக்கினேன் என்று { கன்றுகளின் பின்னே (காட்டில்) போக விட்டேனே!' என்று
அசோதை கழறிய சொல் { யசோதைப்பிராட்டி (மனம் நொந்து) சொன்னவற்றை அருளிச்செய்த,

பொன் திகழ் மாடம் புதுவையர் கோன் பட்டன் { பொன்மயமாய் விளங்காநின்றுள்ள மாடங்களையுடைய ஸ்ரீவில்லிபுத்தூரிலுள்ளவர்களுக்குநிர்வாஹகரான பெரியாழ்வாருடைய
இன் தமிழ் மாலைகள் வல்லவர்க்கு { போக்யமான தமிழ்ச்சொல் மாலைகளை ஓதவல்லவர்களுக்கு
இடர் இல்லை { (ஒருகாலும்) துன்பமில்லையாம்.

அடிவரவு:—அஞ்சனம் பற்று நன்மணி வண்ணம் அவ்வவ்விடம் மிடறு வள்ளி பன்னிரு குடை என்றும் சிலை.

—o—

(காடுசென்று மீண்டுவந்த கண்ணனைக்கண்டு யசோதை களித்தும் வருத்தியுங்கூறுதல்)

---

244 சீலைக்குதம்பையொருகாதொருகாது செங்நிறமேற்றுன்றிப்பூ *
கோலப்பணைக்கச்சுங்கூறையுடையுங் குளிர்முத்தின்கோடாலமும் *
காலிப்பின்னேவருகின்ற கடல்வண்ணன்வேடத்தைவந்துகாணீர் *
ஞாலத்துப்புத்திரனைப்பெற்றார் நங்கைமீர்நானேமற்றாருமில்லை. (க)

நங்கைமீர் — பெண்காள்!
ஒரு காது சீலைக் குதம்பை — ஒருகாதிலே சீலைத்தக்கையையும்
ஒரு காது செம் நிறம் மேல்தோன்றிப் பூ — மற்றொரு காதிலே செங்காந்தள் பூவையும் (அணிந்து கொண்டு)
கூறை உடையும் — திருப்பரியட்டத்தின் உடுப்பையும்
(அது நழுவாமைக்குச் சாத்தின)
கோலம் பணை கச்சும் — அழகிய பெரிய கச்சுப்பட்டையையும்
குளிர் முத்தின் கோடி ஆலமும் — குளிர்ந்திராநின்றுள்ள முத்தாலே தொடுக்கப்பெற்று (பிறைபோல்) வளைந்திருக்கின்ற ஹாரத்தையும்
(உடையழகைக் கொண்டு)
காலி பின்னே வருகின்ற கடல் வண்ணன் வேடத்தை — கன்றுகளின் பின்னே (மீண்டு) வாராநின்ற கடல் போன்ற நிறத்தவனான கண்ணனுடைய வேஷத்தை
வந்து காணீர் — வந்துபாருங்கள்;
ஞாலத்து — பூமண்டலத்திலே
புத்திரனை பெற்றார் — பிள்ளையைப் பெற்றவர்களுள்
('நல்ல பிள்ளை பெற்றவள்' என்று சொல்லத்தக்கவள்)
நானே — நான் ஒருத்தியேயாவேன்;
மற்று ஆரும் இல்லை — வேறொருத்தியுமில்லை.

* * *—சீலைக்குதம்பை = 'போய்ப்பாடுடைய நின்' என்ற திருமொழியில் யசோதைப்பிராட்டி கண்ணபிரானை வேண்டியழைத்துக் காதிலிட்ட துணித்திரி. இரண்டு காதுகளிலும் அத்திரியை இவள் இட்டனுப்ப, அவன் காட்டிலே ஒருகாதில் திரியைக் களைந்திட்டுச் செங்காந்தள் பூவை அணிந்து கொண்டுவக்தமை அறிக. உடை என்று வஸ்திரத்திற்கும் அதனை உடுத்துதற்கும்பேர். இங்கு இரண்டாவதான தொழிற்பொருளைக் கொள்க. ஆலம் = 'ஹாரம்' என்றவடசொல் ஆரமெனத்திரிந்து ரகரத்திற்கு லகரம் போலியாக வந்தது: அன்றிக்கே, 'கோடாரமும்' என்றே பாடமாகவுமாம்; அன்றிக்கே 'கோடாலம்' என்றொரு முழுச்சொல்லாய் முத்துப்பணியைச் சொல்லிற்றுகவுமாமென்பர். வேடம்—வேஷம், பெண்காள்! கச்சுங்கூறையுமாரமுமாக என் கண்ணபிரான் கன்றுமேய்த்து மீண்டு வருகின்ற கோலத்தை வந்து காண்மின்; பிள்ளை என்றால் இவனொருத்தனையொழிய மற்றைப்பிள்ளைகள் அணிற்பிள்ளை கீரிப்பிள்ளை தென்னம்பிள்ளையேயாமத்தனை; அவற்றைப்பெற்ற தாய்களோடு மலடிகளோடு ஒருவாசியில்லை; 'புத்ரவதீ' என்று எனக் கொருத்திக்கே யன்றே பட்டங்கட்டத்தகும் என்று புகழ்ந்து மகிழ்ந்து பொலிகின்றாள். ... ... (க)

245 கன்னிநன்மாமதிள்சூழ்தரு பூம்பொழிற்காவிரித்தென்னரங்கம் *
மன்னியசீர்மதுசூதனகேசவா பாவியேன்வாழ்வுகந்து *
உன்னையிளங்கன்றுமேய்க்கச் சிறுகாலேயூட்டியொருப்படுத்தேன் *
என்னில்மனம்வலியாளொருபெண்ணில்லை யென்குட்டனேமுத்தந்தா. (உ)

கன்னி நல் மா மதிள் சூழ்தரு — அழிவற்ற விலக்ஷணமான பெரியமதில்களாலே சூழப்பட்டு
பூ பொழில் காவிரி தென் அரங்கம் — பூஞ்சோலைகளையுடைய காவேரி நதியோடுகூடிய தென் திருவரங்கத்தில்
மன்னிய — பொருந்தியெழுந்தருளியிருக்கின்ற
சீர் மது சூதனா — கல்யாண குணயுக்தனான மதுஸூதனனே! [கண்ணபிரானே!]
கேசவா — கேசவனே!
பாவியேன் — பாவியாகிய நான்

வாழ்வு உகந்து — (நமது ஜாதிக்கேற்ற கன்று மேய்க்கையாகிற) ஜீவகத்தை விரும்பி

உன்னை சிறுகாலே ஊட்டி — (இவ்வலீச்சலுக்கு ஆளல்லாத) உன்னை விடியற்காலத்திலேயே உண்ணச் செய்து

இள கன்று மேய்க்க ஒருப்படுத்தேன் — இளங்கன்றுகளை மேய்க்கைக்காக (அவற்றின் பின்னே போக) ஸம்மதித்தேன்;

(இப்படி உன்னை அனுப்பிவிட்டுப் பொறுத்திருந்த)

என்னில் — என்னிற்காட்டில்

மனம் வலியாள் ஒரு பெண் இல்லை — கல்நெஞ்சையுடையளான ஒரு ஸ்த்ரீயும் (இவ்வுலகில்) இல்லை;

என் குட்டனே முத்தம் தா — எனது குழந்தாய்! (எனக்கு) ஒரு முத்தம்கொடு.

246 காடுகளூடுபோய்க் கன்றுகள்மேய்த்துமறியோடி * கார்க்கோடற்பூச்
சூடிவருகின்றதாமோதரா கற்றுத்தூளிகாணுன்னுடம்பு *
பேடைமயிற்சாயற்பின்னைமணாளா நீராட்டமைத்துவைத்தேன் *
ஆடியமுதுசெய்யப்பனுமுண்டிலன் உன்னோடுடனேயுண்பான். (சு)

காடுகள் ஊடு போய் — (பற்பல) காடுகளினுள்ளே புகுந்து (கன்றுகள் கைகழியப் போகாதபடி)

மறி ஓடி — (அவற்றை) மறிக்கைக்காக [திருப்புகைக்காக] முன்னே ஓடி

கன்றுகள் மேய்த்து — (அக்) கன்றுகளை மேய்த்து

கார் கோடல் பூ சூடி வருகின்ற தாமோதரா — பெரிய கோடல் பூக்களை முடியிலணிந்து கொண்டு (மீண்டு) வருகின்றகண்ணபிரானே!

உன் உடம்பு — உன் உடம்பானது

கன்று தூளி காண் — கன்றுகளால் துகைத்துக் கிளப்பப்பட்ட தூளிகள் படியப்பெற்றுள்ளதுகாண்;

மயில் பேடை சாயல் பின்னை மணாளா — பெண்மயில்போன்றசாயலையுடையநப்பின்னைப்பிராட்டிக்கு வல்லபனானவனே!

(இந்த உன் உடம்பை அலம்புவதற்காக)

நீராட்டு அமைத்து வைத்தேன் — நீராட்டத்துக்கு வேண்டிய வஸ்துக்களை ஸித்தப்படுத்தி வைத்திருக்கிறேன்;

(ஆகையால் நீ)

ஆடி அமுதுசெய் — நீராடி அமுதுசெய்வாயாக;

உன்னோடு உடனே உண்பான் அப்பனும் உண்டிலன் — உன்னோடு கூடவே உண்ண வேணுமென்று (உன்)தகப்பனாரும் (இதுவரை) உண்ணவில்லை.

247 கடியார்பொழிலணிவேங்கடவா கரும்போரேறே * நீயுகக்குங்
குடையுஞ்சேருப்புங்குழலுந்தருவிக்கக் கொள்ளாதேபோனாய்மாலே *
கடியவெங்கானிடைக்கன்றின்பின்போன சிறுக்குட்டச்செங்கமல
வடியும்வெதும்பி * உன்கண்கள்சிவந்தாயசைந்திட்டாய் நீயெம்பிரான். (சூ)

கடி ஆர் பொழில் அணி வேங்கடவா — (மலர்களின்) பரிமளம் நிறைந்த சோலைகளையுடைய அழகிய திருவேங்கடமலையிலெழுந்தருளிப்பிருப்பவனே!

போர் கரு ஏறே — யுத்தஞ்செய்ய முயன்ற காளரிஷபம்போல்செருக்கிப்பிருக்குமவனே!

மாலே — (கன்றுகளிடத்தில்) மோஹமுள்ளவனே!

எம்பிரான் — எமக்கு ஸ்வாமியானவனே!

நீ உகக்கும் குடையும் செருப்பும் குழலும் தருவிக்க — நீ விரும்புமவையான குடையையும் செருப்பையும் வேய்ங்குழலையும் (நான் உனக்கு) கொடுக்கச் செய்தேயும்

கொள்ளாதே போனாய் — (அவற்றைநீ) வாங்கிக்கொள்ளாமல் (கன்றுகளின் பின்னே) சென்றாய்;

(இப்படி)

கடிய வெங்கான் இடை — மிகவும் வெவ்விய காட்டிலே

கன்றின் பின் போன சிறு குட்டன் — கன்றுகளின் பின்னே தொடர்ந்து சென்ற சிறுப்பிள்ளையாகியஉன்னுடைய

செம் கமலம் அடியும் வெதும்பி — செந்தாமரைப் பூப்போன்ற திருவடிகளும் கொதிக்கப்பெற்று

உன் கண்கள் சிவந்தாய் — உன் கண்களும் சிவக்கப்பெற்றாய்;

அசைந்திட்டாய் — நீ—; (உடம்பு) இளைக்கவும் பெற்றாய்.

* * *—தருவிக்க என்பதற்குக் 'கொடுக்க' என்று தன்னினப்பொருள்கொள்க. போலும் என்பதை வினைமுற்றாகக் கொள்ளாமல், போனவனே! என விளியாகக் கொள்ளலுந்தகும். கண்கள் சிவந்தாய்—"சினவினை சினையொடும் முதலொடுஞ் செறியும்" என்ற நன்னூற் சூத்திரமுணர்க. (சு)

248 பற்றார்நடுங்கமுன்பாஞ்சசன்னியத்தை வாய்வைத்தபோரேறே * என்
சிற்றாயர்சிங்கமேசீதைமனாளா சிறுக்குட்டச்செங்கண்மாலே *
சிற்றுடையுஞ்சிறுப்பத்திரமும் இவைகட்டிலின்மேல்வைத்துப்போய் *
கற்றாயரோடுநீகன்றுகள்மேய்த்துக் கலந்துடன்வந்தாய்போலும். (நு)

முன் — (பாரதப்போர்செய்த) முற் காலத்தில்
பற்றார் நடுங்க பாஞ்ச சன்னியத்தை வாய் வைத்த போர் ஏறே — (உனது உயிர் போன்ற பாண்டவர்களுக்குப்) பகைவரான துரியோதனியர் நடுங்கும்படி சங்கத்தைத் திருப்பவளத்தில் வைத்து ஊதின போர் செய்யலுற்ற காளை போன்ற கண்ணபிரானே!
என் சிறு ஆயர் சிங்கமே — எனக்கு விதேயனாய் சிறிய இடைப்பிள்ளைகளுள் சிங்கக்குட்டி போன்றுள்ள வனே!
சீதை மணாளா — ஸீதாபிராட்டிக்கு வல்லபனாவனே!
சிறு குட்டன் — சிறு பிள்ளையாயிருப்பவனே!
(இப்படியிருக்கச் செய்தேயும்)

செம் கண் மாலே — செந்தாமரை மலர்போன்ற கண்களையுடைய ஸர்வேச்வரனே!
நீ—;
சிறு ஆடையும் — (உன் பருவத்துக்குத்தக்க) சிறிய திருப்பரிவட்டமும்
சிறு பத்திரமும் இவை — குற்றுடைவாளுமாகிற இவற்றை
(காட்டுக்குப் போகையிலுள்ள விரைவாலே)
கட்டிலின் மேல் வைத்து போய் — (கண்வளர்ந்தருளின) கட்டிலின்மேலேவைத்து மறந்து போய்
கன்று ஆயரோடு — கன்று மேய்க்கிற இடைப்பிள்ளைகளுடனே
கன்றுகள் மேய்த்து — கன்றுகளை மேய்த்து விட்டு
(மீண்டு மாலைப்பொழுதிலே)
கலந்து உடன் — (அந்த * தன்னேராயிரம் பிள்ளைகளோடே) கூடிக் கலந்து
வந்தாய் போலும் — (வீட்டுக்கு) வந்தாயன்றே?

249 அஞ்சுடராழியுன்கையகத்தேந்தும் அழகாநீபோய்கைபுக்கு *
நஞ்சுமிழ்நாகத்தினோடுபிணங்கவும் நானுயிர்வாழ்ந்திருந்தேன் *
என்செய்யவென்னைவயிறுமறுக்கினாய் ஏதுமோரச்சமில்லை *
கஞ்சன்மனத்துக்குகப்பனவேசெய்தாய்காயாம்பூவண்ணங்கொண்டாய். (சூ)

அம் சுடர் ஆழி கை அகத்து ஏந்தும் அழகா — அழகிய ஒளியையுடைய திருவாழியாழ்வானைத் திருக்கையிலே தரியாநின்றுள்ள அழகப்பிரானே!
நீ—!
பொய்கை புக்கு — (காளியன் கிடந்த) பொய்கையிலே போய்ப்புகுந்து
(அவ்விடத்தில்)
நஞ்சு உமிழ் நாகத்தினோடு பிணங்கவும் — விஷத்தை உமிழாநின்ற காளியனோடு சண்டை செய்தபோதும்

நான் உயிர் வாழ்ந்து இருந்தேன் — நான் ஜீவித்திருந்தேன்;
என் செய்ய என்னை வயிறு மறுக்கினாய் — ஏதுக்காக என்னை (இப்படி) வயிறு குழம்பச்செய்கின்றாய்;
ஏதும் ஓர் அச்சம் இல்லை — (உனக்கு) கொஞ்சமும் பயமில்லையே;
காயாம்பூ வண்ணம் கொண்டாய் — காயாம்பூப்போன்ற வடிவு படைத்தவனே!
கஞ்சன் மனத்துக்கு உகப்பனவே செய்தாய் — கம்ஸனுடைய மனஸுக்கு உகப்பாயுள்ளவற்றையே செய்யாநின்றாய்.

* * *—மறுக்கினாய் என்பதற்கு 'மறுக்குகின்றாய்' என்றும், செய்தாய் என்பதற்குச் 'செய்கின்றாய்' என்றும் நிகழ்காலப் பொருள்கொள்ளல் தகும்; இது வழுவமைதியின்பாற்படும்; "விரைவினு மிகவினுந் தெளிவினு மியல்பினும், பிறழ்வும் பெறுஉமுக் காலமுமேற்புழி" என்றார் நன்னூலார். (சு)

250 பன்றியுமாமையுமீனமுமாகிய பாற்கடல்வண்ணனுவன்மேல் *
கன்றினுருவாகிமேய்புலத்தேவந்த கள்ளவசுரர்தம்மை *
சென்றுபிடித்துச்சிறுக்கைகளாலே விளங்காயெறிந்தாய்போலும் *
என்றுமென்பிள்ளைக்குத்தீமைசெய்வார்கள் அங்ஙனமாவர்களே. (எ)

பன்றியும் ஆமையும் மீனமும் ஆகிய — மஹாவராஹமாயும் ஸ்ரீகூர்மமாயும் மத்ஸ்யமாயும் திருவவதரித்தருளின
பால் கடல் வண்ணன் — பாற்கடல்போல் வெளுத்திருந்துள்ள திருமேனியையுடையவனே !
உன் மேல் — உன்னை நலியவேணுமென்ற எண்ணத்தினால்
கன்றின் உரு ஆகி — கன்றின் உருவத்தை யெடுத்துக்கொண்டு
மேய்புலத்தே வந்த — (கன்றுகள்) மேயும் நிலத்தில் வந்துகலந்த
கள்ளம் அசுரர் தம்மை — க்ருத்ரிமனனை அஸுரனை
(அவன் சேஷ்டையாலே அவனை அசுரனென்றறிந்து)
சென்று சிறு கைகளாலே பிடித்து — (அக்கன்றின் அருகிற்) சென்று (உனது) சிறிய கைகளாலே (அக்கன்றைப்) பிடித்து
விளங்காய் எறிந்தாய் போலும் — (அஸுராவிஷ்டமான தொரு) விளாமரத்தின் காய்களை நோக்கி விட்டெறிந்தாயன்றே ;
என் பிள்ளைக்கு தீமைசெய்வார்கள் — என் பிள்ளையான கண்ணபிரானுக்குத் தீமைகளை உண்டுபண்ணுமவர்கள்
என்றும் அங்ஙனம் ஆவர்கள் — என்றைக்கும் அவ்விளவும் கன்றும்போலே நசித்துப் போகக்கடவர்கள்.

கண்ணபிரானே ! உன்னை நலியவந்த வத்ஸாஸுரனையும் கபித்தாஸுரனையும் அநாயாஸமாக முடித்தவனன்றே நீ—என்று யசோதைசொல்ல, அவன் 'ஆம்' என்ன, அதைக்கேட்ட யசோதை மனமகிழ்ச்சி ஒருபக்கத்திலும் வயிற்றெரிச்சல் ஒருபக்கத்திலுமாய் 'என்னுடைய பிள்ளைக்குத் தீமை செய்யக் கருதுமவர்கள் என்றும் அப்படியே மாளக்கடவர்கள்' என்று கைநெரித்துச் சாபமிடுகிறாள் ஈற்றடியால் ... ... (எ)

251 கேட்டறியாதனகேட்கின்றேன் கேசவாகோவலரிந்திரற்கு *
காட்டியசோறுங்கறியுந்தயிருங் கலந்துடனுண்டாய்போலும் *
ஊட்டமுதலிலேனுன்றன்னைக்கொண்டு ஒருபோதுமெனக்கரிது *
வாட்டமிலாப்புகழ்வாசுதேவா உன்னையஞ்சுவனின்றுதொட்டும். (அ)

கேசவா — கண்ணபிரானே !
கேட்டு அறியாதன கேட்கின்றேன் — (உன் விஷயமாக இதுவரை நான்) கேட்டறியாதவற்றை (இன்று) கேட்கப் பெற்றேன்;
(அவற்றில் ஒன்று சொல்லுகின்றேன் கேள் ;)
கோவலர் இந்திரற்கு காட்டிய — கோபாலர்கள் இந்த்ரனைப் பூஜிப்பதற்காக அனுப்பிய
சோறும் கறியும் தயிரும் — சோற்றையும் (அதுக்குத் தக்க) கறியையும் தயிரையும்
உடன் கலந்து உண்டாய் போலும் — ஒன்றுசேரக் கலந்து உண்டவனன்றே நீ ;
(இப்படி உண்ணவல்ல பெருவயிற்றனை உன்னை)
ஊட்டமுதல் இலேன் — (நாடோறும்) ஊட்டிவளர்க்க (த்தக்க) கைம்முதல் எனக்கில்லை ;
உன்தன்னை கொண்டு ஒருபோதும் எனக்கு அரிது — உன்னை வைத்துக்கொண்டு ஒருவேளையும் என்னால் ஆற்றமுடியாது ;
வாட்டம் இலா புகழ் வாசுதேவா — (என்றும்) வாடாத புகழையுடைய வஸுதேவர் திருமகனே !
இன்று தொட்டும் உன்னை அஞ்சுவன் — இன்றுமுதலாக உன்னைக் குறித்து அஞ்சாநின்றேன்

252 திண்ணிர்வெண்சங்குடையாய் திருநாள்திருவோணமின்றேழுநாள் *
முன்பண்ணோர்மொழியாரைக்கூவிமுனையட்டிப் பல்லாண்டுகூறுவித்தேன் *
கண்ணலஞ்செய்யக் கறியுங்கலத்ததரிசியுமாக்கிவைத்தேன் *
கண்ணநீகாலத்தோட்டுக்கன்றின்பின்போகேல் கோலஞ்செய்திங்கேயிரு. (க)

திண் ஆர் வெண் சங்கு உடையாய் — திண்மைபொருந்திய வெண் சங்கத்தை (திருக்கையில்) ஏந்தியுள்ளவனே!

கண்ணை — கண்ணபிரானே!

திரு நாள் திரு ஓணம் இன்று ஏழு நாள் — (நீ பிறந்த) திருநக்ஷத்திரமாகிய திருவோண நக்ஷத்திரம் இற்றைக்கு ஏழாவது நாளாகும்;

(ஆதலால்,)

முன் பண் ஏர் மொழி யாரை கூவி முளை அட்டி பல்லாண்டு கூறுவித்தேன் — முதல்முதலாகப்பண்ணோடே கூடின அழகிய பேச்சையுடைய மாதர்களை யழைத்து அங்குராரோபணம்பண்ணி மங்களாசாஸனமும் பண்ணுவித்தேன்;

கண்ணுலம் செய்ய — (திருவோண நக்ஷத்திரன்று) திருக்கல்யாணம் செய்வதற்கு

கறியும் அரிசியும் கலத்தது ஆக்கி வைத்தேன் — கறியமுதுகளையும் அமுதுபடியையும் பாத்திரங்களில் சேமித்து வைத்திருக்கின்றேன்;

நீ—;

நாளைத் தொட்டு கன்றின் பின் போகேல் — நாளைமுதற்கொண்டு கன்றுகளின் பின்னே (காட்டுக்குப்) போகவேண்டா;

கோலம் செய்து இங்கே இரு — (உன்வடிவுக்குத்தக்க) அலங்காரங்களைச் செய்துகொண்டு இந்த அகத்திலேயே இருக்கக் கடவாயாக.

253 புற்றரவல்குலசோதைநல்லாய்ச்சி தன்புத்திரன்கோவிந்தனை *
கற்றினம்மேய்த்துவரக்கண்டுகந்தவள் கற்பித்தமாற்றமெல்லாம் *
செற்றமிலாதவர்வாழ்தரு தென்புதுவைவிட்டுசித்தன்சொல் *
கற்றிவைபாடவல்லார் கடல்வண்ணன்கழலிணைகாண்பர்களே. (ம)

புற்று அரவு அல்குல் அசோதை நல் ஆய்ச்சி — புற்றிலே (வளர்கின்ற) பாம்பின்படத்தை ஒத்த அல்குலையுடையளாய் யசோதையென்னும் பெயரையுடையளாய் (பிள்ளைநிறத்தில்) நன்மையையுடையளான ஆய்ச்சியானவள்

தன் புத்திரன் கோவிந்தனை — தன் மகனை கண்ணபிரானை

கன்று இனம் மேய்த்துவர கண்டு உகந்து — கன்றுகளின் திரளை (க்காட்டிலே) மேய்த்துவிட்டு மீண்டுவரக்கண்டு மனமகிழ்ந்து

அவள் — அவ்யசோதை

(அம்மகனைக்குறித்து இன்னபடிசெய் என்று)

கற்பித்த மாற்றம் எல்லாம் செற்றம் இலாதவர் வாழ்தரு — நியமித்துக்கூறிய வார்த்தைகளையெல்லாம்;—அஸூயையற்ற ஸ்ரீவைஷ்ணவர்கள் வாழுமிடமான

தென் புதுவை விட்டு சித்தன் சொல் இவை கற்று பாடவல்லார் — அழகிய ஸ்ரீவில்லிபுத்தூருக்குநிர்வாஹகரான பெரியாழ்வார் அருளிச்செய்த இப்பாசுரங்களை (ஆசார்யமுகமாக) ஓதி (வாயாரப்) பாடவல்லவர்கள்

கடல் வண்ணன் கழல் இணை காண்பர்கள் — கடல்போன்ற நிறத்தனனை எம்பெருமானுடைய திருவடியிணைகளைக்கண்டுஅநுபவிக்கப்பெறுவர்கள்.

* * *—கற்பித்த மாற்றம்—இத்திருமொழியில், மூன்றும் பாட்டிலும் ஒன்பதாம்பாட்டிலும் நியமித்தவாறு காண்க. வாழ்தரு=தரு-துணைவினை. ... ... (ம)

அடிவரவு:—சீலை கன்னி காடு கடி பற்றர் அஞ்சுடர் பன்றி கேட்டு திண்ணர் புற்று தழை.

மூன்றும்பத்து—நான்காந்திருமொழி, தழைகளுந்தொங்கலும்.

[கண்ணன் காட்டில் பசுமேய்த்துத் திரும்பிவரும்போதை மஹோத்ஸவாநுபவம்.]

254 தழைகளுந்தொங்கலுந்தும்பியேங்குந் தண்ணுமையேக்கம்மத்தளிதாழ்பீலி *
குழல்களுங்கீதமுமாகியேங்குங் கோவிந்தன்வருகின்றகூட்டங்கண்டு *
மழைகொலோவருகின்றதென்றுசொல்லி மங்கைமார்சாலகவாசல்பற்றி *
நுழைவனர்நிற்பனராகியேங்கும் உள்ளம்விட்டுண்மறக்தொழிந்தனரே. (க)

தழைகளும் தொங்கலும் எங்கும் ததும்பி — பலவகைப்பட்ட மயிற்பீலிக் குடைகள் நாற்புறங்களிலும் நிறைந்து

தண்ணுமை எக்கம் மத்தளி — மிருதங்கங்களும் ஒரு தந்திரியையுடைய மத்தளவாத்யங்களும்

தாழ்பீலி குழல்களும் கீதமும் எங்கும் ஆகி — பெரிய விசிறிகளும் இலிக் குழல், வேய்ங்குழல் என்ற குழல்களும் இவற்றின் பாட்டுக்களும் எங்கும் நிறைய

(இந்த ஸங்கிவேசத்துடனே)

கோவிந்தன் வருகின்ற கூட்டம் கண்டு — கண்ணபிரான் (கன்று மேய்த்து மீண்டு) வருகின்ற பெரிய திருவோலக்கத்தைப் பார்த்து

மங்கைமார் — யுவதிகளான இடைப் பெண்கள்

மழை கொல் ஓ வருகின்றது என்று சொல்லி — 'மேக ஸமூஹமோதான் (தரைமேலே கடந்து) வருகின்றது!' என்று உல்லேகித்து

சாலகம் வாசல்பற்றி — ஜாலகரந்த்ரங்களுக்கு (வாதாயனங்களுக்கு) சென்றுகிட்டி

நுழைவனர்நிற்பனர் ஆகி — (வியாமோஹத்தாலே சிலர் மேல்விழுவதாக்ச் சாலக வாசல் வழியே) நுழையப் புகுவாரும், (சிலர் குருஜநபயத்தாலே) திகைத்து நிற்பாருமாகி

எங்கும் — கண்ணபிரான் நடந்த வழி முழுவதும்

உள்ளம் விட்டு — தங்கள் நெஞ்சைப் பரக்க விட்டு

ஊண் மறந்தொழிந்தனர் — ஆஹாரத்தை மறந்துவிட்டார்கள்.

கண்ணபிரான் கன்று மேய்த்துவிட்டுத் தன்னோடொத்த நிறத்தனரான ஆயிரந்தோழன்மாருடன் கூடிப் பற்பல பீலிக்குடைகள் விசிறிகள் வாத்தியங்கள் முதலிய ஸம்ப்ரமத்துடன் வருகின்றவாற்றைக் கண்ட யுவதிகள் 'இவை மேகங்கள் திரண்டுருண்டு வருகின்றனவோ' என்று தம்மிலே தாம் சொல்லிக் கொண்டு இவனை இடைவிடாது காண்கைக்காகத் தந்தம் மாளிகைகளில் கவாக்ஷ த்வாரத்தளவிலே நின்று காணலுற்று, கண்ணனுடைய அழகின் மிகுதியைக் காணக்காணப் பரவசைகளாய், நின்ற விடத்தில் நிற்கமாட்டாமல் சிலர் அதிவிவேசாதிசயத்தால் கண் கலங்கிச் சன்னல் வழியாக வெளிப் புறப்பட முயல்வாரும், சிலர் மாமிமார் முதலியோருக்கு அஞ்சி அவ்விடத்திலேயே திகைத்து நிற்பாருமாய் இப்படி தந்தம் நெஞ்சுகளையிழந்து ஆஹாரவிருப்பத்தையும் மறக்கப் பெற்றார்கள் என்பதாம். (க)

255 **வல்லி நுண்ணிதழன்னவாடைகொண்டு வசையறத்திருவரைவிரித்துடுத்து ***
பல்லி நுண்பற்றுகவுடைவான்சாத்திப் பணைக்கச்சுந்திப்பலதழைநடுவே *
முல்லைநன்னறுமலர்வேங்கைமலரணிந்து பல்லாயர்குழாநடுவே *
எல்லியம்போதாகப்பிள்ளைவரும் எதிர்நின்றங்கினவாயிழவேல்மினே. (உ)

பிள்ளை — நந்தகோபர் மகனை கண்ணன்,

வல்லி நுண் இதழ் அன்ன ஆடை கொண்டு — கற்பகக்கொடியினது நுட்பமான இதழ்போன்று ஸுகுமாரமான வஸ்த்ரத்தைக் கொணர்ந்து

திரு அரை வசை அறவிரித்து உடுத்து — (தனது) திருவரையிலே ஒழுங்காக விரித்துச் சாத்திக்கொண்டு

(அதன்மேல்)

பணை கச்சு உந்தி — பெரிய கச்சுப்பட்டையைக் கட்டிக்கொண்டு

(அதன்மேல்)

உடை வாள் பல்லி நுண் பற்று ஆக சாத்தி — கத்தியை பல்லியானது சுவரிலே இடைவெளியறப் பற்றிக் கிடக்குமாபோலே நெருங்கச்சாத்திக்கொண்டு

நல் நறு முல்லை மலர் வேங்கை மலர் அணிந்து — அழகியதும் பரிமளமுள்ளதுமான முல்லைப்பூவையும் வேங்கைப்பூவையும் (தொடுத்து) (மாலையாகச்) சாத்திக்கொண்டு

பல் ஆயர் குழாம் நடுவே — பல இடைப்பிள்ளைகளுடைய கூட்டத்தின் நடுவில்

பல தழை நடுவே — பல மயில்தோகைக்குடை நிழலிலே

எல்லி அம் போது ஆக வரும் — ஸாயம் ஸந்த்யாகாலத்திலே வருவன்;

அங்கு எதிர் நின்று — அவன் வரும் வழியில் எதிராக நின்று

வளை இனம் இழவேல்மின் — கை வளைகளை இழவாதே கொள்ளுங்கள்.

தோழிமார் ஒருவர்க்கொருவர் சொல்விக்கொள்ளும் பாசுரம் இது. தோழிகாள்! இவ்வூரில் ஒரு பிள்ளை உளன் என்பது உங்களுக்குத் தெரியுமே, அவன் நல்ல நல்ல ஆடையைச் சாத்திக்கொண்டு

கச்சுங்கத்தியுமாகத் தனது தோழன்மாருடன் மஹாஸம்ப்ரமமாக மாலைப்பொழுதாகிய இப்பொழுதிலே இச்சேரியேற வரப்புகாநின்றான், அவன் வருமழகைக் காணவிரும்பி வழியில் அவனை யெதிர்கொண்டு நின்றவர்களில் ஒருத்தரும் வளையிழவாதாரில்லை; நீங்களாகிலும் ஜாகரூகதையுடனிருந்து உங்கள் கை வளைகளை நோக்கிக் கொள்ளுங்கள் என்று ஒருத்தி தன் தோழிகளுக்கு எச்சரிக்கை கூறுகின்றனளென்க. வளையிழக்கைக்கு அடியென்? என்னில்; * ஸாக்ஷாந் மந்மதமந்மதனை அவனைக் கண்ணுற்கண்ட மாத்திரத்திலேயே பெண்களுக்கு விசேஷமான வியாமோஹம் பிறக்கும்; அதற்கு ஏற்றபடி அவனோடு ரமிக்கை அவர்களுக்கு அரிது; அதனால் கூணைகூணை உடல் இளைக்கும்; உடனே கை வளைகள் கழன்றுவிழும் என்றறிக. ... ... (உ)

256 சுரிகையுந்தெறிவில்லுஞ்சேண்டுகோலும் மேலாடையுந்தோழன்மார்கொண்டோட *
ஒருகையாலொருவன்றன்தோளையூன்றி ஆநிரையினம்மீளக்குறித்தசங்கம் *
வருகையில்வாடியபிள்ளைகண்ணன் மஞ்சளும்மேனியும்வடிவுங்கண்டாள் *
அருகேநின்றுளென்பெண்ணைக்கிக்கண்டாள் அதுகண்டிவ்வூரொன்று
புணர்க்கின்றதே. (ங)

தோழன்மார்	தன்னேராயிரம் பிள்ளைகள்,
சுரிகையும்	உடைவாளையும்
தெறி வில்லும்	சுண்டுவில்லையும்
சேண்டு கோலும்	பூஞ்சேண்டுகோலையும்
மேல் ஆடையும்	உத்தரீயத்தையும்
	(கண்ணபிரானுக்கு வேண்டினபோது கொடுக்கைக்காக)
கொண்டு ஓட	கையிற்கொண்டு பின்னே ஸேவித்துவர,
ஒருவன் தன்தோளை	ஒரு உயிர்த்தோழனுடைய தோளை
ஒரு கையால் ஊன்றி	ஒரு திருக்கையினால் அவலம் பித்துக்கொண்டு
(ஒரு கையால்)	மற்றொரு திருக்கையினால்
ஆநிரை இனம் மீள குறித்த சங்கம்	(கைகழியப்போன) பசுக்களின் நிரள் திரும்பி வருவதற்காக ஊதவேண்டிய சங்கை
(ஊன்றி)	ஏந்திக்கொண்டு
வருகையில்	மீண்டு வருமளவில்
வாடிய	வாட்டத்தை அடைந்துள்ள
பிள்ளை கண்ணன்	ஸ்ரீக்ருஷ்ணனுடைய
மஞ்சளும் மேனியும் வடிவும்	பற்றுமஞ்சள் மயமான திருமேனியையும் அவயவஸௌந்தர்ய சோபையையும்
அருகே நின்றுள்ள என் பெண்	(அவனுக்குச்) சமீபத்தில் நின்றுகொண்டிருந்த என் மகள்
கண்டாள்	(முதலில் எல்லாரும் பார்க்கிறாற்போல்) பார்த்தாள்;
	(பிறகு, அபூர்வவஸ்து தர்சநமாயிருந்தபடியால்)
நோக்கி கண்டாள்	கொஞ்சம் குறிப்பாகப் பார்த்தாள்;
அது கண்டு	அவ்வளவையே நிமித்தமாகக்கொண்டு
இ ஊர்	இச்சேரியிலுள்ளவர்கள்
ஒன்று புணர்க்கின்றது	(அவனுக்கும் இவளுக்கும் அடியோடில்லாத) ஒரு ஸம்பந்தத்தையே நிட்டுச் சொல்லுகின்றனர்;
ஏ	இதற்கு என்செய்வது!

* * *—ஒரு பெண்பிள்ளையின் தாய் சொல்லும் பாசுரம் இது. கண்ணபிரான் காட்டில் கன்றுகளை மேய்த்துவிட்டு, லீலோபகரணங்களுங் கையுமான தனது தோழன்மாருடன் மீண்டு வரும்போது வழியில்கின்றுகொண்டிருந்த என்மகள் முதலில் அவனைப் பொதுவாகப் பார்த்தாள்; பிறகு 'இவர்களில் இவனெருத்தன் விலக்ஷணனாயிருக்கின்றானே!' என்று சிறிது உற்றுநோக்கினாள்; உலகத்தில் அபூர்வவஸ்துவைப் பார்ப்பவர்களுக்கெல்லாம் இது இயல்வே; நெஞ்சில் ஒருவகை ஆசையைக்கொண்டு பார்த்தாளில்லை; ஆயிருக்கச்செய்தேயும் 'இவள் அவனை உற்றுநோக்கினாளாகையால் இவளுக்கும் அவனுக்கும் ஏதோ இருக்கின்றது' என்று ஊரார் வம்புகூறுகின்றனர், இது தகுமோ? என்று முறைப்படுகின்றாள். நின்றாள்—முற்றெச்சம். ... ... (ச)

257 குன்றெடுத்தாநிரைகாத்தபிரான் கோவலனுய்க்குழலூதியூதி *
கன்றுகள்மேய்த்துத்தன்தோழரோடு கலந்துடன்வருவானைத்தெருவிற்கண்டு *
என்றுமிவனையொப்பாரைநங்காய் கண்டறியேனேடிவந்துகாணுய் *
ஒன்றுநில்லாவளைகழன்று துகிலேந்திளமுலையுமென்வசமல்லவே. (ஞ)

கங்காய் ஏடி — பூர்த்தியை யுடையவளே ! தோழீ !

இவனை ஒப்பாரை என்றும் கண்டு அறியேன் — இவ்வனைப் போன்றுள்ள வ்யக்தியை எந்த நாளிலும் (நான்) பார்த்ததில்லை ;

வந்து காணுய் — (இங்கே) ஓடிவந்துபார் ; (என்று ஒருத்தி தன் தோழியை அழைக்க, அவள் சிறிது தாமஸிக்க, மேல் தனக்குப் பிறந்த விகாரத்தைச் சொல்லுகிறாள்;—)

கோவலன் ஆய் — இடைப்பிள்ளையாகப் பிறந்து (இந்த்ர பூஜையை) விலக்க)

(பசிக்கோபத்தினால் இந்திரன் விடாமழை பெய்வித்தபோது)

குன்று எடுத்து ஆ நிரை காத்த பிரான் — கோவர்த்தன மலையை (குடையாக) எடுத்துப் பசுக்களின் திரளை ரக்ஷித்தருளின உபகாரகனும்

குழல் ஊதி ஊதி — குழலைப் பலகால் ஊதிக் கொண்டு

கன்றுகள் மேய்த்து — கன்றுகளை (காட்டில்) மேய்த்துவிட்டு

தன் தோழரோடு உடன் கலந்து — தனது தோழர்களுடன் கூடிக்கொண்டு

தெருவில் வருவானை கண்டு — இவ்வீதிவழியே வருபவனுமான கண்ணபிரானை நான் கண்டவளவிலே

துகில் கழன்று வளை ஒன்றும் நில்லா — (எனது அரையிலுள்ள) புடவை (அரையில் தங்காதபடி அவிழ்ந்தொழிய கை வளைகளும் சற்றும் நிற்கின்றனவில்லை ;

ஏந்து இள முலையும் என் வசம் அல்ல — (என்னுடைய) சுமக்கப்படுகின்ற மெல்லிய முலைகளும் என் வசத்தில் நிற்கின்றனவில்லை.

258 சுற்றிநின்றுயர் தழைகளிடச் சுருள்பங்கிநேத்திரத்தாலணிந்து *
பற்றிநின்றுயர்கடைத்தலையே பாடவுமாடக்கண்டேன் * அன்றிப்பின்
மற்றொருவற்கென்னைப்பேசலொட்டேன் மாலிருஞ்சோலையெம்மாயற்கல்லால் *
கொற்றவனுக்கிவளாமென்றெண்ணிக் கொடுமின்கள்கொடீராகிற்கோழம்பமே. (நு)

ஆயர் சுற்றி நின்று தழைகள் இட — இடைப்பிள்ளைகள் (தன்னைச்) சூழ்ந்துகொண்டு மயில்தோகைக் குடைகளை (தன்திருமேனிக்குப் பாங்காகப்) பிடித்துக் கொண்டுவர,

சுருள் பங்கி நேத்திரத்தால் அணிந்து — (தனது) சுருண்ட திருக்குழல்களை (எடுத்துக் கட்டி) பிலிக்கண்களாலே அலங்கரித்துக்கொண்டு

ஆயர் கடைத்தலை பற்றி நின்று — இடைப்பிள்ளைகளின் கோஷ்டியில் முன்புறத்தில் நின்றுகொண்டு

பாடவும் ஆடவும் கண்டேன் — பாட்டுங்கூத்துமாக வரக் கண்டேன் ;

பின் — இனிமேல்

அன்றி — அவனுக்கொழிய

மற்று ஒருவற்கு — வேறொருவனுக்கு

என்னை பேசல் ஒட்டேன் — என்னை (உரியளாகத் தாய் தந்தையர்) பேசுவதையும் நான் பொறுக்கமாட்டேன்;

(ஆர்க்கொழியவென்று கேட்கிறீர்களாகில்?)

மாலிருஞ் சோலை எம் மாயற்கு அல்லால் — திருமாலிருஞ்சோலையில் நித்யவாஸம் பண்ணுகிறவனது தலைவனுக்கொழிய

[மற்றொருவற்கு என்னைப் பேச லொட்டேன்;]

(ஆகையினால், தாய்மார்களே!)

இவள் கொற்றவனுக்கு ஆம் என்று எண்ணி — (நம்மகளான) இவள் அத்தலைவனுக்கே உரியள், என்று நிச்சயித்துவிட்டு

கொடுமின்கள் — (அவனுக்கே தாரைவார்த்து) தத்தம்பண்ணி விடுங்கள்;

கொடீர் ஆகில் கோழம்பமே — (அப்படி) கொடாவிட்டீர்களேயானால் (உங்களுக்கு என்றைக்கும்) மனக்குழப்பமேயாம். (நான் இறந்தொழிவேனென்றபடி.)

259 சிந்துரமிலங்கத்தன்திருநெற்றிமேல் திருத்தியகோறம்புந்திருக்குழலும் *
அந்தரமுழுவத்தண்தழைக்காவின்கீழ் வருமாயரோடுடன்வளைகோல்வீசா *
அந்தமொன்றில்லாதவாயப்பிள்ளை அறிந்தறிந்திவ்வீதிபோதுமாகில் *
பந்துகொண்டானென்றுவளைத்துவைத்துப் பவளவாய்முறுவலுங்காண்போந்தோழீ
(கூ)

தோழீ — வாராய் தோழீ!
தன் திரு நெற்றிமேல் சிந்தூரம் — தன்னுடைய திருநெற்றியில் சிந்தூரமும்
திருத்திய கோறம்பும் — (அதன்மேல்) ப்ரகாசமாகச் சாத்தின திலகப்பொட்டும்
திரு குழலும் இலங்க அந்தரம் — (அதற்குப் பரபாகமான) திருக்குழற்கற்றையும் விளங்கவும், ஆகாசமடங்கலும்
முழுவம் — மத்தளங்களின் ஓசையினால் நிறையவும்
தழை தண் காவின் கீழ் — பீலிக்குடைகளாகிற குளிர்ந்த சோலையின் கீழே
வரும் ஆயரோடு உடன் — (தன்னோடு) வருகின்ற இடைப் பிள்ளைகளோடு கூட
வளை கோல் வீசா — வளைந்த தடிகளை வீசிக்கொண்டு
ஒன்றும் அந்தம் இல்லாத — (அலங்கார விசேஷங்களில்) ஒவ்வொன்றே எல்லை காண வொண்ணாத
ஆயர் பிள்ளை — இடைப்பிள்ளையான கண்ணபிரான்
அறிந்து அறிந்து — தன் தன்மையையும் என் தன்மையையும் அறிந்து வைத்தும்
இவ்வீதி போதும் ஆகில் — இத்தெரு வழியே வருவாராகில்
(அவனை)
பந்து கொண்டான் என்று வளைத்து வைத்து — '(எங்கள்) பந்தை வலியப் பிடுங்கிக்கொண்டுபோனவனன்றே இவன்' என்று (முறையிட்டு) வழிமடக்கி
(அவனுடைய)
பவளம் வாய் முறுவலும் காண்போம் — பவளம்போன்ற அதரத்தையும் புன் சிரிப்பையும் நாம் கண்டு அனுபவிப்போம்.

260 சாலப்பன்னிரைப்பின்னேதழைக்காவின்கீழ்த் தன்திருமேனிநின்றொளிதிகழ *
நீலநன்னறுங்குஞ்சிநேத்திரத்தாலணிந்து பல்லாயர்குழாநடுவே *
கோலச்செந்தாமரைக்கண்மிளிரக் குழலூதியிசைபாடிக்குனித்து * ஆயரோ
டாலித்துவருகின்றவாயப்பிள்ளை அழகுகண்டென்மகளயர்க்கின்றதே- (எ)

சால பல் நிரை பின்னே — பற்பல பசுத்திரளின் பின்னே
தழை காவின் கீழ் — பீலிக்குடைகளாகிற சோலையின் கீழே
தன் திரு மேனி ஒளி திகழ நின்று — தன்னுடைய திருமேனியானது பளபளவென்று விளங்கும்படி நின்று
நீலம் நல் நறு குஞ்சி — நீலநிறத்தையுடைத்தாய் சுருட்சி, நீட்சி முதலிய அமைப்பையுடைத்தாய் பரிமளம் வீசாநின்றுள்ள திருக்குழற்கற்றையை
நேத்திரத்தால் அணிந்து — பீலிக்கண்களினால் அலங்கரித்துக்கொண்டு
பல் ஆயர் குழாம் நடுவே — பல இடையர்களின் கூட்டத்தின் நடுவில்
கோலம் செந்தாமரை கண் மிளிர — அழகிய செந்தாமரை மலர் போன்ற (தனது) திருக்கண்கள் ஸ்புரிக்கப்பெற்று
குழல் ஊதி — வேய்ங்குழலை ஊதிக்கொண்டும்
இசை பாடி — (அதற்குத்தக்க) பாட்டுக்களைப் பாடிக்கொண்டும்
குனித்து — கூத்தாடிக்கொண்டும்
ஆயரோடு ஆலித்து வருகின்ற ஆயர் பிள்ளை — இடைப் பிள்ளைகளுடனே மகிழ்ந்துவருகின்ற இடைப்பிள்ளையான கண்ணபிரானுடைய
அழகு என் மகள் கண்டு அயர்க்கின்றது — வடிவழகை என் மகள் பார்த்து அறிவு அழியா நின்றாள்.

261 சிந்துரப்பொடிக்கொண்டுசென்னியப்பித் திருநாமமிட்டங்கோரிலையந்தன்னில் *
அந்தரமின்றித்தன்னெறிபங்கியை அழகியநேத்திரத்தாலணிந்து *
இந்திரன்போலிவருமாயப்பிள்ளை யெதிர்நின்றங்கினவோயிழவேலென்ன *
சந்தியில்நின்றுகண்டூர் நங்கைதன்துகிலொடுசரிவளைகழல்கின்றதே. (அ)

சிந்துரம் பொடி கொண்டு — "ஸிந்தூர சூர்ணத்தைக் கொணர்ந்து
தன் சென்னி அப்பி — தன்னுடைய திருமுடியிலே அப்பிக்கொண்டும்,
அங்கு ஓர் இலை தன்னில் — திருநெற்றியில் ஒரு இலையிலே
திருநாமம் இட்டு — ஊர்த்துவபுண்ட்ரம் சாத்திக்கொண்டும்

நெறி பங்கியை அழகிய நேத்திரத்தால் அந்தரம் இன்றி அணிந்து	நெறித்திரா நின்றுள்ள திருக்குழலை அழகிய பிலிக் கண்களினால் இடைவெளி யில்லாதபடி [நெருங்க] அலங்கரித்துக் கொண்டும்,	வலை இனம் இழவேல்	கைவளைகளை நீ இழக்க வேண்டா''
		என்ன	என்று (என் மகளை நோக்கி நான் உறுத்திச்) சொல்லச் செய்தேயும்
இந்திரன் போல் வரும்	ஸாக்ஷாத் தேவேந்திரன் போல (ஊர்வலம்) வருகின்ற	நங்கை	(எனது) மகளானவள்
		சந்தியில் நின்று	அவன் வரும் வழியில் நின்று
ஆயர் பிள்ளை	இடைப்பிள்ளையானகண்ண பிரானுக்கு	தன் துகிலொடு	தனது துகிலும்
		சரிவளை	கைவளைகளும்
எதிர் அங்கு நின்று	எதிர்முகமான இடத்தில் நின்றுகொண்டு	சுழல்கின்றது	கழன்றொழியப்பெற்றாள்.
		ஏ	இதென்ன அநியாயம் !.

* * *—''இலையந்தன்னுல்'' என்றவிடத்து, அம்-சாரியை. அன்றிக்கே ''இலயந்தன்னுல்'' என்று பாடமாகில், இல் அயம் எனப்பிரித்து, இல் என்று உள்ளாய், ''அயமென்ப நீர் தடாகம்'' என்ற நிகண்டின்படி அயம் என்று ஜலமாய், ஓர் இலயமென்றது நிருப்பவளத்துக்குட்பட்டதொரு ரஸமென்ற படியாய், சிந்துரப் பொடியை அதராம்ருதத்தினுல் நனைத்துக் குழைத்து அதைத் திருநாமமாகச்சாத்தி என்று பொருள்கொள்க. அன்றிக்கே, ''இலந்தன்னுல் வருமாயப்பிள்ளை'' என இயைத்து, ''இலயமே கூத்துங் கூத்தின் விகற்பமு மிருபேரென்ப'' என்ற நிகண்டின்படி 'கூத்தாடிக்கொண்டு வருகின்ற' என உரைத்துக் கொண்டுகூட்டுப்பொருள்கோளாகக் கொள்வாருமுளர்; இப்பொருளில் 'இலயம்' எனினும் ஒக்குமென்க 'கண்ணபிரான் வரும்வழியில் எதிர்நோக்கி நின்று அவனைக் காமுற்றுத் தம்மனோரதத்தின்படி அவனோடு பரிமாறப்பெறுமல் உடனே உடலினைத்து வளைகழலப்பெற்றார் பலருண்டு; அவர்களைப்போல் நீயும் வளையிழவாதேகொள்' என்று என் மகளை நோக்கி நான் முறையிடச்செய்தேயும், அவள் அப்பேச்சைப்பேணுமல் அவ்வழியில் நின்று துகிலையும் வளையையுக் தோற்றுத் தவிக்கின்றளென்று ஒருத்தியின் தாய் இரங்குகின்றாள். சந்தி—பலர் கூடுமிடம். கண்டீர்—முன்னிலையசை ... ... (அ)

262 வளங்காதில்மேல்தோன்றிப்பூவணிந்து மல்லிகைவனமாலைமௌவல்மாலை *
சிலிங்காரத்தால்குழல்தாழவிட்டுத் தீங்குழல்வாய்மடுத்தூதியூதி *
அலங்காரத்தால்வருமாயப்பிள்ளை அழகுகண்டென்மகளாசைப்பட்டு *
விலங்கிநில்லாதெதிர்நின்றுகண்டீர் வெள்வளைகழன்றுமெய்ம்மெலிகின்றதே. (க)

வலங் காதில் மேல தோன்றிப் பூ வனம் மல்லிகை மாலை	வலது காதில் செங்காந்தள் பூவையும் (திருமார்பில்) காட்டுமல்லிகை மாலையையும்	ஆயர் பிள்ளை	இடைப்பிள்ளையானகண்ண பிரானுடைய
		அழகு என் மகள் கண்டு	வடிவழகை என் மகள் பார்த்து
மௌவல் மாலை அணிந்து	மாலதீ புஷ்பமாலையையும் அணிந்துகொண்டு	ஆசைப்பட்டு	(அவனிடத்தில்) காமம் கொண்டு;
சிலிங்காரத்தால் குழல் தாழவிட்டு	அலங்காரமாக திருக்குழல்களை (திருமுதுகில்) தொங்க விட்டுக் கொண்டு	(இவ்வடிவழகு-கண்டவர்களை வருத்தும் என்று கண்ணேமாறவைத்துக்' கடக்க நிற்கவேண்டியிருக்க,)	
		விலங்கி நில்லாது	(அப்படி) வழிவிலங்கி நில்லாமல்
தீம் குழல் வாய் மடுத்து ஊதி ஊதி	இனிமையான வேய்ங்குழலை நிருப்பவளத்தில் வைத்து வகைவகையாக ஊதிக் கொண்டு,	எதிர் நின்று	(அவனுக்கு) எதிர்முகமாக நின்று
		வெள்ளை வளை கழன்று	(தனது) சங்கு வளைகள் கழலப் பெற்று
அலங்காரத்தால் வரும்	(கிழ்ச்சொன்ன) அலங்காரங்களோடே வாராநின்ற	மெய் மெலிகின்றது	உடலும் இளைக்கப் பெற்றாள்.

* * *—கண்ணன் பசுக்களை மேய்த்துவிட்டுப் பலவகையலங்காரங்களோடு திரும்பிவரும்போது என் பெண் அவனுடைய மனோஹரமான அழகைப் பார்த்து ஆசைகொண்டு 'இது கண்டவர்களை

வருத்தும்' என்று கண்ணீர் மாறவைத்து விலங்கவேண்டியதாயிருக்க, அப்படி செய்யாமல் அவனழகைப் பார்த்துக்கொண்டு எதிரே நின்றதனால் வளைகழல உடம்பு மெலியப்பெற்றாளென்று-தன் பெண்ணின் நன்மையை விளவவந்தவர்க்குச்சொல்லி வருந்துகின்றாளொருத்தி... ... (கூ)

263 விண்ணின்மீதமரர்கள்விரும்பித்தொழ மிறைத்தாயர்பாடியில்வீதியூடே *
கண்ணன்காலிப்பின்னேயெழுந்தருளக்கண்டு இளவாய்க்கன்னிமார்காமுற்ற
வண்ணம் * வண்டமர்பொழிற்புதுவையர்கோன் விட்டுசித்தன்சொன்னமாலைபத்தும் *
பண்ணின்பம்வரப்பாடும்பத்தருள்ளார் பரமானவைகுந்தம்நண்ணுவரே. (ம)

விண்ணின் மீது அமரர்கள் விரும்பி தொழ — பரமாகாசமாகிய ஸ்ரீவைகுண்டத்திலே நித்யஸூரிகள் ஆதரித்து ஸேவியாநிற்கச் செய்தேயும்
கண்ணன் — ஸ்ரீக்ருஷ்ண பரமாத்மா
மிறைத்து — (அவர்களை மதியாமல்) மேலணித்து
ஆயர் பாடியில் — திருவாய்ப்பாடியில் (வந்து அவதரித்து)
வீதி ஊடே காலி பின்னே எழுந்தருள — தெருவேறப் பசுக்களின் பின்னே எழுந்தருளாநிற்க, (அவ்வழகை)
இள ஆய் கன்னிமார் கண்டு — யுவதிகளான இடைப் பெண்கள் பார்த்து
காமுற்ற வண்ணம் — காமவிகாரமடைந்த படியை,—
வண்டு அமர் பொழில் — வண்டுகள்படிந்த சோலைகளையுடைய
புதுவையர் கோன் — ஸ்ரீவில்லிபுத்தூரிலுள்ளார்க்குத் தலைவரான
விட்டு சித்தன் சொன்ன — பெரியாழ்வார் அருளிச்செய்த
மாலை பத்தும் — சொல்மாலையாகிய இப்பத்துப் பாசுரங்களையும்
இன்பம் வர பண் பாடும் பத்தர் உள்ளார் — இனிமையாகப் பண்ணிலே பாடவல்ல பக்தர்களாயிருக்குமவர்கள்
பரமான வைகுந்தம் நண்ணுவர் — லோகோத்தரமான ஸ்ரீவைகுண்டத்தை அடையப் பெறுவார்கள்.

* * *—ஸ்ரீவைகுண்டத்தில் நித்யஸூரிகளனைவரும் தன்னைத்தொழா நிற்கவும் எம்பெருமான் அவ்விடத்தே வீற்றிருந்து தனது பரத்துவத்தைப் பாராட்டலாமாயிருக்க, அங்ஙன் செய்யாது இடைச்சேரியில்வந்து பிறந்தது தனது ஸௌசீல்யத்தை வெளிப்படுத்துகைக்காகவென்க. (கo)

அடிவரவு:—தமை வல்வி சுரிகை குன்று சுற்றி சிந்துரம் சால சிந்துரப்பொடி வலம் விண் அட்டு.

மூன்றும்பத்து—ஐந்தாந்திருமொழி, அட்டுக்குவி

[கோவர்த்தன மலையின் வருணனை]

264 அட்டுக்குவிசோற்றுப்பருப்பதமும் தயிர்வாவியும்நெய்யளறுமடங்கப்
பொட்டத்துற்றி * மாரிப்பகைபுணர்த்த பொருமாகடல்வண்ணன்பொறுத்தமலை
வட்டத்தடங்கண்மடமான்கன்றினை வலிவாய்ப்பற்றிக்கொண்டு * குறமகளிர்
கோட்டைத்தலைப்பால்கொடுத்துவளர்க்குங் கோவர்த்தனமென்னுங்கொற்றக்
குடையே. (க)

குற மகளிர் — குறப்பெண்கள்,
வட்டம் தட கண் மடம் மான் கன்றினை — வட்டவடிவான பெரிய கண்களையுடையதும் (தனது தாய்க்கு) வசப்பட்டிருப்பதுமான மான்குட்டியை
வலி வாய் பற்றிக் கொண்டு — வலியிலே அகப்படுத்தி
(பின்பு அதனைத் தங்களுடையதாக அபிமானித்து, அதற்கு)
கொட்டை தலை பால் கொடுத்து வளர்க்கும் — பஞ்சுச்சுருளின் நுனியாலே பாலை எடுத்து ஊட்டி வளர்க்கைக்கு இடமான
கோவர்த்தனம் என்னும் — 'கோவர்த்தநம்' என்ற பெயரையுடையதும்
கொற்றம் குடை — வெற்றியையுடையதுமான குடையானது (யாதெனில்?)

அட்டு குவி சோறு பருப்பதமும் — சமைத்துக் குவிக்கப்பட்ட சோருகிற பர்வதமும்
தயிர் வாவியும் — தயிர்த்திரளாகிற ஓடையும்
நெய் அளறும் — நெய்போகிற சோறும்
அடங்க பொட்ட துற்றி — ஆகிய இவற்றைமுழுதும் விரைவாக [ஒரே கபளமாக] அமுதுசெய்து விட்டு,
(இப்படி செய்கையினாலே இந்திரனுக்குக் கோபம்மூட்டி அவன் மூலமாக)
மாரி பகை புணர்த்த — மழையாகிற பகையை உண்டாக்கின
பொரு மா கடல் வண்ணன் — அலையெறிகிற பெரிய கடலினது நிறம்போன்ற நிறத்தனை கண்ணபிரான்
பொறுத்த மலை — (தனது திருக்கைவிரலால்) தூக்கின மலையாம்,

* * *—முன்னிரண்டடிகளின் கருத்து;—குறப்பெண்கள் அழகிய மான்களை வளர்க்க விரும்பி அவற்றை வலிவைத்துப் பிடிப்பித்துத் தங்கள் குடங்காலில் அவற்றை இருத்திப் பஞ்சுச்சுருள்களின் நுனியால் அவற்றுக்குப் பாலூட்டி வளர்க்கப்பெற்ற மலை என்றவாறு. அவை அப்பஞ்சுச்சுருளின் நுனியைத் தன் தாய் மூலையாகப் பாவித்து உறிஞ்சுமென்க.

துற்றி—'துற்று' என்னும் பகுதியினடியாப் பிறந்த வினையெச்சம். ''துற்று''என்றும் சிலர் ஓதுவர்.

பின்னடிகட்கு உள்ளுறைபொருள் யாதெனில்;—(வட்டம்—வருத்தம்.) தனது வாஞ்சாமவ்ருத்தத்தில் விசாலமான ஞானத்தையும், ஸ்வரகூடிணத்தில் அசக்தியையுமுடையாரொருவரை ஆசாரியனாவன் ''வாசுதேவன் வலியுளே'' என்றபடி-எம்பெருமானுகிற வலியிலகப்படுத்தி, அவனுக்கு ஸகலவேத சாஸ்திர தாத்பரியமாய் * பாலோடு அமுதன்னவாயிரமாகிய திருவாய்மொழியை உரைத்து வளர்க்குந்தன்மையைச் சொல்லிற்றாகிறது; எனவே, இப்படிப்பட்ட மஹாநுபாவர்கள் உறையுமிடமென்று அம்மலையின் சிறப்பைக் கூறியவாறும். ... ... (க)

265 வழுவொன்றுமில்லாச்செய்கைவானவர்கோன் வலிப்பட்டுமுனிந்துவிடுக்கப்பட்ட *
மழைவந்தெழுநாள்பெய்துமரத்தடுப்ப மதுசூதனனெடுத்துமறித்தமலை *
இழவுதரியாததோர்ற்றுப்பிடி யிளஞ்சீயந்தொடர்ந்துமுடுகுதலும் *
குழவியிடைக்காலிட்டெதிர்ந்துபொருங் கோவர்த்தனமென்னுங்கோற்றக்
குடையே. (உ)

(இந்திரபட்டம் பெறுதற்காகச் செய்த ஸாதநாம்சத்தில்)
ஒன்றும் வழு இல்லா செய்கை — ஒரு குறையுமற்ற செய்கை கனையுடைய
வானவர் கோன் — தேவேந்திரனுடைய
வலி பட்டு — பலாத்காரத்துக்கு உள்பட்டும்
முனிந்து விடுக்கப் பட்ட — (அவ்விந்திரனால்) கோபத்துடன் ஏவப்பட்டுமுள்ள
மழை — மேகங்களானவை
வந்து எழு நாள் பெய்து மா தடுப்ப — (அகாலத்திலே குமுறிக் கொண்டு) வந்து ஏழுநாளளவும் (இடைவிடாமல்) வர்ஷித்து பசுக்களை (வெளியேபோகக்கூடாதபடி) தகைய
மதுசூதன் எடுத்து — கண்ணபிரான் (ஸர்வஜந்துக்களையும் காப்பதற்காக அடிமண்ணோடு கிளப்பி) எடுத்து
மறித்த மலை — தலைகீழாகப் பிடித்தருளின மலையானது (எதனால்;)
இள சீயம் தொடர்ந்து முடுகுதலும் — சிங்கக்குட்டியானது (யானைக்குட்டியை நலிவதாகப்) பின்தொடர்ந்து வந்து எதிர்த்தவளவிலே,
இழவு தரியாதது ஓர் ஈற்றுப்பிடி — (தன் குட்டியின்) வருத்தத்தைப் பொறுக்கமாட்டாத (அக்குட்டியைப்) பெற்ற பெண்ணானையானது
குழவி கால் இடை இட்டு — (அந்தக்) குட்டியை (தனது) நான்கு கால்களின் நடுவில் அடக்கிக்கொண்டு
எதிர்ந்து பொரும் — (அந்தச் சிங்கக்குட்டியோடு) எதிர்த்து போராடப்பெற்ற
கோவர்த்தனம் * * * குடையே—.

* * *—முன்னிரண்டடிகளின் கருத்து;—ஒரு பெண்யானையானது தன் குட்டியை ஒரு சிங்கக் குட்டி நலிவதாகவந்து சிறினவளவிலே அந்துன்பத்தைப் பொறுக்கமாட்டாமல் அந்தத் தன் குட்டியைத் தனது நான்கு கால்களினுள்ளே அடக்கி மறைத்துக்கொண்டு அச்சிங்கக்குட்டியை எதிர்த்துப் போர் செய்தற்கிடமான கோவர்த்தனமலை என்க. இனி, இழவு என்பதற்கு, விட்டுப்பிரிதல் என்று பொருள்

கொண்டு வேறுவகையாகவும் கருத்துக் கூறலாம்; குட்டியுந் தானுமாயிருந்த ஒரு பெண்யானை, தன்னை நலியவந்த ஒரு சிங்கக்குட்டியோடு தான் பொராதினைத்து அப்போது தன் குட்டியை இறைப்பொழுதும் தனித்துவிட்டிருக்கமாட்டாத தான் அக்குழவியைத் தன் காலிடையிலடக்கிக்கொண்டு போர்செய்ததாகக் கொள்க.

இதற்கு உள்ளுறைபொருள்;—தன்னைப்பற்றிக்கிடக்கும் சிஷ்யனுடைய விரஹத்தைப் பொறுக்க மாட்டாத ஆசார்யனவன், அச்சிஷ்யனைத் தொடர்ந்து முடிப்பதாக வருகின்ற வாஸனாரூபகருமங்களுக் கஞ்சி, அவனைத் தன் திருவடிகளுக்கு அந்தரங்கனைக்கிக்கொண்டு அக்கருமவாஸனையை நீக்கி முடிக்குந் தன்மையைச் சொல்லிற்றாகிறது. ... ... (2)

266 அம்மைத்தடங்கண்மடவாய்ச்சியரும் ஆயருமாகிரையுமலறி *
எம்மைச்சரணேன்றுகொள்ளென்றிரப்ப இலங்காழிக்கையெந்தையெடுத்தமலை *
தம்மைச்சரணென்றதம்பாவையரைப் புனமேய்கின்றமானினங்காண்மினென்று *
கொம்மைப்புயக்குன்றர்சிலைகுனிக்குங் கோவர்த்தனமென்னுங்கொற்றக்குடையே. (6)

அம்மை தட கண் மடம் ஆய்ச்சியரும் — அழகிய மை அணிந்த விசாலமான கண்களையுடைய இடைச்சிகளும்
ஆன் ஆயரும் ஆ நிரையும் — கோபாலர்களும் பசுக்கூட்டமும்
அலறி — (மழையின் கனத்தால்) கதறிக் கூப்பிட்டு
எம்மை சரண் ஏன்று கொள் என்று இரப்ப — ('எம்பிரானே! நீ) எமக்கு ரக்ஷகனாயிருக்குந் தன்மையை ஏற்றுக் கொள்ள வேணும்' என்று பிரார்த்திக்க,
(அவ்வேண்டுகோளின்படியே)
இலங்கு ஆழி கை ஐந்தை — விளங்காநின்ற திருவாழி ஆழ்வானை கையிலே உடையனாய் எமக்கு ஸ்வாமியான கண்ணபிரான்
எடுத்த மலை — (அவற்றை ரக்ஷிப்பதற்காக) எடுத்த மலையாவது (எது என்னில்?);—

கொம்மை புயம் குன்றர் — பருத்த புஜங்களையுடைய குறவர்கள்,
தம்மை சரண் என்ற தம் பாவையரை — தங்களை சரணமென்று பற்றியிருக்கிற தங்கள் பெண்களை
(கொல்லியிலே வியாபரிக்கிற அப்பெண்களின் கண்களைக்கண்டு இவை மான்பேடைகள் என்று ப்ரமித்து)
புனம் மேய்கின்ற மான் இனம் காண்மின் என்று — '(நம்முடைய) கொல்லையை மேய்ந்து அழிக்கின்றமான் கூட்டங்களைப் பாருங்கோள்' என்று (ஒருவர்க்கொருவர் காட்டி)
(அவற்றின்மேல் அம்புகளை விடுவதாக)
சிலை குனிக்கும் — (தமது) வில்லை வளையாகின்றுள்ள
கோவர் * * * குடையே,

* * *—"எம்மைச் சரணேன்றுகொள் என்றிரப்ப"—எங்களை ரக்ஷித்தருள் என்றுவேண்ட என்பது கருத்து. "சரணென்றுகொள்" என்ற பாடத்தை மறுக்க. பெண்களின் நோக்குக்கு மான் நோக்கை உவமை கூறுதல் கவிமரபாகையால், இம்மலையிலுள்ள குறத்திகள் *மானேய் மடநோக்கிகள் என்பதைப் பெறுவிக்கும் வார்த்தை பின்னடிகளிலுள்ளது.

இதற்கு உள்ளுறை பொருள்;—பெருங்கொடையாளனாயிருப்பானொரு ஆசிரியன், தன்னைச் சரணமாகப்பற்றியிருக்கும் சிஷ்யர்கள் விஷயாந்தரங்களிற் செல்லாதிருக்கச் செய்தேயும் அவர்களை அதிசங்கித்து அத்தன்மையை விலக்குவதற்காக அவர்களுக்குப் பிரணவத்தின் பொருளைப் பரக்க உபதேசித்தருளுகிறபடியைச் சொல்லிற்றாகிறது. ப்ரணவோ தநுஃ என்று-பிரணவத்தைச் சிலையாக உருவகப்படுத்தியுள்ளமை காண்க. ஆத்துமா எம்பெருமானுக்கொழிய மற்றொருவர்க்கும் சேஷமன்று என்றதெளிவைப் பிறப்பிக்கின்ற ப்ரணவத்தை உபதேசிக்கவே, அவ்விஷயாந்தரப்ராவண்யம் விலகுமென்க. ... ... (5)

267 கடுவாய்ச்சினவெங்கட்களிற்றினுக்குக் கவளமெடுத்துக்கொடுப்பானவன்போல் *
அடிவாயுறக்கையிட்டெழப்பறித்திட்டு அமரர்பெருமான்கொண்டுகின்றமலை *
கடல்வாய்ச்சென்றுமேகங்கவிழ்ந்திறங்கிக் கதுவாய்ப்படநீர்முகந்தேறி * எங்குங்
குடவாய்ப்படின்றுமழைபொழியும் கோவர்த்தனமென்னுங்கொற்றக்குடையே. (7)

கடு வாய் சினம் வெம் கண் — பயங்கரமான வாயையும் மிக்க சீற்றத்தையும் நீண்ட கண்களையும் உடைய
களிற்றினுக்கு — ஒரு யானைக்கு
கவளம் எடுத்து — சோற்றுக் கபளத்தைத் திரட்டியெடுத்து
கொடுப்பான் அவன் போல் — கொடுக்கின்ற யானைப்பாகனைப்போல,
அமரர் பெருமான் — தேவர்களுக்குத் தலைவனான கண்ணபிரான்
கை அடி வாய் உற இட்டு — (தனது) திருக்கைகளை (மலையின் கீழ் வேர்ப்பற்றிலே உறும்படியாகச் செலுத்தி (மற்றொரு திருக்கையினாலே மேலே பிடித்து)
எழ பறித்திட்டு — இளரப்பிடுங்கி
கொண்டு நின்ற — (தானே) தாங்கிக்கொண்டு நின்ற
மலை — மலையாவது (எது? என்னில்;—)
மேகம் — மேகங்கள்
கடல் வாய் சென்று — கடலிடத்துச்சென்று
இறங்கி கவிழ்ந்து — (அங்கு) இறங்கிக்கவிழ்ந்து கிடந்து
கதுவாய்ப்பட — (கடல்) வெறுந்தரையாம்படி
நீர் முகந்து ஏறி — (அங்குள்ள) நீர் முழுவதையும் மொண்டு கொண்டு மீண்டும் ஆகாசத்தில்) ஏறி
எங்கும் குடம் வாய்ப்பட நின்று — எல்லாவிடத்தும் குடங்களில் நின்றும் நீரை சொரியுமா போலே
மழை பொழியும் — மழைபொழியாநிற்கப் பெற்ற

கோவர் * * * குடையே—.

268 வானத்திலுள்ளீர்வலியீருள்ளீரேல் அறையோவந்துவாங்குமினென்பவன்போல் *
ஏனத்துருவாகியவீசனெந்தை யிடவனெழவாங்கியெடுத்தமலை *
கானக்களியானைதன்கொம்பிழந்து கதுவாய்மதஞ்சோரத்தன்கையெடுத்து *
கூனற்பிறைவேண்டியண்ணுத்துநிற்குங்கோவர்த்தனமென்னுங்கொற்றக்குடையே.(ஈ)

ஏனத்து உரு ஆகிய ஈசன் எந்தை — (முன்பு ஒரு காலத்திலே) வராஹரூபம் கொண்டருளின ஸ்வாமியாயும் எனக்குத் தந்தையாயுமுள்ள கண்ணபிரான்,
வானத்தில் உள்ளீர் வலியீர் உள்ளீர் ஏல் — "மேலுலகத்திலிருப்பவர்களே! (நீங்கள்) (என்னோடொக்க) வல்லமையுள்ளவர்களாயிருப்பீர்களாகில்
அறையோ வந்து வாங்குமின் என்பவன் போல் — அறையோ அறை!! (இங்கே) வந்து (இம்மலையை கையால்) தாங்கிக்கொண்டு நில்லுங்கள்" என்று சொல்லுகிறவன் போல
இடவன் எழ வாங்கி எடுத்த மலை — ஒரு மண்கட்டிபோலே (அநாயாஸமாகக்) இளரப்பிடுங்கி எடுத்துக்கொண்டு நிற்கப்பெற்ற மலையாவது;—
கானம் களி யானை — காட்டு நிலங்களில்செருக்கித் திரியக்கடவதான ஒரு யானையானது
தன் கொம்பு இழந்து — (கரைபொருது திரியும்போது ஓரிடத்தில் குத்துண்டு முறிந்த தன் தந்தத்தை இழந்ததனால்
கதுவாய் மதம் சோர தன் கை எடுத்து — அக்கொம்பு முறிந்து புண்பட்டவாயிலே மதநீரானது ஒழுகாநிற்க தனது துதிக்கையை உயரத்தூக்கி (ஆகாசத்தில் தோற்றுகின்ற)
கூன் நல் பிறை வேண்டி அண்ணுத்து நிற்கும் — வளைந்த அழகிய பிறையை (தானிழந்த கொம்பாகப் பாவித்து).. (அதைப்பறித்துக்கொள்ள) விரும்பி மேல் நோக்கிப் பார்த்துக்கொண்டிருக்கப்பெற்ற

கோவர் * * * குடையே—;

* * *—கண்ணபிரான் மலையை விடாது வருத்தாது தாங்கிக்கொண்டு நிற்றலே ஒருவகையாக உத்ப்ரேக்ஷிக்கின்றார்—முதலடியினால்: நாம் ஆகாசத்திலே மூன்றுதோமென்று இறுமாந்திருப்பவர்களே! நீங்கள் மெய்யே வலிவுள்ளவர்களாகில் இம்மலையைச் சிறிது தாங்குங்கள் பார்ப்போம் என்று தேவர்களை அழைப்பவன் போன்றுளனென்க. அறையோ என்றது—பௌருஷம்தோன்ற மீசைமுறுக்கிச் சொல்லும் வெற்றிப்பாசுரம். பாதாளலோகஞ்சென்று சேர்ந்த பூமியை ஒட்டுவிடுவித்தெடுத்துத் திருவயிற்றிலே தாங்கிநின்ற பெருமானுக்கு இம்மலையெடுக்கை அரிதன்றென்பார் "ஏனத்துருவாகியவீசன்" என்றார். இடவன்—மண்கட்டிக்குப்பெயர். பின்னடிகளின் கருத்து; ஒரு யானையானது கரைபொருது

திரியும்போது ஓரிடத்திற் கொம்பைக் குத்தினவளவிலே அக்கொம்புமுறியப்பெற்று அவ்விடத்தில் மத நீரொழுகப்பெற்ற ஆற்றுமையாலே துதிக்கையைத் தூக்கிக்கொண்டு, வானத்தில் வளைந்து தோற்றும் இளந்திங்களைத் தானிழந்தகொம்பாக ப்ரமித்து அதனைப்பறித்துக்கொள்ள வேண்டுமென்ற ஆவலுடன் உயர்முகமாகவேயிருக்கும்படியைச் சொல்லியவாறு. கதுவரம்-குறையுற்ற இடம். இதற்கு உள்ளுறை பொருள்;—ஸம்ஸாரமாகிற மருகாந்தாரத்திலே களித்துத்திரிகிற ஆத்துமா தனது மமகாரமழியப் பெற்று மதமாத்ஸர்யங்களும் மழுங்கப்பெற்று ஸத்துவம் தலையெடுத்து அஞ்சலிபண்ணிக்கொண்டு ப்ரக்ருத்யாத்ம விவேகம் முதலிய ஞானங்களைப் பெறவிரும்பி ஊர்த்துவகதிநிஷ்டனாயிருக்கும்படியைக் குறித்தவாறும்: இது மகாரார்த்தமென்க. ... ... (சு)

269 செப்பாடுடையதிருமாலவன்றன் செந்தாமரைக்கைவிரலைந்தினையும் *
கப்பாகமடுத்துமணிநெடுந்தோள் காம்பாகக்கொடுத்துக்கவித்தமலை *
எப்பாடும்பரந்திழிதெள்ளருவி யிலங்குமணிமுத்துவடம்பிறழ *
குப்பாயமெனநின்றுகாட்சிதரும் கோவர்த்தனமென்னுங்கொற்றக்குடையே. (சூ)

செப்பாடு உடைய திருமால் அவன் — செவ்வைக்குணத்தையுடையனாய் சீரியபேதியான அக்கண்ணபிரான்

தன் செம் தாமரை கை விரல் ஐந்தினையும் — தன்னுடைய செந்தாமரை மலர்போன்ற திருக்கையிலுள்ள ஐந்து விரல்களையும்

கப்பு ஆக மடுத்து — (மலையாகிற குடைக்குக் காம்படியிலுண்டான) இலைக்கொம்புகளாக அமைத்து

மணி நெடு தோள் — அழகிய நீண்ட திருத்தோள்களை

காம்பு ஆக கொடுத்து — (அந்தமலைக் குடைக்குத் தாங்கு) காம்பாகக் கொடுத்து

கவித்த மலை — தலைகீழாகக் கவித்த மலையாவது,—

எப் பாடும் பாய்ந்து இழி தெள் அருவி — எல்லாப் பக்கங்களிலும் பரவிப் பெருகாகின்ற தெளிந்த சுனைநீரருவிகளானவை

இலங்கு மணி முத்த வடம் பிறழ — விளங்காநின்ற அழகிய முத்தாஹாரம் போலத் தனித்தனியே ப்ரகாசிக்க,

குப்பாயம் என நின்று — (கண்ணபிரானுக்கு இது ஒரு) முத்துச்சட்டையென்று சொல்லும்படியாக,

காட்சி தரும் — காணப்படப் பெற்ற கோவர் * * * குடையே—,

* * *—கப்பு—குடைக்காம்பினடியிற் கிளைவிட்டாற்போன்றுள்ள வேத்ரதண்டங்கள். கோவர்த்தன மலையை ஒருகுடையாக உருவகப்படுத்தியதற்கேற்பத் தடங்கை விரலைந்தும் மலரவைத்த கண்ணபிரான் கைவிரல்களைக் கப்பாகவும் பாஹுதண்டத்தைக் காம்பாகவும் உருவகப்படுத்தியவாறுகாண்க. பின்னடிகளின் கருத்து;—(மலைகளில் சுனைநீரருவிகள் இன்றியமையாதன வாகையால்) இம்மலையில் கண்டவிடமெங்கும் பரவிப்பெருகுகின்ற தெள்ளருவிகளானவை அமைந்துள்ள படியைப்பார்த்தால் கண்ணபிரானுக்காக முத்துச்சட்டை வித்தப்படுத்தப் பட்டுள்ளதுபோலும் என உத்ப்ரேக்ஷித்தவாறென்க. குப்பாயம்—சட்டை; "மெய்ப்பை சஞ்சுளி கஞ்சுகம் வாரணம், குப்பாயமங்கி சட்டையாகும்" என்பது—திவாகரம். இக்குச் சந்தர்ப்பம் நோக்கி முத்துச்சட்டை எனப்பட்டது. ... (சு)

270 படங்கள்பலவுமுடைப்பாம்பரையன் படர்பூமியைத்தாங்கிக்கிடப்பவன்போல் *
தடங்கைவிரலைந்தும்மலரவைத்துத் தாமோதரன்தாங்குதடவரைதான் *
அடங்கச்சென்றிலங்கையையீடழித்த அனுமன்புகழ்பாடித்தங்குட்டன்களை *
குடங்கைக்கொண்டுமந்திகள்கண்வளர்த்துங் கோவர்த்தனமென்னுங்கொற்றக்குடையே.

படங்கள் பலவும் உடை பாம்பு அரையன் — பல படங்களையுடைய ஆதிசேஷன்

படர் பூமியை தாங்கி கிடப்பவன்போல் — பரம்பின பூமியை (தன் தலைகளினால்) தாங்கிக் கொண்டிருப்பது போல்,

தாமோதரன் — கண்ணபிரான்

தடகை விரல் ஐந்தும் மலர வைத்து — (தனது) பெரிய திருக்கைகளிலுள்ள ஐந்து விரல்களையும் மலர்த்தி [விரித்து]

(அவற்றாலே)

தாங்கு தட வரை — தாங்கப்பெற்ற பெரிய மலையாவது;—

மந்திகள் — பெண்குரங்குகளானவை,

இலங்கையை சென்று அடங்க ஈடு அழித்த அனுமன் புகழ்பாடி — லங்காகரத்தேறப்போய், அவ்வூர் முழுவதையும் சீர்கெடும்படி பங்கப்படுத்தின சிறிய திருவடியினுடைய கீர்த்தியைப்பாடிக்கொண்டு

தம் குட்டன்களை குடங்கைக் கொண்டு கண் வளர்த்தும் — தமது (குரங்குக்) குட்டிகளை கைத்தலத்தில் படுக்க வைத்துக்கொண்டு (சீராட்டி) உறக்கப்பெற்ற

கோவர் * * * குடையே—,

* * *—கண்ணபிரான் ஐந்துவிரல்களாலும் மலையைத் தாங்கிக்கொண்டு நின்றது—ஆகிசேஷன் தனது ஆயிரந்தலைகளினால் பூமியைத் தாங்கிக்கொண்டு இடப்பதை யொக்குமென்றார்—முன்னடிகளால்.

பின்னடிகளின் கருத்து;—அம்மலையிலுள்ள பெட்டைக் குரங்குகள் பண்டு தம் குலத்திற்பிறந்து பற்பல வீரச்செயல்களைச்செய்த ஹநுமான் இராமபிரானிடத்துப் பெற்ற பரிசுகளைப் பாடிக்கொண்டு தம்குட்டிகளை அகங்கையிற்கொண்டு சீராட்டி உறங்கச்செய்யும்படியைக் கூறினபடி. உலகத்திலுங் குழந்தைகளை உறக்கவேண்டுவோர் சில கதைகளைச் சொல்லிச் சீராட்டுதல் வழக்கமாயிருப்பதை அறிக. குட்டன்—உவப்பிலே வந்த திணைவழுவமைதி.

இதற்கு உள்ளுறைபொருள்;—கபடச்செயல்களுக்கு ஆகரமான இந்திரியங்களின் நிறைவென்ற பாகவதர்களின் ஞானநுட்டானங்களைத் தமது கைக்கடங்கின சிஷ்யர்களுக்கு உபதேசித்து இம்முகமாக அவர்களுக்கு அறிவை வளரச்செய்கின்ற மஹாநுபாவர்களின்படியைக் கூறியவாறும். (எ)

271 சலமாமுகிற்பல்கணப்போர்க்களத்துச் சரமாரிபொழிந்தெங்கும்பூசலிட்டு * கலிவானுறக்கேடகங்கோப்பவன்போல் காராயணன்முன்முகங்காத்தமலை * இலைவேய்குரம்பைத்தவமாமுனிவர் இருந்தார்கடுவேசென்றணர்சொறிய * கொலைவாய்ச்சினவேங்கைகள்நின்றுறங்குங்கோவர்த்தனமென்னுங்கொற்றக்குடையே.

சலம் மா முகில் பல் கணம் — நீர் கொண்டெழுந்த காள மேகக் களிறுகளுடைய பல நிரளானது,

எங்கும் பூசல் இட்டு — இடைச்சேரியடங்கலும் கர்ஜனை பண்ணிக்கொண்டு

போர் களத்து சரம் மாரி பொழிந்து — யுத்தரங்கத்தில் சரமழை பொழியுமாபோலே நீர் மழையைப் பொழிந்து

கலிவான் உற — (ஸர்வஜந்துக்களையும்) வருத்தப் புகுந்தவளவிலே

காராயணன் கண்ணபிரான்

கேடகம் கோப்பவன் போல் — கடகு கோத்துப் பிடிக்குமவன்போல

(குடையாக எடுத்துப் பிடித்து)

முன் முகம் காத்த. மலை — முந்துற வருகிற மழையினாரம்பத்தைதகைந்த மலையாவது,-

கொலை வாய் சினம் வேங்கைகள் — கொல்லுகின்ற வாயையும் கோபத்தையுமுடைய புலிகளானவை

இலை வேய் குரம்பை — இலைகளாலே அமைக்கப்பட்ட குடில்களில்

தவம் மா முனிவர் இருந்தார் கடுவே சென்று — இருக்கின்ற தபஸ்விகளான மஹர்ஷிகளின் நிரளிலே புகுர

(அங்குள்ள ரிஷிகள்)

அணர் சொறிய — (தமது) கழுத்தைச் சொறிய

(அந்த ஸுகபாரவச்யத்தினால், அப்புலிகள்

நின்று உறங்கும் — நின்றபடியே உறங்கப்பெற்ற

கோவர் * * * குடையே—.

* * *—பின்னடிக்குக் உள்ளுறைப்பொருள் ;—காமம், குரோதம், மதம், மாச்சரியம் முதலிய தீயகுணங்களுக்கு வசப்பட்டொழுகுகின்ற ஸம்ஸாரிகள் அருந்தவ முனிவரான காதமுனிகள் போல் வாருடைய நிருவோலக்கத்திலே புகுந்து வருத்தந்தோற்றநிற்க, அவர்கள் கருணைகூர்ந்து உய்யும் வழிக்கு உடலான பொருள்களை நெஞ்சில் எளிதிற்பதியுமாறு உபதேசிக்க, அதனால் அவர்கள் திருந்தி உலகவுணர்ச்சியி னுறக்கமுற்றுப் பேரின்பம் நுகருமாற்றைப் பெறுவித்தவாறும். (அ)

272 வன்பேய்முலையுண்டதோர்வாயுடையன் வன்துணைநின்றதோர்வன்பரத்தை *
தன்பேரிட்டுக்கொண்டுதரணிதன்னில் தாமோதரன்தாங்குதடவரைதான் *
முன்பேவழிகாட்டமுசுக்கணங்கள் முதுகிற்பெய்துதம்முடைக்குட்டன்களே *
கொம்பேற்றியிருந்துகுதிபயிற்றுங் கோவர்த்தனமென்னுங்கொற்றக்குடையே. (கூ)

வல் பேய் முலை உண்டது ஓர் வாய் உடையன் — கல் நெஞ்சளான பூதனையினுடைய (விஷந்தடவின) முலையை (உறிஞ்சி) உண்ட வாயை யுடையனை

தாமோதரன் — கண்ணபிரான்

தன் பேர் இட்டுக் கொண்டு — (கோவர்த்தனன்என்ற)தனது திருநாமத்தை (மலைக்கு) இட்டு,

வல்பரத்தைநின்றது ஓர் வன் தூண் என — பலிஷ்டமானதொரு பாரத்தைத் தாங்கிக் கொண்டு நின்ற ஒரு வலிய தூணைப் போல நின்று

தரணிதன்னில் அங் நிலவுலகத்தில் (உள்ளவர்கள் காணும்படி)

தான் தாங்கு தட வரை — தான்தாங்கிக்கொண்டுநின்ற பெரிய மலையாவது:—

முசு கணங்கள் — முசு என்ற சாதிக்குரங்குகளின் திரள்கள்

(தம் குட்டிகளுக்கு)

முன்பே வழி காட்ட — ஏற்கனவே ஒரு கிளையில் நின்றும் மற்றொரு கிளையில் பாயும் வழியைக் காட்டுகைக்காக

தம்முடை குட்டன்களே — தம் தம் குட்டிகளை

முதுகில் பெய்து — (தம் தம்) முதுகிலே கட்டிக் கொண்டுபோய்

கொம்புஏற்றியிருந்து — மரக்கொம்பிலே ஏற்றி வைத்து

குதி பயிற்றும் — அக்கொம்பில் நின்றும் மற்றொரு கொம்பில் குதித்தலைப் பழக்குவியா நிற்கப் பெற்ற

கோவர் * * * குடையே—.

* * *—கண்ணபிரான் பசுக்களுக்கும் புல்லும் தண்ணீரும் கொடுத்து வளர்ப்பதனால் தான் பெற்றுள்ள கோவரீத்தநன் என்னுந்திருநாமத்தை அந்த மலைதனக்கு இட்டு அதனைக்குடையாக எடுத்துத் தாங்கிக்கொண்டு நின்றது—வலியதொரு ஸ்தம்பம் பெருஞ்சுமையைத் தாங்கி நிற்பதை ஒக்குமென்று முன்னடிகளால் உவமித்துக் கூறினரென்க, பரத்தை என்றதன்பின் 'தாங்கி' என்றொரு வினையெச்சம் வருவித்துக்கொள்ளலாம். கண்ணனைத் தூணாகவும், மலையைத் தூண்தாங்கு சுமையாகவும் உருவகப் படுத்தியவாறு காண்க.

முசு என்பது குரங்குகளின் ஓர்வகைச்சாதி ; சேந்தன் திவாகரத்தில் "காருகம் பூகம் கருங் குரங்காகும்" என்றதற்குப்பின், "ஓரியுங் கலியுங் கடுவனும் முசுவே" எனக் கூறியுள்ளதுகாண்க. குரங்குகளானவை தம்குட்டிகளுக்குக் கிளைதாவும் வழியைக் காட்டுவதற்காக அவற்றைத் தம்முதுகில் கட்டிக்கொண்டுபோய் ஒருகொம்பிலிருந்து மற்றொருகொம்பிலே குதிக்கும் விதத்தைத் தாம் மூன்றுறக் குதித்துக்காட்டிப் பயிற்றுவியாநிற்குமென்பது—பின்னடிகளின்கருத்து. குதி—குதித்தல்; முதனிலைத் தொழிற்பெயர். முன்பே பருவம் நிரம்புவதற்கு முன்னமே என்றலுமொன்று.

இதற்கு உள்ளுறை பொருள் ;—ஸதாசார்யர்கள் தாங்களபிமானித்த சிஷ்யர்களைத் தாங்களன் புடனணைத்துக்கொண்டு அவர்களுக்கு நல்வழி காட்டுகைக்காக வேதசாகைகளை ஓதுவித்து அவற் றிலேயே அவர்கள் புத்திஸஞ்சாரம் பண்ணிக்கொண்டிருக்கும்படி ஞானோபதேசம் பண்ணும்படியைக் குறிப்பித்தவாறும். ... ... (கூ)

273 கொடியேறுசெந்தாமரைக்கையிரல்கள் கோலமுமிழ்ந்திலவாடிற்றில *
வடிவேறுதிருவுகிர்நொந்துமில மணிவண்ணன்மலையுமோர்சம்பிரதம் *
முடியேறியமாமுகிற்பல்கணங்கள் முன்னெற்றிநரைத்தனபோல * எங்குங்
குடியேறியிருந்துமழைபொழியுங் கோவர்த்தனமென்னுங்கொற்றக்குடையே. (ஙு)

கொடி ஏறு செந்தாமரை கை — (ரோகாரூபமான) த்வஜத்தையுடைய செந்தாமரை மலர் போன்ற (கண்ணனது) திருக்கையும்

இரல்கள் — (அகிலுள்ள) திருவிரல்களும் (ஏழுநாள் ஒருபடிப் படமலையைத் தாங்கிக் கொண்டு நின்றதனால்)

கோலமும் அழிந்தில — (இயற்கையான) அழகும் அழியப்பெறவில்லை ;
வாடிற்றில — வாட்டமும் பெறவில்லை ;
வடிவு ஏறு — அழகு அமைந்த
திரு உகிரும் — திருநகங்களும்
கொந்தில — நோவெடுக்கவில்லை ;
(ஆகையால்)
மணி வண்ணன் மலையும் — நீல மணி போன்ற நிறத்தனை கண்ணபிரான் (எடுத்தருளின) மலையும்
(அம்மலையை இவன் எடுத்து நின்ற நிலைமையும்)
ஓர் சம்பிரதம் — ஒரு இந்திர ஜாலவித்தையாயிருக்கின்றது ;
(அந்தமலை எது! என்னில் ;—)
முடி ஏறிய மா முகில் பல் கணங்கள் — கொடுமுடியின்மேலேறிய காளமேகங்களினுடைய பலதிரளான கூட்டங்களானவை
எங்கும் மழை பொழிந்து — மலைச் சாரல்களிலெல்லாம் மழைபெய்து (வெளுத்தனவால்)
முன் நெற்றி நரைத்தன போல — (அம்மலையினுடைய) முன்புறம் நரைத்தாற்போல் தோற்றும்படி
குடி ஏறி இருக்கும் — (கொடுமுடியின்மேல்) குடி புகுந்திருக்கப் பெற்ற
கோவர் * * * குடையே—.

* * *—கண்ணபிரான் ஏழு நாளளவும் ஏகாகாரமாக மலையைத் தாங்கிக்கொண்டு நிற்கச் செய்தேயும் கை, விரல், நகம் முதலியவையொன்றும் சிறிதும் விகாரமடையாமையால், இவன் மலையெடுத்து நின்றவிது தொம்பரவர் கூத்துப்போலே ஒரு கண்கட்டுவித்தையாகத் தோற்றுகின்றதேயன்றி ஒன்றும் மெய்க்கொள்ளப் போகவில்லை ; மெய்யே மலையைச் சுமந்தானாகில் மேனிவாட்டமுண்டாகாதொழியுமோ ! என்று சமத்காரந்தோற்றக் கூறுகின்றார்—முன்னடிகளில். சம்பிரதம்—ஒருவகை அஞ்சனத்தின் உதவியினால் ஒரு முஹூர்த்தகாலத்தளவு நிற்கும்படி மாஞ்செடி முலீக்கச்செய்தல் முதலிய இந்திரஜாலவித்தை. அம்மலையிலுள்ள கார்மேகங்கள் அதன் சிகரத்தில் நிலச்செழிப்புண்டாம்படி எங்கும் வர்ஷித்து நீர் கழிந்தமையால் வெளுக்கப்பெற்று அச்சிகரத்தின்மேற் குடியிருக்கும்படியைப் பார்த்தால் அம்மலையின் முன்னெற்றி நரைத்துக்கிடக்கின்றதோ வென்று தோற்ற நின்றதென்று உத்ப்ரேக்ஷித்தவாறு. கண்ணபிரான் மழை தடுக்க மலையெடுத்தபோது அதன் மேல் இவ்வாறு மழையுண்டானதாகப் பொருளன்று ; இதை உபலக்ஷண ரூப விசேஷணமாகக் கொள்க. குடியேறியிருந்து மழை பொழியும்—மழை பொழிந்து குடியேறியிருக்கும் என விருதிபிரித்துக் கூட்டியுரைக்கப்பட்டது. வர்ஷியாமல் வெளுத்திருக்குங்காலத்திலும் மேகங்களிருக்குமிடம் மலைத்தலை யோரமாதல் அறிக.

இதற்கு உள்ளுறைபொருள்;-வேதாந்த நிஷ்டர்களான ஆசாரியர்கள் தம்மடிபணிந்த சிஷ்யர்களுக்கு ரஸமான அர்த்தங்களை உபதேசித்துத்தாங்கள் சுத்தஸ்வரூபர்களாக இருக்கும்படியைக் குறித்தவாறும் (ஐ)

274 அரவிற்பள்ளிகொண்டரவந்துரந்திட்டு அரவப்பகையூர்தியவனுடைய * குரவிற்கொடிமுல்லைகள்நின்றுறங்கும் கோவர்த்தனமென்னுங்கொற்றக்குடைமேல் * திருவிற்பொலிமறைவாணர்புத்தூர்த்திகழ் பட்டர்பிரான்சொன்னமாலைபத்தும் * பரவுமனநன்குடைப்பத்தருள்ளார் பரமானவைகுந்தம்நண்ணுவரே. (கக)

அரவில் பள்ளி கொண்டு — திருவனந்தாழ்வான்மீது (பாற்கடலில்) பள்ளி கொள்பவனும் (அதைவிட்டு ஆய்ப்பாடியில்) வந்து பிறந்து)
அரவம் துரந்திட்டு — காளியநாகத்தை ஒழித்தருளினவனும்
அரவம் பகை ஊர்தியவனுடைய — ஸர்ப்பசத்ருவான கருடனை வாஹனமாக வுடையவனுமான கண்ணனுடைய,—
குரவில் கொடிமுல்லைகள் நின்று உறங்கும் — குரவமரத்தில் முல்லைக் கொடிகள் படர்ந்து அமைந்திருக்கப்பெற்ற
கோவர்த்தனம் என்னும் கொற்றம் குடை மேல் — கோவர்த்தனமென்ற கொற்றக்குடை விஷயமாக,
திருவில் பொலி மறை வாணர் புத்தூர் திகழ் பட்டர் பிரான் — ஸ்ரீவைஷ்ணவஸார்யாலே விளங்காநின்ற வைதிகர்கள் இருக்குமிடமான ஸ்ரீவில்லிபுத்தூரில் விளங்கா நின்றுள்ள பெரியாழ்வார்
சொன்ன மாலை பத்தும் — அருளிச்செய்த இப்பத்துப் பாசுரங்களையும்
பரவும் மனம் நன்கு உடை பத்தர் உள்ளார் — அப்யளிக்கைக்கீடான மநஸ்ஸை நன்றாக உடையரான பக்தர்களாயிருப்பார்
பரமான வைகுந்தம் நண்ணுவர் — பரமபதத்தை அடையப் பெறுவர்.

அடிவரவு:—அட்டு வழுவம்மை கடுவான் செப்பாடுபடம் சலம்வன்பேய் கொடி அரவில் நாவல்.

[கண்ணனுடைய வேணுகானத்தின் சிறப்பு.]

[இது—ஆழ்வார் தாமான் தன்மையிலே அருளிச்செய்தது.]

—o—

275 நாவலம்பெரியதீவினில்வாழும் நங்கைமீர்களிதோரற்புதங்கேளீர் *
தூவலம்புரியுடையதிருமால் தூயவாயிற்குழலோசைவழியே *
கோவலர்சிறுமியரிளங்கொங்கைகுதுகலிப்ப உடலுளவிழ்ந்து * எங்கும்
காவலுங்கடந்துகயிறுமாலையாகி வந்துகவிழ்ந்துநின்றனரே. (க)

அம் பெரிய நாவல் தீவினில் வாழும் நங்கைமீர்கள் — அழகிய விசாலமான ஜம்பூத்வீபத்தில் வாழாநின்றுள்ள பெண்காள்!

ஓர் அற்புதம் இது கேளீர் — ஒரு ஆச்சரியமான இச்சங்கதியைச் செவிகொடுத்துக் கேளுங்கள்; (யாது அற்புதமென்னில்;)

தூ வலம்புரி உடைய திரு மால் — சுத்தமான ஸ்ரீபாஞ்சஜந்யத்தையுடைய ச்ரியபதியான கண்ணபிரானுடைய

தூய வாயில் குழல் ஓசை வழியே — அழகிய திருப்பவளத்தில் (வைத்து ஊதப்பெற்ற) புல்லாங்குழலினுடைய இசையின் வழியாக

கோவலர் சிறுமியர் — இடைப்பெண்களினுடைய

இள கொங்கை — இளமுலைகளானவை

குதுகலிப்ப — (நாங்கள் முன்னேபோகிறே மென்று நெறித்து) ஆசைப்பட

உடல் உள் அவிழ்ந்து — சரீரமும் மநஸ்ஸும் சிதிலமாகப்பெற்று

எங்கும் காவலும் கடந்து — எங்குமுள்ள காவல்களையும் அதிக்கிரமித்துவிட்டு

கயிறு மாலை ஆகி வந்து — கயிற்றில்தொடுத்த பூமாலைகள்போல(த் திரள் திரளாக) வந்து

கவிழ்ந்து நின்றனர் — (கண்ணனைக்கண்டு வெள்கிக்) கவிழ்தலையிட்டு நின்றார்கள்;

[இதிலும் மிக்க அற்புதமுண்டோ.]

* * *—கண்ணபிரான் வேய்ங்குழலை வாயில்வைத்து ஊத, அதனோசையைக்கேட்ட இடைப்பெண்கள் உடலினைத்து மனமுருகி, தங்களுக்குக் காவலாக வீட்டிலிருக்கின்ற மாமியார் மாமனார் முதலியோரையும் அலக்ஷியம் பண்ணிவிட்டுக் கண்ணன் குழலூதுமிடத்தேறப் புகுந்து, ஒருகயிற்றிலே அடரப் பூக்களை ஒழுங்குபடத் தொடுத்தாற்போல வரிசையாக நின்று கண்ணன்முகத்தைக் கண்டவாறே 'நாம் நமது காமத்தை இங்ஙனே வெளிப்படையாக்கினோமே' என்று வெள்கி, அவன் முகத்தை முகக்கொண்டு காணமாட்டாமல் தலைகவிழ்ந்து தரையைக்கீறி நின்றனரென்க. ... (க)

276 இடவணரையிடத்தோளொடுசாய்த்து இருகைகூடப்புருவம்நெரிந்தேற *
குடவயிறுபடவாய்கடைகூடக் கோவிந்தன்குழல்கொடுதினபோது *
மடமயில்களொடுமான்பிணைபோலே மங்கைமார்கள்மலர்க்கூந்தலவிழ *
உடைநெகிழ்வோர்கையாலதுகில்பற்றி ஒல்கியோடரிக்கணைடின்றனரே. (உ)

கோவிந்தன் — கண்ணபிரான்

இட அணரை — (தனது) இடப்பக்கத்து மோவாய்க்கட்டையை

இட தோளொடு சாய்த்து — இடத்தோள் பக்கமாகச் சாய்த்து

இரு கை கூட — இரண்டு திருக்கைகளும் (குழலோடு) கூடவும்

புருவம் நெரிந்து ஏற — புருவங்களானவை நெறித்து மேலேகிளரவும்

வயிறு — வயிறானது

குடம் பட — குடம்போலக் குமிழ்த்துத் தோற்றவும்

வாய் கடை கூட — வாயானது இரண்டருகுங் குவியவும்

(இவ்வாறான நிலைமையாக)

குழல் கொடு ஊதின போது — வேய்ங்குழலைக்கொண்டு ஊதினகாலத்திலே,

மடம் மயில்களொடு மான் பிணைபோலே மங்கைமார்கள் — அழகிய மயில்களையும் மான்பேடைகளையும் போன்றுள்ள யுவதிகள்

மலர் கூந்தல் அவிழ — (தங்களுடைய) மலர்ணிந்த கூந்தல் முடியானது அவிழ்ந்து அலையவும்

உடை நெகிழ — அரைப்புடவையானது நெகிழவும்

துகில் ஓர் கையால் பற்றி — (நெகிழ்ந்த) அத்துகிலை ஒரு கையாலே பிடித்துக் கொண்டு

ஒல்கி — துவண்டு

அரி ஓடு கண் ஓட நின்றனர் — செவ்வரி, கருவரிகள் ஓடா நின்ற கண்கள் (கண்ணபிரான் பக்கலிலே) ஓடப் பெற்றனர்.

***—குழலூதும்போது மோவாய்க்கட்டையின் இடப்பக்கம் இடத்தோள் பக்கமாகத் திரும்புதலும், இரண்டு கையும் குழலோடு கூடுதலும், புருவம் நெரித்தலும், வயிற்றிலே காற்றை நிறைத்து நிறுத்தி, அதனைத் திருப்பவளத்தாலே நிரமமாக விட்டு ஊதவேண்டுகையாலே வயிறு குடம்போல எடுப்பாகத் தோற்றுதலும், குழலின் துளைகளின் அளவுக்கு ஏற்ப வாய் குவித்து முயற்சித்துப்போதலும் இயல்பாமென்க. அளர்—தாடி; அதற்கு உரிய இடத்திற்கு ஆகுபெயர். கடை கூட—(வாயின்) இரண்டு ஓரங்களும் ஒன்றுய்க்கூட; எனவே, குவிந்து என்றதாயிற்று: கடைவாய்கூட—இரண்டு கடைவாய்களு மொன்றோடொன்றுகூட. கோடு—கொண்டு என்பதன் சிதைவு. (உ)

277 வானிளவரசுவைகுந்தக்குட்டன் வாசுதேவன்மதுரைமன்னன் * நந்தர்
கோனிளவரசுகோவலர்குட்டன் கோவிந்தன்குழல்கொடூதினபோது *
வானிளம்படியர்வந்துவந்தீண்டி மனமுருகிமலர்க்கண்கள்பனிப்ப *
தேனிளவுசெறிகூந்தலவிழச் சென்னிவோர்ப்பச்செவிசேர்த்துநின்றனரே. (ஊ)

வான் இள அரசு — பரமபதத்தக்கு யுவராஜனுயும்

வைகுந்தர் குட்டன் — அப்பரம்பதத்திலுள்ள நித்யஸூரிகளுக்குப் பரிந்து நோக்க வேண்டும்படியான பருவத்தையுடையனுயும்

வாசுதேவன் — வஸுதேவர்க்கு மகனுகப் பிறந்தவனுயும

மதுரை மன்னன் — வடமதுரைக்கு அரசனுயும்

நந்தர்கோன் இள அரசு — நந்தகோபர்க்கு (ப்பிள்ளையாய் வளர்ந்து) இளவரசனுயும்

கோவலர் குட்டன் — இடையர்களுக்குப் பரிந்து நோக்கவேண்டும்படியான பிள்ளையாயுமுள்ள

கோவிந்தன் — கண்ணபிரான்

குழல் கொடு ஊதினபோது—;

வான் — ஸ்வர்க்கலோகத்திலுள்ள

இள படியர் — போகத்துக்கு உரிய சரீரத்தையுடையரான மாதர் (ஸ்ரீப்ருந்தாவனத்திலே)

வந்து வந்து ஈண்டி — நிரன்நிரளாகவந்து குவிந்து

மனம் உருகி — (தங்கள்) நெஞ்சு உருகப் பெற்று

மலர் கண்கள் பனிப்ப — குவளைமலர்போலழகியகண்களினின்றும் ஆநந்தநீர் துளித்துவிழ

தேன் அளவு செறி கூந்தல் அவிழ — தேனேடுகூடின செறிந்த மயிர்முடியானது அவிழ,

சென்னி வோர்ப்ப — நெற்றியானது வேர்வையடைய (இவ்வகை விகாரங்களையடைந்து)

செவி சேர்த்து நின்றனர் — (தமது) காதுகளை (அக்குழலோசையிலே) மடுத்துத் நிகைத்து நின்றார்கள்.

***—கண்ணபிரானது குழலினிசையைக்கேட்ட மேலுலகத்து மாதர் தங்களிருப்பிடத்தில் நிற்கமாட்டாமல், கண்ணனிருக்கு மிடத்தில் கூட்டங் கூட்டமாக ஓடிவந்து அக்குழலோசையை நன்றுகக் கேட்ட பிறகு அவர்களது மனம் நீர்ப்பண்டமாய் உருகிற்று; கண்களினின்றும் ஆநந்த பாஷ்பங்கள் துளித்தன; கூந்தல் அவிழ்ந்தன, நெற்றி வோர்த்தது; இப்படிப்பட்ட விகாரங்களை அடைந்துகொண்டே அவ்விசையைக் கேட்டுக்கொண்டு மயங்கிக்கிடந்தன ரென்க.

சென்னி என்ற சொல் தலையைக் குறிப்பதாயினும், இங்கு நெற்றியைக் குறித்தது; "மத்தக மிலாடம் முண்டகம் நுதல் குளம், நெற்றிபாலம் என நிகழ்த்தினரே" என்ற திவாகர நிகண்டில், தலையைக்குறிப்பதான மத்தகமென்ற சொல்லை நெற்றிக்கும் பரியாயநாமமாகக் கூறியுள்ளது காண்க. (ஈ)

278 தேனுகன்பிலம்பன்காளியனென்னுந் தீப்பப்பூடுகளடங்கவுழக்கி *
கானகம்படியுலாவியுலாவிக் கருஞ்சிறுக்கன்குழலூதினபோது *
மேனகையொடுதிலோத்தமையரம்பை உருப்பசியரவர்வெள்கிமயங்கி *
வானகம்படியில்வாய்திறப்பின்றி ஆடல்பாடலிவைமாறினர்தாமே. (சு)

தேனுகன் பிலம்பன் காளியன் என்னும் தீப்பப்பூடுகள் அடங்க உழக்கி — தேநுகாஸுரன், ப்ரலம்பாஸுரன் காளியநாகம் என்று சொல்லப்படுகிற கொடிய பூண்டுகளெல்லாம் தலையழித்துப் போகட்டு

கான் அகம் படி உலாவி உலாவி — காட்டுக்குள்ளே இயற்கையாக எப்போதும் உலாவிக் கொண்டு

கரு சிறுக்கன் — கரிய திருமேனியையுடைய சிறுபிள்ளையான கண்ணன்

குழல் ஊதின போது—;

மேனகையொடு திலோத்தமை அரம்பை உருப்பசி அரவர் — மேனகையும் திலோத்தமையும் ரம்பையும் ஊர்வசியும் (ஆகிற) அப்ஸரஸ்ஸ்த்ரீகள் (அக்குழலோசையைக்கேட்டு)

மயங்கி வெள்கி — மோஹமடைந்து வெட்கப்பட்டு

வான் அகம் படியில் வாய் திறப்பு இன்றி — தேவலோகத்திலும் பூலோகத்திலும் வாயைத்திறவாமல்

ஆடல் பாடல் இவை தாமே மாறினர் — ஆடுகை, பாடுகை என்கிற இக்காரியங்களைத் தாமாகவே விட்டொழிந்தனர்.

279 முன்னரசிங்கமதாகியவுணன்முக்கியத்தைமுடிப்பான் மூவுலகில், மன்னரஞ்சும் *
மதுசூதனன்வாயிற்குழலினோசை செவியைப்பற்றிவாங்க *
நன்னரம்புடையதும்புருவோடு நாரதனுந்தந்தம்வீணைமறந்து *
கின்னரமிதுனங்களுந்தந்தங்கின்னரம் தொடுகிலோமென்றனரே. (எ)

முன் நரசிங்கம் அது ஆகி அவுணன் முக்கியத்தை முடிப்பான் — முற்காலத்திலே நரஸிம்ஹரூபங்கொண்டு ஹிரண்யாஸுரனுடைய மேன்மையை முடித்தவனும்

மூ உலகில் மன்னர் அஞ்சும் — மூன்று லோகத்திலுள்ள அரசர்கள் (தனக்கு) அஞ்சும்படியாயிருப்பவனுமான

மதுசூதனன் — கண்ணபிரானுடைய

வாயில் குழலின் ஓசை — வாயில் (வைத்து ஊதப்பெற்ற) வேய்ங்குழலினுடைய ஸ்வரமானது

செவியை பற்றி வாங்க — காதுகளைப் பிடித்திழுக்க,

நல் நரம்பு உடைய தும்புருவோடு நாரதனும் — நல்ல வீணையைக் கையிலுடைய தும்புருமுனிவனும் நாரதமஹர்ஷியும்

தம் தம் வீணை மறந்து — தங்கள் தங்களுடைய வீணையை மறந்துவிட,

கின்னரம் மிதுனங்களும் — கிந்நரமிதுநம் என்று பேர் பெற்றுள்ளவர்களும்

தம் தம் கின்னரம் தொடுகிலோம் என்றனர் — தங்கள் தங்கள் கின்னரவாத்தியங்களை '(இனித்) தொடக்கடவோமல்லோம்' என்று விட்டனர்.

280 செம்பெருந்தடங்கண்ணன்திரடோளன் தேவகிசிறுவன்தேவர்கள்சிங்கம் *
நம்பரமனிந்நாள்குழலூதக்கேட்டவர்கள் இடருற்றனகேளீர் *
அம்பரந்திரியுங்காற்றப்பரெல்லாம் அழுதகீதவலியாற்சுருக்குண்டு *
நம்பரமன்றென்றுநாணிமயங்கி கைந்துசோர்ந்துகைம்மறித்துநின்றனரே. (சூ)

செம் பெரு தட கண்ணன் — சிவந்து மிகவும் பெரிய திருக்கண்களையுடையனும்

திரள் தோளன் — பருத்த தோள்களையுடையனும்

தேவகி சிறுவன் — தேவகியின் பிள்ளையாய்

தேவர்கள் சிங்கம் — தேவஸிம்ஹமாய்

நம் பரமன் — நமக்கு ஸ்வாமியான பரமபுருஷனாயிராநின்ற கண்ணபிரான்

இ நாள் குழல் ஊத — இன்றையதினம் வேய்ங்குழலை ஊத,

கேட்டவர்கள் — (அதன் இசையைக்) கேட்டவர்கள்

இடர் உற்றன கேளீர் — அவஸ்தைப்பட்ட வகைகளை (சொல்லுகிறேன்) கேளுங்கள்;

அம்பரம் — (அந்த இடர் யாதெனில்,) ஆகாசத்திலே

திரியும் காந்தப்பர் எல்லாம் அமுதம் கீதம் வலையால் சுருக்குண்டு தம் பரம் அன்று என்று (முன்பெல்லாம் பாடித்திரிந்ததற்கும்)

திரியாநின்ற கந்தருவர் அனைவரும் அமுதம்போல் இனிதான குழலிசையாகிற வலையிலே அகப்பட்டு, (பாடுகையாகிற) சுமை(இனி) நம்முடையதன்று என்று அறுதியிட்டு

காணி மயக்கி கைந்து சோர்ந்து

வெட்கப்பட்டு அறிவழிந்து மனம் சிதிலமாகப்பெற்று சரீரமும் கட்டுக்குலையப் பெற்று

கை மறித்து நின்றனர்

(இனி நாம் ஒருவகைக் கைத் தொழிலுக்குங் கடவோமல்லோம் என்று) கையை மடக்கிக்கொண்டு நின்றார்கள்.

281 புவியுள்கான்கண்டதோரற்புதங்கேளீர் பூணிமேய்க்குமிளங்கோவலர்கூட்டத்
தவையுள் * நாகத்தணையான்குழலூத அமரலோகத்தளவுஞ்சென்றிசைப்ப *
அவியுணுமறந்துவானவரெல்லாம் ஆயர்பாடிநிறையப்புகுந்தீண்டி *
செவியுணவின்சுவைகொண்டுமகிழ்ந்து கோவிந்தனைத்தொடர்ந்தென்றும்விடாரே. (எ)

புவியுள் நான் கண்டது ஓர் அற்புதம் கேளீர்

பூமியிலே நான் கண்ட ஒரு ஆச்சரியத்தை (சொல்லுகின்றேன்,) கேளுங்கள்;

(அது யாதெனில்;)

பூணி மேய்க்கும் இள கோவலர் கூட்டத்து அவையுள்

பசுக்களை மேய்க்காநின்ற இடைப்பிள்ளைகள் நிரண்டிருக்கிற ஸபையிலே

நாகத்து அணையான் குழல் ஊத

சேஷசாயியான கண்ணபிரான் குழலூதின வளவிலே,

(அதன் ஓசையானது)

அமரர் லோகத்து அளவும் சென்று இசைப்ப

தேவலோகம் வரைக்கும் பரவி (அங்கே) த்வனிக்க,

(அதைக்கேட்ட)

வானவர் எல்லாம் அவி உணு மறந்து

தேவர்களனைவரும் ஹவிஸ்ஸை உண்பதை மறந்து

ஆயர் பாடி நிறைய புகுந்து ஈண்டி

இடைச்சேரி நிறையும்படி (அங்கு) வந்து சேர்ந்து நெருங்கி

செவி உள் நா இன் சுவை கொண்டு மகிழ்ந்து

செவியின் உள்நாக்கிலே (குழலோசையின்) இனிய ரஸத்தை உட்கொண்டு மனங்களித்து

கோவிந்தனை தொடர்ந்து என்றும் விடார்

கண்ணபிரானைப் பின் தொடர்ந்தோடி ஒருக்ஷண காலமும் (அவனை) விட மாட்டாதிருந்தனர்.

282 சிறுவிரல்கள்தடவிப்பரிமாறச் செங்கண்கோடச்செய்யவாய்கோப்பளிப்ப *
குறுவெயர்ப்புருவங்கூடலிப்பக் கோவிந்தன்குழல்கொடுதினபோது *
பறவையின்கணங்கள்கூடுதுறந்து வந்துதழ்ந்துபடுகாடுகிடப்ப *
கறவையின்கணங்கள்காற்பரப்பிட்டுக் கவிழ்ந்திறங்கிச்செவியாட்டகில்லாவே. (அ)

சிறு விரல்கள் தடவி பரிமாற

(தனது) சிறிய கைவிரல்கள் (குழலின் துளைகளைத்) தடவிக்கொண்டு (அக்குழலின் மேல்) வியாபரிக்கவும்

செம் கண் கோட

செந்தாமரை போன்ற கண்கள் வக்ரமாகவும்

செய்ய வாய் கொப்பளிப்ப

சிவந்த திருப்பவளம் (வாயுவின் பூரிப்பாலே) குமிழ்க்கவும்

குறு வெயர் புருவம் கூடலிப்ப

குறு வெயர்ப் பரும்பின புருவமானது மேற்கிளர்ந்து வளையவும்,

கோவிந்தன் குழல் கொடு ஊதினபோது—;

(அக்குழலோசையைக் கேட்ட)

பறவையின் கணங்கள் பக்ஷிகளின் கூட்டங்கள்

கூடு துறந்து வந்து சூழ்ந்து படு காடு கிடப்ப

(தம்தம்) கூடுகளை விட்டொழிந்து (கண்ணருகில்) வந்து சூழ்ந்துகொண்டு வெட்டி விழுந்த காடுபோலே மெய் மறந்து கிடக்க,

கறவையின் கணங்கள் கால் பரப்பிட்டு

பசுக்களின் நிரள் கால்களைப்பரப்பி

கவிழ்ந்து இறங்கி

தலைகளை கன்றுகட்கு தொங்கவிட்டுக்கொண்டு

செவி ஆட்டகில்லா

காதுகளை அசைக்கவும் மாட்டாதே நின்றன.

283 திரண்டெழுதழைமழைமுகில்வண்ணன் செங்கமலமலர்சூழ்வண்டினம்போலே *
சுருண்டிருண்டகுழல்தாழ்ந்தமுகத்தான் ஊதுகின்றகுழலோசைவழியே *
மருண்டுமான்கணங்கள் மேய்கைமறந்து மேய்ந்தபுல்லுங்கடிவாய்வழிசோர *
இரண்டுபாடுந்துலுங்காப்புடைபெயரா எழுதுசித்திரங்கள்போலநின்றனவே. (கூ)

திரண்டு எழு தழை மழை முகில் வண்ணன் — திரண்டுமேலெழுந்த தழைத்திராகின்ற காளமேகம் போன்ற வடிவையுடைய கண்ணபிரான்,

செம் கமலம் மலர் சூழ் வண்டு இனம் போலே சுருண்டு இருண்ட குழல் தாழ்ந்த முகத்தான் — செந்தாமரைப் பூவைச் சூழ்ந்து படிந்துள்ள வண்டுத் திரளைப்போன்று சுருட்சியையும் கருநிறத்தையுமுடைய திருக்குழல்களானவை தாழ்ந்து அலையப்பெற்ற முகத்தையுடையவனுய்க்கொண்டு

ஊதுகின்ற குழல் ஓசை வழியே — ஊதுகிற குழலின் ஓசையாகிற வழியிலே (அகப்பட்டு)

மான்கணங்கள் மருண்டு மேய்கை மறந்து — மான் கூட்டங்கள் அறிவு மழிந்து மேய்ச்சலையும் மறந்து

மேய்ந்த புல்லும் கடைவாய் வழி சோர — வாயில் கவ்வின புல்லும் கடைவாய் வழியாக நழுவி விழ,

இரண்டு பாடும் துலுங்கா புடை பெயரா — முன் பின்னகிற இரண்டருகிலும (காலை) அசைக்காமலும் பக்கங்களில் அடிடைப் பெயர்த்து இடமாட்டாமலும்

எழுது சித்திரங்கள் போல நின்றன — (சுவரில்) எழுதப்பட்ட சித்திரப் பதுமை போலத் திகைத்து நின்றன.

284 கருங்கண்தோகைமயிற்பிலியணிந்து கட்டிநன்குடுத்தபீதகவாடை *
அருங்கலவுருவினுயர்பெருமான் அவனொருவன்குழலூதினபோது *
மரங்கள்நின்றுமதுதாரைகள்பாயும் மலர்கள்வீழும்வளர்கொம்புகள்தாழும் *
இரங்குங்கூம்புந்திருமால்நின்றநின்றபக்கம்நோக்கி அவைசெய்யுங்குணமே. (ஙு)

கருங்கண் தோகை மயில் பிலி அணிந்து — கறுத்த கண்களையுடைய தோகைகளையுடைய மயில்களின் இறகுகளை (திருமுடி மேல்) அணிந்து கொண்டு

நன்கு கட்டி உடுத்த பீதகம் ஆடை — நன்றாக அழுந்தச்சாத்தின பீதாம்பரத்தையும்

அரு கலம் உருவின் — அருமையான ஆபரணங்களையும் (அணிந்துள்ள) திருமேனியையுடையனான

ஆயர் பெருமானவன் ஒருவன் குழல் ஊதினபோது—;

மரங்கள் நின்று (உள்ளுருகினமை தோற்ற) மது தாரைகள் பாயும் — (அசேதநமான) மரங்களுங்கூட ஒருபடிப்பட நின்று மகரந்த தாரைகளைப் பெருக்கா நின்றன;

மலர்கள் வீழும் — புஷ்பங்களும் (நிலைகுலைந்து) விழாநின்றன;

வளர் கொம்புகள் தாழும் — மேல்நோக்கி வளர்கின்ற கொம்புகளும் தாழாநின்றன;

இரங்கும் — (அம்மரங்கள் தாம்) உருகாநின்றன;

கூம்பும் — கைகூப்புவாரைப் போலே, தாழ்ந்த கொம்புகளைக் குவியாநின்றன;

(இவ்வாறுக)

அவை திருமால் நின்ற நின்ற பக்கம் நோக்கி — அந்த மரங்கள் கண்ணன் எந்த எந்தப் பக்கங்களில் நிற்பனோ, அவ்வப்பக்கங்களை நோக்கி,

செய்யும் குணம் ஏ — செய்கின்ற வழிபாடுகள் இருந்தபடி யென்!

[என்று வியக்கிறபடி.]

285 குழலிருண்டுசுருண்டேறியகுஞ்சிக் கோவிந்தனுடையகோமளவாயில் *
குழல்முழுஞ்சுகளினூடுகுமிழ்த்துக் கொழித்தெழுந்தவமுதப்புனல்தன்னை *
குழல்முழவம்விளம்பும்புதுவைக்கோன் விட்டுசித்தன்விரித்ததமிழ்வல்லார் *
குழலிவென்றகுளிர்வாயினராகிச சாதுகோட்டியுள்கொள்ளப்படுவாரே. (கக)

இருண்டு சுருண்டு ஏறிய குழல் குஞ்சி கோவிந்தனுடைய கோமளம் வாயில் — கறுத்துச் சுருண்டு நெடுக வளர்ந்த அலகலகான மயிர்களை யுடையனனை கண்ணபிரானுடைய அழகிய வாயில்

(வைத்து ஊதப் பெற்ற)

குழல் முழங்குகளினூடு — வேய்ங்குழலினுடைய தளைகளிலே

குமிழ்த்து — நீர்க்குமிழி வடிவாகக் கிளர்ந்து

(பிறகு அது உடையப் பெற்று)

கொழித்து எழுந்த அமுதம் புனல் தன்னை — கொழித்துக்கொண்டு மேற்கிளம்பின அப்புத ஜலத்தை

குழல் முழவம் விளம்பும் புதுவை கோன் விட்டுசித்தன் — குழலோசையோ டொக்கப், [பரமபோக்யமாக] அருளிச்செய்தவரும் ஸ்ரீவில்லிபுத்தூர்க்குத் தலைவருமான பெரியாழ்வார்

விரித்த தமிழ் வல்லார் — விஸ்தாரமாகக் கூறிய இத் தமிழ்ப்பாசுரங்களை ஓத வல்லவர்கள்

குழலை வென்ற குளிர் வாயினர் ஆகி — திருக்குழலோசையின் குளிர்த்தியையுங் கீழ்ப்படுத்தித் தான் மேலாம்படி குளிர்ந்த வாய்மொழியை யுடையராய்

சாது கோட்டியுள் கொள்ளப்படுவார் — ஸ்ரீ வைஷ்ணவர்கள் கோஷ்டியில் பரிக்ரஹிக்கப்படுவார்கள்.

அடிவரவு:—காவல் இடவான் தேனுகன் முன் செம்பெரும் புவி சிறு திரண்டு கருங் குழல் ஐய.

மூன்றும்பத்து—ஏழாந்திருமொழி, ஐயபுழுதி.

(ஆழ்வார் தமது பக்தியைத் தாய்பாசுரத்தினால் வெளியிடுவது.)

286 ஐயபுழுதியுடம்பணைந்து இவள்பேச்சுமலந்தலையாய் *
செய்யதூலின்சிற்றுடை செப்பனுடுக்கவும்வல்லளல்லள் *
கையினிற்சிறுதூதையோடு இவள்முற்றில்பிரிந்துமிலள் *
பையரவணைப்பள்ளியானெடு கைவைத்திவள்வருமே. (க)

இவள் ஐய புழுதி உடம்பு அளைந்து — இச் சிறுபெண்ணானவள் அழகிய புழுதியை உடம்பிலே பூசிக்கொண்டு

பேச்சும் அலந்தலை ஆய் — ஒன்றோடொன்று அன்வயியாத பேச்சையு முடையளாய்

செய்ய தூலின் சிறு ஆடை — சிவந்த நூலாலே நெய்விக்கப்பட்ட சிற்றுடையை

செப்பன் உடுக்கவும் வல்லள் அல்லள் — செம்மையாக [அரையில்தங்கும்படி] உடுக்கவும் மாட்டாதவளாயிரா நின்றாள்,

இவள் — இப்படிக்கொத்த பருவத்தையுடையளான இவள்

சிறு தூதையோடு முற்றிலும் — (மணற்சோறுக்கும்) சிறிய தூதையையும் சிறு சுளகையும்

கையினில் பிரிந்து இலள் — கையில்நின்றும் விட்டொழிகின்றிலள்;

இவள் பை அரவு அணை பள்ளியானெடு கைவைத்து வரும் — இப்படிக்கொத்த விளையாட்டையுடைய இவள் சேஷசாயியான எம்பெருமானுடனே கைகலக்து வாராநின்றாள்.

இதற்கு உள்ளுறைபொருள் யாதெனில்; இவ்வாழ்வாருடைய ஆற்றுமையைக்கண்ட ஞானிகள் "எம்பெருமானைச் சேரப்பெறுதற்கு வேண்டிய உபாயங்கள் பூர்ணமன்றிருக்க, இவருக்கு அவ்விஷயத்திலுண்டாகிய அவகாஹம் என்னே?" என்று சொல்லும் வார்த்தை—ஸ்வாபதேசம். எம்பெருமானைச்சேர்ந்து அநுபவித்தற்கு உபகரணமான சரீரம் பிரகிருதிஸம்பந்தத்தினால் சுத்த ஸாத்விகமாகப் பெறவில்லை; அவனுடைய ஸ்வரூப ரூபகுணங்களை அடைவுபடச்சொல்ல வல்லமையில்லை; "மடிதற்றுத் தான் முந்துறும்" (திருக்குறள்) என்றபடி அரையில் ஆடையை இறுக உடுத்துக்கொண்டு முந்துற்றுக் கிளம்பும் முயற்சியில்லை; [முயற்சியை அதன் காரணத்தாற் கூறினர்.] இந்திரியங்கள் போன்ற போகோபகரணங்களை மீறவில்லை; இப்படியிருக்க இவர்க்குப் பகவத் விஷயகாரம் நேர்ந்தது கிர்ஹேதுக கிருபையினாலத்தனையென்று அறுதியிட்டவாறு. ஆழ்வார் திருவவதரித்தபொழுதே தொடங்கி எம்பெரு

மானுலல்லது செல்லாமை இப்பாட்டில் வெளியாம். ஐய என்பதைப் பெயரெச்சமாகக் கொள்ளாமல், அஹஹ! என்னும் பொருளதாகக் கொள்ளவுங்கூடும். அலந்தலை-மயக்கம். செப்பன்—செப்பம் என்றதன்போலி. தூந்தை—மகளிர் மணலில் விளையாடும்போது மணலால் சோறு சமைப்பதாகப் பாவனை பண்ணுமிடத்து அந்த மணற்சோறுக்குகைக்குக் கருவியாவது; சிறுமுட்டியென்பர். முற்றில்-சிறுமுறம். இப்பாட்டில், பருவத்துக்கும் செயலுக்கும் உள்ள பொருத்தமின்மையை இவள் இவள் இவள் என்று பல தடவைகளால் காட்டுகிறபடி. ... ... (க)

287 வாயிற்பல்லுமெழுந்தில மயிரும்முடிகூடிற்றில *
சாய்விலாதகுறுந்தலைச் சிலபிள்ளைகளோடிணங்கி *
தீயினைக்கிணங்காடிவந்து இவள்தன்னன்னசெம்மைசொல்லி *
மாயன்மாமணிவண்ணன்மேல் இவண்மாலுறுகின்றாளே. (உ)

வாயில் பல்லும் எழுந்தில — (இம்மகளுடைய) வாயிலே பற்களும் முளைக்கவில்லை;
மயிரும் முடி கூடிற்றில — மயிரும் சேர்த்து முடிக்கும் படி கூடவில்லை.
இவள் இவண் — இப்படிப்பட்ட இவள் இந்தப்பருவத்தில்
சாய்வு இலாத குறுந்தலை சிறு பிள்ளைகளோடு இணங்கி — தலைவணக்கமில்லாத தண்மையில் தலை நின்ற சில பெண்பிள்ளைகளோடு ஸஹவாஸம் பண்ணி
(அதற்குப் பலனாக)
தீ இணக்கு இணங்காடி வந்து — பொல்லாத இணக்கத்தை [களவுப் புணர்ச்சியை]ச் செய்துவந்து

(இத்தனை போது எங்குப்போனாய்! யாரோடு இணங்கி வந்தாய்? என்று நான் கேட்டால்)

தன் அன்ன செம்மை சொல்லி — தனக்கு ஒத்த வார்த்தைகளைக் கபடமற்ற வார்த்தைபோல் தோற்றும்படி சொல்லி

இவள்—;

மாயன் மா மணி வண்ணன் மேல் மாலுறுகின்றாள் — அற்புதச் செய்கைகளையும் நீலமணிநிறத்தையுமுடைய எனை கண்ணபிரான் விஷயத்தில் மோஹப்படுகிறாள்.

* * *—இளம்பருவத்தளானவிவள் தாய்க்கடங்காத சில தண்ணிய பெண்களோடு சேர்ந்து அதுஅடியாகப் பகவத்விஷயத்திலே ஊன்றி, அவ்வூற்றத்தை மறைப்பதற்காகச் சில பொய்களைப்பேசி, 'கண்ணா! மணிவண்ணா!' என்று இடைவிடாது வாய்வெருவுகின்றாளென்று கூறியவாறு.

குறுந்தலை—குறுமையில் தலைநின்ற=நீசர் வகுப்பில் முதல்நின்ற என்றபடி. [தீயிணைக்கிணங் காடிவந்து] தன்னோடு கலந்தவர்களைத் தாய்க்கடங்காதபடி கலக்கறுக்கவல்ல பகவத்விஷயத்திலே அவகாஹித்து என்றபடி. தன் அன்ன—குறிப்புப்பெயரெச்சமன்று; இரண்டாம் வேற்றுமையுருபு தொக்கது. தான் எவ்வளவு ரஜஸ்வாக இருக்கின்றாளோ, அவ்வளவு ரஜஸ்வாயுள்ள வார்த்தைகளைச் சொல்லி என்று எதிர் மறையிலக்கணையாகக் கூறியவாறு. (உ)

288 பொங்குவெண்மணற்கொண்டு சிற்றிலும்முற்றத்திழைக்கலுறில் *
சங்குசக்கரந்தண்டுவாள் வில்லுமல்லதிழைக்கலுறாள் *
கொங்கையின்னங்குவிந்தெழுந்தில கோவித்தனெடிவளோ *
சங்கையாகியென்னுள்ளம் காடொறுந்தட்டுளுப்பாகின்றதே. (ங)

(இவள்,)
பொங்கு வெள் மணல் கொண்டு — நுண்ணியதாய் வெளுத்திராநின்ற மணலாலே
முற்றத்து சிற்றில் இழைக்கலுறிலும் — முற்றத்திலே கொட்டகத்தை நிர்மாணஞ் செய்யத் தொடங்கினாலும்
சங்கு சக்கரம் தண்டு வாள் வில்லும் அல்லது இழைக்கலுறாள் — சங்கு முதலியஎம்பெருமான் சின்னங்களையொழிய (மற்றொன்றையும்) இழைக்க நினைப்பதில்லை;
(இவளுக்கோவென்றால்)

இன்னம் கொங்கை குவிந்து எழுந்தில — இன்றளவும் முலைகளானவை முகம் திரண்டு கிளர்ந்தனவில்லை;
இவளோ — இப்படி இளம்பருவத்தளானஇவளோ
கோவித்தனெடி சங்கை ஆகி — கண்ணபிரானோடு சம்பந்தமுடையவளாகச் சங்கித்து
என் உள்ளம் நாள் தொறும் தட்டுளுப்பாகின்றது — என் நெஞ்சமானது ஸர்வகாலமும் தடுமாறிச் செல்லாகின்றது.

* * *—இம்மகளே வெளியிற் புறப்படவொட்டிலன்றே இவள் தீயிணக்கிணங்காடிவரு, இன்றுள், இனி உள்முற்றத்திலிருந்துகொண்டே விளையாடச் சொல்லுவோமென்று, தாயாகிய நான் அங்ஙனமே நியமித்துவைத்தால், இவள் முற்றத்தில் சிற்றிலிழைக்க ஒருப்பட்டாலும் எம்பெருமானது பஞ்சாயுதங்களை இழைக்கின்றாளேயொழிய வேறு சிற்றிலிழைப்பதில்லை; தலைமகளை வசப்படுத்துதற்கு முக்கியஸாதநமான மூலிகளோ, ஆண்மூலிக்கும் பெண்மூலிக்கும் மூள்ள வாசிதோற்ற முகந்திரண்டு இவளுக்குக் கிளரவில்லை; இப்படிக்கொத்த இவளது இளமையைப்பார்த்தால் "தலைமகளைடு இவள் இணங்கினள்" என்ன முடியவில்லை; இவள் செய்யும்படிகளைப்பார்த்தால் அவ்விணக்கம் சங்கிக்கும் படியாயிருக்கின்றது; ஆகையால் ஒன்றையும் நிர்ணயித்தறியுமாட்டாமையாலே என்நெஞ்சு தடுமாறு நின்றதே! என்கிறாள். தட்டுளுப்பு—தடுமாற்றம். ... ... (கூ)

289 ஏழைபேதையோர்பாலகன்வந்து என்பெண்மகளையேள்கி *
தோழிமார்பலர்கொண்டுபோய்ச் செய்தசூழ்ச்சியையார்க்குரைக்கேன் *
ஆழியானென்னுமாழமோழையில் பாய்ச்சியகப்படுத்தி *
மூழையுப்பறியாததென்னும் மூதுரையுமிலளே. (சு)

ஏழை பேதை ஓர் பாலகன் என் பெண்மகளை — சாபல்ய முடையவளும் அறியாமை யுடையவளும் இளம்பருவத்தை யுடையளுமான எனது பெண் பிள்ளையை

தோழிமார்பலர்வந்து எள்கி கொண்டு போய் — பல தோழிகள் அணுகிவந்து (விளையாடவரவேணு மென்று) வஞ்சித்து அழைத்துக்கொண்டுபோய்

ஆழியான் என்னும் — ஸர்வேச்வரன் என்று ப்ரஸித்தமான

ஆழம் மோழையில் — ஒருவராலும் நிலைகொள்ள வொண்ணாத கீழ்ற்றில்

பாய்ச்சி — உள்ளுறத்தள்ளி

அகப்படுத்தி — (அதிலே) அகப்படுத்தி

செய்த சூழ்ச்சியை ஆர்க்கு உரைக்கேன் — (இவ்வாறு) செய்த கபடத் தொழில்களை யாரிடம் முறையிடுவேன்?;

(இம்மகளோ வென்றால்)

மூழை உப்பு அறியாதது என்னும் மூதுரையும் இலள் — "அகப்பையானது (பதார்த்தத்தின்) ரஸத்தை அறியாது" என்கிற பழமொழியின் அறிவையும் தன்னிடத்து உடையவளல்லள்.

* * *—கண்டதொன்றை ஆசைப்படும்படியான அறியாமைக்குக் காரணமாகிய இளம் பருவத்தை யுடையளான என்மகளை அவளுடைய பலதோழிகள் விளையாட்டுக்கென்று கூட்டிக்கொண்டு போய்ச் செய்த ஒரு அகார்த்தத்தை நான் யாரிடம் முறையிட்டுக் கவலைதீர்வேன்? அவர்கள் செய்தது என்னெனில்; ஸர்வேச்வரன் என்று மேல்வேஷம் பூண்டுள்ள ஒரு ஆழமான ஆற்றினுள்ளே இவளைத் தள்ளிக் கரையேறமாட்டாது அலமரும்படியன்றே செய்தது; இவ்வலமாப்புக்கு என்மகள் உரியளோ? இவளது பருவம் எதுவாயிருந்தது? சமையற்பாத்திரத்தில் அகப்பையையிட்டுத் துழாவினால் அந்த அகப்பைக்குச் சோற்றின் சுவையை அறிய வல்லமையில்லை என்கிற இவ்வளவு அறிவும் இவளுக்கு இல்லையே; ஆனபின்பு பருவம் இப்படிக்கொத்ததாயிருக்க, இவளைத் தோழிகள் படுத்தும் பாடு என்னே! என்று தன்னிலே தான் முறையிட்டு வருந்தியவாறு.

"ஏழை பேதையோர் பாலிகை" எனப் பெண்பாலாகக் கூறவேண்டுமிடத்துப் பாலகன் என ஆண்பாலாகக்கூறியது—உவப்பினாலாகிய பால்வழுவமைதியாம்: தன் புத்திரனை "என் அம்மை வந்தாள்" என உவப்பினால் பெண்பாலாகக் கூறுமிடமுமுண்டு; "உவப்பினு முயர்வினுஞ் சிறப்பினுஞ் செறவினும், இழிப்பினும் பால்நிலையிழுக்கினு மியல்பே" என்பது நன்னூல்.

பகவத்விஷயத்திலே பேரவாக்கொண்டுள்ள இவ்வாழ்வாரைப் பாகவதர் கொண்டுபோய் பகவத் ஸந்நிதியிற் சேர்த்தமையை அன்பர் கூறுதல், இதற்கு உள்ளுறைபொருள். இவர்க்கு லௌகிகவ்யவஹாரங்களில் உணர்த்தி செல்லாமையைக் கூறுவது—ஈற்றடி. ... ... (சு)

290 காடுமுருமறியவேபோய் கல்லதுழாயலங்கல்
சூடி * நாரணன்போமிடமெல்லாஞ் சோதித்துழிதருகின்றாள் *
கேடுவேண்டுகின்றார்பலருளர் கேசவனேடிவளை *
பாடுகாவலிடுமினென்றென்று பார்தடுமாறினதே. (எ)

காடும் ஊரும் அறிய போய் — விசேஷ ஜ்ஞாநிகளும் ஸாமாந்ய ஜ்ஞாநிகளும் அறியும்படியாக [பஹிரங்கமாக] வீட்டைவிட்டுப் புறம்பேபோய்

கல்ல துழாய் அலங்கல் சூடி — பசுமை மாறாத திருத்துழாய் மாலையை (பகவத் ப்ரஸாதமென்று சொல்லிக் கொண்டு) தரித்துக் கொண்டு

நாரணன் போம் இடம் எல்லாம் சோதித்து உழிதரு கின்றாள் — எம்பெருமான் போகிற இடம் முழுவதும் தேடித் திரியாநின்றாள்;

கேடு வேண்டு கின்றார் பலர் உளர் — "(இக்குடிக்குக்) கேடுவிளைய வேணுமென்று கோரு மவர்கள் பலபேருண்டு;

(ஆகையால்)

இவளை கேசவனோடு பாடுகாவல் இடுமின் என்று என்று — எம்பெருமானைத் தேடித்திரி கிற இவளை (அந்த) எம் பெருமானோடு (சேர்ப்பதற் கான அந்தப்புரத்திற் கொண்டுபோய்) அருகு காவலிடுங்கள்" என்று இதையே பலகாலும் சொல்லிக்கொண்டு

பார் தடுமாறினது — பூமியிலுள்ள அதுகூல ஜநமானது மனங்குழம்பிச் செல்லாகின்றது.

* * *—"வேதம் வல்லார்களைக் கொண்டு விண்ணோர் பெருமான் திருப்பாதம் பணிந்து" என்ற படி-பாகவதர்களின் புருஷகாரத்தை முன்னிட்டு எம்பெருமானைப் பற்றுதல் முறைமையாயிருக்க, தனது அவாவின் மிகுதியாலே பதறி அம்முறையைமீறி எம்பெருமானைப் பற்ற நினைத்த ஆழ்வாருடைய ப்ரவ்ருத்திசைலியைக்கண்ட அன்பர் 'ப்ரபந்ந ஸந்தாநத்திற்கு இது ஸ்வரூப விருத்தம்' என்றறுதியிட்டு, பாகவத புருஷகார புரஸ்ஸரமாக இவரை அங்குச் சேர்க்கலுற்றபடியைக் கூறுதல், இதற்கு உள்ளுறைபொருள். ... ... (சு)

291 பட்டங்கட்டிப்பொற்றேடுபெய்து இவள்பாடகமுஞ்சிலம்பும் *
இட்டமாகவளர்த்தெடுத்தேனுக்கு என்னெஞ்சிருக்கலுற்றாள் *
பொட்டப்போய்ப்புறப்பட்டுநின்று இவள்பூவைப்பூவண்ணனென்னும் *
வட்டவார்குழல்மங்கைமீர் இவள்மாலுறுகின்றாளே. (சூ)

வட்டம் வார் குழல் மங்கைமீர் — சுருட்சியையும் நீட்சியையும் முடைய கூந்தலையுடைய மாதர்காள்!,

(இம்மகளுக்கு)

பட்டம் கட்டி — (நெற்றிக்கு அணியான) பட்டத்தைக் கட்டியும்

பொன் தோடு பாடகமும் சிலம்பும் பெய்து — (காதுக்கு அணியான) பொன் தோட்டையும் (கழலணியான) பாடகத்தையும் சிலம்பையும் இட்டும்

இவள் இட்டம் ஆக வளர்த்து எடுத்தேனுக்கு என்னெஞ்சு — இவளுடைய இஷ்டாநுஸாரமாக (இவளை) வளர்த்தெடுத்த என்னெஞ்சு

இவள் இருக்கலுற்றாள் — இவள் இருக்கமாட்டேனென்கிறாள்;

(பின்னை என் செய்கின்றாளெனில்;)

பொட்ட போய் புறப்பட்டு நின்று — திடீரென்று என்னைக் கைவிட்டுப் (பல்லாருங்காணத் தெருவிலே) புறப்பட்டு நின்று

பூவைப் பூ வண்ணன் என்னும் — "காயாம்பூப்போன்ற மேனி நிறமுடைய கண்ணபிரானே!" என்று வாய்விட்டுக் கூப்பிடா நின்றாள்;

(அவ்வளவில் அவன் அருகுவாரா தொழியில்)

இவள் மாலுறுகின்றாள் — இவள் மோஹத்தை யடைகின்றாள்.

* * *—ஸ்வாபதேசத்தில், பட்டம் பாடகம் முதலிய ஆபரணங்களாவன—ஆசிரியன் உண்டாக்குகின்ற நாமரூபங்களும், பகவத் ப்ரணமாகிகளும், பின்பு ஆசார்யவைபவத்தை உணர்த்தி அவனுக்குண்டாக்கும் சேஷத்வஜ்ஞாநாதிகளுமாகிற ஆத்மாலங்காரங்கள். ஆழ்வார் தமக்கு இவ்வகை ஆத்மாலங்காரங்களை உண்டாக்கின ஆசார்யர்களிடத்துள்ள நிஷ்டை மாத்திரத்தால் பர்யாப்திபெறுமல், எம்பெருமானெழுந்தருளியிருக்குமிடமான பல திருப்பதிகளிற்சென்று ஆழ்ந்திடுதலைக் கூறுதல், இதற்கு உள்ளுறைபொருள். ... ... (சூ)

292 பேசுவந்தரியாதபெண்மையின் பேதையேன்பேதையிவள் *
கூசமின்றிநின்றார்கள்தம்மெதிர் கோல்கழிந்தான்முழையாய் *
கேசவாவென்றுங்கேழலென்றுங் கிஞ்சுகவாய்மொழியாள் *
வாசவார்குழல்மங்கைமீர் இவள்மாலுறுகின்றாளே. (எ)

வாசம் வார் குழல் மங்கைமீர்	வாஸனையையும் நீட்சியையு முடைய கூந்தலையுடைய பெண்காள்!
பேதையேன் பேதை	பேதைமையையுடைய ளான என்னுடைய பெண் பிள்ளையும்
பேசவும் தரியாத பெண்மையின்	(தன்னுடைய ஆசாரத்துக்கு ஒரு கெடுதி விளைந்ததாகப் பிறர்) ஒரு வார்த்தை சொன்னாலும் (அதைப்) பொறுக்கமாட்டாத ஸ்த்ரீத்வத்தை யுடையவளும்,
கிஞ்சுகம் வாய் மொழியாள்	கிளியினுடைய வாய்மொழி போன்ற இனிய வாய் மொழியையுடையளுமான
இவள்	இவள்,
நின்ருர்கள் தம் எதிர்	மர்யாதை தவருமல் இருக்கு மவர்கள் முன்னே,
கூசம் இன்றி	கூச்சமில்லாமல்
கோல் கழிந்தான் மூழை ஆய்	கோலைவிட்டு நீங்கின அகப் பைபோல
(என்னோடு உறவற்றவளாய்க்கொண்டு)	
கேசவா என்றும்	கேசவனே! என்றும்
கேடு இலீ என்றும்	அழிவற்றவனே! [அச்யு தனே!] என்றும் வாய் விட்டுச்சொல்லி
இவள் மாலுறு கின்ருள்	இவள் மோஹமடையா கின்ருள்;

[எ-இரக்கம்]

* * *—ஸ்த்ரீத்வத்துக்கு ஏற்ற குணங்களில் ஒன்றுக்கும் ஒரு கேடு விளைபாதபடி மர்யாதை முறைமையில் தான் ஒழுங்குபட நிற்பதும் தவிர அக்குணங்களுக்குக் கெடுதிவிளைந்ததாக ஒருவர் ஒரு பேச்சுப் பேசினால் அத்தைக்கேட்டு ஸஹித்திருக்கவும் மாட்டாத ஸந்நிவேசத்தில் அமைந்திருந்த எனது பெண்பிள்ளை இன்று செய்தபடியைப் பார்த்தால், முன்பு தான் நின்ற நிலைமைக்கு எதிர்த்தட்டாயிருக் கின்றது; அது என்? எனில்; இன்றளவும் அடக்கத்துடன் ஒடுங்கியிருந்த இவள் இன்று காம்பைவிட்டு நீங்கின அகப்பைபோல் தாயாகிய என்னை அன்று கூச்சமின்றித் தெருவில் புறப்பட்டுக் கண்ணன் பெயர்களைக் கூவியழைத்து அவன் வரவைக் காணுமல் மயக்கமுறுகின்ருள்; இது, தான் முன்புகின்ற நிலைமைக்குப் பொருந்தியவாருமோ? என்றவாறு. கோல்கழிந்தான் மூழையாய் - கோல் கழிந்த மூழையாய் என்றபடி.

ஸர்வசேஷியான எம்பெருமானது பொருளாகிய இவ்வாத்ம வஸ்துவை அவன்ருனே வந்து கைக்கொண்டுபோகிற போமதொழிய, அவனிருப்பிடத்துக்கு நாமாகச் சென்று நிற்றல் ஸ்வரூபவிருத் தமாமெனத் துணிந்து அவ்வுறுதியுடன் ப்ரபந்நஸந்தாநமர்யாதையில் வழுவாது நிற்பதுந்தவிர, "ஸ்வரூப விருத்தமான செய்கையைச் செய்தார்" என்று பிறர்பேசிலும் மாற்றும்படியான நிலைமையில் நின்ற ஆழ்வார் க்ரமப்ராப்திபற்றுமல் பதறி பகவத் ஸந்நிதியிற் போய்ப்புகுந்து அவனது திருநாமங்களை அநு ஸந்தித்துப் பிச்சேறினபடியை அன்பர் கூறுதல், இதற்கு உள்ளுறைபொருள். ... (எ)

293 காறைபூணுங்கண்ணுடிகாணும் தன்கையில்வளைகுலுக்கும் *
கூறையுடுக்குமயர்க்கும் தன்கோவ்வைச்செவ்வாய்திருத்தும் *
தேறித்தேறிநின்றுயிரம்பேர்த் தேவன்திறம்பிதற்றும் *
மாறில்மாமணிவண்ணன்மேல் இவள்மாலுறுகின்ருளே. (அ)

இவள்	இப் பெண்பிள்ளையானவள்
காறை பூணும்	பொற்காறையை(தன் கழுத்தில்) பூணு நின்ருள்;
(அக்காறையுங் கழுத்துமான அழகை)	
கண்ணுடி காணும்	கண்ணுடிப் புறத்தில் காணு நின்ருள்;
தன் கையில் வளை குலுக்கும்	தன் கையிலிருக்கிற வளையல்களைக் குலுக்கா நின்ருள்;
கூறை உடுக்கும்	புடவையை (ஒழுங்குபட) உடுத்துக் கொள்ளா நின்ருள்;
(அவன் வரவுக்கு உடலாக இவ்வளவு அலங்கரித்துக்கொண்ட வளவிலும் அவன் வரக்காணுமையாலே,)	
அயர்க்கும்	தளர்ச்சியையடையா நின்ருள்;
(மறுபடியும் தெளிந்து இதற்குமேலாக அலங்கரித்துக்கொள்ளத் தொடங்கி)	
தன் கொவ்வை செம் வாய் திருத்தும்	கோவைக்கனிபோலச் சிவந்துள்ள தன் அதரத்தைத் (தாம்பூல சர்வணைகளால்) ஒழுங்குபடுத்தா நின்ருள்;
தேறித் தேறி நின்று	மிகவும் தெளிந்துநின்று
ஆயிரம் பேர் தேவன் திறம் பிதற்றும்	ஸஹஸ்ரநாமப் பொருளான எம்பெருமானுடைய குணங்களை வாய் புலற்றுநின்ருள்;
(அதன்பிறகு)	
மாறு இல் மா மணி வண்ணன் மேல் மாலுறுகின்ருள்	ஒப்பற்றவனும் நீலமணி போன்ற நிறத்தையுடையனுமான (அக்) கண்ணபிரான் மேல் மோஹிபாநின்ருள்.

* * *—எம்பெருமானது வரவை எதிர்பார்த்திருந்த என்மகள் தன் ஆற்றமையாலே ஏதேனு மொன்றைச் செய்து நாம் அவனைப் பெறவேணும்' என்று நினைத்து; 'அவன் மனமிழுப்புண்ணுமாறு நாம் நம்மை அலங்கரித்துக்கொண்டால் அவன் தானேவந்து மேல்விழுவன்' என்று, முதன் முதலாக அவன் கண்டு மகிழ்ந்து கட்டிக்கொள்ளுமிடமான கழுத்தைக் கண்டிகை முதலிய பூஷணங்களால் அலங்கரித்து, அவ்வலங்காரம் அவன் உகக்கும்படி வாய்த்ததா என்பதை உணருகைக்காக அவ்வழகைக் கண்ணுடிப் புறத்திலே காண்பதும், இம்மனோரதமடியாக உடம்பில் ஒரு பூரிப்புத்தோற்றுகையால் அதன் அளவை அறிகைக்காகக் கைவளைகளை அசைத்துப் பார்ப்பதும், அவன் உகக்கத்தக்க பட்டுப் புடவையை அவன் வருமளவும் களைவதும் உடுப்பதும், இப்படி அவன் வரவுக்கு உடலாகத் தன்னை அலங்கரித்தவளவிலும் அவன் வரக்காணுமையாலே அறிவழியா நிற்பதும், மீண்டும் அறிவு குடிபுகுந்து 'இன்னமும் அவன் விரும்பி வருகைக்கு உடலாகச் சில அலங்காரங்களைச் செய்துகொள்வோம்' என்று தனது கொவ்வைக் கனிவாயைத் தாம்பூல சர்வஞ்ஞிகளால் மிகவுஞ் சிவக்குமாறு பரிஷ்கரிப்பதுமாயிருந்துகொண்டு, அவ்வளவிலே தனது அலங்காரவ்கைகள் நன்கு வாய்த்தமையையும், ஆசாலேசமுடையாரையும் விரும்பிக் கைக்கொள்ளுகையாகிற அவனுடைய சீர்மையையும் அநுஸந்தித்துத் தெளிந்துநின்று வரவை யெதிர்பார்க்க, அவ்வளவிலும் அவன் வரக்காணுமையாலே மோஹமடையாகின்றாளென்றவாறு. ... ... (அ)

294 கைத்தலத்துள்ளமாடழியக் கண்ணுலங்கள்செய்து * இவளை
வைத்துவைத்துக்கொண்டென்னவாணிபம் நம்மைவடுப்படுத்தும் *
செய்த்தலையெழுநாற்றுப்போல் அவன்செய்வனசெய்துகொள்ள *
மைத்தடமுகில்வண்ணன்பக்கல் வளரவிடுமின்களே. (கூ)

கைத்தலத்து உள்ள மாடு அழிய — கையிலுள்ள பணத்தைச் செலவழித்து
கண்ணுலங்கள் செய்து — (இவளுக்குச் செய்ய வேண்டிய) கல்யாணங்களைப் பண்ணி
இவளை — (நமக்கடங்காத) இவளை
வைத்து வைத்துக் கொண்டு — நியமித்தும் காவலிட்டும் வைத்துக் கொண்டிருப்பதனால்
என்ன வாணிபம் — என்ன பயனுண்டாம்;
(பயனுண்டாகாதொழிவது மன்றி)
நம்மை வடுப்படுத்தும் — நமக்கு அவத்யத்தையும் உண்டாக்கும்;
(என்று தாயாராகிய நான் சொல்ல,
இதைக்கேட்ட பந்துக்கள்)

செய்தலை எழுநாற்று போல் — "வயலிலே வளர்ந்த நாற்றை அவ்வயலுக் குடையவன் தன் இஷ்டப்படி விநியோகங்கொள்வதுபோல,
(இவளையும்)
அவன் செய்வன செய்து கொள்ள — (ஸ்வாமியாகிய) அவன்தான் செய்ய நினைத்தவற்றை (த் தடையற) ச் செய்து கொள்ளும்படி
மை தடமுகில் வண்ணன் பக்கல் வளர விடுமின்கள் — கறுத்துப் பெருத்த மேகம் போன்ற வடிவையுடைய அக் கண்ணபிரானிடத்தில் (இவள்) வாழும்படி (இவளைக் கொண்டுபோய்) விட்டுவிடுங்கள்"
(என்கிறார்கள் என்று, தாய் தானே சொல்லுகிறபடி.)

* * *—நம்குடிக்காக இவளொரு பெண்தானே உள்ள் என்று அன்பு மிகுதியால் கையிலுள்ள செல்வத்தையடையச் செலவழித்து இவளுக்குச் செய்யவேண்டிய மங்கள காரியங்களையெல்லாஞ் செய்து இவளை நாம் காத்துவருவதனால் நமக்கு இறையும் பயனின்றி யொழிந்தமாத்திரமே யல்லாமல் இவளது நடத்தையினால் நமக்குப் பெருப்பெருத்த பழிகளும் விளையாநின்றன! என்று கலங்கிப்பேசின தாயை நோக்கி, பந்துக்கள், ஒருவன் தன் க்ஷேத்திரத்தில் உள்ள காற்றைத் தன் கருத்துக்கொத்தபடி தான் விநியோகப்படுத்திக்கொள்வதுபோல, ஸர்வேச்வரன் தனது உடைமையான இவளைத் தன் நினைவின்படி உபயோகப்படுத்திக்கொள்ளுமாறு இவளை அவனிடத்திற்கொண்டு சேர்த்துவிடுங்கள்என்று கர்த்தவ்ய நிரூபணம்பண்ணிக் கூறினபடியைத் தாய் கூறினளென்க. மாடு—செல்வம்; "மாடு பொன் பக்கம் செல்வம்"என்பது நிகண்டு. வடுப்படுத்துதல்-குறைவு படுத்துதல். செய்-வயல். தலை-ஏழனுருபு. (கூ)

295 பெருப்பெருத்தகண்ணுலங்கள்செய்து பேணிகம்மில்லத்துள்ளே *
இருத்துவானெண்ணிராமிருக்க இவளுமொன்றெண்ணுகின்றாள் *
மருத்துவப்பதம்நீங்குளென்னும் வார்த்தைபடுவதன்முன் *
ஒருப்படுத்திடுமினிவளை உலகளந்தானிடைக்கே. (எ)

(இவளுக்கு)
பெருப் பெருத்த கண்ணுலங்கள் செய்து — மிகவும் விசேஷமான கல்யாண காரியங்களைச் செய்து
பேணி நம் இல்லத் துள்ளே இருத்து வான் எண்ணி நாம் இருக்க — அன்பு பூண்டு நம் வீட்டுக் குள்ளேயே (இவளை) இருக்கச்செய்வதாக நாம் நினைத் திருக்க,
இவளும் ஒன்று எண்ணுகின்றாள் — இவளோ வென்றால் (நம் எண்ணத்துக்கு விபரீத மாக) மற்றொன்றை எண்ணுகின்றாள்.

(என்று தாயாகிய நான் சொல்ல, இதைக்கேட்ட பந்துக்கள்)

மருத்துவப் பதம் நீக்கினுள் என்னும் வார்த்தை படுவதன் முன் — வயித்தியன் தான் செய்யும் மருந்தில் பதம் பார்த்துச் செய்யாவிடில் அது கை தவறுவதுபோல, இவள் பதம்பார்த்து நாம் செய்யாமையாலே இவள் கைகழிந்தாளென்கிற அபவாதம் பிறப்பதற்கு முன்
இவளை — இவளை
உலகு அளந்தானிடைக்கே — உலகளந்தருளின கண்ணபிரானிடத்திலேயே (கொண்டுபோய்)
ஒருப்படுத்திடுமின் — சேர்த்துவிடுங்கள்.

(என்று கூறியதைத் தாய் கூறுகின்றாள்.)

* * *—இப்பெண்பிள்ளைக்கு அவ்வக்காலங்களில் செய்யவேண்டிய மங்கள காரியங்களை விசேஷ விபவமாகச்செய்து மிக்க அன்புபாராட்டி நம் அகத்திலேயே இவளை வளர்ப்பதாக நினைத்திருக்கும் நமது நினைவுக்கு நேர்மாறுபாடாக இவள் வெளிப்புறப்படுவதாக நினைத்திருக்கின்றாளே! என்று கலங்கிக் கூறின தாயை நோக்கி பந்துக்கள், அங்ஙனமில் இவளை இப்போதே கண்ணபிரானிடத்திற் கொண்டுபோய்ச் சேர்த்து விடுதலே நலுகிப்போம்; அல்லாவிடில், வைத்யன் தான் செய்கிற ஔஷதத்தில் பாகம்பார்த்துச் செய்யாதபோது, அம்மருந்து கைதவறிப்போவதுபோல, இவள் பதம்பார்த்து நாம் செய்யாமையாலே இவள் கைகழியப் போனாள் என்று பெருத்ததொரு லோகாபவாதம் பரவி விடுமென்று கர்த்தவ்ய நிரூபணம்பண்ணிக் கூறியபடியைத் தாய் கூறினளென்க, ... (ம)

296 ஞாலமுற்றுமுண்டாலிலைத்துயில் காராயணனுக்கு * இவள்
மாலதாகிமகிழ்ந்தனளென்று தாயுரைசெய்ததனை *
கோலமார்பொழில்சூழ்புதுவையர்கோன் விட்டுசித்தன்சொன்ன
மாலைபத்தும் * வல்லவர்கட் கில்லைவருதுயரே. (ஙக)

இவள் — "இப்பெண்பிள்ளையானவள்,
ஞாலம் முற்றும் உண்டு ஆல் இலையில் நாராயணனுக்கு — எல்லாவுலகங்களையும் திருவயிற்றிலே வைத்து நோக்கி, ஒரு ஆலந்தளிரிலே கண்வளர்ந்தருளின எம்பெருமான் விஷயத்தில்
மால் அது ஆகி (அவனை அடைக்கவேண்டுமென்ற மநோரதத்தினால்) மகிழ்ந்தனள் என்று மனமுகந்தாள்" என்று — மோஹத்தையுடையளாய்

தாய் உரை செய்ததனை — தாய் சொல்லியதை,
கோலம் ஆர் பொழில் சூழ் புதுவையர் கோன் விட்டு சித்தன் சொன்ன — அழகு நிறைந்த சோலைகளாலே சூழப்பட்ட ஸ்ரீவில்லி புத்தூரிலுள்ள வர்க்குத் தலைவரான பெரியாழ்வார் அருளிச்செய்த
மாலை பத்தும் வல்லவர்கட்கு — சொல்மாலையாகிய இப்பத்துப்பாட்டையும் ஓதவல்லவர்களுக்கு
வரு துயர் இல்லை — வரக்கூடிய துன்பம் ஒன்றுமில்லை.

அடிவரவு:—ஐய வாயில் பொங்கு ஏழை நாடு பட்டம் பேச கறை கைத்தலம் பெரு ஞாலம் நல்ல.

மூன்றும்பத்து—எட்டாந்திருமொழி, நல்லதோர் தாமரைப்பொய்கை.

[இதுவும் ஆழ்வார் தாய்ப்பாசுரமாகக் கூறுவது.]

தன் மகளுக்கு எம்பெருமான் பக்கலுள்ள அன்புமிகுதியைக்கண்ட திருத்தாயார் இவளுக்கு அவனோடு கலவி உண்டாயிற்றென்று தானறிந்தும் "லோகாபவாதம் பிறப்பதற்குமுன் இவளை அவன் பக்கலில் கொண்டுபோய்ச் சேர்த்துவிடுங்கள்" என்று பந்துக்கள் சொல்லிய பின்பும் அவளைத்தாயார் எம்பெருமான் பக்கலிற் கொணர்ந்து சேர்க்காதொழிகையாலே, அவன்றானே ஏகாந்தமாக இரவில்

வந்து, ஒரு படுக்கையில் தாயுடன் படுத்திருந்த இவளை எழுப்பித் திருவாய்ப்பாடியேறக் கொண்டுபோக; பிறகு கண்விழித்த திருத்தாயார் படுக்கையில் பெண்ணைக்காணுமல் பலவகையாகக் கதறின படியைக் கூறுவது இத்திருமொழி.

இதனால், இவ்வாழ்வார்க்குப் பகவத் விஷயத்திலுள்ள அதிகவேசாதிசயம் சொல்லியவாறு. பெரிய திருமொழியில், "கள்வன் கொல் யானறியேன்" என்ற திருமொழியை ஒரு புடை ஒத்திருக்கும் இத்திருமொழி. ... ...

297 நல்லதோர்தாமரைப்பொய்கை நாண்மலர்மேற்பனிசோர *
அல்லியுந்தாதுமுதிர்ந்திட்டு அழகழிந்தாலொத்ததாலோ *
இல்லம்வெறியோடிற்றுலோ என்மகளேயெங்குங்காணேன் *
மல்லரையட்டவன்பின்போய் மதுரைப்புறம்புக்காள்கொலோ. (க)

நல்லது ஓர் தாமரை பொய்கை — அழகிய ஒரு தாமரைக்குள மானது (தன்னிடத்துள்ள)
நாள் மலர் மேல் பனி சோர — அப்போதலர்ந்த பூவின்மேல் பனி பெய்ததனால்
அல்லியும் தாதும் உதிர்ந்திட்டு — (அம்மலரினது) உள்ளிதழும் புறவிதழும் உதிரப்பெற்று
அழகு அழிந்தால் ஒத்தது — அழகு அழியப் பெறுவது போல,
இல்லம் வெறி ஓடிற்று — (இவ்) வீடான து வெறிச் சென்றிருக்கிறது;
என் மகளே எங்கும் காணேன் — என் பெண்பிள்ளையை ஓரி டத்திலும் கா ண் கி ன் றி லேன்;
மல்லரை அட்டவன் பின் போய் — மல்லர்களை அழித்த கண்ண பிரான் பின்னேபோய்
மதுரைப் புறம் — மதுரைக்கு அருகிலுள்ள திருவாய்ப்பாடியில்
புக்காள்கொல் ஓ — புகுந்தாளாவள் கொல் ?.

298 ஒன்றுமறிவொன்றில்லாத உருவறைக்கோபாலர்தங்கள் *
கன்றுகால்மாறுமாபோலே கன்னியிருந்தாளைக்கொண்டு *
நன்றுங்கிறிசெய்துபோனன் நாராயணன்செய்ததீமை *
என்றுமெமர்கள்குடிக்கு ஓரேச்சுக்கொலாயிடுங்கொலோ. (உ)

ஒன்றும் அறிவு ஒன்று இல்லாத — பொருந்திய ஞானம் சிறிது மில்லாதவர்களும்
உரு அறை கோபாலர் தங்கள் — ரூபஹீநர்களுமான இடையரானவர்கள்
கன்று கால் மாறும் ஆ போலே — கண்ணுக்கழகிய கன்றுகளை உடையவர்க ளறியாமல் களவிலே கொ ண் டு போவது போல,
கன்னி இருந்தாளை — கன்னிகைப் பருவத்தளாய் ளனக்கடங்கியிருந்த பெண்ணை
நன்றும் கிறி செய்து — நல்ல உபாயங்களைப்பண்ணி
கொண்டுபோனன் — (தெரியாமல்) அபஹரித்துக் கொண்டு போன
நாராயணன் செய்த தீமை — கண்ணபிரான் செய்த தீம் பானது
எமர்கள் குடிக்கு — எங்கள் குலத்துக்கு
என்றும் ஓர் ஏச்சு ஆயிடும் கொல் ஓ — சாச்வதமான ஒரு பழிப்பா கத் தலைக் கட்டுமோ ?.

கன்றுகால் மாறுதலாவது:—தியவையாயுள்ள தங்கள் கன்றுகளை "உங்களுடையவை" என்று பிறர்க்குக்காட்டி, நல்லவையாயுள்ள அவர்கள் கன்றுகளைத் தங்களுடையனவாக்கிக்கொள்ளுதலும் பிறருடைய அழகிய கன்றுகளை உடையவர்களறியாமல் களவு வழியால் நிலைபேர்த்துக்கொண்டு போதலுமாம், பிற்பட்ட பொருளே இவ்விடத்துக்குச் சேருமெனக் கொள்ளப்பட்டது. இங்கு நன்றுங் கிறி செய்கையாவது - பகலிற் கொண்டுபோனால் பலரறிந்து நிஷேதிக்கக் கூடுமென்று, அனைவரு முறங்கும்போதுபார்த்துக் கொண்டுபோதல். இப்படி இவன் செய்த தீமையானது குற்றமற்ற எங்கள் குடிக்கு ஸ்தாவரமான பழிப்பாகுமோ ? அன்றி, எம்பெருமான்றானே வந்து கைக்கொண்டு போயின னென்று இக்குடிக்கு ஏற்றமாமோ ! என்பது நான்காமடியின் கருத்து. ... (உ)

299 குமரிமணஞ்செய்துகொண்டு கோலஞ்செய்திலத்திருத்தி *
தமருப்பிறருமறியத் தாமோதரற்கென்றுசாற்றி *
அமரர்பதியுடைத்தேவி அரசாணியைவழிபட்டு *
துமிலமெழப்பறைகொட்டித் தோரணம்காட்டிடுங்கொலோ. (ங)

குமரி மணம் செய்து கொண்டு — கன்னிகை யவஸ்தையிற் செய்ய வேண்டிய மங்கள விசேஷத்தைச் செய்து,

கோலம் செய்து — (ஆடை ஆபரணங்களால்) அலங்கரித்து

இல்லத்து இருத்தி — விவாஹமந்திரத்தில்உட்கார வைத்து,

தமரும் பிறரும் அறிய தாமோதரற்கு என்று சாற்றி — பந்துவர்க்கங்களும் மற்று முள்ள உதாஸீநர்களும் அறியும்படி "(இவள்) கண்ணபிரானுக்கு (க் கொடுக்கப்பட்டாள்)என்று சொல்லி,

(பிறகு)

அமரர் பதியுடை தேவி — தேவாதி தேவனை கண்ணபிரானுக்கு மஹிஷியாகப் பெற்ற என்மகள்

(ஜாதிக்குத்தக்க ஒழுக்கமாக)

அரசாணியை வழிபட்டு — அரசங்கிளையை ப்ரதக்ஷிணம் பண்ண

துமிலம் ஏழ பறை கொட்டி — பேரொலி கிளம்பும்படி பறைகளை முழக்கி

தோரணம் நாட்டிடும் கொல்லோ — மகர தோரணங்களை (ஊரெங்கும்) நாட்டி அலங்கரித்துக் கொண்டாடுவார்களோ?.

* * *—கண்ணபிரான், தன்மகளைக் கிரிசெய்து கொண்டுபோனமையைப்பற்றிச் சிந்தித்துப் பயனில்லையென்று அச்சிந்தையை விட்டிட்டு. புக்ககத்துத் தலைவர்கள், இவளுக்கு விவாஹாங்கமாகச் செய்யவேண்டிய தோழிப்புழுங்கல் முதலிய மங்கள காரியங்களை அடைவுபடச்செய்து சீர்மைகுன்றாமல் அலங்காரங்களையும் அமைத்து, மணமாளிகையில் ஸகல ஜனங்களையும் அழைத்து விதிப்படி "இவளைக் கண்ணனுக்குத் தேவியாகத் தருகிறோம்" என்று வெளிப்படையாகச் சொல்லி, பிறகு விவாஹ காலத்தில் சாஸ்திரத்திற்கேற்ற ஆசார முறைமையின்படி அலங்கார பீடத்தின்மேல் நாட்டும் அரசங்கிளையை இவள் வலம் வரும்படி செய்வித்து, ஸாமாந்யமாக ஊரெங்கும் அலங்கரித்து இவ்வகைகளால் கொண்டாட்டமும் கோலாஹலமுமாக இருப்பார்களோ? அன்றி கொண்டாட்டம் ஏதுக்கு? என்று உபேக்ஷித்திருப்பார்களோ? என்று ஸந்தேஹிக்கிறாள். "அரசாணியை வழிபட்டு" என்றது—மற்றுமுண்டான சாஸ்த்ர தொழில்களுக்கெல்லாம் உபலக்ஷணமென்க. ... ... (க)

300 ஒருமகள்தன்னையுடையேன் உலகம்நிறைந்தபுகழால் *
திருமகள்போல்வளர்த்தேன் செங்கண்மால்தான்கொண்டுபோனான் *
பெருமகளாய்க்குடிவாழ்ந்து பெரும்பிள்ளைபெற்றவசோதை *
மருமகளைக்கண்டுகந்து மணைட்டுப்புறஞ்செய்யுங்கொலோ. (ச)

ஒரு மகள் தன்னை உடையேன் — ஒரே மகளை உடையளாகிய நான்

உலகம் நிறைந்த புகழால் — உலகமெங்கும் பரவின கீர்த்தியோடு

திரு மகள் போல வளர்த்தேன் — பெரிய பிராட்டியாரைப் போல் சிராட்டி வளர்த்தேன்:

(இப்படி வளர்ந்த இவளை)

செம் கண் மால் தான் கொண்டு போனான் — செந்தாமரைக் கண்ணனை ஸர்வேச்வரன் தானே (ஸாக்ஷாத்தாக நானியாமல்) வந்து கொண்டு போனான்;

(போனால் போகட்டும்;)

பெருமகளாய் குடிவாழ்ந்து பெரும் பிள்ளை பெற்ற அசோதை — (இடைச்சேரியில்) ப்ரதாந ஸ்த்ரீயாய்க் குடிவாழ்க்கை வாழ்ந்து பெருமைதங்கிய பிள்ளையைப் பெற்றவளான யசோதைப்பிராட்டியானவள்

மருமகளை கண்டு உகந்து — (தன்) மருமகளான என்மகளைக்கண்டு மகிழ்ந்து

மணைட்டுப் புறம் செய்யும் கொல்லோ — மணவாட்டிக்குச் செய்யக் கடவதான சீர்மைகளைச் செய்வளோ.!

* * *—அரிய நோன்புகளை கோற்று அத்விதீயையான பெண்பிள்ளையைப் பெற்ற நான், இவளை "காவியங்கண்ணி பெண்ணில் கடிமாமலர்ப்பாவையொப்பாள்" என்றபடி எல்லார்க்கும் வைலக்ஷண்யத்துக்கு உபமாக பூமியாகச் சொல்லக்கடவளான பிராட்டியோடொக்க, உலகத்தாரெல்லாரும் புகழும்படி வளர்த்தேன். இப்படி வளர்ந்த இவளை எம்பெருமான் தானே நேரில் வந்து கைக்கொண்டு போனான்; போகட்டும், அதைப்பற்றிச் சிந்தையில்லை; போனவிடத்தில் இவளுக்கு மாமியாரான யசோதைப்பிராட்டி இவளுடைய ஸௌந்தர்யம் வ்யாமோஹம் முதலிய குணங்களைக்கண்டு "பெரும்பேறு பேற்றோம்" என மகிழ்ந்து, கல்யாணப்பெண்ணுக்குச் செய்யவேண்டிய சீர்மைகளைக் குறையறச் செய்வளோ? அன்றி, லௌகிகத்துக்குத் தக்க வளவு அற்பாதரயமாகச் செய்து விடுவளோ? என்று ஸம்சயிக்கின்றனள்.

கூரத்தாழ்வான் திருநாட்டுக்கெழுந்தருளினபோது எம்பெருமானர் இப்பாட்டைச் சொல்லிக் கதறி அழுதார் என்ற ஐதிஹ்யமுணர்க. புகழால் வளர்த்தேன் என்றது—புகழுண்டாம்படி வளர்த்தேன் என்றவாறு. ... ... (சு)

301 தம்மாமன்நந்தகோபாலன் தழீஇக்கொண்டென்மகள்தன்னை *
செம்மாந்திரேயென்றுசொல்லிச் செழுங்கயற்கண்ணுஞ்செவ்வாயும் *
கொம்மைமுலையுமிடையுங் கொழும்பணைத்தோள்களுங்கண்டிட்டு *
இம்மகளைப்பெற்றதாயர் இனித்தரியாரென்னுங்கொலோ. (சூ)

தம் மாமன் நந்த கோபாலன் — என்மகள்தனக்கு மாமனான நந்தகோபரானவர்
என் மகள் தன்னை தழீஇக்கொண்டு — என் பெண்ணை (அன்புடன்) தழுவிக்கொண்டு
செம்மாந்திரு என்று சொல்லி — (வெட்கத்தாலே தரையைக் கிறிமுதங்கவிழ்ந்து நிற்காமல்) செவ்வனேநில்என்று சொல்லி
(பிறகு ஸர்வாங்க ஸௌந்தர்யத்தையுங் காணலாம்படி அவள் ருஜுவாக நிற்க)
செழு கயல் கண்ணும் — அழகிய மீன் போன்ற (அவளது) கண்களையும்
செம் வாயும் — சிவந்த அதரத்தையும்
கொம்மை முலையும் — (கச்சுக்கு அடங்காமல்) பெருத்திருக்கின்ற முலையையும்
இடையும் — இடுப்பினழகையும்
கொழு பணை தோள்களும் — பருத்த மூங்கில் போன்ற தோள்களையும்
கண்டிட்டு — நன்றுகப்பார்த்து
இ மகளை பெற்ற தாயர் இனி தரியார் என்னும் கொல் ஓ — "இப் பெண்பிள்ளையைப் பெற்ற தாயானவள் இவளைப் பிரிந்த பின்பு உயிர் தரித்திருக்க மாட்டாள்" என்று சொல்லுவரோ?.

* * *—கீழ்ப்பாட்டில், மாமியார் சீராட்டுதலைப்பற்றிச் சங்கித்தாள்; இப்பாட்டில் மாமனார் சீராட்டுதலைப்பற்றிச் சங்கிக்கிறாள்;—என் மகளின் மாமனான நந்தகோபர் இவளையழைத்து முத்தமிட்டு இவளது ஸர்வாவயவ ஸௌந்தர்யத்தையுங் கண்டு மகிழ்ந்து "இப்படி அழகிற் சிறந்த பெண்பிள்ளையைப் பெற்ற தாய் இவளைப்பிரிந்து உயிர்வாழ்ந்திருப்பது அரிது" என்று அன்பு தோற்றச் சொல்வரோ? அன்றி, விருப்பமற்றுச் சிறிதும் விகாரமடையாமல் இருப்பரோ? எனச் சங்கித்தவாறு. தழீஇ-தழுவி; அளபெடைகொண்ட. வினையெச்சம். செம்மாந்திரு-முழுச்சொல். தாயர்—பூஜையிற் பன்மை. ... ... (சூ)

302 வேடர்மறக்குலம்போலே வேண்டிற்றுச்செய்தென்மகளை *
கூடியகூட்டமேயாகக் கொண்டுகுடிவாழுங்கொலோ *
நாடுநகருமறிய நல்லதோர்கண்ணலஞ்செய்து *
சாடிறப்பாய்ந்தபெருமான் தக்கவாகைப்பற்றுங்கொலோ. (சூ)

சாடு இற பாய்ந்த பெருமான் — சகடாஸுரனை முறித்துத் தள்ளின திருவடிகளையுடைய கண்ணபிரான்,
வேடர் மறக்குலம் போலே — வேடர்களையும் மறவர் என்கிற நீச ஜாதியரையும் போலே
என் மகளை வேண்டிற்று செய்து — (ஸ்த்ரீத்வத்திற் பிறந்த) என் பெண்பிள்ளையைத் தன் இஷ்டப்படி செய்து
கூடிய கூட்டமே ஆகக்கொண்டு — தம்பதிகளாகிய இருவரும் கெஞ்சு பொருந்திக்கூடின கூடுதலையே விவாஹமாகக் கொண்டு
குடி வாழும் கொல் ஓ — குடிவாழ்க்கை வாழ்வனே?
(அன்றி)
நாடும் நகரும் அறிய நல்லது ஓர் கண்ணலம் செய்து — ஸாமான்ய ஜனங்களும் விசேஷஜ்ஞ ஜனங்களும் அறியும்படி[ப்ரஹிரங்கமாக] விலக்ஷண மானதொரு விவாஹோத்ஸவத்தை (விதிப்படி) செய்து
தக்க ஆகைப் பற்றும் கொல் ஓ — (ஜாதிதர்மத்துக்குத்) தகுதியாகப் பாணிக்ரஹணம் பண்ணுவனே?

* * *—என்மகளோவென்றால் வேடரையும் மறக்குலத்தாரையும்போல் தண்ணியஜாதியிற் பிறந்தவளல்லள்; மஹாகுலப்ரஸூதையான இவளைக் கண்ணபிரான் களவுவழியாற் கொண்டுபோனாலும் போனவிடத்தில் விவாஹோத்ஸவத்தையாகிலும் முறைவழுவாமல் லோகாந்தமாகச் செய்தா

ஞில் ஒருவாறு குறைநீரப்பெறலாம்; இவளே இவ்விருந்து கொண்டுபோகிறபோது வழிவிடையில் இரு வரும் கெஞ்சுபொருந்திக் கூடுகையாகிற காந்தருவ விவாஹத்தன்னையே சாஸ்த்ரோக்தமான விவா ஹோத்ஸவமாக நினைத்து வேறுவகையான விவாஹ ஸம்ப்ரமங்களே வெளிப்படையாகச் செய்யாதொழி வனே? அன்றி, திருவாய்ப்பாடியிலுள்ளாரையும் அதைச்சேர்ந்த மதுரை முதலிய நகரங்களிலுள்ளாரை யும் வரவழைத்துப் பலரறியப் பாணிக்ரஹணம் பண்ணிக்கொள்வனே? என்று ஸம்சயிக்கிறபடி.

அகத்தமிழில், "அறநிலை ஒப்பே பொருள்கொள் தெய்வம், யாழோர் கூட்டம் அரும்பொருள் வினையே, இராக்கதம் பேய்நிலை என்று கூறிய, மறையார் மன்ற லெட்டிவை அவற்றுள், துறையமை நல்யாழ்புலமையோர் புணர்ப்புப், பொருண்மை யென்மனர் புலமையோரே" என்று விவாஹம் எட்டு வகையாகக் கூறப்பட்டுள்ளது; தனியிடத்து இருவரும் காமமோஹத்தாலே கூடுகை, யாழோர் கூட்டம் [காந்தர்வவிவாஹம்] எனப்படும்; இது சுருங்காரரஸமுமாய், ஸ்த்ரீபிஷுடைய அகங்யார்ஹதாரூப மான கற்புக்கும் முதலாகையாலே அகத்தமிழ்மரியாதைக்குப் பிரதானமாய்ப் போரும். "அன்பினைந் திணைக் களவெனப்படுவ, தந்தணரருமறை மன்றலெட்டினுள், கந்தருவவழக்க மென்மனர் புலவர்" என அகத்தமிழிலும் கூறப்பட்டது. இப்படி சாஸ்த்ரீயமாய் கற்புக்கு முறுப்பான ஸம்பந்தத்தாலே, ஆழ்வார் தம்முடைய அகங்யார்ஹத்வத்தை வெளியிட்டவாறென்க.

[வேடர் இத்யாதி.] "கள்ளர், பள்ளிகள் என்னுமாபோலே, வேடர் மறவர் என்கிறதும் தண்ணிய ஜாதியில் அவாந்தரபேதம்" என்ற வியாக்கியானமறிக. இத்தண்ணியசாதியிற் பிறந்த பெண்களைக் கொள்வார் கூடிய கூட்டமேயாகக்கொண்டு குடிவாழ்வது சாதிவழக்கமென்க. வேண்டிற்றுச் செய்து-இரண்டு தலையிலுமுண்டான குடிப்பிறப்பைப்பாராதே, ஒரு சாஸ்த்ரமர்யாதையின்றியே தனக்கு வேண்டினபடிசெய்து என்றபடி. ... ... (சு)

303 அண்டத்தமரர்பெருமான் ஆழியானின்றென்மகளை *
பண்டப்பழிப்புக்கள்சொல்லிப் பரிசறவாண்டிடுங்கொலோ *
கொண்டுகுடிவாழ்க்கைவாழ்ந்து கோவலப்பட்டங்கவித்து *
பண்டைமணாட்டிமார்முன்னே பாதுகாவல்வைக்குங்கொலோ. (எ)

அண்டத்து அமரர் பெருமான் ஆழியான் — பரமபதத்திலுள்ள நித்ய ஸூரிகளுக்குத் தலைவனும் திருவாழியாழ்வானையுடையனுமான கண்ணபிரான்
என் மகளை இன்று — என் பெண்பிள்ளையை, இப்போது
பண்டம் பழிப்புக்கள் சொல்லி — பதார்த்தங்களுக்குக் குறை சொல்வது போல் (இவளது) ரூபகுணங்களிற் சில குறைகளைச்சொல்லி,
பரிசு அறவாண்டிடும் கொல்லோ — பரிசு கெடும்படி ஆகுவனே? (அன்றி.)
பண்டை மணாட்டிமார் முன்னே — முன்பே பட்டங்கட்டித் தனக்குத் தேவியாயிருப்பவர்களின் முன்னே
கொண்டு — இவளைக்கொண்டு
குடி வாழ்க்கை வாழ்ந்து — (தனது) க்ருஹக்ருத்ய மெல்லாம் நடத்தி
கோவலர் பட்டம் கவித்து — "இவள் இடைக்குலத்துக்குத் தலைவி" என்று (தன் மனைவியானமைதோற்றப்) பட்டங்கட்டி,
பாதுகாவல் வைக்கும் கொல்லோ — அந்தபுரக்காவலிலே வைப்பனே?

* * *—உலகத்தில் குற்றமேகண்ணுறிருப்பவர் எப்படிப்பட்ட பதார்த்தங்களிலும் ஏதாவது ஒருகுறையைக் கூறுவது வழக்கம்; அதுபோல் கண்ணபிரானும் என்மகளிடத்து ரூபகுணங்களில் ஏதாகிலுமொரு குறையைக் கூறித் தாழ்வு நினைத்து புறத்தொழில்களில் நியமித்துவிடுவனே? அன்றி, முன்னமே பட்டங்கட்டிக்கொண்டு அந்தப்புர மஹிஷிகளாயிருப்பவர்களோடு சேர்த்து இவள் குருத்தின் படி ஸகலகாரியங்களையும் நிர்வஹிப்பனே? என்று ஸந்தேஹிக்கிறாள். "பண்டப்பழிப்புக்கள்சொல்லி" என்பதில், உபமேயார்த்தம் தொக்கி நிற்கின்றது; "மருத்துவப்பதம் நீங்கினள்" என்பதிற்போல. (எ)

304 குடியிற்பிறந்தவர்செய்யுங் குணமொன்றுஞ்செய்திலனந்தோ *
நடையொன்றுஞ்செய்திலன்நங்காய் நந்தகோபன்மகன்கண்ணன் *
இடையிருபாலுமவணங்க இனத்தினூடேன்மகளேங்கி *
கடைகயிறேபற்றிவாங்கிக் கைதழும்பேறிடுங்கொலோ. (அ)

நங்காய் — பூர்ணையாயிருப்பவளே;
நந்தகோபன் மகன் கண்ணன் — நந்தகோபருடைய பிள்ளையாகிய கண்ணபிரான்,
குடியில் பிறந்தவர் செய்யும் குணம் ஒன்றும் செய்திலன் — உயர்ந்தகுலத்திற் பிறந்தவர்கள் (குலமர்யாதைக்குத் தக்கபடி) செய்யுங் குணங்களில் ஒருவகைக்குணத்தையும் செய்தானில்லை;
கடை — உலகத்துக்குப் பொதுவான நடத்தைகளிலும்
ஒன்றும் செய்திலன்—;
அந்தோ — அஹஹ!
என் மகள் — என் மகளானவள்

(தயிர் கடையும்போது)
இடை இரு பாலும் வணங்க — இடுப்பானது இருபக்கத்திலும் துவண்டுபோவதனால்
ஏங்கி — (மூச்சுப்பிடித்துக் கடையமாட்டாமல்) நடுநடுவே ஏக்கமுற்று
இளைத்து இளைத்து — மிகவும் இளைத்து
கடை கயிறே பற்றி வாங்கி — கடைகிற கயிற்றையே பிடித்து வலித்திழுப்பதனால்
கை தழும்பு ஏறிடும் கொல் ஓ — (தனது ஸுகுமாரமான) கைகள் தழும்பேறப் பெறுமோ?.

* * *—திருத்தாயார், தன் மனவருத்தத்தை அண்டை வீட்டிலுள்ள ஒரு ஸ்திரீயிடத்துச் சொல்லுகிறதாய்ச் செல்லுகிறது இப்பாசுரம். நற்குடியிற் பிறந்தவர்கள், பெண்களை முறையிலே வளர்த்துகொண்டு வெளியிற்கொண்டு போவதில்லை என்றொரு ஸம்ப்ரதாயமுண்டு; அங்ஙனுஞ்செய்திலன் இக்கண்ணபிரான், இது செய்யாதொழியிலுமொழிக; உலகத்தில் ஸாமாந்யஜனங்கள் செய்து போருகிற ரீதிகள் சில உண்டே, அவையுஞ் செய்திலன்; (அதாவது - இங்கனே பிறர்பெண்ணைக் களவு வழியிற் கொள்வதையோ ஸாமாந்யருந்தான் செய்கின்றனர்? அதுவுமன்றி, தன்வீட்டுக்குக் கொண்டு போனதும் போகாததுமாயிருக்க, இவளைத் தயிர்கடையவோ நியமிப்பது? இவ்வாறு எந்தநாட்டில் நடக்கும்? என்றபடி.) இளம்பருவத்தளான என் மகள் இடம்வலங்கொண்டு தயிர்கடையவேண்டுகையால் இடைதுவண்டி உடலிளைத்துப் பெருமூச்சுவிட்டு இவ்வகை வருத்தங்களோடு, தொடங்கின காரியம் தலைக்கட்டுமளவும் இடைவிடாமல்கடைகயிற்றையே பிடித்து வலித்திழுத்தால் அவளுடைய தளிர்போன்ற தடங்கைகள் தழும்பேறப்பெறுதோ! என வருந்தியவாறு. (அ)

305 வெண்ணிறத்தோய்தயிர்தன்னை வெள்வரைப்பின்முன்னெழுந்து *
கண்ணுறங்காதேயிருந்து கடையவுந்தான்வல்லள்கொலோ *
ஒண்ணிறத்தாமரைச்செங்கண் உலகளந்தானென்மகளை *
பண்ணறையாப்பணிகொண்டு பரிசறவாண்டிடுங்கொலோ. (கூ)

(என்மகள்) தான் — என்மகளானவள்
வெள்வரைப்பின் முன் எழுந்து — இழக்கு வெளுப்பதற்கு முன்பாக எழுந்திருந்து
கண் உறங்காதே இருந்து — கண் விழித்துக் கொண்டிருந்து
வெள் நிறம் தோய் தயிர் தன்னை — வெளுத்த நிறத்தையுடைத் தாய்த் தோய்ந்த தயிரை
கடையவும் வல்லள் கொல் ஓ — கடையும்படியான சக்தியைத்தான் உடையளோ?

அழகிய நிறத்தையுடைய
ஒள் நிறம் செம் தாமரை கண் உலகு அளந்தான் — செந்தாமரைமலர் போன்ற கண்களையுடையவனும் (த்ரிவிக்ரமாவதாரத்தில்) உலகளந்தருளினவனுமான கண்ணபிரான்
என் மகளை — என் பெண்ணை
பண் அறையாப்பணி கொண்டு — தர்மஹாநியாக இழிதொழில்களைச் செய்வித்துக் கொண்டு
பரிசு அற ஆண்டிடும் கொல் ஓ — (அவளுடைய) பெருமை குலையும்படி ஆளுவனே?

* * *—கண்ணபிரான் என்மகளைக் கொண்டுபோய்த் தயிர்கடைகையாகிற தொழிலில் நியமித்துவிட்டானாகில், என்மகள் இழக்குவெளுப்பதற்குமுன் உறக்கத்தை ஒழித்து எழுந்து தயிர்கடைவதற்கு எங்ஙனே வல்லளாவள்? என்று சொல்லிச் சுற்றுப்போது மூச்சித்தக்கிடந்து, பின்பு தெளிந்து, எல்லாரையுங் குளிர நோக்கும்படியுள்ள கண்கள் படைத்தவனும், வளீஷ்டனேடு சண்டாளரோடு வாசியற அனைவரையும் தன் திருவடிக் கீழாக்கிக் கொண்டவனுமான கண்ணபிரான் என்மகளை அதர்மமாக இழிதொழில்களில் ஏவி, அவளது பெருமைகளைக் குலைப்பனே! அன்றி, பெருமைக்குத் தக்கவாறு திருவுள்ளம் பற்றுவனே? என்று ஸந்தேஹிக்கிறாள்.—கண்ணபிரான்திருமாலிகையில் கறைவைக் கணங்கள் பலவாகையால் அவை அளவற்றபாலித்தருளும், பின்பு அதைத்தோய்த்துத் தயிராக்கிக் கடைவதற்குப் பின்மாலைப் பொழுதிலேயே எழுந்திருக்க வேணுமென்க. பண் - அமைவு, சீர், செவ்வை, தகுதி. அறை-குறைவு. ஆ-ஆக என்பதன் விகாரம். ... ... (கூ)

306 மாயவன்பின்வழிசென்று வழியிடைமாற்றங்கள்கேட்டு *
ஆயர்கள்சேரியிலும்புக்கு அங்குத்தைமாற்றமுமெல்லாம் *
தாயவள்சொல்லியசொல்லைத் தண்புதுவைப்பட்டன்சொன்ன *
தூயதமிழ்பத்தும்வல்லார் தூமணிவண்ணனுக்காளரே (ய)

(மகளானவள்,)
வழி இடை போகிறவழியிலே
(அபூர்வ வஸ்துக்களைக்கண்டால் 'இவை என்? என்று அவ்விஷயமாக)
மாற்றங்கள் கேட்டு — வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டு
மாயவன் பின் வழி சென்று — கண்ணபிரான் பின்னே போய்
ஆயர்கள்சேரியிலும் புக்கு — திருவாய்ப்பாடியிலும் சென்று புகுந்தபின்பு
அங்குத்தை மாற்றமும் எல்லாம் — அங்குண்டாகும் செயல்கள் சொலவுகள் முதலிய எல்லாவற்றையுங் குறித்து

தாய் அவள் தாயானவள்
சொல்லிய சொல்லை சொன்ன வார்த்தைகளை
தண் புதுவைபட்டன் சொன்ன — குளிர்த்தியையுடைய ஸ்ரீவில்லிபுத்தூரில் அவதரித்த பெரியாழ்வார் அருளிச்செய்தவையாகிய
தூய தமிழ் பத்தும் வல்லார் — பழிப்பற்ற தமிழ்ப்பாட்டுக்கள் பத்தையும் ஓதவல்லவர்கள்
தூ மணி வண்ணனுக்கு ஆளர் — அழகிய மணிபோன்ற நிறத்தையுடைய கண்ணபிரானுக்கு ஆட்செய்யப்பெறுவர்.

அடிவரவு:—நல்லது ஒன்று குமரி ஒரு தம்மாமன் வேடர் அண்டக்குடி வெண்ணிறம் மாயவன் என்னுதன்.

மூன்றும்பத்து—ஒன்பதாந்திருமொழி, என்னுதன் தேவிக்கு

(ஆழ்வார் இரண்டு கன்னிகைகளான நிலைமையெய்தி ஸ்ரீகிருஷ்ண குணங்களையும் ஸ்ரீராம குணங்களையும் பாடுகிறார்.)

[சோபனமடிப்பது போன்ற ஒருவகை விளையாடல்-உத்திபதத்தில்.]

307 என்னுதன்தேவிக்கு அன்றின்பப்பூவியாதாள் *
தன்னுதன்காவலே தண்பூமரத்தினை *
வன்னுதப்புள்ளால வலியப்பறித்திட்ட *
என்னுதன்வண்மையைப்பாடிப்பற எம்பிரான்வண்மையைப்பாடிப்பற. (க)

என் நாதன் தேவிக்கு — எனக்கு ஸ்வாமியான கண்ணபிரானுடைய தேவியான ஸத்யபாமைப் பிராட்டிக்கு
இன்பம் பூ அன்று ஈயாதாள் தன் — மனோஹரமான கற்பகப்பூவை (அவள் விரும்பின) அக்காலத்தில் கொடாத இந்திராணியினுடைய
நாதன் கணவனான தேவேந்திரன்
காவலே — கண்டுகொண்டு நிற்கும் போதே
தண் பூ மரத்தினை — குளிர்ந்த பூக்களையுடைய கல்பவருக்ஷத்தை,

வல்நாதம் புள்ளால் — வலிவையுடைய ஸாமவேதஸ்வரூபியான பெரிய திருவடியாலே
வலிய பறித்து — பலாத்காரமாகப் பிடுங்கிக் கொண்டுவந்து
இட்ட — (அதனை ஸத்யபாமையின் வீட்டு முற்றத்தில்) நட்டருளின
என் நாதன் — என் ஸ்வாமியான கண்ணபிரானுடைய
வண்மையை பாடி பற — வலிவைப் பாடிக்கொண்டு உந்திபற,
எம் பிரான் வண்மையை பாடிப் பற—.

இவ்வாழ்வார், ராமகிருஷ்ண உபயாவதாரகுணசேஷ்டிதங்களை ஏககாலத்தில் அநுபவிக்க விரும்பினபொழுதிலும் முதன்முதலாக க்ருஷ்ணாவதார வ்ருத்தாந்தத்தைப் பேசினபடியால் இவர்க்கு மிக்க அபிநிவேசம் கிருஷ்ணாவதாரத்திலேயாமென்பது போதருமென்ப. ... (க)

308 என்வில்வலிகண்டு போவென்றெதிர்வந்தான் *
தன்வில்லினோடுந் தவத்தையெதிர்வாங்கி *
முன்வில்வலித்து முதுபெண்ணுயிருண்டான் *
தன்வில்லின்வன்மையைப்பாடிப்பற தாசரதிதன்மையைப்பாடிப்பற. (உ)

என் வில் வலிகண்டு போ என்று — 'என்னுடைய வில்லின் வலியைக் கண்டுபோ' என்று சொல்லிக்கொண்டு
எதிர் வந்தான் தன் — எதிர்த்துவந்த பரசுராமனுடைய
வில்லினோடு தவத்தையும் எதிர் வாங்கி — வில்லோடும் தபஸ்ஸையும் அவன் கண் ணெதிரில் அழித்தருளினவனும்
முன் வில் வலித்து — இதற்கு முன்னே வில்லை வளைத்து
முது பெண் உயிர் உண்டான் தன் — (பரஹிம்ஸையில்) பழகிக் கிடந்த தாடகையினுடைய உயிரை முடித்தருளின வனுமான இராமபிரானுடைய
வில்லின் வன்மையை — வில்லினது வலிவை
பாடிப் பற—;
தாசரதி தன்மையை — சக்ரவர்த்தி திருமகனுடைய ஸ்வபாவத்தை
பாடிப் பற—.

309 உருப்பிணிநங்கையைத் தேரேற்றிக்கொண்டு *
விருப்புற்றங்கேக விரைந்தெதிர்வந்து *
செருக்குற்றருன் வீரஞ்சிதைய * தலையைச்
சிரைத்திட்டான்வன்மையைப்பாடிப்பற தேவகிசிங்கத்தைப்பாடிப்பற. (ஊ)

உருப்பிணி நங்கையை தேர் ஏற்றிக் கொண்டு — ருக்மிணிப்பிராட்டியை (தனது) தேரின்மேல் ஏற்றிக்கொண்டு
விருப்புற்று ஏக — ஆசையுடனே (கண்ணன்) எழுந்தருளப்புக,
அங்கு விரைந்து எதிர் வந்து செருக்கு உற்ருன் — அவ்வளவில், மிக்கவேகங் கொண்டு (போர் செய்வதாக) எதிர்த்து கர்வப்பட்ட ருக்மனுடைய
வீரம் சிதைய — வீரத்தனம் கெடும்படியாக
தலையை சிரைத்திட்டான் வன்மையை — (அவனது) தலையை (அம்பாலே) சிரைத்துவிட்ட கண்ணனுடைய வலிவை
பாடிப் பற—;
தேவகி சிங்கத்தை — தேவகியின் வயிற்றில் பிறந்த ஸிம்ஹக்குட்டி போன்றவனை
பாடிப் பற—.

310 மாற்றுத்தாய்சென்று வனம்போகேயென்றிட *
ஈற்றுத்தாய்பின்றொடர்ந்து எம்பிரானென்றழ *
கூற்றுத்தாய்சொல்லக் கொடியவனம்போன *
சீற்றமிலாதானைப்பாடிப்பற சீதைமணாளனைப்பாடிப்பற. (எ)

மாறு தாய் சென்று வனமே போகு என்றிட — (பெற்றதாயோடு) ஒத்த (ஸுமித்திரை) என்கிற) தாயானவள் சென்று 'நீ காட்டுக்கேபோ' என்று நியமிக்க,
ஈற்றுத்தாய் பின் தொடர்ந்து — பெற்ற தாயாகிய கைகேயி தன்னைப்) பின் தொடர்ந்து வந்து
எம் பிரான் — "என் நாயனே!
(உன்னைப்பிரிந்து எப்படி தரித்திருப்பேன்")
என்று அழ — என்று கதறி அழ,
கூற்று தாய்சொல்ல — யமனைப்போல் கொடிய ளானகைகேயியின் சொல்லைக்கொண்டு
கொடிய வனம் போன — கொடிய காட்டுக்கு எழுந்தருளின
சீற்றம் இலாதானை — சீற்றமற்ற இராமபிரானை
பாடிப் பற—;
சீதை மணாளனை — சீதைக்கு வல்லபனாகவனை
பாடிப் பற—.

மாற்றுத்தாய் என்று ஸுமித்ரையையும், கூற்றுத்தாய் என்று கைகேயியையுஞ் சொல்லுகிறதாக நிர்வஹிப்பராம் நாலூர்பிள்ளை. இப்பொருளில், "மாற்றுத்தாய்" என்றது - மற்றைத்தாய் என்றபடி; அன்றிக்கே, மாறு என்று ஒப்பாய், மாருனதாய்-பெற்றதாய்க்குப் போலியான தாய் என்னவு

மாம். கூற்றுத்தாய்=கூற்று—யமன்; கொடுமையில் யமனைஒப்பாள் கைகேயி என்பதுபற்றி, அவள் "கூற்றுத்தாய்" எனப்பட்டாள்.

இனி, மாற்றுத்தாய் என்று கைகேயியையும், கூற்றுத்தாய் என்று ஸுமித்ரையையும் சொல்லுகிறதாகவுமாம். கைகேயி, கௌஸல்யைக்குத் தன் நினைவாலே மாற்றுந்தாயிறே; பரதன் நினைவுக்கு மேற்பொருந்தாமையாலும் மாற்றுந்தாய் எனப்படுவள். கூறுபட்ட ஹ்ருதயத்தை உண்கையாலே ஸுமித்திரை கூற்றுத்தாய் எனப்படுவள்; கூறு+தாய், கூற்றுத்தாய். (சு)

311 பஞ்சவர்தூதனுய்ப் பாரதங்கைசெய்து *
நஞ்சுமிழ்நாகங்கிடந்த நற்பொய்கைபுக்கு *
அஞ்சப்பணத்தின்மேல் பாய்ந்திட்டருள்செய்த *
அஞ்சனவண்ணனைப்பாடிப்பற அசோதைதன்சிங்கத்தைப்பாடிப்பற. (ரு)

பஞ்சவர் தூதன் ஆய் { பஞ்சபாண்டவர்களுக்காக (துர்யோதனனிகளிடம்) தூதனுய்ப்போய்

(அத் துரியோதனனிகள் தன்சொற்படி இசைந்து வாராமையால்)

பாரதம் கை செய்து { பாரதயுத்தத்தை அணிவகுத்துச் செய்தவனும்,

நஞ்சு உமிழ் நாகம் கிடந்த நல் பொய்கை புக்கு { விஷத்தைக் கக்குகின்ற காளியன் கிடந்த கொடிய மடுவிலே புகுந்து

அஞ்ச பணத்தின்மேல் பாய்ந்திட்டு { (அக்காளியன்) அஞ்சும்படி (அவனது) படத்திலே குதித்து

(நடமாடி அக்காளியனை இளைப்பித்துப் பின்பு அவன் ப்ரார்த்திக்க)

அருள் செய்த { அப்பாம்பின் பிராணனைக் கருணையாய் விட்டிட்ட வனுமான

அஞ்சனவண்ணனை பாடிப் பற—;
அசோதை தன் சிங்கத்தை பாடிப் பற—;

312 முடியொன்றி மூவுலகங்களுமாண்டு * உன்
னடியேற்கருளென்று அவன்பின்தொடர்ந்த *
படியிலிகுணத்துப் பரதற்கம்பிக்கு * அன்
றடிநிலையீந்தானைப்பாடிப்பற அயோத்தியர்கோமானைப்பாடிப்பற. (சூ)

முடி ஒன்றி மூ உலகங்களும் ஆண்டு { "திருமுடி சூடி பூமி, சுவர்க்கம், பாதாளம் என்ற மூன்று லோகங்களையும் பரிபாலித்துக்கொண்டு

உன் அடியேற்கு அருள் என்று { தேவருடைய தாஸனை எனக்கு க்ருபை பண்ண வேணும்" என்று எண்ணிக்கொண்டு

அவன் பின் தொடர்ந்த { பெருமாள் பின்னே தொடர்ந்து வந்த

படி இல் குணத்து பரதன் கம்பிக்கு { ஒப்பற்ற குணக்கடலையுடையனை ஸ்ரீ பரதாழ்வானுக்கு

அன்று அடி நிலை ஈந்த அயோத்தியர் கோமானை { அக்காலத்திலே ஸ்ரீ பாதுகைகளை அளித்தருளின இராமபிரானை பாடிப்பற—; அயோத்தையிலுள்ளவர்களுக்கு அரசனனவனை

பாடிப் பற—.

313 காளியன்பொய்கை கலங்கப்பாய்ந்திட்டு * அவன்
மீண்முடியைந்திலும் நின்றுகடஞ்செய்து *
மீளவவனுக்கு அருள்செய்தவித்தகன் *
தோள்வலிவீரமேபாடிப்பற தூமணிவண்ணனைப்பாடிப்பற. (எ)

காளியன் பொய்கை கலங்க பாய்ந்திட்டு { காளியன் கிடந்த பொய்கை முழுவதும் கலங்கும்படி (அதில்) குதித்து

அவன் மீள் முடி ஐந்திலும் நின்று நடம் செய்து { அக்காளியனுடைய ஆகாசத்தளவும் நீண்ட ஐந்து படங்களின் மேலும் நின்று கூத்தாடி,

மீள { அவன் இளைத்துச் சரணம் புகுந்த பிறகு

அவனுக்கு அருள் செய்த வித்தகன் { அக்காளியனுக்கு(ப் பிராணனைக் ருபை செய்தருளின விஸ்மயநீயனை கண்ண பிராணுடைய

தோள் வலி வீரம் { புஜபலத்தையும் வீரப்பாட்டையும் } பாடிப் பற—;

தூ மணி வண்ணனே { பழிப்பற்ற நீலமணி போன்ற நிறத்தையுடைய வனே } பாடிப் பற—.

314 தார்க்கிளைத்தம்பிக்கு அரசீந்து * தண்டகம்
நூற்றவள்சொற்கொண்டுபோகி நுடங்கிடை *
சூர்ப்பணகாவைச் செவியொடுமூக்கு * அவள்
ஆர்க்கவரிந்தானைப்பாடிப்பற அயோத்திக்கரசனைப்பாடிப்பற. (அ)

தார்க்கு இளைத்தம்பிக்கு அரசு ஈந்து { மாலியிட்டு ராஜ்யம் நிர்வஹிக்கைக்கு (தகுந்திராத) இளம் பருவத்தையுடைய னை பரதாழ்வானுக்கு (அடி சூடுகையாகிற) அரசைக் கொடுத்து,

நூற்றவள் சொல் கொண்டு { (இராமனைக் காட்டுக்குச் செலுத்தக்கடவோம், என்று) எண்ணங்கொண்ட கைகேயியினுடைய சொல்லை ஏற்றுக்கொண்டு

தண்டகம் போகி { தண்டகாரண்யத்துக்கு எழுந்தருளி } (அவ்விடத்தில்)

நுடங்கு இடை சூர்ப்பணகாவை செவியொடுமூக்கு அவள் ஆர்க்க அரிந்தானை { துவண்ட இடையை உடையவளான சூர்ப்பணகையினுடைய காதையும் மூக்கையும் அவள் கதறும்படி அறுத்த இராமபிரானை } பாடிப் பற—;

அயோத்திக்கு அரசனை பாடிப் பற—.

"ஆவிறையும்" என்ற நன்னூல் விதிப்படி 'சூர்ப்பணகை' எனத் திரியவேண்டியிருக்க அங்ஙனந் திரியாதது * புதியனபுகுதலென்னலாம்; "பழையன கழிதலும் புதியன புகுதலும், வழுவல காலவகையினானே" என்றார் நன்னூலார். ... ... (அ)

315 மாயச்சகடமுதைத்து மருதிறுத்து *
ஆயர்களோடுபோய் ஆநிரைகாத்து * அணி
வேயின்குழலூதி வித்தகனாய்நின்ற *
ஆயர்களேற்றினைப்பாடிப்பற ஆநிரைமேய்த்தானைப்பாடிப்பற. (ஆ)

மாயம் சகடம் உதைத்து { க்ருத்ரிமமான [அசுராவிஷ்டமான] சகடத்தை (திருவடிகளால்) உதைத்துத்தள்ளியும்

மருது இறுத்து { இரட்டை மருதமரங்களை இற்று விழும்படி பண்ணியும்,

(பின்பு)

ஆயர்களோடு போய் ஆநிரை காத்து { இடையர்களோடு கூட (காடேறப்) போய் பசுக்களின் திரளை ரக்ஷித்தும்

அணி வேயின் குழல் ஊதி { அழகிய வேய்ங்குழலை ஊதியும் } (இப்படிப்பட்ட செயல்களாலே)

வித்தகனாய் நின்ற விஸ்மயநீயனாய் நின்ற

ஆயர்களேற்றினை { இடையர்க்குத் தலைவனை கண்ணபிரானை } பாடிப் பற—;

ஆநிரை மேய்த்தானை பாடிப் பற—.

316 காரார்கடலை அடைத்திட்டிலங்கைபுக்கு *
ஓராதான்பொன்முடி ஒன்பதோடொன்றையும் *
கோரவன்தம்பிக்கே நீரரசீந்த *
ஆராவமுதனைப்பாடிப்பற அயோத்தியர்வேந்தனைப்பாடிபபற. (இ)

கார் ஆர் கடலை அடைத்திட்டு { கருமை பொருந்திய கடலை (மலைகளினால்) அடைத்து விட்டு [சேது கட்டி]

இலங்கை புக்கு (அந்த சேதுவழியாக) லங்கையிற் புகுந்து (அவ்விடத்தில்)

ஓரீரான் பொன் முடி ஒன்பதோடு ஒன்றையும் நேரா — (தன் வீரப்பாட்டை) மதியாத ராவணனுடைய அழகிய தலைகள் பத்தையும் அறுத்துபோகட்டு

அவன் தம்பிக்கே நீள் அரசு ஈந்த — அவனது தம்பியான விபீஷணழ்வானுக்கே நெடுங்காலம் நடக்கும்படியான ஆதி ராஜ்யத்தை அளித்தருளின

ஆரா அமுதனை — எவ்வளவு உண்டாலும் திருப்தியைத் தாராத அம்ருதம்போல் இனியனை இராமபிரானை

அயோத்தியர் வேந்தனை — அயோத்திபிலுள்ளவர்க்கு அரசனுனவனை

பாடிப் பற—;

பாடிப் பற—.

நேரா—'செய்யா' என்னும் வாய்பாட்டு உடன்பாட் டிறந்தகால வினையெச்சம்; நேர்ந்து [அறுத்து] என்றவாறு. நீளரசு-"என்னிலங்கு நாமத்தளவு மரசென்ற" என்றதை நினைக்க. (கo)

317 நந்தன்மதலையைக் காகுத்தனைநவின்று *
உந்திபறந்த ஒளியிழையார்கள்சொல் *
செந்தமிழ்த்தென்புதுவை விட்டுசித்தன்சொல் *
ஐந்திரண்டைந்தும்வல்லார்க்கு அல்லலில்லையே. (கக)

நந்தன் மதலையை காகுத்தனை நவின்று — நந்தகோபன் குமாரனை கண்ணபிரானையும் இராமபிரானையும் ஒருவருக்கொருவர் எதிரியாய் நின்று) சொல்லி

உந்தி பறந்த ஒளி இழையார்கள் சொல் — உந்தி பறக்கையாகிற லீலாரஸங்கொண்டாடின அழகிய ஆபரணமணிந்த ஆய்ப்பெண்களிருவருடைய சொல்லை,

செம் தமிழ் தென் புதுவை விட்டுசித் தன் சொல் — அழகிய தமிழ்ப் பாஷையாலே, அழகிய ஸ்ரீவில்லிபுத்தூர்க்குத் தலைவரான பெரியாழ்வார் அருளிச்செய்த

ஐந்திரண்டைந்தும் வல்லார்க்கு — க்ருஷ்ணவதார விஷயமான ஐந்தும், ராமாவதார விஷயமான ஐந்துமாகிய இப்பத்துப் பாசுரங்களை ஓதவல்லவர்களுக்கு

அல்லல் இல்லை — துன்பமொன்றுமில்லையாம்.

அடிவரவு:—என்னுதன் என்னில் உருப்பிணி மாற்று பஞ்சவர் முடிகாளியன் தார் மாய காரார் நந்தன் நெறிந்த.

மூன்றும்பத்து—பத்தாந்திருமொழி, நெறிந்தகருங்குழல்

[பிராட்டியிடத்தில் திருவடி அடையாளம் விண்ணப்பஞ் செய்தது கூறல்.]

318 நெறிந்தகருங்குழல்மடவாய் நின்னடியேன் விண்ணப்பம் *
செறிந்தமணிமுடிச்சனகன் சிலையிறுத்துநினைக்கொணர்ந்த
தறிந்து * அரசுகளேகட்ட அருந்தவத்தோனிடைவிலங்க *
செறிந்தசிலைகொடுதவத்தைச் சிதைத்ததுமோரடையாளம். (க)

நெறிந்த கருங்குழல் மடவாய் — [illegible] கூந்தலையுடைய பிராட்டீ!

நின் அடியேன் விண்ணப்பம் — உமது அடியவனை என்னுடைய விஜ்ஞாபனம் (ஒன்றைக் கேட்டருள வேணும்):...

செறிந்த மணி முடி சனகன் சிலை இறுத்து — நெருங்கின ரத்நங்களையுடைய கிரீடத்தை அணிந்த ஜநகமஹாராஜன் (கன்யாசுல்கமாக ஏற்படுத்தின) ருத்ரதநுஸ்ஸை முறித்து

தன்னை கொணர்ந்தது அறிந்து	உண்மை மணம்புரிந்து கொண்டதைத் தெரிந்து கொண்டு	செறிந்த சிலை கொடு	(தனக்குத்) தகுந்த (அப்பரசு ராமன் கையிலிருந்த விஷ்ணு) தநுஸ்ஸை வாங்கிக்கொண்டு
அரசுகளை கட்ட அருதவத்தோன்	(துஷ்ட) ராஜர்களை (ப்பயிருக்கு) க் களை களைவது போலழித்த அரிய தவத்தையுடைய பரசுராமன்	தவத்தை சிதைத்ததும்	(அப்பரசுராமனுடைய) தபஸ்ஸை அழித்ததும்
இடை விலங்க	நடுவழியில் தடுக்க	ஓர் அடையாளம்	ஒரு அடையாளமாகும்.

319 அல்லியம்பூமலர்க்கோதாய் அடிபணிந்தேன்விண்ணப்பம் *
சொல்லுகேன்கேட்டருளாய் துணைமலர்க்கண்மடமானே *
எல்லியம்போதினிதிருத்தல் இருந்ததோரிடவகையில் *
மல்லிகைமாமாலைகொண்டு அங்கார்த்ததுமோரடையாளம். (2)

அல்லி அம் பூ மலர் கோதாய்	அகவிதழ்களையுடைய அழகிய பூக்களால் தொடுக்கப்பட்ட பூமாலை போன்றவளே!	கேட்டருளாய்	(அதைத்) திருச்செவி சாத்த வேணும்;
		அம் எல்லி போது	அழகிய இராத்திரி வேளையில்
அடி பணிந்தேன் விண்ணப்பம்	(உமது திருவடிகளில் வணங்கிய நான் விஜ்ஞாபநமொன்றை	இனிது இருத்தல் இருந்தது	இனிமையான இருப்பாக இருந்ததான
சொல்லுகேன்	(உம்மிடத்தில்) சொல்லுவேன்;	ஓர் இடம் வகையில்	ஓரிடத்திலே
துணை மலர் கண் மடம் மானே	ஒன்றோடொன்று ஒத்தத்தாமரை மலர்போன்ற கண்களையும்மடப்பத்தையுமுடைய மான் போன்றவளே!	மல்லிகை மாமாலை கொண்டு ஆர்த்ததும்	மல்லிகைப் பூவினால் தொடுக்கப்பட்ட சிறந்த மாலையினால் (கீர் இராம பிரானைக்) கட்டியதும்
		ஓர் அடையாளம்—.	

* * *—இதனால் அயோத்தியிலிருந்தகாலத்தில் பிராட்டியும் பெருமாளும் ராத்ரி வேளையில் ஏகாந்தமான இடத்தில் உல்லாஸமாக இருக்கையில், பிரணய ரோஷத்தினால் பிராட்டி பெருமாளை மல்லிகைமாலையைக் கொண்டு கட்டியதை அநுமான் அடையாளமாகக் கூறுகின்றான்; இது மிகவும் அந்தரங்கமாக நடந்திருக்குமாதலால், இது மற்ற அடையாளங்களைப் போலன்றிச் சிறந்த அடையாளமாகுமென்க. வநவாஸஞ்சென்றமை இன்னுங்கூறப்படாமையால், இச்செயலை காட்டிலிருந்தபோது நிகழ்ந்ததாகக் கொள்வதுபொருந்துமேயன்றி, வநவாஸகாலத்து நிகழ்ந்ததாகக் கொள்ளுதல் பொருந்தாதென்க. ... ... (2)

320 கலக்கியமாமனத்தனளாய்க் கைகேசிவரம்வேண்ட *
மலக்கியமாமனத்தனளாய் மன்னவனும்மருதோழிய *
குலக்குமராகாடுறையப் போவென்றுவிடைகொடுப்ப *
இலக்குமணன்றன்னெடும் அங்கேகியதோரடையாளம். (3)

கைகேசி கலக்கிய மாமனத்தனள் ஆய்	கைகேயியானவள் (மந்தரையினால்) கலக்கப்பட்ட சிறந்த மனத்தையுடையவளாய்	மலக்கிய மா மனத்தனன் ஆய்	(அக்கைகேயியின் வார்த்தையால்) கலக்கமடைந்த சிறந்த மனத்தையுடையவனாய்
வரம் வேண்ட	(தசரதர் முன் தனக்குக் கொடுத்திருந்த) வரங்களின் பயனைக் கேட்க	மன்னவனும்	தசரதசக்ரவர்த்தியும்
		மருது ஒழிய	மறுத்துச்சொல்ல முடியாமல் வெறுமனேகிடக்க,

* (அந்த வைதர்ப்பத்தில் கைகேயியானவள்,)

நலம் குமரா காடு உறைய போ என்று விடை கொடுப்ப { "உயர்குலத்திற்பிறந்த குமாரனே! காட்டிலே (பதினான்கு வருஷம்) வஸிக்கும்படி போவாய்" என்று சொல்லி விடைகொடுத்தனுப்ப

அங்கு இலக்குமணன் தன்னொடு எகிய தும் } அக்காட்டிலே லக்ஷ்மணனோடுகூட (இராமபிரான்) சென்றடைந்தும்

ஓர் அடையாளம்—.

321 வாரணிந்தமுலைமடவாய் வைதேவிவிண்ணப்பம் *
தேரணிந்தவயோத்தியர்கோன் பெருந்தேவிகேட்டருளாய் *
கூரணிந்தவேல்வலவன் குகனோடுங்கங்கைதன்னில் *
சீரணிந்ததோழமை கொண்டதுமோரடையாளம். (அ)

வார் அணிந்த முலை மடவாய் வைதேவி விண்ணப்பம் { கச்சை அணிந்த முலையையும் மடப்பத்தையுமுடைய பிராட்டி! ஒரு விஜ்ஞாபனம்,

தேர் அணிந்த அயோத்தியர் கோன் பெருந்தேவி { தேர்களாலே அலங்கார மான அயோத்தியிலுள்ளார்க்கு அரசனுக்குத் தகுந்த உரிய இராமபிரானது பெருமைக்குத் தகுந்த தேவியே!

கேட்டருளாய் { (அவ்விண்ணப்பத்தைக்) கேட்டருளவேணும்!

கூர் அணிந்த வேல் வலவன் குகனோடும் { கூர்மை பொருந்திய வேலாயுதத்தில் வல்லவனாகிய குஹப்பெருமானோடு கூட

கங்கை தன்னில் கங்கைக் கரையிலே

சீர் அணிந்த தோழமை கொண்டதும் { சிறப்புப்பொருந்திய ஸ்நேஹத்தைப் பெற்றதும்

ஓர் அடையாளம்—.

* * *—இராமபிரான் ஏகதார வ்ரதமுடையனாதலால் அப்பெருமானுக்குச் சிறுதேவியர் பலரும் பெருந்தேவி யொருத்தியுமில்லை யாதலால், "பெருந்தேவி" என்பதற்கு, பெருமைக்குத்தக்க தேவியென வுரைக்கப்பட்டது. (அ)

322 மானமருமென்னோக்கி வைதேவிவிண்ணப்பம் *
கானமருங்கல்லதர்போய்க் காடுறைந்தகாலத்து *
தேனமரும்பொழிற்சாரல் சித்திரகூடத்திருப்ப *
பான்மொழியாய்பரதம்பி பணிந்ததுமோரடையாளம். (ஆ)

மான் அமரும் மெல் நோக்கி வைதேவி { மானினையொத்த மென்மையான கண்களையுடையவளான பிராட்டியே!

பால் மொழியாய் { பால்போல் இனிய பேச்சையுடையவளே!

தேன் அமரும் பொழில் சாரல் சித்திர கூடத்து இருப்ப { வண்டுகள் பொருந்திய சோலைகளையுடைய தாழ்வரையோடுகூடிய சித்திரகூட பர்வதத்தில் நீங்கள் இருக்கையில்

விண்ணப்பம்—;

கான் அமரும் கல் அதர் போய் காடு உறைந்த காலத்து { காட்டில் பொருந்திய கல் நிறைந்த வழியிலேபோய் காட்டில் வஸித்தபோது

பரதன் நம்பி பணிந்ததும் { பரதாழ்வான் வந்து வணங்கியதும்

ஓர் அடையாளம்—.

323 சித்திரகூடத்திருப்பச் சிறுகாக்கைமுலைதீண்ட *
அத்திரமேகொண்டெறிய அனைத்துலகுந்திரிந்தோடி *
வித்தகனேயிராமாவுன் னின்னபயமென்றழைப்ப *
அத்திரமேயதன்கண்ணை அறுத்ததுமோரடையாளம். (இ)

சித்திரகூடத்து இருப்ப — சித்திரகூட பர்வதத்தில் (நீங்களிருவரும்) ராஜாநுபவம் பண்ணிக்கொண்டிருக்கையில்

சிறு காக்கை முலை தீண்ட — சிறிய காக்கையின் வடிவு கொண்டுவந்த ஜயந்தன் (உமது) திருமுலைத் தடத்தைத் தீண்ட

(அதனுற் சிற்றமுற்ற ஸ்ரீராமன்)

அத்திரமே கொண்டு எறிய — ப்ரஹ்மாஸ்திரத்தைத் தொடுத்துப் பிரயோகிக்க,

(அக்காகம் அதற்குத் தப்புவதற்காக)

அண்டத்து உலகும் திரிந்து ஓடி — உலகங்களிலெல்லாம்திரிந்து ஓடிப்போய்

(தப்ப முடியாமையால் மீண்டு இராமபிராணியே அடைந்து)

வித்தகனே இராமா ஓ நின் அபயம் என்று அழைப்ப — "ஆச்சரியமான குணங்களையுடையவனே! ஸ்ரீராமனே! ஓ!! (யான்) உன்னுடைய அடைக்கலம்" என்று கூப்பிட

அத்திரமே — (உயிரைக் கவர வேணுமென்று விட்ட அந்த) அஸ்த்ரமே

அதன் கண்ணை அறுத்ததும் — அந்தக் காகத்தின் ஒரு கண்ணைமாத்திரம்அறுத்து விட்டதும்

ஓர் அடையாளம்—.

ஸ்ரீ ராமாயணத்தில் ஸுந்தரகாண்டத்தில் இந்த வ்ருத்தாந்தம் திருவடிக்குப் பிராட்டியருளிச் செய்வதாகக் காணப்படுகின்றது ; இங்குப் பிராட்டிக்குத் திருவடி கூறுவதாகச் சொல்லுகிற விது, கல்பாந்தரத்திலாதல், புராணாந்தரத்திலாதல் உண்டென்று கொள்ளக்கடவது. இனி, மற்றும் பலவகைகளாலும் ஸமாதானங் கூறலாம். "அத்திரமே"—முதல் ஏகாரம்-இசைநிறை ; இரண்டாவது-சிறப்புப் பொருளது. நின் அபயம்-யான் அநந்யகதி என்றபடி. ... ... (சு)

324 மின்னெத்தநுண்ணிடையாய் மெய்யடியேன்விண்ணப்பம் *
பொன்னெத்தமானென்று புகுந்தினிதுவிளையாட *
நின்னன்பின்வழிநின்று சிலைபிடித்தெம்பிரானேக *
பின்னேயங்கிலக்குமணன் பிரிந்ததுமோரடையாளம். (எ)

மின் ஒத்த நுண் இடையாய் — மின்னலைப்போன்ற மெல்லிய இடையை யுடையவளே!

மெய் அடியேன் விண்ணப்பம் — உண்மையான பக்தனாகிய எனது விண்ணப்பத்தை(க் கேட்டருளவேணும்;)

பொன் ஒத்த மான் ஒன்று புகுந்து இனிது விளையாட — பொன் நிறத்தை ஒத்த (நிறமுடைய) (மாரீசனாகிய) ஒரு மான் (பஞ்சவடியில் நீரிருக்கும் ஆச்ரமத்தருகில்) வந்து அழகாக விளையாடா நிற்க,

(அதை மாயமான் என்று இளையபெருமான் விலக்கவும்)

நின் அன்பின் வழி நின்று — உம்முடைய ஆசைக்குக் கட்டுப்பட்டு நின்று

சிலை பிடித்து — வில்லை யெடுத்துக்கொண்டு

எம்பிரான் ஏக — இராமபிரான் (அம்மானைப் பிடித்துக் கொணர்வதாகி அதன் பின்னேதொடர்ந்து) எழுந்தருள,

பின்னே அங்கு இலக்குமணன் பிரிந்ததும் — பிறகு அவ்விடத்தில் இளைய பெருமாளும் பிரிந்ததுவும்

ஓர் அடையாளம்—.

325 மைத்தகுமாமலர்க்குழலாய் வைதேவிவிண்ணப்பம் *
ஒத்தபுகழ்வானரக்கோன் உடனிருந்துநினைத்தேட *
அத்தகுசீரயோத்தியர்கோன் அடையாளமிவைமொழிந்தான் *
இத்தகையாலடையாளம் ஈதவன்கைமோதிரமே. (அ)

மை தகு மா மலர் குழலாய் வைதேவி — மைபோல் விளங்குகிற, சிறந்த புஷ்பங்களை அணிவதற்கு உரிய கூந்தலை யுடைய வைதேஹியே!

விண்ணப்பம்:—

ஒத்த புகழ் — "பெருமாளோடு இன்பத்துன்பங்கள்) ஒத்திருக்கப் பெற்றவன்" என்கிற கீர்த்தியுடைய

வானரர்கோன் — வானரங்களுக்கெல்லாந் தலைவரான ஸுக்ரீவ மஹாராஜர்

உடன் இருந்து — (இராமபிராஜோடு) கூட இருந்து

நினை தேட — உம்மைத் தேடும்படி (ஆள் விடுகையில் என்னிடத்து விசேஷமாக அபிமானிக்க)

அதகு சீர் அயோத்தியர் கோன் அடையாளம் இவை மொழிந்தான் — (பிரிந்த) அந்த நிலைக்குத் தகுதியான குணமுள்ள அயோத்தியிலுள்ளார்க்குத் தலைவரான பெருமாள் இவ்வடையாளங்களை (என்னிடத்தில்) சொல்லியருளினான்; (ஆதலால்)

அடையாளம் இதகையால் — (யான் சொன்ன) அடையாளங்கள் இவ்வழியால் (வந்தன); (அன்றியும்)

ஈது அவன் கை மோதிரம் — இதுவானது அவ்விராமபிரானுடைய திருக்கையிலணிந்துகொள்ளும் மோதிரமாகும்.

—பெருமாள் உம்மைத் தேடிக்கொண்டு வரும்போது வழியில் ஸுக்ரீவ மஹாராஜனோடு அக்நிஸாக்ஷிகமாகத் தோழமை பூண்டுகொண்டு அவ்விருவரும் ஒன்றாக விருந்து ஒவ்வொரு திக்குக்குப் பலகோடிக் கணக்கான வானரர்களை உம்மைத் தேடும்படி அனுப்பும்போது ஸுக்ரீவமஹாராஜன் என்னிடத்தில் விசேஷ அபிமானம் வைத்திருப்பதை உணர்ந்து, "இவனுலே நமதுகாரியம் கைகூடும்" என்று என்னிடத்தில் இராமபிரான் விசேஷகடாக்ஷம் செய்தருளி இவ்வடையாளங்களைச் சொல்லியனுப்பிய தனால், இப்படி அடையாளங்களை யான் கூறினேன்; அன்றியும், தனது நாமாங்கிதமான மோதிரத்தையும் கொடுத்தருளினனென்று அநுமான் இராமபிரானுடைய திருவாழியையும் காட்டித் தான் ராமதூத னென்பதை வற்புறுத்திப் பிராட்டியின் ஸந்தேஹத்தைப் போக்குகின்றனனென்க. (அ)

326 திக்குநிறைபுகழாளன் தீவேள்விச்சென்றநாள் *
மிக்கபெருஞ்சிலைவடுவே வில்லிறுத்தான்மோதிரங்கண்டு *
ஒக்குமாலடையாளம் அனுமானென்றுச்சிமேல் *
வைத்துக்கொண்டுகந்தனளால் மலர்க்குழலாள்சீதையுமே. (கூ)

திக்கு நிறை புகழ் ஆளன் தீவேள்வி — திக்குகளிலே நிறைந்த கீர்த்தியையுடையவனான ஜநகராஜனுடைய அக்நிகளை கொண்டு செய்யும் யாகத்திலே

சென்ற நாள் — (விச்வாமித்திரருடன்) போன காலத்திலே

மிக்க பெருசிலை வடுவே வில் இறுத்தான் மோதிரம் கண்டு — மிகவும் பெரிய ஸபையின் நடுவில் ருத்ரதநுஸ்ஸை முறித்த இராமபிரானுடைய மோதிரத்தை பார்த்து

மலர் குழலாள் சீதையும் — பூச்சூடத்தக்க கூந்தலையுடையளானஸீதாபிராட்டியும்

அனுமான் — 'வாராய் ஹனுமானே!

அடையாளம் ஒக்கும் என்று — நீ (சொன்ன) அடையாளங்களெல்லாம் ஒத்திராநின்றுள்ளனவையே' என்று திருவடியை நோக்கிச்) சொல்லி (அத்தத் திருவாழியை)

உச்சி மேல் வைத்துக்கொண்டு உகந்தனள் — தன் தலையின்மீது வைத்துக்கொண்டு மகிழ்ந்தாள்.

327 வாராரும்முலைமடவாள் வைதேவிதனைக்கண்டு *
சீராருந்திறலனுமன் தெரிந்துரைத்தவடையாளம் *
பாராரும்புகழ்ப்புதுவைப் பட்டர்பிரான்பாடல்வல்லார் *
ஏராரும்வைகுந்தத்து இமையவரோடிருப்பாரே. (ம)

வார் ஆரும் முலை மடவாள் வைதேவி தனை கண்டு — கச்சு அணிந்திருக்கைக்கு உரிய முலையையுடையளான ஸீதாபிராட்டியைப் பார்த்து

சீர் ஆரும் திறல் அநுமன் — சீர்மைபொருந்திய சக்தியையுடையனான சிறிய திருவடி

தெரிந்து உரைத்த அடையாளம் — (பெருமாளிடத்தில் தான்) அறிந்துகொண்டு, (பின்பு பிராட்டியிடத்திற்சொன்ன) அடையாளங்களை (க்கூறுவதான),

பார் ஆரும் புகழ் புதுவை பட்டர் பிரான் பாடல் — பூமியெங்கும் பரவின கீர்த்தியையுடையராய் ஸ்ரீவில்லிபுத்தூர்க்குத் தலைவரான பெரியாழ்வார் அருளிச்செய்த இப்பாடல்களை

வல்லார் — ஓதவல்லவர்கள்

ஏர் ஆரும் வைகுந்தத்து — எல்லா நன்மைகளும் நிறைந்த ஸ்ரீவைகுண்டத்தில்

இமையவரோடு இருப்பார் — நித்யஸூரிகளோடுகூட வாழ்கையாயிருக்கப் பெறுவர்கள்.

அடிவரவு:—நெறி அல்லி கலக்கிய வாரணி மான் சித்திர மின் மைத்தகு திக்கு வாராரும் கதிர்.

மூன்றும்பத்து உரை முற்றிற்று.

நான்காம்பத்து—முதல் திருமொழி, கதிராயிரமிரவி.

[எம்பெருமானைத் தேடுவார் சிலரும் அவனைக் கண்டோமென்பார் சிலருமாக ஆழ்வார் தம்மை இரண்டு வகுப்பாக வகுத்துக்கொண்டு பேசும் பதிகம்.]

நாய்ச்சியார் திருமொழியில் "பட்டிமேய்க்தோர் காரேறு" என்ற திருமொழியை இத்திருமொழியோடு ஒப்பிடுக; "இங்கே போதக் கண்டீரே" என்று கேட்பார் சிலரும், "விருந்தாவனத்தே கண்டோமே" என்று விடையளிப்பார் சிலருமாய்ச் சென்றதிறே அத்திருமொழிதன்னிலும். ...

328 கதிரிராயிரமிரவி கலந்தெரித்தாலொத்தநீண்முடியன் *
எதிர்ப்பெருமையிராமனை யிருக்குமிடம்நாடுதிரேல் *
அதிருங்கழற்பொருதோள் இரணியனகம்பிளந்தரியாய் *
உதிரமனைந்தகையோடிருந்தானை உள்ளவாகண்டாருளர். (க)

கதிர் ஆயிரம் இரவி கலந்து எரித்தால் ஒத்த நீள் முடியன் — (எண்ணிறந்த) கிரணங்களையுடைய ஆயிரம் ஆதித்யர்கள் ஏககாலத்திற்கூடி ஜ்வலித்தாற்போல் (மிகவும் பளபளவா நின்றுள்ள) நீண்ட திருவபிஷேகத்தையுடையவனும்

எதிர் இல் பெருமை இராமன் — ஒப்பற்றபெருமையையுடையவனுமான இராமபிரான்

இருக்கும் இடம் நாடுதிர் ஏல் — எழுந்தருளியிருக்குமிடத்தை தேடுகிறீர்களாகில்

(அவ்விடத்தைச் சொல்லுகிறேன்;)

அதிரும் கழல் பொரு தோள் இரணியன் ஆகம் அரி ஆய் பிளந்து — (கல்கல் என்று) ஒலிசெய்யா நின்றுள்ள வீரக்கழலையும் போர்செய்யப் பதைக்கிற தோள்களையுமுடைய ஹிரண்யாஸுரனுடைய மார்பை நரஸிம்ஹரூபியாய்க்கொண்டு கீண்டு

உதிரம் அனைந்த கையோடு இருந்தானை — (அதனையுண்டான) ரக்தத்தை அளைந்த கைகளோடு கூடி (சிற்றந்தோற்ற)எழுந்தருளியிருந்த நிலைமையில் (அவனை)

உள்ள ஆ கண்டார் உளர் — உள்ளபடி ஸேவித்தவர்கள் இருக்கின்றனர்.

* * *—இதனால் இராமனாய் அவதரித்ததும் நரஸிம்ஹமாய் அவதரித்தது மெல்லாம் ஒரு ஈச்வரவ்யக்தியேயென்று தர்மியின் ஐக்யத்தைக் கூறியவாறும்; மேலிற்பாட்டுக்களிலுமிங்ஙனமேகொள்க. (க)

329 நாந்தகஞ்சங்குதண்டு நாணெலிச்சார்ங்கம்திருச்சக்கரம் *
ஏந்துபெருமையிராமனை யிருக்குமிடம்நாடுதிரேல் *
காந்தள்முகிழ்விரற்சீதைக்காகிக் கடுஞ்சிலைசென்றிறுக்க *
வேந்தர்தலைவன்சனகராசன்றன் வேள்வியிற்கண்டாருளர். (உ)

காந்தகம் சங்கு தண்டு நாண் ஒலி சார்ங்கம் திரு சக்கரம் ஏந்து பெருமை இராமன் இருக்கும் இடம் நாடுதிர் ஏல்— நந்தகம் என்னும் வாளையும் ஸ்ரீபாஞ்ச ஜந்யத்தையும் கௌமோதகி என்னும் கதையையும் காண்கோஷத்தையுடைய ஸ்ரீசார்ங்கதநுஸ்ஸையும் திருவாழியாழ்வானையும் (திருக்கைகளில்) ஏந்தும் படியான பெருமையையுடைய இராமபிரான்

காந்தள் முகிழ்விரல் சீதைக்கு ஆகி — செங்காந்தளரும்பு போன்ற விரல்களையுடைய பிராட்டிக்காக

கடுஞ்சிலை சென்றிறுக்க வேந்தர் தலைவன் சனகராசன் தன் வேள்வியில் சென்று — ராஜாதிராஜனை ஜனகசக்ரவர்த்தி யினுடைய யஜ்ஞவாடத்திலே எழுந்தருளி

கண்டார் உளர் — வலிய வில்லை முறிக்கக் கண்டவர்கள் இருக்கின்றனர்.

330 கோலவானகோம்புபறித்துக் கூடலர்சேனைபொருதழிய *
சிலையால்மராமரமெய்ததேவனைச் சிக்கெனகாடுதிரேல் *
தலையால்குரக்கினந்தாங்கிச்சென்று தடவரைகொண்டடைப்ப *
அலையார்கடற்கரைவீற்றிருந்தானை அங்குத்தைக்கண்டாருளர். (கூ)

கோலவான கோம்பு பறித்து — கொலை செய்கையையே இயல்வாகவுடைய (குவலயாபீடமென்னும்) யானையினுடைய தந்தங்களைப் பறித்துக் கொண்டவனும்

கூடலர் சேனை அழிய பொருது — (ஜரஸ்தாசத்திலுள்ள ராக்ஷஸர்களாகிய) சத்துருக்களுடைய சேனையானது அழியும்படி போர் செய்தவனும்,

சிலையால் மராமரம் எய்த தேவனை — வில்லாலே ஸப்தஸால வ்ருக்ஷங்களை எய்தவனுமான எம்பிரானை

சிக்கன காடுதிர் ஏல் — சத்ருபாத்யவஸாயத்தை தேடுகிறீர்களாகில்

(அவனிருக்குமிடஞ் சொல்லுகிறேன்—;)

குரங்கு இனம் தடவரை தலையால் தாங்கிக்கொண்டு சென்று அடைப்ப — வாநரஸேனையானது பெரிய மலைகளை (தமது) தலைகளினால்சுமந்துகொண்டுபோய் (கடலின் நடுவே அணையாக அடைக்க

அலை ஆர் கடல் கரை வீற்றிருந்தானை — அலையெறிகிற கடற்கரையிலே எழுந்தருளியிருந்த இராமபிரானை

அங்குத்தை கண்டார் உளர்—. — அந்த ஸந்நிவேசத்திலே

கூடலர்—கூடமாட்டாதவர்; எனவே, சத்ருக்களாயினர்: ஸந்தர்ப்பம் நோக்கி, ஜநஸ்தாக வாஸிகளெனக் கொள்ளப்பட்டது; "மராமரமெய்த தேவனை" என்றிறே உடன்கூறியது. (கு)

331 தோயம்பரந்தநடுவுதழலின் தோல்லிவடிவுகொண்ட *
மாயக்குழவியதனைநாடுறில் வம்மின்சுவடுரைக்கேன் *
ஆயர்மடமகள்பின்னைக்காகி அடல்விடையேழினையும் *
வீயப்பொருதுவியர்த்துநின்றானை மெய்ம்மையேகண்டாருளர். (கூ)

பரந்த தோயம் நடுவு — எங்கும் பரவின ஜலத்தின் நடுவே

சூழலின் — உபாயத்தினால்

தொல்லை வடிவு கொண்ட — பழமையான (பெரிய) வடிவைச் சுருக்கிக்கொண்ட

மாயம் குழவி அதனை நாடுறில் — அந்த ஆச்சர்யக்குட்டியை தேட முயன்றீர்களாகில்

வம்மின் — (இக்கே) வாருங்கள்;

சுவடு உரைக்கேன் — (உங்களுக்கு) ஓரடையாளம் சொல்லுகிறேன்;

ஆயர் மகள் — (ஸ்ரீகும்பர் என்னும்) ஆயருடைய பெண்பிள்ளையும்

மடம் — மடப்பம் என்ற குணத்தையுடையளுமான

பின்னைக்கு ஆகி — நப்பின்னைப் பிராட்டிக்காக

அடல் விடை ஏழினையும் வீய — வலிய ரிஷபங்களேழும் முடியும்படியாக

பொருது — (அவற்றோடு போர்செய்து (அந்த ஆயாஸத்தாலே)

வியர்த்து நின்றானை — குறுவெயர்ப்பரும்பின வடிவுந்தானுமாய் நின்றவனை

மெய்ம்மையே கண்டார் உளர்—. — உண்மையாகவே

* * *—பரீத என்றதன்பின் 'போது' எனவருவித்து, நடுவு சூழலில் தோயம்பரந்தபோது எனஇயைத்து, (சுற்றும் கடலாய்,) அதனிடையிலே உருண்டைவடிவாயிருக்கிற பூமியெங்கும் ஜலம் பரவினகாலத்திலே என்றுரைக்கவுங் கூடும். இவ்வுலகத்தையடங்கலும் பிரளயவெள்ளம் வந்துமூட, அதில்ரக்ஷ்யவர்க்கம் அழியாதபடி அவற்றைத் திருவயிற்றில்வைத்து கோக்கித் தனது பெரியவடிவைச்சிறிதாகச் சுருக்கிக்கொண்டு ஒரு ஆலந்தளிரிலே எம்பெருமான் சிறுகுழந்தைபோலத் துயின்ற வரலாறு முன்னடிகளிலடங்கியது. தோயம்—வடசொல். தூழல்—உபாயம்; அதாவது—பெரியவடிவைச் சிறியவடிவாகச் சுருக்கிக்கொண்டமை, (ஸ)

332 கீரேறுசெஞ்சடைகீலகண்டனும் நான்முகனும்முறையால் *
சீரேறுவாசகஞ்செய்யநின்ற திருமாலைநாடுதிரேல் *
வாரேறுகொங்கையுருப்பிணியை வலியப்பிடித்துக்கொண்டு
தேரேற்றி * சேனைநடுவுபோர்செய்யச் சிக்கெனக்கண்டாருளர். (ஙு)

(இதைக் கேளுங்கள்;)

நீர் ஏறு செம் சடை நீலகண்டனும் — (எம்பெருமானது ஸ்ரீபாத) தீர்த்தமானது ஏறப்பெற்ற சிவந்த ஜடையையும் (விஷமுண்டதனால்) கறுத்த மிடற்றையுமுடையனான சிவபெருமானும்

நான்முகனும் — சதுர்முகப்ரஹ்மாவும்

முறையால் — (சேஷ சேஷி பாவமாகிற) முறையின்படி

சீர் ஏறு வாசகம் செய்ய நின்ற — சிறந்தசொற்களைக்கொண்டு துதிக்கும்படி அமைந்து நின்ற

திருமாலே — ச்ரிய: பதியாகிய எம்பெருமானே

நாடுதிர் ஏல் — தேடுகிறீர்களாகில்,

வார் ஏறு கொங்கை உருப்பிணியை — கச்சை அணிந்த முலைகளையுடைய ருக்மிணிப் பிராட்டியை

வலிய பிடித்துக் கொண்டு தேர் ஏற்றி — பலாத்காரமாகப் பிடித்துக் கொண்டு (தனது) திருத்தேரின்மேல் ஏறவிட்டு

(அவ்வளவிலே சிசுபாலாதிகளான பல அரசர் எதிர்த்துவர,)

சேனை நடுவு — (அவ்வரசர்களுடைய) ஸைந்யமத்யத்திலே

போர் செய்ய — (அவ்வரசர்களோடு) யுத்தம் பண்ணும்போது

சிக்கன — திண்மையாக [த்ருடமாக]

கண்டார் உளர்—.

333 பொல்லாவடிவுடைப்பேய்ச்சிதுஞ்சப் புணர்முலைவாய்மடுக்க
வல்லானை * மாமணிவண்ணனை மருவுமிடம்நாடுதிரேல் *
பல்லாயிரம்பெருந்தேவிமாரோடு பௌவமெறிதுவரை *
எல்லாருஞ்சூழச்சிங்காசனத்தே யிருந்தானைக்கண்டாருளர். (சு)

(இதைக்கேளுங்கள்:)

பொல்லா வடிவு உடை பேய்ச்சி துஞ்ச — மஹாகோரமான வடிவையுடைய பூதனையானவள் மாளும்படியாக

புணர் முலை வாய் மடுக்க வல்லான் — தன்னில்தான் சேர்ந்திருக்துள்ள (அவளது) முலையிலே (தனது) வாயை வைத்து உண்ணவல்லவனும்

மா மணி வண்ணன் — நீலமணிபோன்ற நிறத்தையுடையனுமான எம்பெருமான்

மருவும் இடம் நாடுதிர் எல் — பொருந்தி எழுந்தருளி யிருக்குமிடத்தைத் தேடுகிறீர்களாகில்,

பௌவம் எறி துவரை — கடலலைகள் வீசப்பெற்றுள்ள ஸ்ரீத்வாரகையிலே

எல்லாரும் சூழ — தேவிமார்எல்லாரும் சுற்றுஞ் சூழ்ந்துகொண்டிருக்க,

பல் ஆயிரம் பெரு தேவிமாரொடு — (அந்தப்) பதினாயிரம் தேவிமாரோடுகூட

சிங்காசனத்து இருந்தானை — ஸிம்ஹாஸநத்தில் எழுந்தருளியிருக்கும்போது

கண்டார் உளர்—.

334 வெள்ளைவிளிசங்குவெஞ்சுடர்த்திருச்சக்கரம் ஏந்துகையன் *
உள்ளவிடம்வினவில் உமக்கிறைவம்மின்சுவடுரைக்கேன் *
வெள்ளைப்புரவிக்குரக்குவெல்கொடித் தேர்மிசைமுன்புநின்று *
கள்ளப்படைத்துணையாகிப் பாரதங்கைசெய்யக்கண்டாருளர். (எ)

வெண்மை நிறமுடையதும் (அநுபவகைங்கரியங்களில் ருசியுடையீர்! வாருங்கள் என்று தன் த்வநியால்) அழைப்பது போன்றுள்ளதுமான ஸ்ரீ பாஞ்சஜந்யத்தையும் தீக்ஷ்ணமான ஐந்தலை நாகத்தையுமுடைய திருவாழியாழ்வானையும் தரியா நின்றுள்ள திருக்கைகளை

வெள்ளை விளி சங்கு வெம் சுடர் திரு சக்கரம் ஏந்து கையன் — யுடைய எம்பெருமான்

உள்ள இடம் வினவில் — எழுந்தருளியிருக்கு மிடத்தைக் கேட்கிறீர்களாகில்

உமக்கு — (கேட்கிற) உங்களுக்கு

இறை சுவடு உரைக்கேன் — சிறிது அடையாளம் சொல்லுகிறேன்,

வம்மின் — வாருங்கள்;—

வெள்ளீ புரவி குரங்கு வெல்கொடி தேர் மிசை முன்பு நின்று — வெள்ளைக்குதிரைகள் பூண்டிருப்பதும் குரங்கைகிற வெற்றிக்கொடியை யுடையதுமான (அர்ஜுனனுடைய) தேரின் மேலே (ஸாரதியாய்) முன்னே நின்று

படை கள்ளம் தவிர்ந்து ஆகி — ஸைந்யத்துக்கு க்ருத்ரிமத் துணையாயிருந்து

பாரதம் கைசெய்ய — பாரத யுத்தத்தை அணிவகுத்து நடத்தும்போது

கண்டார் உளர்—.

335 காழிகைகூறிட்டுக்காத்துநின்ற அரசர்கள்தம்முகப்பே *
காழிகைபோகப்படைபொருதவன் தேவகிதன்சிறுவன் *
ஆழிகொண்டன்றிரவிமறைப்பச் சயத்திரதன்தலையை *
பாழிலுருளப்படைபொருதவன் பக்கமேகண்டாருளர். (அ)

காழிகை கூறிட்டு காத்து நின்ற அரசர்கள் தம் முகப்பே — (பகல் முப்பது) காழிகைகளைப் பங்கிட்டுக்கொண்டு (ஜயத்ரதனைக்) காத்துக்கொண்டிருந்த ராஜாக்கள் முன்னிலையில்

காழிகை போக படைபொருதவன் — (பகல் முப்பது) காழிகையும் போயிற்றென்று தோற்றும்படியாக (தன்) ஆயுதமாகிய திருவாழியாழ்வானைக்கொண்டு(ஸூர்யனை) மறைத்தவனும்

தேவகிதன் சிறுவன் — தேவகிப் பிராட்டியின் பிள்ளையுமான கண்ணபிரான்

(உள்ள இடம்) — எழுந்தருளியிருக்குமிடத்தை

(வினவில்) — கேட்கிறீர்களாகில்

(உரைக்கேன்) — சொல்லுகின்றேன்;—

அன்று — (அப்படி அவ்வரசர்கள் காத்துக்கொண்டு நின்ற) அன்றைக்கு

ஆழி கொண்டு இரவி மறைப்ப — திருவாழியினால் ஸூர்யனைத்தான் மறைக்க (அதனால் பகல் கழிந்ததாகத் தோற்றி வெளிப்பட்ட)

சயத்திரதன் தலை — ஜயத்ரதனுடைய தலையானது

பாழில் உருள படை பொருதவன் பக்கமே — பாழியிலே கிடந்துருளும்படி அம்பைச் செலுத்தின அர்ஜுனனருகில்

கண்டார் உளர் — (அவ்வெம்பெருமானைக்) கண்டாருண்டு.

* * *—அர்ஜுனன் பதின்மூன்றுநாட் போரில் தன்மகனை அபிமந்யுவைக்கொன்ற ஜயத்ரதனை 'நாளை அஸ்தமிப்பதற்கு முன்னே கொல்லாவிடின் நீக்குநித்து உயிர்விடுவேன்' என்று ப்ரதிஜ்ஞை பண்ண, அதற்கு இடமறும்படி புருஷப் பிரமாணமன்றியே தீர்க்கனை அவனை ஒரு புருஷப்பிரமாணமாகக் குழிக்குள்ளே நிறுத்தி 'நீங்கள் இத்தனை காழிகை காத்துக்கொள்ளுங்கோள்; நாங்கள் இத்தனை காழிகை காத்துக்கொள்ளுகிறோம்' என்று விபாகம் பண்ணிக்கொண்டு. பகல் முப்பது காழிகையும் அவனுக்கு ஒருநலிவு வாராதபடி காத்துக்கொண்டு நின்ற அதிரத மஹாரதரான துரியோதனன் முதலிய ராஜாக்கள் முன்னே கண்ணபிரான் அர்ஜுனனுடைய சபதம் பொய்த்துவிடுமே யென்று சிந்தித்து, ஸூர்யாஸ்தமயமாவதற்குச் சில காழிகைக்கு முன்னமே பகல்காழிகை முப்பதுஞ் சென்றதாகத் தோற்றும்படி, நினைவறிந்து காரியஞ்செய்யுந் தனது திருவாழியைக் கொண்டு ஸூர்யனை மறைக்க, அதனால் எங்கும் இருளடைந்தபொழுது அர்ஜுனன் அக்நிப்ரவேசஞ் செய்தலைக் களிப்புடனே காணுதற்குச் சயத்ரதனைக் குழியில் நின்றும் அவர்கள் கிளப்பி நிறுத்தினவளவிலே இருள் பரப்பின திருவாழியைக் கண்ணபிரான் வாங்கிவிட, பகலாயிருந்ததனால் உடனே அர்ஜுனன் ஜயத்ரதனுடைய தலை பாழிபிற் கிடந்துருளுமாறு அம்பாலே பொருதனன் [தலைதுணித்தனன்] என்பது இப்பாட்டிற் குறித்த வரலாறு. ... ... (அ)

336 மண்ணும்மலையும்மறிகடல்களும் மற்றும்யாவுமெல்லாம் *
திண்ணம்விழுங்கியுமிழ்ந்ததேவனைச் சிக்கெனநாடுதிரேல் *
எண்ணற்கரியதோரேனமாகி யிருநிலம்புக்கிடந்து *
வண்ணக்கருங்குழல்மாதரோடு மணந்தானைக்கண்டாருளர். (கூ)

மண்ணும் மலையும் மறி கடல்களும் மற்றும் யாவும் எல்லாம் — பூமியையும் மலைகளையும் அலையெறியா நின்றுள்ள கடல்களையும் மற்றுமுண்டான எல்லாப் பொருள்களையும்

நிண்ணம் விழுங்கி — நிச்சயமாக (ப்ரளயங் கொள்ளாதபடி) திருவயிற்றிலே வைத்து நோக்கி

(பின்பு ப்ரளயங்கழிந்தவாறே)

உமிழ்ந்த தேவனே — (அவற்றை வெளிநாடு காண) உமிழ்ந்த எம்பெருமானே

சிக்கன நாடுநிர் ஏல் — ஊற்றத்துடனே தேடுகிறீர்களாகில்

(இதனைக் கேளுங்கள் ;)

எண்ணற்கு அரியது ஓர் ஏனம் ஆகி — நிகனக்க முடியாத (பெருண்மையையுடைய) ஒப்பற்ற வராஹமாய் அவதரித்து

புக்கு இரு நிலம் இடந்து — (ப்ரளய வெள்ளத்திற்) புகுந்து பெரிய பூமியை அண்டபித்தியில் நின்றும் ஒட்டு விடுவித்தெடுத்து

(அவ்வளவிலே பூமிப்பிராட்டி தன்னை வந்து அணைக்க)

வண்ணம் கரு குழல் மாதரோடு மணந்தானே — அழகியதும் கறுத்ததுமான கூந்தலையுடைய (அந்த) பூமிப்பிராட்டியோடு ஸம்ச்லேஷித்தருளினவனே

கண்டார் உளர்—.

337 கரியமுகிற்புரைமேனிமாயனைக் கண்டசுவடுரைத்து *
புரவிமுகஞ்செய்துசெந்நெலோங்கி விளைகழனிப்புதுவை *
திருவிற்பொலிமறைவாணன் பட்டர்பிரான்சொன்னமாலைபத்தும் *
பரவுமனமுடைப்பத்தருள்ளார் பரமனடிசேர்வர்களே. (ய)

கரிய முகில் புரை மேனி மாயனை — நீலமேகம் போன்ற திருமேனியுடையனும் ஆச்சரியச் செய்கைகளையுடையனுமான

கண்ட சுவடு உரைத்து — கண்ணபிரானை ஸேவித்த அடையாளங்களை அருளிச்செய்து;

செந்நெல் ஓங்கி புரவிமுகம் செய்த விளை கழனி புதுவை — செந்நெற் பயிர்களானவை (ஆகாசமளவும்) உயர்ந்து குதிரை முகம்போலத் தலைவணங்கி விளையா நிற்கப்பெற்ற வயல்களையுடைய ஸ்ரீவில்லிபுத்தூர்க்குத் தலைவரும்

திருவின் பொலி மறை வாணன் பட்டர்பிரான் — (விஷ்ணுபக்தியாகிற) செல்வத்தினால் விளங்காநின்றுள்ளவரும் வேதத்துக்குநிர்வாஹகருமான பெரியாழ்வார்

சொன்ன மாலை பத்தும் — அருளிச்செய்த சொல்மாலையாகிற இப் பத்துப்பாட்டையும்

பரவும் மனம் உடை பத்தர் உள்ளார் — அநுஸந்திக்கைக்கீடான மநஸ்ஸையுடையவரும் பக்தியையுடையவருமாயிருப்பவர்கள்

பரமன் அடி சேர்வர்கள் — பரமபுருஷனுடைய திருவடிகளைக் கிட்டப் பெறுவார்கள்.

அடிவரவு:—கதிர் நாந்தகம் கொலை தோய்ம் நீரேறு பொல்லா வெள்ளை நாழிகை மண் கரிய அலம்பா.

—●—

நான்காம்பத்து—இரண்டாந்திருமொழி, அலம்பா வெருட்டா.

[திருமாலிருஞ்சோலைப் பதிகம்.]

338 அலம்பாவெருட்டாக் கொன்றுதிரியுமரக்கரை *
குலம்பாழ்படுத்துக் குலவிளக்காய்நின்றகோன்மலை *
சிலம்பார்க்கவக்கு தெய்வமகளிர்களாடுஞ்சீர் *
சிலம்பாறுபாயுந் தென்திருமாலிருஞ்சோலையே. (க)

தெய்வம் மகளிர்கள் — தேவஸ்திரீகள்

சிலம்பு ஆர்க்க வந்து ஆடும் சீர் — (தமது) பாதச்சிலம்புகள் ஒலிக்கும்படி (பூலோகத்தில்) வந்து நீராடும்படியான பெருமையையுடைய

சிலம்பு ஆறு — நூபுர கங்கையானது

பாயும் — (இடைவிடாமல்) பெருகப் பெற்றுள்ள

தென் திருமாலிருஞ் சோலை — அழகிய திருமாலிருஞ் சோலையானது,—

அலம்பா வெருட்டா கொன்று திரியும் அரக்கரை — (ப்ராணிகளை) அலைய்ச் செய்தும் பயப்படுத்தியும் உயிர்க்கொலை செய்தும் திரிந்துகொண்டிருந்த ராக்ஷஸர்களை

குலம் பாழ் படுத்து — ஸகுடும்பமாகப் பாழாக்கி

குலம் விளக்கு ஆய் நின்ற கோன் மலை — (இக்ஷ்வாகு வம்சத்துக்கு விளக்காய் நின்ற பெருமாள் (எழுந்தருளியிருக்குமிடமான) திருமலையாம்.

* * *—அலம்பா, வெருட்டா—'செய்யா' என்னும் வாய்பாட்டு உடன்பாட்டிறந்தகால வினையெச்சம்; அலம்பி, வெருட்டி என்றபடி; அலம்புதல்—'இவர்களின் கீழ் நமக்குக் குடியிருக்கமுடியாது' என்று நிலைதளும்பச் செய்தல்; பிறவினையில் வந்த தன்வினை. [சிலம்பு ஆர்க்க இத்யாதி.] தேவஸ்த்ரீகள் முன்பு நூபுரகங்கையில் நீராடவரும்போது ராவணாதிராக்ஷஸர்களுக்கு அஞ்சித் தாங்கள் இருப்பிடத்தை விட்டுப் புறப்படுவது அவ்வரக்கர்கட்குத் தெரியாமைக்காகத் தம் காற்சிலம்புகளைக் கழற்றிவிட்டு வருவார் சிலரும், அவை ஒலிசெய்யாதபடி பஞ்சையிட்டடைத்துக் கொண்டு வருவார் சிலருமாயிருப்பார்கள்; எம்பெருமான் அவதரித்து, அரக்கரைக் குலம் பாழ்படுத்த பின்புச் சிலம்பொலிக்க வருவர்களென்க.

339 வல்லாளன்தோளும் வாளரக்கன்முடியும் * தங்கை
பொல்லாதமூக்கும் போக்குவித்தான்பொருந்துமலை *
எல்லாவிடத்திலுமெங்கும்பரந்து பல்லாண்டொலி *
செல்லாநிற்குஞ்சீர்த் தென்திருமாலிருஞ்சோலையே. (உ)

பல்லாண்டு ஒலி — மங்களாசாஸந கோஷமானது

எல்லா இடத்திலும் எங்கும் பரந்து செல்லாநிற்கும் சீர் — எல்லாரிடங்களிலும் திருமலையின் பரப்பெங்கும் பாவிச் செல்லும்படியான பெருமையையுடைய

தென் திருமாலிருஞ்சோலை—;

வல் ஆளன் — வலிய ஆண்மைபையுடையனும்

வாள் — (சிவனிடத்துப்பெற்ற) வாளையுடையனுமான

அரக்கன் — ராவணனுடைய

தோளும் முடியும் — தோள்களும் தலைகளும்

தங்கை பொல்லாத மூக்கும் — (அவனது) தங்கையாகிய சூர்ப்பணகையின் கொடிய மூக்கும்

போக்குவித்தான் — அறுப்புண்டு போம்படி பண்ணின எம்பெருமான்

பொருந்தும் மலை — பொருந்தி எழுந்தருளியிருக்குமிடமான திருமலையாம்.

* * *—வல்லாளன் என்று பாணனைச் சொல்லிற்றாய், அவனது தோள்களையும் ராவணனது முடிகளையும் போக்குவித்தானென்று உரைத்ததுமொன்று. ... (உ)

340 தக்கார்மிக்கார்களைச் சஞ்சலஞ்செய்யுஞ்சலவரை *
தெக்காநெறியேபோக்குவிக்குஞ் செல்வன்பொன்மலை *
எக்காலமுஞ்சென்று சேவித்திருக்குமடியரை *
அக்கானெறியைமாற்றும் தண்மாலிருஞ்சோலையே. (ஊ)

எக்காலமும் சென்று சேவித்திருக்கும் அடியரை — எப்போதும் போய் திருவடி தொழா நின்றுள்ள பாகவதர்களை

அக்கான்நெறியை மாற்றும் — அப்படிப்பட்ட [கொடுமையான] (பாவக்) காட்டுவழியில் நின்றும் விலக்கக்கடவதும்

தண் — தாபஹரமுமான

மாலிருஞ்சோலை;—

தக்கார் மிக்கார்களை — (க்ருபாவிஷயத்தில்) எம்பெருமானை ஒத்தவர்களும் (அவனிலும்) மேற்பட்டவர்களுமாயுள்ள மஹாத்மாக்களை

சஞ்சலம் செய்யும் சலவரை — அலைத்துவருத்தா நின்றுள்ள க்ருத்ரிமப்பய்ல்களே

தெக்கு ஆம் நெறியே போக்குவிக்கும் — தென்திசையிலுள்ள நரக மார்க்கத்திலே போகும்படி பண்ணுகின்ற

செல்வன் — ச்ரியபேதியான எம்பெருமான் (எழுந்தருளி யிருக்கு மிடமான)

பொன் மலை — அழகிய திருமலையாம்.

கான் நெறி—காட்டுவழி, பாவக்காட்டுவழி; என்க; "இறவுசெய்யும் பாவக்காடு" என்பது காண்க. ... ... (கூ)

341 ஆயர்கூடி அமைத்தவிழவை * அமரர்தங்
கோனுர்க்கோழியக் கோவர்த்தனத்துச்செய்தான்மலை *
வானுட்டில்நின்று மாமலர்க்கற்பகத்தொத்திழி *
தேனுறுபாயுந் தென்திருமாலிருஞ்சோலையே. (சு)

வான் நாட்டில் மாமலர் கற்பகம் தொத்தில் நின்று இழி தேன் — ஸ்வர்க்க லோகத்திலுள்ள பெரிய பூக்களை யுடைய கல்பவ்ருக்ஷத்தினுடைய பூங்கொத்தில் நின்றும் பெருகா நின்ற தேனானது

ஆறு பாயும் — ஆறுபோய்க் கொண்டு ஓடா நிற்கிற

தென் — அழகையுடைய

திருமாலிருஞ்சோலை—;

ஆன் ஆயர் கூடி அமைத்த விழவை — பசுக்களுக்குத் தலைவரான இடையர்கள் ஒன்று சேர்ந்து (இந்திரனுக்காக) ஏற்படுத்தின ஸமாராதனையை

அமரர் தம் கோனுர்க்கு ஒழிய — (அந்த) தேவேந்திரனுக்குச் சேரவொட்டாமல் தடுத்து

கோவர்த்தனத்து செய்தான் மலை — கோவர்த்தன மலைக்குச் (சேரும்படி) செய்தருளின கண்ணபிரானுடைய திருமலையாம்.

342 ஒருவாரணம்பணிகொண்டவன் பொய்கையில் * கஞ்சன்றன்
ஒருவாரணமுயிருண்டவன் சென்றுறையும்மலை *
கருவாரணம் தன்பிடிதுறந்தோட * கடல்வண்ணன்
திருவாணைகூறத்திரியுந் தண்மாலிருஞ்சோலையே. (எ)

பொய்கையில் ஒரு வாரணம் பணி கொண்டவன் — பொய்கைக் கரையில் (ஸ்ரீ கஜேந்த்ராழ்வானுகிற) ஒரு யானையினிடத்து கைங்கரியத்தை ஸ்வீகரித்தருளினவனும்,

கஞ்சன் தன் ஒரு வாரணம் உயிர் உண்டவன் — கம்ஸனுடைய (குவலயாபிடமென்ற) ஒரு யானையினுடைய உயிரைமுடித்தவனுமான கண்ணபிரான்

சென்று உறையும் மலை — எழுந்தருளி நித்யவாஸம் பண்ணப்பெற்ற மலையாவது;—

கரு வாரணம் தன் பிடி — கறுத்ததொரு யானை, தன்னுடைய பேடையானது

துறந்து ஓட — (பிரணய ரோஷத்தினால், தன்னைவிட்டிட்டு ஓடப்புக, (அதுகண்ட அவ்யானையானது)

"கடல் வண்ணன் திரு ஆணைகூற — "கடல்போன்ற நிறமுடைய அழகர்மேலாணை" என்று சொல்ல

திரியும் — (அப்பேடையானது அவ்வாணைக்குக் கட்டுப்பட்டு அப்புறம் போகமாட்டாமல்) மீளாநின்றுள்ள

தண் — குளிர்ந்த

மாலிருஞ் சோலை — திருமாலிருஞ்சோலை மலையாம்.

பின்னடிகளின் கருத்து;—திருமாலிருஞ் சோலைமலையிலுள்ள ஒருயானைக்கும் அதன்பேடைக்கும் பிரணயகலஹம் நேர்ந்து, அதனால் அப்பேடையானது அவ்யானையைச் சினந்து அதனைத் துறந்தோடப் புக, யானையானது அப்பேடையை மற்ற உபாயமொன்றினாலும் நிறுத்தமாட்டாமல், "அழகர் ஸ்ரீபாதத்தின்மேலாணை; நீ என்னைத் துறந்து அகலலாகாது" என்று ஆணையிட, அப்பேடையானது அவ்வாணையை மறுக்கமாட்டாமல் மீளா நிற்குமென்ற விசேஷத்தைக் கூறியவாறு. *ஸுந்தரதோர் திவ்யாஜ்ஞா* என்ற ஸுந்தரபாஹுஸ்தவ ச்லோகமும் இப்பொருளதே யென்றுணர்க. ... ... (கு)

343 ஏவிற்றுச்செய்வான் ஏன்றெதிர்ந்துவந்தமல்லரை *
சாவத்தகர்த்த சாந்தணிதோட்சதுரன்மலி *
ஆவத்தனமென்று அமரர்களும்கன்முனிவரும் *
சேவித்திருக்குந் தென்திருமாலிருஞ்சோலையே. (சூ)

ஏவிற்று செய்வான் — (கம்ஸன்)ஏவினகாரியங்களை செய்து முடிப்பதற்காக
ஏன்று எதிர்த்து வந்த மல்லரை — துணிந்து எதிரிட்டுவந்த (சாணூரன் முதலிய)மல்லர்களை
சாவ தகர்த்த — முடியும்படியாக நொறுக்கினவனும்
சாந்து அணி தோள் — (கூனியிட்ட)சாந்தை அணிந்து கொண்டுள்ள தோள்களையுடையனும்
சதுரன் — ஸமர்த்தனுமான கண்ணபிரான் (எழுந்தருளி யிருக்கிற)
மலி — மலியாவது;—
அமரர்களும் கல் முனிவரும் — (பிரமன்முதலிய) தேவர்களும் (ஸநகர் முதலிய) மஹர்ஷிகளும்
ஆவத்து தனம் என்று சேவித்து இருக்கும் — ஆபத்துக் காலத்துக்குத் துணையாயிருக்குமிடமென்று (நிஜமாகவே)ஸேவித்துக்கொண்டு இருக்குமிடமான
தென் திருமாலிருஞ்சோலை—.

344 மன்னர்மறுக மைத்துனன்மார்க்கொருதேரின்மேல் *
முன்னங்குநின்று மோழையெழுவித்தவன்மலி *
கொன்னவில்கூர்வேற்கோன் நெடுமாறன்தென்கூடற்கோன் *
தென்னன்கொண்டாடுந் தென்திருமாலிருஞ்சோலையே. (எ)

மன்னர் மறுக — (குருதேசத்து) அரசர்கள் குடல் குழம்பும்படி
மைத்துனன் மார்க்கு — மைத்துனன்மாரான பாண்டவர்களுக்கு(த் துணையாகி)
ஒரு தேரின் மேல் — ஒரு தேரிலே
முன் அங்கு நின்று — முற்புறத்திலேநின்று கொண்டு
மோழை எழுவித்தவன் மலி — (நீர்நரம்பில்விட்ட வருணாஸ்திரத்தின் வழியே) கிழுண்டான நீரானது குமிழியெறிந்து கிளரும்படி பண்ணினகண்ணபிரான்(எழுந்தருளி யிருக்கிற) மலியாவது—;
கொல் நவில் கூர் வேல் கோன் — கொலையையே தொழிலாகவுடைய கூர்மை பொருந்திய வேலையுடையவனும் ராஜநீதியை வழுவாமல் நடத்துமவனும்
நெடு மாறன் தென் கூடல் கோன் — பெருமை பொருந்தியவனும் 'மாறன்' என்னும் பெயருடையவனும் அழகிய 'நான்மாடக்கூடல்' என்ற பெயரையுடைய மதுரைக்குத் தலைவனும்
தென்னன் கொண்டாடும் — பாண்டி நாட்டுத் தலைவனுமான மலயத்வஜராஜனாலே கொண்டாடப்பெற்ற
தென் திருமாலிருஞ்சோலை—.

* * *—அர்ஜுனனுடைய தேர்க்குதிரைகள் தண்ணீர்க்கு விடாய்த்து இளைத்தவளவில், அவன் பக்கல் பக்ஷபாதியான கண்ணபிரான், கடினமான ஸ்தலத்திலும் நீர் நரம்பு அறியவல்லவனுதலால், அங்கு வாருணாஸ்திரத்தைப் பிரயோகித்துக் கிழுள்ளநீரை வெளிக்கிளப்பிக் குதிரைகளைவிட்டு நீருட்டிப் புரட்டியெழுப்பிக்கொண்டு போந்து பூட்டிக்கொண்டுவந்து முன்னேநிறுத்த, இதைக்கண்ட மாற்றரசரெல்லாம் "அர்ஜுநன்பக்கல் இக்கண்ணனுக்குப் பக்ஷபாதமிருந்தபடியென்!, இனி நாம் இவனை வெல்லுகையென்று ஒன்றுண்டோ? என்று குடல்மறுகினமை, முன்னடிகளிற் கூறப்பட்டது. மறுக—மனம் குழம்புகைக்காக. முன் அங்குநின்று—ஸாரத்யம் பண்ணுகைக்கு உரியஇடத்தில் நின்று என்றபடி. மோழை—கிழாறு; எழுவித்தலாவது-மேலெழும்படி செய்தல்.

அகஸ்தியமுனிவன் வீற்றிருக்கும் மலய பர்வதத்திற்சென்று 'தர்மமே நடத்தக்கடவேன்' என்று மலயபர்வதத்தையெழுதிக் கொடியெடுத்த 'மலயத்வஜன்' என்ற அரசன் தேவரீர் கங்கைநீராடப் போகாநிற்கச் செய்தே, * மதிதவழ் குடுமியளவிலே சென்றவாறே தேர் வடக்கு ஓடாமல்நிற்க, அவ்வரசன் அவ்விடத்திலே தேரை நிறுத்தி, 'இங்கே தீர்த்த விசேஷமும் எம்பெருமானும் ஸந்நிதி பண்ணியிருக்கவேணும்' என்று நினைத்து இறங்கி ஆராய்ந்து பார்க்க, அவ்விடத்தில் நித்யஸந்நிஹித ரான அழகர் அவ்வரசனை நோக்கி, 'இவ்வாற்றிலே நீராடு' என்று நியமித்தருள, காமங்கேட்டுணர்ந்து நீராட வேண்டுகையால் 'இவ்வாற்றுக்குப் பெயர் என்?' என்று அரசன்கேட்க, 'முன்பு நாம் உலகளந்த போது பிரமன் திருவடி விளக்கினகாலத்தில் நம் பாதச் சிலம்பின் நீர் இதிலே தெறித்துச் 'சிலம்பாறு' என்று பெயர்பெற்றது' என்று அழகர் அருளிச்செய்ய, அதுகேட்ட அரசன் அவ்வாற்றில் நீராடி, கங்காஸ்நாந விருப்பத்தையும் தவிர்ந்து அத்திருமாலிருஞ் சோலைமலையிற்றானே பேரன்பு பூண்டிருந்தா னென்ற வரலாற்றைத் திருவுள்ளம்பற்றித் "தென்னன் கொண்டாடும்" என்றருளிச் செய்தார். (எ)

345 குறுகாதமன்னரைக்கூடுகலக்கி வெங்கானிடை *
சிறுகால்நெறியேபோக்குவிக்குஞ் செல்வன்பொன்மலை *
அறுகால்வரிவண்டுகள் ஆயிரநாமஞ்சொல்லி *
சிறுகாலைப்பாடுந் தென்திருமாலிருஞ்சோலையே. (அ)

குறுகாத மன்னரை கூடு கலக்கி — (திருமலையை) அணுகாத அரசர்களுடைய இருப்பிடத்தைக் குலைத்து [அழித்து]
வெம் கான் இடை சிறு கால் நெறியே போக்குவிக்கும் — தீக்ஷ்ணமான காட்டிலே சிற்றடிவழியாக (அவ்வரசர்களை) ஓட்டுகின்ற
செல்வன் — திருமால் (எழுந்தருளியிருக்கிற)
பொன் மலை — சிறந்த மலையாவது;—
அறு கால் வரி வண்டுகள் — ஆறுகால்களையுடைய அழகிய வண்டுகளானவை
சிறு காலை — விடியற்காலத்திலே
ஆயிரம் காமம் சொல்லி பாடும் — (எம்பெருமானுடைய ஸஹஸ்ரநாமங்களை ஆளத்திவைத்துப் பாடுமிடமான
தென் திருமாலிருஞ்சோலை—.

346 சிந்தப்புடைத்துச்செங்குருதிகொண்டு பூதங்கள் *
அந்திப்பலிகொடுத்து ஆவத்தனஞ்செய்யப்பன்மலை *
இந்திரகோபங்கள் எம்பெருமான்கனிவாயொப்பான் *
சிந்தும்புறவில் தென்திருமாலிருஞ்சோலையே. (கூ)

பூதங்கள் சிந்த புடைத்து — ஸ்ரீ வைஷ்ணவ பூதங்களானவை (தேஹபோஷணமே பண்ணிக்கொண்டு திரியும் நாஸ்திகர்களைக் கண்டால், அவர்களை) (அவயவங்கள்) சிதறும்படி அடித்துக் கொன்று
செம் குருதி கொண்டு — (அதனால் அவர்களுடலினின்றுபுறப்படுகிற) சிவந்த ரத்தத்தைக்கொண்டு
அந்தி பலிகொடுத்து — அந்திப்பொழுதிலே (எம்பெருமானுக்கு) ஆராதநரூபமாக ஸமர்ப்பித்து
ஆவத்து தனம் செய் — ஆபத்காலத்துக்குத் துணையாமிடமென்று ஸேவிக்குமிடமும்
அப்பன் — ஸ்வாமி (எழுந்தருளியிருக்குமிடமுமான)
மலை — மலையாவது;—
இந்திர கோபங்கள் — பட்டுப் பூச்சிகளானவை
எம்பெருமான் கனி வாய் ஒப்பான் — அனைவர்க்கும் ஸ்வாமியான அழகருடைய (கொவ்வைக்) கனிபோன்ற திருவதரத்திற்குப் போலியாக
சிந்தும் புறவில் — (கஸ்தூரிவிடமெங்கும்) சிதறிப் பறக்கப்பெற்ற தாழ்வரையையுடைய
தென் திருமாலிருஞ்சோலை—.

* * *—பூதயோனியாயிருக்கச் செய்தேயும், வைஷ்ணவரூப ரூபங்களோடுகூடி, பகவத்பாகவத பக்தியையுடையனவாய்த் திரியும் பூதங்கள் திருமாலிருஞ்சோலைமலையிற் பல உண்டு; அவை அத்திருமலையில் யாரேனும் ஆஸ்திகர்களாக எழுந்தருளக் கண்டால், அவர்களெதிரில் நிற்கமாட்டாமல் அஞ்ஜலி பண்ணிவிட்டு மறைந்திருக்கும்; தேஹபோஷணமே பண்ணித்திரியும் நாஸ்திகர்களைக்கண்டால், அவர்களை அவயவங்கள் சிதற அடித்துக்கொன்று, அவர்களுடைய தேஹத்தில்நின்றும் பெருகுகின்ற ரத்தத்தைத் தம்முடைய சாதிக்குத்தக்கபடி தாம் பருகும்போது, அதனை அழகருக்கு ஆராதநரூபேண ஸமர்ப்பித்துப் பருகிக்கொண்டு, இதுவே ஆபத்துக்கு உதவுமிடமென்று இத்திருமலையிலே வாழுமென்க. ஆவத்தனஞ்செய்—ப்ரதக்ஷிணஞ் செய்யுமிடமான என்னவுமாம். ... ... (கூ)

347 எட்டுத்திசையும் எண்ணிறந்தபெருந்தேவிமார் *
விட்டுவிளங்க வீற்றிருந்தவிமலன்மேல் *
பட்டிப்பிடிகள் பகடுறிஞ்சிச்சென்றுமாலைவாய் *
தெட்டித்தினைக்குந் தென்திருமாலிருஞ்சோலையே. (ம)

எண் இறந்த பெரு தேவிமார் — கணக்கிடமுடியாதவர்களும் பெருமை பொருந்தியவர் களுமான தேவிமாரான வர்கள்
எட்டு திசையும் விட்டு விளங்க — எட்டுத்திக்குகளிலும்மிகவும் ப்ரகாசிக்க (அவர்கள் நடுவே)
வீற்றிருந்த — பெருமை தோற்ற எழுந் தருளியிருந்த
விமலன் மேல — நிர்மலனை கண்ணபிரான் (எழுந்தருளிருக்கிற)மேலை யாவது;
பட்டி பிடிகள் — வேண்டினபடி திரியுமவை யான யானைப்பேடைகளா னவை
மாலை வாய் — இரவிலே
பகடு உறிஞ்சி சென்று — ஆண்யானையோடு ஸம்ச்லே ஷித்துப்போய்
தெட்டித் தினைக்கும் — (அந்த ஸம்ச்லேஷரஸம்)முற் றிக் களியா நிற்குமிடமான
தென் திருமாலிருஞ்சோலை.—

348 மருதப்பொழிலணி மாலிருஞ்சோலைமலைதன்னை *
கருதியுறைகின்ற கார்க்கடல்வண்ணனம்மான்றன்னை *
விரதங்கொண்டேத்தும் வில்லிபுத்தூர்விட்டுசித்தன்சொல் *
கருதியுரைப்பவர் கண்ணன்கழலிணைகாண்பர்களே. (கக)

மருதம் பொழில் அணி மாலிருஞ் சோலைமலை தன்னை — மருதஞ் சோலைகளை அலங் காரமாகவுடைய திருமா லிருஞ்சோலை மலையை
கருதி உறைகின்ற கார் கடல் வண் ணன் அம்மான் தன்னை — விரும்பி (அதில்) எழுந்தருளி யிருக்கின்ற கரு ங் கடல் போன்ற நிறத்தையுடைய அழகப்பிரானுடை
விரதம் கொண்டு ஏத்தும் — (மங்களா சாஸனத்தையே) வ்ரதமாகக்கொண்டு துதிக் குமவரும்
வில்லிபுத்தூர் விட்டுசித்தன் சொல் — ஸ்ரீவில்லிபுத்தூரில் அவதரித் தவருமான பெரியாழ்வார் அருளிச்செய்த இவற்றை
கருதி உரைப்பவர் — விரும்பி ஓதுமவர்கள்
கண்ணன் கழல் இணை காண்பர்கள் — கண்ணபிரானுடையதிருவடி களை ஸேவிக்கப் பெறு வர்கள்.

அடிவரவு:—அலம் வல்லானன் தக்கார் ஆனையர் ஒரு ஏனம்று மன்னர் குறுகாத சித்த எட்டு மருதம் உருப்பிணி.

நான்காம்பத்து—மூன்றாந் திருமொழி, உருப்பிணி நங்கை

[இதுவும் திருமாலிருஞ்சோலைப்பதிகம்.]

349 உருப்பிணிநங்கைதன்னைமீட்பான் தொடர்ந்தோடிச்சென்ற *
உருப்பனையோட்டிக்கொண்டிட் டுறைத்திட்டவுறைப்பன்மேல் *
பொருப்பிடைக்கொன்றைநின்று முறியாழியுங்காசுங்கொண்டு *
விருப்பொடுபொன்வழங்கும் வியன்மாலிருஞ்சோலையதே. (க)

உருப்பிணி நங்கை தன்னை } ருக்மிணிப்பிராட்டியை

மீட்பான் { (கண்ணனுடையதேரில் நின்றும்) திருப்பிக்கொண்டு போவதற்காக

தொடர்ந்து ஓடி சென்ற உருப்பிணை { (அத்தேரை) பின்தொடர்ந்து கொண்டுஓடிவந்த'ருக்மன்' என்றவனை

ஓட்டிக்கொண்டிட்டு { ஓட்டிப் பிடித்துக்கொண்டு (தேர்த்தட்டிலே) இருத்தி

உறைத்திட்ட { (அவனைப்)பரிபவப்படுத்தின

உறைப்பன் மலை { மிடுக்கையுடைய கண்ணபிரான் (எழுந்தருளியிருக்கிற) மலையாவது

கொன்றை கொன்றை மரங்களானவை

பொருப்பு இடை நின்று } மலையிலே நின்று

முறி பொன் ஆழியும் காசும் கொண்டு { முறிந்த பொன்மயமான மோதிரங்கள்போன்றபூரம் புகளையும் (பொற்காசு) போன்ற பூவிதழ்களையும் வாரிக்கொண்டு

விருப்பொடு வழங்கும் { ஆதரத்துடனே (பிறர்க்குக்) கொடுப்பவை போன்றிருக்கப்பெற்ற

வியன் மாலிருஞ் சோலை அதே } ஆச்சரியமான அந்தத்திருமாலிருஞ் சோலையேயாம்.

பின்னடிகளின் கருத்து:—திருமாலிருஞ்சோலை மலையிலுள்ள கொன்றை மரங்கள், நரம்பும் இதழுமாகப் பூக்களைச் சொரிகின்றமை, முறிந்த பொன் மோதிரங்களையும் பொற்காசுகளையும் வாரிப் பிறர்களுக்குக் கொடுப்பது போன்றுள்ளது என்ற உத்ப்ரேக்ஷையைத் திருவுள்ளத்திற்கொண்டு, உபமேயார்த்தத்தை வெளிப்படையாக அருளிச்செய்யாமல் கூறுகின்றனரென்க. கொன்றைப் பூவிலுள்ள நரம்பும் இதழும்-முறிந்த பொன்மோதிரமும் பொற்காசும்போலே யிருக்கும்படி காண்க. (க)

350 கஞ்சனுங்காளியனுங் களிறுமருதுமெருதும் *
வஞ்சனையின்மடிய வளர்ந்தமணிவண்ணன்மலை *
நஞ்சுமிழ்நாகமெழுந்தனவி நளிர்மாமதியை *
செஞ்சுடர்நாவளைக்குந் திருமாலிருஞ்சோலையதே. (உ)

கஞ்சனும் காளியனும் களிறும் மருதும் எருதும் { கம்ஸனும் காளிய நாகமும் (குவலயாபீடமென்ற) யானையும் இரட்டை மருத மரங்களும்(அரிஷ்டாஸுரனுகிற) ரிஷபமும்

வஞ்சனையின் மடிய { (தந்தம்முடைய) வஞ்சனைகளாலே (தாம்தாம்) முடியும்படி

வளர்ந்த { (திருவாய்ப்பாடியில்) வளர்ந்தருளினவனும்

மணி வண்ணன் { நீலமணிபோன்ற நிறமுடையவனுமான கண்ணபிரான்

மலை { (எழுந்தருளியிருக்கும் மலையாவது;—

நஞ்சு உமிழ் நாகம் { விஷத்தைஉமிழாநின்றுள்ள (மலைப்)பாம்பானவை

நளிர் மா மதியை { குளிர்ந்த (மலைச்சிகரத்தின் மேல் தவழுகின்ற) பூர்ண சந்திரனை

(தமக்கு உணவாக நினைத்து)

எழுந்து அணவி செம் சுடர் நா அளைக்கும் { (படமெடுத்துக்) கிளர்ந்து கிட்டி சிவந்த தேஜஸ்ஸையுடைய (தனது) நாக்கினால் (சந்திரனை) அளையா நிற்கு மிடமான

திருமாலிருஞ்சோலை அதே—.

* * * திருமலையிலுள்ள மலைப்பாம்புகள் பூர்ணசந்திரனைப் பார்த்து, அவனைத் தமக்கு ஆமிஷமாகக்கருதி, மேற்கிளர்ந்து தமது நாவினால் அச்சந்திர மண்டலத்தை அளையா நிற்குமென்று-இத்திருமலையின் ஓக்கத்தைக் கூறியவாறும். ... ... (உ)

351 மன்னுநரகன்றன்னைச் சூழ்போகிவனைத்தெறிந்து *
கன்னிமகளிர்தம்மைக் கவர்ந்தகடல்வண்ணன்மலை *
புன்னைசெருந்தியொடு புனவேங்கையுங்கோங்குமின்று *
பொன்னரிமாலைகள்தூ பொழில்மாலிருஞ்சோலையதே. (ஙு)

மன்னு நரகன் தன்னை சூழ் போகி (தன்னை அழிவற்றவனாக நினைத்துப்) பொருந்திக் கிடந்த நரகாசுரனை கொல்லும் வகை கனவே ஆராய்ந்து

வனைத்து (அவனைத் தப்பிப்போகமுடியாதபடி) வளைத்துக் கொண்டு

எறிந்து (திருவாழியாலே) நிரஸித்து

(அவனுல் நிறையிலடைத்துவைக்கப் பட்டிருந்த)

கன்னி மகளிர் தம்மை கவர்ந்த (பதினாயிரத் தொருநாறு) கன்னிகைகளையும் தான் கொள்ளைகொண்ட

கடல் வண்ணன் கடல்போன்ற நிறமுடையனை கண்ணபிரான்(எழுந்தருளியிருக்கிற)

மலை மலையாவது;—

புன்னை செருந்தி யொடு புனம் வேங்கையும் கோங்கும் நின்று புன்னை மரங்களும் புனத்திலுண்டாகிற வேங்கைமரங்களும் கோங்குமரங்களும் (புஷ்பங்களால் நிறைந்து ஒழுங்குபட) நின்று

பொன்னரி மாலை கள் சூழ் (திருமலைக்குப்) பொன்னரி மாலைகள் சுற்றினாற்போலே யிருக்கப்பெற்ற

பொழில் சோலைகளையுடைய

மாலிருஞ்சோலை அதே—.

புன்னை, செருந்தி, வேங்கை, கோங்கு என்ற இம்மரங்களின் பூக்கள் பொற்கென்ற நிறம் பெற்றிருக்கும்; அப்படிப்பட்ட பூக்கள் நிறைந்த மரங்கள் இத்திருமலையில் ஒழுங்குபட நிற்பது-மலைக்குப் பொன்னரிமாலை என்னும் ஆபரணம் ஸமர்ப்பிப்பது போன்றுள்ளதென்ற உத்ப்ரேக்ஷை, பின்னடிகளுக்குக்கருத்து. பொன்னரிமாலை என்பது-பொன்னாற்செய்யப்பட்ட ஒரு ஆபரண விசேஷம். (க)

352 மாவலிதன்னுடைய மகன்வாணன்மகளிருந்த *
காவலிக்கட்டழித்த தனிக்காளைகருதும்மலை *
கோவலர்கோவிந்தனைக் குறமாதர்கள்பண்குறிஞ்சி *
பாவொலிபாடிநடம்பயில் மாலிருஞ்சோலையதே. (அ)

மாவலி தன்னுடைய மகன் வாணன் மகள் இருந்த காவலிகட்டு அழித்த மஹாபலியினுடைய புத்திரனாகிய பாணாஸுரனுடைய மகளான உஷை இருந்த சிறைக்கூடத்தை அரணே அழித்தருளினவனும்

தனி காளை ஒப்பற்ற யுவாவுமான கண்ணபிரான்

கருதும் மலை விரும்புகிற மலையாவது;—

குற மாதர்கள் குறத்திகளானவர்கள்

கோவலர் கோவிந் தனை இடையர்களுக்குள் கோவிந்தாபிஷேகம் பண்ணப் பெற்ற கண்ணபிரான் விஷயமாக

குறிஞ்சி பண் பாவொலி பாடி நடம் பயில் குறிஞ்சி ராகத்தோடுகூடின பாட்டுக்களை இசைபெறப் பாடிக்கொண்டு (அப்பாட்டுக்குத்தகுதியாக)கூத்தாடுமிடமான

மாலிருஞ்சோலை அதே—.

353 பலபலகாழஞ்சொல்லிப் பழித்தசிசுபாலன்றன்னை *
அலவலைமைதவிர்த்த அழகனலங்காரன்மலை *
குலமலைகோலமலை குளிர்மாமலைகோற்றமலை *
நிலமலைநீண்டமலை திருமாலிருஞ்சோலையதே. (ஆ)

பல பல காழம் சொல்லி பழித்த சிசுபாலன் தன்னை அலவலைமை தவிர்த்த அழகன் பலபலகுற்றங்களைச்சொல்லி தூஷித்த சிசுபாலனுடைய அற்பத்தனத்தை (சரமதசையில்) போக்கியருளின அழகையுடையனும்

அலங்காரன் அலங்காரத்தையுடையவனும் (மானகண்ணபிரான்)எழுந்தருளியிருக்கிற)

மலை மலையாவது;—

குலம் மலை தொண்டக்குலத்துக்குத்தலைவான மலையும்

கோலம் மலை அழகையுடைய மலையும்

குளிர் மா மலை குளிர்ந்த பெரிய மலையும்

கொற்றம் மலை ஜயத்தையுடைய மலையும்

நிலம் மலை (நல்லமரங்கள் முளைக்கைக்குப் பாங்கான) நிலத்தையுடைய மலையும்

நீண்ட மலை நீட்சியையுடைய மலையுமான

திருமாலிருஞ்சோலை அதே—.

* * *—காதுகொண்டு கேட்கமுடியாதபடி தூஷித்துக் கொண்டிருந்த சிசுபாலனுக்குச் சரம தசையில் கண்ணபிரான் தன் அழகைக்காட்டித் தன்னளவில் பகையை மாற்றியருளினமை, முன்னடிகளிற் கூறப்பட்டது. நாழும் என்பதில், அம்-சாரியை. நாழ் என்றசொல், குற்றமென்னும் பொருளது; * காமாமிகவுடையோம் நாழ் * என்ற நம்மாழ்வார் பிரயோகமுங் காண்க. (சூ)

354 பாண்டவர்தம்முடைய பாஞ்சாலிமறுக்கமெல்லாம் *
ஆண்டங்குநூற்றுவர்தம் பெண்டிர்மேல்வைத்தவப்பன்மலை *
பாண்டகுவண்டினங்கள் பண்கள்பாடிமதுப்பருக *
தோண்டலுடையமலை தொல்லைமாலிருஞ்சோலையதே. (சூ)

பாண்டவர் தம் முடைய பாஞ்சாலி மறுக்கம் எல்லாம் — பஞ்சபாண்டவர்களுடைய (மனைவியாகிய) த்ரௌபதியினுடைய மனக்குழப்பத்தை யெல்லாம்
ஆண்டு — (தன்) திருவுள்ளத்திற் கொண்டு.
அங்கு — (அவள் பரிபவப்பட்ட) அப்போது அத்துன்பங்களை யெல்லாம்)
நூற்றுவர் தம் பெண்டிர் மேல் வைத்த — (துரியோதநாதிகள்) நூற்றுவருடையமனைவியர்களின் மேல் சுமத்தின
அப்பன் — ஸ்வாமியான கண்ணபிரான் (எழுந்தருளியிருக்கிற)
மலை — மலையாவது,—
பாண்டகு வண்டு இனங்கள் — பாட்டுக்குத் தகுதியான (ஜன்மத்தையுடைய) வண்டுத்திரளானவை
பண்கள் பாடி மதுபருக — ராகங்களைப் பாடிக்கொண்டு தேனைக் குடிப்பதற்குப் பாங்காக(ச் சோலைகள் வாடாமல் வளர)
தோண்டல் உடைய மலை — ஊற்றுக்களையுடைய மலையாகிய
தொல்லை மாலிருஞ் சோலை அதே — அநாதியான அந்தமாலிருஞ்சோலையேயாம்.

355 கனங்குழையாள்பொருட்டாக் கணைபாரித்து * அரக்கர்தங்கள்
இனங்கழுவேற்றுவித்த எழில்தோளெம்மிராமன்மலை *
கனங்கொழிதெள்ளருவி வந்துசூழ்ந்தகன்ஞாலமெல்லாம் *
இனங்குழுவாடும்மலை யெழில்மாலிருஞ்சோலையதே. (எ)

கனம் குழையாள் பொருட்டா — ஸ்வர்ணமயமான காதணியையுடையளான பிராட்டிக்காக
கணை பாரித்து — அம்புகளைப் பிரயோகித்து
அரக்கர் தங்கள் இனம் கழு ஏற்றுவித்த — ராக்ஷஸகுலத்தை குலத்தின் மேல் ஏற்றினவனும்
எழில் தோள் எம் இராமன் — அழகிய தோள்களையுடையவனும் எமக்குத் தலைவனுமான இராமபிரான் (எழுந்தருளியிருக்கிற)
மலை — மலையாவது,—
கனம் கொழி தெள் அருவி — பொன்களைக் கொழித்துக் கொண்டு வாராநின்ற தெளிந்த அருவிகளிலே
அகல் ஞாலம் எல்லாம் — விசாலமான பூமியிலுள்ளாரெல்லாரும்
இனம் குழு ஆடும் — திரள் திரளாக வந்து சூழ்ந்துகொண்டு நீராடப் பெற்ற
எழில் — அழகிய
மாலிருஞ் சோலை மலை அதே—.

356 எரிசிதறுஞ்சரத்தால் இலங்கையினை * தன்னுடைய
வரிசிலைவாயிற்பெய்து வாய்க்கோட்டத்தவிர்த்துகந்த *
அரையனமரும்மலை அமரரோடுகோனுஞ்சென்று *
திரிசுடர்சூழும்மலை திருமாலிருஞ்சோலையதே. (அ)

எரி சிதறும் சரத்தால் — நெருப்பைச் சொரியா நின்றுள்ள அம்புகளினால்
இலங்கையினை — லங்கைக்கரசனான ராவணனை
தன்னுடைய வரிசிலை வாயில் பெய்து — தன்னுடைய நீண்ட வில்லின் வாயிலே புகுரச் செய்து
வாய் கோட்டம் தவிர்த்து உக்க — (அவனுடைய) வாக்கின் அநீதியைக் குலைத்து (தான் வெற்றி பெற்றமையாலே) மகிழ்ந்தருளின
அரையன் — ஸ்வாமியான இராமபிரான்
அமரும் மலி — எழுந்தருளியிருக்கிற மலியாவது
அமரரோடு கோனும் திரிசுடர் சென்று சூழும் — தேவர்களோடுகூட (அவர்களுக்குத்) தலைவனான இந்திரனும் (இரவும் பகலும்) திரியாகின்ற சந்த்ர ஸூர்யர்களும் வந்து பிரதக்ஷிணம்பண்ணப்பெற்ற
திருமாலிருஞ்சோலை மலை அதே—.

357 கோட்டுமண்கொண்டிடந்து குடங்கையில்மண்கொண்டளந்து *
மீட்டுமதுண்டுமிழ்ந்து விளையாடும்விமலன்மலை *
ஈட்டியபல்பொருள்கள் எம்பிரானுக்கடியுறையென்று *
ஓட்டருந்தண்சிலம்பாறுடை மாலிருஞ்சோலையதே. (கூ)

மண் — (ஹிரண்யாக்ஷனாலே பாயாகச் சுருட்டிக்கொண்டு போகப்பட்ட) பூமியை
(வராஹரூபியாய் அவதரித்து)
இடந்து — (அண்டபித்தியில் நின்றும்) ஒட்டுவிடுவித்தெடுத்து
கோடு கொண்டு — (தனது) திரு எயிற்றிலே என்றுகொண்டும்
மண் — (மஹாபலியினால் தன் வசமாக்கிக் கொள்ளப்பட்ட) பூமியை
(வாமநரூபியாய் அவதரித்து)
குடங்கையில் கொண்டு — அகங்கையில் (நீரேற்று) வாங்கிக்கொண்டு
அளந்து — அளந்தருளியும்,
மீட்டும் — மறுபடியும் (அவ்வந்தர ப்ரளயத்திலே அந்தப் பூமி அழியப் புக)
அது உண்டு — அப் பூமியைத் திருவயிற்றில் வைத்து நோக்கி,
(பின்பு பிரளயங் கழிந்தவாறே)
உமிழ்ந்து — (அதனை) வெளிப்படுத்தியும்
(இப்படிப்பட்ட ஆச்சரியச் செயல்களாலே)
விளையாடும் விமலன்மலை — விளையாடா நின்றுள்ள நிர்மல ஸ்வரூபியான எம்பெருமான் (எழுந்தருளியிருக்கிற) மலையாவது;—
ஈட்டிய பல் பொருள்கள் — (பெருகி வரும்போது) வாரிக்கொண்டு வரப்பெற்ற பலவகைப்பட்ட (பொன் முத்து, அகில் முதலிய) பொருள்கள்
எம் பிரானுக்கு — எம்பெருமானுக்கு
அடியுறை என்று — ஸ்ரீ பாதகாணிக்கையென்று
ஓட்டரும் — (பெருகி) ஓடிவாரா நின்றுள்ள
தண் — குளிர்ந்த
சிலம்பாறு உடை — நூபுர கங்கையையுடைய
மாலிருஞ்சோலை அதே—.

358 ஆயிரந்தோள்பரப்பி முடியாயிரமின்னிலகை *
ஆயிரம்பைந்தலைய அனந்தசயனனுமமலை *
ஆயிரமாறுகளுஞ் சுனைகள்பலவாயிரும் *
ஆயிரம்பூம்பொழிலுமுடை மாலிருஞ்சோலையதே. (ஙை)

ஆயிரம் தோள் பரப்பி — பலவாயிருந்துள்ள திருத்தோள்களைப் பரப்பிக்கொண்டும்
முடி ஆயிரம் — ஆயிரந் திருமுடிகளும்
மின் இலக — (திருவாழ்வேஷகத்திலுள்ள ரத்நங்களினால்) மிகவும் விளங்கும்படியாகவும்
பை ஆயிரம் தலைய — பரந்த ஆயிரந்தலைகளையுடைய
அனந்தன் — திருவனந்தாழ்வான்மீது
சயனன் — பள்ளிகொண்டருளுமவனான எம்பெருமான்
ஆளும் மலை — ஆளுகின்ற மலையாவது;—
ஆயிரம் ஆறுகளும் — பல நதிகளையும்
பல ஆயிரம் சுனைகளும் — அனேகமாயிரந் தடாகங்களையும்
ஆயிரம் பூ பொழிலும் உடை — பல பூஞ்சோலைகளையுமுடைய
மாலிருஞ்சோலை அதே—.

359 மாலிருஞ்சோலையென்னும் மலையையுடையமலையை *
நாலிருமூர்த்திதன்னை நால்வேதக்கடலமுதை *
மேலிருங்கற்பகத்தை வேதாந்தவிழுப்பொருளில் *
மேலிருந்தவிளக்கை விட்டுசித்தன்விரித்தனவே. (ககஉ)

மாலிருஞ்சோலை என்னும் மலையை உடைய — திருமாலிருஞ்சோலை என்கிற திருமலையை (தனக்கு இருப்பிடமாக) உடையவனும்

மலையை — ஒரு மலை சாய்ந்தாற்போன்றுள்ளவனும்

கால் இருமூர்த்தி தன்னை — திருவஷ்டாக்ஷர ஸ்வரூபியானவனும்

நால்வேதம் கடல் அமுதை — நான்கு வேதங்களாகிற கடலில் ஸாரமான அம்ருதம் போன்றவனும்

மேல் இருங் கற்பகத்தை — (ஸ்வர்க்கலோகத்திலுள்ள கல்பவ்ருக்ஷத்தினும்) மேற்பட்டதும் பெரிதுமான கல்பவ்ருக்ஷமாயிருப்பவனும்

வேதாந்தம் விழுப் பொருளில் மேல் இருந்த விளக்கை — வேதாந்தங்களிற் கூறப்படுகின்ற சிறந்த அர்த்தங்களுள் மேற்பட்ட அர்த்தமாயிருப்பவனும், தனக்குத்தானே விளங்குமவனுமான எம்பெருமானைக் குறித்து

விட்டுசித்தன் விரித்தன — பெரியாழ்வார் அருளிச்செய்தவை இப்பாசுரங்கள்.

* * *—இத்திருமொழி கற்றுர்க்குப் பலஞ்சொல்லித் தலைக்கட்டாதொழிந்தது—இப்பாசுரங்களின் பொருளை அறிகையே இதுகற்கைக்குப் பயனுமென்று திருவுள்ளம்பற்றி யென்க. [நாலிருமூர்த்தி தன்னை.] வாஸுதேவன், ஸங்கர்ஷணன், ப்ரத்யும்நன், அநிருத்தன் என்று நால்வகையாகக் கூறப்பட்ட பெரிய வடிவை யுடையவனென்பதும் பொருளாம்; அப்போது, இரு என்பதற்கு—இரண்டு என்று பொருளன்று; இருமை—பெருமை. ... ... (ககஎ)

அடிவரவு:—உருப்மிணி கஞ்சன் மன்னு மாவலி பல பாண்டவர் கனம் எரி கோட்டு ஆயிரம் மாலிரு நா.

நான்காம்பத்து—நான்காந்திருமொழி, நாவகாரியம்

(திருக்கோட்டியூர்ப் பதிகம்.)

360 நாவகாரியஞ்சொல்லிலாதவர் நாடொறும்விருந்தோம்புவார் *
தேவகாரியஞ்செய்து வேதம்பயின்றுவாழ்திருக்கோட்டியூர் *
மூவர்காரியமுந்திருத்தும் முதல்வனைச்சிந்தியாத * அப்
பாவகாரிகளைப்படைத்தவன் எங்ஙனம்படைத்தான்கொலோ. (க)

நா அகாரியம் சொல்லிலாதவர் — நாவினால் சொல்ல வொண்ணாதவற்றை (ஒருகாலும்) சொல்லியறியாத ஸ்ரீவைஷ்ணவர்கள்

நாள் தொறும் விருந்து ஓம்புவார் — நாடோறும் (ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு) விருந்தளித்துக்கொண்டும்

தேவர் காரியம் செய்து — பகவதாராதநம் பண்ணிக்கொண்டும்

வேதம் பயின்று வாழ் திருக்கோட்டியூர் — வேதங்களை ஓதிக்கொண்டும் வாழுமிடமான திருக்கோட்டியூரில் (எழுந்தருளியிருப்பவனும்,)

மூவர் காரியமும் திருத்தும் முதல்வனை — பிரமன், ருத்ரன், இந்திரன் என்ற மூவருடைய காரியங்களையும் செய்து தலைக்கட்டுமவனும், எல்லார்க்கும் தலைவனுமான எம்பெருமானை

சிந்தியாத — நெஞ்சாலும் நினையாத

அபாவ காரிகளை — அப்படிப்பட்ட [மிகவும் கொடிய] பாவஞ்செய்த ப்ராணிகளை

படைத்தவன் எங்ஙனம் படைத்தான் கொலோ — ஸ்ருஷ்டித்தவன் எதுக்காக ஸ்ருஷ்டித்தானே! (அறியோம்)

361 குற்றமின்றிக்குணம்பெருக்கிக் குருக்களுக்கனுகூலராய் *
செற்றமொன்றுமிலாத வண்கையினர்கள்வாழ்திருக்கோட்டியூர் *
துற்றியேழுலகுண்ட தூமணிவண்ணன்றன்னைத்தொழாதவர் *
பெற்றதாயர்வயிற்றினைப் பெருநோய்செய்வான்பிறந்தார்களே. (உ)

குற்றம் இன்றி — ஒருவகையான குற்றமுமில்லாமல்
குணம் பெருக்கி — (சமம், தமம் முதலிய) குணங்களை வளரச்செய்துகொண்டு
குருக்களுக்கு — (தம்தம்) ஆசாரியர்களுக்கு
அனுகூலர் ஆய் — (கைங்கரியம் பண்ணுவதற்குப்) பக்காயிருப்பவர்களும்
செற்றம் ஒன்றும் இலாத — பொருமை யென்பது சிறிதுமில்லாதவர்களும்
வண் கையினர்கள் — உதாரமான கையையுடையவர்களுமான ஸ்ரீவைஷ்ணவர்கள்
வாழ் திருக் கோட்டியூர் — வாழுமிடமான திருக்கோட்டியூரில் (எழுந்தருளியிருப்பவனும்)
ஏழ் உலகு துற்றி உண்ட — ஸப்தலோகங்களையும் ஒரு கபளமாகத் திரட்டியுண்டவனும்
தூமணி வண்ணன் தன்னை — பழிப்பற்ற நீலமணிபோன்ற நிறத்தையுடையனுமான எம்பெருமானை
தொழாதவர் — வணங்காதவர்
பெற்ற தாயர் வயிற்றினை — (தங்களைப்) பெற்ற தாய் மாருடைய வயிற்றை
பெரு நோய் செய்வான் பிறந்தார்கள் — மிகவும் நோவுபடுத்துகைக்காகப் பிறந்தார்களத்தனை.

362 வண்ணகன்மணியும் மரதகமுமுத்தி * நிழலெழுந்
தின்னைசூழ்திருக்கோட்டியூர்த் திருமாலவன்றிருநாமங்கள் *
எண்ணக்கண்டவிரல்களால் இறைப்பொழுதுமெண்ணகிலாதுபோய் *
உண்ணக்கண்டதம்மூத்தைவாய்க்குக் கவளமுந்துகின்றார்களே. (ஊ)

நல் வண்ணம் மணியும் மரகதமும் அழுத்தி — நல்ல நிறத்தையுடைய ரத்னங்களையும் மரதகங்களையும் (ஒழுங்குபட) இழைத்ததனால்
நிழல் எழும் இன்னை சூழ் திருக்கோட்டியூர் திருமால் அவன் திரு நாமங்கள் — ஒளிவிடாகின்றுள்ள தின்னைகளாலே சூழப்பெற்ற திருக்கோட்டியூரில் (எழுந்தருளியிருக்கிற) திருமாமகள் கொழுநனுடைய திருநாமங்களை
எண்ண கண்ட — (ஒன்று, இரண்டு என்று) எண்ணுகைக்காகப் படைக்கப்பட்ட
விரல்களால் — விரல்களாலே (அந்தத்திருநாமங்களை)
இறை பொழுதும் எண்ணகிலாது — கூணகாலமும் எண்ணாமாட்டாமல்
போய் — புறம்பேசென்று
உண்ணக் கண்ட தம் ஊத்தை வாய்க்கு — (சரீரபோஷணார்த்தமாக) உண்ணுகின்ற தங்களுடைய அசுத்தமான வாயிலே
கவளம் உந்துகின்றார்களே — சோற்றுத்திரளைகளை (அவ்விரல்களினால்) தள்ளாகின்றார்களே!
(இதென்ன கொடுமை!.)

363 உரகமெல்லணையான்கையில் உறைசங்கம்போல்மடவன்னங்கள் *
நிரைகணம்பரந்தேறுஞ் செங்கமலவயல்திருக்கோட்டியூர் *
நரகமாசனகாவிற்கொண்டழையாத மானிடசாதியர் *
பருகுநீருமுடிக்குங்கூரையும் பாவஞ்செய்தனதான்கொலோ. (எ)

உரகம் மெல் அணையான் கையில் உறைசங்கம் போல் — திருவனந்தாழ்வானை ஈருமாரமான படுக்கையாகவுடைய எம்பெருமானது திருக்கையில் உள்ள ஸ்ரீபாஞ்சஜந்யம்போல் வெளுத்த
மட அன்னங்கள் — மடப்பம்பொருந்திய ஹம்ஸங்களானவை
நிரை கணம் பரந்து ஏறும் செம் கமலம் வயல் — நிரள்நிரளாகப் பரவி ஏறியிருக்கப்பெற்ற செந்தாமரை மலர்களையுடைய வயல்களாலே சூழப்பட்ட
திருக் கோட்டியூர் — திருக்கோட்டியூரில் (எழுந்தருளியிருப்பவனும்)
நரகம் நாசனை — (தன்னடியார்க்கு) நரகப்ரவேசத்தை ஒழித்தருளுமவனுமான எம்பெருமானை

காவில் கொண்டு அழையாத	நாவினால் அழைக்கமாட்டாத	பருகும் நீரும் உடுக்கும் கூறையும்	குடிக்கிற தண்ணீரும் உடுத்துக் கொள்ளுகிற வஸ்திரமும்
மானிட சாதியர்	மனுஷ்ய ஜாதியில் பிறந்தவர்கள்	பாவம் செய்தன தான் கொள்ள	பாவஞ்செய்தனவோ தான்

364 ஆமையின்முதுகத்திடைக்குதிகொண்டு தூமலர்சாடிப்போய் *
தீமைசெய்திளவாளைகள் விளையாடுநீர்த்திருக்கோட்டியூர் *
நேமிசேர்தடங்கையினான நினைப்பிலாவலிநெஞ்சுடை *
பூமிபாரங்களுண்ணுஞ்சோற்றினைவாங்கிப் புல்லெத்திணிமினே. (நு)

இள வாளைகள்	இளமைபொருந்திய 'வாளை' என்னும் மீன்கள்	நேமி சேர் தட கையினான	திருவாழியாழ்வானை சேர்ந்திருக்கிற பெரிய திருக்கையையுடையனுமான எம்பெருமானை
ஆமையின் முதுகத்திடை குதிகொண்டு	ஆமைகளினுடைய முதுகின்மேல் குதித்துக் கொண்டும்	நினைப்பு இலா வலி நெஞ்சு உடை பூமி பாரங்கள்	(ஒருகாலும்) நினையாத கடினமான நெஞ்சை உடையவர்களும் பூமிக்குச் சுமையாயிருப்பவர்களுமான பாவிகள்
தூ மலர் சாடிப் போய்	நல்ல புஷ்பங்களை உழக்கிக் கொண்டும்	உண்ணும் சோற்றினை வாங்கி	உண்கிற சோற்றைப் பிடுங்கிவிட்டு, (எறிந்து)
தீமை செய்து	(க்ஷுத்ர ஜந்துக்களைக் கலக்கி ஓட்டுகையாகிற) தீம்புகளைச் செய்துகொண்டும்	புல்லை	(அறிவற்ற பசுக்களுக்கு உணவான) புல்லைக் கொண்டு
விளையாடு நீர்	விளையாடுமிடமான நீரையுடைய	தினிமின்	அவர்கள் (வயிற்றைத்) தூற்றுவிடுங்கள்.
திருக் கோட்டியூர்	திருக்கோட்டியூரில் (எழுந்தருளியிருப்பவனும்,)		

* * *—உலகத்தில், அறிவுடையார் சோற்றை உண்ணவேணும், அறிவிலிகள் புல் முதலியவற்றை உட்கொள்ளவேணும் என்பது விவாதமற்ற விஷயம். திருக்கோட்டியூரெம்பெருமானை நெஞ்சாலும் நினையாத மனிதர் அறிவற்றவர்களாதலால், அவர்கள் புல்லைத்தான் தின்னவேணும்; அங்ஙனன்றி, அவர்கள் முறை தப்பித் தின்னுஞ் சோற்றைப் பிடுங்கி யெறிந்துவிட்டு, அவர்கள் வயிற்றில் புல்லையிட்டு நிறையுங்கள் என்கிறார். முன்னடிகளிற் கூறியது—தன்மை நவிற்சி. (நு)

365 பூதமைந்தொடுவேள்வியைந்து புலன்களைந்துபொறிகளால் *
ஏதமொன்றுமிலாத வண்கையினர்கள்வாழ்திருக்கோட்டியூர் *
நாதனைநரசிங்கனை நவின்றேத்துவார்களுழக்கிய *
பாததூளிபடுதலால் இவ்வுலகம்பாக்கியஞ்செய்ததே. (சு)

பூதம் ஐந்தொடு	பஞ்சபூதமயமாகிய சரீரத்திலும்	வாழ் திருக் கோட்டியூர்	வாழுமிடமான திருக்கோட்டியூரில் (எழுந்தருளியிருப்பவனும்,)
ஐந்து வேள்வி	பஞ்சமஹாயஜ்ஞங்களிலும்	நாதனை நரசிங்கனை	(எமக்கு) ஸ்வாமியும் நரஸிம்ஹஸ்வரூபியுமான எம்பெருமானை
ஐந்து புலன்கள்	(சப்தம் முதலிய) ஐந்து விஷயங்களிலுலும்	நவின்று ஏத்துவார்கள் உழக்கிய பாததூளி படுதலால்	அநுஸந்தித்துத் துதிக்குமவரான பாகவதர்கள் திருவடிகளிலே பிறந்தருளினதூளியுடைய ஸம்பந்தத்தினால்
(ஐந்து) பொறிகளால்	பஞ்சேந்திரியங்களிலுலும் (ஸம்பவிக்கக்கூடிய)	இ உலகம் பாக்கியம் செய்தது	இந்தலோகமானது பாக்யம் பண்ணினதாகக் கொள்ளப்படும்.
ஏதம் ஒன்றும் இலாத	குற்றமொன்று மில்லாதவர்களும்		
வண் கையினர்கள்	உதாரமானகைகளையுடையவர்களுமான ஸ்ரீவைஷ்ணவர்கள்		

• நிலம், நீர், தீ, கால், விசும்பு என்கிற பஞ்சபூதமயமாகிய சரீரத்தைப் பூதமைந்து என்றது - ஆகு பெயரால், வேள்வி ஐந்து. தேவயஜ்ஞம், பித்ருயஜ்ஞம், பூதயஜ்ஞம், மநுஷ்யயஜ்ஞம், ப்ரஹ்மயஜ்ஞம என்பவை. புலன்கள் ஐந்து-சப்தம், கந்தம், ரூபம், ரஸம், ஸ்பர்சம் என்பவை. பொறிகள் ஐந்து-செவி, வாய், கண், மூக்கு, உடல். திருக்கோட்டியூரிலுள்ள ஸ்ரீவைஷ்ணவர்கள், தங்கள் தேஹத்தைப் பாகவத விஷயத்தில் ஆட்படுத்துமவர்கள் என்றும், பகவத் பாகவதர்களின் முகமலர்த்திக்காகப் பஞ்சயஜ்ஞாநுஷ்டாநம் பண்ணுமவர்கள் என்றும், பஞ்சஜ்ஞாநேந்திரியங்களையும் பாகவத விஷயத்தில் உபயோகப்படுத்துமவர்கள் என்றும் கூறியவாறு. ... ... (சு)

366 குருந்தமொன்றொசித்தாஞெடுஞ்சென்று கூடியாடிவிழாச்செய்து *
திருந்துநான்மறையோரிராப்பகல் ஏத்திவாழ்திருக்கோட்டியூர் *
கருந்தடமுகில்வண்ணனைக் கடைக்கொண்டுகைதொழும்பத்தர்கள் *
இருந்தவூரிலிருக்கும்மானிடர் எத்தவங்கள்செய்தார்கொலோ. (எ)

திருந்து — (எம்பெருமான் ஸ்வரூபங்களைப் பிழையறக் கூறுகையாகிற) திருத்தத்தையுடைய

நான்மறையோர் — நான்கு வேதங்களையுமோதின ஸ்ரீவைஷ்ணவர்கள்

ஒன்று குருந்தம் ஒசித்தாஞெடும் சென்று கூடி ஆடி — ஒரு குருந்தமரத்தை முறித்தருளின கண்ணபிரானைச் சென்று சேர்ந்து (அவனுடைய குணங்களிலே) அவகாஹித்து

விழா செய்து — (விக்ரஹ ஸேவையாகிற உத்ஸவத்தை அநுபவித்துக்கொண்டு

இரா பகல் ஏத்தி வாழ் திருக்கோட்டியூர் — இரவும் பகலும் மங்களாசாஸநம்பண்ணிக்கொண்டு வாழுமிடமான திருக்கோட்டியூரில் (எழுந்தருளியிருப்பவனும்,)

கரு தட முகில் வண்ணனை — கறுத்துப் பெருத்த மேகம் போன்ற நிறத்தையுடையனுமான எம்பெருமானைக் குறித்து

கடைக்கொண்டு கைதொழும் பத்தர்கள் — கைச்சியாது ஸந்தாநத்துடன் அஞ்ஜலி பண்ணுகின்றுள்ள பக்தியையுடைய ஸ்ரீவைஷ்ணவர்கள்

இருந்த ஊரில் இருக்கும் மானிடர் — எழுந்தருளியிருக்குமிடமான ஊரிலே நித்யவாஸம் பண்ணுகிற மநுஷ்யர்கள்

எ தவங்கள் செய்தார் கொல் ஓ — எப்படிப்பட்ட தபஸ்ஸுகளை அநுஷ்டித்தார்களோ (அறியேன்.)

367 களிர்ந்தசீலன்கயாசலன் அபிமானதுங்கனாடோறும் *
தெளிந்தசெல்வனைச்சேவகங்கொண்ட செங்கண்மாலிருக்கோட்டியூர் *
குளிர்ந்துறைகின்றகோவிந்தன் குணம்பாடுவாருள்ளநாட்டினுள் *
விளைந்ததானியமுமிராக்கதர் மீதுகொள்ளகிலார்களே. (அ)

ஒளிர்ந்த சீலன் — குளிர்ந்த ஸ்வபாவத்தையுடையவரும்

நய அசலன் — நீதிநெறி தவறாதவரும்

அபிமான துங்கனை — இடைவிடாது எம்பெருமானை அநுபவிக்கையாலுண்டான) அஹங்காரத்தால் உயர்ந்தவரும்

தாள்தொறும் தெளிந்த செல்வனை — நாடோறும் தெளிந்துவராநின்றுள்ள கைங்கர்யஸம்பத்தை யுடையவருமான செல்வகம்பியை

சேவகம் கொண்ட — அடிமை கொண்டவனும்

செம் கண் மால் — செந்தாமரைபோன்ற கண்களையுடையவனும் (அடியார்பக்கல்) மோஹமுடையனுமான

திருக்கோட்டியூர் — திருக்கோட்டியூரில்

குளிர்ந்து உறைகின்ற கோவிந்தன் குணம் பாடுவார் — திருவுள்ளமுகந்து எழுந்தருளியிருப்பவனான எம்பெருமானுடைய திருக்கல்யாண குணங்களைப் பாடுமவரான ஸ்ரீவைஷ்ணவர்கள்

உள்ள நாட்டினுள் விளைந்த தானியமும் — எழுந்தருளியிருக்கிற நாட்டிலே விளைந்த தான்யத்தையும்

இராக்கதர் மீது கொள்ள கிலார்கள் — ராக்ஷஸர்கள் அபஹரிக்கமாட்டார்கள்.

368 கொம்பினர்பொழில்வாய்க் குயிலினங்கோவிந்தன்குணம்பாடுசீர்*
செம்பொனர்மதிள்சூழ் செழுங்கழனியுடைத்திருக்கோட்டியூர் *
நம்பனைநரசிங்கனை நவின்றேத்துவர்களைக்கண்டக்கால் *
எம்பிரான்றனசின்னங்கள் இவரிவரென்றுசைகள்தீர்வனே. (கூ)

கொம்பின் ஆர் பொழில்வாய்குயில் இனம் கோவிந்தன் குணம் பாடு — கிளைகளாலே நெருங்கின சோலைகளிலே குயில்களின் திரள் கண்ணபிரானுடைய சீர்மைகளைப் பாடாநிற்கப்பெற்றதும்,

சீர் செம் பொன் ஆர் மதிள் சூழ் — சிறந்த செம்பொன்னாலே சமைந்த மதிள்களாலே சூழப்பட்டதும்,

செழு கழனி உடை திருக்கோட்டியூர் — செழுமை தங்கிய கழனிகளையுடையதுமான திருக்கோட்டியூரில் (எழுந்தருளியிருப்பவனும்,)

நம்பனை — (பக்ஷதன் என்று) விச்வஸிக்கக் கூடியவனும்

நரசிங்கனை — நரஸிம்ஹரூபியுமான ஸர்வேச்வரனை

நவின்று ஏத்துவார்களை — அநுஸந்தித்துத் துதிக்கும் பாகவதர்களை

கண்டக்கால் — (யான்) ஸேவிக்கப் பெறுவேனாகில்

இவர் இவர் எம்பிரான் தன சின்னங்கள் என்று — "இந்த இந்த ஸ்ரீவைஷ்ணவர்கள் எம்பெருமானுடைய அடையாளமாயிருப்பவர்கள்" என்று அநுஸந்தித்து

ஆசைகள் தீர்வன் — (நெடுநாளாய்ப் பிறந்துள்ள) ஆசைகளைத் தலைக்கட்டிக் கொள்வேன்.

* * *—திருக்கோட்டியூரெம்பெருமானடியார்களை ஸேவிக்கும்போதே 'அவ்வெம்பெருமான் ஸாத்விகர்களிலும் ஸேவிக்கப்படுமவன்' என்கிற லக்ஷணம் வெளியாமாதலால் 'இவர்கள் எம்பெருமானது சிறப்பைத் தெரிவிக்கவல்ல சின்னங்கள்' என்று அநுஸந்தித்து, யான் நெடுநாளாய்க்கொண்டுள்ள பல வகை ஆசைகளையும் தீர்வேனென்கிறார், பாகவதர்களின் ஸேவை, பகவத் ஸேவையினும் அரிது என்பார் கண்டக்கால் என்கிறார். (கூ)

369 காசின்வாய்க்கரம்விற்கிலும் கரவாதுமாற்றிலிசோறிட்டு *
தேசவார்த்தைபடைக்கும் வண்கையினர்கள்வாழ்திருக்கோட்டியூர் *
கேசவாபுருடோத்தமா கிளர்சோதியாய்குறளாவென்று *
பேசுவாரடியார்கள் எந்தம்மைவிற்கவும்பெறுவார்களே. (கo)

காசின் வாய் கரம் விற்கிலும் — ஒருகாசுக்கு ஒருபிடி நெல் விற்கும்படியான துர்ப்பிக்ஷ காலத்திலும்

கரவாது — (தமக்குள் பொருள்களை) மறைத்திடாது

மாறு இலி — பதில் உபகாரத்தை எதிர்பாராமல்

சோறு இட்டு — (அதிதிகளுக்கு) அன்னமளித்து

தேச வார்த்தை படைக்கும் வண் கையினர்கள் — புகழ்ச்சியான வார்த்தைகளை ஸம்பாதித்துக் கொள்ளுமவரும் உதாரமான கையையுடையவர்களுமான ஸ்ரீவைஷ்ணவர்கள்

வாழ் — வாழுமிடமான

திருக் கோட்டியூர் — திருக்கோட்டியூரில் (எழுந்தருளியிருக்கிற)

கேசவா — கேசவனே!

புருடோத்தமா — புருஷோத்தமனே!

கிளர் சோதியாய் — மிகுந்த தேஜஸ்ஸையுடையவனே!

குறளா — வாமந வேஷம்பூண்ட எம்பெருமானே!

என்று பேசுவார் அடியார்கள — என்றிப்படி (எம்பெருமான் திருநாமங்களைப்) பேசுமவரான பாகவதர்கள்

எந்தம்மை விற்கவும் பெறுவார்கள் — அடியோங்களை (தம் இஷ்டப்படி) விற்றுக்கொள்ளவும் அதிகாரம் பெறுவார்கள்.

* * *—ஒருகாசுக்கு ஒருபிடிநெல் விற்கும்படியான காலத்தில் தம்மயிற்றைத் தாம் நிறைத்துகொள்வதே அரிது; தம்மயிற்றைப்பட்டினிகொண்டு பிறர்மயிற்றை நிறைப்பதென்றால் ஏதேனுமொரு ப்ரத்யுபகாரத்தைக் கணிசித்தாகவேணும், இது உலகத்தில் ஸாமான்ய ஜநங்களின் இயல்பு; திருக்கோட்டியூரி லெழுந்தருளியிருக்கும் ஸ்வாமிகளோவென்றால், காசின்வாய்க் கரம்விற்குங்காலத்திலும்

[மஹத்தான துர்ப்பிக்ஷ காலத்திலும்] கைம்மாறுகருதாது அதிதிகளுக்கு அந்நதானம்பண்ணி நாடெங்கும், புகழ்பெற்றிருப்பர்களாம். அப்படிப்பட்ட மஹானுபாவர் வாழுமிடத்துள்ள எம்பெருமானது திருநாமங்களே அநுஸந்திக்குமவர்கள் அடியேனைத் தங்களிஷ்டப்படி உபயோகப்படுத்திக்கொள்ளுமாறு யான் உடன்பட்டிருக்கத்தட்டில்லை யென்று—தம்முடைய சரமபர்வ நிஷ்டையின் பரமகாஷ்டையை அருளிச்செய்தவாறு. ... ... (கo

370 சீதநீர்புடைசூழ் செழுங்கழனியுடைத்திருக்கோட்டியூர் *
ஆதியானடியாரையும் அடிமையின்றித்திரிவாரையும் *
கோதில்பட்டர்பிரான் குளிர்புதுவைமன்விட்டுசித்தன்சொல் *
ஏதமின்றியுரைப்பவர் இருடீகேசனுக்காளரே. (ஙங)

சீதம் நீர் புடை சூழ் செழு கழனி உடை திருக் கோட்டியூர் ஆதியான்
- குளிர்ந்த நீராலே சுற்றும் சூழப்பெற்ற செழுமை தங்கிய கழனிகளையுடைய திருக்கோட்டியூரில் (எழுந்தருளிருக்கிற) எம்பெருமானுக்கு

அடியாரையும்
- அடிமை செய்யும் பாகவதர்களையும்

அடிமை இன்றி திரிவாரையும்
- அடிமை செய்யாமல் திரிகின்ற பாவிகளையும் குறித்து.

கோது இல் பட்டர் பிரான் குளிர் புதுவை மன் விட்டு சித்தன் சொல்
- குற்றமற்றவரும் அந்தணர்கட்குத் தலைவரும் குளிர்ந்த ஸ்ரீ வில்லிபுத்தூர்க்கு நிர்வாஹகருமான பெரியாழ்வார் அருளிச்செய்த இப்பாசுரங்களை

ஏதம் இன்றி உரைப்பவர்
- பழுதில்லாதபடி ஓதுமவர்கள்

இருடீகேசனுக்கு ஆளர்
- எம்பெருமானுக்கு ஆட்செய்யப் பெறுவர்.

அடிவரவு:—கா குற்றம் வண்ணம் உரகம் ஆமை பூதம் குருந்தம் நளிர்ந்த கொம்பின் காசின் சீதநீர் ஆசை.

நான்காம்பத்து—ஐந்தாந்திருமொழி, ஆசைவாய்ச்சென்ற

(பக்திமான்கள் பெறும்பேறு உரைத்தல்,)

371 ஆசைவாய்ச்சென்றசிந்தையராகி அன்னையத்தனென்புத்திரர்பூமி *
வாசவார்குழலாளென்றுமயங்கி மாளுமெல்லைக்கண்வாய்திறவாதே *
கேசவாபுருடோத்தமாவென்றுங் கேழலாகியகேடிலீயென்றும் *
பேசுவாரவரெய்தும்பெருமை பேசுவான்புகில்நம்பரமன்றே. (க)

ஆசை வாய் சென்ற சிந்தையர் ஆகி
- (தனக்கு) ஆசையுள்ள விடத்திலே போய்ப் பதிந்த நெஞ்சையுடையராய்க் கொண்டு

என் அன்னை
- என்னுடைய தாய்

என் அத்தன்
- என்னுடைய தகப்பன்

என் புத்திரர்
- என்னுடைய பிள்ளைகள்

என் பூமி வாசம் வார்
- என்னுடைய நிலம்; பரிமளம் வீசாநின்றுள்ள

என் குழலாள்
- கூந்தலையுடையளாள என் மனைவி

என்று
- என்று சொல்லிக்கொண்டு

மயங்கி
- (அவர்கள் பக்கல்) மோஹமடைந்து

மாளும் எல்லைக்கண்
- சரமஸமயத்தில்

வாய் திறவாதே
- வாயைத்திறந்து (அவர்கள் பேரைச்) சொல்லியழையாமல்,

கேசவா என்றும்
- கேசவனே!' என்றும்

புருடோத்தமா என்றும்
- புருஷோத்தமனே' என்றும்

கேழல் ஆகிய கேடு இலீ என்றும்
- 'வராஹரூபியாய் அவதரித்தவனும் அழிவில்லாதவனுமான எம்பெருமானே!' என்றும்

பேசுவார் அவர்
- சொல்லுமவர்கள்

எய்தும் பெருமை
- அடையக்கூடிய பெருமை காண்

பேசுவான் புகில்
- பேசப்புக்கால்

நம் பரம் அன்று
- நம்மால் பேசித்தலைக்கட்டப் போகாது.

(பழுதே பல பகலும் போக்கினேனும்)

* * *—அஹங்காரமமகாரங்களே வளரச்செய்யக்கடவதான ஸம்ஸாரத்தில் ஆழங்காற்பட்டுப் பழுதே பலபகல்களைப் போக்கினாலும், உயிர்முடியுமளவிலாகிலும் அந்தஸம்ஸாரத்தில் நெஞ்சைச் செலுத்தாது எம்பெருமான் திருநாமங்களே வாய்விட்டுச்சொல்லுமவர்கள் மேலுலகத்திற் பெறும் பரிசு களைச் சொல்லித்தலைக்கட்ட யாம் வல்லரல்லோ மென்கிறார், வாழ்நாள் முழுவதையும் பகவந்நாமஸங் கீர்த்தநத்தாலேயே போக்கினவர்கள் பெறும் பெருமையை எம்பெருமான்றானும் பேசித் தலைக்கட்டவல்ல னல்லனென்பது வெளிப்படை. "என்றுமயங்கி வாய்திறவாதே மாளுமெல்லைக்கண்" என இயைத்து, அம்மா, அண்ணா, பிள்ளை, பூமி, பெண்டாட்டி என்று சொன்னதும் மூர்ச்சையடைந்து, அவர்கள்பேரைச் சொல்லி யழைக்கவும் மாட்டாமல் மாள்வதற்குள் என்று பொருளுரைப்பாருமுளர், (க)

372 சீயினுற்செறிந்தேறியபுண்மேல் செற்றலேறிக்குழம்பிருந்தெங்கும் *
ஈயினுலரிப்புண்டுமயங்கி யெல்லிவாய்ச்சென்றுசேர்வதன் முன்னம் *
வாயினல்நமோநாரணவென்று மத்தகத்திடைக்கைகளைக்கூப்பி *
போயினிற்பின்னையித்திசைக்கென்றும் புணைக்கொடுக்கிலும்போகவொட்டாரே. (உ)

சீயினல் செறிந்து ஏறிய புண் மேல்	சீயாலே மிகவும் நிறைந்த புண்ணின்மேல்
செற்றல் ஏறி	ஈ இருந்து முட்டையிட்டு
குழம்பிருந்து	அவை புழுத்து நீராய்ப் பாயுமளவில்
எங்கும்	உடல் முழுதும்
ஈயினல் அரிப்புண்டு	ஈயாலே அரிக்கப்பட்டு
மயங்கி	(வேதனை பொறுக்கமாட்டாமல்) மூர்ச்சையடைந்து
எல்லி வாய் சென்று சேர்வதன்முன்னம்	சாயங்காலத்தைக் கிட்டுவதற்கு முன்னே,
வாயினல் நமோநாரணவென்று	வாயாலே 'நமோநாராயணாய' என்று சொல்லிக்கொண்டு
மத்தகத்திடை கைகளை கூப்பி	உச்சியிலே அஞ்ஜலி பண்ணி (சரீர வியோகமான பின்பு)
போயினல்	(பரமபதம்) போய்ச்சேர்ந்தால்
பின்னை	பிறகு
பிணைக் கொடுக்கிலும்	(நித்யமுக்தர்கள்) காக்கள் உத்தரவாதம் பண்ணுகிறோம்' என்றாலும்
இதிசைக்கு என்றும் போக ஒட்டார்	(பூலோகமாகிற) இந்தத் திக்கைக் குறித்து ஒரு நாளும் (இந்த முக்தர்களைப் போகவொட்டார்கள்.

* * *—"தின்டாவழும்புஞ் செங்கீருஞ் சியுரம்புஞ் செறிதசையும், வேண்டாநாற்றமிகு முடலே'! என்ற ஐயங்கார் பாசுரத்தின்படி-பற்பல அஸஹ்யங்களுக்கு ஆகரமான இவ்வுடம்பின் வேதனைக்கனத் தினல் மயக்கமுற்று மரணமடைவதற்குமுன், வாயாலே திருவஷ்டாக்ஷரத்தை அநுஸந்தித்துக்கொண்டு முடிமேல் கைகூப்பித் தொழுமவர்கள் பரமபதம்போய்ச் சேருவர்களென்பதில் இறையும் ஐயமில்லை; அப்படி அவர்கள் அங்குப்போய்ச் சேர்ந்தபின்னர், "இவர்கள் இரண்டுகாலுக்குப் பூமண்டலத்தில் இருந்து வரட்டும்; மீண்டுவருவர்களோ வாரார்களோ என்று ஸம்சயமுண்டாகில், நாங்கள் அதற்கு உத்தரவாதம் பண்ணக்கடவோம்" என்று சில நித்யஸூரிகள் தங்களே முடுகாட்டினாலும்; இவர்களை அவ்விடத்திலிருந்து இந்தப்பிரகிருதி மண்டலத்துக்கு அனுப்பவல்லார் யாருமில்லையென்கிறார்; இதனால்; * ஒரிவில் காலமெல்லா முடனுய்மன்னி வழுவிலாவடிமை செய்யப்பெறுவர் என்றவாறு. (உ)

373 சோர்விலுற்பொருள்வைத்ததுண்டாகில் சொல்லுசொல்லென்றுசுற்றுமிருந்து *
ஆர்வினவிலும்வாய்திறவாதே அந்தகாலமடைவதன்முன்னம் *
மார்வமென்பதோர்கோயிலமைத்து மாதவனென்னுந்தெய்வத்தைநாட்டி *
ஆர்வமென்பதோர்பூவிடவல்லார்க்கு அரவதண்டத்தினியாமிலமே. (ஙு)

சோர்விலுல்	ஞாபகப் பிசகாக
பொருள் வைத்தது உண்டு ஆகில்	(எங்கேனும் ஏதாவதொரு) பொருள் வைக்கப்பட்டிருக்குமாகில்
சொல்லு சொல் என்று	(அதைச்) சொல்லுசொல்லு' என்று
சுற்றும் இருந்து	சூழ்ந்துகொண்டு
ஆர் வினவிலும்	எப்படிப்பட்ட அன்பர்கள் கேட்டாலும்
வாய் திறவாதே	(அவர்களுக்கு மறுமாற்றஞ் சொல்லுகைக்கும்) வாயைத் திறக்கமாட்டாத படி
அந்த காலம் அடைவதன் முன்னம்	மரணகாலமானது வந்து கிட்டுவதற்கு முன்னே;
மார்வம் என்பது ஓர் கோயில் அமைத்து	'ஹ்ருதயம்' என்கிற ஒரு ஸந்நிதியை ஏற்படுத்தி (அந்த ஸந்நிதியில்)

மாதவன் என்னும் தெய்வத்தை நாட்டி (அத்தெய்வத்தைக் குறித்து) — 'திருமால்' என்கிற தேவதையை எழுந்தருளப் பண்ணி

ஆர்வம் என்பது ஓர் பூ இட வல்லார்க்கு — 'பக்தி' என்கிற ஒரு புஷ்பத்தை ஸமர்ப்பிக்க வல்லவர்களுக்கு

அரவ கண்டத்தில் உய்யலும் ஆம் — யமபடர்களால் வரும் துன்பத்தினின்றும் தப்பி பிழைக்கலாகும்.

* * *—முதலடியில் "சுற்றுமிருந்தார்" என்ற பாடமுமுண்டு. ... (கூ)

374 மேலெழுந்ததோர்வாயுக்கிளர்ந்து மேல்மிடற்றினையுள்ளெழவாங்கி *
காலுங்கையும்விதிர்விதிர்த்தேறிக் கண்ணுறக்கமதாவதன்முன்னம் *
மூலமாகியவொற்றையெழுத்தை மூன்றுமாத்திரையுள்ளெழவாங்கி *
வேலைவண்ணனேமேவுதிராகில் விண்ணகத்தினில்மேவலுமாமே. (சு)

மேல்எழுந்தது ஓர்வாயு — ஊர்த்துவச்வாஸமானது

கிளர்ந்து — மேலெழுந்ததனால்

மேல் மிடறு — நெஞ்சானது

உள் எழ வாங்கி — மேலே இடிந்துவிழப்பெற்று

காலும் கையும் விதிர் விதிர்த்து ஏறி — கால்களும் கைகளும் பதை பதைக்கப்பெற்று

கண் உறக்கம் அது ஆவதன் முன்னம் — தீர்க்க நித்திரையாகிய மரணம் ஸம்பவிப்பதற்கு முன்னே,

மூலம் ஆகிய ஒற்றை எழுத்தை — (ஸகல வேதங்களுக்கும் காரணமாகிற 'ஓம்' என்ற பிரணவத்தை

மூன்று மாத்திரை உள் எழ வாங்கி — உச்சரிக்கவேண்டிய முறைப்படி உச்சரித்து,

வேலை வண்ணனே மேவுதிர் ஆகில் — கடல்போன்றநிறத்தையுடைய ஸ்ரீமன் எம்பெருமானே ஆச்ரயித்தீர்களாகில்

விண் அகத்தினில் மேவலும் ஆம் — ஸ்ரீ வைகுண்டத்தில் (அடியார்கள் குழாங்களோடு) உடன் கூடவும் பெறலாம்;

* * *—உயிர் உடலைவிட்டு நீங்குவதற்குப் பூர்வக்ஷணத்திற் பிறக்கும் விகாரங்கள், ஒன்றரை யடிகளாற் கூறப்படுகின்றன; அவையாவன-மேல்முகமாக சுவாஸம் [மூச்சுக்] கிளம்புதலும் நெஞ்சு இடிந்து விழுதலும், கைகால்கள் பதைபதைத்தலுமாம். இப்படிப்பட்ட விகாரங்களையடைந்து மாளுவதற்கு முன்னமே, ஸகலவேதஸாரமாகிய ஓம் என்னும் பிரணவத்தை உச்சரிக்கவேண்டிய முறை வழுவாது உச்சரித்து எம்பெருமானை இறைஞ்சவேணு மென்கிறது.

விதிர் விதிர்த்தல்-'படபட' என்று துடித்தல். [மூலமாகிய இத்யாதி] பிரணவத்திற்கு ஒரு மாத்திரையும் உண்டு; இரண்டுமாத்திரையும் உண்டு, மூன்றுமாத்திரையும் உண்டு; ஒன்று இரண்டு மாத்திரைகளையுடையதாகப் பிரணவத்தை உச்சரிக்குமவர்களுக்கு ஸுத்ரபலப்ராப்தியேயுள்ளது; அதனை மூன்று மாத்திரையுள்ளெழவாங்குமவர்களுக்கே பரமபதப்ராப்தியுண்டு என்பதை ஸ்ரீபாஷ்யத்தில் ஸுதி கர்மாநிகரணத்தில் தெளியக்காணலாம்: மூன்றுமாத்திரைகளிற் குறைவுபடாமல் உச்சரித்தலே மூன்று மாத்திரையுள்ளெழவாங்குதலாம். ... ... (சு)

375 மடிவழிவந்துநீர்ப்புலன்சோர வாயிலிட்டியகஞ்சியும்மீண்டே *
கடைவழிவாரக்கண்டமடைப்பக் கண்ணுறக்கமதாவதன்முன்னம் *
துடைவழியும்மைநாய்கள்கவரா தூதத்தாலும்மைப்பாய்வதுஞ்செய்யார் *
இடைவழியில்நீர்கூறையுமிழவீர் இருடீகேசனென்றேத்தவல்லீரே. (ரு)

(யமகிங்கரர்களைக்கண்ட பயத்தினால்)

மடி புலன் வழி வந்து நீர் சோர — லிங்கத்தின் வழியாக வந்து மூத்திரநீர் பெருகவும்,

வாயில் அட்டிய கஞ்சியும் கண்டம் அடைப்ப — வாயிலே பெய்த பொரிக்கஞ்சியானது கழுத்தை அடைக்கவும்,

மீண்டும் கடை வழி வார — மறுபடியும் கடைவாய் வழியாலே (அந்தப் பொரிக்கஞ்சி வழியாகிற்கவும்

கண் உறக்கம் அது ஆவதன் முன்னம்—;

இருடீகேசன் என்று — 'ஹ்ருஷீகேசன்' என்று (எம்பெருமான் திருநாமத்தைச் சொல்லி)

ஏத்தவல்லீர் — ஸ்தோத்ரம்பண்ண வல்லவர்களே!

நாய்கள் உம்மை துடை வழி கவரா — (யமலோகத்திலுள்ள) செந்நாய்களானவைஉங்களைத் துடையிலே கவ்வமாட்டா;

(யமகிங்கரர்கள்,)

உம்மை சூலத்தால் பாய்வதும் செய்யார் — உங்களை சூலாயுதத்தினால் குத்தவும் மாட்டார்கள்;

நீர் இடை வழியில் கூறையும் இழவீர் — நீங்கள் நடுவழியில் வஸ்திரத்தையும் இழக்க மாட்டீர்கள்.

* * * மரணகாலம் கிட்டும்போது, கண்டவிடமெங்கும் யமகிங்கரர்கள் தென்படுவதாக நினைத்து, அதனலுண்டான அச்சத்தினல் கிடந்தபடியே மூத்நிரம்விட்டுக்கொள்ளுவர்கள்; வாயில்விட்ட பொரிக் கஞ்சி உள் இழியமாட்டாது கழுத்தையடைத்துக் கடைவாய் வழியாகப் பெருகும்; இப்படிப்பட்ட அவஸ்தைகள் பட்டுக்கொண்டு கிடக்கும்போதே, எம்பெருமான் பேர்சொல்லக் காலம் வாய்க்காது மாளப் பெற்ருல், யமலோகம் போகநேர்ந்து, வழியிடையிற் செந்காய்களால் துடை கவ்வப்பட்டும், யமகிங்கரர்களினல் சூலங்கொண்டு குத்தப்பட்டும், அரையிற் கூறையை இழக்கப்பெற்றும்; இப்படி பல துன்பங்கள் படவேண்டி வருமாதலால், அவற்றுக்கெல்லாம் இடமறும்படி மூக்குறமுன்னமே எம்பெருமானை ஏத்தப்பெறில் இடர்ப்பாடு ஒன்றும் படநேரோது என்கிறர். (சு)

376 அங்கம்விட்டவையைந்துமகற்றி ஆவிமூக்கினிற்சோதித்தபின்னை *
சங்கம்விட்டவர்கையைமறித்துப் பையவேதலைசாய்ப்பதன்முன்னம் *
வங்கம்விட்டுலவுங்கடற்பள்ளிமாயனை மதுசூதனைமார்பில்
தங்கவிட்டுவைத்து* ஆவதோர்கருமஞ்சாதிப்பார்க்கு என்றுஞ்சாதிக்கலாமே.(சூ)

அவை ஐந்தும் அங்கம் விட்டு அகற்றி — பஞ்ச பிராணன்களும் உடலை விட்டு அகன்று போக, (பின்பு)
அவர் — அருகு உள்ளவர்கள்
மூக்கினில் ஆவி சோதித்த பின்னை — மூக்கில் (கையை வைத்து) 'பிராணன் இருக்கிறதா இல்லையா' என்று சோதித்துப் பார்த்து, இல்லையென்றறிந்த பின்பு
சங்கம் விட்டு — (அவருடைய உயிரில்) ஆசையை விட்டு,
(அங்குள்ளாரை நோக்கி, 'இப்போதை நிலைமை என்?' என்று வந்தவர்கள் கேட்க;) (அவர்களுக்குப் பதிலாக)
கையை மறித்து — கையை விரித்துக்காட்டி
பைய தலை சாய்ப்பதன் முன்னம் — மெள்ள மெள்ள (தங்கள்) தலையைத் தொங்கவிட்டுக் கொள்வதற்கு முன்னே,-
வங்கம் விட்டு உலவும் கடல் பள்ளி மாயனை — கப்பல்களானவை இடைவிடாமல் நிரியப்பெற்ற கடலில் பள்ளிகொள்பவனும் ஆச்சரிய சக்தியுக்தனும்
மது சூதனை — மதுவைக்கொன்றவனுமான ஸ்ரீமன்நாராயணனை
மார்பில் தங்கவிட்டு வைத்து — ஹ்ருதயத்தில் அமைத்து,
ஆவது ஓர் கருமம் சாதிப்பார்க்கு — ஸ்வரூபத்துக்குச் சேர்ந்த தொரு (உபாயவரணமாகிற) காரியத்தை ஸாதிக்குமவர்களுக்கு
என்றும் சாதிக்கலாம் — எந்நாளும் பலானுபவம்பண்ணப்பெறலாம்.

* * *—பிராணம், அபாநம், வியாநம், உதாநம், ஸமாநம் என்ற பஞ்ச ப்ராணன்களும் உடலைவிட்டொழிந்தபின்பு, அருகிலுள்ள பந்துக்கள் அந்தப் பிணத்தின் மூக்கில் கையைவைத்துப்பார்த்து, ஆவி போயிற்று' என்று உறுதியாகத் தெரிந்துகொண்டு அவ்வுடலில் ஆசையைவிட்டிட்டு, யாரேனும் வந்து 'அவர்க்குத் திருமேனி எப்படியிருக்கின்றது?' என்று கேட்கில், அதற்கு அவர்கள் வாய்விட்டு மறுமொழி சொல்லமாட்டாமல், 'உயிர்போயிற்று' என்பதைக்காட்டும்படி கையைவிரித்துக்காட்டிவிட்டு, ஒரு மூலையிலிருந்துகொண்டு தலைகவிழ்ந்து அழும்படியான தசை நேரிடுவதற்குமுன், க்ஷீராப்திசாயியான எம்பெருமானை நெஞ்சால் நினைத்துக்கொண்டு ஸ்வரூபாநுரூபமான ப்ரபத்தியை அநுஷ்டிப்பவர்கள், எந்நாளும் அநுபவிக்கக்கூடியபேற்றைப் பெறுவர்களென்கிறர். ... ... (சூ)

377 தென்னவன்றமர்செப்பமிலாதார் சேவதக்குவார்போலப்புகுந்து *
பின்னும்வன்கயிற்ருற்பிணித்தெற்றிப் பின்முன்னுகவிழுப்பதன்முன்னம் *
இன்னவனினையானென்றுசொல்லி யெண்ணியுள்ளத்திருளறநோக்கி *
மன்னவன்மதுசூதனனென்பார் வானகத்துமன்ருடிகள்தாமே. (எ)

செப்பம் இலாதார் தென்னவன்தமர் — ருஜுவானசெய்கை இல்லாதவர்களான யமகிங்கரர்கள்
சேவதக்குவார் போல புகுந்து — எருதுகளை அதக்கி ஓட்டுமவர்கள் போல வந்து,
பின்னும் வல்கயிற்ருல் பிணித்து எற்றி — அதற்குமேல் வலிவுள்ள பாசங்களினல் கட்டி அடித்து
பின் முன் ஆக இழுப்பதன் முன்னம் — தலைகீழாக (யமலோகத்துக்கு) இழுத்துக்கொண்டு போவதற்கு முன்னே,—

மன்னவன் — (அந்தத் தென்னவனுக்கும்) மன்னவனான எம்பெரு மான்

இன்னவன இனை யான் — இப்படிப்பட்ட ஸ்வரூபத்தை யுடையவன் இப்படிப்பட்ட ஸ்பாவத்தை யுடையவன்

என்றுசொல்லி — என்று (அவனுடைய ஸ்வரூப ஸ்வபாவங்களைச்) சொல்லி

எண்ணி — (அவற்றை)நெஞ்சாலும் மநகம்பண்ணி

உள்ளத்து இருள் அற நோக்கி — ஹ்ருதயத்திலுள்ள (அஜ்ஞான மாகிற) அந்தகாரம் நீங்கும்படி (அவ்வெம்பெரு மானை) ஸாக்ஷாத்கரித்து,

மதுசூதனன் என் பார் — (தேஹமுள்ளதனையும்) 'மதுஸூதநனே' என்று அவன் திருநாமங்களையே சொல்லிக் கொண்டிருக்கு மவர்கள்

வான் அகத்து — ஸ்ரீவைகுண்டத்திலே

மன்னுடிகள் தாம் — (எம்பெருமானுடைய நித்ய ஸூரிகளின் கைங்கரியத்துக்காக) மன்னுடப் பெறுவார்கள்.

[வானகத்துமன்றடிகள்.] மன்றடுதல்- இரந்துகேட்டல். "வானகம் மன்றத்து ஆடிகள்."—என இயைத்து, பரமபதத்திலுள்ள நித்ய ஸூரி ஸபையில் ஸஞ்சரிக்கப்பெறுவார்கள் என்று பொருளுரைப்பாருமுளர். ... ... (எ)

378 கூடிக்கூடியுற்றார்களிருந்து குற்றம்நிற்கநற்றங்கள்பறைந்து * பாடிப்பாடியோர்பாடையிலிட்டு நரிப்படைக்கோருபாகுடம்போலே * கோடிமூடியெடுப்பதன்முன்னங் கௌத்துவமுடைக்கோவிந்தனேடு * கூடியாடியவுள்ளத்தராலுல் குறிப்பிடங்கடந்துய்யலுமாமே. (அ)

(மரணமான பின்பு,)

உற்றார்கள் கூடி கூடி இருந்து — பந்துக்களானவர்கள் நிரள் நிரளாகக் கூடியிருந்து கொண்டு

குற்றம் நிற்க நற்றங்கள் பறைந்து — (செத்தவன்செய்த) குற்றங்கள் (பல)நிடக்க(அவற்றையெல்லாம் விட்டு விட்டு) (நிறுத)உண்மையாகத் தோன்றுப்படியான வற்றைச்சொல்லி,

பாடிப் பாடி — (அழுகைப் பாட்டுக்களைப்) பலகால் பாடி

ஓர் பாடையில் இட்டு — ஒரு பாடையிலே படுக்கவைத்து

மூடி — வஸ்த்ரத்தையிட்டு மூடி

நரிப்படைக்கு ஒரு பாகுடம் போலே — நரிக்கூட்டத்துக்கு ஒரு பாகுக்குடத்தைப் பச்சையாகக் கொடுப்பதுபோல (இப்பிணத்தைக் கொடுக்கைக்காக,)

எடுப்பதன் முன்னம் — (சுடுகாட்டுக்குக் கொண்டு போவதாக) எடுப்பதற்கு முன்னே,—

கௌத்துவம் உடை கோவிந்தனேடு — கௌஸ்துபத்தை (நிருமார்பிலே) உடைய எம்பெருமான் பக்கலில்

கூடி ஆடிய உள்ளத்தர் ஆனால் — சேர்ந்து அவகாஹித்த நெஞ்சையுடையவர்களாக ஆனால்,

குறிப்பு இடம்கடந்து உய்யலும் ஆம் — யமலோகத்தைஅதிக்ரமித்து (பரமபதம்போய்ச்சேர்ந்து) உஜ்ஜீவிக்கப் பெறலாம்.

[நரிப்படைக்கொரு பாகுடம்போலே] வீட்டிலிருந்து பாடையை மூடிக்கொண்டு போவதைப்பார்த்தால், சுடுகாட்டிலுள்ள நரிப்படைகளுக்கு உணவாம்படி பாகுக்குடங்கொண்டு போகிறார்களோ என்று நினைக்கும்படியா யிருக்குமென்க; அன்றி யமலோகத்திற் பாபிஷ்டர்களை நலிவதற்கென்று ஏற்படுத்தப்பட்டுள்ள நரிப்படைகளுக்குப் பாகுக்குடம் கொண்டுபோவதுபோல' என்றும் உரைக்கலா மென்பர் சிலர்; பாகு—குடம், பாகுடம், தொகுத்தல் விகாரம்; இனி, பாதுடம் என்கிறவிது, "ப்ராப்ருதம்" என்ற வடசொல்லின் விகாரமென்றுங்கொள்ளலாம்; அப்போது, நரிப்படைகளுக்குப் பாதகாணிக்கை கொண்டுபோவதுபோல என்பது பொருள், ப்ராப்ருதம்—பாத காணிக்கை. குறிப்பிடம்-பாபங்களின் பலனை அநுபவிப்பதற்கென்று குறிக்கப்பட்ட இடம்; எனவே, யமலோகமாயிற்று. கடத்தல்-அங்குச் செல்லாதொழிதல். ... ... (அ)

379 வாயொருபக்கம்வாங்கிவலிப்ப வார்ந்தநீர்க்குழிக்கண்கள்மிழற்ற *
தாயொருபக்கந்தந்தையொருபக்கந் தாரமுமொருபக்கமலற்ற *
தீயொருபக்கஞ்சேர்வதன்முன்னந் செங்கண்மாலொடுஞ்சிக்கனச்சுற்றமாய் *
ஒருபக்கம்நிற்கவல்லாருக்கு அரவதண்டத்திலுய்யலுமாமே. (கூ)

வாய் ஒரு பக்கம் வாங்கிவலிப்ப — வாயானது (வாயுவினாலே) ஒருக்கடுத்து வலிக்கவும்
வார்ந்த நீர் குழி கண்கள் மிழற்ற — பெருகாநின்ற நீரையுடையதும் உள்ளே இடிய இழிக்ததுமான கண்ணானது அலமந்து நிற்கவும்,
ஒரு பக்கம் தாய்ஒரு பக்கம் தந்தை ஒரு பக்கம் தாரமும் — ஒருபக்கத்தில்தாயாரும் மற்றொரு பக்கத்தில் தகப்பனாரும் இன்னொரு பக்கத்தில் மனைவியும் (இருந்து கொண்டு)
அலற்ற — கதறி அழவும்,
ஒரு பக்கம் தீ சேர்வ தன் முன்னம் — மற்றொரு பக்கத்திலே நெருப்பானது (மார்வில் வந்து) சேருவதற்கு முன்னே
செம்கண் மாலொடும் — புண்டரீகாக்ஷனை எம்பெருமானை
சிக்கன சுற்றம் ஆய் — நிருபாதிக பந்துவாகக் கொண்டு
ஒரு பக்கம் நிற்க வல்லாருக்கு — அவனொருவனிடத்திலேயே பக்ஷபாதமாய் நிலைத்து நிற்கவல்லவர்களுக்கு
அரவ தண்டத்தில் உய்யலும் ஆம் — யமதண்டனையில் நின்றும் தப்பிப் பிழைக்கப் பெறலாம்.

380 செத்துப்போவதோர்போதுநினைந்து செய்யுஞ்செய்கைகள்தேவபிரான்மேல் *
பத்தராயிறைஞ்சார்பெறும்பேற்றைப் பாழித்தோள்விட்டுசித்தன்புத்தூர்க்கோன் *
சித்தம்நன்கொருங்கித்திருமாலைச் செய்தமாலையிவைபத்தும்வல்லார் *
சித்தம்நன்கொருங்கித்திருமால்மேல் சென்றசிந்தைபெறுவர்தாமே. (ம)

செத்துப்போவது ஓர் போது — இறந்துபோகுங் காலத்திலே
செய்யும் — (யமபடர்களால்) செய்யப்படுகிற
செய்கைகள் — (கடுஞ்) செயல்களை
நினைந்து — நினைத்து
தேவபிரான்மேல் — தேவபிரான் பக்கலில்
பத்தர் ஆய் — அன்பு பூண்டவர்களாய் இருந்து
இறைஞ்சார் — (பின்பு) இறந்தவர்கள்
பெறும் பேற்றை — அடையக்கூடிய பலன்களைக் குறித்து,
பாழி தோள் — (ஸம்ஸாரத்தை வென்ற) மிடுக்கையுடைய தோள்களையுடையவரும்
புத்தூர் கோன் — ஸ்ரீவில்லிபுத்தூருக்கு தலைவருமான
விட்டுசித்தன் — பெரியாழ்வார்
சித்தம் — (தம்முடைய) நெஞ்சை
திருமாலை — திருமால் திறத்தில்
நன்கு — நன்றாக
ஒருங்கி — ஒருப்படுத்தி
செய்த — அருளிச்செய்த
மாலை — சொல்மாலையாகிய
இவை பத்தும் — இப்பத்துப் பாட்டுக்களையும்
வல்லார் — ஓதவல்லவர்கள்
சித்தம் நன்கு ஒருங்கி — (ஆழ்வார்க்குப் போல) நெஞ்சு ஒருபடிப்படப் பெற்று
திருமால்மேல் சென்ற — திருமால் பக்கலிலே குடிகொண்ட
சிந்தை — மநஸ்ஸை
பெறுவர் — உடையராவர்.

அடிவரவு:—ஆசை சேர்வு மேல் மடி அங்கம் தென்னவன் கூடி வாய் செத்து காசு.

நான்காம்பத்து—ஆறாந்திருமொழி, காசுங் கறையுடை

(பகவந்நாமங்களையே ப்ரஜைகளுக்கு இடும்படி நியமித்தல்.)

381 காசுங்கறையுடைக்கூறைக்கும் அங்கோர்கற்றைக்கு
மாசையினால் *, அங்கவத்தப்பேரிடும்ஆதர்காள் *
கேசவன்பேரிட்டு நீங்கள்தெளித்திருமினே *
நாயகன்நாரணன் தாளன்னேநரகம்புகாள். (க)

காசுக்கும் கறை உடை கூறைக்கும் ஓர் கற்றைக்கும் ஆசையினால் — ஒரு காசுக்காகவும் (தலைப்புகளில் கல்ல) கறைகளையுடைய வஸ்திரத்துக்காகவும் ஒரு கட்டுக் கற்றைக்காகவும்(உண்டான)ஆசையாலே

அவத்தம் பேர் இடும் ஆதர்காள் — மிகவும் நீசதான (க்ஷுத்ர தேவதைகளின்) பெயர்களை (உங்கள் பிள்ளைகளுக்கு) இடுகிற அறிவு கெட்டவர்களே!

கேசவன் நாயகன் — கேசவனென்னுந் திருநாமத்தையுடையவனும் ஸர்வ சேஷியுமான நாராயணனுடைய திருநாமங்களை (உங்கள் பிள்ளைகளுக்கு) இட்டு

நாரணன் பேர் இட்டு — மகிழ்ச்சி கொண்டிருங்கள்;

தேனித்து இருமின் — (அப்படி நாமகரணஞ் செய்தால்)

தம்மன்னீர நரகம் புகாள் — (அப்பிள்ளைகளுடைய) தாய்மார் துர்க்கதியை அடையமாட்டார்கள்.

நீங்கள்—;

* * *—உலகத்தில் பலர் தம்மக்களுக்கு இந்திரன், சந்திரன், குபேரன் என்றிவைபோன்ற பெயர்களை இடுவது-ஸ்வயம்ப்ரயோஜநமாகவுமன்று, ஆமுஷ்மிகமான பயனைக் கருதியுமன்று; பின்னை என்கொண்டென்னில்; அப்பெயர்களை இட்டால் நாலுகாசுகிடைக்கும், நல்ல ஆடைகிடைக்கும், ஒரு கட்டுக் கற்றை கிடைக்கும் என்றுண்டான விருப்பத்தினாலாம். இவ்விருப்பங் கொண்டு அப்பெயர்களை இடுமவர்கள் இறையும் அறிவுள்ளவரல்லர்; அவர்கள் இடும்பெயர்களும் (ஸ்வரூபத்துக்குத்) தீங்கு விளைக்கத் தக்கவை, ஆதலால் அவற்றை ஒழித்து அப்பிள்ளைகளுக்கு எம்பெருமான் திருநாமங்களை இட்டால், அவர்களைப்பெற்ற தாய்தந்தையர் நமன்தமர் கையிலகப்பட்டு நலிவுபடாமல் உய்ந்து போவர் என்று) உபதேசித்தருளியவாறு. இங்ஙனிடாதொழிகில், அவர்கள் நரகம்புகுவரென்பது வெளிப்படை. (க)

382 அங்கோருகூறை அரைக்குடுப்பதனாசையால் *
மங்கியமானிடசாதிப் பேரிடுமாதர்காள் *
செங்கணெடுமால் சிரீதராவென்றழைத்தக்கால் *
நங்கைகாள்நாரணன் தம்மன்னீநரகம்புகாள். (உ)

அங்கு ஒரு கூறை அரைக்கு உடுப்ப தன் ஆசையால் — அந்த நீசரிடத்தில் ஒருவஸ்த்ரத்தை(ப்பெற்று)அரையில் உடுக்க வேணுமென்னும் ஆசையினால்

மங்கிய மானிடசாதி பேர் இடும் ஆதர்காள் — கெட்டுக் கிடக்கிற மநுஷ்ய ஜாதியிற் பிறந்தவர்களுடைய பெயரை இடுகிற குருடர்களே!

நங்கைகாள் — சொல்விற்றை அறியவல்ல மதியிலை நிறைந்தவர்களே!

(நீங்கள் உங்கள் பிள்ளையை)

செம் கண் நெடுமால் சிரீதரா என்று அழைத்தக்கால் — புண்டரீகாக்ஷனை ஸர்வேச்வரனே! ஸ்ரீதரனே! என்று [இப்பெயர்களை இட்டு] அழைத்தீர்களாகில்

நாரணன் தம்மன்னீ — நாராயணநாமத்தைப்பூண்ட அப்பிள்ளையினுடைய தாயானவள்

நரகம் புகாள்—.

383 உச்சியிலெண்ணெயுஞ் சுட்டியும்வனையுமுகந்து *
எச்சம்போலிந்தீர்காள் என்செய்வான்பிறர்பேரிட்டீர் *
பிச்சைபுக்காகிலும் எம்பிரான்திருநாமமேநச்சுமின் *
நாரணன் தம்மன்னீநரகம்புகாள். (ங)

எச்சம் பொலிந்தீர்காள் — ஐந்தாநத்திலுள்ள விளங்குமவர்களே!

உச்சியில் எண்ணெயும் சுட்டியும் வனையும் உகந்து — உச்சியில்(தடவத்தக்க) எண்ணெயையும் (நெற்றியில் தொங்கும்படி கட்டத்தக்க) சுட்டியையும் (கையில் அணியத்தக்க) வளையையும் விரும்பி

என் செய்வான் — ஏதுக்காக

பிறர் பேர் இட்டீர் — (எம்பெருமானை யொழிந்த) மற்றவர்களுடைய பெயர்களை (உங்கள் பிள்ளைகளுக்கு) இட்டீர்கள்?

பிச்சை புக்கு ஆகிலும் — பிச்சையெடுத்து ஜீவித்தாகிலும்

எம்பிரான் திருநாமமே நச்சுமின் — எம்பெருமானுடைய திருநாமத்தையே விரும்பி இடுங்கள்;

(அப்படி இட்டால்)

நாரணன்***இத்யாதி பூர்வவத்—.

ஒரு அந்தணன் தன் மகனுக்கு நாமகரண காலத்தில், 'ஐச்வரியம் தரவல்லானெருவனுடைய பெயரை இப்பிள்ளைக்கு இடவேணும்" என்றெண்ணிக் 'குபேரன் பெயரை இடு' என்றவளவிலே, "ஜளிபிளி என்று பேரிட்டழைத்து ஜீவிப்பதிற் காட்டிலும், நாராயணன் என்ற திருநாமத்தைச் சாத்திப் பிச்சைபுக்காகிலும் ஜீவிக்கவமையும்' எனறார் ஒரு ஆஸ்திகர் என்பதொரு கதை இங்கு அறியத்தக்கது. (ஜளிபிளி-குபேரன் பெயர் ; (வடமொழி) ... ... (க).

384 மானிடசாதியில்தோன்றிற்றேர் மானிடசாதியை *
மானிடசாதியின்பேரிட்டால் மறுமைக்கில்லை *
வானுடைமாதவா கோவிந்தாவென்றழைத்தக்கால் *
நானுடைநாரணன் தம்மன்னேநரகம்புகாள். (ச)

மானிட சாதியில் தோன்றிற்று ஓர் மானிட சாதியை — மநுஷ்யஜாதியில்உண்டான ஒரு மநுஷ்ய ஜந்துவை

மானிட சாதியின் பேர் இட்டால் — (கர்ம பலன்களை அநுபவிக் கப்பிறந்த) மநுஷ்ய சாதி யர்க்கு உரியபெயரை இட் டழைத்தால்

மறுமைக்கு இல்லை — அத்ருஷ்டபலம் [மோக்ஷம்] பெறுகைக்கு யாதொரு வழியுமில்லையாம் ;

வான் உடை மாதவா கோவிந்தா என்று அழைத்தக்கால் — பரமபதத்தை (விபூதியாக) உடைய ச்ரியஃபதியே! கோவிந்தனே ! என்று(எம் பெருமான் திருநாமத்தை யிட்டு) அழைத்தால்,

நானுடை நாரணன் — எனக்குநாதனான நாராயண னுடைய திருநாமத்தைப் பூண்ட அப்பிள்ளை யினுடைய

தம்மன்னே நரகம் புகாள்—.

385 மலமுடையூத்தையில்தோன்றிற்றேர் மலவூத்தையை *
மலமுடையூத்தையின்பேரிட்டால் மறுமைக்கில்லை *
குலமுடைக்கோவிந்தா கோவிந்தாவென்றழைத்தக்கால் *
நலமுடைநாரணன் தம்மன்னேநரகம்புகாள். (ஞ)

மலம் உடை ஊத்தையில் தோன்றிற்று ஓர் — மலத்தை யுடையதும் ஹேய முமான சரீரத்தில்நின்றும் தோன்றினதொரு

மலம் ஊத்தையை — (தானும் அப்படியே) ம ல முடையதும் ஹேயமுமான சரீரத்தோடே கூடியிருக் கிற ஜந்துவை

மலம் உடை ஊத்தையின் பேர் இட்டால் — (கீழ்ச்சொன்னபடியே)மலத் தை யுடையதும் ஹேயமு மான சரீரத்தையுடைய மற்றொரு ஜந்துவினுடைய பெயரை இட் டு அழைத் தால்,

(அதனால் இம்மையிலே சில அல்பபலன்

* இடைத்தாலும்,)

மறுமைக்கு இல்லை — அத்ருஷ்ட பலத்துக்கு ஒரு வழியுமில்லையாம் ;

குலம் உடை கோவிந்தா கோவிந்தா என்று அழைத்தக்கால் — நற்குலத்திற் பிறந்த கோவிந் தனே ! கோவிந்தனே ! என்று (பகவந்நாமத்தை யிட்டு) அழைத்தால்,

நலம் உடை நாரணன் — (தன் திருநாமத்தைச் சொன்னவர்களை வாழ் விக்கையாகிற)நன்மையை யுடைய எம்பெருமா னுடைய திருநாமம்பூண்ட அப்பிள்ளையினுடைய

தம்மன்னே நரகம் புகாள்—.

* * *—"நீண்டாவழும்புஞ் செங்கீருஞ் சீயுரம்புஞ் செறிதசையும், வேண்டா நாற்றம் மிகுமுடல்" என்றபடி மாம்ஸரக்தம் முதலிய மலங்களோடு கூடி ஹேயமாயிருக்கிற மாதாபித்ரு சரீரத்தினின்று தோன்றினதாயும், 'காரண வஸ்துவுக்கிணங்கவே கார்யவஸ்து பிறக்கும்' என்ற நீதியின்படி, மாதாபிதாக்களுடைய சுக்ல சோணிதங்களாலே பரிணதமாகையாலே தத்ஸ்வரூபமாகவே யிருக்கிற சரீரத்தோடே கூடினதாயு மிருக்கிற ஜந்துவைக், கீழ்ச்சொன்ன படியே மிகவும் ஹேயமாயிருந்துள்ள சரீரத்தைப் பூண்டுகொண்டிருக்கிற ஒரு கர்மவச்ய ஜந்துவின் பெயரையிட்டழைத்தால், இம்மையிற் சிலபயன் பெறினும் ஆமுஷ்மிகத்தில் ஒருபயனும் பெறமுடியாது என்பது முன்னடிகளின் கருத்து. மூன்றுமடியில் சூலம்—இடைக்குலம். ... ... (ஞ)

386 காடுகருமறிய மானிடப்பேரிட்டு *
கூடியழுங்கிக் குழியில்விழ்ந்துவழுக்காதே *
சாடிறப்பாய்ந்தவனே தாமோதராவென்று
நாடுமின் * நாரணன் தம்மன்னேரகம்புகாள். (சு)

காடும் நகரும் அறிய { குக்ராமங்களில் உள்ள ஸாமான்ய ஜ்ஞானிகளும் நகரவாஸிகளான விசேஷ ஜ்ஞானிகளும் ('இவன் உயர்ந்தவன்' என்று) அறியும்படி,—
மானிடர் பேர் இட்டு { (க்ஷுத்ர) மனுஷ்யர்கள் பெயரை யிட்டு
கூடி அழுங்கி குழியில் விழ்ந்து { அவர்களோடு கூடி ஒளி மழுங்கி (அவர்கள் விழுந்த) குழியிலே விழுந்து
வழுக்காதே தவறிப்போகாமல்
சாடு இற பாய்ந்த தனிவா { சகடாஸுரன் முறியும்படி உதைத்தருளின பெரியோனே!' (என்றும்)
தாமோதரா என்று 'தாமோதரனே!' என்றும்
நாடுமின் { வாழ்த்திக்கொண்டு திரியுங்கள்;
(இங்ஙனேயாகில்,)
நாரணன் தம்மன்னே ரகம் புகாள்—.

*—"நாடு நகருமறிய" என்கிறவிது சுற்றடியில், 'நாடுமின்" என்ற விணைமுற்றோடு இயையும். அழுங்கி—ஆத்துமாவுக்கு இயற்கையாயுள்ள ஸ்வரூப ப்ரகாசம் மழுங்கி என்றபடி. (சு)

387 மண்ணிற்பிறந்துமண்ணுகும் மானிடப்பேரிட்டு * அங்
கெண்ணமொன்றின்றியிருக்கும் ஏழைமனிசர்காள் *
கண்ணுக்கினிய கருமுகில்வண்ணன்காமமே
நண்ணுமின் * நாரணன் தம்மன்னேரகம்புகாள். (எ)

மண்ணில் பிறந்து மண் ஆகும் மானிடர் பேர் இட்டு { மண்ணில் நின்றுமுண்டாய்பின்பு மண்ணையிடுகிற அல்ப மநுஷ்யர்களுடைய பெயரை(த் தங்கள் பிள்ளைகளுக்கு) இட்டு
அங்கு எண்ணம் ஒன்று இன்றி இருக்கும் ஏழை மனிசர்காள் { ஆமுஷ்மிக பலத்தில் ஒரு விசாரமுமற்றிருக்கிற அறிவற்ற மநுஷ்யர்களே!
கண்ணுக்கு இனிய கருமுகில் வண்ணன் { கண்ணல் காண்கைக்கு போக்யனும் காளமேகம் போன்ற நிறத்தையுடையனுமுள்ள எம் பெருமானுடைய
காமமே நண்ணுமின் { நிருகாமத்தையே விரும்பி பிடுங்கள்;
நாரணன் தம்மன்னே ரகம் புகாள்—.

* * *—"மண்ணுய் நீரெரிகால் மஞ்சலாவு மாகாசமுமாம் புண்ணராக்கை" என்றபடி-தேஹத்திற்குப் பஞ்சபூதங்களும் உபாதாநமாயிலும் அவற்றுள் பார்த்திவபாகமே [—அதாவது மண்பாகம்] அதிகமாயிருப்பதுபற்றி, அம்மண்ணில் நின்றும் தேஹத்துக்கு உற்பத்தியென்பார், "மண்ணிற்பிறந்து' என்றார்.

தேஹம் உருக்குலைத்தால், 'காரியத்திற்குக் காரணத்திலே லயமாகக்கடவது' என்ற முறைமையின் படி-மறுபடியும் மண்ணைப்போகக் கடவதானமைபற்றி, "மண்ணுகும்" என்றார். அந்த ...பரமபதத்திலே என்றபடி. (எ)

388 நம்பிபிம்பியென்று நாட்டுமானிடப்பேரிட்டால் *
நம்பும்பிம்புமெல்லாம் காலுகாளிலழுங்கிப்போம் *
செம்பெருந்தாமரைக்கண்ணன் பேரிட்டழைத்தக்கால் *
நம்பிகாள்நாரணன் தம்மன்னேரகம்புகாள். (அ)

நம்பி பிம்பி என்று நாடு மானிடர் பேர் இட்டால் — நம்பி என்றும் பிம்பி என்றும் கூறுதற்கு மநுஷ்யர்களுடைய பெயரை (உங்கள் பிள்ளைகளுக்கு நீங்கள்) இட்டால்

நம்பும் பிம்பும் எல்லாம் — 'நம்பி' 'பிம்பி' என்னும் பெயர்களுக்கு அடியான முதன்மையெல்லாம்

நாலுநாளில் அழுங்கிப் போம் — நாலு நாளைக்குள் அழிந்து போம்;

செம் பெரு தாமரை கண்ணன் பேர் இட்டு — சிவந்தும் பெருத்துமிருக்கிற தாமரைப் பூப்போன்ற திருக்கண்களையுடைய எம் பெருமானுடைய திருநாமத்தை இட்டு

அழைத்தக்கால் — அழைத்தால்

நம்பிகாள் — (அறிவினால்) குறைவற்றவர்களே!

நாரணன் தம்மன்னை நரகம் புகாள்—.

* * *—நம்பி என்னுஞ்சொல், 'குறைவற்றவன்' என்னும் பொருளை யுடையதாதல்பற்றி, 'இப் பெயரை நமது பிள்ளைக்கு இட்டால் ஒரு குறையுமின்றிப் பூர்ணனாயிருப்பன்' என நினைத்து அப் பெயரை இடுகிறவர்களைக் குறித்து ஏசுகிறார் இப்பாட்டில்.

பிம்பி என்பதற்கு (இங்கு) ஒரு பொருளுமில்லை. இச்சொல் எப்படி பொருளற்றதோ, அப்படியே தான் நீங்கள் விரும்பியிடுகிற நம்பி என்கிற சொல்லும் பொருளற்றது என்று கூறிக்கிற படியாய், நம்பிக்கு எதிர்த்தட்டாக ஒரு பிம்பியை அருளிச் செய்கிறரென்க.

"நம்பும் பிம்புமெல்லாம்" என்றது-நம்பிபிம்பி என்ற பெயர்களின் பகுதியை யெடுத்துக் காட்டியபடி. ... ... (அ)

389 ஊத்தைக்குழியில் அமுதம்பாய்வதுபோல் * உங்கள்
மூத்திரப்பிள்ளையை யென்முகில்வண்ணன்பேரிட்டு *
கோத்துக்குழைத்துக் குணுலமாடித்திரிமினே *
நாத்தகு நாரணன் தம்மன்னைநரகம்புகாள். (கூ)

ஊத்தை குழியில் அமுதம் பாய்வது போல் — அசுத்தமானதொரு குழியிலே அம்ருதம் பாய்ச்சினாற் போலே

உங்கள் மூத்திரம் பிள்ளையை — உங்களுடைய அசுத்தனனை பிள்ளைக்கு

என் முகில்வண்ணன் பேர் இட்டு — எனக்குத் தலைவனும் காளமேகம்போன்ற திருநிறத்தையுடையனுமான எம் பெருமானுடைய திருநாமத்தை நாமகரணம் பண்ணி

(அதனால் அப்போதே நீங்கள் எம்பெருமானுடைய பரிக்ரஹமாகப் பெற்று)

கோத்து குழைத்து — (அவ்வெம்பெருமானோடு) கூடிக் கலந்து

(அதனாலுண்டாகும் ஆநந்தத்துக்குப் போக்குவீடாக)

குணுலம் ஆடி — குணுலிக் கூத்தாடிக் கொண்டு

திரிமின் — திரியுங்கள்;

(இப்படியாகில்,)

நாதகு நாரணன் — நாவினால் துதிக்கத்தக்கநாராயணனுடைய பெயரைப் பூண்ட அப்பிள்ளையினுடைய

தம்மன்னை நரகம் புகாள்.—

* * *—பரமபாவநமாகிய எம்பெருமான் திருநாமத்தைப் பரமஹேயரான மானிடமக்களுக்கு இடுவது-அசுத்தமாகிய ஒரு எச்சிற்குழியில் அம்ருதத்தைப் பாய்ச்சுவதை ஒக்குமென்க. ஊத்தைக்குழியில் அமுதம் பாய்ந்தால், அவ்வமுதந்தானும் அத்தோடொக்க அசுத்தமாய் அபோக்யமாயொழியும்; எம்பெருமானுடைய திருநாமமோவென்றால் அங்ஙனன்றியே தனக்கு ஒரு ஸ்பர்சதோஷமில்லாதபடி தான் புகுந்த விடத்தையும் பரிசுத்தமாக்கி விலக்ஷண பரிக்ராஹ்யமாம்படி பண்ணுமென்று அமுதத்திற்காட்டில் திருநாமத்திற்கு வாசி அறியத்தக்கது.

குணுலிக் கூத்தாவது ஆநந்தத்துக்குப் போக்குவீடாகத் தலைகீழாக ஆடுவதொருகூத்து. ஆநந்தம் தலைமண்டைகொண்டால் மெய்மறந்து கூத்தாடும்படி யாகுமென்பதைத் திருவாய்மொழியில் "மொய்ம்மாம் பூம்பொழிற்பொய்கை" என்ற திருவாய்மொழியினால் அறிக. கோத்துக்குழைந்து-ஒருபொருட் பன்மொழி; "கூடிக்கலந்து" என்பதுபோல. குழைத்து என்றதினது-'குழைந்து' என்ற தன்வினைப் பொருளில்வந்த பிறவினை. "நாத் தகும்" என்பதற்கு, ('பிள்ளைக்குத் திருநாமத்தையிட்டு அத்தைப் பல காலுஞ் சொல்லுகையாகிறவிது) உங்கள் நாவுக்குச்சேரும்' என்று முரைப்பர். ... (கூ)

390 சீரணிமால் திருநாமமேயிடத்தேற்றிய *
வீரணிதோல்புகழ் விட்டுசித்தன்விரித்த *
ஓரணியொண்டமிழ் ஒன்பதோடொன்றும்வல்லவர் *
பேரணிவைகுந்தத்து என்றும்பேணியிருப்பரே. (ஙு)

சீர் அணி மால் திரு நாமமேஇடதேற்றிய
- கல்யாண குணங்களே ஆபரணமாகவுடையனும் (அடியார் பக்கல்) வ்யாமோஹமுடையனுமான எம்பெருமானுடைய திருநாமத்தையே (தம் தம் பிள்ளைகளுக்கு) இடும்படி உபதேசித்தருளினவரும்

விரித்த
- விரிவாக அருளிச்செய்தவையும்

ஓர் அணி ஒண் தமிழ் ஒன்பதோடு ஒன்றும் வல்லவர்
- (கற்பார்க்கு) ஒப்பற்ற ஆபரணம் போன்றவையும் அழகிய தமிழ்ப்பாஷையுமாயிருந்துள்ள இப்பத்துப் பாட்டுகளையும் ஓதவல்லவர்கள்

வீரம் அணி தொல் புகழ்விட்டுசித்தன்
- (இந்திரியங்களை வெல்லுகையாகிற) வீரப்பாட்டை ஆபரணமாகவுடையவரும்
- சாச்வதமான கீர்த்தியையுடையவருமான பெரியாழ்வார்

பேர் அணி வைகுந்தத்து
- பெரியதும் அழகியதுமான ஸ்ரீவைகுண்டத்தில்

என்றும் பேணி இருப்பர்
- எந்நாளும் எம்பெருமானுக்கு) மங்களாசாஸனம் பண்ணிக்கொண்டு வாழப்பெறுவர்.

அடிவரவு :—காசும் அங்கொரு உச்சி மாலிட மல நாடி மண் நம்பி ஊத்தை சீரணி தங்கை.

நான்காம்பத்து—ஏழாந்திருமொழி, தங்கையை மூக்கும்

கண்டமென்னுங் கடிநகர் விஷயமான பதிகம்.

391 தங்கையைமூக்குந்தமையனைத்தலையுந் தடிந்தவெந்தாசரதிபோய் *
எங்குந்தன்புகழாவிருந்தரசாண்ட எம்புருடோத்தமனிருக்கை *
கங்கைகங்கையென்றவாசகத்தாலே கடுவினைகளைந்திடகிற்கும் *
கங்கையின்கரைமேற்கைதொழுநின்ற கண்டமென்னுங்கடிநகரே. (க)

கங்கை கங்கைஎன்ற வாசகத்தாலே
- 'கங்கை, கங்கை' என்ற சப்தத்தைச் சொல்லுவதனால்

கடு வினை களைந்திடகிற்கும் கங்கையின் கரை மேல்
- கடிதமான பாபங்களை ஒழிக்கவல்ல கங்கா நதியினுடைய கரையிலே

கை தொழ நின்ற
- (பக்தர்கள்) கைகூப்பித் தொழும்படியாக நின்ற

கண்டம் என்னும் கடி நகர்
- 'கண்டம்' என்னும் பெயரையுடைய சிறந்தநகரமானது

(எதுவென்னில் ;—)

தங்கையை மூக்கும்
- (இராவணனுடைய) தங்கையாகிய சூர்ப்பணகையினுடைய மூக்கையும்

தமையனை தலையும்
- (அவனுடைய) தமையனான ராவணனுடைய தலையையும்

தடிந்த
- அறுத்தொழித்தவனும்

போய் எங்கும் தன் புகழா இருந்து அரசு ஆண்ட
- (அயோத்திமாநகர்க்கு) எழுந்தருளி நாடடங்கலும் தன்னுடைய கீர்த்தியேயாம்படி பதினாயிரம் ஸம்வத்ஸரம் எழுந்தருளியிருந்து ராஜ்யபரிபாலநஞ் செய்தருளினவனும்

எம் தாசரதி எம் புருடோத்தமன் இருக்கை
- எமக்குத் தலைவனுமான இராமபிரானுகிய எமது புருஷோத்தமப் பெருமானுடைய வாஸஸ்தாநமாம்.

* * *—ஏதேனுமொரு குளத்தில் நீராடுமவர்கள் அந்த நீரைக் கங்கையாக நினைந்து, 'கங்கை, கங்கை' என்று உச்சரித்தால் உடனே அவர்களுடைய பெருப்பெருத்த பாபங்களையெல்லாம் மொழிக்கும்படியான பெருமை பொருந்திய கங்கையின் கரையிலுள்ள கண்டமென்கிற நகர விசேஷம்—ஸ்ரீபதரிகாச்ரம மார்க்கத்தில் தேவப்ரயாகையென்று ப்ரஸித்தமான தலமென்பர். ... ... (க)

392 சலம்பொதியுடம்பில்தழலுமிழ்பேழ்வாய்ச் சந்திரன்வெங்கதிரஞ்ச *
மலர்ந்தெழுந்தணவுமணிவண்ணவுருவின் மால்புருடோத்தமன்வாழ்வு *
நலந்திகழ்சடையான்முடிக்கொன்றைமலரும் நாரணன்பாதத்துழாயும் *
கலந்திழிபுனலாற்புகர்படுகங்கைக் கண்டமென்னுங்கடிநகரே. (உ)

சலம் பொதி உடம்பின் சந்திரன் — ஜலத்தைப்பொதிந்துகொண்டிருக்கிற வடிவையுடைய சந்திரனும்

தழல் உமிழ் பேழ் வாய் வெங் கதிர் — நெருப்பை உமிழா நின்றுள்ள பெரிய கிரணங்களை யுடையனுய் வெம்மையே இயல்வாகவுடையனை ஸூர்யனும்

அஞ்ச — அஞ்சும்படியாக

மலர்ந்து எழுந்து அணவு — மிகவும் பரம்பின சரீரத்தையெடுத்துக்கொண்டு கிளர்ந்து (அந்த சந்த்ர ஸூர்யர்களுடைய இருப்பிடத்தைச்) சென்று கிட்டின

மணி வண்ணம் உருவின் — நீலமணி போன்ற நிறம் பொருந்திய வடிவையுடையவனும்

மால் — (அடியார் பக்கல்)வ்யாமோஹமுடையவனுமான

புருடோத்தமன் வாழ்வு — புருஷோத்தமன் வர்ழுமிடம்.

நலம்திகழ்சடையான் முடி கொன்றை மலரும் — (எம்பெருமானுடைய ஸ்ரீபாததீர்த்தத்தை வஹிக்கின்றமையாலுண்டான) நன்மை விளங்கா நிற்கிற ஜடையையுடையனை சிவபெருமானுடைய தலையில் (அணியப் பெற்றுள்ள) (செந்நிறமுடைய) கொன்றைப் பூவோடும்

நாரணன் பாதத் துழாயும் கலந்து — (அச்சிவபிரானுக்குந் தலைவனை) நாரணனுடைய திருவடிகளிற் பூனைந்த (பசுமை நிறமுடைய) திருத்துழாயோடும் சேர்ந்து

இழி — ஆகாசத்தில் நின்றும் பூமியில் இழிந்து வெள்ளமிடா நின்ற

புனலால் புகர்படு கங்கை — ஜலத்தினால் விளாங்கா நின்றுள்ள கங்கைக்கரையிலுள்ள

கண்டமென்னுங் கடி நகர்—;

* * *—எம்பெருமான் மாவலி கையில் நீரேற்றுப் பெற்று உலகளக்கத் தொடங்கி ஓங்கியுயர்ந்தபோது சந்த்ரஸூர்யர்கள் "இதுவென் புகுந்ததிங்கந்தோ" என்றாற்போல அஞ்சினராம்; அப்படி அவர்கள் அஞ்சும்படி விம்மி வளர்ந்த எம்பெருமான் பொருந்தியெழுந்தருளியிருக்குமிடம் கண்டமென்னுங் கடிநகரென்க. சந்திரன் அம்ருதமயமான கிரணங்களை யுடையவனுதலால், சலம்பொதியுடம்பினனுகக் கூறப்படுவன். பேழ்—பெருமை. "சலம்பொதியுடம்பிற் சந்திரன், தழலுமிழ்பேழ் வாய் வெங்கதிர்" என இயைத்துரைக்கப்பட்டது.

பின் ஒன்றரையடிகளால், கங்கையை வருணிக்கின்றார்:—இக்கங்கை முதலில் எம்பெருமானது திருவடியினின்றும் பெருகிப் பின்பு சங்கரன் சடையினில் தங்கி, ஆகாசத்தில் நின்றும் நிலவுலகத்தில் பிரவஹித்தமையால், எம்பெருமானுடைய பாதத்துழாய்மலரோடும் சிவபிரானுடைய முடிக்கொன்றை மலரோடுங்கீழ்ந்து பசுமைநிறமும் செந்நிறமுமாகத் தோற்றுகின்ற நீர்ப்பெருக்கினால் விலக்ஷணமான தொரு புகரைப்பெறுமென்க. "நலந்திகழ்" என்பதைச் சடையோடும் இயைக்கலாம், சடையாலேடும் இயைக்கலாம். எம்பெருமானுடைய ஸ்ரீபாததீர்த்தத்தைத் தனக்குத் தாய்மை விளைக்குமதாகப்ரதிபத்திபண்ணித் தலையால் தரிக்கைக்கு மேற்பட்ட நன்மையில்லையிறே சடையானுக்கு. (உ)

393 அதிர்முகமுடையவலம்புரிகுமிழ்த்தி அழலுமிழாழிகொண்டெறிந்து * அங்
கெதிர்முசவசுரர்தலைகளேயிடறும் எம்புருடோத்தமனிருக்கை *
சதுமுகன்கையிற்சதுப்புயன்தாளில் சங்கரன்சடையினில்தங்கி *
கதிர்முகமணிகொண்டிழிபுனற்கங்கைக் கண்டமென்னுங்கடிநகரே. (ஊ)

(எம்பெருமானுடைய திருவடியை விளக்குகிறபோது)

சதுமுகன் கையில் — சதுர்முகப்ரஹ்மாவினுடைய கையிலும்

சதுப்புயன் தாளில் — சதுர்ப்புஜனை எம்பெருமானுடைய திருவடியிலும்

(பின்பு,)

சங்கரன் சடையினில் — சிவபெருமானுடைய ஜடையிலும்

தங்கி — தங்கி,

கதிர் முகம் மணி கொண்டு இழி புனல் கங்கை — ஒளியையுடையனவும் சிறந்தவையுமான ரத்நங்களை கொழித்துக்கொண்டு இழிகிற தீர்த்தத்தையுடைய கங்கைக் கரைபிலுள்ள

கண்டமென்னும் கடிநகர்—;

அங்கு — உலகமளந்த அப்போது,

அதிர் முகம் உடைய வலம்புரி குமிழ்த்தி — முழங்காநின்ற முகத்தையுடைய ஸ்ரீ பாஞ்சஜந்யத்தை திருப்பவளத்தில் வைத்து ஊதியும்

அழல் உமிழ் ஆழி கொண்டு எறிந்த — நெருப்பைவீசாநின்றுள்ள திருவாழியை யெடுத்துவிட்டெறிந்தும்,

எதிர்முகம் — (போர் செய்வதாக)எதிர்த்த முகத்தையுடைய

அசுரர் — அஸுரர்களுடைய

தலைகளை — தலைகளை

இடறும் — உருட்டியருளின

எம் புருடோத்தமன் இருக்கை — எமது புருடோத்தமனுடைய வாஸஸ்தானமாகும்.

* * *—திருமால் உலகமளந்த காலத்தில் மேலே ஸத்யலோகத்திற்சென்ற அப்பிரானது திருவடியைப் பிரமன் தன் கைக்கமண்டல தீர்த்தத்தாற் கழுவி விளக்க, அந்த ஸ்ரீபாததீர்த்தமாகப்பெருகித் தேவலோகத்திலிருந்த ஆகாய கங்காநதியை, ஸூர்யகுலத்துப் பகீரத சக்ரவர்த்தி கபிலமுனிவனது கண்ணின் கோபத்திக்கு இலக்காகி உடலெரிந்து சாம்பலாய் நற்கதியிழந்த தனது மூதாதையரான ஸகரபுத்திரர் அறுபதினாயிரவரை நற்கதி பெறுவிக்கும்பொருட்டு நெடுங்காலந் தவஞ்செய்து மேலுலகத்திலிருந்து கீழுலகத்துக்குக் கொணர்கையில், அவனது வேண்டுகோளாற் சிவபிரான் அந்நதியை முடியின் மேல் ஏற்றுச் சிறிது சிறிதாகப் பூமியில் விட்டனன் என்ற வரலாறு அறியத்தக்கது.

ஓங்கி உலகளந்தருளும்போது நமுசி முதலிய அசுரர்கள் "என்னிதுமாய மென்னப்பனறிந்திலன், முன்னிய வண்ணமே கொண்டளவாய்" என்று தடைசெய்ய, அப்போது சங்கை முழக்கியும், ஆழியை எறிந்தும் அவர்களைத் தொலைத்தருளினமை முன்னடிகளிற் கூறியது. "குமிழ்த்தி" "எறிந்து" என்ற வினையெச்சமிரண்டும், "இடறும்" என்ற பெயரெச்சத்தோடு இயையும். இம்முன்னடிகளிற் கூறிய வரலாறு, ஸாதாரணமாகத் தேவாஸுர யுத்தகாலங்களில் நடந்ததாகக் கொள்ளவுங்கூடும். "தலைகளையிடறும்" என்றது அவர்களைத் தொலைத்தமையைக் கூறியவாறு. ... ... (க)

394 இமையவரிறுமாந்திருந்தரசாள ஏற்றுவந்தெதிர்பொருசேனை *
நமபுரம்நணுகநாந்தகம்விசிறு நம்புருடோத்தமன்நகர்தான் *
இமவந்தந்தொடங்கியிருங்கடலளவும் இருகரையுலகிரைத்தாட *
கமையுடைப்பெருமைக்கங்கையின்கரைமேல் கண்டமென்னுங்கடிநகரே. (ச)

இமவந்தம் தொடங்கி இரு கடல் அளவும் — இமயமலையின் உச்சிமுதற் கொண்டு பெரியகடல் வரைக்கும்

இரு கரை உலகு இரைத்து ஆட — இரண்டு கரைகளிலுமுள்ள உலகத்தவர்கள் ஆரவாரித்துக்கொண்டு நீராட,

கமை உடைபெருமை — (அவர்களது பாபங்களைப்) பொறுக்கையால் வந்த பெருமையையுடைய

கங்கையின் கரைமேல் கங்கைக்கரையில்

கண்டம் என்னும் கடிநகர்—,

இமையவர் — (இந்திரன் முதலிய) தேவர்கள்

இறுமாந்து இருந்து — அஹங்காரப்பட்டுக் கொண்டிருந்த

அரசு ஆள — ராஜ்யபரிபாலநஞ்செய்வதற்காகவும்,

ஏற்று வந்து எதிர் பொரு சேனை — துணிந்துவந்து (தன்மேலும் அத்தேவர்கள் மேலும்) எதிர்ந்து போர் செய்கிற (அஸுர ராக்ஷஸ) ஸேனையானது

நமபுரம் நணுக — யமலோகத்தைக் கிட்டுகைக்காகவும்

நாந்தகம் விசிறு — நந்தகமென்னும் வாளை வீசாநிற்குமவனும்

நம் புருடோத்தமன் நகர் — நமக்குத் தலைவனுமான புருஷோத்தமப் பெருமானுடைய நகரமாகும்,

* * *—அசுரர்களும் மநுக்களும் இந்திரன் முதலிய தேவர்களைக் குடியிருக்கவொட்டாதபடி அலைத்து அடர்த்து எதிர்ந்து போர்புரியப்புக, அப்போது எம்பெருமான் இந்திராதிகளுக்குப் பக்ஷபாதியாயிருந்து அவர்களை இடையூறின்றி அரசாள்விக்குமாறு அவ்வசுரர்மீது தனது நந்தகவாளை வீசியேறிந்து அவர்களை யொழித்தமை முன்னடிகளிற் கூறியது. நாந்தகம்—கீட்டல் விகாரம். (ச)

395 உழுவதோர்படையுமுலக்கையும்வில்லும் ஒண்சுடராழியுஞ்சங்கும் *
மழுவொடுவாளும்படைக்கலமுடைய மால்புருடோத்தமன்வாழ்வு *
எழுமையுங்கூடியீண்டியபாவம் இறைப்பொழுதளவினிலெல்லாம் *
கழுவிடும்பெருமைக்கங்கையின்கரைமேல் கண்டமென்னுங்கடிநகரே. (ரு)

எழுமையும் கூடி ஈண்டிய பாவம் எல்லாம் — ஏழு ஜன்மங்களில் சேர்ந்து திரண்ட பாவங்களே யெல்லாம்
இறைப்பொழுது அளவினில் கழுவிடும் பெருமை — க்ஷணகாலத்துக் குள்ளே போக்கி விடும்படியான பெருமையையுடைய
கங்கையின் கரைமேல் கண்டம் என்னும் கடி நகர்—;
உழுவது ஓர் படையும் உலக்கையும் — உழுவதற்கு உரிய கருவியாகிய கலப்பையையும் உலக்கையையும்
வில்லும் — ஸ்ரீ சார்ங்கத்தையும்
ஒண்சுடர் ஆழியும் — அழகிய தேஜஸ்ஸையுடைய திருவாழியையும்
சங்கும் — ஸ்ரீ பாஞ்சஜன்யத்தையும்
மழுவொடு — கோடாலியையும்
வாளும் — நந்தக வாளையும்
படைக்கலம் உடைய — ஆயுதமாக வுடையவனும்
மால் — ஸர்வேச்வரனுமான
புருடோத்தமன் — புருஷோத்தமப் பெருமாள்
வாழ்வு — எழுந்தருளியிருக்குமிடம்.

* * *—கலப்பையும் உலக்கையும்—பலராமாவதாரத்திலும், மழு—பரசுராமாவதாரத்திலுங் கொள்ளப்பட்ட ஆயுதங்களென்க. படைக்கலமுடைய=படை, கலம், உடைய என்று பிரித்து, (இவற்றை) ஆயுதமாகவும் ஆபரணமாகவுமுடைய என்று முரைக்கலாம்.

அநேக ஜன்மஸஞ்சிதமான பாவங்களனைத்தையும் ஒரு கொடிப்பொழுதில் ஒழித்துவிடும்படியான பெருமையையுடையது கங்கையென்பது பின்னடி. கழுவிடும்—கழுவியிடும். ... ... (ரு)

396 தலைப்பெய்துகுமுறிச்சலம்பொதிமேகஞ் சல்சலபொழிந்திடக்கண்டு *
மலைப்பெருங்குடையால்மறுத்தவன்மதுரை மால்புருடோத்தமன்வாழ்வு *
அலைப்புடைத்திரைவாயருந்தவமுனிவர் அவபிரதங்குடைந்தாட *
கலப்பைகள்கொழிக்குங்கங்கையின்கரைமேல் கண்டமென்னுங்கடிநகரே. (சு)

அரு தவம் முனிவர் — அரிய தவங்களைப் புரிந்த மஹர்ஷிகள்
அலைப்பு உடை திரை வாய் — அலைத்தலையுடைய [கரையையெறியா நின்றுள்ள] அலையிலே
அவபிரதம் குடைந்து ஆட — அவப்ருதஸ்நானம் பண்ண,
(பிறகு பெருக்காறாய்)
கலப்பைகள்கொழிக்கும் — (யாக பூமியி லுண்டான) கலப்பை முதலிய உபகரணங்களெல்லாவற்றையும் எடுத்துத் தள்ளிக்கொண்டு போகா நிற்கிற
கங்கையின் கரை மேல் கண்டம் என்னும் கடி நகர்—;
சலம் பொதி — (கடலிலுள்ள) ஜலத்தைப் பொதிந்துகொண்டிரா நின்ற
மேகம் — மேகங்களானவை
தலைப்பெய்து — திருவாய்ப்பாடியில் வந்து கிட்டி
குமுறி — கர்ஜனைபண்ணி
சலசல பொழிந்திட கண்டு — சள சள வென்று மழை பொழிய (அதைக்) கண்டு
மலை பெரு குடையால் மறுத்தவன் — கோவர்த்தந மலையாகிற பெரிய குடையாலே (அம் மழையைத்) தடுத்தருளினவனும்
மதுரை மால் புருடோத்தமன் — திரு வடமதுரையில் விருப்பமுடையனுமான ஸ்ரீ புருஷோத்தமப் பெருமான்
வாழ்வு — எழுந்தருளியிருக்குமிடம்.

* * *—சலசல—ஒலிக்குறிப்பு. மலைத்தவன் என்றும் பாடமுண்டென்பர்.

பின்னடிகளின் கருத்து;—தபஸ்விகளான மஹர்ஷிகள் பகவத்ஸமாராதநரூபங்களான யாகங்களைக்குறையற அனுட்டித்து, அந்திமஸநத்தில் அவப்ருத ஸ்நாநஞ்செய்ய, அநந்தரம் பெருக்காறாய்ப் பெருகி யாகபூமியிலுள்ள கலப்பை முதலிய உபகரணங்களெல்லாவற்றையும் எடுத்துத்தள்ளிக் கொண்டு போகா நிற்குமதான கங்கைக்கரையிலுள்ள கண்டமென்னுங் கடிநகர் என்பதாம். அவபிரதம்—வேள்வியின் முடிவிற் செய்யவேண்டிய ஸ்நாநம்; ... ... (சு)

397 விற்பிடித்திறுத்துவேழத்தைமுறுக்கி மேலிருந்தவன்தலைசாடி *
மற்பொருதெழப்பாய்ந்தரையனையுதைத்த மால்புருடோத்தமன்வாழ்வு *
அற்புதமுடையவைராவதமதமும் அவரிளம்படியரொண்சாந்தும் *
கற்பகமலருங்கலந்திழிகங்கைக் கண்டமென்னுங்கடிநகரே. (எ)

அற்புதம் உடைய ஐராவதம் மதமும் — ஆச்சர்யகரமான 'ஐராவதம்' என்னும் (தேவேந்திரனது) யானையினுடைய மதநீரும்,
அவர் இள படியர் ஒண் சாந்தும் — அத்தேவர்கள் (விரும்பத்தக்க) இளம்பருவத்தையுடையவர்களான தேவமாதர்கள் (அணிந்த) சிறந்த சந்தனமும்
கற்பகம் மலரும் — (அவர்களதுகுழலில்சொருகியிருந்த) கற்பகப் பூக்களும்
கலந்து இழி கங்கை — ஒன்றுசேர்ந்து இழியா நின்றுள்ள கங்கையின் கரையில்
கண்டம் என்னும் கடி நகர்—;

வில் பிடித்து இறுத்த — (கம்ஸனுடைய ஆயுதச்சாலையிலிருந்த) வில்லைப்பிடித்து முறித்தும்,
வேழத்தை முறுக்கி — (குவலயாபீடமென்ற)யானையைப் பங்கப்படுத்தியும்,
மேல் இருந்தவன் தலை சாடி — (அந்த யானையின்)மேலிருந்த யானைப்பாகனுடைய தலையைச் சிதறப்புடைத்தும்,
மல்பொருது — (சாணூரமுஷ்டிகாதி) மல்லர்களோடு போர் செய்தும்
அரையனை — உயர்ந்த கட்டிலின் மேலிருந்த அரசனுமான கம்ஸனை
எழ பாய்ந்து உதைத்த — அவன்மேற் பாய்ந்து (கீழே தள்ளித் திருவடிகளால்) உதைத்தருளின
மால் புருடோத்தமன் வாழ்வு—;

* * *—எவ்வகையினாலாவது கண்ணபிரானை நலிய நினைத்த கம்ஸன் தான் ஒரு தநுர்யாகஞ் செய்வதாக, அதற்கு அப்பிரானை உறவுமுறைமையால் அழைக்க, அவ்வண்ணமே கண்ணபிரான் அங்கே எழுந்தருளிச்செய்த செயல்களைக் கூறுவது, முன்னடி. ... ... (எ)

398 திரைபொருகடல்சூழ்திண்மதிள்துவரை வேந்துதன்மைத்துனன்மார்க்காய் *
அரசனையவியவரசனையருளும் அரிபுருடோத்தமனமர்வு *
நிரைநிரையாகநெடியனயூபம் நிரந்தரமொழுக்குவிட்டு * இரண்டு
கரைபுரைவேள்விப்புகைகமழ்கங்கைக் கண்டமென்னுங்கடிநகரே. (அ)

நெடியன — நீண்டவையாபிராநின்றுள்ள
யூபம் — (பசுக்கள் கட்டுகிற) யூபஸ்தம்பங்களானவை
நிரை நிரை ஆக — நிரள் நிரளாக.
நிரந்தரம் ஒழுக்குவிட்டு — இடைவிடாமல் நெடுக ஓடாநிற்பதும்
இரண்டு கரை புரை — இருபக்கத்துக் கரைகளும் தம்மிலே ஒத்து
வேள்வி புகை கமழ் — யாகத்நிலுண்டாகும் புகைகளால் பரிமளியா நிற்பதுமான
கங்கை — கங்கைக் கரையில்
கண்டம் என்னும் கடி நகர்—;

திரை பொரு கடல் சூழ் திண் மதிள் — அலையெறியா நின்றுள்ள கடலால் சூழப்பெற்ற திண்மையான மதிள்களையுடைய
துவரை வேந்து — த்வாரகைக்கு தலைவனும்
தன் மைத்துனன் மார்க்கு ஆய் — தன்னுடைய மைத்துனன்மார்களான பாண்டவர்களுக்கு பக்ஷபாதியாய் நின்று
அரசனை அவிய — துரியோதநாதி ராஜாக்களை அழியச்செய்து
அரசினை அருளும் — ராஜ்யத்தை (அப்பாண்டவர்க்குக்) கொடுத்தருளினவனும்
அரி — (ஸகல பாபங்களையும்) போக்குமவனுமான
புருடோத்தமன் — புருஷோத்தமப் பெருமாள்
அமர்வு — பொருந்தியெழுந்தருளியிருக்குமிடம்.

* * *—கங்கையிற் பற்பல யூபஸ்தம்பங்கள் இடைவிடாது நெடுக அடித்துக்கொண்டு ஓடுமென்பது மூன்றுமடி. யூபம்—யாகப்பசுவைக் கட்டுந்தறி, வடசொல். நிரந்தரம்—வடசொல், இரண்டு கரைபொரு—இரண்டு கரைகளும் ஒருபடிப்பட ; இரண்டு கரைகளிலும் என்றவாறு. ... (அ)

399 வடதிசைமதுரைசாளக்கிராமம் வைகுந்தந்துவரையயோத்தி *
இடமுடைவதரியிடவகையுடைய எம்புருடோத்தமனிருக்கை *
தடவரையதிரத்தரணிவின்டிடியத் தலைப்பற்றிக்கரைமரஞ்சாடி *
கடலினைக்கலங்கக்கடுத்திழிகங்கைக் கண்டமென்னுங்கடிநகரே, (கூ)

தட வரை அதிர — (மந்தரம் முதலிய) பெரிய மலைகளானவை சலிக்கும் படியாகவும்
தரணி விண்டு இடிய — பூமியானது பிளவுபட்டு இடிந்து விழும்படியாகவும்
தலைப்பற்றி — (மரங்களினுடைய) தலையளவுஞ் செல்லக் கிளம்பி
கரை மரம் சாடி — கரையிலுள்ள மரங்களை மோதி முறித்தும்
கடல் கலங்க — (ஒன்றுலுங் கலங்காத) கடலுங்கூட கலங்கும்படி
கடுத்து இழி கங்கை — வேகங்கொண்டு இழியா நின்றுள்ள கங்கா தீரத்திலுள்ள

கண்டம் என்னும் கடி நகர்—;

வட திசை மதுரை சாளக்கிராமம் — வடதிக்கிலுள்ள ஸ்ரீ மதுரையும் ஸ்ரீ ஸாளக்ராமமும்
வைகுந்தம் துவரை — ஸ்ரீவைகுண்டமும் ஸ்ரீத்வாரகையும்
அயோத்தி — திருவயோத்தியையும்
இடம் உடை — இடமுடைத்தான [விசாலமான]
வதரி — ஸ்ரீ பதரிகாச்ரமமுமாகிற இவற்றை
இடவகை உடைய — வாஸஸ்தானமாகவுடையவனை

எம் புருடோத்தமன் இருக்கை—.

* * *—பகீரத சக்கரவர்த்தி தனது தபோபலத்தினால் கங்கையை இறக்கிக்கொண்டு வருகிற போது வந்திழிகிற வேகத்தைச் சொல்லுவன பின்னடிகள். கடுத்து = கடுமை—வேகம். ... (கூ)

400 மூன்றெழுத்ததனைமூன்றெழுத்ததனால் மூன்றெழுத்தாக்கி * மூன்றெழுத்தை
ஏன்றுகொண்டிருப்பார்க்கிரக்கங்குடைய எம்புருடோத்தமனிருக்கை *
மூன்றடிநிமிர்த்துமூன்றினில்தோன்றி மூன்றினில்மூன்றுருவானான் *
கான்தடம்பொழில்சூழ்கங்கையின்கரைமேல் கண்டமென்னுங்கடிநகரே. (ஙி)

கான் தட பொழில் சூழ் — நறுநாற்றம் கமழா நின்றுள்ள பெரிய சோலைகளினால் சூழப்பெற்ற

கங்கையின் கரைமேல் கண்டம் என்னும் கடி நகர்—;

மூன்று எழுத்ததனை — அகார, உகார, மகார ஸ்வரூபமான 'ஓம்' என்னும் பிரணவத்தை
மூன்று எழுத்ததனால் — ('நிருக்தம்' என்று மூன்றக்ஷரமான பெயரையுடைத்தான நிர்வசந ப்ரக்ரியையாலே)
மூன்று எழுத்து ஆக்கி — (மூன்று பதமாய் மூன்று அர்த்தத்துக்கு வாசகமாயிருக்கும்) மூன்றெழுத்தாகப்பிரித்து
மூன்று எழுத்தை — (அந்த) மூன்றெழுத்தை [பிரணவத்தை]
ஏன்று கொண்டிருப்பார்க்கு — (தஞ்சமாக நினைத்து) அநுஸந்திக்குமவர்கள் பக்கலில்

இரக்கம் நன்கு உடைய — கிருபை மிகுந்த கருணையையுடையவனும்
மூன்று அடி நிமிர்த்து — (அந்த பிரணவத்தை நமோ பதத்தோடும் நாராயண பதத்தோடுங் கூட்டி) மூன்று பதமாக்கி [திருவஷ்டாக்ஷரமாக்கி]
மூன்றிலும் — (அந்த) மூன்று பதங்களிலும்
தோன்றி — ஆத்மாவினுடைய அநந்யார்ஹ சேஷத்துவம், அநந்ய சரணத்துவம், (அநந்ய போக்யத்வமாகிற மூன்று ஆகாரங்களையும்) தோன்றுவித்து
மூன்றினில் — அந்த ஆகாரத்ரயத்துக்கும் விஷய ஸம்பந்தியாக
மூன்று உரு ஆனன் — (தானும்) சேஷித்வம், சரண்யத்வம், ப்ராப்யத்வம் என்கிற மூன்று ஆகாரங்களையுடையனுமான

எம் புருடோத்தமன் இருக்கை—.

"மூன்றெழுத்ததனை மூன்றெழுத்ததனால் மூன்றெழுத்தாக்கி"—பிரித்துப் பார்த்தால் மூன்றெழுத்தாகத் தோற்றும்படியாய், ஸ்தூலதர்சநத்தில் ஏகாக்ஷரமாகத் தோற்றும்படியாயுள்ள 'ஓம்' என்கிற பிரணவத்தை நிர்வசநக்ரமத்தினால் மூன்றெழுத்தாகப் பிரித்து என்றபடி. ... (ஙி)

401 பொங்கொலிகங்கைக்கரைமல்கிண்டத் துறைபுருடோத்தமனடிமேல் *
வெங்கலிகலியாவில்லிபுத்தூர்க்கோன் விட்டுசித்தன்விருப்புற்று *
தங்கியவன்பால்செய்தமிழ்மாலை தங்கியநாவுடையார்க்கு *
கங்கையில்திருமால்கழலிணைக்கீழே குளித்திருந்தகணக்காமே. (கக)

பொங்கு ஒலி கங்கைக் கரை மல்கி கண்டத்து உறை — (நீர்க்கொழிப்பால் வந்த) இளர்த்தியை யுடையதும் கோஷத்தை யுடையதுமான கங்கைக் கரையில் உள்ளதும் எல்லாவகை ஏற்றங்களையுடையதுமான திருக்கண்டங் கடிநகரில் நித்யவாஸம் பண்ணுகின்ற

புருடோத்தமன் — புருஷோத்தமப் பெருமாளுடைய

அடி மேல் — திருவடிகளில்,—

வெம் கலி நலியா வில்லிபுத்தூர் கோன் விட்டுசித்தன் — கொடிய கலியினால் நலியப் பெறுத ஸ்ரீவில்லிபுத்தூருக்குத் தலைவரான பெரியாழ்வார்

விருப்புற்று — ஆசைப்பட்டு

தங்கிய அன்பால் செய் — நிலைநின்ற பக்தியினால் அருளிச்செய்த

தமிழ் மாலை — தமிழ் மாலையாகிய இப்பாசுரங்கள்

தங்கிய — நிலை நின்றிருக்கப்பெற்ற

நா உடையார்க்கு — நாக்கையுடையவர்களுக்கு

கங்கையில் குளித்து — கங்காநதியில் நீராடி

திருமால் இணை கழல் கீழே இருந்த கணக்கு ஆம் — சரியைபதியினுடையவொன்றொன்றான திருவடிகளின் கீழே நிரந்தரவேலை பண்ணுகையாகிற பயன்பெற்றதாகும்.

அடிவரவு :—தங்கை சலம் அதிர் இமையவர் உழு நலி வில் நிரை வட மூன்று பொங்கு மாதவ.

நான்காம்பத்து—எட்டாந்திருமொழி, மாதவத்தோன்.

402 மாதவத்தோன்புத்திரன்போய் மறிகடல்வாய்மாண்டானை *
ஓதுவித்ததக்கணையர் உருவுருவேகொடுத்தாளூர் *
தோதவத்தித்தூய்மறையோர் துறைபடியத்துளும்பியெங்கும் *
போதில்வைத்ததேன்சொரியும் புனலரங்கமென்பதுவே. (க)

மறி கடல் வாய் போய் மாண்டான் — அலையெறியா கின்றுள்ள கடலிற் புகுந்து (முதலை வாயிலகப்பட்டு) உயிர் தொழிந்த

மாதவத்தோன் புத்திரனை — மஹா தபஸ்வியான ஸாந்தீபினியினுடைய பிள்ளையை

ஓதுவித்த தக்கணையா — (ஸாந்தீபிநி தன்னை) அத்தியயநம் பண்ணுவித்ததற்கு தக்ஷிணையாக

உரு உருவே கொடுத்தான் — (அப்புத்திரன் மரணமடையும் போதுள்ள ரூபம் மாறுதபடி) யதாரூபமாக (கொணர்ந்து) கொடுத்தருளின எம்பெருமானுடைய

ஊர் — திருப்பதியாவது;—

தோதம் வத்தி — பரிசுத்தமாகத் தோய்த்து உலர்த்தின வஸ்திரங்களை அணியா நிற்பவரும்

தூய் மறையோர் — நிர்த்தோஷ ப்ரமாணமான வேதத்தைத் தமக்கு நிரூபகமாக வுடையவருமான ஸ்ரீவைஷ்ணவர்கள்

துறை படிய — காவேரித் துறைகளில் அவகாஹிக்க,

எங்கும் துளும்பி — (அதனால்) அக்காவேரி முழுதும் அலை மோதப் பெற்று

போதில் வைத்த தேன் சொரியும் — (அதனால் தாமரை மலர்களின் நாளங்கள் அலைய) (அந்தப்) பூக்களில் இராநின்றுள்ள தேனானது பெருகப்பெற்ற

புனல் — நீரையுடைய

அரங்கம் என்பது — திருவரங்கமென்னும் திருப்பதியாம்.

பின்னடிகளின் கருத்து.— * கங்கையிற் புனிதமாய காவிரியில் பெரிய பெருமாளுடைய திருக்கண்நோக்கான திருமுகத்துறை முதலான பலதுறைகளில் ஆசாரபரரான வைதிக ஸ்ரீவைஷ்ணவர்கள் நிரள் நிரளாகவந்து குடைந்து நீராட, அதனால் அக்காவேரியடங்கலும் அலைமோதப்பெற்று, அவ்வலைகளினால் தாமரை மலர்களின் நாளங்கள் அலைக்கப்பட, அதனால் அப்பூக்களினின்றும் தேன் பெருக, அத்துடன் சேர்ந்த தீர்த்தத்தையுடைய திருவரங்கமென்பதாம். ... ... (க)

403 பிறப்பகத்தேமாண்டொழிந்த பிள்ளைகளோநால்வரையும் *
இறைப்பொழுதிற்கொணர்ந்துகொடுத்து ஒருப்படுத்தவுறைப்பனூர் *
மறைப்பெருந்தீவளர்த்திருப்பார் வருவிருந்தையளித்திருப்பார் *
சிறப்புடையமறையவர்வாழ் திருவரங்கமென்பதுவே. (உ)

பிறப்பு அகத்தே மாண்டு ஒழிந்த பிள்ளைகளோ நால்வரையும் — ஸுமதிதாக்ருஹத்திலே இறந்தொழிந்த வைதிக புத்திரர்கள் நால்வரையும்

இறைப் பொழுதில் கொணர்ந்து கொடுத்து — ஒரு நொடிப் பொழுதில் (ஸ்ரீவைகுண்டத்தினின்றும்) கொண்டுவந்து (மாதாபிதாக்கள் கையில்) கொடுத்து

ஒருப்படுத்த — (இப்பிள்ளைகள் எம்பிள்ளைகள் தான் என்று) ஸம்மதிபண்ணுவித்த

உறைப்பன் — சக்தியுக்தன் (எழுந்தருளியிருக்கிற)

ஊர் — திருப்பதியாவது,—.

மறை பெருந்தீ வளர்த்து இருப்பார் — வேதங்களிற்கூறப்பட்டுள்ள [வைதிகமான] சிறந்த (மூன்று) அக்நிகளையும் (அவிச்சிந்நமாக) வளர்த்துக் கொண்டிருப்பவர்களும்

வருவிருந்தை அளித்திருப்பார் — (தம் தம் திருமாளிகைக்கு) எழுந்தருளுகிற அதிதிகளான ஸ்ரீவைஷ்ணவர்களை ஆதரித்துப் போருமவர்களும்

சிறப்பு உடைய மறையவர் வாழ் — (இப்படிப்பட்ட) உத்கர்ஷக்களையுடையவர்களுமான வைதிகர்கள் வாழப்பெற்ற

திரு அரங்கம் என்பதுவே—.

* * *—மூன்றுமடியில் விருந்து என்ற சொல் ஆகுபெயரால் விருந்தினரை உணர்த்திற்று. (உ)

404 மருமகன்றன்சந்ததியை உயிர்மீட்டுமைத்துனன்மார் *
உருமகத்தேவீழாமே குருமுகமாய்க்காத்தானூர் *
திருமுகமாய்ச்செங்கமலந் திருநிறமாய்க்கருங்குவளை *
பொருமுகமாய்நின்றலரும் புனலரங்கமென்பதுவே. (ங)

மருமகன் தன் சந்ததியை உயிர் மீட்டு — மருமகனை அபிமன்யுவினுடைய புத்திரனை பரிக்ஷித்தை மறுபடியும் பிழைப்பித்து,

மைத்துனன் மார் உரு — மைத்துனன்மாரான பாண்டவர்களுடைய சரீரமானது

மகத்து — (பாரதயுத்தமாகிற) நரமேதத்திலே

வீழாமே — விழுந்து அழிந்து போகாதபடி

குருமுகம் ஆய் — ஆசார்ய ரூபியாய் (ஹிதோபதேசங்களைப்பண்ணி)

காத்தான் — ரக்ஷித்தருளின கண்ணபிரானுடைய

ஊர் — திருப்பதியாவது;—

செம் கமலம் — செந்தாமரை மலர்களானவை

திருமுகம் ஆய் — (பெரிய பெருமாளுடைய) திருமுகத்துக்குப் போலியாகவும்,

கருகுவளை — நீலோத்பல புஷ்பங்கள்

திருநிறம் ஆய் — திருமேனி நிறுத்துக்குப் போலியாகவும்

பொருமுகம் ஆய் நின்று — (ஒன்றுக் கொன்று) எதிர் பொருகிற முகத்தையுடைத்தாய்க்கொண்டு

அலரும் புனல் — விகஸிக்கப்பெற்ற நீர்வளத்தையுடைய

அரங்கம் என்பது—.

* * *—பண்டு பாரதப்போரில், அர்ஜுநன் மகனான அபிமன்யுவின் மனைவியாகிய உத்தரை. என்பவளுடைய கருவைநோக்கி அசுவத்தாமாவினால் பிரயோகிக்கப்பட்ட அபாண்டவாஸ்திரத்தினால் அக்கருவிலிருந்த சிசு [பரிக்ஷித்] நீருயொழிய, அச்சிசுவை மீண்டும் உயிர் பெறுத்தவேண்டுமென்று

ஸுபத்நிரையினல் பிரார்த்திக்கப்பட்ட கண்ணபிரான் தனது செந்தாமரை மலர்போன்ற திருவடியினல் அச்சிசுவை அடிதொடங்கி முடியிறுக ஸ்பர்சித்தருள, உத்தரக்ஷணத்திலேயே அச்சிசு உயிர்பெற்ற வராறு முதலடியிற் கூறப்பட்டது.

பின்னடிகளின் கருத்து;—திருவரங்கத்தைச் சூழ்ந்து பெருகாநின்ற காவிரி நீரில், பெரிய பெருமாளது திருமுகம்போன்ற செந்தாமரை மலர்களும், அவரது திருமேனி நிறம்போன்ற கருநெய்தல் பூக்களும் பரபாகத்தாலே ஒன்றுக்கொன்று எதிர் பொருகிற முகத்தை யுடைத்தாய்க்கொண்டு விகஸிக்குமென்று நீர்வளஞ் சொல்லியவாறு. [பொருழகமாய்] குவளையும் கமலமும் எம்பெருமானது திருநிறத்தோடும் திருமுகத்தோடும் போர்செய்யப் புகுவனபோல அலரா நின்றபடியைக் கூறும் என்றுரைப்பாருமுளர். ... ... (சு)

405 கூன்தொழுத்தைசிதகுரைப்பக் கோடியவள்வாய்க்கடியசொற்கேட்டு *
ஈன்றெடுத்ததாயரையும் இராச்சியமுமாங்கொழிய *
கான்தொடுத்தகெறிபோகிக் கண்டகரைக்கனைத்தானூர் *
தேன்தொடுத்தமலர்ச்சோலைத் திருவரங்கமென்பதுவே. (சூ)

கூன் தொழுத்தை — கூனையுடைய வேலைக்காரியாகிய மந்தரையானவள்

சிதகு உரைப்ப — (ஸ்ரீராம பட்டாபிஷேக மஹோத்ஸவத்துக்கு) விகாசகமான தியசொற்களைச் சொல்ல

(அச் சொற்களை அங்கீகரித்துக் காட்டுக்கு எழுந்தருளச்சொன்ன

கொடியவள் வாய் கடிய சொல் கேட்டு — மஹாக்ரூரையான கைகேயியினுடையவாயிலுண்டான கடினமான சொல்லைக் கேட்டு,

ஈன்று எடுத்த தாயரையும் — (தன்னைப்) பெற்று வளர்த்த தாயான ஸ்ரீ கௌசலையாரையும்

இராச்சியமும் ஆங்கு ஒழிய — ராஜ்யத்தையும் கைவிட்டு

கான் தொடுத்த கெறி போகி — காடுகள் அடர்ந்திராநின்றுள்ள வழியே (ஸ்ரீதண்டகாரணியத்திற்கு) எழுந்தருளி

கண்டகரை — (முனிவர்களுக்கு) முள்போலப் பாதகராயிருந்த (ஜகஸ்தாக வாஸிகளான) ராக்ஷஸரை

கனைத்தான் — கிரளித்தருளின எம்பெருமான் (எழுந்தருளியிருக்கிற)

ஊர் — திருப்பதியாவது—;

தேன் தொடுத்த மலர் — தேன் மாறாத மலர்களையுடைய

சோலை — சோலைகளை யுடைத்தான

திரு அரங்கம் என்பது—.

தொழுத்தை—அடிமைப்பெண். சிதகு—விபரீதம். தாயர்—பூஜைமிற்பன்மை. கண்டகர்—முள்ளைப்போன்றவர். ... ... (சு)

406 பெருவரங்களவைபற்றிப் பிழக்குடையவிராவணனை *
உருவரங்கப்பொருதழித்து இவ்வுலகினைக்கண்பெறுத்தானூர் *
குரவரும்பக்கோங்கலரக் குயில்கூவுங்குளிர்பொழில்தூழ் *
திருவரங்கமென்பதுவே யென்திருமால்சேர்விடமே. (நு)

குரவு அரும்ப — குரவ மரங்களானவை அரும்புவிடாநிற்க,

கோங்கு அலர — கோங்கு மரங்களானவை அலராநிற்க,

குயில் கூவும் — குயில்களானவை (களித்துக்) கூவும்படியான

குளிர் பொழில் சூழ் — குளிர்ந்த சோலைகளாலே சூழப்பெற்ற

திரு அரங்கம் என்பது — திருவரங்கமென்னும் திருப்பதியானது;—

பெரு வரங்கள் அவை பற்றி — பெருமை பொருந்திய வரங்களைப் பலமாகக்கொண்டு

பிழக்கு உடைய — (தேவர் முனிவர் முதலாயினோரிடத்துப்) பிழை செய்கையையே இயல்வாகவுடைய

இராவணனை — இராவணனுடைய

உரு அரங்க பொருது அழித்து — உடலானது சிந்திப்பிந்திமாம்படி போர் செய்து (அவனைத்) தொலைத்து

இ உலகினை கண் பெறுத்தான் — இந்த லோகத்தைக் காத்தருளினவனும்

என் திருமால் சேர்வு இடம் — எனக்குத் தலைவனும் சரியே பதியுமான எம்பெருமான் சேருமிடமாகிய

ஊர் — திருப்பதியாம்.

407 கீழுலகிலசுரர்களைக் கிழங்கிருந்துகிளராமே *
ஆழிவிடுத்தவருடைய கருவழித்தவழிப்பனூர் *
தாழைமடலூடுரிஞ்சித் தவளவண்ணப்பொடியணிந்து *
யாழினிசைவண்டினங்கள் ஆளம்வைக்குமரங்கமே. (சு)

கீழ் உலகில் அசுரர்களை கிழங்கு இருந்து கிளராமே — பாதாள லோகத்திலுள்ள அஸுரர்களை அடிக்கிடந்து கிளம்ப வொட்டாதபடி

ஆழி விடுத்து அவருடைய கரு அழித்த — திருவாழியாழ்வானை ஏவி அவ்வசுரர்களுடையகர்ப்பமளவாக அழித்தருளினவனும்

அழிப்பன் — சத்ருக்களைத்தொலைத்தருளுவதையே இயல்வாகவுடையனுமான எம்பெருமான் (எழுந்தருளியிருக்கிற)

ஊர் — திருப்பதியாவது;—

யாழ் — வீணையினுடைய (ஓசை போன்ற)

இன் இசை — இனிய இசையையுடைய

வண்டு இனங்கள் — வண்டுகளின் நிரள்களானவை

தாழை மடலூடு உரிஞ்சி — (மலரத் தொடங்குகிற) தாழைமடலினுள்ளே உடம்பை உரோசிக் கொண்டு (புகுந்து)

தவளம் வண்ணம் பொடி அணிந்து — (அம்மடலிலுள்ள) வெளுத்த நிறத்தையுடைய சுண்ணத்தை (உடம்படங்கலும்) அணிந்துகொண்டு (அந்தக் களிப்பாலே)

ஆளம் வைக்கும் அரங்கம் — தென,தென என்று ஆளத்தி வைத்துப் பாடுமிடமான திருவரங்கமாம்.

* * *—பரம்புகளானவை புற்றுக்களில் பாங்காகக் கிடந்து வளிப்பதுபோல, அசுரர்களும் பாதாளலோகத்திற் பாங்காகக்கிடந்து, சில சில காலங்களில் அங்கு நின்றும் போந்து தேவர்களை அடர்த்துப் போர்செய்வர்கள்; அப்போது எம்பெருமான் அத்தேவர்கட்குத் துணையாய்நின்று அவ்வசுரரை அழித்தொழித்தருள்வன், இவ்வாறுஅவ்வசுரர்கள் பலகால் போர்புரிய வருவதையும் அவ்வப்போதுகளிலெல்லாம் தான் அவர்களை ஒழிக்கவேண்டிய வருத்தத்தையும் நோக்கி, அவ்வசுரரைக் கிழங்கோடு களையவேணுமெனத் திருவுள்ளம்பற்றித் தனது திருவாழியைச் செலுத்தி அங்ஙனமே நிறைவேற்றிக் கொண்டானென்பன, முன்னடிகள். ... ... (சு)

408 கொழுப்புடையசெழுங்குருதி கொழித்திழிந்துகுமிழ்த்தெறிய *
பிழக்குடையவசுரர்களைப் பிணம்படுத்தபெருமானூர் *
தழுப்பரியசந்தனங்கள் தடவரைவாயீர்த்துக்கொண்டு *
தெழிப்புடையகாவிரிவந்து அடிதொழுஞ்சீரரங்கமே. (எ)

கொழுப்பு உடைய செழு குருதி — கொழுப்பையுடையதும் செழுமை தங்கியதுமான ரக்தமானது

கொழித்து இழிந்து குமிழ்த்து எறிய — ஊற்றுமாறுமல் கிளர்ந்து நிலத்தில் பரவிக் குமிழி கிளம்பி அலை யெறியும்படி

பிழக்குடைய — (பரஹிம்சையாகிய) நீமை களைச் செய்கின்ற

அசுரர்களை — அஸுரர்களை

பிணம் படுத்த — பிணமாக்கியருளின

பெருமாளூர் — எம்பெருமான் (எழுந்தருளியிருக்கிற) திருப்பதியாவது;—

தழுப்பரிய சந்தனங்கள் — (ஒருவரிருவரால்) தழுவ முடியாத சந்தனமரங்களை

தட வரை வாய் ஈர்த்துக்கொண்டு வந்து — பெரிய மலைகளினின்று (வேரோடே பிடுங்கி) இழுத்துக்கொண்டு வந்து (இவற்றைத் திருவுள்ளம் பற்ற வேணும் என்று எம்பெருமானைப் பிரார்த்திக்கின்றதோ என்னலாம்படி)

தெழிப்பு உடைய காவிரி — இரைச்சலையுடைய திருக்காவேரி நதியானது

அடி தொழும் சீர் அரங்கம் — (எம்பெருமானது) திருவடிகளைத் தொழுகையாகிற சீர்மையைப் பெற்ற திருவரங்க நகராம்.

தழுப்பரிய—சந்தனமரம் சிறிதாயிருந்தால் ஒருவரிருவரால் தழுவமுடியும்; அளவிட்டுக்காட்டவொண்ணாதபடி மிகவும் ஸ்தூலமாயிருப்பதனால் தழுவமுடியாமை கூறப்பட்டது: தழுவுதல்-கைகளால் அணைத்துக்கொள்ளுதல். ... ... (எ

409 வல்லெயிற்றுக்கேழலுமாய் வாளெயிற்றுச்சீயமுமாய் *
எல்லையில்லாத்தரணியையும் அவுணனையுமிடந்தானூர் *
எல்லியம்போதிருஞ்சிறைவண்டு எம்பெருமான்குணம்பாடி *
மல்லிகைவெண்சங்கூதும் மதிளரங்கமென்பதுவே. (அ)

வல் எயிறு கேழலும் ஆய் — வலிவுள்ள பற்களையுடைய வராஹமாய்த் திருவவதரித்தும்,
வாள் எயிறு சியமும் ஆய் — ஒளியையுடைய பற்களையுடைய நரஸிம்ஹமாய்த் திருவவதரித்தும்,
எல்லை இல்லா தரணியையும் அவுணனையும் இடந்தான் — எல்லையில்லாத பூமியையும் ஹிரண்யாஸுரனையும் கீண்டருளின எம்பெருமான் (எழுந்தருளியிருக்கிற)
ஊர் — திருப்பதியாவது,—
இரு சிறை வண்டு — பெரிய சிறகுகளையுடைய வண்டுகளானவை
எல்லியம்போது — அந்திப்பொழுதிலே
எம் பெருமான் குணம் பாடி — பெரிய பெருமாளுடைய திருக்குணங்களைப் பாடிக் கொண்டு
மல்லிகை வெண் சங்கு ஊதும் — மல்லிகைப்பூவாகிற வெளுத்த சங்கை ஊதாநிற்கப் பெற்றதும்
மதிள் — திருமதிள்களையுடையதுமான
அரங்கம் என்பது—.

* * *—வண்டுகள் அந்தியம்போதில் எம்பெருமான் குணங்களைப் பாடிக்கொண்டு திரிதலைக் கூறுவது, மூன்றுமடி. கீழ் திருமாலிருஞ் சோலையைப் பாடும்போது "அறுகால் வரிவண்டுகள் ஆயிரநாமஞ் சொல்லிச் சிறுகாலைப்பாடும்" என்றார்; இங்கு "எல்லியம்போது" என்கிறார்; இதனால், திவ்யதேசங்களிலுள்ள வண்டுகள் காலத்துக்கேற்பப் பண்களிலே பகவத்குணங்களை நியதமாகப் பாடும்படியைக் கூறியவாறு.

[மல்லிகை இத்யாதி.] ஸாயங்கால புஷ்பமான மல்லிகைப்பூவில் வண்டுகளிருந்து ஊதும்போது அந்தப் பூவானது அலருவதற்கு முன்பு தலைகுவிந்து மேல்பருத்துக் காம்படிநேர்ந்து வெளுத்த நிறத்தையுடைத்தாய் சங்கைப்போன்றிருத்தலால் வெண்சங்கை ஊதுவதுபோல்வதுபற்றி இங்ஙனருளிச் செய்தாரென்க. ... ... (அ)

410 குன்றுடுகொழுமுகில்போல் குவளைகள்போல்குரைகடல்போல் *
நின்றுடுகணமயில்போல் நிறமுடையநெடுமாலூர் *
குன்றாடுபொழில்தழைந்து கொடியிடையார்முலையணவி *
மன்றாடுதென்றலுலாம் மதிளரங்கமென்பதுவே. (கு)

குன்று ஆடு கொழு முகில் போல் — மலையினுச்சியிற் சார்ந்த நீர் நிறைந்த மேகம்போலவும்
குவளைகள் போல் — கருநெய்தல் பூப்போலவும்
குரை கடல் போல் — ஒலிசெய்யாநின்ற கடல் போலவும்
நின்று ஆடு மயில் கணம் போல் — (களிப்பாலே) நின்று ஆடா நின்றுள்ள மயில்களின் நிரள்போலவும் (இராநின்ற)
நிறம் உடைய — வடிவழகையுடையனான
நெடுமால் — எம்பெருமான் (எழுந்தருளியிருக்கிற)
ஊர் — திருப்பதியாவது
தென்றல் — தென்றல் காற்றானது
குன்று பொழிலூடு தழைந்த — (மலய) பர்வதத்திலுள்ள சோலைகளினிடையிலே துழைந்து
(அங்குள்ள பூக்களின் தாதுகளை அளைந்து பரிமளத்தைக் கொய்துகொண்டு)
கொடி இடையார் முலை அணவி — கொடிபோன்ற இடையையுடையரான பெண்களினுடைய (கலவைச்சாந்தணிந்த) முலைகளை வியாபித்து
(அந்தப் பரிமளத்துடனே)
மன்றாடி உலாம் — நாற்சந்திகளிலூடே உலாவப்பெற்ற
மதிள் அரங்கம் என்பது—.

411 பருவரங்களவைபற்றிப் படையாலித்தெழுந்தானை *
செருவரங்கப்பொருதழித்த திருவாளன்திருப்பதிமேல் *
திருவரங்கத்தமிழ்மாலை விட்டுசித்தன்விரித்தனகொண்டு *
இருவரங்கமெரித்தானை யேத்தவல்லாரடியோமே. (ம)

'பருவரங்கள் அவை பற்றி — (பிரமன் முதலியோரிடத்துப் பெற்ற) பெரியவரங்களைப் பலமாகக்கொண்டு
படை ஆழித்து எழுந்தானை — யுத்த விஷயமாகக் கோலாஹலஞ் செய்து வெளிப் புறப்பட்ட இராவணனை
செரு அரங்க பொருது அழித்த — யுத்தத்திலே ஒழியும்படி போர் செய்து ஒழித்தருளின
திரு ஆளன் — (வீர்யமாகிற) லக்ஷ்மியைத் தனக்கு நிரூபகமாக உடையனை எம்பெருமானுடைய
திருப்பதி மேல் — (திருவரங்கமென்னும்) திருப்பதி விஷயமாக

விட்டுசித்தன் விரித்தன — பெரியாழ்வார் அருளிச்செய்த
திரு அரங்கம் தமிழ் மாலை கொண்டு — (பாட்டுத்தோறும்) 'திருவரங்கம்' என்கிற திருநாமத்தையுடைய தமிழ் மாலையாகிய இப்பத்துப் பாசுரங்களையுங்கொண்டு,
இருவர் அங்கம் எரித்தானை — (மதுகைடபர்களாகிற) இருவருடைய உடலைத் (திருவனந்தாழ்வானுடைய மூச்சுவெப்பத்தினால்) கொளுத்திப் போகட்ட எம்பெருமானை
ஏத்த வல்லார் அடியோம் — துதிக்க வல்லவர்களுக்கு அடிமை செய்யக்கடவோம்.

* * *—"தீதிலாதவொண்டமிழ்க ளிவையாயிரத்துளிப்பத்தும், ஓத வல்ல பிராக்கள் நம்மை ஆளுடையார்கள் பண்டே" என்று—தம் அருளிச்செயலைக் கற்பார்க்குத் தாம் அடிமை செய்வதாக அருளிச்செய்த நம்மாழ்வாரைப்போல், இவ்வாழ்வாரும் இப்பத்தையுங் கற்பார்க்கு அடிமை செய்யப் பெறுவோம் யாமென்கிறார். ... ... (ஐ)

அடிவரவு:—மாதவ பிறப்பு மருமகன் கூன் பெரு கீழ் கொழுப்பு வல்லெயிறு குன்று பரு மரவடி.

நான்காம்பத்து—ஒன்பதாந் திருமொழி, மரவடியை.

(இதுவும் திருவரங்கப்பதிகம்.)

412 மரவடியைத்தம்பிக்கு வான்பணயம்வைத்துப்போய்வானோர்வாழ *
செருவுடையதிசைக்கருமம் திருத்திவந்துலகாண்டதிருமால்கோயில் *
திருவடிதன்திருவுருவும் திருமங்கைமலர்கண்ணுங்காட்டிநின்று *
உருவுடையமலர்நீலங் காற்றூட்டவோசலிக்குமோளியரங்கமே. (க)

தம்பிக்கு — (சித்திரகூடத்தில் வந்து ப்ரபத்தி பண்ணின) பரதாழ்வானுக்கு
மர அடியை — ஸ்ரீபாதுகைகளை
வான் பணயம் வைத்து — நன்றாக நம்புகைக்கு உரியதாக அளித்து
வானோர் வாழ — தேவர்கள் வாழும்படி
போய் — (சித்திரகூடத்தைவிட்டு அவ்வருகே) எழுந்தருளி
செரு உடைய திசை கருமம் — யுத்தத்துக்கு உரிய தெற்குத் திக்கில் செய்ய வேண்டிய காரியங்களை
திருத்தி — குறையறச்செய்து முடித்துவிட்டு
வந்து — பிராட்டியுடன் அயோத்திக்கு எழுந்தருளி
உலகு ஆண்ட — ராஜ்ய பரிபாலநம் செய்தருளின

திருமால் கோயில் — சீரியபதி (எழுந்தருளியிருக்கிற) கோயிலாவது;
திரு அடி தன் திரு உருவும் திரு மங்கை — ஸர்வஸ்வாமியான பெரிய பெருமாளுடைய திருமேனி நிறத்தையும் பெரிய பிராட்டியாருடைய
மலர் கண்ணும் — மலர்ந்த திருக்கண்களின் நிறத்தையும்
காட்டி நின்று — பிரகாசிப்பித்துக் கொண்டு
உரு உடைய நீலம் மலர் — அழகு பொருந்திய கருநெய்தற் பூக்களானவை
காற்று ஆட்ட ஒளி கும் — காற்று அசைக்க அசைந்து கொண்டிருக்கப்பெற்ற ஒளியையுடைய
அரங்கம் — திருவரங்கமாம்.

413 தன்னடியார்திறத்தகத்துத் தாமரையாளாகிலுஞ்சிதகுரைக்குமேல் *
என்னடியாரதுசெய்யார் செய்தாரேலென்றுசெய்தாரென்பர்போலும் *
மன்னுடையவீபிடணற்கா மதிளிலங்கைத்திசைநோக்கிமலர்கண்வைத்த *
என்னுடையதிருவரங்கற்கன்றியும் மற்றொருவர்க்காளாவரே. (உ)

தன் அடியார் திறத்தகத்து — தன்னுடைய [எம்பெருமானுடைய] அடியவர்கள் விஷயத்தில்
தாமரையாள் ஆகிலும் — (புருஷகாரம் பண்ணக்கடவளான) பெரியபிராட்டியார் தாமே
சிதகு உரைக்கும் ஏல் — குற்றங்களைக் கணக்கிட்டுச் சொல்லத் தொடங்கினாலும்
என் அடியார் அது செய்யார் — "எனக்கு அடிமைப்பட்டவர்கள் அக்குற்றங்களைச் செய்யமாட்டார்கள்;
செய்தார் ஏல் — (செய்த குற்றத்தைப் பொறுப்பதற்கு ஈம்பெருமானுண்டு என்று சிலவற்றைச்) செய்தார்களாயினும்
கன்று செய்தார் என்பர் — (அவர்கள்) கன்மையையே செய்தார்களத்தனே" என்று சொல்லா நிற்பவரும்,
மன் உடைய விபிடணற்கா — ஐச்வரியம் பொருந்திய விபீஷணழ்வானுக்காக
மதிள் இலங்கை திசை நோக்கி — மதிளையுடைய லங்கையின் முகமாக
மலர் கண் வைத்த — மலர்ந்த திருக்கண்களை வைத்தருளினவனும்
என்னுடைய — எனக்கு ஸ்வாமியுமான
திரு அரங்கற்கு அன்றியும் — பெரிய பெருமாளையொழிய
மற்று ஒருவர்க்கு ஆள் ஆவரே — வேறொருவர்க்கு ஆட்படுவார் ஆரேனுமுண்டோ.

* * *—சேதநர் செய்த பிழைகளைக் கணக்கிட்டு அதற்குத் தக்கவாறு தண்டம் நடத்துவதாகச் சிற்றமுற்றிருக்கு மெம்பெருமானை எதிர்த்து "இவ்வுலகிற் பிழைசெய்யாதார் ஆர்?" என்றுற்போலச் சில பேச்சுக்களைப் பேசி மயக்கி அக்குற்றவாளிகளை வாழ்விக்கக்கடவளான பிராட்டி தானே எம்பெருமானுடைய திருவுள்ளத்தைச் சோதிக்கக் கருதியோ, வேறு ஏதேனுமொருகாரணங் கொண்டோ அந்த சேஷபூதர்நிறத்துச் சிலகுற்றங்களை எம்பெருமானிடத்துக் கூறுவளேயாகில், அதுகேட்டு எம்பெருமான், "இப்படிப்பட்ட குற்றங்களை உன்னடியார் செய்யத் துணிவர்களேயன்றி என்னடியார் ஒருகாலுஞ் செய்யமாட்டார்கள்" என்பன்; அவ்வளவிலும் பிராட்டியானவள், "நீர் இங்ஙன் சொல்லலாகாது, அவர்கள் குற்றவாளிகள் என்பதில் இறையும் ஐயமில்லை" என்று நிர்ப்பந்தித்துச் சொல்லில், அதற்கு எம்பெருமான் "உன்னடியார் செய்யுங் குற்றங்கள் உனக்குப் பொல்லாங்காகத் தோற்றக் கடவனவாகிலும், என்னடியார் செய்யுங் குற்றங்கள் எனக்குக் குணமாகவே தோற்றுகின்றன; இனி நீ ஒன்றும் எதிர்த்துப்பேசக்கடவையல்லை" என்று வெட்டொன்று துண்டிரண்டாகக் கூறுவன் என்பது முன்னடிகளிற் போதரும். இதனால், பெருமாள், பிராட்டி இருவரும் ஒருவர்க்கொருவர் போராடி அடியாரை நோக்கியருளுமாறு கூறியதாம்.

"ஆளாவரே" என்றது—ஆளாகமாட்டார் என்றபடி; "பிரிநிலை வினை எண் ஈற்றசை தேற்றம் இசைநிறை என ஆறு ஏகாரம்மே" (தன்னூல்) என்ற சூத்திரத்தில் ஏகார இடைச்சொல்லுக்கு எதிர் மறைப்பொருள் கூறப்படா தொழியினும், "புதிய புகுதல்" என்பதனால் அப்பொருள் கொள்ளப்படுமென்றுணர்க. ... ... (உ)

414 கருஞுடையபொழில்மருதுங் கதக்களிறும்பிலம்பனையுங்கடியமாவும் *
உருஞுடையசகடினையும் மல்லரையுமுடையவிட்டோசைகேட்டான் *
இருளகற்றுமெறிகதிரோன் மண்டலத்துடேற்றிவைத்தேனிவாங்கி *
அருள்கொடுத்திட்டடியவரை ஆட்கொள்வானமருமுரணியரங்கமே. (ங)

கருள் உடைய பொழில் மருதும் — (கிருஷ்ணனை கலியவேணும் என்கிற) சீற்றத்தையுடையதும் (மன மிழுப்புண்ணும்படி புறம்பே) சோலை செய்து நிற்பதுமான (இரட்டை) மருத மரங்களையும்
கதம் களிறும் — மிக்க கோபத்தையுடைய குவலயாபீடத்தையும்
பிலம்பனையும் — ப்ரலம்பாஸுரனையும்
கடிய மாவும் — மிகவும் க்ரூரனை குதிரை வடிவாய்வந்த கேசியையும்
உருள் உடைய சகடினையும் — உருண்டுவந்த சகடாஸுரனையும்
மல்லரையும் — மல்லர்களையும்

உடையவிட்டு	நிரஸித்தருளி
ஓசை கேட்டான்	கீர்த்திபெற்றவனும்
இருள் அகற்றும்	இருளைப் போக்காகின்ற
எறி கதிரோன்	வீசுகின்ற கிரணங்களையுடையனை ஸூர்யனுடைய
மண்டலத்தூடு	மண்டலத்தினுள்ளே
அடியவரை ஏற்றி	அடியார்களை ஏறச்செய்து
(அங்கு நின்றும் அர்ச்சிராதி மார்க்கமாகப் பரமபதத்திற்குக் கொண்டுபோய்)	
வைத்து	(அங்கு அவர்களை) நிறுத்தி
ஏணி வாங்கி	தன்னுடைய உபாயத்வாகாரத்தைத் தவிர்த்து
அருள் கொடுத்திட்டு	(அவர்கள் இவ்விடத்தில் நின்றும் மீளாமைக்கும் கைங்கரிய லாபத்திற்கு முறுப்பாக அவர்கள் பக்கல்) க்ருபைபண்ணி
ஆட்கொள்வான்	அடிமை கொள்ளுமவனுமான எம்பெருமான்
அமரும் ஊர்	பொருந்தி எழுந்தருளியிருக்கிற திருப்பதியாவது
அணி அரங்கம்	அழகிய திருவரங்கமாம்.

* * *—யமளார்ஜுந பங்கம்; குவலயாபீடவதம், ப்ரலம்பாஸுரப்ரளயம், கேசிஸம்ஹாரம், சகடாஸுரபஞ்சநம், மல்லநிரஸநம் என்னு மிவ்வாறு வ்ருத்தாந்தங்களும் முன்னடிகளிற் கூறப்படுவன; 'கறுப்பு' என்னும் பொருளைத் தருவதாகிய 'கருள்' என்னுஞ்சொல், "கறுப்புஞ் சிவப்பும் வெகுளிப் பொருள்" என்றபடி சிற்றமென்னும் பொருளைத் தந்ததென்க. "உருளுடைய சகடரையும்" என்றும் பாடமுண்டு; "சகடினையும்" என்பதே ஆன்றோர் பாடம்; இன்—இடைச்சாரியை. அஸுரனுல் ஆவேசிக்கப்பெற்ற சகடம் உருண்டுவந்து கண்ணனை நலியப்புக்கதனுல், "உருளுடைய" என்றார். உருள் முதனிலைத் தொழிற்பெயர். இந்தத் தீப்பப்பூடுகளனைத்தையும் கண்ணபிரான் ஆயாஸமின்றி எளிதிற் களைந்திட்டனனென்பது "உடையவிட்டு" என்ற சொல்நயத்தாற் போதருமென்பர். (உ)

415 பதினருமாயிரவர் தேவிமார்பணிசெய்யத்துவரையென்னு
மதில் * நாயகராகிவீற்றிருந்த மணவாளர்மன்னுகோயில் *
புதுநாண்மலர்க்கமலம் எம்பெருமான்பொன்வயிற்றிற்பூவேபோல்வான் *
பொதுநாயகம்பாவித்திறுமாந்து பொற்சாய்க்கும்புனலரங்கமே. (ச)

துவரை என்னும் அதில்	ஸ்ரீத்வாரகையென்கிற பட்டணத்தில்
பதினாறு ஆயிரவர் தேவிமார்	பதினாயிரத்தொருநூறு தேவிமார்
பணி செய்ய	கைங்கரியம் பண்ண,
நாயகர் ஆகி வீற்றிருந்த	(அவர்களுக்கு) நாயகராய்க்கொண்டு (அவர்களின் நடுவே) எழுந்தருளியிருந்த
மணவாளர்	மணவாளப்பிள்ளை
(அழகிய மணவாளப் பெருமாளாய்)	
மன்னு கோயில்	நித்யவாஸம் பண்ணுகிற கோயிலாவது;—
புது நாள் கமலம் மலர்	அப்போதலர்ந்த செவ்வித்தாமரைப் பூவானது
எம்பெருமான்	எம்பெருமானுடைய
பொன் வயிற்றில்	அழகிய திருநாபியிலுள்ள
பூ போல்வான்	தாமரைப் பூவோடு ஸாம்யம் பெறுவதற்காக
பொது நாயகம் பாவித்து	ஸர்வ நிர்வாஹகத்வத்தைப் பாவித்து
இறுமாந்து	(அப்பாவனையாலே) கர்வங்கொண்டு
பொன் சாய்க்கும்	(மற்ற தாமரைகளின்) அழகைத் தள்ளிவிடாகின்றுள்ள
புனல்	நீர்வளத்தையுடைய
அரங்கம்	திருவரங்கமாம்.

* * *—திருவரங்கமாகரைச்சுற்றிச் சூழ்ந்துள்ள திருக்காவேரியில் எம்பெருமானது திருநாபிக் கமலம்போன்ற பல தாமரை மலர்கள் ஓங்கி விளங்குகின்றனவென்றும், அப்பூக்களோடொத்த அழகிய பூக்கள் மற்றேரிடத்திலுமில்லை யென்றுங் கூறுவன பின்னடிகள். வயிறு—திருநாபிக்கு இலக்கணை. "பூவே" என்றவிடத்து, ஏ—இசைநிறை. போல்வான்—வான்விகுதிபெற்ற விணையெச்சம். பொது நாயகம் பாவித்து—லோகஸ்ருஷ்டிக்குக் காரணமாய்-ஸர்வநிர்வாஹகமாயிருக்கிற இருப்பைத் தானுடையதாகப் பாவித்து என்றபடி. இறுமாந்து = இறுமா—பகுதி; இறுமாப்பு—கர்வம். ... (ச)

416 ஆமையாய்க்கங்கையாய் ஆழ்கடலாயவளியாயருவரைகளாய் *
நான்முகனுயிரான்மறையாய்வேள்வியாய்த்தக்கணையாய்த்தானுமானுன் *
சேமமுடைநாரதனுர் சென்றுசென்றுதுதித்திறைஞ்சக்கிடந்தான்கோயில் *
பூமருளிப்புள்ளினங்கள் புள்ளரையன்புகழ்குழறும்புனலரங்கமே. (ஞ)

(ஸ்ரீநாரத மஹர்ஷிக்குத் தன்னுடைய ஸர்வாதிகத்துவத்தை விளங்கச் செய்வதற்காக)

ஆமை ஆய் (முதலில் கங்காஜலத்துக்குள்) ஆமையாயும்

கங்கை ஆய் (பின்பு அந்த ஆமை முதலிய ஜந்துக்களுக்கு இருப்பிடமான) கங்கையாயும்

ஆழ் கடல் ஆய் (பின்பு அக்கங்கை முதலிய நதிகளுக்குப் புகலிடமான) ஆழ்ந்த கடலாயும்

அவனி ஆய் (பின்பு அக்கடலுக்கு இருப்பிடமான) பூமியாயும்

அரு வரைகள் ஆய் (பின்பு அப்பூமிக்கு ஆதாரமான) பெரியமலைகளாயும்

நான்முகன் ஆய் (பின்பு அம்மலைகளுக்கு ஸ்ருஷ்டிகர்த்தாவான) சதுர்முகனுமாயும்

நால் மறை ஆய் (பின்பு அச்சதுர்முகனுக்குத் தாரகமான) நான்குவேதங்களாயும்

வேள்வி ஆய் (பின்பு வேதாந்தங்களுக்குப் பராபணமான) யாகங்களாகவும்

தக்கணை ஆய் (பின்பு அந்த யாகங்களுக்கு வீர்யத்தைக் கொடுக்க வல்ல) தக்ஷிணையாகவும்

தானும் ஆனான் சேமம் உடை நாரதனார் சென்று சென்று தங்கித்து இறைஞ்ச கிடந்தான் கோயில் புள் இனங்கள் ஆ மருவி புள் அரையன் புகழ் குழுமும் புனல் அரங்கம்

(அந்த தக்ஷிணை முகமாக அனைவர்க்கும் அவரவர்கள் விரும்பின பலத்தைக் கொடுக்கவல்ல அஸாதாரண விக்ரஹ விசிஷ்டனை) தானுகவும்,

(ப்ரஹ்மபாவனையில் நிஷ்டையாகிற) க்ஷேமத்தையுடைய

ஸ்ரீநாரத பகவான் பலகாலும் எழுந்தருளி ஸ்தோத்திரம் பண்ணி வணங்கும்படி

பள்ளிகொண்டருள் பவனகவும் இராகின்ற எம்பெருமானுடைய

கோயிலாவது;—

(அன்னம்முதலிய) பறவைக் கூட்டங்கள்

(நீர்ப்பூ முதலிய) பூக்களில் பொருந்தியிருந்து

தங்கள் சாதிக்குத் தலைவனை பெரிய திருவடியினுடைய

கீர்த்தியை

அதிசூரஸமாகப் பேசாநிற்கப் பெற்றதும்

நீர்வளத்தையுடையதுமான திருவரங்க நகராம்

* * *—துரியோதநாதியருடைய யாகத்தில் வந்த அரசர்களனைவரும் ஸ்ரீத்வாரகையின் மஹிமையையும் அங்கு ஸ்ரீகிருஷ்ணன் எழுந்தருளியிருக்கிற மநிப்பையுமெல்லாம் துரியோதநாதிகளின் முகமாகக் கேட்டுத் தாங்கள் கண்ணபிரானோடு உறவு பண்ணிக்கொள்ள விரும்பி, அத்துரியோதநாதியருடனும் பாண்டவர்களுடனும் ஸபரிவாரராய்ப் புறப்பட்டு ரைவதகபர்வதத்திற்குப் போந்து, தாங்கள் க்ருஷ்ணஸேவார்த்தமாக வந்திருக்கிறபடியைக் கண்ணபிரானுக்குத் தெரிவிக்க, அதையறிந்த கண்ணனும் 'இவர்கள் பரிவாரங்களுடன் நிரண்டு வருகைக்குக் காரணம் யாதோ' என்று சிந்தித்து, ஸ்ரீபலராமனையும் ஸாத்யகியையும் முன்னிட்டுக்கொண்டு சேனைகளுடனும் ஆயுதங்களுடனும் அவர்களிருப்பிடத்திற் கெழுந்தருளி எல்லாரையும் குசலங்கேட்டு, அவரவர்களுடைய வயஸ்ஸுக்கும் வலிவுக்கும் அறிவுக்கும் பெருமைக்கும் தக்கவாறு ஆஸநமிடுவித்துத் தானும் தனக்கேற்றதொரு சிரிய சிங்காதனத்தில் எழுந்தருளியிராகிற்கச் செய்தே, ஸ்ரீநாரத மஹர்ஷி வந்து வணங்கி ஸ்ரீகிருஷ்ண பகவானை நோக்கி "ஸர்வ தேவர்களிற் காட்டிலும் நீர் ஆச்சரியகரரும் தர்யருமாகா கின்றீர்; இவ்வுலகில் வேறு யாருமில்லை" என்று விண்ணப்பஞ்செய்ய, கண்ணபிரான் அதைக்கேட்டுப் புன்முறுவல் செய்து, "முனிவனே! தக்ஷிணைகளோடுகூட நான் ஆச்சரியரெனவும் தர்யரெனவும் சொல்லப்பட்டவன்" என்றருளிச்செய்ய, அதனைக் கேட்ட முனிவன் மிகவும் மனமகிழ்ந்து, "பிரானே! தேவர் அருளிச்செய்த வாக்கியத்தினால் அடியேன் மிகவும் மகிழ்வுற்றேன்; இனி வந்தவழியே விடைகொள்ளுகிறேன்" என்று விண்ணப்பஞ்செய்து போகநினைத்தவளவில், அங்குள்ள அரசர்கள் இப்படி ஸ்ரீகிருஷ்ணனுக்கும் நாரதமுனிவற்கும் நடந்த ஸம்வாதத்தின் உட்பொருளைத் தாங்கள் அறியாமையாலே ஸ்ரீகிருஷ்ணனுடைய திருமுக மண்டலத்தை நோக்கி "நாரதமுனிவன் தேவரைக் குறித்துச் சொன்ன வாக்கியமும், அதற்கு உத்தரமாகத் தேவர் அருளிச்செய்த வாக்கியமுமாகிற இந்த மஹாரஹஸ்யம் எங்களுக்கு இன்னதென்று விளங்கவில்லை, இதனை விரித்துரைக்கவேணும்" என்று பிரார்த்திக்க, கண்ணபிரானும் அம்முனிவன்றன்னையே கூறுமாறு நியமித்தருள, அம்முனிவன் அவ்வாசார்யனை நோக்கிக் கூறினது ஹரிவம்சத்தில் விஷ்ணு பர்வத்தில் ககக-வது அத்யாயத்திலுள்ளது. அதுவே இங்குச் சுருங்க அருளிச்செய்யப்பட்டதென்க.

(5)

417 மைத்துனன்மார்காதலியை மயிர்முடிப்பித்தவர்களையேமன்னராக்கி *
உத்தரைதன்சிறுவனையும் உய்யக்கொண்டவுயிராளனுறையுங்கோயில் *
பத்தர்களும் பகவர்களும் பழமொழிவாய்முனிவர்களும்பரந்தநாடும் *
சித்தர்களுந்தொழுதிறைஞ்சத் திசைவிளக்காய்நிற்கின்றதிருவரங்கமே. (கூ)

மைத்துனன்மார் காதலியை — (தனது)மைத்துனன்மாரான பாண்டவர்களுடைய பத்தினியாகிய த்ரௌபதியை
மயிர் முடிப்பித்து — விரித்த கூந்தலை முடியும்படி செய்தருளி
அவர்களையே மன்னர் ஆக்கி — அப்பாண்டவர்களையே அரசாள்வித்தருளியவனும்
உத்தரை தன் சிறுவனை — (அபிமன்யுவின் மனைவியான) உத்தரை என்பவளுடைய மகனை (கருவிற் கரிக்கட்டையா யொழிந்த) பரீக்ஷித்தை
உய்யக்கொண்ட — உயிர்பெற் றெழுந்திருக்கும் படி செய்தருளியவனும்
உயிர் ஆளன் — எல்லா உயிர்க்கட்கும் தலைவனுமான எம்பெருமான்
உறையும் கோயில் — எழுந்தருளியிருக்கிற கோயிலாவது;—
பத்தர்களும் — பக்தர்களும்
பகவர்களும் — ஞானியாசிகளும்
பழமொழிவாய் முனிவர்களும் — அநாதிவாக்காகியவேதத்தை வாயிற்கொண்டுள்ள ரிஷிகளும்
பரந்த நாடும் — விசாலமான நாட்டிலுள்ள மற்றும் பலரும்
சித்தர்களும் — நித்ய முக்தர்களும்
தொழுது இறைஞ்ச — அஞ்சலி பண்ணி வணங்கும் படி
திசை விளக்கு ஆய் நிற்கின்ற — எல்லாத் திக்குகளுக்கும் விளக்காயிருக்கிற
திரு அரங்கம் — திருவரங்க நகராம்.

418 குறட்பிரமசாரியாய் மாவலியைக்குறும்பதக்கியரசுவாங்கி *
இறைப்பொழுதிற்பாதாளங் கலவிருக்கைகொடுத்துகந்தவெம்மான்கோயில் *
எறிப்புடையமணிவரைமேல் இளஞாயிறெழுந்தாற்போலிரவணையின்வாய் *
சிறப்புடையபணங்கள்மிசைச் செழுமணிகள்விட்டெறிக்குந்திருவரங்கமே. (எ)

குறள் பிரமசாரி ஆய் — வாமன ப்ரஹ்மசாரியாய் (எழுந்தருளி)
மாவலியை குறும்பு அதக்கி — மஹாபலியினுடைய செருக்கை அடக்கி
அரசு வாங்கி — (அவனுடைய) ராஜ்யமாயிருந்த பூமியை (தன்னுடையதாம்படி நீரேற்றுப்) பெற்று
இறைப் பொழுதில் பாதாளம் — க்ஷணகாலத்துக்குள் பாதாளலோகத்தை
கலவிருக்கை கொடுத்து — (அவனுக்கு) இருப்பிடமாகக் கற்பித்து
உகந்த — (இந்திரன் வேண்டுகோளைத் தலைக்கட்டினேம் என்று) மகிழ்ந்த
எம்மான் — எமது தலைவனை எம்பெருமான் (எழுந்தருளியிருக்கிற)
கோயில் — கோயிலாவது
எறிப்பு உடைய மணி வரைமேல் — மிக்க ஒளியையுடைய ரத்ந பர்வதத்தின்மேல்
இள ஞாயிறு எழுந்தால்போல் — பாலஸூரியர்கள் உதித்தாற் போல
அரவு அணையின்வாய் — திருவனந்தாழ்வானிடத்து
சிறப்பு உடைய பணங்கள் மிசை — அழகு பொருந்திய படங்களின்மேல்
செழுமணிகள் விட்டு எறிக்கும் — செழுமை தங்கிய ரத்னங்களானவை மிகவும் ஜ்வலியா நிற்கப்பெற்ற
திரு அரங்கம் — திருவரங்கமாம்.

419 உரம்பற்றியிரணியனை உகிர்நுதியாலோள்ளியமார்புறைக்கவூன்றி *
சிரம்பற்றிமுடியிடியக்கண்பிதுங்க வாயலறத்தெழித்தான்கோயில் *
உரம்பெற்றமலர்க்கமலம் உலகளந்தசேவடிபோலுயர்ந்துகாட்ட *
வரம்புற்றகதிர்ச்செங்கெல் தாள்சாய்த்துத்தலைவணங்குந்தண்ணரங்கமே. (அ)

உரம் பற்றி — (தன்னுடைய) வலிமை நிறைந்த (ச்சேருக்குற்ற)
இரணியனை ஒள்ளிய மார்பு — இரணியாஸுரனுடைய அழகிய மார்பை
உகிர் நுதியால் உறைக்க ஊன்றி — நகங்களின் நுனிகள் உள்ளே பொத்தும்படி (திருக்கைகளால்) பற்றிக்கொண்டு

முடி இடிய	(அவனது தலையிலுள்ள) கிரீடமானது பொடிபடும் படியாகவும்	கோயில்	கோயிலாவது ;—
கண் பிதுங்க	கண்களானவை பிதுங்கும் படியாகவும்	உரம் பெற்ற கமலம் மலர்	செழுப்புப் பொருந்திய தாமரை மலர்களானவை
வாய் அலற	(வேதனை பொறுக்கமாட்டாமல்) வாய் அலறும்படியாகவும்	உலகு அளந்த சேவடிபோல் உயர்ந்து காட்ட	மேலுலகை அளப்பதாக உயர்ந்த திருவடியைப் போல் உயர வளர்ந்து விளங்க,
சிரம் பற்றி	தலையைப் பிடித்து		
தெழித்தான்	(பிரஹ்லாதனுடைய விரோதியை முடித்தோமென்னும் மகிழ்ச்சியினால்) ஆரவாரம் செய்தருளின எம்பெருமான் (எழுந்தருளியிருக்கிற)	வரம்பு உற்ற கதிர் செக்கெல்	வரம்பு சேர்ந்து விளைந்து நிற்பதும் கதிரையுடையதுமான செந்நெலானது
		தாள் சாய்த்து தலை வணக்கும் தண் அரங்கம்	தாள்களை நீட்டித் தலை வணங்கி நிற்கப்பெற்ற குளிர்ந்த திருவரங்கநகராம்.

* * *—நான்காமடிக்கு உள்ளுறை பொருள் ;—தேவர் முதலானோர் திரண்டு வந்து காலில் தீட்டித் தலை வணங்கித் தண்டனிட்டுக் கிடக்குமாற்றைக் கூறியவாறும். ... ... (அ)

420 தேவுடையமீனமாயாமையாயேனமாய் அரியாய்க்குறளாய் *
மூவுருவினீராமனாய்க் கண்ணனாய்க்கற்கியாய்முடிப்பான்கோயில் *
சேவலோடுபெடையன்னஞ் செங்கமலமலரேறியூசலாடி *
பூவணைமேல்துதைந்தெழு செம்பொடியாடிவிளையாடும்புனலரங்கமே. (கூ)

தேவு உடைய மீனம் ஆய்	தேஜஸ்ஸையுடைய மத்ஸ்யமாயும்	சேவலோடு	(தனது) புருஷ ஜம்ஸத் தோடுகூட
ஆமை ஆய்	கூர்மமாயும்	செம் கமலம் மலர் ஏறி	செந்தாமரைப் பூவின்மேலேறி
ஏனம் ஆய்	வராஹமாயும்	ஊசல் ஆடி	(அம்மலரை அசைத்து) ஊசலாடி
அரி ஆய்	நரஸிம்ஹமாயும்	பூ அணை மேல்	புஷ்ப சயனத்தின்மேல்
குறள் ஆய்	வாமனனையும்	துதைந்து எழு	(ஒன்றோடொன்றுபுணருகையாகிற) நெருக்கத்தைச் செய்து (அதனால்) கிளர்ந்த
மூ உருவின் இராமன் ஆய்	பரசுராமனையும், தசரதராமனையும், பலராமனையும்,	செம் பொடி ஆடி	(சுண்ணமாகிற) சிவந்த பொடியில் மூழ்கி
கண்ணன் ஆய்	ஸ்ரீ கிருஷ்ணனையும்	விளையாடும்	விளையாடா நிற்கப்பெற்ற
கற்கி ஆய்	கல்கியாயும்	புனல் அரங்கம்	நீர்வளத்தையுடைய திருவரங்கநகராம்.
(திருவவதாரங்களெடுத்து,)			
முடிப்பான்	(விரோதிகளை) ஒழிக்கவல்ல எம்பெருமான் (எழுந்தருளியிருக்கிறான்)		
கோயில்	கோயிலாவது ;—		
பெடை அன்னம்	அன்னப்பேடையானது		

* * *—எம்பெருமானது தசாவதாரங்களை அடைவே கூறுவன முன்னடிகள். "தேவுடைய" என்ற அடைமொழி—ஆமை முதலிய எல்லாவற்றிலும் அந்வயிக்கக்கடவது. [மூவுருவினீராமனும்.] துஷ்டக்ஷத்ரியரை ஒழிப்பதற்கான பரசுராமாவதாரமும் ராவணநிராகரணார்த்தமாக ஒழிப்பதற்கான ஸ்ரீராமாவதாரமும், ஆஸுரப்ரக்ருதிகளான க்ஷத்ரியாதிகளை ஒழிப்பதற்கான பலராமாவதாரமுமாகிற இம் மூன்று அவதாரங்களுள் முந்திச்சொன்ன ஸ்ரீராமாவதாரம் ஸ்வரூபேண அவதரித்ததாகையால் முக்கியம்; மற்றவை இரண்டும் ஆவேசாவதாரங்களாகையால் அமுக்கியம். ஆயினும் அவ்விரண்டிற்கும் ஸ்வரூபாவேசரூபதயா உண்டான உயர்ந்தி உள்ளமையால், அவை முக்கிய அவதாரங்களுடன் சேர்த்துக் கணக்கிடப்பட்டன.

[கற்கி] தருமநெறிமுறைகள் நிலைகுலைந்து பாவமே வெல்லுகின்ற காலமாகிய கலியுகமுடிவில் எம்பெருமான் கல்கி என்று குதிரை வடிவமான அவதாரமெடுத்து அத்தருமநெறி முதலியவற்றை நிலை பெறுத்தி யருளப்போகிறார் என்று புராணங்கூறும்; "தருமந்தவிர்ந்து பொறைகெட்டுச் சத்தியஞ்

சாய்ந்து தயை, தெருமந்து தன்பூசனைமுழுதுஞ் சிதையக் கலியே, பொருமந்த காலக்கடைமினி லெம் பொன்னரங்க னல்லால், அருமந்த கற்கியென் றுரேயவை கிலியாக்குவரே." ஏன்ற திருவரங்கத்துமாலை அறிக. ... ... (கூ)

421 செருவாளும்புள்ளாளன்மண்ணாளன் செருச்செய்யுநாந்தகமென்னு
மொருவாளன் * மறையாளனோடாதபடையாளன் விழுக்கையாளன் *
இரவாளன்பகலாளனென்னையாளன் ஏழுலகப்பெரும்புரவாளன் *
திருவாளனினிதாகத் திருக்கண்கள்வளர்கின்றதிருவரங்கமே. (ஙி)

செரு ஆளும் புள் ஆளன் — தானே போர்செய்யவல்ல பெரிய திருவடிக்குத் தலைவனும்

மண் ஆளன் — லீலா விபூதியை ஆளுமவனும்,

செரு செய்யும் நாந்தகம் என்னும் ஒரு வாளன் — (ஆச்ரிதவிரோதிகளை எதிர்த்துப்,) பூசல் செய்யவல்ல நந்தகம் என்கிற ஒப்பற்ற தொரு கொற்றவாளையுடையவனும்

மறை ஆளன் — நான்குவேதங்களையும் ஆளுமவனும்,

ஓடாத படை ஆளன் — (போர்க்களத்தில்) முதுகு காட்டி ஓடாத ஸேனைகளையுடையவனும்,

விழு கை ஆளன் — சிறந்த ஔதார்ய முடையவனும்,

இரவு ஆளன் — ராத்ரி காலத்துக்கு நியாமகனும்,

பகல் ஆளன் — பகற்போதுக்கு நியாமகனும்,

என்னை ஆளன் — அடியேனுக்குத் தலைவனும்

ஏழ் உலகம் பெரு புரவு ஆளன் — ஸப்த லோகங்களாகிற பெரிய ஸாம்ராஜ்யத்தை ஆளுமவனும்,

திரு ஆளன் — பெரிய பிராட்டியாரை (த்தேவியாக) ஆளுமவனுமான எம்பெருமான்

இனிது ஆக — திருவுள்ளமுவந்து

திருக் கண்கள் வளர்கின்ற — திருக்கண் வளர்ந்தருளுகிற (கோயிலாவது;—)

திரு அரங்கம் — திருவரங்க நகராம்.

ஞானத்தின் ஸங்கோசவிகாஸங்களுக்குக் காரணமாகிய இரவு பகல்களைத் தன் அதீநமாகவுடையவன் என்கிறது—இரவாளன் பகலாளன் என்று. ... ... (ஙி)

422 கைந்நாகத்திடர்கடிந்த கனலாழிப்படையுடையான்கருதுங்கோயில் *
தென்னாடும்வடநாடுந்தொழுகின்ற திருவரங்கந்திருப்பதியின்மேல் *
மெய்ஞ்ஞாவன்மெய்யடியான் விட்டுசித்தன்விரித்ததமிழுரைக்கவல்லார் *
எஞ்ஞான்றுமெம்பெருமானிணையடிக்கீழ் இணைபிரியாதிருப்பர்தாமே. (ஙஙி)

கை நாகத்து இடர் கடிந்த — பெரிய துதிக்கையையுடைய கஜேந்த்ராழ்வானுடைய துன்பத்தைப் போக்கின

கனல் ஆழி — ஜ்வலியா நின்றுள்ள திருவாழியாழ்வானை

படை உடையான் — ஆயுதமாகவுடைய எம்பெருமான்

கருதும் கோயில் — விரும்பி, எழுந்தருளியிருக்கப்பெற்ற கோயிலாய்,

தென் நாடும் வட நாடும் தொழுகின்ற — தென்னாட்டிலுள்ளாரும் வடநாட்டிலுள்ளாரும் ஸேவிக்கும்படி அமைந்த

திரு அரங்கம் திருப்பதியின்மேல் — திருவரங்கமென்னும் திருப்பதி விஷயமாக

மெய் ஞாவன் மெய் அடியான் விட்டு சித்தன் — மெய்யே சொல்லா நின்ற நாவையுடையரும் பிரயோஜனத்தை விரும்பாத அடிமை செய்பவருமான பெரியாழ்வார்

விரித்த தமிழ் — அருளிச்செய்த இத்தமிழ்ப் பாசுரங்களை

உரைக்க வல்லார் — ஓதவல்லவர்கள்

எம்பெருமான் இணை அடி கீழ் — எனக்குச் சேஷியான பரமபதநாதனுடைய ஒன்றே டொன்றொத்த திருவடிகளின் கீழ்

எஞ்ஞான்றும் இணை பிரியாது இருப்பர் — எந்நாளும் (நித்யமுக்தர்களின் நிரளாகிற) துணையைப் பிரியாமல் (அவர்களோடு கூடி) வாழ்ந்திருக்கப் பெறுவர்.

அடிவரவு :—மரவடி தன் கரு பதினறு ஆமை மைத்துனன் குறள் உரம் தேவு செருகைக்நாக துப்பு.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

(சரமகாலத்தில் வருத்தமொன்றும்தோன்றாமைக்காக இப்போதே துதிக்கின்றேனென்றல்).

423 துப்புடையாரையடைவதெல்லாஞ் சோர்விடத்துத் துணையாவரென்றே *
ஒப்பிலேனெகிலும்நின்னடைந்தேன் ஆனைக்குநீயருள்செய்தமையால் *
எய்ப்பென்னைவந்துநலியும்போது அங்கேதுகானுன்னைநினைக்கமாட்டேன் *
அப்போதைக்கிப்போதேசொல்லிவைத்தே னரங்கத்தரவணைப்பள்ளியானே. (க)

(அவரைப்போல் அடியேனையுங் காத்தருள்வீரென்று)

அரங்கத்து அரவு அணை பள்ளியானே — திருவரங்கம் பெரிய கோயிலில் திருவனந்தாழ்வானாகிற படுக்கையின் மேல் பள்ளி கொள்ளா நின்றுள்ள எம்பெருமானே!

நின் அடைந்தேன் — தேவரைச் சரணம் புகுந்தேன்;

துப்பு உடையாரை அடைவது — (அடியாரைக் காப்பதில்) ஸாமர்த்தியமுடைய தேவரீரை ஆச்ரயிப்பது

எய்ப்பு என்னைவந்து நலியும்போது — (வாத பித்த ச்லேஷ்மங்களினால் நெருக்குண்கையாலுண்டாகக் கடவதான) இளைப்பானது அடியேனைக் கிட்டி வருந்துங்காலமாகிற

எல்லாம் சோர்வு இடத்து — 'ஸர்வ இந்திரியங்களும் சிதிலமாய் விடுங்காலத்தில்

துணை ஆவர் என்றே — தேவரீர் துணையாயிருக்கும்' என்கிற எண்ணத்தினாலன்றே?

அங்கு நான் உன்னை ஏதும் நினைக்கமாட்டேன் — அந்த சரமதசையில் அடியேன் தேவரீரை கூணகாலமாயினும் நினைக்க முடியாதவனாவேன்.

அப்போதைக்கு — அக்காலத்துக்காக

ஒப்பு இலேன் ஆகிலும் — (இவ்வாறு துணைசெய்வதற்கு உரிய அதிகாரிகள் இன்னரென்று தேவர் திருவுள்ளத்திற் கொண்டிருக்குமவர்களோடு) அடியேன் ஒப்பற்றவனாகிலும்,

இப்போதே — (கரணகளேபரங்கள் தெளிவு பெற்றிருக்கிற) இப்போதே

நீ ஆனைக்கு அருள் செய்தமையால் — தேவர் கஜேந்திராழ்வானைக் காத்தருளியவராதலால்

சொல்லி வைத்தேன் — (என்னுடைய பிரார்த்தனை) விண்ணப்பஞ்செய்து கொண்டேன்.

* * *—"துப்புடையாரை யடைவதெல்லாஞ் சோர்விடத்துத் துணையாவை யென்றே" என்று முன்னிலையாகக் கூறவேண்டியிருக்க, அன்யனம் கூறுது படர்க்கையாகக் கூறியது, இடவழுவமைதியின் பாற்பாடும்; முன்னிலைப் படர்க்கை என்க; "ஓரிடம்பிற இடந்தழுவலுமுளவே" என்பது நன்னூல். காத்தல் தொழில் வல்லமை எம்பெருமானுக்கன்றி மற்று ஆர்க்கேனும் அமையாதென்பது-ப்ரபந்நபரித்ராணம் முதலிய பிரபந்தங்களினால் அறுதியிடப்பட்டதாதலின், படர்க்கைப்பொருள் பொருந்தாதென்றுணர்க. "உடையாரை துணையாவர்" என்ற பன்மை-பூஜையிற் போந்ததாம். (க)

424 சாமிடத்தென்கோக்குறிக்கொள்கண்டாய் சங்கோடுசக்கரமேந்தினனே *
காமிடத்தென்னையனேகதண்டஞ் செய்வதாநிற்பர்கமன்றமர்கள் *
போமிடத்துன்திறத்தெத்தனையும் புகாவண்ணம்கிறபதோர்மாயைவல்லீ *
ஆமிடத்தேயுன்னைச்சொல்லிவைத்தேன் அரங்கத்தரவணைப்பள்ளியானே. (உ)

சங்கொடு சக்கரம் ஏந்தினனே — ஸ்ரீ பாஞ்சஜந்யத்தையும் ஸ்ரீ ஸுதர்சனாழ்வானையும் திருக்கையில் அணிந்து கொண்டுள்ளவனே

அனேக தண்டம் செய்வதாநிற்பார் — பல வகைகளால் தண்டிக்கவேயா நின்றவர்களாய்

அரங்கத்து அரவு அணைப் பள்ளியானே!—; நமன் தமர்கள் — யமபடர்கள்

போம் இடத்து — இழுத்துக்கொண்டு போம்போது

(என்னுடைய நெஞ்சானது)

நா மடித்து — (மிக்ககோபத்தோடு) நாக்கை மடித்துக்கொண்டு

உன் நிறத்து எத்தனையும் புகா வண்ணம் — உன் விஷயத்தில் சிறிதாயினும் அவகாஹிக்கமாட்டாதபடி.

என்னை — (மஹாபாபியான) அடியேனை

நிற்பது ஓர் மாயை வல்லே — மறைந்து நிற்கையாகிற ஒப்பற்றதொரு மாயையைச் செய்வதில் (நீ) வல்லவனாயிரா நின்றாய்;

(ஆகலால்,)

ஆம இடத்தே — ஸ்வேதத்விபமும் தெளிவு பெற்றிருக்கையாகிற இக்காலத்திலேயே

சாம் இடத்துஎன்னை குறிக்கொள் கண்டாய் என்று — "சரீரமாகிற மமயத்தில் (உன்னை நினைக்கமாட்டாத) அடியேனைத் திருவுள்ளம் பற்றியருள வேணும்" (என்று)

உன்னை — உன்னைக் குறித்து

சொல்லி வைத்தேன் — விண்ணப்பஞ் செய்து கொண்டேன்.

* * *—"ஆமிடத்தே-சாமிடத்தென்னைக் குறிக்கொள் கண்டாய் (என்று) உன்னைச் சொல்லி வைத்தேன்" என்று இயையும். கீழ்ப்பாட்டில் "எல்லாஞ் சோர்விடத்து" என்றதை விவரிக்கிறது—"சாமிடத்து" என்று. (உ)

425 எல்லியில்வாசல்குறுகச்சென்ரு லெற்றிகமன்றமர்பற்றும்போது *
நில்லுமினென்னுமுபாயமில்லை நேமியுஞ்சங்கமுமேந்தினனே * [டென்றும் *
சொல்லலாம்போதேயுன்னாமமெல்லாம் சொல்லினேனென்னைக்குறிக்கொண்
அல்லல்படாவண்ணங்காக்கவேண்டு மரங்கத்தரவணைப்பள்ளியானே. (ங)

நேமியும் சங்கமும் ஏந்தினனே — திருவாழியையும் ஸ்ரீ பாஞ்சஜந்யத்தையும் கையில் அணிந்து கொண்டுள்ளவனே!

நில்லுமின் என்னும் உபாயம் இல்லை — "கடக்க நில்லுங்கள்" என்று (அவர்களைக் கிட்டவரவொட்டாமல்) தடுக்கும்படியான ஒருபாயமும் (என்கையில்) இல்லை;

அரங்கத்து அரவு அணைப் பள்ளியானே!

(ஆதலால்,)

எல்லியில் — (அடியேனுடைய வாழ்நாளின்) எல்லையாகிய சரமதசையில்

சொல்லலாம் போதே — வாய்விட்டுச்சொல்லுகைக்குரிய இப்போதே

உன் நாமம் எல்லாம் சொல்லினேன் — உன்னுடைய திருநாமங்களையெல்லாம் சொன்னேன்;

(ஆகையால்,)

வாசல் குறுகச்சென்ரு — (யமபுரத்துக்குப்) போம் வழியைக் கிட்டப்புகுந்தால்

என்னை குறிக்கொண்டு — அடியேனைத் திருவுள்ளத்திற்கொண்டு

நமன் தமர் ஏற்றி பற்றும்போது — யமகிங்கரர்கள் அடித்துப் பிடிக்கும் காலத்தில்

என்றும் அல்லல்படாவண்ணம் காக்க வேண்டும் — எப்போதும் அசுத்தப்படாதபடி ரக்ஷித்தருளவேணும்.

* * *—எம்பெருமானே! நான் சரமதசையில் கர்மபலானுபவத்துக்காக யமபுரத்தின் வழியே சென்றால் அங்கு யமகிங்கரர்கள் வந்து என்னை அடித்துப் பிடிக்கும்போது, "நீங்கள் என்னருகில் வரக்கூடாது" என்று அவர்களைத் தடுக்க என்னால் முடியாது: ஆதலால், அப்படிப்பட்ட அசுத்தம் அடியேனுக்கு விளைய வொண்ணுமைக்கு உறுப்பாக இப்போதே உன் திருநாமங்களையெல்லாம் அநுஸந்தித்து விட்டேன்; இதுவே ஹேதுவாக என்னை நீ திருவுள்ளத்திற்கொண்டு காத்தருளவேணு மென்றவாறு. (ஈ)

426 ஒற்றைவிடையனும்நான்முகனு முன்னையறியாப்பெருமையோனே *
முற்றவுல்கெல்லாம்நீயேயாகி மூன்றெழுத்தாயமுதல்வனேயோ *
அற்றதுவாணளிவற்கென்றென்னி யஞ்சுமன்றமர்பற்றலுற்ற *
அற்றைக்குநீயென்னைக்காக்கவேண்டு மரங்கத்தரவணைப்பள்ளியானே. (அ)

ஒற்றை விடையனும் நான்முகனும் — ஒப்பற்ற ரிஷபவாஹனனான ருத்ரனும் ப்ரஹ்மாவும்

உன்னை அறியா பெருமையோனே! — உன்னை (உள்ளபடி) அறியவொண்ணுமைக்கு உறுப்பான பெருமை பொருந்தியவனே!

முற்ற உலகு எல்லாம் நீயே ஆகி — ஒன்றொழியாதபடி எல்லா உலகங்களும் நீயே ஆய்

மூன்று எழுத்து ஆய முதல்வனே — மூன்று அக்ஷரமான ப்ரணவ ஸ்வரூபியானவனும் ஸர்வ காரண பூதனுமானவனே!

அரங்கத்து அரவு அணைப் பள்ளியானே!—;
நமன் தமர் — யமகிங்கரர்கள்
இவற்கு வாழ்நாள் அற்றது என்று எண்ணி — 'இவனுக்கு ஆயுஸ்ஸு முடிந்தது' என்று நினைத்து,
அஞ்ச — (பிடிக்கிற பிடியில்) அஞ்சும்படி
பற்றல் உற்ற அற்றைக்கு — பிடிக்கப் புகுகிற அன்றைக்கு
நீ என்னை காக்க வேண்டும்—.

* * *—[முன்றெழுத்தாய.] அகார, உகார, மகாரங்களாகிற [ஓம்] பிரணவத்துக்கு அர்த்தமாயிருப்பவன் என்க. இம்மூன்றெழுத்துக்களில் முதலாவதான அகாரத்தின் ப்ரக்ருத்யர்த்தமான ஸர்வகாரணத்வத்தைச் சொல்லுகிறது—முதல்வனே! என்று. ஓ, என்று இரக்கக்குறிப்புமாம், அந்நிலைக்கு—அப்போதைக்கு. ... ... (ஈ)

427 பையரவினணைப்பாற்கடலுள் பள்ளிகொள்கின்றபரமமூர்த்தி *
உய்யவுலகுபடைக்கவேண்டி உந்தியில்தோற்றினுய்நான்முகனை *
வையமனிசரைப்போய்யென்றெண்ணிக் காலனையுமுடனேபடைத்தாய் *
ஐயவினியென்னைக்காக்கவேண்டு மரங்கத்தரவணைப்பள்ளியானே. (நு)

பால் கடலுள் — திருப்பாற் கடலில்
பை அரவு இன் அணை — (பரந்த) படங்களையுடைய திருவனந்தாழ்வானுகிற இனிய படுக்கையின் மீது
பள்ளி கொள்கின்ற — திருக்கண் வளர்ந்தருளா நின்ற
பரம மூர்த்தி — பரம சேஷியானவனே!
உய்ய — (எல்லாவுயிர்களும் தன்னை அடைந்து) உஜ்ஜீவிக்கும்படி
உலகு படைக்க வேண்டி — லோகங்களை ஸ்ருஷ்டிக்க விரும்பி
உந்தியில் நான்முகனை தோற்றி — நிருநாபிக் கமலத்தில் பிரமனைத் தோற்றுவித்தவனே!
வையம் மனிசர் — பூமியிலுள்ள மநுஷ்யர்கள்
பொய் என்று எண்ணி — (நமது கட்டளையாகிய சாஸ்த்ர மர்யாதையில் நிற்க மாட்டாது) க்ருத்ரிமராய் நடப்பவர்களென்று நினைத்து
(அந்த விபரீதாசரணத்துக்குத் தக்க தண்டம் நடத்துதற்காக)
காலனையும் உடனே படைத்தாய் — யமனையும் கூடவே ஸ்ருஷ்டித்தருளினவனே!
ஐய — பரமபந்துவானவனே!
அரங்கத்து அரவு அணைப்பள்ளியானே!—;
இனி என்னை காக்கவேண்டும்—.

428 தண்ணனவில்லைநமன்தமர்கள் சாலக்கொடுமைகள்செய்யாகிற்பர் *
மண்ணைடுநீருமெரியுங்காலும் மற்றுமாகாசமுமாகிநின்றாய் * [டென்றும் *
எண்ணலாம்போதேயுன்நாமமெல்லா மெண்ணினேனென்னைக்குறிக்கொண்
அண்ணலேநீயென்னைக்காக்கவேண்டு மரங்கத்தரவணைப்பள்ளியானே. (கூ)

மண்ணைடு நீரும் எரியும் காலும் ஆகாசமும் மற்றும் ஆகி நின்றான் — பூமியும்ஜலமும்தேஜஸ்ஸும் வாயுவும் ஆகாசமும் (ஆகிற பஞ்ச பூதங்களும்) மற்றுமுள்ள பதார்த்தங்களுமாய் நின்றவனே!
அண்ணலே — ஸர்வ ஸ்வாமியானவனே!
அரங்கத்து அரவு அணைப் பள்ளியானே!—
நமன் தமர்கள் — யமகிங்கரர்கள்
தண்ணனவு இல்லை — இரக்க மற்றவர்களாய்க் கொண்டு
சால கொடுமைகள் செய்யாகிற்பர் — மிகவும் கொடிய சிக்ஷைகளை பண்ணுவர்கள்,
(அப்படிப்பட்ட சிக்ஷைகளுக்கு ஆளாகாதொழியும்படி,)
எண்ணலாம்போதே — அநுஸந்திக்கைக்கு உரிய காலத்திலேயே
உன் நாமம் எல்லாம் — உன்னுடைய திருநாமங்களையெல்லாம்
எண்ணினேன் — அநுஸந்தித்தேன்;
(ஆதலால்,)
என்னை — அடியேனை
நீ — நீ
குறிக்கொண்டு என்றும் காக்க வேண்டும் — திருவுள்ளத்திற் கொண்டு எப்போதும் ரக்ஷித்தருள வேணும்.

* * *—தண்ணனவு—குளிர்ச்சி; 'தண்ணனவு' என்றவுடனே ஈரநெஞ்சு அற்றவர்களென்றவாறு- அன்றி, 'தண்ணனவு' என்று—தணிதலைச் சொல்லிற்றாய் [தணிதல்—ஓய்தல்.] நலிகையில் ஓழிவில்லாமையைக் கூறியவாறுமாம். சால—உரிச்சொல். ... ... (கூ)

429 செஞ்சொல்மறைப்பொருளாகிநின்ற தேவர்கள்நாயகனேயெம்மானே
எஞ்சலிலென்னுடையின்னமுதே யேழுலகுமுடையாயென்னப்பா *
வஞ்சவுருவின்நமன்றமர்கள் வலிந்துநலிந்தென்னைப்பற்றும்போது *
அஞ்சலமென்றென்னைக்காக்கவேண்டு மரங்கத்தரவணைப்பள்ளியானே. (எ)

செஞ்சொல் மறைப் பொருள் ஆகி நின்ற — ருஜுவான சொற்களையுடைய வேதத்துக்கு அர்த்தமாயிருப்பவனும்
தேவர்கள் நாயகனே — நித்திய ஸூரிகளுக்கு தலைவனுமானவனே!
எம்மானே — எம் பெருமானே!
எஞ்சல் இல் இன் என்னுடை அமுதே — குறைவற்ற பரம போக்யமான எனக்கு (ரஸ்யமான) அம்ருதம்போன்றவனே!
ஏழ் உலகும் உடையாய் — உலகங்களுக்கெல்லாம் ஸ்வாமியானவனே!
என் அப்பா — எனக்கு உபகாரகனானவனே!
அரங்கத்து அரவு அணைப் பள்ளியானே!—
வஞ்சம் உருவின் நமன் தமர்கள் — வஞ்சனை பொருந்திய ரூபத்தையுடையரான யமகிங்கர்கள்
என்னை வலிந்து நலிந்து பற்றும் போது — அடியேனை பலாத்காரித்து ஹிம்ஸித்துக்கொண்டு பிடிக்கும்போது
அஞ்சல் என்று — 'அஞ்சவேண்டா' என்று
என்னை காக்கவேண்டும்—.

430 நானேதுமுன்மாயமொன்றறியேன் நமன்றமர்பற்றிநலிந்திட்டு * இந்த
ஊனேபுகேயென்றுமோதும்போதங் குன்னைநானென்றுணைக்கமாட்டேன் *
வானேய்வானவர்தங்களீசா மதுரைப்பிறந்தமாமாயனே * என்
ஆனாய்நீயென்னைக்காக்கவேண்டு மரங்கத்தரவணைப்பள்ளியானே. (அ)

வான் ஏய் வானவர் தங்கள் ஈசா — பரமபதத்தில் பொருந்தியிராநின்ற நித்ய முக்தர்களுக்கு தலைவனே!
மதுரை பிறந்த மாமாயனே — திருவடமதுரையில் அவதரித்த மிக்க ஆச்சரிய சக்தியையுடையவனே!
என் ஆனாய் — (பாகனுக்கு வசப்பட்டொழுகுகின்ற) யானை போல் எனக்கு வசப்பட்டிருப்பவனே!
அரங்கத்து அரவு அணைப் பள்ளியானே;
நான் உன் மாயம் ஏது ஒன்றும் அறியேன் — அடியேன் உன்மாயைகளில் யாதொன்றையும் அறியமாட்டேன்;
நமன் தமர் பற்றி நலிந்திட்டு — யமகிங்கர்கள் (என்னைப்) பிடித்து (இந்த சரீரத்தோடே) பண்ணவேண்டிய ஹிம்ஸைகளையெல்லாம் பண்ணிவிட்டு, (பின்பு,
இந்த ஊன் புகு என்று — 'இந்த யாதநா சரீரத்திலுள்ளே பிரவேசி' என்று
மோதும்போது — அடிக்கும்போது
அங்கு — அவ்விடத்தில்
உன்னை நான் ஒன்றும் நினைக்க மாட்டேன்;—
நீ என்னை காக்கவேண்டும்.—

431 குன்றெடுத்தாநிரைகாத்தவாயா கோநிரைமேய்த்தவனேயெம்மானே *
அன்றுமுதலின்றறுதியாக ஆதியஞ்சோதிமறந்தறியேன் *
நன்றுநன்கோடியநமன்றமர்கள் நலிந்துவலிந்தென்னைப்பற்றும்போது *
அன்றங்குநீயென்னைக்காக்கவேண்டும் அரங்கத்தரவணைப்பள்ளியானே. (கூ)

குன்று எடுத்து — கோவர்த்தனமலையைக்குடையாக எடுத்து (ப்பிடித்து)
ஆ நிரை — பசுக்களின் திரளை
காத்த ஆயா — ரக்ஷித்தருளின ஆயனே! [-கோபாலனே!]
கோ நிரை மேய்த்தவனே — மாடுகளின் கூட்டத்தை மேய்த்தருளினவனே!
எம்மானே — எனக்கு ஸ்வாமியானவனே!
அரங்கத்து அரவு அணைப் பள்ளியானே;—
அன்று முதல் இன்று அறுதி ஆக — (உனக்குப் பல்லாண்டு பாடமஞ்சுக்கிக்கொண்டே) அந்நாள் தொடங்கி இன்றளவாக
ஆதி அம் சோதி — ஸர்வகாரணபூதனான உன்னுடைய விலக்ஷணதேஜோரூபமான திவ்யமங்கள விக்ரஹத்தை

மறந்து அறியேன் (அடியேன்) மறந்தறியேன்;
நன்றும் கொடிய நமன் தமர்கள் மிக்க கொடுமை பொருந்திய யமகிங்கரர்கள்
என்னை கலித்து வலிக்கும் போது அன்று என்னை ஹிம்ஸித்து பலாத்காரித்து பிடிக்கும் காலமான அத்தருணத்தில்
அங்கு அவ்விடத்தில்
நீ என்னை காக்கவேண்டும்.—

432 மாயவனைமதுசூதனனை மாதவனைமறையோர்களேத்தும் *
ஆயர்களேற்றினையச்சுதனை அரங்கத்தரவணைப்பள்ளியானை *
வேயர்புகழ்வில்லிபுத்தூர்மன் விட்டுசித்தன்சொன்னமாலைபத்தும் *
தூயமனத்தனராகிவல்லார் தூமணிவண்ணனுக்காளர்தாமே. (ம)

மாயவனை ஆச்சரியசக்தியை யுடையவனும்
மதுசூதனனை மது என்ற அசுரனை ஒழித்தருளினவனும்
மாதவனை பெரியபிராட்டியார்க்குவல்லபனும்
மறையோர்கள் ஏத்தும் ஆயர்கள் ஏற்றினை வைதிகர்களினால் துதிக்கப்படுமவனும் இடையர்களுக்குத் தலைவனும்
அச்சுதனை (அடியாரை ஒருகாலும்) கழுவவிடாதவனும்
அரங்கத்து அரவணைப் பள்ளியானை கோயிலில் சேஷசயநத்தில் கண் வளர்ந்தருள்பவனுமான எம்பெருமானை நோக்கி
வேயர் புகழ் வில்லி புத்தூர் மன் விட்டு சித்தன் சொன்ன தாம் திருவவதரித்த குடியிலுள்ளாரெல்லாராலும் புகழப்பட்டவரும் ஸ்ரீவில்லிபுத்தூர்க்கு நிர்வாஹகருமான பெரியாழ்வார் அருளிச்செய்த
மாலை பத்தும் சொல்மாலையான இப்பத்துப் பாசுரங்களையும்
தூய மனத்தனராகி வல்லார் தாம் நிர்மலமான நெஞ்சையுடையராய்க்கொண்டு ஓதவல்லார்கள்
தூமணி வண்ணனுக்கு ஆளர் பழிப்பற்ற நீலமணிபோன்ற வடிவையுடைய எம்பெருமானுக்கு அடிமைசெய்யப்பெறுவர்.

[ஏ—அசை.]

* * *—அன்று முதல்—கர்ப்பவாஸம் முதலாக என்றும்கொள்வர், அறுதி-முடிவு. அன்று முதல் இன்றளவாக ஆநியஞ்சோநியை மறந்தறியேன் என்னை நின்றுகொண்டு, "நன்றுங் தீர்டிய நமன்தமர்கள் நலிந்து வலிந்தென்னைப் பற்றும்போதன்றைக்கு நீயென்னைக் காக்கவேண்டும்" என்றல் விருத்தமன்றேயென்னில்; அதிசங்காமூலமான கலக்கத்தினால் வந்த அச்சத்தாலே இங்ஙனே வேண்டுகிறபடி. ... ... (கூ)

அடிவரவு:—துப்பு சாமிடம் எல்லி ஒற்றை பை தண்ணனவு செஞ்சொல் நானேது குன்று மாயவாக்கு.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஐந்தாம்பத்து—முதல்திருமொழி, வாக்குத்தூய்மை.

(பெரிய பெருமாளுடைய போக்யதையில் தமது மனமொழி மெய்கள் மேல்விழுறுபடியைப் பேசுதல்.

433 வாக்குத்தூய்மையிலாமையினாலே மாதவாவுன்னைவாய்க்கொள்ளமாட்டேன் *
காக்குநின்னையல்லாலரியாது நானதஞ்சுவனென்வசமன்று *
மூர்க்குப்பேசுகின்றுனிவனென்று முனிவாயேலுமென்காவினுக்காற்றேன் *
காக்கைவாயிலுங்கட்டுரைகொள்வர் காரணாகருளக்கொடியானே. (க)

மாதவா ச்ரியபதியானவனே!
காரணா (உலகங்கட்கெல்லாம்) ஆதிகாரணமானவனே
கருளன் கொடியானே பெரிய திருவடியை த்வஜமாகவுடையவனே!
வாக்கு தூய்மை இலாமையினாலே (என்னுடைய) வாய்மொழிக்கு பரிசுத்தி இல்லாமையால்
உன்னை (ஹேயப்ரதிபடனனை) உன்னை

வாய் கொள்ள மாட்டேன் — வாய்கொண்டு துதிக்க யோக்யதை அற்றவனாயிராகின்றேன்; (வெறுமனே இடப்போமென்று பார்த்தாலும்)

என் வசம் அன்று — எனக்கு வசப்பட்டு நிற்பதன்று;

நாக்கு நின்னை அல்லால் அறியாது — (ரஸமறிந்த எனது) நாக்கானது உன்னையொழிய மற்றொருவரை (வாய்க் கொள்ள) அறியாது;

இவன் மூர்க்கு பேசுகின்றான் என்று முனிவாய் ஏலும் — "இவன் மூடர் பேசும் பேச்சைப் பேசாகின்றான்" என்று திருவுள்ளம் பற்றிநீ சீறியருளினாலும்

அது நான் அஞ்சுவன் — அசுத்தமான நாக்கு இங்ஙனே உன் பக்கல் ஈடுபடாநின்றதைக் குறித்து நான் அஞ்சுகிறேன்;

என் நாவினுக்கு ஆற்றேன் — என்னுடைய நாக்கின் பதற்றத்தை நான் ஸஹிக்க வல்லேனல்லேன்;

(அது) அந்த நாக்கானது

காக்கை வாயிலும் கட்டுரை கொள்வர் — காக்கையினுடைய வாயிலுண்டான சொல்லையும் நற்சொல்லாக (அறிவுடையார்) கொள்ளுவர்கள்

* * *—நாவினுக்கு ஆற்றேனென்றது—நாவினுடைய பதற்றத்துக்கு ஆற்றேன் என்றபடி. காக்கைவாயிலும்-காக்கைவாயில் நின்றும்; ஐந்தாம் வேற்றுமை. கட்டுரை-ஏற்றசொல், பொருளுள்ள சொல். ... ... (க)

434 சழக்குநாக்கொடுபுன்கவிசொன்னேன் சங்குசக்கரமேந்துகையானே *
பிழைப்பராகிலும்தம்மடியார்சொல்பொறுப்பது பெரியோர்கடனன்றே *
விழிக்குங்கண்ணிலேன்நின்கண்மற்றல்லால் வேறொருவரோடென்மனம்பற்றாது *
உழைக்கோர்புள்ளிமிகையன்றுகண்டாய் ஊழியேழுலகுண்டுமிழ்ந்தானே. (உ)

சங்கு சக்கரம் ஏந்து கையனே!—;

பெரியோர் கடன் அன்றே — பெருந்தன்மை யுடையவர்களுக்குக் கடமையன்றே?

ஊழி ஏழ் உலகு உண்டு உமிழ்ந்தானே — பிரளய காலத்தில் எல்லாவுலகங்களையும் திருவயிற்றில் வைத்து நோக்கி (பின்பு) (அவற்றை) வெளிப்படுத்தினவனே!

நின் கண் அல்லால் மற்று விழிக்கும் கண் இலேன் — உன்னுடைய கடாக்ஷமொழிய வேறொருவருடைய கடாக்ஷத்தை (ரக்ஷகமாக) உடையேனல்லேன்;

(அன்றியும்)

சழக்கு நாக்கொடு புன்கவி சொன்னேன் — பொல்லாத நாக்கினால் அற்பமான பாசுரங்களை நான் சொன்னேன்;

வேறு ஒருவரோடு என் மனம் பற்றாது — மற்று ஒருவர் பக்கலிலும் எனது நெஞ்சானது பொருந்தமாட்டாது;

பிழைப்பர் ஆகிலும் — (தாஸபூதர்கள்) பிழை செய்தார்களேயாகிலும்

உழைக்கு ஓர் புள்ளி மிகை அன்று கண்டாய் — புள்ளிமானுக்கு ஒரு புள்ளி (ஏறுவது) குற்றமன்றே?

தம் அடியார் சொல் பொறுப்பது — தமக்கு அடிமைப்பட்ட அவர்களுடைய சொல்லை பொறுத்தருளுகை

* * *—[உழைக்கோர் புள்ளி மிகையன்று கண்டாய்] உடம்பு முழுவதும் புள்ளிமயமாயிருக்கிற மானுக்கு ஆரோபிதமாக ஒரு புள்ளி ஏறி அதிகமாகத் தோன்றினால், அதனால் அந்த மானுக்கு ஒரு குற்றமுமில்லை; அதுபோல, அபராதஸஹத்வமே வடிவாயிருக்கிற உனக்கு என்னொருவனுடைய அபராதத்தைப் பொறுப்பதனால் ஒரு குற்றமும் வாராது என்றவாறு. இவ்வகைப் பொருளில், உழையின் ஸ்தானத்தில் எம்பெருமான் நின்றதாகப் பெறலாகும்; அன்றி, அந்த ஸ்தானத்தில் ஆழ்வாரே நின்றதாகவுங் கொள்ளலாம்; புள்ளிமானுக்கு ஒரு புள்ளி அதிகமானால், அதனால் அதற்கொரு குற்றமில்லாதவாறுபோல, அபராதமயனை அடியேனுக்கு ஒரு அபராதமேறினால், அதனால் உன்னுடைய அங்கீகாரத்திற்கு ஒரு குறையுமில்லைகாண் என்றவாறும். முன்னோர் உரைத்தபடியே வியாக்கியானப் போக்குக்கு ஒக்குமென்க. மிகை—குற்றத்துக்கும் பெயர்; "மிகையே குற்றமுங் கேடுந் துன்பமும், மிகுதியும்" என்பது நிகண்டு. இனி, இங்கு மிகை என்பதற்கு கேடு என்று பொருள் கொள்ளுதலும் பொருந்துமென்க. ... ... (உ)

435 நன்மைதீமைகளொன்றுமறியேன் நாரணவென்னுமித்தனையல்லால் *
புன்மையாலுன்னைப்புள்ளுவம்பேசிப் புகழ்வானன்றுகண்டாய்திருமாலே *
உன்னுமாறுன்னையொன்றுமறியேன் ஓவாதேநமோநாரணவென்பன் * (க)
வன்மையாவதுன்கோயிலில்வாழும் வைட்டணவனென்னும்வன்மைகண்டாயே.

திருமாலே — ச்ரீயஃபதியானவனே !

நாரண என்னும் இத்தனை அல்லால் — 'நாராயண!' என்று கூப்பிடுகையாகிற இவ்வளவொழிய

நன்மை தீமைகள் ஒன்றும் அறியேன் — (வேறு) நன்மை தீமை ஒன்றையும் அறிகிறேனில்லை ;

புன்மையால் — (எனக்கு இயற்கையாக உள்ள) அற்பத்தனத்தினால்

உன்னை புள்ளுவம் பேசி — உன்னைக்குறித்து வஞ்சகமான சொற்களைச் சொல்லி

புகழ்வான் அன்று கண்டாய் — புகழுமவனல்லன் (அடியேன்);

உன்னை உன்னும் ஆறு — உன்னை இடைவிடாது ஸ்மரித்துக் கொண்டிருக்கத் தக்க வழிகளில்

ஒன்றும் அறியேன் — ஒரு வழியையும் அறிகிறேனில்லை ;

ஓவாதே நமோ நாரண என்பன் — (ஒரு நொடிப்பொழுதும்) ஒழிவின்றி [இடைவிடாமல்] 'நமோ நாராயணய' என்னு நின்றேன் ;

வன்மை ஆவது உன் கோயிலில் வாழும் வைட்டணவன் என்னும் வன்மை — (அடியேனுக்கு) மிடுக்காவது 'உன்னுடைய கோயிலில் வாழாநின்றுள்ள வைஷ்ணவன்' என்கிற மிடுக்கேயாம்.

[கண்டாய்—முன்னிலையசைச்சொல்.]

436 நெடுமையாலுலகேழுமளந்தாய் நின்மலாநெடியாயடியேனை *
குடிமைகொள்வதற்கையுறவேண்டா கூறைசோறிவைவேண்டுவதில்லை *
அடிமையென்னுமக்கோயின்மையாலே அங்கங்கேயவைபோதருங்கண்டாய் *
கொடுமைக்கஞ்சனைக்கொன்றுநின்தாதை கோத்தவன்தனைக்கொள்விடுத்தானே. (ச)

நெடுமையால் உலகு ஏழும் அளந்தாய் — (குறிய மாணுருவைமாற்றி) நெடுக வளர்ந்ததனால் எல்லா வுலகங்களையும் அளந்தருளினவனே !

நின்மலா — பரிசுத்தனவனே !

நெடியாய் — (அனைவர்க்கும்) தலைவனானவனே !

கொடிய கஞ்சனை கொன்று — கொடிய கம்ஸனை உயிர்க்கொலை செய்து,

நின் தாதை கோத்த வன் தலை கொள்விடுத்தானே — உனது தந்தையாகிய வஸுதேவருடைய காலில் பூட்டப்பட்டிருந்த வலிய விலங்கின் பூட்டைத் தறித்துப் போகட்டவனே !

அடியேனை — (உனக்கு) அடிமைப் பட்டுள்ள என்னை

குடிமை கொள்வதற்கு ஐயுற வேண்டா — கிங்கரனாகக் கொள்வதற்கு ஸந்தேஹிக்க வேண்டியதில்லை ;

கூறை சோறு இவை வேண்டுவது இல்லை — (இக்கூறையையுஞ் சோற்றையும் (நான் உன்னிடத்து) விரும்புகிறேனில்லை ;

அடிமை என்னும் அ கோயின்மையாலே — அடிமையென்கிற அந்தபாஜகுல மாஹாத்மியத்தினால

அவை அங்கு அங்கு போதரும் — அக்கூறை சோறுகள் அவ்வவ்விடங்களில் (தாமாகவே) கிடைக்கும்.

[கண்டாய்-முன்னிலையசைச்சொல்.]

437 தோட்டமில்லவளாத்தொழுவோடை துடவையுங்கிணறுமிவையெல்லாம் *
வாட்டமின்றியுன்பொன்னடிக்கீழே வனப்பகம்வகுத்துக்கொண்டிருந்தேன் *
நாட்டுமானிடத்தோடெனக்கரிது நச்சுவார்பலர்கேழலொன்றாகி *
கோட்டுமண்கொண்டகோன்கையினனே குஞ்சரம்வீழக்கொம்பொசித்தானே. (ஞ)

கேழல் ஒன்று ஆகி கோடு மண் கொண்ட கோன் கையினனே — ஒப்புமற்ற வராஹரூபியாய்க் கொண்டு (தனது) கோரப்பல் நுனியில் பூமிப்பந்தாங்குகையாகிற ஸ்வபாவத்தை யுடையவனே !

குஞ்சரம் வீழ கொம்பு ஒசித்தானே — (குவலயாபீடமென்ற) யானையானது முடியும்படி (அதன்) தந்தத்தை முறித்தெறிந்தவனே !

தோட்டம் இல்லவள் ஆ தொழு ஓடை துடவையும் — தோட்டமும் மனை வியும் பசுக்களும் மாட்டுத்தொழுவமும் குளமும் வினை கிலமும்

கிணறும் இவை எல்லாம் — கிணறுமாகிற இவையெல்லாவற்றையும்

வாட்டம் இன்றி அகம் — குறைவில்லாமல்

உன் பொன் அடி கீழ் — உனது அழகிய திருவடியிலே

வளைப்ப வகுத்துக் கொண்டிருந்தேன் — நிரை வகுத்துக்கொண்டிரா நின்றேன்,

எனக்கு நாடு மானிடத்தோடு அரிது — (எல்லாம் உன் திருவடியே என்றிருக்கிற) எனக்கு நாட்டிலுள்ள மநுஷ்யரோடு (ஸஹவாஸம் செய்வது) அஸஹ்யம்;

பலர் நச்சுவார் — பலபேர் (இந்த ஸஹவாஸத்தை) விரும்புவர்கள்.

* * *—கீழ்ப்பாட்டில், தாரகபதார்த்தம் [-சோறு] கைங்கர்யரஸத்தில் அந்தர்பூதமென்றார்; இப்பாட்டில், போஷக பதார்த்தங்களும் உன் திருவடிகளை அநுபவிக்கையாகிற ரஸத்தில் அந்தர்பூதங்களென்கிறார்.

தோட்டம் முதலிய போஷக வஸ்துக்களனைத்தும் உன் திருவடிகளேயென்று அறுதியிட்டிரா நின்றேன் என்பது மூன்னடிகளின் தேர்ந்த கருத்து. துடவை—ஸ்ரீக்ஷேத்ரம். வளைப்ப + அகம், வளைப்பகம்; தொகுத்தல் விகாரம். தோட்டம் முதலியவற்றைப் பொன்னடிக்கீழ் வளைப்ப வகுத்துக் கொண்டிருக்கையாவது—எம்பெருமான் திருவடியை ஏழு வகுப்பாகப் பிரித்து, ஒரு வகுப்பைத் தோட்டமாகவும், மற்றொரு வகுப்பை இல்லவளாகவும்,.....மற்றொரு வகுப்பைக் கிணறுகவும் பிரதிபத்தி பண்ணுகையேயாம். எம்பெருமானது திருவடியையொழிய வேறொன்றைப் போஷகமாக மதிப்பதில்லை யென்றவாறு.

இனி மூன்னடிகளுக்கு வேறுவகையாகவும் பொருள் கொள்ளத்தகும்; அதாவது;—தோட்டம்.....கிணறுமாகிய இவையெல்லாம், வளைப்பு அகம்—சூழ்ந்திருக்குமிடம், உன் பொன் அடிக்கீழ்—உனது திருவடி நிழலிலே (ஈடாக), வகுத்துக்கொண்டிருந்தேன். (என்நெஞ்சினுள் அத்திருவடியைச்) சூழ்த்துகொள்ளா நின்றேன், அத்திருவடி நிழலிலேயே எல்லாப் பொருளுமாக ப்ரதிபத்திபண்ணி, அத்திருவடியை நெஞ்சினுள் வளைத்துக்கொண்டேன் என்பது கருத்து ... ... (நு)

438 கண்ணுநான்முகனைப்படைத்தானே காரணகரியாயடியேன்நான் *
உண்ணுநாள்பசியாவதொன்றில்லை ஓவாதேநமோநாரணவென்று *
எண்ணுநாளுமிருக்கெச்சாமவேத நான்மலர்கொண்டுனபாதம்
நண்ணுநாள் * அவைதத்துறுமாகில் அன்றெனக்கவைபட்டினிகாணே. (கூ)

காரணனே — (லோகஸ்ருஷ்டிக்குக்) காரணமானவனே!

நான்முகனை படைத்தானே — பிரமனை (உந்திமேல்)படைத்தருளினவனே!

கண்ணனே — கண்ணபிரானே!

கரியாய் — (காளமேகம்போல்) கறுத்த நிறத்தையுடையவனே!

அடியேன் நான் உண்ணுநாள் பசி ஆவது ஒன்று இல்லை — (உனக்கு) சேஷபூதனான நான் உண்ணுதொழிந்த போது பசியென்பது ஏறத்து மூண்டாவதில்லை;

ஓவாதே நமோ நாராயணனே என்று எண்ணுநாளும் — இடைவிடாமல் 'நமோ நாராயணாய' என்று அநுஸந்திக்கப் பெறுத காலும்

இருக்கு எசு சாம வேதம் — ருக், யஜுஸ், ஸாமம் என்கிற வேதங்களை (ச்சொல்லிக்கொண்டும்)

நாள் மலர் கொண்டு — அப்போதலர்ந்த [புதிய] பூக்களை எடுத்துக்கொண்டும் (வந்த)

உன பாதம் நண்ணுநாள் — உன் திருவடிகளைக் கிட்டப் பெறுத நாள்களும்

அவை — (எனக்கு) அந்த உண்ணுதொழிந்த நாள்களாம்;

அவை ஈதத்துறும் ஆகில் — அந்த வேதாநுஸந்தாநமும், புஷ்பஸமர்ப்பணமும் தட்டுப்படுமாகில்

அன்று எனக்கு பட்டினி நாள் — அந்த நாளானது எனக்கு உண்ணுதொழிந்த காளாகும்.

ஈ அவை—அந்தநாள்கள், தத்துறுமாகில்—நேரிடுமாஞல், என்றுமுரைக்கலாம். கருத்து ஒன்றே.

* * *—'தாரகபோஷகங்களெலாம் எம்பெருமான் திருவடிகளே' என்று கீழ் அருளிச்செய்ததை இப்பாட்டில் விசதமாக்கி கிடத்தருளுகிறார். இவ்வுலகத்திலுள்ளாரனைவரும் ஒரு பொழுது உண்ணுதொழிந்தால், பசியினால் மிகவும் தளர்ந்து வருந்துவர்கள்; அடியேனுடைய இயல்வு அங்ஙனன்றென்று; திருமந்திரத்தை அநுஸந்திக்கப் பெறுதகாலும், * தொழுது முப்போது மூன்னடிவணங்கித்

தூமலர் தூய்த்தொழுத ஏத்தப் பெறுத நாளுமே அடியேனுக்கு உண்ணுநாள்; இவ்விரண்டும் அடியேனுக்கு வாய்க்கப்பெற்ற நாள் உண்டுகளிக்கப்பெற்ற காளேயாம். 'சோற்றுல் வயிற்றை நிரப்பின நாள் உண்டநாள், அப்படி நிரப்பாதநாள் பட்டினிநாள்' என்கிற வ்யவஸ்தை என்னிடத்தில்லை; நான் வயிறார உண்டபோதிலும், திருமந்த்ராநுஸந்தாநமும் ஸ்ரீபாதசேவையும் தட்டுப்பட்டதாகில், அந்நாள் எனக்குப் பட்டினிநாளே என்றவாறு. ... ... (சு)

439 வெள்ளைவெள்ளத்தின்மேலொருபாம்பை மெத்தையாகவிரித்ததன்மேலே *
கள்ளமனத்தைகொள்கின்றமார்க்கங் காணலாங்கொலென்னுசையினுலே *
உள்ளஞ்சோரவுகந்தெதிர்விம்மி உரோமகூபங்களாய்க்கண்ணீர்கள் *
துள்ளஞ்சோரத்துயிலணைகொள்ளேன் சொல்லாயானுன்னைத்தத்துறுமாறே.(ரு)

வெள்ளை வெள்ளத்தின் மேல் — பால்மயமான பெருக்கிலே
ஒரு பாம்பை மெத்தையாக விரித்து — ஒப்பற்ற திருவனந்தாழ்வாணைப் படுக்கையாக விரித்து
அதன் மேலே கள்ளம் நித்திரை கொள்கின்ற மார்க்கம் — அப்படுக்கையின்மீது (நீ,) யோகநித்திரை செய்தருளும் படியை
காணலாம் கொல் என் ஆசையினுலே — காணக்கூடுமோ என்கிற விருப்பத்தினுல்,
உள்ளம் சோர — நெஞ்சு அழிய
உகந்து எதிர் விம்மி — மகிழ்ச்சியின் மிகுதியால் (வார்த்தைசொல்லவொண்ணுதபடி) மாறுகலங்கி
உரோம கூபங்கள் ஆய் — (உடம்பு முழுவதும்) மயிர்க்குழி யெல்லாம்பெற்று
கண்ணீர்கள் துள்ளம் சோர — கண்ணீர் துளி துளியாகச் சோரப்பெற்று
அணை துயில் கொள்ளேன் — படுக்கையில் உறங்கப்பெறுகிறதேயில்லை;
உன்னை தத்துறும் ஆறு சொல்லாய் — (இப்படிப்பட்ட) அடியேன் உன்னைக் கிட்டும்வழியை அருளிச்செய்யவேணும்.

440 வண்ணமால்வரையேதுடையாகமாரிகாத்தவனேமதுசூதா *
கண்ணனேகரிகோள்விடுத்தானே காரணனேயுட்டபிரானே *
எண்ணுவாரிடரைக்களைவானே யேத்தரும்பெருங்கீர்த்தியினுனே *
நண்ணிநான்உன்னைநாடோறுமேத்தும் நன்மையேயருள்செய்யெம்பிரானே (அ)

காரணனே — (உலகங்கட்குக்) காரணமானவனே!
எண்ணுவார் இடரைக் களைவானே — (எப்போதும் உன்னையே திபானிப்பவர்களுடைய துன்பங்களைப் போக்குமவனே!
மது சூதா — மதுவைக் கொன்றவனே!
கரி கோள் விடுத்தானே — கஜேந்த்ராழ்வானுடைய துக்கத்தை நீக்கினவனே!—;
கண்ணனே!—;
வண்ணம் மால்வரை குடை ஆக மாரி காத்தவனே — அழகிய பெரிய கோவர்த்தன மலை குடையாக (அமைய) மழைநிலின்றும் (பசுக்களையும் இடையரையும்) காத்தருளியவனே!
களி அட்ட பிரானே — (குவலயாபீட மென்னும்) யானையை முடித்த உபகாரகனே!
ஏத்த அரு பெருகீர்த்தியினுனே — துதிக்கமுடியாத அளவற்ற கீர்த்தியையுடையவனே!
எம்பிரானே — எமக்குத் தலைவனே!
நான் உன்னை நாள் தொறும் நண்ணி ஏதமும் நன்மை அருள் செய் — அடியேன் உன்னை தினந்தோறும் ஆச்ரயித்து துதிக்கையாகிற நன்மையை அருள் செய்யவேணும்.

441 நம்பனேநவின்றேத்தவல்லார்கள் நாதனேநரசிங்கமதாகிய *
உம்பர்கோனுலகேழுமளந்தாய் ஊழியாயினியாழிமுன்னேந்தி *
கம்பமாகரிகோள்விடுத்தானே காரணாகடல்கடைந்தானே *
எம்பிரானெண்ணியாளுடைத்தேனே யேழையேனிடரைக்களையாயே. (க)

கம்பனே	(ரக்ஷகன் என்று) கம்பத் தருந்தவனே !
நவின்று ஏத்த வல்லார்கள் நாதனே	(ஸ்தோத்ரங்களை) வாயாரச் சொல்லிப் புகழவல்லவர் களுக்கு ரக்ஷகனே !
நரசிங்கம் அது ஆனாய்	நரஸிம்ஹாவதாரஞ் செய்த ருளினவனே !
உம்பர் கோன்	நித்யஸூரிகளுக்கு தலை வனே !
உலகு ஏழும் அளந்தாய்	எல்லா வுலகங்களையும் (திரி விக்கிரமாவதாரத்தில்) அள ந்துகொண்டவனே !
ஊழி ஆனாய்	காலம் முதலிய பதார்த்தங் களுக்கெல்லாம் நிர்வாஹ கனானவனே !
முன் ஆழி ஏந்தி	முன்னே திருவாழியாழ் வானை (திருக்கையில்) ஏந் திக்கொண்டு
மாகம் பம் கரி கோள் விடுத்தானே	(எழுந்தருளி) மிக்க கடுக் கத்தை அடைந்த கஜேந்தி ராழ்வானுடைய சிறையை விடுத்தருளினவனே !
காரண	ஜகத்காரண பூதனே !
கடலைக் கடந்தானே	(திருப்பாற்) கடலை (தேவர் கட்காகக்) கடைந்தருளின வனே !
எம்பிரான்	எம்பெருமானே !
என்னை ஆளுடைத் தேனே	அடியேனை ஆட்படுத்திக் கொண்டவனும் தேன் போல் இனியனுமானவனே !
ஏழையேன் இடரைக் களையாய்	(உன் திருநாமங்களில்) சாப ல்யமுடைய என்னுடைய துன்பத்தைக் களைந்தருள வேணும்.

442 காமர்தாதைகருதலர்சிங்கங் காணவினியகருங்குழற்குட்டன் *
வாமனனென்மரதகவண்ணன் மாதவன்மதுசூதனன்றன்னை *
சேமனன்கமரும்புதுவையர்கோன் விட்டுசித்தன்வியன்தமிழ்பத்தும் *
நாமமென்றுநவின்றுரைப்பார்கள் நண்ணுவாரோல்லைகாரணனுலகே. (ம)

காமர்தாதை	மன்மதனுக்குத் தந்தையும்
கருதலர் சிங்கம்	(தன்னை) விரோதிப்பவரா கிய யாலகட்குச் சிங்கம் போன்றவனும்
காண் இனிய கருங் குழல் குட்டன்	ஸேவிப்பதற்கு அழகாயிருக் கிற கறுத்த குழலியுடைய சிறுக்கனானவனும்
வாமனன்	வாமநாவதாரம் செய்த ருளியவனும்
என்	எனக்குத் தலைவனும்
மரதகம் வண்ணன்	மரதகப் பச்சைபோன்ற வடிவையுடையவனும்
மாதவன்	பிராட்டிக்குக் கணவனும்
மதுசூதனன் தன்னை	மதுவைக்கொன்றவனுமான எம்பெருமானைக் குறித் தருளிச்செய்த,
சேமம் நன்கு அமரும் புதுவையர் கோன்	க்ஷேமமானது நன்கு க [குறைவின்றி] அமைந் திருக்கப்பெற்ற ஸ்ரீவில்லி புத்தூரிலுள்ளார்க்குத் தலை வரான
விட்டுசித்தன்	பெரியாழ்வாரது
வியன் தமிழ் பத்தும்	பெருமையுள்ள (இத்) தமிழ்ப் பாசுரங்கள் பத்தையும்
நாமம் என்று நவின்று உரைப் பார்கள்	(எம்பெருமானது) திருநாமங் களாக பிரதிபத்திபண்ணி அனுசந்தி கொண்டு ஓது மவர்கள்
ஓல்லை காரணன் உலகு நண்ணுவர்	விரைவாக ஸ்ரீவைகுண் டத்தை இட்டப்பெறு வார்கள்.

* * *—அடிவரவு;—வாக்கு சுழக்கு நன்மை நெடுமை தோட்டம் கண்ணி வெள்ளை வண்ணம் நம்பன் காமர் நெய்.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஐந்தாம்பத்து—இரண்டாந்திருமொழி, நெய்க்குடத்தை.

(ஆழ்வார் தம்மிடத்தே எம்பெருமான் குடிகொண்டவிறுமாந்து கூறுதல்.)

443 நெய்க்குடத்தைப்பற்றி யேறுமேறும்புள்போலிரிந்து * எங்குந்
கைக்கொண்டுநிற்கின்றநோய்கள் காலம்பெறவுய்யப்போமின் *
மெய்க்கொண்டுவந்துபுகுந்து வேதப்பிரானர்கிடந்தார் *
பைத்தொண்டபாம்பணையோடும் பண்டன்றுபட்டினங்காப்பே (க)

நெய்குடத்தை பற்றி — நெய் வைத்திருக்கும் குடத்தைப் பற்றிக்கொண்டு

நும் எறும்புகள் போல் எங்கும் சிரந்து — (அக்குடத்தின்மேல்) ஏறுகின்ற எறும்புகளைப்போல் என்னுடைய உடம்பு முழுவதும் பரவி

கைக்கொண்டு நிற்கின்ற நோய்காள் — (என்னை) வசப்படுத்தி என்னையே இருப்பிடமாகக் கொண்டு நிலைத்து நிற்கிற வியாதிகளே!

காலம் பெற உய்யப் போமின் — விரைவாக (நீங்கள்) பிழைக்க வேண்டி (என்னை விட்டு வேறிடத்தைத் தேடிப்) போய்விடுங்கள்;

வேதம் பிரானார் — (பிரமனுக்கு) வேதத்தை உபகரித்தருளின எம்பெருமான்

பைக்கொண்ட பாம்பு அணையோடும் வந்து புகுந்து — பரம்பின படங்களையுடைய திருவனந்தாழ்வானென்கிற படுக்கையோடுங்கூட எழுந்தருளி

மெய்கொண்டு கிடந்தார் — (எனது) சரீரத்தை (தனக்கு இனிதாகத்) திருவுள்ளம் பற்றி (என் சரீரத்தினுள்ளே) பள்ளிகொண்டிராநின்றார், (ஆதலால்,)

பட்டினம் பண்டு அன்று — (அவ்வெம்பெருமானுடைய) பட்டணமாகிய இவ்வாத்துமா பழைய நிலைமையை உடையதன்று;

காப்பு — (அவனால்) காக்கப்பெற்றது.

"ஓங்கார வட்டத்து மாசுணப்பாயி லுலோகமுண்ட
பூங்கார் விழிக்குப் புலப்பட்டதா லெப்பொழுதுமென்னை
நீங்காதிடர்செய்யும் தீவினைகா ளிவி னின்றுபின்று
தேங்காது நீருமக் காளிடத்தேசென்று சேர்மின்களே"

[திருவரங்கத்தமாலை—கூ2] என்ற ஐயங்கார் பாசுரத்தை இத்திருமொழியோடு ஒருபுடை ஒப்பிடலாகும். ... ...

* * *—அக்நிஹோத்ரமாராதநாதிகளுக்கு உதவும்படி சேமித்து வைக்கப்பட்டிருக்கும் நெய்க்குடத்தை எறும்புகள் ஏறி ஆக்கிரமிப்பது போல, எம்பெருமானுக்குப் பல்லாண்டு பாடுகைக்கென்று சேமிக்கப்பட்டிருக்கின்ற எனது உடலில் ஆக்கிரமித்துக்கொண்டு, நான் உங்களுக்கு வசப்பட்டு ஒழுகும்படி என்னைக் கையாளாக்கிக்கொண்டு சாச்வதப்ரதிஷ்டையாக நிற்கின்ற நோய்களே! இனி இவ்வாத்துமா உங்களுடைய ராஜ்யமன்று; இத்தனை காலும்போலல்ல இக்கால்; எம்பெருமான் தனது படுக்கையோடுங்கூட விரும்பிப் பள்ளிகொண்டிருக்குமிடமாகிற்று இன்று இவ்வாத்துமா; ஆனபின்பு, அவனது காவலில் அகப்பட்ட இவ்வுடலிடத்து இனி உங்களுக்குப் பிழைத்திருக்க வழியில்லை; இன்னும் சில காளளவும் பிழைத்திருக்க வேணுமென்ற விருப்பமுங்களுக்கு உளதாகில், இவ்விடத்தைவிட்டுச் சடக்கென ஓடிப்போங்கள் என்கிறார்.

"பாம்பணையோடும் வந்து புகுந்துகிடந்தார்" என்றதனால் நித்யவாஸத்துக்காக எழுந்தருளினமை விளங்கும். பட்டினம்—பத்தநமென்ற வடசொல் விகாரம்; ராஜதாநி என்பது பொருள்: ஆத்துமா எம்பெருமானுடைய ராஜதாநியாதலறிக. ... ... (5)

444 சித்திரகுத்தனெழுத்தால் தென்புலக்கோன்பொற்யோற்றி *
வைத்தவிலச்சினைமாற்றித் தூதுவரோடியொளித்தார் *
முத்துத்திரைக்கடற்சேர்ப்பன் முதறிவாளர்முதல்வன் *
பத்தர்க்கமுதனடியேன் பண்டன்றுபட்டினங்காப்பே. (2)

சித்திரகுத்தன் — (சித்ரகுப்தனென்கிற (யம லோகத்துக்) கணக்குப் பின்னையானவன்

தென்புலம் கோன் பொறி ஒற்றி — தெற்குத் திசைக்குத் தலைவனான யமனுடைய மேலெழுத்தை இடுவித்து

எழுத்தால் வைத்த இலச்சினை — (தான்) எழுதிவைத்த குறிப்புச்சீட்டை

தூதுவர் மாற்றி ஓடி ஒளித்தார் — யமகிங்கரர்கள் கிழித்துப் போட்டுவிட்டு (கண்ணுக்குத் தெரியாத இடந்தேடி) ஓடி ஒளித்துக்கொண்டார்கள்;

முத்து திரை கடல் சேர்ப்பன் — முத்துக்களை (க்கொண்டு வீசுகிற) அலைகளையுடைய கடலில் தண்வளர்ந்தருளுமவனும்,

முது அறிவு ஆளர் முதல்வன் — முதிர்ந்த அறிவையுடைய நித்யஸூரிகளுக்கு தலைவனும்,

பத்தர்க்கு அமுதன் — அடியார்களுக்கு அம்ருதம்போல் இனியனுமான எம்பெருமானுக்கு

அடியேன் — (யான்) தாஸனாயினேன்;

பண்டு அன்று பட்டினம் காப்பு—;

"தாரணியின் மன்னியயனூர் தனித்தவன் காத்தபிரான் கருணையெனுங் கடலாடித் திருவினை கண்டதற்பின் திரணரகெண்ணிய சித்திரகுத்தன் தெரித்துவைத்த சுருணையிலேறிய சூழ்வினைமூற்றுந் துரந்தனமே." (தேசிகப்ரபந்தம்.) என்ற பாசுரமிங்கு நினைக்கத்தக்கது.

445 வயிற்றில்தொழுவைப்பிரித்து வன்புலச்சேவையதக்கி *
கயிற்றுமக்காணிகழித்துக் காலிடைப்பாசங்கழற்றி *
எயிற்றிடைமண்கொண்டவெந்தை யிராப்பகலோதுவித்து * என்னைப்
பயிற்றிப்பணிசெய்யக்கொண்டான் பண்டன்றுபட்டினங்காப்பே (ங)

(வராஹரூபியாய்த் திருவவதரித்தபோது.)

எயிற்றிடை மண் கொண்ட எந்தை — (தன தது) கோரப் பல்மேல் பூமியை தாங்கியருளின எம்பெருமான்,

(அடியேனுக்கு)

வயிற்றில் தொழுவைப் பிரித்து — வயிற்றினுள் விலங்கிட்டுக் கொண்டிருக்கையாகிற கர்ப்ப வாஸத்தைக் கழித்தருளியும்,

புலம் வல் சேவை அதக்கி — இந்திரியங்களாகிற கடுமையான ரிஷபங்களை (பட்டி மேய்ந்து திரிய வொட்டாமல்) அடக்கியும்

கயிறும் — நரம்புகளும்

அக்கு — எலும்புகளுமேயாயிராகின்ற

ஆணி — சரீரத்தில் (ஆசையை)

கழித்து — ஒழித்தருளியும்

பாசம் — (யமதூதர்களுடைய) பாசங்களை

காலிடை கழற்றி — காலேகட்டி இழுக்கவொண்ணாதபடி பண்ணியும்,

இராபகல் ஓதுவித்து — இரவும் பகலும்நல்லறிவைப் போதித்து

பயிற்றி — (கற்பித்தவற்றை) அநுஷ்டாந பர்யந்தமாக்கி

பணிசெய்ய — நித்திய கைங்கர்யம் பண்ணும்படி

என்னைக் கொண்டான் — அடியேனைக் கைக்கொண்டருளினன்;

பண்டு அன்று பட்டினம் காப்பு—;

446 மங்கியவல்வினைநோய்காள் உமக்குமோர்வல்வினைகண்டீர் *
இங்குப்புகேன்மின்புகேன்மின் எளிதன்றுகண்டீர்புகேன்மின் *
சிங்கப்பிரானவனெம்மான் சேருந்திருக்கோயில்கண்டீர் *
பங்கப்படாதுய்யப்போமின் பண்டன்றுபட்டினங்காப்பே. (சு)

(எனது ஆத்துமா,)

மங்கிய வல்வினை நோய்காள் — (ஆத்துமா உருத்தெரியாதபடி) மழுங்கிக் கிடப்பதற்குக் காரணமான வலிய பாவங்களின் மூலமாக வளர்ந்த வியாதிகளே!

உமக்கும் ஓர் வல்வினை கண்டீர் — உங்களுக்குங்கூட ஒருகடின மான நீமை (நேர்ந்தபடியை) (இன்று) பாருங்கள்;

இங்கு புகேல்மின் புகேல்மின் — இவ்விடத்தில் (இனி) வர வேண்டா, வர வேண்டா;

(இனி நீங்களவ்வினைக் கிட்டுகை,)

எளிது அன்று — சுலபமான காரியமன்று;

புகேல்மின் — (ஆதலால் இனி இங்கு) வர வேண்டா;

சிங்கப் பிரான் எம்மான் அவன் — நரஸிம்ஹாவதார மெடுத்து உபகரித்தருளினவனும் எமக்குத் தலைவனுமான எம்பெருமான்

சேரும் திருக்கோயில் கண்டீர் — எழுந்தருளியிருப்பதற்கிடமான திருக்கோயிலாக அமைந்தபடியைப் பாருங்கள்;

பங்கப்படாது உய்யப் போமின் — பரிபவப்படாமல் பிழைத்துப் போங்கள்.

பண்டு அன்று பட்டினம் காப்பு—.

447 மாணிக்குறளுருவாய மாயனையென்மனத்துள்ளே *
பேணிக்கொணர்ந்துபுகுதவைத்துக்கொண்டேன் பிரிதின்றி *
மாணிக்கப்பண்டாரங்கண்டீர் வலிவன்குறும்பர்களுள்ளீர் *
பாணிக்கவேண்டாநடமின் பண்டன்றுபட்டினங்காப்பே. (ஞ)

மாண்டி குறள் உரு ஆய் — பிரமசாரி வேஷத்தை உடைய வாமனனுப் அவதரித்தவனும்

மாணிக்கப் பண்டாரம் — மாணிக்க நிதிபோல் இனிபனும்

மாயனை — ஆச்சரிய பூதனுமான எம் பெருமானை

பேணி கொணர்ந்து — ஆசைப்பட்டி எழுந்தருளப் பண்ணிக்கொண்டுவந்து

என் மனத்துள்ளே — என் நெஞ்சினுள்ளே

புக — புகுந்திருக்கும்படி

பிறிது இன்றி வைத்துக் கொண்டேன் — வேற்றுமையில்லாமல் அமைத்துக்கொண்டேன் ;

வலிவல் குறும்பர்கள் உள்ளீர் — மிகவும் கொடிய குறும்புகளைச் செய்கிற இந்திரியங்களே !

நடமின் — (வேறிடந்தேடி) ஓடுங்கள் ;

பாணிக்கவேண்டா — தாமசிக்கவேண்டியதில்லை,

பண்டு அன்று பட்டினம் காப்பு—.

* * *மாணி—அழகுக்கும் பெயர் ; 'பிரமசாரி' என்றபடியுமாம். உரு—வடிவு. பிறிது இன்றி—இரண்டு பொருளாகத்தோற்றாமல், ஏகவஸ்து என்னலாம்படி பொருந்தச்செய்து என்றபடி. எம்பெருமானை மாணிக்கப்பண்டாரமென்றது—அதுபோல் பெறுதற்கரியவன் என்றவாறு. ... ... (சு)

448 உற்றவுறுபிணிநோய்காள் உமக்கொன்றுசொல்லுகேன்கேண்மின் *
பெற்றங்கள்மேய்க்கும்பிரானூர் பேணுந்திருக்கோயில்கண்டீர் *
அற்றமுரைக்கின்றேன் இன்னமாழ்வீவீர்காள் * உமக்கிங்கோர்
பற்றிலிகண்டீர்கடமின் பண்டன்றுபட்டினங்காப்பே. (சூ)

உற்ற உறு பிணி நோய்காள் — நெடுநாளாக இருக்கிற மிக்க வருத்தத்தைச் செய்கிற நோய்களே !

உமக்கு ஒன்று சொல்லுகேன் கேண்மின் — உங்களுக்கு ஒரு வார்த்தை சொல்லுகிறேன் : கேளுங்கள் ;

(நீங்கள் இப்போது குடிபிருக்கிற எனது இவ்வுடலானது)

பெற்றங்கள் மேய்க்கும் பிரானூர் பேணும் திருக்கோயில் — பசுக்களை மேய்த்தருளிய கண்ணபிரான் விரும்பி எழுந்தருளிபிருக்கைக்கு இடமான திருக்கோபிலாயிற்று ;

கண்டீர் — (முன்புள்ள நிலைமையிற் காட்டில் இன்றுள்ள நிலைமையின் வாசியைப்) பாருங்கள் ;

ஆழ்வினைகாள் — (ஸப்ஸார ஸமுத்ரத்தில் என்னை) ஆழங்காற்படுத்தின ஓ கொடுமைகளே !

இன்னம் — மறுபடியும்

அற்றம் உரைக்கின்றேன் — அறுதியாகச் சொல்லுகிறேன் ;

உமக்கு இங்கு ஓர் பற்று இல்லை — உங்களுக்கு இவ்விடத்தில் ஒரு வகை அவலம்பமும் கிடையாது.

(ஆதலால்)

நடமின் — (இனி இவ்விடத்தைவிட்டு) நடவுங்கள்,

பண்டு அன்று பட்டினம் காப்பு—.

* * *—யசோதைப்பிராட்டிக்கு அடங்கிநடந்த ஸ்ரீகிருஷ்ணன் எனக்கு எளியனாய்நின்று தானுகந்தருளின நிலங்களிலுள்ள அன்புகொண்டு என் தேஹத்தில் எழுந்தருளிபிருக்கிறான் ; இதை ப்ரத்யக்ஷமாகக் காணுங்கோளென்று நோய்களுக்குக்கூறி, பிறகு அந்நோய்களுக்கும் காரணமான பாபங்களை நோக்கி மீண்டும் 'உங்களுக்காகத் தீர்ந்த ஒரு விஷயஞ்சொல்லுகின்றேன் : அதாவது—என்னுடைய தேஹம் முன்போலன்றி ஸ்ரீகிருஷ்ணன் குடிபுகுந்ததனால் காவல்பெற்றிருக்கின்றது ; ஆகையால் இந்த தேஹத்தில் நீங்கள் நிராசையாய்ப் போய்விடுங்கள்' என்றருளிச்செய்கிறார். ... (சூ)

449 கொங்கைச்சிறுவரையென்னும் பொதும்பினில்வீழ்த்துவழுக்கி *
அங்கோர்முழையினிற்புக்கிட்டு அழுத்திக்கிடந்துழல்வேனை *
வங்கக்கடல்வண்ணனம்மான் வல்வினையாயினமாற்றி *
பங்கப்படாவண்ணஞ்செய்தான் பண்டன்றுபட்டினங்காப்பே. (எ)

சிறுவரை கொங்கை என்னும் பொதும்பினில் — சிறிய மலைபோன்ற முலைகளாகிற பொந்தில்

வழுக்கி வீழ்த்து — வழுக்கி விழுந்து

அங்கு ஓர் முழையினில் புக்கிட்டு — (நரகமென்கிற) பரலோகமாகிய ஒரு குகையினுள் புகுந்து

அழுந்தி கிடந்து — (அங்குநின்றும் கால் பேர்க்க வொட்டாமல் அங்கேயே) அழுந்தியிருந்து
உழல்வேனை — திரியப்போகிற என்னுடைய
வல்வினை ஆயின — தீவினைகளாயிருப்பவைகளை
வங்கம் கடல் வண்ணன் அம்மான் — கப்பல்களையுடைய கடல் போன்ற திருநிறத்தனை எம்பெருமான்
மாற்றி — போக்கியருளி
பங்கப்படா வண்ணம் செய்தான் — பரிபவப்படாதபடி செய்தருளினன்;
பண்டு அன்று பட்டினம் காப்பு—.

* * *—"வாணிலாமுறுவல் சிறுநுதல் பெருந்தோள் மாதரார் வனமுலைப்பயனே பேணினேன்" என்றபடி விஷயாந்தரங்களில் ஆழங்காற்படுத்திப் பின்பு அதற்குப்பலமாக நரகங்களிலும் கொண்டுபோய் அழுத்தக் கடவனாயான எனது கருமங்களையெல்லாம் எம்பெருமான் ஒழித்தருளி, பரிபவங்களுக்கு ஆளாகாதபடி செய்தருளிப் பாதுகாத்தருளினனென்கிறார்.

450 ஏதங்களாயினவெல்லாம் இறங்கலிடுவித்து * என்னுள்ளே
பீதகவாடைப்பிராளர் பிரமகுருவாகிவந்து *
போதிற்கமலவன்னெஞ்சம் புகுந்துமென்சென்னித்திடரில் *
பாதவிலச்சினைவைத்தார் பண்டன்றுபட்டினங்காப்பே (அ)

பீதக ஆடை பிரானர் — திருப்பிதாம்பரத்தையுடையனை எம்பெருமான்
பிரமகுரு ஆகிவந்து — ப்ரஹ்மோபதேசம் பண்ணக்கடவனான ஆசாரியனாய் எழுந்தருளி
போது இல் — அறிவுக்கு இருப்பிடமானதும்
வல் — (அந்தர்யாமியையும் அறியவொட்டாத) வன்மையையுடையதுமான
நெஞ்சம் கமலம் — ஹ்ருதய கமலத்தினுள்
புகுந்து — பிரவேசித்து
என் உள் — எனது (அந்த) ஹிருதயத்தில்
ஏதங்கள் ஆயின எல்லாம் — தோஷங்களாக இருப்பவற்றையெல்லாம்
இறங்கலிடுவித்து — நீக்கி
என் சென்னித்திடரில் — என்னுடைய தலையின்மீது
பாத இலச்சினை வைத்தார் — ஸ்ரீபாத முத்திரையை ஏறியருளப் பண்ணினன்;
பண்டு அன்று பட்டினம் காப்பு—.

451 உறகலுறகலுறகல் ஒண்சுடராழியேசங்கே *
அறவெறிநாந்தகவாளே அழகியசார்ங்கமேதண்டே *
இறவுபடாமலிருந்த எண்மருலோகபாலீர்காள் *
பறவையரையாவுறகல் பள்ளியறைகுறிக்கொண்மின். (கு)

ஒண் சுடர் ஆழியே — அழகிய தேஜஸ்ஸையுடைய திருவாழியாழ்வானே!
சங்கே — ஸ்ரீபாஞ்சஜந்யாழ்வானே!
அற — (ஆச்ரிதவிரோதிகளின் உடல்) அழும்படி
எறி — (எம்பெருமானால்) வீசப்படுகிற
நாந்தக வாளே — நந்தகமென்கிற திருக்குறுவாளையுடையவரே!
அழகிய சார்ங்கமே — அழகு பொருந்திய சார்ங்கமென்கிற திருவில்லே!
தண்டே — (கௌமோதகி என்கிற) கதையே!
இருந்த எண்மர் உலோகபாலீர்காள் — (எம்பெருமானுடைய நியமனத்திற்கு ஆட்பட்டு) இராகின்ற அஷ்டதிக்குப் பாலகர்களே!
இறவு படாமல் — தப்பிப் போகாமல்
உறகல் உறகல் உறகல் — உறங்காதிருங்கள், உறங்காதிருங்கள் உறங்காதிருங்கள்;
பறவை அரையா உறகல் — பறவைகளுக்குத் தலைவனான பெரிய திருவடியே! உறங்காதிரு,
(நீங்கள் எல்லாரும் விழித்துக் கொண்டிருந்து,)
பள்ளி அறை குறிக்கொள்மின் — (எம்பெருமானுக்குத்) திருப்பள்ளியறையாகிய என் சரீரத்தை நோக்கிக் காத்திருங்கள்.

* * *—இவ்வாழ்வார் மற்றை ஆழ்வார்களைப் போலன்றி, 'எம்பெருமானுக்கு என் வருகிறதோ!' என்று அஸ்தாநே பயசங்கை பண்ணிப் பல்லாண்டு பாடுமவராதலால், இதுவரை தம்மை எம்

பெருமானைக் காக்கப்பட்டவராக அநுஸந்தித்துப்போந்தவிவர், அவனுக்குக் காவல் தேடுகிறார், இப் பாட்டில், எம்பெருமானுடைய திவ்யாயுதங்களையும், அஷ்டதிக் பாலகர்களையும், வாஹநத்தையும் விளித்து, நீங்களெல்லாருமாகச் சேர்ந்து உறங்காமல் கண்விழித்துக்கொண்டிருந்து எம்பெருமானுடைய படுக்கைப்பற்றை நோக்கிக் கொண்டிருங்களென்கிறார்.

உறகல்—உறங்கவேண்டா என்ற பொருளையுடைய உறங்கல் என்னும் எதிர்மறை வியங்கோள் வினைமுற்றின் சிதைவு. 'உறகல் உறகல் உறகல்' என்ற அடுக்குத்தொடர், அச்சம் பற்றியது. 'இறவு படாமல் உறகல்' என இயையும்; அன்றி, 'இறவுபடாமல்இருந்த' என அடைவே இயைத்து, என்றும் இறவாமல் வாழ்கின்ற என்று பொருள் கொள்ளவுமாம். [எம்ம நுலோகபாலீர்காள்.] "இந்திரனங்கி யமனிருதி வருணன, வந்தவாயு குபேரனீசாநன், என்ன வெண்டிசை யுலோகபாலகர்" என்பது நீவாகாம். ... ... (க)

452 அரவத்தமளியினேடும் அழகியபரற்கடலினேடும் *
அரவிந்தப்பாவையுந்தானும் அகம்படிவந்துபுகுந்து *
பரவைத்திரைபலமோதப் பள்ளிகொள்கின்றபிரானை *
பரவுகின்றன்விட்டுசித்தன் பட்டினங்காவற்பொருட்டே. (ஙு)

அரவத்து அமளியினேடும் — திருவனந்தாழ்வானிகிற படுக்கையோடும்
அழகிய பால் கடலோடும் — அழகு பொருந்திய திருப்பாற் கடலோடுங்கூட,
அரவிந்தப் பாவையும் தானும் வந்து — செந்தாமரைமலர் மகளாகிய பெரியபிராட்டியாரும்தானுமாக எழுந்தருளி
அகம்படி புகுந்து — (எனது) உடம்பாகிற ஸ்தானத்தில் பிரவேசித்து,
பரவை — (அந்தத்) திருப்பாற் கடலிலுடைய
பல திரை மோத — பல அலைகள் தளும்ப
பள்ளி கொள்கின்ற பிரானை — திருக்கண் வளர்ந்தருளாநின்ற எம்பெருமானை
விட்டுசித்தன் — பெரியாழ்வார்
பட்டினம் காவல் பொருட்டு — ஆத்மரக்ஷண நிமித்தமாக
பரவுகின்றன் — போற்றுகின்றார்.

* * *—"பைக்கொண்ட பாம்பணையோடும்—மெய்க்கொண்டு வந்து புகுந்து—கிடந்தீர்" என்று உபக்ரமத்தில் அருளிச் செய்தபடியே நிகமித்தருளுகிறார். எம்பெருமானுக்குத் திருப்பாற்கடலிலும் திருவனந்தாழ்வானிடத்தும் மிக்கஅன்பாதலால் அவற்றைவிட்டுப் பிரிந்து வரமாட்டாமல் அவற்றையும் உடன்கொண் டெழுந்தருளினனென்க. இது, மற்றுமுள்ள நித்ய ஸூரிகளோடுங்கூட எழுந்தருளினமைக்கு உபலக்ஷணமென்பர். அமளி—படுக்கை. அகம்படி வந்து புகுந்து—அந்தரங்க பரிஜநங்களோடுகூட வந்து புகுந்து என்று மூரைப்பர். பரவை—கடல்; எம்பெருமான் அழைத்துக் கொண்டுவந்த திருப்பாற்கடல். "பட்டினம் காவல்பொருட்டுப் பரவுகின்றன்"—(இப்படி) ஆத்துமாவைக் காத்தருளின உபகாரத்திற்காகப் போற்றுகின்றன் என்றபடி.

இத்திருமொழி ஸ்வயமே இனியதாயிருத்தலால் இதற்குப் பயன் கூறுதொழிந்தனரென்க. (ஙு)

அடிவரவு:—நெய் சித்திர வயிற்றில் மங்கிய மணி உற்ற கொங்கை ஏதம் உறகல் அரவத் துக்க.

ஐந்தாம்பத்து—மூன்றாந்திருமொழி, துக்கச்சுழலை.

(திருமாலிருஞ் சோலைப் பதிகம்.)

453 துக்கச்சுழலையைச்சூழ்ந்துகிடந்த வல்லையயறப்பறித்து *
புக்கினிற்புக்குன்னைக்கண்டுகொண்டேன் இனிப்போகவிடுவதுண்டே *
மக்களறுவரைக்கல்லிடைமோத இழந்தவள்தன்வயிற்றில் *
சிக்கனவந்துபிறந்துகின்றாய் திருமாலிருஞ்சோலையெந்தாய். (க)

மக்கள் அறிவுரை கல் இடை மோத — (உனக்கு முன்பிறந்த) ஆறு பிள்ளைகளையும் கம்ஸனை வன்) கல்வில்மோதிமுடிக்க (அதனால்)

இழந்தவள் தன் வயிற்றில் — (அம்மக்களையுமுவரையும்) இழந்தவளான தேவகியி னுடைய திருவயிற்றில்

சிக்கன வந்துபிறந்து நின்றாய் — சடக்கென வந்து திருவவ தரித்தருளினவனே !

திருமாலிருஞ்சோலை எந்தாய் — (எல்லார்க்கும் எளியனும் படி) திருமாலிருஞ்சோலை யில் (எழுந்தருளியிருக்கிற) எம்பெருமானே !

புக்கினில் புக்கு — (நீ) புகுந்தவிடங்களிலெல் லாம் (நானும்) புகுந்து

உன்னை கண்டு கொண்டு — உன்னை ஸேவித்து,

துக்கம் சூழலையை சூழ்ந்து கிடந்த வலியை — துக்கங்களாகிற சுழலாற் றைச் சுற்றுமதிளாகக் கொண்டிருக்கிற வலி போன்ற சரீரத்தில் நசையை

அறபறித்தேன் — அறும்படி போக்கிக் கொண்ட அடியேன்

இனி — (உன்னைப்) பிரியாமைப்பட்டுப் பெற்றபின்பும்

போகவிடுவது உண்டே — (வேறிடத்திற்குப்) போகும் படி விடுவது முண்டோ ?

* * *—இரண்டாமடியில், ''கண்டுகொண்டேன்'' என்ற விடத்துள்ள ஏன் விகுதியைப் பிரித்து முதலடியிறுதியிலுள்ள 'பறித்து' என்பதனோடு கூட்டி யுரைக்கப்பட்டது. இனி இருந்தபடியே அன்வயித்துப் பொருள் கொள்ளுதலும் ஒருவாறு ஒக்குமென்க.

'துக்கச் சுழலை' என்று—துக்கங்கள் சுழல்வதற்கு இடமான ஆத்துமாவைச் சொல்லிற்றாய், அதைச் சூழ்ந்துகிடந்தவலை என்று—அவித்யாகர்ம வாஸநாரூபிகளைச் சொல்லுகிறதாகவுங் கொள்ளலாம்.

புக்கினில்—'புக்கவதனில்' என்பதன் மரூஉ. பரத்வ, அந்தர்யாமித்வ, வியூஹ, விபவ, அர்ச்சாவதாரங்களளவாகப் புக்குக்காண்கையாவது—அந்த அந்த நிலைகளைப் பிரத்யக்ஷமாகாரமான மாநஸ ஸாக்ஷாத்காரத்தினால் அநுபவித்துப் பாடுகை.

கல்லிடைமோத—கல்மேல் அறைய என்றபடி. ... ... (க)

454 வளைத்துவைத்தேனினிப்போகலொட்டேன் உன்றனிந்திரஞாலங்களால் *
ஒளித்திடில்நின் திருவாணைகண்டாய் நீயொருவர்க்கும்மெய்யனல்லை *
அளித்தெங்கும்நாடுநகரமுந் தம்முடைத்தீவினைதீர்க்கலுற்று *
தெளித்துவலஞ்செய்யுந்தீர்த்தமுடைத் திருமாலிருஞ்சோலையெந்தாய். (உ)

நாடும் நகரமும் எங்கும் அளித்து — நாட்டிலுள்ளாரும் நகரத்தி லுள்ளாரும் மற்றெங்கு முள்ளவர்களும் நெருங்கி

தம்முடைய தீவினை தீர்க்கல் உற்று — தங்கள் தங்களுடைய துஷ்ட கர்மங்களைஒழிப்பதில் விரு ப்புற்று

தெளித்து வலம் செய்யும் — ஆரவாரித்துக்கொண்டு பிர தக்ஷிணம் செய்யப்பெற்ற

தீர்த்தம் உடை திருமாலிருஞ்சோலை (எழுந்தருளியிருக்கிற) எந்தாய் — தீர்த்த விசேஷங்களையுடைய திருமாலிருஞ் சோலைமலை யில் எம்பெருமானே !

வளைத்து வைத்தேன் — (உன்னை ச்) சூழ்த்துக்கொண் டேன் ;

இனி போகல் ஒட்டேன் — இனிமேல்(நீவேறிடந்தேடிப்) போவதை (நான்) ஸமமதிக் கமாட்டேன் ;

உன் தன் இந்திர ஞாலங்களால் — உனக்கு உள்ள மாயச்செய் கையில் வல்லமையினால்

ஒளித்திடில் — (உன்னை நீ) ஒளித்துக் கொண்டால்

நின் திரு ஆணை — உனது பிராட்டியின்மே லாணை ;

(அப்படி ஒளிக்கலாகாது,)

நீ ஒருவர்க்கும் மெய்யன் அல்லை — நீ ஒருவரிடத்திலும் உண் மையான உக்தி அநுஷ்டா னங்களையுடையவனல்லை.

455 உனக்குப்பணிசெய்திருக்குந்தவமுடையேன் இனிப்போயொருவன் *
தனக்குப்பணிந்து * கடைத்தலைநிற்கை நின்சாயையழிவுகண்டாய் *
புனத்தினைக்கிள்ளிப்புதுவவிக்காட்டி உன்பொன்னடிவாழ்கவென்று *
இனக்குறவர்புதியதுள்ளும் எழின்மாலிருஞ்சோலையெந்தாய். (ங)

இனம் குறவர் — திரள் திரளாய்ச் சேர்ந்துள்ள குறவர்கள்

புனம் தினை கிள்ளி — புனத்திலுண்டான தினைகளை பறித்து

புதுஅவி காட்டி — (அதை எம்பெருமானுக்குப்) புதிய ஹவிஸ்ஸாக அமுது செய்யப்பண்ணி

(அதற்காக ப்ரயோஜநாந்தரத்தை விரும்பாமல்)

உன் பொன் அடி வாழ்க என்று — "உன் செவ்வடி செவ்வி திருக்காப்பு" என்று (மங்களாசாஸநம் பண்ணிக்கொண்டு)

புனையது உண்ணும் — புனையாதாகிய அத்தினையை உண்ணுதற்கு இடமான

எழில் மாலிருஞ்சோலை — அழகு பொருந்திய திருமாலிருஞ்சோலைமலையில் (எழுந்தருளியிருக்கிற)

எந்தாய் — எம்பெருமானே!

உனக்கு பணி செய்து இருக்கும் தவம் உடையேன் — (சேஷியாகிய) உனக்குக் கைங்கரியம் பண்ணிக் கொண்டிருக்கையாகிற (உனது) அநுக்ரஹத்தைப் பெற்றுள்ள அடியேன்

இனி போய் ஒருவன் தனக்கு பணிந்து — இனிமேல் புறம்பே போய் ஒரு க்ஷுத்ரபுருஷனைப் பற்றி

கடைத்தலை நிற்கை நின் சாயை அழிவு கண்டாய் — (அவனுடைய) வீட்டுவாசலில் (கதிதேடி) நிற்பதானது உன்னுடைய மேன்மைக்குக் குறையன்றே?

456 காதப்பலவுந்திரிந்துழன்றேற்கு அங்கோர்கிழில்லைநீரில்லை * உன்
பாதமலல்லாலற்றேருயிர்ப்பிடம் நானெங்குங்காண்கின்றிலேன் *
தூதுசென்றுய்குருபாண்டவர்க்காயங்கோர்பொய்சூற்றம்பேசிச்சென்று *
பேதஞ்செய்தெங்கும்பிணம்படுத்தாய் திருமாலிருஞ்சோலையெந்தாய். (சு)

காதம்பலவும் திரிந்து உழன்றேற்கு — பலகாத தூரமளவும் திரிந்து அலைந்த எனக்கு

அங்கு ஓர் கிழல் இல்லை — அவ்விடங்களில் (ஒதுங்குகைக்கு) ஒரு கிழலுங் கண்டதில்லை;

(அன்றியும்)

நீர் இல்லை — (தாபமாற்றக் கடவதான) தண்ணீரும் கண்டதில்லை

(ஆராய்ந்து பார்த்தவிடத்தில்,

உன் பாதம் நிழல் அல்லால் — உனது திருவடி நிழலொழிய

மற்று ஓர் உயிர்ப்பு இடம் — மற்றொரு ஆச்வாஸ ஹேதுவான இடத்தை

நான் எங்கும் காண்கின்றிலேன் — நான் ஓரிடத்தும் காண்கிறேனில்லை.

குரு பாண்டவர்க்காய் — குருவம்சத்திற்பிறந்த பாண்டவர்களுக்காக

ஓர் பொய் சூற்றம் பேசி சென்று — ஒருபொய்புறவைப் பாராட்டிக்கொண்டு

அங்கு தூது சென்றுய் — துர்யோதநனிடத்து தூது போய்

பேதம் செய்து — இரண்டு வகுப்பினர்க்கும் கலஹத்தை மூட்டி

(பின்பு பாரதயுத்தம் கோடித்து, அந்த யுத்தத்தில்)

எங்கும் பிணம் படுத்தாய் — தூரியோதநனையில் ஒருவர் தப்பாமல் பிணமாக்கி யொழித்தருளினனே!

திருமாலிருஞ்சோலை எந்தாய்!—;

கீழ்ப்பாட்டில், "இனிப்போ யொருவன்றனக்குப் பணிந்து கடைத்தலை நிற்கை நின்சாயையழிவு கண்டாய்" என்று ஆழ்வாரருளிச் செய்தவாறே, எம்பெருமான் ஆழ்வாரை நோக்கி, "ஆழ்வீர்! நீர் புறம்புபோய் நிற்பது என் சரீரைக்கு அழிவாதல் ஆகட்டும்; அப்படி நிற்கும்படியாகப் புறம்பே ஓரிடமுமக்கு உளதோ?" என்று கேட்க; வேறு ஓரிடமும் கிடையாதென்கிறார், இப்பாட்டால். (சு)

457 காலுமேழுகண்ணுந்தும்பில்லா உடல்சோர்ந்துநடுங்கி * குரல்
மேலுமேழுமயிர்க்கூச்சுமரு எனதோள்களுந்வீழ்வொரியர *
மாலுகளாநிற்குமென்னையுமே உன்னைவரழத்தலைப்பெய்திட்டேன் *
சேலுகளாநிற்குங்கள்சூழ்தண் திருமாலிருஞ்சோலையெந்தாய். (நு)

சேல் உகளா நிற்கும் நீர் சூழ் — மீன்களானவை துள்ளி விளையாடுதற்கு இடமான பெரிய தடாகங்களாலே சூழப்பெற்ற

திருமாலிருஞ்சோலை — திருமாலிருஞ்சோலையில் (எழுந்தருளியிருக்கிற)

எந்தாய் — எம்பெருமானே!

(எனக்கு உன்னிடத்துள்ள அன்பு மிருதியினால்)

என் காலும் எழா — என்னுடைய கால்களும் (வைத்த விடத்தைவிட்டுப்) பேர்கின்றனவில்லை;

கண்ணநீரும் நில்லா — கண்ணீரும் உள்ளே தங்குகின்றனவில்லை;

உடல் சோர்ந்து நடுங்கி — சரீரமானது கட்டுக்குலைந்து நடுங்கியதனால்

குரலும் மேல் எழா — குரலும் கிளம்புகின்றதில்லை;

மயிர்க்கூச்சும் அரு — மயிர்க்கூச்செறிதலும் ஒழிகின்றதில்லை;

தோள்களும் வீழ்வு ஒழியா — தோள்களும் விழுந்துபோவதில் நின்றும் ஒழிந்தனவில்லை [ஒரு வியாபாரமும் செய்ய முடியாமல் விழுக் தொழிந்தன];

என் மனம் மால் உகளா நிற்கும் — எனது நெஞ்சானது வியாமோஹத்தை அடைந்நிரா நின்றது;

(இப்படிகளால்)

வாழ உன்னை தலைப் பெய்திட்டேன் — வாழ்வுறும்படி உன்னை சேர்ந்துவிட்டேன்.

* * *—மெய்யடியார்கள் பகவத்விஷயத்தில் அவகாஹிக்க வேணுமென்று நெஞ்சில் நினைத்த போதே "காலாழும் நெஞ்சழியுங் கண்சுழலும்" என்றபடி ஸர்வேந்திரியங்களுக்கும் சோர்வு பிறக்கு மாதலால், அப்படிப்பட்ட நிலைமை எம்பெருமானருளால் தமக்கு வாய்த்தபடியைக் கூறுகிறார், மூன்றடி களால்; வைத்த அடியை எடுத்துவைத்து நடக்கத் தொடங்கினால், கால் கிளம்புகின்றதில்லை; ஆகந்த பாஷ்பம் இடைவிடாது பெருகாகின்றது; சரீரம் கட்டழிந்து நடுங்காகின்றமையால் வாய்நிறந்து ஒரு பேச்சுப்பேச மூடியவில்லை; மயிர்க்கூச்சு ஒய்கிறதில்லை; (உன்னைத் தோளாலணைப்போமென்று பார்த் தால்,) தோள்கள் ஒரு வியாபாரம் பண்ணவும் வல்லமையற்றுச் சோர்வையடைந்தன; நெஞ்சு பிச் சேறிக்கிடக்கிறது.

வீழ்வொழியா என்பதற்கு, "நிர்விகாரமாய்" என்றிவ்வளவே பெரியவாச்சான்பிள்ளை பொருளுரைத்ததாக அச்சுப்பிரதிகளிற் காண்கிறது; அது பொருத்தமற்றது; "நிர்வ்யாபாரமாம்" என்றிருந்ததை, "நிர்விகாரமாய்" எனமயங்கி அச்சிடுவித்தனர் போலும். வீழ்வு—சோர்வு; அது ஒழி யாமையாவது--எப்போதும் சோர்வுற்றிருக்கை. அதாகிறது--நிர்வ்யாபாரத்வம். இனி "நிர்விகாரமாய்" என்ற அச்சுப்பிரதிப்பாடத்தை, "நிர்விகாரமாம்" எனத் திருத்திக்கொண்டு, "நிர்வ்யாபாரமாம்" என்ற பாடத்தின் பொருளையே அதற்குக்கொள்ளுதல் பொருந்துமென்னவுமாம். மனமே என்றவிடத்து, ஏகாரம்—இசைநிறை, ... (சு)

458 எருத்துக்கொடியுடையானும் பிரமனுமிந்திரனும் * மற்று
மொருத்தருமிப்பிறவியென்னும்நோய்க்கு மருந்தறிவாருமில்லை*
மருத்துவனாய்நின்றமாமணிவண்ணா மறுபிறவிதவிர *
திருத்தி *உன்கோயில்கடைப்புகப்பெய் திருமாலிருஞ்சோலையெந்தாய் (சூ)

திருமாலிருஞ்சோலை எந்தாய்!—.

எருது கொடி உடையானும் — ஏழ்ருஷபத்வஜனை ருத்ரனும்

பிரமனும் — (அவனுக்குத் தந்தையான ப்ரஹ்மாவும்

இந்திரனும் — தேவேந்திரனும்

மற்றும் ஒருத்தரும் — மற்றுள்ள எந்தத் தேவரும்

இ பிறவி என்னும் நோய்க்கு — இந்த ஸம்ஸாரமாகிற வியாதிக்கு

மருந்து அறிவார் இல்லை — மருந்து அறிய வல்லவரல்லர்;

மருத்துவன் ஆய் நின்ற மாமணி வண்ணா — (இப்பிறவி நோய்க்கு) மருந்தை அறியுமவனான நீலமணிபோன்ற வடிவையுடையவனே!

மறு பிறவி தவிர திருத்தி — (எனக்கு) ஜன்மாந்தரம் நேராதபடி (அடியேனை) சிக்ஷித்து

உன் கோயில் கடைபுக பெய் — உன் கோயில் வாசலில் வாழும்படி அருள் புரிய வேணும்

* * *—[கோயில் கடைப்புகப்பெய்.] "உன் கடைத்தலையிருந்து வாழுஞ் சோம்பர்" என்றவிடத்திற்கு உதாஹரணமாகக் காட்டப்பட்ட திருக்கண்ணமங்கையாண்டான் நிலைமையை அடியே னுக்கு அருள்செய்யவேணுமென்கிறார். "திருக்கண்ண மங்கையாண்டான், ஒரு ஸம்ஸாரி தன் வாச லிற் பற்றிக் கிடந்தவொரு நாயை கலிந்தவனை வெட்டித் தானுங் குத்திக்கொண்டபடியைக்கண்டு, ஒரு தேஹாத்மாபிமானியினளவு இதுவானால், பரமசேதநனை ஈச்வரன் நம்மை யமாதிகள் கையில் காட்டிக் கொடானென்று திருவாசலிற்பற்றிக் கிடந்தாரிறே" என்ற திருமாலை வியாக்கியானம் காண்க. பெய்-முன்னிலையொருமை விகுதிமுற்று. ... ... (சூ)

459 அக்கரையென்னுமனத்தக்கடலுளழுந்தி உன்பேருளால் *
இக்கரையேறியிளைத்திருந்தேனை அஞ்சேலென்றுகைகவியாய் *
சக்கரமும்தடக்கைகளும் கண்களும்பீதகவாடையோடும் *
செக்கர்நிறத்துச்சிவப்புடையாய் திருமாலிருஞ்சோலையெந்தாய். (எ)

சக்கரமும் தட கைகளும் கண்களும் பீதக ஆடையோடும் — திருவாழியாழ்வானும் பெரிய திருக்கைகளும் திருக்கண்களும் திருப்பீதாம்பரமும்

செக்கர் நிறத்து சிவப்பு உடையாய் — செவ்வானத்தின் நிறம் போன்ற நிறத்தையுடைய வையாபிருக்கப்பெற்றவனே!

அக்கரை என்னும் அனத்தம் கடலுள் — ஸம்ஸாரமென்கிற அர்த்த ஸமுத்திரத்திலுள்ளே

அழுந்தி — (நெடுநாள்) அழுந்திக்கிடந்து

இளைத்திருந்து — (அதில்) வருத்தப்பட்டுக் கொண்டிருந்து

(முன்பு,)

உன் பேர் அருளால் — உனது பரம கிருபையினால்

இக்கரை ஏறினேன் — இக்கரை யேறின அடியேனைக்குறித்து

அஞ்சேல் என்று கைகவியாய் — அபயப்ரதாநமுத்ரையைக் காட்டியருளவேணும்.

* * *—இளைத்திருந்தேனை என்றவிடத்துள்ள இரண்டனுருபைப்பிரித்து, ஏறி என்ற வினையெச்சத்தோடு கூட்டியுரைத்தோம். இருந்தபடியே அன்வயித்துப் பொருள்கொள்ளுதலுமொன்று. ஸம்ஸாரஸாகரத்தில் ஆழ்ந்துகிடந்து அலமருகைக்கிடான அஜ்ஞாநத்தை நீக்கி ஞானத்தைப் பிறப்பித்தருளியவாறுபோல, உன் திருவடியோடே சேர்த்தியையும் பண்ணியருளவேணுமென்று வேண்டுகிறர் இப்பாட்டால். ... ... (எ)

460 எத்தனைகாலமுமெத்தனையூழியும் இன்றேநாளையென்றே *
இத்தனைகாலமும்போய்க்கிறப்பட்டேன் இனியுள்ளப்போகலொட்டேன் *
மைத்துனன்மார்களைவாழ்வித்து மாற்றலர்நூற்றுவரைக்கெடுத்தாய் *
சித்தம்கின்பாலதறியன்றே திருமாலிருஞ்சோலையெந்தாய் (அ)

மைத்துனன் மார்களை வாழ்வித்து — உனது அத்தை பிள்ளைகளான பாண்டவர்களை வாழச்செய்து

மாற்றலர் நூற்றுவரை கெடுத்தாய் — (அவர்களுக்குச்) சத்ருக்களாகிய துரியோதநாதியர் நூறுபேரையும் ஒழித்தருளினவனே!

திருமாலிருஞ்சோலை எந்தாய்!-;

இன்றேநாளை என்றே — இன்றைக்கு, நாளைக்கு என்று சொல்லிக்கொண்டே

(கழித்த காலம்)

எத்தனை காலமும் எத்தனை ஊழியும் — எத்தனை காலமும் எத்தனை கல்பங்களுமுண்டோ,

இத்தனை காலமும் — இத்தனை காலமுழுவதும்

போய் கிறப்பட்டேன் — (ஸம்ஸாரமாகிற) யந்திரத்தில் அகப்பட்டுக் கொண்டிருந்தேன்;

இனி போகவிடுவது உண்டே — (அதில் நின்றும் விடுபட்டு ஞானம்பெற்ற) இன்று முதலாக(உன்னை)வேறிடத்திற்குப்போக ஸம்மதிக்க (என்னால்) முடியுமோ?

சித்தம் கின்பாலது அறிதி அன்றே — (எனது) நெஞ்சானது உன் நிறத்தில் ஈடுபட்டுள்ளமையை அறிகின்றாயன்றே?

* * *—இன்றைக்கென்றும், நாளைக்கென்றும், நேற்றைக்கென்றும் இப்படி சொல்லிக்கொண்டு கழித்தகாலம் முழுவதையும் பாழேபோக்கினேன், ஏதோ சிறிது ஸுக்ருத விசேஷத்தினால் இன்று உன்னைப் பிடித்தேன், இனி நீ என்னைவிட்டுப் புறம்புபோகப் புக்கால், அதற்கு நான் எள்ளளவும் இசைபமாட்டேன்; எனக்கு உன்நிறத்து இவ்வகை அதிவேசம் பிறக்கைக்கிடாக, என்நெஞ்சு உன்னை விட்டு மற்றொன்றை நினைப்பதேயில்லை யென்னுமிடத்தை ஸர்வஜ்ஞனை நீ அறியாதிருப்பாயன்றே? என்கிறர். ... ... (அ)

461 அன்றுவயிற்றிற்கிடந்திருந்தே அடிமைசெய்யலுற்றிருப்பன் *
இன்றுவந்திங்குன்னைக் கண்டுகொண்டேனினிப்போகவிடுவதுண்டே *

சென்றங்குவாணனையாயிரந்தோளுந் திருச்சக்கரமதனில்
தென்றி *திசைதிசைவீழச்செற்றுய் திருமாலிருஞ்சோலையெந்தாய். (க)

அங்கு சென்று — சோணித புரத்திற்கு எழுந்தருளி
வாணனை — பாணாஸுரனுடைய
ஆயிரம் தோளும் — ஆயிரந் தோள்களும்
திசை திசை தென்றி வீழ திரு சக்கரம் அதனால் செற்றுய் — திக்குகள்தோறும் சிதறி விழும்படி சக்ராயுதத்தினால் நெருக்கியருளினவனே!
திருமாலிருஞ்சோலை எந்தாய்!—;
வயிற்றில் கிடந்திருந்து அன்றே — கர்ப்பவாசம் பண்ணுகையாகிற அன்று முதற் கொண்டே
அடிமை செய்யல் உற்றிருப்பன் — (உனக்குக்) கைங்கரியம் பண்ணுவதில் அபிநிவேசங் கொண்டிருந்த நான்
இன்று இங்கு வந்து உன்னை கண்டு கொண்டேன் — இப்போது இத்திருமாலிருஞ் சோலை மலையில் வந்து (அனைவர்க்கும் எளியனாய்) உன்னை ஸேவித்துக் கொண்டேன்,
இனி போக விடுவது உண்டே:-

462 சென்றுலகங்குடைந்தாடுஞ்சுனைத் திருமாலிருஞ்சோலைதன்னுள்
நின்றபிரான் *அடிமேலடிமைத்திறம் நேர்படவிண்ணப்பஞ்செய் *
பொன்றிகழ்மாடம்பொலிந்துதோன்றும் புதுவைக்கோன்விட்டுசித்தன்
ஒன்றிஜேடொன்பதும்பாடவல்லார் உலகமளந்தான்தமரே. (ம)

உலகம் சென்று குடைந்து ஆடும் சுனை — உலகத்தாரெல்லாரும் (தங்கள் தங்களிருப்பிடத்தில் நின்றும்) போய் அவகாஹித்து நீராடா நிற்கப் பெற்றதீர்த்தங்களையுடைய
திருமாலிருஞ் சோலை தன்னுள் — திருமாலிருஞ்சோலை மலையில்
நின்ற பிரான் — எழுந்தருளியிருக்கிற எம் பெருமானுடைய
அடிமேல் அடிமைத்திறம் — திருவடிகளில் கைங்கரிய விஷயமாக,
பொன் திகழ் — ஸ்வர்ணமயமாய் விளங்காநின்ற
மாடம் — மாடங்களில்
பொலிந்து தோன்றும் — நிறைந்து விளங்கா நின்ற
புதுவை — ஸ்ரீ வில்லிபுத்தூர்க்கு
கோன் — தலைவரான
விட்டு சித்தன் — பெரியாழ்வார்
நேர்பட — பொருந்தும்படி
விண்ணப்பம் செய் — அருளிச்செய்த
ஒன்றிஜேடு ஒன்பதும் பாட வல்லார் — இப் பத்துப் பாசுரங்களையும் பாடவல்லவர்கள்
உலகம் அளந்தான் தமர் — திரிவிக்கிரமாவதாரம் செய்தருளின எம்பெருமானுக்குச் சேஷ பூதர்களாகப் பெறுவர்.

அடிவரவு:—துக்க வஹித்து உனக்கு காதம் காலும் எருத்து அக்கரை எத்தனை அன்று சென்று சென்னி.

ஐந்தாம்பத்து—நான்காந்திருமொழி, சென்னியோங்கு.

(ஆழ்வார் தம்முடைய க்ருதக்ருத்யத்வத்தைச் சொல்லித் தலைக்கட்டுதல்)

463 சென்னியோங்கு தண்திருவேங்கடமுடையாய்* உலகு
தன்னைவாழநின்றநம்பி தாமோதரா சதிரா *
என்னையுமென்னுடைமையையும் உன்சக்கரப்பொறியேற்றிக்கொண்டு
நின்னருளேபுரிந்திருந்தேன் இனியெள்திருக்குறிப்பே. (க)

சென்னி ஓங்கு தண் திருவேங்கடம் உடையாய் — கொடுமுடியானது (ஆகாசத்தளவும்) உயர்ந்திருக்கப் பெற்ற குளிர்ந்த திருவேங்கடமலையை (இருப்பிடமாக) உடையவனே!
உலகு தன்னை வாழ நின்ற நம்பி — உலகத்தவர்களை வாழ்விப்பதற்காக எழுந்தருளியிராநின்ற (கல்யாண குணங்களால் நிறைந்தவனே!
தாமோதரா — தாமோதரனே!

சதிரா — (அடியாருடையகுற்றத்தைக் கண்ணெடுத்துப் பாராத) சதிரையுடையவனே!

என்னையும் என் உடைமையையும் உன் சக்கரப்பொறி ஒற்றிக்கொண்டு — எனது ஆத்துமாவுக்கும் என் உடைமையான சரீரத்திற்கும் உன்னுடைய ஸுதர்சனழ்வானுடைய திருவிலச்சினையை இடுவித்து

இன் அருளே புரிக்கிருந்தேன் — உன்னுடையகருணையையே (ஸ்வயம்ப்ரயோஜநமாக) விரும்பிப்பிரார்த்தித்தேன்;

இனி — இப்படிபானபின்பு

என் திருக்குறிப்பு — திருவுள்ளக்கருத்து எதுவாயிருக்கின்றது?

* * *—எம்பெருமானே! நெடுநாளாய் உன்திறத்தில் விமுகனைப் விஷயாந்தரங்களே நச்சி அங்குமிங்கும் அலைந்து திரிந்த அடியேனை, உனது திவ்ய கல்யாண குணங்களைக்காட்டி வசப்படுத்திக் கொண்டு, ஆத்மாத்மீயங்களே யெல்லாம் உனக்கே சேஷப்படுத்திவிட்டு உன் அருளாலே புருஷார்த்தமாகப் பிரதிபத்தி பண்ணிக்கொண்டிருக்கும்படியான நிலைமையையும் அடியேனுக்கு அமைத்தருளினாய்; இதனால் உன் அபேக்ஷிதமும் தலைக்கட்டிற்று; என் அபேக்ஷிதமும் தலைக்கட்டிற்று; இனிச்செய்யவேண்டுவ தொன்றில்லை; இன்னும் என் செய்யவேணுமென்று உன் திருவுள்ளத்தில் ஓடுகிறது என்று கேட்கிறபடி.

464 பறவையேறுபரம்புருடா நீயென்னைக்கைக்கொண்டபின் *
பிறவியென்னுங்கடலும்வற்றிப் பெரும்பதமாகின்றதால் *
இறவுசெய்யும்பாவக்காடு தீக்கொளீஇவேகின்றதால் *
அறிவையென்னுமமுதவாறு தலைப்பற்றிவாய்க்கொண்டதே (உ)

பறவை ஏறு பரம் புருடா — பெரிய திருவடிமேல் ஏறும் மஹாநுபாவனான புருஷோத்தமனே!

என்னை கைக்கொண்ட பின் — (ஸ்வரக்ஷகனான) நீ (வேறு கதியற்ற என்னை ஆட்படுத்திக்கொண்ட பிறகு)

பிறவி என்னும் கடலும் வற்றி பெரும் பதம் ஆகின்றது — ஸம்ஸாரமாகிற ஸமுத்ரமும் வறண்டுபோய் (அதனால்) பெரிய தரம் பெற்றதாகிறது;

இறவு செய்யும் பாவக்காடு தீக்கொளீஇ வேகின்றது — (இவ்வாத்துமாவை) முடிக்கிற பாபஸமூஹமானது நெருப்புப்பட்டு வெந்திட்டது;

அறிவை என்னும் அமுதம் ஆறு தலைப் பற்றி வாய்க்கொண்டது — ஞானமாகிற அம்ருதநதியானது மேன்மேலும் பெருகிச் செல்லாகின்றது.

465 எம்மனுவென்குலதெய்வமே யென்னுடைநாயகனே *
நின்னுளேனெய்ப்பெற்றகன்மை யிவ்வுலகினிலார்பெறுவார் *
கம்மன்போலவிழித்தமுக்கும்காட்டிலுள்ளபாவமெல்லாம் *
சும்மெனுதேகைவிட்டோடித் தூறுகள்பாய்ந்தனவே. (ங)

எம் மனு — எமக்குத் தலைவனே!

என் குல தெய்வமே — என் குடிக்குப் பரதேவதையானவனே!

என்னுடை நாயகனே — எனக்கு நாதனானவனே!

நின்னுளேன் ஆய் அடியேன் — உன் அபிமாநத்தில் ஒதுங்கினவனுய்

இ உலகினில் ஆர் பெறுவார் பெற்ற நன்மை — இந்த உலகத்திலுள் மற்று யார்தான் பெறுவர் பெற்ற நன்மையை?

நம்மன் போல விழித்து அமுக்கும் — பூதப்ரேதபிசாசங்களைப் போல் (உருத்தெரியாமல் ஒளிந்து வந்து) கீழே தள்ளி மேலே அமுக்காநின்றுள்ள

காட்டில் உள்ள பாவம் எல்லாம் — உலகத்திலுள்ள எல்லாருடைய பாவங்களும்

சும்மெனுது — மூச்சுவிடவும் மாட்டாமல்

கைவிட்டு ஓடி தூறுகள் பாய்ந்தன — ஸைலஸமாக விட்டிட்டு ஓடிப்போய் புதர்களில் ஒளிந்து கொண்டன.

* * *—கீழ் "பிறவியென்னுங்கடலும் வற்றிப் பெரும்பதமாகின்றதால், இறவுசெய்யும் பாவக்காடு தீக்கொளீஇ வேகின்றதால்" என்று தம்முடைய விரோதிகள் ஒழிந்தமையையும் அபேக்ஷிதம் தலைக்கட்டினமையையும் அருளிச்செய்த ஆழ்வாரைநோக்கி எம்பெருமான், "ஆழ்வீர்! நீரொருவர் மாத்திரம்

பேறுபெற்றால் அது என்னுகும்? உம்மோடு ஸம்பந்தமுடையார்க்கும் விரோதி கழிந்தாலன்றே? நீர் பேறுபெற்றீராவது" என்ன, அதற்கு ஆழ்வார், "என் நாயனே! நான் உன்னுடைய பொருளாக வாய்ந்தபின்பு என்னைப்போல் நன்மைபெற்றார் இவ்வுலகில் யாரேனுமுண்டோ? என்னுடைய விரோதிகள் கழிந்ததன்றி என்னோடு ஸம்பந்தம் பெற்றாருடைய விரோதிகள் கழிந்ததுமன்றி, இங்காட்டிலுள்ளார் ரிஷிவருடையவும் விரோதிகளுமன்றே கழிந்தன; இதற்கு மேற்படவும் ஒரு நன்மையுண்டோ?" என்பதாய்ச் செல்லுகிறது, இப்பாட்டு.

எம்மனு—எம் மன்னு; தொகுத்தல். "எம்மனுயென் குலதெய்வமே" என்றும் ஒருபாடம், அப்போது 'எம் அனுய்' எனப்பிரியும். அனுய்—அன்னை என்பதன் விளி; தொகுத்தல்; எனக்குத் தாய்போலப் பிரியமே நடத்துமவனே! என்றபடி. ... ... (கூ)

466 கடல்கடைந்தமுதங்கொண்டு கலசத்தைநிறைத்தாப்போல் *
உடலுருகிவாய்திறந்து மடுத்துன்னைநிறைத்துக்கொண்டேன் *
கொடுமைசெய்யுங்கூற்றமும் என்கோலாடிகுறுகப்பெரு *
தடவரைத்தோட்சக்கரபாணீ சார்ங்கவிற்சேவகனே. (சு)

(அடியேன்)

தடவரை தோள் சக்கரபாணீ — பெரிய மலைபோன்ற தோள்களை யுடையவனும் திருவாழி யாழ்வானைத் திருக்கையிலுடையனுமானவனே!

சார்ங்கம் வில் சேவகனே — சார்ங்கத்தை வில்லாகக் கொண்ட வீரனே!,—

கடல் கடைந்து அமுதம் கொண்டு கலசத்தை நிறைத்தாப் போல் — திருப்பாற் கடலை (மந்தர மலையாகிற மத்தினால்) கடைந்து (அக்கடலினின்றும்) அம்ருதத்தை யெடுத்து கலசத்தில் (நீ) நிறைத்தது போல

உடல் உருகி வாய் திறந்து உன்னை மடுத்து நிறைத்துக் கொண்டேன் — உடல் உருகப் பெற்று வாயைத் திறந்துகொண்டு (ஆராவமுதாகிய) உன்னை உட்கொண்டு தேக்கிக் கொண்டேன்;

(இனி,)

கொடுமை செய்யும் கூற்றமும் என் கோல் ஆடி குறுகப் பெரு — கொடிய தண்டங்களை நடத்துமவனான யமனும் எனது செங்கோல் செல்லுமிடங்களில் அணுகவல்லவனல்லன்.

* * *—கடலிலிக்கடைந்தெடுத்த அமுதத்தைக் கலசத்தினுள் நிறைத்தவாறுபோல, உன்னை நான் என்னுள்ளே நிறைத்துக்கொண்டேன் என்கிறார் முன்னடிகளால். ஸம்ஸாரமாகிய கடலினுள் ஈச்வரனாகிற அமுதத்தைத் தேர்ந்தெடுத்து ஆத்மாவாகிற கலசத்தில் ஆழ்வார் நிறைத்துக்கொண்டனரென்க (சு)

467 பொன்னைக்கொண்டுரைகல்மீதே நிறமெழுவுரைத்தாற்போல் *
உன்னைக்கொண்டென்னுகம்பால் மாற்றின்றியுரைத்துக்கொண்டே *
உன்னைக்கொண்டென்னுள்வைத்தேன் என்னையுமுன்னிலிட்டேன் *
என்னப்பாவென்னிருடீகேசா என்னுயிர்காவலனே. (எ)

என் அப்பா — எனக்குத் தக்தையானவனே!

என் இருடீகேசா — எனது இந்திரியங்களை (உன்வசப் பட்டொழுகும்படி) நியமிக்க வல்லவனே!

என் உயிர் காவலனே — என் ஆத்மாவை (அந்யசேஷமாகாதபடி) காக்கவல்லவனே!

பொன்னை நிறம் எழ உரைகல் மீது கொண்டு உரைத்தால் போல — ஸுவர்ணத்தை நிறமறிய [நிறத்தைப் பரீக்ஷிப்பதற்காக] உரைகல்லில் இட்டு உரைப்பதுபோல

உன்னை என் நா அகம் பால் கொண்டு மாற்று இன்றி உரைத்துக் கொண்டேன் — (பரமபோக்யனான) உன்னை என் நாவினுட்கொண்டு மாற்று அழியும்படி உரைத்துக்கொண்டேன்,

உன்னை என்னுள் கொண்டு வைத்தேன் — (யோகிகட்கும் அரியனான) உன்னை என் நெஞ்சினுள் அமைத்தேன்;

என்னையும் உன்னில் இட்டேன் — (நீசனான) அடியேனையும் உனக்குச் சேஷப்படுத்தினேன்.

.* * *—கீழ்ப்பாட்டில், எம்பெருமானுக்கு அம்ருதத்ருஷ்டாந்தம் கூறினர், இப்பாட்டில் ஸ்வர்ணத்ருஷ்டாந்தங்கூறுகின்றனர். உலகத்தில் பொன்னைப் பரீக்ஷிக்க விரும்புமவர்கள், அதனை உரைகல்லில் இட்டுரைத்துப் பார்ப்பார்கள்; அதுபோல், பொன்போன்ற உன்னை, அப்சாரங்களில் மண்டின என் நாக்காகிற உரைகல்லில் இட்டு உரைத்தேன்; நல்லபொன்னைக்கெட்ட கல்லிலிட்டுரைத்தால் அப்பொன்னினுடைய மாற்றுக்குறைவதுபோல், நீ என்றன் சழக்கு நாக்கிலிட்டுரைக்கப்பட்டமையால் மாற்று அழியப்பெற்றாய் என்பது, முன்னடிகளின் கருத்து. நிறமேழு—நிறமறிவற்காக, என்றே பொருளாகும்; 'நிறமுண்டாம்படி' என்பது பொருளன்று. 'உன்னைக்கொண்டு, இத்யாதி இரண்டாமடி சைச்சியாநுஸந்தாநம். ஒருவராலும் துதிக்கவொண்ணாத விஷயத்தை ஒருவன் துதிக்கத் தொடங்குவது—அவ்விஷயத்தைத் தூஷிப்பதுபோலாகுமேயன்றி, பூஷிப்பதாக மாட்டாதானமபற்றி, மாற்றின்றி என்கிறார். இங்கு, இனிறி என்பதற்கு—'இல்லாமற்போம்படி' எனப் பொருள்கொள்ளவேணும். ... ... (சூ)

468 உன்னுடையவிக்கிரமம் ஒன்றுழியாமலெல்லாம் *
என்னுடையநெஞ்சகம்பால் சுவர்வழியெழுதிக்கொண்டேன் *
மன்னடங்கமழுவலங்கைக்கொண்ட இராமநம்பி *
என்னிடைவந்தெம்பெருமான் இனியெங்குப்போகின்றதே. (சூ)

மன் அடங்க (துஷ்ட) க்ஷத்ரியர்கள் அழியும்படி
மழு மழு என்னும் ஆயுதத்தை
வலம் கைக்கொண்ட வலக்கையில் ஏந்தியிராகின்றுள்ள
இராமன் பரசுராமனாய்த் திருவவதரித்த
நம்பி குணபூர்த்தியையுடையவனே!
உன்னுடைய விக்கிரமம் ஒன்று ஒழியாமல் எல்லாம் உன்னுடைய வீரச்செயல்களில் ஒன்றுதப்பாமல் எல்லாவற்றையும்
என்னுடைய நெஞ்சகம் பால் என்னுடைய நெஞ்சினுள்ளே
சுவர்வழி எழுதிக் கொண்டேன், சுவரில் சித்திரமெழுதுவதுபோல எழுதிக்கொண்டேன்;
எம்பெருமான் எமக்குத் தலைவனே!
என்னிடை வந்து என்பக்கலில் எழுந்தருளி
இனி போகின்றது எங்கு இனிமேல் போவதானது வேறு எவ்விடத்தைக் குறித்து?

"மல்லாண்ட திண்டோள் மணிவண்ணா" என்று தொடங்கி மல்லவதம் முதலிய சிறுச்சேவகங்களெல்லாம் என் நெஞ்சில் நன்கு அநுபவத்தேன் என்கிறார் "உன்னுடைய விக்கிரமம் எல்லாம்" என்னுமளவே போதுமாகிருக்க, "ஒன்றுழியாமல்" என்று விசேஷித்துக் கூறினமைக்குக் கருத்து என்னெனில்; வியாஸர், வான்மீகி முதலிய முனிவர்கட்கும் விஷயமாகாத விக்கிரமங்கள் தமக்கு விஷயமான படியைக் குறித்தவாறு; கீழ் இரண்டாம் பத்தில் ஏழாந்திருமொழியில் "சீமாலிதனவணேடு தோழமைக்கொள்ளவும் வல்லாய், சாமாறவனீ நீ பெண்ணிற் சக்கரத்தால் தலைகொண்டாய்" என்றருளிச்செய்த விருத்தாந்தமும், மூன்றும்பத்தில் பத்தாந்திருமொழியில், "எல்லியம்போ நினிறிருத்த விருந்ததோரிட வகையில், மல்லிகைமா மாலை கொண்டங்கார்த்தது மோரடையாளம்" என்றருளிச்செய்த விருத்தாந்தமும் மற்ற முனிவர்கட்கன்றி இவ்வாழ்வார் ஒருவர் தமக்கே ஞானவிஷயமாகினவாறு காண்க. (சூ)

469 பருப்பதத்துக்கயல்பொறித்த பாண்டியர்குலபதிபோல் *
திருப்பொலிந்தசேவடி யென்சென்னியின்மேற்பொறித்தாய் *
மருப்பொசித்தாய்மல்லடர்த்தாய் என்றுநின்றுன்வாசகமே *
உருப்பொலிந்தகாவினேனே உனக்குரித்தாக்கினையே. (எ)

பருப்பதத்து கயல் பொறித்த (மஹாமேரு பர்வதத்தில் (தன தது) மகரகேதனவை நாட்டின
பாண்டியர் குலபதி போல் பாண்டிய வம்சத்து அரசனைப்போல்,
திருப்பொலிந்த சேவடி என் சென்னியின் மேல் பொறித்தாய் என்று அழகு விளங்காகின்றுள்ள செந்தாமரைமலர்போன்ற திருவடிகளை என்தலையின் மீது (அடையாளமாக) நாட்டியருளினவனே! என்றும்,

மருப்பு ஒசித்தாய் என்று { குவலயாபீடத்தின் கொம்பை முறித்தவனே! என்றும்,

மல் அடர்த்தாய் என்று { மல்லரை நிரளித்தவனே! என்றும் (இவ்வாருன)

உன் வாசகமே { உனது செயல்களுக்கு வாசகமான திருநாமங்களின் அநுஸந்தாகத்தினாலேயே

உருபொலிந்த நாவி னேனே { தழும்பேறின நாக்கை யுடைய அடியேனே

உனக்கு உரித்து ஆக்கினையே { உனக்கு அநந்யார்ஹசேஷ னாக ஆக்கிக்கொண்டாயே.

* * *—பரமபதத்தை இருப்பிடமாகவுடைய எம்பெருமான் அங்கு நின்றும் இவர் பக்கலிலே வருமளவு முண்டான பாவக்காடுகளைப் பழாக்கியும், விரோதிகளைப் போக்கியும், இவருடைய சென்னித்தடரில் பாதவிலச்சினை வைத்தருளினமைக்கு ஒரு திருஷ்டாந்தம் காட்டுகிறார், முதலடியில். பாண்டிய குலத்துத் தலைவனாயிருந்த மலயத்வஜ ராஜன் தனது நாட்டில் நின்றும் மஹாமேருகிரியளவும் வழியிலுள்ள காடுகளைக்களைந்து, பகைவர்களைப்பாற்றித் தனக்கும் தனது பரிஜனங்களுக்கும் நடை எளிதாம்படி பெருவழி யாக்கிக்கொண்டு சென்று, தனது வெற்றி தோற்றும்படி அம்மேருகிரியின் சிகரத்தில் தனது மகரகேதுவை நாட்டிப்போயினனென்ற வரலாறு அறிக. பாண்டியர் குலபதி கயல்பொறித்த இடமாகிய பருப்பதத்தை இங்கு கூறியதனால், பெறுதற்கரிய இப்பேற்றைப் பெறுதற்காகத் தாம் ஒரு முயற்சியும் செய்திலர் என்பது போதரும். பொறித்தாய், ஒசித்தாய், அடர்த்தாய் என்ற மூன்றும் விளி. ''உருப்பொலிந்த'' என்று—எம்பெருமானைத் துதிப்பதனால் நாவுக்குப் பிறந்த புகர்ப்பைக் கூறியவாறுமாம். ''[உருப்பொலிந்த நாவினேனே.] செவ்வாய்க்கிழமையை 'மங்களவாரம்' என்னுமாபோலே விபரீதலக்ஷணை; இதர விஷயங்களிலேயிறே என் நாக்கு உருப்பொலிந்தது'' என்பது ஆன்றோருரைவாக்கியம்.

பகவத் ஸந்நிதிகளில் ஸ்ரீசடகோபன் ஸாதிக்கும்போது, இப்பாசுரத்தை அநுஸந்திப்பது ஸம்ப்ரதாயம். ... ... (எ)

470 அனந்தன்பாலுங்கருடன்பாலும் ஐதுநொய்தாகவைத்து * என்
மனந்தனுள்ளேவந்துவைகி வாழச்செய்தாயெம்பிரான் *
நினைந்தெனுள்ளேநின்றுநெக்குக் கண்களசும்பொழுக *
நினைந்திருந்தேசிரமந்தீர்ந்தேன் நேமிநெடியவனே (அ)

நேமி நெடியவனே { திருவாழியாழ்வானையுடைய ஸர்வாதிகனே!

எம்பிரான் { எனக்குப் பரமோபகாரக னானவனே!

அனந்தன் பாலும் { திருவனந்தாழ்வானிடத்திலும்

கருடன் பாலும் { பெரிய திருவடியினிடத்திலும்

ஐது நொய்தாக வைத்து { (அன்பை) மிகவும் அற்பமாகவைத்து

என் மனம் தன் உள்ளே { எனது ஹ்ருதயத்தினுள்ளே

வந்துவைகி வந்து பொருந்தி

வாழ செய்தாய் { (என்னை) வாழ்வித்தருளினாய்;

(இப்படி வாழ்வித்த உன்னை,)

என் உள்ளே நினைந்து நின்று { என் நெஞ்சில் அநுஸந்தித்துக்கொண்டு

நெக்கு { (அதனால்) நெஞ்சு சிதிலமாகப் பெற்று

கண்கள் அசும்பு ஒழுக { கண்களினின்றும் நீர் பெருகும்படி

நினைந்து இருந்தே { (நீ செய்த நன்றிகளை) அநுஸந்தித்துக்கொண்டே

சிரமம் தீர்ந்தேன் இளைப்பாறப் பெற்றேன்.

* * *—எம்பெருமான் தனது அந்தரங்க கிங்கரர்களான நித்யஸூரிகளனைவரிடத்தும் அன்பைக்குறைத்து, அவ்வன்பு முழுவதையும் தம்மொருவர் பக்கலில் அமைத்தருளின பரமோபகாரத்தைப் பேசுகின்றார், இப்பாட்டில். ''சென்றால் குடையாம்'' (2134) என்றபடி பலவகைப் பணிவிடைகளையுஞ் செய்யவல்ல திருவனந்தாழ்வானிடத்தும், உவந்தேறுகைக்குரிய பெரிய திருவடியிடத்துமே அன்பு குறைந்ததென்றால், மற்றையோரிடத்துக் குறையுமற்றது, கைமுதிக நியாயத்தாற் பெறலாகுமென்க. ஐது எனினும், நொய்து எனினும் அற்பமென்றே பொருள்; இங்கு ஒருபொருட் பன்மொழியாய், மிகவும் அற்பமாக' என்று பொருள்படும். ... ... (அ)

471 பனிக்கடலிற்பள்ளிகோனைப் பழகவிட்டோடிவந்து *
மனக்கடலில்வாழவல்ல மாயமணிளகம்பி *
தனிக்கடலேதனிச்சுடரே தனியுலகேயென்றென்று *
உனக்கிடமாயிருக்க என்னையுனக்குரித்தாக்கினையே. (கூ)

பனி கடலில் பள்ளி கோனை பழகவிட்டு — குளிர்ந்த திருப்பாற்கடலில் பள்ளிகொள்ளுதலைப் பழகியதாக விட்டு (மறந்து விட்டு)
ஓடிவந்து — (அங்கு நின்றும்) ஓடி வந்து
என் மனம் கடலில் வாழ வல்ல — என்னுடைய ஹ்ருதயமாகிற கடலில் வாழ வல்லவனும்
மாயம் மணிள கம்பி — ஆச்சரிய சக்தியை யுடையவனும் (பெரிய பிராட்டியார்க்குக்) கணவனும் குணபூர்ணனுமான எம் பெருமானே!
தனி கடல் என்று — ஒப்பற்ற திருப்பாற் கடலென்றும்
தனி சுடர் என்று — ஒப்பற்ற ஆதித்யமண்டலமென்றும்
தனி உலகு என்று — ஒப்பற்ற பரமபதமென்றும் (சொல்லப்படுகிற இவை)
உனக்கு இடம் ஆய் இருக்க — உனக்கு (ஏற்ற) வாஸஸ்தானமாயிருக்கச் செய்தேயும்
(அவற்றை உபேக்ஷித்துவிட்டு)
என்னை உனக்கு உரித்து ஆக்கினையே — (மிகவும் நீசனான) அடியேனை உனக்கு உரிய வாஸஸ்தானமாக அமைத்துக்கொண்டருளினையே! (இஃது என்ன ஸௌசீல்யம்!)

* * *—எம்பெருமான், தன்னை அநுபவிக்குமவர்களான நித்யஸூரிகளை உபேக்ஷித்துவிட்டு என்னிடத்து அன்பு பூண்டு, என்னையே போக்தாவாகக் கொள்ளவந்தான் என்றார், கீழ்ப்பாட்டில்; இப்பாட்டில், அவ்வெம்பெருமான் தன்னுடைய போக ஸ்தானங்களையும் உபேக்ஷித்துவிட்டு வந்து என் நெஞ்சையே தனக்கு உரிய இடமாக அங்கீகரித்தருளினனென்கிறார். ... ... (கூ)

472 தடவரைவாய்மிளிர்ந்து மின்னுத் தவளநெடுங்கொடிப்போல் *
சுடரோளியாய்நெஞ்சினுள்ளே தோன்றுமென்சோதிகம்பி *
வடதடமும்வைகுந்தமும் மதிள்துவராவதியும் *
இடவகைகளிகழ்ந்திட்டு என்பாலிடவகைகொண்டனையே. (ஙி)

தட வரை வாய் மிளிர்ந்து மின்னும் தவளம் நெடு கொடி போல் — பெரிய பர்வதத்தில் மிகவும் விளங்கா நின்றுள்ள பரிசுத்தமான பெரியதொரு கொடிபோல,
சுடர் ஒளி ஆய் என் நெஞ்சின் உள்ளே தோன்றும் சோதி நம்பி — மிக்க தேஜஸ் ஸ்வரூபியாய் என்னுடை ஹ்ருதயத்தினுள் விளங்கா நின்றுள்ள ஒளி மிகுந்த ஸ்வாமியான!,
வட தடமும் — வடதிசையிலுள்ள திருப்பாற்கடலும்
வைகுந்தமும் — வைகுந்தமும்
மதிள் துவராவதியும் — மதில்களையுடைய த்வாரகையும் (ஆகிற)
இடவகைகள் இகழ்ந்திட்டு — இடங்களையெல்லாம் உபேக்ஷித்துவிட்டு,
என்பால் இடவகை கொண்டனையே — என்னிடத்தில் வாஸஸ்தானத்தை புத்தியைப் பண்ணியருளினையே! (இஃது என்ன வாத்ஸல்யம்!)

* * *—கீழ்ப்பாட்டில் எம்பெருமான் திருப்பாற்கடல் முதலிய திவ்ய ஸ்தானங்களை மறந்து விட்டுத் தம்மிடம் போந்தபடியைப் பேசியருளினார்; ஒரு பொருளை மறதியினால் விட்டவர்கள் மீண்டு ஒருகால் அப்பொருள் கிடைவுக்கு வரும்போது அதனை அங்கீகரிப்பதுபோல, எம்பெருமானும் இப்போது திருப்பாற்கடல் முதலிய விடங்களை மறந்துவிட்டானேலும், பின்பொருகால் அவை கிடைவுக்குவரின், அவற்றை அங்கீகரித்தருள்வானன்றே? என்று சிலர் சங்கிப்பதாகக் கொண்டு, அச்சங்கைக்குப் பரிஹாரம் பிறக்குமாறு இப்பாட்டை அருளிச்செய்கின்றரென்க. "இடவகைகள் இகழ்ந்திட்டு" என்ற தில் நோக்கு. ... ... (ஙி)

473 வேயர்தங்கள்குலத்துதித்த விட்டுசித்தன்மனத்தே *
கோயில்கொண்டகோவலனைக் கொழுங்குளிர்முகில்வண்ணனை *
ஆயரேற்றையமர்கோவை அந்தணர்தமுதத்தினை *
சாயைபோலப்பாடவல்லார்தாமும் அணுக்கர்களே. (ஙக)

வேயர் தங்கள் குலத்துதித்த விட்டு சித்தன் மனத்து	வேயர்களுடைய வம்சத்தில் அவதரித்த பெரியாழ்வாருடைய ஹ்ருதயத்தில்	அமரர் கோவை	நித்யஸூரிகளுக்கு நிர்வாஹகனும்
கோயில் கொண்ட கோவலனே	திருக்கோயில்கொண்டெழுந்தருளியிருக்கிற கோபாலனும்,	அந்தணர்தம் அமுதத்தினை	(ஸநகர் முதலிய) மஹர்ஷிகளுக்கு அம்ருதம்போல் இனியனுமான எம்பெருமானை
கொழு குளிர் முகில் வண்ணனே	கொழுமையும் குளிர்ச்சியும் பொருந்திய மேகம் போன்ற நிறத்தையுடைய வனும்,	பாட வல்லார்தாம் சாயை போல	(இத்திருமொழியினால்) பாட வல்லவர்கள் நிழல்போல
ஆயர் ஏற்றை	இடையர்களுக்குத் தலைவனும்,	அணுக்கர்கள்	(எம்பெருமானை எப்பேர்தம்) அணுகியிருக்கப் பெறுவர்கள்.

ஈற்றடியில் ஒரு ஐதிஹ்யம்:—பண்டு எம்பெருமானர் திருக்கோட்டியூர் நம்பியைத் திருவடி தொழுவதற்கென்று அங்கு எழுந்தருளின காலத்தில், சிலர் எம்பார் என்ற ஆசிரியரிடம் வந்து "'சாயைபோலப் பாடவல்லார்' என்ற அடியின் கருத்தை அருளிச்செய்யவேணும்" என்று பிரார்த்திக்க, எம்பார், "எம்பெருமானரிடத்தில் இதன் பொருளை நான் கேட்டுணர்ந்ததில்லை; இப்போது அவரைக்கேட்டு உங்களுக்குச் சொல்லுவோமென்று பார்த்தால், அவர் திருக்கோட்டியூர்க்கு எழுந்தருளியிருக்கிறார்; ஆகிலும் நான் உங்களுக்கு இப்போதே சொன்னேனாகவேணும்" என்று, எம்பெருமானருடைய திருவடி நிலைகளையெடுத்துத் தம் திருமுடியின்மீது வைத்துக்கொண்டு, "இப்போது உடையவர் எனக்கு அருளிச்செய்தார், சொல்லுகிறேன் கேளுங்கள்" என்று, "அந்தணர்தம் அமுதத்தினைப் பாடவல்லார் சாயையபோல அணுக்கர்கள்" என அன்வயித்துப் பொருள் கொள்ளுங்கள்' என்றருளிச் செய்தனராம். தம்முடைய நிழல் தம்மைவிட்டு அகலாதவாறுபோல, எம்பெருமானைப் பாடுமவர்கள் அம்பெம்பெருமானைவிட்டு இறையும் அகலாது அவன்றனக்கே அத்தாணிச் சேவகராகப்பெறுவர் என்றவாறு. இனி, 'சாயைபோல—குளிர்தீதியுண்டாம்படி, பாடவல்லார் தாம்-, அணுக்கர்கள்' என்றும் சிலருரைப்பரென்ப. சாயை-வடமொழி. (கக)

அடிவரவு:—சென்னி பறவை ஏழ்மை கடல் பொன் உன் பருப்பதம் அனந்தன் பனி தட்டவரை வேயர் கூர்வழி.

பெருமாள்கோயில் ப்ரவாதிபயங்கரம்
அண்ணங்கராசாரியர் இயற்றிய
பெரியாழ்வார் திருமொழியுரை
முற்றுப்பெற்றது

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

எம்பெருமானர் திருவடிகளே சரணம்.

ஜீயர் திருவடிகளே சரணம்.



ஜகன்மோஹினி பிரஸ், சிங்கப்பெருமாள்கோவில்.

ஸ்ரீ :

சூடிக்கொடுத்த நாச்சியார் அருளிச்செய்த

திருப்பாவையின் தனியன்கள்.



பட்டர் அருளிச் செய்தது.

நீளாதுங்கஸ்தநகிரிதடஸுப்தமுத்போத்ய க்ருஷ்ணம்
பாராார்த்த்யம் ஸ்வம் ச்ருதிசதசிரஸ்ஸித்தமத்யாபயந்தீ
ஸ்வோச்சிஷ்டாயாம் ஸ்ரஜி நிகளிதம் யா பலாத்க்ருத்ய புங்க்தே
கோதா தஸ்யை நம இதமிதம் பூய ஏவாஸ்து பூய:.

நீளாதுங்க ஸ்தநகிரி தடஸுப்தம்	கப்பின்னைப் பிராட்டியினது உயர்ந்த திருமுலைத் தடங்களாகிற மலைச் சாரலில் கண் வளர்ந்தருளு மவனும்,
ஸ்வோச் சிஷ்டாயாம்	தன்னுல் சூடிக் களையப்பட்ட
ஸ்ரஜி	மாலையிலே
நிகளிதம்	விலக்கிடப்பட்டவனுமான
க்ருஷ்ணம்	கண்ணபிரானை
உத்போத்ய	திருப்பள்ளி யணர்த்தி
ச்ருதி சத சிரஸ் ஸித்தம்	பற்பல வேதங்களின் தலையான பாகங்களாலேதேறின [வேதாந்த ஸித்தமான]

ஸ்வம்	தன்னுடையதான
பாரார்த்த்யம்	பாரதந்திரியத்தை
அத்யாபயந்தீ	அறிவியா நின்றவளாய்
பலாத்க்ருத்ய	பலாத்காரம் செய்து
யா கோதா	யாவளொரு ஆண்டாள்
புங்க்தே	(அக்கண்ணபிரானை) அநுபவிக்கிறளோ
தஸ்யை	அப்படிப்பட்ட பெருமையையுடையவளான ஆண்டாளின் பொருட்டு
பூயோ பூய ஏவ	காலதத்துவ முள்ளதனையும்
இதமிதம் நம:	இந்த இந்த நமஸ்காரமானது
அஸ்து	ஆயிடுக.

* * *—கப்பின்னைப் பிராட்டியின் திருமுலைத்தடங்களில் தலைசாய்த்துக் கண்வளர்ந்தருளாநின்ற கண்ணபிரானைத் திருப்பள்ளியுணர்த்தி, அடிமைசெய்யும் விஷயத்தில் தனக்குள்ள ஆவலை அறிவித்துத் தன் குழலிற் சூட்டிய பூமாலையாலே அப்பிரானை விலக்கிட்டு அநுபவித்த ஆண்டாளைத் திருவடி தொழுகின்றேன் என்றவாறு.

(உய்யக்கொண்டார் அருளிச்செய்தது).

அன்ன வயற்புதுவை யாண்டா ளரங்கற்குப்
பன்னு திருப்பாவைப் பல்பதியம்—இன்னிசையாற்
பாடிக் கொடுத்தாள்நற் பாமாலை பூமாலை
சூடிக் கொடுத்தாளைச் சொல்.

அன்னம் வயல்	ஹம்ஸங்கள் (உலாவுகின்ற) வயல்களே யுடைய
புதுவை	ஸ்ரீவில்லிபுத்தூரில் (திருவவதரித்த)
ஆண்டாள்	'ஆண்டாள்' என்னுந் திருநாமத்தை யுடையவளும்
பன்னு	ஆராய்ந்து அருளிச் செய்யப் பட்ட
திருப்பாவை பல்பதியம்	திருப்பாவை யென்னும் பல பாசுரங்களே
இன் இசையால்	இனிய இசையடன்
பாடி	பாடி (அவற்றை)
அரங்கற்கு	ஸ்ரீரங்கநாதனுக்கு
நல் பா மாலை	விலக்ஷணமான பாமாலையாக
கொடுத்தாள்	ஸமர்ப்பித்தவளும்,
பூ மாலை	(செண்பகம் முதலிய) பூக்களினாலாகிய மாலையை
சூடி	(தான் முந்துறக் குழலிற்) சூடி,
கொடுத்தாளே	(பிறகு ரங்கநாதனுக்கு) ஸமர்ப்பித்தவளுமான கோதையை
இல்	அநுஸந்திக்கக் கடவை.

* * *—ஆண்டாள் அருளிச்செய்த திவ்வியப்பிரபந்தங்களே ஒதுவதிற் காட்டிலும் அவ்வாண்டாள் தன்னுடைய திருநாம ஸங்கீர்த்தனமே முக்கியமென்பது இப்பாட்டின் கருத்தாம்.

(இதுவும் அங்ஙனமே)

சூடிக் கொடுத்த சுடர்க்கொடியே தொல்பாவை
பாடியருளவல்ல பல்வளையாய்—நாடி நீ
வேங்கடவற் கென்னை விதியென்ற விம்மாற்றம்
நாங்கடவா வண்ணமே நல்கு.

சூடி கொடுத்த	பூமாலையைத் திருக் (குழலிற்) சூடி, (அதனை எம்பெருமானுக்கு) ஸமர்ப்பித்த
சுடர் கொடியே	தேஜோமயமான கொடி போன்றவளே !
தொல் பாவை	அகாதி ஆசாரவித்தமான நோன்பை
பாடி	(திருப்பாவை முகமாகக்) கூறி
அருள் வல்ல	(அடியார் திறத்துக்) கருணை புரிய வல்லவளும்
பல் வளையாய்	பலவளைகளே அணிந்துள்ள வளுமான கோதாய் !
நீ	நீ
நாடி	(மன்மதனை) நாடி
என்னை வேங்கடவற்கு விதி என்ற இம்மாற்றம்	("காமதேவா ! நீ என்னைத் திருவேங்கடமுடையானுக்கு வாழ்க்கைப்படுத்தவேணும்") என்று காமனைக் குறித்துக் கூறிய கூற்றை
நாம் கடவா வண்ணம்	யாம் மீறுதொழியுமாறு
நல்கு	அருள்புரிவாயாக.

* * *—இப்பாட்டால், நாச்சியார் திருமொழியில் மிக்க அன்பு எமக்குப் பிறக்கவேணுமென்பப் பிரார்த்தித்தவாறு. அதில் முதற்றிருப்பதிகத்தில் "அனங்கதேவா !, உய்யவுமாக்கொலோ வென்று சொல்லி யுன்னையு மும்பியையுக் தொழுதேன், வெய்யதோர் தழலுமிழ் சக்கரத்தை வேங்கடவற்கென்னை விதிக்கிற்றியே" இத்தியாதி பாசுரங்களினால், ஆண்டாள் காமனை வணங்கி, "வேங்கடவாணனுக்கு நான் வாழ்க்கைப்படுமாறு நீ விதிக்க வேணும்" என வேண்டினமை அறிக.

தனியன் உரை முற்றுப்பெற்றது.

ஆண்டாள் திருவடிகளே சரணம்.

சூடிக்கொடுத்த நாச்சியார் அருளிச்செய்த

திருப்பாவையின் உரை

அவதாரிகை.

* ஆழ்வார்கள் தாங்கள் ஸம்ஸாரத்திற் கிடந்துறக்காகிற்க, எம்பெருமான் தானேவந்து அவர்களை உணர்ந்த, பிறகு உணர்த்தனர் அவர்கள். ஆண்டாள் அங்ஙனன்றி மணத்துடன் மூளைக்கும் திருத்துழாய் போன்று எம் பெருமான் திறத்து ஆராதகாத்துடன் அவதரித்து இவள்தானே அவ்வெம்பெருமான் ஸந்நிதியிற் சென்று "உம்பர்கோமானே! உறக்காதெழுந்திராய்" என்று அவனை உணர்த்தினளாதலால் ஆழ்வார்களிலும் ஆண்டாளுக்குள்ள வைலக்ஷண்யம் சொல்லாற்கூறும்பரமன்று. அன்றியும், ஆடவரை ஆடவர்கண்டு காமுறுவதிற் காட்டிலும் பெண்டிர்கண்டு காமுறுதல் பள்ளமடையா யிருக்குமென்பது உலகத்து எளிதிலுணர்ந்த விஷயமாதலால், பகவத் விஷயத்தில் ஆழ்வார்களின் காமம்போல் மேட்டுமடையா யிருக்கையன்றியே இவ்வாண்டாளுடைய காமம் பள்ளமடையா யிருக்கையாகிற மற்றொரு வைலக்ஷண்யமும் உற்று நோக்கத்தக்கது. ஆழ்வார்கள் காமத்தின் மெய்ப்பாட்டுக்காகப் பெண்ணுடை உடுத்துப் பேசினர்கள்; இவட்கு அங்ஙன் ஆரோபித்துக்கொள்ளவேண்டிய ஆகாரமொன்றுமில்லையே.

இங்ஙனம் அமைந்த அதிசய விசேஷங்களுடன் வளர்ந்தருளாகின்ற சூடிக்கொடுத்த சுடர்க்கொடி ஒரு கொள்கொம்புடன் கூடவேண்டும் பருவமாய், அதற்குரிய ஞானபக்திகள் மீதூர்ந்து செல்லப்பெற்று "மானிட வர்க்கென்று பேச்சுப்படில் வாழகில்லேன்" என்று மாநுஷ காற்றத்தைப் பொறுக்கமாட்டாதே * அக்கைத்தலத் திடை யாழிகொண்டானவன் முகத்தன்றி விழியாதாளாய், ஸ்ரீவில்லிபுத்தூரில் எழுந்தருளியிராகின்ற வடபெருங் கோயிலுடையானுடனே தழுவி முழுசிப் பரிமாறப்பெறவேணுமென்று விரும்பிச்செல்ல, அவ்விருப்பத்திற்கிடாக கூடலளாயி முகங்காட்டாமையாலே மிகவும் மனம் நொந்து "இவ்வெம்பெருமானோடு கலவிபெற்றுக் களித்தார் ஆரேனுமுண்டோ?" என்று ஆராய்ந்த விடத்து, திருவாய்ப்பாடியிலுள்ள அஞ்சலகுக்குடி ஆயர் மங்கைகள் இவனுடன் கலந்து களிக்கப்பெற்றார்கள்" என்றுணர்ந்து, "அக்கலவி காலாந்தரத்தில் கடந்தொன்றுகையாலே அதில் நமக்கு அன்வயமின்றி யொழிந்தது; இனி, அவன் உலாவிப்போன அடிச்சுவடும் அவனும் பெண்களுமாகத் தினைத்த யமுனாநதியும், அவன் கோவைகாக்க எடுத்த கோவர்த்தனகிரியும் கிடந்தனவாகில், அவற்றைக் கொண்டாகிலும் தரிப்போம்" என்று அங்குச் செல்ல நினைக்க, பகவத் விரஹத்தாலே உடல் மெலிவற்ற இவ்வாண்டாள் அவ்வளவு செல்லமாட்டாதாளாய், "ஜனகராஜன் தன் மகளான சீதைக்கு விலிழற் என்று ஒரு அவதி வைத்தாப் போலவும் கும்பர் தன் மகளான நப்பின்னைப்பிராட்டிக்கு ஏறு தழுவுதல் என்று ஒரு அவதி வைத்தசப்போலவும் நம் சந்தை நமக்கு ஓர் அவதியும் கற்பிக்கவில்லையே! இனி காம் வாழ்வது எவ்வனேயோ?" என்று சிந்தித்துத் தளர்ந்திருக்க; அவ்வளவில் சில தார்மிகர்கள் — 'திருவாய்ப்பாடியிற் கண்ணபிரான் ஆயர்மங்கைகளுடன் † குரவைகோத்து விளையாடும்போது ஆனந்தரஸம் தலைப்பற்றி வாய்க்கொண்டு செல்ல, 'இனி நற்கேடு கெடலாகாது என்று அந்த ரஸம் மாறுகைக்காகக் கண்ணபிரான் பெண்களைப் பிரிந்து மறைந்திருக்க, அப்போது அப் பெண்பிள்ளைகள் தங்கள் ஆற்றுமையாலே, 'இனி எவ்வகையாலாயினும் காம் தரிக்கவேணும்' என்று ஓர் ஆய்ச்சி 'நான் காளியநாகத்தின் வலியை அட்ங்குகிறேன் காண்' என்பது, மற்றொருத்தி 'நான் தேநுகாஸுரனைத் தொலைத்தொழிகிறேன் காண்' என்பது, வேறொருத்தி நான் பூதனை முலையைச் சுவைத்துண்ணுகிறேன் காண் என்பதாய் இப்படி அனைவரும் தங்கள் கண்ணபிரான்போல அநுகாரஞ்செய்து ஒருவாறு துயர்தீர்ந்து தரித்தார்கள்" என்று ‡ சொல்லக்கேட்ட ஆண்டாள் தானும் அவ்வாய்ச்சிகளைப்போல் அநுகரித்துத் தரிக்கும்படியைக் கூறுவது, திருப்பாவை என்கிற இத்திவ்வியப் பிரபந்தம்.

அவதாரிகை முற்றுப்பெற்றது.

ஆண்டாள் திருவடிகளே சரணம்.

---

† இக்குரவைக்கூத்து வடமொழியில் ராஸக்ரீடை என வழங்கும். அஃதாவது கண்ணபிரான் பலதிருவருக் கொண்டு ஒவ்வொரு ஆய்ச்சியின் பக்கத்திலும் ஒவ்வொரு கண்ணனாகின்று ஆடுவதொரு கூத்து.

‡ ஸ்ரீவிஷ்ணுபுராணம்—ஐந்தாவது அம்சத்தில் பதின்மூன்றாமத்தியாயத்தில் இது கூறப்பட்டுள்ளமை காண்க.

ஸ்ரீ:

திருப்பாவை.

மார்கழித்திங்கள் மதிநிறைந்தநன்னாளால் *
நீராடப்போதுவீர் போதுமினேநேரிழையீர் *
சீர்மல்குமாய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள் *
கூர்வேற்கொடுந்தொழிலன் நந்தகோபன்குமரன் *
வரார்ந்தகண்ணி யசோதை யிளஞ்சிங்கம் *
கார்மேனிச்செங்கண் கதிர்மதியம்போல்முகத்தான் *
நாராயணனே நமக்கேபறைதருவான் *
பாரோர்புகழப்படிந்தேலோரெம்பாவாய். (க)

சீர் மல்கும்	செல்வம் நிறைந்துள்ள
ஆய்ப்பாடி	திருவாய்ப்பாடியில்
செல்வம் சிறுமீர்காள்	கைங்கர்ய ஸம்பத்தையும் இளம் பருவத்தையுமுடைய பெண்காள்!
கேர் இழையீர்	விலக்ஷணமான பூஷணங்களே அணிந்துள்ளவர்களே!
மார்கழி நீங்கள்	(மாதங்களிற் சிறந்த) மார்கழி மாஸமும்
மதி நிறைந்த நல் நாள்	பூர்ண சந்திரோதயத்தையுடைய (சுக்கில பக்ஷத்திய) நல்லநாளும் (நமக்கு வாய்த்திராநின்றன.)
கூர் வேல்	கூர்மைபொருந்திய வேலாயுதத்தையுடையவனும்
கொடு தொழிலன்	(கண்ணபிரானுக்குத் தீங்கு செய்யவரும் க்ஷத்ரியர்களுக்கு) கொடுமைத் தொழிலைப் புரியுமவனுமான
நந்தகோபன்	நந்தகோபனுக்கு
குமரன்	பிள்ளையாய்ப் பிறந்தவனும்,
வர் ஆர்ந்த கண்ணி	அழகு நிறைந்த கண்களையுடையளான
அசோதை	யசோதைப்பிராட்டிக்கு
இள சிங்கம்	சிங்கக்குட்டி போலிருப்பவனும்,
கார் மேனி	காளமேகத்தோடொத்த திருமேனியையும்
செம் கண்	செந்தாமரைப் பூப்போன்ற திருக்கண்களையும்
கதிர் மதியம் போல் முகத்தான்	ஸூர்யனையும் சந்திரனையும் போன்ற திருமுகத்தையுமுடையனுமான
நாராயணனே	ஸ்ரீமந் நாராயணன் தானே
நமக்கே	('அவனுல் பேறு' என்றிருக்கிற) நமக்கே
பறை	பறையை
தருவான்	கொடுக்குமவனுயிராநின்றான்.
ஆல்	ஆதலால்,
பாரோர்	இவ்வுலகத்தவர்கள்
புகழ	கொண்டாடும்படி
படிந்து	(இந்நோன்பிலே) ஊன்றி
நீர் ஆட போதுவீர்	நீராட வர விருப்பமுடையீர்களே!
போதுமின்	வாருங்கள்;
எல் ஓர் எம்பாவாய்!	

* * *—ஆயர் சிறுமிகள் "நாம் நோன்பு நோற்பதற்கிடாக நமக்கு இங்ஙனே விலக்ஷணமானதொரு காலம் நேர்பட்டபடி என்!" என்று காலத்தைக் கொண்டாடி, மார்கழி நீராட்டத்தில் விருப்பமுடைய பெண்களே விளிக்குமாறு கூறுவது, இப்பாட்டு.

நெடுநாள் சிறையிற் கிடந்தவன், அதினின்றும் விடுபட்டுச் சுற்றத்தாருடனே கூடப் பெற்றநாளில் "கீழ்க்கழிந்த நாள்களைப்போலன்றியே இற்றைநாளின் வைலக்ஷண்யமிருந்தவாறு என்கொல்!" என்று அந்நாளே முந்துறக் கொண்டாடுவதுபோல், நெடுநாளாக நிலவறைகளில் அடைபட்டுக் கண்ணபிரானேட்டைக் கலவியை இழந்துகிடந்த இவ்வாயர் சிறுமியரும்

தாங்கள் க்ருஷ்ணனோடு ஸம்ச்லேஷிக்குமாறு வாய்த்தவரென்று அந்தரீ முதலடியிற் கொண்டாடுகின்றனர். பகவத்கீதையிற் கண்ணபிரான் "மாஸங்களனைத்தினுள்ளும் மார்கழி மாதமாகிறேன் நான்" என்று இம்மாதத்திற்குள்ள விறுபாடு தோற்ற அருளிச் செய்தமையால் அம்மாதம் வாய்க்கப்பெற்றவர்கள் அதனைக் கொண்டாடாதிருக்க வல்லரல்லரே. இராமபிரானை முடிசூட்டப் பரிந்து முயன்றபோழ்து வளந்தருதலில் முதன்மையான மாதம் தன்னடையே நேர்பட, அதனை அங்குக் கொண்டாடினாற்போல், இவர்களும் நோன்பு நோற்கமுயலத் தன்னடையே வாய்த்த மார்கழி மாதத்தை நினைந்து நெஞ்சு கனிகின்றனர். இடைத்தலைவர்கள் குளிர்க்கு அஞ்சிப் புறப்படமாட்டாத மாதமுமாதலால் கொண்டாட்டத்திற்குக் குறையில்லையே.

நற்காரியங்கள் செய்ய விரும்பினோர்க்குச் சாஸ்திரங்களில் விதிக்கப்பட்ட சுக்லபக்ஷமும் இவர்கட்கு நினைவின்றி வாய்த்தபடியால், அதனையுங் கொண்டாடுகின்றனர் மதிநிறைந்த நன்னாள் என்று. ஒருவரை ஒருவர் முகங்கண்டு அநுபவித்தற்கும், எல்லாருங்கூடிச் சென்று கண்ணபிரானை உணர்த்துவதற்கும் பங்காக நிலா நேர்பட்டமையால் மகிழ்ச்சி மிக்கது. இவர்கள் கண்ணபிரானோடு ஸம்ச்லேஷிப்பதற்கு ஊரார் விரோதிகளாயிருக்குங்காலத்தில் * "நந்த கோபாலன் கடைத்தலைக்கே நள்ளிருட்கண் என்னையுய்த்திடுமின்" என்று நள்ளிருளை வேண்டுவர்கள்; இப்போது அங்ஙனன்றி க்ருஷ்ண ஸம்ச்லேஷத்திற்கு ஊராரே இசைந்து நின்றமையால் இருளை வெறுத்து நிலவைக் கொண்டாடுகின்றனரென்க. கீழ்க்கழிந்த நாட்களெல்லாம் தீயவையென்று தோன்றும், இப்போது நன்னாள் என்றமையால்.

நெடுநாளாகக் கண்ணபிரானைப் பிரிந்திருந்தமையாற் பிறந்த தாபமடங்கலும் தீருமாறு நீராடவிருப்பமுடையீர்! வாருங்கள் என்று அழைப்பது, இரண்டாமடி. இங்கு, நீராட எனக் கூறியது, "கண்ணபிரானோடு கலவிசெய்ய" எனக் கூறியவாறு; தமிழர், கலவியைச் "சுனையாடல்" "புனலாடல்" என்னுமாற்றாற் கூறுவர்.

"பெற்றேன் வாய்ச்சொல் இறையும் பேசக்கேளாள் பேர்பாடித் தண் குடந்தை நகரும் பாடிப், பொற்றூமரைக் கயம் நீராடப் போனாள் பொருவற்ற னென்மகள் உம்பொன்னு மஃதே" என்ற திருமங்கையாழ்வார் பாசுரமுங் காண்க.

ஒருவர்க்கொருவர் தோழிகளாயிராநின்ற இவர்கள் "குளிக்கவாருங்கள்" என்று அழைக்கலாமாயிருக்க, "நீராடப்போதுவீர்" என்று கௌரவந்தோற்றக் கூவினமையால், பகவத் ஸம்பந்த முள்ளவர்கள் எவராயிருப்பினும் கௌரவிக்கப்பட வேண்டியவரே யென்று கூறப்பட்டதாயிற்று. "கள்ளவிழ் சோலைக் கணபுரம் கைதொழும், பிள்ளையைப் பிள்ளையென் றெண்ணப் பெறுவரே." என்றார் திருமங்கையாழ்வாரும்.

அற்பபலமாகிய சுவர்க்காநுபவத்திற்கு உறுப்பாகக் கூச்மாண்டகணஹோமம் முதலிய அரிய கருமங்கள் செய்யவேண்டும்; மீட்சியின்றி வைகுந்தமாநகர் புகுவதற்கேதான பகவத் ஸங்கத்திற்கு அபேக்ஷா மாத்திரமே போதும்; வேறு ஒருவகையதிகாரமும் வேண்டா என்பது, "போதுவீர்! போதுமினே" என்ற சொற்போக்காற் போதரும். பெறுகிற பேற்றிற்கு ஏற்ற ஸாதநமில்லாமையால் 'இச்சைமாத்திரமே போரும்' என்கிறதென்க. ஏதுமிச்சம் பழங்கொண்டு மன்னனைக்கண்டு ராஜ்யம் பெற்றார்க்கு அந்தப்பழம் ஸாதநகோடியிற் புகமாட்டாதவாறு போல, இவ்விச்சையும் ஸாதநமாக வகையில்லை என்பதுமிங்கு உணரத்தக்கது. போதுவீர், போதுமினே—'வருகிறவர்களெல்லாரும் வாரும்' என்பதுபோல.

'கண்ணபிரான் நம்மை எப்போது அணைத்துக்கொள்ள வருவனே' என்று ஆய்ச்சிகளனை வரும் என்றுமொக்க ஆபரணம் பூண்டிருத்தலால், "நேரிழையீர்" என விளிக்கப்பட்டனர். 'எம்பெருமானேடு ஸம்ச்லேஷிக்க வாருங்கள்' என்று இவர்கள் விளித்தவுடனே உவப்பினால் அவர்களது மேனி ஆபரணம் பூண்டாற் போலாயிற்றென்பது உள்ளுறை.

ஏற்கனவே பால் நெய் முதலியவற்றுற் சீர்மை பொருந்திய திருவாய்ப்பாடியில் திருநாட்டுத் தலைவனை கண்ணபிரான் வந்து பிறந்தமையால், "சீர்மல்குமாய்ப்பாடி" என்பப்பட்டது. பரத்துவம் மாத்திரம் பொலியநிற்கும் பரமபதம் போலன்றி, ஸௌசீல்ய ஸௌலப்யாதி ஸகல குணங்களும் சாலவிளங்குமிடமிதுவாதலால் சீர்மல்கச் சொல்லவேண்டாவே.

எம்பெருமானிடத்து அன்புடைமைக்கு மேற்பட்ட செல்வம் ஆத்துமாவுக்கு இலதாதலாலும், தண்டகாரணிய வாசிகளான முனிவர் இராமபிரானது ஸௌந்தர்யாதிசயத்தில் ஈடுபட்டு அன்புமிகுதியாற் பெண்மை விரும்பி மற்றொரு பிறப்பில் ஆயர்மங்கையராய்க் கண்ணனைக் கூடினரென்பவாதலாலும் "செல்வச் சிறுமீர்காள்" என விளிக்கப்பட்டதென்க.

எறும்பு முதலிய சிற்றுயிர்களின் சாவுக்கு அஞ்சிப் பசும்புல்லிற் காலை ஊன்றவைத்து நடந்தறியாத நந்தகோபன் கண்ணனை மகனைப் பெற்றபின்பு அவனிடத்துப் பரிவுமிகுதியால் கொட்டிற்கீழ் ஓர் சிற்றெறும்பு ஊர்ந்தாலும் அதனைக் கொல்வதென்று எப்போதுங் கூரிய வேலுங்கையுமாயிருந்தமை பற்றிக் "கூர்வேற் கொடுந்தொழில" னைக் கூறப்பட்டனன். உலகிற் சிறுவர்கள் தந்தையர் பால் அஞ்சி நிற்பதும், தாய்மார்பால் அடங்காதொழிவதுமாயிருத்தல் போலக் கண்ணபிரானும் நந்தகோபனுக்குக் கோற்கீழ்க்கன்றாகவும், யசோதைப் பிராட்டிக்குச் சிங்கக்குருகாகவு மிருந்தமைபற்றி "நந்தகோபன் குமரன்," "அசோதை யிளஞ்சிங்கம்" எனப்பட்டது. செருக்கிலும் மேனிப்பிலும் கண்ணனுக்குச் சிங்கம் உவமையாமென்க. "அழுகையுமஞ்சி நோக்குகை நோக்குமணிகொள் செஞ்சிறுவாய் நெளிப்பதுவும், தொழுகையுமிவை கண்டவசோதை தொல்லையின்பத்திறுதிகண்டாளே" என்றபடி—கண்ணனது திவ்விய சேஷ்டிதங்களைக் கண்டகளிப்பின் மிகுதியால் யசோதைக்குக் கண்கள் அலர்ந்து அழகுமிக்குத் தோற்றுமாறுபற்றி "ஏராரந்தகண்ணி" என அவட்கு அடைமொழி கொடுக்கப்பட்டது.

கண்ணபிரானது திருமேனியைக் காண்டலுமே கார்முகிலைக் கண்டாற்போல் ஸகல தாபங்களும் தீர்வதுபற்றிக் "கார்மேனி" எனப்பட்டது. "ஆற்றிலிருந்து விளையாடுவோங்களைச், சேற்றுலெறிந்து வளைதுகிற் கைக்கொண்டு, காற்றிற் கடியனுயோடியகம்புக்கு, மாற்றமுந் தாரானென்று முற்றும் வளைத்திறம் பேசானென்று முற்றும்" என்றபடி—இவன் பொறுக்கொணாத் தீம்புகளைப் போரச்செய்யினும், வடிவழகை நினைக்குங்கால் விடமாட்டாது மேல் விழுந்து அநுபவிக்கைக்கு உரித்தாயிருத்தலால், "கார்மேனிச் செங்கண் கதிர்மதியம் போல் முகத்தான்" என அழகிலீடுபட்டுக் கூறுகின்றனர். திருமுகமண்டலத்தின் ஒளிக்குக் கதிரவனும், குளிர்ச்சிக்குத் திங்களும் உவமையென்க. இப்படிப்பட்ட அழகு பொருந்தியவன் அற்புருடனுயிருக்கையன்றியே நமக்கு வகுத்த நாயகனுமாயிராநின்ரு னென்கிறார்கள்—நாராயணனே என்பதனால்.

நாராயணனே என்றவிடத்து ஏகாரம் பிரிநிலைப் பொருளதாய், [பிரிநிலை—அவதாரணம்] நாராயணன் அடியார்க்குக் காரியஞ் செய்யுமிடத்துச் சாதனங்களை யெதிர்பாராது செய்து தலைக்கட்டுபவன் என்பதை உணர்த்தும். நமக்கே என்றவிடத்து ஏகாரமும் அப்பொருட்டாய்,

நாராயணன் ஸர்வ ஸாதாரண ஸ்வாமியாயினும், ஆகிஞ்சந்யம், அநந்யகதித்வம் என்னு மதிகாரங் களமைந்த நமக்கன்றி மற்றையோர்க்குக் காரியம் செய்யான் என்பதைத் தெரிவிக்கும்.

பறை என்பது நோன்புக்கு அங்கமானதொரு வாத்ய விசேஷம். இவ்வாய்ச்சிகள், மேல், "மாலே மணிவண்ணா" என்ற பாட்டில் அபேக்ஷித்தபடி கண்ணபிரான் பறைதரப்புக, அதுகண்ட இவர்கள் "சிற்றஞ்சிறுகாலே" என்கிற பாசுரத்தில், "இற்றைப் பறைகொள்வா னன்றுகாண் கோவிந்தா, எற்றைக்கு மேழேழ்பிறவிக்கு முன்றன்னே, டுற்றோமே யாவோ முனக்கே நாமாட் செய்வோம், மற்றை நங்காமங்கள் மாற்று" எனக் கூறினமையால், பறை, பறை என்று சொல்லிக்கொண்டு போவது நாட்டார்க்கு ஒரு வியாஜமாத்திரமேயாய், அதன் உள்ளுறை கைங்கரிய விருப்பம் என்பது விளங்கும். அக்கைங்கரியத்தைத் தாமாகவே செய்ய இவர்கட்குப் பிராப்தி உளதாயினும் "ஏவ மற்றமராட் செய்வார்" என்றபடி எதிர்த்தலையின் நியமனங்கொண்டு செய்வதே ஸ்வரூபத்துக்குச் சேருமென்னும் ரஹஸ்யார்த்தம், "பறை தரு வான்" என்பதனாற் பேசதரும். *ஸ்வயம் து ருசிரே தேசே க்ரியதாமிதி மாம் வத* என்ற இளையபெருமாள் பிரார்த்தித்தவாற்றை நோக்குக.

கண்ணபிரானையும் ஆயர்மங்கைகளையும் நெடுநாள் பிரித்திருந்த ஆய்த்தலைவர் இன்று கூட்டியது—நோன்பு நோற்று மழை பெய்விக்கவாதலால், இவர்களது நோன்பினால் மழை பெய்யர் தொழியில் அவர்கள் இவர்களை இகழக்கூடும்; மழை பெய்யில் "ஆ! பெண்கள் நேர்ந்தபடி என்கொல்; மழைபெய்தபடி என்கொல்!" என்று புகழக்கூடும்: அப்புகழ் உண்டாகவேணு மென்னும் விருப்பத்தைக் காட்டுகின்றனர், பாரோர் புகழ என்பதனால். புகழ என்றது—மகிழ என்றபடியுமாம்.

பகவத் கைங்கரியத்தில் ருசியுடைய பாகவதர்கள், பகவத் குணானுஸந்தானத்தினால் "காலாழும் நெஞ்சழியுங் கண் சுழலும்" என்றபடி எழுந்திருக்க வல்லமையற்று ஸ்தப்தராய்க் கிடக்கும் பாகவதர்களைக் கைங்கரியத்திற்கு அழைத்தல் இதற்கு உள்ளுறைபொருள். "மார் கழித் திங்கள்" என்று—ஸத்துவகுணம் நிறம்பெறும்படியான கால விசேஷத்தைக் கூறியவாறு. "மதிநிறைந்த நன்னாள்" என்று—ஆசிரியனுடைய அருளடியாக ஸ்வரூப வுணர்ச்சி பெற்று எம்பெருமானுடைய விஷயீகாரத்திற்கு இலக்காகப் பெற்ற நாளைக்கூறியவாறு. "அன்று நான் பிறந்திலேன் பிறந்தபின் மறந்திலேன்" என்றபடி—பிறந்தநாள் இதுவாதலால் அதனைக் கொண் டாடுகிறபடி *ஏஷ ப்ரஹ்ம ப்ரவிஷ்டோஸ்மி க்ரீஷ்மே சீதமிவ ஹ்ரதம்* என்று பகவத் ஸமா ச்ரயணத்தைப் புனலாடலோடொக்கக் கூறினமையால் "நீராடப் போதுவீர்" என்று—'பக வத் ஸமாச்ரயணம் பண்ண வாருங்கள்' என்கிறது. "போதுவீர் போதுமினே" என்கையால் —பவித்ரபாவியாய் நீராடுதல், மூக்கைப்பிடித்தல், ஸங்கல்பம் செய்துகொள்ளல் முதலிய அங்க களாபங்கள் இதற்கு வேண்டாவென்கிறது. ஞானபக்தி வைராக்யம் முதலிய குணங்களே ஆத்து மாவுக்கு அலங்காரமாதலால், அக்குணமுடைமை கூறுகிறது "நேரிழையீர்" என்று. எம்பெரு மானது எளிமை முதலிய குணங்கள் பரமபதத்தளவுஞ் சென்று அலையெறியும்படி பொங்கா நிற் கப்பெற்ற நிருப்பதிகளில் பகவதநுபவத்திற்குப் பாங்கான அபிநிவேசமுடைய அநந்யார்ஹ சேஷபூதர்களை விளிப்பது, மூன்றுமடி. அந்யசேஷத்வமும் ஸ்வஸ்வாதந்திரியமும் இல்லாதாரைக் குறிப்பது, சிறுமீர்காள் என்பது. மங்களாசாஸநபரரான ஆசாரியர்கட்கு விதேயனுயிருப்பவன் எம்பெருமான் என்பதைக் கூறுவது, நான்காமடி. பூர்ணமான ஞானத்தை விளக்கக் கடவ தும், "குலந்தருஞ் செல்வந்தந்திடும்" என்றபடி ஸகலாதிசயங்களையும் தக்கடவதுமான பெரிய திருமந்திரத்தில் தனது வீறுபாடு தோற்ற விளங்குபவன் எம்பெருமான் என்பதைக் கூறுவது,

ஐந்தாமடி. கண்—ஞானம். திருமந்திரம் தாயாகச் சொல்லப்படுவதனால், இங்கு "அசோதை" என்று திருமந்திரத்தைக் குறித்தவாறும். மந்திரம் எம்பெருமானைத் தன் கருவிலே வைத்துக் கொண்டு எல்லாருமறியலாம்படி பிரகாசிப்பிக்குந் தன்மையுடைமை பற்றித் தாயாகக் கூறப் படுதல் பொருந்துமென்க. ஆச்ரயணீயனுடைய போக்யத்வஞ் சொல்லுகிறது, ஆறாமடி. அடியார்க்கு அணுகத்தக்கவனையும், அல்லாதார்க்குக் கிட்டவொண்ணாதவனையு மிருப்பன் எம்பெரு மான் என்பதை விளக்கும், "கதிர்மதியம்போல் முகத்தான்" என்பது. அவ்வெம்பெருமானிடத்தன்றி மற்றையோரிடத்து யாம் பேறுபெறக் கடமைப்பட்டிலோ மென்பதைக் காட்டுவது, ஏழாமடி. பகவதாச்ரயணத்தினால் நமக்கு அளவற்ற புகழ் உண்டாகுமென்கிறது, "பாரோர் புகழ" என்பது. இனி, இந்நடையில் அவரவர்கள் மநிவைகித்திரிக்கேற்ப ஸ்வாப தேசார்த்தங்களை உய்த்துணர்க.

[ஏலோரெம்பாவாய்.] இத்தொடர்மொழிக்குத் தனித்தனியே பொருள் ஆராயப்புகுதல் வேண்டா; வென்றவர் முன்னே தோற்றூர் "தடம் பொங்கத்தம் பொங்கோ" என்பது முதலியவை போல், நோன்பு நோற்கப் புக்கவர் "ஏலோரெம்பாவாய்" என்ற மகுடத்தினைப் பாசுரங் கூறுவது மரபு எனக்கொள்க.

மார்கழி—மார்க்கசீர்ஷமென்னும் வடசொற் சிதைவு. திங்கள்—சந்திரன்; அமாவாசைக்கு அமாவாசை ஒரு மாதமெனக்கொண்டு சந்திரசம்பந்தத்தாற் காலத்தை வரையறுக்கும் சாந்திரமான ரீதிபற்றி, திங்கள் என்று மாதத்திற்குப் பெயர் வழங்கலாயிற்று; இலக்கணை. முதலடி யிறுதியில் ஆல்—'ஆதலால்' என்பதன் சிதைவு; அசையுமாம். போதுவீர், போதுமின்—"போதருவீர், போதருமின்" என்பவற்றின் மரூஉ என்னலாம். சீர்—ஸ்ரீ. மல்குதல்—விஞ்சியிருத்தல். சிறுமீர்காள்—'சிறுமியர்காள்' என்பதன் விளி. (க)

வையத்துவாழ்வீர்காள் நாமும்நம்பாவைக்கு *
செய்யுங்கிரிசைகள் கேளீரோ * பாற்கடலுள்
பையத்துயின்ற பரமனடிபாடி *
நெய்யுண்ணேம்பாலுண்ணேம் நாட்காலேநீராடி *
மையிட்டெழுதோம் மலரிட்டு நாமுடியோம் *
செய்யாதனசெய்யோந் தீக்குறளைசென்றோதோம் *
ஐயமும்பிச்சையு மாந்தனையுங்கைகாட்டி *
உய்யுமாறெண்ணி யுகந்தேலோரெம்பாவாய். (உ)

வையத்து வாழ்வீர்காள்	இப் பூமண்டலத்தில் வாழ்ந்திராநின்றுள்ளவர்களே!
நாமும்	(எம்பெருமானுலேயே பேறு என்ற அத்யவஸாயமுடைய) நாமும்
உய்யும் ஆறு எண்ணி	உஜ்ஜீவிக்கும் வழியை ஆராய்ந்து,
பால் கடலுள் பைய துயின்ற பரமன் அடி பாடி	திருப்பாற்கடலில் அவதாகத்துடன் கண் வளர்ந்தருளாகின்ற பரமபுருஷனுடைய திருவடிகட்கு மங்களாசாஸனம் பண்ணி
ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி	(ஆசார்யாதிகளுக்கு இடுகையாகிற) ஐயத்தையும், (ஆர்த்தர்கட்கு இடுகையாகிற) பிக்ஷையையும் சக்தியுள்ள வளவும் இட்டு
உகந்து நம் பாவைக்கு செய்யும் கிரிசைகள் கேளீர்	மகிழ்ந்து நமது நோன்புக்கு(அங்கமாகச்) செய்யவேண்டிய க்ரியைகளை காதுகொடுத்துக் கேளுங்கள்.
நாம்	நோன்பு நோற்கத் தொடங்கினோம்

நெய் உண்ணேம்	நெய் உண்ணக் கடவோமல்லோம்;	செய்யாதன	(மேலைத் தலைவர்கள்) செய்யாதவற்றை
நாட்காலே நீர் ஆடி	விடியற்காலத்திலேயே ஸ்நானஞ் செய்துவிட்டு	செய்யேம்	செய்யக் கடவோமல்லோம்;
மை இட்டு எழுதோம்	(கண்ணில்) மையிட்டு அலங்காரம் பண்ணக் கடவோமல்லோம்;	தீ குறளை	கொடிய கோட்சொற்களை
மலர் இட்டு முடியேம்	(குழலில்) பூ வைத்து முடிக்கக் கடவோமல்லோம்;	சென்று ஓதோம்	(எம்பெருமானிடத்துச்) சென்று கூறக் கடவோமல்லோம்;

எல் ஓர் எம்பாவாய் —

* * * —ஒரு விசேஷகாரியத்தில் ஒருப்பட்டவர்கள் அக்காரியம் தலைக்கட்டுமளவும் சிலவற்றைப் பரிஹரிக்க வேண்டுமென்றும் சிலவற்றைப் பற்றவேண்டுமென்றும் அந்த விடுபற்றுக்களை முதலில் ஸங்கல்பித்துக்கொள்ள வேண்டுமென்றும் சாஸ்திரங்களிற் கூறியுள்ளதனால், அதற்கேற்ப, நோன்பு ஆகிற விசேஷகாரியத்தில் ஒருப்பட்ட இவ்வாயர்மங்கைகள் தாங்கள் விடுமவற்றையும் பற்றுமவற்றையும் ஸங்கல்பிக்கிறார்கள், இப்பாட்டில்.

பரற்கடலுள் பையத்துயின்ற பரமனடிபாடுகை, நாட்காலே நீராடுகை, ஐயமும் பிச்சையுமாந்தனையுங் கைகாட்டுகை ஆகிற இம்மூன்றும் செய்யப்படுமவை. நெய்யுண்ணுமை, பாலுண்ணுமை, மையிட்டெழுதாமை, மலரிட்டுமுடியாமை, செய்யாதன செய்யாமை, தீக்குறளை சென்றோதாமை என்பன விடப்படுமவை. "உண்ணேம், செய்யோம், ஓதோம்" என்ற தன்மைப் பன்மை வினைமுற்றுக்கள் ஸங்கல்பத்தைக்காட்டுமவை. "செய்யுங் கிரிசைகள் கேளீரோ" என்றாற்போலவே "விடுங்கிரிசைகள் கேளீரோ" என்றுஞ்சொல்லவேண்டாவோவென்னில்; வேண்டா; விடுகையென்பதும் செய்யுங் கிரிசையினுள் அடங்கக்கூடுமாதலின் எனவே, "செய்யுங் கிரிசைகள்" என்ற ஒரு சொற்போக்கிற்றானே விடுபற்றுக்களிரண்டும் வெளியாயினவென்க.

வாழ்ச்சிக்கு நிலமல்லாத இருள் தருமா ஞாலத்தில் வாழ்வதென்பது நெருப்புச் சட்டியில் தாமரை பூப்பதையொக்குமாதலால், இங்ஙன் வாழப்பிறந்தவர்களின் பெருமை என்னே! என வியந்து 'வையத்து வாழ்வீர்காள்' என விளிக்கின்றனர். நீர்மை மேன்மை முதலிய குணங்களனைத்தும் விளங்குமாறு கண்ணபிரான் அவதரித்த ஆய்ப்பாடியிற் பிறவியின் மிக்க வாழ்ச்சியில்லையே. கண்ணபிரானுடைய விருப்பத்திற்கு இலக்காகமாட்டாத மூடாண்களாய்ப் பிறத்தல், பருவங்கழிந்த பெண்களாயிருத்தல் செய்யாதே ஒத்தபருவத்திற் பெண்களாயிருக்குமவர்களின் வாழ்ச்சி பேச்சுக்கு நிலமல்லவென்க.

நாமும் என்றவிடத்து உம்மைக்குக் கருத்தென் எனில்; ஸ்வாமிக்குப் பாரதந்த்ரமான ஸ்வம் பேற்றுக்காகத்தானே ஒருப்பாவுந்தி பண்ணுகைக்கு உரிமையற்றதாயிருக்க, ருசி இருந்தவிடத்தில் இருக்கவொட்டாமையாலே பதறிச் செல்லுகின்றமையைக் காட்டும். "ஆறெனக்கு நின் பாதமே சரணெத் தந்தொழிந்தாய்" "நாகணை மிசை நம்பிரான் சரணே சரண் நமக்கு" என்றிருக்கையாகிற அநந்யோபாயத்வத்தைக் குலைக்கவல்ல செயல்களில் நோன்பும் ஒன்றுதலால் அது ஆத்மாவுக்கு அப்ராப்தகரும மெனப்படுகிறது. ஆகில் அப்ராப்தகாரியத்தில் இவர்கள் கைவைப்பது ஸ்வரூபவிருத்தமேயன்றே வென்னில்; அன்று; "அப்ராப்த விஷயங்களிலே ஸக்தனனவன் அது லபிக்கவேணுமென்றிராதிருந்தால் ப்ராப்தவிஷய ப்ரவணனுக்குச் சொல்லவேண்டாவிறே; அநுஷ்டானமும் அநநுஷ்டானமும் உபாய கோடியில் அந்வயியாது. அநந்யோ

பர்யத்வமும் அநந்யோபேயத்வமும் அநந்யதைவத்வமும் குலையும்படியான ப்ரவ்ருத்தி காணு நின்றேமிறே. ஜ்ஞாநவிபாக கார்யமான அஜ்ஞாநத்தாலே வருமவையெல்லாம் அடிக்கழஞ்சு பெறும். உபாயபலமாய் உபேயாந்தர்ப்பூதமாயிருக்குமது உபாயப்ரதிபந்தகமாகாது" இத்தி யாதி ஸ்ரீவசநபூஷண ஸூக்திகளையும் அவ்விடத்து வியாக்கியான வாக்கியங்களையுங் கண்டு தெளிக.

இந்த்ரஜித்து முதலியவர்கள் எம்பெருமானையும் அவனடியாரையும் அழிக்கைக்குச் செய்த யாகம் போலன்றியே, ப்ரயோஜநாந்தரங்களை விரும்பிச்செய்யும் வ்ரதங்கள் போலுமன்றியே க்ருஷ்ணனும் க்ருஷ்ணவிபூதியும் ஸித்திபெறுதற்குச் செய்யும் நோன்பு இது என்ற வாசியைக் காட்டுகிறது, "நம் பாவைக்கு" என்ற சொற்போக்கு.

செய்யுங் கிரிசைகள் என்றது–சேதநராகையாலே பேறு கைபுகுமளவும் காலக்ஷேபத்துத்துக் குறுப்பாகச் செய்யும் செயல்கள் என்றபடி. "பெருந்தெருவே ஊராரிகழினும் ஊராதொழியேன் நான் வாரார்பூம் பெண்ணைமடல்" என்று மடலெடுப்பதாகக் காட்டிவிட்டவளவே போலன்றி அநுஷ்டாந பர்யந்தமாகச் செய்கிற நோன்பு இது என்பதைக் காட்டும், செய்யும் என்ற சொற் போக்கு.

'பெண்களையும் கிருஷ்ணனையும் நெடுநாள் கடுமையாகப் பிரித்துவைத்த இவ்வாய்ப்பாடியில் இங்ஙனே ஒரு சேர்த்தியுண்டானவாறு என்கொல்!' என்றும், 'இவ்விருள் தருமாஞாலத்தில் பகவத்விஷயத்தை அநுபவித்தற்கு இத்தனை பேர் திரள்வது என்ன விசித்ரம்!' என்றும் வியந்து மரம் மலை முதலியன போல ஸ்தப்தராய் மயங்கிக் கிடக்குமவர்களைத் துடைதட்டி யெழுப்பு வாரைப்போல் "கேளீர்" என்று துடைதட்டி உணர்த்துகிறார்கள். அந்யபரத்வத்தைத் தவிர்க் கைக்காகவன்றே சொல்நடுவில் கேளீர் என்னவேண்டுவது.

'பசுக்களுக்கு மேய்ச்சல் வாய்த்தால் அப்போது கிடைப்பனவற்றை யெல்லாம் விரைந்து உட்கொண்டு பின்னர் லாவகாசமாக அசையிடுவதுபோல, பகைவர் பரம்பினை இப்பாடியில் க்ருஷ்ணஸம்ச்லேஷத்திற்கு வழிபிறந்த இந்நாளிற் செய்யவேண்டியவற்றைச் சடக்கெனச் செய்துவிட்டுப் பின்பு லாவகாசமாக இருந்து நெஞ்சார மகிழவேண்டும்; அன்றி இப்போது மேற்காரியத்திற் பதற்றமற்று 'இங்ஙனே வாய்த்தவாறு என்னே!' என்றுற்போலச் சிலபேசிக் கொண்டு மகிழ்ந்து மயங்கி ஸ்தப்தைகளாய் நின்றால் க்ருஷ்ணநுபவத்துக்கென்று வாய்த்த அற்ப காலமும் பழுதேகழியும்; இந்நாளுநாளுங் கடந்தால் க்ருஷ்ணனெங்கே, நாம் எங்கே' என்றி ருக்குமவர்களாதலால் "செய்யுங் கிரிசைகள் கேளீரோ" எனப் பதற்றந்தோற்றக் கூறுகின் றனர். அவர்கள் கேட்கைக்கு உடன்பட்டவாறே சொல்லத் தொடங்குகின்றனர் 'பாற்கடலுள்' என்பது முதலாக.

இடர்ப்பட்டாரை இன்பக்கடலில் ஆழ்த்துவதை இயற்கைத் தொழிலாகவுடைய எம் பெருமான், தாமரைமலர் வேண்டி வானத்தே நிற்பவன்போற் * சேணுயர் வானமாகிற வைகுந்த நாட்டிலிருந்தாற் காரியமாகாதெனக் கருதி, ஆர்த்தர்களின் கூச்சல் செவிப்படுமாறு இவ்வண்டத்திற்குட்பட்ட திருப்பாற்கடற்கெழுந்தருளி அங்கு * உறங்குவான்போல் யோகு செய்து பெருமானிருப்பன் என்னும் வரலாறு அறிக. அங்குப் பிராட்டிமார் போகத்தில் திரு வுள்ளமூன்றுது ஆர்த்தரக்ஷணத்தில் அவஹிதனாயிருக்குமாற்றைக் கூறும், பைய என்னுங் குறிப்பு "வினையெச்சம் ஒரு மாணிக்கத்தைத் தகட்டிலழுத்தினால் அது மிக்க புகர்பெற்றுத் தோற்றுமாறுபோல, எம்பெருமான் திருப்பாற்கடலில் திருவனந்தாழ்வான்மேற் சாய்ந்த பிறகு

இருமேனியிற்புகர் நிறம்பெற்றுப் பரம புருஷனெனத் தெற்றென விளங்குமாறிருக்குந் தன்மையை உளப்படுத்திப் பரமன் என்றனர். அன்றி, ஆர்த்தரக்ஷணத்தில் ஆவல்கொண்டு வாளுடையும் விட்டு வருகையாகிற குணவிசேஷத்தால் வந்த மேன்மையை உளப்படுத்திக் கூறுகின்றனரெனினு மொக்கும். எம்பெருமானுடைய மேன்மையை நினைத்தவாறே தங்களுடைய தாழ்மையும் தன்னடையே நினைவுக்கு வருமாதலால், பின்பு அவனை எத்துகையே பணியாதல்பற்றி அடிபாடி என்றனர்.

எல்லாவகைகளாலும் விஞ்சின மேன்மையையுடைய கண்ணபிரானடியைப் பாடி என்ன வேண்டியிருக்க, அங்ஙன் சொல்லாது, திருப்பாற்கடல் நிலைமையைப் பாடுவதாகச் சொல்லுகிறவிதற்குக் கருத்து யாதெனில்; "கிருஷ்ணனையும் நம்மையும் நோக்கிப் பண்டே அதிசங்கை கொண்டிருக்கிற இடையர், நமக்குத் தெய்வம் தந்த இச்சேர்த்தியைச் சீறி அழிக்கிற் செய்வ தென்?" என்னுமச்சத்தினால் கண்ணனடி பாடுவதாகக் கூறுகின்றிலரெனக்கொள்க. * ஏஷ நாராயண: ஸ்ரீமாந் க்ஷீரார்ணவ நிகேதந:—நாகபர்யங்க முத்ஸ்ருஜ்ய ஹ்யாகதோ மதுராம் புரீம்" என்னும் பிரமாணத்தை அவ்விடையர் அறியாரென நினைத்தனர்போலும்.

"உண்ணுஞ்சோறு பருகுநீர்த் தின்னும் வெற்றிலையு மெல்லாங் கண்ணன்" என்றபடி ஸகல போக்யமயனை எம்பெருமான்றனடி பாடுதலேயே உண்கையாக நினைக்கும் உறுதி இவர்கட்கு உளதாதலால், வேறு உணவில் விருப்பமொழியுமாறுபற்றி, நெய்யுண்ணேம் பாலுண்ணேம் என்கிறார்கள். உண்டார்க்கு உண்ணவேண்டாவே. 'நெய்குடியோம், பால்குடியோம்' என்னவேண்டியிருக்க, 'நெய் உண்ணேம், பால் உண்ணேம்' என்றது சாதிப்பேச்சு. ஆனது பற்றியே 'நெய்யுண்டான், பாலுண்டான்' என்று கண்ணபிரானுக்குப் பேர் வழங்குவதும். அன்றியே, திருவாய்ப்பாடியிற் கண்ணபிரான் பிறந்தபின்னர் நெய் பால் முதலியவற்றை ஒருவரும் கண்டறியாதாராய்ப் பேர் மாத்திரத்தைக் காதிற் கேட்டுள்ளவர்களாய், அவை உண்ணத்தகுந்தவையோ, குடிக்கத் தகுந்தவையோ வென்பதையும் ஆராய்ந்தறிந்திலராதலால், 'அவை உட்கொள்ளப் படுமவை' என்னுமளவையேகொண்டு "நெய்யுண்ணேம் பாலுண்ணேம்" என்கிறார்களென்று ரஹஸ்யாகவமருளிச் செய்வர். "அடிபாடி நெய்யுண்ணேம்" என்ற சொற்போக்கால் அடிபாடுவதற்கு முன்னே நெய்யும் பாலும் தாரகமாயிருந்தனவாயினும் அடி பாடப்பெற்றபின்னர் "எல்லாங்கண்ணன்" என்றிருக்கும் நிலைமை வாய்த்தமை தோற்றுமென்பர்.

நோன்பு நோற்கைக்கு அங்கமாகவும் விரஹதாப மாறுகைக்காகவும் குளிக்கும்படியைச் சொல்லுகிறது, காட்காலே நீராடி என்று. சக்ரவர்த்தித் திருமகன் நாடுதுறந்து காடுசென்றபின் பரதாழ்வான் "இராமபிராணைக் காட்டுக்கு ஓட்டிய பாவிகாண் இவன்" என்னும் உலகநிந்தைக்கு அஞ்சி ஒருவர் கண்ணுக்கு மிலக்காகாதபடி பொழுதுவிடியுமுன்னமே சாயுங்காலத்தில் நீராடி வந்தாற்போல், இவர்களும் ஸ்வப்ரவ்ருத்தி பரத்வ ப்ராகாசநப்ரயுக்தமான லோககர்ஹைக்கு அஞ்சி ஒருவராலுங் காணவொண்ணாதபடி பின்னாளிற்றானேபோய் நீராட நினைக்கிறார்கள், காட்காலே என்று.

இந்திரியங்களுள் பிரதானமான கண்களுக்கு, "காணுதார்கண்ணென்றுங் கண்ணல்ல கண்டாமே" என்றபடி எம்பெருமானை அநுபவிக்கையொழிய வேறு பேறு இலதாதலால் அப்பேறு வாய்க்குமுன் அக்கண்களை அலங்கரிக்கக்கடவோமல்லோம்; "நின்பாதபங்கயமே தலைக்கணியாய்" "தாள்கண்டு கொண்டென் தலைமேற் பூவைத்தேனே" என்றபடி எம்பெருமானை

றனிணையடிகளைப் புனைதலே தலைக்குப் பேறுதலால் அப்பேறு பெறுதற்குமுன் தலையை அலங்கரிக்கக்கடவோமல்லோ மென்கிறார்கள், ஐந்தாமடியால்.

ஒரு காரியம் பிரமாணங்களில் அநுஷ்டேயமாகச் சொல்லப்பட்டிருப்பினும் சிஷ்டாநுஷ்டானமின்றி யொழியில் அது விடத்தக்கதேயாமென்னும் ஸம்ப்ரதாயார்த்தத்தை வெளியிடும், செய்யாதன செய்யோம் என்பது. தசரத சக்ரவர்த்தியின் கட்டளையாலும் பெருமாள் நியமனத்தாலும் பரதாழ்வான் அரசாளுகைக்கு உரியனாயிருந்தும் அங்ஙன் ஆளாதொழிந்தது மூத்தாரிருக்க இளையார் முடிசூடுகை பூர்வாநுஷ்டானத்திற்குச் சேராதென்னும் நினைவாலன்றே. ஆபஸ்தம்பராலும் * தர்மஜ்ஞஸமய: ப்ரமாணம் வேதாச்ச * என்று சிஷ்டாநுஷ்டானமே முதற் பிரமாணமாகக் கூறப்பட்டமை அறியத்தக்கது. இனி, இவர்கள் நோன்பு நோற்கையாகிறவிது சிஷ்டாநுஷ்டான ஸித்தமோ? எனில்; ஆம்; பூர்வமீமாம்ஸையில் ஹோளாதிகரணங்ஙாயத்தை ஆராய்ந்துணர்க. (ஹோளாவாவது வஸந்தோத்ஸவம்; இதனை ஹோளாஹமெனவுங் கூறுவர். இது பங்குனி மாதத்துப் பௌர்ணமாஸிக்கடுத்த ப்ரதிபத்தில் ஒருவர் மேல் ஒருவர் மஞ்சணீர் தெளித்துச் செய்யப்படும் உத்ஸவம்; இது சிஷ்டாசாரஸித்த மென்னுமிடம் அவ்வதிகரணத்தில் நிஷ்கர்ஷிக்கப்பட்டது. அதுபோலவே இந்நோன்பும் சிஷ்டாசாரஸித்தமெனக்கொள்க; "மார்கழி நீராடுவான் மேலையார் செய்வனகள் வேண்டுவன கேட்டியேல்" என்று மேலுங் கூறுவர்.)

தோழிமார் ஒருவர்க்கொருவர் உரையாடும்போது "பேய்ப்பெண்ணே" என்றும், "நாயகப் பெண்பிள்ளாய்" என்றும் பலவகையாக விளிப்பர்களாதலால், 'அவளைக் கௌரவப்படுத்தினள், என்னை லாகவப்படுத்தினள்' எனச்சீறி எம்பெருமான் பக்கலிற்சென்று ஒருவர் மேலொருவர் குற்றங்குறை கூறுதல் கூடாதென்று தம்மிலே தாம் ஸங்கேதித்துக் கொள்ளுகின்றனர், தீக்குறளை சென்றோதோம் என்று. ஒரு விஷயத்தில் அதிகரித்தவர் தீயசொற்களைச் சொல்வதைத் தவிர வேண்டுமென்று விதியாதலால், அவ்விதிக்கிணங்கச் சங்கற்பித்துக் கொள்கின்றனரென்க. "பேய்ப்பெண்ணே!' என்று வையவுங் கடவோம்; 'நாயகப் பெண்பிள்ளாய்!' என்று காலிலே விழவுங்கடவோம்; அவன் செவிப்படுத்தோம்; பத்துமாஸம் சுற்றுமிருந்து ராக்ஷஸிகள் பண்ணின தர்ஜந பர்த்ஸநாதிகளை யெகாந்தத்திலும் பெருமாளுக்கு விண்ணப்பஞ் செய்யாத பிராட்டியைப்போலே" என்ற ஆழ்வியர்ப்படி அருளிச்செயல் இங்கு அறியத்தக்கது.

யோக்ய புருஷர் விஷயத்திலும் ஆசார்ய விஷயத்திலும் உரிய காலங்களில் பஹுமாநத்துடன் வெகுவாக ஸமர்ப்பிக்குமது ஐயம்; "தேஹி" என்று அர்த்தியாநின்ற பிக்ஷுக்கள் விஷயத்தில் ஆதரத்துடன் பரிமிதமாக ஸமர்ப்பிக்குமது பிச்சை. இவ்விரண்டையும் இயன்றவளவு செய்யக்கடவோ மென்கிறார்கள், ஏழாமடியில். ஆந்தனையும் என்றது ஆமளவுமென்றபடி; சக்தியுள்ளவளவும் என்க 'இந்நோன்பு ஆந்தனையும்' என்று உரைப்பாருமுளர். "அவர்கள் கொள்ளவல்லாரந்தனையும்" என்று மூரைப்பர். கைகாட்டி என்ற சொல் நயத்தால் எவ்வளவு கொடுத்தாலும் 'நாம் என்ன கொடுத்துவிட்டோம்' என்றே நெஞ்சிலோட்ட வேணுமென்பது போதருமென்ப.

உள்ளுறைபொருள் :—எம்பெருமானையே ஸர்வபோக்யமுமாகக் கொள்ளவேண்டுமென்கிறது, நெய்யுண்ணுமித்யாதியால். வர்ணாச்ரமங்கட்கு உரிய, நித்யகருமங்கள் குறையற அநுஷ்டிக்கக்கடவன வென்கிறது, "நாட்காலே நீராடி" என்பதனால். மை கண்ணுக்கு ப்ரகாசகமாகையாலே ஆத்மயாதாத்மிய ப்ரகாசகமான ஜ்ஞாநயோகத்தில் அந்வயிக்கலாகாதென்றும்,

மல்லிட்டு முடிகை ஸ்வபோகரூபமாகையாலே பக்தியோகத்தைச் சொல்லிற்றாய், அதில் அந்வயிக்கலாகாதென்றுங் கூறுகின்றது ஐந்தாமடி. "நாம் முடியோம்" என்கையாலே பகவத்-ப்ராப்தி ஸாதனங்களான ஞானயோக பக்தியோகங்களில் நாமாக அந்வயியாதொழிகையே வேண்டுவது; அவன்றானே இவ்வாத்ம வஸ்துவை அநுபவிக்கும்போது ஞானபக்திகளிரண்டையுந் தந்து 'இவற்றை நீ தவிராதொழிய வேணும்' என்றால் செய்யலாவதில்லை யென்னுமிடம் தோற்றும். இனி "மையிட்டெழுதோம்" என்பதனால் ஐச்வர்யத்தில் ஆசை கொள்ளக்கடவோமல்லோமென்றும், "மலரிட்டு முடியோம்" என்பதனால் ஆத்மாநுபவமாகிற கைவல்யத்தில் ஊன்றக்கடவோமல்லோ மென்றுஞ் சொல்லுகிறதெனவுங் கூறக் குறையில்லை. எம்பெருமான் வாத்ஸல்யாதிகுண யுக்தனாகிலும் "வேதம் வல்லார்களேக்கொண்டு விண்ணோர்பெருமான் திருப்பாதம் பணிந்து" என்றபடி பாகவதரை முன்னிட்டல்லது ஆச்ரயிக்கலாகாதென்பதைக் காட்டும், "செய்யாதன செய்யோம்" என்பது. பிறர்க்கு அநர்த்தத்தை விளைக்கவல்ல பொய்சொல்லலாகாதென்கிறது, "தீக்குறளே சென்றோதோம்" என்றது. ஐயமாவது—பகவத் வைபவம்; பிச்சையாவது—பாகவத வைபவம்; இவை இரண்டையும் தானறிந்தவளவும் பிறர்க்கு உபதேசிக்க வேண்டுமென்கிறது. பகவத் ஸங்கிதியில் பாகவத வைபவத்தையும், பாகவத ஸங்கிதியில் பகவத் வைபவத்தையும் யதாசக்தி கூறவேண்டுமென்க. (உ)

ஓங்கியுலகளந்த வுத்தமன்பேர்பாடி *
நாங்கள் நம்பாவைக்குச் சாற்றி நீராடினால் *
தீங்கின்றி நாடெல்லாந் திங்கள்மும்மாரிபெய்து *
ஓங்குபெருஞ்செந்நெ லூடுகயலுகள *
பூங்குவளைப்போதிற் பொறிவண்டுகண்படுப்ப *
தேங்காதேபுக்கிருந்து சீர்த்தமுலைபற்றி
வாங்க * குடம்நிறைக்கும் வள்ளற்பெரும்பசுக்கள் *
நீங்காதசெல்வம் நிறைந்தேலோரெம்பாவாய். (ங)

ஓங்கி	(மஹாபலி வார்த்த நீர் கையில் விழுந்தவாறே) ஆகாசத்தனவும் வளர்ந்து
உலகு அளந்த	(மூன்று) லோகங்களையும் (திருவடிகளாலே தாவி) அளந்துகொண்ட
உத்தமன் பேர்	புருஷோத்தமனுடைய திருநாமங்களை
நாங்கள்	(பிரயோஜநாந்தரத்தை விரும்பாத) நாங்கள்
பாடி	(ப்ரீதிக்குப் போக்குவீடாகப்) பாடி
நம் பாவைக்கு சாற்றி	நம் நோன்புக்கென்று சங்கற்பித்துக்கொண்டு
நீர் ஆடினால்	நீராடினால்
நாடு எல்லாம்	தேசமெங்கும்
தீங்கு இன்றி	(அதிவிருஷ்டி, அநாவ்ருஷ்டி ஆகிற) தீங்கு ஒன்றுமில்லாமல்
திங்கள் மும்மாரி பெய்து	மாதந்தோறும் மூன்று தாரம் மழை பெய்ய (அதனால்)
ஓங்கு பெரு செந் நெல் ஊடு	ஆகாசத்தளவும் வளர்ந்து பெருத்துள்ள செந்நெற் பயிர்களின் நடுவே
கயல் உகள	மீன்கள் துள்ள
பூ	அழகிய
குவளை போதில்	நெய்தல் மலரில்
பொறிவண்டு	மிக்க புகரையுடைய வண்டுகளானவை
கண் படுப்ப	உறங்க,
புக்கு	(மாட்டுத் தொழுவிற்) புகுந்து
தேங்காதே இருந்து	சலியாமல் பொருந்தியிருந்து

சீர்த்த முலை பற்றி வாங்க	(பசுக்களின்) பருத்த முலைகளை (இரு கையாலும்) பிடித்து வலிக்க	பெரும் பசுக்கள்	பெரிய பசுக்களானவை
		நீங்காத செல்வம் நிறைந்து	நீங்காத ஸம்பத்து நிறையும் படி
வள்ளல் *	(எல்லார்க்கும் கட்டி அடிக்க லாம்படி விதேயமாயிருக்கை யாகிற) உதார ஸ்வபாவ முடைய	குடம் நிறைக்கும்	(பால் வெள்ளத்தாலே) குடங்களை நிறைக்கும்.
			எல் ஓர் எம் பாவாய்!—.

* * *—உலகத்தில் சுவர்க்கத்தை முக்கியமான பேருகக்கொண்டு ஜ்யோதிஷ்டோமயாகஞ் செய்பவற்கு, ஆயுஸ்ஸு, ஸந்தாநம் என்று சில அவாந்தரபலங்களும் உடன் கூடும்; இவ்வாயர் மங்கைகள் எம்பெருமானையே எல்லாவகைப் பயனுகவும் உள்ளத்துக் கொண்டுள்ளவர்களாதலால் அவ்வெம்பெருமானெழிய வேறொருபயனையும் விரும்பமாட்டார்கள்; ஆயினும் இவர்கள் விரும்ப வேண்டுவதொன்றுண்டு; அதாவது தாங்கள் நோன்பு நோற்குமாறு அநுமதி அளித்தவர்கட்குச் சில ஸம்ருத்திகளை ஆசாஸிக்கை. அஃது இப்பாட்டிற் செல்லும். * யத்ராஷ்டாக்ஷரஸம்ஸித்தோ மஹாபாகோ மஹீயதே—தத்ர ஸஞ்சரிஷ்யந்தி வ்யாதி துர்பிக்ஷதஸ்கராः* என்று திருவெட்டெழுத்து வல்லாரொருவனிருந்த நாடு ஸம்ருத்தமாயிருக்கு மென்னுமின்றுல் இத்தனை மஹாநுபாவைகளிருக்கும் நாடு ஸம்ருத்தமாகச் சொல்லவேண்டாவே.

முதற் பாட்டில் "நாராயணனே" என்பதனுல் எம்பெருமானுடைய உபயவிபூதி நாதத்வஞ் சொல்லப்பட்டது; இரண்டாம்பாட்டில், "பாற்கடலுள் பையத்துயின்ற பரமன்" என்பதனுல் அவதாரார்த்தமாகத் திருப்பாற்கடலில் வந்து சாய்ந்தபடி சொல்லப்பட்டது. இப்பாட்டில் "ஓங்கியுலகளந்த உத்தமன்" என்பதனுல் அவதரித்தருளினபடி சொல்லப்பட்டது. உலகங்களைக் காப்பதற்காகத் திருப்பாற்கடலிற் சாய்ந்தபோது ஆர்த்தரக்ஷணம் பண்ணப் பெருமையாலே எம்பெருமான் பனிப்பட்டுச் சாய்ந்த மூங்கில் போலக் குன்றி, அம்மூங்கில் இரவியின் கதிர்படக் கிளம்புமாறுபோல, இவனும் மாவலிவார்த்த நீர் கையிற் பட்டவாறே கிளம்பினபடியைக் கூறுவது "ஓங்கியுலகளந்த" வென்பது.

மஹாபலிசியன்னும் அஸுராராஜன் தன் வல்லமையால் இந்திரன் முதலிய யாவரையும் வென்று மூன்று உலகங்களையும் தன் வசப்படுத்தி அரசாண்டு செருக்குக்கொண்டிருந்த பொழுது, அரசிழந்த தேவர்கள் திருமாலைச் சரணமடைந்து வேண்ட, அப்பெருமான் குள்ளவடிவான வாமநாவதாரங்கொண்டு அம்மாவலியினிடஞ் சென்று தன் காலடியால் மூவடி மண் வேண்டி அது கொடுத்தற்கு அவன் இசைந்தவுடனே திரிவிக்கிரமனுய் ஆகாசத்தை அளாவி வளர்ந்து ஓரடியாற் பூலோகத்தையும், மற்றோரடியால் மேலுலகத்தையும் அளந்து மூன்றுமடிக்காக அவன்முடியிற் காலை வைத்து அவனைப் பாதாளத்திலழுத்தி யடக்கின வரலாற்றை உணர்க.

"இவன் இன்று செல்வனுயினன்" என்றுல், நேற்றுவரை தரித்ரனுயிருந்தமை தன்னடையே விளங்குவதுபோல், இங்கு "ஓங்கி உலகளந்த" என்றமையால், கீழ் வாமநனுயிருந்தமை தன்னடையே போதருமென்க. இங்கு, உத்தமன் என்றதற்குக் கருத்து யாதெனில், அதமாதமன், அதமன், மத்யமன், உத்தமன் என்று உலகில் பிராணிகள் நால்வகைப்பட்டிருப்பார்கள்; பிறரை நலிந்து தன் வயிறு வளர்ப்பவன் அதமாதமன்; பிறரும் வாழ்ந்தால் வாழட்டுமென்றிருப்பவன் அதமன்; பிறரும் வாழவேணும், நாமும் வாழவேணுமென்றிருப்பவன் மத்ய

மன்; 'தான் கெட்டும் பிறரை வாழ்விக்குமவன் உத்தமன். (தானுங்கெட்டுப் பிறரையுங் கெடுப்பவனுடைய வகுப்பு அறிவரிது) எம்பெருமான் தன் வடிவைக் குறுகச் செய்வதும், பிறர் பாற்சென்று இரப்பதுமாகிய கேடுகளைத் தானடைந்தும் இந்திரன் முதலிய தேவர்களை வாழ்வித் தமைபற்றி, இங்கு உத்தமனாகக் கூறப்பட்டனனென்க.

இப்போது உலகளந்த அபதானத்தைக் கூறுவதற்குக் காரணம் யாதெனில்; 'என் முடி மேல் அடிவைக்கவேணும்' என்று ஒருவரும் வேண்டாதிருக்கச் செய்தேயும் விலக்காமையையே பற்றுசாகக்கொண்டு அவர் முடியிலு மடியிட்டருளின எம்பெருமான் இன்று இரந்துவேண் டும் நமது காரியத்தைத் தலைக்கட்டாதொழியான் என்னுங் கருத்துத் தோன்றவென்க.

உலகளந்தருளினவன்று சிலர் கழஞ்சுமண் பெற்றுக் களித்தொழிந்தனர்; சிலர் கழஞ்சு மண் இழந்து வருந்தி யொழிந்தனர்; இவ்வளவேயொழிய, அவ்வபதானத்திற்குப் பல்லாண்டு பாடினர் யாருமிலராதலால் அக்குறைதீர இன்று இவர்கள் பாடவேணுமென்று பாரிக்கின்றனர் "உத்தமன் பேர்பாடி" என்று. தங்களுக்கு ப்ரயோஜநாந்தரத்தில் ப்ராவண்யமில்லாமையை நாங்கள் என்பதனாலும், தமது நோன்பு மற்றையோர் நோன்பிற் காட்டிலும் விலக்ஷணமென்பதை "நம் பாவைக்கு" என்பதனாலும் விளக்குகின்றனர். "பாவைக்குச் சாற்றி" என்றது—"பாவைக் கென்று சாற்றி" என்றபடி. "நமது நோன்பை வியாஜமாகக் கொண்டு" எனப் பொருள் கூறலுமாம். "தீங்கின்றி" என்று தொடங்கி மேல் ஆறு அடிகளினாலும் இம் மார்கழி நீராட் டத்தினால் நாட்டுக்கு விளையும் வளம் கூறப்படுகின்றது. ஒன்பது நாள் வெயிலும் ஒருநாள் மழையுமாக மாதந்தோறும் மும்மாரிபெய்தல் நாட்டுக்கு நன்மையென்க. தீங்கு இன்றி - நோய், பஞ்சம், கள்ளர் முதலிய தீங்கொன்றுமின்றி என்றுமாம். இங்ஙன் தீங்கள் மும்மாரிபெய் தால் வயல்கள் செழிப்புறுமாறு கூறுகின்றது நான்காமடி. செந்நெற்கு இட்ட ஓங்கு என்னு மடை மொழி - உயர்த்தியையும், பெரு என்னு மடைமொழி சுற்றிலே பணைக்கையையுங் கூறும். "செய் கொள் செந்நெலுயர்" என்றது காண்க. நெல்லு வைரத்தூண்போல நிற்கையால் கயல்கள் நேரே ஸஞ்சரிக்கப்பெறுது ஒருக்கடுத்து உலாவும்படியைக் கூறுவது, "ஊடுகயலுகள" என்பது. உகளுதலாவது - நீரிலும் நிழலிலுங்கிடந்து வளர்ந்த செருக்காலே களித்து மேல் நோக் கிப் பாய்தல். "சலங்கொண்டு மலர் சொரியும் மல்லிகையொண் செருந்தி சண்பகங்கள் மணநாறும் வண்பொழிலினூடே, வலங்கொண்டு கயலோடி விளையாடும்" என்னும் திரு மங்கையாழ்வார்.

காலங்களில் மாறாது மழைபெய்வதனால் செழிப்புற்றுவளர்ந்த செந்நெற் பயிர்களினூடே, உகளுங்கயல்களினுடல் உரையப்பெற்று ஊசல்போ லசையா நின்றுள்ள மலர்ந்த குவளைமலர் களில் வண்டுகள் தேனை அருந்திப் பேடைகளுடன் விளையாடிக் கண்ணுறங்குமாற்றைக் கூறு வது ஐந்தாமடி. பசுக்கள் மிக்கபால் தருதற்கு ஏதுவான புல்லுணவின் வளத்திற்கு மழையே ஏதுவாதலால், மேற்குறித்தவாறு மழைபெய்யவே பசுக்கள் அளவற்ற பால்வெள்ளத்தினாற் பாற் குடங்களை மிகுதியாக நிறைக்கும்படியைக் கூறுவன மற்ற மூன்றடிகள். பசுக்கள் பால் சுரக் கத்தொடங்கினால் பெருவெள்ளமாய்ப் பெருகுமென்றஞ்சி மாட்டுத்தொழுவிற் கறக்கப்புகு வதற்குப் பெரும்பாலும் பலர் தேங்குவர் என்பதை உள்ளுறையாய்க் காட்டும். "தேங்காதே புக்கிருந்து" என்ற சொற்போக்கு. தேங்குதல்—அஞ்சுதல். [பற்றி வாங்க] - மூலையை ஒருகால் தொட்டுவிட்டால் மாறாது பால்பெருகிக் குடங்குடமாக நிறையும் என்பது ஒரு கருத்து. பற்றிப் பற்றி வளிக்கக் குடங்களை நிறைக்குமென்றலு மொன்று.

இதற்கு உள்ளுறைபொருள் வருமாறு :—பகவந்நாம ஸங்கீர்த்தநம் பண்ணிப் பகவதநுபவம் பண்ணினால் இவ்வுலகமெங்கும் தேஹாத்மாபிமாநம் முதலிய தோஷங்களொன்றுமின்றியே யொழியும். ஸத்வோத்தரமான காலத்தில், அநந்யார்ஹசேஷத்வம், அநந்ய சரணத்வம், அநந்ய போக்யத்வமாகிற ஆகாரத்ரயஜ்ஞானமுண்டாம் ; [இது மூன்றுமடிக்கு.] இப்பிரகிருதி மண்டலத்திலும் ஆத்ம வர்க்கங்கள் களித்துத்துள்ளும் ; [இது நான்காமடிக்கு.] ஞானிகளுடைய * போதிற்கமலவன் னெஞ்சினுள் * தெய்வவண்டெனப்படும் எம்பெருமான் வந்து புகுந்து சுகமாகக் கண்வளர்ந்தருள்வன் ; [இஃது ஐந்தாமடிக்கு.] [நீரச் சரணமுபகத:] என்றபடி - சிஷ்யன் பிற்காலியாதே குருகுலத்திற் புக்கு நிலைத்திருந்து தனக்குத் தாரகங்களான ஆசிரியன் பொற்பதங்களைப் பற்றிப் பிரார்த்திக்க, உபதேசபாத்ரபூதரான சிஷ்யரைப் பரிபூர்ண ஞானிகளாக்குமவர்களாய், சிஷ்யஸுலபராய், இடைவிடாத பகவத் குணநுபவத்தினால் பரிபுஷ்டரான ஆசார்யர்களுடைய அசிந்த்யமான ஸம்பத்து மல்கும்படியைக் கூறுவன மற்ற மூன்றடிகள்.

பெய்து, நிறைந்து என்பன - பெய்ய, நிறைய என்னும் பொருள்பட நின்றமையால், எச்சத்திரிபு. "சொல் திரியினும் பொருள் திரியாவினைக்குறை" என்பது நன்னூல். எழாமடியில் "நிறைக்கும்" என்பதை வினைமுற்றாகக் கொள்ளாமல் பசுக்களுக்கு அடைமொழியாக்கி, 'நிறைக்கவல்ல பசுக்கள்' எனப் பொருள்கொண்டு, எட்டாமடியில் "நிறைந்து" என்னும் வினையெச்சத்தை வினைமுற்றாகக்கொண்டு 'நிறையும்' எனப்பொருளுரைத்தலுமாம். (கூ)

ஆழி மழைக்கண்ணா ஒன்றுநீ கைகரவேல் *
ஆழியுள் புக்கு முகந்துகொடார்த்தேறி *
ஊழிமுதல்வ னுருவம்போல் மெய்கறுத்து *
பாழியந் தோளுடைப் பற்பநாபன் கையில் *
ஆழிபோல்மின்னி வலம்புரிபோல் நின்றதிர்ந்து *
தாழாதே சார்ங்க முதைத்த சரமழைபோல் *
வாழ வுலகினிற் பெய்திடாய் * நாங்களும்
மார்கழிநீராட மகிழ்ந்தேலோ ரெம்பாவாய். (சு)

ஆழி மழைக்கண்ணா	மண்டல வர்ஷத்துக்குத் தலைவனான பர்ஜந்யனே!	ஊழி முதல்வன் உருவம்போல் மெய் கறுத்து	காலம் முதலிய ஸகல பதார்த்தங்களுக்கும் காரணபூதனான எம்பெருமானுடைய திருமேனி போல் (உனது) உடம்பிற் கருமைபெற்று
நீ	நீ		
கை	(உன்னுடைய) கொடையில்		
ஒன்றும்	ஒன்றையும்		
கரவேல்	ஒளியாதொழியவேணும் ; (நீ செய்யவேண்டிய பணி என்னவென்றால்)	பாழி அம் தோள் உடை பற்ப நாபன் கையில்	பெருமையும் அழகும் பொருந்திய தோள்களையுடையவனும், நாபிக்கமலமுடையவனுமான எம்பெருமானுடைய கையில் (வலப்பக்கத்திலுள்ள)
ஆழியுள் புக்கு	கடலினுட் புகுந்து		
முகந்து கொடு	(அங்குள்ள நீரை) மொண்டு கொண்டு		
ஆர்த்து	கர்ஜனை பண்ணி (பேரொலி செய்து)		
ஏறி	(ஆகாயத்தே) ஏறி,	ஆழி போல் மின்னி	திருவாழி யாழ்வானைப்போல் ஒளி மல்கி,

வலம்புரி போல் நின்று அதிர்ந்து	(இடப்பக்கத்திலுள்ள) பாஞ்ச ஜந்யாழ்வானைப்போல் நின்று முழங்கி,
சார்ங்கம் உதைத்த சரம் மழைபோல்	ஸ்ரீசார்ங்கத்தாலே தள்ளப்பட்ட பாணவர்ஷம்போல்,
வாழ	(உலகத்தாரனைவரும்) வாழும் படியாகவும்
நாங்களும்	(கண்ணபிரானுடைய கலவிக்கு நோன்பு நோற்கிற) நாங்களும்
மகிழ்ந்து	ஸந்தோஷித்து
மார்கழி நீராட	மார்கழி நீராட்டம் செய்யும்படியாகவும்
உலகினில்	இவ்வுலகத்தில்
தாழாதே	தாமதம் செய்யாமல் (சடக்கென)
பெய்திடாய்	மழைபொழியக் கடவை.

எல் ஓர் எம் பாவாய்!—.

* * *—ஆயர்சிறுமியர் தாம் மார்கழி நீராடினால் நாட்டுக்கு விளையும் நன்மைகளை இங்ஙனே மநோரதித்துக்கொண்டிருக்க, பர்ஜந்யனும், 'எம்பெருமானடிபணியுமவர்கட்குச் சிறிது கிஞ்சித்கரித்து நாமும் நமது ஸ்வரூபத்தை நிறம் பெறுவித்துக்கொள்ளவேணும்' எனக்கருதி, 'நான் உங்கள் நிறத்துச்செய்யவேண்டுமடிமைத்திறத்தை ஆய்ந்துரைக்கவேணும்' என்று இவர்களின் நியமநத்தைப் பிரார்த்தித்துநிற்க, ஆய்ச்சிகள், "பர்ஜந்யனே! 'பெண்கள் நோற்றபடியென்! மழை பெய்தபடியென்!' என்று அனைவரும் தலைதுலுக்கிக்கொண்டாடும்படி வர்ஷிக்கவேணும்" என்று அவன் செய்யவேண்டு மடிமையைக் கையோலை செய்துகொடுக்கின்றனர் இப்பாட்டால். [பர்ஜந்யன்=மழைக்கு நிர்வாஹகன்; மேகமென்றவாறு.]

வாராய் பர்ஜந்யனே! உனது ஔதார்யத்தை நீ எள்ளளவும் ஒளிக்கலாகாது; கடலினுட்புகுந்து அங்குள்ள நீரை முற்றும் முகந்துகொண்டு பெருமுழக்கஞ் செய்து வானத்தின் மீதேறி எம்பெருமானது திருமேனிபோலக் கருமைபூண்டு, அவனது வலங்கை யாழிபோல் மின்னி இடங்கைச் சங்கம்போல் அதிர்ந்து, ஸ்ரீசார்ங்கம் சரமழை பொழியுமாறு போல நாடெங்கும் நீரைச்சொரிந்து எமது மார்கழி நீராட்டத்தை மகிழ்ச்சியுடனே தலைக்கட்டவேணும், என்பது—இவர்கள் கட்டளையிடும் பரிசு.

ஸந்நிதிகளில் கைங்கர்யபரர்களை அருளிப்பாடிடும்போது, "குடை தாக்குவான்!, சாமரைவீசுவான்!, திருச்சின்ன மூதுவான்!" என்றிங்ஙனே அவரவர்கள் அதிகரித்த காரியத்தையிட்டு அருளிப்பாடிடுவது ஸம்ப்ரதாய மாதலால் இவர்களும் அந்நடையை அடியொற்றி "ஆழிமழைக் கண்ணா!" என்று அவன் அதிகரித்த காரியத்தையிட்டு அழைக்கின்றனரென்க. எம்பெருமான் படைப்புத் துடைப்புத் தொழில்களை அயனரர் தலையிலிட்டுத்தான் கீர்த்தற்றொழிலைக் கைப்பற்றினாற்போல, 'பிடி, அடி' என்னுங் காரியத்தை நமன் முதலியோர் தலையிலிட்டு, உனது நீர்மைக்குப் பொருந்த எல்லாரையுங் குளிர நோக்குங் காரியத்தில் நியமிக்கப்பட்டவனன்றே நீ எனப் புகழ்கின்றவாறு காண்க.

ஒன்றும் நீ கை கரவேல்:—உன் கொடையில் ஒன்றும் வஞ்சியாதொழியவேணும் என்றபடி. புண்ணியம் பண்ணினாருந்தவிடத்து வர்ஷித்தல், பாவம் பண்ணினாருந்தவிடத்து வர்ஷியாதொழிதல் என்றொரு விஷமநியதி கொள்ளற்பாலதன் றென்கை. கை கரக்கை—கொடை மாறுகை.

மேகத்தின் முழக்கம் மகிழ்ச்சிக்கு உறுப்பாதலால் ஆர்த்து என்று அம்முழக்கத்தை வேண்டுகின்றனர். கடல் கடந்து இலங்கைக்குச் சென்ற அனுமன் செய்தியை உணராத குரக்கினங்கள் கடற்கு இக்கரையில் வருந்தி ஏங்கிக்கிடந்த போழ்து, அனுமன் பிராட்டியைக்

கண்ட களிப்பின் மிகுதியால் ஆரவாரித்துக்கொண்டு வந்து அவ்வாநர வீரர்களை மகிழ்வித்தவாறு போல நீயும் ஆரவாரத்தினால் எம்மை மகிழ்விக்கவேணுமென வேண்டியவாறு.

ஏறி என்றதனால், முகந் தோற்றுமே நின்று காரியஞ்செய்யும் எம்பெருமானைப்போலன்றி; "விண்ணில மேலாப்பு விரித்தாற்போல்" என்றபடி ஆகாசாவகாசமெல்லாம் வெளியடையும் படி உன் வடிவைப் பரப்பிக்காட்டிக் காரியஞ் செய்யவேணுமென்ற விருப்பம் தோன்றும்.

ஊழிமுதல்வன்—ஊழி என்று காலத்துக்குப்பெயர்; இங்குக் காலத்தைக் கூறியது மற்றுமுள்ள எல்லாப் பதார்த்தங்களையுங் கூறியவாறும்; இஃது உபலக்ஷணமெனப்படும். "உருவம்போல் மெய்கறுத்து" என்ற சொல் நயத்தால், அவ்வெம்பெருமானது திருமேனியின் நிறத்தை மாத்திரம் நீ ஒருபுடை ஏறிட்டுக்கொள்ளலா மத்தனையொழிய, அவன்றன் அகவாயில் தண்ணளி எவ்வகையானும் உன்னால் ஏறிடுவித்துக்கொள்ள அரிது என்னுங் கருத்துத் தோன்று மென்ப. இங்கு, "நாச்சியார்விழி விழிக்கவொண்ணுதென்றற்போலே" என்ற ஆறுயிரப்படி அருளிச்செயல் நோக்கத்தக்கது; அவ்வாக்கியத்தின் பொருள் வருமாறு:—திருவரங்கம் பெரிய கோயிலில் ஒதிய திருவத்யயநோத்ஸவத்திற் கடைநாளிரவு ஸ்ரீரங்கநாதன் நாச்சியார் திருக் கோலம் பூண்டு ஸேவை ஸாதித்தருள, ஸ்ரீபட்டர் ஸேவித்துப் பெருமானை நோக்கி 'நாச்சியா ருடைய வேஷத்தை ஏறிட்டுக்கொண்டதத்தனை யொழிய அவள்போல் விழிவிழிக்க உன்னு லாகாதே' என்றுரைத்தருளினரென்ற ஐதிஹ்யத்தை உளப்படுத்தியவாறு.

கண்ணபிரானது திருமேனிநிறத்தைக் காணவிருப்பமுடைய இவர்கள் அதன் போலி யையாகிலுங்கண்டு களிப்போமென்னு மாசையால் 'ஊழிமுதல்வனுருவம்போல் மெய்கறுத்து" என்கிறார்களென்னுங் கருத்து மூணரற்பாலது.

பாழி அம் தோள்—வலிமையும் அழகும் பொருந்திய தோள்; எனவே, ரக்ஷகத்வ போக் யத்வங்களிரண்டும் தோளுக்குள்ளன வென்றதாயிற்று. பற்பநாபன் கையிலாழிபோல் மின்னி— "பற்பநாபன்போல் மின்னி" என்னுதொழிந்ததென் எனில்; அரசனை நோக்கி 'உனக்கு மகன் பிறந்தான்' என்றால் அவன் தனது கம்பீர்யத் தோற்றப் பேசாதிருப்பினும் உரிய அடி யார் பக்கலில் உகப்பும் அதனாலாய காரியங்களுங் காணப்படுதல்போல, வெற்றிபெற்ற எம் பெருமான் தான் ஸாதாரணமாயிருப்பினும் திருவாழி யாழ்வான் மிக மின்னித் தோற்றுவதை லால் "ஆழிபோல் மின்னி" என்றனரென்க.

"சார்ங்கமுதைத்த சரமழைபோல்" என்றவுடனே, அச்சார்ங்கத்துச் சரமழை ராவண னியரை முடித்தாற்போல் இதுவும் முடித்துவிடிற் செய்வதென் என்றஞ்சி "வாழ உலகினிற் பெய்திடாய்" என்றனர்.

(ச)

மாயனை மன்னு வடமதுரை மைந்தனை *
தூய பெருநீர் யமுனைத் துறைவனை *
ஆயர் குலத்தினில் தோன்று மணிவிளக்கை *
தாயைக் குடல்விளக்கஞ் செய்த தாமோதரனை *
தூயோமாய் வந்துநாம் தூமலர்கள் தூய்த்தொழுது *
வாயினற் பாடி மனத்தினற் சிந்திக்க *
போய பிழையும் புகுதருவா னின்றனவும் *
தீயினில் தூசாகும் செப்பேலோ ரெம்பாவாய். (ஞ)

மாயனை	மாயச் செயல்களை யுடையவனும்
மன்னு வடமதுரை மைந்தனை	(பகவத் ஸம்பந்தம்) நித்யமாகப் பெற்றுள்ள வடமதுரைக்குத் தலைவனும்,
தூய பெருநீர்	பரிசுத்தமாய் ஆழம்மிக்கிருக்கிற தீர்த்தத்தை யுடைய
யமுனை துறைவனை	யமுனை யாற்றங்கரையை பெரு பகமாக வுடையவனும்,
ஆயர் குலத்தினில் தோன்றும்	இடைக்குலத்தில் விளங்கா நின்றுள்ள
அணி விளக்கை	மங்கள தீபம் போன்றவனும்
தாயை குடல் விளக்கஞ் செய்த	தாயாகிய தேவகிப் பிராட்டியின் வயிற்றை விளக்கச் செய்தவனுமான
தாமோதரனை	கண்ணபிரானை,
நாம்	(அடிச்சியோமாகிய) நாம்
தூயோம் ஆய் வந்து	பரிசுத்தியுள்ளவர்களாய்க் கிட்டி
தூ மலர்கள் தூய்	நல்ல மலர்களைத் தூவி
தொழுது	வணங்கி
வாயினால் பாடி	வாயாரப்பாடி
மனத்தினால் சிந்திக்க	நெஞ்சாரா தியானம் பண்ண (அதன் பிறகு)
போய பிழையும்	(சேஷ சேஷிபாவ ஜ்ஞான முண்டாவதற்கு) முன்பு கழித்த பாவங்களும்,
புகுதருவான் நின்றனவும்	பின்பு (தன்னை அறியாமல்) வரக்கூடிய பாவங்களும்
தீயினில் தூசு ஆகும்	நெருப்பிலிட்ட பஞ்சு போலே உருமாய்ந்து போம்; (ஆன பின்பு)
செப்பு	அவ்வெம்பெருமான் திருநாமங்களைச் சொல்;

எல் ஓர் எம் பாவாய்!—.

* * *—நோன்பு நோற்கும் பெண்களில் ஒருத்தி, 'நாம் நோன்பு நோற்று எம்பெருமானை அநுபவிக்க இலேயகலப் பாரியாநின்றோம்; இஃது அழகியவாறே; "ச்ரேயாம்ஸி பஹுவிக்நாநி பவந்தி மஹதாமபி" என்று மேலேயார் செய்யும் நற்கிரிசைகட்கும் பல இடையூறுகள் மிடைதருமென்று நூல்கள் கூறும்; இராமபிரானை முடிசூட்டுதற்காகச் சம்பராந்தகனான தசரத சக்கரவர்த்தி பாரித்தான்; பிரமரிருடியான வசிட்டன் முஹூர்த்தமிட்டான்; ஸாக்ஷாத் தருமமெனப்பட்ட இராமன் முடிசூட நின்றான்; பிராட்டியோடே கூடிப் பெரியபெருமாளைத் தொழுதிறைஞ்சினான்; நாடடங்கலும் இவ்வபிஷேக மங்களத்தைப் பிரார்த்தித்து மங்களாசாஸநம் செய்யாநின்றது; இங்ஙனம் அமைந்திடவும் அந்த மங்களகாரியத்திற்குமன்றோ இடையூறு மிடைதந்தது; நாம் நெடுநாளாகப் பண்ணியுள்ள பாவங்கள் பல கிடக்க இன்று செய்யக்கருதிய நற்கிரிசை நன்னர் நிறைவேறுமோ?' என்று கேட்க; நாம் பகவந்நாம ஸங்கீர்த்தநம் பண்ணவே பாவங்களனைத்தும் தீயிலிட்ட பஞ்சுபோல உருமாய்த் தொழியுமாதலால் அத்திருநாமங்களை ஸங்கீர்த்தநம் பண்ணக்கடலையென்று அவளை நோக்கி மற்றொருத்தி உரைக்கும் பாசுரமாய்ச் செல்லுகிறது இப்பாட்டு.

ஸர்வேச்வரன் பரமபத நிலயனையிருந்து வைத்துத் திருவாய்ப்பாடியிற் கண்ணபிரானைய் அவதரித்துக் கோவலர்க்கும் கோக்களுக்குந் தான் எளியனாய், வெண்ணெய் களவுகாண்பது, மாதரைக் களவுகாண்பதாய்ச் செய்த ஆச்சரியச் செயல்களின் அளவின்மையை நினைத்து "மாயனை" என்றது "சூட்டுநன் மாலைகள்" என்ற பாசுரமுங் காண்க. திருவடமதுரையில் ஸித்தாச்ரமத்தில் ஸ்ரீவாமநனைய்த் தவம்புரிந்திருந்தமையாலும் ஸ்ரீசத்ருக்நாழ்வான் படையெடுத்துப் பகையறுத்துத் தனக்குப் படைவீடாகப்பெற்று நெடுநாள் அரசாண்டமையாலும், கிருஷ்ணனைய் வந்து பிறந்தமையாலும் இவ்வகைகளாலே மதுரைக்குப் பகவத்ஸம்பந்தம் நித்திய மாயிருக்குந் தன்மைபற்றி மன்னு என்று வடமதுரைக்கு அடைமொழி கொடுக்கப்பட்டது.

மைந்தன்—மிடுக்கை யுடையவன்; மைந்து—மிடுக்கு, "தந்தைகாலிற் பெருவிலங்கு தாள்விழ நள்ளிருட்கண், வந்தவெந்தை" என்றபடி கண்ணபிரான் தான் பிறக்கும்போதே

வஸுதேவ தேவகிகளின் காலில் விலங்கு இற்று முறியுமாறு பிறந்த மிடுக்கைக் கூறியவாறு; பருவம் நிரம்புவதற்குமுன்னே கஞ்சன் குஞ்சி பிடித்துதைத்த மிடுக்கைக் கூறியவாறுமாம்.

கண்ணன் திருமதுரையிற் பிறந்தவாறே வஸுதேவன் கம்ஸனிடத்துள்ள அச்சத்தினால் அப்பிள்ளையைத் திருவாய்ப்பாடியில் ஒளித்து வளர்க்கக் கருதி எழுந்தருள்வித்துக்கொண்டு செல்ல, வழியிடையிற் பெருவெள்ளமாய்ப் பெருகிக்கொண்டிருந்த யமுனையாறு தன்னை முழுத் தாளளவாக வற்றுவித்து வழிதந்தமையால், அவ்வாற்றிற்கு இதனை ஒப்புயர்வற்ற தாய்மையாகக் கருதித் தூய பெருநீர் என விசேஷிக்கப்பட்டது. இங்கு, "யமுநாஞ்சநதிகம்பீராம் நாநாவர்த்த ஜஷாகுலாம்—வஸுதேவோ வஹந் க்ருஷ்ணம் ஜாநுமாத்ரோதகோ யயௌ." என்ற ஸ்ரீவிஷ்ணுபுராணவசநம் நோக்கத்தக்கது. பிராட்டி சரணம்புகவும் ராவணபயத்தாலே, அஞ்சியிருந்த கோதாவரிபோலன்றியே கம்ஸன் மாளிகை கிழற்கீழே வற்றிக்கொடுத்ததே தாய்மையாம். பெருநீர்—அஞ்சுலகூங்குடியிற் பெண்களும் கண்ணனுங்கூடி ஜலக்ரீடை பண்ணுவதற்கும், பெண்கள் விரஹதாபந்தீரக் குளிக்கைக்கும் பர்யாப்தமான நீரையுடைய வென்றபடி. பெருமை பொருந்திய நீரையுடைய வென்றுமாம். கவிபாடுவார்க்கு ஊர், பேர், ஆறு முதலியவை வேண்டுமாகையால், "வடமதுரை மைந்தனை" என்று ஊரும், "தாமோதரனை" என்று பேரும், "யமுனைத்துறைவனை" என்று ஆறுங் கூறப்பட்டன. "முத்துப்படுந்துறை, நவமணி படுந்துறை" என்னுமாபோலே, கண்ணபிரானுக்கு எமுனையாறு பெண்கள் படுந்துறையாகையால் "யமுனைத்துறைவனை" எனப்பட்டது.

"ஆயர்குலத்தினிற் பிறந்த" என்னுது, "தோன்றும்" என்றது, "தேவகீ பூர்வ ஸந்த்யாயா மாவிர்ப்பூதம் மஹாத்மநः." என்ற புராண நடையை அடியொற்றி யென்க: கீழ்த்திசையில் உதிக்கின்ற ஆதித்தியனுக்கு அத்திசையிற் பற்றுண்டாகிலன்றே தேவகியின் வயிற்றில் உதித்த கண்ணபிரானுக்கு அவ்வயிற்றிற் பற்றுண்டாவதென்ற கருத்துத் தோன்றக் கூறினன் முனிவனென்பர். ஆகில், "கண்ணன் கேசவன் நம்பி பிறந்தினில்" "மன்னு நாரணன் நம்பி பிறந்தமை" "பிறந்தவாறும்" என்றிப்புடைகளிலே கூறப்பட்டுள்ளவற்றுக்குப் பொருத்த மெங்ஙனே யெனில்; ஸம்ஸாரிகள் பத்துமாதம் கர்ப்பவாஸம் பண்ணினால், "பன்னிரு திங்கள் வயிற்றிற்கொண்ட வப்பாங்கினால்" என்றபடி தான் பன்னிரண்டு மாதம் கர்ப்பவாஸம் பண்ணுகையாலும், பெற்ற தாய்க்கு மூலை சுரக்கையாலும், மூலை பெருவிடில் இவன் தான் நோவு படுகையாலும், தன்னைக்கட்டவு மடிக்கவுமாம்படி எளியனுக்கி வைக்கையாலும் அங்ஙன் கூறப் படுகின்றதெனக் கொள்க. இனி, வடமதுரையிற் பிறந்த கண்ணபிரானை ஆயர் குலத்தினிற் பிறந்தனனாகக் கூறுவானென்னெனில்; மூலைப்பால் குடித்து அழுதவிடமே பிறந்த இடமாதல் பற்றி யென்க. அன்றி, மதுரையில் மறைந்திருந்து ஆய்க்குலத்தில் வெளிப்பட்டமை பற்றியுமாம்.

உடலை நீக்கித் தலையையும், தலையை நீக்கி உடலையுங் கழுவுமவர்களான இடைச்சிகள் "தூயோமாய்" என்கிறார்களே, இவர்கட்குத் தூய்மையாவதென்? எனில்; எம்பெருமானிடத்தில் ஸம்பந்தவுணர்ச்சிக்கு மேற்பட வேறொரு சுத்தியும் ஆத்மாவுக்கு இலதாதலால் அத் தூய்மை கூறப்படுகின்றது. "மமசாப்யந்தராத்மாயம் சுத்தம் வேத்தி விபீஷணம்." என்று —ஸுக்ரீவ மஹாராஜர் ராமபிரானிடத்து விபீஷணழ்வானைச் சுத்தனென்றது, மேற்கூறிய தூய்மையைக் கருதியன்றே.

தூமலர்கள்—மலர்க்குத் தூய்மையாவது—ஒரு பிரயோஜநத்தை விரும்பி இடப்படா தொழிகை. தூய் என்ற சொற்பேரக்கால், எம்பெருமானது திருவடிகளில் மலர்களை மிக்க ஆத

ரத்துடன ஸமர்ப்பிக்கவேணுமென்றொரு நியதியில்லை; அடைவுகெடத் தூவிலுமமையுமென்பது போதரும். தொழுது, பாடி, சிந்திக்க என்று மனமொழி மெய்களாகிற முக்காரணங்களினுடையவும் வியாபாரங்கள் கூறப்பட்டன.

இனி, தொழுகை, பாடுகை, சிந்தனையாகிய இக்காரியங்களினுற் பெறும் பேறு கூறுவன, கடையிரண்டடிகள். எம்பெருமானை யடிபணிவதற்கு முன்பு செய்யப்பட்ட பிழைகள்–போய பிழை; [பூர்வாகம்] எனப்படும். அடிபணிந்த பின்னர் பிரகிருதி வாஸனையினுல் அபுத்திபூர்வமாகச் செய்யும் பிழைகள்—புகுதருவான் நின்றன; உத்தராக மெனப்படும். இவையிரண்டும் தீயிலிட்டதூசுபோல உருமாய்ந்தொழியுமென்று பலன் கூறிற்றாயிற்று.

'நாம் நெடுகாலாகப் பண்ணியுள்ள பாவங்கள் பல கிடக்க, இன்று செய்யக்கருதிய நற்கிரிசை நன்னர் நிறைவேறுமோ?' என்று வினவியவளை நோக்கியது, செப்பு என்ற முன்னிலை வினைமுற்று. இங்ஙன் ஒருத்தியை முன்னிலைப்படுத்திக் கூறியவிது அனைவரையும் நோக்கிக் கூறியவாறே யாமெனக் கொள்க; உபலக்ஷணமென்க. செப்ப என்று பிரிக்கவுமாம். (நி)

479. புள்ளுஞ் சிலம்பினகாண் புள்ளரையன் கோயிலில் *
வெள்ளை விளிசங்கின் பேரரவங் கேட்டிலையோ *
பிள்ளாய் யெழுந்திராய் பேய்முலை நஞ்சுண்டு *
கள்ளச் சகடங் கலக்கழியக் காலோச்சி *
வெள்ளத் தரவில் துயிலமர்ந்த வித்தினை *
உள்ளத்துக்கொண்டு முனிவர்களும் யோகிகளும் *
மெள்ள வெழுந்து அரியென்ற பேரரவம் *
உள்ளம் புகுந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய். (சு)

புள்ளும்	பறவைகளும்
சிலம்பினகாண்	(இரை தேடுகைக்காக எழுந்து) ஆரவாரக்கள் செய்யா நின்றன காண்;
புள் அரையன்	பறவைத் தலைவனான பெரிய திருவடிக்கு
கோ	ஸ்வாமியான ஸர்வேச்வரனுடைய
இல்லில்	ஸந்நிதியிலே
வெள்ளை	வெண்மை நிற முடையதும்
விளி	(அனைவரையும்) அழையா நிற்பதுமான
சங்கின்	சங்கினுடைய
பேர் அரவம்	பேரொலியையும்
கேட்டிலையோ	செவிப்படுத்துகின்றிலையோ?
பிள்ளாய்	(பகவத் விஷயாஸ மறியப் பெறுத) பெண்ணே!
எழுந்திராய்	(சடக்கென) எழுந்திரு;
பேய் முலை நஞ்சு	பூதனையின் முலையில் (தடவிக் கிடந்த) விஷத்தை
உண்டு	(அவளது ஆவியுடன்) அமுது செய்து
கள்ளம் சகடம்	வஞ்சனை பொருந்திய (அஸுரா விஷ்டமான) சகடமானது
கலக்கு அழிய	கட்டுக் குலையும்படி
கால்	திருவடியை
ஓச்சி	ஓங்கச் செய்தவனும்
வெள்ளத்து	திருப்பாற்கடலில்
அரவில்	திருவனந்தாழ்வான்மீது
துயில் அமர்ந்த	திருக்கண் வளர்ந்தருளின
வித்தினை	ஜகத்காரணபூதனுமான எம் பெருமானை
முனிவர்களும்	மஹர்ஷிகளான ரிஷிகளும்
யோகிகளும்	யோகப்பயிற்சியில் ஊன்றினவர்களும்

உள்ளத்து கொண்டு	(தமது) ஹ்ருதயத்தில் அமர்த்திக் கொண்டு	அரி என்ற	'ஹரிர் ஹரி:' என்ற
		பேர் அரவம்	பேரொலியானது
		உள்ளம் புகுந்து	(எமது) நெஞ்சிற் புகுந்து
மெள்ள எழுந்து	(ஹ்ருதயஸ்தனான அவ்வெம் பெருமான் அசையாதபடி) ஸாவதானமாக எழுந்து	குளிர்ந்து	குளிர்ந்தது ;
			எல் ஓர் எம் பாவாய்—.

(இனியாகிலும் எழுந்திரு என்று ஒருத்தியை உணர்த்துகிறபடி.)

* * *—இப்பாட்டு முதல், மேல் "எல்லேயிளங்கிளியே" என்ற பாட்டளவாகப் பத்துப் பாசுரங்களாலே அநுபோக்தாக்களைக் குறித்துத் திருப்பள்ளியெழுச்சி பாடப்படுகின்றது. கிருஷ்ணநுபவத்திற்குப் பிரதான உபகரணமான காதலும், ஏகாந்தமான காலமும், கோவலக்கிழவர்களின் இசைவும் பஞ்சலக்ஷங்குடியிற் பெண்களுக்கும் ஒருங்கே வாய்த்திருக்கையாலே அவரவர் தனித்தனியே அநுபவிக்க அமைந்திருக்க, ஒருவரை ஒருவர் சென்றெழுப்புவானேன் எனில்; பெருக்காற்றில் இழிவார் துணையின்றி இழியமாட்டாதவாறுபோல' "காலாழும் நெஞ்சழியுங் கண் சுழலும்" என்றும், "செஞ்சொற்கவிகாள்! உயிர்காத்தாட் செய்மின்" என்றுமருளிச்செய்தபடி—இழிந்தாரைக் குமிழ் நீரூட்டவல்ல * ஆழியானென்னு மாழமோழையில் இழியுமிவர்கள் துணையின்றி இழிய அஞ்சித் துணைகூட்டிக்கொள்வதற்காக ஒருவரை ஒருவர் உணர்த்துகின்றனரென்க. அன்றியும், "ஏக: ஸ்வாது ந புஞ்ஜீத" "இன்கனி தனியருந்தான்" என்றபடி சுவைமிக்க பொருள் தனியே புஜிக்கத்தக்கதல்லாமையால் தோழிமார்களுடன் கூடிப் புசிக்கப் பாரிக்கின்றனரென்றுங் கொள்க.

"வேதம் வல்லார்களைக்கொண்டு விண்ணோர் பெருமான் திருப்பாதம் பணிந்து" என்றபடி பகவத்ஸமாச்ரயணம் பாகவத புரஸ்கர பூர்வகமாகச் செய்யப்படவேண்டுதலால், அதனை அனுட்டித்துக் காட்டுகின்றனரென்பது, ஆழ்கருத்து.

இனி, அனைவர்க்கும் கிருஷ்ணநுபவத்தில் அவர் ஒத்திருக்குமாகில் சிலர் எழுப்பச் சிலர் உறங்குகை அவாவிற்குக் குறையன்றே எனின்; அன்று; கண்ணபிரானது திவ்யசேஷ்டிதங்களும் கல்யாணகுணங்களும் சிலரை நஞ்சுண்டாரைப்போலே மயங்கப்பண்ணும்; சிலரை இருந்தவிடத்தில் இருக்கவொட்டாதே துடிக்கப்பண்ணும்; ஆகையால் அவாவிற்குக் குறையாமாறு ஒன்றுமின்றென்க.

இனி இப்பாட்டின் கருத்து:—மூந்துற உணர்ந்த பெண்பிள்ளைகள்; பொழுதுவிடிந்தமையையு மறியாமற் கிடந்துறங்குகின்றவொருத்தியின் மாளிகைவாசலிற் சென்று சேர்ந்து 'பிள்ளாய்! விடிந்தபின்பும் இங்ஙனே கிடந்துறங்கலாகுமோ?' என்று வெறுக்க, அதனைக் கேட்ட அவள் 'பொழுதுவிடிந்தாலன்றே எழுந்திருக்கவேண்டுவது; பொழுதுவிடிந்தமைக்கு அடையாளமேது? என்று கேட்க; 'நாங்கள் இங்ஙனே உணர்ந்துவந்தது அடையாளமாகவற்றன்றே?' என்று இவர்கள் கூற, அதற்கு அவள் 'உறங்கினார் உணரிலன்றே விடிந்ததாவது; "கண்ணரைக்கண்டு கழிவதோர் காதலுற்றார்க்குமூண்டோ கண்கள் துஞ்சுதலே" என்றபடி உங்களுக்கு உறக்கந்தானில்லையே; ஆனபின்பு உங்களுணர்த்தி விடிவுக்கு அடையாளமாகமாட்டாது; வேறடையாளமுண்டாகிற் சொல்லுங்கள்' என்ன; "புள்ளுஞ் சிலம்பினகாண்" என்று மூந்துற ஓரடையாளங் கூறுகின்றனர். பறவைகள், மார்கழி நீராடவேணுமென்னும் விரைவுமின்றி, வைகி எழுந்திருக்கில் குற்றமுண்டென்னு மறிவுமின்றியிருக்க உணர்ந்தது—காலமுணர்த்த உணர்ந்தபடியாதலால் இது போதுவிடிவுக்கு ஏற்ற அடையாளமரமென்பது இவர்களின் கருத்து.

இவ்வடையாளங் கூறக்கேட்ட அவள், 'உங்களுணர்த்தி விடிவுக்கு அடையாளமாக மாட்டாதவாறு போல்வே உங்களூரிலுள்ள பறவைகளினுணர்த்தியும் விடிவுக்கு அடையாள மாக மாட்டாது; "ஊரும்நாடு முலகமுந்தன்னைப் போலவனுடைய, பேருந்தார்களுமே பிதற்ற" என்றுற்போல நீங்கள் நுமதருகிலுள்ள அனைத்தையும் தம்மோடொத்தனவாக்குமவர்களன்றே' என்றுகூற, அதனைவிட்டு வேறடையாளங் கூறுகின்றனர்—திருப்பள்ளியெழுச்சிக்கு ஊதின சங்கின் ஒலியும் செவியிற்பட்டதில்லையோ? என்கிறார்கள்.

கண்ணபிரானுடைய குணங்களில் ஈடுபட்டிருப்பார் உறையுமிடமான திருவாய்ப்பாடியிலும் கோயிலுண்டோ என்னில்; "ராமோ ராமோ ராம இதி ப்ரஜாநாமபவந் கதா:" என்று திருவயோத்தியில் சக்ரவர்த்தித் திருமகனுடைய குணங்களிலே தோற்றுச் செல்லா நிற்கச் செய்தே "ஸஹ பத்ந்யா விசாலாக்ஷ்யா நாராயணமுபாகமத்" என்று பெருமாள் பிராட்டியுடன் கூடிப் பெரியபெருமாளை உபாஸித்ததாகச் சொல்லிற்றிறே; அங்குப்போலே இங்கும் ஒரு திருக்கோயில் உண்டென்னலாம்.

புள் அரையன்—புள் என்றே பெரிய திருவடியைச் சொல்லிற்றாய், அரையன் என்று அவற்குத் தலைவனை எம்பெருமானைச் சொல்லிற்றாகவுமாம். இப்படி பெரிய திருவடியையிட்டு எம்பெருமானை நிரூபிக்கிறவிது—"ராமம் லக்ஷ்மணபூர்வஜம்" என்று இளையபெருமாளையிட்டுப் பெருமாளை நிரூபித்தாற்போலுமென்ப. எம்பெருமானை அடியார்பக்கலிற் கொடுவந்து கூட்டுமவன் கருடனுகையாலே அவனிடத்துள்ள உகப்புத்தோற்ற அவனையிட்டு நிரூபிக்கிறபடி; "புள்ளின்பின்போன தனி நெஞ்சமே" என்றிருக்குமவர்களன்றே.

இனி இவ்வடையாளத்துக்கும் மறுப்புக் கூறுகின்றாள் உள்ளுறங்குமவள்;—"வெள்ளை விளிசங்கின் பேரரவம்" என்றீர்கள்; சங்குக்கு வெண்மை நிறம் இயற்கையாகையால், வெள்ளை என்ற அடைமொழி வியர்த்தம்; விளிசங்கு என்கிறீர்கள்; சாமந்தோறும் அழைக்கக் கடவதான சங்கு என்றதாகிறது; ஆகையாலே இது பொழுதுவிடிவை உணர்த்தவல்ல சங்கன்று; பேரரவம் என்கிறீர்கள்; பெருத்த ஒலியாகில் உங்களுக்குப்போலே எனக்கும் செவிப்படவேணும்; செவிப்படாமையாலே அப்ரஸித்தம்; ஆனபின்பு நீங்கள் சொல்லுமதெல்லாம் பேதுவிடிவுக்கு அடையாளமாகமாட்டாது என்றனள்.

இனி இதற்குஸமாதானம்—கேட்டிலையோ என்பது. இப்படிப்பட்ட பேரொலியும் செவிப்படாதபடி நீ உள்ளே செய்புஞ்செய்கை என்னே என்கை. பிள்ளாய்—பேதைமையுடையவளே! என்றபடி; இது ஸாபிப்ராய ஸம்போதனம். பாகவத ஸம்ச்லேஷத்தளவு முண்டானலல்லது பகவத்விஷய ப்ராவண்யத்திற்குப் பரிபூர்த்தியில்லை; நீ அங்ஙனன்றியே கிருஷ்ணஸம்ச்லேஷத்தளவிலேயே நின்று பாகவத ஸம்ச்லேஷத்தில் விருப்பமற்றிருப்பது பேதைமையின் பணியன்றே என்றவாறு.

இங்ஙன் சொல்லக்கேட்ட அவள், "நானே க்ருஷ்ண ஸம்ச்லேஷத்தளவில் நிற்கிறேன்? உங்களது இனிய பேச்சுக்களைக்கேட்டு உளங்களிந்திருக்கிற என்னைப் பிள்ளையென்கிற நீங்களன்றே பிள்ளைகள்" என்ன; இவர்கள், 'வேறுமனே பேச்சுக்கேட்டுக் கிடக்கவொண்ணுமோ? "அடியார்கள் தம், ஈட்டங் கண்டிடக்கூடுமேல் அதுகாணுங் கண்பயனவதே" "அடியார்கள் குழாங்களை உடன்கூடுவ தென்றுகொலோ" "பேராளன் பேரோதும் பெரியோரை ஒருகாலும் பிரிகிலேனே" என்றிப்புடைகளிலேயன்றே பெரியார் பணித்த பாசுர

மிருப்பது; அப்படியே உன்வடிவை நாங்கள் கண்டு எங்கள் வடிவை நீ கண்டு அநுபவிக்க விரும்பாதே எங்கள் வார்த்தைகளுக்குக் கண்ணழிவுஞ் சொல்லுகிற நீயன்றே பிள்ளை' என்ன; அதுகேட்ட அவள், "நீங்கள் சொன்னபடியே நான் பிள்ளையாகிறேன்; கர்ணமிருதமான சில பேச்சுக்களைச் சொல்லுங்கள்" என்னச் சொல்லுகிறார்கள், பேய்முலை நஞ்சுண்டு என்று தொடங்கி.

பேய்முலை நஞ்சுண்ட வரலாறு:—கிருஷ்ணனைப்பெற்ற தாயான தேவகியினது உடன் பிறந்தவனுதலால் அக்கண்ணபிரானுக்கு மாமனுகிய கம்ஸன், தன்னைக் கொல்லப்பிறந்த தேவகீ புத்திரன் ஒளித்துவளர்தலை அறிந்து, அக்குழந்தையைநாடி யுணர்ந்துகொல்லும்பொருட்டுப் பல அசுரர்களை ஏவ, அவர்களில் ஒருத்தியான பூதனையென்னும் ராக்ஷஸி நல்ல பெண்ணுருவத்தோடு இரவிலே திருவாய்ப்பாடிக்கு வந்து, அங்குத் தூங்கிக்கொண்டிருந்த கண்ணனுகிய குழந்தையை எடுத்துத்தனது நஞ்சுதோய்ந்த முலையைக் கொடுத்துக் கொல்லமுயல, பகவானை குழந்தை அவ்வரக்கியின் தனங்களைக் கைகளால் இறுகப்பிடித்துப் பாலுண்ணுகிற பாவனையிலே அவளுயிரையும் உறிஞ்சி அவளைப் பேரிரைச்சலிட்டுக் கதறி உடம்பு நரம்புகளின் கட்டெல்லாம் நீங்கி விழுந்து இறக்கும்படி செய்தனன் என்பதாம்.

கள்ளச்சகடங் கலக்கழியக் காலோச்சின வரலாறு:—நந்தகோபர் திருமாளிகையில் ஒரு வண்டியின் கீழ்ப்புரத்திலே தொட்டிலிற் பள்ளிகொண்டிருந்த ஸ்ரீ கிருஷ்ணன், ஒருகால் அச்சகடத்திற் கஞ்சனுல் ஏவப்பட்ட அசுரனெருவன் வந்து ஆவேசித்துத் தன்மேலே விழுந்து தன்னைக் கொல்ல முயன்றமை அறிந்து பாலுக்காக அழுகிற பாவனையிலே தன் சிறிய திருவடிகளை மேலே தூக்கி உதைத்தருள, அவ்வுதை பட்டமாத்திரத்தில் அச்சகடு திருப்பப்பட்டுக் கீழே விழுந்து அசுரனுட்பட அழிந்ததென்பதாம்.

இவ்விரண்டு அபதானங்களையும் இங்கெடுத்துக் கூறியது - உள்ளுறங்குமிவள் அஞ்சிக் கடுக எழுந்தோடி வருதற்கென்க. ஸர்வேச்வரனுலே தத்தம் இடர்களைக் களைந்துகொள்ளக் கருதுவார் அல்லாதார்; பெரியாழ்வரோட்டைச் சம்பந்தமுடையார் அங்ஙனன்றி "எம்பெருமானுக்கு என்ன அவத்யம் விளைகின்றதோ" என்று வயிறுபிடிக்குமவர்களாகையாலே, பூதனையினுடையவும் சகடத்தினுடையவும் பிரஸ்தாவத்தைத் தொட்டங்கினுல் "கண்ணபிரானுக்கு இங்ஙனே சில தீமைகள் விளைந்தனவே!" என்று நெஞ்சு வெதுப்புண்டு துணுக்கென் றெழுந்திருக்கக் கூடுமென்பது வாசலிற் கூவுமாய்ச்சிகளின் கருத்து. இங்குக் குலசேகராழ்வார் சரித்திரம் நினைக்கத்தக்கது.

திருப்பாற்கடலிற்கிடை அவதாரங்கட்கு அடிக்கிழங்காதல்பற்றி "வெள்ளத்தரவில் துயிலமர்ந்த வித்தினை" எனப்பட்டது. உழவர் விரையை நீரிலே சேர்ப்பதுபோல், உலகங்கட்கெல்லாம் விதைபோன்ற தான் நீரிலே சேர்ந்தானென்பது ரஸோக்தி. முனிவர்கள் - மஹரிஷிகள்; அவராவார்—ஒரு ப்ரஹ்மத்திற்குங் கடவராகமாட்டாதே குணத்ரய மாத்திரத்தில் ஒருப்பட்டவர்கள். யோகிகள்—கைங்கர்ய நிஷ்டர்கள். ஸ்ரீ பரதாழ்வானையும் இளையபெருமானையும் அடைவே ஒப்புக்கொள்க.

மெள்ள எழுந்து—வயிறு வாய்க்கப்பெற்ற மாதர் [கர்ப்பிணி ஸ்திரீகள்] வயிற்றினுள் உரையும் பிள்ளைக்கு நோவுவராதபடி மெள்ள எழுந்திருப்பது போலவும், மகனை நலியுமாறு இரணியனுல் ஏவப்பட்ட கிங்கரர்களினுல் ப்ரஹ்லாதாழ்வான் மலைமுடிகளினின்று தள்ளுண்ணும்

போது "ஹ்ருதயேநோத்வஹந் ஹரிம்" என்றபடி—'பார்த்தருள் பார்த்தருள்' என்று ஹ்ருதய குஹரவாஸியான ஸர்வேச்வரனைப் பிடித்துக்கொண்டாற்போலவும் எம்பெருமானை உள்ளத்துக் கொண்ட இம்முனிவர்களும் யோகிகளும் அவ்வெம்பெருமான் தளும்பாதபடி எழுந்திருப்பர்க ளென்றுணர்க.

உஷ:காலத்தில் உணரும்போது 'ஹரிர்ஹரி:, ஹரிர்ஹரி:' என்ற அநுஸந்தானத்துடன் உணரவேண்டுமென்பது விதியாதலால், அதன்படி அவர்கள் அத்தனைபேருந்திரண்டு அநுஸந் தித்த ஹரிநாமத்தின் பேரொலி இப்பாடியெங்கும் பரவிச்செல்ல, அதுகேட்டு நாங்கள் உணர்ந்து வந்தோம்; இது பொழுது விடிவுக்கு ஏற்ற அடையாளம்; இதற்குக் கண்ணழிவுசொல்ல உன்னுலாகாது; ஆனபின்பு கடுக எழுந்து எங்களுடன் கூடப்பெறுய் என்று கூவியவாறு.

"புள்ளரையன் கோயில்" என்ற பாடமும் கொள்ளற்பாலதே. "பேரரவம்" என்ற விடத்து, அரவம்—ரவ: என்ற வடசொல்லிகாரம். வெள்ளம்—திருப்பாற்கடற்கு ஆகுபெயர். வித்தினை—வித்து இன் ஐ—, இன்—சாரியை; வித்தை யென்றபடி. குளிர்ந்து—'குளிர்ந்தது' என்னும் வினைமுற்றின் தொகுத்தல்.

(ஸ்வாபதேசம்) இது பெரியாழ்வாரைத் திருப்பள்ளி யுணர்த்தும் பாசுரம். பிள்ளாய்! என் பது இதில் விளி. அறிவில்லாதவனைப் பிள்ளை யென்பது. எம்பெருமானுடைய ஸர்வ ரக்ஷகத்வம் முதலிய திருக்குணங்களை மறந்தே இவ்வாழ்வார் மங்களாசாஸனத்தில் ஒருப்பட்டாராதலால் பிள்ளை யென்னத் தகுதியுடையாராயினர். "ஜ்ஞாநவிபாக கார்யமான அஜ்ஞானத்தாலே வருமவையெல் லாம் அடிக்கழஞ்சு பெறும்" என்ற ஸ்ரீ வசனபூஷண திவ்ய ஸூக்தியும் மங்களாசாஸநத்திற்கு அஜ்ஞானத்தையே மூலமாகக் காட்டிற்று. இவ்வாழ்வார் பெரும்பாலும் நந்தவனத்திலேயே போது போக்குவாராதலால் அவ்விடத்து அடையாளமாகிய 'புட்களின் சிலம்புதல்' முன்னே கூறப்பட்டது. புள்ளரையன் என்று பெரிய திருவடியின் ப்ரஸ்தாவம் செய்திருப்பதில் இப்பெரி யாழ்வார் பெரிய திருவடியின் அம்சமாகத் திருவவதரித்தவர் என்று குருபரம்பரா ப்ரபாவாதி களிற் கூறியுள்ள விஷயம் முத்ராலங்காரரீதியில் ஸூசிதமாகிறது.

'வெள்ளை விளிசங்கு' என்கிற சொல்தொடர் முதன் முதலாகப் பெரியாழ்வாருடைய திருவாக்கில் தோன்றியது. (பெரியாழ்வார் திருமொழி 4—1—7 காண்க.) அதனை இங்கு அநுவதித்துக்காட்டுவது ஒருவகையான லிங்கம். [பேய்முலை நஞ்சுண்டு] பெரியாழ்வார் திரு மொழியில் (சீதக் கடலில்) கண்ணபிரானுடைய சரித்திரங்களில் பேய்முலை நஞ்சுண்ட கதை முதன் முதலாக அநுஸந்திக்கப்பட்டது. "பிறங்கிய பேய்ச்சி முலை சுவைத்துண்டிட்டு" என் றது காண்க. மறுபடியும் அந்தச் சரித்திரத்தை அநுஸந்திக்கையில் சகடாஸுரபங்கத்தையும் கூட்டி அநுஸந்தித்தார். "நால்களோர் நாலிந்து" என்ற பாசுரங் காண்க. அதற்குப் பொருந்த இங்கு "பேய்முலை நஞ்சுண்டு கள்ளச் சகடங் கலக்கழியக் காலோச்சி" என்றது. "வெள்ளத்தரவில்" என்று தொடங்கிப் பெரியாழ்வார்க்குள்ள 'விஷ்ணுசித்தர்' என்னும் திரு நாமமும் அதற்கு விவரணமான "அரவத்தமளியினணை" "பனிக்கடலில் பள்ளிகோளை" என்ற பாசுரங்களின் தாற்பரியமும் கண்கு ஸூசிதம்.

480. கீசுகீசென்றெங்குமானைச்சாத்தன் கலந்து *
பேசின பேச்சரவங் கேட்டிலையோ பேய்ப்பெண்ணே *
காசும் பிறப்புங் கலகலப்பக் கைபேர்த்து *
வாச நறுங்குழலாய்ச்சியர் * மத்தினால்

ஓசைபடுத்த தயிரரவங் கேட்டிலையோ *
நாயகப் பெண்பிள்ளாய் நாராயணன்மூர்த்தி *
கேசவனைப் பாடவும்நீ கேட்டே கிடத்தியோ *
தேசமுடையாய் திறவேலோ ரெம்பாவாய். (எ)

பேய் பெண்ணே	மதிகெட்ட பெண்ணே !
எங்கும்	எல்லாவிடங்களிலும்
ஆனைச்சாத்தன்	பரத்வாஜ பக்ஷிகளானவை
கலந்து	(ஒன்றோடொன்று) ஸம்ச்லேஷித்து
கீசுகீசு என்று	கீச்சுகீச்சென்று
பேசின	பேசிய
பேச்சு அரவம்	பேச்சினுடைய ஆரவாரத்தை
கேட்டிலையோ	(இன்னும் நீ) கேட்க வில்லையோ?
வாசம்	பரிமள வஸ்துக்களினால்
நறு *	மணம்கமழா நின்றுள்ள
குழல்	கூந்தலையுடைய
ஆய்ச்சியர்	இடைப்பெண்கள்
காசும்	(கழுத்தில் அணிந்துள்ள) அச்சுத் தாலியும்
பிறப்பும்	ஆமைத்தாலியும்
கலகலப்ப	கலகலவென்று சப்திக்கும்படியாக
கை பேர்த்து	கைகளே அசைத்து
மத்தினால்	மத்தாலே
ஓசை படுத்த	ஓசை படுத்தின
தயிர் அரவம்	தயிரின் ஒலியையும்
கேட்டிலையோ	கேட்கவில்லையோ?
காயகப் பெண் பிள்ளாய்	பெண்களுக்கெல்லாம் தலைமையாயிருப்பவளே!
நாராயணன் மூர்த்தி கேசவனை	ஸ்ரீமந் நாராயணனுக்கதாரமான கண்ணபிரானை
பாடவும்	(காங்கள்) பாடா நிற்கச் செய்தேயும்
நீ	நீ
கேட்டே	(அப்பாட்டைக்) கேட்டு வைத்தும்
கிடத்தியோ	(இங்ஙனே) உறங்குவாயோ ?
தேசம் உடையாய்	மிக்க தேஜஸ்ஸையுடையவளே!
திற	(நீயே எழுந்துவந்து கதவைத்) திற;

எல் ஓர் எம் பாவாய்—.

* * *—சிலரை உணர்த்திக் கூட்டிக்கொண்டு கண்ணபிரான் பக்கற் போமவர்களன்றே இவர்கள் ; நம்மைப் போலவே அனைவரும் நன்மைபெறவேணுமென்னுங் கருத்துடையோரன்றே. பகவத்ஸம்பந்தம் மெய்யே உண்டாகில் தன் வயிற்றிற்பிறந்த ப்ரஜையினுடைய ஸம்ருத்திக்கு உகக்குமாறுபோலவே அனைவருடைய ஸம்ருத்திக்கும் உகக்கவேணுமன்றே ?

ஆட்கொண்ட வில்லிபுத்தூர் எழுந்தருளா நிற்கச்செய்தே நஞ்சீயர் தெண்டனிட்டு நிற்க, "பகவத்விஷயத்தில் ருசி நமக்கு மெய்யே பிறந்ததில்லைகாணும்" என்று ஆட்கொண்ட வில்லிபுத்தூர் அருளிச்செய்ய, நஞ்சீயர், "உம்மைப்போல் ஆசார்யவான்கள் ஆரேனுமுளரோ ? நீர் இங்ஙனே அருளிச்செய்வானென் ?" என்று கேட்க ; "பாகவதர்களின் ஸம்ருத்தியைக்கண்டு மிக உகக்கையன்றே பகவத்விஷயத்தில் ருசி மெய்யே பிறக்கையாவது ; அஃது இல்லாமையைப்பற்றச் சொன்னேன்காணும்" என்று ஆட்கொண்ட வில்லிபுத்தூர் அருளிச்செய்தார் என்ற ஐதிஹ்யம் இங்கு நினைக்கத்தக்கது.

இங்ஙனே எல்லார்க்குமொக்க இந்நன்மை உண்டாகவேணுமென்ற பரிப்புடன் எல்லாரையுந் தட்டிக்கொண்டு மற்றொருத்தியின் மாளிகைவாசலிற் சென்ற ஆயர்மாதர், 'பெண்ணே போதுவிடிந்ததுகாண், எழுந்திராய்' என்ன ; 'விடிந்தமைக்கு அடையாளமென் ?' என்று அவள் கேட்க ; 'ஆனைச்சாத்தன் கலந்துபேசின பேச்சரவம் முதலியன அடையாளமல்லவோ ?' என்கிறார்கள்.

கீசுகீசு—ஒலிக்குறிப்பு; அகக்ஷரஸமையிருக்கிறபடி 'ஆனைச்சாத்தம்' எனினும் 'ஆனைச்சாத்தன்' எனினும் ஒக்கும்; பரத்வாஜபக்ஷி-வலியனெனப்படுமென்ப. "செம்போத்து" என்பாருமுளர். உணர்த்தவந்த ஆய்ச்சிகள் 'ஆனைச்சாத்தத்தினுடைய தொனி விடிவுக்கு அடையாளமன்றே?' என்ன; 'ஒரு ஆனைச்சாத்தமுணர்ந்தவிது விடிவுக்கு அடையாளமாகப் போருமோ?' என்று அவள் கேட்க; இவர்கள் "எங்கும்" என்ன; 'எங்கும் நீங்களில்லையோ அவற்றை உணர்த்துகைக்கு' என்று அவள் சொல்ல; 'அவை நாங்களுணர்த்த உணர்ந்தனவல்ல; கலந்துபேசின பேச்சுக்காண்' என்று இவர்கள் சொல்ல; 'இரவெல்லாமுறங்கிப் பொழுதுவிடியும்போதோ கூப்பது?' என்று அவள் கேட்க; 'மரக்கலம் [கப்பல்] ஏறிப்போமவன் மீண்டுவருமளவும் ஜீவநமேற்றிக்கொண்டுபோவதுபோல, இவையும் பிரிவுகாலமாகிய விடியற்காலத்திலே கலந்து பகல் முப்பது நாழிகைக்கும் விளைநீர் அடைத்துக்கொண்டு 'அந்தோ! பிரிவு வருகின்றதே!' என்னும் தளர்த்திதோற்றப் பேசுகிற பேச்சு விடிவுக்கு அடையாளமாகவற்றன்றே என்கிறார்கள்.

இங்ஙன் கூறக்கேட்ட அவள், "மாளிகைகளில் துதிபாடகர்கள் வம்சாவளி சொல்லக் கேட்டு உணரக்கடவார் பறவைகளின் பேச்சுக்கேட்டு உணரவேண்டும் படியாவதே! அஹஹ! இஃதென்ன விபரீதகாலம்!' என்று வெறுத்துக்கிடக்க, பேய்ப்பெண்ணே! என்று நிந்திக்கின்றனர். பாகவத ஸம்ச்லேஷத்திற்கு விரைந்து ஓடிவாராமே ஆறியிருக்கையின் மிக்க பேய்த்தனமில்லையே. இங்ஙன் கூறக்கேட்ட அவள், 'நள்ளிருட்கண் வந்து பொழுதுவிடிந்ததெனப் பிதற்றுகின்ற நீங்களன்றே பேய்ப்பெண்கள்' என்ன; இவர்கள், 'பொழுதுவிடிந்ததில்லை' என்கிற நீதான் பேய்ப்பெண் என்ன; அவள், 'விடிந்தமைக்குக்கூறிய இவ்வடையாளம் போதாது; வேறடையாள முண்டாகிற் சொல்லுங்கள்' என்ன; இவ்வூரில் ஆய்ச்சிகளனைவரு முணர்ந்தெழுந்து தயிர்கடைகிற ஓசைகூடச் செவிப்பட்டதில்லையோ? அஃது அடையாளமாகவற்றேயன்றே? என்கிறார்கள்.

காசு பிறப்பு—மாதர் அணியும் ஆபரணவிசேஷம். கலகலப்ப—ஒலிக்குறிப்பு. கடைய வேண்டிய தயிர் அளவற்றுள்ளமையாலும், கடைகின்ற தங்களுடைய ஸௌகுமார்யத்தாலும், க்ருஷ்ணன் அருகில் வந்திருந்துகொண்டு 'தயிரை மோராக்கவொட்டேன்' என்று கடைகபிற்றைப்பற்றி வலிக்கையாலும் கடைகையிலுள்ள அருமையைக் கூறுவது, கைபேர்த்து என்பது. கைபேர்த்து-தயிர்கடைகையில் கையை வியாபரிக்கச்செய்து என்றபடி. கடைகிறபோதைச் சிரமத்தாலே மயிர் முடிகட்டு நெகிழ்ந்து முடைநாற்றத்தை மறைக்கும்படி மணங்கமழா நின்றுள்ளமைபற்றி "வாசநறுங்குழலாய்ச்சியர்" எனப்பட்டது.

"உத்காயதீநாமரவிந்தலோசநம் வ்ரஜாங்கநாநாம் திவமஸ்ப்ருசத் த்வநி:—தத்நச்ச நிர்மந்தநசப்தமிச்ரிதோ நிரஸ்யதே யேந திசாமி மங்களம்." கண்ணபிரானுடைய கண்ணழகுக்குத் தோற்றுப்பாடுகிற ஆயர் மாதருடைய பாட்டிஞெலி தயிர்கடைகிற ஓசையோடே கலசிப்பரமபதத்தே சென்றெலித்ததெனப் புராண நூல் கூறுமாறறிக. ஆய்ச்சிகள் தயிர்கடையும்போதும் கண்ணபிரானைப் பாடுவார்களோவென்னில்; "விக்ரேதுகாமா கில கோபகந்யா மூராரிபாதார்ப்பிதசித்தவ்ருத்தி:-தத்யாதிகம் மோஹவசாதவோசத் கோவிந்த தாமோதர மாதவேதி." ஓராய்ப்பெண், கண்ணபிரான் முடிமுடித்தவிரத்தில் தோற்று அவன்பக்கல் கருத்தை ஊன்றவைத்து வேறுசிந்தையின்றியிருக்க, வீட்டிலுள்ள பெரியோர் 'இவளை இதினின்றும் மீட்கும் விரகு எதோ' என்று பார்த்து, பாலையும் தயிரையும் நெய்யையும் தந்து 'இவற்றை விற்றுவா' என்ற,

ணுப்ப, அவளும் அங்ஙனமே விற்கச்செல்ல, நீனேவு கண்ணபிரான் பக்கலிலாகையாலே, 'கோவிந்தன் வாங்கவில்லையோ கோவிந்தன், க்ருஷ்ணன் வாங்கவில்லையோ க்ருஷ்ணன், மாதவன் வாங்கவில்லையோ மாதவன்' என்று க்ருஷ்ணநாமங்களைக் கூறிக்கொண்டு திரிந்தாள் என்னுகின்றபடி, தயிர் கடையும்போது கண்ணபிரானைப் பாடுவர்களென்னத் தட்டுண்டோ? நிற்க.

இவ்வடையாளம் சொல்லக்கேட்ட அவள், 'பெண்காள்! இப்போது இப்பாடி பண்டு போலோ இருப்பது? க்ருஷ்ணன் பிறந்த பின்னர் * வாங்கக் குடம் நிறைக்கும்வள்ளற் பெரும் பசுக்களாகையாலே அறுபது நாழிகையும் கறப்பது கடைவதாய்ச் செல்லுமத்தனையேயன்றே? இது விடிவுக்கு அடையாளமாகவற்றே!' என்று அவர்கட்கு மறுமாற்றத்திற்கு இடமில்லாத படிகூற, வேறு விடைசொல்ல வல்லமையின்மையாலே நாயகப் பெண்பிள்ளாய்! என்கிறார்கள். இங்ஙனே நாங்கள் சொல்லுமடையாளங்கட்கெல்லாம் அந்யதாஸித்தி சொல்லுகிறதற்கு அடி உன் வீறுடைமையன்றே என்றவாறு.

இப்பாட்டில், ஒருகால் 'பேய்ப்பெண்ணே!' என்பது, மற்றொருகால், 'நாயகப் பெண்பிள்ளாய்!' என்பதாய்ச் செல்லுகிறபடியைக் காண்மின்; "ஒரு மிதுநமாய்ப் பரிமாறுகின்றுல் தாழச் சொன்னபோதும் உயரச் சொன்னபோதுமாயிறே யிருப்பது" என்பர், அழகியமணவாளப்பெருமாள் நாயனார்; "'பேய்ப்பெண்ணே' என்றத்தோடு 'நாயகப் பெண்பிள்ளாய்' என்றத்தோடு வாசி இல்லையிறே அகவாயில் பாவம் ஒன்றுகையாலே" என்பர், பெரியவாச்சான் பிள்ளை. நாயகப்பெண்பிள்ளாய்!—இத்திருநாமத்துக்கெல்லாம் நீ தலைவியானபடி இதுவோ? எல்லாரையும் திரட்டிக்கொண்டுபோய் உத்தேச்யத்தைப் பெறுகையன்றே தலைவியின் காரியம் என எளியவாறு.

இங்ஙன் ஏசக்கேட்ட அவள், 'என்னை நீங்கள் தலைவி என்னலாமோ, உங்களுக்கு நான் அடிமைப்பட்டவளல்லேனே? இதோவந்து கதவைத்திறக்கிறேன்; எம்பெருமானுடைய சில அபதானங்களைப் பாடிக்கொண்டிருங்கள்' என்ன; இவர்கள் கேசிவத வ்ருத்தாந்தத்தைப் பாடத்தொடங்கினர்கள்.

கேசியின் வாயைக் கீண்டெறிந்த வரலாறு:—கம்ஸனால் ஏவப்பட்ட அஸுரர்களில் கேசி என்பவன் குதிரையின் உருவத்தோடு ஆயர்கள் அஞ்சிநடுங்கும்படி கனைத்துத் துரத்திக்கொண்டு கண்ணபிரான்மேற் பாய்ந்துவர, அப்பெருமான் திருக்கையை நன்றுகப் பெருக்கிநீட்டி அதன் வாயிற்கொடுத்துத் தாக்கிப்பற்களை உதிர்த்து உதடைப் பிளந்து அதனுடம்பையும் இருபிளவாக வகிர்ந்து தள்ளினன் என்பதாம்.

நாராயணன்மூர்த்தி கேசவனே = நாராயணமூர்த்தியாகிய கேசவனே; அன்றி, மூர்த்தி என்று ஸ்வாமிக்கும் பெயராகையாலே, நாராயணனதாரமாய் ஸர்வஸ்வாமியான கேசவனே என்னும் உரைக்கலாம். கேசவன் என்பதற்கு, கேசியைக் கொன்றவன், சிறந்த மயிர்முடியையுடையவன், அயனரர்கட்குத் தலைவன் என மூவகைப் பொருள்களுண்டு.

இவர்கள் கேசவனைப் பாடச்செய்தேயும் அவள் பேசாதேகிடக்க, நீகேட்டே கிடத்தியோ என்கிறார்கள். நாங்கள் பாடினபாட்டு உன் உறக்கத்திற்குத் துடைகுத்தினவாறுயிற்றுப்போலுமென்ற கருத்துக்காண்க. உள்ளே அவள் எம்பெருமானுடைய வெற்றியை அநுஸந்தித்துக் கொண்டு பேசாதே கிடந்தமையால், இவர்கள் சாலகவாசலாலே நோக்கிக் கண்டனர்; எம்

பெருமானுடைய விஜயாநுஸந்தாநத்தினால் அவள் வடிவிற்மேன்றியுள்ள புகரைக்கண்டு "தேச முடையாய்!" என விளித்துக் கதவைத்திறவென்கிறார்கள்.

கிடத்தி—முன்னிலை யெருமை விணைமுற்று. தேசம்—தேஜஸ் என்னும் வடசொல் விகாரம். (எ)

(ஸ்வாபதேசம்)—இது, பெரியாழ்வார்க்கு அடுத்த முந்தினவரான குலசேகராழ்வாரை யுணர்த்தும் பாசுரம். 'பேய்ப்பெண்ணே!, நாயகப் பெண்பிள்ளாய்!, தேசமுடையாய்!, என்ற மூன்று விளிகளும் குலசேகராழ்வாரை வற்புறுத்துவன. பெருமாள் திருமொழியில் *மெய்யில் வாழ்க்கையை* என்ற வொரு பதிகத்தினால் தம்மைப் பெரும்பேயராகச் சொல்லிக்கொண்டவர் இவ்வாழ்வார். * ஏர் மலர்ப் பூங்குழல், ஆலிநீள் கருங்பு, மன்னுபுகழ்க் கௌசலைதன் * என்ற பதிகங்களில் பல பெண்களின் தன்மையை யடைந்து பேசினருமிவர். "கொல்லி காவலன் கூடல் நாயகன்" என்று அரசரான தன்மை தோற்றப் பேசினாதலால் நாயகப் பெண்பிள்ளாய் என்றது. அன்றியும், ஒரு ஹாரத்தில் நட்ட நடுவிலுள்ள மணியை 'நாயகக்கல்' என்பதுண்டு. குரு பரம்பரையில் எம்பெருமானரை நடுநாயகமென்று யதிராஜ ஸப்ததியில் தேசிகன் கூறினர்; யதிராஜோக நிபத்த நாயக ஸ்ரீ: மஹதீ குருபங்க்தி ஹாரயஷ்டி:" என்றார். அதுபோலவே ஆழ்வார் களுள் குலசேகரர் நடுநாயகமாகவுள்ளவர். பொய்கையார் பூதத்தார் பேயார் மழிசையர் மாறன் என முன்னே ஐவர்; பட்டநாதன் கோதை தொண்டரடிப்பொடிகள் பாண்பெருமாள் கலியன் எனப் பின்னே ஐவர்; நடுவே குலசேகரர். ஆகவே இதுபற்றியும் நாயகப் பெண்பிள் ளாய் என்ற விளி நன்கு பொருந்தும். [தேசமுடையாய்!] பகவத்கீதையில் [18—43.] [ஶௌர்யம் தேஜோத்ருதிர் தாக்ஷ்யம்—க்ஷாத்ரம் கர்ம ஸ்வபாவஜம்.] என்று தேஜஸ்ஸை க்ஷத்ரிய தர்ம மாகச் சொல்லப்பட்டிருப்பதற்கிணங்க இந்த விளி இவ்வாழ்வாருடைய க்ஷத்ரியத்வத்தைத் தெரிவிக்கும். அன்றியும், "தேவத்வமும் நிந்தையானவனுக்கு ஒளிவரும் ஐகள் போலே ப்ரஹ்ம ஜன்மமும் இழுக்கென்பார்க்குப் பண்டை நாளில் பிறவி உண்ணீட்டுத் தேசன்றே" என்ற ஆசார்ய ஹ்ருதய ஸ்ரீ ஸூக்தியின்படியும். அதற்கு மூலமான "மண்ணுண்டிலராகி யெவ்விழிவிற்றுணை லும், ஆழியங்கைப் பேராயற்கு ஆளாம்பிறப்பு—உண்ணீட்டுத் தேசன்றே" என்ற பெரிய திருவந்தாதிப் பாசுரத்தின்படியும் பகவத் ஸேஷத்வத்திற்கு அநுகூலமான பிறப்பே தேஜஸ் ஸென்று நிர்ணயிக்கப்படுகிறது; அப்படிப்பட்ட பிறப்பை *ஊனேறு செல்வத்து* என்ற பதி கத்தில் பாசுரந்தோறும் ஒரோவிதமாக விரும்பினவர் இவ்வாழ்வாரேயாதலால் தேச முடையார் இவரேயாகத் தகும். இப்பாட்டில் "ஆனைச் சாத்தன்" என்ற பதப்பிரயோகம் கவனிக்கத் தக்கது. இச் சொல் மலையாள பாஷையிலிருந்து திசைச் சொல்லாகத் தமிழில் வழங்குவதென் பர். (ஆனசாதம்) என்று மலைநாடர் வலியனென்னும் பறவையை வழங்குவராம். இங்வாழ் வார் மலைநாட்டில் திருவவதரித்தவராதலால் அத்திசைச்சொல் இங்குப் பரவசமாகவே அமைந்தது போலும். காசும் பிறப்பும் என்று ஆபரண விசேஷங்களைப் பற்றின ப்ரஸ்தாவமிருப்பது இவ் வாழ்வாருடைய சரிதையில் ஆபரண ப்ரஸ்தாவமுள்ளவாற்றை ஒருவாறு நினைப்பூட்டும். "ஆங் கெடப் பரனன்பர் கொள்ளாரென்று அவர்களுக்கே வாரங்கொடு குடப்பாம்பில் கையிட்டவன்" என்ற தனியனும் ஸ்மரிப்பது. "வாசநறுங்குழ லாய்ச்சியர் மத்தினை லோசைபடுத்த தயிரரவம்" என்றது பெருமாள் திருமொழியில் "கெண்டை யொண்கண் மடவாளொருத்தி கீழையகத்துத் தயிர் கடையக் கண்டு.....வண்டமர் பூங்குழல் தாழ்ந்துலாவ.....தண் தயிர் நீ கடைந்திட்ட வண்ணம்" என்ற பாசுரத்துச் சொற்சுவைகளை நன்கு நினைப்பூட்டும். [நாராயணன் மூர்த்தி கேசவனைப் பாடவும்] கிருஷ்ணவதாரத்தில் குதிரை வடிவாக வந்த கேசியென்னு மஸுரனை வதஞ்

செய்ததனால் கேசவனென்றது. இவ்வாழ்வார் தமது திருமொழியில் முதன் முதலாக இந்த வாலாற்றையே பேசி யநுபவித்தார் * மாவினை வாய் பிளந்துகந்தமாலே * என்று. ஸ்வப்ரபந்தத்தை "நலந்திகழ் நாரணனடிக்கீழ் நண்ணுவாரே" என்று நாராயணனைப் பாடித் தலைக் கட்டினர். [கேட்டே கிடத்தியோ] இவ்வாழ்வார் காடோறும் அந்தணர்களைக் கொண்டு ஸ்ரீராமாயண பாராயணஞ் செய்வித்துத் தாம் கேட்டவர். கேட்டு, இருந்த விடத்திலிராமல் படையெடுத்துஞ் சென்றவர்.

481. கீழ்வானம் வெள்ளென் றெருமை சிறுவீடு *
மேய்வான் பரந்தனகாண் மிக்குள்ள பிள்ளைகளும் *
போவான் போகின்றாரைப் போகாமற் காத்து * உன்னைக்
கூவுவான் வந்துநின்றோம் * கோதுகலமுடைய
பாவாய் யெழுந்திராய் பாடிப் பறைகொண்டு *
மாவாய் பிளந்தானை மல்லரை மாட்டிய *
தேவாதி தேவனைச் சென்றுநாஞ் சேவித்தால் *
ஆவாவென் றாராய்ந் தருளேலோ ரெம்பாவாய். (அ)

கோதுகலம் உடைய பாவாய் — கிருஷ்ணனுலே மிகவும் விரும் பத்தக்க பதுமை போன்ற வனே!
கீழ் வானம் — கீழ்த்திசைப்பக்கத்து ஆகாசமானது
வெள்ளென்று — வெளுத்தது; (அன்றியும்,)
எருமை — எருமைகளானவை
மேய்வான் — (பனிப்புல்) மேய்கைக்காக
சிறுவீடு — சிறு தோட்டங்களில்
பரந்தன — சென்று புக்கன;
போவான் போகின்றார் — (திருவேங்கட யாத்திரை போலே) போகையையே பிரயோஜனமாகக் கொண்டு போகின்ற
மிக்குள்ள பிள்ளைகளும் — மற்றுள்ள எல்லாப் பெண் பிள்ளைகளையும்
போகாமல் காத்து — போக ஒட்டாமல் தடுத்து
உன்னை கூவுவான் வந்து நின்றோம் — உன்னை அழைத்தற்பொருட்டு (உன் மாளிகை வாசலில்) வந்திரா நின்றோம்;
எழுந்திராய் — (எங்களுடன் கூடுவதற்காக) எழுந்திரு;
பாடி — (கண்ணபிரானுடைய குணங்களைப்) பாடி
பறை கொண்டு — (அவனிடத்துப்) பறையைப் பெற்று,
மா வாய் பிளந்தானை — குதிரையுருவமெடுத்து வந்த கேசி யென்னு மசுரனுடைய வாயைக்கீண்டெறிந்தவனும்
மல்லரை மாட்டிய — மல்லர்களை மாளச் செய்தவனுமான
தேவாதி தேவனை — அத்தேவ தேவனை
நாம் சென்று சேவித்தால் — நாம் அணுகி அடி பணிந்தால் (அவன்,)
ஆராய்ந்து — (நமது குறைகளை) ஆராய்ந்து
ஆ ஆ என்று அருளும் — ஐயோ! என்று இரங்கியருள்வன்;

எல் ஓர் எம் பாவாய்—

* * *—எல்லாரும் திரண்டுவந்து அழைக்கவேண்டும்படி கண்ணபிரானுக்கு மிகவும் அந்தரங்கவல்லபையாயிருப்பாளொருத்தியை உணர்த்தும் பாசுரம் இது.

"பாவாய்! கீழ்வானம் வெள்ளென்றதே; இனியாகிலும் எழுந்திராய்" என்றழைக்க; இதனைக்கேட்ட அவள், 'அதற்குள் இராக்காலம் கழிகையாவதென்? கீழ்வானம் வெளுக்கையாவதென்? இஃது உங்களுடைய விபரீதஞானம்; "அஞ்சுடராவெய்யோனணி நெடுந்தேர்

தோன்றுதால்" என்று * நிங்கள் திருமுகத்துச் சேயிழையாரான நீங்கள் நெடும்போதாகக் கீழ்த்திசையை நோக்கிக்கொண்டிருக்கையாலே உங்களுடைய முகநிலா கீழ்த்திசையிற் சென்று தட்டி உங்கள் முகத்திலேவந்து பிரதிபிம்பித்துத் தோன்றுகையாலே கிழக்கு வெளுத்ததுபோலத் தோற்றுகிறது; இஃது உங்களுடைய அந்யதாஜ்ஞானம்; வேறு அடையாளமுண்டாகிற் சொல்லுங்கள்' என்ன; எருமைகள் பனிப்புல் மேய்கைக்காகச் சென்று பரந்தமை ஏற்ற அடையாளமன்றே? என்கிறார்கள்.

சிலர், "எருமை சிறைவீடு" எனப்பாடங்கொண்டு, எருமைகள் சிறையினின்றும் [—தொழுவத்தினின்றும்] விடுக்கப்பட்டு என்றுரைத்தனர்; அது பொருத்தமற்றதென மறுக்க. சிறுவீடு மேய்கையாவது—ஊர்ப்பசுக்களுடனே சென்று வெளிவயல்களில் மேய்வதற்கு முன்னே அவரவர்கள் சொந்தமாக அமைத்த நல்ல பசும்புல் நிறைந்த சிறு தோட்டங்களில் மேய்கை. நன்றுகப் பால் தருவதற்காக இப்படி சிறுவீடு மேயவிடுதல் ஆயர் வழக்கம்.

இங்ஙனே ஒரு அடையாளங் கூறக்கேட்ட அவள், 'உங்களது முகவொளியினால் சிதறிப்போகிற இருள்களின் திரள் எருமைகளாக உங்கட்குத் தோற்றுகின்றனவே யன்றி, அவை மெய்யே எருமைகளல்ல; இஃது உங்களுடைய விபரீதஜ்ஞானம்' என்ன; அதுகேட்ட இவர்கள், 'எங்கள் ஞானம் விபரீதமாகில் ஆகிறது; பொழுதுவிடியவில்லை யென்கைக்கு அடையாளமுண்டாகில் நீ சொல்லாய் பார்ப்போம்' என்ன; அதற்கு அவள், 'இத்திருவாய்ப்பாடியில் அஞ்சு லக்ஷங் குடிப்பெண்களுண்டு; இப்போது இங்குவந்துள்ள பெண்கள் ஆயிரத்துக்கு மேற்பட்டிரார்; மற்றவர்களும் உணர்ந்துவாவேண்டாவோ? அவர்கள் உணர்ந்து எழுந்து வாராமை விடியாமைக்கு அடையாளமாகக் குறையில்லை' என்ன; அதுகேட்ட இவர்கள், 'இவ்வளவேயோ நீ உணர்ந்தது; உன்னையொழிந்த பெண்டிரனைவரும் உணர்ந்தெழுந்து புறப்பட்டுப் பாவைக்களத்தை நோக்கிச்செல்ல, உன்னைத் தவிர்த்துச் செல்லுதல் உரியதன்றென்று அவர்களைப் போகவொட்டாமல் தடுத்து, உன்னை அழைப்பதற்காக உன் மாளிகை வாசற்கடையிலே வந்து படுகாடு கிடவாநின்றோங்காண்' என்கிறார்கள்.

உத்தேச்யமானதொரு ஸ்தலத்தைச்சென்று சேர்வதிற்காட்டிலும் அத்தலத்தை நோக்கிச் செல்லுகைதானே அர்ச்சிராதிகதிபோல் போகரூபமாயிருக்குமென்பது தோற்றும், "போவான் போகின்றாரை" என்பதனாலென்ப. போவான்—போவதற்கு; வான் விகுதிபெற்ற தெரிநிலை வினையெச்சம். (வான் என்பதில், ஆன்—வினையெச்சவிகுதி; வ்—எதிர்கால இடைநிலை என்பது ஒரு சாரார் கொள்கை.) போவதற்குப் போகின்றார் என்றால், போகையே பிரயோஜநமெனப் புலப்படுமன்றே. போகின்றாரை என்றவிடத்துள்ள இரண்டாமுருபு "மிக்குள்ள பிள்ளைகளும்" என்றவிடத்துப் பிரித்துக்கூட்டியுரைக்கப்பட்டது.

இங்ஙனே இத்தனை ஆய்ப்பெண்டிரும் இவள் மாளிகைவாசலில் வந்து துவள்வதற்கு அடி-இவள் கண்ணபிரானுக்கு மிகவும் அந்தரங்கவல்லபையாயிருக்குமஃதேயா மென்பது "கோதுகலமுடைய பாவாய்" என்ற விளியாற்போதருமென்க. கோதுகலம்—கௌதூஹலம் என்ற வடசொல்விகாரம்; ஆசை என்பது அதன் பொருள்; கண்ணபிரானுடைய ஆசையைத் தன்னிடத்துப் பெற்றுள்ள என்றபடி.

ஸர்வசேஷியான எம்பெருமான் சேஷபூதர் இருக்குமிடத்தே வந்து அருள்புரியக்கடமையுடையனாயிருந்துவைத்து, அவன் அங்ஙன் செய்யாதொழிகையில் நாம் நம் ஸ்வரூபத்தைக் குலைத்துக்

கொண்டாகிலும் அவனிருக்கு மிடத்தேறச் சென்று சேவித்தால், அவன் 'ஆ! நம் காரியத்தை நாம் செய்யத்தவறினேமே; அன்னநடையவணங்குகளே ஆயாஸப்படுத்தினேமே!' என்றுதான் கழிவிரக்கமுற்று நம் காரியத்தைச் செய்து தலைக்கட்டுவன்; எல்லாருமாகத் திரண்டுபோகலாம், எழுந்து வா என்றழைக்கின்றனர், பின்னடிகளால்.

(ஸ்வாபதேசம்). குலசேகரர்க்கு அடுத்த முந்தினவரான நம்மாழ்வாரை யுணர்த்தும் பாசுரமிது. கோதுகலமுடைய பாவாய்! என்றவிளி நம்மாழ்வாரை வற்புறுத்தும். ('கோது குலமுடைய' என்று வழங்கிவரும் பாடம் பரமக்ருபையுடன் மறக்கத்தக்கது. அப்பாடம் நெடுநாளாகவே நாடெங்கும் பரவியதலையாய அநர்த்தம் பெரிதுமுண்டு. ஸ்ரீபராசரஸ்வாமி வியாக்கியானம் செய்தருளுமிடத்து "குலம் குலமாக வுனக்குப் பரிசர்யை பண்ணும்படி....." என்றுரைத்திட்டார். அது, 'கோதுகுலமுடைய' என்கிற (தவறுதலான) பாடத்தில் அபிநிவேஶத்தினால்போலும். வஸ்துதஸ்து, வடமொழியில் கௌதூஹலம் என்ற சொல் தமிழில் கோது கலமெனத் திரிந்தது. இதில் குகரம் நுழைய ப்ரஸக்தியில்லை. "கோதுகலமுடைக் குட்டனேயோ" என்றார் பெரியாழ்வாரும்.) கோதுகலமாவது ஆசை; ஆசையையுடைய என்றது. - எம்பெருமானிடத்தில் ஆசையையுடைய, அல்லது எம்பெருமானுடைய ஆசையைத் தன்னிடத்திலே கொண்டுள்ள-என்று இருவகையாகவும் பொருள்படும். பட்டர் நம்மாழ்வாரைப் பற்றிப் பேசும்போது "ரிஷிம் ஜுஷாமஹே க்ருஷ்ணத்ருஷ்ணைதத்வமிவோதிதம்" என்று க்ருஷ்ண குதூஹலமே நம்மாழ்வாராக வடிவெடுத்தது என்றார். க்ருஷ்ண த்ருஷ்ணை என்றதும் க்ருஷ்ணனிடத்தில் த்ருஷ்ணை, க்ருஷ்ணனுடைய த்ருஷ்ணை என இருவகையாகவும் விரியும். இதனால் தேறின பொருளே "கைம்மா துன்பொழித்தாயென்று கைதலை பூசலிட்டே, மெய்மாலாயோழிந்தேன் எம்பிரானுமென்மேலானே" என்ற பாசுரத்தினால் நம்மாழ்வார்தாமே வெளியிட்டருளினார். "ப்ரியோ ஹி ஜ்ஞானினோத்யர்த்தம் அஹம் ஸ ச மம ப்ரிய:" என்றபடி. நானும் எம்பெருமானிடத்துக் குதூகலங் கொண்டேன், அவனும் என்னிடத்துக் குதூஹலங் கொண்டான் என்றருளிச்செய்தவர் நம்மாழ்வார். பாவாய்! என்ற விளியும் இவர்க்குப் பொருந்தும். திருவாய்மொழியில் "சூழ்விசும் பாட்டியேன் பாவையே" என்றும் "என்பாவை போயினித் தண்பழனத் திருக்கோளூர்க்கே" என்றும் பலவிடங்களில் தம்மைப் பாவையாகச் சொல்லிக் கொண்டவர் இவ்வாழ்வார். 'எழுந்திராய்' என்ற சொல்லாற்றல் நன்கு நோக்கத்தக்கது; உட்கார்ந்திருப்பவரையன்றே எழுந்திரா யென்பது. மற்றையாழ்வார்களெல்லாரும் அர்ச்சையில் நின்ற திருக்கோலமாகவேயுள்ளார்; நம்மாழ்வாரொருவரே வீற்றிருந்த திருக்கோலம். "பத்மாஸநோபவிஷ்டம்" என்கிற பூர்வாசார்யச்லோக பதமும் இங்கு அநுஸந்தேயம். [கீழ்வானம் வெள்ளென்று.] உதயகாலத்தில் கிழக்கு வெளுக்கும். இங்கும் வகுளபூஷண பாஸ்கரோதயமாதலாலும், அதுதானும் கலியுகத்தின் உதயகாலத்திலாதலாலும் கிழக்கு வெளுத்ததாகச் சொல்லிற்று. கீழ்வானமென்றபோதே மேல்வானம் நினைவுக்கு வரும். நித்யவிபூதி மேல்வானமாகும். லீலாவிபூதியானது நம்மாழ்வாருடைய திருவாய்மொழி யவதாரத்தாலே "ஓராயிரத்துளிப்பத்து உரைக்கவல்லார்க்கு வைகுந்தமாகும் தம்மூரெல்லாம்" "வையம் மன்னி வீற்றிருந்து விண்ணுமாள்வர் மண்ணுளாரே" இத்யாதிப்படியே தானே பரமபதமாயிற்று. ஆகவே கீழ்வானமான இவ்விபூதி வெள்ளென்றது. [எருமை சிறுவீடு மேய்வான்] வீடு என்று மோக்ஷம்; சிறு வீடு என்று கைவல்ய மோக்ஷம். இந்த ஸங்கேதமிட்டருளினவர் நம்மாழ்வார்; திருவாய்மொழியில் (4—1—10) "குறுக மிகவுணர்வத்தொடு நோக்கி" என்ற பாசுரத்தின் பொருள்கொண்டு இங்கு அறியத்தக்கது. எருமையென்பது தாமஸப்ரக்ருதிகளே. நம்மாழ்வார்

திருவவதாரம் செய்தருள்வதற்கு முன்னே பலரும் காமஸப்ரக்ருதிகளாய் நல்வீடு செல்லாது சிறுவீடு முதலியவற்றிற் சென்று பாழாயினர் என்பது இங்கு ஸூசிதம். [மிக்குள்ள பிள்ளை களுமித்யாதி.] மற்றைப் பிள்ளைகளையும் போகவொட்டாமல் தடுத்து இப்பிள்ளை வாசலில் வந்து துவள்வதனால் இவருக்குண்டான விலக்ஷணமான ஏற்றம் தோற்றுவதுபோல, மற்றையாழ்வார் களிற் காட்டில் நம்மாழ்வார்க்குண்டான ப்ரபந்நஜநகூடஸ்தத்வமாகிற ஏற்றம் தோற்றுவிக்கப் பட்டது. "போவான் போகின்றாரை" என்ற பிரயோகம் வெகு ஆச்சரியமானது. 'போவதற் காகப் போகிறவர்கள்' என்று சொல்லுவதுண்டோ? இல்லை. அப்படியிருக்க என் சொல் லிற்று? போவதுதானே ஸ்வயம் ப்ரயோஜனமென்று காட்டுவதற்காகவே சொல்லிற்று. இத்த கைய பிரயோகம் முதன் முதலாக நம்மாழ்வார் திருவாக்கில்தான் வந்தது; திருவிருத்தத்தில் "போவான் வழிக்கொண்ட மேகங்களே!" என்றார். [உன்னைக் கூவுவான் வந்துநின்றோம்.] 'கூவிக்கொள்ளும் காலமின்னங்குறுகாதோ" "என்னைக் கூவியருளாய் கண்ணனே" "கூவிக் கொள்ளாய் வந்தந்தோ" என்று பலகாலும் விரும்பினபடியே கூவுவான் வந்து நின்றோமென்கி றார். [மாவாய் பிளந்த தேவாதிதேவனை] இப்போது ஆண்டாள் நோற்பதுபோல நம்மாழ்வா ரும் ஒரு திருவாய்மொழியில் நோன்பு நோற்றார்; வீற்றிருந்தேழுலகும் என்ற திருவாய்மொழி யில் "ஏற்ற நோற்றேற்கு" என்று முதலிலும் "வண்டமிழ்நூற்க நோற்றேன்" என்று மூடி விலும் வருவது காண்க. அங்ஙனம் நோற்ற திருவாய்மொழியில் தேவாதிதேவனை அநுபவிக் கின்ற ஆழ்வார் மாவாய் பிளந்தானென்ற விசேஷணத்தையே முதற்பாட்டில் இட்டருளினார்; "வெம்மாபிளந்தான் தன்னை" என்றது காண்க. ப்ரதமப்ரபந்தத்தில் "இமையோர் தலைவா!" என்றும்; சரமப்ரபந்தத்தில் "அயர்வறுமமரர்களதிபதி" என்றும் தேவாதிதேவனையே மூன் றுற முன்னம் சேவித்தாராழ்வார். [சென்று நாம் சேவித்தால்] "வானநாயகனே! அடியேன் தொழவந்தருளே" என்று தேவாதிதேவனை நீர் உம்மிடம் வருமாறு அழைத்தீர்; அங்ஙனமல் லாமல் அவனிடம் நாம் சென்று சேவிக்கலாம் வாரும் என்றழைக்கிறாள் போலும். [ஆவா வென்று] "ஆவாவென விரங்கார் அந்தோவலிதே கொல், மாவாய் பிளந்தார் மனம்" என்றும், "அடியேற்கு ஆவாவென்னுமே" என்றும் நீர் விரும்பினபடியே மாவாய்பிளந்த பெருமான் உமக்கு ஆவாவென்பன் என்று காட்டுகிறபடி. [ஆராய்ந்து] "ஆரென்னையாராய்வார்" என்ற உம்முடைய குறையும் தீரும் என்று காட்டியபடி.

482. தூமணி மாடத்துச் சுற்றும் விளக்கெரிய *
தூபங் கமழத் துயிலணைமேற் கண்வளரும் * *
மாமான் மகளே மணிக்கதவந் தாள்திறவாய் *
மாமீ ரவளை யெழுப்பீரோ * உன்மகள்தான்
ஊமையோ அன்றிச் செவிடோ வனந்தலோ *
ஏமப் பெருந்துயில் மந்திரப் பட்டாளோ *
மாமாயன் மாதவன் வைகுந்த னென்றென்று *
நாமம் பலவும் நவின்றேலோ ரெம்பாவாய். (கூ)

தூ மணி மாடத்து சுற்றும் — பரிசுத்தமான மாணிக்கங்களழுத்திச்சமைத்த மாளிகையில் காற்புறமும்

விளக்கு எரிய தூபம் கமழ — விளக்குகள் எரியவும் (அகில் முதலியவற்றின்) வாசனைப்புகைகள் மணம் வீசவும்,

துயில் அணைமேல் கண்வளரும்	மென்மையான படுக்கையின் மீது நித்திரை செய்யா நின்ற.
மாமான் மகளே	அம்மான் பெண்ணே !
மணி கதவம்	மாணிக்கக் கதவினுடைய
தாள்	தாழ்ப்பாளே
திறவாய்	திறந்திடுவாயாக ,
மாமீர்	அம்மாமீ !
அவளே	(உள்ளே உறங்குகிற) உன் மகளே
எழுப்பீரோ	எழுப்ப மாட்டீரோ ?
உன் மகள்	உன் மகனானவள்
ஊமையோ	வாய்ப்புலன் இல்லாதவளோ?
அன்றி	அல்லாமற் போனால்
செவிடோ	செவிப்புலன் இல்லாதவளோ ?
	(அன்றி)
அனந்தலோ	பேருறக்க முடையவளாயிருக் கின்றாளோ ?
	(அன்றி)
பெரு துயில்	பெரிய படுக்கையில்
மெப்பட்டாளோ	காவலிடப்பட்டாளோ?
	(அன்றி)
மந்திரப் பட்டாளோ	மந்திர வாதத்தினால் கட்டுப் படுத்தப்பட்டாளோ ?
மா மாயன்	' அளவிறந்த ஆச்சரியச் செய் கைகளே யுடையவனே !'
மாதவன்	' திருமகள் கேள்வனே !'
வைகுந்தன்	'ஸ்ரீவைகுண்ட நாதனே !'
என்று என்று	என்று பலகால் சொல்லி
நாமம் பலவும்	(எம்பெருமானுடைய) திரு நாமங்கள் பலவற்றையும்
நவின்று	(வாயாரக்) கற்றேம்;

(இனியாகிலும் உன் மகள் உணரலாகாதா?)

எல் ஓர் எம் பாவாய்—.

* * *—மைத்துனமையுறவுடையா ளொருத்தியை உணர்த்தும் பாசுரம் இது. சுற்றும் விளக்குகள் விளங்கப் பெற்றுத் துயிலணைமேற் கண் துயில்கின்ற மாமான்மகளை நோக்கி " மணிக்கதவம் தாள் திறவாய் " என்று வெளியே நிற்பவர்கள் சொல்ல, அவள் அதனைக் கேட்டுவைத்தும் மறுமொழி ஒன்றுங் கூறுதாளாய்க்கிடக்க, அங்ஙனே கிடக்கும்படியைக் கண்ட அவள் தாயார் 'இத்தனை பெண்பிள்ளைகள் வருந்தி வாசலிலே நின்று துவள, இவள் ஒரு பேச்சும் பேசாதே கிடந்துறங்குவது என்ன நீதி!' என்று நெஞ்சிற்கொண்ட இரக்கம் முகத்திலே தோற்றும்படி யிருக்குமாற்றை இவ்வாய்ச்சிகள் கண்டு, ' மாமீர் ! அவளொருத்தி எங்கள் திரளிற் புகாமையாலே நாங்கள் படும்பாட்டைக் கண்டீரே ; உமது மகளைச் சிறிது உணர்த்தலாகாதா ? நாங்கள் நெடும்போதாக நின்று கூவச்செய்தேயும் இவள் மறுமாற்ற மொன்றும் தருகின்றிலளே ; இவள் ஊமையா ? செவிடா ? பேருறக்கம் பிடித்தவளா ? அன்றி, இவள் எழுந்திருக்கக் கூடாதென்று யாரேனும் படுக்கையில் காவலிட்டிருக்கிறார்களா ? அன்றி மந்திரவாதத்தினால் ஸர்ப்பத்தைத் தடைகட்டுவது போல், இவள் படுக்கையினின்றும் எழுந்திருக்க வொண்ணாதபடி ஆரேனும் மந்த்ரப்ரயோகம் பண்ணிவிட்டார்களா ? நாங்கள் ஒருவகையாகவும் நிர்ணயிக்கமாட்டுகின்றிலோம் ' என்ன ; இதனைக்கேட்ட தாயார் 'நீங்கள் இங்ஙனே ஒன்றும் சங்கிக்கவேண்டா ; அவளுக்கும்படியான பகவந்நாமங்களைப் பகரத்தொடங்கினீர்களாகில் அவள் தன்னடையே உணர்ந்தெழுந்துவருவள்' என்ன ; ' அங்ஙனமும் செய்தற்றது ; நாங்கள் இவ்வளவாகச் சொன்ன பகவந்நாமங்கட்கு ஓர் வரையறையில்லை காணும் ; இன்னும் யாம் என் செய்வோம்' என்கிறார்கள்.

தூமணிமாடம்—நம்மாழ்வார் திருவாய் மொழியில் திருத்துலைவில்லி மங்கலத்தை வருணிக்கத்தொடங்கி, " துவளில் மாமணிமாட மோங்கு துலைவில்லி மங்கலம் " என்றார் ; இங்கு அங்ஙனன்றித் " தூ மணிமாடம் " எனப்பட்டது. இவ்விரண்டிற்கு முள்ளவாசியென் என்னில் ; துவள்இல் என்ற அடைமொழியினால்-துலைவில்லி மங்கலத்து மாடங்களின் மணிகள், முதலில் துவளுற்றிருந்து பின்னர் துவளற்றனவாயின வென்பது தோற்றுவிக்கப்படும். இங்கு தூ என்ற

அடைமொழியினல்-இங்குற்ற மாடத்து மணிகள் பிறப்பேதொடங்கிப் பரம பாவநங்களாய் எஞ்ஞான்றும் துவளின்ஸம்பந்தத்தைப் பெறுதன வென்பது தோற்றுவிக்கப்படும். (துவள்—தோஷம்) இங்கு, முக்தர்படியையும் நித்தியர்படியையும் நெஞ்சிற் கொள்க; முக்தராகிறூர்-சில நாள் வரை ஸம்ஸாரஸாகரத்தில் அழுந்திக்கிடந்து, பின்னர் அப்பற்று அறப்பெற்றோர்; (இது, துவளில் என்றபடிக்கு ஒக்கும்) நித்தியராகிறூர்-என்றும் ஸம்ஸாரஸம்பந்தமே யில்லாதாராய் அநவரதம் பரவாஸுதேவன் பதவீணையிற் பரிசரியை பண்ணும் அநந்தகருட விஷ்வக்ஸேநர்கள் போல்வார்; (இது. தூ என்றபடிக்கு ஒக்கும்.)

புறம்பே நின்று துவள்கின்ற எங்கள் நெஞ்சு இருண்டு புகையாகிற்க, உள்ளே சுற்றும் விளக்கெரியும்படியாகப் பெற்ற பாக்கியமே பாக்கியம்! என்னும் வயிற்றெரிச்சல் முதலடியில் தோற்றுமாறு காண்க.

"புறம்பே நின்று 'மணிக்கதவம்தாள் திறவாய்' என்கிறவர்கள் உள்ளெரிகிற விளக்கறிந்தபடி என்னென்னில்; மாணிக்கக்குப்பியிலே அகவாயிலுள்ளது நிழலிட்டுத் தோற்றுமா போலே தூமணிமாடமாகையாலே உள்ளெரிகிற விளக்குத் தோற்றுமிறே" என்ற ஆரூயிரப்படி அருளிச்செயலே இங்கே கூட்டிக்கொள்க.

"தூபம் கமழ" என்ற சொல்நயத்தால், கண்ணுக்குப் புகையாகத் தோற்றுகையன்றியே வெறும்பரிமளமேயாயிருக்குமாறு தோன்று மென்ப. "தூமம் கமழ" என்றும் ஓதுவர்; துயிலணை—படுத்துக் கொண்டவுடனே உறக்கத்துக்குப் பரவசமாக்கவல்ல மெத்தையென்க; இதனல், அப்படுக்கையின் மென்மை, குளிர்த்தி முதலிய குணங்கள் விளங்கும். "மென்மலர்ப் பள்ளி வெம்பள்ளியாலோ" என்றபடி நாங்கள் பள்ளியிற்சாயப் பெறுதே யிருக்க, நீ துயிலணையிற் கண்வளர்வது நமது நட்புக்கு நன்றுகப் பொருந்துமம்மா! என வெறுத்துக் கூறுகின்ற சொற்போக்கு இது என்றுணர்க. "துயிலணைமேல் உறங்கும்" என்னுதே "கண்வளரும்" என்றது-பகவத்விஷயத்தில் அவகாஹித்தவர்கள் கௌரவிக்கத்தக்கவரென்ற கருத்தைக் காட்டுதற்கென்க. ஊடே வெறுத்துக் கூறுவதெல்லாம் ஆற்றுமையின் செயலத்தனையிறே. ["மாமான் மகளே] திருவாய்ப்பாடியிலே ஒருப்பக்கருதிஸம்பந்தம் தனக்கு உஜ்ஜீவநஹேதுவாக ஆண்டாள் ஆசைப்பட்டபடி" என்பது ஆரூயிரப்படி.

"ஊமையோ? செவிடோ?" என்ற வினுக்களுக்கு உட்கருத்து:—ஆர்த்தர் விஷயத்தில் இரக்கமுற்று 'ஐயோ!' என்றொரு வாய்ச்சொல் சொல்வதற்கும் அவகாசமில்லையோ உன் மகளுக்கு? ஆர்த்தரான எங்களுடைய கூக்குரல் செவிப்பட வொண்ணுதபடி உன் மகள் உள்ளே செய்யுங் காரியம் என்னே?

அனந்தலோ?—கண்ணபிரானேடு நெடும்போதாகக் கூடிக் களித்துப் படுக்கையில் இப்போதுதான் சாய்ந்தனளோ? ஏமப்பேருந்துயில் மந்திரப் பட்டாளோ?—உன்மகள் எங்களோடு உறங்குவொட்டாதவாறு போல, அவளோ ஆரேனும் உணர்வொண்ணுதபடி மந்திரவாதஞ் செய்து கட்டுப் படுத்தினரோ? "பெய்புமாமுகில் போல்வண்ண! உன்றன் பேச்சுஞ் செய்கையும், எங்களோ மையலேற்றி மயக்க உன்முகம் மாயமந்திரந்தான் கொலோ?" என்ற நாச்சியார் திருமொழியை இங்கு அநுஸந்திக்க.

ஏமம் என்பதை, ஹேம என்னும் வடசொல்லின் விகாரமாகக் கொள்ளில், கநகமயமான பெருந்துயிலில் மந்திரப்பட்டாளோ? என்று பொருளாம். ஏமம்—இரா, இன்பம், உன்மத்தம், கலக்கம், களிப்பு, காவல், சேமம், திரைச்சீலை, புதையல், பொன், மயக்கம், விழுதி.

இவர்கள் இங்ஙனே வினவக்கேட்ட தாயார், "பெண்காள்! நீங்கள் இவளது பிரகிருதியை உணர்ந்திருந்து இவளை எழுப்பவேண்டும் முறையை உணர்ந்திலீர்களே; இங்ஙன மெழுப்பினால் இவள் எழாள். தென்றலுஞ் சிறு துளியும் பட்டாற்போல அவள் உகக்குந்திருநாமங்களை வாயார அநுஸந்தித்தீர்களாகில் சடக்கென உணர்ந்து வாராளோ" என்ன; அங்ஙனுஞ் செய்தற்றதென்கிறார்கள், கடையிரண்டடிகளால்.

மாமாயன்:—அபலைகளான பெண்களைத் தன்வசப்படுத்திக் கொள்ளுதற்குச் சாதனமான பல ஆச்சரிய குண சேஷ்டிதங்களை உடையவன் என்றபடி.

மாதவன்:—இடக்கை வலக்கை அறியாத இடைச்சிகளை மாத்திரம் வசப்படுத்திக் கொண்டவனல்லன் அவன்; அல்லிமலர் மகளை இறையு மகலவொண்ணுதபடி மார்பில் அழுத்திக் கொண்டுள்ளவன் காண்மின் என்றவாறு.

வைகுந்தன்:—இங்ஙன் பெண்களை மாத்திரம் தோற்பிக்குமவனல்லன்; கண்கள் துஞ்சாமே கண்டபடியே நிற்கும் நித்திய ஸூரிகளை ஒரு நாடாகவுடையவன் எல்கை. என்றென்று என்றமையால் அவைபோல்வன பல திருநாமங்கள் கூறினமை தோன்றும்.

(ஸ்வாபதேசம்). கும்மாழ்வார்க்கு அடுத்த முந்தினவரான திருமழிசைப்பிரானை யுணர்த்தும் பாசுரமிது. இதில் மாமான் மகளே! என்ற விளி ஒருவகையான தேஹஸம்பந்தத்தில் நோக்குடையது. ஆண்டாளுக்கும் திருமழிசை யாழ்வார்க்கும் ஒருவகையான தேஹஸம்பந்தமுண்டு: அதாவது—ஸ்ரீதேசிகன் கோதாஸ்துதியில் "கமலாமிவாந்யாம் கோதாம்" என்றும் "ஸந்த: பயோதி துஹிதுஸ் ஸஹஜாம் விதுஸ் த்வாம்" என்றும் அருளிச் செய்த படியே ஆண்டாள் ஸாக்ஷாத் ஸ்ரீமஹாலக்ஷ்மியாவள். "பார்க்கவீ லோகஜநநீ க்ஷீரஸாகரஸம்பவா" என்ற அமரகோசத்தின்படியும் இதிஹாஸ புராண வரலாற்றின் படியும் லக்ஷ்மி (ஆண்டாள்) ப்ருகு குலத்தில் தோன்றியவள். திருமழிசைப்பிரானும் ப்ருகுகுலத்தில் தோன்றியவரென்பது சரித்திரவித்தம். இத்தகைய ஸமாந குலஸம்பந்தம் இங்கு நோக்கத்தக்கது. ரிஷி குலத்திலே பிறந்து பிரம்பன் குடியிலேயாளர் அவர். ப்ராஹ்மண குலத்திலே பிறந்து கோபாலர் குலத்திலேயாளுள் இவள். இதுவும் ஒற்றுமை நயம். [தூமணி மாடத்து] சிறந்த மாணிக்கக் குப்பியினுள்ளேயுள்ளது வெளியில் விழலிட்டுத் தோன்றும். திருமழிசைப்பிரான் "உட்கிடந்த வண்ணமே புறம் பொசிந்து காட்டிடே" என்று வேண்டிக் கொண்டபடியே உள்ளிருந்த திருமால் அப்படியே வெளியிற் பொசிந்து காட்சிதந்தமையால் இவர் தூமணிமாட மென்னத் தகுதியுடையார். [சுற்றும் விளக் கெரிய] விளக்காவது ஞானவொளி. "சாக்கியங் கற்றேனுஞ் சமணக்கற்றேனும் சங்கரனாக்கிய ஆகமநூல் ஆராய்ந்தோம்," என்றபடி இவ்வாழ்வார் ஸகல மதங்களிலும் புக்கு ஸர்வதோமுகமான ஞான விளக்கம் பெற்றவராதலால் சுற்றும் விளக்கெரிதல் இவர்க்கு அஸாதாரணம். "யானறிந்த வாறு—ஆறிவார்" என்றும் "என் மதிக்கு விண்ணெல்லா மூண்டோ விலை" என்றும் இவரது பாசுரங்களினுலும் இது ஸித்தம். [தூபம் கமழ] சிறந்த ஞானமிருத்தல் மாத்திரம் பயன்படாது; அது நன்கு பரிமளிக்கவேண்டும். எம்பெருமானையன்றி வேறொரு தெய்வத்தைத் தொழாதிருத்தலே ஞானத்திற்குப் பரிமளம். "மறந்தும் புறந்தொழாமாந்தர்" என்பது இவ்வாழ்வாருடைய திருவாக்காகும். [துயிலணை மேல் கண்வளரும்] இவ்வாழ்வாருடைய திருக்கண் செல்வது சயனத்திருக்கோலமான எம்பெருமான்களின்மீதுதான். கச்சி வெஃகாவிலும் திருக்குடந்தையிலுமே பெரும்பாலும் இவர் காலம் கழித்தது. சயனத்திருப்பதிகளையே ஒரு கோர்வையாக வெடுத்துப் பாசுரம் பாடினவரும் இவ்வாழ்வார்; காகத்தினைக் குடந்தை

வெஃகாத் திருவெவ்வுள் காகத்தணையரங்கம் பேர் அன்பில்–நாகத்தணைப் பாற்கடல் கிடக்கு மாதி நெடுமால், அணைப்பார் கருத்தனுவான்" என்றது காண்க. [துயிலணை மேல் கண்வளரும் மாமானுடைய மகளே!] மகள் என்றதனால் விதேயத்வம் சொன்னபடி. மகள் சொற்படி தந்தை கேட்பதும் தந்தை சொற்படி மகள் கேட்பதும் வழக்கம். மாமான் என்றது மஹா மஹான் என்றபடி. துயிலணைமேல் கண்வளரும் மாமான் யதோக்தகாரி யெம்பெருமான்; அப்பெருமாள் இவ்வாழ்வார் சொற்படி கேட்டவர்; "கணிகண்ணன் போகின்றூன்–நீயுமுன்றன் பைந்நாகப்பாய் சுருட்டிக்கொள்" என்றபோது அப்படியே சுருட்டிக்கொண்டு புறப்பட்டார்; "உன்றன் பைந்நாகப்பாய் விரித்துக்கொள்" என்றபோதும் அப்படியே. இனி, துயிலணை மேற்கண்வளரும் மாமான்–ஆராவமுதன்; அப்பெருமாளும் "எழுந்திருந்து பேசுவாழி கேசனே" என்ற இவ்வாழ்வாரது வேண்டுகோளின்படி எழுந்திருந்தவர் என்பது ப்ரஸித்தம். [உன் மகள் தான் ஊமையோ] வாய்திறவாமலே ஹஸ்தசேஷ்டை முதலியவற்றால் காரியம் செய்வது ஊமைகளின் பணி. இவ்வாழ்வாரும் யாத்திரையடைவில் பெரும்புலியூரென்னும் கிராமத்தில் ஒரு வேதியன் வீட்டுவாசல் திண்ணையில் சிறிது பொழுது எழுந்தருளியிருக்க அங்கு வேதமோதிக் கொண்டிருந்த அந்தணர்கள் தீர்த்தயாத்ரை பெருப்புப்போலுள்ள ஆழ்வாருடைய மஹிமையைத் தெரிந்துகொள்ளாமல் அவரைக் கீழ்ச்சாதியராகவெண்ணி வேதாத்யயனம் அவருடைய காதிற் படலாகாது என்று கருதி ஒத்துத் தவிர்ந்திருக்க, அக்குறிப்பையறிந்த ஆழ்வார் அவ்விடத்தை விட்டுத் தூரத்திற்சென்று வேறோரிடத்து மேடையில் வீற்றிருக்கையில் அந்த வேதியர்கள் மீண்டும் வேதமோதத் தொடங்கி, விட்ட வாக்கியம் தோன்றுது முயங்கி நிற்க, ஆழ்வார் அதுகண்டு கறுப்பு தெற்களைக் கையுகிராலே இடந்துபோட, அப்பொருளுள்ள வேதவாக்கியம் அவர்கட்குத்தோன்றிற்று: அதாவது—"க்ருஷ்ணனும் விஷ்ணுவும் ஸகலர்பிதம்" என்பது. உடனே அவர்கள் ப்ரதக்ஷிண ப்ரணமாதிகளால் இவரை உபசரித்து க்ருதார்த்தாயினர் என்பது சரித்ர வரலாறு. இங்ஙனமாக வாய்திறவாமலே, இங்கிதத்தினால் காட்டினது பற்றி ஊமையோ? என்றது. சொன்ன சொற்களைச் செவியேற்காதவர் செவிடர்: அந்தச் செவிடும் இவரது சரிதையில் ப்ரஸித்தம்: முன் சொன்ன பெரும்புலியூரில் அந்தணரடிகள் யாகஞ் செய்துகொண்டிருந்த விடத்தில் இவ்வாழ்வாரை எழுந்தருளுவித்துக்கொண்டு போய்ச் சில மஹான்கள் இவர்க்கு அர்க்ய பூஜை செய்விக்க, அப்போது அங்கிருந்த பல சிசுபாலஜ்ஞாதிகள் எண்ணிறந்த வசைமொழிகளை வர்ஷிக்க, அவற்றை இவ்வாழ்வார் செவியேற்காதிருந்தனர் என்ற வரலாறு காண்க. [அனந்தலோ] தூக்கமோ என்றபடி, பரமைகாந்திகட்குத் தூக்கமாவது பாஹ்யவிஷயங்களிற் சிறிதும் நெஞ்சு செல்லாதிருக்கப் பெறுதலே. "உன்னைத் தெரித்தெழுதி வாசித்துங் கேட்டும் வணங்கி வழிபட்டும் பூசித்தும் போக்கினேன் போது" என்றும் "தொழிலெனக்குத்தொல்லைமால் தன்னுமைத்தப் பொழுதெனக்கு மற்றதுவே போதும்" என்று மருளிச்செய்பு மிவ்வாழ்வார்க்கு இந்த நிலைமையே அனந்தலாகும். [ஏமப்பெருந்துயில் மந்திரப்பட்டாளோ] மற்றையாழ்வார்களிற்காட்டிலும் இவ்வாழ்வாருடைய பரமைகாந்தித்வம் மிக விலக்ஷணம் என்பது இங்கு அறியத்தக்கது. "திருமனமிலேன் திருவுகந்தன்னை நெடுமால், அவனெனக்கு நேரான்" என்னும்படியான திருவாழி இவர்க்கே அஸாதாரணமன்றே! இதுதான் பெருந்துயில், எம் பெருமானை யொழிந்த மற்றையோரைக் கண்கொண்டு பாராமையிற் பெருமை.

[மாமாயன்] "மாயமென்ன மாயமே" என்றும், "மாயமாய மாக்கினாய் உன்மாய முற்று மாயமே" என்றும் பலகாலும் எம்பெருமானது மாமாயங்களைப் பேசுகிறவர் இவ்வாழ்வார். [மாதவன்] "மாதவனை வத்தாதார் சனவரே" என்றவரும் இவ்வாழ்வாரே. "திருவில்

லாத் தேவரைத் தேறேன்மின் தேவு" என்றதுங்காணலாம். [வைகுந்தன்] "வைகுந்தச் செல்வனார் சேவடிமேல் பாட்டு" என்றவர் இவ்வாழ்வாரே. வைகுந்தனது சேவடிமேல் தாம் பாசுரம் பாடினவராகச் சொல்லிக்கொண்டார். ஆகவே, மாமாயன், மாதவன், வைகுந்தனென்ற திருநாமங்கள் இவ்வாழ்வார்க்குப் பரமபோக்யங்களென்பது ஸுசிதம்.

483. நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற வம்மனாய் ! *
மாற்றமூந் தாராரோ வாசல் திறவாதார் *
நாற்றத் துழாய்முடி நாராயணன் * நம்மால்
போற்றப் பறைதரும் புண்ணியனால் * பண்டொருநாள்
கூற்றத்தின் வாய்வீழ்ந்த கும்பகரணனும் *
தோற்று முனக்கே பெருந்துயில்தான் தந்தானே *
ஆற்றவனந்தலுடையா யருங்கலமே *
தேற்றமாய் வந்து திறவேலோ ரெம்பாவாய். (ஷ)

நோற்று	நோன்பு நோற்று
சுவர்க்கம் புகுகின்ற	ஸுகாநுபவம் பண்ணுகின்ற
அம்மனாய்	அம்மே !
வாசல் திறவாதார்	வாசற்கதவைத் திறவாதவர்கள்
மாற்றமும் தாராரோ	ஒருவாய்ச் சொல்லுங்கொடுக்க மாட்டாரோ ?
நாற்றம் துழாய்முடி	நறு நாற்றம் வீசாகின்றுள்ள திருத்துழாய் மாலையை அணிந்துள்ள திருமுடியை யுடைய
நாராயணன்	நாராயணனும்,
நம்மால் போற்ற பறை தரும்	நம்மால் மங்களாசாஸனம் பண்ணப்பெற்றுப் புருஷார்த்தங்களைத் தந்தருள்பவனும்
புண்ணியனால்	தர்மமே வடிவுகொண்டு வந்தாற் போன்றவனுமான இராமபிரானால்
பண்டு ஒரு நாள்	முன் ஒரு காலத்திலே
கூற்றத்தின் வாய் வீழ்ந்த	யமன்வாயில் (இரையாக) விழுந்த தொழிந்த
கும்பகரணனும்	கும்பகர்ணனும்
தோற்று	தோல்வியடைந்து
பெருந்துயில்	(தனது) பேருறக்கத்தை
உனக்கேதான் தந்தானே	உனக்கேதான் கொடுத்துவிட்டானே?
ஆற்ற அனந்தல் உடையாய்	மிகவும் உறக்கமுடையவனே !
அருங்கலமே	பெறுதற்கரிய ஆபரணம் போன்றவனே !
தேற்றம் ஆய் வந்து திற	தெளிந்து வந்து (கதவைத்) திறந்திடு ;
	எல் ஓர் எம பாவாய்—.

'எல்லாரு முடன் கூடிக் குளிக்கக் கடவோம், உடன்கூடி நோன்பு நோற்கக்கடவோம். உடன்கூடிக் கிருஷ்ணாநுபவம் பண்ணக்கடவோம்' என்று சொல்லிவைத்து, நாங்கள் உணர்த்தவும் உணராதே கிடந்துறங்குகியேலும், 'இப்போது கதவைத் திறக்க அவகாசமில்லை' என்றெரு வாய்ப்பேச்சுத்தான் சொன்னலாகாதோ ? இங்ஙனைத்த பேருறக்கம் உனக்கு வந்த வழி யாதுகொல் ? பண்டு இராமபிரானது அம்புக்கு இலக்காகி மாண்டொழிந்த கும்பகரணன் தனது உறக்கத்தை உனக்குத் தந்தொழிந்தானேதான் ? ஆ ! சால நன்று இது ; இப்பேருறக்கம் உனக்கு ஆகாதுகாண் ; நீ ஒருத்தி எங்கள் தெருவில் வந்து கூடாமையால் இத்திரள் இருள் மூடிக்கிடக்குமாற்றை வந்து காணாய் தோழி ! என்கிறார்கள்.

முதலடிக்கு மூன்றுவகையாகக் கருத்துரைக்கலாம் :—கண்ணபிரானுடைய திருமாளிகைக்கு அடுத்த திருமாளிகையாய் இடைச் சுவரற்றிருப்பதனால், கண்ணபிரானேடு இடைவிடின்றிச் சுகாநுபவம் பண்ணும்படி நீ நோற்ற நோன்பு என் கொல் ? முன்பிறவியில் நோற்ற

நோன்பின் பயனை இப்போது கிருஷ்ணானுபவ ஸுகம் பெற்று நிற்றி என்கிறாளென்பது முதற் கருத்து.

பொழுது விடிந்தபின்னரும் உணர்ந்தெழுந்து வாராமையினால், அம்மே! இங்ஙன் கிடந்து துறங்காநின்ற நீயோ நோன்பு நோற்றுச் சுகானுபவம் பண்ணப்போகிறாய்? நினைவுக்கும் செயலுக்கும் பொருத்தம் அழகிதாயிருந்தது! என எகியவாறாகக் கொள்ளுதல், இரண்டாங் கருத்து.

'எல்லாருமொக்கக்கூடி நோன்பு நோற்றுக் கிருஷ்ணானுபவஸுகம் பெறுவோம்' என்று சொல்லிவைத்து, நீ தனியே நோன்பு நோற்றுச் சுகானுபவம் பண்ணுவது என்ன தருமம்! என வெறுக்கின்றவாறாகக் கொள்ளுதல், மூன்றாங் கருத்து. இவள் நோற்ற நோன்பாவது—ஸித்த ஸாதந ஸ்வீகாரமென்க. * வித்: க்ருஷ்ணம் ப்ராஹ்மணஸ்தத்வதோ யே தேஷாம் ராஜந்! ஸர்வ யஜ்ஞாஸ்ஸமாப்தா: * என்ற மஹாபாரதங் காண்க.

ஸ்வர்க்கமென்ற வடசொற்றிரிபாகிய சுவர்க்க மென்னுஞ் சொல், இங்குச் சுகத்தைச் சொல்லிற்று. "யஸ்த்வயா ஸஹ ஸ்வர்க்கோ நிரயோ யஸ்த்வயா விநா" [உன்னுடன் கூடியிருத்தல்-சுவர்க்கம்; உன்னைப் பிரிந்திருத்தல்—நரகம்] என்ற ஸ்ரீராமாயணம் நோக்கத்தக்கது. புகுகின்ற என்ற அடைமொழி—உள்ளே கிருஷ்ணானுபவ ஸுகம் நிகழுமாற்றைக்கூறும்; இதனால் அனுபவத்தில் இடைவீடின்மையும் தோற்றுமென்க.

அம்மனாய்! என்ற விளியால்—நீ இங்ஙன் தனியே ஸுகானுபவம் பண்ணுவது உன் பெருமைக்குப் பொருந்து மத்தனை யன்றித் தோழமைக்குத் தகாதென்பது போதரும். அம்மனாய்—'அம்மனை' என்பதன் ஈறு திரிந்தவினை; தாயே! என்று பொருள்.

அசோக வநத்திற் பிராட்டி களிப்பின் மிகுதியால் "ப்ரஹர்ஷேணவருத்தா ஸா வீயராஜ ஹாரா ந கிஞ்சந" என்றபடி ஒன்றும் பேசாதே திடுக்கிட்டுக் கிடந்தாற்போல, இவளும் இவர்களது மதுரமான வாய்மொழியைக் கேட்டுப் பரமாநந்தத்திற்குப் பரவசப்பட்டிருந்தமையாலும், 'இவர்களுக்கு அடிச்சியாகிய என்னை இவர்கள், 'தாயே!' என்று விளித்துப் பழியிடுகின்றனரே' என்ற உள் வெதுப்பினாலும், 'நாம் கிருஷ்ணானுபவம் பண்ணுவதாக இவர்கள் பழியிடாநின்றார்கள்; இத்தருணத்தில் நாம் இவர்கட்கு மறுமொழி கூறுதல் தகாது' என்ற நினைவினாலும் அவள் பேசாதே கிடந்தாள்; அவளது கருத்தை அறியாத இவர்கள், தாங்கள் வெளியே நின்று துவள்கிற துவட்சி பொறுக்கமாட்டாமல், "மாற்றமுந்தாராரோ வாசல் திறவாதார்" என்கிறார்கள். நீ வாயைத் திறவாதொழியினும் கதவையாகினும் திறக்கலாகாதோ? என்ற வாறு. உன் உடம்பைக் கிருஷ்ணனுக்குத் தந்தால், உன் பேச்சை எங்களுக்குத் தரலாகாதோ? என்றிப்புடைகளிலே கருத்துரைப்பர்.

முதலடியில் 'அம்மனாய்' என முன்னிலைப்படுத்தி விளித்தமைக்கு ஏற்ப "மாற்றமுந் தாராயோ வாசல் திறவாதாய்" என முன்னிலையாகவன்றே கூற அடுப்பது; படர்க்கையாகக் கூறியுள்ளவிது பொருந்துமாறென் எனில்; "ஓரிடம் பிறவிடந்தழுவலுமுளவே" (நன்னூல்) என்பது இலக்கணமாகலின் இது பொருந்துமென்க.

இங்ஙன் இவர்கள் பழியிட்டுக் கூவுகின்றமையை உணர்ந்த அவள், 'ஐயோ! நம்மேல் இவர்கள் வீண்பழி இடுகின்றனரே; இவர்கட்கு ஒரு மறுமொழி சொல்லியாகிலும் பிழைப்போம்' என்றெண்ணி, "தோழிகாள்! நீங்கள் நெடும்போதாக இங்ஙனே பழியிடுவதென்?

கண்ணபிரான் இங்கு இல்லையே" என்ன; அதுகேட்ட இவர்கள் அம்மா! நன்று சொன்னாய்; நீ மறைத்தாயாகிலும் திருத்துழாய் மணம் அவனிருப்பைக் கோட்சொல்லித் தாராகின்றதே; அதனை நீ மறைக்கவல்லையல்லையே' என்ன; அதற்கு அவள், "அந்தோ! பாவமே!! அவன் இப்போது இங்குக் கிடந்தால்தான் துழாய் மணநாறுமென்று கருதுகின்றீர்களோ? ஒருகால் அவன் அணைத்துவிட்டால் அந்நாற்றம் நூறு குளிக்கு நிற்குமென்பதை நீங்கள் அறியீரோ? அன்றியும், நான் உங்களைப் பிரிந்துவந்து படுக்கையிற் சாய்ந்தபோதே தொடங்கி நீங்கள் வாசலைப்பற்றிக்கொண்டு நிற்கிறீர்கள்; கட்டுங்காவலுமான வாசலிலே அவன் எங்ஙனம் புகலன்? இவற்றை ஆராயாது நீங்கள் பழியிடுவது தருமமன்று" என்ன; "அவன் எங்களைப் போலக் கதவு திறக்குந்தனையும் காத்திருக்கவேணுமோ? அவன் நாராயணனென்பதை நாங்களறியோமோ, நீதான் அறியாயோ; அவன் வியாபகனுயிருந்து வைத்து, வேண்டினவிடத்தே வந்து தோற்றமாட்டிற்றிலனுகில் அவனுடைய வியாப்திக்குப் பிரயோஜனம் என்னுகும்?" என்று இவர்கள் சொல்ல; அவள் மறுமாற்றஞ்சொல்ல வல்லமையற்று வாய்திறவாதே கிடந்து உறங்குமவள் போலப் பாவனை செய்தாள்; குறட்டைவிட்டாள்; அதனைச்செவியுற்ற இவர்கள், 'அம்மா! கும்பகரணனும் உனக்குத் தோற்றுத் தனது உறக்கத்தை உனக்கே தந்தொழிந்தனனே?' என்கிறார்கள்.

கும்பகரணன் இவட்குத் தோற்றுத் துயில் தருகையாவதென் எனில்;

சிற்பிகள் இருவர்கூடி, 'நாமிருவரும் தனித்தனியே ஒரு பதுமை யெழுதுவோம், பின்பு மத்தியஸ்தர்கள் எவனுடைய சிற்பத்தை இகழ்ந்துரைக்கின்றனரோ, அவன் அன்றுமுதல் சிற்ப வேலையை விட்டிட வேண்டியது' என்று ஸமயபந்தஞ் செய்துகொண்டு, இருவருஞ் சித்திரமெழுத, முடிவில் இகழ்வடைந்தோன் முன்ஸமயபந்தத்தின்படி சிற்பத் தொழிலை விட்டிடுமாறு போல, கும்பகரணனும் இவளுங்கூடி, 'நாமிருவரும் உறங்குவோம்; உறக்கத்தில் தோல்வியடைந்தோர் உறக்கத்தை விட்டிடவேண்டியது' என்று ஸமயபந்தஞ் செய்துகொண்டு உறங்க, அதில் கும்பகரணன் தோல்வியடைந்து, ஸமயபந்தத்தின்படி உறக்கத்தை விட்டிட, அவ்வுறக்கத்தை இவள் கைப்பற்றினள் எனக் கவிமரபிற்கேற்பச் சமத்காரந் தோற்றக் கூறப்பட்டுள்ளமை அறிக. இதனால் இவளது உறக்கத்தின் ஒப்புயர்வின்மை கூறியவாறும்.

"ஸ்ரீ பரசுராமாழ்வானை வென்று பெருமாள் அவன் கையில் வில்லை வாங்கினற்போலே, நீயும் அவனை வென்று நித்திரையைக் கைக்கொண்டாயோ?" என்பது ஆருயிரப்படி.

கூற்றத்தின் வாய்வீழ்ந்த—தன்னுல் சிறையிலடைக்கப்பட்டிருந்த யமனுடைய வாயில் வீழ்ந்தானென்க. கூற்றம்—உடலையு முயிரையும் வேறு கூறுக்குபவன், யமன். "வாய்விழுந்த" என்றும் ஓதுவர்.

இராமபிரானை புண்ணியன் என்றது—"ராமோ விக்ரஹவாந் தர்ம:" என்னும் பிரமாணத்தை அடியொற்றியதாம்.

'அஸஹ்யாபசாரிகளில் அக்ரேஸரனை இராக்கதப் பையலோ டொக்க நம்மைச் சேர்க்கின்றனரே இவர்கள்! இஃது என்ன கொடுமை! இனி வெளியிற் சென்று முகங்காட்டுவோம்' என்று எண்ணி, தான் உணர்ந்தமை தோற்றச் சோம்பல் முறித்தாள்; அதனை உணர்ந்த இவர்கள், 'ஓ! உறக்க மிருந்தபடி யென்!' என வியந்து, "ஆற்ற அனந்தலுடையாய்!" என விளிக்கின்றனர். பின்பு சாலகவாசலிலே அவளுணர்ந்தபடியை உற்று நோக்கினர்கள்; அவள் தங்

கள் நிரளில் வந்து கூடினுல் நவரத்நமாலியில் நாயகக்கல் அழுத்தினுற்போலாமெனக் கருதி, அருங்கலமே! என்கிறார்கள். நாயகமணி இல்லாத ஹாரம்போல் இத்நிரள் இருள் மூடிக்கிடக் கிறது; இதனே நீ விளக்க வாராய் என விளித்தவாறும்.

இவர்களுடைய ஆதராதிசயத்தை உணர்ந்த அவள் தணுக்கென்று வாப்புறப்பட, அஃத றிந்த இவர்கள், "தேற்றமாய் வந்து நிற" என்கிறார்கள். புறப்பட்டு மேல்நிலங்களில் நின்று தடுமாறுதே தெளிந்து வந்நிழிந்து நிற என்றபடி. இதற்கு மற்றொரு வகையாகவும் கருத் துரைக்கலாம்:—

பஞ்சவடியிற் பிராட்டியைப் பிரிந்த இராமபிரான் கிஷ்கிந்தையிற் புக்கு ஸுக்ரீவ மஹாராஜனே நண்பனுகக் கொண்டு வாலியை வதைசெய்து மால்யவத் பர்வதத்தில் கார்காலத்தைக் கழித்தவனந்தரம், 'ஸுக்ரீவன் பிரதிஜ்ஞைபண்ணி யிருந்தபடி இன்றுகாறும் படை நிரட்டிக் கொண்டு போர்க்குப் புறப்படவில்லே' என்ற அளவற்ற சீற்றத்தினுல் இளேயபெருமானே நியமித் தருள, அவரும் அந்நியமநத்தைச் சிரமேற் கொண்டு ஸுக்ரீவனது பள்ளியறை வாசலிற் போந்து காணேலியைத் தலைப்பெய்ஞக்க, அவரது சீற்றத்தைத் தணிக்கக்கருதிய தாரை வெளிவரும் போது, ஸம்போக லக்ஷணங்களே மறைத்திடாது அரைகுலேயத் தலே குலேய வந்தாற்போல வாராதே கொள்; இத்நிரளில் உன்னே நியமிக்கக் கடமைப்பட்ட குருகுல மாதருமுளராதவரல் ஸுரத சின்னங்களே நன்கு மறைத்து ஸதஸ்ஸில் வருகைக்கு உரிய கோலத்துடன் வந்து நிறவா யாக என்கிறார்களென்றுமாம்.

"ஊராகத் நிரண்டுகிடக்கிறது; அவர்களிலே உன்னேயும் நியமிக்க வல்லாருண்டு; அவர் கள் முன்னே படுக்கையில் சாய்ந்தபடியே வாராதே உன்னேப் பேணிக்கொண்டு, ஸதஸ்யையாய் வந்து நிற" என்பது ஆருயிரம்.

வித்தஸாதந ஸ்வீகாரம்பண்ணி, உபாயாத்யவஸாயத்தில் நிறைந்த ஊற்றமுடைய மஹாநு பாவரை உணர்த்துதல், இப்பாட்டுக்கு உள்ளுறைபொருளாம்.

(ஸ்வாபதேசம்:) நிருமழிசை யாழ்வாருக்கு அடுத்த முந்நினவரான பேயாழ்வாரை யுணர்த் தும் பாசுரமிது. ஒடித்நிரியும் யோகிகளாய் ஒருவரோடு ஒருவர் சேராமல் ஸஞ்சரித்துக் கொண்டி ருந்த பொய்கையார் பூதத்தார் பேயார் இம்மூவரையும் ஒன்று சேர்த்து அநுபவிக்கக் கருதிய எம் பெருமான் ஒரு பெருமழையை வியாஜமாக்கித் நிருக்கோவலேடை கழியில் நெருக்கி யநுபவித்தா னென்பது வரலாற்றின் சுருக்கம். இப்பேயாழ்வாரைப் பற்றித் நிருவரங்கத் தமுதனர் நூற்றந்தா நியில். அருளிச் செய்யுமிடத்து "மன்னிய பேரிருள் மாண்டபின் கோவலுள் மாமலராள் தன்னெடு மாயனைக் கண்டமை காட்டும் தமிழ் தலிவன்" என்றார். பொய்கையாரும் பூதத்தாரும் இரு விளக்கேற்றியிருந்தையகற்ற, இவ்வாழ்வார் "நிருக்கண்டேன் பொன்மேனி கண்டேன்" என்று தொடங்கிப் பலாநுபவம் செய்தருளினர் என்பர் ஆன்றோர். அவ்வர்த்தமே யிங்கு முதலடியிற் பொலியும். நோற்று—மற்றை யிரண்டு ஆழ்வார்களும் விளக்கேற்றுகையாகிற உபாயாநுஷ்டா னஞ் செய்யவே என்றபடி. சுவர்க்கமாவது ஆனந்தாநுபவம். "யஸ்த்வயாஸஹ ஸ்ஸ்வர்க்கோ நிர்யோ யஸ் த்வயாவிநா" என்று ஸ்ரீ ராமாயணத்தில் பிராட்டி அருளிச் செய்ததுங் காண்க. "வாசல் நிறவாதார்" என்றது பேயாழ்வார்க்கு மிகவும் பொருத்தமான லிங்கம். நிருக்கோவ லிடைகழியில் பொய்கையார் முன்னே புகுந்து தாளிட்டுக் கொண்டார்; பிறகு பூதத்தார் வந்து சேர அவர்க்கு அப்பொய்கையார் வாசல் நிறந்தார். பிறகு வந்து சேர்ந்த பேயார்க்குப் பூதத் தார் வாசல் நிறந்தார். இப் பேயார்க்குப் பிறகு ஒருவரும் வந்து புகாமையினுல் வாசல் நிறக்க

வேண்டிற்றில்லை. ஆகவே வாசல் திறவாதார் என்றது பேயாழ்வார்க்கு மிகப்பொருத்தமாக அமைந்த குறிப்பு. [நாற்றத்துழாய்முடி நாராயணன்] இவ்வாழ்வாருடைய பாசுரங்கள் திருத்துழாய்மயமாகவேயிருக்கும். * திருக்கண்டேனுக்கு அடுத்த பாசுரம் "பொன்தோய் வரை மார்பில் பூந்துழாய்" என்பது. அதற்கடுத்த பாசுரம் "மலராள் தனத்துள்ளான் தண்டுழாய் மார்வன்" என்பது. முடிவுபாசுரத்திலும் "தண்டுழாய்த்தார் வாழ் வரை மார்பன்" என்றார். இடையிலும் பல பாசுரங்கள் காண்க. ஒன்பதாவது பாசுரத்தில் [நாமம் பல சொல்லி—யென்பதில்] நாராயணனையும் திருத்துழாயையும் கண்ணனையும் சேர்த்துப் பாடினார் பேயார். இதுவும் ஒரு சிறந்த பொருத்தம். "காண்காணென விரும்பும்கண்கள்" என்று ஒரு கொடிப்பொழுதும் கண்மூடி யிருக்க மாட்டாமையைச் சொல்லிக்கொண்ட நீர் கும்பகர்ணனுக்கும் மேலாக இன்னமும் துயில் கொள்ளல் தகுதியோ என்கிறாள் பண்டொருநாளென்று தொடங்கி. இப்பாட்டில் நட்ட நடுவில் இராமபிரானுடைய திவ்ய சரித்திரமொன்றை ஆண்டாள் அமைத்தது பேயாழ்வாருடைய திருவந்தாதியில் நட்ட நடுவில் "அவனே—இலங்காபுரமெரித்தானெய்து" என்றும் "எய்ததுவும் தென்னிலங்கைக் கோன்வீழ" என்றும் அருளிச்செய்தமைக்கு நன்கு ஒக்கும். திருமழிசையாழ்வாரை யுணர்த்தின கீழ்ப்பாட்டில் அனந்தலோ என்று வெறும் அனந்தலே சொல்லிற்று. இப்பாட்டில் ஆற்றவனந்தலுடையாய்! என்கிறது—மழிசையர் கோனுக்கும் இவ்வாழ்வார் ஆசாரியராதலால் விசேஷணமிட்டபடி. அனந்தல் என்று ஹேயமான உறக்கமன்று சொல்லுகிறது. * உரோவிந்யஸ்த ஹஸ்தாஸ்தே நித்ரயந்தே ஸுகிர்ப்பரா:— என்று பகவச் சாஸ்திரங்களில் கொண்டாடப்பட்ட 'அனந்தல்' பரமைகாந்தித்வ ஸீமா பூமியைக் காட்டுமது. [அருங்கலமே!] எம்பெருமானது திருவருளை மிக அருமையாகப் பெற்ற ஸத்பாத்ரமே! என்றபடி. பாசுரம் தொடங்கும்போதே "திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன்" என்று ஆனந்தமாகத் தொடங்கப் பெற்ற பகவத் பரமக்ருபா பாத்ரபூதர் மற்றொரு ஆழ்வாரில்லையே. [தேற்றமாய் வந்துதிற] உம்முடைய திருநாமமோ பேயார்; பேய்த்தனமாக வாராமல் தேறிவந்து திறவும் என்கிறாள்.

484. கற்றுக் கறவைக் கணங்கள் பலகறந்து *
செற்றார் திறலழியச் சென்று செருச்செய்யும் *
குற்றமொன்றில்லாத கோவலர்தம் பொற்கொடியே *
புற்றர வல்குற் புனமயிலே போதராய் *
சுற்றத்துத் தோழிமாரெல்லாரும் வந்து * நின்
முற்றம் புகுந்து முகில்வண்ணன் பேர்பாட *
சிற்றாதே பேசாதே செல்வப்பெண்டாட்டி * நீ
எற்றுக் குறங்கும் பொருளேலோ ரெம்பாவாய். (கக)

கன்று கறவை	கன்றுகிய பசுக்களினுடைய
பல கணங்கள்	பல திரள்களை
கறந்து	கறப்பவர்களும்
செற்றார்	சத்துருக்களினுடைய
திறல் அழிய	வலி அழியும்படி
சென்று	(தாமே படையெடுத்துச்) சென்று
செரு செய்யும்	போர் செய்யுமவர்களும்
குற்றம் ஒன்று இல்லாத	ஒருவகைக் குற்றமும் அற்றவர்களுமான
கோவலர் தம்	கோபாலர்களுடைய (குடியிற் பிறந்த)
பொன் கொடியே	பொன்கொடி போன்றவளே!

புற்று அரவு அல்குல் புன மயிலே	புற்றிலிருக்கிற பாம்பின் படம் போன்ற அல்குலையும், காட்டில் (இஷ்டப்படி திரிகிற) மயில் போன்ற சாயலையு முடையவளே!
செல்வம் பெண் டாட்டி	செல்வமுள்ள பெண் பிள்ளாய்!
போதராய்	(எழுந்து) வருவாயாக.
சுற்றத்து தோழி மார் எல்லாரும்	பந்துவர்க்கத்திற் சேர்ந்தவர்களும் தோழிமார்களுமாகிய எல்லாரும்
வந்து	(திரண்டு) வந்து
கின் முற்றம் புகுந்து	உனது (திருமாளிகையின்) முற்றத் தேறப் புகுந்து
முகில் வண்ணன் பேர் பாட	கார்மேகவண்ணனான கண்ணபிரானுடைய திருநாமங்களைப் பாடச் செய்தேயும்
நீ	(பேருறக்கமுடைய) நீ
சிற்றாது	சலியாமலும்
பேசாது	(ஒன்றும்) பேசாமலும்
உறங்கும் பொருள் எற்றுக்கு	உறங்குவது என்ன பிரயோஜனத்திற்காகவோ? (அறியோம்)
	எல் ஓர் எம் பாவாய்—.

* * *—கண்ணபிரான் ஊர்க்காக ஒரு பிள்ளையாய் அவதரித்துக் கொண்டாடப்பட்டு வளர்ந்தருளுமாறுபோல, ஊர்க்காக ஒரு பெண்பிள்ளையாயிருப்பாளாய், கணவனைடு கலவி செய்கைக்குப் பாங்கான பருவமுடையளாய், 'அவனைப் பெறுதற்கு நானே நோற்பேன்? வேணுமாகில் அவன்றானே நோற்று வருகிறான்' என்று கிடக்கிறவொருத்தியை உணர்த்தும் பாசுரம், இது.

உனது உறவுமுறையார் தோழிமார் என்ற வர்க்கங்களில் ஒருவர் தப்பாமல் அனைவரும் திரண்டுவந்து எம்பெருமான் திருநாமங்களைப் பாடாநிற்க, நீ உடம்பிலும் அசைவின்றி வாயிலும் அசைவின்றி இங்ஙனே கிடந்துறங்குவது என்னபயனைக் கருதியோ அறியோம் என்கின்றனர். முதலிரண்டடிகள் கோவலர்க்கு அடைமொழி.

ராஜகுமாரன் மூலசரிந்த பெண்டிரைப் பாராதவாறுபோலக் கண்ணபிரான் கன்றுகளையன்றிப் பசுக்களைப் பெரும்பான்மையாகக் காணக்கடவனல்லனாதலால், இவன் தனது காஸ்பர் சத்தினுற் பசுக்களையுங் கன்றுக்கி யருள்வனென்க.

"கணங்கள் பல" என்றமையால் கறவைகள் தனித்தனியே எண்ணமுடியாமையேயன்றியே அவற்றின் நிரல்களும் எண்ணமுடியா வென்பது தோற்றும்.

எம்பெருமானது மேன்மையைப் பொறுதார் எம்பெருமானடியார்க்குப் பகைவர்; எம்பெருமானடியாரின் மேன்மையைப் பொறுதார் எம்பெருமானுக்குப் பகைவர். இவ்விருவகைப் பகைமையுங் கம்ளனுக்கு உண்டென்பது, "தீய புந்திக்கஞ்சனுன்மேற் சினமுடையன்" என்ற பெரியாழ்வார் திருமொழியினாலும், "சாதுசனத்தை நலியுங்கஞ்சனை" என்ற திருவாய்மொழியினாலும் விளங்கும்.

"கோவலர்தம் பொற்கொடியே!" என்ற விளியினால், ஜகராஜன் திருமகள் "ஜகாகாம் குலே கீர்த்திமாஹரிஷ்யதி மே ஸுதா" என்றபடி ஜககுலத்திற்குப்புகழ் படைத்தாற்போலே, இவள் கோவலர் குடியை விளக்கஞ்செய்பவளென்பதும், ஒரு கொள்கொம்போடு அணைந்தன்றி நிற்கமாட்டாதகொடிபோல ஒரு கணவனைடு புணர்ந்தன்றித் தரிக்கமாட்டாதவளென்பதும் போதருமென்க இத்தால், எங்களோடு கூடி, உனக்குக் கொள்கொம்பான கிருஷ்ணனைச் சேரப்பாராய் என உணர்த்தியவாறு மென்க.

புற்று அரவு அல்குல்—புறம்பு புறப்பட்டுத் திரிந்து வாழ்நிபடைத்த உடம்புடைத்தாயிருக்கை

யன்றியே தன் இருப்பிடந் தன்னிலே கிடக்கும் அரவரசின் படமுங் கழுத்தும்போல ஒளியையும் அகலத்தையுமுடைய நிதம்பத்தையுடையவளே! என்றபடி. இவர்கள் தானும் பெண்டிராயிருக்கச் செய்தே இவளுடைய அல்குலே வருணித்தது—நெஞ்சினுல் ஆண்மை பூண்டமையாலென்க. "பெண்டிருமாண்மை வெஃகிப்பேதுறு முலையினுள்" (சீவக சிந்தாமணி) என்றது காண்க. இனி, "கண்ணிற்காண்பரேல் ஆடவர் பெண்மையை அவாவுந் தோளினுய்." (கம்பராமாயணம்.) "வாராகவாமனனே அரங்காவட்ட நேமிவலவாராகவா உன் வடிவுகண்டால் மன்மதனும் மடவாராக ஆதரஞ் செய்வன்" (திருவரங்கத்தந்தாதி.) என்பவாதலால், ஆண் பெண்ணுகு மிடமு முண்டென்று உணர்க. "பும்ஸாம் த்ருஷ்டி சித்தாபஹாரிணம்" என்று—பெருமான் ஆண்களையும் பெண்ணுடை உடுக்கப் பண்ணுமாபோலே பெண்களே ஆண்களாக்குகிறது இவளுடைய அல்குல்' என்ற ஆருயிரப்படி அருளிச் செயல் இங்கு அறியற்பாலது. புற்றுக்குள்ளேயடங்கின பாம்புபோலே நுட்பமான இடையையுடையவளே! என்னவுமாம்.

கான் புறப்பட மற்றெல்லாரும் வந்தாரோ? என்று அவள் கேட்க; கூறுகின்றனர். [சுற்றத்துத் தோழிமார் இத்தியாதி.] சுற்றத்தாரும் தோழிமாருமென்றுவது, சுற்றத்தாரான தோழிமார் என்றுவது உரைக்கலாம். "புனமயிலே!' முகில்வண்ணன் பேர்பாட, நீ எற்றுக்குறங்கும் பொருள்" என இயைத்து, மயில், முகிலின் பேரைக் கேட்டவுடனே களித்துக்கூத்தாடவேண்டியிருக்க, நீ இங்ஙனே கிடந்துறங்குவது என்றிய? என கேஷபிக்கின்றனரெனக் கருத்துக் கூறுக.

சிற்றுதே:—சிற்றல்-சிதறுதல்; அங்கங்களே அசைத்தலுஞ் செய்யாமல் என்றபடி.

(ஸ்வாபதேசம்.) பேயார்க்கு அடுத்த முந்தினவான பூதத்தாரை யுணர்த்தும் பாசுரமிது. இதில், "குற்ற மொன்றில்லாத கோவலர் தம் பொற்கொடியே!" என்ற விளி பூதத்தார்க்கு நன்கு பொருந்தும். பல பொருள்களே யுடையதான கோ என்னும் சொல் மொழி என்ற விடத்திற்போல ஸ்ரீ ஸுக்தியைச் சொல்கிறதிங்கு. கோவலர்—ஸ்ரீ ஸுக்திகளே பருளவல்லவர்களான ஆழ்வார்கள். "குற்றமொன்றில்லாத" என்ற விசேடணம் முதலாழ்வார்கள் மூவர்க்கே பொருந்தும்; யோகிஜத்வமாகிற வொரு குற்றம் மற்றை யாழ்வார்களுக்குண்டு; அக்குற்ற மொன்றும் இல்லாத கோவலர்—முதலாழ்வார்கள்; அவர்களுள் பொற்கொடியே!—"கோல்தேடி யோடுங் கொழுந்ததே போன்றதே மால்தேடி யோடும் மனம்" என்கிற பாசுரத்தினுல் தம்மை ஒரு கொடியாகச் சொல்லிக்கொண்டவர் பூதத்தாழ்வாரே யாவர். எம்பெருமானுகிற உபகந்தைத் தேடிச் செல்லுகின்ற கொடிபோல்வேன் நான் என்றவர் இவரேயிறே. "கற்றுக் கறவைக் கணங்கள் பல கறந்து" என்பது முதலாழ்வார் மூவர்க்கும் பொதுவான வாசகம். கற்றுக் கறவை—கன்றுகிய கறவை. (கறவை யென்பதனுல் ஸ்ரீ ஸுக்தி விவக்ஷிதம்.) மற்றை யாழ்வார்கள் பெரிய பெரிய பாசுரங்களே யளித்தார்கள். முதலாழ்வார்கள் அங்ஙனன்றிக்கே வெண்பாவாகிய மிகச் சிறிய பாசுரங்களே யளித்தார்கள். பெரய்கை யாழ்வாருளிய திருவந்தாதி கறவைக் கணம்; பூதத்தாழ்வார் திருவந்தாதியும் சேர்ந்து கறவைக் கணங்கள்; பேயாழ்வார் திருவந்தாதியும் சேர்ந்து கறவைக்கணங்கள் பல. க்ரமேண ஏகவசந த்விவசந பஹுவசநங்கள் இணங்கின அழகு காண்க. [செற்றுர் திறலழியச் சென்று செருச் செய்யும்] தேசமெங்கும் திரிந்து பகவத் விஷயங்களே நிரஸிக்க வேணுமென்கிற அர்த்தத்தை "எண்டிசையும் பேர்த்தகரம் நான்குடையான் பேரோதிப் பேதைகாள்! தீர்த்தகராமின் திரிந்து" என்ற பாசுரத்தினுல் வெளியிட்டவர் இவ்வாழ்வாரே. "புற்றரவல்குல்" என்பது இடையழகை வருணிப்பதாகும். ஸ்வாபதேஸத்தில் இடையழகாவது பக்தியின் பெருமை. ஞானம் பக்தி விரக்தி என்ற மூன்றில்

பக்தியானது இடைப்பட்டதாதலால் இடையழகென்பது பக்தியின் அழகேயாகும். இவ்வாழ்வார் தம்முடைய திருவந்தாதியை முடிக்குமிடத்து "என்றனளவன்றுல் யாவுடைய வன்பு" என்றே முடித்தார். இதனால் இவரது இடையழகு நன்கு வெளிப்பட்டதாயிற்று. அன்பிலே தொடங்கி அன்பிலே தலைக் கட்டினர். புனமயிலே! என்ற விளியும் இவர்க்கு அழகாகப் பொருந்தும். பொழிலிடத்தே வாழும் மயில்; இவ்வாழ்வார் தோன்றிய தலமோ திருக்கடல் மல்லை; அதனைப் பாடின கலியன் "கடி பொழில் சூழ்கடன் மல்லை" என்றே பன்முறையும் பாடினர். மயில் மேகத்தைக் காண்பதிலே மிக்க குதூஹல முடைத்தாதலால், மேகம் நீர்பருக வருமிடமான கடற்கரையிலே மயில்கள் மகிழ்ந்து நிற்கும். இவ்வாழ்வார் நின்ற விடமும் கடற் கரையிலே யிறே. [சுற்றத்துத் தோழிமாரித்யாதி.] இவர்க்குப் பொய்கையாரும் பேயாரும் சுற்றத்தவர்கள்; மற்றையாழ்வார்கள் தோழிமார். [முகில் வண்ணன் பேர் பாட.] முந்துற முன்னம் முகில் வண்ணன் பேர் பாடினவர் இவ்வாழ்வாரே யாவர்; "உலகேழும் முற்றும் விழுங்கும் முகில்வண்ணன்....ஏத்துமென்னெஞ்சு" என்ற இவர் பாசுரம் காண்க புனமயில் முகில் வண்ணனைத் தானே பாடும்.

485. கனைத்திளங் கற்றெருமை கன்றுக் கிரங்கி *
நினைத்து முலைவழியே நின்று பால்சோர *
நனைத்தில்லஞ் சேறாக்கும் நற்செல்வன் தங்காய் *
பனித்தலை வீழ நின் வாசற்கடை பற்றி *
சினத்தினால் தென்னிலங்கைக் கோமானைச் செற்ற *
மனத்துக்கினியானைப் பாடவும் நீ வாய்திறவாய் *
இனித்தா னெழுந்திரா யீதென்ன பேருறக்கம் *
அனைத்தில்லத்தாரு மறிந்தேலோ ரெம்பாவாய். (கஉ)

இளங் கன்று எருமை	இளங்கன்றுகளையுடைய எருமைகளானவை
கனைத்து	(பால் கறப்பார் இல்லாமையாலே) கதறிக்கொண்டு
கன்றுக்கு இரங்கி	(தன்) கன்றின் மீது இரக்கமுற்று
நினைத்து	(கன்று ஊட்டுவதாக) நினைத்து (அந்நினைவினால்)
முலை வழியே நின்று பால் சோர	முலை வழியால் இடைவிடாமல் பால் பெருக, (அப்பெருக்கினால்)
இல்லம்	வீட்டை
நனைத்து	(முழுதும்) ஈரமாக்கி
சேறு ஆக்கும் நல் செல்வன்	சேறாகப் பண்ணுகையாகிற சிறந்த செல்வத்தையுடைய வனுடைய
தங்காய்	தங்கையானவளே!
பனி	பனியானது
தலை வீழ	எங்கள் தலையிலே விழும்படி
நின் வாசல் கடை பற்றி	உனது மாளிகையின் வாசற் கடையை அவலம்பித்துக் கொண்டு,
சினத்தினால்	(பிராட்டியைப் பிரித்தான் என்னுஞ்) சீற்றத்தினால்
தென் இலங்கை கோமானை	தென் திசையிலுள்ள லங்காபுரிக்கு அரசனான இராவணனை
செற்ற	கொன்றொழித்தவனும்
மனத்துக்கு இனியானை	சிந்தனைக்கு இனியனுமான இராமபிரானை
பாடவும்	(நாங்கள்) பாட்டாகச் செய்தேயும்
நீ	நீ
வாய் திறவாய்	வாய்திறந்து பேசுகிறாயில்லை,

இனித் தான்	எங்களாற்றுமையை அறிந்து கொண்ட பின்பாகிலும்	அனைத்து இல்லத் தாரும்	(இச்சேரியிலுள்ள) எல்லா வீட்டுக்காரர்களாலும்
எழுந்திராய்	எழுந்திரு ;	அறிந்து	(நாங்கள் உன் மாளிகை வாசலில் நிரண்டு நிற்கிறவிது) அறியப்பட்டதாயிற்று :
ஈது என்ன பேர் உறக்கம்	இஃது என்ன ஒயாத தூக்கம் ?		எல் ஓர் எம் பாவாய்—.

* * *—நாட்டிலிருந்த போதோடு காட்டிலிருந்த போதோடு வாசியற பெருமானைப் பின் தொடர்ந்து நோக்கிக்கொண்டு திரியும் இளையபெருமானைப் போன்று, கண்ணபிரானையன்றி மற்றொருவரையும் அறியாமல் என்று மொக்க அவனையே பின்தொடர்ந்து அவன் பக்கல் மிகவும் பரிவுபூண்டிருப்பானொருவனுடைய தங்கையாய்ச் சீர்மை பெற்றிருப்பாளொரு ஆய்ப்பெண்ணை உணர்த்தும் பாசுரம், இது.

நெடும்போதாக நின்வாசற் கடையை நாங்கள் பற்றிக்கொண்டு, * முன் பொலாவிராவணன்றன் மூதுமதிளிலங்கை செற்ற சீரிய சேவகத்தை எடுத்துப் பாடாகின்றோம் நீ வாய்திறவாதே கிடந்துறங்குகின்றாய் ; இங்ஙனும் ஒருறக்கங்கூடுமோ ? உன்னைக் காணாதே நாங்கள் அலமந்து தளர்ந்திருக்கு மாற்றை நீ அறிந்து வைத்தும் இங்ஙனுறங்குகை உரியதன்று, இனிக் கடுக உணர்ந்து வாராய், என்கிறார்கள்.

இதில் முதலிரண்டடியை அடிகளால் இவள் தமையனுடைய செல்வத்தின் சிறப்புக் கூறப்படுகின்றது. அவன் அநவரதம் கண்ணபிரானுடன் கூடித்திரிபவனுதலால் கறவைகளைக் காலந் தவறாது கறக்கப் பெறுன் ; அக்கறவைகள் வகுத்த காலத்திற் கறக்கப் பெறுமையாலே மூலை கடுத்து ' கன்று என்படுகிறதோ !' என்று வாசலிலே நின்று குமுறி, தூரத்திற் கட்டப்பட்டிரா நின்றுள்ள கன்றின்மீது தனது பாவபந்தத்தைச் செலுத்தி, பாவநாப்ராகர்ஷத்தாலே, கன்று மூலையில் வாய்வைத்ததாகக் கொண்டு, கைவழியாகவு மன்றி, கன்றின் வாய்வழியாகவுமன்றி மூலை வழியே பால் சொரியா நிற்கும் ; அந்தப் பாற்பெருக்கினால் வீடு முழுவதும் வெள்ளமானபடியாதொன்றுண்டு—அதனைச் செல்வமென்றிட்டு, இங்ஙனெத்த செல்வமுடையானுக்குத் தங்கையாகப் பிறந்தவளே ! என்று அவளை விளிக்கின்றனர்.

கனைத்தல்—குமுறுதல் ; இடைவீடின்றித் தானஞ் செய்தலையே தொழிலாகவுடைய உதாரசிகாமணிகள் ஒரு கணப்பொழுது கொடாதொழியில் மனந்தளும்புமாறு போலவும், எம்பெருமான் அடியார் காரியங்களைச் செவ்வனே செய்யப் பெறுதொழியில் " ருணம் ப்ரவ்ருத்தமிவ மே ஹ்ருதயாந்நாபஸர்ப்பதி " என்று திருவுள்ளந் தளும்புமாறு போலவும், பசுக்கள் க்ரமமான காலத்திற் கறக்கப் பெறுதொழியில் மூலைக்கடுப்புற்றுக் கனைத்தல் இயல்பென்க.

நின்று பால் சோர—முகில் மழைபொழிய நினைத்தால் கடலிற்புக்கு நீரை முகந்து கொண்டு வந்து பின்பு பொழிய வேணும் ; இக்கறவைகட்கு அவ்வருத்த மில்லை, நினைவே ஊற்றுகப் பால் சுரக்குமாதலால் ; அங்ஙனவு மாறுமையால் திருமலையில் திரு அருவிகள் போன்று பால் மாறுதே பெருகுமென்க. " பகவத் விஷயப்பொருள் கூறவேணும் " என்று ஒருவர் கேளாதொழியினும் கற்றுணர்ந்த ஞானிகர் தமது செல்லாமையாலே தாமே பகவத் விஷயார்த்தங்களை எடுத்துரைக்குமாறு போலவும், அர்ஜுனன் கேளாதேயிருக்கக் கண்ணபிரான் கீதையில் " பூய ஏவ மஹா பாஹோ ! ச்ருணு மே பரமம் வச :" என்று கூறத் தொடங்குகின்றபோலவு மாயிற்றுக் கறவைகளின்படி.

மேல் நான்காவது முதல் இரண்டரை அடிகளால் இவர்கள் தாங்கள் செய்யும்படியைக் கூறுகின்றனர்; கீழ் "ஆழிமழைக்கண்ணு!" என்ற பாட்டில் பர்ஜந்ய தேவதைக்கு அருளிப் பாடிட்டு மழைபெய்ய நியமித்தார்களாதலால், அக்கட்டளையின்படி அவன் பெய்யும் மழை தலையிலே விழுமாறு இவளது வீட்டுவாசற்கணையத்தை அவலம்பித்துக் கொண்டு நிற்குமாற்றைக் கூறும், நான்காமடி.

இராமபிரான் இராவணனோடு போர்புரியும்போது அவன் மிகவும் எளிவரவு பட்டமையைக்கண்டு இரக்கமுற்று, "நிசாசரர் கோமானே! போரில் மிகவும் வருத்தமுற்றாய்; ஆதலின் இன்று இருப்பிடஞ்சென்று சிறிது தேற்றமடைந்து நாளை போர்க்கு வா, அப்போது என் வலியைக் காண்பாய்" என்று நியமநம் தந்து தானே போகவிட்டருளினமை முதலிய பல குணங்களினால் ஈடுபடுத்துந்தரமுடையனுதல்பற்றி "மனத்துக் கினியானை" என அடைமொழி கொடுக்கப்பட்டது. கண்ணபிரான் பெண்களைப் படுத்தும்பாடுகளை நினைத்தால் "வெற்ற வெறிதே பெற்ற தாய் வேம்பேயாக வளர்த்தாளே" என்னும்படியிருத்தலால், அவன் மனத்துக்கு இனியனல்லன் போலும்.

இனித்தானெழுந்திராய்—எங்களுடைய ஆர்த்தியைக்கண்டு எழுந்திரா தொழியில் ஒழி; மனத்துக்கினியானுடைய பாட்டுக்களைக் கேட்கவாகிலும் உணருதி என்றபடி.

ஈதென்ன பேருறக்கம்—உறக்கம் இருவகைப்படும்–லௌகிகமும் வைதிகமும். தமோகுணத்தின் பிராசுர்யத்தினால் உறங்குகின்ற ஸம்ஸாரிகளின் உறக்கம்–லௌகிகம். அனைத்துலகங்களினுடையவும் காவலைச் சிந்தனை செய்து கொண்டு * உறங்குவான்போல் யோகு செய்யும் எம்பெருமானுடைய நித்திரை வைதிகம். இவ்விரு வகையிலுஞ் சேராதேயிருப்பதொரு விலக்ஷண நித்திரையாயிரா நின்றது உன் உறக்கம் என்கிறார்களென்க.

"அனைத்தில்லத்தாருமறிந்து" என்பதற்கு இரண்டு வகையாகக் கருத்துரைக்கலாம்; நீ பரமபுருஷனையே பிரயோஜநமாகவுடையையாதலால், 'இப்பாடியிலுள்ள பெண்களில் ஒருத்தி தப்பாமல் அனைத்தில்லத்தாரும் உணர்ந்து வாவேண்டும்' என நினைத்துக்கிடக்கிறாயாகில், அங்ஙனமே அனைத்தில்லத்தாரும் அறிந்து வந்தாயிற்று; இனி நீ உணர்ந்துவா என்கிறார்கள், என்பது ஒரு கருத்து; பாடியிலுள்ள பெண்களெல்லாருந் திரண்டு வந்து உன் மாளிகை வாசலில் நின்று கூப்பிட, நீ சிறிது பொழுது உணராமற் கிடக்க, இதனால் உனக்கு வரும் மதிப்பை அனைவரும் அறியவேண்டுமென்று கிடக்கிறாயாகில், அங்ஙனும் அறிந்தாயிற்று; இனி உணர்ந்துவா, என்கிறார்கள் என்பது மற்றோர் கருத்து. இவ்விரண்டினுள் பின்னருரைத்த கருத்து சிறக்குமென்க.

(ஸ்வாபதேசம்.) பூதத்தாழ்வார்க்கு அடுத்து முந்தினவரான பொய்கையாழ்வாரை யுணர்த்தும் பாசுரமிது. தங்காய்! என்ற விளி இவர்க்கு நன்கு பொருந்தும். உலகில் தங்கையென்று ஸ்ரீ மஹாலக்ஷ்மியையும் தமக்கையென்று பூதேவியையும் வழங்குவர்கள். 'சேட்டை தம்மடியகத்து' என்ற திருமாலைப் பாசுரத்தில், தமக்கைக்கு வாசகமான ஜ்யேஷ்டா என்ற சொல்லால் பூதேவியைக் குறித்தமை காண்க. ஸ்ரீ மஹாலக்ஷ்மி தாமரை மலரில் பிறந்தவள். 'வசை மலர்க் கருவதனில் வந்தமைந்தான் வாழியே' என்கிறபடியே பொய்கையாழ்வாரும் தாமரைப் பூவில் தோன்றியவர். இந்த வொற்றுமைநயம் பற்றி தங்காய்! என விளிக்கத் தகுதியுடையாரிவ் வாழ்வார். "நனைத்தில்லஞ் சேறாக்கும்" என்ற விசேடணமும் இவர்க்கு வெகு நேர்த்தியாகப் பொருந்தும். ராவணவதாநந்தரம் திருவயோத்திக்கு மீண்டு எழுந்தருளா நின்ற பெருமானை நோக்கி பரத்வாஜ மஹர்ஷி "பங்க திக்தஸ்து ஜடிலோ பரதஸ் த்வாம் ப்ரதீக்ஷதே" என்றார்.

இங்கு பரதாழ்வான் சேறு பூசப் பெற்றிருப்பதாகச் சொல்லப்பட்டதன் கருத்து யாது? இரவும் பகலும் நிச்சலும் அழுதழுது நனைத்தில்லம் சேறுக்கினன் என்றபடி. "வண் பொன்னிப் போறு போல் வருங் கண்ண நீர்கொண்டு அரங்கன் கோயில் திருமுற்றம் சேறு செய் தொண்டர்"! என்றார் குலசேகரப் பெருமாளும். அவ்வண்ணமாகவே பொய்கை யாழ்வாரும் "பழுதே பல பகலும் போயினவென்று அஞ்சியழுதேன்" என்று காமே பேசினபடியே அழுதவராதலால் நனைத்தில்லஞ் சேறுக்கின ரென்க.

[கனைத்து] முதன் முதலாகப் பேசத் தொடங்கும்போது கனைப்பது இயல்பு. பொய்கை யார்க்கு முன்னம் பேசினவர்கள் யாருமில்லை. இவரே முதன் முதலாகப் பேசத் தொடங்கினவ ரென்பது இவ்வினையெச்சத்தினால் தோற்றுவிக்கப்படும். [இளங் கற்றெருமை] எருமை யென் றால் மஹிஷீ; லக்ஷித லக்ஷணக்ரமத்தால் தேவ தேவ திவ்ய மஹிஷீ என்றவாறு. எம்பெருமா னுக்கு திவ்ய மஹிஷியான பிராட்டியை யெப்பவர் இவ்வாழ்வார் என்பது ஸூசனை. "இளங் கன்றுகளையுடைய" என்று விசேஷண மிட்டதனால், மற்றை யாழ்வார்களனைவரும் இவர்க்கு வத்ஸ ஸ்தானீயர்களாய் இவர் மாத்ரு ஸ்தானீயர் என்று காட்டினபடி. ஆழ்வார்களுள் முதல் வரிறே யிவர். [கன்றுக் கிரங்கி] இவர் ஸ்ரீ ஸூக்தி யருளிச் செய்யத் தொடங்கினது கன்றுக ளான நம்போல்வார் பக்கலிலுள்ள பரம க்ருபையா லென்கை.

[நினைத்து முலைவழியே நின்று பால்சோர.] பகவத் குணங்களை நினைத்தவாறே அந்த நினைவு தானே ஊற்றுப்போல் பால் போன்ற ஸ்ரீ ஸூக்திகள் பெருகப்புக்கன என்றபடி. [பனித் தலைவீழ நின்வாசல் கடைபற்றி] இவர் பொய்கையில் தோன்றினவராதலால் இவரது வாசற் கடையைப் பற்றுவார்க்குப் பனித்தலை வீழ ப்ராப்தமே யாகுமிறே. [சினத்தினை வித்யாதி.] இது ஸ்ரீராம குண கீர்த்தனம். மஹர்ஷிகளின் ஞானக் கண்ணுக்கும் இலக்காகாத வொரு ஸ்ரீராம சரிதம் இவ்வாழ்வாருடைய அகக்கண்ணுக்கு இலக்கானமை "பூமேய மாதவத்தோன் தாள் பணிந்த வாளரக்கன் நீண்முடியைப், பாதமத்தா லெண்ணினன் பண்பு." என்ற இவரது பாசுரத்திற் பொலியும். அதில் "நாமே யறிகிற்போம் நன்னெஞ்சே!" என்றதற்குப் பொருந்த "மனத்துக் கினியானை" என்றருள். [இனித் தானெழுந்திராய்] "பழுதே பல பகலும்" என் கிற பாசுரம் பேசின பிறகுங்கூட உறங்கலாமோ? என்கை. முமுக்ஷுப்படியில் "பழுதே பல பகலும் போயினவென்று இறந்த நாளைக்குக் கூப்பிடுகிறவனுக்கு உறங்க விரகில்லை" என்ற ஸ்ரீ ஸூக்தியும் இங்கு அநுஸந்தேயம். [அனைத்தில்லத்தாரு மறிந்து] "அறியுமுலகெல்லாம் யானேயு மல்லேன்" என்ற இவ்வாழ்வார்து பாசுரத்தை அழகாக நினைப்பூட்டுகிறபடி காண்மின்.

இப்பாசுரத்தோடு ஆண்டாளுக்கு முன்னை ஆழ்வார்களை யெல்லாம் உணர்த்திற்றாயிற்று. "ஆழ்வார்கள் பன்னிருவர்" என்றருள்ள ஸம்ப்ரதாயப்படிக்கு ஸ்ரீ மதுரகவிகளும் ஆண்டாளும் ஆழ்வார் கோஷ்டியில் சேராதவர்களாதலால் இவ்விருவரையு முணர்த்துவதும் இப்பாட்டிலேயே அறியக்கிடக்கிறது. எங்ஙனே யென்னில்; நற்செல்வன் தங்காய்! என்றது நற்செல்வன் தங் கையே! என்று பொருள்படுதலால் நற்செல்வன் தன்னுடைய கையாக இருப்பவனே! என்ற படியாகும். இங்கு நற்செல்வ னென்பது நம்மாழ்வாரை, அவர் திருவாய்மொழி அருளிச் செய் கையில் மதுரகவிகள் அவருடைய கையின் ஸ்தானீயராயிருந்து பட்டோலை கொண்டாராதலால் இத்த விளி மதுரகவிகட்குப் பொருந்தும்.

இனி நற்செல்வனென்று எம்பெருமானைச் சொல்லிற்றாகி அவருடைய தங்கையென்று ஆண்டாளையுஞ் சொல்லக் குறையில்லை. "கோதற்ற ஞானத் திருப்பாவை பாடிய பரவை

தங்கை" என்றும், "பெரும்பூதூர் மாமுனிக்குப் பின்னுள் வாழியே" என்று முள்ளவை காண்க. ஆண்டாள் தன்னேத்தானே உணர்த்திக் கொள்ளுகை பொருந்துமோவென்று விரஸ மாக வினவுவார்க்கு நாம் விடையளிக்க வல்லோமல்லோம். சொற்சுவை அமைந்திருக்கு மழகை அநுபவித்துப் போருகிறே மத்தனை.

486. புள்ளின்வாய் கீண்டானைப் பொல்லாவரக்கனை *
கிள்ளிக் களைந்தானைக் கீர்த்திமை பாடிப்போய் *
பிள்ளைகளெல்லாரும் பாவைக்களம் புக்கார் *
வெள்ளி யெழுந்து வியாழ முறங்கிற்று *
புள்ளுஞ் சிலம்பினகாண் போதரிக்கண்ணினாய்! *
குள்ளக்குளிரக் குடைந்து நீராடாதே *
பள்ளிக்கிடத்தியோ பாவாய்நீ நன்னாளால் *
கள்ளந் தவிர்ந்து கலந்தேலோ ரெம்பாவாய். (கஉ)

புள்ளின் வாய் கீண்டானை	பறவையுருவம் பூண்டு வந்த பகாசுரனுடைய வாயைக் கீண்டெறிந்தவனும்
பொல்லா அரக்கனை இள்ளி களைந்தானை	கொடியனான இராவணனை முடித்து (அரக்கர் குலத்தை வேரோடு) களைந்தொழித்த வனுமான எம்பெருமானு டைய
கீர்த்திமை பாடி போய்	வீர சரிதங்களைப் பாடிக் கொண்டு சென்று
பிள்ளைகள் எல்லாரும்	எல்லாப் பெண்பிள்ளைகளும்
பாவைக் களம் புக்கார்	கோன்பு நோற்பதற்காகக் குறிக்கப்பட்ட இடத்திற் புகுந்தனர்;
வெள்ளி எழுந்து	சுக்ரோதயமாகி
வியாழம் உறங்கிற்று	ப்ருஹஸ்பதி அஸ்தமித்தான், (அன்றியும்)
புள்ளும்	பறவைகளும்
சிலம்பின	(இரைதேடப் போன இடங்களில்) ஆரவாரஞ்செய்தன;
போதரிக் கண்ணினாய்	புஷ்பத்தின் அழகைக்கொள்ளை கொள்ளாநின்ற கண்ணையுடையவளே!
பாவாய்	பதுமை போன்றவளே!
நீ	நீ
நல் நாள்	திருஷ்ணனும் காமும் கூடுகைக்கு வாய்த்த காலமாகிய இந்த நல்ல நாளில்
கள்ளம் தவிர்ந்து	(திருஷ்ணனுடைய குண சேஷ்டிதங்களைத்தனியே நினைத்துக் கிடக்கையாகிற) கபடத்தை விட்டு
கலந்து	எங்களுடன் கூடி
குள்ளக் குளிர குடைந்து நீர் ஆடாதே	உடம்பு வவ்வவிடும்படி குளத்திற்படிந்து ஸ்நானம் பண்ணுமல்
பள்ளி இடத்தியோ	படுக்கையிற் கிடந்துறங்கா நின்றியோ?
ஆல்	ஆச்சரியம்!

எல் ஓர் எம் பாவாய்.—

* * *—கண்ணபிரான் பிறந்து வளருமூரான திருவாய்ப்பாடியிலே அவனையே பரட வேண்டியிருக்க அவனைவிட்டுத் தென்னிலங்கைக் கோமானைச் சென்ற இராமனைப் பாடுவதும், அவனை மனத்துக்கினியானென்பதும் க்ருஷ்ண பக்தர்களுக்கு அஸஹ்யமாகையாலே ஒரு பெரிய கிஜர்ச்சி தோன்றிய தை. உடனே சில பெரியார்கள் புகுந்து கண்ணனும் இராமனும் ஒரு திருமூர்த்தியே யென்கிற தத்துவத்தை விளக்கி ஸமாதானம்பண்ண, பிறகு ஒருவாறு தேறி அவ்விரண்டு திருமூர்த்திகளையும் சேர்த்து ஆனந்தமாகப் பாடுகிறார்கள்.

புள்ளின்வாய்கீண்ட வரலாறு:—ஒருத்தி மகனைப்பிறந்து ஓரிரவிலொருத்தி மகனை யொளித்து வளர்கின்ற கண்ணபிரான்மீது கறுக்கொண்ட கம்ஸனால் கண்ணனை நலியுமாறு நிய

மிக்கப்பட்ட ஓரஸுரன் கொக்கின் உருவங்கொண்டு சென்று யமுனைக்கரையில் கண்ணபிரானை விழுங்கிவிட, அவனது நெஞ்சில் கண்ணன் நெருப்புப்போல எரிக்கவே, அவன் பொறுக்கமாட்டாமல் கண்ணனை வெளியே உமிழ்ந்து மூக்கால் குத்த நினைக்கையில், கண்ணன் அவன் வாயலகுகளைத் தனது இரு கைகளினாலும் பற்றி விரிவாகக் கிழித்திட்டனன் என்பதாம்.

"கிள்ளிக் களைந்தானை" என்ற சொற்போக்கால் இறையும் வருத்தமின்றிக் களைந்தமை தோற்றும். ஆராமங்களில் பூச்சி பட்ட இலைகளைக் கிள்ளிப் போகடுமாபோலே களைந்தானென்க. "கீர்த்திமை பாடிப் போய்" என்றது, விரஹத்தாலே துர்ப்பலைகளான பெண் பிள்ளைகள் பக்வத் குணகீர்த்தநத்தைப் பாதேயமாகக்கொண்டு வழிகடந்தன ரென்றவாறு "பாதேயம் புண்டரீகாக்ஷ காமஸங்கீர்த்தநாம்ருதம்" என்றதுமுணர்க. [பாதேயம்=வழிச்சோறு.]

பிள்ளைகளெல்லாரும்—நாங்கள் சென்று எழுப்பிக்கொண்டு போகவேண்டும்படி சிறுமிய ராயிருப்பவர்களும் உணர்ந்து போகா நிற்க, நீ கிடந்துறங்குகை மிக அழகிது என்ற கருத்துக் காண்க.

பாவைக்களம்—கண்ணபிரானும் ஆய்ச்சியருமாக நோன்பு நோற்கைக்கென்று குறிப்பிடப்பட்டதோரிடம்: பலர் திரளுமிடம் களமென வழங்கப்படும்; 'நெற்களம்' 'போர்க்களம்' என்பன காண்க.

இவர்கள் இங்ஙனஞ் சொல்லக்கேட்ட அவள், 'அவர்கள் சிறுப்பெண்களாகையால் காலமறியாமல் எழுந்து போயிருக்கக் கூடும்; அறிந்த நாம் அகாலத்தில் போகவொண்ணாது; சுக்ரோதயமாயிற்று? பாருங்கள்' என்ன; அது கேட்ட இவர்கள், 'சுக்கிரன் உச்சிப்பட்டான்; குரு அஸ்தமித்தான்' என்றனர். இதுகேட்ட அவள், 'நீங்களும் போகவேணுமென்ற வலிய அபிநிவேச முடையவர்களாகையால் உங்கள் கண்ணுக்குச் சுக்கிரன் உதித்தாகவும், குரு அஸ்தமித்தாகவுந் தோற்றக் கூடும்; ஆதலால் நீங்கள் சொல்வது பொழுது விடிவுக்கு அடையாளமன்று; வேறு அடையாளமுண்டாகிற் சொல்லுங்கள்' என்ன; அதற்கு இவர்கள் 'நாங்கள் இத்தனைபேர் திரண்டுவந்தது அடையாளமாகவற்றன்றே?' என்ன; அதுகேட்ட அவள் 'பிரிந்தவர்கள் திரண்டால் அத்திரட்சி அடையாளமாகும்; 'நீங்கள் "போனான் பேரோதும் பெரியோரை ஒருகாலும் பிரிகிலேனே" என்று நினையுமவர்களாகையால் உங்கள் திரட்சி பொழுது விடிவுக்கு அடையாளமாகமாட்டாது; வேறுண்டாகிற் சொல்லுமின்' என்ன; "புள்ளுஞ் சிலம்பினகாண்" என்று பறவைகளின் ஆரவாரங்களை அடையாளமாக்கக் கூறுகின்றனர்.

இவர்கள் இவ்வடையாளஞ் சொல்லக்கேட்ட அவள், தீர்யக் ஜந்துக்களினுடைய வ்ருத்தாந்தத்தைக்கொண்டோ நாம் காலத்தை அறுதியிடுவது! என்று நினைத்துப் பேசாதே கிடக்க: அம்முணர்ந்த இவர்கள், 'நீ இப்படி எங்களை அலக்ஷியம் பண்ணிக்கிடக்கைக்கு ஹேது உன் கண்ணழகைப்பெருக்க மதிக்கையன்றே!' என்ற கருத்துத்தோற்ற, 'போதரிக்கண்ணினாய்' என விளிக்கின்றனர். இந்த ஸம்போதனைக்கு நால்வகைப்பொருள்கள் கூற இடமுண்டு;—போது—உலாவுகின்ற, அரி கண்ணினாய்—மானினுடைய கண்போன்ற கண்ணையுடையவளே! என்பது ஒரு பொருள்; (பல பொருளொரு சொல்லாகிய ஹரி என்ற வடசொல், அரி எனத் திரிந்தது.) போது என்று புஷ்பமாய், குவளைப்பூவையும் மான்கண்ணையுமொத்த கண்ணையுடையவளே.! என்கை இரண்டாம்பொருள். அரி என்று வண்டாய் பூவிற்படிந்த வண்டுபோன்ற கண்ணுடையவளே! என்கை மூன்றும் பொருள். அரி என்று சத்ருவாய், புஷ்பத்தின் அழகுக்குச் சத்ருவான கண்ணழகுடையவளே! என்கை நான்காம் பொருள்.

குள்ளக்குளிர—'கத்தக்கதித்து' 'பக்கப்பருத்து' 'தக்கத்தடித்து' 'கன்னங் கறுத்து' செக்கச் சிவந்து' என்பன போன்ற ஒருவகைக் குறிப்பிடைச்சொல். உடம்பு மிகவும் வவ்வ லிடும்படி என்றவாறு. மார்கழி மாதத்தில் உஷ:காலத்தில் நீராடினால் குள்ளக் குளிருமென்க.

இராமபிரான் தந்தைசொற்கொண்டு வநவாஸஞ் சென்ற பின்னர் நந்திக்ராமத்தில் ராஜ்ய காரியங்களை நிர்வஹித்துப் போந்த பரதாழ்வான், நாம் பொழுதுவிடிந்த பின்னர் ஸரயுவில் முழுக் கிடச் சென்றால் நம்மைக் கண்ணுறுவாரினைவரும் "அண்ணரைக் காடேறத் துரத்தின பாவி போகின்றான்" என விரல்சுடுக்கி வைவர்கொல்" என்றஞ்சி அபரராத்ரியிற்றானே சரயுவிற் சென்று நீராடி வருவதுபோல், இவ்வாய்ச்சிகளும் சிலர் கண்பட யமுனையிற் சென்று நீராடில் 'உபாயாநுஷ்டாநம் பண்ணி ஸ்வரூப நிறத்தைக் குலைத்துக்கொள்ளும் பாவிகள் போகின்றனர்' என்று கண்டாரினைவரும் வைவர் என அச்சமுற்று, ஒருவர் கண்ணிலும் படாதபடி நீராடி வர வேணுமென்பார், "குள்ளக்குளிரக் குடைந்து நீராடாதே பள்ளிக்கிடத்தியோ ?" எனப் பொடி கின்றனர்.

(ஸ்வாபதேசம்) இது ஆண்டாளுக்கு அடுத்த தொண்டரடிப்பொடி யாழ்வாரை யுணர்த் தும் பாசுரம். [போது அரிக் கண்ணினாய்!] புஷ்பங்களை ஹரிப்பதிலேயே த்ருஷ்டியைச் செலுத்து பவரே ! என்றபடி. புஷ்ப கைங்கரிய பரரிறே இவ்வாழ்வார். "துளபத் தொண்டாய தொல் சீர்த் தொண்டரடிப்பொடி" "தொடை யொத்த துவளமுங் கூடையும் பொலிந்து தோன்றிய தோள் தொண்டரடிப்பொடி" என்றவை காண்க. பாவாய்! என்ற விளியும் இவர்க்கு நன்கு பொருந்தும். பதிவ்ரதா சிரோமணியைப் பாவை யென்பர். இவ்வாழ்வார் அரங்கனொருவ னுக்கே வாழ்க்கைப்பட்டு வேறொரு திருப்பதி யெம்பெருமானை நெஞ்சிலும் நினையாதவராதலால் கற்புச் சிறப்பு குறிக்கொள்ளத்தக்கது. திருவேங்கடமுடையா னெதிரே ஒருவர் "பதின்மர் பாடும் பெருமாள்!" என்று ஏத்த, அதைக்கேட்ட பெரிய கேள்விஜீயர், 'சோழியன் கெடுத்தான் காணும்; அந்த ஏற்றம் நம் பெருமாளுக்கில்லையே; நம்பெருமாளொருவர்க்கே' என்றார் என்ற ஐதிஹ்யமும் இங்கு நினைக்கத் தக்கது.

[நன்னாளால்] "மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்" என்ற திருவாக்கிலேயே இச்சொல்லும் வருகின்றது. தொண்டரடிப்பொடிகள் திருவவதரித்தது மார்கழித் திங்களே யாதலால் நன்னாளென்னத் தட்டுண்டோ ? [கள்ளந் தவிர்ந்து] 'சூதனுய்க் கள்வனுகி' என்றும் 'கள்ளமேகாதல் செய்து' 'கள்ளத்தேனையுந் தொண்டாய்' என்றும் பலகாலும் தமது கள்ளத் தைப் பேசிக்கொண்டாரிவ்வாழ்வார். இவரது சரிதையிலும் பொன்வட்டில் விஷயமான கள் ளம் அடிபட்டுக் கிடக்கிறது. அது தவிர்ந்து பகவத் பாகவத கோஷ்டியில் கலந்த படியை ஈற்றடி தெரிவிக்கின்றது. பெரியாழ்வார் போலவே இவ்வாழ்வாரும் பெரும்பாலும் பூம்பொழில் வாழ் முடையவராதலால் அவ்விடத்து அடையாளமாகப் புள்ளும் சிலம்பினகாண் என்பது இப் பாட்டிலும் புகுந்தது. [குள்ளக் குளிரவித்யாதி.] நீராட்டம் முதலிய நித்ய கர்மாநுஷ்டானங் களையும் தவிர்ந்து சிலகாலம் பள்ளிக்கிடந்தமை இவ்வாழ்வாரது சரிதையிற் காணத்தக்கது. புள் ளின்வாய் கீண்டானை யென்று தொடங்கிக் கண்ணபிரானுடையவும் இராமபிரானுடையவும் கீர்த்திமை பாடினபடி சொல்லுகிறது. இவ்வாழ்வார் திருமாலையின் முடிவில் 'வளை வெழுந்தவள மாட மதுரைமா நகரந்தன்னுள், கவளமால் யானை கொன்ற கண்ணனை யரங்கமாலை' என்று கண்ணபிரானுடைய கீர்த்திமையையும், திருப்பள்ளி யெழுச்சியில் 'மாமுனி வேள்வியைக் காத்து அவபிரதமாட்டிய வடுதிறலயோத்தி யெம்மரசே யரங்கத்தம்மா!' என்று இராமபிரானுடைய

கீர்த்தியையும் பாடினமையுணர்க. 'பிள்ளைகளெல்லாரும்' என்றது ஆண்டாள் தனக்கு மூன்றின ஆழ்வார்களெல்லாரையும் சொன்னபடி.

487. உங்கள் புழைக்கடைத் தோட்டத்து வாவியுள் *
செங்கழுநீர் வாய்நெகிழ்ந் தாம்பல்வாய் கூம்பினகாண் *
செங்கற் பொடிக்கூறை வெண்பல் தவத்தவர் *
தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போகின்றார் *
எங்களை முன்ன மெழுப்புவான் வாய்பேசும் *
நங்கா யெழுந்திராய் நாணுதாய் நாவுடையாய் *
சங்கொடு சக்கரமேந்துந் தடக்கையன் *
பங்கயக்கண்ணனைப் பாடேலோ ரெம்பாவாய். (கசு)

உங்கள் புழைக்கடை தோட்டத்து வாவியுள்	உங்கள் (வீட்டுப்) புழைக்கடைத் தோட்டத்திலிருக்கிற தடாகத்திலுள்ள
செங் கழுநீர்	செங்கழுநீர்ப் பூக்களானவை
வாய் நெகிழ்ந்து	விகஸிக்க,
ஆம்பல் வாய் கூம்பின	ஆம்பல் மலர்களின் வாய் மூடிப்போயின ; (அன்றியும்,)
செங்கலீ 'பொடி கூறை வெண்பல் தவத்தவர்	காவிப்பொடியில் (தோய்த்த) வஸ்திரங்களையும் வெளுத்த பற்களையு முடையராய் தபஸ்விகளா யிருந்துள்ள ஸந்நியாஸிகள்,
தங்கள் திருக்கோயில் சங்கு இடுவான்	தமது திருக்கோயில்களைத் திறவுகோலிட்டுத் திறக்கைக்காக
போகின்றார்	போகா நின்றனர் ;
எங்களை	எங்களை
முன்ன எழுப்புவான் வாய்பேசும் நங்காய்	முந்தி வந்து எழுப்புவதாகச் சொல்லிப்போன நங்கையே !
நாணுதாய்	('சொன்னபடி எழுப்பவில்லையே !' என்னும்) வெட்கமுமில்லாதவளே !
நா உடையாய்	(இனியபேச்சுப் பேசவல்ல) நாவைப் படைத்தவளே !
சங்கொடு சக்கரம் ஏந்தும் தடகையன்	சங்கையும் சக்கரத்தையும் தரியா நின்றுள்ள விசாலமான திருக்கைகளை யுடையவனும்
பங்கயம் கண்ணனை	தாமரைபோற் கண்ணனுமான கண்ணபிரானை
பாட	பாடுகைக்கு
எழுந்திராய்	எழுந்திரு ;
	எல் ஓர் எம் பாவாய்—.

* * *—ஆய்ச்சியர் திரளுக்கெல்லாம் தலைவியாய், 'நான் எல்லார்க்கும் முன்னே உணர்ந்து வந்து எல்லாரையும் உணர்த்தக்கடவேன்' என்று சொல்லிவைத்து, அதனை மறந்து உறங்குவாளொருத்தியை உணர்த்தும் பாசுரம், இது.

உணர்ந்த ஆய்ச்சிகள் எல்லாருமாகத் திரண்டு இவள் மாளிகை வாசலிலே வந்து 'நெடும் போதாக நாங்கள் உன் வாசலில் வந்து நின்று துவளா நிற்க, நீ எழுந்திரா தொழிவதேன் ?' என்ன ; பொழுது விடியவேண்டாவோ எழுந்திருக்கைக்கு ? பொழுது விடிந்தமைக்கு அடையாளமென் ?' என்று அவள் கேட்க; 'செங்கழுநீர் அலர்ந்து ஆம்பல்வாய் கூம்பினமை அடையாளமன்றே ?' என்று இவர்கள் சொல்ல; அதற்கு அவள், அஹஹ ! உங்கள் மயக்கமிருந்தவாறு என்கொல் ! நீங்கள் என் வாசலில் வந்த களிப்பின் மிகுதியால் உங்கள் கண்கள் அலர்ந்து, நீங்கள் என் முகம் பெருதொழியவே வெள்கி வெறுத்து உங்கள் வாய் மூடிப்போனமையைச்

செங்கழுநீர் வாய் நெகிழ்ந்து ஆம்பல்வாய் கூம்பினதாக நீங்கள் நினைத்திட்டீர்கள்; இது உங்களுடைய ப்ரமமே யொழிய வேறன்று' என்ன; அதற்கு இவர்கள், 'பேதாய்! வாவியிற் செங்கழுநீர் அலர்ந்து ஆம்பல்வாய் கூம்பினமையைச் சொன்னேங்காண் நாங்கள்' என்ன; அதற்கு அவள், 'இரவெல்லாம் வயலெங்குமுலாவி மொக்குகளை மலர்த்துவதும் மலர்களை மூடுவிப்பதுமன்றே உங்களுக்குக் காரியம்' என்ன; அதுகேட்ட இவர்கள், 'கட்டுங்காவலுமாயுள்ள தோட்டத்து வாவிகளிலிருக்கும்படியைச் சொன்னேங்காண்' என்ன; அதற்கு அவள், 'அங்கும் நீங்கள் சென்றதாகத்தான் நான் சொல்லுகிறேன்' என்ன; 'நாங்கள் வந்தோமென்கைக்கு ஸம்பாவனையுமில்லாத உங்கள் புழைக்கடைத் தோட்டத்து வாவியிலுள்ள படியைச் சொல்லுகிறேம்' என்றார்கள்.

புறம்பு நின்று உட்புகுவதற்கு வழிபெறாது துவள்கின்ற இப்பெண்டிர், அவள் வீட்டுப் புழைக்கடையிற் செங்கழுநீர் வாய்நெகிழ்ந்து ஆம்பல்வாய் கூம்பினபடியை அறிந்ததெங்ஙனே? எனில்; மற்றுள்ள விடங்களிலெங்கும் அவை வாய்நெகிழ்ந்து வாய்கூம்பியிருக்கின்றமையை இவர்கள் நன்கு அறிந்துள்ளவர்களாதலால், இவள் வீட்டுப் புழைக்கடையிலும் அங்ஙனம் நிகழ்ந்திருக்கத் தட்டில்லை என நிச்சயித்துக் கூறுகின்றனர் என்க; எனவே, அநுமானங்கொண்டறிந்து கூறினரென்றபடி.

இவ்வடையாளத்திற்கும் அவள் ஒரு கண்ணழிவுகூற, வேறோரடையாளங் கூறுகின்றனர்;—[செங்கற்பொடிக்கூரை இத்தியாதி.] திவ்யதேசங்களில் ஜீயர் ஸ்வாமிகள் எழுந்தருளித் திறைகோல் கொடுத்துத் திருக்காப்பு நீக்குவிக்கிற ஸம்ப்ரதாய முண்டாதலால் இங்ஙனே சொல்லுகிறது.

இவ்வடையாளங் கூற, உள்ளுள்ளவள் கேட்டு, "தோழிகாள்! 'ஸததம் கீர்த்தயந்தோமாம்' என்றும், 'தெரித்தெழுதி, வாசித்துங் கேட்டும் வணங்கி வழிபட்டும், பூசித்தும் போக்கினேன் போது' என்றுமுள்ள பிரமாணங்களை மறந்தீர்களோ? பரமைகாந்திகளான பாகவதர்கள் ஒருகால் பகவதாராதநம் பண்ணி மற்றைப்போது கிடந்துறங்குவரென்று நினைத்தீர்களோ? எப்போதும் அவர்கள் பகவதாராதநத்திலேயே ஊன்றியிருப்பர்களாதலால் அவர்களுடைய பணிவிடிவுக்கு அடையாளமாகாது" என்ன; மேல் அதற்கு உத்தரமாகச் சொல்லுகிறார்கள், எங்களை என்று தொடங்கி; நங்காய்! 'நான் எல்லாரிலும் முன்பு உணர்ந்தெழுந்து வந்து தோழிகளையெல்லாம் உணர்த்துகிறேன்' என்று சொல்லிச் சென்ற நீ, இப்போது எழுந்து வந்தவர்களையும் மறுத்துப் பேசுவது சால அழகிதாயிருந்தது; இஃதடங்கலும் உனது நிறைவுக்குக் குறையாமத்தனையாதலால் கடுக எழுந்துவா என்கிறார்கள்.

நாணுதாய்—நீ எழுந்து வாராதொழியிலும் ஒழிக; 'சொன்னபடி செய்திலோமே!' என்று நெஞ்சிற் சிறிது வெட்கமுங்கொண்டிலையே; அம்மா! உன்னைப்போற் சூனை கெட்டவள் இவ்வுலகத்தில் வேறொருத்தியுமிலள் என்றவாறு.

உடனே நாவுடையாய்! என அன்பார விளிக்க, அதுகேட்ட அவள், 'தோழிகாள்! நீங்கள் எனக்காக மிக வருந்தினீர்கள்; இதோ எழுந்து வருகிறேன், நான் செய்யவேண்டிய காரியமென்? சொல்லுங்கள்' என்ன; வலங்கையாழியிடங்கைச் சங்கமுடையனுய்த் தாமரைபோற் கண்ணனை கண்ணபிரானுடைய கீர்த்திகளைப் பாடுதற்காக அழைக்கின்றே மத்தனைகாண் என்கிறார்கள்.

கண்ணபிரான் திருவவதரிக்கும்போது திருவாழியுந் திருச்சங்குமாகத் தோன்ற, தேவகியார் அதுகண்டு அஞ்சி, 'அப்பனே! இவ்வாயுதங்களை மறைத்துக்கொள், மறைத்துக்கொள்; எழுப்பூண்டெல்லாம் அஸுரமயமாயிருக்கப் பெற்ற இக்கிலத்தில் இவை விளங்குவதற்குரியன வல்ல' என வேண்ட; அவன் அங்ஙனமே அவ்வாயுதங்களை உடனே உபஸம்ஹரித்திட்டானென்று இதிஹாஸபுராணங்கள் இயம்பா நிற்க, இவ்வாய்ச்சிகள் அக்கண்ணபிரானைச் சங்கொடு சக்கரமேந்தும் தடக்கையனாகக் கூறுதல் பொருந்துமாறென்? எனில்; கண்ணபிரான் அவ்வாயுதங்களை மறைத்திட்டது உகவாத பகைவர்கட்காகவே யாதலால் அவர்களை யொழிந்த மற்றை அன்பர்கட்குத் தோற்றத் தட்டில்லை யெனக்கொள்க; "நெய்த்தலை நேமியுஞ் சங்கும், நிலாவிய, கைத்தலங்கள் வந்து காணீரே" என்று எசோதைப் பிராட்டி ஆய்ப்பாடியிற் பெண்டுகளை அழைத்துக் காட்டின பாசுரமுங் காண்க.

(ஸ்வாபதேசம்.) தொண்டரடிப் பொடிகளுக்கு அடுத்த திருப்பாணாழ்வாரை யுணர்த்தும் பாசுரமிது. இதில், நங்காய்! நாணாதாய்! நாவுடையாய்! என்ற மூன்று விளிகளும் பாண் பெருமாளுக்கு நன்கு பொருந்தும். நங்கை யென்பது குணபூர்த்தியைச் சொல்லுகிறது. லோகஸாரங்க மஹாமுனிகள் வந்து என் தோளின் மீது ஏறிக் கொள்ளுமென்ன, அத்யந்த பாரதந்திரிய ஸ்வரூபத்தை நினைத்து அதற்கு உடன்பட்டமை குணபூர்த்தி, அங்ஙனம் அந்தணர் தலைவரது தோளின்மீது ஏறியிருக்கச் செய்தேயும் சிறிதும் செருக்குக் கொள்ளாமல் 'அடியார்க்கென்னை யாட்படுத்த விமலன்' என்றே பேசினவராதலால் நாணுதலர். (நாண்—அஹங்காரம்) 'பாண்பெருமாள் பாடியதோர் பாடல் பத்தும் பழமறையின் பொருளென்று பரவுமின்கள்' என்று தேசிகன் பணித்தபடி ஸகல வேதார்த்தங்களையும் பத்துப் பாசுரத்திலே அடக்கிப் பேசின பரம சதுரராதலால் நாவுடையார். "கையினுர் சுரிசங்கனலாழியர்" என்று சங்கொடு சக்கரமேந்தின வழகை யநுபவித்தமை பற்றியும் 'கரியவாகிப் புடை பரந்து மிளிர்ந்து செவ்வரியோடி நீண்டவப் பெரியவாய கண்கள்' என்று கண்ணழகில் ஈடுபட்டும் பேசினமை பற்றியும் 'சங்கொடு சக்கர மேந்துங் தடக்கையன் பங்கயக் கண்ணனைப் பாட' என்றுள். இவ்வாழ்வார் தமது சாதி நிலைமைக்கு ஏற்ப வாழ்ந்த விடத்தைக்கருதி உங்கள் புழைக்கடை யித்யாதி அருளிச் செய்யப்பட்டது. இவரது சரிதையில் ஸம்பந்தப்பட்ட லோகஸாரங்க மஹாமுனிகளின் தன்மையைக் காட்டுவது போலுள்ளது செங்கற் பொடிக் கூரை யித்யாதி. 'எங்களை முன்ன மெழுப்புவான் வாய் பேசும் நங்காய்' என்பதில் ஒரு அழகிய பொருள் தொனிக்கும். (அதாவது—) எழுப்புவதாவது—தூக்கிக் கொள்வது. எங்களை என்றது பாகவதர்களை யென்றபடி. பாண்பெருமாளே! உம்முடைய முதற்பாசுரத்தில் 'அடியார்க் கென்னையாட்படுத்தவிமலன்' என்றசொல் நயத்தை நோக்குங்கால் பாகவதர்களை நீர் தோளில் தூக்கிக் கொண்டாடுபவர் போலத் தெரிகின்றது. உமது கதையோ அப்படியில்லை. மஹாபாகவதரான லோகஸாரங்க மஹர முனியின் தோளின் மீதேறி நீர் இருந்ததாகவுள்ளது. ஆகவே, முந்துறமுன்னம் பாகவத சேஷத்வத்தை நீர் சொல்லிக் கொண்டது வாய்பேசு மத்தனையே போலும் என்று விநோதமாகக் கூறுகிறபடி.

488. எல்லே யிளங்கிளியே யின்ன முறங்குதியோ *
சில்லென் றழையேன்மின் நங்கைமீர் போதர்கின்றேன்
வல்லையுன் கட்டுரைகள் பண்டேயுன் வாயறிதும் *
வல்லீர்கள் நீங்களே நானேதா னுயிடுக *

ஒல்லை நீ போதா யுனக்கென்ன வேறுடையை *
எல்லாரும் போந்தாரோ போந்தார் போந்தெண்ணிக்கொள் *
வல்லானை கொன்றானை மாற்றாரை மாற்றழிக்க
வல்லானை * மாயனைப் பாடேலோ ரெம்பாவாய். (கூ)

இளங் கிளியே	இளமை தங்கிய கிளி போன் றுள்ளவளே!
எல்லே	(இஃது) என்னே !
இன்னம்	இத்தனை பெண் பிள்ளைகள் திரண்டுவந்த பின்பும்
உறங்குதியோ	தூங்குகின்றாயோ? (என் று உணர்த்த வந்தவர் கள் கேட்க;)
கங்கைமீர்	பெண்காள்!
போதர்கின்றேன்	(இதோ) புறப்பட்டு வருகி றேன்;
சில் என்று அழை யேல்மின்	சிலுகு சிலுகென்று அழையா தேயுங்கள்; (என்று உறங்கு கிறவள் விடைசொல்ல,) இளங்கிளியே! .
வல்லை	(நீ வார்த்தை சொல்லுவதில்) வல்லமை யுடையவள்;
உன் கட்டுரைகள்	உனது கடுமையான சொற் களையும்
உன் வாய்	உன் வாயையும்
பண்டே	நெடுநாளாகவே
அறிதும்	நாங்கள் அறிவோம்; (என்று உணர்த்தவந்தவர்கள் சொல்ல,)
நீங்களே வல்லீர்கள்	(இப்படிச் சொல்லுகிற) நீங் கள் தான் (பேச்சில்) வல் லமை யுடையீர் (அன்றோ!)
நானே தான் ஆயிடுக	(நீங்கள் சொல்லுகிறபடி) நான் தான் (வல்லவளாய்) ஆகக் கடவேன்; (உங்களுக்கு நான் செய்ய வேண்டுவ தென்? என்று உள்ளுறங்கு மவள் கேட்க;)
நீ	நீ
ஒல்லை	சீக்கிரமாக
போதாய்	எழுந்துவா;
உனக்கு	(தனியே) உனக்கு மட்டும்
வேறு என்ன உடையை	(நீ) வேறு என்ன (அதிசயத் தை) உடையையாயிரா நின் றாய்? (என்று உணர்த்தவந் தவர்கள் கேட்க;)
எல்லாரும்	(வரவேண்டியவர்கள்) எல்லா ரும்
போந்தாரோ	வந்தனரோ? (என்று உறங்கு மவள் கேட்க;)
போந்தார்	(எல்லோரும்) வந்தனர்;
போந்து எண்ணிக் கொள்	(நீ எழுந்துவந்து) எண்ணிப் பார்த்துக்கொள்; (என்று உணர்த்தவந்தவர்கள் கூற,) (என்னே எதுக்காகவரச்சொல்லுகிறீர்களென்று. உறங்குமவள் கேட்க;)
வல் ஆனை	(குவலயாபீடமென்னும்) வலிய யானையை
கொன்றானை	கொன்றொழித்தவனும்
மாற்றாரை	சத்ருக்களான கம்ஸாதிகளை
மாற்று அழிக்க வல்லானை	மிடுக்கு அழிந்தவர்களாகச் செய்தருள வல்லவனும்
மாயனை	அற்புதனுமான கண்ணபிரானை
பாட	பாடுகைக்காக (ஒல்லை நீபோதாய், என்றழைக்கிறார்கள்) எல் ஓர் எம் பாவாய்.—

* * *—எல்லாப் பெண்களுடைய நிரட்சியையுங் காணக்கருதிக் கிடப்பாளொருத்தியை உணர்த்தும் பாசுரம், இது.

கீழ்ப் பத்துப்பாட்டிலும் நிகழ்ந்த விஷயங்கள் இப்பாட்டில் வெளிப்படையாகக் காணப்படும். "புள்ளுஞ் சிலம்பினகாண்" என்ற பாட்டுத் தொடங்கிக் கீழ்ப்பாட்டளவு முள்ள ஒன்பது பாட்டுக்களிலும் உணர்த்துமவர்களுடைய பாசுரமொன்றேயன்றி உறங்குமவ ளுடைய ஆக்ஷேபாதிரூபமான பாசுரமொன்றும் வ்யக்தமாகக் காணப்படவில்லை ; அது, சொற் றொடை நோக்கி அவதாரிகையாக எடுத்துரைக்கப்பட்டது ; இப்பாட்டிலோவென்னில் ;

முதலடி–உணர்த்துமவர்களின் பாசுரம் ; இரண்டாமடி–உறங்குமவளின் பாசுரம் ;
மூன்றுமடி–உணர்த்துமவர் பாசுரம் ; நான்காமடி உறங்குமவள் பாசுரம் ;
ஐந்தாமடி–உணர்த்துமவர் பாசுரம் ; ஆறுமடியில், முற்கூறு–உறங்குமவள் பாசுரம் ;
மேல்முழுதும்–உணர்த்துவர் பாசுரம்

ஆறுயிரப்படி அருளிச்செயல் :—" திருப்பாவையாகிறது இப்பாட்டிறே, பகவத் விஷயத்திலிருக்கும்படி யெல்லாம் * சிற்றஞ் சிறுகாலையிலே சொல்லுகிறது ; பாகவதவிஷயத்திலிருக்கும்படி யெல்லாம் இப்பாட்டிலே சொல்லுகிறது " என்று.

பாகவதவிஷயத்திலிருக்கும்படி இப்பாட்டில் கூறியவாறென் ? எனில், " சில பாகவதர் தன்னைவெறுக்கில் எதேனுமொரு விரகாலே அவர்களை க்ஷமை கொள்ளுகிற முகத்தாலே ஈச்வரனை க்ஷமைகொள்ள வேணுமென்னுமிடம்–" ரூக்ஷாக்ஷராணி சிருண்வந் வை ததா பாகவதேரிதாந், ப்ரணமபூர்வகம் க்ஷாந்த்யா யோ வதேத் வைஷ்ணவோ ஹி ஸ :" என்று ஸ்ரீ வைஷ்ணவ லக்ஷணஞ் சொல்லுகிற பிரமாணத்தில் பிரஸித்தம்." என்று ரஹஸ்யத்ரயஸாரத்தில் அபராத பரிஹாராதிகாரத்தில் தூப்புற்பிள்ளை அருளிச் செய்தபடி–பாகவதர்களால் ஏதேனுமொருபடியாகக் குற்றம் சாட்டப்பெற்றவர்கள், அப்பாகவதர் திருவடிகளில் தலைசாய்த்து, ' இக்குற்றம் அடியேனுடையதுதான், க்ஷமித்தருளவேணும் ' எனப் பிரார்த்தித்துப் பொறுப்பித்தல் ஸ்ரீவைஷ்ணவ லக்ஷணமாதலால், அவ்வாறே இப்பாட்டில் " நானேதானையிடே " என்று–பிறர் கூறிய குற்றம் தன்னிடத்தே யுள்ளதாகத் தானிசைந்தமை கூறப்படுதலால், பாகவத விஷயத்திலிருக்கும்படி சொல்லிற் றாகிறது. " திருப்பாவையாகிறது இப்பாட்டிறே " என்றதும் இவ்வர்த்த விசேஷத்தில் ஊற்றத் தினாலேயென்பது அறியத்தக்கது.

" உங்கள் புழைக்கடை " என்ற பாட்டால் அயல் திருமாளிகைப் பெண்ணை உணர்த்துங்கால் " பங்கயக்கண்ணனைப் பாட " என்றதைக் கேட்ட இவள் அப்பேச்சின் இனிமையை நினைந்து நெஞ்சு குளிர்ந்து அப்பாசுரத்தைத் தன் மிடற்றிலிட்டு நுண்ணிதாகப் பாடின குரலின் மென்மையைச் செவியுற்ற இவர்கள் அவளை " இளங்கிளியே ! " என விளிக்கின்றனர் ; எல்லே ! என்றது–ஸம்போதநக் குறியாகவுமாம் ; ஆச்சரியக் குறிப்பிடைச் சொல்லாகவுமாம்.

உணர்த்த வந்தவர்கள் உறங்குமவளை, ' இளங்கிளியே ! ' என விளித்ததும் அவள் நினைத்தாள் ; நம் அயலகத்துப் பெண்ணை " நாணாதாய் ! ' என வெறுத்துரைத்தவிவர்கள் நம்மை நோக்கி ' இளங்கிளியே ! ' என்றால், இதை நாம் மெய்யே புகழ்ச்சியாகக் கருதலாகாது. உறக்கத்தில் அவளிலும் மேற்பட்டவளாயிராகின்ற நாம் நிந்தைக்கு உரியோமத்தனையன்றிப் புகழ்தற்கு உரியோமல்லோம் ; ஆனபின்பு, இப்போது இவர்கள் புகழ்ச்சி தோன்ற விளித்தமைக்குக் கருத்து வேறுகவேணும் ? " மாசுடையுடம்பொடு தலையுலறி வாய்ப்புறம் வெளுத்து " என்னும்படி எங்களுடம்பு வைவர்ணியமடைந்து வாயும் வெளுத்திருக்க, உன் உடம்பு கிருஷ்ணஸம்ச்லேஷத்தினால் பசுகுபசுகென்று, வாயும் சிவந்து குறியழியாமே கிடக்கிறபடி வெகு அழகிதாயிராகின்றது ! என்ற கருத்துப்பட, ' இளங்கிளியே ! ' என்ற மெல்லிய பேச்சினால் நிந்திக்கின்றனரேயன்றி வேறில்லை ; இவ்வளவில் இவர்களுக்கு நாம் ஒரு மறுமாற்றந் தந்தால் வெறுப்பா " என்று பேசாதே கிடந்தாள் ; கிடக்க, இவர்கள் " இன்ன முறங்குதியோ " என்கிறார்கள். நாங்கள் வருதற்கு முன் உறங்கினையேலும், எங்களது ஆர்த்தி தோற்றுங் கூக்குரல் செவிப்பட்ட பின்னரும் உறங்குவது தருமமோ ? என்றவாறு.

அவள் தான் உள்ளே உறங்குகிறுளல்லளே ; பங்கயக்கண்ணனே அநுஸந்தித்துக் கொண் டன்றே கிடக்கிறுள் ; அவ்வநுஸந்தாநத்திற்கு இவர்களின் வன்சொற்களெல்லாம் இடையூறாயி ருந்தமையால், " சில்லென்றழையேன்மின் " என்றுள். சில்லென்றழைத்தல்–நெஞ்சு வெறுப் புண்ணுமாறு அழைத்தல் ; சில் என்றவிது–ஒருவகை அநுகாரக் குறிப்பிடைச்சொல்.

அவள் அங்ஙனஞ் சொல்லக்கேட்ட இவர்கள், ' எங்களைப் பிரிந்து ஒரு கணப்பொழுதும் தரிக்கமாட்டாதிருந்த உனக்கு இன்று எங்கள் காட்சியும் பேச்சும் வெறுப்புக்கு உறுப்பாம்படி உனக்கு வந்த பூர்த்தி என்கொலம்மா ! ' என்ன ; அதற்கு அவள், ' என் தன்மையை அறியாமல் என்னிடத்து விபரீதமானதொரு கருத்துக்கொண்டு, இளங்கிளியே ! என்று என்னை விளிக்கிற நீங்களன்றே பூர்த்தியுள்ளவர்கள் ; வாய் திறவாதிருக்க வல்லீராகில் நான் புறப்படுகிறேன் என்பாள்–" நங்கைமீர் போதர்கின்றேன் " என்றுள்.

அவள் இங்ஙனஞ் சொல்லக் கேட்ட இவர்கள், " ஆ ! ஆ !! ' நங்கைமீர் ! ' என்ற உற வற்ற சொல்லாலே எம்மை நீ சொல்லவல்லை என்பதை நாங்கள் இன்றுதானே அறிகின்றோம் ? * சில்லென்றழையேன்மின் என்பது, * நங்கைமீர் ! என்பதாய் இப்படி கடுமையாக நீ கூறவல்லை யென்பதை யாம் நெடுகாளாகவே அறிகின்றோமம்மா ! " என்கிறார்கள் மூன்றுமடியால்

இவர்கள் இங்ஙனஞ் சொல்வதைக் கேட்ட அவள், ' நீங்கள் உங்கள் குற்றத்தைப் பிறர் தலைமீது ஏறிடாகின்றீர்கள் ; வன்சொற்கள் கூறுதிறமை உங்கள் பக்கலுள்ளதொன்றேயன்றி யான் ஒரு வன்சொல்லுஞ் சொல்லவல்லேனல்லேன் ' என்று சொல்லி, உத்தரகூணைத்தன்னிலே கைஷ்ணவலகூணத்தை ஆராய்ந்தாள் ; பாகவதர் ஒரு வைஷ்ணவனை நோக்கி ஒரு குற்றஞ் சாற் றினராகில், அவன் மெய்யே அக்குற்றமுற்றவனல்லனேனும் பாகவதர் பேச்சின் கௌரவ்யதை நிமித்தமாக, அவர் கூறிய குற்றத்தைத் தான் இசைந்து கொடுகிற்றல் ஸ்வரூபமென்று பூராண நூல்கள் புலப்படுத்தாநிற்க, நாம் " வல்லீர்கள் நீங்களே " என மறுத்துப் பேசுவது அஸத்பா ப்சாரத்திலுங் கொடியதாமெனக் கருதி, மீண்டு " நானேதானுயிடுக " என்கிறுள்.

இங்ஙனே அவர்கள் கூறிய குற்றத்தைத் தான் இசைந்து, ' இங்ஙன் குற்றவாளியாகிய நான் உங்கள் நிறத்துச் செய்யவேண்டியதென் ? ' என்று கேட்க, உணர்த்த வந்தவர்கள் ' உன் குற்றத்தை நீ இசைந்த பின்பு விளம்பமற இத்திரளில் வந்து பொறுப்பிக்கவன்றே வேண்டுவது ' என்பார், " ஒல்லை நீ போதாய் " என்றனர். அவள் இதனைக் கேட்டதும், ' இதோ வருகின் றேன் ' என்று புறப்பட்டுவரத் தொடங்கினள் ; உத்தரகூணத்திலேயே அவன் தம் திரளில் வந்து புகாமையால், நாம் போதாய் என்றவுடனே இவள் அரைகுலையத்திலே குலைய ஓடிவாராதே தாழ்க் கைக்கு அடி என் ? நாம் படும்பாடு இவள் படாதொழிவதென் ? ' என்று உள்ளெதும்பி, " உனக் கென்ன வேறுடையை " என்கிறார்கள். பஞ்சலகூஷங் குடிற்பெண்களுக்கு மில்லாதே உனக் கென்று வேறுக நீ என்ன அதிசயத்தை உடையளாயிராநின்றாய் எங்களுடன் வந்து கூடா மைக்கு ? என்றவாறு. உடையை என்பது–முன்னிலையொருமை நிகழ்காலக்குறிப்பு வினைமுற்று.

இங்ஙனிவர்கள் " உனக்கென்ன வேறுடையை " என கூஷபித்துரைத்தமை கேட்கலுற்ற அவள், ' தோழிகாள் ! உங்களோடு கூடுவதிற்காட்டிலும் எனக்கு வேறொரு காரியமுண்டோ ? வரவேண்டும் பெண்களனைவரும் வந்தபின் புறப்படலாமென்று கிடக்கிறேனத்தனை ; எல்லாப் பெண்களும் வந்து கூடினரா ? கண்டு கூறுமின் ' என்ன ; அதுகேட்ட இவர்கள், ' க்ருஷ்ண விர ஹத்தினுல் துவண்ட பெண்களெல்லாரும் உன்னைக்காண்கைக்காக உன்மாளிகை வாசலேறப்

'போந்து படுகாடுகிடக்கின்றனர்; ஆயினும் இன்னும் ஒருவரிருவர் வராதிருக்கக்கூடும்' என நினைத்தியேல் வந்து கணக்கிட்டுக்கொள்' என்றனர். கணக்கிட்டுக்கொள்ளுமாறு விரும்புதற்குப் பல காரத்துகள் கூறலாம்;—ஒவ்வொரு பெண்ணும் அவளால் தனித்தனியே காணப்பெறுதல், பேர்சொல்லப்பெறுதல், விரல்தொட்டு எண்ணப்பெறுதல், ஸ்பர்ச ஸுகமநுபவிக்கப்பெறுதல், பஞ்சலக்ஷங்குடிற்பெண்களாகையாலே எண்ணிமுடிக்குமளவும் அவளைப் பிரியாதே அநுபவிக்கப் பெறுதல்—முதலிய பலபேறுகளைக் கருதின்றென்க.

இவர்கள் இங்ஙனங் கூறக்கேட்ட அவள் 'நாமினைவருங் கூடிச்செய்யவேண்டுங் காரியமேது?' என்ன; கண்ணபிரானது கீர்த்திமைகளைப் பாடவேணுமென்கிறார்கள், கடையிரண்டடிகளால்.

[மாற்றரை மாற்றழிக்க வல்லானை.] கண்ணபிரான், பகைவரைக்கண்டால் 'இன்றுபோய் நாளைவா' என்ற இராமபிரானைப்போல் ஒரு பேச்சுப்பேசான்; வெட்டொன்று துண்டிரண்டாக்கி முடித்திடுவன். குவலயாபீடத்தின் கொம்பை முறித்துக்கொன்று, உட்புகுந்து சாணூர முஷ்டிகாதி மல்லர்களைமடித்து, உயர்ந்த மஞ்சத்தில் வீற்றிருந்த கஞ்சனைக் குஞ்சி பிடித்திழுத்துத் தள்ளி வதைத்து, இப்படியாகச்செய்த சிறுச்சேவகங்கள் பலவற்றை நினைக்க.

இப்படி ஸந்திகளைப் படுத்துமவன் ஆய்ச்சிகள் பக்கலில்வந்தால் அவர்களுக்குக் குழைச்சாக்காய்க் கட்டவு மடிக்கவுமிசைந்து நிற்பானதைலால், மாயனை எனப்பட்டது. பாட+ஏல், பாடேல்; தொகுத்தல்.

சைவசமயகுரவர் நால்வருள் ஒருவராகிய மாணிக்கவாசகர் இயற்றிய திருவாசகத்தில்,

"ஒண்ணித்திலநகையாய்! இன்னம் புலர்ந்தின்றே?
வண்ணக் கிளிமொழியா ரெல்லாரும் வந்தாரோ?
எண்ணிக் கொடுள்ளவா சொல்லுகோ மவ்வளவுங்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேதவிழுப் பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உண்ணெக்கு நின்றுருக யாமாட்டோ நீயேவந்
தெண்ணிக் குறையிற் றுயிலேலோ ரெம்பாவாய்."

என்ற நான்காம் பாட்டு, "எல்லேயிளங்கிளியே" என்னும் இப்பாட்டின் பொருள் நடையை அடியொற்றியதென்பதை இங்கு உணர்க.

(ஸ்வாபதேசம்.) பாண் பெருமாளுக்கு அடுத்தவரும் ஸர்வகநிஷ்டருமான திருமங்கையாழ்வாரை யுணர்த்தும் பாசுரமிது. இவ்வாழ்வார் இரண்டு ஆய்ச்சிகளுக்குப் பரஸ்பர ஸம்வாதமாக * மானமரு மென்னோக்கி * என்றொரு பதிகம் அருளிச்செய்தவராதலால் இவரையுணர்த்தும் பாசுரம் பரஸ்பர ஸம்வாத ரூபமாகவே அமைக்கப்பட்டது. 'கிளிபோல் மிழற்றி நடந்து * மென்கிளிபோல் மிக மிழற்று மென்பதையே' என்று பல பாசுரங்களில் இவர் தம்மைக் கிளியாகச் சொல்லிக்கொண்டவராதலால் கிளியே! என்ற விளி இவர்க்குப் பொருந்தும் அன்றியும், சொல்லிற்றையே சொல்லுவது கிளியின் இயல்பு. அதுபோல இவர் 'மாறன் பணித்த தமிழ்பறைக்கு மங்கையர்கோன் ஆறங்கம் கூற' என்றபடி நம்மாழ்வார் ஸ்ரீஸூக்திகளை யநு

சரித்தே அருளிச் செய்பவராதலாலும் கிளியென்றது. இரண்டாமடி திருமங்கையாழ்வாருடைய விடையளிப்பு. [வல்லியுன் கட்டுரைகள் பண்டே உன்வாயறிதும்.] இது கலியனே கோக்கி ஆண்டாள் கூறுமது. 'வாசிவல்லீரிந்தளூரீர்! வாழ்ந்தேபோம் நீரே' என்று நீர் மிகக் கடின மாகப், பேச வல்லீரென்பது எனக்கு, [பண்டே— நீர் அவதரித்துப் பாசுரம் பேசுவதற்கு முன்னமே] தெரியுங்காணும் என்றாள். அதுகேட்ட கலியன் வல்லீர்கள் நீங்களே='கொள்ளும் பயனொன்றில்லாத கொங்கை தன்னைக் கிழங்கோடும், அள்ளிப்பறித்திட்டவன் மார்பிலெறிந்து என்னழலைத் தீர்வேனே' என்று அற வெட்டிதாகச் சொன்ன உன் பேச்சு கடினமா? என் பேச்சு கடினமா? நீயே பார்க்கலாம்—என்றார். என்றவுடனே * நண்ணுதவாளவுணீர் * கண்சோர வெங்குறுதி * முதலிய திருமொழிகளில் தாம் அநுஸந்தித்த பாகவத சேஷத்வ காஷ்டையை நினைத்து * நானே தானுயிடுக என்றார். "உனக்கென்ன வேறுடையை" என்றது திருமங்கை யாழ்வார்க்கு அஸாதாரணமான திருமடல் திவ்ய ப்ரபந்த வக்த்ருத்வத்தை யுளப்படுத்தியதாகும். [எல்லாரும் போந்தாரோ இத்யாதி.] கலியனுக்கு முன்னமே மற்றுமுள்ள ஆழ்வார்கள் அவதரித்து, பன்னிருவர் என்கிற ஸங்கியை இவரோடு நிரம்பிற்று என்று தெரிவிக்கப்பட்டது.

[வல் ஆனை கொன்றானை—மாயனைப் பாட.] ஆனையைக் கொன்ற விஷயத்தை ஒரு ஆச்சரியமாக எடுத்துப் பேசினவர் கலியன். "ஆவரிவை செய்தறிவார் அஞ்சனமாமலை போலே" என்ற பெரிய திருமொழி காண்க. அடிக்கடி கலியன் வாய்வெருவுவதும் வல்லானை கொன்ற வரலாற்றையே; "கவள யரனைகொம் பொசித்த கண்ணனென்னும்" இத்யாதிகள் காண்க [மாற்றரை மாற்றழிக்க வல்லானை மாயனைப் பாட] எம்பெருமான் தன் திறத்தில் மாறு செய்பவர்களது செருக்கை வெகு ஆச்சரியமாக அடக்குபவன் என்பதைக் காட்டுகின்ற சரிதைகளுள் கோவர்த்தநோத்தாண கதை மிகச் சிறந்தது. மாறுசெய்த இந்திரனுக்கு ஒரு தீங்கு நினைக்காமலே கண்ணன் அவனது கொழுப்பை யடக்கினனிறே. இக்கதையிலே கலியன் மிக்க ஊற்றமுடையவர்; பெரிய திருமொழியை முடிக்கும்போதும் "குன்றமெடுத்து ஆநிரை காத்தவன் தன்னை" என்றார்; சரமப் பிரபந்தமாகிய திருநெடுந் தாண்டகத்தை முடிக்கும் போதும் "குன்றெடுத்த தோளினானை" என்றே தலைக் கட்டினார்.

489. நாயகனாய் நின்ற நந்தகோபனுடைய
கோயில்காப்பானே * கொடித்தோன்றுந் தோரண
வாசல்காப்பானே * மணிக்கதவந் தாள்திறவாய் *
ஆயர் சிறுமியரோமுக்கு * அறைபறை
மாயன் மணிவண்ணன் நென்னலே வாய்நேர்ந்தான் *
தூயோமாய் வந்தோந் துயிலெழப்பாடுவான் *
வாயால் முன்னமுன்னம் மாற்றாதே யம்மா * நீ
நேய நிலைக்கதவம் நீக்கேலோ ரெம்பாவாய். (கசு)

நாயகன் ஆய்நின்ற	(எமக்கு) ஸ்வாமியாயிருக்கிற	கொடி	த்வஜபடங்கள்
நந்தகோபனுடைய	நந்தகோபருடைய	தோன்றும்	விளங்காநிற்கப்பெற்ற
கோயில்	திருமாளிகையை	தோரணம் வாசல்	தோரண வாசலை
காப்பானே	காக்குமவனே!	காப்பானே	காக்குமவனே!

மணி	அழகிய
சதவம்	கதவினுடைய
தாள்	தாழ்ப்பாளே
திறவாய்	திறக்கவேணும்;
ஆயர் சிறுமியரோமுக்கு	இளமை தங்கிய இடைப்பெண்களாகிய எமக்கு
மாயன்	ஆச்சரியச் செயல்களையுடையவனும்
மணி வண்ணன்	நீலமணி போன்ற திருநிறத்தையுடையவனுமான கண்ணபிரான்
நென்னலே	நேற்றே
அறை பறையாய் நேர்ந்தான்	ஒலி செய்யும் பறையைத் தருவதாக வாக்களித்தான்;
துயில் எழ	(அவ்வெம்பெருமான்) துயிலினின்றும் எழுந்திருக்கும்படி
பாடுவான்	பாடுகைக்காக
தூயோம் ஆய்	பரிசுத்தைகளாய்
வந்தோம்	(அடியோம்) வந்திருக்கின்றோம்;
அம்மா	ஸ்வாமி!
முன்னம்முன்னம்	முதல் முதலிலே
வாயால்	(உமது) வாயினால்
மாற்றாதே	மறுக்காதொழிய வேணும்; (அன்றியும்)
கேசம் நிலை கதவம்	(கண்ணபிரான் பக்கலில்) பரிவற்றிருக்கும் நிலைமையையுடைய கதவை
நீ	நீயே
நீக்கு	நீக்கவேணும்;

ஸ்ரீ ஓர் எம்பாவாய்.—

* * *—கீழ்ப் பத்துப்பாட்டுகளினால் பத்துப் பெண்களை உணர்த்தினபடியைக் கூறியது—திருவாய்ப்பாடியிலுள்ள பஞ்சலக்ஷங் குடிப்பெண்களையு முணர்த்தியவாற்றிற்கு உபலக்ஷணம்.

முந்துறமுன்னமுணர்ந்த பெண்கள் உறங்குகின்ற மற்றைப்பெண்களையு முணர்த்தித் தம்முடன் கூட்டிக்கொண்டு எல்லாரும் பெருங்கூட்டமாகத் திரண்டு ஸ்ரீ நந்தகோபர் திருமாளிகை வாசலிற் சென்று சேர்ந்து, திருக்கோயில் காப்பானையும் திருவாசல் காப்பானையும் நோக்கித் 'திருவாசல் திருக்காப்பு நீக்கவேணும்' என்று இரக்கும்படியைக் கூறும் பாசுரம், இது.

இப்பாட்டில் முதலடி—கோயில் காப்பானையும், இரண்டாமடி—வாசல் காப்பானையும் உணர்த்துகின்றது. கோபுர வாசல்போன்ற வெளிப்புறத்து வாசலைக் காப்பவன்—கோயில் காப்பானென்றும், த்வஜஸ்தம்பத்தினருகிலுள்ள வாசல் போன்ற உட்புறத்து வாசலைக்காப்பவன்—வாசல்காப்பானென்றும் இங்குக் கூறப்படுகின்றனனெனக்கொள்க.

"நாயகனாய்நின்ற" என்ற அடைமொழி-நந்தகோபனுக்கு இட்டதாகவுமாம்; கோயில் காப்பானுக்கு இட்டதாகவுமாம். இவ்வாயர் மாதர் வடகரையே சேஷியாகக்கருதும் அதிகாரிகளாகையால் அவர்களை நாயகரென்கிறார்கள். ஒருவன் ஒரு ரத்நத்தைத்தந்தால், அதன் விலையின் மேன்மையை அறியவறிய, அதனைக்கொடுத்தவன் பக்கலில் அளவற்ற ஆதரம் பிறக்குமாறு போல, வடகர் முகமாக எம்பெருமானைப் பெறுவார் பெற்ற பொருளின் சீர்மையை ஆராய்ந்து, அதனைப் பெறுவித்த வடகர் பக்கலில் பெருநன்றி பாராட்டுவர். ஆனதுபற்றியே ஆளவந்தார் எம்பெருமானை ஸ்தோத்ர ரத்நத்தினால் துதிக்க இழிந்து, முந்துறமுன்னம் காதமுனிகள் முதலிய ஆசாரியர்களைத் துதித்தருளினார்.

"கண்ணபிரான் கோயில் காப்பானே!" என்னுமல், "நந்தகோபனுடைய கோயில் காப்பானே" என்றது—பரமபதத்தில் எம்பெருமான் ஸ்வதந்த்ரனாயிருந்து பட்டபாடுதீர நந்தகோபற்குப் பிள்ளையாய்ப்பிறந்து பாரதந்த்ரியத்தைப் பேணினனாதலால் அவன் திருவுள்ள முகக்குறிப்பு காகவென்க. "கண்ணபிரானுடைய கோயில்" என்றால், இவன் நந்தகோபருடைய அபிமானத்தில் ஒதுங்கியிருக்கையாகிற பாரதந்த்ரியம் பரிமளிக்க வழியில்லையே.

திருக்கோயில் காக்கும் முதலி இவர்களுக்கு மிகவும் கௌரவிக்கத்தக்கவனுயிருக்க, அவ்னதிகரித்த காரியத்தையிட்டு அவனை விளிப்பது இழிவன்ரேவெனில், 'துகில் தோய்ப்பவனே!' 'வண்டி ஓட்டுமவனே!' என்றிப்படியெல்லாம் விளிப்பதுபோலன்று இங்கு இவர்கள் விளித்த விளி. 'நந்தகோபனுடைய கோயிலைக்காப்பவனுக அமையப்பெற்ற உன்றன் பாக்கியமே பாக்கியம்' என்று இவர்களுக்கு உள்ள உகப்பு இத்தகைய விளிச்சொல்லாய் வழிந்து புறப்பட்டபடி. அக்கோயில் காப்பானும் இங்ஙன் விளித்தலையே தனக்குப் பரமபுருஷார்த்தமாக நினைப்பானொருவனிறே. அன்றியும், இதனுல் சேஷவ்ருத்தியடியாக வரும் பெயரே ஆத்மாவுக்கு ஸ்வரூபாநுரூபமென்னும் சாஸ்த்ரார்த்தமும் வெளியிடப்பட்டவாறும்.

இங்ஙனம் இவர்கள் அவனைப்புகழ்ந்து விளிக்க, அவன் மிகவுமுள் குளிர்ந்து, கண்ணுலே, 'புகுருங்கள்' என்று நியமனங்கொடுக்க, அவ்வாசலாற்புகுந்து உள்ளேசென்று, தோரண வாசல் காக்கும் முதலியை உணர்த்துகின்றனர், கொடித்தோன்றுமென்று தொடங்கி. இனி, இரண்டு ஸம்போதநமும் ஒருவனையே நோக்கியவை என்று நிர்வஹித்தலு மொக்கும்.

தோரணவாசலுக்குக் "கொடித்தோன்றும்" என்ற அடைமொழி இட்டதற்குக் கருத்து;—திருவாய்ப்பாடியிலுள்ள மானிகைகளெல்லாம் ஒருபடிப்பட்டுத் தோற்றுதலால், நடுநிசையில் அலமந்துவரும் ஆயர்பாதர் நின்று தடுமாறுதே 'இது நந்தகோபர் திருமாளிகை' என்று சடக்கென உணர்ந்து தெளிந்து வருதற்காகக் கொடிகட்டி வைக்கப்பட்டிருக்குமென்க. பெரு விடாய்ப்பட்டவர்க்குத் தண்ணீர்ப்பந்தல்கள் நெடுந்தூரத்தினின்றுந் தோற்றவேணுமென்று தார்மிகர்கள் கொடிகட்டித் தோரணம் நாட்டுவரன்ரே. "பெருமானைக்காணப்பெறுதே ஆர்த்தனன் பூமீ பரதாழ்வான், ராமாச்ரமஸ்ரீசகமான தூமவல்கலங்களைக்கண்டு தரித்தாற்போலே கொடியையும் தோரணத்தையுங்கண்டு இவர்கள் தரிக்கைக்காகவாயிற்று கட்டுவைத்தது" என்ற ஆரூயிரமறிக.

வாசல் காப்பானே!—கொடியும் தோரணமும் அசேதநமாகையால் அவை எம்மை அழைக்கவும்மாட்டா, உள்ளேகொண்டு புகவும்மாட்டா; இனி நீ சைதந்யம் பெற்றதற்கு ப்ரயோஜநம் பெறுதியென்கிறார்கள். பண்டு கண்ணபிரான் "அர்ஜுனன் ரூபத்தையைக் கொண்டுபோக நீங்கள் அநுமதிபண்ணியிருங்கள்" என்று வாசல்காப்பாருக்கு அருளிச்செய் திருந்ததுபோல, "பெண்களை உள்ளே புகவிடு" என்று இவ்வாசல் காப்பானுக்கும் நியமித்திருக்கக்கூடுமென்று இவர்களின் நினைவுபோலும்.

மணிக்கதவந் தாள்திறவாய்—கதவின் இனிமையிலே எங்கள் கண்ணும் நெஞ்சும் பிணிப் புண்ணவொண்ணுமல் கதவைத்திறந்து எம்மை உள்ளே புகவிடாய் என்கிறார்கள். இவர்கள் வேண்டுமாற்றைக் கேட்கலுற்ற அவன், "பயம்மிக்க தேசத்தில் நடுநிசையில் வந்து கதவைத் திறக்க அழைக்கிறவர் யார்?" என்ன; அதற்கு இவர்கள், "அச்சந் தவிர்ப்பானிருக்குமிடத்தில் அஞ்சவேண்டும் ப்ரஸக்தி என்?" என்ன; அதுகேட்ட அவன், "யுகம் த்ரேதாயுகமாய், காலம் நல்லடிக்காலமாய், தமப்பனர் சம்பராந்தகனுய், பிள்ளைகள் தாங்களும் ஆண்புலிகளாய், அவர்கள் தரம் வழியேபோய் வழியேவருமவர்களுமாய், ஊரும் திருவயோத்தியையுமா யிருந்தமையாலே ராமாவதாரத்தில் அச்சமற்றிருந்தது; இப்போது அங்ஙன் அஞ்சவேண்டாதே பாலிலேயுண்டு பனியிலே கிடக்கிறதோ? காலம் கலிக்குத் தோள்தீண்டியான த்வாபராந்தமாய், தமப்பனுர் பசும்புல் சாவமிதியாத பரமஸாதுவான நந்தகோபராய், பிள்ளைகள் சிறுவராய், பின்னையும் தீம்ப

ரில் கலிவாராய், இருப்பிடம் இடைச்சேரியாய், அதுதான் கம்ஸனுடைய ராஜ்யத்திற்கு மிகவும் அணித்தாய் அவனுக்கு இறையிறுக்குமூராய், அவன்றன் பரம சத்துருவாய், எழும்பூண்டெல் லாம் அஸுரமயமாயிருக்க, அச்சங்கெட்டிருக்குமிட மிதுவாவதெங்ஙனே?" என்ன; அது கேட்ட இவர்கள் "எங்களுக்கு அஞ்சவேணுமோ? நாங்கள் பெண்பிள்ளைகளல்லோமோ?" என்ன; அதற்கு அவன், "அப்படியா? சூர்ப்பணகை பெண்பிள்ளையன்றே? 'அஞ்சுவன் வெஞ்சொல் நங்காய்! அரக்கர் குலப்பாவை தன்னை' என்று பிற்பட்டவருங்கூட அஞ்சும்படி அவள் நலிந்தது ஒரு மாளிகையும் வாசல் கர்ப்பாருமில்லாமையா லன்றே?" என்ன; அதுகேட்ட இவர்கள் "அவள் ராக்ஷஸி, நாங்கள் இடைப்பெண்கள்; அவளோடொக்க எங்களைக் கருத லாமோ?" என்ன; அதற்கு அவன், "ஆய்ப்பெண்களா? பூதனை ஆய்ப்பெண்ணல்லளோ? அவள் செய்துபோன தீமையை நீங்கள் அறியீரோ? நன்முகச் சொன்னீர்கள்; இடைச்சிக ளுக்கன்றே மிகவும் அஞ்சவேண்டும்" என்ன; அதற்கு உத்தரமாக "ஆயர் சிறுமியரோம்" என்கிறார்கள்.

இவர்கள் இங்ஙனங் கூறியதைக்கேட்ட அவ்வாசற் காவலோன், "சிறுமியராகிலென்? ஆஸுரமானதொரு கன்று [வத்ஸாஸுரன்] வந்து நலியப்பார்த்ததன்றே? யாரம் பருவங் கொண்டு நம்பவல்லோமல்லோம்; வந்த காரியத்தைச் சொல்லுங்கள், வார்த்தையில் அறிகிறேம்" என்றான்; அதற்கு இவர்கள் "அறைபறை" என்றார்கள்; நோன்புக்குப் பறைவேண்டி வந்தோ மென்றபடி. அதனைக்கேட்ட அவன், "அதுவாகில் பெருமான் திருப்பள்ளி யுணர்ந்தெழுந்த பின்னர் விண்ணப்பஞ் செய்து தருகிறேம், நில்லுங்கள்" என்றான். அதற்கு இவர்கள் "நென் னலேயாய் நேர்ந்தான்" என்கிறார்கள்; நீ இன்றைக்கு விண்ணப்பஞ் செய்ய வேண்டாதபடி நேற்றே அப்பெருமான் எமக்குப் பறைதருவதாக அருளிச்செய்தான என்றவாறு.

"இங்ஙன் இவர்கள் "நென்னலேவாய் நேர்ந்தான்" என்னக் கேட்ட வாசல் காப்பான், எம்பெருமான் உங்கள் காரியத்தைச் செய்துதருவதாக அருளிச்செய்தானேனும் அவன் எங்களை இங்கு வைத்ததற்கு ஒரு பயன் வேண்டாவோ? எங்கள் பணிக்கு அவனே கடவான்? "வந்த வர்களின் ஸ்வரூப ஸ்வபாவங்களை ஆராய்வதற்கென்றே நியமிக்கப்பெற்றுள்ள நாங்கள் உங்கள் அகவாயை ஆராய்ந்துணராமல் விடமுடியாது" என்றான்; அவற்கு உத்தரமாக இவர்கள் "தூயோமாய் வந்தோம்" என்கிறார்கள்.

இதன் கருத்து:—நீங்கள் வருந்தி ஆராயவேண்டும்படி நாங்கள் வந்தோமல்லோம்; நீங்கள் இங்ஙனே அஞ்சும்படி கருத்துக்குற்றமுடையோ மல்லோம்; உபாயாந்தரபராயும் உபேயாந்தரபராயும் வந்தோமல்லோம்; அத்தலைக்குப் பல்லாண்டு பாடுகையையே பரமபுரு ஷார்த்தமாக நினைத்து வந்தோம் யாம் என்றவாறு. தூயோம்—தூய்மையுடையோம்; தூய்மை யாவது—தங்கள் தலையிலுஞ் சில அதிகப்ரஸங்கங்களை ஏறிட்டுக் கொள்ளாமல் 'நமக்குடைய ரக்ஷ ணத்திற்கு அவனே கடவன்' என்றிருக்கும் அத்யவஸாய விசேஷம்.

இவ்வாறு இவர்கள் இயம்பக்கேட்ட அவன், "உங்கள் தூய்மையை நாடறியுமாறு நீங் கள் அநந்யப்ரயோஜநைகள் என்கைக்கு ஏற்ற அடையாளஞ் சொல்லுங்கள்; உங்களாற்றூ மையைக் கண்டால் ஒரு பறை பெற்றுப்போக வந்தீராகத் தோன்றவில்லை" என்றான்; அதற்கு விடையாகத் "துயிலெழப்பாடுவான்—வந்தோம்" என்கிறார்கள். அவன் உணர்ந்தெழும்போதை அழகுக்கு மங்களாசாஸநம் பண்ணவந்தோம் என்றபடி. "துயிலெழை பாடுவான்" "துயி லெடை பாடுவான்" என்பன பாடபேதங்கள்.

இங்ஙன மிவர்களின் பேச்சுக்களைக் கேட்ட திருவாசல்காப்பான், அபிஸந்தியின் சிறப்பை உள்ளபடி அறிந்துவைத்தும், இவர்கள் பேச்சின் இனிமையை இன்னும் செவியாற் பருகவிரும்பி, "ஆகிலும் நீங்கள் இவ்வகாலத்தில் உள்ளே புகுரவொண்ணாது" என மறுத்துக் கூறுவான் போல் தோற்றினன்; பிறர் கருத்தறிவதில் வல்லவர்களான இவ்வாய்ச்சிகள் அதனை அறிந்து, "என் அப்பனே! நீ நெஞ்சாலே சிலவற்றை நினைத்தியேலும், வாயால் நெருப்பைச் சொரிந்தாற் போல் மறுத்துக் கூறுதொழிய வேணும்" என்கிறார்கள் எழாமடியினில்.

இங்ஙன மியம்புகின்ற இவ்வாய்ச்சிகளின் ஆர்த்தியின் கனத்தையும் அகவாயிற் சுத்தியையும் ஆராய்ந்தறிந்த அவ்வாசல் காப்பான், "ஆகில் நான் உங்களை மறுக்கவில்லை; கதவைத் தள்ளிக்கொண்டு புகுருங்கள்" என்ன; அதுகேட்ட ஆய்ச்சிகள், "காயகனே! எம்பெருமான் திறத்து உனக்குள்ள பரிவிற்காட்டிலும் மிக விஞ்சின பரிவு இக்கதவிற்கு உள்ளதுபோலும்; எங்களால் தள்ளமுடியாது" "நீயே திறக்கவேணும்" என்கிறார்கள், கடையடியால்.

490. அம்பரமே தண்ணீரே சோறே யறஞ்செய்யும் *
எம்பெருமான் நந்தகோபாலா வெழுந்திராய் *
கொம்பனைக் கெல்லாங் கொழுந்தே குலவிளக்கே *
எம்பெருமாட்டி யசோதா யறிவுரூய் *
அம்பர மூடறுத் தோங்கி யுலகளந்த *
உம்பர்கோமானே யுறங்கா தெழுந்திராய் *
செம்பொற் கழலடிச் செல்வா பலதேவா *
உம்பியும் நீயு முறங்கேலோ ரெம்பாவாய். (கஎ)

அம்பரமே	வஸ்த்ரங்களேயே
தண்ணீரே	தீர்த்தத்தையே
சோறே	சோற்றையே
அறம் செய்யும்	தருமமாக அளிக்கின்ற
எம்பெருமான் நந்தகோபாலா	எமக்கு ஸ்வாமியான நந்தகோபரே!
எழுந்திராய்	எழுந்திருக்கவேணும்;
கொம்பு அனைக்கு எல்லாம்	வஞ்சிக்கொம்பு போன்ற மாதர்களுக்கெல்லாம்
கொழுந்தே	முதன்மையானவளே!
குலம் விளக்கே	(இக்) குலத்திற்கு (மங்கள) தீபமாயிருப்பவளே!
எம்பெருமாட்டி	எமக்குத் தலைவியானவளே!
அசோதாய்	யசோதைப் பிராட்டியே!
அறிவுரூய்	உணர்ந்தெழு;
அம்பரம் ஊடு அறுத்து	ஆகாசத்தை இடைவெளியாகக்கொண்டு
ஓங்கி	உயரவளர்ந்து
உலகு அளந்த	(எல்லா) உலகங்களையும் அளந்தருளின
உம்பர்கோமானே	தேவாதிதேவனே!
உறங்காது	(இனிக்) கண்வளர்ந்தருளாமல்
எழுந்திராய்	எழுந்திருக்கவேணும்;
செம்பொன் கழல் அடி	சிவந்த பொன்னாற் செய்த வீரக்கழலை அணிந்துள்ள திருவடியை யுடைய
செல்வா	சீமானே!
பலதேவா	பலதேவனே!
உம்பியும் நீயும்	உன் தம்பியாகிய கண்ணனும் நீயும்
உறங்கேல்	உறங்காதொழியவேணும்;

எல் ஓர் எம் பாவாய்.—

* * *—திருவாசல் காக்கும் முதலிகளின் அநுமதிகொண்டு உள்ளே புகுந்த ஆய்ச்சிகள் ஸ்ரீநந்தகோபரையும் யசோதைப் பிராட்டியையும் கண்ணபிரானையும் நம்பி மூத்தபிரானையும் திருப்பள்ளி யுணர்த்தும் பாசுரம், இது.

"பர்த்தாவினுடைய படுக்கையையும் ப்ரஜையினுடைய தொட்டிலையும் விடாத மாதா வைப்போலே" என்றும், "ஸ்ரீநந்தகோபரையும் க்ருஷ்ணனையும் விடாத யசோதைப் பிராட்டி யைப்போலே" என்றும், (முமுக்ஷுப்படியில்) அருளிச்செய்தபடி, முதற்கட்டில் நந்தகோபரும், இரண்டாங்கட்டில் யசோதைப் பிராட்டியும், மூன்றுங்கட்டில் கண்ணபிரானும், நான்காங்கட் டில் நம்பி மூத்தபிரானும் பள்ளிகொள்வது முறையாதலால், அம்முறையை அடியொற்றி உணர்த் தியவாறு. கண்ணனே ஆய்ச்சிகள் களவுகாண்பர்கொல்! என்னுமச்சத்தினாலும் நந்தகோபர் மூன்கட்டில் கிடப்பராம்.

இதில், முதலிரண்டடிகள் நந்தகோபரை உணர்த்தும். நந்தகோபருடைய கொடை மேன்மையைக் கூறும் முதலடி. "வஸ்த்ரேண வபுஷா வாசர" என்றபடி மேனிக்கு நிறம் கொடுக்கும் பொருள்களில் முதன்மையான ஆடைகளையும், தாரகமான தண்ணீரையும், போஷக மான சோற்றையும் வேண்டுவார்க்கு வேண்டியபடி அறமாக அளிக்கவல்லவனே! என்றபடி. "அறஞ் செய்யும்" என்றமையால், புகழைப் பயனாகக் கருதாமல் கொடையையே பயனாகப் பேணிக்கொடுக்கின்றமை விளங்கும். யாசகர்கள் கொண்டல்லது தரிக்கமாட்டாதவாறு போல, இவர் கொடுத்தல்லது தரிக்கமாட்டாரென்பது ஆழ்ந்த கருத்து.

"அம்பரமே தண்ணீரே சோறே" என்ற ஏகாரங்கள் பிரிகிலேப்பொருளனவாய், வஸ்த்ரங் களே மாத்திரம் தானஞ்செய்பவன், தண்ணீரை மாத்திரம் தானஞ்செய்பவன், சோற்றை மாத்தி ரம் தானஞ் செய்பவன் என்னும் பொருளைத்தரும். அம்பரமும் தண்ணீரும் சோறும் நந்த கோபன் தானஞ் செய்ததாக எங்குங் கண்டதில்லை. அப்படியிருக்க இங்கே இவர்கள் இப்படி கூறுவதானது கொண்டென்னில், இவையெல்லாம் தானஞ் செய்தமை கண்ணபிரானிடத்துக் கண்டதாதலால் இவனுக்குக் காரணபூதனை நந்தகோபனிடத்திலே ஏறிட்டுச் சொல்லுகிறபடி போலும். "காரணகுண ஹி கார்யே ஸங்க்ராமந்தி" என்கிற நியாயத்தைக் கருதிக் கூறலாமன்றே.

எம்பெருமான்—"உண்ணுஞ்சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையுமெல்லாங் கண்ணன்" என்றபடி, எங்களுக்கு அம்பரமுந் தண்ணீருஞ் சோறுமாயுள்ள கண்ணபிரானே எமக்குத் தந்து எங்கள் ஸத்தையை நோக்கும் ஸ்வாமி நீயன்றே என்றபடி.

ஆக இவ்வளவால் நந்தகோபரை விளித்து, "எழுந்திராய்" என்று அவரைத் திருப்பள்ளி யுணர்த்தியவாறே, இவர்கள் உள்ளே புகுவதை அவர் அநுமதித்தமை தோன்றவிருக்க, பின்னர் இடைக்கட்டிற் புகுந்து யசோதைப் பிராட்டியை உணர்த்துகின்றனர்—மூன்று நான்காமடிகளால்.

எம்பெருமானைப் பற்றும்போது பிராட்டியை முன்னிட்டுப் பற்றுமாபோலே, இங்குக் கீழ் நந்தகோபரைப் பற்றும்போதும் யசோதைப் பிராட்டியை முன்னிட ப்ராப்தமாயிருக்க, முன்னர் நந்தகோபரைப் பற்றிப் பின்னர் யசோதையைப் பற்றுவது என்னெனில்; பர்த்தாவை முலையாலணைக்கைக்காகவும் பிள்ளையை முலைப்பால் கொடுத்து வளர்க்கைக்காகவும் யசோதைப் பிராட்டி இடைக்கட்டிற் கிடக்கிறபடியால், கண்ணுற் காண்கிறபடிக்கு மேற்பட ஒன்றுமறி யப்பெறாத இவ்வாய்ச்சிகள் கண்டபடியே பற்றுகிறார்களெனக் கொள்க.

கோம்பனர்க்கெல்லாங் கோமுனே!—கொம்பு என்னும் பொதுப்பெயர், இங்கு வஞ்சிக் கொம்பு என்ற சிறப்புப் பெயரின் பொருள் பெற்றது. சிறந்த மாதர்களின் இடைக்கு வஞ்சிக் கொம்பை உவமை கூறுதல் கவிமரபென்க; அது துவட்சியிலும் நேர்மையிலும் இடைக்கு உவ

மையாம். அனுர்=அன்னுர் என்றபடி ; அப்படிப்பட்டவர் என்பது அதன் பொருள் ; எனவே, கொம்பு போன்றவர் என்றதாயிற்று. செடிக்கு ஒரு தீங்கு நேர்ந்தால், கொழுந்தில் முதலில் வாட்டம் பிறப்பதுபோல, பெண்டிர்க்கு ஒரு கேடுவந்தால் முந்துற யசோதை பக்கலில் வாட்டங் காணப்படுவது பற்றிக் "கொழுந்தே!" எனப்பட்டாள் ; முற்றுவமை.

இங்ஙன் வேண்டப்பட்ட யசோதைப் பிராட்டியும் இவர்கள் உட்புகுவதற்கு இசைச் தமை தோற்ற இருக்க, மூன்றுங்கட்டிற் புக்குக் கண்ணபிரானை உணர்த்துகின்றனர், ஐந்தாறு மடிகளால்.

இப்போது உலகளந்தவபதாந்தத்தை எடுத்துக் கூறுவது—வேண்டாதார் தலையிலும், வேண்டாவென மறுத்தவர் தலையிலும் திருவடியை வைத்தருளின நீ, திருவடிகளில் விழுந்து யாசிக்கு மெங்களை அடிமை கொள்ளா தொழிவது எங்ஙனே? என்னுங் கருத்தினாலென்க.

உறங்காது எழுந்திராய்—"ஸதா பச்யந்தி ஸூரய:" என்றபடி ஒரு கணப்பொழுதுங் கண்ணுறங்காது ஸேவித்துக்கொண்டிருந்த நித்யஸூரிகளைத் துடிக்கவிட்டு எம்மை உகந்து இங்கு வந்த நீ எங்களுக்கும் முகங்காட்டாமல் உறங்கி, எங்களையுந் துடிக்கவிடாதேகொள் என்றவாறு.

இவர்கள் இங்ஙன் இரந்து எழுப்பச் செய்தேயும், அவன் 'இவர்கள் நம்பி மூத்தபிரானை எழுப்பாமல் நம்மை எழுப்புகின்றனராதலால் முறைகெடச் செய்தார்களாய்த்து ; ஆனபின்பு இவர்களுக்கு நாம் முகங் கொடுப்பது தகுதியன்று' என்று பேசாதேயிடந்தான் ; இவ்வாய்ச்சிகள் இங்கித மறியவல்லவராதலால் அக்கருத்தினை உணர்ந்து 'முறை கெட உணர்த்தினோமே!' எனச் சிறிது மனம் நொந்து, கடை யிரண்டடிகளால் நம்பி மூத்தபிரானை உணர்த்துகின்றனர்.

செம்பொற் கழலடிச் செல்வா!—தனக்குப் பின்பு ஸாக்ஷாத் ஸ்ரீகிருஷ்ணபரமாத்மா வந்து திருவவதரிக்கும்படி பிறந்த காலநலத்தைச் சொல்லுகிறதென்க. "கிருஷ்ணன் பின்னே பிறக்க முன்னே பொற்கால் பொலிய விட்டுப் பிறந்த சீமானே!" என்ற ஆழ்வியருங்காண்க. பலதேவற்குச் செல்வமாவது—கண்ணபிரானுக்கு அடிமை செய்யப்பெறுகை. "லக்ஷ்மணோ லக்ஷ்மிஸம்பந்ந:" என்று இளையபெருமாள் இராமபிரானுக்குப் பின் பிறந்து படைத்த செல்வத்தைப் பல தேவன் கண்ணபிரானுக்கு முன் பிறந்து படைத்தனனென்க.

உம்பியும் நீயுமுறங்கேல்—உலகத்தில் படுக்கையில் பள்ளிகொள்வார் உறங்குவது கண்டோமத்தனை யன்றிப் படுக்கையுங்கூட உறங்குவதைக் கண்டிலோம் ; ஆகையாலே அவனுக்குப் படுக்கையான நீயும், எங்களுக்குப் படுக்கையான அவனும் உறங்காது உணரவேணுமென்கிறார்களென்பது ரஹஸ்யார்த்தம். பலராமன் சேஷாவதாரமாகையாலே * அனந்தன் மேற்கிடந்த வெம்புண்ணியனுக்குப் படுக்கையாகத் தட்டில்லையிறே. கண்ணபிரான் இவர்களுக்குப் படுக்கையாவது ப்ரணயத்தாலே.

இப்பாட்டில், முதலடியிலும் ஐந்தாமடியிலுமுள்ள அம்பரம் என்னுஞ் சொல், கற்சமவடசொல் ; அச்சொல்லுக்கு வடமொழியில், ஆடையென்றும் ஆகாசமென்றும் பலபொருளுண்டு. உம்பி—'உன் தம்பி' என்பதன் மரூஉ. உறங்கேல்—முன்னிலை எதிர்மறை வினைமுற்று.

491. உந்து மதகளிற்ற னோடாத தோள்வலியன் *
தந்தகோபாலன் மருமகளே நப்பின்னாய் *
கந்தங்கமழுங் குழலீ கடைதிறவாய் *
வந்தெங்குங் கோழி யழைத்தனகாண் * மாதவிப்

பந்தல்மேற் பல்காற் குயிலினங்கள் கூவினகாண் *
பந்தார்விரலி யுன் மைத்துனன் பேர்பாட *
செந்தாமரைக்கையாற் சீரார் வளையொலிப்ப *
வந்து திறவாய் மகிழ்ந்தேலோ ரெம்பாவாய். (௰அ)

உந்து மதகளிற்றன்	(தன்னுல் வென்று) தள்ளப்படு கிற மதயானைகளை யுடைய வனும்
ஓடாத	(போர்க்களத்தில் முதுகு காட்டி) ஓடாத
தோள் வலியன்	புஜபலத்தை யுடையவனுமான
நந்தகோபாலன்	நந்தகோபனுக்கு
மருமகளே	மருமகளானவளே !
கப்பின்னாய்	ஓ ! கப்பின்னைப் பிராட்டியே !
கந்தம் கமழும் குழலீ	பரிமளம் வீசாநின்றுள்ள கூந்தலை யுடையவளே !
கடை திறவாய்	தாழ்ப்பாளைத் திறந்திடு ;
கோழி	கோழிகளானவை
எங்கும் வந்து	எல்லாவிடங்களிலும் பரவி
அழைத்தனகாண்	கூவா நின்றனகாண் ;
	(அன்றியும்),
மாதவி பந்தல் மேல்	குருக்கத்திக் கொடிகளாலாகிய பந்தலின் மேல் (உறங்குகிற)
குயில் இனங்கள்	குயிற் கூட்டங்கள்
பல்கால்	பல தடவை
கூவின காண்	கூவா நின்றனகாண் ;
பந்து ஆர் விரலி	(கிருஷ்ணனோடு விளையாடுகைக்கு உபகரணமான) பந்து பொருந்திய விரலை யுடையவளே !
உன் மைத்துனன் பேர் பாட	உனது கணவனுடைய கண்ண பிரானுடைய திருநாமங்களை (நாங்கள்) பாடும்படியாக
சீர் ஆர் வளை ஒலிப்ப வந்து	சீர்மை பொருந்திய (உன்) கை வளைகள் ஒலிக்கும்படி (கடைந்து) வந்து
செம் தாமரை கையால்	செந்தாமரைப் பூப் போன்ற (உன்) கையினால்
மகிழ்ந்து திறவாய்	(எங்கள் மீது) மகிழ்ச்சி கொண்டு (தாழ்ப்பாளைத்) திறந்திடு ;

எல் ஓர் எம் பாவாய்.—

* * *—" கன்னிகையின்றிக் கண்ணலங் கோடிப்பதுபோல், ப்ரதாந பூதையான நப்பின்னைப் பிராட்டியைப் பற்றுமல், வழிப்போக்கர்களோடொத்த வாசற்காப்பானையும் நந்தகோபனையும் பலதேவனையும் பற்றுவதனல் பயன் யாது கொல்?" என்று கண்ணபிரான் திருவுள்ளத்திற் கொண்டுளன் என நினைத்த இவ்வாய்ப் பெண்டிர், நப்பின்னைப் பிராட்டியை உணர்த்தும் பாசுரம், இது.

எம்பெருமானைப் பற்றுவார்க்கு ஒரு புருஷகாராபேக்ஷை உள்ளவாறு போலப் பிராட்டியைப் பற்றுவார்க்கும் ஒரு புருஷகாரம் அபேக்ஷிதமாக வேண்டாவோ ? என்னில் ; வேண்டா ; அவளுடைய கருணைதானே அவளைப்பற்றுகைக்குப் புருஷகாரமாகவற்றும் ; நெருப்பை ஆற்றுகைக்கு நீர் வேண்டும் ; நீரை ஆற்றுகைக்கு நீரே போதுமன்றே.

எம்பெருமானைப் பற்றும்போது பிராட்டிமுன்னைப் பற்றவேணு மென்று பிரமாணங் கிடக்க, இப்போது இவர்கள் நப்பின்னையைப் பற்றுவதென் ? எனில் ; க்ருஷ்ணவதாரத்திற்கு இவள் ப்ரதாநமஹிஷியாதலால் இவளைப்பற்றுகின்றனரென்க.

[உந்துமதகளிற்றன் இத்தியாதி.] கண்ணபிரானைச் சொல்லும்போது " நந்தகோபன் குமரன் " என்று நந்தகோபருடைய ஸம்பந்தத்தை யிட்டுச்சொல்வது போல, நப்பின்னையையும் நந்தகோபர் ஸம்பந்தத்தையிட்டுக் கூறுகின்றனர், அவருடைய ஸம்பந்தம் இவளுகப்புக்குறுப்பாயிருத்தலால். " உந்துமதகளிற்றன் " என்பதற்கு மதயானைகளை உந்துமவன்—தொலைக்கிறதள்ளு

மவன், உந்துகின்ற [பெருக்குகின்ற] மத நீரையுடைய களிறுபோன்றவன் (அல்லது) களிறுகளை யுடையவன் எனப் பொருள்கள் காண்க

"ஓடாத தோள்வலியன்" என்பதற்கு போர்க்களத்திற் பகைவரைக் கண்டு அஞ்சி ஓடாத மிடுக்கன் என்றும், நாட்டில் நடையாடாத [லோக விலக்ஷணமான] தோள் வலியை யுடையவன் என்றும் பொருள் கொள்க. இங்ஙன் சிறப்பித்துக் கூறுகைக்கீடான வலியின் கனம் இவர் பக்கல் இருக்கவேயன்றே கண்ணனிடத்துக்கறக்கொண்ட கஞ்சன் தான் நேரில் வந்து தீங்கு செய்யமாட்டாமல், பூதனையை ஏவுவது சகடாஸுரனை ஏவுவதாய் இப்படி களவிலே நலியப் பார்த்தது. அக்கஞ்சன் மாளிகையின்கீழ் பிள்ளைகளை வளர்த்த நந்தகோபர்க்கு இவ்வ ளவு வலி இன்றியமையாததாம். நித்ய ஸம்ஸாரியாயிருப்பவன் தனது அநீதிகளை நினைத்து அஞ்சி னால் எம்பெருமானுடைய குணங்களை அநுஸந்தித்து அச்சங் கெடுவதுபோல, கண்ணபிரான் செய்யுந் தீமைகளை நினைத்து அஞ்சுமாய்ச்சிகள் நந்தகோபருடைய தோள் வலியை நினைத்து அச்சங் கெடுவராம்.

இங்ஙன் பெருமிடுக்கைப் பெற்றுள்ள இவர் அஹங்காரலேசமுமற்றவராய், தாழ்ந்தார்க் கும் பரமஸுலபரா யிருக்குந் தன்மையைத் தெரிவிக்கும் 'நந்தகோபாலன்' என்று இவர் படைத்த பெயர். நப்பின்னை கும்பர் மகளாயிருக்க, அவளைக் "கும்பர் மகளே!" என்று விளியாது "நந்த கோபாலன் மருமகளே!" என விளித்தற்குக் கருத்து யாதெனில்; நப்பின்னை இளமையே தொடங்கி இங்கே வளருகையாலும், தனது தந்தையாரை மறந்திட்டதனாலும்,

"ஈராமழைபெய்த வீரவீரத்துள் பனிநுகங்கொண்டு யானையேர் பூட்டி
வெள்ளி விதைத்துப் பொன்னே விளையினும் வேண்டேன் பிறந்தகத்திண்டிய வாழ்வே;
செங்கேழ்வரகுப் பசுங்கதிர்கொய்து கன்றுக்காத்துக் குன்றிலுணக்கி
ஊடுபதர்போக்கி முன்னுதவினோர்க்குதவிக் காடுகழியிந்தனம் பாடுபார்த்தெடுத்துக்
குப்பைக்கீரை உப்பின்று வெந்ததை இரவற்குலம் பரிவுடன் வாங்கிச்
சோறதுகொண்டு பீறலடைத்தே ஒன்றுவிட்டொருநாள் நின்று கிடப்பினும்
நன்றே தோழி! நங்கணவன் வாழ்வே."

என்றபடி புக்ககத்தில் வாழ்வையே பெருக்கமதித்து ஸ்ரீநந்தகோபருடைய ஸம்பந்தத் தைத் தனக்குப் பெரும்பேறாக நினைத்திருப்பதனாலும் இங்ஙன் விளிக்கப்பட்டனள் எனக் கொள்க.

இவர்கள் இங்ஙன் அழைக்கையிலும், அவள் "கண்ணன் பிறந்தபின்னர் நந்தகோபர்க்கு மருமகளாகாதவள் திருவாய்ப்பாடியில் எவள்? இப்போது இவர்கள் அழைப்பது நம்மைத்தா னென்றறிவது எங்ஙனம்?" என நினைத்துப் பேசாதே கிடந்தாள்; இதனை அறிந்த அவர்கள் 'நப்பின்னாய்!' எனப் பேர் கூறி அழைக்கின்றனர்.

நந்தகோபாலனுக்கு மருமக்கள் பலர் கிடப்பினும் அவர்களைக் கொண்டு எமக்குப் பணி யென்? உன்றன் கரிலில் விழுமவர்கள் காண் நாங்கள் என்பது உட்கருத்து.

இங்ஙனம் ஆய்ச்சிகள் விளிக்க, அதனைக்கேட்ட நப்பின்னை "க்ருஷ்ணானுபவம் நானொருத் தியே பண்ணுகிறேனென்னும், க்ருஷ்ணனுடனே நாமும் கலவி செய்யுமாறு இவள் கருணை புரிந்தி லள் என்றும் இவ்வாய்ச்சிகட்கு நம்மேற் சிறிது சீற்றமிருக்கக் கூடுமாதலால், இப்போது இவர்

க்களுக்கு மறுமொழி கூறுதிருப்போம்" என்றெண்ணி மீண்டும் பேசாதே கிடக்க; "கந்தங் கமழுங் குழலீ!" என்கிறார்கள்; நீ உள்ளே கிடக்கவில்லை என்று தோற்றுமாறு சலஞ் செய்தியேலும் உன்னுடைய குழலின் பரிமளம் உன் இருப்பைக் கோட்சொல்லித்தாரா நின்றதே! எங்கள் கூக்குரலுக்கு நீ மறுமொழி தந்திலையாகிலும் உன் குழலின் கந்தம் கமிகவந்து மறுமொழி தாரா நின்றதே! என்கிறார்களெனக் கொள்க. கந்தம்—வடசொற்றிரிபு.

இவர்கள் இங்ஙனம் கூறுவதைக் கேட்ட நப்பின்னை "'மலரிட்டு நாம் முடியோம்' என்று முதலில் பண்ணின ப்ரதிஜ்ஞையை நாம் மீறிக்கிடக்கும்படியை இவர்களுணர்ந்தனர் போலும்" என்று அஞ்சி மீண்டும் பேசாதே கிடக்க, "கடைதிறவாய்" என்கிறார்கள். அனைவருமாகத் திரண்டு பண்ணின ப்ரதிஜ்ஞையை அதிலங்கநஞ் செய்து நீ பூ முடித்தாற்போலே நாங்களும் எங்கள் சென்னிப்பூவை [கண்ணனை] அணிந்துகொள்ளும்படி கதவைத் திறந்துவிடாய் என்றபடி. அப்பரிமள வெள்ளம் வெளிப்புறப்படுமாறு கதவைத் திறந்துவிடாய் என்ற படியுமாம்.

இதனைக்கேட்ட நப்பின்னை 'இங்ஙன் நடுநிசியில் வந்தெழுப்புவதென்? பொழுது விடிய வேண்டாவோ கதவைத் திறக்கைக்கு?' என்ன; இவர்கள் 'பொழுது விடிந்தொழிந்தது என்ன; அவள் 'விடிந்தமைக்கு அடையாளஞ் கூறுமின்' என்ன; இவர்கள், கோழியழைத்தமையை அடையாளமாகக் கூறுகின்றனர்.

இங்ஙனங் கோழிகூவினதைப் பொழுது விடிவுக்கு அடையாளமாகக் கூறியதைக் கேட்ட நப்பின்னை, "சாமக்கோழிகளின் கூவுதல் பொழுதுவிடிவுக்கு அடையாளமாகமாட்டாது; அவை சற்றுப்போது கூவிப்பின்னை உறங்கும்; இங்ஙன் அவை சாமந்தோறுங்கிளர்ந்தடங்கும்; இனி வேறடையாள முண்டாகிற் கூறுமின்" என்ன; குருக்கத்திப்பந்தலின்மேற் கிடந்துறங்கின குயிலினங்கள் பல்கால் கூவினமையை அடையாளமாகக் கூறுகின்றனர்; "வந்தெங்குங் கோழியழைத்தனகாண்" என்றுற்போலப் "பலகால் குயிலினங்கள் கூவினகாண்" என்றுற் போதுமே 'மாதவிப்பந்தல்மேல்" எனக் கூறியதற்குக் கருத்து யாதெனில்; படுக்கையின் வாய்ப்பாலே அவை பொழுது விடிந்தமையையு முணராமல் உறங்க வேண்டியிருக்க, உணர்ந்தெழுந்தனவென்றல், பொழுது நன்றாக விடிந்ததாக வேண்டாவோ? என்றவாறு. மாதவிப் பந்தல் குயில்கட்கு மிகவும் வாய்த்த படுக்கையாம். மாதவி—வடசொல்விகாரம்.

இப்படிபட்ட அடையாளந்தன்னை இவர்கள் கூறவும் நப்பின்னை "இவ்வடையாளம் மாத்திரம் கண்ணழிவற்றதோ? 'கொத்தலர் காவின் மணித்தடங் கண்படை கொள்ளுமிளங் குயிலே, என்தத்துவனை வரக்கூகிற்றியாகில் தலையல்லாற் கைம்மாறிலேனே' (நாய்ச்சியார் திருமொழி.) என்று-உறங்குங் குயில்களையும் கிளப்பிக் கூவச்சொல்லி வருத்துகிறவர்களன்றே? இவர்கள் சொல்லியபடி அவை கூவாதொழியில் 'இன்று நாராயணனை வரக்கூவாயேல் இங்குத்தை நின்றுந்துரப்பன்' என்று அவற்றைச் சோலையினின்றுந் துரத்திவிடுவதாகச் சொல்லி அச்சமுறுத்துகிறவர்களுமன்றே இவர்கள். ஆனபின்பு இவர்களூரில் இருப்பையே கூலியாகக் கொண்டு அவை கூப்பிட்டனவாமத்தனை; இக்கூவுதல் ஒரு அடையாளமாக வற்றன்று" என்றெண்ணிப் பேசாதே கிடந்தாள்; கிடக்கவே, மீண்டும் அவளை விளிக்கின்றனர் "பந்தார் விரலி!" என்று. கண்ணபிரானும் நப்பின்னைப் பிராட்டியும் இரவிற் பந்தடித்து விளையாட, அவ்விளையாட்டில் கண்ணபிரான் தோற்றனனாக; நப்பின்னை, தனக்கு வெற்றியைத்தந்த அப்பந்தைக் கையா

லணைத்துக்கொண்டே கிடந்துறங்க, அதனைச் சாலகவாசலாற் கண்ணுற்ற இவ்வாய்ச்சிகள் "பந்தார் விரலி" என்கின்றன ரென்க. நாங்களும் பந்துபோல் ஒரு அசேதநவஸ்துவாகப் பிறந்திருந்தோமாகில் எங்களையும் நீ உன் கைக்குள் அடக்கிக் கொள்வாயன்றே? என்ற கருத்தும் இதனில் தோற்றும்.

தாம் வந்த காரியத்தைக் கூறுகின்றனர், "உன் மைத்துனன் பேர்பாட" என்று. அதாவது—"இன்னளடியான், இன்னளடியான்" என்று எல்லையின்றி அவன் படைத்துள்ள பல பெயர்களையுஞ் சொல்லி வாயாரப் பாடுதற்கு என்றபடி.

இங்ஙனங் கூறக்கேட்ட நப்பின்னை, "யந்த்ரத்தினால் கதவைத் திறந்து கொள்ளலாம்படி பண்ணி வைத்திருக்கிறேன்; உபாயமாகத் திறந்துகொண்டு புகுருங்கள்" என்ன; அதனைக் கேட்ட ஆய்ச்சிகள், "நாங்கள் ஸ்வப்ரயத்நத்தினால் 'பேறுபெற நினைத்துளோமோ? உன்னாலே பெறவிருக்கிறவர்களன்றே? உன் கைபார்த்திருக்கிறவர்களன்றே? நாங்களே திறந்துகொண்டு புகவல்லோமல்லோம்; உன்றன் கையில் வளைகள் நன்கு ஒலிக்க, அவ்வொலியைக் கேட்டு எங்கள் நெஞ்சு குளிரும்படி நீயே எழுந்து வந்து திறக்கவேணு மென்கிறார்கள், கடையிரண்டடிகளால்.

செந்தாம்ரைக் கையால்—இயற்கையாயுள்ள செம்மைக்குமேல் பத்துபிடித்ததனாலும் மிக்க இசம்மையுடைய கையால் என்க.

சீரார்வளை—வளைக்குச் சீர்மையாவது—என்றுங் கழலாதிருக்கப் பெறுகை. ஒருகாலைவிலும் விச்லேஷம் நேர்ந்தாலன்றே "தாமுகக்குந் தங்கையிற் சங்கமே போலாவோ, யாமுகக்கு மென்கையிற் சங்கமு மேந்திழையீர்!" என்றும், "என்னுடைய கழல் வளையைத் தாமுங்கழல் வளையே யாக்கினரே" என்றும் வருந்தவேண்டுவது. நப்பின்னை நித்ய ஸம்ச்லிஷ்டை யாகையாலே சீரார்வளைக்கையாளா யிருப்பளிறே. இவ்வளையின் ஓசையைக்கேட்டுக் கண்ணனும் உணர்ந்தானாய், தாங்களும் வாழ்ந்தாராகக் கருதி 'ஒலிப்ப' என்கிறார்கள்.

க்ருஷ்ண ஸம்ச்லேஷத்துக்கு விரோதமாக வொண்ணுதென்று நப்பின்னை கிடந்தபடியே கதவைத்திறக்க முயல, அதனை யறிந்த இவர்கள், 'எங்களுக்காக நீ நாலடி நடந்துவந்தாய்' என்னும் பரிசை நாங்களும் பெறுமாறு எழுந்து வந்து திறக்கவேணுமென்பார், "வந்து திறவாய்" என்கிறார்கள்.

இப்பாட்டு எம்பெருமானைர் விசேஷித்து உகந்தருளின பாட்டு என்று நம் முதலிகள் மிகவும் ஆதரித்துப்போருவாம். அவ்வரலாறு வருமாறு:—எம்பெருமானார் திருப்பாவை அநுஸந்தாநத்துடன் மாதுகரத்திற்கெழுந்தருளுகிற அடைவில், ஒருநாள் பெரியநம்பி திருமாளிகைக்கு எழுந்தருள அப்போது திருக்காப்பு சேர்த்திருக்கையாலே, அநுஸந்தாநத்தைக்கேட்டு அத்துழாய் திருக்காப்பு நீக்கியருள, எம்பெருமானார் அவளைக் கண்டவாறே மூர்ச்சித்து விழ, அத்துழாய் பெரியநம்பி பக்கலிற் சென்று, "ஐயா! கதவைத்திறந்து சென்றேன்; என்னைக்கண்டவுடனே ஜீயர் மூர்ச்சித்து விழுந்தார்" என்ன; நம்பி ஸர்வஜ்ஞராகையாலே "உந்து மதகளிறு அநுஸந்தாநமா யிருக்கவடுக்கும்" என்றருளிச்செய்ய, அதனைக்கேட்ட அத்துழாய் 'ஆவதென்?' என்ன; "செந்தாமரைக்கையால் சீரார்வளை யொலிப்ப வந்து திறவாய், என்று அநுஸந்தியா நிற்க நீ திறந்தவாறே அவ்வாறே உன்னைக்கண்டு 'நப்பின்னையை ஸேவிக்கப்பெற்றேன்' என்று மூர்ச்சித்தாராகவேணும்" என்று நம்பி அருளிச்செய்தார்; ஆகையாலே இப்பாட்டு எம்பெருமானாருகந்ததென்று நம்முதலிகள் ஆதரிப்பரென்க. (கஅ)

492. குத்து விளக்கெரியக் கோட்டுக்கால் கட்டில்மேல் *
மெத்தென்ற பஞ்ச சயனத்தின் மேலேறி *
கொத்தலர் பூங்குழல் நப்பின்னை கொங்கைமேல் *
வைத்துக்கிடந்த மலர்மார்பா வாய்திறவாய் *
மைத்தடங் கண்ணினாய் நீயுன் மணாளனை *
எத்தனைபோதுந் துயிலெழ வொட்டாய்காண் *
எத்தனையேலும் பிரிவாற்ற கில்லாயால் *
தத்துவமன்று தகவேலோ ரெம்பாவாய். (ககூ)

குத்து விளக்கு	நிலைவிளக்குகளானவை
எரிய	(காற்புகாமல்) எரியா நிற்க,
கோடு கால் கட்டில் மேல்	யானைத்தந்தங்களினால் செய்த கால்களையுடைய கட்டிலிலே
மெத்தென்ற	மெத்தென்றிருக்குமதாயும்
பஞ்ச சயனத்தின் மேல் ஏறி	(அழகு, குளிர்த்தி மென்மை, பரிமளம், வெண்மை என்னும்) ஐந்து குணங்களையுடையதுமான படுக்கையின் மீதேறி,
கொத்து அலர் பூ குழல்	கொத்துக் கொத்தாக அலர்கின்ற பூக்களை யணிந்த கூந்தலை யுடையவளான
நப்பின்னை	நப்பின்னைப் பிராட்டியினுடைய
கொங்கை	திருமுலைத் தடங்களை
மேல் வைத்து	தன்மேல் வைத்துக்கொண்டு
கிடந்த	பள்ளிகொள்கின்ற
மலர் மார்பா	அகன்ற திருமார்பை யுடைய பிரானே !
வாய் திறவாய்	வாய்திறந்து ஒரு வார்த்தை அருளிச் செய்யவேணும்,
மை தட கண்ணினாய்	மையிட்டு அலங்கரிக்கப்பெற்றதும் விசாலமுமான கண்ணையுடைய நப்பின்னாய் !
நீ	நீ
உன் மணாளனை	உனக்குக் கணவனான கண்ணபிரானை
எத்தனை போதும்	ஒரு கொடிப்பொழுதும்
துயில் எழ ஒட்டாய்	படுக்கையை விட்டு எழுந்திருக்க ஒட்டுகிறாயில்லை;
எத்தனையேலும்	கூணகாலமும்
பிரிவு ஆற்ற கில்லாய்	(அவனைப்) பிரிந்து தரித்திருக்க மாட்டுகிறாயில்லை;
ஆல்	ஆ ! ஆ !!
தகவு என்று	(நீ இப்படி இருப்பது உனக்குத்) தகுதியன்று;
தத்துவம்	(இஃது) உண்மை ;

வல் ஓர் எம் பாவாய்!—.

* * *—கீழ்ப்பாட்டால் நப்பின்னைப் பிராட்டியை உணர்த்திச் "சீரார்வளை யொலிப்ப வந்து திறவாய்" என வேண்டினவாறே அவள் கதவைத்திறப்போமென்று எழுந்து புறப்பட, அதனைக்கண்ட கண்ணபிரான், "நம்மைப்பற்றினரை இவள் தன் அடியாராக அபிமானிப்பது போல, நாமும் இவளைப்பற்றினரை நம்மடியாராக அபிமானிக்கவன்றே அடுப்பது; ஆனபின்பு நம்முடையாரான இவ்வாய்ச்சிகட்கு இவள் முற்பட்டுக் காரியஞ் செய்தாளாகக்கூடாது; இவளை நோக்கிக் 'கடைதிறவாய்' என்ற இவர்கட்கு நாம் முற்பட்டுக் காரியஞ் செய்தோமாக வேணும்; அதனால் வரும் புகழ்ச்சியை நாம் பெறவேணும்" எனக்கருதித் தான் சடக்கென எழுந்து நப்பின்னையைக் கதவுதிறக்கவொட்டாமல் மற்கட்டாகக் கட்டிப் பிடித்திழுத்துப்படுக்கையில் தள்ளித்தானும் அவள் மேல் விழுந்து, அவளுடைய திருமேனியின் ஸ்பர்சத்தினால் தானும் மயங்கி, ஆய்ச்சிகள் வந்த காரியத்தையும் மறந்து கிடக்க, இவர்கள் அவனை எழுப்பின வளவில், நப்பின்னை, 'நம்முயற்சியைத் தடை செய்து ஆய்ச்சிகளின் வெறுப்புக்கு நம்மை உறுப்பாக்கின

இவனே வாய்திறக்க வொட்டுவதில்லை' என்று அவனே விடைசொல்லவும் வல்லமையறும்படி சிக்கனக் கட்டிக்கொண்டு கிடக்க, இவர்கள் அந்த நப்பின்னை தன்னையே மீண்டும் உணர்த்தும் பாசுரம், இது. இங்ஙன் மீண்டும் இவனே உணர்த்துவதும் கண்ணபிரானே உணர்த்துதற்காகவே என்க.

முதலடியில் முந்துறமுன்னம் "குத்துவிளக்கெரிய" என்றது—நம்மைப்போல் 'பொழுது விடியிற் செய்வதென்?' என்று அஞ்சாமலும், இருளோத்தேடவேண்டாமலும் விளக்கினொளியிற் கிடந்து இருஷ்ணன் முகத்தைக் கண்டு களிக்கப்பெறுகின்ற இந்நப்பின்னை என்ன நோன்பு நோற்றாள் கொலோ?' என்னும் வியப்பை விளக்குமென்க. குத்து விளக்கு—இஷ்டமான இடங்களில் பேர்த்துவைப்பதற்கு உரிய விளக்கு. "கோட்டுக்கால் கட்டில்மேல்" என்றதும்—'எங்களைப்போலே நெரிஞ்சிற்காடும் மணற்கொட்டகமுந்தேடி ஓடவேண்டாமல், இவள் ஒருத்தி மாத்திரம் வாய்த்தபடுக்கையில் சுகமாகக்கிடக்கப்பெறுவதே!' என்னும் நினைவு நிகழ்வதைக்காட்டும். நந்தகோபன் உந்துமதகளிற்றனைக் கூறப்பட்டனனுதலால் அவனது மாளிகையிற் கோட்டுக்கால் கட்டில் இருக்கத் தட்டில்லையே.

பஞ்சசயனம்—அழகு, குளிர்த்தி, மென்மை, பரிமளம், வெண்மை என்கிற ஐங்குணங்களின் அமைப்பு—சிறந்த சயனத்தின் இலக்கணமாதல் அறிக. இவ்வைங்குணங்களுள் மென்மையுஞ் சேர்ந்திருக்க, மெத்தன்ன என்று தனியே கூறியது மற்ற குணங்களினும் மென்மை படுக்கைக்கு விசேஷ குணமாதலாலும், அது இப்படுக்கையில் மிக்கிருப்பதனாலுமென்க. இனி, "பஞ்சசயன" மென்பதற்கு, துளிர், மலர், பஞ்சு, மெல்லிய கம்பளம், பட்டு என்னும் இவ்வைந்து வஸ்துக்களினால் செய்யப்பட்ட சயனமென்றும் பொருள் கூறுவர் சிலர்.

கோத்தலர் பூங்குழல் நப்பின்னை—இதனால் அவளுடைய குழலின் சீர்மை கூறியவாறு; மொக்குகளைப் பறித்துக் குழலிலே சூடினால் அவை தன்னிலத்திற்போலே அலர்ப்பெற்ற கூந்தலையுடைய நப்பின்னை என்றபடி. "கொங்கைமேல் வைத்துக்கிடந்த மலர் மார்பா" என்றவிடத்து, நப்பின்னையின் கொங்கைமேல் மார்பைவைத்துக்கிடக்கின்றவனே! என்றும், நப்பின்னையின் கொங்கையைத் தன் மார்பின்மீது வைத்துக்கொண்டு கிடப்பவனே! என்றும் இருவகையாகப் பொருள்தோன்றும். இவற்றுள் முந்தியபொருள் அவதாரிகைக்கு நன்கு பொருந்தும்; நப்பின்னையைக் கீழ்தள்ளி, அவள்மேல் கண்ணபிரான் பள்ளிகொண்டவாறுகவன்றே அவதாரிகை வைக்கப்பட்டது.

"மலர்மார்பா! எழுந்துவாராய்" என்னுது, "வாய்திறவாய்" என்றது—குணமும் குணியும் போலே ஒரு பொருள் என்னலாம்படி கிடக்கிறவர்களைப் பிரிக்கலாகாது என்னும் நினைவாலும். இவன் கிடந்தவிடத்திற்கிடந்தே முகினைது முழக்கம் போன்ற மிடற்றோசை செவிப்படுமாறு ஒரு பேச்சுப் பேசுவதே நமக்குப்போருமென்னும் நினைவாலுமென்க.

"மலர் மார்பா! வாய்திறவாய்" என்ற சொல்லமைதியால், நீ உன் மார்பை நப்பின்னைக்குத் தந்தாயேனும் வாயையாகிலும் எங்களுக்குத் தரலாகாதா? என இரக்கின்றமை தோற்றுமென்க. இப்படி இவர்கள், "வாய் திறவாய்" என்றதைக் கேட்டருளின கண்ணபிரான், "இவ்வாய்ச்சிகள் மிகவும் நொந்தனர்போலும், இங்ஙனம் இவர்களே வருத்தமுறுத்துவது தருமமன்று; 'இதோ வந்து கதவைத் திறக்கிறேன்' என்று ஒரு வார்த்தை சொல்லுவோம்" என்று திருவுள்ளமிரங்கி வாயைத்திறக்கப் புக்கவாறே நப்பின்னை, "அவர்களுக்காகக் கதவைத்திறக்க எழுந்துசென்ற நம்முடைய முயற்சியைத் தடுத்த இவன்றனது முயற்சியை நாம் நிறைவேற வொட்டுவோமோ?" என்றெண்ணி கண்ணன் வாய்திறக்க வொண்ணாதபடி கழுத்தைக்கட்டி

அமுக்கிக்கொண்டு கிடக்க, அதனைச் சாலகவாசலிலே கண்ட ஆய்ச்சிகள் நப்பின்னையை நோக்கி, "ஆச்ரிதர் காரியத்தைத் தலைக்கட்டுவிப்பதற் கென்றே கங்கணமிட்ட நீயும் இங்ஙன் செய்வது தகுதியன்றுகாண்" என்கிறார்கள், பின் நான்கடிகளால்.

தத்துவம் அன்று தகவு என்பதற்கு இருவகையாகப் பொருள் கூறுவர்; எங்ஙனே யெனில்? தத்துவம்—நாங்கள் இவ்வளவாகச் சொன்ன வார்த்தை, ஆற்றுமையாலே கண்ணஞ் சுழலேயிட்டுச் சொன்னதன்று; உண்மையே சொன்னே மத்தனை காண்; அன்று தகவு—எங்கள் பக்கலிலும் நீ இங்ஙன் உபேக்ஷை தோற்றவிருப்பது தருமமன்று, என்பது ஒருவகை யோஜனை. தகவு தத்துவம் அன்று என இயைத்து, உனக்கு நீர்மை உண்டென்பது உண்மையன்று, என்று மற்றோர் வகை யோஜனை. (கூ)

493. முப்பத்து மூவ ரமரர்க்கு முன்சென்று *
கப்பந் தவிர்க்குங் கலியே துயிலெழாய் *
செப்பமுடையாய் திறலுடையாய் * செற்றார்க்கு
வெப்பங்கொடுக்கும் விமலா துயிலெழாய் *
செப்பன்ன மென்முலைச் செவ்வாய்ச் சிறுமருங்குல் *
நப்பின்னை நங்காய் திருவே துயிலெழாய் *
உக்கமுந் தட்டொளியுந் தந்துன் மணாளனை *
இப்போதே யெம்மை நீராட்டேலோ ரெம்பாவாய். (உ0)

முப்பத்து மூவர் அமரர்க்கு	முப்பத்து முக்கோடி தேவர் கட்கு
முன் சென்று	(துன்பம் வருவதற்கு) முன்னமே எழுந்தருளி
கப்பம்	(அவர்களுடைய) கடுக்கத்தை
தவிர்க்கும்	நீக்கியருளவல்ல
கலியே	மிடுக்கையுடைய கண்ணபிரானே !
துயில் எழாய்	படுக்கையினின்றும் எழுந்தருள் ;
செப்பம் உடையாய்	(ஆச்ரிதரக்ஷணத்தில்) ருஜுவாயிருக்குந் தன்மையை யுடையவனே ;
திறல் உடையாய்	(பகைவர் மண்ணுண்ணும்படியான) வலிமை யுடையவனே !
செற்றார்க்கு	சத்துருக்களுக்கு
வெப்பம்	(பயமாகிற) ஜ்வரத்தை
கொடுக்கும்	கொடுக்கவல்ல
விமலா	பரிசுத்தஸ்வபாவனே !
துயில் எழாய்—;	

செப்பு அன்ன	பொற்கலசம் போன்ற
மென் முலை	விரஹம் பொறுத்த முலைகளையும்
செம் வாய்	சிவந்த வாயையும்
சிறு மருங்குல்	நுண்ணிதான இடையையும் உடைய
நப்பின்னை நங்காய்	நப்பின்னைப் பிராட்டியே !
திருவே	ஸ்ரீமஹாலக்ஷ்மியே !
துயில் எழாய்—; (துயிலெழுந்த பின்பு)	
உக்கமும்	(கோன்புக்கு உபகரணமான) ஆலவட்டத்தையும் [விசிறியையும்]
தட்டொளியும்	கண்ணாடியையும்
உன் மணாளனை	உனக்கு வல்லபனான கண்ணபிரானையும்
தந்து	கொடுத்து
எம்மை	(விரஹத்தால் மெலிந்த) எங்களை
இப்போதே	இந்த க்ஷணத்திலேயே
நீராட்டு	நீராட்டக்கடவாய் ;
ஏல் ஓர் எம் பாவாய்—.	

* * *—கீழ்ப்பாட்டில், "தத்துவமன்று தகவு" என்று ஆய்ச்சிகள் தங்களாற்றுமையினால் வருத்தம் தோற்றச் சில குற்றங் கூறினரேயாயினும், பெருமானுடைய திருவுள்ள மறிந்து

ஏற்ற அவகாசத்தில் விண்ணப்பஞ் செய்வோமென்றெண்ணி நப்பின்னை பேசாதே பள்ளிகொண்டிருந்தாள்; அவளோட்டைக் கலவியிற் பரவசப்பட்டுள்ள கண்ணபிரானையும் "நப்பின்னைப் பிராட்டியை நோக்கி அதிசூக்ஷுமமாகக்கூறுகின்ற பெண்களுக்கு நாம் முகங்காட்டக் கடவோமல்லோம்" என்று சீற்றமுற்றிருக்கக்கூடும் இவன் என்று அதிசங்கித்த ஆய்ச்சிகள், மீண்டும் அக்கண்ணபிரான்றன்னை நோக்கி, அவனுடைய பெருமைகள் பலவற்றையும் பரக்கப் பேசித் துயிலெழ வேண்டினவிடத்தும் அவன் வாய்திறவாதிருக்க, இவ்வாய்ச்சிகள், "நாம் ப்ரணய ரோஷத்தினால் நப்பின்னை விஷயமாகக் கூறிய சில வார்த்தைகள் இவனுக்கு அஸஹ்யமாயினபோலும்; இனி, அவளுடைய பெருமைகளைப் பேசினோமாகில் இவனுடைய சீற்றம் ஒருவாறு தணியப் பெறும்" என நினைத்து அவளுடைய ஆத்மகுணங்களையும் தேஹகுணங்களையுங் கூறி ஏத்தி, "நங்காய்! எங்கள் மநோரதத்தைத் தலைக்கட்டி யருளவேணும்" என வேண்டுமாற்றால் செல்லுகிறது, இப்பாட்டு.

முப்பத்து மூவரமரர்=அஷ்டவஸுக்கள், ஏகாதசருத்ரர், த்வாதசாதித்யர், அச்வினிதேவதைகள் இருவர், ஆக அமரர் முப்பத்து மூவராய், முக்கியரான அவர்களைக் கூறியது மற்றுள்ளாரையுங் கூறியவாறாகக் கொள்க.

இப்போது இவ்வாய்ச்சிகள் கண்ணனை நோக்கி, "முப்பத்து மூவரான தேவர்களைக் காத்தருளினவனே!" என விளித்தற்கு இருவகைக் கருத்தாம்; ஆண்புலிகளாயும், மிக்க மிடுக்காயும், ஸ்வப்ரயோஜந பராயும், உபாயாந்தர உபேயாந்தரங்களில் நசையுடையராயும், தங்கள் காரியம் தலைக்கட்டினவாறே உன்னையே எதிரிடுமவர்களாயும், உன்னை எழுப்பி எதிரிகளின் அம்புக்கு இலக்காக்குமவர்களாயும், கொன்றாலும் சாவாதவர்களாயும், உன் வடிவழகின் அநுபவத்தையே போக்யமாகக் கொள்ளாமல் அம்ருதத்தைப் போக்யமாக உகக்குமவர்களாயும் நோவுபட்டால் ஆற்றவல்லவர்களாயுமுள்ள தேவர்கட்கோ நீ உதவி புரியவேண்டுவது? வலியற்ற பெண் பிள்ளைகளாயும், "உனக்கே நாமாட் செய்வோம்" என்று உன்திறத்திற் கைங்கரியத்தையே புருஷார்த்தமாக உடையோமாயும், "மற்றை நங்காமங்கள் மாற்று" என்று உபேயாந்தரத்தில் நசையற்றவர்களாயும், "எற்றைக்கு மேழேழ் பிறவிக்கு முன்றன்னோடு உற்றோமே யாவோம்" என்று காலதத்துவமுள்ளதனையும் உனக்கு அணுக்கராயும், "அடிபோற்றி!, திறல் போற்றி!, புகழ்போற்றி!, கழல்போற்றி!, குணம்போற்றி!, கையில் வேல் போற்றி!" என்றிப்படி மங்களாசாஸநம் பண்ணுகையையே ஸ்வரூபமாக உடையோமாயும், "அங்கணிரண்டுங் கொண்டு எங்கள்மேல் நோக்குதியேல், எங்கள்மேற் சாபமிழிந்து" என்று உன் கடாக்ஷமொன்றையே ஆசைப்பட்டிருப்போமாயும், உன்னை ஒரு நொடிப்பொழுது பிரியில் நீர் நீத்த மீன்போல் துடித்து முடியக்கடவோமாயும், "உண்ணுஞ் சோறு பருகுநீர் தின்னும்வெற்றிலையு மெல்லாங் கண்ணன்" என்றிருப்பவர்களுமான எங்களைக் காத்தருள்வதன்றே உனக்குப்பெருமையாமென விநயந்தோற்றக்கூறுதல், ஓர் கருத்தாம். இங்ஙனம் அளவற்ற ஆண்புலிகளைக்காத்து நீ படைத்த புகழடங்கலும், இன்று நீ எம்மை நோக்காத மாத்திரத்தினால் இழக்கப்பட்டதேயாமென மிடுக்காகக் கூறுதலும் ஓர் கருத்தாம். அமரர் என்னும் வடசொல், என்றைக்குஞ் சாவாதவர் எனப் பொருள் படும். முன்சென்று என்பதற்கு, முன்கோஷ்டியிற் சென்று என்று பொருளுரைப்பதினும், அவர்களுக்கு ஒரு தீங்கு வருவதற்கு முன்னமே சென்று என்றுரைத்தல் சிறக்குமென்க ஆகவே, இது-காலமுன்; இடமுன் அன்று. நடுக்கமென்னும் பொருளையுடைய கம்ப: என்ற வடசொல், இங்கு எதுகையின்பம் நோக்கிக் கப்ப மென வலித்துக்கிடக்கின்

றது. தேவர்கள், அஸுராராக்ஷஸரால் குடியிருப்பையுமிழந்து புகலிடமற்றுப்பட்ட நடுக்கத்தைத் தவிர்த்தமை கூறப்பட்டது. இனி, கப்பமென்று இறையாய், தேவர்கள் ராவணுதிகட்குப் பணிப்பூவிட்டுத் திரியாமல் காக்கப்பெற்றமை கூறியவாறுமாம்.

தீருவே துயிலெழாய்—பிராட்டியின் திருநாமத்தை நீ வஹிப்பதற்கு இணங்க அவளுடைய குணங்களும் உனக்கு வரவேண்டுமன்றே? அவள் அடியார்க்காகப் பத்துமாதம் பிரிந்து ஊணு முறக்கமுமற்றுச் சிறையிலகப்பட்டுப் பட்டபாடுகளை நீ ராமாயணத்தில் கேட்டறியுண்றே; அவ்வளவு வருத்தமும் நீ படவேண்டா; எங்களுக்காக இப்போது துயிலெழுந்தாயாகிற் போதுமென்றபடி.

"துயிலெழாய்" என்றதைக்கேட்ட நப்பின்னை, "ஆய்ச்சிகாள்! நான் உறங்குகிறேனல்லேன்; கண்ணபிரானுல் உங்கட்குப் பெறுவிக்கவேண்டிய வற்றை மநோரதித்துக் கொண்டிராநின்றேன்; நான் எழுந்து செய்யவேண்டுவதென்ன? சொல்லுங்கள்" என்ன; நோன்புக்கு வேண்டிய உபகரணங்களையெல்லாம் தந்தருளி, உன்னையும் எங்களையும் நீராட்டுவிக்க வேணுமென வேண்டுகின்றனர். நீராட்டு—ஸம்ச்லேஷிக்கச்செய் என்றவாறு.

விரோதியும் கண்ணழியும் தரும்படி வேண்டினவிது—மற்றும் வேண்டியவை எல்லாவற்றையும் அபேக்ஷித்தமைக்கு உபலக்ஷணமென்க. இப்போதே=இந்த க்ஷணம் தப்பினுல் பின்பு ஊராரும் இசையமாட்டார்; நாங்களும் உயிர் வாழ்ந்திருக்கமாட்டோமென்க. எம்மை என்று விரஹம் தின்ற உடம்பைக் காட்டுகிறபடி. (உ)

494. ஏற்ற கலங்க ளெதிர்பொங்கி மீதளிப்ப *
மாற்றாதே பால்சொரியும் வள்ளற் பெரும்பசுக்கள் *
ஆற்றப் படைத்தான் மகனே யறிவுறாய் *
ஊற்றமுடையாய் பெரியாய் * உலகினில்
தோற்றமாய் நின்ற சுடரே துயிலெழாய் *
மாற்றாருனக்கு வலிதொலைந்துன் வாசற்கண் *
ஆற்றாது வந்துன் னடிபணியு மாபோலே *
போற்றியாம் வந்தோம் புகழ்ந்தேலோ ரெம்பாவாய். (உக)

ஏற்ற கலங்கள்	(சுரந்தபாலை) ஏற்றுக்கொண்ட கலங்களானவை
எதிர் பொங்கி	எதிரே பொங்கி
மீதளிப்ப	மேலே வழியும்படியாக
மாற்றாதே	இடைவிடாமல்
பால் சொரியும்	பாலைச் சுரக்கின்ற
வள்ளல்	(பெண்களும் பேதைகளும் அணைத்துக் கொள்ளும்படி) நற்சீலத்தையுடைய
பெரும்பசுக்கள்	பெரிய பசுக்களை
ஆற்றப் படைத்தான் மகனே	விசேஷமாகப் படைத்துள்ள நந்தகோபர்க்குப் பிள்ளையானவனே!
அறிவுறாய்	திருப்பள்ளி யுணரவேணும்;
ஊற்றம் உடையாய்	(அடியாரைக் காப்பதில்) சக்தியுடையவனே!
பெரியாய்	பெருமை பொருந்தியவனே!
உலகினில்	(இவ்)வுலகத்திலே
தோற்றம் ஆய் நின்ற	ஆவிர்ப்பவித்த
சுடரே	தேஜோரூபியானவனே!
துயில் எழாய்—;	
மாற்றார்	சத்துருக்கள்

உனக்கு வலி தொலைந்து	உன் விஷயத்தில் (தங்களுடைய) வலிமாண்டு [உபயோக மற்ற வலியை யுடையராய்.]	யாம்	நாங்கள்
		புகழ்ந்து	(உன்னைத்) துதித்து
		போற்றி	(உனக்கு) மங்களாசாஸனம் பண்ணிக்கொண்டு
உன் வாசல் கண்	உன் மாளிகை வாசலில்		
ஆற்றது வந்து	தனியற்று வந்து	வந்தோம்	(உன் திருமாளிகை வாசலில்) வந்து சேர்ந்தோம் ;
உன் அடி பணியும் ஆ போலே	உன் திருவடிகளில் சரணாகதி பண்ணிக் கிடப்பதுபோல்		
		எல் ஓர் எம் பரவாய்—.	

* * *—கீழ்ப்பாட்டில் நப்பின்னைப் பிராட்டியை எழுப்பின பின்னர், அவள் உணர்ந்தெழுந்துவந்து "தோழிகாள்! நான் உங்களில் ஒருத்தியன்றே? உங்கள் காரியத்தைக் குறையறத் தலைக்கட்டுவிக்கிறேன்; நீங்கள் இறையும் வருந்த வேண்டா; நாமெல்லாருங்கூடிக் கண்ணபிரானை வேண்டிக்கொள்வோம், வம்மின்" என்ன; அங்ஙனமே நப்பின்னைப் பிராட்டியு மூட்டபட அனைவருமாகக் கூடிக் கண்ணபிரான் வீரத்தைச்சொல்லி ஏத்தி, அவனை உணர்த்தும் பாசுரம், இது.

முதலிரண்டடிகளால் நந்தகோபருடைய செல்வத்தைப் புகழ்கின்றனர். கீழ் பதினேழாம்பாட்டிலும் பதினெட்டாம் பாட்டிலும் நந்தகோபருடைய அறநெறித்தலைமையும் தோள் வலிவீரமும் புகழப்பட்டன; இப்பாட்டில், அவருடைய கறவைச் செல்வத்தின் சீர்மை கூறப்படுகின்றதென்றுணர்க. இவ்வாய்ச்சிகள் பலகாலும் கண்ணபிரானை விளிக்கும்போது "நந்தகோபன் மகனே" என்று விளித்தற்குக் கருத்து யாதெனில்; பரமபதத்திலிருப்பைத் தவிர்த்தும் * பனிக்கடலிற் பள்ளிகோளைப் பழகவிட்டும் நீ இத்திருவாய்ப்பாடியில் நந்தகோபர்க்குப் பிள்ளையாய்ப் பிறந்தது இங்ஙன் கிடந்துறங்கவோ?* எங்கள் குறையைத் தீர்க்கவன்றே நீ * அறிவொன்று மில்லாத ஆய்க்குலத்திற் பிறந்தது; ஆனபின்பு, பிறந்த காரியத்தை நேர்க்கவேண்டாவோ? என்றபடி.

"ஏற்றகலங்கள்" என்ற சொல்லாற்றலால், கலமிடுவாருடைய குறையேயன்றி, இட்ட கலங்களைப் பசுக்கள் நிறைக்கத் தட்டில்லை என்பதும், சிறிய கலம் பெரிய கலம் என்னும் வாசியின்றிக் கடலை மடுத்தாலும் 'நிறைக்கத் தட்டில்லையென்பதும் பெறப்படும். எதிர்பொங்கி மீதளிப்ப—ஒருகால் முலையைத் தொட்டுவிட்டாலும் முலைக்கண்ணின் பெருமையாலே ஒரு பீறிலே கலங்கள் நிறைந்து பால் வழிந்தோடா நின்றாலும், முலைக்கடுப்பாலே மேன்மேலும் சொரியுமாதலால் எதிர்பொங்கி மீதளிக்கும். "மாற்றாதே பால்சொரியும்" என்ற சொல் நயத்தால், இட்ட கலங்கள் நிரம்பின; இனிக் கலமிடுவாரில்லை' என்று பால் சொரிவதைப் பசுக்கள் நிறுத்தாவா மென்றவாறும். ஸ்ரீ விஷ்ணு புராணத்தில் ஸ்ரீ பராசர மஹர்ஷியை மைத்ரேய பகவான் தண்டனிட்டு தத்துவங்களை அருளிச்செய்யவேணும்' எனப் பிரார்த்திக்க, அங்ஙனமே தத்வோபதேசம் பண்ணிப் போராநின்ற பராசரர் "பூய ஏவ மஹா பாஹோ! ப்ரஹ்ருஷ்டோ வாக்ய மப்ரவீத், இதஞ்ச ச்ருணு மைத்ரேய" என்று நல்ல அர்த்தங்களை இவன் இழக்கவொண்ணாதென்று, மைத்ரேயருடைய பிரார்த்தனையின்றியே சில அர்த்தங்களை உபதேசித்தவாறுபோல இப்பசுக்களும் தமது முலைக்கடுப்பினாலும் மேலும் மேலும் பாலைச் சொரியு மென்க.

"மகனே! அறிவுறாய்" என்ற சொல்லாற்றலால், நீ உன் தந்தையாருடைய செல்வத்தை நினைத்தியேல் அச்செல்வச் செருக்காலே உணர்ந்தெழுந்திருக்க ப்ராப்தியில்லையாம்; அவனுக்கு மகனைப்பிறந்தபடியை நினைத்தியேல் கடுக அறிவுற ப்ராப்தமா மென்றவாறும். அறிவுறாய் என்று

'இவர்கள் எழுப்பவேண்டும்படி அவன் உள்ளே செய்கிறதென் எனில்; தனக்கு இத்தனை பெண்கள் கைப்பட்டார்களென்றும், இனி இத்தனை பெண்களைக் கைப்படுத்த வேணுமென்றும் ஆராய்ந்துகொண்டு கிடக்கிறானும்..

இவர்கள் இங்ஙனம் புகழ்ந்து உணர்த்துவதைக் கேட்ட கண்ணபிரான், "இப்புகழ்ச்சி என்கொல்? இப்படிப்பட்ட கறவைச் செல்வம் இவ்வாய்ப்பாடியில் யார்க்கில்லை? இது நமக்கு ஓரேற்றமோ?" என நினைத்து வாய்திறவாதிருக்க, இவர்கள் மீண்டுஞ் சில உத்கர்ஷங்களைக் கூறி உணர்த்துகின்றனர். ஊற்றமுடையாய்!—இதற்கு இரு வகையாகப் பொருள் கூறலாம்: ஊற்றமென்று திண்மையாய், அபௌருஷேயமான வேதத்திற்குப் பொருளா யிருக்கையாகிற திண்மையை உடையவனே! என்றும், அடியாரை நோக்குவதில் ஊக்கமுடையவனே! என்றும்.

பெரியாய்!—அளவற்ற வேதங்களெல்லாங் கூடிக்கூறினவிடத்தும் எல்லை காணவொண்ணாத பெருமையை யுடையவனே! என்றபடி. அப்படிப்பட்ட பெருமைகள் ஓலைப்புறத்தில் மாத்திரம் கேட்கலாம்படி இராமல், அவற்றை அனைவர்க்கும் நன்கு வெளிப்படுத்தியவாறு கூறும் "உலகினில் தோற்றமாய் நின்ற சுடரே!" என்னும் விளி.

துயிலெழாய்—நீ இப்போது துயிலெழாதொழியில் நீ பிறந்து படைத்த செல்வமும் குணங்களுமெல்லாம் மழுங்கிப் போய்விடுங்காண்; மிகவும் அருமைப்பட்டு அவற்றை ஸம்பாதித்த நீ ஒரு நொடிப்பொழுதில் எளிதாக அவற்றை இழவாமல் அனைவரும்பெறும்படி திருப்பள்ளியுணர்ந்தருளாய் என்பது உள்ளுறை.

இவர்கள் இங்ஙனம் வேண்டக்கேட்ட கண்ணபிரான், "ஆய்ச்சிகாள்! ஆகிறது; நாம் எழுந்திருக்கிறேம்; நீங்கள் வந்தபடியை ஒரு பாசுரமிட்டுச் சொல்லுங்கள்" என்று நியமிக்க, இவர்கள் தாங்கள் வந்தபடிக்கு ஒரு த்ருஷ்டாந்தமிட்டுக் கூறுகின்றனர், மாற்றருனக்கு என்று தொடங்கி மூன்றடிகளால்.

[வலிதொலைந்து.] வலிதொலைகையாவது—"ந நமேயம் து கஸ்யசித்" என்றபடி வணங்கா முடிகளாயிருக்கைக்கு உறுப்பான மூரட்டுத்தனத்தை முடித்துக் கொள்ளுகை. ஆற்றுதுவந்து—இராமபிரான் ப்ராஹ்மாஸ்த்ரம் தொடுத்துவிட வேண்டும்படி பிராட்டி விஷயத்தில் மஹாபசாரப்பட்டு எத்திசையுமுழன்றோடி எங்கும் புகலற்று இலைத்து விழுந்த காகம்போல் வந்து என்க.

யாம் வந்தோம்—சத்துருக்கள் உன்னுடைய அம்புக்குத் தோற்று, அவை பிடரியைப் பிடித்துத் தள்ளத்தள்ள வந்தாற்போலே, நாங்கள் உன்னுடைய ஸௌந்தர்ய ஸௌசீல்யாதி குணங்கள் பிடித்திழுக்க வந்தோமென்கை.

495. அங்கண்மா ஞாலத் தரசர் * அபிமான
பங்கமாய் வந்துநின் பள்ளிக்கட்டிற்கீழே *
சங்க மிருப்பாற்போல் வந்து தலைப்பெய்தோம் *
கிங்கிணி வாய்ச் செய்த தாமரைப் பூப்போலே *
செங்கண் சிறுச்சிறிதே யெம்மேல் விழியாவோ *
திங்களு மாதித்தி யனு மெழுந்தாற்போல் *
அங்க ணிரண்டுங்கொண் டெங்கள்மேல் நோக்குதியேல் *
எங்கள்மேற் சாப மிழிந்தேலோ ரெம்பாவாய். (22)

அம் கண் மா ஞாலத்து அரசர்	அழகியதாய் விசாலமாய்ப் பெரிதாயள்ள பூமியில் (அரசாட்சி செய்த ராஜாக்கள்
அபிமான பங்கம் ஆய் வந்து	(தங்களுடைய) அஹங்கார மடங்கி வந்து
நின் பள்ளி கட்டில் கீழே	உன் சிங்காசனத்தின் கீழ்
சங்கம் இருப்பார் போல்	திரள் திரளாக இருப்பது போலே
வந்து	(நாங்களும் உன் இருப்பிடத்தே) விடைகொண்டு
தலைப்பெய்தோம்	கிட்டினோம்;
கிங்கிணி வாய்ச் செய்த	கிண்கிணியின் வாய்போலிராகின்ற (பாதிவிகவிதமான)
தாமரைபூ போலே	செந்தாமரைப் பூப்போன்ற
செம் கண்	சிவந்த திருக்கண்கள்
சிறுச் சிறிது	கொஞ்சம் கொஞ்சமாக
எம் மேல்	எங்கள் மேலே
விழியாவோ	விழிக்கமாட்டாவோ?
திங்களும்	சந்திரனும்
ஆதித்தியனும்	ஸூர்யனும்
எழுந்தால்போல்	உதித்தாற்போல
அம் கண் இரண்டும் கொண்டு	அழகிய திருக்கண்களிரண்டினாலும்
எங்கள் மேல் நோக்குதி எல்	எங்களைக் கடாக்ஷித்தருள்வாயாகில்
எங்கள் மேல் சாபம்	எங்கள் பக்கலிலுள்ள பாபம்
இழிந்து	கழிந்துவிடும்;
	எல் ஓர் எம் பாவாய்—.

* * *—கீழ்ப்பாட்டில், "மாற்றரசுனக்கு வலிதொலைந்து" இத்யாதியால் தாங்கள் போக்கற்று வந்தவாற்றைக் கூறின விடத்தும், "இன்னமும் இவர்களுடைய அகவரையை அறியக் கடவோம்" என்று கண்ணபிரான் பேசாதே கிடக்க; அது கண்ட ஆய்ச்சிகள், "பிரானே! இப்படியோ இன்னும் உன் திருவுள்ளத்தில் ஒடுவது? எமக்கு நீதான் புகலாகா தொழிந்தாலும் வேறொரு புகலிடத்தேடி ஓடாதபடி அநந்யார்ஹைகளாய் வந்து அடிபணியா நின்ற எங்களை நீ கடாக்ஷித்தருளவேணும்" மென்று பிரார்த்திக்கும் பாசுரம், இது.

தம்மிடத்தில் ஈச்வரத்வ புத்தியையுடைய சில அஹங்காரிகளான அரசர்கள் "இப்பூமிக்கு நாம் கடவோம்" என்று அபிமானித்திருந்த அஹங்காரத்தை அடிப்பற்றோடு அழித்துப்போகட்டு 'ஸோஹம்' என்றிருந்த நிலைகுலைந்து 'தாஸோஹம்' என்று சேஷத்வத்தை முறையிட்டுக் கொண்டு ஸர்வஸ்வாமியான உன்னுடைய பள்ளிக்கட்டிலின் கீழ் வந்து புகுந்து கூட்டங்கூட்டமாக இருப்பதுபோல, நாங்களும் எங்களுடைய ஸ்த்ரீத்வாபிமானத்தைத் தவிர்த்துக்கொண்டு இங்ஙனே வந்து புகுந்தோம்; இனி எம்மைக் கடாக்ஷித்தருளுதியேல், இன்றளவும் உன்னைப் பிரிந்திருந்ததற்கு அடியான பாவங்களடங்கலும் ஒழிந்துவிடு மென்கிறார்கள்.

அபிமானபங்கமாய்—"ஒரு நாயகமாய் ஓடவுலகுடனுண்டவர், கருநாய் கவர்ந்த காலர் சிதைகிய பானையர், பெருநாடுகாண இம்மையிலே பிச்சைதாங்கொள்வர்" என்று நம்மாழ்வார் அருளிச்செய்தபடி ராஜ்யம் முதலியவற்றை இழந்து மிக்க பரிபவங்கள் பட்டு அஹங்கார மடங்கப்பெற்றனரென்க.

ஆய்ச்சிகள் "வந்துதலைப் பெய்தோம்" என்றதைக்கேட்ட கண்ணபிரான், "பெண்காள்! எல்லாம் ஸபலமாயிற்றன்றே? இனி ஒரு குறையுமில்லையே?" என்ன; "உன்னுடைய கடாக்ஷம்பெற நினைத்தன்றே நாங்கள் வந்தது; அது பெறவேண்டாவோ?" என்கிறார்கள்—"கிங்கிணி வாய்ச்செய்த" இத்யாதியால்.

ஏககாலத்தில் ஞாயிறும் திங்களு முதித்தால் தாமரைமலர் பாதி முகுளிதமாயும், பாதி விகஸிதமாயுமிருக்கு மென்றுகொண்டு, கண்ணபிரானுடைய திருக்கண்களுக்கு அந்த நிலைமையை

வேண்டுகின்றனர். இஃது, இற்பொருளுவமை ; வடநூலார், 'அபூதோபமை' என்பர். கண்ணனுடைய திருக்கண்கள், சேதநருடைய குற்றங்குறைகளை நினைத்துப் பாதிமூடியும், அவர்களுடைய கூக்குரலைக்கேட்டுப் பாதிதிறந்து மிருக்கு மாதலால், அதற்கு இந்த உவமை கூறியது மிகப் பொருந்தும்.

முதலிலேயே பூர்ணகடாக்ஷஞ் செய்தருளினால் தாங்கப்போகாதென்று, பொறுக்கப் பொறுக்கக் கடாக்ஷிக்கவேணு மென்கிறார்கள், சிறுச் சிறிதே என்பதனால்.

"கிங்கிணிவாய்ச் செய்த" என்றவிடத்து, "செய்த" என்கிறவிது—உவமவுருபு ; [-உபமாவாசகபதம்] எனவே, கிண்கிணிவாய்போன்ற என்றதாயிற்று. கிண்கிணி—அரைச்சதங்கை; பாதிபாகம் மூடினவாருகவும், பாதிபாகம் திறந்தவாருகவுஞ் செய்யப்படுவதொரு ஆபரண விசேஷம். (உஉ)

✓49. மாரி மலைமுழஞ்சில் மன்னிக் கிடந்துறங்கும் *
சீரிய சிங்க மறிவுற்றுத் தீவிழித்து *
வேரி மயிர்பொங்க வெப்பாடும் பேர்ந்துதறி *
மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டு *
போதருமா போலேநீ பூவைப்பூ வண்ணு * உன்
கோயில்நின் றிங்ஙனே போந்தருளி * கோப்புடைய
சீரிய சிங்கா சனத்திருந்து * யாம்வந்த
காரிய மாராய்ந் தருளேலோ ரெம்பாவாய். (உக)

மாரீ	மழைகாலத்தில்
மலை முழஞ்சில்	மலையிலுள்ள குஹைகளில்
மன்னி கிடந்து	(பேடையும் தானும் ஒருவஸ்து என்னலாம்படி) ஒட்டிக் கொண்டு கிடந்து
உறங்கும்	உறங்காநின்ற
சீரிய சிங்கம்	(வீர்யமாகிற) சீர்மையுடைய சிங்கமானது
அறிவுற்று	உணர்ந்தெழுந்து
தீ விழித்து	நெருப்புப்பொறி பறக்கும்படி கண்களை விழித்து
வேரி மயிர்	(ஜாதிக்கு உரிய) பரிமளமுள்ள உளைமயிர்களானவை
பொங்க	சிலும்பும்படி
எப்பாடும்	நாற்புறங்களிலும்
பேர்ந்து	புடைபெயர்ந்து [அசைந்து]
உதறி	(சரீரத்தை) உதறி
மூரி நிமிர்ந்து	சோம்பல் முறித்து
முழங்கி	கர்ஜனை பண்ணி
புறப்பட்டு போதரும் ஆ போலே	வெளிப் புறப்பட்டு வருவது போல,
பூவை பூ வண்ணா	காயாம் பூப்போன்ற நிறத்தையுடைய பிரானே !
நீ	நீ
உன் கோயில் நின்று	உன்னுடைய திருக்கோயிலினின்றும்
இங்ஙனே போந்தருளி	இவ்விடத்தே (ஆஸ்தாகத்தில்) எழுந்தருளி
கோப்பு உடைய	அழகிய ஸந்நிவேசத்தையுடைய
சீரிய	லோகோத்தரமான
சிங்காசனத்து	விம்ஹாஸநத்தின் மீது
இருந்து	எழுந்தருளியிருந்து
யாம் வந்த காரியம்	நாங்கள் (மநோரதித்துக் கொண்டு) வந்த காரியத்தை
ஆராய்ந்து	விசாரித்து
அருள்	கிருபை செய்ய வேணும்;

எல் ஓர் எம் பாவாய்—.

* * *—இவ்வாய்ச்சிகள் "சங்கமிருப்பார்போல் வந்து தலைப்பெய்தோம்" என்று வேறு புகலற்று வந்து விழுந்தோ மென்றதைக் கேட்டருளின கண்ணபிரான், கடுக உணர்ந்தருளி,

"பெண்காள்! மிகவும் வருந்தி இவ்வளவும் வந்தீர்களே! உங்களிருப்பிடந் தேடிவந்து உங்களை நோக்குகையன்றே எனக்குக்கடமை! என் ஸ்வரூபத்தை நீங்கள் நன்கு உணர்வீர்களன்றே? யாரேனும் பகைவர் கையிலகப்பட்டு வ்யஸநப்பட்டு நம்மிடம் வந்து முறைப்பட்டால், நான் அவர்களின் வருத்த மிகுதியைக் கண்ணுற்று, 'ஆ! ஆ!! உங்களுக்கு ஒரு வருத்தம் வருதற்கு முன்னமே வந்து உங்களை நோக்கவேண்டிய கடமையையுடைய நான் அங்ஙனம் மூந்துற வரப் பெருதொழியினும் வருத்தம் நேர்ந்தவுடனேயாகினும் வந்து உதவப்பெறலாமே; அங்ஙனமும் வந்து உதவப்பெற்றிலேனே; வருத்தமுற்ற நீங்களே உற்ற வருத்தத்தை என்னிடம் வந்து முறை யிட்டுக் கொள்ளும்படி நான் அந்யபரை யிருந்தொழிந்தேனே; என்னுடைய இக்குற்றத்தை நீங்கள் பொறுத்தருள வேணும்' என்று அஞ்சி நடுங்கிக் கூறும் முறையையுடைய என் ஸ்வரூப ஸ்வபாவங்கள் உங்களுக்குத் தெரிந்தவையேயன்றே? உங்களை நான் இவ்வளவு வருத்தமுறுத்தி யதைப்பற்றிப் பொறைவேண்டுகின்றேன்; இனி உங்கள் காரியத்தைக் குறையறத் தலைக்கட் டித் தருகின்றேன்; உங்களுக்கு நான் செய்யவேண்டுவதென்?" என்ன; அதனைக் கேட்ட ஆய்ச்சிகள், "பிராணே! எங்களுடைய மநோரதம் இப்படி ரஹஸ்யமாக விண்ணப்பஞ் செய்யக் கூடியதன்று; பெரிய கோஷ்டியாக எழுந்தருளியிருந்து கேட்டருளவேணும்" என்று ஆஸ்தா நத்திற் புறப்பாடு ஆகவேண்டிய க்ரமத்தை விண்ணப்பஞ் செய்யும் பாசுரம், இது.

வர்ஷா காலத்தில் எல்லாவிடங்களும் ஒரு நீர்க்கோப்பாகும்படி மழை பெய்ய, வழிக ளெல்லாம் தூறுகி ஸஞ்சாரத்திற்கு அயோக்யமாயிருக்குமாதலால் அப்போது அரசர்களும் தத் தம் பகைவரிடத்துள்ள பகையையும் மறந்து, சேனைகளைத் திரட்டிக்கொண்டு போர்புரியப் புறப் படுவதைத் தவிர்ந்து நாலாறு திங்கள் வரை அந்தःபுரத்தில் மன்னிக்கிடப்பர்; சக்ரவர்த்தித் திரு மகனும் பிராட்டியைப் பிரிந்த பின்னர் விரைவில் முயன்று அவளை வருவித்துக்கொள்ள வேண்டி யிருந்தும் வர்ஷா காலத்தில் மஹாராஜர் வெளிப்புறப்பட வொண்ணுதென்று ஸுக்ரீவ மஹாராஜ ரைத் தாரையோடு கூடிக்கிடந்துறங்கவிட்டுத் தானும் இளையபெருமாளுமாக மால்யவத் பர்வதத் தில் மிக்க வருத்தத்துடனே அக்காலத்தைக் கழித்தருளினரன்றே? ஆனபின்பு, மாரிகாலமானது பிரிந்தார் கூடுங்காலமாயும், கூடினோர் ஸுரதஸ மநுபவிக்குங் காலமாயுமிருக்குமாதலால் சிங்கங் களும் அக்காலத்தில் பர்வத குஹைகளிற் கிடந்துறங்கும்; அக்குஹை வாசலில் களிறுகள் வந்த டைந்து பிளிறினாலும் அவ்வொலி செவிப்படாதவாறுகவே அவை கிடந்துறங்கும்; மாரிகாலங் கழிந்தவாறே அவை உறக்கத்தை விட்டெழுந்து, 'நம் எல்லைக்குள் புகுந்தாரார்?' எனச்சீறி நோக்குவதுபோற் கண்களில் நெருப்புப் பொறி பறக்கும்படி விழித்து காற்புறமும் நோக்கி, உடலமயிர்கள் சிலும்புமாறு சுற்றும் அசைந்து, உறங்கும்போது அவயவங்களை மூடக்கிக்கொண்டு கிடந்தமையாலுண்டான தமிர்ப்பு தீரும்படி அவயவங்களைத் தனித்தனியே உதறி, உலாவுகைக்கு உடல் விதேயமாம்படி உடலை ஒன்றாக நிமிர்த்து [—சோம்பல் முறித்து என்றபடி], மற்ற துஷ்ட மிருகங்கள் கிடந்த விடத்திற் கிடந்தபடியே உயிர்மாய்ந்து முடியும்படி வீரகர்ஜன பண்ணிப் பின்பு தன் இருப்பிடத்தை விட்டு யதேச்சமாக ஸஞ்சரிப்பதற்காக வெளிப்புறப்படுவது இயல்வு. அங்ஙனமே கண்ணபிரான் புறப்பட்டு சிங்காசனத்தேற எழுந்தருளுமாறு வேண்டுகின்றனர். சிங்கம் மலைமுழஞ்சிற் கிடந்துறங்குவது போல் இவ்வசோதை யிளஞ்சிங்கம் "நப்பின்னை கொங்கைமேல் வைத்துக்கிடந்த மலர்மார்பா!" என்றபடி * நீளா துங்கஸ்தநகிரிதட ஸுப்தமா யிருக்கும்படி காண்க.

சிங்கம் பிறக்கும்போதே "ம்ருகேந்திரன்" என்றும் "ம்ருகராஜன்" என்றும் சிறப்புப்

பெயரைப் பெறுதல்பற்றிச் சீரியசிங்க மெனப்பட்டது. கண்ணபிரானும் நரஸிம்ஹாவதாரத்திற் போற் சிலபாகஞ் சிங்கமாயும் சிலபாகம் மானிடமாயுமிருக்கை யன்றியே "சிற்றுயர் சிங்கம்" "எசோதை யிளஞ்சிங்கம்" என்றபடி பூர்ண லிம்ஹமாயிருத்தலால், சீரிய என்னு மடைமொழி இவனுக்கு மொக்குமென்க.

அறிவற்று—என்ற சொல்லாற்றலால், அடியோடு அறிவில்லாததொரு வஸ்துவுக்கு அறிவு குடிபுகுந்தமை தோன்றும்; சிங்கம் பேடையைக் கட்டிக்கொண்டு கிடந்துறங்கும்போது அறிவிழந்திருக்கும். கண்ணபிரானும் அடியார் காரியத்தைச்செய்ய நினைத்து உணர்வதற்கு முன்னர் அறிவற்றதொரு பொருளாகவேயன்றே எண்ணப்படுவன்.

தீவிழித்து=கண்ணபிரான் ஆய்ச்சிகளின் கூக்குரலைக்கேட்டு உணர்ந்தனனாதலால், "இவர்கள் இங்ஙனம் கூக்குரலிடும்படி இவர்கட்கு யாரால் என்ன துன்பம் நேர்ந்ததோ!" என்று உடனே திருக்கண்கள் சீற்றந் தோற்றச் சிவக்கு மென்க. (அடியாருடைய பகைவரைப் பற்றின சீற்றம்.)

வேரிமயிர் போங்க=சிங்கத்தின் மடைகளில் ஜாதிக்கு ஏற்றதொரு பரிமள முண்டாதல் அறிக. கிடந்துறங்கும்போது உரோமயிர்கள் நெருக்குண்டு அமுங்கிக் கிடக்குமாதலால், உணர்ந்த வுடனே அவற்றை மலரச்செய்வது சாதியியல்பு. அங்ஙனமவற்றை மலரச் செய்வதற்காக, எப் பாடும் பேர்ந்து உதறும். எப்பாடும்—எல்லாப் பக்கங்களிலும் என்றபடி. போர்ந்து—பெயர்ந்து என்றவாறு. பெயர்தல்—அசைதல். மூரி என்று—சோம்பலுக்குப் பெயர்; "மூரி நிமிர்ந்து" என்றது—சோம்பல் தீரும்படி நிமிர்ந்து என்றபடி.

["யாம்வந்த காரியம்."] இப்போதே இவர்கள் வந்த காரியம் இன்னதென்று இயம்பா தொழிவானென்? எனில்; முதலடியிலே சொல்லிவிட்டால் ஸ்வதந்திரனாகிய இவன் மறுத்தாலும் மறுக்கக்கூடுமென்றஞ்சி, இன்னும் காலடி கிட்டச் சென்றவாறே விண்ணப்பஞ் செய்வோ மென்றிருக்கிறார்கள். அதாவது—"சிற்றஞ்சிறுகாலே" என்ற பாட்டில் விண்ணப்பஞ் செய் கிறார்கள். "உன்றன்னோடுற்றோமே யாவோமுனக்கே நாமாட் செய்வோம், மற்றை நங்கா மங்கள் மாற்று" என்றது காண்க. (உக)

497. அன்றிவ் வுலக மளந்தா யடிபோற்றி *
சென்றங்குத் தென்னிலங்கை செற்றாய் திறல்போற்றி *
பொன்றச் சகட முதைத்தாய் புகழ் போற்றி *
கன்று குணிலா வெறிந்தாய் கழல்போற்றி *
குன்று குடையா வெடுத்தாய் குணம்போற்றி *
வென்று பகைகெடுக்கும் நின்கையில் வேல்போற்றி *
என்றென்றுன் சேவகமே யேத்திப் பறைகொள்வான் *
இன்றியாம் வந்தோ மிரங்கேலோ ரெம்பாவாய். (உசு)

அன்று	(இந்திரன் முதலானவர்கள் மஹாபலியால் கலிவுபட்டு) அக்காலத்தில்	அளந்தாய்	(இரண்டடியால்) அளந்தருளினவனே!
இ உலகம்	இந்த லோகங்களை	அடி	(உன்னுடைய அத்) திருவடிகள்
		போற்றி	பல்லாண்டு பல்லாண்டு வாழ்க;

அங்கு	பிராட்டியைக் களவு கண்ட இராவணனிருக்குமிடத்தில்
சென்று	எழுந்தருளி
தென் இலங்கை	அவனுடைய பட்டணமாகிய அழகிய லங்காபுரியை
செற்றாய்	அழித்தருளினவனே !
திறல்	(உன்னுடைய) மிடுக்கு
போற்றி	பல்லாண்டு வாழ்க;
சகடம் பொன்ற	சகடாஸுரன் முடியும்படி
உதைத்தாய்	(அச்சகடத்தை) உதைத்தருளினவனே !
புகழ்	(உன்னுடைய) கீர்த்தியானது
	போற்றி !—;
கன்று	கன்றாய் நின்ற ஒரு அஸுரனை [வத்ஸாஸுரனை,]
குணிலா	எறிதடியாகக் (கொண்டு)
எறிந்தாய்	(கபித்தாஸுரன் மீது) எறிந்தருளினவனே !
கழல்	(உன்னுடைய) திருவடிகள்
	போற்றி !—;
குன்று	கோவர்த்தனகிரியை
குடையா	குடையாக
எடுத்தாய்	தூக்கினவனே !
குணம்	(உன்னுடைய ஸௌசீல்ய ஸௌலப்யாதி) குணங்கள்
	போற்றி !—;
வென்று	(பகைவரை) ஜயித்து
பகை	த்வேஷத்தை
கெடுக்கும்	அழிக்கின்ற
நின் கையில் வேல் போற்றி	உனது திருக்கையிலுள்ள வேல் வாழ்க;
என்று என்று	என்றிப்படிப் பலவாறாக மங்களாசாஸநம் பண்ணிக் கொண்டு
உன் சேவகமே	உன்னுடைய வீர்யங்களையே
ஏத்தி	புகழ்ந்துகொண்டு
யாம்	அடியோம்
இன்று	இப்போது
பறை கொள்வான் வந்தோம்	பறை கொள்வதற்காக உன்னிடம் விடை கொண்டோம்
இரங்கு	திருவுள்ளம் பண்ணியருள்;
	வல் ஓர் எம் பாவாய்—.

* * *—பாரதப்போரில் அர்ஜுநன் 'இரண்டு சேனைகளின் நடுவே தேரைக் கொண்டு போய் நிறுத்து' என்ன, அங்ஙனமே செய்த கண்ணபிரான் பெண்களின் வேண்டுகோளை மறுக்க மாட்டாதாஞ்தலால் அவர்களின் பிரார்த்தனைக்கு இசைந்து, 'பெண்காள் ! இதோ புறப்பட்டு வருகிறேன்' என்று சொல்லித் திருப்பள்ளியறையில் நின்றும் திவ்ய ஸிம்ஹாஸனத்தளவும் வரத் தொடங்க, அதனைக்கண்ட ஆய்ச்சிகள், பண்டு தண்டகாரணிய வாசிகளான முனிவர் 'இராம பிரானைக் கண்டவுடனே ராக்ஷஸரால் நமக்கு நேரும் பரிபவங்களைச் சொல்லி முறையிட வேணும்' என்று பாரித்திருந்தவர், இராமபிரானைக் கண்டவாறே ராக்ஷஸ பரிபவங்களை மறந்து மங்களாசாஸநம் பண்ணத் தொடங்கினாற்போல, இவர்களும் தங்கள் மநோரதங்களையெல்லாம் மறந்து 'இத்திருவடிகளைக் கொண்டோ இவனை நாம் நடக்கச் சொல்லுவது !' என வருந்தி அத்திருவடிகளை யெடுத்து முடிமேற் புனைந்து கண்களில் ஒற்றிக்கொண்டு, பண்டு உலகளந்தருளினவாற்றையும் சகட முதைத்தவாற்றையும் நினைந்து வயிறெரிந்து இத்திருவடிகட்கு ஒரு தீங்கும் நேராதொழியவேணுமென்று மங்களாசாஸநஞ் செய்வதாய்ச் செல்லும் பாசுரம், இது.

உலகளந்தருளினபோது அமரர்கள் தங்கள் பிரயோஜநத்தைப்பெற்று அவ்வளவோடே மீண்டனரேயன்றி, 'இம் மெல்லடிகளைக் கொண்டு காடுமோடையும் அளக்கப்பண்ணினேமே !' என்று வயிறெரிந்து அத்திருவடிகட்குக் காப்பிட்டார் ஆருமில்லை யென்கிற குறைதீர இப்போது இவ்வாயர் மாதர் மங்களாசாஸநம் பண்ணுகின்றனரென்க. இவ்வுலகம் என்ற சொல்லாற்றலால் மென்மைபொருந்திய திருக்கைகளையுடைய பிராட்டிமாரும் பிடிக்கக் கூசும்படி புஷ்பஹாஸஸுகுமாரமான திருவடி எங்கே ! * உடையுங்கடியனவுன்று வெம்பரற்களுடைக்கடிய வெங்கானிடங்கள் எங்கே ! என்றவாறு தோற்றும். அளந்தாய் !—'அளந்தான்' என்பதன் ஈறுதிரிந்த

விளி. போற்றி, வாழி, பல்லாண்டு—இவை ஒரு பொருட்சொற்கள். அடி போற்றி—* தாள் ஓலகமளந்த அசவுதீர வேணும் என்றபடி.

போன்ற—பொடி பொடியாம்படி என்றபடி. புகழ்—பெற்றதாயுங்கூட உதவப்பெருத் ஸமயத்தில் தன் வலியையேகொண்டு தன்னைக்காத்தமையால் வந்தகீர்த்தி.

முள்ளைக்கொண்டே முள்ளைக்களைவதுபோல் துஷ்டரைக்கொண்டே துஷ்டரைக்களையும் வல்லமை கன்று குணிலாவெறிந்த வரலாற்றினுல் விளங்கும். குணில்—எறிகருவி. கன்றைக் குணிலாகக் கொண்டெறிந்தது திருக்கையாயிருக்க, அதற்குப்போற்றி யென்னுதே, "கழல் போற்றி" என்றது சேருமாறென்? எனில்; (ஆருயிரப்படி.) "விளாவை இலக்காகக் குறித் துக் கன்றை எறிகருவியாகக் கொண்டு எறிவதாக நடந்தபோது குஞ்சித்த திருவடிகளில் வீரக் கழலையும் அகவாயிற் சிவப்பையுங்கண்டு காப்பிடுகிறார்கள்." "[அடிபோற்றி!—கழல்போற்றி.] நீட்டின திருவடிகளுக்கும் குஞ்சித்த திருவடிகளுக்கும் சூழ்ந்திருந்து பரிவாரைப் போலே பரிகிறார்கள்."

இந்திரன் மேகங்களை ஏவி மழைபெய்வித்துத் திருவாய்ப்பாடியிலுள்ள சராசரங்களைத் தூக்கும் பெருத்ததீங்கை உண்டுபண்ணப்புகுந்ததற்குக் கண்ணபிரான் சீற்றமுற்று அவ்விந்திரன் தலையை அறுத்தெறிய வல்லமை பெற்றிருந்தபோதிலும், அப்பிரான் அவன் திறத்து இறையுஞ் சீற்றங்கொள்ளாமல், 'நம்மிடத்தில் ஆநுகூல்யமுடைய இந்திரனுக்கு இக்குற்றம் ப்ராமாதிகமாக வந்ததன்றே, பெரும்பசியாற் பிறந்தகோபத்தினுல் இப்போது தீங்கிழைக்க ஒருப்பட்டானே லும் சிறிதுபோது சென்றவாறே தானே ஓய்வன்; இவனுடைய உணவைக் கொள்ளை கொண்ட நாம் உயிரையுங்கொள்ளை கொள்ளக் கடவோமல்லோம்' எனப்பேருள் பாராட்டி, அடியாரை மலையெடுத்துக்காத்த குணத்திற்குப் பல்லாண்டு பாடுகின்றனர்.

[வேல்போற்றி.] வெறுங்கையைக் கண்டாலும் போற்றி! என்னுமவர்கள், வேல்பிடித்த அழகைக்கண்டால் 'போற்றி!' என்னுதொழிவரோ?

"அடிபோற்றி, திறல்போற்றி, புகழ்போற்றி, கழல்போற்றி, குணம்போற்றி, வேல் போற்றி!" என்று இவர்கள் நாக்குக்கு இடும் ஷட்ரஸமிருக்கிறபடி.

"பறைகொள்வான் இன்றுயாம் வந்தோம்" என்றது—* எற்றைக்கு மேழேழ்பிறவிக் கும் உன்றன்னோடு உற்றேமேயாய் உனக்கே நாமாட்செய்ய வந்தோம் என்றபடி.

யாம் வந்தோம் இரங்கு என்ற சொல்லாற்றலால், பாகதஸ்வீகாரமே ஸ்வரூபானுரூபமென் றும், ஸ்வகதஸ்வீகாரம் ஸ்வரூபவிருத்தமென்றும் துணிந்திருக்கின்ற அடியோங்கள் உன் வரவை எதிர்பார்த்திருக்க வேண்டியவர்களாயினும், ஆற்றுமையின் மிகுதியால் அங்ஙனமிருக்க வல்ல மையற்று வந்துவிட்டோம், இக்குற்றத்தைப் பொறுத்தருளவேணுமென வேண்டுகின்றமை தோற்றும்.

இன்று+யாம், இன்றியாம்; "யவ்வரின் இய்யாம்" என்பது நன்னூல். (உச)

498. ஒருத்தி மகனைப்பிறந்து * ஓரிரவில்
ஒருத்தி மகனு யொளித்து வளர *
தரிக்கிலா னகித்தான் தீங்கு நினைந்த *
கருத்தைப் பிழைப்பித்துக் கஞ்சன் வயிற்றில் *

நெருப்பென்ன நின்ற நெடுமாலே * உன்னை
அருத்தித்து வந்தோம் பறைதருதி யாகில் *
திருத்தக்க செல்வமும் சேவகமும் யாம்பாடி *
வருத்தமும் தீர்ந்து மகிழ்ந்தேலோ ரெம்பாவாய். (உரு)

ஒருத்தி	தேவகிப் பிராட்டியாகிற ஒருத்திக்கு
மகன் ஆய்	பிள்ளையாய்
பிறந்து	அவதரித்து
ஓர் இரவில்	(அவதார காலமாகிய அந்த) ஒரு ராத்திரியில் (திருவாய்ப்பாடியில் நந்தகோபர் திருமாளிகையில் வந்து சேர்ந்து),
ஒருத்தி	யசோதைப் பிராட்டியாகிற ஒருத்தியினுடைய
மகன் ஆய்	பிள்ளையாக
ஒளித்து வளர	ரகசியமாக வளருங் காலத்தில்
தான்	தான் [கம்ஸன்]
தரிக்கிலான் ஆகி	(அங்ஙனம் வளர்வதைப்) பொறுதவனாய்
தீங்கு நினைந்த	(இவனை எப்படியாகிலும் கொல்லவேணும் என்று) தீங்கை நினைத்த
கஞ்சன்	கம்ஸனுடைய
கருத்தை	எண்ணத்தை
பிழைப்பித்து	வீணாக்கி
வயிற்றில்	(அக்கஞ்சனுடைய) வயிற்றில்
நெருப்பு என்ன நின்ற	'நெருப்பு' என்னும்படி நின்ற
நெடு மாலே	ஸர்வாதிகனான எம்பெருமானே!
உன்னை	உன்னிடத்தில்
அருத்தித்து வந்தோம்	(புருஷார்த்தத்தை) யாசியாகின்று கொண்டு வந்தோம்;
பறை தருதி ஆகில்	எங்களுடைய மநோரதத்தை நிறைவேற்றித் தருவாயாகில்
திருத்தக்க செல்வமும்	பிராட்டி விரும்பத்தக்க ஸம்பத்தையும்
சேவகமும்	வீர்யத்தையும்
யாம் பாடி	நாங்கள் பாடி
வருத்தமும் தீர்ந்து	(உன்னைப் பிரிந்து படுகிற) துயரம் நீங்கி
மகிழ்ந்து	மகிழ்ந்திடுவோம்;
	எல் ஓர் எம் பாவாய்—.

* * *—கீழ்ப்பாட்டில் மங்களாசாஸநம் பண்ணின பெண்களை நோக்கிக் கண்ணபிரான், 'பெண்காள்! நம்முடைய வெற்றிக்குப் பல்லாண்டுபாடுகை உங்களுக்கு ஜந்மஸித்தம்; இதுகிடக்க, நீங்கள் இக்குளிரிலே உங்களுடலைப் பேணுமல் வருந்திவந்தீர்களே! உங்களுடைய நெஞ்சிலோடுகிறது வெறும் பறையேயோ? மற்றேதேனுமுண்டோ?' எனினவ; அது கேட்ட பெண்கள், பிரானே! உன்னுடைய குணங்களை நாங்கள் பாடிக்கொண்டு வருகையாலே ஒரு வருத்தமும் படாமல் சுகமாக வந்தோம்; பறை என்று ஒரு வ்யாஜத்தையிட்டு நாங்கள் உன்னையேகாண் பெறநினையா நின்றோம்' என்று விடை கூறுவதாய்ச்செல்லும் பாசுரம், இது.

அரியதொழில்களையும் எளிதாகச் செய்து முடித்தவனக்கு எங்கள் வேண்டுகோளைத் தலைக்கட்டித்தருவது மிகவுமெளியதே என்னுங் கருத்துப்படக் கண்ணபிரானை விளிக்கின்றனர், மூன் ஐந்தடிகளால்.

"தேவகி மகனுய்ப்பிறந்து எசோதைமகனுய் ஒளித்துவளர" என்னுமல், "ஒருத்தி மகனுய்ப்பிறந்து...ஒருத்திமகனுய் ஒளித்துவளர" என்றது—அத்தேவகி யசோதைளின் ஒப்புயர்வற்ற வைலக்ஷண்யத்தை உளப்படுத்தியவாறு. 'தேவகி கண்ணனைப்பெற்ற பாக்கியவதி. எசோதை கண்ணனை வளர்த்தெடுத்த பாக்கியவதி' என்று உலகமடங்கலும் புகழும்படியான அவர்களது பிறு பாட்டை, 'ஒருத்தி' என்ற சொல்நயத்தால் தோற்றுவிக்கிறபடி. ஒருத்தி=அத்விதியை என்றபடி.

கண்ணபிரான் யசோதையினிடத்து வளர்ந்த வளவையேகொண்டு அவனை அவளது மக

ஞ்சுக் கூறுதல் பொருந்துமோ? எனின்; அழுது முலைப்பால் குடித்த இடமே பிறந்தவிடமாத லாலும், கண்ணபிரான் அழுது முலைப்பால் குடித்ததெல்லாம் யசோதையிடத்தேயாதலாலும், திருப்ரதிஷ்டை பண்ணினவர்களிற் காட்டிலும் ஜீர்ணோத்தாரணம் பண்ணினவர்களே முக்கிய ராதலாலும் கண்ணபிரான் யசோதைக்கே மகனுவனென்க.

ஒளித்துவளர=பிறந்தவிடத்தில் ப்ரகாசமாக இருக்கவொண்ணுதாப் போலவே, வந்து சேர்ந்தவிடத்திலும் விஷத்ருஷ்டிகளான பூதநாதிகளுக்கு அஞ்சி ஒளித்து வளர்ந்தபடி. "வானிடைத் தெய்வங்கள்காண, அந்தியம்போது அங்கு நில்லேல்" என்று அநுகூலர் கண்ணிலும் படவொண்ணுதபடி அடக்குமவர்கள் ப்ரதிகூலர்கண்ணில் படவொட்டுவர்களோ? "அசுரர்கள் தலைப்பெய்யில் யவங்கொலாங்கென்றுழு மென்றூருயிர் ஆன்பின்போகேல்" "கண்ணு நீ நானைத்தொட்டுக் கன்றின்பின் போகேல் கோலஞ்செய் திங்கேயிரு" இத்தியாதி.

தரிக்கிலானுகி—நாரதாதிகள் கம்ஸனிடத்துச்சென்று, 'உன்னுடைய சத்துரு திருவாய்ப்பாடியிலே வளராநின்றுன்' என்ன, அவன் அதுகேட்ட மாத்திரத்திலே, 'நம் கண்வட்டத்திலில்லையாகில் என்செய்தாலென்?' என்றிராமல், 'சதுரங்கபலத்தோடே கூடி ஐச்வர்யத்திற்கு ஒரு குறையுமின்றியே இருந்தோமாகில் வந்தவன்று பொருகிறேம்' என்று ஆறியிராமல் அப்பொழுதே தொடங்கித் தீங்குசெய்கைக்கு உறுப்பான பொருமையைச் சொல்லுகிறது.

தீங்குநினைந்த=சகடம், கொக்கு, கன்று, கழுதை, குதிரை, விளாமரம், குருந்தமரம் முதலிய பல வஸ்துக்களில் அசுரர்களை ஆவேசிக்கச்செய்தும், பூதனையை அனுப்பியும், வில்விழுவுக்கென்று வரவழைத்துக் குவலயாபீடத்தை ஏவியும், இப்படியாகக் கண்ணபிரானை கலிவதற்குக் கஞ்சன் செய்த தீங்குகட்கு ஓர் வரையறை யில்லாமையுணர்க.

'கருத்தைப் பிழைப்பித்து=எவ்வகையிலாவது கண்ணனை முடித்துவிட்டு இறுதியில் மாதுலஸம்பந்தத்தைப்பாராட்டி 'ஐயோ! என் மருமகன் இறந்தொழிந்தானே!' என்று கண்ணீர்விட்டு அழுது துக்கம்பாவிக்கக் கடவோம் என்று நினைத்திருந்த கம்ஸனுடைய நினைவை அவனுலேடே முடியும்படி செய்தருளினனென்க. பிழைப்பித்தல்–பிழையை உடையதாகச் செய்தல். பாழாக்கி என்பது தேர்ந்தபொருள்.

கஞ்சன்வயிற்றில் நெருப்பென்ன நின்ற நெடுமாலே—"பேய்ப்பாடுடைய நின்தந்தையுந் தாழ்த்தான் பொருதிறற் கஞ்சன் கடியன், காப்பாருமில்லைக் கடல்வண்ணு! உன்னைத் தனியே போயெங்குந்திரிதி" "என்செய்ய வென்னை வயிறுமறுக்கினுய் எது மோரச்சமில்லை, கஞ்சன் மனத்துக்கு உகப்பனவே செய்தாய் காயாம் பூவண்ணங்கொண்டாய்!" "வாழகில்லேன் வாசுதேவா!" என்று—கண்ணபிரானுடைய சேஷ்டைகளை நினைந்து வயிறெரிந்து கூறும் பெண்டிருடைய வயிற்றிலிருந்த நெருப்பையெல்லாம்வாரிக் கண்ணபிரான் கஞ்சன் வயிற்றில் எறிந்தனன் போலும். ஸ்ரீகிருஷ்ணன் தேவகியின் வயிற்றிற்குப் பிள்ளையாகவும் கஞ்சன் வயிற்றிற்கு நெருப்பாகவு மிருப்பனென்க. நெடுமாலே! என்ற விளியினுற்றலால்–இப்படி நாட்டிற்பிறந்து படாதனபட்டுக் கஞ்சனைக் கொன்றது அடியாரிடத்துள்ள மிக்க வியாமோஹத்தினுல் என்பது போதரும்.

இங்ஙனங் கண்ணபிரானை ஆய்ச்சிகள் ஸம்போதிக்க, அதுகேட்ட கண்ணபிரான்!, "பெண்காள்! நீங்கள் சொல்லியபடி நான் கஞ்சன்வயிற்றில் நெருப்பென்ன நின்றது உண்டு; அதுகிடக்க, இப்போது நான் உங்களுக்குச் செய்ய வேண்டுவதென்?" என்று கேட்க; மறு

மெர்ழி கூறுகின்றனர்;—'பிராளே! எங்களுக்கு நீ பிறந்துகாட்டவும் வேண்டா; வளர்ந்து காட்டவும் வேண்டா; கொன்று காட்டவும் வேண்டா; உன்னைக்காட்டிலும் போதும்' என்ற கருத்துப்படக் கூறுமாறுகாண்க [உன்னை அருத்தித்து வந்தோம்.] "என்னை யாக்கிக் கொண் டெனக்கே தன்னைத்தந்த கற்பகம்" என்றபடி அடியார்க்கு நீ வேறொன்றைக்கொடாதே உன் னையே கொடுக்குமவனுதலால், நாங்கள் உன்னையே வேண்டி வந்தோம். இவர்கள் இங்ஙனஞ் சொல்லக்கேட்ட கண்ணபிரான், 'பெண்காள்! "பறைகொள்வான் இன்று யாம் வந்தோம்" என்று ஒருகால் சொல்லுகிறீர்கள்; "உன்னை யருத்தித்து வந்தோம்" என்று ஒருகால் சொல்லு கிறீர்கள்; இஃது என்னே! பரஸ்பர விருத்தமாகப் பேசுகின்றீர்களே!' என்று கேட்க; இவர் கள், மீண்டும் "பறைதருதியாகில்" என்கிறார்கள்; பறை என்னும் பதத்தின் பொருளைச் "சிற் றஞ் சிறுகாலே" என்ற பாட்டிலன்றே இவர்கள் வெளியிடுகின்றனர்—"இற்றைப் பறைகொள் வானன்றுகாண்" இத்யாதியால்.

"தருதியாகில்" என்ற சொல்லாற்றலால், சேதநனுடைய க்ருத்யமொன்றும் பலஸாதந மாகமாட்டாது; பரமசேதநனுடைய நினைவே பலஸாதநமென்னும் ஸித்ஸம்ப்ரதாயார்த்தம் வெளிப்படையாம்.

'பெண்காள்! உங்களுடைய கருத்தை அறிந்துகொண்டேன்; நீங்கள் வந்தபடிதான் என்? வருகிறபோது மிகவும் வருத்தமுற்றீர்களோ?' என்று உபசரித்துக்கேட்க; 'பிராளே! உன்னுடைய ஐச்வர்யத்தையும் ஆண்பிள்ளைத்தனத்தையும் அடியோம் வாயாரப்பாடிக்கொண்டு வந்தோமாகையால் எமக்கு ஒரு வருத்தமுமில்லை' என்கிறார்கள்.

499. மாலே மணிவண்ணு மார்கழி நீராடுவான் *
மேலையார் செய்வனகள் வேண்டுவன கேட்டியேல் *
ஞாலத்தை யெல்லாம் நடுங்க முரல்வன *
பாலன்ன வண்ணத்துன் பாஞ்சசன்னியமே *
போல்வன சங்கங்கள் போய்ப்பா டுடையனவே *
சாலப் பெரும்பறையே பல்லாண் டிசைப்பாரே *
கோல விளக்கே கொடியே விதானமே *
ஆலி னிலையா யருளேலோ ரெம்பாவாய். (உசு)

மாலே	(அடியார் பக்கலில்) வியாமோஹமுடையவனே!
மணி வண்ணு	நீலமணி போன்ற வடிவை உடையவனே!
ஆலின் இலையாய்	(ப்ரளயகாலத்தில்) ஆலந்தளிரில் பள்ளிகொள்பவனே!
மார்கழி நீராடுவான்	மார்கழி நீராட்டத்திற்காக
மேலையார்	உத்தமபுருஷர்கள்
செய்வனகள்	அனுட்டிக்கும் முறைமைகளில்
வேண்டுவன	வேண்டியவற்றை
கேட்டி ஏல்	கேட்கிறாயில்; (அவற்றைச் சொல்லுகிறோம்;)
ஞாலத்தை எல்லாம்	பூமியடங்கலும்
நடுங்க	நடுங்கும்படி
முரல்வன	ஒலிசெய்யக் கடவனவும்
பால் அன்ன வண்ணத்து உன் பாஞ்ச சன்னிய மே போல்வன	பால் போன்ற நிறமுடையதான உன்னுடைய ஸ்ரீ பாஞ்சஜந்யத்தை ஒத்திருப்பனவுமான
சங்கங்கள்	சங்கங்களையும்
போய் பாடு உடையன	மிகவும் இடமுடையனவும்
சால பெரு	மிகவும் பெரியனவுமான
பறை	பறைகளையும்

பல்லாண்டு இசைப்பார்	திருப்பல்லாண்டு பாடும்வர்களையும்	விதானம்	மேற்கட்டிகளையும்
கோலம் விளக்கு	மங்கள தீபங்களையும்	அருள்	ப்ரஸாதித்தருளவேணும்;
கொடி	த்வஜங்களையும்		வல் ஓர் எம் பாவாய்—.

* * *—'பெண்காள்! "உன்னை யருத்தித்து வந்தோம் பறை தருதியாகில்" என்கிறீர்கள்; நம்முடைய ஸம்ச்லேஷரஸத்திலே உத்ஸாஹமுடையவர்கள் வேறொன்றை விரும்பக்கூடாமையாலே, அதென் சொன்னீர்களென்று அதிலே ஒரு ஸம்சயம் பிறவாநின்றது; அதாகிறது எது? அதற்கு மூலம் எது? அதற்கு வேண்டுவன எவை? அவற்றுக்கு ஸங்கயை எத்தனை? இவற்றை விரியச் சொல்லுங்கள்' என்று கண்ணபிரான் நியமித்தருள, அதுகேட்ட ஆய்ச்சிகள், 'பிரானே! உன் முகவொளியை வெளியிலேகண்டு உன் திருநாமங்களை வாயாரச் சொல்லுகைக்கு ஹேதுவாயிருப்பதொரு நோன்பை இடையர் ப்ரஸித்தமாகையாலே உன்னுடைக் கலவிக்கு அவிருத்தமா யிருக்கின்றமையைக் கருதி இடையர் பக்கலில் நன்றி கிடைவாலே அந்நோன்பிலே இழிந்தோம்; அதற்கு, முன்னோர்கள் செய்து போருவ தொன்றுண்டு; அதற்கு வேண்டும் உபகரணங்களான அங்கங்களும் இவை; அவற்றையும் தந்தருளவேணுமென்று வேண்டிக் கொள்ளும் பாசுரம், இது.

இவர்கள் "மார்கழி நீராடுவான்" என்றவுடனே, கண்ணபிரான் மேன் மேலும் இவர்கள் வாயைக்கிளப்பி வார்த்தை கேட்கவிரும்பி, 'மார்கழியாவதென்? நீராட்டமாவதென்? இது யார்செய்புங்காரியம்? அப்ரஸித்தமான தொன்றைச் சொல்லா நின்றீர்களே' என்ன; அது கேட்ட இவர்கள் "தர்மஜ்ஞஸமய: ப்ரமாணம்" இத்யாதிகளை நெஞ்சிற்கொண்டு, 'சிஷ்டாநுஷ்டாநம் ப்ரமாணமன்றே? இந்நோன்பு சிஷ்டாநுஷ்டாந ஸித்தமன்றே?' என்கிறார்கள்.

'இங்ஙன் இவர்கள் சிஷ்டாநுஷ்டாநத்தை எடுத்துக் கூறியவாறே, அவன் 'பெண்காள்! லோகஸங்க்ரஹார்த்தமாக அவர்கள் அபேக்ஷிதங்களையுஞ் செய்யாநிற்பர்; அவர்கள் செய்யுமா போலே அவையெல்லாம் செய்யப்போகாதே' என்ன; "வேண்டுவன கேட்டியேல்" என்கிறார்கள். அவர்கள் செய்து போருமவற்றில் இப்போது அதிகரித்த காரியத்திற்கு அபேக்ஷிதமுமாய் ஸ்வரூபத்திற்கு அவிருத்தமுமாயிருக்குமவற்றைக் கேட்கிறுயாகில் என்றபடி.

"ஞாலத்தை எல்லாம்" என்றது "ஞாலமெல்லாம்" என்றபடி; உருபு மயக்கம். அன்றேல், "நடுங்க" என்னும் வினையெச்சத்திற்குப் பிறவினைப் பொருள் கொள்ளவேண்டும்.

திருப்பள்ளி யெழுச்சிக்குச் சங்குகள் வேண்டும்; புறப்பாட்டுக்குப் பறைவேண்டும்; பறை கொட்டிக்கொண்டு புறப்படும்போது எதிரே நின்று திருப்பல்லாண்டுபாட அரையர் வேண்டும்; பாடுவார் எங்கள் முகத்திலே விழித்து நாங்கள் அவர்கள் முகத்திலே விழித்துக் கொண்டு போம்படி மங்களதீபம் வேண்டும்; நெடுந்தூரத்திலேயே எங்கள் திரளைக்கண்டு திலர் வாழும்படி முன்னே பிடித்துக்கொண்டு போவதற்குக் கொடிவேண்டும்; புறப்பட்டுப் போம் போது பனி தலைமேல் விழாதபடி காக்க ஒரு மேற்கட்டி வேண்டும்? ஆகிய இவ்வுபகரணங்களையெல்லாம் நீ தந்தருளவேணு மென்கிறார்கள்.

இதுகேட்ட கண்ணபிரான், 'பெண்காள்! இவ்வளவு பொருள்களை நான் எங்ஙனே சேமித்துத் தரவல்லேன்? இஃது எனக்கு மிகவும் அரிய காரியமாயிற்றே!' என்ன; உன்னுடைய சிறிய வயிற்றிலே பெரிய லோகங்களெல்லாவற்றையும் வைத்து ஒரு ஆலந்தளிரிலே கிடந்து

அகடித்தங்களைச் செய்யவல்ல உனக்குங் கூட அரியதொன்றுண்டோ? என்னுங் கருத்துப்பட "ஆனினிலையாய்!" என விளிக்கின்றனர். (உசு)

500. கூடாரை வெல்லுஞ்சீர்க் கோவிந்தா * உன்றன்னைப்
பாடிப் பறைகொண்டு யாம்பெறு சம்மானம் *
நாடு புகழும் பரிசினால் நன்றாக *
சூடகமே தோள்வளையே தோடே செவிப்பூவே *
பாடகமே யென்றனைய பல்கலனும் யாமணிவோம் *
ஆடை யுடுப்போ மதன்பின்னே பாற்சோறு *
மூடநெய் பெய்து முழங்கை வழிவார *
கூடி யிருந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய். (உஎ)

கூடாரை	தன் அடிபணியாதவர்களை
வெல்லும் சீர்	வெல்லுகின்ற குணங்களையுடைய
கோவிந்தா	கண்ணபிரானே!
உன் தன்னை	உன்னை
பாடி	(வாயாரப்) பாடி
பறை கொண்டு	(உன்னிடத்து யாம் வேண்டுகின்ற) பறையைப் பெற்று
யாம் பெறு சம்மானம்	(பின்னும்) நாங்கள் பெறும் படியான ஸம்மானமாவது :-
நாடு புகழும் பரிசினால்	நாட்டார் புகழும்படியாக
சூடகம்	(கையிலணியும் ஆபரணமான) சூடகங்களும்
தோள் வளை	தோள்வளைகளும்
தோடு	(காதுக்கிடும் ஆபரணமான) தோடும்
செவிப் பூ	கர்ணப்பூவும்
பாடகம்	பாதகடகமும்
என்றனைய பல் கலனும்	என்று சொல்லப்படும் இவ் வாபரணங்கள் போன்ற மற்றும் பல ஆபரணங்களும் (உன்னுடனும் நப்பின்னைப் பிராட்டியினுடனும் பூட்டப்பட.)

யாம் நன்றாக அணிவோம்—,

ஆடை	சேலைகளை
உடுப்போம்	(நீ உடுத்த) உடுத்துக்கொள்வோம்;
அதன் பின்னே	அதற்குப் பின்பு
பால் சோறு	பாற்சோறானது [க்ஷீராந்நம்]
மூட	மறையும்படியாக
நெய் பெய்து	நெய் பரிமாறி
முழங்கை வழி வார	முழங்கையால் வழியும்படியாக (உண்டு)
கூடி இருந்து	(நீயும் நாங்களுமாகக்) கூடியிருந்து
குளிர்ந்து	குளிரவேணும்;

ஏல் ஓர் எம் பாவாய்—.

* * *—கீழ்ப்பாட்டிற் சங்குகளையும் பறைகளையும் பல்லாண்டிசைப்பாரையும் கோலவிளக்கையும் கொடியையும் விதானத்தையும் அருளவேண்டுமென்று அபேக்ஷித்த ஆயர்மாதரை நோக்கிக் கண்ணபிரான், "பெண்காள்! நம்மோடு ஒத்த ஈச்வரனொருவனுண்டாகிலன்றோ நம் பாஞ்சஜந்யத்தோடு ஒத்ததொரு சங்கு உண்டாவது; அன்றியும் 'சங்கங்கள்' என்று பலசங்குகள் வேணுமென்று நின்றீர்கள்; ஒன்றரை தேடினேமாகிலும் பாஞ்ச ஜந்யத்தோடொத்த பல சங்குகள் கிடையாவே; நம் பாஞ்ச ஜந்யத்தையும், * புள்ளரையன் கோயில் வெள்ளை விளிசங்கையும், * ஆநிரையினம் மீளக்குறித்த சங்கத்தையும் தருகிறேன், கொள்ளுங்கள்; இனி, 'பறை' என்றீர்களாகில்; நாம் உலகளந்தபோது ஜாம்பவான் நம் ஜயம் சாற்றின பறையைத் தருகிறேன்; 'பெரும்பறை' என்றீர்களாகில், நாம் இலங்கை பாழாளாகப்படை பொருதபோது நம் ஜயஞ்சாற்றினதொரு பறையுண்டு; அதனைத் தருகிறேன்; அதற்கு மேல் 'சாலப்பெரும்பறை'

•என்றீர்களாகில், மிகவும் பெரிதான பறையாவது—நாம் * பரோர்களெல்லாம் மகிழப் பறை கறங்கக் குடமாடுகிறபோது நம் அரையிலே கட்டியாடினதொரு பறையுண்டு; அதனைத் தருகிறேன், கொள்ளுங்கள்; பல்லாண்டு பாடுகைக்கு உங்களுக்குப் பெரியாழ்வாருண்டு; அவரைப் போலே 'அடியோமோடும் நின்னோடும் பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு' என்று உங்களையும் நம்மையுஞ் சேர்த்துக் காப்பிடுகையன்றியே "பொலிக பொலிக பொலிக!" என்று உங்களுக்கே காப்பிடும் நம்மாழ்வாரையுங் கொண்டுபோங்கள்; இனி, கோல விளக்குக்காக உபயப்பிரகாசிகையான நப்பின்னையைக் கொள்ளுங்கள்; அதற்கு மேல் கொடிவேணுமாகில் "கருளக்கொடியொன்றுடையீர்" என்று நீங்கள் சொல்லும் பெரிய திருவடியைக் கொண்டுபோங்கள்; அதற்குமேல் விதானம் வேணுமாகில், நாம் மதுரையில் நின்றும் இச்சேரிக்கு வரும்போது நம்மேல் மழைத்துளி விழாதபடி * தொடுத்து மேல்விதானமாய்வந்த நம் அனந்தனைக்கொண்டுபோங்கள்; இவ்வளவேயன்றே நான் உங்களுக்குச் செய்யவேண்டுவது" என்ன;

இதுகேட்ட பெண்கள், "பிரானே! மார்கழி நீராடப்போம்போதைக்கு வேண்டியவை இவை; நோன்புநோற்றுத் தலைக்கட்டினபின்பு நாங்கள் உன்னிடத்துப் பெறவேண்டிய பல பஹுமாநவிசேஷங்களுள; அவற்றையும் நாங்கள் பெற்று மகிழும்படி அருள்புரிய வேணுமென்று ப்ரார்த்திக்கும் பாசுரம், இது.

"கூடாரை வெல்லுஞ் சீர்க்கோவிந்தா!" என்னும் ஸ்ரீ—கூடுமவர்கட்குத் தோற்று நிற்குமவனே! என்ற கருத்தை உளப்படுத்தும். ஆச்ரிதர் நிறத்திலே எல்லாப்படிகளாலும் பரதந்த்ரனாயிருப்பவனே! என்கை. ராமாவதாரத்திலே தன்னோடுகூடின ஸுக்ரீவ மஹாராஜர்க்குப் பரவசப்பட்டு வழியல்லாவழியில் வாலியை வதைசெய்தமையும், கிருஷ்ணாவதாரத்தில் பாண்டவர்க்குப் பரவசப்பட்டுப் பொய்சொல்லியும் கபடங்கள் செய்தும் நூற்றுவரை முடித்தமையும் முதலானவை இங்கு அநுஸந்திக்கத்தகும்; இவையெல்லாம் ஆச்ரிதர்க்குத் தோற்றுச்செய்யுஞ் செயல்களிறே. இப்போது இவர்கள் இங்ஙனே விளித்தற்குக் காரணம் யாதெனில்; நீ எங்களுடைய மழலைச் சொற்களுக்குத்தோற்று. நாங்கள் வேண்டினபடியே பறைமுதலியவற்றையெல்லாம் தந்தருளினவனல்லையோ? என்னுங்கருத்தைக் காட்டுதற்கென்க.

[உன்றன்னே இத்யாதி.] இப்படிப்பட்ட உன்னை நாங்கள் நெடுநாள்பட்ட துயர மெல்லாந் தீரப்பாடி, அப்பாட்டிலே தோற்ற உன்னிடத்துப் பறையைப் பெற்று, மேலும் பெறவேண்டிய பரிசுகள் பல உள; அவற்றையும் நீ குறையறப் பெறுவிக்க வேணுமென்கிறார்கள்.

நாடுபுகழும் பரிசினால்=நெடுநாளாக நாங்கள் எல்லாராலும் பட்ட அவமானம் மறக்கும்படியாக, 'ஆ! பெண்கள் கண்ணபிரானைக் குறித்து நோன்பு நோற்றுப் பேறுபெற்றபடி என்னே!' என்று அனைவரும் கொண்டாடும்படி நீ எம்மை பஹுமானிக்க வேணுமென்றபடி.

பஹுமாநிக்கவேண்டியபடியைக் கூறுகின்றனர், சூடகமே என்று தொடங்கி.

பாடகம்—பாதகடகமென்னும் வடசொற்சிதைவு. இன்னவை என்று எடுத்துக் கூறப்பட்ட இவ்வாபரணங்களையும் இவைபோல்வன மற்றும் பல ஆபரணங்களையும் நீ உன்கையால் எங்களுக்குப் பூட்ட, நாங்கள் அணிந்தோமாகவேணும்; அங்ஙனமே ஆடைகளையும் நீ உன்கையால் எங்களுக்கு உடுத்த, நாம் உடுத்தோமாக வேணுமென்கிறார்கள்.

[பாற் சோறு இத்யாதி.] "வையத்து வாழ்நீர்கள்" என்ற பாட்டில் "நெய்யுண்ணேம் பாலுண்ணேம்" என்று ப்ரதிஜ்ஞை பண்ணின இவர்கள் இன்று நோன்பு நோற்று முடிக்கை

யாலே உணவை வேண்டுகின்றன ரென்க. இன்றளவும் ஆய்ச்சிகள் உணவைத் தவிர்த்திருக்கின்றனரே! என்று கண்ணபிரான்முனும் உண்ணுதிருந்தமையால் ஊரில் நெய்பால் அளவற்றுக் கிடக்குமாதலால் "பாற் சோறு மூட நெய் பெய்து முழங்கை வழிவார" என்கிறார்கள்.

"கூடியிருந்து குளிர்ந்து" என்கையாலே, பரிதிருகைக்காக உண்ணவேண்டுகிற தன்று, பிரிந்து பட்ட துயரமெல்லாம் தீருமாறு எல்லாருங் கூடிக்களித்திருக்கை உத்தேச்ய மென்பது போதரும். (உள)

501. கறவைகள் பின்சென்று கானஞ்சேர்ந் துண்போம் *
அறிவொன்று மில்லாத வாய்க்குலத்து * உன்றன்னைப்
பிறவி பெருந்தனை புண்ணியம் யாமுடையோம் *
குறைவொன்று மில்லாத கோவிந்தா * உன்றன்னை
டுறவேல் நமக்கிங் கொழிக்க வொழியாது *
அறியாத பிள்ளைகளோ மன்பிலை * உன்றன்னைச்
சிறுபே ரழைத்தனவுஞ் சீறியருளாதே *
இறைவா நீ தாராய் பறையேலோ ரெம்பாவாய். (உஅ)

குறைவு ஒன்றும் இல்லாத கோவிந்தா ;—

யாம்	நாங்கள்
கறவைகள் பின் சென்று	பசுக்களின் பின்னேபோய்
கானம் சேர்ந்து	காடு சேர்ந்து
உண்போம்	சாரீரபோஷணமே பண்ணித் திரியு மவர்களாயும்,
அறிவு ஒன்றும் இல்லாத	சிறிதளவும் அறிவில்லாத
ஆய் குலத்து	இடைக்குலத்தில்
உன் தன்னை	உன்னை
பிறவி பெறும் தனை புண்ணியம் உடையோம்	(ஸ்ஜாதீயனுகப்) பெறுவதற்குத் தக்க புண்ணியமுடையவர்களாயுமிராநின்றோம் ;
இறைவா	ஸ்வாமியான கண்ணபிரானே!
உன் தன்னோடு உறவு	உன்னோடு (எங்களுக்குண்டான) உறவானது
இங்கு நமக்கு ஒழிக்க ஒழியாது	இங்கு உன்னலும் எம்மாலும் ஒழிக்க ஒழியமாட்டாது,
அறியாத பிள்ளைகளோம்	(லோகமரியாதை ஒன்றும்) அறியாத சிறு பெண்களான நாங்கள்
உன் தன்னை	உன்னை
அன்பிலை	ப்ரீதியிலலே
சிறு பேர் அழைத்தனவும்	சிறிய பேராலே (நாங்கள்) அழைத்ததைக் குறித்தும்
சீறி அருளாதே	கோபித்தருளாமல்
நீ	(ஆச்ரிதவத்ஸலனான) நீ
பறை தாராய்	பறை தந்தருளவேணும்;

எல் ஓர் எம் பாவாய்—.

* * *—"மார்கழி நீராடுவான்" என்று நோன்பை ப்ரஸ்தாவித்து, அந்நோன்புக்கு உபகரணங்களான சங்கு முதலியவற்றையும், நோன்பு தலைக்கட்டின பின்னர் அலங்கரித்துக் கொள்ளுதற்கு உபகரணமான ஆடை ஆபரணங்களையும், ப்ரீதி பரீவாஹமாகக் கூடிக் குளிர்ந்து பாற்சோறுண்கையையும் கீழிரண்டு பாட்டாலும் அபேக்ஷித்த ஆய்ச்சிகளை நோக்கிக் கண்ணபிரான், 'பெண்காள்! உங்களுடைய கருத்து இவ்வளவென்று எனக்குத் தோற்றவில்லை ; நீங்கள் இப்போது அபேக்ஷித்தவற்றையும், இன்னுஞ் சில அபேக்ஷித்தால் அவற்றையும் நான் தரவேண்டில் உங்களுடைய நிலைமையை அறிந்து தரவேண்டியிராநின்றது ; பேறு உங்களதான

பின்பு நீங்களும் சிறிது முயற்சியுடையீர்களா யிருக்கவேண்டும்; அதுக்குடலாக நீங்கள் அநுஷ்டித்த உபாய மேதேனுமுண்டோ?' என்று கேட்டருள, அதுகேட்ட ஆய்ச்சிகள், 'பிரானே! எங்கள் நிலைமையை நீ தான் நேரே கண்ணால் காண்கிறிலையோ? அறிவிலிகளான நாங்கள் எடுத்துக் கூறவேண்டும்படி நீ உணராத தொன்றுண்டோ? எங்கள் நிலைமையை நன்கு உணரா நின்ற நீ "நீங்களனுட்டித்த உபாய மேதேனுமுண்டோ?" என வினவியது மிக அற்புதமா யிருந்ததே!' என்று தங்கள் ஸ்வரூப மிருக்கும்படியை அறிவித்து, "இவ்விடைப்பெண்கள் கேவலம் தயா விஷயமென்று திருவுள்ளம் பற்றி நீ எங்கள் காரியம் செய்தருள வேணும்" என்று விண்ணப்பஞ் செய்யும் பாசுரம், இது.

கீழ், "போற்றியாம் வந்தோம்" "செங்கண் சிறுச் சிறிதே எம்மேல் விழியாவோ?" "உன்னை அருத்தித்து வந்தோம்" என்றிவை முதலான பாசுரங்களிலும் ஆய்ச்சிகள் தங்களுக்குள்ள ப்ராப்யருசியை வெளியிட்டனர்; அந்த ப்ராப்யத்தைப் பெறுகைக்கு உடலாகத் தங்களுடைய ஆகிஞ்சந்யத்தையும் அவனுடைய உபாயத்வத்தையும் வெளியிடுகின்றனர், இப் பாட்டில்.

இவர்கள்--கீழ் "யாம்வந்த காரிய மாராய்ந்தருள்" என்றவாறே அவன் அதனை ஆராயாமல் 'இவர்கள் நெஞ்சில் ஸாதநாம்சமாய்க்கிடப்பன ஏதேனுஞ் சில உண்டோ?' என்று ஆராயத் தொடங்க, அதை யறிந்த ஆய்ச்சிகள் 'நாயனே! நின்னருளே புரிந்திருக்கிற எங்கள் பக்கலில் எடுத்துக் கழிக்கலாம் படியும் சில உபாயங்களுள வென்றிருந்தாயோ? 'இரங்கு' என்றும் 'அருள்' என்றும் நாங்கள் அபேக்ஷித்த அருளுக்கு ப்ரதிபந்தகமாக எங்கள் நிறத்தில் ஸாதநாம்சமொன்றுமில்லையென்று ஸர்வஜ்ஞனறிய அறிவிக்கிறார்கள்.

ஸாத்யோபாயங்களை ஒழித்து ஸித்தோபாயத்தை ஸ்வீகரிக்கு மதிகாரிகளுக்குப் பேற்றுக்குக் கைம்முதலாயிருப்பதொரு நற்கருமமில்லை யென்கையும், மேலும் யோக்யதை இல்லை யென்கைக்காகத் தங்களுடைய அபகர்ஷத்தை அநுஸந்திக்கையும், மூலஸ்ருதமான ஈச்வரனுடைய குண பூர்த்தியை அநுஸந்திக்கையும், ஸம்பந்தத்தை உணருகையும், பூர்வாபராதங்களுக்கு க்ஷாமணம் பண்ணுகையும், உபாய பூதனான ஈச்வரன் பக்கலிலே உபேயத்தை அபேக்ஷிக்கையுமாகிற இவை ஆறும் அதிகார அங்கங்களாதலால் இப்பாட்டில் இவ்வாறும் வெளியிடப் படுகின்றன;

(க) முதலடியில்--பசுக்களின்பின்னே போய்த்திரிந்து சரீரபோஷணம் பண்ணுமவர்களாயிரா நின்றே மென்கையாலே தங்களிடத்தில் நற்கருமமொன்று மில்லாமையும்,

(உ) இரண்டாமடியில்—"அறிவொன்றுமில்லாத ஆய்க்குலத்து" என்கையாலே, மேலும் யோக்யதையில்லை யென்கைக்காகத் தங்களுடைய அபகர்ஷாநுஸந்தானமும்,

(ங) நான்காமடியில்—"குறையொன்றுமில்லாத கோவிந்தா!" என்கையாலே மூலஸ்ருதமான ஈச்வரனுடைய குணபூர்த்தியின் அநுஸந்தானமும்,

(ச) ஐந்தாமடியில் "உறவேல் நமக்கிங்கொழிக்க வொழியாது" என்கையாலே ஸம்பந்த ஸ்மரணமும்,

(ஞ) எழாமடியில்—"சிறியருளாதே" என்கையாலே பூர்வாபராதங்களுக்கு க்ஷாமணமும்,

(சு) எட்டாமடியில்—"இறைவா நீ தாராய்பறை" என்கையாலே உபேயாபேக்ஷையும் விளங்காநின்றமை காண்க.

"குறை வொன்றுமில்லாத கோவிந்தா!" என்றது—உனக்கொரு குறையுண்டாகிலன்றே எங்களுக்கொரு குறையுண்டாவது என்ற கருத்தைக் காட்டும். கோவிந்தா:—நித்யஸூரிகளுடைய ஓலக்கத்திலே அவாப்த ஸமஸ்த காமனுயிருக்கு மிருப்பைத் தவிர்ந்து இடைச்சேரியிற் பசு மேய்க்கப் பிறந்தது குறைவாளரான எங்களை நிறைவாளராக்க வன்றே வென்கை.

இங்குச் "சிறுபேர்" என்றது நாராயண நாமத்தை யென்பர்; இந்திரன் வந்து கண்ண பிரானுக்குக் கோவிந்தாபிஷேகம் பண்ணின பின்பு, அவனை நாராயணனென்கை குற்றமிறே. ஒருவன் முடிசூடப் பெற்றபின்னர், அவனை முன்னைப் பெயரிட்டழைக்கைக்கு மேற்பட்ட குற்ற முண்டோ?

அழைத்தன=='நாராயணன்' என்று ஒருகாற் சொல்லி நில்லாமல், "நாராயணனே நமக்கே பறைதருவான்" என்றும், "காற்றத்துழாய் முடி நாராயணன்" என்றும், "நாராயணன் மூர்த்தி" என்றும் பலகாற் சொன்னமையால், 'அழைத்தன' என்று பன்மையாகக் கூறப் பட்டது.

"உன்றன்னை—அழைத்தனவும்" என்ற உம்மைக்குக் கருத்து—நாங்கள் எங்களுக்குள்ளே ஸ்நேஹ பாரவச்யத்தாலே "பேய்ப்பெண்ணே!, ஊமையோ?, செவிடோ?, நாணுதாய், பண்டே யுன்வாயறிதும்" என்று பலவாருகச் சொல்லிக் கொண்டவைகளையும் பொறுத்தருள வேணு மென்பதாம்.

இங்ஙன் 'பொறுத்தருளவேணும்' என்று ப்ரார்த்திக்க பெண்டிரை நோக்கிக் கண்ண பிரான், 'நம்மாலே பேரும்படியான உறவு கம்மோடு உண்டாகிலும், குற்றத்தைப் பொறுக்க வேணு மென்றலும் பலனை அநுபவிக்குமவர்கள் நீங்களான பின்பு, நீங்களும் ஏதாவதொன்று செய்ததாக வேண்டாவோ? வ்யாஜமாத்ரமாகிலும் வேணுமே; 'இவர்கள் இன்னது செய்தார் கள், இவன் இன்னது செய்தான்' என்று நாட்டார்க்குச் சொல்லுகைக்கு ஒரு ஆலம்பகம் வேண்டுமே!' என்ன; அது கேட்ட ஆய்ச்சிகள், 'எதிர்த்தலையில் ஒன்றையும் எதிர்பாராமல் நீ காரியஞ் செய்தால் உன்னை விலக்குகைக்கு உரியாருண்டோ?' என்னும் கருத்துப்பட 'இறைவா' என்று விளிக்கிறார்கள். (உஅ)

502. சிற்றஞ் சிறுகாலே வந்துன்னைச் சேவித்து * உன்
பொற்றுமரையடியே போற்றும்பொருள்கேளாய் *
பெற்றம்மேய்த்துண்ணுங் குலத்திற் பிறந்(து)த நீ *
குற்றேவலெங்களைக் கொள்ளாமற் போகாது *
இற்றைப்பறைகொள்வா னன்றுகாண் கோவிந்தா *
எற்றைக்குமேழேழ் பிறவிக்கும் • உன்றன்னோடு
உற்றோமேயாவோ முனக்கேநாமாட்செய்வோம் *
மற்றைநங்காமங்கள் மாற்றேலோரெம்பாவாய். (உக)

கோவிந்தா	கண்ணபிரானே !
சிற்றம் சிறுகாலே	விடி காலத்திலே
வந்து	(இவ்விடத்தேற) வந்து
உன்னை சேவித்து	உன்னைத் தெண்டனிட்டு
உன் பொன் தாமரை அடி போற்றும் பொருள்	உனது அழகிய திருவடித் தாமரைகளே மங்களாசாஸநம் பண்ணுவதற்குப் பிரயோஜனத்தை
கேளாய்	கேட்டருளவேணும்;
பெற்றம் மேய்த்து உண்ணும் குலத்தில் பிறந்த நீ	பசுக்களே மேய்த்து உண்ணும் இடைக்குலத்தில் பிறந்த நீ
எங்களே	எங்களிடத்தில்
குற்றேவல்	அந்தரங்க கைங்கரியத்தை
கொள்ளாமல் போகாது	திருவுள்ளம் பற்றுதொழிய வொண்ணாது ;
இற்றை பறை கொள்வான் அன்று காண்	இன்று (கொடுக்கப்படுகிற இப்) பறையைப் பெற்றுக் கொள்வதற்காக நாங்கள் வந்தோமல்லோம் ;
எற்றைக்கும்	காலமுள்ளவளவும்
ஏழ் ஏழ் பிறவிக்கும்	(உன்னுடைய) எவ் வவதாரங்களிலும்
உன்தன்னோடு	உன்னோடு
உற்றோமே ஆவோம்	உறவு உடையவர்களாகக் கடவோம் ;
உனக்கே	உனக்கு மாத்திரமே
நாம்	நாங்கள்
ஆள் செய்வோம்	அடிமை செய்யக் கடவோம் ;
நம்	எங்களுடைய
மற்றை காமங்கள் மாற்று	இதர விஷய விருப்பங்களே தவிர்த்தருளவேணும் ;

எல் ஓர் எம் பாவாய்—.

* * *—கீழெல்லாம் "பறை, பறை" என்று சொல்லி வந்த ஆய்ச்சிகள் அப்பறையின் பொருளை நிஷ்கர்ஷித்து விண்ணப்பஞ் செய்யும் பாசுரம், இது. 'நாட்டார் இசைகைக்காக 'நோன்பு' என்று ஒன்றை வியாஜமாகக் கொண்டு வந்து புகுந்தோம் மத்தனை யொழிய, எங்களுக்கு உத்தேச்யம் உன் திருவடிகளில் நித்திய கைங்கரியம் பண்ணுகைதான்; இனி ஒரு நொடிப் பொழுதும் உன்னைவிட்டு நாங்கள் பிரிந்தோமாக வொண்ணாது: வேறு ஒருவகையான விருப்பமும் எமக்குப் பிறவாவண்ணம் நீயே அருள்புரியவேணும்' என்று காலைக்கட்டுகிறார்கள்.

சிற்றஞ்சிறுகாலை—அருணோதயகாலத்தைக் கூறியவாறு. 'சின்னஞ்சிறுப்பையன், செக்கச் சிவந்த தலை' என்னும் பிரயோகங்களை யொக்கும் இப்பிரயோகம். "சிற்றஞ்சிறுகாலே" என்றும் ஓதுவர்.

"காலைவந்து" என்னுமல், 'சிறுகாலைவந்து' என்னும்ல், "சிற்றஞ்சிறு காலைவந்து" என்றதற்குக்கருத்து.—எங்கள் பருவத்தை ஆராய்ந்தால் பொழுது விடிந்து பதினைந்து நாழிகையாஞ்சும் குளிருக்கு அஞ்சிக் குடிலைவிட்டுக் கிளம்பமாட்டாதா ரென்று தோற்றுகிறது, குளிரை ஒரு பொருளாக நினையாமல் நாங்கள் இத்தனை சிறுகாலையில் வந்தது எவ்வளவு ஆற்றுமையின் கனத்தினாலாகக் கூடுமென்பதை ஸர்வஜ்ஞனான நீயே ஆய்ந்தறிந்துகொள் என்றவாறு.

"உன் பொற்றுமரை யடியே போற்றும் பொருள் கேளாய்" என்றது—நாங்கள் எதை உத்தேசித்து உன்னைக் காப்பிடுகின்றோமோ அந்த உத்தேசத்தை வெளியிடுகின்றோம், கேட்டருள் என்றபடி. அந்த உத்தேசத்தை வெளியிடுகின்றன, மற்ற அடிகள்.

[பெற்றம் மேய்த்து இத்தியாதி.] நித்ய ஸூரிகளின் நடுவே எழுலகும் தனிக்கோல் செல்ல வீற்றிருக்கு மிருப்பைத் தவிர்த்து இவ்விடைக்குலத்தில் நீ வந்து பிறந்ததற்கு ஒரு பயன் வேண்டாவோ? எங்களிடத்தில் நீ கைங்கரியம் கொள்ளாதொழிவாயாகில் 'உன்னுடைய இப்பிறவி பயனற்றதாமன்றே? என்கிறார்கள்.

எங்களே—உரூபு மயக்கம்; ஐந்தாம் வேற்றுமைப் பொருள் கொள்க. "குற்றேவலெங்களைக் கொள்ளாமற் போகாது" என்றவிடத்தில், "கொம்மை முலைகளிடர்தீரக் கோவிந்தற்

கோர்க்குற்றேவல், இம்மைப் பிறவி செய்யாதே இனிப் போய்ச் செய்யுந் தவந்தானென்" என்ற நாச்சியார் திருமொழியை நினைப்பது.

இப்படி, 'எங்களிடத்திற் குற்றேவல் கொள்ளவேணும்' என்று வேண்டின ஆய்ச்சிகளை நோக்கிக் கண்ணபிரான், 'பெண்காள்! அது அப்படியே ஆகிறது; அந்தரங்கமாக ஏவிக்கொள்ளுகிறேன்; நீங்கள் மார்கழி நோட்டத்திற்கு உபகரணமாகக் கேட்டவற்றைத் தருகிறேன், கொண்டுபோங்கள் என்று ஒரு பறையை எடுத்துவரப் புக்கான்; அது கண்ட ஆய்ச்சிகள், 'அப்பா! கருத்தறியாமற் செய்கிறாயே; நாங்கள் 'பறை' என்று சொன்னதற்குக் கருத்துரைக்கின்றோம் கேளாய்' என்று உரைக்கத் தொடங்குகின்றனர் "இற்றைப்பறை" இத்யாதியால்.

இன்று × பறை, இற்றைப்பறை இப்போது நீ எடுத்துக்கொடுக்கும் பறை என்றபடி. கொள்வானன்று—கொள்வதற்காகவன்று; 'நாங்கள் வந்தது' என்று சேஷ பூதணம் செய்க.

எற்றைக்கும்—என்றைக்கு மென்றபடி. "ஏழேழ் பிறவிக்கும்"—"தேவத்வே தேவதே ஹேயம் மநுஷ்யத்வே ச மாநுஷீ" என்றபடி எம்பெருமானுடைய பிறவி தோறும் ஒக்கப் பிறக்கும் பிராட்டியைப்போலே தாங்களும் ஒக்கப்பிறந்து ஆட்செய்ய நினைக்கிறார்கள்.

["மற்றை நங்காமங்கள் மாற்று."] இதற்குப் பலபடியாகப் பொருளுரைப்பர்; கைங்கரியத்தில் ஸ்வப்ரயோஜநத்வ புத்தி நடமாடுகையைத் தவிர்க்கவேணுமென்ற பொருள் முக்கியம். "ப்ராப்ய விரோதி கழிகையாவது—* மற்றை நங்காமங்கள் மாற்றென்றிருக்கை" என்ற முமுக்ஷுப்படி அருளிச்செயல் அறியத்தக்கது. (உக)

வங்கக்கடல்கடைந்த மாதவனைக்கேசவனை *
திங்கள்திருமுகத்துச் சேயிழையார்சென்றிறைஞ்சி *
அங்கப்பறைகொண்டவாற்றை * அணிபுதுவைப்
பைங்கமலத் தண்டெரியற் பட்டர்பிரான்கோதைசொன்ன *
சங்கத்தமிழ்மாலை முப்பதுந் தப்பாமே *
இங்கிப்பரிசுரைப்பா ரீரிரண்டுமால்வரைத்தோள் *
செங்கண் திருமுகத்துச் செல்வத்திருமாலால் *
எங்குந் திருவருள் பெற்றின்புறுவ ரெம்பாவாய் * (கூ)

வங்கம் கடல்	கப்பல்களையுடைய (திருப்பாற்) கடலை
கடைந்த	(தேவர்களுக்காகக்) கடைந்த
கேசவனை	கண்ணபிரானை
திங்கள் திருமுகத்து சே இழையார்	சந்திரன்போன்ற அழகிய முகத்தையும் செவ்விய ஆபரணங்களையுமுடைய ஆய்ச்சிகள்
சென்று	அடைந்து
இறைஞ்சி	வணங்கி
அங்கு	அத்திருவாய்ப்பாடியில்
பறை கொண்ட அ ஆற்றை	(தங்கள்) புருஷார்த்தத்தைப் பெற்ற அந்த வ்ருத்தாந்தத்தை.
அணி புதுவை	அழகிய ஸ்ரீவில்லிபுத்தூரில் (திருவவதரித்த)
பை கமலம் தண் தெரியல் பட்டர் பிரான்	பசுமை பொருந்திய தாமரை மலர்களிலுலான குளிர்ந்த மாலையையுடைய பெரியாழ்வாருடைய (திருமகளார்)
கோதை	ஆண்டாள்
சொன்ன	அருளிச்செய்த

சங்கம் தமிழ்மாலை முப்பதும்	திரள் திரளாக அநுபவிக்க வேண்டிய தமிழ்மாலையாகிய இம் முப்பது பாசுரங்களையும்
தப்பாமே	தப்பாமல்
இங்கு	இங்கிலத்தில்
இ பரிசு	இவ்வண்ணமே
உரைப்பார்	ஓதுமவர்கள்
ஈர் இரண்டு மால் வரை தோள்	பெரிய மலைபோன்ற நான்கு திருத் தோள்களையுடையனும்,
செம் கண் திரு முகத்து	சிவந்த திருக்கண்களையுடையனும்,
செல்வம்	ஐச்வர்யத்தையுடையனும்
திரு மாலால்	ச்ரிய:பதியுமான எம்பெருமானாலே
எங்கும்	எவ்விடத்தும்
திரு அருள்பெற்று	(அவனுடைய) க்ருபையைப் பெற்று
இன்புறுவர்	ப்ரஹ்மாநந்தசாலிகளாவர்.

எம் பாவாய்—.

* * *—முதற்பாட்டில், காலத்தையும், அதிகாரிகளையும், காரியத்தைத் தலைக்கட்டுவிக்கும் கிருஷ்ணனையுங் கொண்டாடிக்கொண்டு நோன்பில் முயன்று, இரண்டாம்பாட்டில், நோன்புக்கு அங்கமாகச் செய்யவேண்டியவற்றையும் தவிரவேண்டியவற்றையும் விவேகித்து, மூன்றும் பாட்டில், நாம் நமக்கு இனிதாக நோன்பு நோற்க அநுமதிபண்ணின நாட்டார்க்கு ஆநுஷங்கிகமாக வர்ஷரூபமான பலன் லபித்திக்குமென்று சொல்லி, நான்காம்பாட்டில், வர்ஷ தேவதையான பர்ஜந்யனை அழைத்து நாடெங்கும் மழை பெய்ய நியமித்து, ஐந்தாம்பாட்டில், தாங்கள் தொடங்குகிற நோன்புக்கு ப்ரதிபந்தகமான பாவங்கள் எம்பெருமானை நாம் வாயினூற்பாடி மனத்தினூற் சிந்திக்கில் தன்னடையே கழியும் என்றறுதியிட்டு, தாங்கள் உத்தேசித்த காரியத்தில் பாகவத ஸமூதாய மனத்தையும் அன்வயிப்பிக்க விரும்பி ஆறுவது பாட்டுத்தொடங்கிப் பதினேந்தாம் பாட்டளவுமுள்ள பத்துப் பாசுரங்களாலே தங்களோடொத்த பருவத்தினரான பெண்களனைவரையு முணர்த்தி, பின்பு எல்லாருமாகத் திரண்டு நந்தகோபர் திருமாளிகையேறப்புகுந்து, பதினாறும் பாட்டில், திருவாசல்காக்கும் முதலியை எழுப்பி, பதினேழாம்பாட்டில், ஸ்ரீ நந்தகோபர், யசோதைப்பிராட்டி, கண்ணபிரான், நம்பி மூத்தபிரான் இவர்களைச் சொல்லும் முறைகள் வழுவாமற் சொல்லி எழுப்பி, பதினெட்டாம் பாட்டில், நப்பின்னைப்பிராட்டியைப் பலவாறுகப் புகழ்ந்து எழுப்பி, பத்தொன்பதாம் பாட்டிலும், இருபதாம் பாட்டிலும், கண்ணபிரானையும் நப்பின்னைப் பிராட்டியையுஞ் சேரவுணர்த்தி, இருபத்தோராம் பாட்டிலும் இருபத்திரண்டாம் பாட்டிலும், தாங்கள் குணங்களுக்குத் தோற்று வந்தபடியையும், அபிமானங்குலைந்து வந்தபடியையும் கடாக்ஷமே தாரகமாக வந்தபடியையும் கண்ணபிரான் ஸந்நிதியில் விண்ணப்பஞ்செய்து, இருபத்து மூன்றும்பாட்டில், எங்களுக்காகப் புறப்பட்டுச் சீரியசிங்காசனத்தில் ஆஸ்தானங் கொண்டருள வேணுமென்று ப்ரார்த்தித்து, இருபத்தினான்காம் பாட்டில், அவ்வாஸ்தானத்திற்கு மங்களாசாஸநம்பண்ணி, இருபத்தைந்தாம் பாட்டில், தாங்கள் அர்த்திகளாய் வந்தமையை விண்ணப்பஞ் செய்து, இருபத்தாறும் பாட்டில், நோன்புக்கு உரிய உபகரணங்கள் இன்னவை இன்னவையென்று சொல்லி அபேக்ஷித்து, இருபத்தேழாம் பாட்டில், நோன்பு நோற்றுத் தலைக்கட்டியபின் பெறவேண்டும் ஸம்மானங்களை அபேக்ஷித்து, இருபத்தெட்டாம் பாட்டில், தங்கள் நினைவிலுள்ளவையும் பலிக்கும்படி தங்கள் சிறுமையையும் அவன் பெருமையையும் அவனுடனுள்ள உறவையுஞ் சொல்லிக்கொண்டு பிழைகளைப் பொறுத்தருளவேண்டி, இருபத்தொன்பதாம்பாட்டில், தங்களுடைய உத்தேச்யத்தை வெளிப்படையாகக்கூறி, இக்கருத்தை நீ நிறைவேற்றுதொழிய வொண்ணாதென்று நிர்ப்பந்தித்துப் ப்ரார்த்திக்க, அவனும் 'அப்படியே செய்கிறேம்' என்று தலைதூக்கப் பெற்று மநோரதம் தலைக்கட்டப் பெற்றபடியைப் பிற்காலத்திலே அக்கருத்து நிலைமையோடே

ஆண்டாள் அருளிச்செய்த இப்பிரபந்தத்தை ஓதுவார் எம்பெருமானுடைய திருவருட்கு இலக்காகி மகிழப்பெறுவர் என்று நிகமிக்கின்றவாறுகச் செல்லும் பாசுரம், இது.

ஆறுயிரப்படி :—"ஸமகாலத்திலே அனுஷ்டித்தாரோபாதியும், அநந்தர காலத்தில் அநுகரித்தாரோபாதியும் பிற்பட்டகாலத்தில் கற்றூர்க்குப் பலிக்குமென்கை. 'கன்றிழந்த தலைநாகு, தோல்கன்றைமடுக்க அதுக்கிரங்குமாபோலே, ஸ்நேஹிகள் சொன்ன இப்பசுரங்கொண்டு புகவே அதில்லாத நமக்கும் பலிக்கும்' என்று பட்டர்."

இப்போது இவ்வாய்ச்சிகள் கடல்கடைந்த விருத்தாந்தத்தைக் கூறியதற்குக் கருத்து யாதெனில் ; தங்களுக்கு ஆச்ரயணீயன் க்ருஷ்ணனுகையாலும், அந்த ஆச்ரயணம் பலபர்யந்த மாவது பிராட்டி ஸம்பந்தத்தாலாகையாலும், அப்பிராட்டியைப் பெறுகைக்கு அவன் பண்ணின வ்யாபாரம் அம்ருத மதநமாகையாலும் அத்தைச் சொல்லுகிறார்கள். அன்றி, ப்ரயோஜநாந்தர பரரான தேவர்கட்காகத் தன் உடம்புநோவக் காரியஞ்செய்தவன் அநந்ய ப்ரயோஜநைகளான நம்முடைய மநோரதத்தைத் தலைக்கட்டுவியாதொழியான் என்பதைப் புலப்படுத்துதற்காகவுமாம்.

ஆச்ரயித்த அதிகாரிகளின் வைலக்ஷண்யஞ் சொல்லுகிறது—இரண்டாமடியில். "நிங்கள் திருமுகத்து" என்று அவர்களுடைய ஸகல கலாபூர்த்தியும், "சேயிழையார்" என்று ஞான விரக்தி பூஷணமுடைமையுங் கூறியவாறு.

"அப்பறைகொண்டவாற்றை"—பறைகொண்ட அவ்வாற்றை ; பறைக்கு முன்புள்ள் அகரச்சுட்டு—ஆற்றை என்பதனோடு கூட்டியுரைக்கப்பட்டது. அன்றியே, [அப்பறை]—நாட்டார்க்காகச்சொன்ன பறையைக்கழித்து, "எற்றைக்கும் ஏழேழ்பிறவிக்கு முன்றன்னோடுற் றோமே யாவோம்" என்று சொன்ன பறையை என்று முரைக்கலாம்.

பொன்னும் முத்தும் மாணிக்கமுமிட்டுச் செய்த ஆபரணம்போலே நாய்ச்சியாரும் பெரியாழ்வாரும் வடபெருங் கோயிலுடையானுமான தேசமாதலால் "அணி புதுவை" எனப்பட்டது. பைங்கமலத்தண்தேரியில்—அந்தணர்கட்குத் தாமரைமாலை அணியுமாறு கூறப்பட்டுள்ளமை உணர்க. பட்டர்பிரான்—ப்ராஹ்மணர்க்கு உபகாரகர் ; பெரியாழ்வார் வேதார்த்தங்களை ராஜகோஷ்டியில் உபந்யஸித்துப் பரதத்வநிர்ணயம் செய்தருளினாதலால், வேதத்தையே செல்வமாகவுடைய அந்தணர்கட்கு உபகாரகராயினர். அன்றியே, "மறை நான்கு முன்னேந்திய பட்டனை" என்று திருமங்கையாழ்வார் எம்பெருமானைப்பட்டங்கட்டி அருளிச்செய்துள்ளமையாலும், பெரியாழ்வார் தம்முடைய பெண்ணை கோதையை எம்பெருமானுக்கு மணம்புணர்வித்து உபகரித்தமையாலும், இக்காரணம்பற்றிப் பட்டர்பிரா னெனப்பட்டாரெனக் கொள்ளுதலும் ஏற்கும்.

கோதை=கோதா என்னும் வடசொல்லிகாரம் ; ஸ்ரீ ஸுக்திகளைத் தந்தவள் என்று அதன்பொருள். சொன்ன—கோபிமாருடைய அவஸ்தையை அடைந்து சொன்ன என்றபடி.

[சங்கத்தமிழ் மாலை.] சங்கம்—ஸங்கமென்ற வடசொற்றிரிபு ; கூட்டமென்று பொருள். "சங்கமிருப்பார்போல் வந்து தலைப்பெய்தோம்" என்றபடி—பஞ்ச லக்ஷங்குடிப்பெண்கள் திரள் திரளாக அநுபவிக்க வேண்டும் ப்ரபந்தமென்று தாற்பரியம்.

[தப்பாமே]—முப்பது பாட்டில் ஒருபாட்டும் நழுவாமல் என்கை. விலையில்லா மணிகளினால் செய்த ஏகாவளியில் ஒருமணி நழுவினாலும் நெடும்பாழாமன்றே ?

[இப்பரிசுரைப்பார்.] திருவாய்ப்பாடியில் பெண்களுக்குக் கிருஷ்ணஸமகாலமாகையாலே க்ருஷ்ண ஸாக்ஷாத்காரங்கிடைத்தது; அந்த ஸாக்ஷாத்காரத்தைப் பிற்காலத்தில் ஆண்டாள் அநுகரித்துப் பெற்றாள்; அவளிலும் பிற்பட்டவர்கள் அப்பேறு பெறவேண்டில் இப்பாசுரங்களின் உக்திமாத்திரமே போருமென்க.

"விடிவோறே எழுந்திருந்து முப்பது பாட்டையும் அநுஸந்தித்தல், மாட்டிற்றிலனாகில் 'சிற்றஞ்சிறுகாலே' என்கிற பாட்டை அநுஸந்தித்தல், அதுவும் மாட்டிற்றிலனாகில் நாம் இருந்த விருப்பை கிணைப்பது" என்று பட்டர் அருளிச்செய்வர். "நாம் இருந்தவிருப்பை" என்றது—நாம் [பட்டர்] இப்பிரபந்தத்தை அநுஸந்தித்து ஈடுபட்டிருந்த விருப்பை என்றபடி.

ஆக, இப்பாட்டால் இப்பிரபந்தம் கற்றார்க்குப் பலஞ்சொல்லித் தலைக்கட்டித்தாயிற்று. இப்பிரபந்தத்தின் பயனைச்சொன்ன இந்தப் பாசுரம்—திருநாமப்பாட்டென்றும், பலச்ருதியென்றுஞ் சொல்லப்பெறும். இது ஆண்டாள் தன்னைப் பிறன்போலக்கூறியது; இது ஒருவகைக் கவிசமயமாதலால் தற்புகழ்ச்சியாகாது; தற்சிறப்புப்பாயிர மெனப்படும்.

இத்திருப்பாவை முப்பதுபாட்டும்—வெண்டளையால் வந்த எட்டடி நாற்சீரொரு விகற்பக் கொச்சகக்கலிப்பா. (கூ-ம்).

பெருமாள் கோயில்
பிரதிவாதி பயங்கரம்
அண்ணங்கராசாரியர் இயற்றிய
திருப்பாவை யுரை
முற்றிற்று

அடிவரவு :—மார்கழி, வையம், ஓங்கி, ஆழி, மாயன், புள்ளும், கீசு, கீழ்வானம், தூமணி, நேற்று, கற்று, கனைத்து, புள், உங்கள், எல்லே, நாயகன், அம்பரம், உந்து, குத்து, முப்பது, ஏற்ற, அங்கண், மாரி, அன்றி, ஒருத்தி, மாலே, கூடாரை, கறவை, சிற்றம், வங்கம், தை.

ஸ்ரீ விலாஸம் பிரஸ், ஸ்ரீரங்கம்.

ஆண்டாள் திருவடிகளே சரணம்.

சூடிக்கொடுத்த நாய்ச்சியார் அருளிச்செய்த

நாய்ச்சியார் திருமொழியின்—தனியன் உரை.

அல்லிநாட் டாமரைமே லாரணங்கி னின்றுணைவி மல்லிநா டாண்ட மடமயில்–மெல்லியலாள்
ஆயர் குலவேந்த னகத்தாள் தென்புதுவை வேயர் பயந்த விளக்கு.

பதவுரை.

அல்லி நாள் தாமரை மேல் ஆர்	இதழ்களையுடைய அப்போதலர்ந்த தாமரைப் பூவில் பொருந்தியிராநின்ற	ஆயர் குலம் வேந்தன்	இடைக் குலத்திற்குத்தலைவனான கண்ணபிரானுடைய
அணங்கின்	தெய்வப்பெண்ணை பெரிய பிராட்டியார்க்கு	ஆகத்தாள்	திருமேனியிற் பொருத்த மூடையளாயும்
இன் துணைவி மல்லிநாடு	இஷ்டஸகியாயும், திருமல்லி நாட்டை	தென் புதுவை வேயர்	அழகிய ஸ்ரீ வில்லிபுத்தூர்க்கு (த்தலைவராய்)
ஆண்ட	(குணத்தாலே ஈடுபடுத்தி) ஆளாநின்ற	[வேயர்குலத்	துதித்தவரான பெரியாழ்வாராலே]
மடம் மயில்	அழகிய மயில்போன்றவளாயும்	பயந்த	பெறப்பட்ட
மெல் இயலாள்	மென்மைத்தன்மை யுடையளுமான ஆண்டாள்,	விளக்கு	விளக்காயு மிராநின்றாள்.

(சில விடங்களில் வழங்கும் மற்றொருதனியன்.)

கோலச் சுரிசங்கை மாயன்செவ் வாயின் குணம்வினவும்
சீலத் தினள்தென் றிருமல்லி நாடி செங்குழன்மேல்
மாலைத் தொடைதென் னரங்கருக் கீயு மதிப்புடைய
சோலைக் கிளியவள் தூயநற் பாதந் துணை நமக்கே.

கோலம் சுரி சங்கை,	அழகையும் சுரியையுமுடைய	மாலைத் தொடை	கலம்பகன் மாலையை
மாயன்	ஸ்ரீபாஞ்ச ஜந்யத்தைநோக்கி கண்ணபிரானுடைய	தென் அரங்கருக்கு	–அழகிய மணவாளனுக்கு
செம் வாயின் குணம்	சிவந்த திருவதரத்தின் அதிசயத்தை	ஈயும் மதிப்பு உடைய	மைர்ப்பிக்கும் படியான மேன்மையுடையளும்
வினவும் சீலத்தினள்	கேட்டுந்தன்மை யுடையவளும்	சோலை கிளி அவள்	சோலையில் வளருங்கிளிபோல் இனிய மொழியையுடையளுமான அவ்வாண்டாளுடைய
தென் திருமல்லிநாடி செழும் குழல் மேல்	தென்திசையிலுள்ள திருமல்லிநாட்டிற்குத் தலைவியும் செழுமைதங்கிய (தனது) திருக்குழற்கற்றையில் (சூட்டப்பெற்ற)	தூய நல் பாதம்	பாவநமும் போக்யமுமான திருவடிகள்
		நமக்கு துணை	நமக்குத் தஞ்சம்.

தனியன் உரை முற்றிற்று.

ஆண்டாள் திருவடிகளே சரணம்

ஸ்ரீ

சூடிக்கொடுத்த நாச்சியார் அருளிச்செய்த—நாச்சியார் திருமொழி.

முதல்திருமொழி—தையோருதிங்கள்.

கண்ணபிரானைப் பெறுகைக்காக மார்கழித்திங்கள் முழுவதும் நோன்பு நோற்ற ஆண்டாள் அவன் கலவியை எதிர்பார்த்தும் அவன் வந்து கலக்கக்காணுமையாலே தரித்திருக்கமாட்டாமல், பிரிந்திருப்பவர்களைக் கூட்டிவிடவல்ல காமனை நோக்கி 'உன்னையும் உன் தம்பியையுந் தொழுகிறேன். நீ. என்னைக் கண்ணபிரானோடு கூட்டிவிட வேணும்' என்று அவன் காலில் விழுந்து இரக்கும்படியைக் கூறும், இத்திருமொழி.

504 தையோருதிங்களுந்தரைவிளக்கித் தண்மண்டலமிட்டுமாசிமுன்னாள் *
ஐயநுண்மணற்கொண்டுதெருவணிந்து அழகினுக்கலங்கரித் தனங்கதேவா *
உய்யவுமாங்கொலோவென்றுசொல்லி உன்னையுமும்பியையுந்தொழுதேன் *
வெய்யதோர்தழலுமிழ்சக்கரக்கை வேங்கடவற்கென்னைவிதிக்கிற்றியே. (க)

அனங்க தேவா	காமதேவனே!
தை ஒரு திங்களும்—தைமாதம் முழுதும்	
தரை விளக்கி	நீ எழுந்தருளவேண்டிய இடத்தைச் சோதித்து (மண்டல பூஜைக்காக)
தண் மண்டலம் இட்டு	குளிர்ந்த (அழகிய) மண்டலாகாரத்தை இட்டு,
மாசி மூன் நாள்	மாசிமாதத்தின் முதற்பக்ஷத்தில்
ஐய நுண் மணல் கொண்டு	அழகிய சிறிய மணல்களினால்
தெரு	(நீ எழுந்தருளும்) வீதிகளை
அழகினுக்கு அணிந்து அலங்கரித்து	அழகுண்டாவதற்காக நன்றாய் அலங்கரித்து,
உய்யவும் ஆம் கொலோ என்று சொல்லி	(காமனைத் தொழுதாகிலும் நாம்) உஜ்ஜீவிக்கலாகுமோ? எனக்கருதி
உன்னையும்	(காமனாகிய) உன்னையும்
உம்பியையும்	உன் தம்பியான சாமனையும்
தொழுதேன்	வணங்கா நின்றேன்;
வெய்யது	(ப்ரதிகூலர் பக்கலில்) உக்ரமானதும்
தழல் உமிழ்	நெருப்புப் பொறிகளை உமிழாநிற்பதுமான
ஓர் சக்கரம்	ஒப்பற்ற திருவாழியாழ்வானை
கை	திருக்கையில் அணிந்துள்ள
வேங்கடவற்கு	திருவேங்கடமுடையானுக்கு
என்னை	என்னை
விதிக்கிற்றி	கைங்கரியம் பண்ணும்படி கல்பிக்கவேணும்;

* * * பிரிந்தாரைச் சேர்ப்பிக்கவல்லவன் மன்மதனென்று கேள்விப்பட்டு, "அவன் காலில் விழுந்தாவது கண்ணபிரானோடு கூடப்பெறுவோம்' எனக் கருதி, அங்ஙனமே அந்த மன்மதனைத் தன் காரியஞ்செய்யும் படிக்கு ஈடாக ஆராதிக்க நினைத்து, அவன் வரவேண்டிய இடங்களையும் தெருக்களையும் பரிஷ்கரித்து அழகிய சிறு மணல்களால் அலங்கரித்து அழகு பெறுவித்து (மண்டலபூஜைக்காக) மண்டலாகாரமான மேடையிட்டு அவனையும் அவன் தம்பியையும் வணங்குவதாகக் கூறும் பாசுரம், இது. "உய்யவுமாங்கொலோ!" என்று ஐயப்படுவதற்குக் காரணம் யாதெனில், ஸ்வரூபநாசத்தை விளைவிக்கவல்ல தேவதையைப் பற்றினமையால், இப்பற்று உஜ்ஜீவந ஹேதுவாமோ? அன்றி, கீழ்விழுகைக்கு ஹேதுவாமோ? என்று நெஞ்சு தளும்புகிறபடி.

"என்று சொல்லி" என்றவிது—வார்த்தைப்பாடு; 'என்று நினைத்து' என்பது அதன் பொருள். 'நீ இங்கிருப்பாயென்று சொல்லி நான் வந்தேன்' என்றால், 'நீ இருப்பாயென்று நினைத்து நான் வந்தேன்' எனப் பொருள் படுதல் காண்க. [உன்னையும் இத்யாதி.] மன்மதனை மாத்திரம் தொழுதாற் போராதோ? கூட அவன் தம்பிக்கும் வந்த வாழ்வு என்? எனில்;

ஆண்டாள் திருப்பாவையில் கண்ணபிரானைப் பற்றும்போது நம்பி மூத்தபிரான் முன்னுகப் பற்றினளாதலால், அந்த வாஸனையாலே இங்கும் மன்மதனை உடன் பிரந்தாலோடு கூட உபாஸிக்கிறபடி. "நதொஹ்ஹ-ஸாஹாயஹனுகூஷ்ணாய" என்றதுங் காண்க.

உம்பி=உன்தம்பி என்பதன் மரூஉ. "காமன்தம்பி சாமன்" என்று பெரியவாச்சான்பிள்ளை உரைத்தருளினர்; அதன்விவரம்; கண்ணபிரானுக்குத் சேஷிமார் பலர் உளரென்றும், அவர்களுள் ருக்மிணிப்பிராட்டியிடத்தில் மன்மதாம்சமாக ப்ரத்யும்நன் பிறந்தனன் என்றும், ஜாம்பவதி தேவியினிடத்தில் 'ஸாம்பன்' என்பவன் பிறந்தனன் என்றும் ஸ்ரீபாகவதத்திற் கூறியுள்ளதனாலும், இங்குச் சாமன் என்றது ஸாம்பனையேயாகையாலும் காமனுக்குச் சாமன் தம்பியாயினனென்க. (வேற்று வயிற்றுத்தம்பி.) மன்மதனைத் தொழுகைக்கு ப்ரயோஜநஞ் சொல்லுகிறது—நான்காமடி. ஸ்ரீ வைகுண்டத்தில் அயர்வறு மமரர்கட்குக் காட்சிகொடுத்துத் தன் செருக்குத் தோற்ற விற்றிருக்குமவன் 'ஸம்ஸாரிகளும் இப்பேற்றைப் பெற்று வாழவேணும்' என்று அங்குநின்றும்போந்து முதற்பயணமெடுத்துவிட்டு, அடியாருடைய விரோதிகளை ஒழிக்கு மியல்வினனை திருவாழியாழ்வானைக் கையிலுடையனுய்க் கொண்டு திருமலையில்வந்து நிற்கிறவனோடே என்னைக் கூட்டவேணுமென்கிறாள்.

[விதிக்கிற்றி.] விதிக்க்+கிற்றி, விதிக்கிற்றி; விகாரப்புணர்ச்சி. இனி, 'கிற்றியே' என்றவிடத்துள்ள ஏ என்பதை அசையாகக்கொள்ளாமல் விளக்குறிப்பாகக்கொண்டு, எம்பெருமானோடு என்னை நீ கூட்டவல்லையோ? என வினவியதாகவும் உரைப்பர். (க)

505 வெள்ளைநுண்மணற்கொண்டுதெருவணிந்து வெள்வரைப்பதன்முன்னந்துறைபடிந்து *
முள்ளுமில்லாச்சுள்ளியேமடுத்து முயன்றுன்னைநோற்கின்றேன்காமதேவா *
கள்ளவிழ்பூங்கணைதொடுத்துக்கொண்டு கடல்வண்ணனென்பதோர்பேரெழுதி *
புள்ளினைவாய்பிளந்தானென்பதோர் இலக்கினிற்புகவென்னையேய்க்கிற்றியே. (உ)

காம தேவா	மன்மதத்தேவே !
வெள்ளை நுண் மணல் கொண்டு	வெளுத்த சிறிய மணல்களைக் கொண்டு
தெரு அணிந்து	வீதிகளை அலங்கரித்து,
வெள்வரைப்ப தன் முன்னம்	கிழக்கு வெளுப்பதற்கு முன்னமே
துறை படிந்து	நீர்த்துறைகளில் முழுகி,
முள்ளும் இல்லா சுள்ளி	(எறும்பு முதலியவை இல்லாத வளவேயன்றியே) முள் ளு மில்லாத சுள்ளிகளை
எரி மடுத்து	நெருப்பிலிட்டு
முயன்று	(இவ்வாருன) ப்ரயத்நங்களைச் செய்து
உன்னை	உன்னைக்குறித்து
நோற்கின்றேன்	நோன்பு நோற்காகின்றேன்; (ஆனபின்பு,)
கள் அவிழ்	தேன் பெருகாநின்றுள்ள
பூ	புஷ்பங்களாகிற
கணை	அம்புகளை
தொடுத்துக் கொண்டு	(வில்லில்) தொடுத்துக் கொண்டு
கடல் வண்ணன் என்பது ஓர் பேர் எழுதி	(கண்ணபிரானுடைய) கடல் வண்ண னென்கிற ஒரு திருநாமத்தை (அம்பிலே) எழுதிக் கொண்டு,
புள்ளினை வாய் பிளந்தான் என்பது ஓர் இலக்கினில்	'பகாஸுரனுடைய வாயைக் கிண்டெறிந்தவன்' என்னும் ஓர் குறியாகிற அக்கடல் வண்ணன் பக்கலில்
புக	(நான்) சென்றுசேரும்படி
என்னை	என்னை
எய்கிற்றி	(நீ) சேர்ப்பிக்கவேணும்.

* * * சிறிய வெண்மணல்களைக் கொண்டு வீதிகளை அலங்கரித்தலும், நாட்காலே நீராடுதலும், ஸமித்துக்களை நெருப்பிலிட்டுத் தீவளர்த்தலும் இக்குக் காமநோன்புக்கு உறுப்பாகச் செய்யுமவையென்க. சுள்ளி—இளவிறகு. முயன்று='எம்பெருமான்றானே வந்து நம்மை ஸ்வீகரிக்க நிற்றல் ஸ்வரூபானுரூபம்' என்று அறுதியிட்டு நிற்கக் கடவளான நான்,

இப்போது அவனைப் பெறுகைக்குச் செய்யும் முயற்சி இது காணுங் என்கை. இம்முயற்சிக்கு ப்ரயோஜநங் கூறுவன, பின்னடிகள். கள்ளவிழ் பூங்கணை = அரவிந்தம், அசோகம், மா, நவமல்லிகை, கருநெய்தல் ஆகிய இவ்வைந்து மலர்களும் மன்மதனுக்கு அம்புகளாம். [கடல் வண்ணன் இத்யாதி.] 'எழுதி' என்றது—அம்பிலே எழுதி என்றவாறுமாம், நெஞ்சிலே எழுதிக்கொண்டு என்றவாறுமாம்; 'அம்பிலே எழுதிக்கொண்டு' என்ற பக்ஷத்தில் 'ச்ரமஹர மான வடிவையுடைய உன்னை ஆண்டாள் ஆசைப்பட்டாள்' என்று அம்பிலே எழுதிக் கொண்டு அவ்வழியாலே அவனுக்கு என்மீது ஆசையை உண்டாக்கிப் பின்னை அவளோடு என்னைச் சேர்க்கவேணுமென வேண்டுவதாகக் கருத்து உணரத்தக்கது; இனி, 'நெஞ்சிலே எழுதிக் கொண்டு' என்ற பக்ஷத்தில், இன்னுமோடு இவளைச் சேர்ப்பிக்க வேணுமென்று ஸங்கல்பித்துக்கொண்டு என்றபடி. "வேள்வரைப்பதன்முன்னம்' என்றது—'வரை வெளுப்பதன்முன்னம்' என்றபடியாய், உதயகிரி வெளுப்பதற்குமுன்னே எனப்பொருள்படுமென்று சிலர் கூறுவர். இலக்கு—ஆண்டாள் தன்னுடைய ஆசை சென்று சேரும்படியான குறிப்பிடம். எய்கிற்றியே?—சேர்ப்பிக்கவல்லையே? என்றுமாம். என்னை என்பதை உருபுமயக்கமாகக்கொண்டு, 'எனக்காக' எனப் பொருள்கொண்டு, எய்கிற்றி—புஷ்பபாணங்களைக் கண்ணபிரான்மீது பிரயோகிக்கவேணும் என்றவாருகவுமுரைக்க இடமுண்டு. (உ)

506 மத்தகன்னறுமலர்முருக்கமலர்கொண்டு முப்போதுமுன்னடிவணங்கி *
தத்துவமிலியென்றுநெஞ்சேரிந்து வாசகத்தழித்துன்னைவைதிடாமே *
கொத்தலர்பூங்கணைதொடுத்துக்கொண்டு கோவிந்தனென்பதோர் பேரேழுதி *
வித்தகன்வேங்கடவாணனென்னும் விளக்கினிற்புகவென்னைவிதிக்கிற்றியே. (ஊ)

(காமதேவா !—;)

நல்நறு மத்த மலர்	நல்ல மணமிக்க ஊமத்த மலர் களையும்
முருக்கமலர் கொண்டு	முருக்கமலர்களையுங் கொண்டு
முப்போதும்	மூன்று காலங்களிலும்
உன் அடி வணங்கி—உன் அடியை வணங்கி	
தத்துவம் இலி என்று நெஞ்சு எரிந்து வாசகத்து அழித்து உன்னை வைதிடாமே	'இவன் பொய்யான தெய்வம்' என்று சொல்லி மனங்கொதித்து (உன் கவரவத்தை) அழித்து வாய்கொண்டு உன்னை நிந்திக்கவேண்டாதபடி
கொத்து அலர் பூ கணை தொடுத்துக் கொண்டு	கொத்துக் கொத்தாக விகளியாநின்ற புஷ்பங்களாகிற அம்புகளை (வில்லில்) தொடுத்துக் கொண்டு
கோவிந்தன் என்பது ஓர் பேர் எழுதி	கோவிந்தநாமத்தை (நெஞ்சில்) தரித்துக் கொண்டு
வித்தகன்	அற்புதனை
வேங்கடம் வாணன் என்னும்	திருவேங்கடமுடையான் என்கிற
விளக்கினில்	விளக்கிலே
புக	(நான்) சேரும்படி
என்னை விதிக்கிற்றி—என்னை நீ செய்யவேணும்.	

* * * மன்மதன் ரஜோகுணப்ரசுரனாதலால் மதகரமான மலர்கள் அவனுக்கு இடத்தக்கவையென்று கொண்டு ஊமத்தை மலர்களையும் முருக்க மலர்களையு மிடுகிறபடி. முப்போது—இரண்டுசந்தியும் ஒரு உச்சிப்போதும். இரண்டாமடியின் கருத்து;—நான் உன் அடி பணிவதற்குப் பலனாக என் மநோரதத்தை நீ நிறைவேற்றுதொழியில், எனது நெஞ்சானது மிகவுங் கொதிப்படைந்து, 'மன்மதன் மெய்யே பலன்தருந் தெய்வமல்லன்; இவன் பொய் சொல்லுமவன்' என்று நாடெங்குமறியும்படி நான் உன்மஹிமையை அழித்து நிந்திக்க நேரிடும்; அப்படிப்பட்ட பரிபவத்தை நீ அடையாமல் தப்பாமல் பேறுபெறுவிக்கப் பாராய் என்கை. தத்துவம்—உண்மை; இலி—இல்லாதவன். வாசகத்து என்றது—நெஞ்சில் நினைக்குமளவேயன்றியே வெளிப்படையாகக் கூறுதலைக்கூறியவாறு. (ஊ)

507 சுவரிற்புராணநின்பேரெழுதிச் சுறவந்கொடிக்களுந்துரங்கங்களும் *
கவரிப்பிணைக்களுங்கருப்புவில்லுங் காட்டித்தந்தேன்கண்டாய்காமதேவா *
அவரப்பிராயந்தொடங்கி யென்றுமாதரித்தெழுந்தவென்தடமூலைகள் *
துவரைப்பிரானுக்கேசங்கற்பித்துத் தொழுதுவைத்தேனெல்லிவிதிக்கிற்றியே. (சு)

புராண	நெடுநாளாக எனக்கு உபகரிக்குமவனே !
காம தேவா	மன்மதனே !
சுவரில்	சுவரிலே
நின் பேர்	உனது பெயர்களை
எழுதி	எழுதி,
சுறவம் நல் கொடிக்களும்	மீன்களாகிற நல்ல த்வஜங்களையும்
துரங்கங்களும்	குதிரைகளையும்
கவரி பிணைக் களும்	சாமரம் வீசுகின்ற பெண்களையும்
கரும்பு வில்லும்	கரும்பாகிற தநுஸ்ஸையும்
காட்டித் தந்தேன் கண்டாய்	(உனக்கு உரியனவாகக்) காட்டிக்கொடுத்தேன்;
அவரப் பிராயம் தொடங்கி	இளம்பருவமே தொடங்கி
என்றும் ஆதரித்து	(அக்கண்ணபிரானையே) எப்போதும்விரும்பி
எழுந்த	கிளர்ந்த
என் நடம் மூலைகள்	எனது பருத்த முலைகளை
துவரைப் பிரானுக்கே	த்வாரகைக்குத் தலைவனான (அக்) கண்ணபிரானுக்கே
சங்கற்பித்து	(அநுபவிக்கத்தக்கவை என்று) ஸங்கல்பித்து
தொழுது வைத்தேன்	(உன்னைத்) தண்டனிடா நின்றேன்; (இந்த மகோரதத்தை)
ஒல்லை விதிக்கிற்றி	(நீ) சீக்கிரமாகத் தலைக்கட்டுவிக்கவேணும்.

* * * கண்ணபிரானைக் காணவேணுமென்ற ஆவலுடைய ஆண்டாள் அவனைக்கண்டால் பின்பு காமதேவனை மறக்கக்கூடுமாதலால், அந்நினைவு மறதிநேரிடாமைக்காக, அந்த மன்மதனைப் பரிஜந பரிவாரங்களுடன் சுவரில் எழுதிவைக்கும்படியைக் கூறுவன, முன்னடிகள். புராண—பிரிந்தவர்களைக் கூட்டவல்லவனைப் புராணங்களில் கூறப்பட்டுள்ளவனே! என்றுங்கூறுவர். சுறவம்—மத்ஸ்யவிசேஷம். காமன் மீனைக்கொடியாக வுடையனுதல் அறிக. துரங்கம்—வடசொல். கவரி—கவரீ என்ற வடசொல்விகாரம். பிணை—பெண்பொதுப் பெயர். கரும்பு×வில், கருப்புவில்; காமனுக்கு 'இக்ஷுதந்வா' என்று வடமொழியிற் பெயர் வழங்குமாறறிக. பின்னடிகளில், கண்ணபிரானை யன்றி மற்றொரு தேவதையை அநுபவிக்கத் தனக்கு ருசியில்லாமையையும், அந்த ருசியைப் பயன் பெறுவிக்கவேண்டுமென்பதையும் கூறுகின்றனள். அவரப்பிராயமென்பதில் அவரமென்றது வடசொல். ஒல்லை—இம்முலைகளின் செவ்வி அழிவதற்கு முன்னமே என்று கருத்து. (சு)

508 வானிடைவாழுமவ்வானவர்க்கு மறையவர்வேள்வியில்வகுத்தவி *
காணிடைத்திரிவதோர்கரிபுகுந்து கடப்பதும்மோப்பதும்செய்வதோப்ப *
ஊனிடையாழிசங்குத்தமர்க்கென்று உன்னித்தெழுந்தவென்தடமூலைகள் *
மானிடவர்க்கென்றுபேச்சுப்படில் வாழகில்லேன்கண்டாய்மன்மதனே. (ரு)

மன்மதனே !—;

வானிடை	ஸ்வர்க்க லோகத்தில்
வாழும்	வாழ்கின்ற
அவானவர்க்கு	விலக்ஷணமான தேவர்களுக்[கென்று]
மறையவர்	ப்ராஹ்மணர்
வேள்வியில்	யாகத்தில்
வகுத்த அவி	கொடுத்த ஹவிஸ்ஸை,
காணிடை திரிவது ஓர் கரி புகுந்து	காட்டிலே திரிகின்ற ஒருகரியானது வந்து
கடப்பதும் மோப்பதும் செய்வது ஒப்ப	கடந்தும் மோந்து பார்த்தும் கெடுப்பதுபோல்,
ஊனிடை	(தனது) திருமேனியில்
ஆழி சங்கு	திருவாழியையும் திருச்சங்கையும் (அணிந்துள்ள)
உத்தமற்கு என்று	புருஷோத்தமனுக்காக
உன்னித்து எழுந்த	ஆதாவுடன் கிளர்ந்த
என் தடம் மூலைகள்	எனது பருத்த முலைகளானவை
மானிடவர்க்கு என்று பேச்சு படில்	(அப்புருஷோத்தமனை யொழிய ச்சில) மநுஷ்யர்களுக்கு (உரியவை) என்கிற் பேச்சு (நாட்டில்) உண்டாகுமேயானால்
வாழ கில்லேன்	நான் உயிர்வாழ்ந்திருக்கமாட்டேன்;

(கண்டாய்—முன்னிலையசை.)

* * * இந்நிலவுலகில் அந்தணர்கள் அனுட்டிக்கும் யாகங்களில், ஹுஂஃபட்ஸ்வாஹா' ஸோமயாஸ்வாஹா' என்று இந்திரன் முதலிய தேவர்கட்கு வகுக்கும் புரோடாசத்தை, மிகவும் அற்பஜந்துவாகிய ஒரு காட்டு நரி கிட்டி, அந்த ஹவிஸ்ஸைக் காலால் கடந்தும் மூக்கால் மோந்தும் நஷ்டமாக்குவதுபோல், கண்ணபிரானுக்காகக் கிளர்ந்தெழுந்த என் கொங்கைகளை மானிடர்க்கு உரியனவாகப் பேசும்பேச்சொன்று இப்பூமண்டலத்தில் கிளம்புமே யாகில் எனது உயிர் உடனே மாய்ந்துவிடும், அப்பேச்சுத்தானே எனக்கு விஷமாகு மென்று காமனை நோக்கிக் கூறுகின்றாள். இதனால், மநுஷ்யனுய்ப் பிறந்த ஒரு பிள்ளைக்கு ஆண்டாளைத் தாரை வார்த்துத் தரலாமென்ற ஒரு பேச்சு ஒரு காபுருஷன் வாயில்வந்தாலும் அது தனக்கு அஸஹ்ய மெனக் கூறும் முகத்தால் கண்ணபிரா னொருவனையே தான் பதியாகப் பெற விரும்புமாற்றைக் கூறியவாறு. அவி—ஹவிஸ் என்ற வடசொல் விகாரம். (நு)

509 உருவுடையாரிலையார்கணல்லார் ஒத்துவல்லார்களைக்கொண்டு * வைகல்
தெருவிடையெதிர்கொண்டு பங்குனிநாள்திருந்தவேநோற்கின்றேன்காமதேவா *
கருவுடைமுகில்வண்ணன்காயாவண்ணன் கருவிளைபோல்வண்ணன் * கமலவண்ணத்
திருவுடைமுகத்தினில்திருக்கண்களால் திருந்தவேநோக்கெனக் கருள்கண்டாய். (சு)

காம தேவா	மன்மதனே !
உரு உடையார்	அழகிய வடிவையுடையராயும்
இளையார்கள்	யௌவநபருவமுடையராயும்
நல்லார்	காமசாஸ்திரத்திற் சொன்ன ஆசாரங்களையுடையராயும்
ஒத்து வல்லார்களை கொண்டு	காமஸூத்ரத்தில் வல்லமையுடையராயுமுள்ளவர்களை முன்னிட்டுக்கொண்டு
வைகல்	நாள்தோறும்
தெருவிடை	(நீ வரும்) வழியிலே
எதிர்கொண்டு	எதிரேசென்று
பங்குனி நாள்	பங்குனிமாதத்துப் பெரிய திருநாளில்
திருந்தவே நோற்கின்றேன்	நல்ல தெளிவுடனே (உன்னைக் குறித்து) நோன்பு நோற்காகின்றேன்,
கரு உடை முகில் வண்ணன்	(நீரைக்) கருவிலேயுடைய மேகம்போன்ற திருநிறமுடையனும்
காயா வண்ணன்	காயாம்பூப்போன்ற திருநிறத்தையுடையனும்
கருவிளை போல் வண்ணன்	காக்கணம் பூப்போல் பளபளப்பையுடையனுமான கண்ணபிரான்
கமல வண்ணம் திரு உடை முகத்தினில் திரு கண்களால்	செந்தாமரை மலரின் நிறம்போன்ற காந்தியையுடைய திருமுக மண்டலத்திலுண்டான திருக்கண்களினால்
எனக்கு	என் விஷயத்தில்
திருந்தவே நோக்க	விசேஷகடாக்ஷம் செய்தருளும்படி
அருள்	நீ கிருபை பண்ணவேணும்.

* * * எம்பெருமானை அடிபணியவேண்டுவார் "வேதம் வல்லார்களைக்கொண்டு விண்ணோர் பெருமான் திருப்பாதம்பணிந்து" என்றபடி வேதவித்துக்களான வைதிகரை முன்னிட்டுப் பணிவதுபோல், ராஜஸதேவதையான காமனைக்குறித்து நோன்பு நோற்கைக்கு ஆண்டாள் சில அதிகாரிகளை முன்னிட்டுக்கொண்டு இழியுமாறுகூறுவன, முன்னடிகள். ஒத்து—ஓதப்படுவது; ப்ரகரணபலத்தினால் காமஸூத்ரமாகிற வேதத்தை இங்குக்கூறும்; அதாவது—வாத்ஸ்யாயந சாஸ்த்ரம். தெருவிடை எதிர்கொள்ளுகை—ஆதராதிசயத்தின்காரியம். திருந்தவே நோற்கின்றேன் என்றது—காமனைத் தொழுகை ஸ்வரூபநாசக மன்றேவென்று இருப்பக் காமல் நோற்கின்றேன் என்றவாறு. கருவுடைமுகில்—நீர் கொண்டெழுந்த காளமேகம். நோக்க × எனக்கு, நோக்கெனக்கு; தொகுத்தல் விகாரம். (சு)

510 காயுடைகேல்லோடுகரும்பமைத்துக் கட்டியரிசியவலமைத்து *
வாயுடைமறையவர்மந்திரத்தால் மன்மதனேயுன்னைவணங்குகின்றேன் *
தேசமுன்னளந்தவன்திரிவிக்கிரமன் திருக்கைகளாலென்னைத்தீண்டும்வண்ணம் *
சாயுடைவயிறுமென்தடமுலையும் தரணியில்தலைப்புகழ்தரக்கிற்றியே. (எ)

மன்மதனே	மன்மதனே !
காய் உடை நெல்லொடு	பசுங்காய் நெல்லும்
கரும்பு	கரும்பும்
அமைத்து	சமைத்து, (அதனோடுகூட)
கட்டி	கருப்புக்கட்டியும்
அரிசி	பச்சரிசியும்
அவல்	அவலும் (ஆகிய இவற்றையும்)
அமைத்து	சமைத்து
வாய் உடை	நல்ல ஸ்வரத்தையுடையராயும்
மறையவர் மந்திரத்தால்	காமசாஸ்திரத்தில் வல்லவர்களாயு மிருப்பவர்களுடைய மந்த்ரத்தினால்
உன்னே	வணங்குகின்றேன்—;
முன்	மூவுலகும் மாவலியால் அபஹரிக்கப்பட்ட காலத்தில்
தேசம்	ஸகலலோகங்களையும்
அளந்தவன்	(திருவடிகளால்) அளந்தருளினவனும்
திரிவிக்கிரமன்	த்ரிவிக்ரமனென்னும் திருநாமமுடையனுமான கண்ணபிரான்
என்னே	என்னுடைய
சாய் உடை	ஒளியையுடைய
வயிறும்	வயிற்றையும்
மென் தடம் முலையும்	மென்மையும் பருமையும் பொருந்தியமுலைகளையும்
திரு கைகளால்	(தனது) திருக்கைகளினால்
தீண்டும் வண்ணம்	ஸ்பர்சிக்கும்படி (பண்ணி)
தரணியில்	(இப்) பூமண்டலத்தில்
தலைப் புகழ்	நிலைநின்ற கீர்த்தியை
தர கிற்றி	(நான்பெறும்படி) தந்தருள வேணும்.

* * * பால்மாறுத பசுங்காய் நெல்லும், கரும்பும், கருப்புக்கட்டியும், பச்சரிசியும், அவலுமாகிற இவை ரஜோகுண ப்ரசுரனை காமதேவனுக்கு ஆமவையென்க. "வாயுடை மறையவர் மந்திரத்தால்" என்றது—காம சாஸ்த்ரமாகிய வாத்ஸ்யாயநத்திற் கூறியமுறை வழுவாதபடி என்றபடி. (எ)

511 மாசுடையுடம்பொடுதலையுலறி வாய்ப்புறம்வெளுத்தோருபோதுமுண்டு *
தேசுடைத்திறலுடைக்காமதேவா நோற்கின்றநோன்பினைக்குறிக்கொள்கண்டாய் *
பேசுவதொன்றுண்டிங்கெம்பெருமான் பெண்மையைத்தலையுடைத்தாக்கும்வண்ணம் *
கேசவனம்பியைக்கால்பிடிப்பாளென்னும் இப்பேறெனக்கருள்கண்டாய். (அ)

தேசு உடை	(பிரிந்தாரைக் கூட்டுகையால் வந்த) புகரையுடையனும்
திறல் உடை	மிடுக்கையுடையனும்
எம் பெருமான்	எமக்கு ஸ்வாமியுமான
காம தேவா	மன்மதனே!,
மாசு உடை	அழுக்குப்படிந்த
உடம்பொடு	உடம்போடேகூட
தலை	தலைமயிரை
உலறி	விரித்துக்கொண்டு
வாய்ப் புறம் வெளுத்து	(தாம்பூல சர்வணமில்லாமையால்) உதடுகள் வெளுக்கப்பெற்று
ஒரு போது உண்டு	ஒருவேளை புஜித்து (இப்படிப்பட்ட வருத்தத்துடன்)
நோற்கின்ற நோன்பினை	(நான்) நோற்கிற நோன்பை
குறிக்கொள்	(நீ எப்போதும்) ஞாபகத்தில் வைக்கவேணும்;
இங்கு பேசுவது ஒன்று உண்டு	இப்போது சொல்லவேண்டுவது ஒன்று உளது; (அதைச் சொல்லுகிறேன் கேள்;)
பெண்மையை	(என்னுடைய) ஸ்த்ரீத்வத்தை
தலையுடைத்தாக்கும் வண்ணம்	ஜீவித்திருக்கும்படி செய்வதற்குறுப்பாக
கேசவன் நம்பியை கால்பிடிப்பாள் என்னும்	'கண்ணபிரானுக்குக் கால்பிடிப்பவள் இவள்' என்கிற
இ பேறு எனக்கு அருள்	இப்புருஷார்த்தத்தை எனக்கு அருளவேணும்; (கண்டாய் - முன்னிலையசை.)

* * * மாசுடை உடம்பொடு=உடம்பில் அழுக்கேறும்படி முழுகாமலிருந்து என்றபடி. கண்ணபிரானோடு கலக்கப்பெறாத சோகத்தினால் உடம்பழுக்குப் போகக் குளிக்கமாட்டாமலென்க. தலையுலறி=குழலில் பூக்களை அணிந்து கொள்ளாமலிருக்கையைக் கூறியவாறு. வாய்ப்புறம்வெளுத்து—வெற்றிலைதின்கைக்கு ப்ரஸக்தியு மில்லாமையால் அதரம் வெளுக்கவேணு மத்தனையிறே. 'ஒருபோதும்' என்றவிடத்து உம்மை—இசைநிறையென்னலாம். 'என்றைக்காவது ஒருநாள் கண்ணபிரான் வந்து கூடுவன் கொல்!' என்னும் நசை

யிலுல் ஒருவேளை உண்டு உயிரைக் காக்கும்படி. குறிக்கோள்='ஆண்டாள் இவ்வளவு வருத்தப்பட்டு ஒரு தோன்பை நோற்றாளே!' என்று உன் நெஞ்சில் எப்போதும் பட்டிருக்கவேண்டுமென்றபடி.

கண்ணபிரானுக்குத் திருவடி வருடும்படியான பாக்கியம் எனக்கு வாய்த்தாலன்றி என் ஸ்த்தை ஜீவியாதென்கை பின்னடிகளின் கருத்து. அவனை முலையாலணைக்க வேண்டுகின்றவிவள் கால்பிடிக்கப்பெறவேண்டுவானென்? எனில்; காலைப் பிடித்துக்கொண்டால் ஆகாதகாரிய மொன்று மில்லையே யென்று நினைவுபோலும். "ஸுநதிகூணீயம் ஹி அரணஸூ ஹணஸூ॥" (அ)

512 தொழுதுமுப்போதுமுன்னடிவணங்கித் தூமலர்தூய்த்தொழுதேத்துகின்றேன் *
பழுதின்றிப்பார்க்கடல்வண்ணனுக்கே பணிசெய்துவாழப்பெறுவிடில்நான் *
அழுதழுதலமந்தம்மாவழங்க ஆற்றவுமதுவுனக்குறைக்குங்கண்டாய் *
உழுவதோரெருத்தினைநுகங்கோடுபாய்ந்து ஊட்டமின்றித்துரந்தாலோக்குமே. (கூ)

மூப் போதும்	(இரண்டு சந்தி, உச்சிப்போது ஒன்று ஆகிய) மூன்று காலங்களிலும்
தொழுது வணங்கி	ப்ரணமபூர்வகமாக (உன்னை) ஆச்ரயித்து
உன் அடி	உன் பாதங்களில்
தூ மலர் தூய்	பரிசுத்தமான புஷ்பங்களைப் பணிமாறி
தொழுது ஏத்துகின்றேன் நான்	ஸேவித்து ஸ்தோத்ரம் பண்ணுகிற நான்
பார் கடல் வண்ணனுக்கே	பூமியைச்சூழ்ந்த கடல் போன்ற திருநிறத்தையுடைய கண்ணபிரானுக்கே
பழுது இன்றி பணி செய்து வாழப் பெருவிடில்	குற்றமொன்றுமில்லாமல் கைங்கரியம் பண்ணி - உஜ்ஜீவியா தொழிவேணில்,
அழுது அழுது அலமந்து	(பின்பு நான்)பலகாலும் அழுது தடுமாறி
அம்மா வழங்க	'அம்மா!' என்று கதறிக் கொண்டுதிரிய,
அது	அப்படி என்னைத் துடிக்க விடுகையாகிற பாவமானது
ஆற்றவும்	மிகவும்
உனக்கு உறைக்கும்	உன்தலைமேல் ஏறும்; (அன்றியும்,என் மநோரதத்தை நீ நிறைவேற்று தொழிவதானது)
உழுவது ஓர் எருத்தினை	ஏருழுகின்ற ஒரு எருதை
நுகம் கொடு பாய்ந்து	நுகத்தடியால் தள்ளி
ஊட்டம் இன்றி துரந்தால் ஒக்கும்	தீனியில்லாமல் - ஓட்டிவிடுவதைப்போலாம்.

* * * ஸாத்விகராயிருப்பார் பகவதாராதநம் பண்ணித் தலைக்கட்டினபிறகு திருவடிகளிலே விழுந்து 'நான் தொடங்கின திருவாராதநத்தைத் தலைக்கட்டினேன், திருவுள்ளத்திற்குப் பாங்கானபடியே போது போக்கியருளவேணும்' என்று ஸ்தோத்ர ரூபமானவற்றை விண்ணப்பஞ் செய்வதுபோல், இவள் மன்மதனிடத்திற் சில விண்ணப்பம் செய்கிறாள். கடையடியின்கருத்து:—நான் உனக்கு இன்றளவுஞ் செய்த பணிவிடைகளை நீ ஏற்றுக்கொண்டு என் காரியத்தைச் செய்து முடிக்காமற் போவது—உழவன் தன் ஜீவநத்துக்காக எருதினிடத்தில் பூர்ணமாக வேலையை வாங்கிக் கொண்டு, பின்பு அதற்குத் தீனி இடாமல் நுகத்தடியால் அடித்துத் தள்ளி ஓட்டுவது போலாம். கோடு—கொண்டு என்பதன் சிதைவு. (கூ)

513 கருப்புவில்மலர்க்கணைக்காமவேளைக் கழலிணைபணிந்தங்கோர்கரியலற *
மருப்பினையோசித்துப்புள்வாய்பிளந்த மணிவண்ணற்கென்னைவகுத்திடென்று *
பொருப்பன்னமாடம்பொலிந்துதோன்றும் புதுவையர்கோன்விட்டுசித்தன்கோதை *
விருப்புடையின்றமிழ்மாலைவல்லார் விண்ணவர்கோனடிகண்ணுவரே. (ங)

கருப்பு ஆல் மலர் கணை காமவேளை	கரும்பாகிற வில்லையும் புஷ்பங்களாகிற அம்புகளையுமுடைய மன்மதனுடைய
கழல் இணை பணிந்து	இரண்டு பாதங்களையும் வணங்கி,
அங்கு ஓர் கரி அலற மருப்பினை ஒசித்து புள் வாய் பிளந்த மணி வண்ணற்கு என்னை வகுத்திடு என்று	'கம்ஸன் மாளிகை வாசலில் (குவலயாபீடமென்ற ஒருயானையானது வீரிடும் படியாக [அதன்] கொம்புகளை முறித்து, பகாஸுரனுடைய வாயைக் கிண்டெறிந்தவனும், நீலமணிபோன்ற நிறத்தனுமான கண்ணபிரானுக்கு என்னை அடிமைப்படுத்த வேணும்' என்று
பொருப்பு அன்ன மாடம்	மலைபோன்ற மாடங்கள்
பொலிந்து தோன்றும்	மிகவும் விளங்காநிற்கப் பெற்ற
புதுவையர் கோன்	ஸ்ரீவில்லிபுத்தூரில் உள்ளவர் கட்கு ஸ்வாமியான
விட்டுசித்தன் கோதை	பெரியாழ்வாருடைய (மகளாகிய) ஆண்டாள் [அருளிச்செய்த]
விருப்பு உடை	விருப்பமடியாகப் பிறந்த
இன் தமிழ் மாலை வல்லார்	இனிய தமிழ்மாலையாகிய இப்பாசுரங்களை ஓதவல்லவர்கள்
விண்ணவர் கோன்	நித்யஸூரிகளுக்குத் தலைவனான எம்பெருமானுடைய
அடி	திருவடிகளை
நண்ணுவர்	கிட்டப்பெறுவர்.

அடிவரவு—தை வெள்ளை மத்தம் சுவர் வான் உரு காய் மாசு தொழுது கருப்பு நாமம்.

இண்டாந்திருமொழி—நாமமாயிரம்.

திருவாய்ப்பாடியில் ஆய்ச்சிகள் சிற்றிலிழைப்பதாகிற லீலையாட்டில் ஊன்றி அந்ய பரத்வம் பாவித்திருக்கையில், கண்ணபிரான் வந்து அந்தச்சிற்றிலையழிக்க முயல, அதைத் தடுத்துப்பேசின ஆய்ச்சிகளின் பாவனையால் இப்பதிகம் அருளிச் செய்யப்படுகிறது.

514 நாமமாயிரமேத்தநின்ற நாராயணனரனே * உன்னை
மாமிதன்மகனைப்பெற்றுல் எமக்குவாதைதவிருமே *
காமன்போதருகாலமென்று பங்குனிநாள்கடைபாரித்தோம் *
தீமைசெய்யும்சிரீதரா எங்கள்சிற்றில்வந்துசிதையேலே. (க)

காமம் ஆயிரம் ஏத்த நின்ற	ஸஹஸ்ரநாமத்தினால் (நித்யஸூரிகள்) துதிக்கும்படி நின்ற
நாராயணனே	நாராயணனே!
நரனே	(சக்ரவர்த்தித் திருமகனாய்ப்பிறந்து) மானிடவுடல்கொண்டவனே!
உன்னை	(ஏற்கனவே தீம்பனை) உன்னை
மாமிதன் மகன் ஆக பெற்றுல்	பர்த்தாவாகவும் பெற்றுல்
எமக்கு வாதை தவிருமே	நாங்கள் நலிவுபடாதிருக்க முடியுமோ?;
காமன் போதரு காலம் என்று	மன்மதன் வருங்காலமென்று
பங்குனி நாள்	பங்குனிமாதத்தில்
கடை	(அவன் வரும்) வழியை
பாரித்தோம்	கோடித்தோம்;
தீமை செய்யும்	தீம்புகளைச்செய்கின்ற
சிரீதரா	சரீயஃபதியான கண்ணபிரானே!
எங்கள் சிற்றில்	நாங்களிழைக்கின்ற மணற்கொட்டகங்களை
வந்து	(நாங்கள் லீலையாடுமிடத்தில்) வந்து
சிதையேல்	நீ அழிக்கவேண்டா.

* * * மாமிதன் மகன் = கணவன்; மாமியாருடைய பிள்ளை தனக்குக் கணவனிறே. வடமொழியில், கணவனை "ஆர்யபுத்ர:" என்ற சொல்லால் வழங்குமாறறிக; ஆர்யனென்று மாமனாரைச் சொல்லிற்றாய், அவருடைய மகனென்று கணவனைச் சொல்லுகிறது. வாதை—'வாயா' என்ற வடசொல் விகாரம். உலகில் எல்லார்க்குந் தீம்பு செய்கின்ற பிரானுடன் தனது மனையிடத்து வந்தால் பொறுக்கவொண்ணாத தீம்பு செய்வனென்பது ப்ரஸித்தமாதலால், அதனை உணர்ந்த இவர்கள், 'ஏற்கனவே தீம்பனை நீ எமக்குக் கணவனுமாகவும் வாய்த்தால்

எங்களால் துன்பம் அநுபவித்து முடியுமோ' என்கிறார்கள். இதுகேட்ட கண்ணபிரான், 'பெண்காள்! நானே தீம்பு செய்பவன்; உங்களை நான் நெஞ்சிலும் நினையாதிருக்க, என் வரவை எதிர்பார்த்துச் சிற்றிலிழைக்கிறீர்கள் நீங்களன்றே?' என்ன; அதுகேட்ட ஆய்ச்சிகள், 'அப்பனே! நீ அங்ஙனம் நினைக்கவேண்டா, நாங்கள் உனக்காகச் சிற்றிலிழைக்கின்றோமல்லோம்; நிகழ்வது பங்குனிமாத மாதலால் காமதேவன் வீதிவலம்வரக் கூடுமென்று அவன் வரும் வீதியிற் சிற்றிலிழைத்து அலங்கரிக்கிறோம் மித்தனை யொழிய உன்னைக் குறித்து ஒன்றுஞ் செய்கின்றிலோம்' என்ன, அதுகேட்ட கண்ணபிரான் 'நீங்கள் சிற்றிலிழைப்பது அங்ஙனார்த்த மாகில், அதனை நான் அழிப்பதும் அங்ஙனார்த்தந்தான்' என்று சொல்லிச் சிற்றிலை அழிக்கப்புக, ஆய்ச்சிகள் 'அழிக்கவேண்டா' என்று விலக்குகின்றனர். (க)

515 இன்றுமுற்றுமுதுகுநோவ இருந்திழைத்தவிச்சிற்றிலை *
நன்றுங்கண்ணுறநோக்கி நாங்கொளுமார்வந்தன்னைத்தணிகிடாய் *
அன்றுபாலகனாகி ஆலிலைமேற்றுயின்றவெம்மாதியாய் *
என்றுமுன்றனக்கெங்கள்மேல் இரக்கமெழாததெம்பாவமே. (உ)

இன்று முற்றும்	இன்றையதினம் முழுவதும்
முதுகு நோவ	முதுகு நோம்படி
இருந்து	உட்கார்ந்துகொண்டு
இழைத்த	ஸ்ருஷ்டித்த
இ சிற்றிலை	இந்தச் சிற்றிலை
நன்றும்	நன்றாக
கண் உற நோக்கி	(நீ) கண் பொருந்தும்படி பார்த்து,
நாம் கொளும் ஆர்வம்தன்னை தணி கிடாய்	நாங்கள் கொண்டிருக்கிற அபிநிவேசத்தைத் தணியச் செய்கிடாய்;
அன்று	மஹாப்ரளயம் வந்தகாலத்தில்
பாலகன் ஆகி	சிசுவடிவு கொண்டு
ஆல் இலை மேல்	ஆலந்தளிரின்மேல்
துயின்ற	கண்வளர்ந்தருளினவனும்
எம் ஆதியாய்	எமக்குத் தலைவனுமான கண்ணபிரானே !
என்றும்	எக்காலத்திலும்
உன் தனக்கு	உனக்கு
எங்கள் மேல்	எம்மிடத்தில்
இரக்கம் எழாதது	தயவு பிறவாமலிருப்பது
எம் பாவமே	நாங்கள் பண்ணின பாவத்தின் பயனேயாம்.

* * * கண்ணபிரானே! நீ ஸர்வசக்தியுக்தனாதலால் எப்படிப்பட்ட அரிய காரியங்களையும் ஒரு ஸங்கல்பமாத்ரத்தினால் வருத்தமறப் படைக்கவல்லை; நாங்கள் * அறிவொன்றுமில்லாத ஆய்க்குலத்திற் பிறந்த அபலைகளாகையாலே இச்சிற்றிலை இழைக்கப்பட்ட பாடு * பன்னியுரைக்குங்காற் பாரதமாம்; இப்படி வருத்தப்பட்டுச் செய்த இச்சிற்றிலை நீகண்ணுறக் கண்ணை ஊன்றவைத்துக் கண்டாயாகில் எங்களுடைய ஆசை ஒருவாறு தணியும் என்று ஆய்ச்சிகள் சொல்லச் செய்தேயும், கண்ணபிரான் அதனைக் கேளாமல் சிற்றிலை அழிப்பதாக முயல, அது கண்ட ஆய்ச்சிகள், 'நாயகனே! பண்டு இப்பாரெல்லாம் நெடுங்கடலேயான காலத்தில் உலகத்தை யெல்லாம் வயிற்றிலே வைத்து நோக்கிப் பாலகனாய் ஆலிலையில் பள்ளி கொண்ட பரமகாருணிகனை நீ மிகவும் எளியரான எங்கள் நிறத்தில் ஒருநாளும் அருள்புரியாதொழிவது நாங்கள் பண்ணின பாபத்தின் பலனேகாணென்று உள் வெதும்புகின்றனர்.

"இன்றுமுற்று முதுகு நோவ" என்பதற்குக் கருத்து-எங்கள் முதுகை நோவு தீரச் சற்றுப் பிடிக்கலாகாதோ? என்பதாம். [நாம் கொளும் ஆர்வத்தன்னைத் தணி.] விஷயம் ஸித்தித்தால் ஆசை நிவர்த்திக்குமாதலால், 'நாம் இழைக்குஞ் சிற்றிலைக் கண்ணபிரான் கடாக்ஷிக்கவேணும்' என்று ஆசைப்பட்டு இவர்களிழைக்குஞ் சிற்றிலில் அவனுடைய கடாக்ஷம் விழுந்தால் இவர்களுடைய ஆசை தீருமென்க. கொளும்—'கொள்ளும்' என்பதன் விகாரம். "நாங்களு மார்வந்தன்னை" என்ற பாடமும் வியாக்கியானத்திற்கு ஒக்கும்; அப்பாடத்தில், நாங்களும் நோக்கி என்று இயையும். அதன் கருத்து; நாங்கள் இச்சிற்றிலை இழைக்கும்

போது இதனைத் தனித்தனி அவயவமாகக் கண்டோமத்தனை யொழிய், ஒரு அவயவியாகக் காணப் பெற்றிலோம்; ஆதலால் எங்களுடைய ஆசை தீரவில்லை; அப்படியிருக்க இதனை நீ அழித்தாயாகில் எங்களுக்குப் பெருத்த குறையாம்; இது ஒரு அவயவியான பின்னர் இத்தை நாங்கள் நன்றாகக் கண்டு மகிழ்ந்து ஆசை தீரும்படி நீ செய்யவேணு மென்பதாம். (உ)

516 குண்டுநீருறைகோளரீ மதயானைகோள்விடுத்தாய் * உன்னைக்
கண்டுமாலுறுவோங்களைக் கடைக்கண்களாலிட்டுவாதியேல் *
வண்டல்நுண்மணல்தெள்ளி யாம்வளைக்கைகளாற்சிரமப்பட்டோம் *
தெண்டிரைக்கடற்பள்ளியாய் எங்கள்சிற்றில்வந்துசிதையேலே. (கூ)

குண்டு	மிக்க ஆழத்தையுடைத்தான
நீர்	கடலிலே
உறை	சாய்ந்தருள்பவனும்,
கோள் அரி !	மிடுக்கையுடைய சிங்கம் போன்றவனும்,
மதம் யானை கோள் விடுத்தாய்	மதம் மிக்க கஜேந்திராழ்வானுக்கு (முதலையால் நேர்ந்த) தன் பத்தைத் தொலைத்தருளினவனுமான கண்ணபிரானே !
உன்னை	(அடியார் தயரைத் தீர்க்கவல்ல) உன்னை
கண்டு	பார்த்து
மால் உறுவோங்களை	ஆசைப்படுகின்ற எங்களை
கடைக் கண்களால் இட்டு	கடைக்கண்களால் பார்த்து
வாதியேல்	ஹிம்ஸிக்கவேண்டா;
யாம்	நாங்கள்
வண்டல்	வண்டலிலுள்ள
நுண் மணல்	சிறிய மணல்களை
வளை கைகளால்	வளையல்கள் அணிந்த கைகளினால்
தெள்ளி	புடைத்து
சிரமப்பட்டோம்	மிகவும் கஷ்டப்பட்டோம் ;
தெண் திரை	தெளிந்த அலைகளையுடைய
கடல்	திருப்பாற்கடலில்
பள்ளியாய்	படுக்கையாகவுடையவனே !

எங்கள் சிற்றில் வந்து சிதையேல்—.

517 பெய்யுமாமுகில்போலவண்ணா உன்றன்பேச்சுஞ்செய்கையும் * எங்களை
மையலேற்றிமயக்க உன்முகம்மாயமந்திரந்தான்கொலோ *
நொய்யர்பிள்ளைகளென்பதற்கு உன்னைநோவநாங்களுரைக்கிலோம் *
செய்யதாமரைக்கண்ணினாய் எங்கள்சிற்றில்வந்துசிதையேலே. (சு)

பெய்யும்	வர்ஷியாநின்றுள்ள
மா முகில்போல் வண்ணா	காளமேகம் போன்ற திருநிறத்தையுடையவனே !
உன் தன்	உன்னுடைய
பேச்சும் செய்கையும்	(தாழ்ந்த) வார்த்தைகளும், (தாழ்ந்த) வியாபாரங்களும்
எங்களை	எங்களை
மையல் ஏற்றி	பிச்சேறப்பண்ணி
மயக்க	அறிவுகெடுக்கைக்கு
உன் முகம்	உன்னுடைய முகமானது
மாய மந்திரம் தான் கொலோ	சுக்குப்பொடியோ ?
நொய்யர் பிள்ளைகள் என்பதற்கு	'அற்பத்தனமுடைய சிறுமியர் இவர்கள்' என்று நீ சொல்லுவாய் என்று பயப்பட்டு
நாங்கள்	நாங்கள்
உன்னை	உன்னைக்குறித்து
நோவ உரைக்கிலோம்	நெஞ்சுபுண்படும்படி (ஒன்றும்) சொல்லுகிறோமில்லை;
செய்ய தாமரை கண்ணினாய்	புண்டரீகாக்ஷனே !

எங்கள் சிற்றில் வந்து சிதையேல்—.

*** பிரானே ! நீ எங்கள் திறத்தில் 'அடியேன், குடியேன்' என்றாற்போலே சொல்லும் அதிவிநய வார்த்தைகளும் கள்ளக்குழைச்சல்களும் எங்களை மிகவும் மயக்குகின்றனவே ; இதற்கெல்லாம் அடி உன் திருமுகமண்டலமிறே ; இப்படிப்பட்ட மயக்கத்தை உண்டுபண்ணுகைக்கு உன் முகம் அம்மான் பொடியோ? என்கிறார்கள் முன்னடிகளால். மாயமந்திரம்—ஆயாஸ்ரம். மந்த்ர முறை உணர்ந்தவர்கள் ஒரு பொடியை மந்திரித்து ஒருவன் மேல் தூவினால் அப்பொடி அவனை மயக்கிவிடுதல்போல, கண்ணபிரானது திருமுகம் இவர்களை மயக்கி விட்டதென்க. (சு)

518 வெள்ளநுண்மணற்கொண்டு சிற்றில்விசித்திரப்பட * வீதிவாய்த்
தெள்ளிநாங்களிழைத்தகோலம் அழித்தியாகிலுமுன்றன்மேல் *
உள்ளமோடியுருகல்லால் உரோடமொன்றுமிலோங்கண்டாய் *
கள்ளமாதவாகேசவா உன்முகத்தனகண்களல்லவே. (சு)

கள்ளம் மாதவா கேசவா	கபடச் செய்கைகளையுடைய கண்ணபிரானே! கேசவனே! நாங்கள்—;
வெள்ளை நுண் மணல் கொண்டு	வெளுத்துச் சிறுத்த மணல் களைக் கொண்டு
வீதிவாய்	தெருவிலே
விசித்திரப்பட	(அனைவரும் கண்டு) ஆச்சரியப் படும்படி
தெள்ளி இழைத்த சிற்றில்	தெளிந்து கட்டின சிற்றிலாகிற
கோலம்	கோலத்தை
அழித்தி ஆகிலும்	- நீ அழித்தாயாகிலும், அதற்காக
உள்ளம்	(எங்களுடைய) நெஞ்சானது
ஓடி	உடைந்து
உருகல் அல்லால்	உருகுமத்தனையொழிய
உன் தன் மேல்	உன்மேலே
உரோடம் ஒன்றும் இலோம்	துளியும் கோபமுடையோமல்லோம்;
உன் முகத்தன	உன் முகத்திலுள்ளவை
கண்கள் அல்லவே	கண்களன்றே!

*** மன்மதன் துச்சீலதேவதை யாகையாலே அவனுக்கு இறையும் நெஞ்சு கோணவொண்ணுதென்று அவன் வரும் வீதியைப் பாங்காக அலங்கரித்தற்பொருட்டு நிலாப் போல் வெளுத்த மணல்களைக் கொணர்ந்து, அவற்றைப் பருக்கைக் கற்களின் கலப்பில்லாமல் புடைத்து நாங்களிழைத்த இக்கோலத்தை நீ அழித்தபோதிலும், ஸர்வஸ்மாத்பரனைவன் இப்படியெல்லாம் செய்யப் பெறுவதே! ஈதென்ன ஸௌசீல்யம்!' என்று நெஞ்சு உருகி நீராய்ப்போமித்தனையொழிய, ரோஷமென்று பேர்படும்படி ஒரு விகாரம் பெற்றோமாகோம்; ஆகிலும் உன்முகத்திலுள்ளவை மெய்யே கண்களாகில் நீ இச்சிற்றிலைச் சிதைக்க ஒருப்பட மாட்டாய்; இச்சிற்றிலை அன்புடன் நோக்குகையன்றே கண்படைத்ததற்குப் பிரயோஜனம் என்கிறார்கள். "வீதிவாய்" = வாய் —ஏழனுருபு. அழித்தி—முன்னிலை யொருமை வினைமுற்று. உரோடம்—ரௌத்ரம். (ரு)

519 முற்றிலாதபிள்ளைகளோம் முலைபோந்திலாதோமை * நாடொறும்
சிற்றில்மேலிட்டுக்கொண்டு நீசிறிதுண்டுதிண்ணைனநாமது
கற்றிலோம் * கடலையடைத்தரக்கர்குலங்களை முற்றவுஞ்
செற்று * இலங்கையைப்பூசலாக்கியசேவகா எம்மைவாதியேல். (சூ)

கடலை அடைத்து அரக்கர் குலங்களை முற்றவும்	சேதுபந்தம் பண்ணி ராக்ஷஸருடைய குலங்களை முழுதும்
செற்று	களைந்தொழித்து
இலங்கையை	லங்காபுரியை
பூசல் ஆக்கிய	அமர்க்களப்படுத்தின
சேவகா	வீரப்பாடு உடையவனே!
முற்றிலாத பிள்ளைகளோம்	முற்றாத இளம் பிள்ளைகளாய்
முலை போந்திலா தோமை	முலையும் கிளரப்பெறாதவெங்களை
நாள் தொறும்	நாள்தோறும்
சிற்றில் மேல் இட்டுக் கொண்டு	சிற்றில் விஷயமாக ஒரு வியாஜத்தை வைத்துக்கொண்டு
நீ சிறிது உண்டு	- நீ செய்யுஞ் செய்திகள் சில உள;
அது திண்ணைன நாம் கற்றிலோம்	அவற்றை நாங்கள் அழகிதாக அப்யஸித்தோமல்லோம்;
எம்மை வாதியேல்	- எங்களை (நீ) துன்பப்படுத்த வேண்டா.

*** 'கண்ணபிரான் இன்னது செய்தான்' என்று பிறர்க்குச் சொல்லமுடியாதபடி அவன் சில குறும்புகளைச் செய்ய, அது கண்ட ஆய்ச்சிகள், 'அப்பா! நெஞ்சில் நினைத்தபடி சில செய்புமவ்வளவேயோ வேண்டுவது? எங்கள் பருவத்தைச் சிறிது ஆராயவேண்டாவோ? ("முலையோ முழுமுற்றும் போந்தில" என்றபடி) * கொங்கை இன்னுங் குவிந்தெழுந்திலாத எங்கள் திறத்து நீ செய்யும் குறும்புகளுக்கு நாங்கள் கருத்து அறியும்படி குருகுலவாஸம் பண்ணி ஒன்றுங் கற்றிலோம்; நீயோ ஒரு பெண்பெண்டாட்டிக்காக வானரப்படை நிரட்டிக் கடலில் அணைகட்டி அரக்கர் குலங்களை வேரற வொழித்த மஹாவீரனாயிராநின்றாய்;

அபலைகளான நாங்கள் உன்னுடைய பலத்திற்கு ஈடுகொடுக்கவல்லோமல்லோம்; ஆகையால், பிரானே! எம்மை நீ நலியாதே கடக்கப்போகவேணு மென்கிறார்கள். வாதியேல்—வாயிலேல். (சு)

520 பேதநன்கறிவார்களோடு இவைபேசினல்பெரிதின்சுவை *
யாதுமொன்றறியாதபிள்ளைகளோமை நீநலிந்தேன்பயன் *
ஓதமாகடல்வண்ணு உன்மணவாட்டிமாரோடுசூழறும் *
சேதுபந்தந்திருத்தினாய் எங்கள்சிற்றில்வந்துசிதையேலே. (எ)

பேதம்	(உன் பேச்சின்) வாசியை
நன்கு அறிவார்களோடு	நன்றாக அறிய வல்லவரோடு
இவை	இப்பேச்சுக்களை
பேசினல்	பேசினால்
பெரிது இன் சுவை—மிகவும் போக்கியமாயிருக்கும்;	
யாது ஒன்றும் அறியாத	எவ்வகையான பாவத்தையு மறியமாட்டாத
பிள்ளைகளோமை	சிறுப் பெண்களான எங்களை
நீ நலிந்து என் பயன்	நீ வருத்த முறுத்துவதனால் என்ன பயன்
ஓதம்	திரைக்கிளப்பத்தையுடைய
மா கடல்	பெரிய கடலிலையொத்த
வண்ணு	திருநிறத்தையுடைய கண்ண [பிரானே !
சேது பந்தம் திருத்தினாய்	திருவணை கட்டினவனே !
உன் மணவாட்டி மாரொடு சூழறும்	உன்னுடைய பத்தினிகளின் மேல் ஆணை,
	எங்கள் சிற்றில் வந்து சிதையேல்—.

* * * கண்ணபிரான் ஆய்ச்சிகளை நோக்கிக் குறும்பாகச் சில வார்த்தைச் சொல்லிச் சிற்றிலழித்து நலிய, அதுகண்ட அவர்கள், 'அப்பனே! வார்த்தைகளின் வாசியை அறிய வல்லவர்களிடத்தில் இக்குறும்பு வார்த்தைகளைச் சொன்னால், நீ ஒன்று சொல்ல, அவர்கள் ஒன்பது சொல்ல, மேன்மேல் வார்த்தைகள் பெருகிப் பரமரஸமாய்ச் செல்லும்; கபடமற்ற வார்த்தைகளின் கருத்தையுமறியமாட்டாத எங்கள் திறத்தில் அப்பேச்சுக்களைப் பேசி நலிவதனால் உனக்கு என்ன பயனுண்டு? என்று சொல்லச் செய்தேயும் அவன் தவிராமல் மேன் மேலுஞ் சிற்றிலைச் சிதைக்கப் புக, 'உன் பெண்டாட்டிகளின் மேலாணை, எம்மை நீ நலியலாகாது' என்கிறார்கள். (எ)

521 வட்டவாய்ச்சிறுதூதையோடு சிறுசுளகும்மணலுங்கொண்டு *
இட்டமாவிளையாடுவோங்களைச் சிற்றிலீடழித்தென்பயன்? *
தொட்டுதைத்துநலியேல்கண்டாய் சுடர்ச்சக்கரங்கையிலேந்தினாய் *
கட்டியுங்கைத்தலின்னுமை அறிதியேகடல்வண்ணனே. (ஏ)

சுடர் சக்கரம் கையில் ஏந்தினாய்	ஒளிபொருந்திய ஸுதர்சந நாழ்வானை திருக்கையில் தரித்திரா நின்றுள்ள கண்ணபிரானே !
கடல் வண்ணனே !—;	
வட்டம் வாய் சிறு தூதையோடு சிறு சுளகும் மணலும் கொண்டு—மணலையுங்கொண்டு வந்து	வட்டவடிவான வாயையுடைய சிறிய பானையோடு சிறிய மூச்சிலையும்
இட்டமா விளையாடுவோங்களை	இஷ்டப்படி விளையாடுகிற எங்களுடைய
சிற்றில் ஈடழித்து	சிற்றிலை மறுபடியும் உபயோகப்படாத படி அழிப்பதனால்
என் பயன் ?—;	
தொட்டு	கையால் தொட்டும்
உதைத்து	காலால் உதைத்தும்
நலியேல் கண்டாய்	ஹிம்ஸியாதொழிகிடாய்;
கைத்தால்	நெஞ்சு கசத்துப்போனால்
கட்டியும்	கருப்புக்கட்டியும்
இன்னுமை அறிதியே	ருசியாது என்பதை அறிவாயன்றே ?

* * * சிற்றிலிழைப்பதற்கான உபகரணங்களைக் கொண்டு விளையாடுகிற வெங்களுடைய சிற்றிலைச் சிதைப்பதனால் உனக்கு என்ன பயன்? என்றதைக் கேட்ட கண்ணபிரான், ஆய்ச்சிகாள்! இச்சிற்றிலை நான் காலாலும் கையாலும் உதைத்துச் சிதைப்பதனால் எனக்கு ஒரு பயனுமில்லை யென்பது மெய்யே; உங்களைத் தீண்டுவதன்றே எனக்குப் பிரயோஜனம்'

என்று அவர்களைத் தீண்ட; அது கண்ட ஆய்ச்சிகள், 'ஹரி ஹரி! நீ எத்தனை ஸ்த்ரீகளைத் தீண்டி வந்தாயோ தெரியாது, எங்கள்மேல் தீண்டாதே கடக்க நில்' என்ன; அதுகேட்ட கண்ணன் 'நான் ஸர்வேச்வரனல்லேனே? என்னுடைய ஸ்பர்சம் உங்களுக்கு நலிவாய் விட்ட தோ? நான் ஈச்வரனென்பதில் உங்களுக்கு ஸம்சயமுண்டாகில் என் திவ்யாயுதத்தைப் பாருங்கள்" என்று திருக்கையிற் சக்கரந் தோற்ற நின்றான்; அது கண்ட ஆய்ச்சிகள் 'நீ மெய்யே ஈச்வரனுங்கிடாய்; இப்போது எங்கள் நெஞ்சு உன்மேல் வெறுப்புண்டிருப்பதால் உன்மீது ஏமக்கு போக்யதை தோற்றவில்லை; நாக்கு கசத்துப்போனால் கருப்பஞ்சாறும் இனிதாகா தென்னுமிடம் உனக்குத் தெரியுமன்றே? என்கிறார்கள். "கடல்வண்ணனே" என விளித்தற்குக் கருத்து:—கண்டுவிடு மதுக்கு மேற்படச் செய்யலாவதில்லை, ஒருகை யள்ளி முகத்தைக் கழுவுதல் குடித்தல் செய்யவொண்ணுதே கடலில் நீர்; அப்படியே யன்றே நீயும் என்கை. ()

522 முற்றத்தூடுபுகுந்து நின்முகங்காட்டிப்புன்முறுவல்செய்து *
சிற்றிலோடெங்கள்சிந்தையுஞ் சிதைக்கக்கடவையோகோவிந்தா *
முற்றமண்ணிடந்தாவி விண்ணுறநீண்டளந்துகொண்டாய் * எம்மைப்
பற்றிமெய்ப்பிணக்கிட்டக்கால் இந்தப்பக்கம்நின்றவரேன்சொல்லார். (கூ)

கோவிந்தா	கண்ணபிரானே !
முற்ற மண் இடம் தாவி விண் உற நீண்டு அளந்து கொண்டாய்	(ஒரு திருவடியினால்) பூமண்டலம் முழுவதையும் தாவியளந்து பரமபதத்தளவும் ஓங்கி (மற்றொரு திருவடியினால் மேலுலகங்களை) அளந்து கொண்டவனே !
முற்றத்தூடு	(நாங்கள் ஏகாந்தமாக விளையாடுகிற) முற்றத்திலே
புகுந்து	நுழைந்து
நின் முகம் காட்டி	உனது திருமுகத்தை (எங்களுக்குக்) காண்பித்து
புன் முறுவல் செய்து	புன் சிரிப்புச்சிரித்து
சிற்றிலோடு எங்கள் சிந்தையும்	எங்கள் சிற்றிலையும் நெஞ்சையும்
சிதைக்க கடவையோ	அழிக்கக் கடவாயோ ? (அவ்வளவோடும் நில்லாமல்,
எம்மைப்பற்றி	எங்களோடே
மெய்ப் பிணக்கு இட்டக்கால்	கலவியும் ப்ரவ்ருத்தமானால்
இந்த பக்கம் நின்றவர்	அருகில் நிற்பவர்கள்
என் சொல்லார்	என்ன சொல்லமாட்டார்கள்.

* * * கண்ணபிரானுடைய கண்வட்டத்திலே நின்றால் அவன் பொறுக்கொணாத் தீமைகளைச் செய்கின்றனென்றஞ்சி அவனுக்குத் தெரியாதபடி ஒருவரொருவராகப்போய் ஒரு முற்றத்திற்புக்குக் கதவுகளை அடைத்துக் கதியங்களையும்போட்டு இவனுக்குப் புகுரவழி யில்லாதபடிபண்ணி விளையாடா நின்றார்கள் ஆய்ச்சிகள்; அம்முற்றத்திலே தங்கள் நிரளின் நடுவே கண்ணபிரான் வந்துநிற்கக் கண்டார்கள்; 'நாம் இவனுக்குத் தெரியாமல் வந்தோ மென்று நினைத்திராநின்றோம்; அழகிதாயிருந்தது; இவன் நமக்கும் முற்பட்டுவந்து நின்றான்; என்செய்தோமாறோம்! இவன்கையிலே அகப்பட்டோமே! இனி இவனுக்குத் தென்பட்டோ மாகாமல் கழியுப்விரகு ஏதோ!' என்று சிந்தித்து ஒரு போக்குக்காணாமல் வெள்கிக் கவிழ் தலையிட்டு நின்றார்கள். [நின்முகங்காட்டி.] இவன் தனித்தனியே ஒவ்வொரு ஆய்ச்சி யிடத்துஞ் சென்று, 'நங்காய்! எங்ஙனே இங்குவந்தாய்? கால்கள் நோகின்றனவோ? நானும் நீயுங் கலந்துவரப் பெற்றிலோமே!' என்றுற்போலே சிலவற்றைச் சொல்லி முகத்தை விளங்கக்காட்டினனென்க. அங்ஙனஞ் சொல்லக்கேட்ட ஆய்ச்சிகள் 'நமது எண்ணம் வீணா யொழிந்ததே!' என்று தங்கள் தோல்வியை நினைத்து லஜ்ஜிக்க, இவன் புன்முறுவல்செய்தான்.

'நாம் இவனுக்குத்தோற்று வெட்கமடைகின்றமையை இவன், அறியலாகாது; அந்ய பாதையைக் காட்டுவோம்' என்று அங்கேயிருந்து சிற்றிலழைக்கப் புக்கார்கள். அதுகண்ட கண்ணபிரான் 'இங்கே நம் கண்வட்டத்திலே இவர்கள் அந்யபரராவதென்!' என்று சிலிட் கென்று, நினைக்கைக்கு நெஞ்சுங் கூடாதே வியாபரிக்கைக்குக் கையுங்கூடாதபடியாகச் சில வற்றைச் செய்தான்; [சிற்றிலோடு இத்யாதி.] உனக்குப் பகுமேய்க்கையன்றே தொழில்;

பெண்களோ நலிகையும்பணியோ? என்கிறார்கள். 'கோவிந்தா! என்ற விளியில்நோக்கு. 'இனி கேட்கவேண்டிய பழியொன்றுமில்லை; எல்லாங் கேட்டாயிற்று; ஆவது ஆயிடுக' என்று பெண்களின் பரியட்டங்களைக்கிழித்து, அவர்கள் உடம்புகொண்டு தாய்மார்முன்பு நிற்க வொண்ணாதபடி பண்ணினன்: "எம்மைப்பற்றி மெய்ப்பிணக்கிட்டக்கால் இந்தப்பக்கம் நின்றவர் என் சொல்லார்" என்கிறார்கள். 'என்னுடே அணைகை உங்களுக்கு அஸஹ்யமாயிருந்ததோ? யோகிகளும் நம் உடம்புடனே அணையவன்றோ ஆசைப்படுவது' என்று கண்ணபிரான் கூற, 'உன்னோடு ஸம்ச்லேஷிக்கை எங்களுக்கு மிகவும் அழகிதே; ஆனாலும் அருகுள்ளார்க்கு அஞ்சவேண்டுமே' என்கிறார்கள். 'இத்தால் ஸம்ச்லேஷம் ப்ரவ்ருத்தமானபடி சொல்லுகிறது" என்பர் பெரியவாச்சான்பிள்ளை. (கூ)

523 சீதைவாயமுதமுண்டாய் எங்கள்சிற்றில்நீசிதையேலென்று *
வீதிவாய்விளையாடும் ஆயர்சிறுமியர்மழலைச்சொல்லை *
வேதவாய்த்தொழிலார்கள்வாழ் வில்லிபுத்தூர்மன்விட்டுசித்தன்றன் *
கோதைவாய்த்தமிழ்வல்லவர் குறைவின்றிவைகுந்தஞ்சேர்வரே. (ம)

சீதை வாய் அமுதம் உண்டாய் — பிராட்டியினுடைய அதராம்ருதத்தைப் பருகினவனே!
எங்கள் சிற்றில் நீ சிதையேல் என்று — நாங்கள் இழைக்குஞ் சிற்றிலை நீ அழிக்காதொழிய வேணும் என்று
வீதி வாய் விளையாடும் ஆயர் சிறுமியர் மழலைச் சொல்லை — வீதியிலே விளையாடாநின்ற இடப்பெண்களுடைய இளம் பருவத்திற்குரிய மெல்லிய சொல்லை, (உட்கொண்டு)
வேதம் வாய் — வேதத்தை உச்சரிக்கின்ற வாயையுடையவர்களும்
தொழிலார்கள் — வைதிகத்தொழில்களைச் செய்பவருமான பரமைகாந்திகள்
வாழ் — வாழுமிடமான
வில்லிபுத்தூர் — ஸ்ரீ வில்லிபுத்தூருக்கு
மன் — தலைவரான
விட்டு சித்தன் தன்- — பெரியாழ்வாருடைய (திருமகளான)
கோதை — ஆண்டாளுடைய
வாய் — திருவாக்கில் நின்று மவதரித்த
தமிழ் — தமிழ்ப்பாசுரங்களை
வல்லவர் — ஓதவல்லவர்கள்
குறைவு இன்றி — குறைவில்லாமல்
வைகுந்தம் சேர்வர் — பரமபதஞ் சேரப்பெறுவர்.

அடிவரவு:—நாமம் இன்று குண்டு பெய் வெள்ளை முற்றில் பேதம் வட்ட முற்றச் சீதை கோழி. (ம)

மூன்றாந்திருமொழி—கோழியழைப்பதன்முன்னம்.

கோபீவஸ்த்ரா பஹாரசரிதையின் அநுபவம்.

524 கோழியழைப்பதன்முன்னங் குடைந்துநீராடுவான்போந்தோம் *
ஆழியஞ்செல்வனேழுந்தான் அரவணைமேற்பள்ளிகொண்டாய் *
ஏழைமையாற்றவும்பட்டோம் இனியென்றும்பொய்கைக்குவாரோம் *
தோழியும்நானுந்தொழுதோந் துகிலேப்பணித்தருளாயே. (க)

அரவு அணை மேல் பள்ளி கொண்டாய் — திருவனந்தாழ்வானாகிற படுக்கையின்மேலே திருக்கண் வளர்ந்தருளுமவனே!
குடைந்து நீர் ஆடுவான் — (குளத்தில்) அவகாஹித்து நீராடுவதற்காக
கோழி அழைப்பதன் முன்னம் போந்தோம் — கோழி கூவுதற்கு முன்னம் (இவ்விடம்) வந்தோம்; (இப்போதோ வென்றால்,)
செல்வன் — (ஸ்ரீமந்நாராயணன் தன்னிடத்து நித்யவாஸம் பண்ணப் பெறுகையாகிற) செல்வத்தையுடையனை
ஆழியன் — ஸௌர்யன்
எழுந்தான் — உதித்தான்
ஆற்றவும் ஏழைமைபட்டோம் — (நாங்கள் உன்னாலே) மிகவும் இளிம்புபட்டோம்;
இனி என்றும் பொய்கைக்கு வாரோம் — இனிமேல் என்றைக்கும் குளத்திற்கு நாங்கள் வருவதில்லை;
தோழியும் நானும் தொழுதோம் — தோழியும் நானுமாக (உன்னை) ஸேவியாகின்றோம்;
துகிலே பணித்தருளாய் — (எங்களுடைய) சேலைகளைத் தந்தருளவேணும்.

கண்ணபிரான் இரவின் முற்கூறெல்லாம் பெண்களோடே புணர்ந்துகிடந்து பிற்கூற்றில் உறங்குமவனுதலால், ஸூர்யோதயமளவும் அவன் கண்விழியான் என்று நினைத்து இவ்வாய்ச்சிகள் கோழிகூவுவதற்கு முன்னமே குளத்தில் நீராடிமீள்வதாக வந்தார்கள்; இவர்கள் நினைத்தது ஒன்றாய், முடிந்தது வேறாய்த்தலைக்கட்டிற்று. இவர்கட்குந் தெரியாமல் கண்ணன் அங்கு வந்து சேர்ந்தனனுதலால் அவனுலே தாங்கள் மிகவும் ஏழைமைப்பட்டு ஸூர்யோதயமாகியும் தாங்கள் வந்தகாரியம் தலைக்கட்டப் பெறுமையைக்கண்டு வருந்திக் கூறுகின்றனர், அப்பா! இன்று நாங்கள் குளத்திற்குவந்து பட்டபாடு போதும்; இனி ஏழேழ்பிறவிக்கும், இக்குளத்தின்முகத்திலும் நாங்கள் விழிப்பதில்லை' என்கிறார்கள். இவர்கள் குடைந்து நீராடுவான் போந்தோம்' என்றவாறே, தமிழர் கலவியைச் சூனியாடலாகச் சொல்லும் முறைமையை உணர்ந்த கண்ணபிரான் தானும் நெஞ்சில் ஒன்றை நினைத்து 'அங்ஙனே நீராடுகைக்குத் தடையென்?' என்ன; அவனதுகருத்தை அறிந்த ஆய்ச்சிகள், 'பிரானே! அந்த ஆசைக்கு இடமறும்படி பாழுஞ்சூரியன்வந்து தோன்றிவிட்டனனே!' என்றனரென்க. செல்வன் என்றதை விபரீதலக்ஷணையாகக் கொள்வது பொருந்தும். எனவே, "செல்வனழியன்" என்றது—பாழுஞ்சூரியன் என்றபடி. சூனியாடலுக்கு விரோதியாகவந்து தோன்றினபடியால் வசவுக்கு உடலாயிற்று. [ஏழைமை ஆற்றவும் பட்டோம்] நீ நெடுநாள் எங்கள் கையில்பட்டதெல்லாம் ஒருகூனத்தில் நாங்கள் உன்கையிலே பட்டோமென்கிறார்கள். இங்ஙனே இவர்கள் பரிதாபந்தோற்றச் சொல்லச்செய்தேயும், அவன் 'இன்று நீங்கள் என்னை வஞ்சித்துவந்த குற்றந்தீர ஒரு அஞ்ஜலிபண்ணுங்கள்' என்றான்; ஒருகையாலே தொழுதார்கள். 'எகஹஸ்தப்ரணமம் மஹாபசாரகோடியில் கணக்கிடப்பட்டுள்ளது; இரண்டுகையாலும் தொழுமின்' என்றான். இவர்கள் தாம் துகிலிழந்திருப்பதனால் அங்ஙன் செய்யமாட்டாதே இருவரிருவராய்ச் சேர்ந்து தொழுகிறார்கள்-"தோழியும்நானுந் தொழுதோம்" என்கிறார்கள்.()

525 இதுவேன்புகுந்ததிங்கந்தோ இப்போய்கைக்கெவ்வாறுவந்தாய் *
மதுவின்றுழாய்முடிமாலே மாயனேயெங்களமுதே *
விதியின்மையாலதுமாட்டோம் வித்தகப்பிள்ளாய்விரையேல் *
குதிகொண்டரவினடித்தாய் குருந்திடைக்கூறைபணியாய். (உ)

இங்கு புகுந்தது இது என்	இங்கே (நீ) வந்து சேர்ந்த விதற்குக் காரணமென்ன ?
இ பொய்கைக்கு எவ்வாறு வந்தாய்	இக்குளத்திற்கு எவ்வழியாலே வந்தாய் ?
மது இன் துழாய் முடி மாலே	தேன்மாறுத இனிய திருத்துழாய் மாலை சூடிய திருவபிஷேகத்தையுடைய பெரியோனே !
மாயனே	ஆச்சரிய சக்தியுடையவனே!
எங்கள் அமுதே	எங்களுக்கு அம்ருதம்போல் இனியவனே !
விதி இன்மையால்	விதியில்லாமையாலே
அது மாட்டோம்	ஸம்ச்லேஷத்திற்கு இசையமாட்டோம்;
வித்தகப் பிள்ளாய்	ஆச்சரிய சேஷ்டைகளையுடைய பிள்ளாய் !
விரையேல்	அவசரப்படவேண்டா ;
அரவில் குதி கொண்டு நடித்தாய்	காளிய நாகத்தின் மேல் குதித்துக் கொண்டு நர்த்தனஞ் செய்தவனே !
குருந்திடைக் கூறை பணியாய்	(அக்) குருந்த மரத்தின்மேல் வைத்திருக்கிற சேலைகளைக் கொடுத்தருள்.

* * * இப்போய்கைக்கு=வழக்கமாக நீயும் நானும் ஜலக்ரீடைபண்ணும் பொய்கையன்றே இது; இதறிந்து நீ வந்தபடி என்? என்கிறார்கள். 'நான் எப்படிவந்தாலென்ன? வந்தாயிற்று, இனி நீங்களும்நானும் ஸுத்தை பெறும்படி அநுபவிக்குமத்தனையன்றே' என்றான் கண்ணன்; அதுகேட்ட ஆய்ச்சிகள், 'நீ ஆசைப்படுவது அழகியதே, ஆகிலும் எங்களுடைய தெளர்ப்பாக்கியத்தினால் நாங்கள் அதற்கு இசைந்து வரமாட்டுகிறோம், என்கிறார்கள். அது என்பதற்கு ஸம்ச்லேஷம் அர்த்தமானபடி என்னென்னில்; கண்ணபிரான் தன்னுடைய ஸம்ச்லேஷ விருப்பத்தை ஸூசனையாகக் காட்டினனுதலால், அதனை உணர்ந்த இவர்கள் அது

என்று ஸம்ச்லேஷத்தைச் சூட்டுகிறார்கள் என்க. நெஞ்சறிசூட்டு. இப்படி இவர்கள் சொல்லச்செய்தேயும் அவன்தன் ஆற்றுமையாலே பதறி மேல்விழப்புக்கான்; 'பிராணே! உன் ஸாமர்த்தியம் நாம் அறிவோம்; அவசரப்படாதே கடக்கநில், என்கிறார்கள். (உ)

526 எல்லேயீதென்னவிளமை யெம்மனைமார்காணிலோட்டார் *
போல்லாங்கீதென்றுகருதாய் பூங்குருந்தேறியிருத்தி *
வில்லாலிலங்கையழித்தாய் நீவேண்டியதெல்லாந்தருவோம் *
பல்லாருங்காணுமேபோவோம் பட்டைப்பணித்தருளாயே. (ஊ)

வில்லால் இலங்கை அழித்தாய் — வில்லாலே லங்கையை நாசஞ் செய்தருளினவனே!
எல்லே — என்னே!
ஈது என்ன இளமை—இது என்ன பிள்ளைத்தனம்!
எம் அனைமார் காணில் ஓட்டார் — எங்களுடைய தாய்மார்கள் கண்டால் (மறுபடியும் எங்களை வீட்டின்வழி வர) ஓட்டார்கள்; (நீயோ வென்றால்)
ஈது — கண்டாரடங்கலும் ஏசும்படி எங்களை அம்மணமாக்கி நிறுத்தியிருக்கிற இது
பொல்லாங்கு என்று—பொல்லாத காரியமென்று
கருதாய் — நினைக்கிறாயில்லை;
பூ குருந்து ஏறி இருத்தி — புஷ்பித்திராநின்ற குருந்த மரத்தின்மேல் ஏற்பிராநின்றாய்;
நீ வேண்டியது எல்லாம் தருவோம் — நீ அபேக்ஷிக்குமவற்றை யடங்கலும் கொடுக்கிறோம்;
பல்லாரும் காணுமே போவோம் — (ஊரிலுள்ள) பலரும் காணுதபடி போகிறோம்;
பட்டை பணித்தருளாய் — (எங்களுடைய) பட்டுச்சேலைகளைத் தந்தருளவேணும்.

527 பரக்கவிழித்தெங்கும்நோக்கிப் பலர்குடைந்தாடுஞ்சுனையில் *
அரக்கநில்லாக்கண்ணீர்கள் அலமருகின்றவாபாராய் *
இரக்கமேலொன்றுமிலாதாய் இலங்கையழித்தபிரானே *
குரக்கரசாவதறிந்தோங் குருந்திடைக்கூறைபணியாய். (எ)

இலங்கை அழித்த பிரானே!—
பலர் குடைந்து ஆடும் சுனையில் — பல பெண்கள் படிந்து நீராடும் இப்பொய்கையின் கரையில்
கண்ண நீர்கள் அரக்க நில்லா — கண்ணீர்த்தாரைகள் அடக்கினாலும் நிற்கமாட்டாத [வையாய்
அலமருகின்ற ஆ எங்கும் பரக்க விழித்து நோக்கி பாராய் — தளும்புகிறபடியை நாற்புறத்திலும் நன்றாக விழித்து உற்றுநோக்கு;
ஒன்றும் இரக்கம் இலாதாய் — கொஞ்சங்கூட தயவு இல்லாதவனே!
குரங்கு அரசு ஆவது அறிந்தோம் — நீ மரமேறவல்லார்க்குள் தலைவன் என்பதை அறிந்துகொண்டோம்; (ஆனபின்பு)
குருந்திடை கூறை—குருந்தின் மேலுள்ள (எங்கள்) [சேலைகளை
பணியாய் — கொடுத்தருளவேணும்.

528 காலைக்கதுவிடுகின்ற கயலொடுவாளைவிரவி *
வேலைப்பிடித்தென்னைமார்கள் ஓட்டிலென்னவிளையாட்டோ *
கோலச்சிற்றுடைபலவுங்கொண்டு நீயேறியிராதே *
கோலங்கரியபிரானே குருந்திடைக்கூறைபணியாய். (ஏ)

கரிய கோலம் பிரானே — கருத்த திருமேனியையுடைய கண்ணபிரானே!
கயலொடு வாளை விரவி — கயல் மீன்களும் வாளை மீன்களும் ஒன்றுக்கூடி
காலை கதுவிடுகின்ற — (எமது) கால்களைக் கடியாநின்றன;
(இப்படி நீ எங்களை வருத்தப் படுத்துவதைக்கேள்விப்பட்டு)
என் ஐமார்கள் வேலை பிடித்து — எங்கள் தமையன்மார்கள் வேலைப்பிடித்துக் கொண்டு
ஓட்டில் — (உன்னைத்) துரத்திவிட்டால்
என்ன விளையாட்டு — (அது பின்னை) என்ன விளையாட்டாய் முடியும்?
நீ — நீ
கோலம் சிற்றுடை பலவும் கொண்டு ஏறி இராது — அழகிய சிற்றுடைகளை யெல்லாம் வாரிக்கொண்டு (மரத்தின் மேல்) ஏறியிராமல்
குருந்திடை கூறை பணியாய் — குருந்தமரத்தின்மேலுள்ள (எங்கள்) சேலைகளைத் தந்தருள்.

529 தடத்தவிழ்தாமரைப்பொய்கைத் தாள்களெங்காலைக்கதுவ *
விடத்தேலேறிந்தாலேபோல வேதனையாற்றவும்பட்டோம் *
குடத்தையெடுத்தேறவிட்டுக் கூத்தாடவல்லவெங்கோவே *
படிற்றையெல்லாந்தவிர்ந்து எங்கள்பட்டைப்பணித்தருளாயே. (ஐ)

தடம் அவிழ் தா மரை பொய்கை	விசாலமாயும் மலர்ந்த தாமரை களையுடையதுமான தடாகத் திலே
தாள்கள் எம் காலே கதுவ	தாமரைத் தண்டுகளானவை எங்கள் கால்களைக் கடிக்க,
விடம் தேள் எறி ந்தால் போல	விஷத்தை யுடைய தேள் கொ ட்டினாற்போலே
ஆற்றவும் வேத னே பட்டோம்	மிகவும் வருத்தப்படாகின்றோம்

குடத்தை எடுத்து ஏற விட்டு	குடங்களை தூக்கி உயரவெறிந்து [இப்படி]
கூத்து ஆட வல்ல	குடக்கூத்தை ஆடுவதற்கு ஸா மர்த்தியமுள்ள
எம் கோவே	எம்முடைய தலைவனே !
படிற்றை எல்லா ம் தவிர்ந்து	(நீ செய்கிற) தீம்புகளை யெல் லாம் விட்டு
	எங்கள் பட்டை பணித்தருளாய்—.

530 நீரிலேநின்றயர்க்கின்றோம் நீதியல்லாதனசெய்தாய் *
ஊரகஞ்சாலவுஞ்சேய்த்தால் ஊழியெல்லாமுணர்வானே *
ஆர்வமுனக்கேயுடையோம் அம்மனைமார்காணிலோட்டார் *
போரவிடாயெங்கள்பட்டைப் பூங் குருந்தேறியிராதே. (எ)

ஊழி எல்லாம் உணர்வானே	கற்பாந்தகாலத்திலெல்லாம் (ஜ கத்ரக்ஷணசிந்தையுடன்) உ ணர்ந்திருப்பவனே !
நீரிலே நின்று அயர்க்கின்றோம்	ஜலத்தில் நின்றுகொண்டு வரு த்தப்படாகின்றோம்;
நீதி அல்லாதன செய்தாய்	அநீதியான செயல்களை செய்யாநின்றாய்;
(உன் விஷயங்களுக்குத் தப்பி ஓடிப்பிழைக்கப் பார்ப்போமென்றால்)	
ஊர் அகம் சால வும் சேய்த்து	எங்கள் ஊராகிய ஆய்ப்பாடியு ம் மாளிகைகளும் மிகவும் தூ ரத்திலிராநின்றன;
ஆல்	ஐயோ!;
(இப்படி நீ எங்களை வருத்தச் செய்தேயும்)	

உனக்கே ஆர்வம் உடையோம்	உன்விஷயத்திலேயே நாங்கள் அன்புள்ளவர்களாயிரா நின் றோம்;
அம்மனைமார்	எங்கள் தாய்மார்
காணில்	(நீ பண்ணும் லீலைகளுக்கு நாங் கள் இணங்கிநிற்பதைக்) க ண் டால்
ஓட்டார்	இசையமாட்டார்கள்;
எங்கள் பட்டை போர விடாய்	எங்களுடைய சேலைகளைத் தந் தருளாய்;
பூ குருந்து ஏறி இராதே	பூத்திராகின்ற குருந்த மரத்தின் மேல் ஏறிக்கொண்டு தீமைகளை ச் செய்யாதே.

* * * [போர விடாய்] சேலையை எங்கள் கைக்கு எட்டிற்று எட்டாதாக விட வொண்ணாது, முழுச் சேலையும் எங்கள் கையில் வந்து விழும்படி விட்டருளாய் என்கை. (எ).

531 மாமிமார்மக்களேயல்லோம் மற்றுமிங்கெல்லாரும்போந்தார் *
தூமலர்க்கண்கள்வளரத் தோல்லியிராத்துயில்வானே *
சேமமேலன்றிதுசாலச் சிக்கனநாமிதுசொன்னேம் *
கோமளவாயர்கோமுந்தே குருந்திடைக்கூறைபணியாய். (ஏ)

தொல்லை இரா தூ மலர் கண் கள் வளர துயில்வானே	பழையராத்ரிகளில் பரிசுத்தமான மலர்போன்ற கண்கள் நித்ரா பரவசமாம்படி பள்ளி கொள்பவனே !
(இப் பொய்கைக் கரையிலே நிற்குமவர்கள்)	
மாமிமார் மக்க ளே அல்லோம்	உனக்குத் தேவிமாராகும் முறை யிலுள்ளார் மாத்திரமல்லோம்;
மற்றும் எல்லாரும்	மற்றுள்ளமாமிமார், அவர்கள் தாய்மார் முதலியவர்களும்

இங்கு போந்தார்	இவ்விடத்தில் வந்திருக்கின்றார்கள்;
இது சால சேமம் அன்று	நீ செய்கிற இத்தீம்பானது மிக வும் தகுதியானதன்று;
இது நாம் சிக்க ன சொன்னேம்	இவ்வார்த்தையை நா ங் க ள் திண்ணிதாகச் சொல்லுகின்றோம்
ஆயர் கோமளக் கொழுந்தே	இடையர்களுக்கு இளங் கொழு ந்து போன்றவனே !
குருந்திடை கூறை பணியாய்—.	

* * * கண்ணபிரான் கூடாதனதோறும் தீமைகளை மிகமிகச் செய்யப் புக்கவாறே, 'இவன் ஊரில் இவ்வளவு செய்யாமல் இங்கே இவை செய்வதனால் 'தனியிடத்திலே: செய்வ தற்கு ஆராய்ச்சியில்லை' என்று இவன் நினைத்திருக்கக் கூடுமெனக்கருதி, 'பிரானே! தனி யிடத்திலே இவை செய்கிறோமென்று நினையாதேகொள்; இவை ஊரிலும் போய்ப்பரவிப் பெருத்தபழியாய் முடியும்' என்று ஆய்ச்சிகள் சொல்ல, 'ஊரிற் பழியாவதென்? ஊரிலிருந்து நீங்களன்றோ இங்கேற வந்தீர்கள், நான் பெரிய தீம்பனென்பது உங்கட்குத் தெரியுமிறே'

என்று கண்ணபிரான் கூற, 'நீ இவ்வாறு தீம்பு செய்வதற்குக் காரண மென்?' என்று ஆய்ச்சியர் கேட்க; 'இங்குள்ளாரனைவரும் எனக்கு மைத்துனமை முறையுடையார்களானது பற்றிச் செய்கிறேன்' என்ன; அதுகேட்ட ஆய்ச்சிகள், 'அப்படியா? இங்குள்ளா ரெல்லாரும் உன்னோடு மைத்துனமை முறையுடையாரல்லர்; மாமிமார்மக்கள் சிலர், மாமிமார் சிலர், மாமிமார்களின் தாய்மார் சிலர் என்றிப்படி பலவகைப்பட்ட உறவுமுறையார் இங்குண்டு காண்; ஆகையாலே இத்தீமைகளைத் தவிராய்' என்கிறார்கள். மாமிமார் மக்கள்—பத்நிகள் என்றபடி; வடமொழியில், நாயகனை 'ஆர்யபுத்ர:' எனவழங்குவதோடு ஒக்கும் இவ்வழக்கு. கீழ் "மாமிதன் மகளைப் பெறாரால்" என்றதுங் காண்க. (அ)

532 கஞ்சன்வலைவைத்தவன்று காரிருளில்லிற்பிழைத்து *
நெஞ்சதுக்கஞ்செய்யப்போந்தாய் நின்றவிக்கன்னியரோமை *
அஞ்சவுரப்பாளசோதை ஆணைவிட்டிட்டிருக்கும் *
வஞ்சகப்பேய்ச்சிபாலுண்ட மசுமையிலீகூறைதாராய். (கூ)

கஞ்சன் வலை வைத்த அன்று — கம்ஸனனவன் உன்னை அழிப்பதாக நினைத்த காலத்தில்
கார் இருள் எல்லில் பிழைத்து நின்ற — மிக இருளையுடைத்தான இரவில் பிழைத்து (அம்மணமாக) நிற்கின்ற
இக் கன்னியரோமை — இளம் பெண்களான எங்களுக்கு
நெஞ்சு துக்கம் செய்யபோந்தாய் — மனத்துன்பத்தை உண்டாக்குவதற்காக வந்துபிறந்தாய்;
அசோதை அஞ்ச உரப்பாள் — யசோதைப் பிராட்டியோவென்றுள் நீ பயப்படும்படி உன்னை அதட்டமாட்டாள்;
ஆணை விட்டிட்டிருக்கும் — தீம்பிலே கைவளரும் படி உன்னை விட்டிராநின்றாள்;
வஞ்சகம் பேய்ச்சி பால் உண்ட — வஞ்சனையையுடைய பூதனையினுடைய முலைப்பாலை (அவளுயிரோடே கூட) உறிஞ்சியுண்ட
மசுமை இலீ கூறை தாராய் — லஜ்ஜையில்லாதவனே! சேலைகளைத் தந்தருள்.

* * * [அஞ்ச உரப்பாள் இத்யாதி.] கண்ணன் செய்யுந்தீம்புகளை யசோதையிடஞ் சென்று யாரேனும் முறையிட்டால், அவள் பரிவின் மிகுதியாலே அவனை அதட்டமாட்டாமல் "இடைப் பெண்கள் திறத்தில் நீ இப்படிதானே தீம்பு செய்கிறது" என்றுற் போலச் சில வார்த்தைகள் சொல்லி மேன்மேலுமவனைத் தீம்பிலே கைவளர விடுவள் என்க. ஆணை இட்டிட்டிருக்கும்" என்றும் பிரிக்கலாம்; இட்டிடுகை—உபேக்ஷித்திருக்கை. "[இருக்கும்.] தான் கண்டபடி இவனைத் தீம்பு செய்ய விட்டு 'நம் மகன் இப்படி பருவம் நிரம்பித் தீமை செய்யப் பெற்றோம்' என்னுமத்தாலே 'தொல்லையின்பத்திறுதிகண்டாள்' என்கிறபடியே ஆநந்த நிர்ப்பரையாய் க்ருதக்ருத்யை யாயிருக்கும்" என்ற வியாக்கியானவாக்யம் அறிக. [மசுமையிலீ!] பிறர் நோவு படுவதைக் கண்டால் "ஹ்ரீரேஷாஹ்ருமமாதுலா" என்று லஜ்ஜைப்படும் சக்ரவர்த்தி திருமகனைப் போலன்றியே வெட்கங்கெட்டுப்பிழைக்கிற பிழைப்பிறே உன்னது என்கை. (கூ)

533 கன்னியரோடெங்கள் நம்பிகரியபிரான்விளையாட்டை *
பொன்னியல்மாடங்கள்சூழ்ந்த புதுவையர்கோன்பட்டன்கோதை *
இன்னிசையாற்சொன்னமாலை யீரைந்தும்வல்லவர்தாம்போய் *
மன்னியமாதவனோடு வைகுந்தம்புக்கிருப்பாரே. (ம)

எங்கள் நம்பி கரிய பிரான் — எமக்குஸ்வாமியாய் கார் கலந்த மேனியனை கண்ணபிரான்
கன்னியரோடு விளையாட்டை — ஆயர்சிறுமியரோடே செய்த திவ்யலீலைகளைக்குறித்து
பொன் இயல் மாடங்கள் சூழ்ந்த — ஸ்வர்ணமயமான மாடங்களால் சூழப்பட்ட
புதுவையர் கோன் பட்டன் கோதை — ஸ்ரீவில்லிபுத்தூரிலுள்ளார்க்குத் தலைவரான பெரியாழ்வார்க்குத் திருமகளான ஆண்டாள்
இன் இசையால் சொன்ன மாலை — இனிய இசையாலே அருளிச்செய்த சொல்மாலையாகிய

ஈர் ஐந்தும் வல்லவர் தாம் போய் வைகுந்தம் புக்கு	இப்பத்துப்பாட்டுக்களையும் கற்கவல்லவர்கள் (அர்ச்சிராதிமார்க்கமாகப்) போய் பரமபதத்தை யடைந்து (அவ்விடத்திலே)	மன்னிய மாதவனோடு இருப்பார்	நித்யவாஸம் செய்தருளுகிற திருமாலோடுகூடி நித்யானுபவம்பண்ணிக்கொண்டு வாழ்ந்திருக்கப் பெறுவர்.

* * * அடிவரவு:—கோழி இது எல்லே பரக்க காலே தடத்து நீர் மாமி கஞ்சன் கன்னி தெள்ளியார் (ய)

நான்காந்திருமொழி—தெள்ளியார்.

(கூடலிழைக்கும் பதிகம்.)

கூடலிழைத்தலாவது:—வட்டமாகக் கோடுகீறி அதற்குள்ளே சுழிசுழியாகச் சுற்றும் சுழித்து இரண்டிரண்டுசுழியாகக் கூட்டிப்பார்க்கும்போது இரட்டைக்கணக்காக முடிவு பெற்றால் கூடுதை, ஒற்றைக்கணக்காக முடிவுபெற்றால்கூடாமை என்று ஒருஸங்கேதம் ஏற் படுத்திக்கொண்டு குறிபார்க்கையாம். இந்தசகுநாவலோகநம்-கூடல், கூடலிழைத்தல், கூடல்வளைத்தல், கூடற்குறி இத்யாதிநாமங்களால் வழங்கப்பெறு மென்ப. திருமழிசைப் பிரான் நான்முகன்திருவந்தாதியில் "அழைப்பன் திருவேங்கடத்தானைக் காண இழைப்பன் திருக்கூடல்கூட" என்றருளிச்செய்துள்ள துங்காண்க. பகவத்ஸம்ச்லேஷத்திலே ஆவலுள்ள படியைக் கூறும் முறைகளிலே இதுவொருமுறை என்னுமிவ்வளவே இங்கு உணரத்தக்கது.

534 தெள்ளியார்பலர் கைதொழுந்தேவனர் * வள்ளல் மாலிருஞ்சோலைமணாளனர் *
பள்ளிகொள்ளுமிடத்து அடிகோட்டிட * கொள்ளுமாகில் நீகூடிடுகூடலே. (க)

கூடலே	கூடல் தெய்வமே !	பள்ளிகொள்ளும் இடத்து	பள்ளி கொண்டருளுமிடத்திலே [திருவரங்கத்திலே]
தெள்ளியார் பலர்	தெளிவுடைய பக்தர்கள் பலர்		
கை தொழும்	கைகளாரவணங்கப்பெற்ற		
தேவனர்	ஸ்வாமியாய்	அடி கோட்டிட	(அவனுடைய) திருவடிகளே நான் பிடிக்கும் படியாக
வள்ளல்	பரமோதாரனாய்		
மாலிருஞ் சோலை மணாளனர்	திருமாலிருஞ் சோலையிலே எழுந்தருளியிருக்கிற மணவாளப்பிள்ளையாகிற பரம புருஷன்,	கொள்ளும் ஆகில்	(அவன்) திருவுள்ளம் பற்றுவதில்
		நீ கூடிடு	நீ கூடவேணும்.

* * * திருவரங்கம் பெரியகோயிலிலே சென்று புக்கு அப்பெருமானுக்குத் திருவடி வருடும்படியான பாக்கியம் இன்று நமக்கு வாய்க்குமாகில், கூடல்தெய்வமே! நீ கூடக்கடவை என்கிறாள். எம்பெருமானுடைய ஸந்நிதியிலே போய் அத்தாணிச்சேவகம் பண்ணும்படியாக விதிவாய்க்கவேணுமென்கிற ப்ரார்த்தனையைக் கூடிடுகூடலே! என்னும் வாய்பாட்டினால் அருளிச்செய்வதாகக் கொள்க (க)

535 காட்டில்வேங்கடம் கண்ணபுரகர் * வாட்டமின்றி மகிழ்ந்துறை வாமனன் *
ஓட்டராவந்து என்கைபற்றி * தன்னெடும் கூட்டுமாகில் நீகூடிடுகூடலே. (உ)

கூடலே !—;			
காட்டில் வேங்கடம்	காட்டிலுள்ள திருவேங்கடமலையிலும்	வாமனன்	வாமனாவதாரம் செய்தருளிய எம்பெருமான்
நகர் கண்ணபுரம்	நகரமாகிய திருக்கண்ணபுரத்திலும்	ஓட்டராவந்து	ஓடிவந்து
		என் கை பற்றி	என்னுடைய கையைப்பிடித்து
வாட்டம் இன்றி	மனக்குறையில்லாமல்	தன்னெடும்	தன்னோடு
மகிழ்ந்து	திருவுள்ளமுகந்து	கூட்டும் ஆகில்	அணைத்துக்கொள்வதாகில்
உறை	நித்யவாஸம் செய்தருளுகிற	நீ கூடிடு	நீ கூடவேணும்.

* * * எம்பெருமான் என்னுடைய ஸம்ச்லேஷிக்கவேணுமென்று திருவேங்கடமலை, திருக்கண்ணபுரம் முதலிய திருப்பதிகளிலே வந்துநிற்கிறான்; எனக்கு இசைவு உண்டோ இல்லையோவென்று சங்கித்துத் தாமஸித்து நிற்கின்றானேபோலும்; அப்பெருமான் என்னுடைய ஆதுரதையை நன்கறிந்து சடக்கென ஓடிவந்து என்னைத்தன்னுடனே அணைத்துக் கொள்ளுமாறு விதிவாய்க்கவேணுமென்று மநோரதிக்கிறாள். ஓட்டராவந்து:—ஓடிவந்து என்றபடி. 'ஓட்டம் தரா' என்றவிரண்டுபதங்கள் 'ஓட்டரா' எனச் சிதைந்தபடி. "வாமனன் ஓட்டராவந்து" என்ற வாக்யஸந்தர்ப்ப ஸ்வாரஸ்யத்தால் பெரியவாச்சான் பிள்ளை அருளிச் செய்கிறார் காண்மின்—"ஓரடிமண்ணுக்குப் பதறுமவன் இவளைப் பெறும்போதைக்கு ஆறியிராநிறே; ஆஸுர ப்ரக்ருதியான மஹாபலிமுன்னே கழஞ்சுமண்ணுக்குப் பதறிநடக்குமவன், இவளொருதலையாலே ஆறியிராநிறே; * காற்றில் முன்னங்கடுகி ஓடிவரக்கடவனிறே." (உ)

536 பூமகன்புகழ்வானவர் போற்றுதற் காமகன் * அணிவாணுதல் தேவகி
மாமகன் * மிகுசீர்வசுதேவர்தம் * கோமகன்வரில் கூடிடுகூடலே. (ங)

பூ மகன்	பூவிற்பிறந்த பிரமனும்	மா மகன்	சிறந்த புத்திரனை,
வானவர்	நித்யஸூரிகளும்	மிகு சீர் வசு தேவர்தம்	மிகுந்த நற்குணங்களையுடையரான வஸுதேவருடைய
புகழ் போற்றுதற்கு	கீர்த்தியைப் பாடித் துதிப்பதற்கு	கோ மகன்	மாட்சிமை தங்கிய புத்திரனை கண்ணபிரான்
ஆம்	தகுந்த	வரில்	(என்னை அணைக்க) வருவானாகில்
மகன்	புருஷோத்தமனை,	கூடலே ! கூடிடு—.	
அணி வாள் நுதல்தேவகி	மிகவும் அழகிய நெற்றியையுடைய தேவகியினுடைய		

* * * நான்முகனும் நித்யஸூரிகளும் போற்றும்படியாக அங்கே எழுந்தருளியிருந்து, பின்புதேவர்களின் வேண்டுகோளுக்கிணங்கி * மண்ணின் பாரம் நீக்குதற்கே வடமதுரையிலே வந்து தேவகிக்கும் வஸுதேவர்க்கும் புதல்வனைத் திருவவதரித்தருளின எம்பெருமான் இன்று என்துயர்தீர இங்கே எழுந்தருளக் கூடுமா என்று மநோரதிக்கிறாள். (ங)

537 ஆய்ச்சிமார்களும் ஆயருமஞ்சிடப் * பூத்தநீள் கடம்பேறிப்புகப்பாய்ந்து *
வாய்த்தகாளியன்மேல் நடமாடிய * கூத்தனூர்வரில் கூடிடுகூடலே. (ச)

ஆய்ச்சிமார்களும்	இடைச்சிகளும்	வாய்த்த காளியன் மேல் நடம் ஆடிய	பாக்யசாலியான காளியநாகத்தின்மேல் நர்த்தனஞ் செய்த
ஆயரும்	இடையரும்	கூத்தனூர் வரில்	நாட்ய சாஸ்த்ர நிபுணனை கண்ணபிரான் வரக்கூடுமாகில்
அஞ்சிட	பயப்படும்படியாக.	கூடலே ! கூடிடு—.	
பூத்த நீள் கடம்பு ஏறி	புஷ்பித்ததாய் உயர்ந்திருந்த கடப்ப மரத்தின் மேல்ஏறி		
புக பாய்ந்து	(அங்குநின்றும்)எழும்பிக்குதித்து		

* * * கூத்தனூர் வரில்=அக்காளியன் தலையிலேநடமாடிய சரமத்தோடே தன் பக்கல் வந்தணையவேணுமென்று விருப்பம்போலும். (ச)

538 மாடமாளிகைசூழ் மதுரைப்பதிநாடி * நங்தெருவின்நடுவே வந்திட்டு *
ஓடைமாமதயானை யுதைத்தவன் * கூடுமாகில் நீகூடிடுகூடலே. (ரு)

மாடம் மாளிகை சூழ் மதுரை பதி	மாடங்களையுடைய மாளிகைகளாலே சூழப்பட்ட மதுரை மாநகரிலே	ஓடை	நெற்றிப்பட்டத்தையுடைத்தாய்
நாடி	(நம்வீட்டைத்) தேடிக்கொண்டு	மா மதம்	மிக்க மதத்தையுடைத்தான
நம் தெருவின் நடுவே வந்திட்டு	நம்முடைய வீதியின் நடுவிலே வந்து	யானை	(குவலயாபீடமென்னும் யானையை
கூடும் ஆகில்	(நம்மோடு) கூடுவானாகில்	உதைத்தவன்	உதைத்து முடித்த கண்ணபிரான்,
கூடலே ! நீ கூடிடு—.			

* * * இரண்டாமடியின் இறுதியிலுள்ள வந்திட்டு என்ற வினையெச்சம்—உதைத்தவன் என்பதிலே அன்வயிப்பதல்ல; கூடுமாகில் என்பதிலே அன்வயிக்கக்கடவது. இப்போது, கண்ணபிரான் திருவாய்ப்பாடியில் இருப்பதாகவும் இவ்வாண்டாள் தான் வடமதுரையிலே யிருப்பதாகவும் பாவனாப்ரகர்ஷம் செல்லுகிறபடி. மதுரைப்பதிக்கு "மாடமாளிகை சூழ்" என்று விசேஷணமிட்டஸ்வாரஸ்யத்தைக் கண்டறிந்த பெரியவாச்சான்பிள்ளை ரஸோக்தியாக அருளிச்செய்கிற ஸ்ரீஸூக்திகளைக்காணீர்—"அவன் வில்விழுவுக்கென்று கோடித்தான்; இவள் இவன் வரவுக்கென்றிருக்கிறாள்". "மதுரைப்பதியிலே நந்தெருவின் நடுவே வந்திட்டு" என்னுமளவே போதுமாயிருக்க, நாடி என்று விசேஷித்து அருளிச்செய்கையாலே, கண்ணபிரான் நேரேவந்து என் வீட்டில் புகுரலாகாது; "நாய்ச்சியார் திருமாளிகை எது?" என்று ஊரெங்கும் விசாரித்துக்கொண்டு தேடிவரவேணுமென்னும் ஆவல் தோற்றும். ஓடை என்று யானையின் நெற்றிப் பட்டத்துக்குப் பெயர். (ரு)

539 அற்றவன் மருதமுறியவோடை கற்றவன் * கஞ்சனவஞ்சனையிற்
செற்றவன் * திகழும்மதுரைப்பதி * கோற்றவன்வரில் கூடிடுகூடலே. (சு)

அற்றவன்	(ஏற்கனவே எனக்கு) அற்றுத் தீர்ந்தவனுய்	வஞ்சனையில்	வஞ்சனையினுலே
மருதம் முறிய	(யமளார்ஜுந மென்னும்) மருத மரங்களானவை முறிந்து விழும்படியாக	செற்றவன்	கொன்று முடித்தவனுய்
நடை கற்றவன்	தவழ்நடை நடக்கக்கற்றவனுய்	திகழும் மதுரை பதி கொற்றவன்	விளங்குகின்ற மதுரை மாநகர்க்கு அரசனை கண்ணபிரான்
கஞ்சனை	கம்ஸனை	வரில்	வந்திடுவானுயின்
		கூடலே ! கூடிடு—.	

* * * அற்றவன்—எற்கனவே "ஆண்டாளுக்கானவன் இவன்" என்னும்படி அற்றுத் தீர்ந்தவன். "அற்ற வல் மருதம் முறிய"—தன்னைக் கொல்வதாக நிச்சயித்துவந்த வலிய மருத மரங்கள் முறியும்படியாக என்று பொருள் கொள்ளக்கூடுமாயினும் ஸ்வரஸமன்று; வியாக்கியானத்திலு மில்லை. (சு)

540 அன்றின்னதனசெய் சிசுபாலனும் * நின்றநீள்மருதும் எருதும்புள்ளும் *
வென்றிவேல்விறல் கஞ்சனும்வீழ * முன் கொன்றவன்வரில் கூடிடுகூடலே. (எ)

அன்று	முற்காலத்தில்	வென்றி வேல் விறல் கஞ்சனும்	வெற்றியை விளக்கவல்ல வேலாயுதமென்ன (அதைப் பிடிக்கத்தக்க) மிடுக்கென்ன இவற்றை யுடையவனை கம்ஸனும்
இன்னதனசெய் சிசுபாலனும்	வெறுக்கக் கூடியகெட்ட காரியங்களையே செய்து வந்த சிசுபாலனும்	வீழ	முடிந்து விழும்படியாக
நின்ற நீள் மருதும்	வழியிடையே நின்ற பெரிய இரட்டை மருதமரங்களும்	முன்	எல்லார் கண்ணெதிரிலும்
எருதும்	ஏழுரிஷபங்களும்	கொன்றவன்	கொன்றொழித்த கண்ணபிரான்
புள்ளும்	பகாஸுரனும்,	வரில்	வரக்கூடுமாகில்
		கூடலே ! கூடிடு—.	

* * * இன்னதன—இனியவையல்லாதவை; அனைவராலும் இகழத்தக்கவை என்றபடி. "பலபலநாழஞ் சொல்லிப் பழித்த சிசுபாலன்" என்றும், "கேட்பார் செவிசுடு கீழ்மை வசவுகளே வையும், சேட்பால் பழம்பகைவன் சிசுபாலன்" என்றும் அருளிச் செய்துள்ளமை காண்க. (எ)

541 ஆவலன்புடையார்தம் மனத்தன்றி மேவலன் * விரைசூழ்துவராபதிக்
காவலன் * கன்றுமேய்த்துவினையாடும் * கோவலன்வரில் கூடிடுகூடலே. (அ)

ஆவல் அன்பு உடையார்தம்	ஆவலையும் அன்பையும் உடையவர்களுடைய	கன்று மேய்த்து விளையாடும் கோவலன்	கன்றுகளைமேய்த்து விளையாடும் கோபாலனுமாகிய கண்ணபிரான்
மனத்து அன்றி மேவலன்	நெஞ்சுதவிர மற்றேரிடத்திலும் பொருந்தாதவனும்	வரில்	வரக்கூடுமாகில்
விரை சூழ் துவராபதி காவலன்	நல்ல வாஸனை சூழ்ந்த த்வாரகாபுரிக்கு நிர்வாஹகனும்	கூடலே! கூடிடு—.	

* * * [காவலன் கோவலன்] பாத்வம் ஒருபக்கத்திலே, ஸௌலப்யம் ஒரு பக்கத்திலே. "ஸர்வஸ்ய ஜகத: பாலௌ வத்ஸபாலௌ பபூவது:" என்ற ரிஷியைப்போலே அதிசயப்படுகிறாளாய்த்து. (அ)

542 கோண்டகோலக் குறளுருவாய்ச்சென்று * பண்டுமாவலிதன் பெருவேள்வியில் *
அண்டமும்நிலனும் அடியோன்றிணால் * கொண்டவன்வரில் கூடிடுகூடலே. (கூ)

பண்டு	முற்காலத்திலே	அண்டமும்	மேலுலகங்களையும்
கோலம்கொண்ட குறள் உரு ஆய்	(மூப்புரி நூலும் க்ருஷ்ணாஜிநமும் முஞ்ஜியும் பவித்ரமும் தண்டுமான) கோலம் பூண்ட வாமந ரூபியாய்	நிலனும்	கீழுலகங்களையும்
		அடி ஒன்றிணால்	ஓவ்வோரடியாலே
மாவலி தன் பெரு வேள்வியில் சென்று	மஹாபலியினுடைய சிறந்த யாக பூமியிலே எழுந்தருளி	கொண்டவன்	அளந்து கொண்டத்ரிவிக்ரமன்
		வரில்	வருவானாகில்
		கூடலே! கூடிடு.—	

* * * "அடி யொன்றிணால்" என்றது "அடி ஓவ் வொன்றிணால்" என்றபடி. (கூ)

543 பழகுநான்மறையின்பொருளாய் * மதமொழுகுவாரணம் உய்யவளித்த * எம்
அழகனூர் அணியாய்ச்சியர்சிந்தையுள் * குழகனூர்வரில் கூடிடுகூடலே. (எ)

பழகு நால்மறையின் பொருள் ஆய்	அநாதியான சதுர்வேதங்களின் உட்பொருளாயிருக்குமவனாய்	எம் அழகனூர்	எம்மை ஈடுபடுத்தவல்ல அழகையுடையனாய்
மதம் ஒழுகுவாரணம் உய்ய அளித்த	மத ஜலம் பெருகாநின்ற கஜேந்த்ராழ்வான் (துயர் நீங்கி) வாழும்படி க்ருபைசெய்தருளினவனாய்	அணி ஆய்ச்சியர் சிந்தையுள் குழகனூர்	அழகிய கோபிமார்களின் நெஞ்சினுள்ளே குழைந்திருக்குமவனை கண்ணபிரான்
		வரில்	வரக் கூடுமாகில்
		கூடலே! கூடிடு.—	

அணியாய்ச்சியர் சிந்தையுள் குழகனூர் - "கொங்கைமேற் குங்குமத்தின் குழம்பழியப் புகுந்து ஒரு நாள் தங்குமேல் என்னுயிர்தங்கும்" என்னும்படியான காதல் கிளர்ந்துள்ளவர்களுக்கு இவன் அப்போதே சென்று முகங்காட்டாவிடில் அவர்கள் மிகவும் மனம் நொந்து ப்ரணயரோஷம் தலையெடுக்கப் பெற்று "அந்த க்ருஷ்ணன் இனி என்றைக்கும் நம்மருகே வாராமலேயா போகப் போகிறான்!; என்றைக்காவது ஒருநாள் அநந்யகதியாய்வந்து நிற்பனன்றோ; அப்போது நாம் அவனுக்கு முகங்கொடுக்கக் கடவோமல்லோம்" என்று திண்ணிதாக ஸங்கல்பம் செய்து கொண்டவர்களுங்கூட மறம்தீர்ந்து மேல்விழுந்தணையும்படி அவர்களைப் பிச்சேற்றவல்ல நல்விரகுகள் அறியுமவன் கண்ணபிரான் என்க. (கஅ)

544 ஊடல்கூடல் உணர்தல்புணர்தலே * நீடுநின்ற நிறைபுகழாய்ச்சியர் *
கூடலைக் குழற்கோதைமுன்கூறிய * பாடல்பத்தும்வல்லார்க்கு இல்லைபாவமே. (கக)

ஊடல்கூடல்	ஊடலோடே கூடியிருக்கையென்ன, (அதாவது-ப்ரணய ரோஷஸஹிதைகளாயிருக்கையென்ன)	முன்	அநாதிகாலமாக
		நீடு நின்ற	நீடித்துப் பொருந்தி நின்ற
உணர்தல்	குறைகளை உணர்த்துகை யென்ன	நிறை புகழ் ஆய்ச்சியர் கூடலை	நிறைந்த புகழையுடைய ஆய்ப்பெண்கள் (இழைத்த) கூடலைப் பற்றி
புணர்தல்	(பிறகு) ஸம்ச்லேஷிக்கையென்ன (இப்படிப்பட்டகாரியங்களிலே)	குழல்கோதை	அழகியமயிர்முடியையுடையளான ஆண்டாள்

கூறிய	அருளிச்செய்த	பாவம் இல்லை	(எம்பெருமானைப் பிரிந்து தக்கிக்கும்படியான) பாவம் இல்லை [யாம்.
பாடல் பத்தும்	பத்துப் பாட்டுக்களையும்		
வல்லார்க்கு	ஓத வல்லவர்களுக்கு		

* * * "ஊடல்கூடல்" என்றது - ஊடலென்ன கூடலென்ன என்று இரண்டாகச் சொல்வதல்ல; ஊடலோடு கூடுகை யென்றுய் ஊடுகையை மாத்திரம் சொல்லிற்றுக் கொள்க. ஊடலாவது ப்ரணய கலஹம்; ஊடல்கூடலாவது அதை உடைத்தாயிருக்கை; ப்ரணயரோஷ விசிஷ்டத்வம். "போதுமறித்துப் புறமே வந்து நின்றீர், எதுக்கிதுவென் இதுவென்னிது வென்னே?" என்றும் "என்னுக்கு அவளைவிட்டிங்குவந்தாய் இன்ன மங்கே நட நம்பி! நீயே" என்றும், என்னுடைய பந்துங்கழலும் தந்து போகு நம்பி!" என்றும் இப்புடைகளிலே சொல்லி எம்பெருமானைக் கிட்டவர வொட்டாமல் கதவடைத்துத் தள்ளுகை ஊடல் எனப்படும்.

* * * உணர்தல்="உணர்த்தல்" என்று பிறவினையாயிருக்க வேண்டுவது ஓசையின்பம் நோக்கி 'உணர்தல்' என்று பிரயோகிக்கப் பட்டிருக்கிறதென்பர். ஸம்ச்லேஷம் பெருமல் தாங்கள் துடிக்கிறபடியை எம்பெருமானுக்கு நேரிலும் தூதுமூலமாகவும் தெரிவித்தல். இனி, புணர்தலாவது இவர்களுடைய துடிப்பை எம்பெருமான் நன்கு அறிந்து "உங்களை விட்டால் எனக்கு வேறு புகலுண்டா? என்னை வேறுகினைக்கலாமா? அடியேனல்லேனே? தாஸனல்லே னே?" என்றுற்போலே ஆற்றுமை மீதூர்ந்தமை தோற்றப் பலபாசுரங்களைச் சொல்லிக் கொண்டு * சுவரார் கதவின் புறமே வந்து நிற்பது * முற்றம் புகுந்து முறுவல் செய்து நிற்ப தாய் நெருங்கினவாறே இவர்களும் பரவசைகளாய் அவனோடு கலந்து பரிமாறுகை. ஆக, ப்ரணய ரோஷத் தோற்றப் பேசுகை யென்ன, தங்கள் வருத்தம் அவன் திருவுள்ளத்திலே படும்படி உணர்த்து வதென்ன, பின்பு இஷ்டப்படி ஸம்ச்லேஷிக்கை யென்ன ஆகிய இப்ப டிப்பட்ட காரியங்களே யாத்திரையாயிருப்பவர்கள் ஆய்ச்சிகள் என்றவாறு.

அடிவரவு:— தெள்ளி காட்டில் பூமகன் ஆய்ச்சி மாடம் அற்றவன் அன்று ஆவல் கொண்ட பழகு ஊடல் மன்னு.

ஐந்தாந் திருமொழி—மன்னுபெரும்புகழ்.

எம்பெருமானது வரவுக்காகக் குயிலை வேண்டும் பதிகம்.

545 மன்னுபெரும்புகழ்மாதவன் மாமணிவண்ணன்முடிமைந்தன்
தன்னை * உகந்ததுகாரணமாக என்சங்கிழக்கும்வழக்குண்டே *
புன்னைகுருக்கத்திநாழல்செருந்திப் பொதும்பினில்வாழுங்குயிலே *
பன்னியேப்போதுமிருந்துவிரைந்து என்பவளவாயன்வரக்கூவாய். (க)

புன்னை குருக்கத்தி நாழல் செருந்தி	புன்னைமரங்களும் குருக்கத்திமரங்களும் கோங்குமரங்களும் செருந்திமரங்களும் (இவைமுதலிய பல மரங்கள் நிறைந்த)
பொதும்பினில்	சோலையிலே
வாழும் குயிலே!	வாழுகின்ற கோகிலமே!,
மன்னு பெரும் புகழ்	நித்யமாய் அளவில்லாத புகழையுடையனும்
மா தவன்	சீரிய: பதியாய்
மா மணி வண்ணன்	நீலமணி போன்ற நிறத்தையுடையனும்
மணி முடி	நவமணிகள் அழுத்திச்சமைத்த திருவபிஷேகத்தையுடையனும்
மைந்தன் தன்னை	மிடுக்கையுடையனை எம் பெருமானை
உகந்தது காரணம் ஆக	ஆசைப்பட்டதுவே ஹேதுவாக
என் சங்கு இழக்கும் வழக்கு	என்னுடைய கைவளைகள் கழன்றொழியும் படியான நியாயம்
உண்டே?	(உலகத்தில்) உண்டோ?; (இது வெகு அநியாயமாயிருக்கிறது.)
	(இதற்கு நான் என்செய்வேன் என்கிறபோ)
என் பவளம் வாயன்	பவளம் போற் பழுத்த திருவதரத்தை யுடையனனை எனது [தூணைவன்
வர	(என்னிடம்) வந்து சேரும்படி
எப்போதும்	இரவும் பகலும்
பன்னி இருந்து	(அவனது திருநாமங்களைக்) கத்திக்கொண்டிருந்து
விரைந்து கூவாய்	சீக்கிரமாகக் கூவவேணும்.

* * * என் சங்கிழக்கும் வழக்குண்டேயென்றது எனது உடல் மெலிந்துபோவது தகுதியோ? என்றபடி. (க)

546 வெள்ளைவிளிசங்கிடங்கையிற்கொண்ட விமலனெனக்குருக்காட்டான் *
உள்ளம்புகுந்தென்னைவித்து நாளுமுயிர்ப்பெய்துகூத்தாட்டுக்காணும் *
கள்ளவிழ்சேண்பகப்பூமலர்கோதிக் களித்திசைபாடும்குயிலே *
மெள்ளவிருந்துமிழற்றிமிழற்றாது என்வேங்கடவன்வரக்கூவாய். (உ)

கள் அவிழ் செண்பகம் பூ மலர் கோதி — தேன் பெருகாநின்றுள்ள செண்பகப் பூவிலே (அஸாரமான அம்சத்தைத்தள்ளி) ஸாரமான அம்சத்தை அநுபவித்து

களித்து — (அதனால்) ஆநந்தமடைந்து

இசை பாடும் குயிலே ! — (அந்த ஆநந்தத்திற்குப் பேர்க்கு வீடாக) இசைகளைப்பாடா நின்றுள்ள கோகிலமே !,

வெள்ளை விளி சங்கு இடங்கையில் கொண்ட — சுத்தஸ்வபாவமாய் (கைங்கர்ய ருசியுடையாரை) அழைக்குமதான ஸ்ரீபாஞ்ச ஜந்யத்தை இடக்கையிலே ஏந்திக்கொண்டிருக்கிற

விமலன் — பவித்ரனான பரமபுருஷன்

உரு எனக்கு காட்டான் — தனது திவ்யமங்கள விக்ரஹத்தை எனக்கு ஸேவை ஸாதிப்பிக்கமாட்டேனென்கிறான்;

(அதுவுமல்லாமல்)

உள்ளம் புகுந்து என்னை நைவித்து — என்னுடைய ஹ்ருதயத்தினுள்ளே வந்து புகுந்து என்னை நைந்து போம்படிபண்ணி (அவ்வளவிலே நான் முடிந்து போவதாயிருந்தால் இன்னமும் என்னை ஹிம்ஸிப்பதற்காக முடியவொட்டாமல்)

நாளும் உயிர் பெய்து — நாள் தோறும் பிராணனைப் பெருக்கடித்து

கூத்தாட்டு காணும் — என்னைத் தத்தளிக்கச்செய்து வேடிக்கை பாரா நின்றாய்; (நீ செய்யவேண்டியதென்ன வென்றால்)

இருந்து — என் அருகில் இருந்துகொண்டு

மெள்ள மிழற்றி மிழற்றாது — உன் மழலைச் சொற்களைச்சொல்லி விலாஸ சேஷ்டிதங்களைப் பண்ணாமல்

என் வேங்கட வன் வர — எனக்காகத் திருவேங்கடமலையிலே வந்து நிற்கிற எம்பெருமான் (இங்கே) வரும்படியாக

கூவாய் — கூப்பிடவேணும். (2)

547 மாதலிதேர்முன்புகோல்கொள்ள மாயனிராவணன்மேல் * சரமாரி
தாய்தலையற்றற்றுவீழத் தொடுத்ததலைவன்வரவேங்கும்காணேன் *
போதலர்காவில்புதுமணம்நாறப் பொறிவண்டின்காமரங்கேட்டு * உன்
காதலியோடுடன்வாழ்குயிலே யென்கருமாணிக்கம்வரக்கூவாய். (ஙூ)

போது அலர் காவில் — சிறந்த பூக்கள் அலர்கின்ற சோலையிலே

புது மணம் நாற — புதிதான பரிமளமானது விச

பொறி வண்டின் காமரம் கேட்டு — அழகிய வண்டினுடைய கா மரம் என்கிற பண்ணைக் கேட்டுக் கொண்டு

உன் காதலியோடு உடன் வாழ் குயிலே — உன் பேடையோடு கூட வாழ்கிற குயிலே !

மாதலி தேர் முன் புகோல் கொள்ள — மாதலியானவன் (இராவணனுடைய)தேரின் முன்னே கோலைக் கொண்டு தன் தேரை நடத்த,

மாயன் இராவணன் மேல் — மாயாவியான ராவணன் மேலே

சரம் மாரி — பாண வர்ஷத்தை

தாய் தலை அற்று அற்று வீழ தொடுத்த — (அவ்விராவணனுடைய) ப்ரதானமான தலை (பலகால்) அற்று அற்று விழும்படிப்ரயோகித்த

தலைவன் — எம்பெருமானுடைய

வரவு — வரவை

எங்கும் காணேன் — ஒருதிக்கிலும் காண்கிறேனில்லை (ஆதலால்)

என் கரு மாணிக்கம் வர — என்னுடைய அநுபவத்துக்கு யோக்யனாய் நீலரத்நம் போன்ற திருமேனியையுடையனான அவ்வெம்பெருமான் இங்கே வரும்படியாக

கூவாய் — நீ கூவவேணும்.

* * * "தாய் தலை" என்பதற்கு "ப்ரதாநமான தலை" என்று பெரியவாச்சான் பிள்ளை பொருள் கூறியிருத்தலால், "தாய்த்தலை" என்று தகரம் மிகாதொழிந்தது எதுகையின் பம் நோக்கியாமென்று கொள்க. அற்றற்றுவீழ="திருச்சரங்கள் பண்ணின பாக்யத்தாலே

(தலை) அறுக்கவறுக்க முளைத்ததாய்த்து; பின்னை அதுதானே போதுபோக்காக நின்று கொன்றுஞ்சுத்து. அப்படி முளைத்ததில்லையாகில், திருச்சரங்களின் வரவு இவனுல் அடக்கப் போகாதே." என்பது வியாக்கியான ஸூக்தி. "வரவெங்கும்" என்றவிடத்து வர என்றும் பதம்பிரிக்கலாம்—எங்கும் வரக்காணேன். (கூ)

548 என்புருகியினவேல்நெடுங்கண்கள் இமைபொருந்தாபலநாளும் *
துன்பக்கடற்புக்குவைகுந்தனென்பதோர் தோணிபெறுதுழல்கின்றேன் *
அன்புடையாரைப்பிரிவுறுகோயது நீயுமறிதியிலே *
பொன்புரைமேனிக்கருளக்கொடியுடைப் புண்ணியனேவரக்கூவாய். (சு)

குயிலே !	ஓ குயிலே !,
என்பு உருகி	எலும்புகள் உருகிப் போனது [மல்லாமல்
இனம் வேல் நெடு கண்கள் இமை பொருந்தா	சிறந்த வேல் போன்ற விசாலமான கண்களும் மூடிக்கிடக்கின்றன வில்லை;
பல நாளும்	நெடுங்காலமாக
துன்பம் கடல் புக்கு	விச்லேஷவ்யஸநமாகிற கடலிலே அழுந்தி
வைகுந்தன் என்பது ஓர் தோணி பெறுது	ஸ்ரீவைகுண்ட நாதன் என்கிற ஒரு தோணியை அடையப் பெறுமல்
உழல்கின்றேன்	அக்கடலுக்குள்ளேயே தட்டித் தடுமாறிக்கொண்டிரா நின்றேன்;
அன்பு உடையாரை பிரிவுறும் நோய் அது	அன்பர்களைப் பிரிவதாலுண்டாகும் துக்கத்தை
நீயும் அறிதி	நீயும் அறிவாயன்றே ?
பொன் புரை மேனி	பொன் போன்ற மேனியையுடையவனை
கருளன் கொடி உடை	கருடனைக் கொடியாக வுடையவனை
புண்ணியனே	"தர்மமே வடிவெடுத்தவன்" என்னப்படுகிற கண்ணபிரானே
வர கூவாய்	இங்கே வரும்படி கூவு. (4)

549 மென்னடையன்னம்பரந்துவிளையாடும் வில்லிபுத்தூருறைவான்றன் *
பொன்னடிகாண்பதோராசையினுல் என்பொருகயற்கண்ணினைதுஞ்சா *
இன்னடிசிலோடுபாலமுதூட்டி யெடுத்தவென்கோலக்கிளியை *
உன்னெடுதோழமைக்கொள்ளுவன்குயிலே உல்களந்தான்வரக்கூவாய். (ரு)

மெல் நடை அன்னம் பரந்து விளையாடும்	மந்தகதியையுடைய அன்னப்பறவைகள் எங்கும் பரவி விளையாடுவதற்கு இருப்பிடமான
வில்லிபுத்தூர்	ஸ்ரீ வில்லிபுத்தூரிலே
உறைவான் தன்	எழுந்தருளியிருக்கிற எம்பெருமானுடைய
பொன் அடி	அழகிய திருவடிகளை
காண்பது ஓர் ஆசையினுல்	காண வேணுமென்றுண்டான ஆசையினுலே
பொரு கயல் என் கண் இணை	சண்டையிடும் இரண்டு கெண்டைகள் போன்ற எனதுகண்கள்
துஞ்சா	உறங்குகின்றனவில்லை;
குயிலே !	ஓ குயிலே !,
உலகு அளந்தான்	(த்ரிவிக்ரமனாய்) உலகங்களை அளந்த பெருமான்
வர	இங்கே வரும்படி
கூவாய்	கூவு;
	(அப்படி கூவுவாயாகில்)
இன் அடிசிலோடு பால் அமுது ஊட்டி எடுத்த என் கோலக் கிளியை	கன்னலமுதையும் பாலமுதையும் ஊட்டி வளர்க்கப் பெற்ற எனது அழகிய கிளியை
உன்னெடு	உன்னோடே
தோழமை கொள்ளுவன்	ஸ்நேஹப்படுத்தி வைப்பேன். (5)

550 எத்திசையுமமரர்பணிந்தேத்தும் இருடீகேசன்வலிசெய்ய *
முத்தன்னவெண்முறுவற்செய்யவாயும் முலையுமழகழிந்தேன்நான் *
கொத்தலர்காவில்மணித்தடங் கண்படைகொள்ளுமிளங்குயிலே *
என்தத்துவனேவரக்கூகிற்றியாகில் தலையல்லாலகைம்மாறிலேனே. (சு)

கொத்து அலர் காவில்	பூங்கொத்துகளானவை மலரு மிடமான சோலையிலே
மணி தடம்	அழகானவொரு இடத்திலே
கண் படை கொள்ளும்	உறங்குகின்ற
இளங் குயிலே!	சிறுகுயிலே!;
எத்திசையும்	எல்லாத்திக்குகளிலும்
அமரர் பணிந்து ஏத்தும்	தேவர்கள் வணங்கித்துதிக்கும் படியான பெருமை வாய்ந்த
இருடீகேசன்	கண்டாருடைய இந்திரியங்களை யெல்லாம் கொள்ளை கொள் ளுமவனை எம்பெருமான்
வலி செய்ய	(தன்னை எனக்குக்காட்டாமல்) மிறுக்குக்களைப் பண்ண,
	(அதனாலே)
கான்	கான்
முத்து அன்ன வெண்முறுவல்	முத்துப்போல் வெளுத்த முறு வலும்
செய்ய வாயும்	சிவந்த அதரமும்
முலையும்	முலையும் (ஆகிய இவை)
அழகு அழிந் தேன்	அழகு அழிந்தாம்படி விகாரப் பட்டேன்;
என் தந்துவினை	நான் உயிர்தரித் திருப்பதற்கு மூலகாரணமான அவ்வெம் பெருமானை
வர கூகிற்றி ஆகில்	இங்கேவரும்படி கூவவல்லியே யானால்
தலை அல்லால்	என்வாழ்நாள் உள்ளவளவும் என் தலையை உன் காவிலே வைத்திருப்பதுதவிர
கைம்மாறு இலேன்	வேறொரு ப்ரத்யுபகாரம் செய்ய அறியேன். (6)

551 பொங்கியபாற்கடற்பள்ளிகொள்வானைப் புணர்வதோராசையினால் * என்
கொங்கைகளிர்ந்துகுமைத்துக்குதுகலித்து ஆவியையாகுலஞ்செய்யும்
அங்குயிலே * உனக்கென்னமறைத்துறைவு ஆழியுஞ்சங்குமொண்தண்டும் *
தங்கியகையவனேவரக்கூவில்நீ சாலத்தருமம்பெறுதி. (எ)

அம் குயிலே!	அழகிய குயிலே!,
பொங்கிய பால் கடல்	அலையெறிவையுடையதிருப் பாற்கடலில்
பள்ளி கொள் வானை	பள்ளிகொண்டருளும் எம் பெருமானையே
புணர்வது ஓர் ஆசையினால்	ஸம்ச்லேஷிக்க வேணுமென்று உண்டான ஆசையினால்
என் கொங்கை	எனது முலைகள்
கிளர்ந்து	பருத்து
குதுகவித்து	மிக்க உத்ஸாஹங் கொண்டு
ஆவியை	எனது உயிரை
குமைத்து ஆகுலம் செய்யும்	உருக்கிவியாகுலப்படுத்தா கின்றனை;
குயிலே!	ஓ குயிலே!
மறைந்து உறைவு	என் கண்ணுக்குப் புலப்படா மல் நீ மறைந்திருப்பதனால்
உனக்கு என்ன	உனக்கு என்ன புருஷார்த்தம்!
ஒண் ஆழியும் சங்கும் தண்டும் தங்கிய கையவ னே வர	திருவாழி திருச்சங்கும் ஸ்ரீ கதையும் பொருந்திய திருக் கைகளையுடைய பெருமாள் இங்கே வரும்படி
நீ கூவில்	நீ கூவுவாயாகில்
சால	மிகவும்
தருமம் பெறுதி	தர்மம் செய்தாயாவாய். (7)

552 சார்ங்கம்வளையவலிக்கும் தடக்கைச்சதுரன்பொருத்தமுடையன் *
காங்களெம்மிலிருந்தோட்டியகச்சங்கம் நானுமவனுமறிதும் *
தேங்கனிமாம்பொழிற்சேக்தளிர்கோதுஞ் சிறுகுயிலே * திருமாலை
ஆங்குவிரைந்தோல்லைக்கூகிற்றியாகில் அவனேநான்செய்வனகாணே. (ஏ)

தேம் கனி மா பொழில்	இனிமையானபழங்களையுடைய மாந்தோப்பிலே
செம் தளிர் கோதும்	சிவந்த (தளிர்களையாயலகால்) கொந்துகிற
சிறு குயிலே!	இளங்குயிலே!,
சார்ங்கம் வளைய வலிக்கும்	தனது வில்லை வளைத்து வலிக்கும் சக்தியை யுடைய
தட கை	பெரிய திருக்கைகளையுடையனும்
சதுரன்	கலவித ஸாமர்த்தியமு முடையனை எம்பெருமான்
பொருத்தம் உடையன்	ப்ரணயரீதியிலும் வல்லமை பெற்றவன்;
காங்கள் இருந்து	அவனும் நானும் ஆக இருவரும் சேர்ந்திருந்து
எம்மில் ஒட்டிய	எங்களுக்குள் ரஹஸ்யமாகச் செய்துகொண்ட
கச்சங்கம்	ஸங்கேதத்தை
நானும் அவனும் அறிதும்	நாங்களிருவருமே அறிவோமே யன்றி வேறொருவரும் அறி யார்:
ஆங்கு திருமாலை	தூரஸ்தனையிருக்கிற ச்ரிய: பதியை
ஒல்லை விரைந்து கூகிற்றி ஆகில்	மிகவும் சீக்கிரமாக நீ கூவுவல்லையாகில்
அவனை	(பிறகு அவன் இங்கு வந்த பிற் பாடு) அவன் விஷயத்தில்
நான் செய்வன	நான் செய்யப் போகிற மிறுக் குக்களை
காண்	காணக்கடவை. (8)

553 பைங்கிளிவண்ணன்சிரீதரனென்பதோர் பாசத்தகப்பட்டிருந்தேன் *
பொங்கொளிவண்டிரைக்கும்பொழில்வாழ்குயிலே குறிக்கொண்டிதுகேள் *
சங்கொடுசக்கரத்தான்வரக்கூவுதல் பொன்வளைகொண்டுதருதல் *
இங்குள்ளகாவினில்வாழக்கருதில் இரண்டத்தொன்றேல்திண்ணம்வேண்டும். (கூ)

பொங்கு ஒளி வண்டு	மிக்க வொளியையுடைய வண்டுகளானவை
இரைக்கும் பொழில்	(மதுபானமயக்கத்தாலே) இசை பாடாநின்ற சோலையிலே
வாழ்	களித்துவிளையாடுகிற
குயிலே!	கோகிலமே!,
இது	நான் சொல்லுகிற இதனை
நீ குறிக்கொண்டு கேள்	நீ பராக்கில்லாமல் ஸாவதாநமாய்க் கேள்;
நான்	நான்
பைங்கிளி வண்ணன் சிரீதரன் என்பது ஓர் பாசத்து	பசுங்கிளி போன்ற நிறத்தையுடையனனைச்சிய: பதியென்கிற ஒருவலையிலே
அகப்பட்டு இருந்தேன்	சிக்கிக்கொண்டு கிடக்கிறேன்
இங்ஙு உள்ள காவினில்	இந்தச்சோலையிலே
வாழ கருதில்	நீ வாழ நினைக்கிறு யாகில்
சங்கொடுசக்கரத் தான் வர கூவுதல்	திருவாழிதிருச் சங்குடையனனை எம்பெருமான் (இங்கே) வரும்படி கூவுவதென்ன
பொன் வளை கொண்டு தருதல்	(நான் இழந்த) பொன்வளை களைக்கொண்டு வந்து கொடுப்பதென்ன
இரண்டத்து ஒன்று	இவையிரண்டுள் ஏதாவதொரு காரியம்
திண்ணம் வேண்டும்	நீ கட்டாயம் செய்து தர வேண்டும்,

* * * மூன்றுமடியிலுள்ள விகல்பத்தின் கருத்து என்னென்று ஆராய்வோம்; கை வளைகளைக் கொணர்ந்து கொடுப்பதென்பது எப்படி? எம்பெருமானுடைய பிரிவினாலே கை கழிந்துபோனவளைகள் மீண்டுவரவேணுமென்றால் கழன்றுபோனவளைகள் கையில்தங்கும்படி செய்யவேணுமென்கை. இது எம்பெருமானுடைய ஸம்ச்லேஷத்தாலன்றி மற்றொரு வழியாலும் நேருவதன்று. அந்த ஸம்ச்லேஷந்தானும் அவ்வெம்பெருமான் வந்தாலன்றி நேரிடாது: இப்படியிருக்க, சங்கொடுசக்கரத்தான் வரக்கூவுதல் என்பது ஒரு பக்ஷமாகவும் பொன்வளைகொண்டுதருதல் என்பது மற்றொரு பக்ஷமாகவும் வேறுபாடுதோற்ற அருளிச்செய் திருக்கிறபடி என்? வ்யாஹதமாயிருந்ததே என்று நினைக்கும்படியாயிராநின்றது. ஆயினும் இஃதொரு சமத்காரவார்த்தை யென்று கொள்ளவேணும்; பதிவ்ரதாசிரோமணியான ஸாவித்ரியானவள் தன்காதலனாகிய ஸத்யவானுடைய உயிரைக்கவர்ந்துசென்ற யமனைவணங்கி அவ்வுயிரைமீட்டுக் கொடுக்கும்படி பலவாறு வேண்டியும் அவன் அதற்கு இசையாமற்போக, உபாயமறிந்த அவள் பலபல தர்மஸம்பந்தமான வார்த்தைகளை இனிமையாகச் சொல்லிக்கொண்டுபோய் அந்தயமனை மதிமயக்கி "ஸத்யவானிடத்தில் எனக்குப் பலபிள்ளைகள் பிறக்கும்படி அருள்புரியவேணும்" எனவேண்ட, அவனும் அப்படியே அருளினன் என்றொரு இதிஹாஸமுண்டு; அதில்' நாயகனுடைய பிராணனைப்பிரார்த்தித்து அதனைப்பெருதவள் ஸந்ததியின் அபிவிருத்தியை வேண்டினது வ்யாஹதமாயிருக் கச்செய்தேயும், எப்படியாவது தன்மநோரதத்தை நிறைவேற்றிக்கொள்ள நினைத்த ஸாவித்ரியின் சதுரமான உக்தியாகையாலே ஒழுங்குபெற்றது போல இங்கும் * சங்கொடு சக்கரத்தான் வரக்கூவுதலும் பொன்வளைகொண்டு தருதலும் பர்யாயமாயிருந்தாலும் இதரருசமத்காரமான உக்தியாகையாலே ஒழுங்கு பெறுமென்க. "ஒருகார்யத்தாலே இரண்டும் தலைக்கட்டுமிறே" என்று ஒரு சொல்லாலே முடித்தருளினர் பெரியவாச்சான்பிள்ளை. (கூ)

554 அன்றுலகமளந்தானையுகந்து அடிமைக்கணவன்வலிசெய்ய *
தென்றலுந்திங்களுமூடறுத்து என்னைநலியுமுறைமையறியேன் *
என்றுமிக்காவிலிருந்திருந்து என்னைத்தனைத்தாதேநீயும்குயிலே *
இன்றுநாராயணனைவரக்கூவாயேல் இங்குத்தைநின்றும்துரப்பன். (ய)

அன்று	மஹாபலி கொழுத்திருந்த அக் காலத்தில்
உலகம் அளந்தானை	மூவுலகங்களையும் அளந்து கொண்டவனை எம்பெரு மான் விஷயத்திலே
உகந்து	நான் கைங்கர்யத்தை ஆசைப்பட,
அவன்	அவ்வெம்பெருமான்
அடிமைக்கண்	(அந்த) கைங்கரியத்திலே
வலி செய்ய	வஞ்சனைபண்ண
(அதற்கு நான் நோவுபட்டிருக்கிற ஸமயத்திலே)	
தென்றலும்	தென்றல்காற்றும்
திங்களும்	பூர்ணசந்திரனும்
என்னை	என்னை
ஊடு அறுத்து நலியும் முறைமை	உள்ளே புகுந்து கொண்டு புகுந்து ஹிம்ஸிக்கும் நியாயத்தை
அறியேன்	அறிகின்றிலேன்;
குயிலே!	ஓ குயிலே!
நீயும்	(என்னுடைய க்ஷேமத்தை விரும்புமவனை) நீயும்
என்றும்	எந்நாளும்
இக் காவில்	இந்தச் சோலையிலே
இருந்து இருந்து	இடைவிடாமலிருந்து கொண்டு
என்னை	(ஏற்கனவே மெலிந்திருக்கிற) என்னை
கதைத்தாதே	ஹிம்ஸியாமலிரு;
இன்று	இன்றைக்கு
நாராயணனைவர கூவாவேல்	ஸ்ரீமந்நாராயணன் இங்கே வரும்படி அவனை நீ கூவா மற்போலையாகில்
இங்குத்தை நின்றும்	இந்தச் சோலையிலிருந்து
துரப்பன்	உன்னைத்துரத்திவிடுவேன்.

* * * அடிமைக்கண் = கண்-ஏழாம்வேற்றுமையுருபு: அடிமையிலே என்றபடி. வலி செய்தலாவது—இவளைத்தவர்கள் விஷயத்தில் பலிஷ்டர் செய்யும் செயலைச் செய்தல்; (அலங்கியஞ் செய்தல், மாட்டேனென்னுதல்.)

* * * "இங்குத்தைநின்றும் துரப்பன்" என்பதற்கு 'இச்சோலையிலிருந்து உன்னைத் துரத்திவிடுவேன்' என்பது பொருளாயினும், 'நான் உயிர்துறந்துவிடுவேன்' என்பது கருத்தாம். நீ நாராயணனை வரக்கூவாவிடில் நான்முடிந்து போவேன்; பிறகு இந்தச்சோலையை உனக்கு நோக்கித்தருவார் இல்லாமையினாலே நீ இருப்பிடமிழந்து வேறிடந்தேடி ஓடவேண்டியதுதான் என்றபடி. ஆகவே, துரப்பன் என்றது—நீ இவ்விடத்தைவிட்டு ஓடிப்போவதற்கு கிடானகாரியத்தைச் செய்வேன் என்றபடியாம்: அக்காரியமாவது - தான் முடிந்து போகை. (ய)

555 விண்ணுறநீண்டடிதாவியமைந்தனை வேற்கண்மடந்தைவிரும்பி *
கண்ணுறவென்கடல்வண்ணனைக் கூவுகருங்குயிலேயென்றமாற்றம் *
பண்ணுறுநான்மறையோர்புதுவைமன்னன் பட்டர்பிரான்கோதைசொன்ன *
நண்ணுறுவாசகமாலைவல்லார் நமோநாராயணயவென்பாரே. (கக)

வேல் கண்	வேல் போன்ற கண்களையுடையளாய்
மடந்தை	பெண்மைக்கு உரிய குணங்கள் நிறைந்தவளாய்
பண் உறு நால் மறையோர் புதுவை மன்னன் பட்டர் பிரான் கோதை	ஸ்வரப்ரதாநமான நான்கு வேதங்களையும் ஓதின ஸ்ரீவைஷ்ணவர்கள் வாழ்கிற ஸ்ரீவில்லிபுத்தூர்க்குத் தலைவரான பெரியாழ்வாருடைய மகளான ஆண்டாள்,
"அடி விண் உற நீண்டு தாவிய மைந்தனை	"திருவடியானது பரமாகாசத்தளவும் போய்ப் பொருந்தும் படியாக நெடுகவளர்ந்து (உலகங்களை) வியாபித்த மிடுக்கையுடையனான எம்பெருமானை
விரும்பி	ஆசைப்பட்டு
கருங் குயிலே! என் கடல் வண்ணனை கண் உற கூவு' என்ற மாற்றம்	'ஓகரியகுயிலே! கடல் போன்ற திருநிறத்தையுடையனை என் காதலனை நான் ஸேவிக்கும் படி நீ கூவு' என்று நியமித்த பாசுரமாக
சொன்ன	அருளிச்செய்த
நண்ணுறு வாசகம் மாலை	போக்யமான (இந்த) ஸ்ரீ ஸூக்தி மாலையை
வல்லார்	ஓதவல்லவர்கள்
'நமோநாராயண' என்பார்	எம்பெருமானுக்கு அந்தரங்கமாகப்பேறுவர்கள்.

* * * நமோநாராயணய வென்பாரே = திருவஷ்டாக்ஷரமஹாமந்திரத்தையநுஸந்திப்பார்க்கு எதுபயனே அது இத்திருமொழிகற்றார்க்குப் பயனென்பது உள்ளுறை. (கக)

அடிவரவு:— மன்னு வெள்ளை மாதலி யென்பு மென்னடை யெத்திசை பொங்கிய சார்ங்கம் பைங்கிளி யன்று விண் வாரணம்.

ஆண்டாள் கனாக்கண்டமை கூறும்பதிகம்.

556 வாரணமாயிரம் சூழவலஞ்செய்து *
நாராணநம்பி நடக்கின்றனென்றெதிர் *
பூரணபொற்குடம் வைத்துப்புரமெங்கும் *
தோரணம்நாட்டக் கனாக்கண்டேன்தோழீநான். (க)

தோழீ	என் உயிர்த்தோழியே !,	எதிர்	எதிரே
நம்பி	ஸகலகுணபரிபூர்ணனை	பொன் பூரண குடம் வைத்து	பொன்மயமான பூர்ணகும்பங்களை வைத்து
நாரணன்	ஸ்ரீமந்நாராயணன்	புரம் எங்கும்	பட்டணம் முழுதும்
ஆயிரம் வாரணம் சூழ	ஆயிரம் யானைகள் சூழ்ந்து வர	தோரணம் நாட்ட	தோரண ஸ்தம்பங்கள் நாட்ட (இந்த நிலைமையை)
வலம் செய்து நடக்கின்றனென்று	பிரதக்ஷிணமாக எழுந்தருளுகிறனென்று (வாத்யகோஷாதிகளால் நிச்சயித்து)	நான் கனாக் கண்டேன்	நான் ஸ்வப்நத்தில் அநுபவித்தேன். (1)

557 நாளைவதுவை மணமென்றுநாளிட்டு * பாலிகமுகு பரிசூடைப்பந்தற்கீழ் *
கோளரிமாதவன் கோவிந்தனென்பானோர் * காளைபுகுதக் கனாக்கண்டேன்தோழீநான். (உ)

தோழீ !—;

நாளை	நாளைக்கு	கோளரி மாதவன் கோவிந்தன் என்பான் ஓர் காளை	நரஸிம்ஹனென்றும் மாதவனென்றும் கோவிந்தனென்றும் திருநாமங்கள் பூண்ட ஒரு யுவா வானவன்
வதுவை மணம் என்று நாள் இட்டு	விவாஹமஹோத்ஸவ மென்று முஹூர்த்தம் நிர்ணயித்து		
பாளை கமுகு பரிசு உடை பந்தல்கீழ்	பாளைகளோடு கூடின பாக்கு மரங்களாகிற அலங்காரங்களையுடைத்தான மணப்பந்தலின் கீழே	புகுத	பிரவேசிக்க
		நான் கனாக் கண்டேன்—.	

* * * "நாளையதினம் கண்ணபிரானுக்கும் ஆண்டாளுக்கும் கல்யாண மஹோத்ஸவம்" என்பதாக முஹூர்த்த நிர்ணயம்பண்ணின பின்பு, விவாஹத்தின் முன்னாளிற் செய்ய வேண்டுஞ் சடங்குகள்செய்தற்காகக் கண்ணபிரான் அலங்காரப்பந்தலின் கீழ் எழுந்தருளக் கனாக்கண்டேனென்கிறாள். (உ)

558 இந்திரனுள்ளிட்ட தேவர்குழாமெல்லாம் * வந்திருந்தென்னை மகட்பேசிமந்திரித்து *
மந்திரக்கோடியுடுத்தி மணமாலை * அந்தரிசூட்டக் கனாக்கண்டேன்தோழீநான். (ங)

இந்திரன் உள்ளிட்ட தேவர் குழாம் எல்லாம்	இந்திரன் முதலான தேவஸமூஹங்களெல்லாம்	அந்தரி	'துர்க்கை' என்கிற நாத்தனார்
வந்து இருந்து	(இந்நிலத்திலே) வந்திருந்து	மந்திரக் கோடி உடுத்தி	கல்யாணப் புடைவையை எனக்கு உடுத்தி
என்னை மகள் பேசி	என்னைக் கல்யாணப் பெண்ணாக வார்த்தை சொல்லி	மணம் மாலை சூட்ட	பரிமளம் மிக்க புஷ்பங்களையும் சூட்ட
மந்திரித்து	அதற்குமேல் ஸம்பந்திகள் ஒருவர்க்கொருவர் செய்துகொள்ள வேண்டிய ஏற்பாடுகள் விஷயமாக யோசித்து முடிவுசெய்துகொண்டு, (பிறகு)	தோழீ ! நான் கனாக் கண்டேன்—.	

* * * இந்திரன் முதலிய வானவர்களெல்லாரும் 'நம்முடைய பெருமானுக்கு நடக்கப்போகிற கல்யாணமஹோத்ஸவத்தை நாமெல்லாருமாய்க் கூடியிருந்து காரியங்கள்செய்து நிறைவேற்றிவரவேணும்' என்று குதூஹலித்துத் தரையிலேகால்பாவிவந்து 'இக்காரியம் முடிந்தாலன்றி நாங்கள் எழுந்திருப்பதில்லை' என்று பிடிவாதமாயிருந்து 'எங்கள்பெருமானுக்கு உங்கள் பெண்ணை மணவாட்டியாக்கித் தரவேணும்' என்றுபெரியதிரளிலே பிரார்த்தித்து, பிறகு உபயவர்க்கத்தாரும் ரஹஸ்யமாகவிருந்து பூஷணபீதாம்பரங்கள் விஷயமாகவும் மற்றுமுள்ள ஸம்விதானங்கள் விஷயமாகவும் ஒருவர்க்கொருவர் பேசிக்கொள்ளவேண்டியவற்றைக் காதோடு காதாகப்பேசிமுடித்து, இனிக்காலவிளம்பம் செய்தால் எதாவது இடையூறு நேரிடக்கூடுமென்றெண்ணி அப்போதே மணமகளுக்கு நாத்தனாரைக்கொண்டு புடைவையுடுத்துகிற க்ரமத்திலே எனக்குநாத்தனாரான துர்க்கையைக்கொண்டு புடைவையுடுத்தி நன்மாலைகளையும் சூட்டுவித்து இப்படிப்பட்ட சில பாணிக்ரஹணபூர்வாங்கங்கள் நடைபெறக் கண்ணாரக்கண்டேனென்கிறாள்.

மகள்பேசுதல்='இவளைமணமகளாகத் தாரைவார்த்துக் கொடுக்கவேணும் என வேண்டிப் பேசுதல். மந்திரித்து=மந்த்ர: (மந்த்ர:) என்றவடசொல்லடியாப்பிறந்த அவ்யயம். மந்த்ரமாவது ஆலோசனை; ஆலோசித்து என்றபடி. மகள்பேசினபிறகு ஆலோசிப்பது பூஷணபீதாம்பராதி விஷயமென்க. மந்திரக்கோடி=மந்த்ரவாஸஸ் [மந்த்ரவாஸஸ்] என்பர் வடநூலார். "கோடியுடுத்து" என்று சிலர் ஓதுவர். "உடுத்தி" என்றபாடமே ஏற்கும்: 'உடுத்து' என்றால், தான் அணிந்துகொண்டு என்று பொருள்; உடுத்தி என்றால் பிறர்க்குச் சாத்தி என்றுபொருள்; இங்குப்பிறவினைப்பொருள் படவேண்டிகிற்றலால் 'உடுத்தி' என்ற பாடமே ஏற்குமென்க. துர்க்கையானவள் கண்ணபிரானுக்கு—உடன்பிறந்தாளாதலால் ஆண்டாளுக்கு நாத்தனாரானாள். அந்தரத்திலே [ஆகாயத்திலே] அந்தர்த்தானமாய்ப் போனமையால் அவளுக்கு அந்தரி என்று பேராயிற்றென்க. (கூ)

559 காற்றிசைத்தீர்த்தங்கொணர்ந்து கனிகல்கி * பாப்பனச்சிட்டர்கள் பல்லாரேடுத்தேத்தி *
பூப்புனைகண்ணிப் புனிதனேடென்றன்னை * காப்புநாண்கட்டக் கனாக்கண்டேன்தோழீநான்.(ச)

தோழீ !—;	
பாப்பனர் சிட்டர்கள் பல்லார்	சிஷ்டர்களான பல ப்ராஹ்மணர்கள்
நால் திசை தீர்த்தம் கொணர்ந்து	நான்கு திசைகளிலுமிருந்து தீர்த்தங்களை கொண்டுவந்து
கனி நல்கி	நன்றாகத் தெளித்து
எடுத்து ஏத்தி	உச்சஸ்வரமாக வெடுத்து மங்களாசாஸனம்பண்ணி
பூ புனை கண்ணி புனிதனோடு	(பலவகைப்) புஷ்பங்கள் புனைந்த மாலையையுடையவனாய்ப் ப்ரமபாவநனான கண்ணபிரானோடு
என்றன்னை	என்னை (இணைத்து)
காப்பு நாண் கட்ட	கங்கணம்கட்ட
நான் கனாக் கண்டேன்—.	

* * * சக்ரவர்த்தித் திருமகனுடைய திருவபிஷேகமஹோத்ஸவத்திற்காக ஸ்ரீவாநரவீரர்கள் நாலுஸமுத்ரத்திலுமுள்ள தீர்த்தங்களையுங் கொணர்ந்தாப்போலே என்னுடைய கல்யாணமஹோத்ஸவத்திற்காக வைதிகஸார்வபௌமர்களான பல அந்தணர்கள் நாற்றிசைகளினின்றும் நானாவகைப் புண்யதீர்த்தங்களைக் கொண்டுவந்து, ஆயுஸ்ஸுமுதலான நன்மைகளெல்லாமுண்டாவதற்காக அந்தத் தீர்த்தங்களாலே தம்பதிகளாகிய எங்களைப் பலகாலும் ப்ரோக்ஷித்து, வேதவாக்கியங்களை உச்சைஸ்ஸ்வரமாக எடுத்து ஓதி ஆசீர்வாதங்கள்பண்ணிக் கண்ணபிரானோடு என்னை இணைத்துக் கங்கணநூல்கட்டும் நிலைமையைக் கனவில் கண்டேனென்கிறாள்' (ச)

560 கதிரோளிதீபம் கலசமுடனேந்தி * சதிரிளமங்கையர்தாம் வந்தெதிர்கோள்ள *
மதுரையார்மன்னன் அடிநிலைதொட்டேங்கும் * அதிரப்புகுதக் கனாக்கண்டேன்தோழீகான்.(ரு)

தோழீ !—;

சதிர் இள மங்கையர் தாம் } அழகிய இளம் பெண்கள்

கதிர் ஒளி தீபம் } ஸூர்யனுடைய ஒளிபோன்ற ஒளியையுடைய மங்கள தீபத்தையும்

கலசம் பொற்கலசங்களையும்

உடன் ஏந்தி கையில் ஏந்திக்கொண்டு

வந்து எதிர் கொள்ள—எதிர்கொண்டுவர,

மதுரையார் மன்னன் } மதுரையிலுள்ளார்க்கு அரசனை ன கண்ணபிரான்

அடி நிலை தொட்டு பாதுகைகளைச்சாத்திக்கொண்டு

எங்கும் அதிர பூமியெங்கும் அதிரும்படியாக

புகுத எழுந்தருள

நான் கனக் கண்டேன்—.

* * * பரவத்தாலும் வடிவழகாலும் தங்களையே எல்லாரும் நோக்கிக்கொண்டிருக்கும்படி மிக்க அழகுவாய்ந்த மாதர்கள் மங்களஸம்ருத்திக்காக தீபங்களையும் பூர்ணகும்பங்களையும் ஏந்திக்கொண்டு எதிர்கொண்டு வர, கண்ணபிரான் பாதுகைசாத்திக்கொண்டு பூமி அதிரும்படி ஸந்தோஷமாக நடந்துவரும்படியைக் கனவில் கண்டேனென்கிறாள். (நு)

561

மத்தளங்கொட்ட வரிசங்கம்நின்றூத * முத்துடைத்தாமம் நிரைதாழ்ந்தபந்தற்கீழ் *
மைத்துனன்நம்பி மதுசூதன்வந்தென்னை * கைத்தலம்பற்றக் கனக்கண்டேன்தோழீநான்.(சு)

தோழீ !—;

மத்தளம் கொட்ட வரி சங்கம் நின்று ஊத } மத்தளங்கள் அடிக்கவும் ரேகைகளையுடைய சங்குகளை ஊதவும்

மைத்துனன் நம்பி மதுசூதன் } மைத்துனமை முறையையுடையனாய் பூர்ணனை கண்ணபிரான்

முத்து உடை தாமம் நிரை தாழ்ந்த பந்தல் கீழ் வந்து } முத்துக்களையுடைய மாலைத்திரள்கள் தொங்கவிடப்பெற்ற பந்தலின் கீழேவந்து

என்னை கைத்தலம் பற்ற } என்னைப் பாணிக்ரஹணம் செய்தருள

நான் கனக் கண்டேன்—.

* * * "நின்றூத" என்றவிடத்து நின்று என்றது வார்த்தைப்பாடு. மைத்துனன்= அத்தைமைந்தன்: மாமான்மகளை மணக்கும்முறைமைபற்றி நப்பின்னைப் பிராட்டிக்குக் கண்ணபிரான் மைத்துனனாதலால் ஆண்டாளும் அந்தஸம்பந்தத்தை ஆசைப்பட்டு "மைத்துனன்நம்பி" என்கிறாளென்ப. (சு)

562

வாய்நல்லார் நல்லமறையோதிமந்திரத்தால் * பாசிலைநாணல்படுத்துப் பரிதிவைத்து *
காய்சினமாகளிறன்னன் என்கைபற்றி * தீவலஞ்செய்யக் கனக்கண்டேன் தோழீநான். (எ)

தோழீ !—;

வாய் நல்லார் நல்ல மறை ஓதி நன்மை ஓதின வைதிகர்கள் சிறந்த வேதவாக்கியங்களை உச்சரிக்க,

மந்திரத்தால் } (அந்தந்த க்ரியைகளுக்கு இசைந்த) மந்த்ரங்களைக்கொண்டு

பாசு இலை நாணல் படுத்து } பசுமைதங்கிய இலைகளையுடைத்தான நாணற்புல்லைப் பரிஸ்தரணமாக அமைத்து

பரிதி வைத்து ஸமித்துக்களை இட்டு,

காய் சினம் மா களிறு அன்னன் } மிக்க சினத்தையுடைய மத்தகஜம் போற்செருக்கனை கண்ணபிரான்

என் கை பற்றி என்கையைப்பிடித்துக்கொண்டு

தீ வலம் செய்ய அக்கினியைச் சுற்றிவர

நான் கனக் கண்டேன்—.

* * * முதலடியில், ஓதினென்றது எச்சத்திரிபு; ஓதனென்றபடி. வாய்நல்லார்நல்ல மறையோத, காய்சினமாகளிறன்னன் மந்திரத்தால் பாசிலைநாணற்படுத்துப் பரிதிவைத்து, என்கைபற்றித் தீவலஞ்செய்யக் கனக்கண்டேன். ஆண்டாளைக் கைப்பிடிக்கப் பெற்றமையாலுண்டான் செருக்குக்குக் காய்சினமாகளிற்றின் செருக்கு ஒக்கும். என்கைபற்றித் தீவலஞ் செய்ய=திருமங்கலியதாரணத்திற்குப்பிறகு தீவலஞ்செய்தல் முறைமையென்ப. தம்பதிகள் தங்களுடைய அன்பை அக்நிஸாக்ஷிகமாக்குகிறபடி. இந்தத் தீவலஞ்செய்தல் ஸப்தபதீ எனவும்படும். (எ)

563 இம்மைக்கும் ஏழேழ்பிறவிக்கும்பற்றுவான் * நம்மையுடையவன் நாரணன்நம்பி *
செம்மையுடைய திருக்கையால்தாள்பற்றி * அம்மிமிதிக்கக் கனாக்கண்டேன்தோழீநான்.(அ)

தோழீ !—;	
இம்மைக்கும் ஏழ் ஏழ் பிறவிக்கும்	இப்பிறவிக்கும் மேலுள்ள பிறவிகள் எல்லாவற்றிற்கும்
பற்று ஆவான்	சரண்யனாயிருப்பவனுய்
நம்மை உடையவன்—நமக்குசேஷியாய்	
நம்பி	ஸகலகல்யாணகுணபரிபூர்ணனுய்
நாரணன்	நாராயணனுடைய கண்ணபிரான்
செம்மை உடைய திருகையால்	செவ்விய (தன்து) திருக்கையினால்
தாள் பற்றி	(என்து) காலைப்பிடித்து
அம்மி மிதிக்க	அம்மியின்மேல் எடுத்துவைக்க
நான் கனாக் கண்டேன்—;	

* * * கர்த்தவ்முள்ளதனையும் நம்முடைய பணிவிடைகளை ஏற்றுக்கொண்டு நம்மை நோக்குமவனுய் கண்ணபிரான் தனது செந்தாமரை மலர்போன்ற திருக்கையாலே என்காலைப்பிடித்து அம்மிமிதிப்பிக்கக் கனாக்கண்டேனென்கிறாள். இது அச்மாரோஹணம் எனப்படும். மணவாளப்பிள்ளை மணவாட்டியின் காலைப் பிடித்துக்கொண்டு போய் அம்மியை மிதிக்கச்செய்வது முறைமையோ? பெண்பிள்ளையின்காலை ஆண்பிள்ளைவந்துபிடிப்பது பொருந்துமோ? இதுஸாஸ்த்ரமரியாத்தைக்குச் சேருமோ? அப்படி ப்ரமாணந்தானுண்டோவென்று பலபேர்க்கு இதிலே விசிகித்ஸைபிறக்கும்; திருக்கையால் தாள்பற்றுகையென்பது அஸாஸ்த்ரீயமன்று காரியமென்று சிலர் க்ரந்தமும் எழுதியிருக்கிறார்கள். ஆனால் அவர்கள்; பெரியவாச்சான் பிள்ளைவியாக்கியானவைகரியின் ஸ்வாரஸ்யத்தை ஆராய்ப்பெற்றிலர் போலும்; வியாக்கியானஸ்ரீக்தி வருமாறு:— "[செம்மையுடைய திருக்கையால் தாள்பற்றி.] பிள்ளையுறவு முறையார் வேண்டாவென்பர்கள்: பெண்பிள்ளையுறவு முறையார் வேணுமென்னுகிறபர்கள்; இப்படி இரண்டுதலையிலுள்ளாரும்வார்த்தை சொல்லாநிற்கச்செய்தே தானேவந்து காலைப்பிடிக்கக் கணிசியாநிற்குமாய்த்து. அதாவது—ஆசார்யர்கால் பிடிக்கவென்றால் இற்யார்த்தகையர்ய்த்து: உபதேஸகர்ஸத்திற் போலன்றிறே பரிமர்ற்றத்திலிருப்பது; உபதேசிப்பது அவன்காலைப்பிடிக்கக்கடவதிர்க; பரிமாற்றத்தில்வந்தால் அவன்றன் காலைப்பிடிக்குமிடமர்கவாய்த்திருப்பது.....[தோழீ! நான்]..... அவன்ஸ்வபாவம் நீ சொல்லக் கேட்டபடியே அநுபவிக்கப்பெற்றேன்." எம்பெருமான் அன்புமிகுதியால் பரிமாறப்புகுந்தால் ஸாஸ்த்ரம் குறுக்கேநிற்கமாட்டாதென்க. "அம்மி மிதிக்க" என்றது—"அம்மிமிதிப்பிக்க" என்றபடி. பாதிவ்ரத்யத்தில் பங்கமடைந்த கல்லுருவமடைந்த அஹல்யையைத் திரஸ்கரணஞ்செய்தல் அம்மிமிதிப்பதற்குக்கருத்து என்றார் ஒருவர். அஹல்யையைப் போலல்லாமல் விழுவாத பாதிவ்ரத்ய முடையேனுயிருக்கக் கடவேனென்று இதனுல் கர்ட்டிக்கொண்டபடியாம். (அ)

564 வரிசிலைவாண்முகத்து என்னைமார்தாம்வந்திட்டு *
எரிமுகம்பார்த்து என்னைமுன்னேநிறுத்தி *
அரிமுகனச்சுதன் கைம்மேலென்கைகளைவைத்து *
பொரிமுகந்திட்டக் கனாக்கண்டேன்தோழீநான். (கூ)

தோழீ—;	
வரி சிலை வாள் முகம்	அழகிய வில்போன்ற புருவத்தையும் ஒளிபொருந்திய முகத்தையுமுடையவர்களான
என் ஐம்மார் தாம் வந்திட்டு	எனது தமையன்மார்கள் வந்து
எரி முகம் பார்த்து	அக்நியை நன்முகஜ்வலிக்கச் [செய்து
முன்னே என்னை நிறுத்தி	அந்த அக்நியின்முன்னே என்னை நிறுத்தி
அரி முகன்	(ஹிரண்யவத்திற்காக) ஸிம்ஹமுகத்தையுடையனுய் அவதரித்த
அச்சுதன்	கண்ணபிரானுடைய
கை மேல்	திருக்கையின்மேலே

என் கை வைத்து பொரி	என்னுடைய கையை வைத்து பொரிகளை
முகந்து அட்ட	அள்ளிப்பரிமாற
நான் கனக் கண்டேன்—.	

* * * அம்மிமிதித்தபிறகு 'லாஜஹோமம்' செய்வதுமுறைமை; அதாவது பொரியை யிட்டு ஆஹுதிசெய்தல்: அது நடந்தபடியைச் சொல்லுகிறாள் இப்பாட்டில். ப்ரயோகசந்த்ரிகை என்னும் க்ரந்தத்தில் விவாஹப்ரகரணத்தில் லாஜஹோமமுறைவரையுமிடத்து [பத்ன்யாஸ் ஸோதர்யோ லாஜாநாவபதீத்யேகே] அதாவது—மணவாட்டியின் கூடப்பிறந்தவன் பொரி களை எடுத்திடுவதாகச்சிலர்கொள்கை என்று சொல்லப் பட்டிருத்தலாலும் அநுஷ்டானமும் அப்படியேயிருப்பதாலும் "என்னைமார் தாம்வந்திட்டுப் பொரிமுகந்தட்ட" என்கிறாள். என்னைமார்=என் ஐமார்—தமையன்மார்; இப்பதம் திருவாய்மொழியிலும் [ஆரும்பத்தில் இரண்டாந்திருவாய்மொழியில் ஏழாம்பாட்டில்] பிரயோகிக்கப்பட்டுள்ளமை காண்க: "என்னைமார் தன்மபாவமென்னும் ஒருநான்று தடிபிணக்கே," சிலைபோன்ற புருவமென்ன வேணடுமிடத்துச் சிலை என்றது—முற்றுவமை: "தாவி வையங்கொண்ட தடந்தாமரை கட்கே" என்றதுபோல; "கஞ்சைக் காய்ந்த கருவில்லி" என்று மேலும் வரும். முகந்து அட்டுதல்—எடுத்துப்ரக்ஷேபித்தல். (கூ)

565

குங்குமமப்பிக் குளிர்சாந்தம்மட்டித்து * மங்கலவீதி வலஞ்செய்துமணநீர் *
அங்கவனோடும் உடன்சென்றங்நானைமேல் * மஞ்சனமாட்டக் கனக்கண்டேன்தோழீநான்.(ய)

	தோழீ!—;
குங்குமம்	குங்குமக்குழம்பை
அப்பி	உடம்பெல்லாம் பூசி
குளிர் சாந்தம்	குளிர்ந்த சந்தனத்தை
மட்டித்து	கனக்கத்தடவி
ஆனை மேல்	மத்தகஜத்தின்மேலே
அவனோடும் உடன் சென்று	அக்கண்ணபிரானோடு கூடியிருந்து
மங்கலம் வீதி	(விவாஹகிமித்தமான) அலங்காரங்கள் விளங்குகின்ற வீதிகளிலே
வலம் செய்து	ஊர்வலம் வந்து
மணம் நீர்	வஸந்த ஜலத்தினால்
மஞ்சனம் ஆட்ட	(எங்களிருவரையும்) திருமஞ்சனம் பண்ணுவதாக
நான் கனக் கண்டேன்—.	

* * * கண்ணபிரானும் தானுமாக அக்நிஸமீபத்திலே சில நாழிகை இருக்கநேர்ந்தமையால் அப்போதுண்டான வெப்பம் பொறுக்கமுடியாததாக, அதற்குப் பரிஹாரமாகக் குளிர்ந்த குங்குமக்குழம்பையும் சந்தனச்சேற்றையும் திருமேனியெங்கும் அப்பி இந்தத் திருக்கோலத்தோடே இருவருமானசேர்த்தியாய் ஆனையின்மீதேறித் திருவீதிவலம்வந்து, பிறகு வஸந்தஜலத்தாலே மஞ்சனமாட்டப்பெற்றதாகக் கனக்கண்டேனென்கிறாள். பச்சைக்கல்யாணத்தன்றிரவு நடைபெறும் வஸந்தஸ்நாநம் இப்பாட்டிற் கூறப்பட்டதென்க. (ய)

566

ஆயனுக்காகத் தான்கண்டகனவினை * வேயர்புகழ் வில்லிபுத்தூர்க்கோன்கோதைசொல் *
தூயதமிழ்மாலை யீரைந்தும்வல்லவர் * வாயுநன்மக்களைப்பெற்று மகிழ்வரே. (கக)

வேயர் புகழ்	வேயர் குலத்தவரால் புகழப்பட்டவராய்
வில்லிபுத்தூர் கோன்	ஸ்ரீவில்லிபுத்தூர்க்குத் தலைவரான பெரியாழ்வாருடைய (திருமகளான
கோதை	ஆண்டாள்
தான் ஆயனுக்கு ஆக கண்ட கனவினை	தான் கோபால க்ருஷ்ணனுக்கு வாழ்க்கைப்பட்டதாகக் கனக் கண்டபடியைக் குறித்து
சொல்	அருளிச்செய்த
தூய	பரிசுத்தமான
தமிழ் மாலை ஈர் ஐந்தும்	தமிழ்த்தொடையான இப்பத்துப் பாட்டுக்களையும்
வல்லவர்	ஓதவல்லவர்கள்
வாயும்	நற்குணங்களமைந்த
நல் மக்களை பெற்று	விலக்ஷணரான புத்ரர்களைப் பெற்று
மகிழ்வர்	ஆநந்திக்கப் பெறுவர்கள்.

அடிவரவு:—வாரணம் நாளை இந்திரன் நாற்றிசை கதிர் மத்தளம் வாய் இம்மை வரிசிலை குங்குமம் ஆயன் கருப்பூரம்.

ஏழாந்திருமொழி—கருப்பூரம்.

எம்பெருமானுடைய திருப்பவளத்தில் நித்யாநுபவரஸிகமான பாஞ்சஜன்யத்தோடு உசாவும் பகுதி.

567 கருப்பூரம்நாறுமோ கமலப்பூநாறுமோ *
திருப்பவளச்செவ்வாய்தான் தித்தித்திருக்குமோ *
மருப்பொசித்தமாதவன்றன் வாய்ச்சுவையும்நாற்றமும் *
விருப்புற்றுக்கேட்கின்றேன் சொல்லாழிவெண்சங்கே. (க)

ஆழி வெண் சங்கே	கம்பீரமாய் வெளுத்திராநின்ற ஸ்ரீபாஞ்சஜந்யாழ்வானே !,
மருப்பு ஒசித்த மாதவன்தன்	(குவலயாபீடயானையின்) கொம்பை முறித்த கண்ணபிரானுடைய
வாய்	திருஅதரத்தினுடைய
சுவையும்	ரஸத்தையும்
நாற்றமும்	பரிமளத்தையும் பற்றி
விருப்புற்று	ஆசையோடே
கேட்கின்றேன்	(உன்னைக்) கேட்கின்றேன்;
திரு பவளம் செம் வாய்தான்	(அப்பெருமானுடைய) அழகிய பவளம் போன்ற சிவந்த திருவதரமானது
கருப்பூரம் நாறுமோ?	பச்சைக்கற்பூரம்போல் பரிமளிக்குமோ? (அல்லது)
கமலம் பூ நாறுமோ?	தாமரைப்பூப்போலே பரிமளிக்குமோ?
தித்தித்திருக்குமோ	மதுரமான ரஸத்தை உடைத்தாயிருக்குமோ?
சொல்	(இன்னபடியிருக்குமென்று எனக்குச்) சொல்.

568 கடலில்பிறந்து கருதாது * பஞ்சசன னுடலில்வளர்ந்துபோய் ஊழியான்கைத்தலத்
திடரில் * குடியேறித் தீயவசுரர் * நடலைப்படமுழங்குந் தோற்றத்தாய்நற்சங்கே. (உ)

நல் சங்கே	அழகிய சங்கே !, (நீ)
கடலில்	ஸமுத்ரத்திலே *
பிறந்து	பிறந்து (அங்குநின்றும்)
பஞ்சசனன் உடலில் போய் வளர்ந்து	பஞ்சஜனனென்ற அஸுரனுடைய சரீரத்திற்போய் வளர்ந்து,
கருதாது	(இப்படிபிறந்தவிடத்தையும் வளர்ந்தவிடத்தையும்) நினையாமல்
ஊழியான்	எம்பெருமானுடைய
கை தலம் திடரில்	கைத்தலமாகிற உன்னத ஸ்தானத்திலே
குடி ஏறி	குடிபுகுந்து
தீய அசுரர்	கொடியவர்களான அசுரர்கள்
நடலை பட	துன்பப்படும்படி
முழங்கும் தோற்றத்தாய்	ஒலி செய்யும்படியான மேன்மையுடையையாயிரா நின்றாய், (உன்பெருமையேபெருமை.)

* * * சங்கே! நீ பிறந்ததெங்கே? போய்வளர்ந்ததெங்கே?; உப்புக்கடலிலேபிறந்து அசுரனுடைய உடலுக்குள்ளே போய்வளர்ந்தாய்; இப்படி மட்டமானகுலத்திலே பிறந்து வளர்ந்தவனக்கு எம்பெருமானுடைய திருக்கைத்தலத்திலே நித்யவாஸம்பண்ணப்பெறுதலும், அவனுடைய திருவாயிலேயிருந்துகொண்டு அஸுராதிகள் குடல்குழம்பும்படி கோஷம் செய்யப்பெறுதலும் வாய்த்தது என்னபாக்கியம்!; உன்வைலக்ஷண்யத்தை என்சொல்வேன்? என்கிறாள். ஓரிடத்திற் பிறந்து ஓரிடத்தில் வளர்ந்து ஓரிடத்திற் குடியேறினதாகச் சொல்லப்பட்டுள்ள இவ்விடத்தில் கண்ணபிரானுடைய நிலைமை நினைவுக்கு வரும்: சங்கு கடலிற்பிறந்தது போல அவன் யதுகுலத்துப்பிறந்தான்; சங்கு அசுரனுடைய உடலில் வளர்ந்ததுபோல அவன் அசுரத்தன்மை பூண்டவனை கம்ஸனுக்குள்ளாய் இறையிறுத்திருக்கிற திருவாய்ப்பாடியிலே வளர்ந்தான்; சங்கு கைத்தலத்திடரிற் குடியேறியதுபோல அவன் காலயவநஜராஸந்தாதிகளுக்காகப்போய் ஸ்ரீத்வாரகையைப் படைவீடாகச்செய்து அங்கே குடியேறினன்: சங்கு தீயவசு

சரை நடத்தப்படுத்துவதுபோல அவன் துர்யோதனாதிகளை மண்ணுண்ணும்படிசெய்தான். இப்படிகளாலே திருச்சங்கான்து எம்பெருமானோடு பரமஸாம்யம்பெற்றிருக்கின்றதென்பதும் ஆண்டாளது கொண்டாட்டத்தில் உள்ளுறை. அஸூயையுமாம். (உ)

569 தடவரையின்மீதே சரற்காலசந்திரன் *
இடையுவாவில்வந்து எழுந்தாலேபோல * நீயும்
வடமதுரையார்மன்னன் வாசுதேவன்கையில் *
குடியேறிவீற்றிருந்தாய் கோலப்பெருஞ்சங்கே. (ஊ)

கோலம் பெரு சங்கே	அழகிய பெரிய சங்கே !,
சரற்காலம் சந்திரன்—சரத்காலத்துச்சந்திரன்	
உவா இடையில்	பௌர்ணமியினன்று
தடவரையின் மீது வந்து எழுந்தால்போல்	பெரிய உதயகிரியிலே வந்து உதித்தாற்போல
நீயும்	நீயும்
வட மதுரையார் மன்னன் வாசு தேவன்கையில்	வடமதுரையிலுள்ளார்க்கு அரசனை கண்ணபிரானுடைய திருக்கையில்
குடி ஏறி	குடிபுகுந்து
வீற்றிருந்தாய்	உன் மேன்மையெல்லாம் தோற்[ற இராகின்றாய்.

570 சந்திரமண்டலம்போல் தாமோதரன்கையில் * அந்தரமொன்றின்றி யேறியவண்செவியில் *
மந்திரங்கொள்வாயேபோலும் வல்லம்புரியே * இந்திரனுமுன்னோடு செல்வத்துக்கேலானே. (எ)

வலம்புரியே!	வலம்புரிச்சங்கே !,
தாமோதரன்கையில்	கண்ணபிரானது திருக்கையில்
சந்திரமண்டலம் போல்	சந்திர மண்டலம் போலே
அந்தரம் ஒன்று இன்றி ஏறி	இடைவிடாது இருந்து கொண்டு
அவன் செவில்	அவனுடைய காதில்
மந்திரம் கொள் வாய் போலும்	ஏதோரஹஸ்யம் பேசுகிறாய் போலிரா நின்றாய்;
இந்திரனும்	(செல்வத்தில் மிக்கவனுகப்புகழ்பெற்ற) இந்திரனும்
செல்வத்துக்கு உன்னோடு ஏலான்	ஐச்வர்யவிஷயத்தில் உனக்கு இணையாகமாட்டான்.

* * * கண்ணபிரானுடைய திருக்கையிலே சந்திரமண்டலம் போலே விளங்காநின்றுகொண்டு ஒருநொடிப்பொழுதும் அத்திருக்கையை விட்டுப்பிரியாமல் அங்கேயிருந்துகொண்டு அவனுடைய திருச்செவியோடே அணைந்தாற்போலிருப்பதனால் அவனது திருக்காதில் ஏதோ ரஹஸ்யம் ஓதுகிறாப்போலேயிராகின்றாய்; சிறந்த செல்வம்பெற்றவனுகப் புகழப்படுகின்ற இந்திரனுக்கும் உன்னளவுசெல்வமில்லாமையாலே நீ ஒப்பற்ற ஐச்வர்யம் படைத்தவனுயிராகின்றாய் என்று கொண்டாடுகிறாள். (எ)

571 உன்னோடேனே ஒருகடலில்வாழ்வாரை * இன்னரினையாரென்று எண்ணுவாரில்லைகாண் *
மன்னுகின்ற மதுசூதன்வாயமுதம் * பன்னருமுண்கின்றாய் பாஞ்சசன்னியமே. (ஏ)

பாஞ்சசன்னியமே!—சங்கே!,	
ஒரு கடலில் உன்னோடுடனே வாழ்வாரை	ஒரேகடலில் உன்னோடுகூடவே வாழப்பிறந்தவர்களான மற்றும்[ம் பலரை
இன்னர் இனையார் என்று எண்ணுவார் இல்லைகாண்	ஒரு பதார்த்தமாகவும் மதிப்பாரில்லை காண்
(நீ ஒருவன் மாத்திரம்)	
மன் ஆகின்ற	ஸர்வஸ்வாமியா யிராகின்ற
மதுசூதன்	கண்ணபிரானுடைய
வாய் அமுதம்	திருவாயினமுதத்தை
பல் நாளும்	பலகாலமாக
உண்கின்றாய்	பருகாகின்றாய்.
(ஆகையால் நீயே பாக்யசாலி.)	

* * * ஓ பாஞ்சசன்னியமே! நீ பிறந்தவிடத்தில் உன்னைப் போலே பிறந்தவர்கள் எத்தனையோபேர்களிருக்கிறார்களன்றே' அவர்களை யாராவது நெஞ்சிலும் நினைப்பாருண்டா? அவர்களுடைய ஸ்வரூபம் இப்படிப்பட்டது, ஸ்வபாவம் இப்படிப்பட்டதென்று யாராவது

அறிய விரும்பினாருண்டா? இல்லை; அப்படியிருக்க, உனக்கொருத்தனுக்கு மாத்திரம் வந்த வாழ்ச்சி என்னே!; கண்ணபிரானுடைய திருவாயிலமுதத்தை அல்லும் பகலும் அநுபவிக்கின்றாயே! உன்னுடைய பாக்கியமே பாக்கியம் என்று கொண்டாடுகின்றாள். (டு)

572 போய்த்தீர்த்தமாடாதே நின்றபுணர்மருதம் *
சாய்த்தீர்த்தான்கைத்தலத்தே யேறிக்குடிகொண்டு *
சேய்த்தீர்த்தமாய்நின்ற செங்கண்மால்தன்னுடைய *
வாய்த்தீர்த்தம்பாய்ந்தாடவல்லாய் வலம்புரியே. (சு)

வலம்புரியே!	வலம்புரிச்சங்கே!,	குடிகொண்டு	அங்கேநித்யவாஸம் பண்ணிக் [கொண்டு
போய் தீர்த்தம்	வெகுதூரம்வழிநடந்துபோய் கங்கை முதலிய தீர்த்தங்களிலே	சேய் தீர்த்தம் ஆய்நின்ற	லோகோத்தரமான தீர்த்தமாகிய
ஆடாதே	நீராடுகையாகிற கஷ்டங்கள் படவேண்டாமல்	செம் கண் மால் தன்னுடைய	புண்டரீகாக்ஷனான கண்ணபி ரானுடைய
நின்ற புணர் மருதம்	நாரதசாபத்தாலே மரமாய்நின்ற இரட்டை மருதமரத்தை	வாய் தீர்த்தம்	வாயிலுள்ள தீர்த்தத்திலே
சாய்த்து ஈர்த்தான்	முறித்துத் தள்ளின கண்ணபி ரானுடைய	பாய்ந்து,	படிந்து
கைத் தலத்துஏறி	திருக்கைத்தலத்தின் மீதேறி	ஆட வல்லாய்	நீராடும் பாக்கியம் பெற்றிருக் [கிறாய்.

* * * இந்நிலவுலகத்தில் புண்யதீர்த்தங்களிற் படிந்து குடைந்தாடவேணுமென்னும் விருப்பமில்லாதாரில்லை; அங்ஙன் விருப்புற்றுரெல்லாரும் ஆயிரக்காதம் ஐந்நூறுகாதம் வழி நடந்துபோய் ஒருகுளத்திலும் குட்டையிலும் முழுக்கிட்டுவருவர்கள்; ஒருதடவை புண்ய தீர்த்தத்திற்பாய்ந்தாடுவதற்கு எல்லாரும் படாப்பாடுகள்படாநிற்க, பாஞ்சசன்னியமே! நீ அப்படிப்பட்டவருத்தமொன்றும் படாமல் எம்பெருமானுடைய திருக்கைத்தலத்திலேயே எளிதாகக்குடியிருந்துகொண்டு அவனுடைய வாயமுதமாகிற லோகோத்தரமான புண்யதீர்த் தத்திலே ஸர்வகாலமும் அவகாஹித்திருக்கின்றாயே!, உனது அத்ருஷ்டமே அத்ருஷ்டம்— என்று கொண்டாடுகின்றாள். (சு)

573 சேங்கமலநாண்மலர்மேல் தேனுகருமன்னம்போல் *
செங்கண்கருமேனி வாசுதேவனுடைய *
அங்கைத்தலமேறி அன்னவசஞ்செய்யும் *
சங்கரையாவுன்செல்வம் சாலவழகியதே. (எ)

நாள் செங் கமலம் மலர் மேல்	அப்போதலர்ந்த செந்தாமரைப்பூவில் (படிந்து)	அம் கைத்தலம் ஏறி	அழகிய கைத்தலத்தின் மீதேறி
தேன்	தேனை	அன்னவசம் செய்யும்	கண்வளர்கின்ற
நுகரும் அன்னம் போல்	பருகுகின்ற அன்னப்பறவைபோன்று	சங்கு அரையா!	சங்குகளிற் சிறந்த பாஞ்ச ஜந்யமே!
செம் கண் கரு மேனி வாசு தேவனுடைய	சிவந்த திருக்கண்களையும் கறு த்த திருமேனியையு முடையகண்ணபிரானது	உன் செல்வம் சால அழகியது	உன்னுடைய செல்வமானது மிகவும் சிறந்ததுகாண்.

* * * ஆழ்வானருளிச்செய்த ஸுந்தரபாஹுஸ்தவத்தில்— [ஸ்ரீமத்வநாத்ரிபதி பாணிதலாப்ஜயுக்மமாரூடயோர் விமலசங்கரதாங்கயோஸ்து—ஏகோப்ஜமாச்ரித் இவோத்தம ராஜஹம்ஸ: பத்மப்ரியோர்க்க இவ தத்ஸமிதோ த்விதீய:] என்ற ச்லோகத்தில் திருச்சங்கைப் பற்றி வர்ணித்திருப்பதில் இப்பாட்டின் கருத்து அமைக்கப்பட்டிருக்கின்றமை அறியத் தக்கது. (எ)

574 உண்பதுசொல்லில் உலகளந்தான் வாயமுதம் *
கண்படைகொள்ளில் கடல்வண்ணன்கைத்தலத்தே
பெண்படையாருன்மேல் பெரும்பூசல்சாற்றுகின்றார் *
பண்பலசெய்கின்றாய் பாஞ்சசன்னியமே. (அ)

பாஞ்சசன்னிய மே!, } சங்கே!,
உண்பது சொல் லில் } நீ உண்பது என்ன வென்றால்
உலகு அளந் தான் வாய் அமு தம் } உலகங்களை அளந்தவனை எம் பெருமானுடைய திருவாயி லுள்ள அமுதம்;
கண் படை கொள்ளில் } நீ படுத்துக்கொள்வது எங்கே யென்றால்
கடல் வண்ணன் கைத் தலத்தே } கடல்போன்ற நிறத்தையுடைய னை அவ்வெம்பெருமானு டைய திருக்கையிலே;
(இப்படி உனக்கு ஊணுமுறக்கமும் அங்கேயாயிருப்பதனால்)

பெண்படை யார் } பெண்குலத்தவர்கள் அனை வரும்
உன் மேல் உன் விஷயமாக
பெரும் பூசல் சாற்றுகின்றார் } பெரிய கோஷம் போடுகிறார் கள்; [எங்கள் ஜீவனத்தை இவனே கொள்ளை கொள்ளு கிறானென்று கூச்சலிடுகிறார் கள்;]
பண்பு அல செய் கின்றாய் } (இப்படி அவர்கள் வருந்தும் படி) அநியாயமான காரியத் தைச் செய்கிறாய்;
[இஃது உனக்குத்தகுதியல்ல என்கை.]

* * * ஓ பாஞ்சசன்னியமே! நீசெய்வது சிறிதும்நியாயமாயில்லை; பெண்ணைப்பிறந்தவர்களெல்லாரும் உன்மேல் வசைகூறும்படியானகாரியம் நீ செய்கிறாய்; அது என்ன வென்றால்; நீ கண்ணபிரானுடைய வாயமுதத்தை உண்பதும் அவனுடைய கைத்தலத்தில் உறங்குவதுமாயிருக்கிறாய்; கோவில் சோற்றைத்தின்று குளத்தில்நீரைக் குடித்துக் கோபுர வாசலிற் கிடந்துறங்குவார்க்குப்போலே உனக்கும் பகவத்ஸம்பந்தம் ஒருநொடிப்பொழுதும் இடையறுதிருக்கின்றது; இப்படி எம்பெருமானேடேயே ஸதா போது போக்கவேணு மென்று ஆசைப்பட்டிருக்கிற பல்லாயிரம்பெண்களை வயிறெரிந்துநிற்கவிட்டு நீயோருவனே இப்படி போதுபோக்குவதானது நியாயமேயல்ல; 'இப்பாவி இப்படி அநியாயம்செய் கிறானே' என்று முறையிடாதாரில்லைகாண் என்கிறாள். கண்படை = உறக்கம்; பெண்படை யார் = நிரல்நிரளாயுள்ள பெண்கள் என்றபடி; திருவாய்ப்பாடியிலுள்ளாரும் ஸ்ரீமதுரை யிலுள்ளாரும். பூசல் = பேரொலிசெய்தல். பண்பல = பண்பு அல—, பண்பு—நியாயம், அல - அல்ல = அல்லாதது, நியாயமல்லாதது அநியாயம். பகவத்விஷயத்தில் அவகாஹித்தவர் கள் [ஏகஸ்வாதுரபுஞ்ஜீத] [இன்கனிதனியருந்தான்] என்றபடிமற்றும்ருசியுடையாரையுங் கூட்டிக்கொண்டு நிரளாகவிருந்து அநுபவிக்கவேண்டியிருக்க, நீ ஏகாகியாய் அநுபவிப்பது அநீதியென்கை. (அ)

575 பதினாறுமாயிரவர் தேவிமார்பார்த்திருப்ப *
மதுவாயிற்கொண்டாற்போல் மாதவன்றன்வாயமுதம் *
போதுவாகவுண்பதனைப் புக்குநீயுண்டக்கால் *
சிதையாரோவுன்னோடு செல்வப்பெருஞ்சங்கே. (கூ)

பெரு செல்வம் சங்கே } பெரியசெல்வம்படைத்த சங் கமே!,
பதினாறும் ஆயிர வர் தேவிமார் } பதினாறுயிரம்தேவிமார்கள்
பார்த்து இருப்ப } (கண்ணபிரானுடைய வாய முதத்தை நாம் பருகவேணு மென விரும்பி) எதிர்பார்த் திருக்கையில்
பொது ஆக உண் பது மாதவன் தன்வாய் அமு தம் } பகவத்ஸம்பந்திகளெல்லாரும் பொதுவாக உண்ணவேண் டியதான அவ்வெம்பெரு மானது வாயமுதத்தை
நீ புக்கு நீயொருவனே ஆக்ரமித்து
மதுவாயில் கொண்டாற்போ ல் உண்டக்கால் } தேனை உண்கிறபோல் உண் டால்
உன்னோடு சிதை யாரோ } (மற்றப்பேர்கள்) உன்னோடு விவாதப்படமாட்டார்களோ?.

* * * பெருஞ்செல்வம் படைத்தசங்கே! நீ அல்லும்பகலும் உண்கிற கண்ணபிரான் றன் வாயமுதமானது உனக்கொருவனுக்கே உரிமைப்பட்டதன்று; அக் கண்ணபிரானுக்கு வாழ்க்கைப்பட்ட பதினாயிரம்பெண்கள் இவ்வமுதத்தைப் பருகுவதற்கு பங்குடையவர்கள். அன்னவர் இதனை அநுபவிக்க அவஸரம்பார்த்திருக்க நீயொருவனேமேல்விழுந்து புஜித்தால் அவர்கள் உன்னோடு பிணங்காதிருக்கமுடியுமோ? அவர்களுடைய மனவருத்தத்திற்கு நீ ஆளாவையாகில் உன்னை ஸாதுகோஷ்டியில் மதிப்பாருண்டோ? என்கிறள். (கூ)

576 பாஞ்சசன்னியத்தைப் பற்பநாபனெடும் *
வாய்ந்தபெருஞ்சுற்றம் ஆக்கியவண்புதுவை *
ஏய்ந்தபுகழ்ப்பட்டர்பிரான் கோதைதமிழ்ஈரைந்தும் *
ஆய்ந்தேத்தவல்லாரவருமணுக்கரே. (ழ)

பாஞ்சசன்னியத்தை	சங்கை
பற்பநாபனெடும்	எம்பெருமானுடைய
வாய்ந்த பெருசுற்றம் ஆக்கிய	கிட்டினபேருறவையுடையதாக வார்த்தை சொன்ன
வண்புதுவை	அழகிய ஸ்ரீ வில்லி புத்தூரில் திருவவதரித்தவளும்
ஏய்ந்த புகழ்	நிறைந்த புகழையுடையவளும்
பட்டர் பிரான் கோதை	பெரியாழ்வாருடைய திருமகளுமான ஆண்டாள் (அருளிச் செய்த)
தமிழ் ஈரைந்தும்	இத்தமிழ்ப் பாசுரங்கள்பத்தையும்
ஆய்ந்து	அநுஸந்தித்து
எத்த வல்லாரவரும்	(இது கொண்டு எம்பெருமானைத்) துதிக்கவல்லவர்களும்
அணுக்கர்	(பாஞ்சஜந்யம் போல்) அந்தரங்கராகப் பெறுவர்கள்.

* * * அடிவரவு:—கருப்பூரம் கடல் தடவரை சந்திரன் உண்ணோடு போய் செங்கமலம் உண்பது பதினாறு பாஞ்ச வின். (ழ)

எட்டாந்திருமொழி—விண்ணீலமேலாப்பு.

மேகவிடுதூது.

577 விண்ணீலமேலாப்பு விரித்தாற்போல்மேகங்காள் *
தெண்ணீர்பாய்வேங்கடத்து என்திருமாலும்போந்தானே *
கண்ணீர்கள்முலைக்குவட்டில் துளிசோரச்சோர்வேனே *
பெண்ணீர்மையீடழிக்குமிது தமக்கோர்பெருமையே. (க)

விண்	ஆகாசம் முழுவதிலும்
நீலம் மேலாப்பு விரித்தால் போல்	நீலநிறமான மேற்கட்டியை விரித்துக்கட்டினாற்போலிரா
மேகங்காள்!	மேகங்களே!, [நின்ற
தெள் நீர் பாய்	தெளிந்த தீர்த்தங்கள் பரயுமிடமான
வேங்கடத்து	திருவேங்கட மலையிலெழுந்தருளி யிராநின்ற
என் திரு மாலும்	திருமாலாகிய எம்பெருமானும்
போந்தானே	(உங்களோடுகூட) எழுந்தருளினானே?
முலை குவட்டில்	முலைதுனியிலே
கண் நீர்கள் துளிசோர	கண்ணீர் அரும்ப
சோர்வேனே	வருந்துகிற என்னுடைய
பெண் நீர்மை ஈடு அழிக்குமிது	பெண்மையை உருவழிக்கிறவிது
தமக்கு	அவர்தமக்கு
ஓர் பெருமையே	ஒருபெருமையா யிராநின்றதோ?.

* * * ஆகாசப்பரப்பு முழுவதும் இடமடையும்படி நீலநிறமாயிருப்பதொரு மேற்கட்டிகட்டினாற்போன்ற மேகங்களே! என் திருவேங்கடமுடையானும் உங்களோடு கூட இவ்விட மெழுந்தருளினானே? என்று ஆண்டாள் மேகங்களைநோக்கிக்கேட்க, அதற்கு அவை மறுமொழியொன்றுஞ் சொல்லாதொழியவே, 'அவன் வாராமையாலன்றே இவை பேசாதிருக்கின்றன' என்று கண்ணீர் வெள்ளமிடத்தொடங்க, 'மேகங்களே! இப்படிதான் கண்ணீர் விட்டு அழும்படி அவன் என்னைப் பரிதர்ப்படுத்துவது அவனுடைய பெருமைக்கு ஏற்குமோ? நீங்களே சொல்லுங்கள்' என்கிறள். (க)

578 மாமுத்தநிதிசொரியும் மாமுகில்காள் * வேங்கடத்துச்
சாமத்தின்நிறங்கொண்ட தாளாளன்வார்த்தையென்னே *
காமத்தீயுள்புகுந்து கதுவப்பட்டிடைக்கங்குல் *
ஏமத்தோர்தென்றலுக்கு இங்கிலக்காய்நானிருட்பேனே. (உ)

மாமுத்தம் நிதி சொரியும் மாமுகில்காள்	சிறந்த முத்துக்களையும் பொன்களையும் கொண்டு பொழிகிற காளமேகங்களே !
வேங்கடத்து	திருமலையிலெழுந்தருளியிரா[கின்ற
சாமத்தின் நிறம் கொண்ட தாளாளன்	நீல நிறமுடையனான எம்பெருமானுடைய
வார்த்தை என்னே	ஸமாசாரம் ஏதாகிலுமுண்டோ?,
காமம் தீ	காமாக்நியானது
உள் புகுந்து	உள்ளேபுகுந்து
கதுவப்பட்டு	கவ்வ, அதனால் பாதைப்பட்டு
கங்குல்	இரவில்
இடை ஏமத்து	நடுயாமத்திலே
ஓர் தென்றலுக்கு	ஒருதென்றற்காற்றுக்கு
நான் இலக்கு ஆய்	நான் இலக்காகி
இங்கு இருப்பேனே—இங்கு இருப்பேனே ?.	

* * * ஓ காளமேகங்களே! நீங்கள் எனக்காக ஔதார்யத்தில் இன்று புதிதாகப் பரிசயம் பண்ணவேணுமோ? வள்ளல்தனமே இயல்பாக இருப்பவர்களன்றே நீங்கள்; விலையுயர்ந்த முத்துக்களையும் பொன்களையும் ஒருவரும் வேண்டாமலிருக்கத்தானே நீங்களே பொழிகின்றீர்களன்றே. அப்படிப்பட்ட நீங்கள், அடியேழ்ந்து வேண்டுகின்ற எனக்காக ஒருவாய்ச்சொல் நல்கலாகாதோ? திருவேங்கடமுடையானுடைய ஸமாசாரம் உங்களுக்குத் தெரியாமலிராதே; ஏதாவது சொல்லலாகாதா? பிறர்க்குப் பொன்னையும் முத்தையும் பொழிகின்ற நீங்கள் எனக்கு ஒருவாய்ச்சொல் பொழிய அருமையோ? என்கிறாள் முன்னடிகளில்.

இவள் அப்படி கேட்டவளவிலும் அம்முகில்கள் இன்னஸமாசாரமுண்டென்று மறுமாற்றம் சொல்லப்பெறுமையாலே தனது ஆற்றுமையின் கனத்தைச் சொல்லி வருந்துகின்றாள் பின்னடிகளில்;—அவ்வெம்பெருமானிடத்து வைத்த காமமாகிற தீயானது வெளியிலுள்ள அவயவங்களை நிச்சேஷமாக தஹித்துவிட்டு இரைகாணாமல் உள்ளேபுகுந்து தஹிக்க, தென்றற்காற்றானது அதற்குத் துணையாயிருந்துகொண்டு நோயை அதிகப்படுத்த இப்படி இரண்டின் கையிலும் அகப்பட்டுக்கொண்டு எத்தனைநாள் நான் தடுமாறிக்கிடப்பேனென்கிறாள். (உ)

579 ஒளிவண்ணம்வளைசிந்தை உறக்கத்தோடிவையெல்லாம் *
எளிமையாலிட்டென்னை யீடழியப்போயினவால் *
குளிரருவிவேங்கடத்து என்கோவிந்தன்குணம்பாடி *
அளியத்தமேகங்காள் ஆவிகாத்திருப்பேனே. (ஊ)

அளியத்த மேகங்காள்	அருள்புரியக்கடவ மேகங்களே !
ஒளி வண்ணம்	தேஜஸ்ஸின் காந்தியும் நிறமும்
வளை சிந்தை	வளைகளும் நெஞ்சும்
உறக்கத்தோடு இவை எல்லாம்	உறக்கமும் ஆகிய இவையெல்லாம்
எளிமையால் என்னை இட்டு	என்னுடையதைன்யமே காரணமாக என்னை உபேக்ஷித்துவிட்டு
ஈடு அழிய போயின	என் சீர் குலியும்படி நீங்கிப் போய்விட்டன;
ஆல்	அந்தோ !;
குளிர் அருவி வேங்கடத்து	குளிர்ந்த அருவிகளையுடைய திருமலையிலெழுந்தருளியிருக்கிற
என் கோவிந்தன் குணம்	என்து கண்ணபிரானுடைய திருக்கல்யாண குணங்களை
பாடி	வாயாரப்பாடிக்கொண்டு (அந்தப்பாட்டேதாரகமாக)
ஆவி காத்திருப்பேனே	பிராணனை ரக்ஷித்திருக்க என்னால் முடியுமோ ?

* * * எம்பெருமானைப்பிரிந்துயிரிட்ட துக்கத்தினால் சரீரசோபைமாறி நிறமழிந்து வளைகழன்று நெஞ்சுதளர்ந்து உறக்கமொழிந்து இப்படியெல்லாம் நான் சீர்குலைந்து தடுமாறியிருக்குமிருப்பை என்சொல்லவல்லேனென்கிறாள் முன்னடிகளால். ஒளிவண்ணம்=ஒளி

பொருந்தியவர்ணம் என்றுமாம். எம்பெருமானோடு ஸம்ச்லேஷிக்கப் பெறுங்காலத்தில் மேனிபுகர்த்திருப்பதும் பிரிந்துபடுங்காலத்தில் "என்மங்கையிழந்தது மாமைநிறமே" என்னும்படி வைவர்ணியப்பட்டிருப்பதும் மெய்யன்பர்களின் இலக்கணமாமென்க. மேனிமெலிவே வளைகளும் கழன்றொழியும்; நெஞ்சும் உருக்குலையும். (சு)

580 மின்னுகத்தெழுகின்ற மேகங்காள் * வேங்கடத்துத்
தன்னுகத்திருமங்கை தங்கியசீர்மார்வற்கு *
எனதுகத்தினங்கொங்கை விரும்பித்தாம் நாடோறும் *
பொன்னுகம்புல்குதற்கு என்புரிவுடைமைசெப்புமினே. (சு)

ஆகத்து மின் எழுகின்ற மேகங்காள்	சரீரத்திலே மின்னல் தோன்றப்பெற்ற மேகங்களே !,
என் ஆகத்து இள கொங்கை	என் மார்விலுண்டான இளமூலைகளை
தாம் விரும்பி	அவ்வெம்பெருமான் விரும்பி
பொன் ஆகம் புல்குதற்கு	அழகிய தம் மார்வோடே அணையவேணுமென்னும் விஷயத்திலே
நாள் தோறும்	நித்யமும்
என் புரிவுடைமை	எனக்கு ஆசையிருக்கிறபடியை
வேங்கடத்து	திருமலையிலே
தன் ஆகம்	தனது திருமேனியில்
திருமங்கை தங்கிய சீர் மார்வற்கு	பிராட்டி எழுந்தருளியிருக்கப்பெற்ற திருமார்பு படைத்த பெருமானுக்கு
செப்புமின்	சொல்லுங்கள்.

* * * எம்பெருமானுடைய கரியதிருமேனியில் மின்னற்கொடிபோன்ற பிராட்டி விளங்கும்படியை நினைப்பூட்டிக்கொண்டு மின்னியெழுகின்ற மேகங்களே! நீங்கள் திருவேங்கடமுடையான்பக்கலிலே சென்று ஒருவார்த்தை சொல்லவேணும்; அதாவது—என்மார்பிலுள்ள இளமூலைகளை அவ்வெம்பெருமான் விரும்பி அணைந்துகொண்டே இடைவிடாதுகிடக்கவேணுமென்று நான் ஆசைப்பட்டிராநின்றேனென்பதை நீங்கள் போய்ச் சொல்லவேணுமென்கிறாள். (சா)

581 வான்கொண்டுகிளர்ந்தெழுந்த மாமுகில்காள் * வேங்கடத்துத்
தேன்கொண்டமலர்சிதறத் திரண்டேறிப்பொழிவீர்காள் *
ஊன்கொண்டவள்ளுகிரால் இரணியனையுடலிடந்தான் *
தான்கொண்டசரிவளைகள் தருமாகில்சாற்றுமினே. (ஞ)

வெங்கடத்து	திருமலையிலே
தேன் கொண்ட மலர் சிதற	தேன்நிறைந்துள்ள புஷ்பங்கள் சிதறும்படி.
திரண்டு ஏறி பொழிவீர்காள்	திரள்திரளாக ஆகாயத்திலேறி மழையைப்பொழிகின்றவையாயும்,
வான் கொண்டு கிளர்ந்து எழுந்த	ஆகாயத்தைக்கபளீகரித்துக்கொண்டு ஓங்கிக் கிளம்புகின்றவையாயுமுள்ள
மா முகில்காள்!	காளமேகங்களே!
ஊன் கொண்ட வள் உகிரால்	வலியுள்ளவையாய் கூர்மையுடையவையான நகங்களாலே
இரணியனை உடல் இடந்தான் தான்	ஹிரண்யாஸுரனுடைய உடலைப்பிளந்தெறிந்த பெருமான்
கொண்ட	என்னிடத்துக்கொள்ளை கொண்டு போன
சரிவளைகள்	கைவளைகளை
தரும் ஆகில்	திருப்பிக் கொடுப்பதாக விருந்தால்
சாற்றுமின்	(எனது அவஸ்தையை அவர்க்குத்) தெரிவியுங்கள்.

* * * விச்லேஷகாலத்திலே எனக்கு உத்தீபகங்களாய்க்கொண்டு தோற்றுகின்ற மலர்களை நீங்கள் சிதறவடிப்பது எனக்குச்சந்தோஷந்தான்; ஆகிலும் அவ்வளவு செய்தமாத்திரத்தால் பயனில்லை; திருவேங்கடமுடையானோடே நான் ஸம்ச்லேஷம்பெற்று இப்மலர்களைப் போகோபகரணமாகக்கொண்டு களிக்கும்படியாகச் செய்துவைக்கவேணும் என்பதாகவுங் கருத்துக்கொள்வர். தான்கொண்டசரிவளைகள் தருமாகில்சாற்றுமின்=எப்பெருமான் ஆண்டாளிடமிருந்துசரிவளைகள்கொண்டானேவென்னில்; அவன் இவளை விட்டுப்பிரிந்ததனால்

இவள் மேனிமெலிந்து வளைகள்கழன்றுபோகப்பெற்றுளாதலால் இவ்வளை நீங்குதலுக்கு அவனே காரணமாகின்றமைபற்றித் தான்கொண்டசரிவளைகள் எனப்பட்டதென்க. தருமாகில் என்று - வளையைத் தருகையாவதென்னென்னில்; மறுபடியும் ஸம்ச்லேஷித்து வளைகள் தங்கும்படிசெய்தல். ஆகவே, சரிவளைகள்தருமாகில் என்றது—அவ்வெம்பெருமான் என்னெடு வந்து புணரத்திருவுள்ளம்பற்றியிருக்கிறனுகில் என்றபடி. சாற்றுமின்=அவனுடைய ஆபிமுக்யத்தை அறிந்துகொண்டு என்நிலைமையை அவனுக்குச் சொல்லுங்கள் என்கை. இங்கே வியாக்யான ஸ்ரீஸூக்தி:—"[சாற்றுமினே.] அவன் தரிலும் தருகிறன்; தவிரிலும் தவிருகிறன்; நீங்கள் அறிவித்துப்போருங்கோள்." அன்றியே; அவனுடைய திருவுள்ளத்தை நீங்கள் அறிந்துகொண்டு அதனை என்னிடம் வந்து சொல்லுங்கள் என்றுமாம். (நு)

582 சலங்கொண்டுகிளர்ந்தெழுந்த தண்முகில்காள் * மாவலியை
நிலங்கொண்டான்வேங்கடத்தே நிரந்தேறிப்பொழிவீர்காள் *
உலங்குண்டவிளங்கனிபோல் உள்மெலியப்புகுந்து * என்னை
நலங்கொண்டநாரணற்கு என்நடலைநோய்செப்புமினே. (சூ)

சலம்கொண்டு	ஸமுத்ரஜலத்தை முகந்து கொண்டு
கிளர்ந்து எழுந்த தண் முகில்காள்	மேற்கிளம்பி விளங்குகின்ற குளிர்ந்த மேகங்களே!,
மா வலியை	மஹாபலியிடமிருந்து
நிலம் கொண்டான் வேங்கடத்து	பூமியை ஸ்வாதீநப்படுத்திக் கொண்டவனை எம்பெருமான் எழுந்தருளியிருக்கிற திருமலையிலே
நிரந்து ஏறி	பரவி உயரவிருந்து
பொழிவீர்காள்!	பொழிகின்ற மேகங்களே!, (நான்)
உலங்கு உண்ட விளங்கனிபோல்	பெருங்கொசுக்கள் புஜித்த விளாம்பழம்போல
உள்மெலிய	உள்மெலியும்படி
புகுந்து	என்னுள்ளே பிரவேசித்து
என்னை	என்னுடைய
நலம் கொண்ட நாரணற்கு	நிறைவுகளை அபஹரித்த நாராயணனுக்கு
என் நடலைநோய் செப்புமின்	எனது கஷ்டவ்யாதியை தெரியியுங்கள்.

* * * உலங்கு என்பது பெருநுளம்பு; (விளாம்பழத்தை மொய்க்கிற கொசுக்கள்;) அவை விளாம்பழத்திலே மொய்த்தவாறே அதின்ரஸமெல்லாம் சுவறிப்போம்; அதுபோல என்னுடம்போடே அணைந்து என்ஸர்வஸ்வத்தையும் அபஹரித்த பெருமானுக்கு நான் இப்படி நோவுபட்டுக்கிடக்கிறேனென்பதைத் தெரியியுங்கள் என்கிறள். (சூ)

583 சங்கமாகடல்கடைந்தான் தண்முகில்காள் * வேங்கடத்துச்
செங்கண்மால்சேவடிக்கீழ் அடிவீழ்ச்சிவிண்ணப்பம் *
கொங்கைமேல்குங்குமத்தின் குழம்பழியப்புகுந்து * ஒருநாள்
தங்குமேல் என்னுவிதங்குமென்றுரையீரே. (எ)

சங்கம் மா கடல் கடைந்தான்	சங்குகளை யுடைத்தாயும் பெருமைவாய்ந்ததுமான கடலைக் கடைந்தருளின பெருமான் எழுந்தருளியிருக்கிற
வேங்கடத்து	திருமலையில்திரிகிற
தண் முகில்காள்	குளிர்ந்த மேகங்களே!,
செம் கண் மால் சே அடி கீழ்	புண்டரீகாக்ஷனை அவ்வெம் பெருமானுடைய செவ்விய திருவடிகளின் கீழ்
அடிவீழ்ச்சி	அடியேனுடைய
விண்ணப்பம்	விஜ்ஞாபநம் (யாதெனில்)
கொங்கை மேல்	எனதுமுலைகளின் மேல் (பூசப் [பட்டுள்ள)
குங்குமத்தின் குழம்பு	குங்குமக் குழம்பானது
அழிய	கன்றுக அவிந்துபோம்படி
ஒருநாள் புகுந்து தங்கும் ஏல்	ஒருகாளாகிலும் அவன் வந்து ஸம்ச்லேஷிப்பனகில் (அப்பிரீதுதான்)
என் ஆவி தங்கும் என்று	என் பிராணன் நிலைநிற்கும்—என்பதாம்;
உரையீர்	(இவ்விண்ணப்பத்தை அப்பெருமானிடத்துச்) சொல்லுங்கள்.

* * * இவளுடைய பாரிப்புக்கெல்லாம் ஒருநாள் அணைத்தால்போருமோ? ஊழி யெல்லா மணைத்துக்கிடந்தாலும் த்ருப்திபெறமாட்டாத அபிநிவேஶமன்றே

இவ்வளவு; அப்படிப்பட்ட அபிநிவேசம் ஒருகாள்வந்து தங்கின வளவாலே த்ருப்திபெறுமோவென்னில்; என்ஆவிதங்கும் என்ற சொல்நலத்தை நோக்குமின்; ஒருநாள் அணைந்தவளவால் போகத்துக்குப்போராது, ப்ராணரக்ஷணத்துக்குப்போரும்- என் கிருளாய்த்து. "[ஒருநாள்தங்குமேல் என்னுவிதங்கும்.] குணஜ்ஞானத்தாலே தரியாளோ என் றிருக்கவொண்ணாது; அணையுமாகில் தரிக்கலாம்" என்பது வியாக்யான ஸ்ரீஸூக்தி. அடி வீழ்ச்சி—அடியாள்; பெயர்ச்சொல். (எ)

584 கார்காலத்தெழுகின்ற கார்முகில்காள் * வேங்கடத்துப்
போர்காலத்தெழுந்தருளிப் பொருதவனூர்பேர்சொல்லி *
நீர்காலத்தெருக்கில் அம்பழவிலைபோல்வீழ்வேனை *
வார்காலத்தொருநாள் தம்வாசகம்தந்தருளாரே. (அ)

கார் காலத்து	வர்ஷாகாலத்திலே
வேங்கடத்து எழுகின்ற	திருமலையிலேவந்து தோற்றுகின்ற
கார் முகில்காள்	காளமேகங்களே!,
போர் காலத்து எழுந்தருளி	யுத்தஸமயத்திலே (போர்க்களத்தில்) எழுந்தருளி
பொருதவனூர்	போர்செய்து வெற்றி பெற்ற இராமபிரானுடைய
பேர்	திருநாமங்களை
சொல்லி	ஸங்கீர்த்தனம்பண்ணி
நீர் காலத்து எருக்கில் அம் பழ இலை போல் வீழ்வேனை	மழைகாலத்தில் எருக்கம் பழுப்புகள் அற்றுவிழுவதுபோல் ஒசிந்துவிழுகின்ற எனக்கு
வார் காலத்து ஒரு நாள்	நெடுகிச்செல்லுகிற காலத்திலே ஒருநாளாகிலும்
தம் வாசகம் தந் தருளாரே	தம்முடைய ஒருவார்த்தையை அருளாதொழிவரோ?.

* * * வர்ஷாகாலத்திலே தவறாமல்வந்து சேருகிறேன் என்று சொல்லிப்போன பெருமான் வாராதொழிந்தாலும் அவனுடையவடிவுக்குப் போலியான நீங்களாவது வந்து தோன்றுகின்றீர்களே! என்ற உகவைதோன்றக் கார்காலத்தெழுகின்ற கார்முகில்காள்! என விளிக்கிறாள். அவ்வெம்பெருமான் வாராதொழிந்தாலும் நாம் திருநாமஸங்கீர்த்தனம்பண்ணிக் கொண்டாவது ஒருவாறு தரித்திருப்போமென்றுபார்த்து, அடியார்கட்காகக் காரியம்செய் வதையே தொழிலாகக்கொண்டு விரோதிநிரஸநத்தில் உத்ஸாஹங்கொண்டு கிளருமவனை சக்ரவர்த்தி திருமகனுடைய திருநாமங்களை ஸங்கீர்த்தனம்பண்ண ஆரம்பித்தேன்; அதுவே காரணமாக உடனே சைதில்யமடைந்தேன்; மழை காலத்தில் எருக்கம்பழுப்புகள் அற்றற்று விழுவதுபோல் ஒசிந்துதளர்ந்து தளர்ந்து விழும்படியான நிலைமையில் நின்றேன்: இவ்வளவி லும் அப்பெருமான் எனக்கு அருள்செய்யநினைத்திலன்; என்வாழ்நாளெல்லாம் இப்படி துக்கமயமாகவேயோ கழியப்போகிறது? ஒருநாளாகிலும் ஒருவாய்ச்சொல் சொல்லியனுப் பவும்மாட்டாரோ? என்கிறாள். (அ)

585 மதயானைபோலேழுந்த மாமுகில்காள் * வேங்கடத்தைப்
பதியாகவாழ்வீர்காள் பாம்பணையான்வார்த்தையென்னே *
கதியென்றுந்தாளிணைவான் கருதாது * ஓர்பெண்கொடியை
வதைசெய்தானென்னும்சொல் வையகத்தார்மதியாரே. (கூ)

வேங்கடத்தை பதி ஆக வாழ்வீர் காள்	திருமலையை இருப்பிடமாகக் கொண்டு வாழ்கின்றவையாயும்
மதம் யானை போல் எழுந்த	மதகஜம்போலே செருக்கிக்கிளர்ந்தவையாயுமுள்ள
மா முகில்காள்	காளமேகங்களே!
பாம்பு அணை யான் வார்த்தை என்னே	சேஷசாயியான எம்பெருமானுடைய வார்த்தையானது இப்படி பொய்யாய் விட்டதே!;
தான்	"அவ்வெம்பெருமான்றன்
என்றும் கதி ஆவான்	எப்போதைக்கும் (ஆச்ரிதர்கட்கு) ரக்ஷகனாயிருந்துவைத்து
கருதாது	அத்தன்மையைநினையாமல்
ஓர் பெண் கொடியை	ஒரு பெண்பிள்ளையை
வதை செய்தான்	கொலைபண்ணினான்"
என்னும் சொல்	என்கிறசொல்லை
வையகத்தார்	இப்பூமியிலுள்ளவர்கள்
மதியாரே	மதிக்கமாட்டார்களே!.

* * * பாம்பணையான்வார்த்தைஎன்னே!=திருவநந்தாழ்வானிடத்து ஸகலவித கைங்கரியங்களையுங் கொள்வதுபோல என்னிடத்தும் கொள்வன்என்றிருந்தேன்; [நாகபர்யங்க முத்ஸ்ருஜ்யஹியாகதோ மதுராம் புரீம்] என்றபடி சேஷசயநத்தைவிட்டுத் திருமதுரையிலே வந்துபிறந்த கண்ணபிரான் தேர்த்தட்டில் நின்றுசொன்ன வார்த்தையை [—சரமச்லோகத்தை] மெய்யென்று நம்பியிருந்தேன்; பாம்போடே ஆணங்கு பாம்பின்தன்மையே தனக்குமுண்டாகப்பெற்றான்; அதற்கு நாக்கு இரண்டாயிருப்பதுபோல இவனும் இரண்டு நாக்குப் பெற்றான்,— அதாவது பொய்யனுய் விட்டான்—என்றகருத்துக்காண்க. (கூ)

586 நாகத்தினணையானை நன்னுதலாள்நயந்துரைசெய் *
மேகத்தைவேங்கடக்கோன் விடுதூதில்விண்ணப்பம் *
போகத்தில்வாழுவாத புதுவையர்கோன்கோதைதமிழ் *
ஆகத்துவைத்துரைப்பாரவரடியாராகுவரே. (ம)

நல் நுதலாள்	விலக்ஷணமான முகத்தை யுடையளாய்	உரை செய்	அருளிச்செய்ததாய்,
போகத்தில் வழுவாத புதுவையர் கோன் கோதை	பகவதநுபவத்தில் குறையாதவரான பெரியாழ்வாருடைய மகளான ஆண்டாள்	மேகத்தை விடு தூதில் விண்ணப்பம்	மேகத்தைத் தூது விடுவதாக அமைந்த விண்ணப்பமாகிய
நாகத்தின் அணையான் வேங்கடக் கோனை	திருவனந்தாழ்வானைப் படுக்கையாகவுடையனை திருவேங்கடமுடையானை	தமிழ்	இத்தமிழ்ப்பாசுரங்களை
		ஆகத்துவைத்து	ஹ்ருதயத்திலே வைத்துக்கொண்டு
நயந்து	ஆசைப்பட்டு	உரைப்பார்வர் அடியார் ஆகுவர்	ஓதவல்லவர்கள் எம்பெருமானுக்கு நித்யகைங்கரியம்பண்ணப்பெறுவர்கள்.

* * * அடிவரவு:—விண் மா ஒளி மின் வான் சலம் சங்கம் கார் மத நாகச் சிந்துரம்.

ஒன்பதாந்திருமொழி—சிந்துரச்செம்பொடி.

கண்ணெதிரே வந்துதோன்றின கார்முகில்கள் நன்றாக மழைபொழிந்தன. உடனே வர்ஷா காலத்தில் புஷ்பிக்கக்கூடிய புஷ்பங்களெல்லாம் புஷ்பிக்கத்தொடங்கின. மழை காலத்தில் களித்துத்திரியுமவையான மயில் முதலிய சிலபிராணிகளும் ஸம்ப்ரமத்தோடு வந்துலாவப் புக்கன. ஆக இப்படிப்பட்ட பதார்த்தங்களெல்லாம் இவளுடைய இந்தவிரஹ தசையிலே வந்துதோற்றவே இவளுடைய ஆற்றுமை மீதூர்ந்து உயிர்கொண்டு தப்பிப் பிழைக்க முடியாத அவஸ்தையாயிற்று. அதனால் மிகவும் துவண்டு பேசுகிறபாசுரமாயிருக்கிறது இத்திருமொழியும் மேல்திருமொழியும்.

587 சிந்துரச்செம்பொடிப்போல் திருமாலிருஞ்சோலையெங்கும் *
இந்திரகோபங்களே யெழுந்தும்பரந்திட்டனவால் *
மந்தரம்காட்டியன்று மதுரக்கோழுஞ்சாறுகொண்ட *
சுந்தரத்தோளுடையான் சுழலேயில்நின்றுய்துங்கொலோ. (க)

திருமாலிருஞ் சோலை எங்கும்	திருமாலிருஞ் சோலையில் பார்த்தபார்த்த விடமெங்கும்	பரந்திட்டன	பரவிக்கிடக்கின்றன;
இந்திரகோபங்கள்—பட்டுப்பூச்சிகளானவை		ஆல்	அந்தோ!;
செம்	சிவந்த	அன்று	(கடலிலக்கடைந்து அமுதமளிக்கவேணுமென்று தேவர்கள் சரணம் புகுந்துவேண்டின) அக்காலத்திலே
சிந்துரம் பொடி போல்	சிந்தூரப்பொடிபோல		
எழுந்து	மேலெழுந்து	மந்தரம்	மந்தரமலையை

நாட்டி.	(பாற்கடலில் மத்தாக) நாட்டி (கடல்கடைந்து)	சுந்தரத் தோளுடையான்	ஸ்ரீ ஸுந்தர பாஹு நாதனுடைய
கொழு மதுரம் சாறு கொண்ட	மிகவும் மதுரமான அம்ருதரஸத்தை எடுத்துத் தேவர்கட்கு அளித்த	சுழலையில் நின்று உய்த்தும் கொல்	சூழ்வலையில் நின்றும் பிழைப்போமோ?

*** மழைகாலத்திலே பட்டுப்பூச்சிகள் விசேஷமாகப் பறக்கும்; அவை காதலுடைய அதரத்தின்பழுப்புக்கு ஸ்மாரகங்களாயிருக்குமாதலால் தலைவிக்கு உத்தீபகமாயிருக்கும், ஐயோ! திருமாலிருஞ்சோலைப் புறமெங்கும் பட்டுப்பூச்சிமயமாய்விட்டதே!; விச்லேஷகாலத்திலே இவை வந்துதோற்றினால் இனி உயிர்தரிக்க வழியுண்டோவென்று வருந்துகின்றாள். "இந்திரகோபங்கள் எம்பெருமான் கனிவாயொப்பான், சிந்தும்புறவில் தென்திருமாலிருஞ்சோலையே" என்ற பெரியாழ்வார்திருமொழி இங்கே நினைக்கத்தக்கது. மதுரச்சாறு என்று அம்ருதரஸத்தைச் சொல்லிற்றாய், மதுரக்கொழுஞ் சாறு என்று அதிற்காட்டிலும் போக்யதைவிஞ்சின பெரிய பிராட்டியாரைச் சொல்லிற்றாகலாம். தேவர்கட்கு அமுதமெடுத்துக்கொடுக்கிற வியாஜத்தினால் லோகோத்தரமான அமுதமென்னலாம்படியான பிராட்டியைஸம்பாதித்துக்கொண்டானிறே; கூரத்தாழ்வான் ஸுந்தரபாஹுஸ்தவத்தில் * உயிமலஹுமாஹு * இத்யாதிச்லோகத்தினால் தெளிவாகக் காட்டின அர்த்தமிது.

சுழலை=சூழ்ச்சி; அதாவது—வஞ்சகர்செய்யும் தந்திரம். இங்குத் திருமாலிருஞ்சோலையழகர்செய்த தந்திரமாவது—தாம் நேராக எழுந்தருளாமல் தமதுவடிவுக்கு ஸ்மாரகங்களான மேகங்களை வரக்காட்டுதல், இந்திரகோபங்களைப் பரவச்செய்தல் முதலிய காரியங்களினால் ஆண்டாளுக்கு உத்தீபகஞ் செய்தல். சுழலையில்நின்றுஉய்துங்கொலோ? என்றது—இந்த ஆபத்தைத் தப்பிப்பிழைக்க நம்மாலாகாது என்றபடி. ஒரு பெரியகைகாரன் நம்மை அகப்படுத்துகைக்குவைத்த வலையைத்தப்பி நாம் பிழைக்கமுடியுமோ? இனிமுடிந்து போமித்தனையேயுள்ளது என்கிறாள். (க)

588 போர்க்களிறுபொரும் மாலிருஞ்சோலையம்பூம்புறவில் *
தார்க்கொடிமுல்லைகளும் தவளநகைகாட்டுகின்ற *
கார்க்கொள்படாக்கள்நின்று கழறிச்சிரிக்கத்தரியேன் *
ஆர்க்கிடுகோதோழீ அவன்தார்செய்தபூசலையே. (உ)

போர் களிறு பொரும்	போர்செய்வதையே தொழிலாகவுடைய யானைகள் பொருது விளையாடு மிடமான	படாக்கள்	படா என்னுங்கொடிகள்
மாலிருஞ்சோலை	திருமாலிருஞ் சோலைமலையினுடைய	நின்று	பூத்துநின்று
அம் பூ புறவில்	மிக்கவழகிய தாழ்வரைகளிலே	கழறிச் சிரிக்க	'எமக்குநீதப்பிப்பிழைக்க முடியாது' என்றுசொல்லிக் கொண்டே சிரிப்பதுபோல விகஸிக்க
தார் கொடி முல்லைகளும்	அரும்புகளையுடையகொடி முல்லைகளும்	தரியேன்	(அதுகண்டு) தரிக்கமாட்டுகின்றிலேன்;
தவளம் நகை காட்டுகின்ற	(அழகருடைய) வெளுத்த புன்சிரிப்பை நினைப்பூட்டா நின்றன; (அன்றியும்)	தோழீ அவன் தார் செய்த பூசலை ஆர்க்கு இடுகோ	எனது உயிர்த்தோழியே! (நாம் ஆசைப்பட்ட) அவனுடைய தோள்மாலையானது உண்டுபண்ணின பரிபவத்தை யாரிடத்து முறையிட்டுக் கொள்வது?
கார் கொள்	சினைகொண்ட		

*** யானைகள் கரைபொருது விளையாடா நிற்கப்பெற்ற திருமாலிருஞ்சோலையிலைச் சாரல்களில் அரும்புகொண்டு விளங்குகின்ற கொடிமுல்லைகளானவை, அவ்வெம்பெருமான் ஸம்போக ஆரம்பஸமயத்திற்பண்ணும் புன்முறுவலை நினைப்பூட்டிக்கொண்டு என்னைத் துன்பப்படுத்தாநின்றன; அதற்குமேலே, படாக்களானவை புஷ்பித்து, ஸம்ச்லேஷம் நடந்தேறின

பின்பு ஒருதலையில்வெற்றிக்கு ஈடாகப் பண்ணும் பெருஞ்சிரிப்பை நினைப்பூட்டாநின்று கொண்டு என்னை உருவழிக்கின்றன. தோழீ! அவ்வெம்பெருமான் திருத்தோளில் சாத்திக் கொண்டிராகின்ற மாலையை ஆசைப்பட்டமையாலன்றே நான் இப்படிபரிபவப்படநேர்ந்தது!; இந்தப்பரிபவத்தை நான் யாரிடத்திற்சென்று முறையிட்டு ஆறுவேன் என்கிறாள். புறவு=சோலைகள் நிரம்பிய ஆராமம். காட்டுகின்ற=விளைமுற்று. படாக்கள்=பெருங் கொடிகள். கார்க்கொள்ளுகை= அழகுகொண்டிருக்கையுமாம். (உ)

589 கருவிளையோண்மலர்காள் காயாமலர்காள் * திருமா
லுருவொளிகாட்டுகின்றீர் எனக்குய்வழக்கொன்றுரையீர் *
திருவிளையாடுதிண்டோள் திருமாலிருஞ்சோலைநம்பி *
வரிவளையில்புகுந்து வந்திபற்றும்வழக்குளதே.

ஒண் கருவிளை மலர்காள்	அழகிய காக்கணம்பூக்களே!
காயாமலர்காள்	காயாம்பூக்களே!
திரு மால் உரு ஒளி காட்டுகின்றீர்	எம்பெருமானுடைய திருமேனியின் நிறத்தை நினைப்பூட்டாநின்றீர்கள்;
எனக்கு	(அதனை நினைத்துவருந்துகின்ற) எனக்கு
உய் வழக்கு ஒன்று	பிழைக்கும் வகையொன்றை
உரையீர்	சொல்லுங்கள்;
திரு விளையாடு திண் தோள்	பெரியபிராட்டியார் விளையாடுமிடமான திண்ணிய திருத்தோளை யுடையரான
திருமாலிருஞ் சோலைநம்பி	அழகர்
இல் புகுந்து	(எனது) வீட்டினுள்புகுந்து
வரி வளை	(எனது) அழகியவளைகளை
வந்தி பற்றும் வழக்கு உளதே	பலாத்காரமாகக்கொள்ளை கொண்டு போவதும் நியாயமோ!

* * * மழைகாலத்தில், கருவிளைப்பூக்களென்கிற காக்கணம் பூக்களும் காயாம்பூக்களும் விசேஷமாகப் புஷ்பிக்குமாதலாலும், அவை எம்பெருமானுடைய திருமேனிநிறத்தோடொத்த நிறத்தையுடையனவாயிருக்கு மாதலாலும் அவற்றின்காட்சி தனக்கு விரஹதசையில் உத்தீபகமாயிருப்பது பற்றி உண்டாகும்வருத்தத்தை அம்மலர்களிலிளித்தே உரைக்கின்றாள். எம்பெருமானுடைய திருநிறத்தை நினைப்பூட்டாநின்றுள்ள கருவிளைப்பூக்களே! காயாம்பூக்களே! நீங்கள் என்னை முடிக்கும்வகை ஒன்றுமோதான் கற்றது? நான்பிழைக்கும்வகையை அறிவீர்களாகிற் சொல்லுங்கள் என்கிறாள் முன்னடிகளில். இங்ஙனம் யாசிக்கப்பட்ட அம்மலர்கள் ஆண்டாளைநோக்கி, 'நாங்கள் உமக்கு ஜீவநோபாயம்சொல்லவேண்டும்படி இப்போது உமக்குநேர்ந்த அனர்த்தம் என்ன?' என்றுகேட்டனவாகக் கொண்டு, அவ்வநர்த்தத்தை முறையிடுகின்றாள் பின்னடிகளில்;—திருமாலிருஞ்சோலையில் அவாப்தஸமஸ்தகாமராயெழுந்தருளியிருக்கிற பெரியவர், நானொருத்தி இருப்பதாகவும் நினையாமல் தமது திருத்தோளைப் பெரியபிராட்டியார்க்கு நித்யானுபவயோக்யமாகக் கொடுத்து அவளும் தாமும் பரமரஸபுஞ்ஜமாய் அநுபவம்நடத்தாநிற்பதைப்பற்றி நான் ஒன்றும்விசாரப்படாமல், 'அவர் முன்பு விரும்பிப்போந்த வளைகள் நம்கையில் இருக்கின்றனவே, அவற்றைக் கண்டுகொண்டாவது தரித்திருப்போம்' என்றெண்ணி நான்என்வீட்டுக்குள்ளே கதவடைத்துக்கொண்டு கிடந்தால், அப்பெரியவர் அதனையும்பொறுமல் சடக்கென ஓடிவந்து என்வீட்டினுள்புகுந்து பலாத்காரமாக அவ்வளைகளைப் பறித்துக்கொண்டு ஓடினரே, இஃது எந்தநீதியிற் சேரும்? இதற்கு மேற்பட எனக்கு வேறோர் அனர்த்தம் விளையவேண்டுமோ? என்கிறாள்.

காட்டுகின்றீர்=விளைமுற்றாகக்கொள்ளாமல் ஸம்போதநமாகக் கொள்ளுதலுமாம். உரையீர்=சொல்லுங்கள் என்றபடியுமாம்: சொல்லமாட்டீர்களோ என்றபடியுமாம். உய்வழக்கு உரைத்தலாவது—அம்மலர்கள் தங்களை வெளிக்காட்டிக்கொள்ளாமல் அடங்கிப்போதலாம். "நீ அஞ்சாதேகொள்; நாங்கள் மறையநின்றோம்; என்று ஒரு வார்த்தை சொன்னை

லாகாதோ? பூப்போலே வந்து புலியாணிகோளீ!" என்ற வியாக்கியான ஸ்ரீஸூக்தி நோக்கத் தக்கது. திருமாலிருஞ்சோலை நம்பி இல்புகுந்து வரிவளைகளை வந்திபற்றினதாகச் சொல்லுகிறவி தற்குக் கருத்து யாதெனில்; எம்பெருமான் தானுகவே வந்து ஸம்ச்லேஷித்துத் தானுகவே பிரிந் துபோனன் என்கை. வந்தி பற்றுகை=பிறர் இசையாதிருக்க நிர்ப்பந்தப்படுத்திப் பிடுங்கிக் கொள்ளுதல். (கூ)

590 பைம்பொழில்வாழ்குயில்காள்மயில்காள் ஒண்கருவிளைகாள் *
வம்பக்களங்கனிகாள் வண்ணப்பூவைகறுமலர்காள் *
ஐம்பெரும்பாதகர்காள் அணிமாலிருஞ்சோலைநின்ற *
எம்பெருமானுடையநிறம் உங்களுக்கென்செய்வதே. (சு)

பை பொழில் வாழ்	பரந்த சோலையில் வாழ்கின்ற
குயில்காள்	குயில்களே!
மயில்காள்	மயில்களே!
ஒண் கருவிளைகாள்-அழகிய காக்கணம் பூக்களே!	
வம்பக்களங்கனி காள்	புதிய களாப்பழங்களே!
வண்ணம் நறு பூவைமலர்காள்	அழகிய நிறத்தையும் பரிமளத் தையுமுடையகாயாம் பூக்களே!
ஐ பெரு பாதகர் காள்	(ஆகிய)பஞ்சமஹாபாதகர் களே!
உங்களுக்கு	உங்களுக்கு,
அணி மாலிருஞ் சோலை நின்ற எம் பெருமானுடைய நிறம் என் செய் வது	திருமாலிருஞ் சோலையிலுள்ள அழகருடைய திருமேனி நிற மானது எதுக்காக?.

[அந்த நிறத்தை நீங்கள் ஏற்றுக்கொண் டது என்னை ஹிம்ஸிப்பதற்காகவே என்கை.]

* * * குயில், மயில், கருவிளை, களங்கனி, காயாம்பூ என்னும் இவ்வைந்து வஸ்துக் களையும் பஞ்சமஹாபாதகிகள் என்கிறாள். பொற்களவு, கள்குடித்தல் முதலிய மஹத்தான ஐந்துபாதகஞ் செய்தவர்களைப் பஞ்ச மஹாபாதகிகளென்று ஸாஸ்த்ரம் கூறும்: அப்பாதகங்க ளினும் மேற்பட்ட பாதகங்களை இக்குயில்முதலியவை செய்கின்றனவாகக்கொண்டு ஆண்டாள் இவற்றைப் பஞ்சமஹாபாதகிகளென்கிறாளாய்த்து. இவை தனக்குப்பொறுக்கவொண்ணாத ஹிம்ஸையைப் பண்ணுவதுபற்றி இங்ஙனங் கூறினளென்க. பரமசேதநனான எம்பெருமா னோடு, அற்பசேதநங்களான குயில்மயில்களோடு, அசேதநங்களான கருவிளைமுதலியவற்றோடு வாசியற எல்லாவஸ்துக்களும் எனக்குத் தீங்குவிளைக்க ஒருப்பட்டால் நான் எங்ஙனேபிழைக் கும்படி?; அவன் பிரிந்துபோனஸமயத்தில் முகங்காட்டி என்னைத் தேற்றவேண்டியவைகளும் பாதகங்களானால் நான் எங்ஙனம் பிழைக்கவல்லேன்?; பிரிந்தவன் ஒருவனுய், பாதகங்கள் பல வானால் பிழைக்கமுடியுமோ? என்கிறள்போலும். எம்பெருமானுடைய நிறம் உங்களுக்கு என்செ ய்வதே?=என்னை உயிர்க்கொலைசெய்கின்ற அவனுடைய நிறத்தை நீங்கள் எதுக்காக எறிட்டுக் கொண்டீர்கள்? என்னை ஹிம்ஸிக்கவேணுமென்றே நீங்கள் அவனது நிறத்தை எறிட்டுக் கொண்டீர்கள்போலும் என்கை. (சு)

591 துங்கமலர்ப்பொழில்சூழ் திருமாலிருஞ்சோலை நின்ற *
செங்கட்கருமுகிலின் திருவுருப்போல் * மலர்மேல்
தூங்கியவண்டினங்காள் தொகுபூஞ்சுனைகாள் * சுனையில்
தூங்குசெந்தாமரைகாளெனக்கோர் சரண்சாற்றுமினே. (டு)

துங்கம் மலர் பொழில் சூழ்	ஓங்கின மலர்களை யுடைய சோலைகள் சூழ்ந்த
திருமாலிருஞ் சோலை	திருமாலிருஞ் சோலையில்
நின்ற	நின்றதிருக் கோலமாய் எழுந்த ருளியிருக்கிற
செம்கண் கரு முகிலின்	செந்தாமரைபோன்ற திருக் கண்களையும் காளமேகம்போன் றவடிவையுமுடைய எம்பெரு மானுடைய
திரு உரு போல்	அழகியவடிவம்போலே

மலர்மேல் தொங்கிய வண்டு இனங்காள்	மலர்மேல் தங்கியிருக்கிற வண்டுக்கூட்டங்களே !
தொகு	நெருங்கியிருக்கின்ற
பூ சுனைகாள்	அழகிய சுனைகளே !
சுனையில் தங்கு	அச்சுனைகளில் உள்ள
செம் தாமரைகாள்	செந்தாமரைமலர்களே !
எனக்கு	(உங்களே யமுதாதர்களாக நினைக்கிற) எனக்கு
ஓர் சரண் சாற்றுமின்	ஒரு அடைக்கலம் சொல்லுங்கள்.

* * * திருமாலிருஞ்சோலைமலைப் பொழில்களில் மலர்ந்துள்ள பூக்களில் தங்குகின்ற வண்டுகளும் சுனைகளும் அழகருடைய திருவுருவை நினைப்பூட்டிநலிவதனாலும், சுனைகளில் அலர்ந்த செந்தாமரைமலர்கள் அவருடைய திவ்யாவயவங்களுக்கு ஸ்மாரகங்களாய்க் கொண்டு ஹிம்ஸிப்பதனாலும் அந்தஹிம்ஸையைப் பொறுக்கமாட்டாத ஆண்டாள் அவற்றை நோக்கி 'அந்தோ! நான் உங்களுக்குத் தப்பிப்பிழைப்பதொரு உபாயம்சொல்ல வல்லீர்களோ?' என்கிறாள். கருமுகில்=முற்றுவமை; "தாவிவையங்கொண்ட தடந்தாமரைகட்கே" என்றாற்போல. (நே)

592 நாறுநறும்பொழில் மாலிருஞ்சோலைநம்பிக்கு * நான்
நூறுதடாவில்வெண்ணெய் வாய்நேர்ந்துபராவிவைத்தேன் *
நூறுதடாநிறைந்த அக்காரவடிசில்சொன்னேன் *
ஏறுதிருவுடையான் இன்றுவந்திவை கொள்ளுங்கொலோ. (கூ)

நறுபொழில் நாறும் மாலிருஞ்சோலை நம்பிக்கு	பரிமளம் மிகுந்தபொழில்கள் மணங்கமழாநிற்கப்பெற்ற திருமாலிருஞ் சோலையில் (எழுந்தருளியிருக்கிற) எம் பெருமானுக்கு
நான்	அடியேன்
நூறு தடாவில் வெண்ணெய்	நூறுதடாக்களில் நிறைந்த வெண்ணெயை
வாய் நேர்ந்து பராவி வைத்தேன்	வாயாலே சொல்லி ஸமர்ப்பித்தேன்; (இன்னமும்)
நூறு தடா நிறைந்த அக்கார அடிசில் சொன்னேன	நூறு தடாக்களில் (நிறைந்த) அக்காரவடிசிலும் வாசிகமாக ஸமர்ப்பித்தேன்;
இவை	இந்த வெண்ணெயையும் அக்காரவடிசிலையும்;
ஏறு திரு உடையான்	(நாட்செல்லநாட்செல்ல) ஏறிவருகிற ஸம்பத்தையுடையரான அழகர்
இன்று வந்து கொள்ளும்கொல்	இன்று எழுந்தருளித் திருவுள்ளம் பற்றுவரோ?

* * * இப்பாட்டும் மேற்பாட்டும் இத்திருமொழியில் விலக்ஷணமாக அமைந்த பாசுரங்கள். கீழ்ச்சென்றபாசுரங்களின் ஶைலியும் மேல்வரும் பாசுரங்களின் ஶைலியும் வேறுபிரிக்க, இப்பாட்டின் ஶைலியும் மேற்பாட்டின் ஶைலியும் விஜாதீயமாக அமைந்திருக்கிறபடியைக் காண்மின். கீழ்ப்பாட்டில் "எனக்கோர்சரண் சாற்றுமினே" என்றவாறே தளர்ந்து த்வயாநுஸந்தானம் பண்ணினாள்; உத்தரகண்டத்தை நன்றாக அநுஸந்தித்தாள்; அதற்கு அர்த்தமாகிய கைங்கரியப்ரார்த்தனையிலே ஊன்றினாள்; காயிகமான கைங்கரியமொன்றும் செய்யமுடியாதபடி தளர்ந்திருக்கும் தஶையாகையாலே வாசிகமான கைங்கரியம் செய்ய விரும்பினாள்; அதுசெய்தபடியைச் சொல்லுகிறாள் இப்பாட்டில்; இப்பாட்டுக்கு ஶேஷபூதம் மேற்பாட்டு. மணங்கமழாநின்ற சோலைகளாலே சூழப்பட்ட திருமாலிருஞ்சோலைமலையில் அவாப்தஸமஸ்தகாமனாய் எழுந்தருளியிருக்கும் எம்பிரானுக்கு அடியேன் நூறுதடாநிறைந்த வெண்ணெயும் நூறுதடாநிறைந்த அக்காரவடிசிலும் வாசிகைகைங்கரியரூபமாக ஸமர்ப்பிக்கிறேன்; இவற்றை அவ்வெம்பெருமான் திருவுள்ளம்பற்றுவானோ? என்கிறாள். எம்பெருமானார், நாச்சியார் திருமொழிகாலக்ஷேபம் ப்ரஸாதித்தருளும்போது இப்பாட்டளவிலே வந்தவாறே "ஆண்டாளுடையமநோரதம் வாசிக மாத்ரமாகப்போச்சுதே யொழிய, கார்யபர்யவஸாயியாகவில்லை; அதனை நாம் தலைக்கட்டவேணும்" என்று அப்போதே புறப்பட்டுத் திருமாலிருஞ்சோலைமலைக்கு எழுந்தருளி * நூறுதடாநிறைந்தவெண்ணெயும் நூறுதடாநிறைந்த அக்காரவடிசிலும் அழகருக்கு அமுதுசெய்வித்தருளி அப்படியே

ஸ்ரீவில்லிபுத்தூரேற வெழுந்தருளி ஆண்டாளை அடிவணங்கிநிற்க, தன்னினைவறிந்து இவர் செய்த காரியத்துக்கு மனமுகந்து "நம்அண்ணரே!" என்றுசொல்லி அர்ச்சாவதாரஸமாதி யைக் கடந்து தழுவிக்கொண்டாள்—என்பர்பெரியோர். இதுபற்றியே "பெரும்பூதூர் மாமுனிக்குப் பின்னுளள்வாழியே" என்று ஆண்டாள் வாழ்த்தப்படுவதும்.

593 இன்றுவந்தித்தனையும் அமுதுசெய்திடப்பெறில் * நான்
ஒன்றுநூறுயிரமாக்கோடுத்துப் பின்னுமாளும்செய்வன் *
தென்றல் மணங்கமழும் திருமாலிருஞ்சோலைதன்னுள்
நின்றபிரான் * அடியேன்மனத்தேவந்துநேர்படிலே. (எ)

தென்றல் மணம் கமழும்	தென்றல்காற்றுனது மணத்தைக்கொண்டு வீசுகின்ற	அமுதுசெய்திட பெறில்	அமுதுசெய்தருளப்பெற்றால்
திரு மாலிருஞ் சோலைதன்னுள்	திருமாலிருஞ் சோலைமலையிலே		(அவ்வளவுமன்றி)
		அடியேன் மனத் தேவந்து நேர் படில்	அடியேனுடைய ஹ்ருதயத்திலேயே நித்யவாஸம் பண்ணப்பெற்றால்
நின்ற	எழுந்தருளியிருக்கிற		
பிரான்	ஸ்வாமியான அழகர்	நான் ஒன்று நூறு ஆயிரம் ஆ கொடுத்து	அடியேன் ஒருதடாவுக்கு நூறுயிரம் தடாக்களாக ஸமர்ப்பித்து
இன்று வந்து	இன்றைக்கு இவ்விடமெழுந் தருளி		
இத்தனையும்	நூறுதடாநிறைந்த வெண்ணெயையும் அக்காரவடிசிலையும்	பின்னும் ஆளும் செய்வன்	அதற்குமேலும் ஸகலவித கைங்கரியங்களும் பண்ணுவேன்.

* * * "இன்றுவந்துஇவைகொள்ளுங்கொலோ?" என்று (கீழ்ப்பாட்டில்) மநோரதித்தபடியே திருமாலிருஞ்சோலையெம்பெருமான் இன்று இவ்விடமெழுந்தருளி, அடியேன் (வாஆ) வாசா ஸமர்ப்பித்த நூறுதடாநிறைந்த வெண்ணெயையும் அக்காரவடிசிலையும் அமுது செய்தருள்வனாகில் இந்த மஹோபகாரத்துக்குக்கைம்மாறாக அடியேன் இன்னும் நூறுயிரம் தடாநிறைந்த வெண்ணெயும் அக்காரவடிசிலும் ஸமர்ப்பிப்பேன்; அவ்வெம்பெருமான் இங்கெழுந்தருளி இவற்றை அமுதுசெய்துவிட்டு மீண்டுபோய்விடாமல் என் ஹ்ருதயத்திலேயே ஸ்தாவரப்ரதிஷ்டையாக இருந்துவிடும்படிக்ஷத்தில் "ஒழிவில் காலமெல்லாமுடனாய்மன்னி வழுவிலாவடிமை செய்யவேண்டும் நாம்" என்று பெரியோர்மநோரதித்த கைங்கரியங்களெல்லாவற்றையும் குறையறச் செய்திடுவேன் என்கிறாள். ஒன்றுநூறுயிரமாக்கோடுத்தலாவது = தான் ஸமர்ப்பித்த தடாக்களில் ஒரு தடாவை அமுதுசெய்தால் அதற்குக் கைம்மாறாகப் பின்னும் நூறுயிரம் (லக்ஷம்) தடா ஸமர்ப்பித்தல். இப்படியே பார்த்துக்கொள்க. இதனால், ஆண்டாள் தனது பாரிப்பின்மிகுதியை வெளியிட்டபடி. "இன்று உவந்து" என்றும் பிரிக்கலாமென்ப. "ஆயிரமாகக்கொடுத்து" என்று அத்யாபகர் ஓதுவர். (எ)

594 காலையெழுந்திருந்து கரியகுருவிக்கணங்கள் *
மாலின்வரவுசொல்லி மருள்பாடுதல்மெய்ம்மைகோலோ *
சோலைமலைப்பெருமான் துவராபதியெம்பெருமான் *
ஆலினிலைப்பெருமான் அவன்வார்த்தையுரைக்கின்றவே. (அ)

கரியகுருவி கணங்கள்	கரியகுருவிக்கூட்டங்கள்	ஆலின் இலை பெருமான் அவன்	ஆலிலையில் வளர்ந்தபெருமானுமுழுள்ள அந்தஸர்வேச்வரனுடைய
காலை	விடியற்காலத்திலே		
எழுந்திருந்து	எழுந்து,	வார்த்தை	வார்த்தைகளை
சோலை மலை பெருமான்	திருமாலிருஞ்சோலைமலைக்குத் தலைவனும்	உரைக்கின்ற	சொல்லா நின்றன, (இப்படி)
துவராபதி எம் பெருமான்	த்வாரகாபுரிக்குத் தலைவனும்	மாலின்	எம்பெருமானுடைய

வரவு	வருகையை	மருள்பாடுதல்	மருளென்கிற பண்ணைப்பாடுவதானது
சொல்லி	சொல்லிக்கொண்டு	மெய்ம்மை கொல்—மெய்யாகத்தலைக்கட்டுமோ?	

* * * ஆண்டாள்பிறந்த வூரில் திர்யக்குக்களுங்கூட எம்பெருமானைப்பற்றின சிந்தனையே மிக்கிருக்குமாதலால் சில கருங்குருவிகள் காலையெழுந்திருந்து கூட்டங் கூட்டமாக இருந்து எம்பெருமானுடையவரவை ஸூசிப்பித்துக்கொண்டு பண்களைப்பாடுவதும் அவ்வெம்பெருமான் விஷயமான வார்த்தைகளைச் சொல்லுவதுமாயிருக்கவே, அதுகண்ட ஆண்டாள் இது மெய்யாய்த்தலைக்கட்டுமோ பொய்யாய்விடுமோவென்று சிந்திக்கிருளாய்த்த. மெய்ம்மை கோலோ? என்றதற்கு இரண்டுவகையாகக் கருத்தாகலாம்; நம்முடைய சித்தவிப்ரமத்தால் இவைபாடுகின்றனவாகத் தோற்றுகின்றதா? அல்லது மெய்யாகவே பாடுகின்றனவா? என்பது ஒருகருத்து; இக்கரியகுருவிக்கணங்கள் இதற்குமுந்தியும் பலகால் மாலின் வரவு சொல்லி மருள்பாடியும் அவ்வெம்பெருமான் வரக்காணுமையினாலே இதுவரையில் இவற்றின்பாட்டு பொய்யாயொழிந்தது; இப்போதாவது அங்ஙனன்றி மெய்யாகத்தலைக்கட்டுமா? என்பது மற்றொருகருத்து. (அ)

595 கோங்கலரும்பொழில் மாலிருஞ்சோலையில்கொன்றைகள்மேல் *
தூங்குபொன்மாலைகளோடுடனுய்நின்று தூங்குகின்றேன் *
பூங்கோள்திருமுகத்து மடைத்தூதியசங்கொலியும் *
சார்ங்கவில்நாணெலியும் தலைப்பெய்வதெஞ்ஞான்றுகொலோ. (கூ)

கோங்கு அலரும் பொழில்	கோங்கு மரங்கள் மலரப்பெற்ற சோலைகளையுடைய	பூ கொள்	அழகுபொருந்திய
		திரு முகத்து	திருப்பவளத்திலே
மாலிருஞ் சோலையில்	திருமாலிருஞ் சோலைமலையில்	மடித்து	வைத்து
		ஊதிய	ஊதப்படுகிற
கொன்றைகள் மேல்	கொன்றைமரங்களின் மேலே	சங்கு ஒலியும்	ஸ்ரீபாஞ்சஜந்யத்தினுடைய த்வனியும்
தூங்கு	தொங்குகின்ற	சார்ங்கம் வில் நாண் ஒலியும்	சார்ங்கமென்னும் வில்லின் நாணோசையும்
பொன் மாலைகளோடு உடனுய் நின்று	பொன் நிறமான பூமாலைகளோடுஸமமாக	தலைப்பெய்வது	ஸம்பவிப்பது
		எஞ்ஞான்று கொல்	என்றைக்கோ ?.
தூங்குகின்றேன்	வாளா கிடக்கிறேன்		

* * * இப்பாசுரத்தின் கருத்து மிகவும் ஆழ்ந்தது. திருமாலிருஞ்சோலைமலையிற் கொன்றைமரங்களின்மீது தொங்குகின்ற கொன்றைப்பூ மாலைகளோடொப்ப நானும் தூங்குகின்றேன் என்று கூறுகின்ற ஆண்டாளுடைய கருத்து யாதெனில்;—கேண்மின்; திருமாலிருஞ்சோலைமலையில் ஸாத்விகபுருஷர்கள் ஏறிப்போவர்களேயன்றி ராஜஸதாமஸபுருஷர்கள் ஏறிப்போகமாட்டார்கள். கொன்றைமலர்கள் சிவன்முதலிய தேவதாந்தரங்களின் ஆராதனைக்கு உபயோகப்படக்கூடியவையாதலால் அம்மலர்கள் ராஜஸதாமஸபுருஷர்கட்கு உபயுக்தமாகுமேயன்றி ஸாத்விகபுருஷர்கட்கு அவை கொண்டு பயனில்லை. இனி, ஸாத்விகமாத்ரப்ராப்யமான திருமாலிருஞ்சோலைமலையில்மலர்கின்ற கொன்றைமலர்கட்கு ஏதாவது உபயோகமுண்டோவென்று சிந்தித்தால், அவை அங்கேமலர்ந்து அங்கேவீழ்வதொழிய வேறேருபயோகமும் அவற்றுக்கு இல்லையென்றே சொல்லவேண்டும். ஆகவே, அம்மலர்களின் ஜன்மம் எப்படி வீணே, அப்படியே என் ஜன்மமும் வீணயிற்றோ! என்கிருள்.

[பூங்கோள் திருமுகத்து இத்யாதி] கண்ணபிரானையன்றி மற்றுளவனையும் கனவிலுங் கருதாதிருந்த ருக்மிணிப்பிராட்டிக்கு சிசுபாலனோடு விவாஹம்நடப்பதாகக் கோடித்து நிச்சயமாயிருந்தசமயத்தில் கண்ணபிரானதுவரவை எதிர்பார்த்திருந்த அப்பிராட்டியின்நெஞ்சு

முறிந்துபோய் இனி நாம் உயிர்துறப்பதே நல்லுபாயம் என்று தீர்மானித்திருந்தசமயத்தில் கண்ணபிரான் பதறிஓடிவந்து புறச்சோலையிலே நின்று தனது ஸ்ரீபாஞ்சஜந்யத்தை ஊத, அவ்வோசையானது அந்தருக்மிணிப்பிராட்டியின் செவியிற்புகுந்து எப்படிப்பட்ட ஆநந்தத்தை உண்டாக்கிற்றோ அப்படிப்பட்ட ஆநந்தம் எனக்கு என்றைக்குஉண்டாகும்!; இராவணனனவன் ஸீதையிடம் வந்து இராமபிரான் இறந்தானாக ஒரு பொய்க்கூற்றுக்கூறி மாயாஸிரஸ்ஸைக் காட்டினபோது அப்பிராட்டி வருந்திக்கிடக்கும் சமயத்திலே இராமபிரான் கடற்கரையிலே நின்று தனது சார்ங்கவில்லைஒலிப்பிக்க, அவ்வொலியானது, ஸீதையின்செவியிற் புகுந்து எப்படிப்பட்ட ஆநந்தத்தை உண்டாக்கிற்றோ அப்படிப்பட்ட ஆநந்தம் எனக்கு என்றைக்கு உண்டாகும்!- என்கிறாள். (கூ)

596 சந்தோடுகாரகிலும்சுமந்து தடங்கள்பொருது *
வந்திழியும்சிலம்பாறுடை மாலிருஞ்சோலைநின்ற
சுந்தரனை * சுரும்பார்குழற்கோதைதொகுத்துரைத்த *
செந்தமிழ்ப்பத்தும்வல்லார் திருமாலடிசேர்வர்களே. (ஙி)

சந்தோடு	சந்தனக்கட்டைகளையும்
கார் அகிலும்	காரகிற்கட்டைகளையும்
சுமந்து	அடித்துக்கொண்டு
தடங்கள் பொருது வந்து	பலபலகுளங்களையும் அழித்துக்கொண்டு ஓடிவந்து
இழியும்	பெருகுகின்ற
சிலம்பாறு உடை	நூபுர கங்கையை யுடைத்தான
மாலிருஞ் சோலை நின்ற சுந்தரனை	திருமாலிருஞ் சோலை மலையில் எழுந்தருளியிருக்கிற அழகரைக்குறித்து
சுரும்பு ஆர் குழல் கோதை	வண்டுகள் படிந்த கூந்தல்முடியை யுடையளான ஆண்டாள்
தொகுத்து உரைத்த	அழகாக அருளிச்செய்த
செம்தமிழ் பத்தும்வல்லார்	செந்தமிழினாலாகிய இப்பத்துப் பாசுரங்களையும்ஓதவல்லவர்கள்
திரு மால் அடி	ஸ்ரீமந் நாராயணனுடைய திருவடிகளை
சேர்வர்கள்	அடையப்பெறுவர்கள்.

* * * சுரும்பார்குழற்கோதை=தேன் நிறைந்த மலர்களையணிந்த குழல்முடியையுடைய ஆண்டாள் என்றபடி. ஒரு குழற்கற்றையாலே எம்பெருமானை மயக்கவல்ல வீறுடையளானவிவள் தான்இப்படி மயங்கிவருந்தினளே! என்று நாம் ஈடுபடுவதற்காகச் "சுரும்பார்குழல்" என்ற அடைமொழி இட்டுக்கொண்டாளென்க. அடிவரவு:—சிந்துரப் போர் கருவிலை பைம்பொழில் துங்க நாறு இன்று காலை கோங்கு சந்து கார்க்கோடல். (ஙி)

பத்தாந்திருமொழி—கார்க்கோடல்.

இதுவுமது.

597 கார்க்கோடல்பூக்காள் கார்க்கடல் வண்ணனெம்மேல் * உம்மைப்
போர்க்கோலஞ்செய்து போரவிடுத்தவனெங்குற்றான் *
ஆர்க்கோவினிநாம் பூசலிடுவது * அணிதுழாய்த்
தார்க்கோடும் நெஞ்சந்தன்னைப் படைக்கவல்லேனந்தோ. (க)

கார் கோடல் பூக்காள்!	கறுத்த காந்தள் பூக்களே!
உம்மை	உங்களை
போர் கோலம் செய்து	யுத்தத்திற்கு உசிதமாக அலங்கரித்து
எம் மேல்	என்மேலே [பாயும்படி]
போர விடுத்தவன்	அனுப்பினவனை
ஆர் கடல் வண்ணன்	கறுத்த கடல் போன்ற வடிவையுடையனை கண்ணபிரான்
எங்குற்றான்	எங்கே யிருக்கிறான்?
நாம்	(உங்களால் மிகவும் நலிவுபட்ட) [நான்
இனி	இனிமேல்
ஆர்க்கு பூசல் இடுவதே	யாரிடத்தில்போய் முறையிட்டுக்கொள்வதோ? (அறியேன்.)

அணி துழாய் தார்க்கு	அழகிய திருத்துழாய்மாலையை ஆசை ப்பட்டு	ஓடும் நெஞ்சம் தன்னை படைக்கவல்லேன் அந்தோ !	ஓடுகின்றநெஞ்சை யுடையவளா யிராகின்றேனே ! ஐயோ !!.

* * * கோடல்பூக்கள் என்று ஒரு புஷ்பஜாதி உண்டு; அது காந்தள்பூ என்றுஞ் சொல்லப்படும். அப்புஷ்பங்கள் கார்காலத்திலே மிகுதியாக மலரும். அவை விரஹகாலத்திலே காமுகர்கட்கு மிகவும் உத்தீபகங்களாயிருக்கும்; பலவகைப்பட்ட நிறங்களையுடைய அப்புஷ்பஜாதியில் கரியநிறமுள்ள பூக்களும் உண்டு; அவை எம்பெருமானுடைய திருநிறத்துக்கு ஸ்மாரகங்களாய்க்கொண்டு ஆண்டாளை விசேஷமாக வருத்துகின்றமையால் 'இம்மலர்களை எம்பெருமான் படைத்தது நம்மைக் கொலைசெய்வதற்காகவே போலும்' என்று அறுதியிட்டு அம்மலர்களையே நோக்கிக் கூறுகின்றாள்; "ஓ கோடல் பூக்களே! என்னைக்கொலைசெய்வதற்கென்று உங்களை அழகாகக்கோடித்து அனுப்பினமஹாநுபாவன் எங்கிருக்கிறான்?" எனவினவுகின்றாள் முன்னடிகளில். உண்மையில் அப்புஷ்பங்கள் அசேதநங்களாகையாலே மறுமொழி ஒன்றும் சொல்லாதிருக்கவே, 'அந்தோ! நம்மை இந்தப்பூக்களும் லக்ஷியம்பண்ணுகின்றனவில்லையே!; அந்த எம்பெருமானேவரமாட்டேனென்கிறான்; இவையோ நம்மோடு பேசுகின்றனவில்லை; உசாத்துணையாகக்கூடியவர்களும் யாருமில்லை; இனி நாம் ஆர்வீட்டு வாசலிலேபோய் நம் துயரை முறையிட்டு ஆறுவது!' என்கிறாள் மூன்றாமடியில்.

எம்பெருமானுடைய விபூதியடங்கலும் நம்மைநலிவதற்கு அவனுக்குத் துணையாயிருப்பதுபோல, நம்மைச் சேர்ந்த வஸ்துக்களாவது நமக்குத் துணை நிற்குமோவென்று பார்த்தாலோ அதுவுமில்லை; நமக்கு விதேயமாயிருக்கக் கடவதான நெஞ்சும் நம்மை உதறித்தள்ளிவிட்டு அவனுடைய திருத்துழாய் மாலையைநாடி ஓடாநின்றது!; இப்படி எல்லாம் பகையாகப் பெற்றேமே! இஃது என்ன கஷ்ட காலம்! என்கிறாள் ஈற்றடியில். இதனால், எம்பெருமானுடைய விச்லேஷம் தனக்கு அஸஹ்யமாயிருக்கிறபடியையும், அவ்வளவிலும் தனது திருவுள்ளம் பகவத்விஷயத்திலேயே ஈடுபட்டுச் செல்லுகிறபடியையும் அருளிச்செய்தாளாயிற்று.
பூசலிடுவது:—பேரொலிசெய்து முறையிடுவது. (க)

598 மேற்றோன்றிப்பூக்காள் மேலுலகங்களின் மீதுபோய் *
மேற்றோன்றும்சோதி வேதமுதல்வர்வலங்கையின் *
மேற்றோன்றுமாழியின் வெஞ்சுடர்போலச்சுடாது * எம்மை
மாற்றோலைப்பட்டவர்கூட்டத்து வைத்துக்கொள்கிற்றிரே. (உ)

மேல் தோன்றிப் பூக்காள்	உயரப் பூத்திருக்கிற காந்தள் பூக்களே !
மேலுலகங்களின் மீதுபோய் மேல் தோன்றும் சோதி	மேலுள்ள உலகங்களெல்லாவற்றையுங் கடந்து அவற்றுக்கு மேற்பட்டு விளங்குகின்ற 'தன்னுடைச்சோதி' என்கிற பரமபதத்தில் எழுந்தருளி இருக்கிற
வேத முதல்வர்	வேதப்ரதி பாத்யனான பரம புருஷனுடைய
வலம்கையின் மேல் தோன்றும்	வலத் திருக்கையிலே விளங்கி நின்ற
ஆழியின்	திருவாழி யாழ்வானுடைய
வெம் சுடர் போல	வெவ்வியதேஜஸ்ஸை போல
சுடாது	தஹியாமல்
எம்மை	என்னை
மாற்றோலைப் பட்டவர் கூட்டத்து	இந்த பிரக்ருதி மண்டலத்தை விட்டு நீங்கினவர்களுடைய நிரளில்
வைத்துக்கொள்கிற்றிரே	கொண்டு சேர்க்க வல்லீர்களோ ?

* * * கீழ், கோடல்பூக்கள்பண்ணின ஹிம்ஸையைப் பொறுக்கமாட்டாமல் அவற்றில்நின்றும் கண்ணீமீட்டு மேலொருபக்கத்திலே வைத்தாள்; அங்கே, மேல்தோன்றிப்பூக்கள் மலர்ந்துதோன்றின. அவை எம்பெருமானுடைய சிரிப்பைக் கோட்சொல்லிக்கொண்டு நலியவே, அவற்றைநோக்கிக் கூறுகின்றாள். தோன்றிப்பூ என்றும், காந்தட்பூ என்று

லும், கோடல்பூ என்றாலும் புஷ்பஜாதி ஒன்றேயாம்; மேல்தோன்றிப்பூ என்றமையால் கீழ்ப் பாட்டிற்சொன்ன கோடல்பூக்கள் கீழேபடர்கின்றவையென்றும், இவைமேலே படர்கின்ற வையென்றும் அவாந்தரபேதம் அறியத்தக்கது; நிலம்பங்கி, கொடிஉம்பங்கி என்கிறாப் போலே.

எம்மை மாற்றேலோப்பட்டவர் கூட்டத்து வைத்துக்கோள்கிற்றிரே— கைவல்யமோக்ஷாநுபவம்பண்ணுகிறவர்களுடைய கோஷ்டியிலாவது என்னைக்கொண்டுபோய் வைப்பீர்களாவென இரக்கிறாளென்று திருமலைநம்பி அருளிச்செய்வராம். இவள்விச்லேஷத்தாலே மிகவும் நொந்துபோனபடியாலே 'நமக்கு பகவதநுபவம் கிடைக்காமற்போனாலும் போகிறது; இந்த ஶரீரம் கழிந்தால்போதும்; அதுவே பரமலாபகம், என்று நினைத்து இங்ஙனே கூறுகின்றாள் போலும். "மாற்றேலோப்பட்டவர்" என்றால் கைவல்யமோக்ஷநிஷ்டர்களை எப்படி சொல்லுமென்னில்; பகவதநுபவத்துக்கு மாறானவர்கள் என்று ஓலைப்பட்டவர்கள் - கேவலர் எனக் கொள்க: (ஓலைப்பட்டவர்கள்=ஓலையில் எழுதப்பட்டவர்கள்.) கேவலர்கள் தனித்தனியாக ஆத்மாநுபவம் பண்ணுமவர்களேயன்றி, ஒரு கூட்டமாக இருந்து அநுபவம் பண்ணமாட்டாதவர்களாகையாலும், இங்கு "கூட்டத்து" என்று அருளிச்செய்திருப்பதாலும் அந்த அர்த்தம் அவ்வளவு ஸ்வரஸமல்லவென்று எம்பார் வேறுவகையாக அருளிச்செய்வராம்—மாற்றேலோப்பட்டவர் கூட்டமாவது அடியார்கள் குழாங்களாம்; என்னை நித்யமுக்தர்களின்திரளின் நடுவே கொண்டுபோய் வைப்பீர்களாவென்கிறாள் என்று அருளிச்செய்வராம். இப்போது, மாற்றேலோப்பட்டவர் என்றது—ஸம்ஸாரத்திலிருந்து ஓலைமாற்றப்பட்டவர் என்றபடி.

அன்றியே: "மாற்றேலோப்பட்டு – அவர்கூட்டத்து" என்றும் பிரித்து உரைப்பர் சில ஆசிரியர். யமன் தனது தூதர்களை நோக்கி 'இன்னானைப் பிடித்து என்னிடம் கொண்டு வாருங்கள்' என்று சொல்லி ஓலைச்சாசனம் எழுதித் தந்தனுப்பினால், சில ஸமயங்களில் அத்தூதர்கள் மாறுபாடாக வேறொருவனைப் பிடித்துக்கொண்டுபோய் விடுவதுண்டு; அப்படியே, இப்போது இவ்வாண்டாளை ஹிம்ஸிக்கும்படியாக இப்புஷ்பங்கள் எம்பெருமானால் நியமித்தனுப்பப் பட்டிருந்தாலும் அந்த நியமநத்தை மாறுடி. இவளைக்கொண்டுபோய் அவ்வெம்பெருமானுடைய கோஷ்டியிலே நிறுத்திவிடக்கூடுமென்கிற எண்ணத்தினால், 'ஓ! மேல் தோன்றிப் பூக்களே! என்னை ஹிம்ஸிக்கவேணுமென்கிற பகவதாஜ்ஞையைமாறுடி அவ்வெம்பெருமானுடைய கோஷ்டியிலே என்னைக்கொண்டுபோய் நிறுத்துங்கள்' என்கிறாளென்க- இப்பக்ஷத்தில்: மாற்றேலோப்பட்டு=ஓலைமாற்றப்பட்டு – அவருடைய ஆஜ்ஞையைமாறுடி என்கை. இன்னும் பலபடியாகவும் பொருள்கொள்ள இடமுண்டு. (உ)

599 கோவைமணட்டி நீயுன்கொழுங்கனிகோண்டு * எம்மை
ஆவிதோலிவியேல் வாயழகர்தம்மையஞ்சுதும் *
பாவியேன்தோன்றிப் பாம்பணையார்க்குந்தம்பாம்புபோல் *
நாவுமிரண்டுளவாய்த்து நாணிலியேனுக்கே. (ரு)

கோவை மணட்டி!	அம்மா! கோவைக் கொடியே!!
நீ	நீ
உன்	உன்னுடைய
கொழுங்கனி கொண்டு	அழகிய பழங்களாலே
எம்மை	என்னுடைய
ஆவி	உயிரை
தோலிவியேல்	போக்கலாகாது;
வாய் அழகர் தம்மை	அழகிய வாய் படைத்த பெருமான் விஷயத்திலே
அஞ்சுதும்	பயப்படா நின்றேன்;
பாவியேன்	பாவியான நான்
தோன்றி	பிறந்தபின்பு
நாணிலியேனுக்கு	லஜ்ஜையற்றவளான என் விஷயத்திலே
பாம்பு அணையார் க்கும்	சேஷ சாயியான பெருமாளுக்கும்

தம் பாம்பு போல்	தமது [படுக்கையான] திருவனந்தாழ்வானுக்குப் போல	நாவும் இரண்டு உள ஆயிற்று	இரண்டு நாக்குகள் உண்டாயின.

* * * மேற்புறங்களில் நின்றும் கண்ணீமீட்டுப் பக்கங்களில் நோக்கினாள்; அங்கே ஒரு செடியிலே கோவைக்கொடிபடர்ந்து பழுத்துக்கிடந்தன: அவற்றை நோக்கிப் பேசுகின்றாள். கோவைக்கனிகள் எம்பெருமானுடைய திருவதரத்திற்கு ஸ்மாரகங்களாயிருப்பவையாதலால் அவ்வழியாலே அவை தன்னை நலியவே அந்த நலிவுபொறுக்கமாட்டாமற் சொல்லுகிறாளென்கை. ஓ! கோவைக்கொடியே! நீ உன்னது சிறந்தகனிகளைக்காட்டி என் உயிரைச் சிதைக்கவேண்டா; உன்கனிகளைக்காணும்போதே திருமாலிருஞ்சோலையழகருடைய திருவதரம் நினைவுக்குவந்து மிகவும்தளர்ந்தொழிவேன்; அதுபற்றி எனக்கு மிகவும் அச்சமாயிருக்கிறது என்கிறாள் முன்னடிகளில். நான் பிறப்பதற்குமுன் அவன் "ஒன்றேயுரைப்பான் ஒருசொல்லே சொல்லுவான்" என்னும்படி ஸத்யவாக்காயிருந்தானாகிலும், நான் தோன்றின பிறகு என்னுடைய பாவத்தினால் அவன் அஸத்யவாக்காய்விட்டான். சொல்வதொன்றும் செய்வதொன்றுமாய்விட்டான். நாக்கு ஒன்றுயிருந்தாலன்றோ சொல்லும் செய்கையும் ஒன்றுயிருக்கும்: இரட்டை நாக்குப் படைத்தவனை திருவனந்தாழ்வானோடு இடைவிடாத சேர்த்தியாலே இவனும் அவனைப்போலே இரண்டு நாக்குப்பெற்றானுயினன்; [அபயம்ததாமி] என்ற நாக்கு இப்போது இல்லை! என்கிறாள்.

நாணிலியேனுக்கே=நான் தவிர மற்றபேர்கள் விஷயத்தில் அவன் ஸத்யவாக்காகவே இருக்கக்கூடும். வெட்கங்கெட்ட என் விஷயத்தில் மாத்திரமே அவன் த்விஜிஹ்வனாய்விட்டானென்கிறாள். இப்படி அவன் பொய்யனாயிருக்கச்செய்தேயும் தான் அவனையே வாய்வெருவாநின்றமைபற்றித் தன்னை வெட்கமற்றவளாகச் சொல்லிக்கொள்ளுகிறாள். (ந)

600 முல்லைப்பிராட்டி நீயுன்முறுவல்கள்கொண்டு * எம்மை
அல்லல்விளைவியேல் ஆழிநங்காயுன்னடைக்கலம் *
கொல்லையரக்கியைமூக்கரிந்திட்ட குமரனார்
சொல்லும்பொய்யானால் * நானும் பிறந்தமைபொய்யன்றே. (ச)

முல்லைப்பிராட்டி!	'அம்மா! முல்லைக்கொடியே!
ஆழி நங்காய்!	கம்பீரமான இயல்வையுடையாய்!
நீ	நீ
உன் முறுவல்கள் கொண்டு	(எம் பெருமானது முறுவல்போன்ற) உனது விகாஸத்தாலே
எம்மை	என்விஷயத்திலே
அல்லல் விளைவியேல்	வருத்தத்தை உண்டாக்க வேண்டா;
உன் அடைக்கலம்	(இதற்காக) உன்னைச் சரணமடைகிறேன்;
கொல்லை அரக்கியை	வரம்புகடந்தவளான சூர்ப்பணகையை
மூக்கு அரிந்திட்ட	மூக்கறுத்துத் துரத்தின
குமரனார்	சக்ரவர்த்தி திருமகனுடைய
சொல்லும்	வார்த்தையே
பொய் ஆனால்	பொய்யாய் விட்டால்
நான் பிறந்தமையும் பொய் அன்றே	நான் பெரியாழ்வார் வயிற்றில் பிறந்ததும் பொய்யாகக் கடவதன்றே.

* * * கோவைக்கொடியில் நின்றும் கண்ணைத் திருப்பிவேறோரிடத்தே வைத்தாள்; அங்கே முல்லையானது நன்றுகப் பூத்துக்கிடந்தது; அதைக்கண்டவாறே எம்பெருமானுடைய முறுவல் நினைவுக்கு வரவே ஆற்றமாட்டாதாளாய் அதின்காலிலே விழுகிறாள்.

வழிபறிக்கவந்த கள்ளனைக்கண்டால் 'பிரானே! நாயனே! அப்பனே!' என்னுமாபோலே 'முல்லைப்பிராட்டி என்கிறாள். அம்மா முல்லைக்கொடியே! கோடல்பூக்களுக்கும் மேல்தோன்றிப்பூக்களுக்கும் கோவைக்கொடிக்கும் ஒருவாறுதப்பிப்பிழைத்தோமென்று நான் மகிழ்ந்திருக்கையில், நீ உன்விகாஸத்தைக்காட்டி என்னைத் துன்பப்படுத்துவது தகுதியோ?

இனி இப்படி என்னைத்துன்பப்படுத்தாதே; உன்காலிலேவிழுந்து உன்னைவேண்டிக்கொள்ளுகிறேன், என்னை ஹிம்ஸிக்கவேண்டாமம்மா! என்கிறாள் முன்னடிகளில். ஆழி நங்காய்!=ஆழியென்றதனால்—காம்பீர்யமுடைமை சொல்லப்படுகிறது; நங்காய் என்றதனால்- பரிபூர்ணை சொல்லப்படுகிறது. உலகில் துதிப்பவர்கள் இப்படிப்பட்ட குணங்களையிட்டுத் துதிப்பது வழக்கமாதலால் ஆண்டாளும் இம்முல்லைக்கொடியை அங்ஙனே துதிக்கின்றாளென்க. இனி, ஆழி என்றதனால் - வட்டமாயிருக்குந்தன்மை சொல்லிற்றாகவுமாம்: முல்லைச்செடியை முட்டாக்கிட்டாற்போல் புஷ்பங்கள் வட்டமாகப் பூத்திருக்குமே.

கொல்லையரக்கியை மூக்கரிந்திட்ட குமரனார்—இராமபிரான்; அவருடைய சொல்லாவது—[மித்ரபாவேந ஸம்ப்ராப்தம் நத்யஜேயம் கதஞ்சந] அதாவது-ஒருவன் மெய்யான அன்போடு என்னைவந்து பற்றுவிட்டாலும் அன்பன்போல் பாவனைசெய்துகொண்டு வந்து சேர்ந்தானேலும் அவனையும் நான் ஒருவிதத்திலும் கைவிடமாட்டேன்—என்றவார்த்தை, இரவுபகல்மாறுடினாலும் என்னுடைய வார்த்தையானது எந்தக்ஷணத்திலும் எள்ளளவும் மாறுடமாட்டாது என்ற அவருடைய வார்த்தையே என்னளவில் பொய்யாய்விட்டபோது, பெரியாழ்வார்வயிற்றிற்பிறப்பா எனக்குக் கார்யகரமாகப்போகிறது? என்கிறாள். கொல்லையரக்கி என்றது—வரம்பு அழிந்த செயலையுடையவள், அதாவது-மரியாதையைத்தப்பி நடந்தவள் என்றபடி. பிராட்டியைப் புருஷகாரமாகக்கொண்டு பெருமாளைப்பற்றி உய்ந்துபோகலாமாயிருக்க அங்ஙன்செய்யாதே பிராட்டியின்மீது விபரீதமான எண்ணங்கொண்டு அவளை விழுங்கப்போனவளன்றே. (ச)

601 பாடும் குயில்காள் ஈதென்னபாடல்* கல்வேங்கட
நாடர்நமக்கொருவாழ்வுதந்தால் வந்துபாடுமின் *
ஆடும்கருளக்கொடியுடையார் வந்தருள்செய்து *
கூடுவராயிடில் கூவிநும்பாட்டுக்கள்கேட்டுமே. (டு)

பாடும்	பாடுகின்ற
குயில்காள்!	குயில்களே!
ஈது	(கர்ண கடோரமான) இக்கூசல்
என்ன பாடல்?	என்னபாட்டு;
நல் வேங்கடம் நாடர்	விலக்ஷணமான திருவேங்கடமலையை இருப்பிடமாகவுடைய பெருமான்
நமக்கு	என்விஷயத்தில்
ஒரு வாழ்வு தந்தால்	ஒரு வாழ்ச்சியைப் பண்ணிக்கொடுப்பனாகில் (அப்போது)
வந்து பாடுமின்	(நீங்கள் இங்கே)வந்துபாடுங்கள்
ஆடும்	(ஆநந்தத்தாலே) ஆடுகின்ற
கருளன்	பெரிய திருவடியை
கொடி உடையார்	த்வஜமாகக் கொண்டிருக்கிற அப்பெருமான்
அருள் செய்து	க்ருபைபண்ணி
வந்து கூடுவர் ஆயிடில்	(இங்கே) வந்து சேர்வனாகில்
கூவி	(அப்போது உங்களை) வரவழைத்து
நும் பாட்டுக்கள்	உங்களது பாட்டுக்களை
கேட்டும்	கேட்போம்.

* * * எந்தப்பக்கம் நோக்கினாலும் ஒவ்வொரு புஷ்பம் கண்ணிலே தோற்றி ஹிம்ஸகமாயிருந்தபடியாலே 'கண்ணைமூடிக் கொண்டோமாகில் சுகப்படலாம்' என்றுநினைத்துக் கண்ணைமூடிக்கொண்டாள். உடனே குயில்களின்பாட்டுக்கள் செவிப்பட்டன. அவற்றைக் கேட்டுத் தரிக்கமாட்டாதாளாய் அக்குயில்களை நோக்கி 'நீங்கள் என் இப்படி கர்ணகடோரமாகக் கத்துகின்றீர்கள்? போரும்போரும்; உங்கள் பாட்டை நிறுத்துங்கள்' என்கிறாள். நமக்கொருவாழ்வுதந்தால் என்றது—உங்கள் பாட்டைக் கேட்கும்படியான காதை எனக்குத் தந்தால் என்றபடி: இப்போது ஸர்வேந்த்ரியங்களும் அவனிலே அபஹரிக்கப்பட்டு அழிந்து கிடக்கின்றமை அறிக. வந்துபாடுமின்=இப்போது உங்களுடைய காட்சி எனக்கு அஸஹ்யமாயிருக்கையாலே ஒழிந்து போங்கள் என்றபடி.

'வேங்கடநாடர்வந்து உனக்கு வாழ்வுகொடுக்கும் ஸமயம் எங்களுக்கு எப்படித்தெரியும்? தெரிந்தாலன்றே அந்த ஸமயத்தில் நாங்கள் வந்து பாடக்கூடும்' என்று அக்குயில்கள் கேட்பனவாகக்கொண்டு கூறுகின்றாள் [ஆடுங்கருளக்கொடியுடையார் இத்யாதி.] அவருடைய வரவுக்கு ஸூசகமாகப் பெரிய திருவடிநாயனார் சிறகைவிரித்துக் கூத்தாடிக்கொண்டுவருவர்; அந்த அடையாளத்தைக்கொண்டே நீங்கள் தெரிந்துகொள்ளலாம். அப்படி நீங்கள்தெரிந்து கொள்ளாவிட்டாலும் அப்போது நானே உங்களை வரவழைத்து உங்கள் பாட்டைக்கேட்பேன் போங்கள் என்கிறாள். (ரு)

602 கணமாமயில்காள் கண்ணபிரான்திருக்கோலம்போன்று *
அணிமாநடம்பயின்றாடுகின்றீர்க்கு அடிவீழ்கின்றேன் *
பணமாடரவணைப் பற்பலகாலமும்பள்ளிகொள்
மணவாளர் * நம்மைவைத்தபரிசிதுகாண்மினே. (கூ)

கணம்	கூட்டமாயிருக்கிற
மா மயில்காள் !	சிறந்தமயில்களே !
கண்ணபிரான்	கண்ணபிரானுடைய
திரு கோலம் போன்று	அழகிய வடிவு போன்ற வடிவையுடையீராய்க்கொண்டு
அணி மா நடம் பயின்று	அழகிய சிறந்த நாட்டியத்திலே பழகி
ஆடுகின்றீர்க்கு	ஆடுகின்ற உங்களுடைய
அடி	திருவடிகளிலே
வீழ்கின்றேன்	ஸேவிக்கின்றேன்;

(இந்த ஆட்டத்தை நிறுத்துங்கள்.)

பணம் ஆடு அரவு அணை	படமெடுத்து ஆடுகின்ற திருவனந்தாழ்வாழ்வாகிற சயநத்திலே
பற்பல காலும்	காலமுள்ளதனையும்
பள்ளிகொள்	பள்ளிகொண்டருளா நின்ற
மணவாளர்	அழகியமணவாளப் பெருமாள்
நம்மை வைத்த பரிசு	எனக்கு உண்டாக்கித்தந்த லக்ஷணம்
இது காண்மின்	இப்படி உங்கள் காலிலே விழும்படியானதாயிற்று.

* * * சில மயில்கள் கூட்டங்கூட்டமாக இருந்துகொண்டு கூத்தாடுவதைக்கண்டு தரிக்கமாட்டாதாளாய் 'இக்கூத்தாடுதலை நிறுத்துங்கள், உங்கள் காலிலே விழுகிறேன்' என்கிறாள். "நின்றுடுகணமயில்போல் நிறமுடையநெடுமால்" [பெரியாழ்வார்திருமொழி] என்னப்பட்ட எம்பெருமானுக்கு இவை ஸ்மாரகங்களாய்க்கொண்டு நலிகிறபடியால் "கண்ணபிரான் திருக்கோலம்போன்று" என்கிறாள். அடி வீழ்கின்றேன்=இக்கூத்து ஒழியவேணுமென்று ப்ரபத்திபண்ணுகிறேனென்றபடி.

இப்படி இவள் சொன்னவாறே, "அந்தோ! பெரியாழ்வார் திருமகளாகப்பெற்ற பெருமைவாய்ந்த நீ இப்படி சொல்லத்தகுமோ? உன் காலிலேயன்றே நாங்கள் விழக்கடவோம்" என்று அம்மயில்கள் சொல்வனவாகக் கொண்டு, கூறுகின்றாள் [பணமாடரவணையித்யாதி.] "சென்றால் குடையாம் இருந்தால் சிங்காசனமாம்" என்றபடி - திருவனந்தாழ்வாணை ஸர்வப்ரகாரங்களாலும் அடிமைகொண்டு சிறப்பிக்குமவர் என்னை உங்கள் காலிலே விழும்படிசெய்த பின்பு நான் செய்யலாவதுண்டோ? என்கிறாள். "பணவாளரவணை" என்றும் பாடமுண்டு; அப்பாடத்தில், படங்களையும் ஒளியையுமுடைய அரவு என்க. (கூ)

603 நடமாடித்தோகைவிரிக்கின்ற மாமயில்காள் * உம்மை
நடமாட்டங்காணப் பாவியேன்நானேர்முதலிலேன் *
குடமாடுகூத்தன் கோவிந்தன்கோமிறைசெய்து * எம்மை
யுடைமாடுகொண்டான் உங்களுக்கினியொன்றுபோதுமே. (எ)

நடம் ஆடி	கூத்தாடிக்கொண்டு
தோகை விரிக்கின்ற	தோகைகளை விரிக்கின்ற
மா மயில்காள்	சிறந்த மயில்களே !
உம்மை	உங்களுடைய
நடமாட்டம் காண	கூத்தைப் பார்ப்பதற்கு
பாவியேன் நான்	பாவியான நான்
ஓர் முதல் இலேன்	ஒரு கைம்முதலுடையேனல்லேன்;
குடம் ஆடு கூத்தன்	குடக்கூத்தாடினவனை
கோவிந்தன்	கோபாலக்ருஷ்ணன்
கோமிறை செய்து	கேட்பாரற்ற மிறுக்குக்களைப் பண்ணி
எம்மை	என்னை
உடை மாடு கொண்டான்	ஸர்வஸ்வாபஹாரம் பண்ணினன்
இனி	இப்படியிருக்க
ஒன்று	(என் முன்னே கூத்தாடி என்னை ஹிம்ஸிக்கையாகிற) ஒரு காரியம்
உங்களுக்கு	உங்களுக்கு
போதுமே	தகுமோ ?

* * * 'உங்கள் கூத்தைநிறுத்துங்கள்' என்று மயில்களின் காலிலே இவள் விழுந்து வேண்டிக்கொள்ளவே, அம்மயில்கள் இவளுடைய எளிமையை நன்குதெரிந்துகொண்டு 'இவளுக்கு நாம் அநிஷ்டமானதைச் செய்தால் நம்மை இவள் தண்டிப்பளோவென்று நாம் அஞ்சவேண்டா; இவள் புகலற்றுக்கிடக்கின்றாள்; இவளை நாம் எப்படி ஹிம்ஸித்தாலும் கேட்பாரில்லை' என்று எண்ணி முன்னிலும் அதிகமாகத் தோகைகளை விரித்துக் கூத்தாடத்தொடங்கின; இவற்றைநோக்கி மீண்டும் தன் அவஸ்தையை முறையிட்டுக்கொள்கிறாள். கண்ணுடையவர்கள் உங்கள் கூத்தைக் கண்டால் பரமாநந்தம் பெறுவர்கள் என்பதில் தட்டில்லை; கண் இழந்திருக்கிற நான் உங்கள் கூத்தை எங்ஙனே காணவல்லேன்?. முதல் இலேன் என்றது—காண்பதற்கு முக்கியஸாதநமான கண்ணையுடையேனல்லேன் என்றபடி. "என் ஐம்புலனும் எழிலுங்கொண்டு" என்றபடி—எல்லா இந்திரியங்களையுங் கொள்ளைகொண்டானிறே எம்பெருமான்.

"பாவியேன் நானோர் முதலிலேன்" என்று சொன்னதை விரித்துரைக்கின்றாள் பின்னடிகளில். நாற்சந்தியிலே குடக்கூத்தாடி அக்கூத்திலே எல்லாரையும் ஈடுபடுத்திக் கொண்டவனும், பசுக்களுக்கும் இடையர்க்குங்கூட ஸுலபனானவன், ஸ்வதந்த்ரர்பண்ணும் படியான மிறுக்குக்களை என் விஷயத்திலே பண்ணி என்னுடைய ஸர்வஸ்வத்தையும் கொள்ளை கொண்டான்; இப்படிப்பட்ட தசையிலே நீங்களும் என்னைவந்து ஹிம்ஸிப்பது தகுதியோ? என்கிறாள். கோமிறை=கோ—அரசர்கள்; மிறை—மிறுக்கு; அரசர்கள் செய்யும்படியான மிறுக்காவது—ஈரநெஞ்சு இளநெஞ்சு இல்லாமல் புரியுங் கொடுமைகள் கோக்கள் மிறுக்கு செய்யுமாபோலே செய்து என்றபடி. அரசர்கள் எதுசெய்தாலும் கேட்பாரில்லையே. [எம்மையுடை மாடு கொண்டான்] எம்மை—எங்களுடைய, உடை—ஆடையையும், மாடு—செல்வத்தையும், கொண்டான் என்றும்; எம்மையுடை—எங்களுடைய, மாடு—ஸர்வஸ்வத்தையும் என்றும் பொருள் கொள்ளலாம். "மாடுபொன் பக்கஞ் செல்வம்" என்றகண்டு அறியத்தக்கது. திருவாய்மொழியில் "மாலுக்கு வையமளந்தமணாளற்கு" என்ற திருவாய்மொழியிற் கூறியபடி எல்லாவற்றையும் இழந்துகிடக்கிற என்னை நீங்களும் கலிகை ப்ராப்தமன்று என்கிறாள். (எ)

604 மழையேமழையேமண்புறம்பூசி உள்ளாய்நின்ற
மெழுகூற்றிறைப்போல் * ஊற்று கல்வேங்கடத்துள் நின்ற *
அழகப்பிரானர்தம்மை யென்னெஞ்சத்தகப்படத்
தழுவநின்று * என்னைத்தைத்துக்கொண்டு ஊற்றவும்வல்லையே. (அ)

மழையே மழையே!-ஓமேகமே !

புறம்	மேற்புறத்திலே
மண் பூசி	மண்ணைப்பூசிவிட்டு
உள்ளாய் நின்ற மெழுகு ஊற்றினால் போல்	உள்ளே யிருக்கும் மெழுகை உருக்கி வெளியில் தள்ளுமா போலே
ஊற்றும்	என்னை அணைந்து அந்தஸ்ஸார மான ஆத்மாவை உருக்கியழிப் பவராய்
நல் வேங்கடத்துள் நின்ற அழகப் பிரானர் தம்மை	விலக்ஷணமான திருவேங்கடம லையிலே நிற்குமவரான அழகிய பெருமாளை
என் நெஞ்சத்து அகப்பட தழுவ நின்று	என் நெஞ்சிலே ஸேவை ஸாதி க்கிறபடியே நான் அணைக்கும் படி பண்ணி
என்னை	என்னை
தனைத்துக் கொண்டு	அவரோடே நெருக்கி வைத்து (பிறகு),

ஊற்றவும் வல்லையே-வர்ஷிக்கவல்லையோ !.

* * * விண்ணீலமேலாப்பிலே கண்ட மேகங்கள் வர்ஷித்த பிறகு விகாஸத்தோடும் விலாஸத்தோடும் கூடிக்கிளர்ந்த பதார்த்தங்களை நோக்கி வார்த்தை சொல்லிக்கொண்டுவந்த ஆண்டாள் இப்போது பழையபடியே மேகங்களை விளித்துக் கூறுகின்றாள்—; மேகங்களானவை சில பதார்த்தங்களை உத்தீபங்களாகக்கிளப்பி அவற்றின் வழியாலே நனைந்தபோதாமல் பின்னையும்விடாதே நின்று வர்ஷித்து ஸாகூஷாத்தாகவும் நலியத்தொடங்கினபடியாலே அவற்றை நோக்கிக் கூறுகின்றனளென்க. மழைபொழிதலும் விரஹிகளுக்கு உத்தீபகமிறே. [மண்புறம் பூசி இத்யாதி.] வெண்கலப்பாத்திரம் முதலியன நிருமிப்பவர்கள், முதலில், பாத்திரத்தின் வடிவத்துக்கு ஒப்ப மண்ணைக்கட்டி அதன்மேல் சுற்றிலும் மெழுகைவளைத்து, பின்னையும் அம்மெழுகின்மேலே மண்ணைப்பூசி, மர்மமாக ஓரிடத்திலே த்வாரமர்க்கி, உள்ளிருக்கும்மெழுகை வெதுப்பி அவ்வழியாலே வெளியே ஊற்றுவர்கள். அவ்வாறுக ஊற்றுகின்றார் வேங்கடத்துள் நின்ற அழகப்பிரானர்—என்கிறவிதனால் தேறுங்கருத்து யாதெனில்;-மேலே மண்ணைஇணைத்து உள்ளிருக்கும்மெழுகைத் தள்ளிவிடுவதுபோல, அப்பெருமானும் உடம்பின் மேலே அணைந்து உள்ளிருக்கும் ஸத்து உருகிக்கழிந்துபோம்படி செய்யவல்லவன்-என்றதாகிறது.—"உடம்பிலே அணைந்து அகவாய் குடிபோம்படிபண்ணுமவராய்த்து" என்ற ருளிச்செய்தார் பெரிய வாச்சான்பிள்ளையும்.

ஊற்றும் என்ற விசேஷணம் அழகப்பிரானரிடத்து அந்வயிக்கும். என்னை இப்பாடு படுத்துகைக்கு அப்பெருமானிடத்துள்ள முக்கியஸாமக்ரி அழகுதான் என்ற கருத்துத் தோன்ற அழகப்பிரானர் தம்மை என்கிறாள். [என்னெஞ்சத்தகப்பட இத்யாதி.] அப்பெருமான் என் நெஞ்சில் ப்ரகாசிக்கிறுப் போலிருக்கிறனத்தனை யொழிய, அவனைநான் அணைக்க விரும்பிக் கையை நீட்டப்புகுந்தால் அகப்படுவதில்லை; இப்படி நான் நோவுபடவொண்ணுமல், அப்பெருமான் எனது நெஞ்சில் ப்ரதிபாஸிக்கும்படியே அவனை நான் அணைக்கும்படிபண்ணி வைத்து [-அதாவது, உஷையையும் அநிருத்தனையும் கூடவிலங்கிட்டுவைத்தாப்போலே அவனையும் என்னையும் ஒருவ்யக்தியாக நெருக்கி] ஓமேகமே! பிறகு நீ வர்ஷிப்பாயாகில் அப்போதன்றே உன்னுடைய வர்ஷம் ஆநந்தகரமாயிருக்குமென்கிறனென்க. விச்லேஷகாலத்தில் வேண்டாத வர்ஷந்தானே ஸம்ச்லேஷ ஸமயத்தில் உத்தேச்யமாயிருக்குமாயிற்று. (அ)

605 கடலேகடலேயுன்னைக்கடைந்து கலக்குறுத்து *
உடலுள்புகுந்துநின்று ஊறலறுத்தவற்கு * என்னையு
முடலுள்புகுந்துநின்று ஊறலறுக்கின்றமாயற்கு * என்
நுடலேகளேல்லாம் நாகணைக்கேசென்றுரைத்தியே. (கூ)

கடலே கடலே!	ஓ கடலே!,
உன்னை	(தனக்குப் படுக்கையிடமாக வாய்த்த) உன்னை
கடைந்து	(மலையை யிட்டுக்) கடைந்து
கலக்குறுத்து	கலக்கி
உடலுள் புகுந்து நின்று	(உனது) சரீரத்திலே புகுந்திருந்து
ஊறல் அறுத்த வர்க்கு	ஸாரமான அமுதத்தை, அபஹரித்தவராய் (அவ்வாருகவே)
என்னையும் உட லுள்புகுந்து நின்று	என் உடலிலும் புகுந்திருந்து
ஊறல் அறுக் கின்ற	என் உயிரை அறுக்குமவரான
மாயர்க்கு	எம்பெருமானுக்கு (விண்ணப்பம் பண்ணும்படி)
என் நடலைகள் எல்லாம்	என்துக்கங்களெல்லாம்
நாக அணைக்கே	அவர்படுக்கையான திருவனந் [தாழ்வானிடத்தில்
சென்று	நீ போய்
உரைத்தியே	சொல்லுவாயா? (சொல்லவேணும் என்கை.)

* * * அநந்தரம், கடலின் ஓதம் காதில்விழத் தொடங்கிற்று; கடலேகடலே! என விளித்து ஒரு வார்த்தை சொல்லுகின்றாள். "மாலுங் கருங்கடலே! என் நோற்றாய்!, வையக முண்டாலினிலைத் துயின்ற வாழியான்—கோலக், கருமேனிச் செங்கண்மாற் கண்படையு ளென்றும், திருமேனி நீ தீண்டப்பெற்று." [முதல் திருவந்தாதி.] என்றபடி—எம்பெருமானுக் கும் கடலுக்கும் நெருங்கின ஸம்பந்தம் இருக்கின்றமையால் அந்த ஸம்பந்தத்தையே பற்று சாகக்கொண்டு கடலைப் பிரார்த்திக்கின்றாள்—நான்படும் பாட்டை * அரவணைமேற்பள்ளி கொண்ட முகில் வண்ணன்பக்கலிலே நீ தெரிவிக்கவேணுமென்கிறாள்.

தனக்கு உபகாரம் செய்யுமவர்களை வேண்டியமட்டும் ஹிம்ஸித்து அவர்களிடத்துள்ள ஸாரத்தையும் கொள்ளைகொள்பவன் எம்பெருமான் – என்னுமிடம் விளங்கக் கூறுவன முன் னடிகள். 'கடலானது நமக்குப் படுக்குமிடமாயிற்றே' யென்று சிறிதும் நோக்காமல் மலை களையெல்லாங் கொணர்ந்து உன்னுள்ளே போட்டு உன்குடல் குழம்பும்படி உன்னைக் கடைந்து கலக்கினது மல்லாமல் உன்னைவிட்டு அன்புடன் அணைந்துகிடக்கிறபோற்கிடந்து உன் பக்கல் ஸாரமாயிருந்த அம்ருதத்தைக் கொள்ளைகொள்வித்தவனன்றே அவன் என்கிறாள். உன்னை இப்பாடுபடுத்தியதுபோலவே என்னையும் படுத்தாகின்றானென்கிறாள் மூன்றாமடியில். மேலோடே அணைந்து உள்ளே பசையறுத்தபெருமானென்கிறாள். மாயற்கு என்றது- அவன் இப்பாடுபடுத்தச்செய்தேயும் "ஆகிலுங்கொடியவென்னெஞ்சமவனென்றே கிடக்கு மெல்லே!" என்றபடி அவனையே பற்றிநிற்கும்படியான மாயமுடையவன் என்றபடி. நடலை = துக்கம். நாகணைக்கே சென்றுரைத்தி = 'சென்றால் குடையாமிருந்தால் சிங்காசன மாம்" என்றபடி ஸ்வவிதகைங்கரியங்களும் திருவனந்தாழ்வானொருவனிடத்தில் தானே கொள்ளவேணும்; அத்தகைய கைங்கரியங்களுக்கு அடியோம் உரிமைப்பட்டோமல் லோமோ? என்று சொல்லவேணுமென்பது உள்ளுறை. அன்றியே திருவனந்தாழ்வானைப் புருஷகாரமாகக்கொண்டு சொல்லவேணுமென்பதாகவுமாம். (கூ)

606 கல்லவென்தோழி நாகணைமிசைகம்பரர் *
செல்வர்பெரியர் சிறுமானிடவர்காஞ்செய்வதென் *
வில்லிபுதுவை விட்டுசித்தர்தங்கள்தேவரை *
வல்லபரிசுவருவிப்பரேல் அது காண்டுமே. (ம)

என் நல்லதோழி !	எனது உயிர்த்தோழியே!,
நாக அணைமிசை	திருவனந்தாழ்வானெனிற படுக்கையிலே சயனித்திருக்கிற
நம் பரர்	நம்பெருமாள்
செல்வர்	பெருஞ் செல்வம்படைத்தவர்;
பெரியர்	எல்லாரினும் மேற்பட்டவர்;
நாம்	நாமோவென்றால்
சிறு மானிடவர்	க்ஷுத்ர மநுஷ்யரா யிரா நின்[ரோம்;

(இப்படிப்பட்டநாம்)

என் செய்வது	என்ன செய்யலாம் ?-
வில்லி புதுவை விட்டுசித்தர்	ஸ்ரீ வில்லிபுத்தூர்க்கு நிர்வாஹகரான பெரியாழ்வார்
தங்கள் தேவரை	தமக்கு விதேயரா யிருக்கிற அப்பெருமானே
வல்ல பரிசு வருவிப்பரேல்	தம்மால் கூடியவகைகளாலே அழைப்பராகில்
அது காண்டும்	அப்போது (அவனை) நாம் ஸேவிக்கப்பெறுவோம்.

* * * ஆண்டாள் இப்படி பகவத்விரஹத்தாலே ஆற்றமாட்டாதாளாய்ப்படுகிற அலமாப்பைக் கண்ட உயிர்த்தோழியானவள் 'ஐயோ! இவள் இப்பாடுபடுகின்றாளே!, இவளை நாம் எப்படி தேற்றுவிப்பது! ஒரு வழியும் தெரியவில்லையே!' என்று சிந்தித்து வ்யஸனித்திருக்கையில், ஆண்டாள் அவ்வுயிர்த்தோழியை நோக்கி 'நீ அஞ்சவேண்டா; ஜீவிப்பதற்கு ஒரு வழிகண்டேன் காண்' என்கிறாள். திருவனந்தாழ்வான்மேல் ஶயனித்தருளுமவராய் ஶ்ரீய : பதியாய்ப் பரமபுருஷராயிருக்கிறவரை அதிக்ஷுத்ரராயிருக்கிற நாம் எங்ஙனே அணுகமுடியும்? "அம்மானுழிப்பிரானவன் எவ்விடத்தான்யானுர்?" என்னுமாபோலே அவருடைய பெருமைக்கும் நம்முடைய சிறுமைக்கும் எவ்வளவோ வாசியுண்டாயிருக்க அவரை நாம் வணைப்பிடமுடியுமோ?, முடியாது. ஆகில் நாம் இழந்தேபோக வேண்டியதோ வென்னில்; இழவாமைக்கு ஒருவழியுண்டு; அப்பெரியவர் நமக்குவசப்படமாட்டாராயினும் நம் அண்ணலான பெரியாழ்வார்க்கு வசப்படாதிருக்க அவரால் முடியாது. அந்த நாகணைமிசை நம்பரர் தாமே பெரியாழ்வாரிடத்தில் கோற்கீழ்க்கன்றுயிருப்பர். "பூச்சூட்டவாராய்" என்றும் "நீராடவாராய்" என்றும் "காப்பிடவாராய்", என்றும் அவர் அழைத்தவாறே அப்பெரியவர் பதறி ஓடிவருவர்; அப்போது நாம் எளிதாக அவரை ஸேவிக்கப்பெறுவோமென்கிறாள்.

இத்திருமொழிக்குப் பலச்ருதி அருளிச்செய்யாமல் இப்பாட்டே அதன் ஸ்தானத்தில் நின்றது. பாகவதஸம்பந்தத்தைக்கொண்டு உஜ்ஜீவிக்கப்பெறுவர்கள் என்பதே இத்திருமொழிக்குப் பலச்ருதியாகக் கொள்ளத்தக்கது. அடிவரவு:—கார் மேல் கோவை முல்லை பாடுங் கண நடமாடி ம்மை கடலே நல்ல தாம். (ய)

பதினோராந்திருமொழி—தாமுகக்கும்.

607 தாமுகக்கும்தங்கையில் சங்கமேபோலாவோ *
யாமுகக்குமென்கையில் சங்கமுமேந்திழையீர் *
தீமுகத்துநாகணைமேல் சேரும்திருவரங்கர் *
ஆமுகத்தைநோக்காரால் அம்மனேயம்மனே. (க)

ஏந்து இழையீர்!	ஆபரணங்களை யணிந்துள்ள மாதர்களே!
யாம் உகக்கும் என் கையில்சங்கம்	நான் உகந்து தரித்துக்கொண்டிருக்கிற என் கையில் வளைகள்
தாம் உகக்கும் தம் கையில் சங்கம் போலாவோ	தான் உகந்து தரித்துக்கொண்டிருக்கிற தன்கையில் சங்கோடு ஒவ்வாதோ?
தீ முகத்து	க்ரூரமான முகங்களையுடைய
நாக அணை மேல்	திருவனந்தாழ்வானெனிற படுக்கையின் மேலே
சேரும்	பள்ளி கொண்டருளா நின்ற
திரு அரங்கர்	ஸ்ரீரங்கநாதன்
முகத்தை	(என்னுடைய) முகத்தை
நோக்கார்	நோக்கு கின்றாரில்லை;
ஆ!	ஐயோ !;
அம்மனே ! அம்மனே !!	அந்தோ ! அந்தோ!!.

* * *—எம்பெருமானுடைய விச்லேஷம் நெடுகிச்செல்லவே, அதனால் உடல் ஈர்க்குப் போல் மெலிந்து கைவளைகளெல்லாம் கழன்றொழிந்தமையையும், இவ்வளவிலும் வந்து முகங் காட்டாத எம்பெருமானுடைய கொடுமையையுங் கூறி வருந்துகின்றாள். ஏந்திழையீர்! என்று அருகேவந்துநிற்கும் பெண்களை விளிக்கிறபடி. 'பெண்காள்!,—தோழிகாள்!' என்னுதே ஏந்திழையீர் என்றது—என்னைப்போலே வளையிழந்துவருந்தாதே, ப்ரளயத்துக்குத் தப்பிப் பிழைப்பாரைப்போலே நீங்கள்மாத்திரம் அவனுடைய விரஹத்துக்கு எப்படிதப்பிப்பிழைத்தீர்கள்? என வியந்து கேட்கிறபடிபோலும். "ஏந்திழையீர்!, யாமுகக்குமென்கையிற் சங்கமும் தாமுகக்கும் தம்கையிற்சங்கமேபோலாவோ?—என்று அப்பெருமாளைக் கேளுங்கள்" என்று வாக்ய சேஷம் பூரித்துக்கொள்ளவேணும். 'நம் கையிலுள்ள சங்கு எப்போதும் நம்கையிலேயே இருக்கவேணும்' என்று அவர் ஆசைப்படுவதுபோல், நானும் 'நம்கையிலுள்ளசங்கு நம்கையிலேயே இருக்கவேணும்' என்று ஆசைப்பட ப்ராப்தி இல்லையோ? அவருடைய ஆசைமாத்திரம் வழுவாமல் பலித்துவிடவேணும் என்னுடைய ஆசைமாத்திரம் பாழ்த்துப்போகவேணுமென்று இஃது என்ன விபரீதலங்கல்பம்? என்று அவரையேபோய்க் கேளுங்கள் என்கிறாள். இரண்டடியிலும் சங்கம் என்றது ஸாப்தச்லேஷம். பாஞ்சஜந்யத்துக்கும் கைவளைக்கும் பெயர்.

முகத்தைநோக்கார்=உடம்போடே அணைய வாராவிடினும் கண்வட்டத்திலே ஸேவை ஸாதிப்பதும் தவிரவேணுமோ? என்முகத்தை நோக்குவதற்கும் அவர் கூசும்படி நான் என்ன பாவம்செய்தேனே அறியேன். ஆ, ஆல்=ஐயோ! ஐயோ!! என்றவாறு. அம்மனே! அம்மனே!! = இப்படிப்பட்ட அவரை இப்போது நினைப்பதும்—புலி, சிங்கம் முதலியவற்றை நினைப்பதுபோல் பயங்கரமாயிற்றே! என்கிறாள்போலும். (க)

608 எழிலுடையவம்மனைமீர் என்னரங்கத்தின்னமுதர் *
குழலழகர்வாயழகர் கண்ணழகர் * கோப்பூழில்
எழுகமலப்பூவழகர் எம்மானர் * என்னுடைய
கழல்வளையத் தாமும்கழல்வளையேயாக்கினரே. (உ)

எழில் உடைய அம்மனைமீர்	அழகையுடைய தாய்மார்களே!,
அரங்கத்து	திருவரங்கத்திலெழுந்தருளியிருக்கிற
என் இன் அமுதர்	என்னுடைய இனிய அமுதம் போன்றவராய்
குழல் அழகர்	அழகிய திருக் குழற்கற்றையையுடையவராய்
வாய் அழகர்	அழகிய திருவதரத்தை யுடையவராய்
கண் அழகர்	அழகிய திருக்கண்களை யுடையவராய்
கொப்பூழில் எழு கமலப்பூ அழகர்	திருநாபியிலுண்டான தாமரைப்பூவாலே அழகுபெற்றவராய்
எம்மானர்	எனக்குஸ்வாமியான அழகிய மணவாளர்
என்னுடைய	என்னுடைய
கழல்வளையை	'கழல்வளை' என்று இடுகுறிப் பெயர்பெற்ற கைவளையை
தாமும்	அவர்தாம்
கழல்வளையே ஆக்கினர்	'கழன் றொழிகிறவளை' என்று காரணப்பெயர் பெற்றவளையாக ஆக்கினர்.

* * * திருவரங்கத்திலே எனக்கு போக்யமான அமுதம்போன்று எழுந்தருளியிருப்பவராய், திருக்குழலழகும் திருவதரத்தினழகும் திருக்கண்ணழகும் திருநாபிக்கமலத்தழகும் பொலியநின்று இவ்வழகையெல்லாங்காட்டி என்னை ஆட்படுத்திக்கொண்டவரான பெரிய பெருமாள்தப்பாக ஒன்றுஞ்செய்யவில்லை; யுக்தமாகவே செய்தார்; நான் கழலாதவளையை இட்டுக்கொண்டிருந்தேனகில் அவரும் அதனைக் கழலாதவளையாகவே அமைத்துவைப்பர்; நான் கழல் வளையிட்டுக்கொண்டேனகையாலே அவர் அதை அங்வர்த்தமாக்கினர்; என்மேல் குற்றமேயன்றி அவர்மேல் என்னகுற்றமிருக்கிறது? உள்ளதை உள்ளபடிசெய்பவரன்றே

அவர். நான் கழலாதவளையை இட்டுக்கொண்டிருந்து அவர் அதைக் கழல்வளையாக ஆக்கினாகில் அப்போது ஒருவாறு அவர்மேல் குற்றஞ்சாட்டலாம்; நானே கழல்வளையிட்டுக்கொண்டேனை பின்பு அதை அவர் அங்ஙதாகரிக்க எப்படிகடவர்? என்று ரஸோக்தியாக அருளிச் செய்கிறாள். இது நர்மோக்தி எனவும்படும். கைவளைக்குக் கழல்வளையென்று இடுகுறிப் பெயர். அதனைக்காரணப்பெயர் போலக்கொண்டு "தாமுங்கழல்வளையேயாக்கினரே" என்றாள். கழன்றொழியும்வளை யாதலால் கழல்வளை எனப்பெயர்வந்ததென்கிறாளாய்த்து. (உ)

609 பொங்கோதம்சூழ்ந்த புவனியும்விண்ணுலகும் *
அங்காதுஞ்சோராமே ஆள்கின்றவெம்பெருமான் *
செங்கோலுடைய திருவரங்கச்செல்வனார் *
எங்கோல்வளையால் இடர்தீர்வராகாதே. (ங)

பொங்கு ஓதம் சூழ்ந்த புவனியும்	அலையெறியா நின்றுள்ள கடலாலே சூழப்பட்ட இப்பூமண்டலமும்	திரு அரங்கம் செல்வனார்	கோயிலிலே பள்ளிகொண்டிருப்பவரான மஹாநுபாவர்
விண் உலகும்	பரமபதமும்	என் கோல் வளையால்	என்னுடைய கைவளையாலே
ஆதும் சோராமே ஆள்கின்ற எம் பெருமான்	சிறிதும் குறைவுபடாதபடி நிர்வஹித்துக் கொண்டு போருகிற ஸ்வாமியாய்	இடர் தீர்வர் ஆகாதே	தம் குறைகளெல்லாம் தீர்ந்து நிறைவு பெறுவரன்றே.
செங் கோல் உடைய	செங்கோல் செலுத்த வல்லவராய்	(அப்படியே என்வளையைக் கொள்ளை கொண்டு அவர் நிறைவுபெற்றுப் போகட்டும் என்றபடி.)	

* * *கடல் சூழ்ந்தமண்ணுலகும் விண்ணுலகுமாகிய உபயவிபூதியையும் அபாயலே ரக்ஷிப்பதாமின்றி ரக்ஷித்தருளுமவனும், என்னை ஒரு மூன்றாம்விபூதியாக ஆளுமவனும், திருவரங்கத்திலே பள்ளிகொண்டருளினபடியே செங்கோல்செலுத்துமவனுமான எம்பெருமான் இப்படி அவாப்தஸமஸ்தகாமனுமிருந்து வைத்தும் குறைவாளன்போன்று என்னுடைய கைவளையைக் கொள்ளை கொண்டுபோனான்; போயிடுக; இவ்வளையினால் அவனுடைய தாரித்ரியமெல்லாம் ஹதமாகட்டும் என்கிறாள். (ங)

610 மச்சணிமாட மதிளரங்கர்வாமனனார் *
பச்சைப்பசுந்தேவர் தாம்பண்டுநீரேற்ற *
பிச்சைக்குறையாகி யென்னுடையபெய்வளைமேல் *
இச்சையுடையரேல் இத்தெருவேபோதாரே. (ச)

மச்சு அணி மாடம் மதில் அரங்கர்	மேல்தளங்களாலே அலங்கரிக்கப்பட்ட மாடங்களையும் மதில்களையுமுடைய திருவரங்கத்திலே எழுந்தருளியிருப்பவராய்	நீர் ஏற்ற பிச்சை குறை ஆகி	உதகதாரா பூர்வகமாகப் பெற்ற பிச்சையிலே குறையுண்டாகி (அக்குறையைத்தீர்ப்பதற்காக)
வாமனனார்	(முன்பு) வாமநாவதாரம் செய்தருளினவராய்	என்னுடைய பெய் வளை மேல்	என்னுடைய (கையில்) இடப்பட்டுள்ள வளை மேல்
பச்சைப் பசுந் தேவர்	பசுமை தங்கிய தேவரான பெரிய பெருமாள்	இச்சை உடையரேல்	விருப்பமுடையவராகில்
தாம்	தாம்	இத்தெருவே போதாரோ	இத்தெருவழியாக எழுந்தருள மாட்டாரோ?
பண்டு	முன்பு (மஹாபலியிடத்தில்)		

* * * பெரிய பெருமாள் முன்பு தாம் மஹாபலியிடத்திலே யாசகராக எழுந்தருளி அவனிடத்தில் உதகதாராபூர்வகமாக பிக்ஷைவாங்கிக்கொண்ட பிச்சையில் குறையுண்டாகி அக்குறையை என்கையாலே தீர்த்துக்கொள்ளவேணுமென்ற ஆவலுடையவராய் என்கை வளையிலே ஆசையுடையவராகில் அஸுரனுடைய யஜ்ஞபூமியிலே கடந்தநடையை இத்தெருவே என் கண்வட்டத்திலே நடந்துகாட்டலாகாதோ? என்கிறாள். (ச)

611 போல்லாக்குறளுருவாய்ப் போற்கையில்நீரேற்று *
எல்லாவுலகும் அளந்துகொண்டவெம்பெருமான் *
நல்லார்கள்வாழும் களிரரங்கநாகணையான் *
இல்லாதோம்கைப்பொருளும் எய்துவானெத்துளனே. (டு)

பொல்லா குறள் உரு ஆய்	விலக்ஷண வாமநரூபியாய்
பொன் கையில்	அழகிய கையாலே
நீர் ஏற்று	பிக்ஷைபெற்று
எல்லா உலகும்	ஸகலலோகங்களையும்
அளந்துகொண்ட எம்பெருமான்	தன்வசப்படுத்திக்கொண்ட ஸ்வாமியாய்
நல்லார்கள் வாழும்	நன்மைமிக்க மஹான்கள் வாழ்கிற
களிர் அரங்கம்	ஸர்வதாபஹரமான திருவரங்கத்தில்
நாக அணையான்	திருவனந்தாழ்வாணைப்படுக்கையாகவுடையரான பெரிய பெருமாள்
இல்லாதோம்	அகிஞ்சனையான என்னுடைய
கைப் பொருளும்	கைம் முதலான வஸ்துவையும் (சரீரத்தையும்)
எய்து வான் ஒத்து உளன்	கொள்ளை கொள்வான் போலிராகின்றான்.

* * * விலக்ஷணமான வாமநரூபத்தைப் பரிக்ரஹித்து அழகியகையிலே நீரேற்றுப் பிச்சைவாங்கி, பிச்சையிட்டவன் குடிவாழ்வதற்கும் ஓரடிமண்மிகாதபடி ஸகலலோகங்களையும் அளந்து ஸ்வாதீநப்படுத்திக்கொண்ட மஹாநுபாவர், தரித்ரரான நம்முடைய கைப்பொருளையும் [அதாவது—இந்தவுடம்பையும்] கொள்ளை கொள்வார்போலே இராகின்றார் என்கிறாள். (டு)

612 கைப்பொருள்கள்முன்னமே கைக்கொண்டார் * காவிரிநீர்
செய்ப்புரளவோடும் திருவரங்கச்செல்வனார் *
எப்பொருட்கும்நின்றார்க்கும் எய்தாது * நான்மறையின்
சொற்பொருளாய்நின்றார் என்மெய்ப்பொருளும்கொண்டாரே. (கூ)

காவிரி நீர் செய் புரளோடும்	காவேரியின் தீர்த்தமான துபயிர் நிலங்களிலெல்லாம் ஓடிப்புரளும்படியான நீர்வளம்மிகுந்த
திரு அரங்கம்	திருவரங்கத்தில் எழுந்தருளியிருக்கிற
செல்வனார்	ஸ்ரீமானையும்,
எப்பொருட்கும் நின்று	எல்லாப்பொருள்களிலும் அந்தராத்மாவாய் நின்று
ஆர்க்கும்எய்தாது	ஒருவர்க்கும் கைப்படாமல்
நால் மறையின் சொல்பொருள் ஆய் நின்றார்	நான்கு வேதங்களிலுள்ள சொற்களுக்கும் பொருளாய் நிற்பவருமான பெரிய பெருமாள்
முன்னமே	ஏற்கனவே
கைப்பொருள்கள்	கையிலுள்ள பொருள்களையெல்லாம்
கைக்கொண்டார்	கொள்ளை கொண்டவராயிருந்து வைத்து (இப்போது)
என் மெய் பொருளும் கொண்டார்	எனது சரீரமாகிற வஸ்துவையும் கொள்ளைகொண்டார்.

* * * எல்லாப்பொருள்களிலும் அந்தர்யாமியாயிருந்துகொண்டு ஒருவர்க்கும் கைப்படாமல் வேதவேத்யராயிருக்கும் பெரியபெருமாள் என்கையிலுள்ள பொருள்களை முன்னமே கைக்கொண்டார்; கடைசியாக ஸரீரமென்கிற ஒரு வஸ்து மிகுந்திருந்தது; அதையும் கொள்ளை கொண்டாரென்கிறாள். மெய்ப்பொருளும் கொண்டார்=மெய் என்று ஆத்மாவையும் சொல்லக்கடவதாகையாலே, ஆத்மீயங்களை ஏற்கனவே கொள்ளை கொண்டவர் இப்போது ஆத்மாவையும் கொள்ளை கொண்டார் என்பதாகவும் உரைக்கலாம். (கூ)

613 உண்ணுதுறங்காது ஒலிகடலையூடறுத்து *
பெண்ணுக்கையாப்புண்டு தாமுற்றபேதெல்லாம் *
திண்ணார்மதில்சூழ் திருவரங்கச்செல்வனார் *
எண்ணுதேதம்முடைய நன்மைகளேயெண்ணுவரே. (எ)

திண் ஆர் மதிள் சூழ்	(மஹா ப்ரளயத்துக்கும் அழியாதபடி) நிண்மை பொருந்திய மதிள்களாலே சூழப்பட்ட
திரு அரங்கம்	கோயிலிலே எழுந்தருளியிருக்கிற
செல்வனூர்	ச்ரீய:பதியான பெருமாள் (ஸ்ரீராமனாய்த் திருவவதரித்த போது)
பெண் ஆக்கை ஆப்புண்டு	(சீதையென்கிற வொரு) பெண்ணின் சரீரத்தில் ஆசைக்குக் கட்டுப்பட்டு
உண்ணுது	உண்ணமலும்
உறங்காது	உறங்காமலும் (வருந்தி)
ஒலி கடலை	(திரைக் கிளப்பத்தாலே) கோஷிக்கின்ற கடலை
ஊடு அறுத்து	இடையறும்படி பண்ணி (அணைகட்டி)
தாம் உற்ற	(இப்படி) தாம் அடைந்த
பேது எல்லாம்	பைத்தியத்தை யெல்லாம்
எண்ணுது	மறந்துபோய் (இப்போது)
தம்முடைய	தம்முடைய
நன்மைகளே	பெருமைகளையே
எண்ணுவர்	எண்ணுகின்றார்.

* * * தமக்கு மேற்பட்டாரொருவருமில்லாதபடி பரமபுருஷரா யிருக்குமவரை ஒரு மானிடப்பெண்ணுகிய நீ இப்படியெல்லாஞ் சொல்லுவது தகுதியோ? அவருடைய மேன்மை எங்கே? உன்னுடைய கீழ்மை எங்கே? இதை ஆராயாமல் நீ அப்பெரியவரைப் பழிப்பது சிறிதும் பொருந்தாது' என்று சில மாதர்கள் ஆண்டாளைநோக்கிக் கூற, அதற்கு மறுமாற்ற முரைக்கின்றாள். அப்பெரியவர் ராமாவதாரத்தில் பட்டபாடுகள் தெரியாதா? ஒரு பெண் பெண்டாட்டியின் உடம்பிலே ஆசைகொண்டு அந்த ஆஸாபாஸபாரவச்யத்தாலே ஊணு மின்றி உறக்கமுமின்றி அவளுடைய பிரிவுக்கு ஆற்றுமல் நோவுபட்டு வானரப்படைகளைத் துணைகொண்டு கடலிலே அணைகட்டுகையாகிற அருந்தொழிலைச்செய்து இப்படிகளாலே தாம் வெளிப்படுத்திய பைத்தியத்தை ஸ்ரீராமாயணம் நடையாடுந்தேஸத்திலே அறியாதாருண்டோ? [அஸித்ரஸ்ஸதம்ராம:] என்றும், [நமாம்ஸம் ராகவோபுங்க்தே நசாபிமதுஸேவதே] என்றும் ஸ்ரீ ராமாயணத்தில் சொல்லப் பட்டிருக்கவில்லையா? பரமபுருஷராயிருப்பவர் ஒரு பெண்ணுக்காக அப்பாடு படலாமோ? அது அவருடைய மேன்மைக்குத் தகுமோ? அது தகுமாகில், எனக்காகவும் அவர் அப்பாடுபட்டிருக்கவேண்டாவோ? என்னிடத்தில் மாத்திரமேயோ அவர் மேன்மை பாராட்டியிருக்கவேணும்? என்கிறாள். (எ)

614 பாசிதூர்த்துக்கிடந்த பார்மகட்குப்பண்டொருநாள் *
மாசுடம்பில்நீர்வாரா மானமிலாப்பன்றியாம் *
தேசுடையதேவர் திருவரங்கச்செல்வனூர் *
பேசியிருப்பனகள் பேர்க்கவும்பேராவே. (அ)

பண்டு ஒருநாள்	முன்னொருகாலத்தில்
பாசி தூர்த்து கிடந்த	பாசிபடர்ந்து கிடந்த
பார் மகட்கு	ஸ்ரீ பூமிப்பிராட்டிக்காக
மாசு உடம்பில் நீர்வாரா மானம் இலா பன்றி ஆம்	அழுக்கேறின சரீரத்தில் ஜலம் ஒழுகா நிற்கும் ஹேயமான தொரு வராஹ வடிவு கொண்ட
தேசு உடைய தேவர்	தேஜஸ்ஸையுடைய கடவுளாகிய
திரு அரங்கச் செல்வனூர்	ஸ்ரீரங்கநாதன்
பேசி இருப்பனகள்	(முன்பு) சொல்லியிருக்கும் பேச்சுக்களானவை
பேர்க்கவும்பேரா	(நெஞ்சில் நின்றும்) பேர்க்கப் பார்த்தாலும்பேரமாட்டாதவை.

* * * ஸ்ரீ தேவிக்காகப் பட்ட பாட்டைச் சொன்னள் கீழ்ப்பாட்டில்; பூமிப்பிராட்டிக்காகப் பட்டபாட்டைச் சொல்லுகிறாள் இப்பாட்டில். பூமிப்பிராட்டியானவள் வெகு காலம் ஜலத்துக்குள்ளே முழுகிக்கிடந்த படியால் பாசிபடர்ந்து கிடந்தமைபற்றிப் "பாசி தூர்த்துக்கிடந்த" என்று அடைமொழி கொடுக்கப்பட்டது. மாசுடம்பில் நீர் வாராமான மிலாப்பன்றி=ஒரு பூமிப்பிராட்டி பக்கலிலே அமர்ந்த ஆசையினால் ஒரு ஸரீரத்தைப் பரிக்ரஹித்தவன், அழுக்குடம்பினரான நாமெல்லாருங்கூட அருவருக்கும்படியாய் அத்யந்தஹேய

மான பன்றிவடிவத்தையோ பரிக்ரஹிக்கவேணும்? 'உடம்பு அழுக்கேறிற்று' என்று லஜ்ஜிக்கவுமறியாத ஜன்மத்தையன்றோ எறிட்டுக்கொண்டது. நீர்வாருதல்—நீர்பெருகுதல். மான மிலா என்றவிடத்து வியாக்கியானம்:—"மாயாம்ருகத்தைக்கண்டு அல்லாதம்ருகங்கள் மோந்துபார்த்து வெருவி ஓடினவிறே; அப்படியன்றிக்கே ஸஜாதீயங்கள் மோந்துபார்த்தாலும் 'நம்இனம்' என்று மருவும்படியாயாய்த்து; ஈச்வராபிமாநம் வாஸனையோடே போனபடி."

பன்றியாந்தேசுடைய தேவர்=அஸ்மாததிகளுக்குப் போலே கர்மமடியாக நேர்ந்த ஜன்மமன்றே; ஸ்வேச்சையாலே எறிட்டுக்கொண்ட ஜன்மமாகையாலே தேஜஸ்ஸுபொலிய நிற்குமென்கிறது. ஆண்டாள் தன்னுடைய ப்ரணயரோஷத்தின் மிகுதியினால் "மானமிலாப் பன்றி" என்னச்செய்தேயும், ஆஸுரப்ரக்ருதிகளாய்ப் பழிக்குமவர்கட்கு இடமறும்படி தேசுடையதேவர் என்று உடனே சொல்லிவைக்கிறாள். [பேசியிருப்பனகள் இத்யாதி.] ஸ்ரீவராஹநாயனார் பேசியிருக்கும்பேச்சுக்களான [ஸ்திதே மநஸி ஸுஸ்வஸ்தே சரீரேஸதி யோ நர:- தாதுஸாம்யே ஸ்திதே ஸ்மர்த்தா விச்வரூபஞ்ச மர்மஜம், ததஸ்தம் ம்ரியமாணம்து காஷ்டபாஷாணஸந்நிபம், அஹம் ஸ்மராமி மத்பக்தம் நயாமி பரமாம் கதிம்.] என்றவை. வராஹசரமச்லோகமிறே இவை. ஸரீரம் மனம் முதலியவை பாங்காயிருக்கும் போது என்னை ஒருவன் ஸ்மரிப்பானாகில் பின்பு அவன் மூச்சடங்கி முடியுமளவானபோது அவனை நான் ஸ்மரித்திருந்து நற்கதியை நண்ணுவிப்பேன்—என்றிறே சொல்லிவைத்திருக்கிறார். அப்பேச்சுக்கள் தன்னளவில் பலிக்கக்காணுமையாலே வருத்தம். பேசியிருப்பனகள் என்ற விடத்திற்கு வியாக்கியானத்தில் அருளிச்செய்யும்பொருள் வேறுயும் சீரியதாயுமிருக்கும்:—"[செல்வனூர் பேசியிருப்பனகள்.] 'செல்வர் சொல்லுக்கஞ்சாரே.' விபூதி விஷயமாகவும் ஆச்ரிதர் விஷயமாகவும் சொல்லியிருக்குமவை யென்னுதல்; அன்றிக்கே, 'நின்னைப்பிரியேன், பிரியிலுமாற்றேன்' என்றுற்போலே கூடியிருந்தபோது சொன்னவையென்னுதல். [போக்கவும்பேராவே.] இவற்றை மறந்துபிழைக்கவென்று பார்த்தால் நெஞ்சில் நின்று போக்கவும் பேருகிறதில்லை; * தாமுற்றபேதெல்லாம் எண்ணுதே தம்முடைய நன்மைகளே யெண்ணி அவர் நம்மை மறந்தாலும் 'கொடியவென்னெஞ்சமவனென்றே கிடக்கும், என்னும்படியே நம்மால் மறந்துபிழைக்கப்போகிறதில்லை யென்கிறாள்." என்பது வியாக்கியான ஸூக்தி. (அ)

615 கண்ணுலங்கோடித்துக் கன்னிதன்னைக்கைப்பிடிப்பான் *
திண்ணுர்ந்திருந்த சிசுபாலன்தேசழிந்து *
அண்ணுர்ந்திருக்கவே ஆங்கவளைக்கைப்பிடித்த *
பெண்ணுளன்பேணுமூர் பேருமரங்கமே. (கூ)

கண்ணுலம் கோடித்து	கல்யாண ஸந்நாஹங்களை யெல்லாம் பரிஷ்காரமாகச் செய்து முடித்து
கன்னிதன்னை	கல்யாணப் பெண்ணை ருக்மிணிப்பிராட்டியை
கை பிடிப்பான்	பாணிக்ரஹணம் செய்துகொள்ளப் போவதாக
திண் ஆர்ந்து இருந்த	ஸம்சயமில்லாமல் நிச்சயமாக நினைத்திருந்த
சிசுபாலன்	சிசுபாலனைவன்
தேசு அழிந்து	அவமானப்பட்டு
அண்ணுர்ந்திருக்க ஆங்கு	ஆகாசத்தை நோக்கிக்கிடக்கும் படியாகநேர்ந்த அச்சமயத்திலே
அவளை	அந்த ருக்மிணிப்பிராட்டியை
கை பிடித்த	பாணிக்ரஹணம் செய்தருளின வனை
பெண்ணுளன்	பெண்பிறந்தார்க்கெல்லாம் தானவன் என்று ப்ரஸித்தனான பெருமான்
பேணும்	விரும்பி எழுந்தருளியிருக்கிற
ஊர்	திவ்யதேசத்தினுடைய
பேரும்	திருநாமமும்
அரங்கம்	திருவரங்கமாம்.

* * * ருக்மிணிப்பிராட்டியின் ப்ரதிபந்தகங்களைப்போக்கி அவளுக்கு உதவினபடியை அநுஸந்தித்து, 'அவளொருத்திக்கு உதவினதானது பெண்பிறந்தா ரெல்லார்க்கும் உதவினபடியன்றே' என்று அவ்வழியாலே தரிக்கிறாள். அர்ஜுநனொருவனைநோக்கிக் கண்ணபிரானருளிச்செய்த வார்த்தையை நாமெல்லாரும் விச்வஸித்திருக்கிறோமிறே; அதுபோல. பேரும் அரங்கமே=பேரும் என்கிற உம்மைக்குக் கருத்தென்னெனில்; அவனும் பெண்ணாளன், அவனுடைய ஊரின்பேரும் அரங்கம்—, அதாவது— அரங்கமென்றால் கூத்தாடுமிடத்துக்குப் பெயர்; ஸ்ரீரங்கமென்றும் திருவரங்கமென்றுமுள்ள ப்ரஸித்தியால், பிராட்டி கூத்தாடுமிடம் அரங்கம் என்று கூறப்படுதலால், அவனும் பெண்களைவாழ்விப்பவன், அவனிருக்கு மூரும் பெண்கள் களித்துவாழுமிடமாய்த்து; இனி நமக்கு என்னகுறையென்கை. (கூ)

616 செம்மையுடையதிருவரங்கர்தாம்பணித்த *
மெய்ம்மைப்பெருவார்த்தை விட்டுசித்தர்கேட்டிருப்பர் *
தம்மையுகப்பாரைத் தாமுகப்பரென்னுஞ்சோல் *
தம்மிடையேபோய்யானுல் சாதிப்பாராரினியே. (ய)

செம்மை உடைய	(மனமொழிமெய்கள் மூன்றும் ஒருபடிப்பட்டிருக்கையாகிற) செம்மைக்குணமுடைய	கேட்டு	(குருமுகமாகக்) கேட்டு
திரு அரங்கர்	ஸ்ரீரங்கநாதர்	இருப்பர்	(அதில் சொல்லியிருக்கிறபடி) நிர்ப்பரராயிருப்பர்;
தாம் பணித்த	(முன்பு) தம்வாயாலே அருளிச்[செய்த	தம்மை உகப்பாரை தாம் உகப்பர் என்னும் சொல்	"தம்மை விரும்பினவர்களைத் தாமும் விரும்புவர்" என்ற பழமொழியானது
மெய்ம்மை	ஸத்யமானதும்	தம்மிடையே	தம்மிடத்திலேயே
பெரு	பெருமை பொருந்தியதுமான	பொய் ஆனுல்	பொய்யாய்ப் போய்விட்டால்
வார்த்தை	சரமச்லோகரூபமான்னவார்த்தை(யை	இனி	அதற்குமேல்
விட்டுசித்தர்	(என்திருத்தகப்பனாரான) பெரியாழ்வார்	சாதிப்பார் ஆர்	(அவர்தம்மை) நியமிப்பார் ஆர்? (யாருமில்லை.)

* * * நெஞ்சில்நினைப்பது ஒன்றுரைப்பது வாயாற்சொல்வதுவேறொன்றுமாய், பின்பு அநுஷ்டிப்பது மற்றொன்றுமாயிருக்கும் செவ்வைக்கேடர்களை ஒருங்கவிடுகைக்கு மநோவாக்காயங்கள் மூன்றும் ஒருபடிப்பட்டிருக்குமவராய் அக்குணம்விளங்குமாறு கோயிலிலே கண்வளர்ந்தருளுமவரான பெருமாள், முன்பு அர்ஜுநனை வ்யாஜீகரித்து அவனுடைய தேர்த்தட்டிலே நின்றுகொண்டு, யதார்த்தமுமாய் ச்லாக்யமுமான ஒருவார்த்தையை அருளிச்செய்தார்; அதாவது— "உன் காரியங்களையெல்லாம் குறையறத்தலைக்கட்டி வைக்க நானிருக்கிறேன்; நீ ஒன்றுக்கும் கவலைப்படவேண்டியதில்லை; உனது ஸகலபாரங்களையும் என்பக்கல் ஸமர்ப்பித்து நிர்ப்பரனாய் இரு" என்று உரைத்த சரமச்லோகம். அவ்வார்த்தையைக்கேட்டு அதன்படியே நிஷ்டையுடையராயிருப்பர் பெரியாழ்வார் என்கிறாள் முன்னடிகளில்: அவருடைய மகளான தனக்கும் அந்த அத்யவஸாயமே புகல்என்று காட்டியவாறு. (ய)

அடிவரவு:—தாம் எழில் பொங்கு மச்சு பொல்லாக் கை உண்ணுப் பாசி கண்ணாலம் செம்மை மற்று.

கண்ணபிரானுறையுமிடங்களிலே தன்னைக்கொண்டு சேர்க்கு மாறுவேண்டுதல்.

617 மற்றிருந்தீர்கட்கறியலாகா மாதவனென்பதோரன்புதன்னை *
உற்றிருந்தேனுக்குரைப்பதெல்லாம் ஊமையரோடுசெவிடர்வார்த்தை *
பெற்றிருந்தாளையோழியவேபோய்ப் பேர்த்தோருதாயில்வளர்ந்தகம்பி *
மற்பொருந்தாமற்களமடைந்த மதுரைப்புறத்தென்னையுய்த்திடுமின். (க)

மற்று இருந்தீர்கட்கு	(என்னுடைய துணிவுக்கு) மாறுபாடாக இருக்கின்ற உங்களுக்கு
அறியல் ஆகா	அறியமுடியாததாய்
மாதவன் என்பது ஓர் அன்புதன்னை	மாதவன் விஷயமான அபிநிவேசத்தை
உற்றிருந்தேனுக்கு	அடைந்திருக்கிற எனக்கு
உரைப்பது எல்லாம்	நீங்கள் சொல்லுவதெல்லாம்
ஊமையரோடு செவிடர் வார்த்தை	ஊமையும் செவிடனுங்கூடி வார்த்தை சொல்லிக்கொள்வது போல் வீண்;
(இப்போது எனக்குச்செய்யத்தக்கது எது வென்றருள்;)	
பெற்றிருந்தாளை ஒழிய போய்	மெய்கொந்து பெற்றதாயான தேவகியை விட்டொழிந்து
பேர்த்து ஒரு தாய் இல்	வேறொரு தாயாகிய யசோதையின் க்ருஹத்திலே
வளர்ந்த	வளர்ந்தவனும்
மல் பொருந்தா மல் களம் அடைந்த	மல்லயுத்தபூமியிலே மல்லர்கள் வந்து சேர்வதற்கு முன்னே தான் முற்பாடனுப்போய்ச் சேர்ந்திருப்பவனுமான
கம்பி	கண்ணபிரானுடைய (ஸகரமாகியய)
மதுரை புறத்து	மதுராபுரியினுடைய ஸமீபப்பிரதேசத்திலே
என்னை	என்னை
உய்த்திடுமின்	கொண்டு சேர்த்துவிடுங்கள்.

* * * 'எனக்கு இப்போது நிகழ்கிற அவஸ்த்தை இப்படிப்பட்டதென்று சிறிதும் அறியகில்லாதநீங்கள், பகவத்விஷயகாமத்தின் மேலெல்லையிலேநிற்கிற எனக்குச்சொல்லுகிற வார்த்தைகள் வீண்; உங்கள்பேச்சு என்காதில் புகவும்மாட்டா; புகுந்தாலும் அவற்றுக்கு மறுமொழிகூறுமளவிலே நான் நிற்கின்றிலேன்; ஆகையாலே நீங்கள் எனக்குஹிதஞ்சொல்லப் பார்ப்பதை நிறுத்திவிட்டு * ஒருத்திமகனுய்ப்பிறந்து ஓரிரவிலொருத்திமகனுய் ஒளித்துவளர்ந்து சாணூர முஷ்டிகாதிமல்லர்களோடே போர்புரிந்து, வெற்றிபெற்ற கண்ணபிரானெழுந்தருளியிருக்கிற மதுராபுரியின்ப்ராந்தத்திலே என்னைக்கொண்டுபோய்ப் போடுங்கள்' என்கிறாள்.

* * * மற்பொருந்தா மற்களமடைந்தகம்பி = "தன்னுடம்போடே அணையவேணுமென்னுமாசையுடைய நானிருக்க, இத்தனைபோதுபுறப்பட்டு முரட்டுமல்லரோடே அணைகைக்குப் போகாநிற்கும்: மல்லரானவர்கள் மற்பொருகைக்கு யுத்தபூமியிலே சென்று † கிட்டுங்காட்டில் தான் யுத்தபூமியிலே சென்று கிட்டுமாய்த்து. அமன் மல்லருடம்போடே அணைவதற்குமுன்னே இடையிலே நான்சென்றுகிட்டிக்கொள்ளும்படி என்னை மதுரையின்பரிஸரத்திலே கொடுபோய்ப் பொகடுங்கோள்" என்ற வியாக்கியான ஸ்ரீ ஸூக்தியின் போக்யதை அநுபவிக்கத்தக்கது.

உய்த்திடுதல் = கொண்டுசேர்க்கையும், உஜ்ஜீவிக்கச்செய்கையும். .... (க)

618 காணியினியோர்கருமமில்லை காலயலாரு மறிந்தோழிக்தார் *
பாணியாதென்னைமருந்துசெய்து பண்டுபண்டாக்கவுறுதிராகில் *
மாணியுருவாயுலகளந்த மாயனைக்காணில்தலைமறியும் *
ஆணையால்நீரென்னைக்காக்கவேண்டில் ஆய்ப்பாடிக்கேயென்னையுய்த்திடுமின். (உ)

† சேர்வதற்கு முன்னே என்றபடி.

இனி காணி ஓர் கருமம் இல்லை நால் அயலாரும் அறிந்தொழிந்தார்	இனிமேல் வெட்கப்பட்டு ஒரு பயனுமில்லை; ஊரிலுள்ளாரெல்லாரும் (எனது செய்தியை) அறிந்துகொண்டார்கள்.
(ஆதலால் இனிவெட்கப்பட்டுப்பயனில்லை)	
பாணியாது மருந்து செய்து	காலதாமதமின்றி வேண்டும் பரிஹாரங்களைச் செய்து
என்னை	என்னை
பண்டு பண்டு ஆக்க உறுதிர் ஆகில்	இப்போதைய விரஹாவஸ்தைக்கு முற்பட்டதான ஸம்ச்லேஷதசைக்கும் முற்பட்டதான பகவத் விஷய வாஸனையையே அறியாததசையிலிருந்த நிறத்தைப்பெற்றவளாகச்செய்ய நினைப்பீர்களாகில்,
நீர்	நீங்கள்
என்னை	என்னை
ஆனையால்	ஸத்யமாக
காக்கவேண்டில்	காப்பாற்ற விரும்புகிறீர்களாகில்
என்னை	என்னை
ஆய்ப்பாடிக்கே	திருவாய்ப்பாடியிலே
உய்த்திடும்மின்	கொண்டு சேர்த்துவிடுங்கள்;
	(அவ்விடத்தில்)
மாணி உரு ஆய் உலகு அளந்த மாயனை காணில்	(மாவலியினிடத்தில்) வாமநரூபியாய்ச்சென்று (த்ரிவிக்ரமனாகி) உலகங்களையெல்லாம் அளந்துகொண்ட பெருமானை ஸேவிக்கப்பெற்றால்
தலை மறியும்	(இந்தநோயானது) தலைமடங்கும்.

* * *—"பெண்ணே! நீ ஆயிரந்தான்சொல்லு; உன்னுடையதுணிவு உகக்கத்தக்கதாக மாட்டாது. நீ படிதாண்டாப்பத்தினியாயிருக்கவேண்டியவள்; படிகடந்து நீ செல்லுமளவில் அவ்வெம்பெருமானுக்கு அது பெருத்த அவத்யமாய்முடியும்; ப்ரபந்நஸந்தானத்திலே இப்படியுமொருத்தி கிளம்பினளே' என்று ஊரார்பழிக்கநேரிடும்; இதெல்லாம் உனது பெண்மைநிறைவுக்குப் பங்கல்ல; உன்ஸ்வரூபத்தை நீ காத்துக்கொள்ளவேண்டாவா?" என்று தாய்மார்சொல்ல, அவர்களை நோக்கிக் கூறுகின்றாள்—நான் முறைகெட்டபடியை இனிமேலா ஊரார் அறியப்போகிறார்கள்? என்றைக்கோ அறிந்துவிட்டார்கள்! இனிமேல் அறியவேண்டும்படி இங்கு ஒன்றும் ரஹஸ்யமாயிருக்கவில்லை. ஏழுசுற்றுப்புல்லையும்மேய்ந்து எட்டுத்தண்ணீரையுங்குடித்துவருகிற கொண்டிப் பசுவின்கிலேபோன்றதன்றே எனதுநிலை; இனி காம் ஆர்க்கு லஜ்ஜைப்படவேணும்? லஜ்ஜைப்பட்டுத்தான் பெறவேண்டியது என்ன இருக்கிறது?. அன்னைமீர்! எனக்கு நன்மை விளைக்கவேணுமென்ற விருப்பம் உங்களுக்கு உண்மையாக உண்டாகில், இப்போதே என்னைத்திருவாய்ப்பாடியிலேகொண்டு சேர்க்கப்பாருங்கள்; இதுவே எனக்குற்ற நன்மையாம்; மற்றைப்படி நீங்கள் செய்யுமதெல்லாம் எனக்குத் தீமையேகிடீர்! என்கிறாள்.

* * * பாணியாது = காலதாமஸம் செய்யாமல் என்றபடி. பாணித்தல் என்னும் பதத்தை ஆழ்வார்களுள் பெரியாழ்வாரும் இவளுமே பிரயோகித்தனர்: "பாணிக்கவேண்டா நடமின்" என்பது பெரியாழ்வார் திருமொழி.

* * * பண்டுபண்டாக்க="பண்டாக்க" என்றால் போராதோ? "பண்டுபண்டாக்க" என்றதற்குக் கருத்தென்? எனில், கேண்மின். இப்போதைய என் அவஸ்தைக்கு முற்பட்டதான யாதொரு அவஸ்தையுண்டோ, அதற்கும்முற்பட்டதான யாதொருஅவஸ்தையுண்டோ அவ்வவஸ்தையில் நான் எப்படியிருந்தேனோ அப்படி என்னை இப்போது ஆக்கவிரும்புவீர்களாகில் என்றபடி. இதனை விவரிப்போம்:— இப்போதைய அவஸ்தையாவது விரஹாவஸ்தை; இதற்கு முந்திய அவஸ்தையாவது ஸம்ச்லேஷா வஸ்தை; அதற்கும்முந்திய அவஸ்தையாவது—பகவத்விஷயவாஸனையே தெரியாமல் அந்யபரமாகப்போதுபோக்கினகாலம். *உண்டியே உடையே உகந்திருந்தகாலம். அப்போது ஸரீரம் வாடாமல்வதங்காமல் மாமைகுன்றாமல் பசுகு பசுகென்றிருக்குமிறே; நிர்விசாரமாக உண்டுடுத்துத் திரியுங்காலத்திலே மேனி நித்யபுஷ்டமாயிருக்கும். பகவத்விஷயத்தில் வாஸனைபண்ணிப்போந்தது முதலாக "ஸம்யோகாவிப்ரயோகாந்தா:" என்றபடிக்ஷணகாலம் ஸம்ச்லேஷமும் சிரகாலவிச்லேஷமுமாய் வ்யஸனமே

மீதூர்ந்துசெல்லுகையாலே–இப்போதைய விரஹாவஸ்த்தைக்கு முந்தியதான ஸம்ச்லேஷாவஸ்த்தையிலுள்ள நிறத்தை விரும்புவதில் ரஸமில்லையென்று, அதற்கும்முந்தியதான அந்யபரத்வாவஸ்த்தையில் நிறத்தை விரும்புகிறளாய்த்து.

தலைமறியும் என்றவினைமுற்றுக்கு எழுவாய்வருவித்துக்கொள்ளவேணும்; உள்கலந்த மாயனை ஸேவிக்கப்பெற்றால் என்னுடைய ஆற்றுமை தலைமடங்குமென்கை. (உ)

619 தந்தையும்தாயுமுற்றுமிற்கத் தனிவழிபோயினளென்னும்சொல்லு *
வந்தபின்னைப்பழிகாப்பரிது மாயவன்வந்துருக்காட்டுகின்றான் *
கொந்தளமாக்கிப்பரக்கழித்துக் குறும்புசெய்வானோர்மகனைப்பெற்ற *
நந்தகோபாலன்கடைத்தலைக்கே நள்ளிருட்கணென்னையுய்த்திடுமின். (ங)

தந்தையும் தாயும் உற்றாரும் நிற்க	"தம்பியரும் தாயாரும் மற்றுமுள்ள உறவினரும் இருக்கும் போது
தனிவழி போயினள் என்னும் சொல்லு	(இவள்) தான்தோன்றியாகத் தெருவிலே புறப்பட்டாள்" என்கிறவார்த்தையானது
வந்த பின்னை	உலகில் பரவின பிறகு
பழிகாப்பு அரிது	அப்பழியைத்தடுப்பதுமுடியாது
(நான் தனிவழிபோகாதிருக்கவும் முடியவில்லை; எனென்றால்)	
மாயவன்	ஆச்சர்யசேஷ்டிதங்களையுடையனை கண்ணபிரான்
வந்து	எதிரே வந்து
உருகாட்டுகின்றான்	தன் வடிவைக் காட்டி இழுக்கின்றானே;
(இப்போது நீங்கள் செய்யவேண்டியதென்னவென்றால்)	
கொந்தளம் ஆக்கி பரக்கழித்து குறும்பு செய்வான் ஓர் மகனை பெற்ற	(பெண்களைக்) குடிகெடுத்துக் குறும்பு செய்யும் பிள்ளையைப் பெற்றவனான
நந்தகோபாலன்	நந்தகோபருடைய
கடைத்தலைக்கே	திருமாளிகை வாசலிலே
நள்ளிருட்கண்	நடுநிசியிலே
என்னை உய்த்திடுமின்	என்னைக் கொண்டுபோய்ச் சேர்த்து விடுங்கள்.

* * *—தாய்தகப்பன்மார் சுற்றத்தார் முதலானோர் இருக்கும்போது, அவர்களைக் கொண்டு தனக்குற்ற நன்மைகளைத் தேடிக்கொள்ளவேண்டியது தகுதியாயிருக்க, ஒருபெண்பிள்ளை அவர்களையெல்லாம் திரஸ்கரித்துவிட்டுத் தான்றோன்றியாகத் தானே புறப்பட்டாள் என்று சிலர்பழிக்கத் தலைப்படுவர்கள்; அப்பழியானது என்னளவிலேநில்லாமல் இக்குடிக்கே பெருத்த பழிப்பாய்த் தலைக்கட்டும். அப்போது இப்பழிப்பைப் பரிஹரிக்க நீங்கள் முயலாதிருக்கப்போகிறதில்லை; ஆனால் அப்போது உங்களுடையமுயற்சி பயன்படமாட்டாது; பழிவிழுவதற்கு முன்னே அதனைப்பரிஹரிக்கப்பார்க்கவேணுமேயல்லது பழிவிழுந்து பரவின பின்பு அது பரிஹரிக்கப்போமோ? பழிவிழுவதற்கு ப்ரஸக்தியில்லாமல் அடங்கியிருக்க என்னால் முடியவில்லை; இப்படிப்பட்டநிலைமையில் நீங்கள் செய்யத்தக்கது யாதெனில், தான்தோன்றியாய் நானுகப்படிகடந்து புறப்பட்டுப்போனேனென்கிற வார்த்தைக்கு அவகாஶமில்லாதபடி என்னை நீங்களாகவே விரும்பி அழைத்துக்கொண்டுபோய்க் கண்ணபிரானருகில் சேர்த்துவிடுங்கள்; அப்படி செய்யுமளவில் என் மநோரதமும் நிறைவேறி நானும்வாழ்ந்தேனாகிறேன்; நீங்களும் புகழ்பெற்றுப்போகிறீர்கள். பழிக்கநினைப்பார்க்கும் அவகாஶமில்லாமேபோகிறது. இந்த ஔசித்யத்தை நீங்கள் நன்குகண்டறிந்து இப்படிசெய்துமுடிப்பீர்களென்று நம்பியே நான் விரைந்துபுறப்படாதே நிற்கின்றேன் என்கிறள்.

தன்னைக் கொண்டுபோய்விடவேண்டுமிடத்தைக் கூறுகின்றள் பின்னடிகளில். * மச்சொடுமாளிகையேறி மாதர்கள்தம்மிடம்புக்குக், கச்சொடு பட்டைக்கிழித்துக் காம்புதுகிலவைகீறி, நிச்சலுந்தீமைகள் செய்பவனாய், * ஆற்றிலிருந்து விளையாடுவோர்களைச் சேற்றுலெறிந்து வளைதுகில்கைக்கொண்டு, காற்றில்கடியனாய் ஓடி அகம்புகுமவனாய் இப்படிதீமைகள்செய்துதிரியுமவனை மகனைப்பெற்ற நந்தகோபாலனுடைய திருமாளிகைவாசலிலே என்னைக் கொண்

டுபோய்ப் படுக்கவையுங்களென்கிறாள். நந்தகோபாலன்கடைத்தலையென்றால்—வைத்யர்களின் வீட்டுவாசல்களில் நோயாளிகள் படுகாடுகிடக்குமாபோலே கண்ணபிரானால் புண்பட்ட பெண்கள் படுகாடுகிடக்குமிடமென்று ப்ரஸித்தமாயிருக்கும்" என்று பட்டரருளிச்செய்வராம்.

"கோந்தளம்=சிலுகிடுகை; பரக்கழிக்கை=பழிவிலோக்கை." என்பது வியாக்கியான ஸ்ரீஸூக்தி. அதாவது—'கண்ணன் பெண்களைப் புண்படுத்தினவாறு என்னே!' நோவுபடுத்தினவாறு என்னே' என்று அனைவரும் மனம்நொந்து பழிக்கும்படிக்கீடான குறும்புகளைச் செய்யுமவனென்கை.

கள்ளிருட்கணென்னையுய்த்திடுமின்=நாலுபேர் கண்ணிலே தென்படும்படியான ஸமயத்திலே நீங்கள் என்னை அங்கே கொண்டுபோனால் அவன் தாய் தந்தையர்க்கு வெட்கப்பட்டு முகம்நோக்காதேயிருப்பன்; ஆதலால், ஒருவர்க்கும் வெள்காமல் உடனே அவன் என்னை அணைக்கும்படி நடுநிசியிலே கொண்டு போங்கள் என்கிறாள். (ரு)

620 அங்கைத்தலத்திடையாழிகொண்டானவன் முகத்தன்றிவிழியேனென்று *
செங்கச்சுக்கொண்டுகண்ணைடையார்த்துச் சிறுமானிடவரைக்காணில்நாணும் *
கொங்கைத்தலமிவைநோக்கிக்காணீர் கோவிந்தனுக்கல்லால்வாயில்போகா *
இங்குத்தைவாழ்வையொழியவேபோய் எழுனைக்கரைக்கேன்னையுய்த்திடுமின். (ச)

அம்கைத்தலத்திடை	அழகிய திருக்கைத் தலத்திலே
ஆழி கொண்டானவன்	திருவாழியை ஏந்தியிருப்பவனான கண்ணபிரானுடைய
முகத்து அன்றி விழியேன் என்று	முகத்தில் தவிர(மற்ற பேருடைய முகத்தில்) விழிக்கமாட்டேனென்று
செம் கச்சு ஆடை கொண்டு கண்ணூர்த்து	நல்ல கஞ்சுகமாகிற ஆடையினாலே கண்களை மூடிக்கொண்டு,
சிறுமானிடவரை நாணில் நாணும் கொங்கைத்தலம் இவை	கூனத்ர மநுஷ்யர்களைக் கண்டால் வெட்கப்படா நின்ற இக்கொங்கைகளை
நோக்கி காணீர்	(தாய்மார்களே!) நீங்கள் உற்று நோக்குங்கள்;
	(இக்கொங்கைகளானவை)
கோவிந்தனுக்கு அல்லால்	கண்ணபிரானைத் தவிர்த்து
வாயில் போகா	மற்றொருவருடைய வீட்டு வாசலே நோக்கமாட்டா;
	(ஆகையாலே)
இங்குத்தை வாழ்வை ஒழியபோய்	நான் இவ்விடத்திலே வாழ்வதை யொழித்து
என்னை எழுனை கரைக்கு உய்த்திடுமின்	என்னை யமுநா நதிக்கரையிலே கொண்டு போட்டுவிடுங்கள்.

* * * 'இப்படிப்பிழைத்த பதற்றம் உனக்கு ஆகாது; சிறிது அடக்கம்வேண்டும்' என்று சொன்ன தாய்மார்களை நோக்கிக் கூறுகின்றாள்—என் கொங்கைகள் படுகிறபாட்டைப் பாருங்கள்; 'கையுந்திருவாழியுமான அழகு பொலிந்து நின்ற கண்ணபிரானுடைய முகத்தைநோக்குவோமேயன்றி மற்று எவரையும் நோக்கமாட்டோம்' என்று திண்ணிதாக ஸங்கல்பஞ்செய்து கொண்டு சிவந்தகச்சினால் கண்ணைமறைத்துக்கொண்டு கூனத்ரமநுஷ்யர்களைக்கண்டால் நாணிக்கிடக்கின்ற இம்முலைகளைக்கொண்டு நான் எங்ஙனே ஆற்றுவேன்? கோவிந்தனுடைய வீட்டுவாசலிலே புகுந்தாலன்றித் தரிக்கமுடியாது இவற்றுக்கு; "விழிக்குங்கண்ணிலேன் நின்கண்மற்றல்லால் வேறொருவரோடு என்மனம் பற்றுது" என்றும் "மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழகில்லேன்" என்றும் ஸங்கல்பித்துக்கொண்டிருக்கிற இவற்றுக்கு நான் என்ன ஸமாதாநம் கூறுவேன்? ஆகையாலே இங்கு நின்றும் என்னைக்கொண்டுபோய் யமுனைக்கரையிலே எறியுங்களென்கிறாள். * தூயபெருநீர்யமுனைத் துறைவனைநீடே ஜலக்ரீடைபண்ணி விளையாட மநோரதிக்கிறாளாய்த்து. "கோவிந்தனுக்கல்லால் வாயில்போகா" என்றவிடத்திற்கு வியாக்கியானம்:—"பசுக்களின் பின்னேபோய்த் தீம்பிலே கைவளரும் க்ருஷ்ணனுக்கல்லது, வழியேபோய் வழிவந்து ஏகதாரவ்ரதனையிருக்கும் சக்ரவர்த்தி திருமகனுக்கு வழிபோகாது." என்று. (ச)

621 ஆர்க்குமென்னோயிதறியலாகாது அம்மனீமீர்துழதிப்படாதே *
கார்க்கடல்வண்ணனென்பானொருவன் கைகண்டயோகம்தடவத்தீரும் *
நீர்க்கரைநின்றகடம்பையேறிக் காளியனுச்சியில்நட்டம்பாய்ந்து *
போர்க்களமாகநிருத்தஞ்செய்த பொய்கைக்கரைக்கென்னையுய்த்திடுமின். (ரு)

அம்மனீமீர் என் இது நோய் ஆர்க்கும் அறியல் ஆகாது — தாய்மார்களே! என்னுடைய இந்த வியாதியானது எப்படிப்பட்ட ஞானிகளுக்கும் அறிய முடியாதது;
துழதிப்படாதே — (இது அப்படிப்பட்ட நோயா! என்று) நீங்கள் துக்கப்படாமல்,-
நீர் கரை நின்ற கடம்பை ஏறி — காளிங்க மடுவின் கரையிலிருந்த கடம்ப மரத்தின் மேல்ஏறி (அங்கிருந்து)
காளியன் உச்சியில் — காளியநாகத்தின் படத்தின்மேலே
நட்டம் பாய்ந்து — ஒரு நர்த்தனவகையாகப் பாய்ந்து
போர் களம் ஆக — அப்பொய்கை தானே யுத்தக்களமாம்படியாக
நிருத்தம் செய்த — நர்த்தனம் செய்யப்பெற்ற
பொய்கைகரைக்கு — மடுவின்கரையிலே
என்னை உய்த்திடுமின் — என்னைக்கொண்டுபோய்ப் போடுங்கள்.
கார் கடல் வண்ணன் என்பான் ஒருவன் — நீலக்கடல் போன்ற திருமேற்றத்தனனை கண்ணபிரான்
நடவ — (தனது திருக்கைகளால் என்னைத்) தடவுவானாகில்
தீரும் — (இந்நோய்) தீர்ந்துவிடும்;
கைகண்ட யோகம் — (இதுதான்) கைமேலே பலிக்கக்கூடிய உபாயம்.

* * * துழதிப்படுதல்—துக்கப்படுதல். "கார்க்கடல் வண்ணனென்பானொருவன் தடவத்தீரும்; (இது) கைகண்டயோகம்" என்று அன்வயம்: யோகமாவது உபாயம். நட்டம்='நாட்யம்' என்றவடசொல் நட்டமெனத்திரிந்தது; 'நிருத்தம்' என்ற வடசொல்லின் திரிபாகவுமாம். நிருத்தமென்பது நிருத்தமென்றும் நட்டமென்றும் திரியக்கூடும். பொய்கை—யமுனையாற்றில் ஓர்பகுதி. (ரு)

622 கார்த்தண்முகிலும்கருவிளையும் காயாமலரும்கமலப்பூவும் *
ஈர்த்திடுகின்றனவென்னைவந்திட்டு இருடீகேசன்பக்கல்போகேயென்று *
வேர்த்துப்பசித்துவயிறசைந்துவேண்டடிசிலுண்ணும்போது * ஈதென்று
பார்த்திருந்துநெடுநோக்குக்கொள்ளும் பத்தவிலோசனத்துய்த்திடுமின். (சு)

கார் தண் முகிலும் — வர்ஷா காலத்திலுண்டான குளிர்ந்த மேகமும்
கருவிளையும் — கருவிளைப்பூவும்
காயா மலரும் — காயாம்பூவும்
கமலம் பூவும் — தாமரைப்பூவுமாகிற இவைகள்
வந்திட்டு — எதிரே வந்துநின்று
இருடீகேசன் பக்கல் போகுஎன்று என்னை ஈர்த்திடுகின்றன — "கண்ணபிரான் பக்கலில் நீயும்போ" என்று என்னை வலிக்கின்றன; (ஆகையாலே,)
வேர்த்து — "பசுமேய்க்கிற சிரமத்தாலே வேர்வையடைந்து
பசித்து — பசியினால் வருந்தி
வயிறு அசைந்து — வயிறு தளர்ந்து
வேண்டு அடிசில் உண்ணும் போது ஈது என்று — வேண்டிய பரமான்னம் உண்ண வேண்டிய காலம் இது என்று
பார்த்திருந்து — (ரிஷி பத்னிகளின் வரவை) எதிர்பார்த்திருந்து
நெடு நோக்குக் கொள்ளும் — நெடுங்காலம் கடாக்ஷித்துக்கொண்டிருக்குமிடமான
பத்தவிலோசனத்து — பத்தவிலோசன மென்கிற ஸ்தானத்திலே
உய்த்திடுமின் — (என்னைக்) கொண்டு சேர்த்துவிடுங்கள்.

* * * பத்தவிலோசன மென்கிற புண்யதேசத்திலே தன்னைக்கொண்டுபோய்விட வேணுமென்கிறாள் பின்னடிகளில். ஒருநாள் கண்ணபிரானும் பலராமனும் பசுக்களுடனும் இடையர்களுடனும் யமுனையாற்றின் கரையிலே சென்று நெடும்போது பசுக்களுமேய்த்துக்களைத்து ஆற்றங்கரையில் ஓரிடத்திலே உட்கார்ந்தவளவில், இடைப்பிள்ளைகளெல்லாரும் க்ருஷ்ண பலராமர்களை நோக்கித் தங்களுடைய பசியின்கொடுமையைக்கூறி 'இப்போதே

நீங்கள் இப்பசியைப் போக்கியருளவேணும்' என்று மிக்க ஆர்த்தியுடன் பிரார்த்திக்க, அவர்களுடைய பரிதாபத்தையறிந்த கண்ணபிரான், 'ஓ பிள்ளைகளே! ஸமீபத்தில் சில மஹர்ஷிகள் ஆங்கிரஸமென்னும்வேள்வியை அநுஷ்டித்துக்கொண்டிருக்கிறார்கள்; நீங்கள் அவர்களிடம் போய் என்பெயரையும் என் தமையனார் பெயரையும் சொல்லி, இன்னாரால் நாங்கள் அனுப்பப்பட்டிருக்கின்றோமென்று கூறி அன்னம் விரும்புங்கள்; பசி தீரும்' என்று கட்டளையிட்டனுப்பினன்; அவர்களும் அங்ஙனமே அவ்விடஞ்சென்று விநயத்துடன் இவ்வண்ணம் விண்ணப்பஞ்செய்து அடிசில்வேண்ட, அவ்வந்தணர்கள் இவ்வாயர்களின்பேச்சைச் செவிகொடுத்துங்கேளாதொழியவே ஆய்ப்பிள்ளைகள் க்ருஷ்ண பலராமர்களிடம் மீண்டுவந்து செய்தியைச் சொல்ல, அதுகேட்ட கண்ணபிரான் புன் முறுவல்செய்து, 'பிள்ளைகாள்! அந்த மஹர்ஷிகளுடைய தர்மபத்னிகள் இருக்கிறார்களே, அவர்களிடஞ்சென்று நானும் பலராமனும் இங்கே இருப்பதாகச் சொல்லி ப்ரஸாதம் கேளுங்கள்; அப்பெண்டிர் தவறுதுதந்திடுவர்கள்' என்று சொல்லி அவர்களை ரிஷிபத்னிகளிடமனுப்ப, உடனே அவர்கள் அவ்விடஞ்சென்று அந்த ருஷிபத்னிகளை நமஸ்கரித்து, 'அம்மனைமீர்! இதோ ஸமீபத்தில் கண்ணபிரானும் நம்பி மூத்த பிரானும் பசுக்களைமேய்த்துக் களைத்திருக்கின்றனர்; அவர்களோடு அநுசரர்களாக வந்த அஸ்மதாதிகளும் களைத்திருக்கின்றோம்; எல்லாரும் பசிதீர்ந்து மகிழும்படி ப்ரஸாதம் தரவேணும்' எனவேண்ட; அப்பெண்டிர்கள் ஸ்ரீக்ருஷ்ணநாமச்ரவணமாத்ரத்திலே பரமாநந்த மடைந்து உடம்புமயிர்க்கூச்செறிந்து உடனே பக்ஷ்யம், போஜ்யம், லேஹ்யம், சோஷ்யம்—என நான்கு வகைப்பட்ட அன்னவர்க்கங்களையும் நல்ல நல்ல பாத்திரங்களிலெடுத்துக் கொண்டு ஸ்ரீ க்ருஷ்ண பலராமர்களிருக்குமிடத்தை நோக்கிப் புறப்படுகையில், தந்தையர் தாய்மார் மக்கள் உடன் பிறந்தார் பர்த்தாக்கள் முதலானோர் எவ்வளவு தடுத்தும் அவர்களுடைய தடைக்கு உடன் படாதவராய் நிலைநின்ற பக்தி நிஷ்டையையுடையவர்களாய் விரைந்துவந்து யமுனையாற்றங்கரைச்சோலையிலே நம்பி மூத்தபிரானையும் கண்ணபிரானையும் ஸேவித்து, கொணர்ந்த அந்த வர்க்கங்களை ஸமர்ப்பித்துவிட்டுப் பரமாநந்த பூரிதர்களாய் மீண்டுசென்றனர்; அவ்வடிசிலைக் கண்ணபிரான் அவ்வாயர் பிள்ளைகளுக்குத்தந்து தானும் அமுதுசெய்தான்—என்ற வரலாறு ஸ்ரீ பாகவதத்தில் தஶமஸ்கந்தத்தில் இருபத்துமூன்றுமத்யாயத்தில் விரிவாகக்காணத்தக்கது.

ரிஷிபத்நிகள் இவ்வண்ணமாக அடிசில் கொணர்ந்துகொடுத்தது ஒரு நாளேயல்ல; நாடோறும் கண்ணபிரான் யமுனையாற்றங்கரைச்சோலைகளிலே வந்து ஆநிரைமேய்த்துக் களைத்துப்போகிறானென்றுணர்ந்த அப்பெண்டிர் நெடுநாள் வரையில் நாடோறும் பகலில் உச்சிவேளையில் கொணர்ந்துகொடுத்துக்கொண்டிருந்தார்களென்றும், ஒவ்வொருநாளும் அவர்கள் அடிசில்கொணரும் ஸமயத்துக்குச்சரியாகக் கண்ணபிரானும் களைப்புடன் அவ்வடிசிலை எதிர்பார்த்து அத்திக்கையே நோக்கியிருப்பனென்றும் இப்பாட்டின் ப்ரஸங்கத்திலே அழகிய மணவாளச்சீயர் உபந்யஸித்தருளும்படி. "வேண்டடிசிலுண்ணும்போது ஈதென்று பார்த்திருந்து நெடுநோக்குக் கொள்ளும்பத்தவிலோசனம்" 'நமக்கு ரிஷிபத்நிகள் ப்ரஸாதம் கொண்டு கொடுக்கும்வேளை அணுகிற்று' என்று அத்திசையைநோக்கி நெடிதாகக் கடாக்ஷித்திருக்குமென்றபடி. பத்தவிலோசனம்=(भक्त ई) பக்தமென்றவடசொல்லுக்கு அன்னமென்றுபொருள்; விலோசனமென்பதற்குப் பார்வையென்றுபொருள்; சோறு பார்த்திருக்குமிடமென்றதாயிற்று. (5)

623 வண்ணந்திரிவும்மனங்குழைவும் மானமிலாமையும்வாய்வெளுப்பும் *
உண்ணலுருமையுமுண்மெலிவும் ஓதநீர்வண்ணனென்பாலொருவன் *

தண்ணந்துழாயென்னும்மாலைகொண்டு சூட்டத்தணியும்பிலம்பன்றன்னை *
பண்ணழியப்பலதேவன்வென்ற பாண்டிவடத்தென்னையுய்த்திடுமின். (எ)

வண்ணம் திரிவும்	(என்னுடைய) மேனிநிறத்தின் மாறுபாடும்
மனம் குழைவும்	மனத்தளர்ச்சியும்
மானம் இலாமையும்	மானங் கெட்டுப் போன படியும்
வாய்வெளுப்பும்	வாய் வெளுத்துப் போனபடியும்
உண்ணல் உருமையும்	ஆஹாரம் வேண்டியிராமையும்
உள் மெலிவும்	அறிவுசுருங்கிப் போனதுமாகிய இவையெல்லாம்
(எப்போது தணியுமென்றால்)	
ஓதம் நீர் வண்ணன் என்பான் ஒருவன்	கடல் வண்ண னென்று ப்ரஸித்தனாய் விலக்ஷணனான கண்ணபிரானுடைய
தண் அம் துழாய் என்னும் மாலை கொண்டு சூட்ட	குளிர்ந்து அழகிய திருத்துழாய் மாலையைக்கொண்டு வந்து சூட்டுமளவில்
தணியும்	நீங்கும்;
(அத்திருத்துழாய் மாலை உங்களால் இங்கே கொண்டு வந்துகொடுக்க முடியாதாகில்)	
பலதேவன்	பலராமன்
பிலம்பன் தன்னை	ப்ரலம்பாஸுரனை
பண் அழிய	ஸந்தி பந்தங்கள் உருக்கொலையும்படி
வென்ற	கொன்று முடித்த இடமாகிய
பாண்டி வடத்து	பாண்டீரமென்னும் ஆல மரத்தினருகில்
என்னை உய்த்திடுமின்	என்னைக்கொண்டுபோய்ச் சேர்த்து விடுங்கள்.

* * * பலராமனாற்செய்யப்பட்ட ப்ரலம்பாஸுரவதத்தைக் கண்ணபிரான்தானே செய்தருளியதாகக் கூறுதலுமுண்டு; "தேனுகன் பிலம்பன் காளியனென்னும்" "கருளுடைய யொழில்மருதுங் கதக்களிறும் பிலம்பனையுங் கடியமாவும்" என்ற பெரியாழ்வார் திருமொழி காண்க. உண்மையில் பலராமன்செய்த இச்செய்தியைக் கண்ணபிரான் செய்ததாகக்கூறுதல் ஔபசாரிகமாகும். ஸ்ரீராமாவதாரத்தில் இளையபெருமாள்செய்த சூர்ப்பணகாபங்கத்தை ஸ்ரீராமபிரான் தானே செய்ததாக ஆழ்வார்கள் அநுஸந்திப்பதும் இங்ஙனமேயாம். "இளையபெருமாள் இந்த்ரஜித்வதம்பண்ண, அந்தவெற்றி பெருமாளதாஞ்போலேயாய்த்து இங்கும்; நம்பிமூத்தபிரானுடையவெற்றியும் க்ருஷ்ணனதாயிருந்ததிறே. அவன் வீராபிஷேகமும் விஜயாபிஷேகமும் பண்ணி மாலையிடும்போது அவன் தனியே நில்லாமே நானும்ஒக்கநின்று மாலையிடும் படியாக என்னை அங்கேகொடுபோய்ப் பொகடுங்கோள்" என்ற வியாக்கியான ஸ்ரீஸூக்தி நோக்கத்தக்கது. பாண்டீரவட மென்ற வடசொல் பாண்டிவடமெனத்திரிந்தது. (எ)

624 கற்றினம்மேய்க்கலும்மேய்க்கப்பெற்றான் காடுவாழ்சாதியுமாகப்பெற்றான் *
பற்றியுரலிடையாப்புமுண்டான் பாவிகாளுங்களுக்கேச்சுக்கோலோ *
கற்றனபேசிவசவுணுதே காலிகளுய்யமழைதடுத்து *
கொற்றக்குடையாகவேந்திநின்ற கோவர்த்தனத்தென்னையுய்த்திடுமின். (அ)

(கண்ணபிரான்)

கன்று இனம்	கன்றுகளின் திரள்களை
மேய்க்கலும்மேய்க்கப்பெற்றான்	மேய்ப்பதையே தொழிலாகப் பெற்றவனுமானான்;
காடு வாழ் சாதியும் ஆகப்பெற்றான்	(வீட்டைவிட்டுக்கழிந்து) காட்டிலேயே தங்கிவாழும்படியான சாதியிலும் பிறக்கப் பெற்றான்;
பற்றி	(வெண்ணெய்களவில்) பிடிபட்டு
உரலிடை	உரலிலே
ஆப்புமுண்டான்	கட்டுப்படவும்பெற்றான்;
(ஸௌலப்யகாஷ்டையான இச்செயல்கள்)	
பாவிகாள்	குணத்தையும் குற்றமாகக் கொள்ளும் பாவிகளே!
உங்களுக்கு	உங்களுக்கு
ஏச்சுக் கொலோ	தூஷணத்துக்கோ உடலாயிற்று?
(இதுவரையில் நீங்கள் இழிவாகச் சொன்னவை நிற்க: இனியாகிலும்)	
கற்றன பேசி வசவு உணுதே	நீங்கள் கற்ற கல்விகளைப்பேசி (என்னிடத்தில்) வசவு கேட்டுக் கொள்ளாமல்,
காலிகள் உய்ய மழை தடுத்து	பசுக்கள் பிழைக்கும்படி பெரு மழையைத் தடைசெய்து
கொற்றக் குடை ஆக	வெற்றிக்குடையாக [குறையற்ற குடையாக]
ஏந்தி நின்ற	(கண்ணபிரானால்) தரிக்கப்பட்ட
கோவர்த்தனத்து	கோவர்த்தன மலையினருகே
என்னை உய்த்திடுமின்	என்னைக் கொண்டுபோய்ச் சேர்த்து விடுங்கள்.

* * * மற்றுஞ்சிலபெண்கள் ஆண்டாளைநோக்கி, 'அம்மா! நீ இராமபிரானை ஆசைப்பட்டாலுங் குற்றமில்லை; மாடுமேய்க்கப்பிறந்த கண்ணனைப்போய் நீ ஆசைப்படா நின்றாய்; அவனே கன்றுகளைமேய்ப்பதற்காக அவற்றின்பின்னே திரிவானொருசிறுவன்: ஒருநாளிலே தங்குவதுமில்லாமல் பசுக்களுக்கு நீரும்புல்லுமுள்ளவிடத்தே தங்குவானொருத்தன்; வெண்ணெயைக்களவாடுவதும் நெய்யைக்களவாடுவதுஞ்செய்து உரலிலேபிணிப்புண்டு திண்டாடுமவன்; அன்னவனைப் பெறுதைக்கோ நீ இப்படி கிடந்து துடிக்கிறது? என்று ஏளனமாகச்சொல்ல; அவர்களைநோக்கிச் சொல்லுகிறாள். அவன் கன்றுகளை மேய்க்கப்பெற்றதும் காடுவாழ்சாதியாகப் பெற்றதும் உரலிடை ஆப்புண்டதும் குணமாகத்தோற்றவேண்டியிருக்க, உங்களுக்கு இவையெல்லாம் குற்றமாகத்தோற்றுவதற்குக் காரணம் உங்களுடைய பாவமேயாம்; சிறந்தகுணமே உங்களுக்குக்குற்றமாகத்தோற்ற நீங்கள் சிசுபாலன்பிறந்த முஹூர்த்தத்திலேயோ பிறந்தது?. "எத்திறமுரலினுமெடிணைந்திருந்தேங்கிய எளிவே!" என்று ஈடுபடவேண்டிய விஷயம் உங்களுக்கு தூஷணரூபமாயிற்றே!. இனி நீங்கள் இப்படிப்பட்ட அஸந்தர்ப்பமான நீசவார்த்தைகளை என் காதில்விழச் சொல்லுவீர்களாகில், நான் வாயில்வந்தபடி உங்களை கிந்தித்துவிடுவேன்; அப்படி நிந்தனைகளுக்கு நீங்கள் ஆளாகாமல், அன்றொருகால் இந்திரன் ஏழுநாள் விடாமழை பெய்வித்தபோது அந்த மழையைத்தடுத்து அனைவரையுங்காத்த கோவர்த்தனமலையினருகே என்னைக்கொண்டுபோட்டு விடுங்களென்கிறாள். (அ)

625 கூட்டிலிருந்துகிளியேப்போதும் கோவிந்தாகோவிந்தாவென்றழைக்கும் *
ஊட்டுக்கொடாதுசெறுப்பனகில் உலகளந்தானென்றுயரக்கூவும் *
காட்டிற்றலைப்பழியேய்த்தியுங்கள் நன்மையிழந்துதலையிடாதே *
சூட்டுயர்மாடங்கள்சூழ்ந்துதோன்றும் துவராபதிக்கேன்னையுய்த்திடுமின். (கூ)

கிளி	(நான் வளர்த்த) கிளியானது
கூட்டில் இருந்து எப்போதும்	கூட்டில் இருந்துகொண்டு ஸதாகாலமும்
கோவிந்தா கோவிந்தா என்று அழைக்கும்	கோவிந்தா கோவிந்தா வென்று கூவாநின்றது;
ஊட்டு கொடாது	உணவு கொடாமல் [பட்டினி கிடக்கும்படி]
செறுப்பன் ஆகில்	துன்பப்படுத்தினேனாகில்
உலகு அளந்தான் என்று	உலகளந்த பெருமானே! என்று
உயர கூவும்	உரக்கக்கூவா நின்றது!
(இத்தத் திருநாமங்கள் என் காதில் விழும்போதே என் சரீரம் புறப்படக் கிளம்புகின்றது; ஆகையால்,)	
நாட்டில்	இவ்வுலகில்
தலை பழி எய்தி	பெருத்த அபவாதத்தைச் சம்பாதித்து
உங்கள் நன்மை இழந்து	உங்களுடைய நல்லபேரைக் கெடுத்துக்கொண்டு
தலை இடாதே	(பிறகு ஒருவரையும் முகம் நோக்கமாட்டாமல்) தலை கவிழ்ந்து நிற்கவேண்டாதபடி,
சூடு உயர்மாடங்கள் சூழ்ந்து தோன்றும்	தலையுயர்ந்தமாடங்களால் சூழப்பட்டு விளங்குகின்ற
துவராபதிக்கு	த்வாரகையிலே
என்னை உய்த்திடுமின்	என்னைக்கொண்டு போய்ச் சேர்த்து விடுங்கள்.

* * * இவள் விரஹத்தாலே நோவுபட்டிருக்கிற இச்சமயத்தில் இவள்வளர்க்குங் கிளிப்பிள்ளையொன்று இவள் முன்புகற்பித்துவைத்த திருநாமத்தைச்சொல்லிக்கொண்டு இங்குமங்கும் திரியத்தொடங்கிற்று; 'இந்த நாம யதேச்சமாகத்திரியும்படியாக விடவேயன்றே இது கண்ணன்நாமமேகுழறிக் கொல்லுகின்றது; இதைப்பிடித்து அடைத்திடுவோம்' என்று பார்த்துக் கூட்டிலே அடைத்தாள்; அது அங்கேயிருந்து "கோவிந்தா! கோவிந்தா!!" என்று கூவத்தொடங்கிற்று; அதைக்கேட்ட ஆண்டாள் 'இது சோற்றுச் செருக்காலேயன்றே இப்படிசொல்லுகிறது; சோற்றைக்குறைத்தோமாகில் தன்னடையே தவிருகிறது' என்றுநினைத்துப் பட்டினியாகவிட்டுவைத்தாள்; 'ஊணடங்க வீணடங்கும், என்று இவளுடைய நினைவுபோலும்.

ஆனல் அந்தப்பட்டினியானது இவளுக்கு விபரீதபலப்ரதமாயிற்று; அரையர்கள் மிடற்றுக்கு எண்ணெயிட்டுப் பட்டினிகிடந்து மிடற்றின்கனத்தை ஆற்றிப் பாடுவதுபோல இக்கிளியும் பட்டினிவிட்டதே காரணமாக உயரப்பாடத் தொடங்கிற்று; "உலகளந்தான்!" என்று அது கூவும்போதை த்வனியைக்கோட்டால் அவன் அன்றிவ்வுலகமளக்கத் திருவடிகளைப் பரப்பின விடமெங்கும் இதுவும்தன்மிடற்றேசையைப்பரவவிடா நின்றதுபோலும். அந்தக்கூவுதலைக் கேட்டவாறே நாமே பதறி ஓடியாகிலும் அவனைச்சென்று கிட்டுவோமென்கிறகாதல் கிளர்கின்றது; அப்படி நான் பதறி ஓடுவது நமதுகுடிக்குப் பெருத்தபழியாய்முடியும்; 'தடிதடியாகத் தாய்மார்களிருந்தும் ஒருபெண்பிள்ளைக்கு நன்மைசெய்யாமல் தெருவிலேபுறப்படப் பார்த்திருந்தார்களே!' என்று நாலைக்கே நாடெங்கும் பழிபரவும்; அப்போது நீங்கள் தலைகவிழ்ந்து தரையைக்கீறி நிற்கத்தான் நேரிடும்; அப்படிப்பட்ட பரிபவத்துக்கு நீங்கள் ஆளாகாமல் இப்போதே என்னைநீங்களாகவே த்வாரகையிலே கொண்டு சேர்த்துவிடுங்களென்கிறாள். (கூ)

626 மன்னுமதுரைதோடக்கமாக வண்துவராபதிதன்னளவும் *
தன்னைத்தமருய்த்துப்பெய்யவேண்டித் தாழ்குழலாள்துணிந்ததுணிவை *
பொன்னியல்மாடம்போலிந்துதோன்றும் புதுவையர்கோன்விட்டுசித்தன்கோதை *
இன்னிசையாற்சொன்னசெஞ்சொல்மாலை யேத்தவல்லார்க்கிடம்வைகுந்தமே. (ய)

தாழ் குழலாள்	தாழ்ந்த கூந்தலையுடையளாய்
பொன் இயல் மாட்டம் பொலிந்து தோன்றும் புதுவையர் கோன் விட்டுசித்தன் கோதை	பொன் மயமான மாடங்களினால் விளங்கித்தோன்றுகின்ற ஸ்ரீவில்லி புத்தூரிலுள்ளார்க்குத் தலைவராகிய பெரியாழ்வாருடைய (திருமகளான) ஆண்டாள்
மன்னு மதுரை தொடக்கம் ஆக வண் துவராபதி தன் அளவும்	ஸ்ரீ மதுரை முதற்கொண்டு ஸ்ரீத்வாரகை வரைக்கும் (சொல்லப்பட்ட சில திவ்ய தேசங்களில்
தன்னை	தன்னை [ஆண்டாளை]
தமர்	தன் உறவினர்
உய்த்து பெய்ய வேண்டி	கொண்டுபோய்ச் சேர்க்க வேண்டி
துணிந்த துணிவை	கொண்ட அத்யவஸாயம் விஷயமாக,
இன் இசையால் சொன்ன	இனிய இசையுடன் அருளிச்செய்த
செம் சொல் மாலை	அழகிய சொல்மாலையாகிய இத்திருமொழியை
ஏத்தவல்லார்க்கு	ஓதவல்லவர்களுக்கு
இடம்	வாழுமிடம்
வைகுந்தம்	பரமபதமேயாம்.

* * * வடமதுரைதொடங்கி த்வாரகாபுரியளவாகப்பத்தெட்டுஸ்தாநங்களைச்சொல்லி அவ்விடங்களிலே தன்னைக்கொண்டுபோய்ச்சேர்க்கவேணுமென்பதாகத் தனது பந்துவர்க்கத்திலுள்ளாரைநோக்கி ஆண்டாளருளிச்செய்த இத்திருமொழியை ஓதவல்லவர்கள் ஸ்ரீவைகுண்டத்திலேபோய் நித்யாநுபவம்பண்ணப்பெறுவர்கள் என்றதாயிற்று. (ய)

அடிவரவு:— மற்று நாணி தந்தை அங்கை ஆர்க்கும் கார்த்தண் வண்ணம் கற்றினம் கூட்டில் மன்னு கண்ணன்.

பதின்மூன்றாந்திருமொழி—கண்ணனென்னும்.

ஆண்டாள் கண்ணபிரானுடைய திவ்ய ப்ரஸாதங்களிலே ஏதேனுமொன்று பெறவிரும்புகிறாள்.

627 கண்ணனென்னுங்கருந்தெய்வம் காட்சிப்பழகிக்கிடப்பேனை *
புண்ணிற்புளிப்பெய்தாற்போலப் புறநின்றழகுபேசாதே *
பெண்ணின்வருத்தமறியாத பேருமானரையிற்பீதக
வண்ணவாடைகொண்டு * என்னைவாட்டந்தணியவீசீரே. (க)

கண்ணன் என்னும்–ஸ்ரீ கிருஷ்ணனென்கிற
கரு தெய்வம் } கரியதொரு பரதேவதையினுடைய
காட்சி காட்சியிலே
பழகிக் கிடப் பேனே } பழகிக்கிடக்கிற என்னைக் குறித்து
(ஓ! தாய்மார்களே! நீங்கள்)
புறம் கின்று அசலாக இருந்துகொண்டு
புண்ணில் புளி பெய்தால்போல } புண்ணிலே புளி ரஸத்தைச் சொரிந்தாற் போல்
அழகு பேசாதே } பணிக்கை சொல்வதைத் தவிர்ந்து,
பெண்ணின் வருத்தம் அறியாத பெருமான் அரையில் } பெண் பிறந்தாருடைய வருத்தத்தை அறியாதவனை கண்ணபெருமானுடைய திருவரையில் சாத்திய
பீதக வண்ண ஆடை கொண்டு } பீதாம்பரத்தைக்கொண்டு வந்து
வாட்டம் தணிய } (என்னுடைய) விரஹதாபம் தீரும்படி
என்னை வீசீர் என்மேல் வீசுங்கள்.

* * * "பெண்ணின்வருத்தமறியாத பெருமான்" என்றவிடத்திலே வியாக்கியான ஸ்ரீஸூக்தி:—"மூலையெழுந்தார்படி மோவாயெழுந்தார்க்குத் தெரியாதிறே என்று பட்டரருளிச்செய்தாராக ப்ரஸித்தமிறே"— [மோவாயெழுகையாவது–மீசை முளைக்கை.]

"அரையில்பீதகவண்ணவாடைகொண்டு–என்கிறளே; திருவரையில்சாத்தின பீதாம்பரமாகவேயிருக்கவேணுமென்று என்னநிர்ப்பந்தம்? மேலிட்ட உத்தரீயமானாலாகாதோ?" என்று நஞ்சீயர் பட்டரைக்கேட்க, "ஆண்டாள் கண்ணபிரானுடைய ஸ்வேதபரிமளத்திலே மிகவும் ஆசை கொண்டவள் காணும்; மேலிட்ட உத்தரீயத்தில் அது விசேஷமாகக்கிடைக்காது; திருவரையிற்பீதாம்பரத்தில்தான் அது ஆசைதீரக்கிடைக்குமென்று 'அரையிற்பீதகவண்ணவாடை கொண்டு' என்கிறாள்" என்றருளிச்செய்தாராம். (க)

628 பாலாலிலையில்துயில்கொண்ட பரமன்வலிப்பட்டிருந்தேனை *
வேலால்துன்னம்பெய்தாற்போல் வேண்டிற்றெல்லாம்பேசாதே *
கோலால்நிரைமேய்த்தாயனுக்குக் குடந்தைக்கிடந்தகுடமாடி *
நீலார்தண்ணந்துழாய்கொண்டு என்னேறிமென்குழல்மேல்சூட்டீரே. (உ)

பாலி ஆலிலையில் } பால் பாயும் பருவத்தையுடைய ஆலந்தளிரிலே
துயில் கொண்ட கண் வளர்ந்தருளின
பரமன் பெருமானுடைய
வலி வலியிலே
பட்டிருந்தேனை } அகப்பட்டுக்கொண்டிருக்கிற என்னைக்குறித்து,
வேலால் துன்னம் பெய்தால் போல் } வேலாயுதத்தை யிட்டுத்துளைத்தாற்போல் [கொடுமையாக]
வேண்டிற்று எல்லாம் பேசாதே } உங்களுக்குத் தோன்றினபடியெல்லாம் சொல்வதைத் தவிர்ந்து,
ஆயன் ஆய் இடைப்பிள்ளையாய்
கோலால் } (இடைச்சாதிக்கு உரிய) கோலைக்கொண்டு
நிரை மேய்த்து பசுக்கூட்டங்களைமேய்த்தவனுய்
குடந்தைகிடந்த } திருக்குடந்தையில் திருக்கண் வளர்ந்தருளுமவனுய்
குடம் ஆடி } குடக்கூத்தாடினவனுமான கண்ணபிரானுடைய
நீல் ஆர் தண் அம் துழாய் கொண்டு } பசுமைபொருந்திக் குளிர்ந்து அழகிய திருத்துழாயைக் கொண்டுவந்து
நெறி மென் } நெறிப்புக் கொண்டதாயும் மிருதுவாயுமிருந்துள்ள
என் குழல்மேல் என் கூந்தலிலே
சூட்டீர் சூட்டுங்கள்.

629 கஞ்சைக்காய்ந்தகருவில்லி கடைக்கணென்னும்சிறைக்கோலால் *
நெஞ்சூடுருவவேவுண்டே நிலையும்தளர்ந்துநைவேனை *
அஞ்சேலென்ஞனவஞ்ஞருவன் அவன்மார்வணிந்தவனமாலை *
வஞ்சியாதேதருமாகில் மார்வில்கோணார்ந்துபுரட்டீரே. (ஊ)

கஞ்சை, காய்ந்த — கம்ஸனைத்தொலைத்தவனையும்
கரு வில்லி — பெரிய வில்போன்ற புருவத்தையுடையனையு மிருக்கிற தன்னுடைய
கடைக்கண் என்னும்-கடைக்கண்ணிகிற
சிறைக்கோலால் — சிறகையுடைய அம்பாலே
நெஞ்சு ஊடுருவ — நெஞ்சுமுழுவதும்
வேவுண்டு — வெந்துபோகும்படியாகப் பெற்று
நிலையும் தளர்ந்து — நிலைமைகுலைந்து
நைவேனை — வருந்துகின்ற என்னை நோக்கி

அஞ்சேல் என்னனவன் ஒருவன் — 'பயப்படாதே' என்றொருவார்த்தையும் சொல்லாதவனுய் விஜாதீயனை
அவன் — அப்பெருமான்
மார்வு அணிந்த — (தனது) திருமார்பில் சாத்தியருளிய
வனமாலை — வனமாலையை
வஞ்சியாதே — மோசம் பண்ணுமல்
தரும் ஆகில் — கொடுத்தருள்வனுகில்
கொணர்ந்து — (அம்மாலையைக்) கொண்டு வந்து
மார்வில் — (என்னுடைய) மார்பிலே
புரட்டீர் — (நெஞ்சினுள் வெப்பம் தீருமாறு) புரட்டுங்கள்.

630 ஆரேயுலகத்தாற்றுவார் ஆயர்பாடிகவர்ந்துண்ணும் *
காரேறுழக்கவுழக்குண்டு தளர்ந்தும்முறிந்தும்கிடப்பேனை *
ஆராவமுதமனையான்றன் அமுதவாயிலூறிய *
நீர்தான்கொணர்ந்துபுலராமே பருக்கியிளைப்பைநீக்கீரே. (சு)

ஆயர் பாடி — திருவாய்ப்பாடி முழுவதையும்
கவர்ந்து-உண்ணும் — கொள்ளை கொண்டு அநுபவிக்கிற
கார் ஏறு — ஒரு கறுத்தகாளைபோன்ற கண்ணன்
உழக்க — ஹிம்ஸிக்க
உழக்குண்டு — (அதனால்) துன்பப்பட்டு
தளர்ந்தும் முறிந்தும் கிடப்பேனை — பலவகையானசைதில்யங்களையடைந்துநொந்துகிடக்கிற என்னை
உலகத்து — இவ்வுலகத்திலே
ஆற்றுவார் — தேறுதல் சொல்லி ஆறச்செய்பவர்
ஆரே — ஆருண்டு? (யாருமில்லை)

('நாங்களிருக்கிறோமே; அம்மா! உனக்கு என்ன செய்யவேணும்? என்று தாய்மார்கேட்க;)
ஆரா அமுதம் அனையான் தன் — எவ்வளவநுபவித்தாலும் த்ருப்தி பிறவாத அம்ருதம்போன்ற கண்ணபிரானுடைய
அமுதம் வாயில் — அம்ருதம் சுரக்கிறதிருவாயில்
ஊறிய — ஊறிக்கிடக்கிற
நீர் தான் — ரஸத்தையாவது
புலராமே கொணர்ந்து — உலராமல் (பசையோடே) கொண்டுவந்து
பருக்கி — அதை நான் பருகும்படிபண்ணி
இளைப்பை நீக்கீர் — (எனது) ஆயாஸத்தைப் பரிஹரிக்கப்பாருங்கள். (என்கிறாள்.)

அமுதத்திலேயுண்டான ஓரமுதத்தைக்கொணர்ந்து, நான் சருகாய் உலர்ந்து போவதற்கு முன்னே என்னைப்பானம்பண்ணுவித்து என்னுடைய இளைப்பை நீக்கப்பாருங்களென்கிறாள். (சு)

631 அழிலும்தொழிலுமுருக்காட்டான் அஞ்சேலென்னனவனொருவன *
தழுவிமுழுசிப்புகுந்தென்னைச் சுற்றிச்சுழன்றுபோகானால் *
தழையின்பொழில்வாய்நிரைப்பின்னே நெடுமொழுதிவருகின்ற *
குழலின்துளைவாய்நீர்கொண்டு குளிரமுகத்துத்தடவீரே. (டு)

அழிலும் தொழிலும் உருக்காட்டான் — அழுதாலும் தொழுதாலும்தன் வடிவைக் காட்டாதவனையும்
அஞ்சேல் என்னனவன் — (உருவைக்காட்டாமலாவது) 'அஞ்சேல்' என்ற சொல்லும் சொல்லாதவனையுமுள்ள
ஒருவன் — ஒரு மஹாநுபாவன் [கண்ணன்]
புகுந்து — இங்கே வந்து
என்னை தழுவி முழுசி — என்னை நெருக்கியணைத்து

சுற்றிச் சுழன்று — முன்னும் பின்னும் சூழ்ந்து கொண்டிருந்து
போகான் — போகாமலிருக்கிறான்;
ஆல்! — இது உண்மையான அநுபவமல்லாமல் மாநஸாநுபவமாத்ரமான உருவெளிப்பாடாகையாலே துக்கப்;
தழையின் பொழில் வாய் — பீலிக் குடைகளாகிற சோலையின்கீழே.

நிரை மின்னே	பசுக்கூட்டங்களின் பின் புறத்திலே	குழலின் துளை வாய்	புல்லாங்குழலின் த்வாரங்களிலுண்டாகிற
நெடு மால்	வ்யாமுக்தனை கண்ணபிரான்	நீர் கொண்டு	நீரைக்கொணர்ந்து
ஊதி வருகின்ற	ஊதிக்கொண்டு வரப்பெற்ற	முகத்து	என்னுடைய முகத்திலே
		குளிர தடவீர்	குளிர்த்தியாகத் தடவுங்கள்.

* * * அழிலுந்தொழிலும் என்றவிடத்து வியாக்கியானத்திலே—"பக்திப்ரபத்திகளிரண்டுக்கும் வாசியறுத்தான்" என்றருளிச்செய்வர் பெரியவாச்சான் பிள்ளை. அழுகையாவது காயக்லேச ஸஹபமாகையாலே தாத்ருஸமானபக்தியைச் சொன்னபடி: தொழுகையென்று ப்ரபத்தியைச் சொன்னபடி. [த்ரௌபத்யா ஸஹிதாஸ்ஸர்வே நமச்சக்ருர்ஜநார்த்தநம்] என்றவிடத்து நமஸ் காரமாவது ப்ரபத்தி—என்றதிறே.

அவனேருவன் என்கிறள்-பேரையிட்டுச்சொல்லவும் வெறுப்புமிக்கதுபோலும்: ஹிம் ஸையின்கொடுமை தோற்றும் இதனால். (இ)

632 நடையொன்றில்லாவுலகத்து நந்தகோபன்மகனென்னும் *
கொடியகடியதிருமாலால் குளப்புக்கூறுகொளப்பட்டு *
புடையும்பெயரகில்லேன்நான் போட்கன்மிதித்தவடிப்பாட்டில் *
பொடித்தான்கொணர்ந்துபூசீர்கள் போகாவுயிரேன்னுடம்பையே. (சு)

நடை ஒன்று இல்லா உலகத்து	(ஏற்கனவே) மரியாதைகளெல்லாம் குலைந்துகிடக்கிற இவ்வுலகத்தில்	புடைபெயரவும் கில்லேன்	அப்படி இப்படி அசைவதற்கும் அசக்தையாயிரா நின்றேன்; (ஆனபின்பு,)
நந்தகோபன் மகன் என்னும்	'ஸ்ரீ நந்த கோபர் மகன்' என்று ப்ரஸித்தனுய்	போட்கன்	சுணீகேடனை அக்கண்ணபிரான்
கொடிய	இரக்கமற்றவனுய்	மிதித்த அடிப் பாட்டில்	திருவடி பட்டு மிதித்த இடத்திலுண்டான
கடிய	ஸ்வார்த்தபரனை	பொடி தான்	ஸ்ரீ பாததூளியையாவது
திரு மாலால்	ச்ரிய:பதியாலே [கண்ணனுலே]	கொணர்ந்து	கொண்டு வந்து
நான்	அபலையான நான்	போகா உயிர் என் உடம்பை	விட்டுப் பிரியாதவுயிரையுடைய என் உடம்பிலே
குளப்புக்கூறு கொளப்பட்டு	மிகவும் துன்புப்படுத்தப் பட்டு	பூசீர்கள்	பூசுங்கள்.

* * *—ஏற்கனவே உலகத்தில்மரியாதையெல்லாம் சீர்குலைந்து கிடக்கின்றன; அதுக் குமேலே ஒன்றுபத்தாய்ச்சீர்குலையும்படி நந்தகோபன் மகனென்கிற ஒருமஹாநுபாவன் வந்து தோன்றினன்; பரமஸாதுவான நந்தகோபனுக்கு இந்தக்கொடியவன் எங்ஙனே பிள்ளையாகப் பிறந்தானே அறியேன்; அவனால் மிகவும்துன்பப்படுத்தப்பட்ட நான் புடைபெயரவும் ஒண்ணு தபடி துவண்டுபோனேன்; இந்தத்துவட்சி தீருவதற்கு மருந்துயாதெனில்; அந்தச் சுணை கேடன் நடந்துசென்றநிலத்திலுள்ள பொடியைக்கொணர்ந்து என்னுடம்பிலே பூசப்பாருங் கள்; அதுவே உற்றமருந்தாகும் என்கிறள்.

குளப்புக்கூறுகொளப்பட்டு = அடிபட்ட இடத்திலேயே மேன்மேலும் அடிபடுதல் குளப்புக்கூறுகொள்ளுதலாம்; [குளம்பு × கூறு, குளப்புக்கூறு.] கால் நடைகளின் குளம்புகள் எப்போதும் அடிபட்டுக் கொண்டேயிருத்தலால் அதுபோல மேன்மேலும் அடிபட்டுக்கொண் டேயிருத்தலைக் குளப்புக்கூறு கொள்ளுதலாகக் கூறுவர்: கூறு என்னுஞ்சொல்லுக்குள்ள பல பொருள்களில் 'தன்மை' என்ற பொருள் இங்கே கொள்ளத்தக்கது; 'குளம்பின்தன்மையை உடையேனை' என்று ஸப்தார்த்தமாய், 'துகையுண்டவிடத்திலேயே மேன்மேலும் துகை யுண்டு' என்று தாத்பர்யார்த்தமாகக்கடவது. புடைபெயர்தல் — பக்கங்களில் அசைதல்; நோவின்கனத்தினால் அசையவும் மாட்டாதிருக்கின்றே னென்கிறள் "புடையும்பெயரகில் லேன்நான்" என்று.

அடிப்பாட்டில்போடி – திருவடிபட்டவிடத்திலுண்டான துகள் என்றபடி. அடிப்பாடு என்று வழிக்குப்பெயர். அவனுடையதிருமேனியில் ஸாக்ஷாத்ஸம்பந்தம்பெற்ற வஸ்துவே வேணுமென்கிறநிர்ப்பந்தமில்லை; பரம்பராஸம்பந்தம்பெற்ற வஸ்துவாயிருந்தாலும் உத்தேச்ய மேயாம் என்று இதனால் தெரிவித்தவாறு. போகாவுயிரென்னுடம்பு=எத்தனைவிஷங்களை வாங்கித்தின்றாலும், எத்தனைகத்திகளையெடுத்துக் குத்திக்கொண்டாலும் இந்தப்பாழும் உயிர் என் உடம்பைவிட்டுப் போகமாட்டேனென்கிறதேயென்று மிக்கவருத்தந்தோற்றக் கூறுகிறபடி. சு

633 வெற்றிக்கருளக்கொடியான்தன் மீமீதாடாவுலகத்து *
வெற்றவெறிதேபெற்றதாய் வேம்பேயாகவளர்த்தாளே *
குற்றமற்றமூலதன்னைக் குமரன்கோலப்பணைத்தோளோடு *
அற்றகுற்றமவைதீர அணையவமுக்கிக்கட்டீரே (எ)

கருளன்வெற்றி கொடியான் தன் மீமீது ஆடா உலகத்து } பெரிய திருவடியை வெற்றிக் கொடியாகவுடைய எம்பெருமானுடைய ஆணையை மீறிச் செல்லக்கடவதல்லாத இவ்வுலகத்தில்

[எம்பெருமானுடைய ஆணைக்கு உட்பட்டதான இவ்வுலகில்,]

பெற்ற தாய் } அவனைப்பெற்ற தாயாகிய யசோதையானவள் (தனது புத்திரனை)

வெற்ற வெறிதே } ஒருவர்க்கும் பயனின்றியே, (பயனில்லையென்கிற மாத்திரமேயோ?)

வேம்பு ஆகவே } வேப்பங்காய்போல் கைக்கும் படியாகவே

வளர்த்தாள் } வளர்த்துவாராநின்றாள் ;

குற்றம் அற்ற } (அவனைத் தவிர்த்து வேறொருவனை விரும்புகையாகிற) குற்றம் இல்லாத

மூலதன்னை } (என்னுடைய) ஸ்தநங்களை

குமரன் } யௌவனத்தோடு தோள் தீண்டியான அப்பெருமானுடைய

கோலம் பணை தோளோடு } அழகியதாயும் கற்பகக்கிளை போன்றதாயுமுள்ள திருத்தோள்களோடே,

அற்ற குற்றம் அவை தீர } (என்னைக்கைவிட்டு) அவனுக்கே அற்றுத்தீர்ந்த குற்றம் தீரும்படி

அணைய அமுக்கி கட்டீர் } அமுக்கி யணைத்துக்கட்டி விடுங்கள்.

* * * — கீழ்ப்பாட்டில், "நந்தகோபன்மகனென்னுங் கொடியகடிய திருமாலால்" என்று—பெற்றதகப்பனை வெறுத்துக்கூறினாள்; இப்பாட்டில், பெற்றதாயை வெறுத்துக்கூறுகின்றாள். கண்ணபிரான் இவ்வளவு தீம்பனையிருப்பதற்குக்காரணம் — யசோதை அவனை வளர்த்தபொல்லாங்கு என்றிருக்கிறாள். அவள்செவ்வையாகநியமித்து பயபக்திகளுண்டாம்படி சிக்ஷித்து வளர்த்திருப்பாளாகில் இவன் இப்படி தீம்பனையிருக்கமாட்டான்; "அஞ்சவுரப் பாளசோதை ஆடைவிட்டிட்டிருக்கும்" என்னவேண்டும்படி அவள் இவனைத் தான்தோன்றியாகவிட்டு வேடிக்கைபார்த்துக்கொண்டிருந்ததனால் இவன் தலைவிரித்தாடும்தீம்பனைகப்பெற்றான் என்றிருக்கிறாள். "பெற்றதாய் வெற்றவெறிதே வேம்பேயாகவளர்த்தாள்" என்று அன்வயக்ரமம்: ஒரு பலனைவிரும்பிப்பிறர்க்கு அகர்த்தத்தை விளைப்பாருண்டு; அங்ஙனன்றியே யசோதை நிஷ்ப்ரயோஜநமாகவே பராநர்த்தத்தைவிளைக்க இவனைவளர்த்தாளே! என்கிறாள். அவன் அப்படி வேம்பாயிருந்தாலும் "வேம்பின்புழு வேம்பன்றியுண்ணாது" என்னுங்கணக்கிலே என்மூலைகளானவை அந்தவேம்பிலேபணைத்த கிளைகளோடே அணையத்தான் ஆசைப்படாகின்றன; ஆகையாலே அவன் தோளையும் என்மூலையையும் ஒன்றுசேர்த்து விலங்கிட்டுவையுங்களென்கிறாள் பின்னடிகளில். (எ)

634 உள்ளேயுருகிஉகைவேனை உளளோவிலளோவென்னுதே *
கொள்ளைகொள்ளிக்குறும்பனைக் கோவர்த்தனனைக்கண்டக்கால் *
கொள்ளும்பயனென்றில்லாத் கொங்கைதன்னைக்கிழங்கோடும் *
அள்ளிப்பறித்திட்டவன்மார்விலேறிக் என்னழலைத்தீர்வேனே. (அ)

உள்ளே உருகி நைவேனை	உள்ளுக்குள்ளேயே கரைந்து நைந்து போகிற என்னைப் பற்றி
உளனோ இலனோ என்னுதல்	'இருக்கிறாளா? செத்தாளா' என்றும் கேளாதவனுய்
கொல்லை கொள்ளி	என் ஸர்வஸ்வத்தையும் அபஹரித்துக்கொண்டவனுய்
குறும்பனை	(பெண்கள் நிறத்திலே) பொல்லாங்கு செய்யுமவனுன
கோவர்த்தனனை	கண்ணபிரானை
கண்டக்கால்	(ஒரு கால்) நான் காணப்பெற்றேனுகில்,—
கொள்ளும் பயன் ஒன்று இல்லாத	(ஆட்டுக்கழுத்தில்முலைபோலே) உபயோகமற்றதான
கொங்கை தன்னை	(என்னுடைய இந்த) முலையை
கிழங்கோடும் அள்ளி பறித்திட்டு	வேர்முதலோடே பற்றிப் பிடுங்கி
அவன் மார்வில் எறிந்து	அந்த க்ருஷ்ணனுடைய மார்பிலே எறிந்துவிட்டு
என் அழலை தீர்வேன்	என் துக்கத்தை போக்கிக்கொள்ளப்பெறுவேன்.

* * *— உள்ளுக்குள்ளேயே உருகி நைந்துகொண்டிராநின்ற என் விஷயத்திலே சிறிது ஆராய்ச்சியுமில்லாதவனும், என்னை வெறுந்தரையாக்கினவனும், சூறும்புசெய்வதற்கென்றே பிறந்தவனுமான கோபாலக்ருஷ்ணனை ஒருகால் நான்காணப்பெற்றேனுகில், ஆட்டின்கழுத்தில் முலைபோலே என் மார்பில் வ்யர்த்தமாக முளைத்துக்கிடக்கிற இப்பாழும்முலைகளை வேர்பறியாகப் பறித்து அவனுடைய மார்விலே விட்டெறிந்து என்துக்கம் தீரப்பெறுவேனென்கிறாள்.

'கொங்கைதன்னைக்கிழங்கோடும் அள்ளிப்பறித்திட்டு எறிந்து என்னழலைத்தீர்வேனே' னென்றல் போராதோ? 'அவன்மார்வில் எறிந்து' என்பானேன்? என்னில், இம்முலைகளால் தான் படும்பாட்டை, * பெண்ணின்வருத்தமறியாத பெருமானை அவனும் படவேணுமென்ற கருத்தினாலென்க. இம்முலைகள் அவன்மார்வில் ஏறி அவனைக் கும்மிக்குமைக்கவேணுமென்று கினைக்கிறாளாய்த்து. இக்கஷ்டத்தை அவனும் பட்டானுகில் அதுவே இவள் அழல்தீர்ந்தபடிபோலே. அழல்—தாபம். (ஆ)

635 கோம்மைமுலைகளிடர்தீரக் கோவிந்தற்கோர்குற்றேவல் *
இம்மைப்பிறவிசெய்யாதே யினிப்போய்ச்செய்யும்தவந்தானேன் *
செம்மையுடையதிருமார்வில் சேர்த்தானேலுமொருநான்று *
மெய்ம்மைசொல்லிமுகம்நோக்கி விடைதான்தருமேல்மிகநன்றே. (கூ)

கொம்மை முலைகள்	(எனது) கிளர்ந்து பருத்த முலைகளினுடைய
இடர் தீர	சூமைச்சல் தீரும்படி
கோவிந்தற்கு	கண்ணபிரானுக்கு
ஓர் குற்றேவல்	அந்தரங்கமானகைங்கரியத்தை
இம்மைப் பிறவி	இந்த ஜன்மத்திலே
செய்யாதே	செய்யப்பெறுமல்
இனி	இந்தப்பிறவி கழிந்த பின்பு
போய்	வேறொரு தேசவிசேஷத்திலே போய்
செய்யும்	செய்யக்கூடியதான
தவந்தான் என்?	தபஸ்ஸு ஏதுக்கு?
செம்மை உடைய திருமார்வில்	(அன்பர்கள் அணைவதற்கென்றே ஏற்பட்டிருக்கையாகிற) செவ்வையையுடைத்தான (தனது) திருமார்பிலே
சேர்த்தானேலும்	(என்னை அவன்) சேர்த்துக் கொண்டானுகில்
(நன்று	நல்லது;) —
ஒரு நான்று	ஒரு நாள்
முகம் நோக்கி	என் முகத்தைப்பார்த்து
மெய்ம்மை சொல்லி	மெய்யே சொல்லி
விடை தான் தரும் ஏல்	"நீ எனக்கு வேண்டாம், போ" என்று தள்ளிவிட்டமை தோன்ற விடை கொடுப்பானுகில்
மிக நன்று	அது உத்தமோத்தமம்.

* * *—*கொங்கைதன்னைக்கிழங்கோடு மள்ளிப்பறித்திடுவானேன்? கிழங்கு என்கிற ஆதமவஸ்துவுண்டாகில் அவ்வாதமவஸ்துதான் நித்யமாகையாலே ஒருகாலவிசேஷத்திலே ஒருதேசவிசேஷத்திலேபோய் நித்யானுபவம் பண்ணப்பெறலாமே; அவ்வனுபவத்தைப் பெறு

வதற்குப் பரிந்துக்கொண்டு இங்கே ஒருவாறு ஆறியிருக்கலாமே' என்று சிலர்சொல்ல; பெற்ற இவ்விடம்போலே இங்கே அநுபவிக்க ஆவல் கொண்டிராநின்றநான் தேஹாந்தரத்திலும் தேசாந்தரத்திலும் நேருவதொரு பேற்றைத் துப்புவேனே வென்கிறாள். (கூ)

636 அல்லல்விளைத்தபெருமானை ஆயர்பாடிக்கணிவிளக்கை *
வில்லிபுதுவைநகர்கம்பி விட்டுசித்தன்வியன்கோதை *
வில்லைத்துலைத்தபுருவத்தாள் வேட்கையுற்றுமிகவிரும்பும் *
சொல்லைத்துதிக்கவல்லார்கள் துன்பக்கடலுள்துவளாரே. (ம)

வில்லை துலைத்த புருவத்தாள் — வில்லைத்தோற்கடித்த புருவங்களை யுடையளாய்

ஆயர் பாடிக்கு அணி விளக்கை — திருவாய்ப் பாடிக்கு மங்கள தீபம் போன்றுப்பிரகாசகனுமான கண்ணபிரானை

வில்லி புதுவை நகர் கம்பி விட்டு சித்தன் வியன் கோதை — ஸ்ரீ வில்லி புத்தூர்க்குத் தலைவரான பெரியாழ்வாருடைய மகளாய் ஆச்சர்ய குணசாலியான ஆண்டாள்,

வேட்கையுற்று — ஆசைப்பட்டு

மிக விரும்பும் சொல்லை — மிக்க அபிநிவேசம் தோற்ற அருளிச்செய்த இப்பாசுரங்களை

அல்லல் விளைத்த பெருமானை — (திருவாய்ப்பாடி முழுதும்) தீங்குவிளைத்து அதனால் பெருமைபெற்றவனும்

துதிக்க வல்லார்கள் — புகழ்ந்து ஓதவல்லவர்கள்

துன்பம் கடலுள் துவளார் — ஸம்ஸார ஸமுத்ரத்தில் துவண்டு நோவுபடமாட்டார்கள்

* * * வில்லைத் துலைத்த புருவத்தாள் = 'துலைத்த' என்னுஞ்சொல் 'துலா' என்ற வடசொல்லடியாகப்பிறந்ததென்று கொண்டால், வில்லை ஒத்திருக்கின்ற புருவத்தையுடையவள் என்று பொருளாகும். (துலா—ஒப்பு.) பெரியவாச்சான்பிள்ளை இவ்வர்த்தத்தைத் திருவுள்ளம் பற்றவில்லை. தன்னெடுஸாம்யங்கொண்டாடியிருக்கு மவற்றையெல்லாம் அழிக்கும்படியாயாய்த்து அவயவஸோபையிருக்கும்படி. வில்தான் ஒப்பாகப் போராதபடியான புருவத்தையுடையவள்." என்றிறே வியாக்கியான ஸ்ரீஸூக்தி. ஆகவே, துலைத்த என்பதற்கு, 'திரஸ்கரித்த' என்று பொருள் கொள்ளத்தகும். தொலைத்த என்பது பாடபேதம். (ஆ)

அடிவரவு:—கண்ணன் பால் கஞ்சை ஆரே அழில் நடை வெற்றி உள்ளே கொம்மை அல்லல் பட்டி.

பதினான்காந்திருமொழி—பட்டிமேய்ந்தோர்.

"தை யொரு திங்களும்" என்று தொடங்கிக் கீழ்த்திருமொழியளவும் ஆண்டாள் பட்டக்லேசமெல்லாம் தீரும்படி கண்ணபிரான் வந்து ஸேவை தந்தருளினபடியைக் கூறுவதாய்த்து—இத்திருமொழி. திருவாய்மொழியில் நம்மாழ்வார் "என் அவாவறச்சூழ்ந்தாயே" என்னும்படியாகப் பெற்ற பேற்றை ஆண்டாளும் பெற்றளாய் அப்பேற்றை நேராகப்பேசாதே "கண்ணபிராணைக் கண்டதுண்டோ" என்றுகேட்பாரும், "ஓம்!நன்றுகக்கண்டதுண்டு" என்று விடையளிப்பாருமாக இத்தகைய அந்யாபதேஶ ப்ரக்ரியையிலே அமைத்து அருளிச்செய்கிறாள்.

637 பட்டிமேய்க்கோர்காரேறு பலதேவற்கோர்கீழ்க்கன்றாய் *
இட்டீறிட்டுவிளையாடி இங்கேபோதக்கண்டீரே *
இட்டமானபசுக்களை யினிதுமறித்துநீரூட்டி *
விட்டுக்கொண்டுவிளையாட விருந்தாவனத்தேகண்டோமே. (க)

ஓர் கார் ஏறு	(கண்ணபிரானென்கிற) கறுத்த காளையொன்று
பட்டி மேய்ந்து	காவலில்லாமல் யதேச்சமாகத் திரிந்துகொண்டும்,
பலதேவற்கு	பலராமனுக்கு
ஓர் கீழ் கன்று ஆய்—ஒப்பற்ற தம்பியாய்	
இட்டூரிட்டு	ஸந்தோஷத்துக்குப் போக்கு வீடாகப் பல வகையான கோலாஹலங்களைப் பண்ணி
விளையாடி	விளையாடிக்கொண்டும்
இங்கே போத	இப்படி வர
கண்டீரே	பார்த்தீர்களோ?
இட்டம் ஆன	(தனக்கு) இஷ்டமான
பசுக்களை	பசுக்களை
இனிது	த்ருப்தியாக
மறித்து	மடக்கி மேய்த்து
நீர் ஊட்டி	தண்ணீர் குடிப்பித்து
விட்டுக்கொண்டு	(இப்படியாக அவற்றை) மேய விட்டுக்கொண்டு
விளையாட	(அப்பெருமான்) விளையாடா நிற்க
விருந்தா வனத்தே	ப்ருந்தாவனத்திலே
கண்டோம்	ஸேவித்தோம்.

* * *—சிறைக்கூடத்தில் கட்டுண்டு கிடப்பாரைப்போலே பரமபதத்தில் திருவனந்தாழ்வான்மடியிலும் ஸேனைமுதலியார் பிரம்பின்கீழிலும் பெரியதிருவடிசிறகின்கீழிலும் ஒடுங்கி வர்த்தித்தபெருமான் இந்நிலத்தேபோந்து யதேச்சமாகத்திரிந்து விளையாடாநிற்கக் கண்டதுண்டோ? என்று கேட்பவர்களின் பாசுரம் மூன்னடிகள். தனக்கு மிகவும் ப்ரீதிபாத்ரமான பசுக்களைப் புல்லும் தண்ணீருமுள்ள விடங்களிலே கொண்டுபோய் மேய்த்துப் பரமாகத்துடனே விளையாடா நிற்குங்கால் ஸ்ரீ ப்ருந்தாவனத்திலே காணபபெற்றோம் என்று விடையளிப்பார் பாசுரம் பின்னடிகள். (க)

638 அனுங்கவென்னைப்பிரிவுசெய்து ஆயர்பாடிகவர்ந்துண்ணும் *
குணுங்குநாறிக்குட்டேற்றைக் கோவர்த்தனனைக்கண்டீரே *
கணங்களோடுமின்மேகம் கலந்தாற்போல்வனமாலை *
மினுங்கநின்றுவிளையாட விருந்தாவனத்தேகண்டோமே. (உ)

அனுங்க	நான் வருந்தும்படியாக
என்னை பிரிவுசெய்து—என்னைப் பிரியவிட்டுப்போய்	
ஆயர்பாடி	திருவாய்ப்பாடியை
கவர்ந்து	ஆக்ரமித்து
உண்ணும்	அநுபவிக்கின்றவனுய்
குணுங்கு நாறி	வெண்ணெய்மொச்ச நாற்றம் நாறுமவனுய்
குட்டேற்றை	இளையரிஷபம் போன்றவனுமான
கோவர்த்தனனை	கண்ணபிரானை
கண்டீரே?—;	
மின் மேகம்	மின்னலும் மேகமும்
கலந்தாற்போல்	ஒன்றோடொன்று சேர்ந்தாற் போலே
வனமாலை மினுங்க நின்று	(கறுத்த திருமேனியிலே மின்னல் போன்ற) வனமாலை திகழப்பெற்று
கணங்களோடு	(தோழன்மாருடைய) கூட்டங்களோடு கூட
விளையாட	விளையாடா நிற்க
விருந்தாவனத்தே கண்டோம்—.	

* * *"கணங்களோடு = ४गः" (கணம்) என்னும்வடசொல்—கூட்டமென்றுபொருள்படும். இங்கே, தோழன்மார் கூட்டமெனக்கொள்க. * தன்னேராயிரம்பிள்ளைகளோடு தளர்நடையிட்டு வருவானிறே கண்ணபிரான். மின்மேகம் = உம்மைத்தொகை: மின்னலும்மேகமும் என்றவாறு. (உ)

639 மாலாய்ப்பிறந்தம்பியை மாலேசெய்யும்மணாளனை *
ஏலாப்பொய்களுரைப்பானை யிங்கேபோதக்கண்டீரே *
மேலால்பரந்தவெயில்காப்பான் வினதைசிறுவன்சிறகென்னும் *
மேலாப்பின்சீழ்வருவானை விருந்தாவனத்தேகண்டோமே. (ரு)

மால் ஆய் பிறந்த நம்பியை	(பெண்கள் பக்கலுண்டான) வ்யாமோஹமே ஒருவடிவாய்க்கொண்டு பிறந்தென்னலாம்படியான பெருமானுய்
மாலே செய்யும் மணாளனை	வ்யாமோஹத்தையே செய்கின்ற மணவாளப் பிள்ளையாய்
ஏலா பொய்கள் உரைப்பானை	பொருந்தாத பொய்களைச் சொல்லுமவனை கண்ணபிரானை

	இங்கே போதக் கண்டீரே!—;	வினதைசிறுவன் சிறகு என்னும் மேலாப்பின் கீழ் வருவானே	கருடனுடைய சிறகாகிற விதானத்தின் கிழ் எழுந்தருளா நின்ற அப்பெருமானே
மேல் பரந்த வெயில் காப்பான்	மேலே பரவின வெய்யிலே (திருமேனியில் படாமல்) தடுப்பதற்காக		விருந்தாவனத்தே கண்டோம்—.

* * * ஏலாப்போய்கள் உரைப்பானே = " ஒற்றுமஞ்மலும் மாளிகைச்சாந்துமாய்வந்தால் 'இதெல்லாம் எங்குநின்றும்பெற்றாய்?' என்றுகேட்டால், 'மற்றுண்டோ? நான் புறம்பு அறிவேனே?' என்னும்." என்றபடியாக்கியான ஸ்ரீ ஸுக்தியின் அழகை நோக்குமின். மேலால் என்றது--மேலே என்றபடி. கண்ணபிரான்வீதியிலே எழுந்தருளும் போது மேலே வெய்யில் படாமைக்காகப் பெரியதிருவடி தன்சிறகைக் குடையாக விரித்து நிழல்செய்வன்; அது கண்ணபிரானுக்கு மேற்கட்டிபிடித்தாற்போலிருக்கும்; அதன்கீழ் அழகாக எழுந்தருள்வனென்க. கருடனுடைய தாய்க்கு வினதா என்றுபெயர்.

மேலாப்பு = மேற்கட்டி, விதானம். .... (ரு)

640 கார்த்தண்கமலக்கண்ணேன்னும் நெடுங்கயிறுபடுத்து * என்னை
ஈர்த்துக்கொண்டுவிளையாடும் ஈசன்றன்னைக்கண்டீரே *
போர்த்தமுத்தின்குப்பாயப் புகர்மால்யானைக்கன்றேபோல் *
வேர்த்துநின்றுவிளையாட விருந்தாவனத்தேகண்டோமே. (ச)

		விளையாடும் ஈசன் தன்னைக் கண்டீரே?—;	
கார் தண் கமலம் கண் என்னும் நெடு கயிறு என்னை படுத்து ஈர்த்துக்கொண்டு	காளமேகத்திலே குளிர்ந்த தாமரைபூத்தாற் போன்றுள்ள திருக்கண்கள் என்கிற பெரிய பாசத்திலே என்னை அகப்படுத்தி (தான் போமிடமெங்கும் என்னெஞ்சையும் கூடவே) இழுத்துக்கொண்டுபோய்	போர்த்த முத்தின் குப்பாயம் புகர் மால் யானை கன்றுபோல்-யானைக்குட்டிபோலே வேர்த்து நின்று விளையாட	போர்வையாகப் போர்த்த முத்துச் சட்டையையுடையதாய் தேஜஸ்ஸையுடையதாய் பெரிதான வேர்வையுற்று நின்று விளையாட
		விருந்தாவனத்தே கண்டோம்—.	

* * *—'மேகத்திலே அழகிய இரண்டு தாமரைப்பூக்கள் பூத்தனவோ?' என்னும்படியமைந்த திருக்கண்களாகிறவலியிலே என்னை அகப்படுத்தித் தான்போமிடமெங்கும் என்னையும் [அதாவது - என்நெஞ்சையும்] இழுத்துக்கொண்டுநிறியுமவனை பெருமானைக்கண்டதுண்டோ? என்றுகேட்பார் பாசுரம்--முன்னடிகள். முத்துச்சட்டையிட்டாற்போலே குருவெயர்ப்பு அரும்பிப் புகரையுடைத்தான யானைக்கன்றுபோலே வேர்த்துநின்று விளையாடும்போது விருந்தாவனத்திலே கண்டோமென்பார்பாசுரம் - பின்னடிகள்.

கார்—மேகம்போலே, தண்—குளிர்ந்த, என்றும் உரைக்கலாம். குப்பாயம் = சட்டை. "குப்பாயமெனநின்று காட்சிதருங் கோவர்த்தனமென்னுங் கொற்றக்குடையே" என்றார் பெரியாழ்வாரும். (ச)

641 மாதவனென்மணியினை வலியில்பிழைத்தபன்றிபோல் *
ஏதுமொன்றும்கோளத்தாரா ஈசன்றன்னைக்கண்டீரே *
பீதகவாடையுடைதாழப் பெருங்கார்மேகக்கன்றேபோல் *
வீதியாரவருவானை விருந்தாவனத்தேகண்டோமே. (ரு)

மாதவன் என் மணியினை	சரியா: பதியாய் எனக்கு நீலரத்நம்போலே பரம போக்யனாய்	வலியில் பிழைத்த பன்றிபோல்	வலியில் நின்றும் நழுவிப் பிழைத்ததொரு பன்றி போலே (செருக்குற்று)

ஏதும் ஒன்றும் } (தன் பக்கலுள்ள) யாதொன்றையும்
கொள தாரா } பிறர்கொள்ளும்படி தாராதவனை (ஒருவர்கைக்கும் எட்டாதவனை)
ஈசன் தன்னைக் கண்டீரே?—;
பீதக ஆடை திருப்பீதாம்பரமாகிற
உடை திருப்பரிவட்டமானது
தாழ தொங்கத்தொங்க விளங்க
பெரு கார் மேகம் கன்று போல் } பருத்துக் கறுத்ததொருமேகக் குட்டிபோலே
வீதி ஆர் வரு வாணே } திருவீதிகிறைய எழுந்தருளும் பெருமானை
விருந்தாவனத்தே கண்டோம்—.

* * * வலியில் — ஐந்தாம்வேற்றுமை. என்றைக்கும் வலியில் அகப்படாததொன்றை வருந்தி வலிப்படுத்தலாம்; வலிப்பட்டிருந்து தப்பினதை வருந்தியும் வலிப்படுத்தமுடியாது; அப்படிதப்பினபின்பு அதற்குள்ளசெருக்கும் வாசாமகோசரமாயிருக்கும். அப்படிப்பட்ட செருக்கு கண்ணபிரானுக்குள்ளதென்னுமிடத்தைக் காட்டுதற்பொருட்டு "வலியில் பிழைத்த பன்றிபோல்" எனப்பட்டதென்க. ஏதும் ஒன்றும் - அணுமாத்திரமும், கொள - பிறர்கொள்ளும்படி, தாரா - தன்னிடத்திலிருந்து கொடாத. — செருக்கு மிக மிக துர்லபத்வம் [-கைக்கு எட்டாமை] மிகுகின்றதென்றபடி.. கொள்ள என்பது கொள என்று தொக்கிக்கிடக்கிறது.

வீதியாரவருவானே = மேகமானது ஆகாசப்பரப்படங்கலும் தனக்கு இடமாக்கிக் கொண்டு வருமாபோலே கண்ணபிரான் வீதிப்பரப்பையெல்லாம் தனக்கு இடமாக்கிக் கொண்டு எழுந்தருள்வனையிற்று. (இ)

642 தருமமறியாக்குறும்பனைத் தன்கைச்சார்ங்கமதுவேபோல் *
புருவவட்டமழகிய பொருத்தமிலியைக்கண்டீரே *
உருவுகரிதாய்முகம்செய்தாய் உதயபருப்பதத்தின்மேல் *
விரியுங்கதிரேபோல்வானே விருந்தாவனத்தேகண்டோமே. (ஈ)

* * *—தயையென்கிற தர்ம்மத்தை ஈஷத்தும் அறியாதவனுய்க் குறும்புசெய்வதையே தொழிலாகக்கொண்டவனுய், தன்கையிலுள்ள சார்ங்கவில்போன்று வட்டமாய் அழகியதான திருப்புருவங்களையுடையனுய், உகந்தாரோடே பொருந்திவாழப்பெறுதவனை பெருமானைக் கண்டதுண்டோ?. உண்டு;— கண்டாருடைய கண்களெல்லாம் குளிரும்படி இருண்டவடிவை யுடையனுய், செந்தாமரைபோற் சிவந்த திருமுகமண்டலத்தை யுடையனுய், உதயபர்வதத்தின்மேலே ஆதித்யன் உதிக்கும்போதுள்ள ப்ரபாவிசேஷத்தை யுடையனுனை கண்ணபிரானை விருந்தாவனத்திலே கண்டோம். திருவுருவம் உதயபர்வதம், முகம் ஸூர்யமண்டலம். (ஈ)

643 பொருத்தமுடையநம்பியைப் புறம்போலுள்ளுங்கரியானை *
கருத்தைப்பிழைத்துநின்ற அக்கருமாமுகிலைக்கண்டீரே *
அருத்தித்தாராகணங்களால் ஆரப்பெருகுவானம்போல் *
விருத்தம்பெரிதாய்வருவானே விருந்தாவனத்தேகண்டோமே. (எ)

பொருத்தம் உடைய நம்பியை } பொருத்தமுடைய ஸ்வாமியாய்
புறம்போல் உள்ளும் கரியானை } உடம்புபோலே உள்ளமும் கறுத்திராநின்றவனுய்
கருத்தை பிழைத்து நின்ற } நான் எண்ணுமெண்ணத்தைத் தப்பி நிற்பவனுய்
அக்கரு மா முகிலை } கறுத்துப்பெருத்த முகில் போன்றவனை அக்கண்ணபிரானை
கண்டீரே?—;
அருத்தி விருப்பத்தக்க
தாரா கணங்களால்—நக்ஷத்ர ஸமூஹங்களாலே
ஆரப் பெருகு வானம் போல் மிகவும் நிறைந்திருத்துள்ள ஆகாசம் போலே
விருத்தம் பெரிது ஆய் } பெருங்கூட்டமாய்
வருவானை எழுந்தருளாகின்ற அப்பெருமானை
விருந்தாவனத்தே கண்டோம்—.

* * *—கீழ்ப்பாட்டில் பொருத்தமிலியைக் கண்டீரே என்று வைத்து இப்பாட்டில் 'பொருத்தமுடையநம்பியை" என்றது என்? என்னில்; பத்துடையடியவர்க்கு எளியனை

பெருமானையோ நாம் பொருத்தமிலி என்பது; அப்படிசொல்வதுதகுநியல்ல; அவன் பொருத்த முடையவனேயாவன் – என்று திருவுள்ளம்பற்றிச் சொல்லுகிறுள் என்பர்சிலர். அங்ஙனன்றியே 'இந்தப்பிள்ளை பரமஸாது' என்றுல் அம்மை எதிர்மறை யிலக்கணையாய் துஷ்டன் என்று காட்டுமாபோலே இங்கும் பொருத்தமுடைய நம்பியென்றது பொருத்த மில்லாமையையே சொல்லிற்றுகக்கொள்க. இதுவே பெரியவாச்சான்பிள்ளை திருவுள்ளம்பற்றின் கருத்தாம்:

புறம்போலுள்ளுங்கரியான் = திருமேனிகறுத்திருந்தாலும் திருவுள்ளம் பரிசுத்தமாயிருக்கலாமே; அதுவும் அசுத்தமாகவேயிருக்கிறதென்று நர்மோக்தி. கருத்தைப்பிழைத்துநின்ற = ஸம்ச்லேஷித்திருக்குங்காலத்திலே "மாதே உன்னைநான்விட்டுப்பிரியேன்; பிரிந்தால்தரியேன்" என்று அவன் சொல்ல அதை மெய்தானென்று நம்பியிருக்கிற நம்பிக்கையைப் போக்கடித்தவனென்றவாறு. இப்படிசொல்லுகிறவன் நம்மைவிட்டு ஒருகாலும் பிரியமாட்டான் என்று கொண்டகருத்தைத்தப்பி, பிரிந்திருப்பவனென்றபடி. விருத்தம் = பழுத்தம். (எ)

644 வெளியசங்கொன்றுடையானைப் பீதகவாடையுடையானை *
அளிநன்குடையதிருமாலை ஆழியானைக்கண்டீரே *
களிவண்டெங்கும்கலந்தாற்போல் கமழ்பூங்குழல்கள்தடந்தோள்மேல் *
மிளிரநின்றுவிளையாட விருந்தாவனத்தேகண்டோமே. (அ)

வெளிய சங்கு ஒன்று உடையானை	வெளுத்த ஸ்ரீபாஞ்ச ஜன்ய மொன்றை யுடையனாய்
பீதக ஆடை உடையானை	பீதாம்பரத்தை உடையாகக் கொண்டவனாய்
நன்கு அளி உடைய	நன்முகக்குபையையுடையனாய்
ஆழியானை	திருவாழியாழ்வானையுடைய னாய்
திருமாலை	சிரியபதியான கண்ணனை
கண்டீரே?—;	
களி வண்டு	(மதுபானத்தாலே) களித்துள்ள வண்டுகளானவை
எங்கும்	எப்புறத்திலும்
கலந்தாற்போல்	பரம்பிறற்போலே,
கமழ் பூ குழல்கள்	பரிமளிக்கின்ற அழகிய திருக் குழல்களானவை
தடந் தோள் மேல்	பெரிய திருத்தோள்களின் மேலே
மிளிர நின்று விளையாட	(தாழ்ந்து) விளங்கநின்று விளையாட
விருந்தாவனத்தே கண்டோம்—.	

* * * கடல்போலே கறுத்ததிருமேனிக்குப் பரபாகமான வெண்மையையுடைய விலக்ஷணமான ஸ்ரீ பாஞ்சஜன்யத்தைத் திருக்கையிலேயுடையனும், பீதாம்பரதரனும், பிராட்டியோட்டைச் சேர்த்தியடியாகக் கருணையுடையனும் திருவாழி யாழ்வானை யுடையனுமான பெருமானைக்கண்டதுண்டோ?;—மதுபானத்தாலே மதித்தவண்டுகள் பரம்பிறற்போலே, பரிமள ப்ரசுரமாய் அழகான திருக்குழல்களானவை திருத்தோளிலே நின்றலைய விளையாடாகிற்க விருந்தாவனத்திலே கண்டோம். வெளிய = வெள்ளிய என்பதன் தொகுத்தல். எம் பெருமானுடைய திருக்குழல்கள் "மைவண்ண நறுங்குஞ்சிக்குழல் பிள்தாழ" என்றபடி தோள்களில் அலையாநிற்பதைக் களிவண்டுகள் பரம்பினவாக உத்ப்ரேக்ஷிக்கிறபடி. "செங்கமலப்பூவில் தேனுண்ணும் வண்டேபோல் பங்கிகள்" என்றுர்பெரியாழ்வாரும். (ஆ)

645 நாட்டைப்படையென்றயன்முதலாத்தந்த நளிர்மாமலருந்தி *,
வீட்டைப்பண்ணிவிளையாடும் விமலன்றன்னைக்கண்டீரே *
காட்டைநாடித்தேனுகனும் களிறும்புள்ளுமுடன்மடிய *
வேட்டையாடிவருவானை விருந்தாவனத்தேகண்டோமே. (இ)

நாட்டை படை என்று	உலகங்களை ஸ்ருஷ்டியென்று
அயன் முதலா	பிரமன் முதலான ப்ரஜாபதி களை
தந்த	உண்டாக்கின
நளிர் மா மலர் உந்தி வீட்டை பண்ணி	குளிர்ந்த பெரிய மலரையுடைத் தான திரு நாபியாகிற வீட் டை யுண்டாக்கி
விளையாடும்	இப்படியாக லீலாரஸமநுபவிக் கிற

மீமலன் தன்னை	பரம பாவநனை பெருமானை கண்டீரே!—;	உடன் மடிய	உடனே மாளும்படியாக
தேனுகனும்	தேநுகாஸுரனும்	காட்டை நாடி வேட்டை ஆடி வருவானை	காட்டிற் சென்று வேட்டை யாடிவரும் அப்பெருமானை
களிறும்	குவலயாபீட யானையும்		
புள்ளும்	பகாஸுரனும்		
			விருந்தாவனத்தே கண்டோம்—.

* * * சிறிது இடத்தைத் தானே கைதொட்டு ஸ்ருஷ்டித்து மேலுள்ளதையெல்லாம் நீங்கள் ஸ்ருஷ்டியுங்களென்று சதுர்முகன்முதலான ப்ரஜாபதிகளை யுண்டாக்கினவனும், அந்த நான்முகனுக்கு இருப்பிடமாகத் திருநாபிக்கமலத்தையுண்டாக்கித் தந்து இதுவே லீலையாக இருப்பவனுமான பரமபுருஷனைக் கண்டதுண்டோ?;—கம்ஸன் ஏவின அசுரர்வேசம்பெற்ற ஜந்துக்களையெல்லாம் முடித்துக்கொண்டு வேட்டையாடி வந்த அப்பெருமானை விருந்தாவனத்திலே கண்டோம். (கூ)

646 பருந்தாள்களிற்றுக்கருள்செய்த பரமன்றன்னைபாரின்மேல் *
விருந்தாவனத்தேகண்டமை விட்டுசித்தன்கோதைசொல் *
மருந்தாமென்றுதம்மனத்தே வைத்துக்கொண்டுவாழ்வார்கள் *
பெருந்தாளுடையபிரானடிக்கீழ்ப் பிரியாதென்றுமிருப்பாரே. (ல)

மருதாள் களிற்றுக்கு	பருத்த கால்களையுடைய கஜேந்த்ராழ்வானுக்கு	தம் மனத்தே வைத்துக் கொண்டு	தங்கள் சிந்தையிலே அநுஸந்தித்துக்கொண்டு
அருள் செய்த	க்ருபை பண்ணின		
பரமன் தன்னை	திருமாலை	வாழ்வார்கள்	வாழுமவர்கள்
பாரின் மேல்	இந்நிலத்திலே		
விருந்தாவனத்தே கண்டமை	ஸ்ரீ ப்ருந்தாவனத்திலே ஸேவிக்கப்பெற்றமையைப்பற்றி	பெருதாள் உடையபிரான் அடிகீழ்	பெருமைபொருந்திய திருவடிகளையுடைய எம்பெருமானுடைய திருவடிகளின் கீழே
விட்டு சித்தன் கோதை சொல்	பெரியாழ்வார் திருமகளான ஆண்டாளருளிச்செய்த இப்பாசுரங்களை	என்றும்	எந்காளும்
மருந்து ஆம் என்று	(பிறவி நோய்க்கு) மருந்தாகக் கொண்டு	பிரியாது இருப்பார்	பிரியாமலிருக்க (நித்யாநுபவம் பண்ண) ப்பெறுவர்கள்.

* * * இத்திருமொழிகற்றார்க்குப் பலன்சொல்லித் தலைக்கட்டுகிறது இப்பாட்டு. ஸ்ரீகஜேந்த்ராழ்வான் முதலியின்வாயிலகப்பட்டு நெடுநாள் துடித்து, பிறகு பெருமானுடைய ஸேவையைப்பெற்றுத் துயர்தீர்ந்து பரமானந்தமடைந்ததுபோல ஆண்டாளும் நெடுநாள் பட்ட விச்லேஷவ்யஸநம் தீர்ந்து மகிழப்பெற்ரு ளென்னுமிடம் முதலடியில் விளங்குமாறு காண்க. [பாரின்மேல்.] "கொம்மைமுலைகளிடர்தீரக் கோவிந்தற்கோர் குற்றேவல், இம்மைப்பிறவிசெய்யாதே இனிப்போய்ச் செய்யும்தவந்தானென்"? என்று பரமபதாநுபவத்தை வெறுத்திருந்த இவளுக்கு இந்நிலத்திலேயே பேறு கைபுகுந்ததென்க: இப்படி பேறுபெற்ற ஆண்டாள் திருவாய்மலர்ந்தருளிய இப்பாசுரங்களை ஸம்ஸார பேஷஜமாகக்கொண்டு சிந்திக்கு மவர்கள் * எஞ்ஞான்று மெம்பெருமானிணையடிக்கீழிணைபிரியாதிருப்பர்கள் என்று தலைக்கட்டிமுடிக்கிறது. (ல)

அடிவரவு:—பட்டி அணுங்க மால் கார்த்தண் மாதவன் தருமம் பொருத்தம் வெளிய காட்டைப் பருந்தாள் இருள்.

ஆண்டாள் திருவடிகளே சரணம்.

பெருமாள்கோயில் பிரதிவாதி பயங்கரம்
அண்ணங்காராசாரியர் இயற்றிய
நாச்சியார்திருமொழி உரை முற்றுப்பெற்றது.

ஸ்ரீ:

பெருமாள் திருமொழித் தனியன் உரை.

இன்னமுதமூட்டுகேனிங்கேவாபைங்கிளியே! தென்னரங்கம்பாடவல்லசீர்ப்பெருமாள்-பொன்னஞ் சிலைசேர்நுதலியர்வேள்சேரலர்கோனெங்கள் குலசேகரனென்றேகூறு.

பைங் கிளியே	பசுமைதங்கிய கிளியே!
இன் அமுதம் ஊட்டுகேன்	(உனக்கு) இனிமையானதோர் அம்ருதம் உண்ணத்தருகிறேன்;
இங்கே வா	என்னருகே வருவாயாக;
தென் அரங்கம்	தென் திருவரங்கத்தைக்குறித்து
பாட வல்ல	(இனிய கவிகளை) அருளிச் செய்யவல்ல
சீர்	கல்யாண குணசாலியான
பெருமான்	மஹாநுபாவர்—,
பொன் அம் சிலை சேர் நுதலியர் வேள்	விரும்பத்தக்கதாய் அழகிய தான புருவத்தை நெற்றியிலே யுடைய மாதர்கட்கு மநோஹரரான—,
சேரலர் கோன்	சேரவம்சத்தவர்களுக்கெல்லாம் ராஜா—,
எங்கள் குலசேகரன்	ப்ரபந்நரான நம்முடைய குலத்துக்குச் சிரோபூஷணமான குலசேகராழ்வார்
என்றே கூறு	என்று இதையே நீ வாய்பிதற்ற வேணும்.

* * * ஸ்ரீராம பக்தரான குலசேகரப்பெருமாள் அவ்விராமபிரானது திருநாமங்களைக் கிளிக்குக் கற்பித்துவைத்து அதன் முகத்தினின்று அவற்றைக் கேட்க விரும்புமாபோலே, குலசேகர பக்தரானவர்கள் அக்குலசேகரருடைய திருநாமங்களைக் கிளிக்குக் கற்பித்து அதன் முகமாகக்கேட்க விரும்புகிறபடி. "பொன்னஞ்சிலை சேர்" என்றவிடத்து, சிலை என்ற சொல்—வில் போன்ற புருவத்துக்கு வாசகமாதலால், உவமவாகு பெயர்.

ஆரங்கெடப்பரனன்பர்கொள்ளாரென்றவர்களுக்கே *
வாரங்கொடுகுடப்பாம்பிற்கையிட்டவன்—மாற்றலரை *
வீரங்கெடுத்தசெங்கோல்கொல்லிகாவலன் வில்லவர்கோன் *
சேரன்குலசேகரன்முடிவேந்தர்சிகாமணியே.

ஆரம் கெட	நவரத்ன மாலையொன்று கெட்டுப்போக,
(அதனை ஸ்ரீவைஷ்ணவர்கள் களவு செய்ததாகக் கள்ள மந்திரிகள் கூற)	
அவர்களுக்கே வாரம் கொடு	அந்த ஸ்ரீவைஷ்ணவர்கள் விஷயத்திலே பக்ஷபாதம் பூண்டு
பரன் அன்பர் கொள்ளார் என்று	"பாகவதர்களான ஸ்ரீவைஷ்ணவர்கள் களவு செய்யமாட்டார்கள்" என்று சொல்லி
குடப்பாம்பில் கை இட்டவன்	பாம்புக்குடத்தில் கையிட்டருளியவர்—,
மாற்றலரை	சத்துருக்களை
வீரம் கெடுத்த கெங்கோல்	பரிபவப்படுத்திய செங்கோன்மையை உடையவரும்
கொல்லி காவலன்	கொல்லி என்கிற நகருக்கு நீர்வாஹகரும்
வில்லவர் கோன்	தநுர்வித்யை பயின்றவர்களில் தலைவரும்
சேரன்	சேரதேசத்தரசரும்
முடி வேந்தர் சிகாமணி	முடியுடை மன்னர்களிற் சிறந்தவருமான
குலசேகரன்	குலசேகராழ்வாராவர்.

* * * குலசேகராழ்வார்க்குள்ள ஸ்ரீவைஷ்ணவ பக்ஷபாதாதிசயத்தைக் கூறுவது இது. 'ஸ்ரீவைஷ்ணவர்கள் ஒருபோதும் கெட்டகாரியஞ்செய்யார்' என்று குடப்பாம்பிற் கையிட்டு சபதம்பண்ணின வரலாறு சரித்திரத்தில் விசதம்.

தனியன் உரை முற்றிற்று.

பெருமாள் திருமொழியின்—உள்ளுறை.

திருமகள் கொழுநனை ஸர்வேச்வரன், தனக்கு அடிமை செய்து உய்தற்கு இட்டுப் பிறந்த ஆத்மாக்களையெல்லாம் ஆட்கொண்டு உய்விக்கும் பொருட்டுப் பரமகிருபையால் (பயிர் செய்பவன் பயிர்த்தலையிலே குடிசை யமைத்துக்கொண்டு அதில் இருந்துகொண்டு அப்பயிரைப் பாதுகாப்பதுபோல) இந்நிலவுலகத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கிற திவ்யதேசங்கள் நூற்றெட்டினுள் முதலதும் தலைமைபெற்றதுமான திருவரங்கம் பெரிய கோயிலில் எழுந்தருளியிருக்கிற அடியவர்க்கெளியனை நம்பெருமாள் விஷயமாக முதல் மூன்று திருமொழிகள்; திருவேங்கடமுடையான் விஷயமாக நான்காவது திருமொழி; மலை நாட்டில் திருவித்துவக்கோட்டம்மான் விஷயமாக ஐந்தாவது திருமொழி; ஆக இப்படி அர்ச்சாவதாரங்களிலே ஈடுபட்டு பக்திபரீவாஹமாக விண்ணப்பஞ்செய்த குலசேகராழ்வார், அர்ச்சாவதாரங்களிற் போலவே விபவாவதாரங்களுள்ளும் ராமாவதாரத்திலும் க்ருஷ்ணாவதாரத்திலும் மிக்க ஈடுபாடுடையராதலால், அவற்றிற் கருத்தைச்செலுத்தி, அவற்றுள்ளும் தமக்குச் சிறிதுகாலமே முந்தினதாதலாற் சமீபித்ததான க்ருஷ்ணாவதாரத்தை நினைத்து, அதில் அப்பெருமானைத் தாம் அநுபவிக்கப்பெறுமற் போனமைக்கு இரங்கி, அவ்விரக்கத்தை அவ்வவதாரத்திலே ஆய்ச்சியர்கள் கண்ணபிரானோடு ஊடல் கொண்டு உரைத்த பேச்சுக்களால் ஆறாந்திருமொழியையும், கண்ணபிரானுடைய குழந்தைத் திருவிளையாடல்களை யசோதை கண்டு களித்தாற்போலத் தேவகிதானுங்கண்டு களிக்கப்பெறுமல் இழந்த தேவகிப்பிராட்டி பின்பு கண்ணனைக் கண்டபொழுது கழிவிரக்கத்தோடு பேசின பேச்சுக்களால் ஏழாந்திருமொழியையும், அதன்பிறகு ஸ்ரீராமாவதாரத்தில் மனஞ்செல்லப்பெற்றவராய், அவ்வவதாரத்தில் கௌஸல்யை பெற்ற பேற்றைக்கருதி அவள் அவ்விராமபிரானைத் தொட்டிலிலிட்டுத் தாலாட்டுக்கூறின முகத்தால் எட்டாவது திருமொழியையும், தாம் அக்காலத்தில் இராமபிரானை அநுபவிக்கப்பெறுமல் இழந்தது—மைந்தனை அப்பெருமானைப் பாலப்பிராயத்திலெல்லாம் அநுபவித்து யௌவநபருவத்தில் அநுபவிக்கப்பெறுதே இழந்த தந்தையான தசரத சக்கரவர்த்தியின் தன்மை போலுதலால், இராமன் வநவாஸம் புகுமளவில் அச்சக்கரவர்த்தி அப்பிரிவை ஆற்றமாட்டாது புலம்பிய புலம்பல் முகமாக ஒன்பதாந்திருமொழியையும், செல்வச்செருக்காலும் அதிகாரத்தாலும் அஹங்கார மமகாரங்களை அடைதற் குரிய ராஜகுலத்திலே பிறந்திருந்தும் பகவானுடைய கருணையினாலும் ஆசார்யோபதேசத்தாலும் அந்தத் துர்பிமானங்கள் சிறிது மில்லாதொழியப் பகவானிடத்திற் பக்தியையும் அப்பெருமானது அடியார்களிடத்திற் ப்ரதிபத்தியையுமே விசேஷமாகப் பெற்றவரான இவ்வாழ்வார் "கற்பாரிராமபிரானே யல்லால் மற்றுங்கற்பரோ" என்றபடி ஸ்ரீராமாவதார வைபவத்தில் மிகவு மீடுபட்டு எப்பொழுதும் ஸ்ரீராமாயணத்தையே பாராயணஞ் செய்பவரா யெழுந்தருளியிருந்தமையால் அந்த ஸ்ரீராமாயண கதையைப் பின்புள்ளாரும் எளிதாக உணர்ந்து உய்யுமாறு * எல்லையில் சீர்த் தயரதன்றன் மகனைப் தோன்றிற்றது முதலாத் தன்னுலகம் புக்கதீறாக வுள்ள சரித்திரங்களைச் சுருக்கமாக உணர்த்த வல்ல பந்தாந் திருமொழியையும் அருளிச் செய்து இத்திவ்ய ப்ரபந்தத்தைத் தலைக்கட்டியருளினார்.

குலசேகரப் பெருமாள் அருளிச்செய்த

பெருமாள் திருமொழி.

[பெருமாள் கோயில் பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர் இயற்றிய உரையோடு கூடியது.]

முதல் திருமொழி—இருளிரிய.

அழகிய மணவாளனுடைய நித்யானுபவமும் அவ்விடத்துக் கைங்கர்யபரர்களோடு நித்ய ஸஹவாஸமும் தமக்கு விரைவில் கிடைக்குமாறு எம்பெருமான் அருள்புரிய வேணு மென்று ப்ரார்த்திப்பது இத்திருமொழி.

647

இருளிரியச்சுடர்மணிகளிமைக்கும்கெற்றி இனத்துத்தியணிபணமாயிரங்களார்ந்த *
அரவரசப்பெருஞ்சோதியனந்தனென்னும் அணிவிளங்குமுயர்வெள்ளாயணையைமேவி *
திருவரங்கப்பெருநகருள்தெண்ணீர்ப்பொன்னி திரைக்கையாலடிவருடப்பள்ளிகொள்ளும்*
கருமணியைக்கோமளத்தைக்கண்டுகொண்டு என்கண்ணிணைகளென்றுகொலோகளிக்குநாளே. ()

திரு அரங்கம்	ஸ்ரீரங்கமென்கிற
பெரு நகருள்	பெரிய நகரத்திலே
இருள் இரிய சுடர் மணிகள் இமைக்கும்	இருளானது சிதறி யொழியும் படி ஒளி விடுகின்ற மணிகள் விளங்கா நிற்கப்பெற்ற
கெற்றி	நெற்றியையும்
இனம் துத்தி	சிறந்த புள்ளியையும்
அணி	அழகாக உடைய
ஆயிரம் பணங்கள் ஆர்ந்த	ஆயிரம் படங்களை உடையனுய்
அரவு அரசன்	நாகங்களுக்குத் தலைவனுய்
பெரு சோதி	மிக்க தேஜஸ்ஸையுடையனை
அனந்தன் என்னும்-திருவனந்தாழ்வானுகிற	
அணி விளங்கும் உயர் வெள்ளை அணையை	அழகு மிக்கு உயர்த்தியை யுடைய வெண்ணிறமான திருப்படுக்கையிலே
மேவி	பொருந்தி
தெள் நீர் பொன்னி	தெளிந்த நீர்த்தத்தையுடைய காவிரியானது
திரை கையால் அடி வருட	அலைகளாகிற கைகளாலே திரு வடிகளைப்பிடிக்க
பள்ளி கொள்ளும்–திருக்கண் வளர்ந்தருளா நின்ற	
கரு மணியை	நீலமணி போன்றவராய்
கோமளத்தை	ஸௌகுமார்யமே வடிவெடுத் தவரான பெரிய பெருமாளை
என் கண் இணைகள்–என் கண்களானவை	
கண்டு கொண்டு	ஸேவிக்கப்பெற்று
களிக்கும் நாள்	ஆநந்தமடையும் நாள்
என்று கொல்	எந்நாளோ !

* * * திருவரங்கம் பெரியகோயிலில் உபயகாவேரீ மத்யத்தில் திருவனந்தாழ்வான் மீது திருக்கண் வளர்ந்தருளாநின்ற அழகிய மணவாளனை அடியேன் கண்ணாரக்கண்டு களிக் கும் பாக்கியம் என்றைக்கு வாய்க்குமோ? என்கிறார். ஆயிரம் பைந்தலைய அனந்தனுகை யால் ஒவ்வொரு தலையிலும் ஒவ்வொரு மாணிக்கமணி உண்டாகையால் மணிகள் எனப்பட் டது. ஒரு மணியின் சுடரே இருளைனைத்தையும் ஒழிக்கவற்றுயிருக்க, ஆயிரம் மணிகளின் சுடரால் இருளிரியச் சொல்லவேண்டாவே. இமைத்தல்—விழித்தல்; அதாவது இங்கு, விளங்குதல். துத்தி- படத்தின் மேலுள்ள பொறி. மேவி என்ற வினையெச்சம் பள்ளி கொள்ளும் வினையைக்கொண்டு முடியும். பொன்னி—பொன்களைக் கொழிக்கையாலே காவிரிக்குப் பொன்னியென்று பெயராயிற்று. கநகநதீ என்றும் ஹேமவதீ என்றும் வட நூலில் வழங்கப் படுவதும் இதுவே. "பொன்னி திரைக்கையாலடிவருட" என்றது—காவிரி யின் அலைகள் இனிதாக மோதிக் குளிர்ச்சி பெற்றுள்ள கரையிலே பரமஸௌகுமார்யமாகக் கண் வளர்ந்தருள்கின்றமையைக் கூறியவாறு. கோமளம்—வடசொல்., "கண்ணல் துகைக்க வொண்ணுத ஸௌகுமார்ய முடையவனை" என்பது வியாக்கியானம். (க)

648 வாயோரைஞ்ஞூறுதுதங்களர்ந்த வளையுடம்பினழல்காகமுமிழ்ந்தசெந்தீ *
வீயாதமலர்ச்சென்னிவிதானமேபோல் மேன்மேலும்மிகவேங்கும்பரந்ததன்கீழ் *
காயாம்பூமலர்ப்பிறங்கலன்னமாலைக் கடியரங்கத்தரவணையில்பள்ளிகொள்ளும் *
மாயோனைமணத்தூணேபற்றிநின்று என்வாயாரவென்றுகோலோவாழ்த்துநாளே. (உ)

கடி அரங்கத்து	நறுமணம்மிக்க கோயிலிலே
ஓர் ஈர் ஐ நூறு வாய்	ஓராயிரம் வாய்களிலே
துதங்கள் ஆர்ந்த	ஸ்தோத்ர வாக்கியங்கள் நிறைந்திருக்கப் பெற்றவனுய்
வளை உடம்பின்	வெளுத்த உடம்பை யுடைய வனுய்
அழல்	(எதிரிகள் வந்து கிட்ட வொண்ணுதபடி) அழலே உமிழாகிற்ப வனுன
நாகம்	ஆதிசேஷன்
உமிழ்ந்த	(தன் வாயினின்று) வெளிக் கக்கிய
செம் தீ	செந்நிறமான அக்நிஜ்வாலையா னது
சென்னி	தலையின் மேலே
வியாத மலர் விதானம் போல்	அழிவில்லாத புஷ்பங்களாற் சமைத்ததொரு மேற்கட்டிபோல
எங்கும் மேல்மேலும் பரந்து மிக	மேற்புறமெங்கும் விஸ்தரித்து விளங்க
அதன் கீழ்	(ஆதிசேஷன் உமிழ்ந்த அக்நிஜ் வாலையாகிற) அந்தப்புஷ்ப விதானத்தின் கீழே
அரவு அணையில்	சேஷசயனத்திலே
பள்ளி கொள்ளும்	கண்வளர்ந்தருளா நிற்பவனும்
காயா பூ மலர் பிறங்கல் அன்ன	காயாவின் அழகிய பூக்களாலே தொடுக்கப்பட்ட நீலமாலை போன்றவனுய்
மாலை	பெருமை பொருந்தியவனுய்
மாயோனை	ஆச்சர்யனை ஸ்ரீரங்கநாதனை (அடியேன்)
மணம் தூண் பற்றி நின்று	திருமணத் தூண்களிரண்டையும் அவலம்பமாகப் பற்றிக்கொண்டு நின்று
என் வாய் ஆர வாழ்த்தும் நாள் என்று கொல்	என் வாய்த்தினவு தீர ஸ்துதி செய்யுங்காலம் என்றைக்கு வாய்க்குமோ?.

* * * ஆயிரம் வாய்களாலும் ஆயிர நாமங்களைச் சொல்லி எம்பெருமானைத் துதிப்பவனும், 'சுத்த ஸத்வகுணமுடையவன்' என்பது நன்கு விளங்குமாறு பால்போல் வெளுத்த உடலையுடையவனுமான ஆதிசேஷன், எம்பெருமானிடத்துள்ள பரிவின் மிகுதியாலே அஸ்தானத்திலும் பயத்தை ஸங்கிப்பவனுதலால் கொடிய அரக்கராசுரர்கள் விபவாவதாரங்களிற் போல அர்ச்சையிலும் வந்து நலிவர்களோ என்னும் அதிசங்கையினால் அவர்கள் அணுகமுடியாதபடி எப்போதும் அழலே வாயில் நின்று கக்கிக்கொண்டிருப்பதனால் செந்நிறமான அந்த அக்நிஜ்வாலையானது அவனுடைய தலைகளின் மேற் கிளம்பி விசேஷமாகப் பரவி 'சண்பகம் முதலிய செம்மலர்களாலே ஒரு மேற்கட்டி அமைக்கப்பட்டுளதோ' என்று உத்ப்ரேக்ஷிக்கத் தக்கதாய் விளங்க, அத்தகைய மேற்கட்டியின் கீழே அரவணையின் மீது பள்ளிகொண்டருளா நின்ற பெரியபெருமாளை ஸேவித்கமாத்ரத்திலேயே "காலாழும் நெஞ்சழியும் கண்சுழலும்" என்றபடி தைர்யம் பிறந்து தரித்து நிற்கமுடியாத அவஸ்தை விளையுங்கால் அவ்வழகிய மணவாளனுடைய திருக்கண்ணேக்கத்திலே நிலாவுகின்ற இரண்டு திருமணத்தூண்களை அவலம்பமாகப் பற்றிக்கொண்டு தரித்துநின்று, வெகுநாளாக இழந்த இழவுதீர ஸ்தோத்ரம் பண்ணும்படியான பாக்கியம் என்றைக்கு வாய்க்குமோ? என்கிறார். [மணத்தூணே பற்றிநின்று] அழகிய மணவாளன் ஸந்நிதியில் மஹாமண்டபத்தண்டையிலிருக்கும் இரண்டு தூண்களுக்குத் "திருமணத்தூண்" என்பது ஸம்ப்ரதாயத் திருநாமம். இதனை சூளோடிஹமென்று வடமொழியில் வழங்குவர். சூளோடிம்—மணம். "மணத்தூணருகில் நின்றுகொண்டு" என்னுமல் "பற்றி நின்று" என்றதன் உட்கருத்தை ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் பட்டர் வெளியிட்டருளினார்;—

"ஸௌஷம்யயொ நாதா தநீயாகாயி தொமுதா நாநாம் !
சூடாம்பவிவாதொடிஹமஹமுபயஜாநாம் மஹியாதஃ ॥" என்று.

அழகிய மணவாளனுடைய திருக்கண்ணேக்கமாகிற அமுதவாற்றின் பெருவெள்ள மான்து அநுபவிக்க இழிந்தவர்களே ஒருமித்து நிலைநின்று அநுபவிக்க வொண்ணுதபடி தூக்கி த்தள்ளி அசைக்குமளவில், அவர்கள் அவலம்பமாகப் பற்றிக்கொண்டு நிற்பதற்காக நாட்டப் பட்டுள்ளவைபோன்ற திருமணத்தூண்களைப் பற்றுவோம் என்பது இந்த ச்லோகத்தின் கருத்து. அழகிய மணவாளனது திருமேனியின் பரிமளம் இரண்டு தூணுகப் பரிணமித்து உருவெடுத்து நிற்பதால் "திருமணத்தூண்". என்று திருநாமமாயிற்று என்பர். (உ)

649 எம்மாண்பினயன்நான்குநாவினலுமெடுத்தேத்தி ஈரிரண்டுமுகமுங்கொண்டு *
எம்மாடுமெழிற்கண்களெட்டினலும் தொழுதேத்தியினிதிறைஞ்சநின்றசெம்பொன் *
அம்மான்றன்மலர்க்கமலக்கொப்பூழ்தோன்ற அணியரங்கத்தரவணையில்பள்ளிகொள்ளும்*
அம்மான்றனடியிணைக்கீழலர்களிட்டு அங்கடியவரோடென்றுகொலோவணுகுநாளே. (ரு)

எ மாண்பின் அயன்	ஸர்வவிதத்தாலு முண்டான மா ட்சிமையையுடைய நான்முகன்
நான்கு நாவினலும் (தனது) நாலு நாக்கினலும்	
எடுத்து	சொற்களே யெடுத்து
ஏத்தி	துதித்து
ஈர் இரண்டு முக மும் கொண்டு	நான்கு முகங்களாலும்
இனிது ஏத்தி	இனிமையாக (வேதங்களாலே) ஸ்தோத்திரம் பண்ணி
எழில் கண்கள் எட்டினலும்	அழகிய எட்டுகண்களினலே
எம் மாடும்	எல்லாப்பக்கங்களிலும்
தொழுது இறை ஞ்ச நின்ற	நன்ருக ஸேவிக்கும்படி அமை ந்த
செம் பொன் அம்மான் தன்	செவ்விய பொன்போல் (வீரும் பத்தக்க வடிவுடைய) ஸ்வாமி யான தன்னுடைய
கமலம் மலர் கொப்பூழ்	தாமரைப் பூவையுடைய திரு நாபியானது
தோன்ற	விளங்கும்படி
அணி அரங்கத்து அரவு அணையில் பள்ளிகொள்ளும்:—;	
அம்மான் தன்	பெரிய பெருமாளுடைய
அடி இணை கீழ்	திருவடிகளின் கீழே
அலர்கள் இட்டு	புஷ்பங்களே ஸமர்ப்பித்து
அங்கு அடிய வரோடு	அங்குள்ள கைங்கர்ய பரர்க ளோடு கூட
அணுகும் நாள் என்று கொல்	நெருங்கி வாழ்வது என்றைக் கோ ?

* * *—பிரமன் வாயாரவாழ்த்திக் கண்ணுரக்கண்டு களிக்கும்படியாகவும், ஸகல லோகங்களிலுடையவும் ஆவிர்ப்பாவத்துக்குக் காரணமாகிய திருநாபிக்கமலம் நன்கு விளங் கும்படியாகவும் திருவனந்தாழ்வான் மீது சாய்ந்தருளாகின்ற பெரியபெருமாளே ஆராதிக்கின் ற அடியார்களோடுகூட அடியேனும் ஆராதிக்கும்படி அந்த திவ்யஸந்நிதானத்திற்குப்போய்ச் சேரும் பாக்கியம் என்றைக்கு வாய்க்குமோ? என்கிறார்.

எம்மாண்பின்—துதிப்பதற்கு உறுப்பான வாக்தேவியை எப்போதும் தன்வசமாகக் கைக்கொண்டிருக்கும் அதிசயத்தையுடையவன் என்பது உட்கருத்து. பட்டர் இப்பாசுரத் தைப் பெரும்பாலும் திருவுள்ளம்பற்றியே ஸ்ரீரங்கராஜஸ்தவ உத்தர சதகத்தில், [எசு.]

"ஸமஸ்தாஸ்வாஸவிஸ்மாபயா நிஜயிா ஜாநஹ நஜ்ஞேயம்
ஹாஸ்தயா வஹயஸ்ய ஆஸ்ய தயா ஸ்ரோஷீ நவாம்கீ தநுஃ ।
கூர்ஸ்நேவபஹரி நீ கரணை ரஸ்ஸ்ஸ்

மாவினை வாய் பிளந்து உகந்த மாலை	குதிரை வடிவங்கொண்டு வந்த கேசியினுடைய வாயைக் கிழித்து மகிழ்ந்த பெருமானை
வேலை வண்ணனை	கடல்போன்ற வடிவையுடைய வனை
என் கண்ணனை	'என்னுடையவன்' என்று அபிமானிக்கக்கூடிய (ஸுலபனை) கிருஷ்ணனை
அன்று	(இந்திரன் கல் மழை பெய்வித்த) அக்காலத்திலே
வல் குன்றம் ஏந்தி	வலிய (கோவர்த்தன) மலையை (க்குடையாக) த் தூக்கி
ஆவினை உய்யக் கொண்ட	பசுக்களைக் காப்பாற்றி யருளின
ஆயர் ஏற்றை	இடையர் தலைவனை
அமரர்கள் தம் தலைவனை	நித்யஸூரிகளுக்கு ஸ்வாமியாய்,
அம் தமிழின் இன்பம் பாவினை	அழகிய தமிழ்ப்பாஷையாலாகிய ஆநந்தமயமான அருளிச்செயல் போல் போக்யனை
அவடமொழியை	அழகிய ஸம்ஸ்க்ருத பாஷையாலாகிய ஸ்ரீராமாயணங்கள் போல் போக்யனை
பற்று அற்றார்கள் பயில் அரங்கத்து	ஸம்ஸார பந்தம் அற்றவர்களான விரக்தர்கள் நித்திய வாஸம் செய்கிற கோயிலிலே

அரவு அணையில் பள்ளிகொள்ளும்—;

கோவினை	ஸ்வாமியான ஸ்ரீ ரங்கநாதனை
கா உற	காக்குத் தடிக்கும்படி
வழுத்தி	துதித்து
என் தன் கைகள்	என்னுடைய கைகளானவை
கொய் மலர் தூய்	(காலத்தில்) பறிக்கப்பட்ட புஷ்பங்களைப் பணிமாறி
கூப்பும் நாள் என்று கொல்	அஞ்ஜலி பண்ணும் நாள் எதுவோ?.

* * * குதிரை வடிவங்கொண்டு தன்னைக் கவளங்கொள்ளவந்த கேசியென்னும் மஹாஸுரனைக் கொன்று தன்னை நித்யாநுபாவ்யனாக உபகரித்தருளினவனும், கடலைக் கண்டாற் போலே வடிவைக்கண்டபோதே தாபத்ரயமும் தீரும்படியிருப்பவனும், அரியன செய்து ஆச்ரிதரைக் காப்பாற்றினவனும் பரம போக்யனுமான ஸ்ரீரங்கநாதனை நாத்தழும்பெழத் துதித்து நன்மலர்களைக் கொணர்ந்து ஸமர்ப்பித்து 'அடியேனை ஆட்கொள்ளவேணும்' என்கிற ப்ரார்த்தனை தோற்றக் கைகூப்பி நிற்கும்படியான பாக்கியம் என்றைக்கு வாய்க்குமோ என்கிறார். எம்பெருமானுடைய ஒப்புயர்வற்ற போக்யதைக்கு அவனுடைய திவ்ய குணங்களை ப்ரதிபாதிக்கின்ற திருவாய்மொழி முதலிய திவ்ய ப்ரபந்தங்களும் ஸ்ரீராமாயணம் முதலிய இதிஹாஸ புராணங்களுந் தவிர வேறொன்றும் ஒப்புச்சொல்லத் தகாமையால் "அந்தமிழினின்பப்பாவினை அவ்வடமொழியை" என்றார்.

[பற்றற்றார்கள் பயிலரங்கம்.] "சிற்றெயிற்று முற்றல் மூங்கில் மூன்று தண்டரொன்றினார், அற்ற பற்றர் சுற்றிவாழு மந்தணீரரங்கமே" என்றார் திருமழிசைப்பிரானும். (சு)

651 இணையில்லாவின்னிசையாழ்கெழுமி இன்பத்தும்புருவுகாரதனுமிறைஞ்சியேத்த *
துணையில்லாத்தோன்மறைநூல்தோத்திரத்தால் தொன்மலர்க்கணயன்வணங்கியோவாதேத்த*
மணிமாடமாளிகைகள்மல்குசெல்வ மதிளரங்கத்தரவணையில்பள்ளிகொள்ளும் *
மணிவண்ணனம்மானைக்கண்டுகொண்டு என்மலர்ச்சென்னியென்றுகோலோவணங்குநாளே.

இன்பம்	(வீணுகானத்தாலே) இன்பந்தருகின்ற
தும்புருவும்	தும்புரு மஹர்ஷியும்
நாரதனும்	நாரத முனிவனும்
இணை இல்லா இன் இசை	ஒப்பற்றதும் போக்யமுமான இசையை
யாழ்	வீணையிலே
கெழுமி	நிறைத்து
(வீணுகானத்தைப் பண்ணிக்கொண்டு)	
இறைஞ்சி ஏத்த	(திருவடிகளிலே விழுந்து) வணங்கித் துதிக்கவும்,
தொல் மலர்க் கண் அயன்	நித்யமான நாபிகமலத்திலுதித்த நான்முகனவன்
வணங்கி	நமஸ்கரித்து
துணை இல்லா	ஒப்பு இல்லாததும்
தொல்	அநாதியுமான
மறை நூல் தோத்திரத்தால்	வேதசாஸ்த்ரங்களாகிற ஸ்தோத்ரங்களால்
ஓவாது ஏத்த	இடைவிடாமல் துதிக்கவும்
மணி மாடம் மாளிகைகள்	மணிமயமான மாட மாளிகைகளையும்
மல்கு செல்வம்	பூர்ணமான ஸம்பத்தையும்

மதிள்	ஸப்தப்ராகாரங்களையுமுடைய
அரங்கத்து	கோயிலிலே
அரவு அணையில் பள்ளிகொள்ளும்—;	
மணி வண்ணன் அம்மானை	நீலமணிபோன்ற திருநிறத்தையுடையனனெம்பெருமானை
கண்டுகொண்டு	ஸேவித்து
என் மலர் சென்னி	என்னுடைய பூமாலை யணிந்த தலையானது
வணங்கும் நாள் என்று கொல்	(அவன் திருவடிகளில்) கமஸ்கரிப்பது என்றைக்கோ?.

* * *—தும்புரு நாரதர் முதலிய முனிவர்கள் பகவத்குணங்களை இனிய இசையுடன் வீணையிலேயிட்டுப் பாடிக்கொண்டும், நான்முகன் நான்கு முகங்களாலும் நான்குவேதங்களை ஓதிக்கொண்டும் வணங்கப் பள்ளிகொண்டருளாநின்ற பெரியபெருமாளை நான் ஸேவிக்கப் பெறுவதும், அரசாட்சிக்கு ஏற்றப் பூமுடி சூடிக்கிடக்கின்ற என்தலை அவனுடைய திருவடியை முடிசூடப் பெறுதலும் என்றைக்கு வாய்க்குமோ? என்கிறார். இன் இசை யாழ் கேழமி—இனிய இசையையுடைத்தான வீணையை அப்யஸித்து என்றுமாம். (இ)

652 அளிமலர்மேலயனரனிந்திரனோடு ஏனையமரர்கள்தங்குழுவுமரம்பையரும்மற்றும் *
தெளிமதிசேர்முனிவர்கள்தம்குழுவுமுந்தித் திசைதிசையில்மலர்தூவிச்சென்றுசேரும் *
களிமலர்சேர்பொழிலரங்கத்துரகமேறிக் கண்வளருங்கடல்வண்ணர்கமலக்கண்ணும் *
ஒளிமதிசேர்திருமுகமும்கண்டுகொண்டு என்னுள்ளமிக்கவென்றுகொலோவுருகுகாளே. (சு)

அளி மலர் மேல் அயன்	(மதுபானத்துக்காக) வண்டுகள் படிந்திருக்கிற தாமரைப்பூவில் தோன்றிய பிரமனும்
அரன்	சிவனும்
இந்திரனோடு ஏனை அமரர்கள் தம் குழுவும்	இந்திரனோடுகூட மற்றைத் தேவர்களின் திரளும்
அரம்பையரும்	ரம்பை முதலிய தேவமாதரும்
மற்றும்	மற்றுமுள்ள
தெளி மதி சேர் முனிவர்கள் தம் குழுவும்	தெளிந்த ஞானத்தையுடைய (ஸநகாதி) மஹர்ஷிகளின் ஸமூஹமும்
உந்தி	ஒருவர்க்கொருவர் நெருக்கித் தள்ளி
திசை திசையில்	பார்த்த பார்த்தவிடமெங்கும்
மலர் தூவி	புஷ்பங்களை இறைத்துக் [கொண்டு
சென்று சேரும்	வந்து சேர்தற்கு இடமான
களி மலர் சேர் பொழில் அரங்கத்து	தேன்மிக்க மலர்களையுடைய சோலைகளையுடைத்தான கோயிலிலே
உரகம் ஏறி	திருவனந்தாழ்வான்மீது பள்ளிகொண்டு
கண் வளரும்	திருக்கண் வளர்த்தருளாநின்ற
கடல் வண்ணர்	கடல்போன்ற வடிவையுடையரான பெரிய பெருமாளுடைய
கமலம் கண்ணும்	செந்தாமரை போன்ற திருக்கண்களையும்
ஒளி மதி சேர் திரு முகமும்	ஒளியையுடைய சந்திரன் போன்ற திருமுகமண்டலத்தையும்
கண்டு கொண்டு	ஸேவிக்கப்பெற்று
என் உள்ளம்	என்னுடைய மனமானது
மிக உருகும் நாள் என்று கொல்	மிகவும் உருகுங்காலம் என்றைக்கோ?

* * * தேவர்களும் தேவமாதர்களும் முனிவர்களும் ஆராதநோபகரணங்களைக் கொண்டுவந்து, திரள் மிகுதியாலே ஒருவரையொருவர் நெருக்கித்தள்ளிப் புகும்படியான கோயிலிலே கண்வளர்ந்தருளாநின்ற பெரியபெருமாளுடைய செந்தாமரைக் கண்ணையும் முகசந்திரமண்டலத்தையும் ஸேவிக்கப்பெற்று, 'பாவியேனுக்கும் இப்பேறு வாய்த்த அதிஸயம் என்கொல்!' என்று நெஞ்சுருகும்படியான நாளும் வரப்போகிறதா? என்கிறார். (சு)

653
மறந்திகழும்மனமொழித்துவஞ்சமாற்றி வன்புலன்களடக்கியிடர்ப்பாரத்துன்பம்
துறந்து * இருமுப்பொழுதேத்தியெல்லியில்லாத்தொன்னெறிக்கண் நிலைநின்றதொண்டரான *
அறந்திகழும்மனத்தவர்தம்கதியைப்போன்னி அணியரங்கத்தரவணையில்பள்ளிகொள்ளும் *
நிறந்திகழும்மாயோனைக்கண்டென்கண்கள் நீர்மல்கவென்றுகொலோநிற்குகாளே. (எ)

மறம் திகழும் மனம் ஒழித்து வஞ்சம் மாற்றி	கொடுமையால் விளங்காநின்றுள்ள மனத்தை ஒழித்து வஞ்சனைகளைப் போக்கி
வல் புலன்கள் அடக்கி	கொடிய இந்திரியங்களை அடக்கி

[பட்டி மேயாதபடி தடுத்து]

இடர் பாரம் துன்பம் துறந்து	(மேன்மேலும்) துக்கத்தை விளைப்பனவாய்ப் பெருஞ்சுமையாயிராநின்ற பழவினைகளை வேரறுத்து
இரு மூப்பொழுது ஏத்தி	பஞ்சகாலங்களிலும் துதித்து
எல்லை இல்லா தொல் நெறிக் கண் நில்லாநின்ற	அளவிறந்த பழைய மர்யாதையிலே நிலைநின்ற
தொண்டர் ஆன	தாஸபூதர்களான

அறம் திகழும் மனத்தவர் தம்	தர்மசிந்தையே விளங்கும் மனமுடையரான ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு
கதியை	பரமப்ராப்யனை,
பொன்னி அணி அரங்கத்து	காவிரியால் அழகுபெற்ற கோயிலிலே

அரவு அணையில் பள்ளிகொள்ளும்—;

நிறம் திகழும்	அழகு விளங்காநின்றுள்ள
மாயோனை	ஆச்சரியனை எம்பெருமானை
என் கண்கள்	எனது கண்களானவை
கண்டு	ஸேவிக்கப்பெற்று
நீர் மல்க நிற்கும் நாள் என்று கொல்	ஆநந்தக் கண்ணீர் ததும்பும்படி நிற்பது என்றைக்கோ!

* * * முன்னடிகளிரண்டும் **ஸ்ரீவைஷ்ணவ லக்ஷணங்கூறுவன.** "திகழும் மனம் மறம் ஒழித்து" என்று அன்வயித்து, விளங்காநின்ற மனத்தில் நின்றும் கொடுமையை நீக்கி என்றுரைத்தலுமாம். மறம்—கொலை, கோபம், கொடுமை. இடர்ப்பாரத் துன்பம் துறந்து—"பாரமாய பழவினை பற்றறுத்து" என்கை. மஹத்தான துக்கத்தை விலக்கக்கூடியதும், மனிதனைக் கீழே அமுக்குவதில் தலைச்சுமை போன்றதுமான பழையவினையை வேரோடு களைந்து என்றபடி.

[இருமுப் பொழுதேத்தி.] இரண்டும் மூன்றும் ஐந்து; பஞ்ச காலபராயணர்களாய் என்றபடி. இதனைச் சிறிது விவரிப்போம்;—ஒரு தினத்தின் பகற்பொழுதை ப்ராத:காலம், ஸங்கவகாலம், மத்யாஹ்நகாலம், அபராஹ்நகாலம், ஸாயங்காலம் என்று ஐந்தாகப்பகுத்து, ஸூர்யோதயம் முதல் அவ்வாறு நாழிகை இவற்றிற்கு முறையே உரியவை என்று வரையறுத்து, அபிகமநம், உபாதாநம், இஜ்யா, ஸ்வாத்யாயம், யோகம் என்ற ஐந்து ஒழுக்கங்களையும் முறையே அந்த (ப்ராத:காலம் முதலிய) ஐந்து சிறுபொழுதிலும் அநுஷ்டிக்கும்படி பஞ்சராத்ரம் முதலிய ஆகமங்கள் கூறும். இரவில் ஆசரிக்கவேண்டுவதும் யோகாநுஷ்டாநமே; இவற்றின் விவரம் வருமாறு:—முதலாறு நாழிகையாகிய ப்ராத:காலத்திலே, ஸ்நாநம் ஸந்த்யாவந்தனம் ஜபம்முதலிய காலைக்கடன்களைச் செய்துமுடித்துத் தாம் ஆராதிக்கவேண்டிய எம்பெருமானுடைய ஸந்நிதியிற்சென்று ப்ரதக்ஷிண நமஸ்கார ஸ்தோத்ரம் முதலியவற்றால் எம்பெருமானை உகப்பிக்கவேண்டும்: இஃது அபிகமநகாலநியமம். அதற்கு அடுத்த ஸங்கவகாலத்திலே, பகவதாராதநத்துக்கு வேண்டிய சுத்தநீர்த்தம் சந்தனம் புஷ்பம் தூபதீபத்ரவ்யங்கள் முதலியவற்றையும், திருமஞ்சனத்துக்கு வேண்டிய பால் தயிர் நெய் தேன் முதலியவற்றையும் எம்பெருமானுக்கு அமுது செய்விப்பதற்கு வேண்டிய அரிசி பருப்பு கறியமுது சர்க்கரை நெய் தயிர் பழம் முதலிய போஜநோபகரணங்களையும் ஸம்பாதித்துத் தொகுத்து ஸித்தஞ்செய்யவேண்டும். இஃது உபாதாநகால நியமம். மூன்றுவதான மத்யாஹ்ந காலத்திலே, மாத்யாஹ்நிகஸ்நாநமும் மாத்யாஹ்நிகச் சடங்குஞ்செய்து விதிமுறை வழுவாது பகவானுக்குத் திருவாராதநம் பண்ணிப் பக்குவமான உணவுகளை அமுது செய்வித்து அங்ஙனம் நிவேதித்த உணவுகளை அதிதிகளோடும் பந்து-மித்ரர்களோடும் புஜிக்கவேண்டும். இஃது இஜ்யாகாலநியமம். அதற்கு அடுத்ததான அபராஹ்ந காலத்திலே, மோக்ஷமார்க்கத்துக்கு உரிய வேத வேதாந்த வேதாங்கங்களையும் இதிஹாஸ புராணங்களையும் மற்றும் உரிய நூல்களையும் தாம் கற்றலும் பிறர்க்குக் கற்பித்தலும் வேண்டும். இது ஸ்வாத்யாயகாலநியமம்.

நற்றதான ஸாயங்காலத்திலே, மாலைக்கடனுகிய ஸந்த்யாவந்தனத்தைச் செய்யத் தொடங்கி ஸுகீர்யாஸ்தமனமான பின்பு ஜபத்தைப் பூர்த்திசெய்து இரவு போஜநாநந்தரம் ஏகாந்தமாக இருந்து ஐம்பொறிகளை யடக்கி ப்ராணயாமஞ்செய்து மனத்தைப் பரமாத்மாவினிடத்தே கிலேகிறுத்தி பகவத்குணநு ஸந்தானத்தோடு பள்ளிகொள்ளவேண்டும். இது யோககாலநியமம். இவ்வாறு அநுஷ்டிக்கும் பாகவதர் பஞ்சகாலபராயணர் எனப்படுவர். (எ)

654

கோலார்ந்தகெடுஞ்சார்ங்கம்கூனற்சங்கம் கோலியாழிகொடுந்தண்டுகோற்றவோள்வாள் *
காலார்ந்தகதிக்கருடனென்னும் வென்றிக்கடும்பறவையிவையீத்தும்புறஞ்சூழ்காப்ப *
சேலார்ந்தகெடுங்கழனிசோலைசூழ்ந்த திருவரங்கத்தரவணையில்பள்ளிகொள்ளும் *
மாலோனைக்கண்டின்பக்கலவியெய்தி வல்வினையேனென்றுகொலோவாழுகாளே. (ஏ)

கோல் ஆர்ந்த	அம்புகளோடு கூடிய
கெடு சார்ங்கம்	பெரியதான ஸ்ரீ சார்ங்க மென்னும் வில்லும்
கூன் நல் சங்கம்	வளைந்து விலக்ஷணமான ஸ்ரீ பாஞ்சஜந்யமென்னும் சங்கமும்
கொலை ஆழி	(எதிரிகளைக்) கொலைசெய்ய வல்ல ஸுதர்சநமும்
கொடு தண்டு	(பகைவர்களுக்குக்) கொடுந் தொழில்புரிகின்ற கௌமோதகி யென்னும் கதையும்
கொற்றம் ஒள் வாள்	வெற்றிபெற்று ஒளிமிக்க நந்தகமென்னும் வாளும்
கால் ஆர்ந்த கடும் கதி	வாயுவேகம் போன்ற மிகவும் விரைந்த நடையையுடைய
கருடன் என்னும்	பெரியதிருவடி யென்னும் பேரையுடைய
வென்றி பறவை இவை ஈந்தும்	ஜயசீலமான பக்ஷி ராஜனும் (ஆகிய) இவையெல்லாம்
புறம் சூழ் காப்ப	காற்புறமும் சூழ்ந்துகொண்டு ரக்ஷிக்கையிட;
சேல் ஆர்ந்த நெடு கழனி	(நீர்வளத்தால்) மீன்கள் நிரம்பிய விசாலமான கழனிகளாலும்
சோலை சூழ்ந்த	சோலைகளாலும் சூழப்பட்ட
திரு அரங்கத்து அரவு அணையில் பள்ளிகொள்ளும்—;	
மாலோனை	ஸர்வாதிகனை எம்பெருமானை
வல் வினையேன்	மஹாபாபியான அடியேன்
கண்டு	ஸேவிக்கப்பெற்று
இன்பம் கலவி எய்தி	ஆநந்தமயமான ஸம்ச்லேஷத்தையும் பெற்று
வாழும் நாள் என்று கொல்	வாழ்வது என்றைக்கோ?

* * * பஞ்சாயுதங்களும், திருவடி விஷ்வக்ஸேநன் முதலிய நித்யஸூரிவர்க்கங்களும் 'அழகிய மணவாளனுக்கு எந்த ஸமயத்தில் என்னதீங்கு நேரிடுமோ?' அன்று அதிஸங்கை பண்ணி எப்போதும் நாற்புறமும் சூழ்ந்து காவலாயிருக்கத் திருவனந்தாழ்வான் மீது திருக்கண் வளர்ந்தருளாநின்ற பெரிய பெருமாளை, ஸாம்ஸாரிக ஸுகாபாஸங்களிலேயே ருசி கண்டிருக்கும்படி மஹாபாபத்தைப் பண்ணி நித்ய கைங்கரியத்தை இழந்து கிடக்கிற அடியேன் என்றைக்கு ஸேவித்து வாழப்போகிறேன் என்கிறார்.

இப்பாசுரத்தை அடியொற்றியே ஆழ்வான் ஸ்ரீவைகுண்ட ஸ்தவத்தில்

தாம்வெவிதம் ஜகுஅகு முதாலிஸாஜைஃ:
தாக்ஷிண்ய வொ நுவ தி நா நு அலெவ்யாஜெந்யஃ ।
தெவ்யா ஸ்ரியாஹ வஹஜ்ஜகஹொ மெ
ஹ்ரும்ஜ்ய வாம ஜகுரவம்கு மி தாக்ஷிவத்ஸா" ॥

என்ற ச்லோகமருளிச் செய்தாரென்க. (ஐ)

655

தூராதமனக்காதல்தோண்டர்தங்கள்குழாங்குழுமித் திருப்புகழ்கள்பலவும்பாடி *
ஆராதமனக்களிப்போடமுதகண்ணீர்மழைசோர நினைந்துருகியேத்தி * நாளும்
சீரார்ந்தமுழவோசைபரவைகாட்டும் திருவரங்கத்தரவணையில்பள்ளிகொள்ளும் *
போராழியம்மானைக்கண்டுதுள்ளிப் பூதலத்தில்என்றுகொலோபுரளுநாளே. (ஒ)

தூராத காதல் மனம்	ஒருநாளும் திருப்தி பெறுத ஆசைகொண்ட மனத்தையுடைய
தொண்டர் தங்கள் குழாம்	ஸ்ரீ வைஷ்ணவர்களின் கோஷ்டியிலே
குழுமி	கூடி
திரு புகழ்கள் பலவும் பாடி	(எம்பெருமானது) கீர்த்திகளெல்லாவற்றையும் (வாயாரப்) பாடி
ஆராத மனம் களிப்போடு	(அவ்வளவிலும்) திருப்தி பெறுத மநஸ்ஸிலுள்ள ஆநந்தத்தோடே
அழுத கண் நீர்	அழுத கண்களிலுண்டான நீர்த்துளிகள்
மழை சோர	மழைபோல் பெருகிவர
நினைந்து உருகி ஏத்தி	(எம்பெருமானை) நினைத்து (அத்தாலே) மனமுருகி ஸ்தோத்திரம் பண்ணி,—

நாளும்,	எப்போதும்
சீர் ஆர்ந்த முழவு ஓசை	நல்ல வாத்யங்களின் கோஷமரனது
பரவை காட்டும்	கடலோசைபோல் முழங்கப் பெற்ற
திரு அரங்கத்து அரவு அணையில் பள்ளிகொள்ளும்—;	ஸ்ரீ ரங்கத்திலே
போர் ஆழி	(பகைவரோடு) யுத்தஞ்செய்வதையே தொழிலாகவுடைய திருவாழியாழ்வானை யுடையரான
அம்மானை	எம்பெருமானை
கண்டு	ஸேவிக்கப்பெற்று
துள்ளி	(ஆநந்தத்துக்குப் போக்கு வீடாகத்) தலைகால் தெரியாமல் கூத்தாடி
பூதலத்தில் புரளும் நாள் என்று கொல்	பூமியிலே (உடம்பு தெரியாமல்) புரள்வது என்றைக்கோ?.

* * * "இன்கனிதனியருந்தான்" [நல்ல பொருள்களைத் தனியே அநுபவிக்கலாகாது] என்றாற்போல, பகவத்குணங்களைத் தனியே அநுபவிக்கக்கூடாதாகையால், அக்குணங்களை வாய்விட்டுக் கதறினாலன்றி திருப்திபெற முடியாதபடி கரைபுரண்ட காதலையுடைய பாகவதர்களின் கோஷ்டியிலே கலந்து அவர்களுடன் எம்பெருமானது கீர்த்திகளை வாயாரப்பாடி அதனால் ஆநந்தக்கண்ணீர் பெருகப்பெற்று 'நமக்குமன்றே இவ்வநுபவம் கிடைத்தது!' என்கிற உள்ளடங்காத பேரின்பப் பெருமையாலே "மொய்ம்மாம் பூம்பொழிற் பொய்கை" என்கிற திருவாய்மொழிப்படி தலைகால் தெரியாமல் துள்ளிக்கூத்தாடி, இப்போது லிம்ஹாஸநத்திலே மார்பு நெறித்திருக்கு மிருப்புத் தவிர்ந்து ஆநந்த மிகுதியாலே நிலத்தில் வீழ்ந்து புரளும்படியான பாக்கியம் வாய்ப்பது என்றைக்கோ? என்கிறார்.

தூராதமனக்காதல்=சப்தாதி விஷயங்களை எவ்வளவு அநுபவித்தாலும் எத்தனைகாள் அநுபவித்தாலும் சிறிதும் திருப்தியடையாத இந்திரியங்களையுடையவர்களின் கோஷ்டியில் நின்றும் விலகி, எம்பெருமானை எவ்வளவு அநுபவித்தாலும் பர்யாப்தி பெறுத மெய்யடியார்கள் திரளிலே புக விரும்புகிறபடி. பரவை காட்டும் என்றது—கடலின் அலைகளின் கோஷத்துக்கு ஒய்வு இல்லாதாப்போலே கோயிலில் வாத்யங்களின் முழக்கத்துக்கு ஒய்வு இல்லாமையால் கடலை ஒத்திருக்கின்ற என்றவாறு. பரவை—கடல்; பரவியது: ஐ—கருத்தாப் பொருள் விகுதி. (கூ)

656 வன்பெருவானகமுய்யவமரருய்யமண்ணுய்ய மண்ணுலகில்மனிசருய்ய *
துன்பமிகுதுயரகலவயர்வொன்றில்லாச்சுகம்வளர அகமகிழ்ந்தொண்டர்வாழ *
அன்பொடுதென்திசைநோக்கிப்பள்ளிகொள்ளும் அணியரங்கன்திருமுற்றத்தடியார்தங்கள்*
இன்பமிகுபெருங்குழுவுகண்டு யானுமிசைந்துடனேயென்றுகொலோவிருக்குநாளே. (ம)

வல்	(நைமித்திக ப்ரளயத்தில்) அழியாதிருக்கக் கடவதும்
பெரு	பெருமைதக்கியதுமான
வானகம்	ஸ்வர்க்கம் முதலிய மேலுலகங்கள்
உய்ய	உஜ்ஜீவிக்கவும்
அமரர்	தேவர்கள்
உய்ய	உஜ்ஜீவிக்கவும்
மண் உய்ய	பூலோகம் உஜ்ஜீவிக்கவும்

மண் உலகில் மனிசர் உய்ய	பூலோகத்திலுள்ள மனிதர்களெல்லாம் உஜ்ஜீவிக்கவும்
மிகு துன்பம் துயர் அகல	மிக்க துக்கத்தை விளைப்பதான பாவங்கள் நீங்கவும்
அயர்வு ஒன்று இல்லா சுகம் வளர	துக்கம் கலசாத சுகம் வளரவும்
அகம் மகிழும்	(எப்போதும்) மனதில் ஆனந்தத்தை யுடையரான

தொண்டர்	ஸ்ரீவைஷ்ணவர்கள்
வாழ	உஜ்ஜீவிக்கவும்
அன்பொடு	திருவுள்ளத்தில் உகப்போடு
தென் திசை கோக்கி	தெற்குத் திக்குக்கு அபிமுகமாக
பள்ளி கொள்ளும்-பள்ளிகொண்டிராநின்ற	
அணி அரங்கன் திரு முற்றத்து	ஸ்ரீரங்கநாதனுடைய ஸந்நிதியுள் திருமுற்றத்திலே
அடியார் தங்கள்	ஸ்ரீவைஷ்ணவர்களுடைய
இன்பம் மிகு பெரு குழுவுகண்டு	ஆநந்தம் நிரம்பிய பெரிய கோஷ்டியை ஸேவித்து
யானும்	அடியேனும்
இசைந்து	(அவர்களுள் ஒருவனாக) மனம் பொருந்தி
உடனே	அவர்களோடுகூட
இருக்கும் நாள் என்று கொல்	வாழ்ந்திருக்குங்காலம் எப்போது (வாய்க்குமோ?).

* * *—தேவர்களும் மநுஷ்யர்களும் விலக்ஷண ஸ்ரீவைஷ்ணவர்களும் வாழவும், பாவங்கள் நீங்கிப் புண்ணியங்கள் செழிக்கவுமாகக் குடதிசைமுடியைவைத்துக் குணதிசை பாதம் நீட்டி வடதிசை பின்புகாட்டித் தென்திசை இலங்கை நோக்கிப் பள்ளிகொண்டருளாநின்ற பெரியபெருமாள் ஸந்நிதித் திருமுற்றத்திலே திகழ்கின்ற பாகவதர்களுடைய கோஷ்டியிலே சேர்ந்து அடியேனும் அவர்களைப்போலே திகழ்ந்து வாழ்வது என்றே! என்கிறார். (ய)

657

திடர்விளங்குகரைப்பொன்னிதிருவுபாட்டுத் திருவரங்கத்தரவணையில்பள்ளிகொள்ளும் *
கடல்விளங்குகருமேனியம்மான்தன்னைக் கண்ணுரக்கண்டுகக்குங்காதல்தன்னுல் *
குடைவிளங்குவிறல்தானைக்கோற்றவொள்வாள் கூடலர்கோன்கொடைக்குலசேகரன்சொற்செய்த
நடைவிளங்குதமிழ்மாலைபத்தும்வல்லார் நலந்திகழ்நாரணனடிக்கீழ்நண்ணுவாரே. (கக)

திடர் விளங்கு கரை	மணற்குன்றுகள் விளங்கா நின்ற கரையையுடைத்தான
பொன்னி நடுவு பாடு	காவிரியின் நடுவிடத்து
திரு அரங்கத்து அரவு அணையில் பள்ளிகொள்ளும்—;	
கடல் விளங்கு	கடல்போல் விளங்குகின்ற
கரு மேனி	கரிய திருமேனியையுடைய
அம்மான் தன்னை	பெரிய பெருமாளை
கண் ஆர கண்டு உகக்கும் காதல் தன்னுல்	'கண்கள் த்ருப்தியடையும்படி ஸேவித்து ஆநந்திக்கவேணும்' என்று உண்டான ஆசையினால்
குடை விளங்கு	(அரசாட்சிக்கு ஏற்ப) வெண் கொற்றக்குடையுடன் விளங்கா நிற்பவரும்
விறல் தானை	பராக்கிரமம் மிக்க ஸேனைகளை யுடையவரும்
கொற்றம் ஒள் வாள்	வெற்றியும், ஒளியும் பொருந்திய வாளை யுடையவரும்
கூடலர் கோன்	மதுரையிலுள்ளவர்களுக்குத் தலைவரும்
கொடை	ஔதார்யத்தையே இயற்கையாகவுடையவருமான
குலசேகரன்	குலசேகரப்பெருமாள்
சொற்செய்த	அருளிச்செய்த
நடை விளங்கு	தமிழ் நடையானது நன்கு விளங்காநிற்கிற
தமிழ் மாலை பத்தும்	தமிழ்ப்பிரபந்தரூபமான இப் பத்துப்பாசுரங்களையும்
வல்லார்	ஓதவல்லவர்கள்
நலம் திகழ் நாரணன்	கல்யாண குணசாலியான ஸ்ரீமந்நாராயணனுடைய
அடி கீழ் நண்ணுவார்	திருவடிகளில் சேரப்பெறுவர்.

அடிவரவு:—இருள் வாயெம்மான் மாலினை யிகுள அளி மறங் கோல் தூரா வன் திடர்நேட்டரு.

இரண்டாந் திருமொழி—தேட்டருந்திறல்.

பகவத்விஷயத்தோடு நின்று தரிக்கமாட்டாமல் பாகவத விஷயத்திலே தாம் பிந்தேறிக் கிடக்கின்றமையை வெளியிடுகிறார் இத்திருமொழியில். பகவத் விஷயத்திலே மெய்யன்பு பூண்டவர்கள் பாகவத விஷயத்திலே ப்ரவணராகாமலிருக்கமுடியாது. பாகவத ப்ராவண்யம் அதிசயித்தாலன்றி பகவத்விஷய ப்ராவண்யம் ஸித்தை பெறாது. இவ்வாழ்வார்க்கு பகவத்விஷய

ப்ரஹ்மண்யத்திற் காட்டில் பாகவதவிஷய ப்ராவண்யமே பள்ள மடையாயிருக்கும்; * ஆரங் கெடப்பரனன்பர் கொள்ளாரென் றவர்களுக்கே வாரங்கொடு குடப்பாம்பிற் கையிட்டவரிறே.

658 தேட்டருந்திறல்தேனினைத் தென்னரங்கனை * திருமாதுவாழ்
வாட்டமில்வனமாலைமார்வனை வாழ்த்திமால்கொள்சிந்தையராய் *
ஆட்டமேவியலந்தழைத்து அயர்வெய்தும்மெய்யடியார்கள்தம் *
ஈட்டங்கண்டிடக்கூடுமேல் அதுகாணும்கண்பயனுவதே. (க)

தேட்டரும் } (தன்முயற்சியால்) தேடிப்பெறுதற்கு அருமையானவனும்
திறல் } (தன்னை முற்ற அநுபவிப்பதற்கு உறுப்பான) வலிவைக் கொடுப்பவனும்
தேனினை } தேன் போல் பரமபோக்யனும்
தென் அரங்கனை } தென் திருவரங்கத்தில் வாழ்பவனும்
திரு மாது வாழ் வாட்டம் இல் வனமாலை மார் பனை } பெரிய பிராட்டியார் நித்யவாஸம் செய்தற்கிடமாய் வாடாமல் செவ்வி பெற்றிருக்கிற வன மாலையை அணிந்துள்ள திருமார்வை யுடையவனுமான ஸ்ரீரங்கநாதனை
வாழ்த்தி மங்களாசாஸநம் பண்ணி

மால் கொள் சிந்தையர் ஆய் } (அவன் திறத்தில்) மோஹங் கொண்ட மனதையுடையராய்
ஆட்டம் மேவி } (அந்த மோஹத்தாலே நின்ற விடத்தில் நிற்கமாட்டாமல்) ஆடுவதிலே ஒருப்பட்டு
அலந்து அழைத்து } (பகவந்நாமங்களை) வாய்விட்டுக் கதறிக் கூப்பிட்டு
அயர்வு எய்தும் இளைப்படைகின்ற
மெய் அடியார் கள் தம் } உண்மையான அன்புடைய பாகவதர்களின்
ஈட்டம் கோஷ்டியை
கண்டிட கூடும் ஏல் } ஸேவிக்கப் பெறுவோ மாகில்
அது காணும் கண் பயன் ஆவது } கண் படைத்ததற்குப் பயன் அதுவேயன்றே?.

* * * "பூணூரமார்பனைப் புள்ளூரும் பொன்மலையைக் காணுதார் கண்ணென்றுங் கண்ணல்ல கண்டாமே" என்று 'எம்பெருமானைக் காண்பதே கண்படைத்ததற்கு ப்ரயோஜநம்' என்கிற ஸித்தாந்தம் ஸாமாந்யமானதென்றும் 'பாகவதர்களுடைய கோஷ்டியை ஸேவித்தாலன்றிக் கண்களுக்கு ஸாபல்யம் கிடையா' தென்பதே விசேஷஸித்தாந்தமென்றும் ஸாரமாகக் கண்டறிந்தவர்களுள் இவ்வாழ்வார் தலைவர் என்னுமிடம் இப்பாட்டில் விளங்கும். அடியவர்கட்குப் பரமபோக்யனை ச்ரீய:பதியை வாயாரத்துதித்து அவனிடத்திலே மிக்க மோஹங்கொண்டு அதனால் உடம்பு நின்றவிடத்தில் நில்லாது கூத்தாடி, 'ச்ரீய:பதியே! ஸ்ரீமந் நாராயணனே!' என்றிப்படி பல திருநாமங்களைக்கூறி யழைத்து, அவ்வளவில் எம்பெருமான் கண்ணெதிரே வந்து ஸேவைதந்தருளக் காணுமையாலே வருந்தி ஏங்குகின்ற பாரமார்த்திக பாகவதர்களின் கோஷ்டியை ஸேவிக்கப்பெறுவதே கண்களுக்கு ப்ரயோஜநமாமென்கிறார்.

மேவி=மேவுதல்—விரும்புதல்: "நம்பும் மேவும் நசையாகும்மே." "கண்டிடக்கூடுமேல்" என்றது — இத்தகைய மெய்யடியார்களை இந்நிலவுலகத்தில் காணப்பெறுவதின் அருமையை விளக்கும். (க)

659 தோடுலாமலர்மங்கைதோளினைதோய்ந்ததும் சுடர்வாளியால் *
நீடுமாமரம்செற்றதும்நிரைமேய்த்ததும் இவையேநினைந்து *
ஆடிப்பாடியரங்கவோவென்றழைக்கும் தொண்டரடிப்பொடி
யாடநாம்பெறில் * கங்கைநீர்குடைந்தாடும்வேட்கை என்னுவதே. (உ)

தோடு உலாம் மலர் மங்கை } இதழ்கள் மிக்கிருந்துள்ள தாமரைப்பூவிற் பிறந்த பிராட்டியினது
தோள் இணை தோய்ந்ததும் } திருத்தோள்களோடு அணையவ முக்கிக் கட்டிக்கொண்டதும்

சுடர் வாளியால்	புகரையுடைய அம்பினால்
நீடு மா மரம் செற்றதும்	நீண்ட ஸ்தஸால வ்ருக்ஷங்களைத் துளைசெய்து தள்ளியதும்
நிரை மேய்த்தது மும்	பசுக்கூட்டங்களை மேய்த்ததும் (ஆகிய)
இவையே நினைந்து	இப்படிப்பட்ட பகவச்சரிதங்களையே அநுஸந்தித்து
ஆடி	சரீர விகாரம்பெற்று
பாடி	(காதலுக்குப் பேர்க்குவீடாக வாய்விட்டுப்) பாடி
ஓ! அரங்க!! என்று	'ஓ அரங்கனே!' என்று (அவன் திருநாமங்களைச் சொல்லி)
அழைக்கும்	கூப்பிடுகிற
தொண்டர்	கைங்கரியத்தையே நிரூபகமாகவுடைய பாகவதர்களின்
அடி பொடி	திருவடித்தூள்களிலே
நாம் ஆட பெறில்	நாம் அவகாஹிக்கப்பெற்றால் (பிறகு)
கங்கை நீர்	கங்கா ஜலத்திலே
குடைந்து ஆடும் வேட்கை	அவகாஹித்து நீராடவேணுமென்கிற ஆசையானது
என் ஆவது	ஏதுக்கு?

* * *—"பெண்டிரால் சுகங்களுய்ப்பான் பெரியதோரிடும்பைபூண்டு, உண்டிராக் கிடக்கும்போது முடலுக்கே கரைந்து நைந்து" என்றபடி அல்லும் பகலும் ஸாம்ஸாரிக சிந்தனைகளே நிகழும் லௌகிகர்படியில்லாமல் எம்பெருமானுடைய திவ்யசரிதங்களையே மாறிமாறி அநுஸந்தித்து, அவ்வநுஸந்தானத்தாற் பிறந்த உகப்பு உள்ளடங்காமல் பகவந்நாமங்களை வாய்விட்டுக் கதறுகின்ற ஸ்ரீவைஷ்ணவர்களின் ஸ்ரீபாததூளிகளில் அவகாஹிக்கப்பெற்றால், பிறகு 'கங்கையில் நீராடவேணும்' என்கிற விருப்பமும் வியர்த்தமேயாம் என்கிறார். (உ)

660 ஏறடர்த்ததுமேனமாய்நிலம்கீண்டதும் முன்னிராமனாய் *
மாறடர்த்ததும்மண்ணளந்ததும் சொல்லிப்பாடி * வண்பொன்னிப்பே
ராறுபோல்வருங்கண்ணநீர்கொண்டு அரங்கன்கோயில்திருமுற்றம் *
சேறுசெய்தொண்டர்சேவடிச் செழுஞ்சேறென்சென்னிக்கணிவனே. (ஊ)

ஏறு அடர்த்ததும்	(நப்பின்னைக்காக) ஏழு ரிஷபங்களை வலியடக்கியதும்
ஏனம் ஆய் நிலம் கீண்டதும்	வராஹரூபியாய் பூமியைக் கோட்டாற் குத்தியெடுத்ததும்
முன் இராமன் ஆய்	முன்பு சக்ரவர்த்தி திருமகனாய்ப் பிறந்து
மாறு அடர்த்ததும்	சத்ரு ராக்ஷஸர்களைக் கிழங்கெடுத்ததும்
மண் அளந்ததும்	(த்ரிவிக்ரமனாய்) உலகளந்ததும் (ஆகிய இந்த சரிதங்களை)
சொல்லி பாடி	வாயாற்சொல்லி வாய்விட்டுப் பாடி
வண் பேர் பொன்னி ஆறு போல் வரும் கண்ணநீர் கொண்டு	ஔதார்யத்தையும் பெருமையையுமுடைய காவிரியாறு போல் பெருகுகின்ற ஆநந்த பாஷ்பங்களாலே
அரங்கன் கோயில் திரு முற்றம்	நம்பெருமாள் ஸந்நிதி உள் திருமுற்றத்தை
சேறு செய் தொண்டர்	சேறாக்குகிற பாகவதர்களின்
சே அடி செழு சேறு	திருவடிகளால் சூழையுண்ட அழகிய சேற்றை
என் சென்னிக்கு அணிவன்	என்னுடைய நெற்றிக்கு திலகமாகக் கொள்வேன்.

* * *—எம்பெருமானுடைய பல அவதார சரித்திரங்களையே அநவரதம் வாயாரப் பாடிக்கொண்டு அன்பு மிகுதியால் கண்களினின்று பெரிய நதிபோலப் பரவசமாகப் பெருகுகின்ற ஆநந்த பாஷ்பங்களாலே ஸ்ரீரங்கநாதன் ஸந்நிதித் திருமுற்றத்தைச் சேறாக்குகின்ற ஸ்ரீவைஷ்ணவர்களின் திருவடிகளால் தொகையுண்ட சேற்றை எனது தலைக்கு அலங்காரமாகக்கொள்வேன் என்கிறார். கண்ணநீர் எவ்வளவு அடக்கினாலும் நில்லாமல் பெருவெள்ளமிடுதற்குப் பொருத்தமான த்ருஷ்டாந்தம் காவிரியேயாம். கண்ணநீர்=(கண் அ) அ—ஆறும் வேற்றுமை யுருபு; கண்களினுடைய நீர் என்றபடி. (ஊ)

661 தோய்த்ததண்தயிர்வெண்ணெய்பாலுடனுண்டவும் உடன்றுய்ச்சிகண்டு *
ஆர்த்ததோளுடையெம்பிரான் என்னரங்கனுக்கடியார்களாய் *
ஈர்த்தழும்பெழுகாரணவென்றழைத்து மெய்தழும்பத்தொழு
தேத்தி* இன்புறும்தொண்டர்சேவடி யேத்திவாழ்த்துமென்னெஞ்சமே. (எ)

தோய்த்த தண் தயிர்	தோய்த்துக் குளர்ந்த தயிரையும்
வெண்ணெய்	வெண்ணெயையும்
பால்	பாலையும்
உடன் உண்ட	ஒரே காலத்திலே அமுது செய்தவளவில்
ஆய்ச்சி	யசோதைப்பிராட்டியானவள்
கண்டு	(அந்தக் களவுநன்னைப்) பார்த்து
உடன்று	கோபித்து
ஆர்த்த	(பிறகு அவளாலே) பிடித்துக் கட்டப்பட்ட
தோள் உடை	தோள்களையுடைய
எம்பிரான்	எமக்குத்தலைவனை
என் அரங்கனுக்கு	என் ரங்கநாதனுக்கு
அடியார்கள் ஆய்	ஆட்பட்டவர்களாய்
நா தழும்பு எழ	நாக்குத் தடிக்கும்படி
நாரணன் என்று அழைத்து	நாராயண! என்று கூப்பிட்டு
மெய் தழும்ப தொழுது	சரீரம் காய்ப்பேறும்படி வேவித்து
ஏத்தி	தோத்திரம் பண்ணி
இன்புறும்	ஆநந்தமடைகின்ற
தொண்டர்	ஸ்ரீவைஷ்ணவர்களுடைய
சே அடி	திருவடிகளை
என் நெஞ்சம்	என் மனமானது
ஏத்தி வாழ்த்தும்	துதித்து (அவர்களுக்கே) பல்லாண்டு பாடும்

* * *—"ஏத்திறம்! உரலினேடிணைந்திருந்தேங்கிய எளிவே!" என்று நம்மாழ்வார் ஆறுமாதம் மோஹித்துக்கிடக்கும்படி மயக்கவல்ல *கண்ணிநுண் சிறுத்தாம்பினால் கட்டுண்ட அபதாநத்தை அநுஸந்தித்து, "கொண்டல் வண்ணனைக் கோவலனாய் வெண்ணெயுண்டவரயன்—அணியரங்கன்" என்றபடி ஸ்ரீரங்கநாதனை அக்கண்ணபிரானாகப் பாவித்துப் பணிசெய்யும் ஸ்ரீவைஷ்ணவர்களுக்குப் பல்லாண்டு பாடுவதையே தொழிலாகக் கொண்டிருப்பேன் நான் என்கிறார். (ச)

662 பொய்சிலைக்குரலேற்றெருத்தமிறுத்துப் போரரவீர்த்தகோன் *
செய்சிலைச்சுடர்சூழொளித் திண்ணமாமதிள்தென்னரங்கனும் *
மெய்சிலைக்கருமேகமொன்று தம்நெஞ்சில்நின்றுதிகழப்போய் *
மெய்சிலிர்ப்பவர்தம்மையேநினைந்து என்மனம்மெய்சிலிர்க்குமே. (ந)

பொய்	க்ருத்ரிமமாய்
சிலை குரல்	கோபத்தை வெளியிடுகின்ற கோஷத்தை யுடைத்தான
ஏறு	(ஏழு) ரிஷபங்களின்
எருத்தம் இறுத்து	முசுப்புகளை முறித்தவனாய்,
போர் அரவு ஈர்த்த கோன்	போர் செய்யவந்த காளிய நாகத்தைநிரஸித்தஸ்வாமியாய்,
சிலை செய்	கல்லினால் செய்யப்பட்டு
சுடர் ஒளி	மிக்க தேஜஸ்ஸையுடைத்தாய்
திண்ணம்	திருடமாயிருக்குந்தன்மையையுமுடைத்தாய்
மா	பெரிதான
மதிள் சூழ்	மதிளாலே சூழப்பட்ட
தென் அரங்கன் ஆம்	தென்னரங்கத்தில் எழுந்தருளியிருப்பவனான ரங்கநாதனாகிற
மெய் சிலை கரு மேகம் ஒன்று	சரீரத்தில் வில்லோடு கூடிய ஒரு காளமேகமானது
தம் நெஞ்சுள் நின்று திகழப் போய்	தங்கள் மனதில் நிலைத்து விளங்கப்பெற்ற
மெய் சிலிர்ப்பவர் தம்மையே	மயிர்க்கூச் செறியும் சரீரமுடைய ஸ்ரீவைஷ்ணவர்களையே
என் மனம் நினைந்து	என் நெஞ்சானது அநுஸந்தித்து
மெய் சிலிர்க்கும்	மயிர்க்கூச்செறியப் பெற்றது.

* * *—அடியார்களை ஆட்கொள்வதற்காக அருமையான செயல்களைச் செய்தருளின எம்பெருமானாகிற காளமேகத்தை ஹ்ருதயத்திலே வஹிக்கப்பெற்று எப்போதும் மயிர்க்கூச் செறியும் திருமேனியையுடையராயிருக்கின்ற ஸ்ரீவைஷ்ணவர்களை அநுஸந்தித்து, அவர்கள் பாடும் பாட்டை என்னெஞ்சு படாநின்ற தென்கிறார்.

"நிகழப்போய்" என்ற விடத்து, போய்—வார்த்தைப்பாடு.
"மனம் மெய்சிலிர்க்கும்" என்றது—மனம் விகாரப்படாநின்ற தென்றபடி. (நி)

663 ஆதியந்தமனந்தமற்புதமான வானவர்தம்பிரான் *
பாதமாமலர்சூடும்பத்தியிலாத பாவிகளுய்ந்திட *
தீதில்நன்னெறிகாட்டி யெங்குந்திரிந்தரங்கனெம்மானுக்கே *
காதல்செய்தொண்டர்க்கெப்பிறப்பிலும் காதல்செய்யுமென்னெஞ்சமே. (கூ)

ஆதி	ஜகத்காரணபூதனுய்
அந்தம்	ப்ரளயகாலத்திலும் வாழ்பவனுய்
அநந்தம்	ஸர்வவ்யாபியாய்
அற்புதம் ஆன	ஆச்சரிய பூதனுய்
வானவர் தம் பிரான்	அமரர்க்கதிபதியான ரங்கநாத னுடைய
மா மலர் பாதம்	சிறந்த மலர்போன்ற திருவடி களை
சூழும் பத்தி இலாத	சிரஸா வஹிப்பதற் குறுப்பான அன்பு இல்லாத
பாவிகள் உய்ந்திட	பாபிகளும் உஜ்ஜீவிக்கும்படி
எங்கும் திரிந்து	ஸர்வதேசங்களிலும் ஸஞ்சாரஞ் செய்து
நீது இல்	குற்றமற்ற
நல் நெறி	நல்வழிகளை
காட்டி	(தமது அநுஷ்டாந முகத்தாலே) வெளிப்படுத்திக்கொண்டு
எம்மான்	நமக்குத் தலைவனை
அரங்கனுக்கே	ஸ்ரீரங்கநாதனுக்கே
காதல் செய்	பக்தி பூண்டிருக்கின்ற
தொண்டர்க்கு	பாகவதர்கள் விஷயத்தில்
என் நெஞ்சம்	எனது மனமானது
எப் பிறப்பிலும்	எந்த ஜன்மத்திலும்
காதல் செய்யும்	அன்பு பூண்டிருக்கும்.

* * *—ஸகல ஜகத்காரண பூதனுய் ஸர்வவ்யாபகனை எம்பெருமானிடத்து அன்பு இல்லாதவர்களான பாவிகளும் அவ்வன்பைப் பெற்று உஜ்ஜீவிக்குமாறு தேச தேசாந்தரங்க ளெங்கும் ஸஞ்சரித்து ஸ்வரூபாநுரூபமான அர்த்த விசேஷங்களை ஆங்காங்கு உபந்யஸிமுகேந உபதேசித்துவரும் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கே நான் பிறவிதோறும் அன்பு பாராட்டுவேன் என் கிறார். "எப்பிறப்பிலும்" என்ற சொற்போக்கால், அப்படிப்பட்ட ஸ்ரீவைஷ்ணவர்கள் பக்கல் பக்திபண்ணுவதற்காக இன்னும் பல ஜன்மங்களைத் தாம்பெற விரும்பியிருக்குமாறு விளங்கும்.

664 காரினம்புரைமேனிநற்கதிர் முத்தவெண்ணகைச்செய்யவாய் *
ஆரமார்வனரங்கனென்னும் அரும்பெருஞ்சுடரொன்றினை *
சேரும்நெஞ்சினராகிச் சேர்ந்துகசிந்திழிந்தகண்ணீர்களால் *
வாரநிற்பவர்தாளிணைக்கு ஒருவாரமாகுமென்னெஞ்சமே. (எ)

கார் இனம் புரை மேனி	மேகங்களின் திரளை ஒத்த திருமேனியையும்
நல் கதிர் முத்தம் வெண் நகை செய்ய வாய்	அழகிய லாவண்யத்தையும் முத்துகள் போல் வெளுத்த புன் சிரிப்பையுடைய சிவந்த திருப்பவளத்தையும்
ஆரம் மார்வன்	முக்தாஹாரமணிந்த மார்வையு முடையனை
அரங்கன் என்னும்	ஸ்ரீரங்கநாதனுகிற
அரும் பெரும் சுடர் ஒன்றினை	அருமை பெருமையுள்ள வில க்ஷணமானதொரு தேஜஸ்ஸை
சேரும் நெஞ்சினர் ஆகி	கிட்டி அநுபவிக்கவேணுமென் கிற சிந்தையையுடையராய்
சேர்ந்து	(அங்ஙனமே) சேர்ந்து
கசிந்து இழிந்த கண் நீர்கள்	(பக்தி பாரவச்யத்தாலே) சுரந்து பெருகின ஆநந்த பாஷ்பங்கள்
வார நிற்பவர்	வெள்ளமிட்டொழுகும்படி நிற் குமவர்களுடைய
தாள் இணைக்கு	இரண்டு திருவடிகள் விஷயத்தில்
என் நெஞ்சம்	என் மனமானது
ஒரு வாரம் ஆகும்	ஒப்பற்ற அன்பையுடைய தாகும்.

* * *—பல காளமேகங்கள் திரண்டாற்போன்று விளங்குகின்ற திருமேனியையும், அத்திருமேனியில் ஒடுகின்ற விலக்ஷணமான லாவண்யத்தையும், முத்துவரிசை போன்ற புன் முறுவலையுடைய திருவதரத்தையும், முத்துமாலையணிந்த திருமார்பையு முடையனை ஸ்ரீரங்நாத னென்கிற ஒரு பரஞ்சோதியை அடிபணிந்து கண்ணுங் கண்ணீருமாய் நிற்கும் ஸ்ரீவைஷ்ண வர்களுக்கே என் நெஞ்சானது அநந்யப்ரயோஜநமாய் ஆட்பட்ட தென்கிறார். (எ)

665 மாலையுற்றகடல்கிடந்தவன் வண்டுகிண்டுநறுந்துழாய் *
மாலையுற்றவரைப்பெருந்திருமார்வனே மலர்க்கண்ணனே *
மாலையுற்றெழுந்தாடிப்பாடித் திரிந்தரங்கனெம்மானுக்கே *
மாலையுற்றிடும்தொண்டர்வாழ்வுக்கு மாலையுற்றதென்னெஞ்சமே. (அ)

மாலை உற்ற கடல்	(தன் திருமேனி ஸ்பர்சத்தாலே) அலையெறிகிற திருப்பாற்கட லில்
கிடந்தவன்	பள்ளிகொள்பவனும்
வண்டு கிண்டு நறுதுழாய் மாலை உற்ற	(தேனுக்காக) வண்டுகள் குடை யா நின்றுள்ள திருத்துழாய் மாலையை அணிந்த
வரை பெரு திரு மார்பினை	மலைபோற் பெருமை தங்கிய திருமார்பையுடையவனும்

மலர் கண்ணினை	செந்தாமரை மலர்போன்ற நிருக்கண்களையுடையவனு மான ஸ்ரீரங்கநாதன் விஷ யத்தில்
மாலை உற்று	வ்யாமோஹத்தை அடைந்து
எழுந்து ஆடி	(இருந்தவிடத்திலிராமல்) எழுந்து கூத்தாடி
பாடி	(வாயாரப்) பாடி
திரிந்து	(இவ்ய தேசங்கள்தோறும் ஸஞ் சரித்து
அரங்கன் எம் மானுக்கே	எமக்கு ஸ்வாமியான ஸ்ரீரங்க நாதன் விஷயத்திலேயே
மாலை உற்றிடும்	பித்தேறித் திரிகின்ற
தொண்டர்	ஸ்ரீவைஷ்ணவர்களுடைய
வாழ்வுக்கு	ஸ்ரீவைஷ்ணவ லக்ஷ்மிக்கு
என் நெஞ்சம் மாலை உற்றது	என் மனம் மயங்கிக்கிடக்கின் றது.

* * *—திருப்பாற்கடலில் பள்ளிகொள்பவனும் நறுந்தேன் மிக்க செவ்வித் துழாய் மாலையையணிந்த பெருந் திருமார்பையுடையவனும் புண்டரீகாக்ஷனுமாகிய ஸ்ரீரங்கநாதன் விஷ யத்திலே மையல்கொண்டு இருந்தவிடத்திலிருக்க மாட்டாமையாலே எழுந்து ஆடுவது பாடு வதாய் விகாரப்படுகின்ற ஸ்ரீவைஷ்ணவர்களுடைய அந்த ஸ்ரீவைஷ்ணவலக்ஷ்மிக்கே என் நெஞ்சு பித்தேறி நின்ற தென்கிறார். அப்படிப்பட்ட நிலைமை நமக்கு வாய்க்குமா? என்று ஆசைகொள்ளா நின்ற தென்றபடி. இரண்டாமடியில் மாத்திரம் மாலே என்பது ஸோ என்ற வடசொல் விகாரம். மற்ற மூன்றடிகளிலுள்ள மாலே—மோஹம் என்னும் பொருளதான மால் என்னுஞ் சொல் இரண்டாம் வேற்றுமை யுருபேற்றது. (அ)

666 மோய்த்துக்கண்பனிசோரமெய்கள்சிலிர்ப்ப ஏக்கியிளைத்துநின்று *
எய்த்துக்கும்பிடுநட்டமிட்டெழுந்து ஆடிப்பாடியிறைஞ்சி * என்
அத்தனச்சனரங்கனுக்கடியார்களாகி அவனுக்கே
பித்தராமவர் * பித்தரல்லர்கள் மற்றையார்முற்றும்பித்தரே. (கூ)

கண் பனி	ஆநந்த பாஷ்பமானது
மொய்த்து சோர	இடைவிடாமல் சொரியவும்
மெய்கள் சிலிர்ப்ப	மயிர்க்கூச்செறியவும் உடல்
ஏக்கி இளைத்து நின்று	நெஞ்சு தளர்ந்து களைத்துப் போய்
எய்த்து	நிலே தளர்ந்து
கும்பிடு நட்டம் இட்டு	மஹா கோலாஹலத்தோடு கூடி ய கூத்தனத்தைப் பண்ணி
எழுந்து ஆடி பாடி இறைஞ்சி	நின்றவிடத்து நில்லாமல் (பல வித) ஆட்டங்களாடிப் பாட்டு கள் பாடி வணங்கி,
என் அத்தன்	எனக்குத் தந்தையாய்
அச்சன்	ஸ்வாமியான
அரங்கனுக்கு	ஸ்ரீரங்கநாதனுக்கு
அடியார்கள் ஆகி	அடிவர்களாய்
அவனுக்கே	அந்த ரங்கநாதன் விஷயத்தி லேயே
பித்தர் ஆமவர்	பித்தேறித் திரிகிறவர்கள்
பித்தர் அல்லர்கள்	பைத்தியக்காரர்களல்லர்;
மற்றையார் முற்றும்	(பத்திகார்யமான இந்த வ்யா மோஹமில்லாத) மற்றபேர் களெல்லாம்
பித்தரே	பைத்தியக்காரர்கள் தான்.

667 அல்லிமாமலர்மங்கைநாதன் அரங்கன்மெய்யடியார்கள்தம் *
எல்லையிலடிமைத்திறத்தினில் என்றுமேவுமனத்தனும் *
கொல்லிகாவலன்கூடல்நாயகன் கோழிக்கோன்குலசேகரன் *
சொல்லின்னின்தமிழ்மாலைவல்லவர் தொண்டர்தொண்டர்களாவரே. (ம)

அல்லி மா மலர் மங்கை நாதன்	அகவிதழ்களையுடைய சிறந்த (தாமரை) மலரில் பிறந்த பிராட்டிக்குக் கணவனான
அரங்கன்	ஸ்ரீரங்கநாதனுடைய
மெய் அடியார் கள் தம்	உண்மையான பக்தர்களு டைய
எல்லையில் அடி மை திறத்தினில்	எல்லையிலே உள்ள சேஷவ்ருத் தியிலே
என்றும் மேவு மனத்தன் ஆம்	எப்போதும் பொருந்திய திரு வுள்ளத்தை யுடையவரும்
கொல்லி காவலன்- கூடல் நாயகன்	கொல்விநகர்க்கு அரசரும் மதுரைக்கு அரசரும்
கோழி கோன்	உறையூருக்கு அரசருமான
குலசேகரன்	குலசேகராழ்வாருடைய
சொல்லின்	ஸ்ரீஸூக்திகளாலே அமைந்த
இன் தமிழ் மாலை வல்லவர்	இனிய தமிழ்ப்பாசுரங்களை ஓதவல்லவர்கள்
தொண்டர் தொண்டர்கள் ஆவர்	தாஸாநுதாஸராகப் பெறுவர்.

* * *—எல்லையி லடிமைத்திறமாவது—" அடியா ரடியார்தம் மடியா ரடியார்தமக்க டியா ரடியார்தம் அடியா ரடியோங்களே " என்கிற சேஷத்வகாஷ்டை. (ம)

அடி-வரவு:—தேட்டு தோட்டோ தோய்த்த பொய் ஆகி காரினம் மாலே மொய்த்து அல்லி மெய்.

ஸாம்ஸாரிகர் படியில் மிக்க வெறுப்பு உண்டாகி, அவர்களைக் காண்பதும் அவர்களோடு ஸஹவாஸஞ் செய்வதும் அஸஹ்யமான நிலைமை தமக்குப் பிறந்தபடியை அருளிச்செய்கிறார்.

668 மெய்யில்வாழ்க்கையை மெய்யெனக்கொள்ளும் * இவ்வையந்தன்னெடும் கூடுவதில்லையான் * ஐயனே! அரங்காவென்றழைக்கின்றேன் * மையல்கொண்டொழிந்தேன் என்றன்மாலுக்கே. (க)

மெய்யில் வாழ்க்கையை — ப்ரக்ருதி ப்ராக்ருதங்களோடு பொருந்தி வாழ்வதையே
மெய் என கொள்ளும் — பாரமார்த்திகமாகக் கருதுகின்ற
இவையம் தன்னெடும் — இவ்வுலகத்தாரோடு
யான் கூடுவது இல்லை — (இனி) நான் சேர்வதில்லை;
ஐயனே — 'ஸ்வாமீ'
அரங்கா — 'ஸ்ரீரங்கநாதனே!'
என்று அழைக்கின்றேன் — என்று (பகவந்நாமங்களைச் சொல்லி) அழையா நின்றேன்;
என் தன் மாலுக்கே — என்னிடத்தில் வாத்ஸல்ய முடைய எம்பெருமான் பக்கலிலேயே
மையல் கொண்டொழிந்தேன் — வ்யாமோஹமடைந்திட்டேன்.

மெய்யில் வாழ்க்கை = மெய் இல் என்று பிரித்து, பொய்யாகிய வாழ்வை என்றுமாம். (க)

669 நூலினேரிடையார் திறத்தேநிற்கும் * ஞாலந்தன்னெடும் கூடுவதில்லையான் * ஆலியாவழையா அரங்காவென்று * மாலெழுந்தொழிந்தேன் என்றன்மாலுக்கே. (உ)

நூலின் நேர் இடையார் திறத்து நிற்கும் — நூல் போன்று (ஸூக்ஷ்மமான) இடையையுடைய பெண்டிர் விஷயத்திலேயே பொருந்தி யிருக்கிற
ஞாலம் தன்னெடும் — (இந்த) ப்ராக்ருத மனிதரோடு
யான் கூடுவது இல்லை—;
ஆலியா — (காதலுக்குப் போக்கு வீடாகக்) கூத்தாடி
அரங்கா என்று அழையா — 'ஸ்ரீரங்கநாதனே!' என்று கூப்பிட்டு
என் தன் மாலுக்கே — என்மேல் வ்யாமோஹமுடைய எம்பெருமான் திறத்திலேயே
மால் எழுந்தொழிந்தேன் — மோஹமுற்றேன்.

* * * ஆலியா, அழையா = 'செய்யா' என்னும் வாய்பாட்டு இறந்தகால வினையெச்சம்; ஆலித்து அழைத்து என்றபடி. (உ)

670 மாரனார் வரிவெஞ்சிலைக்காட்செய்யும் * பாரினரோடும் கூடுவதில்லையான் * ஆரமார்வன் அரங்கனனந்தன் * நல் நாரணன் நரகாந்தகன்பித்தனே. (ஊ)

மாரனார் வரி வெஞ் சிலைக்கு — மன்மதனுடைய அழகிய கொடிய வில்லுக்கு
ஆள் செய்யும் — ஆட்பட்டு (விஷய ப்ரவணராய்த்) திரிகிற
பாரினரோடும் — (இப்) பூமியிலுள்ள ப்ராக்ருதர்களோடு
யான் கூடுவது இல்லை—;
ஆரம் மார்வன் — முக்தாஹாரத்தைத் திருமார்பிலே அணிந்துள்ளவனும்
அனந்தன் — அளவிடமுடியாத ஸ்வரூபஸ்வபாவங்களையுடையனும்
நல் நாரணன் — ஸர்வ ஸ்வாமியாய்
நரக அந்தகன் — அடியவர்களை நரகத்தில் சேராதபடி காத்தருள்பவனான
அரங்கன் — ஸ்ரீரங்கநாதன் விஷயத்திலே
பித்தன் — மோஹமுடையனாயிரா நின்றேன்.

* * * நரகாந்தகன்—நரகாஸுரனைக் கொன்றவன் என்றுமாம். (ஊ)

671 உண்டியே உடையே உகந்தோடும் * இம் மண்டலத்தொடுங் கூடுவதில்லையான் * அண்டவாணன் அரங்கன்வன்பேய்முலை * உண்டவாயன்றன் உன்மத்தன்காண்மினே (எ)

உண்டியே ஆஹாரத்தையும்
உடையே வஸ்திரத்தையுமே
உகந்து ஓடும் } விரும்பி(க் கண்டவிட மெங் கும்) ஓடித்திரிகிற
இ மண்டலத் தொடும் } இந்தப் பூமண்டலத்திலுள்ள பிராகிருதர்களோடு
யான் கூடுவது இல்லை—;

அண்டம் வாழ்நன்—பரமபதத்திலே வாழ்பவனும்
வல் பேய் முலை உண்ட வாயன் } கல்நெஞ்சையுடைய பூதனை யின் முலையை அமுது செய்த வாயையுடையனுமான
அரங்கன் தன் ஸ்ரீரங்கநாதன் விஷயத்தில்
உன்மத்தன் } பைத்தியம் பிடித்தவனைப்போ நின்றேன்.

* * * 'ஸ்ரீராமாயணம் எங்கு உபந்யஸிக்கிறார்கள்? ஸ்ரீ பாகவதம் எங்கு உபந்யஸிக்கிறார்கள்? பகவத்ஸேவை எங்கே கிடைக்கும்? பாகவதஸேவை எங்கே கிடைக்கும்?' எல்லா காதும் கண்ணும் தினவெடுத்து ஓடிக்களிக்கவேண்டியது ஸ்வரூபமாயிருக்க, அஃதொழிந்து 'சோறு கொடுப்பது எங்கே? கூறை கிடைப்பது எங்கே?' என்று வாய்வெருவிக் கொண்டு பறந்தோடுகின்ற இப்பாவிகளோடு எனக்குப் பொருந்தாது. விரோதிகளைப் போக்கித் தன்னை அருள்கின்ற எம்பெருமான்குணங்களையே நினைந்து நைந்து உள்கரைந்துருகுமவன் நான் என்கிறார். (அ)

672 நீதில்கன்னெறிநிற்க அல்லாதுசெய் * நீதியாரோடும் கூடுவதில்லையான் *
ஆதியாயன் அரங்கனந்தாமரை * பேதைமாமணவாளன்றன் பித்தனே. (ஆ)

நீது இல் நல் கெறி நிற்க } குற்றமற்ற நல்வழி இருக்கச் செய்தே (அவ்வழியில் போகாமல்)
அல்லாது செய் நீதியாரொடும் } நல்வழிக்கு எதிர்த்தட்டானவற்றைச் செய்வதை விரதமாகக் கொண்டுள்ள பிராகிருதர்களோடு
யான் கூடுவது இல்லை—;

ஆதி (உலகங்கட்கு) முதல்வனும்
ஆயன் } ஸ்ரீகிருஷ்ணனாய் அவதரித்து ஸர்வஸுலபனும்
அம் தாமரை பேதை மா மணவாளன் } அழகிய தாமரைப்பூவில் அவதரித்த பிராட்டியின் வல்லபவனான
அரங்கன் தன் ஸ்ரீரங்கநாதன் திறத்தில்
பித்தன் மோஹங் கொண்டிரா நின்றேன்.

* * * தேவதாந்தரங்களைப் பற்றுகை, தீயநெறி; எம்பெருமானை ஸ்வயம் ப்ரயோஜநமாகப் பற்றுகை; நல்லநெறி; ஐச்வரியம் முதலிய க்ஷுத்ரபுருஷார்த்தங்களை விரும்பி அவற்றுக்காக எம்பெருமானைப் பற்றுகை, தீமையோடு கலகிய நல்ல நெறி—என்று கண்டுகொள்க. அநந்ய ப்ரயோஜநமாக எம்பெருமானைப் பற்றுகையாகிற பரமசுத்த மார்க்கத்தை விட்டிட்டு, ஸ்வரூப விருத்தமாக ஒழுகுகின்றவர்களோடு எனக்குப் பொருந்த மாட்டாதென்றாராயிற்று. ()

673 எம்பரத்தர் அல்லாரோடுங்கூடலன் * உம்பர்வாழ்வை ஒன்றுகக்கருதலன் *
தம்பிரானமரர்க்கு அரங்கர்கர் * எம்பிரானுக்கு எழுமையும்பித்தனே. (இ)

எம் பரத்தர் அல்லா ரொடும் } என்னைப்போலே அநந்ய ப்ரயோஜநராயிராதவர்களோடு (நான்) கூடமாட்டேன்;
கூடலன்
உம்பர் வாழ்வை } தேவதைகளின் ஸ்வர்க்கம் முதலிய போகங்களையும்
ஒன்று ஆக ஒரு புருஷார்த்தமாக
கருதலன் எண்ணமாட்டேன்;

அமரர்க்கு நித்யஸூரிகளுக்கு
தம்பிரான் ஸ்வாமியாய்
அரங்கம் நகர் கோயிலிலே எழுந்தருளியிருக்கிற
எம்பிரானுக்கு பெரிய பெருமாள் விஷயத்தில்
எழுமையும் எப்போதும்
பித்தன் பித்தனைகா நின்றேன்.

* * * ஸம்ஸாரத்தில் வெறுப்பும் கைங்கரியத்தில் விருப்பும் இல்லையாகில் ப்ரஹ்மாதிகளின் ஸம்பத்தேயாகிலும் அதை நான் க்ருணமாகவே நினைப்பேன்; நித்யஸூரிகளெல்லாம் அநுபவிக்குமாபோலே ஸம்ஸாரிகளும் இழவாமல் அநுபவிக்கும்படி கோயிலிலே வந்து ஸுலபராகக் கண்வளர்ந்தருளுமவருடைய இந்த நீர்மையை நினைத்து 'இது எத்திறம்!' என்று மோஹிப்பதே எனக்குத் தொழிலாயிருக்கு மென்கிறார். (ஈ)

674 எத்திறத்திலும் யாரோடும்கூடும் * அச்சித்தந்தன்னைத் தவிர்த்தனன் செங்கண்மால் *
அத்தனே! அரங்காவென்றழைக்கின்றேன் * பித்தனையொழிந்தேன் எம்பிரானுக்கே. (எ)

செங்கண்மால்	புண்டரீகாக்ஷனை எம்பெருமான்	அத்தனே	ஸ்வாமியே!
எத்திறத்திலும்	எந்த விஷயத்திலும்	அரங்கா	ஸ்ரீரங்கநாதனே!
யாரொடும்	கண்ட பேர்களோடே	என்று அழைக்கின்றேன்	என்று கூவாநின்றேன்;
கூடும் அச்சித்தம் தன்னை	சேர்ந்து கெட்டுப்போவதற்கு உறுப்பான நெஞ்சை		
தவிர்த்தனன்	நீக்கியருளினன்; (ஆதலால்)		

எம்பிரானுக்கே பித்தனாய் ஒழிந்தேன்—.

* * * 'ஆழ்வீர்! அயலாரோடு பொருந்தாமைக்கடியான நன்மை உமக்கு வந்தபடி என்?' என்று சிலர் கேட்க; இது நானே ஸம்பாதித்துக் கொண்ட தல்ல; ஸர்வேச்வரனது அருளடியாகக் கிடைத்ததென்கிறார். 'ஒரு அவைஷ்ணவனோடு பேசினால் ஸகல புருஷார்த்தங்களும் கொள்ளைகொள்ளையாகக் கிடைக்கும்' என்று ஒரு ஆப்தன் சொன்னபோதிலும் அப்போதும் அவர்களை த்ருணமாகக் கருதி, ஸ்ரீரங்கநாதா! ஸ்ரீரங்கநாதா!' என்றே எப்போதும் வாய்வெருவிக் கொண்டிருக்குமாறு எம்பெருமான் எனக்கு அருள்புரிந்த பாக்கியம் மற்றை யோர்க்குக் கிடைக்குமோ என்கிறார். எம்பெருமான் என்னை ஒருதடவை குளிரக் கடாக்ஷித்த மாத்திரத்திலே இந்த பாக்கியம் வாய்த்தது என்பார் "செங்கண்மால்" என்கிறார். (எ)

675 பேயரேயெனக்கியாவரும் யானுமோர் பேயனே * எவர்க்குமிதுபேசியேன்?
ஆயனே! அரங்காவென்றழைக்கின்றேன் * பேயனையொழிந்தேன் எம்பிரானுக்கே. (அ)

யாவரும்	இவ்வுலகத்தாரடங்கலும்	இது	இவ்விஷயத்தை
எனக்கு	என் வரைக்கும்	பேசி	(விரிவாகச்) சொல்வதனால்
பேயரே	பைத்தியக்காரர்கள் தான்;	என்	என்ன ப்ரயோஜநமுண்டு!
யானும்	(அவர்களிற் காட்டில் விலக்ஷணனான) நானும்	ஆயனே	'ஸ்ரீகிருஷ்ணனே!
		அரங்கா	ஸ்ரீரங்கநாதனே!'
எவர்க்கும்	எவர்களுக்கும்	என்று அழைக்கின்றேன்	என்று (பகவந்நாமங்களைச் சொல்லி) கூவாநின்றேன்;
ஓர் பேயனே	ஒரு பைத்தியக்காரன் தான்;		

எம்பிரானுக்கே பேயனாய் ஒழிந்தேன்—.

* * * "நிமந்த்ரணம் ஹி நாஸ்தீஹ கௌலீ நவாநாம்" [கோமணம் கட்டாத ஊரில் கோமணம் கட்டுவானொருவன் பைத்தியக்காரன்போல் பரிஹஸிக்கத்தக்கவனவன்] என்ற பழமொழியின்படி—லோகவிஜாதீயரான நீர் பைத்தியக்காரன் என்று எல்லாராலும் இகழக்கூடியவரா யிருக்கின்றீரே! என்று ஆழ்வாரை நோக்கிச் சிலர் கூற, அவர்களுக்கு விடை கூறுகின்ற பாசுரமிது. (அ)

676 அங்கையாழி அரங்கனடியிணை * தங்குசிந்தைத் தனிப்பெரும்பித்தனும் *
கொங்கர்கோன் குலசேகரன்சொன்னசொல்* இங்குவல்லவர்க்கு ஏதமொன்றில்லையே. (கூ)

அம்கை ஆழி	அழகிய திருக்கையிலே திருவாழியாழ்வானை ஏந்தியுள்ள	குலசேகரன்	குலசேகராழ்வார்
		சொன்ன	அருளிச்செய்த
அரங்கன்	ஸ்ரீரங்கநாதனுடைய	சொல்	இப்பாசுரங்களை
அடி இணை	திருவடிகளில்	இங்கு	இவ்விபூதியிலே
தங்கு சிந்தை	பொருந்திய மனமுடையவராய்	வல்லவர்க்கு	ஓதவல்லவர்களுக்கு
தனி பெரு பித்தன் ஆம்	லோக விலக்ஷணரான பெரிய பித்தராய்	ஏதம் ஒன்று இல்லை	(பகவதநுபவத்திற்கு) ஒருவிதமான இடையூறும் உண்டாகமாட்டாது.
கொங்கர் கோன்	சேரதேசத்தவர்களுக்குத் தலைவரான		

அடிவரவு:—மெய் நூல் மாரன் உண்டி தீதில் எம்பரத்தர் எத்திறம் பேயர் அங்கை ஊன்.

நான்காந்திருமொழி—ஊனேறு செல்வம்.

இவேங்கட மலையில் தமக்குள்ள ஆதராதிசயத்தை வெளியிடுபவராய்த் திருமலையோடு ஸம்பந்த முடையதொரு பிறப்பைத் தாம்வேண்டுகிறார் இத்திருமொழியில்.

677 ஊனேறுசெல்வத்து உடற்பிறவியான்வேண்டேன் *
ஆனேறேழ்வென்றருன் அடிமைத்திறமல்லால் *
கூனேறுசங்கமிடத்தான்றன் வேங்கடத்து *
கோனேரிவாழுங் குருகாய்ப்பிறப்பேனே. (க)

ஆன் ஏறு ஏழ் வென்றான்	(நப்பின்னைப் பிராட்டிக்காக) ஏழு எருதுகளை ஜயித்தவனை எம்பெருமானுக்கு	(அன்றியும்,) கூன் ஏறு சங்கம்	வளைந்திருக்கிற ஸ்ரீபாஞ்சஜந்யத்தை
அடிமை திறம் அல்லால்	கைங்கரியம் செய்வதையே நான் வேண்டுவதல்லாமல்	இடத்தான் தன்	இடத்திருக்கையிலேயுடையனை எம்பெருமானுடைய
ஊன் ஏறு செல்வத்து உடல் பிறவி	(நாளுக்கு நாள்) மாம்சம் வளர்ந்து தடிப்பதாகிற செல்வத்தையுடைய இம்மனித வுடம்பெடுத்துப் பிறத்தலை	வேங்கடத்து	திருவேங்கட மலையில்
யான் வேண்டேன்	(விவேகம் பெற்ற) நான் (இனி) விரும்பமாட்டேன்;	கோனேரி வாழும்	திருக்கோனேரி என்கிற ஸ்வாமி புஷ்கரிணியில் வாழ்கிற
		குருகு ஆய் பிறப்பேன்	நாரையாகவாவது பிறக்கக் கடவேன்.

* * *—'திருவேங்கடமலையில் வாழ்ச்சி கிடைக்கப்பெற்றால், விவேகமற்றதொரு திர்யக்ஜாதியாகப் பிறப்பதும் அடியேனுக்குப் பரமோத்தேச்யமாகும். அத்திருமலை வாழ்ச்சிக்கு விரோதியான இம்மானிட வுடற்பிறவி எனக்கு ஒருநாளும் வேண்டா' என்கிறார். அடிமைத் திறமாவது—திருவடி திருவனந்தாழ்வான் இளையபெருமாள் முதலானவர்கள் போலப் பலபடியாலும் ஓழிவில் காலமெல்லா முடனாய் மன்னி வழுவிலா வடிமைசெய்யும் வகை.

கோன் ஏரி=ஸ்வாமி புஷ்கரிணி. இப்பெயர் ஸர்வலோக நிர்வாஹகனான எம்பெருமானுக்கு மிகவும் பிரியமான தடாகமெனப் பொருள்படும். அன்றி, எல்லாத் தீர்த்தங்களினும் தலைமைபெற்ற தீர்த்தமென்றும் பொருளாகலாம். இந்த ஸ்வாமி புஷ்கரிணியின் சிறப்பு, வராஹ புராணம் முதலியவற்றில் பரக்கக் காண்தக்கது. திருமலையில் ஸந்நிதிக்கு அருகிலுள்ள பிரதானமான திவ்யதீர்த்தம் இது.

"உடல்பிறவி யான் வேண்டேன்" என்று பிறவியை இகழ்ந்தவர்தாமே "குருகாய்ப் பிறப்பேனே" என்று பிறவியை விரும்பினமையால், அங்கே பிறப்பது பிறப்பன்று; அது விரஜாநதியைச் சேர்ந்து வைகுண்டத்தில் வாழ்வதொக்குமென்று கருதினர் என்பது விளங்கும். ஊன், ஆன், கோன் என்பவற்றில், ன்—சாரியை. குருகு என்ற சொல்—அன்னம் க்ரௌஞ்சம் என்ற நீர்வாழ்பறவைகளைக் குறிப்பதாகவும் பறவைப்பொதுப்பெயராகவும் வழங்கும்.

678 ஆனைசெல்வத்து அரம்பையர்கள்தற்சூழ* வானுளுஞ்செல்வமும் மண்ணரசும்யான்வேண்டேன்*
தேனுர்பூஞ்சோலைத் திருவேங்கடச்சுனையில் * மீனுய்ப்பிறக்கும் விதியுடையேனவேனே. (உ)

ஆதை செல் வந்து	அழியாத (யௌவநமாகிய) ஸம்பத்தையுடைய
அரம்பையர்கள்	அப்ஸரஸ் ஸ்த்ரீகள்
தன் சூழ	தன்னைச் சூழ்ந்து நிற்க
வான் ஆளும்	மேலுலகத்தை அரசாளுகின்ற
செல்வமும்	ஐச்வர்யத்தையும்
மண் அரசும்	இப்பூலோகத்தை அரசாளும் ஆட்சியையும்
யான் வேண் டேன்	(வருத்தமின்றிக் கிடைப்பதா யினும்) யான் விரும்பமாட் டேன்;
தேன் ஆர் பூ சோலை	தேன் மிக்க மலர்களுள்ள சோலைகளையுடைய
திருவேங்கடம்	திருவேங்கட மலையிலிருக்கின்ற
சுனையில்	சுனைகளிலே
மீன் ஆய் பிறக்கும்-ஒரு மீனைப் பிறக்கத்தக்க	
விதி	பாக்யத்தை
உடையேன் ஆவேன்	உடையவனாகக்கடவேன்.

* * *—'இந்திரன் முதலிய தேவாதி தேவர்களின் பதவிகளும் இவ்வுலகத்து அரசாட்சியுமாகிய இரண்டும் ஒருங்கு கிடைத்தாலும் வேண்டா' என்று விலக்குகின்றார். அரம்பையர்கள்—ரம்பை முதலியோர். இரண்டாமடியிலுள்ள சொற்போக்கினால், இவை எனக்கு எக்காலத்திலே கிடைத்தாலும் வேண்டா வென்பதும், இவற்றை யான் வேண்டாமைக்குக் காரணம் இவை கிடையாமையன்று, இவற்றில் எனக்கு விருப்பமில்லாமையே என்பதும் தோன்றும். முக்தியின் மஹாநந்தத்தை நோக்குங்கால் இவ்விரண்டும் சிற்றின்பமேயாதலும், சாச்வதமான அந்தஸ்தாநத்தை நோக்குங்கால் இவை அழிவுள்ளனவேயாதலும், ஆத்மாவைக் கரும பந்தங்களினின்று விடுவிக்கின்ற அவ்விட்டு நிலைபோலவன்றி இவை பந்தங்களே உறுதிப்படுத்துதலில் பொன்விலங்கும் இருப்புவிலங்கும் போலத் தம்முள் ஒப்பனவே யாதலும் கருதத்தக்கன. தேன்ஆர்—வண்டுகள் ஆரவாரிக்கின்ற என்றுமாம். சுனை—மலையில் நீரூற்றுள்ள குளம்.

கீழ் "குருகாய்ப் பிறப்பேனே" என்றவர், அதற்கு இறகுகள் இருப்பதால் அது அத்திருமலையை விட்டுப் பறந்து வேற்றிடத்திற்குச் சென்றிடக்கூடுமெனக் கருதி, அங்ஙனமன்றி அத்திருமலையிலேயே பிறப்பு வாழ்ச்சி இறப்புகளையுடைய மீனைப் பிறப்பேனகென்று இப்பாட்டில் வேண்டுகின்றார். குருகாய்ப் பிறத்தலோடு அதற்கு இரையாகின்ற மீனைப் பிறத்தலோடு இவர்க்கு வாசியில்லை; திருமலையில் எதேனும் ஒரு ஜன்மத்தையே அபேக்ஷிப்பவராதலால்: "எம்பெருமான் பொன்மலைமேல் எதேனு மாவேனே" என்பர் பின்னும். (உ)

679 பின்னிட்டசடையானும் பிரமனுமிந்திரனும் *
துன்னிட்டுப்புகலரிய வைகுந்தநீள்வாசல் *
மின்வட்டச்சுடராழி வேங்கடக்கோன்தானுமிழும் *
பொன்வட்டில்பிடித்துடனே புகப்பெறுவனுவேனே. (ரூ)

பின்னிட்ட சடையானும்	திரித்துவிட்ட சடையையுடைய வரனை சிவனும்
பிரமனும்	சதுர்முகனும்
இந்திரனும்	தேவேந்திரனும்
துன்னிட்டு	நெருக்கி
புகல் அரிய	உள்ளே புகுவதற்கு ஸாத்யமல்லாமலிருக்கின்ற
வைகுந்தம் நீள் வாசல்	பூலோக வைகுண்டமாகிய திருமலையிலுள்ள திருக்கோயிலின் நீண்ட திருவாசலிலே
மின் வட்டம் சுடர் ஆழி	மின்னலை வளைத்தாற்போல சோதிமயமாய் விளங்குகின்ற வட்டவடிவமான சக்ராயுதத்தையுடைய
வேங்கடம் கோன் தான்	திருவேங்கடமுடையான்
உமிழும்	வாய்நீருமிழ்கின்ற
பொன் வட்டில்	தங்க வட்டிலை
பிடித்து	கையிலேந்திக்கொண்டு
உடனே புக பெறுவேன் ஆவேனே	அத்தரங்க பரிஜநங்களுடனே நானும் உள்ளே புகும் பாக்கியத்தைப் பெறக்கடவேன்.

* * *—எம்பெருமானுக்கு அந்தரங்க கைங்கரியம் செய்யப் பெறுவதுண்டானால் மநுஷ்ய ஜன்மமேயாகிலும் அமையும் என வேண்டுகின்றார். பிரமன் சிவன் இந்திரன் முதலிய தேவர்கள் திருவேங்கடமுடையானைச் சேவித்தலில் விருப்பத்தால் அங்குவந்து அக்கருத்தினாலேயே மிகுதியாகக் கூடியுள்ள அடியார்களின் பெருங்கூட்டத்தின் நடுவில் சிகரி நெருக்குண்டு உள்ளேபுகமுடியாமல் தடுமாறப்பெற்ற அத்திருமலையின் கோயில்வாயிலில் யான் அப்பெருமானுக்கு அந்தரங்க கிங்கரனைப் அவன் வாய்நீருமிழும் பொற்காளாஞ்சியை ஏந்திக்கொண்டு செல்லுமளவில், "இவர் அந்தரங்க கைங்கரியபரர்" என்று அனைவரும் விலகி வழிவிட, அர்ச்சக பரிசாரகர்களுடனே யானும் தடையின்றி எளிதில் இனிது உள்ளேபுக்கு கர்ப்பக்ருஹத்திற் சேர்ந்து அருகில் நின்று கைங்கரியம்பண்ணப் பெறுவேனகவென்று பிரார்த்திக்கின்றார்.

பின்னிட்ட—பின்னிய; இடு—துணைவினை. பின் இட்ட என்று பிரித்து, பின்னே தொங்கவிட்ட சடையையுடையவன் என்றலுமாம். இங்ஙனம் 'பின்னிட்ட' என்றதைச் சடைக்கு விசேஷணமாக்காமல் சடையானுக்கு விசேஷணமாக்கி, தந்தையான நான்முகன் முன்னேபோகப் பின்னே செல்கின்றவன் புத்திரனை ருத்ரன் என்று உரைத்தலு முண்டு. கீழ் "மீளப்பிறக்கும் விதியுடையேனுவேன்" என்றவர், மீளனது நீர்மிலையைப்பற்றியே உயிர்தரிக்கவேண்டிவருமேயென்று ஒரு கைங்கரியபரனகப் பிறக்கவேணுமென்று அபேக்ஷித்தார். வட்டில்—இங்கே, படிக்கம். உடனே—சீக்கிரமாக எனினுமாம். 'வாசல் புகப்பெறுவேன்' என்று அன்வயம். (சு)

680 ஒண்பவளவேலை உலவுதண்பாற்கடலுள் *
கண்துயிலும்மாயோன் கழலிணைகள்காண்பதற்கு *
பண்பகரும்வண்டினங்கள் பண்பாடும்வேங்கடத்து *
சென்பகமாய்நிற்கும் திருவுடையேனுவேனே. (சு)

ஒண் பவளம் வேலை உலவு — ஒளியுள்ள பவழக்கொடிகளைக் கரையிலே கொணர்ந்து கொழித்து (அலைகள்) உலாவுகிற
தண் பாற்கடலுள் — குளிர்ந்த திருப்பாற்கடலிலே
கண் துயிலும் — யோக நித்திரை செய்தருள்கின்ற
மாயோன் — ஆச்சரிய சக்தியுக்தனை எம் பெருமானுடைய
கழல் இணைகள் — இரண்டு திருவடிகளை
காண்பதற்கு — ஸேவிக்கும்படியாக,
பண் பகரும் வண்டு இனங்கள் — இசையையே பேசுகிற வண்டுகளின் கூட்டங்கள்
பண் பாடும் வேங்கடத்து — பண்ணிசை பாடப்பெற்ற திருமலையிலே
செண்பகம் ஆய் நிற்கும் திரு உடையேன் ஆவேன் — சண்பக மரமாய் நிற்கும் பாக்கிய முடையேனகக் கடவேன்.

* * *—ஜங்கமமானதொரு பிறட்புவேண்டு மென்பதில்லை; திருவேங்கடமலையில் இருப்பு நேரும்படியாக அங்கு நிற்பதொரு ஸ்தாவரமாகவாயினும் நான் ஆகவேண்டுமென்று அபேக்ஷிக்கின்றார். "வானவர் வானவர்கோனெடுஞ் சிந்து பூமகிழும் திருவேங்கடம்" என்றபடி பரமபதத்திலுள்ளார் புஷ்பவர்ஷம் வர்ஷிக்கின்ற இடமாதல்பற்றிப் புஷ்பமண்டப மெனப்படுகின்ற திருமலையிலே எம்பெருமானுக்குப் புஷ்பகைங்கரியஞ்செய்வது விசேஷமாதலால் அக்கைங்கரியத்துக்கு உபயோகப்படுவதொரு மரமாதலை வேண்டினரென்க. பலவகைப் புஷ்பங்களுள் சண்பகமலர் எம்பெருமானது திருவுள்ளத்துக்கு மிகவும் உகப்பாதலைப் பெரியாழ்வார் பூச்சூட்டல் திருமொழியில் "தேனிலினிய பிரானே! செண்பகப்பூச் சூட்டவாராய்" என்று இதனை முதலிற்கூறியதனாலும் உணர்க. கீழ்ப்பாட்டில் விரும்பின கைங்கரியம் கிடைத்தால் வட்டிலைக் களவுசெய்ய ஆசைதோன்றிச் சிறையிருக்க நேரிடும் என நினைத்து சண்பகமரமாய்ப் பிறக்கவேணுமென்று அபேக்ஷித்தபடி. (சு)

681 கம்பமதயானைக் கழுத்தகத்தின்மேலிருந்து *
இன்பமரும்செல்வமும் இவ்வரசும்யான்வேண்டேன் *
எம்பெருமானீசன் எழில்வேங்கடமலைமேல் *
தம்பகமாய்நிற்கும் தவமுடையேனுவேனே. (நி)

கம்பம்	(தன்னைக் கண்டவர்கட்கு அச்சத்தால்) நடுக்கத்தை விளைக்கின்ற	யான்வேண்டேன்	நான் விரும்ப மாட்டேன்:
மதம் யானை	மதங்கொண்ட யானையினது	எம்பெருமான்	எமது தலைவனும்
கழுத்து அகத்தின் மேல் இருந்து	கழுத்தின் மீது வீற்றிருந்து	ஈசன்	(எல்லாவுலகுக்குந்) தலையான பெருமானுடைய
இன்பு அமரும்	நாநாவித ஸுகங்களைப் பொருந்தி அநுபவிக்கும்படியான	எழில் வேங்கடம் மலைமேல்	அழகிய திருமலையிலே
செல்வமும்	ஐச்வரியத்தையும்	தம்பகம் ஆய்நிற்கும்	புதராய் நிற்கும்படியான
இ அரசும்	(அதற்குக் காரணமான) இந்த அரசாட்சியையும்	தவம்	பாக்கியத்தை
		உடையேன் ஆவேன்	உடையவனாகக்கடவேன்.

* * *—சென்பகமரமாய்ப் பிறந்தால் திருமலைக்கு வருகிற மஹாப்ரபுக்கள் யாராவது இதனை விரும்பித் தம் வீட்டிற்கொண்டுபோய் நாட்டக் கருதிப் பெயர்த்துக்கொண்டு போகக் கூடும்; அப்படி உண்டோவெனில்; "கற்பகக்காவுகருதிய காதலிக்கு இப்பொழுது ஈவ னென்று இந்திரன் காவினில், நிற்பனசெய்து நிலரத்திகழ் மூற்றத்துள், உய்த்தவன்" என்ற படி—ஸத்யபாமைப் பிராட்டியின் விருப்பத்திற் கிணங்கிய கண்ணபிரான், ஸ்வர்க்கலோகத் தில் இந்திரனது நந்தவனத்திலிருந்த கற்பகத்தருவை ஸத்யபாமையினது மாளிகைத் திரு முற் றத்திலே கொணர்ந்து நட்டானே. அவ்வாறு யாரேனுமொருவர் சண்பகமரத்தையும் பெயர்த் துக்கொண்டு போனால் திருமலையில் வாழ்ச்சி இழந்ததாமே என்று கருதி, அங்ஙனம் மஹாப்ர புக்களின் விருப்பத்திற்குக் காரணமாகக் கூடாததொரு தம்பகமாய் நிற்க விரும்புகிறார் இப் பாட்டில். கம்பம்—வடசொல்; கூடு: — நடுக்கம். கம்பமதயானை — (கண்டாரை வெரும்) நடுங்கும்படி மதங்கொண்ட யானை. அன்றி, மதங்கொண்டதாதலால் வெளியேவிட வொண் ணாதபடி கம்பத்திலேயே கட்டப்பட்டு நிற்கின்ற யானை யென்றும், அசையுமியல்பையுடைய மதயானை என்றும் பொருளாம்.

தம்பகமாய்=புல் கோரை செடி கொடி முதலியவற்றின் புதர்—ஸ்தம்பம் [ஸ்தம்பः] எனப்படும். அது கவ்ருத்யம் பெற்று ஸ்தம்பகம் என நிற்கும். அவ் வடசொல் தம்பகம் என விகாரப்பட்டது. இனி தம்பகமாவது—இலை காய் கனி நிழல் ஒன்றுக்கு முதவாததொரு வம்யவ்ருக்ஷ பென்பாரு முளர். (நி)

682 மின்னனையநுண்ணிடையார் உருப்பசியும்மேனகையும் *
அன்னவர்தம்பாடலோடும் ஆடலவையாதரியேன் *
தென்னவெனவண்டினங்கள் பண்பாடும்வேங்கடத்துள் *
அன்னனையபோற்குவடாம் அருந்தவத்தனுவேனே. (கூ)

மின் அனைய நுண் இடையார்	மின்னல்போல் ஸூக்ஷ்மமான இடையை உடையவர்களாகிய	வண்டு இனங்கள்	வண்டுகளின் கூட்டம்
உருப்பசியும் மேனகையும் அன்னவர் தம்	ஊர்வசியும் மேனகையும் போல்முகியவர்களான ஸ்த்ரீகளின்	தென்ன என பண் பாடும்	'தெனதென' என்று ஆளத்தி வைத்து இசைபாடப் பெற்ற
பாடலொடும் ஆடல் அவை	பாட்டும் ஆட்டமுமாகிய அவற்றை	வேங்கடத்துள்	திருமலையிலே
ஆதரியேன்	யான் விரும்பமாட்டேன்;	அன்னனைய பொன் குவடு ஆம்	அப்படிப்பட்ட பொன்மயமான சிகரமாவதற்கு உரிய
		அரு நவத்தன் ஆவேன்	அருமையான தவத்தையுடையவனாகக் கடவேன்.

* * *—"தம்பகமாய் நிற்குந் தவமுடையேனுவேன்" என்றவர் சிறிது யோசித்த வளவில், அரசாங்கத்தார், மலையிலுள்ள செடி செட்டுகளை அடிக்கடி சோதிப்பவராதலால் திடீரென்று அவர்கள் தம்பகத்தைக் களைந்தெறிந்திடக் கூடுமெனவும், அதுதானே விரைவில் தீர்ந்து தொழியக்கூடுமெனவும் நினைத்து, அங்ஙனன்றி என்றும் ஒருபடியா யிருக்கும்படி அத்திருமலையில் ஒருபாகமாகக் கடவேனென்று அபேக்ஷிக்கின்றார். முன்னிரண்டடிகளால் தேவலோக போகத்தில் தமக்கு எள்ளளவும் ஆசை யில்லாமையை வெளியிட்டார். (சு)

683 வானுளும்மாமதிபோல் வெண்குடைக்கீழ் * மன்னவர்தம்
கோனுகிவீற்றிருந்து கொண்டாடும்செல்வமறியேன் *
தேனுர்பூஞ்சோலைத் திருவேங்கடமலைமேல் *
கானுறுப்பாயும் கருத்துடையேனுவேனே. (எ)

வான் ஆளும் மா மதி போல்	ஆகாயத்தைத் தனக்கு இடமாகக்கொண்டு விளங்குகின்ற பூரண சந்திரன் போன்ற
வெள் குடை கீழ்	ஒற்றை வெண்கொற்றக் குடையின் கீழ்
மன்னவர் தம் கோன் ஆகி வீற்றிருந்து	ராஜாதி ராஜனைப்பெருமை தோன்ற இருந்து
கொண்டாடும்	(அனைவராலும்) கொண்டாடப் படுவதற்குக் காரணமான
செல்வு அறியேன்	செல்வத்தை (யான் ஒரு பொருளாக) மதிக்கமாட்டேன்;
தேன் ஆர் பூ சோலை திருவேங்கடம் மலை மேல்	தேன்மிக்க மலர்களுள்ள சோலைகளையுடைய திருமலையின் மேல்
கான் ஆறு ஆய் பாயும்	ஒரு காஞ்சுரப்பெருகும்படியான
கருத்து உடையேன் ஆவேன்	அத்ய வஸாயத்தை உடையவனாகின்றேன்.

* * *—கீழ்ப்பாட்டில், பொற்குவடாக வேணுமென்று பாரித்தார்; சிறிது யோசித்த வாறே, அதுதன்னிலும் ஓர் அநுபபத்தி தோன்றிற்று: அதாவது—புதிதாகத் தேவ்வாலயங்கள் காட்டுமவர்கள் சிலாமயமாக மூலவிக்ரஹம் எழியருளப் பண்ணுவதற்காக மலை முகடுகளி லின்று பெரும் பெரும் பாறைகளை உடைத்துக் கொண்டு போகிற வழக்கமுளதாதலால் அதுவும் ஏற்றதல்ல வென்று தோன்றிற்று. தோன்றவே, அங்ஙனமன்றி, ஒருவராலும் பெயர்த்துக்கொண்டு போகக் கூடாததான காஞ்சுரப் பிறக்கவேணுமென்று அபேக்ஷிக்கிறார் இதில்.

684 பிறையேறுசடையானும் பிரமனுமிந்திரனும் *
முறையாயபெருவேள்விக் குறைமுடிப்பான்மறையாளன் *
வெறியார்தண்சோலைத் திருவேங்கடமலைமேல் *
நெறியாய்க்கிடக்கும் நிலையுடையேனுவேனே. (அ)

பிறை ஏறு சடையானும்	இளஞ் சந்திரன் ஏறியிராநின்ற ஜடையையுடைய சிவனும்
பிரமனும்	ப்ரஹ்மாவும்
இந்திரனும்	தேவேந்திரனும்
முறை ஆய	தம் தமது போக்யதைக்குத் தக்கபடி செய்கின்ற
பெரு வேள்வி	பெரிய யாகங்களின் பயனை
குறை முடிப் பான்	(அவர்களது) குறையைத் தீர்த்து அவர்கள் கோரிக்கையைத் தலைக்கட்டுவிப்பவனும்
மறை ஆளன்	வேதங்களிற் பரம்பொருளாகக் கூறப்படுபவனுமான எம்பெருமானுடைய
வெறி ஆர் தண் சோலை	பரிமளம் மிக்க குளிர்ந்த சோலைகளையுடைய
திரு வேங்கடம் மலை மேல்—;	
நெறி ஆய் கிடக்கும்	(போகிற) வழியாய்க் கிடக்கின்ற
நிலை	நிலையை
உடையேன் ஆவேன்	உடையவனாகக்கடவேன்,

* * *—கீழ்ப்பாட்டில் "காலருய்ப்பாயுங் கருத்துடையேனுவேனே" என்று பாரித்தவர் சற்று ஆராய்ந்ததில் அது தன்னிலும் ஓர் குறையுணர்ந்தார்; ஆறு எப்போதும் ப்ரவஹிக்கக்கூடியதல்ல; சில காலங்களில் வற்றிப்போம்; அப்போது திருமலை வாழ்ச்சி இழந்ததாம் என நினைத்தார். அங்ஙனமன்றி எப்போதும் ஒரு தன்மையாகத் திருவேங்கட முடையானை ஸேவிக்கவருகின்ற பாகவதர்களின் ஸ்ரீபாததூளி படும்படி வழியாய்க்கிடக்கும் நிலைமை தமக்கு வாய்க்கவேண்டுமென்று பிரார்த்திக்கின்றார் இதில்.

குறைமுடிப்பான்—இது இரட்டுற மொழிதலாய், குறையைத் தீர்ப்பவன், வேண்டு கோளைப் பூர்த்திசெய்பவன் எனப் பொருள்தரும். அநிஷ்ட நிவ்ருத்தியும் இஷ்டப்ராப்தியும் செய்பவன் என்கை. (அ)

685 செடியாயவல்வினைகள் தீர்க்கும்திருமாலே *
நெடியானேவேங்கடவா நின்கோயிலின்வாசல் *
அடியாரும்வானவரும் அரம்பையருங்கிடந்தியங்கும் *
படியாய்க்கிடந்து உன்பவளவாய்காண்பேனே. (கூ)

செடி ஆய	செடிபோல் அடர்ந்துள்ள	அடியாரும் வான வரும் அரம்பை யரும் கிடந்து இயங்கும் படி ஆய் கிடந்து	பாகவதர்களும் மற்றைத்தேவர் களும் அப்ஸரஸ் ஸ்த்ரீகளும் இடைவிடாது ஸஞ்சரிக்கப் பெற்ற படியாய்ப் பொருந்தி
வல் வினைகள் தீர்க்கும்	கொடிய கருமங்களை (ஆச்ரிதர்க்குப்) போக்கியருள் கிற		
திரு மாலே	ச்ரிய:பதியான பெருமானே!		
நெடியானே	பெரியோனே!	உன் பவளம் வாய் காண்பேன்	உனது பவழம்போன்ற திருவ தரத்தைக் காண்பேனுகக்கட வேன்.
வேங்கடவா	திருவேங்கட முடையானே!		
நின் கோயிலின் வாசல்	உனது ஸந்நிதியின் உள் வாச லிலே		

* * *—கீழ்ப்பாட்டில் "நெறியாய்க்கிடக்கும் நிலையுடையேனுவேனே" என்று திருமலைக்கு வழியாகத் தாழ்கவேணுமென்று அபேக்ஷித்தவர் சிறிது ஆராய்ந்ததில் அது தன்னிலும் ஓர் குறை கண்டார்; வழியென்பது அவரவர்களுடைய ஸௌகரியத்துக்குத் தக்கபடி மாறுபடும் கீழ்த்திருப்பதியிலிருந்து திருமலைக்குப் போகும்வழி மிக வருத்தமா யிருக்கிறதென்றும் யாத்ரிகள் சந்த்ரகிரி வழியாகப் போகக்கூடும்; ஒரிடத்திற்கு ஒன்றுதான் வழியென்று சொல்ல முடியாதாகையாலும், வழியானது விலகி நிற்பதாகையாலும், வழியாக வேணுமென்று விரும்புவதிற் காட்டிலும் எம்பெருமானது திருவருள் நோக்கம் பதியுமாறு அவன் கண்முகப்பிலே மெய்யடியாரோடு பிறரோடு வாசியற எல்லாரும் இடைவிடாது ஸஞ்சரிக்கும் படியான ஓர் அசேதநப்பொருளாகி, அதிலே உன் பவளவாய் காணும்படியானதொரு சைதந்யத்தையும் பெறக்கடவே னென்று தமது விசேஷமான விருப்பத்தை விண்ணப்பஞ் செய்கிறார் இதில். இப்பாசுரத்தை அடியொற்றியே விஷ்ணுவாலயங்களிற் கோயிலினுள் வாசற்படி 'குலசேகரப்படி' என்று இவர்பெயரையிட்டு வழங்கப்படும் என்பது ஸம்ப்ரதாயம். (கூ)

686 உம்பருலகாண்டு ஒருகுடைக்கீழுருப்பசிதன் *
அம்பொற்கலையல்குல் பெற்ருலுமாதரியேன் *
செம்பவளவாயான் திருவேங்கடமென்னும் *
எம்பெருமான்போன்மலைமேல் ஏதேனுமாவேனே. (ம)

உம்பர் உலகு ஆண்டு	மேலுலகங்களை யெல்லாம் அரசாண்டு	அம்	அழகிய
ஒரு குடை கீழ்—ஒரு குடையின் நிழலிலே உருப்பசி தன்		பொன் கலை அல் குல்	பீதாம்பர மணிந்த அல்குலை

பெற்றலும்	அடையப் பெறினும்
ஆகியேன்	(அதனை) விரும்பமாட்டேன்;
செம் பவளம் வாயான்	சிவந்த பவழம்போன்ற வாயை யுடையவனை
எம்பெருமான்	எனது அப்பனுடைய
திருவேங்கடம் என்னும் பொன் மலைமேல்	திருவேங்கட மென்ற பெயரை யுடைய அழகிய திருமலை யின் மேல்
ஏதேனும் ஆவேன்	ஏதேனுமொரு பதார்த்தமாகப் பிறக்கக்கடவேன்.

* * *—கீழ்ப்பாட்டில் படியாகக் கிடக்கவேணுமென்று பிரார்த்தித்தது எம்பெருமானுடைய பவளவாய் காண்பதற்காக; அப்புருஷார்த்தம் கிடையாதொழியினு மொழியும்; எனெனில்; திருமலையில் ஸங்கிதிக்குள் கருங்கல்படியிருப்பது திருவேங்கட முடையானுடைய செல்வத்திற்குத் தகாது என்று மஹா ப்ரபுக்கள் வந்து அப்படியை ஸ்வர்ணகவசத்தால் ஆவரிக்கக் கூடும். அப்போது நாம் அப்பன் திருமுகமண்டல ஸேவையை இழந்தோமாவோம்; ஆகையால் படியாய்க் கிடப்பதும் பாங்கல்ல என்று அறுதியிட்டார். பின்னை எந்தப்பிறவியைப் பிரார்த்திக்கலா மென்று யோசித்தார்; கீழ் கிகழ்ந்தமாதிரி ஒவ்வொரு பிறப்பிலும் ஒவ்வொரு அநுபபத்தி தோன்றிக்கொண்டே யிருந்தது. கடைசியாக ஒரு பிறவியையும் தாமாக வேண்டிக்கொள்ள விரும்பாதவராய் "எம்பெருமான் பொன்மலைமேல் ஏதேனு மாவேனே" என்கிறார். (டு)

687 மன்னியதண்சாரல் வடவேங்கடத்தான்தன் *
பொன்னியலுஞ்சேவடிகள் காண்பான்புரிந்திறைஞ்சி *
கொன்னவிலுங்கூர்வேல் குலசேகரன்சொன்ன *
பன்னியநூல்தமிழ்வல்லார் பாங்காயபத்தர்களே. (கக)

கொல் நவிலும்	(பகைவர்களைக்) கொல்லுதலை ப்பயின்ற
கூர் வேல்	கூர்மையான வேலாயுதத்தை யுடைய
குலசேகரன்	குலசேகராழ்வார்
மன்னிய தண் சாரல் வடவேங் கடத்தான் தன்	நிலைபெற்ற குளிர்ச்சியுள்ள சாரல்களையுடைய வடவேங் கட மலையில் எழுந்தருளி யிருக்கிற பெருமானது
பொன் இயலும் சே அடிகள்	பொன்போற் சிறந்த சிவந்த திருவடிகளை
காண்பான்	ஸேவிப்பதற்கு
புரிந்து	ஆசைப்பட்டு
இறைஞ்சி	வணங்கி
சொன்ன	அருளிச்செய்த
பன்னிய நூல் தமிழ்	ஆராய்ந்த நூல்களிற் கூறிய இலக்கணத்துக்கு இசைந்த தமிழ்ப்பதிகத்தை
வல்லார்	கற்று வல்லவர்
பாங்கு ஆய பத்தர்கள்	(அப்பெருமான் திருவுள்ளத்துக்கு) இனிய பக்தர்களாவர்.

இத்திருமொழியை அடியொற்றி,

"மாடாக நிழற்று செழுமரஞகத் தவச்சிறிய
பூடாகக் குழைத்த நறும்புதலாக வழிப்படுமோ
ரோடாகப் பெறுவமெனிலுயிர்காள் ! நற்கதிபேறலாம்
வீடாகத் திருநெறிமால் வீற்றிருக்கும் வேங்கடத்தே." (கக)

என்று திருவேங்கடக் கலம்பகத்திற் கூறியது காண்க.

அடிவரவு:—ஊன் ஆனை பின் ஒண் கம்பம் மின் வான் பிறை செடி உம்பர் மன்னிய தரு.

ஸ்ரீமந்நாராயணனே யன்றித் தமக்கு வேறு சரணமில்லாமையை அநேக ப்ரகாரங்களாலும் பூர்வகமாகத் திருவித்துவக் கோட்டம்மான் முன்னிலையில் விண்ணப்பஞ் செய்கிறார். *

688 தருதுயரம்தடாயேல் உன்சரணல்லால்சரணில்லை *
விரைகுழுவும்மலர்ப்பொழில்சூழ் வித்துவக்கோட்டம்மானே ! *
அரிசினத்தாலீன்றதாய் அகற்றிடினும் * மற்றவள்தன்
அருள்நினைந்தேயழுங்குழவி அதுவேபோன்றிருந்தேனே. (க)

விரை குழுவும்	பரிமளம் விஞ்சிய
மலர்	புஷ்பங்களையுடைய
பொழில் சூழ்	சோலைகளாலே சூழப்பட்ட
வித்துவக்கோடு	திருவித்துவக்கோட்டில் எழுந்தருளியிருக்கிற
அம்மானே	ஸ்வாமியே!
தருதுயரம்	(நீயே எனக்குத்) தந்த இத்துன்பத்தை
தடாய் ஏல்	நீயே களைந்திடா விட்டாலும்
உன் சரண் அல்லால் சரண் இல்லை	உனது திருவடிகளே யன்றி (எனக்கு) வேறு புகலில்லை;
ஈன்ற தாய்	பெற்ற தாயானவள்
அரிசினத்தால்	மிக்க கோபங்கொண்டு அதனால்
அகற்றிடினும்	(தனது குழந்தையை) வெறுத்துத் தள்ளினாலும்
மற்று	பின்பும்
அவள் தன் அருள் ஏ நினைந்து அழும்	அத்தாயினுடைய கருணையையே கருதி அழுகின்ற
குழவியதுவே	இளங்குழந்தையையே
போன்று இருந்தேன்	ஒத்திரா நின்றேன்.

* * * வித்துவக்கோடு என்பதற்கு—வித்வான்கள் கூடிய இடம் என்று காரணப் பொருள் கூறுவர். பிள்ளைப்பெருமாளையங்கார் தூற்றெட்டுத் திருப்பதியந்தாதியில் "திருவிற்றுவக்கோடு சேர்ந்தார் பிறவி கருவிற்றுவக் கோடுங்காண்" என்றிருப்பதனால். வித்துவக்கோடு அல்ல; விற்றுவக்கோடு என்பர் சிலர்: அவ்விடத்திலும் "திருவித்துவக்கோடு" என்றே பாடமென்பர் பெரியோர்: இவ்வளவால் எதுகையின்பம் குன்றுது இத்திருமொழியின் ஈற்றுப்பாசுரத்திலும் இங்ஙனமே பாடமாம். இத்திவ்யதேசம் மலைநாட்டில் "திருமிற்றக்கோடு" என வழங்கப் படுகின்றது. (க)

689 கண்டார்இகழ்வனவே காதலன்றுன்செய்திடினும் *
கொண்டானையல்லால் அறியாக்குலமகள்போல் *
விண்டோய்மதிள்புடைசூழ் வித்துவக்கோட்டம்மா! * நீ
கொண்டாளாயாகிலும் உன்குரைகழலே கூறுவனே. (உ)

விண் தோய் மதில்	ஆகாயத்தை அளாவிய மதில்கள்
புடை சூழ்	எப்புறத்தும் சூழப்பெற்ற
வித்துவக்கோடு அம்மா	திருவித்துவக்கோட்டில் எழுந்தருளியிருக்கிற ஸ்வாமிந்!
காதலன் தான்	கணவனானவன்
கண்டார் இகழ்வனவே செய்திடினும்	பார்ப்பவர்களனைவரும் இகழத்தக்க செயல்களையே செய்தாலும்
கொண்டானை அல்லால் அறியா	(தன்னை) மணஞ்செய்து கொண்டவனை அக்கணவனையேயன்றி வேறொருபுருஷனை நினைப்பதுஞ் செய்யாத
குலம் மகள் போல்	உயர்ந்தகுலத்துப் பிறந்த கற்புடைய மகள்போல்
நீ கொண்டு ஆளாய் ஆகிலும்	என்னை அடிமைகொண்டவனான நீ குறையும் தலைக்கட்டாமல் உபேக்ஷித்தாயாகிலும்
உன் குரை கழலே	ஒலிக்கின்ற வீரக்கழலையுடைய உனது திருவடிகளையே
கூறுவன்	சரணமாகக்குறிக்கொள்வேன்.

690 மீன்நோக்கும்நீள்வயல்சூழ் வித்துவக்கோட்டம்மா! * என்
பால்நோக்காயாகிலும் உன்பற்றல்லால்பற்றிலேன் *
தான்நோக்காதேத்துயரஞ் செய்திடினும் * தார்வேந்தன்
கோல்நோக்கிவாழுங் குடிபோன்றிருந்தேனே. (சு)

மீன் நோக்கும் — மீன்களெல்லாம் (தாம் வஸிப்பதற்கு மிகவும் தகுதியான இடமென்று) ஆசையோடு பார்க்கிற [நீர்வளம் மிக்க]
மீன் வழல் சூழ் வித்துவக்கோடு — விசாலமான கழனிகள் சூழ்ந்த திருவித்துவக்கோட்டில் எழுந்தருளியுள்ள
அம்மா — பெருமானே!
என்பால் — அடியேன் மீது
நோக்காய் ஆகிலும் — (நீ) அருள் நோக்கம் செய்யாதிருந்தாலும்
உன் பற்று அல்லால் பற்று இலேன் — உன்னைச் சரணமாகப் பற்றுதலை விட்டு வேறொருவரைச் சரணம் புகமாட்டேன்;
தார் வேந்தன் — (குடிகளைக் காப்பதற்கென்று) மாலையணிந்துள்ள அரசன்
தான் நோக்காது — (அதற்கு ஏற்றபடி) தான் கவனித்துப் பாதுகாவாமல்
எத்துயரம் செய்திடினும் — எப்படிப்பட்ட துன்பங்களைச் செய்தாலும்
கோல் நோக்கி வாழும் — (அவனுடைய) செங்கோலையே எதிர்பார்த்து வாழ்கிற
குடி — ப்ரஜைகளை
போன்று இருந்தேன் — ஒத்திருக்கின்றேன்.

691 வாளாலறுத்துச்சுடினும் மருத்துவன்பால் * மாளாதகாதல் நோயாளன்போல் மாயத்தால் *
மீளாத்துயர்தரினும் வித்துவக்கோட்டம்மா! * நீ ஆளாவுனதருளே பார்ப்பனடியேனே. (சு)

வித்துவக்கோடு அம்மா!—:
அறுத்து வாளால் — (வைத்தியன்) கத்தியைக்கொண்டு, அறுத்தலும், (ஊசியைக் காய்ச்சிச்)
சுடினும் — சூடுபோடுதலுஞ் செய்தாலும்
மருத்துவன் பால் மாளாத காதல் — அவ்வைத்தியனிடத்து நீங்காத அன்புடைய
நோயாளன் போல்-நோயாளியைப்போல்
மாயத்தால் — (உன்) மாயையினால்
நீ மீளா துயர் தரினும் — நீ நீங்காத துன்பத்தை (எனக்கு) விளைத்தாலும்
அடியேன் — உனது அடியவனை நான்
ஆள் ஆ (க) — அவ்வடிமை வித்திப்பதற்காக
உனது அருளே பார்ப்பன் — உன்னுடைய கருணையையே நோக்கியிரா நின்றேன்.

* * * நீயே எனக்கு ஸர்வவிதரக்ஷகன் என்று நான் துணிந்த பின்பு, நீ எனக்கு எவ்வளவு துன்பங்களை இவ்விபூதியிலே தந்தருளினாலும் அவற்றையெல்லாம் நான் நன்மையாகவே கருதி மிக்க நன்றியறிவு பாராட்டி மேன்மேலும் அன்பு செய்து வருவேனேயன்றி உன்னைச் சிறிதும் குறைசூறமாட்டேன் என்பதை உபமாநத்தால் விளக்கினார். (சு)

692 வெங்கட்டிண்களிறடர்த்தாய் வித்துவக்கோட்டம்மானே! *
எங்குப்போயுய்கேன் உன்னிணையடியே அடையலல்லால் *
எங்கும்போய்க்கரைகாணது எறிகடல்வாய்மீண்டேயும் *
வங்கத்தின்கூம்பேறும் மாப்பறவைபோன்றேனே. (சு)

வெம் கண் — பயங்கரமான கண்களையுடைய
திண் களிறு — வலிய (குவலயாபீடமென்னும்) யானையை
அடர்த்தாய் — கொன்றவனே!
வித்துவக்கோடு அம்மானே!—;
உன் இணை அடியே அடையல் அல்லால் — உனது உபய பாதங்களையே (நான்) சரணமடைவதல்லாமல்
எங்கு போய் உய்கேன் — வேறு யாரிடத்திற்போய் உஜ்ஜீவிப்பேன்?
ஏறி — அலையெறிகிற
கடல் வாய் — கடலினிடையிலே
எங்கும் போய் கரை காணது — நான்கு திக்கிலும் போய்ப் பார்த்து எங்கும் கரையைக்காணமல்
மீண்டு — திரும்பிவந்து
ஏயும் — (தான் முன்பு) பொருந்திய
வங்கத்தின் — மாக்கலத்தினுடைய
கூம்பு ஏறும் — பாய்மரத்தின்மீது சேர்கிற
மா பறவை போன்றேன் — பெரியதொரு பக்ஷியை ஒத்திராநின்றேன்.

693 செந்தழலேவந்து அழலேச்செய்திடினும் * செங்கமலம்
அந்தரம்சேர் வெங்கதிரோற்கல்லால்அலராவால் *
வெந்துயர்வீட்டாவிடினும் வித்துவக்கோட்டம்மா! * உன்
அந்தமில்சீர்க்கல்லால் அகம்குழையமாட்டேனே.

வித்துவக்கோடு அம்மா!—;

செம் தழலே வந்து	செந்நிறமுடைய நெருப்பு (தானை) அருகில்வந்து	அலரா	(நெருப்புக்கு) மலரமாட்டா;
அழலே செய்திடினும்	வெப்பத்தைச் செய்தாலும்	வெம் துயர்	(அநுபவித்தே தீரவேண்டிய வையான கொடிய (என்) பாவங்களை
செம் கமலம் அந்தரம் சேர் வெம் கதிரோற்கு அல்லால்	செந்தாம்மரைகள் வானத்தில் தோன்றுகிற வெவ்விய கிரணங்களையுடைய ஸூர்யனுக்கு மலருமே யல்லது,	வீட்டா விடினும்	தீர்த்தருளா தொழிந்தாலும்
		உன் அந்தம் இல் சீர்க்கு அல்லால்	உனது எல்லையில்லாத உத்தம குணங்களுக்கே யல்லாமல்
		அகம் குழைய மாட்டேன்	(வேறொன்றுக்கு நான்) நெஞ்சுருகமாட்டேன்.

694 எத்தனையும்வான்வறந்தகாலத்தும் பைங்கூழ்கள் *
மைத்தெழுந்தமாமுகிலே பார்த்திருக்கும்மற்றவைபோல் *
மெய்த்துயர்வீட்டாவிடினும் வித்துவக்கோட்டம்மா! * என்
சித்தமிகவுன்பாலே வைப்பனடியேனே. (எ)

வித்துவக்கோடு அம்மா!—;

வான் எத்தனையும் வறந்த காலத்தும்	மேகமானது எவ்வளவுகாலம் மழை பெய்யாமல் உபேக்ஷித்தாலும்	அவை போல்	அப்பயிர்கள் போல,
		மெய் துயர் வீட்டா விடினும்	தவருது அநுபவிக்கப்படுகிற என் துன்பங்களை நீ போக்காமல் உபேக்ஷித்தாலும்
பைங் கூழ்கள்	பசுமை தங்கிய பயிர்கள்	அடியேன்	உனக்கு தாஸனாகிய நான்
மைத்து எழுந்த மாமுகிலே பார்த்து இருக்கும்	கருநிறங்கொண்டு கிளம்புகின்ற பெரிய மேகங்களையே எதிர் பார்த்திருக்கும்;	என் சித்தம் உன் பாலே மிக வைப்பன்	என் மநஸ்ஸை உன்னிடத்திலேயே மிகவும் செலுத்துவேன்.

695 தோக்கிலங்கியாறெல்லாம் பரந்தோடித்தொடுகடலே *
புக்கன்றிப்புறம்நிற்க மாட்டாதமற்றவைபோல் *
மிக்கிலங்குமுகில்நிறத்தாய் வித்துவக்கோட்டம்மா! * உன்
புக்கிலங்குசீரல்லால் புக்கிலன்காண்புண்ணியனே! (ஏ)

மிக்கு இலங்கு முகில் நிறத்தாய்	மிகுதியாய் விளங்குகிற காளமேகம்போன்ற கரியதிருநிறமுடையவனே!

வித்துவக்கோடு அம்மா!—,

புண்ணியனே	புண்ய ஸ்வரூபியாயுள்ளவனே!	தொடு கடலே புக்கு அன்றி புறம் நிற்க மாட்டாத	ஆழ்ந்த கடலிலே சென்று சேர்ந்தல்லது மற்றோரிடத்தே புகுந்து நிற்கமாட்டா;
தோக்கு இலங்கு யாறு எல்லாம்	(ஜலப்ரவாஹம்) திரண்டு விளங்குகிற நதிகளெல்லாம்	அவை போல்	அவ்வாறுகள் போல,
பரந்து ஓடி	(கண்டவிடமெங்கும்) பரவியோடி (முடிவில்)	புக்கு இலங்கு	(என் நெஞ்சினுள்ளே) புகுந்து விளங்குகிற
		சீர் அல்லால்	(உனது) கல்யாணகுணங்கள் தவிர (மற்றோரிடத்தில்)
		புக்கிலன்	ஆழ்ந்திடேன்.

696 நின்னேயேதான்வேண்டி நீள்செல்வம்வேண்டாதான்
தன்னேயே * தான்வேண்டும் செல்வம்போல், மாயத்தால் *
மின்னேயேசேர்திகிரி வித்துவக்கோட்டம்மா! *
நின்னேயேதான்வேண்டி நிற்பனடியேனே. (ஐ)

மின்னேயே சேர் திகிரி	மிக்க ஒளியையேகொண்டுள்ள சக்கராயுதத்தையுடைய
வித்துவக்கோடு அம்மா !—;	
நின்னேயேவேண்டி-உன்னேயே விரும்பி	
நீள் செல்வம் வேண்டாதான் தன்னேயே	மிக்க ஸம்பத்தை விரும்பாத வனேயே
தான் வேண்டும்	தானுகவே வந்துசேர விரும்புகிற
செல்வம் போல்	அந்த ஐச்வரியம்போல,
மாயத்தால்	(உன்) மாயையினல்
(நீ என்னே உபேக்ஷித்தாயாகிலும்)	
அடியேன்	உனது அடியவனன நான்
நின்னேயே வேண்டி நிற்பன்	உன்னேயே அடைய விரும்பி நிற்பேன்.

* * * யாவனொருவன் எம்பெருமானிடத்திலே அன்பைச் செலுத்தி அதனல் ஐச்வர்யத்தை உபேக்ஷிக்கிறனே, அவன் உபேக்ஷிக்க உபேக்ஷிக்க அவனது நல்வினைப்பயனல் அச்செல்வம் அவனை விடாது விரும்பி வலியத் தொடர்ந்து சேர்தல் இயல்பு. (அபேக்ஷிப்பவனுக்குக் கிடையாதொழிதலும், அபேக்ஷியாதவனுக்கு வலிவிலேகிடைத்தலும் பகவத் ஸங்கல்ப மஹிமையென்பது இங்கு அறியத்தக்கது.) அதுபோலவே, நீ உன் உடைமையாகிய என்னை உபேக்ஷிக்க உபேக்ஷிக்க நான் உன்னையே விடாது நிற்பேன் என்றவாறு. அடியார்களுக்கு நேரும் துன்பங்களைப்போக்கி எங்களைக் காப்பதற்காகவே கையும் திருவாழியுமாக இங்கே வந்துள்ளாய் நீ என்பது மூன்றுமடியின் உட்கருத்து.

இப்பாட்டு விஷயத்தில் வேதாந்த தேசிகனுடைய கருத்து;—செல்வத்தை வெறுத்து எம்பெருமானையே வேண்டி நிற்பவனுக்கு அச்செல்வம் தானே வந்து சேர்தல் "யஸ்யாநு ஹரிர்முஞ்சதி தஸ்யவித்தம்ஹரந்தமந்யஸ்ய" என்ற பகவத் வாக்யத்திற்குப் பொருந்தாதலால், இப்பாட்டில் அங்ஙனம் கூறியுள்ளதை, முன்பு நெடுங்காலம் ஐச்வர்யத்துக்காக உபாஸனை பண்ணி அதுபெருமல் அதனை வெறுத்து எம்பெருமான் பக்கல் அன்புபூண்ட ஒரு அதிகாரி விஷேஷ விஷயமாகக் கொள்ளுதல் நலம் என்பதாம். செல்வம் என்பதற்கு 'மோக்ஷலக்ஷ்மி' என்றுரைப்பாரும் உளர். (கூ)

697 வித்துவக்கோட்டம்மா நீவேண்டாயேயாயிடினும் *
மற்றுரும்பற்றிலேனென்று அவனைத்தாள்நயந்து *
கொற்றவேல்தானைக் குலசேகரன் சொன்ன *
நற்றமிழ்ப்பத்தும்வல்லார் நண்ணுர்நரகமே. (ம)

'வித்துவக்கோடு அம்மா!—;	
நீ வேண்டாயே ஆயிடினும்	நீ (என்னை) உபேக்ஷித்தாயாகிலும்
மற்று ஆரும் பற்றிலேன்	வேறு எவரையும் நான் சரணமடைய மாட்டேன்'
என்று	என்று (அத்யவஸாயத்தை வெளியிட்டு)
அவனை தாள் நயந்து	அவ்வெம்பெருமானது திருவடிகளிலேயே ஆசைகொண்டு
கொற்றம் வேல் தானை குலசேகரன் சொன்ன	வெற்றியைத்தரும் வேலாயுதத்தையும் சேனையையுமுடையவரான குலசேகரர் அருளிச்செய்த
நல் தமிழ் பத்தும்	நல்ல தமிழ்ப்பாடல்கள் பத்தையும்
வல்லார்	ஓதவல்லவர்கள்
நரகம் நண்ணுர்	(கொடிய பாவங்கள் செய்திருந்தாலும்) நரகத்திற் சேரமாட்டார்கள்.

அடிவரவு:—தருக் கண்டார் மீளேக்கு வாளால் வெங்கட்டின் செந்தழல் எத்தனை தொக்கு நின்னை வித்து ஏர்.

இத்திருமொழியின் உள்ளுறை.

க. தருதுயரம். தாயினுடைய ஸ்தானத்தில் எம்பெருமானையும், குழந்தையினுடைய ஸ்தானத்தில் தம்மையும் வைத்துக் கூறியதனால் பரமாத்மாவுக்கும் ஜீவாத்மாவுக்குமுள்ள ஸம்பந்தம் தாய்க்கும் குழந்தைக்குமுள்ள உறவுமுறை போன்றதென விளங்கும், அதாவது பிராணிவர்க்கங்களையெல்லாம் படைத்துக் காப்பவன் எம்பெருமானே என்பது.

உ. கண்டாரிகழ்வன. கணவன் ஸ்தானத்தில் எம்பெருமானையும் மனைவி ஸ்தானத்தில் தம்மையும் வைத்துக் கூறியதனால், பரமாத்மாவுக்கும் ஜீவாத்மாவுக்கு முள்ள ஸம்பந்தம் கணவனுக்கும் மனைவிக்கு முள்ள தொடர்பு போன்றதெனத் தோன்றும்: அதாவது பரமாத்மாவினது தலைமையும் ஜீவாத்மாவினது அடிமையும், ஜீவாத்மா பரமாத்மாவுக் காக உரியதாயிருக்கையும், ஜீவாத்மா பரமாத்மாவின் ஸம்ச்லேஷத்தால் இன்பத்தையும் விச்லேஷத்தால் துன்பத்தையும் அடைதலும், பரமாத்மாவையே ஜீவாத்மா கரணங் களெல்லாவற்றாலும் அநுபவித்து ஆநந்திக்கலும் முதலியன.

ங. மீனுக்கு நீள்வயல். எம்பெருமானே அரசன் ஸ்தானத்திலும் தம்மைக்குடிகள் ஸ்தானத்திலும் வைத்துக் கூறியதனால், பரமாத்மாவுக்கும் ஜீவாத்மாவுக்கு முள்ள ஸம்பந்தம் அரசனுக்கும் ப்ரஜைகளுக்கு முள்ள ஸம்பந்தம் போன்றதென விளங்கும். அதாவது—ரக்ஷ்ய ரக்ஷகபாவம்: அவன் காப்பவனாகவும் இவன் காக்கப்படுமவனாகவு மிருத்தல்.

ச. வாளாலறுத்து. வைத்தியன் ஸ்தானத்தில் எம்பெருமானையும் நோயாளியின் ஸ்தானத்தில் தம்மையும் வைத்துக் கூறியதனால், பரமாத்மா ஜீவாத்மாவுக்கு ஹிதஞ்செய்வதிலேயே ஊன்றியவனாதலும், ஜீவாத்மா பரமாத்மாவினிடத்து நம்பிக்கை கொள்ளவேண்டிய வனாதலும் தெளிவாம்.

ஞ. வேங்கண் திண்களிறு. மரக்கலத்தின் ஸ்தானத்தில் எம்பெருமானையும் பறவையின் ஸ்தானத்தில் தம்மையும் வைத்துக் கூறியதனால், ஜீவாத்மாவுக்குப் பரமாத்மாவை யின்றி அமையாதென்பதும் பரமாத்மா ஜீவாத்மாவுக்கு ஆதாரமாதலும் வெளியாம்.

சு. செந்தழலேவந்து. ஸூர்யன் ஸ்தானத்தில் எம்பெருமானையும் தாமரையின் ஸ்தானத்தில் தம்மையும் வைத்துக் கூறியதனால், பரமாத்மா இன்பந்தருபவனென்பதும் ஜீவாத்மா இன்பமநுபவிப்பவனென்பதும் விளங்கும். இதில், இரண்டாவது பாசுரத்திற் காட்டியது போன்ற நாயக நாயகீ பாவம் தொனிக்கும்.

எ. எத்தனையும்வான். காளமேகத்தின் ஸ்தானத்தில் எம்பெருமானையும் பயிரின் ஸ்தானத் தில் தம்மையும் வைத்துக் கூறியதனால், உலகத்து உயிர்கட்கெல்லாம் ஜீவநாதாரம் பரமாத்மாவே என்று அறியலாம்.

ஆ. தோக்கிலங்கியாறு. கடலின் ஸ்தானத்தில் எம்பெருமானையும் நதியின் ஸ்தானத்தில் தம்மையும் வைத்துக் கூறியதனால், பரமாத்மாவினது பெருமையும் ஜீவாத்மாவினது சிறுமையும், முடிவில் ஜீவாத்மா பரமாத்மாவை அடைதலும். புலனும். இதிலும் நாயக நாயகீ பாவம் தொனிக்கும்.

கூ. நின்னையேதான் வேண்டி. செல்வத்துக்கு உரியவனுடைய ஸ்தானத்தில் எம்பெரு மானையும் செல்வத்தின் ஸ்தானத்தில் தம்மையும் வைத்துக் கூறியதனால், 'ஜீவாத்மா பரமாத்மாவின் உடைமை' என்பது புலப்படும். [ஸ்வஸ்வாமிபாவ ஸம்பந்தம்.]

ஙி. வித்துவக்கோட்டம்மா. இங்ஙனம் ஆழ்வார் தமது குறையை எம்பெருமான் பக்கலிலே ஒருமுறைக்கு ஒன்பதுமுறை விண்ணப்பஞ் செய்ததனால் அவனுக்கு ஆழ்வாரிடம் உண்டான கருணையின் பெருக்கு அவ்வாழ்வாரது அருளிச்செயல்களில் ஆழ்பவரள வும் செல்லு மென்பது இப்பாசுரத்தில் அமையும்.

ஐந்தாந்திருமொழி உரை முற்றிற்று.

பிரணய ரோஷங்கொண்ட கோபிகள் கண்ணபிரானை வெறுத்துரைத்த பாசுரம்.

698 ஏர்மலர்ப்பூங்குழலாயர்மாதர் எனைப்பலருள்ளவிவ்வூரில் * உன்றன்
மார்வுதழுவுதற்காசையின்மை அறிந்தறிந்தேயுன்றன்பொய்யைக்கேட்டு *
கூர்மழைபோல்பனிக்கூதலெய்திக் கூசிநடுங்கியமுனையாற்றில் *
வார்மணற்குன்றில்புலரநின்றேன் வாசுதேவாவுன்வரவுபார்த்தே. (க)

வாசுதேவா	கண்ணபிரானே!
ஏர் மலர் பூ குழல் ஆயர் மாதர்	அழகிய புஷ்பங்களை அணிந்த பரிமளம் மிக்க கூந்தலையுடைய இடைப்பெண்கள்
எனை பலர் உள்ள	எத்தனையோ பேர்களிருக்கப் பெற்ற
இ ஊரில்	இந்தத் திருவாய்ப்பாடியில்
உன்தன் மார்வு தழுவுதற்கு	உன்னுடைய மார்வோடு அணைவதற்கு
ஆசை இன்மை அறிந்து அறிந்தே	ஆசை யில்லாமையை நன்றாக அறிந்து வைத்தும்
உன்தன்	உன்னுடைய
பொய்யை கேட்டு	பொய்யான வார்த்தைகளைக் கேட்டு
(அவற்றை மெய்யென மயங்கி)	
கூர் மழை போல் பனிக்கு ஊதல் எய்தி	மிக்க மழைபோல் பெய்கிற பனியாலுண்டான குளிரிலே அகப்பட்டு
கூசி	(யார் பார்த்து விடுகிறார்களோ வென்று) கூச்சமடைந்து
நடுங்கி	நடுங்கிக்கொண்டு
யமுனை ஆற்றில்	யமுனாநதியில்
வார் மணல் குன்றில்	பெரியதொரு மணற் குன்றிலே
உன் வரவு பார்த்து	உன் வரவை எதிர்பார்த்துக் கொண்டு
புலர நின்றேன்	போது விடியுமளவும் (அங்கே யே) காத்து நின்றேன்.

* * * கண்ணபிரான் ஒரு பெண்பிள்ளையை நோக்கி 'நீ யமுனையாற்றின் மணற்குன்றிலே போய் நில்லு, நான் அங்கே வருகிறேன்' என்று சொல்லிவிட, அப்படியே அவள் அங்கேபோய் விடியுமளவும் நின்று அவன் வரக்காணுமல் வருத்தத்தோடு மீண்டுவந்து, மற்றொரு நாள் அவனைக்கண்டபோது ப்ரணய ரோஷந்தோற்றச் சொல்லுகிற பாசுரமாயிருக்கிறது இப் பாட்டு. அநியாயமாய் உன் பொய்யைக்கேட்டு மோசம்போனே னென்கிறாள். [வாசுதேவா !] கனவிலும் பொய்சொல்லியறியாத வஸுதேவர் வயிற்றிற் பிறந்த நீயும் தந்தையை ஒத்திருப்பாயென்று நம்பிக் கேட்டேன்காண்! என்ற குறிப்பு. புலர்தல்—பொழுது விடிதல். ()

699 கெண்டையொண்கண்மடவாளொருத்தி கீழையகத்துத்தயிர்கடையக்
கண்டு * ஒல்லைநானும்கடைவனென்று கள்ளவிழியைவிழித்துப்புக்கு *
வண்டமர்பூங்குழல்தாழ்ந்துலாவ வாண்முகம்வேர்ப்பச்செவ்வாய்துடிப்ப *
தண்டயிர்நீகடைந்திட்டவண்ணம் தாமோதரா ! மெய்யறிவன்நானே. (உ)

தாமோதரா	கண்ணபிரானே!
கீழை அகத்து	(என் வீட்டுக்குக்) கிழக்கண்டை வீட்டில்
கெண்டை ஒண் கண் மடவாள் ஒருத்தி	கயல் போன்று அழகிய கண்களை யுடையளான ஒரு பெண்ணானவள்
தயிர் கடைய கண்டு	(தனியே) தயிர்கடையா நிற்பதைக்கண்டு (இவளே வசப்படுத்துதற்கு இது ஸமயமென்று நிச்சயித்துக்கொண்டு)
நானும்	'நானும் (உன்னோடுகூட)
ஒல்லை கடைவன் என்று	சீக்கிரமாக (இத்தயிர்க்)கடைகிறேன்' என்று (வாயாற் சொல்லி)
கள்ளம் விழியை விழித்து	திருட்டுப்பார்வை பார்த்து
புக்கு	(அவளருகே) சென்று சேர்ந்து
வண்டு அமர் பூ குழல்	வண்டுகள் படிந்த புஷ்பங்களை அணிந்த மயிர் முடியானது

தாழ்ந்து உலாவ	அவிழ்ந்து அசையும்படியாக வும்	தண் தயிர்	குளிர்ந்த தயிரை
வாள் முகம் வேர்ப்ப	ஒளிபொருந்திய முகமானது வேர்க்கும்படியாகவும்	நீ கடைந்திட்ட வண்ணம்	நீ கடைந்தபடியை
செம் வாய் துடிப்ப	சிவந்த அதரமானது துடிக்கும் படியாகவும்	நான் மெய் அறி வன்	நான் மெய்யே அறிவேன்.

* * * வேறொரு ஆய்ச்சியின் வார்த்தை இது. என் அகத்திற்குக் கீழண்டை அகத் திலிருப்பாளொரு பெண்பிள்ளையானவள் தனியே யிருந்து தயிர் கடையா நிற்கையில் அது கண்ட நீ "சுலபோபாயம் பெற்றேம்" என உகந்து அவளருகில் ஓடிச்சென்று புகுந்து "அம்மா! நீ தனியாகத் தயிர்கடைந்தால் ஒருகாலும் வெண்ணெய் புறப்படமாட்டாது; நா னும் ஒருதலைபற்றிக் கடைந்தால் தான் விரைவில் வெண்ணெய் காணும்" என்று வாயாற் சொல்லி, உள்ளே வேற்று நினைவு இருக்கும்படி தோன்றத் திருட்டுவிழி விழித்து, மயிர்முடி அவிழ்ந்து அலையும்படியாகவும், தாமரையிலே முத்துப் படிந்தாற்போலே ஒளிபொருந்திய முகம் வேர்க்கும்படியாகவும், அதரம் துடிக்கும்படியாகவும் அவளோடேகூடி நீ தயிர்கடைந்த வரலாறு எனக்குத் தெரியுமப்பா! என்கிறாள். 'இன்னமும் அங்கேயே தயிர்கடையப்போ; இங்கே உனக்கென்னபணி?' என்ற ஊடல் உள்ளுறை. (உ)

700 கருமலர்க்கூந்தலொருத்திதன்னைக் கடைகணித்தாற்கேயொருத்திதன்பால் *
மருவிமனம்வைத்துமற்றொருத்திக்குரைத்து ஒருபேதைக்குப்பொய்குறித்து *
புரிகுழல்மங்கையொருத்திதன்னைப்புணர்தி அவளுக்கும்மெய்யனல்லை *
மருதிறுத்தாயுன்வளர்த்தியோடே வளர்கின்றதாலுன்றன்மாயைதானே. (ஊ)

மலர் கரு கூந்தல்	புஷ்பங்களை அணிந்துள்ள கறுத்த மயிர்முடியையுடையளான	புரி குழல் மங்கை ஒருத்தி தன்னை	கடை குழன்று சுருண்ட கூந்தலையுடையளான ஒரு இளம் பெண்ணை
ஒருத்தி தன்னை	ஒரு பெண்பிள்ளையை	புணர்தி	கலவி செய்யாநின்றாய்;
கடைக் கணித்து	கடைக்கண்ணால் பார்த்து விட்டு	அவளுக்கும்	அந்தப் பெண்ணுக்கும்
ஆங்கே	அப்படியிருக்கச் சொல்லி	மெய்யன் அல்லை	பொய்யனாயிராநின்றாய்;
ஒருத்திதன் பால் மனம் மருவி வைத்து	வேறொரு பெண்பிள்ளை யிடத்தில் மனதைப் பொருந்தச் செய்து, (அவளையும் விட்டு)	மருது இறுத்தாய்	இரட்டை மருதமரங்களை முறித்துத்தள்ளினவனே!
மற்று ஒருத்திக்கு	வேறொரு பெண்ணிடத்தில்	உன் வளர்த்தி யோடே	நீ வளர்வதோடு கூடவே
உரைத்து	(உனக்குநான் அடியேன்') என்று சொல்லிவைத்து,	உன்தன் மாயை	உன்னுடைய கள்ளங் கபடங்களும்
ஒரு பேதைக்கு	வேறொரு பெண்ணுக்கு	வளர்கின்றது	வளர்ந்து வாராநின்றன;
பொய் குறித்து	(ஸம்ச்லேஷத்துக்காகப்) பொய்யாகவே (ஒரு ஏகாந்தஸ்தலத்தைக்) குறிப்பிட்டுவைத்து, ஆக இத்தனை பேரையும் ஏமாற்றி விட்டு)	ஆல்	அந்தோ!,

* * * இங்கே "மருதிறுத்தாய்!" என விளித்ததனால், நீ பருவம் நிரம்புவதற்கு முன்னமே தீண்டிஞரைக் கொன்றவனுதலால் உன்னைத் தீண்ட நான் அஞ்சா நின்றேன் காண் என்று குறிப்பிட்டவாறு மென்ப. (ஊ)

701 தாய்முலைப்பாலிலமுதிருக்கத் தவழ்ந்து தளர்நடையிட்டுச்சென்று *
பேய்முலைவாய்வைத்துநஞ்சையுண்டு பித்தனென்றே பிறரேசநின்றாய் *
ஆய்மிகுகாதலோடுயானிருப்ப யான்விடவந்த வென்தூதியோடே *
நீமிகுபோகத்தைநன்குகந்தாய் அதுவுமுன்கோரம்புக்கேற்குமன்றே. (ச)

தாய் மூலையில்	தாயாகிய யசோதைப் பிராட்டியினுடைய மூலைகளில்
பால் அமுது இருக்க	போக்யமான பால் இருக்கச் செய்தேயும், (அதனை விரும்பாமல்)
தவழ்ந்து	தவழ்ந்துகொண்டு
தளர் நடை இட்டு சென்று	தட்டுத்தடுமாறி நடந்து சென்று
பேய் முலை வாய் வைத்து	பூதனையினுடைய முலையிலே வாயை வைத்து
நஞ்சை உண்டு	(அம்முலைமீது தடவிக்கிடந்த) விஷத்தை உறிஞ்சி அமுதுசெய்து
பித்தன் என்று	(இப்படி செய்தது காரணமாக) 'பைத்தியக்காரன்' என்று
பிறர் ஏச நின்றாய்	அயலாரெல்லாரும் பரிஹஸிக்கும்படி நின்ற பிரானே !
யான்	நான்
ஆய் மிகு காதலொடு இருப்ப	மிகவும் அதிகமான ஆசையோடு எதிர்பார்த்திருக்கையில்,
நீ	நீ,
யான் விட வந்த என் தூதியோடே	என்னால் தூதனுப்பப்பட்டு (உன்னிடம்) வந்த என் வேலைக்காரியோடே
மிகு போகத்தை	நல்ல போக ரஸங்களை
நன்கு உகந்தாய்	நன்றாக அநுபவித்தாய்.
அதுவும்	அந்தச் செய்கையும்
உன் கோரம்புக்கு	உனது தீம்புக்கு
ஏற்கும் அன்றே	தகுந்திருக்குமாய்த்து.

702 மின்னைத்தநுண்ணிடையாளைக்கொண்டு வீங்கிருள்வாயென்றன்வீதியூடே *
பொன்னைத்தவாடைகுக்கூடலிட்டுப் போகின்றபோதுநான்கண்டுநின்றேன் *
கண்ணுற்றவளைநீகண்ணலிட்டுக் கைவிளிக்கின்றதும்கண்டேநின்றேன் *
என்னுக்கவளைவிட்டிங்குவந்தாய் இன்னமங்கேநடநம்பி ! நீயே. (ரு)

மின் ஒத்த நுண் இடையாளை கொண்டு	மின்னல்போன்று ஸூக்ஷ்மமான இடையையுடைய ஒரு பெண்ணை அணைத்துக்கொண்டு
வீங்கு இருள் வாய்	நிபிடமான (மிக்க) இருள்வேளையிலே
பொன் ஒத்த ஆடை	பீதாம்பரத்தாலே
குக்கூடல் இட்டு	முட்டாக்கிட்டுக்கொண்டு
என்தன் வீதி ஊடே	என் வீதிவழியே
போகின்ற போது	(அவளும் நீயுமாகப்) போகும் போது
நான் கண்டு நின்றேன்	நான் பார்த்துக்கொண்டிருந்தேன்: (அன்றியும்:) நீ—;
கண்ணுற்றவளை	கண்ணில் தென்பட்ட வேறொருத்தியை
கண்ணல் இட்டு	(உனக்கே அற்றுத் தீரும்படி) கடாக்ஷித்து
கை விளிக்கின்றதும்	(இன்னவிடத்தே வாவென்று) கையாலே அழைத்து ஸம்ஜ்ஞை பண்ணினதையும்
கண்டே நின்றேன்	பார்த்துக்கொண்டுதானிருந்தேன்;
அவளை விட்டு	அந்தப் பெண்மணியை விட்டு
இங்கு	என்னிடத்திற்கு
என்னுக்கு வந்தாய்	ஏதுக்காக வந்தாய் !
நம்பி	ஸ்வாமிந்!
இன்னம் அங்கே நட	இனிமேலும் நீ அவர்களிடத்திற்கே நடப்பாயாக.

* * * வேறொருத்தியின் பாசுரம் இது. நள்ளிருளில் ஒருவர்க்குந் தெரியாமல் போகவேணுமென்று போகிறவன் இருளன்னமாமேனியைத் திறந்துகொண்டே போகலாம்; அல்லது கறுத்ததோர் ஆடையைப் போர்த்துக்கொண்டு போகலாம். நீயோ இரவே அகற்றிப் பளபளவென்று ப்ரகாசிக்கும்படியான பீதாம்பரத்தை முட்டாக்கிட்டுக் கொண்டுபோனாய்; போவதுதானும் வேறுவழியாயோ? நான் கண்டு வயிறெரியவேணுமென்றே என் தெருவழியே போனாய், என்ற கருத்துக்களை விரித்துக்கொள்க. குக்கூடல்—முட்டாக்கு. (ரு)

703 மற்போருதோளுடைவாசுதேவா வல்வினையேன்துயில்கொண்டவாறே *
இற்றையிரவிடையேமத்தேன்னை இன்னணமேலிட்டகன்றுநீபோய் *
அற்றையிரவுமோர்பிற்றைநாளும் அரிவையரோடுமணங்குவந்தாய் *
எற்றுக்குநீயென்மருங்கில்வந்தாய் எம்பெருமான் ! நீயெழுந்தருளே. (சு)

மல் பொரு தோள் உடை வாசுதேவா	மல்லரோடு போர்செய்த தோள் களையுடைய கண்ணபிரானே !
வல்வினேயேன்	மஹாபாவியான நான்
துயில் கொண்ட வாறே	தூங்குவதற்கு ஆரம்பித்த வுடனே
இற்றை இரவு இடை ஏமத்து	அன்றிரவு நடுச்சாமத்திலே
இன் அணைமேல்	இனிய படுக்கையிலே
என்னை இட்டு	என்னைப் படுக்கவிட்டு
நீ அகன்று போய்	நீ விலகிப்போய்
அற்றை இரவும்	(அகன்றுபோன) அன்றிரவும்
ஓர் பிற்றைநாளும்	—அதற்கு மறுநாளும்
அரிவையரோடும்	(எல்லாப்) பெண்களோடும்
அணைந்து வந்தாய்	கலவிசெய்து வந்தாய்;
நீ	இப்படிப்பட்ட நீ,
என் மருங்கில் எற்றுக்கு வந்தாய்	என்னருகில் ஏதுக்காக வந்தாய்?
எம்பெருமான்	என் நாயகனே !
நீ எழுந்தருள்	நீ (அவர்களிடமே) போகக்கட. [வை.

* * * வேறொரு பெண்மணியின் பேச்சு இது. மல்லர்களோடு யுத்தஞ்செய்யக் கற்றுயேயன்றி என்னோடு சிருங்கார ரஸானுபவம் பண்ணக் கற்றிலைகாண் ! என்ற உபாலப்பம் தோன்ற "மற்பொரு தோளுடை வாசுதேவா!" என விளிக்கின்றனள். வல்வினேயேன் = நீ என்னை ஒருத்தியையே விரும்பி மற்றையோரைக் கண்ணெடுத்துப் பாராமலிருப்பதற் குறுப்பான பாக்கியமற்ற நான், என்பது கருத்து. இரண்டாமடியில், "இற்றையிரவிடை" என்றே பாடம் நிகழினும் "அற்றை யிரவிடை" என்ற பாடமே வியாக்கியானத்திற்கும் பொருட்சேர்த்திக்கும் தகும் என்பர் பெரியோர். (சு)

704 பையரவின்னணைப்பள்ளியினாய் பண்டையோமல்லோம்நாம் * நீயுகக்கும்
மையரியோண்கண்ணினருமல்லோம் வைகியெம்சேரிவரவோழிநீ *
செய்யவுடையுந்திருமுகமும் செங்கனிவாயுங்குழலுங்கண்டு*
பொய்யொருநாள்பட்டதேயமையும் புள்ளுவம்பேசாதேபோகுநம்பீ ! (எ)

பை அரவு இன் அணை பள்ளியினாய்	படங்களையுடைய இனிய சேஷ சயனத்திலே பள்ளிகொள்பவனே!
நம்பி	பூர்ணனனவனே!
நாம்	நாங்கள்
பண்டையோம் அல்லோம்	உன் மாயைப்பேச்சுவலையில் அகப்படுகைக்கு பழையபடி ஏமாந்தவர்களல்ல;
நீ உகக்கும்	நீ விரும்பத்தக்கவர்களாய்
மை	மையணிந்து
அரி ஒண்	மான் போலழகிய
கண்ணினரும் அல்லோம்	கண்படைத்தவர்களான பெண்களுமல்லோம்;
வைகி	காலவிளம்பஞ் செய்து
எம் சேரி	எமது அகத்துக்கு
வரவு ஒழி நீ	வருவதை இனி நீ விட்டிடு;
செய்ய உடையும்	அழகிய பீதாம்பரத்தையும்
திரு முகமும்	திருமுகமண்டலத்தையும்
செம் கனி வாயும்	சிவந்த கோவைக்கனி போன்ற அதரத்தையும்
குழலும்	கூந்தல் முடியையும்
கண்டு	பார்த்து (அவற்றில் ஈடுபட்டு)
பொய்	உன் பொய்வார்த்தைகளில்
ஒரு நாள் பட்ட தே அமையும்	ஒருநாள் பட்டபாடு போதுமே;
புள்ளுவம்	க்ருத்ரிமமான வார்த்தைகளை
பேசாதே	(மறுபடியும்) சொல்லாமல்
போகு	(உன் தேவிமார்களிடத்தே) போய்ச்சேர்.

* * * வைகி என்றதன் கருத்துயாதெனில்;—'உங்களிருப்பிடத்திற்கு மற்றும் எத்தனையோ பேர் வருகிறப்போலே நானுமொருவன் வந்தாலென் ? என்னையேன் போகச்சொல்லுகிறாய் ?' என்று கண்ணபிரான் கேட்க; 'எல்லாரும் வரும்போதில் உன்னை நான் வரவேண்டாவென்று சொல்லவில்லை; பிறர்க்கு அதிசங்கை உண்டாம்படி அகாலத்திலே வருவதைத் தான் மறுக்கிறேன்' என்கிறாள் என்க. பிறகு கண்ணபிரான் "நங்காய்! இதற்குமுன் சொல்லாத வார்த்தைகளை இன்று புதிதாகச்சொல்லுகிறாயே! என்னை வேற்றுமனிசனாக நினைத்துவிட்டாயே!" என்ன; உன் கள்ளச்செயல்களையும் க்ருத்ரிமபாஷணங்களையும் முன்பு நம்பிப்பட்டதுபோதும்; இனி வேண்டா என்கிறாள். புள்ளுவம்-வஞ்சகம். (எ)

705 என்னைவருகவெனக்குறித்திட்டு இனமலர்முல்லையின்பந்தர்நீழல் *
மன்னியவனைப்புணரப்புக்கு மற்றென்னைக்கண்டுழறுகெழிந்தாய் *
பொன்னிறவாடையைக்கையில்தாங்கிப் பொய்யச்சம்காட்டிநீபோதியேலும் *
இன்னமென்கையகத்தீங்கொருநாள் வருதியேலென்சினம்தீர்வன்நானே. (அ)

என்னை	என்னை
வருக என	(இன்னவிடத்திற்கு)வாவென்று
குறித்திட்டு	ஸங்கேதம் பண்ணிவைத்து விட்டு,
இனம் மலர் முல் லையின் பந்தர் நீழல்	நிறைந்த மலர்களையுடைய முல் லைப்பந்தலின் நிழலிலே
மன்னியவனை	(வெகுகாலமாய்ப்) பதுங்கி நின்ற ஒருத்தியை
புணர புக்கு மற்று என்னை கண்டு	ஸம்ச்லேஷிக்கப்போய் பிறகு என்னைப்பார்த்து
உழறு கெழிந்தாய் பொன் நிறம் ஆடையை	கலங்கி அப்பாலே நழுவினாய்; பீதாம்பரத்தை
கையில் தாங்கி	கையிலே தாங்கிக்கொண்டு
பொய்	பொய்யாக
அச்சம் காட்டி	நீ என்னக்கு அஞ்சினதாக நான் பாவிக்கும்படி செய்துகொண்டு
நீ போதி ஏலும்	நீ (என்கைக்கு அகப்படாமல்) ஓடிப்போன போதிலும்
இன்னம்	இனி
ஈங்கு	இங்கே
என் கை அகத்து	என்னிடத்திற்கு
ஒரு நாள் வருதி ஏல்	ஒருநாளாகிலும் வருவாயாகில் (அப்போது)
நான் என் சினம் தீர்வன்	நான் என்கோபத்தைத்தீர்த்துக் கொள்வேன்.

* * * [என்சினம் தீர்வன்நானே] என்கிறவிடத்தைக் கோயிலில் திருவத்யயநோத்ஸவத்தில் 'உய்ந்த பிள்ளை' என்பாரொரு அரையர் அபிநயிக்கும்போது, கையாலே அடிப்பதும் காலாலே துவைப்பதுமாய் அபிநயித்தார்; அதாவது—மறுபடியும் நீ என்கையில் அகப்படும் போது உன்னை நான் கையாலடித்தும் காலால் துகைத்தும் என் கோபத்தைத் தணித்துக் கொள்வேன் என்பதாகக் கருத்தைவிரித்தார். அப்போது கோஷ்டியிலெழுந்தருளியிருந்த எம்பார் இங்ஙனே அரையர் காட்டிய அபிநயத்தைக் கடாக்ஷித்து அரையர்க்கு ராஜிக்யம் போராதென்று திருவுள்ளம்பற்றி, 'கெடுவாய்! அப்படி அவள் செய்தாளாகில் ஊஹும்ஹும்ஹும் நம மொவிகா தாஹ நம" என்றிருக்கிற கண்ணனுக்கு அது வருத்தமோ? வேப்பிலை யருண்டையோ? இது அவனுக்கு ஸுஹ்யமாஹ மாகுமன்றே ஆகையால் அதுவன்று கருத்து; முகங்கொடுக்காமல் முகத்தை மாறவைத்து என் கோபத்தைத் தணித்துக்கொள்வேன் என்னுங் கருத்துத் தோன்ற, கையிட்டு முகத்தை மறைத்துத் திரியவைத்தருளிக் காட்டவேணுமென்று தாம் அவ்வாறாக அபிநயித்துக்காட்டினர் என்று ப்ரஸித்தம். (அ)

706 மங்கலநல்வனமாலைமார்விலிலங்க மயில்தழைப்பீலிசூடி *
பொங்கிளவாடை அரையில்சாத்திப் பூங்கொத்துக்காதில்புணரப்பெய்து *
கொங்குநறுங்குழலார்களோடு குழைந்துகுழலினிதூதிவந்தாய் *
எங்களுக்கேயோருநாள்வந்தூத உன்குழலின்னிசைபோதராதே. (கூ)

மங்கலம்	மங்களகரமாய்
நல்	விலக்ஷணமான
வனமாலை	வனமாலையானது
மார்பில்	மார்விலே
இலங்க	பிரகாசிக்க,
மயில் தழைப்பீலி	மயிலிறகுகளை
சூடி	சூடிக்கொண்டும்
பொங்கு இள ஆடை	பளபளவென்ற மெல்லிய ஆடையை
அரையில் சாத்தி	அரையிலே சாத்திக்கொண்டும்
பூ கொத்து காதில்	பூங்கொத்துக்களை காதிலே
புணரப் பெய்து	மிகவும் பொருந்த அணிந்து கொண்டும்
கொங்கு நறு குழ லார்களோடு	தேன்மணம் கமழ்கின்ற கூந் தலையுடைய பெண்களோடு
குழைந்து	ஸம்ச்லேஷித்து (அத்தாலுண் டான ஸந்தோஷத்துக்குப் போக்குவீடாக)
குழல்	புல்லாங்குழலை

இனிது ஊதி வந்தாய்	போக்யமாக ஊதிக்கொண்டு வந்தாய்;	வந்து ஊத	வந்து ஊதும்படி
ஒரு நாள்	ஒரு நாளாகிலும்	உன் குழலின் இசை	உனது குழலின் இசையானது
எங்களுக்கே	எங்களுக்காக	போதராது	வரமாட்டாதுகாண்.

707 அல்லிமலர்த்திருமங்கைகேள்வன்தன்னை நயந்தளவாய்ச்சிமார்கள் *
எல்லிப்போழுதினிலேமத்தூடி எள்கியுரைத்தவுரையதனை *
கொல்லிநகர்க்கிறைகூடற்கோமான் குலசேகரனின்னிசையில்மேவி *
சொல்லியவின்தமிழ்மாலைபத்தும் சொல்லவல்லார்க்கில்லைதுன்பந்தானே. (ய)

இள ஆய்ச்சிமார்கள்	இளமை தங்கிய இடைப்பெண்கள்	கூடல் கோமான்	மதுரைக்கு அரசருமான
அல்லி மலர் திருமங்கை கேள்வன் தன்னை நயந்து	தாமரைப்பூவில் பிறந்த பிராட்டிக்குக் கொழுநனை கண்ணபிரானை ஆசைப்பட்டு,	குலசேகரன்	குலசேகராழ்வார்
		இன் இசையில் மேவி	இனிய பண்ணிலே பொருந்த
எல்லி ஏமப் பொழுதினில்	ராத்ரியின் நடுச்சாமத்திலே	சொல்லிய	அருளிச்செய்த
		இன் தமிழ்	பரமபோக்யமான தமிழாலாகிய
ஊடி	ப்ரணய கலஹம்பண்ணி	மாலை	மாலாரூபமான
எள்கி	ஈடுபட்டு	பத்தும்	இப்பத்துப் பாட்டையும்
உரைத்த உரை அதனை	சொன்ன பாசுரங்களை (உட்கொண்டு)	சொல்ல வல்லார்க்கு	ஓதவல்லவர்களுக்கு
கொல்லி நகர்க்கு இறை	கொல்லி என்னும் நகருக்குத் தலைவரும்	துன்பம் இல்லை	ஸம்ஸாரதுக்கம் அணுகாது.

அடிவரவு:—ஏர் கெண்டை கரு தாய் மின் மற்பொரு பையரவின் என்னை மங்கல அல்லி ஆலை. (ய)

ஸ்ரீ:

ஏழாந்திருமொழி—ஆலை நீள் கரும்பு.

கண்ணபிரானுடைய குழந்தைத் திருவிளையாடல்களை யசோதை கண்டு களித்தாற் போலத் தான் களிக்கப்பெறாமல் இழந்த தேவகியார் பின்பு கண்ணனைக் கண்டபொழுது கழிவிரக்கத்தோடு பேசின பேச்சுக்களாற் செல்லுகிறது, இத்திருமொழி.

708 ஆலைநீள்கரும்பன்னவன்தாலோ அம்புயத்தடங்கண்ணினன்தாலோ *
வேலைநீர்நிறத்தன்னவன்தாலோ வேழப்போதகமன்னவன்தாலோ *
ஏலவார்குழலென்மகன்தாலோ என்றென்றுன்னையேன்வாயிடைநிறைய *
தாலோலித்திடும்திருவினையில்லாத் தாயிற்கடையாயின தாயே. (க)

ஆலை நீள் கரும்பு அன்னவன்	ஆலையிலிட்டு ஆடக்கருந்த நீண்ட கரும்புபோன்ற கண்ணனே!	ஏலம் வார் குழல்	பரிமளம் மிக்கு நீண்ட திருக்குழலையுடைய
தாலோ	(உனக்குத்) தாலாட்டு;	என் மகன்	என்மகனே!
அம்புயம் தட கண்ணினன்	தாமரைபோன்று விசாலமான திருக்கண்களையுடையவனே!	தாலோ	தாலேலோ;
		என்று என்று	இப்படி பலகாலுஞ்சொல்லி
தாலோ	தாலேலோ;	என் வாயிடை நிறைய	என் வாய் த்ருப்தியடையும்படி
வேலை நீர் நிறத்து அன்னவன்	கடலின் நிறம்போன்ற நிறத்தையுடையவனே!	உன்னை தால் ஒலித்திடும் திருவினை இல்லா தாயிற்கு	உன்னைத் தாலாட்டுகையாகிற ஸம்பத்து இல்லாத தாய்மார்களில்
தாலோ	தாலேலோ;		
வேழம் போதகம் அன்னவள்	யானைக்குட்டி போன்றவனே!	கடை ஆயின தாய்	கடையான தாயாயிரா நின்றேன் நான் (என்கிறாள் தேவகி.)
தாலோ	தாலேலோ;		

* * *—பன்னிரண்டு மாதம் உன்னை வயிற்றிற் சுமந்து பெற்ற நான் உடனே திரு வாய்ப்பாடிக்குப் போக்கிவிட்டேனுதலால், உன்னைத் தொட்டிலிலிட்டுத் தாலாட்டுதல் முதலிய ஆநந்தாநுபவங்களை யசோதை பெற்றாளே யன்றி நான் பெறுதொழிந்தேன், பாவியே னிழந் தேன், பிள்ளையைப் பெற்று ஆநந்தாநுபவம் பண்ணப்பெறுத துரதிருஷ்டஸ்ரீவிகளான தாய் மாரில் அந்தோ ! நான் கடைகெட்ட தாயரகிவிட்டேனே ! என்று தேவகி தன் வயிற்றெரிச் சலிக் கண்ணபிரானை நோக்கிக் கூறுகின்றன ளென்க.

"ஆலிநீள் கரும்பன்னவன்" என்று தொடங்கி "ஏலவார் குழலென்மகன்" என்றளவு முள்ள ஐந்து விளிகளும் அண்மை விளி. குழந்தையைத் தொட்டிலிலிட்டுத் தாலாட்டும் போது தாய்மார் முதலியோர் பாராட்டிச் சொல்லும் பாசுரம் இவை. ஆலியிலிட்டு ஆடத் தகுந்த கரும்பு என்றது—நன்றாக முற்றி ரஸம் நிரம்பிய கரும்பு என்றவாறு; அதுபோன்ற வனே! என்றது—"ரஸொவைஸ:" என்று உபநிஷத்தில் ஓதியுள்ளபடி—இன்சுவையே உரு வெடுத்து வந்தாற்போலுள்ளவனே! என்றபடி: தாலோ=தால்—நாக்கு; குழந்தைகளை உறங்கப் பண்ணுவதற்காகப் பெண்கள் நாவை அசைத்துச் சொல்லும் சொலவு. (க)

709 வடிக்கோளஞ்சனமெழுதுசெம்மலர்க்கண் மருவிமேலினிதோன்றினைநோக்கி *
முடக்கிச்சேவடிமலர்ச்சிறுகருந்தாள் போலியும்நீர்முகிற்குழவியேபோல *
அடக்கியாரச்செஞ்சிறுவிரலனைத்தும் அங்கையோடணைந்தானையிற்கிடந்த *
கிடக்கைகண்டிடப்பெற்றிலேனந்தோ கேசவாகெடுவேன்கெடுவேனே. (உ)

வடி கொள்	கூர்மையை யுடைத்தாய்
அஞ்சனம் எழுது	மையிடப் பெற்றதாய்
செம் மலர்	செந்தாமரை மலரை ஒத்ததான
கண்	கண்களாலே
மேல் ஒன்றினை	மேற்கட்டியிலே தொங்கவிட்டி ருக்கும் கிளி முதலியவற்றில் ஒரு வஸ்துவை
இனிது	இனிதாக
மருவி நோக்கி	பொருந்தப் பார்த்துக்கொண்டும்;
கரு தாள்	கறுத்தபுறந்தாளை யுடையதும்
மலர்	செந்தாமரை மலரையொத்து
சிறு	சிறுத்த
சே அடி	சிவந்த அகவாயை உடையது மான திருவடிகளை
மூடக்கி	மூடக்கிக்கொண்டும்
நீர் பொலியும்	(கழுத்தளவும் பருகின) நீர் விளங்கப்பெற்ற
முகில் குழவிபோல	மேகக்குட்டி போல,
செம் சிறு விரல் அனைத்தும்	அழகிய சிறுத்த திருவிரல்க ளெல்லாவற்றையும்
அம் கையோடு	உள்ளங்கையிலே
அடக்கி ஆர	அடங்கும்படி
அணைந்து	முடக்கிப் பிடித்துக்கொண்டும்
ஆனையின் கிடந்த கிடக்கை	ஆனை கிடக்குமாபோலே பள்ளி கொண்டருளுமழகை
கண்டிட பெற்றிலேன்	கண்டு அநுபவிக்கப் பெறுத பாவியானேன்;
அந்தோ	ஐயோ!
கேசவா	கண்ணபிரானே!
கெடுவேன் கெடுவேன்	ஒன்று மநுபவிக்கப்பெறுத பெரும்பாவியானேன்.

* * * தாயாயிருந்து தாலாட்டும் பாக்கியத்தை மாத்திரமேயோ நானிழந்தது? நீ தொட்டிலிற் சாய்ந்திருக்குமழகை ஊர்ப்பெண்களெல்லாரும் திரண்டு வந்து கண்டு களித்துப் போவர்களே; அவர்களில் ஒருத்தியா யிருந்தாகிலும் நான் அவ்வழகைக் காணப்பெற்றேனே? அக்கேடுமில்லையே! ஐயோ! என்கிறாள். குழந்தைகள் தொட்டிலில் கிடக்கும்போது இருக் கக்கூடிய இயல்வைச் சொல்வன மூவடிகளும். குழந்தைகள் தொட்டிலில் அண்ணாந்து பார்த்துக்கொண்டு கிடக்குமாதலால் வேறு நினைவின்றி மேலே உற்றுநோக்குதற்காகத் தொட்டிலின்மீது கிளிச்சட்டம் தொங்கவிட்டு வைப்பர்கள்; அதில் மிக அழகான ஒரு வஸ்துவை உற்றுநோக்கிக்கொண்டு களித்திருத்தல் குழந்தைகளின் இயல்பு; அதனைக்கூறுவது முதலடி. தொட்டிலில் கிடக்கும் விதம் சொல்லுகிறது மேல். மேல்புறம் கறுத்து உட்புறம்

சிவந்துள்ள திருவடிகளே முடக்கிக்கொண்டும், கைவிரல்களே முடக்கிக்கொண்டும், 'மேகக் குட்டி கிடக்கிறதோ! ஆனைக்குட்டி கிடக்கிறதோ!' என்று விகற்பிக்கலாம்படியாக நீ தொட்டிலில் சாய்ந்திருக்கும் போதை யழகை அநுபவிக்கப் பெருது இழந்தேனே (உ)

710 மூந்தைகன்முறையன்புடைமகளிர் முறைமுறைதந்தம்குறங்கிடையிருத்தி *
எந்தையே! என்தன்குலப்பெருஞ்சுடரே எழுமுகில்கணத்தெழில்கவரேறே! *
உந்தையாவனென்றுரைப்பநின்செங்கேழ்விரலினும் கடைக்கண்ணினும்காட்ட *
நந்தன்பெற்றனன்நல்வினையில்லா நங்கள்கோன்வசுதேவன்பெற்றிலனே. (ங)

அன்பு உடை	ப்ரீதியை யுடையவர்களான
மூந்தை நல் முறை மகளிர்	பரம்பரையாக வருகிற நல்ல உறவு முறையையுடைய பெண்கள்
தம் தம் குறங் கிடை	தங்கள் தங்கள் துடைகளிலே
முறை முறை	க்ரமம் க்ரமமாக
இருத்தி	வைத்துக்கொண்டு
எந்தையே	"என் அப்பனே!
என்தன் குலம் பெருசுடரே	எங்கள் குலத்துக்குப் பெருத்த தொரு விளக்கானவனே!
எழு முகில் கணத்து	(கடலில் நீரை முகந்துகொண்டு) மேலெழுகின்ற மேக ஸமூஹத்தினுடைய
எழில் கவர் ஏறே	அழகைக் கவர்ந்துகொண்ட "காளைபோன்றவனே!" (என்றிப்படி பலவாறுகத் துதித்து)
உந்தையாவன் என்று உரைப்ப	உன் தகப்பனர் யார்? (காட்டு,) என்றவளவிலே
நின்	உன்னுடைய
செம் கேழ் விரலினும்	சிவந்து சிறந்த விரலினலும்
கடை கண்ணினும்	கடைக் கண்ணலும்
காட்ட	(இன்னர் என் தகப்பனர் என்று) காட்ட, (அந்தப் பாக்கியத்தை)
நந்தன் பெற்றனன்	நந்தகோபர் பெற்றார்;
நல் வினை இல்லா நங்கள் கோன்	பாக்யஹீனையான என்னுடைய பர்த்தாவான
வசுதேவன்	வஸுதேவர்
பெற்றிலன்	(நந்தகோபர் பெற்ற பாக்கியத்தைப்) பெறவில்லை.

* * * ஒருவீட்டில் ஒரு குழந்தை பிறந்ததென்றால் உறவினரெல்லாரும் வரிசை வரிசையாக வந்து குழந்தையை எடுத்துத் தம் தம் துடை மீது இட்டுக்கொண்டு, 'என் நாயனே! என் குலவிளக்கே! என் கண்மணியே!' என்றிப்படி பலவாறுகப் புகழ்ந்து கூறி, 'என் செல்வமே! உன் தகப்பன் யார்? காட்டு பார்ப்போம்' என்று கேட்குமளவில் குழந்தை தன் விரலாலும் கடைக் கண்ணாலும் தன் தந்தையைக் காட்டுவது வழக்கம்; அவ்வாறு ஸ்ரீ க்ருஷ்ண ஜிஜ்ஞாஸை கேட்கும்போது, பெற்ற தகப்பனுகிய வஸுதேவனைக் காட்டவேண்டியது ப்ராப்தமாயிருக்கவும் பிறந்தது முதலாக நந்தகோபர் மாளிகையிலேயே வளர்ந்தது பற்றி அந்த நந்தகோபரை யன்றி வேறொருவரைத் தந்தையென்றறியாமையால் அவரையே தனக்குத் தந்தையாகக் காட்டிணுனை வடுக்கும் என்றெண்ணிய தேவகி, அந்தோ! பரமபாக்ய ஸாலிகியான யசோதையைக் கைப்பிடித்த பாக்யத்தாலே "இவன் என் தகப்பன்" என்று விரலாலும் கண்ணாலும் காட்டும்படியான அத்ருஷ்டத்தை நந்தகோபன் பெற்றான்; பெரும் பாவியான என்னைக் கைப்பிடித்த கொடுமையாலே வஸுதேவன் இழந்தான்; என்று சொல்லி வயிறெரிகிறாள். (ங)

711 களிநிலாவெழில்மதிபுரைமுகமும் கண்ணனே! திண்கைமார்வும்திண்தோளும் *
தளிர்மலர்க்கருங்குழல்பிறையதுவும் தடங்கொள்தாமரைக்கண்களும்போலிந்த *
இளமையின்பத்தையின்றென்தன்கண்ணால் பருகுவேற்கிவள்தாயெனநினைந்த *
அளவில்பிள்ளைமையின்பத்தையிழந்த பாவியேனெனதாவிநில்லாதே. (ச)

கண்ணனே	ஸ்ரீ க்ருஷ்ணனே!
களி நிலா	ஆநந்தத்தை விளைக்கும் நிலாவையுடைய
எழில் மதி புரை முகமும்	பூர்ண சந்திரனை ஒத்த திருமுகமும்
திண் கை	திண்ணிதான திருக்கைகளும்

மார்வும் திருமார்பும்
நின் தோளும் } வலிமைபொருந்திய திருத்தோள்களும்
தளிர் மலர் கரு குழல் } தளிரையும் மலரையு மூடைத் தாய்க் கனுத்த திருக்குழற் கற்றையும்
பிறை அதுவும் } அஷ்டமீ சந்திரன் போன்ற திருநெற்றியும்,
தடங் கொள் விசாலமான
தாமரை கண்களும் } தாமரைபோன்ற திருக்கண் களும் (ஆகிய இவை)
பொலிந்த இளமை இன்பத்தை } அழகுபெற்று விளங்கும்படி யான யௌவநாவஸ்தை யின் போக்யதையை

இன்று இப்போது
என்தன் கண்ணுல்-என்னுடைய கண்ணுலே
பருகுவேற்கு (நான்) அநுபவியாநின்றலும்
இவள் தாய் எனை நினைந்த } '(இவள் என்னுடைய)தாய் என்று நினைப்பதற்குத்தகுதியான
பிள்ளைமை சைசவப்பருவத்திலுண்டான'
அளவு இல் இன்பத்தை } அளவில்லாத ஆநந்தத்தை
இழந்த அநுபவிக்கப்பெருமல் இழந்த
பாவியேன் எனது - பாவியான என்னுடைய
ஆவி உயிரானது
நில்லாது தரித்து நிற்க வழியில்லையே!.

* * * கண்ணபிரானே! செறிந்த நிலாவையுடைய பூர்ண சந்திரன் போன்ற திரு முகமும் நிண்ணிதான திருக்கையும் திருமார்வும் திருத்தோளும் திருக்குழலும் திருநெற்றியும் திருக்கண்களுமாகிய இவ்வவயவங்களின் சோபைகளால் விளங்கா நின்றுள்ள உனது யௌவந பருவத்திலழகை இப்போது நான் கண்ணுரக் கண்டநுபவியா நின்றேனுகிலும், தாயாரொருத்தியையேயன்றி வேறொருத்தரையு மறியாத இளம்பருவத்தை அநுபவிக்கப் பெறுமற்போனேனே! என்கிற அநுதாபமே என் நெஞ்சைக் கொள்ளே கொண்டிருப்பதனல் இப்போது அநுபவிக்கப் பெற்றது ஒரு பொருளாகத் தோன்றுமல் கழிவிரக்கமே என்னைப் புண்படுத்தா நின்ற தென்கிறுள். (ச)

712 மருவுநின்திருநெற்றியில்சுட்டியசைதர மணிவாயிடைமுத்தம்
தருதலும் * உன்றன்தாதையைப்போலும்வடிவுகண்டுகொண்டு உள்ளமுள்குளிர *
விரலைச்செஞ்சிறுவாயிடைச்சேர்த்து வெகுளியாய்நின்றுரைக்குமவ்வுரையும் *
திருவிலேனென்றும்பெற்றிலேன் எல்லாம்தெய்வநங்கையசோதைபெற்றாளே. (ரு)

நின் திரு நெற்றியில் மருவும் சுட்டி அசைதர } உன்னுடைய திரு நெற்றியிலே பொருந்தியிருக்கிற சுட்டி யானது அசையும்படி
மணி வாயிடை முத்தம் தருதலும் } அழகிய வாயிலுண்டான முத்தத்தைக் கொடுப்ப தென்ன,
உன்தன் தாதை யைப் போலும் } உன்னுடைய தகப்பனுரைப் போன்ற
வடிவு (உன்) வடிவழகை
கண்டுகொண்டு (நான்) பார்த்து
உள்ளம் உள் குளிர } (என்) மனஸ்ஸானது உள்ளே குளிரும்படி
செம் சிறு வாயிடை-சிவந்த சிறிய திருவாயிலே

விரலை சேர்த்து விரல்களை வைத்துக்கொண்டு
வெகுளியாய் நின்று உரைக்கும் அவ்வுரையும் } (நீ) சீற்றத்தோடே சொல்லுகிற மழலைச் சொற்க ளென்ன (ஆகிய இவற்றிலே)
ஒன்றும் ஒன்றையும்
திரு இலேன் பாக்யமற்றவளான நான்
பெற்றிலேன் அநுபவிக்கப் பெறவில்லே;
தெய்வ நங்கை எசோதை } 'தெய்வமாது' என்று சொல்ல லாம்படியான யசோதைப் பிராட்டி
எல்லாம் பெற்றாளே } (அந்த பால்யசேஷ்டிதங்கள்) எல்லாவற்றையும் அநுபவிக்கப் பெற்றுளே.

* * * திருநெற்றியிலே கூடப்பிறந்தாற்போல அமைந்து விளங்கும் சுட்டியானது அசைந்தும்படி நீ முத்தங்கொடுப்பதையும் இழந்தேன்; "நம் குழந்தையின் முகம் தகப்பனுரு டைய முகம்போலவே யிருக்கிறது!" என்று சொல்லிக்கொண்டு உனது முகத்தைச் சந்தோஷ மாகப் பார்த்து நிற்கும்போது, நீ விரல்களே வாயிலுள்ளே வைத்துக்கொண்டு பால்யோசித மாகச் சீற்றம் தோற்றச்சொல்லும் மழலைச் சொற்களையும் நான் கேட்கப்பெருமல் இழந் தேன்; இழப்பதற்கு நானொருத்தி எற்பட்டாற்போலே அநுபவிப்பதற்கு யசோதைப் பிராட்டி யென்பாளொருத்தி எற்பட்டாள், உன் லீலா ரஸங்களெல்லாவற்றையும் அவளே பெற்றனள் என்கிறுள். "முத்தம் தருதலும், உரைக்கு மவ்வுரையும் ஒன்றும்

பெற்றிலேன்" என்று அன்வயம். வெகுளியாய் நின்று—சீறுபாறென்று பேசுதல் குழந்தைகளின் இயல்வாம். யசோதை ஒருவித நோன்பும் நோற்காதே யாத்ருச்சிகமாகவே கண்ணபிரானுடைய அதிமாநுஷ சீலவ்ருத்த வேஷங்களனைத்தையுங்காணப்பெற்றமை பற்றித் தெய்வநங்கை எனப்பட்டாள். (ரு)

713 தண்ணந்தாமரைக்கண்ணனேகண்ணு தவழ்ந்தெழுந்துதளர்ந்ததோர்நடையால் *
மண்ணில்சேம்பொடியாடிவந்து என்தன்மார்வில்மன்னிடப்பெற்றிலேனந்தோ! *
வண்ணச்செஞ்சிறுகைவிரலனைத்தும் வாரிவாய்க்கொண்டவடிசிலின்மிச்சல் *
உண்ணப்பெற்றிலேன் ஓ! கொடுவினையேன் என்னையென்செய்யப்பெற்றதெம்மோயே. (சு)

தண் அம் தாமரை கண்ணனே	குளிர்ந்த அழகிய தாமரை போன்ற திருக்கண்களை யுடையவனே
கண்ணு	கண்ணபிரானே!
தவழ்ந்து	(நீ) தவழ்ந்துகொண்டு
எழுந்து	எழுந்திருந்து
தளர்ந்தது ஓர் நடையால்	தட்டுத்தடுமாறி நடப்பதாகிற ஒரு நடையிலுல்
செம் மண் பொடியில்	சிவந்த புழுதி மண்ணிலே
ஆடி	விளையாடி
வந்து	(அக்கோலத்தோடே) வந்து
என் தன் மார்வில்	என்னுடைய மார்விலே
மன்னிட பெற்றிலேன்	நீ அணையும்படியான பாக்கியத்தைப் பெற்றிலேன்;
அந்தோ	இஃது என்ன தெளர்ப்பாக்கியம்!
வண்ணம் செம் சிறு	அழகுபெற்றுச் சிவந்து சிறிதான
கை விரல் அனைத்தும்	கைவிரல்களெல்லாவற்றாலும்
வாரி	வாரிக்கொண்டு
வாய்க்கொண்ட	அமுது செய்த
அடிசிலின்	ப்ரஸாதத்தினுடைய
மிச்சல்	சேஷத்தை
உண்ண பெற்றிலேன்	(நான்) உண்ணப் பெறவில்லை;
கொடு வினையேன்	(இவற்றை யெல்லாம் நான் இழக்கும்படியாக) மஹாபாபத்தைப் பண்ணினேன்;
ஓ	ஐயோ!
எம் மோய்	என் தாயானவள்
என்னை	என்னை
என் செய்ய	ஏதுக்காக
பெற்றது	பெற்றாளோ!.

* * * குளிர்ந்து அழகிய தாமரைப்பூப்போலே அலர்ந்த திருக்கண்களையுடைய கண்ணபிரானே! நீ செம்மண்ணிலே புழுதியிலேவந்து விளையாடும்போது தவழ்ந்து செல்வதனாலும் தட்டுத் தடுமாறித் தரையில் காலூன்றியு மூன்றுதும் நடப்பதனாலும் புழுதி மண்ணை அளைந்த அக்கோலத்தோடே வந்து என் மார்விலே கட்டிக்கொண்டு கிடக்கப்பெற்றிலேனே!; எல்லாத் திருவிரல்களாலும் ப்ரஸாதத்தை வாரி அமுது செய்யும்போது வாயது கையதாக மிருந்த ப்ரஸாதத்தையு முண்ணப் பெற்றிலேனே!; ஆட்டின் கழுத்தில் முலை (அதர்) போலே என்னை என் தாய் வீணுகவேயன்றே பெற்றாளென்கிறாள். "செம்மண் பொடியில் தவழ்ந்து ஆடி, எழுந்து தளர்ந்ததோர் நடையால் வந்து என்றன் மார்வில் மன்னிடப் பெற்றிலேன்" என்று அன்வயித்துப் பொருள் கொள்ளுதல் சாலச்சிறக்கும். இப்பாட்டின் முன்னடிகட்கு

"மக்கண் மெய்தீண்டலுடற்கின்பம்" என்னுங் குறளையும், பின்னடிகட்கு

"அமிழ்தினு மாற்ற வினிதே தம் மக்கள் சிறுகை யளாவிய கூழ்"

என்னுங் குறளையும் நினைக்க. (சு)

714 குழகனேயென்தன்கோமளப்பிள்ளாய் கோவிந்தாவென்குடங்கையில்மன்னி *
ஒழுகுபேரெழிலிளஞ்சிறுதளிர்போல் ஒருகையாலோருமுலைமுகம்நெருடா *
மழலைமென்னகையிடையிடையருளா வாயிலேமுலையிருக்கவென்முகத்தே *
எழில்கொள்நின்திருக்கண்ணிணைநோக்கந்தன்னையும் இழந்தேனிழந்தேனே. (எ)

சூழகனே	எல்லாரோடும் கலக்கும் ஸ்வ பாவமுடையவனே!
என் தன் கோமளம் பிள்ளாய்	என் வயிற்றிற் பிறந்த அழகிய குமாரனே!
கோவிந்தா	கோவிந்தனே!
என் குடங்கையில் மன்னி	என்னுடைய குடங்கையிலே பொருந்தி யிருந்து
ஒழுகு பேர் எழில்	வெள்ளமிடாகின்ற மிக்க அழகையுடைத்தாயும்
இள சிறு தளிர் போல்	மிகவும் இளசான தளிர் போன்றதுமான
ஒரு கையால்	ஒரு திருக்கையாலே
ஒரு முலை முகம்	(என்னுடைய) ஒரு முலைக் காம்பை
நெருடா	நெருடிக்கொண்டு
முலை வாயிலே இருக்க	மற்றொரு முலையானது (உன்) வாயில் இருக்க
இடை இடை	நடு நடுவே
என் முகத்தே	என் முகத்தை நோக்கி
மழலை மெல் நகை அருளா	புன்சிரிப்பைச் செய்து கொண்டு
எழில் கொள் நின் திரு கண் இணை நோக்கம் தன்னையும்	அழகிய உன் இரண்டு கண்களாலும் பார்க்கிற பார்வையையும்
இழந்தேன் இழந்தேன்	ஐயோ! இழந்தேனே!

* * *—"ஒரு முலையை வாய்மடுத்து ஒரு முலையை நெருடிக்கொண்டு, இருமுலையும் முறை முறையா யேங்கி யேங்கி யிருந்துணையே" (பெரியாழ்வார் திருமொழி, உ—உ=அ) என்று யசோதை கண்ணனே வேண்டிக்கொண்டு அவ்வாறே பெற்றனள் என்பதை அறிந்த தேவகி, அப்பாக்கியம் தனக்கு நேராமற் போனதுபற்றி வருந்துகின்றாள். நீ என் குடங்கையில் சாய்ந்துகொண்டு ஒருகையாலே (எனது) ஒரு முலைக்காம்பை நெருடிக்கொண்டும் மற்றொரு முலையைத் திருப்பவளத்தில் வைத்துக்கொண்டும் நடுநடுவே என்னை இனிதாக நோக்கும் நோக்கத்தை அநியாயமாய் இழக்தொழிந்தேனே! என்கிறாள்.

சூழகன்—எல்லாரோடும் கலந்து பரிமாறுவதையே இயல்வாக வுடையவன். கோமளம்—ஸுகுமாரம். குடங்கை என்பதற்கு 'உள்ளங்கை' என்று சிலர் பொருள் கூறுவர்; அப் பொருள் உண்டாயினும் இவ்விடத்திற்கு அது பொருளல்ல; பெண்பிள்ளைகள் குழந்தைகட்கு முலை கொடுக்கும்போது தமது முழங்கையிலே குழந்தையை வைத்துக்கொண்டு முலை கொடுப் பது வழக்கமாதலால் இங்குக் குடங்கை என்பதற்கு 'முழங்கை' என்று பொருள் கொள்ளு தல் தகுதி; "எட்டுணைப்போது என் குடங்காலிருக்க கில்லாள்" இத்யாதி இடங்களில் குடங் கால் என்பதற்கு 'முழங்கால்' என்று பொருள் கொள்ளவேண்டுமாறறிக; "குடங்கையில் மண்கொண்டடனந்து" இத்யாதி ஸ்தலங்களில் 'உள்ளங்கை' என்ற பொருட்குப் பாதகமில்லை யென்க. நெருடா, அருளா—'செய்யா' என்னும் வாய்பாட்டு வினையெச்சம்; நெருடி, அருளி என்றபடி. (எ)

715 முழுதும்வெண்ணெயளைந்துதோட்டுண்ணும் முகிழிளஞ்சிறுத்தாமரைக்கையும் *
எழில்கொள்தாம்புகொண்டடிப்பதற்கு எள்குநிலையும்வெண்தயிர்தோய்ந்தசெவ்வாயும் *
அழுகையுமஞ்சிநோக்குமந்நோக்கும் அணிகொள்செஞ்சிறுவாய்நெளிப்பதுவும் *
தொழுகையுமிவைகண்டவசோதை தொல்லையின்பத்திறுதிகண்டாளே. (அ)

வெண்ணெய் முழுதும் அளைந்து	வெண்ணெயைக் குடத்திலுள் ளவளவும் (கையையிட்டு) அளைந்து
தொட்டு உண்ணும்—எடுத்து உண்கிற	
இள முகிழ் தாமரை சிறு கையும்	இளந்தளிரையும் தாமரையையும் போன்ற சிறிய திருக்கைகளும்
எழில் கொள் தாம்பு கொண்டு அடிப்பதற்கு	அழகிய தாம்பாலே அடிக்க (அதற்கு)
எள்கு நிலையும்	அஞ்சுகிற்கும் நிலையும்,
வெண் தயிர் தோய்ந்த செம் வாயும்	வெளுத்த தயிர்பூசிய சிவந்த வாயும்,
அழுகையும்	அழுவதும்,
அஞ்சி நோக்கும் அ நோக்கும்	பயந்து பார்க்கிற அப்பார்வையும்
அணிகொள் செம் சிறு வாய் நெளிப்பதுவும்	அழகிய சிவந்த சிறியவாய் துடிப்பதும்

தொழுகையும்	அஞ்ஜலி பண்ணுகையும் (ஆகிற)	அசோதை தொல்லை இன் பத்து	யசோதையானவள் பரமானந்தத்தினுடைய
இவை	இவற்றையெல்லாம்		
கண்ட	நேரில் கண்ணாற்கண்டு அநுபவித்த	இறுதி கண்டாள்	எல்லையை காணப்பெற்றாள்.

* * *—"தாரார் தடந்தோள்க ளுள்ளளவுங் கைநீட்டி, ஆராத வெண்ணெய்விழுங்கி" என்றபடி—வெண்ணெயிலுண்டான ஆதராதிசயத்தாலே கைமுழுதும் வெண்ணெய்க் குடத்திலே புகவிட்டு அளாவுதலால் "ஆழவமுக்கி முகக்கினு மாழ்கடல்நீர், நாழிமுகவாது நாணுமே" என்கிற ஸாமாந்யமான செய்தியையும் அறியாதே அவிவேகந்தோற்றச் செய்த காரியங்களைக் காணப் பெற்றிலேன், என்கிறாள் முதலடியில். "அடிப்பதற்கு" = அடிப்ப, அதற்கு எனப்பிரித்துரைத்தலுமாம்; தொகுத்தல்.

கண்ணன் தயிரைக் களவாடி உண்ணும்போது யசோதை கண்டு தடியும் தாம்புமெடுத்தவாறே "தாயெடுத்த சிறு கோலுக் குலைந்தோடித், தயிருண்டவாய் துடைத்த மைந்தன்" என்றபடி அந்தத் தயிரை மறைப்பதாகத் துடைத்துக்கொள்ள ஆரம்பித்து வாய் நிறையச் சுற்றிலும் பூசிக்கொள்வன்; பிறகு யசோதையால் அடிபட்டு அழுவன், அஞ்சிறைற் போல் நோக்குவன், வாய் துடிக்கும்படி விக்கி விக்கி அழுவன், கடைசியாக அஞ்ஜலிபண்ணுவன்; ஆக இக்கோலங்களையெல்லாம் கண்டு ஆநந்தத்தின் எல்லையிலே நிற்கும்படியான பாக்கியம்யசோதைக்குக் கிடைத்ததேயன்றிச் சுமந்துபெற்ற எனக்குக் கிடைக்காமற் போயிற்றே! என்று வருந்துகின்றாள். [தொல்லையின்பத்தினிறுதி கண்டாளே.] "சூநஹோஸ்மஹே திவ்யஜாநாதீ" என்ற உபநிஷத்தின்படி-தொல்லையின்பம் என்று எம்பெருமானுகிய கண்ணனையே சொல்லிற்றாய், அபரிச்சிந்நனை அவனை யசோதை பரிச்சிந்நனுக்கி விட்டாளே! என்றுரைப்பதுமொன்று. அழுகையும் தொழுகையும் பரிச்சிந்நர்களுடைய க்ருத்யமிறே. [பரிச்சிந்நர்—ஓரளவு பட்டவர்.] (அ)

716 குன்றினுல்குடைகவித்ததும் கோலக்குரவைகோத்ததும்குடமாட்டும் *
கன்றினுர் விளவெறிந்ததும் காலால்காளியன்தலைமிதித்ததும்முதலா *
வென்றிசேர்பிள்ளைநல்விளையாட்டமனைத்திலும் அங்கென்னுள்ளமுள்குளிர *
ஒன்றுங்கண்டிடப்பெற்றிலேனடியேன் காணுமாறினியுண்டெனிலருளே. (கூ)

குன்றினுல் குடை கவித்ததும்	கோவர்த்தன மலையைக் குடையாகத் தாங்கி நின்றதும்	நல் பிள்ளை விளையாட்டம் அனைத்திலும்	விலக்ஷணமான பால்ய சேஷ்டிதங்க ளெல்லா வற்றிலுள்ளும்
கோலம் குரவை கோத்ததும்	அழகாக ராஸக்ரீடை செய்ததும்	ஒன்றும்	ஒரு சேஷ்டிதத்தையும்
குடம் ஆட்டும்	குடக்கூத்தாடினதும்	என் உள்ளம் உள் குளிர	என் நெஞ்சு குளிரும்படி
கன்றினுல் விளவெறிந்ததும்	கன்றாய் வந்த ஒரு அசுரனைக் கொண்டு (அஸுராவேசமுடைய) விளங்காய்களை உதிர்த்ததும்	அடியேன் அங்கு கண்டிட பெற்றிலேன்	நான் அச்சேஷ்டிதங்களை நீ செய்த விடத்தில் கண்ணாரக்கண்டு களிக்கப் பெற்றிலேன்;
காலால் காளியன் தலை மிதித்ததும் முதலா	திருவடிகளாலே காளிய நாகத்தின் தலையை மர்த்திக்கதும் (ஆகிய இவை) முதலாக வுள்ள	இனி காணும் ஆறு	இப்போது (அவற்றை நான்) காணத்தக்க உபாயம்
வென்றி சேர்	வெற்றி பொருந்திய	உண்டு எனில் அருள்	இருக்குமாகில் கிருபைசெய்தருளவேணும்.

* * * உனது சேஷ்டைகளை யசோதைக்குக் காட்டினையேயன்றிப் பாவியேன் கண்ணுக்கு நீ ஒன்றையுங் காட்டவில்லை; கீழ் நடந்தவற்றையெல்லாம் எனக்காக மறுபடியும் ஒருதடவை செய்து காட்டக்கூடுமோ என் அப்பனே! என்கிறாள். (கூ)

717 வஞ்சமேவியநெஞ்சுடைப்பேய்ச்சி வரண்டுகார்நரம்பெழக் கரிந்துக்க *
கஞ்சமார்தருசுழிமுலையங்தோ சுவைத்துநீயருள்செய்துவளர்ந்தாய் *
கஞ்சன்நாள்கவர்கருமுகிலேந்தாய் கடைப்பட்டேன்வெறிதேமுலைசுமந்து *
தஞ்சமேலொன்றிலேனுய்ந்திருந்தேன் தக்கதேநல்லதாயைப்பெற்றாயே. (ய)

வஞ்சம் மேவிய நெஞ்சு உடை பேய்ச்சி — வஞ்சனை பொருந்திய நெஞ்சையுடையளான பூதனையான வள்
வரண்டு — உடம்பு சோஷித்து
எழ — (உள்ளுள்ள ரத்நமாம்ஸங்கள்) வெளியிற் கொழிக்கும்படியாகவும்
நார் நரம்பு கரிந்து உக்க — நார்போன்ற நரம்புகள் கருகி உதிரும்படியாகவும் (அவளுடைய)
கஞ்சம் ஆர்தரு சுழி முலை — விஷந்தீற்றிய கள்ள முலையை
நீ சுவைத்து — நீ ஆஸ்வாதம் பண்ணியும்
அருள்செய்து — (என்மேல்) கிருபையினாலே
வளர்ந்தாய் — உயிருடன் வளரப்பெற்றாய்;
அந்தோ — ஆச்சரியம்!

கஞ்சன் நாள் கவர் — கம்ஸனுடைய ஆயுஸ்ஸை அபஹரித்த
கரு முகில் எந்தாய் — காளமேகம் போன்ற நாயனே!
முலை வெறிதே சுமந்து — (நான்) முலையை வியர்த்தமாகச் சுமந்து
கடைப் பட்டேன் — கெட்டவரிலும் கடைகெட்டவளானேன்;
தஞ்சம் ஒன்று இலேன் — (உன்னையொழிய வேறு) புகலற்றிராநின்றேன்;
உய்ந்திருந்தேன் — (என்றைக்காகிலு முன்னைக் கண்ணால் காண்போமென்று) பிராணனைப் பிடித்துக்கொண்டு ஜீவிக்கிறேன்;
தக்கது — உனக்குத் தகுதியான
நல்ல தாயை — நல்ல தாயாரை
பெற்றாய் — ஸம்பாதித்துக் கொண்டாய்.

* * * [கடைப்பட்டேன் வெறிதே முலைசுமந்து.] முலை நெறித்தபோது பாலுண்பதற்கு உன்னைப் பிள்ளையாகப் பெற்றுவைத்தும் நீ வேறு முலையைத்தேடி ஓடினமையால் என் முலை பயனற்றொழிகையாலே இம்முலை எனக்குப் புரைகுழல் போலே வீணை சுமையாயிற்றென்கிறாள். [தஞ்சமேல் இத்யாதி.] நான் முன்னமே உயிர்துறந்திருக்க வேண்டுமாயினும் எப்போதாயினும் உன்னைக் காணப்பெறவேணுமென்னுமாசையால் பிராணனை வலியப்பிடித்து வைத்துக்கொண்டிருக்கிறேனென்று கருத்து. [தக்கதே இத்யாதி.] உனக்கு முலைப்பால் வேண்டும்போது என்னையும் விட்டு யசோதையையும் விட்டுப் பூதனையைப்பற்றினையே! இதுவோ தகுதி? என்றவாறு. (ய)

718 மல்லைமாநகர்க்கிறையவன்தன்னை வான்செலுத்திவந்தீங்கணைமாய்த்து *
எல்லையில்பிள்ளைசெய்வனகாணத் தெய்வத்தேவகிபுலம்பியபுலம்பல் *
கொல்லிகாவலன்மாலடிமுடிமேல் கோலமாம்குலசேகரன்சொன்ன *
நல்லிசைத்தமிழ்மாலைவல்லார்கள் நண்ணுவாரொல்லைநாரணனுலகே. (கக)

மல்லை மா நகர்க்கு — செல்வம் நிரம்பிய பெரிய நகரமாகிய வடமதுரைக்கு
இறையவன் தன்னை — தலைவனுயிருந்த கம்ஸனை
வான் செலுத்தி — வீரஸ்வர்க்கத்திற்கு அனுப்பி
ஈங்கு வந்து அணை — (தேவகி ஸமீபமாகிய) இங்கே வந்து சேர்ந்த
பிள்ளை — கண்ணபிரானுடைய
மாயத்து எல்லை இல் செய்வன — அற்புதத்தில் எல்லையில்லாத சேஷ்டிதங்களை
காணு தெய்வத் தேவகி — (கடந்தபோது) காணப்பெறுத தெய்வத்தன்மை பொருந்திய தேவகியானவள்
புலம்பல் — புலம்பிக்கொண்டு சொன்ன பாசுரங்களை
கொல்லி காவலன்—கொல்லி நகர்க்கு அரசராய்
மால் அடி முடி மேல் கோலம் ஆம் — ஸர்வேச்வரனுடைய திருவடி களைத் தம் திருமுடிக்கு அலங்காரமாகவுடையரான
குலசேகரன் சொன்ன — குலசேகராழ்வார் அருளிச்செய்த
நல் இசை தமிழ் மாலை — நல்ல இசையையுடைய தமிழ்ஞாலாகிய சொல் மாலையை
வல்லார்கள் — ஓதவல்லவர்கள்
ஒல்லை — விரைவாக
நாரணன் உலகு நண்ணுவார் — ஸ்ரீவைகுண்டத்தை சேரப்பெறுவர்.

அடிவரவு:—ஆலவடி முந்தை களி மருவு தண்ணம் குழகன் முழுது குன்று வஞ்சம் மல்லை மன்னு.

எட்டாந்திருமொழி—மன்னுபுகழ்.

ஸ்ரீ ராமாவதாரத்தில் கௌஸல்யை பெற்ற பேற்றைக்கருதி, அவள் அவ்விராம பிராஜைத் தொட்டிலிலிட்டுத் தாலாட்டுக் கூறின முகத்தால் இத்திருமொழி அருளிச்செய்கிறார். இவ்வநுபவம் இவர்க்குத் திருக்கண்ணபுரத்தெம்பெருமான் விஷயத்திலே செல்லுகிறது.

719 மன்னுபுகழ்க்கௌசலைதன் மணிவயிறுவாய்த்தவனே! *
தென்னிலங்கைக்கோன்முடிகள் சிந்துவித்தாய்செம்பொன்சேர் *
கன்னிநன்மாமதிள்புடைசூழ் கணபுரத்தென்கருமணியே! *
என்னுடையவின்னமுதே இராகவனே!தாலேலோ. (க)

மன்னு புகழ்	நிலைநின்ற புகழையுடைய
கௌசலை தன்	கௌஸல்யையினுடைய
மணி வயிறு	அழகிய வயிற்றிலே
வாய்த்தவனே	பிள்ளையாகத் திருவவதரித்தவனே!
தென் இலங்கை கோன்	தென்னிலங்கைக்கு இறைவனான ராவணனுடைய
முடிகள்	பத்துத் தலைகளையும்
சிந்து வித்தாய்	சிதறப் பண்ணினவனே!
செம் பொன் சேர்	செவ்விய பொன்னாலே செய்யப்பட்டதாய்
கன்னி	அழிவில்லாததாய்
நல்	விலக்ஷணமாய்
மா	பெரிதான
மதில்	திருமதிளாலே
புடை சூழ்	நாற்புறமும் சூழப்பட்ட
கணபுரத்து	திருக்கண்ணபுரத்திலெழுந்தருளியிருக்கிற
என் கரு மணியே	நீலரத்நம் போன்ற எம்பெருமானே!
என்னுடைய இன் அமுதே	எனக்கு போக்யமான அம்ருதமா யிருப்பவனே]
இராகவனே!	ஸ்ரீராமனே!
தாலேலோ	(உனக்குத்) தாலாட்டு.

* * *—இதில், முதலடியால் அவதாரமும், இரண்டாமடியால் அவதார ப்ரயோஜநமும் சொல்லப்பட்டன வென்க. கணபுரம்—கண்ணபுரம் என்பதன் தொகுத்தல்; திருக்கண்ணபுரம் என்னும் இத் திவ்யதேசம் சோழநாட்டுத் திருப்பதிகள் நாற்பதில் ஒன்று: இத்தலத்தில் சௌரிராஜப்பெருமாள் மிகவும் வரப்ரஸாதி என்பது ப்ரஸித்தம். நம்மாழ்வார், திருமங்கையாழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள், குலசேகராழ்வார்-ஆகிய ஐவர்களால் மங்களாசாஸநஞ் செய்யப்பெற்ற சிறந்த திவ்யதேசம் இது. தாலேலோ=வளர்பிள்ளையைத் தொட்டிலிலே வளர்த்திக் கண்வளரப் பண்ணுகைக்காகச் சீராட்டித் தாலாட்டுதல்; தால்—நாக்கு: தமிழில் தொண்ணூற் றாறுவகைப் பிரபந்தங்களுள் ஒன்றாகிய பிள்ளைத்தமிழில் இத்தாலாட்டை எட்டாம் மாதத்திற் கூறுவது; கவிமரபு. (க)

720 புண்டரிகமலர்தன்மேல் புவனியெல்லாம்படைத்தவனே *
திண்டிறலாள்தாடகைதன் உரமுருவச்சிலைவளைத்தாய் *
கண்டவர்தம்மனம்வழங்கும் கணபுரத்தென்கருமணியே *
எண்டிசையுமாளுடையாய் இராகவனே! தாலேலோ. (உ)

புண்டரிகம் மலர் அதன் மேல்	(திருநாபியில்அலர்ந்த)தாமரைப்பூவின்மேல் (பிரமனைத் தோற்றுவித்து அவன் முகமாக)
புவனி எல்லாம் படைத்தவனே	உலகங்களெல்லாவற்றையும் ஸ்ருஷ்டித்தவனே!
திண் திறலாள் தாடகைதன்	திருடமான பலத்தை யுடையளான தாடகையினுடைய
உரம் உருவ	மார்வைத் துளைக்கும்படியாக
சிலை வளைத்தாய்	வில்லை வளைத்து அம்புகளை எய்தவனே!
கண்டவர்	ஸேவித்தவர்கள்
தம் மனம் வழங்கும்	தங்கள் மனத்தைத் தாங்களே இசைந்து கொடுப்பதற்குத் தகுந்த
கணபுரத்து என் கருமணியே!—;	
எண் திசையும்	எட்டுத் திக்கிலுள்ளவர்களையும்
ஆள் உடையாய்	அடிமை கொண்டருளுபவனே!
இராகவனே! தாலேலோ—.	

721 கோங்குமலிகருங்குழலாள் கௌசலைதன்குலமதலாய் *
தங்குபெரும்புகழ்ச்சனகன் திருமருகா ! தாசரதீ *
கங்கையிலும்தீர்த்தமலி கணபுரத்தென்கருமணியே *
எங்கள்குலத்தின்னமுதே இராகவனே ! தாலேலோ. (ரு)

கொங்கு மலி கருகுழலாள் — பரிமளம் மிகுந்த கறுத்த கூந்தலையுடையளான
கௌசலை தன் குலம் மதலாய் — கௌஸல்யையினுடைய சிறந்த பிள்ளையானவனே!
தங்கு பெரு புகழ் சனகன் — பொருந்திய மஹாகீர்த்தியையுடைய ஜநக மஹாராஜனுக்கு
திரு மருகா — மாப்பிள்ளை யானவனே!
தாசரதீ — சக்ரவர்த்தி திருமகனே!
கங்கையிலும் — கங்காநதியிற் காட்டிலும்
மலி தீர்த்தம் — சிறப்பு மிக்க தீர்த்தங்களையுடைய
கணபுரத்து — திருக்கண்ண புரத்திலெழுந் தருளி யிருக்கிற
என் கருமணியே!—;
எங்கள் குலம் — எங்கள் ராஜவம்சத்துக் கெல்லாம்
இன் அமுதே — போக்யமான அமுதம் போன்றவனே!
இராகவனே! தாலேலோ—.

எங்கள் குலத்து இன் னமுதே=ஸ்ரீராமன் ராஜவம்ஸத் திற் பிறந்தாற்போல இக்குல சேகராழ்வாரும் ராஜவம்ஸத்திற் பிறந்தவராதலால் இங்ஙனமருளிச் செய்தாரென்க. (ரு)

722 தாமரைமேலயனவனைப் படைத்தவனே ! * தயரதன்தன்
மாமதலாய் மைதிலிதன்மணவாளா ! * வண்டினங்கள்
காமரங்களிசைபாடும் கணபுரத்தென்கருமணியே *
ஏமருவுஞ்சிலைவலவா ! இராகவனே ! தாலேலோ. (சு)

தாமரை மேல் — (திருநாபிக்) கமலத்திலே
அயன் அவனை படைத்தவனே — பிரமனை உண்டாக்கினவனே!
தயரதன் தன் மா மதலாய் — தசரதனுடைய மூத்த குமாரனே!
மைதிலி தன் மணவாளா — பிராட்டிக்கு வல்லபனே!
வண்டு இனங்கள் — வண்டுகளின் கூட்டங்கள்
காமரங்கள் இசைபாடும் — காமர மென்னும் இசையைப் பாடப்பெற்ற
கணபுரத்து — திருக்கண்ணபுரத்தி லெழுந் தருளியிருக்கிற
என் கருமணியே!—;
ஏ மருவும் சிலை வலவா — அம்புகள் பொருந்திய (ஸ்ரீ சார்ங்கமென்னும்) வில்லை ஆளவல்லவனே!
இராகவனே! தாலேலோ—.

* * * "தாமரைமேல் அயனவனைப் படைத்தவனே!" என்று சொல்லி, "தயரதன்றன் மாமதலாய் !" என்று சொன்னவிது—ஸகல விபூதிக்கும் பிதாவாகிய நீ இவ்விபூதியில் ஒரு பிரீதிகாப்ராயனை தசரதனைப் பிதாவாகக்கொண்டு 'அவனுடைய பிள்ளை' என்னும்படியாகப் பிறந்த அதிசயம் என்கொல்! என வியந்தவாறும்.

"ஏமருவுஞ்சிலை" =ஏ—எய்கையிலே, மருவும்—மூட்டாநின்ற, சிலை—வில், என்றும் பொருளர்கலாம்: ஆரேனும் பிடிக்கிலும் எய்கையிலே மூட்டும் வில் என்பது கருத்து: வெகு சாதுரியமாய் அடக்கி ஆளத்தக்க வில்—என்றவாறு: இக்கருத்துத் தோன்றவே பெரியாழ்வாரும் "சார்ங்கமென்னும் வில் ஆண்டான் றன்னை" என்றருளிச் செய்தாரென்க. (சு)

723 பாராளும்படர்செல்வம் பரதனும்பிக்கேயருளி *
ஆராவன்பினோயவனுடே அருங்கானமடைந்தவனே! *
சீராளும்வரைமார்பா! திருக்கண்ணபுரத்தரசே! *
தாராளும்நீண்முடி என்தாசரதீ! தாலேலோ. (டு)

பார் ஆளும் படர் செல்வம் } பூமி முழுவதையும் ஆட்சி புரிகையாகிற பெரிய ராஜ்ய ஸம்பத்தை

பரதன் நம்பிக்கே } ஸ்ரீ பரதாழ்வானுக்கே

அருளி } நியமித்து விட்டு

ஆரா அன்பு இளையவனோடு } பரிபூர்ணமான பக்திப்பெருக் காதலியுடைய இளையபெரு மாளுடன் கூட

அரு கானம் அடைத்தவனே } (புகுவதற்கு) அருமையான காட்டைக் குறித்து எழுந்தரு ளினவனே!

சீர் ஆளும் வரை மார்பா } வீரலக்ஷ்மிக்கு இருப்பிடமாய் மலைபோன்ற திருமார்பை யுடையவனே!

திருக் கண்ணபுரத்து அரசே!—'

தார் ஆளும் நீள் முடி } மாலையோடு கூடின சிறந்த திருமுடியையுடையவனே!

என் தாசரதீ! தாலேலோ—.

* * *—வநவாஸஞ் செல்லும்போது இராமபிரான் இளையபெருமாளை நோக்கி, 'இளையோய்! நான் போகிறேன்; நீ இங்கேயிருப்பாயாக' என்றபோது, அவர் தமது கைங்கரிய ருசியையும் பிரியில் தரியாமையையும் பரக்கப்பேசித் தம்மையுங்கூட்டிக்கொண்டு போகும்படி செய்தனராதலால் "ஆராவன்பினையவனோடு" என்றார். [அருங்கானம்."] "கல் நிரைந்து நீந்து கழையுடைந்து கால்சுழன்று, பின்னுந் நிரைவயிற்றுப்பேயே திரிந்துலவாக், கொன்னவிலும் வெங்கானம்" [பெரிய திருமடல்] என்றார் கலியனும். (ரு)

724 சுற்றமெல்லாம்பின்தொடரத் தொல்கானமடைந்தவனே ! *
அற்றவர்கட்கருமருந்தே அயோத்திநகர்க்கதிபதியே ! *
கற்றவர்கள்தாம்வாழும் கணபுரத்தேன்கருமணியே ! *
சிற்றவைதன்சொற்கொண்ட சீராமா ! தாலேலோ. (சு)

சுற்றம் எல்லாம் பின் தொடர } எல்லா உறவினரும் பின்னே தொடர்ந்துவர,

தொல் கானம் அடைந்தவனே } புராதநமான தண்டகாரண்யத்துக் கெழுந்தருளினவனே!

அற்றவர்கட்கு } உனக்கே அற்றுத்தீர்ந்த பரம பக்தர்களுக்கு

அரு மருந்தே } (ஸம்ஸார ரோகத்தைத் (தணிக்க) அருமையான மருந்து போன்றவனே!

அயோத்தி நகர்க்கு அதிபதியே } அயோத்யா நகரத்திற்கு அரசனே!

கற்றவர்கள் தாம் வாழும் கண புரத்து } ஞானிகள் வாழ்தற்கு இடமான திருக்கண்ணபுரத்திலே எழுந்தருளியிருக்கிற

என் கரு மணியே } நீலமணிபோலழகிய எம்பெரு மானே!

சிற்றவை தன் } சிறிய தாயாராகிய கைகேயியினுடைய

சொல் கொண்ட சீராமா } சொல்லை ஏற்றுக்கொண்ட ஸ்ரீ ராமனே!

தாலேலோ—.

* * * இராமன் காட்டுக் கெழுந்தருளுகையில் பிரஜைகள் மாத்திரமே பின் தொடர்ந்ததாக ஸ்ரீராமாயணத்திற் கூறுகிற்க; இங்கு, "சுற்றமெல்லாம் பின் தொடரத் தொல் கான மடைந்தவனே!" என்றருளிச்செய்தது சேர்வதெங்ஙனே? என்று எம்பெருமானார் திருவோலக்கத்தில் ப்ரஸ்தாவம் நிகழ, அதற்கு எம்பெருமானார் அருளிச் செய்தது—"அஹம் ஸர்வம் கரிஷ்யாமி' என்று சொன்ன எல்லாவடிமையும் செய்யு 'மிளையபெருமாள் கூடப்போகையாலே எல்லா பந்துக்களும் கூடப்போலர்களாய்த்திறே" என்றும்: இது ரஸோக்தியாக அருளிச்செய்தபடி.

அற்றவர்கள்:—"வாயம்ப்ராஹ்மணஹமயிஷ்யோ வாநவ்ருஷ்ஹமணொஹாரு! த்ருஹாயொஹ நாயவஜ்ரத! ராக்ஷஸொஹ-ருநுதெஜூரம் ॥ வநஹிவஸ்யஸாரீராணி ஒ-நீ நாம் ஹாவி தாதூநாம்! ஹதா நாம்ராக்ஷஸொவொ வொ-ராதொவை-ருஹமி நாம்வஹ-யாவநெ ॥" [ஸ்ரீராமா—ஆரண்—எ—கடு] என்று சரபங்காச்ரமத்தில் வந்து கதறின தண்டகாரண்ய வாலிகளான முனிவரைச் சொல்லுகிறது. அங்ஙனம் வந்து வேண்டிக்கொண்ட முனிவர்களை நோக்கி "அப்படியே நான் உங்கள் விரோதிவர்க்கங்களை வேரறத் தொலைத்து விடுகிறேன், அஞ்சேல்மின்"

என்று உறுதிமொழி கூறிய இராமபிரான் அந்தப் பிரதிஜ்ஞையை நிறைவேற்றுதற்பொருட்டு தண்டகாரண்யத்திற்குப் புறப்படுங்கால் பிராட்டி பெருமாளை நோக்கி, 'ஆரியரே! தாபஸவ்ருத்தியை அவலம்பித்துவந்து சேர்ந்தவிடத்தில் க்ஷத்ரியவ்ருத்தியைப் பாராட்டக் கருதுவது உமக்குத் தகுதியல்ல; உமது விஷயத்தில் ஒரு குற்றமுஞ் செய்யாத பிராணிகளை நீர் கொல்ல முயல்வது அநியாயமாகும்' என்று பலவாறுக உணர்த்த; அது கேட்ட இராமபிரான், "ஸீதே! நான் பிராணனை விட்டாலும் விடுவேன்; லக்ஷ்மணனையும் உன்னையும் விட்டாலும் விடுவேன்; யாருக்காவது பிரதிஜ்ஞை செய்துகொடுத்து அதிலும் பிரமஜ்ஞானிகளுக்குப் பிரதிஜ்ஞைசெய்து கொடுத்து அதைமாத்திரம் நிறைவேற்றாது விடவேமாட்டேன்; ரிஷிகள் தாம் என்னிடம் வந்து முறையிடாமற் போனாலுங்கூட அவர்களை ரக்ஷிப்பது எனதுகடமை; பிரதிஜ்ஞையும் பண்ணிக் கொடுத்துவிட்ட பின்னர் இனி நான் தவறக்கூடுமோ?" என்று சரக்கற வார்த்தை சொல்லி அம்முனிவர்களைக் காத்தருளினவாறு கூறும் "அருமருந்தே!" என்னும் விளி. (கூ)

725 ஆலினிலைப்பாலகனாய் அன்றுலகமுண்டவனே! *
வாலியைக்கொன்றரசு இளையவானரத்துக்களித்தவனே! *
காலின்மணிகரையிலைக்கும் கணபுரத்தென்கருமணியே! *
ஆலிநகர்க்கதிபதியே அயோத்திமனே! தாலேலோ. (எ)

அன்று — முன்பு மஹாப்ரளயம் வந்தபோது
ஆவின் இலை பாலகன் ஆய் — ஓர் ஆலந்தளிரிலே குழந்தை வடிவாய்க்கொண்டு
உலகம் உண்டவனே — லோகங்களையெல்லாம் திருவயிற்றில் வைத்து நோக்கினவனே!
வாலியை கொன்று-வாலியைக் கொலைசெய்து
இளைய வானரத்துக்கு — அவனது தம்பியான ஸுக்ரீவனுக்கு
அரசு அளித்தவனே — ராஜ்யத்தைக் கொடுத்தவனே!
காலில் மணி — கால்வாய்களிலுள்ள ரத்நங்களை
கரை அலைக்கும் — கரையிலே கொண்டு கொழிக்கப்பெற்ற
கணபுரத்து — திருக்கண்ணபுரத்தில் எழுந்தருளியிருக்கிற
என் கரு மணியே!—,
ஆலி நகர்க்கு அதிபதியே — திருவாலி திருநகரிக்கு தலைவனே!
அயோத்தி மனே - அயோத்தி நகர்க்கு அரசனே! தாலேலோ—.

"காலின்மணி கரையலைக்கும்" = உள்ளுக்கிடக்கிற ரத்நங்களைக் காற்றாலே கரையிற் கொழிக்கு மென்னுதல், அன்றி, கால் என்று கால்வாய்களைச் சொல்லிற்றாய், கால்வாய்களிலுள்ள மணிகளைக் கொண்டுவந்து கரையிலே எறிடுமென்னுதல். "ஆலிநகர்க் கதிபதியே!" என்றவிடத்தில், "ஒரு வாலியைக்கொன்று ஒரு வாலி தன்னைத் துணையாகக்கொள்ளப்பெற்றதே!" என்று சாடுக்தி அருளிச் செய்வர் பெரியவாச்சான் பிள்ளை. (ஏ)

726 மலையதனாலணைகட்டி மதிளிலங்கையழித்தவனே! *
அலைகடலைக்கடைந்து அமரர்க்கமுதருளிச்செய்தவனே! *
கலைவலவர்தாம்வாழும் கணபுரத்தென் கருமணியே! *
சிலைவலவா! சேவகனே சீராமா! தாலேலோ. (ஐ)

மலை அதனால் அணைகட்டி — மலைகளைக்கொண்டு ஸேதுபந்தனம் பண்ணி
மதிள் இலங்கை அழித்தவனே — அரணையுடைத்தான லங்காபுரியைப் பாழ்படுத்தினவனே
அலை கடலை கடைந்து — அலையெறிகின்ற திருப்பாற்கடலைக்கடைந்து
அமரர்க்கு அமுது — தேவர்களுக்கு அம்ருதத்தை
அருளிச் செய்தவனே — கொடுத்தருளினவனே!
கலை வலவர் தாம்வாழும் கணபுரத்து — ஸகல சாஸ்த்ரங்களையும் அறிந்தவர்கள் வாழ்கிற திருக்கண்ணபுரத்தில் எழுந்தருளியிருக்கிற
என் கரு மணியே!—;
சிலைவலவா — (ஸ்ரீ சார்ங்கமென்னும்) வில்லைச் செலுத்த வல்லவனே!
சேவகனே — வீரனே!
சீராமா! தாலேலோ—;

சேவகனே!=சேவகம் என்ற பராக்கிரமத்துக்குப் பெயராதலால், மஹாவீரனே! என்றபடி. "சிலைவலவா! சேவகனே!" என்ற சேர்த்தியால், சார்ங்கமும் மிகை என்னும்படியான வீரப்பாடுடையவன் என்பது போதரும். (அ)

727 தனையவிழும்நறுங்குஞ்சித் தயரதன்தன்குலமதலாய்! *
வனையவொருசிலையதனுல் மதிளிலங்கையழித்தவனே! *
கனைகழுநீர்மருங்கலரும் கணபுரத்தென்கருமணியே! *
இனையவர்கட்கருளுடையாய் இராகவனேதாலேலோ. (கூ)

தனை அவிழும் நறு குஞ்சி — கட்டு அவிழும்படியான நறு நாற்றமுடைய மயிர்முடியை யுடையனனை
மருங்கு அலரும் கணபுரத்து — சுற்றிலும் மலரப் பெற்ற திருக்கண்ணபுரத்தி லெழுந்தருளி யிருக்கிற
தயரதன் தன் — தசரத சக்ரவர்த்தியினுடைய
குலம் மதலாய் — சிறந்த திருக்குமாரனே!
ஒரு சிலை வனைய — ஒப்பற்ற வில்லினது வனைய
அதனுல் — அந்த வில்லாலே
மதிள் இலங்கை அழித்தவனே!—;
கனை கழுநீர் — கனையாகப் பரிக்கப்பட்ட செங்கழுநீர்கள்
இனையவர்கட்கு — இனையவர்கள் விஷயத்திலே
அருள் உடையாய் கருணை பொருந்தியவனே!
இராகவனே! தாலேலோ—.

* * *—இனையவர்கட்கு அருளுடையாய்!=வாலியை வதைத்து இனையவனனை சுக்ரீவனுக்கு அருள்புரிக்தான்; இராவணனை வதைத்து இனையவனனை விபீஷணனுக்கு அருள்புரிக்தான் என்றிறே பெருமாளுக்கு ப்ரஸித்தி. தூர்ப்பலர்களாய் இனைத்திருப்பவர்கள் திறத்தில் அருள் செய்பவன் என்றுமாம். (கூ)

728 தேவரையுமசுரரையும் திசைகளையும்படைத்தவனே! *
யாவரும்வந்தடிவணங்க அரங்கமர்த்துயின்றவனே! *
காவிரிநன்னதியும் கணபுரத்தென்கருமணியே! *
ஏவிவெஞ்சிலைவலவா இராகவனே! தாலேலோ. (எ)

தேவரையும் — தேவர்களையும்
அசுரரையும் — அசுரர்களையும்
திசைகளையும் — திக்குக்களையும் [அதாவது—எல்லாப் ப்ரதேசங்களையும்]
படைத்தவனே — ஸ்ருஷ்டித்தவனே!
யாவரும் வந்து அடி வணங்க — ஸகல தேசங்களும் வந்து திருவடிகளில் ஸேவிக்கும்படியாக
அரங்கம் மர்த்து — ஸ்ரீரங்கத்திலே
துயின்றவனே — பள்ளி கொண்டிருப்பவனே!
காவிரி நல் நதி — காவேரி யென்கிற சிறந்த நதியானது
பாயும் — ப்ரவஹிக்கப்பெற்ற
கணபுரத்து — திருக்கண்ணபுரத்தில் எழுந்தருளியிருக்கிற
என் கரு மணியே!—;
ஏவி வெம் சிலை வலவா — அம்புகள் தொடுக்கப் பெற்று அழகியதாய்ச் சத்துருக்களுக்குக் கொடியாயிருக்துள்ள வில்லே ஆளவல்லவனே!
இராகவனே! தாலேலோ—.

729 கன்னிநன்மாமதிள்புடைசூழ் கணபுரத்தென்காகுத்தன் *
தன்னடிமேல் * தாலேலோவென்றுரைத்த தமிழ்மாலை *
கொன்னவிலும்வேல்வலவன் குடைக்குலசேகரன்சொன்ன *
பன்னியநூல்பத்தும்வல்லார் பாங்காயபத்தர்களே. (கக)

என் காருத்தன் தன் அடிமேல்	என் ஸ்வாமியான இராம பிரான் விஷயமாக
தாலேலோ என்று உரைத்த	(கௌஸல்யை) தாலாட்டிச் சொன்ன பாசுரங்களை, (உட்கொண்டு)
கொல் நவிலும் வேல் வலவன் குடை குலசேகரன்	கொலைத்தொழில் புரிகின்ற வேலாயுதத்தைச் செலுத்த வல்லவரும் குடையையுடையவருமான குலசேகராழ்வார்
கன்னி நல் மா மதிள் புடைசூழ் கணபுரத்து	சாச்வதமான சிறந்த அழகிய மதிள்கள் நாற்புறமும் சூழப் பெற்ற திருக்கண்ணபுரத்திலே
சொன்ன	அருளிச்செய்த
பன்னிய நூல் தமிழ் மாலை பத்தும்	பரம்பியதாய் லக்ஷணமாய்த் தமிழ்ப்பாமாலையாகிய இப்பத்துப்பாசுரங்களையும்
வல்லார்	அதிகரிக்க வல்லவர்கள்
பாங்கு ஆய பத்தர்கள்	அமைந்த பக்திமான்களாகப் பெறுவர்.

* * *—பாங்காய பத்தர்கள் = கௌஸல்யை திருத்தாயாராயிருந்து அநுபவித்தாற்போலவும், இவ்வாழ்வார் பக்தராயிருந்து அநுபவித்தாற்போலவும் பகவதநுபவத்தைப் பெறுவார்களென்க. (கக)

அடிவரவு:—மன்னு புண்டரிக கொங்கு தாமரை பார் சுற்றம் ஆலின் மலி தனி தேவர் கன்னி வன்தாள்.

ஒன்பதாந் திருமொழி—வன்ருளினிணை.

சக்கரவர்த்தி இராமனைப் பிரிந்தவளவிலே இரங்கிப் பேசின பேச்சுக்களின் வடிவமாக அருளிச் செய்வது, இத்திருமொழி.

730 வன்ருளினிணைவணங்கி வளநகரம்தொழுதேத்தமன்னனுவான்
நின்ருயை * அரியணைமேலிருந்தாயை நெடுங்கானம்படரப்போகு *
என்ருளெம்மிராமாவோ உனைப்பயந்தகைகேசிதன்சொற்கேட்டு *
நன்ருகநானிலத்தையாள்வித்தேன் நன்மகனேயுன்னைநானே. (க)

எம் இராமாவோ	ஓ எமது இராமனே!
வளம் நகரம்	அழகிய அயோத்திமாநகரத்துப் பிரஜைகளனைவரும்
வல் தாளின் இணைவணங்கி தொழுது ஏத்த	(சரணமடைந்தவர்களை எப்பொழுதும் விடாமற்பாதுகாக்கும்) வலிமையையுடைய (உனது) இரண்டு திருவடிகளிலும் (விழுந்து)நமஸ்கரித்து (எழுந்து) கைகூப்பி நின்று துதிக்க:
மன்னன் ஆவான் நின்ருயை	அரசனுக்குப் பட்டாபிஷேகஞ் செய்து கொள்ளுதற்கு ஸித்தனாய் நின்றவனும்
அரி அணை மேல் இருந்தாயை	சிங்காசனத்தின் மீது வீற்றிருக்க ஸித்தனாயிருந்தவனுமான உன்னை
நெடுங்கானம் படர போகு என்ருள்	'பெரியகாட்டிற் செல்லுதற்கு (இங்கர்விட்டு நீங்கிப்) போ' என்று (கைகேயி) கூறினள்;
நல் மகனே	நல்ல குமாரனே!
நான்	நான்
உனை பயந்த கைகேசி தன் சொல் கேட்டு	உன்னைப் பெற்று வளர்த்த தாயான கைகேயியின் வார்த்தையைக்கேட்டு
நன்ருக உன்னை நானிலத்தை ஆள்வித்தேன்	நன்ருக! உன்னை நிலவுலகத்தை ஆளும்படி செய்தேன்.

* * * "நன்ருக உன்னை நானிலத்தை ஆள்வித்தேன்" என்றது—'கல்லைக்கடிக்க நன்ருய்ச் சமைத்தாய்' என்பது போன்ற விபரீதலக்ஷணை. இப்படி நான் உன் பக்கல் பெருந்தீங்கு செய்தவிடத்திலும் நீ சிறிதும் குணங்குறைந்தாயில்லை; உன் குணம் மேன்மேல் மிக்கு விளங்கப்பெற்ருய்; நானே குணக்கேடுடையனாய் நின்றேன் என்பான் "நன்மகனே!" என்று விளித்தான்: புத்ரலக்ஷணங்களைப் பூர்த்தியாகவுடையவன் என்றபடி: தன் சொல் தவருது நடக்குமவனை மகனென்க. ஈற்றடி இரக்கத்தை நன்கு விளக்கும். போகு—என்ருள் = போகென்ருள் என்று புணரத்தக்கது, சிறுபான்மை உயிர்வரக் குற்றியலுகரம்

கெடாது பொது விதியால் வகரவுடம்படு மெய் எற்று, போகுவென்குள் என்று நின்றது: இவ்விடத்து இது செய்யுளோசை நோக்கியது. இராமாவோ:—ஓகாரம் மிக்கது, புலம்பல் விளியாகலின்; "புலம்பின் ஓவும் ஆகும்" என்குர் நன்னூலாரும். "உன்னே நானிலத்தை ஆள்வித்தேன்"—இரண்டு செயப்படு பொருள் வந்த வினை; ஸ்ரீகூஷ்ணதாரிவுயொம மென்பர் வடநூலார். (க)

731 வெவ்வாயேன்வெவ்வுரைகேட்டு இருநிலத்தைவேண்டாதேவிரைந்து * வென்றி
மைவாயகளிறுழிந்துதேரோழிந்துமாவோழிந்து வனமேமேவி *
நெய்வாயவேல்நெடுங்கண் நேரிழையுமிளங்கோவும்பின்புபோக *
எவ்வாறுநடந்தனையெம்மிராமாவோ! எம்பெருமானென்செய்கேனே! (உ)

	எம் இராமாவோ !—
வெவ் வாயேன் வெவ் உரை கேட்டு	கொடிய வாயையுடையேனை என்னுடைய கடுஞ்சொற்களைக் கேட்டு
இரு நிலத்தை வேண்டாதே	பெரிய நிலவுலகத்து அரசாட்சியை விரும்பாமலே விட்டிட்டு
விரைந்து	சீக்கிரமாக
வென்றி மை வாய களிறு ஒழிந்து தேர் ஒழிந்து மா ஒழிந்து	வெற்றியை விளைப்பதான மைம்மலை போன்ற வடிவத்தையுடைய யானையும் தேரும் குதிரையுமாகிய வாகனங்களையொழிய விட்டு
வனமே மேவி	காட்டையே சேர்ந்து
நெய் வாய வேல் நெடு கண் நேரிழையும்	நெய்பூசிய நுனியையுடைய வேலாயுதம் போன்ற நீண்ட கண்களையும் தகுதியான ஆபரணங்களையுமுடையளான பிராட்டியும்
இளங்கோவும்	இளைய பெருமானும்
பின்பு போக	உடன் தொடர்ந்துவர
எ ஆறு நடந்தனை	எங்ஙனம் நடந்து சென்குயோ !
எம் பெருமான்	எமது ஐயனே !
என் செய்கேன்	நான் என் செய்வேன் ?

* * * எவ்வாறு நடந்தனை = கால்நடை நடக்க உரியனல்லாத நீ எங்ஙனம் நடந்து சென்குயோ! என்று பரிதபிக்கிறபடி. கைகேயி வார்த்தைகளுக்குக்குறுக்குச் சொல்லமுடியாமல் இவ்வாறு உன்னைப் பிரியவிட்டு அகதிகளை எனக்கு இனி மரணமே கதியென்பான் "என் செய்கேன்" என்குன். எம்பெருமான்!-அண்மை விளியாதலின் இயல்பு. (உ)

732 கொல்லணைவேல்வரிநெடுங்கண் கௌசலைதன்குலமதலாய்!குனிவில்லேந்தும் *
மல்லணைந்தவரைத்தோளா வல்வினையேன்மனமுருக்கும்வகையேகற்குய் *
மெல்லணைமேல்முன்துயின்குயி ன்றினிப்போய்வியன்கானமரத்தின்நீழல் *
கல்லணைமேல்கண்துயிலக்கற்றனையோ காகுத்தா!கரியகோவே. (ஙூ)

கொல் அணை வேல்	கொலைத்தொழில் பொருந்தின வேலாயுதம் போன்ற
வரி நெடுங்கண்	செவ்வரி பரந்த நீண்ட கண்களையுடைய
கௌசலை தன் குலம் மதலாய்	கௌஸல்யையினது குலத்தில் தோன்றிய குமாரனே !
குனி வில் ஏந்தும்	வளைந்தவில்லைத் தரித்த
மல் அணைந்த வரை தோளா	வலிமை பொருந்திய மலைகள் போன்ற தோள்களையுடையவனே !
வல் வினையேன் மனம் உருக்கும் வகையே கற்குய்	மஹாபாபியான் என்னுடைய மனதை உருகச்செய்வதற்கே வல்லவனே !
காகுத்தா	ககுத்ஸ்தனென்னும் அரசனது குலத்தில் தோன்றியவனே !
கரிய கோவே	கருநிறமுடைய ஐயனே !
மெல் அணை மேல் முன் துயின்குய்	மென்மையான பஞ்சணை மெத்தையின்மேல் முன்பெல்லாம் படுத்து உறங்கிப் பழகினவனன நீ,
இனி இன்று போய்	இனிமேற் புதிதாக இன்றைக்குச்சென்று
வியன் கானம் மரத்தின் நீழல்	பெரிய காட்டிலுள்ள மரத்தின் கிழலிலே
கல் அணைமேல் கண் துயில கற்றனையோ	கருங்கற் பாறைகளையே படுக்கையாகக்கொண்டு அதன்மேற் படுத்துத் துயிலப்பழகின்குயோ

* * * இன்றளவும் ராஜார்ஹமான ஸுகுமாரஸயநங்களிலே ஸுகமே கிடந்து கண் வளர்ந்த உனக்கு இனி * கொடுங்கதிரோன் துன்று வெயில்வறுத்த வெம்பரல்மேல் படுக்க நேர்ந்ததே! இஃதென்ன கொடுமை! என்று வயிறெரிகிறபடி. வல்வினையேன் என்றது:— "குடையுஞ்செருப்புங் கொடாதே தாமோதரனே நான், உடையுங்கடியனவுன்று வெம்பரற் களுடைக், கடிய வெங்கானிடைக் காலடிநோவக் கன்றின்பின், கொடியே னென்பிள்ளை யைப் போக்கினேன் எல்லே பாவமே?" என்றுற்போல, பெருமானுடைய திருமேனி ஸௌகுமார்யத்தை நோக்காமல் வெவ்வியகாட்டில் அவனைப் போகவிட்ட கொடுமையை யுடைய தன்னைத்தானே வெறுத்துக் கூறியது. மனமுருக்கும் என்றவிடத்து, மனம் முருங்கும் என்றும் பதம்பிரிக்கலாம்; முருக்குதல்—அழித்தல். முருங்கு என்பதன் பிறவினை. வியன்—உரிச்சொல்; வியல் என்பதன் விகாரமுமாம். நீழல்—நிழல் என்பதன் நீட்டல். (ரு)

733 வாபோகுவாவின்னம்வந்தொருகால்கண்டுபோ மலராள்கூந்தல் *
வேய்போலுமெழில்தோளிதன்பொருட்டா விடையோன்றன்வில்லைச்செற்றாய் *
மாபோகுநெடுங்கானம்வல்வினையேன் மனமுருக்கும்மகனே! * இன்று
நீபோகவென்னெஞ்சம் இருபிளவாய்ப்போகாதேநிற்குமாறே. (சு)

வா	(சற்று இங்கே) வா;
போகு	இனிச்செல்வாய்;
வா	மறுபடியும் இங்குவா;
இன்னம் வந்து ஒருகால் கண்டு போ	(போம்போது) பின்னையும் ஒரு தரம் வந்து என்னைப் பார்த்து விட்டுப்போ;
மலர் ஆள் கூந்தல்	பூக்களை எப்பொழுதும் தரிக்கிற மயிர்முடியை யுடைய வளும்
வேய்போலும் எழில் தோளி தன் பொருட்டு ஆ	மூங்கில்போன்ற அழகிய தோள்களையுடையவளான பிராட்டியை மணஞ்செய்து கொள்ளுதற்காக
விடையோன் தன் வில்லை	சிவனுடைய வில்லை
செற்றாய்	முறித்தவனே!
வல் வினையேன் மனம் உருக்கும் மகனே	மஹாபாபியான எனது மனதை உருகச் செய்கிற மைந்தனே!
இன்று நீ	இப்பொழுது நீ
மா போகு நெடுங் கானம் போக	யானைகள் ஸஞ்சரிக்கிற பெரிய காட்டுக்குப்போக,
என் நெஞ்சம்	எனது மனமானது
இரு பிளவு ஆய் போகாதே நிற்கும் ஆறே	இரண்டு பிளப்பாகப் பிளந்து போகாமலே வலியதாய் நிற்கும் தன்மை என்னே?

* * *—தசரதன் ஸ்ரீராமனை க்ஷணகாலம் காணவிட்டால் உடனே காண்கைக்காக ஸுமந்த்ரனையிட்டு வரும்படி அழைப்பிப்பன்; பின்பு அவ்விராமனது பின்னழகையும் நடையழகையும் காண்கைக்காக 'போ' என்பன்; பின்னையும் கண்மறையப் போனவாறே ஆற்றுமையால் 'வா' என்பன்; மீண்டும் வந்தவாறே 'இன்னம் போம்போது ஒருகால் கண்டுபோ' என்பன்; இப்படி மகனிடத்து அன்பினாலும் அவனது பிரிவை ஆற்றமாட்டாமையாலாகிய மனச்சுழற்சியாலும் பலமுறை 'வா' என்றும் 'போ' என்றும் மாறிமாறிச் சொல்லி வந்தனனென்க. [மாபோகு] மா என்ற விலங்கின் பொதுப்பெயர், சிறப்பாய் இங்கு யானையைக் குறித்தது. "வா போகு வா வின்னம் வந்தொருகால் கண்டுபோ" என்பது—தசரதன் அறிவுகெட்டுப் புலம்புகிற சமயத்தில் வார்த்தையாதலால் அநந்விதமாய் நிற்கின்றதென்ப. (சு)

734 பொருந்தார்கைவேல்நுதிபோல்பரல்பாய மெல்லடிக்கள்குருதிசோர *
விரும்பாதகான்விரும்பிவெயிலுறைப்ப வெம்பசிநோய்கூர * இன்று
பெரும்பாவியேன்மகனே! போகின்றாய் கேகயர்கோன்மகளாய்ப்பேற்ற *
அரும்பாவிசொற்கேட்டவருவினையேன் என்செய்கேனந்தோ! யானே. (ரு)

பொருந்தார் கை வேல் நுதி போல்	பகைவர்கள் கையிலேந்தும் கூர்மையான வேலாயுதத்தின் நுனி போன்ற
பரல்	பருக்கைக் கற்கள்
பாய	(காலில் தைத்து அழுந்தவும்

மெல் அடிக்கள் குருதி சோர — மென்மையான (உனது) பாதங் களிலின்று ரக்தம் பெருகவும்

வெயில் உறைப்ப — (மேலே) வெயிலுறைக்கவும்

வெம் பசி நோய் கூர — (வேண்டியபோது உணவு கிடையாமலே) வெவ்விய பசியாகிய நோய் மிகவும்,

பெரும் பாவியேன் மகனே — மஹாபாபியான எனது மைந் தனே!

இன்று — இப்பொழுது

விரும்பாத கான் விரும்பி போகின் றாய் — (எவரும்) விரும்பாத காட்டை (நான் போகச் சொன்னே னென்பதனாலே) விரும்பி (அவ்விடத்துக்குச் செல்கிறாய்;

கேகயர்கோன் மகள் ஆய்பெற்ற அரும்பாவி — கேகயராஜன் பெற்ற மகளான கொடிய பாவியாகிய கை கேயியினுடைய

சொல் கேட்ட அரு வினையேன் யான் — வார்த்தையைக் கேட்ட கொடி யேனாகிய நான்

அந்தோ! என் செய்கேன் — ஐயோ! என்ன செய்வேன்!,

* * *—எப்படிப்பட்ட கல்நெஞ்சினரும் செய்யமாட்டாத ஒருமஹா பாபத்தைச் செய்பவளான ஒரு பாபமூர்த்தியைக் கேகயராஜன் பெண்ணாய்ப் பெற்றான்; அவள் வார்த்தை யிலே அகப்பட்டுக்கொண்டு நான் பரிஹாரமில்லாததொரு செயலைச் செய்துவிட்டேன்; இனி இதற்கு நான் செய்யக்கூடிய பரிஹாரம் ஒன்றுமில்லையே! என்று பச்சாத்தாபத்தோடு கூறு கிறபடி. மஹாபாபியான எனக்கு மகனைப் பிறந்தமையாலன்றே ஸுகுமாரனான நீ இங்ங னம் மஹா வநத்துக்குச் செல்ல நேர்ந்தது என்பான் "பெரும்பாவியேன் மகனே?" என்றான். வெம்பசி நோய் கூர=கூர—மிகுதியுணர்த்தும் கூர் என்ற உரிச்சொற்பகுதியினடியாய் பிறந்த செயவெனெச்சம். கேகயர்—கேகய தேசத்திலுள்ளவர்கள். (ரு)

735 அம்மாவென்றுகந்தழைக்கும் ஆர்வச்சொல்கேளாதேயணிசேர்மார்வம் *
என்மார்வத்திடையழுந்தத் தழுவாதேமுழுசாதேமோவாதுச்சி*
கைம்மாவின்நடையன்னமென்னடையும் கமலம்போல்முகமும்காணாது *
எம்மானேயென்மகனேயிழந்திட்ட இழிதகையேனிருக்கின்றேனே. (சூ)

அம்மா என்று உகந்து அழைக்கும் — 'ஐயா!' என்று மகிழ்ச்சி கொண்டு (என்னை) அழைக் கின்ற

ஆர்வம் சொல் கேளாதே — ப்ரீதி விளங்குஞ்சொல்லை (நான்) கேட்கப் பெறாமலும்

அணி சேர் மார் வம் — ஆபரணங்கள் பொருந்திய (என் மகனது) மார்பு

என் மார்வத் திடை அழுந்த — என் மார்பிலே அழுந்தும்படி

தழுவாதே — (நான் அவனை இறுக அணைத் துக்கொள்ளாமலும்

முழுசாதே — (அந்த ஆலிங்கந போகக் கட வில்) முழுகாமலும்

உச்சிமோவாது — உச்சியை மோந்திடாமலும்

கைம்மாவின் நடை அன்ன மெல்நடையும் — யானையினது நடைபோன்ற [கம்பிரமான அம்மகனது] மென்மையான நடையின் அழகையும்

கமலம் போல் முகமும் — தாமரை மலர்போன்ற (அவ னது) முகப்பொலிவையும்

காணாது — காணாமலும்

எம்மானை என் மகனை இழந் திட்ட — எமது ஐயனை என்மகனைக் (காடேறப்போக்கி) இழந்து விட்ட

இழி தகையேன் — இழிவான செயலைச் செய்தவ னான நான்

இருக்கின்றேனே — (இன்னமும் அழிந்திடாமல்) உயிர் வாழ்ந்திருக்கின்றேனே.

* * * ப்ரீதிப்ரகர்ஷம் தோன்ற ஐயா! என்று அழைக்கும் மகனது இன்சொல்லைக் கேட்கப்பெறாமலும் இயற்கையழகோடு செயற்கையழகு செய்யும் ஆபரணங்கள் அசைந்து விளங்குகின்ற அவனது மார்பைத்தழுவிக் கொள்ளப் பெறாமலும், ஆநந்தஸாகரத்தில் அழுந் தப்பெறாமலும், உச்சிமோரப் பெறாமலும் நடையழகு காணப்பெறாமலும், முகாரவிந்தத்தை அநுபவிக்கப் பெறாமலும் என் கண்மணியைக் காட்டுக்குத்துரத்தின படுபாவியாகிய நான் அப்போதே சாவாமல் இன்னும் பிழைத்திருக்கவும் வேணுமா! என்று பரிதபிக்கிறபடி. அம்மா வென்று=தந்தையை அம்மாவென்று அழைத்தல், உவப்புப்பற்றிய பால் வழுவமைதி: "உவப்பினு முயர்வினுஞ் சிறப்பினுஞ் செறலினும், இழிப்பினும் பால்திணை இழுக்கினு மியல்பே." என்பது நன்னூல். (பொதுவியல்-உஅ) (கூ)

736 பூமருவுநறுங்குஞ்சிபுன்சடையாப்புனைந்து பூந்துகில்சேரல்குல் *
காமரெழில்விழலுடுத்துக் கலனணியாதங்கங்களழகுமாறி *
ஏமருதோளென்புதல்வன் யானின்றுசெலத்தக்கவனந்தான்சேர்தல் *
தூமறையீரிததகவோ?சுமந்திரனே!வசிட்டனே! சொல்லீர்நீரே. (எ)

தூ மறையீர் } நித்ய நிர்த்தோஷமான வேதத்தை ஓதியிருக்கிற பிராமணர்களே!
சுமந்திரனே } (ராஜதர்மத்தை நன் கறிந்து நடத்திப் போந்த ஸுமந்த்ரரே!
வசிட்டனே } (ராஜகர்மங்களை உபதேசித்துப் போருகிற) வஸிஷ்ட மஹர்ஷியே!
(உங்களை ஒரு விஷயம் கேட்கிறேன்;)
பூ மருவும் நறு குஞ்சி } புஷ்பம்மாறாதே யிருப்பதாய் மணம் கமழாநின்ற திருக்குழலை
புன் சடை ஆ புனைந்து } விகாரமான ஜடையாகத் திரித்து
பூ துகில் சேர் அல்குல் } நல்ல பட்டுப் பீதாம்பரங்கள் சாத்தவேண்டிய திருவரையிலே

காமர் எழில் விழல் உடுத்து } காண்கைக்கு ஆசைப்படத்தக்க அழகிய விச்வாமித்ரத்தைக் கயிறுக முறுக்கிச் சாத்தி
கலன் அணியாது } திருவாபரணங்கள் அணியாமல்
அங்கங்கள் அழகு மாறி } இயற்கை யழகுக்கு மேல் திருவாபரணங்களால் உண்டாகக் கூடிய செயற்கை யழகின்றியிலே,
ஏமரு தோள் என் புதல்வன் தான் } ஸாரக்ஷிதமான தோள்களையுடையனை எனது குமாரனவன்
யான் இன்று செல தக்க வனம் சேர்தல் இது } நான் இப்போது போகவேண்டிய காட்டுக்குத் தான் போவது
தகவோ தகுதிதானே?
நீரே சொல்லீர் } (தர்மஜ்ஞரான) நீங்களே (ஆராய்ந்து) சொல்லுங்கள்.

* * * நல்ல புஷ்பங்களைச் சூடிப் பரிமளம் விஞ்சக்கடவதான திருக்குழலைச் சடையாகத் திரித்தும், நான் அறுபதினாயிரமாண்டு அரசாண்டு ஸம்பாதித்து வைத்திருக்கும் பட்டுப் பீதாம்பரங்களில் நல்லவற்றைச் சாத்தக்கடவதான திருவரையில் விச்வாமித்ரத்தைக் கயிறுக முறுக்கிச் சாத்தியும், இயற்கையான அழகுக்கு மேலே செயற்கையழகுக்காக ஆபரணங்களைச் சாத்தவேண்டிய அவயவங்களில் அவற்றைச் சாத்திக்கொள்ளாமலும் அந்தோ! என் மைந்தன் காட்டுக்குச் சென்றனனே! ஐயோ! இக்காடு இந்தவயதில் அவனுக்குச் செல்லக் கூடியதா? அறுபதினாயிரமாண்டு போகங்களை புஜித்துப் பல்லிழுந்து தலைநரைத்து உடலினைத்து உடை குலைப்பட்ட நான் இன்று போகக்கூடியதான காட்டிற்கு எனது மைந்தன் செல்கிறனே! இது என்ன அநியாயம்!! தர்மங்களை அறிந்தும் அநுஷ்டித்தும் உபதேசித்தும் போருகிற மஹானுபாவர்களே! இது நியாயந்தானு? நீங்கள் சற்று ஆராய்ந்து சொல்லுங்கள்! என்கிறன்.

737 பொன்பெற்றுரெழில்வேதப்புதல்வனையும் தம்பியையும்பூவைபோலும் *
மின்பற்றுநுண்மருங்குல் மெல்லியலென்மருகியையும்வனத்திற்போக்கி *
நின்பற்றுநின்மகன்மேல்பழிவிளைத்திட்டு என்னையும்நீள்வானில்போக்க *
என்பெற்றுய்?கைகேசீ இருநிலத்திலினிதாகவிருக்கின்றுயே. (அ)

கைகேசி பொன் பெற்றூர் எழில் வேதம் புதல்வனையும் } கைகேயியே கல்விச் செல்வத்தைப் பெற்ற வர்களான உபாத்தியாயரின் கீழேயிருந்து அழகிய வேதங்களை ஓதியிருக்கிற மூத்த மகனை இராமனையும்
தம்பியையும் } (அவனது) தம்பியான லக்ஷ்மணனையும்
பூவை போலும் } (பேச்சின் இனிமையிற் கொஞ்சுகிற) இளி போன்றவளும்

மின் பற்று நுண் மருங்குல் மெல் இயல் என் மருகியையும் } மின்னலும் ஈடாகமாட்டாத நுண்ணிய இடையையும் மென்மையான தன்மையையு முடையவளுமான என் மருமகளாகிய ஸீதையையும்
வனத்தில் போக்கி காட்டுக்குப் போகச்செய்து
நின் பற்று ஆம் நின் மகன் மேல் பழி விளைத்திட்டு } உனது அன்புக்கு இடமான உன் மகனை பரதன்மேற் பழியுண்டாம்படி செய்து

என்னையும் நீள் வானில் போக்க	(புத்ரவிரஹத்தால்) என்னையும் தூரத்திலுள்ள மேலுலகத்திற்கு ச்செலுத்துதலினால்
என் பெற்றாய்	நீ என்ன பயனடைந்தாய்?

	(இவ்வளவு செய்துவிட்டு நீ)
இரு நிலத்தில்	பெரிய இவ்வுலகத்தில்
இனிது ஆக	சுகமாக
இருக்கின்றாயே	வாழ்கின்றாயே.

* * *—"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு, மாடல்ல மற்றையவை" என்றபடி கல்வி அழிவில்லாத சிறப்புடைய செல்வமாதலால் அக்கல்வியைப் பூர்ணமாகப் பெற்ற வஸிஷ்டர் முதலிய உபாத்தியாயர்களைப் போன் பெற்றார் என்றார். பரதன் அந்நாட்டிலில்லாமல் மாதாமஹனைக் காணும்பொருட்டு மாமனுடைய கேகய தேசத்துக்குச் சென்றிருக்கையில் இங்குக் கைகேயி செய்த முயற்சி பரதனுக்குத் தெரியாததும் தெரிந்தவளவில் மிக்க வருத்தத்தைத் தருவதுமாயினும் கைகேயி தன் மகனுக்காகச் செய்த முயற்சியில் அவள் மகனும் ஸம்பந்தப்பட்டவனென்று உலகத்தார் ஸந்தேஹித்து நிந்திப்பதற்கு இடங்கொடுத்தலால் "நின் பற்றார் நின்மகன் மேல் பழி வீழ்த்திட்டு" எனப்பட்டது. உன் மகனுக்கு அநுகூலமாக நீ செய்த காரியம் அந்த உன் காதல்மகனுக்கே சாச்வதமான பெரும்பழியை விளைத்துத் தீமையாய் முடிந்ததே! என்று எடுத்துக்காட்டியபடி. தசரதன் இங்ஙனம் தனக்கும் தன் அருமை மகனை இராமனுக்கும் பெருந்தீங்கு செய்த கைகேயியின் வயிற்றிற் பிறந்தவனென்ற காரணத்தாலே பரதனிடத்துக்கொண்ட உபேக்ஷையினால் அவனை நின்மகன் என்றார்.

மருகி—மகன் மனைவி, (இதன் ஆண்பால்-மருகன்.) என் பெற்றாய்=இவ்வளவு கொடுமைகளை ஒருங்கே செய்தற்கு நீ என்ன திறமைபெற்றாய்! எனினுமாம். [இரு நிலத்தில் இனிதாக இருக்கின்றாயே.] "ஸம்ஸாரஸாகரமாகிறது, புத்ரர்களோடும் பர்த்தாவோடும் கூடியிருக்கையாய்த்து; உனக்குப் புத்ரரான பெருமாளைக் காட்டிலேபோக்கி என்னையும் ஸ்வர்க்கத்திலே போக்குகையாலே ஸம்ஸாரஸாகரம் அழகிதாக அனுபவிக்கக்கடவையிறே" என்ற வியாக்கியானஸாக்தி காண்க. ஸ்ரீராமவிரஹத்தால் உலகமெல்லாம் வருந்திக்கிடக்கையில் நீ ஒருத்திமாத்திரம் மனமகிழ்ந்திருக்கின்றனையே, இது என்ன அழகு! என்க. (அ)

738 முன்னொருநாள்மழுவாளிசிலைவாங்கி அவன்தவத்தைமுற்றும்செற்றாய் *
உன்னையுமுன்னருமைபையுமுன்மோயின்வருத்தமும் ஒன்றாகக்கொள்ளாது *
என்னையுமேன்மெய்யுரையும்மெய்யாகக்கொண்டு வனம்புக்கவேந்தாய்! *
நின்னையேமகனாகப்பெறப்பெறுவேன் ஏழ்பிறப்பும்நெடுந்தோள்வேந்தே!. (கூ)

முன் ஒரு நாள் மழு ஆளி சிலை வாங்கி	முன்பு ஒரு நாளிலே பரசுராமனிடத்திலிருந்து அவன் கையில்லை வாங்கி
அவன் தவத்தை முற்றும் செற்றாய்	அவனியற்றிய தபஸ்ஸின் பயனை முழுதும் (அம்புக்கு இலக்காக்கி) அழித்திட்டவனே!
உன்னையும் உன் அருமையையும்	உன்னுடைய மேன்மையையும் (நான் பெருந்தவஞ் செய்து) உன்னை அருமை மகனாகப்பெற்ற தன்மையையும்
உன் மோயின் வருத்தமும்	உனது பெற்ற தாயான கைகேயை (உன்னைப் பிரியில் தரியேன் என்று) உன் பின் தொடர்ந்த வருத்தத்தையும்
ஒன்று ஆக கொள்ளாது	ஒரு பொருளாகக் கொள்ளாமல்

என்னையும்	என்னையும்
என் மெய் உரையும்	எனது ஸத்யவாக்கையும்
மெய் ஆக கொண்டு	பொருளாகக் கருதி
வனம் புக்க எந்தாய்	காடேறச் சென்ற எமது ஐயனே!
நெடுந்தோள் வேந்தே	பெரிய தோள்களையுடைய அரசனே!
ஏழ் பிறப்பும்	இனி அனேக ஜன்மங்கள் பிறந்து பிறந்த ஜன்மந்தோறும்
நின்னையே மகன் ஆக பெற பெறுவேன்	நீ எனக்குப் பிள்ளையாய்ப் பிறக்கும்படி பேறுபெறக்கடவேன்.

* * *—மழு ஆளி=மழுவை (ஆயுதமாக) ஆள்பவன்; இ-கருத்தாப்பொருள் விகுதி. அன்றியே, மழு வாளி-மழுவாகிய ஆயுதத்தை யுடையவன்; இ-பெயர் விகுதி. மழு வாள்-இரு பெயரொட்டுப் பண்புத்தொகை. மழு-கோடாலி.

என் நாயனே! உன்மீது கொண்ட அன்பின் தன்மையை மெய்யாக அறியாமல் என்னை வருத்தக்கூடிய பேய்களின் வாக்கியத்தைப் பரிசோதனை பண்ணவேண்டுமென்றும், பெருமையாக நித்யமே சொல்லிவருகிற தன்னையும் காப்பதன்றி அனர்த்தவாரியாக ஆக்கிக்கொண்டதென்று என் லக்ஷ்யத்தை லக்ஷ்யமாக்க வேணுமென்றும் வெற்றிலை கொண்டு வணக்கிற்புகுந்த என் அநுமனைப்போலே! என்பது மூன்றாமடியின் கருத்து. தன்னை யாகனே எந்தாய் என்றது, அன்புபற்றிய வழுவமைதி. செற்றாய்=செறு-பகுதி. (கூ)

759 தேனுகுமாமலர்க்கூந்தல் கோசலையும்சுமித்திரையுஞ்சிந்தைநோவ *
கூனுருவின்கொடுந்தொழுத்தைசொற்கேட்ட கோடியஎன்தன்சோற்கொண்டு* இன்று
கானகமேமிகவிரும்பி இன்றுபோய்நாளைவாவெனக்கைத்துறந்த * நானும்
வானகமேமிகவிரும்பி போகின்றேன் மனுதலத்தார்தங்கள்கோவே! (ஙி)

மனுதலத்தார்கோவே = மனுஷ்யலோகத்திற்சிறந்த-அரசர்களிற் சிறந்தவனே!
தேன்குமாமலர்க்கூந்தல் = தேனோடு புறப்பட விகிற சிறந்த மலர்களோடுகூடிய கூந்தலையுடைய
கோசலையும் சுமித்திரையும் = கௌஸல்யையும் ஸுமித்ரையும்
சிந்தைநோவ = மனம் வருந்த
கூனுருவின் கொடுந்தொழுத்தை சொற்கேட்ட கொடியஎன்தன் சொல்கொண்டு = வக்ரமான வடிவம் போலவே மனமும் கோணலாகப் பெற்ற வேலைக்காரியான கூனியினது வார்த்தையைக் கேட்ட கொடியவளான கைகேயியின் சொல்லை ஏற்றுக்கொண்டு
கானகமேமிக விரும்பி இன்று போய் நாளை வா எனக்கைத்துறந்த = காட்டையே மிகவும் விரும்பி இப்பொழுது போகவிட்ட
நானும் = நானும்
வானகமேமிக விரும்பி போகின்றேன் = (உன் பட்டாபிஷேகத்தின் பொருட்டு) அலங்கரிக்கப்பட்டிருக்கிற இந்நகரத்தை நானும் விட்டிட்டு மேலுலகத்தையே மிகவும் விரும்பி (அவ்விடத்திற்குச்) செல்கின்றேன்.

***—மூன்று தாய்மார்களில் இரண்டுபேர் வருந்தவும் ஒருத்தி மகிழவும் நீ அயோத்தியைத் துறந்து காடுகளுஞ் சென்றாயாதலின், நானும் இவ்வயோத்தியைத் துறந்து மேலுலகை நோக்கிச் செல்லுகின்றே னென்கிறான். கூனுருவின்=இன்-ஐக்ஞார்த்தவருபு, ஒப்புப்பொருள். கொடுமை—தீமையேயன்றி வளைவுமாதலை 'கொடுக்கோல்,' 'கொடுமரம்' என்ற இடங்களில் காண்க. தொழுத்தை-தொழும்பன் என்பதன் பெண்பால். மநு-ஸூர்யனது குமாரன்; வைவஸ்வதமநு. (ஙி)

760 ஏரார்ந்தகருநெடுமாலிராமனுய் வனம்புக்கவதனுக்காற்று *
தாரார்ந்ததடவரைத்தோள்தயரதன்தன் புலம்பியவப்புலம்பல்தன்னை *
கூரார்ந்தவேல்வலவன்கோழியர்கோன் குடைக்குலசேகரன்சொற்செய்த *
சீரார்ந்தஇப்பாலையிவைவல்லார் தீநெறிக்கண்செல்லாரன்றாமே. (கூ)

ஏர்ஆர்ந்த கருநெடுமால் இராமனாய் வனம்புக்கவதனுக்கு = அழகு நிறைந்த கருநிறமுடைய மஹாவிஷ்ணு ஸ்ரீராமனாகத் திருவவதரித்து காட்டிற்குச் சென்றதான அதற்கு
ஆற்ற = பொறுக்கமாட்டாமல்
தார்ஆர்ந்தகடவரைத்தோள் தயரதன் புலம்பிய புலம்பல்தன்னை = வெற்றிமாலை பொருந்திய பெரிய மலைபோன்ற தோள்களை யுடைய தசரத சக்ரவர்த்தி கதறின அக்கதறல்களை.
கூர்ஆர்ந்த வேல்வலவன் கோழியர்கோன் குடைக்குலசேகரன் சொல்செய்த = கூர்மை மிக்க வேற்படையின் தொழிலில் வல்லவரும் கோழியர்களுக்குத் தலைவனுமான கொற்றக்குடையை உடைய குலசேகராழ்வார் அருளிச்செய்த
சீரார்ந்த இப்பாலை இவை = சிறப்புமிக்க தமிழ்மாலை இவை
வல்லார் தீநெறிக்கண் செல்லார் = இப்பத்துப் பாசுரங்களையும் கற்கவல்லவர்கள் கொடியவழி யொன்றிலும் சென்று சேரமாட்டார்கள்.

(தான், தாம்—அசைகள்)

அடிவரவு:—வன்முள் வெவ்வாய் கொல்லிணை வாபோகு பொருந்தார் அம்மா பூப் பொன் முன் தேன் எராஅர் அங்கண்.

ஸ்ரீராம சரித்திரத்தை ஸ்ரீ வால்மீகிபகவான் பேசியநுபவித்தாற்போலத் தாமும் பேசி அநுபவிக்கிறார்—இத்திருமொழியில். இத்திருமொழி ஸ்ரீராமாயண ஸங்க்ரஹ மெனப்படும்.

741 அங்கணெடுமதிள்புடைசூழயோத்தியென்னும் அணிநகரத்துலகனைத்தும்விளக்குஞ்சோதி *
வெங்கதிரோன்குலத்துக்கோர்விளக்காய்த்தோன்றி விண்முழுதுமுயக்கொண்டவீரன்றன்னை *
செங்கணெடுங்கருமுகிலேயிராமன்தன்னைத் திலலைநகர்த்திருச்சித்ரகூடந்தன்னுள் *
எங்கள்தனிமுதல்வனையேம்பெருமான்தன்னை என்றுகொலோகண்குளிரக்காணுநாளே. (க)

அம் கண்	அழகிய இடத்தையுடைத்தும்
நெடு மதிள்	உயர்ந்த மதில்களினால்
புடை சூழ்	காற்புறமும் சூழப்பட்டதும்
அயோத்தி என்னும்	'அயோத்யா' என்று ப்ரஸித்தமான
அணி நகரத்து	அழகிய நகரத்திலே,
உலகு அனைத்தும்	ஸகல லோகங்களையும்
விளக்கும் சோதி	விளங்கச் செய்கிற தனது ஒளியின் அம்சத்தாலே,
வெம் கதிரோன் குலத்துக்கு	ஸூர்ய வம்சத்துக்கு (விளக்க முண்டாம்படி)
ஓர் விளக்கு ஆய்தோன்றி	ஒப்பற்றதொரு விளக்குபோல (அதில்) வந்து அவதரித்து
விண் முழுதும்	தேவர்களெல்லாரையும்
உயக் கொண்ட	துன்பந்தீர்ந்து வாழச்செய்த
வீரன் தன்னை	மஹாவீரனும்,
செம் கண்	சிவந்த திருக்கண்களையுடைய
நெடு கரு முகிலே	பெரிய காளமேகம் போன்ற வடிவு முடையவனும்,
இராமன் தன்னை	ஸ்ரீராமனென்னும் திருநாமமுடையவனும்
திலலை நகர் திருசித்ர கூடம் தன்னுள்	திலலை நகரத்திலுள்ள திருச்சித்திர கூடத்தில் (எழுந்தருளியிருக்கிற)
எங்கள் தனி முதல்வனை	எமக்கு ஒப்பற்ற காரணமாகிறவனும்
எம் பெருமான் தன்னை	எமக்குத் தலைவனுமான பரமனை
கண் குளிர காணும் நாள்	கண்கள் குளிரும்படி ஸேவிக்கும் நாள்,
என்று கொல் ஓ	எந்நாளோ!

742 வந்தெதிர்ந்ததாடகைதன்னுரத்தைக்கீறி வருகுருதிபொழிதரவன்கணையொன்றேவி *
மந்திரங்கொள்மறைமுனிவன்வேள்விகாத்து வல்லரக்கருயிருண்டமைந்தன்காண்மின் *
செந்தளிர்வாய்மலர்நகைசேர்செழுந்தண்சோலைத் திலலைநகர்த்திருச்சித்ரகூடந்தன்னுள் *
அந்தணர்களோருமூவாயிரவரேத்த அணிமணியாசனத்திருந்தவம்மான்தானே. (உ)

வந்து எதிர்ந்த தாடகை தன் உரத்தை கீறி	செருக்கிவந்து எதிரிட்ட தாடகையினுடைய மார்பைப் பிளந்து
வரு குருதி பொழிதர	ரக்தம் வெளிவந்து சொரியும் படி
வல் கணை ஒன்று ஏவி	வலிய ஒப்பற்றதோர் அம்பைச் செலுத்தி
மந்திரம் கொள் மறை முனிவன் வேள்வி காத்து	எல்லா மந்திரங்களையும் தம்மிடத்திலே கொண்ட வேதங்களின் வழியே விச்வாமித்ர மஹாமுனி செய்த யாகத்தைப் பாதுகாத்து
வல் அரக்கர்	(அந்த யாகத்துக்கு இடை யூறு செய்த ஸுபாஹு முதலிய) வலிய ராக்ஷஸர்களுடைய
உயிர் உண்ட	உயிரைக் கொள்ளைகொண்ட
மைந்தன்	மிடுக்கையுடையவன் (யாரென்னில்;)
செம் தளிர்வாய்	சிவந்த தளிர்களின் நடுவே
மலர்	மலர்ந்த புஷ்பங்களையுடையதும்
நகை சேர்	(காண்பவர்) மகிழும்படியான அழகு பொருந்தினதும்
செழு	செழுமையை யுடையதுமான
தண்	குளிர்ந்த
சோலை	சோலைகளையுடைய
திலலை நகர் திருச் சித்ரகூடம் தன்னுள்—;	
அந்தணர்கள் ஒரு மூவாயிரவர் ஏத்த	ப்ராஹ்மணர் மூவாயிரம் பேர் (திரண்டு துதிக்க)
அணி மணி ஆசனத்து இருந்த	அழகிய ரத்நஸிம்ஹாஸநத்திலே வீற்றிருந்த
அம்மான் தானே	ஸர்வேச்வரனே யாவன்;
காண்மின்	அறியுங்கள்.

* * *—விச்வாமித்ர முனிவன் தனது வேள்வியைக் காக்கும்பொருட்டு தசரத சக்கரவர்த்தியினிடம் அநுமதிபெற்று இராமபிராஜை இளையபெருமாளுடன் அழைத்துக்கொண்டு போனபொழுது அம்முனிவ ஞ்சரமத்திற்குச் செல்லும் வழியிடையே மிக்க செருக்குடன் வந்து எதிர்த்த தாடகையை ஸ்ரீராமன் முனிவனது கட்டளைப்படி பெண்ணென்று பாராமற் போர்செய்து கொன்றது மன்றி, பின்பு முனிவன் செய்த யாகத்தில் தீங்குவிளைக்கவந்த ஸுபாஹு முதலிய பல அரக்கர்களையுங் கொன்று மாரீசனை வாயவ்யாஸ்திரத்தினுற் கடலிலே தள்ளிவிட்டு யாகத்தை நிறைவேற்றுவித்தனன் என வரலாறு அறிக.

[அந்தணர்கள் ஒரு மூவாயிரவர்.] "நாங்கை நாலாயிரம், தில்லை மூவாயிரம்" என்ற ப்ரஸித்தி காண்க; "மூவாயிர நான்மறையாளர் நாளும் முறையால் வணங்க அணங்காயசோதித், தேவாதி தேவன் திகழ்கின்ற தில்லைத் திருச்சித்ரகூடஞ் சென்று சேர்மின்களே" என்னூர் திருமங்கையாழ்வாரும். (உ)

743 செவ்வரிநற்கருநெடுங்கண்சீதைக்காகச் சினவிடையோன்சிலையிறுத்துமழுவாளேந்தி *
வெவ்வரிநற்சிலைவாங்கிவென்றிகொண்டு வேல்வேந்தர்பகைதடிந்தவீரன்தன்னை *
தெவ்வரஞ்சுநெடும்புரிசையுயர்ந்தபாங்கர் தில்லைநகர்த்திருச்சித்ரகூடந்தன்னுள் *
எவ்வருவெஞ்சிலைத்தடக்கையிராமன்றன்னை இறைஞ்சுவாரிணையடியேயிறைஞ்சினேனே.(ங)

செவ்வரி நல் கரு நெடு கண்	(உத்தம லக்ஷணமான) சிவந்த ரேகைகள் படர்ந்த அழகிய கருமையான நீண்ட கண்களை யுடைய
சீதைக்கு ஆக	வநிதையை மணம்புரிதற் பொருட்டு
சினம் விடை யோன்	கோபத்தையுடைய ரிஷபத்தை வாஹநமாக வுடையனை சிவபிரானுடைய
சிலை இறுத்து	வில்லை முறித்து (பின்புமிதிலா புரியினின்று மீளும் வழியில்)
மழு வாள் ஏந்தி	கோடாலியாகிய ஆயுதத்தை ஏந்தியவனை பரசுராமனுடைய
வெவ் வரி நல் சிலை	பயங்கரமான கட்டமைந்த சிறந்த வில்லை
வாங்கி	கையிற்கொண்டு (வளைத்து)
வென்றி கொண்டு	(அவனை) வென்று
வேல் வேந்தர் பகை தடிந்த	(தான் அவதரித்த ஜாதியிற்பிறந்த) வேற்படையையுடைய க்ஷத்ரியர்களுக்குப் பகையைத்தீர்த்த
வீரன் தன்னை	மஹாவீரனை,—
தெவ்வர்	பகைவர்கள்
அஞ்சு	(கண்டமாத்திரத்திலே, கடக்க வொண்ணுதென்று) அஞ்சும் படியான
நெடு புரிசை	உயர்ந்த மதிளையும்
உயர்ந்த பாங்கர்	ஓங்கிய (அட்டாலை யென்னும்) மதிற்பக்கத் நிடத்தையு முடைய
தில்லை நகர் திருச் சித்ரகூடம் தன்னுள்—; (எழுந்தருளியிருக்கிற)	
எவ்வரு வெம் சிலை தட்கை இராமன் தன்னை	(வேறொருவரால்) அடக்கியாளுதற்கு அரியதும் (பகைவர்க்குப்) பயங்கரமுமான வில்லை ஏந்திய பெரிய கையை யுடைய இராமபிராஜை
இறைஞ்சுவார்	வணங்குகிற அடியார்களுடைய
இணை அடியே	இரண்டு திருவடிகளையே
இறைஞ்சினேன்	வணங்குகிறேன்.

***—நான்காமடியில் எவ்வரி என்றே நாடெங்கும் ஓதுவர்; அப்பாடத்துக்கு ஏவரி என்பது எவ்வரியென்று விகாரப்பட்டதெனக்கொண்டு, ஏ-அம்பு தொடுப்பதற்கு உரிய வரி-நீண்ட என்று கஷ்டப்பட்டுப் பொருள்கொள்ளலாமாயினும், "வேறொருத்தரால் அடக்கியாள வொண்ணுதே காணவே ப்ரதிபக்ஷம் முடியும்படியான ஸ்ரீசார்ங்கம்" என்ற வியாக்கியானத்திற்கு அப்பாடம் சேராது. எவ்வரு என்றோதுவதே சிறக்கும். ஏவரு என்பது எதுகை நோக்கி ,எவ்வரு' எனக் குறுக்கலும் விரித்தலுமாகிய விகாரங்களை யடைந்தது. ஏவு-ஏவுதல், அடக்கியாளுதல்; (முதனிலைத் தொழிற்பெயர்.) அரு-ஒண்ணாத; எனவே, அடக்கியாள முடியாத என்றதாயிற்று. [இறைஞ்சுவா ரிணையடியே இறைஞ்சினேனே.] இராமனுக்கு அடியவனை பரதனுக்கு அடிமை பூண்டொழுகின சத்ருக்நன் போலப் பாகவத தாஸனைவேண்டுமென அவாவுகின்றார்.(ங)

744 தொத்தலர்பூஞ்சுரிகுழல்கைகேசிசொல்லால் தொன்னகரம்துறந்து, துறைக்கங்கைதன்னை *
பத்தியுடைக்குகன்கடத்தவனம்போய்ப்புக்குப் பரதனுக்குப்பாதுகமும்மரசுமீந்து *
சித்திரகூடத்திருந்தான்றன்னை யின்றுதில்லைநகர்த்திருச்சித்ரகூடந்தன்னுள் *
எத்தனையுங்கண்குளிரக்காணப்பெற்ற இருநிலத்தார்க்கிமையவர்கேரோவ்வார்தாமே. (ச)

தொத்து அலர் பூ சுரி குழல் — கொத்துக் கொத்தாக மலர்ந்த புஷ்பங்களைச் சூடிய நுனி சுருண்ட கூந்தலையுடைய
கைகேசி — கைகேயியினது
சொல்லால் — சொல்லின்படி
தொல் நகரம் துறந்து — தொன்று தொட்டுப் பரம்பரையாய் வருகிற ராஜ்யத்தைக் கைவிட்டு
துறை கங்கை தன்னை — கங்கையின் துறையை
பத்தி உடை குகன் கடத்த — மஹாபக்தனை குஹப்பெருமான் புனை செலுத்தியதவ, (கடந்து)
வனம் போய் புக்கு — காட்டிற்போய்ச் சேர்ந்து
பரதனுக்கு — (அங்கு வந்த) பரதாழ்வானுக்கு
பாதுகமும் அரசும் ஈந்து — (தனது) மரவடியையும் ராஜ்யத்தையும் கொடுத்து
சித்திர கூடத்து இருந்தான் தன்னை — சித்ரகூட பர்வதத்திலெழுந்தருளியிருந்த ஸ்ரீராமபிரானை
இன்று — இப்பொழுது [பிற்காலத்தில்]
தில்லைநகர் திருச்சித்ரகூடம் தன்னுள்;—
கண் குளிர காண பெற்ற — கண் குளிரும்படி ஸேவிக்கப் பெற்ற
இரு நிலத்தார்க்கு — பெரிய [சிறந்த] பூலோகத்திலுள்ளவர்களுக்கு
இமையவர் — நித்யஸூரிகளும்
எத்தனையும் நேர் ஒவ்வார் — சிறிதும் ஸமமாகமாட்டார்கள்;
(தாம், ஏ—ஈற்றசைகள்; தேற்றமுமாம்.)

* * *—ஸ்ரீ ராமாவதாரத்திலே சித்ரகூட பர்வதத்தில் எழுந்தருளியிருந்த இருப்பைப் பிற்பட்டார் கேட்டு அநுபவிக்கப் பெறுவதேயன்றித் தாம்கண்டு அநுபவிக்கப் பெறாமல் கண்விடாய்த்து நிற்கிற குறைதீர எக்காலத்திலும் முள்ளார் அநுபவிக்கைக்காக அங்ஙனமே தில்லைத் திருச்சித்திரகூடத்தில் வீற்றிருக்கின்றனன் என்பது பின்னடிகளின் உட்கோள். (ச)

745 வலிவணக்குவரைநெடுந்தோள்விராதைக்கொன்று வண்தமிழ்மாமுனிகொடுத்தவரிவில்வாங்கி*
கலிவணக்குநோக்கரக்கிமூக்கைகீக்கிக் கரனெடுதூடணன்தன்னுயிரைவாங்கி *
சிலைவணக்கிமான்மறியவெய்தான்தன்னைத் தில்லைநகர்த்திருச்சித்ரகூடந்தன்னுள் *
தலைவணங்கிக்கைகூப்பியேத்தவல்லார் திரிதலால்தவமுடைத்துத்தரணிதானே. (டு)

வலி வணக்கு — (எதிரிகளுடைய) வலிமையைத் தோற்பிக்கின்ற
வரை நெடு தோள் — மலை போன்ற பெரிய தோள் களையுடைய
விராதை — விராத னென்னும் இராக்ஷஸனை
கொன்று — கொன்று,
வண் தமிழ் மா முனி கொடுத்த — சிறந்த தமிழ்ப் பாஷைக்கு உரியவரான அகஸ்திய மூனிவர் கொடுத்த
வரி வில் வாங்கி — கட்டமைந்த வில்லை பெற்று,
கலி வணக்கு நோக்கு அரக்கி மூக்கை கீக்கி — மானின் பார்வையைத் தோற்பிக்கும்படியான பார்வையழகை யுடையவளாய் வந்த சூர்ப்பணகை யென்னும் ராக்ஷஸியின் மூக்கை அறுத்து
கரனெடு தூடணன் தன் உயிரை வாங்கி — கரன் தூஷணன் என்னும் அரக்கர்களின் உயிரை (அவர்களுடம்பினின்று) கவர்ந்து,
மான் — மாரீசனென்ற மாயாம்ருகமானது
மறிய — அழியும்படி
சிலை வணக்கி எய்தான் தன்னை — தனது வில்லை வளைத்து அம்பு களை எய்தவனான இராமபிரானை
தில்லைநகர் திருச்சித்ரகூடம் தன்னுள்;
தலை வணங்கி கை கூப்பி ஏத்த வல்லார் — தலை வணங்கி அஞ்ஜலி பண்ணித் துதிக்கவல்ல அடியார்கள்
திரிதலால் — (தன்மீது) ஸஞ்சரிக்கப் பெறுதலால்
தரணி — பூமியானது
தவம் உடைத்து — பாக்கியமுடையது
(தான், ஏ—ஈற்றசைகள்; தேற்றமுமாம்.)

* * *—இராமபிரான் பரசுராமனிடமிருந்து விஷ்ணுதநுஸ்ஸைப் பெற்று அவனை வென்றபோது அங்குவந்து தன்னைக் கொண்டாடிய தேவர்களுள் வருணனிடத்திலே அவ்வில்லைக் கொடுத்து அதனை நன்றுகப் பாதுகாத்துவைத்திருந்து உரிய ஸமயத்தில் தன்னிடம் கொணர்ந்துகொடுக்குமாறு சொல்ல, அங்ஙனமே அதனை வாங்கிச்சென்று நன்கு பாதுகாத்து வைத்திருந்த வருணன் பின்பு ஸ்ரீராமன் வநவாஸம்புக்குத் தண்டகாரணியத்தில் அகஸ்தியாச்ரமத்திற்கு எழுந்தருளினபொழுது அதனை அம்பறுத்தூணியுடனும் வாளுடனும் அம்முனிவர் தர, பெருமாள் பெற்றுக் கொண்டனன் என்பது இங்கு அறியத்தக்கது.

சூர்ப்பணகையை அங்கபங்கஞ் செய்தது இளைய பெருமாளின் செய்கையாயினும் அதனைப் பெருமாள் மேல் ஏற்றிச் சொன்னது, இராமனது கருத்துக்கு ஏற்ப அவன் கட்டளையிட்டபடி இவன் செய்தனனாதலின் ப்ரயோஜ்ய கர்த்தாவின் விளையாதல்பற்றி யென்க. அன்றியும் "ராகவஸ்ய முகஸ்ரியோ வாஹகஃ" என்றபடி இராமபிரானுக்கு லக்ஷ்மணன் வலத்திருக்கை யெனப்படுதலால் அங்ஙனம் கையாகிற லக்ஷ்மணனுடைய செயலே இராமன்மேல் ஒற்றுமை நயம்பற்றி ஏற்றிச் சொல்லுதல் தகுதியே. சூர்ப்பணகை ராமலக்ஷ்மணர்களிடம் வரும்போது அழகிய வடிவமெடுத்து வந்தனளாதலால் "கலிவணக்கு நோக்கரக்கி" என்றார். "மானின் விழிபெற்று மயில் வந்ததெனவந்தாள்" என்றார் கம்பரும். இங்கே மூக்கு என்றது—மற்றும் அறுபட்ட அவயவங்களுக்கும் உபலக்ஷணம்.

746 தனமருவுவைதேகிபிரியலுற்றுத் தளர்வெய்திச்சடாயுவைவைகுந்தத்தேற்றி *
வனமருவுகவியரசன்காதல்கொண்டு வாலியைக்கொன்றிலங்கைநகரரக்கர்கோமான் *
சினமடங்கமாருதியால்சுடுவித்தானைத் தில்லைநகர்த்திருச்சித்ரகூடந்தன்னுள் *
இனிதமர்ந்தவம்மானைபிராமன்றன்னை ஏத்துவாரினையடியையேத்தினேனே. (கூ)

தனம் மருவு	(தான் விரும்புஞ்) செல்வமாகப் பொருந்திய
வைதேகி பிரியல் உற்று	பிராட்டி பிரியப்பெற்று
தளர்வு எய்தி	(அதனால்) வருத்தமடைந்து
சடாயுவை	ஜடாயுவென்னும் கழுகரசை
வைகுந்தத்து ஏற்றி	பரமபதத்திற் செலுத்தி
வனம் மருவு	(வாலிக்கு அஞ்சிக்) காட்டில் மறைந்து வசிக்கிற
கவி அரசன்	வாநரராஜனை சுக்ரீவனுடன்
காதல் கொண்டு	ஸ்நேஹஞ் செய்துகொண்டு
வாலியை கொன்று	(அவனது விருப்பத்தின்படி அவன் தமையனை) வாலியை வதைத்து,
இலங்கை நகர் அரக்கர் கோமான் சினம் அடங்க	இலங்காபுரியை (அதற்குத் தலைவனாகிய) ராக்ஷஸராஜனை ராவணனுடைய செருக்கு ஒழியும்படி
மாருதியால் சுடுவித்தானை	அனுமானைக்கொண்டு எரிப்பித்தவனும்
தில்லை நகர் திருச் சித்ரகூடம் தன்னுள்—	
இனிது அமர்ந்த	இனிமையாய் எழுந்தருளியிருக்கிற
அம்மானை	ஸர்வேச்வரனுமான
இராமன் தன்னை	இராமபிரானை
ஏத்துவார்	துதிக்கின்ற அடியார்களுடைய
இணை அடியே	உபயபாதத்தையே
எத்தினேன்	துதிக்குந் தன்மையேன் (யான்.)

* * *—"தனமருவு வைதேகி" என்றவிடத்து, தனம் என்பதை ஷஷ்டி மென்ற வடசொல்லின் விகாரமாகக்கொண்டு வேறுவகையாகவும் பொருள்கூறலாமாயினும் "விஷ்ணோஃ ஸ்ரீஃ" என்றபடி பெருமாளுக்கு ஷஷ்டி மென்ற வடசொல் விகாரம். (கூ)

747 குரைகடலேயடலம்பால்மறுகவெய்து குலகட்டிமறுகரையையதனுலேறி *
எரிகெடுவேலரக்கரோடுமிலங்கைவேந்தன் இன்னுயிர்கொண்டவன்தம்பிக்கரசுமீந்து *
திருமகளோடினிதமர்ந்தசெல்வன்தன்னைத் தில்லைநகர்த்திருச்சித்ரகூடந்தன்னுள் *
அரசமர்ந்தானடிசூடுமரசையல்லால் அரச்சாகவெண்ணேன்மற்றரசுதானே. (எ)

குரை கடலில்	கோஷிக்கின்ற கடலில்
அடல் அம்பால்	தீக்ஷ்ணமான அம்பைக் கொண்டு
மறுக எய்து	கலங்கும்படி எய்யத் தொடங்கி,
குலை கட்டி	(அதில்) அணைகட்டி
அதனால்	அந்த அணைவழியாக
மறு கரையை ஏறி	(கடல் கடந்து) அக்கரை சேர்ந்து
எரி நெடு வேல் அரக்கரொடும்	(சத்துருக்களை) எரிக்கின்ற நீண்ட வேற்படையையுடைய இராக்கதர்களும்
இலங்கை வேந்தன்	இலங்கைக்கு அரசனான இராவணனும் ஆகிய அவர்களுடைய
இன் உயிர் கொண்டு	இனிய உயிரைக் கவர்ந்து [கொன்று]
அவன் தம்பிக்கு	அவ்விராவணனது தம்பியான விபீஷணனுக்கு
அரசும் இந்து	ராஜ்யத்தைக் கொடுத்து
திருமகளோடு	லக்ஷ்மியின் அவதாரமான பிராட்டியுடனே
இனிது அமர்ந்த	இனிமையாகச்சேர்ந்த
செல்வன் தன்னை	எல்லாவகைச் செல்வங்களுமுடையவனும்

திலீலை நகர் திருச் சித்ரகூடம் தன்னுள்—;

அரசு அமர்ந்தான்	தனது மேன்மை தோன்ற எழுந்தருளியிருப்பவனுமான இராமபிரானது
அடி சூடும்	திருவடிகளைத் தலைமேற் கொள்ளுதலாகிற
அரசை அல்லால்	அரசாட்சியைப்பெற விரும்பு வேனேயன்றி
மற்று அரசு	அதற்கு மாறுக ஸ்வாதந்திரியம் பாரட்டுகிற அரசாட்சியை
அரசு ஆக எண்ணேன்	ஒரு பொருளாக மதிக்கமாட்டேன்.

* * *—இப்படி லாது பரித்ராணமும் துஷ்ட சிக்ஷணமும் செய்தருளி உலகத்தை உய்வித்தருளிய இராமபிரானது திருவடிகளைச் சிரோபூஷணமாகக் கொள்வதே தமக்குப் பெருத்த ஸாம்ராஜ்யமென்பதை இப்பாட்டால் வெளியிட்டார். (எ)

748 அம்பொனெடுமணிமாடவயோத்தியெய்தி அரசெய்தியகத்தியன்வாய்த்தான்முன்கொன்றுன் தன் * பெருந்தோல்கதைகேட்டுமிதிலைச்செல்வி உலகுய்யத்திருவயிறுவாய்த்தமக்கள் * செம்பவளத்திரள்வாய்த்தன்சரிதைகேட்டான் திலீலைநகர்த்திருச்சித்ரகூடந்தன்னுள் * எம்பெருமான்தன்சரிதைசெவியால்கண்ணுல்பருகுவோம் இன்னமுதம்மதியோமன்றே. (அ)

அம் நெடு பொன் மணி மாடம்	அழகிய உயர்ந்த பொன்னையும் இரத்தினங்களையுங்கொண்டு அமைக்கப்பட்ட உபரிகை வீடுகளையுடைய
அயோத்தி	அயோத்யா நகரத்துக்கு
எய்தி	மீண்டுவந்து
அரசு எய்தி	அரசாட்சியை அடைந்து
தான் முன் கொன்றுன் தன்	தன்னால் முன்பு கொல்லப்பட்டவனை இராவணனுடைய
பெரு தொல் கதை	பெரிய பூர்வ வ்ருத்தாந்தங்களையெல்லாம்
அகத்தியன் வாய் கேட்டு	அகஸ்திய மகாமுனிவன் வாயாற் சொல்லக்கேட்டு,
மிதிலை செல்வி	மிதிலாநகரத்தில் தோன்றிய பிராட்டி
உலகு உய்ய	உலகமுழுவதும் வாழும்படி
திருவயிறு வாய்த்த-பெற்ற	
மக்கள்	தன்பிள்ளைகளான குசலவர்களுடைய
செம் பவளம் திரள் வாய்	சிவந்த பவழத்துண்டு போன்ற வாயினால்
தன் சரிதை	தனது சரித்திரமான ஸ்ரீராமாயணத்தை
கேட்டான்	கேட்டருளினவனை

திலீலை நகர் திருச் சித்ரகூடம் தன்னுள்—;

(எழுந்தருளியிருக்கிற)

எம் பெருமான் தன்-	எமது தலைவனுடைய
சரிதை	சரித்திரத்தை
செவியால் கண்ணுல் பருகுவோம்	காதினாற்கேட்டு (அப்பெருமானைக்) கண்ணால் ஸேவிக்கப் பெறுவோம்யாம்;

(அதுவேயன்றி,)

இன் அமுதம்	இனிய தேவாம்ருதத்தையும்
மதியோம்	(ஒரு பொருளாக நன்கு மதிக்கமாட்டோம்
அன்றே	அல்லவா! (ஏற்றசை, தோற்றமுமாம்.)

* * *—ஆராவமுதமாகவுள்ள எம்பெருமானுடைய ஸேவையின் மிக்க இனிமைக்கும், அங்ஙனமேயுள்ள அப்பிரானுடைய சரித்திரத்தின் மிக்க இனிமைக்கும் தேவாம்ருதத்தின் இனிமை சிறிதும் ஈடாகாதென்னுங் கருத்தால், இன்னமுதமதியோம் என்கிறார். "இன்னமுதமதியோ மொன்றே" என்றும் பாடமுண்டாம்: அமுதம்—அமுதத்தை, ஒன்று—ஒரு பொருளாக, மதியோம் என்றவாறு.

குசலவர் இராமாயண ப்ரவசநஞ்செய்து அதனால் உலகத்தை நன்னெறியில் உய்த்தலும், இராமபிரான்காலத்திற்குப்பின் அப்பெருமான்போலவே நீதி முறை தவறாது உலகத்தை இனிது ஆளுதலும் தோன்ற "உலகுய்யத் திருவயிறு வாய்த்த மக்கள்" என்றார். (ஆ)

749 செறிதவச்சம்புகன்தன்னைச்சென்றுகொன்று செழுமறையோனுயிர்மீட்டுத்தவத்தோனீந்த *
நிறைமணிப்பூணணியுங்கொண்டிலவணன்தன்னைத் தம்பியால்வானேற்றிமுனிவன்வேண்ட*
திறல்விளங்குமிலக்குமனைப்பிரிந்தான்தன்னைத் தில்லைநகர்த்திருச்சித்ரகூடந்தன்னுள் *
உறைவானைமறவாதவுள்ளந்தன்னையுடையோம் மற்றுறுதுயரமடையோமன்றே. (கூ)

செறி தவம்	மிக்க தபஸ்ஸையுடையனை
சம்புகன் தன்னை	(சூத்ரசாதியனை) சம்புகனை
சென்று கொன்று	(அவனிருக்கு மிடந்தேடிச்) சென்று தலையறுத்து
செழு மறை யோன் உயிர் மீட்டு	சிறந்த ப்ராஹ்மண குமாரனுடைய உயிரை மீட்டுக் கொடுத்து,
தவத்தோன் ஈந்த	அகஸ்தியமாமுனிவன் கொடுத்த
நிறை மணி பூண் அணியும் கொண்டு	பெருவிலையுள்ள உத்தம ஹாரமான ஆபரணத்தையும் சாத்தியருளி
இலவணன் தன்னை	லவணனை
தம்பியால்	சத்ருக்நனைக்கொண்டு
வான் ஏற்றி	வீரஸ்வர்க்கத்திற் குடியேற்றுவித்து
முனிவன் வேண்ட	துர்வாஸமுனிவனது சாபத்தால்
திறல் விளங்கும் இலக்குமனை பிரிந்தான் தன்னை	பலபராக்கிரமம் விளங்கப் பெற்ற லக்ஷ்மணனைத் துறந்தவனும்

தில்லை நகர் திருச் சித்ரகூடம் தன்னுள்—,

உறைவானை	நித்யவாஸம் பண்ணுகிறவனுமான இராமபிரானை
மறவாத உள்ளம் தன்னை உடையோம்	மறவாமல் எப்பொழுதும் தியானிக்கிற மனத்தையுடையோம்
மற்று உறு துயரம் அடையோம்	இனி (எம்பெருமானை அநுபவிக்கப் பெற்றிலோமென்று) வருந்துன்பத்தை அடையமாட்டோம்.

(அன்று, எ—ற்றசை,)

* * *—தன்னை அக்காலத்திற் காணப்பெறுத குறைதீரப் பிற்காலத்தார் காணும்படி தில்லைத் திருச்சித்திரகூடத்தில் அப்படிப்பட்ட திவ்விய மங்கள விக்ரஹத்தோடு நித்யவாஸம் செய்தருளாநின்ற எம்பெருமானை இறையும்மறவாது எப்பொழுதும் தியானிப்போமாகில், 'அக்காலத்தில் எம்பெருமானை அநுபவிக்கப் பெற்றிலோமே!' என்றுவரும் துன்பத்தை அடையமாட்டோம் என்றவாறு. (கூ)

750 அன்றுசராசரங்களைவைகுந்தத்தேற்றி அடலரவப்பகையேறியசுரர்தம்மை
வென்று* இலங்குமணிநெடுந்தோள்நான்கும்தோன்ற விண்முழுதுமெதிர்வரத்தன்தாமம்மேவி*
சென்றினிதுவீற்றிருந்தவம்மான்தன்னைத் தில்லைநகர்த்திருச்சித்ரகூடந்தன்னுள் *
என்றும்நின்றுனவனிவனென்றேத்தி காளுமிறைஞ்சுமினெவ்வெப்பொழுதும்தொண்டீர்காளே. (ஐ)

அன்று	(தன்னடிச்சோதிக்கு எழுந்தருள்கிற) அக்காலில்
சர அசரங்களை	(அயோத்யாபுரியிலுள்ள) ஜங்கமும் தாவரமுமான எல்லாவுயிர்களையும்
வைகுந்தத்து ஏற்றி	பரமபதத்துக்குப் போகச் செய்து,
அடல் அரவம் பகை ஏறி	வலிமையையுடைய பாம்புகளுக்குப் பகையான கருடன் மேல் ஏறிக்கொண்டு
அசுரர் தம்மை வென்று	அசுரர்களை ஜயித்து
இலங்கும் அணி கெடு தோள் நான்கும் தோன்ற	(அந்த ஜயலக்ஷ்மி) விளங்கப் பெற்ற அழகிய நீண்ட (தனது) திருக்கைகள் நான்கும் விளங்க
விண் முழுதும் எதிர் வர	பரமபதத்திலுள்ளாரெல்லாரும் எதிர்கொண்டு உபசரிக்கும்படி
தன் தாமம் மேவி சென்று	தமது ஸ்தாநமான அப்பரமபதத்திலே போய்ப்புக்கு
இனிது வீற்றிருக்க	(தன் மேன்மையெல்லாம் தோன்றும்படி) இனிமையாகத் (திவ்யஸிம்ஹாஸநத்தில்) எழுந்தருளியிருந்த

அம்மான் தன்னை — ஸர்வேச்வரனை
தில்லை நகர் திரு சித்ரகூடம் தன்னுள் என்றும் நின்ற நன் அவன் இவன் என்று ஏத்தி — (அந்த இருப்பில் ஒன்றும் குறையாமல் அவ்வாறே) தில்லைச் சித்ரகூடத்தில் எந்நாளும் (நமக்காக) நித்யவாஸம் பண்ணுகிற அப்பெருமான் இவ்விராமபிரானே யென்றறிந்து துதித்து

தொண்டீர் நீர் — அவனுக்கு அடியவர்களான நீங்கள்
நாளும் எப் பொழுதும் — தினந்தோறும் எப்பொழுதும்
இறைஞ்சு மின் — வணங்கி உஜ்ஜீவியுங்கள்.
(ஏ—இசைநிறை.)

* * *—இளையபெருமாளை விட்டுப் பிரிந்ததனால் தரிக்கமாட்டாமல் மிகவும் க்லேசமடைந்த இராமபிரான் ராஜ்யத்தைவிட்டு எழுந்தருளத் தொடங்கியபோது அயோத்யா நகரத்து உயிர்களெல்லாம் பெருமாளைச் சரணமடைந்து 'தேவரீர் எங்குச் சென்றாலும் அடியோங்களையும் கூடவே அழைத்துக்கொண்டு செல்லவேண்டும்' என்று பிரார்த்திக்க, ஸ்ரீராமன் அவர்களுடைய பக்திப்ரகர்ஷத்தைக்கண்டு 'அப்படியே ஆகட்டும்' என்று அருளிச்செய்து, அனைவரையும் தம்மைப் பின்தொடர்ந்து வருமாறு பணித்தருளிப் பிரயாணப்பட்டனர். அப்பொழுது அந்நகரத்திருந்த மனிதர்களேயன்றி விலங்கு பறவை முதலிய அஃறிணை உயிர்களும் அகமகிழ்ந்து பெருமாள்பின் சென்றன. இங்ஙனம் பலரும் புடைசூழ ஸ்ரீபகவான் ஸரயூநதியில் இறங்கித் தன்னடிச்சோதிக்கு எழுந்தருளும்போது தம்மிடத்து இடையறாத அன்புகொண்டு பின்பற்றிச்சரயுவில் மூழ்கி உடம்பைத் துறந்த எல்லாவுயிர்கட்கும் ப்ரஹ்ம லோகத்துக்கு மேற்பட்டதாய்ப் பரமபதம்போலவே அபுநராவ்ருத்தியாகிற மேம்பாடுள்ள ஸாந்தாநிகமென்னும் உலகத்தை அளித்தனர். ஸ்ரீராமபிரான் பரமபதத்துக்குச் சென்றபோழ்து, சங்க சக்கரங்களிரண்டையும் தரிக்கிற மேற்பாற் கரமிரண்டுந் தோன்றப் பெற்றமை விளங்க, "அசுரர் தம்மை வென்றிலங்கு மணிநெடுந்தோள் நான்குந் தோன்ற" என்றார்; இந்த அடைமொழியை வீற்றிருந்த என்பதனோடாவது சித்ரகூடந்தன்னுள் நின்றான் என்பதனோடாவது இயைத்தலும் ஏற்கும். அடலரவப் பகையேறி என்றது, தன்தாம்மேவி என்றதனோடும், அசுரர் தம்மை வென்று என்றதனோடும் இயைக்கத்தக்கது. (ம)

751 தில்லைநகர்த்திருச்சித்ரகூடந்தன்னுள் திறல்விளங்குமாருதியோடமர்ந்தான்தன்னை *
எல்லையில்சீர்த்தயரதன்தன்மகனைத்தோன்றிற்றதுமுதலாத் தன்னுலகம்புக்கதீறா *
கொல்லியலும்படைதானைக்கொற்றவாள்வாள் கோழியர்கோன்குடைக்குலசேகரன்சொற்செய்த *
நல்லியலின்தமிழ்மாலைபத்தும்வல்லார் நலந்திகழ்நாரணனடிக்கீழ்நண்ணுவாரே. (கக)

தில்லை நகர் நற் சித்ரகூடம் தன்னுள்—;
திறல் விளங்கும் — பல பராக்கிரமம் விளங்கப் பெற்ற
மாருதியோடு — அனுமானுடனே
அமர்ந்தான் தன்னை — நித்யவாஸம் பண்ணுகிற எம்பெருமானைக்குறித்து
எல்லை இல்சீர் தயரதன் தன் மகன் ஆய் தோன்றிற்று அது முதல் ஆ தன் உலகம் புக்கது ஈறு ஆ — அழிவில்லாத புகழையுடைய தசரதசக்ரவர்த்தியின் குமாரனாய்ப் பிறந்தது முதல் பரமபதம் புக்கது இறுதியாக (ஸ்ரீராமாயணகதை முழுதையும் ஸங்க்ரஹமாக அமைத்து)

கொல் இயலும் படை தானை கொற்றம் ஒள் வாள் கோழியர் கோன் குடை குல சேகரன் சொல் செய்த — (பகைவர்களைக்) கொல்லுதல் பொருந்திய ஆயுதங்களையுடைய சேனையையும் வெற்றியையும் ஒளியையுமுடைய வாளாயுதத்தையுடையவரும் உறையூரிலுள்ளார்க்குத் தலைவரும் வெண் கொற்றக்குடையையுடையவருமான குலசேகராழ்வார் அருளிச்செய்த
நல் இயல் — சிறந்த இயற்றமிழிலக் கணத்துக்கு இசைந்த
இன் தமிழ் மாலை பத்தும் — இனியதமிழ்ப் பிரபந்த ரூபமான இப்பத்துப் பாசுரங்களையும்
வல்லார் — கற்று வல்லவர்கள்
நலம் திகழ் நாரணன் — பரமபதத்தில் விளங்குகிற ஸ்ரீமந் நாராயணனுடைய
அடி கீழ் நண்ணுவார் — திருவடிகளிற் சேரப் பெறுவார்கள்.

* * *—தில்லைத் திருச்சித்ரகூடத் தெம்பெருமான் விஷயமாக ஸ்ரீகுலசேகராழ்வார் அருளிச்செய்த பரமபோக்யமான இத்திருமொழியை ஓதவல்லவர்கள் எம்பெருமானருளாற் பரமபதமடைவரென்று பயனுரைத்துத் தலைக்கட்டினராயிற்று. பால்யத்தில் ப்ரஹ்மா அளித்த வரத்தினால் சிரஞ்ஜீவியானவரும், தாஹ்ஹ்ஹ்னொ நந்ஹ் வஹ்ஹிவிய ஹாவவத்வெயஹ்ஹாவகம் அநித உஹ்வஹ உஹ்வஹ்ஹ்ஹூ! வொதெவஹஹ ஹநந்ஹாஹு வாஹாம் விஹ்ஹ்திம் பஹ்ஹ்யா வய்ஹ்ய அநிதம் தவ வொவதெவொள” [அதிமாநுஷஸ்தவம்.]

என்றபடி—ஸ்ரீராமகதை உலகத்திலுள்ளவளவும் தாம் ஜீவித்திருக்குமாறு ஸ்ரீராமனிடம் வரம்வேண்டிப் பெற்றவருமான திருவடி, இராமபிரான் தன்னடிச் சோதிக்கு எழுந்தருளிய பொழுது அவனைவிட்டுப் பிரியமாட்டாது மனமிரங்க, அந்த உத்தம பக்த சிகாமணியைத் தானும் விடமாட்டாமல் ஸ்ரீராமன் அவருடனே சித்ரகூடத்தில் வந்து வீற்றிருக்கின்றனனும்.

அடிவரவு:—அங்கண் வந்து செவ்வரி தொத்து வலி தனம் குரை அம்பொன் செறி அன்று தில்லை பூகிலா.

குலசேகரப்பெருமாள் திருவடிகளே சரணம்.

பெருமாள்கோயில் பிரதிவாதிபயங்கரம்
அண்ணங்கராசாரியர் இயற்றிய,
பெருமாள் திருமொழி உரை
முற்றுப்பெற்றது.

திருச்சந்தவிருத்தம்.

திருமழிசைப்பிரான் அருளிச்செய்த திவ்யப்ரபந்தங்கள் இரண்டினுள் இரண்டாவது-இது. முதலாவது-நான்முகன் திருவந்தாதி. அது நாலாயிர திவ்யப்ரபந்தத்தில் மூன்றுவது ஆயிரமாகிய 'இயற்பா' என்பதில் சேர்க்கப்பட்டுள்ளது; இது-முதலாயிரத்தைச் சேர்ந்தது.

விருத்தம்-வ்ருத்தமென்கிற பதமே இங்கு விருத்தமெனத் திரிந்திருப்பதாகக் கொள்க. செய்யுளைக் குறிக்கிற இப்பொதுமொழி, இங்கே சிறப்பாய் (எழுசீர்க்கழி நெடிலடி) ஆசிரிய விருத்த மென்னும் ஒருவகைச் செய்யுளை உணர்த்தி நூலுக்குக் கருவியாகு பெயராய்த்து.

எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை என ஆறு உறுப்புகளைப்பெற்று வருகிற பா-வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என நால்வகைப்படு மென்பதும், இப்பா னான்கிற்கும்-துறை, தாழிசை, விருத்தம் என இனம் மூன்று உளவென்பதும் யாப்பிலக்கணம் பயின்றவர் எளிதிலறிந்ததேயாம். ஆகவே, பாவினம் மூன்றனுள் ஒன்றான விருத்தத்தின்பாற் படும் ஆசிரியவிருத்தமாகிய இத்திவ்யப்ரபந்தம் – பொதுப்பெயராற் குறிக்கப்பட்டுளதென் றறிக.

இனி, சந்தவிருத்தமாவது என் ? எனில் ; கலிவிருத்தம், வஞ்சிவிருத்தம், ஆசிரியவிருத் தம் என்றாற்போலத் தனியே சந்தவிருத்தமென்று ஒன்று கிடையாது. இனிய ஓசையால் அமைந்த விருத்தமே சந்தவிருத்தமெனப்படும். ஆசிரியவிருத்தத்தால் அமையும் மற்ற பாசுரங் களினும் இத்திவ்ய ப்ரபந்தத்திற் பாசுரங்கள் மிகவும் இனிய ஓசையை உடையனவாயிருத்த லால், இதனிற் சந்தவிருத்தமென்றது தகுமென்க. எனவே, பெரும்பாலும் ஒன்றுமுதல் ஆறு சீர்கள் மாச்சீர்களும், எழாஞ்சீர் விளச்சீருமாகிய கழிநெடிலடி நான்கு கொண்ட எழுசீராசிரி யச்சந்தவிருத்த மென்றதாயிற்று. தான தான தான தான தான தான தானனா-என்பது இப்பிர பந்தத்திற்குப் பெரும்பாலும் சந்தக்குழிப்பாம்.

இனி, இப்பிரபந்தத்தைக் கலி விருத்தமாகக் கொள்வாருமுளர். எந்தவிருத்தமாகக் கொண்டாலும் ஓசையின் இனிமை ஒப்பற்றதாகையால் சந்தவிருத்த மென்கை சிறப்புடைத் தேயாம்.

ஸ்ரீ:

திருச்சந்தவிருத்தத்தின் தனியன்கள்.

தருச்சந்தப் பொழில்தழுவு தாரணியின் துயர்தீரத்
திருச்சந்த விருத்தஞ்செய் திருமழிசைப் பரன்வருமூர்
கருச்சந்துங் காரகிலுங் கமழ்கோங்கு மணநாறுந்
திருச்சந்தத் துடன்மருவு திருமழிசை வளம்பதியே.

தரு சந்தம் பொழில் தழுவு தாரணியின்	வ்ருக்ஷங்களினுடைய அழகையுடைய சோலைகளாலே சூழப்பட்ட பூமியிலே உள்ளவர்களுடைய
துயர் தீர	துக்கம் தீரும்படியாக
திருச்சந்த விருத்தம் செய்	'திருச்சந்த விருத்தம்' என்னும் திவ்யப்ரபந்தத்தைச் செய்தருளிய
திருமழிசை பரன் வரும் ஊர்	திருமழிசைப்பிரான் திருவவதரித்த திவ்ய தேசம் எதுவென்றால்,
கரு சந்தும்	பெருமை பொருந்திய சந்தன மரங்களும்
கார் அகிலும்	கறுத்த அகிற்கட்டைகளும்
கமழ் கோங்கும்	மணம்மிக்க கோங்குமரங்களும்
மணம் நாறும்	பரிமளம் வீசப்பெற்றதாய்,
திரு	பெரிய பிராட்டியார்
சந்தத்துடன்	அபிநிவேசத்தோடு
மருவு	பொருந்திவாழப்பெற்றதான
திரு மழிசை வளம் பதியே	திருமழிசை என்னும் செல்வம் மிக்க திருநகரியே யாம்.

எம்பெருமானைக்காட்டிலும் அவன் உகந்து எழுந்தருளியிருக்கும் திருப்பதிகளே பரமோத்தேச்யமென்னுமிடம் தோற்றக் "கண்டியூரரங்கம் மெய்யம் கச்சி பேர் மல்லியென்று, மண்டிணீர் உய்யலல்லால் மற்றையார்க்கும் உய்யலாமே" என்றும் "விண்ணகரம் வெஃகா விரி திரைநீர் வேங்கடம்" என்றும் "திரு நறையூர் மணிமாடஞ் சேர்மின்களே" என்றும் "பதியே பரவித்தொழும் தொண்டர்தமக்குக்கதியே!" என்றும் அருளிச்செய்திருப்பதுபோல, ஆழ்வார்களைக் காட்டிலும் அவர்கள் திருவவதார ஸ்தலங்களே ப்ரபந்நர்க்குப் போற்றத்தக்கவை என்பதை விளக்குதற்காகத் திருமழிசையாழ்வார் பக்கலுள்ள பக்திப்ரகர்ஷத்தின் பரீவாஹமாக அவருடைய திருவவதார ஸ்தலத்தைப் புகழ்ந்து பேசுவது-இப்பாட்டு.

உலகு மழிசையு முள்ளுணர்ந்து தம்மிற் புலவர் புகழ்க்கோலால் தூக்க—உலகு தன்னை வைத்தெடுத்த பக்கத்தும் மாநீர் மழிசையே வைத்தெடுத்த பக்கம் வலிது.

புலவர்	ஸர்வஜ்ஞராகிய சதுர்முகர்,
உலகும்	(திருமழிசை தவிர மற்ற) எல்லா வுலகங்களையும்
மழிசையும்	திருமழிசையையும்
தம்மில் உள் உணர்ந்து	(தனித்தனியே) தம்நெஞ்சில் ஆராய்ந்து (விச்வகர்மாவைக் கொண்டு)
புகழ் கோலால் தூக்க	துலாக்கோல் நாட்டி நிறுப்பிக்க
உலகு தன்னை வைத்து எடுத்த பக்கத்தும்	உலகங்களை எல்லாம் வைத்து நிறுத்த தட்டிற்காட்டிலும்
மா நீர் மழிசை வைத்து எடுத்த பக்கமே வலிது	சிறந்த நீர்வளம் மிக்க திருமழிசையை வைத்து நிறுத்த தட்டே வலிமிக்கதாயிருந்தது (தாழ்ந்தது.)

ஸ்ரீ பக்திஸார முனிவரர் திருவவதரித்த திவ்ய க்ஷேத்ரமாகிய திருமழிசையின் அநந்ய ஸாதாரணமான ஏற்றம் இதனால் கூறப்படுகின்றது.

பண்டொருகால், வஸிஷ்டர் பார்க்கவர் முதலிய பல ப்ரஹ்மர்ஷிகள் ஸத்யலோகத்தைச் சார்ந்து அங்குத் தலைமைபூண்டு வீற்றிருக்கின்ற சதுர்முக ப்ரஹ்மாவைத் திருவடி தொழுது கூப்பியகையராய் "இஹபர மோக்ஷமாகிற மூன்றிடங்களின் பேற்றையும் பெறுதற்கு ஏற்ற முயற்சி செய்யத்தக்க தலமாக விருத்தலால் அனைத்துலகங்களுள்ளுஞ் சிறந்ததான பூலோகத்திலே ச்லாக்கியமான க்ஷேத்ரம் இன்னதென்று தெரிந்து ஆங்குச்சென்று பெருந்தவமியற்றக் கருதி இப்பொழுது ஈங்கு வந்த எங்களுக்கு அத்தகைய திவ்யஸ்தாநம் இன்னதென்று துணிந்து உரைத்தருளவேண்டும்" எனவேண்ட, அவ்வேண்டுகோளுக்கு இரங்கிய த்ரிபுவநகர்த்தாவாகிய சதுர்முகர் உடனே தேவசிற்பியான விச்வகர்மாவை வரவழைத்து "இம்முனிவர்கள் காணத் துலாக்கோல் நாட்டி அதன் ஒரு தட்டில் ஐம்பது கோடியோஜனை விஸ்தீர்ணமான பூமிமுழுவதையும், மற்றொரு தட்டில் திருமழிசையென்னும் புண்யக்ஷேத்ரமொன்றையும் வைத்து நிறுப்பாய்" என்று சொல்ல, அங்ஙனம் அவன் செய்தவளவிலே, மண்ணுலக முழுவதையும் நாட்டியதட்டு இலேசுபட்டு மேலோங்கி நிற்க, திருமழிசைப் பதியையிட்டதட்டு கனம்பெற்றுத் தாழ்ந்துநின்றது. அவ்வேறுபாட்டை நான்முகன் அந்த முனிவர்கட்கு நன்கு எடுத்துக்காட்டி அந்த மழிசைப்பதிக்கு மஹீஸார க்ஷேத்ர மென்று காரணப்பெயர்கூறி, அதிற்போயிருந்து தவம்புரிந்து உயர்கதிபுகுமாறு அநுமதிதந்து அவர்களை அனுப்ப; அவ்வண்ணமே அம்முனிவர்கள் அவ்விடத்தை யடைந்து தவம்புரிந்தனர் என்ற புராணவரலாறு இங்கு அறியத்தக்கது.

ஸகலஸ்தலங்களிற்காட்டிலும் திருமழிசை மிக்க வீறு பெற்றது என்பதைப் பிரமன் முன்னுற முன்னமே தான் ஆராய்ந்து நெஞ்சிற் கொண்டனனதலால், "புலவர் உலகுமழிசையும் தம்மில் உள்ளுணர்ந்து" எனப்பட்டது. இங்கு, புலவர் என்றது - உலகங்களையெல்லாம் படைக்கவல்ல ஸாமர்த்தியம் பெற்ற ப்ரஹ்மாவை. இங்ஙனன்றி - "பார்க்கவாதி மஹர்ஷிகளான மஹாகவிகள்" என்பது பிள்ளைலோகஞ்ஜீயர் வியாக்கியானம்.

புகழ்க்கோல்—பெருமையை விளக்கும் துலாக்கோல். தூக்க—பிறவினைப் பொருளில் வந்த தன்வினை. துலாக்கோல்நாட்டி நிறுத்தவன் விச்வகர்மாவாயினும், அவன் ப்ரயோஜ்யகர்த்தாவாகவும் சதுர்முகன் ப்ரயோஜக கர்த்தாவாகவு மிருத்தலால் தூக்க என்னக் குறையில்லையென்க.

தனியன் உரை முற்றிற்று.

திருச்சந்தவிருத்தவுரையின் அவதாரிகை.

யதுகுலத்திலே பிறந்து ஆய்க்குலத்திலே வளர்ந்த கண்ணபிராஜனப்போல, ரிஷிபுத்திரராய்ப் பிறந்து தாழ்ந்தகுலத்திலே வளர்ந்தருளின பரமதயாளுவான திருமழிசைப்பிரானுக்கு ஸர்வேச்வரன் நிர்ஹேதுகமாக * மயர்வறமதி நலமருளி, தன்னுடைய திவ்யாத்மஸ்வரூபத்தையும், ஞானம் சக்திமுதலிய கல்யாணகுணங்களையும், இவற்றுக்கு ப்ரகாசகமான திவ்யமங்கள விக்ரஹத்தையும், அதுக்கு அலங்காரமான திவ்யபூஷணதிவ்யாயுதங்களையும், இவையெல்லாம் காட்டிலெறித்த நிலாவாகாதபடி அருகேயிருந்து அனுபவிக்கிற நாச்சிமார்களையும் அச்சேர்த்தியிலே அடிமைத்தொழில் செய்வதையே ஜீவநமாகக்கொண்டிருக்கிற பரிஜநவர்க்கத்தையும் இப்போகத்தை நித்யமாக வளர்க்கிற பரமபதத்தையும் ஸாக்ஷாத்தாக ஸேவைஸாதிப்பித்தருளி, படைப்பு அளிப்புத் துடைப்புத் தொழில்களை லீலையாக நடத்திப்போருகிற தன் படிகளையுங்

காட்டிக்கொடுத்து, ஆகவிப்படி உபயவிபூதிநாதனை எம்பெருமான் தன் பெருமைகளை யெல்லாம் காட்டித்தந்தருளுகையாலே, இவ்வாழ்வார் இடைவிடாது அவ்வெம்பெருமானை அநுபவிப்பதிலேயே ஊன்றினவராய், மார்க்கண்டேயன் முதலானைப்போல் நெடுங்காலம் இவ்விபூதியிலேயே எழுந்தருளியிருந்து, "பரமபோக்யமாய்ப் பரமளவிலபமான இந்த பகவத்விஷயாநுபவத்தை நம்மைப்போலே எல்லாரும் பெறலாமாயிருக்க, பலர் இழந்து ஸம்ஸாரிகளாய்ப் பட்டுப்போவதற்கு அடி என் ?" என்று ஆராய்ந்து ஸம்ஸாரிகள் பக்கலிலே கண்வைத்தார்.

தாம் சுத்தஸத்வநிஷ்டராயிருப்பதற்கு எதிர்த்தடையாக அவர்கள் ரஜோகுணத்தாலும் தமோகுணத்தாலும் கலங்கி ராஜஸதாமஸபுராணங்களிலே ஊன்றி, தலையறுத்துப் பாதகியான வனும் தலையறுப்புண்டு வந்திருந்தவனுமான தேவதாந்தரங்கள்பக்கலிலே பரத்வபுத்தி வைத்து அதுவே காரணமாக அநர்த்தப்படுகிறபடியை உணர்ந்து அது பொறுக்கமாட்டாமே, "ஸ்ரீமந்நாராயணனேபரதத்துவமென்னும் அர்த்தத்தை இவர்களுக்கு உபதேசித்தால் இவர்கள் உஜ்ஜீவிக்க விரகாம்" என்று திருவுள்ளம்பற்றி "நான்முகனை நாராயணன் படைத்தான்" என்று தொடங்கித் திருவந்தாதிமுகமாக ஸ்ரீமந்நாராயணனது பரத்துவத்தைப் பலவாறுக அருளிச்செய்தவிடத்தும், அவர்கள் இச்சுவடறிந்து திருந்திவரக் காணுமையாலே,

"ஆரானு மாதானுஞ்செய்ய, அகலிடத்தை
ஆராய்ந்து அதுதிருத்தலாவதே !—சீரார்
மனத்தலே, வன்துன்பத்தை மாற்றினேன், வானோர்
இனத்தலைவன் கண்ணனல் யான்"

என்று-பெரிய திருவந்தாதியில், நம்மாழ்வார், பிறர்துன்பத்திற்குக் கரைவது தவிர்ந்து தான்பெற்ற பேற்றிற்கு உகந்தருளினாற்போலவும், திருவாய்மொழியில் "அணைவதரவணைமேல்" என்னுந் திருவாய்மொழியினால் எம்பெருமானுடைய மோக்ஷப்ரதத்வத்தை ஸம்ஸாரிகட்குப் பரக்க உபதேசித்தவிடத்தும் அவர்கள் திருந்திவந்து சேரக்காணுமல் "கார்முகில்போல் வண்ணன் என் கண்ணனை நான் கண்டேனே" என்று-தாம் பெற்ற பேற்றை இனிதாகப்பேசி மகிழ்ந்தாற்போலவும், இவரும், "ஆ! எம்பெருமானுடைய திருவருள் நம்மேல் ப்ரவஹித்த வாறு என்கொல் !, மற்ற பேரைப்போலே நாமும் விஷயாந்தரங்களிலும் தேவதாந்தரங்களிலும் கால்தாழ்ந்து பாழ்பட்டொழியாமே அவ்வெம்பெருமானுடைய பரவ்யூஹவிபவாந்தர்யாம்யர்ச்சாவதாரங்களென்னும் நிலைகளிற் பெருமையை வாய்வெருவுவதே நமக்குப் போதுபோக்காம்படி நாம் பெற்ற பாக்கியம் என்னே !" என்றிப்புடைகளிலே, தமக்குப்பிறந்த லாபங்களைப் பேசுகிறார்-இத்திருச்சந்த விருத்தத்தால்.

ஸ்ரீ:

திருமழிசைப்பிரான் திருவாய்மலர்ந்தருளிய

திருச்சந்த விருத்தம்.

ஸ்ரீகாஞ்சீ பிரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசாரியர் இயற்றிய உரையுடன் கூடியது.

---

752 பூநிலாயவைந்துமாய்ப் புனற்கணின்ற நான்குமாய் *
தீநிலாயமூன்றுமாய்ச் சிறந்தகாலிரண்டுமாய் *
மீநிலாயதோன்றுமாகி வேறுவேறுதன்மையாய் *
நீநிலாயவண்ணநின்ன யார்நினைக்கவல்லரே. (க)

[எம்பெருமானே]

பூ நிலாய ஐந்தும் ஆய் — பூமியில் தங்கியிருக்கிற (சப்தம் முதலிய) ஐந்துகுணங்களுக்கும் நிர்வாஹகனாய்,

புனல் கண் நின்ற நான்கும் ஆய் — நீரிலே உள்ள நான்கு குணங்களுக்கும் நிர்வாஹகனாய்,

தீ நிலாய மூன்றும் ஆய் — தேஜஸ்ஸிலே உள்ள மூன்று குணங்களுக்கும் நிர்வாஹகனாய்,

சிறந்த கால் இரண்டும் ஆய் — (ஸர்வப்ராணிகளுக்கும் ஜீவந ஹேதுவாகையாலே) ச்ரேஷ்டமான வாயுவிலே உள்ள இரண்டு குணங்களுக்கும் நிர்வாஹகனாய்,

மீ நிலாயது ஒன்றும் ஆகி — ஆகாசத்திலே உள்ள சப்தகுணமொன்றுக்கும் நிர்வாஹகனாய்

வேறு வேறு தன்மை ஆய் — பரஸ்பரம் விலக்ஷணமான தேவாதி பதார்த்தங்களுக்கும் ஆத்மாவாய்

நீ நிலாய வண்ணம்-நீ நிற்கிற படியையும்

நின்ன — உன்னையும்

ஆர் கினைக்க வல்லர் — ஸ்வப்ரயத்நத்தினால் யார் தான் சிந்தித்தறியக்கடவர்?

* * *—அண்டங்களுக்குக் காரணமாய், குணங்களோடு கூடிய நிலம் நீர் தீ கால் விசும்பெனும் ஐம்பூதங்கட்கு அந்தராத்மாவாய் நிற்கிற நீயே உபாதாந காரணம்; இப்பரமார்த்தமானது வேதாந்தப்ரமேயம் கைப்படாத பாஹ்ய குத்ருஷ்டிகளுக்கு நெஞ்சில்புக வழியில்லை யென்கிறது, இப்பாட்டு. இது எம்பெருமானை முன்னிலையாக்கிச் சொல்லும் பாசுரமாயிருத்தலால் விளி வருவித்துக் கொள்ளப்பட்டது.

இப்பாட்டில் முன் இரண்டரையடிகளால் ப்ராக்ருதஸ்ருஷ்டி சொல்லப் படுகிறது, ஸாதாரணமாய் ப்ருதிவிக்கு மணம் குணமென்றும், அப்புக்கு ரஸம் குணமென்றும், தேஜஸ்ஸுக்கு ரூபம் குணமென்றும், வாயுவுக்கு ஸ்பர்சம் குணமென்றும், ஆகாசத்திற்கு சப்தம் குணமென்றும் இங்ஙனே ஒவ்வொரு பூதத்திற்கு ஒவ்வொன்று குணமாகச் சொல்லப்பட்டிருந்தாலும், 'காரணவஸ்துவிலுள்ள குணங்கள் காரியத்தில் வந்து சேருகின்றன' என்ற நியாயப்படி பூமிக்கு ஐந்து குணங்களும், ஜலத்திற்கு நான்கு குணங்களும், தேஜஸ்ஸுக்கு மூன்று குணங்களும், வாயுவுக்கு இரண்டு குணங்களும் உண்டு. கைத்திரீயோப நிஷத்தில்- "ஆகாசாத்வாயு: வாயோரக்நி: அக்நேராப: அத்ப்ய: ப்ருதிவீ," என்று ஆகாசத்தில் நின்றும் வாயுவும், வாயுவில் நின்றும் அக்நியும், அக்நியில் நின்றும் ஜலமும், ஜலத்தில் நின்றும் ப்ருதிவியும் உண்டானவதாக ஓதப்பட்டிருக்கின்றது. ஆகாசத்தில் நின்றும் பிறக்கிற வாயுவானது தன் குணமாகிய ஸ்பர்சத்தோடுகூட ஸ்வகாரணமான ஆகாசத்தின் குணமாகிய சப்தத்தையும் உடைத்தானதாம். வாயுவில் நின்றும் பிறக்கிற அக்நியானது தன்குணமாகிய ரூபத்தோடு கூட ஸ்வகாரணமான வாயு விஸிடத்துள்ள சப்தஸ்பர்சங்களையும் உடைத்தானதாம். அக்நியில் நின்றும் பிறக்கிற ஜலமானது தன்குணமாகிய ரஸத்தோடுகூட ஸ்வ காரணமான அக்நியிடத்துள்ள சப்தஸ்பர்சரூபங்களையும் உடைத்தானதாம். ஜலத்தில் நின்றும் பிறக்கிறபூமியானது தன் குணமாகிய கந்தத்தோடுகூட ஸ்வகாரணமான ஜலத்தி

துள்ள சப்தஸ்பர்ஶரூபரஸங்களையும் உடைத்தானதாம். ஆகவே, பூமியானது ஐந்து குணங்களை உடைத்தானதாகவும், ஜலமானது நான்கு குணங்களை உடையதாகவும், அக்நியானது மூன்று குணங்களையுடையதாகவும், வாயுவானது இரண்டு குணங்களையுடையதாகவும், ஆகாசமானது ஒரு குணத்தை உடையதாகவும் ஆயிற்று. இந்த ப்ரக்ரியையைத் திருவுள்ளம்பற்றியே "பூநிலாயவைந்தும்" இத்யாதிகள் அருளிச்செய்யப்பட்டனவென்க.

இப்படி ஒரு பூதத்தில் நின்றும் மற்றொரு பூதமுண்டாவதாகச் சொல்லப்பட்ட ப்ரக்ரியை தவிர, தன்மாத்ரத்தில் நின்றும் தன்மாத்ரம் பிறக்கை, பூதத்தில் நின்றும் தன்மாத்ரம் பிறக்கை முதலிய ப்ரகாரான்தரங்களும் உண்டாயிருக்கும், அதுவுமன்றி, பஞ்சீகரண ப்ரக்ரியையாலே எல்லாபூதங்களிலும் எல்லாக் குணங்களுமே ஏற்றத்தாழ்வாக இருக்குமென்கிற கோட்பாடு மூண்டாயினும், இங்கே *ஆகாசாத் வாயு: * என்று கீழே உதாஹரிக்கப்பட்ட ச்ருதிச்சாயையாலே அருளிச்செய்யப்பட்டிருக்கிறதென்றுணர்க. இந்தப்ரக்ரியை ஸ்ரீவிஷ்ணு புராணத்திலும் (முதல் அம்சம், இரண்டாமத்யாயம், ச்லோ 50.) ஸ்பஷ்டம்.

(1) பூமியில்—சப்தம், ஸ்பர்சம், ரூபம், ரஸம், கந்தம்,
(2) புனற்கண்—சப்தம், ஸ்பர்சம், ரூபம், ரஸம்.
(3) தீயில்—சப்தம், ஸ்பர்சம், ரூபம்.
(4) காற்றில்—சப்தம், ஸ்பர்சம்.
(5) ஆகாயத்தில்—சப்த மொன்றே.

ஆக இப்பஞ்சபூதகுணங்கள் எம்பெருமானுயிருக்கையாவதென்? எனில்; பஞ்சபூதங்கள் எப்படி எம்பெருமானிட்ட வழக்காயிருக்கின்றனவோ, அப்படியே அவற்றின் குணங்களும் அவ்வெம்பெருமானிட்ட வழக்காயிருக்கின்றனவென்றவாறு.

"வேறு வேறு தன்மையாய்" என்றது அண்டத்துக்கு உட்பட்டவையாய் ஒன்றுக்கொன்று விலக்ஷணங்களாயுள்ள தேவாதிபதார்த்தங்கட்கெல்லாம் ஆத்மாவாயிருக்கும்படியைச் சொல்லுகிறது. ஆத்மாக்களனைவரும் ஜ்ஞாத்ருத்வாதிகளாலே வேற்றுமையின்றி ஒருபடிப்பட்டிருந்தாலும் கர்மாதீநமாகவருகிற தேவத்வமநுஷ்யத்வாதிகளாகிற உபாதிகள் வெவ்வேறுபட்டனவாதல்பற்றி "வேறு வேறு தன்மையாய்" எனப்பட்டதென்ப. ஆர் நினைக்கவல்லர்? என்றது-நினைக்கவல்லாரொருவருமில்லை யென்ற குறிப்பு. பேதாபேதிகள் நினைக்கவோ? நிர்விசேஷவஸ்துவ்யதிரிக்தங்கள் அபரமார்த்தமென்னும் மாயாவாதிகள் நினைக்கவோ ? என்கிறார்.

753 ஆறுமாறுமாறுமாய் ஓரைந்துமைந்துமைந்துமாய் *
ஏறுசீரிரண்டுமூன்றும் ஏழுமாறுமெட்டுமாய் *
வேறுவேறுஞானமாகி மெய்யிலேடுபோய்யுமாய் *
ஊறுமோடோசையாயவைந்தும் ஆயவாயமாயனே. (உ)

ஆறும் ஆய் } (அத்யயநம் முதலிய) ஆறு கருமங்களுக்கும் நிர்வாஹகனாய்,	ஓர் ஐந்தும் ஆய் } பஞ்சமஹாயஜ்ஞங்களால் ஆராத்யனாய்
ஆறும் (ஆய்) } (அக்கருமங்களை அநுஷ்டிப்பதற்கு உரிய காலமாகிய வஸந்தம் முதலிய) ஆறு ருதுக்களுக்கும் நிர்வாஹகனாய்,	ஐந்தும் (ஆய்)—பஞ்சாஹாக்நிகளாலே ஆராத்யனாய்,
ஆறும் (ஆய்) } (ஆக்நேயம் முதலிய) ஆறு யஜ்ஞங்களாலே ஆராதிக்கத்தகுந்தவனாய்,	ஐந்தும் (ஆய்) } (கார்ஹபத்யம் முதலிய) பஞ்சாக்நிகளைச் சரீரமாகக் கொண்டவனாய்,
	ஏறு சீர் மிக்க அதிசயத்தையுடைய
	இரண்டும் (ஆய்) } (ஜ்ஞாந விரக்திகளாகிற) இரண்டையும் அளிக்க வல்லனாய்

மூன்றும் (ஆய்)	(அந்த ஜ்ஞாநவிரக்திஸாத்யமான) பரபக்தி பரஜ்ஞாந பரம பக்திகளாகிற மூன்றையும் அளிக்கவல்லனாய்
ஏழும் (ஆய்)	(விவேகாதிகளான) ஏழுக்கும் நிர்வாஹகனாய்
ஆறும் (ஆய்)	(ஜ்ஞாநசக்தியாதி) ஆறு குணங்களுக்கும் நிர்வாஹகனாய்,
எட்டும் ஆய்	(அபஹதபாப்மத்வம் முதலிய) எட்டு குணங்கட்கும் நிர்வாஹகனாய்,
வேறு வேறு ஞானம் ஆகி	பாஹ்யஸமயமென்றும் குத்ருஷ்டி ஸமயமென்றும் பலபல வாகச் சொல்லப்படுகிற சமயங்கட்கு ப்ரவர்த்தகனாய்,
மெய்யினோடு பொய்யும் ஆய்	யதார்த்தஜ்ஞானிகளுக்கு மெய்யனாய், அல்லாதார்க்குப் பொய்யனாய்
ஊருடு ஓசை ஆய ஐந்தும் ஆய	ஸ்பர்சம் சப்தம் முதலிய பஞ்ச விஷயங்களுமாகக் கடவையாய்
ஆய!	கோபாலஜாதியனாய் வந்து பிறந்தவனே!

நின்னை யார் நினைக்க வல்லர்?—.

ஆறும்=அத்யயநம், அத்யாபநம், யஜநம், யாஜநம், தாநம், ப்ரதிக்ரஹம்-தான் ஓதுதல், பிறரை ஓதுவித்தல், தான் வேள்வி செய்தல், பிறரை வேள்வி செய்வித்தல், தான் கொடுக்கை, பிறர் கொடுப்பதை ஏற்றுக்கொள்ளுகை-என ஆறு கருமங்கள் அந்தணர்கட்குக் கூறப்பட்டுள்ளன. அக்கருமங்கட்கு எம்பெருமான் நிர்வாஹகனென்கை. ஆறும்=வஸந்தம், க்ரீஷ்மம், வர்ஷா, சரத், ஹேமந்தம், சிசிரம் என ஆறு ருதுக்களுண்டு. இரண்டுமாதங்கள் கொண்டது ஒரு ருது எனப்படும். இன்ன இன்ன வருணத்தவர் இன்ன இன்ன ருதுவிலே இன்ன இன்ன கருமங்களை அநுஷ்டிக்கக்கடவர் என்று சாஸ்த்ரங்களிலே காலவிபாகம் கூறப்பட்டுள்ளது. அந்த ருதுக்களுக்கு எம்பெருமான் ப்ரவர்த்தகன் என்றபடி.

ஆறும்=ஆக்நேயம், அக்நீஷோமீயம், உபாம்சுயாஜம், ஐந்த்ரம் இரண்டு ஐந்த்ராக்நம் என்ற ஆறுயாகங்கள். (இவற்றுள் முதல் மூன்றுயாகங்கள் பௌர்ணமியில் செய்யப்படுகிற படியால் "பௌர்ணமாஸம்" என்றும், மற்ற மூன்றும் அமாவாஸ்யையில் செய்யப்படுகிறபடியால் 'தர்சம்' என்றும், இவ்விரண்டும் ஸ்வர்க்கமாகிய ஒரே பலத்திற்கு ஸாகாங்கமாகையால் 'தர்சபௌர்ணமாஸம்' என்று ஒரே பெயராகச் சொல்லப்படுகிறது என்றறிக.) இங்கே 'இந்த ஆக்நேயம் முதலிய ஆறுயாகங்களைச் சொல்லியது மற்று எல்லாக்கருமங்கட்கும் உபலக்ஷணமென்று கொள்க. "ஆறுமாய்" என்றது-எம்பெருமானே ஸர்வதேவதைகளுக்கும் சரீரியாயிருந்துகொண்டு தானே ஸர்வயஜ்ஞ போக்தாவாகிறானென்றவாறு.

ஐந்தும்=தேவயஜ்ஞம், பித்ருயஜ்ஞம், பூதயஜ்ஞம், மநுஷ்யயஜ்ஞம், ப்ரஹ்மயஜ்ஞம் என்பவை பஞ்சமஹாயஜ்ஞங்களெனப்படும். பஞ்ச மஹாயஜ்ஞபோக்தா எம்பெருமானென்கிறது. ஐந்தும்=ப்ராண, அபாந, வ்யாந, உதாந, ஸமாநங்களென்கிற ஐந்துக்கும் செய்யப்படுகிற பஞ்சாஹுதிகள். "ப்ராணாயஸ்வாஹா, அபாநாயஸ்வாஹா" இத்யாதி பஞ்சவாக்யங்களாலே செய்யப்படுகிற ப்ராணாஹுதிகள் ஐந்தும் அந்தர்யாமியான பரமாத்மாவுக்குச் சேரும் ஆராதநங்களென்க. ஐந்தும்=கார்ஹபத்யம், ஆஹவநீயம், தக்ஷிணாக்நி, ஸப்யம், ஆவஸத்யம் என்பவை பஞ்சாக்நிகள். இந்த பஞ்சாக்நிகளை சரீரமாகக்கொண்டவன் எம்பெருமான் என்கிறது. கார்ஹபத்யம் முதலிய மூன்று அக்நிகளே ச்ரௌதாக்நிகளாம் என்று ஸத்யாஷாடரும் பரத்வாஜரும் கூறுவர்; ஸப்யம், ஆவஸத்யம் என்ற இரண்டையும் கூட்டிப் பஞ்சாக்நிகளென்பர் மற்ற ஸ்மார்த்தர்கள்; ப்ராஹ்மணர்க்கு முதல் மூன்று அக்நிகளேயாமென்பது ஹிரண்யகேசிமதம்.

ஏறு சீரிரண்டும்="மாற்பால் மனஞ்சுழிப்ப மங்கையர்தோள் கைவிட்டு" என்றபடி* ஔந்தாமரையாள் கேழ்வனைநுவனையே நோக்குமுணர்வான ஜ்ஞாநமும் கடையறப்பாசங்கள் விடுகையாகிற விரக்தியும். ஸகலசாஸ்த்ரங்கட்கும் இவ்விரண்டில் தான் முக்கியநோக்கா

தலால் ஏழுசீர் எனச் சிறப்பித்துக் கூறப்பட்ட தென்க. மூன்றும் = முற்கூறிய ஜ்ஞாநவிரக்தி களின் பயனுக விளைகின்ற பரபக்தி பரஜ்ஞாந பரமபக்திகள். அன்றியே, உபாஸநபலமான ஐச்வர்ய, கைவல்ய, பகவத்ப்ராப்திகளாகவுமாம். இவற்றைக் கொடுப்பவன் எம்பெருமான், என்பது ஸாமாநாதிகரண்யத்தின் கருத்து.

ஏழும் = கீழ்ச்சொல்லப்பட்ட கர்மயோகம் முதலாகப் பரம பக்திபர்யந்த மான அளவுகளைப் பிறப்பிக்கக் கடவதான மநோநைர்மல்யத்துக்கு அடியான விவே கங்கள் ஏழையும் நிர்வஹிக்குமவன் எம்பெருமான் என்க. விவேகம், விமோகம், அப்யாஸம், க்ரியை, கல்யாணம், அநவஸாதம், அநுத்தர்ஷம் என்பவை ஏழும் விவேகாதிஸப்தகம் எனப்படும். இவற்றின் விவரணம் வருமாறு:— 1. விவேக மாவது-ஜாதிதுஷ்டமும், ஆச்ரயதுஷ்டமும், நிமித்ததுஷ்டமுமன்றியே யிருந்துள்ள அன்னத்தாலுண்டான காயசுத்தி. மூன்றுவகையான தோஷமுமில்லாத ஆஹார ரத்தின் விவேகநபலமான காயசுத்தியிலே விவேகசப்தம் ஔபசாரிகம். இங்ஙனன்றியே, விவிக்தாஹாரஸேவையாலே ராஜஸ தாமஸாஹாராவஸ்யாயித்தெஹத்திற்காட்டில் ஸ்வதேஹத் தினுடைய விவேகநம் விவேக மென்னவுமாம். 2. விமோகமாவது—"விஷொகः காஹா நஹி ஷூः" என்றபடி காமத்தில் அநபிஷ்வங்கம், விஷயத்தைப் புசித்தல்லது நிற்கமாட்டாத விகா ரத்திற்கு அபிஷ்வங்கமென்று பெயர்; அது இல்லாமை அநபிஷ்வங்கம். "காஹாத் கொ யொஜிஜாயதெ" இத்யாதிவசநத்தாலே க்ரோதாதிகளின் இல்லாமை இவ்விடத்திலே பலிதம். 3. அப்யாஸமாவது—சூரஂஹணவஂஸீயூ நஂவ ஂநः வ ஂநஹ்யாவः என்றபடி சுபாச்ரயமான வஸ்துவிலே பலகாலும் பரிசீலநம் பண்ணுகை. 4. க்ரியையாவது—பஞ்சமஹாயஜ்ஞம் முதலிய நித்ய கருமங்களை வல்லவளவு அநுஷ்டித்தல். 5. கல்யாணமாவது—ஸர்வபூதஹித மான ஸத்யமும், மனமொழிமெய்கள் ஒருபடிப்பட்டிருக்கையாகிற ஆர்ஜவமும், பரதுஃக்கது க்கித்வமாகிற தயையும், லொஹ மற்றிருக்கையாகிற தாநமும், கரணத்ரயத்தாலும் பர பீடையை நிவர்த்திக்கையாகிற அஹிம்ஸையும், பிறர்செய்த அபகாரத்தைச் சிந்தியாமையாகிய ஈநஹ்யெயுமாகிற இவற்றுக்குக் கல்யாண மென்று பெயர். 6. அநவஸாதமாவது—என் றைக்கோ கழிந்த மக்கள் முதலியோரது மரணத்தையும் மற்றும்பல சோகநிமித்தங்களையும் சிந்தித்து மனதை மழுங்கச்செய்யாமை. 7. அநுத்தர்ஷமாவது—ஸந்தோஷநிமித் தங்களுண் டாலும் தலைகால் தெரியாமல் பொங்காதிருக்கை. ஆக இப்படிப்பட்ட குணங்கட்கு விவேகாதி ஸப்தக மென்று வ்யபதேசம். எம்பெருமானைச் சிந்திப்பதற்குக் காரணமான மனத்தெளிவுக்கு இவை இன்றியமையாதனவாதலால் இவை நிஷ்பந்நமாகுப்படி எம்பெரு மான் அருள்செய்பவ னென்கிறது.

ஆறும்—ஜ்ஞாநம், பலம், ஐச்வர்யம், வீர்யம், சக்தி, தேஜஸ் என்கிற ஆறு குணங் கட்கும் நிர்வாஹகனென்கை. எட்டும் = சாந்தோக்ய உபநிஷத்தில் எட்டாவது ப்ரபாடகத்தில் (5) வஷஷு தாவஹு தவாவுவாவிஜிஜொஜிஜ்ஞ தத்—ஷிஜிஜொகொ விஜிவதொவிவாவஹு தத்காஹஹு தத்வஂகஹு: என்று ஓதப்பட்ட எட்டுகுணங்களையுடையவன் என்கை. அபஹதபாப்மா = பாப ஸம்பந்தமற்றவன்; விஜர:—கிழத்தனமற்றவன், நித்யயுவாவாயிருப்பவன் என்றவாறு. விம்ருத்யு:—மரணமற்றவன்; விசோக:—ஸ்வார்த்தமான சோகமற்றவன். [அடியார்களு டைய சோகத்தைக் கண்டு அது அடியாக சோகிக்கை கல்யாணகுணவர்க்கத்திலே படிக்கப் பட்டிருப்பதால், இங்கு விசோக: என்றது-ஸ்வார்த்தமான சோகமற்றவன் என்றபடியாம்.] விஜிகத்ஸ:—பசியற்றவன்; அபிபாஸ:—தாஹமற்றவன்; ஸத்யகாம:—ஆசீர்தர்க்கு அநுபாவ்ய மான குணவிபூதிகளையுடையவன். ஸத்யஸங்கல்ப:—ஒன்றிலும் வீணாகாத ஸங்கல்பத்தை யுடையவன். "எட்டுமாய்" என்கிற ஸாமாநாதிகரண்யம்—இந்த அபஹதபாப்மத்வாதிகுணஷ் டகத்தைத் * தம்மையே நாளும்வணங்கித் தொழுமடியார்க்கு விளைக்கவல்லவன் என்பது

பற்றியுமாம். * தம்மையேயொக்க அருள்செய்யுமவனிறே எம்பெருமான். "வெளநரஅ வெண் சுஹிஷ்ஷ்ஷ்

* * * லீலாவிபூதிவிசிஷ்டனையும் நித்யவிபூதிவிசிஷ்டனையும் நீ எழுந்தருளியிருக்கு மிருப்பை நிர்ஹேதுகக்ருபையாலே எனக்கு நீ காட்டியருள நான் எளிதிற்கண்டாப்போல் ஸ்வஸாமர்த்தியத்தாற் காணக்கூடியவர்கள் யாருமில்லை யென்கிறார். முன்னிரண்டடிகளால் லீலாவிபூதியோகமும் பின்னிரண்டடிகளால் நித்யவிபூதியோகமும் அருளிச்செய்யப் படுகின்றன. முதலடியில், 1 ஐந்தும் = ப்ருதிவி, அப்பு, தேஜஸ், வாயு, ஆகாசம் [நிலம் நீர் தீ கால்விசும்பு] என்ற பஞ்சபூதங்கள். 2 ஐந்தும் = த்வக்கு, சக்ஷுஸ், ச்ரோத்ரம், ஜிஹ்வா, க்ராணம் [செவி வாய் கண் மூக்கு உடல்] என்ற பஞ்சஜ்ஞாநேந்திரியங்கள். 3 ஐந்தும் = வாக்கு, பாணி, பாதம், பாயு, உபஸ்தம் [வாய், கை, கால், குதம், குறி] என்ற பஞ்சகர்மேந்திரியங்கள். 4 இரண்டாமடியில், ஐந்தும் = சப்ததந்மாத்ரை, ஸ்பர்சதந்மாத்ரை, ரூபதந்மாத்ரை, ரஸதந்மாத்ரை, கந்ததந்மாத்ரை என்னும் பஞ்சதந்மாத்ரைகள்.

மூன்றும் = அவ்யக்தமஸ்ஸென்றும் அக்ஷரமென்றும் சில அவஸ்தைகளை யுடைத்தா யிருக்கிற ப்ரக்ருதி (1), அந்தப்ரக்ருதியில்நின்றும் குணவைஷம்யமடியாகப் பிறக்கிற விகாரங் களுள் முதலதான மஹாந் (2), அந்தமஹத்தத்வத்தில் நின்றும் பிறக்கிற அஹங்காரம் (3), ஆக மூன்று. ஒன்று-மநஸ்ஸு. ஆக இருபத்தினாலுதத்துவங்கள் சொல்லப்பட்டன. (முதலடியில் பதினைந்து; இரண்டாமடியில் ஒன்பது, ஆக-24.) ஆகிநின்ற என்ற ஸாமாநாதிகரண்யம் - இத் தத்துவங்களுக்கும் எம்பெருமானுக்குமுள்ள ஸம்பந்தங்களெல்லாவற்றையும் உளப்படுத்திய தாம். அல்லவற்றுளாயுமாய் = இப்படி இருபத்திநாலாக வகுக்கப்பட்ட ப்ரக்ருதியிலே ஸம்ஸ்ருஷ்டரான ஜீவாத்மாக்களுக்கு அந்தர்யாமியாய் என்றபடி. அல்லவை என்றால் ஜீவாத்மாக் களை எங்ஙனே குறிக்கும்படியென்னில்; அல்லவை என்பதற்கு 'அப்படியாகாதவை' என்று பொருள். ப்ரகரணாநுகுணமாக 'அசித்தாகாதவை' என்று பொருளாய் அசேதநவ்யவஹாரத்த ரான சேதநர்களைக் குறிக்கிறபடி.

இனி பின்னடிகளில், திவ்யமங்களவிக்ரஹத்தையும் நித்யவிபூதியோகத்தையும் தமக்குக் காட்டித்தந்தருளினபடியை அருளிச்செய்கிறார். (1) ஐந்தும் = "வஜ்ரஶக்தியொக்ஷவஸ்வாஸ ஹாஜஹுஹுஸ். வாஸாஹிஸ்ருக்ஹிஷ்ணுக்ருவிஸ்ருஹஸ்வாஸஹாகநஸ்." பஞ்சசக்திகளாவன-"வாஸஹெஷ் வாஸாநுவிஸ்வாநிவ்ய தஸ்வஸ்வஹவ" என்று சொல்லப்படுகிறவையாய் நித்யவிபூதியிலுள்ளவை யான பஞ்சபூதங்கள். வாஸுதேவனுடைய திவ்யமங்களவிக்ரஹம் பஞ்ச சக்திமயமென்று வேதாந்தநூற்கொள்கை. ஐந்தும், ஐந்தும், ஐந்தும் = அப்ராக்ருதங்களான ஜ்ஞாநேந்திரியங்க ளைந்தும், கருமேந்திரியங்களைந்தும், சப்தாதி போக்யங்களைந்தும். ஐந்தும் = ஹொஹவாநங்க ளென்ற வகுப்பு (1), ஹொஹொவகுணங்களென்ற வகுப்பு (2), "வைகுந்தத்தமரரும் முனிவ ரும்" என்ற இரண்டு வகுப்புகள் (4), முக்தர் என்றவகுப்பு (5)—ஆக ஐந்து கோடிகள். அந்தரம் = ஆகாசம்; பரமாகாசமெனப்படுகிற பரமபதம். (நே)

755 மூன்றுமுப்பதாறினோடு ஒரைந்துமைந்துமைந்துமாய் *
மூன்றுமூர்த்தியாகிமூன்று மூன்றுமூன்றுமூன்றுமாய் *
தோன்றுசோதிமூன்றுமாயத் துளக்கமில்விளக்கமாய் *
என்றெனுவியுள்புகுந்தது என்கொலோவெம்மீசனே. (நை)

மூன்று முப்பது	முப்பத்து மூன்று ஹல்லெழுத்துகட்கும்	ஆய்	நிர்வாஹகளாய்
		மூன்று மூர்த்தி ஆகி	ருக்கு, யஜுஸ், ஸாமம் என்கிற வேதத்ரய ஸ்வரூபியாய்
ஆறினோடு ஒரு ஐந்தும் ஐந்தும்	பதினாறு அச்செழுத்துகட்கும்	மூன்று மூன்று	
ஐந்தும்	ளகாராதி பஞ்சாக்ஷரங்கட்கும்	மூன்று மூன்றும் ஆய்	த்வாதசாக்ஷரீ ப்ரதி பாத்யனாய்

மூன்று தோன்று சோதி ஆய்	மூன்று அக்ஷரமாகிய ப்ரணவத்திலே விளங்கும் ஜ்யோதிர்மயனாய்	ஏன்று	(என் காரியங்களே யெல்லாம் நீயே உன் தலைச்சுமையாக) ஏறிட்டுக்கொண்டு
துளக்கம் இல் விளக்கம் ஆய்	என்று மழிவற்ற விளக்காகிய அகாரத்துக்கு வாச்யனாய்	என் ஆவியுள்	என்னுடைய ஹ்ருதயத்தினுள்ளே
எம் ஈசனே!	எமக்கு நிருபாதிக சேஷியாயிருப்பவனே!	புகுந்தது என் கொல்?	புகுந்திருப்பது என்ன நீர்மை!

* * * வேதங்களையும் மந்த்ர ரஹஸ்யங்களையும் தேவரீர் உண்டாக்கி வைத்திருக்கச் செய்தேயும் அடியேன் அவ்வழியாலே அறிந்து உபாஸியாதே யிருக்க தேவரீரே அடியேனுடைய ஹ்ருதயத்தினுள்ளே புகுந்தெழுந்தருளியிருக்கிறவிது என்ன நீர்மை! என்று ஈடுபட்டுப் பேசும் பாசுரம், இது. மூன்று மூர்த்தியாகி=ருக்கு, ஸாமம், யஜுஸ் என்று மூன்று உருக்கொண்ட வேதங்களுக்கு ப்ரதிபாத்யன் (அல்லது) ப்ரவர்த்தகன் என்றபடி. மூன்று மூன்று மூன்று மூன்றுமாய்=நாலுமூன்றுகள் கூடிப் பன்னிரண்டாய், "ஓம் நமோ பகவதே வாஸுதேவாய" என்கிற த்வாதசாக்ஷரியாலே ப்ரதிபாத்யன் என்றதாகிறது.

தோன்று சோதி மூன்றுமாய்='மூன்று தோன்று சோதியாய்' என்று மொழிமாற்றி இயைக்கவேணும். மூன்றிலே தோன்றுகிற சோதியாய் என்றபடி. மூன்று என்கிறது—மூன்று திருவக்ஷரமான ப்ரணவத்தை. இது ஸம்ஹிதாகாரத்தாலே ஏகாக்ஷரமாயிருந்தாலும் உட்பிரிவிலே அ, உ, ம் என மூன்றுதிருவக்ஷரமாய் மூன்று அர்த்தங்களைப் பிரதிபாதிக்கவற்றாயிருக்குமிறே. இப்படிப்பட்ட ஓங்காரத்திலே திகழ்கின்ற ஜ்யோதிர்மயன் எம்பெருமானிறே. "ஓங்காரோ பகவாந் விஷ்ணுः" என்றதும் காண்க. துளக்கமில் விளக்கமாய்=அந்த ப்ரணவத்திலே ப்ரதமாக்ஷரமான அகாரத்தைத் "துளக்கமில்விளக்" கென்கிறது. ஸகல வேதங்கட்குங் காரணமான ப்ரணவத்துக்குங் காரணமாய், தனக்கொரு காரணமற்றிறே அகாரமிருப்பது. ஆகையால் துளக்கமற்ற விளக்குப்போன்றதாய்த்து. ஆக இவ்வழிய லே நான் அறிந்து உபாஸிப்பதற்கு நீ விஷயமாக வேண்டியிருக்க, அங்ஙனாகாதே நீயே எனது அஜ்ஞாந அசக்திகளைக் கண்டறிந்து இப்படிப்பட்ட உன் ஸ்வரூபத்தை எனக்கு ஸாக்ஷாத்கரிப்பித்து என்னை இடைவிடாது அடிமைகொண்டனையே! என்கிற உருக்கம் ஈற்றடியில் தோற்றும். (சு)

756 நின்றியங்குமொன்றலா வுருக்கடோறுமாவியாய் *
ஒன்றியுள்கலந்துநின்ற நின்னதன்மையின்னதென்று *
என்றும்யார்க்குமெண்ணிறந்த ஆதியாய்நின்னுந்திவாய் *
அன்றுநான்முகற்பயந்த ஆதிதேவனல்லையே. (ஙு)

நின்று	ஸ்தாவரமாயும்
இயங்கும்	ஜங்கமமாயுமிருக்கிற
ஒன்று அலா உருக்கள் தோறும்	பலவகையான சரீரங்கள் தோறும்
ஆவி ஆய்	ஆத்மாவாய்
ஒன்றி	பொருந்தி
உள் கலந்து நின்ற—பரிணமாப்ய வர்த்தியாகின்ற	
நின்ன	உன்னுடைய
தன்மை	ஸ்வபாவம்
இன்னது என்று	இத்தகையதென்று
என்றும்	எக்காலத்திலும்
யார்க்கும்	எப்படிப்பட்ட ஞானிகட்கும்
எண் இறந்த	சிந்திக்க முடியாதிருக்கிற
ஆதியாய்	ஆதிகாரணபூதனான எம்பெருமானே! (நீ)
அன்று	முற்காலத்திலே
நின் உந்திவாய்	உனது திருநாபியில்
நான் முகன்	சதுர்முகப்ரஹ்மாவை
பயந்த	படைத்த
ஆதிதேவன் அல்லையே	முழு முதற் கடவுளல்லையோ?.

* * * எம்பெருமான் ஆழ்வாரை நோக்கி "ஆழ்வீர்! நம்மை உள்ளபடி அறிவிக்க வற்ருன வேதங்களும் மந்த்ரரஹஸ்யங்களும் பலபல உண்டாயிருக்க 'யாவர்காணவல்லரே' என்பானேன்?" என்ன; அந்தர்யாமித்வத்தாலும் ஜகதேக காரணத்வத்தாலும் ஸகலாதாரனு யிருக்கிற ஸ்வபாவத்தை ஸ்தூலத்ருஷ்டியாலே ஸமுதாயரூபேண அறியில் அறியலாமத்தனை யொழிய, தேவரீர் காட்ட நான் அலகலகாகக் கண்டாற்போலே ஒருவர்க்குங் காணமுடியா தென்கிறார்-இதில். நின்று என்று - நிலைபேராதே நிற்கும் மலைமுதலிய ஸ்தாவர பதார்த்தங் களைச் சொல்லுகிறது; இயங்கும் என்று-அசையக்கூடிய பசுபக்ஷ்யாதி ஜங்கம பதார்த்தங் களைச் சொல்லுகிறது. ஒன்று அலா = ஒன்று அல்லாத என்ருய், பலபலவென்றபடி. நின் உந்திவாய் இத்யாதி. தேவாதி ஸகலபதார்த்தங்களும் அழிந்து கிடந்த அக்காலத்தில் உன்னு டைய திருநாபிக்கமலத்திலே பிரமனைப்படைத்த ஜகதேககாரணனல்லையோ நீ உந்திவாய் = வாய்-எழுருபு. நான் முகன் + பயந்த, நான்முகற்பயந்த. (நி)

757 நாகமேந்துமேருவெற்பை நாகமேந்துமண்ணினை *
நாகமேந்துமாக மாகமாகமேந்துவார்புனல் *
மாகமேந்துமங்குல்தீயோர் வாயுவைந்தமைந்துகாத்து *
ஏகமேந்திநின்றநீர்மை நின்கணேயியன்றதே. (கூ)

நாகம் ஏந்தும் ஆக!	திருவனந்தாழ்வானலே தரிக்கப்பட்ட திருமேனியையுடைய எம்பெருமானே!
நாகம்	ஸ்வர்க்கலோகத்தை
ஏந்து	தரிக்கிற
மேரு வெற்பை	மேரு பர்வதத்தையும்
நாகம்	திருவனந்தாழ்வான் (அல்லது) திக்கஜங்களாலே
ஏந்து	தரிக்கப்பட்ட
மண்ணினை	பூமியையும்,
மா கம்	பரம பதத்தையும்,
மாகம் ஏந்து வார்புனல்	ஆகாசத்தாலே தரிக்கப்பட்ட சிறந்தகங்கையையும்
மா கம் ஏந்து மங்குல்	ஆகாசத்தாலே தரிக்கப்பட்ட மேக மண்டலத்தையும்
ஓர் தீ	வைச்வாநராக்நியையும்
ஐந்து வாயு	பஞ்சவ்ருத்தி ப்ராணன்களையும்
அமைந்து காத்து	பொருந்தி ரக்ஷித்தருளி
ஏகம் ஏந்தி நின்ற நீர்மை	(எல்லாவற்றையும்) ஒரு வஸ்து வே தரித்துக்கொண்டு நிற்கிற தென்று (உபநிஷத்துக்களில்) சொல்லப்பட்டுள்ள ஸ்வபாவம்
நின்கணே	உன்னிடத்தில் தான்
இயன்றது	இருக்கின்றது.

* * * ஸகலவஸ்துக்களுக்கும் எம்பெருமான் அந்தர்யாமியாயிருந்து கொண்டு அனைத்துக்கும் ஆதாரமாகிறுன் என்னுமர்த்தம் கீழ்ப்பாட்டிற் சொல்லப்பட்டது; உலகத்தில் ஒன்றுக்கொன்று தாரகங்களாகத் தோற்றும் பதார்த்தங்கட்கும் இவ்வெம்பெருமானே தாரகன் என்கிறது இப்பாட்டு. இரண்டாமடியிலுள்ள "நாகமேந்துமாக!" என்பது ஸம் போதநம். அரவணைமேற் பள்ளிகொண்ட பெருமானே! என்று விளித்தபடி. மேருபர்வதம் ஸ்வர்க்கத்தை எங்ஙனே தரிக்கிறதென்றால், தன் சிகரத்திலுள்ள தேஜஸ்ஸின் வழியாலே என் பர். முதலடியின் முதலிலுள்ள நாகம்—நாகः" என்ற வடசொல்விகாரம். "ஸ்வர்-ஸவிதா வை லோகோ நாகः" என்பது ச்ருதி. அதற்குமேல் நாகம்—நாமः என்ற வடசொல் விகாரம். அந்த பதத்திற்கு ஸர்ப்பமென்றும் யானையென்றும் இரண்டு பொருள்களுண்டு. இரண்டு பொருளும் இங்கு ஏற்கும். பூமியானது ஆதிசேஷனாலும் திக்கஜங்களாலும் தாங்கப்படுதலால். இரண்டாமடியிலுள்ள நாகமும்-நாமः என்ற வடசொல் விகாரம் ("நாகமேந்துமாகன்" என் பதன் அண்மைவிளி.) இரண்டாமடியில், மாகம் இரண்டும் ஊஹாவம் என்ற வடசொல் விகாரம். முதல் மாகம்-பரமாகாசவாசகம். இரண்டாவது மாகம்-ப்ரஸித்தாகாசவாசகம். மூன்றுமடியிலுள்ள மாகமும்-ஊஹாவம் என்ற வடசொல் விகாரமே.

ஏகமேந்தி நின்ற நீர்மை=“ஸ ஏவாத்ர வ்ருʼயிவீம் ஏஷ ஏதத்ஸாம” “ஸனகஸனந்த ஸுஜஂ ஸிஹ்கிஷ்ஷ விஷ்ணும்” என்றிவைமுதலான வேதாந்த வாக்கியங்களில் ஓதப்பட்டுள்ள அர்த்தம் உன்பக்கலில்தான் பொருந்தியிரா நின்ற தென்றபடி. ஏகம்-ஸகம். நின் கண்=கண்—எழுனுருபு. (கூ)

758 ஒன்றிரண்டுமூர்த்தியாய் உறக்கமோடுணர்ச்சியாய் *
ஒன்றிரண்டுகோலமாகி வேலைஞாலமாயினாய் *
ஒன்றிரண்டுதீயுமாகி ஆயனாயமாயனே *
ஒன்றிரண்டுகண்ணினானும் உன்னையேத்தவல்லனே. (எ)

ஒன்று இரண்டு மூர்த்தி ஆய்	ப்ரதாநமான ஒரு மூர்த்தியும் அப்ரதாநமான இரண்டு மூர்த்தியுமாய்	ஒன்று இரண்டு தீயும் ஆகி	மூன்று அக்நிகளுக்கும் நிர்வாஹகனாய்
உறக்கமோடு உணர்ச்சி ஆய்	அஜ்ஞாநத்துக்கும் ஸத்ஜ்ஞாநத்துக்கும் நியாமகனாய்	ஆயன் ஆய மாயனே!	கோபாலஸ்ரேஷ்டனாய் அவதரித்த ஆச்சர்யபூதனான எம்பெருமானே!
ஒன்று இரண்டு காலம் ஆகி	மூன்று காலங்களுக்கும் நிர்வாஹகனாய்	ஒன்று இரண்டு கண்ணினானும்	முக்கண்ணனான சிவபிரானும்
வேலை ஞாலம் ஆயினாய்	கடல்சூழ்ந்த பூமண்டலத்துக்கு ப்ரவர்த்தகனாய்	உன்னை ஏத்த வல்லனே	உன்னை துதிக்க வல்லவனே!

* * * ப்ரஹ்மருத்ராதிகளைச் சரீரமாகக்கொண்டு அவர்களுக்கு நியாமகனாய் என்கிறது முதலடியில். “முனியே நான்முகனே முக்கண்ணப்பா” இத்யாதிகளிற்போல இங்கும் ஸாமாநாதிகரண்யம் சரீர சரீரி பாவத்தைப் பற்றியதாம். உறக்கமோடு உணர்ச்சியாய்=இலக்கணையால் அஜ்ஞாநத்தை உறக்கமென்கிறது. ஞாநமற்றவனுக்கு உறக்கம் தவிர வேறு தொழிலில்லாமை அறியத்தக்கது. அஜ்ஞாநம், அந்யதாஜ்ஞாநம், விபரீதஜ்ஞாநம், ஸம்சயம், மறப்பு இவையெல்லாம் உறக்கமேயாம். உறக்கத்துக்கும் உணர்ச்சிக்கும் எம்பெருமான் நிர்வாஹகனாகையாவ தென்னென்னில்; தன் ஸ்வரூப யாதாத்மியத்தைச் சிலர்க்கு உள்ளபடி ஸாக்ஷாத்கரிக்கச்செய்பவனும் தானே; த்ரிமூர்த்திலாம்ய வ்யாமோஹாதிகளாலே சிலரை மயக்குபவனும் தானே என்கை. ஒன்றிரண்டு காலமாகி=இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்று மூன்று காலங்களுக்கும் நிர்வாஹகன் என்பது ஸாமாந்யமான அர்த்தம். ஸத்வகுணம் மிகும்படியான ஸாத்விககாலத்துக்கும், ரஜோகுணம் மிகும்படியான ராஜஸகாலத்துக்கும், தமோகுணம் மிகும்படியான தாமஸகாலத்துக்கும் கடவன் என்கை விசேஷார்த்தம்.

ஒன்றிரண்டு தீ=ஆஹவநீயம், கார்ஹபத்யம், தக்ஷிணாக்நி என்பவை. ஏத்தவல்லனே என்றது-ஏத்தவல்லவனல்லன் என்றபடி. (ஏ)

759 ஆதியானவானவர்க்கும் அண்டமாயவப்புறத்து *
ஆதியானவானவர்க்கும் ஆதியானவாதிநீ *
ஆதியானவானவானர் அந்தகாலநீயுரைத்தி *
ஆதியானகாலநின்னை யாவர்காண்வல்லரே. (ஐ)

ஆதி ஆன கால	ஆதிகாலத்துக்கு நிர்வாஹகனவனே!,	அண்டம் ஆய அப்புறத்து ஆதி ஆன வானவர்க்கும்	அண்டமென்று பெயர் பெற்ற அப்பரமபதத்திலுள்ள ப்ரதாநர்களான நித்யஸூரிகளுக்கும்
ஆதி ஆன	ஜகத்ஸ்ருஷ்டி முதலியவற்றுக்குக் கர்த்தாக்களான		
வானவர்க்கும்	(ப்ரமன் முதலிய) தேவதைகட்கும்	ஆதி ஆன ஆதி	நிர்வாஹகனான அதிபதி

நீ	நீயாகிருய் ;	நீ உரைத்தி	நீ அருளிச்செய்யா நின்றுய்,
ஆதி ஆன	ஜகத்துக்குக் கடவர்களாக ஏற்பட்டிருக்கிற	ஆதி காலம் ஆன நின்னே	ஆதிகாலத்துக்கு நிர்வாஹகனான உன்னே
வானம் வாணர்	(பிரமன் முதலிய) மேலுலகத்தவர்களினுடைய	யாவர் காண வல்லர்	பரிச்சேதிக்க வல்லார் யார் ?
அந்த காலம்	முடிவு காலத்தை.		

* * *—உபயவிபூதியினுமுள்ள சகல பதார்த்தங்களினுடையவும் ஸ்தாதிகள் தானிட்டவழக்காகப்பெற்ற உன்னே ருத்ரன் ஒருவனேயோ பரிச்சேதிக்கமாட்டான் ? உபயவிபூதியிலும் பரிச்சேதிக்க வல்லார் இல்லே யென்கிறார்.

ப்ரஹ்மா, தக்ஷப்ரஜாபதிகள், ஸப்தரிஷிகள், ஆதித்யர்கள் ஆகிற இவர்கள் ஸ்ருஷ்டிகர்த்தாக்கள்; இந்திரன், சதுர்த்தச மநுக்கள் ஆகிற இவர்கள் ஸ்திதிகர்த்தாக்கள்; ருத்ரன், அக்நி, யமன் முதலானவிவர்கள் ஸம்ஹாரகர்த்தாக்கள், ஆகிய இவர்களைச் சொல்லுகிறது-முதலடியில் "ஆதியானவானவர்" என்று. 'அண்டமாயவப்புறத்தாதியானவானவர்'-நித்யஸூரிகள். "அண்டமாள்வதாணே" "அண்டம்போ யாட்சி அவர்க்கதறிந்தோமே" இத்யாதிகளில் அண்டசப்தம் பரமபதவாசகமாக வருதல் காண்க. இவ்விடத்துப் பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியானத்தில் "அண்டசப்தவாச்யமான லீலாவிபூதிக்கு அப்புறத்தில் பரமபதத்தில் வர்த்திக்கிற" என்றிருப்பது அச்சுப்பிழை ; "லீலாவிபூதிக்கு அப்புறத்தில் அண்டசப்தவாச்யமான பரமபதத்தில் வர்த்திக்கிற" என்பது சுத்தபாடம்.

ஜகத்துக்கு நிர்வாஹகமான காலதத்துவமும் அவ்வெம்பெருமானிட்ட வழக்கென்கிறது – மூன்றுமடி. எம்பெருமான் ப்ரவர்த்திப்பித்த சாஸ்த்ரங்களிலே "ஸுஹஸ்ர-ஸுவயஸ ஸுஹயஸ்ரஸ்ரஹஸ்ரஸ்ரஸ்ர

761 தன்னுளேதிரைத்தெழும் தரங்கவெண்தடங்கடல் *
தன்னுளேதிரைத்தெழுந்து அடங்குகின்றதன்மைபோல் *
நின்னுளேபிறந்திறந்து நிற்பவும் திரிபவும் *
நின்னுளேயடங்குகின்ற நீர்மைநின்கணின்றதே. (ய)

தன்னுள்ளே திரைத்து	தன்னிலே இளர்ந்து
எழும்	பரவுகின்ற
தரங்கம்	அலைகளையுடைத்தாய்
வெண் தடம்	வெளுத்த ப்ரதேசங்களை யுடைத்தான
கடல்	கடலானது
தன்னுள்ளே திரைத்து எழுந்து	தனக்குள்ளே இளர்த்துலாவி
அடங்குகின்ற தன்மைபோல்	(மறுபடியும்) சாந்தமாவது போல,
நிற்பவும் திரிபவும்	ஸ்தாவரஜங்கமரூபமான ப்ரபஞ்சமெல்லாம்
நின்னுளே	உன் ஸ்வரூபத்துக்குள்ளே
பிறந்து	உத்பந்நமாய்
இறந்து	லயமடைந்து
நின்னுளே அடங்குகின்ற நீர்மை	(இப்படி) உன் ஸ்வரூபத்துக்குள்ளேயே ஒடுங்கிப்போருகைக்கு உரிய தன்மை
நின் கண்ணே நின்றது	உன்பக்கலில் தான் உள்ளது.

* * *—அதர்வசிகையிலே "காரணம்தமீச்வரம்" என்று ஓதப்பட்டிருக்கிறது. 'ஜகத்துக்கு எது உபாதாநகாரணமோ அதுதான் உபாஸ்யம்' என்பது அந்த சுருதிவாக்யத்தின் பொருள், அப்படி உபாதாந காரணத்வ ப்ரயுக்தமான ஆச்ரயணீயத்வமும் எம்பெருமானிடத்தே யுள்ளது என்கிறது-இப்பாட்டு.

அலையெறிவு ஓய்ந்துகிடந்த கடலானது வாயுஸஞ்சாரத்தாலே எங்கும் அலையெறியப் பெற்று, மீண்டும் காற்று ஓய்ந்தவாறே அவ்வலையெறிவு அடங்கி, கடலானது சாந்தமாவது போல-என்பது முன்னடிகளின் கருத்து. பின்னடிகளிற் கூறப்படும் அம்சத்திற்கு இது த்ருஷ்டாந்தம். தார்ஷ்டாந்திகத்தில் வாயுவின் ஸ்தானத்திலே பகவத் ஸங்கல்பத்தைக் கொள்க. ஸங்கல்பமில்லாதபோது பகவத்ஸ்வரூபம் சாந்தமாயிருக்கும். "ஏஹ்யேஹ்யாஸ்வாஜாயேய" என்றாற்போன்ற ஸங்கல்பம் உண்டானவாறே ஸ்தாவர ஜங்கமாத்மகமான ப்ரபஞ்சங்கள் தோன்றுதலும் பின்பு அழிதலுமான அவஸ்தைகளையடைந்து கடைசியாக 'தஸ்யவைதஸ்யவை கேவலம்' என்றபடி எம்பெருமானளவிலே உயரூப்ஸ்ருதங்களாய்ப் போகிறபடியைசொல்லுகிறது. நிற்பவும் திரிபவும்=நிற்பனவும் திரிபனவு மென்றபடி. (ய)

762 சொல்லினுற்றொடர்ச்சிநீ சொலப்படும்பொருளும்நீ *
சொல்லினுற்சொலப்படாது தோன்றுகின்றசோதிநீ *
சொல்லினுற்படைக்க நீபடைக்கவந்துதோன்றினுர் *
சொல்லினுற்சுருங்க நின்குணங்கள்சொல்லவல்லரே. (கக)

சொல்லினால்	வேதாந்த சாஸ்த்ர முகத்தாலே
தொடர்ச்சி நீ	(ஏகாந்திகளுக்கு) உறவை உண்டு பண்ணுமவன் நீ;
சொலப்படும் பொருளும் நீ	(சில புராணாதிகளில் ஆச்ரயணீயராகச்) சொல்லப்படுகிற தேவாதி பதார்த்தங்களுக்கும் அந்தராத்மா நீ;
சொல்லினால் சொலப்படாது தோன்றுகின்ற சோதி நீ	வேதத்தால் பரிச்சேதிக்கப்படாதென்று தோன்றுகிற தேஜஸ் சப்தவாச்யன் நீ;
சொல்லினால்	நீ காட்டிக்கொடுத்த வேதத்திற் சொல்லியபடி
படைக்க	(உலகங்களை) உண்டாக்குவதற்காக
நீ படைக்க வந்து தோன்றினர்	உன்னாலே ஸ்ருஷ்டிக்கப்பட்டு வந்து பிறந்தவர்களான ப்ரஹ்மாதிகள்
சொல்லினால்	சப்தங்களைக் கொண்டு
சுருங்க	சுருக்கமாகவாவது
நின் குணங்கள்	உனது கல்யாண குணங்களை
சொல்ல வல்லரே	வர்ணிக்க சக்தர்களோ ? (அல்லர்.)

* * * ப்ரஹ்மருத்ராதிகள் ஆச்ரயணீயரல்லர்களென்றும் எம்பெருமானொருவனே ஆச்ரயணீயனென்றும் சொல்லிவிடலாமோ? வேதங்களில் "வகவனவரஹெரா நஹிதீயாய தஸ்மை" "நவைநூஆவஹீவனவகெவஶ:" இத்யாதிகளான சில வாக்கியங்கள் சிவபாரம்யத்தையும், "ஹிரண்யகர்ப்பஸமவர்ததாக்ரே பூதஸ்யஜாத: பதிரேகஆஸீத்" இத்யாதிகளான சில வாக்யங்கள் ப்ரஜாபதி பாரம்யத்தையும் சொல்லிக்கிடக்கின்றனவே; அவர்கள் ஆச்ரயணீயராகத் தடையென்ன? என்று சிலர்க்கு சங்கையுண்டாக' அந்த ப்ராஜாபதி பசுபதிகள் எம்பெருமானுக்குப் புத்ரபௌத்ரர்களாக வேதங்கள் முறையிடா நிற்பதுந்தவிர, அவர்கள் எம்பெருமானுடைய திருக்கல்யாண குணங்களை விரிவாகப் பேசமாட்டாமையன்றிக்கே சுருக்கமாகவும் பேசமுடியாதவர்களென்று ப்ரமாண ப்ரஸித்தமாயிருக்க, இப்படி ஸ்ருஜ்யர்களாயும் அஜ்ஞர்களாயுமுள்ள அவர்கள் ஆச்ரயணீயராகைக்கு ப்ரஸக்தியேயில்லை யென்றாயிற்று. (கக)

763 உலகுதன்னைநீபடைத்தி உள்ளோடுக்கிவைத்தி * மீண்
டுலகுதன்னுளேபிறத்தி ஓரிடத்தையல்லையால் *
உலகுநின்னெடொன்றிநிற்க வேறுநிற்றியாதலால் *
உலகில்நின்னையுள்ளசூழல் யாவருள்ளவல்லரே. (கஉ)

உலகு தன்னை	லோகங்களை	உலகு	ப்ரபஞ்சம் முழுதும்
நீ படைத்தி	நீ ஸ்ருஷ்டியாகின்றாய்;	நின்னெடு ஒன்றி நிற்க	(சரீரியான) உன்னோடு (சரீரமாய்) அணைந்து நிற்க
உள் ஒடுக்கி வைத்தி	(நித்யநைமித்திகாதி ப்ரளயாபத்துக்களிலே அவ்வுலகங்களை) திருவயிற்றினுள்ளே ஒடுங்கவைத்து நீயே நோக்கா நின்றாய்.	வேறு நிற்றி	அஸாதாரண விக்ரஹத்தோடு கூடி வ்யாவ்ருத்தனாயிரா நின்றாய்;
மீண்டு	அதுவுமன்றியில்		ஆதலால்:
உலகு தன்னுளே	இவ்வுலகத்தினுள்ளே	உலகில்	லோகத்திலே
பிறத்தி	வந்து அவதரியா நின்றாய்;	சூழல் உள்ள நின்னை	ஆச்சரியமான படிகளையுடைய உன்னை
ஓர் இடத்தை அல்லை	ஓரிடத்தை இருப்பிடமாகவுடையை என்று நிர்ணயிக்க முடியாதவனாயிரா நின்றாய்;	யாவர் உள்ள வல்லர்	அறியவல்லாரார்?

* * * ஜகத்காரணபூதனாய்நின்று நோக்குமளவே யன்றிக்கே அஸாதாரண விக்ரஹத்தோடுங் கூடிவந்தவதரித்து நோக்குகின்ற உன்படிகளை அறியவல்லார் ஆருமில்லை யென்கிறார்.

நான்காமடியை, "சூழல் உள்ள நின்னை உலகில்யாவருள்ளவல்லர்" என மாற்றி அன்வயித்துக்கொள்க. ஆச்சர்யமான படிகளையுடைய உன்னை லௌகிக புருஷர்களில் அறியவல்லார் ஆருமில்லை யென்கை. இனி, நின்னை என்பதற்கு 'உன்னிடத்திலே' என்று பொருள்கொண்டு உன்னிடத்திலே உள்ள சூழலை ஆர் அறியவல்லார்? என்னவுமாம். படைத்தி, வைத்தி, பிறத்தி, நிற்றி = இவை முன்னிலை யொருமை வினை முற்றுக்கள். (கஉ)

764 இன்னையென்றுசொல்லலாவது இல்லையாதுமிட்டிடை *
பின்னைகேள்வனென்பர் உன்பிணக்குணர்ந்தபெற்றியோர் *
பின்னையாயகோலமோடு பேருமூருமாதியும் *
நின்னையார் நினைக்கவல்லர் நீர்மையால்நினைக்கிலே. (கங)

இன்னை என்று சொல்லலாவது	'நீ இப்படிப்பட்டவன்' என்று சொல்லக்கூடியது	இட்டிடை	நுண்ணிய இடையையுடையளான நப்பின்னைப்பிராட்டிக்கு
யாதும் இல்லை	ஒரு படியுமில்லை;	பின்னை கேள்வன் என்பர்	வல்லபனைக் கூறுவர்கள்;
உன் பிணக்கு உணர்ந்த பெற்றியோர்	உன்னுடைய அவதாராதி விஷயங்களில் ஆச்ரிதர்க்கும் அநாச்ரிதர்க்கு முள்ள விவாதத்தை அறிந்திருக்கும் மஹான்கள் (உன்னை)	நின்னை	உன்னுடைய
		பின்னை ஆய கோல மோடு	ஸர்வவிலக்ஷணமான திவ்யமங்கள விக்ரஹத்தையும்
		பேரும்	திருநாமங்களையும்
		ஊரும்	திவ்யஸ்தானங்களையும்

ஆதியும்	(விக்ரஹபரிக்ரஹம் பண்ணின தற்குக்) காரணத்தையும்	ஆர் நீனைக்க வல்லர்	(மற்றைப்படி) அறிய வல்லாரார் ?
நீர்மையால் நினைக்கில் (அல்லது)	உன்னுடைய கிருபையினுலே நீ அறிவிக்க அறியுமதொழிய		

* * *—எம்பெருமானுடைய வைலக்ஷண்யத்தையும் அவதாரரஹஸ்யங்களையும் அவன் தானே காட்டிக்கொடுக்கில் காணுமதொழிய ஸ்வப்ரயத்நத்தாலே ஆர்க்கும் காணமுடியா தென்கிறார். "ஆகியஞ்சோதியுருவை அங்குவைத்திங்குப்பிறந்த" என்றபடி தன்படிகளில் ஒன்றும் குறையாமே எல்லாவற்றோடுங் கூடிவந்து திருவவதரித்து நிற்கிறநிலையிலே உன்படி களில் ஏதாவதொருபடியையும் பரிச்சேதித்து அறியமுடியாதென்பது முதலடியின் கருத்து. உன்னுலே * மயர்வற மதிநல மருளப் பெற்று உன் விஷயங்களை யெல்லாம் நன்கறிந்துள்ள மஹான்கள் "மிதுநமே ஆச்சரணீயம்" [அதாவது பெருமாளும் பிராட்டியுமாக இருவருமான சேர்த்தியிலே அடிமைசெய்கை முறை] என்று சொல்லுவார்கள்—என்பது இரண்டாமடியின் கருத்து. பிணக்காவது - "பேருமோருருவமும் உளதில்லை" என்று அநாச்சரிதர்கள் கூறுவதும், "பேருமோராயிரம் பிறபலவுடைய வெம்பெருமான்" என்று ஆச்சரிதர் கூறுவதுமான இப்படிப் பட்ட விவாதம்: இதனை யறிந்தவர்களென்றுல், அநாச்சரிதர்கள் கூறுவது அஸம்பத்தமென்றும் ஆச்சரிதர்கள் கூறுவதே பொருத்தமுடைத்தென்றும் சோதித்தறிந்தவர்களென்கை.

"பின்னையாயகோலம்" என்றது-இதர வ்யாவ்ருத்தமான விக்ரஹமென்றபடி. அன்றி, மானிடசாதிக்கும் பிற்பட்டதான [ஹேயமான] திர்யக்காதி ஜாதியிலேயான திருமேனி யென் னவுமாம். "ஜாநகரூபே ஹெரிவ்யே" என்று கீதையிலே அறிவித்தாப்போலே நீயே அறிவிக்கில் அறியுமத்தனையொழிய மற்றைப்படியாக அறியமுடியாதென்பது ஈற்றடியின்கருத்து. இப் பாட்டின் முடிவில் நினைக்கிலே என்றவிடத்து அல்லது என்று கூட்டிக் கொள்ளவேணு மென்பர். (கஈ)

765 தூய்மையோகமாயினுய் துழாயலங்கல்மாலையாய் *
ஆமையாகியாழ்கடற்றுயின்ற ஆதிதேவ * நின்
நாமதேயமின்னதென்ன வல்லமல்லவாகிலும் *
சாமவேதகீதனுய சக்ரபாணியல்லையே. (கச)

தூய்மை யோகம் ஆயினுய்	ஸம்ஸாரிகள் அழுக்குடம்பு நீங்கி ஓப் பரிசுத்தமான அப்ராக்ருத சரீரம் பெறும்படி அருள் செய்யுமவனே !	இன்னது என்ன	இன்னின்னவை யென்று சொல்ல
		வல்லம் அல்ல ஆகிலும்	யாம் ஸமர்த்தர்களல்லோ மாயினும்
துழாய் அலங்கல் மாலையாய்	திருத்துழாய்மாலை யணிந்துள்ளவனே !	சாம வேத கீதன் ஆய	ஸாமவேதத்திலே ப்ரதிபாதிக்கப்பட்டவனுன
ஆமை! ஆகி! ஆழ்! கடல்! துயின்ற! ஆதிதேவ!	கூர்மரூபியாய் ஆழ்ந்தகடலிலே திருக்கண் வளர்ந்தருளின ஆதிதேவனே !	சக்ர பாணி அல்லையே	கையிலே திருவாழி யணிந்த பரமபுருஷன் நீயேயிறே (என்று சொல்லவல்லோம்)
நின் நாமதேயம்	உனது திருநாமங்களுக்கு வாச்யமான குணசேஷ்டிதங்கள்		

* * *—"நம் அவதாரரஹஸ்யத்தை நீர் அறிந்தபடி யென் ?" என்று எம்பெருமான் திருவுள்ளமாக, "ப்ரயோஜநாந்தரபரர்க்காக இதரஸஜாதீயராகத் திர்யக்யோநியிலே திருவவத ரித்தருளின தேவரீருடைய குணசேஷ்டிதங்களை அடியேன்பரிச்சேதித்து அறியமாட்டேனே னும் அவ்வடிவழகு வெஞ்செகவுயிமஜீம் என்றறிந்தேன்" என்கிறார்.

தூய்மை யோகமாயினுய் !=அசித்ஸம்ஸர்க்கத்தாலே அசுத்தனை ஸம்ஸாரிக்கு உன் க்ருபையாலே அந்த அசித்ஸம்ஸர்க்கத்தை யறுத்து நித்யஸூரிகளோடே சேர்த்து உன்னை அநுபவிப்பிக்கவல்ல சுத்தியோகத்தையுடையவனே! என்றபடி. [நின்நாமதேயம் இத்யாதி.]

நாமதேயமாவது-குணங்களையும் சேஷ்டிதங்களையும் சொல்லுகிற திருநாமம். ஆயினும் இச் சொல் இங்கு இலக்கணையால் திருநாமவாச்யமான குணசேஷ்டிதங்களையே சொல்லக்கடவ தாமென்பர். "நின்னமதேயமென்று-வாச்யமான குணசேஷ்டிதங்களை தத்ஸாமானாதிகரண்யமான சப்தத் தாலே லக்ஷிக்கிறது." என்ற வியாக்கியானஸ்மர்த்தி காண்க. உன்னுடைய எண்ணில் பல்குண ங்களையும் இன்புறு மிவ்வினையாட்டுகளையும் இவை யிவையென்று பகுத்துச்சொல்ல அடியேன் அஸமர்த்தனேயாகிலும் என்றவாறு.

சாமவேதகீதனுய சக்ரபாணியல்லையே=நீபரிக்ரஹித்தருளின கூர்மவிக்ரஹம் ஸாமாந்ய மானதல்லவென்றும் ஸாக்ஷாத் ஸாந்தோமஸ்வரூபமாய்க் கையுந்திருவாழியுமான அதிரமணீய ஹிரண்மயவிக்ரஹம் என்றும் அறிந்தேனென்கை. (கசு)

766 அங்கமாறும்வேதநான்கும் ஆகிநின்றவற்றுளே *
தங்குகின்றதன்மையாய் தடங்கடற்பணத்தலை *
செங்கணுகணைக்கிடந்த செல்வமல்குசீரினாய் *
சங்கவண்ணமன்னமேனி சார்ங்கபாணியல்லையே. (கடு)

அங்கம் ஆறும்	சிக்ஷை முதலிய ஆறு அங்கங்களென்ன
வேதம் நான்கும்	(அங்கியான) நான்கு வேதங்களென்ன (இவற்றுக்கு)
ஆகி நின்று	ப்ரவர்த்தகனுய் நின்று
அவற்றுளே	அந்த ஸாங்கமான வேதங்களினுள்ளே
தங்குகின்ற தன்மையாய்	ஸுப்ரதிஷ்டிதமாயுள்ள ஸ்வரூபஸ்வபாவங்களையுடையவனே !
ட கடல்	மஹா ஸமுத்ரத்திலே
பணம் தலை செம் கண் நாக அணை	படங்களின் தலையிலே சிவந்த கண்களையுடையனை திருவனந்தாழ்வானகிற அணையிலே
கிடந்த	கண்வளர்ந்தருளுகிற
மல்கு செல்வம் சீரினாய்	நிறைந்த செல்வத்தையும் குணங்களையுமுடையவனே !
சங்க வண்ணம் அன்னமேனி	சங்கினுடைய வர்ணம் போன்ற திருமேனியையுடையனுய் (இருதயுகத்தில் திருவவதரித்து)
சார்ங்கபாணி அல்லையே	(த்ரேதாயுகத்தில் இக்ஷ்வாகுகுலத்திலே) கையும் வில்லுமாய் வந்து பிறந்தவன் நீயேயன்றே ?

* * * வேதங்கட்கும் அவற்றின் அங்கங்கட்குமே விஷயமாகவல்ல ஸ்வரூப ஸ்வபாவங்களையுடைய நீ ஆச்ரிதர்களை அநுக்ரஹிக்கைக்காகத் திருப்பாற்கடலிலே திருக்கண் வளர்ந்தருளி, அதுதானும் பரதசை யென்னும்படி அங்கு நின்னும் புறப்பட்டு ஆச்ரிதர் உகந்த ரூபத்தையே உனக்கு ரூபமாகக் கொண்டு வந்தவதரித்தாய் என்கிறார்.

அங்கம் ஆறும்=சிக்ஷை, வ்யாகரணம், சந்தஸ், நிருக்தம், ஜ்யோதிஷம், கல்பம் என வேதாங்கங்கள் ஆறு. அச்சுக்கள், ஹல்லுக்கள் என்னும் அக்ஷரங்களை உச்சரிக்க வேண்டிய முறைகளும், அவை ஒன்றோடொன்று சேரவேண்டும் முறைகளும் சிக்ஷையில் சொல்லப்படும்; ப்ரக்ருதி ப்ரத்யயங்களின் பாகுபாடும், அவற்றின் அர்த்தவிவேகமும் வியாகரணத்திலும் நிருக்தியிலும் நிர்ணயிக்கப்படும்; காயத்ரீ, த்ரிஷ்டுப், ஜகதீ இத்யாதி அக்ஷரஹெஙங்கள் சந்தஸ்ஸில் கூறப்படும்; வேதோக்தகர்மங்களைக் காலமறிந்து அநுஷ்டிக்க வேண்டுகையாலே அக்காலங்களை யறிவிக்கும் ஜ்யோதிஷம்: ஆச்வலாயநர், ஆபஸ்தம்பர் முதலிய மஹர்ஷிகளால் செய்யப்பட்ட கல்பங்களில் வைதிககருமங்களை அநுஷ்டிக்கவேண்டிய முறைமைகள் விளக்கப்படும். இப்படிப்பட்ட ஆறு அங்கங்களோடு கூடிய வேதங்கள் நான்கு. ருக், யஜுஸ், ஸாமம், அதர்வணம் என்பன. ஆக இந்த ஸாங்கவேதங்களாலும் எம்பெருமானுடைய ஸ்வரூபஸ்வபாவங்களே ப்ரதிபாதிக்கப்படுகின்றமை ஒன்றரையடிகளாற் கூறப்பட்டதாயிற்று. ()

767 தலைக்கணத்துகட்குழம்பு சாதிசோதிதோற்றமாய் *
நிலைக்குணங்கள்காணவந்து நிற்றியேலும்நீடிரும் *

கலைக்கணங்கள்சொற்பொருள் கருத்தினுல் நினைக்கொணு *
மலைக்கணங்கள்போலுணர்த்தும் மாட்சிநின்றன்மாட்சியே (கசு)

தலைக் கணம் } முதன்மைபெற்ற தேவகண மென்ன
துகள் } கூடாத்ரமான ஸ்தாவரகண மென்ன
குழம்பு சாதி } மிச்ரயோனிகளான மநுஷ்ய திர்யக்ஜாதிகளென்ன இவற்றி [லே
சோதி } அப்ராக்ருதமான தேஜஸ்ஸோ டேகூட
தோற்றம் ஆய் திருவவதரித்து
நிலைக்கணங்கள் காண } (தேவாதிகள் மாத்திரமே யன்றி யே) ஸ்தாவரங்களும் (உன்னை) அனுபவிக்கும்படி
வந்து நிற்றி ஏலும் } வந்து நிற்கிறுயாகிலும்
நீடு இரும் கலை கணங்கள் } நித்தியமாய் விரிந்தவையான வேதாதிசாஸ்த்ர ஸமூஹங்கள்
சொல் பொருளினுல் கருத்தினுல் } அபிதாநவ்ருத்தியாலும் தாத்பர்ய வ்ருத்தியாலும்
கிலைக்க ஒணு } (உன்பெருமைகளை) நினைக்க வும் மாட்டாமல்
மலை கணங்கள் போல் உணர்த் தும் மாட்சி } பர்வத ஸமூஹங்கள்போல் அபரிச்சேத்யமாக அறிவிக்கும் வைலக்ஷண்யமானது,
நின் தன் மாட்சி யே } உன்னுடைய வைலக்ஷண்ய மென்னுமித்தனை.

* * * திருப்பாற்கடலில் நின்றும் தேவமநுஷ்யாதி யோநிகளிலே அவதரித்து ரக்ஷிப் பது மாத்திரமேயன்றி ஸ்தாவரபர்யந்தமான நால்வகை ஸ்ருஷ்டிகளிலும் அவதரித்து நீ உன்னை ஸர்வாநுபவயோக்யமாக ஆக்கிலுலும் சாஸ்த்ரங்களானவை பரிச்சேதித்து அறிய மாட்டாதபடியன்றே உன்னுடைய அவதார வைலக்ஷண்ய மிருப்பது என்கிறார். மநுஷ் யாதிகளுக்கு மேற்பட்ட தேவகணத்தைத் தலைக்கண மென்கிறது. கூடாத்ரகணங்களாகிய ஸ்தாவராதிகளைத் துகள்கண மென்கிறது. மநுஷ்யகணங்களும் திர்யக்கணங்களும் குழம்பு சாதி யெனப்படும். தேவகணங்கள் புண்யயோநியாய், ஸ்தாவரங்கள் பாபயோநியாய் இருப்பதுபோலன்றியே மநுஷ்ய திர்யக்ஜாதிகளிரண்டும் புண்யபாப மிச்ரயோநிகளாகை யாலே குழம்புசாதி என்கை உசிதம்; ஆக இந்நான்கு யோநிகளிலும் "ஜாயஸ்வ மரிஷ்யஸ்வ யாவிஜாயதே" என்றபடி பிறந்தருளுமிடத்து "ஆதியஞ்சோதி யுருவை யங்குவைத்திங்குப் பிறந்த" என்றபடி அப்ராக்ருத திவ்யஸம்ஸ்தாநத்தோடே பிறந்தருளினபடியைக்கூறுவது முதலடி. ஸ்தாவரஜாதியில் எம்பெருமான் பிறந்தமை யுண்டோவென்னில் உண்டு; குப்ஜாம்ர மாய் [- அதாவது சிறியதொரு மாமரமாய்]த் திருவவதரித்த வரலாறு புராண ப்ரஸித்தம்.

இப்படி திருவவதரித்து, நிலைக்கணங்கள் காணவந்து நிற்றியேலும் = தேவாதிகள் மாத்ர மேயல்லாமல் ஸ்தாவரங்களுங்கூட உன்னை அநுபவிக்கும்படி நீ வந்து நின்றுயாகிலும். நிலைக் கணங்கள் - அசையாமல் நிலைநிற்கும் ராசிகள், ஸ்தாவர ஸமூஹங்கள். நீ இப்படி தாழ்நின் றுலும் வேதம் முதலிய சாஸ்த்ரங்களானவை உன் வைபவத்தை ஒருபடியாலும் பரிச்சேதிக்க மாட்டாமல், பர்வத ஸமூஹங்களே வர்ணிக்கப்புகுந்த வொருவன் அவற்றைப் பரிச்சேதித்து வர்ணிக்கமாட்டாதே ஒரு ஸமுதாய ரூபேண வர்ணிக்குமாபோலே வர்ணிக்குமித்தனை யல்லது வேறில்லை யென்கிறார் நீடிருங் கலைக்கணங்கள் இத்யாதியால். (கசு)

768 ஏகமூர்த்திமூன்றுமூர்த்தி காலுமூர்த்திகன்மைசேர் *
போகமூர்த்திபுண்ணியத்தின்மூர்த்தி யேண்ணில் மூர்த்தியாய் *
நாகமூர்த்திசயனமாய் கலங்கடற்கிடந்து * மேல்
ஆகமூர்த்தியாயவண்ணம் என்கொலாதிதேவனே. (கஎ)

ஆதி தேவனே ஸர்வகாரண பூதனை பெருமா [னே !
ஏக மூர்த்தி ஆய் } (பரமபதகிலயனை) பாவாஸ் தேவமூர்த்தியாய்
மூன்று மூர்த்தி ஆய் } ஸங்கர்ஷண, ப்ரத்யும்ந, அநிரு த்தர்களாகிற மூன்று மூர்த்தி யாய்

நாலு மூர்த்தி ஆய்	ப்ரதாநம், புருஷன், அவ்யக்தம், காலம் என்னுமிவற்றை சரீரமாகக்கொண்ட நாலு மூர்த்தியாய்
நன்மை சேர் போகம் மூர்த்தி ஆய்	விலக்ஷணமாய்ப் போகத்துக்கு அர்ஹமான மூர்த்தியாய்
புண்ணியத்தின் மூர்த்தி ஆய்	புண்யமே வடிவுகொண்ட தொரு மூர்த்தியாய்
எண் இல் மூர்த்தி ஆய்	(இப்படி) எண்ணிறந்த (பல பல) மூர்த்தியாய்
நலம் கடல்	நல்ல திருப்பாற்கடலில்
நாகம் மூர்த்தி சயனம் ஆய் கிடந்து	திருவனந்தாழ்வானுடைய் திருமேனியைப் படுக்கையாகவுடையனாய்க் கண்வளர்ந்தருளி
மேல்	அதுக்குமேலே
ஆக மூர்த்தி ஆய வண்ணம்	அடியார்கள் உகந்த உருவமாகிய அர்ச்சாவதாரமாய் அவதரித்த தன்மை
என் கொல்	என்னேயிருந்தது ?,

* * *—பரவாஸுதேவ மூர்த்தியா யிருந்துகொண்டு நித்யவிபூதியை நிர்வஹித்தும், வ்யூஹம் முதலாக ஸ்தாவரஜங்கமபர்யந்தமாகத் திருவவதரித்து லீலாவிபூதியை நிர்வஹித்தும் போருகிற இவை ஒரொன்றே சாஸ்த்ரங்களுக்கு அவிஷயமாயிருக்க, அதுக்குமேலே * தமருகந்த தெவ்வுருவ மவ்வுருவந்தானுப் ஸர்வஸுலபனுய் ஸர்வஸுஹ்ருஷ்ணுவாய் ஸர்வஜநஸமாராத்யனுய் அர்ச்சாவதார ரூபியாய்த் தன்னை அமைத்துநின்ற தன்மை என்னே ! என்று அது தன்னிலே உள்குழைகின்றார்.

"மேல் ஆகமூர்த்தியாய வண்ணம் என் கொல் !"—கீழ்க்கூறிய பற்பல திருவுருவங்களே ஏற்றுக்கொண்டதுமல்லாமல் இப்படிப்பட்ட ஸர்வாத்மநா பரதந்த்ரமான தொரு நிலைமையை ஏற்றுக்கொண்டவிது என்ன ஸௌலப்ய பரமகாஷ்டை ! என உள்குழைகிறபடி. ஆதிதேவனே!=ஜகத்துக்கெல்லாம் ஆதிகாரணமாயிருக்கிற நீ கார்யவர்க்கத்துக்குள்ளே அதி க்ஷுத்ரஜந்துவாயிருப்பானொரு சேதநனுடைய விருப்பத்துக்கிணங்கி நடப்பது என்ன வித்தகம்! என்று கேட்கிறபடி. (கஎ)

769 விடத்தவாயோராயிரம் இராயிரங்கண்வெந்தழல் *
விடுத்துவீழ்விலாதபோகம் மிக்கசோதிதோற்கசீர் *
தொடுத்துமேல்விதானமாய பௌவநீரராவணை *
படுத்தபாயல்பள்ளிகொள்வது என்கொல் ! வேலைவண்ணனே. (கஅ)

வேலை வண்ணனே	கருங்கடல் வண்ணனை எம்பெருமானே !,
விடத்த	விஷத்தையுடைத்தான
ஒரு ஆயிரம் வாய்	ஓராயிரம் வாய்களினின்றும்
இரு ஆயிரம் கண்	ஈராயிரம் கண்களினின்றும்
வெம் தழல்	வெவ்விய தழலே
விடுத்து	புறப்படவிட்டுக்கொண்டு,
வீழ்வு இலாத போகம்	ஒரு காலும் விச்சேதமில்லாத பகவதநுபவத்தையுடையனுய்
மிக்க சோதி	மிகுந்த ஜ்யோதிஸ்ஸையுடையனுய்
விதானம் ஆய	மேற்கட்டிபோன்ற படங்களினுடைய
மேல்	மேற்புறத்திலே
தொக்க	திரள்திரளாயிருக்கிற
சீர்	அழகை
தொடுத்து	தொடுத்து
பௌவம் நீர்	ஸமுத்ரஜலத்திலே
படுத்த	படுக்கையாக அமைந்த
அரா அணை பாயல் பள்ளி கொள்வது	திருவனந்தாழ்வானுகிற சயநத்திலே பள்ளிகொண்டருளும் தன்மை
என் கொல்	எத்திறம்?.

* * *—கீழ் "நாகமூர்த்திசயனமாய்" என்றும் "தடங்கடல்பணத்தலைச் செங்குணகணைக் கிடந்த" என்றும் கூரஸாகரசயநம் ப்ரஸ்துதமானவாறே திருவுள்ளம் அங்கே ஆழங்காற்பட்டு அந்நிலையிலே அபிநிவேசாதிசயம் தோற்ற அருளிச்செய்கிறார்.

"விடத்தவாயொராயிர மிராயிரங்கண் வெந்தழல் விடுத்து" என்னுமளவால் "ஆங்கார வாரமதுகேட்டு அழலுமிழும் பூங்காரரவு" [நான்முகன் திருவந்தாதி.] என்ற அர்த்தத்தை அருளிச்செய்தபடி. ஆபத்துநேருவதற்கு ப்ரஸக்தியற்ற இடத்திலுங்கூட ஆதராதி சயத்தினுல் ஆபத்தை அதிசங்கித்துக் காப்பிடுந்தன்மை நித்யஸூரிகளுக்கெல்லாம் உண்டாயிருக்கச்செய்

தேயும் திருவனந்தாழ்வானுக்கு அது விசேஷித்திருக்குமாய்த்து. வீழ்வு இலாத போகம்= "சென்றுல்குடையாம் இருந்தால் சிங்காசனமாம் நின்றுல் மரவடியாம் நீள்கடலுள் - என்றும், புணையாமணிவிளக்காம் பூம்பட்டாம் புல்கு மணையாக் திருமாற்கரவு." என்றபடி பஹு முகமாகத்திருமால் திறத்தில் கிஞ்சித்கரிக்குந் தன்மையினால் பகவதநுபவமாகிற போகத்திற்கு எப்போதும் விச்சேதமில்லாதவன் என்கை. மிக்க சோதி=பகவதநுபவம் மாறுதே செல்லுமவர்கட்கு விலக்ஷணமான தொரு தேஜஸ்ஸு உண்டாகக்கடவதிறே; அதனைச் சொல்லுகிறது. (கஅ)

770 புள்ளதாகிவேதநான்கும் ஓதினாய், அதன்றியும் *
புள்ளின்வாய்பிளந்து புட்கொடிப்பிடித்த பின்னரும் *
புள்ளூர்தியாதலால் அதென்கொல்மின்கொள்கேமியாய்! *
புள்ளின்மெய்ப்பகைக்கடல் கிடத்தல்காதலித்ததே. (ககூ)

மின் கொள் கேமியாய்	தேஜஸ்ஸியாய் விளங்கா நின்றுள்ள திருவாழியையுடைய பெருமானே !
புள் அது ஆகி வேதம் நான்கும் ஓதினாய்	ஹம்ஸரூபியாய் அவதரித்து நான்கு வேதங்களையும் உபதேசித்தருளினாய்;
அது அன்றியும்	அதுவுமல்லாமல்,
புள்ளின் வாய் பிளந்து	(உன்னை விழுங்குவதாக வாயைத்திறந்துகொண்டு வந்த) பகாஸுரனுடைய வாயைக்கிழித்து (அவனை முடித்துவிட்டு)
புள்கொடி பிடித்த பின்னரும்	பெரியதிருவடியை த்வஜமாகப் பிடித்ததுமல்லாமல்
புள்ளூர்தி	அப்பெரிய திருவடியை வாஹநமாகக்கொண்டு செல்லாகின்றாய்;
ஆதலால்	இப்படி பலவகையான ரக்ஷணோபாயங்களைச் செய்தருளாகிற்கச்செய்தேயும்
கடல்	திருப்பாற்கடலிலே
புள்ளின் பகை மெய்	கருடனுக்குப் பகையென்று தோற்றும்படியான திருவனந்தாழ்வானுடைய திருமேனியிலே
கிடத்தல்	பள்ளிகொள்வதை
காதலித்தது	விரும்பிப்போருவதாகிற
அது	அக்காரியம்
என்கொல்	என்ன திருவுள்ளத்தாலே ?

* * *—கீழ்ப் பாட்டில் "பௌவநீரராவணைப் படுத்தபாயல் பள்ளிகொள்வதென்கொல்?" என்று - எதுக்காகத் திருப்பாற்கடலில் கண்வளர்ந் தருளாநின்றாய்? என்று எம்பெருமானை நோக்கி வினவிய ஆழ்வாரைக்குறித்து அப்பெருமான் "ஆழ்வீர்! ஸம்ஸாரிகளை ரக்ஷிப்பதற்காகத்தான் நாம் இக்கிடை கிடக்கிறோம்." என்றருளிச்செய்ய; அதுகேட்ட ஆழ்வார், "பஹுமுகமாக ஸம்ஸாரிசேதநர்களை ரக்ஷித்தருளின நீ ரக்ஷணைக்குத்யத்திலே இன்னும் சேஷம் வைத்திருக்கிறாயோ? பண்டே எல்லாம் செய்தருளிற்றே!; ஆயிருக்க, ஒன்றும் செய்யாதவன் போலவும் இன்னும் பல செய்யவேண்டியவன்போலவும் திருப்பாற் கடலிலே வந்து கண்வளர்ந்தருள்வது என்னே? என்கிறார்.

"புள்ளதாகி வேதநான்கு மோதினாய்" என்று-ப்ரமாணத்தைக் கொடுத்தபடியையும், "புள்ளின்வாய் பிளந்து" என்று-ப்ரமேயபூதனை தன்னைக் கொடுத்தபடியையும் சொல்லிற்றாயிற்று. இப்படிப்பட்ட ரக்ஷணம் என்றைக்கோ செய்யப்பட்டதாகில் இன்றைக்கும் மேலுள்ளகாலத்துக்கும் என்னுயிற்று? என்று சங்கிப்பார்க்கு இடமறும்படி யருளிச் செய்கிறார் புட்கொடியித்யாதி. தான் ரக்ஷணத்தொழிலொன்றிலேயே தீக்ஷிதன் என்பது தோன்றக் கொடிகட்டிக் கிடக்கிறபடி. ஆபத்து அடைந்தவர்களனைவரும் தன்பக்கலிலே வந்து காரியங்கொள்ளும்படி ரக்ஷணதர்மத்தைத் தெரிவிக்கைக்காகவிறே பெரியதிருவடியை த்வஜமாகக் கொண்டிருக்கிறது. கருடனை த்வஜமாகக்கொண்டமாத்திரத்தால் என்னுகும்? என்று சங்கிப்பார் தெளியுமாறு அருளிச்செய்கிறார் புள்ளூர்தி என்று. ஆச்ரிதர்கட்கு ஆபத்து நேர்ந்தால் பறவையேறிக் கடிதோடிக் காப்பிடுமவன் என்று காட்டியபடி. பின்னரும்—பெரிய திருவடியை த்வஜமாகக் கொண்டதுமாத்திரமே யல்லாமல்; புள்ளூர்தி—ஆச்ரிதர் ஆபந்நராய் இருந்தவிடங்களிலேவந்து உதவுகைக்கு அவனை வாஹநமாகக்கொண்டு நடத்தா நின்றாய், என்கை. ஊர்தி—ஊர்கின்றாய் என்றபடி.

"புட்கொடிப் பிடித்தபின்னரும்" என்று இப்போதைய பாடமிருந்தாலும் "புட்கொடிப் பிடித்தி பின்னரும்" என்றே ப்ராசீநமும் சுத்தமுமான பாடமென்று அழகியமணவாளச் சீயர் அருளிச்செய்யக்கேட்டிருக்கை. ஊர்தி என்றதுபோலவே பிடித்தி என்றதும் 'பிடிக்கின்ருய்' என்ற பொருளுடைய முன்னிலையொருமை நிகழ்கால வினைமுற்று. ஆகவே, "புள்ளதாகி வேதநான்குமோதினுய், அதன்றியும் புள்ளின்வாய் பிளந்து புட்கொடிப்பிடித்தி, பின்னரும் புள்ளூர்தி" என்றிங்ஙனே மூன்று வாக்யார்த்தமாகக் கொள்ளுதல் சிறக்கு மென்க. பின்னரும் என்றது – அன்றியும் (அவிஅ) என்றபடி.

ஆதலால் என்றது-இப்படியெல்லாம் செய்திருக்கச்செய்தேயும் என்றபடி. அர்த்தஸ்வாரஸ்யத்துக்காக சப்தத்தை நெருக்குவது உசிதமேயாமென்க. இப்படி பஹுமுகமாக ரக்ஷகத்வத்தை வெளிப்படுத்திக்கொண்டு ரக்ஷணைக தீக்ஷிதனுய் எழுந்தருளியிருக்கச் செய்தேயும் திருப்பாற்கடலிலேவந்து குளிரிலே கிடப்பதென்? என்று ஹாஸ்யமும் தோற்றுகிறது. பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானத்தில் இப்பாட்டின் அன்வயக்ரமம் சிறிது மாறுபட்டிருப்பினும் ஸ்ருதி மாரமதிகளின் ஸௌகரியத்துக்காக இங்ஙனே யாம் உரைத்தோமென்றுணர்க. கீழும் மேலும் இங்ஙனே யாமெழுதுமிடங்களில் இதுவே ஸமாதாநமென்று கொள்க.

கடல் புள்ளின் பகை மெய் கிடத்தல் காதலித்தது என்கொல்? - என்று மாற்றி அன்வயித்துக்கொள்க. நித்யஸூரிகளில் தலைவராயும் எம்பெருமானுக்கு அந்தரங்க கிங்கரர்களாயுமுள்ள பெரியதிருவடி திருவனந்தாழ்வான்களுக்கு உண்மையில் பகைமையென்ன ப்ரஸக்தி தானுமில்லையேயாகிலும் கருடஜாதிக்கும் ஸர்ப்பஜாதிக்கும் உலகவியற்கையிலே பகைமை காணப்படுவதுபற்றி "புள்ளின்பகை" என்று அருளிச்செய்தார். வியாக்கியானத்திலும் - "ஸர்வாந்தர்யாமிக்ருஷ்டியால் பார்த்தால் திருவடிக்கு ஸஹஜசத்ருவென்னலாயிருக்கிற திருவனந்தாழ்வான்மேலே" என்று அருளிச்செய்துள்ளமை காண்க. (கக)

771 கூசமொன்றுமின்றி மாசுணம்படுத்து, வேலைநீர் *
பேசநின்றதேவர்வந்து பாடமுன்கிடந்ததும் *
பாசநின்றநீரில்வாழும் ஆமையானகேசவா ! *
ஏசவன்றுநீகிடந்தவாறு கூறுதேறவே. (உ)

முன்	அநாதிகாலமாக,	பாசம் நின்ற நீரில் வாழும் ஆமையான கேசவா (என்று) ஏச நீ கிடந்த ஆறும்	"வருண பாசங்கள் கிடக்கிற கடலிலேவாழ்கின்ற ஆமையென்னும் க்ஷுத்ர ஜந்துவாகப் பிறந்த கேசவனே!" என்று (அவிவேகிகள்) ஏசும்படி கிடந்தபடியையும்
வேலை நீர்	ஸமுத்ரஜலத்திலே		
கூசம் ஒன்றும் இன்றி	சிறிதும் கூசாதே		
மாசுணம்	திருவனந்தாழ்வானே		
படுத்து	படுக்கையாகவிரித்து		
பேச நின்ற தேவர் வந்து பாடக் கிடந்ததும்	ஸ்தோத்ரம் பண்ணுவதற்கென்று அமைந்த ப்ரஹ்மாதி தேவர்கள் வந்து பாடும்படி சயித்த ருளின படியையும்.	தேற	அடியேன் நன்ருதெரிந்து கொள்ளும்படி
அன்று	தேவர்களுக்காகக் கடல் கடைந்த அக்காலத்திலே	கூறு	(எனக்கு) அருளிச் செய்ய வேணும்.

* * *—ப்ரயோஜநாந்தரபரரான நான்முகன் முதலானேர் எத்தத் திருப்பாற்கடலிலே திருக்கண்வளர்ந்தருளுகிற மேன்மைதானே நீர்மைக்கு எல்லை நிலமாயிராநின்றது; அமரர்க்கு அமுதமளிக்கக் கடல் கடைந்தபோது மந்தரமலையைத்தாங்குவதற்காக ஆமையாக உருவெடுத்த நீர்மைதானே மேன்மைக்கு எல்லை நிலமாயிராநின்றது; இவற்றைப் பிரித்து என்நெஞ்சிலே நன்குபடும்படி அருளிச்செய்யவேணுமென்கிறர்.

க்ஷீரஸாகரசயநவ்ருத்தாந்தம் முன்னடிகளில் கூறப்படுகிறது; கூர்மாவதார வ்ருத்தாந்தம் பின்னடிகளில் கூறப்படுகிறது. க்ஷீரஸாகரசயநம் பரத்வப்ரகாசகமாயினும் ப்ரயோஜநாந்தரபரர்களும்வந்து கிட்டித் துதிக்கலாம்படி எம்பெருமான் தன்னை அமைத்துக்கொண்டு கிடக்கிறபடியை நோக்கினவாறே "இப்படியும் ஒரு எளிமை உண்டோ?" என்று உள்குழையும்படியிருத்தலாலும், ஆமையாய்ப்பிறந்த பிறவி எல்லார்க்கும் ஏசுகைக்கிடமாயிருந்தாலும் தேவதேவாதி தேவனுக்கு பரமபுருஷன் "ஸுஜாயஸேநோ வஹ்ந்யோ விஜாயதே" "பல பிறப்பாய் ஒளிவரு முழுநலம்" இத்யாதிப்படியே தண்ணியபிறவியிற் பிறந்த விடத்தும் பரத்வம் குன்றுமற் பொலியநிற்பதே! என்று ஈடுபடும்படியாயிருத்தலாலும், மற்றுள்ளார்க்குப் பரத்வம் தோன்றுமிடத்தில் எளிமையும், எளிமை தோன்றுமிடத்தில் பரத்வமும் இவ்வாழ்வார்க்குத் தோன்றுகின்ற தாய்த்து. எல்லா அவதாரங்களிலும் பரத்வஸௌலப்யங்கள் ஒன்றுக்கொன்று தோலாதே வீறுபெற்றிருக்குமென்பதுவே இப்பாட்டின் உள்ளுறை. ஸௌலப்யத்தோடு இணங்காத பரத்வமும், பரத்வத்தோடு இணங்காத ஸௌலப்யமும் ஒருபொருளாக மதிக்கத்தக்கவையல்ல வாகையால் இரண்டோடுங் கூடிநிற்கும் நிலையே மெச்சத்தக்கதாமென்க.

பாசம் நின்ற நீரில்=ஜலராசிக்கு அதிஷ்டாந தேவதை வருணனாகையாலும், அவ்வருணனுக்குப் பாசம் ஆயுதமாகையாலும் "பாசம் நின்ற நீர்" எனப்பட்டது. "பாசன் நின்ற" என்றும் பாடமுண்டாம்; பாசன் = வருணன். இனி, "பாசம் நின்ற நீரில்" என்பதற்கு, "பரமபதத்திற்காட்டில் ப்ரேமஸ்தலமான கடலிலே" என்றும் பொருள் அருளிச்செய்வர். பாசம் என்றது ஆசை; 'பரமபதத்திற்காட்டிலும் இந்த நீர்நிலமே நமக்கு போக்யமான இடம்' என்று எம்பெருமான் ஆசைப்படத்தக்க நீர் என்றபடி. (உய்)

772 அரங்கனே! தரங்கநீர் கலங்கவன்றுகுன்றுசூழ் *
மரங்கள்தேயமாநிலங்குலுங்க மாசுணஞ்சுலாய் *
சுருங்கநீகடைந்தபோது நின்றசூரரென்செய்தார்? *
குரங்கையாளுகந்தவெந்தை கூறுதேறவேறிதே. (உக)

குரங்கை	வானரப்படைகளை
ஆள் உகந்த எந்தை!	உகந்து ஆட்கொண்ட நாயனே!
அரங்கனே)	ஸ்ரீரங்கநாதனே!
அன்று	(துர்வாஸ மஹர்ஷியின் சாபத்தினாலே தேவர்கள் செல்வமிழந்து வருந்தி உன்னைச் சரணம் பற்றினின்ற) அன்று
தரங்கம் நீர் கலங்க	அலைகளையுடைய ஸமுத்ரமானது கலங்கவும்,
குன்று சூழ் மரங்கள் தேய	மந்தரமலையைச் சூழ்ந்த மரங்கள் தேயவும்.
மா நிலம் குலுங்க	பெரிய பூமியானது குலுங்கவும்
மாசுணம் நெருங்க சுலாய்	வாஸுகி யென்னும் நாகத்தை அழுந்தச்சுற்றி
நீ கடைந்த போது	(கடலை) நீ கடைந்தருளின காலத்திலே
நின்ற	அருகே நின்றுகொண்டிருந்த
சூரர்	மிக்க பராக்ரமசாலிகளென்று பேர்பெற்ற தேவாஸுர ப்ரப்ருதிகள்
என் செய்தார்	என்ன காரியம் செய்தார்கள்
இது	இவ்விஷயத்தை
வேறு	விசேஷித்து
தேற	நான் தெரிந்துகொள்ளும்படி
கூறு	அருளிச்செய்யவேணும்.

* * * இந்திரன் முதலிய தேவர்களின் வேண்டுகோளுக்கிணங்கி மந்தர மலையைமத்தாகநாட்டி வாஸுகிநாகத்தைக் கடைகயிறாகச் சுற்றிக் கடல்கடைந்தபோது தேவர்கள் அசுரர்கள் முதலியோர் தாங்கள் கயிற்றைவலித்துக் கடைவதாகக் கைவைத்து க்ஷணகாலத்திற்குள் இழுத்துப்போய்க் கைவாங்கினவாறே 'நீங்கள் வெறுமனே இருங்கள்' என்று அவர்களைச் சுகமாக உட்காரவைத்து விட்டு எம்பெருமான் தானே அஸுரஹாயனுய்க்கடைந்து தலைக்கட்டியிருக்கச் செய்தேயும் "தேவதைகள் கடல்கடைந்தார்கள்" என்று நாட்டார் தேவதைகளுக்கு விஜயப்புகழ்கூறுமாறு அவர்களை அபிமாநித்தது, - அதிமாநுஷக்ருத்யங்

கலைச்செய்து இராவணனைத் தொலைத்ததெல்லாம் தன்னுடைய திவ்யசேஷ்டிதமாயிகச்சுக் செய்தேயும் 'வாநரவீரர்கள் இலங்கையைப் பொடிபடுத்தினர்கள்' என்று உலகத்தார் அவர் கள் தலையிலே விஜயப்புகழை ஏறிட்டுக்கூறுமாறு அவர்களை அபிமானித்ததும் - என்ன ஆச்சரித் பக்ஷபாதம்! என்று விஸ்மயப்படுகிறார்கள்.

கடல் கடைந்தவிதம் மிகவும் பயங்காரமாயிருந்தது என்கைக்காக, "தரங்க நீர் கலங்க, குன்றுசூழ் மரங்கள் தேய, மாநிலம் குலுங்கக் கடைந்தபோது" என்கிறார். ஸர்ப்பஜாதிக்கு வாசகமாகிய மாசுணம் என்றசொல் இங்கு வாஸுகி யென்று சிறப்புப்பொருளைத் தந்தது. சுலாய்=சுலாவி என்றபடி: சுலாவுதல்- சுற்றுதல். இப்படி மீகடைந்த காலத்திலே, "நாங்கள் பராக்ரமசாலிகள்" என்று செருக்கி மார்புதட்டிக் கிடப்பவர்களான தேவர்கள் "கடலில் கின்றும் அமுதம் கிளர்ந்து வருவது எப்போதோ!" என்று தாங்கள் உணவுபெறுங்காலத்தை எதிர்பார்த்து அக்கடலையே நோக்கிக்கொண்டிருந்ததுதவிர ஸமுத்ரமதந காரியத்துக்கு உறுப் பாக ஒருகாரியமும் செய்யவில்லை; செய்ததுண்டாகில் பிராணே! நீயே சொல்லிக்காண்; மந்தர மலைக்கு அதிஷ்டாநமா யிருந்தார்களா? வாஸுகிக்கு நல்லசக்தியுண்டாம்படி வரமளித்தார் களா? அல்லது கடை கயிற்றைத்தான் சற்றுப்பிடித்து வலித்தார்களா? என்னதான் செய்தார் கள்? அவர்கள் செய்தது ஒன்றுமில்லை. (அப்படி யிருக்கச்செய்தேயும் 'தேவர்கள் கடல் கடைந்தார்கள்' என்று நாடெங்கும் புகழும்படி அவர்களை அபிமானித்தது என்ன ஆச்சரித பக்ஷபாதம்! என்ற வியப்பு உள்ளுறை.) (உக)

773 பண்டுமின்றுமேலுமாயோர் பாலனாகிஞாலமேழும் *
உண்டுமண்டியாலிலைத்துயின்ற ஆதிதேவனே! *
வண்டுகிண்டுதண்டுழாய் அலங்கலாய்! கலந்தசீர் *
புண்டரீகபாவைசேருமார்ப பூமிநாதனே! (உஉ)

பண்டும் இன்றும் மேலும் ஆய்	மூன்று காலங்களிலும் கைவிடாதே நின்று ரக்ஷித்தருளுமவனைபோலே
ஞாலம் ஏழும்	உலகங்களையெல்லாம்
மண்டி உண்டு	(ப்ரளய வெள்ளம் கொள்ளாதபடி) விரும்பி அமுது செய்து
ஓர் பாலன் ஆகி	ஒப்பற்ற சிறுகுழந்தையாய்
ஆலிலை துயின்ற	ஆலந்தளிரிலே கண்வளர்ந்தருளின
ஆதிதேவனே!	மூல புருஷனே!
வண்டு	வண்டுகளானவை
கிண்டு	(மதுவுக்காக வந்து) குடையும்படியான
தண்துழாய் அலங்கலாய்	குளிர்ந்ததிருத்துழாய் மாலையை அணிந்தவனே!
சீர் கலந்த புண்டரீக பாவை சேரும் மார்ப!	அழகு சேர்ந்த தாமரை மலரில் பிறந்த பெரிய பிராட்டியார் வந்து புணரும்படியான திருமார்பை யுடையவனே!
பூமி நாதனே!	பூமிப்பிராட்டிக்கு நாதனே! (என்று ஈடுபடுகிறார்.)

* * * எல்லா வுலகங்களையும் கொள்ளைகொள்ளவந்த ப்ரளய காலத்திலே வலிஷ்ட சண்டாளவிபாகம் பாராமல் எல்லாரையும் திருவயிற்றிலே வைத்து நோக்கின உனக்கு ஆச்சரி தர்கள் விஷயத்திலே வாத்ஸல்யமுள்ளமை ஒரு வியப்போ? என்கிறார் இப்பாட்டில். அநாச்சரி தர்கள் என்று ஒருவரையும் விலக்காமல் ஆச்சரிதர்களோடு ஸமமாகவே அவர்களையும் வயிற்றிற் கொண்டவன் ஆச்சரித விஷயத்தில் காட்டும் பக்ஷபாதம் உண்மையில் வியப்பன்றே.

எம்பெருமானுடைய ரக்ஷகத்வம் மூன்று காலங்களிலும் குறையற்ற தென்கிறார்— பண்டும் இன்றும் மேலும் என்று. பண்டும் என்றது ஸ்ருஷ்டிக்கு முற்காலத்திலே என்றபடி. இன்றும் என்றது - ஸ்ருஷ்டிகாலத்தைச் சொன்னபடி. மேலும் என்றது ப்ரளயகாலத்தைச் சொன்னபடி. ஸ்ருஷ்டிக்கு முற்காலத்தில் எம்பெருமானுடைய ரக்ஷகத்வம் எப்படிப்பட்ட தென்னில்; ஒன்று ஒன்றிலே லயிக்கிறதென்று சொல்லிக்கொண்டு வருமிடத்து இதுதியாக

"சகஸ்ரம் தஶஸி ஜீயதே—தஶ: வரெஷெவ வஸுஹவதி" என்று சொல்லியிருக்கையாலே தன் பக்கலிலே ஏறிட்டுக்கொண்டு நோக்கும்விதம் அறியத்தக்கது. ஸ்ருஷ்டிதசையில் எல்லா வுயிர் கட்கும் ஏககாலத்தில் கரண களே பரங்கள் கொடுத்தருளியதும், ப்ரளய தசையில் அனைத் தையும் வயிற்றிலே வைத்து நோக்கியதும் ரக்ஷணப்ரகாரங்கள். (உஉ)

774 வானிறத்தோர்சீயமாய் வளைந்தவாளெயிற்றவன் *
ஊனிறத்துகிர்த்தலம் அழுத்தினுயுலாயசீர் *
நானிறத்தவேதநாவர்கல்லயோகினுல் வணங்கு *
பானிறக்கடற்கிடந்த பற்பநாபனல்லையே. (உங)

வால் நிறத்து	வெளுத்த நிறத்தையுடைய	நால் நிறத்த வேதம்	உதாத்தம், அநுதாத்தம், ஸ்வரிதம், ப்ரசயம் என்கிற நால் வகை ஸ்வரங்களையுடைய வேதங்களை
ஓர் சீயம் ஆய்	ஒப்பற்ற நரசிங்க மூர்த்தியாயவதரித்து;	நாவர்	நாவிலே உடையவர்கள் [ச்ரோத்ரியர்கள்]
வளைந்த வாள் எயிற்றவன்	வளைந்தும் ஒளிபெற்றுமிருக்கிற பற்களையுடையனை இரணியனுடைய	கல்ல யோகினுல்	விலக்ஷணமான உபாயத்தினுலே
ஊன் நிறத்து	சரீரத்தில் மர்ம ஸ்தானத்திலே	வணங்கு	வணங்குவதற்கு இடமான
உகிர் தலம் அழுத்தினுய்!	கை நகங்களை அழுத்தினவனே!	பால்நிறக் கடல்	திருப்பாற் கடலிலே
		கிடந்த	பள்ளிகொண்டருளின
உலாய சீர்	உலகமெங்கும் உலாவுகின்ற சீர்மையையுடைய	பற்பநாபன் அல்லையே	பத்மநாபன் நீயேயன்றே.

* * * ப்ரளயகாலத்து ஆபத்தைப்போக்கி வடதளசாயியாக அமைந்தது மிகவும் அற்புதமான செயல் என்று அதிலே ஈடுபட்டுப்பேசினர் கீழ்ப்பாட்டில். இந்த அகடிதகடநா ஸாமர்த்தியமானது நரசிங்கவுருக்கொண்ட ஸாமர்த்தியத்தின் முன்னே ஒரு பொருளாக மதிக்கத்தக்கதோ? "நரஸ்யாயுதநாம்ஸுகா ஸிம்ஹஸ்யாயுதநாம்தயா" என்கிறபடியே சரீரத்தில் ஏகதேசத்தை மநுஷ்ய ஜாதியமாக்கியும் ஏகதேசத்தைத் திர்யக் ஜாதியமாக்கியும் இப்படி இரண்டு ஜாதியை ஏகவிக்ரஹமாக்கித் தூணிலேவந்து தோன்றிய விக்ரஹம் ஸாமான்யமானதோ? இதனைப் பரிச்சேதிக்க வல்லாரார்? என்கிறார் இப்பாட்டில்.

வால் நிறத்தோர் சீயமாய்=புருஷோத்தமன் தன்ஸ்வரூபத்தை அழித்து ஸிம்ஹஜாதியனைது போலவே காளமேகம்போன்ற தன்நிறத்தையும் மாற்றி வெண்ணிறத்தை ஏறிட்டுக்கொள்வதே! என்று ஈடுபடுகிறார். வால் வெண்மை. இனி, வான் நிறம்" எனப்பிரித்து, திவ்யமான தன்மையையுடைய என்று பொருள் கொள்ளுதலும் நன்றே. சீயம்=சிங்கம். "வளைந்தவா ளெயிற்றவன்" என்றதனால் இரணியனுடைய பயங்கரமான வடிவுடைமை தோன்றும். ஊன்நிறம்—சரீரத்தின் மர்மஸ்தாநம் - ஹ்ருதயமென்க. உகிர்த்தலம் என்ற விடத்து, "தலம்" என்றது வார்த்தைப்பாடு. "உல்ய" என்றது 'உலாவிய' என்றபடி. (உங)

775 கங்கைநீர்பயந்த பாதபங்கயத்தெமண்ணலே *
அங்கையாழிசங்குதண்டு வில்லும்வாளுமேந்தினுய் *
சிங்கமாயதேவதேவ தேனுலாவுமென்மலர் *
மங்கைமன்னிவாழுமார்ப ஆழிமேனிமாயனே. (உச)

கங்கை நீர்	கங்காதீர்த்தத்தை	அம் கை	அழகிய திருக்கையிலே
பயந்த	உண்டாக்கின	ஆழி சங்கு தண்டு வில்லும் வாளும்	பஞ்சாயுதாழ்வார்களை
பாத பங்கயத்து எம் அண்ணலே!	திருவடித் தாமரையையுடைய எம்பெருமானே!	ஏந்தினுய்!	ஏந்திக்கொண்டிருப்பவனே!

சிங்கம் ஆய	நரஸிம்ஹ மூர்த்தியாயவதரித்த	மன்னிவாழும் மார்ப	(அப்பூவை விட்டு வந்து) பொருந்தி வாழும்படியான திருமார்பை யுடையவனே !
தேவ தேவ!	தேவாதி தேவனே;	ஆழி மேனி	கடல் போன்ற திருமேனியை யுடைய
தேன் உலாவும் மெல் மலர் மங்கை	தேன் பொருந்திய ஸுகுமார மான தாமரைப்பூவில் பிறந்த பிராட்டி	மாயனே !	ஆச்சர்ய பூதனே ! (என்று ஈடுபடுகிறார்.)

* * *—அஹங்காரிகளில் தலைவனை ருத்ரனுக்கும் ஸ்ரீபாத தீர்த்தத்தைத் தந்தருளி அவனைப் பாவனஞ்செய்தருளினவனன்றே நீ; "வாத-வுணதர-கூபாயம் விஜ்ஞ ஜஹஹ நிவ வஹாவஜ்ஞாய-யீபிஹ்ர" என்றபடி - இடர்ப்பட்டுவரும் அடியார்களைத் துயர்நீக்கி ரக்ஷிப்பதில் காலதாமதம் நேரிடாமைக்காகப் பஞ்சாயுதாழ்வார்களை எப்போதும் திருக்கையிலே எந்திக் கொண்டிருப்பவனன்றே நீ: அந்த ஆச்ரிதரக்ஷண தீக்ஷையை ஒருஸமய விசேஷத்திலே நரஸிங்கமாய்த் தோன்றி வெளியிட்டவனன்றே நீ; இப்படிப்பட்ட குணங்களுக்குத் தோற்றுப் பெரிய பிராட்டியார் உன்னை விடமாட்டாதே எப்போதும் மார்பில் மன்னியிருக்கின்றனன்றே; கருங்கடலைக் கண்டவாறே கண்களுங் குளிர்ந்து ஸகல தாபங்களும் ஆறுவதுபோல உன்திருமேனியை ஸேவித்தவாறே என் கண்கள் குளிர்ந்து தாபத்ரயமும் ஆறும்படியா யிராகின்றதே! என்று ஈடுபடுகிறார். (உசு)

776 வரத்தினிற்சிரத்தைமிக்க வாளெயிற்றுமற்றவன் *
உரத்தினிற்கரத்தைவைத்து உகிர்த்தலத்தையூன்றினாய் *
இரத்திநீயிதென்னபோய் இரந்தமண்வயிற்றுளே
கரத்தி * உன்கருத்தை யாவர்காணவல்லர்கண்ணனே. (உடு)

வரத்தினில்	(பிரமன் கொடுத்த) வரத்திலே	இரத்தி	(ஒருஸமயம்மாவலியிடத்தே சென்று) யாசிக்கிறாய்;
சிரத்தை மிக்க	அதிகமான நம்பிக்கை யுடையவனாய்	இது என்ன பொய்	இது என்ன இந்திரஜாலம் ?
வாள் எயிறு	வாள் போன்ற (பயங்கரமான) கோரப்பற்களை யுடையவனை	இரந்த மண்	யாசித்துப்பெற்ற உலகத்தை
மற்றவன்	ஆச்சரித சக்ருவான இரணியனுடைய	வயிற்றுளே கரத்தி	(ஒருகால்)திருவயிற்றுக்குள்ளே ஒளித்து வைக்கிறாய்;
உரத்தினில்	மார்விலே	கண்ணனே!	கண்ணபிரானே !
கரத்தை வைத்து	திருக்கைகளை வைத்து	உன் கருத்தை	(இப்படியெல்லாம் செய்கிற) உன்னுடைய கருத்தை
உகிர்த்தலத்தை	நகங்களை	யாவர் காண வல்லர்	யார்கண்டறியவல்லார் ? (யாருமில்லை.)
ஊன்றினாய்	அழுத்திக்கொன்றாய்;		
நீ	இப்படிப்பட்ட நீ		

* * * அநந்யப்ரயோஜநனை [உன் அநுக்ரஹத்தைத் வேறொன்றையும் பயனாகக்கருதாதவனை] ப்ரஹ்லாதாழ்வானுடைய விரோதியைக் கழித்தருளினாய் என்பது ஒரு புறமிருக்கட்டும்; ப்ரயோஜநாந்தரபரனை இந்திரனுக்காக யாசகவேஷம்பூண்டு வந்தாயே இதென்ன மாயப்? அவ்வளவேயோ? இந்திரனளவு ஆபிமுக்யமுமில்லாமல் விமுகரான ஸம்ஸாரிகளை ப்ரளயாபத்திலே திருவயிற்றில் வைத்து ரக்ஷித்தாயே, இதற்குத்தான் என்ன கருத்து? பரமார்த்திகனை ஆச்ரிதனையும் க்ருத்ரிமனை ஆச்ரிதாபாஸரையையும் ராவண ஹிரண்யாதிகளின் வரிசையிலே கணக்கிடத்தக்க ஸம்ஸாரிகளையும் ஒரு ஸமமாகக் காத்தருள்கின்ற உன்னுடைய உட்கருத்து என்ன? நீயே எனக்கருளிச்செய்யவேணுமென்கிறார்.

நீ நரஸிம்ஹாவதாரமெடுத்தவாற்றைப் பார்த்தாலோ 'அபார சக்தியுக்தன்' என்று தோன்றுகிறது; அடுத்தபடியாக, இந்திரனது வேண்டுகோளுக்கிணங்கி வாமநனாய் வந்து யாசகம் செய்தவாற்றைப் பார்த்தாலோ 'அசக்தன்' என்று தோற்றுகின்றது; ப்ரளயாபத்துக்கு உதவுந்தன்மையைப் பார்த்தாலோ 'இவனுக்குமேற்பட்ட ஸர்வஜ்ஞனும் ஸர்வசக்த

ஞும் எவ்வுலகத்திலுமில்லை' என்னும்படியாயிருக்கிறது; இப்படி சக்தியையும் அசக்தியையும் மாறிமாறிக் காட்டிக்கொண்டு நீ பலபல மாயச் செயல்கள் செய்வதற்குக் கருத்து எதுவோ? எனக்குத் தெரிய வருளிச்செய்யவேணுமென்கிறார்-என்றுங் கொள்ளலாம். (உசு)

777 ஆணிஞ்ஞெடுபெண்ணுமாகி அல்லவோடுநல்லவாய் *
ஊணிஞ்ஞெடோசையூறுமாகி ஒன்றலாதமாயையாய் *
பூணிபேணுமாயனகிப் போய்யிஞ்ஞெடுமெய்யுமாய் *
காணிபேணுமாணியாய்க் கரந்துசென்றகள்வனே. (உசு)

ஆணிஞ்ஞெடு பெண்ணும் ஆகி	புருஷஜாதி, ஸ்த்ரீஜாதி என்ற இரண்டு சாதிக்கும் ப்ரவர்த்தகனாய்
அல்லவோடு நல்ல ஆய்	மேற்சொன்ன இரண்டு ஜாதியிலும் சேராத நபும்ஸக பதார்த்தங்களென்ன இம்மூன்று வகுப்பிலும் சிறந்தவை யென்ன இவற்றுக்கெல்லாம் நிர்வாஹகனாய்
ஊணிஞ்ஞெடு ஓசை ஊறும் ஆகி	ரஸம், சப்தம், ஸ்பர்சம் முதலிய விஷயங்களுக்கு நியாமகனாய்
ஒன்று அலாத மாயை ஆய்	உலகத்திலுள்ள எல்லாப் பொருளாகவும் பரிணமிக்கின்ற ப்ரக்ருதிக்கு நிர்வாஹகனாய்
பூணி பேணும் ஆயன் ஆகி	பசுக்களை மேய்க்கிற இடையனாய்
பொய்யிஞ்ஞெடு மெய்யும் ஆய்	பொய்யரான துர்யோதநாதிகள் பக்கலிலே பொய்யனாய் மெய்யரான பாண்டவர் பக்கலிலே மெய்யனாய்
காணிபேணும் மாணி ஆய்	(மூவடி) நிலத்தை ஆசைப்பட்ட ப்ரமசாரியாகி
கரந்துசென்ற கள்வனே !	(மஹாபலியின் யாக பூமியிலே) க்ருத்ரிமமாக எழுந்தருளின மாயனே !
உன்னை யார் மதிக்கவல்லார்!	உன்னை அளவிடக்கூடியவர்கள் யார் !

* * * எல்லாவற்றிற்கும் நிர்வாஹகனை நீ நித்யஸூரி போக்யமான உன்வடிவை ஆச்ரிதர்க்காக தேவஸஜாதீயமாக்கியும் கோபாலஸஜாதீயமாக்கியும் அவதரித்துப் பண்ணின ஆச்சரியசேஷ்டைகளே யார் அறியவல்லார் என்கிறார். வாமநாவதாரமும் க்ருஷ்ணாவதாரமும் ஒருபுண்ட ஒத்திருக்கையாலே அவ்விரண்டவதாரங்களையும் சேர்த்து அநுஸந்திக்கின்றரென்ப.

ப்ரஜைகளை அதிகப்படுத்தி லீலாவிபூதியை விஸ்தாரமாக்கவேணுமென்ற திருவுள்ளத்தினால் ஸ்த்ரீஜாதியையும் புருஷஜாதியையும் ஏராளமாகப் படைத்து அவற்றிலே தான் அந்தராத்மாவாய் நின்று பரஸ்பர ஸம்பந்தத்தை உண்டு பண்ணி இவ்வகையாலே நிர்வஹிக்கின்றான் என்ற கருத்து ஆணிஞ்ஞெடு பெண்ணுமாகி என்பதற்கு. ஆனால் ஒன்றுக்குமுதவாத நபும்ஸகஜாதிக்கு எம்பெருமான் நிர்வாஹகனல்லனேவென்ன, அதற்கும் இவனே நிர்வாஹகனென்கிறது அல்லவோடு என்று. அல்ல=ஸ்த்ரீஜாதியும் புருஷஜாதியுமாகாதவை; அவையாவன - நபும்ஸகவ்யக்திகள். நல்லவாய்=நல்ல பதார்த்தங்களாகையாவதென்னென்னில்; பகவத்கீதையில் பத்தாவது அத்யாயத்தில் "யத்யத்விபூதிமத்ஸத்த்வம் ஸ்ரீமதூர்ஜிதமேவ வா | தத்ததேவாவகச்ச மம தேஜோம்சஸம்பவம்" அதாவது - எந்தஎந்த வஸ்துவானது செல்வமிக்கதாயும் அழகுமிக்கதாயும் நற்காரியங்களில் முயற்சிமிக்கதாயும் விளங்குகின்றதோ அவ்வப்பொருளெல்லாம் எனது தேஜஸ்ஸின் ஏகதேசத்தினுடைய இயைபுகொண்டதென அர்ஜுநனே! நீ தெரிந்துகொள்! என்று அருளிச்செய்தபடி உலகத்திலுள்ள ஸர்வபதார்த்தங்களிலும் சிறப்புப்பெற்றவஸ்துக்களில் எம்பெருமானுடைய தோற்றம் மிக்கவீறுபெற்றிருக்குமென்கை. இதனால், ஹேயமானவஸ்துக்களில் எம்பெருமானுடைய தோற்றம் இல்லையென்றபடியல்ல; எல்லாவற்றிலும் ஸாமாந்யமாகத் தோற்றமிருந்தாலும் சிறந்தவஸ்துக்களில் தோற்றம் அதிசயித்திருக்குமென்க.

ஒன்றலாத மாயையாய்=ஒன்றலாத - ஒன்று அல்லாத; பலவாகப் பரிணமிக்கக் கூடிய என்றபடி. எல்லாப்பொருளுமாய்க்கொண்டு பரிணமிக்கக்கூடியது ப்ரக்ருதிதத்வமேயாகையாலும், "ஸாயாத்மகம் ஸுகம் தைத்யா" என்றபடி மாயையென்று ப்ரக்ருதித்வத்துக்குப் பேரா

கையாலும், ஸர்வவஸ்துவாயும் பரிணமிக்கவல்ல ப்ரக்ருதித்வத்துக்கு நியாமகனானவனே! என்று பொருளுரைக்கப்பட்டது. அன்றியே, மாயை என்று ஆச்சர்யத்தையும் சொல்லுவதுண்டாதலால், ஒன்றிரண்டு வஸ்துக்களுக்குமாத்திரம் நிர்வாஹகனுகையன்றிக்கே ஸகலபதார்த்தங்களையும் சேதநனுடைய கர்மாநுகூலமாக நிர்வஹிக்கவல்ல ஆச்சர்யத்தையுடையவனே! என்றதாகவுமாம்.

ஸங்கல்பத்தினுலேயே ஸகலத்தையும் நிர்வஹிக்கவல்லனு யிருக்கச்செய்தேயும் ஸாது பரித்ராணத்துக்காக அஸாதாரணவிக்ரஹத்தை மொவாது ஸ்வீகரித்து, தன்னைப்பேணுமல் பசுக்களைப் பேணினனென்கிறது பூணிபேணுமாயனுகி என்று. அப்படி ஸ்ரீக்ருஷ்ணனுய்த் திருவவதரித்து ரக்ஷித்தருளுங்காலத்துப் பொய்யராயிருந்த துரியோதநாதிகளுக்குத்தானும் பொய்யனேயாகவும், மெய்யராயிருந்த பாண்டவர்கட்குத்தானும் மெய்யனேயாகவு மிருக்கிறபடியைச் சொல்லுகிறது பொய்யிலேடு மெய்யுமாய் என்று. (உசு)

778 விண்கடந்தசோதியாய் விளங்குஞானமூர்த்தியாய் *
பண்கடந்ததேசமேவு பாவநாசநாதனே *
எண்கடந்தயோகினேடு இரந்துசென்றுமாணியாய் *
மண்கடந்தவண்ணநின்னை யார்மதிக்கவல்லரே. (உஎ)

விண் கடந்த சோதியாய்!	விபுவான மூலப்ரக்ருதி உனக் குள்ளேயாம்படி அதனை அதிக ரமித்த ஸ்வயம்ப்ரகாசனே!	எண் கடந்த யோகினேடு	எண்ண முடியாத ஆச்சர்ய சக் தியோடு கூடினவனுய்க் கொண்டு
விளங்கு	ஸ்வயம்ப்ரகாசனுன	மாணி ஆய்	வாமகனுய்
ஞானம்	ஜீவாத்மாவை	இரந்து சென்று	(மூவடிமண்வேணுமென்று) யாசித்துச் சென்று
மூர்த்தியாய்	சரீரமாக வுடையவனே!	மண் கடந்த வண்ணம்	பூமியை யளந்துகொண்ட விதத்தையும்
பண் கடந்த தேசம் மேவு	வேதங்களாலும் அளவிடமுடி யாத பரமபதத்திலே நித்யவாஸ ம் பண்ணுமவனுய்	நின்னை	உன்னையும்
பாவநாச நாதனே!	ஸேவ்யப்ரத்யநீகனான ஸர்வேச் வரனே!	ஆர் மதிக்க வல்லர்	அளவிடக்கூடியவர்கள் யார்?

* * * "விண்கடந்தசோதியாய்!" என்றது - விபுவான மூலப்ரக்ருதியானது உனக்குள்ளேயாம்படியான ஸ்வரூபவைபவத்தையுடைய ஸ்வயம்ப்ரகாச வஸ்துவானவனே, என்றபடி. விண் என்றால் ஆகாசமென்று பொருளாமே யல்லது மூலப்ரக்ருதியென்று பொருளாகக்கூடுமோவென்னில்; ஆப்; ப்ருஹதாரண்யக உபநிஷத்திலே (நி - அ - எ) "ஸூகாஸை ஏதஸ்ய வை தாம்ய" என்றவிடத்தில் ஆகாசசப்தத்தை மூலப்ரக்ருதிபரமாக வியாக்கியானித்துள்ளார்கள்; "சுர ரறிவருநிலை விண்" என்று திருவாய்மொழியிலும் விண் என்று மூலப்ரக்ருதியை அருளிச்செய்திருக்கிறார். "விளங்கு ஞான மூர்த்தியாய்" என்றது - ஸ்வயம்ப்ரகாசமாய் ஜ்ஞாநசப்தவாச்யமான ஆத்மஸ்வரூபத்தை சரீரமாகவுடையவனே! என்றபடி.

ஆக, முதலடியிலுள்ள இரண்டு ஸம்போதநங்களாலும் எம்பெருமானுக்கு "ஸுணோ ணீயா நுஹதோ உஹீயாநு" என்று சொல்லப்பட்டுள்ள விபுத்வ ஸூக்ஷ்மத்வங்கள் சொல்லப் பட்டனவென்க. "விண்கடந்த சோதியாய்" என்ற முதல் ஸம்போதநத்தில் "உஹதோ உஹீ யாநு" என்றுமிடம் சொல்லுகிறது; விளங்கு ஞானமூர்த்தியாய்" என்ற இரண்டாவது ஸம் போதநத்தில் "ஸுணோணீயாநு" என்றுமிடம் சொல்லுகிறது.

[பண்கடந்த இத்யாதி.] பண் என்று ஸ்வரத்துக்குப் பேராகிலும் இங்கு ஸ்வரப்ரதாநமான வேதத்தை லக்ஷணையால் குறிக்கும். பண்கடந்த=வேதத்தை அதிக்ரமித்த - வேதத்திற்கு விஷயமாகாத என்கை; வேதங்களாலே பரிச்சேதிக்க முடியாத அப்ராக்ருத ஸ்தாந

மான பரம்பதத்திலே நித்யவாஸம் செய்தருள்கின்ற பரமபுருஷனே!. பாவநாசநாதன் - வட மொழித்தொடர். ஆக இரண்டு அடிகளும் ஸம்போதநமாய் முடிந்தன; இனி பின்னடிகளில் உலகளந்த சரிதம் அளவிட முடியாத ஒப்பற்றதொரு சரிதமென்கிறார். யோகு = யொமः என்ற வடசொல் 'யோகு' எனக் குறைந்து கிடக்கிறது. யொமமென்று கல்யாண குணத்துக்கும் உபாயத்துக்கும் பெயர். இங்கு அவ்விரண்டுபொருளும் ஆகலாம். யாசகவேஷத்தோடு எழுந்தருளச்செய்தேயும் மற்றபடி கல்யாணகுணயோகத்தில் குறையில்லை யென்கை. மஹாபலியின் செருக்கை யடக்குவதற்கு நல்ல உபாயமறிந்து செய்து செயலாதலால் உபாயப்பொருளும் பொருந்துமென்க. (உஎ)

779 படைத்தபாரிடந்தளந்து அதுண்டுமிழ்ந்துபௌவநீர் *
படைத்தடைத்ததிற்கிடந்து முன்கடந்தபெற்றியோய்! *
மிடைத்தமாலிமாலிமான் விலங்குகாலனூர்புக *
படைக்கலம்விடுத்த பல்படைத்தடக்கைமாயனே. (உஅ)

பௌவம் நீர்	(அண்டங்களுக்குக் காரண மான) ஏகார்ணவத்தை
பண்டத்து	ஸ்ருஷ்டித்து,
படைத்த	(பிறகு, அண்டப்ரஹ்மஸ்ருஷ்டி பூர்வமாக) ஸ்ருஷ்டிக்கப்பட்ட
பார்	பூமியை
இடந்து	(ஸ்ரீவராஹமூர்த்தியாய் அண்ட பித்தியில் கின்றும்) ஒட்டுவிடுத் தெடுத்து
அளந்து	(த்ரிவிக்ரமனாய்) அளந்து
உண்டு	(ப்ரளயகாலத்தில்) திருவயிற்றி ல் வைத்துகோக்கி
உமிழ்ந்து	(ப்ரளயங்கழிந்த பின்பு) வெளி ப்படுத்தியும்,
பௌவம் நீர்	(இலங்கைக்கு அழகான) கடலை
அடைத்து	சேதுகட்டித் தூர்த்து.
முன் அதில் கிடந்து	முன்பொருகால் அக்கடலிற் கண்வளர்ந்தருளி,
கடைந்த	(ஒருகால் அமுதமெடுப்பதற்காக அதனைக்) கடைந்தருளின
பெற்றி யோய்!	(இப்படிப்பட்ட அளவற்ற பெ ருமைகளையுடையவனே!
மிடைத்த	செருக்கி வந்த
மாலி	மாலி என்கிற ராக்ஷஸ னென்ன
விலங்கு மான் மாலி	அதிக்ஷுத்ரனான ஸுமாலி யென்னும் ராக்ஷஸனென்ன இவர்கள்
காலன் ஊர் புக	யமலோகம் போய்ச் சேரும்படி யாக
படைக்கலம் விடுத்த	ஆயுதங்களை ப்ரயோகித்தருளி ன
பல் படை தட கை மாயனே!	பலவகைப்பட்ட திவ்யாயுதங்க ளைவிசாலமான திருக்கையிலே யுடையனான பெருமானே!

(உன்னையார் மதிக்கவல்லர்? என்று கீழ்ப்பாட்டின் க்ரியையைக் கூட்டிக்கொள்வது)

* * * "மாலிமான்" என்றதை 'மான் மாலி' என்று மாற்றி அந்வயித்து ஸுமாலி யென்று பொருள்கொள்ளப்பட்டது. 'ஸு' என்பதன் ஸ்தாநத்தில் மான் என்றது மஹாந் என்பதன் விகாரம். அன்றி, 'மாலியென்றான்' என்பவனை 'மாலி மான்' எனக் கூறிக்கிடப்பதாகவுங் கொள்ளலாம். அங்ஙனுமன்றி, மாலி, மாலி, மான் விலங்கு - மாலியென்ன, சுபாலி யென்ன, மாரீச மாயாமிருகமென்ன இவர்கள் காலனூர்புக - என்று முரைக்கலாம். விலங்க என்றது மாலி சுமாலிகட்கு அடைமொழியானபோது, அதிக்ஷுத்ரர்களான என்று பொருள் கொள்க. இப்பாட்டில் வினைமுற்று இல்லையாகிலும் கீழ்ப்பாட்டோடேயாவது மேற் பாட்டோடேயாவது கூட்டிக்கொள்ளலாம். (உஅ)

780 பரத்திலும்பரத்தையாதி பௌவநீரணைக்கிடந்து *
உரத்திலுமொருத்திதன்னை வைத்துகந்ததன்றியும் *
நரத்திலும்பிறத்திகாத ஞானமூர்த்தியாயினாய் *
ஒருத்தரும்நினைதுதன்மை யின்னதென்னவல்லரே. (உக)

நாத !	ஸ்வாமிந் !
ஞானம் மூர்த்தி ஆயினாய்	ஜ்ஞாநஸ்வரூபியானவனே !
பரத்திலும் பரத்தை ஆதி	பராத்பரனுமிராநின்றாய்,
ஒருத்தி தன்னை	ஒப்பற்ற பெரிய பிராட்டியாரை
உரத்தில்	திருமார்பிலே
வைத்து	பிரியாமல் அணையவைத்து
உகந்து	மகிழ்ந்து
பௌவம் நீர் அணை கிடந்து	திருப்பாற்கடலாகிற சயநத்திலே கண்வளர்ந்தருளி
அது அன்றியும்	இப்படிகளாலே ஆச்ரித ரக்ஷணம் செய்வது மல்லாமல்
கரத்திலும்	ஹேயமான மானிட சாதியிலும்
பிறத்தி	வந்து பிறக்கின்றாய்;
நினது தன்மை	உன்னுடைய அநுக்ரஹ ஸ்வபாவத்தை
ஒருத்தரும்	யாராகிலும்
இன்னது என்ன வல்லரே ?	இப்படிப்பட்டதென்று பரிச்சேதிக்க ஸமர்த்தர்களோ ? (யாருமில்லை.)

* * * மேன்மை எல்லைகாண முடியாதாப்போலே நீர்மையும் எல்லைகாண வொண்ணுதபடி யிருக்குமாற்றை அநுபவித்து ஈடுபடுகிறார். க்ஷீரஸாகரசாயித்வமும் லக்ஷ்மீபதித்வமும் பராத்பரத்வப்ரகாசகமாதலால் "பரத்திலும் பரத்தையாதி" என்றதற்கு உபபாதகமாக அவ்விரண்டையும் அருளிச்செய்தார். பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியானத்திற்கு அரும்பதவுரை வரைந்த வொருவர்—"பரத்தையாதி யென்றது—'பரத்தையாகி' என்று பாடமாக வேணுமென்று கண்டுகொள்வது" என்றெழுதிவைத்தது மறுக்கத்தக்கது. ஆதி என்பது 'ஆ' என்னும் வினைப்பகுதியடியாப்பிறந்த நிகழ்கால முன்னிலை யொருமை வினைமுற்று என்பதை அவர் அறிந்திலர். ஆதி=ஆகின்றாய் என்றபடி. பரத்தை=முன்னிலை; படர்க்கையில் பரத்தன் என்றும். மேற்பட்ட வஸ்துக்களிலும் மேற்பட்ட வஸ்துவாக இராநின்ற யென்கை. கரத்திலும் பிறத்தி=ராமகிருஷ்ணதிரூபேண மனுஷ்ய ஜாதியிலும் பிறக்கின்ற யென்கை. நினது=நினது என்றதன் நீட்டல். (உக)

781 வானகமும்மண்ணகமும் வெற்புமேழ்கடல்களும் *
போனகஞ்செய்தாலிலைத்துயின்ற புண்டரீகனே *
தேனகஞ்செய்தண்ணறு மலர்த்துழாய்நன்மாலையாய் *
கூனகம்புகத்தெறித்த கொற்றவில்லியல்லையே. (உய)

வானகமும்	வானுலகத்திலுள்ளாரையும்
மண்ணகமும்	மண்ணுலகத்திலுள்ளாரையும்
ஏழ் வெற்பும்	ஸப்தகுலபர்வதங்களையும்
ஏழ்கடல்களும்	ஸப்தஸாகரங்களையும்
போனகம் செய்து	அமுதுசெய்து
ஆல் இலை துயின்ற	ஆலந்தளிரிலே கண்வளர்ந்தருளின
புண்டரீகனே !	தாமரை போன்ற அவயவங்களையுடைய பெருமானே !
தேன் செய் அகம்	தேன் நிறைந்த உட்புறத்தையுடைத்தாய்
தண்	குளிர்ந்ததாய்
நறு	பரிமளிதமான
மலர் துழாய்	திருத்துழாயை
நல் மாலையாய் !	நல்லமாலையாக அணிந்தவனே! (நீ;
கூன்	(கூனியினுடைய) கூனனது
அகம் புக	உள்ளே யொடுங்கும்படி
தெறித்த	விட்டெறிந்த
கொற்றம் வில்லி அல்லையே	வெற்றி வில்லை யுடையவனன்றே.

782 காலநேமிகாலனே கணக்கிலாதகீர்த்தியாய் *
ஞாலமேழுமுண்டுபண்டு ஓர்பாலனையபண்பனே *
வேலைவேவவில்வளைத்த வேல்சினத்தவீர * நின்
பாலராயபத்தர்சித்தம் முத்திசெய்யுமூர்த்தியே. (உக)

கால நேமி காலனே !	காலநேமியென்னும் அஸுரனுக்கு யமனானவனே!
கணக்கு இலாத கீர்த்தியாய் !	எண்ணிறந்த புகழையுடையவனே !
பண்டு	முன்பொருகால் (ப்ரளய காலத்திலே)
ஞாலம் ஏழும் உண்டு	ஏழுலகங்களையும் அமுது செய்து

ஓர் பாலன் ஆய பண்பனே!	ஒரு சிறுகுழந்தைவடிவமெடுத்த ஆச்சர்யபூதனே !	நின்பாலர் ஆய பத்தர் சித்தம்	உன்பக்கல் அன்புபூண்டவர்களின் சித்தத்தின்படி
• வேலை வேவ வில் வளைத்த வெல் சினத்த வீர !	கடல்நீர் வெந்துபோம்படி வில்லை வளைத்த, எதிரிகளை வென்றேவிடும்படியான சீற்றத்தையுடைய வீரனே !	முத்தி செய்யும்	(அவர்கட்கு) மோக்ஷம் தந்தருள்கிற
		மூர்த்தியே !	ஸ்வாமியே !

* * *—காலநேமி என்பவன் இராவணனுடைய மாதுலன்; இவன், தாராகாசுர யுத்தத்தில் எம்பெருமானால் கொல்லப்பட்டவன். வேலை—கடற்கரைக்குப் பெயர்; இலக்கணையால் கடல்நீரைக் குறிக்கும்.

வெல்சினத்தவீர!=சிலருடைய கோபம் காலக்ரமத்தில் தன்னடையே சாந்தமாவதுண்டு; அங்ஙனன்றியே ஸமுத்ரராஜன்மீது பெருமாளுக்குண்டான கோபம் வெல்சினமாய்த்து; வென்றுலன்றித் தீராத கோபமென்றபடி. நின்பாலராயபத்தர்=நின் பால் அர்-உன்னிடத்து உள்ளவர்கள்: உன் பாதச்சாயையிலே ஒதுங்கிவர்த்திக்கிற பக்தர்கள் என்கை. முத்திசெய்தல்-வேறுவிஷயங்களில் ஆசையற்றதாகச் செய்தல். மூர்த்தி-ஸ்வாமி; திவ்யமங்கள விக்ரஹமாகவுமாம்; வடிவழகைக் காட்டித் தன்பக்கல் ஆழங்காற் படுத்திக் கொள்ளுமவனே! என்றவாறு. (ரு-க)

783 குரக்கினப்படைகொடு குரைகடலின்மீதுபோய் *
அரக்கரங்கரங்க வெஞ்சரந்துரந்தவாதிநீ *
இரக்கமண்கொடுத்தவற்கு இருக்கவொன்றுமின்றியே *
பரக்கவைத்தளந்துகொண்ட பற்பபாதனல்லையே. (ரு-உ)

குரங்கு இனம் படைகொடு	வானரர்களின் திரளான சேனையைத்துணைகொண்டு	மண் கொடுத்தவற்கு	உனக்கு மூவடிநிலம் தானங் கொடுத்த மஹாபலிக்கு
குரை கடலின் மீதுபோய்,	கோஷிக்கின்ற கடலில் (அணை கட்டி) எழுந்தருளி	இருக்க	குடியிருப்பதற்கு
அங்கு	அவ்விலங்கையிலுள்ள	ஒன்றும் இன்றியே	ஒருசாண் நிலமும்மிகாதபடி
அரக்கர்	ராவணாதி ராக்ஷஸர்கள்	பரக்க வைத்து	(திருவடியை) மிகவும் விஸ்தாரமாக வைத்து
அரங்க	அழியும்படி	அளந்து கொண்ட	(மூவுலகங்களையும்) ஸ்வாதீநப்படுத்திக்கொண்ட
வெம் சரம்	தீக்ஷ்ணமான அம்புகளை	பற்ப பாதன் அல்லையே	தாமரைபோன்ற திருவடிகளையுடைய பெருமானும் நீயே காண்.
துரந்த	அவர்கள்மேல் பிரயோகித்த		
ஆகி	வீரர்களில் தலைவன்		
நீ	(எம்பெருமானே;) நீயே காண்;		
இரக்க	நீ வாமநனாய்ச் சென்று யாசிக்க		

* * *—யாசகவேஷத்தைப் பூண்டுகொண்டு சென்று யாசிப்பதும், பிறகு யாசகங் கொடுத்தவனுக்குக் குடியிருக்க ஒரு அடிநிலமும் மிகாதபடி ஸர்வஸ்வாபஹாரம் பண்ணுவதும் உனக்குத்தான் வற்றிருக்கு மென்கிறார்போலும்.

"இரக்கமொன்று மின்றியே" என்றே பெரும்பாலும் பாடம் வழங்கும்; பெரியவாச்சான்பிள்ளை யருளிச்செய்த வியாக்கியானத்தில் "பூமியில் அவனுக்கு ஒரு பதங்யாஸமும் சேஷியாதபடி" என்றருளிச்செய்திருத்தலால் "இருக்க ஒன்று மின்றியே" என்று பாடமிருந்திருக்க வேணுமென்று பெரியோர் கூறுவர். "இரக்கமொன்றுமின்றியே" என்ற பாடத்திலும் வியாக்கியான வாக்கியத்தைப் பொருந்தவிடலாமென்பர். இதில் ஆக்ரஹமுடையோமல்லோம். (ரு-உ)

784 மின்னிறத்தெயிற்றரக்கன்வீழ வெஞ்சரந்துரந்து *
பின்னவற்கருள்புரிந்து அரசளித்தபெற்றியோய் *
கன்னிறத்தொரின்சொலேழை பின்னைகேள்வமன்னுசீர் *
பொன்னிறத்தவண்ணனை புண்டரீகனல்லையே. (ரு-ரு)

மின் நிறத்து எயிறு அரக்கன்	மின்னல் நிறத்தையொத்த பற் களையுடையனை இராவணன்	ஓர் இன் சொல்	ஒப்பற்ற மதுரமான வாக்கை யுடையளாய்
வீழ	மாளும்படி	ஏழை	உன்பக்கல் சாபல்யமுடைய வளான
வெம் சரம்	கொடிய அம்புகளை		
துரந்து	அவன் மேல் பிரயோகித்து (அவனை முடித்தருளி)	பின்னை	நப்பின்னைப் பிராட்டிக்கு
		கேள்வ!	நாயகனானவனே!
பின்னவற்கு	அவனது தம்பியான விபீடண னுக்கு	மன்னு சீர்	நித்யஸித்த கல்யாண குணங்க ளையுடையனாய்
அருள் புரிந்து	க்ருபை செய்தருளி		
அரசு அளித்த	பட்டாபிஷேகம் செய்து வைத்த	பொன் நிறத்த வண்ணன் ஆய	பொன்போன்ற திவ்யமங்கள விக்ரஹத்தை யுடையனை
பெற்றியோய்!	பெருமானே!		
நல் நிறத்து	நல்ல நிறத்தையுடையளாய்	புண்டரீகன் அல்லையே	புண்டரீகாக்ஷனென்பவன் நீயே காண்.

* * *—இராவணனைக் கொன்றொழித்து ஸ்ரீ விபீஷணழ்வானை இலங்கையரசனாக்கி அருள்புரிந்தவாற்றைச் சொல்லிப் புகழ்கிறார் முன்னடிகளில். இராவணன் பார்க்கும்போதே பயங்கரமானவடிவுடையன் என்பதுதோன்ற மின்னிறத்தெயிற்றரக்கன் என்கிறார். வீழ - விழ என்பதன் நீட்டல். பின்னவன் - தம்பி. பெற்றி - பெருமை. (நூநூ)

785 ஆதியாதியாதிநீ ஓரண்டமாதியாதலால் *
சோதியாதசோதிநீ அதுண்மையில்விளங்கிலை *
வேதமாகிவேள்வியாகி விண்ணிலேடுமண்ணுமாய் *
ஆதியாகியாயனை மாயமென்னமாயமே. (நூச)

ஆதி ஆதி ஆதி நீ	மூன்று விதமான காரணமும் நீயே யாகிறாய்:	விளக்கிலை	(வேறொன்றுலன்றிக்கே) தானே நீ விளங்குகின்றாய்;
ஒரு அண்டம் ஆதி	அண்டத்துக்குட்பட்ட ஸகல பதார்த்தங்களுக்கும் நிர்வாஹகனு மாகிறாய்;	வேதம் ஆகி	வேதங்கட்கு நிர்வாஹகனாய்
		வேள்வி ஆகி	யஜ்ஞங்களாலே ஆராத்யனாய்
		விண்ணிலேடு மண்ணும் ஆய்	உபய விபூதிக்கும் நியாமகனாய்
ஆதலால்	இப்படியிருக்கையாலே		
சோதியாத சோதி நீ	பரீக்ஷிக்கவேண்டாத பரம்பொருள் நீயேயாகிறாய்;	ஆதி ஆதி	இப்படி ஸர்வகாரண பூதனாயிருந்துவைத்து
அது உண்மையில்	அந்த சோதியானது ப்ரமாணஸித்தமாகையாலே	ஆயன் ஆய மாயம்	இடையனாய்ப்பிறந்தமாயம்
		என்ன மாயம்!	என்ன ஆச்சரியமோதான்.

* * *—உலகத்தில் ஒரு காரியம் பிறக்கவேணுமானால் அதற்கு மூன்று வகையான காரணங்கள் உண்டு: உபாதானகாரணம், ஸஹகாரிகாரணம், நிமித்தகாரணம். குடம் என்கிற ஒருகாரியம் பிறக்கவேண்டுமிடத்து மண் உபாதான காரணமென்றும், சக்கரம் தடி தண்ணீர் முதலியவை ஸஹகாரிகாரணமென்றும், குயவன் காலம் அத்ருஷ்டம் முதலியவை நிமித்த காரணமென்றும் கொள்ளப்படும்; அப்படியே ஜகத்தாகிற காரியத்துக்கு மூவகைக்காரணங் கள் அமையவேண்டுமே, அவற்றில் எம்பெருமான் எவ்வகைக் காரணமாகிறானென்றால், மூவ கைக்காரணமும் இவனொருவனேயென்கின்றார் ஆதியாதியாதிநீ என்று. ஆதி என்றது காரணம் என்றபடி. ஆதிசப்தத்தை மூன்றுதடவைப் பிரயோகித்ததனால் மூவகைக்காரணமும் நீயே என்றதாகிறது.

ஓரண்டமாதி=அண்டமென்றது ஜாத்யேக வசனமாகக்கொள்ளத்தக்கது. அண்டராசி களை ஸ்ருஷ்டித்து அவற்றுள் பிரமன் முதல் எறும்பளவான ஸகல பதார்த்தங்களையும் ஸ்ருஷ் டித்து அவற்றுக்கு அந்தர்யாமியாயிருக்கிறாய் என்றபடி. இவ்விடத்தில் ஆதி என்றது-ஆகின் றாய் என்னும் பொருளையுடையதான நிகழ்கால முன்னிலையொருமைவினைமுற்று. ஆ-பகுதி; தி - விகுதி.

ஆதலால் சோதியாத சோதி நீ = கார்யவர்க்கங்களிலே ஒருவனுயிருந்தால் நீ பரஞ்சோதியா அன்று என்று சோதித்துப் பார்க்கவேண்டியதாகும்; அப்படியன்றிக்கே ஸகலஜகத்காரண பூதனாக அமைந்தாயாகையினால் ஜ்யோதிச்சப்த வாச்யன் நீ தான் என்று எளிதாக நிர்ணயிக்க லாயிராநின்றது என்றபடி. ஜகத்காரணபூதமான பொருள் எதுவோ அதுதான் உபாஸிக்கத் தகுந்ததென்றும் அதுதான் பரஞ்சோதியென்றும் வேதாந்தங்களிற் கூறப்பட்டிருத்தலால் உன்னைப்பற்றி சோதிக்கவேண்டிய வருத்தமில்லையென்கிறார். "நாராயணவஜ்யோதிः" என்றது காண்க.

786 அம்புலாவுமீனுமாகி ஆமையாகியாழியார் *
தம்பிரானுமாகி மிக்கதன்புமிக்கதன்றியும் *
கொம்பராவுநுண்மருங்குல் ஆயர்மாதர்பிள்ளையாய் *
எம்பிரானுமாயவண்ணம் என்கொலோவெம்மீசனே. (ரூடு)

எம் ஈசனே	எம்பெருமானே! (தேவரீர்)	அன்றியும்	இதற்குமேலும்
ஆழியார் தம் பிரானும் ஆகி	திருவாழியாழ்வானையுடைய பரமபுருஷனுமிருந்து வைத்து	கொம்பு அராவு நுண்மருங்குல் ஆயர் மாதர் பிள்ளை ஆய்	வஞ்சிக்கொம்பு போலும் அரவு போலும் நுட்பமான இடையை யுடைய இடைப்பெண்ணுக்குப் பிள்ளையாய்ப் பிறந்து
அம்பு உலாவும் மீனும் ஆகி	ஜலத்தில் உலாவுகின்ற மீனுகியும்		
ஆமை ஆகி	ஆமையாகியும் (அவதரித்து)	எம்பிரானும் ஆய வண்ணம் என் கொல்	எம்பிரானுமாக நின்ற நிலையும் என்ன அற்புதம்!
மிக்கது	அதிசயத்தை அடைந்தருளிற்று		
அன்பு மிக்கது	மிகுந்த அன்பையும் காட்டி யருளிற்று;		

***"ஆழியார்தம் பிரானுகியும் அம்புலாவுமீனுமாகி ஆமையாகி" என்று அன்வயித்துக்கொள்ளவேணு மென்பர். சக்கரத்தாழ்வாரை அடக்கி ஆளுமவனென்றால் பரத்வத்திற்கு அதனில் மேற்பட்ட லக்ஷணமில்லை; சக்கரக்கையன் என்பதும் பராத்பரன் என்பதும் பரியாயமாகக் கொள்ளத்தக்கவை; ஆகவே, "ஆழியார்தம்பிரானுகியும்" என்றது—பராத்பரனு யிருந்துவைத்தும் என்றபடியாம்- பரத்வத்தைப் பேணுமல் மீனுயும் ஆமையாயும் பிறந்தவாறு என்கொல்? என்கிறார். மிக்கது = இப்படி கூஷ்மாண்டயோனிகளிற் பிறந்ததைப் பாவிகள் தாழ்வாக நினைத்தாலும் ஞானிகள் "பலபிறப்பாயொளிவரு முழுநலம்" என்று-பிறக்கப் பிறக்க ஒளிவளர்வதாக அருளிச்செய்வராகையாலே அப்படியே இவருமருளிச்செய்கிறார். மிக்கது-தாழ்ந்து பிறந்தாலும் மேன்மையே விளங்க நின்றீர் என்கை. இது மூன்னிலைப்பொருளில் வந்த படர்க்கை; "ஹவாநு ஹவஜி" என்று வடதூலார் பிரயோகிப்பதுபோல: இப்பிரயோகம் கௌரவாதி சயத்தைக்காட்டும். அன்புமிக்கது என்ற விடத்தும் இங்ஙனமே. தாழப்பிறந்தாகிலும் அடியார்களின் காரியத்தைக் குறையறச் செய்துமுடிக்க வேணுமென்னும் அன்பிலால் இப்படி பிறந்தாய் என்று கருத்து. (ரூடு)

787 ஆடகத்தபூண்முலை அசோதையாய்ச்சிபிள்ளையாய் *
சாடுதைத்தோர்புள்ளதாவி கள்ளதாயபேய்மகள் *
வீடவைத்தவெய்யகொங்கை ஐயபாலமுதுசெய்து *
ஆடகக்கைமார்வாய் அமுதமுண்டதென்கொலோ. (ரூசு)

ஆடகத்த பூண் முலை	ஸ்வர்ணமயமான ஆபரணங்களை யணிந்த ஸ்தனங்களை யுடையளான	சாடு உதைத்து	சகடாசுரனைத் திருவடிகளால் உதைத்தொழித்து
அசோதை ஆய்ச்சி பிள்ளை ஆய்	யசோதை யென்னும் கோபிகைக்கு புத்திரனைப் பிறந்தருளி	ஓர் புள்ளது ஆவி கள்ள தாயபேய் மகள்	சிறுகுழந்தைகளை அணுகப் பண்ணுவதொரு பறவையின் வடிவுகொண்டு வந்தக்ருத்ரிம மாதாவாகிய பூதனையானவள்

வீட	நீ உயிர் விட்டு மாளும்படி
வைத்த	உன் திருப்பவளத்திலே வைத்த
வெய்ய கொங்கை	(விஷம் தீற்றின) கொடிய முலை யிலுள்ள
ஐய பால்	ஸூக்ஷ்மமான பாலை
அமுதுசெய்து	உறிஞ்சியுண்டு
ஆடகம் கை மாதர்	பொன்வளைகள் அணிந்த கை களையுடைய ஸ்த்ரீகளினுடைய
வாய் அமுதம் உண்டது	அதரத்திலுள்ள அமுதத்தைப் பருகினது
என் கொல்	என்ன விந்தகம்!

* * * ஆடகக்கை மாதர்வா யமுதமுண்டது என்கொல்?=“உன்னையுமொக்கலையிற் கொண்டு தமில்மருவி உன்னெடுதங்கள் கருத்தாயின செய்துவருங் கன்னியரும் மகிழ” என்றபடி திருவாய்ப்பாடியிலுள்ள கன்னிகைகள் இவனை யிடுப்பிலெடுத்துக்கொண்டு தங்கள் தங்கள் மனைகளிலேகொண்டுபோக, யௌவநதசையைப் பரிக்ரஹித்து விந்தகனுக்கலந்து அவர்களது வாயமுதத்தை உண்பன்; அதனைச் சொல்லுகிறார். ஆடகக்கைமாதர் என்றது - பொன்வளைகளாலே அலங்கரிக்கப்பட்ட கையையுடைய பெண்கள் என்றபடி. (ஆடகம் என்ற காரணச்சொல் காரியத்திற்கு இலக்கணையால் வாசகமாயிற்று.) கண்ணபிரான் பிடிக்குங் கையென்றும், கண்ணபிரான் அணைக்குங் கையென்றும் அலங்கரிப்பர்களாம். வாயமுதமுண்டது என்கொல்!=பூதனைபக்கல் உண்ட விஷத்திற்கு இவ்வமுதம் பரிஹாரமோ? என்றவாறு. (நூசு)

788 காய்த்தநீள்விளங்கனியுதிர்த்து எதிர்ந்தபூங்குருந்தம்
சாய்த்து * மாபிளந்தகைத்தலத்த கண்ணனென்பரால் *
ஆய்ச்சிபாலையுண்டுமண்ணையுண்டு வெண்ணெயுண்டு * பின்
பேய்ச்சிபாலையுண்டு பண்டோரேனமாயவாமனே. (நூஎ)

காய்ந்த நீள்	காய்கள் நிறைந்ததும் உயர்த்தியையுடையதுமான
விளங்கனி	(அஸுராவிஷ்டமான) விளா மரத்தின் கனிகளை
உதிர்த்து	உதிரச்செய்து (அவ்வசுரனைக் கொன்று)
எதிர்ந்த பூ குருந்தம்	எதிரிட்ட அழகிய குருந்த மரத் திலுள்ள அசுரனை
சாய்த்து	முடித்து
மா பிளந்த கைத் தலத்த	குதிரை வடிவங்கொண்டு வந்த கேசியென்னுமசுரனை இரு துண்டமாகப் பிளந்த
கண்ணன் என்பர்	கண்ணன் என்று (உன்னை அறிவுடையார்) சொல்லுவர்கள்;
ஆய்ச்சி பாலை	யசோதைப் பிராட்டியினுடைய முலைப்பாலை
உண்டு	அமுது செய்து
வெண்ணெய் உண்டு	நவநீதத்தை அமுது செய்து
பேய்ச்சிபாலை உண்டு	பூதனையினுடைய முலைப்பாலை உண்டு
பின்	கல்பத்தின் முடிவில்
மண்ணை	பூமியை
உண்டு	திருவயிற்றிலே வைத்து
பண்டு	கல்பத்தின் ஆதியிலே
ஓர் ஏனம் ஆய	ஒப்பற்ற வராஹரூபியாய் அவதரித்த
வாமனே	வாமந மூர்த்தியே!

789 கடங்கலந்தவன்கரி மருப்பொசித்தோர்பொய்கைவாய் *
விடங்கலந்தபாம்பின்மேல் நடம்பயின்றநாதனே *
குடங்கலந்தகூத்தனைய கொண்டல்வண்ணதண்டுழாய் *
வடங்கலந்தமார்ப காலநேமிகாலனே. (நூஅ)

கடம் கலந்த வன் கரி	மதஜலத்தால் வ்யாப்தமான வலிய (குவலயாபீடமென்ற) யானையினுடைய
மருப்பு	கொம்பை
ஒசித்து	முறித்தெறிந்து,
ஓர் பொய்கை வாய்	ஓர் மடுவின் துறையிலே
விடம் கலந்த பாம்பின் மேல்	விஷமயனான காளியநாகத்தின் மேல்
நடம் பயின்ற	நர்த்தனம் செய்தருளின

நாதனே !	ஸ்வாமியே !,	தண் துழாய் வடம் கலந்த மாலே மார்ப	குளிர்ந்த திருத்துழாய் வடந் தோடு கூடன மாலேயை அணிந்த திருமார்பையுடையவனே !
குடம் கலந்த கூத்தன் ஆய	குடக்கூத்தாடின		
கொண்டல் வண்ண !	காளமேகம் போன்ற கண்ண பிரானே !	காலநேமி காலனே !	காலநேமி யென்னும் அசுரனுக்கு மிருத்யுவானவனே ! [என்று ஈடுபடுகிறார்.]

790 வேற்பெடுத்துவேலைநீர் கலக்கினையதன்றியும் *
வேற்பெடுத்துவேலைநீர் வரம்புகட்டிவேலைசூழ் *
வேற்பெடுத்தவிஞ்சிசூழ் இலங்கைகட்டழித்தநீ *
வேற்பெடுத்துமாரிகாத்த மேகவண்ணனல்லையே. (நூக)

வெற்பு எடுத்து	மந்தர பர்வதத்தைகீகொண்டு	வெற்பு எடுத்த இஞ்சி சூழ் இலங்கை கட்டு அழித்த நீ	மலையான மதிளாலே சூழப்பட்டதாயுமுள்ள லங்கையினுடைய அரணை அழியச்செய்த தேவரீர்
வேலை நீர்	கடல் நீரை		
கலக்கினாய்	கலங்கச் செய்தாய்;		
அது அன்றியும்	அதுவு மல்லாமல்		
வெற்பு எடுத்து மலைகளைக்கொண்டு			
வேலை நீர்	(தெற்குக்) கடலிலே	வெற்பு எடுத்து	கோவர்த்தனமலையைக் குடையாக வெடுத்து
வரம்பு கட்டி	திருவணையைக்கட்டி.		
வேலை சூழ்	கடலாலே (அகழாகச்) சூழப் பட்டதாயும்	மாரி காத்த மேகம் வண்ணன் அல்லையே	மழையைத் தடுத்த காளமேக நிபச்யாமரன்றே?

* * *—முதலடியில், வெற்பு=மந்தரமலை, இரண்டாமடியில், வெற்பு=பலவகை மலைகள்; கண்டமலைகளையுங்கொண்டன்றே அணைகட்டிற்று. மூன்றாமடியில், வெற்பு=கோவர்த்தனமலை.

791 ஆனேகாத்தோராணேகொன்று அதன்றியாயர்பிள்ளையாய் *
ஆனமேய்த்தியாநெயுண்டி அன்றுகுன்றமொன்றினால் *
ஆனேகாத்துமையரிக்கண் மாதராற்திறத்து * முன்
ஆனையன்றுசென்றடர்த்த மாயமென்னமாயமே. (சுவி)

ஆனே காத்து	கஜேந்த்ராழ்வானைக் காத்தருளி	குன்றம் ஒன்றினால்	கோவர்த்தனமென்ற ஒரு மலையைக்கொண்டு
அது அன்றி	அவ்வளவேயல்லாமல்	ஆனே காத்து	பசுக்களை ரக்ஷித்து
ஆயர் பிள்ளை ஆய்	கோபால குமாரனாகி	மை அரி கண் மாதராற் திறத்து	மையணிந்து செவ்வரி படர்ந்த கண்ணையுடையளான நப்பின்னைப் பிராட்டிக்காக
ஓர் ஆனை கொன்று	ஒரு வலியாபீடமென்ற ஒரு யானையைக்கொன்று		
ஆனை	பசுக்களை	அன்று	அக்காலத்திலே
மேய்த்தி	மேய்த்தருளா நின்றாய்;	முன் சென்று	அவளெதிரே நின்று
ஆ நெய்	பசுக்களின் நெய்யை	ஆனை அடர்த்த மாயம்	எருதுகளேழையும் கொன்ற ஆச்சரியம்
உண்டி	அமுது செய்யாநின்றாய்;	என்ன மாயம்	என்ன ஆச்சரியம்!:
அன்று	இந்திரன் விடாமழை பெய்வித்த காலத்தில்		

* * * இரண்டாமடியில், ஆனை=ஆன் ஐ; ஆன் - பசுஜாதி; ஐ - இரண்டாம் வேற்றுமையுருபு. மேய்த்தி, உண்டி=முன்னிலையொருமை வினைமுற்றுக்கள். மூன்றாமடியில் "ஆனைக்காத்து" என்று ஸந்தியாகவேண்டுமிடத்து 'ஆனேகாத்து' என இயல்பாக நின்றது எதுகை நயம் நோக்கியென்க. ஆ என்றும் ஆன் என்றும் கோக்களுக்குப் பெயர். (சுவி)

792 ஆயனாகியாயர்மங்கை வேயதோள்விரும்பினாய் *
ஆயநின்னையாவர்வல்லர் அம்பரத்தோடிம்பராய் *
மாய! மாய மாயைகொல் அதன்றி நீவகுத்தலும் *
மாயமாயமாக்கினாய் உன்மாயமுற்றுமாயமே. (சக)

மாய!	ஆச்சரியபூதனே!, (நீ)
ஆயன் ஆகி	இடைப்பிள்ளையாய்ப்பிறந்து
ஆயர் மங்கை	இடைப்பெண்ணை நப்பின்னைப்பிராட்டியினுடைய
வேய தோள்	வேய்போன்ற தோள்களை
விரும்பினாய்	விரும்பிப் புணர்ந்தாய்;
அம்பரத்தோடு இம்பராய்	மேலுலகத்தவர்களும் இவ்வுலகத்தவர்களுமாயுள்ளவர்களில்
யாவர் நின்னை ஆய வல்லர்	யார்தான் உன் ஸ்வரூபத்தை ஆராய்ந்து அறியவல்லார்? (யாரும் அறியகில்லார்.)
மாயம் மாயை கொல்!	(இப்படி அறியமாட்டாதது) பிரகிருதியைப்பற்றின அஜ்ஞாநத்தாலல்ல. (ஸர்வஜ்ஞராயிருந்தாலும் உன்ஸ்வரூபம் அறியமுடியாததே.)
அது அன்றி	அது அப்படியிருக்கட்டும்;
நீ	ஸர்வசக்தனான நீ
வகுத்தலும்	(உன்னை வணங்கி வழிபடுவதற்கு உறுப்பாகக் காரணகளை ப்ராதிகளை) உபகரித்திருக்கச் செய்தேயும்
மாய	(சேதநர்கள் அவற்றைக்கொண்டு நல்வழியில் புகாமல்) மாய்ந்து போக
(அந்த விநாசத்தை நீ ஸஹிக்கமாட்டாமல்)	
மாயம் ஆக்கினாய்	(இவர்களை ஸம்ஹரிப்பதே க்ஷேமமென்று) ப்ரக்ருத்யவஸ்தையிலே கொண்டு நிறுத்தினாய்;
உன் மாயம் முற்றும்	உன்னுடைய ஸங்கல்பமெல்லாம்
மாயமே	ஆச்சரியமாயிருக்கின்றன.

*** எம்பெருமானே! நீ உகந்தாரைத் தத்ஸஜாதீயனாய் வந்தவதரித்து ஸ்வரூபாநுரூபமாக ரக்ஷித்தருளும்படியையும், விமுகரான ஸம்ஸாரிகளை ஸங்கல்பத்தாலே கர்மாநுகூலமாக ரக்ஷித்தருளும்படியையும் அநுஸந்திக்கப்புகுந்தால் பரிச்சேதிக்கமுடியாத ஆச்சர்யமாயிருக்கிறதே! என்கிறார்.

[நீ வகுத்தலும் இத்யாதி.] ஸம்ஸாரிகளுடைய இழவைக்கண்டு இரங்குமவனான நீ அவர்கள் உன்னையடைந்து உய்வதற்காக அவர்கட்கு நீ காரணகளைபரங்களைக் கொடுத்திருக்கச்செய்தேயும் அவர்கள் அவற்றைக்கொண்டு நன்மை தேடிக்கொள்ளாமல் விஷயாந்தரப்ரவணராய் அழிந்துபோக, 'இவர்கட்கு இனி ஸம்ஹாரமே நல்லது' என்று திருவுள்ளம்பற்றி அவர்களை ப்ரக்ருத்யவஸ்தையிலே கொண்டு நிறுத்தினாய்; உன்னுடைய மாநஸவ்யாபாரரூபமான ஸங்கல்பஜ்ஞாநமடங்கலும் ஆச்சர்யகரமாயிருக்கின்றது காணென்கிறார். நல்வழி தவிர்ந்து தீயவழியிற்சென்ற ஸம்ஸாரிகளை ஸம்ஹரிப்பதும் கர்மாநுகுணமான ரக்ஷணமென்று திருவுள்ளம். (சக)

793 வேறிசைந்தசெக்கர்மேனி நீறணிந்தபுன்சடை *
கீறுதிங்கள்வைத்தவன் கைவைத்தவன்கபால்மிசை *
ஊறுசெங்குருதியால் நிறைத்தகாரணந்தனை *
ஏறுசென்றடர்த்தவீச பேசுகூசமின்றியே. (சஉ)

கூசம் இன்றியே சென்று ஏறு அடர்த்த ஈச	கூசாமல் சென்று (நப்பின்னைப்பிராட்டிக்காக) எருதுகளை வலியடக்கின பெருமானே!,
வேறு	வேருக
இசைந்த	ஸம்ஹாரத்தொழிலுக்குத் தகுதியான
செக்கர் மேனி	சிவந்த உடலையுடையனாய்
நீறு அணிந்த	பஸ்மதாரியாய்
புண் சடை கீறு திங்கள் வைத்த வன்	ஹேயமான ஜடையிலே சந்திரகலையை வைத்துக்கொண்டிருப்பவனான ருத்ரன்
கை வைத்த	தன்கையில் வைத்துக்கொண்டிருந்த
வல் கபால் மிசை	வலிதான கபாலத்தை
ஊறு செம் குருதியால்	உன்திருமேனியிலே ஊறுநின்றுள்ள சிவந்த ரக்தத்தாலே
நிறைத்த காரணம் தனை	நிறைத்த காரணத்தை
பேசு	அருளிச் செய்யவேணும்.

* * * "அரனுடைய கபாலத்தை நிறைத்தது எதற்காக? சொல்" என்று கேட்பதற்குக் கருத்து-நீ ஸர்வஸ்மாத்பரனுய் அவன் உன் ஆட்சிக்குக் கீழ்ப்பட்டவனுயிருக்கையாலே அவன் யாசிக்கவும் நீ அவனை அநுக்ரஹிக்கவும் நேர்ந்ததென்று நாங்களெல்லாரும் நினைத்திருக்கிறோம்; இப்படி உனது பரத்வத்தைவெளியிடுதல் தவிர வேறு காரணமுண்டாகில் அருளிச் செய்யவேணும் என்கை.

"கூசமின்றியேபேசு" என்றுவது, "கூசமின்றியே ஏறு சென்றடர்த்தவீச!" என்றுவது அன்வயிக்கலாம். "ஏறு சென்றடர்த்தவீச! பேசு" என்ற ஸம்போதந ஸ்வாரஸ்யத்தால்-நீ சாஸ்த்ரத்துக்கு வசப்படாத ஜந்மத்திலே பிறந்து ஏழு கோ (ஹோ) ஹத்யை பண்ணச் செய்தேயும் ஈச்வரத்வம் நிறம் பெறநின்றுய்; ருத்ரன் தன் ஈச்வரத்வத்தால் வந்தமேன்மை குலையாமல் நிற்கச்செய்தேயும் பாதகியானன்; அந்தப்பாதகத்தை உனது திருவருளால் போக்கிக் கொண்டான்; இந்த நெடுவாசியை அறியவல்லாரார்; என்பதாக உட்கருத்துத்தோன்றும்.

வேறு இசைந்த சேக்கர் மேனி=எம்பெருமான் ஸர்வரக்ஷகனுயிருக்கும் தன்மைக்கு ஏற்ப அவனுக்குக் கடல்போன்ற அழகியவடிவம் அமைத்தால், சிவன் ஸர்வஸம்ஹாரகனுயிருக்குந்தன்மைக்கு ஏற்ப அவனுக்குக் கோபாவேச ஸூசகமாய்ச் செந்நிறமான உடல் அமைந்ததாம். கபால்='கபாலம்' என்ற வடசொல்லின்குறை. எவ்வளவு ப்ரயாஸப்பட்டும் அக்கபாலம் கையைவிட்டு நீங்காதிருந்ததனால் வன் கபால் எனப்பட்டது. (கூ)

794 வெஞ்சினத்தவேழவெண் மருப்போசித்துருத்தமா *
கஞ்சனைக்கடிந்து மண்ணளந்துகொண்டகாலனே *
வஞ்சனத்துவந்தபேய்ச்சி ஆவிபாலுள்வாங்கினாய் *
அஞ்சனத்தவண்ணனுய ஆதிதேவனல்லையே. (கூ)

வெம் சினத்த வேழம்	உக்ரமான கோபத்தையுடைய குவலயாபீடமென்னும் யானையினுடைய
வெண் மருப்பு ஒசித்து	வெண்ணிறமான தந்தத்தை ஒடித்து (அந்த யானையை முடித்து)
உருத்த மா	கோபிஷ்டனையும் பலிஷ்டனையுமிருந்த
கஞ்சனை	கம்ஸனை
கடிந்து	வதைசெய்து
வஞ்சனத்து வந்த பேய்ச்சி ஆவி	வஞ்சனையால் வந்த பூதனையின் உயிரை
பாலுள் வாங்கினாய்	முலைப்பாலுண்கிற பாவனையினுல் ஆகர்ஷித்தவனே!
மண் அளந்து கொண்ட காலனே!	(த்ரிவிக்ரமனுய்) பூமியெல்லாமளந்துகொண்ட திருவடியையுடையவனே!
	நீ,
அஞ்சனத்த வண்ணன் ஆய	மைபோன்ற காந்தியையுடையனை
ஆதிதேவன் அல்லையே	ஆதிபுருஷனன்றே?

* * * ருத்ரனுடைய பாதகத்தைப் போக்கினவளவேயன்றிக்கே க்ருஷ்ணனுய் வந்தவதரித்து மண்ணின் பாரமான கம்ஸனைக் கூண்டோடு களைந்தருளுகையாலும், அந்த ருத்ராதிகளோடு க்ரிமிகீடாதிகளோடு வாசியின்றி எல்லார் தலைகளிலும் த்ரிவிக்ரமனுய்த் திருவடிகளை வைத்துஸர்வசேஷித்வத்தை விளக்கிக்கொண்டபடியாலும் ஜகத்காரணபூதன் நீயேயென்கிறார்.

795 பாலினீர்மைசெம்பொனீர்மை பாசியின்பசும்புறம் *
போலுநீர்மைபோற்புடைத்தடுத்து வண்டுவிண்டுலாம் *
நீலநீர்மையென்றிவை நிறைந்தகாலநான்குமாம் *
மாலினீர்மைவையகம் மறைத்ததென்னநீர்மையே. (கூ)

பாலின் நீர்மை	பாலின் நிறம்போன்ற வெண்மை யென்ன,
செம் பொன் நீர்மை	சிவந்த பொன்னின் நிறம் போன்ற செம்மையென்ன
பாசியின் பசும் புறம் போலும் நீர்மை	பாசியினுடைய பசும்புறம் போன்ற பசுமை நிறமென்ன,
பொற்பு உடை தடத்து வண்டு விண்டு உலாம் நீலம் நீர்மை	அழகையுடைய தடாகத்திலேயுள்ள வண்டுகள் சிறகு விரித்து பரவா நிற்கும் கருநெய்தல் பூவின் நிறம்போன்ற கருநிற மென்ன,
என்று இவை நிறைந்த	என்கிற இந்த நான்கு நிறங்களும் நிறையப்பெற்ற
காலம் நான்கும் ஆம் மாலின் நீர்மை	நான்கு யுகங்களுக்கும் நிர்வாஹகனான எம்பெருமானுடைய ஸௌலப்யகுணத்தை
வையகம்	இல்வுலகத்திலுள்ளவர்கள்
மறைத்தது	திரஸ்கரித்தது
என்ன நீர்மை	என்ன ஸ்வபாவம்!.

* * * கீழ்ப்பாட்டில் "அஞ்சனத்தவண்ணனுய" னென்று திருமேனி நிறம் ப்ரஸ்துதமாகவே, க்ருதம் முதலிய யுகங்களில் சேதநர் தமது ஸத்வம் முதலிய குணங்கட்குத் தகுதியாக ச்வேதம் முதலிய வர்ணங்களை விரும்புகையாலே அவ்வக்காலங்களிலே அந்தந்த நிறங்களைப் பரிக்ரஹித்து முகங்காட்டினபடியை அநுஸந்தித்து, இப்படி முகங்காட்டச் செய்தேயும் ஸம்ஸாரிகள் கார்கடைக்கொள்ளுகிறார்களே! இதென்ன துர்வாஸநாபலம்!! என்று வருந்துகிறார்.

"பாசிபோலும் நீர்மை" என்னுதே "பாசியின் பசும்புறம்போலு நீர்மை" என்றது—பசுமை நிறத்தின் சிறப்புத்தோற்றவாம்; பாசியில் பசுமை குறைந்த புறமும் உண்டிறே. "நீலநீர்மை" என்னுமளவே போதுமாயிருக்க "பொற்புடைத்தடத்து வண்டுவிண்டுலாம்" என்று நீலத்திற்கு அடைமொழி கொடுத்தது—உபமேயத்தில் போக்யதையைத் தோற்றுவிக்கைகாக வென்க. மூன்றுமடியின் முடிவில் "நான்குமாய்" என்று பெரும்பாலும் பாடமோதுவர்களேனும் அது உபேக்ஷிக்கத்தக்கதாம். "நான்குமாம் மாலின்" என்க. (அ)

796 மண்ணுளாய்கோல்விண்ணுளாய்கோல் மண்ணுளேமயங்கிநின்று *
எண்ணுமெண்ணகப்படாய்கோல் என்னமாயைநின்றமர் *
கண்ணுளாய்கோல்சேயைகோல் அனந்தன்மேற்கிடந்தவெம்
புண்ணியா * புனத்துழாயலங்கலம்புனிதனே. (அ)

அனந்தன் மேல் கிடந்த	திருவனந்தாழ்வான்மேலே சாய்ந்தருள்கின்ற
எம் புண்ணியா	எங்களுடைய ஸுக்ருத ஸ்வரூபியான எம்பெருமானே!
புனம் துழாய் அலங்கல்	தன்னிலத்திலே வளர்ந்த திருத்துழாயாலே செய்யப்பட்ட மாலையையுடைய
அம் புனிதனே	பரமபாவநனே!,
மண் உளாய்	லீலாவிபூதியில் அவதரித்திராநின்றாய்;
விண் உளாய்	பரமபதத்தில் எழுந்தருளியிராநின்றாய்;
மண்ணுள் மயங்கி நின்று எண்ணும் எண் அகப்படாய்	இந்நிலத்திலே விபரீதஜ்ஞாநிகளாயிருக்கிற ஸம்ஸாரிகளுடைய எண்ணங்களுக்கு விஷயமாகாதிருக்கிறாய்;
நின் தமர்	உன்னுடையவர்களான அநந்யப்ரயோஜநர்களுக்கு
கண்ணுளாய்	சக்ஷுர்விஷயமாகாநின்றாய்;
சேயை	(மற்றையோர்க்கு) தூரஸ்தனாயிரா நின்றாய்;
என்ன மாயை	இது என்ன ஆச்சரியம்!.

* * * "மாலின் நீர்மை வையகம் மறைத்தது என்ன நீர்மையே!" என்று ஸம்ஸாரிகளின் கொடுமையை நினைத்து வருந்தினார் கீழ்ப்பாட்டில். அப்படிப்பட்ட ஸம்ஸாரிகளிலே தாமும் ஒருவராயிருக்கச் செய்தேயும் தாம் அவர்களைப்போலன்றியே எம்பெருமானுடைய பரத்வம், ஸௌலப்யம் முதலிய குணங்களிலே ஈடுபட்டு அவற்றை வாய்வெருவுதலே போதுபோக்காயிருக்கப்பெற்றமை அருளிச்செய்கிறார்.

"மண்ணுளாய்" "விண்ணுளாய்" இத்யாதி பதங்களுக்கு அடுத்தபடியாக வுள்ள (கொல்) என்ற இடைச்சொற்களெல்லாம் வாக்யாலங்காரமாக நினைக்கத் தக்கன. "மண்ணுளாய், என்ன மாயைகொல்? விண்ணுளாய், என்ன மாயைகொல்?" என்றிங்ஙனே யோஜிக்கவுமாம். அப்ராக்ருதமாய் அதீந்த்ரியமான திவ்ய விக்ரஹத்தை ப்ராக்ருத ஸஜாதீயமாக்கிக் கொண்டு அவதரித்துக் கண்ணுக்கு விஷயமாக்கா நின்றாய்; ஸம்ஸாரநாற்றமே தெரியாத நித்ய ஸூரிகட்கும் அபரிச்சேத்யனாக விண்ணிலே உள்ளாய்; ப்ரக்ருதி ஸம்பந்தத்தாலேவந்த விபரீத ஜ்ஞாநத்தையுடையராய் ப்ரயோஜநாந்தரபரரான ஸம்ஸாரிகள் மநோரதிக்கும் மநோரதங்களுக்கு அவிஷயமாயிராநின்றாய்; உன் திருவடிகளிலே அநந்யப்ரயோஜநராயிருப்பார்க்கு உனது நிஜஸ்வரூபத்தை ஸாக்ஷாத்கரிப்பியா நின்றாய்; ஆச்ரித விரோதிகள் உன்னை அறிய வொண்ணாதே எதிரிட்டு முடிந்துபோம்படி அவர்கட்கு தூரஸ்தனுயிராநின்றாய்; இப்படி பல்வகையாகப்பரந்து நிற்கவல்ல ஆற்றல் உனக்கே உள்ளது - என்று ஈடுபடுகிறார். (சடு)

797 தோடுபெற்றதண்டுழாய் அலங்கலாடுசென்னியாய் *
கோடுபெற்றியாழியேந்தி அஞ்சிறைப்புள்ளூர்தியால் *
நாடுபெற்றநன்மை நண்ணமில்லையேனுநாயினேன் *
வீடுபெற்றிறப்பொடும் பிறப்பறுக்குமாசொலே. (சசு)

தோடு பெற்ற	இதழ்களையுடைய	ஊர்தி	வாஹநமாக நடத்தாநின்றாய்;
தண் துழாய்	குளிர்ந்த திருத்துழாயினாலாகிய	நாடு பெற்ற நன்மை	மற்றபேர்கள் பெற்ற நன்மையை
அலங்கல்	மாலையானது	நண்ணம் இல்லை யேனும்	நான் பெற்றிலேனாகிலும்
ஆடு	விளங்கப்பெற்ற	நாயினேன்	நீசனான அடியேன்
சென்னியாய்	திருமுடியை யுடையவனே!,	வீடு பெற்று	மோக்ஷத்தைப் பெற்று
கோடு	ஸ்ரீபாஞ்சஜந்யாழ்வாணை	இறப்பொடும் பிறப்பு அறுக்கும் ஆ	இறப்பதும் பிறப்பதுமான ஸம்ஸாரத்தைத் தொலைக்கும் வகையை
பற்றி	தரித்து	சொல்	அருளிச்செய்யவேணும்.
ஆழி	திருவாழியாழ்வாணை		
ஏந்தி	ஏந்திக்கொண்டு		
அம் சிறை புள்	அழகிய சிறகையுடைய பெரிய திருவடியை		

* * * அநாதிகாலம் இழந்தொழிந்த நான் இனியாகிலும் உய்யுமாறு அருள்செய்ய வேணு மென்கிறார். நாடுபெற்ற நன்மையாவது-திருத்துழாய் மாலையும் திருமுடியுமாக விளங்கநின்ற ஸமயத்தையும் திவ்யாயுதபாணியாய்ப் பெரியதிருவடியின்மீதேறி எழுந்தருளின ஸமயத்தையும் அநுபவிக்கப்பெற்ற நன்மை. அந்த நன்மையை அடியேன் பெறுகிறந்தாலும் இனியாகிலும் இந்த ஸம்ஸாரபந்தம் அறும்படியான பாக்கியம் பெற்று நித்யஸூரிகளுடைய திருவோலக்கத்திலே புக்குத் திளைக்கும்படியாக அருள்செய்ய வேணுமென்று வேண்டுகிறார். (சஎ)

798 காரொடொத்தமேனிங்கள்கண்ண விண்ணினாதனே *
நீரிடத்தராவணைக்கிடத்தி யேன்பரன்றியும் *
ஓரிடத்தையல்லை எல்லையில்லையென்பராதலால் *
சேர்விடத்தைநாயினேன் தெரிந்திறைஞ்சுமாசொலே. (சஎ)

காரொடு ஒத்த மேனி	காளமேகத்தோடு ஒத்த திருமேனியையுடையனாய்	விண்ணின் நாதனே	நித்யஸூரிகட்குத் தலைவனே!
கங்கள் கண்ண	எங்களுக்கு அநுபாவ்யனான கண்ணனே!	நீர் இடத்து	(நீ) திருப்பாற்கடலிலே

அரா அணை	திருவனந்தாழ்வானெகிழ படுக்கையிலே
கிடத்தி	பள்ளிகொண்டருளா நின்றுப்
என்பர்	என்று (ஞானிகள்) சொல்லுவர்கள்;
அன்றியும்	அது தவிரவும். (நீ)
ஓர் இடத்தை அல்லை	ஓரிடத்தை இருப்பிடமாக வுடையையல்லை,
எல்லை இல்லை	(நீ உறையுமிடங்கட்கு) எல்லை இல்லை
என்பர்	என்றும் சொல்லுவர்கள்;
ஆதலால்	இப்படி உன் இருப்பிடம் ஸுலபமல்லாமையாலே
நாயினேன்	மிகவும்நீசனுகிய அடியேன்
சேர்வு இடத்தை தெரிந்து	ஆச்ரயிப்பதற்கு உரியஸ்தலத்தை (இன்னதென்று) தெரிந்து கொண்டு
இறைஞ்சும் ஆ சொல்	ஆச்ரயிக்கலாம்படியை அருளிச்செய்யவேணும்.

* * * கீழ்ப்பாட்டில் "வீடுபெற்றிறப்பொடும் பிறப்பறுக்குமா சொல்" என்று பிரார்த்தித்த ஆழ்வாரைநோக்கி எம்பெருமான், "ஆழ்வீர்! பரவ்யூஹ விபவங்களென்ற நமது நிலைகள் ஆச்ரயிக்கத்தக்க ஸ்தலங்களன்றே? அவற்றில் ஒரு நிலையைப்பற்றி யாச்ரயித்து நன்மை பெற்றுப்போம்" என்றருளிச்செய்ய; அந்த நிலைகள் அடியேனுக்கு ஆச்ரயணீயமான நிலங்களல்ல; மிகவும் நிஹீநனான அடியேன் ப்ரதிபத்திபண்ணி ஆச்ரயிக்கத் தக்கதோரிடத்தை அருளிச் செய்யவேணுமென்கிறார்.

ஓரிடத்தை அல்லை = இன்னஸ்தலமென்று குறிப்பிடக்கூடிய ஓரிடத்தை இருப்பிடமாக வுடைத்தா யிருக்கின்றாயில்லை. ஒருவர்கண்ணுக்கும் புலப்படாதபடி அந்தர்யாமியாய் ஸர்வ வஸ்துக்களிலும் வ்யாபித்தனுய் இராநின்றாய் என்றபடி. எல்லை யில்லை என்பர் = தஹரவித்யை, சாண்டில்யவித்யை, வைச்வாநரவித்யை உபகோஸலவித்யை என்றுப்போலே சொல்லப்படுகிற வித்யைகளுக்கு எல்லை யில்லாமையாலே அவற்றில் சொல்லப்படுகிற ஆச்ரயணீய ஸ்தலங்கட்கும் எல்லை யில்லை என்கை.

ஆகையால் = இப்படி, பரமபதம் தேசத்தால் விப்ரக்ருஷ்டமாய், க்ஷீராப்தி அதிக்ருதாதிகாரமாய், அந்தர்யாமித்வம் ப்ரதிபத்திக்கே எட்டாததாய் ஆச்ரயணீயஸ்தலம் அபரிச்சேத்யமாயிருக்கையாலே என்றவாறு. அயோக்யனை அடியேன் "இது நமக்கு ஆச்ரயணார்ஹமான ஸ்தலம்" என்று ஓரிடத்தை நிஷ்கர்ஷித்து ஆச்ரயித்து உஜ்ஜீவித்துப்போம்படியாக ஓரிடத்தைக் காட்டிக்கொடுக்க வேணுமென்று தலைக்கட்டுகிறார். ஓரிடத்தை = 'ஓரிடத்தன்' என்பதன் முன்னிலையுருவம். (சஎ)

799 குன்றினின்றுவானிருந்து நீள்கடற்கிடந்து * மண்
ணெனின்றுசென்றதோன்றையுண்டு அதோன்றிடந்துபன்றியாய் *
நன்றுசென்றநாளவற்றுள் நல்லுயிர்படைத்தவர்க்கு *
அன்றுதேவமைத்தளித்த ஆதிதேவனல்லையே. (சஅ)

குன்றில் நின்று	திருவேங்கடமலையில் நின்றும்
வான் இருந்து	பரமபதத்தில் வீற்றிருந்தும்
நீள் கடல் கிடந்து	பெரிதான நீருப்பாற்கடலிலே திருக்கண்வளர்ந்தருளியும்
மண் ஒன்று சென்று	இப்பூமண்டலத்தை ஒருகால் (த்ரிவிக்ரமனுய்) வியாபித்தும்
ஒன்று அதை உண்டு	மற்றொருகால் அப்பூமியை விழுங்கியும்
ஒன்று அது பன்றி ஆய் இடந்து	மற்றொருகால் அப்பூமியை வராஹரூபியாய் இடந்தும்
நன்று சென்ற நாள் அவற்றுள்	நன்றாய்சென்ற நாட்களிலே
நல் உயிர் படைத்து	நல்ல உயிரான மனிதர்களை ஸ்ருஷ்டித்தும்
அன்று	அப்போது
அவர்க்கு	அந்த மனிதர்கட்கு
தேவு	(தங்கள் தங்கள் குணங்களுக்குத்தக்கபடி ஆச்ரயிக்கத்தக்க) தேவதைகளை
அமைத்து	ஏற்படுத்தியும் (இப்படிகளாலே)
அளித்த	நன்மைசெய்தருளின
ஆதிதேவன் அல்லையே	பரமபுருஷன் நீயேகாண்.

800 கொண்டைகொண்டகோதைமீது தேனூலாவுகூனிகூன் *
உண்டைகொண்டரங்கவோட்டி உள்மகிழ்ந்தநாதனூர் *
நண்டையுண்டுநாரைபேர வாளைபாயநீலமே *
அண்டைகொண்டுகெண்டைமேயும் அந்தணீரரங்கமே. (சகூ)

கொண்டை கொண்ட	மயிர்முடியிலே அணியப்பட்ட
கோதை மீது	மாலையிலே
தேன் உலாவு	வண்டுகள் உலாவப்பெற்ற
கூனி	கூனியினுடைய
கூன்	(முதுகில்) கூனை
உண்டை கொண்டு	(வில்லிலே) உண்டையை வைத்தெறிந்து
அரங்க ஓட்டி	அழுக்கி
உள் மகிழ்ந்த	திருவுள்ளம் மகிழப்பெற்ற
நாதன்	எம்பெருமானுடைய
ஊர்	திவ்யதேசம் (எதுவென்றால்)
நாரை	நாரையானது
நண்டை உண்டு	நண்டைத்தின்று
பேர	அசைந்துவர,
வாளை	வாளைமீனானது
பாய	துள்ளியெழுந்து இங்குமங்கும் பாய,
கெண்டை	கெண்டை மீனானது
நீலம் அண்டை கொண்டு	கருநெய்தல் மலர்களை அணைக்கொண்டு
மேயும்	மேயப்பெற்ற
அம் தண் நீர்	அழகிய குளிர்ந்த நீர்வளத்தையுடைய
அரங்கம்	திருவரங்கமாம்.

* * * இவ்வாழ்வார்க்கு ஒரு ஆச்ரயணீய ஸ்தலத்தைக் காட்டிக்கொடுக்கவேண்டியது நமக்குக்கடமைதான் என்று துணிந்த எம்பெருமான், திருவரங்கம் பெரியகோயிலை ஆச்ரயணீய ஸ்தலமாகக் காட்டிக்கொடுக்கக் கண்ட ஆழ்வார் இனிதாக அநுபவிக்கிறார்.

[நண்டையுண்டு இத்யாதி.] நண்டை விழுங்கின நாரையானது, விழுங்கப்பட்ட நண்டின் கனத்தாலே மலை பேர்ந்தாற்போலே பேர்ந்துவர, அந்த நாரைக்குத் தன்மேலே நோக்கென்று நினைத்து அஞ்சின வாளைமீனானது துள்ள, அதனைக்கண்டு அஞ்சினகெண்டை மீனானது கருநெய்தல் மலர்களின் இருட்சியை அண்டைகொண்டு அரணுக்குள்ளே அச்சமின்றி வாழ்வாரைப்போலே அதற்குள்ளே பயங்கெட்டு மேயப்பெற்ற ஜலஸம்ருத்தியையுடைய திருவரங்கம் என்கை. ஆக, நாரையைக்கண்டு வாளைமீன் அஞ்சித்துள்ளினதாகவும், அதன் துள்ளலைக்கண்டு கெண்டைமீன் அஞ்சிப் பதுங்கினதாகவும் வர்ணிக்கப்பட்டது.

இந்த வர்ணனைக்கு ஒரு ஸ்வாபதேச மருளிச்செய்கிறார் பெரியவாச்சான்பிள்ளை— "இத்தால், ஸம்ஸாரிகளை நலிகிற அஹங்காரத்தைக் கண்டு பீதராய் முமுக்ஷுக்களாயுபாஸநத்திலே இழிந்த ஸாதகரைக்கண்டு இவையிரண்டும் மயர்வாகுமென்று ஸர்வேச்வரனையே உபாயமாகப்பற்றி நிர்பரராய் ஸ்வரூபாநுரூபமான பகவத்குணாநுபவமே யாத்ரையாய் வர்த்திக்கும் ப்ரபந்நர்க்கு ஸ்மாரகமாயிருக்கிறதாய்த்து கெண்டைகளினுடைய யாத்ரையென்கை" என்று.—நண்டைக்கபளீகரித்த நாரையின் ஸ்தானத்திலே - ஸம்ஸாரிகளைக் கபளீகரிக்கிற அஹங்காரம். நாரையைக்கண்டு அஞ்சித்துள்ளுகிற வாளையின் ஸ்தானத்திலே - அஹங்காரத்துக்கு இருப்பிடமான உபாஸகர். நாரையையும் வாளையையும் கண்டு அஞ்சி நெய்தல் நிழலிலே பதுங்கின கெண்டையின் ஸ்தானத்திலே - அஹங்காரத்துக்கும் உபாஸநத்துக்கும் இருப்பிடமான பகவத் பாதாரவிந்தநிழலிலே யொதுங்கி அச்சங்கெட்டு வாழ்கிற ப்ரபந்நர்கள்—என்க. (சகூ)

801 வெண்டிரைக்கருங்கடல் சிவந்துவேவமூன்ஞெர்நாள் *
திண்டிறற்சிலைக்கைவாளி விட்டவீரர்சேருமூர் *
எண்டிசைக்கணங்களும் இறைஞ்சியாடுதீர்த்தநீர் *
வண்டிரைத்தசோலைவேலி மன்னுசீரரங்கமே. (நுவ)

முன் ஓர் நாள்	முன்பொருகாலத்திலே
வெண் திரை கரு கடல்	வெளுத்த அலைகளையுடைய கருங்கடலானது
சிவந்து வேவ	தீப்பற்றி வேகும்படி
திண் திறல் சிலை	மிக்கவலியையுடைய சார்ங்கத்தில் நின்றும்
வாளி	அம்புகளை
கை விட்ட	பிரயோகித்த
வீரர்	மஹாவீரரான பெருமாள்
சேரும்	பொருந்திவாழப்பெற்ற
ஊர்	திவ்யதேசம் (எது வென்றால்)
எண் திசை கணங்களும்	எட்டுத்திக்கிலுமுள்ள ஜனஸமூஹங்களெல்லாம்
இறைஞ்சி ஆடி	வணங்கி அவகாஹிக்கப்பெற்ற
தீர்த்தம் நீர்	புண்யதீர்த்தங்களை யுடைத்தாய்
வண்டு	வண்டுகள்
இரைத்த	பாடுகின்ற
சோலை	சோலைகளை
வேலி	வேலியாகவுடைத்தாய்
சீர் மன்னு	அழகு பொருந்தியதான
அரங்கம்	திருவரங்கமாம்.

802 சரங்களைத்துரந்து வில்வளைத்திலங்கைமன்னவன் *
சிரங்கள்பத்தறுத்துதிர்த்த செல்வர்மன்னுபோன்னிடம் *
பரந்துபொன்னிரந்துநுந்தி வந்தலைக்கும்வார்புனல் *
அரங்கமென்டர் நான்முகத்தயன்பணிந்தகோயிலே. (ருக)

வில் வளைத்து	வில்லை வளைத்து
சரங்களை துரந்து	அம்புகளை ஏவி
இலங்கை மன்னவன்	இராவணனுடைய
பத்துசிரங்கள்	பத்துத் தலைகளையும்
அறுத்து உதிர்த்த	அறுத்துத்தள்ளின
செல்வர்	ஸ்ரீமான்
மன்னு	நித்யவாஸம் செய்கிற
பொன் இடம்	திவ்யதேசம் (எதுவென்னில்)
நிரந்துபரக்து	மிகவும் விஸ்தாரமாகி
பொன்	பொன்களை
நுந்தி வந்து	கொழித்துக்கொண்டுவந்து
அலைக்கும்	அலையாகின்றுள்ள
வார் புனல்	திருக்காவேரியை யுடைத்தாய்
நான் முகத்து அயன்	சதுர்முகனை பிரமன்
பணிந்த	ஆச்ரயிக்குமிடமான
கோயில்	கோயிலாகிய
அரங்கம்	திருவரங்கமாம்
என்பர்	என்று (ஞானிகள்) கூறுவர்.

803 போற்றையுற்றமுற்றல்யானை போரெதிர்ந்துவந்ததை *
பற்றியுற்றுமற்றதன் மருப்பொசித்தபாகனூர் *
சிற்றெயிற்றுமுற்றல்மூங்கில் மூன்றுதண்டரோன்றினர் *
அற்றபற்றர்சுற்றிவாழும் அந்தணீரரங்கமே. (ருஉ)

பொற்றை உற்ற முற்றல் யானை	மலைகளிலே திரிந்து பலிஷ்டமான குவலயாபீடயானையானது
போர் எதிர்ந்து வந்ததை	போர்செய்வதற்கு எதிர்ந்துவர. அவ் யானையை
உற்றுப்பற்றி	உறுதியாகப் பிடித்துக்கொண்டி
அதன்	அதனுடைய
மருப்பு	தந்தங்களை
ஒசித்த	முறித்தெறிந்த
பாகன்	பாகன்போன்ற கண்ணபிரானுடைய
ஊர்	திவ்யதேசம் (எதுவென்றால்)
சிறு எயிறு	சிறுகின கணுக்களை யுடைத்தாய்
முற்றல்	முற்றினதான
மூங்கில்	மூங்கிலினால் செய்யப்பட்ட
மூன்று தண்டர்	திரிதண்டத்தையுடையரான ஸந்ந்யாஸிகளும்
ஒன்றினர்	ஏகாந்திகளும்
அற்ற பற்றர்	(விஷயாந்தரம் முதலியவற்றில்) பற்று அற்றுப் போனவர்களும்
சுற்றி வாழும்	சூழ்ந்து வாழுமிடமான
அம் தண் நீர் அரங்கம்	அழகியதாய்க் குளிர்ந்த தீர்த்தத்தையுடையதான திருவரங்கமாம்.

* * * போற்றை என்று - மலைக்கும், யானைகள் ஏராளமாகத் திரிகிற காட்டுக்கும் பெயர். "போரெதிர்ந்துவந்த, பொற்றையுற்ற முற்றல் யானையை" என்று யோஜித்துக்கொள்க. ஒன்றினர் = பகவத்விஷயமொன்றையே பற்றின ஹ்ருதயத்தையுடைய ஏகாந்திகள்; தேசாந்தரங்களை விட்டு இந்த தேசமொன்றையே புகலாகப் பற்றினவர்கள் என்றுமாம். சுற்றி = ப்ரதக்ஷிணஞ்செய்துகொண்டு என்றுமாம். (ருஉ)

808 சங்குதங்குமுன்கைநங்கை கொங்கைதங்கலுற்றவன் *
அங்கமங்கவன்றுசென்று அடர்த்தெறிந்தவாழியான் *
கொங்குதங்குவார்குழல் மடந்தைமார்குடைந்தநீர் *
பொங்குதண்குடந்தையுள் கிடந்தபுண்டரீகனே. (ருள)

சங்கு தங்கு முன் கை நங்கை	(நித்ய ஸம்ச்லேஷத்தாலே) சங்கு வளைகள் பொருந்தி யிருக்கப்பெற்ற பிராட்டியினுடைய
கொங்கை	திருமுலைத்தடத்திலே
தங்கல் உற்றவன்	விஹாரத்தை விரும்பினபடு பாவியினுடைய [இராவணனுடைய]
அங்கம்	சரீரமானது
மங்க	மாளவேணுமென்று
அன்று சென்று	முன்பு (இலங்கைக்கு) எழுந்தருளி
அடர்த்து	அவ்வூரை ஆக்ரமித்து
எறிந்த	(அவன் தலைகளை) அறுத்தொழித்தவனுய்
ஆழியான்	கடல்போன்ற சரமஹரமான திருமேனியையுடையனான இராமபிரான்
கொங்கு தங்கு	பரிமளம்பொருந்திய
வார் குழல்	நீண்ட கூந்தலையுடையவர்களான
மடந்தைமார்	திவ்யஸ்த்ரீகள்
குடைந்த	அவகாஹிக்கப்பெற்ற
நீர்	தீர்த்தமானது
பொங்கு	வ்ருத்தியடைந்திருக்கப்பெற்ற
தண் குடந்தையுள்	குளிர்ந்த திருக்குடந்தையிலே
கிடந்த	பள்ளிகொண்டியாகின்ற
புண்டரீகன்	ஸ்வாமியாகின்றன்.

* * * "கொங்குதங்கு வார்குழல் மடந்தைமார்" என்றது லௌகிக ஸ்த்ரீகளையல்ல; "மதிமுக மடந்தைய ரேந்தினர்வந்தே" என்று ஆழ்வாரருளிச்செய்தபடி பரமபதத்திலே எதிர் கொண்டழைக்கு மவர்களான திவ்யஸ்த்ரீகளைச் சொல்லுகிறது. (ருள)

809 மரங்கெடநடந்தடர்த்து மத்தயானைமத்தகத்து *
உரங்கெடப்புடைத்து ஓர்கொம்போசித்துகந்தவித்தமா *
துரங்கம்வாய்பிளந்து மண்ணளந்தபாத * வேதியர்
வரங்கொளக்குடந்தையுள் கிடந்தமாலுமல்லையே. (ருஉ)

மரம் கெட நடந்து	யமளார்ஜுந வ்ருக்ஷங்கள் முடியும்படி நடைகற்று,
மத்த யானை அடர்த்து	(குவலயாபீடமென்னும்) கொழுத்த யானையை மதமொழித்து,
மத்தகத்து	(அவ்யானையின்) தலைமேல்
உரம் கெட புடைத்து	(அதன்) வலிமாள ப்ரஹாரங்கள் கொடுத்து
ஓர்கொம்பு ஒசித்த உத்தமா	(அதன்) தந்தத்தை முறித்தெறிந்த பரமபுருஷனே!,
துரங்கம்	குதிரை வடிவங்கொண்டு வந்த கேசியென்னுமசுரனுடைய
வாய் பிளந்து	வாயைப்பிளந்து (அவனை யொழித்த பெருமானே!)
மண் அளந்த பாத!	உலகங்களை யளந்து கொண்ட திருவடிகளையுடையோனே! (நீ,)
வேதியர் வரம் கொள	வைதிகர்கள் தங்கள் தங்களுடைய விருப்பங்களைப் பெற்றுக்கொளுமாறு

குடந்தையுள் கிடந்தமால் அல்லையே-

810 சாலிவேலிதண்வயல் தடங்கிடங்குழும்பொழில் *
கோலமாடநீடு தண்குடந்தைமேயகோவலா *
காலநேமிவக்கரன் கரன்முரன்சிரமவை *
காலனேடுகூட வில்குனித்தவிற்கைவீரனே. (ருக)

சாலி வேலி	செந்நெற் பயிர்களை வேலியாகவுடைய
தண் வயல் தடம் கிடங்கு	குளிர்ந்த கழனிகளென்ன பெரிய அகழிகளென்ன
பூ பொழில் கோலம் நீடு மாடம்	புஷ்பித்த சோலைகளென்ன அழகாக ஓங்கின மாடங்களென்ன இவற்றையுடைத்தாய்

தண்	குளிர்ந்ததான
குடந்தை	திருக்குடந்தையிலே
மேய	எழுந்தருளியிராநின்ற
கோவலா	க்ருஷ்ணனே!,
காலநேமி	காலநேமியென்ன
வக்கரன்	தந்தவக்ரனென்ன
கரன் முரன்	கொடியவனான முரனென்ன இவர்களுடைய
சிரம் அவை	தலைகளானவை
காலனோடு கூட	யமலோகம் போய்ச் சேரும் படியாக
வில் குனித்த	வில்லை வளைத்த
வில் கை	அழகிய திருக்கையையுடைய
வீரனே	தனி வீரனே! (என்று ஏத்து கிறார்)

* * * காலநேமி யென்பவன் இராவணனுடைய மாதுலன்; இவன், தாரகாசுர யுத்தத்தில் எம்பெருமானுற் கொல்லப்பட்டவன். வக்கரன்—தந்தவக்ரன்; தந்தவக்த்ரன் என்று சொல்வதுமுண்டு. கண்ணபிரான் ருக்மிணிப்பிராட்டியை ஸ்வீகரித்தருளினபோது எதிர்த்து வந்து போர்செய்த அரசர்களில் இவனொருவன். முரன்=நரகாசுரனுடைய மந்திரி. கரன் என்று ஒரு ராக்ஷஸனுண்டாகிலும் அவன் இங்கே விவக்ஷிதனல்லன்; அவன் ராமாவதாரத்தில் கொல்லப்பட்டவன்; இப்பாட்டில் க்ருஷ்ணாவதாரசரிதங்கள் அநுஸந்திக்கப்படுவதால் கரன் என்பது முரனுக்கு அடைமொழியாயிற்று. வாஃ என்ற வடசொல் க்ரூரனென்ற பொருளையுமுடையது. "சிரமவை காலனோடுகூட" என்றவிடத்து "அறுத்து" என்றொரு வினையெச்சத்தை வருவித்துக்கொண்டு உரைத்தலுமொன்று. (நிக)

811 செழுங்கொழும்பெரும்பனிபோழிந்திட உயர்ந்தவேய் *
விழுந்துலர்ந்தெழுந்து விண்புடைக்கும்வேங்கடத்துள்நின்று *
எழுந்திருந்துதேன்பொருந்து பூம்பொழிற்றழைக்கொழும் *
செழுந்தடங்குடந்தையுள் கிடந்தமாலுமல்லையே. (சுவி)

செழும் கொழும் பெரும்பனி	இடைவிடாதே தாரைகளாய் விழுகிற கனத்த மூடுபனி யானது
பொழிந்திட	பொழிந்தவளவிலே
உயர்ந்த வேய் விழுந்து	முன்பு ஓங்கியிருந்த மூங்கிற் பணைகள் (அப்பனியின் கனத்தாலே) தரையிலே சாய்ந்து
உலர்ந்து	(பிறகு ஸூர்யகிரணங்களாலே அப்பனி) உலர்ந்த பின்பு
எழுந்து	(அம்மூங்கிற்பணைகள்) உயரக் கிளம்பி
விண்புடைக்கும்	விண்ணுலகத்தை முட்டும்படியான உந்நதியையுடைய
வேங்கடத்துள்	திருவேங்கடமலையிலே
நின்று	நின்றருளி,
தேன்	வண்டுகளானவை
எழுந்து இருந்து பொருந்து	மேலே கிளம்புவதும் கீழே படிந்திருப்பதுமான நிலைமைகளோடு பொருந்தியிருக்கப் பெற்ற
பூ பொழில்	புஷ்பங்கள் நிறைந்த சோலைகள்
தழை கொழும்	தழைத்தோங்கா நிற்கப்பெற்ற தாய்
செழும் தடம்	செழுமை தங்கிய தடாகங்களையுடைத்தான
குடந்தையுள்	திருக்குடந்தையிலே
கிடந்த	திருக்கண்வளர்ந்தருளா நின்ற
மால் அல்லையே	பெருமாள் நீயிறே.

* * * "நிலையார நின்றுன்தன் நீள்கழலே யடைநெஞ்சே" என்று நிலையழகிலே ஈடுபடுவார்க்கும் "கிடந்ததோர் கிடக்கைகண்டு மெய்ஞ்ஞானம் மறந்து வாழ்கேன்?" என்று சயநத் திருக்கோலத்திலே ஈடுபடுவார்க்கும் போக்யமாகத் திருவேங்கடமலையில் நின்றருளியும் திருக்குடந்தையில் சாய்ந்தருளியும் போருகிறது அடியார்பக்கலுள்ள வ்யாமோஹத்தின் காரியமன்றே வென்கிறார். உலர்ந்து=பனி உலர; எச்சத்திரிபு. (சுவி)

812 நடந்தகால்கள்நொந்தவோ நடுங்கஞாலமேனமாய் *
இடந்தமெய்குலுங்கவோ விலங்குமால்வரைச்சுரம் *
கடந்தகால்பரந்த காவிரிக்கரைக்குடந்தையுள் *
கிடந்தவாறெழுந்திருந்து பேசுவாழிகேசனே. (சுக)

விலக்கு	நீர் பெருகவொண்ணுதபடி தடையாயிருக்கிற
மால் வரை	பெருப்பெருத்த மலைகளையும்
சுரம்	பாலைநிலம் முதலிய அருவழி களையும்
கடந்த	(வேகத்தாலே) கடந்துகொண்டு வருகின்ற
கால் பரந்த	விஸ்தாரமான வாய்க்கால்களை யுடைய
காவிரி	திருக்காவேரி நதியினுடைய
கரை	கரைமீது
குடந்தையுள்	திருக்குடந்தையிலே
கிடந்த ஆறு	திருக்கண் வளர்ந்தருளுகிறபடி யானது
நடந்த கால்கள் நொந்தவோ	உலகளந்த திருவடிகள் நொந்த தலைலோ? (உலகளந்த விடாய் தீரவோ?)
ஞாலம்	பூமிப்பிராட்டியானவள்
நடுங்க	(பாதாளத்திலே உருமாய்த்து 'நம்மை யெடுக்க வல்லார் ஆரு மில்லையே' என்று) நடுங்கிக் கிடந்த காலத்து
ஏனம் ஆய்	மஹாவராஹமூர்த்தியாகி
இடந்த	அப்பூமியை அண்டபித்திமில் நி ன்றும் விடுவித்து உத்தரிப்பித்த
மெய்	திருமேனி
குலுங்கவோ?	சிரமப்பட்டதலைலோ? (ஏனமா ய் உலகிடந்த விடாய்தீரவோ?)
கேசனே	கேசவனே!
எழுந்திருந்து பேசு	(எந்தவிடாய் தீரக்கிடக்கிறு யென்பதை) எழுந்திருந்து அருளிச்செய்க;
வாழி	இக்கிடையழகு என்றும் வாழ்க.

* * * இப்படி ஆராவமுதாழ்வார் திருவடிகளிலே அநுபவிக்க இழிந்த இவ்வாழ்வாரை நோக்கி அப்பெருமான் வாய்திறந்து ஒரு வார்த்தை யருளிச்செய்யாமலும் கைகோலி அணைத்தருளாமலும் ஏகாகாரமாகக் கண்வளர்ந்தருளக் காண்கையாலே 'இது அர்ச்சாவதார ஸமாதி' என்று இவர் திருவுள்ளம்பற்றுமல், ஏதோ அளவற்ற சிரமத்தினால் இப்படி திருக்கண் வளர்ந்தருள்கிறாரென்று அதிசங்கை பண்ணி, "வடிவிணையில்லா மலர்மகள் மற்றை நிலமகள் பிடிக்கும் மெல்லடி" என்கிறபடியே பரமஸுகுமாரமான திருவடிகளைக்கொண்டு உலகங்களை அளந்ததனால் உண்டான ஆயாஸத்தாலோ? அன்றி, பூமியைப் பாயாகச்சுருட்டி எடுத்துப் போன ஹிரண்யாக்ஷனை மஹா வராஹமூர்த்தியாய்க் கொன்று அப்பூமியைக்கொணர்ந்து பழையபடி விரித்ததனால்உண்டான ஆயாஸத்தாலோ இங்ஙனே தேவரீர் ஆடாது அசங்காது திருக்கண்வளர்ந்தருள்கிறது?; இதை எனக்குத் தெரியவருளிச்செய்யவேணும் என்கிறார்.

உலகளந்த சிரமமாகில் திருவடிகளைப் பிடிக்கவும் உலகிடந்த சிரமமாகில் திருமேனியைப் பிடிக்கவும் பாரிக்கிறார்போலும். [விலங்குமால் இத்யாதி.] பல மலைகளையும் பல பாலை நிலங்களையும் கடந்துகொண்டு, பெருமாளுக்கு சீதோபசாரம் பண்ணவேணுமென்னும் அபிநிவேசத்தாலே காவேரி ஓடிவருகின்றாளென்க. எழுந்திருந்து பேசு = கண்வளர்ந்தருளுகையின் காரணத்தை சயனித்துக் கொண்டே அருளிச்செய்யலாகாது; என்னுடைய அச்சம் தீரும்படி எழுந்திருந்து அருளிச்செய்யவேணும் என்கிறார். எழுந்திருக்குப்போது உண்டாகக்கூடிய சேஷ்டிதங்களைக் காணவும் அருளிச்செய்யும்போதை ஸ்வரத்தைக் கேட்கவும் விரும்புகிறபடி.

வாழி—ஸ்ரீமான் ஸ்ரீரங்கே ஸுகமாஸ்தே ஸ்ரீமாந் வேங்கடநாயகஸ்ரீமான் வரதகுரு" என்று—சித்ரகூடத்திலே திருக்கண்வளர்ந்தருளின இராமபிரானைப் பிராட்டி தட்டியுணர்த்தியெழுப்பினதற்காகப் பின்பு அநுதாபப்பட்டாற்போல், ஆச்சரியமான இந்த சயநத்திருக்கோலத்தைக் குலைத்து அடுத்தக்ஷணத்திலே நாமும் அநுதாபப்படும்படி நேர்ந்துவிடுமோ வென்றஞ்சின ஆழ்வார் வாழி யென்று அந்த சயனத்திருக்கோலத்துக்கே உகந்து மங்களாசாஸநம் செய்தருளுகிறார். ஒரு தீங்கு இல்லாமே கண்வளர்ந்தருளுகிற இவ்வழகு நித்யமாய்ச் செல்லவேணுமென்கிறார்.

திருமழிசைப்பிரான் ஆராவமுதாழ்வாரைநோக்கி "கிடந்தவாறெழுந்திருந்து பேசு" என்று பிரார்த்திக்க, பெருமாளும் பக்தபராதீநதையாலே அப்படியே எழுந்திருக்கப்புக அது கண்ட ஆழ்வார் அர்ச்சாவதாரமாதி குலைய வொண்ணுதென்று திருவுள்ளம்பற்றி வாழிவாழி

என்று மங்களாசாஸநமுகத்தால் அப்படியே கிடந்தருளும்படியை விரும்ப, ஆராவமுதாழ்வாரும் அவ்வண்ணமே தன்னுடைய எழுச்சிமுயற்சியை நிறுத்திக்கொண்டாரென்றும், இப்போதைய அர்ச்சாவதார நிலைமையில் இவ்வம்சம் விளங்குமாறு உத்தாநபாயியாக ஸேவை ஸாதிப்பதும் இதுபற்றியேயென்றும் பெரியோர் ஐதிஹ்யங்கூறக்கேட்டதுண்டு. (சுக)

813 கரண்டமாடுபொய்கையுள் கரும்பணைப்பெரும்பழம் *
புரண்டுவீழவாளைபாய் குறுங்குடிநெடுந்தகாய் *
திரண்டதோளிரணியன் சினங்கொளாகமொன்றையும் *
இரண்டுகூறுசெய்துகந்த சிங்கமென்பதுன்னையே. (சுஉ)

கரண்டம் ஆடு பொய்கையுள்	நீர்க்காக்கைகள் உலாவுகின்ற பொய்கையிலே	திரண்டதோள்	திரண்டதோள்களை யுடையவனுடைய
கரு பணை பெரு பழம்	கரிய பெரிய பனம்பழங்களானவை	இரணியன்	ஹிரண்யனுடைய
		சினம் கொள் ஆகம் ஒன்றை	மாத்ஸர்யம் விளங்குகிற கடுமையில் அத்விதீயமான சரீரத்தை
புரண்டு வீழ	விழுந்துபுரள (அவற்றைக்கண்டு நீர்க்காக்கைகளாக ப்ரமித்து அஞ்சின)	இரண்டு கூறு செய்து	இருபிளவாகப் பிளந்து
வாளை	மீன்கள்	உகந்த	மகிழ்ந்த
பாய்	துள்ளியோடி யொளிக்கின்ற	சிங்கம் என்பது	நரஸிம்ஹ மூர்த்தியென்று சொல்வது
குறுங்குடி	திருக்குறுங்குடியிலே எழுந்தருளியிருக்கிற	உன்னையே	உன்னையோ ? [ஸுகுமாரனை வுன்னை முரட்டுச்சிங்கமென்னத்தகுமோ ?.]
நெடுந்தகாய்	மஹாநுபாவனே!,		

* * * நீர்க்காக்கைகள் ஸஞ்சரிக்கும் பொய்கையிலே பெரியகரிய பனம்பழங்கள் விழுந்துபுரள, அவற்றை நீர்க்காக்கையாகப்ரமித்த வாளைகளானவை அஞ்சிப் பாயும்படியை அருளிச்செய்கிறார் ஒன்றரையடிகளில். மெய்யான நீர்க்காக்கையைக் கண்டு பயப்படாமல் போலியானதொன்றைக்கண்டு பயப்பட்டதாக அருளிச்செய்தவிது - திருக்குறுங்குடியிலுள்ளார். நம்பிபக்கலிலே ப்ரேமத்தின் மிகுதியால் * அஸ்தாநே பயசங்கை பண்ணும்படிக்கு ஸுசகம் என்க. நெடுந்தகாய்—'நெடுந்தகை' என்பதன் விளி; பெருந்தன்மை பொருந்தினவனே ! என்றபடி.

இப்போதும் திருக்குறுங்குடிநம்பி ஸந்நிதியிலுள்ள புஷ்கரிணிக்குக் கரண்டமாடு பொய்கை என்று திருநாமம் வழங்கி வருதலும், ஆழ்வார் "கரும்பணைப் பெரும்பழம்" என்று பணித்தது பழுதாகாமைக்காக அப்புஷ்கரிணியின் கரையில் ஒரு திருப்பனைமரம் நம்பியின் கடாக்ஷமேதாரகமாக நாளைக்கும் வளர்ந்து வருதலும் அறியத்தக்கன. சினம் என்று விம்முதலுக்கும் வாசகமாகையாலே, சினங்கொள் ஆகம்-விம்ம வளர்ந்த சரீரம் என்றலுமாம். (சுஉ)

814 நன்றிருந்துயோகநீதி நண்ணுவார்கள்சிந்தையுள் *
சென்றிருந்துதீவினைகள் தீர்த்ததேவதேவனே *
குன்றிருந்தமாடநீடு பாடகத்துமூரகத்தும் *
நின்றிருந்துவேங்கணைக்கிடந்தது என்னநீர்மையே. (சுஊ)

நன்று இருந்து	(யோகப்பயிற்சிக்கு உரிய ஆஸனத்திலே முறைப்படி நிலைத்திருந்து	தீ வினைகள் தீர்த்த தேவ தேவனே!	(அவர்களுடைய) தீ வினைகளைத் தொலைத்தருளின தேவாதிதேவனே!,
யோகம் நீதி நண்ணுவார்கள் சிந்தையுள்	யோகமாகிய உபாயத்தை ஸாதிக்கின்ற யோகிகளுடைய ஹ்ருதயத்தினுள்ளே	குன்று இருந்த நீடு மாடம்	மலைகளைக் கொணர்ந்து சேர்த்துவைத்தாற்போன்றிரா நின்ற ஓங்கின மாடங்களையுடைய
சென்று இருந்து	ப்ரவேசித்திருந்து	பாடகத்தும்	திருப்பாடகத்திலும்

64-பாட்டு— நின்றதெந்தையூரகத்து.

ஊரகத்தும்	திருவூரகத்திலும்
வெஃகணை	திருவெஃகாவிலும்
இருந்து நின்று கிடந்தது	(க்ரமேண) வீற்றிருந்த திருக்கோலமாகவும் நின்ற திருக்கோலமாகவும் சயனத்திருக்கோலமாகவும் எழுந்தருளியிருப்பது
என்ன நீர்மை	என்ன ஸௌஹார்த்தமோ!

* * * தேவரீர் ஸௌகுமார்யத்தைக் கணிசியாமல் பக்தஸிகாமணியாகிய ப்ரஹ்லாதன் திறத்திலுள்ள வாத்ஸல்யமே காரணமாக மூர்க்கவதாரமெடுத்து இரணியனை அழியச் செய்தது பொருந்தலாம்; ஸ்வப்ரகாரத்தாலும் விமுகரான ஸம்ஸாரிகளுடைய ஆபிமுக்யத்தை எதிர்பார்த்து உம்முடைய மேன்மையைப் பாராதே கோயில்களிலே நிற்பது இருப்பது கிடப்பதாகிற விது அந்தோ! என்ன நீர்மை!! என்று ஈடுபடுகிறார்.

ஊரகம் — ஆதிசேஷனென்னும் பொருளையுடைய உரகமென்ற வடசொல் ஊரகமென்று நீண்டு கிடக்கிறது; பெருமாள்கோயிலில் உலகளந்த பெருமாள் எங்கிலும் ஊரகமென வழங்கும். அங்கே திருவனந்தாழ்வானுடைய வரப்ரதாநத்வப் ப்ரஸித்தம். வெஃகணை-'வேகவணை' என்பது வெஃகணையென்று கிடக்கிறது. 'வெஹாவெதா' என்று வடசொல்வழக்கம்; ஸ்ரீயதோக்தகாரி ஸங்நிதி. (சூஉ)

815 நின்றதெந்தையூரகத்து இருந்ததெந்தைபாடகத்து *
அன்றுவெஃகணைக்கிடந்தது என்னிலாதமுன்னெலாம் *
அன்றுநான்பிறந்திலேன் பிறந்தபின்மறந்திலேன் *
நின்றதுமிருந்ததும் கிடந்ததுமென்னெஞ்சுளே. (சூச)

எந்தை	எம்பெருமான்
ஊரகத்து	திருவூரகத்திலே
நின்றது	நின்றருளினதும்
பாடகத்து	திருப்பாடகத்திலே
இருந்தது	வீற்றிருந்ததும்
வெஃகணை	திருவெஃகாவில்
கிடத்தது	திருக்கண்வளர்ந்தருளினதும் (எப்போதென்றால்)
என் இலாத முன் எலாம்	நான் பிறவாதிருந்த முற்காலத்திலேயாய்த்து;
அன்று	அப்போது
நான் பிறந் திலேன்	நான் ஜ்ஞானஜன்மம் பெற்றேனில்லை;
பிறந்தபின்	அதுபெற்ற பின்பு [அறிவு பிறந்தபின்பு]
மறந்திலேன்	மறக்கவில்லை:
நின்றதும் இருந்ததும் கிடந்ததும் என் நெஞ்சுளே	ஆதலால் அவன் ஊரகம் முதலிய திருப்பதிகளில் பண்ணும் செயல்களையெல்லாம் எனது நெஞ்சினுள்ளே செய்யா நின்றான் காணீர்.

* * * உலகத்திலே ஒருவனுக்கு ஒருவன் கடன்கொடுத்திருந்தால் அந்தக்கடனைத் திருப்பிவாங்கிக்கொள்வதற்காகக் கடனாளி வீட்டிலேவந்து கேட்குமபோது முகத்தில் நிலாநின்றுகொண்டே கேட்டுவிட்டுப் போய்விடுவன்: அவ்வளவில் காரியம் ஆகாதே; பலபலமுறை வந்து சிலநாள்வரையில் திண்ணைமீது உட்கார்ந்துகொண்டு கடனை நிர்ப்பந்தித்துப்பார்ப்பன்; அவ்வளவிலும் கைபுகாவிடில் 'கடனைத்தீர்த்தாலொழியப்போவதில்லை' என்று படுக்கைபோட்டு நிர்ப்பந்திப்பன்; இப்படியாகவே எம்பெருமானும் அஸ்மதாதிகள் செலுத்தவேண்டிய கைங்கரியக் கடனைப் பெற்றுக்கொள்வதற்காக ஓரிடத்தில் நின்று பார்க்கிறான். மற்றோரிடத்தில் வீற்றிருந்து பார்க்கிறான்; இன்னுமோரிடத்தில் சாய்ந்து பார்க்கிறான்.—திருவூரகத்திலே நீற்கிறான், திருப்பாடகத்திலே இருக்கிறான்: திருவெஃகாவிலே கிடக்கிறான்; இப்படி நிற்பது இருப்பது கிடப்பதாகிறவிவை எப்போதென்னில்; நான் ஆபிமுக்யம்பண்ணப்பெறுத காலத்திலேயாய்த்து. உபயவிபூதிநாதனை தான் ஸம்ஸாரியான வெனக்கு ருசிபிறவாதகாலமெல்லாம் ருசிபிறக்கைக்காக நின்று னிருந்தான் கிடந்தான்; எனக்கு ருசியைப்பிறப்பிக்கை அவனுக்கு ஸாத்யம் (பலன்): அதற்கு ஸாதநம்-நிற்றலிருத்தல் கிடத்தல்கள். பலன்கைபுகுந்தவாறே

இவ்ய தேசங்களிலே நிற்றலிருத்தல் கிடத்தல்களைத் தவிர்ந்து ("அரவத்தமளியினேறு மழகிய பாற்கடலோடும், அரவிந்தப்பாவையுந்தானு மகம்படிவந்து புகுந்து" என்னுமாபோலே) அவ் விருப்புக்களையெல்லாம் எனது நெஞ்சிலே செய்தருளினை னென்கிறார்.

இரண்டாமடியில், நானிலாத என்னவேண்டுமிடத்து என்னிலாத என்றதை வடமொழி யில் ஆர்ஷப்ரயோகங்களைப்போலவும் சாந்தஸப்ரயோகங்களைப்போலவும் கொள்க: "அப்பனே யென்று மறப்பன் என்னுகியே" என்ற திருவாய்மொழிப் பிரயோகமும் நோக்கத்தக்கது.(சூசு)

816 நிற்பதுமோர்வேற்பகத்து இருப்புவிண்கிடப்பதும் *
நற்பெருந்திரைக்கடலுள் நானிலாதமுன்னெலாம் *
அற்புதனநந்தசயநன் ஆதிபூதன்மாதவன் *
நிற்பதுமிருப்பதும் கிடப்பதுமென்னெஞ்சுளே. (சூடு)

அற்புதன்	(ஞானம் சக்தி முதலியவற்றால்) ஆச்சரியபூதனும்	இருப்பும்	வீற்றிருப்பதும்
அனந்த சயனன்	அரவணைமேற் பள்ளி கொள் பவனும்	நல் பெருதிரை கடலுள் கிடப்பதும்	நல்ல பெரிய அலைகளையுடைய திருப்பாற்கடலிலே சாய்ந் தருள்வதும்,
ஆதிபூதன் மாதவன்	ஜகத்காரணபூதனும் ச்ரிய:பதியுமான பெருமான்	நான் இலாத முன் எலாம்	நான் முறையறியாதே அஸத் தாய்க் கிடந்த காலத்திலேயாம்: (இப்பொழுதோவென்றால்)
ஓர் வெற்பு அகத்து நிற்பதும்	விலக்ஷணமான திருவேங்கட மலையிலே நின்றருள்வதும்	நிற்பதும் இருப்பதும் கிடப்பதும் என் நெஞ்சுளே.	
விண்	பரமாகாசமென்னும் திருநாட் டிலே		

* * * தம்முடைய திருவுள்ளத்தினின்றும் எம்பெருமான் பேராமல் இங்கேயே ஸ்தாவரப்ரதிஷ்டையாயிருக்கிற இருப்பிலே மிகவும் ஈடுபட்டு, எம்பெருமான் திருவேங்கட மலையில் நிற்பதும் திருநாட்டிலே இருப்பதும் திருப்பாற்கடலிலே கிடப்பதுமெல்லாம் தன்னை டுண்டான முறைமை அறியாதே நான் அஸத்கல்பனையிருந்த காலத்திலேயாம்: நான் முறை யறிந்து பரிமாறினபின்பு அவ்வெம்பெருமானுடைய பரிமாற்றமெல்லாம் எனது நெஞ்சி னுள்ளே யாய்த்து என்கிறார். (சூடு)

817 இன்றுசாதனின்றுசாதல் அன்றியாரும்வையகத்து *
ஒன்றிநின்றுவாழ்தலின்மைகண்டும் நீசரென்கொலோ *
அன்றுபாரளந்த பாதபோதையுன்னிவானின்மேல் *
சென்றுசென்றுதேவராய் இருக்கிலாதவண்ணமே. (சூசு)

இன்று சாதல்	பிறந்தானென்கிற கூணத்திலே செத்துப்போவதோ	நீசர்	அறிவில்லாதவர்கள்
நின்று சாதல்	சிலகாலமிருந்து செத்துப் போவதோ	அன்று பார் அளந்தபாத போதை உன்னி	முன்பு பூமிமுழுவதையும் அள ந்தருளின பாதாரவிந்தத்தைச் சிந்தித்து
அன்றி	இவ்விரண்டத்தொன்று தவிர	சென்று	அர்ச்சிராதிமார்க்கத்தாலே சென்று
யாரும்	மேன்மக்களான ப்ரஹ்மாதி களும்	வானின்மேல் சென்று	பரமபதத்தேறப் புகுந்து
வையகத்து	இந்நிலத்திலே	தேவர் ஆய் இருக்கிலாத வண்ணம் என் கொல்	நித்யஸூரிகளோடொக்க இரா தது ஏனே?
ஒன்றி நின்று வாழ்தல் இன்மை கண்டும்	சிரஞ்சீவியாயிருந்து வாழமுடியாதென்பதை ப்ரத்ய க்ஷமாகப் பார்த்திருந்தும்		

* * * கருவிலேயே சிலவுயிர்கள் மாண்டொழிகின்றன; கருவில் நின்றும் கீழே விழுந்தவாறே சிலவுயிர்கள் மாண்டொழிகின்றன; சிலகாலம் ஜீவித்திருந்து சிலர் மாள்வர்: இப்படியல்லது, என்றைக்கும் அழிவில்லாதவர்களென்று சொல்லும்படியாக இந்நிலத்திலே

சிரஞ்ஜீவிகளாயிருப்பார் ஆருமில்லை என்னுமிடத்தைக் கையிலங்கு நெல்லிக்கனியாக ப்ரத்யக்ஷீகரித்துவைத்தும், அன்றொருகால் குணதோஷ நிரூபணம் பண்ணுமல் ஸகலலோகங்களிலு முண்டான ஸகல சேதநர் தலையிலும் பொருந்தி முறையையுணர்த்தின ஸர்வ ஸுலபமான நிருவடித்தாமரைகளே ஆச்ரயித்து அர்ச்சிராதிமார்க்கத்தாலே சென்று மீட்சியற்ற வைகுந்த மாநகரைக்கிட்டி நித்யஸூரிகளோடு ஒரு கோவையாயிருப்பதற்கு முயல்வார் ஆருமில்லையே! இஃது என்ன பாவம்!! என்கிறார். "பாதபோதை யொன்றி" என்றும் பாடமுண்டு. (கூசூ)

818 சண்டமண்டலத்தினூடு சென்றுவீடுபெற்றுமேல் *
கண்டுவீடிலாதகாதல் இன்பநாளுமெய்துவீர் *
புண்டரீகபாதபுண்யகீர்த்தி நுஞ்செவிமடுத்து,
உண்டு * நும்முறுவினைத் துயருள்நீங்கியுய்ம்மினே. (கூஎ)

சண்டன் மண்டலத்தினூடு சென்று	ஸூர்யமண்டலமத்யமார்க்கத்தாலே போய்	புண்டரீக பாதன்	தாமரைபோன்ற திருவடிகளை யுடையனான பெருமானுடைய
வீடு பெற்று	பரமபதத்தை அடைந்து (அவ்விடத்தில்)	புண்ய கீர்த்தி	பரிசுத்தமான திருப்புகழ்களை
மேல் வீடு இலாத காதல் இன்பம் நாளும் கண்டு எய்துவீர்	ஒருநாளும் அழிவில்லாததான பக்தியின் பயனான கைங்கர்யஸுகத்தை நித்யமாகப்பெற விருப்பமுடையவர்களே! [முமுக்ஷுக்களே]	நும் செவி	உங்களுடைய காதுகளிலே
		மடுத்து	தேக்கி
		உண்டு	அநுபவித்து,
		நும் உறு வினை துயருள் நீங்கி உய்ம்மின்	உங்களுடைய ப்ரபல பாபங்களின் பலனான துக்கங்களில் நின்றும் நீங்கி உஜ்ஜீவித்துப் போங்கோள்.

* * * இதுமுதல் மேலேழுபாட்டாலே பரோபதேசம் பண்ணியருளுகிறார். ஸம்ஸாரிகள் தங்களுக்கு ஹிதமானதை அறிந்துகொள்ளாவிடினும் நாமாவது அறிவித்து அவர்களை உய்விப்போமென்று திருவுள்ளம்பற்றி, அவர்களுடைய துர்கதியைக்கண்டு பொறுத்திருக்க மாட்டாத க்ருபாவிசேஷத்தாலே உபதேசத்திலே மூளுகிறபடி. அர்ச்சிராதிமார்க்கத்தாலே சென்று நிலைநின்ற புருஷார்த்தத்தைப்பெற விருப்பமுடையீர்! ப்ராப்யமும் ப்ராபகமுமான பகவத் விஷயத்தை ஆச்ரயித்து உங்களுடைய விரோதிகளைப் போக்கிக்கொண்டு உஜ்ஜீவித்துப் போங்கள் என்கிறார் இப்பாட்டில்.

வடமொழியில் ஸூர்யனுக்கு 'ஸவிதா' என்று பெயர்; அதில் ஏகதேசத்தைக் கொண்டு சண்டன் என்கிறாரிங்கு. காதலின்பம்—காதல் என்று பக்திக்குப் பெயர்: பக்தியின் பலமான இன்பமாவது கைங்கர்யஸுகம். "செவிமடுத்துண்டு" என்றவிடத்து, "செவிக்குணவில்லாதபோது சிறிது, வயிற்றுக்கு மீயப்படும்" என்ற குறள் நினைக்கத்தக்கது. (கூஎ)

819 முத்திறத்துவாணியத்து இரண்டிலொன்றுநீசர்கள் *
மத்தராய்மயங்குகின்றது இட்டதிலிறந்துபோந்து *
எத்திறத்துமுய்வதோர் உபாயமில்லையுய்குறில் *
தொத்திறுத்ததண்டுழாய் நன்மாலைவாழ்த்திவாழ்மினே. (கூஏ)

முத்திறத்து	மூன்றுவகைப்பட்ட [ஸாத்விக, ராஜஸ, தாமஸங்களான]	அதில் இட்டு	அந்த லோகத்திலே அந்தக் கரும பலன்களை யொழித்து
வாணியத்து இரண்டில்	பலன்களுக்குள்ளே (ஸாத்விகமொழிந்த) மற்றை யிரண்டு பலன்களில்	இறந்து	அவற்றை யநுபவிப்பதற்காகப் பூண்டுகொண்ட சரீரத்தை முடித்து
ஒன்றும் நீசர்கள்	விருப்பமுடையரான நீசரான மனிசர்கள்	போந்து	(மறுபடியும் கர்ப்பவாஸ வழியாலே) பூலோகத்தில் வந்து

மத்தர் ஆய்	'தேஹமே ஆத்மா' என்கிற ப்ரமத்தையுடையராய்
மயங்குகின்றது	மோஹித்துப்போவார்கள்; (அப்படிப்பட்டவர்கட்கு)
உய்வது ஓர் உபாயம்	உஜ்ஜீவகோபாயம்
எத்திறத்தும் இல்லை	எவ்வழியாலுமில்லை; [மேலேறுவதும் கீழிறங்குவதுமாய்த் திரிதலொழிய நிலைநின்ற புருஷார்த்தம்பெற விரகில்லை;]
உய்குறில்	(உங்களுக்கு) உஜ்ஜீவிக்க விருப்பமுண்டாகில்
தொத்து இறுத்த	கொத்துக்கொத்தாகச் செறிந்த
தண் துழாய்	குளிர்ந்த திருத்துழாய் மாலையை புடையனை
நல் மாலை	பரமபுருஷனை
வாழ்த்தி	துதித்து
வாழ்மின்	உஜ்ஜீவித்துப்போங்கோள்.

* * * ஸம்ஸாரிகள் ஸத்வ குணமொன்றையே மேற்கொள்ளாமல் ரஜஸ் தமோகுணங்களுக்கும் வசப்பட்டிருப்பதால் அக்குணங்கட்குத் தகுதியாக ராஜஸ தாமஸ தேவதைகளையும் அவர்கள் ஆச்ரயிக்கக்கூடுமாதலால் அப்படி மதிகெட்டுப் போகாதபடி ஸர்வாதிகனை புனத் துழாய் மாலையாலேயே ஆச்ரயித்து உஜ்ஜீவிக்கச் சொல்லுகிறார்.

உலகத்தில் அவரவர்கள் பெறும் பலன்கள் மூன்றுவகைப்படும்; ஸாத்விக தேவதையை ஆச்ரயித்தால் ஸாத்விகபலன் பெறலாகும்; ராஜஸதேவதைகளை ஆச்ரயித்தால் ராஜஸபலன்; தாமஸதேவதைகளை ஆச்ரயித்தால் தாமஸபலன்; இம்மூவகைப்பட்ட பலன்களினுள் ஸாத்விக பலனைப்பேணாது மற்ற இருவகைப் பயன்களை விரும்பி அவ்வழியிலே ஊன்றித்திரிகின்ற நீச மனிசர்கள் நித்யஸுகத்தை அடையமாட்டார்கள்; அந்தப்பலன்களைச் சில தேசவிசேஷங்களில் அநுபவிப்பதும் மீண்டும் இவ்வுலகத்திலே பிறந்துழல்வதுமாய் இப்படியே தேஹாத்மாபிமானிகளாய் நசித்துப்போவர்களேயன்றி எவ்விதத்திலும் உஜ்ஜீவிக்கக் கடமைப்பட்டவர்களல்லர். உஜ்ஜீவிக்கவேண்டில், ஸர்வரக்ஷகனென்னுமிடத்துக்கு ப்ரகாசகமாகத் திருத்துழாய் மாலையை யணிந்துள்ள பெருமானைப் பணிந்து வாழவேண்டும். (சூஅ)

820 காணிலுமுருப்பொலார் செவிக்கினிதகீர்த்தியார் *
பேணிலும்வரந்தர மிடுக்கிலாததேவரை *
ஆணமென்றடைந்துவாழும் ஆதர்காளெம்மாதிபால் *
பேணிநும்பிறப்பெனும் பிணக்கறுக்கிற்றிரே. (சூகூ)

காணிலும்	கண்டாலும்
உரு பொலார்	விகாரமான உருவத்தையுடையராயும்
செவிக்கு இனிது அகீர்த்தியார்	காதுக்குக் கடூரமான சரித்திரங்களையுடையராயும்
பேணிலும்	(இப்படிப்பட்ட விகாரமான உருவத்தையும் ஹேயமான சரிதையையும், கவனியாமல்) ஆச்ரயித்தாலும்
வரம் தர	(ஆச்ரயித்தவர்கட்கு) இஷ்டத்தைக்கொடுக்க
மிடுக்கு இலாத	சக்தியற்றவர்களாயுமுள்ள
தேவரை	தேவதைகளை
ஆணம் என்று	சரணமென்றுகொண்டு
அடைந்து வாழும்	அவற்றையடைந்து கெட்டுப்போகிற
ஆதர்காள்	குருடர்களே!
எம் ஆதி பால்	ஸர்வகாரணபூதனை எம்பெருமானிடத்து
பேணி	வழிபாடுகளைச் செய்து
நும்	உங்களுடைய
பிறப்பு எனும்	ஸம்ஸாரமாகிற
பிணக்கு	பெரும்புதரை
அறுக்க கிற்றிரே	அறுத்தொழிக்க வல்லீர்களோ?

* * * தேவதாந்தரங்களினுடைய அயோக்யதைகளை நன்றாகச்சொல்லி, இப்படிப்பட்ட தேவதாந்தரங்களை உதறித்தள்ளிவிட்டு ஸர்வ ஜகத்காரண பூதனை எம்பெருமானை யடி பணிந்து முக்தர்களாய்ப்போகலாகாதா? என்கிறார். "காணிலும் உருப்பொலார்—அந்த தேவதாந்தரங்களைக் காணவேகூடாது; கண்டால் வடிவாவது கண்ணுக்கு நன்றாயிருக்குமோவென்றால், இராது, மஹாகோரமாயிருக்கும்: 'விரூபாக்ஷன்' என்கிற பெயரேபோராதோ வடிவின்

பொல்லாங்கைக் காட்டுகைக்கு. அக்குப்புலியினதளுமான கோலம் காணப்பொல்லாதாயிருக்குமே. வடிவின்பொல்லாங்கு இருக்கட்டும்; சரித்திரமாவது காதுகொடுத்துக்கேட்க இனிதாயிருக்குமோவென்னில்; சேவிக்கு இனிய கீர்த்தியார்-தகப்பன்தலையைக் கிள்ளினான்; கபாலதாரியாய் உலகமெங்குந்திரிந்து பிச்சையெடுத்தான்; யாகத்தைக்கெடுத்தான்; மாமனுரை பாய்த்தான்; என்றிப்படிப்பட்ட சரிதைகள் காதுகொண்டு கேட்கக்கூடாதவையிறே. இவற்றையெல்லாம் ஸஹித்துக்கொண்டு வருந்தி ஆச்ரயித்தாலும் இஷ்டத்தை நிறைவேற்றித்தரவல்ல சக்தியாவது உண்டோவென்னில்; பேணிலும் வரந்தர மிடுக்கு இலாத தேவர்—கண்டா கர்ணனுடைய சரித்திரத்தை ஆராய்ந்தால் இதுதெரியும். இப்படிப்பட்ட தேவதைகளைச் சரணமாகப் பற்றிநின்ற அறிவுகேடர்களே! நமக்கெல்லார்க்கும் காரணபூதனான பரமபுருஷன் பக்கலிலே ஆதரத்தைப்பண்ணி, ஒருவராலும் அறுக்கப்போகாத உங்களுடைய பிறவியென்னும் தூற்றை அறுத்துக்கொள்ள மாட்டீர்களோ?. "வரந்தரும் மிடுக்கிலாத" என்றும் பாடமுண்டு. ஆணம்—சரணம். அடைந்து வாழும்—அயோக்ய தைவங்களையடைந்து பாழாய்ப் போகிறீர்களே! என்று கூப்பிக்கிறபடி. ஆகவே, வாழும் என்றது விபரீதலக்ஷணை. ஆதர்—குருடரும், அறிவுகேடரும். (கூகூ)

821 குந்தமோடுசூலம்வேல்கள் தோமரங்கள்தண்டுவாள் *
பந்தமானதேவர்கள் பரந்துவானகமுற *
வந்தவாணனீரைஞ்ஞூறு தோள்களூன்றுணித்தநாள் *
அந்தவந்தவாகுலம் அமரரேயறிவரே. (எல)

குந்தமோடு சூலம் வேல்கள் தோமரங்கள் தண்டு வாள் — ஈட்டிகளென்ன சூலங்களென்ன வேலாயுதங்களென்ன இருப்புலக்கைகளென்ன கதைகளென்ன வாள்களென்ன (இவற்றோடுகூட)

பந்தம் ஆன தேவர்கள் — கூட்டங் கூட்டமாயிருந்த ருத்ராதிதேவதைகள்

பரந்து — (பல திக்குகளிலும்) சிதறிப்போய்

வானகம் உற — தங்கள்தங்களிருப்பிடமான மேலுலகங்களிற் சென்றுசேர,

வந்த வாணன் — (பிறகு சோள்களை வீசிக்கொண்டு) எதிர்த்துவந்த பாணாஸுரனுடைய

ஈர் ஐ நூறு தோள்களை — ஆயிரந் தோள்களை

துணித்த நாள் — அறுத்துத் தள்ளினபோது (அத்தெய்வங்கள்)

அந்த அந்த ஆகுலம் — வாயாற்சொல்லமுடியாதபடி வியாகுலப்பட்டமையை

அமரரே அறிவர் — (நாம் அறியோம்;) அத்தெய்வங்கள் தாமே அறிவர். (அவர்களையே கேட்டுக்கொள்வது.)

* * * "வரந்தரமிடுக்கிலாததேவர்" என்று கீழ்ப்பாட்டிற் கூறியதைக் கேட்ட சிலர், "இப்படிசொல்லலாமோ? அவர்களுக்கு சக்தி இல்லையோ? அவர்களை ஆச்ரயித்து இஷ்டஸித்தி பெற்றவர்கள் பலபேர்களில்லையோ?" என்ன; ருத்ரனை யாச்ரயித்து அவனுக்கு [illegible] யிருந்த பாணஸுரன் பட்டபாடும், அந்த ருத்ரன் தானும் கண்கலங்கினபடியும் அப்போது உடன்பட்ட தேவர்கட்கே தெரியுமத்தனையென்கிறார்.

பந்தமானதேவர்கள்—பந்தமாவது ஸம்பந்தம், ருத்ரனோடு ஸம்பந்தமுடையவர்களான ஸுப்ரஹ்மண்யன் முதலான தேவதைகள் என்றபடி. வாணனுக்கு உறவான ருத்ரர்கள் என்றுமாம். இங்ஙனன்றிக்கே, "குந்தமோடு சூலம் வேற்கள் தோமரங்கள் தண்டுவாள்பந்தமான" என்று சேர்த்து அன்வயிக்கவுமாம்; குந்தம் முதலான ஆயுதங்கள் காற்கட்டாகப் பெற்ற தேவர்கள் என்றதாகிறது. ரகஸ்யமாக வேண்டிய ஆயுதங்கள் காற்கட்டானபடி; இராவணனுக்குப்போல. (எல)

822 வண்டுலாவுகோதைமாதர் காரணத்தினுல்வெகுண்டு *
இண்டவாணனீரைஞ்ஞூறு தோள்களோத்துணித்தநாள் *
முண்டனீறன்மக்கள்வெப்பு மோடியங்கியோடிடக்
கண்டு * நாணிவாணனுக்கிரங்கினன் எம்மாயனே. (எக)

வண்டு உலாவு கோதை மாதர் காரணத்தினுல்	(மகரந்தத்திற்காக) வண்டுகள் உலாவப்பெற்ற பூமாலையை அணிந்திருந்த உஷையின் நிமித்தமாக
வெகுண்டு	கோபங்கொண்டு
இண்ட	செறிந்துவந்த
வாணன்	பாணசுரனுடைய
ஈர் ஐ நூறு தோள்களை	ஆயிரந்தோள்களை
துணித்தநாள்	கழித்தபோது
முண்டன் நீறன்	மொட்டைத்தலையனுய் நீறு பூசினவனை ருத்திரனும்
மக்கள	அவனுடைய குமாரர்களும்
வெப்பு	ஜ்வரதேவதையும்
மோடி	பிடாரியும்
அங்கி	அக்கிதேவதையும் (மற்றுமுள்ளவர்களும்)
ஓடிட	(பாணசுரனை வஞ்சித்துவிட்டு, தங்களுயிரைக் காத்துக்கொள்ள) ஓடிப்போன வளவிலே
கண்டு	பார்த்து
நாணி	(இந்த முதுகுகாட்டிப் பயல்களோடு போர் செய்யவா நாம் வந்தோமென்று) வெட்கப்பட்டு
வாணனுக்கு	பாணசுரன் விஷயத்திலே
இரங்கினன்	கிருபைபண்ணினவன்
எம்மாயனே	ஆச்சரிய சக்தியுக்தனை எம் பெருமானேயாவன். ('எம் ஆயனே' என்று பிரிக்கவுமாம். ஆயன்—கண்ணபிரான்.)

* * * ருத்ரனைவன் பாணனை ரக்ஷிப்பதாகப் பிரதிஜ்ஞை பண்ணிவைத்து, பரிகரங்களோடுகூட ரக்ஷிக்க முயற்சியுஞ்செய்து ரக்ஷிக்க முடியாமல் எதிரிகையிலே அவனைக் காட்டிக்கொடுத்துத் தப்பிப்போனபடியாலும், கண்ணபிரான் க்ருபைபண்ணி அவனுடைய ஸத்தையை நோக்கினபடியாலும் அந்தச்சிவன் ரக்ஷகனல்லவென்றும் கண்ணபிரானே ரக்ஷகனென்றும் ப்ரத்யக்ஷஸித்தமாயிற்றென்கிறார்.

தன்னுடைய பெண்ணான உஷையானவள் தன் ஆசைதீர அநிருத்தாழ்வானோடு கலவி செய்திருக்கச்செய்தே அதனையுணர்ந்து ஸந்தோஷியாமல் கோபங்கொண்டவனுய் யுத்தத்திலே வந்து மேல்விழுந்த வாணனுடைய ஆயிரந்தோள்களை யறுத்தவக்காலத்தில், மொட்டைத் தலையனும் சாம்பலாண்டியுமான சங்கரனும் அவனது புதல்வரான ஷண்முகாதிகளும், ஜ்வரதேவதை, பிடாரி, நாற்பத்தொன்பது அக்நிகளுக்குக் கூடஸ்தனான அக்நி இவர்களும் தங்கள் தங்கள் பிராணனைக் காப்பாற்றிக்கொண்டால் போதுமென்றெண்ணி முதுகுகாட்டி ஓடிப் போக, உயிரிழக்கவேண்டியவனான வாணன்மீது பரமகிருபையைச் செய்தருளி நான்கு தோள்களைப் உயிரையும் கொடுத்தருளினன் எம்பெருமான்; ஆனபின்பு இவன் ரக்ஷகனே! மற்றையோர் ரக்ஷகரோ? ஆராய்ந்து காண்மின் என்றவாறு. (எக)

823 போதின்மங்கைபூதலக்கிழத்தி தேவியன்றியும் *
போதுதங்குகான்முகன் மகனவன்மகன்சொலில் *
மாதுதங்குகூறன் ஏறதூர்தியென்றுவேதநூல் *
ஓதுகின்றதுண்மையல்லதில்லை மற்றுரைக்கிலே. (எஉ)

போதில் மங்கை	பூமகளான லக்ஷ்மியும்
பூதலம் கிழத்தி	பூமிப்பிராட்டியும்
தேவி	தேவிமாராவர்;
அன்றியும்	மேலும்
போது தங்கு கான் முகன்	பூவிலே பொருந்தியிருப்பவனை பிரமன்
மகன்	புத்திரனுயிரா நின்றான்;
சொலில்	மேலும் சொல்லப்புக்கால்
மாது தங்கு கூறன்	ஒரு பக்கத்திலே பார்வதி தங்கப்பெற்றவனுய்
ஏறு அது ஊர்தி	எருதை வாஹநமாக வுடையனை சிவன்

அவன் மகன்	பேரனுமிராகின்றன்;
என்ற	இவ்வண்ணமாக
வேதம் சொல்	வேதசாஸ்த்ரம்
ஓதுகின்றது	உரைப்பதானது
உண்மை	ஸத்யம்;
மற்று	இங்ஙனன்றிக்கே
அல்லது	இப்படியல்லாத வேறொரு அர்த்தத்தை [சிவபாரம்யத்தை]
உரைக்கில்	(சைவ ஆகமாதிகளைக் கொண்டு) சொல்லப்பார்க்கில்
இல்லை	அது அஸத்யம்.

* * *—எம்பெருமானுடைய பரத்வஹேதுவான பெருமைகளைப் பேசுகிறார். பூவிலே பிறந்த பெரியபிராட்டியாரும் ஸ்ரீபூமிப்பிராட்டியாரும் தேவிமாராக இருக்கிறார்கள்; நாபிக்கமலத்திலே பிறந்த நான்முகன் புத்ரனாக அமைந்திருக்கிறன்; ஸாம்பமூர்த்தியாய் வ்ருஷபத்வஜனனான ருத்ரன் பௌத்ரனாக அமைந்திருக்கிறன்—இது நான் சொல்லும் வார்த்தையல்ல; வேதங்களில் முறையிடப்படும் பொருள் இதுவேயாம். இது யதார்த்தமேயன்றி ப்ரசம்ஸாவாக்யமல்ல. ச்ரிய:பதி என்னுமிடமும் பிரமனுக்குப்பிதா என்னுமிடமும் சிவனுக்குப் பிதாமஹன் என்னுமிடமும் எம்பெருமானுடைய பரத்துவத்தை ஸ்தாபித்துக் கொடுத்து சிவாதிகளுடைய அவரத்வத்தையும் நிலைநாட்டித்தருமென்க. (எஉ)

824 மரம்போதச்சரந்துரந்து வாலிவீழமுன்னேர்நாள் *
உரம்போதச்சரந்துரந்த உம்பராளி யெம்பிரான் *
வரங்குறிப்பில்வைத்தவர்க்கலாது வானமாளிலும் *
நிரம்புநீடுபோகம் எத்திறத்தும்யார்க்குமில்லையே. (எங)

முன் ஓர் நாள்	முன்னொரு காலத்திலே
மரம் பொத	ஸப்தஸாலவ்ருக்ஷங்கள் துளை படும்படியாக
சரம் துரந்து	அம்பைப்பிரயோகித்து (அதற்குப்பிறகு)
வாலி வீழ	வாலியானவன் முடியும்படியும்
உரம் பொத	அவனது மார்பிலே பொத்தும் படியும்
சரம் துரந்த	பாணத்தைப் பிரயோகித்த
உம்பர் ஆளி எம் பிரான்	தேவாதிதேவனான எம்பெருமான்
வரம் குறிப்பில்	(தன்னுடைய) சிறந்த திருவுள்ளத்திலே
வைத்தவர்க்கு அலாது	யாரை விஷயீகரிக்கிறனோ அவர்கட்குத்தவிர;
வானம் ஆளிலும்	மேலுலகங்கட்கு அதிபதிகளாயிருந்தாலும்
யார்க்கும்	மற்றெவர்கட்கும்
நிரம்பு நீடு போகம்	சாச்வதமாய்ப் பரிபூர்ணமான கைங்கர்யஸுகம்
எத்திறத்தும்	எவ்வழியாலும்
இல்லை	கிடைக்கமாட்டாது.

* * *—அந்தப் பரமபுருஷனே இராமபிரானாகத் திருவவதரித்தனனென்றுசொல்லி, அந்த மஹானுபாவனுல் திருவுள்ளம்பற்றப்படாதவர்கள் உத்தமாதிகாரிகளாயிருந்தாலும் நித்யஸுகானுபவத்திற்கு உரியரல்லர் என்கிறார்.

ஸப்தஸாலவ்ருக்ஷங்களைத் துளைத்ததுபோலவே வாலியின்மார்பையும் பாணத்தினுல் துளைத்து அவனுயிரைமாய்த்த மஹானுபாவனது திருவுள்ளத்தாலே விஷயீகரிக்கப்பட்டவர்களுக்கன்றி மற்றெவர்க்கும் நித்யமான மோக்ஷத்தைப்பெற வழியில்லை. மூன்றாமடியில், அலாது = 'அல்லது' என்பது அலது எனத் தொக்கி நீட்டல் பெற்றது. வானம்ஆளிலும் = சிறந்த ஞானத்தையுடையராய்ப் பதினன்கு லோகங்கட்கும் நிர்வாஹகராகிய ப்ரஹ்மாதிகளாயிருந்தாலும் என்றபடி. (எங)

825 அறிந்தறிந்துவாமனன் அடியிணைவணங்கினுல் *
செறிந்தெழுந்தஞானமோடு செல்வமுஞ்செறிந்திடும் *
மறிந்தெழுந்ததெண்டிரையுள் மன்னுமாலை வாழ்த்தினுல் *
பறிந்தெழுந்துதீவினைகள் பற்றறுதல்பான்மையே. (எச)

வாமனன்	உலகளந்தபெருமானுடைய
அடி இணை	அடியிணைகளை
அறிந்து அறிந்து	உபாயமென்றும் உபேயமென்றும் தெரிந்துகொண்டு
வணங்கிலை	நமஸ்கரித்தால்
செறிந்து எழுந்த ஞானமோடு	பரம ச்லாக்யமாகக் கிளர்ந்த ஞானமும்
செல்வமும்	பக்தியாகிற செல்வமும்
செறிந்திடும்	பரிபூர்ணமாக விளையும்;
மறிந்து எழுந்த	பரம்பிக்கிளர்ந்த
தெண் திரையுள்	தெளிந்த அலைகளையுடைய திருப்பாற்கடலிலே
மன்னு	நித்யவாஸம் செய்தருள்கின்ற
மாலை	ஸர்வேச்வரனை
வாழ்த்திலை	ஸங்கீர்த்தநம் பண்ணினால்
எழுந்த தீ வினைகள்	ஆத்மஸ்வரூபத்திலே வளர்ந்து கிடக்கிற கொடு வினைகள்
பற்று அறுதல்	வாஸனையும் மிகாதபடி நசித்துப்போதல்
பான்மையே	இயற்கையேயாம் [அநாயாஸமாக நசிக்குமென்கை.]

* * *—பரமபுருஷனுடைய திருவுள்ளம்பற்றல்தானே மோக்ஷஸாதநமாகில் முமுக்ஷுவான அதிகாரி செய்யவேண்டியது ஒன்றுமில்லையோவெனில்; அவ்வெம்பெருமானுடைய திருவடித்தாமரைகளை வணங்குதலும் அவனது திருப்புகழ்களை வாயாரவாழ்த்துதலும் இவனுக்குக் காலக்ஷேபமாகக்கடவது; இவற்றால் இவனுடைய பாவங்கள் தொலைந்து நல்ல ஞானபக்திகள் தழைக்கும் என்கிறார்.

எம்பெருமான் தன்னுடைமையைப் பெறுதற்குத் தானே யாசகனாய் நிற்பவன் என்பதையும், அடியாரை ஆட்கொள்ளுமிடத்தில் வலிஷ்ட சண்டாள விபாகம் பாராமல் எல்லார் தலையிலும் ஒரு ஸமமாகத் திருவடிகளை வைத்து ஆட்படுத்திக் கொள்பவன் என்பதையும் சாஸ்த்ர ச்ரவணத்தாலும் ஆசார்ய உபதேசத்தாலும் நன்கு தெரிந்துகொண்டு அத்திருவடிகளை வணங்கிலால் ஞான ஸம்பத்தும் பக்தி ஸம்பத்தும் குறைவின்றி உண்டாகும்; திருப்பாற் கடலிலே துயில்கின்ற அப்பெருமானுடைய திருநாமங்களை வாயாலேசொன்னால் அவனைப் பெறுதற்கு ப்ரதிபந்தகங்களாயுள்ள பாவங்கள் அவலீலையாக அற்றொழியும் என்கை. பான்மை—இயற்கை; பாவங்களை ப்ரயாஸப்பட்டுப் போக்கினதுபோலன்காமே தன்னடையே போனதாகப் போமென்றபடி. (எசை)

826 ஒன்றிநின்றுநற்றவஞ்செய்து ஊழியூழிதோறெலாம் *
நின்றுநின்றவன்குணங்கள் உள்ளியுள்ளந்தூயராய் *
சென்றுசென்றுதேவதேவர் உம்பரும்பரும்பராய் *
அன்றியேங்கள்செங்கண்மாலை யாவர்காணவல்லரே. (எரு)

ஒன்றி நின்று	மனம் சலிபாமல் நிலைத்து நின்று
நல் தவம்	விலக்ஷணமான தபஸ்ஸை [அதாவது-கர்மயோகத்தை]
ஊழி ஊழி தோறு எலாம் செய்து	பலபல ஜந்மபரம்பரைகளிலே அநுஷ்டித்து
அவன் குணங்கள்	அப்பெருமானுடைய திருக்குணங்களை
நின்று நின்று உள்ளி	ஸாத்மிக்க ஸாத்மிக்க அநுஸந்தித்து
உள்ளம் தூயர் ஆய்	கல்மஷமற்ற நெஞ்சையுடையராய்
சென்று சென்று	மேல்மேல் படிகளிலே ஏறி [ச்ரவணம் மநநம் நிதித்யாஸநம் என்கிற பர்வங்களிற் சென்று]
உம்பர் உம்பர் உம்பர் ஆய் அன்றி	பரபக்தியுக்தராய் பரஜ்ஞாநயுக்தராய் பரம பக்தியுக்தராய் இப்படி யெல்லா மாஞலல்லது
தேவதேவர்	(மற்றபடி) தேவதேவராயிருந்தாலும்
எங்கள் செம் கண் மாலை	செந்தாமரைக்கண்ணாலே எம்மை விஷயீகரித்தருளும் பெருமானை
யாவர் காண வல்லர்	யார் காணக்கூடியவர்கள்.

* * *—விசாலமான விஷயாந்தர வழிகளிலே ஓடக்கடவதான நெஞ்சை அவற்றில் நின்றும் வாங்கி மீட்டுப் பகவத்விஷயத்திலே நிலைநிறுத்தி நெடுங்காலம் கர்மயோகத்தை யநுஷ்டித்து அவ்வெம்பெருமானுடைய திருக்கல்யாண குணங்களை க்ரமேண அநுஸந்தித்து,

ஆகவிப்படி கர்மயோகாநுஷ்டாநத்தாலும் குணாநுஸந்தாநத்தாலும் மனம் பரிசுத்தமாகப் பெற்று, க்ரமத்தில் அநவரதபாவநையளவிற்சென்று பரமபக்தி தலையெடுத்துப் பரமபதத்திற் சென்று சரணாகதவத்ஸலனை புண்டரீகாக்ஷனை ஸேவிக்கப்பெறலாமத்தனையொழிய வேறு எவ்வழியாலே அவனை ஸாக்ஷாத்கரிக்க முடியும்? என்கிறார். எங்கள் பெருமானை யென்றுவது, எங்களீசனை யென்றுவது அருளிச்செய்யாது "எங்கள் செங்கண்மாலே" என்றருளிச் செய்த தன் உட்கருத்தைப் பெரிய வாச்சான்பிள்ளை யருளிச்செய்கிறார் காண்மின்—"ஜிதந்தே புண்டரீகாக்ஷ" என்கிற படியே ருசியே தொடங்கிப் பரமபக்தி பர்யந்தமாக அத்தலையில் விசேஷ கடாக்ஷத்தாலே ஸித்தி யென்று தோற்றுகைக்காகச் செங்கண்மால் என்றது,, என்று. (எரு)

827 புன்புலவழியடைத்து அரக்கிலச்சினைசெய்து *
நன்புலவழிதிறந்து ஞானநற்சுடர்கொளீஇ *
என்பிலெள்கிநெஞ்சுருகி உள்கனிந்தெழுந்ததோர் *
அன்பிலன்றியாழியானை யாவர்காணவல்லரே. (எசு)

புல்	சப்தாதிவிஷயங்களானை
புலன் வழி	சப்தாதிவிஷயங்களிலே இந்திரியங்கள் ஓடுவதற்குரிய வழியை
அடைத்து	அடைத்து
அரக்கு இலச்சினை செய்து	(விஷயமார்க்கத்வாரத்திலே) அரக்கு முத்திரையிட்டு
நன் புலன் வழி திறந்து	ஸத்விஷய மார்க்கத்தைத் திறந்துவிட்டு
ஞானம்	ஞானமாகிய
நல் சுடர்	விலக்ஷணமான ப்ரபையை
கொளீ இ	கொளுத்தி [ஞானத்தை நன்கு ப்ரகாசிக்கச்செய்து]
என்பு இல்	எலும்பு வீடாகிய சரீரம்
எள்கி	சிதிலமாகி
நெஞ்சு உருகி	நெஞ்சு உருகி (இப்படிப்பட்ட நிலைமையில்)
உள் கனிந்து எழுந்தது ஓர் அன்பில் அன்றி	பரிபக்குவமாய்க்கிளர்ந்த விலக்ஷணமான தொரு ப்ரேம முண்டாகலல்லது
ஆழியானை	திருவாழியைக் கையிலேந்தின பெருமானை

யாவர் காண வல்லர்—?.

* * *—சப்தாதி விஷயங்களைப் பற்றியோடுகிற இந்திரியங்களின் ஓட்டத்தைத் தடுத்து அவ்விஷயமார்க்கமே புல்லுமிடப் போம்படி அடைத்து அரக்கு முத்திரையிட்டு வாளனையும் மறுவலிடாதபடிபண்ணி, விலக்ஷண விஷயத்தில் இந்த்ரியங்களைப் பரவவிட்டு விலக்ஷணமான ஜ்ஞாநப்ரபையை நன்றாக விளக்கி எம்பெருமானுடைய ஸ்வரூபரூப குணவிபூதிகளை ஸ்வஜ்ஞாநத்துக்கு விஷயமாக்கி, அஸ்திமயமான சரீரம் சிதிலமாய் ஹ்ருதயம் உருகிக் கனிந்த ப்ரேம முண்டாகலல்லது சக்ரபாணியான எம்பெருமானை யார் ஸாக்ஷாத்கரிக்கவல்லர்?—"எப்போதுங் கைகழலா நேமியான் நம்மேல் வினைகடிவான்" என்கிறபடியே - விஷயாந்தரங்களிலே அவகாஹிப்பதற்கு அடியான பாபத்தையும் எம்பெருமான் நிறத்தில் வைமுக்ய்யத்துடனிருக்கைக்கு ஹேதுவான பாபத்தையும் கையில் திருவாழியாலே இருதுண்டமாக வெட்டி, கையுந் திருவாழியுஞ் சேர்ந்த சேர்த்தியைக் காட்டித் தன் விஷயமான பக்தியை வளரச்செய்த அப் பெருமானை நான் கண்டாப்போலே வேறுயார் காணவல்லாரென்றவாறு.

புன்புலவழிகளில் அரக்கிலச்சினை (ஸீல்) வைக்கமுடியுமோ வென்னில்; மறுபடியும் அந்தவழி காணவொண்ணாதபடி நன்றாக அதனை மறந்து என்றபடி. என்பிலெள்கி = என்பு - எலும்பு; எலும்புகட்கு, இல் - இருப்பிடம், சரீரம்; அது எள்குமோ வெனில் "கடல்கிறக்கடவுளெந்தையரவணைத்துயிலுமா கண்டு, உடலெனக் குருகுமாலோ" என்றாரே தொண்டரடிப்பொடியாழ்வார். (எசு)

828 எட்டுமெட்டுமெட்டுமாய் ஒரேழுமேழுமேழுமாய் *
எட்டுமூன்றுமொன்றுமாகி நின்றவாதிதேவனை *
எட்டினையபேதமோடு இறைஞ்சிநின்றவன்பெயர் *
எட்டெழுத்துமோதுவார்கள் வல்லர்வானமாளவே. (எஎ)

எட்டும் எட்டும் எட்டும் ஆய்	இருபத்தினைந்து தத்துவங்களுக்கு நிர்வாஹகனையும்
ஓர் ஏழும் ஏழும் ஏழும் ஆய்	ஸப்தத்வீபங்களுக்கும் ஸப்த குலபர்வதங்களுக்கும் ஸப்த ஸாகரங்களுக்கும் நிர்வாஹகனையும்
எட்டும் மூன்றும் ஒன்றும் ஆகி நின்ற	த்வாதசாதித்யர்களுக்கு அந்தராத்மாவாயுமிருக்கிற
ஆகி தேவனை	பரமபுருஷனை
எட்டினைய பேதமோடு இறைஞ்சி நின்று	ஸாஷ்டாங்கப்ரணமம் பண்ணி
அவன் பெயர் எட்டு எழுத்தும்	அவ்வெம்பெருமானுக்கு வாசகமான திருவஷ்டாக்ஷர மந்த்ரத்தை
ஓதுவார்கள்	அநுஸந்திக்குமவர்கள்
வானம் ஆள வல்லர்	பரமபதத்தை ஆளவல்லவர்களாவர்.

* * *—எட்டும் எட்டும் எட்டுமாய்=மூவெட்டு இருபத்தினைந்து ; கருமேந்திரியங்கள் ஐந்து; ஞானேந்திரியங்கள் ஐந்து; சப்தாதி விஷயங்கள் ஐந்து; நிலம் நீர் முதலிய பூதங்கள் ஐந்து; மநஸ், மஹாந், அஹங்காரம், ப்ரக்ருதி - ஆக இருபத்தினைந்து தத்துவங்களுண்டிறே; அத்தத்துவங்களுக்கு அந்தராத்மாவாயிருக்கும்படியைச் சொல்லுகிறது. [ஓர் ஏழும் இத்யாதி.[ஜம்பூத்வீபம் முதலிய ஏழு தீவுகளென்ன, ஏழு குலபர்வதங்களென்ன, ஏழு கடல்களென்ன இவற்றுக்கு நிர்வாஹகனென்கிறது. எட்டும் மூன்றும் ஒன்றும் கூடினால் பன்னிரண்டாம்; த்வாதசாதித்யர்களுக்கு அந்தர்யாமியானவ னென்றபடி. இப்படிப்பட்ட ஸர்வஜகத்காரண பூதனை எம்பெருமானை அஷ்டாங்க ப்ரணமபூர்வகமாக ஆச்ரயித்துத் திருவஷ்டாக்ஷரத்தை ஓதுமவர்கள் பரமபதத்தை ஆளப்பெறுவர்களென்கிறார். எட்டினைய பேதமோடிறைஞ்சுகை யாவது — "உநொவை-ஜ்ஜிஹ நெநஹஹந ஹஸ் யாதயெ । கமெஉவஆ்தாஸ்வாஹாஸு ஸிர ஹுஷெ்ரவவளுஹம்" என்றபடி ஸாஷ்டாங்கப்ரணமம்பண்ணுகை. பேதம் — ஹெஉமென்ற வடசொல் விகாரம். பேதமாவது ப்ரகாரம். (எஎ)

829 சோர்விலாதகாதலால் தொடக்கருமனத்தராய் *
நீரராவணைக்கிடந்த நின்மலனலங்கழல் *
ஆர்வமோடிறைஞ்சிநின்று அவன்பெயரெட்டெழுத்தும் *
வாரமாகவோதுவார்கள் வல்லர்வானமாளவே. (எஅ)

நீர் அரா அணை கிடந்த	திருப்பாற்கடலிலே திருவனந்தாழ்வானாகிற படுக்கையிலே கண்வளர்ந்தருள்கிற
நின் மலன்	அகில ஹேயப்ரத்யநீகனை எம்பெருமானுடைய
நலம் கழல்	நன்மைபொருந்திய திருவடிகளை
ஆர்வமோடு	அன்புடன்
இறைஞ்சி நின்று	அச்ரயித்து
சோர்வு இலாத காதலால்	விஷயாந்தரப் பற்றினால் தளராத காதலோடு
தொடக்கு அரு மனத்தர் ஆய்	விச்சேதமில்லாமல் ஏகாக்ரமான மனமுடையவர்களாய்
அவன் பெயர் எட்டு எழுத்தும்;—	
வாரம் ஆக	இதுவே நமக்குத் தஞ்சம் என்கிற அத்யவஸாயத்தோடு
ஓதுவார்கள்	அநுஸந்திக்குமவர்கள்
வானம் ஆள வல்லர்	பரமபதத்தை ஆள்வதற்கு ஸமர்த்தராவர்.

* * *—ஒருவன் பகவத்விஷயத்தில் மிக்க ப்ராவண்யமுடையனாயிருந்தாலும் அவனுக்கு விஷயாந்தரப்பற்றும் சிறிதுகிடக்குமாகில் அதுவானது பகவத் விஷயப்ராவண்யத்தை விரைவில் குலைத்துவிடும். அங்ஙனல்லாமல் பகவத்விஷயமொன்றிலேயே ஏகாக்ரமான காதலானது சோர்விலாத காதலெனப்படும். அப்படிப்பட்டப்ரேமத்தினால் பகவதநுஸந்தானம் மாறாத

நெஞ்சையுடையராய்க் கொண்டு, ஸ்ரீரங்காகரசேஷசாயியினுடைய திருவடிகளே போக்யதாபுத்தியோடே ஆச்ரயித்துத் திருவஷ்டாக்ஷரத்தை அன்புடன் அதிகரிக்கவல்லவர்கள் பரமபத்தத்துக்கு நிர்வாஹகராகப்பெறுவர்கள். (எஅ)

830 பத்திஞ்ஞேடுபத்துமாய் ஒரேழிஞ்ஞேடொரோன்பதாய் *
பத்திஞன்றிசைக்கணின்ற நாடுபெற்றநன்மையாய் *
பத்திஞயதோற்றமோடு ஓராற்றல்மிக்கவாதிபால் *
பத்தராமவர்க்கலாது முத்திமுற்றலாகுமே. (எக)

பத்திஞ்ஞேடு பத்தும் ஆய்	பத்து திக்குகளுக்கும் பத்து திக்பாலகர்களுக்கும் அந்தர்யாமியாய்	நன்மை ஆய்	நன்மைக்காக
		பத்தின் ஆய தோற்றமோடு	தசாவதாரங்களோடு (ஆவிர்ப்பவித்து)
ஓர் ஏழிஞ்ஞேடு ஓர் ஒன்பது ஆய்	ஸப்தஸ்வரங்களென்ன நவநாட்யரஸங்களென்ன இவற்றுக்கு ப்ரவர்த்தகனுய்	ஆற்றல் மிக்க	பொறுமையிலே பூர்ணனை
		ஓர் ஆதி பால்	எம்பெருமான் விஷயத்திலே
பத்து நால் திசை கண் நின்ற	பதிஞன்குவகைப்பட்ட	பத்தர் ஆமவர்க்கு அலாது	பக்தியுடையராயிருப்பவர்களுக்கன்றி (மற்றையோர்க்கு)
நாடு	லோகங்களிலுள்ளவர்கள்	முத்தி	மோக்ஷபுருஷார்த்தம்
பெற்ற	பெறக்கூடிய	முற்றல் ஆகுமே	பரிபக்வமாகுமோ?

* * *—பத்துத்திக்குகளுக்கும் அவற்றுக்கு அத்யக்ஷர்களான தேவர்கள் பதின்மர்க்கும் நிர்வாஹகனுய், ஸப்தஸ்வரங்களுக்கும் ஒன்பது நாட்யரஸங்களுக்கும் நிர்வாஹகனுய், பதிஞன்கு வகைப்பட்ட உலகங்களிலுள்ளார்க்கு போக்யதைக்காக தசாவதாரங்கள் செய்தருளி அவ்வவதாரங்களில் ஸம்ஸாரிகள் பண்ணும் பரிபவங்களையெல்லாம் பொறுத்து ரக்ஷிக்குமவனை எம்பெருமான் திறத்தில் பக்தியுள்ளவர்களாயிருப்பார்க்கல்லது மோக்ஷபலம் பக்குவமாகைக்கு வழியில்லை.

பத்திஞன்றிசைக்கண்நின்ற = பத்தோடுகூடிய நான்கு - பதிஞன்கு; திசை—ப்ரகாரம்; பதிஞன்கு வகையிலேயிருக்கிற நாடுகளாவன - சதுர்த்தச புவனங்கள். ஆகுபெயரால், நாட்டிலுள்ளவர்களெனப்பொருள்படும். அவர்கள் பெறும் ப்ரயோஜநமாகைக்காக - (அதாவது) பயன் பெற்றேமென்று களித்து அநுபவிப்பதற்காக; மீஞ்ஞேட்டாமை கேழலரி குறளாய் முன்னுமிராமனுய்த் தானுய்ப் பின்னுமிராமனுய்த் தாமோதரனுய்க் கற்கியுமானுன்" என்கிறபடியே தசாவதாரங்கள் செய்தருளின ஸர்வ ஜகத்காரணபூதனை எம்பெருமான் திறத்திலே நன்றியறிவுடையார்க்கன்றி மற்றையோர்க்கு மோக்ஷபலன் பக்குவமாக வழியில்லை. ஆற்றல் மிக்க = ஆற்றலாவது பொறுமை; "க்ஷமாஜநஜீவாம க்ஷமிஷ்ய" என்றபடி ஸம்ஸாரிகள் பலவகைகளிலே திரஸ்காரங்கள் பண்ணினாலும் அவற்றைக்கணிசியாது பொறுமை பாராட்டுமவனென்கை. (எக)

831 வாசியாகிநேசமின்றி வந்தெதிர்ந்ததேனுகன் *
நாசமாகிநாளுலப்ப நன்மைசேர்பனங்கனிக்கு *
வீசிமேல்நிமிர்ந்ததோளின் இல்லையாக்கினுய்கழற்கு *
ஆசையாமவர்க்கலால் அமரராகலாகுமே. (அஅ)

வாசி ஆகி	(கோவேறு) கழுதையின் வடிவங்கொண்டு	நாசம் ஆகி நாள் உலப்ப	ஆயுஸ்ஸுமாண்டு அழிந்து போம்படியாக •
நேசம் இன்றி வந்து எதிர்ந்த	எதிரிட்ட	மேல் நிமிர்ந்த தோளின்	உயரத்துக்கப்பட்ட தோளாலே
தேனுகன்	தேநுகாஸுரனை		

மன்மை சேர் னங்களிக்கு ரிசி	அழகிய பனைப்பழங்களின் மேலே தூக்கியெறிந்து	அன்ன ஆம் வர்க்கு அலால்	நேசிக்குமவர்களுக்கன்றி (மற் றையோர்க்கு)
ல்லே ஆக்கினைப் கழற்கு	(அவ்வசுரனை) ஒழித்தருளின தேவரீருடைய திருவடிகளுக்கு	அமர் ஆகல் ஆகுமே	நித்யஸூரிகளோடு ஒப்படை தல் கூடுமோ?

* * *—கீழ்ப்பாட்டில் "பத்தினையதோற்றமோடு" என்று ப்ரஸ்தாவிக்கப்பட்ட தசாவ தாரங்களுள் ஸ்ரீ கிருஷ்ணவதாரத்தை அநுஸந்தித்து அவ்வவதாரசேஷ்டிதங்களுள் ஒன்றான தேனுகாஸுர நிரஸந விருத்தாந்தத்தைப்பேசி, இப்படிப்பட்ட ஆச்ரித விரோதி நிவர்த்தகனான எம்பெருமான் திருவடிகளிலே ஆசையுடையார்க்கன்றி மற்றையோர்க்கு நித்யஸூரிபோகம் கிடைக்கமாட்டாதென்கிறார். (அடி)

832 கடைந்தபாற்கடற்கிடந்து காலநேமியைக்கடிந்து *
உடைந்தவாலிதந்தனுக்கு உதவவக்திராமனாய் *
மிடைந்தவேழ்மரங்களும் அடங்கவெய்துவேங்கடம் *
அடைந்தமாலபாதமே அடைந்துநாளுமுய்ம்மினே. (அக)

கடைந்த	(கூர்மாவதாரத்திலே) கடையப் பட்ட	ஏழ் மரங்களும்	ஸப்தஸால வ்ருக்ஷங்களையும்
பால் கடல்	திருப்பாற்கடலிலே	அடங்க	ஏழேழாகவுள்ள ஸப்தகுலபர்வ தாதிகளான மற்றவற்றையும்
கிடந்து	கண்வளர்ந்தருளியும்	எய்து	பாணத்தாலே துளைபடுத்தி
காலநேமியை	காலநேமியென்னுமசுரனை	வேங்கடம் அடைந்த	திருவேங்கடமலையிலே எழுந் தருளியிருப்பவனை
கடிந்து	ஒழித்தருளியும்,		
உடைந்த	நடுங்கிக்கிடந்த	மால	எம்பெருமானுடைய
வாலி தந்தனுக்கு	வாலியின் தம்பியான சுக்rீ வனுக்கு	பாதமே	திருவடிகளையே
உதவ	உபகாரம் செய்ய	நாளும்	நாள்தோறும்
இராமன் ஆய் வந்து	இராமபிரானாய் வந்து தோன்றி	அடைந்து	ஆச்ரயித்து
மிடைந்த	ஒன்றோடொன்றுகப் பிணைந்து கிடந்த	உய்ம்மின்	உஜ்ஜீவியுங்கள்.

* * *—[உடைந்தவாலி தந்தனுக்கு.] 'உடைந்த' என்ற அடைமொழி வாலிக்கும் ஆக லாம்; வாலிதம்பிக்குமாகலாம். உடைதல் - தளர்வு. வாலி, 'நமக்குப் பகையான ஸுக்rீவன் நாம் புகவொண்ணாதரிச்யமூகபர்வதத்திலே வந்துமாகைத் துணைகொண்டு வாழாநின்றான்; எந்தஸம யத்திலே நமக்கு என்னதீங்கை விளைப்பனோ' என்று உடைந்துகிடப்பன். ஸுக்rீவனுடைய உடைதல் சொல்லவேண்டா. "வாலி தன்பினுக்கு" எனப் பாடமிருந்திருக்கலா மென்பர்.(அக)

833 எத்திறத்துமொத்துநின்று உயர்ந்துயர்ந்தபேற்றியோய் *
முத்திறத்துமூரிநீர் அராவணைத்துயின்ற * நின்
பத்துறுத்தசிந்தையோடுநின்று பாசம்விட்டவர்க்கு *
எத்திறத்துமின்பம் அங்குமிங்குமெங்குமாகுமே. (அஉ)

எத்திறத்தும் ஒத்து நின்று	எந்த ஜாதியில் அவதரித்தாலும் ஸஜாதீயன் என்ற காரணத் தால் சேதநா சேதநங்களோடு ஒத்திருக்கச்செய்தேயும்	நின் பத்து உறுத்த சிந்தையோடு நின்று	தேவரீர் விஷயத்திலே பக்தி அழுந்தின நெஞ்சோடு கூடியிருந்து
உயர்ந்து உயர்ந் த பெற்றியோய்	(குணவிசேஷத்தால்) மேன் மேலுமுயர்ந்த ப்ரபாவத்தை யுடையோனே!	பாசம் விட்ட வர்க்கு	விஷயாந்தரப் பற்றுக்களை விட்டவர்கட்கு
முத்திறத்து மூரி நீர்	திருப்பாற்கடலிலே	எத்திறத்தும் இன்பம்	ஸர்வவித ஸுகமும்
அரா அணை துயின்ற	சேஷசயனத்திலே திருக்கண் வளர்ந்தருள்கின்ற	இங்கும் அங்கும் எங்கும் ஆகும்	இவ்வுலகத்திலும் அவ்வுலகத்திலும் மற்றெவ்வுலகத்திலும் எளிதாம்.

* * *—தேவஜாதியிலும் மநுஷ்யஜாதியிலும் திர்யக்ஜாதியிலும் ஸ்தாவரஜாதியிலும் ஜநிக்கையாலே தஜ்ஜாதியர்களே அந்தந்த ஜாதியாலே ஒருபுடையொத்திருந்தாலும் குணப்பெருமையாலுண்டான மேன்மையையுடையவனே! திருப்பாற்கடலிலே திருவனந்தாழ்வான்மீது திருக்கண் வளர்ந்தருளாநின்ற உன்பக்கல் பக்திமிகுந்த மநோரதத்தோடே நின்று விஷயாந்தரங்களில் பற்றை அறுத்துக்கொள்பவர்கட்கு இப்மண்ணுலகத்திலும் வானுலகத்திலும் மற்றெவ்வுலகத்திலும் ஸர்வப்ரகாரங்களாலும் ஆநந்தம் நிரம்புமென்கிறார். முத்தி றத்து மூரிநீர் – ஆற்றுநீர், ஊற்றுநீர், மழைநீர் என்று மூன்றுவகைப்பட்ட நீரையுடையது கடல். "மூங்நீர்" என்னக்கடவதிறே. மூரி - பழையதான ; பெரிதான என்றுமாம். (அஉ)

834 மட்டுலாவுதண்டுழாய் அலங்கலாய்புலன்கழல் *
விட்டுவீழ்விலாதபோகம் விண்ணில்நண்ணியேறினும் *
எட்டினோடிரண்டெனுங் கயிற்றினல்மனர்தினை *
கட்டிவீடிலாதுவைத்த காதலின்பமாகுமே. (அஊ)

மட்டு உலாவு தண் துழாய் அலங்கலாய்	தேன் நித்யமாயிருக்கப்பெற்ற குளிர்ந்த திருத்துழாயினல் தொடுக்கப் பட்ட திருமாலையை அணிந்துள்ள வனே!	(இங்நிலத்தில் இருந்துகொண்டே)	
		எட்டினோடு இரண்டு எனும் கயிற்றினல்	பத்து என்கிற பக்தியாகிற பாசத்தினலே
		மனம் தனை	மநஸ்ஸை
		கட்டி	கட்டுப்படுத்தி
புலன் கழல் விட்டு	(உன்னுடைய) விலக்ஷணமான திருவடிகளே (இங்நிலத்திலேயே அநுபவிப்பதை) விட்டு	வீடு இலாது	விச்சேதமில்லாதபடி
		வைத்த	அமைக்கப்பட்ட
விண்ணில் ஏறி	பரமபதத்திற் சென்று	காதல்	ப்ரேமத்தினலுண்டாகக் கூடிய
வீழ்வு இலாத போகம் நண்ணினும்	அழிவில்லாததொரு போகத்தை அடையப்பெற்றாலும், (அது கிடக்கட்டும்)	இன்பம் ஆகுமே	ஆநந்தத்தை ஒக்குமோ அப்பரமபதாநுபவம்?

* * *—எட்டினோடிரண்டெனுங் கயிற்றினல் - எட்டோடு இரண்டு சேர்ந்தால்பத்து; இவ்விடத்தில் பத்து என்கிற எண் விவக்ஷிதமல்ல. "பத்துடையடியவர்க்கெளியவன்" என்றபடி பக்திக்கும் பத்து என்று பேருண்டாதலால் அப்பொருளே இங்கு விவக்ஷிதம்.

வைத்தகாதலின்பமாகுமே – வைத்தகாதலே இன்பமாகும் என்று அந்வயித்து, உன் திருவடிகளில்வைக்கும் ப்ரேமமானது ஒரு ஸுகத்துக்கு ஸாதநமாகையன்றிக்கே ஸ்வதஸ்ஸுகமாயிருக்குமென்றுமாம். (அஊ)

835 பின்பிறக்கவைத்தனன்கொல் அன்றிநின்றுதன்கழற்கு *
அன்புறைக்கவைத்தநாள் அறிந்தனன்கொலாழியான் *
தன்றிறத்தோரன்பிலா அறிவிலாதநாயினேன் *
என்றிறத்திலென்கொல் எம்பிரான்குறிப்பில்வைத்ததே. (அச)

ஆழியான்	சக்ரஹஸ்தனை எம்பெருமான்	அந்நாள் அறிந்தனன் கொல்	பரமபதத்திலே சென்று அநுபவிக்கு மொரு நாளைக் திருவுள்ளம் பற்றியிருக்கிறானே?
பின் பிறக்க வைத்தனன் கொல்	நான் இன்னும் சில பிறவிகள் பிறக்கும்படியாகத் திருவுளம் பற்றி யிருக்கிறானே!	தன் திறத்து	தன் விஷயத்திலே
		ஓர் அன்பு இலா	சிறிதும் அன்பு இல்லாதவனும்
அன்றி	அல்லது,	அறிவு இலாத	விவேகமில்லாதவனும்
		நாயினேன்	நீசனுமாகிய
தன் கழற்கு	தன் திருவடிகளிலே	என் திறத்தில்	என் விஷயத்திலே
நின்று	நிலைத்துநின்று	எம்பிரான்	எம்பெருமான்
அன்பு உறைக்க வைத்து	(எனக்கு) அன்பு ஊர்ஜிதமாம் படியாக ஸங்கல்பித்து	குறிப்பில் வைத்தது	திருவுள்ளம்பற்றி யிருப்பதானது
		என் கொல்	எதுவோ? (அறியேன்.)

* * * கீழ்ப்பாட்டிலே ப்ரஸ்தாவித்த பக்தியானது தம்மிடத்தில் இல்லாமையாலும், தர்ப் ப்ரக்ருதி பரவசரா யிருக்கக் காண்கையாலும், எம்பெருமான் கேட்பாரற்ற ஸ்வதந்த்ரனு கையாலும், அவன் திருவுள்ளமுகந்தாலல்லது பேறு பெறமுடியாதாகையாலும் இக்காரணங்க கீயெல்லாங் கருதி 'எம்பெருமான் என்னைத் தன் திருவடிகளிலே பரமபக்தனும்படி பண்ணி யருள கினைத்திருக்கிறானே? அன்றி நித்ய ஸம்ஸாரியாக்க கினைத்திருக்கிறானே? என் திறத்தில் என் நாதன் திருவுள்ளம்பற்றியிருப்பது என்னே? என்கிறார். இந்த சரீரம் முடிந்தபின்புங் கூட இன்னும் சில சரீரங்களையும் நான் கொள்ளும்படியாக கினைத்திருக்கிறானே? அன்றியே, தனது திருவடிகளில் இடையறுத அன்பை எனக்கு உறைக்கவைத்து அத்திருவடிகளை யநுப விப்பேனும்படி ஒரு நல்ல காலமுண்டாக கினைத்திருக்கிறானே? அவன்விஷயத்திலே அணுமாத் ரமும் அன்பில்லாத அஜ்ஞனும் நீசனுமாகிய என்விஷயத்திலே எதுசெய்வதாகத் திருவுள்ளமோ தெரியவில்லையே! என்று அலமருகின்றார்.

"பின்பிறக்கவைத்தனன் கொல்" என்றவிடத்து, 'பின்பு இறக்கவைத்தனன் கொல்' என்றும் பிரிக்கலாம்; இறப்பாவது மறப்பு; (எம்பெருமானை மறந்திருப்பதே ஆத்மாவுக்கு இறப்பு.) தன்பக்கலிலே எனக்கு ஞானம் பிறந்த பின்பும் தன்னை மறக்கும்படியாக்கினானே? என்றவாறு. (அசை)

836 நச்சராவணைக்கிடந்த நாதபாதபோதினில் *
வைத்தசிந்தைவாங்குவித்து நீங்குவிக்கநீயினம் *
மெய்த்தன்வல்லையாதலால் அறிந்தனன்நின்மாயமே *
உய்த்துநின்மயக்கினில் மயக்கலென்னைமாயனே. (அடு)

நஞ்சு அரா அணை	(ஆச்ரித விரோதிகள்மேல்) விஷத்தை உமிழ்கின்ற திருவனந்தாழ்வானைகிற சயனத்திலே
கிடந்த	திருக்கண்வளர்ந்தருள்கிற
நாத	ஸர்வேச்வரனே!
பாத போதினில்	(உன்னுடைய) திருவடித்தாமரைகளிலே
வைத்த	(இப்போது) வைக்கப்பட்டுள்ள
சிந்தை	மநஸ்ஸை
வாங்குவித்து	அதில் நின்றும் திருப்பி
நீங்குவிக்க	வேறுவிஷயங்களில் போக்க
நீ	ஸ்வதந்த்ரனை நீ
இனம்	இன்னமும்
மெய்த்தன்	மெய்யாகவே
வல்லை ஆதல்	ஸமர்த்தனாயிருக்கிறாய் என்பதை
அறிந்தனன்	அறிந்திருக்கிறேன்;
மாயனே!	ஆச்சரியசக்தியுக்தனே!
என்னை	அடியேனை
நின் மாயமே உய்த்து	உன்னுடைய மாயச்செயலையே நடத்தி
மயக்கினில்	ப்ராக்ருத பாசங்களிலே (வைத்து)
மயக்கல்	மயக்கவேண்டா

* * * அடியேன் விஷயத்திலே எம்பெருமான் திருவுள்ளம் எப்படிப்பட்டதோ வென்று ஸந்தேஹித்தார் கீழ்ப்பாட்டில்; என்னை உன் ஸ்வாதந்திரியத்தினால் ஸம்ஸாரப்படுகுழியிலே இன்னமும் தள்ளாமல் கிருபைபண்ணியருளவேணுமென்று இரக்கிறார் இப்பாட்டில். ()

837 சாடுசாடுபாதனே சலங்கலக்கபோய்கைவாய் *
ஆடரவின்வன்பிடர் நடம்பயின்றநாதனே *
கோடுநீடுகைய செய்யபாதநாளுமுள்ளினால் *
வீடனுகமெய்செயாத வண்ணமென்கொல்கண்ணனே. (அசு)

சாடி சாடு பாதனே	சகடாஸுரனை உதைத்தொழித்த திருவடியையுடையவனே!
சலம் கலந்த பொய்கை வாய்	(விஷமே அதிகமாகி அத்துடன் சிறிது) ஜலமும் கலந்திருக்கப் பெற்ற ஒரு மடுவிலே
ஆடு அரவின்	(செருக்கினால் படமெடுத்து) ஆடிக்கொண்டிருந்த காளிய நாகத்தினுடைய
வன் பிடர் நடம் பயின்ற	வலியதான பிடரியிலே நர்த்தனம் செய்த

நாதனே!	ஸ்வாமியே!
கோடு நீடு கைய	ஸ்ரீ பாஞ்சஜந்யத்திலில் நித்யா லங்க்ருதமான திருக்கையை யுடையவனே!
கண்ணனே	கண்ணபிரானே!
செய்ய பாதம்	(உனது) செந்தாமரைபோற் சிவந்த திருவடிகளே
காளும் உள்ளினல்	காள்தோறும் அடியேன் தியானித்துக் கொண் டிருக்கும்போது
மெய்	மெய்யாகவே
வீடன் ஆக செயாத வண் ணம் என்கொல்	(அடியேனை) முக்தனாக்காதது ஏனோ!

* * * எம்பெருமான் விரோதிநிரஸநத்தில் ஸமர்த்தன் என்னுமிடத்தை நிரூபித்துக் கொண்டு இப்படி ஸமர்த்தனை நீ என்விரோதியைமாத்திரம் நிவர்த்திப்பியாமல் உபேக்ஷை பண்ணுவது தகுதியோவென்கிறார். சலம் கலந்த பொய்கை = அப்பொய்கையிலே விஷமே விஞ்சின தென்றும் அத்தோடுகூட ஜலமும் சிறிது சேர்ந்திருக்கு மென்றும் உணர்க. வீடன் = வீட்டையடைந்தவன்; முக்தன். (அசு)

838 நெற்றிபெற்றகண்ணன் விண்ணினுதலோடுபோதின்மேல் *
நற்றவத்தநாதனோடு மற்றுமுள்ளவானவர் *
கற்றபெற்றியால்வணங்குபாத நாதவேத * நின்
பற்றலாலோர்பற்று மற்றதுற்றிலேனுரைக்கிலே. (அள)

நெற்றி பெற்ற கண்ணன்	நெற்றியிலே கண்ணைப் பெற்ற வனான சிவனும்
விண்ணின் நாதன்	தேவேந்திரனும்
போதின் மேல் நல் தவத்து நாதன்	தாமரைப்பூவிலே பிறந்த நல்ல தாபஸனான நான்முகக்கடவு ளும்
மற்றும் உள்ள வானவர்	மற்று முண்டான பல தேவதை களும்
கற்ற பெற்றியால்	தாங்கள தாங்கள் அப்யஸித் துள்ள முறைமைக் கிணங்க
வணங்கு பாத!	வந்து வணங்கப்பெற்ற திரு வடிகளை யுடையவனே!
நாத!	நாயனே!
வேத!	வேதப்ரதிபாத்யனே!
உரைக்கில்	(என் அத்யவஸாயத்தைச்) சொல்லப்புக்கால் (சொல்லு ஹேன் கேளாய்;)
நின் பற்று அலால்	உன்னையே ஆச்ரயமாகக் கொண்டிருப்பது தவிர
மற்றது ஓர் பற்று	வேறொர் ஆச்ரயத்தை
உற்றிலேன்	நான் நெஞ்சாலும் ஸ்பர்சிக்க வில்லை,

* * * முக்கண்ணன் முதலிய தேவதைகளுங்கூடத் தங்களுடைய அபீஷ்ட ஸித்திக்கு தேவரீருடைய கையையே எதிர்பார்த்திருக்கிறார்களாகையாலே அடியேனுக்கும் தேவரீரொழிய வேறுபுகலில்லையென்று தம்முடைய அநந்யகதித்வத்தை விளம்புகிறார். நெற்றிக்கண்ணனை சிவனென்ன, ஸ்வர்க்கத்துக்கு நிர்வாஹகனை இந்திரனென்ன, நிருநாபிக்கமலத்திலே பிறந்து மஹாதபஸ்வியான பிரமனென்ன இவர்களும் மற்றுமுள்ள பற்பல தேவதைகளும் தங்கள்தங்களறிவுக்குத் தகுதியாகத் திருவடிபணியப்பெற்றவனே! உலகங்கட்கெல்லாம் தனி நாயகனாக வேதங்களில் பிரதிபாதிக்கப்பட்டுள்ளவனே! "கலைவாய் துன்பங் கலையாதொழி வாய் கலைகண்மற்றிலேன்" என்றாற்போல உன்னையே சரணமாகப் பற்றியிருக்குமதொழிய வேறொரு சரணமும் அடியேனுடைய நெஞ்சினில் கொள்ளப்படவில்லை யென்கிறார். இரண்டாமடியில் "நற்றவத்து" என்றும் "நற்றவத்த" என்றும் பாடபேதங்களுண்டு. "கற்ற பெற்றியால்" என்றவிடத்து "தங்களன்பாரத் தமதுசொல் வலத்தால் தலைத்தலைச்சிறந்து பூசிப்ப" என்ற திருவாய்மொழி நினைக்கத்தக்கது. (அள)

839 வெள்ளேவேலைவெற்புநாட்டி வெள்ளெயிற்றராவளாய் *
அள்ளலாக்கடைந்தவன்று அருவரைக்கோராமையாய் *
உள்ளநோய்கள்தீர்மருந்து வானவர்க்களித்த * எம்
வள்ளலாரையன்றி மற்றோர்தெய்வநான்மதிப்பனே. (அஅ)

வெள்ளே வேலை	வெண்கடலாகிய திருப்பாற் கடலிலே
வெற்பு	மந்தரமலையை
நாட்டி	நட்டு
வெள் எயிறு அரா	வெளுத்த பற்களையுடைய வாஸுகி நாகத்தை
அளாய்	(கடை கயிறாகச்) சுற்றி
அள்ளல் ஆ	அலைகள் செறியும்படி
கடைந்த அன்று	(கடலைக்) கடைந்தருளின காலத்தில்
அரு வரைக்கு	தாங்கமுடியாததான அம்மலைக்கு
ஓர் ஆமை ஆய் வான்வர்க்கு	(தாரகமான) ஒரு ஆமையாகி தேவதைகளுக்கு
உள்ள நோய்கள் தீர் மருந்து	ஏற்பட்டிருந்த நோய்களைத் தீர்க்கவல்ல மருந்தாகிய அமிருதத்தை
அளித்த	(கடலிற் கடைந்தெடுத்து) அருளின
எம் வள்ளலாரை அன்றி	உதாரனனை எம்பெருமானை யன்றி
மற்று ஓர் தெய்வம்	வேறொருதேவதையை
நான் மதிப்பனே	நான் (ஒருபொருளாக) மதிப்பனோ!

* * * வெளுத்தகடலிலே மந்தரமலையை மத்தாகநாட்டி வெளுத்த பற்களையுடைய வாஸுகி யென்னும் நாகத்தைக் கடைகயிறாக அதிலேசுற்றி அந்தமாகடலை "கடல்மாறு சுழன்றழைக்கின்ற வொலி" என்னும்படியே திரைகள் எதிரேவந்து செறியும்படியாகக் கடைந்தருளினகாலத்து அம்மலை ஆழ்ந்துபோகாமல் தன் முதுகிலே நின்று சுழலும்படி கூர்மரூபியாய்த் தாங்கிக்கிடந்து, தேவதைகட்கு ஏற்பட்டிருந்த துன்பங்களெல்லாம் தீருப்படியான மருந்தாகிய அம்ருதத்தை அவர்கட்கு எடுத்தளித்த பரமோதாரனனை பரமபுருஷனையன்றி வேறொரு தெய்வத்தை ஆச்ரயணீயமாக நினைப்பனோ நான் என்கிறார். (அஅ)

840 பார்மிகுத்தபாரமூன் ஒழிச்சுவானருச்சுனன் *
தேர்மிகுத்துமாயமாக்கி நின்றுகொன்றுவென்றிசேர் *
மாரதர்க்குவான்கொடுத்து வையமைவர்பாலதாம். *
சீர்மிகுத்தநின்னலாலோர் தெய்வம்நான்மதிப்பனே. (அக)

முன்	முற்காலத்தில்
பார் மிகுத்த பாரம்	பூமியிலே அதிகமாக வுண்டான சுமையாகிய துஷ்டவர்க்கத்தை
ஒழிச்சுவான்	ஒழிப்பதற்காக
அருச்சுனன் தேர் மிகுத்து	அர்ஜுனனுடைய தேரை நன்றாக நடத்தி
மாயம்	(பகலே இரவாக்குகை முதலான) ஆச்சரியச் செயல்களை
ஆக்கி நின்று	உண்டாக்கி
கொன்று	(எதிரிகளைக்) கொன்று
வென்றிசேர் மாரதர்க்கு	ஜயம்பெறுவதாக நினைத்திருந்த மஹாரதர்களான துர்யோதநாதிகளுக்கு
வான் கொடுத்து வையம்	வீரஸ்வர்க்கத்தைக் கொடுத்து பூமண்டலத்தை
ஐவர் பாலது ஆம்	மஞ்சபாண்டவர்களுடைய தாக ஆக்குவித்த
சீர் மிகுத்த	புகழ் மிகுந்த
நின் அலால்	உன்னையன்றி
ஓர் தெய்வம்	மற்றொரு தெய்வத்தை
நான் மதிப்பனே	நான் ஆதரிப்பேனோ?

* * * [மாரதர்க்கு.] அதிரதர், மஹாரதர், ஸமரதர், அர்த்தரதர் எனத்தேர்வீரர் நால்வகைப்படுவர்; அஸஹாயராய்த் தாம் ஒரு தேரின்மேலிருந்து தமது ரதகஜ துரகபதாதிகளுக்கு அழிவுவராமல் காத்துக்கொண்டு பல்லாயிரம் தேர்வீரர்களோடுபொருது வெல்லும் வல்லமையுள்ளார் அதிரதர் என்றும், கீழ்ச்சொன்னபடியே தாமிருந்து பதினாயிரம் தேர்வீரரோடு பொருபவர் மஹாரதர் என்றும், ஒருதேர்வீரரோடு தாமுமொருவராய் நின்று எதிர்க்கவல்லவர் ஸமரதர் என்றும், அங்ஙனமேபொருது தம் தேர்முதலியவற்றை இழந்துவிடுபவர் அர்த்தரதர் என்றும் சொல்லப்படுவர். இப்பாட்டில் மாரதர் என்றது மஹாரதர் என்றபடி. போர்க்களத்திலே மடிந்த வீரர்கட்கு ஸ்வர்க்கம் கிடைப்பதாக சாஸ்திரம் கூறுவதுபற்றி "மாரதர்க்கு வான் கொடுத்து" என்றார். தோற்றொழிந்த மாரதர்கட்கு வென்றிசேர் என்ற அடைமொழி தகுமோவெனின்; ஜயம் பெறுதற்கு யோக்யதையுடையவர்கள் என்று பொருளேயல்லது வெற்றிபெற்றவர்களென்று பொருளல்ல; ஆகவே, வென்றிசேர் - ஜயமுண்டாவதாக நினைத்திருந்த - என்றதாயிற்று. (அக)

841 குலங்களாயவீரிரண்டில் ஒன்றிலும்பிறந்திலேன் *
நலங்களாயநற்கலைகள் நாலிலும்நவின்றிலேன் *
புலன்களைந்தும்வென்றிலேன் பொறியிலேன்புனித * நின்
இலங்குபாதமன்றி மற்றோர்பற்றிலேனெம்மீசனே. (கூய்)

புனித!	பரிசுத்தனான
எம் ஈசனே	எம்பெருமானே!
குலங்கள் ஆய ஈர் இரண்டில்	(ப்ராஹ்மணாதி) நான்கு வர்ணங்களுக்குள்
ஒன்றிலும்	ஒரு வர்ணத்திலும்
பிறந்திலேன்	நான் பிறக்கவில்லை;
நலங்கள் ஆய நல்கலைகள் நாலிலும்	(சேதநர்க்கு) நன்மையைக் காட்டுவதான நல்ல நான்கு வேதங்களிலும்
நவின்றிலேன்	பயிற்சிசெய்யவில்லை;
புலன்கள் ஐந்தும்	பஞ்சேந்திரியங்களையும்
வென்றிலேன்	ஜயிக்கவில்லை;
பொறியிலேன்	சப்தாதி விஷயங்களில் அகப்பட்டிருக்கிறேன்; (ஆனபின்பு)
நின்	உன்னுடைய
இலங்கு பாதம் அன்றி	ஒளிமிக்க திருவடிகளைத் தவிர
மற்று ஓர் பற்று இலேன்	வேறொரு ஆச்ரயத்தை யுடையேனல்லேன்.

* * * கீழ்ப்பாட்டுக்களில், தாம் வேறுகதியற்றவர் என்னுமிடத்தை வெளியிட்டது போல இப்பாட்டில் வேறு உபாயமொன்றுமில்லாமையை வெளியிட்டருள்கிறார். ஆகிஞ்சந்யமும் அநந்யகதித்வமுமாக இரண்டு முண்டாக வேணுமே; அவற்றுள் அநந்யகதித்வ முண்டானமை கீழே சொல்லிற்றாயிற்று. ஆகிஞ்சந்யஞ் சொல்லுகிறது இதில். ஆக இரண்டாலும் உபாயமும் உபேயமும் எம்பெருமானே என்றதாகிறது. ப்ரஹ்ம க்ஷத்ரிய வைச்ய சூத்ர ரூபமான நான்கு வருணங்களுள் ஒருவருணத்திலும் ஜநிக்கப்பெற்றிலேன்; சேதநர்களுடைய அதிகாரங்கட்கும் குணங்கட்கும் தக்கபடி ப்ரியஹிதங்களை விதிக்கும் விலக்ஷணமான சாஸ்த்ரங்களையும் அதிகரிக்கப்பெற்றிலேன்; இந்திரியங்கள் என்னைத் தம் வசமாகப் பிடித்திழுத்துக் கொண்டுபோக நான் அவையிட்டவழக்காய்த் திரிந்தொழிந்தேனே யொழிய அவற்றிலே ஓர் இந்திரியத்தையும் சிக்ஷிக்க ஸமர்த்தனாகப்பெற்றிலேன்; ஆகவே சப்தாதி விஷயப்ரவணனாய்ப் போந்தேன்; ஆகையாலே ஒருவித உபாயமும் அநுஷ்டிக்கைக்கு அயோக்யனாயிருந்தேனாலும் "உன்திருவடிகளே உபாயம்" என்ற அத்யவஸாயம் மாத்ரம் குறையற்றிராநின்றது என்கிறார். (கூய்)

842 பண்ணுலாவுமென்மொழிப் படைத்தடங்கணுள்பொருட்டு *
எண்ணிலாவரக்கரை நெருப்பினுல்நெருக்கினாய் *
கண்ணலாலோர்கண்ணிலேன் கலந்தசுற்றமற்றிலேன் *
எண்ணிலாதமாயநின்னை என்னுள்நீக்கலென்றுமே. (கூக)

பண் உலாவும் மெல் மொழி	(குறிஞ்சி காந்தாரம் காமரம் முதலிய) ராகங்கள் விளங்குகின்ற இனிய பேச்சையுடையவளும்
படை தடம் கணுள் பொருட்டு	வாள்போன்று பெரிய கண்களையுடையளுமான பிராட்டிக்காக
எண் இலா அரக்கரை	கணக்கில்லாத ராக்ஷஸரை
நெருப்பினுல்	அம்புகளின் தீயினாலே
நெருக்கினாய்	தொலைத்தருளினவனே!
கண் அலால்	(எனக்கு நீ) நிர்வாஹகனே யொழிய
ஓர் கண் இலேன்	வேறொரு நிர்வாஹகனை நானுடையேனல்லேன்;
கலந்த சுற்றம் மற்று இலேன்	நெஞ்சு பொருந்தின உறவும் வேறில்லை;
எண் இலாத மாய!	அநந்தமான ஆச்சரிய சக்தியையுடையவனே!
நின்னை	உன்னை
என்றும்	எக்காலத்திலும்
என்னுள் நீக்கல்	என்னைவிட்டுப் பிரிக்கவே கூடாது.

843 விடைக்குலங்களேழுடர்த்து வென்றிவேற்கண்மாதரார் *
கடிக்கலந்ததோள்புணர்ந்த காலியாயவேலைநீர் *
படைத்தடைத்ததிற்கிடந்து முன்கடைந்து, நின்றனக்கு *
அடைக்கலம்புகுந்தவென்னை அஞ்சலென்னவேண்டுமே. (கூ2)

வேலை நீர்	ஜலதத்துவமாகிய கடலை	அடர்த்து	கொழுப்படக்கி
படைத்து	(முதல்முதலாக) ஸ்ருஷ்டித்தும்	வென்றி வேல் கண் மாதரார்	ஜயசீலமான வேல்போன்ற கண்களை யுடையளான நப்பின்னைப்பிராட்டியினுடைய
அடைத்து	(ஸ்ரீராமாவதாரத்திலே அக் கடலில்) அணைகட்டியும்;	கடி கலந்த தோள்	பரிமளம் மிக்க திருத்தோளோடே
அதில் கிடந்து	(தங்கள் தங்கள் ஆபத்தை முறையிட்டுக் கொள்வார்க்கு முகங்கொடுக்க) அக்கடலில் பள்ளிகொண்டருளியும்	புணர்ந்த	ஸம்ச்லேஷித்த
		காலி ஆய	கோபாலக்ருஷ்ணனே!
முன்	முன்னொருகாலத்திலே	நின் தனக்கு	உன் பக்கலிலே
கடைந்து	(தேவதைகளுக்காக அதைக்) கடைந்தும் (இப்படியெல்லாம் செய்தது மல்லாமல்)	அடைக்கலம் புகுந்த என்னை	சரணம் புகுந்த என்னை நோக்கி
ஏழ் விடை குலங்கள்	நாநாவர்ணமான ஏழு ரிஷபங்களையும்	அஞ்சல் என்ன வேண்டும்	"பயப்படாதே" என்றொரு வார்த்தை யருளிச்செய்ய வேணும்.

*** ஸ்ரீ விபீஷணழ்வானுக்கு அபயப்ரதாநம் செய்தருளினாற் போலவும் அர்ஜுநனை நோக்கி "மாசுச:" என்றாற்போலவும் அடியேனை நோக்கி அஞ்சேல் என்றருளிச்செய்யவேணும் பிராநே! என்கிறார். "முன்கடைந்த நின்றனக்கு" என்றும் பாடமுண்டு. அஞ்சல்-எதிர்மறை வினைமுற்று. (கூ2)

844 சுரம்பரங்குதண்டுழாய் துதைந்தலர்ந்தபாதமே *
விரும்பிநின்றிறைஞ்சுவேற்கு இரங்கரங்கவாணனே *
கரும்பிருந்தகட்டியே கடற்கிடந்தகண்ணனே *
இரும்பரங்கவெஞ்சரந்துரந்த வில்லிராமனே. (கூங்)

கரும்பு இருந்த கட்டியே	கருப்பங் கட்டிபோலே பரம போக்யனாயிருந்தவனே!	அரங்கம் வாணனே	கோயிலில் வாழ்பவனே!
கடல் கிடந்த கண்ணனே!	திருப்பாற்கடலிலே திருக்கண் வளர்ந்தருளும் லீலபனே!	சுரும்பு	வண்டுகளானவை
இரும்பு	இரும்புபோல் வலிய ராக்ஷஸ சரீரங்கள்	அரங்கு	படிந்திருக்கப்பெற்ற
		தண் துழாய்	குளிர்ந்த திருத்துழாய்
		துதைத்து	நெருங்கி
அரங்க	அழியும்படி	அலர்ந்த	விகஸித்திருக்கப்பெற்ற
		பாதமே	(உனது) திருவடிகளையே
வெம் சரம்	தீக்ஷ்ணமான அம்புகளை	விரும்பி நின்று	ஸ்வயம்ப்ரயோஜநமாக ஆசைப்பட்டு
துரந்த	பிரயோகித்த		
வில்	ஸ்ரீ சார்ங்கவில்லை யுடையவனே!	இறைஞ்சு வேற்கு	தொழுகின்ற அடியேன் பக்கல்
இராமனே	இராமபிராநே!	இரங்கு	க்ருபைபண்ணியருள்.

*** கீழ்ப்பாட்டில் "அஞ்சலென்னவேண்டுமே" என்று அபயப்ரதாநமாத்ரத்தை வேண்டிநாயினும் அவ்வளவினால் த்ருப்திபெறக் கூடியவரல்லரே; பெரியபெருமாள் திருவடிகளிலே நித்யாநுபவம் அபேக்ஷிதமாயிருக்குமே; அவ்வநுபவம் வாய்க்குமாறு க்ருபைசெய்தருளவேணுமென்கிறார் இதில். நான்காமடியில், இரும்புபோல் வலியநெஞ்சினரான அரக்கர் என்ன வேண்டு மிடத்து இரும்பு என்று அபேதமாகச்சொன்னது ரூபகாதிசயோக்தியாம். அரங்குதல்-(இங்கு) அழிதல். (கூங்)

845 ஊனின்மேயவாவிநீ உறக்கமோடுணர்ச்சிநீ *
ஆனின்மேயவைந்துநீ அவற்றுணின்றதூய்மைநீ *
வானிலேடுமண்ணுநீ வளங்கடற்பயனுநீ *
யானுநீயதன்றி யெம்பிரானும்நீயிராமனே. (கூச)

இராமனே	இராமபிரானே!
ஊனில் மேய ஆவி நீ	சரீரத்திலே பொருந்தியிருக்கிற பிராணன் நீயிட்ட வழக்கு;
உறக்கமோடு உணர்ச்சி நீ	ஜ்ஞாநமும் அஜ்ஞானமும் நீயிட்ட வழக்கு;
ஆனில் மேய ஐந்தும் நீ	பசுக்களிடத்து உண்டான பஞ்சகவ்யமும் நீ;
அவற்றுள் நின்ற தூய்மை நீ	அப்பஞ்ச கவ்யங்களுக்குள்ள பரிசுத்தியும் நீ ஸங்கல்பித்தது;
வானிலேடு மண்ணும் நீ	நித்ய விபூதி லீலா விபூதியென்ற உபய விபூதியும் நீயிட்ட வழக்கு,
வளம் கடல் பயனும் நீ	அழகிய ஸமுத்ரத்திலுண்டான (அம்ருதம் ரத்னம் முதலான) பிரயோஜனங்களும் நீ;
யானும் நீ	அடியேனும் உன் அதீநன்;
அது அன்றி	இப்படி பலவாறு பிரித்துச் சொல்வதல்லாமல்
எம்பிரானும் நீ	ஸர்வேச்வரனும் நீ காண்.

* * * எம்பெருமான் ஸர்வப்ரகாரி என்னுமிடத்தை யருளிச்செய்கிறார். உறக்கமோடு உணர்ச்சி நீ = தமோகுணத்தின் காரியமான உறக்கமும் ஸத்வகுணத்தின் காரியமான புத்தி விகாஸமும் நீயிட்டவழக்கு; சிலர் விஷயாந்தர ப்ரவணராய் அறிவுகேடராய்க் கிடப்பதும், சிலர் உன்பாதமே பரவிப்பணிந்து கிடப்பதுமெல்லாம் நீ ஸங்கல்பிக்குர் வகைகளேயா மென்றவாறு. வளங்கடற்பயனும்நீ = சிறந்த கடலிலுள்ள பயன் - அம்ருதம் ரத்னம் முதலியவை; அவையும் உன் ஸங்கல்பாதீநமென்றபடி. பிரயோஜநாந்தர பரர்களான தேவர்களுக்குக் கடலினின்றும் அமுதமாகிற பிரயோஜநாந்தரத்தை யெடுத்துக் கொடுத்தருளினதுபோல் மற்றுமுள்ள பிரயோஜநாந்தர பரர்கட்கும் நீயே அப்பிரயோஜநங்களை அளிக்கவல்லை என்பது உட்கருத்தாம்.

[ஆனின்மேய இத்யாதி.] சுத்தியை விளைக்கக்கூடிய பதார்த்தங்களுள் முதன்மையாகக் கூறப்படுகிற பஞ்சகவ்யமும் அவற்றிலுண்டான பரிசுத்தியும் உனது ஸங்கல்பத்திலாயது. ஊனின்மேய ஆவிநீ என்றது-சரீரம் நின்றிருப்பதும் நசித்துப்போவதுப் உன்னுடைய இச்சாதீநமென்றபடி. வானிலேடு மண்ணும் நீ என்றது-ஆலம்பநமற்ற ஆகாசத்திலே பலபல தேவதைகள் ஸஞ்சரிக்கிறதும், நீரிலேகிடக்கிற பூமியானது கரையாமல் ஸகலத்துக்கும் ஆதாரமாயிருப்பதும் உன்னாலே என்றபடி. யானும்நீ என்றது-எனக்கு உன்பக்கல் நசி பிறவாதகாலத்திலும் எனக்கு நல்லமதியை யளித்து ருசியைப் பெருக்கினதும் நீயென்றபடி. (கூச)

846 அடக்கரும்புலன்களைத்தடக்கி ஆசையாமவை *
துடக்கறுத்துவந்து நின்தொழிற்கணின்றவென்னைநீ *
விடக்கருதிமெய்செயாது மிக்கோராசையாக்கிலும் *
கடற்கிடந்தநின்னலாலோர் கண்ணிலேனெம்மண்ணலே. (கூரு)

எம் அண்ணலே!	எம்பெருமானே!
அடக்க அரு	அடக்கமுடியாத
ஐந்து புலன்கள்	பஞ்சேந்திரியங்களை
அடக்கி	பட்டிமேயாதபடி நியமித்து
ஆசை ஆம் அவை	விஷயாந்தரப் பற்றுக்களை
துடக்கு அறுத்து வந்து	ஸ்வாஸநமாகத் தொலைத்து விட்டு வந்து
நின் தொழில் கண்	உன் கைங்கரியத்திலே
நின்ற	நிஷ்டனையிருக்கிற
என்னை	அடியேனை
நீ	இவ்வளவு ஆளாக்கின நீ
விட கருதி	உபேக்ஷிக்கத் திருவுள்ளம்பற்றி
மெய் செயாது	என் உஜ்ஜீவநார்த்தமான க்ருஷியை மெய்யாக நடத்தாமல்
மிக்க ஓர் ஆசை ஆக்கிலும்	விஷயாந்தரப்ராவண்யத்தை அதிகரிப்பித்தாலும்
கடல் கிடந்த நின் அலால்	க்ஷீரஸாகர சாயியான உன்னையல்லது
ஓர் கண் இலேன்	வேறொரு ஸ்வாமியையுடையேனல்லேன்.

* * * புறம்புண்டான விஷயங்களில் விருப்பத்தை விலக்கி உன்னளவில் அபிநிவேசத்தைப் பிறப்பித்துக் கைங்கர்யத்தைப் பிரார்த்திக்கும்படி அடியேனை இவ்வளவு நல்ல நிலைமைக்குக் கொண்டுவந்த நீதானே என்னை உபேக்ஷித்து விஷயாந்தர ப்ரவணனாகக் கெட்டுப்போகும்படி ஒருகால் கைவிட்டபோதிலும் உன்னையொழிய வேறொரு கதியில்லை யெனக்கு என்று தம்முடைய அத்யவஸாயத்தை அருளிச்செய்கிறார்.

ஆசார்யனுடைய நல்ல உபதேசங்களைக்கொண்டும் சாஸ்த்ர பரிசயத்தைக் கொண்டும் இந்திரியங்களை அடக்கப்பார்த்தால் அடக்கமுடியாத இவ்விந்திரியங்களை உன் திவ்யமங்கள விக்ரஹலாவண்யத்தைக்காட்டி ஈடுபடுத்தி விஷயாந்தரங்களில் போகாதபடி தகைந்து புருஷார்த்தங்களின் மேலெல்லையாகிய கைங்கர்ய ப்ரார்த்தனையிலேயே நிலைநிற்கும்படி உன் திருவருளுக்குப் பாத்ரமாகி நின்ற என்னை நீ உபேக்ஷிப்பதாகத் திருவுள்ளம்பற்றி எனது உஜ்ஜீவநக்ருஷியை முட்டமுடிய நடத்தாமல் இன்னும் விஷயாந்தரங்களிலேயே ருசியைப் பிறப்பித்து உன்னைவிட்டு நீங்கும்படி நீ செய்தாயாகிலும் என்மனம் உன்னைவிட்டு நீங்காது என்றவாறு. "என்னை நெகிழ்க்கிலும் என்னுடை நன்னெஞ்சுன்னை அகல்விக்கத் தாழ்ங்கில்லானினி" என்ற நம்மாழ்வாரைப்போல அருளிச் செய்கிறபடி. மெய்செயாது = என்னை உஜ்ஜீவிப்பிக்க வேணுமென்ற திருவுள்ளத்துடன் தொடங்கின க்ருஷிகளை மெய்யாகத் தலைக்கட்டாமல் என்கை. (கூடு)

847 வரம்பிலாதமாயமாய வையமேழும்மெய்ம்மையே *
வரம்பிலாழியேத்திலும் வரம்பிலாதகீர்த்தியாய் *
வரம்பிலாதபல்பிறப்பு அறுத்துவந்துநின்கழல் *
பொருந்துமாதிருந்தநீ வரஞ்செய்புண்டரீகனே. (கூசு)

வரம்பு இலாத மாய	அளவிறந்த ஸ்வரூபத்தை யுடைய பிரகிருதித்தத்துவத்தை ஸ்வாதீநமாகவுடையவனே
மாய!	ஆச்சர்யசக்தியுக்தனே!
வையம் ஏழும்	ஏழுலகத்திலுமுள்ள ஜனங்களும் (கூட)
மெய்ம்மையே	மெய்யாகவே
வரம்பு இல் ஊழி	பலபல கற்பங்கள் வரையில்
ஏத்திலும்	தோத்ரம் பண்ணினாலும்
வரம்பு இலாத கீர்த்தியாய்	எல்லைகாணமுடியாத புகழை யுடையோனே!
புண்டரீகனே	புண்டரீகாக்ஷனே! (அடியேன்)
வரம்பு இலாத	முடிவில்லாமல் நேரக் கூடிய வையான
பல் பிறப்பு	பற்பல ஜன்மங்களை
அறுத்து	இன்றோடு முடித்துவிட்டு
நின் கழல் வந்து	உனது திருவடிகளைக் கிட்டி
பொருந்தும் ஆ	அவற்றிலேயே ஸக்தனாயிருக்கும்படி
திருந்த	நன்றாக
நீ வரம் செய்	அநுக்ரஹித்தருளவேணும்.

* * * "அஞ்சலென்னவேண்டுமே" என்றும் "இரங்கு அரங்கவாணனே!" என்றும் பொதுப்பட அருளிச்செய்ததை விவரியாநின்றுகொண்டு, "ஸம்ஸாரத்தை வேரறுத்து உன் திருவடிகளிலே பொருந்தும்படியாக அநுக்ரஹம் பண்ணியருளவேணும்" என்று தம்முடைய ப்ராப்யத்தை ஸ்பஷ்டமாகப் பிரார்த்திக்கிறார். (கூசு)

848 வெய்யவாழிசங்குதண்டு வில்லும்வாளுமேந்துசீர் *
கைய! செய்யபோதில்மாது சேருமார்ப! நாதனே! *
ஐயிலாயவாக்கைநோய் அறுத்துவந்துநின்னடைந்து *
உய்வதோருபாயம் நீயெனக்குநல்கவேண்டுமே. (கூஎ)

வெய்ய ஆழி	(எதிரிகள்மேல்) தீக்ஷ்ணமான திருவாழியையும்
சங்கு தண்டு வில் ஆம் வாளும்	திருச்சங்கையும் கதையையும் ஸ்ரீ சார்ங்கத்தையும் நந்தக வாளையும்
ஏந்து சீர் கைய!	தரித்துக்கொண்டிருக்கிற அழகிய திருக்கைகளையுடையவனே!
செய்ய போதில் மாது	செந்தாமரை மலரில் பிறந்த பிராட்டி

சேரும் மார்ப	நித்யவாஸம்பண்ணுகிற திரு மார்பையுடையவனே!	அறுத்து வந்து நின் அடைந்து	தொலைத்து வந்து உனனை அடைந்து
நாதனே	ஸர்வஸ்வாமியே!	உய்வது ஓர் உபாயம்	நான் உஜ்ஜீவிக்கும்படியான வொரு உபாயத்தை
ஐயில ஆய ஆக்கை நோய்	சிலேஷ்மம் முதலியவற்றுக்கு இருப்பிடமாகிய சரீரமாகிய வியாதியை	எனக்கு நீ நல்க வேண்டும்	அடியேனுக்கு அருளவேணும். (97)

849 மறந்துறந்துவஞ்சமாற்றி ஐம்புலன்களாசையும் *
துறந்துநின்கணைசையே தொடர்ந்துநின்றகாயினேன் *
பிறந்திறந்துபேரிடர்ச் சுழிக்கணின்றுநீங்குமா *
மறந்திடாதுமற்றெனக்கு மாயநல்கவேண்டுமே. (கூவு)

மாய!	ஆச்சரிய சக்தி யுக்தனான பெருமானே!,	பிறந்து இறந்து	பிறப்பது இறப்பதுமான விகாரங்களே யடைந்து கொண்டு
மறம் துறந்து வஞ்சம் மாற்றி	கோபத்தை ஒழித்து கள்ளங்கபடுகளைத் தவிர்த்து	பேர் இடர் சுழிக்கண் நின்றும்	மஹாதுக்க மண்டலமான ஸம்ஸாரத்தில் நின்றும்
ஐம் புலன்கள் ஆசையும் துறந்து நின் கண் ஆசையே தொடர்ந்து நின்ற காயினேன்	பஞ்சேந்த்ரியங்களினுடைய விஷயாந்தரப் பற்றையும் ஒழித்து உன் பக்கலில் பக்தியே மேன்மேலும் பெருகி வரப்பெற்ற அடியேன்	நீங்கும் ஆ மற்று	நீங்கும் பிரகாரத்தையும் அதற்கு மேற்பட்டுப் பரமாகந்த மடையும் பிரகாரத்தையும்
		எனக்கு மறந்திடாது நல்க வேண்டும்	அடியேனுக்கு மறவாமல் அருளவேணும்.

* * * பிறர்க்கு ஒரு ஏற்றமிருக்தால் அதனைப் பொறுக்கமாட்டாமையும் பிறர்க்குத் தீங்குவினைப்பதையே நிந்திக்கையும் மறம் எனப்படும். அதனை யொழித்து, வஞ்சபாவது - அநுகூலன்போலத்தோற்றி முடிவில் பிரதிகூலனாய் நிற்றல்; அதனையும் தொலைத்து, இந்திரியங்களுக்கு விஷயாந்தரங்களிலுண்டான ஆசையையும் அகற்றி உன்பக்கல் ஆசையே மேன்மேலும் தொடர்ந்து பெருகும்படியான நிலைமையிலேயே நின்ற அடியேன், பிறப்பதும் இறப்பதுமான மஹாதுக்கசக்ரத்தில் நின்றும் நீங்கும் விதத்தையும் அதற்குப்பிறகு ப்ராப்தமாகக்கூடிய பரமாகந்த ஸாம்ராஜ்யத்தையும் நீயே தந்தருளவேணும். மற்று என்பது அசைச்சொல்லாகக்கொண்டு, பேரிடர்ச்சுழிக்கணின்று நீங்குதலே மாத்திரமே பிரார்த்திக்கின்ற தென்னவுமாம்.

850 காட்டிநான்செய்வல்வினைப் பயன்றனில்மனந்தனை *
காட்டிவைத்துநல்லவல்ல செய்யவேண்ணினாரென *
கேட்டதன்றியென்னதாவி பின்னைகேள்வநின்னெடும் *
பூட்டிவைத்தவென்னை நின்னுள்நீக்கல்பூவைவண்ணனே. (கூகூ)

பின்னை கேள்வ!	நப்பின்னைப் பிராட்டிக்கு நாதனே!	காட்டி வைத்து நல்ல அல்ல செய்ய எண்ணினர்	துணியும்படி செய்வித்து அஸத்யமான ஹிம்ஸைகளே செய்ய நினைத்திருக்கிறார்கள்
பூவை வண்ணனே	காயாம்பூப்போன்ற நிறமுடையவனே!	என கேட்டது அன்றி	என்று நான் கேட்டிருக்கிற படியாகாமைக்காக
(யமஜிங்கர ரானவர்கள்)		என்னது ஆவி நின்னெடும் பூட்டிவைத்த என்னை	என்னுடைய ஆத்மாவை உன்பக்கலிலே ஸமர்ப்பித்து நிர்ப்பரனாயிருக்கிற என்னை
நான் செய் வல் வினை காட்டி	நான் செய்த பிரபலமான பாவங்களே எனக்கு ஞாபகப் படுத்தி	நின்னுள் நீக்கல்	உன்னை விட்டுப்பிரித்து விட வேண்டா.
பயன் தனில்	அப்பாவங்களின் பலன்களை அநுபவிப்பதில்		
மனம் தனை	எனது மநஸ்ஸை		

* * * நான் கணக்கு வழக்கில்லாதபடி செய்திருக்கும் பாவங்களுக்குப் பலன் அநுபவித்தே தீரவேண்டியதாகும்; நான்செய்த பாவங்கள் இவ்வுலகத்தில் அந்தந்த கூஷணங்களில் அழிந்துபோய்விட்டாலும் அவற்றை நான் மறந்தொழிந்தாலும் பாபபலன்களை ஊட்டுவதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள யமகிங்கரர்கள் என்னுடைய ஒவ்வொரு பாவத்தையும் எடுத்தெடுத்துக்கூறி 'இவற்றின்பலனை அநுபவித்தே தீரவேணும்' என்று வற்புறுத்தக் கடமைப்பட்டிருக்கிறார்களென்பதை நான் பெரியோர்முகமாகவும் சாஸ்த்ரமுகமாகவும் கேட்டிருக்கிறேன்; அப்படிப்பட்ட பயங்கரமான யமகிங்கரயாதனைகள் அடியேனுக்கு நேரக்கூடாதென்று ஏற்கனவே தேவரீர்பக்கல் ஆத்மஸமர்ப்பணம் பண்ணியிருக்கிறேன்; இவ்வடியேனை அந்த ரங்கபூதனாக தேவரீர் திருவுள்ளத்தில் கூட்டிக்கொண்டருளினால் "வரிஹர யஸ்வமீஷ நாவஹாது" என்றபடி அந்த நரகவேதனைகட்கு ஆளாகாதொழியலாம்; ஆகையாலே தேவரீர் அடியேனை அவிரோதனாக கொண்டருளவேணும் என்று பிரார்த்திக்கிறார்.

செய்யவேண்ணினர் என்ற வினைமுற்றுக்கு ஏற்ப "நமன்தமர்" என்ற எழுவாய் வருவித்துக்கொள்ளவேணும். என்றைக்கோ செய்து முடிந்துபோன வல்வினைகளைக் காட்டுவதாவது-நினைப்பூட்டுகை; இன்ன இன்ன பாவங்களைச் செய்தாயென்று தெரிவித்தல். "பயன்றனால்" என்பதும் சிலருடைய பாடம். பயன்றனில் மனந்தனை நாட்டிவைக்கையாவது-பிறரை வஞ்சித்து ஏகாந்தமாகப் பாவங்களைச் செய்து தீர்த்தோம்; அவற்றின் பலன்களை இப்போது அநுபவித்தேதீரவேண்டும்; இப்போது யமபடர்களை வஞ்சிக்க முடியாது என்று தீர்மானித்துக்கொள்ளுகை. யமபடர் செய்யக்கூடிய ஹிம்ஸைகளின் கொடுமையை நினைத்து இன்ன ஹிம்ஸையென்று சொல்ல அஞ்சி நல்லவல்ல என்று பொதுவிலே அருளிச்செய்கிறார்: நல்லதாகாத செயல்களையென்கிறார். (கஙக)

851 பிறப்பிறைப்பேர்ச் சுழிக்கணின்றுநீங்குமஃது *
இறப்பவைத்தஞானநீசரைக் கரைக்கொடேற்றுமா *
பெறற்கரியநின்னபாத பத்தியானபாசனம் *
பெறற்கரியமாயனே யெனக்குநல்கவேண்டுமே. (கஂஂ)

பெறற்கு அரிய மாயனே	(ஒருவர்க்கும் ஸ்வயத்நத்தாலே) பெறுவதற்கு முடியாத எம் பெருமானே!	ஞான நீசரை	ஸர்வஜ்ஞராகத் தங்களை நினைத்துக்கொண்டிருக்கிற நீசர்களை
		கரை கொடு ஏற்றம் ஆ	கரையிலே கொண்டு சேர்க்கும் படியாக
பிறப்பிறைப்பேர் இடர் சுழிக்கள் நின்றும்	பிறப்பு முதலிய பெருப்பெருத்த துக்கங்களை விளைக்கின்ற ஸம்ஸாரத்தில் நின்றும்	பெறற்கு அரிய	துர்லபமான
		நின்ன பாதம் பத்தி ஆன	உன் திருவடிகளில் பக்தியாகிற
நீங்கும் அஃது	நீங்குவதற்கு நன்றுப்பான தத்வ ஹிதங்களை	பாசனம்	மரக்கல [ஓட] த்தை
இறப்ப வைத்த	மறந்தொழிந்த	எனக்கு நல்க வேண்டும்	அடியேனுக்கு அருளவேணும்.

* * * "என்னை நின்னுள் நீக்கல்" என்ற ஆழ்வாரை நோக்கி எம்பெருமான் 'ஆழ்வீர்! அவிச்சிந்நமான நித்ய ஸம்ச்லேஷத்தைப் பிரார்த்திக்கின்றீரே; அது பெறவேணுமானால் நீர் பரமபக்தியோடு கூடியிருக்கவேணுமே' என்ன; அப்படிப்பட்ட பரமபக்தியையும் நீயே தந்தருளவேணுமென்று இரக்கிறார். தேவரீருடைய பாதாரவிந்தத்திலே பக்தியுண்டாவது ஸாமான்யமல்ல; அஃது அனைவர்க்கும் எளிதில்பெறுதற்கு அரிது; அதனை அடியேனுக்கு நிர்ஹேதுகக்ருபையினால் தந்தருளவேணுமென்று பின்னடிகளில் பிரார்த்திக்கிறார். அப்படிப்பட்ட பக்தியை அடியேனுக்கு தேவரீர் அருளினால் அஃது என்னைபோலுவனுடைய உஜ்ஜீவநத்துக்கு மாத்ரம் உபயுக்தமாகாது; அதனைக்கொண்டு பலநீசர்களை நான் கரையேற்றப் பார்ப்பேனென்கிறார் முன்னடிகளில். (கஂஂ)

852 இரந்துரைப்பதுண்டுவாழி ஏமநீர்நிறத்தமா *
வரந்தருந்திருக்குறிப்பில் வைத்ததாகில்மன்னுசீர் *
பரந்தசிந்தையொன்றிநின்று நின்னபாதபங்கயம் *
நிரந்தரம்நினைப்பதாக நீநினைக்கவேண்டுமே. (க°க)

ஏமம் நீர் நிறத்து	மஹாஜலமான கடல் போன்ற நிறத்தையுடைய	பரந்த	கண்ட விடங்களில் அலைந்து திரிகிற
அம்மா!	ஸ்வாமீ!	சிந்தை	எனது நெஞ்சானது
இரந்து உரைப்பது உண்டு	(தேவரீரை) யாசித்துச் சொல்லும் வார்த்தை யொன்றுண்டு;	ஒன்றி நின்று	(தேவர் விஷயத்திலேயே) ஸ்திரமாயிருந்துகொண்டு
வாழி	பல்லாண்டு பல்லாண்டு;	நின்ன	தேவரீருடைய
மன்னு சீர் வரம் தரும் திருக் குறிப்பில்	(சேதநர்க்குச்) சிறந்த வரங்களை யருள்வதே இயல்வான (தேவரீருடைய) திருவுள்ளத்தில்	பாத பங்கயம்	திருவடித்தாமரைகளை
		நிரந்தரம்	இடைவிடாமல்
		நினைப்பது ஆக	தியானிக்கும்படியாக
வைத்தது ஆகில்	அடியேனுக்கு ஏதாவது வரங் கொடுக்க நினைவுண்டாகில் (இந்த வரம் கொடுக்கவேணும்;)	நீ நினைக்க வேண்டும்	தேவரீர் திருவுள்ள மிரங்க வேணும்.

* * * கீழ்ப்பாட்டில், பக்தியைத் தந்தருளவேணுமென்று பிரார்த்தித்த ஆழ்வாரை நோக்கி எம்பெருமான், 'உமக்கு நான் பக்தியைக்கொடுப்பதாவதென்ன? விஷயாந்தரங்களில் நின்றும் மீட்கப்பட்ட இந்திரியங்களைக்கொண்டு நம்மை நிரந்தரமாக நினைத்தால் அதுவே பரம பக்தியாகத் தலைக்கட்டுகிறது; காரியம் உம்கையிலேகிடக்க என்னை நிர்ப்பந்திப்பானேன்?' என்ன; பிரானே! அப்படி நிரந்தர சிந்தனபண்ணுவது என் முயற்சியினாலேயே தலைக்கட்டி விடுமோ? தேவரீர் ஸங்கல்பியாதவளவில் அதுதானும் நடைபெறுமோ? ஆகையாலே அடியேன் தேவரீரையே நிரந்தரம் நினைப்பேனும்படி திருவுள்ளம்பற்றி யருளவேணுமென்கிறார்.

முதலடியின் முடிவில், அமா என்றது அம்மா! என்றபடி: தொகுத்தல். ஸ்வாமிந்! என்கை. "இரந்துரைப்பதுண்டு" என்றவாறே எம்பெருமான் முகங்காட்டவில்லை; 'இவ்வாழ்வார்க்குக் காரியமொன்றுமில்லை; திருப்பித்திருப்பி 'அருளாய், இரங்கு' என்று பிரார்த்தித்துக் கொண்டிருப்பார்; இவர்க்கு நாம் முகங்கொடுக்கலாகாது' என்று நினைத்துப் பாமுகனாயிருந்தான்; அங்ஙனிருந்தகண்டு, வாழி என்று கப்பிரமான மிடற்றோசையோடே பேசினார்: அந்த மங்களாசாஸனசப்தம் செவிப்பட்டவாறே எம்பெருமான் பரவசனாய் ஆழ்வாரை நோக்கினான்; நோக்குதலும் அபரிச்சிந்நமான கடல்போலே சரமஹரமான திவ்ய விக்ரஹத்தை ஸேவித்து "ஏமநீர் நிறத்து அம்மா!" என்று பெருமிடறு செய்து கூப்பிடுகிறார் என்று விவரித்துக்கொள்க. (க°க)

853 விள்விலாதகாதலால் விளங்குபாதபோதில்வைத்து *
உள்ளுவேனதூனநோய் ஒழிக்குமாதெழிக்குநீர் *
பள்ளிமாயபன்றியாய வென்றிவீரகுன்றினுல் *
துள்ளுநீர்வரம்புசெய்த தோன்றலொன்றுசொல்லிடே. (க°உ)

தெழிக்கும் நீர்	கொந்தளிக்கிற கடலிலே	வரம்பு செய்த	அணைகட்டின
பள்ளி	சயனங்கொண்டிருக்கிற	தோன்றல்!	ஸ்வாமியே!
மாய	ஸர்வேச்வரனே!	விள்வு இலாத காதலால்	நீக்கமில்லாத அன்பினால்
பன்றி ஆய	மஹாவராஹமாகத் திருவவதரித்த		
வென்றி வீர	ஜயசீலனான வீரனே!	விளங்கு பாத போதில் வைத்து	(உனது) விளங்குகின்ற பாதாரவிந்தத்திலே (நெஞ்சை) வைத்து
துள்ளும் நீர்	துள்ளின கடலிலே		
குன்றினுல்	மலைகளைக்கொண்டு		

உள்ளு வேனது	(அத்திருவடிகளையே தஞ்சமாக) அநுஸந்தித்திருக்கிற என்னுடைய	ஒழிக்கும் ஆ	ஒழிக்கும் வழிகளில்
		ஒன்று	ஒருவழியை
ஊனம் நோய்	சரீரசம்பந்தமான நோய்களை	சொல்லிடு	அருளிச்செய்க.

* * * "நின்னபாதபங்கயம் நிரந்தரம் நினைப்பதாக நீ நினைக்கவேண்டுமே" என்று பிரார்த்தித்த ஆழ்வாரைநோக்கி எம்பெருமான் "ஆழ்வீர்! இந்த சரீரம் உள்ளவரையில் அப்படிப்பட்ட நிரந்தரசிந்தனை கூடமாட்டாதுகாணும்; சரீரசம்பந்தம் அற்றொழிந்த பின்புதான் அது வாய்க்கும்" என்ன, "பிரானே! இந்த சரீரம் தொலையவேணுமென்கிற ருசியோ எனக்குப் பூர்ணமாயிராநின்றது; இதனைத் தொலைப்பதற்குறுப்பான சக்தியோ தேவரீருக்குப் பூர்ணமாயிராநின்றது; இனி இதனைத் தொலைத்தருளத்தட்டுண்டோ; வாய்திறந்தொருவார்த்தை அருளிச்செய்யவேணும்" என்கிறார்.

விள்விலாத காதல்=விள்வாவது பிரயோஜநாந்தரங்களை நச்சி நெகிழ்ந்து போகை; அஃது இல்லாத காதல்-அநந்யப்ரயோஜநமைக்கொண்டு பண்ணும் ப்ரேமம். அப்படிப்பட்ட ப்ரேமத்தாலே திருவடித்தாமரைகளிலே நெஞ்சைவைத்து அவற்றையே சரணமாக அநவரதம் அநுஸந்தித்துக்கொண்டிருக்கிற அடியேனுக்கு ஊனத்தை விளைக்கும் சரீர ஸம்பந்தமாகிற நோயைப் போக்கியருளும் வகைகளில் ஒருவகை அருளிச்செய்யவேணும். 'இன்ன காலத்திலே இதனைப் போக்குகிறேன்' என்று சொன்னாலும் போருமென்று திருவுள்ளம். (க°உ)

854 திருக்கலந்துசேருமார்ப தேவதேவதேவனே *
இருக்கலந்தவேதநீதி ஆகிநின்றநின்மலா *
கருக்கலந்தகாளமேக மேனியாயநின்பெயர் *
உருக்கலந்தொழிவிலாது உரைக்குமாறுரைசெயே. (க°ங)

திரு	பெரிய பிராட்டியார்	நின் மலா	பரிசுததனே)
கலந்து சேரும்	நித்யஸம்ச்லேஷம் பண்ணி வாழப்பெற்ற	கரு கலந்த காள மேகம் மேனி	பொன்னோடு சேர்ந்த காளமேகம்போன்ற திருமேனியையுடைய
மார்ப	திருமார்பையுடையனே!		
தேவர் தேவர் தேவனே	ப்ரஹ்மாதிகளிற் காட்டிலும் மேற்பட்ட நித்யஸூரிகளுக்கும் தலைவனே!	ஆய	கண்ணபிரானே!
		நின் பெயர்	உன் திருநாமங்களை
		ஒழிவு இலாது	நிரந்தரமாக
இருக்கு கலந்த வேதம் நீதி ஆகி நின்ற	(பலவகைப்பட்ட) ருக்குக்கள் சேர்ந்திருக்கிற வேதங்களால் பிரதி பாதிக்கப்படுகையை ஸ்வபாவமாகவுடையனை	உரு கலந்து உரைக்கும் ஆறு	திவ்யமங்களவிக்ரஹத்தோடு சேர்த்து அநுஸந்திக்கும் வகையை
		உரைசெய்	அருளிச்செய்யவேணும்.

* * * ஆழ்வார் தம்முடைய சரீரபந்தத்தை அறுத்துத் தந்தருள வேணுமென்று எம்பெருமானைப் பிரார்த்தித்தாலும் அவன் இப்போதே அது செய்யமாட்டானே; இந்த சரீரத்தோடே இவரைச் சிறிதுகாலம் வைத்து அநுபவிக்க விருப்பமுடையவனுதலால் 'வேர்சூடுவார் மண்பற்றை உகக்குமாபோலே' இந்த ப்ராக்ருத சரீரத்தையே மிகவும் விரும்பியிருப்பவனிறே; அதனால், 'ஆழ்வீர்! நீர் பிரார்த்திக்கிறபடி சரீரபந்தத்தை இப்போதே அறுத்துத் தாமுடியாது; அதுக்கு ஒரு காலவிசேஷம் உண்டு; பொறுத்திரும்' என்ன; அப்படியாகில் தேவரீருடைய மேன்மைக்கும் நீர்மைக்கும் வடிவழகுக்கும் வாசகமான திருநாமங்களையாவது அடியேன் இடைவிடாது அநுஸந்தித்துக்கொண்டிருக்கும்படி அருள் புரியவேணுமென்று பிரார்த்திக்கிறார். இருக்கு+கலந்த=இருக்கலந்த; "சங்கு-கதை, சங்கதை" போல. மூன்றுமுடியில், ஆய! என்பது 'ஆயன்' என்பதன்விளி. ஹிரண்யவர்ணையான பிராட்டி சேர்ந்த கரிய திருமேனிக்குக் கருக்கலந்த காளமேகத்தை ஒப்புச்சொல்லிற்று ஒக்கும். கரு—பொன்; மின்னலைச்

சொல்லிற்றாகக் கொள்க. கரு என்று கர்ப்பத்தைச் சொல்லிற்றாகவுமாம்; நீர்நிறைந்த காளமேகமென்றபடி. உருக்கலந்து = திருநாம ஸங்கீர்த்தநம் பண்ணும்போது நிவ்யமங்கள விக்ரஹாநுபவமும் நடைபெறவேணுமென்ற ஆசை விளங்கும். (க°ஈ)

855 கடுங்கவந்தன்வக்கரன் கரன்முரன்சிரமவை *
இடந்துகூறுசெய்த பல்படைத்தடக்கைமாயனே *
கிடந்திருந்துநின்றியங்குபோதும் நின்னபொற்கழல் *
தொடர்ந்துவீள்விலாததோர் தொடர்ச்சிநல்கவேண்டுமே. (க°உ)

கடு	க்ரூரனான	மாயனே	பெருமானே!
கவந்தன்	கபந்தனென்ன	கிடந்து இருந்து நின்று இயங்கு போதும்	படுக்கை இருக்கை நிற்கை திரிகை முதலிய ஸர்வாவஸ்தைகளிலும்
வக்கரன்	தந்தவக்த்ரனென்ன	நின்ன	தேவரீருடைய
கரன்	கரனென்ன	பொன்கழல்	அழகிய திருவடிகளையே
முரன்	முரனென்ன (இவர்களுடைய	தொடர்ந்து வீள்வு இலாதது ஓர் தொடர்ச்சி	இடைவிடாது அநுவர்த்தித் திருக்கையாகிற ஒரு தொடர்ப்பை
சிரம் அவை	தலைகளை	நல்கவேண்டும்	தந்தருளவேணும்.
இடந்து கூறு செய்த பல் படை தட கை	சிந்நபிந்நமாக்கினவனும் பலவகைப்பட்ட ஆயுதங்களைப் பெரிய திருக்கைகளிலே உடையனுமான		

* * * ஸர்வாவஸ்தைகளிலும் எம்பெருமானுடைய திருவடிகளிலேயே நிரந்தர சிந்தனை நடைபெறவேணுமென்று பிரார்த்திக்கிறார்.

[கிடந்திருந்து இத்யாதி.] "சூஷீ நா வாபாயா நாவா சீஷஞ்ஜாயதாகூரவா । வைஷ்ணவீ ஹஸ்தீதே நயாதா ஹஹஷ்ஷே கெபவழி" என்ற ச்லோகம் இங்கு அநுஸந்திக்கத்தக்கது. படித்துக்கொண்டிருக்கும் போதும் உட்கார்ந்திருக்கும்போதும் நிற்கும்போதும் திரியும்போதும் ஆக எல்லா வவஸ்தைகளிலும் தேவரீருடைய பாதாரவிந்த சிந்தனையே மேன்மேலும் நடந்து வருமாறு அருள் புரியவேணுமென்று பிரார்த்தித்தாராயிற்று. (க°ஊ)

856 மண்ணையுண்டுமிழ்ந்து பின்னிரந்துகொண்டளந்தமண் *
கண்ணுளல்லதில்லையென்று வென்றகாலமாயினாய் *
பண்ணைவென்றவின்சொல்மங்கை கொங்கைதங்குபங்கயக்
கண்ண * நின்னவண்ணமல்லதில்லை யெண்ணும்வண்ணமே. (க ஙு)

மண்ணை உண்டு	பூமியைப் பிரளயகாலத்திலே திருவயிற்றில் வைத்து ரக்ஷிக்கியும்	வென்ற	(அவ்வுலக முழுவதையும்) ஸ்வாதீநப்படுத்திக் கொண்டும் போந்த
பின் உமிழ்ந்து	பிரளயங் கழிந்த பிறகு வெளிப்படுத்தியும்	காலம் ஆயினாய்	ஸர்வகால நிர்வாஹகனே!
இரந்து கொண்டு	(மஹாபலியிடத்தில்) பிக்ஷையேற்றுப்பெற்று	பண்ணை வென்ற இன்சொல் மங்கை கொங்கை தங்கு பங்கயக் கண்ண	பண்களைத்திரஸ்கரித்த இனிமையான பேச்சையுடைய பிராட்டியினுடைய திருமுலைத்தடத்திலே பிரியாது வாழ்கிற புண்டரீகாக்ஷனே!
அளந்து	அளந்துகொண்டும்,	நின்ன வண்ணம் அல்லது	உன் வடிவழகுதவிர
'மண் கண்ணுள் அல்லது இல்லை' என்று	'இவ்வுலகமானது நமது கடாக்ஷத்தாலன்றி ரக்ஷை பெற்றிருக்கமாட்டாது' என்று திருவுள்ளம்பற்றி	எண்ணும் வண்ணம் இல்லை	தியானிக்கக்கூடிய வடிவுமற்றொன்றுமில்லை.

* * * அடியேன் பிரார்த்தித்தபடி நீ அருள்வாய், அருளாதொழிவாய்; என்னுடைய அத்யவஸாயம் எப்படிப்பட்டது தெரியுமோ? உன்னுடைய நிவ்ய மங்கள விக்ரஹத்தின் அநுபவமல்லது வேறொன்றும் நெஞ்சில் நடவாதென்று தமது உறுதியை வெளியிடுகிறார். (க°ஙு)

857 கறுத்தெதிர்ந்தகாலநேமி காலனைக்கூடவன்று *
அறுத்தவாழிசங்குதண்டு வில்லும்வாளுமேந்தினாய் *
தொறுக்கலந்தவூனமஃது ஒழிக்கவன்றுகுன்றமுன் *
பொறுத்தநின்புகழ்க்கலாலோர் நேசமில்லைநெஞ்சமே. (க°சு)

அன்று — முன்னொரு காலத்து
கறுத்து எதிர்ந்த காலநேமி — கோபித்து எதிரிட்ட காலநேமியானவன்
காலனைக் கூட — யமலோகம்போய்ச் சேரும்படியாக
அறுத்த — அவன் தலையை அறுத்த
ஆழி சங்கு தண்டு வில்லும் வாளும் — பஞ்சாயுதாழ்வார்களை
ஏந்தினாய் — திருக்கையிலே அணிந்து கொண்டிருக்கும் பெருமானே!
தொறு கலந்த ஊனம் அஃது — பசுக்களுக்கு நேர்ந்த அப்படிப்பட்ட ஆபத்தை
அன்று ஒழிக்க — அப்போதே போக்குவதற்காக
முன் — எல்லாருடையவும் கண் முன்னே
குன்றம் பொறுத்த நின் — கோவர்த்தனமலையை (குடையாகத்) தூக்கியெடுத்த தேவரீருடைய
புகழ்க்கு அலால் — திருக்குணங்களுக்குத் தவிர (மற்றெவ்விஷயத்திலும்)
நெஞ்சம் — எனது நெஞ்சுக்கு
ஓர் நேசம் இல்லை — சிறிதும் ப்ரீதியில்லை.

*** தேவரீருடைய திவ்யசேஷ்டதங்களைப் புகழ்ந்து பேசுவதிலேயே அடியேனுக்கு அபிநிவேசம் பெருகுகின்ற தென்கிறார். காலநேமியை முடித்தருளின படியையும் கோவர்த்தனமலையைக் குடையாக வெடுத்துக் கோநிரையைக் காத்தபடியையும் கூறிப் புகழ்ந்தாராய்த்து. (க°சு)

858 காய்சினத்தகாசிமன்னன் வக்கரன்பவுண்டிரன் *
மாசினத்தமாலிமா சுமாலிகேசிதேனுகன் *
நாசமுற்றுவீழ நாள்கவர்ந்தநின்கழற்கலால் *
நேசபாசமெத்திறத்தும் வைத்திடேனெம்மீசனே. (க°எ)

எம் ஈசனே — எம்பெருமானே!
காய் சினத்த காசி மன்னன் — மஹா கோபியான காசிராஜாவும்
வக்கரான் — (ருக்மிணீ விவாஹ காலத்தில் வந்து போர் செய்த) தந்தவக்த்ரனும்
பவுண்டிரன் — பௌண்ட்ரக வாஸுதேவனும்
மா சினத்த மாலி — அதிகோபிஷ்டனை மாலியும்
மா சுமாலி — மஹாஜனஸுமாலியும்
கேசி — (குதிரை வடிவங்கொண்டு கொல்லவந்த) கேசியும்
தேனுகன் — தேநுகாஸுரனும்
நாசம் உற்று வீழ — துக்கத்தை யநுபவித்து மாண்டு போம்படியாக
நாள் கவர்ந்த — (அவர்களுடைய) வாழ்நாளை முடித்த
நின் — தேவரீருடைய
கழற்கு அலால் — திருவடிகளுக்குத்தவிர
எத்திறத்தும் — வேறு எவ்விஷயத்திலும்
நேச பாசம் — ஆசாபாசத்தை
வைத்திடேன் — வைக்கமாட்டேன். (107)

859 கேடில்சீர்வரத்தனுங் கெடும்வரத்தயனரன் *
நாடிநேடுநாட்டமாயிரத்தன் நாடுநண்ணினும் *
வீடதானபோகமெய்தி வீற்றிருந்தபோதிலும் *
கூடுமாசையல்லதொன்று கொள்வதேகுறிப்பிலே. (க°அ)

கேடு இல் சீர் வரத்தன் ஆம் அயன் — அழிவில்லாத ஸம்பத்தையுடையனும்படி வரம் பெற்ற வனான பிரமனென்ன
கெடும் வரத்து அயன் — எல்லாவற்றுக்கும் முடிவை உண்டு பண்ணுவதான வரம் பெற்ற சிவனென்ன (இவர்களுடைய)
நாடி நேடு — நாடுகளோடுகூட
நாட்டம் ஆயிரத்தன் நாடு — ஆயிரங்கண்ணுடைய இந்திரனுடைய நாட்டையும்
நண்ணினும் — அடையப்பெறுவதாயிருந்தாலும்
வீடு ஆன அது போகம் எய்தி வீற்றிருந்த போதிலும் — மோக்ஷமாகிய அவ்வநுபவத்தையே பெற்று (ஆநந்தமயமாய்) வீற்றிருக்கப் பெறுவதாலும்

கூடும் ஆசை அல்லது	'எம்பெருமானேடு சேரவேணும் சேரவேணும்' என்று மனோரதித்திருக்கை தவிர	ஒன்று குறிப்பில் கொள்வனே	மற்றொன்றை நெஞ்சினுள் நினைப்பேனே.

* * * எம்பெருமானைக் கிட்டி அநுபவிப்பதிலுங்காட்டில் அவ்வநுபவத்தைப்பற்றின மனோரதமே நித்யமாய்ச் செல்லுமாகில் அதுவே கிறக்குமென்பது ஆழ்ந்த பக்தியுடையவர்களுடைய ஸித்தாந்தம்; அதனை யருளிச்செய்கிறார் இப்பாட்டில். நாட்டம் என்று கண்ணுக்குப் பெயர்; நாட்டமாயிரதனன் என்று ஸ்ரீரங்கராஜனை இந்தியலுக்கு நாமநேயமாகிறது. இதனை யுணராது, "நாடிநேடு நாட்டமாய் இரத்தனேடு நண்ணினும்" என்று ஓதுமவர்களுடைய ஞானப்பெருமையை என் சொல்வோம். (கம்மு)

860 சுருக்குவாரையின்றியே சுருங்கிஞய் ‡ சுருங்கியும் *
பெருக்குவாரையின்றியே பெருக்கமெய்துபெற்றியோய் *
செருக்குவார்கள்தீக்குணங்கள் தீர்த்ததேவதேவனென்று *
இருக்குவாய்முனிக்கணங்களேத்த யானுமேத்தினேன். (கம்கூ)

சுருக்கு வாரை இன்றியே	சுருங்கச்செய்வதற்கு ஹேதுவான கருமம் முதலியவை ஒன்றுமில்லாமலே	தீக்குணங்கள்	அஹங்கார மமகாரங்களாகிற தீயகுணங்களை
சுருங்கினுய்	(ஸ்ரீ வாமனனைச்) சுருங்கின பெருமானே !	தீர்த்த தேவதேவன்!	தொலைத்தருளின தேவாதிதேவனே!
சுருங்கியும் பெருக்கு வாரை இன்றியே	அப்படி குறுகினபின்னும்; பெருகச்செய்வதற்கு ஹேதுவான கருமம் முதலியவை ஒன்றுமில்லாமலே	என்று	இவ்வாறு பலகாலும் ஸ்தோத்ரம் செய்யப்பட்டு
பெருக்கம் எய்து பெற்றியோய்	(த்ரிவிக்ரமனைக்) திருவளர்த்திபெற்ற பெருமானே !	இருக்கு வாய் முனி கணங்கள் ஏத்த	வேதமோதும் வாயையுடையரான மஹரிஷிகளின் திரள் துதிக்க (அவர்களுக்கு)
செருக்குவார்கள்	அஹங்காரிகளாய்த்திரிந்த மஹாபலிபோல்வாருடைய	யானும் ஏத்தினேன்	அடியேனும் துதித்தேனித்தனை.

* * * எம்பெருமானே ! உன்னுடைய வடிவழகு, திருக்கல்யாணகுணங்கள், திவ்ய சேஷ்டிதங்கள் முதலியவற்றைப்பற்றி நான் பேசுவதெல்லாம் நானுகவே கண்டறிந்து பேசுவதல்ல; சிற்றறிவினனுகிய எனக்கு ஒன்றும்தெரியாது; வைதிக புருஷர்கள் ஸ்தோத்ரப் பண்ணக்கண்டு நானும் அநுவாதரூபமாக ஏதோ பேசினேனத்தனை என்று நைச்யானுஸந்தானம் பண்ணிக்கொள்ளுகிறார். "எப்படி ஊராமிலிக்கக் குருட்டாமிலிக்கு மென்னும் அப்படியானுஞ் சொன்னேன், அடியேன் மற்றியாதென்பனே" (திருவிருத்தம்.) "இரைத்து நல்ல மேன்மக்களேத்த யானுமேத்தினேன்" (திருவாய்மொழி.) என்ற நம் மாழ்வாரருளிச் செயல்களுங் காண்க. (கம்கூ)

861 தூயனுமன்றியும் சும்புலாவுதண்டுழாய் *
மாயனின்னைநாயினேன் வணங்கிவாழ்த்துமீதெலாம் *
நீயுனின்குறிப்பினில் பொறுத்துநல்குவேலைநீர் *
பாயலோடுபத்தர்சித்தம் மேயவேலைகண்ணனே. (ககம்)

சும்பு உலாவு தண் துழாய்	வண்டுகள் உலாவப்பெற்ற குளிர்ந்த திருத்துழாய் மாலையையுடைய	வேலை நீர் பாயலோடு	திருப்பாற்கடலாகிற படுக்கையோடுங்கூட
மாய !	ஆச்சரிய சக்தியுக்தனான பெருமானே !	பத்தர் சித்தம் மேய வேலை வண்ணனே!	பக்தர்களுடைய ஹ்ருதயத்திலே குடிகொண்டிருக்கிற கடல் வண்ணனே!

காயினேன்	நீசனை அடியேன்	வாழ்த்தும் இது எலாம்	துதிப்பதாகிற இதனையெல்லாம்
தூயனையும்	பரிசுத்தனுகவோ	நீயும்	(ஸர்வஸ்மாத்பரனான) தேவரீரும்
அன்றியும்	பரிசுத்தனல்லாதவனுகவோ	நின் குறிப்பினில் பொறுத்து	திருவுள்ளத்திலே கூடிக்கருளி
நின்னை	தேவரீரை	நல்கு	அநுக்ரஹம்செய்யவேணும்.
வணங்கி	ஸேவித்து		

* * * தூயனையும் அன்றியும்=என்னை ஒருவிதத்திலே பார்த்தால் பரிசுத்தனென்னலாம்; மற்றொருவிதத்திலே பார்த்தால் அபரிசுத்தனென்றும் சொல்லலாம்;—தேவரீரைப் பரம பரிசுத்தராக அநுஸந்திப்பதே எனக்கு சுத்தியாதலால் அந்த விதத்தாலே அடியேன் சுத்தனுகவுமாம்; அஹங்கார மமகாரங்களால் நிறைந்திருக்கிறேனுதலால் அந்தவிதத்தாலே அபரிசுத்தனுகவுமாம்; சுத்தனுயோ அசுத்தனுயோ தேவரீரை வணங்கித் துதித்துவிட்டேன்; இனி கூடிப்பதே நலம். (ககஂ)

862 வைதுநின்னைவல்லவா பழித்தவர்க்குமாறில்போர் *
செய்துநின்னசெற்றதீயின் வெந்தவர்க்கும்வந்துனை *
எய்தலாகுமென்பர் ஆதலாலெம்மாய, நாயினேன் *
செய்தகுற்றம்நற்றமாகவேகொள் ஞாலநாதனே. (ககக)

நின்னை வைது வல்ல ஆ பழித்தவர்க்கும்	தேவரீரை நிந்தித்து சக்தியுள்ளவரைக்கும் அபவாதங்கள் சொன்ன சிசுபாலாதிகளுக்கும்,	உனை வந்து எய்தல் ஆகும் என்பர்	தேவரீரைக்கிட்டி உஜ்ஜீவிக்கப் பெறலாகுமென்று (மஹரிஷிகள்) சொல்லாநின்றனர்;
மாறு இல் போர் செய்து	ஒப்பில்லாத யுத்தம்பண்ணி	ஆதலால்	ஆகையாலே
நின்ன செற்றம் தீயில்	தேவரீருடைய கோபாக்நியில்	எம் மாய !	எம்பெருமானே !
வெந்தவர்க்கும்	வேந்துபோன வாலி முதலாஞோர்க்கும்	ஞாலம் நாதனே	ஸர்வலோக ஸம்ரக்ஷகனே!
		நாயினேன் செய்த குற்றம்	அடியேன் பண்ணின குற்றங்களை
		நற்றம் ஆகவே கொள்	குணமாகவே கொள்ளல் வேண்டும்.

* * * தம்முடைய அபசாரத்தைப் பொறுத்தருளும்படி பிரார்த்தித்தார் கீழ்ப்பாட்டில்; எம்பெருமானுடைய வாத்ஸல்யமென்னும் குணவிசேஷத்தை ஆராய்ந்துபார்த்தார்; * என்னடியாரது செய்யார் செய்தாரேல் நன்று செய்தார் என்று குற்றத்தையும் குணமாகக் கொள்ளுகிற எம்பெருமானுடைய திருவுள்ளம் புண்படும்படி "பொறுத்துநல்கு" என்று பிரார்த்திப்பது மஹாபசாரமென்று அநுதபித்து, அவ்வெம்பெருமானுடைய வாத்ஸல்ய குணத்துக்குத்தகுதியாய்ப் பேசுகிறார்—"நாயினேன் செய்தகுற்றம் நற்றமாகவே கொள்" என்கிறார்.

"கற்றினம் மேய்க்கலும் மேய்க்கப்பெற்றான் காடுவாழ் சாதியுமாகப் பெற்றான், பற்றியுரலிடையாப்பு முண்டான் பாவிகாள் உங்களுக்கேச்சுக்கொலோ?" என்று ஆண்டாள் வயிறெரிந்து பேசும்படியாக தேவரீரை விசேஷ்டாகத் தூஷித்து தேவரீரோடே எதிரம்புகோத்துப் போர்புரிந்து கடைசியாக தேவரீருடைய கோபாக்நிக்கு இலக்காகி நீரூயொழிந்த சிசுபால வாலிப்ரப்ருதிகளும் தேவரீருடைய பதத்தை பராப்தாஞர்களென்று மஹர்ஷிகள் சொல்லிவைத்திருக்கிறார்கள்: மஹாத்மோஹிகளான அவர்களுடைய அபராதங்களைப் பொறுத்தருளின தேவரீர், அவர்களைப்போலே ப்ரதிகூலனல்லாத அடியேனுடைய குற்றங்களையும் பொறுத்தால் விசேஷமென்? ஆச்ரிதருடைய குற்றங்களை நற்றமாகக் கொள்வதன்றே சிறப்பு என்கிறார்.

வைதுவல்லவா பழித்தவனுன சிசுபாலனுக்கு மோக்ஷம் கிடைத்ததென்பதைப் பராசரர் சொல்லிவைத்தார், "ஹமவஹுகெ-ணவராவாதி தஷுதஷுரணாஷுஹுவிறு வஷுஂயொ ஹமவ தா ஷுஷுஷ ஂவாநீ தஷுஷுவிஷுஷுவுயஷுஷுஂயெள" என்பது ஸ்ரீவிஷ்ணுபுராணம். "கேட்பார் செவி சுடு கீழ்மை வசவுகளே வையும் சேட்பால் பழம்பகைவன் சிசுபாலன், திருவடி தாட்பாலடைந்த தன்மையறிவாரையறிந்துமே" என்றார் நம்மாழ்வாரும். மாறில் போர்செய்து செற்றத்தீயில் வெந்தவனுன வாலிக்கு மோக்ஷ ப்ராப்தியை வால்மீகிமுனிவர் கூறினர்; "ராஹவா ணாஹதஷுவி ஷு ஸாஹதஷுரஷுமதிம்" என்பது ஸ்ரீராமாயணம். வைதலாவது என்ன? பழித்தலாவது என்ன? எனில்; இல்லாத செய்திகளைச்சொல்லி தூஷிப்பது வைதல்; உள்ள செய்திகளையே இழிவாகச்சொல்லி தூஷிப்பது பழித்தல் என்று கொள்க. (ககக)

863 வாள்களாகிநாள்கள்செல்ல நோய்மைகுன்றிமூப்பெய்தி *
மாளுநாளதாதலால் வணங்கிவாழ்த்தென்னெஞ்சமே *
ஆளதாகுநன்மையென்று நன்குணர்ந்ததன்றியும் *
மீள்விலாதபோகம் நல்கவேண்டுமாலபாதமே. (ககஉ)

நாள்கள்	தினங்களானவை
வாள்கள் ஆகி செல்ல	(நமது ஆயுளை அறுக்கும்) வாள்கள்போன்று கழிய
நோய்மை	பலவகை வியாதிகளாலே
குன்றி	உடல் பலக்குறைபட்டு
மூப்பு எய்தி	கிழத்தனமும் வந்துசேர்ந்து
மாளும் நாள் அது	மரணமடைவதோர் நாள் நெருங்கிவிட்டது;
ஆதலால்	மிருத்யுகாலம் குறுகிவிட்டபடியால்
என் நெஞ்சமே	எனது மனமே!
ஆளது நன்மை ஆகும் என்று	எம்பெருமானுக்கு ஆட்பட்டிருப்பதே நன்மையென்று
நன்கு உணர்ந்து	திருடமான அத்யவஸாயம் கொண்டு
வணங்கி வாழ்த்து	(அவ்வெம்பெருமானை) தொழுது ஏத்துவாயாக;
அது அன்றியும்	அதற்கு மேலே
மால பாதமே	அப்பெருமானுடைய திருவடிகளே
மீள்வு இலாத போகம்	மறுபடி திரும்பி வருதலில்லாத நித்யபோகத்தை
நல்க வேண்டும்	அளிக்கக்கடவது.

* * * "மின்னின்னிலையில மன்னுயிராக்கைகள்" என்றபடி நமது வாழ்நாள் இன்னபோது முடியுமென்று தெரியாதாகையால் வாழ்நாளுள்ள வரையில் எம்பெருமானை வணங்கி வாழ்த்தவேணுமென்று தமது திருவுள்ளத்தைக் குறித்து உபதேசிக்கிறார். நாள்களோ கடுங்குதிரைபோல் விரைந்தோடிக்கொண்டே யிருக்கின்றன; 'ஆயுஸ்ஸை அறுக்கிற வாள்களோ இவை என்னும்படியாக நாள்கள் பழுதே கழியாநிற்க, யௌவநப்பருவத்தி லுண்டாகக் கூடிய ரோகங்களாலே உடல் குன்றிப்போய் இடிவிழுந்தாற்போல் திடீரென்று கிழத்தனமும் வந்துசேர்ந்து செத்துப்போகும் நாள் அணுகிவிட்டது; ஆயுஸ்ஸை அஸ்திரமாகையாலும், உள்ள ஆயுஸ்ஸில் விக்நங்கள் பலவு முண்டாகையாலும், 'நாளைக்குத் தொழுவோம்' என்றிராமல் இப்போதேதிருவடிகளிலே வணங்கி வாழ்த்தப்பாராய் நெஞ்சே!; ஆளது நன்மையாகும் என்று நன்கு உணர்ந்து வணங்கிவாழ்த்து என்று அந்வயம். போதைப்போக்குவதற்காகவன்றே 'அடிமைசெய்வதுதான் புருஷார்த்தம் என்கிற அத்யவஸாயத்துடனே வணங்கி வாழ்த்து' என்கிறார். (ககஉ)

864 சலங்கலந்தசெஞ்சடைக் கறுத்தகண்டன்வேண்டலே *
புலன்கலங்கவுண்டபாதகத்தன் வன்றுயர்கெட *
அலங்கன்மார்வில்வாசநீர் கொடுத்தவனடித்தசீர் *
கலங்கொள்மாலகண்ணுவண்ணம் எண்ணுவாழிநெஞ்சமே. (ககஙூ)

நெஞ்சமே!	என்மனமே!
வாழி	உனக்குப்பல்லாண்டு; (நான் சொல்வதைக் குறிக்கொள்;)
சலம் கலந்த செம் சடை	கங்கைநீரோடுகூடின சிவந்த ஜடையையுடையனும்
கறுத்த கண்டன்	(விஷத்தினால்) கறுத்த கழுத்தையுடையனும்
புலன் கலங்க	ஸர்வ இந்திரியங்களும் கலங்குமாறு
வெண் தலை	வெளுத்துப்போன கபாலத்திலே
உண்ட பிச்சைவாங்கியுண்டுஜீவித்த	
பாதகத்தன்	கோரபாதகியுமான சிவபிரானுடைய
வன் துயர் கெட	வலிதான துக்கம் தீரும்படி
அலங்கல் மார்வில்	திருத்துழாய் மாலையை யணிந்த திருமார்பினனும்
வாசம் நீர்	திவ்யபரிமளமான தீர்த்தத்தை
கொடுத்தவன்	அவனுக்குப்ரஸாதித்தருளின
அடுத்த சீர்	என்றும்விட்டு நீங்காத திருக்கல்யாண குணங்களையுடைய
நலம் கொள் மாலை	ஆநந்தமயனான எம்பெருமானே
நண்ணும் வண்ணம்	அணுகும் வழியாகிற அவனது திருவருளையே
எண்ணு	அநுஸந்தித்திரு.

865 ஈனமாயவெட்டுநீக்கி ஏதமின்றிமீதுபோய் *
வானமாளவல்லையேல் வணங்கிவாழ்த்தென்னெஞ்சமே *
ஞானமாகிஞாயிறாகி ஞாலமுற்றுமோரெயிற்று *
ஏனமாயிடந்தமூர்த்தி யேத்தைபாதமெண்ணியே. (ககச)

என் நெஞ்சமே	எனது மனமே;
ஈனம் ஆய	(அறிவுக்குக்) குறைவை விளைக்கவல்ல
எட்டும்	அவித்யை, கருமம், வாஸநா, ருசி பிரகிருதி ஸம்பந்தம், தாபத்ரயம் ஆகிய எட்டையும்
நீக்கி	போக்கி
ஏதம் இன்றி	ஸம்ஸார துக்கங்களெல்லாம் போய்
மீது போய்	(அர்ச்சிராதி மார்க்கத்தாலே லீலாவிபூதிக்கு)மேலே சென்று
வானம்	பரமபதத்தை
ஆள வல்லை ஏல்	அநுபவிக்கவேண்டியிருந்தாயாகில்
ஞானம் ஆகி	ஆத்மஞானத்தை யளிப்பவனும்
ஞாயிறு ஆகி	ஸூரியனைப்போலே இந்திரிய ஞானத்தை அளிப்பவனும்
ஏனம் மூர்த்தி ஆய்	மஹா வராஹமூர்த்தியாய்
ஞாலம் முற்றும்	பூமி முழுவதையும்
ஓர் எயிறு	ஒரு கோட்டினாலே
இடந்த	அண்டபித்தியில் நின்றும் ஒட்டு விடுவித்தெடுத்து ரக்ஷித்த
எந்தை	எம்பெருமானது.
பாதம்	திருவடிகளை
எண்ணி	சிந்தித்து
வணங்கி	நமஸ்கரித்து
வாழ்த்து	துதிக்கக்கடவை.

* * * ஈனமாயவெட்டும் என்று—ஆத்மாவுக்குப் பொல்லாங்கைப் பண்ணுவதான காமம், க்ரோதம், லோபம், மோஹம், மதம், மாத்ஸர்யம், அஜ்ஞானம், அஸூயை என்ற எட்டும் சொல்லிற்றாகவுமாம். (இந்த நிர்வாஹம் ஆசார்ய ஹ்ருதய வியாக்கியானத்திலுள்ளது.) காமமாவது - விரும்பின பதார்த்தத்தை அநுபவித்தே தீரவேண்டும்படியான அவஸ்தை. க்ரோதமாவது-அப்படி விரும்பின பதார்த்தம் கிடையாதொழியில் அதைகொடுக்காதவர்கள்மேல் பிறக்கும் சீற்றம். லோபமாவது - கண்டபதார்த்தங்களிலும் அளவற்ற அபேக்ஷை. மோஹமாவது-கார்யமின்னது அகார்யமின்னது என்று ஆராயமாட்டாமை. மதமாவது-பொருள் முதலியவை கிடைப்பதனாலுண்டாகும் களிப்பு. மாத்ஸர்யமாவது - பிறர்மிடுக்கம் பொறுமையை அநுஷ்டாநபர்யந்தமாக நடத்துகை. அஜ்ஞாநமாவது - இவற்றில் மேல்வருங்கெடுதியை நிரூபிக்கமாட்டாமை. அஸூயையாவது - குணங்களிலே தோஷத்தை ஆவிஷ்கரிக்கை. இவையெட்டும் நீங்கினால் ஏதம் கழிபுமாதலால் ஏதமின்றி எனப்பட்டது.

ஞானமாகி ஞாயிறாகி = ஞானத்தையளித்து உள்ளிருந்தே நீக்குவானும் எம்பெருமானே; ஸூர்யனை யுண்டாக்கி அவன் மூலமாகப் புறம்பிருந்தே யொழிப்பானும் எம்பெருமானே என்ற கருத்து உணரத்தக்கது. ஆத்மஜ்ஞாநத்துக்கும் இந்த்ரியஜ்ஞாநத்துக்கும் நிர்வாஹகனென்ற வாறு. ஸ்ரீ வராஹமூர்த்திக்கு ஞானப்பிரான் என்ற நிருநாமம் ப்ரஸித்தமாதலால் அதனைத் திருவுள்ளம்பற்றியே ஞானமாகி ஞாயிறாகி என்கிறபோதும். ப்ரளயக்கடலில் அழுந்திக்கிடந்த பூமிப்பிராட்டியை உத்தரித்தருளினதுபோலவே ஸம்ஸாரக் கடலில் அழுந்திக்கிடக்கிற நம்மையும் உத்தரித்தருள்வன் என்று அநுஸந்திக்கவேணுமென்பது தோன்ற "ஞாலமுற்றுமோரெயிற் றேனமாயிடந்தமூர்த்தி" என்றார். (ககச)

866 அத்தனுகியன்னேயாகி ஆளுமெம்பிரானுமாய் *
ஒத்தொவ்வாதபல்பிறப்பொழித்து நம்மையாட்கோள்வான் *
முத்தனுர்முகுந்தனுர் புகுந்துநம்முள்மேவினுர் *
எத்தினுலிடர்க்கடற்கிடத்தி யேழைநெஞ்சமே. (ககடு)

முத்தனுர்	ஸம்ஸார ஸம்பந்த மில்லாத வரும்	அன்னே ஆகி	மாதாவாயும்
முகுந்தனுர்	மோக்ஷபூமியை அளிப்பவரு மான பெருமாள்;	ஆளும் எம்பிரா ஹும் ஆய்	அடிமைகொள்ளும் ஸ்வாமியாயும்
ஒத்து ஒவ்வாத பல் பிறப்பு ஒழித்து	ஞானமுடைமையால் ஒத்தும் யோகிபேதத்தால் ஒவ்வாமலுமி ருக்கிற பலவகைப்பட்ட பிறவி களைப் போக்கி	கம்முள்	நம்மிடத்திலே
		புகுந்த மேவினுர்	புகுந்து ஒரு நீராகப் பொருந்தி னுர்; (அனுபவிப்பு)
நம்மை ஆட் கொள்வான்	நம்மை அடிமை கொளவதற் காக,	ஏழை நெஞ்சமே	மதிகெட்ட மனமே!
		எத்தினுல்	ஏதுக்காக
அத்தன் ஆகி	பிதாவாயும்	இடர் கடல்	துக்கஸாகரத்திலே
		கிடத்தி	அழுந்திக்கிடக்கிறாய்.

* * *—அன்று திருத்தேர்த்தட்டிலே நின்று கண்ணபிரான் அர்ஜுநனை நோக்கி "மாசுச:—துக்கப்படாதே" என்று சரமச்லோக மருளிச்செய்தாப்போல, இவ்வாழ்வார் தம் திருவுள்ளத்தைநோக்கி "மாசுச:" என்கிறார் இப்பாட்டில். புருஷகாரப்படியின் முடிவிலே, "* வார்த்தையறிபவர் என்கிற பாட்டுப் * அத்தனுகி என்கிற பாட்டுப் இதுக்கு அர்த்தபாக அநுஸந்தேயப்." என்று பிள்ளை யுலகாசிரியர் அருளிச்செய்தமை நோக்கத்தக்கது.

"முத்தனுர் முகுந்தனுர் - ஒத்தொவ்வாத பல்பிறப்பொழித்து நம்மை யாட்கொள்வான் - அத்தனுகி அன்னேயாகி ஆளும் எம்பிரானுமாய்ப் புகுந்து நம்முள் மேவினுர், எழைநெஞ்சமே! எத்தினுல் இடர்க்கடல் கிடத்தி?" என்று அந்வயிப்பது. அகிலஹேய ப்ரத்யநீகராகையாலே ஸம்ஸாரநாற்றமே கண்டறியாதவராய் மோக்ஷபூமியைத் தந்தருள்பவரான பெருமாள் பல வகைப்பட்ட பிறவிகளைப்போக்கி நித்ய ஸம்ஸாரிகளான நம்மை நித்யஸூரிகளைப்போல அடிமைகொள்ளத் திருவுள்ளம்பற்றி, பிதாவாயும் மாதாவாயும் நம்முடைய கைங்கர்ய ப்ராப்தியும் பந்துவாயும் இப்படி ஸர்வவித பந்துவாயும் நம்முடைய சிறுமையையும் தம்முடைய பெருமையையும் பாராதே நம்முடைய ஸகலமான பாரங்களையும் தாமே ஏறிட்டுக் கொண்டு செய்துமுடிப்பதாக நம்முள்ளே புகுந்து ஒருநீராகப் பொருந்தினர்; அறிவுகெட்ட நெஞ்சே! ஸர்வஜ்ஞனும் ஸர்வசக்தனும் ப்ராப்தனும் தன்மேன்மை பாராதே தாழுகின்று உபகரிக்குமவனும் அவன் நமக்கு வாய்த்திருக்க, எத்தாலே நீ துக்கக்கடலில் கிடக்கிறது? இனி துக்கப்படாதே கொள் என்கிறார்.

"ஒத்தொவ்வாத பல்பிறப்பு" என்பதற்கு மற்றொருவகையாகவும் பொருள்கூறுவர்; எல்லாப் பிறவிகளும் ஹேயமாயிருக்கச்செய்தேயும் ஒருவனுக்கு ப்ரியமான ஜன்மம் மற்றொருவனுக்கு அப்ரியமாகிறது; ஒருவனுக்கு அப்ரியமான ஜன்மம் வேறொருவனுக்கு ப்ரியமாகிறது. ஓரரத்மாவுக்கு மநுஷ்யஜன்மம் ப்ரியமாயிருந்தால் இன்னுமோரரத்மாவுக்கு வராஹஜன்மம் ப்ரியமாகிறது. இப்படி ஆத்மபேதேந மனஸ்ஸுக்கு ஒத்தும் ஒவ்வாமலுமிருக்கிற பல்வகைப் பிறப்புக்களென்றவாறு. முத்தனுர்=முக்த:' என்ற வடசொல்லுக்கு "விடுபட்டவன்" என்று பொருள்; அதாவது ஸம்ஸாரத்திலிருந்து விடுபட்டவன் என்க; ஸம்ஸாரியாயிருந்த ஜீவாத்மா ஒருகாலத்தில் விடுபேற்றால் அவன் முக்தனெனப்படுவான்; அதுபோல எம்பெருமானுக்கு ஸம்ஸாரபந்தம் என்றைக்குமே யில்லாவிடினுங்க அல்பாநுஷ்ட ஸம்ஸாரான பெருமானே முத்தனுர் என்னலாமோ எனின்; ஸம்ஸார ஸம்பந்தம் இருந்து கழிந்தவர் என்று இவ்விடத்தில் பொருள்கொள்ளாது ஸம்ஸார ப்ரதிபடர் என்றபாத்திமே பொருள்கொள்ள வேணும். வேதபுருஷன் எப்பெருமானே "யதோவாசோ" என்று சொன்னவிடத்திற்குச் சொல்லிக் கொள்ளவேண்டிய உபபத்திகள் இங்கே அநுஸந்தேயப்; விரிப்பிற்பெருகும். (ககடு)

முகுர்தனுர்=மு - முக்தியாகிற, கு - பூமியை, ந: - கொடுப்பவர்.

867 மாறுசெய்தவாளரக்கன் நாளுலப்பவன்றிலங்கை *
நீறுசெய்துசென்றுகொன்று வென்றிகொண்டவீரனுர் *
வேறுசெய்துதம்முளென்னே வைத்திடானமையால் * நமன்
கூறுசெய்துகொண்டு இறக்குற்றமெண்ணவல்லனே. (ககசு)

மாறு செய்த வாள் அரக்கன்	ஆயுதபாணியான இராவணனுடைய
நாள் உலப்ப	வாழ்நாள் முடியும்படியாக
அன்று	முற்காலத்து
இலங்கை	லங்காபுரியை
சென்று	அடைந்து
நீறு செய்து	நீறுக்கி
கொன்று	அவனைக் கொன்று
வெற்றி கொண்ட வீரனுர்	ஜயம்பெற்ற மஹா வீரரான பெருமாள்
என்னை	அடியேனை
தம்மூள் வேறு செய்து வைத்திடாமையால்	தம்மில் வேறுபடுத்தி வைக்காமையினல் [என்னை அந்தரங்க பூதகைக்கொண்டருளினபடியால்] (இனி)
நமன்	யமனுனவன்
கூறுசெய்து கொண்டு	(என்னை அப்பெருமாளிடத்தினின்றும்) பிரித்து
இறந்த குற்றம்	நான்செய்து கழித்த பாவங்களை
எண்ண வல்லனே	நெஞ்சாலும் நினைக்கக் கடவனே.

* * *—மேல்வரும் பிறவிகட்கு அடியான கருமங்களைக் கழித்துத் தம்மை அடிமை கொள்ள எம்பெருமான் முற்பட்டமையைக் கீழ்ப்பாட்டில் அருளிச்செய்தார்; "நாம் நரகவேதனைகளை அநுபவிப்பதற்கு ஹேதுவான பாவங்களைப்பண்ணிக் கிடக்கிறோமாகையாலே யமனுக்கு வசப்பட்டுத் துன்பப்படாதொழிய முடியுமோ" என்று கவலையுற்ற திருவுள்ளத்தைக் குறித்து, நமக்குத் தஞ்சமான சக்ரவர்த்தி திருமகளார் தம்மோடே நம்மைக் கூட்டிக்கொண்ட பின்பு நாம் செய்த குற்றம் யமனால் ஆராய முடியுமோவென்கிறார். "எண்ணவல்லனே என்றது — பாபம் பண்ணினனென்று தன் க்ருஹத்திலே யிருந்து நினைக்கவுர் சக்தனல்லனென்றபடி." என்ற வியாக்கியான ஸ்ரீஸூக்தி காண்க. (ககசு)

868 அச்சநோயோடல்லல் பல்பிறப்பவாயமூப்பிவை *
வைத்தசிந்தைவைத்தவாக்கை மாற்றிவானிலேற்றுவான் *
அச்சுதனனந்தகீர்த்தி ஆதியந்தமில்லவன் *
நச்சுநாகணைக்கிடந்த நாதன்வேதகீதனே. (ககள)

அச்சம்	பயமென்ன
நோயொடு அல்லல்	வியாதியோடு கூடின மநோவியாதியென்ன
அவாயம் மூப்பு	அபாயங்களுக்கு இடமான கிழத்தனமென்ன
பல் பிறப்பு	பலவகைப் பிறப்புகளென்ன
இவை	ஆகிய இவற்றையும்,
வைத்த சிந்தை	இவற்றை யனுபவிப்பதற்காகக் கண்ட நெஞ்சையும்
வைத்த ஆக்கை	கிழ்ச்செய்னவற்றுக்கு ஆச்ரயமாகக்கண்ட சரீரத்தையும்
மாற்றி	போக்கடித்து
வானில் ஏற்றுவான்	(நம்மைப்) பரமபதத்திலே கொண்டு சேர்ப்பவன் (ஆரென்னில்)
அச்சுதன்	அடியாரை ஒருநாளும் கைவிடாதவனும்
அனந்த கீர்த்தி	எல்லையில்லாத கீர்த்திகளையுடையனும்
ஆதி அந்தம் இல்லவன்	முதலும் முடிவு மில்லாதவனும்
நஞ்சு நாக அணை கிடந்த நாதன்	(விரோதிகள்மீது) விஷத்தை உமிழ்கின்ற ஆதிசேஷனுகிற சயனத்திலே கிடந்தருளும் ஸ்வாமியும்
வேத கீதன்	வேதங்களினல் பிரதிபாதிக்கப்பட்டவனுமான பெருமானும்

* * *—யமனுக்கு வசப்பட்டு வருந்துகைக்கு ஹேதுவான பாபங்கள் போனலும் மேன்மேலும் தேஹஸம்பந்தத்தைத் தொடுக்கவல்ல ப்ராரப்தகர்மம் கிடக்கவில்லியோவென்ன; அந்த ப்ராரப்த கர்மத்தையும் அதற்கு ஆச்ரயமான தேஹத்தையும் போக்கிப் பரமபதத்திலே நம்மை எம்பெருமான் கொண்டுபோவானனபின்பு நம்பேற்றுக்கு ஒருகுறையில்லை யென்கிறார். (ககள)

869 சொல்லினுந்தொழிற்கணும் தொடக்கருதவன்பினும் *
அல்லுநன்பகலிலேடு ஆனமாலைகாலையும் *
வல்லிகாண்மலர்க்கிழத்தி நாதபாதபோதினை *
புல்லியுள்ளம்வீள்விலாது பூண்டுமீண்டதில்லையே. (ககஅ)

வல்லி நாள் மலர் கிழத்தி நாத!	படர்ந்த செவ்வித் தாமரைப் பூவிலே பிறந்த பிராட்டிக்கு நாதனே!
உள்ளம்	எனது நெஞ்சானது
சொல்லினும்	வாக்கினும்
தொழில் கணும்	காயிகவ்யாபாரங்களிலும்
தொடக்கு அருத அன்பினும்	விச்சேதமற்ற அன்பிலும் (ஒருபடிப்பட்டு)

அல்லிமேடு ஆன மாலையும்	ராத்ரியோடுகூடின ஸாயம்ஸந்த்யையிலும்	புல்லி	அணைந்து
நல் பகலினோடு ஆன காலையும்	நல்ல அஹஸ்ஸோடு கூடிய ப்ராதஸ் ஸந்த்யையிலும் (ஆக ஸர்வகாலங்களிலும்)	வீள்வு இலாது	(ஒரு நொடிப்பொழுதும்) விச்சேதமில்லாமல்
பாதம் போகினே	உன்னுடைய திருவடித் தாமரையை	பூண்டு	அத்திருவடிகளையே மேற்கொண்டு
		மீண்டதில்லே	நிலைத்து நிற்கின்றது.

* * *—திருவுள்ளத்தை நோக்கி அருளிச்செய்துகொண்டுவந்த ஆழ்வார் இப்பாட்டில் எம்பெருமானையே நோக்கித் தம் திருவுள்ளத்துக்குண்டான ப்ராப்யருசியை வெளியிடுகிறார். *பூவார் திருமாமகள் புல்கிய மார்பனை பெருமானே! என்னுடைய ஒருநுதயமானது உன்னுடைய திருவடித்தாமரையை ஸர்வகாலங்களிலும் பரிபூர்ணமாக அணைந்து மறுபடி பேர்க்கவும் பேராதபடி அதிலேயே லயித்துப்போயிற்று என்கிறார். மநோவாக்காயங்கள் மூன்றுக்கும் பகவத் விஷயமொன்றே விஷயமாகப் பெற்றமையைக் கூறுவது முதலடி. * கிஞ்சையாலும் சொல்லாலும் செய்கையினாலும் அவகாஹிக்கப் பெற்றமையைக் கூறியவாறு.

வல்லிநாண்மலர்க்கிழத்தீநாத! = வல்லியென்பதை மலர்க்கு விசேஷணமாக்குதலும் மலர்க்கிழத்திக்கு விசேஷணமாக்குதலும் ஒக்கும். முதற்பக்ஷத்தில், படர்ந்த செவ்வித்தாமரைப்பூ என்றாகிறது; இரண்டாம் பக்ஷத்தில், வல்லிபோலே – கொடிபோலேயிராநின்ற நாண்மலர்க்கிழத்தியுண்டு—பெரியபிராட்டியார்; அவட்குநாதனே! என்றாகிறது. (ககஅ)

870 பொன்னிசூழரங்கமேய பூவைவண்ணமாயகேள் *
என்னதாவியென்னும் வல்வினையினுட்கொழுந்தெழுந்து *
உன்னபாதமென்னநின்ற ஒண்சுடர்க்கொழுமலர் *
மன்னவந்துபூண்டு வாட்டமின்றியேக்கும்நின்றதே. (ககக)

பொன்னி சூழ்	காவிரிசூழ்ந்த	கொழுந்து எழுந்து	(தேவரீர் விஷயமான அநுராகமாகிற) கொழுந்து கிளர்ந்து
அரங்கம்	திருவரங்கத்திலே	உன்ன	தேவரீருடைய
மேய	நித்யவாஸம் செய்தருள்கிற	பாதம் என்ன நின்ற	திருவடியென்கிற
பூவை வண்ண மாய!	காயாம்பூப்போன்ற திருமேனியையுடைய ஆச்சர்யபூதரான பெரிய பெருமாளே!	ஒண்சுடர் கொழு மலர்	அழகிய சுடர்மிக்க புஷ்பத்திலே
கேள்	(இவ்விண்ணப்பத்தைக்) கேட்டருளவேணும்;	மன்ன வந்து பூண்டு	ஸ்திரமாக வந்துபடிந்து
என்னது	என்னுடைய	எங்கும்	தேவரீருடைய விபூதிகளெல்லாவற்றிலும்
ஆவி என்னும்	ஆத்மா என்கிற	வாட்டம் இன்றி நின்றது	குறையாமல் வியாபியா நின்றது.
வல் வினை யுள்	வலிய பாபராசியிலே		

* * *—'ஆழ்வீர்! பரமவிலக்ஷணமான இப்படிப்பட்ட அபிநிவேசம் உமக்கு நம்பக்கலில் உண்டானமை ஆச்சரியமாயிராநின்றதே!; இதற்கு அடி என்?' என்று எம்பெருமான் கேட்டருள; வடிவழகையும் சீலத்தையும் காட்டி தேவரீர் பண்ணின க்ருஷ்பலித்த பலன் மேலிது என்கிறார்போலும். காவிரிசூழ்ந்த திருவரங்கம பெரியகோயிலிலே நித்யவாஸம் செய்தருள்கிற விலக்ஷணமான நிருபாதி படைத்த மாயனே! உன்னுடைய அழகாலும் சீலத்தாலும் எனக்குப்பிறந்த ருசிவிசேஷத்தைக் கேட்டருளவேணும்; உபகாரம் செய்தருளின தேவரீர் மறந்தொழிந்தாலும் நன்றியறிவுடைய நான் சொல்லக் கேட்கவேணும்; சொல்லுகிறது தான் என்னென்னச் சொல்லுகிறார்—என்னதாவியிற்யாதியால்.

"ஜூராநாநது யஸ்ஸாகா" என்று ஜ்ஞாநஸ்வரூபியாயும் ஆநந்தஸ்வரூபியாயும் சாஸ்த்ரங்களுள் சொல்லப்பட்டிராநின்ற ஆத்மா என்னளவில் அப்படிப்பட்டதன்று; கொடிய பாபராசிகளின் பிண்டமே ஆத்மவஸ்துவாக நிற்கிறதென்னலாம் அப்படிப்பட்ட என் ஆத்மவஸ்துவில் தேவரீரைப்பற்றின அநுராகமானது தேவரீருடைய பாதாரவிந்தத்திலே பரிபூர்ணமாக அவகாஹித்து தேவரீருடைய ஸ்வரூபரூபகுண விபூதிகளையெல்லாம் கபளீகரித்து விளங்காகின்றது என்கிறார். இவ்வாழ்வார்க்கு ஆவியென்றும் வல்வினையென்றும் பர்யாயம்போலும். கைச்யாநுஸந்தாந பரமகாஷ்டையிலிருக்கிறபடி. "சுஹஜாஜ்ஞே ராய நாஹுயஃ" என்ற அநுஸந்தாநம் முதிர்ந்தபடி. தம்முடைய ஆவிக்கு வல்வினை என்று பெயரிட்டு

உற்போல, பகவத் விஷயாநுபாகத்திற்குக் கோழுந்து என்று திருநாமம் சாற்றினர். என்ன தாவியென்னும் வல்லியிலே கொழுந்து எழுந்ததானது நெருப்பிலே தாமரை பூத்தது போலும் - என்ற திருவுள்ளத்தோற்ற அருளிச் செய்கிறபடி பாரீர். (ககக)

871 இயக்கருதபல்பிறப்பில் என்னைமாற்றியின்றுவந்து *
உயக்கொண்மேகவண்ணனெண்ணி யென்னிலாயதன்னுளே *
மயக்கினென்தன்மன்னுசோதி ஆதலாலென்னுவிதான் *
இயக்கெலாமறுத்து அருதவின்பவீடுபெற்றதே. (கஉ)

உயக்கொள்	(நம்போல்வாரை) உஜ்ஜீவிக்கச் செய்பவனை
மேக வண்ணன்	காளமேக நிபச்யாமனை பெருமான்
இன்று	இன்றைக்கு (நிர்ஹேதுகமாக)
இயக்கு அருத பல் பிறப்பில்	தொடர்ச்சியாருமல் நெடுகச் செல்லும்படியான பலவகைப் பிறப்புக்களினின்றும்
என்னை	அடியேனை
மாற்றி	மாற்றுகைக்குத் திருவுள்ளம் பற்றி
வந்து	இங்கேயெழுந்தருளி
கண்ணி	நெருங்கி
தன்னில் ஆய என்னுள்	தன்னோடு அவிநாபூதமான என்னுள்ளே
தன்	தன்னுடைய
மன்னு சோதி	நித்ய ஜ்யோதிர்மயமான திவ்ய மங்கள விக்ரஹத்தை
மயக்கினென்	ஸம்ச்லேஷிப்பித்தான்!
ஆகலால்	இப்படி புரையறக் கலந்தருளுகையாலே
என் ஆவி தான் இயக்கு எல்லாம் அறுத்து	எனது ஆத்ம வஸ்துவானது ஒன்றோடொன்று பிணைந்து கிடந்த அவித்யாகர்மாக்களை வேரறுத்து
அருத இன்பம் வீடு பெற்றது	ஒருநாளும் முடியாத இன்பமாகிய மோக்ஷஸுகத்தை பெற்றதாயிற்று.

* * *—ஸ்வகதஸ்வீகாரம்போல் தோற்றும்படியன்றே கீழ்ப்பாட்டில் அருளிச்செய்தார்; அங்ஙனன்றிக்கே, பரகதஸ்வீகாரம் பரிமளிக்கப் பேசுகிறார் இதில். நிர்ஹேதுகமாகப் பெரியபெருமாள் தம்முடைய திவ்யமங்கள விக்ரஹத்தை என்னுள்ளே பிரியாதபடி வைத்தருளினபடியாலே ப்ரதிபந்தக ஸமஸ்தங்களும் யெல்லாம் நிச்சேஷமாகப் போக்கி * அத்தமில் பேரின்பமான கைங்கர்ய ஸாம்ராஜ்யத்தைப் பெற்றேனென்று உபகார ஸ்மருதியோடே தலைக்கட்டு கிறார்.

எனக்கு அந்தாகியாக நிகழ்ந்துவந்த பலவகைப் பிறவிகளைத் தவிர்த்தருளத் திருவுள்ளம்பற்றி இன்று நிர்ஹேதுக க்ருபையினாலே நானிருந்தவிடத்தே வந்துகிட்டித் தனக்கு ப்ரகாரபூதமான என்னுடைய ஹ்ருதயத்திலே தனது ஜ்யோதிர்மயமான திவ்யமங்கள விக்ரஹத்தைப் பிரிக்கவொண்ணாதபடி பொருத்தினன் கார்முகில் வண்ணன்; இப்படி தானேவந்து பேல்லிழுந்து தன்னையொழிய எனக்கு ஒருக்ஷணகாலமும் செல்லாதபடி பண்ணியருளினபடியாலே இவ்வாத்ம வஸ்துவானது ஒன்றோடொன்று பிணைந்துகிடந்த அவித்யாகர்ம வாஸனாருசி ப்ரக்ருதி ஸம்பந்தங்களையெல்லாம் வேரறநீக்கி எஞ்ஞான்றும் இடைவிடில்லாத விலக்ஷணமான ரூபமான கைங்கர்ய ஸாம்ராஜ்யமாகிற முக்தியைப் பெற்றுழிந்ததென்றுராயிற்று.

[மயக்கினென்.] மயக்குதல்—அறிவுகெடுத்தலும் கலத்தலும்; இங்கே, கலத்தல். தன்மன்னுசோதி=ஸுகுமாரதகாமஜநஹ்ருத்ஸ்வாமிநாம் யஸ்நவஸ்ருஜிதம் ஸாரஸௌந்தர்யம் ! ஜயதி ஜிஹ்வி ரஸவ ஸஹஸ்ரஜிஹ்ம” [ஸுந்தரபாஹுஸ்தவம்.] என்னும்படி விலக்ஷணமான திவ்யமங்களவிக்ரஹத்தை ஜ்யோதி என்றும் சோதி என்றும் சொல்லக்கடவது “ஆதியஞ்சோதியுரு” என்றுரே நம்மாழ்வாரும். (கஉ)

திருமழிசைப்பிரான் திருவடிகளே சரணம்.

பெருமாள்கோயில் பிரதிவாதிபயங்கரம்
அண்ணங்கராசாரியர் இயற்றிய
திருச்சந்த விருத்தவுரை
முற்றுப்பெற்றது.

ஸ்ரீ :

தொண்டரடிப்பொடியாழ்வார் அருளிச்செய்த

திருமாலையின் தனியன்.



மற்றொன்றும் வேண்டா மனமே ! மதிளரங்கர்
கற்றினம் மேய்த்த கழலிணைக்கீழ்—உற்ற
திருமாலை பாடுஞ்சீர்த் தொண்டரடிப் போடியேம்
பெருமானே யெப்பொழுதும் பேசு.

மனமே	கெஞ்சே !	உற்ற	ஸம்பந்தம் பெற்றிருக்கிற
மற்று ஒன்றும் வேண்டா	வேறொன்றும் (உனக்கு விரும்ப) வேண்டிய தில்லை	திருமாலை	'திருமாலை' என்னும் திவ்யப்ர பந்தத்தை
மதில் அரங்கர்	ஸப்த ப்ராகாரங்களோடு கூடிய ஸ்ரீரங்கத்துக்குத் தலைவரான நம்பெருமாளுடைய	பாடும்	பாடியருளின
		சீர்	கல்யாணகுணங்களையுடைய
கன்று இனம் மேய்த்த	(திருக்ருஷ்ணாவதாரத்தில்) கன்றுகளின் கூட்டங்களை மேய்த்தருளிய,	தொண்டரடிப் பொடி எம்பெருமானே	தொண்டரடிப்பொடி யாழ்வாரை
கழல் இணை கீழ்	இரண்டு திருவடிகளின் கீழே	எப்பொழுதும்	ஸர்வகாலமும்
		பேசு	அநுஸந்திக்கக்கடவாய்.

மூன்றுமடியில் வெண்டளை தவறுகின்றது ; " திருமாலை பாடுஞ்சீர்த் தொண்டர்பொடியேம் " என்று பாடமிருந்திருக்கும் ; காலகதியில் மாறுபட ஓதப்பட்டு வருகின்றது என்பர்.

தொண்டரடிப்பொடியாழ்வார் அருளிச்செய்த திவ்யப்ரபந்தங்கள் இரண்டினுள் முதலாவது இது ; (மற்றொன்று-திருப்பள்ளியெழுச்சி.) " திருமாலையறியாதவன் பெருமாளையறியான் " என வழங்கும் பழமொழியினால் இத்திவ்யப்ரபந்தத்தின் சிறப்பு அறியத்தக்கது.

ஒரு விஷயத்தைக்குறித்துப் பலசெய்யுள் கூறுவது மாலை எனப்படும். தமிழில் பலவகைப் ப்ரபந்தங்களுள் 'மாலை' என்பது ஒன்று. திரு என்னுஞ் சொல் சிறப்புப்பொருளைக்காட்டி மாலைக்கு அடைமொழியாய் நின்றது. இப்ப்ரபந்தம் ஸ்ரீரங்கநாதனைப்பற்றிப் பாடுவதாதலால் 'திருமாலை' எனச்சிறப்பித்துக் கூறப்பட்டது. இப்பிரமாலை ஸ்ரீரங்கநாதன் திருவடிகளில் சாத்தும் பூமாலை போலுதலாலும் இந்நூல் திருமாலை எனத்திருநாமம் பெற்றது. ப்ரபந்தத்திற்குப் பெயரிடும் வகையைக் கூறுமிடத்து, " முதனூல் கருத்தன் அளவு மிகுதி, பொருள் செய்வித்தோன் தன்மை முதல் நிமித்தமும், இடுகுறியாலும் நூற்கு எய்தும் பெயரே " (நன்னூல் –பொதுப்பாயிரம்.) என்று கூறப்பட்டிருத்தலால், நுதலிய பொருளினாலும் தன்மையினாலும் பேர்பெற்றது இந்நூல் என்க. (நுதலிய பொருள் – நூலிற்கூறப்பட்ட விஷயம். தன்மை – இயல்பு)

இத்திவ்யப்ரபந்தம்-வடமொழியில் ஸ்ரீவிஷ்ணுதர்மம் என்னும் நூலின் ஸாரம் என்பது ஆசார்யர்களின் கொள்கை.

தனியன் உரை முற்றிற்று.

ஸ்ரீ :

திருமாலை.

---

872. காவலிற் புலனைவைத்துக் கலிதன்னைக் கடக்கப்பாய்ந்து *
நாவலிட் டுழிதருகின்றேம் நமன்தமர் தலைகள்மீதே *
மூவுல குண்டுமிழ்ந்த முதல்வனின் னுமங்கற்ற *
ஆவலிப் புடைமைகண்டாய் அரங்கமா நகருளானே. (க)

மூ உலகு	எல்லா வுலகங்களையும்
உண்டு	(ப்ரளய காலத்திலே) திருவயிற்றிலே வைத்து
உமிழ்ந்த	(ப்ரளயம் நீங்கினபிறகு அவற்றை) வெளிப்படுத்திய
முதல்வ	ஜகத்காரணபூதனே!
அரங்கமாநகருளானே!—;	
நின் நாமம் கற்ற	உனது திருநாமத்தைக் கற்ற
ஆவலிப்புடைமை	செருக்கினாலே
புலனை	பஞ்சேந்திரியங்களையும்
காவலில் வைத்து	(வெளியில் ஓடாதபடி) சிறையில் அடைத்து
கலிதன்னை	பாபராசியை
கடக்க பாய்ந்து	வெகுதூரம் உதறித்தள்ளி
நாவலிட்டு	ஜயகோஷம் செய்து
நமன்தமர் தலைகள் மீதே	யமபடர்களின் தலைமேல்
உழி தருகின்றேம்	அடியிட்டுத் திரிகின்றோம்.

(கண்டாய்-முன்னிலை அசைச்சொல்)

அடியார்களைக் காத்தருளும் நிறம் நன்கு விளங்கும்படி கோயிலில் கண் வளர்ந்தருளும் பெருமானே!, உன் திருநாமத்தை நான் கற்றதனால் பெற்றபேற்றின் கனத்தைக் கண்டாயோ? அஹஹ! என்னைத் தீவழியில் செலுத்தி உனக்கு விலக்காகின பஞ்சேந்திரியங்களை அவற்றின் ஸ்வாதந்திரியம் ஒன்றும் ஒங்க வொண்ணாதபடி அமுக்கி, இத்தனை நாளாக இவற்றை அமுக்கி ஆளமுடியாதபடி தடையாய்க் கிடந்த பாபங்களையும் உதறிவிட்டு, இதனால் நரகபாதையில் நின்றும் பயம் தவிர்ந்து யமகிங்கரர் தலைமேல் அடியிட்டுத் திரியாநின்றேன்; என்று செருக்கு எப்படிப்பட்டது! பாராய் என்கிறார்.

[காவலில் புலனை வைத்து] முன்பு என்னைச் சிறையில்வைத்த இந்திரியங்களை இன்று நான் சிறையில் வைத்தேனென்கிறார். இராவணன் போர்க்களத்திலே இராமபிரானது அம்புகட்கு இலக்காகிப் பட்டுப் போனவாறே மந்தோதரி புலம்புகிறாள்—"இந்த்ரியாணி புரா ஜித்வா ஜிதம் த்ரிபுவநம் த்வயா-ஸ்மரத்பிரிவ தத்வைரமத்ய தைரேவ நிர்ஜித:" என்றாள்: அதாவது-இராவணனே! நீ முன்பு இந்த்ரியங்களையெல்லாம் வென்று அதனால் மூவுலகையும் வென்றாய்; (இந்திரியங்களை நிக்ரஹித்துக் கொடுந்தவம்புரிந்து வரம் பெற்றமையால் மூவுலகும் வென்றனனதலால் இங்ஙன் கூறப்பட்டது.) அந்த இந்திரியங்கள் "இப்போது நம்மை இப்படி தலையெடுக்கவொட்டாமல் பண்ணிவிட்டானே; ஆகட்டும் தக்க சமயம் பார்த்து இவனைத் தலையமுக்குவோம்" என்று நெஞ்சில் பகை வைத்துக்கொண்டிருந்து இப்போது உனக்கு பிரதிக்ரியை செய்துவிட்டன என்றாள். (இந்திரியங்களை அடக்காமல் அவற்றுக்குப் பரவசப்பட்டு ஸீதையைக் கவர்ந்ததனால் உனக்கு இக்கேடு விளைந்ததென்றபடி.) அப்படி இராவணனிடத்தில் இந்திரியங்கள் முதலில் பரிபவப்பட்டு, பிறகு அவனைத் தாம் பரிபவப்படுத்தியவாறுபோல இவ்வாழ்வார் முதலில் தாம் இந்திரியங்களால் பரிபவப்பட்டுப் பொன்வட்டில் நிமித்தமாகச் சிறைபட்டிருந்த சினத்தை நெஞ்சில் வைத்துக்கொண்டிருந்து ஸமயம்பார்த்து அவற்றைத் தாம் சிறைப்படுத்தினர் என்ற விசேஷார்த்தம் இங்கு உய்த்துணரத்தக்கது.

கலிதன்னைக் கடக்கப் பாய்ந்து—கலி என்று கலியுகத்தைச் சொல்லிற்றுப் "இவன் க்ருத-யுக புருஷர்களில் ஒருவன்" என்று பலருஞ்சொல்லும்படி கலியைக் கெடுத்தேனென்றுமாம்.

காவலிடுதல்—தோற்றவர் முன்னே ஜயித்தவர்கள் தமது வெற்றியைக் கூறிக் கோஷித்தல். "உழிதருகின்றேன்" என்று ஒருமையாகக் கூறாமல் பன்மையாகக் கூறியவித்தால்-ஒரு புண்ணியசாலியின் ஸம்பந்தத்தாலே பல பாபிகளும் பேறு பெறுவர்களென்னும் சாஸ்த்ரார்த்தம் வெளியாம்: அதாவது-தான் ஒருவன் நின்நாமம் கற்க, அந்த ராஜகுல மாஹாத்மியத்தால் என்னைச் சேர்ந்தவர்களும் நமன்றமர் தலைகள் மீது அடியிடும்படியானமை பாரீர் என்கை. வாலியின் பெயர் செவிப்பட்ட வளவில்தானே அஞ்சிச் சுரமடைத்துகிடந்த ஸுக்ரீவ மஹாராஜர் இராம பிரானை அண்டைகொண்டபலத்தாலே கிஷ்கிந்தாத்வாரத்திலே சென்று அறைகூவினாற்போல இவரும் கீழெல்லாம் நமன்தமர்க்கு அஞ்சிக்கிடந்து இன்று திருநாமத்தை அண்டைகொண்ட பலத்தாலே அவர்கள் தலைகளிலே ஸபரிகராராய் அடியிட்டுத் துவைக்கிறார். (க)

873. பச்சைமா மலைபோல்மேனி பவளவாய் கமலச்செங்கண் *
அச்சுதாவமரரேறே ஆயர்தம் கொழுந்தேயென்னும் *
இச்சுவை தவிரயான்போய் இந்திர லோகமாளும் *
அச்சுவை பெறினும்வேண்டேன் அரங்கமா நகருளானே. (உ)

அரங்கமா நகருளானே!—;

பச்சை மா மலை போல் மேனி	பசுமை நிறமுள்ள பெரிய மலை போன்ற திருமேனியையும்	என்னும்	என்று (எனது) வாயினால் சொல்லுவதனால் (எனக்கு) உண்டாகின்ற
பவளம் வாய்	பவளம் போன்ற சிவந்த திரு வாயையும்	இச் சுவை	இந்த அநுபவருசியை
செம் கமலம் கண்	செந்தாமரை மலர் போன்ற திருக்கண்களையுமுடைய	தவிர	விட்டுவிடும்படி
அச்சுதா	அச்சுதனே!	யான்போய்	யான் (இவ்வுலகத்தினின்றும் நீங்கிப் பரமபதத்திற்குச்) சென்று
அமரர் ஏறே	நித்யஸூரிகளுக்குத் தலை வனே!	இந்திர லோகம் ஆளும்	(அந்தப்) பரமபதத்தை ஆளு கின்ற
ஆயர்தம் கொழுந்தே	இடையர் குலத்தில் தோன்றிய இளங்குமரனே,	அச் சுவை	அந்த அநுபவருசியை
		பெறினும்	அடைவதாயிருந்தாலும்
		வேண்டேன்	(அதனை) விரும்பமாட்டேன்.

இப்படி திருநாமங் கற்ற ஆழ்வாரை நோக்கிப் பெரியபெருமாள் "ஆழ்வீர்! நம் பேர் சொன்னவர்களுக்கு நாம் கொடுப்பதொரு நாடு உண்டு; அத்தைத் தருகிறோம், கொள்ளும்" என்ன; இவ்வுலகத்திலிருந்தபடியே திருநாமத்தைச் சொல்லி அதனால் பெறக்கூடிய இனிமைக்கு பரமபதத்திற்போய் அநுபவிக்கின்ற அந்த அநுபவத்தினால் தோன்றும் இனிமையும் ஈடாகாது; அது எனக்கு வேண்டா என்கிறார். "ஸ்நேஹோ மே பரமோ ராஜந் த்வயி நித்யம் ப்ரதிஷ்டிதः— பக்திச்ச நியதா வீர பாவோ நாம்யத்ர கச்சதி." என்ற திருவடி வார்த்தையை நினைப்பது.

பசுமை நீலம் கருமை என்ற நிறங்களை அபேதமாகக் கூறுவது கவிமரபதனால் எம்பெருமானுடைய காளமேகத் திருவுருவத்திற்குப் பச்சைமாமலையை உவமை கூறினார். ஸாதாரண மலையானது எம்பெருமானுடைய துளக்கலாகா நிலைக்கும் வளர்த்திக்கும் ஒப்பாகுமேயன்றி, காணப்புக்கவர்களின் கண்ணையும் நெஞ்சையும் குளிர்வித்து அவர்களுடைய ஸம்ஸார தாபங்களை யெல்லாம் போக்குந்தன்மையும் எப்போதும் தியானஞ்செய்தற்கு உரியதாயிருத்தலும் பெருங்

கருணைக்கு இருப்பிடமாயிருத்தலும் முதலிய குணவிசேஷங்களில் ஒப்பாகமாட்டாமையால் 'பச்சைமா' என்ற அடைமொழி மலைக்குக் கொடுக்கப்பட்டது.

'அச்யுதன்' என்னும் திருநாமம்-தான் என்றும் நழுவாதவன் என்றும், (தன் அடிபணிந் தோரை) நழுவவிடாதவன் என்றும் பொருள்படும்.

என்னுமிச்சுவை என்றதனால், எம்பெருமானது குணங்களை அநுபவிக்க வேண்டியதில்லை; அவனுடைய திருநாமங்களைக் கூறுதல் மாத்திரமே சுவை தருதற்குப் போதுமென்பது பெறப்படும்.

யான்—திருநாமஞ் சொல்லுகைக்குப் பாங்கான நாவையுடைய நான் என்றபடி. வேறொரு தேசத்தேறப்போய் அநுபவிக்குமளவும் விளம்பத்தைப் பொறுக்கமாட்டாத மிகுந்த அபிநிவேச முடைய நான் என்றுமாம். போய் என்பதனால் போவதிலுள்ள அருமைப்பாட்டையும் இப் போது பயன் எளிதிற் கைப்பட்டிருத்தலையும் குறிப்பித்தனர். "ஏரார் மூயல்விட்டுக் காக்கைப் பின் போவதே."

இந்திரன் முதலிய சொற்களெல்லாம் முக்கியவ்ருத்தியாகப் பரமாத்மாவையே குறிக்கு மென்பதும் மற்றைத் தேவர்களைக் குறிப்பது இலக்கணையாலென்பதும் வேதாந்திகளின் கொள் கையாதலால் 'இந்திரலோக' மென்பது ஸ்வர்க்கலோகத்தைக் குறியாமல் எம்பெருமானுக்கே உரிய பரமபதத்தைக் குறித்தது.

"இந்திரலோகமாளுமச்சுவை இனிதன்று" என்னுமல், "அச்சுவைபெறினும் வேண் டேன்" என்றது-தாம் பரமபதானுபவத்தைப் பழித்தவர்காமல் திருநாமஸங்கீர்த்தனத்தில் தமக் குள்ள ஆதராதிசயத்தை விளக்குதற் பொருட்டாம். பரமபதானுப மென்கிற பதார்த்தமே கிடையாதென்றும், 'சாஸ்த்ர மரியாதைக்காக அது உண்டென்று ஒருகால் இசைந்தாலும் அது சுவையற்றதாமென்றும் உபந்யஸிக்கிற ஆழ்வாரொருவர் உளரிறே; திருமங்கையாழ்வார் திருமடல்களை நோக்குக.

"அரங்கமாநகருளானே! அச்சுவை பெறினும் வேண்டேன்" என்றது பரமபதத்திலிருக் கிறதைவிட்டு இவ்வழகையும் சீலத்தையும் இங்குள்ளார்க்கு முற்றூட்டாக அநுபவிக்கக் கொடுக்கவந்து கிடக்கிற இது போதாதோ? தாழ்ந்தார்க்கு முகங்கொடுக்கிற நீர்மையை அநுபவிக்கைக்கு அங்குள்ளாரும் இங்கே வராநிற்க, என்னை அங்கே போகவிடப்பார்ப்பதென்? என்ற கருத்துத்தோன்றும். (உ)

874. வேதநூல் பிராயம்நூறு மனிசர்தாம் புகுவரேலும் *
பாதியு முறங்கிப்போகும் நின்றவிப் பதினோராண்டு *
பேதைபாலக னதாகும் பிணிபசி மூப்புத்துன்பம் *
ஆதலால் பிறவிவேண்டேன் அரங்கமா நகருளானே. (கூ)

அரங்கமாநகருளானே!—;

மனிசர் தாம்	மநுஷ்யர்கள்	பாதியும்	அந்த சதாயுஸ்ஸில் பாதியான ஐம்பது வருஷமும்
வேதம் நூல்	வேதசாஸ்த்ரத்திற்படியே	உறங்கி போகும்	உறக்கத்தாலே கழியும்;
நூறு பிராயம் புகுவரேலும்	நூறுபிராயம் வாழ்ந்திருப்பர்களேயாஞலும்	நின்ற இப்பதினோ யாண்டு	மிகுந்த ஐம்பது வருஷம்

பேதை	சிசுவாயிருக்கும் அவஸ்தையாயும்	மூப்பு	கிழத்தனமாயும்
பாலகன்	'சிறுபயல்' என்னும்படியான அவஸ்தையாயும்	துன்பம்	மற்றும் பல துன்பங்களாகவும் கழியும்;
அது ஆகும்	நெஞ்சால் நினைக்கவும் தகாத யௌவநாவஸ்தையாயும்	ஆதலால்	இப்படி ஆயுஸ் முழுவதும் அகர்த்த பரம்பரையாய்க் கழிகிறபடியால்
பிணி	வியாதிமயமாயும்		
பசி	ஐந்து இந்திரியங்கட்கும் ஐந்து விஷயங்களிலுமுண்டான ஆசையைத் தொலைக்கும் காலமாயும்	பிறவி	ஜன்மத்தை
		வேண்டேன்	விரும்புகிறேனில்லை.

உலகத்தில் மானிடப்பிறவி யென்பது ஜன்மாந்தர ஸஹஸ்ரநற்றவங்களாலே பெறக்கூடியது; அதனை வருந்திப்பெற்றாலும், கர்ப்பத்திலேயும், பிறந்தவுடனும் நாலுநாள் கழித்தும் சில மாதங்கள் கழித்தும் சில வருடங்கள் கழித்தும் இறக்கக்கூடியவர்கள் பெரும்பான்மையரே யன்றி, வேதசாஸ்த்ரத்தில் "ஶதாயுர்வை புருஷ:" [மனிதன் நூறு பிராயம் வாழ்பவன்] என்று கூறியுள்ளபடி தீர்க்காயுஸ்ஸாக வாழக்கூடியவர் மிகச் சிறுபான்மையரே; விதிவசத்தால் சிலர் நூறு பிராயம் புக்கு வாழப்பெற்றாலும் அவரது வாழ்நாள் கழியும் வகையை ஆராய்ந்தால் ஒரு நொடிப்பொழுதாவது நற்போதாகக் கழிய வழியில்லை. ஸூர்யன் அஸ்தமித்து மீண்டும் உதிக்குமளவும் உறங்குவது ஒரு நியமமாக வந்துவிட்டபடியால் அஹோராத்ரமாகிய ஒரு தினத்துக்கு உள்ள அறுபது நாழிகையில் மூப்பது நாழிகை உறக்கத்தில் கழிகிற கணக்கில் பாதி ஆயுஸ்ஸாகிய ஐம்பதுவருஷம் உறக்கத்தால் கழிந்ததாகிறது; மற்ற பாதிவாழ்நாளில்-தன்னுடைய ஹிதாஹிதம் தாயின் அதீனமாயிருக்கும் சிசுத்வாவஸ்தையாய்ச் சிலகாலமும், எத்தனை தீம்புகள் செய்தாலும் சிறுவொண்ணாதபடி செல்வப்பிள்ளை பருவமாய்ச் சிலகாலமும், பிறகு யௌவநம் வந்து புகுந்து விஷயாந்தரங்களிலே மண்டித்திரியும் பருவமாய்ச் சிலகாலமும், இங்ஙனே இந்திரியச் சிறையிலே அகப்பட்டுத் தடுமாறுநிற்க இடிவிழுந்தாற்போலே வந்து புகுகிற கிழத்தனமாய்ச் சிலகாலமும், " அத்யுத்கடை: புண்யபாபைரிஹைவ பலமச்நுதே" [வரம்புகடந்த புண்யபாபங்களின் பலனை இப்பிறவியிலேயே அநுபவிக்கிறான்] என்றபடி - யௌவநத்திற் செய்த எல்லை கடந்த குறும்புகட்குப் பலனை எய்தும் பிணிகளால் வருந்துவதாய்ச் சிலகாலமும், பசியினால் ஒன்றும் தோன்றுதபடி இடர்படுவதாய்ச் சிலகாலமும், ஒருபக்கத்தில் பிள்ளை செத்தான் என்றும் கேட்டு அழுவதும், மற்றொருபக்கத்தில் மனைவி செத்தாள் என்று கேட்டு அழுவதுமாய் இப்படி ஸம்ஸாரத்துன்பங்களில் ஆழ்ந்து செல்லும் நாளாய்ச் சிலகாலமும் கழிவதால் இத்துன்பங்களை அநுபவிப்பதற்கு இன்னும் சிறிது ஆயுஸ் கடன் வாங்கிக் கொள்ளவேண்டியதாமேயன்றி உள்ள வாழ்நாளில் ஆத்மாவைப்பற்றிச் சிறிதாகிலுஞ்சிந்திக்கப் பொழுது கிடைப்பரிது; ஆதலால் இப் பிறவி எனக்கு வேண்டா என்கிறார்.

கீழ்ப்பாட்டில் 'பரமபதம் எனக்கு வேண்டா' என்ற ஆழ்வாரை நோக்கி எம்பெருமான் " ஆழ்வீர்! உமக்குப் பரமபதம் வேண்டாவாகில் கோயிலோடே தேசுள்ளதாண்டியான ஸம்ஸாரத்திலேயிருந்து திருநாமத்தை அநுபவியும்" என்றருளிச்செய்ய; " அது தன்னையும் கிருபித்த வாறே திருநாமம் சொல்லுகைக்கு அவகாசம் அரிதாம்படி துக்கபரம்பரையேயா யிருந்தது; ஆகையாலே எனக்கு ஸம்ஸாரத்திலிருப்பும் வேண்டா" என்று ஆழ்வார்கூற 'திருநாமம் சொல்லுகைக்கு அவகாசமில்லாதபடி ஸம்ஸாரத்துக்கு நீர் சொல்லுகிற குறை என்?' என்று எம்பெருமான் கேட்டருள, ஸம்ஸாரத்தினுடைய தோஷங்களை இப்பாட்டால் உபபாதிக்கிறாரென்க.

"இத்தால், பழகிப்போருகிற ஸம்ஸார யாத்ரையிலும் ஜுகுப்ஸை பிறக்கும்படி திரு நாமம் இனிதென்று அம்முகத்தாலே திருநாமத்தினுடைய போக்யதாப்ரகர்ஷத்தைச் சொல்லு கிறது" என்பர் பெரியவாச்சான் பிள்ளை.

வேதநூல்—வேதமென்கிற சாஸ்த்ரம்; அன்றியே, வேதமும் மற்றுமுள்ள சாஸ்த்ரங்களு மென்றுமாம். உறங்கி - உறங்க என்றவாறு; எச்சத்திரிபு. பதினேயாண்டு - பத்தாலே பெருக் கப்பட்ட ஐயாண்டு – ஐம்பதுவருஷமென்றபடி. "நின்றதிற் பதினேயாண்டு" என்றும் சிலர் ஓதுவர்.

பேதை பாலகன் என்ற அடைவின்படியே யௌவநபரூவத்தையும் வாய்விட்டுச் சொல் லாதொழிந்தது - அப்பரூவத்தின் மிக்க கொடுமையை விளக்குதற்காம். துஷ்டன் பெயரை நாக்கொண்டு கூறக் கூசுமவர் 'அந்தப்பயல்' என்றே சொல்லுமாபோலே. அப்பரூவத்தின் கொடுமையை இவ்வாழ்வார் நன்கு கைகண்டவாதலால் அதனை நினைத்தவாறே அஞ்சி நடுங்கி அதாகும் என்கிறார். 'பேதைத்தனமே நன்று' என்னும்படியன்றே இப்பரூவத்தின் அறிவு கேடு இருப்பது.

இப்படி "பிறவி வேண்டேன்" என்ற ஆழ்வாரை நோக்கி எம்பெருமான் "ஆழ்வீர்! 'அச்சுவை பெறினும் வேண்டேன்' என்று பரமபதமும் வேண்டா என்கிறீர்; 'பிறவி வேண் டேன்' என்று ஸம்ஸாரமும் வேண்டா என்கிறீர்; நம் கையிலுள்ளது இவ்விரண்டு விபூதியே யன்றே? இரண்டுக்கும் குறை கூறு நின்றீர்; 'நின்றால் ஆணை, இருந்தால் ஆணை, கிடந்தால் ஆணை' என்பாரைப் போலே நீர்படுத்துகிறபாடு என்!" என்ன அரங்கமாநகருளானே! என்கிறார்; கீழ்க்கூறிய இரண்டு விபூதிக்கும் மேற்பட்டு மூன்றுவது விபூதி யென்னும்படியான கோயிலிலே எனக்கு ஓர் இருப்பு அமைக்கலாகாதோ? என்பது உட்கருத்து.

கோயிலில் குடிவாழ்ந்தால் பேதைப் பரூவத்திலே அந்தப்புராணத்துக் கென்றுகிலும் ஸந்நி திக்குள் கொண்டு புகுவர்கள்; பால்யாவஸ்தையில் விளையாடும்போதும் பெருமாள் புறப்பாடு அருளிப்பாடு முதலியவற்றை அநுகரிக்கும்படியாயிருக்கும்; யௌவநம் வந்தால், தான் விரும் பின விஷயாந்தரங்களைக் காணவேண்டியாகிலும் ஸந்நிதிக்குள்ளே புகலாயிருக்கும்; மூப்பு டைந்து உள்ளே புகமாட்டாத நாளைக்கு நம்பெருமாள் இவன் வாசலிலே வந்து நிற்கலாயிருக் கும்; ஆக இப்படிகளாலே கனவிலும் காண்பது பெருமாள் வடிவழகேயாயிருக்குமாகையாலே கோயில் வாஸம் அடிக்கழஞ்சு பெற்றுச்செல்லா நிற்குமென்றருளிச்செய்வர். (ஈ)

874. மோய்த்தவல் வினையுள்நின்று மூன்றெழுத் துடையபேரால்
கத்திர பந்துமன்றே பராங்கதி கண்டுகோண்டான் *
இத்தனை யடியரானார்க்கு இரங்கும் நம்மரங்கனைய *
பித்தனைப் பெற்றுமந்தோ பிறவியுள் பிணங்குமாறே. (ச)

மோய்த்த வல் வினையுள் நின்று மூன்று எழுத்து உடைய பேரால்	அடர்ந்துகிடக்கிற கொடிய பாபராசியினுள்ளே நின்று கோவிந்த நாமத்தாலே
கத்திரபந்தும் அன்றே பராங்கதி கண்டு கொண்டான்	கூத்தர் பந்துவன்றே சிறந்த பதவியை கண்டு அநுபவிக்கப் பெற்றான்;

இத்தனை அடியர் ஆனார்க்கு	இவ்வளவு ஆதரவுள்ளமுடைய வர்கட்கும்	பெற்றும்	சேஷியாகப் பெற்றுவைத்தும்
இரங்கும்	அருள்புரிகின்ற	பிறவியுள்	ஸம்ஸாரத்திலகப்பட்டு
நம் அரங்கன் ஆய பித்தனை	நம் அழகியமணவாளனுகிற ஆச்சரித வியாமுக்தனை	பிணங்கும் ஆறே	வருந்துகிற விதம் என்னே !
		அந்தோ	ஐயோ !

இப்பாட்டு முதல், பதினைன்காம் பாட்டளவும் பகவத் விஷயத்திலே தம்மைப்போல் ஆழங்காற்படாமல் உடனுக்கே கரைந்து நைந்து நிரியும் ஸம்ஸாரிகளின் இழவைக்கண்டு பொறுக்கமாட்டாமல் தளர்ந்து ஒரு பக்கத்தில் ஆச்சரியப்பட்டும், ஒரு பக்கத்தில் வருத்தப்பட்டும், மற்றொரு பக்கத்தில் வெறுப்புற்றும் இன்னொரு பக்கத்தில் நிந்தித்துக்கொண்டும் பேசுகிறார்.

பகவதநுபவத்திலே ஊன்றி உகப்பேயரய்ச் செல்லுமிவர் ஸம்ஸாரிப் பாவிகளைப்பற்றிக் கரைந்து வருந்துவானேன்? என்னில்; இப்பாவிகள் அநியாயமாய் வருத்த விஷயத்தை இழந்து படுகின்றனரே என்னும் துக்கம் பொறுக்கமாட்டாமையாலும், பகவத்விஷயம் பலர் கூடித் திரண்டு அநுபவிக்கவேண்டிய இனிய விஷயமாதலாலும், "ஏக: ஸ்வாது ந புஞ்ஜீத" [இன்கனி தனி யருந்தான்] என்றபடி இனிய விஷயத்தைத் தனியராய் அநுபவித்து ஸாத்மிப்பித்துக்கொள்ள வல்ல தன்மையரல்லாதலாலும் துணை கூட்டிக்கொள்ளத் தேடுகிறரென்க.

'கொடும்பாவிகளான எங்களுக்கு எம்பிரான் திருநாமங்களை உச்சரிப்பதற்கு யோக்யதை உண்டோ? தேவஸ்தானமான புரோடாஸத்திலே நாய் வாய்வைக்கக்கடவதோ?' என்று சில ஸம்ஸாரிகள் அயோக்யதாநுஸந்தானம்பண்ணி அகலப்பார்க்க, அவர்களை நோக்கி, 'ஆதர்காள்! நன்கு சொன்னீர்கள்; க்ஷத்ரபந்து என்பவனிற்காட்டிலும் வேறொரு கொடியபாபிஷ்டன் இவ்வுலகில் உளனென்று நீங்கள் கேட்டதுண்டோ! அவனுடைய கொடுமையை நீங்கள் புராணத்திலே விரிவாகக்கேட்டிருக்கலாமே; அப்படிப்பட்ட பாவியுமன்றே கோவிந்த நாமத்தை உச்சரித்து நற்கதி நண்ணினன். அன்றியும், பொய்யான அன்பை அபிநயித்துக் காட்டுவார் பக்கலிலும் பிச்சேறி மேல்விழுந்து பற்றுவானுயிருந்தான் எம்பெருமான்; இவற்றையெல்லாம் நீங்கள் அறிந்துவைத்தும் படுகுழியில் வீழ்ந்து படுவதே! இஃது என்ன கொடுமை!' என வியக்கிறார்.

மொய்த்த வல்வினை—பாபராசிகள் கோடிக்கணக்காகச் சேர்ந்து 'நான் முன்னே நான் முன்னே' என்று மேல்விழுந்து மொய்த்துக்கொண்டு கிடக்கிறபடி; தேன் கூட்டை மொய்த்துக் கொள்ளுமாபோலே; "நெய்க்குடத்தைப் பற்றி ஏறுமெறும்புகள்போல் நிரந்து, எங்குங் கைக்கொண்டு நிற்கின்ற நோய்காள்" என்ற பெரியாழ்வார் திருமொழியையும் நோக்குக. மொய்த்த வல்வினையுள் நின்று—மஹாபாபிஷ்டனுயிருந்துவைத்து என்றபடி.

மூன்றெழுத்துடைய பேரால்—இன்ன திருநாமமென்னுதே ரஹஸ்யமாய்ச் சொல்லிற்று—ருஷி பிறந்த பின்பு 'அந்தத் திருநாமம் என்?' என்று விரும்பிக்கேட்டால் அப்போதைக்கு உபதேசிப்போமென்றும். "மூன்றெழுத்தனை மூன்றெழுத்தனால்" என்று பெரியாழ்வார் மறைத்தாற்போல.

கத்ரபந்து—பிராமணர்களுள் அதமனை 'ப்ரஹ்மபந்து' என்கிறாப்போலே, க்ஷத்ரியர்களுள் அதமனை க்ஷத்ரபந்து என்கிறது. "நம்முதலிகள் கோஷ்டியில் 'நாலூரான்' என்றாற்போலே ரிஷிகள் கோஷ்டியில் 'க்ஷத்ரபந்து' என்றுல் செவிபுதைக்கும்படியாயாய்த்திருப்பது" என்பர் பெரிய வாச்சான் பிள்ளை. நாலூரானுடைய கொடுமை கூரத்தாழ்வான் சரிதத்தில் காணத்தகும்.

பராங்கதி—பரகதி என்றவாறு; அதாவது பரமபதப்ராப்தி. கோவிந்தநாம ஸங்கீர்த்தநத்தால் பாபராசியில் நின்றும் விடுபட்டவளவேயன்றி, ஐச்வரியம் கைவல்யம் முதலிய க்ஷுத்ர பலங்களைப் பெற்றொழியாதவளவேயுமன்றி நித்ய ஸூரிகளுடைய நித்யாநுபவத்தையன்றே பெற்றது.

கத்திரபந்துமன்றே—க்ஷத்ரபந்துவின் உபாக்கியானம் ஸ்ரீ விஷ்ணுதர்மத்தில் தொண்ணூற்றேழாவது அத்யாயத்தில் பரக்கக்கூறப்பட்டுள்ளது; அதன் சுருக்கம் வருமாறு:—

மிகக் கொடிய நடத்தைகளையுடையனாய், பல்வகைப் பாவங்களும் உருவெடுத்து வந்தனவென்னும்படி மஹாபாபியான க்ஷத்ரபந்து என்பானொருவன் இருந்தான்; அவன் தனது கொடுமையினால் தாய் தந்தை மக்கள் மித்திரர் அனைவராலும் கைவிடப்பட்டவனாய், காட்டிலே திரிந்து கொண்டு ஜீவஹிம்ஸையினால் வயிறுவளர்த்துவந்தான். இங்ஙனம் நெடுநாள் சென்றவளவில், ஒருநாள் ஒரு மாமுனிவர் கொடிய வெய்யில் வேளையில் வழிபோகா நிற்கையில் வழிதப்பி, இப் பாவி திரியுங் கானகத்திலே புகுந்து இவனது கண்ணுக்கு இலக்காயினர். அவரைக்கண்டதும் அவருடைய பரிதாபத்தைக் கண்ட இவனுக்குத் தன்னையுமறியாமல் அம்முனிவர் விஷயத்திற் காருண்யமுண்டாகி, 'மாமுனிவரே! இஃது உம்முடைய வழியன்றே; வழிதப்பிவந்தீர் போலும்; உற்றுநோக்கிப்பாரும்' என்று முனிவரை நோக்கிக்கூற, அவரும் உணர்ந்து, பொறுக்கமுடியாத தாஹத்தையுடையராய் ஒரு தடாகத்தைத் தேடிச்செல்லுகையில் அருகே ஒரு அழகிய பொய்கையைக்கண்டு, தாபமிகுதியால் சடக்கென அக்குளத்திற்போய் விழுந்திட்டார். அப்போது அருகிருந்த க்ஷத்ரபந்து தனது கையிலிருந்த வில்லையும் அம்புகளையும் எறிந்துவிட்டு, அம்முனிவரைப் பிடித்துத்தூக்கித் தேற்றித் தாமரைக்கிழங்குகளை உணவாகக்கொடுத்து விடாயைப்போக்கி மகிழ்வித்தான். பிறகு அவர் கரைமீதேறி ஒரு மரத்தடியில் உட்கார, அவரது கால்களின் நோவுதீர நன்றாகப்பிடித்து உபசாரங்களைச்செய்த க்ஷத்ரபந்துவை நோக்கி அம்முனிவர், 'பேருபகாரம்புரிந்த பெரியோனே! யாருடைய சிறந்த குலத்திற் பிறந்தவன் நீ? உனது வரலாறுகளைக் கேட்க விரும்புகிறேன்' என்ன; அதுகேட்ட அவனும் 'முனிவர் கோமானே! நான் ஸூர்யவம்ஸத்தில் விஸ்வரதன் என்பவற்கு மகனுய்த்தோன்றியவன்' என்று தொடங்கித் தனது கொடுமைகளையெல்லாம் ஒன்றும் ஒளிக்காமல் உள்ளபடி சொல்ல; அவற்றைச்செவியுற்ற முனிவர் இவனை நல்வழியிற் செலுத்தவேணுமென்ற கருத்துக்கொண்டு 'அப்பா! இனி இத்தீய குணங்களையெல்லாம் விட்டிட்டு ஜீவகாருண்யத்தையே பரமதர்மமாகக் கடைப்பிடிக்க உன்னாலாகாதோ?' என்று கேட்க; அதற்கு அவன் 'காமம், குரோதம், லோபம், மோஹம், மதம், மாத்ஸர்யம் என்னும் தீக்குணங்கட்குப் பிறப்பிடமான நான் அவற்றை விட்டுப்பிரிந்து ஒரு க்ஷணகாலமும் இருக்கில்லேன்; என்மனம் என்வசமன்று; இது தவிர வேறு நியமனமுண்டாகில் சிரமேற் கொள்ளக் காத்திருக்கிறேன்' என்ன; எப்படியாவது இவனை வழிபடுத்த வேணுமென்னும் பேரவாக்கொண்ட முனிவர் 'இது மாட்டாயாகில், எப்போதும் கோவிந்த! கோவிந்த! என்று சொல்லிக்கொண்டிருக்கவாவது உன்னால் முடியுமோ? இருமினாலும் தும்மினாலும் கோவிந்த! என்றே சொல்லிக்கொண்டிருப்பாயாகில் உனக்கு மிக்க நன்மையுண்டாம்' என்று சொல்லிவிட்டுப்போயினர். அது முதலாக க்ஷத்ரபந்து கோவிந்த நாமத்தை இடைவிடாது ஸங்கீர்த்தநம் பண்ணிக்கொண்டிருந்தான். சிலகாலங் கழித்து அவன் மரணமடைந்து அந்தணர் குலத்தில் பூர்வஜந்ம ஸ்மரணத்துடன் பிறந்தான். உடனே அவனுக்கு இக்கொடிய ஸம்ஸாரத்தில் மிக்க நிர்வேதம் உண்டாயிற்று. இப்படிப்பட்ட உத்தமோத்தமமான ப்ராஹ்மண குலத்

தில் எனக்குப்பிறவி நேர்ந்ததும் பூர்வஜன்ம ஸ்மரணமுண்டானதும் நான் முன்பு பண்ணின. கோவிந்தநாம ஸங்கீர்த்தநத்தின் பயனன்றே? ஆகவே எனக்கு மேலான நன்மையை விலைத்த அந்த ஸ்ரீ கோவிந்தனையே நான் ஆராதனஞ்செய்து, * தீண்டாவழும்புஞ் செந்நீருஞ் சீயநரம்புஞ் செறிதசையும் வேண்டா நாற்றமிகு முடலிலிட்டு * மாயவன் சேற்றள்ளற் பொய்நிலத்தைக் கடந்து நலமந்தமில்லாதோர் நாடாகிய பரமபதத்தை அடையக்கடவேன் என்பதாகத் துணிந்து அங்ஙனமே செய்து பரமபாகவதனாகி வீடுபெற்றனன் என்பதாம்.

இத்தனையடியாரானுர்க்கு—க்ஷத்ரபந்துவைப்போல ஸ்வல்பம் ஆநுகூல்ய முடையவர்கட்கு என்றும்; 'ஈஸ்வரன் மோக்ஷி, நீ மோக்ஷன்' என்று ஒருவர் சொன்னால் 'ஆ! அப்படியா?' என்று மார்புதட்டி மறுப்பதற்கு முன்வராமாட்டாத அத்வேஷ முடையார்க்கும் என்றும் இரண்டுவகை யாகப் பொருள் கூறுப.

பித்தன்—இது செய்யத்தகும், இது செய்யத்தகாது என்ற விவேகமற்றவன் பேயனெனப் படுவான்; எம்பெருமானும் அடியார் திறத்திலுள்ள வ்யாமோஹரூபாநிசயத்தினால் பரிமாறும் முறையில் அடைவுகெட்டு முறைமாறுபவனுதலால் பித்தனெனப்பட்டது. பகவத் விஷயத்திலே உன்மத்தகமாக ஆழுமவர்களைப் பேயர் என்னுமாபோலே, பாகவத விஷயத்திலே உன்மத்தகமாகப் பரிமாறுபவனைப் பித்தனென்னக் குறையில்லையே. (ச)

876. பெண்டிரால் சுகங்களுய்ப்பான் பெரியதோரிடும்பைபூண்டு *
உண்டிராக் கிடக்கும்போதும் உடலுக்கே கரைந்துகைந்து *
தண்டுழாய் மாலைமார்பன் தமர்களாய்ப் பாடியாடி *
தொண்டுபூண்டமுதமுண்ணுத் தொழும்பர்சோறுகக்குமாறே. (சு)

பெண்டிரால்	மனைவியால்
சுகங்கள்	ஸகல ஸுகங்களையும்
உய்ப்பான்	அநுபவிப்பதாகக்கருதி
பெரியது ஓர் இடும்பை	மிகப் பெரிதான தயரங்களை
பூண்டு	மேற்கொண்டு
இரா	இராப்பொழுதிலே
உண்டு	புஜித்து
கிடக்கும் போதும்	படுக்கையிலே சாயும் போதும்
உடலுக்கே கரைந்து கைந்து	சரீரத்திற்காகவே கவலைப்பட்டு செஞ்சு உளர்ப்பெற்று,
தண் துழாய் மாலை மார்பன் தமர்கள் ஆய்	குளிர்ந்த திருத்துழாய்மாலையைத் திருமார்பிலணிந்த பெருமானது அடியாராய்
பாடி	(அவன் குணங்களை வாயாரப்) பாடி
ஆடி	(பரவசராய்க்) கூத்தாடி
தொண்டு பூண்டு	(இவ்வகைகளாலே) சேஷவ்ருத்தியை மேற்கொண்டு
அமுதம் உண்ணு தொழும்பர்	(பகவத்குணானுபவமாகிற) அமுதத்தை பழிக்கப்பெறுத கீசர்
சோறு உகக்கும் ஆறே	சோற்றை விரும்பும் வகை என்னே!

• பெண்களோடு அணைந்து சுகத்தை அநுபவிக்க விரும்புதல் தீயோடு அணைந்து விடாய்தீர நினைப்பதையும், ஆடுகிற பாம்பின் நிழலிலே ஒதுங்கி ஸுகம் பெற நினைப்பதையு மொக்குமென் பார்—பெண்டிரால் சுகங்களுய்ப்பான் பெரியதோரிடும்பைபூண்டு என்கிறார். ஐயோ! துக்கத்திற்கு ஸாதநமானவற்றையே சுகத்திற்கு ஸாதனமாக நினைப்பதே! இப்படியுமொரு மயக்கமுண்டோ? பிழைக்கவேணுமென்று நினைப்பாரும் விஷத்தையுண்பரோ?

பெரியதோரிடும்பைபூண்டு—ஸுக ஸாதநமாக நினைத்துத் தாம் கொண்ட பெண்டிரை உகப்பிப்பதற்காக மருத்துயாதநம் வாங்கவேணும், பரஹிம்ஸை பண்ணவேணும், பொற்களவு

செய்யவேணும், ராஜ தண்டனைகளை அநுபவிக்க வேணும், ஐயோ! இப்படிகளாலே பெரும் பெருத்த துக்கங்களை எறிட்டுக்கொள்ளுகிறார்களே! முதலிலே பெண்டிரைக் கொள்வதற்கு ஸாதநமாகச் செய்யும் செயல்களும் துக்கரூபம்; கொண்ட பெண்டிரைப் பாதுகாப்பதற்காகச் செய்யும் செயல்களும் துக்கரூபம்; இவ்வளவேயுமன்றி அப்பெண்டிரால் இவன் அடைவதும் பூர்ணதுக்கமே. "ஈதெபோமின் ஈங்கிரேன்மின் இருமியிளைத்தீர், உள்ளங்கூசியிட்டீர்" என்று கதவடைத்துக் காற்கடைக் கொள்ளுவர்களே. "பெரியதோரிடும்பை எய்தி" என்னுமல் பூண்டு என்ற சொல் நயத்தால் கழுத்திலே மாட்டிக்கொண்ட வாயோடுபோலே பிறகு தன்னையும் கழற்றிக்கொள்ள முடியாமை விளங்கும்.

உண்டிரா—தாம் கொண்ட பெண்டிரை உகப்பிப்பதற்காகப் பகலெல்லாம் சூதனுய்க் கள்வனுகித் தூர்த்தரோடிசைந்து போதுபோக்கவேண்டியிருப்பதால் ஒருபிடி சோறு உண்பதற்கும் அவகாசம் அரிதாய்விடும்; பின்னே இரவிலே யாய்த்து உண்பதற்குச் சிறிது அவகாசம் பெறுவது. பகலெல்லாம் அலைந்து ஒரு பிடி சோறு உண்டவாறே உடம்பு பரவசமாய் விழுந்து விடுமாதலால் "கிடக்கும்போதும்" என்கிறார்.

அப்போதாகிலும் ஆத்மாவைப்பற்றிச் சிறிது கரையக்கூடுமோ என்று பார்த்தால் இல்லை; [உடலுக்கே கரைந்து நைந்து] பொழுதுவிடிந்தவாறே எங்கே சூதாடப்போகலாம், எங்கே களவாடப்போகலாம் என்றுற்போலே மீண்டும் தேஹயாத்ரையைப்பற்றின சிந்தையே யாய்த்து நிகழ்வது.

கரைந்து நைந்து—பகவத் விஷயத்திலே ஆழ்ந்தவர்கள் "நினைதொறும் சொல்லுந்தொறும் நெஞ்சிடிந்துகும்" என்றபடி படும்பாடுகளை யெல்லாம் அந்தோ! இவன் விஷயாந்தரங்களிற் படுவதே! என்று வயிறெரிகிறார்.

எவ்வளவோ பாவங்கள்செய்து பணங்களைத்திரட்டிக் கொணர்ந்து கொடுத்து ஆராதித்தாலும் முகஞ்சிதறப் புடைக்கிற மாதர்களின் முன்னுனையையே பின்பற்றி ஓடுகின்றனரேயன்றி ஸ்ரீலபமாய் ஸ்வரூபாநுரூபமான விஷயத்தைச் சிந்தித்து மகிழ்வாரில்லையே என்கிறார்—[தண்டு ழாய் மாலை இத்யாதி.] ('எனக்கு ஆடு பலி கொடுக்கவேண்டா; ஊன்வாட உண்ணுது உயிர் காவலிட்டு உடலிற் பிரியாப் புலனைந்தும் நொந்துவாடத் தவஞ்செய்யவேண்டா; நீயும் நானும் ஒன்று, என்று இத்தனை உறவு பண்ணிக்கொண்டு வந்தால் போதும், அவர்களை நான் விடமாட்டேன்' என்ற கருத்துத்தோன்றத் திருத்துழாய் மாலையணிந்து நிற்கிற பிரானைப் பற்றுவாரில்லையே!)

தமர்களாய்—'எம்பெருமானுடைய கோஷ்டியிற் சேர்ந்தவர்கள் நாங்கள்' என்றிவ்வளவே யன்றே அவர்கள் கூட்டவேண்டியது. இவ்வளவு ஸ்வரூபஜ்ஞாநம் வாய்ந்தவாறே பின்னை அவர்கள் வெறுமனிருக்கமுடியுமோ? பாடியாடும்படியாகும். பிறகு "உனக்கே நாமாட்செய்வோம்" என்று அத்தாணிச்சேவகத்திற்கு அணுகலாகும்; அதிலே ஸகல ரஸங்களும் காணலாகும். இவ்வளவும் பெற்று மகிழவேண்டியவர்கள் "இப்படிப்பட்ட ரஸமொன்று உண்டு" என்றும் நினையாமல் விஷயாந்தரங்களை விரும்பிப் பாழாய்ப் போவதே!

தொண்டுபூண்டு அமுதமுண்ணு—"ஹ்ருத்யதரிநாத! தவ தாஸ்யமஹாரஸஜ்ஞ:" என்று அறிவுடையார் எம்பெருமானுடைய அடிமையையே ஆராவமுதமாக அநுபவிக்கிறார்கள், எச்சில் வாயிலே அமுதமுண்டென்று மயங்கி ஓடுவாரும் சிலரே.

• தொழும்பர்—'இவனுக்குமேல் நீசனில்லை' என்னும்படி முதல் வகுப்பில் தேறினவர்; பரம நீசர். 'தொழும்பர்' என்று அடியவர்க்கும் பெயர்.

"[சோறு உகக்குமாறே.] மண்ணிற்காட்டில் சோற்றுக்கு வாசியறிந்து ஜீவிக்கிறபடி எங்ஙனே! நித்யமான ஆத்மவஸ்துவுக்கு பகவத்சேஷத்வமே தாரகமென்று அறியாதவன் அநித்யமான தேஹத்திற்குச் சோறு தாரகமென்று அறிந்து ஜீவிக்கிருனே? பித்ராதிகள் ஜீவிக்கக் காண்கிற வாஸனைகொண்டு ஜீவிக்கிருனித்தனையிறே; வாசியறியுமவனுகில் ஆத்மாவுக்கு நன்மை யெண்ணுனே? ஒன்றிலே விசேஷஜ்ஞாநமுண்டாகில் மற்றையதிலும் அறிவு உண்டாகாதோ?" என்ற வியாக்கியான ஸ்ரீ ஸூக்திகளின் போக்யதையைச் சிறிது அநுபவிக்க.

"கரைந்து நைந்து அமுதமுண்ணு" என இயையும். (நு)

877. மறஞ்சுவர் மதிளெடுத்து மறுமைக்கே வெறுமைபூண்டு *
புறஞ்சுவ ரோட்டைமாடம் புரளும்போதறியமாட்டீர் *
அறஞ்சுவ ராகிநின்ற அரங்கனுர்க் காட்செய்யாதே *
புறஞ்சுவர் கோலஞ்செய்து புள்கவ்வக் கிடக்கின்றீரே. (சு)

மறம் சுவர்	கொடுமையாகிற சுவரை
மதில் எடுத்து	மதிளாக எழுப்பியும்,
மறுமைக்கு	ஆமுஷ்மிக பலத்திற்கு
வெறுமை பூண்டு	ஏழ்மையை மேற்கொண்டும் இருக்கிற நீங்கள்
புறம் சுவர்	வெளிச்சுவராய்
ஓட்டை	அநித்யமான
மாடம்	சரீரமானது
புரளும்போது	தரையில் விழும் காலத்தை
அறியமாட்டீர்	அறியமாட்டீர்;
அறம் சுவர் ஆகிநின்ற	தர்மமே ப்ராகாரமாக நிற்கிற
அரங்கனுர்க்கு	அழகியமணவாளனுக்கு
ஆள் செய்யாதே	அடிமை செய்யாமல்
புறம் சுவர்	வெளிச்சுவரான உட்பிரை
கோலம் செய்து	அலங்கரித்து
புள் கவ்வ	பறவைகள் கவ்விக்கொள்ளும் படி
கிடக்கின்றீரே	கிடக்கின்றீர்களே.

விஷயங்கள் அற்பமென்றும் அஸ்திரமென்றும் கீழ்க்கூறிய ஆழ்வாரை நோக்கிச் சிலர் "விஷயங்களுக்கு அல்பாஸ்திரத்வம் முதலிய பலதோஷங்களுள்ளனவாயினும் அவற்றை நாங்கள் விடவேணுமென்ற நியதியில்லை; ஒரு விஷயத்தில் பூர்ணமான அனுபவத்தைப் பெறுதொழிவோமாயினும் விஷயங்கள் பல உளவாகையால் ஒன்றில் இல்லாத நன்மையை வேறொன்றிலே கூட்டிக்கொண்டு அனுபவிக்கிறோம் போம்" என்று சொல்ல, "அப்படியேயானாலும் அந்த விஷயங்களை அநுபவிக்கக்கூடிய வஸ்து ஸ்திரமாயிருக்கவேணுமே; அவ்விஷயங்களைப்போலவே போக்தாவும் அஸ்திரன்கிடீர்" என்கிறார் இப்பாட்டால்

இவன் 'தேவழியிற்சென்று அகியாயமாய்க் கெட்டுப்போகிறனே! இவனுக்கு உரிய ஹிதங்களைச் சொல்லி இவனை மீட்போம்' என்று ஸஹஜ காருண்யமாலிகளான சில மஹாநுபாவர் இதஞ்செய்வதற்குக் கிட்டவந்தால் அவர்களை அபதார்த்தமாக நினைத்துத் துச்சமாகப் பேசும் படியான கொடுமையை மறம் என்கிறது. ஹிதஞ்சொல்லவந்த விபீஷணழ்வானை "த்வாம் துஷ்க குலபாம்ஸநம்" என்றிகழ்ந்த ராவணனுடைத்த குணசாலிகளாய்த்து மறஞ்சுவர் மதிளெடுப்பார். அமாநித்வம் முதலிய ஆத்மகுணங்களைத் தனக்கு அணிகக் கொள்ளவேண்டியது போய், கொடுமையை அணிகக் கொள்ளவேண்டும்படியாய்த்தே உங்கள் பாவம்! என்கிறார்.

"பூதபவ்ய பவந்நாத: கேசவ: கேசிஸூதந: – ப்ராகாரஸ் ஸர்வவ்ருஷ்ணீநாமாபந்நாப யதோஹரி:" [பாரதம்-ஸபாபர்வம்] என்று அடியவர்க்கு மதிளாகச் சொல்லப்பட்ட எம்பெரு மானை விட்டு மறஞ்சுவரை நீங்கள் மதிளாகப் பற்றினபடி மிகவுமழகியதே!

இப்படி கொடுமையையே காப்பாகக்கொண்டால் அதனால் பலிப்பது ஆமுஷ்மிகத்திற்கு ஒரு கைம்முதலில்லாமையே யன்றே; அதனைச் சொல்லுகிறது.- மறுமைக்கே வேறுமைபூண்டு என்று. ஸரீரத்திற்குத் தாரகமாயிருப்பதைத் தேடுகிறுப்போல் ஆத்மாவுக்குத் தாரகமாயிருப்பதை யும் சிறிது தேடியிருப்பானனால் ஆமுஷ்மிக பலத்திற்கு அது ஒரு பற்றுசாகும்; அங்ஙனன்றி யொ ழிந்தமையால் இவனுடைய வியாபாரம் ஆமுஷ்மிகத்திற்கு தாரித்ரியத்தை விளைத்துவிட்டதென்க.

புறஞ்சுவர் என்கிறது-தேகத்தை. சுவராவது உள்ளே கிடக்கிற வஸ்துவைக் காக்கு மது; ஆத்மாவுக்குரிய நன்மைகளை உண்டாக்கி அதனைக் காப்பாற்றுதற்பொருட்டு எம்பெருமா னால் தரப்பட்ட (சுவரென்னும்) சரீரத்தைக்கொண்டு அக்காரியத்தைச் செய்யாமல் புறம்பே வியாபரித்தபடியால் புறஞ்சுவர் என்ன வேண்டிற்று. ஓட்டைமாடம் என்றும் இச்சரீரத்திற்கே நாமாந்தரம் போலும். ஒரு ஓட்டைவீடானது 'அப்போது விழுந்தது, இப்போது விழுந்தது' என்னும்படி அஸ்திரமாயிருக்குமாபோலே இச்சரீரமும் 'இப்போதோ அப்போதோ' என்னும் படி நச்வரமாயிருக்குமாறு காண்க.

புரளும்போது அறியமாட்டீர்—இத்தகைய சரீரம் எப்போது கீழே விழப்போகிறதென்று கேட்டால் அந்த ஸமயத்தை நீங்கள் அறிந்துசொல்ல வல்லீரல்லீர்; இன்று விழுந்தாலும் விழும்; நாளைக்கு விழுந்தாலும் விழும்; ஆகையாலே இந்த ஸரீரத்தை போக்தாவாக மாறுபட நினைத்து நீங்கள் பரக்க வியாபாரங்கள் செய்தாலும், இது நின்னின்னிலையில்தாதலால் இதை நம்பி ஒன் றுஞ் செய்யக்கூடியதாயில்லையே என்கை. அன்றியே, இச்சரீரம் புரளுங்காலத்திலே உங்களுக்கு அறிவு நடையாடாதாகையால் "ப்ராணப்ரயாணஸமயே கபவாதபித்தை: கண்டாவரோதநவி தௌ ஸ்மரணம் குதஸ் தே" [முகுந்தமாலை] என்றபடி அப்போது உங்களால் ஒன்றும் நன்மை தேடிக்கொள்ளமுடியாது; "அப்போதைக்கிப்போதே சொல்லிவைத்தேன்" என்றபடி செய் யுங்கள் என்று உபதேசிக்கிறுரென்றுங் கொள்ளலாம்.

அறஞ் சுவராகி நின்ற—தர்மமாகிற சுவர் வடிவெடுத்து வந்தாற்போலிரா நின்ற; "தர்ம ஸம்ஸ்தாபநார்த்தாய ஸம்பவாமி யுகேயுகே" என்ற வாயோலைப்படியே தர்மத்திற்குச் சுவராய் [ரக்ஷகராய்] நின்ற என்றுமாம்.

புறஞ்சுவர் கோலஞ்செய்து—"அஸந்நேவ ஸ பவதி, அஸத் ப்ரஹ்மேதி வேதசேத்" என்ற சுருதிப்படி ஆத்மாவானது பாழ்த்துக்கிடக்க, அவ்வாத்மாவை "ஸந்தமேநம் ததோ வித:" என் னும்படி ஸத்தாக்குகிற வழியிலே ஒரு முயற்சி செய்யாமல் இன்னடிசிலுண்பதும் பொன்னு டைமை பூண்பதும் பூத்துகில் சாத்துவதுமாய் நீங்கள் சரீரத்திற்குச் செய்கிற கோலங்கள் சவாலங்காரத்தோடும் விதவாலங்காரத்தோடும் ஒக்குமென்றவாறு.

"புள் உண்ணக் கிடக்கின்றீரே" என்னுமல் "கவ்வ" என்றதன் கருத்து.- நன்றியறிவற்ற வனுடைய மாமிசத்தைப் பறவைகளும் தின்னமாட்டா என்பது ஸித்தாந்தமாதலால், மஹாப காரகனை எம்பெருமானிடத்து நன்றியறிவற்ற உங்களுடைய மாமிஸத்தைப் பறவைகளும் தின்னமாட்டா; கவ்வினவுடனே 'இது க்ருதக்நமாம்ஸம்' என்று எறிந்துவிடுமென்பதாம். (சு)

878. புலையற மாகிநின்ற புத்தொடு சமணமெல்லாம் *
கலையறக் கற்றமாந்தர் காண்பரோ கேட்பரோதாம் *
தலையறுப் புண்டும்சாகேன் சத்தியங் காண்மினையா *
சிலையினு லிலங்கைசெற்ற தேவனே தேவனுவான். (ஏ)

கலை	சாஸ்திரங்களே
அற கற்ற மாந்தர்	நன்முக ஒதின மனிதர்
புல அறம் ஆகின்ற	கீச தர்மமாயிராகின்ற
புத்தொடு சமணம் எல்லாம்	பௌத்தமதம் கூபணமதம் முதலிய எல்லா மதங்களேயும்
காண்பரோ	நெஞ்சாலேதான் ஆராய்வார்களோ?
கேட்பரோ	காதுகொடுத்துத்தான் கேட்பார்களோ? (அதுநிற்க)
தலை அறுப்புண்டும்	என் தலையானது அறுக்கப்பட்டாலும்
சாகேன்	நான் சாகமாட்டேன்;
சத்தியம்	இது ஸத்தியம்;
ஐயா	ஸ்வாமிகளே!
காண்மின்	(ப்ரத்யக்ஷமாகக் காட்டுகிறேன்) பாருங்கள்;
சிலையினுல்	வில்லாலே
இலங்கை செற்ற	இலங்கையை நாசஞ்செய்த
தேவனே	எம்பெருமானே
தேவன் ஆவான்	ஸர்வேச்வனெனப் படுவான்.

'தொண்டுபூண்டமுதமுண்ணைத்தொழும்பர்' என்றும், "புள் கவ்வக்கிடக்கின்றீரே" என்றும் எங்களே இகழ்ந்துரைப்பதிற் பயனென்? ஸம்ஸாரத்தின் இயல்பு இப்படி யிராகின்றது; அன்றியும் "தொண்டுபூண்டு அமுதமுண்போமென்று பார்த்தாலும் எந்தத்தேவனே வண்ங்கி வழிபடுவதென்று தெரியவில்லே; நாங்கள் பரதேவதா நிச்சயம்பண்ண மாட்டாமையாலே ஸம்ஸாரத்திலே ஆழ்கிறோம்; எங்கள் மீது குற்றமென்?" என்று சில ஸம்ஸாரிகள் கூற, அவர்களைத் தெளிவிக்க விரும்பிய ஆழ்வார், தேவதா நிஷ்கர்ஷம் பண்ணித்தருகிறார்.

புத்தோடு—புத்தமென்ற வடசொல் புத்து எனத் திரிந்தது. சமணம்—கூபணகருடைய மதம். கலையறக்கற்ற மாந்தராவார்-கூரத்தாழ்வான் போல்வார். "ஸ்ருதிஸ்ம்ருதிதிஹாஸங்களில் நிலேநின்றவர்களாய் வேததாத்பர்யம் கைப்பட்டவர்கள்; அவர்களாகிறார் - கூரத்தாழ்வான் போல்வாரிறே"! என்பர் பெரியவாச்சான்பிள்ளை.

"காண்பரோ கேட்பரோதான்" என்றவிடத்தில் ஓர் ஐதிஹ்யம் அருளிச்செய்வர்:— கூரத்தாழ்வான் "இஷ்டஸித்தி" என்கிற ஒரு புறமதச்சுவடி வாசித்துக்கொண்டிருந்த சிலரோடே கூடிச் சிறிது போதுபோக்கி எம்பெருமானர் ஸந்நிதிக்கு விளம்பித்துவர, "ஏன் இத்தனே விளம்பம்?" என்று உடையவர் கேட்டருள, ஆழ்வானும் காரணத்தை உள்ளபடியே உரைக்க, உடையவர் "ஹா ஹா! 'கலையறக்கற்ற மாந்தர் காண்பரோ கேட்பரோதான்' என்ற அருளிச்செயல் என்னயிற்று?" என்று புநஸ்ஸநாநம் செய்வித்தருளி ஸ்ரீபாதத்துளியும் இடுவித்தருளினாம்.

தலையறுப்புண்டும்—ஸத்யமான வார்த்தையை நான் சொல்லிக்கொண்டே கழுத்தில் கத்தியை எரிந்தேனுகில் தலே அறுபடமாட்டாது ஸத்யம்; ஒருகால் தலே அறுப்புண்டாலும் உயிர் போகாதென்பது புநஸ்ஸத்யம்.

சாவேன், சாகேன் என்பன பாடபேதங்கள். (ஏ)

879. வெறுப்போடு சமணர்முண்டர் விதியில்சாக்கியர்கள் * நின்பால்
பொறுப்பரி யனகள்பேசில் போவதே நோயதாகி *
குறிப்பெனக் கடையுமாகில் கூடுமேல் தலையையாங்கே *
அறுப்பதே கருமங்கண்டாய் அரங்கமா நகருளானே. (அ)

அரங்கமா நகருளானே !—;

வெறுப்பொடு	(பகவத் விஷயத்தைக் கேட்கவும் பொறுத) வெறுப்போடு கூடிய
சமணர்	சூபணர்களும்
முண்டர்	சைவர்களும்
விதி இல்	பாக்கியஹீனரான
சாக்கியர்கள்	பௌத்தர்களும்
நின்பால்	உன் விஷயத்திலே
பொறுப்பு அரிய னகள்	பொறுக்கமுடியாத சில வார்த்தைகளை
பேசில்	சொல்லுவார்களாகில்
அதுவே நோய் ஆகி	அந்த நிந்தைகளைக் கேட்டதே வியாதியாய்
போவது	முடிந்து போவது (உத்தமம், அங்ஙன்றியே)
எனக்கு	(பகவத் விரோதிகளின் ஸத்தையையும் பொறுத) எனக்கு
குறிப்பு அடையும் ஆகில்	இலக்கு வாய்க்குமாகில் (அதற்குமேல்)
கூடுமேல்	(எனக்கு சக்தியும்) கூடுமாகில்
ஆங்கே	உன்னை நிந்தித்த அவ்விடத்திலேயே.
தலையை அறுப்பதே	அவன் தலையை அறுத்துத் தள்ளுகையே
கருமம் கண்டாய்	செய்யத் தக்கதாகாண்.

வெறுப்போடு—ஒரு காரணத்தை முன்னிட்டன்றியே நிஷ்காரணமாக எம்பெருமானுடைய பெருமை என்றும் சிவிலென்று திரஸ்கரிக்கையாகிற வெறுப்போடுகூடிய புறச்சமயிகள், ஸாத்விகர் காது கொடுத்துக் கேட்கப்பொறுத உன் விஷயமான தூஷணங்களைப் பேசும்போது அப்பேச்சுக்கள் ஒரு ஸாத்விகன் காதில் விழுந்தால், அவன்றன் மெய்யே ஸாத்விகனாகில் அந்த க்ஷணத்திலேயே தன்னுடையே உயிர் துறக்க வேணும் என்கிறார்—முன்னிரண்டடிகளால். உயிர்துறப்பதற்கு நோய் முதலிய சில வியாஜங்கள் நேரவேண்டுமே என்று சிலர் நினைக்கக்கூடுமென்றெண்ணி "போவதே நோயதாகி" என்கிறார். பகவந்நிந்தையைக் கேட்பதற்கு மேற்பட்ட நோய்கூட உலகத்திலுண்டோ ? என்பது கருத்து.

விஷ்ணுத்வேஷிகள் சொல்லுகிற தூஷணங்களை அநுவதிக்கவேண்டுமானால் அவற்றைத் தாம் முன்னம் நெஞ்சால் நினைத்தாகவேண்டுமாதலால் அங்ஙன் நினைப்பதையும் கொடிய பாவமாகக்கருதி "பொறுப்பரியனகள்" என்று ஸமுதாயமாகச் சொல்லுகிறார்.

"சமணர்முண்டர்"=சமணராகிய முண்டர் என்றும் உரைப்ப.

விதியில்="தைவம் திஷ்டம் பாகதேயம் பாக்யம் ஸ்த்ரீ கியதிர் விதி;" என்ற அமரகோசத்தின் படி-விதியாவது-பாக்யம்,-அத்ருஷ்டம் "அன்பாக்கியேத்தி அடிமைப்பட்டேனுனக்கு, என்பாக்கியத்தாலினி" என்றபடி எம்பெருமான் பெருமையைப் பேணுவதற்கு எவ்வளவோ அத்ருஷ்டம் வேண்டுமாதலால் அப்படிப்பட்ட அத்ருஷ்டமற்றவர்கள் சாக்கியர் என்கிறார்.

"போவதே நோயதாகி" என்பதற்கு வேறு வகையாகவும் பொருள் கூறலாம். "குரோர்யத்ர பரீவாதோ நிந்தாவாபி ப்ரவர்த்ததே, கர்ணௌ தத்ர பிதாதவ்யௌ கந்தவ்யம் வா ததோந்யத:" [பெரியோரைப்பற்றி நிந்தை நடக்குமிடத்தில் காதுகளை மூடிக்கொள்வதாவது, சடக்கென அப்பால் செல்வதாவது செய்யவேணும்] என்ற சாஸ்திரப்படி விலகிச்செல்வது நன்று என்கிறராகவுமாம்.

தூஷணை கேட்கப்பொறுமல் முடிந்துபோனலும் விலகிப்போனலும் தூஷித்தவனுக்கு என்ன பிராயஶ்சித்தம் செய்தாயிற்றென்று ஒரு கேழ்வி பிறக்கக்கூடுமாதலால், அவ்விஷயத்தில் தம்ஸித்தாந்தத்தை அருளிச்செய்கிறார்—குறிப்பெனக்கு இத்யாதியால்.

குறிப்பு—ரஹஸ்யம்; அதாவது தூஷித்த பேர்வழி. அவன் தூஷித்து விட்டு ஓடிப்போய் விடாமல் என் முன்னே நிற்பானகில் என்றபடி. கூடுமேல்—அவன் முன்னே நின்றுகொண் டிருந்தாலும் அவனை அஞ்சாது கொலைசெய்யும்படியான வல்லமை தனக்கு வேணுமே; தாம் ஒருவனைக் கொல்ல முயன்று அவனால் தாம் கொலையுண்பாருமுண்டே; அங்ஙனன்றி, நினைத்தபடி செய்து நிறைவேற்றவல்ல வல்லமையும் வாய்க்குமாகில் என்றபடி.

மரணதண்டனையானது ஒரு கொலைசெய்தவர்களுக்குச் சிக்ஷையாக அரசாங்கத்தாரால் விதிக்கப்பட்டிருக்கிறதேயொழிய, பகவந்நிந்தை பண்ணினவர்களுக்குக் கொலையை ஸிக்ஷை யாக எங்கும் விதித்ததில்லை; காமகாரத்தாலே விதியை மீறிக் கொலைசெய்யில் தமக்கு அநர்த்தமே யன்றோ பலிக்கக்கூடுமென்று ஸங்கித்துக் கூடுமேல் என்கிறார்; அதாவது-அரசாங்கத்தாரும் நமது ஸித்தாந்தத்திற்கு உடன்படக்கூடுமேல் என்றபடி என்பதாக இக்காலத்தோர் பொருள் கூறுப. (அ)

880. மற்றுமோர் தெய்வமுண்டே மதியிலா மானிடங்காள் *
உற்றபோ தன்றிநீங்கள் ஒருவனென் றுணரமாட்டீர் *
அற்றமே லொன்றறியீர் அவனல்லால் தெய்வமில்லை *
கற்றினம் மேய்த்தவேந்தை கழலிணை பணிமினீரே. (கூ)

மதி இலா	தத்துவஜ்ஞானமில்லாத
மானிடங்காள்	மனிதர்களே !
மற்றும்	(நான் சொல்லுகிறவனைத்) தவிரவும்
ஓர் தெய்வம்	(சரணமாக அடையக் கூடிய வேறு) ஒரு தெய்வம்
உண்டே	உண்டோ ? [இல்லை]
நீங்கள்	நீங்கள்
உற்ற போது அன்றி	(சரணமடைந்த அந்த க்ஷணத்தே தேவர்கட்கு) ஒரு ஆபத்தி நேர்ந்த காலத்திலல்லாமல் (மற்றைக் காலத்தில்)
ஒருவன் என்று	(நான் சொல்லுகிற இவன்) ஒருவனே கடவுள் என்பதை
உணரமாட்டீர்	அறியமாட்டீர்கள் ;
	(நீங்கள் இப்படி அறியாமைக்குக் காரணமென்னவெனில் ; வேதத்திலே)
மேல்	(பதப்பொருளுக்கு) மேற்பட்ட
அற்றம்	மறைபொருளே (தாத்பரியத்தை)
ஒன்று அறியீர்	சிறிதும் அறியமாட்டீர்கள் ;
	(இனி முடிவுப்பொருளே நீங்கள் உணருமாறு கூறுவேன் ;)
அவன் அல்லால்	அந்த எம்பெருமான் தவிர
தெய்வம் இல்லை	(சரணமடையக்கூடிய) தெய்வம் (வேறொன்று) இல்லை ; (ஆகையால்)
கன்று இனம் மேய்த்த எந்தை	கன்றுகளின் கூட்டங்களை (மிக்க உகப்போடு) மேய்த்து வந்த எமது ஸ்வாமியான ஸ்ரீ கிருஷ்ணனுடைய
கழல் இணை	இரண்டு திருவடிகளையும்
நீர் பணிமின்	நீங்கள் சரணமாகப் பற்றுங்கள்.

பல தேவதைகளையும் பற்றிக் கூறுகிற வேதத்தின் உட்பொருளை நுட்பமாக ஆராய்ந்து அறி யுந் திறமையில்லாமையால் நீங்கள் தேவதாந்தரங்களைப் பற்றுகின்றீர்கள் ; 'ஒரு குறையும் வாரா மல் உன்னைப் பாதுகாக்கிறேன்' என்று ப்ரதிஜ்ஞை பண்ணி பாஞ்சஜந்யாழ்வான் வாசல்தோறும் பரிவா

ரத்தேரடி பாதுகாவலாயிருந்த சிவன் அந்த வாணாசுரனை எதிர்த்துவந்த ஸ்ரீகிருஷ்ணனோடு போர் செய்யமாட்டாமல் தோற்று ஓடினபோது அந்தச் சிவனுடைய வலியின்மையை அந்த வாணன் கண்டறிந்ததுபோல, நீங்களும் ஸரணமாகப் பற்றியிருக்கிற தேவதாந்தரங்களுக்கு ஏதேனும் ஆபத்து நேர்ந்தால்தான் அத்தெய்வங்களின் பலஹீநத்வத்தைக் கண்டறிவீர்கள்: நீங்கள் இப்படி பரமாத்மாவைத் தவிர்த்து இதர தேவதைகளைப் பற்றுதற்குக் காரணம் நுமக்குப் பகுத்தறிவு இல்லாமையே. உண்மையில் ஸ்ரீகிருஷ்ணனைத்தவிர வேறு தெய்வமில்லை. ஆகையால் நீங்கள் அந்த ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவையே சரணமாகப் பற்றுங்களென்று உபதேசிக்கின்றனரென்க.

பெறுதற்கரிய மநுஷ்ய ஜன்மத்தைப் பெற்றிருந்தும் ஈடேறுதற்கு உரியதான பரமாத்மாவைப்பற்றிய தத்துவஞானம் இல்லாமையால் எடுத்த ஜன்மமே வீணாய்விட்டதென்று குறிப்பிக்கும்படி "மதியிலாமானிடங்காள்" என்றார்.

"ஒண்டாமரையாள் கேள்வனையுவனையே நோக்குமுணர்வு" என்றபடி பரமாத்மாவைப்பற்றிய அறிவே அறிவெனப்படுமாதலால் மற்றை உலகவறிவு இருந்தும் பரமாத்மாவைப் பற்றிய அறிவைப்பெறாத இவர்கள் மதியிலா மானிடங்களாயினர்; இதுபற்றியே "மானிடர்காள்!" என உயர்திணைவாய் பாட்டாற் கூறாது "மானிடங்காள்" என அஃறிணைவாய்பாட்டாற் கூறியதும். இது - இழிப்பினால் உயர்திணையில் அஃறிணைவந்த திணைவழுவமைதி.

உற்றபோதன்றி உணரமாட்டீர்—உற்றபோதே நீங்கள் அவனொருவனே தெய்வமென்று உணர்வீர் என † இரண்டு எதிர்மறைகள் ஒருடன்பாட்டுப் பொருளை வற்புறுத்தின; "அவனல்லால் தெய்வமில்லை" என்றவிடத்தும் இப்படியே.

அற்றமேலொன்றறியீர்—வேதத்திற் பலவிடங்களிலும் தேவதாந்தரங்களைப்பற்றி (எம்பெருமானைப்போலவே) சிறப்பித்துக் கூறியிருப்பதுகண்டு அவற்றிற்கு ஆபாதப்ரதீதியில் (—மேல் நோக்கில்) தோன்றுகிற பொருளையே கருத்தாக எண்ணி "நாராயணபரா வேதாः" என்றபடி வேதங்கள் முழுவதும் ஸ்ரீமந்நாராயணனையே பரம்பொருளாகக் கருத்துப்பொருளால் கூறுவன என்பதை உய்த்துணராமலிருக்கின்றீரென்றவாறு.

அற்றம்—மறைபொருள்; உட்கருத்து: அறு—பகுதி. "அவனல்லால் தெய்வமில்லை" என்று - தேவதாந்தரங்கள் இல்லை என மறுக்கின்றாரல்லர்; எம்பெருமானுக்கு ஸ்ரீரமாகப் பல தேவதைகள் உள என்பதில் ஆக்ஷேபமில்லை; சரணமாகப் பற்றத்தக்க தெய்வம் வேறில்லை என்றுய்த்துச் சொல்லுவது.

"கற்றினம்மேய்த்த" என்ற அடைமொழியினால் எம்பெருமானது ஸௌலப்யத்தை வெளியிட்டவாறு. எந்தை - பரமஸ்வாமி. கழல் - வீரர் காலில் அணியும் வடம்; தானியாகுபெயராய்ப் பாதத்தை உணர்த்திற்று.

881. காட்டினன் தெய்வமெங்கும் நல்லதோ ரருள்தன்னாலே *
காட்டினன் திருவரங்கம் உய்பவர்க் குய்யும்வண்ணம் *
கேட்டிரே நம்பிமீர்காள் கெருடவாகனனும் நிற்க *
சேட்டைதன் மடியகத்துச் செல்வம்பார்த் திருக்கின்றீரே. (கo)

† அன்றி, மாட்டீர் என்பன.

எக்கும்	எல்லாவிடங்களிலும்
தெய்வம்	(அம்மன் பிடாரி முதலான தாமஸ) தேவதைகளே
நாட்டிலுன்	(ராஜஸர்க்கும் தாமஸர்க்கும் ஆச்ரயிக்கலாம்படி எம்பெருமான்) நிலைநிறுத்தி யிருக்கிறான்;
உய்பவர்க்கு	உஜ்ஜீவிக்க விரும்புமவர்கட்கு
உய்யும் வண்ணம்	உஜ்ஜீவிக்கலாம்படி
நல்லது ஓர் அருள் தன்னுலே	தனது ஒப்பற்றதொரு க்ருபையினால்
திரு அரங்கம்	அரங்கமாநகரை
காட்டிலுன்	காண்பித்தருளினான்;
நம்பிமீர்காள்	'நமக்கு ஒன்றாலும் குறையில்லை' என்று நினைத்திருப்பவர்களே!
கேட்டிரே	(நான் சொல்வதைக்) கேட்டீர்களா?
கெருட வாகனன் நிற்கவும்	கருடனே வாஹநமாகவுடைய பெருமான் விளங்கா நிற்கச் செய்தேயும்

(தேவதாந்தரங்களைப் பற்றுகிற நீங்கள்)

சேட்டைதன் மடியகத்து	மூதேவியிடத்தினின்றும்
செல்வம் பார்த்து இருக்கின்றீர்	ஐச்வரியம்பெற நினைத்திருக்கிறீர்கள் போலும்.

நீர் சொல்லுகிற எம்பெருமானைழிய வேறொரு தேவதையும் புகலன்றுகில், உலகில் பல பல தேவதைகள் அவ்வவர்களால் கொண்டாடப்படுவதற்கும், அக் கொண்டாட்டத்திற்கு ஏற்ப அத்தேவதைகள் பயன் அளித்து வருவதற்கும் என்ன காரணம்? பயன் கொடுக்கிற சக்தி வாய்ந்த தேவதைகளைப் பற்றுவதால் என்ன பாதகம் விளையும்? என்று சில மாந்தர் கேட்க; அவர்களுக்கு விடை அளிக்கிற பாட்டு இது.

ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற மூன்று குணங்களும் அமைந்த சேதநர்கட்கெல்லாம் அவரவர்களுடைய ருசிக்குத் தக்கபடி காரியஞ்செய்பவன் எம்பெருமானதலால் ராஜஸருடையவும் தாமஸருடையவும் ருசிக்கு ஏற்ப அக்குணங்களுள்ள அம்மன் பிடாரி முதலிய க்ஷுத்ரதேவதைகளை எம்பெருமான்றுனே ஒவ்வொரு பேரிட்டு நாட்டினான். "யே ஹ்யந்யதேவதாபக்தா: யஜந்தே சரத்தயான்விதா:—தேபி மாமேவ கௌந்தேய! யஜந்த்யவிதிபூர்வகம்" என்ற கீதையின்படியும், ஆகாசாத் பதிதம் தோயம் யதா கச்சதி ஸாகரம்—ஸர்வ தேவநமஸ்கார: கேசவம் ப்ரதி கச்சதி" என்ற வசநப்படியும் அந்த க்ஷுத்ரதேவதைகளைக் குறித்துச்செய்யும் வணக்கவழிபாடுகள் யாவும் அத்தேவதைகட்கும் ஆத்மாவான ஸ்ரீமந்நாராயணனிடத்திற் போய்ச் சேர்ந்துவிடுமேயன்றி அவர்களுக்கே உரியனவாகமாட்டா. ராஜப்பிரதிநிதிகள் ஒவ்வோரிடங்களிலும் ப்ரஜைகளிடத்தில் பணங்களை (கப்பம்) வசூல் செய்து அவற்றைப் பிரதாந ராஜனிடத்தில் சேர்ப்பது போல வாய்த்து இத்தேவதைகளின் தொழிலும். "இறுக்குமிறை யிறுத்துண்ண எவ்வுலகுக்கும் தன் மூர்த்தி, நிறுத்தினுன் தெய்வங்களாக அத்தெய்வநாயகன்றுனே" என்றும் "அவரவர் விதிவழி யடைய நின்றனரே" என்றும் நம்மாழ்வாரு மருளிச்செய்தார்.

"நல்லதோரருள் தன்னுலே" என்பதை "நாட்டிலுன்" என்ற வினைமுற்றுடே கூட்டி அன்வயிக்கவுமாம். சாஸ்த்ர விச்வாஸத்துக்கு இசையாதவர்களை வேதமானது அவர்களுடைய ருசிக்கீடாக அபிசாரம் முதலிய ஹிம்ஸைகளையும் கூறிப் படிப்படியாக நல்வழி சேர்த்துக்கொள்ளுமாறு போல, எம்பெருமானும் அந்யசேஷத்வத்துக்கு இசையாத ராஜஸ தாமஸ ப்ரக்ருதிகளை அவரவர்களுடைய குணநுகுணமாகப் பணியும்படி ராஜஸதாமஸ தேவதைகளைப் பரமக்ருபையாலே ஆங்காங்கு நாட்டி, பிறகு காலகதியிலே ஸத்வம் தலையெடுத்து உஜ்ஜீவிக்கும் விரகு தேடுவார்க்கு உஜ்ஜீவநோபாயமாகத் தான் திருவரங்கம் பெரியகோயிலிலே வந்து சாய்ந்தருளினன் என்கிறார்.

அந்த க்ஷுத்ரதேவதைகள் க்ஷுத்ரமான பலன்களைக் கொடுக்கவல்லனவே யன்றி, மோக்ஷமாகிய உத்தம புருஷார்த்தத்தைக் கொடுக்க அவற்றுக்கு சக்தி இல்லை; அது உள்ளது எம்பெருமானொருவனுக்கேயாம்; இந்த தத்துவமறியாமல் முமுக்ஷுக்களாயிருப்பார் ஸ்ரீமந்நாராயணனைத்தவிர்த்து இதர தேவதைகளை ஆச்ரயிப்பது எங்ஙனே சொல்லலாயிருந்ததெனில்; ஐச்வரியத்தைப் பெற விரும்பின ஒருவன் அதனைத்தரவல்ல மஹாலக்ஷ்மியை உபாஸனை செய்ய வேண்டியிருக்க, அவளது திருவடிகளிற் புகாமல், உள்ள செல்வத்தையும் துடைக்கவல்ல மூதேவியைப் பற்றிப் பணியும் மூடனது செயலோடு ஒப்பிடலாமாயிருந்தது என்கிறார்.

இங்கு உபமேயமான அம்சத்தையும் உபமாநமான அம்சத்தையும் தனித்துச் சொல்லாமல் ஒரு போக்காகச் சொன்னது முற்றுவமை: தேவதாந்தரங்கள் பக்கல் பரமபுருஷார்த்தத்தைப்பெற நினைக்கை, சேட்டை தன் மடியகத்துச் செல்வம் பார்த்திருக்கை என்று இரண்டு பொருளில்லை; இதுவே அது, அதுவே இது என்ற கருத்துத்தோன்றும்.

சேட்டை—மூத்தவள் என்னும் பொருளதான் 'ஜ்யேஷ்டா'. என்ற வட சொல்விகாரம். மூதேவியென்பவள் பிராட்டிக்கு முற்பிறந்தவள். தாரித்ரியம், துரத்ருஷ்டம், உறக்கம், சோம்பல், மூடத்தனம் முதலியவை உள்ளவனை 'மூதேவி' என்று நிந்திப்பது ப்ரஸித்தம். ஆகையாலே மூதேவியென்பவள் ஸகல அச்லீலங்களுக்கும் மூலஸ்தாநம். (கo)

882. ஒருவில்லாலோங்குமுந்நீர் அடைத்துலகங்களுய்ய *
செருவிலேயரக்கர்கோனைச் செற்றநம்சேவகனூர் *
மருவியபெரியகோயில் மதிள்திருவரங்கமென்னு *
கருவிலேதிருவிலாதீர் காலத்தைக்கழிக்கின்றீரே. (கக)

ஒரு வில்லால்	சார்ங்கம் என்கிற ஒரு வில்லாலே
ஒங்கு முந்நீர் அடைத்து	கொந்தளிக்கிற கடலை அணை கட்டி
உலகங்கள் உய்ய	லோகமெல்லாம் வாழும்படி
செருவிலே	போர்க்களத்திலே
அரக்கர் கோனை	இராவணனை
செற்ற	முடித்தருளின
நம் சேவகனூர்	நமக்குத் தலைவரும் மஹாவீரருமான பெருமாள்
மருவிய	பொருந்தி வாழ்வதற்கு இடமான
பெரியகோயில்	பெருமை தங்கிய கோயிலாவது
மதிள் திரு அரங்கம்	ஏப்பாராகாரங்கள் சூழ்ந்த ஸ்ரீரங்கக்ஷேத்ரம்
என்னு	என்று சொல்லமாட்டாத
கருவிலே திரு இலாதீர்	கர்ப்ப கிர்ப்பாக்யர்களே!
காலத்தை	(பகவதநுபவத்துக்காக்கண்ட) காலத்தை
கழிக்கின்றீர்	பாழே போக்குகிறீர்களே!

இராமபிரானும் கண்ணபிரானுமாய் அவதரித்த பெருமான்றானே திருவரங்கம் பெரிய கோயிலில் கண்வளர்ந்தருளுகிறான்; ஜாயமாநகால கடாக்ஷமில்லாமையாலன்றே நீங்கள் இழக்கிறது! என்று க்ஷேபித்துக்கூறுவது இப்பாட்டு.

‡ இராமபிரான் ஸமுத்ரராஜனை அடைக்கலம்பற்றி வழிவிடவேணுமென்று வேண்டிக்கொண்டவிடத்தும் அவன் வந்து முகங்காட்டாதொழிய, "ஒரு மீன்படுகுட்டம் நம்மை அஸமர்த்தராக நினைத்துவிட்டது; இனி ஒரு கைபார்க்குமத்தனை" என்று துணிந்து இளையபெருமாளை

‡ "கல்லால் கடலை அணைகட்டி யுகந்தாய்" என்னுமிற்க, "ஒருவில்லா லோங்கு முந்நீரடைத்து" என்று இவர் அருளிச்செய்வதற்குக் கருத்து.

கோக்கி "வில்லைக்கொண்டுவா" என்று நியமித்தருளினபின்பு ஸமுத்ராஜன் அஞ்சி நடுங்கி ஓடி வந்து முதுகைக்காட்டித் தன்மீது அணைகட்டிப் போகும்படி அமைந்தனனதலால், ஒரு வில்லா லோங்கு முந்நீரடைத்து என்கிறார். ஓங்கு என்றது–கடலின் இயற்கையான கொந்தளிப்பைக் கூறுகிறபடி யன்று; இராமபிரான் சீற்றத்தாலே கையும் வில்லுமாய் நின்ற வீரவுறப்பைக் கண்டு கீழ்மண்கொண்டு மேல் மண்ணெறிந்து காலிலேவிழுமாபோலே திருவடிகளளவும் வந்து வெள்ளங் கோத்தபடியைக் கூறுவதாம்.

உலகங்களை யெல்லாம் வாழ்விக்கக்கருதிய பெருமாள் தனித்தனியாக ஒவ்வொருவருடைய இருப்பிடத்திற்குஞ் சென்று அவர்களை வாழ்விப்பது அரிய காரியமென்றெண்ணி ஸதுபாயம் சிந்தித்து இராவணனொருவனைக் கொன்றுவிட்டால் உலகங்களையெல்லாம் வாழ்வித்தவாறும் என்று அறுதியிட்டு ராவணஸம்ஹாரம் செய்தருளினனென்ற கருத்துத்தோன்ற "உலகங்களுய்யச் செருவிலே அரக்கர்கோனைச் செற்ற" என்கிறார். பல்லாயிரம் பசுக்களை மேய்ப்பவனுக கண்ணபிரான் ஒவ்வொரு பசுவுக்கும் புல்லுந் தண்ணீருங் கொடுத்துக் காப்பாற்றவேண்டிய அருமையை நோக்கி ப்ருந்தாவனத்தைப் பசும்புற்காடாக ஸங்கல்பித்து அவ்வரிய காரியத்தை எளிதில் நிறைவேற்றிக்கொண்டாற்போலவும், நம்மாழ்வாரொருவரை அவதரிப்பித்து நாட்டை யடங்கலும் எளிதில் திருத்தினாற்போலவும் இராவணனொருவனைக்கொன்று உலகங்களையெல்லாம் எளிதில் வாழ்வித்தானுய்த்து.

நம் சேவகனார் மருவிய பேரியகோயில்—ராவணவதம்பண்ணி விஜயற்ற பின்பும் அப்போதை யநுபவத்தை இழந்த பிற்பாடர்க்கும் உதவுகைக்காக வன்றே கோயிலிலே வந்து கண்வளர்ந்தருளுகிறது. "மாமுனிவேள்வியைக் காத்து அவபிரதமாட்டிய வடுதிறலயோத்தியெம்மரசே! அரங்கத்தம்மா" என்ற ஒற்றுமை நயமும் நோக்கத்தக்கது.

மதிள் திருவரங்கம்—ராமாவதாரத்திற்போலே இங்கும் சில ஆபத்து விளையுமோ என்றஞ்சித் திருமங்கையாழ்வார் போல்வாரான மங்களாசாஸந பரர்கள் காப்பாக இட்ட மதிளையுடைய ஸ்ரீரங்கம்.

கருவிலே திருவிலாதீர்–ஜாயமாநம் ஹி புருஷம் யம் பச்யேத் மதுஸூதந:–ஸாத்விகஸ் ஸது விஜ்ஞேய: ஸ வை மோக்ஷார்த்தசிந்தக:" என்றபடி கர்ப்பவாஸ ஸமயத்தில் எம்பெருமான் ஸத்வ குணத்தைச் செழிப்பிப்பதற்காகக் குளிரநோக்குவதொரு நோக்குண்டு; அதனைப் பெறுதவர்களன்றே நீங்கள்; பெற்றிருந்தீர்களாகில் இத்தகைய விசிகித்ஸைகள் உங்களுக்குப் பிறவாவே.

காலத்தைக் கழிக்கின்றீரே—"பழுதே பலபகலும் போயின வென்றஞ்சியழுதேன்" என்று ஞானிகள் கதறியிருப்பதைக் கேட்டுவைத்தும் நீங்கள் காலத்தைப்பாழே போக்குகிறீர்களே பாவிகாள்! என்று வயிறெரிகிறார். (கக)

883. நமனும்முற்கலனும்பேச நரகில்நின்றுர்கள்கேட்க *
நரகமேசுவர்க்கமாகும் நாமங்களுடையநம்பி *
அவனதூரரங்கமென்னது அயர்த்துவீழ்ந்தளியமாந்தர் *
கவலையுள்படுகின்றரேன்று அதனுக்கேகவல்கின்றேனே. (கஉ)

நமனும்	யமதர்மராஜாவும்	நரகில் நின்றுர்கள் கேட்க	அந்த வார்த்தை நரகத்திலே பாப பலன்களை அனுபவிக்கிற பாவிகளின் காதில் பட்டவளவிலே
முற்கலனும்	முற்கலபகவானும் ஒருவர்க் கொருவர்		
பேச	வார்த்தையாடிக்கொண்டிருக்க		

நரகமே	அந்த நரகந்தானே
சுவர்க்கம் ஆகும்	ஸ்வர்க்க லோகமாய்விட்டது என்று சொல்லுதற்கீடான மேன்மைவாய்ந்த
நாமங்கள் உடைய	திருநாமங்களையுடைய
நம்பி அவனது	பரிபூரண எம்பெருமானுடைய
ஊர்	திவ்யதேசம்
அரங்கம் என்னுது	திருவரங்கமாகும் என்று சொல்லாமல்
அளிய மாந்தர்	அருமந்த மனுஷ்யர்கள்
அயர்த்து	(ஸ்வரூபத்தை) மறந்து
வீழ்ந்து	(விஷயாந்தரப் படுகுழியிலே) விழுந்து
கவலையுள் படுகின்றார் என்று	துக்கத்திலே அகப்படுகிறார்களே யென்று
அதனுக்கே	அதற்காகவே
கவல்கின்றேன்	நான் கவலைப்படாகின்றேன்.

திருநாமத்தின் பெருமையை நான் அறியாதிருந்தேனகில் ஸம்ஸாரிகளைப்பற்றிக் கவலைப் படமாட்டேன்; மநுஷ்யஜந்மம் எளிதிற் பெறக்கூடுமாயின் நான் கவலைப்படமாட்டேன்; இவர்கள் உஜ்ஜீவநத்திற்காகச் செய்யவேண்டிய காரியம் மிகப் பெரிதாயின் கவலைப்படமாட்டேன். திருநாமங்களின் மேன்மையோ சொல்லுந்தரமல்ல; பெறுதற்கு அரிதான மானிடஜந்மத்தையோ இவர்கள் பெற்றிருக்கிறார்கள்; இவர்கள் செய்யவேண்டிய காரியமோ மிக அற்பமானது— 'எம்பெருமான் ஊர் திருவரங்கம்' என்றிவ்வளவே சொல்லவேண்டுமத்தனை இங்ஙனிருக்கவும் இவர்கள் விஷயாந்தரப் படுகுழியிலே தலைகீழாக விழுந்து வருந்துவர்களாகில் நான் எங்ஙனே கவலைப்படாதிருக்கமுடியும்? இவர்கள் சிறிது திருந்தினராகில் என் அநுபவத்திற்கு எவ்வளவோ துணையாகுமே! என்கிறார்.

முத்கலோபாக்கியாநம் ஸ்ரீவிஷ்ணுதர்மத்திலே தொண்ணூறுவது அத்யாயத்திற் கூறப் பட்டுள்ளது. அதன் சுருக்கம் வருமாறு:—முத்கலனென்பவன் பெரும்பாவிகளில் தலைவன்; அவன் ஒருநாள் கோதாநம் பண்ணும் போது 'க்ருஷ்ணாய' என்று சொல்லி தாநஞ்செய்தான். பின்பு அவன் மாண்டபிறகு யமகிங்கரர்வந்து நெருங்கி அவனை யமன் பக்கலிலே கொண்டு செல்ல, யமன் இவனை எதிர்கொண்டு ஸம்பாவனை செய்தான்: அதுகண்ட முத்கலன், "உன்னுடைய படர்கள் என்னை நெருங்கிக்கொண்டுவராகிற்க, நீ என்னை கௌரவிப்பதற்கு என்ன காரணம்?" என்று கேட்க; "உன்னுடைய மேன்மையை அவர்களுமறிந்திலர், நீயுமறிந்திலை,-க்ருஷ்ண நாமத்தை நீ ஒருகால் சொன்னாய்காண்!" என்று யமன் அதனைப் புகழ்ந்துகூற, இப்படி ப்ரஸக்தாநுப்ரஸக்தமான இந்த ஸம்வாதம் நரகாநுபவம் பண்ணுகிறவர்களுடைய காதிலே விழுந்த வாறே அந்த நரகந்தானே துக்காநுபவ நிலமாயிருந்த நிலைமாறி ஆநந்தாநுபவ நிலமாய்விட்டதென்றால் இத்திருநாமத்தின் வைபவம் எப்படிப்பட்டதாயிருக்கவேணும்? "என்னை நீ ரக்ஷிப்பதற்குக் காரணமென்ன?" என்று முத்கலன் கேட்க, "முன்பு நீ க்ருஷ்ணநாமம் சொன்னாய்" என்று யமன் உத்தரமுரைத்த இவ்வளவேயாய்த்துப் பிறந்தது; யமன் தனக்குப் பர்வதமாக அத்திருநாமத்தை உச்சரித்தவனல்லன்; முற்கலன் ப்ரார்த்திக்க அவனுக்கு உபதேசித்தவனுமல்லன்; நரகாநுபவம் செய்கிறவர்களின் காதிலே இது விழுந்து அவர்கள் உய்வுபெறவேணுமென்று நினைத்துச் சொன்னவனுமல்லன்; இனி இதனைக் கேட்டவர்களோ பாபம்பண்ணுகிற ஸமயத்திலே அநுதபித்து மீண்டு ப்ராயச்சித்தம் செய்துகொள்ளக்கூடிய காலத்திலே கேட்டவர்களல்லர்; பாபத்தினுடைய பலன்களை அநுபவிக்கும் போதாயிற்றுக் கேட்டது. அப்போது தானும் இச்சையோடு கேட்டாருமல்லர்; யாதிருச்சிகமாகத் திருநாமம் செவிப்பட்டவித்தனையே: இப்படிப்பட்ட திருநாமமே இவ்வளவு பெருமையுடைத்தாகில், பின்னை என்சொல்லவேண்டும்?

பாபபலாநுபவம் பண்ணும்போது யாத்ருச்சிகமாகத் திருநாமம் செவிப்பட்டாற் போலே பாபம் செய்யும்போது ஒரு தடவையாவது திருநாமம் செவிப்பட்டிராதா? அது கொண்டு அவன் நற்கதிபெறலாமன்றே என்னில்; அப்போது விஷய ப்ராவண்யத்தால் வந்த செருக்காலே இவையொன்றும் செவிப்படா; நற்காநுபவம் பண்ணும் ஸமயத்தில் தான் "நல் வார்த்தை சொல்வார் ஆரேனும் கிடைப்பாரோ?" என்று எதிர்பார்க்கிறவர்களாகையாலே செவிப்படும் என்ப.

நரகமே சுவர்க்கமாகும்—நரகத்தையே ஸ்வர்க்கமாக்கவல்ல என்றபடி. பாபஸ்தாநம் புண்யஸ்தாநமாக உடனே மாறிவிடக்கூடுமோவென்று சங்கிக்கவேண்டா; இராவணன் கையைவிட்டு நீங்கி விபீஷணாழ்வான் கையில் வந்தவாறே லங்கை 'தாமஸபுரி' என்னும் பெயர் நீங்கி 'ஸாத்விகபுரி' என்று புகழ்பெறவில்லையோ?

"ஒருவனுடைய அந்திம ஸமயத்திலே திருமந்த்ரத்தை உபதேசித்து 'இத்தைச்சொல்லாய்' என்ன; அவனும் 'ஆமாகில் சொல்லிப்பார்க்கிறேன், ஆமாகில் சொல்லிப்பார்க்கிறேன்' என்று இத்தை அநேக முறுச்சொல்லித் திருமந்த்ரந்தன்னைச் சொல்லாதே செத்துப்போனான்; ‡ இரண்டும் அநுஷ்டிக்கத்தெரிந்திருக்கச்செய்தே சொல்லவொட்டிற்றில்லையிறே பாபபலம்!" என்ற வியாக்யாந ஸூக்தியை நோக்குக.

அளியமாந்தர்—திருநாமம் சொல்லுகைக்கு உரிய நாக்குப்படைத்த அருமருந்தன்ன மநுஷ்யர்கள்.

அதனுக்கே கவல்கின்றேனே—என் குடும்பத்தைப்பற்றி நான் கரைகின்றேனில்லை: என்னதும் பிறரதுமான குடும்பத்தைப்பற்றியும் கரைகின்றேனில்லை; பிறர் குடும்பம் கெட்டுப் போகிறதே! என்பதற்காகவே கரைகின்றேனென்றார்.

884. எறியுநீர்வெறிகொள்வேலை மாநிலத்துயிர்களெல்லாம்
வெறிகொள்பூந்துளபமாலை விண்ணவர்கோனையேத்த
அறிவிலாமனிசரெல்லாம் அரங்கமென்றழைப்பராகில்
பொறியில்வாழ்நரகமெல்லாம் புல்லெழுந்தொழியுமன்றே. (கரு)

(அவ்வாறு துதிப்பது அற்பஞான முடையார்க்கு முடியாவிடினும்)

எறியும் நீர் வெறி கொள் வேலை	அலைகள் வீசுகின்ற தண்ணீரையும் (புலாலின்) காற்றத்தையும் கொண்டிருக்கிற கடலினால் சூழப்பட்ட
மா நிலத்து	பெரிய இந்தப் பூலோகத்திலுள்ள
உயிர்கள் எல்லாம்	ஆத்மாக்கள் யாவும்
வெறிகொள் பூ துளபம் மாலை	கல்ல பரிமளமுடைய அழகிய திருத்துழாய் மாலையை அணிந்துள்ள
விண்ணவர்கோனை	தேவாதி தேவனை திருமாலை
ஏத்த	தோத்திரம் பண்ணுவதற்காகவே (ஏற்பட்டிருக்கின்றன;)
அறிவு இலா மனிசர் எல்லாம்	தத்வஜ்ஞாநம் கிடாதபடி அத்தனிதர் யாவரும்
அரங்கம் என்று அழைப்பர் ஆகில்	(அர்த்தி பூர்வமாகவாவது) ஸ்ரீரங்கமென்று சொல்லுவார்களாகில்

(அம்மாத்திரத்தாலேயே)

பொறியின் வாழ்	பஞ்சேந்திரியங்களின் வசப்பட்டு வாழ்கின்ற
நரகம் எல்லாம்	(ஞானிகளுக்கு நரகமாகிய) இப்பிரபஞ்சம் முழுதும்
புல் எழுந்து ஒழியும் அன்றே	புல் முளைத்து பாழாய்ப்போயிடுமன்றே.

‡ "ஆமாகில் சொல்லிப்பார்க்கிறேன்" என்பதும் (மெய்யெழுத்து கீக்கி) எட்டெழுத்து, திருமந்த்ரமும் எட்டெழுத்து என்க.

கீழெல்லாம் பிறருடைய துயரத்தைக்கண்டு தாம் பொறுக்கமாட்டாமல் கவல்கிறபடியை வாய்விட்டுச்சொன்னார்; ஒன்றும் பயன்படவில்லை; இனி பரோபதேசத்தில் நின்றும் மீண்டுவிடுவோம் என்று பார்த்தார்; பிறர்க்கென்றே அவதரித்த இவர் எங்ஙனே சடக்கென மீளக்கூடும்? தீயகுணம் நிறைந்த பிள்ளையைப்பற்றி ஒன்றும் கவனிக்கக்கூடாதென்று தகப்பன் மீளநினைத்தாலும் அங்ஙனேவின்படி உடனே மீளமுடியுமோ? அப்படியே இவ்வாழ்வாரும் பிறருடைய துயரத்தைப்பற்றிக் கவலைப்படுவதினின்றும் உடனே மீளமாட்டாமல் அவர்களை நோக்கிக் கூறுகிற முறையை மாத்திரம் விட்டிட்டு, தம் நெஞ்சோடு தாமே வருந்துகின்றார், இப்பாட்டில்.

மூலப்ரக்ருதியிலே அழுந்தி ஒளிமழுங்கிக்கிடந்த ஆத்மாக்களையெல்லாம் எம்பெருமான் தனது இன்னருளால் உஜ்ஜீவிப்பிக்க விரும்பித் தன்னை அடையுமாறு கடைசரணம் முதலிய அவயவங்களையும் சாஸ்திரங்களையும் காட்டிக்கொடுத்தான் என்ற நூற்கொள்கை, முன் இரண்டடிகளிற் குறிப்பிடப்பட்டது.

அதற்கு ஏற்ப, கடவுளையடைந்து பேறுவது தத்வஞானத்தின் காரியமாதலால் அறிவிலாமனிசர்க்கு அது கைகூடாவிடினும், அவர்கள் யாவரும் அபுத்தி பூர்வகமாகவாவது எம்பெருமான் நித்யவாஸஞ் செய்கின்ற திருவரங்கம் பெரியகோயிலை ஒருதரமாவது வாய்விட்டுச் சொன்னராகிலும், அவனது ஊரைச்சொன்னதன் பயனாக அவ்வெம்பெருமானால் கடாக்ஷிக்கப்பெற்று மோக்ஷத்தையடையத் தட்டில்லை; பின்பு பாபத்தின் பயனாக வாழ்கின்ற பிராணி ஒன்றும் இங்கு இருக்கக் காரணமில்லாமையால் இந்தப் பூலோகம் முழுவதும் புல் முளைத்துப் பாழாய்விடும்; இத்தனை எளியவழியையும் மேற்கொள்ளாமற் கைவிட்டு இவ்வுலகத்தவர் அறிவுகேடராயிருக்கின்றார்களே! என்று பின்னிரண்டடிகளால் இரங்குகின்றனரென்க.

கலம்தமில்லதோர் நாடாகிய பரமபதத்தை அடைந்து அங்கு 'ஸர்வகந்தஸ் ஸர்வரஸ:' என்கிற எம்பெருமானுடைய திருத்துழாய் நறுமணத்தை அநுபவித்துக்கொண்டு அப்பிராணை எத்தி இனிதாக இருக்கவேண்டிய சேதநர்கள் "வெள்ளத்திடைப்பட்ட நரியினம்போலே" என்றபடி கலங்கிப் புலால் நாற்றம் வீசுகிற கடல்வெள்ளத்துக்கு உட்பட்ட இப்பூமியிலே கிடந்து வருந்துகின்றார்களே! என்ற இரக்கப்பொருள் தோன்ற "எறியுநீர் வேறிகொள்வேலை மாநிலத்துயிர்கள்" என்கிறார். மாநிலம்-ஐம்பதுகோடி விஸ்தீர்ணமான பூமி.

அழைப்பராகில் என்றது—பெரும்பாவிகளான இவர்கட்குத் கடுஞ்சொற்களைச் சொல்வது எளிதேயன்றி, அரங்கமென்றுவாயாற்சொல்லுவதும் அருமை என்பது தோன்ற.

யந்த்ரம்போல எல்லா அவஸ்தையிலும் தப்பாதபடி தன்பக்கலிலே அகப்படுத்திக் கொள்ளவற்ருகையாலே பொறி என்று இந்திரியங்களைச் சொல்லுகிறது. "இருள் தருமாஞாலத்து ளினிப்பிறவி யான்வேண்டேன்" என்னும் ஆழ்வார் போன்ற அறிவுடையார்க்கு இந்த உலகவாழ்வு நரகம்போலத் தோன்றுமாதலால், இந்த ஸம்ஸாரத்தை நரகம் என்றே கூறினர்.

இவ்வுலகத்திலுள்ளோர் யாவரும் எம்பெருமானுடைய திருப்பதியின் திருநாமத்தைச் சொன்னராகில் அதுவே காரணமாகப் பரமபதத்தை அடைவராதலால் அப்போது நரகத்திற்குச் செல்வார் ஒருவருமில்லாமற்போக, அந்நரகம் புல்லெழுந்தொழியும் என்று உரைப்பாருமுண்டு; இப்பொருளில், பொறி இல் என்று பிரித்து 'அழகு இல்லாத' எனப் பொருள் கொள்க. வாழ்-அசை

885. வண்டினமுரலும்சோலை மயிலினமாலும்சோலை *
கொண்டல்மீதணவும்சோலை குயிலினம்கூவும்சோலை *
அண்டர்கோனமரும்சோலை அணிதிருவரங்கமென்னு *
மிண்டர்பாய்ந்துண்ணும்சோற்றை விலக்கிநாய்க்கிடுமினீரே. (கசை)

வண்டு இனம் முரலும் சோலை	வண்டுகளின் கூட்டங்களானவை காமம் செய்யாகிற்கப் பெற்ற சோலைகளையுடையதும்,
மயில் இனம் ஆலும் சோலை	மயில்களின் கூட்டங்களானவை கூத்தாடாகிற்கப் பெற்ற சோலைகளையுடையதும்
கொண்டல் மீது அணவும் சோலை	மேகங்களானவை மேலேவந்து படியாகிற்கப்பெற்ற சோலைகளையுடையதும்
குயில் இனம் கூவும் சோலை	குயில்களின் கூட்டங்கள் ஒன்றையொன்று அழையாகிற்கப்பெற்ற சோலைகளையுடையதும்,
அண்டர்கோன் அமரும் சோலை	தேவர்கட்குத் தலைவனான ஸ்ரீரங்கநாதன் நித்யவாஸம் பண்ணப்பெற்ற சோலைகளை
அணி	ஆபரணமாகவுடையதுமான
திரு அரங்கம் என்னு	ஸ்ரீரங்கம் என்று சொல்லமாட்டாத
மிண்டர்	நன்றியறிவில்லாத மூர்க்கர்கள்
பாய்ந்து உண்ணும் சோற்றை	மேல் விழுந்து உண்ணுகிற சோற்றை
விலக்கி	(அவர்கள் உண்ணக் கூடாதபடி) தடுத்து
நீர் நாய்க்கு இடுமின்	நீங்கள் (அந்தச்சோற்றை நாய்க்கு இடுங்கள்.

இதுவரை பகவத்விஷய விரோதிகளான பாவிகளை நினைத்ததற்கும் அவர்களோடு ஸம்பாஷணை செய்ததற்கும் ப்ராயஸ்சித்தமாக "வண்டினமுரலுஞ் சோலை" இத்யாதியைப் பரம போக்யமாகத் தாம் அநுஸந்திக்கச் செய்தேயும், மீண்டும் "திருவரங்கமென்னுமிண்டர்" என்று அப்பாவிகளையே நினைக்கிறார். அவர்களையொழிய இவர்க்கு ஒருக்ஷணமும் செல்லாதுபோலே. ஸம்ஸாரத்திலேயே நெடுநாள் ஊன்றினவன் கெரண்ட பெண்டிர் மக்களுற்றார் சுற்றத்தவரோடுண்டான பற்றை அறுத்துக்கொண்டு பகவத்விஷய சிந்தையினுலேயே போதுபோக்கவேணுமென்று பெருமுயற்சி செய்தாலும் பழையதான வாஸனையின் கனத்தினுல் அந்த ஸம்ஸாரப் பற்றை விரைவில் அறுத்துக்கொள்ள முடியாமல் "அங்குற்றேனல்லே னிங்குற்றேனல்லேன்" என்றுற்போல இருகரையையுத் தடுமாறுமாபோலே, பராங்முகரையும் சீர்திருத்தி மங்களாஸாஸநத்துக்கு ஆளாக்கிக் கொள்வதற்காகப் பாடுபடுகையாகிற ஒரு விலக்ஷண ஸ்ஸாரத்திலே நெடுநாளாக ஊன்றின இவ்வாழ்வார், மநோரதம் நிறைவேறப்பெறுத வருத்தத்தினுல் அப்பாவிகளின் பற்றை அறுத்துக்கொள்ளவேணுமென்று பெருக்கமுயன்றுலும் அஃது இவர்க்கு விரைவில் கைகூடுகிறதில்லை மங்களாஸாஸனத்திற்கு ஆள்சேர்க்கப் படுகிறபாட்டின் உறைப்பு என்னே!

திருவரங்கமென்னுமிண்டர்—அவன் தங்களுக்காக வந்து கிடவாகிற்க, அவனுடைய தேஜஸ்தை வாயாலே சொல்லவுங்கூடாமட்டாத மூர்க்கர். நரகவாஸம், கர்ப்பவாஸம் முதலானவை பிடரியைப் பிடித்துக்கொண்டு நிற்க, கேவலம் தேஹபோஷணத்திலேயே ஊன்றிக் கிடக்கிறவர்களுக்கு மேற்பட்ட மூர்க்கரும் உண்டோ?

["மிண்டர்பாய்ந்துண்ணுஞ் சோற்றைவிலக்கி நாய்க்கிடுமினீரே."] "நேமிசேர் தடங்கையினானை நினைப்பிலாவலி நெஞ்சுடைப், பூமிபாரங்களுண்ணுஞ் சோற்றினை வாங்கிப் புல்லைத் தின்னிமினே" என்றுர் பெரியாழ்வார்; இவர் நாய்க்கிடுங்களென்கிறார். தங்களை உத்தேசித்து வந்து கண்வளர்ந்தருளுகிற அந்த உபகாரத்தை அறியாத க்ருதக்னர் ஜீவிக்கிற ஜீவனத்தை விலக்கி, ஒருநாள் ஒருபிடி சோறிட்டவன் வாசலிற்பற்றிக் கிடக்குமத்தனை நன்றியறிவுடைய நாய்க்கிடுங்களென்கை.

நாய் நன்றியறிவுடையதென்பது உண்மையே ; அதற்கு சோறிடவேணுமானால் தனக்கு உரிய சோற்றை இடட்டும் ; பிறன் உண்கிற சோற்றைப் பிடுங்கி நாய்க்கு இடுவதற்கு என்ன அதிகாரமுண்டு? என்று ஸங்கிக்கவேண்டா ; "யோ அஸாதுப்யோர்த்த மாதாய ஸாதுப்யஸ் ஸம்ப்ரயச்சதி—கல்பகோடி ஸஹஸ்ராணி ஸ யாதி ச்ரேயஸாம் பதம்" என்று- அஸாத்துக்களின் பொருளைப்பறித்து ஸாத்துக்களுக்கு இடும்படி ஸாஸ்த்ரம் விதித்திராநின்றதிறே : இவ்வர்த்தத்தை உண்மையாக அறிந்து அநுஷ்டாநபர்யந்தம் வெளிக்காட்டியவர் திருமங்கையாழ்வாரென்க.

அண்டர்—இடையர்க்கும் தேவர்க்கும் பெயர். (கச)

886. மெய்யர்க்கேமெய்யனுகும் விதியிலாவென்னைப்போல *
பொய்யர்க்கேபொய்யனுகும் புட்கொடியுடையகோமான் *
உய்யப்போமுணர்விலர்கட்கு ஒருவனென்றுணர்ந்தபின்னை *
ஐயப்பாடறுத்துத்தோன்றும் அழகனூரரங்கமன்றே. (கரு)

புள் கொடி உடைய கோமான்	கருடனைக் கொடியாகவுடைய ஸ்வாமியான திருமால்
விதி இலா என்னை போல	(தெடுங்காலம் எம்பெருமானது அருளைப் பெறுதற்கு ஏற்ற) நல்வினை இல்லாதிருந்த என்னைப் போல
மெய்யர்க்கு	அத்வேஷமாத்திரமுடையவர்க்கு
மெய்யன் ஆகும்	(தன் ஸ்வரூபத்தை) உள்ளபடி காட்டித்தருவன் ;
பொய்யர்க்கு	(எம்பெருமான் விஷயத்தில்) அத்வேஷத்தைப் பெற்றிராதவர்க்கு [எம்பெருமான் விஷயத்திலே பகைமை கொண்டிருப்பவர்க்கு]
பொய்யன் ஆகும்	(தனது ஸ்வரூபத்தைக் காட்டித் தாரமல் தானும்) பொய்யனாயிருப்பன் ;
உய்ய போம் உணர்வினர்கட்கு	உஜ்ஜீவிப்பதற்கு உரிய நல்லறிவு உடையவர்க்கு [கீழ்க் கூறிய மெய்யர்க்கு]
ஒருவன் என்று உணர்ந்த பின்னை	'கடவுள் ஒருவன் உண்டு' என்று நல்லறிவு பிறந்த பின்பு
ஐயப்பாடு அறுத்து	பின்னும் வரக்கூடிய ஸந்தேகங்களைப் போக்கி
தோன்றும்	ஸேவை ஸாதிக்கிற
அழகன்	அழகையுடைய அந்த எம்பெருமானது
ஊர்	இருப்பிடம்
அரங்கம்	திருவரங்கமாகும் ;

(அன்றே-ஈற்றசை; தேற்றமுமாம்)

தம் உபதேசத்தை மதியாத ஸம்ஸாரிகளைக் குறித்து ஹிதம் கூறுவதில் நின்றும் கரல்வாங்கின ஆழ்வார்—'இந்த ஸம்ஸாரிகளுக்குள்ளே ஒருவனை என்னைப் பரோபதேஸம் பண்ண வல்லேனும்படி எம்பெருமான் தன்விஷயத்தில் படிப்படியாகப் பரமபக்தியளவான ஊற்றத்தைப் பிறப்பித்து இப்படி நிர்ஹேதுகமாகக் கடாக்ஷித்தவாறு என்னே!' என்று தமது நன்றியறிவு தோன்றக் கொண்டாடுகிறார் : இதுவன்றே அறிவுடையாருடைய செயல்.

'தைவம் உண்டு' என்ற ஆதரவோடு அங்கீகரியாவிடினும் 'தைவம் உண்டு' என்று ஒருவன் சொன்னால் அதில் ஆக்ஷேபாதிகளாலே பகைமை பாராட்டாதிருக்கும் நிலை - அத்வேஷமெனப்படும் : இதுவே பரமபக்திக்கு முதற்படி எனப்படும். ஒருவஸ்துவில் ஒருவனுக்கு த்வேஷம் குடிகொண்டிருந்தால் அவன் அவ்வஸ்துவைப் பற்றிச் சிந்திக்கவே முடியாது : அன்றி, 'தேசமுமில்லை, த்வேஷமுமில்லை' என்கிற நிலைமையிலிருந்தால் அவன் நாளடைவில் அவ்வஸ்து விடத்தில் பரமபக்திபர்யந்தமான அன்பைப் பெற்றுவிடக்கூடும் என்பது அனைவர்க்கும் அநுபவம்

ஸித்தமான விஷயம். ஆனதுபற்றியே அத்வேஷமென்பது பரமப்ரீதிக்கு முதற்படியாகக் கொள்ளப்பட்டிருக்கின்றதென்க.

இத்தகைய அத்வேஷமுடையார்க்குத் தனது ஸ்வரூபத்தைக் காட்டிக்கொடுத்தும், அவ்வாறன்றிப் பகைமை கொண்டிருக்கும் நாஸ்திகர்க்குத் தனது ஸ்வரூபத்தைக் காட்டித் தாமலும் இருப்பவனை எம்பெருமான், 'தெய்வம் ஒன்று உண்டு' என்று மாத்திரம் கருதுபவரான அந்த ஆஸ்திகர்க்கு 'நாம் அடையவேண்டிய அக்கடவுள்தான் யாவன்? அக்கடவுளை நாம் அடையுமிடத்து நமக்கு நேரக்கூடிய இடையூறுகளைத் தவிர்ப்போன் யாவன்?' என்று இவை முதலாகத் தோன்றுகிற ஸந்தேஹங்களையெல்லாம் தனது வடிவழகு முதலியவற்றால் போக்குவான்: அப்படிப்பட்டவன் நித்யவாஸம் செய்யுமிடம் திருவரங்கம் என்பது இப்பாட்டின் கருத்து. எம்பெருமானுடைய இத்தகைய தன்மையை இவர் தம் அநுபவத்தாலே உணர்ந்து கூறினராதலால் தம்முடைய க்ருதஜ்ஞதையை வெளியிடுவது இப்பாட்டு என உரைக்கப்பட்டதென்க.

'மெய்யர்க்கு' என்பதற்கு 'தத்வஜ்ஞானமுடையவர்கட்கு' என்று பொருள் கூறவேண்டியதாயிருக்க அங்ஙன்கூறாது 'அத்வேஷமுடையார்க்கு' என்று கூறியது எங்ஙனே? இது ஸமதார்த்தமாகுமோ? என்று ஸங்கிக்கக்கூடும்; கேண்மின்;—'தத்துவ ஞானிகட்கு எம்பெருமான்தான் மெய்யனுவான்' என்று கூறினால் அதனால் எம்பெருமானுக்கு ஒரு சிறப்புத் தோன்றுதாகையாலும், எம்பெருமானது சிறப்பைக் கூறவேண்டியது இங்கு அவசியமாகையாலும் இங்ஙனே பொருள் கூறவேண்டியதாயிற்று.

மெய்யாவது - ஆஸ்திகபுத்தி, பொய்யாவது - நாஸ்திக புத்தி; அதாவது - 'கடவுளுண்டு' என்பதை அங்கீகரியாமல் தாம் கண்ணாற் காண்கின்ற பொருளையே நம்புகின்ற ஞானம்; ஆகவே இப்பாட்டில் மெய்யர் என்பது ஆஸ்திகரையும், பொய்யர் என்பது நாஸ்திகரையும் குறிக்குமென்க.

விதியிலா வென்னைப்போல என்பது † மத்திமதீபமாக மெய்யர்க்கு மெய்யனுவதற்கும் பொய்யர்க்குப் பொய்யனுவதற்கும் உவமையாம். எங்ஙனேயெனில்; நான் நாஸ்திகபுத்தி கொண்டு கடவுளின் உண்மையை மறுத்து உலகத்துப் பொருள்களிடத்துப் பற்றுக்கொண்டு திரிந்த கீழ்நாள்களிலெல்லாம் அவ்வெம்பெருமானும் என்னைக்கிட்டாமல், தான் ஒருவன் உளன் என்றும் தோன்றுதபடி உபேக்ஷித்திருந்தான்; எனக்கு ஆஸ்திகபுத்தியால் எம்பெருமானிடத்து அத்வேஷம் தோன்றிய இப்போதோ அவ்வெம்பெருமான் தனது ஸ்வரூபமெல்லாம் நன்கு தோன்றுமாறு விசேஷஜ்ஞானத்தைப் பிறப்பித்தானெனக் காண்க.

ஞானம் பிறந்தபின்பு இவ்வாழ்வார் தம்மைக்குறித்து "விதியிலாவென்னை" என்று வெறுத்துக்கூறுவது - முன்னமே எம்பெருமானைக் கிட்டித் தாம் ஈடேற வேண்டியிருக்க, அங்ஙனமில்லாமல் நெடுநாள் அவனியிழந்துகிடந்த தமது தௌர்ப்பாக்யத்தை நினைப்பதனாலாம். "பழுதேபலபகலும் போயினவென்று அஞ்சியழுதேன்" என்றார் பொய்கையாழ்வாரும்.

இப்படி ஆஸ்திகபுத்திமாத்திரத்தையே வியாஜமாகக்கொண்டு தத்வஜ்ஞானம் நிரம்பாத உயிர்களையும் எம்பெருமான் காத்தருள்வதற்குக் காரணம்—அவர்கட்கெல்லாம் தாம் ஸ்வாமியாயிருப்பதே என்பது தோன்றக் கோமான் என்றார். "ஸம்பந்நராயிருக்குமவர்களேயாகிலும் ஒருகாசு விழுந்தவிடத்தே போய்த் தேடாநிற்பர்களாய்த்து - தந்தாம் வஸ்துவை விடமாட்டாமையாலே" என்ற வியாக்யான ஸூக்தியை நோக்குக.

†'மத்திமதீபமாவது—ஒரு மாளிகையின் நடுவிலே வைக்கப்பட்ட விளக்கு முன்னும் பின்னும் வெளிச்சம் தருவதுபோல, நடுவின்ற சொல்லாவது சொற்றொடராவது முன்னும் பின்னும் சென்று இயைவது.

ஒருவனென்றுணர்ந்தபின்னை—கேவலம் தேஹமே அன்று உள்ளது; தேஹாதிரிக்தமாயிருப்பதொரு ஆத்மா உண்டு; அவனுக்கு ஸ்வாமியாயிருப்பானொரு எம்பெருமானுமுண்டு, என்னும் அறிவு பிறந்தபின்பு என்றபடி.

ஐயப்பாடு—ஐயம், படு என்ற இரண்டு சொற்கள் சேர்ந்து ஒருசொல் தன்மைப்பட்டு ஐயப்படு என்று முதனிலையாகி அது ஐயப்பாடு எனத்திரிந்தது; முதனிலைதிரிந்த தொழிற்பெயர்.

887. சூதனுய்க்கள்வனுகித் தூர்த்தரோடிசைந்தகாலம் *
மாதரார்கயற்கணென்னும் வலையுள்பட்டழுந்துவேனை *
போதரேயென்றுசொல்லிப் புந்தியிற்புகுந்து * தன்பால்
ஆதரம்பெருகவைத்த அழகனூரரங்கமன்றே. (கசு)

சூதன் ஆய்	(முதலில்) சூதிலே ஊன்றினவனுய்
கள்வன் ஆகி	(பிறகு) களவிலே ஆழ்ந்தவனுய்
தூர்த்தரோடு இசைந்த காலம்	விஷயாந்தர ப்ரவணரோடே பொருந்தியிருந்த காலத்திலே
மாதரார்	ஸ்திரீகளுடைய
கயல் கண் என்னும்	கயல்போன்ற கண்களாகிற
வலையுள் பட்டு	வலையினுள்ளே அகப்பட்டு
அழுந்துவேனை	அழுந்திக்கிடக்கிற என்னை
போதர் என்று சொல்லி	'அடா! இப்படிவா' என்று அருளிச் செய்து
புந்தியில் புகுந்து	என் மனவிலே வந்து புகுந்து
தன்பால் ஆதரம் பெருக வைத்த அழகன்	தன்னிடத்திலே அன்பை வளரச் செய்த அழகையுடைய எம்பெருமானது
ஊர்	இருப்பிடம்
அரங்கம்	திருவரங்கமாகும்.

(அன்றே—ஈற்றசை; தேற்றமுமாம்)

எம்பெருமானுல் தாம் பெற்றபேற்றை மற்றொருவகையாகப் பேசுகிறார். முன்னிரண்டடிகளால்—தாம் முன்பு நின்றநிலையைக் கூறி, பின்னடிகளால்—இப்போது பெற்ற நன்மையைக் கூறுகிறார்.

ஒருவன் விஷயாந்தரங்களிலே ஈடுபட்டால் அந்த ஸப்தாதி விஷயங்களை இஷ்டப்படி அநுபவிப்பதற்குப் பொருள் விசேஷமாக வேண்டுமாதலால் எவ்வழியிலாவது அது திரட்ட வேண்டிச் சூதாடுவதிலும் களவுசெய்வதிலும் இறங்குவான்; சூதாவது—பச்சதோஹாரத்வம்; அதாவது—ப்ரத்யக்ஷக்களவு; 'கன்னக்களவன்று' என்கிற மாத்திரமேயொழிய, களவு என்பதில் தட்டில்லை; சூதாடுகிறவன் முதலில் விசேஷலாபம் வரக்கண்டு மேன்மேலும் அதிலே முயல்வான்; அடைவிலே, சூதில்பெற்ற பொருளையும் இழந்து ஏற்கனவே கையிலுள்ளதையுமிழந்து, அவைத்தையும் கொதுகைவைத்துத் தோற்கும்படியான நிலைமைக்கு வருவான்; இதில் இவ்வளவு தலையானவாறே பிறகு கன்னக்களவிலே கைவைப்பான். அதிலே ஏகாகியாகத் திரிவது சிலநாள் வரையில்; தேர்ச்சி பெற்றவாறே தீவட்டிக் கொள்ளையிலிறங்குவான்; அது ஒருவனுய்ச் செய்யக்கூடிய காரியமன்றுகையால் பலரையும் துணைகூட்டிக் கொள்வான். நாலு தூர்த்தரோடு கெருங்கினவாறே அவர்கள் மாதரார்கயற்கணெனனும் வலையில் பட்டழுந்தும்படி செய்வார்கள். அதற்கு மேற்பட்ட ஆபத்து வேறொன்று சொல்லவேண்டா. இத்தனையும் தமக்கு உண்டானதாகச் சொல்லுகிறார் இவ்வாழ்வார்.

இப்படிப்பட்ட துஷ்சரிதங்களாலே எம்பெருமானுடைய அலம்புரிந்த நெடுந்தடக்கைக்கும் எட்டாமல் நெடுந்தூரஞ்சென்ற என்னை அவ்வெம்பெருமானுடைய அழகானது 'பயலே! இங்குவா' என்றழைக்க, அதை நான் செவியிலேற்றுக் கொள்ளாமற்போக, பின்னையும் அவ்

வழகு என்னை விடமாட்டாதே என் நெஞ்சினுள்ளே வந்து சிக்கனப்புகுந்து ஸ்திரமாகக் குடி புகுந்து எம்பெருமான் பக்கலில் நான் மிக்க ஆதரம் வைக்கும்படி செய்த விசித்திரம் என்னே! என்று சிந்தித்து உருகுகின்றனர்—பின்னடிகளில்.

இங்கு முக்கியமாகக் கவனிக்கவேண்டிய விஷயம் :—"தன்பால் ஆதரம் பெருகவைத்த" என்ற அடைமொழியை அழகனிடத்திலே அன்வயிக்காமல் அழகிலே அன்வயிக்க வேண்டும் :—எம்பெருமான் ஓர் அழகு உடையவன் ; அவ்வழகு எப்படிப்பட்டதென்றால், சூதனைக் கள்வனுகி.....வலியுள்பட்டமூந்துவேனைப் போதரேயென்று சொல்லிப் புந்தியிற்புகுந்து தன்பால் ஆதரம் பெருகவைத்து—என்றிங்கனே உய்த்துணர்க. தன்பால்—எம்பெருமானிடத்திலே என்றபடி.

888. விரும்பிநின்றேத்தமாட்டேன் விதியிலேன்மதியொன்றில்லே *
இரும்புபோல்வலியகெஞ்சம் இறையிறையுருகும்வண்ணம் *
சுரும்பமர்சோலைசூழ்ந்த அரங்கமாகோயில்கொண்ட *
கரும்பினைக்கண்டுகொண்டு என்கண்ணினைகளிக்குமாறே ! (கள)

விரும்பி நின்று	ஆதாரத்தோடே ஒருபடிப்பட நின்று
ஏத்த மாட்டேன்	ஸ்தோத்ரம் பண்ணமாட்டா தவனுயிரா நின்றேன் ;
விதி இலேன்	(கைகூப்புதல் முதலிய) காயிக வ்யாபாரங்களும் செய்யப் பெறுதவனுயிரா நின்றேன்.
மதி ஒன்று இல்லே	('ஈச்வரன் ஒருவன் உண்டு' என்கிற) ஒரு அறிவும் (எனக்கு) இல்லே ;
(இப்படிப்பட்ட என்னுடைய)	
இரும்புபோல் வலிய நெஞ்சம்	இரும்பைப்போல் கடினமான கல் நெஞ்சானது
இறை இறை உருகும் வண்ணம்	கொஞ்சம் கொஞ்சமாக உருகும்படி ;
சுரும்பு அமர் சோலை சூழ்ந்த	வண்டுகள் பொருந்திய சோலைகளாலே சூழப்பட்ட
மா அரங்கம்	மாட்சிமைதங்கிய ஸ்ரீரங்கத்தை
கோயில் கொண்ட	இருப்பிடமாகத் திருவுள்ளம் பற்றின
கரும்பினை	பரமபோக்யனை எம்பெருமானை
என் கண் இனை	எனது இரண்டு கண்களும்
கண்டுகொண்டு	பார்த்தவண்ணமாய்
களிக்கும் ஆறு எ	மகிழ்ச்சியடைகிற விதம் என்னே !
(என்று ஆச்சர்யப்படுகிறபடி.)	

தரித்ரனுக்கு நித்யபாயஸம் கிடைத்தாற்போலே, ஒருவகை யோக்யதையுமில்லாத கல் நெஞ்சனை எனக்கு அழகிய மணவாளன் ஸேவைஸாதிக்கப் பெற்ற பாக்கியத்தை நான் என்னவென்று சொல்லுவேன் என்று தடுமாறுகின்றனர்.

மனஸ்ஸு, வாக்கு, காயம் என்ற மூன்றுவகை புருஷார்த்தங்களில் ஒன்றினையும் நான் பகவத் விஷயத்தில் அன்வயிக்கப்பெறவில்லே ; சிறிதுகாலமாகிலும் ஒருபடிப்பட நிலைத்துநின்று உண்மையான அன்புடன் ஸ்தோத்ரஞ் செய்யுமவனல்லேனுதலால் வாய்படைத்த பயன் பெற்றிலேன் ; ("கின் தலையைத் தாழ்த்து இருகைகூப்பென்றால் கூப்பாது பாழ்த்தவிதி" என்றபடி) ஒரு அஞ்சலியும் நேராகச் செய்யமாட்டாதவனுகையால் காயம்படைத்த பயனும் பெற்றிலேன் ; எம்பெருமானுடைய ஸ்வரூபம் ரூபம் குணம் விபூதி இவற்றைப்பற்றி விசேஷமாகச் சிந்திக்க மாட்டா மற்போனாலும், 'எம்பெருமான் ஒருவன் உண்டு' என்று அவனுடைய ஸத்தையையாகிலும் சிந்திக்கலாமே ; அதுவும் சிந்தித்திலேனுதலால் மனம்படைத்த பயனும் பெற்றிலேன். இனி மேலாவது மநஸ்ஸைத் திருத்திக்கொள்ளக்கூடுமோ வென்று பார்த்தாலும், அதற்கும் யோக்யதையில்லாதபடி மனம் கல்லாய்க்கிடக்கிறது.

[" இரும்புபோல் நெஞ்சம் " என்னுமளவே போதுமாயிருக்க, ' வலிய ' என்று விசேஷித்ததற்குக் கருத்து யாதெனில்; " இரும்புபோல் " என்று சொன்னவுடனே நமது நெஞ்சுக்கு இரும்பை உவமை கூறியது ஒக்குமாவென்று ஆராய்ந்தார்; இரும்பை நெருப்பிலே காய்ச்சி நிமிர்த்துக் கொள்ளலாம்; நமது நெஞ்சு ஒருபடியாலும் ஸர்வசக்தனாலும் நிமிர்த்தமுடியாதிருத்தலால் இவ்வுபமாநம் ஒவ்வாது, வேறு எவ்வுபமாநமும் ஏலாது என்றெண்ணி, வலிய என்றார். ஸாமாந்யமாக, ' கடினமான நெஞ்சு ' என்னலாமேயொழிய, இன்னதுபோல் கடினமானதென்று சொல்ல முடியாதென்க.]

இத்தகைய கல்நெஞ்சும் கரையும்படியாயன்றே எம்பெருமான் கோயிலிலே கண்வளர்ந்தருள்வது!. சேஷசயிப்பு அமைந்த அரங்கமாநகரில் அமர்ந்த நாதனை என் கண்கள் கண்டு களிக்கும் விதத்திற்கு நான் என்ன பாக்யமிடுவேனென்கிறார்.

உபநிஷத்திலே " ரஸோ வை ஸ: " என்று எம்பெருமானை ரஸமயனாக ஓதியிருப்பதால், இவரும் (' கரும்பு போன்றவனே ' என்னாமல்) கரும்பினை என்று ஸாக்ஷாத் கரும்பாகவே கூறுகின்றார்.

உருகும் வண்ணம் என்பது—கோயில்கொண்ட என்பதனோடு அந்வயிக்கும்; கண்டு கொண்டு என்பதனோடு இசையுமென்பாருமுளர். (கஎ)

889. இனிதிரைத்தீவலோமோத எறியுந்தண்பரவைமீதே *
தனிகிடந்தரசுசெய்யும் தாமரைக்கண்ணனெம்மான் *
கனியிருந்தனையசெவ்வாய்க் கண்ணனைக்கண்டகண்கள் *
பனியரும்புதிருமாலோ என்செய்கேன்பாவியேனே. (கஅ)

இனி திரை தீவலோ	அலைகளிலுண்டான திவலைகளானவை
இனிதுமோத	இனிதாக அடிக்க, [வீச]
எறியும்	கொந்தளிக்கிற
தண்	குளிர்ந்த
பரவைமீது	கடல்போன்ற திருக்காவேரியிலே
தனி கிடந்து	தனியே வந்து கண்வளர்ந்தருளி
அரசு செய்யும்	செங்கோல் செலுத்துகிற
தாமரை கண்ணன்	புண்டரீகாக்ஷனாய்
எம்மான்	எமக்குத் தலைவனாய்
கனி இருந்தனைய செம் வாய் கண்ணனை	கொவ்வைக்கனி போன்று சிவந்த வாயையுடையனான கண்ணபிரானை
கண்ட கண்கள்	ஸேவிக்கப்பெற்ற (எனது) கண்களில் நின்றும்
பனி அரும்பு	குளிர்ந்த கண்ணீர்த்துளிகள்
உதிரும்	பெருகாநின்றன,
பாவியேன்	(கண்ணாரக்கண்டு களிக்கைக்குப்) பாக்கியமில்லாத நான்
என் செய்கேன்	எது செய்வேன்?

எம்பெருமானை ஸேவிக்கப்பெற்றமைக்கு உகந்து உரைத்த ஆழ்வார், கண்களினுடைய களிப்புக்குப் போக்குவீடான ஆநந்தக்கண்ணீர் பெருகப்பெற்று, ' ஐயோ! இக்கண்ணீர் அரும்பரும்பாகத் துளித்துக் கண்களை மறைத்து எம்பெருமானை இடைவிடாது ஸேவிக்கவொட்டாமல் இடைச்சுவராய்த் தடை செய்கின்றனவே! கைக்கு எட்டினது வாய்க்கு எட்டாதொழியும்படி மஹாபாபத்தைப் பண்ணின நான் இந்த துக்கத்திற்கு எங்குப்போய் முறையிட்டுக் கொள்வேன் ' என்று வெறுக்கிறார்.

பரவை என்று கடலுக்குப் பெயர்: திருப்பாற்கடலிலே கண்வளர்ந்தருளுகிறவன் இங்குக் காவிரியிடையிலே வந்து கண்வளர்ந்தருள்வதாக அநுஸந்திக்கிறார் என்னலாம்: அன்றியே,

காவேரிதான் ஒரு பெருங்கடல் பெருகுமாபோலே பெருவெள்ளங் கோத்துப் புரளுங்கையாலே காவேரியையே கடலாகச் சொல்லிற்றுகவுமாம். முற்றுவமை.

தனி கிடந்து — பிராட்டிமாருமில்லாமல் பரதேசியாய்க் கிடக்கிறானென்றபடி. யன்று; நினைவறிந்து பரிமாறும் நித்யமுக்தாதிகளே ஒருநாடாக வுடையவன் அவர்களையெல்லாம் விட்டு விட்டு, ஸம்ஸாரிகள் பக்கல் நசையாலே "ஒருவனுகிலும் கிடைக்கக்கூடுமோ?" என்று வந்து கிடக்கும்படியைச் சொல்லுகிறது. தனி - ஒப்பில்லாதபடி என்றுமாம்.

அரசு செய்கையாவது — விரோதி நிரஸநம் செய்கை; அதாவது — 'அஹம்-மம' என்றிருக்கும் ஸம்ஸாரிகளின் பாழான நிலைமையைக் குலைத்து 'நம:' என்னும்படி செய்துகொள்ளுகை. "அரசு செய்யுந் தாமரைக் கண்ணன்" என்ற சொற்போக்கால் எம்பெருமான் தனது திருக்கண்ணழகால் அனைவரையும் அகப்படுத்திக் கொள்ளுகிறான் என் விளங்கும்.

பெரியபெருமாளே லேவித்தால், அவதாரத்திற் பிற்பட்டவர்கட்கும் உதவுகைக்காகக் கண்ணபிரான்தான் வந்து கண்வளர்ந்தருளுகிறானென்று ஸ்மரிக்கலாம்படி யிருக்குமாதலால் கண்ணனே என்கிறார்: "கோவலனாய் வெண்ணெயுண்டவாயன்.....அண்டர்கோ னணியரங்கன்" என்றார் திருப்பாணழ்வாரும். இவ்விடத்திலே பட்டர் அருளிச்செய்யும்படி:— "யசோதைப்பிராட்டி பிள்ளை மனம் கன்றுமல் தீம்பிலே கைவளரும்படி வளர்த்த மொசுமொசுப் பெல்லாம் பெரியபெருமாள் பக்கலில் தோற்றியிருக்கும்: வலிஷ்டாதிகளாலே ஸுஸிக்ஷித ராய் வார்ந்து வடிந்த விநயமெல்லாம் தோற்றும்படியான சக்ரவர்த்தி திருமகனை ஸ்மரிக்கலாம் படியிருக்கும் — நம்பெருமாளைக் கண்டால்" என்று.

இனிது + திரை - இனிதிரை; கடைக்குறை. இருந்தனைய - இருந்தாலனைய; இருந்தாற் போன்ற என்றபடி. ஆல் ஓ - வியப்பிடைச்சொற்கள்; இரக்கமும் கூப்பீடும் தோற்றுகிற குறிப்பிடைச் சொற்களுமாம். (கஅ)

890. குடதிசைமுடியைவைத்துக் குணதிசைபாதம்நீட்டி *
வடதிசைபின்புகாட்டித் தென்திசையிலங்கைநோக்கி *
கடல்நிறக்கடவுளெந்தை அரவணைத்துயிலுமாகண்டு *
உடலெனக்குருகுமாலோ என்செய்கேனுலகத்தீரே. (கக)

உலகத்தீரே	உலகத்திலுள்ளவர்களே!
கடல் நிறம் கடவுள்	கடல்போன்ற கருநிறத்தை யுடைய கடவுளான
எந்தை	எம்பெருமான்
குடதிசை	மேற்குத்திக்கில்
முடியை வைத்து	திருமுடியை வைத்தருளியும்,
குணதிசை	கிழக்குத் திக்கில்
பாதம் நீட்டி	திருவடிகளை நீட்டியும்,
வடதிசை	வடக்குத் திக்கிலே
பின்பு காட்டி	(தனது) பின்புறத்தைக் காட்டியும்
தென்திசை	தெற்குத் திக்கில்
இலங்கை	(விபீஷணன் வாழுமிடமான) லங்கையை
நோக்கி	(அன்போடு) பார்த்துக் கொண்டும்
அரவு அணை	திருவனந்தாழ்வானுகிற படுக்கையில்
துயிலும் ஆ	யோகநித்திரை செய்யுந் தன்மையை
கண்டு	காண்பதனால்
எனக்கு உடல் உருகும்—;	
ஆலோ	ஐயோ
என் செய்வேன்	(நான்) என்ன செய்ய மாட்டுவேன்.

கண் முதலிய அவயவங்களுக்கு உண்டாகிற விகாரமேயல்லாமல் அவற்றுக்கு ஆர்ய மாய் அவயவியான ஶரீரமும் கட்டழியாநின்றதே! இதற்கு என் செய்வேன்! என்கிறார். அழகிய மணவாளன் நான்கு திக்குக்களுக்கும் தன் ஸம்பந்தமுண்டாம்படி ஸௌஶீல்யநலனுய் யோகநித்திரை செய்தருள்வதை ஸேவித்துத் தமது ஶரீரம் நீராய்க்கரைந்து உருகிச் செயலற்றிருத்தலே உலகத்தார்க்கு வியப்போடு அறிவிக்கின்றனரென்க.

பூமியின் ஸ்ருஷ்டி - மநுஷ்யதிர்யக்ஸ்தாவரங்களான பொருள்கள் வாழ்தற்காக என்றும் ஆகாஶத்தின் ஸ்ருஷ்டி-தேவர்கள் வாழ்தற்காக என்றும் ஏற்பட்டிருக்கிறது; திக்குக்களின் ஸ்ருஷ்டி வ்யர்த்தம் என்று நினைக்கவேண்டா; சேதநர்க்குத் தன்மீது அன்பை யுண்டாக்குமாறு எம்பெருமான் தான் பள்ளி கொள்வதற்காகவே திக்குக்களை ஸ்ருஷ்டித்ததும் என்று இப்பாட்டால் கூறுவதாக விஶேஷார்த்த முரைப்பர்.

மேலைத்திக்கு-உபயவிபூதிக்கும் தலைமை வஹித்தலைத் தெரிவிக்குமாறு தான் சூடின திருவபிஷேகத்தையுடைய திருமுடியை வைப்பதனாலும், கீழைத்திக்கு-லகலலோகமும் உஜ்ஜீவிக்கும்படி ஶரணமடைதற்குரிய தனது திருவடிகளை நீட்டுவதனாலும், வடக்குத்திக்கு முரட்டு ஸ்வபாவத்தை நடையாடுவதாகி ஆழ்வார்களின் செவிக்கினிய ஈரச்சொல் நடையாடாத தேசமாகையாலே அத்திக்கிலுள்ளாரெல்லாரும் ஈடேறுதற்கு எற்படவேண்டிய பின்னழகையெல்லாம் காட்டுவதனாலும், தெற்குத்திக்கு-தனது அந்தரங்க பக்தனான விபீஷணாழ்வானுக்காகத் தனது திருக்கண்களை வைத்து அன்போடு நோக்குவதனாலும் என இவ்வாறு நான்கு திக்குக்களும் பயன் பெறுமென்க. விபீஷணாழ்வான் சிரஞ்ஜீவியாய் என்றும் இலங்கையில் வாழ்ந்து வருகின்றானென்பது நூற்கொள்கை.

இப்படி நாற்திசையிலுள்ளாரும் பயன்பெற வேண்டுமென்று ஒரு வ்யாஜம் வைத்து எம்பெருமான் பள்ளிகொண்டதும் ஆழ்வார் பொருட்டாகவே யாயிற்றென்ற கருத்து மூன்றுமடியில் தோன்றும். (எந்தை)

உடல் உருகும் - உணர்வுடைய ஜீவன் உருகுவதன்றி ஜடபதார்த்தமான உடம்பும் உருகுமென்றபடி. ["எனக்கு உடலுருகுமாலோ என் செய்கேனுலகத்திலே":]—ஆற்றுப் பெருக்கிலே அருகிலுள்ள கரைகள் உடைந்தால் கரையைப் பாதுகாப்பவர்கள் கைவிட்டுக் கடக்கின்று கூப்பிடுமாபோலே கூப்பிடுகிறார். பெரியபெருமாளழகைக்கண்டுவைத்துக் குறியழியாதே புறப்படுகிற ஸம்ஸாரிகளைப் பார்த்து, உங்களைப்போலே உடல் உருகாதே கல்லாயிருப்பதற்கு ஒரு உபாயம் சொல்லமாட்டீர்களோ? என்கிறார்.

"உடலம் நெக்குருகுமாலோ" என்பது பாடபேதம்: நெக்கு-கரைந்து என்றபடி. (கஈ)

891. பாயுநீரரங்கந்தன்னுள் பாம்பணைப்பள்ளிகொண்ட *
மாயனூர்திருநன்மார்வும் மரதகவுருவுந்தோளும் *
தூயதாமரைக்கண்களும் துவரிதழ்ப்பவளவாயும் *
ஆயசீர்முடியும்தேசும் அடியரோர்க்ககலலாமே. (உல)

பாயும் நீர் அரங்கம் தன்னுள் பாம்பு அணை பள்ளிகொண்ட	பாயாநின்றுள்ள காவிரி சூழ்ந்த கோயிலிலே சேஷஶயநத்திலே கண்வளர்ந்தருளாநின்ற	மாயனூர்	ஆச்சரிய சக்திவாய்ந்த எம் பெருமானது
		திரு நல் மார்வும்	பிராட்டி வாழ்கின்ற விலக்ஷணமான மார்பும்,

மரகதம் உருவும்	மரகதமணிபோன்ற திருமேனி நிறமும்
தோளும்	திருத்தோள்களும்
தாய தாமரை கண்களும்	பரிசுத்தமான தாமரை மலர் போன்ற திருக்கண்களும்
துவர் இதழ்	சிவந்த அதரமும்
பவளம் வாயும்	பவளம் போன்ற வாயும்
ஆய சீர் முடியும்	வேலைப்பாடுள்ள அழகிய திரு முடியும்
தேசும்	(இவற்றாலுண்டான) தேஜஸ்ஸும்
அடியரோர்க்கு	ஸ்வரூபஜ்ஞானமுடைய தாஸர்களுக்கு
அகலலாமோ	இழக்கத்தகுமோ ?

கீழ் "பனியரும்பு உதிருமாலோ என் செய்கேன் பாவியேனே" என்றும், "உடலெனக் குருகுமாலோ என் செய்கேனுலகத்தீரே" என்றும் கதறின ஆழ்வாரை நோக்கிச் சில ஸம்ஸாரிகள் "ஓய்! பகவத் விஷயத்திலே அகப்பட்டுனன் இங்ஙனே கதறுகிறீர்? அதில் ஊற்றத்தை விட்டு எங்களோடே கூடினீராகில் 'என் செய்கேன்! என்செய்கேன்!!' என்று வாய்வெருவ வேண்டாதபடி தரித்து ஸுகமே வாழலாமே! உம்முடைய ஸ்வயம்க்ருதாநர்த்தம் மிகவு மழகிது!" என்றாற்போலே சில சொல்ல; அதுகேட்ட ஆழ்வார், 'பாவிகாள்! கண்வளர்ந் தருளுகிற அழகைக்கண்டுவைத்து, 'இவ்வழகெல்லாம் நமக்காகவாயிற்று?' என்று களிக்கும் படியான ஸ்வரூபஜ்ஞாநமுடைய எங்களுக்கு, "அஹம்-மம" என்றிருக்கிற உங்களைப்போல் அகலமுடியுமோ? என்கிறார்.

எம்பெருமானுடைய அதிசயங்களை வெறும் எட்டுப்புறத்தில் கேட்டுப் போகையன்றிக்கே, பரமபாவநமான திருவாங்கத் திருப்பதியிலே திருவனந்தாழ்வான்மீது "தன் தாளுந் தோளும் முடிகளும் சமனிலாத பல பரப்பி" என்றபடி ஸகலாவயவஸௌந்தர்யமும் நன்கு விளங்கும்படி சாய்ந்தருள்கின்ற எம்பெருமானது திவ்ய தேஜஸ்ஸைக் காணப்பெற்றவர்களும் மீண்டு கால்பேர்ந்து விலகமுடியுமோ? என்க. (உ)

892. பணிவிஞல்மனமதொன்றிப் பவளவாயரங்களுர்க்கு *
துணிவிஞல்வாழமாட்டா தொல்லைநெஞ்சேநீசொல்லாய் *
அணியினுர்செம்பொனுய அருவரையனையகோயில் *
மணியனுர்கிடந்தவாற்றை மனத்தினுல்நினைக்கலாமே? (உக)

பவளம் வாய்	பவளம்போன்ற அதரத்தையுடைய
அரங்களுர்க்கு	அழகிய மணவாளன் விஷயத்திலே
பணிவிஞல்	கைங்கர்யருசியால்
மனம் அது ஒன்றி	கருத்தைப் பொருந்தவைத்து
துணிவிஞல்	துணிவுடன்
வாழமாட்டா	வாழமாட்டாத
தொல்லை நெஞ்சே	கிழத்தனமுள்ள மநஸ்ஸே!
அணியின் ஆர் செம் பொன் ஆய அருவரை அனைய	அழகினாலே பூர்ணமாய் செவ்விய பொன்னாலே செய்யப்பட்ட சிறந்த மேரு பர்வதத்தை யொத்த
கோயில்	கோயிலிலே
மணி அனுர்	நீலமணிபோன்ற எம்பெருமான்
கிடந்த ஆற்றை	கண்வளர்ந்தருளுகிறபடியை
மனத்தினுல்	நெஞ்சினால்
நினைக்கல் ஆமே	(அளவிட்டு அறியக்கூடுமோ?
நீ சொல்லாய்	நீயே சொல்லிக்காண்.

"கரும்பினைக்கண்டுகொண்டு" என்றும், "அவனைத் தூயிலுமா கண்டு" என்றும் அழகிய மணவாளனை நீர் கண்ணால் கண்டமையாலன்றே "என்செய்கேன்! என்செய்கேன்!!" என்று தவிக்கிறீர்; அப்பெருமான் பள்ளிகொண்டருளும்படியைக் கண்ணால் காணவேண்டா; ஒரு மூலையிலே உட்கார்ந்து நெஞ்சினால் த்யாநஞ் செய்துகொண்டிரும் என்று சிலர் சொல்ல,

அதற்கு உத்தரமாகத் தமது திருவுள்ளத்தை நோக்கிக் கூறுகின்றார் - அப்பெருமான் பள்ளி கொண்டருளுமாற்றை நெஞ்சினுல்தான் நினைத்துத் தரித்திருக்க முடியுமோ ? என்கிறார்.

நெஞ்சால் நினைக்கமுடியாதென்பதை உபபாதிப்பன-முன் இரண்டடிகள்.

நெஞ்சே ! நீ வெகுகாலத்தைப் பாழே கழித்தவனல்லையோ ? நீ அநுகூலப்பட்டிருந்தாயாகில் முன்னமே உஜ்ஜீவித்திருக்கலாமன்றே ? அதற்காக நீ செய்திருக்கவேண்டிய காரியமும் அதிகமொன்றுமில்லை ; உன்னுடைய சிந்தனையை எம்பெருமான் விஷயத்திலே செலுத்தி அவனைப் பணிவதாக நிலைநிறுத்தி, ' இனி நாம் பணியவேண்டிய வ்யக்தி வேறில்லை ' என்று திண்ணிதாக அத்யவஸாயங் கொண்டிருந்தால் இவ்வளவேபோரும் உஜ்ஜீவநத்திற்கு ; வெகுகாலமாக இப்படிப்பட்ட பணிவும் அத்யவஸாயமும் இல்லாமல் நெடுநாளாகப் பாழாய்ப்போனவனன்றே நீ ; இப்படி சிறிதுகாலம் ஒரு விஷயத்திலே நிலைநிற்கமாட்டாத நீ எம்பெருமான் அரவணைமேல் சாய்ந்தருளும்படியை நினைப்பதென்றால் இது கூடுமான காரியமா என்பதை நீயே ஆராய்ந்து பார் என்கிறார் என்னவுமாம்.

[பணிவினுல் மனமது ஒன்றி.] இங்கு மனம் என்று மநோவ்ருத்தியாகிய சிந்தனையைச் சொல்லுகிறது. ஒன்றி-பிறவினைப் பொருளில் வந்த தன்வினை ; ஒன்றுவித்து என்றபடி.

சிந்தனையைப் பணிவினுல் ஒன்றுவித்தலாவது-எம்பெருமானைப் பணிவதாக முயற்சி செய்தல். " இதர விஷயங்களிலே போகிற நெஞ்சை அவற்றில் நின்றும் மீட்டு ப்ராப்த விஷயத்திலே ப்ரவணமாக்குவோ மென்னும் உத்யோகமாத்ரமேயாய்த்து இவ்விஷயத்துக்கு வேண்டுவது " என்பர் பெரியவாச்சான்பிள்ளையும்.

துணிவினுல்—த்ருடாத்யவஸாயத்தினுல் என்றபடி. வாழமாட்டா என்று-இத்தனை காலமாக வாழாதொழிந்தமையைக் கூறியவாறு. [தொல்லை நெஞ்சே] இழவிலே உள்ள தொன்மையை [அநாதித்வத்தை] நெஞ்சிலே ஏறிட்டுக் கூறுகிறபடி ; அநாதிகாலம் வாழ்ச்சியை இழந்தொழிந்த நெஞ்சே ! என்றவாறு.

[அணியினர் இத்யாதி.] மஹாமேருவைப் புடைபடத் துளைத்து அது விம்மும்படி அதிலே ஒரு நீலரத்நத்தை அழுத்தினாற்போலாய்த்துக் கோயிலாழ்வார்க்குள்ளே பெரியபெருமாள் கண்வளர்ந்தருளுகிறபடி.

மணி அனர்-' அன்னர் ' என்பது ' அனர் ' எனத் தொக்கிக் கிடக்கிறது. (உக)

893. பேசிற்றேபேசலல்லால் பெருமையொன்றுணரலாகாது *
ஆசற்றார்தங்கட்கல்லால் அறியலாவானுமல்லன் *
மாசற்றார்மனத்துளானே வணங்கிநாமிருப்பதல்லால்
பேசத்தானுவதுண்டோ பேதைநெஞ்சேநீசொல்லாய். (உஉ)

பேதை நெஞ்சே	விவேகமற்ற மனமே !
பேசிற்றே	(வேதங்களும் வைதிக புருஷர்களும்) பேசின பேச்சுக்களையே
பேசல் அல்லால்	(நாமும்) பேசுவதேயல்லாமல்
பெருமை	(எம்பெருமானது) மேன்மையிலே
ஒன்று	ஏகதேசமும்
உணரல் ஆகாது	அறியமுடியாது ;
ஆசு அற்றார் தங்கட்கு அல்லால்	உபயாந்தரப்பற்றறுகிற குற்றமற்றவர்களுக்குத் தவிர (மற்றையோர்க்கு)
அறியல் ஆவானும் அல்லன்	அறிய முடியாதவனுயுமிராநின்றான் (அவன் ;)

மாசு அற்றோர் மனத்து உளானை — குற்றமற்ற பெரியோர்களின் நெஞ்சில் நித்யவாஸம் செய்யுமவனை

நாம் வணங்கி இருப்பது அல்லால் — நாம் வணங்கிக்கொண்டு காலங்கழிக்கலா மத்தனை யொழிய

பேச தான் ஆவது உண்டோ — (அவன் பெருமைக்கீடாகப்) பாசுரமிட்டுப் பேசும் படியா யிராநின்றதோ?

நீ சொல்லாய்—.

நினைக்கமுடியாதாகில் வாய்விட்டுப் பேசினாலோவென்ன; "மநஃ பூர்வோ வாகுத்தரஃ" என்றன்றோ சொல்லியிருப்பது; மநஸ்ஸாலே பரிச்சேதிக்க வொண்ணுத விஷயத்தைப் பாசுரமிட்டு முடிக்கப்போமோ என்கிறார்.

பேசமுடியாதென்றால் பேசுவதை விட்டு விலகி வாய்மூட வேண்டாவோ? பின்னையும் பேசிக்கொண்டே இருக்கிறதென்? என்ன; ஊமையாகப் பிறவாமல் நாலாறு வார்த்தைகள் சொல்லும்படியாகப் பிறந்தோமாதலால், வேதங்களும் வைதிகோத்தமர்களும் சொல்லிப் போன பேச்சுக்களில் ஏதோசிலவற்றைச் சொல்லிக்கொண்டிருக்கிறோமே யொழிய, எம்பெருமானுடைய பெருமைகளையெல்லாம் அறிந்து பேசுகிறபடியன்று என்கிறார் முதலடியில்: "நிறமுயர் கோலமும் பேருமுருவு மிவையிவை யென்று, அறமுயல் ஞானச் சமயிகள் பேசிலு மங்கங்கெல்லாம், உறவுயர் ஞானச்சுடர்விளக்காய் நின்றதன்றி யொன்றும், பெறமுயன்றி ரில்லையால் எம்பிரான் பெருமையையே" என்ற திருவிருத்தத்தை ஒருபுடைஒத்திருக்கும் இது.

அன்றியே; "யதோ வாசோ நிவர்த்தந்தே" என்று வேதம் பேசினபடியே நாமும் "எம்பெருமானுடைய பெருமையைப் பேசமுடியாது" என்று பேசுமத்தனையல்லது பெருமை அறியமுடியாது என்றும் பொருள்படும். (உஉ)

894 **கங்கையிற்புனிதமாய காவிரிதடுவுபாட்டு ***
பொங்குநீர்பரந்துபாயும் பூம்பொழிலரங்கந்தன்னுள் *
எங்கள்மாலிறைவனீசன் கிடந்ததோர்கிடக்கைகண்டும் *
எங்ஙனம்மறந்துவாழ்கேன் எழையேனேழையேனே ! (உங)

ஏழையேன் — (எம்பெருமானைக் கிட்டிஞல் அநுபவிக்க மாட்டாமலும், பிரிந்தால் தரிக்க மாட்டாமலும்) பேதைமைக்குணத்தையுடைய நான்

கங்கையின் புனிதம் ஆய காவிரி நடுவு பாட்டு — கங்காநதியிற் காட்டிலும் பரிசுத்தியுடையதாகிய காவேரிநதியினது நடுவிடத்திலே

பொங்கு நீர் — பெரிய இளர்த்தியோடு வருகின்ற (அந்நதியின்) நீர்ப் பெருக்கு

பாய்ந்து பாயும் — எங்கும் பரவிப்பாய்தற்கிடமானதும்

பூ பொழில் — அழகிய சோலைகளையுடையதுமாகிய

அரங்கம் தன்னுள் — கோயிலிலே

எங்கள் மால் — (அடியவரான) எங்களிடத்தில் பேரன்பு உடையவனும்

இறைவன் — ஸர்வஸ்வாமியும்

ஈசன் — ஸர்வநியாமகனுமாகிய ஸ்ரீரங்கநாதன்

கிடந்தது — சயனித்திருப்பதாகிய

ஓர் கிடக்கை — ஒப்பற்ற பள்ளிகொண்ட திருக்கோலத்தை

கண்டும் — ஸேவிக்கப்பெற்ற பின்பும்

மறந்து — (அந்தக்கிடையழகை) மறந்துபோய்

எங்ஙனம் வாழ்கேன் — எவ்வாறு தரித்திருப்பேன் யான்?

ஏழையேனே — ஒன்றுஞ் செய்யமாட்டாது திகைத்தவனாகவே நிற்பேன்.

உபயகாவேரி மத்தியிலே ஸ்ரீரங்கத்தில் அழகியமணவாளனது சயநதிருக்கோலத்தை ஸேவிக்கப்பெற்றபின்பு, யான் அந்தக்கிடையழகிலே மனம் ஈடுபட்டுப் புறம்பே செல்ல

மாட்டாது தவித்து வருந்துதலையொழிய அதனைமறந்து தரித்திருக்க உபாயமுண்டோ என்று-தாம் எம்பெருமானது இடையழகில் ஈடுபட்டமையை இதனால் கூறுகின்றனரென்க.

கங்காநதியானது விஷ்ணுபாதத்தில் நின்றும் தோன்றியதாதலால் பரிசுத்தமானது; என்றாலும், சிவனுடைய சடைமுடியில் தங்கியதனால் 'ரௌத்ரம்' [ருத்ரஸம்பந்தமுள்ளது-சடைச்சாறு] என்று சொல்லுகிற ஒரு குறைவை அடைந்திட்டது; இந்தக் காவேரியோ அங்ஙனம் குறைபாடு ஒன்றுமில்லாததோடு அந்தக்கங்கையைத் தனது திருவடியில் நின்று முண்டாக்கின பெருமான்தான் மிக்க அன்புபூண்டு தன் நடுவிற் பள்ளிகொள்ளும் பாக்யமும் பெற்றதுபற்றி, அந்தக்கங்கையைப் பார்க்கிலும் இதுவுற்றம் பெற்றதாகுமென்பர். *பேணைநீர் ஹலக்ஷீவ தத்கங்காம் விஷ்ணுபதீத்வ மாத்ரமூகராம் ஹேமாபகா ஹந்த்வகம்'' என்று பட்டரும் அருளிச்செய்தது காண்க.

[பொங்குநீர் பரந்து பாயும் பூம்பொழிலரங்கம்] கோயிலைக் கிட்டுகின்றோமென்கிற தூதாஹலத்தினால் பெரிய கிளர்த்திகொண்டு தனது பெருமகிழ்ச்சியெல்லாம் தோற்றுமாறு எங்கும் காவேரிநதி பாய்வதனால் எப்போதும் மலர்கள் மாறாத சோலைகள் சூழ்ந்த பெரிய பெருமாளது லௌகுமார்யத்துக்கு அநுகூலமான நீர்வளத்தையும், எப்போதும் இளவேனிற் பருவம்போலத் தோன்றுகிற பூஞ்சோலைகளையுமுடைய ஸ்ரீரங்கம்: இதனால் அத்தேசத்தினது தூய்மையும் இனிமையும் வெளியாமென்க.

இறைவன் என்பது-அவன் ஸகல பதார்த்தங்களுக்கும் தலைவன் என்பதையும்; ஈசன் என்பது-தனது தலைமைக்குத் தகும்படி ஆளவல்ல திறமையுடையவனென்பதையும் தெரிவிக்குமென்ப.

கண்டும் மறந்து எங்ஙனம் வாழ்கேன்—இவ்விஷயத்தைக் கண்டு அநுபவிப்பதற்கு முன்பாகில் மறந்தாலும் மறக்கலாம்; கண்டு அநுபவித்த பின்பு மறக்கும் வழி தெரியவில்லையே! மறக்க மருந்துண்டாகில் கொடுங்கள் என்கிறார்.

சுவேதநதியுடைய மகள் என்னும் பொருளதான காவேரீ என்ற வடசொல் காவிரி எனத்திரிந்தது. நடுவு பாட்டு-பாட்டு-ஏழனுருபு; இடத்திலே. எங்கள்-தம்மைப்போன்ற அடியாரையும் உளப்படுத்திய தன்மைப் பன்மை. மால்-அன்பு; அதனையுடையவனுக்கு ஆகுபெயர். ஏழையேன்—''நுண்ணுணர்வின்மை வறுமை'' என்றபடி 'அறிவில்லாதவன்' என்றவாறு. (உந)

**895 வெள்ளநீர்பரந்துபாயும் விரிபொழிலரங்கந்தன்னுள் *
கள்வனூர்கிடந்தவாறும் கமலநன்முகமும்கண்டும் *
உள்ளமேவலியைபோலும் ஒருவனென்றுணரமாட்டாய் *
கள்ளமேகாதல்செய்து உன்கள்ளத்தேகழிக்கின்றாயே.** (உச)

வெள்ளம் நீர்	பெருக்கையுடைய காவேரியானது
பரந்து பாயும்	எங்கும் பரவிப்பாய்தற்கு இடமானதும்
விரி பொழில்	விசாலமான சோலைகளையுடையதுமான
அரங்கம் தன்னுள்	கோயிலிலே,
கள்வனூர்	அடியவர்களைக் கொள்ளைகொள்ளுமவனான அழகிய மணவாளன்
கிடந்த ஆறும்	பள்ளிகொள்ளும்படியையும்
கமலம் கல் முகமும்	தாமரைமலர்போல் அழகிய திருமுகத்தையும்
கண்டும்	ஸேவிக்கப்பெற்ற பின்பும்,
உள்ளமே	ஓ நெஞ்சே!
வலியை போலும்	நீ கல்லாயிராநின்றாய் போலும்!
ஒருவன் என்று	அவன் ஒப்பற்றவனென்று
உணரமாட்டாய்	அறியமாட்டாய்; (இவ்விஷயத்தில்)
கள்ளம் காதலே செய்து	கபடமான பக்தியையே செய்துகொண்டு
உன் கள்ளத்தே	உனது கபடச்செய்கையிலேயே
கழிக்கின்றாயே	காலத்தைக் கழிக்கிறாயே!

எம்பெருமான் பரமபதத்தில் நித்யஸூரிகளோடு பரிமாறுவதை விட்டு விட்டு இங்கே வந்து கண்வளர்ந்தருளுவது-உண்டியே உடையே உகந்தோடு மிம்மண்டலத்தவராகிய் ஸம்ஸாரிகளை வசப்படுத்திக்கொள்வதற்காக வலைவீசுகிறபடியாதலால் கள்வனார் எனப்பட்டது. வேசியைக்கண்டு பேசவிரும்பியும், சோறுவாங்கி உண்ணக்கருதியும், திருவிழாக்களிலே திரண்டவர்கள் ஏமாந்திருக்கையில் கொள்ளை கொள்ளக்கருதியும் இவ்வாறு பலவகை எண்ணங்களோடே கோவிலுக்குள்ளே புகுந்தவர்களை, வடிவழகு முதலியவற்றைக்காட்டி நாளடைவில், தனக்கு அற்றுத்தீர்ந்த அடியவராம்படி ஆக்கிக்கொள்ளுகிற எம்பெருமானைக் கள்ளனென்னத் தடையுண்டோ? "செஞ்சொற் கவிகாள்! உயிர் காத்து ஆட்செய்மின் திருமாவிருஞ்சோலை, வஞ்சக்கள்வன் மாமாயன்" என்றுமே நம்மாழ்வாரும்,

தன் உடைமையைப் பெறுதற்கு இங்ஙனே வந்துகிடக்கிற கிடையையும், தாய்க்கோலே செய்பவனும் மயங்கி நிற்கும்படியான அழகுவாய்ந்த திருமுக மண்டலத்தையும் ஸேவிக்கப்பெற்றபின்பு நெஞ்சே! சிறிதுகூட விகாரப்படாமல் கல்போலத் திண்ணிதாயிருக்கின்றாயே! என்கிறார். "கீழ்ப்பிறந்த விகாரமெல்லாம் விஷய வைலக்ஷண்யத்தைப்பற்ற அஸத்ஸமமாயிருக்கிற தாய்த்து இவர்க்கு" என்பர் பெரியவாச்சான்பிள்ளை.

'இப்போது எனக்கு வந்த வன்மை என்ன?' என்று நெஞ்சானது கேட்க; ஒருவனென்றுணராமாட்டாய் என்கிறார்: உண்டு உறங்கும் ஸாமான்யரைப்போலே இவனையும் நினைத்திருக்கிறாயே யொழிய 'இஃது ஒரு விலக்ஷண வஸ்து' என்று விவேகிக்கமாட்டுகிறிலையே! அப்படி விவேகித்திருப்பாயாகில் அவ்விஷயத்திற்குத் தகுதியாக விடாய்பிறந்திருக்கவேணுமே; அது பிறவாமையாலே உன்னைக் கல் என்னத் தட்டென்? என்கிறார்.

கள்ளமே காதல்செய்து உன் கள்ளத்தே கழிக்கின்றாயே—நெஞ்சே!, ப்ராக்ருத விஷயங்களை விரும்பிப்போந்த வாஸனை இவ்விஷயத்திலும் தொடர்ந்த மாத்திரமே யொழிய, இதன் வைலக்ஷண்யத்துக்குத் தகுதியாக நீ காதல் கொண்டாயில்லை; கபடமான காதல்கிடாய் உன்னது, என்கை. (உச)

896 குளித்துமூன்றனலோம்பும் குறிகொளந்தணமைதன்னை *
ஒளித்திட்டேனென்கணில்லை நின்கணும்பத்தனல்லேன் *
களிப்பதென்கொண்டுநம்பீ கடல்வண்ணகதறுகின்றேன் *
அளித்தெனக்கருள்செய்கண்டாய் அரங்கமாநகருளானே. (உரு)

அரங்கமாநகருளானே!—;
குளித்து — ஸ்நாநம் பண்ணி
மூன்று அனலை — மூன்று அக்நிகளை
ஓம்பும் — வளர்ப்பதற்குரிய யோக்யதையைத் தருவதும்
குறி கொள் — கஷ்டப்பட்டுக் காப்பாற்றத் தக்கதுமான
அந்தணமை தன்னை — ப்ராஹ்மண்யத்தை
ஒளித்திட்டேன் — பாழாக்கிவிட்டேன்;
என் கண் இல்லை — (ஆத்மவிஷய ஜ்ஞாநம்) என் பக்கல் இல்லை;
நின் கண் பத்தனும் அல்லேன் — உன் விஷயமான பக்தியும் உடையவனல்லேன் நான்;
(இப்படியிருக்க;)
கடல் வண்ண—; நம்பீ—;
என் கொண்டு களிப்பது — (நான்) எதைக்கொண்டு ஆநந்தமடைவேன்?
கதறுகின்றேன் — (தூக்கத்துக்குப் போக்குவீடாக) வாய்விட்டுக் கூப்பிடா நின்றேன்;(ஆதலால்)
எனக்கு — என் விஷயத்தில்
அளித்து அருள்செய் — பிரகாசம் கிருபை செய்தருள வேணும்.
(கண்டாய்...முன்னிலையசை.)

கர்மயோகம், ஜ்ஞாநயோகம், பக்தியோகம் என்று சாஸ்த்ரங்களில் உபாயமாகக்கூறப்பட்டவற்றை அநுஷ்டிப்பதற்கு ஏற்ற ப்ராஹ்மண்யமிருந்தும் ஐயோ! எனக்கு ஒன்றிலும் யோக்யதை இல்லையே என்று தமது வறுமையைக் கூறுகின்றார்.

அக்நிஹோத்ரம் முதலிய தித்தொழில்களைச் செய்வதற்கு யோக்யதையைக்கொடுப்பது ப்ராஹ்மண்யம் என்பது முதலடைமொழியால் விளங்கும். குறிகொள் என்பதனால்-இந்த ப்ராஹ்மண்யம் மிகவருந்திக்காப்பாற்றவேண்டிய தென்பது போதரும். ப்ராஹ்மணயோனியிற் பிறந்தவன் எவ்வளவு அக்ருத்யங்கள் செய்தாலும் ப்ராஹ்மணனாகவே இருக்கிறான் என்பது கிடையாதாகையாலும், சாஸ்த்ரங்களிலே பாபங்களைக் கூறும்போது ஜாதிப்ரம்சாபாதக பாபங்கள் [அதாவது-ஜாதியில் நின்றும் நழுவச்செய்யவல்ல பாவங்கள்] என்று சில பாதகங்கள் கூறப்பட்டிருத்தலாலும் அப்படிப்பட்ட பாவங்களுக்கு ஆளாகாதபடி ஒழுங்காக இருக்காலன்றி ப்ராஹ்மண்யம் நிலைத்து நிற்கமாட்டாதாகையால், குறிகொள் எனப்பட்டதென்க.

மூன்றனல்—த்ரேதாக்நி; அதாவது-கார்ஹபத்யம், ஆஹவநீயம், தக்ஷிணாக்நி. ஓம்புதல்-ஆராதித்தல்.

"அந்தணமைதன்னை ஒளித்திட்டேன்"—நான் ஒருவன் வரம்பு கடந்து காமேயமாகத் திரிந்தவளவால் ப்ராஹ்மண்யமென்பதே ஒன்று உலகில் கிடையாதென்று சொல்லும்படியாய் விட்டதென்கை.

ஆக, 'ஒளித்திட்டேன்' என்னுமளவால் கர்மயோகத்தில் தமக்குச் சிறிதும் அந்வயமில்லாமையை அருளிச்செய்து, "என்கணில்லை" என்பதால் ஜ்ஞாந யோகமில்லாமையைக் கூறி "நின்கணும் பத்தனல்லேன்" என்பதால் பக்தியோகமு மில்லாமையைக் கூறுகின்றார்.

இப்படி உன்னைப் பெறும்வழிகளிலே ஒன்றிலும் எனக்கு அந்வயமில்லாமையாலே நான் எதைப் பற்றுசாகக்கொண்டு களித்திருப்பேன்; ஏதாவது ஸ்வல்பம் கைம்முதலாவது என்னிடத்தில் இருக்குமாகில் 'பேற்றில் நமக்கு அதிகாரமுண்டு' என்று நினைத்து ஆறியிருக்கலாம். அங்ஙன் ஆறியிருக்க விரகில்லாமையால் ஐயோ! ஐயோ!! என்று கதறுகின்றேனென்கிறார் மூன்றுமடியால்.

உம்மை நான் ரக்ஷிப்பதற்கு உறுப்பாக உம்மிடத்தில் ஒருகைம்முதலுமில்லை என்பது தெண்ணமான பின்பு கதறிப் பயனென்? என்னை என் செய்யச்சொல்லுகிறீர்? என்று எம்பெருமான் திருவுள்ளமாக; ஒரு கைம்முதலுள்ளவர்களைத்தான் ரக்ஷிப்பதென்று உனக்கு நியதியுண்டாகில் கோயிலிலே வந்து சாய்ந்தருள்வானேன்? உன்னுடைய ஒப்புயர்வற்ற கருணைக்கு என்னைத் தவிர வேறு விஷயமுண்டோவென்னும் கருத்தை நான்காமடியில் வெளியிடுகிறார். ... ... (உரு)

897 போதெல்லாம்போ துகொண்டு உன்பொன்னடிபுனையமாட்டேன்*
தீதிலாமொழிகள்கொண்டு உன்திருக்குணம்செப்பமாட்டேன்*
காதலால்நெஞ்சமன்பு கலந்திலேனதுதன்னாலே*
ஏதிலேனரங்கர்க்கெல்லே என்செய்வான்தோன்றினேனே. (உசு)

போது எல்லாம் — எல்லாக் காலங்களிலும்
போது கொண்டு — பூக்களைக்கொண்டு
உன் பொன் அடி புனைய மாட்டேன் — உன்னுடைய அழகிய திருவடிகளிலே ஸமர்ப்பிக்க மாட்டுவேனல்லேன்;
தீது இலா மொழிகள் கொண்டு — குற்றமற்ற சொற்களினால்
உன் திருக்குணம் செப்ப மாட்டேன் — உன்னுடைய நற்குணங்களைக் கீர்த்தநம் செய்யமாட்டுவேனல்லேன்;
காதலால் அன்பு — உண்மையான பக்தியால்
நெஞ்சம் — நெஞ்சிலே
கலந்திலேன் — வைத்துக்கொண்டிருக்கின்றேனில்லை;
அது தன்னாலே — ஆதலால்
அரங்கர்க்கு — அழகிய மணவாளனாகிய தேவரீர்க்கு
ஏதிலேன் — ஒரு காரணத்தாலும் ஸ்பர்சிக்கப் பெற்றவனல்லேன்;
(இப்படிப்பட்ட நான்)
என் செய்வான் தோன்றினேனே — எதற்காகப் பிறந்தேனென்று (அறியேன்)
எல்லே — ஐயோ!

"கடல்வண்ணா! கடல்வண்ணா!!" என்று கதறின ஆழ்வாரை நோக்கி எம்பெருமான், 'த்ரைவர்ணிகாதிகாரமான உபாயங்களில் உமக்கு அந்வயமில்லையென்றீர்; இருக்கட்டும்; ஸ்வாதிகாரமான அர்ச்சகம், ஸ்தோத்ரம் முதலியவற்றில் ஏதாவது அந்வயமுண்டோ?' என்று கேட்க், ஐயோ! ஒன்றிலும் அந்வயமில்லையே! என்று கையை விரிக்கிறார்.

"கள்ளார் துழாயும் கனவலரும் கூவிளையும், முள்ளார் முளரியும் ஆம்பலும் முன் கண்டக்கால், புள்ளாயோரேனமாய்ப் புக்கிடந்தான் பொன்னடிக்கென்று உள்ளாதா ருள்ளத்தை உள்ளமாக்கிகொள்ளோமே" என்றபடி கண்ணிற்சண்ட பூக்களைக் கொணர்ந்து பெருமாள் திருவடிகளிலே ஸமர்ப்பிக்க வேண்டியது ப்ராப்தமாயிருக்க, அது செய்யமாட்டுகிறிலேன்; இவ்வளவு கஷ்டமும் வேண்டா; வாயில்வந்த நாலு சொற்களைச்சொல்லி ஸ்தோத்ரமாவது செய்யலாமே; அதுவும் செய்யப் பெற்றிலேன்; அவ்வளவு சிரமமும் வேண்டா; நெஞ்சிலேயாவது சிறிது ஸ்நேஹம் வஹிக்கலாமே; அதுவும் பெற்றிலேன்; இப்படி ஒருவிதத்தாலும் எம்பெருமான் விஷயத்திலே நான் கிஞ்சித்கரிக்கப் பெறாதவனானபின்பு, ஆட்டின் கழுத்தில் மூலைக்கும் எனக்கும் ஒரு வாசியில்லை; என்னுடைய பிறவி வீண்! வீண்!! வீண்!!! என்கிறார். (உசு)

898 குரங்குகள்மலையை நூக்கக் குளித்துத்தாம்புரண்டிட்டோடி *
தரங்கநீரடைக்கலுற்ற சலமிலாவணிலுப்போலேன் *
மரங்கள்போல்வலியநெஞ்சம் வஞ்சனேன்நெஞ்சுதன்னுல் *
அரங்கனுர்க்காட்செய்யாதே அளியத்தேனயர்க்கின்றேனே. (உஎ)

குரங்குகள்	வாநரவீரர்கள் (கிஞ்சித்கரித்தது ஸ்வரூபம் நிறம் பெறுவதற்கு)
மலையை நூக்க	மலைகளைத்தள்ளிக்கொண்டுவர
குளித்து புரண்டிட்டு ஓடி	நீரிலே முழுகி (கரையிலுள்ள உலர்ந்த மணலிலே) புரண்டு ஓடி
தரங்கம் நீர் அடைக்கல் உற்ற	அலைக்கிளர்ச்சியையுடைய கடலைத் தூர்க்கையிலே ஒருப்பட்ட
சலம் இலா	கபடமற்ற
அணிலும் போலேன்	அணில்களையும் ஒத்திருக்கின்றேனில்லை;
மரங்கள் போல் வலிய நெஞ்சம்	மரங்களைப்போலே கடினமான நெஞ்சையுடையனாய்
வஞ்சனேன்	வஞ்சனையையே தொழிலாகவுடையனாய்
அளியத்தேன்	அருமந்த மநுஷ்யஜன்ம நான்
அரங்கனுர்க்கு	அழகியமணவாளனுக்கு
நெஞ்சு தன்னுல்	பாவநா வ்ருத்தியாலுங்கூட
ஆள் செய்யாதே	அடிமை செய்யாமல்
அயர்க்கின்றேன்	அநர்த்தப்படா நின்றேன்.

மநுஷ்யனாய்ப் பிறந்தவன் செய்யக்கூடிய கிஞ்சித்காரங்களில் மாத்திரமே யன்று எனக்கு அந்வயமில்லையென்பது; ஸாமாந்யமான திர்யக்குக்கள் செய்யக்கூடிய கிஞ்சித்காரமும் பாவியேன் செய்யப்பெற்றிலேன் என்று வருந்துகின்றார்.

ஸ்ரீராமாவதாரத்தில் பெருமாள் இலங்கைகாகர் எழுந்தருள்வதற்காகக் கடலில் அணை கட்ட நேர்ந்தபோது வாநரவீரர்கள் மலைகளைக் கொணர்ந்து எறிந்து கடலைத் தூர்ப்பதைக் கண்ட அணிற்பிள்ளைகள் 'இவ்வாநரங்கள் தமது சக்திக்கு இயன்ற காரியத்தைச் செய்து பெருமாள் விஷயத்திலே கிஞ்சித்கரித்தால் நாமும் நமது சக்திக்கு ஏற்றவாறு இப்பெரிய காரியத்திலே சிறிது கிஞ்சித்கரிப்போம்' என்றெண்ணி, எல்லா அணிற்பிள்ளைகளும் கடலிலே முழுகுவது, உடனே அந்த ஈரவுடம்போடே கரைமேல் மணலில் புரண்டு உடலில் ஒட்டிக்கொண்ட மணல்களைக் கடலிலேகொண்டு உதறுவதாய் இப்படிப்பட்ட ஒரு காரியத்திலே ஸேதுபந்தன கைங்கரியத்திற்கு உதவிபுரிந்ததாக ஒரு இதிஹாஸம் உண்டு; அதனை அருளிச்செய்கிறார் முன் இரண்டடிகளில்.

வாநரங்கள் போலவும் அணிற்பிள்ளைகள் போலவும் சரீர சக்தியுள்ளபடி ஒருகைங்கரியமும் செய்யமுடியாமற் போயினும், நெஞ்சாலேயாவது எம்பெருமானை நினைத்து அவ்வழியாலே

பகவத் கைங்கர்யபரர்களில் ஒருவனாக நிற்கலாமே; அதுவுமில்லாமல் என் அருமருந்தன்ன மானிடப் பிறவியைப் பாழே போக்கினேனே! என்று கதறுகின்றார் பின்னடிகளில் (உஎ)

899 உம்பராலறியலாகா ஒளியுளாரானைக்காகி *
செம்புலாலுண்டுவாழும் முதலைமேல்சீறிவந்தார் *
நம்பரமாயதுண்டே நாய்களோம்சிறுமையோரா *
எம்பிராற்காட்செய்யாதே யென்செய்வான்தோன்றினேனே (உஅ)

உம்பரால் அறியல் ஆகா ஒளி உளார்	தேவர்களாலும் (இவ்வகையென்று பரிச்சேதித்து) அறிய முடியாத தேஜோமயமான பரமபதத்தை விபூதியாகவுடைய எம்பெருமான்
ஆனைக்காகி	கஜேந்த்ராழ்வானுக்காக,
செம் புலால் உண்டு வாழும் முதலை மேல் சீறி	சிவந்த மாம்ஸத்தை புஜித்து வாழ்கிற முதலையின் மேலே சீற்றங்கொண்டு
வந்தார்	(மடுவின் கரையிலே) எழுந்தருளினார்;

(இப்படி ஆச்ரித பக்ஷபாதியாய் ரக்ஷிக்குமவனிருக்க;)

நம் பரம் ஆயது உண்டே	(நம்முடைய ரக்ஷணத்தில்) நமக்கொரு பலமுண்டோ?
நாய்களோம் சிறுமை ஓரா	நாய்போல் நிக்ருஷ்டரான நம்முடைய தண்மையை ஆராயாதவரான
எம் பிராற்கு	எம்பெருமானுக்கு,
ஆள் செய்யாதே	அடிமைசெய்யப் பெறாமல் (இருக்கிற நான்)
என் செய்வான் தோன்றினேன்	எதுக்காக பிறந்தேன்!

மடுவின் கரையிலே முதலையின் வாயில் அகப்பட்டு வருந்தின கஜேந்த்ராழ்வான் "நாராயணா! ஓ! மணிவண்ணா நாகணையாய்!" என்று அழைத்தவாறே அரைகுலையத் தலைகுலைய மடுவின்கரையிலே ஓடிவந்தவனன்றோ எம்பெருமான்; இப்படி ஆச்ரித வ்யாமுக்யனாய் ஆச்ரித பக்ஷபாதியான எம்பெருமானிருக்க அவனைக் கடகாகப்பற்றாமல நம்மைநாமே ரக்ஷித்துக் கொள்ளப் பார்ப்பதும் ஒரு காரியமாகுமோ? ஆனால் பரமோத்க்ருஷ்டனான அவன் பரமநிக்ருஷ்டரான நம்மை ஒரு பொருளாக நினைப்பனோ என்று சிறிது சங்கிக்கலாம்; இதுவும் அவனுடைய ஸ்வரூபத்தை அறியாதாருடைய சங்கையாகும்; 'இவன் நீசன், இவன் உத்க்ருஷ்டன்' என்று ஏற்றத்தாழ்வுகளைப் பார்ப்பவனல்லன் எம்பெருமான். இப்படிப்பட்ட எம்பெருமான் விஷயத்திலே சிறிதும் அடிமை செய்யப்பெறாத பாவியேன் எதுக்காக ஒரு மனிதனாகப் பிறந்தேனென்று தலையிலடித்துக் கொள்ளுகிறபடி. பரமபதத்தை ஒளி என்ற சொல்லாற் கூறியது வடமொழி வேதப்ரக்ரியையை அடியொற்றியாம்.

"செம்புலாலுண்டு வாழும்" என்று முதலைக்கு இட்ட அடைமொழியின் கருத்து என்னென்னில்; "தீர்யக்ஷு நைவஹி விபக்ஷதயோபசார:" (அதிமாநுஷஸ்தவம்) என்றபடி எதிரியாக நினைக்கவும் தகாத ஒரு ஹீந ஜந்துவை எதிரியாகி அதன்மேல் கோபங்கொண்டது ஆச்ரித பக்ஷபாதத்தாலன்றோ என்னுங் கருத்து வெளிவரும்.

நம்பரம்—பலமு என்னும் பொருளதான பர: என்ற வடசொல் பரமெனத் திரிந்தது. "ந்யஸ்ய தண்டம் பாதபத்மே வரத நிஜபரம் நிர்ப்பரோ நிர்ப்பயோஸ்மி" என்று அநுஸந்திப்பது அறிவுடையார் செயலாதலால் நமக்குப் பரமான தொன்றுமில்லையென்க. (உஅ)

900 ஊரிலேன்காணியில்லை உறவுமற்றொருவரில்லை *
பாரில்நின்பாதமூலம் பற்றிலேன்பரமமூர்த்தி *
காரொளிவண்ணனே கண்ணனேகதறுகின்றேன் *
ஆருளர்களைகணம்மா அரங்கமாநகருளானே. (உக)

பாரில்	இந்தப் பூமியிலே	பற்றிலேன்	(தஞ்சமாகப்) பற்றுதலனை யிராகின்றேன்;
ஊர் இலேன்	தேவரீர் உகந்திருக்கும் திருப் பதிகளிலே பிறக்கப் பெற்றிலேன்;	பரம மூர்த்தி	மிகச் சிறந்தவனே!
காணி இல்லை	(திருப்பல்லாண்டு பாடுகை முதலானவற்றுக்காக விடப்பட்ட) காவேரியாட்சியும் எனக்கில்லை;	கார் ஒளி வண்ணனே	மேகத்தின் காந்திபோன்ற மேனி நிறமுடையவனே!
		கண்ணனே	ஸ்ரீ கிருஷ்ணனே!
உறவு இல்லை	பந்துக்களுமில்லை;	கதறுகின்றேன்	(வேறு புகலற்று உன்னையே) கூப்பிட்டா நின்றேன்;
மற்று ஒருவர் இல்லை	தோழன்மார் முதலானவர் களும் ஒருவருமில்லை.	அம்மா	ஸ்வாமிந்!
நின் பாதம் மூலம்	தேவரீருடைய திருவடி களையும்	அரங்கமா நகருளானே.—;	
		களைகண் ஆர் உளர்	(உன்னையொழிய வேறு ரக்ஷகர் யார் இருக்கிறார்!

தமக்கு ஒருவிதத்தாலும் 'பேறு தப்பா' தென்று நிச்சயித்து விசாரமற்றிருப்பதற்கு இடமில்லாமையை விரிய உரைக்கும் பாசுரம் இது.

ஊரிலேன்.—வேறு எவ்வித யோக்யதையுமில்லாமற் போனாலும் ஸாளக்ராமம், கோயில் திருமலை, பெருமாள்கோயில் முதலிய திவ்யதேசங்களில் ஜன்மமாவது கிடைத்தால் அதைக் கொண்டு உய்வு பெறலாம். அப்படிப்பட்ட ஒரு தேசத்திலும் எனக்குப் பிறவி நேரவில்லையே! என்கிறார்.

காணி யில்லை.—திவ்யதேசத்தில் ஜன்மமில்லாவிடினும் உதாரணார்த்தமாக ஏதாவது கொஞ்சம் க்ராம பூமிகள் ஏற்பட்டிருந்தால் அங்குப்போகவேண்டிய காலங்களில் யாத்ருச்சிகமாக இடைவிலே ஒரு திவ்யதேசசேவை கிடைக்கக்கூடும் அப்படிப்பட்ட ப்ரஸக்தி நேருவதற்கு ஒரு குழியளவு காணியுமில்லை யென்கிறார்.

இவையொன்றுமில்லையாகிலும் திவ்யதேசவாஸிகளோடு உறவு இருக்குமாகில் பந்துக்ருத்ய பரிபாலனத்துக்காகச் சிலகாலம் அங்குப்போகவும் அதடியாக பகவத்சேவை கிடைக்கவும் ப்ரஸக்தியுண்டு; அப்படிப்பட்ட உறவினர்களும் எனக்கில்லை; ஆனபின்பு ஒரு வழியிலும் உன்னைப்பெற உபாயமில்லாமையாலே "நின்பாத மூலம் பற்றிலேன்" என்கிறார்.

இப்படி ஒரு கைம்முதலுமில்லாதவனென்ற காரணத்தினால் என்னை நீ விடலாகாது; கெட்டுப்போன உடைமையைப் பெறுவதற்கு உடையவன் முயற்சி செய்யுமாபோலே கெட்டுப்போன அடியேனைப் பெறுவதற்கு நீர் முயலவேண்டும்படியான இங்கொழிக்கவொழியாத உறவு இருப்பதை நோக்கவேணுமென்கிறார், பரமமூர்த்தி என்று தொடங்கி. (உக)

901 மனத்திலோர் தூய்மையில்லை வாயிலோரின் சொலில்லை *
சினத்தினல்செற்றம்நோக்கித் தீவிளிவிளிவன்வாளா *
புனத்துழாய்மாலையானே பொன்னிசூழ்திருவரங்கா *
எனக்கினிக்கதியென்சொல்லாய் என்னையாளுடையகோவே. (நம)

புனம் துழாய் மாலையானே	தன்னிலத்திலே வளர்ந்து செவ்விதான திருத்து ழாயை மாலையாக அணிந் துள்ளவனே!	மனத்தில் ஓர் தூய்மை இல்லை	(என்) மநஸ்ஸிலே தெளிவு கொஞ்சமும் இல்லை;
பொன்னி சூழ் திரு அரங்கா	காவேரியாலே சூழப்பட்ட ஸ்ரீரங்கத்தில் சாய்ந்தருள் பவனே!	வாயில் ஓர் இன் சொல் இல்லை	வாயிலே ஒரு நற்சொல்லும் கிடையாது;
என்னை ஆள் உடைய கோவே	அடியேனை அடிமையாகக் கொண்ட ஸ்வாமியானவனே!	வாளா சினத்தினல் செற்றம் நோக்கி தீ விளி விளிவன்	நிஷ்காரணமாக கோபத்தாலே பகைமை தோற்றப்பார்த்து மிகக்கொடுமையாக வார்த்தை சொல்லா நிற்பேன்;

எனக்கு { இப்படிப்பட்ட துர்க்குணங்கள் நிறைந்த எனக்கு } { இனி / கதி என் / சொல்லாய் } இனிமேல் / என்ன கதி? / அருளிச்செய்யவேணும்.

"குளித்து மூன்றனலோயோம்பும்" என்ற பாட்டுத்தொடங்கி ஐந்து பாட்டுக்களாலே தம்மிடத்தில் ஒருவித நன்மையும் இடையாதென்பதை வெளியிட்ட ஆழ்வாரை நோக்கி எம்பெருமான், "ஆழ்வீர்! உம்மிடத்தில் ஒரு நன்மையும் இல்லையென்றீர்; இருக்கட்டும், ஒருவித நன்மையுமில்லாதாகப்போலே ஒருவிததீமையுமில்லாதிருந்தாலும் போதும்; அப்படி உண்டோ?" என்று கேட்க; நநிந்திதம் கர்மததஸ்திலோகே ஸஹஸ்ரசோ யந்நமயாவய்யதாயி" என்ற ஆளவந்தாரைப்போலே என்னிடத்திலில்லாத தீமை உலகத்திலேயே இல்லை! எல்லா விதத் தீமைகளும் என் பக்கல் குடிகொண்டிருக்கின்றன வென்கிறார்.

மனத்தில் ஓர் தூய்மை இல்லை—காமம், க்ரோதம், லோபம், மோஹம், மதம், மாத்ஸர்யம் என்று சொல்லப்படும் பல துர்க்குணங்களில் ஒன்றுவது குறைந்தால் கொஞ்சமாவது சித்தசுத்தி ஏற்படும், அப்படியுமில்லை யென்கை.

நெஞ்சு பூர்ணமாகக் கெட்டுப்போயிருந்தாலும் வாயில் நாலு நல்லசொற்கள் வந்தாலாவது நாலுபேர் பார்த்து 'இவன் நல்லவன்' என்று சொல்லக்கூடும், இப்படியுமில்லை; தப்பிப்போயும் ஒரு நல்லவார்த்தை வாயில் வருவதில்லை. ஒருவன் நல்லாடை யுடுத்து நால்வர்க்கு நல்லனாகத் திரிந்தானாகில் அவனுடைய அந்த மேன்மையைப் பொறுக்கமாட்டாமல் நிஷ்காரணமாக நான் அவர்களைப் பழித்துக்கூறும் சொற்களுக்கு எல்லையேயில்லை.

இப்படி தமது தீமைகளைப் பரக்க உரைத்த ஆழ்வாரை நோக்கி எம்பெருமான் "ஆழ்வீர்! பேற்றுக்கு ப்ரதிபந்தகம் எவ்வளவு வேணுமோ அவ்வளவும் உம்மிடத்தில் இருப்பதாகக் கூறுகின்றீர்; இப்படிப்பட்ட உம்மை நான் என்செய்பவல்லேன்; உம்முடைய கருமபலனை நீர் அநுபவிக்கக்கடவீர்" என்று உபேக்ஷைதோற்ற அருளிச்செய்ய, அதற்கு உத்தரமாகப் "புனத்துழாய் மாலையானே" என்கிறார்; நம்முடைய குறைகளைப்பார்த்து அகலவொண்ணுதபடி, ஒழிக்கவொழியாத உறவை ஏறதுவாகக் கைப்பற்றக் கடவோமென்று காக்குமியல்வினனாயிருக்குமிருப்புத்தோற்றத் தனமாலை யிட்டிருப்பவரன்றோ தேவீர்; நாங்கள் கருமபலனை அனுபவிப்பதற்கு நீர் தனமாலை யிட்டுக்கொண்டிருப்பானேன்? என்கை. ... (நடு)

902 தவத்துளார்தம்மிலல்லேன் தனம்படைத்தாரிலல்லேன் *
உவர்த்தநீர்போல என்றனுற்றவர்க்கொன்றுமல்லேன் *
துவர்த்தசெவ்வாயினூர்க்கே துவக்சறத்துரிசனானேன் *
அவத்தமேபிறவிதந்தாய் அரங்கமாநகருளானே. (நக)

அரங்கமாநகருளானே!—;

தவத்துளார் தம்மில் அல்லேன் { தபஸ்ஸை அநுஷ்டித்தவர்களில் }

தனம் படைத்தாரில் அல்லேன் { (தனியாராதனம் முதலியவற்றுக்காகப்) பொருள் ஸம்பாதித்தவர்களிலும் சேர்ந்தவனல்லேன்; }

என்றன் உற்றவர்க்கு { என்னைச் சேர்ந்தவர்களுக்கு }

உவர்த்த நீர் போல { உப்புத்தண்ணீர்போல }

ஒன்றும் அல்லேன் { ஒன்றுக்கும் உதவாதவனாயிரா நின்றேன்; }

துவர்த்த செவ் வாயினூர்க்கே { பழுப்பேறின அதரத்தையுடைய மாதர்கட்கும் }

துவக்கு அற ஸம்பந்தம் அற்றுப்போம்படி

துரிசன் ஆனேன் · கள்ளனாயினேன்;

(இப்படிப்பட்ட எனக்கு)

பிறவி அவத்தமே தந்தாய் { ஜன்மத்தை வ்யர்த்தமாகவே கொடுத்தாய். }

'தவமாவது—சரீரத்தை வருத்தப்படுத்திச் செய்யும் காரியம்; முமுக்ஷுக்களாயிருப்பார் மோக்ஷார்த்தமாகத் தவம்புரிவர்கள்; புபுக்ஷுக்களாயிருப்பார் ஸ்வர்க்கம் முதலிய ப்ரயோஜநாந்தரங்களைக் குறித்துத் தவம் புரிவார்கள்; நான் ஒருவிதமான தவமும் செய்திலேன்.

ஸ்வவிஷயத்திலே விநியோகப்படுகிற தனத்தை நான் படைக்கவில்லை என்கிறார் 'தனம் படைத்தாரிலல்லேன்' என்பதனால். "பொருள் கையுண்டாய்ச் செல்லக்காணில் போற்றி யென்றேற்றெழுவர்" (திருவாய்மொழி—கூ-க-நு) என்றபடி கையில் நாலுகாசு நடமாடுமளவு கழிந்தால் பந்துக்களும் நோக்கமாட்டார்களென்ற கருத்துடன் இரண்டாபடி அருளிச்செய்கிறார். உவர்த்த நீர் போல--உப்புத் தண்ணீரை முகத்திலே இறட்டிக்கொண்டால் கண்விழிக்கவொண்ணாதபடி கரிக்குமாபோலே என்னை அவர்கள் நேர்முகம் பார்க்கமுடியாதபடி அவர்கட்கு நான் தீயனாய்விட்டேனென்கை.

இப்பாசுரத்திற்கு உள்ளுறை பொருள்:— [தவத்துளார் இத்யாதி.] உன்னுடைய நிர்ஹேதுக விஷயீகாரத்துக்கு விரோதியாக நான் ஒரு ஸ்வப்ரவர்த்தியும் செய்யவில்லை: கையில் காசுள்ளவனையிருந்தேனகில் ஆகிஞ்சந்யத்தில் குறையுடையேனுவேன்; அங்ஙனுமில்லை; அகிஞ்சநர்களில் தலைவனையிராநின்றேன். கொண்டபெண்டிர் மக்களுற்றார் சுற்றத்தவர் என்ற ஆபாஸ பந்துக்களோடே போதுபோக்காகின்றேனகில் "சேலேய்கண்ணியரும் பெருஞ்செல்வமும் நன்மக்களும், மேலாத்தாய் தந்தையுமவரே யினியாவாரே" என்னும் நிலைவாய்ந்த பிறகு நாம் கைப்பற்றுவோமென்று நீ ஆறியிருக்கலாம்; அங்ஙனுமில்லை: பந்தக்களுக்கு என்னால் ஆகக்கூடிய நன்மை ஒன்றுமில்லாமையாலே அவர்கள் என்னை விட்டொழிந்தனர்; சேலேய்கண்ணியரிடத்தும் நான் கள்ளனுய்ப் போந்தபடியாலே அவர்களும் என்னைத் தூற்றிவிட்டனர். இனி உன்னுடைய விஷயீகாரம் இடையூறின்றி உள்புகுரலாமென்றவாறு. இந்த உள்ளுறை பொருளுக்கு நான்காமடியோடே ஸங்கதி எங்ஙனேயென்னில்: இப்படி உன் விஷயீகாரத்திற்கு நான் உசிதனுயிருக்கச்செய்தேயும் என்னை நீ உபேக்ஷிப்பதால் என்னை நீ வீணே படைத்தாயிறே என்கிறார். அவத்தம்—அவத்யம் என்ற வடசொல் விகாரம். (நூ)

903 ஆர்த்துவண்டலம்பும்சோலை அணிதிருவரங்கந்தன்னுள் *
கார்த்திரளனையமேனிக் கண்ணனேயுன்னைக்காணும் *
மார்க்கமொன்றறியமாட்டா மனிசரில்துரிசனுய *
மூர்க்கனேன்வந்துநின்றேன் மூர்க்கனேன்மூர்க்கனேனே. (நூ)

வண்டு ஆர்த்து அலம்பும் சோலை அணி	வண்டுகள் ஆரவாரம் செய்து கொண்டு அலைந்துகொண்டிராநின்ற சோலைகளாலே அழகு பெற்றிருக்கிற
திரு அரங்கம் தன்னுள்	ஸ்ரீரங்கத்திலே (பள்ளி கொண்டருளாநின்ற)
கார் திரள் அனைய மேனி க்கண்ணனே	மேகஸமூஹத்தை ஒத்த திருமேனியையுடைய பெருமானே!
உன்னை காணும் மார்க்கம்ஒன்று அறியமாட்டா	உன்னை ஸாக்ஷாத்கரிக்கக் கூடிய உபாயமொன்றையும் அறியமாட்டாதவனுய்
மனிசரில்	மனிதர்களுக்குள்
துரிசன் ஆய	கள்ளனுய்,
மூர்க்கனேன்	பிடித்தது விடமாட்டாத மூடனுகிய அடியேன்,
வந்து நின்றேன்	(வேறுபுகலற்று, தேவர் திருமுன்பே) வந்து நின்றேன்;
மூர்க்கனேன் மூர்க்கனேன்	என்னுடைய தண்மையை நன்றாகக் கடாக்ஷித்தருள வேணுமென்றபடி.

எம்பெருமான் ஆழ்வாரைநோக்கி "ஸம்ஸாரிகளுக்குங்கூட ஆகாதபடி அஸாரமான் நீர் என்னிடத்தில் வந்து நிற்பதேன்?" என்று கேட்க; என்னுடைய மூர்க்கத்தனத்தாலே வந்து நின்றேன்காண் என்கிறார்.

வண்டுகள் பலவகைப்பட்ட மலர்களில் பெருகும் தேனைப் பருகுவதற்காகப் போராவாரம் செய்துகொண்டு அலையாநிற்கப்பெற்ற சோலைகள் சூழ்ந்த திருவரங்கம் பெரியகோயில்

வில் காளமேகங்களெல்லாம்கூடி இங்ஙனே ஒரு உருவெடுத்துக்கிடக்கின்றனகொல் என்று சங்கிக்கும்படியாகப் பரமபோக்யமாய்ப் பள்ளிகொண்டருளாநின்ற பெருமானே! தேவரீரை ஸாக்ஷாத்கரிக்கப் பெறும் உபாயம் இன்னதென்று அறியமாட்டாதவர்களில் பெருங்கள்ளனாகிய அடியேன் என் நிலைமையை நினைத்துப்பார்த்தால் தேவர் திருமுன்பே வந்து நிற்கைக்கு யோக்யதையே இல்லை; ஆயிருக்கச்செய்தேயும் யுக்தாயுக்தம் ஆராயமாட்டாத மூர்க்கனுகை மாலே லஜ்ஜாபயங்களற்று வந்து நின்றேனென்கை.

அவனைக் காணும் மார்க்கங்களாவன:—கர்மயோகம், ஜ்ஞாநயோகம், பக்தியோகம், அவதாரரஹஸ்யஜ்ஞானம், புருஷோத்தமவித்யை, புண்யக்ஷேத்ரவாஸம், திருநாமஸங்கீர்த்தனம் முதலிய உபாயங்கள். ... ... (நஉ)

904 மெய்யெல்லாம்போகவிட்டு விரிகுழலார்ப்பட்டு *
பொய்யெல்லாம்பொதிந்துகொண்ட போழ்க்கனேன்வந்து நின்றேன் *
ஐயனேயரங்கனே உன்னருளென் னுமாசைதன்னுல் *
பொய்யனேன்வந்து நின்றேன் பொய்யனேன்பொய்யனேனே. (நஙு)

மெய் எல்லாம் { மெய்யான (நினைவு, சொலவு, செயல் ஆகிய) எல்லாவற்றையும்
போகவிட்டு நீக்கிவிட்டு
விரி குழலார்ப் பட்டு { விரிந்த கூந்தலையுடைய மாதர் திறத்தில் ஆழங்காற்பட்டு (அகப்பட்டு)
பொய் எல்லாம் { எல்லாவிதமான பொய்களையும்
பொதிந்து கொண்ட { நிறைத்துக்கொண்டிருக்கிற
போழ்க்கனேன் க்ருத்ரிமனான அடியேன்

ஐயனே ஸ்வாமின்!
அரங்கனே! —;
உன் அருள் என்னும் ஆசை தன்னுல் { தேவரீருடைய க்ருபையிலே பூண்டான ஆசையினாலே
வந்து நின்றேன்—;
(நான் எப்படிப்பட்டவனென்றால்;)
பொய்யனேன் பொய்யனேன் பொய்யனேன் { மனமொழி மெய்களாகிற மூன்று காரணங்களிலும் பொய்யன்;
வந்து நின்றேன் { (தேவர் திருமுன்பே வெட்கமற்று) வந்துநின்றேன்.

தம்முடைய தாழ்வுகளை வாயாரச்சொல்லிக்கதறி தேவரீருடைய கருணையொன்றையே எதிர்பார்த்திருப்பவனடியேன் என்கிறார்.

மனம், மொழி மெய் என்கிற முக்காரணங்களிலும் ஸத்யம் நிலையாயிருக்கப்பெற்ற உத்தமாதிகாரியாயிருக்க முடியாமற்போனாலும் ஏதாவதொரு காரணத்திலாவது ஸத்யமாயிருக்கலாம்; அப்படிப்பட்ட நிலைமையும் எனக்கில்லை; விஷயாந்தர ப்ராவண்யத்தாலே பொய்தவிர வேறில்லாதவனுயிரான்றேன். ஆயினும் "தேவரீருடைய திருவருள் இருக்குமாலை நமக்கொரு குறைவுமில்லை" என்கிற விச்வாஸமொன்றுமாத்திரம் என்னிடத்தில் உள்ளதாதலால் அக்கருணையிலுள்ள ஆசையாலே, வெட்கமும் அச்சமுமற்றுத் திருமுன்பே வந்து நின்றேன் என்கிறார்.

போழ்க்கன்—முறைகேடன், வழிதப்பினவன். 'போட்கன்' என்றலுமுண்டு. (நஙு)

905 உள்ளத்தேயுறையும்மாலே உள்ளுவா னுணர்வொன்றில்லா *
கள்ளத்தேன் நா னும்தொண்டாய்த் தொண்டுக்கேகோலம்பூண்டு *
உள்ளுவாருள்ளிற்றெல்லாம் உடனிருந்தறிகியென்றே *
வெள்கிப்போயென் னுள்ளேநான் விலவறச்சிரித்திட்டேனே (நச

உள்ளத்தே உறையும் மாலே { நெஞ்சினுள்ளே வாஸஞ்செய்கிற எம்பெருமானுடைய உன்னை
உள்ளுவான் உணர்வு ஒன்று இல்லா { சிந்திப்பதற்குறுப்பான அறிவு சிறிதும் இல்லாத

கள்ளத்தேன் நானும்	கள்ளநெஞ்சுடைய அடியேனும்
தொண்டு ஆய்	(உன்) அடிமையிலே அன்வயித்தவனாய்
தொண்டுக்கே கோலம் பூண்டு	அவ்வடிமைக்கு உரிய வேஷங்களை அணிந்து
(இருந்தபோதிலும்)	
உள்ளுவார் உள்ளிற்று எல்லாம்	நினைப்பவர்கள் நினைப்ப தெல்லாவற்றையும்
உடன் இருந்து அறிதி என்று	நீ கூடவேயிருந்து அறிகின்றாயென்று
(நான் உணர்ந்து)	
நான்	நான்
என் உள்ளே	எனக்குள்ளே
வெள்கிப்போய்	மிகவும் வெட்கப்பட்டு
விலவு அற சிரித்திட்டேன்	விலாப்பக்கத்து எலும்பு முறியும்படி சிரித்தேன்.

தொண்டுக்கே கோலம்பூண்டு–வெள்கிப்போய் என்னுள்ளே நான் விலவறச் சிரித்திட்டேன் என்று அன்வயம்.

நாம் ஓரிடம்தேடி ஓடவேண்டாதபடி நம்மிருதயத்தினுள்ளே எப்போதும் வந்து கொலுவிருக்கிற உன்னைச் சிந்தைசெய்வதற்கு ஏற்ற அறிவுஇல்லாத ஆத்மாபஹாரக் கள்ளநெஞ்சுடைய அடியேன் உனக்கு அடிமைசெய்பவன்போலத் தோன்றி "இவன் பரமபாகவதன், பரமபக்தன்" என்று கண்டாரடங்கலும் புகழும்படியாக "தொடையொத்த துளவமும் கூடையும் பொலிந்து தோன்றிய தோள் தொண்டரடிப்பொடி" என்றபடி கைங்கர்யவேஷங்களைப் போட்டுக்கொண்டு திரிந்தபோதிலும் "இன்னார்இன்னார் இன்னது நினைக்கிறார்கள்" என்று எல்லாருடைய நினைவையும் நீ நெஞ்சினுள்ளேயே இருந்துகொண்டு அறிகின்றாயென்று உனது ஸர்வஜ்ஞத்வத்தை நான் அநுஸந்தித்தவாறே 'ஐயோ! நமது கள்ளவேஷம் வெளிப்படையாயிற்றே!' என்று வெட்கமடைந்து எனக்குள்ளேயே நான் சிரித்துக்கொண்டேனென்கிறார்.—ஸ்வாத்மாப்யேநம் விகர்ஹதே" என்ற கருத்து ஈற்றடியில் உறையும். விலவறச் சிரித்திட்டேன் என்றது—எல்லை கடந்து சிரித்தமையைக் கூறியவாறு. ... (நூ)

906 தாவியன் றுலகமெல்லாம் தலைவிளாக்கொண்டவெந்தாய் *
சேவியேனுன்னையல்லால் சிக்கெனச்செங்கண்மாலே! *
ஆவியே! அமுதே யென்றனுயிரனையவெந்தாய்! *
பாவியேனுன்னையல்லால் பாவியேன்பாவியேனே. (நூ)

அன்று	அக்காலத்தில் (த்ரிவிக்ரமாவதாரத்தில்)
உலகம் எல்லாம்	எல்லா உலகங்களையும்
தாவி	கடந்து
தலைவிளாக் கொண்ட	(திருவடியினால்) வியாபரித்த
எந்தாய்	எமது ஸ்வாமியே!
செங்கண்மாலே	சிவந்த திருக்கண்களையுடைய திருமாலே!
ஆவியே	(எனது உயிர்தரித்திருப்பதற்குக் காரணமான) பஞ்சப்ராணவாயுவானவனே!
அமுதே	அம்ருதம் போன்றவனே!
என்தன் ஆர் உயிர் அனைய எந்தாய்	(என்னை நல்வழியிற் செலுத்தின) அருமையான ஆத்மாவைப் போன்ற எனது தலைவனே!
பாவியேன்	பாவியாகிய யான்
சிக்கென	உறுதியாக (எப்போதும் விடாமல்)
உன்னை அல்லால்	உன்னைத்தவிர (மற்றையோரை)
சேவியேன்	வணங்கமாட்டேன்;
(உன்னையல்லாது வேறொருவரை)	
பாவியேன்	நினைக்கவும் மாட்டேன்
பாவியேனே	நான் பாவியனேயாவேன்.

கீழ்ப்பாட்டில் தமது கள்ளத்தன்மையைப் பேசி, "இப்படிப்பட்ட நாம் எம்பெருமானை விட்டுதல் தகாது" என்று ஆழ்வார் அகல நினைக்க ஆழ்வீர்! நாம் உலகத்தாருடைய தாழ்வுகளைக் கண்ணெடுத்துப்பாராது அவர்களுடைய ஸ்வல்ப குணத்தையே பாராட்டி அவர்களை அடிமை கொள்பவரல்லோமோ? என்று தன்னுடைய வாத்ஸல்யம் விளங்குமாறு எல்லாவற்றையும் தான் அடிமைகொண்ட த்ரிவிக்ரமாவதார சரித்திரத்தை இவர்க்கு நினைப்பூட்டிச் சமாதானமுண்டாகுமாறு செய்ய; அதனால் ஆழ்வார் தாம் முன்பு அவனைவிட்டு விலகிச்சென்றும்படி நினைத்த தமது குற்றத்தைப் பாராட்டி, "பாவியேன் பாவியேனே" என்று தம்மை வெறுத்துக்கூறி, எம்பெருமானைத்தவிர வேறொரு கடவுளை நினைத்தலும் தொழுதலும் செய்யாத தமது தன்மையை வெளியிடுகின்றனர். ... ... (கூ)

907 மழைக்கன்றுவரைமூனேந்தும் மைந்தனே! மதுரவாறே! *
உழைக்கன்றேபோலநோக்கம் உடையவர்வலையுள்பட்டு *
உழைக்கின்றேற்கென்னைநோக்காதொழிவதே உன்னையன்றே
அழைக்கின்றேன் * ஆதிமூர்த்தீ! அரங்கமாநகருளானே. (கூசு

அன்று — (இந்திரன் பகைக் கோபத்தாலே ஏழு நாள் விடாமழை பெய்வித்த) அக்காலத்திலே
முன் — (பசு முதலியவை மழையினால் கஷ்டமடைவதற்கு) முன்பாகவே
மழைக்கு — மழையைத் தடுப்பதற்காக
வரை ஏந்தும் மைந்தனே — கோவர்த்தன பர்வதத்தை (கையில் குடையாக) ஏந்திய மிடுக்கையுடையவனே!
மதுர ஆறே — இனிய ஆறுபோல் எல்லார்க்கும் விடாயைத் தீர்ப்பவனே!
உழை கன்று போல நோக்கம் உடையவர் — மான் குட்டியின் விழிபோன்ற விழியையுடைய மாதர்களின்
வலையுள் — (அந்த நோக்காகிற) வலையினுள்ளே
பட்டு — அகப்பட்டு
உழைக்கின்றேற்கு என்னை — துடிக்கிற என்னை
நோக்கா தொழிவதே — கடாக்ஷியாமலிருப்பதும் தகுதியோ?
ஆதி மூர்த்தி — முழுமுதற் கடவுளே!
அரங்கமா நகருளானே!—;
உன்னை அன்றே அழைக்கின்றேன் — தேவரீரை நோக்கியன்றே நான் கூப்பிடாநின்றேன்.

பேறு பெறுவதில் விரைவு மிகுதியாலே ஆற்றுமை கரைபுரண்டு பெருமிடறுசெய்து கூப்பிடுகிறார்.

இந்திரன் பகைக்கோபத்தாலே ஏழுநாள் விடாமழை பெய்வித்து வருத்தப்படுத்தின காலத்தில் கோவர்த்தநகிரியைக் கொற்றக்குடையாக வெடுத்து ஆயரையும் ஆநிரையையும் காத்தருளினவனன்றே நீ; அப்படி அவர்களைக் காப்பதற்கு அவர்களிடத்தில் என்ன குணம் கண்டுவிடித்தாய்? அவ்விடையருடைய கோஷ்டியிலாவது பசுக்களின் திரளிலாவது அடியேனையும் சேர்த்துக்கொள்ளலாகாதா? என்னும் இரக்கப்பொருள்தோன்ற மழைக்கன்று வரைமூனேந்தும் மைந்தனே! என்கிறார்.

மதுர ஆறே!—ரக்ஷித்தருளாமல் உபேக்ஷித்தபோதிலும் உன்னை விடமுடியவில்லையே! என்பது கருத்து. ஆறானது எரி, குளம் முதலியவைபோலே ஓரிடத்திலேயே இராமல் நாநாதேசங்களிலும் போய்ப் பெருகுவதுபோல் எம்பெருமான் அடியார் இருக்குமிடங்களிலெல்லாம்போய் ஸேவை ஸாதித்தருள்கின்ற ஸௌலப்யமும் இந்த முற்றுவமையால் தோற்றுமென்க.

"உன்னையன்றே யழைக்கின்றேன்" என்றவாறே எம்பெருமான் "ஆழ்வீர்! நீர் அழைத்தவுடனே நான் 'ஏன்?' என்ன வேணுமோ? என்ன ஆவச்யகதை? என்று கேட்க, ஆதிமூர்த்தி என்கிறார்—இவ்வுலகம் உருமாய்ந்துகிடந்த காலத்திலே ஒருவருடைய அபேக்ஷையும் எதிர்பாராமல் இவற்றை உண்டாக்கின உனக்கு இவற்றின் ரக்ஷணம் அவச்ய கர்த்தவ்யமன்றே என்கை. ... ... (கூசு)

908 தெளிவிலாக்கலங்கல் நீர்சூழ் திருவரங்கத்துள்ளோங்கும் *
ஒளியுளார்தாமேயன்றே தந்தையும்தாயுமாவார் *
எளியதோரருளுமன்றே என்திறத்தெம்பிரானார் *
அளியன்நம்பையலென்னார் அம்மவோ! கொடியவாறே. (நா)

தெளிவு இலா கலங்கல் நீர் சூழ்	(ஒருகாலும்) தெளிவில்லாமல் கலக்கம் மாறாதிருக்கிற காவேரியாலே சூழப்பெற்ற
திரு அரங்கத்துள்	கோயிலிலே
ஓங்கும்	விஞ்சியிருக்கிற
ஒளி உளார் தாமே அன்றே	தேஜஸ்ஸை உடையவரான அழகிய மணவாளனேரு வனே யன்றே
தந்தையும் தாயும் ஆவார்	(நமக்குத்) தகப்பனும் தாயுமாயிருப்பர்;
என் திறத்து	(அவர்) என் விஷயத்தில் (செய்தருள வேண்டுவது)
எளியது ஓர் அருளும் அன்றே	ஸாமான்யமான ஒரு க்ருபா மாத்திரமேயன்றே?
எம்பிரானர்	எனக்கு உபகாரகரான அவர்
நம் பைய்ல் அளியன் என்னார்	"நம்முடைய பையலான இவன் நமது கருணைக்கு உரியன்" என்று திரு வுள்ளம் பற்றுகிறாரில்லை;
அம்ம ஓ கொடிய ஆறே	ஐயோ! (இவருடைய இயல்வு) மிகவும் கொடு மையா யிரான்றதீ!

தாம் இப்படி கதறுகிறச்செய்தேயும் பெரியபெருமாள் இரங்கி அஞ்சேல்" என்னக் காணுமையாலே, தம்மையொழிய வேறே ஒரு சுற்றத்தவர் எனக்கு இருப்பதாக நினைத்திருக்கிறாரோ? ப்ரயோஜநாந்தரங்களை விரும்பி அகன்று போகிறேனென்று நினைத்திருக்கிறாரோ? 'நம்முடையவன்' என்று என்னைச் சிறிது அபிமாநித்தால் போதுமாயிருக்க இவ்வளவுகூட அபிமாநியாமல் கூக்குரல் கேட்டுக்கொண்டே கண்ணுறங்குவதே! அம்மே! இவர் திருவுள்ளம் இப்போது இங்ஙனே கொடிதாயிற்றே!' என்று வருந்துகின்றார்.

காவேரிக்குத் தெளிவில்லாமை-மேன்மேலும் பெருக்கு மிக்கிருக்கையாலே. இத்தெளிவில்லாமையை பட்டர் ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் ஒருசமத்காரம் தோற்ற வருணிக்கிறார்-"துக்தாப்திர்ஜநகோ ஜநக்யஹமியம்" இத்யாதி ச்லோகத்தால். அதன் கருத்து-பாற்கடல் தகப்பனார்; பொன்னி என்ற நான் தாய்; ஸ்ரீரங்கநாய்ச்சியார் பெண்; பெரியபெருமாள் மணவாளன்; இந்த விஷயத்திலே பெரியபெருமாளுக்கும் பெரியபிராட்டியார்க்கும் சகுதியாக நான் என்ன பண்ணப்போகிறேன்? என்று கலங்கினாற்போல, சாமரம், கருப்பூரம், சந்தநவருக்ஷங்கள், சிறந்த ரத்நங்கள், முத்துக்கள் முதலியவற்றை அலைகளாகிற கைகளாலே உந்தா நின்று கொண்டு ஆழ்ந்து வருகிற காவேரியைப் பற்றுங்கள் என்பதாம்.

திருவரங்கத்துள் ஓங்குமொளியுளார் என்றது—பரமபதம் முதலிய இடங்களில் எழுந்தருளியிருக்கு மிருப்பைக்காட்டிலும் கோயிலிலே எழுந்தருளியிருக்கு மிருப்பிலே உள்ள அதிசயம் தோற்ற.

விபீஷணாதிகளை ரக்ஷித்தாற்போலே வில்லும் கோலு மெடுத்து ரக்ஷிக்கவேண்டியதில்லை; குளிர ஒருகால் நோக்கியருளினால் என்தாபம் தீரும் என்ற கருத்துப்பட அருளிச்செய்கிறார் எளியதோரருளுமன்றே என்திறத்து என்று.

எம்பெருமான் சோதிவாய்திறந்து 'ஆழ்வீர்!' என்றழைக்கவேணுமென்று இவர் ஆசைப்படுகின்றாரில்லை; 'அடே பையா!' என்று ஒரு இன்சொல் சொல்லக்கேட்க விரும்புகின்றார். (நா)

... ...

909 மேம்பொருள்போகவிட்டு மெய்ம்மையைமிகவுணர்ந்து *
ஆம்பரிசறிந்துகொண்டு ஐம்புலனகத்தடக்கி *
காம்பறத்தலைசிரைத்து உன்கடைத்தலையிருந்துவாழும் *
சோம்பரையுகத்திபோலும் சூழ்புனலரங்கத்தானே. (நஅ)

புனல் சூழ் அரங்கத்தானே — காவிரி சூழ்ந்த கோயிலிலே கண்வளர்ந்தருளுமவனே!
மேம்பொருள் — (ப்ராக்ருத ஜநங்கள்) விரும்புகிற லௌகிக பதார்த்தங்களே
போக விட்டு — வாஸனையோடு விட்டிட்டு
மெய்ம்மையை — ஆத்மஸ்வரூபத்தை
மிக உணர்ந்து — உள்ளபடி அறிந்து
ஆம் பரிசு — ஸ்வரூபாநுரூபமான ஸமாசாரங்களையும்
அறிந்துகொண்டு — தெரிந்துகொண்டு
ஐம் புலன் — ஐந்து இந்திரியங்களையும்
அகத்து அடக்கி — (விஷயாந்தரங்களில் போக வொட்டாமல்) தம்முள்ளே பதிய அடக்கி,
காம்பு அற — அடியோடே
தலை சிரைத்து — தன் தலையிலுள்ள சுமையைத் தொலைத்து
உன் தலைக்கடை இருந்து — உனது திருவாசலிலே (காவலாளராக) வாஸஞ்செய்து
வாழும் — உஜ்ஜீவிக்கின்ற
சோம்பரை — (தம்முடைய ஹிதத்தில்) சோம்பியிருக்குமவர்களே
உகத்திபோலும் — உகக்குமவனல்லையோ நீ.

"அளியனம் பையலென்னுர் அம்மவோ கொடியவாறே!" என்று கீழ்ப்பாட்டில் ஆழ்வார் வருந்தினவாறே "இவ்விருள்தருமாஞாலத்திலே ஸ்வரூபாநுரூபமான புருஷார்த்தத்தை அபேக்ஷிப்பதும் அதற்காக நம் கைபார்த்திருப்பதும் அதுக்குமேலே விளம்பம் பொறுமல் கூப்பிடுவதும்! இதென்ன ஆச்சரியமாயிருக்கிறதே! இப்படிப்பட்ட ஒரு உத்தமாதிகாரியைக் கிடைக்கப் பெற்றேமே!" என்று பெரியபெருமாள் திருவுள்ளம் மிகவும் ப்ரஸந்நமாய், அந்த ப்ரஸாதமெல்லாம் திருமுகத்திலே தோற்றும்படி யிருக்கக்கண்ட ஆழ்வார், "பெருமானே! தேவரீரைக்கிட்டி தேவரீர் பக்கலிலே ஸர்வபாரங்களையும் ஸமர்ப்பித்து நிச்சிந்தையாயிருப்பவர்களைக் கண்டால் தேவரீருடைய திருவுள்ளம் இங்ஙனேயோ மலர்ந்திருப்பது!" என்று பெரியபெருமாள் திருமுகத்தை நோக்கி விண்ணப்பம் செய்கிறார்.

மேம்பொருள் என்பதற்கு (க) மேலெழுந்த பொருளென்றும், (உ) மேவின பொருளென்றும், (ங) மேம்பாட்டை விளைக்கும் பொருளென்றும் மூன்றுபடியாக நிர்வஹம்; (க)கருமங்கள் காரணமாக வந்தேறியாய் பகவத்விஷய உணர்ச்சி வந்தவாறே விட்டகலும்படியாயிருக்கும் பொருள்-மேலெழுந்த பொருள் எனப்படும். அதாவது ஸம்ஸாரஸம்பந்தம். (உ) மேவின பொருளாவது-சிக்கன ஒட்டிக்கொண்டிருக்கும் பொருள்; சேதநனுல் பிரிக்கவொண்ணாதபடியிருக்கை. அதாவது தேஹஸம்பந்தம், அவித்யா ஸம்பந்தம். (ங) மேம்பாட்டை விளைக்கையாவது-தன்னைப் பற்றினாரை ஸர்வஜ்ஞராக அபிமாநித்திருக்கும்படி பண்ணவற்றாகை. அப்படிப்பட்ட பொருளாவது-ப்ரக்ருதி ப்ராக்ருத பதார்த்த ஸம்பந்தம்; ஆகிற இவற்றை வாஸனையோடே ஒழித்து, தேஹத்தை ஆத்மாவென்று நினைக்கை, தேஹத்தைப்பற்றின ப்ராக்ருத பதார்த்தங்களில் 'இவை என்னுடையவை' என்கிற மமதாபுத்தி, தேஹத்திற்காட்டில் வேறுபட்ட ஆத்மாவில் ஸ்வாதந்திரியபுத்தி முதலியவற்றை அடியோடு ஒழித்து என்றபடி.

அதற்குமேல் ஆத்மஸ்வரூபத்தை உள்ளபடி உணரவேணும்: அதாவது-ஆத்மா ஸ்வயம் ப்ரகாசன், நித்யன், உணர்வைக் குணமாகவுடையவன்: அணுபரிமாணன், எம்பெருமானுக்கு அநந்யார்ஹ சேஷபூதன், அந்த சேஷத்வத்தை பாகவதரளவும் உடையவன் என்றிங்ஙனே விவேகமாக உணருகை. ப்ரக்ருதி ப்ராக்ருதங்கள் ஹேயம் என்றறிந்து ஆத்மாவையும் உள்ளபடி யறிந்த பிறகு, பின்னையும் ஆம் பரிசு அறிந்துகொள்ளுகையாவது-கைங்கரியமே புருஷார்த்தம் என்றறிகை.

ஐம்புலனகத்தடக்குகையாவது-எம்பெருமானுக்குப் பண்ணும் கைங்கரியத்தில் ஸ்வப்ரயோஜநத்வபுத்தி பிறவாதபடி நோக்குகை. "தனக்கேயாக எனைக்கொள்ளுமீதே" என்றபடி எம்பெருமானுக்கே இனிதாகப் பண்ணும் கைங்கர்யமே புருஷார்த்தம் என்கிற ஸுஷ்மார்த்தம் இங்கு உணரத்தக்கது.

காம்பு அறத் தலைசிரைத்து—உபாயாந்தரங்களில் தனக்குள்ள பற்று அறும்படி தன் தலையிலுண்டான துரிதங்களைப்போக்கி. அதாவது-பேற்றுக்கு எம்பெருமான் ஸாதநமேயொழிய நாம் செய்யும் க்ரியாகலாபங்களொன்றும் ஸாதநமல்ல என்று உறுதியான அத்யவஸாயம் வஹித்து என்றபடி. அஹங்கார கர்ப்பமான உபாயாந்தரங்களின் விடுகையைச் சொன்னபடி.

இப்படி பரமைகாந்திகளாய் எப்போதும் உன் திருவாசலையே பற்றிக்கிடந்து வாழுஞ் சோம்பராகிய பரமபாகவதர்கள் விஷயத்திலே தேவரீர் திருவுள்ளம் உகந்திருக்கும்படியே! என்று விக்கிறபடி.

'வாழும் சோம்பர் என்றது கெடுஞ்சோம்பரை வ்யாவர்த்திக்கிறது. கெடுஞ்சோம்பராவார் ஈச்வரனில்லை, சாஸ்த்ரமில்லை, பரலோகமில்லை என்றுற்போலே எல்லாவற்றையும் இல்லைசெய்து விஹிதகர்மங்களை அநுஷ்டியாமல் தோன்றிற்றுச் செய்து சோம்பேறிகளாய்த் திரிவார். வாழுஞ் சோம்பராவார்-சாஸ்த்ரத்தில் நாஸ்திகராய்க் கர்த்தவ்யங்களை விடுகையன்றிக்கே ஆஸ்திகசிகாமணிகளாய் ஸித்தோபாயமான எம்பெருமானை ஸ்வீகரித்து அவ்வெம்பெருமானுடைய அநுபவமே காலக்ஷேபமாய்த் தமது ஹிதத்தைத் தாமே தேடிக்கொள்ளுவதில் சோம்பியிருப்பவர்கள்.

உகத்தி—முன்னிலையொருமை வினைமுற்று. (நஅ)

**910 அடிமையில்குடிமையில்லா அயல்சதுப்பேதிமாரில் *
குடிமையில்கடைமைப்பட்ட குக்கரில்பிறப்பரேனும் *
முடியினில்துளபம்வைத்தாய் மொய்கழற்கன்புசெய்யும் *
அடியரையுகத்திபோலும் அரங்கமாநகருளானே. (நகக)**

முடியினில் துளபம் வைத்தாய் {திருமுடியிலே திருத்துழாய் மாலையை அணிந்தவனே!
அரங்கம் மாநகர் உளானே!—;
அடிமையில் {(உனக்குக்) கைங்கரியம் செய்வதில்
குடிமை இல்லா {உயர்குடிப் பிறப்பிற்கு ஏற்ற ஒழுக்கமில்லாத
அயல் (அடிமைக்கு) அயலான
சதுப்பேதிமாரில் {நான்கு வேதங்களையு மோதின அந்தணர்களைக் காட்டிலும்

குடிமையில் கடைமை பட்ட {குடிப்பிறப்பினால் இழிடைந்த இழிமுலத்திற் [பிறந்த மிகவும்]
குக்கரில் பரமசண்டாள ஜாதியில்
பிறப்பர் எனும் பிறப்பர்களானாலும்
மொய் கழற்கு {(உனது) நெருங்கிய திருவடிகளிடத்து
அன்பு செய்யும் பக்தி செய்கின்ற
அடியரை அடியார்களையே
உகத்தி போலும் நீ விரும்புவாய் போலும்.

இனிமேல், கீழ்ப்பாட்டில் சொன்ன ஞானமுடைய பாகவதர்களின் வைபவம் கூறுகிறது. எம்பெருமான் தன் திருவடித்தாமரைகளில் பக்திசெய்யாதவர்கள் உயர்குலத்திற் பிறந்தவர்களாயிருந்தபோதிலும் அவர்களை ஒருபதார்த்தமாகவும் நினையாமல் உபேக்ஷித்துவிட்டு, தனது திருவடிகளில் பக்தி செய்பவர் மிகவும் இழிகுலத்தவராயினும் அவரையே விரும்புவன் என்கிறது இப்பாட்டில்.

மேன்மைக்குக் காரணம்—எம்பெருமான்பக்கல் தொண்டுபூண்டு ஒழுகுவதே தவிர, உயர்குடிப்பிறப்பு அன்று. அவ்வாறு தொண்டுபூண்டு ஒழுகாமலிருப்பதே தாழ்ச்சிக்குக் காரணம்; இழிகுலப்பிறப்பு அன்று; ஆகையால் யோகிஜகம்மத்தைச் சிறிதும் பாராட்ட வேண்டாமென்க.

குடிமை—குடிப்பிறப்பிற்கு ஏற்ற நல்லொழுக்கம். அயலாதலாவது—'எம்பெருமானுடைய கைங்கர்யத்தைச் செய்தற்கு அநுகூலமாக வேதமோதுகிறோம்' என்று அறியாதிருக்கை. அத்யயநத்திற்குப் பலன்வேதத்தின் பொருளை உள்ளபடி அறிந்து நடப்பதுதான்' என்று உரைசாவர்கள் நான்கு வேதங்களிலும் வல்லவரானாலும் பயனில்லை என்பது முதலடியில் விளங்கும்.

சதுர்வேதிமார்—சதுர் வேதிமார்; இருக்கு, யஜுஸ், ஸாமம், அதர்வணம் என்ற நான்கு வேதங்களை ஓதினவர்களென்க. குக்கர்—மிகவும் தாழ்ந்தவர் என்பது பொருள்; [கூஷ்த்ர] என்ற வடசொல் குக்கர் எனத்திரிந்தது. எனும்—எனினும் என்பதன் மரூஉ. (நகூ)

911 திருமறுமார்ப! நின்னைச் சிந்தையுள் திகழவைத்து *
மருவியமனத்தராகில் மாநிலத்துயிர்களெல்லாம் *
வெருவுறக்கொன்றுசுட்டிட்டு ஈட்டியவினையரேலும் *
அருவினைப்பயனதுய்யார் அரங்கமாநகருளானே. (சவி)

திரு மறு மார்ப — பெரிய பிராட்டியாரையும் ஸ்ரீவத்ஸமென்கிற மறுவையும் திருமார்பிலே அணிந்துள்ளவனே!

அரங்கமா நகருளானே?—;

மா நிலத்து உயிர்கள் எல்லாம் — (இந்தப்) பெரிய பூமண்டலத்திலே உள்ள ஜீவராசிகளெல்லாம்

வெருவு உற — (ஜகத்தெல்லாம்) நடுங்கும்படி

கொன்று சுட்டிட்டு — பரஹிம்ஸைபண்ணி

ஈட்டிய வினையர் ஏலும் — விசேஷமாக ஸம்பாதிக்கப்பட்ட பாவங்களையுடைய வர்களானாலும்

நின்னை சிந்தையில் திகழவைத்து — உன்னை (தங்கள்) நெஞ்சில் விளங்கும்படிவைத்து

மருவிய மனத்தர் ஆகில் — திருடமான அத்யவஸாயத்தை உடையராயிருப்பரேயானால் (அவர்கள்)

அரு வினை பயன் அது உய்யார் — (தாங்கள் செய்த) மஹாபாதகங்களினுடைய பலனை அநுபவிக்கமாட்டார்கள்.

தாழ்ந்த வகுப்பில் பிறப்பேயன்றி நீசமான அதநுஷ்டாநமு முடையரேயாயினும் "மேம் பொருள் போகவிட்டு" என்ற பாட்டிற்கூறிய அதிகாரத்திலே நிஷ்டையுடையராகில் அவர்களுக்கு அந்தக் கருமங்களின் பலன் அநுபவிக்கக் கடவதல்ல என்கிறது, இப்பாட்டு.

திருமகள் கொழுகனை எம்பெருமானே! என்னை இடைவிடாது நெஞ்சிலே அநுஸந்தித்திருப்பாராகில் அந்த ப்ரபாவத்தாலே அவர்களுடைய பரஹிம்ஸை முதலிய கொடியபாவங்களும் தீயிலிட்ட தூசுபோல் உருமாய்ந்தொழியுமாதலால் அவர்கள் நரகங்களிலே புக்கு அக்கருமங்களின் பலன்களான தண்டனைகளை அநுபவிக்கவேண்டிய ப்ரஸக்தியே யில்லை என்றவாறு. ... ... (சவி)

912 வானுளாரறியலாகா வானவாவென்பராகில் *
தேனுலாந்துளபமாலைச் சென்னியாவென்பராகில் *
ஊனமாயினகள்செய்யும் ஊனகாரகர்களேனும் *
போனகம்செய்தசேடம் தருவரேல்புனிதமன்றே. (சக)

ஊனும் ஆயினகள் செய்யும் — தாங்கள் நிஷ்டூரமான செயல்களைச் செய்யுமவர்களாயும்

ஊன காரகர்கள் ஏனும் — பிறரைக்கொண்டு கஷ்டூர மான க்ருத்யங்களைச் செய்விப்பவர்களாயு மிருந்தபோதிலும்

வான் உளார் அறியல் ஆகா வானவா என்பர் ஆகில் — 'மேலுலகத்திலுள்ள பிரமன் முதலியோராலும் அறிய முடியாததேவனே!' என்று அநுஸந்திப்பராகில்

தேன் உலாம் துளபம் மாலை சென்னியா என்பர் ஆகில் — 'தேன் பெருகாநின்ற திருத் துழாய் மாலையைத் திரு முடியிலே அணியுமவனே! .என்று அநுஸந்திப்பாராகில்

(அப்படிப்பட்ட மஹாத்துமாக்கள்)

போனகம் செய்த சேடம் — தாங்கள் அமுது செய்து மிகுந்த பிரஸாதத்தை

தருவர் எல் அன்றே — அநுக்ரஹிப்பாராஞல் அப்போதே

புனிதம் — (அந்த ப்ரஸாதத்தைப் பெற்றவர்கள்) பரிசுத்தராவர்கள்.

பகவத்ஸம்பந்தம் பெற்றவர்களுக்கு நிஷ்டூர ஜந்மத்தாலும் நிஷ்டூர அநுஷ்டாநத்தாலும் ஒரு குறையுமில்லை யென்பது மாத்திரமேயல்ல; அவர்கள் தங்களுடைய உச்சிஷ்டாந்நத்தாலே ஸம்ஸாரிகளையெல்லாம் பரிசுத்தராக்கும் படியான பெருமை பொருந்தியவர்கள் என்பது இப்பாட்டு.

தேவர்கள் மேலுலகில் இருப்பவர்கள் என்ற மாத்திரத்தால் அவர்களுக்கு எம்பெருமானுடைய ஸ்வரூபம்ரூபம் முதலியவை விசதமாய்விடுமென்ன முடியாது. "நாம் மநுஷ்யர்களிற்காட்டிலும் மிகவும் மேம்பாடுடையோம்; மேலுலகத்தில் வாழ்கிறோம்; கடவர்களாயிருக்கிறோம்" என்றூற்போலே அவர்கள் தங்களைப் பெருக்க மதித்திருப்பதால், "அகிஞ்சநோ நந்ய கதிஃ" என்றிருக்கும் ஸாத்விகாதிகாரிகளால் அறியப்படுமவனை எம்பெருமானே அவ்வஹங்காரிகள் அறியகில்லார் என்க. இப்படி எம்பெருமானுக்குள்ள 'அறிவதரியான்' என்கின்ற ஸ்வரூபத்தை உள்ளபடி அறிவரேல், அவர்கள் தாங்கள் இழிதொழில் செய்யுமவர்களாயிருந்தாலும், தாங்கள் செய்வது போதாமல் பிறரையும் அவ்விழிதொழில்களைச் செய்விப்பவர்களாயிருந்தாலும் அவர்கள் தாங்கள் பெற்றிருக்கும் பகவத் ஸ்வரூபவுணர்ச்சி காரணமாக மிகவும் ஆதரிக்கப்படுவர்களே யன்றி இழிதொழில் செய்யுமவர்களென்று இகழப்படமாட்டார்கள். அவ்வளவேயுமன்று; அவர்கள் தாங்களமுதுசெய்து மிகுந்த ப்ரஸாதத்தை அருள் புரிந்தால் அதனைப்பெற்று மற்றையோர் தூய்மைபெறலாம்படி அத்தனை பெருமை பொருந்தியவர்கள்காண் என்கிறது. ... ... (சஉ)

913 பழுதிலாவொழுகலாற்றுப் பலசதுப்பேதிமார்கள் *
இழிகுலத்தவர்களேலும் எம்மடியார்களாகில் *
தொழுமினீர்கொடுமின்கொண்மின் என்றுதின்னேமொக்க *
வழிபடவருளினுய்போல் மதில் திருவரங்கத்தானே. (சஉ)

மதில் திருவரங்கத்தானே!—;

ஒழுகல் ஆறு — பிரமன் முதல் தங்களளவும் நீண்டு வருகிற பரம்பரையில்

பழுது இலா — ஒருகுற்றமும் மற்றிருக்கு மவர்களாய்

பல சதுப் பேதிமார்கள் — கான்கு வேதங்களையும் ஓதினவர்களாயு முள்ளவர்களே!

எம் அடியார்கள் ஆகில் — "நமக்கு அடிமைப்பட்டவர் களாயிருந்தால் (அவர்கள்)

இழி குலத்தவர்க ளேனும் — தாழ்ந்த வகுப்பில் பிறந்தார் களே யாகிலும்

நீர் தொழுமின் — நீங்கள் (அவர்களைத்) தொழுங்கள்;

கொடுமின் — (உங்களிடத்திலுள்ள விசே ஷார்த்தங்களை அவர்க ளுக்கு) உபதேசியுங்கள்;

கொள்மின் — அவர்களிடத்தில் விசே ஷார்த்தங்களுண்டாகில்) கேட்டுக்கொள்ளுங்கள்;"

என்று — என்று உபதேசித்தருளி

தின்னேமொக்க வழிபட அருளினுய் — உனக்கு ஸமமாக அவர்களை ஆராதிக்கும்படி உரைத்தருளினாய்;

(போல்—அசை).

உத்பத்தியிலாவது ஆசாரம் முதலியவற்றிலாவது ஒருவகையாலும் குறையின்றியே ஸத்ஸங்காத ப்ராஹ்மணர்களாய் ஸதாசாரநிஷ்டர்களா யிருக்கும் சதுர்வேதிகளை நோக்கி எம்பெருமான்கூறினவார்த்தை;— 'ஓ சதுர்வேதிகளே! உங்களைப்போலே, ப்ரஹ்மாதொடங்கி நெடுகிவருகிற வம்சப்பரம்பரையிலே பிறந்து சதுர்வேதிகளா யிருப்பவர்கள் தாம் பூஜ்யர், மற்றையோர் அநாதரணீயர் என்று நீங்கள் பாவிக்கலாகாது; எந்த ஜாதியிலே பிறந்தவரேனும் எனது அடியவர்களானால் அவர்களை நீங்கள் தொழவேணும்; பரஸ்பரம் ஜ்ஞாநத்தைக் கொடுத்துக்கொள்ளலாம்; விசேஷமாகச் சொல்வதென்? என்னை நீங்கள் எவ்விதமாக ஆராதிக்க உடன்பட்டிருக்கிறீர்களோ, அவ்விதமாகவே அவர்களையும் ஆராதிக்க வேண்டியதுதான்" என்று. ஸ்ரீபாஞ்சராத்ரத்திலே "பக்தி ரஷ்டவிதா ஹ்யேஷா" என்று தொடங்கி "கஸ்மைசித்யம் ததோதக்ராஹ்யம் ஸபூஜ்யோ யதாஹ்யஹம்" என்பதிறுகவுள்ள ச்லோகங்களை நோக்குக.

ஆசார்யஹ்ருதயத்தில்—"ம்லேச்சனும் பக்தனாகில் சதுர்வேதிகள் அநுவர்த்திக்க அறிவுகொடுத்துக் குலதைவதமாதொடாக்கப் பூஜைகொண்டு பாவநதீர்த்த ப்ரஸாதனு மென்கிற திருமுகப்படியும்" என்னும் ஸ்ரீஸூக்தியும் அதன் வ்யாக்யாந ஸ்ரீஸூக்திகளும் இங்கு அநுஸந்திக்கத்தகுவன. ... ... (சஉ)

914 அமரவோரங்கமாறும் வேதமோர்நான்குமோதி *
தமர்களில்தலைவராய சாதியந்தணர்களேலும் *
நுமர்களைப்பழிப்பராகில் நொடிப்பதோரளவிலாங்கே *
அவர்கள்தாம்புலையர்போலும் அரங்கமாநகருளானே. (சந)

அரங்கமாநகருளானே!—;
ஓர் அங்கம் ஆறும் — (வேதத்தின்) விலக்ஷணமான ஆறு அங்கங்களையும்
ஓர் வேதம் நான்கும் — நான்கு வேதங்களையும்
அமர ஓதி — கெஞ்சில் பதியும்படி அதிகரித்து
தமர்களில் தலைவர் ஆய — பாகவதர்களுக்குள்ளே முதன்மையான
சாதி அந்தணர்களேலும் — ப்ராஹ்மண ஜாதியர்களாயிலும் (அவர்கள்
நுமர்களை — தேவரீருடைய அடியார்களை
பழிப்பர் ஆகில் — (அவர்களுடைய ஜந்மத்தைப் பார்த்து) தூஷிப்பாராகில்
நொடிப்பது ஓர் அளவில் — ஒருநிமிஷகாலத்துக்குள்ளே
அவர்கள் தாம் — அந்த ஜாதி ப்ராஹ்மணர்கள் தாம்
ஆங்கே — அப்போதே
புலையர் — சண்டாளராவர்கள்.
(போலும்—வாக்யாலங்காரம்.)

ருக்கு, யஜுஸ், ஸாமம், அதர்வணம் என்று வேதங்கள் நான்கு; சிக்ஷை, வியாகரணம், சந்தஸ், நிருக்தம், ஜ்யோதிஷம், கல்பம் என்று வேதாங்கங்கள் ஆறு; இவற்றையெல்லாம் கண்டபாடம பண்ணி அவற்றின் பொருள்களையும் அறிந்து, அவ்வறிவுக்குப் பலனாக பகவத்கைங்கர்யத்திலே முதன்மையாக ஊன்றியிருக்கும் சிறந்த அந்தணர்களா யிருந்தபோதிலும் அவர்கள், கீழ்க்குறிப்பிடுகிறபடியாகாதவைகளெல்லாமில்லாமல் கேவலம் பகவத்கைங்கர்யமொன்றுமாத்திரமுடைய ஒரு ஸ்ரீவைஷ்ணவரை [-அதாவது சண்டாளஜாதியிலே பிறந்தவரை] அந்தப் பிறவியைப்பற்றி இகழ்வாக நினைத்து தூஷிப்பார்களானால் தூஷிக்குமவர்கள் தாங்களே ப்ராஹ்மண்யம் கெடுக்கும் கர்மசண்டாளராய்ப் போவர்கள். இப்படி போவது ஜந்மாந்தரத்திலோ வென்னில்; அன்று; தூஷித்த அந்த க்ஷணத்திலேயே சண்டாளராயொழிவர் (சந)

915 பெண்ணுலாஞ்சடையினானும் பிரமனுமுன்னைக்காண்பான் *
எண்ணிலாவூழியூழி தவஞ்செய்தார்வெள்கிநிற்ப *
விண்ணுளார்வியப்பவந்து ஆனைக்கன்றருளையீந்த
கண்ணனே* உன்னையென்னே களைகணைக்கருதுமாறே. (சச)

பெண் உலாம் சடையினனும்	கங்காநதி உலாவுகின்ற சடையை யுடையனன சிவனும்
பிரமனும்	நான்முகக்கடவுளும்
உன்னை காண்பான்	உன்னைக் காண்பத்தற்காக
எண் இலா ஊழி ஊழி	எண்ணமுடியாத நெடுங்காலமாக
தவம் செய்தார்	தவம்புரிந்தவர்களாய் (அவ்வளவிலும் காணப் பெறுமையாலே)
வெள்கி நிற்ப	வெட்கமடைந்து கவிழ்தலை யிட்டிருக்க
அன்று	அக்காலத்திலே
ஆனைக்கு	(முதலையாயிலகப்பட்ட) ஸ்ரீகஜேந்த்ராழ்வானுக்காக
வந்து	(மடுவின் கரையில்) எழுந்தருளி
விண் உளார் வியப்ப அருளை ஈந்த	நித்யஸூரிகளும் ஆச்சரியப் படும்படி பரமக்ருபை யைச் செய்தருளிய
கண்ணழுய்	(என்னிடத்து அருள்செய்யா மையாலே) தயவில்லாத வனே!
உன்னை	உன்னை
கனகணை	தஞ்சமாக
கருதும் ஆறு என்னே	நினைக்கலாகுமோ ?

கீழ்ப்பாட்டுக்களில் கூறிய பாகவத வைபவம் நன்கு ஸம்பவிக்கக் கூடியதென்பதை ஸ்தாபிப்பதற்காக ஸ்ரீகஜேந்த்ராழ்வானுடைய சரிதத்தை அநுஸந்தித்துக் காட்டுகின்றார்; சிவன் பிரமன் முதலாயினோர் தாங்கள் எம்பெருமானை ஸாக்ஷாத்கரிக்கவேணுமென்று நெடுங்காலம் தவம்புரிந்தும் அவர்கட்கு அப்போது கிடையாமையாலே வெள்கிநிற்கும்படியாயிற்று; கஜேந்த்ராழ்வான் மநுஷ்யஜாதியுமல்ல; மிகவும் நீசமான திர்யக்ஜாதி. அப்படியிருந்தும் எம்பெருமானுடைய விஷயீகாரத்திற்கு எளிதில் பாத்திரமாய்விட்டது. ஆகையாலே ஜாதியின் சிறப்பு உபயோகமற்றது என்கிற அர்த்தம் இப்பாட்டில் அர்த்தாத் ஸித்தம்.

வெள்கிநிற்ப—தங்களுடைய ச்ரமம் வீணாய் ஒழிந்தமையை நினைத்து வெட்கப்பட்டுத் தலைகுனிந்து தரையைக்கீறி நிற்கையில் என்கை. அன்றியே, வெள்கிநிற்ப - வெட்கப்பட்டு நிற்கும்படியாக என்று முரைக்கலாம். ஒரு தபஸ்ஸும் செய்யாத ஒரு யானைக்கு அருளை யீந்தது பிரமனுக்கும் சிவனுக்கும் லஜ்ஜாஹேதுவாக ஆமன்றே.

அவர்களுக்கு வெட்கமாவது—ஐயோ! முதலையின் வாயிலே அகப்படாமல் தபஸ்ஸிலே இழிந்து என்ன காரியஞ்செய்தோம்! என்று படும் லஜ்ஜை. அப்படி அவர்கள் லஜ்ஜைப்படும் படியாகவும் விண்ணுளார் ஆச்சரியப்படும்படியாகவும் வந்து என்க. வியப்ப—பரமாதிகள் நெடுங்காலமாக எதிர்பாராநிற்க அவர்களையும் எங்களையும் அநாதரித்து ஒரு திர்யக்ஜந்துவின் காற்கடையிலே அரைகுலையத்தலைகுலைய ஓடிப்போய்விழுவதே! என்று நித்யஸூரிகள் வியப்ப. கண்ணழுய் = கண்ணாறை யென்பதன் விளி.

"[உன்னையென்னை கனகணைக் கருதுமாறே.] ஆச்ரிதபக்ஷபாதியான உன்னை ஜகத்துக்குப் பொதுவான ரக்ஷகனென்று சொல்லுமவர்கள் மதிகேடரென்கிறார். 'தேவாநாம் தாநவாநாஞ்ச ஸாமாந்ய மதிதைவதம்' என்கிற பந்தம் கிடக்க, சிலர்க்காகச் சிலரை அழிக்கிற இவனை ஸர்வரக்ஷகனென்று நினைக்கலாமோ?" என்பது வ்யாக்யாநஸூக்தி. கனகண—ரக்ஷகம். (சரி)

... ...

916 வளவெழுந்தவளமாட மதுரைமாநகரந்தன்னுள்*
கவளமால்யானைகொன்ற கண்ணனேயரங்கமாலே*
துளவத்தொண்டாயதொல்சீர்த் தொண்டரடிப்பொடி சொல்*
இளையபுன்கவிதையேலும் எம்பிரான்கினியவாறே (சரி)

வளம் எழும் தவளம் மாடம்	அழகு விஞ்சியிருப்பதும் வெண்ணிறமுடையதுமான் மாடங்களையுடைய
மா மதுரைநகரம் தன்னுள்	பெருமை தங்கிய வடமதுரையில்,
கவளம் மால் யானை கொன்ற	கவளங் கொண்டிருப்பதும் பெருத்ததுமான (குவலயாபீடமென்னும் கம்ஸனுடைய) யானையைக் கொலைசெய்தருளின
கண்ணனை	ஸ்ரீக்ருஷ்ணனுடைய
அரங்கம் மாலை	கோயிலிலே (கண்வளரும்) எம்பெருமானைக் குறித்து
தளபம் தொண்டு ஆய	திருத்துழாய்க் கைங்கர்யநிஷ்டருமான
தொல்-சீர்	இயற்கையான சேஷத்வத்திலே நிலைநின்றவருமான
தொண்டரடிப் பொடி	தொண்டரடிப்பொடியாழ்வார் (அருளிச்செய்த)
சொல்	திருமாலையாகிய இத்திருமொழி
இளைய புன் கவிதை எலும்	மிகவும் குற்றங்குறைகளையுடைய கவித்வமாயிருந்தபோதிலும்
எம்பிராற்கு	பெரியபெருமாளுக்கு
இனிய ஆறே	பரமபோக்யமாயிருந்தபடியென்! (என்று ஈடுபடுகிறார்.)

விசேஷ உணவுகளையுண்டு மதம் பிடித்துக் கொழுத்திருந்த குவலயாபீடமென்னும் கம்ஸனது யானையை ஒழித்தருளினதற்போலே தம்முடைய ப்ராப்தி ப்ரதிபந்தகங்களையும் போக்கினபடியை அருளிச்செய்து பெரியபெருமாளுடைய ப்ரீதியே தமக்கு ப்ரயோஜனமென்று முடிக்கிறார்.

கவளம் என்று யானையுணவுக்குப் பேர். "களவமால்யானை" என்றும் பாடமுண்டு. அப்போது கல்பः என்னும் வடசொல் களவமெனத்திரிந்ததாம்; ஒரு பருவத்தில் பெருத்தயானையென்றபடி. இளைய புன் என்பவை—சப்தத்தில் இளமையையும் கவித்வத்தில் குற்றத்தையும் கூறும்.

எம்பெருமானைக் குறித்து அடியேன் சொன்ன சொற்கள் குற்றம் குறைகள் நிரம்பியவையாயினும், எனது நெஞ்சில் உருக்கத்தையும் ஊற்றத்தையும் அறிந்திருக்கும் பெரியபெருமாளுக்கு இது ஆராவமுதமாயிருக்குமென்கிறார்.

"இப் பிரபந்தம் கற்றார்க்குப் பலஞ்சொல்லா தொழிந்தது-இவ்வுகப்புத்தானே அவர்களுக்குப் பலமாகையாலே" என்ற வ்யாக்யாநஸ்லோகம் இங்கு அநுஸந்திக்கத்தக்கது. (சரி)

அடிவரவு.

காவல் பச்சை வேதம் மொய்த்த பெண்டிர் மறம் புலை வெறுப்பு மற்றும் நாட்டினுள் ஒரு நமனும் எறி வண்டு மெய் சூது விரும்பி இனிது குட பாய் பணி பேசு கங்கை வெள்ளம் குளித்து போது குரங்கு உம்பரால் ஊர் மனம் தவமார்த்து மெய் யுள்ளம் தாவி மழை தெளி மேம்பொரு ளடிமை திரு வான் பழுதில் அமரப் பெண் வளவெழும் கதிர்.

தொண்டாடிப்பொடியாழ்வார் திருவடிகளே சரணம்.


பெருமாள் கோயில் பிரதிவாதி பயங்கரம்

அண்ணங்கராசாரியர் இயற்றிய திருமாலை யுரை

முற்றிற்று.

ஸ்ரீரஸ்து.

தொண்டரடிப்பொடியாழ்வார் அருளிச்செய்த திருப்பள்ளியெழுச்சியின் தனியன்கள்.



ஸ்ரீ ॥ தமேவ மத்வா பரவாஸுதேவம் ரங்கேசயம் ராஜவதர்ஹணீயம்
ப்ராபோதிகீம் யோऽக்ருத ஸுக்திமாலாம் பக்தாங்க்ரிரேணும் பகவந்தமீடே.

யः	யாவரொரு ஆழ்வார்	வ்ராபொயிகீம்	திருப்பள்ளி யுணர்த்துமதான
ராஜவத்	அரசனைப்போல	வாக்திமாலாம்	திவ்யப்ரபந்தத்தை
அர்ஹணீயம்	பூஜிக்கத்தக்கவராய்	அக்ருத	அருளிச்செய்தாரோ
		(தம்	அப்படிப்பட்ட)
ரங்கே சயம்	திருவரங்கத்தரவணையில் பள்ளிகொள்பவரான பெரிய பெருமாளே	பகவந்தம்	ஞானம் முதலிய குணங்கள் அமைந்த
தம் மத்வா பரவாஸுதேவகே	அப்படிப்பட்ட ஸாகூதாத் பரவாஸுதேவனுகவே	பக்தாங்க்ரி ரேணும்	தொண்டரடிப் பொடியாழ்வாரை
ஈக்வா	ப்ரதிபத்திபண்ணி,	ஈடே.	துதிக்கின்றேன்.

***—பரமஸத்வ ஸமாச்ரயனன எம்பெருமானுக்கு ராஜஸ்தபோகுணகார்யமான உறக்கம் இருக்க ப்ரஸக்தியில்லாமையினாலே திருப்பள்ளியெழுச்சி பாடுகையாகிறவிது எங்ஙனே பொருந்துமெ கிற சங்கைக்குப் பரிஹாரமாக இந்தச்லோகம் அவதரித்தது. ராஜோபசாரம் போலச்செய்கிறது யென்று ஸமாதானம் காண்க.

மண்டங்குடியேன்பர் மாமறையோர் மன்னியசீர்த்
தொண்டரடிப்பொடி தோன்னகரம்—வண்டு
திணர்த்தவயல்தென்னரங்கத்தம்மானைப் பள்ளி
யுணர்த்தும்பிரானுதித்த வூர்.

வண்டு	வண்டுகளானவை	தொண்டரடிப் பொடி	"தொண்டரடிப்பொடி" என்னுந் திருநாம முடையரான ஆழ்வார்
திணர்த்த	நெருங்கிப்படிந்திருக்கப்பெற்ற	உதித்த ஊர்	திருவவதரித்த திவ்ய தேசமாவது—
வயல்	கழனிகள் சூழ்ந்த	மா மறையோர்	சிறந்த வைதிகர்கள்
தென்	அழகிய	மன்னிய	பொருந்தி வாழ்தற்கிடமான
அரங்கத்து	திருவரங்கத்தில் (கண்வளர்ந் தருள்கிற	சீர்	சிர்மையையுடைய
அம்மானை	பெரிய பெருமாளை	மண்டங்குடி	திருமண்டங்குடி என்கிற
பள்ளி உணர்த்தும்—திருப்பள்ளி யுணர்த்துமவராய்		தொல் நகரம்	அகதியான நகரமாகும்
பிரான்	பரமோபகாரகராய்	என்பர்	என்று பெரியோர் கூறுவர்.

தனியனுரை முற்றிற்று.

917 கதிரவன்குணதிசைச்சிகரம்வந்தணைந்தான் கனவிருளகன்றதுகாலையம்பொழுதாய் *
மதுவிரிந்தொழுகினமாமலரேல்லாம் வானவரரசர்கள்வந்துவந்தீண்டி *
எதிர்திசைநிறைந்தனரிவரோடும்புகுந்த இருங்களிற்றீட்டமும்பிடியோடுமுரசும் *
அதிர்தலிலலைகடல்போன்றுளதெங்கும் அரங்கத்தம்மாபள்ளியெழுந்தருளாயே. (க)

அரங்கத்து அம்மா	திருவரங்கத்தில் பள்ளிகொண்டருளும் ஸ்வாமியே
கதிரவன்	ஸூர்யனனவன்
குணதிசை	கிழக்குத் திக்கிலே
சிகரம்	(உதயகிரியின்) கொடுமுடியிலே
வந்து அணைந்தான்-வந்து கூடினன்;	
கனம் இருள்	(இரவில்) அடர்ந்திருந்த இருளானது
அகன்றது	நீங்கி யொழிந்தது;
அம்	அழகிய
காலை பொழுது ஆய்	காலைப் பொழுதுவர,
மா மலர் எல்லாம்	சிறந்த புஷ்பங்களெல்லாம்
விரிந்து	விகாஸமடைய
மது ஒழுகின	தேன் வெள்ளமிடா கின்றன;
வானவர்	தேவர்களும்
அரசர்கள்	ராஜாக்களும்
வந்து வந்து	ஒருவர்க்கொருவர் முற்கோலி வந்து
ஈண்டி	திரண்டு
எதிர் திசை	திருக்கண்ணேக்கான தெற்கு திக்கிலே
நிறைந்தனர்	நிறைந்துகின்றார்கள்;
இவரொடும் புகுந்த	இவர்களோடு கூடவந்த (இவர்களது வாஹனமாகிய)
இரு களிறு ஈட்டமும்	பெரிய ஆண்யானைத் திரள்களும்
பிடியோடு	பெண்யானைத் திரள்களும்
முரசும்	பெரியவாத்யங்களும்
அதிர்தலில்	சப்திக்கும்போது
எங்கும்	எத்திசையும்
அலை	அலையெறியாகின்ற
கடல் போன்று உளது	ஸமுத்ர கோஷத்தை ஒத்திருக்கிறது; (ஆதலால்)
பள்ளி எழுந்தருளாய்	திருப்பள்ளியை விட்டு எழுந்திருக்கவேணும்.

918 கோழுங்கொடிமுல்லையின்கோழுமலரணவிக் கூர்ந்ததுகுணதிசைமாருதமிதுவோ *
எழுந்தனமலரணைப்பள்ளிகோள்ளன்னம் ஈன்பனிநனைந்ததமிருஞ்சிறகுதறி *
விழுங்கியமுதலையின்பிலம்புரைபேழ்வாய் வெள்ளெயிறுறவதன்விடத்தினுக்கனுங்கி *
அழுங்கியவானையினருந்துயர்கெடுத்த அரங்கத்தம்மாபள்ளியெழுந்தருளாயே. (உ)

குணதிசை மாருதம்	கீழ்காற்றானது
கொழு கொடி	செழுமை தங்கிய கொடியையுடைத்தான
முல்லையின்	முல்லைச்செடியிலுண்டான
கொழு மலர்	அழகிய மலர்களை
அணவி	அணைந்துகொண்டு
இதுவோ	இதோ
கூர்ந்தது	வீசாகின்றது;
மலர் அணை	புஷ்பசயனத்திலே
பள்ளிகொள்	உறங்குகின்ற
அன்னம்	ஹம்ஸங்களானவை,
ஈன் பனி நனைந்த	(மழைபோல்) சொரிகிற பனியாலே நனைந்த
தம்	தங்களுடைய
இரு சிறகு	அழகிய சிறகுகளை
உதறி	உதறிக்கொண்டு
எழுந்தன	உறக்கம் விட்டெழுந்தன;
விழுங்கிய	(தன்காலை) விழுங்கின
முதலையின்	முதலையினுடைய
பிலம் புரை	பாழி போன்ற
பேழ் வாய்	பெரியவாயிலுள்ள
வெள் எயிறு உற	வெளுத்த கோரப்பற்கள் ஊன்ற
அதன்	அம்முதலையினுடைய
விடத்தினுக்கு	பல் விஷத்திற்கு
அனுங்கி அழுங்கிய	மிகவும் நோவுபட்ட
ஆனையின்	கஜேந்த்ராழ்வானுடைய
அரு துயர்	பெரிய துக்கத்தை
கெடுத்த	போக்கியருளின

அரங்கத்தம்மா! பள்ளி எழுந்தருளாய்.

919 சுடரொளிபரந்தனசூழ்திசையெல்லாம் துன்னியதாரகைமின்னொளி சுருங்கி *
படரொளிபசுத்தனன்பனிமதியிவனே பாயிருளகன்றதுபைம்பொழிற்கமுகின் *
மடலிடைக்கீறிவண்பாளைகள்காற வைகறைகூர்ந்ததுமாருதமிதுவோ *
அடலொளிதிகழ்தருதிகிரியந்தடக்கை அரங்கத்தம்மா! பள்ளியெழுந்தருளாயே. (சு)

சூழ் திசை எல்லாம் } கண்டவிடமெங்கும்
சுடர் ஒளி ஸூர்ய கிரணங்களானவை
பரந்தன பரவி விட்டன;
துன்னிய (ஆகாசத்தில்) நெருங்கிய
தாரகை நக்ஷத்திரங்களினுடைய
மின் ஒளி மிக்க தேஜஸ்ஸானது
சுருங்கி குறைவுபட்டது மின்றி
படர் ஒளி மிக்க ஒளியையுடைய
பனி மதி இவன் இக்குளிர்ந்த சந்திரனும்
பசுத்தனன் ஒளிமழுங்கினன்;
பாய்ப் இருள் பரந்த இருட்டானது
அகன்றது; நீங்கிற்று;
வைகறை மாருதம் இது } இந்த விடியற்காற்றானது
பை பசுமை தங்கிய
பொழில் சோலைகளிலுள்ள
கமுகின் பாக்குமரங்களினுடைய
மடலிடை கீறி மடலைக்கீற
(அத்தாலே)
வண் பாளைகள் காற } அழகிய பாளைகளானவை பரிமளிக்க
(அப்பரிமளத்தை முகந்துகொண்டு)
கூர்ந்தது; வீசாநின்றது;
அடல் பெருத்த கிடக்கையுடைத்தாய்
ஒளி திகழ்தரு தேஜஸ்ஸு விளங்கா நின்றுள்ள
திகிரி திருவாழியாழ்வானே
அம் தடகை } அழகிய பெரிய திருக்கையிலேயுடைய
அரங்கத்தம்மா! பள்ளியெழுந்தருளாய்—.

920 மேட்டிளமேதிகள்தளைவிடுமாயர்கள் வேய்ங்குழலோசையும்விடைமணிக்குரலும் *
ஈட்டியவிசைத்திசைபரந்தனவயலுள் இரிந்தனசும்பினமிலங்கையர்குலத்தை *
வாட்டியவரிசிலைவானவரேறே ! மாமுனிவேள்வியைக்காத்து * அவபிரதம்
ஆட்டியவடுதிறலயோத்தியெம்மரசே! அரங்கத்தம்மா! பள்ளியெழுந்தருளாயே. (சா)

மேடு இள மேதிகள் } உயர்த்தியும் இளமையும் தங்கிய
தளை விடும் } (மேய்கைக்குக்) கட்டவழித்து விடுகிற
ஆயர்கள் இடையர் (ஊதுகிற)
வேய்ங்குழல் ஓசையும் } புல்லாங்குழலின் நாதமும்
விடை } எருதுகளின் (கழுத்திற் கட்டியுள்ள)
மணி மணிகளினுடைய
குரலும் ஓசையும் (ஆகிய)
ஈட்டிய இசை } இவ்விரண்டும் கூடின த்வநியானது
திசை பரந்தன திக்குக்களெங்கும் பரவிவிட்டது;
வயலுள் கழனிகளிலுள்ள
சும்பு இனம் வண்டுகளின் திரள்
இரிந்தன ஆரவாரித்துக்கொண்டு கிளம்பின;
இலங்கையர் குலத்தை } ராக்ஷஸவர்க்கத்தை
வாட்டிய உருவழித்த
வரி சிலை அழகிய சார்ங்கத்தையுடைய
வானவர் ஏறே தேவாதிதேவனே!
மா முனி விச்வாமித்ர மஹர்ஷியினுடைய
வேள்வியை யாகத்தை
காத்து நிறைவேற்றுவித்து
அவபிரதம் ஆட்டிய } அவப்ருத ஸ்நாநம் செய்வித்தருளின
அடு திறல் } (விரோதிகளை) ஒழிக்கவல்ல மிடுக்கையுடையனாய்
அயோத்தி எம் அரசே } அயோத்தியா புரியை ஆளுகையாலே எங்களுக்குஸ்வாமியானவனே!
அரங்கத்தம்மா!
பள்ளி எழுந்தருளாயே—.

921 புலம்பினபுட்களும்பூம்பொழில்களின்வாய் போயிற்றுக்கங்குல்புகுந்ததுபுலரி *
கலந்துகுணதிசைக்கனைகடலரவம் களிவண்டுமிழற்றியகலம்பகம்புனைந்த *
அலங்கலந்தொடையல்கொண்டடியிணை பணிவான் அமரர்கள்புகுந்தனராதலிலம்மா! *
இலங்கையர்கோன்வழிபாடுசெய்கோயில் எம்பெருமான்! பள்ளியெழுந்தருளாயே. (ரு)

பூ	பூக்திராநின்றுள்ள
பொழில்களின் வாய்–சோலைகளிலுள்ள	
புட்களும்	பறவைகளும்
புலம்பின	(உணர்ந்து) ஆரவாரஞ் செய்யாநின்றன;
கங்குல்	இரவானது
போயிற்று	கழிந்தது;
புலரி	ப்ராத:காலமானது
புகுந்தது	வந்தது;
குணதிசை	கீழ்த்திசையிலே
கனை	கோஷஞ்செய்கிற
கடல்	கடலினுடைய
அரவம்	ஓசையானது
கலந்தது	வியாபித்தது;
களி	தேனைப்பருகிக் களிக்கின்ற
வண்டு	வண்டுகளானவை
மிழற்றிய	சப்தியாநிற்கிற
கலம்பகன் புனைந்த	பல்வகைப்பூக்களாலே தொடுக்கப்பட்ட
அம்	அழகிய
அலங்கல் தொடையல் கொண்டு	அலங்கல்மாலை ஏந்திக் கொண்டு
அமரர்கள்	தேவர்கள்
அடி இணை பணிவான்	(தேவரீருடைய) திருவடியிணைகளில் பணிமாறுகைக்காக
புகுந்தனர்	வந்து நின்றனர்;
ஆதலில்	ஆகையாலே
அம்மா	ஸ்வாமின்!
இலங்கையர் கோன் வழிபாடு செய் கோயில்	லங்கேச்வரனை விபீஷணழ்வான் ஆஸ்ரயித்து பண்ணப் பெற்ற கோயிலிலே (கண் வளர்ந்தருளுகிற)

எம்பெருமான்! அஸ்மத்ஸ்வாமியே!
பள்ளி எழுந்தருளாயே—.

922 இரவியர்மணிநெடுந்தேரோடுமிவரோ இறையவர்பதினெருவிடையருமிவரோ *
மருவியமயிலினனறுமுகனிவனே மருதரும்வசுக்களும்வந்துவந்தீண்டி *
புரவியோடாடலும்பாடலுந்தேரும் குமரதண்டம்புகுந்தீண்டியவெள்ளம் *
அருவரையனையகின்கோயில்முனனிவரோ அரங்கத்தம்மாபள்ளியெழுந்தருளாயே. (சு)

மணி	விலக்ஷணமாய்
நெடு	பெரிதான
தேரொடும்	தேரோடுகூட
இரவியர்	பன்னிரண்டு ஆதித்தர்களும்
இறையவர் பதினெரு விடையரும்	ஜகத்துக்கு நிர்வாஹகர்களான ஏகாதச ருத்ரர்களும்
மருவிய	பொருந்திய
மயிலினன்	மயில்வாகனத்தையுடைய
அறுமுகன்	ஸுப்ரஹ்மண்யனும்
மருதரும்	மருத்கணங்களான ஒன்பதின்மரும்
வசுக்களும்	அஷ்டவசுக்களும்
வந்து வந்து	ஒருவருக்கொருவர் மூன்றிக் கொண்டுவந்து
ஈண்டி	நெருங்கிநிற்க
	(இவர்களுடைய வாஹநமான)
புரவியோடு தேரும்-குதிரைகள் பூண்ட ரதங்களும்	
பாடலும் ஆடலும்-பாட்டும் கூத்துமாய்	
குமரதண்டம் புகுந்து	தேவஸேநா ஸமூகங்கள் வந்து புகுந்து
ஈண்டியவெள்ளம்	நெருங்கியிருக்கிற திரளானது
அரு வரை அனைய	பெரிய மலைபோன்ற
கோயில்	கோயிலில்
நின் முன்	தேவரீர் திருக்கண்ணேக்கத் திலே (நிற்கின்றது;)

அரங்கத்தம்மா!
பள்ளி யெழுந்தருளாயே—.

923 அந்தரத்தமரர்கள்கூட்டங்களிவையோ அருந்தவமுனிவரும்மருதருமிவரோ *
இந்திரனனையும்தானும்வந்திவனே எம்பெருமானுனகோயிலின்வாசல் *
சுந்தரர்நெருக்கவிச்சாதரர்நூக்க இயக்கரும்மயங்கினர்திருவடிதொழுவான் *
அந்தரம்பாரிடமில்லைமற்றிதுவோ அரங்கத்தம்மாபள்ளியெழுந்தருளாயே. (எ)

எம்பெருமான்	எனக்கு ஸ்வாமியான
உன கோயிலின் வாசல்	தேவரீருடைய திருக்கோயிலின் வாசலிலே
இந்திரன்தானும்	தேவேந்திரனும்
ஆனையும்	(அவனது வாஹனமான) ஐராவதயானையும்
வந்து	வந்திருப்பதுமன்றி,
அந்தரத்து அமரர்கள்	அண்டத்துக்குள் இராநின்ற தேவர்களும்
கூட்டங்கள்	இவர்களுடைய பரிவாரங்களும்
அரு தவம் முனிவரும்	மஹாதபஸ்விகளான ஸநகாதி மஹர்ஷிகளும்

மீருகரும்	மருத்கணங்களும்,
இயக்கரும்	யக்ஷர்களும்,
சுந்தரர் கெருக்க	கந்தர்வர் கெருக்கவும்
விர்யாகர் தரங்க	வித்யாதரர்கள் தள்ளவும்
திருவடி தொழு வான் மயங்கினர்	(தேவரீருடைய) திருவடிகளைத் தொழுவதற்காக வந்து மயங்கி நின்றனர்;
அந்தரம்	ஆகாசமும்
பார்	பூமியும்
இடம் இல்லை	அவகாசமற்றிரா கின்றது;

அரங்கத்தம்மா!

பள்ளியெழுந்தருளாய்—.

924 வம்பவிழ்வானவர்வாயுறைவழங்க மாநிதிகபீலியோண்கண்ணுடிமுதலா *
எம்பெருமான்படிமைக்கலங்காண்டற்கு ஏற்பனவாயினகொண்டுநன்முனிவர் *
தும்புருகாரதர்புகுந்தனரிவரோ தோன்றினனிரவியும்துலங்கொளிபரப்பி *
அம்பரதலத்தில்நின்றகல்கின்றதிருள்போய் அரங்கத்தம்மாபள்ளியெழுந்தருளாயே. (அ)

வழங்க	(தேவரீருக்கு) ஸமர்ப்பிப்பதற்காக
வட்பு அவிழ்	பரிமளம் மிகுந்த
வாயுறை	அறுகம்புல்லும்
மா	சிறந்த
நிதி	சங்கநிதி பத்மநிதிகளும் (கையிலேயுடையராய்க் கொண்டு)
வானவர்	தேவர்களும்,
கபிலை	காமதேநுவும்
ஒண்	ஒளி பொருந்திய
கண்ணுடி முதலா	கண்ணுடி முதலாக,
எம்பெருமான்	ஸ்வாமியான தேவரீர்
காண்டற்கு	கண்டருளுகைக்கு
ஏற்பன ஆயின	தகுதியாயுள்ளவையான
படிமைக் கலம் கொண்டு	உபகரணங்களெல்லாவற்றையுங்கொண்டு
நல் முனிவர்	மஹர்ஷிகளும்
தும்புரு நாரதர்	தும்புரு நாரதர்களும்
புகுந்தனர்	வந்து நின்றார்கள்; (இதுவுமன்றி)
இரவியும்	சூரியனும்
துலங்கு ஒளி	(தனது) மிக்க தேஜஸ்ஸை
பரப்பி	எங்கும் பரவச் செய்து கொண்டு
தோன்றினன்	உதயமானன்;
இருள்	இருளானது
அம்பரதலத்தில் நின்று	ஆகாசத்தினின்றும்
போய் அகல்கின்றது	நீங்கிப்போயிற்று;

அரங்கத்தம்மா! பள்ளி எழுந்தருளாய்—.

925 ஏதமில்தண்ணுமையேக்கம்மத்தளி யாழ்குழல்முழவமோடிசைதிசைகெழுமி *
கீதக்கள்பாடினர்கின்னரர்கருடர்கள் கெந்தருவருமிவர்கங்குலுமெல்லாம் *
மாதவர்வானவர்சாரணரியக்கர் சித்தரும்மயங்கினர்திருவடிதொழுவான் *
ஆதலிலவர்க்குநாலோலக்கமருள அரங்கத்தம்மாபள்ளியெழுந்தருளாயே. (கூ)

ஏதம் இல்	குற்றமற்ற
தண்ணுமை	சிறுபறையும்
ஏக்கம்	ஒற்றைத் தந்தியையுடைய வாத்யமும்
மத்தளி	மத்தளமும்
யாழ்	வீணையும்
குழல்	புல்லாங்குழல்களுமாய்
திசை	திக்குக்களெங்கும்
முழவமோடு	இவற்றின் முழக்கத்தோடு
இசை கெழுமி கீதங்கள் பாடினர்	இசை மாட்டிப் பாட்டு பாடக் கடவரான
கின்னரர்	கின்னரர்களும்
கருடர்கள்	கருடர்களும்
கெந்தருவரும்	கந்தர்வர்களும்
இவர்	இதோ மற்றுள்ளவர்களும்
மா தவர்	மஹர்ஷிகளும்
வானவர்	தேவர்களும்
சாரணர்	சாரணர்களும்
இயக்கர்	யக்ஷர்களும்
சித்தரும்	ஸித்தர்களும்
திருவடி தொழு வான்	(தேவரீருடைய) திருவடிகளில் வணங்குகைக்காக
கங்குலும் எல்லாம்	இரவெல்லாம்
மயங்கினர்	(கெருக்கத்தில் வருந்தி) மோஹமுற்றனர்;
ஆகலில்	ஆகையாலே
அவர்க்கு	அவர்களுக்கு
நால் ஓலக்கம் ஆக	பகலோலக்க மருளுகைக்காக

அரங்கத்தம்மா! பள்ளி எழுந்தருளாய்—.

926 கடிமலர்க்கமலங்கள்மலர்ந்தனவிவையோ கதிரவன்கனைகடல்முளைத்தனனிவனே *
துடியிடையார்சுரிகுழல்பிழிந்துதறித் துகிலுடுத்தேறினர்சூழ்புனலரங்கா *
தோடையோத்ததுளவமும்கூடையும்போலிந்து தோன்றியதோள்தொண்டரடிப்பொடியென்னு
மடியனே* அளியனென்றருளியுன்னடியார்க்காட்படுத்தாய் பள்ளியெழுந்தருளாயே. (க)

புனல் சூழ்	திருக்காவேரித் தீர்த்தத்தாலே சூழப்பட்ட
அரங்கா	ஸ்ரீரங்கத்தில் கண்வளர்ந் தருளுமவனே!
கடி	பரிமளமுடைய
கமலம் மலர்கள்	தாமரைப் பூக்களானவை
மலர்ந்தன	(நன்றாக) மலர்ந்து விட்டன;
கதிரவன்	(தாமரையை மலர்த்துவல்ல) ஸூர்யனானவன்
கனை கடல்	கோஷஞ் செய்கையையே இயல்வாகவுடைய கடலிலே
முளைத்தனன்	உதயகிரியிலே வந்து தோன்றினன்;
துடி இடையார்	உடுக்கை போன்ற (சூக்ஷ்மமான) இடையையுடைய மாதர்
சுரி குழல்	(தமது) சுருண்டமயிர் முடியை
பிழிந்து உதறி	நீர்ப்பசையறப் பிழிந்து உதறி விட்டு
துகில் உடுத்து	(தம்தம்) ஆடைகளை உடுத்துக் கொண்டு
ஏறினர்	கரையேறிவிட்டார்கள்;
தொடை ஒத்த	ஒழுங்காகத் தொடுக்கப் பெற்ற
துளவமும்	திருத்துழாய் மாலையும்
கூடையும்	பூக்குடலையும்
பொலிந்து தோன்றிய	விளங்கா நிற்கப்பெற்ற
தோள்	தோளையுடைய
தொண்டரடிப் பொடி யென்னும்	'தொண்டரடிப்பொடி' என்ற பெயருடைய
அடியனே	தாஸனே
அளியன் என்று அருளி	'திருப்பண்ணுகைக்கு உரிய பாத்திரம்' என்று திருவுள்ளம் பற்றி அங்கீகரித்தருளி
உன் அடியார்க்கு	தேவரீருடைய நித்யகிங்கரர்களான பாகவதர்களுக்கு
ஆள்படுத்தாய்	ஆளாக்க வேணும்; (அதற்காக)
பள்ளி எழுந்தருளாய்	திருப்பள்ளியை விட்டு எழுந்தருளவேணும்.

அடிவரவு:—கதிர் கொழு சுடர் மேட்டு புலம்பின இரவியர் அந்தரம் வம்பு ஏதம் கடி அமலன்.

தொண்டரடிப்பொடியாழ்வார் திருவடிகளே சரணம்.

திருப்பள்ளியெழுச்சியுரை
முற்றிற்று.

திருப்பாணழ்வார் அருளீச்செய்த

அமலனாதிபிரான்

தனியன் உரை

ஆபாதசூட மநுபூய ஹரிம் சயாநம்
மத்யே கவேரதுஹிதுர் முதிதாந்தராத்மா।
யோ நிச்சிகாய மகவை முரிவாஹகம் தம்
அத்ரஷ்ட்ருதாம் நயநயோர் விஷயாந்தராணும்

யः	யாவரொரு திருப்பாணழ்வார்
கவேர துஹிதுः	திருக்காவேரியின்
மத்யே	நடுவில்
சயாநம்	திருக்கண் வளர்ந்தருளுகிற
ஹரிம்	அழகிய மணவாளப் பெருமாளை
ஆபாதசூடம்	திருவடி தொடங்கித் திருமுடி யளவாக
அநுபூய	(கண்குளிர) அநுபவித்து
முதித அந்தராத்மா	மகிழ்ந்த சிந்தையராய்
நயநயோः விஷயாந்தராணும் அத்ரஷ்ட்ருதாம்	(தமது) திருக்கண்கள் (அப்பெருமானன்றி) மற்றொன்றையும் காணமாட்டாமையை
நிச்சிகாய	அறுதியிட்டருளினரோ,
தம்	அப்படிப்பட்ட
முநிவாஹநம்	லோகஸாரங்க முநிமுநியை வாஹநமாகக் கொண்ட திருப்பாணழ்வாரை
மகவை	சிந்திக்கக்கடவேன்.

காட்டவேகண்டபாத கமலநல்லாடையுந்தி
தேட்டருமுதரபந்தந்திருமார்வு கண்டஞ்செவ்வாய்
வாட்டமில்கண்கள்மேனி முனியேறித்தனிபுகுந்து
பாட்டிலுல்கண்டுவாழும் பாணர்தாள்பரவினேமே.

முனி ஏறி	லோகஸாரங்க முனியின் (தோளின்மேல்) ஏறி
தனி புகுந்து	தனியே உள்ளே புகுந்து
காட்டவே கண்ட	(அம்முனிவரர்) காண்பித்தபடியே கண்டு ஸேவிக்கப்பட்ட
பாத கமலம்	திருவடித்தாமரைகளும்
நல் ஆடை	விலக்ஷணமான திருப்பீதாம்பரமும்
உந்தி	திருநாபியும்
தேட்டரும்	கிடைத்தற்கு அரிதான
உதர பந்தம்	பொன் அரைநாணும்
திரு மார்வு	பிராட்டி வாழ்கிற மார்பும்
கண்டம்	திருக்கழுத்தும்
செம் வாய்	சிவந்த வாயும்
வாட்டம் இல்	சோர்வு இல்லாத
கண்கள்	திருக்கண்களும் (ஆகிய இவற்றோடு கூடிய)
மேனி	திருமேனியை
பாட்டிலுல் கண்டு வாழும்	பாசுரங்களின் அநுஸந்தானத்தோடு கூட ஸேவித்தே ஆனந்தித்த
பாணர்	திருப்பாணழ்வாருடைய
தாள்	திருவடிகளை
பரவினேம்	துதிக்கப் பெற்றேம்.

ஸ்ரீः

அமலனாதிபிரான்.

927 அமலனதிபிரான் அடியார்க்கென்னையாட்படுத்த
விமலன் * விண்ணவர்கோன் விரையார்பொழில்வேங்கடவன் *
நிமலன் நின்மலன்நீதிவானவன் நீண்மதிளரங்கத்தம்மான் * திருக்
கமலபாதம்வந்து என்கண்ணினுள்ளனவொக்கின்றதே. (க)

அமலன்	பரிசுத்தனும்
ஆதி	ஜகத்காரணபூதனும்
பிரான்	உபகாரகனும்
என்னை	(இழிகுலத்தவனை) என்னை
அடியார்க்கு	(தனது) அடியவர்களான பாகவதர்களுக்கு
ஆட்படுத்த	ஆட்படுத்துகையாலே வந்த
விமலன்	சிறந்தபுகழை யுடையனும்

விண்ணவர் கோன்	நித்யஸூரிகட்குத் தலைவனை யிருந்து வைத்து (ஆச்ரிதர்கட்காக)
விரை ஆர் பொழில்	பரிமளம் மிக்க சோலைகளை யுடைய
வேங்கடவன்	திருவேங்கட மலையில் வந்து தங்குமவனுய்
நீமலன்	ஆச்ரயிப்பார்க்கு அரியனையிருக்கையாகிற குற்றமற்று, ஆச்ரித பாரதந்திரியத்தை வெளியிட்டு நிற்குமவனுய்
நின்மலன்	அடியாருடைய குற்றத்தைக் காண்கையாகிற தோஷமில்லாத வத்தலனுய்,
நீதிவானவன்	சேஷசேஷி முறை வழுவாதபடி நியாயமே செல்லும் நிலமான பரமபதத்துக்கு நிர்வாஹகனுய்
நீள் மதிள்	உயர்ந்த மதிள்களையுடைய
அரங்கத்து	கோயிலிலே (கண் வளர்ந்தருளுகிற)
அம்மான்	ஸ்வாமியான அழகிய மணவாளனுடைய
திருக் கமலபாதம் வந்து	திருவடித்தாமரைகளானவை தானேவந்து
என் கண்ணின் உள்ளன ஒக்கின்றதே	என் கண்ணுக்குள்ளே புகுந்தன போலிரா நின்றனவே.

928 உவந்தவுள்ளத்தனுய் உலகமளந்தண்டமுற *
நிவந்தநீண்முடியன் அன்றுகேர்ந்தநிசாசரரை *
கவர்ந்தவேங்கணைக்காகுத்தன் கடியார்பொழிலரங்கத்தம்மான்* அரைச்
சிவந்தவாடையின்மேல் சென்றதாமெனசிந்தனையே. (உ)

உவந்த உள்ளத்தன் ஆய்	மகிழ்ச்சியோடு கூடிய மனத்தையுடையனுய்க் கொண்டு
உலகம் அளந்து	மூவுலகங்களையும் அளந்து
அண்டம் உற	அண்டகடாஹத்தளவுஞ் சென்று முட்டும்படி
நிவந்த	உயர்த்தியை அடைந்த
நீள் முடியன்	பெரிய திருமுடியை யுடையவனுய்
அன்று	முற்காலத்தில்
கேர்ந்த	எதிர்ந்து வந்த
நிசாசரரை	ராக்ஷஸர்களை
கவர்ந்த	உயிர்வாங்கின
வெம் கணை	கொடிய அம்புகளையுடைய
காகுத்தன்	இராமபிரானுய்,
கடி ஆர்	மணம் மிக்க
பொழில்	சோலைகளையுடைய
அரங்கத்து	ஸ்ரீரங்கத்தில் எழுந்தருளியிருப்பவனை
அம்மான்	எம்பிரானுடைய
அரை	திருவரையில் (சாத்திய)
சிவந்த ஆடையின் மேல்	பீதாம்பரத்தின்மேல்
என நிந்தனை	என்னுடைய நினைவானது
சென்றது ஆம்	பதிந்ததாம்.

929 மந்திபாய வடவேங்கடமாமலை * வானவர்கள்
சந்திசெய்யநின்ருரன் அரங்கத்தரவினணையான் *
அந்திபோல்நிறத்தாடையும் அதன்மேலயனைப்படைத்ததோரெழில் *
உந்திமேலதன்ரே அடியேனுள்ளத்தின்னுயிரே. (ஙு)

மந்தி	குரங்குகளானவை
பாய்	(ஒரு கிளையில் நின்றும் மற்றொரு கிளையில்) பாயப்பெற்ற
வடவேங்கடம் மா மலை	வட திசையிலுள்ள திருவேங்கடமென்னும் திருமலையிலே
வானவர்கள்	நித்யஸூரிகள்
சந்தி செய்ய நின்ருரன்	பூக்களைக்கொண்டு ஆராதிக்கும்படி நிற்பவனுய்,
அரங்கத்து	கோயிலிலே
அரவு இன் அணையான்	திருவனந்தாழ்வானிற போக்யமான படுக்கையையுடையனுன அழகியபெரியபெருமாளுடைய
அந்தி போல் நிறம் ஆடையும்	செவ்வானம்போன்ற நிறத்தையுடைய திருப்பீதாம்பரமும்
அதன் மேல்	அப்பீதாம்பரத்தின் மேலே
அயனை படைத்த	பிரமனைப்படைத்த
அது ஓர் எழில்	அப்பற்ற அழகையுடைய
உந்தி மேலது	திருநாபிக் கமலமும்
அன்ரே	ஆகிய இவற்றின் மேற் படிந்ததன்ரே
அடியேன் உள்ளத்து இன் உயிர்	என்னுடைய மனஸ்ஸிலே விளங்குகிற இனிதான ஆத்ம ஸ்வரூபம்.

"வடவேங்கட மாமலை நின்றான் - அரங்கத்தரவினணையான்" என்ற சொற்போக்கால் உபய காவேரிமத்தியில் கோயிலிலே பாங்காகக் கண் வளர்ந்தருள்வதற்காகச் சேணுயர்ந்த திருமலையிலே நின்று இடம் பார்த்தான்போலும் என்று நம் ஆசாரியர்கள் ரஸோக்தியாக அருளிச்செய்வர்கள். கோயில்வாஸமாகிற உபேயத்திற்குத் திருமலையில்வாஸம் உபாயமென்றதாயிற்று. *மலைமேல்தான்நின்று என்மனத்துளிருந்தானே* என்ற திருவாய்மொழி இங்கு நினைக்கத்தக்கது. (கூ)

930 சதுரமாமதிள்சூழிலங்கைக்கிறைவன் தலைபத்து
உதிரவோட்டி * ஓர்வெங்கணையுய்த்தவன் ஓதவண்ணன் *
மதுரமாவண்டுபாட மாமயிலாடரங்கத்தம்மான் * திருவயிற்
றுதரபந்தம் என்னுள்ளத்துள் நின்றுலாகின்றதே. (சை)

சதுரம்	நாற்சதுரமாய்
மா	உயர்ந்திருக்கிற
மதில் சூழ்	மதில்களாலே சூழப்பட்ட
இலங்கைக்கு	லங்காநகரத்திற்கு
இறைவன்	நாதனான இராவணனை
ஓட்டி	(முதல் நாள் யுத்தத்தில்) தோற்று ஓடும்படி செய்து (மறுநாட்போரில்)
தலை பத்து	(அவனது) தலை பத்தும்
உதிர	(பனங்காய்போல்) உதிரும்படி
ஓர்	ஒப்பற்ற
வெம் கணை	கூர்மையான அஸ்த்ரத்தை
உய்த்தவன்	ப்ரயோகித்தவனும்,
ஓதம் வண்ணன்	கடல்போன்ற (குளிர்ந்த) வடிவையுடையவனும்,
வண்டு	வண்டுகளானவை
மதுரமா	மதுரமாக
பாட	இசைபாட
	(அதற்குத் தகுதியாக)
மா மயில் ஆடு	சிறந்த மயில்கள் கூத்தாடப் பெற்ற
அரங்கத்து அம் மான்	திருவரங்கத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்வாமியுமான ஸ்ரீரங்கநாதனுடைய
திரு வயிறு உதர பந்தம்	திருவயிற்றில் சாத்தியுள்ள 'உதரபந்த' மென்னும் திருவாபரணமானது
என் உள்ளத்துள் நின்று	என் நெஞ்சினுள் நிலைத்து நின்று
உலாகின்றது	உலாவுகின்றது.

இரண்டாமடியிலுள்ள 'ஓட்டி' என்பதை இராவணனிடத்தே அன்வயியாமல் வெங்கணையிலே அன்வயிக்கவுமாம். இலங்கைக்கிறைவன் தலைபத்து உதிரும்படியாக ஓர் வெங்கணையை யோட்டி உய்த்தவன் என்க. திருவயிற்றுதரபந்தம் = திருவயிற்றிலே சாத்தியுள்ள உதரபந்தமென்கிற திருவாபரணம் என்று பொருள்படுதலால் 'வயிறு, உதரம்' என்பன புநருக்தியாகா.

931 பாரமாய பழவினைபற்றறுத்து * என்னைத்தன்
வாரமாக்கிவைத்தான் வைத்ததன்றியென்னுள்புகுந்தான் *
கோரமாதவம்செய்தனன்கொலறியேன் அரங்கத்தம்மான் * திரு
வாரமார்பதன்றோ அடியேனையாட்கொண்டதே. (ஞ)

	பெறுதற்கு உறுப்பாக, நான்)
பாரம் ஆய	பொறுக்க முடியாத சுமையாயிராநின்ற
பழ வினை	அநாதியான பாபங்களின்
பற்று அறுத்து	சம்பந்தத்தைத் தொலைத்து
என்னை	(அதனால் பாபம் நீங்கப் பெற்ற) அடியேனை
தன் வாரம் ஆக்கி வைத்தான்	தன்னிடத்தில் அன்பு உடையவனாகப் பண்ணி வைத்தான் (ரங்கநாதன்:)
வைத்தது அன்றி	இப்படி செய்து வைத்தது மல்லாமல்
என்னுள் புகுந்தான்	என் ஹ்ருதயத்திலும் ப்ரவேசித்து விட்டான்;
கோரம் மா தவம்	உக்ரமான பெரிய தொரு தபஸ்ஸை
செய்தனன் கொல்	(முற்பிறவியில்) செய்திருப்பேனோ என்னவோ?
அறியேன்	அறிகிறேனில்லை;
அரங்கத்து அம் மான்	ஸ்ரீரங்கநாதனுடைய
திரு ஆரம்	பிராட்டியையும் முக்தாஹாரத்தையும் உடைத்தான
மார்பு அது அன்றோ	அத்திருமார்பன்றோ
அடியேனை	தாஸனான என்னை
ஆள்கொண்டது	அடிமைப்படுத்திக்கொண்டது.

(இப்படிப்பட்ட பாக்கியத்தைப்

அடியார்களைப் பரிந்துகாத்தருளவல்ல பெரிய பிராட்டியாரும், ஸர்வரக்ஷகத்வலக்ஷண மான ஹாரமும் திகழப்பெற்ற திருமார்பினழகே என்னை யீட்டுத்திக்கொண்ட தென்கிறார். 'சோரமாதவம் செய்தனன் கொல்' என்றவிடத்து 'செய்தனன்' என்பதைத் தன்மையாகக் கொள்ளாமல் படர்க்கையாகக் கொள்வதுமுண்டு; தன்மையாகக் கொள்ளுமளவில், இப்படிப் பட்ட பாக்கியம் பெறுதற்கு நான் என்ன தவஞ் செய்தேனே! என்றதாம். படர்க்கையாகக் கொள்ளுமளவில், இப்படி யென்னெஞ்சினுள் புகுவதற்கு எம்பெருமான் உபய காவேரீமத் தியிலே நின்றுகொண்டு என்ன கடுந்தவம் புரிந்தானே! என்றதாம். ஒரு சேதநனைப் பெறுகை ஈச்வரனுக்குப் பரம புருஷார்த்தமாகையாலே தவம் செய்யவேண்டியவன் அவனே யென்க. இரண்டாமடியில், வாரம்-பக்ஷபாதம். (ரு)

932 தண்டவெண்பிறையன் துயர்தீர்த்தவன் * அஞ்சிறைய
வண்டுவாழ்பொழில்சூழ் அரங்கநகர்மேயவப்பன் *
அண்டரண்டபகிரண்டத்து ஒருமாநிலமெழுமால்வரை * முற்றும்
உண்டகண்டங்கண்டீர் அடியேனையுய்யக்கொண்டதே. (சா)

தண்டம்	ஒரு தண்டாயிருக்கிற (கலா மாத்ரமான)	அப்பன்	ஸ்வாமியுமான ஸ்ரீரங்கநாத னுடைய
வெண் பிறையன்	வெளுத்த சந்த்ரனே (முடி யிலே) உடையனான சிவ னுடைய	அண்டர்	அண்டத்துக்குட்பட்ட தேவாதி வர்க்கங்களையும்
துயர்	(பிச்சை யெடுத்துத் திரிந்த) பாதகத்தை	அண்டம்	அண்டங்களையும்
தீர்த்தவன்	போக்கினவனும்	பகிரண்டம்	அண்டாவரணங்களையும்
அம் சிறைய வண்டு	அழகிய சிறகையுடைய வண்டுகள்	ஒரு மா நிலம்	ஒப்பற்ற மஹாப்ருதிவியையும்
வாழ்	வாழ்தற்கிடமான	எழு மால் வரை	ஏழு குலபர்வதங்களையும்
பொழில் சூழ்	சோலைகள் சூழப் பெற்ற	முற்றும்	சொல்லிச் சொல்லாத மற் றெல்லாவற்றையும்
அரங்கம் நகர்	திருவரங்கப்பெரு நகரிலே	உண்ட	அமுதுசெய்த
மேய	பொருந்தியிரா நின்ற	கண்டம் கண்டீர்	திருக்கழுத்துக்கிடீர்
		அடியேனை	தாஸனான என்னை
		உய்யக் கொண் டது	உஜ்ஜீவிப்பித்தது.

முதலடியில் 'பிறையன்' 'பிறையின்' என்பன பாடபேதங்கள். பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியானத்தில் 'சந்த்ரனுடைய கூஹ்யத்தைப் போக்கினனென்றுமாம்' என்றருளிச் செய்தது கொண்டு 'பிறையின்' என்கிற பாடாந்தரம் ஊஹிக்கப்படுகிறது. (சு)

933 கையினார்சுரிசங்கனலாழியர் நீள்வரைபோல்
மெய்யனூர் * தளபவிரையார் கமழ்நீண்முடியெம்
ஐயனூர் * அணியரங்கனூர் அரவினணைமிசைமேயமாயனூர் *
செய்யவாய்ஐயோ! என்னைச்சிந்தைகவர்ந்ததுவே. (எ)

கையின் ஆர்	திருக்கைகளில் பொருந்தியிருக்கின்ற	அணி அரங்கனூர்	அழகு பொருந்திய திருவாய் க்குத்திற் கண் வளர்ந்தரு ளும் பவராய்
சுரி சங்கு	சுரியையுடைய திருச்சங்கை யும்	அரவு இன் அணை மிசை மேய	திருவனந்தாழ்வானாகிற இனிய திருப்பள்ளியின் மீது பொருந்திய
அனல் ஆழியர்	தீ வீசுகின்ற திருவாழியை யும் உடையராய்,	மாயனூர்	ஆச்சரிய செய்கைகளை யுடை யரான ஸ்ரீரங்கநாதருடைய
நீள் வரைபோல் மெய்யனூர்	பெரியதொரு மலைபோன்ற திருமேனியை யுடையராய்	செய்ய வாய் என்னை	சிவந்த திருப்பவளமான தை என்னுடைய
தளபம் விரை ஆர் கமழ் நீள் முடி	திருத்துழாயின் பரிமளம் மிகப் பெற்று அதனால் பரிமளியா நின்றுள்ள உயர்ந்த திருவபிஷேகத்தை யுடையராய்	சிந்தை கவர்ந் தது	நெஞ்சைக் கொள்ளைகொண் டது.
ஐயனூர்	எமக்கு ஸ்வாமியாய்	ஐயோ	(ஆச்சர்யாதிசயக் குறிப்பு.)

சம்பெருமானை முழுக்க அநுபவிக்கப் பார்த்திருக்கையில் இடையிலே அசுரன் சொஞ்சைத் கொள்ளைகொண்டு விட்டதே! இதற்கென் செய்வேன்? என்பார்போலே ஐயோ என்கிறார். "பண்டே நெஞ்சுபறிகொடுத்த வென்னை அநியாயம் செய்வதே யென்று கூப்பிடுகிறார்" என்பர் பெரியவாச்சான்பிள்ளை. "ஐயோ வென்றது-ஆச்சர்யத்தையாதல் அநுபவிக்க அரிதானபடியையாதல், அநுபவரஸத்தையாதல் காட்டுகிறது" என்பர் நம்புற்பிள்ளை.

934 பரியனாகிவந்த அவுணனுடல்கீண்ட * அமரர்க்
கரியவாதிப்பிரான் அரங்கத்தமலன்முகத்து *
கரியவாகிப்புடைபரந்து மிளிர்ந்துசெவ்வரியோடி * நீண்டவப்
பெரியவாயகண்கள் என்னைப்பேதைமைசெய்தனவே. (அ)

பரியன் ஆகி	மிகவும் ஸ்தூலமான வடிவை யுடையனாய்க் கொண்டு
வந்த	(ப்ரஹ்லாதனை நலிய) வந்த
அவுணன்	அஸுரனான இரணியனுடைய
உடல்	சரீரத்தை
கீண்ட	கிழித்துப் பொகட்டவனும்,
அமரர்க்கு	பிரமன் முதலியதேவர்கட்கும்
அரிய	அணுகமுடியாதவனும்
ஆகி	ஜகத்காரணபூதனும்
பிரான்	மஹோபகாரகனும்
அரங்கத்து	கோயிலில் எழுந்தருளியிருக்கிற
அமலன்	பரமபாவநனுமாகிய எம்பெருமானுடைய
முகத்து	திருமுக மண்டலத்தில்
கரிய ஆகி	கறுத்த நிறமுடையவையாய்
புடை பரந்து	விசாலங்களாய்
மிளிர்ந்து	பிரகாசமுடையவையாய்
செவ்வரி ஓடி	செவ்வரி படர்ந்திருப்பனவாய்
நீண்ட	(காது வரை) நீண்டிருப்பனவாய்
பெரிய ஆய	பெருமை பொருந்தியவையுமான
அக்கண்கள்	அந்தத் திருக்கண்களானவை
என்னை	அடியேனை
பேதைமை செய்தன	உன்மத்தனைச் செய்துவிட்டன.

எப்போதும் அழகிய மணவாளனது திருக்கண்களின் பெருமையையே தாம் வாய்வெருவி, பலரும் பேயனென்று ஏசும்படியான உன்மத்த நிலைமையை யடைந்திட்டதாக அருளிச்செய்கிறார். கறுத்த நிறமுடைமை, விசாலமாயிருக்கை, ஒளிபொருந்தியிருக்கை, செவ்வரி படர்ந்திருக்கை [சிறு கொடிபோன்ற சிவந்த ரேகை யோடுதல்] காதளவும் நீண்டிருக்கை ஆகிய இவை கண்களுக்குப் பெருமை.

பேதைமை—அறிவில்லாமையும் உன்மத்தமும். (அ)

935 ஆலமாமரத்தினிலைமேல் ஒருபாலகனாய் *
ஞாலமேழுமுண்டான் அரங்கத்தரவினணையான் *
கோலமாமணியாரமும் முத்துத்தாமமும்முடிவில்லதோரெழில் *
நீலமேனியையோ! நிறைகொண்டதென்னெஞ்சினையே. (கூ)

மா	பெரிதான
ஆலமரத்தின்	ஆலமரத்தினுடைய
இலைமேல்	(சிறிய) இலையிலே
ஒரு பாலகன் ஆய்	ஒரு சிறு பிள்ளையாகி
ஞாலம் எழும் உண்டான்	எழுலகங்களையும் திருவயிற்றிலே வைத்து நோக்கினவனும்
அரங்கத்து	கோயிலிலே
அரவு இன் அணையான்	திருவனந்தாழ்வானாகிற திருப்பள்ளியின்மீது சாய்ந்தருள்பவனுமான ஸ்ரீரங்கநாதனுடைய
கோலம்	அழகிய
மா	சிறந்த
மணி ஆரமும்	ரத்நங்களால் செய்யப்பட்ட ஹாரமும்
முத்து தாமமும்	முத்துவடமும் (ஆகிய இவை போன்ற பல்லாயிரம் திருவாபரணங்கள்)
முடிவு இல்லது	எல்லைகாண முடியாமல் அபரிமிதமாக விளங்காநிற்கப்பெற்றதும்
ஓர் எழில் நீலம்	ஒப்பற்ற அழகையுடையதும் கருநெய்தல் மலர் போன்றதுமான
மேனி	திருமேனியானது
என் நெஞ்சினை	எனது நெஞ்சினுடைய
நிறை கொண்டது	அடக்கத்தை கொள்ளைகொண்டுபோயிற்று.

ஐயோ!=இதற்கென்செய்வேன்? என்கிறார்.

தனித்தனி ஒவ்வொரு அவயவத்திலும் ஈடுபட்டுப் போந்த ஆழ்வார் அவயவியான திரு மேனியை யதுபவித்துத் தமது நெஞ்சு பரவசமானபடியைப் பேசுகிறார் இதில். கோலமா மணி யாரங்களையும் முத்துத்தாமங்களையும் முடிவில்லாத அழகையும் நீல நிறத்தையுமுடைய திருமேனி என்றுரைத்தலுமாம். நெஞ்சை நிறை கொள்வதாவது மோஹிக்கச்செய்கை. (கூ)

936 கொண்டல்வண்ணனைக் கோவலனுய்வெண்ணெய்
உண்டவாயன் * என்னுள்ளம்கவர்ந்தானை *
அண்டர்கோனணியரங்கன் என்னமுதினைக்
கண்டகண்கள் * மற்றொன்றினைக் காணவே. (ம)

கொண்டல் வண்ணனை — காளமேகம் போன்ற வடிவை யுடையவனும்	அணி அரங்கன் — (பூமண்டலத்துக்கு) அலங்கா ரமான திருவரங்கத்தில் கண்வளர்ந்தருள்பவனும்
கோவலன் ஆய் வெண்ணெய் உண்டவாயன் — கோபாலகுமாரனுகப்பிறந்து வெண்ணெயமுது செய்த திருவாயையுடையவனும்	என் அமுதினை — எனக்குப் பரம போக்யமான அம்ருதமாயிருப்பவனு மான அழகியமணவாளனை
என் உள்ளம் — என்னுடைய நெஞ்சை	கண்ட கண்கள் — லேவிக்கப்பெற்ற (எனது) கண்களானவை
கவர்ந்தானை — கொள்ளைகொண்டவனும்	மற்று ஒன்றினை — வேறொன்றையும் (பரமபத நாதனையும்)
அண்டர் கோன் — நித்யஸூரிகட்குத் தலைவனும்	காண — காணமாட்டா.

இவ்வாழ்வார் 'அடியேன்' என்னுமதொழிய, இப்பிரபந்தம் தலைக்கட்டுமளவிலும் தம்முடைய பேரும் ஊரும் பேச மறக்கும்படி தாம் பெற்ற அனுபவத்திற்கு இனியொரு விச்சேதம் வாராதபடி பெரிய பெருமாள் அருள்புரிந்தமையைக்கண்டு வியந்து அப்பெருமா ளுடைய திருமேனியிலேயே தாம் ஒருநீராக லயம்பெற்ற படியைப் பேசித் தலைக்கட்டு கிறார். கொண்டல்வண்ணன் = கடலிலுள்ள நீரையடங்கலும் முகந்துகொண்டு காவேரி மத் தியில் வந்து படிந்ததொரு காளமேகம்போன்று கண்டாருடைய விடாயைத் தீர்க்கவல்ல திருமேனியையுடையவன். அன்றி, மேடுபள்ள வாசியின்றித் தாழ்ந்தாருயர்ந்தார் அனை வரும் உஜ்ஜீவிக்கும்படி கருணையாலத்தை வர்ஷிக்குமவன் என்றுமாம். கொண்டல்—மேகம்; கொழிலாகு பெயர்.

மற்றொன்றினைக்காண = பரவ்யூஹாதிகள் மற்றுள்ள அர்ச்சாவதாரங்கள் ஒன்றையும் காணமாட்டா என்க. பரமபதநாதனை வியாவர்த்திப்பதே இங்கு முக்கியம்.

இப்பாசுரம் அருளிச்செய்தவுடனே பெரிய பெருமாள் அத்திருமேனியோடு ஆழ்வாரை அங்கீகரித்தருள அனைவரும் காண அப்பிரானது திருமேனியிலே அந்தர்ப்பவித்து, காய்ந்த இரும்புண்ட நீரையினர் என்று ஸம்பிரதாயவல்ல பெரியோர்கள் அருளிச்செய்வர். (கடி)

அடிவரவு:—அமலன் உவந்த மற்கி சதுரம் பாரம் துண்டம் கை பரி ஆலம் கொண்டல் கண்ணி.

திருப்பாணாழ்வார் திருவடிகளே சரணம்.

அமலனதிபிரான் உரை முற்றிற்று.

—[ ]—

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

நம்மாழ்வாரையன்றித் தேவுமற்றறியாத மதுரகவியாழ்வார் அருளிய

கண்ணிநுண் சிறுத்தாம்பு.

—[○□○]—

இப்பிரபந்தம் முதலாயிரத்தில் சரம ப்ரபந்தமாக ஸ்ரீமங்காத முனிகளால் வகுக்கப் பட்டது. நம்மாழ்வாரருளிய திருவாய் மொழியை ஸேவிக்கத் தொடங்கும்போதும் முடிக்கும் போதும் இப்பிரபந்தத்தை நியமேந அநுஸந்திப்பது ஸம்ப்ரதாயம். திருவாய் மொழியைப் போலவே இதையும் வீதிகளில் ஸேவிப்பதில்லை. "நாதனுக்கு நாலாயிரமுரைத்தான் வாழியே" என்கிற நம்மாழ்வாருடைய வாழித் திருநாமத்தின்படி ஸ்ரீமங்காத முனிகளுக்கு நம்மாழ்வார் நாலாயிரபிரபந்தங்களையும் யோகதசையிலே உபதேசித்தருளினதற்குக் காரணம் இக்கண் ணிநுண்சிறுத்தாம்பு பிரபந்தமே-என்னும்வரலாற்றை நாதமுனிகளின் வைபவத்திற் காண்க.

ஆழ்வாருடைய தோத்திரமாகத் திருவவதரித்த இப்பிரபந்தம்-எம்பெருமானுடைய தோத்திரமாகிய திவ்யப்ரபந்தங்களினிடையே சேர்த்து அநுஸந்திக்கப்பட்டு வருவதன் பொருத்தத்தை மணவாள மாமுனிகள் உபதேச ரத்தின மாலையில்-*வாய்த்த திருமந்திரத்தின் மத்திமமாம் பதம் போல், சீர்த்த மதுரகவி செய்கலையை, ஆர்த்தபுகழாரியர்கள் காங்கள் அருளிச்செயல் நடுவே, சேர்வித்தார் தாற்பரியம் தேர்ந்து* என்கிற பாசுரத்தினால் அருளினார்.

இப் பிரபந்தம் அந்தாதித் தொடையால் அமைந்தது. பதிற்றந்தாதி நூற்றந்தாதி யென்ற வகைகளில் இந்நூல் பதிற்றந்தாதியாம். அந்தாதி, வெண்பாவினாலேனும் கட்டளைக் கலித்துறையினாலேனுமே பாடப்பட வேணுமென்பது நியதியன்றென்ப. இப்பிரபந்தம் கலி விருத்தத்தினாலமைந்தது.

கம்பர்தாம் ஆழ்வார் விஷயமாகச் சடகோபரந்தாதி பாடுதற்கு இக்கண்ணிநுண் சிறுத் தாம்பை வழிநூலாகக் கொண்டமையை அவர்தாமே வெளிப்படுத்தி *மன்றே புகழ் மூம் திருவழுந்தூர்வள்ளல் மாறனைமுன், சென்றே மதுரகவிப்பெருமான் செந்தமிழ்த் தொ டையில், ஒன்றேபதிகமுரைத்தவன் பொன்னடியுற்று நின்றான், என்றேபதிகம் பதிகமதாக விசைத்தனனே* என்னும் பாயிரம் இங்கு நினைக்கத்தக்கது.

தனியன் உரை.

அவிதிதவிஷயாந்தரச்சடாரேः உபநிஷதாமுபகாநமாத்ரபோகः।
அபிச குணவசாத் ததேகசேஷீ மதுரகவிர் ஹ்ருதயே மமாவிரஸ்து

அவிதித விஷயாந்தரः	(நம்மாழ்வாரைத் தவிர) வேறொரு விஷயத்தையும் மறியாதவரும்	குணவசாதபிச	குணமடியாகவும்
சடாரேः	நம்மாழ்வாருடைய (திவ்யஸூக்திகளாகிய)	ததேகசேஷீ	அந்த நம்மாழ்வாரொருவரையே தமக்கு சேஷியாகக் கொண்டவருமான
உபநிஷதாம்	த்ரமிடோபநிஷத்தான திவ்ய ப்ரபந்தங்களே	மதுரகவிः	மதுரகவியாழ்வார்
உபகாந மாத்ர போகः	இசை பாடுவது ஒன்றையே பேரின்பமாகக் கொண்டவரும்	மம ஹ்ருதயே	என் நெஞ்சில்
		ஆவிரஸ்து	ஆவிர்ப்பவிக்கக்கடவர்.

வேறொன்றும்நானறியேன் வேதந்தமிழ்செய்த
மாறன்சடகோபன்வண்குருகூர்—ஏறெங்கள்
வாழ்வாமென்றேத்தும் மதுரகவியாரெம்மை
ஆள்வாரவரேயரண்.

வேறு ஒன்றும் நான் அறியேன்	"(நம்மாழ்வார் தவிர) வேறொருபொருளும் நான் அறியமாட்டேன்;	சடகோபன் எங்கள் வாழ்வு ஆம் என்று	நம்மாழ்வார் "எமக்கு உஜ்ஜீவனராவர்" என்று
வேதம் தமிழ் செய்த மாறன்	வேதார்த்தங்களைத் தமிழாக அருளிச்செய்த மாறனென்னும் திரு	எத்தும். மதுரகவியார் எம்மை ஆள்வார்	தோத்திரஞ் செய்தருளின மதுரகவியாழ்வார் நம்மை ஆள்பவர்;
வண்குருகூர் வறு	அழகிய திருக்குருகூர் நகர்க் குத் தலைவருமான	அவரே அரண்	அந்த மதுரகவிகளே (ப்ரபந்நகுலத்துக்கு) ரக்ஷகர்.

தனியனுரை முற்றிற்று.

937 கண்ணிநுண்சிறுத்தாம்பினால் கட்டுண்ணப்
பண்ணியபெருமாயன்* என்னப்பனில்*
நண்ணித்தென்குருகூர் நம்பியென்றக்கால்*
அண்ணிக்குமமுதூறும் என்னுவக்கே. (க)

கண்ணி	(உடம்பிலே உறுத்தும்படி பல) முடிகளையுடைத்தாய்	என் அப்பனில்	எனக்கு ஸ்வாமியான ஸர்வேச்வரனே விட்டு,
நுண்	(உடம்பிலே அழுந்தும்படி) நுட்பமாய்	நண்ணி	(ஆழ்வாரைக்) கிட்டி ஆச்ரயித்து
சிறு	(எட்டம்போராதபடி) சிறிதாயிருக்கிற	தென்குருகூர் நம்பி என்றக் கால்	தென்திசையிலுள்ள (ஆழ்வார் திருநகரி யென்னும்) குருகூர்க்குநிர்வாஹகரான ஆழ்வார் என்று அவரது திருநாமத்தைச்சொன்னால்
தாம்பினால் கட்டுண்ண பண்ணிய	கயிற்றினால் யசோதைப்பிராட்டி தன்னைக் கட்டும்படி பண்ணுவித்துக்கொண்ட	அண்ணிக்கும்	பரமபோக்யமாயிருக்கும்;
பெரு மாயன்	விசேஷ ஆச்சரிய சக்தியுக்தனாய்	என் நாவுக்கே அமுதி ஊறும்	என் ஒருவனுடைய நாவுக்கே அம்ருதம் ஊறுகிறபோலும்.

எம்பெருமானுடைய திருநாமத்தைச் சொல்லுவதிற் காட்டிலும் ஆழ்வாருடைய திருநாமத்தைச் சொல்லுவதே தமக்குப் பரம போக்யமென்கிறார். எம்பெருமானிடத்தில் விருப்பமற்றிருக்கிறவர் பாசுரந் தொடங்கும்போதே எம்பெருமானையே வருணித்துப் பேசுவானேன்! என்னில், த்யாஜ்ய விஷயத்தை முன்னே சொல்லி உபாதேய விஷயத்தைப் பின்னே சொல்லவேண்டுகையாலே. என் அப்பன் என்னலாமோவென்னில், தாம் தெய்வமாகச்சொண்ட ஆழ்வாருடைய முதற்கல்லாஸத்திற்காகச் சொல்லுகிறபடி. ஆழ்வாருடைய முதற்கல்லாஸம் இவர்க்கு உத்தேச்யமாகில் எம்பெருமானை த்யஜிக்கலாமோ? வென்னில், த்யஜிப்பதாகக் கொள்ளவே கூடாது. மேல் மூன்றாம்பாட்டில் இது விசதமாகும்.

நம்மாழ்வார் மற்றுமுள்ள அவதாரங்களிற் காட்டில் க்ருஷ்ணாவதாரத்திலே-அதுதன்னிலும் வெண்ணெய் களவுகண்டு ஆய்ச்சியர் தாம்பினால் உரலினிடை ஆப்புண்டிருந்த வாலாற்றில்* எத்திற முப்பேழுலகுண்டு இருந்தேழுலகிய வெளிவே!* என்று ஆறுமாதம் மோஹித்திருந்தவராதலால் அந்த அவதாரத்தை முன்னிட்டுக் கொண்டு கண்ணபிரானைக்கூறுகின்றார். ஆழ்வார்க்குக் கண்ணபிரானிடத்தில் எவ்வளவு வியாமோஹமோ, அதனிலும் விஞ்சிய வியாமோஹம் தமக்கு ஆழ்வார் பக்கலிலே என்று காட்டினாராயிற்று. என்னப்பனில் என்றது-என்னப்பனை விட்டு என்றபடி.

கண்ணிநுண் சிறுத்தாம்பினால் கட்டுண்ட பெருமாயன் என்னுதே 'கட்டுண்ணப்பண்ணிய' என்றதனால் தன்னைக் கட்டுதற்குத் தானே இசைந்து போந்தமை விளங்கும். ஒரு சுற்றுக்குப் போராத தாம்பு இரண்டு மூன்று சுற்றுக்குப் போரும்படி உடம்பைச் சுருக்கி அமைத்துக்கொண்டதே பெருமாயம்.

'தென்குருகூர்நம்பி யென்றக்கால் அண்ணிக்கும் அமுதூறும்' என்று கூறின மதுரகவிகள் இப்படிப்பட்ட தம்முடைய நிலை மற்றையோர்க்கு அரிது என்று காட்ட "என்னாவுக்கே" என்றார். பகவானே ரஸிக்காத மற்றையோர்க்கு ஆழ்வார் ரஸிக்கவகையுண்டோ? (க)

938 நாவினால் நவிற்றி இன்பமெய்தினேன்*
மேவினேன் அவன் பொன்னடி மெய்ம்மையே*
தேவுமற்றறியேன் குருகூர்நம்பி*
பாவினின்னிசை பாடித்திரிவனே. (2)

நாவினால் நவிற்றி — நாக்கினால் (ஆழ்வாரை) ஸ்தோத்திரம் பண்ணி
இன்பம் எய்தினேன் — ஆநந்தத்தைப் பெற்றேன்;
அவன் பொன் அடி — அவ்வாழ்வாருடைய அழகிய திருவடிகளை
மேவினேன் — ஆச்ரயிக்கப் பெற்றேன்;
மெய்ம்மையே — இது சத்தியமே.
மற்று தேவு அறியேன் — (ஆழ்வாரை யொழிய) வேறொரு தெய்வத்தை அறியமாட்டேன்;
குருகூர் நம்பி — திருநகரிக்கு நிர்வாஹகரான அவ்வாழ்வாருடைய
பாவின் இன் இசை — அருளிச்செயல்களின் இனிய இசையையே
பாடி — பாடிக்கொண்டு
திரிவன் — திரியக்கடவேன்.

தம்முடைய மனமொழி மெய்களாகிற முக்கரணங்களும் ஆழ்வார்பக்கலிலேயே ஏகாக்ர மாக ஈடுபட்டபடியை இப்பாட்டில் கூறுகின்றார். தேவு மற்றறியேன் என்றது மனத்தின் காரியம் சொன்னபடி. முதலடியில் சொன்ன நாவின் காரியத்தை மீண்டும் சிறப்பித்துக் கூறு கின்றார் ஈற்றடியினால். குருகூர்நம்பிபா = ஆழ்வாரால்ருளிச் செய்யப்பட்ட திவ்யபிரபந்தங்கள்; அல்லது, ஆழ்வாவிஷயமான தோத்திரப்பா.

முதலடியில் நவிற்றின்பம், நவிற்றியின்பம், நவித்து இன்பம் என மூன்று பாடங்கள் வழங்கும். நவித்து- வடமொழியடியாப் பிறந்த வினையெச்சம். இரண்டாமடியில் 'மெய்ம் மையே' என்றது ஸத்யமிட்டுச் சொல்லுகிறபடி. ஆழ்வார் திருவடிகளிலே தாம் தொழுவது யோகதசையிலன்று, அர்ச்சாவதாரத்திலன்று, விபவதசையிலேயே யென்றபடி. (2)

939 திரிதந்தாகிலும் தேவபிரானுடை*
கரியகோலத் திருவுருக்காண்பன்நான்*
பெரியவண்குருகூர் நகர்நம்பிக்கா
ளுரியனாய்* அடியேன்பெற்றநன்மையே. (3)

திரிதந்தாகிலும் — (பகவத் விஷயத்தோடு ஒட்டற்றுத்) திரிந்தே னாகிலும்
தேவபிரானுடை — நித்ய ஸூரிகளுக்குத் தலைவ னான எம்பெருமானுடைய
கரிய கோலம் — (நீலம்போல்) கறுத்ததாய் அழகியதான
திரு உரு — பிராட்டியோடு கூடிய திவ்ய ரூபத்தையும்
நான் காண்பன் — நான் ஸேவிப்பேன்;
பெரிய வண் குருகூர் நகர் நம்பிக்கு — பெருமையையும் ஔதார்யமும் முடைய ஆழ்வார்க்கு
உரிய ஆள் ஆய் — அநந்யார்ஹ சேஷபூதனா யிருந்து வைத்து
அடியேன் பெற்ற நன்மை — அடியேன் பெற்ற பேறு இது காணீர்.

***—ஆழ்வாருடைய உகப்புக்காக எம்பெருமானையும் ஸேவிப்பேனென்றவாறு.

தேவுமற்றறியே னென்றார் கீழ்ப்பாட்டில்; இதில் தேவுமற்று அறிவேன் என்கிறார். ஆழ்வார் பற்றின விஷயமென்று அவ்வழியாலே எம்பெருமானைப் பற்றினால் குற்றமில்லை யென்று காட்டினபடி.

திரிதந்தாகிலு மென்றது-திரிதந்தேனாகிலு மென்றபடி; எம்பெருமானோடு ஒட்டற்று ஆழ் வார் பக்கலிலேயே ப்ரவணனாய்த் திரிந்தேனாகிலும் என்கை. அன்றிக்கே, திரிதந்தாகிலும்- திரும்பி வந்தாகிலும் என்றவாறுமாம். எம்பெருமானைத்யஜித்து ஆழ்வாரைப் பற்றின் நீர் மறுபடியும் எம்பெருமானைப் பற்றுவதாகச் சொல்லுகிறீரே, இதுவென்? என்ன, பின்னடிக

ளாலே அதற்கு உத்தரமுரைக்கின்றார்-தேவபிரானுருவை நான் காண்பதானது என்னுடைய முயற்சியடியாக நேர்ந்ததாகில் அது எனக்குத் தீமையாகும்; ஆழ்வார் திருவடிகளிலே நான் அடியனாயிருத்துவைத்து அவர் வழியாலே பெற்றதாகையாலே இது நன்மையேயாம் என்றவாறு. 'தேவபிரானுடைக் கரியகோலத் திருவுருவைத் திரிதந்துகான் காண்பனுகிலும் அது பெரியவண் குருகூர்நகர் நம்பிக்கு அடியேன் ஆளுரியனுய்ப் பெற்ற நன்மையாகுமேயன்றித் தீமையாகாது' என்றுமாம். (நு)

940 நன்மையால்மிக்க நான்மறையாளர்கள் *
புன்மையாகக் கருதுவராதலின் *
அன்னையாயத்தனுய் என்னையாண்டிடும்
தன்மையான் * சடகோபனென்தம்பியே. (சு)

நன்மையால் மிக்க {நற்குணத்தால் மேன்மை பெற்றவர்களாய்}
நான்மறை ஆளர்கள் {நான்கு வேதங்களிலும் வல்லவர்களான வைதிகர்கள்}
(என்னை) அடியேனை
புன்மை ஆக கருதுவர் ஆதலில் {ஹேய குணங்களே ஒருவடிவு கொண்டதென் றெண்ணி உபேக்ஷித்திருப்ப தென்பதுவே ஹேதுவாக}

அன்னை ஆய் மாதாவாயும்
அத்தன் ஆய் பிதாவாயும்
என்னை ஆண்டிடும் தன்மையான் {அடியேனைக் கைக்கொண்டருளுமியல்வினரான}
சடகோபன் நம்மாழ்வார்
என் நம்பி எனக்குத் தலைவர்.

(***-அருள் மிகுத்தவர்களும் கைவிடத்தக்க தம்மை ஆழ்வார் கைக்கொண்டாரென்கை.)

ஆழ்வாரால் தாம்பெற்ற பேற்றைக்கூறிப் பெருநன்றி பாராட்டுகிறார். ஸகல வைதிகர்களாலும் அபதார்த்த மென்று கைவிடப்பட்டிருந்த அடியேனை யாவதொரு ஆழ்வார் விசேஷமாகக் கடாக்ஷித்தருளி ஸகலவித பந்துக்களும் செய்யக்கூடிய காரியத்தைத் தாமொருவரே அடியேன்திறத்துச் செய்தருளிப் பொருளல்லாத வென்னைப் பொருளாக்கி யருளினரோ அவ்வாழ்வாரன்றோ எனக்குத் தலைவர்; அவர்தாம் உகந்த பகவத்விஷயத்தை நான் உகவா கொழிந்தேனுகில் ஆழ்வார் என்னை அங்கீகரித்தருள்வதற்கு முன்பு நான் நின்ற நிலைக்கும் இப்போதைய நிலைமைக்கும் என்ன வாசியுள்ளதாம்; ஆகவே நான் கீழ்ப்பாட்டில் கூறினவிஷயம் அயுக்தமன்று என்றதாக இப்பாட்டின் பாவதாற்பரியம் காண்க.

கருதுவராதலின் = கருதி அனைவரும் கைவிட்டிருந்த காலத்திலே யென்பது கருத்து (சு)

941 நம்பினேன் பிறர்தன்பொருள்தன்னையும் *
நம்பினேன் மடவாரையும்மூன்னலாம் *
செம்பொன்மாடத் திருக்குருகூர்நம்பிக்கு
அன்பனுய் * அடியேன் சதிர்த்தேனின்றே. (நு)

அடியேன் {(இன்று 'அடியேன்' என்று சொல்லும்படி திருந்தின) நான்}
மூன்னலாம் {(ஆழ்வாருடைய விஷயீகாரம் பெறுவதற்கு) முன்பெல்லாம்}
பிறர் அயலாருடைய
நல்பொருள் தன்னையும் {நல்ல பொருள்களே}
நம்பினேன் ஆசைப்பட்டிருந்தேன்;

(பிறர்) மடவாரையும் {பிறருடைய ஸ்திரீகளையும் விரும்பிப் போந்தேன்;}
நம்பினேன் இன்று ஐப்போதோ வென்றால்
செம் பொன் மாடம் {செவ்வியபொன்னுற் சமைந்த மாடங்களையுடைய}
திருக் குருகூர் நம்பிக்கு {திருநகரிக்குத் தலைவரான ஆழ்வார்க்கு}
அன்பன் ஆய் பக்தனுகப்பெற்று
சதிர்த்தேன் {சதிரை யுடையேனுனேன் [சமத்தனும் விட்டேன்.]}

கீழ்ப்பாட்டில் ப்ரஸ்தாவித்த புண்மையை உபபாதிக்கிறார் இப்பாட்டில். அநாதி காலமாகப் பரதத்வமும் பரதாரபரிக்ரஹமும் பண்ணிப்போந்தேன்; இப்போது ஆழ்வாருடைய அருளுக்கு இலக்காகப் பெற்றுச சதிரனுபவிக்கிறேனென்கிறார்.

முதலடிக்கு— அயலாருடைய பொருள்களைக் களவுசெய்தேன் என்று ஸாமாந்யமாகப் பொருளாயினும் நன்பொருள் என்ற ஸ்வாரஸ்யத்தால் இங்கு ஆத்மா பஹாரம் பொருளாகக்கடவது. ஈச்வரனுக்கு சேஷ பூதமான விலக்ஷண ஆத்ம வஸ்துவை யென்னுடையதாக அபிமானித்திருக்கையாகிற ஆத்மாபஹாரத்தைக் களவைச்செய்து போந்தேன் என்கை.

நம்புதல்—விரும்புதல், "நம்பும் மேவும் நசையாகும்மே." இப்படியிருந்த நீர் ஆழ்வாரைக் கிட்டினபடி எங்ஙனே? என்று கேட்க; மடவார்களை ஆராதிப்பதற்காகப் பொருள் தேடிக் கொள்ளையடிப்பதற்கு இடம்பார்த்துத் திரியாநிற்கையில் அச் செம்பொன் மாடத்தைக் களவுகாணப்போனேன்: அங்கே வைத்தமாநிதியைக் கண்டு அகப்பட்டேனென்கிறார்; இவர்க்கு வைத்தமாநிதி ஆழ்வாரேயாம். சதிர்த்தேன்-கிருதக்ருத்யனானேன் என்றபடி. 'சதுர' என்ற வடசொல் சதிர் எனத்திரிந்து அது அடியாகப் பிறந்த வினைமுற்று இது. (ரு)

942 இன்று தொட்டும் எழுமையு மெம்பிரான்*
நின்றுதன் புக ழேத்தவருளினன்*
குன்றமாடத் திருக்குருகூர் நம்பி*
என்றுமென்னை யிகழ்விலன் காண்மினே. (சூ)

இன்று தொட்டும் எழுமையும்	இன்று முதலாக மேலுள்ள காலமெல்லாம்	குன்றம் மாடம்	மலைபோன்ற மாடங்களை யுடைய
நின்று	(நான்) அத்யவஸாயம் நிலைக்கப்பெற்று	திருக்குருகூர் நம்பி	திருநகரிக்குத் தலைவரான அவ்வாழ்வார்
தன் புகழ்	தம்முடைய (ஆழ்வாருடைய) திருப்புகழ்களை	என்றும் என்னை	(இனி) எக்காலத்திலும் என் விஷயத்தில்
ஏத்த	துதிக்கும்படி	இகழ்வு இலன்	அநாதரமுடையவராக இருக்கமாட்டார்;
எம்பிரான் அருளினன்	எம் ஸ்வாமியான ஆழ்வார் க்ருபை பண்ணினார்;	காண்மின்	(இதனை அநுபவத்தில்) கண்டுகொள்ளுங்கள்.

"சதிர்த்தேனின்றே" என்று பரமாநந்தமாக அருளிச் செய்த மதுரகவிகளை நோக்கி 'நீர் சதிர்த்தபடி என்?' என்று கேட்க, இன்று முதலாக இனிமேலுள்ள காலமெல்லாம் ஆழ்வாருடைய திவ்ய குணங்களையே நான் பாடித்திரியும்படி ஆழ்வாரால் க்ருபைபண்ணப் பெற்றேன்; இவ்வளவேயுமன்றி, ஒருகால் நான் ஆழ்வாரை இகழ்ந்தாலும் அவர் என்னை இகழமாட்டாரென்னும்படி அவ்வளவு பரமக்ருபைக்குப் பாத்திரமாயினேனே! இதற்கு மேற்பட்ட சதிர் உலகத்திலுண்டோ? என்கிறார். இகழ்தல்—கைவிடுதல். (சூ)

943 கண்டுகொண்டென்னைக் காரிமாறப்பிரான்*
பண்டைவல்வினை பாற்றியருளினன்*
எண்டிசையும் அறியவியம்புகேன்*
ஒண்டமிழ்ச் சடகோபனருளையே. (எ)

பிரான்	பரமோபகாரகராய்	பாற்றி அருளினன்	உருமாய்த்து போம்படி பறக்கடித்தருளினார்; (ஆதலால்)
காரி மாறன்	பொற்காரியார் திருக்குமாரரான நம்மாழ்வார்	ஒண் தமிழ் சடகோபன் அருளையே	அழகிய தமிழ்க் கவிகளுக்கு ஆகரமான அவ்வாழ்வாருடைய க்ருபையையே
என்னை	(தமது பெருமையை அறியாத) என்னை	எண் திசையும் அறிய	எட்டுத் திக்கிலுள்ளவர்களும் அறியும்படி
கண்டு கொண்டு	கடாக்ஷித்து கைக்கொண்டு	இயம்புகேன்	சொல்லக்கடவேன்.
பண்டை வல்வினை	அநாதியாய்ப் பிரபலமாயிருந்த பாவங்களை		

கிழ்ப்பாட்டில் "தன் புகழேத்தவருளினன்" என்றவிடத்துக்கூறிய புகழேத்துகையாவது இதுதான் என்று இப்பாட்டில் வெளியிடுகிறார்; ஆழ்வார் திருவாய்மொழிபாடவல்லவர், எம்பெருமானையும் வசப்படுத்தவல்லவர் இத்யாதியாகவுள்ள அவருடைய புகழ்க்கு ஏத்துகிறவனல்லன்; பாவங்கள் கூடுபூரித்துக்கிடந்த அடியேனைப் பரமபரிசுத்தனைச் செய்து கொண்ட பெருமையாதொன்றுண்டு. இதற்குமேல் வேறொருபெருமை ஆழ்வாருக்கு இருப்பதாக நான் நினைக்கவில்லை, அந்தப்பெருமையையே நாமெடுத்துமுரியப் பறையடிக்கிறோமென்கிறார். கண்டுகொண்டு என்ற விடத்தில் கொண்டு என்பது துணைவினையன்று; கண்டும் என்றும் கொண்டு என்றும் இரண்டும் தனித்தனி வினையெச்சங்கள். என்னைக் கடாக்ஷித்து, என்னுடைய துர்க்குணமே பற்றாசாக என்னை அங்கீகரித்தருளி என்றபடி. (எ)

944 அருள்கொண்டாடும் அடியவரின்புற *
அருளினன் அவ்வருமறையின்பொருள் *
அருள்கொண்டு ஆயிரமின்றமிழ்ப்பாடினன் *
அருள்கண்டீர் இவ்வுலகினில்மிக்கதே. (அ)

அருள் கொண்டாடும்	பகவத் கிருபையைக் கொண்டாடுகின்ற	இன் தமிழ்	இனிய தமிழ்ப் பாஷையிலே அமைத்த
அடியவர்	பக்தர்கள்	ஆயிரம்	திருவாய் மொழியாயிரத்தை
இன்புற	ஆநந்திக்கும்படி	பாடினன்	பாடினவருமான ஆழ்வாருடைய
அ அருமறையின் பொருள்	அந்த அருமையான வேதத்தின் உட்பொருள்களை	அருள் கண்டீர்	க்ருபை ஒன்றுமாத்திரமன்றே
அருளினன்	அருளிச்செய்தவராயும்	இ உலகினில்	இந்த லோகத்திலே
அருள் கொண்டு	பரமக்ருபையாலே	மிக்கது	அதிசயித்திருக்கிறது.

எம்பெருமானது அருளைக்காட்டிலும் ஆழ்வாரருளே சீரியதென்கிறார். "வேதங்களும் வேதங்களுமும் நீதிநூலும் கற்பமுஞ் சொற்பொருள்தானும் மற்றை நிலைகளும் வானவர்க்கும பிறர்க்கும் நீர்மையினாலருள் செய்தான" என்றபடி ஸகலவேதவேதாங்க நூல்களையும் ப்ரஸாதத்தருளின எம்பெருமானுடைய க்ருபைக்கு மேற்பட உலகில் வேறொரு க்ருபையுண்டோ? என்று அந்த பகவத் க்ருபையிலேயே ஈடுபட்டிருந்த பாகவதர்கள், ஆழ்வார் திருவாய்மொழி அருளிச்செய்த பின்னர் 'ஹா! ஹா!! இவ்வளவு இனிமையான திவ்யப்ரபந்தம் போன்ற ஒரு நூலையும் இதுவரை ஈச்வரன் நமக்கு உபகரிக்கவில்லை; இன்றளவும் ஈச்வரனுக்கு மேற்பட்ட க்ருபாளு யாருமில்லை யென்று நாம் மயங்கிக்கிடந்தோம், *பாலேய்தமிழரைசாரர் பத்தர் பரவுமாயிரத்தை அருளிச்செய்த ஆழ்வாருடைய திருவருளுக்கு ஈடாகான அருளும் இனி உலகிலுண்டோ? என்று வியந்து மகிழ்ந்தனராம்; அதனை யருளிச்செய்கிறார்—இவ்வது முதலடியில்.

இவ்வுலகினில் என்பதை ஏழாம் வேற்றுமையாகக் கொள்வதினும் ஐந்தாம் வேற்றுமையாகக் கொண்டு, ஆழ்வாருடைய அருள் இந்த லோகத்திற்காட்டிலும் பெரிது என்றலாம் பதும் ஒக்கும். ... ... (அ)

945 மிக்கவேதியர் வேதத்தினுட்பொருள் *
நிற்கப்பாடி யென்நெஞ்சுள் நிறுத்தினன் *
தக்கசீர்ச் சடகோபனென்நம்பிக்கு * ஆட்
புக்ககாதல் அடிமைப்பயனன்றே. (கூ)

மிக்க வேதியர் வேதத்தின் உட்பொருள் நிற்க பாடி	சிறந்த வைதிகர்களால் ஓதப்படுகின்ற வேதத்தினுடைய உள்ளுறை பொருளானது நிலை நிற்கும்படி திருவாய்மொழியை	என்நெஞ்சுள் நிறுத்தினன்	என்னுடைய ஹ்ருதயத்தில் (அந்த வேதார்த்தங்களே அல்லது (திருவாய்மொழியை ஸுப்ரதிஷ்டிதமாக்கி யருளினர் (ஆழ்வார்);